உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேதவியாஸமுநிவரருளிய

பதினெண் மஹாபுராணங்களி லொன்றாகிய

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

இதனை,

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து

மஹாஸந்நிதானம்

ஸ்ரீ௸ஸ்ரீ

அம்பலவாண தேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்,

ஈக்காடு

அரங்கசாமிமுதலியார் குமாரருமாகிய

இரத்தினவேலுமுதலியார்

ஸம்ஸ்கிருத பண்டித ருதவியால்

மொழிபெயர்த்து,

தமது

பண்டிதமித்திர யந்திரசாலையிற்

பதிப்பித்தனர்.

சென்னை.

1900.

Registered Copy-Right.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ.

சொல்லிய

கட்டளைக்கலித்துறை.

1. சொல்வளர் செந்தமிழ் தொன்முறை கற்றுத் துகடபுத்தோ
னல்வளர் கண்டத்தெ மண்ணல் பதந்தொழு மன்புடையோன்
பல்வகை மக்களு முய்யப் பரமன் பராக்கிரம
நல்வள நூலை நவின்று புகழ்கொளு நாவலனே.

2. பாண்டிய னுகு மதிவீர ராமன் பரிந்துரைத்த
காண்டகு நூல்பல வற்றுங் கவின்மிகு காசிகண்டத்
தேண்டகு முட்கருத் தெல்லாந் தெரித்துரை யெவ்வெவர்க்கும்
வேண்டிய வாறு வகுத்த விரத்தின வேற்செம்மலே.

3. வித்தைக் களஞ்சிய மாகிய சைவ வியாதமுனி
முத்திக்கு வித்தாப் புராணமு வாறு மொழிந்தவற்றுட்
டத்தைக் கிளவிபங் கற்குரித் தாயொளிர் சைவமதைத்
தித்திக்கு மின்சொற் றமிழ்மொழி யாக்கித் திகழ்ந்தனனே.

4. குடம்பயின் மால்பணி யும்பர னன்பர்கள் கூர்ந்துமகிழ்
திடம்பெற நூற்பட லங்கட்குத் தக்க திருவுருவப்
படம்பல சிறப்ப வழுவின்று காட்சியின் பம்பயப்ப
விடங்களுக் கேற்ற வடமொழி மேற்கோ ளிலகுமன்றே.

5. அன்ன செழுந்தமிழ்ச் சைவ புராண வமைப்பினையா
மென்னென் றுரைப்பே மினியஃ திழுமெனு மின்னெலியி
னன்ன ரொழுகிடும் யாறுகொ லோவின் னயமனைத்துந்
துன்னிய வந்த வசன நடையெழில் சொல்லரிதே.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

சீரிருக்கு நான்மறையின் சிரமிருக்குஞ் சிவபெருமான்
செல்வம் வாய்ந்த
பேரிருக்குஞ் செயங்கொண்ட தொண்டைமண் டலத்துளுவர்
பிறங்கி வாழு
மேரிருக்கு முயர்கோட்ட நாலாறி லொன்றாகி
யிருவி சும்பின்
காரிருக்கும் பூந்துடவைக் கரையிருக்குந் தடங்களுலுங்
கவினீக் காட்டில்.

விரிந்தபுக ழரங்கசா மிக்கோமான் றவப்பேறாய்
விளங்க வந்து
புரிந்தவிலக் கியவிலக் கணப்பனுவ லனைத்தினுநற்
புலமை யெய்ந்து
தெரிந்தவுரை யாசிரிய னிவன்போலு மில்லையெனவே
தேர்ந்து தக்கோர்
பரிந்துரைக்கப் புகழ்நிறைந்த விரத்தினவே லுப்பெயர்கொள்
பாவ லோன்றான்.

பொன்னவிர்நன் மணிமார்பன் விழியிலகுஞ் செஞ்சரணைப்
பொருளாக் கொண்ட
தன்னிகரில் வாதரா யணமுனிவ னுயர்மறைக்குச்
சார்ப தாகப்
பன்னியபு ராணமூ வாறதனிற் பரமற்குப்
பத்த வற்று
ளுன்னரிய சிவமகா புராணத்தி னிற்றிகழு
முண்மை நோக்கி.

அன்னநா வினையுலகங் கண்டுகளி கூர்ந்தரன்பா
லன்பு மேவ
மன்னியசெந் தமிழதனின் மொழிபெயர்த்துக் கத்தியமா
வழங்கச் செய்தா
னின்னவன்செய் சிவபுண்ணி யத்தினுக்குக் கைம்மாறிங்
கியற்ற வோர்தல்
மின்னொளிர்மா மழைதருநன் கருமுகிற்கு வேளாண்மை
விழைதற் பாற்றே.

உ

ஸ்ரீ ஸாம்பசிவாய நம:

உபோற்காதம்.

உலகங்களெல்லாவற்றையுந் தமது சக்திபேதங்களாற் சிருஷ்டி திதி சங்கார திரோபவ அநுக்கிரகங்கட்குட்படுத்திச் சர்வலோக சர்வ தேவ சர்வஜன நாயகராய்த் தேவதேவன் மகாதேவன் இறை பாசுபதன் சம்பு ஈசுவரனென்னும் பல காரணத்திருநாமங்களுடையராய் ஜடைமுடியும், ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோஜாதமென்னும் ஐந்து திருமுகமண்டலங்களும், பத்துத்திருக்கரங்களும், ஒரு திருமேனியும், இரண்டு திருவடிகளும், இச்சாஞானக்கிரியை யென்னும் மூவிலைச்சூலமும், பராசக்திவடிவமான மழுவும், கர்த்ருபாவமான கட்வங்கமும், வாளும், பீஜாபூரகமும், வஜ்ரமும், ஜனனபயத்தைப் போக்குவதான அபயாஸ்தமும், ரித்திகுணமான நாகமும், ஸ்தூல ஸூக்ஷ்ம பூதங்களை நடத்தும் மாயாரூபமானபாசமும், குணமாகிய நீலோற்பலமும் அங்குசமும், சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணமான தமருகமும், போகாநுக்கிரகஞ்செய்யும் வரதாஸ்தமும், நாதகுணமாகிய மணியும், சங்காரகுணமாகிய அக்கினியும், திரோதாயி யென்னும் படிவட்டமும், அருளாகிய சுகந்தமும், பரையாகிய மாலையும், அநுக்கிரகாங்குரமான சிறுநகை முதலியவற்றையுங்கொண்டு கருணைமேலீட்டால் ஆன்மாக்களின் கிரியா பூஜா நிமித்தஞ் சகளத்திருமேனிகொண்டும்,

"மைப்படியுங் கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையான் மாசொன் றில்லான், ஒப்புடைய னல்ல னொருவ னல்ல னோரூர னல்லனோ ருவம னில்லி, அப்படியு மவ்வுருவு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணி னல்லால், இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவ னிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே"—என்ற திருநாவுக்கரசுஸ்வாமிகள் திருவாக்கின்படி அன்பர்களின் யோகபூஜாநிமித்தம் நிஷ்களத் திருமேனிகொண்டும்,

"எண்ணில்பல் கோடி சேவடி முடிக ளெண்ணில்பல் கோடிதிண்டோள்கள், எண்ணில்பல் கோடி திருவுரு நாம மேர்கொண்முக் கண்முகமியல்பும், எண்ணில்ப்ல் கோடி யெல்லைக்கப் பாலாய் நின்றைஞ் ஞூற் றந்தண ரேத்தும், எண்ணில்பல் கோடி குணத்தரேர் வீழி யிவர்நம்மை

யாளுடை யாரே"—என்று திருவிசைப்பாவிற் சேந்தனார் அருளியதிருவாக்கின்படி விராட்சொரூபங்கொண்டும் விளங்கும் பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களிடத்து அநாதியே வைத்த திருவருள் விலாசத்தால், அவர்கட்குத் தநுகரண புவன போகங்களைத் தந்தும் அவர்களுச்சீவனார்த்தம் வேதங்களை யளித்தும் அவ்வேதங்களுக்கு வியாக்கியானமாகச் சிவாகமங்களை அருளியும், அவற்றின் வழியிலுலகங்களை வழிப்படுத்த நந்திதேவராதிய பரமாசாரியரை நியமித்தும், உலகத்தைத் திருத்தியருளினர்.

பின்னர் வேதாகமங்களை ஓதவும் உணரவும் ஏலாத ஏனையோர் பொருட்டு அவ்வேதாகம சாரத்தை யுட்கொண்ட சரிதமாகிய புராணங்களை அருளி நந்திதேவர் மூலமாக அகஸ்தியராதி மகருஷிகளுக்கு உபதேசிப்பித்தனர். இம்முறையுள்வந்தவரும் பிரமபுத்திரருமான ஸநத்குமார மகருஷியிடத்தில் விஷ்ணுமூர்த்தியின் அவதாரமான வியாஸமகருஷி உபதேசிக்கப்பெற்று, தமது மாணவருள் ஒருவரான ஸூதமுநிவருக்குப் புராணங்களையெல்லாம் உபதேசித்தனர். அவர் நைமிசாரணிய முநிவராதியர்கட்கு ஓதியுணர்த்தியது பதினெட்டுப் புராணங்களாம்.

அவை: பிரமபுராணம் - பத்மபுராணம் - விஷ்ணுபுராணம்-சைவபுராணம் - பாகவதபுராணம் - பவிஷ்யபுராணம் - நாரதீயபுராணம்-மார்க்கண்டேயபுராணம் - ஆக்கினேய்புராணம் - பிரமகைவர்த்தபுராணம்-இலிங்கபுராணம் - வராகபுராணம் - காந்தபுராணம் - வாமனபுராணம் - மச்சபுராணம் - கூர்மபுராணம் - காருடபுராணம் - பிரமாண்டபுராணங்களாம். இப்பதினெட்டிற்குங்கூடிய கிரந்த சங்கியை நான்கிலக்ஷத்தெண்ணாயிரம்.

அவற்றுள், சைவபுராணம் - பவிஷ்யபுராணம் - மார்க்கண்டேயபுராணம் - இலிங்கபுராணம் - காந்தபுராணம் - வராகபுராணம் - வாமனபுராணம் - மச்சபுராணம் - கூர்மபுராணம் - பிரமாண்டபுராணமென்னும் பத்துஞ் சிவபுராணங்கள். இவற்றுள், சைவபுராணம் இருபத்துநாலாயிரங்கிரந்தமும், பவிஷ்யபுராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேயபுராணம் முப்பத்திராயிரங்கிரந்தமும், இலிங்கபுராணம் பதினோராயிரங்கிரந்தமும், காந்தபுராணம் இலக்ஷங்கிரந்தமும், வராகபுராணம் இருபத்துநாலாயிரங்கிரந்தமும், வாமனபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், மச்சபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், கூர்மபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பிரமாண்டபுராணம் பன்னீராயிரங்கிரந்தமுமுடையன. ஆகச் சிவபுராணம் பத்திற்குங் கிரந்தம் இரண்டிலக்ஷத்தறுபத்தெண்ணாயிரம்.

காருடபுராணம் - நாரதீயபுராணம் - வைணவபுராணம் - பாகவதபுராணம் என்னு நான்கும் விஷ்ணு புராணங்கள். இவற்றுள், காருடபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், நாரதீயபுராணம் இருபத்தையாயிரங்கிரந்தமும், வைணவபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பாகவதபுராணம் பதி

...ணுயிரங் கிரந்தமுமுடையன. ஆக
...தம் ஐம்பத்தையாயிரம்.

பிரமபுராணம் பத்மபுராணம் என்னு மிர...
...வற்றுள், பிரமபுராணம் பதினுயிரங் கிரந்தமும்,
...தயாயிரங் கிரந்தமுமுடையன. ஆகப் பிரமபுராண...
...ம் அறுபத்தையாயிரம்.

ஆக்கினேயம் அக்கினிபுராணம். இது என்...
...முடையது.

பிரமகைவர்த்தம் சூரியபுராணம். இது பன்னீரா...
...முடையது.

சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவ... ...குணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமா... ...ள்ளதுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் தெ... ...ளிபளிங்கு வடிவினராய் என்று முறங்காது பிராமணுதிபதியாயிருப்பர்.

விஷ்ணுபுராண நான்கும் தாமசங்களாம். தமோகுணம் ... கருநிறமுடையதும் உதாசின ரூபமும் கூடகிருத்திய சமர்த்தமுமாயுள்... ...ளது. நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாம... ...சங்கள். விஷ்ணு கரியருஞ் சேஷசயனஞ் செய்வோரும் பக்தரை கிப்பிப்பவருமாயிருப்பர்.

பிரமபுராணம் இரண்டும் இராஜசங்களாம். இரஜோ... ...குணம் சிவந்த நிறமுடையதுந் துக்கத்துக்கிடமுஞ் சஞ்சலரூபமுமாயு... ... பிரமா செந்நிறமுடையராய்ச் சஞ்சலரூபியாயிருப்...

அக்கினிபுராணமுஞ் சூரியபுரா... ...யுக்தமாம். அக்கினியுஞ் சூரியனும் முக்குணவடிவின...

ஆதலால், இப்பதினெட்டி... ...ராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவ... ...புராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்கச்...

இப்புராணங்கள்... ...உபபுராணங்கள் பதினெட்... ...தலின் இவற்... ...னலாயிற்று. இனி, சிவபுரா... ...யுள்ள சைவபுராணம் என்னும் சிவமஹா... ...ங்களுடையதெனக்கூறினுமேனும், இலக்ஷ... ...ன்னிரண்டு ஸம்ஹிதைகளையுடையதென் ...ன் பூர்வபாகத்திற் சொல்லப்பட்டிருக்... ...தடியுங் காணப்படவில்லை. அவை பிரம... ...வென்றும், சிற்சில ஸம்ஹிதைகட்குப்

பாற்காதம்.

...றும் இவ்வடமொழிப்புராணத்துள் எ...
...ணத்தை நெடுநாளாகத் தமிழ்ப்படுத்தவே...
...காண்ட எமக்கு ஞானஸம்ஹிதை வாயுஸம்ஹி...
என்னும் மூன்று சங்கிதையே கிடைத்தன. ...
அச்சிட்டிருப்பதாகத் தெரிந்து அதனை வருவித்...
...ன்னிடத்திருந்த பிரதிக்கும் அப்பிரதிக்கும் பலவித்...
...வபுராணமெனப் பெயர்பூண்டிருந்தும் ஆங்காங்கு...
...மல்லாத கதாபேதங்களும் விரவியிருந்தன. அவற்றை
...வாறு கையெழுத்துப் பிரதிபோலவே பாடங்கொண்டும்,
...ிற்கு அச்சுப்பிரதியே ஆதாரவாகக்கொண்டும் மொழி
...ாயிற்று.

மிக்... க பெரிய இவ்வரிய வேலையைத்தொடங்கிய யாம் முற்று
விக்கவில்லை... யென்கிற பெயரும் அதனால் விளையுந் தோஷமுமடையாவண்
ணம் இத...னை முட்டின்றி முடித்துவித்த எம்பெருமான் திருவருட்பெருக்
கத்...தைப் பலகாலும் பரவுகின்றனம்.

இந்நூலிற் கூறிவரும் அரிய விஷயங்கள் மிக்க கல்விமான்களுக்
கே ப்பன்படக் கூடியவாயினும், கற்றோரன்றி மற்றோரும் இதன் கருத்
தை எ...திலுணரவேண்டுமென்னுங் கருத்துட்கொண்ட யாம் வடசொற்
களைப் ...ரும்பாலும் தற்பவ தற்சமங்களாக வமைத்தும், சரிதையை
விளக்கஞ்...த்தும் எளிய நடையில் எழுதலாயினம். இந்நூலின் மொழி
பெயர்ப்பு ச...திரிகள் வன்மையால் சரியாயிருப்பினும், பலவிடங்களில்,
சொற்குற்றம்...த்துக்குற்றம் இலக்கணக்குற்ற முதலியன விருக்கவுங்
கூடும். சின்னு...
இயற்கை யியற்... ...க்குத் தவறிருக்கை
ரும்புகழையே றிவினராகியசீவா... ...பெருமான் ப்ப
ரென நம்புகின்றன... ...றிந்த சான்றோர்கள் சிவ... ...ங்கீ...கரிப்ப

சைவாபிமான... ...ாண்டு குற்றங் குறியாது ...

நமது தமிழ்ப்பாஷையி...
வரால் வடமொழியினின்... ...ழ்ச்செல்வர்களே! கனவான்களே!
நன்றி பயக்குமென்பதில் ளொவ்வொன்றும் ஒவ்வொரு
தக்க நூல்களை முயன்று மொ... ...படின் உலகுக்குச் சாலவும்
கருணைபுரிவாராக. சுபம். ...தலின் ஒவ்வொ...
...ழியிட்...ளைக்...

சென்னை:
சார்வரிஸ்ரீ சிங்கரவி. } ஈ - இ...



(2- சூதமுனிவர்நைமிசாரணியவாசிகளுக்குச்சைவபுராணங்கூறுதல்.

உ

ஶுபமஸ்து.

ஓம் ஸாம்பஸதாஶிவாய நம:

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

ஞானஸம்ஹிதை.

காப்பு.

ஜகத: பிதரம் ஶம்பும் ஜகதோ மாதரம் ஶிவாம்।
தத்புத்ரம் ச கணாதீஶம் நத்வைதத்வர்ணயாம்யஹம்॥

உலகங்களெல்லாவற்றுக்கும் (பரம) பிதாவான சிவபெருமானையும், அவ்வுலகங்களெல்லாவற்றுக்கும் (பரம) மாதாவான ஸர்வமங்கள ப்ரதையாகிய உமாபிராட்டியாரையும், இவர்கள் புதல்வரான விநாயக மூர்த்தியையும் நமஸ்காரஞ்செய்து இச்சிவதத்துவத்தை வர்ணிக்கின்றேன்.

வாணீ யஸ்ய வக்த்ரே ச லக்ஷ்மீர்யஸ்ய ச வக்ஷஸி।
யஸ்யாஸ்தே ஹ்ருதயே ஸம்வித் தம் ந்ருஸிம்ஹமஹம் பஜே॥

எந்த நரசிங்கமூர்த்தியினது திருமுகத்தில் ஸரஸ்வதியும், திருமார்பில் இலக்ஷுமியும், இதயத்தில் ஞானமும் இருக்கின்றனவோ அந்த நரசிங்க மூர்த்தியை யான் அடைகிறேன்.

முதலாவது

புராணவரலாறுரைத்த அத்தியாயம்.

ஒருகாலத்தில் நைமிசாரண்ணிய வாசிகளான ரிஷிகள் யாவரும் (அதிவிநய பயபக்தியோடு) வியாஸ பகவானுடைய சிஷ்யராகியும் நற்குணங்களுடையவராகியும் விளங்கும் ஸூதமுநிவரை நோக்கிப் பின்வருமாறு வினவினார்கள்.

மகா பாக்கியசாலியான ஸூத முநிவரே! வெகு காலம் சிரஞ்சீவியாய்ச் சுகித்திருப்பீராக. தேவரீரது திருமுகமாகிய தாமரைமலரிலிருந்து பெருகாநின்ற ஞானமாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்கின்ற அடியேங்கள்

விசேஷமாகத் திருப்தி யடையாதவர்களாய், மறுபடியுஞ் சிலவற்றை வினவ விரும்புகின்றோம். பாபரகிதராகிய தேவரீர் வியாஸபகவானது திருவருளால் *கிருத கிருத்தியனென்னுந் தன்மை யுடைந்தவராகின்றீர். முற்காலத்தில் நடந்த சங்கதிகள் நிகழ்காலத்தில் நடக்கும் சமாசாரங்கள் இனி நடக்கப் போகும் விருத்தாந்தங்கள் ஆகிய த்ரிகால வர்த்தமானங்களில், தேவரீருக்குத் தெரியாத விஷயம் சிறிது மில்லை. குருவான வியாஸபகவானது கிருபையால் எல்லாம் ஸபலமாகச் செய்யப்பட்டன. தேவரீர் கிருபை செய்து ஸர்வோத்கர்ஷமான சிவபெருமானது தத்துவத்தையும், அவர் விஷயமாகச் செய்யவேண்டிய சிறந்த பூஜையையும், அவரது அநேகவிதமான சரித்திரங்களையுந் திருவாய்மலர்ந் தருளவேண்டும். நிர்க்குணனான ஈசுவரன் எப்படி ஸகுணனாகிறான்? அடியேங்கள் நன்றாக விசாரித்துச் சிவதத்துவத்தை யறிந்தவர்களல்லோம். மகா தேவரும் உலகத்திற்குச் சுகத்தைச் செய்பவருமான சங்கரனென்னுந் திருநாமத்தையுடைய பகவான் இவ்வுலக சிருஷ்டிக்கு முற்காலத்திலும், அந்தச் சிருஷ்டியின் மத்தியகாலத்திலும், முடிவான பிரளயகாலத்திலும் எவ்விதமாக விருக்கின்றார்? அந்தச் சிவபெருமான் எப்படிப் பிரசன்னராகிறார்? அப்படிப் பிரசன்னராகி இவ்வுலகங்களின் பொருட்டு எவ்விதமான பலன்களைக் கொடுக்கிறார்? எந்த வுபாயத்தால் பகவானான மகாதேவன் சீக்கிரத்திற் பிரசன்னராகிறார்? இவற்றையும் இன்னும் எங்களால் கேட்கப்படாதவிஷயங்களையும் உத்தமவிரதசீலரான தேவரீர் சொல்லவேண்டுமென்று ஸௌநகரர்தி முநிவர்கள் கேட்க, ஸூதமுநிவர் மகா சந்தோஷத்தோடு கூடியவராய் அம்முநிவர்களுக்கு ஓர் வார்த்தை சொன்னார்.

புராணவரலாறுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

இரண்டாவது

ஜோதிலிங்கோற்பவவர்ணன முரைத்த அத்தியாயம்.

முநிசிரேஷ்டர்களே! நீங்கள் நன்றாய்க்கேட்டீர்கள். எவ்வெவ்விஷயங்களைநீங்கள் இப்பொழுது வினவினீர்களோ அவ்வவ்விஷயங்களையே நாரத முநிவர் பிரமஞானத்தை யறிவதற்காகப் பிதாவான பிரமதேவரிடத்தில் முன்னொருகாலத்திற்கேட்டிருக்கின்றனர். அதன்விபரஞ்சொல்லுகின்றேன்.

ஓபிராமணர்களே! முநிபுங்கவரான நாரதபகவான் ஸமஸ்தலோகங்களிலுஞ் சஞ்சரித்து, சிவபெருமானது அநேகவிதமான திருவுருவங்களைத் தரிசித்து, பூஜை நமஸ்காரங்கள் செய்து, பரமாத்மாவான சிவபெருமானது தத்துவத்தை யறிவதற்காக அவரது திருநாமத்தைச் சிந்தித்துக்கொண்டே பிரமதேவரிடஞ் சென்று அவரைப் பணிந்து, பின்வருமாறு கேட்கின்றனர்.

* கிருத கிருத்தியர் - நூல்களிற் கூறிய ஒழுக்கங்களையெல்லாம் முறைப்படி செய்து முடித்தவர்.

பிரமஞானிகளுட்சிறந்தவராகியும், பிரபுவாகியும், இவ்வுலகங்கட்குப் பிதாமகனுகியும் விளங்கும் பிரமதேவரே! தேவரீரது அநுக்கிரகத்தினுல் உத்தமமான விஷ்ணுவின் மகத்துவ முழுவதையும், பக்திமார்க்கத்தையும், ஞானமார்க்கத்தையும், செய்தற்கருமையாகிய தபோமார்க்கத்தையும்,தான மார்க்கத்தையும், தீர்த்தங்களின் மார்க்கத்தையும் அறிந்திருக்கிறேன். ஆனல், சிவபெருமானது தத்துவத்தையும், விதிப்படி கிரமமாகச் செய்ய வேண்டிய அவருடைய பூஜையையும் அவரது நாநாவிதமான சரிதங்களினும் அறியப்படவில்லை. எந்தையே! அவற்றை அடியேனுக்குச் சொல்ல வேண்டும். நிர்க்குணமான சிவதத்துவத்தைப்பற்றி ஸர்வஜ்ஞரான தேவரீரையன்றி, சந்தேகத்தோடுகூடிய வேறு யாரைக் கேட்கப்போகிறேன். ஆகையால், அச்சிவபெருமானது மகிமையையும், உலகோபகாரமாக அவரால் அருளிச்செய்யப்படும் விரதங்களையும், அவர் ஸந்துஷ்டராகி உலகங்களுக்கு எந்தெந்தப் பலன்களைக் கொடுக்கின்றுரோ அவற்றையும், சிவலிங்கோற்பத்தியையும், பார்வதிதேவியாரது விவாஹமஹோற்சவத்தையும், இவை போன்ற என்னுற் கேட்கப்படாத பிறவற்றையுந் தேவரீர் சொல்ல வேண்டும். யான் இவ்விஷயங்களைப் பூர்வத்தில் அநேகரிடத்திற் கேட்டிருந்தபோதினுந் திருப்தியடைந்திலன் என்று கேட்டார். இவ்வாறு வினவிய தனது *தேகஸம்பூதரான நாரதமுநிவர் வார்த்தையைக் கேட்டு உலகங்கட்குப் பிதாமகனுன பிரமதேவர் சொல்லத்தொடங்கினர்.

பிராமணனுன †நாரதரே! உலகங்கட்கு இதத்தைச்செய்யும் விருப்பத்தால் நீர் நன்று வினவினீர். எதைக்கேட்பதனுல் எல்லாவுலகங்கட்கும் ஸமஸ்தபாபநாசமும் உண்டாகுமோ அப்பேர்ப்பட்ட சிவபெருமானது சிறந்த தத்துவத்தையும், அவரது அற்புதமான திருவுருவத்தையும் என்னுலும் விஷ்ணுவினுலும்நன்றுக அறியப்படவில்லையாயினும்எனக்குஎட்டியவரையிற் சொல்கின்றேன். புத்திரனுன நாரதரே! ‡அஸதாத்மகமாயும் ஸதாத்மகமாயுமிருக்கின்ற இவ்வுலகம் எப்பொழுது கண்ணுக்குப் புலப்படாததாக ஆய்விடுகிறதோ அப்பொழுது வியாப்திரூபமான பிரமமாக ஆய்விடுகிறது. அப்பிரமமானது தூலமுமன்று; சூக்குமமு மன்று; உஷ்ணமானதுமன்று; சீதமானதுமன்று; உற்பத்தியுடையதுமல்ல; நாசமடைவதுமல்ல. மிகுந்த ஸத்தியத்தையும் அறிவையும் உடையது. அத்தகைய பிரமத்தை யோகிகள் எப்பொழுதும் ஞானக்கண்ணுற் பார்க்கின்றனர். யாவுமாகியும் சிறந்ததாகியும் விளங்கும் அந்தப் பிரமமானது ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் தருகின்றது. சிலகாலங்கழித்து அப்பிரமத்திற்கு இச்சையுண்டாயிற்று. அதைப் பிரகிருதியென்றும் மூலகாரணமென்றுஞ் சொல்லுவர். அப்பிரகி

* தேகஸம்பூதர் - தன் தேகத்தினிடத்துத் தோன்றினவர்.

† நாரதர் - நரர்கட்கு இதத்தைச் செய்பவர்.

‡ அஸதாத்மகம் - ஆத்மா இன்மையானதன்மை. ஸதாத்மகம் - ஆத்மா உண்மையானதன்மை.

ருதியென்பவள் எட்டுக்கைகளையும், விசித்திரமான வஸ்திரத்தையும், ஆயிரம் பூர்ணசந்திரர்களுக்குச் சமானமான முகத்தையு முடையவள்; அநேக விதமான ஆபரணங்களை யணிந்தவள்; நாநாவிதமான கானங்களோடு சேர்ந்தவள்; எல்லாவற்றிற்குங் காரணமானவள்: அழகுமுதலியவற்றால் * அத்விதீயையாயும், புருஷஸம்பர்க்கத்தால் ஸத்விதீயையாயுமிருக்கிற அம்மாயாதேவியானவள் எந்தப்பிரமத்தினிடத்திலிருந்து எந்தக்காலத்தில் உண்டானாளோ அந்தப்பிரமத்தினிடத்திலேயே அதேகாலத்தில் புருஷனும் உண்டானான். அவ்விருவரும் ஒன்றுசேர்ந்து யோசனைசெய்வதில் பிரீதியுள்ளவர்களாய் நம்மிருவரால் யாது செய்யப்படவேண்டுமென்று ஒருவரோடொருவர் யோசித்தார்கள். இவர்கள் இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் நற்குணத்தோடுகூடிய மங்களகரமான ஓர் வாக்கு "உங்களுக்குண்டான சந்தேகத்தைப் போக்குவதற்கு நீங்களிருவருந் தவஞ் செய்யவேண்டும்" என்று—உண்டாக, அவ்வாக்கைக் கேட்ட பிரகிருதி புருடன் ஆகிய இருவரும் மிகவுங் கடினமான தவத்தைச்செய்தார்கள்.

நாரதரே! யோகமார்க்கத்தை முக்கியமாகக் கொண்ட அப் பிரகிருதி புருட னிருவரும், எவ்வளவோ காலங்கழித்து அந்த யோகத்தியான மார்க்கத்தினின்றும் விழித்துக்கொண்டு, விழித்தவுடனே ஆ! ஆ! நம்மால் எவ்வளவுகாலந் தவஞ்செய்யப்பட்டதென்று ஆச்சரியப்பட்டார்கள். அந்த இருவருடைய யாக்கையினின்றும் நாநாவிதமான ஜலப்பெருக்குஉண்டாகிச் சகல வுலகங்களிலும் வியாபித்தது. எல்லையில்லாததும், பரிசுத்தமாத்திரத்திற் பாபத்தைப் போக்குவதுமான அந்த ஜலமானது பிரமரூபமாக ஆயிற்று. அப்பொழுது புருடனானவன் மிகவும் இளைப்படைந்து அப் பிரகிருதியுடன் சேர்ந்து ஜலத்தில் அநேககாலம் பிரீதியுடனே நித்திரைசெய்தான். அம் மகாத்மாவான புருடனுக்கு அந்த ஜலஶயநமுதல் நாராயண னென்னும் பெயர் வழங்கலாயிற்று. அந்தப் பிரகிருதிக்கு நாராயணி யென்னும் பெயர் ஸர்வஸம்மதமாய் வழங்கலாயிற்று. பிரகிருதிபுருடன் ஆகிய இருவர் தவிர அக்காலத்தில் ஒன்றும் உண்டாகவில்லை. இப்பால் பரமாத்ம சம்பந்தமான தத்துவங்கள் உண்டாயின. பிரகிருதியினிடத்தில் மஹத்தும், மஹத்தினிடத்தில் (ஸத்வம் - தாமஸம் - இராஜஸமென்னும்) முக்குணங்களும், அம் முக்குணங்களினின்று (ஶப்தம் - ஸ்பரிஸம் - ரூபம் - ரஸம் - கந்தமென்னும்) பஞ்சதன்மாத்திரைகளும், அப் பஞ்சதன்மாத்திரைகளிடமிருந்து (ஆகாஸம் - வாயு - தேயு - அப்பு - பிருதிவி யென்னும்) பஞ்சபூதங்களும், அப் பஞ்சபூதங்களிடத்தில் (வாக்கு - பாதம் - பாணி - பாயுரு - உபஸ்தமென்னும்) கன்மேந்திரியங்களும், (மெய்-வாய்-கண்-மூக்கு-செவி யென்னும்) ஞானேந்திரியங்களும், (மனம்-புத்தி-சித்தம்-அகங்கார மென்னும்) அந்தக்கரணங்களும் உண்டாயின. இத்தத்துவங்கட்கு இவ்வாறு எண்ணிக்கை

* அத்விதீயை - இரண்டற்றவள். அதாவது சமானமில்லாதவள்.



1897

(3- திருமால் யோக நித்திரையிலிருக்கையில் பிரமனுதித்தது-

யிடப்படுகிறது. பிரகிருதிபுருடர்கள் தவிர அத் தத்துவங்கள் ஜலமயம். இருபத்துநான்கு தத்துவங்களுடன் சேர்ந்திருக்கின்ற அத்தத்துவமானது பிரகிருதி புருடர்களால் ஒன்றாய்ச் சேர்க்கப்படுகிறது.

முநிசிகாமணியே! அத் தத்துவத்தைத் தன் சுவாதீனஞ் செய்து கொண்டு பிரமஸ்வரூபமான ஜலத்தில் நித்திரைசெய்யுந் தேவனான நாராயணன் தூங்குகையில், அவரது நாபியினின்றும் எண்ணிறந்த இதழ்களோடு கூடியதாயும், தாதுக்களால் வியாப்தமாயும், அநேகயோசனை யகலமும் அநேகயோசனை யுயரமுமுடையதாயும், கோடிசூரியருக்குச் சமமான காந்தியுடன்கூடியதாயும், அதி சுந்தரமும் தத்துவ ஸூக்ஷ்மமுமான மிகவுஞ் சிறந்த ஓர் தாமரைப்புஷ்பம் உதித்தது. அத் தாமரைமலரிலிருந்து ஹிரண்யகர்ப்பனான நான் புத்திரனாக உதித்தேன். அந்த நாராயணனுடைய மாயையால் மோகிதனான நான் கமலம் தவிர வேறொன்றையும் அறியவில்லை. நான் யார்? எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறேன்? என்னால் யாதுசெய்யவேண்டியது? நான் யாருக்குப் புத்திரனாகப் பிறந்தேன்? என்னை உண்டுசெய்தவர்கள் யாவர்? என்றிப்படியாகச் சந்தேகப்பட்டுக்கொண் டிருக்கிற எனக்கு நிச்சய மொன்றுந் தோன்றாமல், மறுபடியும் யான் எந்தக்காரணத்தால் மோகத்தையடைந்தேன்? எவ்விடத்தில் இத்தாமரையின் அடிப்பிரதேசமிருக்கின்றதோ அவ்விடத்தில் நம்மைச்சிருஷ்டிசெய்தவனும் இருப்பான்; அதற்குச் சந்தேகமில்லை யென்று இவ்வாறு மனோதிடம் செய்துகொண்டு தாமரைமலரினின்றும் இறங்கி, அநேகவருடகாலம் ஒவ்வொரு நாளத்திலுஞ் சுற்றியும், மோகிதனான நான் உத்தமமான அந்தக் கமலஸ்தானத்தையடையவேயில்லை. மறுபடியும் சந்தேகத்தோடு அம்மலரையடையவிரும்பி அக் காம்பின் வழியாக ஏறினேன். அந்தக் கமலத்தின் * குட்மனத்தை யடையவில்லை. அந்தக்காம்புகளின் வழியிற் சுற்றிக்கொண்டிருக்கும் எனக்கு அநேகவருடம் சென்றன. க்ஷணகாலம் அவ்விடத்தில் இளைப்படைந்து மூர்ச்சையுடன் கிடந்தேன். அப்பொழுது மிகவும் சிறந்ததும் மங்களப்ரதையுமான வாக்கானது "தவஞ்செய்" என்று உதித்தது. அவ்வசரீரியைக் கேட்டு யான் பன்னிரண்டுவருடங்கள் தவஞ்செய்தேன். அக்காலத்தில் நான்கு கைகளுடையவராயும் சோபைக்கு ஸ்தானமான திருமுகத்தை யுடையவராயும் பீதாம்பரந் தரித்தவராயும் சங்க சக்கரமுதலிய ஆயுதங்களை ஏந்தினவராயும் மேகவர்ணராயும் மிகவும் ஸந்துஷ்டராயும் தெளிவான முகபங்கயத்தை யுடையவராயும் கிரீடமுதலான பூஷணத்தோடு கூடியவராயும் கோடி மன்மத ஸங்காசராயும் இருக்கும் விஷ்ணுமூர்த்தி எனக்கு அநுக்கிரகஞ் செய்வதற்காகப் பிரசன்னமானார். பிரகிருதியோடு உண்டுசெய்யப்பட்ட விஷ்ணுவினுடைய அத்தகைய அழகான ரூபத்தைக் கண்டு ஆனந்தத்தையடைந்தேன். தங்கமயமான காந்தியை யுடையவரும், வெளிக்கு ஸத்வகுணப்

* குட்மனம் - மொக்கு.

பிரதனுகத்தோன்றியபோதிலும் துஷ்டர்களை நாசஞ்செய்வதற்காக அகத்தில் தமோகுணப்பிரதனுகியும், நாரணனுகியுமுள்ள யாரொருவர் கண்களுக்குப்புலப்பட்டாரோ அப்பேர்ப்பட்ட விஷ்ணுவை நான் பார்த்து மிகவுங் களிப்புற்றேன். அவரது மாயையால் மோகிதனுன யான் அவ்விஷ்ணுவை நீயார்? சொல்லென்று கேட்டேன்.

நாரதரே! அவ்வாறுவினவிய என் மொழியைக் கேட்ட விஷ்ணுவானவர் என்னைநோக்கி, நல்லவிரதமுடையவனே! அடா குழந்தாய்! ஸத்வ குணத்தால் வியாப்தனுகவும் உன்னை நிர்மாணம் செய்தவனுகவும் விஷ்ணுவாகவும் என்னையறி. இவ்விஷயம் உண்மையென்று புன்சிரிப்போடு கூறிய அவ்விஷ்ணுமூர்த்தியின் உல்லாசவார்த்தையைக்கேட்டு, அவரது மாயையால் மோகத்தையடைந்தவனுய், மீண்டும் அவரைப் பயப்படுத்தி, எவ்வாறு குருவானவன் சிஷ்யனை எளிதாய்ப்பேசுவானே அவ்வாறு சிருஷ்டித்தொழில் செய்கின்ற என்னை அடாகுழந்தாயென்று சொல்லுகிருய். உன்னைமாத்திரம் இவ்வுலகங்களை உண்டுசெய்கின்றவனென்றும், மாயையை வியாபிக்கச்செய்கின்றவனென்றும், விஷ்ணுவென்றும், ஸமஸ்த உலகங்களையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவனென்றும், சிருஷ்டி செய்கிறவனென்றும், இரட்சிப்பவனென்றும், தாமரை மலர்போலிருக்குங் கண்களையுடையவனென்றும் ஏன் மோகத்தால்சொல்லுகிருய்? அக்காரணத்தைச் சீக்கிரத்திற்சொல் என்று வினவிய என்னை அவ்விஷ்ணுவும், நானே உலககாரணன்; என்னுடைய சரீரத்தினின்றும் நீ உண்டானுய்; இவ்வுலகங்களை உண்டுசெய்வதற்குண்டான என்னை மறந்துவிட்டாய்; இவ்விஷயத்தில் உன்பேரில் தப்பில்லை; இஃது என் மாயையாற் செய்யப்பட்ட காரியம். பிரமாவே! உண்மையாகச் சொல்லுகிறேன். முன் என்னுல் உண்டுசெய்யப்பட்ட இருபத்துநான்கு தத்துவங்களும் என்னிடத்திலேயேயிருக்கின்றனவென்று, இவ்வாறுரைத்த நாராயணனுடைய வார்த்தையைக் கேட்டு, நான் கோபங்கொண்டு, நீயார்? உன்னை யுண்டுபண்ணினவன் ஒருவ னிருக்கவேண்டும் என்று கூறிப் பிறகு மிகவுங் கோரமான யுத்தஞ்செய்தேன். இப்படி யுத்தஞ்செய்த எங்களிருவருடைய விவாதத்தைத் தீர்ப்பதற்காகவும் எங்களுக்கு ஞானத்தை யுற்பவிக்கச் செய்வதற்காகவும் எங்களிருவருக்கும் மத்தியில் அற்புதமான ஓர் சோதிலிங்கம் உண்டாயிற்று.

முநிசிரேஷ்டராகிய நாரதரே! பல்லாயிரங்கோடி ஜ்வாலைகளால் பூரணமாயும், காலாக்நியின் ஸமுகத்திற்கு ஒத்ததாயும், நாச விருத்திக ளற்றதாயும், ஒப்பற்றதாயும், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததாயும், பிரகாசமில்லாததாயும், உலகங்களை யுண்டுபண்ணத்தக்கதாயுமிருக்கிற அச்சோதிலிங்கத்தினது எண்ணிறந்த சுடர்களால்மோகத்தை யடைந்த விஷ்ணுவானவர் என்னைப்பார்த்து, பிரமாவே! ஏன் யுத்தஞ்செய்கிருய்? இவ்விடத்தில் மூன்ருவது ஒருவன் வந்திருக்கிருன். நம்மிருவரது ஆயோதன மிருக்கட்டும். அக்கினிமயமாக வுண்டாயிருக்கிற இச்சோதிலிங்கம் எவ்விடத்திலிரு



(4- விவாதமுற்ற பிரமனும் வஷ்ணுவும் சோதியின் அடிமுடி தேடியுணராது துதித்தது-

ந்து உண்டாயிற்றென்று நாற்புறத்திலும் பார்ப்போம். அதற்காக நீ ஹம்ஸ வுருவை யெடுத்துக்கொண்டு வாயுவேகத்திற்குச் சமமான வேகத்துடன் அதிசீக்கிரத்தில் ஆகாயத்திற்செல்லவேண்டும். நானும் வராகவடிவமெடுத்துக் கொள்ளுகிறேன் என்று கூறி, விஷ்ணுவானவர் பன்றியாய் வடிவமாறினர். நாரதரே! நானும் அழகான சிறகுகளோடுகூடிய அன்னப்பறவையின் வடிவாகினேன். அதுமுதல் எனக்கு ஹம்ஸமென்றும் ஹம்ஸராஜனென்றும் பெயர்வழங்கலாயின. "ஹம்ஸ ஹம்ஸ" என்று—எவன் ஜபஞ் செய்கிருனே அவன் நானாக ஆய்விடுகிறான். அன்னவடிவடைந்த நான் வாயுவேக மனோவேகத்துடன் ஆகாயத்திற் பறந்தேன். நாராயணனே பத்துயோசனை நீளமும், பத்துயோசனை அகலமும், மேருபருவதம்போன்ற சரீரமும், குரூர நகதுதிகளும், பெரியபற்களும், ஊழிக்கால சூரியனுக்குச் சமமான காந்தியும், நீளமானமூக்கும், பெருஞ்சப்தமும், சிறுகால்களும், பராக்கிரமமும், மனோவேகமுமுடைய சுவேதவராக வடிவமாய்ப் பாதாளலோகத்திற்குச்சென்றார். இவ்வாறுசென்ற விஷ்ணுவானவர் ஆயிரவருடமட்டும் பாதாளத்திற் சஞ்சரித்துத் தேடிக்கொண்டிருந்தார். அதுமுதல் எல்லா வுலகங்களுக்கும் சுவேதவராககற்பம் பிறந்தது.

சோதிலிங்கோற்பவவர்ணனமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

மூன்றாவது

பிரம விஷ்ணுக்களுக்கு வரமளித்த அந்தியாயம்.

முநிசிகாமணிகளே! விஷ்ணுவும் பிரமாவும் முறையே வராக வடிவையும் ஹம்ஸ வடிவையும் எடுத்துக்கொண்டு பாதாளம் ஆகாயம் இவற்றிற் சஞ்சாரஞ் செய்யச் சென்றபிறகு நடந்த சங்கதிகளைச் சொல்லுகின்றேனென்று ஸூதர் சொல்லுகின்றார்.

பிரமதேவர் சொல்வது:—நாரதரே! விஷ்ணுவானவர் வெகுகாலஞ் சுற்றியும் அவ்விலிங்கத்தினது சிறிது காரணத்தையும் அறியவில்லை. அவ்வளவுகாலம் ஆகாயத்திற்சென்ற நானும் சிறிதும் அறியவில்லை. அதன் மூலத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று விடாமுயற்சியோடு சென்ற நான் மிகவும் இளைப்படைந்து அவ்விலிங்க மிருந்த இடத்திலே வந்து சேர்ந்தேன். அதே மாதிரி நாராயணனும் மிகவும் இளைப்படைந்து பயந்த கண்களோடு வராகவடிவுடனேயேவந்து என்னோடுசேர்ந்து இலிங்கஸ்வரூபியான பகவானை அடிக்கடி நமஸ்காரஞ் செய்து அப்பகவானது மாயையால் மோகத்தையடைந்து இஃதென்னவென்று சிந்தித்தார். இத்தன்மையதென்று எண்ணக்கூடாததாயும், பெயரும் செயலும் அற்றதாயும், லிங்கமில்லாததாயும், பத்தர்களுக் கருள்செய்யும்படி லிங்கத்தின் தன்மையை யடைந்ததாயும், யோகிகளுக்கும் புலப்படாததாயுமுள்ள அந்தச் சோதிலிங்க வுருவத்தை

மனத்தை யுறுதிசெய்து நமஸ்கரித்த நாங்களிருவரும், கடவுளே! ஸமஸ்த மூலிகாரணனே! தேவரீரது திருவுருவத்தை நாங்கள் அறியோம். தேவரீரது ஸ்வரூபம் எவ்வகைப்பட்டதோ? தேவரீர் யாரோ? அப்படி அகோசரமான தேவரீரை நமஸ்காரஞ் செய்கிறோம் என்று, இவ்விதமாகத் தோத்திரஞ்செய்து ஆயிரவருடம் நமஸ்காரஞ் செய்துகொண்டிருந்த எங்களிருவருக்கும், மகாப்பிரகாசமாகவும் ஆனந்தமயமாகவும், *ப்லுதமாத்திரையின் லக்ஷணத்துடன் கூடியதாகவுமுள்ள ஓம் என்கிற சப்தரூபம் உண்டாயிற்று.

புத்திரனான நாரதனே! மகா சப்தத்துடன் சேர்ந்திருக்கிறதே இஃதென்னவென்று யோசித்த நாராயணன் எதனிடத்திலிருந்து இந்தச் சப்தம் உண்டாயிற்றோ அந்தப் பொருளுக்கு நமஸ்காரம் என்று நமஸ்கரித்து, அவ்விலிங்கத்தினது தென்பாகத்தில் அழிவில்லாததும் முதலாவதுமான அகாரத்தையும், அதன் வடபாகத்தில் உகாரத்தையும் இவ்விரண்டிற்கும் நடுவில் மகாரத்தையும், உயரத்தில் "ஓம்" என்னுஞ் சப்தவிசேஷத்தையும் பார்த்தார். அவற்றுள் தெற்கிலிருந்த முதலெழுத்தாகிய அகாரம் சூரியமண்டலம் போலவும், வடக்கிலிருந்த இரண்டாவதெழுத்தாகிய உகாரம் அக்கினியின் காந்தி போலவும், நடுவிலிருந்த மூன்றாவதெழுத்தாகிய மகாரம் சந்திரமண்டலம் போலவும் விளங்க, அதன்பேரில் ஸ்படிகக்கல் போன்ற காந்தியையுடையதான பரம்பொருளைத் தரிசித்தார்.

லிங்கஸ்ய தக்ஷிணே பாகே ததா(அ)பஶ்யத் ஸநாதநம் ।
ஆத்யவர்ணம் அகாராக்யம் உகாரம் சோத்தரே தத꞉ ।
மகாரம் மத்யதஶ்சைவ நாதாந்தம் தஸ்ய சோமிதி ॥

சாக்கிர சொப்பன சுழுத்தி துரியமென்னும் நான்கிற்கும் மேம்பட்ட துரியாதீதமாயும் நிர்க்குணமாயும், மாயாஸம்பந்த விகார மில்லாததாயும், ஸஜாதீயம் விஜாதீய மென்னுந் தொந்தமற்றதாயும், இரண்டாவ தில்லாததாயும், உள்வெளி அற்றதாயும், ஆதிமத்தியாந்தரகிதமாயும், ஆனந்தத்திற்குக் காரணமான பரமானந்தமாயும், ஸத்யமாயும், அழிவில்லாததாயும், முக்கியமாயுமிருக்கிற ஏகாக்ஷரம் என்று சொல்லப்படுகிற பரப்பிரமத்தைப் பார்த்தார். [அகாரமென்னும் பெயரையுடைய பகவான் சிருஷ்டிபண்ணுகிறவர். உகாரமென்னும் பெயரையுடைய பர்க்கர் திதித்தொழில் செய்பவர். மகாரமென்னும் பெயரையுடைய பவர் அனுக்கிரகிப்பவர்.] நானும் அந்த விஷ்ணுவும் ஆச்சரியமுடைய மனதுடன் அச்சமயத்தில் மிகவும் ஆச்சரியகரமானதும், அழகுள்ளதும், ஐந்து திருமுகங்களுடையதும், பத்துத் திருக்கரங்களுடையதும், பச்சைக்கற்பூரம்போன்ற நிறமுடையதும், பலவிதமான காந்தியையும் பலவித ஆபரணங்களையும் கம்பீரத்தையும் பராக்கிரமத்தையும் மகா புருஷலக்ஷணத்தையும் சிறந்த உருவத்தையும் உடையதும், எல்லாவற்றையும் உண்டுசெய்யத் தக்கதுமாகிய சிவதத்துவத்தையே பார்த்து, உட

* ப்லுதமாத்திரை என்றது மூன்று மாத்திரை.



(5- பிரமவிஷ்ணுக்கள் சிவபெருமானைத் துதித்து அவரது ஐம்பத்தோரக்ஷரவடிவைத் தரிசித்து வரம் பெற்றது-

னே அவர்தான் எல்லாத் தேவர்களுக்கும் ஈசனென்று தெரிந்துகொண்டு விதிப்படி வேதோக்தமான ஸத்யோஜாதாதி மந்திரங்களினால் விஷ்ணுவானவர் அவரைத் தோத்திரஞ் செய்தார்; நானும் அப்படியே, தோத்திரஞ்செய்தேன். எங்கள் இருவருடைய தோத்திரங்களாற் சந்தோஷப்பட்ட மாயா ஸம்பந்த மற்றவரான மகேசுவரன் திவ்விய * ஸப்தமயமான ரூபத்தையடைந்தவராய் அந்த ஜ்யோதிலிங்கத்தில் பெருஞ்சிரிப்புடன் விளங்கினர்.

அகாரஸ்தஸ்ய மூர்த்தா து லலாடம் தீர்க்க உச்யதே ।
இகாரம் தக்ஷிணம் நேத்ரம் ஈகாரம் வாமலோசநம் ॥ (உ௨)
உகாரம் தக்ஷிணம் ஶ்ரோத்ரம் ஊகாரம் வாம உச்யதே ।
ருகாரம் தக்ஷிணம் தஸ்ய கபோலம் பரமேஷ்டிந: ॥ (உ௩)
வாமம் கபோலம் ரூகாரம் லு லூ நாஸாபுடே உபே ।
ஏகார ஓஷ்ட ஊர்த்வஶ்ச ஐகாரஸ்த்வதரோ விபோ: ॥ (உ௪)
ஓகாரஶ்ச ததௌகாரம் தந்தபங்க்தித்வயம் க்ரமாத் ।
அம் அஸ்தாலுநீ தஸ்ய தேவதேவஸ்ய ஶூலிந: ॥ (உ௫)
காதிபஞ்சாக்ஷராண்யஸ்ய பஞ்சஹஸ்தாநி தக்ஷிணே ।
சாதிபஞ்சாக்ஷராண்யேவம் பஞ்சஹஸ்தாநி வாமத: ॥ (உ௬)
டாதிபஞ்சாக்ஷரம் பாதஸ் தாதிபஞ்சாக்ஷரம் ததா ।
பகாரம் உதரம் தஸ்ய ஃபகாரம் பார்ஶ்வ உச்யதே ॥ (உ௭)
பகாரம் வாமபார்ஶ்வம் து பகாரம் ஸ்கந்த உச்யதே ।
மகாரம் ஹ்ருதயம் ஶம்போர் மஹாதேவஸ்ய யோகிந: ॥ (உ௮)
யகாராதிஸகாராந்தம் விபோர்வை ஸப்ததாதவ: ।
ஹகாரம் நாபிரூபம் ஹி க்ஷகாரம் க்ராண உச்யதே ॥ (உ௯)
ஏவம் ஶப்தமயம் ரூபமகுணஸ்ய குணாத்மந: ॥

அகாரம் அவருடைய சிரம், ஆகாரம் நெற்றி, இகாரம் வலதுகண், ஈகாரம் இடதுகண், உகாரம் வலதுசெவி, ஊகாரம் இடதுசெவி, ருகாரம் வலதுகன்னம், ரூகாரம் இடதுகன்னம், லுகாரம் வலதுநாசி, லூகாரம் இடதுநாசி, ஏகாரம் மேலுதடு, ஐகாரம் கீழுதடு, ஓகார ஔகாரங்கள் முறையே மேலுங் கீழுமுள்ள பல்வரிசைகள். அம் அந்தப் பெருமானுடைய வலதுதாடை, அ: இடது தாடை, க வ ம வ ங என்னும் பஞ்சாக்ஷரங்கள் வலதுபக்கத்து ஐந்து திருக்கரங்கள், ச ஊ ஜ ஊ ஞ என்னும் பஞ்சாக்ஷரங்கள் இடதுபக்கத்து ஐந்து திருக்கரங்கள், ட ಠ ಡ ಢ ண என்னும் பஞ்சாக்ஷரங்கள் வலது கால், த ய த ய ந என்னும் பஞ்சாக்ஷரங்கள் இடதுகால், பகாரம்வயிறு, ஃப காரம் வலதுபக்கம், ப காரம் இடதுபக்கம், ப காரம் தோள், மகாரம் மகாயோகியும் மகாதேவனுமாகிய சம்புவினுடைய மனது, ய ர ல வ ஶ ஷ ஸ (என்னும் எழுத்துக்கள்) முறையே ரஸம், ரக்தம், மாமிசம், மேதஸ், எலும்பு,

* ஸப்தமயமான ரூபம் - ஐம்பத்தோரக்ஷரங்களின் வடிவம்.

மஜ்ஜை, சுக்கிலம் என்னும் ஸப்ததாதுக்கள், ஹகாரம் தொப்புள், க்ஷகாரம்
நாதம் என்றுசொல்லப்படுகிறது. இப்படி குணசொரூபியாயும்நிர்க்குணனாயு
மிருக்கிறவனுடைய ரூபமானது ஸப்தமயமாம். அத்தகைய பகவானைஎன்னு
டன்கூட விஷ்ணுவும் பார்த்து, பிரபுவே! எங்கள்விஷயத்தில் கிருபை செய்ய
வேண்டும் என்று விசேஷமாய் வேண்டிக்கொள்ள, எங்கள் பிரார்த்தனைக்
கிரங்கிஅப்பொழுது தயவுள்ளவனாயிருக்கிறேன் என்று திருவாய்மலர்ந்தரு
ளியதைக் கேட்டு, நாங்களிருவரும், மகாதேவனே! இறைவராகிய தேவரீர்
பிரசன்னமானபக்ஷத்தில் எங்களுக்கிஷ்டமான வரத்தைக் கொடுக்கவேண்டு
மென, சிவபெருமான் - சிருஷ்டிசெய்பவன் பிரமன்; சிருஷ்டித்தவற்றைக்
காப்பவன் விஷ்ணு; சங்கரிப்பவன் உருத்திரன்; இந்தப் பிரகிருதிதான் தேவ
ஸம்பந்தமானது. இந்தப் பிரகிருதியில் பிரமாணி யென்ற பெயரையுடைய
சக்தி பிரமனையடையப்போகிறது. இன்னும் இந்தப் பிரகிருதியில் லக்ஷ்மி
யின் பெயரால் ஒரு சக்தி விஷ்ணுவையடையப்போகிறது. காளியென்னும்
பெயரையுடைய சத்தி என் அமிசமான உருத்திரனை அடைவாள். அந்தக்
காளியானவள் சில காரியார்த்தமாக ஜோதிரூபமாக வுண்டாவாள். இதனால்
சுபகரமான தேவர்கள் மூவரென்றும், சுபகரமான சத்திகள் மூவரென்றுஞ்
சொல்லப்படுவர். அந்த மூவரும் என்னுடைய கட்டளைப்படி சேர்ந்து தமது
சத்தியருடன் கலந்து சிருஷ்டிதிதிசங்காரங்களைச் செய்வர் என்று திருவாய்
மலர்ந்தருளின சிவபெருமானை விஷ்ணுமூர்த்தியானவர் நோக்கி மீண்டும்
விண்ணப்பஞ் செய்கின்றார்.

சுவாமீ! தேவரீராற் சொல்லப்பட்டவற்றை நாங்கள் ஏற்றுக்கொ
ண்டு செய்கின்றோமாயினும் விஞ்ஞாபனஞ் செய்துகொள்ளவேண்டியதொன்
றுண்டு. அதையுந் தேவரீரே செய்யவேண்டியவர் என்றார். அவ்வேண்டு
கோளை யங்கீகரித்த பெருமான் "ஓ விஷ்ணுவே! உன் விசுவாசத்தைப்பற்றி
மிகவும் இஷ்டத்தை உண்டுபண்ணுகிற இரட்சித்தற்றொழிலாகிய ஒரு பதவி
யைக்கொடுக்கிறேன்" என்றுகூறினர். உலகங்களுக்குச் சுகத்தையுண்டுசெய்
கிற சங்கரபகவானைக்குறித்து விஷ்ணுவானவர் தேவதேவா! நமஸ்காரம்:
எனக்குப் பதவிமுதலியன வேண்டாம். தத்வோபதேசம் செய்யவேண்டும்.
நல்விரதரே! தியானிக்கத்தக்கதும், சேவிக்கத்தக்கதும், பூஜிக்கத்தக்கதுமா
யிருக்கிற ஒன்றை யுபதேசிக்கவேண்டும். எதைச் செய்தால் எல்லா வல்ல
மையும் உண்டாகிச் சந்தேகமறுமோ அப்படிப்பட்டதை யுபதேசிக்கவேண்
டும் என்று கேட்டார். அதற்குச் சிவபெருமானார் பரதத்வமாயும் பிரணவ
ஸ்வரூபமாயும், மங்களகரமாயுமிருக்கிற நாதரூபத்தை அருளினார். அவரரு
ளாற் அந்நாதரூபத்தை அருளப்பெற்று அப்பரதத்வத்தை நன்றாயறிந்து
பிறகு அந்த நாதரூபத்தையுந் தரிசித்தார். அநுஷ்டிக்கும் உபாயத்தையும்
அந்த மந்திரத்தின் உண்மையையும் சுபமான வழிகளையும் அறிந்துகொண்டு
பகவானாகிய விஷ்ணுவானவர் மறுபடி நமஸ்கரித்து நாதரூபமான பரம்பொ
ருளை மேலேபார்த்தார். ஓங்காரத்தைக்காரணமாகவுடையதும் ஐந்து கலைக

ளோடு கூடியதும் "ஓம் தத்வமசி" என்று சொல்லப்பட்டதுமான மந்திரமானது சிவசம்பந்தமான மஹாவாக்கியமென்று சொல்லப்படுகிறது. அது சுத்த ஸ்படிகநிறமாயும், மிக மேம்பட்டதாயும், எல்லா அபீஷ்டங்களையுங் கொடுக்கத்தக்கதாயும், ஞானஸ்வரூபமாயும், மந்திரரூபமாயும் உள்ளது. இன்னும் விசேடமான காயத்ரி ரூபத்தோடு கூடியதாயும், இருபத்துநான்கு எழுத்துக்களோடு விளங்குவதாயும், தருமார்த்தகாமமோக்ஷங்களாகிய சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடுப்பதாயும், மேற்பட்ட மிருத்தியுஞ்சயம் என்றும், பஞ்சாக்ஷரம் என்றும், சிந்தாமணி என்றும், தக்ஷிணாமூர்த்திமந்திரம் என்றுஞ் சொல்லப்பட்ட இவ்வைந்து மந்திரங்களையும் விஷ்ணுமூர்த்தியானவர் அடைந்து ஜபித்தார்.

பிரமவிஷ்ணுக்களுக்குவரமளித்த அத்தியாயம்
முற்றிற்று.

நான்காவது
சிவலிங்க மகிமையுரைத்த அத்தியாயம்.

பிரமதேவர் சொல்லுகின்றார் :— தோத்திரஞ் செய்துகொண்டும் ஜபஞ் செய்துகொண்டு மிருக்கும் நாராயணனுக்கு முன்னே சிவபெருமான் தரிசனங்கொடுத்துப் பிரசன்னராகி அந்த விஷ்ணுவுக்குச் சுவாச மார்க்கமாக வேதத்தைக் கொடுத்தருளினர்; அவ்வேதத்தில் அநேக மந்திரங்களும் அநுஷ்டானங்களு மிருந்தன. மகரிஷியே! ஸமஸ்த வித்தைகளுக்கும் ஸ்தானமாகவும் பிரபுவாகவுமுள்ள சிவபெருமானிடத்திலிருந்து வந்த அந்த வேதத்தை வாங்கிக்கொண்டு அவ்விஷ்ணுமூர்த்தியும் அதையே எனக்குச் சுவாச மார்க்கமாகக் கொடுத்தார். ஒருவராலும் உணரப்படாத தமது சிவதத்துவஞானத்தைச் சிரேஷ்டராகிய அந்தச்சிவபெருமான் நாராயணனுக்குக் கொடுக்க, நாராயணன் மிகுந்ததயவுடன் அந்தச் சிவதத்துவ ஞானத்தையும் எனக்குக் கொடுத்தார். நாராயணன் தனக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட வேதத்தைச் சாங்கோபாங்கமாக அறிந்துகொண்டு பிறகு சிவபெருமானை நோக்கி, பிரபுவே! தேவரீர் எவ்விதத்தில் சந்தோஷமடைபவர்? எவ்விதமாக என்னால் தியானிக்கத்தக்கவர்? அடியேன் தியானஞ் செய்யத்தக்கது யாது? சங்கரபகவானாகிய தேவரீரை மனிதன் எப்படி அடைவான்? தேவதேவா! கேட்போரது பாபங்களை யெல்லாம் பரிகரிக்கத்தக்க இந்தச் சிவதத்துவ ஞானத்தைத் தேவரீர் அடியேன் விஷயத்தில் தயவுகொண்டு உபதேசிக்கவேண்டும் என்று கூறிய நாராயணனுடைய வார்த்தையைக் கேட்டு, சிவபெருமான் தயாமூர்த்தியாய் விஷ்ணுவே! சாக்கிரதையாகக் கேளும் என்று சொல்லத்தொடங்கினர். விஷ்ணுவே! இப்பொழுது நாம் எப்படிப் பிரத்தியக்ஷமாக இருக்கின்றோமோ அப்படியே பிரத்தியக்ஷமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு இந்த இலிங்கத்தை எப்பொழு

தும் பூசிக்கவேண்டியது. அப்படிப் பூசித்தால் நாம் மனமகிழ்ச்சி யுற்றுச் சகல பலன்களையும், சகலமான மனோபீஷ்டங்களையும் அநுக்கிரகிப்போம். எப்பொழுது ஒருவர்மனத்தில் துக்கமுண்டாகிறதோ அப்பொழுது இலிங்க மூர்த்தியைப் பூசித்தால் அந்தத் துக்கம் ஒழிந்துபோகும். இந்தப் பிரமன் ஓய்வின்றிச் சிருஷ்டி காரியஞ் செய்யவேண்டும். நீ பிராணிகளை இரக்ஷிக்கவேண்டும். நீங்கள் எப்பொழுதும் எம்மிடத்தில் மிகுந்த பக்தியைச் செய்யுங்கள் என்று, தம்மை எவ்வித பூஜை செய்வதால் சர்வாபீஷ்டங்களையுங் கொடுப்பாரோ. ஸகலபாபங்களும் நிவிர்த்தியாமோ அப்படிப்பட்ட பூஜாவிதியையும் விஷ்ணுவுக்கு உணர்த்துவதாகக் கூறியருளினர். பிறகு, சேதனசேதனமாயும், லோகரூபமாயும், ஸகல தேவர்களுக்கும் பிரபுவாயும், ருக்வேத சாமவேத யசுர்வேத சுரூபமாயும், சிருஷ்டி திதி சங்கார கர்த்தாவாயும், ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்க வல்லவராயும் உள்ள சிவபெருமானை விஷ்ணுவானவர் மறுபடியுந் துதிசெய்தார்.

ஏகாக்ஷராய ருத்ராய அகாராயாத்மரூபிணே ।
உகாராயாதிதேவாய வித்யாதேஹாய தே நம: ॥ (கஎ)
த்ருதீயாய மகாராய ஸிவாய பரமாத்மனே ।
ஜலாய ஜலஜாஸ்யாய நமஸ்தே ஜலஸாயினே ॥ (கஅ)
ஸித்தாய ஸித்தரூபாய ஸ்ருஷ்டிரூபாய தே நம: ।
ஜ்ஞானாய ஜ்ஞானகம்யாய நமஸ்தே பரமாத்மனே ॥ (ககூ)
ஹிரண்யபாஹவே துப்யம் நமஸ்தே ஹேமரேதஸே ।
கபர்தினே நமஸ்துப்யம் நாநாரூபதராய ச ॥ (உ0)
வ்ருஷாகபயே ஸர்வாய கபர்தாய ததா நமோ நம: ।
ஸிவாய ஸிவரூபாய வ்யாபினே விஸ்வரூபிணே ॥ (உக)
நமோ நித்யாய நாம்பதயே லிங்கரூபிணே ।
தேஜஸே தேஜஸாம் பதயே நமஸ்தே ஸர்வரூபிணே ॥ (உஉ)
ஸாஸ்வதாய வரிஷ்டாய வாக்ப்ரதாய யோகினே ।
ஸூக்ஷ்மாய ஸ்தூலமயாய ஸுவர்ணாய ஹேமவர்ணினே ॥ (உங)
ஸுதனே ஸர்வயோகாய ஸ்வாமினே விஷ்வணே நம: ।
ஓங்காராய நமஸ்துப்யம் ஸர்வஜ்ஞாய நமோ நம: ॥ ॥ ॥ (உச)
விராமாதீதம் ஸ்துத்வா ப்ரஹ்மணா ஸஹிதோ ஹரி: ।
இதம் ஸ்தோத்ரம் பரம் புண்யம் ஸர்வபாப ப்ரணாசனம் ॥ (உரு)
ய: படேச்ச்ருணுயாத்வாபி ஸ்ராவயேத்வாதி ஜோத்தமான் ।
ஸயாதி ப்ரஹ்மணோ லோகம் பாபகர்மரதோபி ஸன் ॥ (உசா)

ஏகாக்ஷர ரூபமாகியும், பிரபுவாகியும், அகாரரூபமாகியும், ஞானரூபமாகியும், உகர்ர ரூபமாகியும், ஆதிதேவனாகியும், வித்யா ஸ்வரூபமுடையவராகியும் இருக்கும் தேவரீருக்கு நமஸ்காரம். மூன்றாவதான மகாரரூபமாகி

யும், சிவமூர்த்தியாகியும், சிரேஷ்டமானஸ்வரூபத்தை யுடையவராகியும், ஜலரூபியாகியும், ஜலஜந்துக்களை ரக்ஷிப்பவராகியும், ஜலத்தில் நித்திரை செய்பவராகியும் இருக்கிற தேவரீருக்கு நமஸ்காரம். சித்ரூபமாகியும், பிராணரூபமாகியும், ஸ்மிருதிரூபமாகியுமுள்ள தேவரீருக்கு நமஸ்காரம். ஞானரூபமாகியும், ஞானத்தினால் அடையத்தக்கவராகியும்,உயர்ந்த ரூபமான தேவரீருக்கு நமஸ்காரம். சுவர்ணமயமான கைகளை யுடையவரும், சுவர்ணமயமான இந்திரியத்தை யுடையவருமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஜடையின் ஸமூகத்தைத் தரித்தவரும், யானையின் தோலைப் போர்வையாக வுடையவருமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். விரஷாகபி சுவரூபியாயும்,சங்காரகர்த்தாவாயும், இரக்ஷண கர்த்தாவாயும், சிருஷ்டி கர்த்தாவாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். மங்கள ஸ்வரூபியாயும், மங்களத்தை யுண்டு செய்பவராயும், பரமாகாய சரீரியாயும், மகாபத்ம முதலான நிதிகளுக்கெல்லாம் பதியாயும், லிங்காகாரமாயும், லிங்கஸ்வரூபத்தை யுடையவராயு மிருக்கிற தேவரீருக்கு வந்தனம். தேஜோ ரூபியாயும் தேஜஸுகளுக்குப் பதியாயும், ஸகலஸ்வரூபியாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். நித்தராயும், ஸகலருக்குஞ் சிரேஷ்டராயும், ஜலத்தை உள்ளேஉடையவராயும், தவத்தில் ஆசக்தராயும் பிரமவிஷ்ணுவான எங்களுக்குச் சாமவேதகீதத்தினாலேபாடத்தக்கவராயும், பரப்பிரமஸ்வரூபியாயும், பரமாத்மாவாயும், ரிஷிஸ்வரூபியாயும், ஸகலத்திலும் வியாபித்தவராயும், பிரபுவாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஓங்காரரூபமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஸகலமுந்தெரிந்த தேவரீருக்கு வந்தனம் வந்தனம்—என்றிப்படி நாராயணமூர்த்தி பிரமதேவருடன் கூடிக்கொண்டு சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து கைகட்டி வாய்பொத்தி நின்றார். [மிகவும் புண்ணிய ஸ்வரூபமாயும் சிரேஷ்டமாயுமிருக்கிற இந்தத் துதியை எவன் படிக்கிறானோ-அல்லதுகேட்கிறானோ-அல்லது சிரேஷ்டரானபிராமணர்களைக்கேட்கச் செய்கிறானோ அவன் மகா பாபியாயிருந்தபோதிலும் பிரமபதவியை யடைவான். சகலபாபங்களும் போவதற்கு நாராயணனால் செய்யப்பட்ட இச் சிவஸ்தோத்திரத்தைச் சொல்லித் துதிப்பவனுக்கு வளர்பிறைச்சந்திரன்போல மங்களம் வளரும்.] என்று, ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கிச் சொல்லுகின்றார். விஷ்ணுவானவர் இவ்வாறு துதிசெய்தபின்னர் சிவபெருமான் சிரேஷ்டமான தேவர்களே! நாம் இந்தத்தோத்திரத்தால் மனங்களித்தோம். சிவமூர்த்தியாகிய எம்மைப் பாருங்கள். பயத்தை விட்டுவிடுங்கள். எமது விருப்பத்தின்படி மகா பலத்தையுடையவர்களான நீங்கள் உண்டாக்கப்பட்டீர்கள். எம்முடைய விருப்பத்தால் ஏந்து உருவம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது.

𑌅𑌯𑌂 𑌮𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚 𑌮𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌹𑍃𑌦𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌃॥ (௩௦)

உலகங்களுக்குப் பிதாமக ஸ்வரூபியான இந்தப் பிரமன் என் வலதுபக்கத்திலும், விண்டு என் இடதுபக்கத்திலும் விசுவாத்மனை உருந்

திரன் என் இதயத்திலும் ஆக இப்படி மூன்று அவதாரமாக விருக்கிறீர்கள். நாம் உங்களிடத்தில் மிகுந்த அன்புடைமையால் நீங்கள் எதைச்சிந்தித்தாலும் அதைக் கொடுப்போம்! என்றிவ்வாறு தயாநித்தியரான சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, என்னையும் விஷ்ணுவையும் மிகவும் மங்களத்தைக்கொடுக்கும் திருக்கரத்தால் மிக்க அன்புடன்பரிசித்தார். அதன்பின்பு நாராயணன் சந்தோஷமிகுந்து லிங்கரூபமாயும் லிங்கவர்ஜிதராயு மிருக்கின்ற சிவபெருமானை வந்தனஞ்செய்து, கடவுளே! தேவரீருக்கு எங்களிடத்தில் பிரீதியுண்டாகி நாங்கள் விரும்பியவரங்களைக் கொடுக்கும்பக்ஷத்தில் தேவரீரிடத்திலேயே ஸ்திரமாயும் வேறொருவரையடையாமலு மிருக்கும் பக்தி எங்களுக் குண்டாகவேண்டு மென்று கேட்டார். மகரிஷிகளே! பிரபுவான சிவபெருமான் அதற்கு நீங்கள் காரியார்த்தமாக எம்மாற் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகையால் உங்களுக்குக் கொடுக்கக்கூடாத வரம் ஒன்றுமில்லை என்றுகூற, நாராயணன் தன் முழங்காலைப் பூமியில் ஊன்றிக் கொண்டு மீண்டும் நமஸ்கரித்து ஸகல தேவர்கட்கும் தேவனான சிவபெருமானே! எங்களுக்குள் ஒருவித விவாத மிருக்கின்றது. அதனைத் தீர்ப்பதற்காகவே தேவரீர் இங்கெழுந் தருளியபடியால் அதனைச்சமனஞ் செய்யவேண்டும் என்று கூறிக் கைகுவித்துச் சிரத்தாற்பணிந்து தியானஞ் செய்துகொண்டிருந்தார். சிவபெருமான் விஷ்ணுவின் வார்த்தையைக் கேட்டு, மீண்டும் நாராயணனை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுகின்றார். விண்டுவே! உனக்கும் இந்தப் பிரமனுக்கும் என்னுடைய ஆஜ்ஞையால் எம்மிடத்தில் எப்பொழுதும் நீங்காத திடபக்தியிருக்கக்கடவது. நீங்கள் * பார்த்திவலிங்க முதலான மூர்த்தியையும் பூசிக்கவேண்டியது. நீங்கள் விதிமுறைப்படி செய்யும்பூஜையால் எம்மைப் பூஜித்து நமஸ்கரிக்கக்கடவீர்கள். அப்பூஜையால் சுகத்தையடைவீர்கள் என்று திருவாய்மலர்ந்தருளி, ஸகலகிலேசங்களையுஞ் சங்கரிக்கும் சிவபெருமான் பூசாக்கிரமத்தை முறைப்படி உபதேசஞ்செய்து இருவருக்கும் இஷ்டமான அநேகவரங்களைக்கொடுத்து, பிரமனே! நீ எம்முடைய ஆக்கினையால் ஸ்ருஷ்டித்தொழில் செய்வாயாக. விஷ்ணுவே! நீ அசையும் பொருள் அசையாப்பொருள்களை இரட்சிப்பாயாக. நிஷ்களமாகிய நாம் சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழில் நடத்தவேண்டிப் பிரமன் விண்டு உருத்திரனென்னும் மூன்றாகப் பிரிந்தோமாதலின், அந்த உருத்திரமூர்த்தி எம்முடைய அம்சத்தைக்காட்டிலும் சாமர்த்தியக்குறைவாயாகப்போகிறதில்லை. பூஜைமுதலானதும் எம்மிருவர்க்கு மொன்றே. (ஏனெனில்) ஜோதிகளுக்கு எப்படி ஜலமுதலான ஸம்பந்த மிருந்தபோதிலும் நீர்சங்கிடையாதோ அதுபோல நிர்க்குணமான எமக்கு ஸம்பந்தமிருக்கையிலும் அதனாற் பந்தனம் கிடையாது. உருத்திர ரூபமும் சிவரூபமேயாம். அதுவிஷயத்தில் வேறாக எண்ணவேண்டாம். சுவர்ணத்திற்கு வேறொரு சுவர்ணமென்கிற பெயர் எப்படி வரவேமாட்டாதோ, ஒரு வஸ்து

* பார்த்திவம் - பிருதிவியாற் செய்யப்படுவது.

வுக்கு அலங்காரஞ் செய்தால் வேறொருபெயர் எப்படி வரவேமாட்டாதோ, ஒரு மண்கட்டியைப் பாத்திரமாகச் செய்தால் மண்கட்டி வேறு, பாத்திரம் வேறு என்கிற வஸ்துபேதம் எப்படி வரவேமாட்டாதோ, அப்படியென் றறிந்து நீங்கள் உருத்திரனுக்கும் எமக்கும் வித்தியாச மெண்ணக்கூடாது. எம்முடைய சிவசொரூபம் வாஸ்தவத்தில்எல்லோர்க்கும்பார்க்கத்தகுந்தது. விஷ்ணுவே! பிரமனும் நீயும் உருத்திரனும் எம்முடைய வடிவமயன்றி வேறன்று. அப்படியன்றிப் பேதமாக நினைப்போர் எம்மைத் தரிசிக்கமாட்டார்கள். ஸத்தியமாயும் ஞானரூபமாயும் நாசமற்றதாயும் அநாதியாயு மிருக்கிற எம்முடைய சிவரூபமே இவற்றிற்கெல்லாம் ஆதிகாரணம். எப்பொழுதும் தியானிக்கத் தக்கதான இச்சிவரூபத்தையே யடைய ஆசைகொண்டிருக்கிற நீங்கள் இச்சிவதத்துவத்தின் மேன்மையை நான் சொல்கிறவண்ணம் அறிந்துகொள்ளவேண்டும். நீங்கள் சிவரூபத்திலிருந்து உற்பவித்தவர்கள். இச்சிவரூபமோ தானே உற்பத்தியாயிருக்கிறது. பிரகிருதியிலிருந்து உண்டானதன்று. உருத்திரமூர்த்தி உண்டாவதற்கு எமது ஆஜ்ஞையே காரணம். நாம் ஒருவரே உருத்திரனாக அவதரிக்கப்போகிறோம்.

விஷ்ணுவே! பிரமனே! நீங்கள் எல்லோரும் ஒரேமாதிரி விளங்கும் இச்சிவரூபத்தைப் பூஜைசெய்யவேண்டும். இச்சிவரூபத்தி லிருந்து சிவாம்ஸமாக இலக்குமியும், சரசுவதியும், அவதரிப்பார்கள். இச்சிவரூபமே காரிய நிமித்தமாகச் சிறந்த வேறு ரூபத்தை யடைந்து காளியென்னும் பெயரால் அவதரிக்கப்போகிறது நிச்சயம். இவர்களுள் விஷ்ணுவே! நீ இலக்குமியைத் துணைகொண்டு இரக்ஷித்தலாகிய தொழிலைச் செய்யவேண்டியது. பிரமாவே! நீ ஸரஸ்வதியைத் துணைகொண்டு எப்பொழுதும் சிருஷ்டி காரியத்தைச் செய்யவேண்டியது. உருத்திரன் மகாகாளியைக் கிரகித்துக்கொண்டு சங்காரத்தொழிலைச் செய்வான். மிகுந்த அறிவுடன் கூடியிருக்கிற நீங்கள் உலகங்களுக்கு இஷ்டங்களை உண்டுபண்ணுகிறவர்களாய், பிராமணர்-க்ஷத்திரியர்-வைசியர் - சூத்திரரென்னும் நான்கு வருணங்களாகவும், பிரமசரியம் - க்ரகஸ்தம்-வானப்பிரஸ்தம்-ஸந்நியாச மென்னும் நான்கு ஆச்சிரமங்களாகவுங் கூடியிருக்கவும், இன்னும் பல காரியங்களுடன் கூடியிருக்கவுஞ்செய்து சுகத்தை யடையுங்கள். விண்டுவே! நீ நம்முடைய சிறந்த அன்பனாகையால் உன்னுடைய இதயத்தில் நாம் இடைவிடாது இருப்போம் நீங்களிருவரும் வெள்ளியாலாவது இரத்தினத்தாலாவது சுவர்ணத்தாலாவது பிருதிவியாலாவது விளங்கும் இலிங்கரூபத்தை, உலகங்களுக்குச் சுகத்தை உண்டுசெய்யவும், உம்மைப்போல உலகத்தார்பூஜிக்கவும், எக்காலத்திலும் இடைவிடாத அன்புடன் பூஜைசெய்யுங்கள். இச்சிவபூஜாநியமனத்திற்கு எவன் அந்நியமா யிருக்கின்றானோ அவனை அடையமாட்டோம் என்று திருவாய்மலர்ந்தருளி அவ்விடத்திலேயே அந்தர்த்தானமாயினர். அது முதற்கொண்டு நாராயணனும் பிரமதேவனும் சிவலிங்கபூசை செய்துகொண்டு சிவபக்தி யுடையவரா யிருந்தார்கள். இலிங்கமே சரஸ்வதி; லிங்கமே மகா

லக்ஷ்மி; லிங்கமே மகாகாளி; லிங்கமே பிரமாதிதேவர்கள்; லிங்கமேசிவ பெருமான்.[எவன் சிவலிங்கத்தின் பிரபாவத்தைச் சிவசந்நிதியில் வாசிக்கின் ருனோ அவனடையும் பலனை என்றுற் சொல்லமுடியாது.] என்று ஸூதமுநிவர் நைமிசாரண்யவாசிகளைப்பார்த்துச் சொன்னார்.

சிவலிங்க மகிமையுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஐந்தாவது

சிருஷ்டி நிரூபணமுரைத்த அத்தியாயம்.

மகாபாக்கியசாலியான ஸூதமுநிவரே! எந்த லிங்கமூர்த்தத்தின் வரலாற்றைக் கேட்பதனல் துக்கத்திற்கு நாசமுண்டாகுமோ அந்த லிங்க மூர்த்தத்தின் பிரபாவத்தைக் கேட்டோம். சிவபெருமான் ஜோதிவடிவாயிருந்து அந்தர்த்தானமானபின்பு என்னவுண்டாயிற்றோ அதையும், சிவபெருமானது பிரபாவத்தையும், அவர் உலகசிருஷ்டி செய்த வகையையும் தேவரீர் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று ஸௌநகாதிமுநிவர்கள் கேட்க ஸூதமுனிவர் சொல்லுகின்றார்:—முநிவர்களே! நீங்கள் நன்றாய் வினவினீர்கள். சிவபெருமான் அந்தர்த்தானமானபின்பு யாது நிகழ்ந்ததோ அதை முன்கேட்டபடியே இப்பொழுது சுருக்கிச்சொல்லுகின்றேன். பிரபுவான சிவபெருமான் அந்தர்த்தானமானபிறகு பிரமதேவன் அன்னவடிவத்தையும் விஷ்ணு வராகவடிவத்தையும் எடுத்துக்கொண்டு செய்த காரியங்களைச் சொல்லுகிறேனென்று கூறிய ஸூதமுநிவரை நோக்கி நைமிசாரணியவாசிகள் அடியேங்கட்கு ஓர் சந்தேகமுள்ளது. அதனை முன்னே நீக்கவேண்டும். அதாவது, பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னவடிவத்தையும் வராக வடிவத்தையும் என் எடுத்துக்கொண்டார்கள்? இவ்வடிவேற்றதற்குக் காரணம் யாது? எனக்கேட்க, ஸூதர் சொல்லுகின்றார்:—அன்னமானது ஆகாயத்தில் பிசகாமற் பறக்கும்; அன்னத்திற்குப் பாலையும் நீரையும் வைத்தால் அது நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் விவேகமுடையது; ஆதலின் பிரமன் ஞானம் அஞ்ஞானமென்னும் இவ்விரண்டினையுந் தனித்தனியுணர்ந்த அன்னவடிவை ஏற்றனன். ஆயினும் ஞானத்தால் விவேகத்தை யடையாமல் இளைப்படைந்து திரும்பினன். வராகவடிவமோ வராககல்பமென்னும் கல்பத்திற்காக உதித்தது. விஷ்ணுவானவர் எந்தத்தினத்தில் வராகவுருவேற்றாரோ, அந்தத் தினமுதல் வராககல்பமெனப்படும். அன்னவுருவத்தையும் வராகவுருவத்தையுமடைந்த பிரமவிஷ்ணுக்களின் விஷயத்தில் ஆச்சரியப்படவேண்டுவதில்லை. ஏனெனில், சிவபெருமானுக்கு எப்படி விருப்பமோ அப்படியே அவ்விருவரும் வடிவமேற்றனர். நாசரகிதமாயும் நிஷ்களமாயும் குணரகிதமாயு மிருக்கும் சிவபெருமான் எதைச் செய்கிறாரோ அதற்கொப்பவே எல்லோரும் விளங்குவார்கள். இதுவிஷயத்திற் சந்தேகம்வேண்டாம்.

ருஷிகளே! மேல்நடந்தவற்றைக் கேளுங்கள்: சிவபெருமான் விஷ்ணுமூர்த்திக்கு அநேகவரங்களைக் கொடுத்து, விஷ்ணுவே! எந்தவிடத்தில் உன்னைப் பார்க்கின்றார்களோ அந்தவிடத்திலுள்ளயாவரும் மோகிக்கக்கடவர். அப்படி மோகிப்பதனால் நீ மதிக்கப்பட்டும் துதிக்கப்பட்டுமிருப்பாய். பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டவுலகத்தில் எப்பொழுது துக்கமுண்டாகிறதோ அப்பொழுது நீ அத்துக்கத்தை நிவிர்த்திசெய்து உலகங்களை இரட்சிப்பாய். நாமே உருத்திரமூர்த்தியாய்ச் சகலலோகங்கட்கும் சங்காரத்தொழில் செய்யப்போகிறோம். இவ்விஷயத்திற் சந்தேகமேயில்லை. விஷ்ணுவே! நீயே எம்மைத் தியானிக்கத்தக்கவன். நாமே அநேகவடிவமாக விளங்குதலின், உனக்கும் எமக்கும் சிறிதும் பேதமுள்ளதாக நினைக்கக்கூடாது. என்றிப்படிச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, பிரமதேவனைத் திருக்கரத்திற் பிடித்துக்கொண்டு உங்களிருவரையும் எமக்குச்சமமாக உலகத்தார் தியானிக்கக்கடவர். அவ்வாறின்றிக் குறைவுசெய்வோர் தீவினையேற்றுத் துன்புறுவாராக. நீங்களிருவரும் சகலஜனங்களுக்கும் பிராணரூபமாய் இருக்கக்கடவீர். பிரமனே! நீ நாலாயிரஞ் சதுர்யுகங்களை ஒருதினமாகச்சொல்லப்பட்ட நூறுவருடமாகிய உன் ஆயுள்வரையில் ஸத்வமுதலான முக்குணங்களோடு கூடிய பிராணிகளின் சிருஷ்டிகாரியத்தைச் செய்யவேண்டியது என்று கூறினர். சிவபெருமானது வார்த்தையைக்கேட்ட விஷ்ணுமூர்த்தி மிக்க ஆநந்தத்துடன் சிவபகவானைப்பணிந்து சொல்லுகின்றார்:—கிருபாசமுத்திரமாயும், உலகங்கட்கெல்லாம் பதியாயுமிருக்கின்ற சிவபெருமானே! தேவரீருடைய ஆக்கினையைச் சிரமேற்றரித்து, தேவரீர் கட்டளையிட்டவகையே அடியேன் செய்யவேண்டியவனாயினும் விண்ணப்பிப்பதொன்றுளது; அதையுந் திருச்செவிசாற்றியருளவேண்டும். தேவரீர் எப்பொழுதும் என்னால் தியானிக்கத்தக்கவராயிருக்கின்றீர்; முன்னமே தேவரீர் அருளியவரங்களை யடைந்தேன்; சிரேஷ்டமானசொரூபியாகிய தேவரீரைத்துதிப்பதினின்று என்மனமானது க்ஷணகாலமும் பிரியாமலிருக்கவேண்டும். என்னிடத்தில் எவன் பக்தனாயிருந்து தேவரீரை நிந்திக்கின்றானோ அவனுக்கு எப்பொழுதும் நரகமே வாசஸ்தானமாகக் கொடுப்பேனென்பது நிச்சயம். எவன் தேவரீருக்குப் பக்தனோ அவன் என்னையும் பக்திசெய்கிறானென்று மகிழ்வேன். தேவரீரால் என்னுடைய மகிமை விருத்திசெய்யப்பட்டது என்று விஷ்ணுவானவர் கூறலும், இவற்றை யெல்லாங் கேட்ட சிவபெருமான் பெருமகிழ்ச்சியுடையவராய் அந்தர்த்தானமாயினர்.

சிவபெருமான் அந்தர்த்தானமானபின்பு, உலகங்கட் கெல்லாம் பிதாமகனான பிரமதேவர் தான்பெற்ற கட்டளைப்படி சிவத்தியானபரராய் விஷ்ணுமூர்த்தியையும் பணிந்துகொண்டு அவரால் ஞானமடைந்து சிருஷ்டிகாரியத்தைச் செய்வதற்கு இச்சைகொண்டார். விஷ்ணுமூர்த்தியும் அப்பொழுது அந்தர்த்தானமாகப் போய்விட்டார். பிரமதேவர், பூர்வத்தில் எந்த ஜலம் சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த ஜலத்தில் அஞ்சலிரூபமாகத் தன்

வீரியத்தைவிட்டார். உடனே அந்த ஜலத்தில் இருபத்துநான்கு தத்துவங்களோடுங்கூடிய அண்டம் உண்டாயிற்று. முனிவர்களே! அநேகஆகாரங்களால் பிரகாசமாய் அந்த அண்டம் சடரூபமாயிருந்தது கண்டு பிரமாசந்தேகத்தையடைந்து விஷ்ணுவைத்தியானித்துப் பன்னிரண்டுவருடம் உக்கிரமானதவத்தைச்செய்தார். அவர்தவத்திற்கு விஷ்ணுவானவர் மனங்களித்துப்பிரசன்னராகி, பிரமாவே! உனக்கு இஷ்டமான வரத்தைக் கேள் கொடுக்கிறேன். உனக்கு என்னாற் கொடுக்கக்கூடியதைக் கொடுப்பதற்குத் தடையில்லை என்று சொல்ல, பிரமதேவர் சொல்லுகின்றார். விஷ்ணுவே! சிவபெருமான் உமக்கு என்னைக் கொடுத்துவிட்டபடியால் நீர் பிரத்தியட்சமானது யுக்தந்தான். சிவபெருமான் எந்தச் சிருஷ்டியைச் செய்யக் கட்டளையிட்டாரோ அது என்னாற்செய்யமுடியாமல் ஜடமாய்ப்போய்விட்டது. ஆதலின் நீர் இப்பொழுது பிராணவாயுரூபமாய் அதற்குப் பிராணனை உண்டுசெய்யவேண்டும் என்று பிரமதேவர்கூறிய வார்த்தையைக்கேட்டு, விஷ்ணுமூர்த்தி சிவாக்கினையின்படி செய்ய விருப்பமுடையவராய், ஆயிரந்தலைகளும் ஆயிரங்கால்களுமுடைய அநந்தரூபம் வகித்துக்கொண்டு அண்டத்தை வியாபித்தாரென்று ஸூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கூறியருளினர்.

ஆறுவது
மேற்படி அத்தியாயம்.

தவசிரேஷ்டர்களான முனிவர்களே! எல்லாப்பாபங்களையும் போக்கும்படியான சரித்திரத்தைச்சொல்லுகிறேன் கேட்பீர்களாகவென்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:— விஷ்ணுவானவர் பிரமாவினால் துதிக்கப்பட்டவராய் அந்த அண்டத்தைப் பிரவேசித்தபொழுது இருபத்துநான்கு தத்துவங்களையுடைய அந்த அண்டம் பாதாளலோகமுதல் ஸத்தியலோகம் வரையில் பிராணனுடையதாயிற்று. அந்த அண்டத்தில் விஷ்ணுவானவர் பிரகாசமாகவிருந்தார். தவத்தையே தனமாகவுடைய பிரமா தவலோகத்திலும், சிலகாலங்களில் இதரலோகங்களிலுமிருந்தார். பிறகு பிதாமகனென பிரமதேவர் மனதினால் சிலபிள்ளைகளை முதலில் உண்டுசெய்தார். அப்பிள்ளைகள் * ஊர்த்துவரேதஸாக ஆனார்கள். சதுர்முகன் மீண்டும் சிலருஷிகளைச் சிருஷ்டித்தார். அவர்கள் மிகவும் விரக்தர்களாக விருந்தார்கள். அவர்கட்காகப் பிரமா மிகவுங் கோபமுற்று அழுகையில், அஞ்சாதே யென்று சீக்கிரமாக † உருத்திரமூர்த்தி தோன்றினர். அவர் பிரமாவைப்பார்த்துப் பிரமாவே! உனக்குத்துக்கமுண்டானால் அதை நாசஞ்செய்வேன்; சந்தேகப்படவேண்டாம் என்றுகூறினர். அதைக்கேட்டபிரமன் உருத்திரமூர்த்தியே!

*ஊர்த்துவரேதஸு - சுக்கிலத்தைக் கீழிறக்காதவர்கள். ஞானிகளென்பது பொருள்.

† பிரமனிட்டுத்துதித்த இவ்வுருத்திரர் நீலலோகிதரெனப்படுவர். இவர் தானே சிருஷ்டிப்பதாகக் கூறினராயினும், பிரமன் கருத்துப்படி அவனுக்குச் சிருஷ்டி தைக்கூடச்செய்து சென்றார்.

நீர் சொல்லும்வார்த்தை அழகாயிருக்கிறது. ஆயினும் சிருஷ்டியில் இடையூறுவராதபடி செய்யவேண்டும் என்று சொல்ல, உருத்திரமூர்த்தி அப்படியே சிருஷ்டி நிர்விக்கினமாக முடியக்கடவது என்று சொல்லிவிட்டு, எந்தக் காலத்துஞ் சலியாது விளங்குந் திருக்கைலாயத்திற் சிவசந்நிதியையடைந்தார். உருத்திரபகவான் இவ்வாறு வரங்கொடுத்துச் சென்றபிறகு பிரமதேவர் ஸப்தருஷிகளைச் சிருஷ்டித்தார். மிகச்சிரேஷ்டமான நாரதனை மடியினின்று உற்பவிக்கச்செய்தார். கர்த்தமருஷியைத் தன்நிழலிலிருந்து படைத்தார். தக்ஷப்பிரசாபதியை * அங்குஷ்டத்தினின்று உண்டுசெய்தார். இவ்வாறு மாநதபுத்திரர் பதின்மர் உண்டாயினர். பிருகுமுநிவரிடத்தில் மரீசியும், மரீசியினிடத்தில்காசிபரும் தோன்றினர். காசிபருடைய சந்ததியினாலே தான் இந்தவுலகம் விருத்தியடைந்தது. மகாத்மாவான தக்ஷப்பிரசாபதிக்கு அறுபதுபெண்கள் பிறந்தார்கள். அவருள் பதின்மூன்றுபெண்கள் காசிபருக்கு விதிப்படி மணஞ்செய்து கொடுக்கப்பட்டார்கள். காசிபருக்கு அந்தப் பெண்களிடத்தில் தேவதைகள் அசுரர் †தநுஜாள் முதலிய அநேகர் உண்டாயினர்; அவர்கள் உலகங்களெல்லாம் வியாபித்தார்கள். தக்ஷப்பிரசாபதியின்பெண்களிடத்தில் விருக்ஷங்களும், பக்ஷிகளும், சர்ப்பங்களும், மலைகளும், அநேகவிதமான கொடிகளுந் தோன்றின. இந்தச்சிருஷ்டிகள் பாதாளமுதல் ஸத்தியவுலகம்வரையில் வியாபித்தன; அவை வியாபியாத இடமே கிடையாது; இது சத்தியம். தக்ஷப்பிரசாபதிக்குச் சதி என்றொரு குமாரத்தியுண்டு; அக்குமாரத்தியைச் சிவபெருமானுக்குக் கொடுத்தார். அச் சதிதேவிக்குப் பவானியென்னும்பெயர் பிரசித்தமாயிருக்கிறது. உருத்திரமூர்த்தி காளியை மணஞ்செய்தார். விஷ்ணு இலக்ஷ்மியை மணஞ்செய்தார். பிரமா ஸரஸ்வதியை விவாகஞ்செய்தார். பிரமன் விண்டு உருத்திரனென்னுந் திரிமூர்த்திகளுந் தங்கள் சத்திகளுடன்கூடி முறைமையே சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்து வருவாராயினர்.

முநிவர்காள்! எந்தச் சதி யென்பவள் சிவபகவானை யடைந்தாளோ அவளே மகாகாளி எனப்படுவாள்; அந்தமகாகாளியே பின்னொருகாலத்தில் ஹிமோபர்வதராஜனிடத்தில் புத்திரியாகிப் பார்வதி யென்னும் பெயருடன் சிவபெருமானை யடைந்தாள். அந்தப் பார்வதிதேவி காளிகா சண்டிகா பத்ரா சாமுண்டா விஜயா ஜயா" என்று கூறப்படும் இத்தியாதி பலநாமங்களை யடைந்தாள். இந்த மூர்த்திகள்மூவரும் குணபேதத்தால் முத்தொழில் செய்கின்றனர் என்று ஸூதர் சொல்லியதைக்கேட்ட முநிவர்கள் ஆனந்தித்து இவ்வளவில் திருப்தி யடையாதவர்களாய் மீண்டும் சொல்லுகின்றார்கள். ஓ முநிபுங்கவரோ! குருவான வியாஸபகவானால் தேவரீர் எல்லாமறிந்தவர். தேவரீரது முகமாகிய தாமரைமலரிலிருந்து பெருகுஞ் சிவசரிதையாகிய அமிர்தத்தை இன்னும் பானஞ்செய்ய விரும்புகின்றோம். மகாகாளி முதலில் தக்ஷப்பிரசாபதிக்கு மகளாகவும், பிறகு பர்வதராஜனுக்குக் குமாரியாகவும்

* அங்குஷ்டம் - பெருவிரல். † தநுஜாள் - ஓர்வகை யசுரர்.

உதித்த திவ்யசரிதையையும், புண்ணியசீலையான பார்வதாதேவி சிவபெருமானை யடைந்த தன்மையையும் இவற்றோடு ஸம்பந்தப்பட்ட பிறவிர்த்தாந்தங்களையும் சொல்லி யருளவேண்டுமென்று கேட்ட சௌநகாதி முனிவர்களை நோக்கி ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

சிருஷ்டி நிரூபணமுரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

ஏழாவது
சிவபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர்சொல்லுகின்றார்:—கேளுங்கள்ருஷிசிரோஷ்டர்களே! இதுவரையில் சிருஷ்டிநிரூபணத்தைச் சொன்னேன். எந்தச் சரிதத்தைக் கேட்டால் பிறவி நாசமாகுமோ அந்த மங்களகரமான சரித்திரத்தைச் சொல்லுகின்றேன். முன்னே தக்ஷப்பிரஜாபதிக்குஞ்சிவபெருமானுக்கும் துவேஷமுண்டான காரணத்தால், தக்ஷப்பிரஜாபதி சிவபெருமான் தவிர மற்றத் தேவர்களையும் முநிவர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு ஒரு யாகஞ்செய்தார். அதனை யறிந்த * தாக்ஷாயணி தந்தை தன்னை யழையாமலிருந்தபோதிலும் அந்த யாகத்தைப் பார்க்க அவாவுற்றுச் சிவபெருமானிடம் விடைபெற்றுத் தக்ஷன் மாளிகையையடைய, அவன் அவமதித்ததால் துக்கித்துத் தன் தேகத்தை நீங்கினாள். [சிவபெருமானுக்குக் கோபமுண்டானபோது யாருக்குச் சுகங்கிடைக்கும்?] சிவபெருமான் கோபத்தால் வீரபத்திரரை யனுப்பி அந்த யாகத்தை விக்நஞ் செய்து தேவர் முநிவர் முதலானவரைத் தண்டிக்க, அவர்கள் குறை கூறினார்கள். சிவபெருமான் மீண்டும் அவர்கள் தோத்திரத்திற்கிரங்கி அவர்களை முன்போலவே அநுக்ரஹஞ் செய்து விடுத்தார். இஷ்டபோகங்களைக் கொடுத்துச் சகலருக்கும் நன்மை செய்யும்படியான தாக்ஷாயணியின் தேகத்திலுண்டான ஜ்வாலையானது தேவர்களாற் பூஜிக்கப்பட்டு ஹிமோற்கிரியில் விழுந்தது. அது ஜ்வாலாமுகி யெனப்படும்; ஸகல இஷ்டங்களையுங் கொடுக்கத்தக்கது. எல்லோரும் தங்கடங்கள் இஷ்டகாமியங்களைப் பெறுவதற்காக அதைப்பூஜிக்கின்றனர். பிறகு அச் சுவாலாமுகி, இமாசலமன்னன் மனைவியாயும், பிதுர்க்கள் மனதினால் நிர்மாணஞ்செய்யப்பட்டவளாயு மிருக்கும் மேனை என்பவளுக்குப் புத்திரியாக அவதரித்தாள். அச்சுவாலாமுகி, பர்வதத்தில் அவதரித்த காரணத்தினால் பார்வதி யெனப் பெயரெய்தினள். அப்பார்வதி சிவபெருமானை நன்றாகப்பூஜித்து நாயகனாக அடைந்து, தன்னை யாஸ்ரயித்த எல்லோருக்கும் ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கிறாள். நீங்கள் எதைக்கேட்டீர்களோ அதைச் சொன்னேனென்றும், இந்தச்சரித்திரத்தைக்கேட்டவர்களுடைய ஸகல பாபங்களும் நிவிர்த்தியாகும்; இதுவிஷயத்தில் ஸந்தேகமேயில்லையென்றுங்கூறினர்.

* தாக்ஷாயணி-தக்ஷன் மகள்; இவ்வம்மைக்கு ஸதிதேவி யென்றும் பெயர்.

ஸூதமுநிவர் வார்த்தையைக் கேட்ட நைமிசாரணியவாசிகளாகிய முநிவர்கள் ஓ முநிசிகாமணியே! தேவரீர் இதுகாறுங் கூறியவற்றால் திருப்தியடையாதவர்களாய் இன்னும் சிவசரித்திரங்களையே எங்கள் மனமானது அவாவுகின்றது. சிவபெருமானை எவ்வாறு பூஜிக்கவேண்டியது? சிவபெருமான் முற்காலத்தில் யாவரால் அம்முறைப்படி பூஜிக்கப்பட்டனர்? அப்பூஜையாற் களித்துச் சிவபெருமான் யாருக்குப்ரசன்னராகி எந்தப்பலனைக்கொடுத்தார்? பார்வதிதேவியார் செய்த தவம் - அவ்வம்மையார் விவாஹம் - த்ரிபுராஸுர வதம்-ஜ்யோதிர்லிங்கங்களின் உற்பத்தி - ஜ்யோதிர்லிங்கங்கள் எத்தனைவிதங்கள்? அவற்றைத் தரிசித்தால் என்ன பலன் கிடைக்கும்? பிராம்மணர்களாலும், க்ஷத்திரியர்களாலும், வைசியர்களாலும், சூத்திரர்களாலும் சிவபூஜை எப்படி செய்யத்தக்கது? இவற்றை எவ்வாறு தேவரீர் வியாஸபகவானிடம் கேட்டீரோ அவ்வாறே விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்றார்கள். அந்த நைமிசாரணிய வாசிகளாகிய முநிவர்களுடைய வேதஸம்மதமான வார்த்தையைக்கேட்டு, அக்கேள்விப்படி ஒவ்வொன்றும் கிரமமாகச் சொல்லத்தொடங்கினர்.

ஸூதர்: முநீஸ்வரர்களே! உங்களால் எந்தவிஷயமானது நன்றாய்க் கேட்கப்பட்டதோ அந்தரஹஸ்யத்தை என்புத்திக்கு எட்டியபடியும் நான் கேள்விப்பட்டபடியுஞ் சொல்லுகிறேன். உங்களால் எப்படி கேட்கப்பட்டதோ அதேமாதிரி வியாஸமுநிவரால் முன் ஸநத்குமாரரிடம் வினவப்பட்டும், உபமந்யுமுநிவரைக்கேட்கப்பட்டுமிருக்கிறது. பிறகு வியாஸபகவான் ஸநத்குமாரரிடம் சிவபூஜை முதலானவற்றைக் கேட்டு அவர் உலகங்களுக்கு ஹிதத்தைச் செய்வதற்காக எனக்குச் சொல்லினர். ருஷிகளே! எந்த விஷயமானது ஸ்ரீ கிருஷ்ணனால் மஹாத்மாவான உபமந்யுவினிடம் கேட்கப்பட்டதோ அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் லிங்கபூஜை முதலானதை ஸம்க்ஷேபமாகச்சொல்லுகிறேன். ஏனெனில், விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமானால் அநேக வருடங்கள் சொன்னபோதிலும் முடிவு பெறாது. அநேகவிதமாகச் சொல்லுவதாற் பயனென்ன? சுகத்தையடைய விருப்பமுள்ளோன் அவனது ஸர்வ இஷ்டங்களும் கூடிவருவதற்காக அநாதியான சிவரூபத்தைச் சிறந்தபக்தியோடு பூஜிக்கவேண்டும். எவ்வளவுகாலம் சிவபகவானை ஒருமனிதன் பூஜைசெய்யவில்லையோ அவனுக்கு அவ்வளவுகாலமும் தரித்திரத்தன்மை, ரோகம், துக்கம், சத்துரு மூலமாய் உண்டான துன்பம் ஆகிய நான்குவிதங்களான பாபங்கள் ஸித்தித்திருக்கின்றன. சிவபகவானைப் பூஜைசெய்தமாத்திரத்தில் ஸமஸ்தவிதமான துன்பங்களும் மறைந்துவிடுகின்றன. கிடைத்தற்கரிய மனிதசரீரத்தையடைந்த எந்த மனிதன் ஸுகம், சந்ததி இவற்றில் விருப்பமுள்ளவனாக இருக்கின்றானோ அவன் ஸர்வ இஷ்டங்களும் சித்திப்பதற்காக மஹாதேவனைப் பூஜைசெய்யவேண்டியது. பூதேவர்கள், க்ஷத்ரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய நான்குவருணத்தவர்களும் சாஸ்திரப்படி கிரமமாக *ப்ராம்ஹமுகூர்த்தத்தில் எழுந்திருந்து "மேக

வர்ணனே! நான்கு ஹஸ்தங்களோடுகூடியவனே! பக்தர்களின் பயத்தைப் போக்குபவனே! உனது அழகான உருவம் என் மனதில் எப்பொழுதும் வாசஞ்செய்யவேண்டியது" என்று—விஷ்ணுவை யாவது குருவை யாவது தோத்திரஞ்செய்து தீர்த்தங்களை ஸ்மரணம்செய்து பிறகு சுபமானஸ்தோத்திரங்களைக் கிரமப்படிசெய்து எழுந்திருந்து தெற்குத்திக்கில் ஏகாந்தஸ்தலத்தில் மலஜலவிஸர்ஜனஞ்செய்து சுத்தமான மண்ணைப் பிராமணன் ஐந்துதடவையும், க்ஷத்திரியன் நான்குதடவையும், வைசியன் மூன்றுதடவையும், சூத்திரன் இரண்டுதடவையும் கிரமமாக (அந்தந்தஜாதிக்குத் தகுந்தபடி) எடுத்துக் கைகால்களை யலம்பிக்கொள்ளவேண்டும். [இந்த மிருத் க்ரஹண ஸௌசாதி விஷயங்கள் நான்காவது வர்ணஸ்தர்கள்போலப் பெண்களுஞ்செய்ய வேண்டும்.] பிறகு வேதியன் பன்னிரண்டு அங்குல அளவும், அரசன்பதினொரு அங்குல அளவும், வைசியன் பத்து அங்குல அளவும், சூத்திரன் ஒன்பது அங்குல அளவுமுள்ள பற்கொம்புகளை ஸ்மிருதியிற் கூறியபடி கொண்டு † காலதோஷத்தை விசாரித்துச் சுத்திசெய்து, தீர்த்தங்களில் எந்தெந்த வர்ணங்களுக்கு எப்படிஸ்நாநம் நியமித்திருக்கிறதோ அவ்வாறே தேசகாலங்களின் விரோத மில்லாமல் ‡ மந்திரங்களோடு கூடிய ஸ்நாநத்தைச் சூரியோதயத்திற்கு மூன்றுநாழிகைக்குமுன் செய்யவேண்டியது.

ஸ்நாநம்செய்தவிடத்தில் முதலில் ஆசமனம்செய்து பரிசுத்தமான வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு நிர்ஜன ஸ்தலத்தில் இருந்து சதுர்வருணங்களில் எந்தெந்த வர்ணஸ்தர்கள் எப்படி அநுஷ்டிக்கவேண்டுமோ அதே மாதிரி ஸந்தியாவந்தனாதி அநுஷ்டானங்களைச் செய்து, பிறகு பூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டியது. பூஜாக்ரமம்:—மனதை ஸ்திரஞ் செய்துகொண்டு பூஜாக்ருஹத்திற் பிரவேசித்து, பூஜைக்குவேண்டுமான திரவியங்களைச் சேகரித்துக்கொண்டு கிரமமாகச் சிவபகவானைப் பூஜைசெய்யவேண்டியது. முதலில் விநாயகனையும், பிறகு த்வாரபாலகர்களையும், பின்பு திக்பாலகர்களையும் பூசித்து, பின்னர் பீடமாவது அல்லது பூஜாத்ரவ்யத்தின் ஸமீபத்தில் அஷ்டதளமான பீடமாவது செய்துகொண்டு அவ்வாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு பிரபுவான சிவபகவானைப் பார்த்து அடிக்கடி கைகளைச் சுத்திசெய்துகொண்டு மூன்றுதரம் ஆசமனம்செய்து மூன்றுதரம் ¶ ப்ராணாயாமஞ் செய்து, ஐந்து முகங்களோடு கூடியவராயும் பத்துப் புஜங்களோடு கூடியவராயும் நிர்மலமான ஸ்படிகக்கல்லுக்கு ஸமானமான ஒளியையுடையவராயும்,

* ப்ராஹ்மம் - சூர்யோதயத்திற்குமுன் ஐந்துநாழிகைகாலம்.

† அமாவாசை ஏகாதசி முதலான திதிகளில் தந்த சுத்தி செய்யக்கூடாதென்று நிபந்தனை.

‡ அகமர்ஷண திருக்குகள்.

¶ ப்ராணாயாமம் - முகநாஸிகாஸஞ்சாரவாயுவை நிறுத்துதல். பூராதி ஸப்த வியாக்ருதிகளை ப்ரணவஸஹிதமாகச்செய்து மூன்றுதரம் மனஸால் ஜபித்து, பிறகு மஹாவ்யாக்ருதி ஜபித்து, ப்ரணவார்த்தத்தில் மனஸை நிறுத்தல்.

ஸர்வாபரணபூஷிதராயும் புலித்தோலைப் போர்வையாகக்கொண்டு மிருக்கிற சங்கரபகவானை த்யானம்செய்யக்கடவன். அச்சிவபெருமானது ஸாரூப்யத்தை யடைந்து மனிதன் தன்பாபத்தைப் போக்கடிக்கவேண்டும். சிவஸம்பந்திரியானசரீரத்தைத்தரித்துப் பரமேசுவரனைப் பூஜைசெய்கையில் மந்திரத்தால் தேகசுத்திசெய்துகொண்டு கிரமமாக மூலமந்திரத்தை நியாஸஞ்செய்யவேண்டியது. ஸமஸ்தமானவிடத்திலும் ப்ரணவமந்திரத்தாலே *ஆறு அங்கநியாசங்களையும் செய்யவேண்டியது. பிறகு (அத்யாதிப்ரயோகங்களாகிய) சங்கல்பஞ்செய்து பூஜைக்கு ஆரம்பம் செய்யவேண்டும். அப்படியே ஆசமனத்திற்காக ஏற்பாடு செய்திருக்கும் பாத்திரத்தையும் நவ கும்பங்களையும் சாஸ்திரப்படி ஸ்தாபிக்கவேண்டியது. அப்பாத்திரங்களைத்தர்ப்பைகளால்மூடினவைகளாய் ஸ்தாபித்துத் தீர்த்தத்தினல் ப்ரோக்ஷணம்செய்து அப்பாத்திரங்கள் எல்லாவற்றிலும் சீதளத்துடன்கூடிய தீர்த்தத்தைச் சேர்க்கவேண்டியது. புத்திமானன மனிதன் சாஸ்திரத்தாற்பார்த்து ப்ரணவமந்திரத்தால் இனி முறையிடப்போகும் திரவியங்களை அப்பாத்திரங்களில் முறையே சேர்க்கவேண்டியது. பாத்யபாத்திரத்தில் விளாமிச்சிவேரும் சந்தனமும், ஆசமநீயபாத்திரத்தில் ஜாதிசுகந்தை-வெட்டிவேர்-கர்ப்பூரம் இவற்றையும் பொடிசெய்து சேர்க்கவேண்டும். மற்றப்பாத்திரங்களில் சந்தனத்தையும் ஏலத்தையும் சேர்க்கவேண்டும். சிவபெருமானுடைய பக்கப்ரதேசத்தில் நந்தீசுவரரைப் பூஜைசெய்யவேண்டும். வாசநாத்ரவ்யங்களாலும் புஷ்பங்களாலும் தூபதீபங்களாலும் இன்னும் அநேகவிதங்களாலும் சிவபெருமானைப் பூஜிக்கவேண்டியது. அப்பொழுது மனிதனனவன் மஹாஸந்தோஷத்துடன் கூடியவனய் லிங்கத்திற்குச் சுத்திசெய்து, ப்ரணவம் முதல் நமோந்தகமாகிய சிவ மந்திரங்களை ஜபித்துப் பிறகு ப்ரணவத்தால் பத்மாஸநஞ்செய்யவேண்டியது. அதன்கிழக்குப்பக்கமானதளம் அணிமாமயம்; தெற்குப்பக்கமானதளம் லகிமாமயம்; மேற்குத்தளம் மகிமாமயம்; வடக்குத்தளம் பிராப்திஸ்வரூபம்; அக்நிபக்கமாய் இருக்கும் தளம் ப்ராகாமியமயம்; நிருதிபக்கத்தில் இருக்கிற தளம் ஈசத்வமயம்; வாயுத்திக்கில் இருக்கிற தளம் வசித்வஸ்வரூபம்; ஈசான்யபக்கத்தில் இருக்கிற தளம் ஸர்வஜ்ஞத்வமயம். கர்ணிகையில் சந்திரனும், சந்திரனுக்குக் கீழ்ப்பாகத்தில் சூரியனும், சூரியனுக்குக் கீழ்ப்பாகத்தில் அக்நிதேவனும், திக்குகளின் கடைசியில் தர்மாதிகளையும், ஸ்தாபிக்கவேண்டியது. நான்கு திக்குகளிலும் பிரகிருதி-மஹத் அகங்காரம்-தத்விகாரம் என்னும் நான்கினையும், கர்ணிகாரூபமான சந்திரன் சமீபத்தில ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களையும் ஸ்தாபிக்கவேண்டியது. முநிவர்களே! அதன் பின்னர் † ஸத்யோஜாதம் பிரபத்யாமி யென்று பரமேஸ்வரனை ஆவாஹநஞ்

* ஆறு அங்கங்கள்—ஹ்ருதயம்-சிரம்-சிகை-கவசம்-நேத்ரம்-அஸ்திரங்கள்.

† 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌯 𑌵𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌭𑌵𑍇 𑌭𑌵𑍇 𑌨𑌾𑌤𑌿𑌭𑌵𑍇 𑌭𑌜𑌸𑍍𑌵 𑌮𑌾𑌂 𑌭𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

செய்து ‡ வாமதேவமந்திரத்தால் இரத்தினசிங்காஸநத்தில் எழுந்தருளச் செய்து, ¶ ருத்ரகாயத்ரியால் ஸாந்நித்யம் [ஸந்நிதிபரிகல்பநம்] செய்து, $ அகோரமந்திரத்தால் * நிரோதம்செய்து, || ஈஸாநஸ்ஸர்வவித்யாநாம் இத்யாதிமந்திரங்களால் சிவமூர்த்தியைப் பூஜைசெய்யவேண்டியது. சிவபெருமானுக்கு பாத்தியம் அர்க்கியம் ஆசமநீயம் கொடுத்து வாஸநாத்ரவ்யம் சந்தனம் முதலியவற்றோடு கூடிய பூர்ணமான தீர்த்தத்தால் மகாநியாஸ பூர்வக ஏகாதச ருத்ர மகாபிஷேகம்செய்விக்கவேண்டியது. பஞ்சகவ்வியத்திற்குச் சொல்லியிருக்கிற விதிப்படி மந்திரித்து ப்ரணவமந்திரத்தால் கவ்ய ஸ்நாநம் செய்விக்கவேண்டும். தீர்த்தம்-பால் - தயிர் - தேன் - கரும்புரஸம் - நெய் இவற்றாலேயும் அபிஷேகஞ்செய்யவேண்டும். கஸ்தூரி-கந்தம்-குங்குமப்பூ-பச்சைக்கற்பூரம் முதலிய புண்யத்ரவ்யங்களாலும் ப்ரணவ மந்திரத்தாலும் மகாதேவனை அபிஷேகம் செய்யவேண்டும். பிறகு பரிசுத்தமான மந்திரங்களால் அபிமந்திரித்து ஜலகும்பங்களில் வெள்ளிய பரிசுத்தமான வஸ்திரங்களால் வடிகட்டிவைத்த ஜலத்தை யபிஷேகிக்கவேண்டியது. இப்பூஜை சிவபெருமானுக்குத் தூரத்திலிருந்து கையினாலெட்டிப் பூஜிக்காமல் அதிசமீபத்திலிருந்துகொண்டே செய்யத்தக்கது. சிவபெருமானை மனோரம்யமான வெண்மையாகிய அக்ஷதையாலும் பூஜிக்கவேண்டியது. தர்ப்பை-நாயுருவி-ஜாதி - சண்பகம் - பாடலம் - வெள்ளலரி - மல்லிகை - கமலம்-உற்பலமுதலிய நாநாவிதமான அபூர்வமலர்களை ஜலத்திற்சேர்த்தும் விதவிதமான பாத்திரங்களாலும் அபிஷேகஞ்செய்யவேண்டியது. ஸமஸ்தமான பலன்களையும் கொடுக்கிற இச் சிவபூஜையானது மந்திரபூர்வகமாகச் செய்யவேண்டியது; எந்தமந்திரங்களால் மனிதர்கள் ஒருதடவையாவது சிவலிங்கத்தை அருச்சிக்கிறார்களோ அந்தமந்திரங்களை ஸர்வபலஸித்திக்காக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

‡ 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌯𑌨𑌮𑍋𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌯𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌯𑌨𑌮𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌨𑌮𑌃 𑌕𑌾𑌲𑌾𑌯𑌨𑌮𑌃 𑌕𑌲𑌵𑌿𑌕𑌰𑌣𑌾𑌯𑌨𑌮𑍋 𑌬𑌲𑌵𑌿𑌕𑌰𑌣𑌾𑌯𑌨𑌮𑍋 𑌬𑌲𑌾𑌯𑌨𑌮𑍋 𑌬𑌲𑌪𑍍𑌰𑌮𑌥𑌨𑌾𑌯𑌨𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌦𑌮𑌨𑌾𑌯𑌨𑌮𑍋 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑌾𑌯𑌨𑌮𑌃 ॥

¶ 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋𑌰𑍁𑌦𑍍𑌰𑌃𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

$ 𑌅𑌘𑍋𑌰𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌥𑌘𑍋𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌘𑍋𑌰𑌘𑍋𑌰𑌤𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌶𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌅𑌸𑍍𑌤𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑌰𑍂𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 ॥

* நிரோதம்-பூசை முடிவுவரையில் சிவபெருமானை அங்கேயேயிருக்கச்செய்தல்.

|| 𑌈𑌶𑌾𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾 𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑌿𑌪𑌤𑌿
𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍 ॥

எட்டாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூதர்சொல்லுகிறார்:—பவமாநாதிமந்த்ரங்களாலேயும், வாங்மீயக மந்த்ரத்தாலேயும், ருத்திரமந்த்ரத்தாலேயும், நீலருத்ரத்தாலேயும், சுபமான ஸ்ரீஸூக்தத்தாலேயும், ரஜநீஸூக்தத்தாலேயும், மங்களகரமான சமகத்தாலேயும், ப்ரணவத்தாலேயும், அதர்வணவேதசிரஸ் என்னும் மந்த்ரத்தாலேயும், தசசாந்திமந்த்ரத்தாலும், பாருண்டத்தாலும், ஆருணத்தாலும், ஜேஷ்டமென்கிற ஸாமத்தாலும், தேவவ்ரதமென்கிற ஸாமத்தாலும், ரதந்த்ரமந்த்ரத்தாலும், . புஷ்யமந்த்ரத்தாலும், புருஷஸூக்தத்தாலும், மிருத்யுஞ்சய மந்த்ரத்தாலும், சிவ பஞ்சாக்ஷரத்தாலும், ஜலப்பெருக்குகள் ஆயிரம் - அல்லது நூற்றெட்டு ரந்த்ரங்களையுடைய பூரணகும்பங்களால் வேதமார்க்கத்தினலாவது, சிவபெருமானது திருநாமங்களாலாவது அபிஷேகஞ் செய்யவேண்டியது. பிறகு சிவபெருமானுக்குச் சந்தனம்-புஷ்பம் முதலானவை சாத்தி ப்ரணவமந்த்ரத்தால் முகவாஸனைகள் கொடுத்து, பிறகு ஸ்படிகக்கல்மயமாயும், நிஷ்களமாயும், அக்ஷரமயமாயும், ஸர்வ உலகங்களுக்குங் காரணபூதமாயும், ஸர்வலோகஸ்வரூபமாயும், உத்தமமாயும், இந்திரன்-பிரமன்-விஷ்ணு-ருத்திரன் முதலான தேவர்களுக்கும் புலப்படாததாயும்,வேதமறிந்தவர்களாலேயும் வேதாந்தத்தில் கோசரிக்கவில்லையென்று சொல்லப்படுவதாயும், உற்பத்திஸ்திதிநாசம் என்னு மூன்று மற்றதாயும், ஸமஸ்தமானரோகங்களுக்கும் மருந்தாயும், சிவதத்துவ மென்று ப்ரஸித்தமாயும், சிவலிங்கத்தில் வைக்கப்பட்டும் இருக்கிற சிவபகவானை லிங்கத்தின் சிரசில் ப்ரணவத்தினல் தூபம் தீபம் தாம்பூலம் இவற்றை நீராஞ்சநம் சுற்றுவதுபோற் சுற்றி, நமஸ்கரித்துத் துதித்து, அநேக விதமான மந்த்ரங்களாலேயும் பூஜிக்கவேண்டியது. ஸ்தோத்ரம் ஜபம் நமஸ்காரம் ப்ரதக்ஷிணம் இவற்றையும் விதிப்படி செய்யவேண்டும். அர்க்யம்கொடுத்துத் திருவடிகளில் புஷ்பங்களைச் சமர்ப்பித்துத் தேவர்களுக்குஅதிபனை சிவபகவானை மனதால் நமஸ்காரஞ்செய்து பூஜைசெய்யவேண்டியது. கையில் புஷ்பத்தை யெடுத்துக்கொண்டு எழுந்திருந்து இருகரங்களையுங் கூப்பினவனாய் இப்பொழுது சொல்லப்போகிற மந்திரத்தால் ஈசானனை சிவபகவானைப் பிரார்த்திக்கவேண்டியது.

𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌜𑍍𑌜𑌪𑌪𑍂𑌜𑌾𑌦𑌿𑌕𑌂 𑌮𑌯𑌾 ।
𑌕𑍃𑌤𑌂 𑌤𑌦𑌸𑍍𑌤𑍁 𑌸𑌫𑌲𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌤𑌵 𑌶𑌙𑍍𑌕𑌰 ॥ (௪௪)

ஸ்வாமீ! சங்கரா! என்னல் அஞ்ஞானத்தாலேயாவது ஞானத்தாலேயாவது ஜபம் பூஜை முதலானது செய்யப்பட்டதோ அது உமதருளால் ஸபலமாக ஆகவேண்டும்—என்று படித்து, அந்தப்புஷ்பங்களைச் சிவபகவானது திருமுடியில் சேர்க்கவேண்டும். பிறகு மங்களாஸ்பதமான அநேக ஆசீர்வாதங்களைச் செய்து சிவபகவான்மேல் † மார்ஜனம்செய்த, பிறகு,

† ஜலத்தாற் ப்ரோக்ஷணஞ் செய்தல்.

மறுபடியும் வந்து அநுக்ரஹிப்பதற்காகத் தான் செய்த அபராதங்களைப் பொறுக்கவேண்டுமென்று துதித்து நமஸ்காரஞ்செய்யவேண்டும். இங்ஙனமாக, அபராதக்ஷாபணம் முதலியவை செய்து நமஸ்கரித்து, ஸமஸ்தமான பாபத்தோடு கூடியவனாகநினைத்து, மீண்டும் பிரார்த்திக்கவேண்டும்.

𑌶𑌿𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌶𑌿𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌶𑌿𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇 𑌭𑌵𑍇 ।
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌶𑌰𑌣𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌮𑌮 ॥ (௧௮)

ஜன்மந்தோறும் (எனக்கு) சிவபகவானிடத்தில் பக்தியிருக்கவேண்டியது. சிவபகவானிடத்தில் பக்தியிருக்கவேண்டியது. சிவபகவானிடத்தில் பக்தி யிருக்கவேண்டியது. (உன்னைத் தவிர) எனக்கு வேறு ரக்ஷணம் கிடையாது. நீயேரக்ஷணம்—என்று இவ்வாறு ஸர்வ ஸக்தியையுங்கொடுக்கிற மகாதேவனைப் பிரார்த்தித்துச் சிறந்த பக்தியோடு கூடியவனாய் வாத்யங்களின் நாதங்களால் விஸேஷமாய்ப் பூஜிக்கவேண்டியது. பிறகு பரிவாரணங்களோடு சங்கரபகவானை நமஸ்காரஞ்செய்து மிகுந்த ஸந்தோஷத்தையடைந்தவனாய்ச் சுகமாய்த் தன்வேலைகளைச் செய்யவேண்டியது. இந்தப்படிக்குச் சிவபக்தியை முக்கியமாக உடையவனாய் எவன் தினந்தோறும் சிவபூஜைசெய்கிறானோ, அவனுக்கே அடிக்கடி ஸகலமான பலப்ராப்தியும் உண்டாகும். மனதில் நினைத்துக்கொண்டிருக்கிற பலமானது ஆறுமாதத்தில் ஸித்தியாகும். வியாதி-விசனம்-சோகம்-பயம்-சூந்யம்-கோணலான வியபாரம்-விஷம் - இவைபோன்ற எத்தகைய துன்பம் வந்தாலும் க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவரும் கருணாமூர்த்தியுமான சிவபெருமான் அத்துன்பங்களை விலக்குவர். மேலும் சிவபகவானைப் பூஜிப்பதால் அந்த மனிதனுக்குச் சுபங்கள் உண்டாகும். அவன் குணங்கள் ஸுக்லபக்ஷத்துச் சந்திரனைப்போல விருத்தியையடையும். வியாஸபகவானிடத்திலிருந்து கேட்கப்பட்ட இந்த அரியவிஷயம் உங்கள்பொருட்டு இம்மாதிரியாகச் சொல்லப்பட்டது. இதன்பிறகு எந்தச் சரிதையை நீங்கள் கேட்கின்றீர்களோ எல்லாப் பாபத்தையும் போக்கடிக்கவல்ல அச்சரிதையைச் சாஸ்திரபூர்வமாகச் சொல்லுகிறேன் என்று ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கிக் கூறினர்.

சிவபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

முற்றிற்று.

ஒன்பதாவது

தேவர்களது துயருரைத்த அத்தியாயம்.

மகாபாக்யரான வியாஸசிஷ்யரே! தோஷரஹிதரே! தேவரீர் நன்றாகக் கூறினீர். இனி த்ரிபுரஜயத்தைக் கூறவேண்டும். அத் த்ரிபுரத்தினுடைய ரூபம் என்ன? அத் த்ரிபுரம் எவ்விடத்தில் விகாரமடைந்தது? அந்தத் த்ரிபுரத்தினுடைய சைனியம் எவ்வளவு கணக்குள்ளது? சிவபகவானுடைய மஹ

த்தான சேனையும் எவ்வளவுபலமுள்ளது? இவற்றைத் தேவரீர் சொல்லவேண்டுமென்று முநிவர்கள் கேட்க, ஸூதமுநிவர் சொல்லுகிறார்:—மஹா பாக்யர்களே! எந்தக் கதையைக் கேட்டு உலகங்களின் துயரம் நீங்குமோ, அப்பேர்ப்பட்ட புண்யசரித்திரத்தைக் கேட்பீர்கள். மாயை செய்கிறவர்களையும் மோஹத்தை யடையச்செய்கிறவனும், மஹா மாயா ஸம்பந்தியுமான தாரன் என்னும் அசுரனுக்கு மகனான தாரகன் என்கிற ஓரசுரன் இருந்தான். அவன் ஆசிரியன் உத்திரவுபெற்று மதுவென்னும் அசுரனது மிகவழகிய வநத்தையடைந்து, எல்லாத்தேவர்களையும் வெல்லுதற்கு அருந்தவஞ்செய்ய வெண்ணி, இருகைகளையும் ஒருகாலையுந் தூக்கிக்கொண்டும், கதிரவனைப் பார்த்துக்கொண்டும் நூறுவருஷம் தவஞ்செய்தான். பிறகு நூறுவருஷம் வரையில் பெருவிரலை ஊன்றிக்கொண்டும், நூறுவருஷம் ஜலத்தைப் பாநஞ்செய்துகொண்டும், நூறுவருஷம் வாயுபக்ஷணஞ்செய்துகொண்டும், நூறுவருஷம் ஜலத்தில் இருந்துகொண்டும், நூறுவருஷம் வெயிலிலும், நூறுவருஷம் பஞ்சாக்நியின் மத்தியிலும், நூறுவருஷம் கைகளை மாத்திரம் பூமியில் ஊன்றிக்கொண்டும், நூறு வருஷம் மரங்களின் கிளையைப் பிடித்துக்கொண்டும், நூறுவருஷம் அதோமுகமாகவும்இருந்து, கேட்பவர்கள்மனமும் அஞ்சத்தக்க கடினமானதவத்தைச்செய்தான். அதனால் அவனுடைய ஸிரத்தினின்றும் மஹத்தான தேஜஸ் கிளம்பித் தேவர்களின் உலகங்களைக் கொளுத்தலாயிற்று. இந்திரனும் இவ்வசுரன் தன் பதவியை எங்கு அடைந்துவிடுகிறானோவென்று பயமுற்றான். மிகவும் துயரத்தை யடைந்த தேவர்கள் இஃதென்ன ஆச்சரியம்! ப்ரபுவான சிவபெருமான் அகாலத்தில் பிரமாண்ட ஸம்ஹாரஞ்செய்யப்போகிறாரா? என்று ஸந்தேகப்பட்டார்கள். இப்படி இருக்குங்காலத்தில், ஒருவன் பிரமதேவனைக் குறித்துப் பயங்கரமான தவஞ்செய்கிறான் என்று தெரியவந்தது.

தேவர்கள் ஒன்றுகூடி, பிரமாவானவர் கொடுக்கக்கூடாத அருமையான வரத்தைக் கொடுக்காமல் இருக்கும்பக்ஷத்திலும், எல்லாவுலகங்களுக்கும் நாசமுண்டாகும். அசுரனாதலால் வரங்கொடுத்தபோதிலும் பெருந்துன்பம் உண்டாகும். எப்படி இருந்தாலும் உலகங்களுக்கு நாசம் ஸம்பவிக்கப் போகிறதாதலால் பிரமாவானவர் வரங்கொடுக்கப் போகிறார். இந்த விஷயத்தில் ஸந்தேஹமில்லை என்று ஆலோசனை செய்துகொண்டு, தேவர்கள் பிரமனையடைந்து நமஸ்காரஞ்செய்து அவரை நோக்கித் தாராகாசுரன் தவஞ்செய்யுஞ் சங்கதி முதலானவற்றைத் தெரிவித்தார்கள். தேவர்களின் விருப்பத்தைச்சாதிக்கிற பிரமதேவர் ஸமஸ்தமான விஷயங்களையும் நிச்சயித்துக்கொண்டு அவ்வசுரன் கடூரமான தவஞ்செய்யுமிடத்திற்கு ஹம்சவாஹனராய்ச்சென்று காட்சியளித்து உன்னால் கடினமான தவம் செய்யப்பட்டது. வேண்டுமானவரத்தைக்கேள்: தருகிறேன் என, தாரகன் பிரமதேவரை நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறான்.

பிரஸன்னரான தேவரீர் வரங்கொடுப்பவராக இருக்க எனக்கு அஸாத்தியமானது என்ன இருக்கிறது? தேவர்கட் கிறைவரான பிரமதேவரே! பிரஸன்னரான தேவரீர் எனக்கு வரங்கொடுக்கத்தக்கவராய் இருக்கும்பக்ஷத்தில் இரண்டுவரம் எனக்குவேண்டும். அதாவது, தேவரீரால் நிர்மாணஞ் செய்யப்பட்டலோகத்தில் பலத்தில் எனக்குச் சமானனான புருஷன் இல்லையென்று சொல்லத்தக்க பலத்தையும், சிவபெருமானுடைய வீர்யத்திற்கு உண்டாகிற பிள்ளையானவர் ஸேநாதிபதியாக என்மேல் எப்பொழுது அஸ்த்ர ப்ரயோகஞ் செய்கிறாரோ அப்பொழுதுதான் எனக்கு மரணம் வரவேண்டும் என்பதையுங் கேட்டான். உலக பிதாமஹனான பிரமதேவர் அவ்வாறே வரங்களைக் கொடுத்துத் தன்னுடைய ஸத்ய லோகத்தை யடைந்து, அவன் தபோபலத்தால் உண்டான தாஹத்தைப் போக்கடித்துக் கொண்டார். மஹாமுநிவர்களே! அந்தத் தைத்யனும் தவச்செயல் நீங்கினவனாய் அவ்வரத்தை யடைந்து சோணிதபுரியைச் சேர்ந்தான். அப்பொழுது எங்குமுள்ள அசுரர்களும் ஒன்றுகூடி, தாரகாசுரனே! நீ இம்மூவுலகங்களினுள்ள எங்களுக்கெலாம் அரசனாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

தாரகன் அந்த அசுரர்களால் அபிஷேகஞ்செய்யப்பட்டவனாய் அசுரர்களுக்கெல்லாம் மன்னவனாகி, பூமியில் ஒருவராலுஞ் செய்யப்படாத ஆஜ்ஞையை நடக்கச் செய்தான். பிராம்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைஸ்யர்கள், சூத்திரர்கள், *விஜாதியானவர்கள், இவர்களும், தானவர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள் முதலியயாவரும் அந்தத் துராத்மாவான தாரகனால் பிடித்து மிகத் துன்பஞ்செய்யப்பட்டவர்க ளானார்கள். அவர்களிடத்தில் இருக்கிற சிறந்த பொருள்களைக் க்ரகித்துக்கொண்டான். இந்திரன் முதலானவர்களால் தங்கள் தங்கள் செல்வங்கள் அவனுக்குக் கப்பணமாகக் கொடுக்கப்பட்டன. இந்திரனால் உச்சைச்ரவம் என்னும் அசுவமும், யமனால் ரத்நமயமான தண்டமும், குபேரனால் கதை, நவநிதிகள் இவைகளும், வருணனால் உத்தம ஜாதிகளான குதிரைகளும், ருஷிகளால் காமதேனுவும் கொடுக்கப்பட்டன. இம்மாதிரியாக எங்கெந்த விடத்தில் உத்தமமானவஸ்துவைப் பார்க்கிறானோ அப்பொழுதே அதை வரவழைத்துவிடுவான். ஸமுத்திரராஜனும் அவனுக்குத் தனது இரத்தினங்களைக் கொடுத்தான். சூரியபகவானும் அந்த அசுரனுக்கு எவ்வளவு காலம் சுகமாக இருக்கிறதோ அவ்வளவு காலம் காய்ந்தான். சந்திரன் எப்பொழுதும் அவன் ஸமீபத்திலேயே இருந்தான். வாயு எப்பொழுதும் சுககரனாகவே யிருக்க மெல்லென வீசிக்கொண்டிருந்தான். தேவர்களுக்குச்செய்யும் ஹவ்யம் பித்ருக்களுக்குச்செய்யும் கவ்யம் இவைகளையும் பலிஷ்டனான அவ்வசுரனேயடைந்தான். மூன்றுலகத்தா

* விஜாதியாவது - இந்நாலு வர்ணங்களிலும் வேறானவர். அநுலோமர் - பிரதிலோமர் - அந்தராளர்-விராத்தியர் முதலானோர்.



(6- சிவபெருமான் சநகாதியருக்கு ஞானநிலையுணர்த்துகையில், உமாதேவியார் தந்தை கட்டளைப்படி சிவபூசை செய்துகொண்டிருக்க, மன்மதன் மலர்க்கணை விடுத்துச் சாம்பரானது.-

ரும் தேவர்களும் தாரகாசுரனது உத்திரவையே முக்யமாகக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது முநிவர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள் முதலிய யாவரும் அவ னுத்திரவின்படி நடக்கும்பொழுது ஜராமரண ஸஹிதர்களான இம்மனிதர் விஷயத்தில் கேட்கவேண்டுவது உண்டா? அந்த அசுரனால் எல்லா † தேவோத்தியானங்களும், ஸமஸ்தமான தீர்த்தங்களுங் கொண்டு வந்து தன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. இம்மாதிரியாக அநேகவருடங்கள் சென்றன. அப்பொழுது தேவர்கள் யாவரும் ஒன்றுகூடிப் பிரமதேவனைச் சரணமடைந்தார்கள்.

தேவர்களது துயருரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

பத்தாவது
சிவபெருமான் யோகத்தமர்ந்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—முநிஸ்ரேஷ்டர்களே! அந்தத் தேவர்கள் யாவரும் உலகங்களுக்குப் பிரபுவான பிரமனையடைந்து நமஸ்கரித்துத் தலைகுனிந்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது பிதாமஹன், துன்பத்தையடைந்திருக்கிற அந்தத் தேவர்களைப்பார்த்து, தேவர்களே! நீங்கள் எந்தக்காரணமாக இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு என்ன துக்கம்? என்னால் ஸாத்தியப்படும்பக்ஷத்தில் அந்தத்துயரத்தை இப்பொழுதே போக்கடிக்கிறேன் என்றுரைத்தனர். ருஷிகளே! இவ்வாறு கூறிய பிரமதேவர் மொழிகளைக்கேட்டு தேவர்கள் தங்கள் பரிவாரங்களோடு ஒன்றுகூடி ஒரு வார்த்தை சொன்னார்கள். தாரகாஸுரனால் நாங்கள் அனுபவிக்கும்துன்பம் தேவரீருக்குத் தெரியாதா? அந்தத் துன்பத்தைத் தேவரீர் போக்கடிக்க வேண்டியது. அதற்காகவே நாங்கள்வந்திருக்கிறோம் என்று இவ்வாறு கூறியதேவர்களைப்பார்த்துச் சதுமுகக்கடவுள் சொல்லுகிறார். விஷவ்ருக்ஷமாக இருந்தபோதிலும் தான் காப்பாற்றிப் பிறகுவெட்டுவது அயுக்தமாவதுபோல் என்னால்வ்ருத்தியடையப்பெற்றவனுக்கு என்னாலேயேவதஞ்செய்யப்படுவது யோக்கியமன் றாகையால், உங்களுக்கு ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன். சிவபெருமானதுவீர்யத்திற்குப் பிறக்கும்பிள்ளை இவனைக் கொல்லப்போகிறான். அப்படிச் சிவவீர்யத்தில் புத்ரோத்பத்தி யுண்டாவது துர்லபமாம். அதுவிஷயத்தில் ஒருவிதமான யோசனையுண்டு. நீங்கள் செய்யக்கூடுமானால் சொல்லுகிறேன்:—ஹிமோத்கிரியின் அழகான கொடுமுடியில் சிவபெருமான் யோகஞ்செய்கிறார். நாரதபகவானாலும் தன்தந்தையான பர்வதராஜனாலும் நீ மஹாதேவனுக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்று நியமிக்கப்பட்டவளாய்ப் பார்வதிதேவியானவள் தனது இரண்டு தோழிமாரோடுஞ் சிவபெருமான் யோகஞ் செய்யுமிடத்தில் வந்து உபசரிக்கிறாள். ருஷிஸ்ரேஷ்டர்களே! அவளுடன் எப்பொழுது சங்கரபகவான் ஸம்பந்தப்படுகிறாரோ அப்பொழுது

† தேவோத்தியானம்=தேவ+உத்தியானம். உத்தியானம் - பூந்தோட்டம்.

அவளிடத்தில் வீர்யமானது விழும். பிறகு உங்கள்காரியம் கைகூடுகிறதற்கு ஸந்தேகமே கிடையாது. அந்தச் சிவபகவானது வீர்யத்தைப் பரிப்பதற்குப் பார்வதியே யோக்யமானவள். அன்யஸ்திரீயினால் முடியாது. அதற்கேற்ற உபாயம் நீங்கள் செய்யவேண்டியது. அப்பொழுது உங்களுக்கு கார்யஸித்தியுண்டாகிறது என்று சொல்லினர். அந்தப்பிரமதேவர்வார்த்தையைக் கேட்டுத் தேவதைகள் யாவரும் நமஸ்காரஞ் செய்து ஒருவரோடொருவர் ஆலோசித்துக்கொண்டு இந்திரனை யடைந்து ஸர்வமான காரியங்களையுஞ் சொன்னார்கள். எப்படியானால் சிவபகவானுக்குப் பார்வதியினிடம் ஆசையுண்டாகுமோ அதேமாதிரி பிரமன் சொன்னபடி உம்மால் செய்யத்தகும் என்று எல்லாவற்றையும் முறைப்படியுரைத்துத் தேவர்கள்மிகவும் ஸந்தோஷத்தை யடைந்தவர்களாய்த் தங்கள் தங்கள் இருப்பிடத்தை யடைந்தார்கள். அந்தத்தேவர்கள் போனபிறகு தேவேந்திரன் மன்மதனை நினைத்தான்.

பிரபுவான மன்மதன் தேவியான இரதியோடு அந்த க்ஷணத்திலேயேவந்து நமஸ்கரித்து நின்றுகொண்டு கரங்களைச் சிரமேற்கூப்பித் தேவர்களுக்கு அதிபனாகிய இந்திரனே! உமக்கு இப்பொழுது என்ன காரியம் உண்டாயிற்று? எந்தக் காரணத்தால் நீர் என்னை நினைத்தீர்? அதைச் சொல்லவேண்டும். அந்த வேலையைச் செய்வதற்காகவே நான் வந்திருக்கிறேன் என்று இவ்வாறுரைத்து மௌனமாக இருந்தான். இந்திரனும் மன்மதன் சொல்லைச் செவியுற்று, நீ சொன்ன வார்த்தை மிகவும் யுக்தம்புக்தம் என்று துதிசெய்துகொண்டே சொல்லுகிறான். மகரத்வஜனே! இப்பொழுது எந்தக் காரியம் வந்துளதோ அது உன்னால் செய்யத்தக்கதே; எந்தக் காரணத்தால் தங்யனான நீ அந்த வேலையைச் செய்ய முயற்சியுள்ளவனாக இருக்கின்றையோ அதைச் சொல்லுகிறேன். எவ்வெவை என் காரியங்களோ அவையெல்லாம் உன் காரியங்களே; வேறல்ல. எனக்கு அநேக ஸ்நேஹிதர்கள் இருந்தபோதிலும் உனக்குச் சமமான ஸ்நேஹிதன் எப்பொழுதும் கிடையாது. எனக்கு யுத்தத்திற்காக பிரமதேவனால் உத்தமமான வஜ்ராயுதம் சிருஷ்டிக்கப்பட்டது. உன்னை மற்றொரு அஸ்திரமாகவும் நிர்மாணம் செய்தார். அவ்விரண்டு அஸ்திரங்களில் வஜ்ராயுதம் ஹிம்ஸிக்கும் ஸ்வபாவமுடையது. நீயோவென்றால் சுகத்தை யுண்டுபண்ணுகிற தன்மையுள்ளவன் என்று ஏற்பட்டிருக்கிறது! ஸமஸ்தமானபேர்களிலும் சிறந்தவனான மன்மதனே! அவ்விரண்டு அஸ்திரங்களுக்குள் நீயே சிறந்தவன். ஏனெனில், வஜ்ராயுதமானது ப்ரயோஜனமில்லாததாக ஆனாலும் ஆகும். நீயோ ஒரு சமயத்திலும் நிஷ்பலனாக ஆகமாட்டாய். ஆகையால் எவனிடத்திலின்றும் ஹிதமுண்டாகுமோ அவனைக் காட்டிலும் ஹிதமான புருஷன் வேறொருவன் நமக்கு எவன் இருக்கிறான்? இதனால் நமக்கு மிகவும் ஸ்நேஹிதனான நீ இந்தக் காரியத்தைச் செய்வதற்கு யோக்கியனாகிறாய்; இது அயலாரால் அஸாத்தியமோவெனில் இப்பொழுது நெடுங்காலம் போக்கடிக்க முடியாததாக உண்டாயிருக்கும் இந்தத்துன்பத்தை இப்பொழுது போக்குவதற்கு உன்னைத்தவிர மற்

ெருருவனுலும் முடியாது. உலகத்தில் கொடையாளிக்குக் கருப்புக்காலத்தி லும்ஸூரனுன மனிதனுக்கு யுத்தத்திலும்,ஸ்நேஹிதனுக்குஆபத்காலத்திலும் புருஷனுக்கு அசக்தி காலத்திலும், ஸ்திரீகளுக்கும் நற்குலத்தில் பிறந்தவ னுக்கும் ஆபத்காலத்திலும், ஸ்நேகத்திற்கு சங்கடம் வந்தகாலத்திலும், மனிதர்களால் பரீக்ஷையுண்டாகிறது. ஓ மித்ரஸ்ரேஷ்டனே! உன்விஷயமான பரிக்ஷையானது இப்பொழுது உண்டாயிருக்கிறது. இந்தக்காரியம் எனக்கு மாத்திரம் சுகத்தைக் கொடுக்கத்தக்க தல்ல; ஸமஸ்ததேவர்களுக்கும் சுகத்தை யுண்டுபண்ணத்தக்கது. இந்த விஷயத்தில் நாமே யாசிக்கிறவர் களாகிறபடியால் இந்தச்சுபமான காரியத்தைநீசெய்துமுடிக்கவேண்டியது.

இவ்விதமாக இந்திரன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு மீன கேதனன் விசுவாசத்தால் கம்பீரமாக, தழதழப்போடு கூடிய புன்சிரிப்புடன் சொல்லுகிறுன்:—தேவேந்திரனே! நம்மிருவருக்கும் பேதம் கிடையாதா கையால் நீர் இப்படி ஏன் சொல்லவேண்டும்? உலகங்களில் உபகாரஞ்செய் கிறவன் காரியத்தால் தெரியப்படுகிறுனே யொழிய, வெறும்பேச்சால் தெ ரியப்படுகிறதில்லை. எவன் நான் இந்த வேலையைச் செய்துமுடிக்கத் திறமை யுள்ளவனென்று பிரகாசமாய் வாய்விட்டுரைக்கிறுனே அவன் எந்தவேலை செய்யப்போகிறுன்? ஓ மகாராஜனே! அப்படி அநுசிதமாக இருந்தபோதி லும் சொல்லுகிறேன் கேளும். முக்திமார்க்கத்தை யடைந்திருக்கும் உன் சத் துருவைத் தள்ளுகிறேன்; உன்னுடைய ஸ்தானத்தை க்ரஹிக்க எவன் தவஞ் செய்கிறுனே அவனை க்ஷணகாலத்தில் ஸ்திரீகடாக்ஷத்தால் கீழேதள்ளச் செய்கிறேன்; தேவனுகிலும் ராக்ஷஸனுகிலும், சிறந்தமுநிவனுகிலும் அவனை க்ஷணத்தில் நாஸப்படுத்துகிறேன். இப்பொழுது நாஸப்படுத்தும் மனிதர் களை ஒருகணக்கிற் கூட்டவே இல்லை. உம்முடைய வஜ்ராயுதம் இன்னும் இருக்கும் அனேக அஸ்திரங்கள் இவற்றைத் தூரத்தில் எறிந்துவிடும். உமக்கு மிகவும் மித்ரனுன நான் வந்திருக்கிற பொழுது அவ்வாயுதங்கள் எந்தக்காரியத்தைச் செய்யப்போகின்றன. சிவபெருமானையே தள்ளுவேனே யாகில் பிறர் விஷயத்தில் கேழ்க்கவேண்டியதென்ன? என்றுசொன்னுன். இந் திரன் அதைக்கேட்டு மகா ஸந்தோஷத்தோடு கூடியவனுய் மன்மதனைப் பார் த்துச் சொல்லுகிறுன். ஓ மன்மதனே! நான் எந்தக் காரியத்தை மனதில் நினைத்தேனே அந்தக்காரியம் உன்னுல் சொல்லப்பட்டது. உன்னை எதற் காக யான் நினைத்தேனே அதைச் சொல்லுகிறேன் கேள். தாரகனென்னும் மஹாசுரன் பிரமதேவனிடத்தில் உயர்ந்த வரத்தை யடைந்து தர்மங்களை நாஸஞ்செய்துகொண்டு உலகங்களைப் பீடிக்கிறுன். பிரபுவே! ஸமஸ்தமான தேவர்களும் நிர்மலர்களான முநீஸ்வரர்களும் அந்த அசுரனுல் துக்கத்தை யடைந்தார்கள்; அவன் விஷயத்தில் தேவர்களின் ஆயுதங்களும் நிஷ்பலமாக ஆய்விட்டன. அவ்வசுரனுக்கு இப்படி அஸ்திரங்களால் மரணம் கிடையாது. அந்தத் துஷ்டஸ்வபாவத்தையுடைய தாரகாஸுரனுக்குச் சிவபெருமானது வீர்யத்திற்குப் பிறந்த பிள்ளையால் மரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் காரியமானது உனக்குதான் சாத்தியம். தேவர்களுக்குமிகுந்த சுகத்தையுண்டுபண்ணத்தக்கதும், எனக்குமிக்க ஹிதஞ் செய்வதுமான இந்தக் காரியத்தை நீ இப்பொழுதே செய்யவேண்டும். சிவபகவானும் மஹத்தான யோகத்தைச்செய்துகொண் டிருக்கிறார். அவருக்குப் பணிவிடைசெய்வதற்காகப் பார்வதி தனது தோழிகளுடன் கூடியவளாய் அவர்ஸமீபத்தில் தனது தகப்பனை ஹிமாசலமன்னன் உத்தரவு பெற்றுக்கொண்டு இருப்பதாய்நாம் கேள்விப்படுகிறோம். ஆகையால் மஹாத்மாவான அந்தச் சிவபகவானுக்கு எப்படி அந்தப் பார்வதியின்மேல் மோகம் உண்டாகுமோ, அப்படி நீயே செய்யவேண்டியவன்! இந்தப்படி நீ உபகாரஞ்செய்தால் க்ருதார்த்தனுவாய். உலகங்களுக்குண்டான துபரமும் போய்விடும். உன் ப்ரதாபத்தால் உலகங்களுக்கு நிலையான தன்மை யுண்டாகும். இதற்குச் சந்தேகமில்லை என்று சொன்னான். அதைக்கேட்ட அப்பஞ்சபாணன் விகசித்த முகபங்கயத்தையுடையவனாய் அப்பொழுது ஹிதத்தையுண்டுபண்ணுகிறவனாக இந்திரனைப் பார்த்து விஸ்வாஸத்தால், சிவபெருமானைப்பார்வதிதேவியிடம் மஹா அன்புள்ளவனாகச் செய்துவிடுகிறேன்; இதில் ஸந்தேகமில்லை என்று சொல்லி அத்தேவேந்திரனது வார்த்தையைச் சிரஸாக வகித்துத் தனது பத்நியான ரதிதேவியோடும் தனதன்பனை வசந்தனோடும் சேர்ந்துகொண்டு எந்தவிடத்தில் ஸாக்ஷாத் சிவபெருமான் பரமயோகம் செய்கிறாரோ அங்குபோய்ச் சேர்ந்தான்.

அப்பொழுது வஸந்தனும் தனது தர்மத்தை யடைந்திருந்தான். வஸந்தருதுவுக்கு எந்தெந்த தர்மங்கள் உண்டோ அந்தத்தர்மங்கள்யாவும் அவ் வனத்தில் வந்து சேர்ந்தன. அந்தவனத்தில் பலாஸக்காடுகளிற் புஷ்பங்கள் விகசித்தன. தேமாமரங்களிலும், அசோக வனங்களிலும் புஷ்பங்கள் மலர்ந்தன. வகுள விருக்ஷங்களிலும் பிரமரங்களால் வியாப்தங்களாய் இருந்தன. அதேமாதிரி சில திலகவிருக்ஷங்களில் பொற் கோகிலங்களுடைய இனிமையான சப்தம் உண்டாயிற்று. அந்த மஹாவனத்தில் வண்டுகளின் ரீங்காரம் உண்டாயிற்று. சந்திரகிரணங்கள் தூதிகைகள்போல் மன்மதாவஸ்தையை யடைந்திருக்கிற மானியான புருஷர்களை ஸம்போகத்துக்கு யோக்கியமான காலத்தில் தங்கள் நாயகியிடம் செலுத்தின. வாயுவானவன் அந்த இடத்தில் சுகமாய் வீசினான். அவ்வனத்தில் வசிக்கும் முநிவர்களுக்குஞ் சகிக்கக்கூடாததாகக் காமப்பெருக்கை உண்டுசெய்து விட்டது. அந்தவனத்தில் கல் மரம் முதலிய அசேதனங்களுக்கும் மன்மதா ஸக்தியுண்டாக்கிற்றென்றால், தேவர்மானவர்விஷயத்தில் கேட்கவேண்டுவதுண்டா?

யாவருடைய துன்பத்தையும் போக்குபவராயும் சிரேஷ்டராயுமிருக்கிற சிவபகவான் அப்பொழுது அவ்விடத்தில் அகாலத்தில் வஸந்த ருதுவின் உற்பத்தியைப்பார்த்து மஹத்தான வியப்பையடைந்து, பிறகு கடூரமான யோகத்தைச் செய்தார். இவ்வாறு பலவிதமாய் வஸந்தருதுவானது

வியாபித்திருக்கையில், மன்மதன் தனது தேவியுடன் கூடியவனாய்ச் சிவபெருமானது இடதுபக்கத்தில் தனது ஸூதபாணத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நின்றனன். அப்பொழுது ரதிஸஹிதனான மன்மதனைப் பார்த்து யார்தான் மோஹிக்கமாட்டார்கள்? அத்தருணத்தில், பார்வதிதேவியானவள் பலவிதமான மலர்களையுஞ் சேகரித்துக்கொண்டு தனது ஸஹிகளோடு கூடியவளாய்ச் சிவபெருமான் இருக்கும் இடத்திற்குச் சிவபூஜை செய்வதற்காக வந்தனள். இந்த உலகத்தில் நாநாவிதமாயும் உயர்ந்ததாயும் எப்படிப்பட்ட ஸௌந்தர்யம் உண்டோ அந்த அழகு முழுவதும் அந்தப் பார்வதிதேவியினிடத்திலேயே நிலைத்திருந்தது. அந்தப் பார்வதிதேவியால் வஸந்த ருதுவில் உண்டான புஷ்பங்கள் ஸந்தோஷத்தோடு தரிக்கப்படுமேயானால், அவளுடைய ஸௌந்தர்யத்தை அநேக வருஷங்கள் கூறினும் வர்ணித்து முடியுமா? எப்பொழுது சிவபகவானது சமீபத்தைப் பார்வதியானவள் அடைந்தாளோ அப்பொழுதே மன்மதன் சிவபெருமான் பார்வதியின்மேல் மோஹிக்கத் தனது வில்லை வளைக்கையில், அது அவன் கையில் நின்றும் நழுகிச் சிவபகவான் பக்கத்தில் விழ, அவர் அதனால் யோகு நீங்கினர்.

அப்பொழுது கருநெய்தல்போலிருக்கிற கண்களையுடைய அந்தப் பார்வதி மஹாதேவனைப் பார்த்து அச்சிவபெருமானை நமஸ்காரஞ் செய்து பூஜைகள்செய்து நின்றுகொண்டிருந்தாள். மிக்க அழகிய சரீரத்தையுடைய அப்பார்வதிதேவியைப் பிரபுவான சிவபெருமான் பார்த்து, அவளது அழகான சரீரத்தை வர்ணிக்கத்தொடங்கினர்:—இது முகமோ அல்லது சந்திரனோ? இவை கண்களோ கருநெய்தற் புஷ்பங்களோ? இப்புருவங்கள் இரண்டும் மஹாத்மாவான மதனனது தநுஸுகளோ? இது அதரமோ கொவ்வைக்கனியோ? இது நாசிகையோ கிளியின் மூக்கோ? இது ஸ்வரமோ கோகிலத்தின் ஆலாபமோ? இது மத்யமோ? இவளது நடையையும் உருவத்தையும் புஷ்பங்களையும் இவளது வஸ்திரங்களையும் இவளது சிருஷ்டியில் நிர்மாணம் பண்ணப்பட்ட ஸௌந்தரியத்தையும் என்னவென்று அடிக்கடி வர்ணிக்க முடியும்? என்று,இவ்வாறு பார்வதிதேவியை வர்ணித்து யோகத்தில் நின்று ஒழிந்தவராக ஆனார். சிவபகவான் எவ்வளவுகாலம் பார்வதியின் முன்றானையைக் கையாற்பரிசித்தனரோ அவ்வளவுகாலம் தூரத்திலேயே நின்றாள். மஹா ஸௌந்தர்யவதியான அந்தப் பார்வதியானவள் ஸ்திரீ ஸ்வபாவத்தினால் மிகவும் வெட்கத்தோடு கூடியவளாய்த் தனது அவயவங்களைப்ரகாசம்பண்ணிக்கொண்டும் அடிக்கடி சிவபெருமானைப்பார்த்துக்கொண்டும் நின்றனள். இவ்வாறாகப் பார்வதிசெய்துகொண்டிருந்த ஸ்ருங்காரங்களைப்பார்த்து, சம்புவானவர் மோஹத்தையடைந்து, ஆ! இவளது ஆலிங்கனத்தைநான் அடைவேனானால் இதைக்காட்டிலும் அடையும்சுகம் வேறுண்டா? என்று க்ஷணகாலம் யோசித்து நான் ஏன் மோஹத்தையடைந்தேன்? ஈசுவரனை நான் ஸந்தோஷத்தோடுகூட அங்கஸ்பரிசத்தினை இச்சிப்பேனாகில்

வேறு எந்தக்ஷுத்திரன் எந்தெந்த அற்பத்தொழிலைச் செய்யமாட்டான்? என்று மனந்திரும்பி ஸர்வாத்மாவான ஈசுவரன் த்ருடமான பர்யங்கபந்த மர்யாத யோகபட்டத்தைத் தரித்தார்.

சிவபெருமான் யோகத்தமர்ந்த அத்தியாயம்

முற்றிற்று.

பதினொன்றாவது

பார்வதி பரிவர்த்தன முரைத்த அத்தியாயம்.

ருஷிகள் சொல்லுகிறார்கள்:—ஸூதமுநிவரே! பிறகு என்ன சங்கதியுண்டாயிற்றோ? அதையுஞ் சொல்லவேண்டுமென, ஸூதமுநிவர் சொல்லுகிறார்:—ருஷிகளே! அதன்பிறகு நிகழ்ந்தவற்றையுஞ் சொல்லுகிறேன் கேட்பீர்களாக. யோகத்திற்கு நழுவுதல் வந்ததைப்பார்த்து இதற்குக் காரணம் ஏதாவது இருக்கவேண்டும்; காரணமில்லாமல் நேரிடாதென்று சிவபகவான் அப்பொழுது நான்கு திக்குக்களையும்பார்த்தார். தனது இடது பக்கத்தில் இருந்துகொண்டு பாணாகர்ஷணம்செய்கிற மன்மதனைக்கண்டார். அவனைப்பார்த்துக் கடுங்கோபங்கொண்டு இதென்ன ஆச்சரியம்? ஒருவராலும் ஆக்ரமிக்கக்கூடாத நான், துஷ்டனான மன்மதனால் விடப்படவில்லை— என்று சிவபகவான் திருவுள்ளத்தெண்ணுகையில், அவரது நெற்றிக்கண்ணில் நின்றும் உயரக்கிளம்பின ஜ்வாலைகளையுடைய அக்நியானது வெளிப்பட்டது. அந்த அக்நியால் அப்பொழுதே மன்மதன் பஸ்மமானான். எமதுபிரபுவான சிவபகவானே! பொறுக்கவேண்டும் என்று தேவர்களின் வார்த்தைகள் எவ்வளவுக்குள் உண்டாயினவோ, அதற்கு முன்னமே மன்மதன் சாம்பலாக்கப்பட்டான். மகாபலசாலியான அந்தமன்மதன் மரணத்தையடையவே தேவர்கள் துக்கத்தையடைந்தார்கள். சிவபகவானும் அந்தக்ஷணத்திலே அந்த ஆசிரமத்தைவிட்டு வேற்றிடஞ் சென்றார். பார்வதியும் த்ருடமான மனத்தையுடையவளாய், தனது ஆபரணமுதலியவற்றை யெடுத்துக்கொண்டு சகிகளுடன் வேகமாகத் தனது தந்தை வீட்டை நோக்கி நடந்தாள்.

அப்பொழுது ரதி தேவியானவள் க்ஷணகாலம் மூர்ச்சையையடைந்து, கணவன் மரணமடைந்ததால் உண்டான துக்கத்தை யறியாதவளாய், ஞாபகம் உண்டானபிறகு ஆற்றமுடியாத துக்கத்தோடுகூடிக் கூச்சலிட்டு அழுதாள். அவள் அழுஞ்சமயத்தில் அவ்வனமுந் துக்கத்தையடைந்தது. அப்பொழுது மயில்கள் தங்கள் நர்த்தனத்தை விட்டன. விருக்ஷங்கள் சலிப்பதை ஒழிந்தன. மிருகங்கள் தங்கள் மேய்ச்சலை நீங்கின. வண்டுகள் தங்கள் ரீங்காரத்தை நீங்கின. ஓ பிராமணர்களே! எப்படி முநிவர்கள் மௌனத்தை யடைந்திருப்பார்களோ அப்படியே பக்ஷிகளும் மௌனமாக இருந்தன. வாயுக்கள் சலிப்பதை நிறுத்திப் பத்துத்திசைகளிலும் வீசவில்லை. இவ்வாறிருக்கையில் ரதி சொல்லுகிறாள்:—என்னசெய்வேன்? எங்குபோ

வேன்? என்ஸ்வாமியான மன்மதனைத் தேவர்கள் வீணே அழைத்து என்ன காரியஞ் செய்தார்கள்? ஆ நாயகனே! நாயகனே! என்று மன்மதனையழைத்து, கைகளையும் கால்களையும் அடித்துக்கொண்டு கூந்தல்களை யறுத்தனள். எனது கர்மத்தால் சமானமான போகமானது ஸகிக்கப்படவில்லை. உலகத்தில் சுகத்தைக்கொடுப்பவனும் ஒருவன்கிடையாது; துக்கத்தைக்கொடுப்பவனும் ஒருவன் கிடையாது; ஆனால் ஸமஸ்தமான ஜந்துவும் தான்செய்த வினையையநுபவிக்கின்றது. ஆகையால் தேவர்களைப்பற்றிச் சோகிப்பதிற்பலனில்லை என்று இதுபோன்ற வார்த்தைகள் சொன்னாள். அப்பொழுது அந்த ரதிதேவியின் அழுகுரலைக்கேட்டு, தேவர்கள் சிவபகவானையடைந்து, அவரைத்துதிசெய்து, உலகங்களுக்குச் சுபத்தை யுண்டுபண்ணுகிற பகவானை சங்கரனே! நாங்கள் சொல்லும் விண்ணப்பத்தைக் கேட்கவேண்டும்; இப்பொழுது மன்மதனாற் செய்யப்பட்டகாரியம் தனக்காகவன்று; துஷ்டனான தாரகனாற் பீடிக்கப்பட்ட தேவர்களுடைய வேண்டுகோளாற் செய்யப்பட்டது. இதற்குச்சந்தேகமில்லை. இரதிதேவியானவள் தனியாய்த் துக்கிதையாய்ப் பிரலாபிக்கின்றனள். எம்பெருமானே! தேவரீர் எவ்விதத்திலுங்கிருபைசெய்யவேண்டும்; தேவரீர் கோபித்தால் எல்லா அண்டங்களும் இப்பொழுதே அழியும்; இரதிதேவியின் துக்கத்தைப்பார்த்து,தேவர்கள்சகிக்கமாட்டாமல் மரணத்தையடைந்தவர்கள்போல இருக்கின்றார்கள்; ஆகையால் அவ்விரதிதேவியின் சோகத்தைத்தேவரீர் போக்கடிக்கவேண்டும் என்று, உலகங்களுக்குச் சுகத்தையுண்டுபண்ணுகிற சிவபகவானைத் தேவர்கள் நமஸ்காரஞ்செய்து கிரமப்படி துதிசெய்து, கிருபைசெய்யும்படி பிரார்த்திக்கையில், சிவபெருமான் தயவுடையவராகிச் சொல்லுகின்றார்.

தேவர்களே! இரதிதேவியானவள் துக்கிப்பதுண்மையே! ஆயினும், எது உண்டானதோ அதுவேறாகமாட்டாது. ருக்மணீ பதியான கிருஷ்ணன் த்வாரகா பட்டணத்தில் வாசம்பண்ணிக்கொண்டு பிள்ளைகளையுண்டுபண்ணப்போகிறான். அதுவரையில் இம் மன்மதன் சரீரமில்லாதவனாகவே இருக்கவேண்டும். பிறகு கிருஷ்ணன் ருக்மணியினிடத்தில் மன்மதனை யுண்டுபண்ணப்போகிறான். அம்மன்மதனுக்குப் பிரத்யும்னன் என்னும் பெயர்வழங்கப்போகிறது. இதற்கையமில்லை. இவன்பிறந்த ஸமயத்திலேயே இவனைச் சம்பரனென்னும்அசுரன் அபஹரித்துச் சமுத்திரத்தையடைந்து தன் நகரம் செல்லப்போகிறான். அவ்வளவுகாலம் அவ்வசுரனது பட்டணத்தில் இரதிதேவி இருக்கட்டும்; அதே நகரத்தில் மன்மதனையடைந்து சம்பரனையுத்தத்தில் மடித்து அவனது த்ரவ்யங்களைத் தனது நகரத்திற்சேர்த்துத் தானும் துவாரகையை யடையப்போகிறாள். இது ஸத்யம். என்று அநுக்கிரகித்து, தேவனான சங்கரன் அத்தேவர்கள் பார்த்திருக்கையிலேயே அந்தர்த்தானமாயினர். தேவர்களும் சிவபெருமானது வார்த்தைப்படி அந்தரதிதேவியையடைந்து அவர்சொன்ன வார்த்தைகளைச்சொல்லித் தங்கள் தங்கள்பதிகளையடைந்தார்கள். ரதிதேவியும்தனக்கு உத்தரவுசெய்தபடி அந்தச்சம்பராசுரன்

பட்டணத்தையடைந்தாள். முநீஸ்வரர்களே அந்நகரத்தைபடைந்து சிவ பெருமானாற் குறிக்கப்பட்டகாலத்தை எதிர்பார்த்திருந்தனள். தேவர்களும் ஆ! ஆ! என்ன உண்டாகுமோ? என்று துக்கிதர்களாகி, தாரகாசுரனுக்கு வதம் எப்படியுண்டாகுமோ? என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். பார்வதியும் தன் பிதாவின் வீட்டை யடைந்து மாதாவான மேனையோடு சேர்ந்து தன்னை மறுபடி பிழைத்தவளாக எண்ணினள். தனதுஸவுந்தர்யாதிரூபத்தை நிந்தித்தாள். ஹா கஷ்டம் ஹாகஷ்டம்என்று வருந்தினள். நித்திரைசெய்கையிலும்,தீர்த்தபானஞ்செய்யும்பொழுதும், போஜனவேளையிலும், நடக்கும் நேரத்திலும், சகிமார் மத்தியில் இருக்கும் ஸமயத்திலும், எனது உருவத்தை நிந்திக்கவேண்டும் என்றுரைத்தாள். இவ்வாறு துக்கமுற்றுச் சுகத்தைச்சிறிதுமடையாமல், சிவத்தியானத்துடன் சிவசிவ என்று சிவநாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் நாரதபகவான் அப்பார்வதி இருக்கும் இடத்தையடைந்து நன்றாய்ப்பூஜிக்கப்பட்டுச் சுகமாய் உட்கார்ந்திருக்கையில், சிவபெருமானது பிராப்தியைக்குறித்துப் பார்வதிதேவி கேட்க, ஓ தேவி! சிவபகவானைத் தபஸாலேயே அடையவேண்டும். அப்படித் தபஸால் அடையாதபக்ஷத்தில், பிரமன் முதலான தேவர்களாலும் அவரை அடையமுடியாது என்று கூறினர்.

பார்வதி பரிவர்த்தனமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது

பார்வதி தபோவர்ணனமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சொல்லுகின்றார்:—ருஷிகளே! பார்வதாதேவியும் நாரதபகவானது வார்த்தையைக் கேட்டுச் சிவபெருமானைத் தவஞ்செய்து அடைவதேதகுமென்று தீர்மானித்துத் தவஞ்செய்யமனங்கொண்டு, தானே நேரில் தாய் தந்தையர்களிடஞ் சென்று விஷயத்தை வெளியிட்டு உத்தரவு பெற வெட்கமுடையவளாய்த் தனது தோழியர்களுக்குச் சொல்ல, தோழிகள் பர்வதராஜனை யடைந்து—அரசே! உமது குமாரத்தியாகிய பார்வதியின் வார்த்தையைச் சொல்லுகிறோம். நீர் அதைக் கேட்டு ஸம்மதிக்க வேண்டும்: அதாவது அப்பார்வதியம்மை தனது தேஹத்திற்கும், ஸௌந்தரத்திற்கும், உமது குலத்திற்கும் ஸாபல்யஞ் செய்ய விரும்பி, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து அவரை மணம் புரிய அவாவுகின்றாள். அதற்கு உமது கட்டளையைக் கொடுக்கவேண்டும் என்றார்கள். பர்வதராஜன் இவ்வாறு கூறிய அத்தோழிகளின் வார்த்தையைக் கேட்டு, ஸகிகளே! இப்பொழுது நீங்கள் சொல்லிய விஷயம் எனக்குச் சம்மதமே; ஆனால் அவள் தாயான மேனை சம்மதிக்கவேண்டும். அப்படி மேனையுஞ் சம்மதித்து, பார்வதி தவஞ் செய்யும் பக்ஷத்தில் இதைக்காட்டிலும் உத்தமமானது வேறொன்றுமிராது.

இதனால் என்குலம் ஸாபல்யமடைய ஐயமே கிடையாது என்று கூறித் தோழிகளை மேனைபால் செல்லவிடுத்தான். பர்வதராஜனிடம் விடைபெற்ற அவ்விருதோழியர்களும் மேனையினுடைய அந்தப்புரஞ்சென்று, அவளைக்கண்டு, தாயே! உனது புத்திரியின் வார்த்தையை நாங்கள் சொல்லக்கேட்டு நீ அவ்வண்ணமேசெய்யவேண்டும்: அதாவது உன் புதல்வியான பார்வதி சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்ய இச்சையுள்ளவளாய்ப் பிதாவின் அநுமதிபெற்று, உன் அநுமதியும் பெறும்படி அனுப்பியிருக்கிறாள்; இப்பதிவிரதை தன் உருவத்திற்குப் பிரயோஜனஞ்செய்ய அவாவுகிறாள்; உன் உத்தரவுங் கிடைத்தால் இப்பொழுதே தவஞ்செய்யச் செல்வாள்; ஆதலால் உத்தரவளிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

பார்வதியின் தோழிகளிருவருஞ் சொல்லிய வார்த்தையைக் கேட்ட மேனை துக்கத்தை யடைந்து தன் புதல்வியை நேரே வருவித்துச் சொல்லுகிறாள்:—ஏ பார்வதி! ஏன் துயரப்படுகிறாய்! நீ ஜன்மாந்தரத்திற் செய்த தவப்பலனால்தான் இவ்வீட்டிற்றோன்றினாய். இங்குனக்கு யாது குறைவு? நீ தவஞ்செய்தற்கு எங்கேபோகிறாய்? இவ்வீட்டில் தேவர்களில்லையா? விசித்ரமான தீர்த்தங்களில்லையா? உன் பிதுர்க்ரஹமான இவ்வீட்டிலேயே தவஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில், நல்ல திவ்ய ஸக்தி யுண்டாகும். நீ முன் சிவபெருமானை அருகே சென்று பணிவிடை செய்திருந்தபொழுது எந்தக் காரியத்தைச் செய்து முடித்தாய்? இனி எந்தக் காரியத்தைச் சாதிக்கப்போகிறாய்? உன் தேஹமோ மிகவுங் கோமளமானது! தவமோ மிகவுங் கடினமாகையால், உனக்குத் தகுதியல்ல. ஆயினும் நீ இங்கிருந்துகொண்டே தவஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்தால் சுலபமாகக் காரியங் கைகூடுமென்று தடுத்தாள். இவ்வாறு பார்வதி தன் தாயாகிய மேனையால் தடுக்கப்பட்டிருந்தபோதிலும், சிவபெருமானைப் பூஜிக்காமல் ஸுகமடையவேயில்லை. அதனை யறிந்த மேனை தன் குமாரத்தியின் துக்கத்திற்குச் சகியாதவளாய்த் தவத்திற்குச் செல்ல விடைகொடுத்தாள். பார்வதியம்மை தன் தாய்மொழி கேட்டவுடன் பெருமகிழ்ச்சி யுற்றுத் தாய்தந்தையரைப் பணிந்துவிடைபெற்று, இருதோழியர்களுடன்வரத் தவச்செயலை மேற்கொண்டு திவ்யமான வஸ்திரத்தையும் இரத்னாபரணங்களையும் விலக்கி மரவுரியும் மௌஞ்சியுந்தரித்து, அந்த ஹிமாசலத்தில் உத்தமமான தீர்த்தங்கள்பொருந்திய ஒரு சிகரத்தையடைந்தாள். அச்சிகரம் அது முதல் பார்வதி தவஞ்செய்த காரணத்தால் கௌரீசிகரம் எனப் பெயர்பெற்றது. அவ்விடத்தில் விருக்ஷங்கள் அழகுள்ளனவாயும் பரிசுத்தமாயும் பலங்களாற் பரிபூரண மாயுமிருந்தன.

பார்வதிதேவியானவள் பூமியைச்சுத்திசெய்து மகா முனிவர்களுஞ் செய்ய முடியாத தவத்தைச்செய்ய ஆரம்பித்துத் தேஹவாஞ்சை சிறிதுமில்லாமல், சூரியனிடத்திற் கண்களையமைத்து மேலான தவத்தைச் செய்தாள்.

அப்படியே *க்ரீஷ்மகாலத்திற் பஞ்சாக்நி மத்தியிலும், வர்ஷாகாலத்திற் பூமியிலும், குளிர்காலத்தில் ஜலமத்தியிலும் இருந்து, கடுந்தவஞ் செய்பவளாய் விருக்ஷங்களை வைத்தனள். அந்தக் கௌரீசிகரத்தில் நாடோறும் விருக்ஷங்கட்குத் தண்ணீர் வார்த்துக் காப்பாற்றுவதுடன் அதிதி பூஜையுஞ் செய்து வந்தனள். பனிக்காலத்தில் காற்றுக்கும், மழைக்காலத்தில் மழைக்கும், எக்காலத்திலும் பசிக்கும் பயத்திற்கும் சிறிது மஞ்சாது, மகா முநிவர்களுஞ் செய்து முடிக்க அஸாத்தியமான தவத்தைச் செய்தாள். அது கண்ட ஸமீபத்திலுள்ள ருஷிகள் யாவரும் இச்சிறுமியால் என்ன விதமான அருந்தவஞ் செய்யப்படுகிறதென்று, ஆங்கு வந்து கண்டு பிரமித்தார்கள். [பெரியோர் சிறியோரது தவமுதலியவற்றைப் பார்க்கப்போவது தகுதியோவென்றால், தவமானது யாவராலும் பூஜிக்கத் தகுந்தது.] அங்கு வந்து கண்டவர்களும் அவ்வாறு கண்டவர்களாற் சொல்லக் கேட்டவர்களுமாகிய ருஷிகள் ஆ! ஆ! கடினமான சரீரத்தை யுடையவர்களாலேயே செய்யமுடியாத இவ்வகைப்பட்டதவத்தை இவ்வம்மை எவ்வாறுசெய்யப்போகிறாள்? என்று சொல்லிக்கொண்டார்கள். அவ்வாசிரமத்திற் கருகிலிருந்த சிங்கம் பசு முதலிய மிருகங்கள் தமது இயற்கைப்பகை நீங்கி ஒன்றோடொன்று அளவளாவி வாழ்ந்தன; விருக்ஷங்கள் பலங்களோடு விளங்கின; விதவிதமான புல் பூண்டுகள் செழித்தன; புஷ்பங்கள் அலர்ந்தன. இவ்வண்ணமாக அவ்வம்மையின் தவஸ்வரூபத்தால் அவ்வனமானது ஸ்ரீ கைலாயத்திற்குச் சமானமாக நன்கு விளங்கியது.

பதின்மூன்றாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—முநிவர்காள்! இவ்வாறு பார்வதிதேவி அருந்தவஞ் செய்கையில், தேவர்களும் நாரதர் முதலிய மகருஷிகளும் பார்வதியின் தவத்தைப்பார்த்து, அத்தவத்தின் தேஜஸால் வியாபரிக்கப்பட்டவர்களாய், சிவபெருமான் வீற்றிருக்கும் ஸ்தானத்தையடைந்து, நாரதபகவானை முன்னிட்டுக்கொண்டு சென்று, சிவபெருமானை ஸேவித்து விசேஷமாகத்துதிசெய்து சொல்லுகிறார்கள்:—ஸ்வாமி! தேவரீரே ஸ்வயம்பு! தேவரீரேசங்கரர்! விசேஷதையையுடையவர்! பார்வதிதேவியாரால் உலகங்களைத் தகனஞ்செய்வதாயும், பார்க்கப்பயங்கரமானதாயும், முன்ஒருநாளுங்காணப்படாததாயும், இனிவரப்போகாததாயும், தேவர் முநிவர் தானவர் முதலானவர்கட்குஞ்செய்யமுடியாததாயுமுள்ள ஓர் அரும் பெருந்தவஞ் செய்யப்படுகிறது. தேவரீர் ப்ரீதியுடையவராய் † எங்கள் காரியத்தைச் செய்யவேண்டும் என்று கூறினர். சிவபெருமான் நாரதர் முதலியோரைப் பார்த்து, தேவர்

* க்ரீஷ்மருது ஆனி ஆடிமாதங்கள். † எங்கள்காரியம் என்றது தேவரீர் பார்வதியை மணந்து, புதல்வனைப்பெற்று, தாரகனை வதைப்பது.

களே! உங்களைப் போன்றவர்களாலேயுங் காணமுடியாத நான் ஹிமாசல மன்னன்மகள் செய்யுந்தவத்திற்கு மனமகிழ்ந்தவனாய்த் தரிசனங்கொடுத்து அவளை மணஞ்செய்யப் போகிறது நிச்சயம்; இது விஷயத்தில் உங்கட்கு யோசனை வேண்டாம்; உங்கள் காரியங் கைகூடுமாதலின், நீங்கள் இருப்பிடஞ் சேருங்கள் என்று கூறி விடைகொடுத்தனுப்பினார்.

சிவபெருமான் தேவர்களை விடைகொடுத்தனுப்பிய பிறகு, ஜடையையுடைய ஒரு பிராமணவேடந் தரித்து, பார்வதிதேவி தவஞ்செய்யும் ஆசிரமத்தை யடைந்தார். பார்வதி தேவி அவ்வேதியரைக் கண்டவுடன் பெருமகிழ்ச்சிகொண்டு அவ்விருத்த வேதியரை அழைத்துக்கொண்டுபோய் அர்க்கிய பாத்திய ஆசமநாதிகளால் உபசரித்துப் பூஜித்து, அவ்வனத்திலுள்ள பல முதலியவற்றையளித்து உண்பித்தனள். வேதியர் தமது விருத்தத்தன்மைக்கேற்பச் சிறிதுநேரம்நித்திரைசெய்தனர். சிதலமான வஸ்திரமணிந்துள்ள அப்பிராமணனைப் பார்வதியம்மை ஸந்தோஷத்துடன் விளித்து ஸந்தோஷவார்த்தைகள் பேசி, நீர் எங்கு வந்தீர்? என வினவ, வேதிய வடிவாக வந்த சிவபெருமான் தன் விர்த்தாந்தங்களை ஒருவாறு சொல்லி, தனது நிஜவடிவைக் காட்டாது தான் கொண்ட வடிவத்திற் கேற்ப, கபடவார்த்தைகள் சொல்லத் தொடங்கினர். அதாவது—ஏ தேவி! இத்தீர்த்தம் - பலம் - உன் தவம் முதலிய யாவும் எப்பொழுதும் பரிபூரணமாக இருக்கவேண்டும். நான்வினவுவதற்கு நீபதில்சொல்லவேண்டும். பால்யையானநீயாதுகாரணத்தாலே தவஞ்செய்கிறாய்? ஸமஸ்த நலங்களிலும் பூஜாவிதங்களிலும் பூரணமாகச் செய்கின்றதனை நோக்கியே நம்மிருவருக்கும் ஸ்நேகம் பிறந்தது. உன் அந்தரங்கத்தை என்விஷயத்திற் பாராட்டாது, நீ எதைவிரும்பித் தவஞ்செய்கின்றையோ அதைத் தெரிந்துகொள்ள இச்சிக்கின்றேன். உன்னிடத்திலேயே தவத்தின் ஸர்வபலமுங் காணப்படுகின்றன. இந்தத் தவம் நாயகன் ஸம்பாதிக்க விரும்பிச் செய்யும்பக்ஷத்தில் இதுவரையில் நிற்கட்டும். இரத்தினமானது தன்னைக் கொள்வோனைத் தேடிச்செல்வதில்லையாயினும், இரத்தினத்தைக் கொள்வோன் தானே வந்து கிரகித்துக் கொள்ளுவான். உனது திவ்ய ஸௌந்தர்யம் தவஞ் செய்வதால் வியர்த்தமாகப் போகின்றது. உன் ஆபரணாதிகளை விட்டுத் தோல் முதலியவற்றை ஏன் அணிந்திருக்கிறாய்? அவற்றிற்குக் காரணஞ் சொன்னால், கேட்டு மகிழ்வேன் என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட பார்வதிதேவி தானே விடை கொடுக்கக் கூடாதவளாய், தன் ஸகிகளி லொருத்தியை யனுப்பி அவளால் ஸகலமான ஸங்கதிகளையும் வேதியவடிவாக வந்த சிவபெருமானுக்குத் தெரிவித்தாள்.

பார்வதி தபோவர்ணனமுறைத்த அத்தியாயம்

முற்றிற்று.

பதினொன்காவது

பார்வதிக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—நைமிசாரண்ய வாசிகளே! மேல் பார்வதிக்கும், வேதிய வடிவாகவந்த சிவபெருமானுக்கும் நடந்த விஷயங்களைச் சொல்லுகிறேன். பார்வதி தேவியால் அனுப்பப்பட்ட தோழியானவள் அவ்வந்தணனை நோக்கி, ஐயரே! எந்தக்காரணத்தினால் பார்வதி தவஞ்செய்கிறாளென்றால், ஐசுவரியத்துடன் கூடியிருப்பினும் இந்திரன்முதலிய தேவர்களை விட்டு, பிநாகமென்னும் வில்லைத்தாங்கிய சிவபகவானைத் தனக்குப் பதியாயடையவேண்டுமென்பதுகருதித்தவஞ்செய்கிறாள். அப்பார்வதி வைத்த விருக்ஷங்கள் பலங்கொடுக்கின்றன. இவளோ நாரதமுநிவர் விருப்பத்தின்படி தவஞ்செய்கிறாள் என்று சொன்னாள். அதைக்கேட்ட ஜடாதரராகிய வேதியர் ஏபார்வதி! உன்தோழிசொல்லிய வார்த்தை ஸத்யமா? பரிஹாஸமா? நிச்சயத்தை நீயே யேன் சொல்லக்கூடாது? என்று கேட்க, பார்வதி தேவி அந்தணரே! என் தோழிசொல்லியயாவு நிஜமே வேறில்லை. மனவாக்குகளுக்கெட்டாத அச்சிவபெருமான் என்றால் எப்படி அடையத்தக்கவர்? அப்படி துர்லபமாயிருப்பினும், மனோவிருப்பத்தால் தவஞ்செய்கிறேன் என்று கூறி மௌநமாக நின்றனள்.

அதைக்கேட்ட வேதியர்—பார்வதீ! நான் இப்பொழுது என் விருப்பின்படி செல்கின்றேன்; நீ எதை இச்சித்தையோ அதைத் தெரிந்துகொள்ள எனக்குப் பெருவிருப்ப மிருந்தது; அதை உன் தோழியாலும் உன்னாலுந் தெரிந்துகொண்டேன்; இனி நான் போகவேண்டுவதே; இல்லாவிடில் ஸ்நேகமானது நமக்குக் குறையும் என்று கூறி விரைவில் புறப்பட்டனர். அப்படி புறப்படுகிற அந்தப் பிராமண வேடமுடைய சிவபெருமானைப் பார்த்துப் பார்வதி தேவி—ஸ்வாமி! ஏன் போகப் புறப்படுகிறீர்? என்று வினவ, அதைக்கேட்ட தண்டதரராகிய விருத்த வேதியர்—பார்வதி! நான் உனக்கு மிகவும் அன்பனாகையாற் சொல்லுகின்றேன். நீயோ சந்தனத்தை விட்டுச் சேற்றைப் பூசவும், யானை வாஹநத்தை விட்டு எருது வாஹனமேறவும், கங்காஜலத்தை விட்டுக் கிணற்றுநீரைப் பானஞ்செய்யவும், ஸூர்ய வொளியை விட்டு மின்மினிப்பூச்சின் ஒளியைக்காணவும், பட்டுவஸ்திரத்தைவிட்டுத் தோலாடையுடுக்கவும், வீட்டு வாஸத்தை விட்டுக் காட்டுவாசஞ்செய்யவும் விரும்பினவளாய், நீ செய்யும் முயற்சி யுக்தமாகக் காணப்படவில்லை. தேவர் நிறைந்த ஸபையை விட்டு அசுரர் பசாசர் நிறைந்த ஸபையை இச்சிக்கிறாய்; இந்திரன் முதலிய உலகபாலகரையெல்லாம் விட்டுச் சிவனை விரும்புகிறாய்; இது யுக்தமல்ல. மிக்க அநுசிதமாகவே காணப்படுகிறது. இன்னுஞ் சொல்லுகிறேன். பார்வதி! தாமரை மலர்போன்ற கண்களையுடைய நீ எங்கே முக்கண்ணனாகிய அந்தச் சிவனெங்கே? சந்திரமுகியான நீயெங்கே ஐந்தலைய



(7- பர்வதராசன் உத்தரவால் உமாதேவியார் தவஞ்செய்கையில், சிவபெருமன் சோதித்துக்காட்சிய
ளித்தது.

ஞன அச்சிவனெங்கே? வர்ணிக்க அசாத்தியமான கேஸபாஸங்களையுடைய நீயெங்கே ஜடாசூடனாகிய சிவனெங்கே? சந்தனாதி வாசனையணிந்த தேஹமுடைய நீயெங்கே ஸ்மசான சாம்பலணிந்த உடலையுடைய சிவனெங்கே? ஸுகமான உனதுவெண்பட்டாடையெங்கே அஸுகமான அவனது யானைத்தோல் எங்கே? உனது திவ்ய தோள்வளைகள் எங்கே அவனது பாம்பணி எங்கே? உனது சேவகர்களான தேவர்களெங்கே அவனது பூதகணங்களெங்கே? உனது ம்ருதங்கமுதலிய வாத்தியங்களெங்கே-அவனது டமருகமெங்கே? உனது பேரிகையெங்கே சிவனது சிருங்கியெங்கே? உனதுடக்கமெங்கே சிவனது கல்லவாத்ய மெங்கே? ஆகையால் உனக்கும் அவனுக்கும் ஒற்றுமையான ரூபங்கிடையாது. அவனோ [விரூபாக்ஷி] கோணலான கண்ணையுடையவன்; அவனதுகுலங்குடிமுதலியன எவ்விடத்தும்நன்றாக அறியப்படவில்லை. அச்சிவன் செல்வவந்தனாகவிருந்தால் [திகம்பரன்] நிருவாணனாக ஏன் இருக்கவேண்டும்? உலகத்தில் புருஷர்க்குள்ள விஸேஷகுணங்களில் ஒன்றாவது சிவனுக்குக்கிடையாது. அவன் வாஹநமோ எருது. வஸ்திரமோ யானைத்தோல். அவன் ஸைந்யமோ பூதபசாசங்கள். அவன்கண்டத்திலோ விஷமிருக்கின்றது. வீடுகளில் வசிக்க அயோக்கியனாய் வநத்தையடைந்தவன் அவன்ஜாதி யின்னதெனத்தெரியாது. அவனது வித்தையும் ஞானமும் கணக்கிடப்படவில்லை. அவனோ ஏகாங்கி-விரக்தன்-சிவன் ஸர்வஸம்மதனான புருஷனாயிருந்தால் மன்மதனைத் தகனஞ்செய்வானா? ஆகையால் அந்தச்சிவனிடத்தில் உன்மனதைச் செலுத்துவது யோக்கியமன்று! உனக்கும் சிவனுக்கும் பலவகையிலும்தாரதம்யமிருக்கின்றது. அது எனக்குயுக்தமாகக்காணப்படவில்லை. ஆயினும் வினையைவெல்லமுடியுமா? உன் இஷ்டப்படியேசெய்! அச்சிவபெருமானை நானறிவேன். அவன்வசிப்பதுருத்ரபூமி; அவன் உலகத்திலுள்ள அஸத்தானபொருள்களையெல்லாம் அடைகிறான். அப்படிப்பட்டவனிடத்திலிருந்து உன் மனதைத் திருப்புவது நலம். அது உனக்கு இஷ்டமில்லாவிடில் என்முன் நில்லாது போ என்று சொன்னார். இவ்வாறு கூறிய தண்டதரர் வார்த்தையைக் கேட்ட பார்வதாதேவி பெருங்கோபமுற்று, அவ்விருத்தனைநோக்கிச் சொல்லத்தொடங்கினள்.

சிவதூஷணஞ்செய்வதில் தேர்ச்சியுடைய முதியோரே! இவ்வளவு நேரம் உம்மைத் தன்யனென்றெண்ணியிருந்தேன்; இப்பொழுதல்லவோ நீர் அபத்தமானவனெனத் தெரிந்துகொண்டேன். தேவதேவரான சிவபெருமானை யறிவேனெனக் கூறிய உமது வார்த்தை முழுப்பொய்யே யன்றி வேறன்று. நீர்நிச்சயமாக அறிந்திருக்கும்பக்ஷத்தில் விரோதமாகச்சொல்ல மாட்டீர். நீர் வஞ்சகர். அந்த ஜகத்ரக்ஷகராகிய சிவபெருமானது வாசாமகோசரமான ஸ்வரூபத்தை நான் சொல்லுகிறேன் கேளும். அவர் யோசித்துப் பார்க்குமிடத்தில் நிர்க்குணரே. காரணத்தால் ஸகுணராகவும் நிர்க்குணராகவுமிருக்கிறார். அவருக்கு ஜாதியேது? பிறப்பேது? அவர் எல்லா வித்தைகளுக்கும் பிறப்பிடமானவர். அவரோ முன் ஒருகாலத்தில் வேதங்

களைச் சுவாஸமார்க்கமாக விஷ்ணுவுக்குக்கொடுத்தார். பரமாத்மாவும் பூரணருமாகிய அப்பகவானுக்கு வித்தையால் என்ன காரியம்? ஆதிபூதனாகிய அப்பெருமானுக்கு வயதேது? பிரகிருதியே அப்பெருமானிடத்திலிருந்து தோன்றியது. எவன் அப்பெருமானை நித்தியமாக அடைகிறானோ அவனுக்கு ப்ரஹாவ உத்ஸாஹ மந்த்ரஜ சக்திகள் கைகூடும். அவரது ஸேவையால் மிருத்யுவை நிச்சயமாக ஜயிக்கலாம். அவரே ம்ருத்யுஞ்ஜயர். அவரது பூஜையால் யாவர்க்கும் சுகம் உண்டாகிறது. அவருக்குச் சுகம் என்னத்திற்கு? ஏ துர்மதியே! அந்தச் சிவபெருமானுக்கு எப்படி ஆரோக்யமுண்டாகும். எந்தச் சிவபகவானது கடாக்ஷத்தினால் தேவர்கள் ஜீவந்தர்களாக இருக்கிறார்களோ, எந்தப் பெருமானுடைய ஸேவைக்காகத் தேவர்கள் காத்திருப்பார்களோ, எந்தப்பெருமானுடைய கணங்கள் தரிஸநத்திற்காகவரும் இந்திராதிதேவர்களை நெருக்கமொழிக்கவேண்டித் தமது கைத்தண்டங்களால் மோத அவர்கள் கிரீடங்கள் பொடிபடுகின்றனவோ, அந்தச்சிவபெருமானே ஸ்வயம்பு. அவ்வகைய பிரபாவங்களையுடைய சிவபெருமான் என்னை இச்சிப்பாராகில், கல்யாணரூபனும் தேவதேவனுமாகிய அந்தப் பெருமானுடைய ஸேவையால் எனக்குக் குறை ஏது? எல்லாப் பிறவிகளிலுந் தரித்திரனாக விருப்போன் சிவபெருமானை ஸேவித்தால் அவன் உடனே அஷ்டலக்ஷ்மியையடைவான். எந்தச் சிவபெருமானிடத்தில் அணிமா முதலிய அஷ்டஸித்திகளும் நர்த்தனம் செய்கின்றனவோ அந்தப் பகவானுக்கு ஐஸ்வரியம் என் துர்லபம்? அவர் எளியராகச் சாமானியர்கட்கு லீலாமாத்திரையாய்க் காணப்படினும், அவரைஸ்மரித்தலினாலேயே ஸர்வமங்களமும் உண்டாகின்றன. * சிவமென்னும் மங்களகரமானபெயர் எவன் முகத்தில் நிரந்தரமாக இருக்கிறதோ அவனது தரிசனத்தினாலே அந்யர்களும் பரிசுத்தர்களாக ஆகிறார்கள் நீர் சொல்லியபடி பஸ்மமானது பரிசுத்தமில்லாம லிருந்தால் அச்சிவபெருமான் மகாநடனஞ் செய்த பிறகு, தேவர்கள் அதை எப்படி சிரசின்மேல் அணிந்துகொள்வார்கள். எந்தச் சிவபெருமான் உலகங்கட்கு ஆதியாயிருக்கின்றாரோ ஈஸ்வரனாயிருக்கின்றாரோ ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்விக்கின்றாரோ அவரை எப்படி யறியத்தகும்? இன்னும்சொல்லுகிறேன் கேளும்.

விருத்தவேதியரே! பரமாத்மாவாயும் பரப்பிரமமாயும் விளங்கும் சிவபெருமானது அறியக்கூடாதவுருவத்தை, உம்மையொத்த அஞ்ஞானிகள் எப்படி அறியக்கூடும்? துராசாரமுடையவர்களும் பாபிகளும் வேதமார்க்கத்திற்குப் புறம்பானவர்களும், நிர்குணனான சிவபெருமானை எப்படி அறிவார்கள்? தத்வவிசாரணையின்றிச் சிவபரம்பொருளை எவன் நிந்திக்கின்றானோ அவனது அந்தஜன்மத்திற்சேகரித்த புண்யம் பஸ்மமாகும். இப்பொழுது நீரோ அளவற்ற தேஜஸையுடைய சிவபெருமானை வெகுவாக நிந்தித்

* ஸ்வெதி௰ம௶ஹ௰ நாஜ உ௱வெயவஸ் நிரஷாழ । (நுடு)
தவெஸ வத௯ஸ௲ நாஜநெ வவித்ராஹஷிநித௶ஸ ॥ (நுசு)

தீர். உமது குணத்தை அறியாமல் விருத்தரென்று பூஜித்து உபசரித்த காரணத்தால் யானும் பாபத்தையடைந்தேன். [ஶிவவித்வேஷிணம் த்ருஷ்ட்வா ஸசேலஸ்நாநமாசரேத் எவனொருவன் சிவபெருமானுக்கு த்வேஷியாயிருக்கின்றானோ அவனைக் கண்டால் (அப்பாப நீக்கம் வேண்டி) *ஸசேலஸ்நானஞ் செய்யவேண்டியது.] ஏ துஷ்டரே! உம்மால் சொல்லப்பட்ட சிவபகவானை நானறிவேன். நீர் நன்றாக அறியமாட்டீர். அவர் எப்படிப்பட்டவராயிருந்தபோதிலும் அவரே எனக்கு அபீஷ்டர். மீண்டுங் கேட்டாலும் அதையே சொல்லுவேன் என்று கூறிப் பார்வதியானவள் தனது ஸகியைப் பார்த்து, ஸகியே! துஷ்டமனதையுடைய இவரை நீ தகையவேண்டியது. ஏனெனில், சிவநிந்தை செய்பவன்மட்டும் பாபத்தை யடைவதோடு போகாமல், அந்த நிந்தையைக் கேட்கிறவர்களும் பாபத்தை யடைவார்கள். இவர் மறுபடியும் சிவநிந்தை செய்வாராகையால், நாமே இவ்விடம் விட்டு வேறு இடஞ்செல்வது நலம். இங்கு நெடுநேரமிருக்கப்படாது என்று, தன் மனதைத் தானே நிந்தித்துக்கொண்டு வேற்றிடஞ்செல்லப்புறப்பட்டுத் தோழியருடன் காலெடுத்துப் பெயர்த்து வைக்கிறதற்குள்ளே, சிவபெருமான் தன் இஷ்டையான பார்வதிதேவியைக் குறித்துப் பிரஸன்னரானார். பார்வதிதேவி தன் வடிவத்தை வெறுத்துக்கொண்டு, சிவபெருமானைத் தியானித்த வகையே விளங்கத் தரிசித்து, நாணத்தால் தலை குனிந்து நின்றனள். அதனைக்கண்ட சிவபெருமான் பார்வதீ! நீ யென்னைவிட் டெங்கேபோவாய்? நீ யெம்மால் விடத்தக்கவளல்ல. உன் தவத்திற்காகக் களித்துப் பிரஸன்னமானேன்; உன்னை லீலாமாத்திரையாய் மனஞ் சோதிக்க இவ்வகையாகக்கூறினேன்; உன் திடபத்தியைக் கண்டு மகிழ்ந்தேன். உனக்குக் கொடுக்கத் தகாத வரமே கிடையாது. வேண்டிய வரத்தைக் கேள். நீ உன் தவத்தால் என்னை அடைந்தாய். உனது அழகைப் பார்த்தால் ஒரு க்ஷணம் ஒருயுகமாகிறது. நீ நாணத்தை விடு. நமது வீட்டுக்குப்போகலாம் வா என்றிவ்வாறு சிவபெருமான்கூற, பார்வதாதேவி தனக்குண்டாயிருந்த துன்பத்தை நீங்கித் தபோபலனடைந்து தவத்தால் உண்டாகிய சிரமத்தைவிட்டாள்.

பார்வதிக்கு வரங்கொடுத்த அத்தியாயம்

முற்றிற்று.

* ஸசேலஸ்நானம்-உடுத்தவுடையுடன் மூழ்குதல்.

பதினைந்தாவது

பார்வதியை மணம்பேசிய அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் அதைக்கேட்டு, மஹாபாகரான ஸூதமுநிவரே! அதன்பின் நடந்த சமாசாரங்களையுஞ் சொல்லி எங்கள் பாபத்தைப் பரிகரிக்கவேண்டும் என்று வினவ, ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். ருஷிகளே! நான் அதன் தொடர்ச்சியையுஞ் சொல்லுகிறேன். பக்தியுடன் கேளுங்கள்—பார்வதிதேவி சிவபெருமானது வார்த்தையைக்கேட்டு, தான் முன் சொல்லிய கடூரமான சொற்களைக்குறித்து வெட்கமுற்று,—விவாகஞ் செய்துகொள்ளச் சித்தமாயிருந்து, வீட்டிற்குப்போவோம்: பார்வதீ! ஏன் காலதாமதஞ் செய்கிறாய்? என்று கூறும் சிவபெருமானுக்குப் பார்வதி, தேவதேவரே! தேவரீர் ஸந்துஷ்டராயிருக்கும்பக்ஷத்தில் என்விஷயத்திற் கிருபைகூர்ந்து உத்தரவளித்து என்னைத் தந்தைவீட்டிற்கு அனுப்பி, பிரசித்தபுருஷர்களால் சுபமாயும் உத்தமமாயும் சிறந்ததாயுமுள்ள விதிக்கிரமமான விவாஹம் அவ்விடத்திற் செய்துகொண்டு, எனது தந்தையான ஹிமோபர்வதராஜன் கிருகத்தில் அவனது கிரகஸ்தாச்சிரம முதலிய யாவும் ஸபலமாகச் செய்யவேண்டும். மணவினை சிறப்பாகவும் என் தந்தை கண்டு பெருமகிழ்வெய்தவும் நீரே செய்விக்கவேண்டும் என்று தோழி மூலமாகக் கூறினள். அவ்வசனத்தைக் கேட்ட சிவபெருமான் அகங்களிதுளும்பி, பார்வதீ! உனக்கு எது விருப்பமோ அஃது அப்படியேயாகுக எனத்திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

பார்வதிதேவி தவப்பயனையடைந்து உடனே தோழியருடன் புறப்பட்டுத் தன் தந்தையாகிய பர்வதராஜன் மாளிகையையடைந்தனள். அதனையறிந்தமேனை அநேக தோழியர் உறவினர் அந்நியர்முதலிய அநேகருடன் எதிர்கொண்டுவந்து ஜயஜயவென்று சொல்லிக்கொண்டு, நீ நற்கருமஞ் செய்தாய்: உன்னால் நாங்கள் யாவரும் பரிசுத்தரானோம் என்று சொல்லி, சந்தன புஷ்பங்களால் பார்வதி தேவியைப்பூஜித்துக் கையுறைகள்கொடுத்து மாளிகைக்கு அழைத்துக்கொண்டு சென்றனள். அப்பொழுது ஹிமவான் நன்று நன்றென்று நாரதபகவானைத் துதிசெய்து துர்ப்புத்திரனைப் பெறுவதினும் சற்புதல்வியைப்பெறுவதேயுக்தமெனத் தனது இல்லறத்தைச் சபலமாக எண்ணினன். ஹிமாசல மன்னன் மாளிகை முழுவதும் ஆநந்தமயமாயிருந்தது. இது நிற்க.

சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரங்கொடுத்து அந்தர்த்தானமான பிறகு காசிக்ஷேத்திரத்தையடைந்து ஸப்தருஷிகளை நினைத்தார். சிவபெருமான் நினைத்தபொழுதே கற்பகவிருட்சம் போன்ற ஸப்தருஷிகளும் அதனையுணர்ந்து,பரமாத்மாவாகிய சிவபெருமானைத்தியானித்துக்கொண்டு, விசித்ரமான முத்து முதலியவற்றாலாகிய ஆபரணங்களையணிந்து தங்கள் தவத்தின் பிரத்தியட்சமான ஸித்திபோல விளங்கும் அருந்ததி முதலிய அவ்



(௧. சிவாக்கிணைப்படி சப்தரிஷிகள் பர்வதராசனையடைந்து உமாதேவியாரை மணம்பேசிமுடித்தல்.)

வவர் மனைவியருடன் சென்று சிவபெருமானிருக்கு மிடத்தை யடைந்து நிற்க, சிவபெருமான் சூரியகாந்திபோல விளங்கும் சப்தருஷிகளைப்பார்த்து, தவநிஷ்டாபரராயும் தேஜோவந்தர்களாயுமுள்ள மகருஷிகளும் சம்சார சம்பந்திகளா யிருக்கிறபடியால் நமக்கும் விவாகவிஷயத்தில் நாணம் வேண்டுவதில்லையென்று கருதினர். அப்பொழுது சப்தருஷிகள் சிவபெருமானை நமஸ்கரித்து, நாம் கிருதார்த்தரானோமென்றெண்ணி, தாம்பிரத்தியட்சமாகச் சிவசேவைசெய்வது சத்தியமோ சொப்பன மாயையோ? அற்பர்களான நாமெங்கே! கிடைத்தற்கரிய சிவதரிசனமெங்கே! என்று இவ்வண்ணமாகக் கருதி, அன்புடன் மீண்டும் நமஸ்கரித்து எதிரில் நின்று, சிவபெருமானை நோக்கிச் சொல்கிறார்கள்.

அளவிறந்த தேஜஸையுடையராகவும் பகவானாகவும் உள்ள சிவபெருமானே! தேவரீருக்கு நமஸ்காரம். *கபர்த்தியாகிய தேவரீருக்கு நமஸ்காரம். ஐந்துதிருமுகங்களையுடைய தேவரீருக்கு நமஸ்காரம். †ஹிரண்யபாஹுவாகவும், நீலகண்டராகவும் உள்ள தேவரீருக்குநமஸ்காரம். ஸர்வவியாபகனாகவும் வியாப்பியனாகவுமுள்ள தேவரீருக்குநமஸ்காரம். சிவனாகவும்சிவரூபனாகவும், பிரணவரூபனாகவுமுள்ளதேவரீருக்கு நமஸ்காரம் என்று பலவாறு தோத்திரஞ்செய்துசொல்கிறார்கள். எல்லோருக்கும் மேலானவரோ! ராஜாதிராஜரோ! பிரபுவே! யாவர்க்கும் அருள்செய்பவரோ! நாங்கள் தேவரீரை எவ்வாறுதுதிப்போம்? நாங்கள் முன்செய்ததவம்-வேதாத்தியயனம்-யாகங்கள்-அமாவாசை கிரகணமுதலிய புண்ணியகாலங்களிற்செய்த தானங்கள்-தீர்த்த ஸ்நானங்கள்-மனவாக்குக் காயங்களாற் சம்பாதித்தபுண்ணியம் முதலியயாவும் தேவரீரது தரிசனத்தால் ஸபலமாயின. தேவரீரை ஸ்மரித்தவன் கிருத கிருத்தியனாவான். தேவரீரோ எம்மை ஸ்மரித்ததால் எமக்குண்டானபாக்கியத்தை என்னவென்றுசொல்லுவோம். எம்பெருமானே! தேவதேவனே! தேவரீரது திருவுள்ளத் தெண்ணுதலாகிய அநுக்கிரகத்தால் யாவர்க்கும் உயர்ந்தவர்களானோம். நாங்கள் தேவரீரை எவ்வாறு அறியப்போகிறோம்? மிகக்குறியவனுக்கு உயர்மரத்துப் பழம் எட்டினாற்போலும், பிறவிக்குருடனுக்குக் கண்கள் பிராப்தியானாற்போலும், ஊமைக்குப் பேச்சுண்டானாற்போலும், தரித்திரனுக்குப் புதைகிடைத்தாற்போலும், முடவன் பர்வதத்தைத்தாண்டினாற்போலும், மலடிக்குப் புத்திரோற்பவமானாற்போலும், தேவரீரது துர்லப தரிசனமானது அடியேங்கட்குக்கிடைத்தது. இதுமுதல் ருஷி சிரேஷ்டர்களெனப் பெயர்பெற்றோம்; மான்யர்களாகவும் பூஜ்யர்களாகவுமானோம்; பெரும்பதவியடைந்தோம்; இனி தேவரீர் அடியேங்கட்குச் சாத்தியமாகவும் சுபகரமாகவுமிருக்கும் பணிவிடை செய்ய ஆஜ்ஞாபிக்கவேண்டுமென்று, வேண்டிக்கொண்டார்கள்.

* கபர்த்தி - சடையுடையோன்.

† ஹிரண்யபாஹு - சுவர்ணம்போற் பிரகாசிக்குந் தோள்களையுடையவர்.

சிவபெருமான் அவர்கள் வார்த்தையைக்கேட்டு, எவராலும் பூஜிக்கத்தக்க ருஷிகாள்! உங்களை நினைத்து வருவித்தகாரணமாவது பிரமனால் துராத்மாவான தாரகாசுரன் பெருவரமடைந்து தேவர்களைத் துயர்செய்து வருகின்றான். 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌸𑌲𑌿𑌲𑌂𑌤𑍇𑌜𑍋 𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑌏𑌵𑌚 । 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍌𑌹𑍋𑌤𑌾𑌜𑍀𑌵𑍇𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 ॥ என்றபடி, நிலம்-நீர்-நெருப்பு காற்று-ஆகாயம்-சூரியன்-சந்திரன்-யாகஞ்செய்வோன் எனப்பிரிந்த எனது அஷ்டமூர்த்தங்கள் உலகத்திற்கு உபகாரஞ்செய்வதற்கேயன்றி ஸ்வப்பிரயோஜனத்திற்காக அன்று என்பது தெரிந்த விஷயமே. ஆதலின் சிவையுடன்கூடி நிற்க விவாஹஞ்செய்துகொள்ள விரும்புகின்றேன். சிவையாகிய அப்பார்வதியோ ருஷிகளாலுஞ் செய்யமுடியாத கடுந்தவஞ்செய்து முடித்தாள். அவளுக்கு இஷ்டமான வரப் பலன் கைகூடவேண்டுமாதலின், நீங்கள் பர்வதராசன் மாளிகையையடைந்து பர்வதராஜனையும் அவன் மனைவி மேனையையும் இதமாயும் உத்தமமாயு மிருக்கும் இந்தக்காரியஞ் சாத்தியப்படும்படி பேசி, பார்வதியை மணமுடிப்பிக்கும்படி விரும்புகிறேன். பார்வதியோ ஸர்வகுண பரிபூர்ணையான கன்னிகையாதலின் அவளை எனக்கு மணமுடித்துக்கொடுக்கும்படி ஹிமோபர்வத ராஜனைக்கேட்டுத் திட்டப்படுத்திக்கொண்டு, தேவர்கட்கு நன்மையுண்டாமாறு விதிப்படி நீங்களே மணவினை நடத்திவிக்கவேண்டும். செய்யவேண்டியவற்றையெல்லாந் தெரிந்த உங்களுக்கு விசேஷமாகச் சொல்லவேண்டுவதில்லை என்று கூறினர்.

பிரபுவான சிவபெருமான் அநுக்கிரகித்தவற்றை யெல்லாங்கேட்ட ஸப்தருஷிகள் நாம்தன்னியர்களாகவும் கிருதகிருத்தியர்களாகவும் மஹான்களாகவு மானோமென்று ஆனந்தித்தார்கள். பிரமவிஷ்ணுக்களால் வணங்கத்தக்கவரும் எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடுக்கத்தக்கவருமான இச்சிவபெருமான் உலகத்திற்கு நன்மையுண்டாகத்தக்க காரியத்தில் நம்மையேவினர். இவரோ சர்வலோககர்த்தாவாயும், அப்பார்வதியே சர்வலோகமாதாவாயுமிருத்தலின், இப்பணிவிடை மிகவும் யுக்தமானது. இக்காரியம் வளர்பிறைச் சந்திரன்போல் விருத்தியடையவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சிவபெருமானை நமஸ்கரித்து நமக்கு விசேஷ புண்ணியங்கிடைத்தது என்று ஆகாயமார்க்கமாகச்சென்று ஹிமாசலத்திலுள்ள பர்வதராஜனது நகரத்தை யடைய,அந்தத்திவ்வியநகரத்தைக்கண்டுஒருவரோடொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ருஷி சிரேஷ்டர்களே! குபேரனது அளகாபுரியைக்காட்டிலும், இந்திரனது சுவர்க்கத்திலுள்ள அமராவதி நகரத்தைக் காட்டிலும், ஆதிசேஷனது யோகவதி பட்டணத்தைப் பார்க்கிலும் இந்த ஹிமவானது நகரம் விசேஷமாகக் காணப்படுகிறது. ஸ்படிகக்கற்களாலும் அநேகரத்தினங்களாலுஞ் செய்யப்பட்ட அழகிய மாடமாளிகைகள் பிரகாசிக்கின்றன. சூரியகாந்தமணிகளும் சந்திரகாந்தமணிகளும் சுவர்த்தலங்களிலெல்லாம் விளங்குகின்றன. மனோரம்மியமான சித்திரங்கள் எழுதப்

பட்டுள்ளன. சோலைகளும் நந்தவனங்களும் தண்ணிய தடாகங்களும் நடைபாவிகளும் உத்யானங்களும் பலவிதமான மதுரம்பொருந்திய கண்டத்தொனியையுடைய பக்ஷிகளும், என்ன விநோதமாயிருக்கின்றன? ஆ! இவர்கள் மனிதர்களா தேவர்களா? ஸ்திரீகளா சித்திரங்களா அப்ஸரசுகளா? இவர்கள் ஸௌந்தரியமென்ன? இப்பட்டணத்தை யாதென்று வர்ணிக்க முடியும்? இந்த ஹிமாசலத்துக்குச் சுவர்க்கமும் ஈடாகுமா? இந்நகரத்தைப் பாராதகண்களும் கண்களாமா? என்று ஆச்சரியத்துடன் இதுபோலப்பேசிக்கொண்டு அப்பட்டணத்தையடைந்து ஹிமவான்மாளிகை சமீபித்தார்கள்.

சூரியனுக்குச் சமமான காந்தியையுடைய சப்தருஷிகளைப் பார்த்த பர்வதராஜன் தன் மனைவியாகிய மேனையைநோக்கி, ஏழு சூரியர்கள் நமது வீட்டிற்கு வருகிறார்களோ? நான் கிரகஸ்தனுகையால் இவர்களைப் பார்வதியே பூஜிக்கவேண்டியவள். இப்பொழுது தான் நாம் தன்யர்களானோம். என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஸப்தருஷிகளும் ஆகாயத்தினின்றிறங்கினார்கள். அதுகண்ட ஹிமவான் அவர்களை எதிர்கொண்டு கண்டு, அவர்களைப்பூஜித்துத் தண்டாகாரமாய் அவர்கள் திருவடியில் விழுந்து சேவித்தான். ஸப்தருஷிகள் தங்கள் கைகளால் பர்வதராஜனைப்பிடித்துக்கொண்டு சுபமுண்டாக: சுபமுண்டாக: சுபமுண்டாக என்று ஆசீர்வதித்தார்கள். ஹிமவான் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து ஸ்வாமிகளே! இன்று தான் என்குடில் புனிதமெய்தியது என்று கூறி, ஆதனங்கொடுத்து உட்காரச்செய்து, அவர்களால் ஆஜ்ஞைபெற்றுத்தானும் உட்கார்ந்து, மகான்களாகிய தாங்கள் எழுவரும் எந்தக்காரணத்தால் என்வீட்டையடைந்தீர்களோ? நான் தன்னியனுனேன். கிருத கிருத்தியனுனேன்; உலகங்களில் யாவரும் மதிக்கத்தகுந்தவனுனேன்; தீர்த்த சமானனுனேன்; நித்தியர்களாகிய தங்கட்குத் தரித்திரனுகிய என்வீட்டில் என்ன காரியம்? என் தரித்திரத்தை யொழிப்பதற்காகவா? என்னைப்புனிதப்படுத்தவா? எனது கிருகத்தைப்பவித்திரஞ்செய்யவா? எதற்காக வந்தீர்கள்? தாசனுன எனக்கு அதனைச்சொல்லவேண்டும்? அவ்வாறு சொன்னல் எனதுகிரகஸ்தாச்சிரமம் ஸபலமாகும். அடியேனுக்கு ஏதாவது கட்டளையிடுவதானுல் விரைவிற் சொல்லியருளுங்கள் என்றிவ்வாறு கூறிய பர்வதராசனைப் பார்த்து ஸப்தருஷிகள் சந்தோஷித்துச் சொல்லுகிறார்கள்.

ஹிமவானே! நீ இப்பொழுது தன்னியனும் பாக்கியசாலியும் ஆயினுய். பரோபகார சிந்தையால் சிவபெருமான் பிராணிகட்குச் சுகஞ் செய்ய விருப்பமுடையவராய் எங்கள் மூலமாக உமது புதல்வியான பார்வதியை அபேக்ஷிக்கிருர். அது உமக்குச் சம்மதமாய் அப்படி கன்னிகாதானஞ் செய்யும் பக்ஷத்தில் உலகங்கட்குச் சுகஞ்செய்கிற சங்கரபகவானுக்குப் பூஜ்யராக ஆவீர். இதற்குச் சந்தேகமில்லை. உமது பெண்ணும் அவரது திருவருளால் உலகமாதாவாவள். உமது ஜன்மம் பிரயோஜனமானதாகும் என்று

கூறினர். இவ்வார்த்தைகளைக் கேட்ட பர்வதராஜன் எனது பத்தினியாகிய மேனையின் கருத்தையுந் தெரியவேண்டும். அப்பார்வதியே என்சரீரம் என் சம்பத்து என் கீர்த்தி பிறிதொன்றல்லவென்று கூறி, மேனையோடு யோசித்து அவளையிணங்கச்செய்து, பார்வதியை உலகமாதாவாகப்பார்த்து, அவள் சரீரத்தைப் பூஷித்து, ருஷிகளின் மடியில் உட்காரவைத்து, ருஷிசிரேஷ்டர்களே! இந்தப் பார்வதி என்னால் உங்களுக்குப் பிக்ஷையாகக் கொடுக்கத்தக்கவள். என்னால் கொடுக்கத்தக்க பிக்ஷை யிதுதான் என, ருஷிகள் ஹிமவானே! நாங்களே பிக்ஷுகர்கள்; நீரே பிக்ஷை கொடுப்பவர்; பார்வதியே பிக்ஷாகதம்பமானாள். இதைக்காட்டிலுஞ் சிறந்தது யாது? என்றுரைத்து, பார்வதியைப் பார்த்து, தேவீ! நீ சிவபெருமானுக்குச் சுகங்கொடுப்பவளாகுக என்று ஆசீர்வதித்துக் கையைப் பிடித்துக்கொண்டு, உனக்குச் சுபம் உண்டாகப்போகிறது. வளர்பிறைச் சந்திரன்போல உன் கணங்கள் உன் வீட்டில் சேர்ந்து நாளாவண்ணமாக விருத்தியடையப்போகிறார்கள் என்று சொல்லி விடுத்து, ஹிமவானிடம் பலங்களோடு புஷ்பதாம்பூலங்களை ஒருவருக்கொருவர் (விவாஹஸ்திரஞ்சொல்லி) மாற்றிக்கொண்டார்கள். அச்சமயத்தில் மேனை கண்ணில் ஜலமொழுக்கினாள். அது கண்ட அருந்ததி சிவபெருமானது அநந்தகல்யாணகுணங்களை அவள் ஆசையுறச் சொல்லி, கண்ணீரைத் துடைத்தாள். பிறகு அந்த ருஷிகள் நான்காவது தினத்தில் உயர்ந்த லக்கினத்தை விவாஹத்திற்கு ஏற்படுத்தி நிச்சயஞ் செய்துகொண்டு பர்வதராஜனிடம் விடைபெற்றுச் சந்தோஷித்தர்களாய் தமது மனைவியருடன் காசிக்ஷேத்திரத்தையடைந்து சிவபெருமானைத் தரிசித்து மணவினையின் முடிவு கூறி, தம்மிடஞ் சென்று மீண்டும் வருவதற்கு உத்தரவு கேட்டார்கள். சிவபெருமான் ஸப்தருஷிகளே! நீங்கள் என்னால் விவாஹத்தில் * அத்வர்யுக்களாகச் செய்யப்பட்டீர்களாதலின் நீங்கள் சிஷ்யர்களோடு வரவேண்டும் எனக் கட்டளையிட, ருஷிகள் அவ்வாறேயாகுக வென்று விடைபெற்றுத் தமதிடத்தையடைந்தனர்.

இப்பால் சிவபெருமான் தெளிந்த முகபங்கயத்துடன் கணஸஹிதமாக விவாஹத்தை விரும்பி, ஸ்ரீ கைலாயத்தையடைந்து நாரதபகவானை நினைக்க, அவரும் உடனேவந்து தோன்றி, ஸ்வாமீ! அடியேனை நினைத்த காரணமென்னவெனவினவி, சிவபெருமான் நிகழ்ந்த செய்திகள் யாவுஞ் சொல்லக்கேட்டு மிக்க ஸந்தோஷமுடையவராயினர். அப்பொழுது சிவபெருமான் பார்வதி கூறிய ஏளனவார்த்தைகளைக் கூறி, பார்வதி என்னைச் சுவாதீனஞ் செய்யுந்தக்க அரும்பெருந்தவஞ் செய்தனள் என்று கூற, நாரதர் சங்கரா! தேவரீர் பக்தர்கட்குச் சுவாதீனமாவதையே விரதமாகக் கொண்டவராயிற்றே? பார்வதியின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றினீர். யான் செய்யத்தக்க காரியம் யாது? அது உத்தரவானால் செய்யத்தடையில்லை என்று கூறிய நாரதமுனிவர் வார்த்தையைக்கேட்டு, சிவபெருமான் நீ கூறியபடியே

* அத்வர்யு - காரியநிர்வாஹகர்த்தா.



(9. உமாதேவியார் திருமணத்திற்குச் சிவபெருமான் சகலதேவர்களுடன் எழுந்தருளுதல். க. இ. ௰௯

பார்வதியை ஸ்வீகரித்தேன். இவ் விஷயத்தில் உனக்குச் சிறிதும் சந்தேகமே வேண்டாம். நம்மாற் சொல்லப்படுங் காரியத்தை நீயே செய்யவேண்டும். நாரதரே ! பிரமன் விஷ்ணு முதலிய தேவர்கள் சப்தருஷிகள் சப்தமாதர்கள் யக்ஷர்கள் கந்தர்வர்கள் நாகர்கள் முதலிய யாவரையும் விவாகத்திற்கு அழைத்துவருவதுடன் இவ்விவாகத்திற்கு வராதவர் எமக்குப் பிரியரல்லரெனக் கூறவேண்டும் என்று சொல்ல, நாரதர் சிவபெருமானை நமஸ்கரித்துச் சென்று, சகலமான தேவர்களையுங் கண்டு சிவபெருமான் கட்டளையை யுணர்த்தி, அதிசீக்கிரத்தில் சிவசந்நிதானத்தையடைந்தனர்.

பார்வதியை மணம் பேசிய அத்தியாயம்

முற்றிற்று.

பதினாறுவது

சிவபெருமான் திருமணத்திற்குத் தேவர் வந்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார் :—முநிவர்காள்! தேவர்கள் யாவரும் சிவபெருமானைப் பணியவேண்டுமென்னும் விருப்பத்தால், தத்தமக்குக்கிடைத்த திருமணத்திற்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் வந்து சேரச்செய்து, இந்திரன் முதலிய தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்திரீகளும் வாத்தியம் நாட்டிய முதலியவற்றுடன் வந்து சேர்ந்தார்கள். பரிபூரணரான பெருமானுக்கு அலங்காரஞ்செய்யவேண்டிய தொன்றுமில்லையாயினும், எல்லோரும் பகவத்சேவைசெய்யவேண்டுமென்னுங் கருத்துடையவராய், தம்மாற் கூடியவரையில் மணநாயகனை அலங்கரித்தார்கள். சந்திரன் கிரீடத்திலிருந்தான். திருநெற்றிக்கண் திலதமாயிற்று. கர்ணாபரணங்களாகிய சர்ப்பங்கள் முதலியன சுவர்ணகுண்டலங்களாயின. விபூதியே சந்தனமாயிற்று. யானைத்தோலே பட்டுவஸ்திரமாயிற்று. சர்ப்பஆரமுதலியனவே நவரத்தினஆரங்களாயின. சிவபெருமானது மகிமையால் அவர் தேகத்திலிருந்த இயற்கைகளே கண்டோருக்கு அலங்காரங்களாகத் தோன்றின. சிவபெருமான் யாவராலும் வருணித்துச் சொல்ல முடியாத ஸர்வாபரணாலங்காரரூபராக விளங்கினர். சிவபெருமான் இவ்வாறு அலங்கார ஐசுவரியத்துடன் கூடியிருக்கையில், பிரமதகணங்கள் சகலவாத்தியங்களையுங் கோஷித்தனர். தேவர்கள் அப்பொழுது பிரபு ஸேவைசெய்யவேண்டி வருவாராயினர். அவருள், பிரமதேவர் ஹம்சவாஹநாரூடராய் ஸகல ருஷிகளும் புடைசூழ்ந்துவர வைபவத்துடன் பூதபதியான பரமேஸ்வரனைச் சேவிக்க வந்து சேர்ந்து நமஸ்கரித்து இருந்தார். விஷ்ணுபகவான் கருடாரூடராய் சகல சேவகர்களுடன் ஸர்வாபரணபூஷிதராய், பரிவாரங்களுடன் வந்து நமஸ்கரித்து அருகிலிருந்தார். இந்திராதி திக்பாலர்கள் யானை-குதிரை-சிவிகை-விமான முதலிய தங்கள் வாஹநங்களிலேறிப் பரிவாரங்களுடன் ஆயுதபாணிகளாய் வந்து பணிந்து ஒருபுடையிருந்தார்கள். அஷ்டவசுக்கள் - துவாதசாதித்தர்கள் - ருஷி

கள்-கங்காதிநதிகள்-சப்தசமுத்திரங்கள்-கந்தர்வர்கள் - தேவதாசிகள்-நாகர்கள் முதலிய யாவரும் ஸர்வாலங்காரத்தோடு தங்கள் பரிசனங்களுடன் சிவபெருமானைச் சேவிக்கவேண்டிய சமையம் இதுவேயென்று சந்தோஷத்துடன் வந்து சேர்ந்து, அவரவர்கள் ஒவ்வொரு கும்பலாக இருந்தார்கள். அந்தச்சமையத்தில் சிவபெருமான் ஸ்ரீகைலாயகிரியிலிருந்து புறப்பட்டுத் தேவர்களைப்பார்த்து நீங்கள் யாவரும் என்முன்னர் செல்கவெனப்பணிக்க, தேவர்கள் பெருங்களிகொண்டவர்களாய் சர்வவாத்தியங்களையு முழக்கிக்கொண்டு சிவநாமங்களை ஜயஜய வென்று கூறவும், சப்தருஷிக ளாசிர்வதிக்கவும், பாநுகம்பன் ஆயிரம் வாய்களாற் சங்கத்தொனிசெய்யவும், வாணாசுரன் ஆயிரங் கைகளாற் குடமுழவடிக்கவும், திருநந்திதேவர் பொற்பிரம்பேந்தித் தேவர் முநிவர் கூட்டத்தைவிலக்கிக்கொண்டு முன்செல்லவும், இந்திரன் களாஞ்சி யேந்தவும், ஈசானன் அடப்பை தாங்கவும், வாயு ஆலவட்டப்பணிசெய்யவும், அக்கினி தூபமேந்தவும், வருணன் பூரணகும்பந்தாங்கவும், நிருதி கண்ணாடி பிடிக்கவும், குபேரன் நவநிதிகள் சிந்தவும்,யமன் கஞ்சுகத்தொழில் புரியவும், நாகராஜர்கள் மாணிக்கத்தீப மேந்தவும், வேதங்கள் திருவடியைச் சுமக்கவும், கங்கைமுதலிய நதிமங்கையர் கவரிவீசவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், பிரமவிஷ்ணுக்கள் இருபுறங் கைகுவித்து வரவும், சர்வாடம்பரபூர்வமாகச் சிவபெருமான் இடபவாகநாரூடராய் ஹிமாசலத்தைநோக்கி வருகின்றவராயினர்.

இங்கிவ்வாறிருக்கையில், ஹிமாசலமன்னன் தன் பந்துமித்திரர்களையெல்லாம் வரவழைத்து விவாஹமண்டபத்தை விநோதமாக அலங்காரஞ்செய்து, நானாவித விசித்திர தோரணங்களுங் கொடிகளுங்கட்டி, அதிக ஸந்தோஷத்துடன் பட்டணமுழுவதும் வர்ணிக்கமுடியாத வகையாக அழகு செய்திருந்தனன். மேருமுதலிய பர்வதங்கள் அவற்றின் மனைவிகள் புத்திரர்கள் புத்திரிகள் யாவும் மானுடரூபம் வஹித்து திருமணத்தைத் தரிசிக்க வஸ்திராபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு பர்வதராஜன்வீட்டில் விவாஹகாரியங்கள் செய்துகொண்டிருந்த வகையை வர்ணிக்க என்னால் முடியாது. பர்வதராஜன் தன் குமாரத்தியைக் கன்னிகாதானஞ்செய்ய மங்களஸ்நானஞ் செய்வித்து விவாஹத்திற்கு யோக்கியமான அலங்காரஞ் செய்வித்து, நாந்தி தேவதா ஆஹ்வாநம்-அங்குராரோபணம் முதலான தேவபூஜை செய்து விவாஹோபகரணங்களைச் சித்தப்படுத்திச் சிவபெருமானைச் சகல தேவர்களுடன் அழைத்துக்கொண்டுவரும்படி தன் ஆப்த ஸ்நேகனான கந்தமாதனபர்வதத்தையும் மற்றொரு சேவகனையும் பதினெண்வகை மேளவாத்தியங்களோடு எதிரே அனுப்பிவைத்து, சிவபெருமான் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சிவபெருமான் தன் சைநியங்களோடும் சகலசித்திகளோடும் மஹாவைபவத்தோடும் பட்டண சமீபத்தில் வந்து சேருகையில், சிவபெருமான்

பரிவாரங்களோடு வந்தார் என்பதைத் தூதுவராலறிந்த பர்வதராஜன் நான் இன்றுதான் கிருதார்த்தனானேன் என்று மனதிலெண்ணி, தானும் தனதுபரிசனங்களோடு எதிர்கொண்டுபோய்,பிரமவிஷ்ணுவாதி சகலதேவர்களோடுங் கூடிவரும் சாம்பவமூர்த்தியைக் கண்டு அதிக ஆச்சரியமடைந்தான். தேவர்கள் யாவரும் இப் பர்வதராஜனுடைய சேனையைப்பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். இரண்டு மகாசமுத்திரங்கள் ஒன்றாகச் சேர்ந்தாற்போல இவ்விரு சேனையும் ஒன்றாகூடியது. இவ்வாறு யாவரும் கலந்து நாம் கிருதார்த்தரானோமென்று மகிழ்ந்து பர்வதராஜன் பட்டணத்தை நோக்கி வந்தார்கள். ஹிமவான் அங்குவந்த தேவர்கட்கெல்லாம் தக்கபடி விடுதிகள் நியமித்து விடுத்து, தான் விவாகமேடையிற் சென்று அலங்காரங்களைச் சரிவரப் பார்த்து, ஸ்நானதானாதி நித்யகடன்களை முடித்துக்கொண்டு மணநாயகனது வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மேனை நாரதருடன் தனதுப்பரிகையின் மேனிலையிலேறி மகாஸந்தோஷத்துடன் கூடிப் பக்தர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும் சிவபெருமானைக் காணவேண்டும்: அவர் எவ்வளவு அழகரோ? அவருக்காகப் பார்வதி அருந்தவஞ் செய்தனளே என்று கூறினள். அதனையுணர்ந்த சிவபெருமான் அம்மேனை மனம் பிரமிக்கும்படியான உருவத்தைக் காட்டிநின்றனர். மேனை தேவர் சேனையைக் கண்டு சந்தோஷமடைந்து, சிவபெருமான் இப்பெருஞ்சேனைக்கு நாயகனாயிருக்கும்பக்ஷத்தில் அவர் எவ்வளவு சமர்த்தரும் புகழுடையவருமாய் இருக்கவேண்டுமென்று நினைத்திருந்தாள்.

முனிவர்களே! வேடிக்கையாயுள்ள ஓர் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.—சவுந்தரியமான கந்தர்வர்கள் - அநேக வஸ்திரங்கள் - நானாவித அலங்காரங்கள் - அநேக வாகனங்கள் - பலவித துவசங்கள் - தேவதாசிகள் முதலியவற்றுடன் கூடிவரும் விச்சுவாவசு வென்னும் கந்தர்வராசனைக்கண்டு இவனே சிவனென்று களித்து என் மருகன் பெருஞ்சேனையுடன் கூடியிருக்கிறான் என நாரதருடன் கூற, நாரதர் ஐயோ இவன் சிவசந்நிதியிற் சங்கீதம் பாடுவோன் என, மேனை இவன் ஊழியனாயின் சிவபெருமான் எவ்வாறிருப்பானோ? என்று நினைக்க, மணிக்கிரீவன் முதலிய யக்ஷர்களும் அவர்கள் சேனையுந் தோற்ற அவர்கள் தலைவனான குபேரனைக் கண்டு இவனே சிவனென மயங்கிச் சொல்லிக்கொள்கையில், வருணன் தனது சேனாசமூகத்துடன் வர இவன்தான் சிவனோ என்றும், யமதர்மராஜன் தன் பரிவாரங்களுடன் வரப்பார்த்து இவன் சிவனாவனோ என்றும், இந்திரன் தன் தேவதாசி முதலானவர்களுடன் வரக்கண்டு நான் பார்த்த யாவரிலும் இவனே சிறந்திருத்தலின் சிவனாகவேண்டுமென்றும் நாரதருடன் சொல்ல, நாரதர் அவர்கள் ஒருவரும் சிவபெருமானல்லவென்கையில், சூரியன் அகண்ட தேஜஸோடு கூடிச், சகல தேவர்களும் புடைசூழ்ந்துவரக்கண்டு இவன்தானோ என, நாரதர் அன்று என, சந்திரன் சகல கிரகங்களோடும் அகண்டமான காந்தியோடும் வரக்கண்டு இவன்

தானோ என்றும், இவனே மருகனானால் என் குலமுழுதும் பவித்திரமாகும்; இவ்வாறுதேஜஸுடையவன் என்மருகனாயின்,பார்வதியின்பாக்கியத்தை எத்தனைவருஷங்கள் சொன்னாலு முடியுமா? என்றும், பிரமதேவர் சகல பிரமருஷிகளுடன் கூடி தேஜோராசியாய் வரக்கண்டு, இவனாவது சிவனாவானோ ஆகானோ என்றும், விஷ்ணு மேகவர்ணராயும் சதுர்ப்புஜ பீதாம்பரதாரியாயும் ஸ்ரீவற்ச - சங்க-சக்கர - கிரீடமுதலிய ஆபரணாலங்கிருதராயும், கோடி மன்மத சவுந்தரியராயும், தாமரைபோலுங் கண்களையுடையவராயும், பக்தர்களுடன் கூடிக் கருடவாகனமிவர்ந்து வரக்கண்டு, இவனே சிவன்; நான் தன்யளானேன் என்றுங் கூற, நாரதர் இவரும் சிவபெருமான் அல்லர்; இதைக்காட்டிலுஞ் சிறந்தவன் சிவபெருமான். அச்சிவபெருமானை வர்ணிக்க முடியாது என்றார். பிருகு முதலிய ருஷிகளும், கங்காதிதீர்த்தங்களும், சிஷ்யர்களும், இஷ்டகாமியங்களைக்கொடுக்கும் கற்பகவிருக்ஷங்களும், காமதேனு முதலியனவும் புடைசூழ இவர்கள் மத்தியில் பிருகஸ்பதிமுனிவர் வரக்கண்ட மேனை இவனே சங்கரன் என, நாரதர் இவரைக்காட்டிலுஞ் சிறந்தவரும் நிர்க்குணருமாகிய சிவபெருமான் வருவார் என, மேனை திரிலோகத்திலுள்ளவர்களையுங் கண்டேன்; இவர்கள் ஒருவரும் அல்ல என்றால் அந்தப்பகவான் எப்படியிருப்பரோ என்று யோசித்துக்கொண்டிருக்கையில், சிவபெருமான் வர, அருகிருந்த நாரதர் மேனையே! இவரே சிவபெருமான் எனக் கூற, மேனை சந்தோஷித்துச் சிவபெருமானைப் பார்த்தனள். அவருடன் வந்த வாயுரூபதரரான சேனைகளை மர்மர ஸப்தத்துடன் வருகையில் இவர்கள் அவர் சேனைகளென்றும், இன்னும் அவர் சேனைகள் வருமென்றுங் கூறினர். பிறகு பூதப் பிரேத பசாசங்கள்-திரும்பிய முகமுடையோர்-விகடரூபதரர்-பயங்கரர்-கருநிறத்தர்-நொண்டிகள்-ரோமமுடையர் - தண்டதரர்-பாசபாணிகள்-விருத்தவாகனர்-டமருக கல்லவாத்தியக்காரர்-தாளமொத்துவார் - கொம்பூதுவார் முதலாகக் கணக்கில்லாது வருஞ் சேனையைக் கண்டு பயந்து, இவர்கட்கிடையே நிர்க்குணசகுணராயும் ஐந்துதிருமுகமும் பத்துக்கரமும்திரிநேத்திரமும் விபூதியணியும் சடைமுடியும் சந்திரசேகரமும் கபாலமாலிகாபரணமும் பெரும்புலித்தோலாடையும் பினாகவில்லும் கங்காளமும் சங்கபூஷணமு முடையராய்ச் சிவபெருமான் ருஷபவாகனத்தின் மேல் யானைத்தோலை விரித்து எழுந்தருளியிருந்து நித்திரைசெய்து உடலசைவான்போலிருந்தார். நாரதர் இவரேசிவபெருமான்என்று குறித்துக் காட்ட மேனை காற்றாலடிபட்ட கொடிபோலத் துக்கமடைந்து சோர்வுடன் கீழே விழுந்து, ஆ! பார்வதி! என்னசெய்தாய்? ஆ! துன்மார்க்கி! என்று சொல்லி மூர்ச்சையடைந்து சிறிதுநேரத்தில் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்தாள்.

சிவபெருமான் திருமணத்திற்குத் தேவர் வந்த அத்தியாயம்

முற்றிற்று.

பதினேழாவது

மேனை அஞ்ஞானமயக்கமுற்ற அத்தியாயம்.

ஸூதர்:—மூர்ச்சை தெளிந்த மேனை நாரதமுநிவரையும் தன்குமா ரத்தியையும் நிந்தித்தனள். எப்படியெனில், நாரதரே! நீர் எமதரசனையடைந்து உன் குமாரத்தியைச் சிவபெருமான் வரிக்கப்போகிறுனென்று கூறி, சிவபெருமான் யோகத்திருக்கையில் பார்வதியைப் பணிவிடை செய்யச்செய்து எங்களைமோசஞ்செய்தீர். நாங்கள் மோசம்போனேம். முநிவர்களுஞ்செய்ய முடியாததவத்தைப் பார்வதி செய்துமுடித்தாள். அதற்குப் பார்க்கவும் மனஞ்சகியாத இப்படிப்பட்ட பலனையடையச் செய்தீர். நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? எப்படி பிழைப்பேன்? கையில் விளக்கேந்திக் கிணற்றில் விழுந்தவளானேன். உமக்கென்ன கெட்டது. எமக்கு எல்லாம் வியர்த்தமாயிற்று. அந்தச் சப்தருஷிகள் இப்பொழுது எங்கே போனார்கள்? அவர்களைக்கண்டால் அவர்கள் மீசையைப் பறித்துவிடுவேன். அவர்களோடு வந்த அருந்ததியு மிகக்கொடியவள். அவர்கள் சொன்ன வார்த்தையாலும் என்புத்திரியின் சுயவிருப்பத்தாலும் இவ்வாருயது. இவள் இவ்விவாஹ முடிவுசெய்தது பொன்னைவிட்டுக் கருமணியைக் கொண்டாற்போலும், அன்னத்தை விட்டுக் காக்கையைக் கூட்டில் வைத்தாற்போலும், கங்காஜலத்தை விட்டுக் கிணற்றுநீரைக் குடித்தாற்போலும், சூரிய வொளியைவிட்டு மின்மினிப்பூச்சியைப் பிடித்தாற்போலும், அரிசியைவிட்டு உமியைத்தின்றாற்போலும், மனமுடைய நெய்யை நீக்கி விளக்கெண்ணெயைக் குடித்தாற்போலும், சிங்கத்தை விட்டு நரியைப் பணிந்தாற்போலும், யாக பஸ்மத்தை விட்டு ஸ்மசான சாம்பலை யணிந்தாற்போலும், சகல தேவர்களையும் விட்டு இவ்விகாரரூபியாகிய சிவன் நிமித்தமாகக் கஷ்டமான தபசைச் செய்ததற்கு இப்படிப்பட்ட பலனை யடைந்தாள். நாரதரே! உம்மையும் உமது புத்தியையும் உமது நடக்கையையும் ஆலோசிக்கையில் நன்ருகவில்லை என்று கூறி, அந்தப் பார்வதியால் குலம்-நடக்கை-சாமர்த்தியம் முதலியன வியர்த்தமாக்கப்பட்டன. ஆதலின் இவற்றைக்கண்டு வருந்துவதைக் காட்டிலும் இறந்தொழிவதே யுக்தம். பர்வதராஜனை இனி எப்படி பார்ப்பேன்? எனக்கு ஏன் சப்தருஷிகள் காணப்பட்டார்கள்? அவர்கள் யாவருங் கூடி இவ்வாறு செய்து என் குலத்தைக் கெடுத்தார்கள். நான் மலடியாயிருப்பினு நன்று. அல்லது இறந்தொழியினு நன்று என்று பலவாறு துக்கித்துக்கொண்டிருக்கையில் பிரமதேவர் அவ்விடம் வந்தார்.

பிரமதேவர் அவ்விடத்திற்குவந்தபொழுது, நாரதமுநிவர் மேனையைநோக்கி, நீ சிவபெருமானுடைய யதார்த்தவடிவத்தை யறியவில்லையென, மேனை ஐயா துஷ்டரே! தூரமாயிரும்; ஒன்றுஞ்சொல்லவேண்டாம் என, பிரமதேவர் மேனு! நான்சொல்லும் வார்த்தையைக்கேள். சங்கரபகவான் உலகங்களைச்சிருஷ்டிப்பவரும் ரக்ஷிப்பவரும் சங்கரிப்பவருமாயிருக்கிறார்.

அவரது திவ்விய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமலே வீண்துயரடைந்தாய் எனக்கூறுகையில், மேனை ஸ்வாமீ! நீங்களெல்லோருங்கூடி யாதுகாரணத்தால் எமதுகுலத்தை வியர்த்தமாக்கப் பிரயத்தனிக்கிறீர்கள்? பார்வதியின் சவுந்தரியத்தை அவலமாக்கி இவ்வகையானவனுக்குமணஞ்செய்வதைவிட, அவளைக் கொன்றுவிடுவது யுக்தமாதலின், நீங்கள் சிவனுக்குக் கொடுக்கும்படிச் சொல்லக்கூடாது எனச்சொல்லுகையில், இந்திராதி அஷ்டதிக்குப்பாலகர்களும்வந்து மேனையைக்கண்டு, அம்மா! சிவபெருமான் ஸர்வதுக்கமும் போக்கடிப்பவரும் சர்வோத்தமருமாயிருந்தும், தயையுடன் உமது குமாரத்திக்குத் தரிசனங்கொடுத்தார். அந்தத் தரிசனம் யாவர்க்குங் கிடைக்கத்தக்கதல்ல எனக்கூற, மேனை மனம்பொறுது, இவ்வார்த்தைகளொன்றும்உபயோகப்படாது. என்னிடத்தில்இப்படிச்சொல்வதைவிட என்னைக் கொன்றுவிடுங்கள். குரூபியான சிவனுக்குப் பெண் கொடுக்கமாட்டேன் என, அப்பொழுது சப்தருஷிகள் வந்து நாங்கள் கூறியது விருத்தமான காரியமல்ல. சிவபெருமானுடைய தரிசனம் விசேஷ பலன்களைக்கொடுக்கத்தக்கது அவர் உங்களிடத்தில் தானம் பெறுதற்குச் சற்பாத்திரராக உமது வீட்டிற்கு வந்திருக்கிறார். சிவபெருமான் உமதுவீட்டிற்குவந்ததைக்காட்டிலும் சுபத்தை உண்டுசெய்யத்தக்கது ஒன்றுமில்லை எனக்கூற, மேனை அவர்கள் வார்த்தையையும் நிராகரித்து, நான் ஆயுதத்தாலாவது கொன்றெறிவேனன்றிச் சங்கரனுக்குக் கொடேன் எனச்சொல்லிக்கொண்டிருக்கையில், பர்வதராஜன் மேனையினிடம்வந்து அவளைத் துக்கத்தோடிருக்கக் கண்டு, பிராணநாயகி! நமது வீட்டிற்கு யார் யார் வந்திருக்கிறார்கள்? இச்சமையத்தில் நீ துக்கிப்பானேன்? ஏன் அவர்களைநிந்திக்கிறாய்? சிவபெருமான் சர்வலோகங்களையுங் காப்பவரும், நிக்கிரகாநுக்கிரகஞ் செய்பவரும், ஜகத்திற் பூஜிக்கத்தக்கவருமா யிருப்பதை யானறிந்து கொண்டேன். உன் மனத்துயரைவிடு. விவாககாரியம் நடத்தவேண்டும் எனக்கூற, மேனை பர்வதராஜனைப்பார்த்து, அரசே! நான் கூறும் வார்த்தையைக்கேட்டு நீ அவ்வாறு செய்யவேண்டும். அதாவது என் குமாரத்தியின் கழுத்தில் ஒரு பெரும் பாறையைக்கட்டி அவளைச் சமுத்திரத்தில் விட்டு நீ சுகமாயிரு எனச்சொல்லிக்கொண்டிருக்கையில், பார்வதிதேவியார் அங்கேவந்து, தாயே! உனக்கு ஏன் இப்படிப்பட்ட விபரீத புத்திவந்தது? தர்மத்தையே பிரதானமாகக் கொண்ட நீ எவ்வாறு தர்மத்தை விடுத்தாய்? இச்சாம்பவமூர்த்தி சர்வோத்தமரும், பிரம விஷ்ணு ருத்திராதிகட்குக் காரணமானவரும், எல்லோருக்குஞ் சுகஞ்செய்பவரும், நிக்கிரகா நுக்கிரக சமர்த்தரும், சர்வமுந்தன்னிடத்துடையவரும், ஸர்வலோகங்களையுஞ் சிருட்டி திதி செய்பவரும், பிறப்பிறப்பில்லாதவருமாதலின் இத்தேவர்களெல்லோரும் சேவகர்கள்போல வந்திருக்கிறார்கள்: பர்த்தனையா? நீ எனக்குஇதஞ்செய்பவளாயிருந்தால் இவரைக்காட்டிலுஞ் சிறந்தவர் யாருளரெனச் சொல்லவேண்டும். இதுவரையிற்செய்த விவாகப்பிரயத்தனம் பலனுறச்செய்வாய்; உலகங்கட்குச்சுகஞ்செய்யுஞ்

சங்கரபகவானுக்கு என்னைக் கன்னிகாதானமாகக்கொடுத்து இவ்விட்டைப் பவித்திரமாகச்செய்வாய்; கஷ்டப்படாதே; துக்கத்தைவிடு. நீ என்னைச் சிவபெருமானுக்குக் கொடுக்காவிட்டால் நான் பிறனொருவனை மணம்புரியேன்; சிங்கமடையும் பொருளை நரியடையுமா? தாயே! மனவாக்குக்காயங்களால் நான் சுயமாகச் சிவபெருமானை வரித்தேன்: வரித்தேன்: வரித்தேன்: உனக்கு இஷ்டமெதுவோ அதைச்செய் எனக்கூறினள். அப்பார்வதியின் வார்த்தையைக்கேட்டு, மேனை மிகவுங்கோபித்து, பார்வதீ! என்வார்த்தைக்கெதிர்த்துப் பேசவும் வல்லவளாயினையா? விஷமூட்டுகிறேன்; அல்லது கிணற்றிற் போடுகிறேன்; அல்லது கத்தியால் வெட்டிவிடுகிறேன்; அல்லது நானுவது உயிர்விடுகிறேன் எனப்பிரலாபித்துப் பலவிதமாகத் தன்னிற்றானே கூறுகின்றாள்.

சிவன் பிரபாவத்தை விசாரிக்கையில் தாய் - தந்தை - உறவினர் - சகோதரர் - தாயாதியர் - நன்னடக்கை - சாதுரியம் - நல்லவீடு - வஸ்திரம் - அலங்காரம் - யோக்கியமான துணைவர் - நல்ல வாகனம் - வாலிப வயது - தனம்-பரிசுத்தம்-வித்தை முதலியவற்றில் ஒன்றுவதுண்டா? எதைக்கண்டு என் குமாரத்தியைக் கொடுப்பது? என்னசெய்வேன்? என்று சிந்தாக்கிரந்தையாய், அங்குள்ளாரைப்பார்த்துக்கூறுஞ்சமையத்தில், விண்வோனவர் அவ்விடம் வந்துமேனையைப் பார்த்து, மேனு! யோக்கியரான பிதுரர்க்கு மாநஸபுத்திரியும், அநேக ஸத்குணங்களையுடையவளும், ஹிமவந்தன் மனைவியும், பிரமவமிசத்திற் பிறந்தவளுமான நீ மகா புண்ணியவதி. உன் பாக்கியத்தை நான் என்னவென்று சொல்லுவேன். தர்மத்திற்கு ஆதாரபூதமான நீ தர்மத்தை யேன் கைவிடுகிறாய்? தேவர்கள் ருஷிகள் பிரமதேவன் நான் முதலாக யாவரும் உன்னிடத்தில் நிஷ்பலமான காரியத்தைச் சொல்வோமா? நாங்கள் சொல்வது சுபமல்லாதிருக்குமா? சுபமல்லவென நீ நினைக்கலாமா? சிவபெருமானை நீ உண்மையில் அறியமாட்டாய்! அந்தப்பெருமான் நிர்க்குணரும் சகுணருமாயிருக்கிறார். அவராலேயே சகல ஜகத்திற்கும் மூலகாரணமானபிரகிருதி நிருமிக்கப்பட்டது. பிரகிருதியோடு விராட்புருஷன் உண்டு செய்யப்பட்டான். பிரமன் நான் உருத்திரன் ஆகிய மூவரும் முக்குண வசத்தராகச் சிருஷ்டிக்கப்பட்டோம். பிறகு வேதங்கள் - தேவர்கள் - காணக்கூடிய தாவர சங்கமங்களாகிய சர்வஜகத்தும் உண்டாக்கப்பட்டமையின், அம்முதற்கடவுளாகிய பரமவஸ்துவின் குணரூபங்களை யாவரறிய வல்லவர்? நானும் பிரமதேவனும் சிவபெருமானது பிரபாவத்தை ஆயிரம் வருஷங்கள் சொல்லினும், முடியாது. சத்திய ரூபியும் ஞான ரூபியும் வியாப்பியனும் வியாபகனும் ஜாமரணமற்றவனும் பிரபுவும் உபாசிப்பவர்கட்குச் சமீபத்திலிருப்பவனும், நான் - பிரமன் - ருத்திரன் - தேவர் - சூரியன் - சந்திரன் - கிரகங்கள் - பர்வதங்கள் - நதிகள் - குபேரன் முதலாகக் காணப்பட்டவுலகமுழுவதையும் ஆக்கினவனும் அச்சிவபெருமானே. ஒரு விதையிலிருந்து விருக்ஷந்தோன்றி, நானுவிதமான கொம்பு இலை முதலாக உண்டாவது

போல, இந்தச் சிவபெருமானிடத்திலிருந்து பிரபஞ்சங்களெல்லாந் தோன்றின. ஜகத்தின் முதலினும் இறுதியினும் சிவபெருமானே இருப்பவர். சிவபெருமான் ஜகத்திலிருக்கிறார் ஜகத் சிவபெருமானிடத்தி லிருக்கிறது. நானும் சிவம்: நீயும் சிவம்: சிவத்தைவிட இரண்டாவதுபொருள்கிடையாது. அவ்வாறிரண்டாவதுஒருபொருள் இருக்குமென நினைத்தல் அஞ்ஞானமேயன்றி ஞானமாகாது. காரியமான ஜகத்திற் காரணமான சிவபெருமான் வியாபித்திருக்கிறாராதலின் காரியம் ஜகத் என்றும், காரணம் சிவமென்றுந் தெரியவேண்டும். அஞ்ஞானத்தாற் காரணகாரியங்கள் பேதமாகக் காணப்படுமன்றி ஞானிகட்குப் பேதமில்லை. சகல ஜகத்தும் சிவமயமேயாம் என்று கூறினர்.

மேனை அஞ்ஞானமயக்கமுற்ற அத்தியாயம்
முற்றிற்று.

பதினெட்டாவது
பார்வதி விவாக முறைத்த அத்தியாயம்.

மேனையைநோக்கி விஷ்ணுமூர்த்தி மேலுஞ் சொல்லுகின்றார்: சிவபெருமானே யாவுமாக விளங்குகின்றாரென்று வேதசிவாகமங்கள் கூறும். குற்றியைக்கண்டு மானுடனென்றும், கயிற்றைக்கண்டு பாம்பென்றும், இப்பியைக்கண்டு வெள்ளியென்றுஞ் சந்தேகித்து, உண்மையுணர்ந்தபிறகு, மானுடனல்ல குற்றியென்றும், பாம்பல்ல கயிறென்றும், வெள்ளியல்ல இப்பியென்றும் மனச்சந்தேகநீங்கித் திடப்படுமாறு, அஞ்ஞானத்தால் சிவனுக்கு இரண்டாவதாகத் தோற்றும் பிரபஞ்சமுழுதும், ஞான முற்ற பொழுது முக்காலத்திலும் சிவனே யென்று தெரியும். மேனா! உனக்கு இன்னும் திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறேன்—உலகத்தில் வேஷக்காரன் வெவ்வேறு வேஷத்தைத் தரித்தாலும் உண்மையில் அவனேயாக இருக்கிறான். தெரியாதவர்கட்கு வேறொருவனென்று மயங்கச்செய்து பொருள் சம்பாதிக்கிறான். தெரிந்தவனோ அவனைக்கண்டு நகைக்கிறான். அப்படியே ஞானியானவன் பிரபஞ்சத்தைச் சிவனுக்கு இரண்டாவதாக நினையான். அஞ்ஞானியானவன் பிரபஞ்சத்தைச் சிவனுக்கு வேறாக நினைப்பான். அன்றியும், ஒரு புருஷன் அநேக வஸ்திரங்களைப் பலவிதமாக மதிக்கக்கருதி உடுத்துகிறான். வஸ்திரங்கள் வெவ்வேறாயினும் தரித்துக்கொள்பவன் ஒருவனே; அப்படியே சிவஸ்வரூபம் வேறொன்றிற்கலந்தபொழுது நானாத்மகமாகத் தோன்றுமன்றி விசாரிக்கையில் ஒன்றே. ஒருவனிடத்தில் நான் எனது என்னும் தத்போதம் இருக்குமளவும் பந்தனமுண்டு. அகங்காரம் போனபொழுது, தானே சிவமென உணர்வான். ஸ்படிகமணியானது செம்பருத்திப்புஷ்ப சையோகத்தால் வேறுநிறமாகக் காணப்பட்டதுபோல, பிரகிருதி சம்பந்தத்தால் சிவபெருமானிடத்தில் அநேகத்துவம் தோற்றுகின்றது. பிரகிருதி



1897

(10- திருமணமகோற்சவம்.

யைக் காட்டினுஞ் சிறந்த பரிபூரணப் பிரமமாகிய சிவதத்துவார்த்தத்தை நாங்களே இதுகாறும் அறியோம். ஆதலின் நீ துக்கத்தைவிட்டுச் சிவபெருமானை ஸேவைசெய்என்று சிவபெருமானிடத்தில் பக்தியுண்டாகும்படி விஷ்ணுமூர்த்தி போதித்தனர். அந்தச்சமையத்தில் நாரதமுநிவர் சிவபெருமானிடஞ்சென்று, ஸ்வாமீ! நாங்கள் ஒவ்வொருவரும் தேவரீர் விஷயமாக மேனையினிடத்திற் பலவிதமாய்த் தூஷிக்கப்பட்டோமெனச் சொல்வதன் முன்னே, சிவபெருமான் பக்தவாத்ஸல்லியத்தால் கண்டோர் மோகிக்கத்தக்க திவ்ய உருவம் வஹித்திருப்ப, நாரதர் மீண்டும் மேனையிடஞ்சென்று அம்மா! உலகமெல்லாம் மோகிக்கத்தக்க பேரழகுடைய உன் மருகனைப் பார் என, மேனையானவள் சிவபெருமானைக் கோடி சூரியர்கட்குச் சமானமான காந்தியும், நல்ல குளிர்ந்த பார்வையும், சுந்தரமான ஆபரணங்களும், திவ்ய கிரீடங்களும், விலையுயர்ந்த வஸ்திரங்களுந் தரித்து, புன்சிரிப்போடு விளங்கக்கண்டாள்.

ஸகல தேவசேவையோடு சூரியன் குடைபிடிக்கவும், சந்திரன் விசிறவும், அணிமாதி அஷ்டசித்திகளும் நடிக்கவும், கங்காதி நதிக்கன்னியர்கள் சாமரையிரட்டவும், பிரமன் விஷ்ணு உருத்திரர்முதலானதேவர்கள் ஜய ஜயவெனக்கூறவும், சகல முநிவர்களும் பலவாறாகத் துதித்துக்கொண்டு கொடிகள்பிடித்துலாவவும், விச்சுவாவசுமுதலிய கந்தர்வர்கள் அரம்பாதி தேவதாசிகளுடன் அநேக வேஷங்கள் தரித்துச் சங்கீதகானஞ்செய்யவும், சிவகணங்கள் யாவரும் மிருதங்கமுதலியவாத்தியங்களை வாசிக்கவும், வேத-அங்க-ஸ்ருதி-ஸ்மிருதிகள் ரூபமடைந்து முன்னே நடக்கவும், சமுத்திரங்கள் நதிகள் அநேகமாக அலங்கரிக்கப்பட்டு முன்னேஉலாவவும், மகாப்பிரகாசத்துடன் சிவபெருமான் விளங்கிய திருக்கோலத்தை வர்ணிக்க யாருஞ் சக்தியுடையரல்லர். அப்படிப்பட்ட திவ்விய மங்கள விக்ரஹமாக விளங்குஞ் சிவபெருமானைப்பார்த்து, சித்திரப் பிரதிமைபோல அசைவற்று ஒன்றுந்தோன்றாதிருந்து, சிறிது நேரத்தில் மனந்தெளிந்து, தேவர்கள்யாவருங்கூறியபடியே இவர் அவ்வகைய சரீரத்தையே யடைந்திருக்கின்றனர். என் மகள் பார்வதி மகா புண்ணியவதியாதலின், இவ்வகைய ஜகந்மோஹந ஸ்வரூபனான சிவபெருமானைக் கணவனாக அடைந்தாள் என்றுகருதி, அவரது அவயவங்கள் ஒவ்வொன்றினையுஞ் சிறிது உற்றுப்பார்த்து மகா சந்தோஷமடைந்து மனதில் நாணமுற்று இன்னுங் காணக்கூடாதவளாயிருந்தாள்.

தேவகணங்களோடு கூடிச் சிவபெருமான் சர்வாலங்கார பூஷணராய்ப் பர்வதராஜன் மாளிகைக்கு வருகையில், மேனை பிரம விஷ்ணுக்களிருபால்வர, இடையேவருஞ் சிவபெருமானைப் பூஜித்தாள். அப்பொழுது அந்த நகரத்திலிருந்த மங்கையர் யாவரும் மணநாயகன் வருகையிலுண்டான பதினெண்வகை மேளவாத்தியங்களி னொலியால் மணநாயகனைக் காணத் தாங்கள் செய்துகொண்டிருந்த வேலைகளை விட்டு அப்படியே ஓடிவந்தார்கள். அதாவது, உடம்பில் வாசனைப்பொடி தேய்ப்பவளும், கணவன் பூஜையிலிரு

க்கையில் அவனுக்கு விசிறிக்கொண்டிருந்த விசிறியைத் தாங்கினவளும், குழந்தை பால் குடித்துக்கொண்டிருக்கையில் அதை விட்டு வந்தவளும், இடையில் ஒட்டியாணமணியவெடுத்து அதைக் கையிற் பற்றிக்கொண்டும், வஸ்திரங் கட்டிக்கொண்டிருந்தவள் அதனை மேல் போர்த்துக்கொண்டும், கண்ணிற்கு மைதீட்ட வேண்டியவள் கையிலேந்திய சலாகையோடு ஒரு கண்ணிற்றீட்டி மறுகண்ணிற் றீட்டாமலும், கண்ணாடி பார்த்துக்கொண்டிருந்தவள் அக்கண்ணாடியோடும், கணவனுக்கு அன்னமிடப் பாத்திரத்திலன்னமேந்தி வந்தவள் அவ்வன்ன பாத்திரத்தோடும் குளிக்கையில் மஞ்சள் பூசிக்கொண்டிருந்தவள் ஒருகாலிற் பூசியும் ஒருகாலிற் பூசாமலும், இவ்வாறு தங்கள் தங்கள் காரியங்களை விடுத்துச் சிவபெருமானாகிய கலியாணப்பிள்ளையைக் காண ஓடோடிவந்து சர்வமங்கள விக்ரஹமாக விளங்கிய எம்பெருமானைக்கண்டு உடல் மறந்து சுவற்றிலெழுதிய சித்திரப் பிரதிமை போலச் சிறிது நேரம் அசையாதிருந்து, அவரிடஞ்சென்ற மனதை ஒருவாறு திருப்பி, ஒருவரோடொருவர் ஆஹா! பார்வதி செய்த அருந்தவத்தால் நல்லபுருஷனையடைந்தாள். இவனது அற்புதத்திருவுருவத்தை யாவரோ வர்ணிப்பவர்? எப்படி வர்ணிக்கமுடியும்? இவருடைய சிவபெருமான்[மங்களமூர்த்தி] என்னும்பெயர் இவருக்குத் தகுந்ததே. இவரைப்பார்த்ததனாலேயே அநேக புண்ணிய பலனை யடைந்தோம். இவ் விமாசலமன்னன் பட்டணத்திலிருந்ததாலன்றோ நாம் கண்கள்பெற்றதனாலுண்டான பலனையடைந்தோம்? இவ்வரிய திருவுருவத்தைக் கண்டவருடைய ஜன்மமும் கிரியையும் ஸபலமாகும். மிகுந்த கஷ்டமான தவஞ்செய்து இவ்விறைவனைக்கணவனாகப்பெற்ற பார்வதியே தன்யையாயும் கிருத கிருத்யையாயுமிருக்கிறாள். இப்பார்வதி புத்தியுள்ளவளாகையால் அவரைச் சந்தோஷப்படுத்தத் தடையிராது. பிரமன் இத்தம்பதிகளை ஒன்று சேர்க்கச்செய்ததே விசேஷம். பார்வதியின் தவம் பெரும்பல னளித்தது. லக்ஷ்மியானவள் விஷ்ணுமூர்த்தியை மணஞ்செய்தாற்போல நமது பார்வதி இச்சிவபெருமானை மணஞ்செய்கின்றாள். பொன்னானது இரத்தினத்தோடுகூடினால் நன்றாய்ப் பிரகாசிப்பதுபோல, இப்பார்வதி சாம்பவமூர்த்தியைக் கணவனாக அடைந்ததனால் நல்ல சுகத்தை யனுபவிப்பாளென் றுசொல்லி, கந்த புஷ்ப அக்ஷதைகளைச் சிவபெருமான்பேரிற் சமர்ப்பித்தார்கள். சிவபெருமான் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டு மகிழ்ச்சிமிகச் சிறிது நேரமிருந்து பர்வதராஜன் முதலியோர் முன்னின்றழைத்துப்போகத் தனது பரிவாரங்களோடும் விவாஹ வேதிகையைச் சேர்ந்தார்.

பிரமதேவர் புரோகிதராகச் சப்தருஷிகள் முதலானவருடன் சதுஷ்கோணமான திருக்கல்யாண மண்டபத்திலிருந்து அத்யாதி ப்ரயோகமுதலான விவாஹசடங்குகளை நடத்தினர். அப்பொழுது பர்வதராஜனும் மேனையும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரணாலங்கிருதராகி வந்தனர். பர்வதராஜன் தன்னுடைய கோத்திர முறையைக்கூறி, சிவபெருமானுக்கு ஆவாஹநம்

பாத்தியம் அர்க்கியம் பட்டுவஸ்திரம் திலகம் புஷ்பஹாரம் பொன்னரங்கள் முதலியவற்றைச் சமர்ப்பித்துப் பூஜித்து, வேதிகையில் மேனையுடன் உட்கார்ந்து அக்நிப் பிரதிஷ்டாபனஞ்செய்தனன். சுமங்கலிகள் மங்கலப்பாடல்கள் பாட, லக்ஷ்மி சரஸ்வதி யிருவரும் தோழியராகிச் சகலாபரண பூஷிதையாக விளங்கும் பார்வதிதேவியை அந்தப்புரத்தினின்றுங் கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டுவந்து சிவபெருமான் சமீபத்தில் இருக்கச்செய்தனர். பிரமன் மந்திரோச்சாரணஞ்செய்ய, மேனை கரகநீர்வார்க்க, ஹிமவான் சிவபெருமானுடைய திருவடியை விளக்கி அவ்வுதகத்தைத் தானுந் தன் மனைவியுங் கிருதார்த்தர்களாகத் தங்கள் சிரமேற்புரோக்ஷித்துக்கொண்டும், சிறிது உட்கொண்டும், பின்பு சாக்ஷதோதகதாரா பூர்வகமாய், பார்வதியின் கையைப்பற்றிச் சிவபெருமான் திருக்கரத்தில்வைத்து என்குமாரத்தியான இப்பார்வதியைத் தேவரீருக்குச் சமர்ப்பித்தேன் என்று கொடுத்தான். உடனே சிவபெருமான் தமது திருக்கரத்தால் மாங்கல்யதாரணஞ் செய்தனர். தேவர்கள் முனிவர்கள் யாவரும் ஆசீர்வதித்தார்கள். ஸுமங்கலிகள் அக்ஷதைகள் சமர்ப்பித்து வணங்கினார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. தேவர்கள் புஷ்பவருஷம் பொழிந்தார்கள். உலகமெல்லாம் மகிழ்ச்சி யுற்றன.

பார்வதி பரமசிவன் என்னும் வதூவரர்களிருவரும் அக்கினிப்பிரதக்ஷிணஞ்செய்துகொண்டிருக்கையில், சிவபெருமான் உமாதேவியின் திருவடியைத் தமது கரத்தாலெடுத்துவைக்க; பார்வதி அம்மி மிதித்தனள். அருந்ததியை நினைக்க அவள் நமஸ்கரித்துக்கொண்டே யெதிர்வரப்பார்த்தார்கள். துருவனும் சப்தருஷிகளும் எதிர்வந்தார்கள். மீண்டும் சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும் சிங்காசனத்தி லிருக்கச்செய்து வேதோக்தமாக ஆசீர்வதித்து யாவருஞ்சந்தோஷித்திருக்கையில், தேவர்கள் யாவரும் உலகமாதாவாகிய பார்வதிக்கும் உலக பிதாவாகிய சிவபெருமானுக்கும் நமஸ்கரித்து, தாங்களோ உலகத்திற்கு மாதா பிதாக்கள்: இந்த நிமிஷமுதல் நாங்கள் பெரும் புண்ணியத்தை யடைந்தோமென்று புகழ்ந்தார்கள். அப்பொழுது கந்தர்வர் அப்ஸரசுகள் நிருத்தம் கானம் வாத்தியம் முதலியவற்றைச் செய்தனர். பர்வதராஜனும் விவாஹ விதியை முடித்துப் பார்வதியைச் சிவபெருமானுக்குக்கொடுத்து, தனது வமிசமும் தனதுகிருகஸ்தாச்ரமமும் சபலமானதென்றுகளித்தான். சிவபெருமானும் பார்வதியுமாகிய வதூவரர்களிருவரும் தாம் கொண்ட கோலத்திற் கேற்பவும், தம்மைப் பார்த்துப் பிறர் அவ்வாறுசெய்யவும் குலதேவதா பிரார்த்தனஞ் செய்து, கங்கணவிசர்ஜனமுடித்து அத்திருமணத்திற்கு வந்திருந்த சப்தருஷிகள் முதலானவர்களைச் சிவபெருமான் * கைகுவித்து அநுக்ரஹித்தனர். ஹிமவானும் தன்னுற் கூடியவளாயில் யாவரையும் பூஜித்தனன். அப்பொழுது தேவர்கள் யாவரும் நாம் இவ்விமாசலமன்னன் முன் எவ்வளவென்று நினைத்தார்கள். இப்பூஜா

* சிவபெருமான் அவ்விருடியர்க்குக் கைகூப்பல் தகுமோ வெனின், அவர்கள்தம் மைப்போலவே வேதியர்களாதலாலும், தாம் அடியார்க்கடியராதலாலு மமையும்.

தானங்களைக்கண்ட பிரமவிஷ்ணுவாதிதேவர்கள் இதுகாறும் கண்டுங் கேட்டும் இல்லாமையால், ஒன்றுஞ் சொல்லமுடியாமல் அதோமுக மானார்கள். அங்குவந்த யாவரும் மரியாதை மிக்கடைந்து பெருங்களிப்புற்றார்கள்.

தேவர்களும் மகருஷிகளும் சிவபெருமானாலும் ஹிமவானாலும் பூஜிக்கப்பட்டும் வெகுமானிக்கப்பட்டும் களித்திருக்கையில், பர்வதராஜன் இப்பொழுது என் ஜனனமும் என் பிழைப்பும் என் கிரகஸ்தாச்சிரமமும் பலனுற்றனஎன்றான். மேனையானவள் தான் முன்செய்தநிந்தனைகளெல்லாம் மன்னிக்கப்படவேண்டும்: என் குலம்பவித்திரமாயிற்று. என் புத்திரியாகிய பார்வதியால் எல்லாப்புகழு மடைந்தேன். இவளே எங்கள் புத்திரியாய் அவதரிக்காவிடின் சிவபெருமான் திருமால் பிரமதேவர் மற்றத் தேவர்கள் முனிவர் யக்ஷர் கருடர்முதலியயாவரும் இங்குவரநேரிடுமோ ? நீங்கள் மஹா புண்ணியர்களாகையால் இதுவரையில் யான் செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனள். அதனைக்கேட்ட தேவர்கள் அதிக சந்தோஷமடைந்து நீ கிருதகிருத்தியை. ஜகத்ரக்ஷகராகிய சிவபெருமானுக்குப் பார்வதியைக் கன்னிகாதனஞ் செய்த பலன் எவ்வளவு எனக் கூறுவாம். மேனை! பர்வதராஜன் மனைவியாய்ப் பிரசித்தியாயிருந்த நீ பார்வதி தேவியைக் குமாரத்தியாயடைந்தமையின், உன் புகழ்சொல்லத்தக்கதல்ல. நீ எங்களைத் திரஸ்கரித்தவை சுகமுடையனவா யெண்ணினோம். உன் ஐசுவரியம்விருத்தியடைக. உனக்குச் சுகமுண்டாக. இனி நாங்கள்போகிறோமென்று, மீண்டும் பர்வதராஜனை ஆசீர்வதித்து அவனது நமஸ்காரத்தை யடைந்து சகல வாத்திய கோஷத்துடன், பர்வதராஜன் மேனை முதலானோருடன், தேவர்கள் சமீபித்து உடன்வர, சிவபெருமானும் பார்வதா தேவியும் ஸர்வ தேவர்களும் புறப்பட்டு வழிக்கொண்டு, கைலாயகிரியை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது பர்வதராஜனும் மேனை முதலிய அவன் மனைவிகளும் கந்தமாதன பர்வத வரையிலுஞ் சென்று வழிவிட்டுத் திரும்பினார்கள். அன்று முதல் பர்வதங்கள் கிருதார்த்தமாயின. அப்பருவதங்கள் பெற்றபலனை வர்ணிக்க முடியாது. விஷ்ணு-பிரமன்-இந்திராதி தேவர்கள்-மகருஷிகள் முதலிய யாவரும் ஸர்வ வாத்தியங்களுடன் நிருத்த நாட்டிய முதலிய வைபவத்துடன் திருக்கயிலாயகிரியையடைந்து, சிவபெருமானது திருமாளிகையில் பார்வதியைக் கிருஹப்பிரவேசஞ் செய்வித்து, ஸ்வாமீ! தேவரீர் பார்வதி தேவியுடன் சுகித்திருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்து, அநுக்ரஹம் பெற்று விடைகொண்டு சிவகடாக்ஷமுற்றுச் சிவபெருமானது விவாக மஹோத்சவத்தைப் புகழ்ந்து பேசிக்கொண்டு தங்கள் தங்கள் நகரத்தையடைந்தனர். தேவர்களுக்குண்டான சந்தோஷத்தையும் சிவபெருமான் அநுக்ரஹித்த வகையையும் விவரிக்க வேண்டுமானால் நூறு வருஷங்களானலும் முடியாது. முநிவர்களே ! நீங்கள் கேட்டப்படியால் எனக்குத்தோன்றிய வரையிற் கூறினேன். நைமிசாரணிய வாசிகளே ! சிவபெருமானது விவாக



(11. அக்கினிதேவன் புறவடிவேற்றதும், குமாரக்கடவுள் சரவணப்பொய்கையில் உற்பவித்ததும்.

மஹோத்ஸவசரிதத்தையாவது, அதில் ஒரு ஸ்லோகத்தையாவது, ஸ்லோக அர்த்தத்தையாவது கேட்டவர்கள் சகல சம்பத்தும் பெற்று, அஞ்ஞானம் நீங்கி, அஷ்டைசுவரியமும் ஆயுராரோக்யமும் கன்னியாலாபமும் பெறு வார்கள்.

பார்வதி விவாகமுரைத்த அத்தியாயம்.

மூற்றிற்று.

பத்தோன்பதாவது

தாரகன் வதையுந் திரிபுரதோற்றமுமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகள் ஸூதமுநிவரைப் பார்த்து, புண்ணியரே! சிவபெருமான் பார்வதி தேவியாரை மணஞ்செய்த பிறகு, புத்திரனைத் தந்து தாரகாசுரனை எவ்வாறு வதைத்தனரோ, அதனையும் விபரமாகக் கூறியருள வேண்டுமென, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்:—சிவபெருமான் பிராட்டியாரோடு அந்தப்புர மடைந்து சிறிதுகாலம் விநோத லீலாமாத்திரையா யமர்ந்திருந்தனர். தேவர்கள் தாரகாசுரனால் மிகவும்பீடிக்கப்பட்டுத் தாங்கள் சிவபெருமானைக் கண்டு விண்ணப்பஞ் செய்துகொள்ளச் சாத்தியமின்றிப் பெருந்துயரத்திலாழ்ந்தவர்களாய், அநேகவருடங்கள் கழித்து ஒருவரோடொருவர் பலவாறு தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொண்டு, கடைசியாய் அக்கினிபகவானை யடைந்து, ஐயா! சிவபெருமான் பெருமாட்டியை மணஞ் செய்தும், தமது வீரியத்திற் புத்திரோற்பவஞ் செய்து தாரகனை வதைக்க வில்லையே. நீரோ எம்மிற் சிறந்தவராதலின், எங்கள் கஷ்டத்தைப் பெருமானுக்குச் சொல்லவேண்டும். நீரோ இதற்குத் தக்கவர்: உம்மையன்றிப் பிறரொருவரால் இக்காரியம் ஆவதல்ல எனப்பிரார்த்திக்க அக்கினிதேவன் ஓர் புறவடிவேற்று மெல்லென உட்புகுகையில், சர்வாந்திரியாமியான சங்கரர், யாரடா கபோத வடிவுடன் வருவோன்? என் வீரியத்தை அவனே தாங்கக்கடவன் என்று வீரியத்தை விடுப்ப, அக்கினி தனது புறவடிவத்தோடு அவ்வீரியத்தை வாயிற்கவ்விச்செல்ல வலியற்றுக் கங்காநதியில்விட, கங்காநதியும் அதைப் பரிக்கமுடியாது தருப்பைப் புல்லில் விட்டது. அத்தருப்பைப்புல்லில் விழுந்தபொழுது அவ்வீரியத்தினின்று முருகக்கடவுள் அதி சுந்தரமும், கண்டவுடன் சகலசுகங்களையுங்கொடுக்கத்தக்க வன்மையும், காந்தியுமுடைய குமாரரூபமடைந்து விளங்கினர். அங்கே நீராடவந்த ஆறுஇராஜ கன்னியர்கள் இக்குழந்தையைக்கண்டு இது என் குழந்தை: இது என் குழந்தையென்று அவர்கள்ஒவ்வொருவரும் முலைகொடுத்தனர். அப்பொழுது குமாரக்கடவுள் ஆறுமுகத்தோடு அறுவரிடத்தும்பால்பருகினர். அக்காரணத்தால் அவருக்கு ஷாண்மாதுரன் [அறுவர் புதல்வன்] என்னும் பெயர் வந்தது.

𑌮𑌤𑌿𑌯𑍋𑌯𑌂𑌮𑌤𑍀𑌯𑌶𑍍𑌚 𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌚𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 ।
𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌾𑌨𑍀𑌹 𑌪𑍀𑌤𑌂𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌯𑌂𑌤𑌦𑌾 ॥ ௪௫ ॥
𑌷𑌾𑌣𑍍𑌮𑌾𑌤𑍁𑌰𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂𑌤𑍁𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।

மதியோயம்மதீயஸ்ச வதந்த்யஸ்சபரஸ்பரம் |
ஸம்பாத்யஷண்முகாநீஹ பீதஂஸ்தந்யம்ஸ்வயம்ததா |
ஷாண்மாதுரஸ்ததாநாம ப்ரஸித்தந்துமஹாத்மந: |

அவ்வறுவரும், பார்வதி மைந்தன் என்றும், அக்கினிபுத்திரன் என்றும், ஸ்கந்தன் என்றும், கங்காபுத்திரன் என்றும், சரவணபவன் என்றும், ஷாண்மாதுரன் என்றும் பல திருநாமங்களைக் காரணத்தால் அடைந்த சுப்பிரமணியக்கடவுளிடத்தில் அத்தியந்த விருப்பமுடையவர்களாய் அவரைப் புத்திரராகப் பாவித்துப் போஷித்து வந்தார்கள். இச்சங்கதியை நாரதமுநிவரால் தேவர்கள் யாவருமுணர்ந்து சந்தோஷத்துடன் சிவபெருமானிடம் வந்து தண்டாகாரமாகப் பணிந்து, அவருடைய கட்டளைபெற்று, சுப்பிரமணியக்கடவுளைத் தங்கள் சேனாதிபதியாகக் கொண்டு அவருக்குச் சர்வாதிகாரமுங் கொடுத்துச் சோணிதபுரத்தை யடைந்து, பத்துத் தினங்கள் கோரமானயுத்தஞ்செய்து பிறகு மகாத்மாவான குமாரக்கடவுளால் தாரகாசுரனைக் கொன்று சத்துருஜயமடைந்தார்கள். அப்போரிலிருந்த அசுரசேனையில் ஓடிப்போனவரொழிய மற்றையோர் மடிந்தார்கள். இவ்வாறு சோணிதபுரத்தில் நடந்த யுத்தத்தில் தீயோர் யாவரும் ஒழிய, உலக முழுவதும் க்ஷேமமாயிருந்தது. தேவர்கள் முநிவர்கள் சுகமடைந்தவர்களாய்த் தங்கள் நகரங்களையடைந்து பரிபாலித்து ஆனந்தமயமாய்ச் சுப்பிரமணியக்கடவுளுடன் சிவசந்நிதியை யடைந்து தேவதேவா! மஹா தேவா! விஸ்வேஸ்வரா! பராத்பரா! பரா! வரதா! பவா! புவனா! அநந்தபலா! பூதநாதா! சம்ஹர்த்தா! கங்காதரா! திரியம்பகா! திரிசூலதாரீ! கபர்த்தி! பரமாத்மா! தண்டதரா! வேதமந்திரப்பிரதாநா! சிருஷ்டிதிதி சங்காரநாதா! அரூபா! ஸ்வரூபா! நீலகண்டா! பஸ்மதாரீ! ஸகலபூதா! பர்வதங்களில் மேருவே! நக்ஷத்திரங்களிற் சந்திரனே! ருஷிகளில் வசிஷ்டரே! சகல வேதங்களிலும் ஓங்காரரூபரே! ஸ்வாமீ! ஸம்சார துக்கத்திலிருக்கும் எங்களை ரக்ஷிப்பவர் நீரே. மஹாப்பிரபூ! நாங்கள்செய்யவேண்டியதொழில் ஏதாவது இருந்தால் கட்டளையிடலாம் என்று கூற, சிவபெருமான் சந்தோஷமிகுந்து, தேவர்களே! முநிவர்களே! உங்கட்கு எப்பொழுது துக்கம் வந்தாலும் அப்பொழுதே அதனையொழிப்போம். நீங்கள் எம்மை எப்போதும் வணங்கி வாருங்கள் என்று கடாக்ஷிக்க, யாவரும் அப்படியே சம்மதித்துப்பணிந்து விடைகொண்டு தம திருப்பிடஞ் சென்றுசேர்ந்து மனக்குறையின்றிச் சிவபூஜைசெய்துகொண்டு வாழ்ந்திருந்தார்கள் எனக் கூறிய ஸூதமுநிவரைப் பார்த்து நைமிசாரணிய வாசிகளாகிய ருஷிகள் தாரகாசுரவதம் நடந்தபிறகு நிகழ்ந்தவற்றைக் கூறவேண்டுமென, ஸூதமுநிவர் சந்தோஷித்துச் சொல்லலுற்றார்.



1897 (12 - குமாரக்கடவுள்தாரகனைச்சங்கரித்தல்.) కు. జై. వెంకట్రాయరాజు వ్రా(౧౮౯౮.)

தாரன்பெற்ற புதல்வனாகிய தாரகாசுரனைக் குமாரக்கடவுள் கொன்றொழித்த பிறகு, தாரகன் புதல்வர்களாகிய வித்யுன்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் மூவரும் அதிக நியமத்துடன் உடலிளைக்க உக்கிரமான தவத்தைச் செய்தார்கள். இவ்வகையாகத் தவஞ்செய்வோர் ஒற்றைக்காலினின்று நூறுவருஷங்களும், பூமியிலிருந்து அநேக வருஷங்களும், வாயுபக்ஷணத்துடன் அநேக வருஷங்களும், அதிக தாபமுண்டாகப் பல வருஷங்களும், தலைகீழாக நின்று ஆயிரவருடங்களும், கைகளை மேலுயர்த்தி நூறு வருஷங்களுமாகத் துக்ககரமான தவத்தை அநேக வருஷம் பிரமதேவனை நோக்கிச்செய்தார்கள். அவர்கள் கொடியோரேனும் தவஜ்வாலையா லுலக மழியுமாதலின், அவர்கட்குப் பிரமதேவர் பிரசன்னராகி, உங்கட்கு வேண்டிய வரம் யாது? உங்கள் தவத்திற்கு மகிழ்ந்தேன் என, அசுரர் மூவரும் தேவரீர் எங்கட்கு வர மளிப்பதாயின் ஸர்வப்பிராணிகளினும் ஒருவராலேனும் இறவா வரமளிக்கவேண்டும் என வேண்ட, பிரமதேவர் நீங்கள் எப்பொழுதும் இறவாதிருக்க யோகமில்லை யாதலின், வேறே வரங்கேளுங்கள் என, அசுரர் ஆலோசித்துப் பிரமதேவரே! அடியேங்கட்கு எண்ணியவிடத்திற் செல்ல வலியுடைய பொன்-வெள்ளி-இரும்புகளா லாகிய மூன்று பட்டணங்கள்வேண்டும். அவை ஆயிரவருஷத்திற்கொருமுறை சேரவேண்டும். ஆயின், அம்மூன்று பட்டணங்களும் ஒன்றுகூடியிருக்குஞ் சமையத்தில் ஒரே பாணத்தால் அம்முப்புரங்களையும் அழிக்க வல்லவனிருந்தால் அவனால் நாங்கள் இறக்க வரந் தரவேண்டும் என, பிரமதேவர் அவ்வாறே யாகுகவென்றருளி, மயன் என்னுந் தச்சனைக் கண்டு, பொன் வெள்ளி இரும்புகளால் மூன்று பட்டணங்கள் நிருமித்து, தாரகாசுர புத்திரருக்குக் கொடுக்கக் கட்டளை யிட்டுத் தனது பதவியை யடைந்தார். பிறகு, மயன் பிரமதேவர் கட்டளைப்படி புரங்கள் மூன்று நிருமித்துப் பொன் பட்டணத்தைத் தாரகாக்ஷனுக்கும், வெள்ளிப்பட்டணத்தைக் கமலாக்ஷனுக்கும், இரும்பு நகரத்தை வித்யுன்மாலிக்கும் கொடுத்தான். அவற்றுள் காஞ்சனபுரியைச் சுவர்க்கத்திலும், இரசிதபுரியை மத்தியத்திலும், ஆயசபுரியைப் பூமியிலும் சஞ்சரிக்கத் தக்கதாகச் சூத்திரம் வைத்து, பட்டணம் ஒன்று யோசனை விஸ்தீரணமுடையதாகச் செய்துகொடுத்ததுபற்றி, பலவான்களான அம்மூவரும் அநேகம் பொருள்களைப் பரிசளித்து வெகு மரியாதை செய்தனுப்பி அப்பட்டணங்களை யடைந்து, யானை தேர் குதிரை சேவகர் முதலிய சேனைகள் - கற்பக விருக்ஷம்-நந்தவனம்-மேடை-சந்திரசாலை-சித்திரத்தொழில்கள் - சூரியமண்டலம்போன்ற விமானங்கள்-பதுமராக மணிகளாலாகிய விமானங்கள் - கைலாசசிகரம்போன்ற விமானங்கள்-அநேக சாரணர் சித்தர் முதலியோர் வசிக்கும் இடங்கள்-சிவாலயங்கள் - தடாகங்கள் - கிணறுகள் - பல்லக்குகள்-கச்சேரி சாவடிகள்-வேதாத்தியயன சாலைகள் - பதிவிரதாஸ்திரீகளோடு அசுர குடும்பங்கள் குடியிருந்து சிரௌதமுதலிய நித்ய கருமங்களை வழா்துநடத்திவரும்பட்டணத்திற் குடியேறி,எப்பொழுதுங் கண்டிராத சிறப்புடன் விளி

ங்குவதுபற்றி மிகமகிழ்ந்தார்கள். அங்கிருந்த அசுரர்களிற்சிலர் கோபிகள்-சிலர் சாந்தவான்கள்-குறியர்-நெடியர்-சமரதர்-அதிரதர்-அர்த்தரதர்-மஹாரதர் சிவபூஜாவான்கள்-பிரம நிஷ்டாபரர்கள்-பலவரங்கள்பெற்றவர்-சூரியன் வாயு இந்திரன்முதலிய தேவர்கட்குச் சமான வலியுடையவர்கள் என விளங்கினர். வேத சாஸ்திரங்களும் ஆங்கு பூரணமாக விளங்கின. தேவர்கள் அந்நகரங்களின் பிரகாசத்திற்கே எதிர்நிற்கமாட்டாதவர்களாய் நாணமடைந்து, அவை யிடம்விட்டுப் பெயர்ந்து செல்கையிற் பலகோடி ஜீவராசிகளும் மரித்தல் கண்டு, எவ்விடத்தும் எப்பொழுதுங் கண்டிராத இந்நகரங்களின் சிறப்புந் துயரும் நோக்கி மனஞ் சகியாது பிரமதேவனை யடைந்து தங்கள் துன்பங்களைச் சொல்லிக்கொண்டார்கள்.

தாரகவதையுந் திரிபுரதோற்றமுமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

இருபதாவது

திரிபுரஸம்ஹார ஆலோசனை அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:— தேவர்கள் துன்பத்தைச் சொல்லக்கேட்ட பிரமதேவர், தேவர்களே! என்னால் விருத்தியடைந்த அசுரர்களை நானே சங்கரித்தல் தகுதியல்ல. அவர்களை ஜயிக்கவேண்டுமானால் தக்க யுக்தி சொல்லுகிறேன். அதாவது: சிவபெருமானிடம் நீங்கள் சென்று முறையிட்டால் அவர் அதற்கேற்ற முயற்சிசெய்து உங்கள் துயரத்தை யொழிப்பர் எனக் கூறி விடுப்ப, தேவர்கள் ருஷபத்துவஜராகிய சிவபெருமானிடஞ் சென்று தங்கள் துன்பங்களை விண்ணப்பிக்க, சிவபெருமான் தேவர்களே! திரிபுராதிகள் மிகப்புண்ணியர்களாதலின் அவர்கட்குவிபத்துவராது; அவர்கள் புண்ணியசீலரா யிருக்குமெல்லையும் ஒருவராலுஞ் சங்கரிக்கப்படமாட்டார்கள்; ஆயினும் இவ்விஷயத்தை என் கட்டளையென்று விண்டுவினிடஞ் சொல்லுங்கள் என, தேவர்கள் வணங்கி விடைபெற்றுத் திருமாலிடஞ் சென்று முறையிட, விஷ்ணு நீங்கள் சொல்வதுண்மையாயினும், தருமமிருக்குமிடத்துத் துக்கமடையுமா? சூரியசந்நிதியி லிருளுண்டாமா? என, தேவர்கள் மிகவுந் துக்கமுற்றுத் தலைவணங்கி, நாங்கள் என்னசெய்வோம்? இத்திரிபுராதிகளிருக்கையில் எங்கள் தருமங்கள் எப்படி விருத்தியாகும்? அவ்வசுரர்களிருக்கவேண்டுவதே யெனில், இத்தேவர்களை அகாலப் பிரளயஞ் செய்துவிடலாம். நாங்களாவது இருக்கவேண்டும்: அவர்களாவது இருக்கவேண்டும் என்று கூறி அழுதார்கள். விஷ்ணு இவர்கள் துக்கவார்த்தையைக் கேட்டு மிகவும் ஆலோசித்து, தேவர்களே! யாககாரியத்தால் சிவபெருமானைப் பணிந்தால் உலகத்தில் இஷ்ட சித்திகள் கைகூடுமாதலின் நீங்களும் அவ்வாறு செய்தால் திரிபுரங்கள் நாசமாகும் என்று சொல்ல, தேவர்கள் கேட்டுச் சந்தோஷித்துக் காரிய சித்தியாயிற்றென்று களிப்புற்றிருக்கையில்,

விஷ்ணுமூர்த்திதேவர்களைப் பார்த்து, பாபிகளைச் சங்கரிக்க வேண்டுமேயன்றிப்பாபிகளல்லாதாரைச்சங்கரிக்கப்படாது. ஆகையால்,அவர்கள் ருத்ரமஹிமையாலேயே யிறக்கவேண்டும். சிவாநுக்ரஹ மில்லாவிட்டால், நானும் பிரமனும் தேவர்களும் முநிவர்களும் தைத்தியர்களும் பிரயோசனப்படமாட்டோம். சிவபெருமானே அவரவர் இஷ்டகாமியங்களைக் கொடுப்பவர். தேவர்கள் யாவரும் அவரை உபாசித்துச் சிறிது வல்லமையையும், பிரமன் உபாசித்துச் சிருஷ்டி வல்லபத்தையும், நான் உபாசித்து ரக்ஷிக்கும் வல்லமையையும் அடைந்ததன்றி வேறல்ல. அவரை உபாசிக்காமல் மகிமையுற்றோர் ஒருவருமிலர். நீங்கள் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டும். அச்சிவலிங்கார்ச்சனை பலத்தால்,சத்துருநாசமாம். ஆதலின்பிருதிவியால்லக்ஷலிங்கார்ச்சனைசெய்ய வேண்டுமென்று, அவர்கட்குச்சிவமூலமந்திரத்தையுபதேசித்துக் கந்தபுஷ்ப தூபதீப நைவேத்தியங்களால் இலக்ஷலிங்கார்ச்சனை செய்வித்தார். அப்பூஜாந்தத்தில், கோரப்பல்-சூலம்-வேல்-கதை-பாணம்-எறிகல் முதலிய ஆயுதங்களையேந்திக் காலாக்நிருத்ரன்போலவும் பிரளயகால சூரியன்போலவும், காந்தியுடைய அநேக பூதங்கள் தோன்றித் தேவர்களைப் பணிந்து எதிர் நிற்க, விஷ்ணு அவர்களை நோக்கி, பூதர்களே! நீங்கள் முப்புரங்களையுங் கொளுத்தி இடித்துச் சூர்ணித்து வந்தவழியே செல்லுங்கள் எனப் பணித்து, சிவபெருமானைத் துதித்து நமஸ்கரித்துத் தேவர்களைப் பார்த்து நான் இவர்கட்கேன் இவ்வகை வார்த்தை கூறினேன்: எப்படி தேவகாரியத்தைக் கைகூட்டி அசுரர்களைச் சங்கரித்து ஒழிப்பேன்? என்று யோசித்து, தர்மவான்கட்கு அபிசாரப்பிரயோகத்தால் நாசமில்லையே? இப்பொழுது முப்புராதிகள் தர்மிஷ்டிகளாயிருக்கிறார்களே: ஒருவராலுஞ் சாகாவரம் பெற்றிருக்கிறார்களே: பாபிகளாயினும் சிவார்ச்சனை செய்தால், தாமரையிலையில் ஜலஞ் சேராததுபோலப் பாபங்கள் விலகுமே: என்ன செய்யலாமென்று, நெடுநேரம் யோசித்து அவ்வசுரர்கள் சிவபூஜாக்கிரமத்தை மறக்கும்படியாக, மாயையாற்செய்தாலன்றிக் காரியங் கைகூடாது. வேததருமங்களும் சிவபூஜையும் பரிசுத்த நடத்தையும் உள்ளவரையினும் அவர்கள் இறவார்கள்; அவற்றை விலக்கவேண்டும் என்று தீர்மானித்துத் தேவர்களை விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தனியே வோரிடத்திருந்து மகாரகசியமாக யோசித்தார்.

திரிபுரசம்ஹாராலோசனை

முற்றிற்று.

இருபத்தோன்றாவது
ஜைநதீக்ஷாபதேசஞ்செய்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—விஷ்ணுமூர்த்தி தன்னிடத்திலிருந்து மாயாஸ்வரூபமான ஒரு புருஷனை தர்மவிக்ந நிமித்தமாக உண்டு செய்தார்; அப்புருஷன் மொட்டைத் தலையும், மலின வஸ்திரவுடையும், மரத்தாற்

செய்த குண்டிகையும், மயிற்றோகைக்குஞ்சமும், ஒரு கையில் வஸ்திரமும், தர்மாவென்னுஞ் சொல்லுமுடையனும் விஷ்ணுவைக் கைகுவித்துப் பணிந்து யான் செய்யவேண்டிய காரியத்தைக் கட்டளையிடவேண்டும் எனக்கேட்க, விஷ்ணு நீ என்னுடலினின் றுதித்தமையின் என்சொற்படி நடக்கக்கடவாய். மாயாமயமான பதினாறுயிரங் கிரந்தங்களை யுண்டுசெய்து கொடுத்தேன். அது சிரௌதாசார ஸ்மார்த்தாசார விருத்தமானதும், வருணாஸ்ரம மில்லாததும், இவ்வுலகத்திலேயே சுவர்க்க நரகங்களுளவென்பதும், வேதம் பொய்யென்பதும், சாஸ்திரங்கள் கர்மவாத மென்பதுமாயுள்ளது. அதனை நீ என்னிடத்திற் பழகித்தேர்ந்து விஸ்தாரப்படுத்தவேண்டும். அவ்வகைய வல்லபமும் நானே உனக்குக் கொடுத்துப் பலவித மாயைகளுஞ் சுவாதீனப்படுத்துவேன். தோன்றுதல் மறைதல், வசியம் அவசியம், சிநேகம் விரோதம் முதலிய விசித்ரவித்தைகள் யாவும் உனக்குக் கைகூடும் என்றுகூற, மாயாபுருஷன் ஸ்வாமீ! அவ்வாறே அச்சாஸ்திரத்தை எனக்குப் போதிக்கவேண்டுமென்று வேண்ட, விஷ்ணு அவனுக்குத் தேர்ச்சியுண்டாகும்படி போதித்து, நான் சொல்லும் இடத்திற்குச்சென்று உனது மாயாவித்தையால் அவர்களை மயக்கி உன் வசப்படுத்தி அவர்கட்கு இந்தச் சாஸ்திரத்தைக் கற்பித்து அவ்வசுரர்களிடமிருக்கும் சிரௌத ஸ்மார்த்த ஆசாரங்களை உன் வலிமையால் விலக்கி, திரிபுர நாசமாகும்படிச் செய்யவேண்டும். விரைவிற்செல்க: அவர்கள் மோகித்தவுடனே உவர்நிலத்தை யடைந்து கலியுகம் வருமெல்லையுமிருந்து, கலியுகம் வந்தபிறகு சிஷ்யப் பிரசிஷ்யர்கட்குப் போதித்து விருத்தி செய்யவேண்டும். நீ இவ்வாறு செய்தால் என் பதவியை யடைவாய் எனக் கட்டளையிட, மாயாரூபி யானவர் நான்கு சிஷ்யர்களைப்படைத்து அவர்கட்கு இவ்வித்தையைப் பயிற்றி அவர்களைப் பண்டிதர்களாக்கி விஷ்ணு சமுகமடைய, அவர்கள் நால்வரும் விஷ்ணுவைப் பணிந்தனர்.

விஷ்ணுவானவர் சந்தோஷித்து நீங்கள் நால்வரும் உங்கள் குருவைப்போலவே விளங்குங்கள் என ஆசீர்வதிக்க, நமக்கு எது கிடைக்கிறதோ அது தர்மமென்று சொல்லிக்கொண்டு,*கந்தைகளைக்கட்டிய பிராணி நிவாரணகுச்சினைக் கையிலேந்தி விஷ்ணுவைப் பணிகையில், அவர்கள் நால்வரையும் விஷ்ணுவானவர் கையிற்பற்றித் தனது தேகசம்பூதனான மாயாசொரூபியின் கையில் ஒப்புவித்து இவர்களை ஜாக்கிரதையோடு காப்பாற்றுக. நீ எப்படியோ இவர்களும் அப்படியே யாவர். உனக்குப் பூஜ்யன்-ருஷி-பதி-ஆசார்யன் - உபாத்தியாயன் என்னும் இப்பெயர்கள் பிரசித்த மாவதுடன், [அரிஹந்] சத்துருவைச் செயிப்பவன் என்னும் என் பெயர் ஒன்றும், உண்டாகுக. நீங்கள் இப்பெயர்களை உச்சரித்துக்கொண்டிருங்கள் என, மாயாரூபி நமஸ்கரித்து விடைபெற்று நால்வரையு முடன்கொண்டு திரிபுரத்திற்

* எதிர்செல்லும் எறும்பு முதலிய பிராணிகளை விலக்கு நிமித்தம் மென்மைத்தன்மை யுண்டாகக் கந்தைகள் கட்டி உபயோகிப்பது அவர் வழக்கு.

கருகில் ஒருவனத்திலிருந்து, மாயையுடையவர்களையும் மாயை செய்யத்தக்க தான விநோத வித்தைகள் செய்துகொண்டிருக்க, அதனைக் கண்டவர்கள் அம்மதப்பிரவேசமாகித் தீக்ஷைபெற்று மோகித்திருந்தார்கள். மாயையைக், கண்டோர் மதிமயங்கினர்கள். இவ்வாறிருக்கையில் நாரதபகவான் விஷ்ணு மூர்த்தியையடைய, விஷ்ணு அவரையும் இவ்வைவரோடு சேர்கவென, அவர் அவ்வாறே சென்று மாயாதீக்ஷைபெற்று அறுவராகப் பட்டணத்திற் பிரவேசித்தனர். நாரதர் வித்யுன்மாலியைக் கண்டு இங்கே வந்திருப்பவர் மகா புத்திமான். தர்மமே லாபமென்று சொல்பவர். அவரிடத்தில் அநேக தர்மங்களுள. அவருக்குச்சமானர் ஒருவருமிலர். நானும் அவரிடத்துள்ள தர்மங்களைக் கண்டு தீக்ஷை பெற்றேன். நீயும் அவரிடம் தீக்ஷைபெற்று மந்திரோபதேசமடைய விருப்பமிருந்தாற் செய்யலாம் என, வித்யுன்மாலி மகா புண்ணியரான தாங்களே தீக்ஷை செய்துகொண்டால் நானும் அத்தீக்ஷையைச்செய்துகொள்ளவேண்டுவதே என்று நேராகவந்து அம்மாயாரூபியைக் கண்டு மோகித்துப் பணிந்து எதிர்நின்று, மகாநுபாவரே! தாங்கள் எனக்குத் தீக்ஷை செய்யவேண்டுமென, குருவானவன் அரசனே! நான் சொல்வதைத் தடையின்றிச் செய்கவெனச் சொல்லுமுன்னரே, அவ்வித்யுன்மாலி தங்கள் சொற்படியே நடப்பேன் என, தான் வாய்கட்டிக்கொண்டிருந்த வஸ்திரத்தை நீக்கி, என் உபதேச மந்திரத்தை யடைகவென்று, சிவதருமங்கள் நசிக்கத்தக்க மந்திரத்தை உபதேசித்துத் தீக்ஷை செய்வித்து, உன் பட்டணத்தார் யாவரும் தீக்ஷாதரராக ஆகவேண்டுமென, அதற்கு அரசனுமிணங்க,சிஷ்யப்பிரசிஷ்யர்களால் நகரமுழுவதும் தீக்ஷை செய்வித்து ஜைநமதவிருத்தி செய்வித்தனர்.

ஜைநதீக்ஷோபதேசஞ் செய்தது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது
திரிபுராதியரை வஞ்சித்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—பதிவிரதாதன முதலிய ஸ்திரீதர்மங்கள்-சிரார்த்ததர்மங்கள் - சிவபூஜை-யாகங்கள்-ஸ்நாநம்-தானம்-தீர்த்த தரிசநம்-வைதிக தர்மங்கள் முதலியகருமத்தாற் பயனில்லை என்று அந்த மாயாரூபி கூற, அந்நகரவாசிகள் அவ்வாறேவிட்டொழிந்தனர். விஷ்ணுவின் கட்டளைப்படி மாயாரூபன் அந்நகரமடைந்தபொழுதே, அம்மாயையோடு மூதேவியும் அப்பட்டணத்திற் குடியேறினள். திரிபுராதிகள் தவஞ்செய்தடைந்த ஐசுவரிய லக்ஷ்மி, அப்பிரமதேவர் கட்டளைப்படி இனி அங்கிருக்கவொண்ணாது எனப்புறப்பட்டுப்போயினள். மாயாஜாலனாகிய ஜைநனும் நாரதரும் சிஷ்யப்பிரசிஷ்யரும் அந்நகரத்தாரையெல்லாம் மாயையால் மயக்க, அவர்கள் சிவபூஜைமுதலிய சற்கருமங்களொழிந்தனர். அதுகண்டதிருமால் இனிக்காரிய

சித்தியாயிற்றென்று களித்துச் சிவபெருமானை யடைந்து விண்ணப்பித்து, மஹேசுவரா! தேவதேவா ! பரமாத்மஸ்வரூபா! * நாராயணரூபா ! சம்சார துக்கத்தைப் பிரமஞானோபதேசத்தாற் போக்குபவரே ! பிரமாநந்தஸ்வரூபரே! மகத்ரூபியே! தேவரீருக்கு நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாகப் பணிந்து † தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தை ஜலத்திலிருந்து மூன்றரை கோடி உரு ஜபித்துக்கொண்டிருக்கையில், தேவர்கள் யாவரும் சிவபெருமானைத் தியானித்து, சர்வஸ்வரூபா! மங்களதரா! பாபரஹிதா! நித்யா! நீலகண்டா நாமரூபக்கிரியாரஹிதா! ஜலஸ்வரூபா! நமஸ்காரம்: நமஸ்காரம்: துக்கமுற்றபொழுது முறையிடக் கட்டளையிட்ட தேவரீரே துணை. சகல அசுரர்களையுஞ் சங்கரிக்க வல்லசக்தியுடையவர் தேவரீரே: தேவரீரைப் பூஜித்தாலொழிய எங்கள் துயரங்களொழியா. தேவரீரே யாவற்றிற்குங்காரணம். பிரகிருதி புருஷர்கட்கு ஆதியானவனே! ஜகத் குருவானவனே! ஜகத்துக்களை ரக்ஷிப்பவனே! வாச்சிய வாசக ரஹிதனே! யோகீசுவரர்களெல்லோரும் முக்திப்பிரியர்களாகித் தேவரீரையே உபாசிக்கிறார்கள். வேதங்கள் தேவரீரையே பரமாத்மனாகக் கூறுகின்றன. அணுவுக்கணுவும், மகத்துக்கு மகத்துமாய் உள்ளவர் தேவரீரே! கைகள்-கால்கள்-கண்கள்-சிரங்கள் - முகங்கள் ஆயிரக்கணக்காக வுடையவர் தேவரீரே. இவ்வாறு விசுவரூபியாயிருந்தும் ஒன்றிலும் அகப்படாதவரே! கோடிசூர்யப்பிரகாசரே ! சுயம்புமூர்த்தியே ! தாவர சங்கமங்களாகிய அப்பிரபஞ்சமும் தேவரீரையன்றி வேறொன்றுண்டா ? இல்லையாதலின், மாயா சம்பந்தத்தால் மோகிக்கப்பட்ட இவ்வசுரர்களைச் சங்கரித்து எங்களை இரக்ஷிக்கவேண்டுமென்று துதித்தார்கள். சிவபெருமான் விஷ்ணுமூர்த்தி செய்த தக்ஷிணாமூர்த்தி மந்திரஜபத்திற்கும், தேவர்கள் செய்த தோத்திரத்திற்கும் சந்தோஷப்பட்டு அப்பொழுது பிரசன்னராய் விஷ்ணுவை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, திருமாலையுந் தேவர்களையும் பார்த்துக் கம்பீரமாகத் தேவர்களே! விஷ்ணுவாற் செய்யப்பட்ட மாயோபாயமும், நாரதர் உடன்பாடும் எனக்குத் தெரியும். தர்ம சூந்யர்களாயிருக்கும் அவ்வசுரர்களுடைய முப்புரங்களையும் இனி நாசஞ்செய்வேன் எனக்கூறி அந்தர்த்தானமாயினர். அதைக்கேட்ட நாராயணன் நான்முகன் இந்திரன் முதலிய இமையவர் யாவரும் கைகளைத் தலைமேற் குவித்துத் தண்டஞ்செய்து சந்தோஷசாகரத்லழுந்தினார்கள். இச் சரிதத்தைப் படித்தோர்-கேட்டோர்-சொன்னோர்-எழுதினோர் முதலானோர் சகலமான இஷ்டகாரியங்களையும் அடைவார்கள்.

திரிபுராதியரை வஞ்சித்தது

முற்றிற்று.

* அஷ்டமூர்த்தங்களி லொன்றாகிய ஜலத்தை இடமாகக் கொண்டவன்.

† "ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம் மேதாம் ப்ரஜ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா|| ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம்மேதாம் ப்ரஜ்ஞாம் ப்ரயச்சஸ்வாஹா."

இருபத்துமூன்ருவது
திரிபுரோபாக்கியான முரைத்த அத்தியாயம்.

ஸூத முநிவர் சொல்லுகிருர் :—தேவர்கள் தங்கள் புத்திரர்களுடன் கூடி, ஸ்வாமீ! ஜயஜயவென்று சிவபெருமானது திருச்சந்நிதித் துவாரத்தின் பக்கலில் சேர்ந்திருந்து, ஐயையோ நாம் யாதுசெய்யலாம்? எங்கே போகலாம்? அந்தோ கெட்டுப்போனேமே எனச் சிலரும், இன்னும் என்ன நடக்கப்போகிறதோ என வேறுசிலரும், நாம் பாபிகள் என இன்னுஞ்சிலரும், நாம் மிகத் தரித்திரர் என வேறுசிலரும் கூற, தைத்தியர்களே பாக்கியசாலிகள் எனச் சிலரும் சொல்லி, தம்மைத் தாமே இவ்வாறு நிந்தித்துக்கொண்டு, மீண்டும் சிவசந்நிதிக்குட் பிரவேசிக்கையில், இவர்கள் இதுகாறும் சொல்லிய விஷயங்களை யெல்லாம் கேட்டிருந்த கும்போதரன் அவர் இறைச்சலிடுதலின், தன் கையிலிருந்த தண்டாயுதத்தால் அத்தேவர்களை யடித்தான். அதனுல் அவ்வமரர் யாவரும் அச்சமெய்தினவர்களாய், ஐயோ! ஐயோ! என்று அலறி யோடினுர்கள். காசிபர் முதலான ருஷிகளும், இந்திரனும் நிலமிசை வீழ்ந்தார்கள். இதனைக் கண்ட இமையவர்யாவரும் முநிவர்முதலிய புண்ணியருக்கும் இப்பேர்ப்பட்ட விபத்துவிளைந்தது தெய்வபலமா? என்று அருகிருந்த விஷ்ணுவை நோக்கிவினவினர். அவற்றைக் கேட்ட விஷ்ணு தேவர்களை நோக்கி உங்களுக்கு ஏன் துக்கம் வந்தது? அத்துன்பத்தை அறவே யொழியுங்கள்; எல்லாப்பலனும் ஒருங்கே தரத்தக்க சிவபூஜையைச் செய்வீர்களானுல் உங்களுக்குக் கிடைக்காததும் ஒன்று உளதோ? ஸகல கணங்கட்குந் தலைவராகிய சங்கரபகவான் தயையுடையவராகும் வகையைச் சொல்கிறேன்:

தேவர்களே! நீங்கள் முதலில் ‡ ப்ரணவத்தை யுச்சரித்து, நம: என்பதைப் பிறகு கூறி, சிவாய என்பதை இறுதியிற் சேர்த்து, சுபம் சுபம் குரு குரு என்றும், மேல் சிவாய என்றும், நம: என்றும், மீண்டும் பிரணவம் சேர்த்துச் சிவகடாக்ஷங் கிடைக்குமெல்லையும் ஜபிக்கவேண்டும். இந்த மந்திரத்தைக் கோடி யுருஜபித்தால் சிவபெருமான் கிருபைகொண்டு இஷ்டகாரியங்களைஅநுகூலப்படுத்துவர்என்றுஉபதேசித்தபிறகு, தேவர்கள்யாவரும் அந்தரங்கமான ஓரிடத்திற் சேர்ந்து, சிவநாமங்களை யுச்சரித்துக்கொண்டே மந்திரஜபஞ் செய்தார்கள். இவ்வாறுகோடிதரம் அம்மந்திரத்தை ஜபித்தபிறகு, சிவபெருமான் கிருபையுடையவராய், பிரத்தியக்ஷமாகி உங்கள் மநோபீஷ்டத்தைச் சொல்லுங்கள் என்று கேட்டார். அப்பொழுது தேவர்கள் எல்லாவரங்களையுங் கொடுப்பவரான சிவபெருமானை இவ்வாறு துதிக்கலானுர்கள். ஸகல உலகங்கட்குஞ் சுகத்தைச் செய்யும் ஸ்வாமீ! பரமாத்மரூபீ! உலகரக்ஷணத்திற்காகச் சூலத்தைத் தரித்தவரே! உயர்வு மிழிவுமில்

‡ ஓம் நம: சிவாய சுபம் சுபம் குரு குரு சிவாயநம: ஓம்—என்பது இதிற் கூடிய மந்திரம்.

லாதவரே! பிரமதகணங்கட்கிறைவரே! கபர்த்தி! திரிநேத்திரங்களை யுடையவரே! வேத நாயகரே! காரிய காரணஸ்வரூபியே! மூலப்பிரகிருதிக்குக் காரணரே! ஸர்வவியாபியே! நமஸ்காரம்: நமஸ்காரம்: என்று துதித்த தேவர்கள் விஷயத்தில் சிவபெருமான் மகிழ்வுற்றிருக்கையில், தேவர்கள் கை கட்டி வாய் பொத்தி முன்னே நின்று தேவரீர் எங்கள் விஷயத்தில் கிருபையுடையவராயிருந்தால் திரிபுரங்களை யழிக்கவேண்டும் என்றார்கள். அந்தத் தேவர்கள் வார்த்தையைக் கேட்டு விச்சுவகர்மனை நோக்கி இரதம் - சாரதி - தநுஸு - பாணம் ஆகிய இவற்றை உறுதியுள்ளனவாய்ச் சித்தஞ்செய். அப்படிச் செய்தால் திரிபுரங்கள் சீக்கிரத்தில் அழிந்துவிட்டதாய் எண்ணிக் கொள்ளலாம் என்று உத்தரவுசெய்தார். இந்த வார்த்தையைக்கேட்டு விச்சுவகர்மன் பிரபஞ்சரக்ஷண நிமித்தமாக, ஸர்வதேவ தேஜோமய திவ்விய மங்கள ஸ்வரூபமான இரதத்தைச் செய்துமுடித்தான்.


திரிபுரோபாக்கியான முரைத்தது

முற்றிற்று.

இருபத்துநான்காவது
திரிபுரதகனமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சொல்லுகிறார் :—மகருஷிகளே! பதினுன்குலகமயமான திவ்யரதத்தைப் பிரயத்தனத்துடன் தேவதேவனுயுள்ள மகாதேவனுக்கு விஸ்வகர்மன் செய்து முடித்தான். ஸர்வபூத மயமாயும் பொன்னாற் செய்யப்பட்டதும் †வலப்புறம் சூரியனையும் இடப்புறம் சந்திரனையுஞ் சக்ரங்களாயுடையதும், நக்ஷத்திரங்களெல்லாம் வாமபாரிச சக்கரத்திற் கலங்காரஞ் செய்வதும், ருதுக்களாறும் காலநிரூபணத்திற்காக இருசக்கரங்களிலிருக்கத்தக்கதும், ஆகாயமே புஷ்கரம் [கொடுமுடி] ஆகவும், மந்தரகிரியே ரதபீடமாகவும், அஸ்தகிரியும் உதயகிரியும் இரிசிகளாகவும், வருஷங்கள் வேகமாகவும், உத்தராயண தக்ஷிணுயனங்கள் ரதஞ்செல்லும் வழியாகவும், சப்த சமுத்திரங்கள் அலங்காரமாகவும், கங்கை முதலிய நதிமாதர்கள் ஸகலாபரணபூஷணதாரிகளாய்ச் சாமரை வீசவும், பிரமதேவர் ரதசாரதியாகக் கடிவாளத்தை யேந்தி நிற்கவும், பிரணவம் குதிரை செலுத்துங் கோலாகவும், விந்தமலை குடையாகவும், மந்தரம் குடைக்கொம்பாகவும், மேருமலை வில்லாகவும், வாசுகி நாணுகவும், சரஸ்வதி அதிற்கட்டிய மணியாகவும், விஷ்ணு பாணமாகவும், அக்நி சல்லியமாகவும், வேதங்கள் நான்கும் நான்கு குதிரைகளாகவும், துருவன் முதலான நக்ஷத்ரங்கள் அலங்காரமாகவும், பிரமாண்டத்தில் உள்ள யாவும் ஸம்பந்தப்பட்டுள்ள திவ்ய ரதத்தைச் சிருஷ்டிசெய்தான்.

† வலப்புறம் பன்னிரண்டு ராசிகளைப் பன்னிரண்டு இலையாக வுடையது சூரியசக்கரம். இடப்புறம் பதினறு கலைகளைப் பதினறு இலையாக வுடையது சந்திர சக்கரம் என ஸ்ருதிகூறும்.



(13- திரிபுரதகனம்.)

சிவபெருமான் ஸர்வதேவஸ்வரூபராய் அந்த யுத்தஸந்நத்தமான இரதத்தில் ஆரோகணித்தார். அச்சமையத்தில் ருஷிகள் ஜயஜயவென்று ஆசீர்வதித்தார்கள். தேவஸ்திரீகள் பல்லாண்டு பாடினர். அந்த இரதம் செல்லுகையில் உலகத்தைத் தாங்குங் கூர்மரூபியான நாராயணன் இடபரூபத்தை வகித்து வந்து அந்தரதத்தைத் தானுஞ் சுமந்தான். அவ்விரதம் மனோவேகத்துடன் நடந்துயுத்தகோலமாகத் திரிபுரமாகிய ராக்ஷஸவாசஸ்தானத்திற் சென்றது.

“ அதாஸ்யரதஸ்யாஸ்ய பகவாந்தரணீதர: ॥ கரு ॥
வ்ருஷேந்த்ரரூபீசோத்தாய ஸ்தாபயாமாஸவைரதம் ।”

அதாதஸ்யரதஸ்யாஸ்ய பகவாந்தரணீதர:
வ்ருஷேந்த்ரரூபிசோத்தாய ஸ்தாபயாமாஸவைரதம்.

அச்சமையத்தில் தேவர்களும் மகருஷிகளும் ஸகல உலகங்கட்குஞ் சுகத்தைச்செய்யும் சதாசிவமூர்த்தியைத் தரிசித்துக் களித்து ஜயஜயவென்று புகழ்ந்தார்கள். அந்தஸ்தோத்திரத்தையும் அவ்வலங்காரத்தையும் நூறுவருஷம் வரையில் வர்ணித்துச்சொன்னாலும்முடியாது. பார்வதிதேவியும் சிவபெருமானுடன் அவ்விரதத்திலிருந்து திரிபுரஸம்ஹாரஞ் செய்து, தேவர் முனிவர்கட்கு ஸுகம் உண்டாக்கும்படித் தானும் உடன்சென்றனள். விஷ்ணு இந்திரன் முதலிய இமையவர்கள் தங்கள் தங்கள் வாகனங்களாகிய இரத கஜ துரக விமானாதிகளில் ஏறி ஆயுதபாணிகளாய்ச் சிவபெருமானுக்குமுன்னே திரிபுரத்தை நோக்கி நடந்தார்கள். ஜடைகளையுடைய ருஷிகள் தண்டகமண்டலங்களுடன் குதித்து ஆர்ப்பரித்தார்கள். சித்தர் சாரணர் முதலானவர் புஷ்பமாரி பொழிந்தார்கள். சிவபெருமான் யுத்தகோலமாகத் திரிபுரத்தை நோக்கிச் செல்லுகையில், ப்ரக்கிரந்தன் - குந்ததந்தன் - கம்பன்-ப்ரகம்பன்-இந்திரன் - இந்திரபகவான் - யந்தன் - ஹிமகரன் - ஸதாட்சன்-பஞ்சாக்ஷன்-ஹைஸ்ராக்ஷன்-மகோதரன் – ஸதஜிஹ்வன்-ஸதாஸ்யன்-கங்கடன்-கடபூதனன்-த்விசிரன் - த்ரிசிரன்-ஏகானனன் - அஜவக்திரன்-ஹயவக்திரன்-கஜவக்திரன்-ஊர்த்வவக்திரன்முதலிய எண்ணிறந்தலக்ஷக்கணக்குடைய சிவகணத்தலைவர்கள் சாம்பவமூர்த்தியுடன் செல்கின்றவர்களாய் ஒருவார்த்தை சொல்கின்றார்கள் :—ஸ்வாமீ ! தேவரீர் மனதால் நினைத்தமாத்திரத்தில் ஸகல சராசரங்களையும் ஸம்ஹரிக்கும் வல்லமை யுடையவராயிருக்க, இந்த ஆடம்பரங்கள் யாதுக்கு? ஸகலமான பரிவாரங்களுடன் கூடி இப்படி இரதாரூடராய் ஆயுதபாணியாய்த் தேவசேனாசமூஹத்துடன் வருவானேன்? இவற்றால் என்ன பலன் ? இதுவிஷயத்தில் துஷ்டர்களுக்கு நம்பிக்கை வரவும், தேவரீர் கீர்த்தி உலகத்தில் வியாபிக்கவும் அவசியம் இருக்க வேண்டுவதேயென நாங்கள் நினைக்கிறோம் என்றார்கள். எல்லாத் தேவர்களையும் காப்பாற்றுபவர் சிவபெருமானே யன்றிப் பிறனொருவனில்லையாதலின் அப்படிப்பட்ட சிவபெருமான் திரிபுர சம்ஹாரநிமித்தமாக வில்லை வளைத்தனர். அப்பொழுது திரிபுரங்களும் ஒன்றுசேர்ந்தன.

அதுகண்ட தேவர்கள் பெருஞ்சந்தோஷமடைந்தார்கள். தேவர்கள் ருஷிகள் சித்தர் முதலிய பதினென்கணங்களும் அஷ்ட மூர்த்தமாக விளங்குஞ் சிவபெருமானைத் துதித்தார்கள். அப்பொழுது பிரமதேவர் ஸ்வாமீ! முப்புரங்களும் ஒன்றுசேர்ந்திருத்தலின் இதுவே நல்லசமையம். இவை சீக்கிரத்திற் பிரிந்துவிடுமாதலின் விரைவில் அஸ்திரப் பிரயோகஞ் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியாகிய நாணையேறிட்டு, விஷ்ணுவாகிய முனையையுடைய பாசுபதாஸ்திரத்தை ஏற்றி, பிரமன்சொன்னதைக்கேட்டு, புரங்கள் பஸ்மமாகப் போனதென்றும், பிரமன் வார்த்தை பயனற்றதென்றும் நினைத்து, திரிபுரத்தைச் சினந்து பார்க்கத் திக்கென்று தீப்பற்றிப் புரங்கள் மூன்றும் எரிந்தன. பிரமன் நடுநடுங்கிச் சிவபெருமானைப் பார்த்துப் பணிந்து கை கட்டி வாய்பொத்தி எதிர்நின்று, ஸ்வாமீ! தேவ தேவா! தேவரீர் பார்த்த மாத்திரத்தில் பஸ்மமாகப்போயிற்றே. இந்தத் திரிபுரதகனத்திற்கு இரத முதலிய ஆடம்பரங்களெல்லாம் என்னை யொத்தவர்கள் இதில் ஸேவித்த பணிவிடைகள் புகழ் பெறுவதற்காகவே செய்தீர். இனி இப்பாணத்தை விட்டுவிடவேண்டும் என்று பிரார்த்திக்க அவன் வேண்டுகோளுக் கிரங்கிப் பெருமான் அவ்வஸ்திரத்தை விடுப்ப, அது திரிபுரத்தை யடைந்து நாஸஞ் செய்து பெருமானைப் பணிந்து அவர்பாலடைந்தது. அநேக கோடி தைத்திய சேனைகளுடன் கூடிய திரிபுரங்கள் ஓரே அஸ்திரத்தால் எரிந்தது. கற்பாந்தகாலத்தில் திரிலோகங்களும் ஓரேபிரளயகால ருத்ரனால் அழிக்கப்பட்டதுபோன் றிருந்தது.

அந்தத் திரிபுரத்தில் சிவபூஜை செய்துவந்த பெருந் தவசிகளாயுள்ளவர்கள் யாவரும் சிவகணப்பதவி யடைந்தார்கள். அந்தச்சமையத்தில் விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள் தேவதேவனை சிவபெருமானையும், அவர் வாமபாகத்தில் விளங்கும் ஸகலலோகமாதாவாகிய உமாதேவியையும் பார்த்துப் பயத்தால் ஒன்றும் பேசாது நமஸ்கரித்து நின்றார்கள். பிரமதேவன், விஷ்ணு, இந்திரன் முதலிய இமையவர்கள் ஒன்றுசேர்ந்து, திரிபுரதகனஞ்செய்த சிவபெருமானைநோக்கி மெய்யன்போடு கைகுவித்து ஸ்வாமீ! தேவ தேவனாகவும், பரமேசுவரனாகவும், ஜகத்பிரபுவாகவும், உலகத்திற்கு ஸுகத்தைச்செய்பவனாகவும் விளங்குபவனே! தேவரீர் எங்கள் விஷயத்தில் அநுக்ரஹமுடையவராய்க் கோபந்தணியவேண்டும். பிரணவஸ்வரூபியாகியும், குணரஹிதனாகியும், ஸகுணனாகியும், ஸதாசிவனாகியும், ஶாந்தனாகியும், மஹேஶனாகியும், பினாகியாகியும், ஸர்வஜ்ஞனாகியும், ஸகலத்தையும் ரக்ஷிப்பவனாகியும், ஸத்யோஜாதஸ்வரூபியாகியும் விளங்கும் தேவரீருக்குநமஸ்காரம்— என்றுஸ்தோத்திரஞ்செய்து தனித்தனி ஒவ்வொருவரும் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து சத்ருஜயமானதுபற்றிப் பெருங் களிப்புடன் சிவத்தியானபரராய் இருந்தார்கள். அப்பொழுது பிரமதேவர் தேவநாயகா! திரிபுர



(14 - விசுவகர்மா தேவர்களுக்குச் சிவலிங்கங்களளித்தது.

தகனே! அடியேற்குத்தேவரீரிடத்திற் பிரியாததிடபக்தியும், இதுபோலவே என்றும் சாரதித்தொழிலும் நிலைபெற அநுக்ரஹஞ் செய்யவேண்டும் என்றார். விஷ்ணு சாஷ்டாங்கமாய்ப்பணிந்து கைகட்டிநின்று ஸகுண நிர்க்குண ஸ்வரூபியாகியும், ப்ரக்ருதி புருஷரூபனாகியும், விசுவாத்மகனாகியும், பக்தப் பிரியனாகியும், ஶாந்தனாகியும், பரமாத்மனாகியும், ஸதாசிவனாகியும் விளங்கும் தேவரீருக்கு நமஸ்காரம்; தேவரீரிடத்தில் அடியேனுக்கு எப்பொழுதும் நீங்காத பக்தியைத் தயைசெய்யவேண்டும் என்றார். பிறகு ஸகலதேவர்களும் நமஸ்கரித்துப் புராரியைநோக்கி,ஸ்வாமீ! எங்களிடத்தில் தயையுடையவராயிருந்து எங்கள் பக்தியை விருத்திசெய்யவேண்டுமென்றார்கள். இவற்றையெல்லாங் கேட்ட சிவபெருமான் பெருமகிழ்ச்சியுடையவராய், தேவர்களே! உங்கள் தோத்திரத்திற்கு நாம் மனங்களித்தோம்; வேண்டியவரங்களைக் கேளுங்கள் என்றார். தேவர்கள் எங்கள் விஷயத்தில் தேவரீர் தயையுடையவராயின் எங்களுக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் பிரத்யக்ஷமாகி அத் துன்பங்களைப் போக்கியருளவேண்டும் என்றார்கள். சிவபெருமான் அவ்வாறே யாகுகவென்றும், உங்கட்கு மோக்ஷாநுக்ரஹஞ் செய்வோமென்றுந் திருவாய்மலர்ந்தருளிச் சில வரங்களைக்கொடுத்தனர். அப்பொழுது நிரீசுவரவாதிகளான சில † முண்டித சிரசுடையவர்கள் வந்து தேவர்களைப் பணிந்து எங்கள் கதி என்னவென்று கேட்க, திருமால் பிரமன் முதலிய தேவர்கள், நீங்கள் கலியுகம் வருமெல்லையும் நிர்ஜ்ஜலபூமியில் வசிக்கவேண்டும் என, அவர்கள் பணிந்து அவ்வாறே சென்றிருந்தார்கள். பிறகு தேவர்களெல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள். இந்த உபாக்யாநத்தைக் கேட்கிறவன் ஸர்வாபீஷ்டமு மடைவானென்பது திண்ணம்.

திரிபுரதகன முரைத்தது

முற்றிற்று.

இருபத்தைந்தாவது
விசுவகர்மா சிவலிங்கமளித்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சொல்லுகிறார் :—பிரமதேவர் தனது ஸத்யலோக மடைந்து ருஷிகளையெல்லாம் விளித்து நகைத்து, உங்கள் யாவருக்கும் இஷ்டகாரியஸித்தியும், நன்மைகளும் உண்டாகவேண்டுமென்று விருப்பமிருந்தால் என்னுடன் சேர்ந்து திருப்பாற்கடலுக்கு வாருங்கள்; நான் தத்வரஹஸ்யத்தை நன்றாய் விசாரித்திருக்கிறேன் என்று கூறினர். அது கேட்ட தேவர்களும் ருஷிகளும் அப் பிரமதேவருடன் சென்று விஷ்ணுபகவான் வீற்றிருக்கும் க்ஷீராப்தியையடைந்து அவ் விண்டுவைப் பணிந்து பல விதமாகத் துதித்து, தேவதேவா! ஜகந்நாதா! பக்தப்ப்ரியா! லக்ஷ்மீ

† இவர்கள் விஷ்ணு மூர்த்தியால் உண்டுசெய்தனுப்பப்பட்ட மாயாரூபியும் சிஷ்யர்களுமாவர்.

நாயகா! அபயங்கொடுத்து அநுக்ரஹிப்போய்! மேகவர்ண! சதுர்ப்புஜங்களை யுடையாய்! பீதாம்பரதரா! சங்க - சக்ர - கதை - பத்மங்களை யணிந்தோய்! புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா! கவுஸ்துவாபரண! எவராலும் நீக்கப்படாத துன்பங்களையும் நீரே நீக்குபவர். அப்படிப்பட்ட தேவரீர் எங்கள் விஷயத்தில் தயவுசெய்யவேண்டும்: ஸந்தோஷத்துடன் பிரஸந்நராகவேண்டும்: ஜயஜய வென்றார்கள். அதனைக் கேட்ட விஷ்ணுமூர்த்தி அத்தோத்திரங்களால் மனங் களிகூர்ந்து தமது நிஜவடிவுடன் பிரஸந்நராகி அவர்களைப் பார்த்து ஸந்தோஷகரமான வார்த்தைகளால், தேவர்களே! நீங்கள் என்னகாரியமாக என்னைக்குறித்துவந்தீர்கள்? என்றுவினவ, பிரமதேவரானவர் ஸ்வாமீ! தேவரீருடைய தண்ணிய கிருபையால் ஸகல துன்பங்களு மொழிந்தன. ஆயினும் ஸகலருக்கும் ஹிதமுண்டாகும் விஷயமாக ஒரு சங்கதி கேட்கின்றோம். அதாவது,—பிரதிதினமும் எவரைச் சேவித்தால் எல்லாத் துயரங்களு மொழிந்து நித்யமான சுகங்கிடைக்கும்? நானும் இவ் விமையவர்களும் எவரைப்பணிந்தால் எல்லாநன்மையும் பெறுவோம்? என்று வினவினர். அதனைக்கேட்ட அவ்விஷ்ணுபகவான் பிரமனே! உனக்கு நான் பூர்வத்திலேயே இதனைப் புகன்றுளேன்; நீ அதனைக் கேட்டிருக்கின்றாயேனும் மீண்டும் உனக்கும் இவ்வும்பர்க்கும் உரைக்கின்றேன்.

பிரமனே! ஸேவிக்கத்தக்க பொருள் உனக்கு அகப்படுவதாயிருந்தும் என்னைக் கேட்கின்றனை. உலகத்தில் ஸேவிக்கவேண்டுமானால் ஸர்வ துக்கங்களையு மொழிக்குஞ் சங்கரனே பதியல்லாமற் பிறனொருவன் பதியாகான். எனக்கும் பிரமனாகிய உனக்கும் இவ்விஷயம் முன் சிவபெருமானாற் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது அற்புதமான திர்ஷ்டாந்த முங்களுக்குப் புலப்படுகின்றது. தேவதேவனாகிய சிவலிங்கப்பெருமானைப் பூஜித்துவந்ததை மறந்து தாரகாசுரன் புதல்வர்களாகிய திரிபுராதிகள் என்னாலும் மாயையாலும் மோகிக்கப்பட்டவர்களாய் எவ்வாறு மாண்டார்கள்? உங்கள் யாவர்க்கும் நீங்காத சுகம் உண்டாகவேண்டுமாயின் சிரத்தையுடன் சிவலிங்கரூபியானசிவபெருமானைப் பூஜைசெய்யுங்கள். உலகங்களில் எந்தப் பொருளையுஞ் சிவலிங்கரூபமாகச் செய்தால் அதிற் சிவபெருமான் அவிர்ப்பாகமாகிறார். ஆதலின், இஷ்டசித்தியடைய விரும்பினவர்கள் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டியது. தேவர்களும் தைத்தியரும் தானவரும் நாமும் எல்லோருஞ் சிவலிங்கபூஜைசெய்யவேண்டியவர்களே. பிரமனே! நீ மறந்துவிட்டனையோ? நீ சிவலிங்கபூஜை எவ்வகையாகவாவது செய்யவேண்டும். எந்தக்காலத்தில் சிவத்தியானம்செய்யாமலிருந்தோமோ அந்தச் சமையமே நமக்கு இடையூறுவருங்காலம். அதுவே அதர்மம். அதுவே விக்நகாலம். அதுவே மூடத்தனம். சிவபக்தி எவர்க்குண்டாகுமோ சிவஸ்மரணை எவர் செய்வரோ அவர் அணுவளவுந் துக்கபாத்திரராகார்.

மநோகரமான வீடுகள் - பலவிதமான ஆபரணங்கள்-சுதந்தரமான மாதர்கள் - அவாவடங்கத்தக்க தனம் - புத்திரபவுத்திராதிசந்ததி - தேஹா



(15-தேவர்கள்யாவரும்விஷ்ணுமூர்த்திமுன்னிலையில்சிவலிங்கபூசைசெய்தது-

ரோக்கியம் - பலவித சினிசினும்பரங்கள் - இரத கஜ துரக முதலிய வாஹநங்கள்-வஹிக்கமுடியாத கீர்த்தி - ஸ்வர்க்கபோகம்-தீர்க்காயு - நற்சிநேகிதர்கள் - முக்திபலம் முதலியவற்றை விரும்பினவர்கள் ஸதா சிவபகவானைச் சிவலிங்கமூர்த்தத்திற் பூஜிக்கவேண்டியது. பக்தியுடன் லிங்கபூஜை செய்கிறவன் புண்ணியகருமங்களைச் செய்ய நேரிடுமேயன்றி, பாபத்தாற் பீடிக்கப்படமாட்டான்.—என் றிவ்வாறு விஷ்ணுமூர்த்தி விளம்பினர். அதைக்கேட்ட தேவர்கள் அவரைப்பணிந்து நாங்கள் பூஜைசெய்வதற்கு லிங்கங்கிடைக்காமையின், இஷ்டகாமியங்களெல்லாம் எங்கட்குக் கைகூடச் சிவலிங்கங்களைப் பிரஸாதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, விஷ்ணுவும் பிரமதேவரும் யோசித்து விச்சுவகர்மனை விளித்து—நாங்கள் சொல்வதுபோல இத்தேவர்கட்கெல்லாம் யோக்யமான லிங்கங்களைச் செய்து, அவரவர் கௌரவத்திற்கேற்பக் கொடுப்பாயாகவெனக் கூற, விஸ்வகர்மன் அப்படியே லிங்கங்களை நிர்மித்து, அவரவர்க்குத் தக்கபடி கொடுத்தனன்.

பதுமராக லிங்கத்தை இந்திரனும், ஸ்வர்ண லிங்கத்தைக் குபேரனும், கோமேதக லிங்கத்தை இயமனும், நீலலிங்கத்தை வருணனும், இந்திரநீலலிங்கத்தை விண்டுவும், ஸ்வர்ணலிங்கத்தைப் பிரமதேவனும், வெள்ளி லிங்கத்தை விச்சுவதேவர்களும் அட்டவசுக்களும், பித்தளை லிங்கத்தை வாயுவும், பார்த்திவலிங்கத்தை அச்சுவினிதேவர்களும், ஸ்படிகலிங்கத்தை இலக்குமிதேவியும், தாமிரலிங்கத்தைத் துவாதசாதித்தர்களும், முத்துலிங்கத்தைச் சோமராஜனும், வஜ்ரலிங்கத்தை அக்கினியும், பார்த்திவலிங்கத்தைப் பிராமணர்களும் பிராமணஸ்திரீகளும், சந்தன லிங்கத்தை மயனும், பவள லிங்கத்தை அநந்தன் முதலிய ஸர்ப்பராஜர்களும், * கோமய லிங்கத்தைத் தயித்தியரும் இராக்ஷஸரும், இருப்புலிங்கத்தைப் பசாசங்களும், † நவநீத லிங்கத்தைச் சசிமுதலியஸ்திரீகளாற்பூஜிக்கப்பட்ட பார்வதிதேவியும், ‡ தாரு லிங்கத்தை நிருதியும், பஸ்மலிங்கத்தை யோகியும், மாவுலிங்கத்தைச் சூரியன் மனைவியாய சாயாதேவியும், இரத்தினலிங்கத்தைச் சரசுவதிதேவியும், தயிராற் செய்த லிங்கத்தை யக்ஷர்களும் பெறும்படி விசுவகர்மன் கொடுக்க அவற்றை அவர்கள் வாங்கி, தேவர்கள் - ருஷிகள் - பிரமா - விஷ்ணு - யக்ஷர் முதலானவர்கள் கார்யஸித்தியின்பொருட்டு விதிப்படி அருச்சித்தார்கள். விஷ்ணுபகவான் பிரமன்முதலிய தேவர்களுக்குப் பூஜாவிதியைச்சொல்லியருளினர். பிரமன் முதலிய தேவர்கள் சந்தோஷமடைந்தவர்களாய்த் தங்கள் வாஸஸ்தானத்தையடைந்தார்கள். விஷ்ணுமூர்த்தியும் அந்தர்த்தானமாயினர். பிரமன் ஸத்யலோகமடைந்து, முன் தன்னுடன் க்ஷீராப்திக்கு வாராத தேவர்கட்கும் சிவபூஜாவிதியை முறைப்படி யுபதேசித்தனர்.

விசுவகர்மா சிவலிங்க மளித்தது

முற்றிற்று.

* கோமயம் - சாணம். † நவநீதம் - வெண்ணெய். ‡ தாரு - மரத்தாற் செய்தது.

இருபத்தாறுவது
பாஹ்யாந்தரலிங்கங்க ளுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகள் ஸூதமுநிவரை நோக்கி, பிரமதேவர் ஸத்ய லோகஞ்சென்றபிறகு நடந்த விர்த்தாந்தங்களையும், பிரமதேவர் சிவபூஜா விதியை அவர்கட்கு உபதேசித்ததையும் தேவரீர் எங்கட்குச் சொல்லியருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, ஸூதமுநிவர்—உலகத்திலிருப்பவர் யாவரும் சுகமடையவேண்டியவிஷயமாக என்னைக் கேட்டீர்கள்; இவ்விஷயம் முன்னொருகாலத்தில் வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரைக்கேட்க, அந்த ஸநத்குமாரமுநிவர் வியாஸருக்குச் சொல்லியபடியே அவர் எனக்குச் சொல்லியதை உங்கட்குச்சொல்லுகிறேனென்று கூறுவாராயினர்.

பிரமதேவர்ஸத்யலோகமடைந்தபின், தேவர்முநிவர்முதலானரை நோக்கி, சிவபூஜாவிதியைச் சொல்கிறேன் கேட்கவேண்டும். ஸகல ஜன்மங்களிலும் துர்லபமான மாநுவஜந்மத்தில், நற்குலத்தில் அவயவப்பழுதின்றி உதிப்பது அருமை. அவ்வகைய அரிய பிறவியை யடைந்தபிறகு தன்குலத்திற் கேற்ற காரியங்களைச் செய்யவேண்டுமேயன்றி அளவுகடந்திருந்தால் அக்கருமத்திற்குத் தக்கபலன் கிட்டாது. தன் ஞானத்திற் கெட்டாத காரியங்களிற் பிரவேஸிக்கப்படாது. கர்மயாகங்கள் பல்லாயிரஞ் செய்வதைக் காட்டிலும் தீர்த்தயாத்திரை முதலிய தபோயாகஞ் சிறந்தது. தபோயாகங்கள் பல்லாயிரத்திலும் ஜபயாகஞ்சிறந்தது. அந்தஜபயாகங்கள் பல்லாயிரத்திலும், மாநஸிகமான தியானயாகம்சிறந்தது. தியானயாகத்திலுஞ்சிறந்தது பிறிதொன்றில்லை; அதுவே ஞானமார்க்கத்திற்குக் காரணம். ஸர்வவியாபகமாகவுள்ள பரப்பிரமவஸ்துவை யோகபுருஷன் தன் தியானத்தினுற் றனது ஹ்ருதயத்திற்றரிசிக்கிறான். தியானயாகத்திலிருப்பவனுக்குப் பரமசிவன் எப்பொழுதும் ஸமீபத்திலேயே யிருப்பன். அவன் பிரமஸ்வரூபமாயிருப்பதால் ஸத்கருமங்களை விடுத்தாலும் பிராயச்சித்தம் வேண்டுவதில்லை. ஸுகம் துக்கம் தர்மம் அதர்மம் ஜபம் ஓமம் தியானம் யோகமுதலியவெல்லாம் அவனுக்கு அவசியமில்லை.

பரமாநந்தத்தை யுண்டுசெய்வதும், பரிசுத்தமானதும், நாசமில்லாததும், நிஷ்களமானதும், ஸர்வபரிபூரணமாயுள்ளதுமானசிவலிங்கத்தை இதயத்திலிருப்பதாக அவன் எண்ணுகிறான். இந்த இலிங்கம் பாஹ்யலிங்கம் - ஆந்தரலிங்கம் என இருவகைப்படும். அவற்றுள், பாஹ்யம் - ஸ்தூலமாகக் கண்ணுக்குப் புலப்படுவது. ஆந்தரம் - ஹ்ருதயத்தில் ஸூக்ஷமமா யுள்ளது. கர்மயாகத்திலிருக்கும் எல்லோரும் பாஹ்யலிங்கார்ச்சனை செய்யவேண்டும். ஏனெனில், அஞ்ஞானிகட்கெல்லாம் பக்தியுண்டாகு நிமித்தமாய் ஸ்தூலத்தில் ஸூக்ஷமத்தைப் பாவனைசெய்து பூஜிக்கவேண்டியது. ஞானிகட்குத் தோஷரஹிதமான ஸூக்ஷமலிங்கம் பிரத்யக்ஷமாகவிருக்கும். அஞ்ஞானிகள் யாவரும் மண் - மரம் இவற்றாற் செய்யப்பட்ட லிங்கங்களைப் பூஜிக்கவே

ண்டியது. தத்வார்த்தங்களை யுணர்ந்தவர்கள் இம் மிருத்லிங்க முதலியவற்றாற் பயனின்றி, சகலமுஞ் சிவமயமென்றுபாவித்து, அகண்டபரிபூரணமாக விளங்குகிறவன் சிவபெருமானென்று தெரிந்திருப்பான். ஞானிக்கு விக்ரஹ ஆராதனம் வேண்டுவதில்லை. இத்தகைய ஞானம் இல்லாதவனுக்குப் பிரதிமாகல்பனஞ் செய்துகொள்ள வேண்டுவது அவசியம். உயர்விடத்திற் செல்லவேண்டியவனுக்குச் சோபானம் [படி] இன்றியமையாததுபோல, நிர்க்குணமான சிவலிங்கப்பிராப்தியை யடையவேண்டிய அஞ்ஞானிக்குப் பிரதிமாபூஜை சொல்லப்பட்டிருக்கிறது. ஸகுண பூஜையால் நிர்க்குணமான சிவப்பிராப்தி யுண்டாகும். இவ்வாறே ஸகலதேவதாப் பிரதிமைகளும் அவரவர் கோரிக்கையின்படி இஷ்டஸித்திகளைக் கொடுக்கின்றன. நான் பூஜைசெய்கிறேனென்பதுடன் பக்திபூர்வமாக ஞானோதயமாகும்வரையில் பூஜிக்கவேண்டியது. அத்தகைய ஞானமில்லாதபக்ஷத்தில் அவன் பூஜைசெய்யும் சந்தனம் புட்பம் தீர்த்தம் நிவேதனம் முதலியயாவும் வியர்த்தமாகும். சிரத்தையின்றிப் பூஜிக்கிறவனது பூஜை வியர்த்தமாவதுடன் அவனும் அதோலோகப்ராப்தியடைவான். இந்தக்காரணத்தால் உங்களுக்குப் பாஹ்யபூஜையைச் சொல்லுகிறேன் என்று பிரமதேவர் சொல்வாராயினர்.

தேவர்களே! ஸ்வஜாதியுசிதமான கர்மாநுஷ்டானங்களைச் செய்துகொண்டு, எந்தெந்த விக்ரஹத்தில் தனக்குப் பக்தியுண்டாகுமோ அந்தப் பிரதிமாபூஜை செய்யவேண்டும். பூஜை தானம் முதலான ஸத்கருமங்கள் செய்யாவிட்டாற் பாதகம் ஒழியாது. பாதகம் ஒழியாதவனுக்கு ஸித்தியுண்டாகாது. அழுக்கேறின வஸ்திரத்தைப் படிகாரத்தில் ஊறவைத்துப் பிறகு தோய்த்துச் சாயம் போட்டால் அதில் இலேசாகச் சாயம்பிடிப்பதுபோல, பாதகங்களை [ஸ்தூல] பிரதிமாபூஜையால் போக்கினபிறகு ஸூக்ஷ்மபூஜையால் ஞானமடைந்து விஞ்ஞானிகளாவர். அந்தவிஞ்ஞானத்திற்கு ஞானமும், ஞானத்திற்கு த்ருடபக்தியும், பக்திக்குப் பிரதிமாபூஜையும், பிரதிமாபூஜைக்கு ஸத்குருவும், ஸத்குருவை யடைவதற்கு ஸத்ஸாங்யத்யமுங் காரணமாகும். ஸத்ஸாங்யத்தால் ஸத்குருவையடைந்து, ஸத்குருவால் மந்த்ராதிக்க பூஜையும், பூஜையால் பக்தியும், பக்தியால் ஞானமும், ஞானத்தால் விஞ்ஞானமும் உண்டாவது ஸத்யம். விஞ்ஞானிக்கு (நான் அவன், குமாரன்-பிறன், சிநேகிதன் - பகைவன், மானம் அவமானம், லாபம் நஷ்டம், ஜயம் அபஜயம் என) பேதமின்றிச் சமபுத்தி யுதிக்கும். இத்தகைய தொந்தபுத்தியற்றவன் சிவரூபியாவான். இப்படி விஞ்ஞானியா யுள்ளவன் இல்வாழ்வோரில் கோடிக்கொருவனாக விருப்பான். அப்படி யிருப்பவனை ஒருவன் கண்ட மாத்திரத்தில் ஸகல பாபங்களும் ஒழியும். அவ்வண்ணமானவனைக் கண்ட புண்யதீர்த்தங்கள் (இவனோ தன்னைக் கண்டவர்களுடைய பாபத்தை அப்பொழுதே நீக்குகிறான். நாமோ அநேக காலம் நம்மிடத்தில் ஸ்நானஞ் செய்தாலன்றிப் புனிதமாக்கமாட்டோம் என்று) வெட்கமடையும். பிரதிமாரூபமான தேவர்கள் அநேககாலங்கழித்து ஒருவனைப் புனிதமாக்குவர்.

ஞானியோ அவனைக்கண்டபொழுதே புனிதமாக்குவான். இல்வாழ்க்கையிலிருக்குமெல்லையும் பிரதிமாபூஜை செய்யவேண்டியது. சிவரூபமாவது-தேவிரூபமாவது-விஷ்ணுரூபமாவது-சூரியரூபமாவது-கணபதிரூபமாவது அன்றி இவ் வைந்தையு மாவது, ஸகலத்திற்குங் காரணமான சிவலிங்கப்பெருமானையாவது பூஜிக்கவேண்டும். மரத்தின் வேரில் ஊற்றிய நீர் அதன் கிளை இலை முதலியவற்றிற்குப் பாய்வதுபோல, மூலகாரணனான சிவபெருமானை யர்ச்சிப்பதால் எல்லாத்தேவர்கட்குந் திர்ப்தி யுண்டாகும். மரத்தின் கிளையிற்சொரிந்த நீர் மரத்திற்குப் பிரயோஜன மில்லாததுபோல, சிவபூஜை செய்யாமல் மற்றத்தேவர்களைப் பூஜிப்பதால் பயனின்றாம். த்ரியம்பகனாகிய சிவபெருமானைப் பூஜித்தால் மனதிலுள்ள ஸகலமான கோரிக்கைகளுங் கைகூடும் என்று பிரமதேவர் கூறினர்.

பாஹ்யாந்தரலிங்கங்க ளுரைத்தது முற்றிற்று.

இருபத்தேழாவது நித்தியகருமமுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்—ப்ராம்ஹமுகூர்த்தத்திலெழுந்து, விஷ்ணுவையுங் குருவையும் அன்போடுதுதித்து, தேகசுத்திசெய்து, கால்கைகள் கழுவி, சூர்யோதயத்திற்குமுன் தந்ததாவனஞ்செய்து, முகத்தை இருகைகளாலும் நீர் கொண்டு பதினாறுதரங் கழுவி, நதி முதலியவற்றில் தேசகால விரோதமின்றி ஸ்நாநஞ்செய்யவேண்டியது. [ஆதிவாரம் - சிரார்த்ததினம் - சூரியசங்க்ராந்தி-கிரஹணம் - மஹாதானஞ்செய்யுஞ்சமையம் - புண்யகாலம்- உபவாசதினம் - ஆசௌசதினங்கள் இந்தச் சமையங்களில் உஷ்ணஜலஸ்நாநஞ் செய்யப்படாது.] தயிலாப்பியங்கன ஸ்நாநஞ் செய்யவேண்டியவர்கள், முறையே ஆதிவாரம்-ரோகத்தையும், சோமவாரம்-தேஜஸையும், அங்காரகவாரம் - மரணத்தையும், புதவாரம்-லக்ஷ்மிகடாக்ஷத்தையும், குருவாரம்-தரித்திரத்தன்மையையும், சுக்ரவாரம் - அசுகத்தையும், சநிவாரம் - சுகத்தையும் உண்டுசெய்யுமாதலின், நிஷித்த வாரங்களில் அப்பியங்கனஞ் செய்யப்படாது; அப்படி நிஷித்தவாரங்களில் ஸ்நாநஞ் செய்ய நேரிட்டால், ஆதிவாரத்தில் புஷ்பமும், மங்களவாரத்தில் மண்ணும், குருவாரத்தில் அறுகம் புல்லும், சுக்ரவாரத்தில் ஜலத்துளியும் எண்ணெயிற்சேர்த்து அப்பியங்கனஞ்செய்யவும். நித்யாப்யங்கனஞ்செய்யும் நியதியையுடையவன் பரிமளவஸ்துக்கள் சேர்த்து எண்ணெயிட்டுக்கொள்ளலாம். ஸ்ரார்த்தம் - கிரஹணம் - உபவாசம் - பிரதமை இத்தினங்களில் எண்ணெ யிட்டுக்கொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட தினங்களிலும் முழுக நேரிட்டால், கிரஹணம் நீங்கிய தினங்களில் கடுகெண்ணெய் உபயோகிக்கவும். தேசகாலங்களையறிந்து சாஸ்திரப்படி ஸ்நாநஞ் செய்கையில், வடக்குத்திசையையாவது கிழக்குத்திசையை

யாவது நோக்கி ஸ்நாநஞ் செய்யவேண்டும். முன்னுடுத்ததும் இராத்திரி உடுத்ததும் பிறர் உடுத்ததுமான வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு ஸ்நாநஞ் செய்யப்படாது. நல்ல வஸ்திர முடுத்துக் கால்கழுவி ஆசமனஞ்செய்து கங்காதி தீர்த்தங்களாகப் பாவனைசெய்து துதித்து, சங்கல்பங்கூறி உடலை நனைத்து, ம்ருத்திகாஸ்நாநஞ் செய்து, ஆசமனஞ்செய்து கங்கையைத் துதித்து ஸ்நானஞ்செய்து உடலைத்துடைத்து மடிவஸ்திரங் கட்டிக்கொண்டு ஆசமனஞ்செய்து கோமய முதலியவற்றுற் சுத்திசெய்த நல்லவிடத்தில் நல்ல மரத்தாற் செய்த ஆசனத்தில் கம்பள முதலிய சித்திராசனமிட்டு அதன்மேல் பட்டுவஸ்திரம் பரப்பி அதில் உட்காரவேண்டும். அப்படிப்பட்ட ஆசனங் கிடைக்காவிட்டால் மான்றோலின்மேலிருந்து த்ரிபுண்டரம் - ஊர்த்துவபுண்டரம் - அர்த்தசந்திரம்-வம்சபத்திரம்-பாரிஜாதபுஷ்பம் ஆகிய இவ்வைந்தில் தமக்குரிய ஒருவகையாகத் தரித்துக்கொள்ளவும். திரிபுண்டர ஊர்த்துவ புண்டரங்கள் சிவபக்தர்கட்குரியன. பிரம க்ஷத்திரிய வைசியர்கள் நான்கு விதமான திலகங்கள் அணியலாம். அர்த்தசந்திரம் ஊர்த்துவபுண்டரமாகிய இரண்டும் சூத்திரர்கட்குரியது. வம்சபத்ரம் போன்ற திலகம் விஷ்ணுபக்தர்கள் தரிக்கவேண்டும். இவ்வாறு தரித்தால் ஜபம் - தபம் - தானம் எல்லாம் ஸபலமாகும். பஸ்ம முதலானது இல்லாவிட்டால் ஜலத்தாலாவது திலகந் தரிக்கவேண்டும். பிறகு தங்கள்குலத்திற்கேற்ற அநுஷ்டானங்கள் செய்துகொண்டு சிவார்ச்சனைசெய்யவேண்டும். எப்படியென்றுல், மந்திரபூர்வகமாக மூன்றுதரம் அல்லது ஒருதரம்ஆசமனஞ்செய்துகொண்டு கங்கையைத்துதித்து, [ஆத்மதத்வாய சுவாஹா - சிவதத்துவாய சுவாஹா - வித்தியாதத்துவாய சுவாஹா] என்று ஆசமனஞ்செய்து சங்கல்பித்து, பூஜாபாத்ரஜலத்தைக் கொண்டுவந்து, சிவபூஜைக்கு வேண்டிய உபகரணங்களைத் தன் சக்திக்கேற்பச் சேகரித்து, மனதைத் த்ருடப்படுத்தி "லிங்கஸ்ய ஆக்நேயபாகஸ்த: ப்ரகாதி முகமர்ச்சயேத்" என்ற சாஸ்திரப்படி, அக்கினிதிசையிலிருக்கச் சிவலிங்கத்தைவைத்து, மந்திரகுருவைத் தியானித்துஅவரைப் பூஜித்து, மனதில் குருகடாக்ஷத்தைக் கருதி, மீண்டும் தன் மனவிருப்பத்தைச் சேர்த்துச் சங்கல்பங்கூறி, பரிவாரதேவர்களுடன் சிவனைப் பூஜிக்கவேண்டும்.

சங்கம் - சக்ரம் - தேனு முதலிய முத்திரைகளில் ஒன்றைக்காட்டி முதலில் சித்தி புத்தி சமேதராகியும், லக்ஷன் லாபன் என்னும் புதல்வர்களையுடையவராகியும் விளங்கும் விநாயகக்கடவுளை சிந்தூரவர்ணமான மலர்களால் பூஜித்து, நமஸ்கரித்து க்ஷமாபணஞ்செய்து, நந்திகேசுவரரை சிவகடாக்ஷங் கைகூடும்படி பூஜித்து, கைகூப்பிவணங்கி, துவாரபாலக ராகிய மஹேசுரரைப் பூஜித்து, பார்வதிதேவியைச் சந்தன குங்கும தூப தீப நைவேத்தியாதிகளால் அர்ச்சித்துப் பணிந்து, சிவசந்நிதி கல்பித்துக்கொண்டு, தன் வீட்டில் பார்த்திபம் - பொன்-வெள்ளி-இரத்தினம் - பாதரச முதலியவற்றுல் செய்யப்பட்ட *சரலிங்கமூர்த்தியையாவது,ஸ்தாபிதலிங்கமூர்த்தியையாவது

* சரம் - அசையக்கூடியது. அதாவது எடுக்கத்தக்கது.

அன்புடன் பூஜிக்கலாம். இதற்குப்பிராணப்பிரதிஷ்டையும் பூசுத்தி பூதசுத்திகளுஞ்செய்துகொண்டு, திக்பாலகர்களைப்பூஜிக்கவேண்டும். மூலமந்திரத்தாலேயே சிவபூஜை செய்யவேண்டும். வீட்டிற் சிவபூஜை செய்கையில் துவாரபாலக பூஜாநியமம் வேண்டியதில்லை. ஆனால் பரிவாரங்களோடு கூடிய சிவபெருமானே! என்று பாவனைமாத்திரமாகப் பூஜைசெய்யவேண்டியது. ‡பத்மாசனமாவது பத்ராசனமாவது உத்தானசனமாவது பர்யங்காசனமாவது செய்து உட்கார்ந்து ஆதிசைவர்களைக்கொண்டாவது தானேயாவது பூஜிக்கவும். அர்க்யம் பாத்யங்கொடுத்து ஜலத்தால் லிங்கத்திற்குஅபிஷேகஞ்செய்யவேண்டும். நிர்ச்சலமான மனதுடன், இனிச் சொல்லப்படும் மந்திரத்தால் ஆவாஹனஞ் செய்யவேண்டும் :—

கைலாஸஸிகரஸ்தஞ்ச பார்வதீபதிமுத்தமம் || (௫௬)
யதோக்தரூபிணம்தேவம் நிர்குணம்குணரூபிணம் |
பஞ்சவக்த்ரம்தஸபுஜ௦ த்ரிநேத்ரம்வ்ருஷபத்வஜம் || (௫௭)
கர்பூரகௌரகம்திவ்யம் சந்த்ரமௌளிம்கபர்திந௦ |
வ்யாக்ரசர்மோத்தரீயஞ்ச கஜசர்மாம்பரம்ஸுபம் || (௫௮)
வாசுக்யாதிபரீதாங்கம் பிநாகாதிவிபூஷிதம் |
கபாலடமருயுக்தஞ்ச கண்டேகரளஸோபிதம் || (௫௯)
ஸித்தயோஷ்டௌசயஸ்யாக்ரே ந்ருத்யந்தீஹநிரந்தரம்
ஜயஜயேதிஸப்தைஸ்ச ஸேவிதம்நிஜபக்தகை : || (௬௦)
தேஜஸாதுஸ்ஸஹேநைவ ஸம்பத்தம்தேவஸேவிதம்
ஸரண்யம்ஸர்வஸத்வாநாம் ப்ரஸந்நமுகபங்கஜம் || (௬௧)
வேதஸாஸ்த்ரார்யதாகீதம் ஸிவமாவாஹயாம்யஹ௦ ||

[(இதன்பொருள்.) கைலாசசிகரத்தி லிருப்பவரும், பார்வதி நாயகரும், உத்தமரும், நிஜஸ்வரூபியும், நிர்க்குணரும், ஸகுணரும், ஐந்துமுகங்களும், பத்துக் கரங்களும், திரிநேத்திரங்களும், ருஷபக்கொடியும், கற்பூரம்போலும் வெள்ளிய திருமேனியும், பிரகாசமும்,சந்திரசேகரமும், சடையும், புலித்தோலாடையும், யானைத்தோலுடையும், ஸுந்தரவடிவமும், வாசுகியாதிசர்ப்பங்கள், பிநாகவில்லாதியவற்று லலங்காரமும், கபாலடமருகமும், நீலகண்டமும், அணிமாதி யஷ்டசித்திகளின் நிருத்தமுடைய சந்நிதியும், நிஜபக்தர்கள் ஜயஜயத்தொனியோடு சேவித்தலும், தேஜோரூபியும், தேவர்களால் சேவையும், சர்வரக்ஷணமும், பிரசன்னமுகபதுமமும், வேதசாஸ்திரங்களாற்புகழப்படுவதுமுடைய சிவபெருமானை ஆவாஹநஞ்செய்கிறேன். என்பது.]

நித்தியகருமமுறைத்தது
முற்றிற்று.

‡ பத்மாசன முதலியவற்றை இப்பொழுது மொழிபெயர்த்துக்கொண்டு வரும் ஹடயோக தீபிகையில் நன்கு காணலாம்.

இருபத்தேட்டாவது
பூஜாவிதிவர்ணன முனைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—பூஜாபாத்திரத்திலிருந்த ஜலத்தால் இலிங்கமூர்த்திக்கு அபிஷேகஞ் செய்யலாம். மகாபிஷேகஞ் செய்யும்பொழுது சேகரித்து அருகேவைத்துள்ள வேறுஜலத்தாலும் அபிஷேகிக்கலாம். மேல் அத்தியாயத்திற்சொல்லிய மந்திரமுனைக்க அசக்தனுயிருந்தால். [யுதோக்த ரூபிணம்ஸம்பும் ஶிவமா வாஹ யாம்யஹம்] மேற்கூறிய முறைப்படியே சிவபெருமானை ஆவாஹனஞ் செய்கிறேனென்று இலிங்கமூர்த்தத்திற் சிவபெருமான் இருப்பதாகப் பாவித்து விதிப்படி உபசாரங்களைச் செய்ய வேண்டியது. முன்சொல்லிய தோத்திரத்தைக் கூறி ஆசனங்கொடுக்கவேண்டியது. சிவாயநம: என்று கூறி, சோடசோபசாரங்களையுஞ் செய்யவேண்டியது. அப்படியே கூறி ஸர்வவியாபியான பெருமானுக்குப் பாத்யம் ஆசமனங் கொடுத்து, வேதமந்திரங்களாற் பஞ்சாமிர்தமும், தான் விரும்பிய பழங்களும், அத்தர் பனிநீர் சந்தன முதலிய பரிமள திரவியங்களும், சுத்த ஜலமும் அபிஷேகித்து, தான் கையெட்டுந் தூரத்திலிருந்து சந்தனபிஷேகஞ் செய்து, ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டுத் தாரைகளையுடைய ஜலபூரண கும்பத்தை மேலே கட்டி, வேதமந்திரங்களாலாவது ஆறுமந்திரங்களோடு கூடிய ருத்திரஸூக்த மந்திரத்தாலாவது ஏகாதசருத்திர மந்திரத்தாலாவது தன்னுற் கூடியவரையில் அபிஷேகித்து, வஸ்திரத்தால் ஒத்தி, ஆசமநீயங் கொடுத்து வஸ்திரதாரணஞ்செய்து, யஜ்ஞோபவீதமுஞ் சமர்ப்பித்து, சந்தனம் வெள்ளையக்ஷதை இவற்றையிட்டு, [திலாஸ்சைவ யவாவாபி கோதுமா மாஷகாஸ்ததா | அர்ப்பணீயா ஶிவாயைவ மந்த்ரைர் நாநா விதைரபி|| (கச) என்றபடி] அக்ஷதையாக எள்ளாயினும் யவையாயினும் கோதுமையாயினும் உளுந்தாயினுந் தரிக்கலாம். எள் பாபத்தைப் போக்குமென்றும், யவை (கோதுமையில் ஒருவகை) அன்னபாக்கியமும், கோதுமை தேகபுஷ்டியும், மாஷம் (உளுந்து) வமிசவிருத்தியுஞ் செய்யுமென்பர். பிரணவாதி நமோந்தகமாகிய சிவமந்திரத்தால் தாமரை-கொன்றை-ஆத்தி-மல்லிகை - ரோஜா-வில்வம் - தர்ப்பை - அறுகு - கருவூமத்தை - துளசி இவைபோன்ற தனக்குக் கிடைத்த புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சிக்கவேண்டும்.

வீட்டிலிருக்கும் சர லிங்கத்தை யாவது அசரலிங்கத்தை யாவனுதானும்,சந்நிதானத்திலிருக்கும் பரார்த்தலிங்கத்தை ஆதிசைவனைக்கொண்டும் இவ்வாறு பூஜித்தபின், பரிமளம் பொருந்திய குங்கிலியம்-அகரு-சந்தனத்தூள்-சாம்பிராணி முதலிய திரவியங்களைத் தூபமிட்டு, ஏகார்த்தி - த்வியார்த்தி - த்ரியார்த்தி - சதுரார்த்தி - பஞ்சார்த்தி முதலான தீபங்களைக் காட்டி, [ரூபந்தேஹி ஜயந்தேஹி பாக்யம்பகவாந் தேஹிமே | புக்திமுக்தி பலந்தேஹி க்ருஹீத்வார்க்யம் ஶிவாதுநா||] பரமேசுவரா! நான் தேவரீருக்குக் கொடுக்கும் அர்க்கியத்தைப் பெற்று எனக்குச் சவுந்தரியத்தைக்

கொடுக்கவேண்டும். ஜயத்தைக்கொடுக்கவேண்டும். பாக்யத்தைக் கொடுக்க வேண்டும். புக்திமுக்திகளையுங் கொடுக்கவேண்டும் என்று அர்க்கியங்கொடுத்து, நானாவிதமான நிவேதனங்களைச்செய்து ஐந்து வர்த்திகளையுடைய தட்டுத்தீபத்தைக் காட்டிக் கர்ப்பூரதீபாராதனைசெய்து, தாம்பூலங் கொடுத்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து, குருவுபதேசப்படி மந்திரங்களாற் றுதித்து, பஞ்சாக்ஷரமந்திரத்தை ஜபித்து, நானாவித சிவஸ்தோத்திரங்கள் கூறி, [தாவகஸ்த்வத் கதப்ராணஸ் தச்சித்தோஹம் ஸதாம்ருடா | கிருபாநித இதி ஜ்ஞாத்வா பூதநாதா ப்ரஸீதமே || என்றபடி] நான் உம்முடையவன்; உம்மிடத்திற் பிராணனுடையவன்; உம்மிடத்திலேயே மனமுடையவன்; கிருபாநிதியே! ஸமஸ்த பிராணிகளுக்கும் பிரபுவே! பூதநாதா! எனக்குப் பிரசன்னராகவேண்டும் என்று *புஷ்பாஞ்சலிசமர்ப்பித்து, †க்ஷமாபணஞ்செய்து, நான் மீண்டும் பூஜைசெய்கையில் இங்கெழுந்தருளவேண்டுமென்று வேண்டி அவரை யனுப்பிவிடவேண்டியது.

இருபத்தோன்பதாவது
மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரைநோக்கி, வியாஸசிஷ்யரே! தேவரீர் யாவுமறிந்தவராதலின், சிவபெருமான் தன்னை எந்தெந்தப்புஷ்பங்களாற் பூஜித்தவர்கட்கு எந்தெந்தப் பலன்களைக்கொடுக்கிறார் என்பதைச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுநிவர் சொல்லுகிறார்: முநிவர்காள்! தனவிருப்பமுடையவன் தாமரைமலர் - வில்வம் - சதபத்திரம் [நூறு இதழ்களை யுடையது] ‡ சதபத்திரம் - ஸங்கபுஷ்பம் இவற்றால் லக்ஷக்கணக்காகப்பூஜித்தால் சந்தேகமின்றிப் பெருந்தனத்தையடைவான். தாமரைமலர் இருபதுகொண்டது பிரஸ்தம். வில்வதளம் ஆயிரங்கொண்டது பிரஸ்தம். சதபத்திரம்-ஆயிரங்கொண்டது அர்த்தப்பிரஸ்தம். [பிரஸ்தம்=பதினறுபலம் எடை] மஹாபூஜைசெய்கையில் மலர்களை எண்ணிப்பூஜிக்க இயலாதாதலின் இவ்வாறு நிறுத்துப் பூஜிக்கவேண்டும். இராஜபோகத்தை விரும்பினவன் பழுதில்லாத பத்துக்கோடி மலர்களாற் பார்த்திவலிங்கத்தைப் பூஜித்து மகிழவேண்டும். அல்லது பத்துக்கோடி வில்வதளத்தைச் சுகந்தமுடைய சந்தனத்திற்றோய்த்துப்பார்த்திவலிங்கபூஜை செய்யவேண்டும். தாமரையாவது சங்கபுஷ்பமாவது இவ்வாறு பூஜிக்கத்தகுமெனப்பெரியோர் கூறுவர். பிறகு தூபதீபநைவேத்திய அர்க்கிய ஆரார்த்திக பிரதக்ஷிண நமஸ்கார க்ஷமாபண விஸர்ஜனமுதலியவற்றைச்செய்தால் இஷ்டபோகமும்ராஜரிகமும் அவன்பெ

* புஷ்பாஞ்சலி - புஷ்பத்தை எடுத்து இருகைகளையுங்குவித்துக் கும்பிட்டு அப்படியே சமர்ப்பித்தல்.

† க்ஷமாபணம்-தான்செய்த பூஜையில் தப்பிதங்களிரும்பின் அவற்றை மன்னிக்கப்பிரார்த்தித்தல்.

‡ சதபத்திரம் - சங்கபுஷ்பம்—தாமரையின் பேதங்களாம்.

றும்படி உலகநாயகராகிய சிவபெருமான் கடாக்ஷிப்பர். பிரதானித்துவத்தை விரும்புகிறவன் ஐந்துகோடிமலர்களாலும், சிறைச்சாலையிலிருந்து நீங்கவேண்டியவன் லக்ஷம் புஷ்பங்களாலும், ரோக நிவிர்த்தி வேண்டியவன் ஐம்பதினாயிரமலர்களாலும்,சுந்தரமானஸ்திரீயை மணஞ்செய்ய விரும்பினவன் இருபத்தையாயிரமலர்களாலும், வித்தியா விருப்பமுடையவன் பன்னீராயிரத்தைந்நூறு மலர்களாலும்,சத்துருவை வெற்றிகொள்ளவும் சத்துருவை ஊர் கடக்கத் துரத்தவும் வேண்டியவர்கள் பத்தாயிர மலர்களாலும், மாரணஞ்செய்யவேண்டியவன் நான்கிலக்ஷமலர்களாலும்,மோஹநஞ்செய்யவேண்டியவன் இரண்டிலக்ஷ மலர்களாலும், ஒருபிரபுவைச் செயிக்கவேண்டியவர்கள் கோடிமலர்களாலும், வசியஞ்செய்யவும் கீர்த்தியடையவும் வேண்டியவர்கள் பதினாயிர மலர்களாலும், வாஹநாதிகள்வேண்டியவன் ஆயிரமலர்களாலும், முக்திவேண்டியவன் ஐந்துகோடி மலர்களாலும், ஞானம் வேண்டியவன் கோடி மலர்களாலும் அருச்சிக்கவேண்டும். சிவபெருமான் பிரத்தியட்சமாக வேண்டியவன் அரைக்கோடி மலர்களாலருச்சித்து ம்ருத்யுஞ்சயமந்திரத்தை ஐந்திலக்ஷம் உரு ஜபிக்கவேண்டும். லக்ஷமலர்களாற்செய்த அர்ச்சனை தேகசுத்தியும், இரண்டிலக்ஷத்தாற் செய்தது ஜன்மாந்தர ஞானமும், மூன்றிலக்ஷத்தால் * கர்மநாஞாநமும், நான்கிலக்ஷத்தால் ஸ்வப்நதரிசநமும், ஐந்திலக்ஷத்தால் சிவப்பிரத்தியக்ஷமும், பத்திலக்ஷத்தால் எல்லாப்பலனுங் கைகூட்டும். மோக்ஷகாமி லக்ஷம் தருப்பையாலும்,தீர்க்காயுவிரும்பினவன் லக்ஷம் அறுகினுலும், புத்திரகாமி லக்ஷம் கருஊமத்தையாலும், கீர்த்திகாமி லக்ஷம் அகத்திப்பூவினுலும், சித்திமுத்திகள் விரும்பினவன் லக்ஷம் துளசியாலும், ஸத்துருக்ஷயம் வேண்டியவன் லக்ஷம் லக்ஷம் வெள்ளெருக்கமலர் மாதுளைமலர் உற்பலமலர் சப்பாத்திமலர்களாலும், ரோக நீக்கம் விரும்பினவன் கரவீரமலர்களாலும், விஷ்ணு அநுக்ரஹம் விரும்பினவன் அதஸிப்பூவினுலும், முக்திகாமி வன்னியினுலும், சுந்தரமானஸ்திரீயைவேண்டியவன் மல்லிகையாலும், தானியசம்பத்து வேண்டியவன் மலைமல்லியாலும், வஸ்திரசம்பத்து வேண்டியவன் கோங்குமலராலும், மன நிர்மலத்துவம் வேண்டியவன் நிர்க்குண்டியாலும் பூஜிக்கவேண்டும். இப்பொழுது கூறின சிவப்பிரீதியான மலர்கள் கிடைக்காவிடின் சண்பகம் தாழை நீங்கிய இதரபுஷ்பங்களாற் பூஜிக்கலாம். இவ்விரண்டும் பூஜாயோக்கியமின்றி நீக்கப்பட்ட காரணத்தைப் பின்சொல்லுகிறேன். சிவப்பிரீதியான மலர்கள் லக்ஷங்கொண்டு அர்ச்சித்தால் அநந்த பலன்கிடைக்கும். இனிச்சிவபெருமானுக்குத் தான்யஞ் சமர்ப்பிக்கும் பலனைச் சொல்லுகிறேன்.

சிவபெருமானுக்கு [சுவேதாக்ஷதை] வெள்ளிய அக்ஷதை லக்ஷம் [ஒன்பது பிரஸ்தமும் இரண்டுபலமும்] சமர்ப்பித்தால் ஸகல சம்பத்துமுண்டாம். இது போதாயனருஷி கூறிய ருத்ரநியாச விதானப்படி சுந்தரமான வஸ்திரந் தரித்துப் பின்னர் சமர்ப்பிக்கத்தக்கது. இதற்குவில்வப்பழம்வைத்து,

* கர்மநாஞானம்-இது இவ்வாறு முடியுமென்றறியும் ஞானம்.

தாபதிபாராதனைகள்செய்தால் பூஜாபலன் கைகூடும். அவன் இருபது பிராமணருக்கு அன்னங்கொடுக்கவும். நூற்றெட்டுத்தரத்திற்குக் குறையாமல் ருத்திரகாயத்திரி ஜபிக்கவும். எள் அக்ஷதை லக்ஷம் [பதினொருபலம்] சமர்ப்பித்தால் சகல பாபநாசமாகும். இதற்குப் பிராமணபூஜையுஞ்செய்யவேண்டும். யவை அட்சதை லக்ஷம் [எட்டரைபிரஸ்தமும் இரண்டுபலமும்] சமர்ப்பித்தால் சுவர்க்கபோகங்கிடைக்கும். இதற்குப் பிரஜாபத்திய கிருச்சிரத்திற்குச் செலவாகுந் தொகையைப் பிராமணபோஜனத்திற் செலவிடுக. கோதுமை அக்ஷதை லக்ஷம்[நூற்றிருபத்தெட்டுப்பலம்]சமர்ப்பித்தால் ராஜாதிபத்தியம் உண்டாகும். இதற்கும் மேற்கூறிய அளவு பிராமணபோஜனஞ் செய்விக்க. பயறு அக்ஷதை லட்சம் [ஏழரை பிரஸ்தமும் இரண்டு பலமும்] சமர்ப்பித்தால் சுகஜீவனமுண்டாம். உளுந்து அட்சதை லட்சம் [பதினைந்தரைபிரஸ்தம்] சமர்ப்பித்தால் இஷ்டகாமியங்கள்கிடைக்கும். இதற்குப்பதினொரு பிராமணரைப் போஷிக்கவும். சாமை தினை முதலிய தானியாட்சதை லட்சம்[சுமார் ஒருபிரஸ்தம்] சமர்ப்பித்தால் தருமார்த்தகாமமோட்சங்கள் கிடைக்கும். இதற்குப் பன்னிரண்டு பிராமணர்கட் கன்னமிடவும். கடுகு லட்சம் [இருபது பலம்] சமர்ப்பித்தால் சத்துருமாரணமாம். இதற்கு நூற்றொரு பிராமணபோஜனமும் ஒருகோதானமும் ஒரு ருஷபதானமுஞ்செய்க. இன்னும் பலவிதமான தான்யங்களாலும் பூஜைசெய்யலாம். துவரையிலையைக் குங்குமங்கலந்த சந்தனத்திற் றோய்த்துப் பூஜித்தால் அநேக பலன் கிடைக்கும் என்று ஸூதமுநிவர் கூறினர். அதனைக்கேட்ட நைமிசாரணிய வாசிகள் ஸ்வாமீ ! தானியங்கள் லட்சத்திற்கு இவ்வளவு எடைஎனத் தெரிவித்தீர் ; இனிப் புஷ்பங்கள் லட்சத்திற்கு எவ்வளவு எடை யென்பதையுங் கூறியருளவேண்டுமென வினவ, ஸூதமுநிவர் சொல்லலுற்றனர்.

முநிவர்களே ! சங்கபுஷ்பம் ஒரு பிரஸ்தமும், ஜாதிமல்லிகை பதினொரு பிரஸ்தமும், மலைமல்லிகை ராஜிகை ஐந்தரை பிரஸ்தமும், மல்லிகை இருபது பிரஸ்தமும், திலபுஷ்பம் பத்தொன்பது பிரஸ்தமும், கரவீரம் நாற்பது பிரஸ்தமும், நிர்க்குண்டி நாற்பதுபிரஸ்தமும், கோங்குதிரிசனம் இவை பத்துப்பிரஸ்தமும் லட்சமலர்களா மாதலின், பிற மலர்களையும் இவ்வாறே நிர்மாணமறிந்து பூஜிக்கவேண்டும். இனித்தாராபூஜையைச்சொல்லுகிறேன்: சிவலிங்கப்பெருமான்மேல் சொரியும்படி தாராபாத்திரங்கட்டி அதனாற் பூஜித்தால் ஜ்வரபாதை முதலியன நீங்கும். சதருத்திரம்-ஏகாதசருத்திரம்-ருத்திரம்-புருஷஸூக்தம்-மிருத்யுஞ்சயம்-காயத்திரி-சிவநாமங்கள் முதலியவற்றாலும், ஆகமோக்தமான மந்திரங்களாலும் தாராபூஜைசெய்யத்தக்கது. ஜலதாராபூஜையாற் சுகவிருத்தியும் சந்தானவிருத்தியுங்கைகூடும். நெய்யைத் தாராபாத்திரத்திற்சொரிந்து அபிஷேகஞ்செய்வித்தால் வம்ஸவிருத்தியும் ரோகநாசமும்முண்டாகும். இதுகபுஞ்சகத்துவம் வந்தவிடத்தில், பத்தாயிரம் மந்திர ஜபத்தோடும், பிரஜாபத்திய கிருச்சிரச்செலவளவு தொகைக்குப் பிராமணபோஜனத்தோடுஞ் செய்யத்தக்கது. சர்க்கரைகலந்த பாலைத் தாரா



(16- தாழம்பூவுக்குச்சாபம்வந்தது.

பாத்திரத்தா லபிஷேகித்தால் ஒருவன் தன்மேற்செய்த பிரயோகமொழியும்; இதுபதினுயிர மந்திரஜப முடியுமளவுந் தாரையிருக்கவேண்டும். சத்துரு உச்சாடனமுங் கலகமும் நீங்கும். பரிமளங்கலந்த தயில தாரை சத்துருக்களைத் தொந்தரைசெய்யும். தேன்தாரை பலரோகங்களைப் பரிகரிக்கும். கருப்பஞ்சாற்றுத்தாரை ஸகல துக்கங்களையுமொழிக்கும். சுத்த ஜலதாரை மோட்சபலன் கொடுக்கும். இவை ஒவ்வொன்றுந் தீமையை யகற்றிச்சுகங் கொடுக்கத்தக்கவை. இவற்றைப் பதினுயிர மந்திரஜபத்தோடும், பதினெரு பிராமணபோஜனத்தோடுஞ் செய்வித்தால் இஷ்டகாமியங்கள் கைகூடும். முநிவர்காள்! நீவிர்கேட்டவற்றைச்சொன்னேன். இப்படிப்பூஜித்தோர் சகல பாபமு நீங்குவர். ஸ்கந்தர்-பார்வதி-கணபதி-இவர்களுடன்கூடிய சிவபெருமானை ஒருதரமாவது பூஜித்தவனுக்கு இம்மை மறுமைப்பலன்கள் கைகூடி, கோடி சூரியப்பிரகாசமான விமானமேறி அவ்வுலகமடைந்து அநேகதேவதாசிகள் நடித்துப்பாட, சிவபெருமான்போல எவ்வுலகத்தில் எவ்வளவுகாலம் எப்படிவாழ விரும்புவரோ அவ்வுலகத்தில் அவ்வளவுகாலம் அப்படியே வாழ்வாரென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

பூஜாவிதிவர்ணன முரைத்தது

முற்றிற்று.

முப்பதாவது

தாழம்பூவின் சாபமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! நீர் தன்யர்: அதிக புண்யர்: தேவரீர் சொல்லிய சிவமஹாத்மியத்தைக் கேட்டு மிகச் சந்தோஷித்தோம். அதில் சண்பகம் தாழை இவ்விரு மலர்களும் பூஜாயோக்கியமற்றவை எனக் கூறினீராதலின், அக்காரணங்களையுங் கூறவேண்டும் எனக் கேட்ட நைமிசாரண்யவாசிகளை நோக்கி ஸூதர்சொல்லுகிறுர்:—ஒருகாலத்தில் ஸ்ரீராமர் லக்ஷ்மணரோடும் சீதையோடும் தந்தைகட்டளைப்படி வனசஞ்சாரஞ்செய்யச் சென்றபொழுது பல்குநதிதீரத்திலிருக்கையில், தன் பிதாவின் சிரார்த்ததினம் வரவே, இன்று இத்திதியை எவ்வாறு முடிப்போமென்று யோசித்து, தம்பியாகிய இலக்ஷ்மணனைப் பார்த்து, சமீபத்திலிருக்குங் கிராமத்திற்குப்போய், கொஞ்சம் தானிய முதலானவற்றைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டனுப்ப, இலக்ஷ்மணன் நாணத்துடன் சென்று, சிரார்த்தகாலம் சமீபிக்குமட்டும்வாராமையால் காலங்கழியுமென்பதறிந்து இராமமூர்த்தியுஞ்சென்றனர். சீதைமட்டுந் தனியேயிருந்து, நாம் பகலிற் சிரார்த்தம் செய்யவேண்டியதற்குச் சாமான்களில்லையே; என் கொழுநனும் கணவனும் வரவில்லையே: எப்படி இதனை முடிப்பது? சிரார்த்தகாலம் கழிகிறதே: ஆசுரகாலம் வருமே: என்று விசாரத்தோடுகூடி நெடுநேரம் யோசித்து, விதிப்படி ஸ்நானஞ்செய்து, தாபசம் இங்குதி இவற்றின் பழத்தைக்கொண்டுவந்து நெருப்பில் வேவித்து மணல்

மேடையிலிருந்து, அப்பொழுதும் அவ்விருவர் வராமையால், பிதுர்க்களுக்குப் பிண்டத்தை நானெப்படி கொடுப்பேன் என்று வருந்தியிருக்கையில், அவ்விடத்திற்கிடைத்த சிறிது மாவைப் பிண்டஞ்செய்து, இவை தன் மாமனான தசரதராஜனுக்கு அர்ப்பணமாகவேண்டுமென நினைத்தாள். அப்பொழுது பிதுர்க்கள் வந்து, நாங்கள் நீ செய்யுஞ்சிராத்தத்திற்காகத் திருப்தியடைந்தோம். சீதா! நானுவித பூஷணாலங்காரமான உன் கையாற் பிண்டத்தைப் பெற்றோமென்றேற்றுநிற்கையில், சீதாதேவி, நீங்கள்யார்? என்று வினவ, அதைக் கேட்ட பிதுர்க்களில் மாமனான தசரதன் நன்னியமமுடையாய்! யான் உன் மாமன். நீ கொடுத்த பிண்டம் எங்களைத் திருப்திசெய்தது. அது ஸபலமாயிற்று என்றான். சீதை நீங்கள் கையால் ஏற்றுக்கொண்டதைக்கேட்டால் என்கணவர் நம்பமாட்டாரோ எனக்கூறினாள்.

தசரதன் அவ்வாறாயின் தக்க சாக்ஷிகளை வைத்துக்கொள் என, சீதை அச்சமைபத்தில் அங்கிருந்த பல்குநதி - பசு - அக்நி - தாழை இந்நான்கையும் பார்த்து நீங்கள் நால்வரும் இதற்குச் சாட்சியிருந்து என் புருஷனுக்குச் சொல்லவேண்டுமென்ன, பிதுர்க்கள்சென்றார்கள். பிறகு ஸ்ரீராமர் வந்து பெண்ணே! விரைவில் உன் காரியங்களைச் செய்; உன் மாமன் வருவான் என, ஜாநகி ஆச்சரியப்பட்டு, நடந்தவை ஒன்றுங் கூறாது இருந்தாள். ஆலசியஞ்செய்வது கண்ட ஸ்ரீராமர் இப்படி ஏன் சும்மா இருக்கிறாய்? என, சீதை நடந்தவற்றைச் சொல்ல, ஸ்ரீராமர் தம்பியைப்பார்த்து, இலக்ஷ்மணா! நீ சீதை கூறியதைக் கேட்டனையா? என்று, பெண்ணே! நாங்கள் சாஸ்திரோக்தமாகச் செய்தாலும் எங்கட்குப் பிரத்யக்ஷமாகாத பிதுர்க்கள் உனக்குப் பிரத்தியக்ஷமானார்களென்பது அபத்தம் எனக் கூறக் கேட்ட சீதை நாணமுற்று, ஸ்வாமீ! நான் பொய் சொல்லவில்லை. எனக்குச் சாக்ஷிகளும் உண்டு. அச்சாட்சிகளை விசாரியும் என, ஸ்ரீராமர் சாட்சியிருந்தால் நம்பத்தக்கதே என, சீதை அந்நால்வரையுங்காட்டி இவர்களே சாட்சிகள் என, அச்சாட்சிகள் இராமர்முன்சொல்லப் பயந்து, நாங்கள் இதை யறியோம் எனக் கேட்ட இராமலக்ஷ்மணர் ஒருவரையொருவர் பார்த்து நகைத்துக்கொண்டு, நாம் வழக்கப்படி சிராத்தஞ் செய்யவேண்டியதேயாதலின் விரைவிற் சமயல் செய்க என, சீதை துக்கித்துப் பாகஞ்செய்துகொண்டிருந்தாள்.

அப்பொழுது இராமர் சங்கல்பஞ் செய்து சிராத்தத்திற்குப் பிராமணர்களில் ஆவாகனஞ் செய்கையில், சூரியசமீபத்திலிருந்து ஓர் அசரீரி "புத்ரனே! ஏன் *அக்நௌகரணஞ்செய்கிறாய்? நாங்கள் ஜாநகி செய்த சிரார்த்தத்தால் திருப்தியடைந்தோம்" என்று கூறக் கேட்டு, ஸ்ரீராமன் நான் ஜாநகி சொன்னதை உண்மையெனக்கொள்ளவில்லையென, பிதுர்க்கள் "செய்த சிரார்த்தத்தை மீண்டுஞ் செய்யப்படாது" என்றும், இராமர் அதையும்

* அக்நௌகரணம்-ஓமஞ்செய்தல்; இது முற்பட்டது. இதனுடன் பிராமண போஜனமும், பிண்டப்ரதானமுங் கூடியது சிரார்த்தமெனப்படும்.

நம்பாது யோசிக்கையில், சூரியபகவான் பிரத்தியக்ஷமாய் "நீயேன் மறு படியுஞ்சிரார்த்தஞ்செய்கிறாய்" என, இராமலக்ஷ்மணர் சீதையைப்பார்த்து நன்றாயிருந்தது; நீ புண்யசாலி! என்று புகழ்ந்து, செய்த பாகத்தைப் புசித்தபிறகு, ஸ்ரீராமர் தம்பியைப்பார்த்து லக்ஷ்மணா! இவர்கள் சாக்ஷிகோரப் பட்டிருந்தும் ஒன்றுங்கூறாதிருந்தனர். துன்மார்க்கர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கையில், சீதை அந்தச் சாட்சிகள்மீதுகோபித்து, நீங்கள் வாஸ்தவத்தை என் பர்த்தாவுக்குச் சொல்லாமையால் பல்குநதியே! நீ * அந்தர்வாஹிநியாயிருக்கவேண்டும். தாழம்பூவே! நீ என்றாற்பூசிக்கப்படும் பரமேஸ்வரனுக்குப் பூஜாயோக்கியமின்றிப்போவதே உனக்குத்தகும். பசுவே! உன் வாய் யோக்கியமற்றமையால், நீ பின்புறத்தில் யோக்கியமும் முகத்தில் அயோக்கியமுமாவாய். அக்கினியே! எல்லாத் தேவர்கட்கும் முகஸ்வரூபியாகிய நீ இதனால் ஸர்வபக்ஷகனாகவேண்டும் என்று சபித்தாள். அந்நால்வரும் அதைப்பெற்றார்கள். அதுமுதல் அந்நான்கும் அச்சாபத்தால் அவ்வாறாயின. இதனால் தாழம்பூவிற்குச் சாபம் வந்த வகையைச் சொன்னேன். இனி சண்பகப் பூவிற்குச்சாபம் வந்ததைச் சொல்லுகிறேனென்று ஸூத முனிவர் சொல்லத்தொடங்கினர்.

தாழம்பூவின் சாபம் முரைத்தது

முற்றிற்று.

முப்பத்தோன்றாவது
சண்பகப்பூவின்சாபமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளே! சகல லோகத்திற்கும் சுகத்தைக் கொடுக்கும் சிவபெருமான் கோகர்ணேஸ்வரரெனத் திருநாமமுற்றுத் தென்றிசையிலிருக்கிறார். அவரது தரிசனத்தால் பாபங்களெல்லாம் நசிக்கும். ஒரு காலத்தில் அப்பெருமானைத் தரிசிக்க நாரதமுனிவர் அங்கே வந்தார். அவ்வாறு வருகையில் பரிமளத்தோடலர்ந்த சண்பக விருக்ஷமொன்றையும், அதனருகே மலர் கொய்யவந்திருக்கும் வேதியனொருவனையுங் கண்டார். அவ்வேதியன் நாரதபகவானையும் அவர்கையிலேந்திய மகதிவீணையையும் கண்டு, அதன் நாதத்தைக் கேட்டுச் சிறிதுநேரம் அங்கிருந்து தான் வந்த வேலையை (நாம் இப்பொழுது மலர்கொய்தால் இவரும் அவ்வாறு செய்வர் என்னும் எண்ணத்தால்) செய்யாமல் இருந்தான். நாரதர் அவ்வந்தணனைக் கண்டு, மறையோய்! நீ கையிற் பாத்திரமேந்தி இங்கு வந்த காரணமென்ன? என வினவ, வேதியன் உண்மை கூறாமல் நான் பிச்சையெடுக்கப் போகின்றேனென, நாரதமுனிவர் அவனை நீங்கித் திருச்சந்நிதானத்தினுட் சென்று கோகர்ணேசுவரரைத் தரிசித்துத் துதித்து மீண்டும் வெளியே வந்து அவ்வேதியனைக்கண்டார்; அப்பிராமணனும் முனிவரறியவொட்டாது

* அந்தர்வாஹிநி-மேலே பிரவாகமாக வராதது.

மலர்கொய்து பூஜித்துத் தன் கையிலிருந்த பாத்திரத்தை மறைத்துக் கொண்டு வெளிவர, இருவரும் சந்திக்க, நாரதர் அவனைக் கண்டு எங்கே வருகிறாய்? என, வேதியன் நான் எங்கும் பிச்சை கிடைக்காமையாற் போகின்றேன் என்று பொய்கூற, நாரதர் தன் ஞானத்தால் நடந்த விர்த்தாந்தங்களை யுணர்ந்து, சண்பக விருக்ஷத்தருகே போய், மரமே! இவ்வேதியன் எங்கே போனான்? உன்னிடம் எவ்வளவு மலர்கள்கொய்தான்? எனக்கேட்க, அப்பிராமணன் தன் விர்த்தாந்தங்களை ஒருவரோடும் உரைக்க வேண்டாமென முன் தன்னைக் கேட்டுள்ளதால், அம்மரம் அப்பிராமணன் யார்? புஷ்ப்பமேது? நீயார்? என்னை யேன் கேட்கின்றனை? என, நாரதபகவான் உண்மையை யுணர்ந்து, சிவசந்நிதியை யடைந்து, சிவபெருமானைப் பூஜித்துள்ள மலர்களைக் கணக்கிட்டுப் பார்க்க, நூற்றொரு மலர்களிருந்தன.

இப்படி யிருக்குஞ் சமையத்தில் வேறொரு வேதியன் மலர்களைக் கரத்திற் கொண்டுவந்து பூஜித்தான். அப்பிராமணனைப் பார்த்த நாரதமுனிவர், நீ யார்? நீ யாது காரணத்தாற் பூஜிக்கின்றனை? இந்தப் புஷ்பங்கள் யாராற் கொண்டுவரப்பட்டுப் பூஜிக்கப்பட்டன? என வினவ, அப்பிராமணன் நிஜவார்த்தைகள் சொல்கிறான். நானோ சதாசிவ பூஜைசெய்து முக்தியடைய வேண்டி வந்தேன். இது நிச்சயம். இதன் முன்வந்து பூஜித்த பிராமணன் இராஜாநுக்ரக மடையவேண்டுமென்று சிவபெருமானைத்தினந்தோறும் நூற்றொரு சண்பகமலர்களால் அருச்சித்து அவ்வாறே ராஜப்பிரியமடைந்து அவ்வரசனாற் செல்வம்பெற்று மற்றுமுள்ள மறையவரை வருத்துகின்றான். இந்தச் சண்பகமலரின் விசேடத்தாற் பெருமை யடைந்து இன்னும் பூஜிக்கிறான். நான் மோக்ஷகோரிக்கையாற் பூஜிக்கிறேன் என்றான். நாரதர் அதைக்கேட்டு ஸத்தியவானான பிராமணனைப் பார்த்து நிரந்தர முக்தி உனக்குக் கிடைப்பது சத்தியம் என்று கூறி, அவன் கூறிய சங்கதிகளைச் சிவபெருமானுக்கு விண்ணப்பிக்கவேண்டிச் சந்நிதியையடைந்து, சுவாமீ! அவ்வந்தணன் சண்பகத்தாற்பூஜித்து ராஜாநுக்ரஹத்தையும், வேதியருக்குத்தானங்கொடுக்கும் அதிகாரத்தையும் பெற்று, அந்தணரை வருத்துகின்றான். இவையெல்லாம் சண்பகப் புஷ்பத்தின் பூஜாபலம் என்று சொல்லி, இவ்வகைய பலனை அத்துஷ்டனுக்கு ஏன் கொடுக்கவேண்டும்? என, சிவபெருமான் நாரதரே! அது அச்சண்பகத்தின் பலன். சண்பகத்தால் அருச்சித்தவர்கட்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கத் தடையில்லை எனச் சொல்லிக்கொண்டிருக்குஞ் சமையத்தில், ஒரு பிராமணஸ்திரீ துக்கமடைந்து சாம்பசிவனைப் பார்த்து, சங்கரா! நான்கெட்டேன்; துஷ்டவேதியனைத் தேவரீர் தண்டிக்கவேண்டும். என் வீட்டிலிருக்கும் பொருளை யெல்லாம் அவன் பலவந்தமாகக் கொண்டு போனான் எனச் சொல்லி முறையிட, நாரதமுநிவர் அந்தப் பிராமணஸ்திரீயைப்பார்த்து, மாதே! யாவரால் யாது துக்கமுற்று அழுகின்றனை? எனக்கேட்க, பிராமணஸ்திரி—மகாநுபாவரே! என் துக்கத்தைச் சொல்கிறேன் செவிகொடுத்துக் கேட்பீராக எனச் சொல்லத்தொடங்கினள்.

முநிவரே! என் கணவர் கன்மவசத்தால் மூடவராய் வீட்டிலிருந்தார். எனக்கொரு குமாரத்தி விவாககாலஞ் சமீபித்து வீட்டிலிருக்கிறாள். அப்பெண்ணுக்கு மணஞ்செய்யவேண்டிய அவசியத்தாலும் பொருளில்லாமையாலும் என் கணவர் அரசனிடத்தில் இன்று தானங்கேட்டு வாங்கினர். அதற்காக இத்துஷ்ட வேதியன் என் வீட்டில் பலாத்காரமாய் நுழைந்து அங்கிருந்த பொருளையெல்லாங் கொண்டுபோனான். அரசன் இவை யொன்று மறியாது அந்தகன் போன்றிருக்கின்றான். இவ்விஷயத்தை முறையிட்டாலுங் கேட்கவில்லை. எனக்குச் செய்யத்தக்கது இதுவெனத் தோன்றவில்லை, என்னைக் காக்கும் பிரபுவுமில்லை. என் வீட்டிலுள்ள பொருளைக் கொள்ளை கொண்டு சென்ற பிராமணன் தினந்தோறும் சிவபூஜைக்கு இங்கே வருகின்றான் என்று சொல்லுகையில், நாரதபகவான் அப்பெண்ணைப் பார்த்து, சுந்தரீ! உன் கணவனுக்கு அரசன் என்ன தானங்கொடுத்தான்? எனக்கேட்க, பிராமணஸ்திரீ சொல்கின்றாள். ஓ அந்தணரே! அரசன் பெருஞ்செல்வத்துடன் ஒரு * உபயகோமுகி தானஞ்செய்தனன். அதையும் இங்கே பூஜைக்கு வரும் பிராமணனே கொடுப்பித்து, தான் கொடுப்பித்த காரணத்தால் என் வீட்டிற்கு வந்து கொள்ளைகொண்டான். இவ்விபரீத நஷ்டத்தை யாரிடஞ் சொல்வேன்? என்னசெய்வேன்? என் கணவர் இதுவரையில் இவ்வகைய பாபதானம் வாங்கினவரல்லர். (என் கன்னிகைக்குக் கலியாணமாக வேண்டியது கருதி வாங்கினர்.) அத்தானம் வாங்கிய பொருளிற் பாதிகொடுக்கச் சொல்லித் தொந்தரவுசெய்தான். அதற்கு நாங்கள் தனத்திற் பாதிகொள்க என, அவன் தனமட்டும் போதாது பசுவையும் பாகித்துக்கொடு என, பசுவை விலைமதித்தலும் பாதியாகப் பகிர்தலும் தோஷகரமாதலின் அப்பாவத்தை யொழிக்க வழியில்லை எனச் சொன்னோம் என்று கூறின அப்பார்ப்பனி மொழியைக் கேட்ட நாரதபகவான் சிவபெருமானை நமஸ்கரித்து ஸ்வாமீ! இத்தன்மையான துஷ்டப் பிராமணன் கையால் தேவரீர் எவ்வாறு பூஜிக்கப்படுகிறீர். இவனைக்காட்டிலும் துஷ்டனொருவனிலன். முதலில் இராஜனிடத்தில் தானமே வாங்கப்படாது. அப்படிப்பட்ட தானத்தை வாங்கினவனிடத்தில் பசுவைப்பங்கிட்டுப் பொருள் வாங்குவோன் பாபத்திற்கு அளவில்லை.

கோமஹாத்மியம்.

பசுவின் வலதுகொம்பில் கங்கை, இடதுகொம்பில் யமுனை, மத்ய பாகத்தில் சரஸ்வதி, முன்காலில் பிரமன், மத்தியத்திற் பரிவாரங்களோடு கூடிய உருத்திரன், பின்பாகத்தில் விஷ்ணு, பக்கங்களில் அநேக தீர்த்தங்கள், வயிற்றின் வலப்பாகத்தில் ருஷிகள், இடப்பாகத்தில் சகல தேவர்கள், வயிற்றின் கீழ்ப்பாகத்தில் சகல நதிகள், குளம்பில் வேதங்கள், பால்மடி

* உபயகோமுகி - பசுவானது பிரசவிக்கையில் கன்று தாயினின்று முற்றும் பிரியாதிருக்கையில் செய்யுந்தானம். கன்றின்முகம்ஒன்று பசுவின்முகம் ஒன்று ஆக இரண்டு முகங்களையுடையது. இவ்வாறு கொடுக்க இயலாதவர் பொன்னாற் செய்து கொடுப்பதுமுண்டு.

யில்சமுத்திரங்களாக இவ்வாறு பசுவினிடமாக உலக முழுவதும் விளங்கும். இவ்வகைய சிறப்புடைய பசுவைப் பூஜித்துப் பிரதக்ஷிணஞ்செய்தால் பூப்பிரதக்ஷிணஞ்செய்த பலன் கிடைக்கும். கோதானஞ்செய்கிறவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூமிமுழுவதையுஞ் சொர்ணபூரிதமாகத் தானங்கொடுத்த பலன் பெறுவான். ஆகையால் கோதானம் பூதானமிரண்டும் சமபலமுடையன. பசுவின் சாணத்தையும் கோமூத்திரத்தையும் உட்கொண்டவன் சகல பாபமும் நீங்குவான். பசுவிடத்திற் பூசிக்கத்தகாத இடம்சிறிதுமில்லை. உலகத்தில் கோதானம் பூதானம் வித்யாதானம் இம்மூன்றும் பவித்ரமானவை. இவை நரகத்திலிருந்த நூற்றொரு தலைமுறைகளைச் சுவர்க்கவாசத்திற் சேர்க்கத்தக்கவை. பிராயச்சித்தமில்லாத பாபங்களும் கோதானத்தாலொழியும். பசுவின் தரிசனமாவது பரிசமாவது தியானமாவது உண்டுசெய்யும் பலனைச் சொல்லமுடியாது. அதின் கொம்பில் பொன், குளம்பில் வெள்ளி, புட்டத்தில் தாமிரம், நேத்ரத்தில் பவளம், கழுத்தில் ஆபரணம், ஸர்வாங்கத்திலும் வஸ்திரம் இவற்றாலலங்கரித்து, பால்கறக்கும் வெண்கலபாத்திரத்தோடும், கன்றோடு நன்றாய்க் கறக்கும் இளம்பருவமும் அழகுமுடைய பசுவைத்தேசகாலத்தில் யோக்கியனுக்குத் தானஞ்செய்தால், கொடுத்தவனுக்கு எவ்வுலகத்திலும் துர்லபமானது ஒன்றுமில்லை. இவ்வகையகோதானங்கொடுத்தவனுக்குப் பெற்றுக்கொண்டவன் செய்திருக்கும் புண்ணியத்தில் எட்டுப்பங்கு அதிக புண்யம் கிடைக்கும். தாயை விற்றல்-கன்னியாவிற்கிரயம் - வேதவிற்கிரயம்-கோவிற்கிரயம் இந்நான்கு பாபங்கட்கும் பிராயச்சித்தமில்லை.

ஓ சுவாமீ! இத் துஷ்டப் பிராமணன் பசுவைப் பங்கிடச் சொல்கிறானே யாதுசெய்வது? தேவரீருக்குப் பக்தனாதலின் ஒன்றுஞ் செய்யக்கூடவில்லையென்று வருந்தினர். அதனைக் கேட்ட சிவபெருமான் நாரதமே! நீயென்பரமபக்தனாதலின் உன் மனதில் எப்படி தோன்றுமோ அப்படிச்செய்தால் அது எனக்குச் சம்மதமே. இவன் என் பக்தனாதலின் முன்னே பாபபலத்தையும், பின்பு சிவாராதனைசெய்த பலத்தையும் அடையும்வண்ணஞ்செய்யலாம் எனக் கட்டளையிட, நாரதமுநிவர் சண்பகவிருட்சத்தையடைந்து, மரமே! உன்னிடத்திலுள்ள பல மலர்களை நாளாவண்ணம் அறுத்துச்செல்வோன் யாவன்? உண்மையை யொளியாது சொல் என, அஃது ஒன்றுங் கூறாதிருப்ப, நாரதர் அப்பொழுது கோபங்கொண்டு, சண்பகமரமே! உலகத்தில் ஸத்தியம் எல்லாவற்றிற்குஞ் சாதனமானது. ஸத்தியத்தைப் பேசினால் இவ்வுலகத்தும் மோட்சவுலகத்துந் துர்லபமொன்றுமில்லை. நீயப்படியின்றி அஸத்தியங் கூறினமையின், இதுமுதல் உன் புஷ்பம் உலகத்திற் சிவபெருமானுக்குப் பூஜாயோக்கியமில்லாததாகுக என்று சிவாநுக்ரஹத்தாற் சாபங்கொடுக்கையில், துன்மார்க்கவேதியனும் அவ்விடம் வந்தனன். நாரதமுநிவர் அவனைக்கண்டு, அடா! நீ சண்பகப்பூவின் விசேஷத்தாற் சிவபூஜைசெய்து அரசனிடம் தானதிகாரத்தை வாங்கி, அநேகம் பிராமணரைத் தொ

ந்தனைசெய்கிருய். நீ ராட்சஸகாரியஞ் செய்துகொண்டிருப்பதால் ராட்சஸனுகக்கடவாய் என்று சபிக்க, பிராமணன் பயந்து உடல் நடுங்கி, என் தப்பிதத்தை மன்னித்துக் காப்பாற்றவேண்டும் என்று நாரதமுநிவருடைய பாதங்களைப்பணிய, நாரதமுநிவர் சிவபெருமான் கூறிய வார்த்தையைமனதிற்கொண்டு, அவன் விஷயத்தில் தயாசொரூபியாய், பிராமணு! நான் சொன்னது பிசகாததலின் நீ அவ்வாறே ராட்சஸவடிவடைவாய் என, அவன் அப்பொழுதே விராதன் என்னும் அசுரனுனன். அப்பொழுது அவனைப்பார்த்து நாரதர்—நீ ஸ்ரீராமனுடைய தரிசனமடைந்து அவனுல் மரணமடைந்து, பிறகு சிவாநுக்ரஹத்தால் திவ்விய ரூபமடையக்கடவாய் என்று சாபாநுக்ரஹஞ் செய்தனர். அவன் அப்படியே சகலப்பிராணிகளுக்கும் பயஞ்செய்யத்தக்கவிராதனுனன். நாரதர், சிவபெருமானை நமஸ்கரித்துச் சண்பகத்தின் மகிமையை வர்ணித்துச் சுயேச்சையாகச் சென்றுர். ஆதலின் சண்பகமலர் சிவபூஜைக்கு யோக்கியதை யில்லாததாயிற்றென்று அறியுங்களென ஸூதமுநிவர் சொல்லினர்.

சண்பகப்பூவின் சாபமுரைத்தது
முற்றிற்று.

முப்பத்திரண்டாவது
கணபாலன் அவதரித்த அத்தியாயம்.

ருஷிகள் ஸூதமுநிவரைப்பார்த்துப் பரமபுண்ணியரே! நாங்கள் கேட்ட விஷயங்கட்குச் சமாதானமுரைத்தீர். எங்கள் சந்தேகங்கள் விலகின. ஸர்வசந்தேகங்களையும் போக்கடிக்கும் திறமையையுடைய வியாஸபகவான் தேவரீருக்குக் குருவாயிருத்தலின், கிருதார்த்தரும் தந்யருமாகிய தேவரீர் மகிமையை யாங்கள்கூற முடியுமோ? இதுவரையில் * பஞ்சாயதன பூஜை உத்தமமென்றும், இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கதென்றுங் கூறினீர். அதில் சிவபஞ்சாயதனம் விஷ்ணுபஞ்சாயதனம் சக்திபஞ்சாயதனம் சூரியபஞ்சாயதனம் கணபதிபஞ்சாயதனம் என்னும் ஐந்துபூஜைகளையும் பிரதானமாகக் கூறினீர். கணபதி எவருடைய புதல்வர்? அவருக்கு இவ்வளவு மஹத்வம் எப்படி வந்தது? சிவபெருமான் முதலிய பெருந்தேவர்களுடன் அவர் இருப்பானேன்? அதிலும் அவரை முற்படப் பூசிப்பானேன்? எனக் கேட்க, அந்தநைமிசாரணியவாசிகளைப்பார்த்து ஸூதமுநிவர்சொல்லுகிறுர்.

புண்யபுருஷர்களே! உலகத்திலுள்ளவர்கட்கெல்லாஞ் சுகத்தையுண்டுசெய்யும் நிமித்தமாகக் கேட்டீர்கள். அதையுஞ்சொல்லுகிறேன்: சிவபெருமான் ஹிமாசலமன்னன் புதல்வியாக அவதரித்த பார்வதிதேவியை மணஞ்செய்து அழைத்துக்கொண்டு திருக்கைலாயகிரியையடைந்து சிறிதுகாலஞ்சென்றபிறகு, ஒருநாள் பார்வதிதேவி தன் தோழிகளாகிய ஜயை விஜயை என்பவருடன் கூடி விளையாடிக்கொண்டிருக்கையில், அத் தோழிய

* பஞ்சாயதனம் - ஐந்துமூர்த்தங்களை ஒன்ருகப் பூஜித்தல்.

ரில் விஜயை தேவியைப்பார்த்து, தாயே! சிவபெருமானுக்கு நந்தி பிருங்கி முதலிய பிரமதகணங்கள் கணக்கின்றியிருக்க, உனக்குக் கணங்கள் ஒருவருங்காணேம். அவர்களே நமது வாயிலிற் சிவாக்கினைப்படி காக்கின்றனர். அவர்கள் நமதுசேனையன்றோ? எனின், ஆம். அவர்கள் சிவபெருமான்கட்டளையைக் கொள்வதுபோல நமது கட்டளையைக் கொள்ளமாட்டார்கள் ஆதலின் ஒரு சேவகன் நமது மனுஷனுகவிருந்தால் நன்றெனச் சொல்லினள். தோழிவார்த்தையைக் கேட்ட பார்வதி இதவார்த்தையாகக்கொண்டு, அதனை முடிக்கப் பிரயத்தனமுடையவளாயிருக்கையில், ஒருநாள் பார்வதியம்மையார் அந்தப்புரத்தில் நீராடிக்கொண்டிருக்கையில், சதாசிவமூர்த்தி வாயிலிலிருந்த நந்திதேவர் வார்த்தையைக் கொள்ளாது உள்ளே செல்ல, ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த மாதேவி * நாணமுற்றுச்சென்று, தோழி கூறிய சொல்லைச் சரிதானென்று தீர்மானித்தாள். இவ்வாறு நடந்தமைபற்றி எனக்கு யோக்கியனான ஒரு சேவகனிருக்கவேண்டுவதுதான். என் கட்டளையின்றி அணுமாத்திரமும் இவ்வந்தப்புரத்தில் ஒன்று நடக்கப்படாது என்று

𑌏𑌵𑌂𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑌾𑌦𑍇𑌵𑌀 𑌜𑌲𑌂𑌜𑌗𑍍𑌰𑌾𑌹𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ।
𑌦𑍇𑌹𑌸𑍍𑌥𑌂𑌮𑍃𑌦𑌮𑌾𑌦𑌾𑌯 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌰𑍂𑌪𑌂𑌪𑍍𑌰𑌭𑍋𑌶𑍍𑌶𑍁𑌭𑌂 ॥ ௧௭॥
𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌯𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌕𑌾𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 ।
𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌗𑌜𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂𑌶𑌿𑌵𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 ॥ ௧௮॥

ஏவம்விசார்யஸாதேவீ ஜலம்ஜக்ராஹபாணிநா |
தேஹஸ்தம்ருதமாதாய த்யாத்வாரூபம்ப்ரபோ:ஶுபம் || (௧௭)
நிர்மாயப்ரணவாகாரம் சதுர்பாஹுந்த்ரிலோசநம் |
ஶுக்லாம்பரதரம்விஷ்ணும் கஜவக்த்ரம்ஶிவாக்ருதிம் || (௧௮)

யோசித்துக் கையிற் சலங்கொண்டு உடலிற் றேய்த்துருட்டி, தனது தலைவராகிய சிவபெருமானுடைய திருவுருவைத் தியானித்து, அதுபோலவே பிரணவஸ்வரூபமும் யானைமுகமும் சதுர்புஜமும் திரிநேத்திரங்களும் மங்களரூபமுமுடையவராய் வெள்ளிய வஸ்திரமணிந்து ஸர்வவியாபியாய் விளங்கும் கணன் என்னும் புத்திரனை நிர்மித்துப் பிராணன்கொடுத்து, வாயிற்படியிலிருத்தி, நீ என் உத்தரவின்றி ஒருவரையும் உள்ளே விடப்படாது என்று கட்டளையிட்டு, நல்ல வஸ்திராபரணங்களையளித்து, நீ தீர்க்காயுவாயிருவென்று ஆசிர்வதித்து, நீ என் பிரிய புத்திரன் என்று கூற, உமா புத்திரன் அன்னையைப் பணிந்து, தாயே! உனக்குள்ள பணிவிடையெல்லாம் செய்கிறேன் எனக் கேட்ட பார்வதி நீ இப்பொழுது துவாரபாலகனுயிரு என்று ஒரு தண்டத்தைக் கொடுத்துச் சந்தோஷித்து, முகத்தில் முத்தமிட்டு ஆலிங்கனஞ்செய்து அந்தப்புரஞ்சென்றாள். கணதேவர் அதுமுதல் பார்வதியின் கட்டளைப்படி திருவாயில் காத்திருந்தனர்.

* நாணமுறுதற்குக் காரணம்—ஸ்நானஞ் செய்கையில் உபசார வஸ்திர மணிந்து நிற்றலின் என்க.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் உமாபிராட்டியார் தோழியருடன் நீராடிக்கொண்டிருக்கையில், சிவபெருமான் பிரமதகண ஸஹிதமாகத் தேவியின் அந்தப்புரத்தை யடைந்து உள்ளே செல்ல யத்தனிக்கையில், கஜானனர் என் தாய் ஸ்நானஞ் செய்தலின் உள்ளே போகக்கூடாது என்று சொல்லித் தடைசெய்து தண்டத்தைக் கையிலெடுத்தனர். அதுகண்ட சிவபெருமான் யான் யாரென்று நினைத்தாய்? நானே சிவன் என்று கூறி, மீண்டும் நுழைகையில், கணன் கோபித்துக் கையிலிருந்த தண்டாயுதத்தால் ஓரடி யடித்து, சிவனுனெலென்ன? இப்பொழுது ஏன் போகிறாய்? என, சிவபெருமான் நீ என்னையறியாய்; மூர்க்கனுயிருக்கிறாய்; உன்னை இங்கே யமர்த்தினவளுக்கு நான் கணவன் என்று மேலுஞ் செல்ல, கணபதி மறுபடியும் ஓரடி யடித்தனர். அதனால் சிவபெருமான் கோபித்து, பிரமத கணங்களை விளித்து, இவன் யார்? இவன் துர்மார்க்கத்தனத்தைப் பாருங்கள் என்று சொல்லினர். பிறகு பிரமதர்கள் துவாரபாலகராயிருக்கும் விநாயகரைப் பார்த்து, நீயார்? நீ ஏன் இங்குவந்தாய்? உன்வேலை யென்ன? என்று வினவ, கணன் நீங்கள் யார்? இங்கேன் வந்தீர்கள்? தூரமாகப் போகக்கடவீர்கள் எனக் கூற, பிரமதகணங்கள் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்து, இவன்யார்? சத்துருவைப்போலக் கடின வார்த்தைகள் சொல்கின்றானென்று ஆலோசித்து, மறுபடியும்கணனைப்பார்த்து,அப்பா! நாங்கள் சிவகணங்கள். சிவபெருமானது கட்டளையைச் செய்வோர். உன்னையும் எங்கள் கணத்தைச் சேர்ந்தவனென்று கருதியேவாளா விருக்கிறோம். இனி தூரத்திற்செல். இங்கேயிருந்தால் இறப்பாய் எனச்சொல்லியும், கணன் துவாரத்தை விடாமல் அங்கேயே யிருக்க, கணங்கள் யாவரும் சிவபெருமானை யடைந்து நடந்த விர்த்தாந்தங்களை வெளியிட, சாம்பமூர்த்தி அவர்களைப் பார்த்து, நீங்கள் நபுஞ்சகர்போலிருக்கிறீர்கள்; அவனைத் தூரத்தேபோகச்செய்யுங்கள் எனக் கூற, அதைக்கேட்ட பிரமதர் மீண்டும் வந்து கணனைக் கண்டு, அடா! உன்னை வாயிற்படியில் வைத்தவர் யார்? எங்களை மதியாமல் நீ பிழைப்பையா? நாங்கள் துவாரபாலராக இங்கிருந்தால் எங்களை இப்படிப் பேசுவது தகுமா? நரியானது சிங்காசனமேறித் தானே அரசனுயிருப்பதாக நினைப்பதுபோல நீ யெண்ணுகின்றனை. நாங்கள் போர்செய்ய எத்தனிக்கு முன் உன் சூரத்துவம் நிற்கும். நாங்கள் போர்செய்ய ஆரம்பித்தபிறகு உன் சூரத்துவம் உபயோகப்படாது. எங்கள் பராக்ரமத்தைப் பார்க்க விரும்பினால் நீ மரிப்பாய் எனக் கூற, கஜமுகர் கோபங் கொண்டு கையில் தண்டாயுதத்தைத் தாங்கி, கடினவார்த்தைகள் கூறும் சிவபடர்களைத் தூரத்திற்போங்கள்; சமீபியாதேயுங்கள்; போகாவிட்டால் என் பராக்ரமத்தைக் காட்டுகிறேன் பாருங்களென்று சுழற்றி அடித்தார்.

கணமூர்த்தியால் அடிபட்டசிவகணங்கள் இனி இத்துவாரபாலகனை யெதிர்த்தால் என்ன விளையுமோ? என்று பயந்தவர்களாய், நெடுந்தூரத்திலிருக்கும் சிவபெருமானையடைந்து, ஸ்வாமீ! அவன் மிகக்கொடியவனுயிருக்

கின்றான். எங்களையெல்லாந் தண்டத்தாற் புடைத்தான் என்று முறையிட்டு ப்பணிந்து நிற்க, சிவபெருமான் அவர்களைப்பார்த்து அவனோ ஒருவன்; நீங் களோ அநேகர். ஒருவனடித்தானென்று இத்தனைபேரும் ஓடிவரலாமா? நீங்கள்தானாபிரமதகணங்கள்? உங்கள்வீரம் நன்றாயிருந்தது. உடனேபோய் அவனை யெதிர்த்து அவ்விடம் விட்டுத் துரத்துங்கள் எனப் புன்சிரிப்புடன் சொல்ல, பிரமதகணங்கள் அவ்வாறே மீண்டும் கணபாலனை யடைந்து, சிறு பிள்ளைபோற் பேசுகின்றவனே! சீக்கிரத்தில் இவ்விடம்விட்டுப்போகாவிடில் எங்கள் பராக்ரமத்தைக் காட்டுகிறோம்பார் எனக்கூற, கணபாலர் இவர் கள் எத்தனைமுறை சொல்லியுங் கேளாமல் வருகின்றார்களேயென யோசிக் குஞ் சமையத்தில், அந்தப்புரத்திலிருந்த அம்மையார், பிரமதகணங்களுங் கணபதியுங்கூறுங் கோலாகலவார்த்தைகளைக்கேட்டு அருகிருந்த தோழி யை விளித்து வெளியேநடக்கும் விவகாரத்தையறிந்து வரும்படி கட்டளை யிட்டனுப்ப, அத்தோழி அவ்வாறே புறம்போந்து சிறிதுநேரம் நின்று அங்கே நடக்கும் விர்த்தாந்தங்களை யறிந்துகொண்டு பார்வதிதேவியோடு சொல்லி, இன்றையத்தினம் நமது சேவகன் வாயிலிலில்லாவிடில் சிவபெரு மான்மட்டுமல்லாமல் பிரமதகணங்களும் உள்ளேவந்திருப்பார்கள். அப்படி யெல்லோரும் வந்திருந்தால் நன்றாயிராது. கணன் நன்றாகச்செய்தான் இதரால் துக்கத்தையடைந்தும் ஒருவனையும் விட்டிலன். அதற்காகவே கணங்கட்கும் கணனுக்கும் வாக்குவாதம் நடக்கின்றது. அதுமுடிந்தபின் ஒருவேளைஜயத்தாலாவது விநயத்தாலாவதுவருவரோ அறியேன். நமது கணனைத் தொந்தரவுசெய்வது நம்மைத்தொந்தரவு செய்வது போலும். தாயே! இச்சமையத்தில் நாம் சிறிது கண்டிப்பாயிருக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினள்.

தோழிசொல்லிய வார்த்தைகளால் பார்வதாதேவி அபிமானமு டையளாய், இச்சிவபெருமான் நமது வாயிலிலிருப்பவனையேன் தொந்தரை செய்யவேண்டும்? அவனைவேண்டிக் கொள்ளப்படாதோ? நன்றாயிருந்தது என்றுகூறி, மீண்டும் தோழியால் ஒருவனையும் உள்ளே விடவேண்டாமெ ன்று கணனுக்குக் கட்டளை யனுப்பினள். அத்தோழி அவ்வாறே வெளி வந்து கணனைக்கண்டு, உன்செயல் சரியானது. நீ ஒருவனையும் உள்ளே விடவேண்டாம். இப்பிரமதர்கள் உன்னைச் செயிக்கமாட்டார்கள். அவர்கள் போர்செய்ய யத்தனித்தால் நீயும் உன்பராக்ரமத்தைக்காட்டவேண்டும். உன் னைச்செயித்தாவது நல்வார்த்தையாற் கேட்டுக்கொண்டாவது வரவேண் டியவர்களே யொழிய வேறல்லர். ஜாக்கிரதை: இது தேவிகட்டளையெனச் சொல்லக்கேட்ட கணபதி தாய்மொழிப்படி வஸ்திரத்தை யிழுத்துக்கட்டி, கிரீடந்தரித்துத் தொடையைத்தட்டி, பிரமதகணங்களே! உங்களை யடித் தெறிந்து விடுகிறேன். நானோ பார்வதி புத்திரன்: நீங்களோ சிவகணங்கள், நாமிருவரும் சமானமாகச்சேர்ந்தோம். செய்யத்தக்கதைப் பார்ப்போம். இனி உங்களுக்குரிய பலாபலத்தால் அதிகாரத்தைச்செலுத்திச் சிவாக்கினை

யைக்காத்துக்கொள்ளுங்கள். நானும் என்னுடைய தாய்கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறேன். நீங்கள் உள்ளே செல்லவேண்டுமானல் என்னைச்சயித்தாவது என்னிடம் உத்தரவுபெற்றாவது போகவேண்டும் என்று கூறினர். அதுகேட்ட சிவகணங்கள் மீண்டும் சிவபெருமானையணுகி வெட்கமுற்றவர்களாய் ஒருவர்பின்னொருவராகநின்று நமஸ்கரித்து, நடந்தசங்கதிகளையெல்லாம் சொல்ல, சிவபெருமான் நாம் அவனைக்கேட்டுக்கொண்டு விநயத்தாற் சென்றால் ஸ்திரீயாக்கினைக்குட்பட்டவராவே மாதலின் நாம் அனைவரும் போர்புரியவேண்டுவதே: எவ்வாறாயினும் முடியட்டும். நீங்கள் பிரமதகணங்களாயிருந்தும் யுத்தத்தைவிட்டு வேண்டிக்கொள்வது யுக்தமல்ல. பார்வதியின் செயல் நன்றாயிருக்கவில்லை. அதற்குரிய பலனை அவளும் அநுபவிப்பாள். யுத்தஞ்செய்யவேண்டுவதே யுக்தமென்று கூறினர்.

கணபாலன் அவதரித்தது

முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது
கணபாலன் போர்புரிந்த அத்தியாயம்.

ஸூதமுநிவர்சொல்லுகிறார் :— இவ்வாறுசொல்லிய சிவபெருமானது வார்த்தையைக்கேட்ட பிரமதகணங்கள் யுத்தமே தகுதியெனக்கொண்டுயுத்தஸந்நத்தராய் ஆயுதபாணிகளாய்க் கணபதியையடையக் கணபாலர் அவர்களைப்பார்த்துத் தானும்யுத்தஸந்நத்தராய், சிவாக்கினையைப்பரிபாலிக்கிறவர்களெல்லோரும்வரலாம். நானே சிறுவன்: தனியன். தாயின்கட்டளைப்படிநடப்பவன். பார்வதியேபுத்திரனுடைய பலத்தைப்பார்ப்பாள். சிவபெருமானே உங்கள் பலத்தைப்பார்க்கட்டும். பலவந்தர்களும் பாலனுமாகிய நம்மிருவருடைய யுத்தத்தை நமது தலைவர்களாகிய சிவ பார்வதிகள் பார்க்கட்டும். நானும் இதுவரையில் யுத்தஞ்செய்தவனல்லன். இப்பொழுதே போர்க்கு வருகிறேனாயினும் உங்கட்கு நாணமே சம்பவிக்கும். நாமிருவருமே ஜயிப்பதும் தோற்பதுமாக நினைக்கவேண்டாம். நீங்கள்வெற்றிபெற்றால் சிவபெருமான் வெற்றிபெற்றதாகவும், நான்வெற்றியுற்றால் தேவி வெற்றியுற்றதாகவும் நினைக்கவேண்டும் என்று சொல்லக்கேட்ட தேவர்கள்கோபித்துக் கண்செவந்து பற்கள்கடித்து ஹுங்காரஞ்செய்துகொண்டுவந்தார்கள். அவர்களில் நந்திதேவர் முன்னேவந்து கணனுடைய ஒருகாலையும் பிருங்கி மற்றொருகாலையும் பற்றியீர்க்க எத்தனிக்கையில், அவர்களிருவரையும் ஒவ்வோரறையறையக் கால்களை விட்டோடினர். உடனே கணன் உருத்தெழுந்து தன்சமீபத்திலிருந்த இருப்புலக்கையால் சிலர்மண்டையையும், சிலர் கன்னத்தையும் சிலர் கழுத்தையும், சிலர்கால்களையும், சிலர்தோள்களையும் உடைத்தனன். எதிரில் நின்றவர்களெல்லாம் இதனைக்கண்டு இவனைஜயிக்கமுடியாதென்றார்கள். அவ்வடியால்சிலர் கீழேவிழுந்தார்கள். சிலர் ஓடினார்கள்.

சிலர் கணனைப்பணிந்து சிவபெருமானை யடைந்தார்களேயன்றி எதிர் நின்று திடசித்தமாகப் போர்புரிவோரிலராயினர். கற்பாந்தமகாப்பிரளயம்போன் றிருக்கும் அச்சமையத்தில் பிரமதேவர் இந்திரன் முதலானவர்கள் இச்சங் கதியை நாரதராற் கேள்வியுற்றுச் சிவபகவானுக்குச் சகாயஞ்செய்யவேண்டு மென்னுங் கருத்துடன்வந்தனர். விஷ்ணுவும் ருஷிகளும் சிவபெருமானைப் பணிந்து ஸ்வாமீ! எங்கட்கு விடைகொடுத்தாற் போர்செய்கிறோம் எனக் கூறுகையில்,கணனால் அடிபட்டுவந்து முறையிடும் பிரமதகணங்களைப்பார்த் து வருந்தி,சிவபெருமான் பிரமனே! நீ அவனிடஞ்சென்று போர்நிகழாவண் ணம் அவனை இதவார்த்தையாற் சுவாதீனஞ்செய்யவேண்டும் என, பிரமன் ருஷிகளுடன் உடனே புறப்பட்டு, பெருவயிறனாகிய கஜானனரிடம் வருகை யிலேயே, கஜானனர்கண்டு பிரமன் மீசையைப்பிடித்துப் பறிக்க, பிரமன் தாளாதவனாய் நான்போர்செய்ய வரவில்லை என்றான். கணன் இருப்புலக் கையைக் கையிலெடுக்க, பிரமனும் முனிவர்களும் ஓடிப்போயினர். அவ்வா றேடுவோரைக்கண்டு ஓடுங்கள் என்று சொல்லியும், சிலரை அடித்துந்துரத்தி னர். ஓடினவர்கள் அடியுண்டு சிவபெருமானிடம் முறையிட, பெருமான் கோபித்து இந்திரன்முதலிய தேவர்கள் சுப்பிரமணியர் முதலியபிரமதர்கள் பூத பிரேத பசாசங்கள் யாவரையும் போர்க்குச்செல்ல உத்தரவளித்தனர்.

அவ்வாறு கட்டளைபெற்றவர்கள் தங்கள் ஆயுதங்களைத்தாங்கிச் சென்று போர்செய்யத்தொடங்கி, தங்கள் ஆயுதங்களைச்செலுத்த உலக முழுவதும் மறைந்தது. அந்தச்சமையத்தில் அந்தப்புரத்திலிருந்த பார்வதி தேவி இரண்டு சக்திகளைச் சிருஷ்டித்து அனுப்பினள். அதில் ஒருசத்தி பயங் கரமான வுடலும் கரியமேனியும் மலைபோன்ற முகத்திற் குகைபோலத் திறந்தவாயுங்கொண்டும், வேறொருசத்தி மின்னல்போலும் ரூபமும், அநே கங் கைகளுடையவளுமாக வந்து, அமரர் விடுத்த அஸ்திரங்களை வாய்திறந் துண்டுகொண்டிருக்க, கணன் இருப்புலக்கையாலடித்து, பூர்வத்தில் சமுத் திரமுழுவதையும் ஒரு மந்தரமலையே கலக்கினாற்போல, கணன் ஒருவனே தேவர் சமுத்திரத்தைக் கலக்கலாயினன். அதனால் யாவரும் மனங்கலங்கி என்ன செய்வோம்? எங்கேபோவோம்? எனச்சொல்லி வருந்துகையில், அரம்பை மேநகை முதலிய அப்சரசுகள் சந்தனபுஷ்பங்களைக் கையிற்றாங்கி ஆகாயத்திலிருந்தும், நாரதர் முதலிய ருஷிகள் வேடிக்கைபார்த்தும், ஆ! இவ்வகைய வீரனை நாம் கண்டதேயில்லை: பிரளயகாலருத்திரனே இவ்வாறு வந்திருக்கிறான் என்றுசொல்லிக்கொள்கையில், கடல்சூழ்ந்த பூமிமுழுவதுங் குலுங்கியது. சமுத்திரம் நிலைகலங்கியது. நவக்கிரக மண்டலத்தை யுடைய ஆகாயம்பிளவுற்றது. யாவரும் கலங்கினர். இந்திராதிதேவர்களும் பிரமத கணங்களும் ஓடினர். அப்பொழுது அறுமுகக்கடவுள் சக்திய ரிருவரால் அழிந்த சைநியமொழிய மிகுந்தவர்களையழைத்துக்கொண்டு சிவசந்நிதியை யடைந்து நமஸ்கரித்து, ஸ்வாமீ! அக்கணனுடைய வல்லமைசொல்ல முடி யாது. இந்த அற்புதவல்லபமுடைய இவனைப்போன்றவனை இதுகாறும்



C.R.S.

17. கணபாலன் போர் புரிந்தது.

கண்டதுமில்லை. கேள்விப்பட்டதுமில்லை. இவனைத் தேவரீரோ எதிர்க்காவிடில் மகாப்பிரளயமுண்டாகுமெனக்கூற, சிவபெருமான் வெகுண்டு நானும் வருகிறேனெனப் புறப்பட்டனர். தேவர்கள் யாவரும்அவரைப் பின்தொடர்ந்து வருவாராயினர்.


அப்பொழுது நாரதர் சிவபெருமானைப்பார்த்து ஸ்வாமீ! அவன் கொல்லத்தக்கவனல்லன்; அவனை வசப்படுத்தினல் க்ஷேமமுண்டாகும். எவ்வகையிலாவது சுவாதீனஞ்செய்துகொள்ளும் எனக்கூறி அந்தர்த்தானமாயினர். சிவபெருமான் அந்நாரதர் வார்த்தையை நிராகரித்துப் போர்புரியச்சென்று கணனைக்கண்டு அதிசயமுற்று இவனை வஞ்சனையாலடிக்காவிட்டால் இவன் எவ்விதத்திலும் ஜயிக்கப்படமாட்டான் என்று கருதி, சைநியமத்தியிலிருந்தனர். நிர்க்குணனுகியசிவபெருமான் விஷ்ணுமுதலானவருடன் போர்க்குவந்திருக்கையில், ஸகலதேவர்களுங் கணங்களுஞ் சந்தோஷித்தனர். விஷ்ணுமூர்த்தி சுவாமீ! நான் இவனை மோகப்படுத்துகிறேன். அப்பொழுது தேவரீர் இவனை அடிக்கவேண்டும்; வஞ்சனையாலன்றி இவனை ஜயிக்கமுடியாது எனச்சொல்லுகையில், சக்திகளிருவரும் மறைந்தனர். கணன் விஷ்ணுவுக்கெதிரேவந்து இருப்புலக்கையைப் பிரயோகிக்குஞ்சமையத்தில், சிவபெருமான் சூலாயுதத்தைக் கரத்திற் ருங்கிக் கோபங்கொண்டு அங்கேவரும்போது சூலப்படை நழுவிவிழ,பிநாகவில்லைத்தாங்கி நின்றனர். கணன் அவ்வில்லையும் பரிகத்தாற்பொடிபடவும் பரிகமானது ஐந்துகரங்களின்மேலும் படவும் ஓரடியடிக்க, பெருமான் மற்ற ஐந்துகரங்களால் சூலத்தைப்பிடித்து நாமேஇவ்வாறு துன்புறுவோமானல் இவனுக்குஇக்கணங்கள் எவ்வளவு? என்றெண்ணுகையில், விஷ்ணு சுவாமீ! இவனது ரூபம் சௌரியம் முதலியவற்ருல் இவனுக்குச் சமானனில்லை எனக்கூறிக்கொண்டிருக்கையில், பரிகத்தை விஷ்ணுவின்மேற் செலுத்த அது அவரது சக்கரத்தைப் பொடிபடுத்த விஷ்ணு வேறொரு சக்கரந் தாங்கி யுத்தத்திற்குவர, உலக்கையையே அவர்மேல்விடுத்து மல்லயுத்தஞ் செய்துகொண்டிருந்தனர். அந்தச்சமையத்திற் சூலபாணியான சிவபெருமான் பின்புறமாகவந்து கணனைப் பாசத்தால்விக்கிப் பூமிமேல்வீழ்த்தினர். இவ்வாறு கணன் பாசபத்தனதுபற்றித் தேவர் முனிவர் பிரமதர்முதலானுர் களிப்பெய்தினர். உடனே நாரதர்பார்வதிதேவியை அந்தப்புரஞ்சென்று கண்டு, சிவபெருமான் பாசத்தாற் கணனைக்கட்டி மூர்ச்சைசெய்வித்தனர்; நீ இச்சமையத்தில் மானம் விடக்கூடாதென்று கலகஞ்செய்துஅந்தர்த்தானமாயினர். தேவர்கள் ஜயஜய்வென்று சந்தோஷித்தார்கள். ருஷிகளே! மேலே பார்வதிசெய்த காரியங்களைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக வென்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

கணபாலன்போர்புரிந்தது
முற்றிற்று.

முப்பத்துநான்நாவது

கணபதி பட்டாபிஷேகமும் விரதமு முரைத்த அத்தியாயம்.

முநிவர்களே! அதன் பின்னர் பார்வதிதேவி கோபமுடையவளாய்ச் செய்த காரியங்களையும் சிவபெருமான் கணனைப் பாசத்தாற் கட்டியடைந்த துன்பத்தையுஞ் சொல்லுகிறேன் என்று ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர்:—அப்பொழுது பார்வதி பெருங்கோபமுடையவளாய் என்னசெய்வேன்? எங்கு போவேன்? பிரளயத்தைச் செய்யவேண்டி வந்ததே? எனத் துக்கித்து அநேக ஆயிரஞ் சக்திகளை யுண்டுசெய்தனள். அந்தச் சக்திகள் மாதேவியைப் பணிந்து நாங்கள் செய்யவேண்டிய காரியம் யாது? கட்டளையிடவேண்டும் எனக்கேட்க, பார்வதி நீங்கள் யோசிக்காமல் இச்சமையத்தில் தேவர்கள் முநிவர்கள் யக்ஷர்கள் அசுரர்கள் முதலானோரை மகாப்பிரளயஞ் செய்யவேண்டும். என்னவனென்றும் பிறனென்றும் பார்க்கவேண்டுவதில்லை எனக் கட்டளையிட, கற்பாந்தத்திற் செய்யுஞ் சங்காரத்தைப்போலவும், அக்கினிதேவன் த்ருணங்களைத் தகிப்பதுபோலவும், பிரமன் விஷ்ணு சங்கரன் இந்திரன் குபேரன் சூரியன் சுப்பிரமணியன் என யோசிக்காது அகப்பட்டவர்களை அங்கங்கே அவர்களை வாயிற்போட்டுக் கவளீகரிக்கக் கருதி யுலவுஞ் சக்திகளிற் சிலர் வாய்திறந்துகொண்டும், சிலர் பயங்கரமாகவும், சிலர் தலையாட்டிக்கொண்டும் பலவாறு யுத்தஞ்செய்யுஞ் சமையத்தில், இந்தச் சங்காரத்தொழிலைப் பார்த்து, விஷ்ணுவாதி தேவர்களும் முநிவர்களும் ஐய! மகாப் பிரளயமாயிருக்கிறதே; இஃதகாலத்திற் சம்பவித்ததே; நாம் பிழைப்பதே கடினம். யாதுசெய்வோம்? என்று யோசித்து ஒருவரோடொருவர் இந்த மகாப் பிரளயம் பார்வதிதேவி கருணைவைத்தாலன்றி அடங்காது என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு சக்தி சிவபெருமானை இடுப்பிலடிக்க, சிவபெருமான் மிகவருந்தி, பார்வதியிடஞ் சென்று இஃதென்னவென வினவவுஞ் சக்தியற்றிருந்தனர். சக்திகள் தராதரமின்றி யாவரையுந் துன்புறுத்தினர். பார்வதி மகாதேஜஸோடு அக்நிமயமாக விளங்குவது கண்டு யாவரும் பிரமித்திருந்தார்கள். நாரதமுநிவர் அப்பொழுது தேவர்கட்கெல்லாஞ்சுகத்தை உண்டுசெய்யக்கருதி, பிரமாதி தேவர்களிருக்குமிடமடைந்து அவர்களோடு கலந்து, யாதுசெயற்பாலது? என்று யோசித்து, பார்வதிதேவிக்குத் தயைவரச் செய்யாவிடின் நமக்குச் சுகமுண்டாவதில்லை எனக்கூற, தேவர்கள் நாரதமுநிவரே! நீரே அதனைச்செய்தற்குத் தகுந்தவராதலின் தயைசெய்து அப்பார்வதி தேவியிடஞ் சென்று அக்கோபத்தையாற்றவேண்டும் என்று விநயத்துடன் கூறலும், நாரதமுநிவர் சில ருஷிகளுடன் பார்வதிதேவியிடஞ் சென்று யாவரும் ஒன்றுகூடிப் பின் வருமாறு தோத்திரஞ் செய்கின்றார்கள்.



C.R.S.

18. கணபதி பட்டாபிஷேகம்.

𑌜𑌗𑌦𑌂𑌬 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈 𑌤𑍇 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ।
𑌅𑌪𑌰𑍍𑌣𑌾𑌯𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌗𑌿𑌰𑌿𑌜𑌾𑌯𑍈 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥ ௨௫ ॥
𑌭𑌵𑌾𑌨𑍍𑌯𑍈 𑌤𑍇 𑌨𑌮𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌯𑍈 𑌤𑍇 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ।
𑌭𑌦𑍍𑌰𑌾𑌯𑍈 𑌤𑍇 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈 𑌤𑍇 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 । ௨௬ ॥
𑌚𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌯𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥ ௨௭ ॥

ஜகதம்பநமஸ்துப்யம் ப்ரக்ருத்யைதே நமோஸ்துதே | அபர்நாயை நமஸ்துப்யம்கிரிஜாயைநமோஸ்துதே || ௨௫ || பவாந்யைதேநமஸ்சைவ துர்காயைதேநமோஸ்துதே | பத்ராயைதேநமஸ்துப்யம்ப்ரக்ருத்யைதேநமோஸ்துதே || ௨௬ || சண்டிகாயை நமஸ்துப்ய்ம்காத்யாயந்யைநமோஸ்துதே || ௨௭ ||

*ஜகந்மாதாவே! பிரகிருதி ரூபியே! சருகுபக்ஷணமு மின்றித் தவஞ்செய்பவளே! ஹிமோபர்வத ராஜபுத்திரியே! * பவானியே! துர்க்க ஸம்ஹாரியே! சகல ஜகத்திற்கும் மங்களஞ் செய்பவளே! முதலாயுள்ளவளே! சண்ட (முண்ட) சம்ஹாரியே! காத்தியாயனியே! உனக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: என்று நாரதாதி முநிவர்கள் தோத்திரஞ்செய்தும், அவர்களைப்பார்த்து ஒன்றுங் கூருமையால், ருஷிகள் பயந்து திருவடியிற் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தாயே! சிவபெருமானும் நாங்களும் மிகுந்த கஷ்டத்தை யடைந்தோம். ஸம்ஹாரத்தை நிறுத்தவேண்டும்; சாந்த மடையவேண்டும்; சாந்தமடையவேண்டும்; நாங்கள் யாவரும் உம்மால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாதலின் சாந்தமடையவேண்டும். க்ஷமிக்க வேண்டும்: க்ஷமிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, பார்வதாதேவி அவர்கள் விஷயத்தில் தயவுசெய்து, என் புத்திரன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபிறகு சம்ஹாரம் நீங்கும். அதுவரையிற் சம்ஹாரம் நடந்தே தீரும். மேலும் உங்கள் யாவராலும் பூஜிக்கப்படுபவனுய், சகலருக்கும் முதற்கடவுளாயிருந்தாலன்றிச் சம்ஹாரமுமொழியாது. நீங்களுஞ் சுகமடையமாட்டீர்கள் எனக்கூற, அவர்கள் யாவரும் பார்வதியின் உத்தரவுபெற்றுச் சிவபெருமானை யடைந்து நிகழ்ந்தவற்றைக் கூற, சிவபெருமானும் விஷ்ணுவாதி தேவர்களும் யோசித்து, இப்பொழுது உலகங்கட்கு க்ஷேமமுண்டாவதே முக்கியமாதலின் அப்பார்வதியின் விருப்பத்தின்படி நடக்கவேண்டுவதே: எனத் தீர்மானிக்க, சிவபெருமான் ஸகல சஞ்ஜீவி முதலிய அவுஷதங்களையுடைய* துரோணுசலம் இங்கே வரவேண்டுமென நினைத்தவுடனே சஞ்சீவகரண முதலான அவுஷதங்களுடன் அப்பர்வதம் வந்து சேர, அதிலுள்ள மூலிகைகளிற் படிந்த காற்று வீசியது. அதனால்போரில் உயிரொழிந்த தேவ முநிவபிரமதகணங்கள் உயிர்பெற்றன. அப்பொழுது பாசபத்தனுக விருக்கும் கணனைச் சிவபெருமான் பார்த்து வருந்தி, பாசத்தை யகற்றித் தமது கையாற்றடவினர். கணன் அக்கணமே யெழுந்து என் இருப்புலக்கை யெங்கே? என்னுடன் போர்செய்த விஷ்ணுவெங்கே? அவனைக் கொல்லவேண்டும் என்று கூறிக்கொண்டு தனது

* பவானி-பவன் பத்தினி.

இருப்புலக்கையைக் கையிற்றூங்கி முன்னேநிற்கையில், இந்திராதி தேவர்களும் நாரதாதி முனிவர்களும் கணன் எழுந்ததற்காக மனங்களித்துச் சிவபெருமான் விஷ்ணுவாதி தேவர்களைப் பார்த்து, இனிப் பார்வதி தேவியார் கேட்ட காரியங்கள் உங்களால் செய்துமுடியவேண்டுமென்றூர்கள்.

𑌇𑌤𑍍𑌯𑌾𑌲𑍋𑌚𑍍𑌯𑌶𑌂𑌕𑌰𑌸𑍍𑌤𑍁𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂𑌸𑍁𑌖𑌹𑍇𑌤𑍁𑌕𑌾𑌮𑍍 ।
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌕𑌰𑌣𑍀𑌯𑍁𑌕𑍍𑌤𑌦𑍍𑌰𑍋𑌣𑌾𑌚𑌲𑌮𑌮𑍇𑌯𑌯𑍀𑌃 ॥ ௩௨ ॥
𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌦𑍇𑌵𑌸𑌗𑌿𑌰𑌿𑌰𑌾𑌗𑌤𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌶𑌂𑌕𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌗𑌤𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌃𑌪𑌾𑌶𑌮𑍋𑌚𑌨𑌮𑍋𑌦𑌨𑍋𑌤𑍍 ॥ ௩௩ ॥
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌕𑌰𑌣𑍀𑌵𑌾𑌯𑍁𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌵𑌶𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑌚𑌕𑌰𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌤𑍍𑌸𑌜𑍍𑌞𑌾𑌮𑍍𑌲𑌪𑍍𑌤𑍍𑌵𑌗𑌣𑌸𑍍𑌤𑌦𑌾 ॥ ௩௪ ॥
𑌪𑌰𑌿𑌕𑌂𑌕𑍍𑌵𑌾𑌤𑍍𑌯𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃𑌕𑍍𑌵𑌹𑌨𑍍𑌯𑌤𑌾𑌂𑌹𑌨𑍍𑌯𑌤𑌾𑌮𑌿𑌤𑌿 ।
𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍁𑌸𑌲𑌮𑌾𑌦𑌾𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌦𑍂𑌰𑌿𑌗𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ ௩௫ ॥
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌰𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌗𑌣𑌂𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌶𑌿𑌵𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌵𑌿𑌦𑌿𑌨𑍍𑌤𑌦𑌾 ॥ ௩௬ ॥

இத்யாலோச்யஶங்கரஸ்சலோகாநாம்ஸுகஹேதுகாம் | ஸஞ்ஜீவகரணீயுக்தத்ரோணசலமமேயதீ: || ௩௨ || ஸ்மரணாதேவஸகிரிராகத்வ ஸம்ஸ்திதஸ்ததா | ஶங்கரஸ்த்வாகதஸ்ஸத்ய:பாஶமோசநமோதநோத் || ௩௩ || ஸஞ்ஜீவகரணீவாயுப்ரசாரவஶதஸ்ததா | ஶிவஸ்யசகரஸ்பர்ஶாத்ஸஜ்ஞாம்லப்த்வகணஸ்ததா || ௩௪ || பரிகம்க்வாத்யவிஷ்ணு:க்வஹந்யதாம்ஹந்யதாமிதி | உக்த்வாமுஸலமாதாயஸ்திதோதுரிகணோத்தம: || ௩௫ || இந்த்ராத்யாநாரதாத்யாஸ்சகணம்வீக்ஷ்யமுதாந்விதா: | ப்ரஶம்ஸந்தஸ்ததா தேவாஸ்ஶிவம்விஷ்ணும்விதிந்ததா || ௩௬ ||

தேவர்கள் வார்த்தையைக் கேட்ட பிரமாதிதேவர்கள், நாமெல்லோரும் எப்படிச்சிவாக்கினையாற் சுகமாகச்சஞ்சரிக்கின்றோமோ அப்படிப் பட்ட பரிபூரண தேஜஸ் வேதமந்திரசம்பந்தத்தால் இக் கணனுக்கு உண்டாகவேண்டுமென்று அபிமந்திரித்து, சுந்தராகாரமுடைய கணனைக் கணாதியக்ஷர்களாயிருக்கும் விஷ்ணுவாதி தேவர்கள் யாவரும் கணநாதனாக விருக்கும்படிப் பட்டாபிஷேகஞ் செய்து, வஸ்திராபரணாலங்காரஞ்செய்து, புதல்வனெழுந்தானெனக் களிகொண்டு கோபந்தணியும்படி பார்வதாதேவியிடம் அழைத்துக்கொண்டுபோய்க் காண்பித்தார்கள். பார்வதாதேவி மிகக்களித்து, கணபதியைச் சகல சாம்பிராஜ்யங்களும் உண்டாக ஆசீர்வதித்து அவர் உடலைக் கையாற்றடவி, மகனே! நீ மிக வருந்தித் தங்யனுயினே: காரியத்தை முடித்தாய்: இதுமுதல் யாவராலும் முன்னம்பூஜிக்கத்தக்கவனாகுக. உன் முகத்திற் சிந்தூரமணிந்திருத்தலின் உன்னைச் செஞ்சாந்தாற்பூஜிக்க மகிழ்க. உன்னைச் செம்மலர்கள்-சந்தனம்-நைவேத்தியம்-நீராஞ்சனம்-தாம்பூலம்-அர்க்கியம்-பிரதக்ஷிணம்-நமஸ்காரம்முதலானவற்றால் பூஜிப்பவர்கட்குச்சகல காரியசித்தியுங் கைகூடும்; இதற்குச் சந்தேகமில்லை என்று கூறி, தான் முன் கோபித்துப் பிரயோகித்த சக்திகளை யழைத்து, இனி யுத்தம் வேண்டாம்

என்று அச்சத்திகளைத் தன்னிடத்தொடுக்கினள். அப்பொழுதே தேவர்கட்குச்சுகமுண்டானமையின் இந்திராதி இமையவர்கள் அப்பார்வதிதேவியைப் பலவாறு துதித்துச் சிவபெருமானை யழைத்துக்கொண்டுபோய், தேவியாரிடம் எழுந்தருளியிருக்கச்செய்து இருவரையுஞ் சந்தோஷப்படுத்தி, சிவபெருமானது திருத்தொடையின்பேரில் விநாயகரைக் கொண்டுவந்து உட்காரவைக்கையில், சிவபெருமான் கஜமுகக்கடவுள் சிரசின்மேல் தமது திருக்கரத்தை வைத்து, தேவர்களைப்பார்த்து "இவன் என் பிள்ளை." எனக் கூற, கணேசர் சிவபெருமானது திருத்தொடையினின்றிழிந்து எதிர் நின்று சிவபெருமானையும் பார்வதிதேவியையும் நமஸ்கரித்து, தேவர்களை நோக்கிக் கைகுவித்து, சிவபெருமானைநோக்கி, தேவதேவா! நான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். சமையத்தில் வரும் குரோதம் இத்தகையது-என, சிவபெருமான் விஷ்ணுவே! பிரமனே! நாம் உலகத்திற் பூஜிக்கப்படுவதுபோல இக்கணேசனும் யாவராலும் பூஜிக்கப்படவேண்டும். அன்றியும் இவ்விநாயகனை முதலிற் பூஜித்து நம்மைப் பின்னே பூஜித்தால்தான் நாம் மனமகிழ்வோம். இவனைப் பூஜியாதவர்கட்குக் காரியங்கள் சித்தியாகா என்று கூறினர்.

அதன் பின்னர் சிவபெருமான் முதலிற் கணபதியைப் பூஜித்தனர். இரண்டாவது அவரை விஷ்ணுவும், மூன்றாவது பிரமதேவரும், நான்காவது பார்வதியும், பிறகு தேவர்கள் யாவரும் மிக்க சந்தோஷத்துடன் பூஜித்தனர். இவ்வாறு யாவரும் பூஜித்து சகலத்திற்கும் பிரபுவாயிருக்கும்படிச் செய்தனர். சிவபெருமான் கணேசருக்குப் பல வரங்களைக் கொடுத்து உன் பெயர் [விக்நஹந்தா] விக்கினங்களைப் போக்குபவன். சகல கணங்கட்குந் தலைவனான நீ பூஜித்தற்குத் தக்கவனாகவேண்டும் என்று கூற, சிவகணங்கள் மங்கலவாத்தியங்களை முழக்கினர். யாவரும் ஆசீர்வதித்தார்கள். தேவர்கள் கந்தர்வர்கள் அப்சரசுகள் வாத்திய நாட்டிய சங்கீதங்கள் செய்தனர். சிவபெருமான் மீண்டுங் கணபதியைப்பார்த்து, பாத்திரபதமாச சுக்கிலபக்ஷ சங்

சதுர்த்²யாம் த்வம் ஸமுத்பந்ந ஊர்ஜே மாஸி க³ணேஶ்வர ।
அஸிதே ச ததா² பக்ஷே சந்த்³ரஸ்யோத³யநே ஶுபே⁴ ॥
ப்ரத²மே ச ததா² யாமே ஜாதே ச கி³ரிஜாஸதி ।
நிர்மிதோ மாஸ்தே ரூபம் தஸ்மாத்தே வ்ரதமுத்தமம் ॥ ௨௫ ॥

சதுர்த்யாம்த்வம்ஸமுத்பன்ன ஊர்ஜேமாஸீகணேஸ்வரா | அஸதேசததா பக்ஷேசந்த்ரஸ்யோதயநேசுபே || ப்ரதமேசததாயாமே ஜாதேசகிரிஜாஸதி | நிர்மதாமாஸ்தேரூபந்தஸ்மாத்தேவ்ரதமுத்தமம் || ௨௫ ||

திரோதய சமையத்தில் இராத்திரி முதற்சாமத்தில் உச்சஸ்தக்கிரஹபஞ்சக யோகத்தில் பார்வதிதேவி விக்நேஸ்வரனைநிர்மித்தமையால், அச்சமையத்தில் விக்நேஸ்வரனைப் பூஜித்தல் உத்தமோத்தமமாதலின் அன்றுமுதல் மறுவருஷத்தில் வரும் அந்தத் திதிவரையில் பிரதி சதுர்த்திகளிலும் விரதத்தை நிய

மத்துடன் என் கட்டளைப்படி செய்யவேண்டும். இப்படிச்செய்வோர் தமது குடும்பத்தில் சகல சவுக்கியங்களும் பெற்றுச் சுகிப்பார்கள் என்று தேவர் முநலானவரை நோக்கிக் கட்டளையிட்டார்.

மார்க்கசீரிஷ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி தின உதயத்தில் ஸ்நானஞ் செய்து ஒரு பிராமணனைத் தான் செய்யப்போகும் கணபதிபூஜைக்கு இராத்திரி உபயோகப்படும்படி நியமித்து, தான் அன்றெல்லாம் உபவாசமிருந்து, அப்பிராமுணனைக் கணபதியாகப் பாவித்து, * தூர்வத்தாற் பூஜித்து, இரவு ஒருஜாமங்கழித்தபிறகு ஸ்நானஞ்செய்து, பொன் முதலிய லோகங்களாலாவது, பவளத்தாலாவது, வெள்ளெருக்கமரத்தாலாவது, பிருதிவியாலாவது, கணபதிப் பிரதிமை செய்து, அதற்குப் பிராணப்பிரதிஷ்டை முதலிய நியதியுடன் கந்தபுஷ்ப தூபதீபங்களாற் பூஜிக்கவேண்டும். அவரது கிரீடத்தில் விளங்கும் பாலசந்திரனைப் பின்னர் பூஜித்து, பிறகு அப்பிராமணனைப் பூஜித்து இன்சுவையோடுகூடிய அன்னங்கொடுத்து, தானும் உப்பின்றி இனிய அமுதுண்ணவேண்டும். இவ்வாறே மறு சதுர்த்திகளிலும் செய்துவந்து வருஷமுடிந்தவுடன் விரதபூர்த்திக்காக உத்தியாபனமாகப்பன்னிரண்டு வேதியருக்கு அன்னமிடவேண்டும். இவ்விரதத்தில் தன்சக்திக்கேற்கத்திரவியலோபஞ் செய்யப்படாது. அஷ்டதளபத்மமெழுதி அதில் ஒருகலசமமைத்து அதில் விக்நேஸ்வரரை ஆவாகனஞ்செய்து தூபதீபாதிகளாற் பூஜித்துஹோமஞ்செய்து, இரண்டு சுமங்கலிகட்கும் இரண்டு பிரமசாரிகட்கும் அன்னமளித்துப் பூஜித்து, விதிப்படி தான் இரவு முழுதும் விழித்திருந்து வாத்திய கோஷ முதலியவற்றால் உத்ஸவஞ்செய்து, மந்திரபுஷ்பஞ் சமர்ப்பித்து அன்புடன் நமஸ்கரித்துத் தன் இஷ்டங்களைச்சொல்லிக்கொள்ளவேண்டும். மறுதினம் விடியற்காலத்திற் பூஜித்து,மீண்டும் நான்பூஜிக்கும்பொழுது தேவரீர் எழுந்தருளவேண்டும் என விசர்ஜனஞ்செய்யவேண்டியது. இவ்வாறு விரதமிருப்பவர்கள் மனதிலுள்ள கோரிக்கையடைவர். பக்தியுடன் செஞ்சந்தனம் சுவேதாக்ஷதை உபசாரமுதலியவற்றாற் பூஜிப்பவர் சகல காரியசித்தியும் பெற்று எல்லாத்துன்பங்களையுமொழிப்பர். இவ்விரதம் எல்லா வருணத்தவரும், ஸ்திரீகளும், சத்துருக்ஷயங் கோரின அரசர்களுஞ் செய்யக்கடவர் என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, தேவர் முநிவர் சிவகணங்கள் முதலிய எல்லோருக்கும் பிரபுவாக்கினர். அக்காலையில் யாவரும் கணநாதனைப்பூஜித்து நமஸ்கரித்தார்கள். தன்புதல்வனுக்கு நேர்ந்த ஏற்றத்திற்காகப் பார்வதிக்குண்டான சந்தோஷத்தைச் சொல்ல ஒருவராலு முடியாது. அப்பொழுது தேவவாத்தியங்கள் முழங்கின. புஷ்பமாரி சொரிந்தனர். உலகமுழுதும் மகிழ்ந்தன.

கணபதி பட்டாபிஷேகமும் விரதமு முணைத்தது
முற்றிற்று.

* தூர்வம்-அறுகம்புல். இது கட்டையின்றிப் பன்னிரண்டங்குல நீளமும் மூன்று கிளையுமாகவுள்ள நூற்றொன்றால் அல்லது இருபத்தொன்றால் பூஜிக்கத்தகும்.

முப்பத்தைந்தாவது,
கணபதி தாய்தந்தையரை வலம்வந்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரண்யவாசிகளை நோக்கி மேலே நடந்தவற்றைக் கூறுகின்றேனென்று சொல்லத்தொடங்கினர் :—தேவகணங்களும் ருஷிகணங்களும் சிவாக்கினைப்படிவந்து, சிவபெருமானையும் பார்வதாதேவியையும் கணேசரையும் புகழ்ந்து, எப்படிப்பட்ட பெருயுத்தம் உலகஸம்ஹார மாகத்தக்கதாய் நிகழ்ந்தது ! என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். சிவபெருமானும் சிவகணங்களும் உலகங்கள் பிழைத்தனவென்று களித்தனர். பார்வதாதேவியுங் கோபமொழிந்து சந்தோஷித்திருந்தாள். சிவபெருமான் பார்வதாதேவியைச் சந்தோஷ வார்த்தையாலுவப்பித்து, உலகவிர்த்திக்காகவேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தார். விஷ்ணு பிரமன் இவருஞ் சிவாக்கினை பெற்றுத் தமதுலகை யடைந்தனர். நாரதபகவானும் பார்வதியைப்புகழ்ந்து பாடிச்சென்றனர். ருஷிகளே ! நீங்கள் கேட்ட விஷயங்களையெல்லாஞ் சொன்னேனென்று கூறிய ஸூதமுநிவரைப் பார்த்து, ருஷிகள் கணேசருடைய விர்த்தாந்தங்களை யெல்லாந் தேவரீர் சொல்லக் கேட்டோமாயினும், அவ்வளவில் ஆசை தணியாது இன்னும் அவருடைய திவ்ய சரிதங்களைக் கேட்க மனம் அவாவுகின்றமையால் எங்களிடங் கருணை கூர்ந்து இன்னுமுள்ள சரிதங்களைச் சொல்லியருளவேண்டுமென்று வேண்ட ஸூதமுநிவரும் மனக்களிப்போடு சொல்லலுற்றனர்.

ருஷிகளே ! பார்வதாதேவியும் சிவபெருமானும் கணபதி விஷயத்தில் அதிகமான புத்திர விருப்பத்தை வைத்து விளையாடிக்கொண்டு வளர்த்தார்கள். கணேசர் ஷண்முகர் இருவரும் தாய்தந்தையர்க்குப் பணிவிடை செய்து அவர்கட்குப் பிரியம் விளைத்தார்கள். வளர்பிறைச் சந்திரன்போல இவ்விரு சகோதரருக்கும் ஸ்நேகம் பெருகிற்று. இப்படியிருக்கையில், பார்வதி பரமேஸ்வர ரிருவரும் நமது புதல்வரிருவர்க்கும் எவ்வாறு மணஞ் செய்யத்தக்கது ? என்று விசாரத்தோடிருந்தார்கள். அவ்வார்த்தையைக் கேட்ட புதல்வரிருவரும் ஆச்சரியமுற்று எனக்கு முன்னே விவாஹ மாக வேண்டும் எனக்கு முன்னே விவாஹமாகவேண்டுமென்று ஒருவரோடொருவர் விவாதஞ் செய்துகொண்டிருக்க, அச்சமையத்தில் ஜடாதரராகிய சிவபெருமானும் பார்வதாதேவியும் ஒரு யோசனை செய்து ஓரிடத்திலிருந்து, புதல்வ ரிருவரையும் வரவழைத்துப் பிள்ளைகளே ! நீங்கள் இருவரும் சமானஸ்தர்கள். உங்களிருவரையும் ஒரேமாதிரியாக நாங்கள் மதிக்கிறோம். இப்பொழுது உங்கட்கு விவாஹஞ்செய்யவேண்டிய காலமாயிருத்தலின் ஒரு யோசனை செய்திருக்கிறோம். அதாவது: எவன் உலகத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து முதலில் வருவானோ அவனுக்கு முதலிலும், எவன் பின் வருவானோ அவனுக்கு இரண்டாவதும் மணஞ்செய்ய வேண்டுமென்பதே என, அதனைக் கேட்ட சுப்பிரமணியர் பூமிப் பிரதட்சிணஞ் செய்து வரும்படி விரைவிற் சென்றனர்.

கணபதி நாம் எவ்வாறு உலகப் பிரதக்ஷிணஞ்செய்வோம் என்று யோசித்து, விதிப்படி ஸ்நாநஞ் செய்து தாய்தந்தையரைக் கண்டு, நீங்கள் சிறிது சிங்காசனத்தி லிருக்கவேண்டுமென்று ஆசனமளிக்க, அவர்கள் அவ்வாறே உட்கார, நான் உங்களைப் பூஜிக்கவேண்டுமென்று கூறி, ஷோடசோபசாரத்துடன் பூஜித்து ஏழுமுறை பிரதக்ஷிணஞ்செய்து கைகுவித்து எதிரில் நின்று தாய் தந்தையரைப்பார்த்து, நான் சொல்லும் விஷயத்தைக் கேட்டுச் சீக்கிரம் எனக்கு மணஞ்செய்விக்க வேண்டும் என, கணபதியின் வார்த்தையைக் கேட்ட சிவபெருமானும் உமாதேவியும் நீ விரைவில் உலகவலம்வா. சுப்பிரமணியன் அதற்காகவேபோயிருக்கிறான். நீயுஞ்சென்று பிரதக்ஷிணஞ் செய்து முன்னே வந்தால் உனக்கே விரைவில் மணஞ்செய்வோம் என்றார்கள். அதைக் கேட்ட கணபதி கோபித்து நான் பூமியை ஏழு பிரதக்ஷிணஞ் செய்துவந்திருக்க என்னை மறுபடியும்போகச்சொல்லலாமா? எனக்கூறினர். கணேசர் வார்த்தையைக் கேட்டு, நீ எப்பொழுது பூமிவலஞ் செய்தாய்? எனக் கேட்க, விநாயகர் நான் உங்களிருவருக்கும் பூஜை செய்து ஏழு பிரதக்ஷிணஞ் செய்தது பிரதக்ஷிணமல்லவா? உங்களிருவரையும் பிரதக்ஷிணஞ் செய்தால் உலகப் பிரதக்ஷிணஞ் செய்ததுபோலாமென்று வேதம் சாஸ்திரம் முதலியன கூறுவதெல்லாம் அபத்தமா? உலகத்தில் மாதா பிதாக்களைப் பூசித்துப் பிரதக்ஷிணஞ்செய்தால் பூப்பிரதக்ஷிணபலன் கிடைக்குமாதலின், வீட்டிலிருக்கும் அன்னையையுந் தந்தையையும் அகற்றித்தீர்த்தயாத்திரை செய்வோன் தாய்தந்தையரைக் கொன்ற பாபமடைவான். தாய் தந்தையருடைய பாதபங்கயமாகிய தீர்த்தத்தைவிடப் புதல்வனுக்கு வேறேதீர்த்தங்கிடையாது. கங்காதி தீர்த்தங்களெல்லாம் கஷடப்பட்டடைய வேண்டியவை; இதுவோ சமீபத்திலுள்ளதும் சுலபமானதும் தர்ம ஸாதனமானதும் எல்லாப்புலன்களையுங் கொடுக்கவல்லதுமாம். புதல்வன் தாய்தந்தையரைப் பூசிப்பதேதீர்த்தம். மனைவி கணவனைப்பூசிப்பதே தீர்த்தம் என்று வேதசாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இதனை அஸத்தியமாக்கும் பக்ஷத்தில் உங்கள் ஸ்வரூபமும் அஸத்தியமே. வேதங்களும் அஸத்தியமேயாம். ஆதலின் நான் பூப்பிரதக்ஷணம் ஏழுமுறை செய்தது நிச்சயம். வேதசாஸ்திரங்களை அஸத்தியமாகவாவது ஸத்தியமாகவாவது செய்யுங்கள்; அஃது உங்கள் விருப்பம் என்று கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட தாய்தந்தையர் களித்தார்கள்.

கணபதி தாய்தந்தையரை வலம்வந்தது

முற்றிற்று.



19. கணபதி சித்தி புத்திகளை மணந்தது.

முப்பத்தாறுவது
கணபதி விவாஹமுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறர்:—சிவபெருமானும் பார்வதாதேவியும் புத்திரரான கணபதியைப்பார்த்து, கணபதீ! நீ மஹாபுத்திமான்; தாய்தந்தையரிடத்திலே திடபக்தியுடையவன்; நீ சொன்ன மொழிகள் சத்தியமானவை. துக்கமடைந்தகாலத்தில் எவன் நிர்மலபுத்தியுடையவனயிருப்பனே, அவன் துக்கங்கள் சூரியனைக் கண்ட இருள்போல நீங்கும். வேதசாஸ்திரோக்தமாகச்செய்தாய். தாய்தந்தையரைப் பிரதக்ஷிணஞ்செய்தால் பூப்பிரதக்ஷிணஞ் செய்தப்லன் கிடைக்குமென்று வேதசாஸ்திரபுராணங்கள் விளம்புமாதலின் நாங்கள் இருவரும் உன் செயலுக்கு மகிழ்ந்தோம் என்று கூறி, புத்திமானை கணபதியைச் சந்தோஷப்படுத்தி, விவாஹவிஷயத்தில் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவில் விசுவரூபன் புதல்வியர்களாகிய சித்தி புத்தி என்னும் மிகச் சவுந்தரியமுடைய கன்னிகைகளை வேத விதிப்படி ஸர்வாடம்பரபூர்வமாக மணஞ்செய்யத் தீர்மானித்து, தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும்வந்திருந்து சிவபெருமான்பார்வதி இவர்கள்மனோரதத்தின்படி விசுவரூபன் மணவினை முடிக்கக் கண்டு களித்தார்கள். கணபதியும் சித்தி புத்திகளுடன் கூடிச் சுகமனுபவித்ததைப்பற்றிக் கூறமுடியாது. பிறகு சிறிதுகாலம் கழிந்தபின் விநாயகருக்குச் சித்தி யென்னும் மனைவியிடம் லக்ஷன் என்னும் பிள்ளையும், புத்தி யென்னும் மனைவியிடம் லாபன் என்னும் பிள்ளையும் உண்டானர்கள். கணபதி இவ்வாறு ஸம்ஸாரவிஷயத்திற் பரமானந்தமுற்றிருந்தார்.

அந்தச்சமையத்தில் பூப்பிரதட்சிணர்த்தமாகச்சென்ற குமாரக்கடவுள் அதனைச் செய்துமுடித்துக் கைலாயபர்வதத்தையடைகையில், நாரதபகவான் அங்கே சென்று ஷண்முகனைக் கண்டு, ஸுப்ரமணியமூர்த்தீ! உமது தாய்தந்தையர் செய்த காரியங்களைக் கேட்டனையா? உன்னைத் தீர்த்த யாத்திரை செய்துவருக என நிமித்தம்வைத் தனுப்பி, விக்நேச்சுரனுக்கு இரு கன்னியரை மணமுடிக்க,அவர் அவ்விருகன்னியரிடம் இருபுதல்வரைப்பெற்றுக் களித்திருக்கின்றர். நீரோ சகலகஷ்டத்துடன்போய், பூப்பிரதக்ஷிணஞ் செய்தீர். தாய்தந்தையரே இவ்வாறு அபகாரஞ் செய்தால் இதரர் என்ன காரியஞ் செய்யமாட்டார்கள்? இது மிக்க அநியாயம்! இது என் மனதிற்கு நன்ருய்த் தோற்றவில்லை; இவ்வாறு செய்தவர்கள் முகத்தைப் பார்க்கப் படாதெனச் சாஸ்திரம் முறையிடுகிறது; சொன்னேன். இனி உம்மிஷ்டப்படி செய்யலாம் என்று கூறிச்சென்றனர். அதன்பிறகு ஷண்முகர் தாய்தந்தையரிடம் வந்து நமஸ்கரித்துக் கோபாக்கினியினல் தகிக்கப்பட்டு, தாய் தந்தையர் தடுப்பதுங் கருதாது கிரவுஞ்சகிரிநோக்கிச்சென்றனர். அவ்வாறு போகையில் தாய்தந்தையர் நீ போகவேண்டாம். பூப்பிரதக்ஷிணஞ்செய்து வந்ததும் விவாஹஞ் செய்வதாகக் கூறியபடி இப்பொழுது விவாகஞ் செய்

கிறேம் என்று கூறித் தடுத்தும், நீங்கள் என்விஷயத்திற் கபடஞ்செய்தீர்களாதலின் யான் இங்கிருக்கப்படாதென்று சொல்லிக்கொண்டே நடந்து, தரிசனமாத்திரத்திலேயே சகல பாபங்களையும் போக்கடித்துக்கொண்டு கிரவுஞ்சகிரி சென்று அங்கேயே நின்றுவிட்டனர். அவ்விடத்தில் அதுமுதல் சுப்பிரமண்ணியருக்குக் குமாரபிரமச்சாரி யெனப் பெயர் திரிலோகத்திலும் பிரசித்தமாக வுண்டாயிற்று.

கார்த்திகைப் பூரணையினன்று தேவர்கள் ருஷிகள் முதலிய யாவரும் அவ்விடஞ்சென்று குமாரதரிசனஞ் செய்கிறார்கள். கார்த்திகைப்பூரணையில் தரிசிப்பவர்களின் பாபங்கழிந்து இஷ்டகாமியங்கள் கைகூடும். புத்திரன் பிரிவுக்காற்றாத பார்வதாதேவி மிக்க துயரத்துடன் கிரவுஞ்சகிரியையடைந்தாள். பிறகு சிவபெருமானும் மல்லிகார்ஜுனன் எனப் பெயர் பெற்று ஜோதிர்லிங்க ஸ்வரூபத்துடன் அவ்விடஞ்சென்று வசித்தார். இப்பொழுதும் அவ்விடத்தில் பார்வதி பரமேஸ்வர ரிருவரும் பிரத்தியட்சமாக இருக்கின்றார்கள். இவ்விருவரது வருகையையு முணர்ந்த ஸ்கந்தர் அவ்விடம்விட்டெழுந்து செல்ல யத்தனிக்கையில், தேவர்கள் யாவரும் அங்கிருக்கும்படி அவரைப் பிரார்த்தித்தமையின் மூன்றுயோசனை தூரத்தில் தங்கினர். இரு வ்வாக்களில், தாய்தந்தையரிருவரும்குமாரக்கடவுளைப்பார்க்கும் விருப்பத்தால் அங்கே வருகின்றார்கள் (என்றால், அமாவாசையில் சிவபெருமானும், பூரணையில் பார்வதாதேவியும் வருகின்றார்கள்). நைமிசாரணிய முனிவர்களே! கணபதி விவாஹவிஷயம் நீங்கள் கேட்டபடியே சொன்னேன். இச்சரிதத்தைக்கேட்டவர்கள் சகல பாபங்களினின்றும் நீங்குவர் என்று ஸூதமுனிவர் சொல்லியருளினர்.

கணபதி விவாஹ முரைத்தது

முற்றிற்று.

முப்பத்தேழாவது

உருத்திராக்ஷ மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவரரோ! தேவரீர் கூறியவற்றால் மிகச்சந்தோஷமடைந்தோம். தேவரீரே தன்யர்: கிருதகிருத்தியர்: தேவரீரது தரிசனத்தால் நாங்களுங் கிருதார்த்தர்களானோம் என்று துதித்த நைமிசாரணிய வாசிகளை நோக்கி, ஸூதமுனிவர் உங்களால் யானும் புண்ணியனானேன். சிவசரிதங்களே உங்கட்கு விருப்பமுண்டாக்குகின்றன. சிவபெருமானைப் பணிந்து அவரது திவ்யசரிதங்களைக் கேட்போர்களே பரிசுத்தர்கள். அவர்களாலேயே அவர்கள் வம்சமுழுவதும் பவித்திரமாகும். சிவநாமங்களை உச்சரிப்பவனிடத்திற் பாபங்களெல்லாம் நெருப்பில்வீழ்ந்த சருகுபோ லழியும். சிவாயநம எனச் சொல்வோன் முகத்தைப் பார்த்தவன் ஸர்வதீர்த்த தரிசனஞ்செய்த பலனை யடைவான். எவனுடைய வாயினிற் சிவநாமங்களும், நெற்றியில்

விபூதியும், கழுத்தில் உருத்திராக்கமும் ஆகிய இம்மூன்றும் விளங்குமோ அவனைப் பார்த்தால் (கங்கா - யமுநா-சரஸ்வதி இம்மூன்றின் சங்கமமான) த்ரிவேணிஸ்நானஞ் செய்தபலன் கிடைக்கும். சகல பாபங்களும் போம். அவனை யிவ்வாறு மதியாமல் அவமதிப்போர் அப்பொழுதே பெரும்பாவ மடைவர். விபூதி யணியாத நெற்றியும், உருத்திராக்ஷதாரணமில்லாத கழுத்தும், சிவநாமம் புகலாத வாயுமுடையவனைக் கண்டால், சண்டாளனைக் கண்டாற்போல விலகிச்செல்லவேண்டும். சிவநாமமே கங்கையும், விபூதியே யமுனையும், உருத்திராக்ஷமே ஸர்வபாபங்களையு மொழிக்கும் ஸரஸ்வதியுமா

𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯𑌨𑍋𑌫𑌾𑌲𑍇 𑌕𑌣𑍍𑌠𑍇𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌨𑌹𑌿𑌶𑌿𑌵𑌮𑌯𑍀𑌵𑌾𑌣𑍀 𑌤𑌂𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌂𑌯𑌥𑌾 ॥ ௧௩ ॥
𑌶𑍈𑌵𑌂𑌨𑌾𑌮𑌤𑌥𑌾𑌗𑌙𑍍𑌗𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌯𑌮𑍁𑌨𑌾𑌤𑌥𑌾 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌾𑌵𑌿𑌰𑌜𑌾𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌿𑌨𑍀 ॥ ௧௪ ॥

விபூதிர்யஸ்யநோபாலே கண்டேருத்ராக்ஷதாரணம் | நஹிஶிவமயீவாணீ தந்த்யஜேதந்த்யஜம்யதா || ௧௩ || ஶைவந்நாமததாகங்கா விபூதிர்யமுநாததா | ருத்ராக்ஷா விரஜாப்ரோக்தா ஸர்வபாபப்ரணாஶிநீ || ௧௪ ||

மாதலின், இம்மூன்றையும் அணிந்த பலனையும் திரிவேணியைத் தரிசித்த பலனையும் உலகத்திற்கு ஹிதஞ்செய்யவேண்டிய பிரமதேவர் துலையில்வைத்து நிறுத்துச் சமமாக விருக்கக்கண்டு, பிரமன் முதலான தேவர்கள் யாவரும் இம்மூன்றையு மடைந்தார்கள். இம்மூன்றையும் அணிந்தவனுடையபலனைச்சொல்ல என்னால் முடியுமோ? என்று ஸூதர் சொல்ல, ருஷிகள் யாவரும் ஸ்வாமீ! அத்தகைய பெரும்பேற்றினைத்தரவல்ல உருத்திராக்ஷத்தின் பிரபாவத்தை அடியேங்கள் கேட்டுப் புனிதராகும் வண்ணம் விரித்துரைத்தருளவேண்டும் என்று இரப்ப, ஸூதரும் அவர்பால் கிருபைகொண்டு சொல்லலுற்றனர்.

ஆயிரத்தொருநூறு ருத்திராக்ஷங்களைத் தரித்தவன் ருத்திரஸ்வரூப மடைவான்; அவன் பலனை அநேக வருஷங்கள் சொல்லினும் முடிவுபெறாது. அதிற்பாதியாகிய ஐந்நூற்றைம்பது மணிகளால் கிரீடஞ் செய்து தரித்தவன் சிவரூபியாவான். முந்நூற்றறுபது மணிகளால் உபவீதஞ் செய்து தரிக்கலாம். சிகையில் மூன்றும், இருகாதுகளிலும் ஐந்து அல்லது ஆறும், கழுத்தில் நூற்றொன்றும், புயத்தில் பதினொன்றும், கன்னமாலை [இருகாது சுற்றிலும்] பதினொன்றும், மணிபந்தங்க ளிரண்டில் பதினொன்றும், பூணூலில் மூன்றுமாக முக்திகாமி தரிக்கவேண்டிய நியமம். ஐம்பது மணிகளைக் கடிசூத்திரமாக அணியத்தக்கது. இவ்வாறணிபவன் முக்தியடையச் சந்தேகமில்லை. இவ்வண்ணமாகத் தரித்து ஆசனத்தமர்ந்து சிவத்தியானஞ் செய்பவன் சாபாநுக்ரஹ சாமர்த்திய மடைவான். அவனைக் கண்டவர் சகல பாபங்களும்போய்க் கங்காஸ்நானபலமுஞ் சிவதரிசன பலமும் பெறுவர். ருத்திராக்க மாலிகையைத் தாங்கி நூறு மந்திரஞ் ஜபித்தால் ஆயிரஞ் ஜபித்த பலன் கிடைக்கும். சிவபெருமான்-விஷ்ணு-சூரியன்-சக்தி-கணபதி இவ்வை

வர் மந்திரங்களையும் ஜபிப்பதற்கு ருத்திராக்ஷமே சிறந்தது. இதனால் சகல மந்திரங்களுஞ் ஜபிக்கலாம். முக்தி-புத்திரபாக்கியம் - ஐசுவரியம்-வித்தை-கன்னிகை - கீர்த்தி முதலியவற்றை விரும்பினவர்கள் ருத்திராக்ஷமணி பரித்து ஜபித்தால் அவற்றைத்தடையின்றி யடைவர். ஆனாலும் சிவபக்தன் ருத்திராக்ஷமணிமாலையை விசேஷமாகத் தரிக்கவேண்டும். விஷ்ணு பக்தன் ஜபமாலையாகக் கொள்ளவேண்டியது. ருத்திராக்ஷத்தை விருப்பத்தோடாவது விருப்பமின்றியாவது அணிந்தால் பலனுண்டாம் ஆதலின் அவை உத்தமமாம். [செல்வப்பொருள்விரும்பினவன் பொன்னாற்செய்தமணியும், கீர்த்தி வேண்டியவன் முத்துமணியும், புத்திரகாமி ஸ்படிகமணியும், வசியகாமி பவளமணியும், வாஹனகாமி வெள்ளிமணியுங் கையிற்கொண்டு ஜபஞ் செய்யலாமென்று நூல்கள் கூறுமாயினும் ருத்திராக்ஷ மணியே இவற்றைக் காட்டினுஞ் சிறந்த பலனைக்கொடுக்கும். உபாசனை பலவகைப் படுதலின் இம்மணி மாலையின் பேதங்களைக் கூறினும். சிவபெருமானையும் விஷ்ணுமூர்த்தியையுந் தியானிக்கையில் ருத்திராக்ஷ மாலையே சுகங்கொடுக்கத் தக்கது. சூரியனுக்குப் படிகமணியும், சண்டிகை-கணேசர்கட்கு முத்து பவளமணிகளும் களி கொடுக்கும் எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.]

இவ்விதமாகச் சொல்லியிருப்பினும் ருத்திராக்ஷம் சிவபெருமானை விசேஷமாகச் சந்தோஷிக்கச் செய்யும். முத்துடன் கலந்த ருத்திராக்ஷம் விண்டுவை மகிழச்செய்யும். பூர்வத்தில் ஸ்ரீவியாஸபகவான் முதலிய ருஷி சிரேஷ்டர்கள் சாஸ்திர விசாரணையால் ருத்திராக்ஷஞ் சிறந்த தென்றார்கள். அவ்வுருத்திராக்ஷத்தின் பேதங்களை இனிக் கூறுகிறேன். ஒருமுக ருத்திராக்ஷமணி சகலகாரியசித்தியையுங்கொடுக்கும். இவ் வொருமுகமணி இருக்குமிடத்தில் அணிமாதி அஷ்ட சித்திகளும் இருக்கும். இருமுகமணி இருக்குமிடத்தில் லக்ஷ்மீகடாக்ஷம் விளங்கும். மும்முகமணி ஸகல விர்த்திகளையுங் கொடுக்கும். நான்முகமணி சதுர்வித புருஷார்த்தங்களையுங் கொடுக்கும். ஐம்முகமணி பாபத்தை யொழிக்கும். ஒரு முகமணி கிடைப்பதரிது; அது இலந்தம்பழ மளவாகக் கிடைத்தால், சுகசவுபாக்கியங்கள் விருத்தியாகும்; நெல்லிக்கனி யளவாயின் சகல துக்கங்களையு மொழிக்கும்; கடலை யளவாயின் விலை மதிக்க முடியாது. அப்படிப்பட்ட மணிகளால் மாலை யணிந்தவன் பலனை என்னென்று சொல்லுவேன். அவ் வொருமணியைவைத்திருப்பவன் சாக்ஷாத் சிவபெருமானே: மண்டலாதிபத்ய ராஜாதிபத்யமும் அதற்குச் சமானமாகா; அப்படிப்பட்ட மணிகிடைத்தாற் பொற்குவியலாவது, ஆணிமுத்துகள் நூறுவது கொடுத்துப் பெறலாம். உருத்திராக்ஷமணிய வேண்டியவன் பொருள் கொடுத்து வாங்கி யணியவேண்டும். ஒருவன் இனமாகக் கொடுக்க வாங்கப்படாது. ஆனால் தானங்கொடுத்தவனுக்கு விசேஷ பலனுண்டு. பொருள் கொடுத்து வாங்கச் சக்தியில்லாதவன் தன் புண்ணியத்தைக் கொடுத்தாவது பெறலாம். கடலை யளவு மணி போகமோக்ஷங்களைக் கொடுக்கும். குன்றிமணியளவு மணி காரியசாதனஞ் செய்யும். எவ்வளவு சிறிய

மணியைப் பூண்பானே அவ்வளவு விசேஷ பலனைப்பெறுவான். சிவமந்திரம் ஜபிக்காதவனையும் ருத்திராக்ஷமணியாதவனையும் பரிசிக்காமல் தூரமாகப்போகவேண்டும். சர்வவிதைகளிலேயும் அவ்வம்முளைகளே யிருக்கின்றனவெனினும், இவ்வுருத்திராக்கவிதையில் முக்தியாகிய முளைகிளம்புகிறது. ருத்திராக்ஷமாலையணிந்தவனைப்பார்த்தால் பூதப் பிரேத பசாச சாகினி டாகினி முதலிய சகல கிரகங்களும், ஆபிசாராதிப் பிரயோகங்களும் அவனைநெருங்காது விலகியோடும். உருத்திராக்ஷமாலிகையைப்பார்த்தால் சிவ விஷ்ணுக்கள் சந்தோஷிப்பர். ஏகமுகருத்திராக்ஷத்தை நீரோட்டத்தில் விட்டால் எதிர்த்தோடும். இருமுகமணியை யணிந்து நெருப்பிலிறங்கினால் உடல் வேகாது; ஜ்வரரோகம் நீங்கும். மூன்றுமுகமணி யணிந்தவனை ஆயுதங்கள் ஊறுசெய்யா. நான்குமுகமணியை வைத்திருப்பவன் வீட்டில்வந்த சோரனுக்குக் கண்கள்தெரியா; அது தண்ணீரில்விட்டால் முழுகிவிடும். ஐம்முகமணியிருந்தால் சகல துன்பங்களையும் விலக்கும். அது நீரில் முழுகாது. இவ்வாறு இவற்றின்குணத்தைப் பரிசோதித்துப்பார்த்து அணியவேண்டும். ஸ்நானம்-தானம்-ஜபம்-ஓமம்-அத்தியயனம் - பிதுர்த்தர்ப்பணம்-சிவ விஷ்ணு பூஜைகள் - சிரார்த்தமுதலிய எல்லாக்காலங்களிலும் ருத்திராக்ஷந் தரித்துக்கொள்ளலாம். முநிவர்களே! நீங்கள் கேட்ட விஷயத்தைச்சொன்னேன். இந்த ருத்திராக்ஷ மஹாத்மியத்தை விரும்பிக்கேட்டவன் சிவபெருமானுக்கு அதிகப்பிரியமுள்ளவனுவானென்று ஸூதமுநிவர் கூறினர்.

உருத்திராக்ஷமகிமை யுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தெட்டாவது

ஜோதிலிங்கங்களின் தொகையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! தேவரீர் சொல்லிய விஷயங்களாற் களிகூர்ந்தோமாயினும், இன்னும் சிவசரிதங்களையே கேட்க விரும்புகிறோம். அதாவது: உலகத்திலே புண்ணியதீர்த்தங்களிலுள்ள பிரசித்தியான லிங்கங்களையும், புண்ணியக்ஷேத்திரங்களிலுள்ள லிங்கங்களையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்ட சௌநகாதிமுநிவர்களை நோக்கி, ஸூதர் சொல்லுகின்றார். முநிவர்களே! நீங்கள் வினவியவிஷயம் மிகச் சிறந்ததேயாயினும் பூமியேலிங்கமாயிருத்தலின் அவற்றின் தொகை சொல்லமுடியாது. லிங்கமில்லாத விடமே கிடையாது. கங்கை முதலிய சகல தீர்த்தங்களும் லிங்கமே. உலகமுதலிய யாவும் லிங்கத்திலேயே அடங்கியிருக்கின்றன. யாவும் லிங்கமாயிருத்தலின் அவற்றைக் கணக்கிடமுடியாது. ஆயினும் தெரிந்தவரையில், சில லிங்கங்களைச் சொல்கின்றேன். உலகத்திற் காணப்படுவதும், சொல்லப்படுவதும், நினைக்கப்படுவதும், கேட்கப்படுவதும் ஆகிய எல்லாம் சிவரூபமேதவிர

வேறொன்று சிறிதுமில்லை. அப்படி யிருப்பினும் எனக்கு வியாஸபகவான் கூறியவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ருஷிகளே! உலகத்திலிருப்பதுபோலவே பாதாளத்திலும் ஸ்வர்க்கத்திலும் எவ்விடத்தும் லிங்கங்களிருக்கின்றன. பூமியிலிருக்கும் மானவர்களும், பாதாளத்திலிருக்கும் நாகர்களும், ஸ்வர்க்கத்திலிருக்கும் தேவர்களும், ராக்ஷஸர்முதலிய யாவரும் லிங்கபூஜை செய்கிறார்கள். சராசராத்மகமான பிரபஞ்சமுழுவதிலும் ஆன்மாக்களை அநுக்ரஹிக்கும்படி சிவபெருமான் லிங்கரூபமாக விளங்குகின்றனர். பக்தியோடு அர்ச்சிக்கும் ஒவ்வொருவருக்கும் அவ்வவ்விடத்திலேயேவிளங்கி அவ்வவரது சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கிறார். ஆன்மாக்கள் தன்னை யருச்சித்துக் கடைத்தேறுவதற்காகவே சிவபெருமான் லிங்கரூபத்தை வகித்திருக்கிறார். லிங்கார்ச்சனை செய்வதால் ஸகலபலனுங் கைகூடும். பிரதானமான லிங்கங்களைக் கேட்டால் எல்லாப் பாபங்களும் நீங்குமாதலின், தேஜோ லிங்கங்களைச் சொல்கிறேன்.

சௌராட்டிர தேசத்தில் ஸோமநாத லிங்கமும், ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சுன லிங்கமும், உச்சினியில் மகாகாள லிங்கமும், ஓங்காரலிங்கமும், ஹிமோத்கிரியில் கேதாரலிங்கமும், * டாகினியில் பீமசங்கரலிங்கமும், வாராணசியில் விஶ்வேஶ்வரலிங்கமும்,கோதாவரி தீரத்தில் திரியம்பக லிங்கமும், † சிதாபுரத்தில் வைத்தியநாத லிங்கமும், தாருகாவனத்தில் நாகேசுவர லிங்கமும், சேதுவில் இராமேசுவரலிங்கமும், சிவாலயத்தில் குஸ்மேச லிங்கமுமெனப்பன்னிரண்டு. இவ்விலிங்கங்களின் திருநாமங்களை விடியற்காலத்தி லெழுந்து துதிசெய்பவன் தன் பாபமொழிந்து சகலசித்தியையும் பெறுவான். இவ்விலிங்கங்களை எல்லா வருணத்தாரும் அருச்சித்து நிவேதிக்கலாம். அவ்வாறு அர்ச்சித்தவர்கள் மகாபாபிகளா யிருப்பினுங் கிருதகிருத்தியர்களாவர். அந்தஜோதிலிங்கங்களுக்கு நைவேதனஞ்செய்து அவற்றைப் புசித்தாற் புண்ணியபலம்வரும். ஆறுமாதம் இவ்விலிங்கங்களி லொன்றை அருச்சித்தவர் பிறவித்துயர் நீங்குவர். கீழ்க்குலத்துதித்தவன் அருச்சித்தால் உயர்குலத்துதித்துச் சற்கருமங்கள் செய்து மோக்ஷமடைவான். மிலேச்சர் சண்டாளர் நபும்ஸகர் முதல் யாராயினும் தரிசித்தவர்கள் வேதியனாகத்தோன்றி நற்கதியடைவார்கள். ஆதலின் இவ்விலிங்கங்கள் எல்லோருங் காணக்கூடியவை. இத்துவாதச லிங்கங்களே யல்லாமல், ஸ்மரித்தமாத்திரத்திற் பாபங்களை யொழிக்கத்தக்க பஞ்சபூத லிங்கங்களாய் ஐந்து லிங்கங்களுண்டு. அவை, காஞ்சிபுரியில் பிரிதிவிமயமான ஏகாம்பர லிங்கமும், காவேரிதீரத்தில் ஜம்புகேஸ்வரபுரியில் அப்புமயமான ஜம்புகேஸ்வர லிங்கமும், அருணாசலத்தில் அக்கினிமயமான அருணாசல லிங்கமும், தக்ஷிணகைலாயமெனப் பிரசித்திபெற்றுச் சுவர்ணமுகிதீரத்தில் ஸ்ரீகாளத்திபுரத்தில் வாயுமயமான சீகாளத்திலிங்கமும், பூலோக மகா கைலாசமென்று புகழப்

* டாகினி-Deccan டெக்கான். † சிதாபுரம்-Paraley பரலே எனவழங்கும்.

பெற்ற தில்லை வனத்தில் ஆகாயமயமான திருமூலலிங்கமுமாம். இவ்வைந்து லிங்கங்களைக் கண்ணுற்கண்டாலும், காதாற்கேட்டாலும், வாயாற்சொன்னாலும், மனதால்நினைத்தாலும் அப்பொழுதே புனிதமடைந்து இஷ்ட சித்திகள் கைகூடப்பெறுவர்.

இனி தீர்த்தங்களிலும் ஸ்தலங்களிலுமிருக்கும் புண்ணிய லிங்கங்கட்கு உபலிங்கங்களைச்சொல்கின்றேன்: சௌராட்டிரத்தில் சோமநாதலிங்கத்திற்கு மஹீநதிசாகரசங்கமஸ்தலத்தில் அந்தகேசலிங்கமும், மல்லிகார்ஜுன லிங்கத்திற்குப் பிருகுபர்வதசமீபத்தில் ருத்திரலிங்கமும், மகாகாளலிங்கத்திற்குத் துக்தேசலிங்கமும், ஓங்காரேசுவர லிங்கத்திற்குக் கர்த்தமேச லிங்கமும், கேதார லிங்கத்திற்கு யமுநா தீரத்தில் பூதேச லிங்கமும், பீமசங்கர லிங்கத்திற்குப் பீமேசுவரலிங்கமும், விசுவேசுவர லிங்கத்திற்குச் சரண்யேசுவர லிங்கமும், திரியம்பக லிங்கத்திற்குச் சித்தேசுவர லிங்கமும், வைத்தியநாத லிங்கத்திற்கு வைஜநாத லிங்கமும், நாகேசுவர லிங்கத்திற்கு ஜில்லிகா சரஸ்வதி சங்கமத்திலிருக்கும் பூதேசுவர லிங்கமும், இராமேசுவர லிங்கத்திற்குக் குப்தேசுவரலிங்கமும், குஸ்மேசலிங்கத்திற்கு வியாக்கிரேசுவர லிங்கமும் உபலிங்கங்களாம். இன்னும், பிரதானமான லிங்கங்களையுஞ் சொல்கிறேன். அவை கங்காதீரத்திலிருந்து பலன்கொடுக்கின்றன. அவை கிருத்திவாசேச லிங்கம்-விருத்தகாலகேசலிங்கம்-திலபாண்டேசுவர லிங்கம்-தசாசுவமேத லிங்கம்-கங்காசாகர சங்கமத்தில் சங்கமேசுவர லிங்கம் - யமுநாதீரத்தில் கோதூமேசுவர லிங்கம் - பிருந்தாவன சமீபத்தில் நீலேசுவரலிங்கம்-பூதேசுவரலிங்கம்-கௌசிகி தீரத்தில் நாரீசுவரலிங்கம்-கல்லகி தீரத்தில் கடுகேச லிங்கம் - புஷ்கர தீரத்தில் பூரேசலிங்கம் - பல்குநதி தீரத்தில் மண்டகேசலிங்கம் - கோமதிசாகர சங்கமத்தில் சித்தநாதேசுவர லிங்கம் - [பாட்னா]பத்தனத்தில் தூரேசலிங்கம் - மிருகேசலிங்கம் - ஜகநாத (அல்லது வைஜநாத)லிங்கம் எனப்படும். நருமதை நதிதீரத்திலுள்ள லிங்கத்தொகை சொல்ல ஒருவராலு முடியாது. அந்த மஹா நதியே சிவரூபமாயும் பாபஹாரகமாயு மிருக்கிறது. அதிலுள்ள பருக்கை முதலிய யாவும் சிவலிங்கமே. ஆயினும் அங்கிருக்கும் லிங்கங்களில் சிலவற்றிற்குத் திருநாமங்கள் சொல்லுகிறோம். அங்குள்ள பர்வதத்தில் ஆவர்த்தேசர் - பத்மேசர் - சிம்ஹேசர் - ஸோமேசர் - குமாரேசர் - புண்டரீகேசர் - மண்டபேசர் - தீக்ஷணேசர் - துந்தரேசர் - சூலேசர் - கும்பேசர் - குபேரேசர் - சோமேசர் - நீலகண்டேசர் - மங்களேசர்-நந்திகேசர் எனப் பெயர்பெறும். நந்திகேசர் கோடி பிரமஹத்திகளையும் போக்கடிப்பர். அவ்விலிங்கத்தைப் பக்தியோடு பூஜித்தவன் அடையாத பலனில்லை. அந்தவிடத்தில் நருமதாஸ்நானஞ் செய்வோர் தாம் செய்த பாவங்களை யெல்லாம் நீங்குவர்.

ஜோதிலிங்கங்களின் தொகையுரைத்தது.

முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது
நந்திகேசுவரலிங்கமகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவரைநோக்கி இன்னும் சிவசரிதங்களைச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதர்சொல்லுகிறார்:—பூர்வத்தில் தர்மராஜன் நாரதமுநிவரைக்கேட்ட விஷயத்தைச்சொல்லுகிறேன். நர்மதைநதிதீரத்தில் கர்ணகி என்னும் பட்டணத்தில் உதத்திய வமிசத்திலுதித்த பிராமணனொருவன் காசியாத்திரை செய்யவிரும்பி, தன் இருகுமாரர்களிடம் மனைவியை யொப்புவித்துச்சென்று, யாத்திரைசெய்து காசியில் வசித்துக்கொண்டிருந்து ஒருநாள் இறந்தான். இச்சங்கதி கேள்விப்பட்ட புத்திரர்கள் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய அந்தியேஷ்டி முதலியவற்றைச் செய்தனர். அவ்விறந்தவன் மனைவி தன் மக்கண்மேல் வைத்த விருப்பத்தால் அவரைக் காத்துக்கொண்டுவந்து, மணவினைசெய்து முடித்து, முன்னோர்வைத்த பொருளை இருவர்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தன் பாதுகாப்பிற்காகச் சிறிது தனம் வைத்திருந்து, சிலகாலத்தில் இறக்குந் ததிவர, அவற்றைத் தருமவழியிற் செலவிட்டுப் புண்ணியங்தேடியும் பிராணனொழியாதிருப்ப, புத்திரர் தாயைக்கண்டு மிகவும் வருந்தி, தாயே! உன் மனக்குறை யேதேனு மிருப்பின் எமக்குக் கூறுக என, எனக்கு ஒரு குறையுளது: அதைச்செய்வீராயின் எனக்கு நன்மரணம் வரும் என்றாள். அது என்னவெனப் புதல்வர்கேட்க, அஃது என் மூத்தமகன் செய்யற்பாலது: அவன் அப்படிச் செய்யவேண்டுமென்பது என்கோரிக்கை. அஃதென்னெனில், காசியில் மரணங் கிட்டாவிடினும் என் எலும்புகளைக் கங்கையில் விடவேண்டுமென்பது. அவ்வாறுசெய்தால் எனக்கு க்ஷேமம்வரும். இதுவே யென் விருப்பமெனக் கூறிய தாய்வார்த்தையைக் கேட்ட மூத்தகுமாரன் தாயே! நீ நல்லமனதாய் உயிர் நீங்கு. உன்காரியத்தை அவ்வாறேசெய்து பின்னர் என்காரியங்களை முடித்துக்கொள்வேன் என்று கைபோட்டுக் கொடுத்தவுடனே, அவள் சிவஸ்மரணை செய்துகொண்டே பிராணன்விட்டாள். அப்பொழுது புத்திரர் தகனமுதல் உத்தரகிரியை யீறாகிய யாவும் சிறப்பாகச் செய்தனர். சுவாதன் என்னும் ஜேஷ்டகுமாரன் முதல் மாசிகஞ்செய்து, காசிக்குப்போகத் தாயின் எலும்பை யெடுத்துக்கொண்டு, தன்மனைவியையும் புதல்வரையும் வீட்டில் நிறுத்தி விரைவில் வருவதாகக்கூறி, ஒருசேவகனைத் துணைகொண்டு புறப்பட்டுச்சிவஸ்தோத்திரஞ்செய்துகொண்டே ஒருயோசனைதூரஞ்சென்று, அன்றுசாயங்காலம் அங்கோர் வேதியன் வீட்டிற்சேர்ந்து சந்தியாவந்தனமுதலிய கிரியைகளை முடித்துக்கொண்டு அன்றிரவுதங்கி, சிவஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது ஐந்து நாழிகை ராத்திரியில் ஒரு ஆச்சரியம் நடந்தது. அதாவது:

கோவத்சசம்வாதம்.

அவ்வீட்டின் வாயிலிலோர் பசுகட்டப்பட்டிருந்தது. அவ்வீட்டு வேதியன் அப்பொழுதுவந்து பசுவையின்னுங் கறக்கவில்லையா? என்று

கன்றையவிழ்த்து விடுத்து, தன்மனைவியைக் கறக்கு நிமித்தங்கூப்பிட்டு, அக் கன்றின் கழுத்துக் கயிற்றைப் பற்றி யிழுத்துச் செல்லுகையில், அஃதவன் காலை மிதிக்க, வேதியன் சினங்கொண்டு முழங்கையாலிடித்துக் கட்டிவிட்டு, பால்கறந்துகொண்டு தன்னை மிதித்ததற்காகக் கொம்பாலடித்துப் பாலூட்ட விடாமையாலும், பசுவின் மடியிற் பாலிருந்ததாலும் பசு மிகவும் அழுதது; அவ்விரைச்சலைக்கேட்ட கன்று, தாயே! ஏன் இரைகிறாய்? என, பசு எனக்கு நேர்ந்த துக்கமாவது உன்னை அவன் கொம்புகொண்டடித்ததால் உண்டானது என, கன்று நாம் கர்மவசத்திலுள்ள ஜீவர்களாகையால் கர்மத்தை யநுபவிக்காமல் எங்குபோக்கக்கூடும். பூர்வத்திற்சிரித்துக்கொண்டு செய்த கர்மத்தை இப்பொழுது அழுதுகொண்டநுபவிக்கவேண்டி வந்தது. சுகதுக்கங்கள் அநுபவிக்காமல் தப்புகிறதில்லை என, பசு மகனே! நீ சொல்லும் வார்த்தை நான் அறிந்ததே யாயினும், சம்சாரமாயையால் துக்கமடைந்திருக்கிறேன்; நான் அழுதுந் துக்கமடங்கவில்லை என, கன்று உனக்குத் தெரியுமென்று கூறினமையின் நீ அழலாகாது. அழுதாற் பயனென்னை? என, பசு எனக்கு இப்பொழுதுண்டான துக்கம் இப்பிராமணனுக்குண்டானாலன்றிச் சிறிது மொழியாதாகையால் இவனுக்கு அவ்வகைய துன்பஞ்செய்யப்போகிறேன். அப்பொழுதுதான் அது தன்செயலால் விளைந்ததென்றுணர்வான். மகனுக்குத் துன்பம் வந்தால் தாய்க்கு அதைக்காட்டிலும் பெருந்துக்கமாயிருக்கும். நல்லது: நாளைய உதயத்தில் இவன் குமாரனை நான் கொம்பாற் குத்துகிறேன்: இவன் மகன் இறப்பான் என, கன்று தாயை நோக்கி இதுவரையிற் செய்த கர்மத்தை யநுபவித்துக்கொண்டிருக்கையில், இப்பிரமஹத்தியை ஏன் அடையவேண்டும்? அவன் புதல்வனைக்கொன்றால் உனக்கும் அவ்வகைய துன்பம் மீண்டும் வராமலிராது. நற்கருமஞ்செய்தால் சுவர்க்கலோகமும், துர்க்கருமஞ்செய்தால் நரகமும், மிசிரகர்மத்தால் மானுஷஜனனமும், கர்மக்ஷயத்தால் முக்தியும் உண்டாகுமாதலின் நீ இவ்வகைய தீச்செயல்புரியவேண்டாம். என்னையடித்தானென்றுநினைக்கிறையே: நான்யார்? நீயார்? நீ தாயுமல்லை: நான் புதல்வனுமல்லன்: தாய்-தந்தை-பிரபு-பந்து-மகன் முதலாகச் சொல்லப்படும் எல்லாம் பொய். எல்லாப் பிராணிகளும் தத்தங் கருமத்தை யநுபவிக்கவேண்டியதாதலின் இதனை யுணர்ந்து தீமை செய்யாது நன்மையே செய்: என, தாய்ப்பசு உனக்குவிளைத்த துன்பத்தைக் கண்ட நான் அதனை அவர்கட்குத் திருப்பிச் செய்யுமளவும் உடல் பதைக்கிறேன். பிரமஹத்தி வருமென்கிறையே: அதனைப் போக்கடிக்கத்தக்க புண்ணியஸ்தலமெனக்குத் தெரியும். இவ்வேதியச்சிறுவனைக் கொன்றால், என் உடல் கறுக்கும். அப்பிரமஹத்தி நீங்கியவுடன் உடல் பழையபடி வெள்ளையாய்விடும். இது எனக்குத் தெரியுமென, கன்று ஒன்றுங் கூறாதிருந்தது. இந்தச் சம்பாஷணையைக் கேட்டிருந்த காசியாத்திரைப்பிராம்மணன் இதைச் சோதித்தபிறகே நாம் போகவேண்டுமெனக் கருதியிருந்தான்.

நாற்பதாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார் :—முநிவர்களே ! மறுநாள் காலையில் அவ் வீட்டு வேதியன் எழுந்து வழிப்போக்கனைக் கண்டு, ஐயரே ! பொழுதேறு கிறதே: இன்னும் நித்திரைசெய்கிறீரோ என, காசியாத்திரைசெல்வோன் என க்கும் என் சேவகனுக்குஞ் சிறிது இளைப்பாயிருத்தலின், இரண்டு நாழிகை கழித்துச் செல்கிறோம் என்று மறைத்துச்சொல்லி நித்திரைசெய்பவன்போ லிருந்தான். அப்பொழுது பசுவைக்கறக்கும் வேளையாயிற்று. வேதியனுக்கு வேலையிருத்தலின் நீ கன்றைவிடு என்று தன்புதல்வனோடு கூறிச்சென்றான். அதைக்கேட்ட சிறுவன் கன்றை யவிழ்த்துப் பசுவினிடம் விட, அவன்தாய் பால்கறக்க வந்தாள். பசு மடிசுரந்தது கண்டு கன்றினைப் பழையபடி கட்ட ஓர்கோலால்புடைத்து இறங்கிக்கட்டுகையில், பசுகோபித்து அவனைக்கொம் பாற் குத்தப் பக்கத்திற் பாய்ந்துவிழுந்து மூர்ச்சையானான். அதனைக் கண் டோர் சொல்லத் தந்தைமுதல் அநேகர் கும்புகூடித் தண்ணீர் கொண்டுவா ருங்கள் எனச் சொல்லிக்கொண்டிருக்கையில் அவ்வாலிபன் மரணமடைந் தான். அதனால் யாவரும் அழுதார்கள். அவ்வீட்டுவேலைக்காரன் பசுவை யடித்து அவிழ்த்துவிடுத்தான். வெண்ணிறமுடைய பசுவானது பிரமஹத்தி யாற் கருநிறமடைந்தது. எல்லோரும் வருத்தமுற்றிருந்தார்கள். இவ்விநோ தத்தையெல்லாங் கண்டிருந்த காசியாத்திரைக்காரன் தன் சேவகனுடன் புறப்பட்டுப் பசுவானது போகும் வழியைப் பின்பற்றிச் சென்றான்.

பசுவானது வாலைக்கிளப்பிக்கொண்டு நருமதைநதியை யடைந்து, நந்திகேசுவரருடைய சமீபத்தில் திவ்யமான ஜலத்தில் மூன்றுதரம் முழுகி ஸ்நானஞ்செய்து வெண்ணிறமடைந்து தான் வந்தவழியே திரும்பிச்சென் றது. அதைக்கண்ட வேதியன் மிக்க ஆச்சரியமடைந்து ஆ! ஆ! இத்தீர்த்தத் தில் ஸ்நானஞ்செய்தமாத்திரத்திற் பிரமஹத்தியொழிந்தது என்று, தானும் தன் சேவகனும் அங்கே ஸ்நானஞ்செய்து நந்திகேசுவரரைப் பிரதக்ஷிணஞ் செய்து சென்றார்கள். அவ்வாறு போகின்ற அவ்விருவர்க்கு முன் சகலாபர ணபூஷிதையான ஒரு பெண் எதிர் வந்து, நீ எங்கிருந்துவருகிறாய் ? பொய் புகலாது உண்மை சொல்: என்று வினவ, வேதியன் மறையாது விஷயத்தை வெளியிட்டான். அதன்பேரில் அவள் நீ இங்கேயிருக்கவேண்டும் என, அவன் சேவகனுடன் அங்கே தங்கியிருக்கையில், கங்கையாகிய அம்மங்கை நீ எங்கே இவ்விசேஷத்தைக் கண்டாயோ அங்கேயே இவ்வெலும்பை விட்டுவிடுவையாயின் உன் தாய் திவ்யதேகமடைந்து சுவர்க்கஞ்சேருவள். பிரதி வருஷமும் வைசாகசுத்தசப்தமியில் கங்கை இவ்விடத்திற்கு வருவாள். இன்றையதினம் அந்தச் சப்தமியாயிருக்கிறது. நானே கங்கை. அவ்விடத் திற்குத்தான் செல்கிறேன் என்று அந்தர்த்தானமாயினள். பிராமணன் மீண்டும் அந்த நருமதைதீரத்திலுள்ள நந்திகேசுவரக்ஷேத்திரத்திற்குவந்து

அந்த அஸ்திகளை அதில் விட்டமாத்திரமே அவன் தாய் திவ்ய வுருவம் வஹித்துக் குமாரனை ஆசிர்வதித்து, குழந்தாய்! நீ தன்யன்; கிருதகிருத்தியன்; வமிசத்தைப் பவித்திரஞ்செய்தாய். உனக்கு தனம்-தான்னியம்-ஆயுள்-வமிச, விருத்தி முதலியன கிடைக்கும் என்று வரமளித்துச் சற்கதி யடைந்தாள்.

இவ்விதமாக அவ்வேதியன் தன் தாய் அஸ்தியை நருமதைநதியில் நந்திகேசுவரசந்நிதிக்கருகில் விடுத்து யாத்திரை முடித்துத் தன் வீடு சேர்ந்தான். அத்தினத்திலிருந்து அந்தத்தீர்த்தம் மாநுடர்க்கெல்லாம், பிரசித்தமாகத் தெரிந்தது. ஆகையால் நந்திகேசுவரசந்நிதிக்கருகில் ஸ்நானஞ்செய்வோர் சகல பாபங்களுமொழிந்து இஷ்டகாமியங்களை அடைவார்களென்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

அன்றியும், ருஷிகையென்னும் ஒருபிராமணப்பெண் *பாலவைதவ்வியமடைந்து அந்தஸ்தலத்திற்குச்சென்று கடூரமான சிவபூஜை செய்துகொண்டிருக்கையில், மூடன் என்னும் தைத்தியன் அவளைச் சிவபூஜை செய்யாதிருக்கும்படி பலவகையாகப் போதித்தும், ருஷிகை அதை மேற்கொள்ளாது சிவபூஜையைக் கடைப்பிடித்து நிற்பதால், தைத்தியன் தனது கோரரூப முதலியவற்றை அவளுக்குக்காட்ட, அவள்பயந்து சிவசிவ! என்று சிவநாமங்களைஸ்மரித்து, சரணமடைந்தவரைக் காப்பாற்றும் விரதத்தை உறுதிசெய்யவேண்டும் எனப்பிரார்த்திக்க, நந்திகேசுவரர் அவளுக்குச் சந்தோஷத்தை உண்டுசெய்யக் கருதிப் பிரசன்னராய்,உனக்கொரு பயமுமில்லை; உன்னை இரட்சித்தேன்; அவ்விராக்ஷதன் தானே போய்விடுவான். நான் எல்லோரையும் இரட்சிக்கு நிமித்தமாகவே இங்கிருக்கிறேன் என்று வரமளித்து, அவள் பூஜித்துவந்த பார்த்திவலிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். கங்காதேவியும் பிரசன்னமாய் அப்பிராமணப்பெண்ணைப்பார்த்து என்ன வரம் வேண்டும்? என,அவள் என் நிமித்தமாக இத்தினமாகிய வைசாக சுத்த சப்தமியில் இங்கு வந்து பிரத்தியக்ஷமா யிருக்கவேண்டும் எனக் கேட்க, அவ்வாறே கங்கையும் இணங்கிப் பிரதிவருஷத்திலும் வருகின்றாள். ஆதலின் அத்தினத்தில் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், சகல பாபங்களும் விலகும். நீங்கள் என்னைக் கேட்ட நந்திகேசுவரமஹாத்மியத்தைச் சொன்னேன் என்று ஸூதமுநிவர் சொல்லினர்.

நந்திகேஸ்வரமகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தோன்றாவது
அத்திரீசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரை நோக்கி இன்னுமுள்ள சிறந்த லிங்கங்களைச் சொல்லவேண்டுமென ஸூதர் சொல்லுகிறார்: வியாசேசுவர-சுகேசுவர-பண்டாரேசுவர-ஹாங்காரேசுவர-சுரேசுவர-பூதேசுவர-

* பாலவைதவ்யம் - இளம்பருவத்திற் கைம்பெண்தன்மை.

சையமேசுவரலிங்கங்கள் பாபஹரமானவை. இன்னும் தப்திகாநதி தீரத்திலே குமாரேசுவர-சித்தேசுவர-ஸ்தநேசுவர-ராமேசுவர-ருஷீசுவர-கும்பேசுவர - நந்தேசுவர-பஞ்சபுஞ்ஜேசுவர லிங்கங்கள் தரிசித்தமாத்திரத்தில் அபீஷ்டங் களைக் கொடுக்கத்தக்கவை. பூர்ணாநதி தீரத்தில் பூர்ணகேசுவர வீரேசுவர லிங்கங்களும், கோதாவரிதீரத்தில் கபாலேசுவர-சக்கரேசுவர - சந்திரேசுவர- தௌதபாபேசுவர - பீமேசுவர - சூரியேசுவரலிங்கங்களும் விளங்குகின் றன. திருப்திகாநதி தீரத்தில் திரியம்பகேசுவர - கோகர்ணேசுவர - நாளுகே சுவர - ராமேசுவர - நந்தேசுவர - விமலேசுவர - கண்டகேசுவரலிங்கங்கள் பூஜித்த மாத்திரத்தில் ஞான முண்டாக்கத்தக்கவை. திருப்திகாநதி கீழ்க் கடற் சங்கமத்திலே தர்மகேசுவர லிங்கமும், மேற்கடற் கரையில் சித்தேசு வர - பிலேசுவர - அந்தகேசுவர லிங்கங்களும் இருக்கின்றன. அந்தகாசுர னைச் சங்கரித்த உக்கிர ரூபத்துடன் சிவபெருமான் நின்றவிடமே அந்த கேசமெனப்படும். எல்லா வுலகங்கட்குஞ் சுகத்தைக் கொடுக்கும் அற்புதா சலத்தில் சங்கரேசுவர - கர்த்தமேசுவர - கோடீசுவரலிங்கங்கள் இருக்கின் றன. கௌசிகாநதி தீரத்தில் அசலேசுவர-நாகேசுவர-அநந்தேசுவர-யோகே சுவர - வைத்யநாதேசுவர - கோடீசுவர - சப்தேசுவர - பத்திரேசுவர-சண் டீசுவர - சங்கமேசுவர லிங்கங்கள் இருக்கின்றன. இதுவரையில் கீழ்த்திசை யிலுள்ளவற்றைச் சொன்னேன்.

முனிவர்களே! இனி தக்ஷணத்தில் உலகத்திலே யிருப்பவர்கள் சுகமடையவும், அத்திரி முனிவரும் அநுசூயையும் ஓர் க்ஷாமகாலத்தில் அன் னதானஞ் செய்யச் சங்கற்பித்துக்கொண்டதனை நிறைவேற்றவும், சுயம்பு மூர்த்தியாய்த் தோன்றிய அத்திரீசுவர லிங்கமொன்று சாக்ஷாத்காரமாக விளங்குகின்றது எனக் கேட்ட முனிவர்கள் அவ்வத்திரீசுவர லிங்கத்தின் உற் பவ முதலியவற்றை எங்கட்குச் சொல்லவேண்டுமென விரப்ப, ஸூதர் சொ ல்லுகின்றார்:—நீங்கள் கேட்ட விஷயம் அருமையானது; அதற்காகப்பெருங் களிப்படைந்தேன்; அந்தக் கதையைச் சொல்லுகிறேன்:— தென்றிசையில் காமதம் என்னும் பெயரையுடையவனமொன்றுண்டு. அது தவஞ்செய்தற்குத் தக்கது. அங்கே பிரமபுத்திரராகிய அத்திரிமுனிவர் தன் மனைவி அநுசூயை யுடன் தவஞ்செய்துகொண் டிருக்கையில், நூறுவருஷகாலம் மழையின்மை உண்டாகிச் சகலருங் கஷ்டப்படவந்தது. தண்ணீர் கிடையாததாயிற்று. மர ங்களெல்லாம் உலர்ந்தன. தளிர்கள் பழங்கள் இல்லையாயின. சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்களும் ஜலமின்றி நிறுத்தப்பட்டன. நிழலுள்ள மர மே யில்லை. நெருப்புக் காற்றடித்தது. இதனால் யாவரும் பெருந்துன்ப முற் றார்கள். இவற்றைக்கண்ட பதிவிரதையாகிய அநுசூயை இத்துயரைச் சகிக்க முடியாமல், தன் கணவன் யோகத்தி லமர்ந்திருக்க, அவர் சிஷ்ர் முதலானோர் பசிப்பிணி யாற்றாது பல விடங்கட்குச் சென்றமையால், தானே அவரை ஒன்றியாகச் சேவித்துப் பணிசெய்துகொண்டு, பார்த்திவலிங்கமொன்று

செய்து, பூஜா வுபகரணங்கள் கிட்டாமையின் மாநஸிகமாக உபசரித்துப் பூஜித்துத் தன் கணவன் முன்னிருத்தி இருவர்க்கும் தண்டஞ் செய்தும் பிரதட்சிணஞ் செய்துகொண்டு மிருந்தாள். அவளது கடினபூஜையைக் கண்ட, தைத்தியர் தானவர் முதலானோர் சுந்தரவதியான அநுசூயையைப் பார்த்து மோகித்து, சிவபூஜா மஹிமையாலும் பதிவிரதா தன்மையாலும் நெருப்புமயமாய் உஷ்ணம் வீசுதலின், சமீபிக்கமுடியாமல் அதிதூரத்திலிருந்தார்கள்.

அத்திரிமுநிவர் செய்யுந் தவத்தைக் காட்டிலும் அநுசூயை செய்யுந் தவம் மிக்க கடினமாக விருந்தது. அநுசூயை தவஞ்செய்து முடித்தவரையில் இவ்விருவர் நீங்க வேறொருவரும் அங்கிருந்திலர். இவ்வாறு சிறிதுகாலங் கழிய, அத்திரிமுநிவர் தியானயோகத்தில் மனலயப்பட்டு ஒன்றும் உணரராராயினர். பதிவிரதையான அநுசூயை தன்கணவனையும் சிவலிங்கப்பெருமானையுமன்றிப் பிறிதொன்றையு முணராது பெருநிஷ்டையி லிருந்தாள். அத்திரிமுநிவர் தவத்திற்கும் அநுசூயையின் சிவபூஜைக்குஞ் சகல தேவர்களும், ருஷிகளும், கங்கைமுதலிய தீர்த்தங்களுஞ் சந்தோஷித்து இவர்களைக் காணும்படி வந்து, இவர்கள் அற்புத சமாதியைக்கண்டு, ஒருவரோடொருவர் இவர்கள் தவமும் பூஜையுமே சிறந்தன ; இதைக்காட்டிலுஞ் சிறந்தது உலகத்திலில்லை; இதுபோல் யாருஞ் செய்திலர் ; இவர்கள் மகா புண்ணியர்கள்; இவர்களைக் காட்டிலும் புண்ணியர்களில்லை என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். சிவபெருமானும் கங்காதேவியுமே அங்கு நின்றவர்கள். அவர்களில் கங்கை அநுசூயையின் பூஜாக்கிரமத்தைக் கண்டு இவளுக்கு ஏதேனும் வரங்கொடுத்தே செல்லவேண்டுமென்றும், சிவபெருமான் இங்கெழுந்தருளி யிருத்தலின் அவரும் ஏதாவது நன்றிசெய்தே அந்தர்த்தானமாவாரென்றும் நினைத்துக் கொண்டிருந்தாள். அநுசூயையோ தன் கணவன் நிஷ்டை கலையுமளவும் சிவபூஜையிலேயே இருக்கவேண்டுமென்று கருத்துக்கொண்டு அன்னபானாதிகளை நீங்கியிருந்தாள். இதுவரையில் இவ்விருவர் நிஷ்டையும் ஐம்பத்துநான்குவருடங்க ளிருந்தன.

ஒருகாலத்தில் அத்திரிமுநிவர் தன் நிஷ்டை நீங்கி அநுசூயையைப் பார்த்து விரைவில் ஜலங்கொண்டுவருக என, அநுசூயை அவ்வாறேயாகுகவென்று கமண்டலத்தை யெடுத்துக்கொண்டுபோய் எங்கெங்குந் திரிந்து நீர் கிடைக்காமல் யோசித்துத்திரிகையில், கங்காதேவி பிரசன்னமாய் உனக்கு வேண்டியதைக் கேள்: கொடுக்கிறேன் என்றுகூற, அநுசூயை நீ யார்? எங்கிருந்து இங்கு வந்தாய்? என, கங்கை உன் பதிவிரதா தர்மத்தையும், நீ உன் கணவனையும் சிவலிங்கத்தையும் பூஜித்துவந்த உறுதிப்பாட்டையும் பார்த்துக்கொண்டிருந்தேன். நான்கங்கை. நீ எதைக் கோருவையோ அதைச் சொல் என, அநுசூயை கங்கையைப் பணிந்து, தாயே! எனக்குத் தண்ணீர் வேண்டும் என, கங்கை உன் கையால் சிறுகுழி தோண்டின் அங்கே நான் ஜலங்கொடுப்பேன் என, அநுசூயை அவ்வாறே தோண்ட ஜலதாரா தோ

ன்றியது. அநுசூயை ஆச்சரியத்துடன் நீர் முகந்துகொண்டு கங்காதேவியை ப்பார்த்து, உனக்கு என்பேரில் தயையிருக்கும் பக்ஷத்தில் என் கணவன் தவஞ்செய்துமுடியுமெல்லையும் இங்கேயேயிருக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, கங்கை நீ உன் கணவனுக்குச் செய்த பணிவிடையாலடைந்த பலனில் ஒரு மாசபலனை எனக்குக் கொடுப்பாயாகில் நான் அப்படியே யிருக்கிறேன் என, அநுசூயை அப்படியே தந்தேனென்று அளித்து, ஜலத்தைக்கொண்டு போய்க் கணவனுக்குக் கொடுத்து முன்னே நின்றனள். அத்திரி முனிவர் முறைப்படி ஆசமனஞ் செய்து தாகந் தீர்ந்து அபரிமிதமான சந்தோஷத்தை யடைந்து, பெண்ணே! நான் தினமும் பானஞ்செய்யுஞ் சலமல்ல; இது வேறாய்ச் சிறந்திருக்கிறது என்று கூறி, நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து, எப்பக்கமும் உலர்ந்த மரமும் நெருப்புக்காற்றுமா யிருக்கக்கண்டு, மழையில்லையா? என மனைவியைக்கேட்க, ஆம்: மழையில்லையென, மழையில்லையாயின் இப்பொழுது எங்கிருந்து இத்தண்ணீர் கொண்டுவந்தாய்? என வினவ, அநுசூயை என்னை நானே புகழ்ந்தவளாவேனே? சொல்லாவிட்டாற் குற்றம் வருமே? என்று யோசித்துக்கொண்டிருக்கையில், மீண்டும் இரண்டாந்தரம் மூன்றாந்தரங்கேட்க, ஸ்வாமீ! நிஜத்தைச் சொல்கிறேன். தங்களை யான் சேவித்தபலத்தாலும்,சிவபூஜைசெய்த பலத்தாலுங் கங்காதேவி யிங்கு வந்திருக்கிறாள். அந்த ஜலத்தையே கொண்டுவந்து கொடுத்தேன் என, அத்திரி முனிவர் ஆச்சரியமுற்று, பெண்ணே! நீ சொல்கிறது நிச்சயமா? நான் யதார்த்தமென்று நம்பவில்லை. யோகிகட்குந் தேவர்கட்கும் அசாத்தியமான காரியம் எப்படி உனக்குக்கைகூடும்? ஆனாற் கங்கையை நான் பிரத்தியக்ஷமாகக் கண்டால் நம்புவேன் என்றார்.

அநுசூயை அதைக்கேட்டு, ஸ்வாமீ! தேவரீர் என்னுடன் வந்தாற் காண்பிக்கிறேனென்று, கங்கை பிறந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக, அக்குழியிலிருக்கும் ஜலப்பெருக்கைக்கண்டு பெருஞ்சந்தோஷமடைந்து, நீ தன்யை. என் தவமும் ஸபலமாயிற்று. கங்காநதியில் ஸ்நானஞ்செய்யக்கிடைத்ததே! இது பிறர்க்குக் கிடைக்குமா? என்று அக்கங்காநீரில் ஸ்நானஞ்செய்து ஆசமனஞ்செய்து பலமுறை கங்கையைத் துதித்தார். அநுசூயையும் அவ்விடத்தே ஸ்நானஞ்செய்தாள். அப்பொழுது கங்கை இவர்களைப் பார்த்து அநுசூயாதேவீ! நான் இனிச் செல்கிறேன் என, அநுசூயை கங்காதேவீ! நீ எனக்குப் பிரத்தியட்சமாகிப் பரிபூரண அன்புடையவளாயின், அங்கீகரித்தபடி யிங்கேயே யிருக்கவேண்டுமென்று பலவிதமாகத் துதித்தாள். அத்திரிமுனிவரும் பலவாறு துதித்துத் தயை வைக்கவேண்டுமென்று யாசித்தார். பிறகு இருவரும் கங்கையைநோக்கி இங்கேயே யிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, கங்கை நீ முன் கணவனையும் சிவலிங்கத்தையும் பூஜித்ததாலுண்டான பலத்தில் ஒருமாசபலனைக்கொடுத்து உன் கணவன் தவம் முடியுமளவு மிருக்கவேண்டுமென்றாய். இப்பொழுது இங்

கேயே இருக்கவேண்டுமென்பாயாகில், அந்தப்பலனில் ஒரு வருஷ பலனைக் கொடுத்தால் அப்படியேயிருப்பேன். தானம் - ஸ்நானம் - யாகம்-பதிசேவை முதலியவற்றின் பலனைக்காட்டிலும் பதிவிரதையைக்கண்டால் அதிக பலன் கிடைத்தலின், உன்னைத் தரிசித்துக்கொண்டே இங்கிருப்பதால் எனக்குஞ் சந்தோஷமாம். உலகத்திற்கெல்லாம் க்ஷேமமுண்டாகவேண்டுமென் றுநினைத்தால் இந்தப்பலனைக்கொடு என, அநுசூயை பெரியோர்கள் பிறர்க்குதவி செய்வதே வேண்டுவராதலின், உலகக்ஷேமத்தை விரும்பி வருஷபலனைக் கொடுத்துவிட்டாள். பொன்-சந்தனம்-கரும்பு இம்மூன்றும் தான் துயருற்றுயினும் பிறருக்கு உதவியாவதுபோல, கஷ்டப்பட்டுத் தேடிய புண்ணியத்தைப் பலர் நன்மையடைதல் விரும்பி அநுசூயை கங்கைக்குக் கொடுத்தாள்.

உலகசுகத்தை விரும்பி இவ்வாறு கங்காதேவிக்குத் தானங்கொடுத்த அநுசூயை விஷயத்தில், அவ்வம்மை பூஜித்த பார்த்திவலிங்கத்திலிருந்து சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் உன் பதிவிரதாதர்மத்திற்குஞ் சிவபூஜைக்குமகிழ்ந்தேன். வேண்டிய வரத்தைக் கேள் என்று கூற, ஐந்து திருமுகங்களோடு பிரத்தியட்சமாக நேரே நிற்கும் சிவபெருமானை அத்திரி முனிவரும் அநுசூயாதேவியும்பார்த்து, தேவரீரும் ஜகந்மாதாவாகிய கங்காதேவியும் ஆகிய இருவர்க்கும் எங்கள் விஷயத்தில் தயையிருக்கும்பட்சத்தில், எப்பொழுதும் இங்கெழுந்தருளியிருந்து உலகத்திற்குச் சுகத்தை யுண்டுசெய்ய வேண்டும் எனப் பிரார்த்திக்க, அவ்விருவரும் அவ்வாறே அங்கீகரித்தனர். சிவபெருமான் அத்திரீசுவரரென்னும் பெயரால், சகலர்க்குஞ் சுகத்தைச் செய்துகொண்டிருக்கிறார். கங்காதேவியும் தன் சகோதரியாகிய பார்வதி தேவியோடும் அங்கேயிருக்கின்றாள். அதுமுதல் அவ்விடத்திற் குறைவில்லாத கங்காசலம் எக்காலத்தும் விளங்குகின்றது. பலமுநீசுவரர்கள் இதையுணர்ந்து தங்கள் பத்நிமார்களோடும் சிஷ்யர்களோடும் அங்கேவந்தார்கள். கோதுமை - தானியங்கள் - இலைகள் - புற்கள் - பழங்கள் யாவும் விருத்தியடைந்திருந்தன. அதுகண்டமுநிவர்கள் யாவரும் இதுவே தபத்திற்குயோக்கியமான பூமியென்று அங்கே தவஞ்செய்திருக்கின்றனர். இத்தவத்தால் களிகூர்ந்த சிவபெருமான் மழைபொழியச்செய்தார். அதனால் சகலருக்கும் சுகமுண்டாகி அன்னபானாதிகளைப் பெற்றுத்தங்களுக்குரிய தவங்களைச்செய்திருந்தார்கள். இந்த அத்திரீசுவரப் பிரபாவத்தைக்கேட்டவர்கள் சகல சுபங்களையு மடைவார்களென்று ஸூதமுநிவர் நைமிசாரணியமுநிவர்களை நோக்கிக் கூற, நைமிசாரணியவாசிகள் ஸ்வாமீ! இனி தேவரீர் தாருவனத்திலுள்ள நாகேசுவரலிங்கப் பிரபாவத்தை யுரைத்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க வியாஸ சிஷ்யர் விளம்பலாயினர்.

அத்திரீசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது
நாகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கி ருஷிகளே! இனி நீங்கள் கேட்ட தேவதாருவனத்திலுள்ள நாகேசுவரலிங்கப் பிரபாவத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் எனச் சொல்லத் தொடங்கினர். பூர்வம் ஒரு கற்பத்தில் * தேவதாருவனமென்றொருவன மிருந்தது. அதில் வசித்திருந்த அநேக முநிவர்கள் யாகமே எல்லாப் பலனையுங் கொடுக்கத்தக்கதென்றும் யாகத்தைக் காட்டிலுங் கடவுள் வேறில்லை யென்றுந் தீர்மானித்து நடந்து வருவாராயினர். அவர் மனைவியர் கற்பே சிறந்ததென்றிருந்தனர். சிவபெருமான் அவர்கள் மயக்கத்தை யறிந்து அதனை யொழிக்கக் கருதி, விஷ்ணுவை விளித்து நீ பெண் வடிவேற்று என்னுடன் வருகவெனப் பணித்தனர். அக்கட்டளை பெற்ற திருமால் பொற்பதுமைபோன்ற மேனியும், பூர்ண சந்திரன்போன்ற முகமும், மன்மதனது கருப்புவில் போன்ற புருவமும், வாட்படை வேற்படை முதலியவற்றை வென்ற விழியும், முல்லை யரும்புபோன்ற தந்த பந்தியும், கொவ்வைக் கனிபோன்ற அதரமும், பொற்கிண்ணம் போன்ற குசங்களும், சாணைக்கல் போன்ற கன்னமும், வள்ளைத்தண்டு போன்ற செவியும், சங்கம்போன்ற கழுத்தும், மூங்கில்போன்ற தோளும், உடுக்கை போன்ற இடையும், யானைத் துதிக்கைபோன்ற தொடையும், அரவின் படம் போன்ற அல்குலும், செந்தாமரைமலர்போன்ற கைகளும், செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாதங்களுமுடைய சர்வாபரண பூஜிதையான பூங்கொடி போன்ற ஓர் பெண்வடி வேற்க, சிவபெருமானும் அம்மங்கைக்கேற்ற ஆடவசிரேஷ்டராய், கோடிசூரியப் பிரகாசமான திவ்விய தேஜஸுடைய திருவுருவேற்று, ஓர் கரத்தில் தமருக மேந்தி, உள்ளாளப்பண் பாடிக்கொண்டு, திகம்பரராய் மதயானை போன்று நடந்து, மாயனாகிய மோகினிப்பெண்ணுடன் தாருவன முநிவர் தவநிலையையும் அம் முநிபன்னியர் கற்பையுஞ் சோதிக்கக் கருதித் தாருவனத்தை யடைந்து, அம்மங்கையர் மையல் கொள்ளும்படி வீடுகள் தோறுஞ் சென்று பலியேற்க, அம் முநிமாதர் பலிகொண்டு வெளியே வந்து பிக்ஷாடனனைக் கண்டு காமப் பித்தேறினவர்களும், மதிமயங்கினவர்களும், தூரமாய் ஓடினவர்களும், ஆலிங்கனஞ் செய்தவர்களும், அழைப்பவர்களும், பிடித்திழுப்பவர்களும், மையல் நோய் துன்புறுத்துவதால் சேரவாருமென்பவர்களும், பின் தொடர்பவர்களும், பெருமூச்சு விடுபவர்களும், காமமேலீட்டாற் செய்வது தெரியாதவர்களும், வளையல் சோர்வார்களும், வஸ்திரத்தை நழுக விடுவோர்களும், வழி தெரியாது விழ்வோர்களும், வார்த்தை குழறுவோர்களுமாயினர். கற்பையன்றிக் கடவுளில்லை யென்றிருந்த முநிபன்னியர் பின்றொடர்ந்துவர, நீலகண்டராகிய பிக்ஷாடனப் பெருமான்

* இத்தேவதாருவனம் ஹிமோபர்வதச் சாரலிலிருந்ததெனப் புராணங்களால் தெரியவருகிறது.

Page 129



20. சிவபெருமான் பிக்ஷாடனரும், திருமால் மோகினியுமாகத் தாருவனமடைந்தது.

வேத கீதங்கள் பாடிக்கொண்டும் விநோத வித்தைகள் செய்துகொண்டும் வீதியி னுலாவிக்கொண்டுமிருந்தனர்.

இஃதிப்படி யிருக்க: மோகினி வடிவேற்ற திருமால், உடலிளைக்கச் செய்யுந் தவமே சிறந்ததென்றிருந்த முனிவர்பால் அடைந்து உல்லாசமாக வுலாவியும், முனிவர்களைக் கண்டு நாணமுற்றாற்போல வொதுங்கியும், தன் கையிலேந்திய வீணையைச் சுருதிகூட்டிப் பாடியும், கண்வலையாற் பலரை மதிமயக்கியும், பண்ணமைந்த பாடலினாற் பலருயிரை வருத்தியும், புன்சிரிப்பினாற் பலரைத் துன்புறுத்தியும், இவ்வாறு பலவிதமாக மோகாக்கினியை அவர்கட்கு மூட்டிவிட, முனிவர்கள் யாவரும் தங்கள் தவச்செயலை மறந்து அவச்செயல் கொண்டு மதிமயங்கி, மாயனாகிய மோகினியின் மலரடியில் வீழ்ந்து, மாதே! நீ யாது காரணமாக இங்கு வந்தனையோ? அஃது எங்கள் தவப்பயனே என்று தங்கள் சடைகள் அவிழ்ந்து தரைமிசைபுரளவும், உத்தரியம் நழுவி விழவும், மோகினியைப் பின்பற்றிச் சென்ற யோகிகளாகிய முனிவர்கள் தமது மனைவியர் கற்பையும் வளையல் முதலிய ஆபரணங்களையும் ஆடையையு மிழந்து பிக்ஷாடனரைச் சூழ்ந்து வருவது கண்டு கோபித்து, திகம்பரனை யடைந்து பலவிதமாகச் சாபங்கள் கொடுத்தனர். அச்சாபங்களி லொன்றுஞ் சர்வலோகக்காரணபூதனாகிய சிவபெருமானையடையவில்லை.* அது கண்ட அருந்தவர் பிக்ஷாடனனை யடைந்து ஐயரே! நீர் யார்? இவள் யார்? என வினவ, பெருமான் யான் ஓர்முனிவன். இவள் என்மனைவி. இங்கேதவஞ் செய்யவந்தோம்என, முனிவர் அப்படியாயின்,வேசைபோலத்திரியும் இவளை யொழித்து நீர் தவஞ்செய்வீர் என்றனர். பிக்ஷாடனர்-மனைவியோடு தவஞ் செய்வதே சிறந்த வானப்பிரஸ்ததருமம். நீங்கள் மனைவியருடன் சேர்ந்து தவஞ்செய்யவில்லையா? உங்கள் மனைவியர்கற்பு மிக்க அழகாயிருக்கின்றதே? உங்கள்செயல் இப்படியிருக்கையில், கற்பிற்சிறந்த என் மனைவியை யானோ நீங்கித்தவஞ்செய்வேன்? என்றுகூறிக் கோபங்கொண்டார்போன்று அவர்களைநீங்கி மோகினியாகிய விஷ்ணுமூர்த்தியுடன் வசிட்டமுனிவர் தவச்சாலை யடைந்து,வசிட்டரும், அருந்ததியும் செய்த பூஜைகளைப்பெற்றுத்திருக்கைலையையடைந்து எழுந்தருளியிருந்தனர்.

*தாருவன முனிவர் சிவபெருமானை நோக்கிச் சொல்லிய சாபமொழிகள் பயன்படாமை கண்டு மனம் வருந்தி, எட்டி வேம்பு முதலிய சமிதைகளோடு, வேப்பெண்ணெய் கடுகெண்ணெய் முதலிய நெய்யைச் சேர்த்து ஜபிக்கத்தகாத மந்திரங்களையெல்லாமோதி, பலாசிலைச் சுருக்குகொண்டு அபிசாரவேள்வி செய்ய, அவ்யாகாக்கினியினின்று, சர்ப்பங்கள் - பூதங்கள்-தமருகம் - மழு-மான்-புலி - யாகாக்கினி-முயலகன் - வெண்டலை முதலியன புறப்பட்டுச் சிவபெருமான்மேற் சீறிவர, சிவபெருமான் அவ்வாறு சீறிவந்தவற்றுள், பாம்பினை ஆபரணமாக வணிந்து, பூதங்களோடாடி, தமருகம் - மழு - மான் இவற்றைத் திருக்கரத் தேந்தி, புலியை யுரித்து அதன் சருமத்தை ஆடையாக வணிந்து, யாகாக்கினியை ஓர் திருக்கரத்தேற்று, முயலகன் முதுகில் திருவடி யூன்றிநின்று, திருமாலாகிய மாயாதேவி கண்டு மகிழவும் தேவர்கள் அந்தரத்திலிருந்து தரிசித்துப் புஷ்பமாரி சொரிந்து புகழவும் திருநடனஞ் செய்தருளினர் எனச் சிலபுராணங்கள் கூறுவது முண்டு.

தேவதாருவன முநிவர் சிவபெருமானையும் திருமாலையும் இகழ்ந்துரைத்த பாபத்தினால், அதுமுதல் சுரமுதலிய வியாதிகளும் பசிமுதலிய துன்பங்களும் மனக்கவலையுமடைந்து, ஒன்றுந்தோன்றாது,யாவரும் ஒன்றுகூடிப் பிரமதேவரை யடைந்து, உடல் நடுங்கவும் உரைகுழறவும் வாய்புலரவுங் கூறுகின்றனர். சுவாமீ ! நோய்களாலும் எண்ணிறந்த துன்பங்களாலும் தரித்திரத்தாலும் நாங்கள் துன்புறுகின்றோமே இதற்குக்காரணமென்ன ? இதனையொழிக்கவேண்டும் என வேண்ட, பிரமதேவர் முநிவர்களே ! யாவராயினும் தன்வீட்டிற்குவந்த அதிதியைப் பூஜிக்கவேண்டுவது தருமமாமென்பதையுணர்ந்த நீங்கள், வேதங்களுந் தேடியறியாத சிவபெருமானே பிக்ஷாடனராகவும் திருமாலே மனைவியாகவும் பிரத்தியக்ஷத்தில் உங்கள் இருப்பிடமடைந்தபொழுது, அவர்களை அவமதித்ததாலேயே, இத்துன்பங்களையடைந்தீர்கள்; அப்பரமேசுவரனைவிட உலகத்திற்கு ஆதரவாகப்பிறரொருவருண்டா? ஒருவருமிலர். மீண்டும் அப்பெருமான் மனமகிழும்படி நாடோறும் சிவலிங்கார்ச்சனைசெய்யுங்கள் எனக்கூறிவிடுப்ப,முநிவர்கள் தமதுதாருவனமடைந்து, பிரமதேவர் சொல்லைக்கடைப்பிடித்து ருத்திராக்ஷகண்டிகையணிந்து, விபூதி உத்தூளனஞ்செய்து, ஸ்ரீபஞ்சாக்ஷரஞ்செபித்து, சிவபக்தியுடையவராய் மனைவியரோடும் இரவும் பகலும் இடைவிடாது நல்ல மலர்களாற் சிவலிங்கார்ச்சனஞ்செய்து வந்தனர். அவ்வாறிருக்கையில், சிவபெருமான் முன்போலவே பிக்ஷாடனராகி மோகினியுடன் தாருவனமடைந்து சிறிதுசிறிதுநேரம் குதித்துச்சென்றும், வேதகீதம் பாடியும், ஐயமேற்பார் போலுலாவியும், யோகஞ்செய்தும், வீணேசிரித்தும், மோகினியோடு விளையாடியும் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தனர்.

முநிவர்கள் அவற்றைக்கண்டு, தமது மனைவியருடன் அவ்விடம் வந்து அவரது திருவடிகளை மலர்களாலருச்சித்துப் பணிந்தனர். சிவபெருமான் அவர்கள் விஷயத்தில் தயாமூர்த்தியாய்ப் பல்லாயிரங்கோடி சூரியப்பிரகாசம்போன்ற தமது நிஜவடிவத்தைக் காட்ட, முநிவர்கள் வேதவாக்கியங்களாற்றுதித்து உடல் சிலிர்ந்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்து நிற்க, சிவபெருமான் முநிவர்களே! நீங்கள் கடவுளில்லையென்று கருதினமையின் இவ்வாறும்மைப் பரீக்ஷித்தோம் என்று அவர்கட்கு ஞானோபதேசஞ்செய்து, இச்சிவலிங்கத்தை எப்பொழுதும் பூஜைசெய்யுங்கள் என்று மோகினியுடன் அந்தர்த்தானமாய், ஆங்கோர் சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருளியிருக்கின்றனர். அவ்விலிங்கமே நீங்கள் வினவிய தாருவன நாகேசுவரலிங்கம். அதுமுதல் அம்முநிவர் அவ்விலிங்கமூர்த்தியைக் காலந்தவறாது பூசித்து இஷ்டகாமியங்களை யடைந்தார்கள் என்று ஸூதமுநிவர் கூறியருளினர்.

நாகேசுவரமகிமையுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்துமூன்றுவது

அந்தகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யமுநிவர்கள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! அந்த கேசுவரலிங்கவரலாற்றை அருளிச்செய்யவேண்டுமென, ஸூதமுநிவர்சொல் லுகிறார். இரணியாட்சன் மகனாகிய அந்தகாசுரன் என்பவன் உலகப் பிரசித்த னானவன். அவன் பிரமதேவனை நோக்கிப் பெருந்தவஞ் செய்து மிகுந்த பலமும், பிரமாண்ட முழுவதுந் தன் ஆயுள்வரையில் அரசுசெய்யும் வரமும் பெற்றுத் திரிலோகங்களைச் சயித்து, ஒருவனுந் தனக்கெதிரில்லை எனச் செருக்குற்று, தேவர்கள் திக்குப்பாலர்கள் முதலானோரை யெல்லாம் அடக்கி மந்தரமலையில் வாழ்ந்திருந்தான். அப்பொழுது தேவர்களுக்கும் அந்த கனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் அந்தகன் கணக்கில்லாத சேனை யோடு தேவர்களை யெதிர்த்துச் செருச்செய்ய, அசுரச்சேனை அமரர்களோடு போர்புரியச் சகியாது புறமுதுகிட் டோடிப்போக, அதுகண்ட அந்தகன் நாம் இம்மலையில் இனி வாழ்வது தகுதியல்லவென்று, சமுத்திரக்கரையில் நிருதி மூலையில் மூன்றுயோசனை விசாலமான ஒரு பிலஞ்செய்துகொண்டு அதில் வாழ்ந்திருந்து,நினைத்தபொழுது வெளிவந்து தேவர்கள் முதலானோ ரைத் துன்பப்படுத்தி மீண்டும் பிலத்தை யடைவானாயிருந்தான். அவன் வசிக்கும் அப்பிலம் இரண்டாவது சுவர்க்கலோகம் போன்று விசித்திரமாக விருந்தது. அவன் இவ்வாறு அடிக்கடி அமரரைத் துன்புறுத்திப் போவத னால் இமையவர் ஆற்றமுடியாமல், சிவபெருமானிடம் பெருங்கூட்டங்கொ ண்டுசென்று சாஷ்டாங்கமாகப் பணிந்து அவனதுகொடுமையை முறையிட, சிவபெருமான் தேவர்கள் வார்த்தையைக் கேட்டு, வானவரே! நீங்கள் உங் கள்பரிவாரங்களுடன் வந்தால் நானும் உடன்வருகிறேன் எனக்கூற, தேவர் கள் அவ்வாறே தமது சேனையுடன் வர, சிவபெருமானும் அவர்களோடு கூடிச் செல்ல, அமரர்கள் அந்தகாசுரபிலத்தை யடைந்து அவனைப் போருக் கழைப்ப, அந்தகன் கடுங்கோபத்துடன் விரைந்து வெளியே சண்டைக்கு வர, அப்பொழுது சிவபெருமான் அவன் வசித்திருந்த பிலபுரத்திற் சென்று எழுந்தருளி யிருந்தனர். அந்தகன் அமரர்களை யலைத்துத் துரத்தி மீண்டுந் தனது நகரிற் செல்லுகையில், சிவபெருமான் எதிர்வந்து தமதுகைச்சூலத் தால் அவனைக் குத்தினர். அதனால் அந்தகன் வருந்தாது பெருமானைப் பல விதமாகத் துதிக்க, பெருமான் களிகூர்ந்து, அந்தகா! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என, அந்தகன் ஸ்வாமீ! தேவரீருக்கு என்பேரில் தயை யிருந்தால் தேவரீரிடத்திற் பக்தியுண்டாகும்படி வரங்கொடுக்கவேண்டும்; இந்த வரம் இனிவருஞ் சனனத்திலும் மாறாதிருக்கவேண்டும் எனக்கேட்க, சிவபெருமான் அவ்வாறே யாகுகவென்று கூறி, அவனுக்குக் கணத்தலைமை கொடுத்து விடுத்து, அங்கிருந்த அசுரர்களை யெல்லாம் ஹதஞ் செய்து, உலகங்கட்குச் சுகத்தைச் செய்தனர். தேவர்கள் சந்தோஷித்துத் தமது

கடைந்தனர். அந்த விடத்தில் சிவபெருமான் அந்தகேசுவரரெனப் பெய ரெய்தி எல்லோருக்கும் முக்தியுதவும்படி வீற்றிருக்கின்றனர். நாடோறும் அப்பெருமானைச் சேவைசெய்தால் ஒரு துக்கமுமின்றிச் சகல சுகமு முண் டாகும். இதுமுதலான ஜோதிலிங்கங்களை ஆதிசைவர்களால் ஆகமோக்த மாக ஆறுமாதம் பூஜைசெய்வித்துச் சேவித்தவர்கள் இஷ்டசித்தியை யடை வார்கள் என்று ஸூதமுநிவர் முநிவர்களை நோக்கிக் கூறினர்.

அந்தகேசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்துநான்காவது
ஆதிசைவர் சிறப்புரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! அந்தகேசுவரலிங்க முதலிய ஜோதிலிங்கங்களை ஆதிசைவர்களால் ஆகமோக்தமாகப் பூஜைசெய்விக்கவேண்டுமெனக் கூறினீ ராதலின், அவ் ஆதிசைவவேதியராவார் யாவர்? அவர் எவ்வாறு மகிமையுற் றனர்? அவர்கள் சரிதத்தையும் அடியேங்கட்குக் கூறியருளவேண்டுமென நைமிசாரணியருஷிகள்கேட்க, ஸூதமுநிவர் மகிழ்வுடன்சொல்லத்தொடங் கினர். முநிவர்களே! சைவர்கள்—அநாதிசைவர் - ஆதிசைவர்-மஹாசைவர்- அநுசைவர்-அவாந்தரசைவர்-பிரவரசைவர்-அந்யசைவர் என *எழுவகைப் படுவர். அவருள் ஆதிசைவர் சிவபெருமானது †ஊர்த்துவமுகத்தினின்றும் தோன்றினவர்களாய் ‡அச்சதாசிவமூர்த்திகளாலேயே தீக்ஷைசெய்யப்பெற் றவர்களாய், சிவபெருமானை ¶ஸ்தாபநாதிகாரியங்களால் அப்பெருமானது முகத்தினின்றே தோன்றிய காமிகாதி சிவாகமங்களிற் கூறிய முறைப்படி அர்ச்சனைசெய்தற்கு உரியராவர். அன்றியும், சிவத்துவிஜர் எனப் பெயருற்ற இன்னோர் சிவபெருமானாலேயே புத்திரராக மதிக்கப்பட்டுச் சிவபூஜா உச்சி ஷ்டப்பொருள்களை யநுபவிப்பதற்கும் தமது அறியாமையாற் செய்த குற் றங்களை மன்னிக்கப்படுதற்கும் சுதந்தரமுற்றிருக்கின்றனர். இவர் சிவபெரு மானுக்குப் புத்திரவுரிமைப்பேறுடையாரென்பதை விளக்கும் ஓர்சரித்திரங் கூறுகின்றேன் :—பூர்வத்தில் ததீசி யென்னும் ஆதிசைவரொருவர் சிவபக்தி யும் சிவார்ச்சனையும் நியமப்படி நீங்காதசிந்தையுடையராய்ச் சிவாகமங்களை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்து நித்ய நைமித்ய ப்ராயச்சித்தங்களைச்செய்துவரு வாராயிருந்தார். இவருக்கு ஒரு புத்திரருண்டு. அப்புத்திரர் தமது மரபிற் கேற்பத் தந்தையால் தீக்ஷைசெய்யப்பெற்று, சிவாகமங்களையுணர்ந்து,கால ந்தவறுமல் சிவபூஜைசெய்துவந்து,தக்கபருவத்தில் மணஞ்செய்யப்பெற்று, அவளது துஷ்கிருத்தியங்களால் மதிமயங்கினவராய் நான்கு புதல்வர்களைப் பெற்றனர். அவளிடம் சுவாதீன மனமுடையவராயிருந்தும் சிவபக்தியைமா த்திரஞ் சிறிதும் குறையாது, தன் தந்தைபோலவே சிவார்ச்சனை செய்தும் பிறர்க்குச் சிவதீக்ஷை செய்துகொண்டும் வந்தனர். அப்பொழுது ஒரு நாள்

தன் தந்தையாகிய ததீசி தன் ஞாதிகள் விஷயமாக அயலூருக்குச் செல்ல வேண்டி, தன் புத்திரனைப்பார்த்து, குழந்தாய்! நான் ஊருக்குப் போகவேண்டி நேர்ந்தமையின், நான் வருமெல்லையும் வழக்கம்போற் சிவலிங்கார்ச்சனை செய்துவருகவெனக் கூறிச்சென்று, உறவினர் விருப்பின்படி சிறிது காலம் அங்கேயே யிருந்தனர். புத்திரரும் காலந்தவறாது சிவபூஜை செய்து வந்தனர். அச்சமையத்தில் சிவராத்திரிதினம் சம்பவிக்க,ஊரிலுள்ளார் யாவரும் விரதமிருந்து சிவபூஜை செய்யவேண்டிய காலமாதலின், அப்புத்திரரும் உபவாசமிருந்து அன்றிரவிற் காலந்தோறும் பூஜித்துவருகையில், மூன்றுங்காலபூஜை முடிந்தபிறகு தேவகதியாலும் தன் மனைவியின் துஷ்கிருத்தியத்தாலும் மனந்தவறினவராய்க் காலஞ் சமீபித்த நான்காங்கால பூஜையையும்நடத்த, சிவபெருமான் சினங்கொண்டுஅவரை உன்மத்தராகச்செய்தனர். அதுமுதல் அவ்வுன்மத்தருடைய புத்திரர் நால்வரில் ஜேஷ்ட புத்திரர் அச்சிவலிங்கார்ச்சனத்தைக் கடைப்பிடித்துச் செய்துவந்தனர்.

சிறிதுகாலங்கழித்து, ததீசி தனது ஊரையடைந்து தன் புத்திரன் உன்மத்தனாயிருக்கக்கண்டு மனத்துயரமுற்றவராய் நியமனப்படி சிவபூஜை செய்கையில், பெருமான் பிரத்தியட்சராய்த் ததீசியை நோக்கி, இவ்வகைய புத்திரனைக்கொண்டு என்னைப் பூசிக்கச்செய்தனை யல்லவா? என்று கண்டிக்க, ததீசி மிகவும் பயந்து, அந்தோ! இப்படியுஞ்செய்வானா: ஆ ஆ! இவனால் என் வமிசமே பெருமையற்றது. இனி என்செய்வேன்? இதற்குப் பிராயச்சித்தமும் உண்டோ? எனத் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டார். இவ்வாறிருக்கையில், அவ் வேதியனைப் பதிதராகச் செய்த அத் துஷ்டை இறந்தாள். அவள் சிவபூஜாவிக்கினம் செய்தவளாயிருப்பினும் ததீசியும் மனந்தாளாது வருந்தினவராய், தன் புத்திரனது பாபம் பரிகரிக்கப்படவேண்டுமென்னும் விருப்பத்தால், பிராயச்சித்த விதிப்படி தன் புத்திரனுக்காக சிவபூஜையும்பார்வதிபூஜையும்செய்துவர, பார்வதாதேவி தயைகொண்டு ததீசியை நோக்கி, ஆதிசைவர்கள் எமது புத்திரர்களாதலின், நீ அஞ்சவேண்டாம் என்று தேற்றி, சிவபெருமானிடம் அவனது பாபத்தை மன்னிக்கவேண்டுமெனக்கூறி, நெய்யால் ஸ்நானஞ்செய்வித்து, சிவபெருமானால் யஜ்ஞோபவீதந்தரிப்பித்து, ஷோடஸாக்ஷரசொரூபமாகிய சிவகாயத்ரியையும்,ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையும் உபதேசஞ் செய்வித்து, பதினாறுமுறைஜபிக்கச்செய்தனர். அதனால் அவரது பாபங்கள் பரிகரிக்கப்பட்டன. சிவபெருமான் அவ்வாதிசைவப்புத்திரரை நோக்கி இனி இம்மந்திரங்களைக்கொண்டே [ஜலாதி நமஸ்காராந்தம்] பாத்யமுதல் நமஸ்காரம்வரையில் அடங்கிய பூஜையைச் செய்ய வேண்டும் என்று இன்னும் அநேக சிவமந்திரங்களையும் உணர்த்தினர். தாநயம்-பலம்-வஸ்திரம்-நெய்-எண்ணெய் முதலிய சிவபூஜை செய்த மிகுதியையெல்லாம் நீங்கள் அநுபவித்தால் உங்களுக்குத்தோஷமில்லை. எனக்கு நிவேதித்தவை முதலியன, ஆதிசைவர்களாகிய எமதுமுகத்திற் றோன்றியநீங்களே அநுபவித்தற்கு உரியரன்றி, பிறர் அதனைப்பெறுதற்குப் பாத்திரராக

மாட்டார்கள். நீங்களேஎம்மையும் பார்வதியையும் பூஜிக்கஉரியவர்களாயிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் (ஆன்மார்த்தலிங்கங்களைப்பூஜிக்கலாமேயன்றி) பரார்த்தலிங்கங்களை ஆதிசைவர்களைக் கொண்டே பூஜிக்கவேண்டும். ஒவ்வொருவரும் இவ்வாறு செய்தே தாம் விரும்பிய இகபரபோகங்களை அநுபவிக்கக்கடவர் என்று ஆசாரியாபிஷேகஞ்செய்து பழயபடியே சிவபூஜாவுரிமையைக்கொடுத்து, நீங்கள் வேதமந்திரங்களினுஞ்சிறந்த ஆகமமுறையாகவே பூஜை செய்யவேண்டும். நீங்கள் எவன் பட்சமாக விருக்கின்றீர்களோ அவனுக்குச் சயமுண்டாகக்கடவது. உங்களைப் பூஜித்தவர்கள் எம்மைப் பூஜித்த பலனைப் பெறுவார்கள். சைவாசாரங்களையும் சிவபக்தியையும் விருத்திசெய்யவேண்டிய ஆதிசைவர்களாகிய நீங்கள் உலகத்தாரால் எம்மைப்போலவே மதிக்கப்பட்டு, குடும்பவிர்த்தியடைந்து வாழக்கடவீர்கள் என்று வரமளித்து ஆசீர்வதித்தனர். ஆதலின், ஆதிசைவர்கள் ஆசாரமுடையவராயினும் (ஒருவேளை தெய்வகதியாய்) ஆசாரந்தவறினவராயினும் அவர்களை உலகத்தோர் கைவிடுதலாகாது.

சிவபெருமானையும் பார்வதிதேவியையும் கையாற்பரிசித்துப் பூஜிக்கும் பேற்றையுடைய ஒரு ஆதிசைவனுக்கு அன்னமளித்தவன் அநேக கோதானபலனைப் பெறுவான். இதற்குத் திருஷ்டாந்தம்:—அந்தகேசுவர நகரத்திலிருந்த நீதிநெறி தவறாத பத்திரனென்னு மரசன் வேதியருக்கு நாடோறும் அன்னமளித்துவருவதாக நியமனஞ் செய்துகொண்டு நாளொன்றுக்கு அநேகமாயிரம் அந்தணருக்கு அறுசுவையோடுகூடிய உணவை விருப்புடன் அளித்துவருகையில், சிவபெருமான் அவன் தன் பக்தனுகையால் மகிழ்ந்து அவன் கையில் ஒரு துவஜத்தைக் கொடுத்து, அரசனே! இதனை உனது அன்னசத்திரத்தில் விடியற்காலத்திற் கட்டிவைத்து உன் நியமப்படி அன்னமளித்துவரக்கடவை; அவ்வாறு அன்னமளித்துவருகையில் எவனேனும் ஓர் சற்புருஷன் அவ்வன்னத்தை உண்ணுவானேல் அன்று நீ நாட்டிய துவஜம் விழும். அவ்வாறதுவிழாவிடின் அன்றையதினம் உன்னன்னத்தைச் சத்புருஷன் உண்ணவில்லையென்று உணர்ந்துகொள் எனக் கூறி மறைய, அரசன் பெருமான் கட்டளைப்படி அவ்வாறே அத்துவஜத்தைத் தன் மாளிகையில் நாட்டி வழக்கப்படி பிராமணபோஜனத்தைச் செய்விக்க ஆரம்பித்து, அப்பொழுது நேரிட்ட ஒரு ஆதிசைவவேதியருக்கு அன்னமளிக்க, உடனே அத்துவஜம் விழுந்தது: பத்திரன் அத்துவஜத்தின் வரலாற்றினை அங்கிருந்த அந்தணர்களுக்குக் கூறி இஃதென்னென வினவ, பிராமணர்கள், நாங்கள் யாவரும் உண்ணுமுன்னமே பதிதனுகிய இவ்வந்தணனுக்கு அன்னமளித்ததால் துவஜம் விழுந்ததேயன்றி, சிவபெருமான் கூறியபடி சத்புருஷன் உண்ண விழுந்ததன்று என, பத்திரன் அந்தணர்களே! நீங்கள் சொல்வது உண்மையாயின் அதனையும் சோதிக்கலாம் என்று, மீண்டும் துவஜத்தை நாட்டி, வந்த வேதியர்களுக்கெல்லாம் சிலநாள் அன்னமளித்துவந்தும் அதுவிழாமையின், அரசனும் அந்தணர்களும் முன் துவஜம்விழுந்தது ஆதி



21. ஆதிசைவ வேதியரொருவர் அன்னம்புசிக்க, அரசநியமப்படி துவசம் வீழ்ந்து அவர் சிறப்பை வெளியிட்டது.

சைவவேதியர் உண்டதனுலேயே யென்று தேர்ந்தார்கள். முனிவர்களே! அவ்வாதிசைவர்கள் சிவகடாட்சம் பெற்றவர்கள் ஆதலின் அவர்கள் தங்களுக்காகவும் பிறர்க்காகவும் சிவபூஜைசெய்ய வுரியவர்கள். புண்ணியசரிதங்களைக் கேட்டலே கடனுகக்கொண்ட மகருஷிகளே! நீங்கள் கேட்டபடியே ஆதிசைவ மகிமையைக்கூறினேன்; அவர்களைக்கொண்டு ஜோதிர்லிங்கங்களை அருச்சிப்பித்தவர்கள் பெறும்பேற்றினை என்னுற் சொல்லமுடியாது என்று ஸூதமுனிவர் கூறியருளினர்.

இவ் வத்தியாயத்தில் மேலே [* † ‡ ¶] இக்குறிப்பிட்டிருக்கும் இடங்களுக்குச் சிறிது சுருதிப் பிரமாணங்கள்.

* வீராகமம் "[illegible] ஶைவாஸ்ஸப்தவிதா ஜ்ஞேயா: தேஷாம்பேதம்ஶ்ருணுஷ்வத | அநாதிஶைவ:ப்ரதம :ஆதிஶைவோத்விதீயக : | த்ருதீயஸ்துமஹாஶைவ:சதுர்தஶ்சாநுஶைவக: | பஞ்சமோவாந்தரஶ்ஶைவ: ஷஷ்ட:ப்ரவரவுச்யதே | ஸப்தமஶ்சாங்யஶைவஶ்சஶைவாநாம்பேதயீரித: | அநாதிஶைவஸ்ஸஶிவ: ஆதிஶைவஸ்ஸிவத்விஜ: | விப்ராஶ்சைவமஹாஶைவா: க்ஷத்ரியோவைஶ்யஏவச | அநுஶைவஸ்ஸமாக்யாத: ஶூத்ராஶ்சைவாந்தராஸ்ம்ருதா: | ஸவர்ணம்பஷ்டமத்யஸ்த:குலால:ப்ரவரஸ்ம்ருதா: | பாரதஶ்சைவஸம்ப்ரோக்த:அங்யஶைவமதோச்யதே | இதோங்யஜாதயோயாஸ்துஅங்யஶைவாஸ்துதாஸ்ம்ருதா: ||" என்றபடியே—சைவர் எழுவருள் முதலாவது அநாதிசைவர் சிவபெருமானும், இரண்டாவது ஆதிசைவர் சிவத்விஜரும், மூன்றுவது மஹாசைவர் சிவதீக்ஷைபெற்ற வைதிகப்பிராமணரும், நான்காவது அநுசைவர் க்ஷத்திரியர் வைசியரும், ஐந்தாவது அவாந்தர சைவர் சூத்திரரும், ஆறுவது பிரவரசைவர் சவர்ணம்பஷ்ட மத்யஸ்த குலாலர்களும், ஏழாவது அங்யசைவர் அங்யஜாதியாருமாவர்.

† சுவாயம்புவசனம் "[illegible] ஊர்த்வவக்த்ரோத்பவாவிப்ரா: ஆதிஶைவா:ப்ரகீர்திதா: | விப்ராஸ்துபக்தாயேதேஷாம் பூஜாகார்யாங்யதாநஹி ||" என்றபடியே—சிவபெருமானுடைய ஊர்த்துவமுகத்திற் பிறந்தவர்கள் ஆதிசைவர்கள். அவர்களுக்குப் பக்தர்களா யிருக்கும் விப்பிரர் பூஜிக்கப்படுவர். அல்லாதவர்கள் அபூஜ்யராவர்.

‡ சந்தானஸம்ஹிதை "[illegible] ஆதௌஸதாஸிவேசைவ தீக்ஷிதாஸ்த்வாதி ஸைவகா: | ஆதிஸைவாஸ்துதே ஜ்ஞேயாஸர்வாநுக்ரஹகா:ஸ்ம்ருதா: ||" என்றபடியே—சதாசிவமூர்த்தியால் தீக்ஷைசெய்யப்பெற்றவர்கள் ஆதிசைவவேதியர்கள்; அவர்கள் எல்லா வருணத்தாருக்குந் தீக்ஷாநுக்ரஹஞ்செய்ய அதிகாரம் பெற்றவர்கள்.

§ காமிகாகமம் "[illegible] ஆதிஸைவகுலேஜாதா: ஸ்ரேஷ்டா ஸ்யு:ஸ்தாபநாதிஷு | தீக்ஷாயாம்ஸர்வமர்த்யாநாம்ப்ரதிஷ்டாயாமதோத்ஸவே | ஸ்தபநேப்ரோக்ஷணேசைவ ப்ராயஸ்சித்தாபிஷேசநே | வ்யாக்யாநாதௌசஸஸ்தாஸ்யு: ஸ்வார்தேவாதபரார்தகே ||" என்றபடியே—ஆதிசைவகுலத்திலுதித்த பிராமணர்கள் ஸ்தாபநாதிகாரியங்களிற் சிரேஷ்டராகின்றனர். எல்லாவருணத்தாருக்கும் சிவதீக்ஷயா லநுக்ரஹிப்பதிலும் பிரதிஷ்டை - உத்ஸவம் - ஸ்தபநம் - ஸம்ப்ரோக்ஷணம் - பிராயச்சித்தம் - அபிஷேகமுதலியவற்றை நடத்துவதிலும்,சிவதருமங்களை வியாக்கியானரூபமாக வெளிப்படுத்துவதிலும் ஸ்வார்த்தபரார்த்தங்களிலும் அதிகாரிகளாவர்.

காமிகாகமம் "[illegible] ஸ்ருஷ்ட்யநந்தரகாலேயே தீக்ஷிதா: கௌஸிகாதய: | ஸிவேந தத்குலோத்தாஸ்யு: ஸைவாஸ் ஸாந்தாநிகாத்விஜா: ||" என்றபடியே—சிவபெருமானால் கௌசிகாதி மஹருஷிகள் சிருஷ்டிக்கப்பட்டுஅவரால்தீக்ஷைசெய்யப்பட்டார்கள்; அவர்கள் குலத்திலுண்டானவர்கள் சந்தானகிரமத்தில்வந்த ஆதிசைவரெனப்படுவார்கள்.

காமிகாகமம் "[illegible] கௌஸிக: காஸ்யபஸ்சைவ பரத்வாஜோத்ரிரேவச | கௌதமஸ்சேதி பஞ்சைதே பஞ்சவக்த்ரேண தீக்ஷிதா: | தேஷாங்குலே ஸமுத்பூதா: ஆதிஸைவா: ப்ரகீர்த்திதா: ||" என்றபடியே—கௌசிகர் காசிபர் பரத்வாஜர் அத்திரி கௌதமர் என்னும் பஞ்சருஷிகள் சதாசிவமூர்த்தியின் பஞ்சமுகங்களால் தீக்ஷிக்கப்பட்டார்கள்; அவர்கள் குலத்திற் பிறந்தவர்கள் ஆதிசைவர்களெனப்படுவார்கள்.

ஆதிசைவர் சிறப்புரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

சோமேசுவர மல்லிகார்ச்சுன மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஜோதிலிங்கங்களின் உற்பத்தியையும் மகாத்மியத்தையும் இன்னுஞ்சொல்லவேண்டுமென, ஸூதமுனிவர்சொல்லுகிறார்: பெரியோர்களிடங் கேள்விப்பட்டவற்றில் எனக்குத் தெரிந்தவரையினுஞ் சொல்லுகிறேன். பூர்வத்தில் தக்ஷனுக்கு அச்சுவினிமுதலியபெயரையுடைய இருபத்தேழு பெண்கள் பிறந்தார்கள். அவர்களைத் தக்ஷன் சந்திரனுக்கு மணஞ்செய்துகொடுக்க, அவர்களுஞ் சந்திரனுங்கூடி, மணியும் பொன்னும் போலப் பெருமையோடு வாழ்ந்தார்கள். அப்படியிருந்த சந்திரன் சிறிதுகாலத்தில் உரோகணி யென்பவளை மாத்திரம் அதிகமாக விசுவாசித்துப் பிறரை உபேக்ஷித்தமையின், அவ்விருபத்தாறு மாதர்களுந் தந்தையினிடஞ் சென்று நடந்த சங்கதியை முறையிட்டு எவ்வாறாயினுங் காக்கவேண்டும் என, தக்ஷன் அவர்கள் வார்த்தையால் மிக்க வருத்த மடைந்து சந்திரனிடம் வந்து, அவனைக் கண்டு, நீ ஸத்குலத்தி லுதித்து களாநிதி யெனப் பெயருற்றும், உன்னை யடைந்த மனைவியரை ஒரே மாதிரி நடத்தாதிருப்பது சரியன்றாதலின், மனைவியர் அனைவருக்கும் ஒரே மாதிரி சுகங் கொடுக்கவேண்டும் என்று விநயபூர்வமாகச்சொல்லித் தன்வீட்டுக்கேகியபின், (மேல் நடக்கவேண்டியது நற்கருமமாயின் அதற்கேற்ப நற்புத்தியும், தீக்கருமமாயின் அதற்கியையத் தீயபுத்தியும் உண்டாவது இயல்பாதலின்) சந்திரன் தக்ஷன் சொல்லைச் சிறிதும் உட்கொள்ளாது தன் விருப்பத்தின்படியே நடந்தான். சந்திரனுக்குத் தீமை விளையவேண்டிய காலம் சமீபித்திருப்பதுபற்றித் தக்ஷன் கூறிய புத்தியைக் கொள்ளாது உரோகணி ஒருத்தியையே விரும்பினான். சிறிதுகாலங் கழித்துத் தக்ஷன் தன்மருகன் புத்திரிகள் விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறானோ அதனைப் பார்ப்போமென வந்து, புத்திரிகளால் அவன் முன்போலவே யிருப்பது தெரிந்து, சந்திரனைநோக்கி, நான் சொல்லிய நற்புத்தியைக் கொள்ளாமையின், உன் கலைகள் நாளாவண்ணமாக க்ஷயமடைகவெனச் சபிக்க, சந்திரன் உடனே கலைகள் குறையக்கண்டு, எங்கேபோவேன்? யாது செய்வேன்? எனத்துக்கித்தான். அதுகண்டு தேவர்களும் முனிவர்களுந்துக்கித்தார்கள். சந்திரன் அவர்களைநோக்கி நீங்கள் எவ்வாறுவது எனக்குற்ற சாபத்தை நீக்கவேண்டுமென மிகவும் வேண்டினான்.

சந்திரன் வேண்டுகோளுக்கிரங்கிய தேவர் முனிவர் முதலானோர் பிரமதேவரிடஞ்சென்று, சந்திரன் தனதுதுர்நடத்தையாற் சாபமேற்ற விஷயத்தைச்சொல்ல, பிரமதேவர் ஐயோ! சந்திரன் தன்மனைவியரில் ஒருத்தியை அபேக்ஷித்துப் பிறரை உபேக்ஷிப்பது தருமமா? அவன் இவ்வகைய துர்ம்மார்க்கனே! இது அவன் இயற்கையே! ஆயினும், தன் மருகன் விஷயத்தில் தக்ஷன் இப்படியுஞ்சபிக்கலாமா? இதுவன்றி அச்சந்திரன் முற்காலத்திற் செய்த ஒரு துர்க்காரியமு முண்டு: அதனையுஞ்சொல்லுகிறேன் கேளுங்கள்.

அவன் பிருகற்பதிமுநிவர் வீட்டிலிருந்தபொழுது அவர் மனைவி தாரையைக் கிரகித்துக்கொண்டுபோய், அவரோடு போர்புரியக்கருதித் தைத்தியர்களை யுதவிகொண்டு சென்றான். அப்பொழுது தேவர்கள் அவன்தந்தைஅத்திரிமுநிவருடன் சென்று, சந்திரா! தாரையைப் பிருஹஸ்பதி முநிவருக்குக் கொடு என்று, அவளைப் பிருகஸ்பதிமுநிவரிடம்விட, அம்முநிவர் அப்பொழுது தாரை கற்பமாயிருத்தலின் இவள்எனக்குவேண்டாமென மறுக்க, அப்படியல்ல: நீர் கொள்ளலாம்; குற்றமில்லையென்று நாங்கள் கூற, பிருகஸ்பதி அவ்வாறாயின் இவள் கர்ப்பம் நீங்கியபிறகு அடைவேனென, தாரையையடைந்து நீயாருக்குக் கருப்பமுற்றாய்? எனவினவ, தாரை சந்திரனுக்கே கருவுற்றேனென, அவள் பிரசவித்தபிறகு அக்குழந்தையைச் சந்திரன்பால் விடுத்து, பலவிதமாகவேண்டிக்கொண்டு பிருகஸ்பதி முநிவருக்குத்தாரையைச்சேர்த்தோம். இப்பொழுதும் அவ்வகைய கொடுந்தொழிலே செய்தனன்? அவனுக்காக வேண்டியது நடந்தே தீரவேண்டுமாயினும், புண்ணியக்ஷேத்திரமான பிரபாசத்திற்குப்போய் மிருத்யுஞ்சயமந்திரத்தால் சிவபெருமானை ஆராதித்தால் தேஜோரூபியான சிவபெருமான் அவன் தேகக்ஷயத்தைப் போக்குவர் என்றார். இவ்வாறுகூறிய பிரமதேவர் வார்த்தையைக்கேட்ட தேவர்கள், தக்ஷனைக்கண்டு வருந்தி, சந்திரனை உடன்கொண்டு பிரபாச க்ஷேத்திர மடைந்து ஒருதீர்த்தமுண்டுசெய்து, அதில் தீர்த்தங்களையெல்லாம் ஆவாஹநஞ்செய்து பார்த்திவலிங்கப் பிரதிஷ்டைசெய்து சிவபூஜாமார்க்கத்தை உபதேசித்து, நீ பூஜித்துக்கொண்டே யிங்கிருவெனச்சொல்லி, தங்கள்இருப்பிடங்களைச்சேர, சந்திரன் ஆறுமாதகாலம் இடைவிடாது மிருத்யுஞ்சயமந்திரத்தால் சிவபூஜைசெய்து, அம்மந்திரத்தைப் பத்துக்கோடி உருச்சபிக்க, சிவபெருமான் பிரசன்னராய் உன் தவத்தையும் பூஜையையும் மெச்சினேன். வேண்டிய வரத்தைக்கேள் என, சந்திரன் சாம்பவமூர்த்தியைப்பார்த்து, சுவாமீ! தேவரீர் பிரசன்னமானபொழுது எனக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை. என் உடல் க்ஷீணிப்பதைவிலக்கி, என்குற்றங்களை மன்னிக்கவேண்டும் எனவேண்ட, சிவபெருமான் சந்திரா! நீ பிராமணசாபத்தைத் தப்புதற்குவழியில்லை; ஆயினும், அதற்கு ஒருபாயஞ்சொல்லுகிறேன். ஒருபக்ஷத்தில் உன்கலைகள் முறையே குறையவும் ஒருபக்ஷத்தில் *உன்கலைகள்முறையே விருத்தியடையவும் அநுக்ரஹித்தேன் என்றார். இச்செய்தியைக் கேள்வியுற்ற தேவர்கள் சந்தோஷித்துவந்து சந்திரனைக்கண்டு பலவிதமாக ஆசீர்வதித்து, சிவபெருமானைநோக்கித் தேவரீர் இவ்விடத்தில் பார்வதி பிரமதகணசகிதராய், சந்திரன் பெயரால் எழுந்தருளியிருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்ப, சிவபெருமான் அவ்வாறே சோமேசுவரர் என்னும் பெயரால் சந்திரன் விருத்தியடையுங் காரணமாகப் பிரசித்தமாயிருக்கிறார். தேவர்கள்மகிழ்ந்து சந்திரன் மிகத்தன்யனானென்று தாங்கள் அங்கேதோண்டிய தீர்த்தத்திற்

* அப்பொழுது சிவபெருமான் சந்திரனது எஞ்சிநின்ற ஒரு கலையினைத் தமது சடையி லணிந்துகொண்டதாக ஸ்ரீஸ்காந்தமஹாபுராணமுதலியன கூறும்.



22. சோமேசுவரர். கிரவுஞ்சகிரியிற் குமார பிரமசாரியார்.

குச் சந்திரகுண்டம் எனப்பெயரிட்டனர். சந்திரன் பிறகுதேவர்களுடன் சிவபெருமானைப்பணிந்து விடைகொண்டு க்ஷேத்திரவலம்வந்து தனது நகரமடைந்து கிரமப்படி தன்காரியத்தி லிருந்தான். அச்சந்திரகுண்டம் ஸ்நானஞ்செய்தவருடைய சகலபாபங்களையும்பரிகரிக்கும்; ரோகங்களை யொழிக்கும்; அசாத்தியமான காரியங்களையுங் கைகூட்டும். பிரபாசக்ஷேத்திரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்தால் உலகவலஞ்செய்தபலன்கிடைக்கும். பிராயச்சித்தங்களால் ஒழியாத குஷ்டமுதலிய ரோகங்களெல்லாம் அங்கே ஸ்நானஞ்செய்து ஆறு மாதம் சிவதரிசனஞ் செய்தால் ஒழியும். விரும்பிய காரியங்களெல்லாம் விரும்பியவண்ணமே கைகூடும். இது சோமேசுவரஜோதிலிங்கப் பிரபாவம். இந்தச் சரித்திரத்தைப் படிப்பவர் சகல பாபங்களையும் நீங்குவர். இனி முன் சொல்லிவிடுத்த * மல்லிகார்ச்சுனலிங்க மகாத்மியஞ் சொல்லுகிறேன்.

முன் சுப்பிரமணியக்கடவுள் உலகவலம் வருவதன்முன்னே கணபதி மணஞ்செய்துகொண்டிருப்பதை நாரதரால் கேள்வியுற்று மனம் வருந்தித் தாய் தந்தையைக் கண்டு ஒன்றுங் கூறாது கிரவுஞ்சகிரியை யடைந்து சுப்பிரமணியபிரமசாரியாய் எழுந்தருளி யிருப்ப, பார்வதி மனந் தாளாது வருந்த, சிவபெருமான் சிலதேவர்களை விடுத்து முருகப்பெருமானை அழைத்து வரும்படி யனுப்ப, அவர்கள் தாம் சென்றழைத்தும் வராமையைத்தெரிவிக்க, சிவபெருமானும் பார்வதியும் அவ்விடமேசென்று வசிப்போம் எனச் சமீபிக்கையில், முருகக்கடவுள் மூன்றுயோசனைதூரத்தே நின்றனர். அவ்விடத்தில் சிவபெருமானுக்கு மல்லிகார்ச்சுனேசர் எனப் பெயர்வழங்கும்; அந்த க்ஷேத்திரம் தரிசித்தவர்களுடைய எல்லாப்பாபங்களையு மொழித்து, ஜனன வாதனையை விலக்கித் தனதான்யாதி ஸகலசம்பத்துகளையுங் கொடுக்கத்தக்கது என்று ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளைநோக்கிக் கூறினர்.

சோமேசுவரமல்லிகார்ச்சுன மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தாறுவது
மகாகாள ஓங்கார லிங்கங்களின் மகிமை.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரை நோக்கித் தேவரீர் வியாஸமுநிவரால் யாவும் உணர்ந்தவர்; இதுகாறும் சொல்லிய விஷயங்களால் திருப்தி யடையாதவர்களாய் ஜோதிலிங்கங்களின் சரிதத்தை இன்னுங் கேட்க விரும்புகின்றோம் என, ஸூதர் சொல்லுகிறார்: சகலப் பிராணிகட்கும் முக்தி யளிக்கத்தக்க திரிலோகங்களையும் பவித்திரமாக்கும் க்ஷிப்பிராநதி தீரத்தில் அவந்திகா புரியில், வேதாத்தியயனமும் வைதிக கருமங்களும் சிவபூஜையும்

* கoடு-வது பக்கத்திற் கணபதிவிவாஹ முரைத்த அத்தியாயத்தின் இறுதியிலும் இது வந்துள்ளது.

செய்யும் வேதப்பிரிய னென்னும் வேதியனொருவன் சற்கரும வசத்தால் உயர் பதவி யடைந்தனன். அவனுக்குத் தன்னைப்போன்று விளங்கும் தேவப்பிரியன்-மேதன் -சுவிரதன்-தருமவாதி என நான்கு புதல்வரிருந்தனர். அவர்கள் காலந் தவறாது சிவபூஜை செய்வதிலும், தம்மை யடுத்தோர்க்குத் தரும மார்க்கத்தைப் போதிப்பதிலும், தந்தைபோன்றும்,தந்தையைக்காட்டிலுஞ் சிறந்துஞ் சுக்கிலபக்ஷ சந்திரர்போல விளங்கினர். இவர்கள் பழக்கிவந்ததால் அப்பட்டண முழுவதும் பிரமதேஜஸு பரிபூரணமாக விளங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது இரத்னமாலா பர்வதத்தில் தூடணனென்னும் மகாபல பராக்கிரமனாகிய தைத்தியராஜன் தர்மத்துவேஷியாய்ப் பிரமதேவருடைய வரமகிமையால் ஜகத்தை அலக்ஷியஞ் செய்துவந்தான். உலகத்தில் வேதாகமாதி மார்க்கங்களில் நடப்போரை, முயலைக் கொல்லுஞ் சிங்கம் போல அழித்து, புண்ணியக்ஷேத்திரங்களிற் சேர்ந்து அங்குள்ள நல்லோர் பெரியோர்களைத் துன்புறுத்தித் திரிந்து, அவ்வவந்தி பட்டணத்தை அநேகசேனையுடனடைந்து வேதியர்களைப்பார்த்து, நீங்கள் ஏன் என்சொற்படி நடக்கவில்லை? தேவர்கள் அரசர்கள் முதலானோரைச் சுவாதீனப்படுத்திக் கொண்ட எனக்கு நீங்கள் எவ்வளவு? வேதியர்களே! நீங்கள் பிழைப்பதாயிருந்து, சிவபூஜை வேதமந்திரோச்சாரண முதலியவற்றைவிடுத்து எனது சொற்படிநடந்தாற் சுகமடைவீர்கள் என்றுகூறி, தனது சைநியங்களாலும், தனது நான்கு மந்திரிகளாலும் அந்நகர்சுற்றும் ஆஞ்ஞைசெய்வித்தான். அம்மந்திரிகள் அவ்வந்தணர்க்குக் கட்டளையிட்டு அப்பட்டணத்திற் பலவிடங்களிலும் பரவிப் பிரளயகாலநாசனஞ் செய்வார்போலச் சென்றனர். அங்கிருந்த வேதியர் அவ்வசுரனது கட்டளையை மதியாது திடபக்தியோடு சிவபூஜைசெய்து சிவத்தியானத்தமர்ந்திருந்தனர். இவ்வாறிருக்கையில் சமீபத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்து அவ்வசுரமந்திரிகளாற்பிடிக்கப்பட்ட பிராமணர் அவந்தியை யடைந்து அங்குள்ள வேதியருடன் முறையிட, அவந்திப் பிராமணர் நாங்கள் சத்துருவைஜயிக்கும் வன்மையும் ஆயுதமுமடையவில்லை உங்களைப் போலவே சாமானிய சரீரமுடையவர்கள். எங்களைச் சிவபெருமானே ரக்ஷிக்கவேண்டும். பிறனொருவன் ரக்ஷிப்பவனில்லை எனத் தைரியத்துடன் பார்த்திப லிங்கார்ச்சனை செய்துகொண்டு, இரேசக பூரக கும்பங்களாலும் பிராணாயாமாதிகளாலுந் தியானித்துக்கொண் டிருக்கிறோம். நீங்களும் அப்படியே செய்யுங்கள் எனச் சொல்ல, யாவரும் அவ்வாறே சிவலிங்கார்ச்சனை செய்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது மந்திரிகள் நால்வருடன் தூஷணன் அவர்களிடம் வந்துகண்டு, இவர்களைப் பிடியுங்கள் அடியுங்கள் கட்டுங்கள் எனப் பலவாறுகூற, அவர்கள் தியான சமாதியிலிருத்தலின் கேளாது தங்கள் தொழிலிலிருந்தார்கள். அச்சமயத்தில் சிவலிங்கார்ச்சனை செய்யப் பார்த்திவ மெடுத்தவிடம் பெருங்குளமாயிருக்க, அதினின்று உக்கிரஸ்வரூபமான மகாகாளேசுவரர் தோன்றிஅந்தணருக்குவந்தஅவஸ்தையைக்கண்டு ஹுங்காரஞ்செய்ய



23. மகாகாளேசுவரர் வேதப்பிரியனுக்காகத் தூடணனாதியரைச் சாம்பராக்கியது.

அசுரர் சாம்பராயினர். ஓடிப்போனவ ரொழிய மற்றையோர் மாண்டனர். சூரியோதயத்தால் இருளொழிந்தாற்போல,சிவதரிசனத்தால் தீயோர் யாவரும் ஒழிந்தனர். தேவதுந்துபிகள்முழங்கின. புஷ்பமாரிவருஷித்தது. சிவ பெருமான் பிராமணர்களே! நீங்கள்யாதுக்கும் அஞ்சவேண்டாம். தவத்தைக் கைவிடாதீர்கள். உங்கட்கு வேண்டியவற்றைக்கேளுங்கள் என, வேதியர் அடியேங்கட்கு முக்தியருளி, லோக ரக்ஷணார்த்தமாக இங்கெழுந்தருளியிருக்கவேண்டும் என வேண்ட, சிவபெருமான் பக்தப்பிரியராகக் குளத்திலேயே, பிரசன்னமூர்த்தமாக எழுந்தருளியிருந்து பிராமணர்கட்கு முக்தியளித்தனர். அக்குளம் நாற்புறமும் ஒவ்வொரு குரோச அகலமுடையது. இப்பெருமான் மகாகாளேசுவரனெனப் பிரசித்தனர். இவரைத் தரிசித்தால் ஸ்வப்பனத்திலுந் துக்கமடையாது. இஷ்டசித்திகள் கைகூடும். ருஷிகளே! இம்மகாகாளேசுவரஜோதிர்லிங்க மகத்துவஞ் சொன்னேன்; இனி ஓங்காரேசுவர ஜோதிர்லிங்க மகத்துவஞ் சொல்லுகிறேன்.

ஒரு சமையத்தில் நாரதமுனிவர் சகலலோகங்களிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு கோகர்ணக்ஷேத்திர மடைந்து சிவதரிசனஞ் செய்துகொண்டு, விந்தகிரியை யடைந்து விந்த மன்னனால் மரியாதை பூர்வமாகப் பூஜிக்கப்பட்டு வீற்றிருக்கையில், விந்தன் நான் எல்லாவற்றையு மடைந்திருக்கிறேன்; ஒன்றிலுங் குறையிலன் எனக்கூற, மானபங்கஞ் செய்யும் நாரதர் கேட்டு, உஸ் என நெட்டுயிர்ப்பு விட, விந்தன் ஸ்வாமீ! தேவரீர் பெருமூச்சு விட்டது யாது காரணம்? என் பூஜையில் யாது குறைவு? என, நாரதர் உன்னிடத்தில் யாவு மமைந்திருப்பினும், மேருமலை உன்னைக் காட்டிலும் பெரிதாயும், தேவர்கள் மதிக்கத்தக்கதாயும் வசிக்கத்தக்கதாயு மிருக்கிறது எனக் கூறி யதேச்சையாகச் சென்றனர். அதனால் விந்த மன்னன் நான் பிழைத்திருத்தலிற் பயன் யாது? சிவாராதனை செய்து மேருவைச் செயிக்கிறேனென்று நிச்சயித்துக்கொண்டு, ஓங்கார ரூபமான யந்திரமொன்றியற்றிப் பார்த்திபலிங்க பூஜை ஆறுமாதவரையிலும் இடைவிடாதும் இடம் பெயராதும் செய்ய, யோகிகட்கும் புலப்படாத சிவபெருமான் திவ்ய மங்களாகாரமாகப் பிரசன்னராகி, உன் விருப்பம் யாது? என, விந்தராஜன் தேவரீருக்கு என் விஷயத்தில் தயையிருந்தால் எல்லோரிலும் உயர்வாக வளரச் சக்தி யளிக்கவேண்டும் எனக் கேட்க, சிவபெருமான் பிறருக்குத் துன்பமுண்டாகத்தக்க வரத்தைக் கொடுக்கக்கூடாதாயினும் இவன் செய்த அருந்தவத்திற்காக விரும்பிய வரத்தைக்கொடுக்கவேண்டியதேயென்றெண்ணி, அவ்வாறே விருத்தியடைக; ஆயினும் நீ * இறுமாப்புற்றால் அப்பேருருவம் எமதடியர்களால் சிறிதாக அடங்குக வென்று வரங்கொடுத்தனர். அப்பொழுது

* பின்னொரு காலத்தில் விந்தமலை பேருருவெடுத்துச் சூரிய சந்திரர்களைச் செல்லவொட்டாது தடுப்ப, தேவர்கள் முனிவர்கள் முதலானோர் உலகம் வருந்துவது கண்டு, அகஸ்தியமுனிவர்பால் முறையிட்டு, அவரால் அதன் இறுமாப்பை யடக்கின ரென்பது இச்சரித்திரத்தொடர்ச்சி.

தேவர்கள் ருஷிகள் யாவரும் அங்கே வந்து, ஸ்வாமீ! தேவரீர் அவனுக்கு வரங்கொடுத்த பிரஸாதமூர்த்தமாக இங்கெழுந்தருளியிருக்கவேண்டும் என அவ்வாறே அங்கமர்ந்தருளினர். ஓங்கார யந்திரத்தில் சுயம்புலிங்கமூர்த்தம் ஒன்றும், அவன் பூஜித்த பார்த்திபமூர்த்தம் ஒன்றும் விளங்கும். அவற்றிற்கு ஓங்காரேசுவரம் அமரேசுவரம் எனப் பெயர் வழங்கும். அம்மூர்த்தங்களைத் தேவர் முதலானோர் பூஜித்துப் பல வரங்களடைந்தனராதலின், அவ்வோங்காரேசுவரரைப் பூஜிப்பவர் மாதுருகர்ப்பத்தை யடையார். மனோபீஷ்டமெல்லாவற்றையும் அடைவர். இது ஓங்காரேசுவர ஜோதிர்லிங்க மகாத்மியம்; இனி கேதாரேசுவர ஜோதிலிங்கப் பிரபாவத்தைச் சொல்லுகிறேனென்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

மகாகாள ஓங்கார லிங்கங்களின் மகிமை யுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தேழாவது

கேதாரேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

மகருஷிகளே! பிரமதேவருக்கு ஒரு புதல்வராகிய ஸ்வாயம்புமனுவின் புத்திரன் பிரியவிரதன். அவனுக்கு எழுவர் புதல்வர்கள். அப்பிரியவிரதன் தான் ஜீவந்தனாயிருக்கையிலேயே தன் புத்திரர்கட்குப் பாகித்துக்கொடுக்கவேண்டுமென்று கருதி ரதாரூடனாய் மேருமலையை எழுமுறை பிரதக்ஷிணஞ்செய்து எழுதீவுகளாகப் பிரித்தான். அத்தீவுகளைப்போலவே எழுசமுத்திரங்களாயின. தன் புதல்வர் எழுவர்க்கும் ஒவ்வொருதீவாகப் பிரித்துக் கொடுத்துச் சிறிதுகாலத்தில் உயர்பதவியையடைந்தான். அவன் புதல்வர்களில் மூத்தவனான ஆக்நீத்ரனுக்கு ஜம்புத்தீவைக் கொடுக்க, அவன் அரசுசெய்துகொண்டிருந்தான். அவனுக்குப்பின் அவன் புதல்வன் நாபி என்பவனும் தந்தையைப்போலவே அரசுசெய்துவந்தான். நாபி என்பவனுக்கு ருஷபன் முதலாக ஒன்பது புதல்வர்கள். ருஷபனுக்கு பரதன் முதல் நூறு புத்திரர்கள். அவர்களில் பரதனே அரசனானான். ருஷபன் முதலிய ஒன்பது பேர்களும் மகாஞானிகளாயிருந்து ஜநகமகாராஜனுக்கு ஞானோபதேசஞ்செய்து எண்பத்தொரு புதல்வரைப் பெற்றனர். அவர்கள் க்ஷத்திரியதர்மத்தை நடத்தி முக்திப்பிரியர்களா யிருந்தனர். அப்பொழுது ருஷபன் ஒன்பது கண்டமாயிருந்த தன் இராச்சியத்தை ஒன்பது ஒன்பது கண்டங்களாக்கி அவர்கள் யாவர்க்குங் கொடுத்தனன். அவை முழுவதுக்கும் பரதனையே அரசனாக நிருமித்தான். நாமிருப்பது பரதகண்டமே. இது மற்றக்கண்டங்களெல்லாவற்றிலுஞ் சிறந்தது. இவ்வெல்லாக்கண்டங்களிலும் விஷ்ணுமூர்த்தி பல அவதாரங்கள்செய்து லோகரக்ஷணஞ்செய்துவருவார். பரதகண்டத்திலே *பதரிகாச்சிரமத்தில் நரநாராயண ரூபமாகத் தோன்றியிருக்

* பதரி - இலந்தைமரம்.

கையில், அவ்விருவரும் பார்த்திவலிங்கபூஜை செய்கையில் அவர்கள் பக்திக்கு மகிழ்ந்து ஒருசமையத்தில் சிவபெருமான் அவர்கட்குப் பிரசன்னராய், நீங்கள் என் விஷயத்தில் நன்றாய்ப் பூஜித்தீர்கள். எல்லா ஸம்பத்துமுடைய உங்கட்கு யாது வேண்டும்? வேண்டுக என, நரநாராயணர் தேவரீருக்கு எங்கள் விஷயத்தில் தயையிருப்பின், யாவரும் தேவரீரைப் பூஜித்துக் கடைத்தேறும்படி இவ்விடத்தில் இப்படியே எழுந்தருளியிருக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, ஹிமபர்வதசாயலில் பனியால் மூடப்பட்டிருக்கும் அவ்விடத்தில் கேதாரீசுவரரென்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்தனர். அவ்விடத்தில் தேவர்கள் ருஷிகள் முதலியவர்களே பூஜிக்க முடியும். பிறர்பூஜிக்கவும் சேவிக்கவும் முடியாது. இப்பதரிகாச்சிரமத்தில் இருப்பவர்கள் கேதாரீசுவரரைப் பூஜித்துக் கிருதார்த்தராயினர்கள். அவ்விலிங்கத்தைப் பக்தியோடு பூஜித்தால் சகலதுக்கமுமகலும். அந்தக்ஷேத்திரத்தில் ஒரு கங்கணரூபம் இருக்கின்றது. அதனைக் கையிற் பூட்டினவனும் அதைத் தரிசித்தவனும் எல்லாப் பாபங்களையும் போக்கடிப்பான். பதரிவனமடைந்து சிவதரிசனஞ் செய்பவன் முக்தனவான். கேதாரக்ஷேத்திரத்தில் நரநாராயணரைச் சேவித்தால் இஷ்டகாமியங்கள் கைகூடும். முனிவர்களே! கேதாரேசுவர ஜோதிலிங்கமகத்மியத்தைச்சொன்னேன்; இனிப் பீமசங்கர மகிமையைச் சொல்லுகிறேன் அன்போடு கேளுங்கள் எனச் சொல்லத்தொடங்கினர்.

கேதாரீசுவர மகிமை யுரைத்தது

முற்றிற்று.


நாற்பத்தேட்டாவது
பீமசங்கர மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—காமரூபதேசத்தில் உலகத்திலுள்ளவர்களை ரக்ஷிக்கவேண்டி ஸகல ஸத்குணங்களையுமுடைய சிவபெருமானது வருகையைக் கூறுகின்றேன். பூர்வத்தில் உலகத்தையெல்லாம் அழிக்கத்தக்க மகா பல பராக்கிரமசாலியான பீமன் என்னும் அசுரனொருவனிருந்தான். அவன் கும்பகர்ணனுக்கும் கற்கடி யென்பவளுக்கும் பிறந்து எல்லோர்க்குந் துக்கஞ்செய்துகொண்டு, கும்பகர்ணனை இராமர் வதைத்தபின்பு அக்கற்கடியை யழைத்துக்கொண்டு சையகிரியையடைந்து வசித்து, தாயாகிய கற்கடியைப்பார்த்து, அம்மா! என் தந்தையெங்கே? நீ ஒன்றியாயிருக்கக் காரணமென்ன? என வினவ, கற்கடி மகனே! இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணனென்னும் உன் தந்தையை, அயோத்தி மன்னனுகிய இராமன் போரிற் கொன்றனன். உன் தந்தை முன்னொருகாலத்தில் தன் தமயனுடன் இக்காமரூபதேசத்திற்கு வந்து என்னைக் கலந்தானேயன்றி நான் இலங்கையைக் கண்டதுங் கிடையாது. என் தந்தை கற்கடன். என் தாய் புஷ்கஸி. என் முதற்புருஷன் விராதன். அவ்விராதன் இராமனால் இறந்தபிறகு தாய்

தந்தையரிடத்திலே யிருக்கையில், அவர்கள் சுதீக்ஷணன் என்னும் ஒரு ருஷியைத் தின்னச் செல்ல, மகா புண்ணியரான அவ்விருஷி அவ் விருவரையும் பஸ்மஞ்செய்ய, நான் ஒன்றியாகவே யிருக்கையில், உன் தந்தை என்னைக்கூடி இங்கேயே விடுத்துச்சென்றனன்; அதனால் நீ பிறந்தாய். உன்னைப் பார்த்துக்கொண்டு காலங்கழித்துவருகிறேன் என்றாள்.

தாய்வார்த்தையைக் கேட்ட பீமன், என் தந்தையையும் விராதனையும் இராமன் கொன்றான். என் பாட்டனையும் பாட்டியையும் ருஷி பஸ்மஞ் செய்தான். எனக்குப் பெருத்த கஷ்டமாயிற்று. நான் கும்பகர்ணனுக்கு மகனென்பது உண்மையாயிருந்தால் இராமனைக் கண்டுபிடித்துக் கொல்லாமல்விடேன் என்றுகூறி, பிரமதேவரைநோக்கிக் கைகளைத்தூக்கிக்கொண்டு ஒரு காலில் நின்று சூரியனைப்பார்த்து மனதில் தியானஞ்செய்து ஆயிரவருஷம் அருந்தவஞ்செய்ய, அவன் சிரசிலிருந்து பயங்கரமான தேஜஸு கிளம்பி உலகங்களைத் தகிக்க, அதனைச் சகியாத தேவர்கள் பிரமதேவரையடைந்து சரணம்புக்கு, கடவுளே! இராட்சதனுடைய தவத்தேஜஸு உலகத்தைத் துன்புறுத்துகின்றது. அவன் எதைக்குறித்துத் தவஞ்செய்கின்றானோ அதனைக் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் நாங்கள் யாவரும் இறப்போம் என, பிரமதேவர் அவ்விமையவர்சொல்லுக்கிணங்கி, துராத்மனான அப்பீமனிடம் அன்னவாகனமிவர்ந்து பிரசன்னராகி, உனது தவத்திற்கு மகிழ்ந்தேன்; வேண்டியது யாது? என, பீமராட்சஸன் ஸ்வாமீ! எனக்கு அபரிமிதமான பலத்தைக் கொடுக்கவேண்டும் என்று சாஷ்டாங்கமாகப் பணிய, பிரமதேவர் அவ்வரத்தை யநுக்ரஹித்து அந்தர்த்தானமாயினர். இராட்சஸனாகிய பீமனும் தாயைப் பணிந்து, அம்மா! என் பலத்தைப் பார். தேவர்கள் யாவரையும் நாசஞ்செய்கிறேன் என்று காமரூபதேசத்தையடைந்து அங்குள்ள பிரியதர்மன் என்னும் அரசனைப் பிடித்து விலங்கிட்டு அவன் வீட்டிலிருந்த யானை-சேனை-சத்திரம்-சாமரம் முதலிய தனங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவ்விராச்சியத்தைச் சுவாதீனப்படுத்திக்கொண்டனன். அவ்வரசன் சிறைச்சாலையிலிருந்துகொண்டே பரமரகசியமாகப் பார்த்திவ பூஜை செய்துகொண்டும், கங்காதேவியையும் பலவாறு மானஸீகமாகத் தியானித்துக்கொண்டுமிருந்து, அப்படியே அவன் மனம் லயமாய்விட்டது. அப்பூஜையெல்லாம் சிவபெருமானுக்குப்பிரியமாயின. பஞ்சாக்ஷரமந்திரத்தைப் பிரணவத்தோ டுச்சரித்துக்கொண் டிருந்தான். அவ்வரசனுடைய தட்சிணையென்னும் மனைவியும் பார்த்திவபூஜைசெய்து சிவத்தியானத்திலேயே மனம் வைத்திருந்தாள்.

இவர்களிருவரும் இவ்வாறிருக்க, பீமன் சகலலோகங்களையும் ஜயித்து, புண்ணியகருமங்களையெல்லாம் அழித்து, தேவர் முனிவர் முதலானவரைத் துன்புறுத்தி ஏகசக்ராதிபதியாயிருக்க, யாவரும் மகாகோசநதி தீரத்தில் சிவபூஜையுஞ் சிவத்தியானமுஞ் செய்துகொண் டிருந்தார்கள். அவர்கள் பூஜைக்குக் களித்த சிவபெருமான் பிரத்தியக்ஷமாய், உங்களுக்கு என்ன



24. மகாகோசநதிதீரத்தில் பிரியதாமனை பூசித்த பார்த்திவலிங்கத்தினின்று சிவபெருமான் தோன்றி அவனைத் துன்புசெய்த
பீமனை ஹுங்காரத்தாலெரித்தது.

வரம் வேண்டும்? எனக் கேட்க, ஸ்வாமீ! தேவரீருக்குத் தெரியாததொன்றில்லையாயினும் எங்கள் கஷ்டத்தைச் சொல்லுகிறோம். பீமனென்னும் பயங்கரமான ராக்ஷஸன் எங்களைக் கஷ்டப்படுத்துவதால் அவனைக் கொன்று எங்களைக் காக்கவேண்டும் எனக் கூற, சாம்பவமூர்த்தி நல்லது அரசனோ மகா பக்தன்; அவன் சிறையிலிருக்கலாமா? அப்படியே பீமனைச் சங்கரிக்கிறேன் என, தேவர்முதலானோர்பணிந்து தமதிடஞ்சென்றனர். அந்தச் சமயத்தில் பிரியதர்மன் பார்த்திவலிங்கபூஜை செய்துவருவதை யறிந்த சிலராக்ஷஸர் பீமனை யடைந்து, சிறையிலிருக்கும் அரசன் உன் விஷயத்தில் ஏதோ அபிசாரஞ் செய்வதாகத் தெரிகிறது; செய்யவேண்டியதை விரைவிற் செய்க என, பீமன் வெகுண்டு அவனைக் கொல்லவேண்டுமென்று உடைவாளோடு அரசனிடம்வந்து, யாதுசெய்கிறாய்? உண்மைசொல்லாவிடின் உன்னைக் கொல்வேன்என, அரசன் சத்தியவானாதலின் வருவதுவரட்டுமென்றுகருதி, நான் சிவபூஜைசெய்கிறேன்; பரமதயாளுவானபரமேசுவரன்இதிலிருக்கிறான்; பக்ததயாளுவாயினும் இக்கஷ்டத்தி லிருக்கும் நான் அவனைச் சேவிக்க முடியுமா? எனக்கூறி, நமது சக்திக்கேற்பப் பூஜிக்கும்பலனைக்கொடுப்பான் எனத் தன்னிற்றானே நினைத்து, கடவுளே! நான் உன் அடியன். உன்விருப்பின்படி செய் என்று விண்ணப்பித்து, ராக்ஷஸனே! நான் சிவபெருமானைப் பணிந்துகொண்டிருக்கிறேன்; உனக்கு எது விருப்பமோ அதைச் செய் என, பீமன் நான் சங்கரனை யறிவேன். என் மூதாதையாகிய இராவணேஸ்வரன் அவனைக் கயிலாயத்தோடு தூக்கிவிட்டான். அவன் என்னை யென்ன செய்யமாட்டுவான்? அவனைத்துதித்தா என்னைச்செயிக்கப்போகிறாய்? நன்றாயிருந்தது. இவ்விலிங்கத்தைத் தூரத்தே யெறிந்துவிடு; அப்படிச்செய்யாவிட்டால்என் பராக்கிரமத்தைப்பார் என, அரசன் நான் சிவபூஜையை விட்டுவிட்டாலுந் தயாமூர்த்தியான சிவபெருமான் உன்னை விடமாட்டார் என, பீமன் நகைத்துச் சிவபெருமானைத் தூஷித்துப்பேசி, நானே உனக்குத் தெய்வம் என, அரசன்-நீயே இவ்வாறு சொல்கிறாய்; நான் அவ்வாறு சொல்லமாட்டேன். நீ பலவான்; செய்வதைச்செய் என, பீமன்-உன் கடவுள் இருந்தால் தன் பலத்தைக் காட்டட்டும் எனக் கூறி, தன் கைக்கத்தியை அவ்வரசன்மீது செலுத்துவதன்முன், அப்பார்த்திவலிங்கத்தினின்று சிவபெருமான் தோன்றி, நான் பீமேசுவரன். இவ்வரசனைக் காக்கவே இங்கு வந்தேன். உத்தமர்களைக் காப்பதே என் விரதமாதலின் இவனைக் காக்கிறேன். என் வலிமையைப் பார் என்று பிநாகத்தை வளைத்து அஸ்திரந் தொடுத்து அப்பீமன் எடுத்த உடைவாளை நூறு துண்டாக்கினர். பீமன் மீண்டுந் திரிசூலத்தைச் செலுத்த அதையும் நூறுதுண்டஞ்செய்தனர். சத்தியைச் செலுத்த அதுவுமழிந்தது. அஸ்திரத்தை விடுப்ப அதுவும் பொடிபட்டது. பிரமதகணங்கட்கும் ராக்ஷஸர்கட்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அது கண்டோரஞ்சத்தக்கது. சொல்ல முடியாதது. உலகமுழுவதும் அதனால்நடுங்கின. சமுத்திரங்கள் கொந்தளித்தன. மலைகள் குலுங்கின. கிரகங்கள் நக்ஷத்திரங்கள் உதிர்ந்

தன. தேவர்கள் துக்கித்தார்கள். அச்சமையத்தில் நாரதமுநிவர்வந்து சிவ பெருமானைப் பணிந்து ஸ்வாமீ! கோபந்தணியவேண்டும். புல்லின்பேரிற் கோடரியைச் செலுத்துவதா? இவனுக்காக இவ்வளவு போர் யாதுக்கு? விரைவில் இவனை அசுரச்சேனையுடன் அழிக்கவேண்டும்எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் ஹுங்காரஞ்செய்ய, அதுவே அஸ்திரமாய்ப் பீமனையும்அவன் சேனைகளாகிய அசுரர்களையுஞ் சருகிற்பட்ட தீப்போலப் பஸ்மமாகச்செய்து அவர்களது உருவமுந் தெரியவொட்டா தொழித்தது. அப்பொழுது சிவ பெருமானது கோபாக்கினி தணியாது அருகிருந்த வனங்களையெல்லாம் கொளுத்த வதுகண்டு தேவர்கள்யாவருங் கூட்டமாகப் பலவாறு பிரார்த்தி க்க, சிவபெருமான் சாந்தமூர்த்தியாய், அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி உலகங்கட்குச் சுகஞ்செய்துகொண்டு பீமசங்கர நாமமுற்று அங்கு எழுந்த ருளியிருக்கின்றனர் என்று ஸூதமுநிவர் கூறினர்.

பீமசங்கர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தோன்பதாவது
காசியின் மகிமை யுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளைநோக்கி முநிவர்களே! நான் இனி எல்லாப் பாபங்களையும் ஒழிக்கத்தக்க விச்சுவேசுவரலிங்க மகாத்மிய த்தைச் சொல்லுகிறேன். பக்திபூர்வமாகக் கேளுங்கள். கண்ணுக்குப் புலப் படுகிற (திருஸ்ய) பிரபஞ்சமானது உண்டாவதன் முன்னமே அவிமுக்த மாகிய காசி க்ஷேத்திரமுள்ளது. அந்தக் காசியின்பிரபாவத்தைக் காசிகண்ட முதலியவற்றிற் கூறப்பட்டிருப்பினுஞ் சுருக்கி இப்பொழுதுசொல்லுகிறேன். நிர்க்குணமும் சத்யஜ்ஞான ரூபமும் அழிவில்லாமையும் சிதானந்த ஸ்வரூப மும் நிர்விகாரமுமாக விளங்குகிற தேஜஸிலிருந்து பிரகிருதியும் புருஷனும் உண்டாகி, நம்மைப்படைத்தவன் யார்? நாம் செய்யவேண்டியது யாது? என்கிறசந்தேகத்துடன் யோசித்துக்கொண்டிருக்கையில்,நிர்க்குண ஸ்வரூபி யான பரமாத்மாவினிடத்திலிருந்து ஓர் அசரீரிவாக்கு "தபஞ்செய்து பிறகு சிருஷ்டிகாரியஞ் செய்யவேண்டும்" என உண்டாக, அதைக்கேட்ட பிரகிருதி புருஷர்கள் நாங்கள் எவ்விடத்திலிருந்து தவஞ்செய்யவேண்டுவது? என வினவ, பரமான்மாவால் தேஜோமயமானதும், பஞ்சக்குரோச விஸ்தீரண முடையதும், மாடமாளிகைகளோடு கூடியதுமான சுந்தரம்பொருந்திய ஒரு நகரமானது நிருமிக்கப்பட்டு ஆகாயத்தில் விளங்குகின்றது. அந்தப்பட் டணத்தை யடைந்து தவஞ்செய்யுங்கள் என்று வாணிகூற, பிரகிருதிபுருஷர் இருவரும் அவ்வாகாய நகரத்தை யடைந்தனர். புருஷனாகிய விஷ்ணு சிரு ஷ்டியை விரும்பிப் பலவித தவத்தைச் செய்துவந்தார். அநேககாலந் தவஞ் செய்ததனால் மகாத்மாவான விஷ்ணுவுக்குத் தேக இளைப்பால் உடலில் மிகு ந்த வியர்வை யுண்டாயிற்று. அவ் வியர்வைநீர் பிரபஞ்ச முழுவதையும்

வியாபரித்தபடியால் பிரபஞ்சமெல்லாங் கண்ணுக்குப் புலப்படாதாயின. இஃதென்ன பெருவியப்பென்று விஷ்ணுவானவர்சிரக்கம்பனஞ்செய்கையில், சிவபெருமானுடைய காதினின்றும் ஒருமணி அவர் எதிரில் விழுந்தது. எந்தவிடத்தில் அம் மணி விழுந்ததோ அந்த விடத்திற்கு மணிகர்ணிகை யெனப் பெயர். [இப்படி விஷ்ணுவின் வியர்வினால் மூடப்பட்டிருந்த அந்த ஆகாய நகரமானது சிவபெருமானது திரிசூலத்தின் ஆதரவால் நிறுத்தப்பட்டிருந்தது] அந்தவிடத்திலேயே விஷ்ணுமூர்த்தி பிரகிருதி ஸஹிதமாகச் சயனித்திருந்தார். இப்படி விஷ்ணுவானவர் யோகநித்திரையி லிருக்கையில் உலகங்கட்குப் பிதாமகனான பிரமதேவர் விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தி லிருந்து பிறந்தார். அப்படிப் பிறந்த பிரமாவானவர் சிவாக்ஞை யடைந்து உலக சிருஷ்டியைச் செய்தார். சராசரரூபமாகச் சிருஷ்டிக்கப்பட்ட அண்ட முழுவதும் சிவபெருமானுடைய சுத்த தேஜஸால் வியாபிக்கப்பட்டது. அது முதல் சிருட்டியானது கிரமமாகநிறைவேறினது. அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்தப் பிரமாண்டத்தின் பரிமாணம் ஐம்பதுகோடி யோசனை விஸ்தீரண மென்று முனிவர்களால் மதிக்கப்பட்டது. ஜலத்திலிருக்கும் இப்பிரமாண்டமானது ஜலத்தின்பேரிற் கப்பல்போலவும், தயிரின்மேல் ஏடுபோலவும், அஷ்டதிக்கஜங்களால் தாங்கப்பட்டு நிலைத்துநின்றது. இந்தப் பிரமாண்டம் மூன்றுகப் பிரிக்கப்பட்டு நடுவிலுள்ளதை மத்தியலோகமென்றும், மற்ற இரண்டு பாகங்களையும் ஊர்த்துவலோகமென்றும், அதோலோகமென்றும் சொல்லப்பட்டன. மத்தியலோகம் பூலோகமென்றும், அதோலோகத்தை அதலம்-விதலம் - சுதலம் - தராதலம் - ரஸாதலம்-மகாதல-ம்பாதல மென்றும் சொல்லப்படும். பூலோகத்தின் மேலுள்ள ஊர்த்துவலோகம்-புவர்லோகம்-ஸ்வர்லோகம் - மஹர்லோகம் - ஜனலோகம் - தபோலோகம் - சத்யலோகமென்றும் சொல்லப்படும். பாதாளலோகங்கள் ஏழும் ஒன்றன்கீழொன்றும், சுவர்க்கலோகங்கள் ஒன்றன்மேலொன்றுமாக முறையே விளங்கும்.

ருஷி சிரேஷ்டர்களே! அப்படிப் பிரிக்கப்பட்ட அந்த வுலகங்களின் விஸ்தீர்ணத்தைக் கிரந்தம்பெருகிவிடுமென்று சொல்லவில்லை. பல நூல்களிலுஞ் சொல்லப்பட்டுள்ளன. புண்ணியஞ் செய்தவர்கள் தங்கள் புண்ணியங்கட்கேற்றபடி ஸுவர்க்கலோகங்களிலும் பாவஞ் செய்தவர்கள் தங்கள் பாபத்திற்கேற்றபடி அதோ லோகங்களிலும் வசிப்பார்கள். இந்தப் பூலோகத்தில் சத்த சமுத்திரங்களும், சத்தத்தீவுகளும், மேருமுதலிய குலபர்வதங்களும், கங்காதி புண்ணிய நதிகளும், விசித்திரமான பல புண்ணியவனங்களும் விளங்குகின்றன. இப்படிச் சிருஷ்டிக் கிரமத்தைச் சொல்லி யினிப் பரப்பிரமஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன்.

நிர்க்குணமான பரமான்மாவுக்கு க்ஷரம் அக்ஷரம் என இருவகை உருவங்களுள. காணக்கூடிய ஸ்தூலப் பிரபஞ்சம் க்ஷரரூபமெனவும், காணுதற்கரிய சூக்குமப்பிரபஞ்சம் அக்ஷரரூபமெனவும், அவ்விரண்டும் மணி யொளி, பூ மணம், கதிர் கரம்போல விளங்குமென்றும் முனிசிரேஷ்டர் கூறுவார்

கள். நிர்க்குண சகுண லக்ஷணங்களை உண்மையுணர்ந்த தத்வஞானிகளே யுணர்வார்கள். சகுணோபாசனை முன்னே செய்து அதன்பலனாலேயே பின்னர் நிர்க்குணோபாசனை செய்யத்தக்கது. சகுணஞானமாகிய அபரஞானம் உண்டானபிறகு நிர்க்குணஞானமாகிய பரஞானம் தானே வளரும். நிர்க்குணப் பரஞானம் உண்டாகும்வரையில் சகுணோபாசனை செய்தேதீரவேண்டும். சிவஞானமுற்றபொழுதே அகங்காராதிகள் நீங்கும். அவை யகன்றபொழுதே தேகவாஞ்ஞை யில்லா தொழியும். அஃ தொழியவே எங்குஞ் சிவமாகத்தோன்ற, பாபகிருத்தியரகிதமாய் சிவோஹம்பாவனையுண்டாகும். அது கைகூடியவர்களுக்கு விதிவிலக்குகளில்லையாகும்.

சிவபெருமான், கர்மபத்தர்களாகிய ஜீவர்கள் எவ்வாறு கிருதார்த்தர்களாகித் தம்மைத் தரிசித்துய்வார்களென்று கருதினவராய், அந்த ஆகாயநகரத்தைச் சூலத்தினின்று விடுத்தார். சுபத்தைக் கொடுப்பதும், ஸம்சாரகர்மங்களை நசிக்கச்செய்வதும், அவிமுக்தமான லிங்கத்தை யுடையதுமான அந்தப்பட்டணம் மாநுடர்களால் எப்பொழுதும் விடப்படக்கூடாதென்று திருவுள்ளங்கொண்டசிவபெருமானால் தமது திரிசூலத்தினின்று இந்தமத்தியலோகத்தில் நிறுத்தப்பட்டது. பிரமாவின் ஒருபகல் கழிந்த பிரமகற்பத்தில் உண்டாகும் பிரளயகாலத்தில், சிவபெருமான் தமது திரிசூலத்தின் மேல் வைத்து இந் நகரத்தைக் காத்திருந்து மீண்டும் சிருஷ்டிக்கிரமத்தில் திரிசூலத்தினின்றும் விடுவர். கர்மங்களை நாசஞ் செய்வதால் இதற்குக் காசியென்று பெயர். "கூஃணாஂகஷ-ணா_தாஸீ கர்மணும் கர்ஷ்ணுத் காசீ" அவிமுக்தலிங்கமானது காசிக்ஷேத்திரத்திலிருந்து, மகாபாபிகளுக்கும் மோக்ஷாநந்தத்தை யடையச்செய்கிறது. ருஷிகளே! மற்றப் புண்ணியக்ஷேத்திரங்களிலெல்லாம் சாரூப்பிய முத்தியும், இந்தக்ஷேத்திரத்தில்மட்டும் சாயுச்சியமென்னும் உத்தம முத்தியும் பெறப்படும். பஞ்சக்குரோச பரிமாணமுடையதும், கோடி பிரமஹத்தி முதலியவற்றைப் போக்கடிப்பதுமான இந்தக் காசிக்ஷேத்திரமானது கதியில்லாதவர்கட்கெல்லாங் கதியாயுள்ளது. தேவர்களும் இந்தப்பட்டணத்தில் இறக்க விரும்புவார்கள். பிரமவிஷ்ணுக்கள் சித்தர் வித்தியாதரர் முனிவர்கள் மாநுடர் முதலிய யாவரும் விரும்பிச் சேவிக்கத்தக்கது. காசிமகாத்மியத்தை நூறுவருஷஞ் சொன்னாலும் என்னாற் சொல்லிமுடியாதாயினுங் கூடியவரையிற் சொல்லுகிறேன். கைலாசபதியும், இச்சையாற்சகுணரும், சுயமாக நிர்க்குணருமாயுள்ள சாம்பவமூர்த்தி ஒருகாலத்தில் இக்காசிக்ஷேத்திரத்தில்வந்து, பாபங்களைப் பரிகரிக்கத்தக்க தன்து ஸ்வரூபமான அவிமுக்த லிங்கத்தை யாவருக்குங் காண்பித்து, அந்த அவிமுக்தமகத்மியத்தைச்சொல்லினர். அதனை விஸ்தாரமாக யான் சொல்ல வல்லவனல்லேன். பிரமதேவனே அநேககோடிவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லிமுடிக்கார். அவிமுக்த க்ஷேத்திராதிபதி பார்வதிதேவி சமேதராகவந்த சிவபெருமானைத் தரிசித்து அநேக ஸ்தோத்திரங்களுடன் நமஸ்காரஞ் செய்து, சுவாமீ! நான் உன்னடிமை. என்னிடத்தில் தயைவைக்கவேண்டும்,



25. பிரமதேவர் தன்னுலகடைந்த சிவபெருமானை யாதனத்தமர்த்தி நமஸ்கரிக்கையில், அவரது நடுச்சிரம் அவமதித்துப்
வந்துச் சிரசைச் சேதித்தது.

உலகத்திற்குச் சுகமுண்டாகுங் காரணமாகத் தேவரீர் இங் கெழுந்தருளி யிருக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து, கண்களினின்றும் ஆநந்தபாஷ்பஞ் சிந்தி, சிவபெருமானுடைய திருவடிகளைப் பற்றி, அத் திருவடியை விடுக்க மனமின்றி, இந் நகரத்தைத் தேவரீர் இராஜதானியாக வைத்துக்கொள்ள வேண்டும். யான் சிந்தையற்றிருக்கவேண்டுமெனக் கருதியிருந்ததற் கேற் பக் கிடைத்த இக் காசிநகரத்தைத் தேவரீர் வாசஸ்தானமாகக் கொண்டு, எக்காலத்திலும் எக்காரணத்தினாலும் இந் நகரத்தைவிட்டு நீங்காதிருந்து எங்கட்குத் தரிசனமளித்து எங்களையெல்லாம் கிருதார்த்த ராக்கவேண்டும். எல்லாப்பிராணிகளையும் முக்தியடையச் செய்யவேண்டும் எனப் பிரார்த்திக்கையில், உலகங்கட்கெல்லாம் பதியான சதாசிவமூர்த்தி தனது பரிவாரங் களுடன் கூடி, லோகோபகாரநிமித்தமாக அங்கே எழுந்தருளியிருந்தனர். சிவபெருமான் தனது திருக்கரத்திலிருந்த பிரமகபாலத்தை அக்காசியிற் பிரதிட்டைசெய்யவேண்டுமென்று கருதிவந்தவராதலின், அவ்வரசன் வேண் டுகோளுக் கிணங்க, தாம் உத்தேசித்து வந்தபடியே அவ்விடத்தில் வசித்தி ருக்க உடன்பட்டனர் என ஸூதமுநிவர் சொல்லுகையில், நைமிசாரணியவா சிகள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமானிடத்திற் பிரமகபா லம் ஏது? அதன் வரலாற்றையுஞ் சொல்லவேண்டும் எனவினவ, ஸூதமுநி வர் சொல்லத்தொடங்கினர்.

மகருஷிகளே! நீங்கள் நல்ல விஷயத்தைக் கேட்டீர்கள். என் குரு வாகிய வியாஸமுநிவர் கூறியவகையையே சொல்லுகிறேன். பூர்வம் ஒருகாலத் திலே சிவபெருமான் உலக க்ஷேமங்களை விசாரிக்கத் திருவுள்ளங்கொண்டு சகல லோகங்களிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு பிரமலோகத்தை யடைய, பிரமதேவர் எதிர்கொண்டு மரியாதை பூர்வகமாய், பெரியோர் தன் வீட்டிற்கு வந்தபடியால் மனமகிழ்ந்து அழைத்துக்கொண்டுபோய் அருக்கிய பாத்திய ஆசமனாதிகளாற் பூசித்து, தனது நான்கு திருமுகங்களாலுந் தோத்தி ரஞ் செய்கையில், ஐந்தாவதாகிய [illegible] முகம் சிவபெருமானைக் குறைகூற, அதனைக் கேட்ட சிவபெருமான், பிரமனுடைய நான்கு முகங்களுந் துதித் தவற்றிற்குச் சந்தோஷித்து, ஐந்தாவது முகமானது செய்த தூஷணத்தி ற்கு விசனமுற்று, ஆஹா! இத்துஷ்ட முகத்தை நிவிர்த்திக்க வேண்டுமெ ன்றும், பாம்பு கடித்த விரல் முதலியவற்றை யறுத்தெறிவதால் அவ்விஷ வேகந் தீர்வதுபோல, முழுவதும் நற்குணமுடைய பிரமதேவனது ஐந்தா முக மொன்றே தீக்கருமமியற்றலின் அதனை விலக்குவதால் அவன் முழுவ தும் நற்குண முறுவானென்றுங் கருதி, சிவபெருமான் எல்லோருக்குஞ் சுகத்தை உண்டுசெய்ய வேண்டியவராதலின் இப்பிரமதேவனுஞ் சுகமடைய வேண்டுவதே யென்று தீர்மானித்து, தமது திருநெற்றி விழியில் அக்கினிச் சுவாலைதோன்றப் பிரமனைச்சமீபித்து அவனது ஐந்தாவது சிரத்தைத் தமது திருவிரலின் நகத்தாற் கொய்தனர். அந்தப் பிரமசிரமானது சிவபெருமா னைப் பின் தொடர்ந்தது. அது இங்கடைந்தபொழுது அவரை விட்டுவிலகி

யது. அக்காரணங்க ளிரண்டினுலும் சிவபெருமான் அங்கே யமர்ந்தனர். எனக்கூறுகையில், சௌனகாதிமுநிவர்கள் ஸூதமுநிவரைநோக்கி,ஸ்வாமீ! தாங்கள் சொல்லிவந்தவிஷயத்தில் எங்களுக்கொரு சந்தேகமுளது. அதனை யும் நீக்கியருளவேண்டும். அதாவது சர்வ லோகங்களுக்கும் பிதாமகனை பிரமதேவர் தனக்கும் உலகங்கட்குந் தலைவராகிய சிவபெருமான் தமதிடத் தேவரக்கண்டு மரியாதை பூர்வமாக உபசரித்தபொழுது, தான் மகா சாந்தசீலரா யிருந்தும் தனது நான்கு வாயினுலுந் துதித்து ஒருவாயினல் அவமதித்த காரணமென்ன? என்பதேயாம்: எனக் கூறக்கேட்ட ஸூதமுநிவர், முனிவர்களே! பிரமதேவர் முன்னொரு காலத்தில் தான் சிருஷ்டிசெய்த சரஸ்வதியை நோக்கி அவளது பேரழகு காரணமாக, நீ என்னை யணையவேண்டும்; நீயே யென் மனைவி; நானே உன் கணவன் எனக் கூறக்கேட்ட வாணி இஃதென்னவிந்தை! நீயேயென்னைப்படைத்து மீண்டும் என்னை மனைவியாதாகக் கூறுவது தருமமா? என்று திரஸ்கரித்து மனந்தாளாது, மகளென்று பாராது தகாதவார்த்தைகூறிய உனது ஒருவாயானது இப்படியே துர்ப்பாஷைகளை வசனித்துக்கொண்டிருந்து பின்னொருகாலத்தில் சிவபெருமானல் தண்டனை யடையக்கடவது எனச் சாபமிட்டனள். அந்தச் சாபத்தின் மகிமையாலேயே, சிவபெருமானை மற்ற முகங்கள் துதிக்கையில் அந்தச் சிரம் நிந்தித்து, அவரால் அறுத்துவிடப்பட்டது என்று கூறினர்.

ஶ்லோ॥ ஶிவோ விஷ்ணுர்ப்ரஹ்மணே தேவ ஸஹஜேந வாரஸ்ய ச ।
பாபம் ச ஸ்ரீகரோதி ஹ ஸ்வயம் ச ஸ்ரீக்ருதம் ந ஹி ॥ (அக)
தத்காரணம் ச ஶ்ருணு யதா ப்ரஷ்யக்ஷயாத்யஹம் ।
ஶ்ரேஷ்டஸ்யாபி தம் யச்ச தச்சைவ ச நஸ்வேந ॥ (அஉ)
கரோதி பாதியச்ச ப்ராணாக்ஷணாய சைவ ।
மாம் ஸ்வாரஸ்ய தஸ்ய ப்ரம்பாதகம் கிந்நரேண ஹி ॥ (அங)
ஶிவஸ்ய தீர்த்தஸம் யோ பாத்ரிஸ்ச ஸ்ச தஸ்யிதம் ।
தஸ்மாத் தீர்த்தவாம் சேஷ்ய தத்ஹாபாதக நாஶநம் ॥ (அச)
இதித்யம் ஜ்ஞாபிதம் தேவைகே ஸாஹாத்ம்யம் தீர்த்தஸம்பவம் ॥
ஶ்ரவா மாம் ஸ்வாரவஸ்யத்தாங்கஸ்தஜா நாதிவேஷ்டிதம் ॥ (அரு)
ஸ்நாநம் குஹ நம் சைவ ஸ்நாநமேயா நவதியாரணம் ।
கர்ணவிஷயே ஶ்ருதம் யேநைர் ஜய உபாஹ்ருதம் ॥ (அசு)
திமம் பாரஸ்யம் சைவஸக்தே ஹ்யாஹ்ய பாபஶ்ரியம் ।
ஸ்வதேஸ்தம் பவிஶா சாஸ்ஸக்தாநாம் சசதார்விதயம் ॥ (அஎ)
ஸ்வாம் மேசாரண்யாபா தேவஸக்தாநாம் பக்திகா நிச ।
விதாஸ்வஸ்நிஜ தேஹ்யஸக்தேஹ்யச்சாநம் ஶ்சிதம் ॥ (அஅ)

ஸ்வவாஹநம் வ்ருஷஶ்சைவ பக்தாநாம் ஹஸ்திகாநத |
ஸ்வவாத்யம் சைவ கஹ்லாத பக்தாநாம் காநகாநத || (ககூ)
ஸ்வஶிரஸி ஜடாதிவ்யா பக்தாநாம் முகுடாதிகம் |
ஸ்வபூஷணம் ச ஸர்பாதி பக்தாநாம் குண்டலாதிகம் || (கூ0)
ஸ்வஸ்ய வஸ்த்ரம் ச சர்மாதி பக்தேப்யஸ்ஸுந்தராம்பரம் |
ஸ்வயம் ததாபி சாந்யச்ச பக்தாநாம் சாந்யதேவ ச || (கூக)
யதாபிலாஷம் பக்தேப்ய: ஶங்கரஸ்ஸம்ப்ரயச்சதி |
தஸ்மாத்தச்சேஷ்டிதம் நைவ ஜ்ஞாதும் ஶக்யம் முநீஶ்வரா: || (கூஉ)

ஶிவோபிஸ்மரணேனைவ பஜநேநபரஸ்யச | பாபந்தூரீகரோதீஹ ஸ்வயந் தூரீக்ருதம்நஹி || அக || தத்காரணஞ்சஶ்ரூயதாம் ருஷய:கதயாம்யஹம் | ஶ்ரேஷ்டஶ்சாசரிதம்யச்சததேவசநர :புந : || அஉ || கரோதிசரதியச்சப்ரமாணரக்ஷணாயவை | ஈஶ்வரஸ்யததாலக்நம் பாதகம்கிம்நரோணஹி || அரு || ஶிவஸ்யதீர்த்தஸம்யோகாச்சிரஶ்சதூரத:ஸ்திதம் | தஸ்மாத்தீர்த்தவரம்ஹ்யேதந்மஹாபாதகநாஶநம் || அச || இத்யேவம்ஜ்ஞாபிதம்லோகேமாஹாத்ம்யம்தீர்த்தஸம்பவம் | அதவாஈஶ்வரஸ்யேச்சாம் கஶ்சஜாநாதிசேஷ்டிதம் || அரு || க்வாநங்கதஹநஞ்சைவ க்வாங்கேயுவதிதாரணம் | கண்டேவிஷந்த்ருதம்யேநம்ருத்யுஞ்ஜயஉதாஹ்ருத: || அசு || திகம்பரஸ்ஸ்வயஞ்சைவ பக்தேப்யோஹ்யசலாம்ஶ்ரியம் | ஸ்வஸைந்யஞ்சபிஶாசாஶ்ச பக்தாநாஞ்ச சதுர்விதம் || ஸ்வாங்கேசருண்டமாலாவைபக்தாநாம்மௌக்திகாநிச | சிதாபஸ்மநிஜஸ்யைவபக்தேப்யஶ்சந்தநந்ததேத் || அஅ || ஸ்வவாஹநம் வ்ருஷஶ்சைவ பக்தாநாம்ஹஸ்திகாநத | ஸ்வவாத்யஞ்சைவ கல்ஹாத பக்தாநாஞ்சாநகாநத || அகூ || ஸ்வஶிரஸி ஜடாதிவ்யா பக்தாநாம்முகுடாதிகம் | ஸ்வபூஷணஞ்சஸர்பாதி பக்தாநாம் குண்டலாதிகம் || கூ0 || ஸ்வஸ்யவஸ்த்ரஞ்சசர்மாதிபக்தேப்யஸ்ஸுந்தராம்பரம் | ஸ்வயந்ததாதிசாந்யச்சபக்தாநாஞ்சாந்யதேவச || கூக || யதாபிலாஷம்பக்தேப்ய ஶ்ஶங்கரஸ்ஸம்ப்ரயச்சதி | தஸ்மாத்தச்சேஷ்டிதம்நைவஜ்ஞாதும்ஶக்யம்முநீஶ்வரா: || கூஉ ||

சிவபெருமான் தன்னைச் சேர்ந்தவர்களையும், தோத்திரஞ் செய்தவர்களையும்,பூஜித்தவர்களையும் பாபரகிதர்களாக்கும் வன்மையுடையவரா யிருக்க, தான் பிரமன் தலையைக் கொய்த தோஷத்தை நிவிர்த்திக்கச் சக்தியின்றிப் போகுமா? இல்லையாயினும், அவ்வாறு நடித்துக்காட்டிய காரணத்தையுஞ் சொல்லுகிறேன். உலக சிரேஷ்டன் செய்த காரியத்தைப் பிறர் நற்கருமமென அங்கீகரிப்பது பிரமாணபூர்வமாகு மாதலின், சிவபெருமான் தான் பிரமசிரச்சேதஞ் செய்தகாலத்தில் அக்கபாலம் ஒட்டிக்கொண்டதெனத் தீர்த்தயாத்திரை செய்தாரேயன்றி, சாமானியரைப்போல இவருக்குப் பாபமணுகிச்செய்தவரல்லர். உலகினர்க்குஇங்ஙன நடித்துக்காட்டினர். சிவபெருமான் இவ்வாறு தீர்த்தயாத்திரைசெய்து பிரமகபாலத்தைவிலக்கினர். காசிக்ஷேத்திரம் இதனல் பாபங்க ளனைத்தையும் போக்கடிக்கத்தக்க உத்தமக்ஷேத்திரமாகும். இந்தக்கபாலம் விழுந்தவிடம் கபாலமோசனதீர்த்தமெனப்படும். நிக்ரகாநிக்ரகசமர்த்தராய்ச் சகலபிரமாண்டங்களையுஞ் சிருஷ்டித்துக்

காத்துச் சங்கரிக்குஞ் சிவபெருமானுடைய சங்கற்பமும் நடக்கையும் யாவனறியவல்லவன். அவர் செய்த காரியங்கள் அநேகம். மன்மதனைத் தகனஞ் செய்திருந்தும் தனதுடலிலேயே வாமபாகத்திற் பார்வதிதேவியை யமர்த்தியிருப்ப தெங்கே? கண்டத்திலே விஷத்தைத் தரித்திருந்தும் மிருத்யுஞ்சயராயிருப்பதெங்கே? தான் திகம்பர ராயினுந் தன்னையடைந்தோருக்குச் சகல ஐசுவரியங்களையும் அநுக்கிரகிப்பதெங்கே? தான் பசாசங்களைச் சைநியமாக வைத்துக்கொண் டிருந்துந் தன்னை யாச்சிரயித்தவர்கட்கு யானை-குதிரை-தேர்-காலாள்முதலிய சதுரங்கசேனையைக் கொடுப்பதெங்கே? தனதுடலிற் கபாலமாலிகை யணிந்திருந்துந் தனது பக்தர்கட்கு முத்துப் பவளமுதலிய மாலைகளைக் கொடுக்கின்றார். தான் மயானச்சாம்பலை யணிந்திருந்துந் தன் பக்தர்கட்குச் சந்தனமுதலிய பரிமளகந்தத்தைக் கொடுக்கின்றார். தான் எருதை வாகனமாகக்கொண்டுந் தன்னைச் சேவிப்பவர்கட்கு யானை குதிரை முதலிய வாகனங்களைக் கொடுக்கிறார். தான் கல்லவாத்தியம் வைத்துக்கொண்டிருந்தும் (டங்கா-நகாரமுதலிய) வாத்தியங்களையுங் கொடுக்கின்றார். தான் ஜடாதரராகியும் அன்பர்கட்குக் கிரீடமுதலிய சகலாபரணங்களையுங் கொடுக்கிறார். தான் சர்ப்பாபரண மணிந்திருந்தும் பக்தர்கட்கு மகரகுண்டலாதி ஆபரணங்களைக் கொடுக்கிறார். தான் யானைத்தோலை யணிந்திருந்தும் அடியவர்கட்குச் சீனி சீனம்பரங்களை யுதவுகிறார். இவையேயன்றித் தன்னை யாச்சிரயித்தவர்கட்கு அவரவர் விருப்பிற் கேற்றபடி இக பர போகங்களைக் கொடுக்கிறாராதலின், அவர் மகிமையைத் தெரிந்துகொள்ள ஒருவருக்குஞ் சக்திகிடையாது. இப்பஞ்சக்குரோசவிஸ்தீரணமுடைய காசிக்ஷேத்திரத்தைக்காட்டிலுந் திரிலோகங்களிலுஞ் சிறந்த க்ஷேத்திரம் ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட க்ஷேத்திரமே யில்லாவிட்டால் சிவபெருமானை அங்கு எக்காலமும் எழுந்தருளியிருந்து அங்கே இறப்பவர்கள் செவியில் தாரகமந்திரோபதேசஞ்செய்து அவர்கட்கு முக்திகொடுக்கமுடியுமா? விசுவேசுவரலிங்கமூர்த்தமாகச் சிவபெருமான் எப்பொழுது முதற் காசிக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்றனரோ அதுமுதல் காசிக்ஷேத்திரம் சிறந்ததாயிற்று. நீங்கள் கேட்டபடியே காசி மகாத்மியத்தைச் சொன்னேன். இக் காசிமகத்துவத்தைக் கேட்டவர்கள் சகலவித சாம்பிராச்சியங்களையும் அடைவார்கள் என்று ஸூதமுநிவர் நைமிசாரணிய வாசிகளை நோக்கிக் கூறியருளினர்.

காசியின் மகிமை யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பதாவது

காசிநகரவர்ணனமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! காசிநகரமே புண்ணிய க்ஷேத்திரங்களிற் சிறந்ததென் றுகூறினீராதலின் அதன் மகிமையை யின்னுந் தேவரீர் விரிவாகக் கூறியருளவேண்டும் என வேண்ட, ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். முநிவர்களே! காசி மகாத்மியத்தையும் விச்சுவேசுவரலிங்க மகாத்மியத்தையுஞ் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஒருகாலத்தில் பார்வதாதேவியானவர் சிவபெருமானை நோக்கி உலகத்தவர்கட்கு இந்தக் காசிக்ஷேத்திர மகிமையைத் தெரிவிக்கு நிமித்தமாய், ஸ்வாமீ! சங்கரா! இக்காசிக்ஷேத்திரப் பிரபாவத்தை அடியேன்பால் தயவு வைத்து விஸ்தீர்ணமாகச் சொல்லவேண்டும் எனக் கேட்க, சிவபெருமான் உமாதேவியார் வார்த்தைக் கிணங்கியும், உலகத்தவர்கட்கெல்லாம் நன்றாகத் தெரியுமாறுந் திருவாய்மலர்ந்தருளத் தொடங்கினர்.

பார்வதீ! நீ உலகசுகத்தை விரும்பி நன்றாகக் கேட்டனை; அப்படியே உனக்குக் காசியின் சிறப்பைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்த க்ஷேத்திரமானது மிக்க இரகசியமானது; எனக்குப் பிரியமானது; சகலப்பிராணிகட்குஞ் சர்வகாலத்திலும் மோக்ஷத்தைக் கொடுக்க எளிதாயுள்ளது. இதிலிருந்து யோகசித்தியடைந்த புண்ணியர்கள் என்னைத் தியானித்துப் பூஜை விரதம் தவம் முதலியனசெய்து, எனதுசின்னங்களாகிய பஸ்ம ருத்திராக்ஷங்களைத் தரித்து, எனது சிவலோகத்தை யடைய விரும்பி, சிரேஷ்டமான சிவயோகத்தை அப்பியாசித்து, பஞ்சேந்திரியங்களைச்செயித்து, அங்கே வசித்திருப்பார்கள். அநேக விருக்ஷங்கள் பறவைகள் முதலியவற்றாலுந் தாமரை கருநெய்தல் முதலிய புஷ்பங்கள் நிறைந்த தடாகங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, அப்ஸரசுகள் கந்தர்வர்கள் முதலியவர்களால் எப்பொழுதும் சேவிக்கப்பட்டுள்ள இந்த முக்திக்ஷேத்திரம் எனக்கு எப்பொழுதும் வாசஸ்தானமாயிருக்கும்படி சம்பவித்த காரணத்தைச் சொல்லுகின்றேன். என்னிடத்தில் அன்புடையவனும், மனமுடையவனும், இராகம் குரோதம் பயமுதலியவற்றை விடுத்தவனும், சுகதுக்கங்கள் லாபநஷ்டங்கள் முதலியனவொழிந்த சமமதிப்புடையவனும், கோபமற்றவனும், சிவஞான முடையவனும், சிவதத்துவத்தைவிசாரிப்பவனும், துக்கத்திற் றுக்கமும்சுகத்திற்சுகமுமில்லாதவனும், நன்மைக்காக மகிழ்ச்சியுந் தீமைக்காகத் துன்பமடைதலுமில்லாதவனும், ஆகிய அத்தகையவனுக்கும் எனக்கும் பேதமில்லை. அவனே சகல தீர்த்தங்களுக்கும் ஒப்பாவான். அப்படிப்பட்டவனுடைய தரிசனத்தை நானும் விஷ்ணுவும் பிரமனும் மற்றத் தேவர்களும் விரும்புவோம். ஏனெனில், அத்தன்மையானவன் ஒருவன், உயிர்விடுவோன் சமீபத்திலிருந்தால் இவனைக் கண்டு உயிர்விட்டவன் மோக்ஷமடைவான். அவனை முக்தனெனச் சொல்லவேண்டியது அவசியமில்லை. அவனே ஜீவன்முக்தனெனப்படுவான். அவனுக்கு

விதிவிலக்குகள் கிடையா. இங்கொரு தீர்த்த விசேஷமுள்ளது. அதனையுஞ் சொல்லுகிறேன். பார்வதீ! பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும், பிரமசரிய கிருகஸ்த வானப்பிரஸ்த சந்நியாசிகளும், * பால குமார யௌவனர்களும், அபரிசுத்தனும், குழந்தையும், கன்னிகையும், பதிதையும், விதவையும், மலடியும், † ரஜோதோஷமுடையவளும், பிரசவித்திறந்தவளும், ஜாதகன்மாதி சம்ஸ்காரங்களில்லாதவளும், பரிசுத்தமானவளும், பாபியும், கர்மவசத்தையுடைய அஞ்ஞானியுமாயினும் இந்தக்காசிக்ஷேத்திரத்தில்இறந்தால், சந்தேகமின்றி மோக்ஷமடைவார்கள். சுவேதசம்-அண்டஜம்-உத்பீஜம்-சராயுசமாயினும், இங்கேயே இறந்தபக்ஷத்தில் அவையெல்லாம் மோக்ஷமடையும். கர்மவசத்தனாயினும் ஞானமில்லாதவனாயினும் பாபியாயினும் சந்தேகமின்றி மோக்ஷ மடைவான். ஞானம்-தியானம்-யோகமுதலியன வில்லாதவர்களாயினுந் தடையின்றி மோக்ஷமடைவார்கள். முன் யான் கூறிய உயர்குணங்களையுடைய சிவஞானிகள் கணக்கில்லாதவர்கள் இவ்விடத்தில் வசிப்பதனால் இந்த க்ஷேத்திரம் எனக்கு எல்லா க்ஷேத்திரங்களிலுஞ் சிறந்ததாயிற்று. இவ்விஷயம் மிகவும் அந்தரங்கமானது. இவ் விபரத்தைச் சித்தயோகிகள் அறிவார்களன்றிப் பிறரறியார். இவ்விடத்தில் எழுந்தருளியிருப்பதே எனக்குப் பெருஞ்சந்தோஷம். இந்நகரமே யாவர்க்கும் முக்திகொடுக்கத்தக்கது. இந்நகரத்திற்கு அவிமுக்தம் எனவும் பெயர். [விமுக்தம்=விடத்தக்கது. அ - எதிர்மறைப்பொருள்தருதலின், அவிமுக்தம்= விடத்தகாதது. என்பதுபொருள்.] காசிநகரம் ஒருகாலத்திலும் என்னால் நீங்கத்தகாதது என்றும், அந்நகரத்தி லடைந்தவர்களைத் தன் மெய்யன்பர்போலப் பாதுகாத்து முக்தியளிக்கத் தக்கதன்றி, விடத்தகாதது என்றும் பொருள்படும். நைமிசாரணியம் - குருக்ஷேத்திரம் - கங்காத்துவாரம் - புஷ்கரமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சேவித்துவருவதால் மோக்ஷமுண்டாகலாமன்றி இறந்தால் மோட்சமடையமாட்டார்கள். இக் காசிப்பதியிலோ இறப்பதனாலேயே மோட்சமுண்டாவதால் எல்லாத்தலங்களிலும் இக் காசிமாநகரம் உத்தமமாகும். பிரயாகையிலும் மோட்சமுண்டாகுமாயினும் இவ்விடத்தில் யான் நீங்காது வசித்தலின், இது பிரயாகையைக் காட்டிலுஞ் சிறந்ததாகும். இந்தக் காசிநகரமானது க்ஷேத்திரமகிமை தீர்த்தமகிமை மூர்த்திமகிமையாகிய மூவகைச் சிறப்பு முடையது. இந்நகரத்தில் வசிப்பவர்கள் அன்னம் - பானம் - நித்திரை - ஸ்திரீபோக முதலியன யாவுங் குறைவின்றிச் செய்துகொண்டிருந்து உயிர்விடினும் மோட்சமுறுவார்கள். அநேக பாபங்கள் செய்து அப் பாபபலத்தாற் பசாசத்துவ மடையினும் இக் காசிப்பதி

* பாலன் பதினாறுவயதுக் குட்பட்டவனும், குமரன் பதினாறுக்குமேல் முப்பதுவயதுக்குட்பட்டவனும், யௌவனன் முப்பதுக்குமேல் நாற்பத்தைந்துவயதுக்குட்பட்டவனுமெனப்படுவர்.

† ரஜோதோஷம் என்றது, மாதர்கள் மாதாந்தருதுச் சிராவகாலத்தி லடையும் ரஜஸு எக்காலமும் ஒழுகப்பெறுதல் என்பர்.

யில் வசிப்பது பலகோடி புண்ணியகாரியங்களைச்செய்து சுவர்க்கத்தில் வசிப்பதைக்காட்டிலுஞ் சிரேஷ்டமாம். இந்தப்பதியில்தாம் வெளியேகாட்டாது தமது மனதிலேயே எம்மைநோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கும் மேற்கூறிய குணங்களையுடைய மகாநுபாவர்கள் அநேகர் வசிக்கின்றனராதலின் மற்ற ஸ்தலங்களைவிட இந்தப்பட்டணத்திலே சுலபமாகஉயர்ந்த பதவிகிடைக்கின்றது. எந்தெந்தப்பலனைக்கோரித் தவஞ்செய்கிறார்களோ அவர்கட்கு அந்தந்தப்பலன்களையுஞ்சாயுச்சியபதவியையும் யான் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். குபேரன் என்னிடத்தில்சகலக்கிரியைகளையுஞ்சமர்ப்பித்துஇந்தத்தலத்தில்என்னைச்சேவிப்பதால் *காணுபத்தியமுற்றிருக்கின்றனன். பராசரனென்னும் யோகியும், வேதவியாசனும், வேதங்களைப் பாகுபடுத்திப் பிரித்து எனக்குப் பக்தர்களாயிங்கிருக்கின்றனர். விஷ்ணுவும்,திருமகளும்,பிரமனும், அநேக தேவருஷிகளும், அஷ்டவசுக்களும், சூரியனும், இந்திரனும் ஏனைய தேவர்களும், யாவரும் என்னை உபாசித்துக்கொண்டே யிங்கிருக்கின்றனர். இன்னுஞ் சிலயோகிகள் தமது ஸ்வரூபத்தைப் பிறர்க்குத் தெரிவிக்காமலே என்னை இவ்விடத்திற் சேவைசெய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஐம்புலன்வழிமனத்தைச்செலுத்துபவனாயினும்தர்மங்களைச்சிதைத்தவனாயினும் இந்தத்தலத்தில் இறந்தவன் மீண்டுந் தாயின்கருப்பத்தையடையமாட்டான். பஞ்சேந்திரியங்களைச் செயித்தவர்களும், ஞானிகளும், உயர்பதவியுற்றவர்களும் என்னை இவ்விடத்தே சேவித்துக்கொண்டிருப்பதால் இவ்விடத்தில் உயிர்நீங்கியவன் யோகபுருஷனாலும் அடைய்க்கூடாத உத்தமப்பதவியை அடைவான்.

இக்காசிக்ஷேத்திரத்தில், பிரமதேவனாற் பிரதிஷ்டைசெய்யப்பட்ட கோப்பிரேக்ஷகம் ஒன்றுளது. அது கைலாயத்திற்குச் சமானமானது. இந்தக் கோப்பிரேக்ஷகேச்சுரனைத் தரிசித்தவர்கள் பாபங்களால் விழுங்கப்பட்டுத் துர்க்கதியை யடையார்கள். கபிலாஹ்ரதம் என்னும் பெயரால் வேறொரு க்ஷேத்திரமும் இங்கேயுளது. அதனைச் சேவித்தாலும் அநந்தபாபங்களு மொழிந்து சிவலோகத்தை யடைவார்கள். இதனை என் ஸ்வரூபமாகப் பிரமன் படைத்தான். நீயும் இஃதென் ஸ்வரூபமாக விளங்குவதைப் பார். இங்கே தேவர்கள் யாவரும் என்னைப் பலவிதமாகப் பிரார்த்தித்தமையின் யான் இலிங்கரூப மடையக்கண்ட பிரமன் என்னைப் பிரதிஷ்டைசெய்து பூஜிக்க யோசித்துக்கொண்டிருக்கையில், விஷ்ணுவானவன் பிரமன் கையிலிருந்த அந்தச் சிவலிங்கக்குறியைத் தான் வாங்கிப் பிரதிஷ்டை செய்து முறைப்படி அருச்சனை செய்துமுடிக்க, பிரமன் கண்டு, விண்டுவே ! யான் பிரதிஷ்டைசெய்யவைத்திருந்த சிவலிங்கத்தினை நீ ஏன் பிரதிஷ்டைசெய்தனை ? என வினவ, திருமால் பிரமாவே ! யான் சிவப்பிரீதி விசேஷமாக வுடைமையின் அதனைப் பிரதிஷ்டை செய்தேனாயினும் அஃதுன்பெயராலேயே விளங்குக எனக் கூறினன். அக்காரணத்தால் கபிலாஹ்ரதத்தில்விளங்கும் சிவ்லிங்

* காணுபத்தியம் - கணங்கட்குத் தலைமை.

கத்திற்கு இரண்யகர்ப்பேசன் 'எனப் பெயர் வழங்குகின்றது. இந்தக் காரணத்தாலும் யான் இங்கே யிருக்கலானேன். ஆதலின் இந்த ஹிரண்யகர்ப்பேசுவரரைத் தரிசித்தமாத்திரத்தில் எனது சிவலோகங் கிடைக்கும். மீண்டும் பிரமதேவன் தன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஒருசிவலிங்கமிருக்க வேண்டுமென்று வேறோர் சிவலிங்கஸ்தாபனஞ் செய்தனன். அதிலும் யான் லீனமாக இருந்தமையின் அதற்கு லீனேசுவரனெனப் பெயரெய்தியது. [லீனம்-ஐக்கியம்] இங்கேயிறந்தவன் மீண்டும்திரும்பாதமோக்ஷமடைவான்.

பார்வதீ! இன்னுஞ் சிறிது தூரத்தில், பூர்வத்திலே தேவர்கள் யாவரையுந் துன்பப்படுத்திவந்த ஓர் அசுரேசன் பெரும்புலி வடிவாகி அமரர்களை யெல்லாம் அலைக்க, அவர்கள்யாவரும் என்னைப் பிரார்த்திக்க, மனமிரங்கி அவனைச் சங்கரித்து மோட்சமளித்து, அத்தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி வியாக்கிரேசுவரனெனவும் எழுந்தருளி யிருக்கின்றேன். உன் தந்தையாகிய பர்வதராசன் இஃதெனக்கு இன்பமுள்ள க்ஷேத்திர மென்றுணர்ந்து இங்கடைந்து ஓர் சிவலிங்கத்தைத் தன் பெயராற் பிரதிஷ்டை செய்துள்ளான். அதுவே சயிலேசுவரலிங்கம்; அதனையும் பார்ப்பாயாக. இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தை யலங்காரஞ் செய்துகொண்டு கங்காநதி விளங்குகின்றது. வருணை அசி என்னும் நதிகள் இரண்டுங் கலக்கின்ற காரணத்தினால் இந்த க்ஷேத்திரத்திற்கு வாரணாசி என்றும் பெயர். அவ்விருநதிகளுஞ் சங்கமமாகும் இடத்தில் பிரமதேவன் ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்திருக்கின்றான். அதற்குச் சங்கமேசுவரனெனப் பெயர். மேலும் மத்தியமேசுவரர்-ஜம்புகேசுவரர் - சுக்கிரனால் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்ட சுக்கிரேசுவரர்-கிருத்திவாகேசுவரர் - விருத்தகாளேசுவரர் - இந்திராதி தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு அவரவர் பெயரால் விளங்கும் இலிங்கங்கள் ஆகிய பாபஹாரமான சிவலிங்கங்களையும் பார்ப்பாய். இந்த இலிங்கங்களே யல்லாமல் இன்னுஞ் சில அந்தரங்கமான விஷயங்களுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்தக் காசிப்பதி நாற்புறத்திலும் ஐந்து குரோச விஸ்தீரண முடையதாக விருக்கிறது. எங்கேயாயினும் இந்தப் பஞ்சக்குரோசப்பதியின் எல்லைக்குள் இறக்க நேரிட்டால் மோட்ச முண்டாகும். பண்டிதன் - வேதாத்தியயன முடையவன் - சண்டாளன் - பதிதன் - சந்நியாசி முதலிய யாவராயினும் இங்கிறந்தால் மோட்சமடைவார்கள் எனக் கூறிய சிவபெருமானுடைய வார்த்தைகளைக் கேட்டு, பார்வதாதேவி ஸ்வாமீ! தேவரீர் கூறும் விஷயமானது எனக்கு ஆச்சரியத்தை விளைக்கின்றது. கர்மஹீனனாகிய ஸந்நியாசியும் கர்மபத்தனாகிய பிறனும் சமானமாகச் சற்கதி யடைந்து, சமானமான போகமோட்சங்களை யடைவார்களென்பது வியப்பல்லவா? அன்றியும், இறப்பவன் அவனது மனைவி புத்திரமித்திரர் தனமுதலியவற்றில் மனத்தைச் செலுத்துவானாயின் அதற்கேற்ற ஜனன மடைவானென நீதிநூல்கள் கூறுதலின், இங்கிறந்ததாலும், தவஞ்செய்ததுந் தீர்த்தயாத்திரை செய்ததுமாகியவற்றால் அடையும் பலனை யடையலாமேயன்றி, மோட்சத்தை யடையக்கூடுமோ? இந்

தச் சந்தேகங்களை நீக்கவேண்டுமெனப் பார்வதாதேவி கேட்க, சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்.

ஐம்பத்தோன்றுவது

மேற்படி அத்தியாயம்.

சிவபெருமான் சொல்லுகின்றார்: பார்வதீ! நல்ல விஷயத்தை வினவினை. இதனைக் கேட்டவர்கள் யாவரும் சகல பாபங்களினின்றும் நீங்குவர். அத்தன்மைத்தான சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். பாபரகிதனானவன் இங்கிறந்தால் அந்தக்ஷணமே மோட்சமடைவான். பாபாத்மாவாகவுள்ளவன் இங்கேயிறந்தால், சிறிதுஜனனங்களையெடுத்துத் தன்பாபங்களைக்கழித்துப் பிறகு மோட்சமடைவான். காசிப்பதியிற் பாபஞ்செய்தவன் பசாசரூபமடைவான். அவ்வாறு பசாசரூபமடைந்து காலபைரவமூர்த்தியாற் பத்தாயிரவருஷங்கள் தண்டிக்கப்பட்டுக் கஷ்டமடைந்து பின்னர் மோட்சமடைவான். இதுவே பாபிகளுடைய கதியாகும். இதனை யறிந்துகொண்டு இந்த அவிமுக்தப்பதியை அடையவேண்டியது. அவ்வாறுணர்ந்து இந்நகரமடைந்து எம்மைச் சேவித்துக்கொண்டிருப்பவன் இறுதியில் மோட்சமடைவான். பிராயச்சித்தங்களால் அழியாத கர்மங்களைச்செய்தவன் கற்பகோடி காலங் கழித்தாலும் அதனை யநுபவித்தே ஒழிக்கவேண்டும். அசுபமான பாப கர்மங்கள் ஒருவனை நரகத்திலே யடையச்செய்யும். புண்ணியகர்மங்கள் சுவர்க்காதி லோகங்களிற் சேரச்செய்யும். மிச்சிர கருமங்களால் உலகத்தில் மாநுடர் பசுக்கள் பட்சிகள் முதலிய பிறவியுண்டாகும். தானடைந்த ஜனனம் உயர்ந்ததாயினும் தாழ்ந்ததாயினும் புண்ணிய பாபங்கள் நசித்தாலன்றி முக்தியுண்டாகமாட்டாது. அவையிரண்டும் ஒழிந்த பின்னரே மோட்சமுண்டாகும்.

சற்கருமம் மூவகைப்படும். அவற்றில் பஞ்சக்குரோசக்ஷேத்திரமுதலிய புண்ணிய பூமியில், பிரதக்ஷிண தியான பூஜாதிகளால் வருவது ஒன்று; இதனால் ஜன்மாந்திர பாபங்கள் நீங்கும். கர்மநிவாரணவிதிப்படி பிராயச்சித்தங்களைச் செய்துகொண்டு பாபங்களையொழித்தல் இரண்டாவதாம். சர்வ கர்மங்களும் நசிக்குநிமித்தமாய் என்னிடத்தே தன் கிரியைகளையெல்லாம் சமர்ப்பித்து என்னைச் சேவித்துக்கொண்டு இந்த க்ஷேத்திரத்தி லிருத்தல் முதலியன மூன்றாவதாம். இவற்றாலும் பாபக்ஷயமாகும். இனி, கர்மமும் மூவகைப்படும். அது சஞ்சிதம் பிராரத்துவம் ஆகாமியம் எனப்படும். அவற்றுள், பூர்வ ஜன்மத்திற் செய்தது சஞ்சிதம். அந்தச் சஞ்சித வினையால் வேறு பிறவி யடைந்து அநுபவிக்கப் புகுஞ் சுபாசுபகர்மமே ஆகாமியம். அந்த ஆகாமியம் உடலால் அநுபவிக்கப்படுகையில் பிராரத்துவம் என்பர். பிராரத்துவம் அநுபவியாமலே நாசமடையாது. பாபமில்லாமலே தேகத்திற்குக் கஷ்டம்வராது. துக்கமயமாகக் காணப்படும் யாவும் பாபமயமே எனத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்துக்கம் ஸ்தூலதுக்கம் ஸூக்ஷ்மது

க்கமென இருவகையாகப் பாபத்தாலேயே யுண்டாகும். பாபமே யில்லாவிடின், எக்காலத்தும் ஒருவன் சுகமாகவேயிருப்பான். ஓரிடத்திற் சுபமே விருத்தியாகும். ஓரிடத்திற் பாபமே விருத்தியாகும். ஓரிடத்திற் பாபமே நசித்திருக்கும். இந்த எல்லாக் கர்மங்களும் க்ஷயமடையவேண்டுமாயின் காசிப்பட்டணத்தைவிட வேறோரிடங் கிடையவேகிடையாது. உலகத்தில் அநேக புண்ணிய க்ஷேத்திரங்கள் சுலபமாகக் கிடைக்குமாயினும், காசிப்பதியில் வாசஞ்செய்யவேண்டுமென்று நினைப்பவர்க்கு அது விசேஷப் பிரயாசத்தோடும் கிடைப்பது அருமை. ஒருவன் காசிக்குப்போகவேண்டுமென்று நூறு ஜனனங்களிற் பிரயத்தனப்பட்டானெனினும் காசிப்பட்டணத்தைச்சேவிக்க அவனுக்குத் தடைவரும். உலகத்திலுள்ள எல்லா க்ஷேத்திரங்களையுந் தரிசித்தாலன்றிப் *புண்ணியதலத்தில் ஆறிலொன்று தரிசிக்கக்கிடையாது. அப்புண்ணியதலங்களாகிய ஆறிலொன்றை முன்ஜனனத்திற் சேவிக்கக் கிடைத்தவனுக்கே காசித்தலத்தின் சேவைகிடைக்கும். அப்படிப்பட்டவனே காசிஸ்தலத்தில்வசித்திருந்து இறக்கும்படி கைகூடும். காசிஸ்தலத்தை யடைந்து கங்காஸ்நானஞ் செய்பவன் ஆகாமியசஞ்சிதங்களை யொழிப்பானாயினும், தேகமுள்ளவரையும் விடாது தொடர்ந்துநிற்றலின் பிராரத்துவத்தை யநுபவித்தேதீரவேண்டும். அங்கே மரணமடைந்தவனுக்கே பிராரத்துவ மொழியும். மரணமடையும்பொழுது ஒருவன் மனமானது அவன் கர்மவசத்துக்கேற்பச் செல்லும். அக்கர்மத்திற்கு மூன்றுபாதங்களுண்டு. அவைமூன்றும் அக்காசியை யடைந்தபொழுதே காலொடிந்து பின்றொடரக் கூடாதவை யாகின்றன. அவன் மனமும் அந்தத் தீர்த்தத்திலே ஐக்கியமாய் விடும். தீர்த்தஸ்நானபலமும், அத்தலமகிமையால் சிவத்தியானஞ் செய்த பலமும் ஆகிய இவ்விரண்டின் வன்மையால் மோட்சமே கைகூடுமென்று சுருதிகள் சொல்லுகின்றன. பார்வதி! முன்னே காசியாத்திரை செய்து அதன்பின்னர் பாபஞ்செய்தவன் முன் தான்செய்த காசியாத்திரைப் புண்ணியவசத்தால் அப்பாபமகலவேண்டி, மீண்டும் அவன் அந்தக்காசித்தலயாத்திரை செய்யும்படி பலவந்தமாகக் கொண்டுபோகப்பட்டுச் சகல பாபங்களையும் தீப்பொறி சிந்திய பருத்திப் பொதிபோல நசிக்கச் செய்வான். ஆகையால் கர்ம நிர்மூலஞ் செய்யத்தக்க காசித்தலத்தை எவ்வாறாவது பிரயத்தனப்பட்டுச்சேவிக்க வேண்டியது எனச் சிவபெருமான் கூற, பார்வதாதேவி சிவபெருமானை நோக்கி மீண்டும் வினவலாயினர்.

ஸ்வாமீ! பிரயாகையில் உயிர்விட்டவன் இஷ்டகாமியங்களை யடைவானல்லவா? (கங்கை-யமுனை-சரஸ்வதி இம்மூன்றுங் கலக்கின்ற) திரிவேணியில், திரிவேணிபூஜையும் விச்சுவேச்சுவரபூஜையுஞ் செய்துகாசித்தலத்திலிறந்தவர்கள் யாதுபலனை யடைவார்கள்? பிரயாகை இஷ்டகாமியங்களைக்கொடு

* புண்ணியக்ஷேத்திரங்கள் ஆறு என்றது, மதுரா-மாயை-காஞ்சி-அவந்தி-துவாரகை - அயோத்தி. இவற்றைக் காசியோடு கூட்டிப் புண்ணியஸ்தலங்கள் ஏழெனப்படும்.

ப்பது. காசிமுக்தியைக்கொடுப்பது. பிரயாகையில் மாதவன் இஷ்டகாமியங்களைக் கொடுக்கவும், காசியில் நீர் முக்தியைக் கொடுக்கவும் இருக்கிறீர்கள். நீர் சர்வமங்கல ஸ்வரூபியாதலின் இந்தச்சந்தேகத்தை நீக்கி யருள வேண்டும் என வினவ, சிவபெருமான் சொல்லத் தொடங்கினர். நாயகி! காசியிலிறந்தவனுக்கு மீண்டும் பிறப்பில்லை. பிரயாகையி லிறந்தவனுக்கு இஷ்டகாமியங்கள் கைகூடுவது நிச்சயம். காசிக்குவந்து பிறகு பிரயாகைக்குப் போவதானால் காசியாத்திரைசெய்த பலன் வீணாய்ப்போகும். பிரயாகைக்குப் போகாவிட்டால் திரிவேணிசங்கம தரிசனபல னில்லாமற்போகும். பிரயாகையில் இறந்தாலும் மோட்சகாமியாக இருப்பானாயின் அங்கேயும் முக்தியேகைகூடும். இவ்வாறேயன்றி வேறன்று: எனச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். இவ்வார்த்தையைக்கேட்ட பார்வதாதேவி சந்தோஷமடைந்தனள். அதுமுதல் சிவபெருவான் விச்சுவநாதரென்னும் பெயருடன் பார்வதி பிரமதகணசகிதமாய்க் காசித்தலத்தில் எழுந்தருளி யிருக்கின்றார் என்று, ஸூதமுநிவர் முநிவர்களை நோக்கிச் சிவபெருமான் காசிப்பதியில் இடைவிடாது எழுந்தருளியிருக்குங் காரணத்தைச் சொல்லினர். அதனைக் கேட்ட நைமிசாரணியவாசிகள் ஸ்வாமீ! இன்னும் சிவசரிதங்களையே தேவரீர் சொல்லவேண்டும் எனவினவ, ஸூதமுநிவர் சகல பாபங்களையும் போக்கடிக்குந் திரியம்பகேசுவரப் பிரபாவத்தைச் சொல்லுகிறேன் என்று சொல்லத் தொடங்கினர்.

காசிநகர வர்ணனமுரைத்தது.

முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது

கௌதமேசுவரமகிமையுரைத்த அத்தியாயம்.

முநிவர்களே! எனக்கு வியாஸபகவான் கூறிய பாபங்களை யொழிக்கத்தக்க புண்ணியசரித்திரங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்: பூர்வத்தில் முநிசிரேஷ்டராகிய கௌதமமுநிவர் தமது மனைவி அஹல்யை என்னும் பெயரையுடைய மகாபதிவிரதையுடன் கூடி, தென்றிசையில் பிரமகிரியில் பத்தாயிரவருஷங்கள் அகண்டமான தவத்தைச் செய்துகொண்டு இருக்கையில், ஒருகாலத்தில் பிராணிகட்கெல்லாங் கஷ்டப்படவேண்டிய அநாவிருஷ்டி நூறுவருஷங்களளவு முண்டாகி, உலகத்திலுள்ள மரங்களெல்லாம் உலர்ந்து பிராணிகள் உயிர்பிழைக்கத்தக்க நீரில்லாமலிருக்க, இருடிகள் மாநுடர் பசுக்கள் பறவைகள் அநேகமாக இறந்தும், பலவிடங்களுக்கு ஓடிப்பரவியும் போயினர். பிரமருஷிகள் முதலானோர் பிராணாயாம முதலிய யோகநிஷ்டையி லிருந்து காலங்கழித்துவந்தனர். அந்தச்சமையத்தில் கௌதமர் பிராணாயாமத்திலிருந்து வருணபகவானை நோக்கிப் பிரார்த்திக்க, அவர் ஜபத்திற்குக் களித்த வருணபகவான் பிரசன்னமாகி, உனக்கு வேண்டிய வரம் யாது? வெளி

யிடுகவெனவினவ, கௌதமமுநிவர் சந்தோஷித்து, உலகமுழுவதும் துன்புறும்படி உண்டாயிருக்கும் மழையின்மையை யொழித்து, யாவருஞ் சுகமடையும்படி மழைபொழியச்செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க, வருணதேவன் கௌதமமுநிவரை நோக்கி, ஈசுவராக்ஞையை விரோதித்து நடக்கப் பிரமேந்திராதி தேவர்களாலும் சாத்தியப்படாதாதலின் அஃது யான் செய்யத்தக்கதன்று. நீ வேறே ஏதேனுங் கோருக. அதனைக் கொடுப்பேன் என, கௌதமமுநிவர் சுவாமீ! என் விஷயத்தில் வரங்கொடுக்கத்தக்க தயவுடையவரா யிருந்தால் யான் சொல்லுகிறேன். உலகத்தில் மகாத்துமாக்களை ஆச்சிரயிப்பதால் ஆச்சிரயித்தவர்கட்குப் பெருமையுண்டாகும். மகாத்மாக்களே பிறருக்குற்ற துன்பங்களை விசாரிப்பார்களன்றிச் சாமானியர்கள் விசாரிக்கமாட்டார்கள். சூரியனைக்கண்டமாத்திரமே யிருளொழிவது போல, மகாத்மாக்களைத் தரிசித்தமாத்திரத்திலேயே தரித்திரம் தூரமாகவிலகும். துக்கம் சோகம் பாபம் பயமுதலியனவு நீங்கி விசேஷ நன்மைகளுண்டாகும். சாமானிய மாநுடரைச் சேவித்தால் அதற் கேற்ற பலன் கிடைக்கும். சிங்கத்தை அதனிடத்திற்சேவித்தால் *முத்துக்கள்கிடைக்கும். நரியை அதன் இடத்திற் சேவித்தால் எலும்புகள் கிடைக்கும். உத்தமர்களுடைய சுபாவம் பிறருடைய துக்கங்களைநீக்கத்தக்கது. தனக்குண்டான எவ்வகைத் துன்பத்தையும் பாராட்டாது அடக்கிக் பிறருக்கு உதவிசெய்யவேண்டியவர்கள் அவர்களே. கற்பகவிருட்சமும் சத்ஜனரும் ஒரே சுபாவமுடையவர். விருட்சம் பொன் சந்தனம் இவை தாம் துன்புற்றாயினும் பிறருக்கு உபயோகப்படுவதுபோலத் தாம் கஷ்டமுற்றாயினும் பிறருக்கு உதவிசெய்ய வல்லவர்கள் உம்மைப்போல அநேக ரிருக்கின்றனர். துக்கத்தால் வருந்துவோனுடைய துக்கத்தைப் போக்கடிப்பது அவ்வாறு போக்கடிப்பவர்கட்கே சுகங்கொடுப்பதாகும். பரோபகாரஞ்செய்பவன் சிறிது பாபமுடையவனென அவனைக் கண்டு விலகுவோன் பாபமுடையவனே யாவானெனச் சுருதிகள் கூறுகின்றன. இப் பூமியானது அண்டசம் சுவேதசம் உத்பீசம் சராயுச மெனும் நான்குவிதமான பிராணிகளால் நிறைந்துள்ளது. இந் நால்வகைத் தோற்றத்தினிடத்தில் யாவர் தயையுடையவரோ, யாவர் அகங்காரமற்றவரோ, யாவர் ஜிதேந்திரியராய் உபகாரஞ்செய்வரோ, யாவர் எப்பொழுதும் யௌவனமுடையவரோ, அப்படிப்பட்ட புண்ணியர்களாலேயே பூமி தாங்கப்பட்டிருப்பதே யன்றி, ஆதிசேடன் ஒருவனாலேயே தாங்கப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டாம். நீரே ஜலமுழுதுக்கும் பிரபுவா யுள்ளவர். உலகமுற்றும் உமது ஸ்வரூபமே. ஆகையால் விளைவுத்தொழில் செய்தற்குரிய மழைஜலம்போலச் சம்பூரணமானஜலத்தைக் கொடுக்கவேண்டும். இதே யான் கேட்கத்தக்கது. உமக்கு என்விஷயத்தில் தயையிருக்கும் பக்ஷத்தில் இவ்வாறு அநுக்கிரகிக்கவேண்டும் எனப்பிரார்த்திக்க, வருணபகவான் கௌதமமுநிவரை பார்த்து, நீ ஒரு குளமெடுக்கவேண்டுமெனக் கூற, அவ்வாறே

* முத்துஎன்றது அதனாற் சங்கரித்த யானையின் மத்தகத்தினின்றுதிர்த்தவை.

கௌதமர்செய்ய, அக்குளம் நீர் நிறைந்திருந்தது. அப்பொழுது வருணமூர்த்தி இஃதெப்பொழுதுங் குறையாது நீர்மயமாயிருக்கவும், சகல தீர்த்தங்களிலும் உத்தமமான தீர்த்தமாயிருக்கவும், உன்பெயரால் [கௌதமதீர்த்தம் எனப்] பிரசித்தமா யிருக்கவும், இங்கேதினமும் ஓமம் ஜபம் சிரார்த்தம் முதலாயினசெய்தால் ஒன்று அநந்தமாகவும் வேண்டுமென்று கூறிக் கௌதமமுநிவரால் தோத்திரஞ் செய்யப்பெற்று அந்தர்த்தானமாயினன். அங்கே கௌதமர் அகண்டமான ஜலத்தையடைந்து நித்திய நைமித்திய கிரியைகளை விதிப்படி செய்துகொண்டு, நெல் கோதுமை முதலிய தானியங்களை விதைத்துவிட்டுத் தவத்தி லிருந்துகொண்டிருந்தார். அவை பலங்கொடுத்தன. விருக்ஷங்கள் புஷ்ப்பித்துக் காய்த்துப் பழுத்தன. அங்கேவிளைந்த தானியங்கள் பெருங் குவியல்களாகச் சேர்த்துவைக்கப்பட்டன.

இவ்வாறு கௌதம முநிவருடைய ஆச்சிரமம் க்ஷேமமாக விருப்பதைச் சிஷ்யப்பிரசிஷ்யர்களால் தெரிந்துகொண்ட மஹருஷிகள் யாவருங் கௌதமர் விருப்பத்தின்படி அங்கே தமது கூட்டங்களோடுவந்து சேர்ந்தனர். பசுக்கள் பக்ஷிகள் முதலிய யாவும் மேய்ச்சலும் நீருங்கிடைப்பதுகண்டு அங்கு வந்து சேர்ந்தன. அந்தவனம் பூமண்டலத்திலே அதிசுந்தரமாக விளங்கியது. இருடிகள் யாவரும் அங்கே தவஞ்செய்துகொண்டு காலங்கழிக்கவேண்டித் தமது சிஷ்யர்களால் உழவுத்தொழில் செய்வாராய், க்ஷாமகாலத்தின் துக்கத்தைக் கௌதமமுநிவர் புண்ணியத்தினுல் மறந்து பரமசந்தோஷத்திலிருந்தனர். அப்பொழுது நிகழ்ந்த விசேஷத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சௌநகாதிமுநிவர்களே! ஒருகாலத்தில் கௌதமர் தமது சிஷ்யர்களைநோக்கி, யான் சந்தியாவந்தனஞ்செய்ய நீங்கள் நமது குளத்திலிருந்து ஜலங் கொண்டுவருகவெனக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறே குளத்தையடைகையில், அங்கே க்ஷாமபாதையால் வந்திருக்கும் முநிபத்தினிகள் அச்சிஷ்யர்களை நோக்கி, யாம் நீர்முகந்து சென்றபின்னரே நீங்கள் நீரெடுத்துச் செல்லவேண்டும். மேலேயிருக்குஞ் சலத்தை நாங்களே முகக்கவேண்டும் எனப் பயமுறுத்த, கௌதமசிஷ்யர்கள் அவர்களை ஒன்றுஞ்செய்ய இயலாதவர்களாய் ஆச்சிரமத்தையடைந்து அஹல்யாதேவியைக் கண்டு நடந்த விஷயத்தை வெளியிட, அஹல்யை அந்தச்சிஷ்யருடன் குளத்தை யடைந்து அம்முநிமங்கையர்க்கு நன்மொழி யுரைத்து விலக்கிச்செல்ல, சிஷ்யர்கள் ஜலமுகந்துகொண்டு கௌதமமுநிவரிடஞ்சென்றுகொடுக்க, முநிவர் தமது சந்தியாவந்தன முடித்துக்கொண்டனர்.

இஃதிவ்வாறிருக்க, குளக்கரையில் முன்னே நீர்முகவாமல் தடை செய்த முநிமாதர் அஹல்யாதேவியைக் கடிந்து பேசித் தமது கணவர்பாலடைந்து, அஹல்யை எங்களைத் தினமுந் தண்டிக்கின்றுள். நாங்கள் அவள் தண்டனைக்கடங்கி வாழ்கின்றேம். நமக்கு இடமில்லாதிருந்து இங்கு வந்திருப்பதால், இவ்வாறுநடந்ததேயன்றி வேறன்று. உலகத்தில் பெண்கட்குப் பொய் கூறுதல் - மாயை - பிடிவாதம் - அதிலோபம்-பரிசுத்தமின்மை-தயை

யின்மை இவை சுபாவமான தோஷங்கள். நமக்குக்கௌரவ முண்டா? என்னபிழைப்பு ? யாதுக்கு ? இவள் கோபிப்பதும் நாங்கள் அடங்கியிருப்பதும் ஏதுக்கு? எனப் பலவாறு கூறினர். அம்மங்கையர் வார்த்தையைக் கேட்ட முநிவர்கள் ஐயோ ! அவ்வஹல்யை பதிவிரதையாதலின் இவ்வாறு சொல்லியிருக்கக் கூடுமோ ? இவர்களிடத்தில் ஏதேனுந் தோஷங்கண்டு ஒருவேளை சொல்லியிருக்கலாமோ, அல்லது ஒருவேளை தானே பெருமையாய்க்கூறியிருப்பினும் நாம் யாதுசெய்யக்கூடும்? அவர்கள் ஆச்சிரமத்திலிருந்து ஜீவிக்கின்றோமே: நாம் அந்த அஹல்யையின் கிருகத்திலிருந்து ஜீவித்துவருகையில் அப்பதிவிரதைக்குக் குற்றஞ் சொல்வது நம்மையே குற்றமுள்ளவர்களாக்கும் எனத் தம்முள் தாமே கருதியிருக்க, அம் முநிமாதர்கள் தமது சொல்லைக் கணவர்கள் கொள்ளாமையின், ஒன்றுஞ்செய்யமாட்டாதவர்களாய், பிரதிதினமும் கௌதமமுநிவர் பூஜைக்குச் சிஷ்யர்கள் ஜலங்கொண்டுபோகும்படி வரும்போதெல்லாம் இவ்வாறே விகடஞ்செய்வதும், சிஷ்யர்கள் அஹல்யையிடஞ் சொல்வதும், அஹல்யை குளக்கரையை யடைந்து, நமது ஆச்சிரமத்திலிருப்பவர்களை எவ்வாறு கண்டிப்பதென்று நல்வார்த்தைகளால் விலக்கிச் சிஷ்யர்களைத் தண்ணீர் முகந்துகொண்டுபோம்படிச் செய்வதும், அம்மங்கையர் தமது கணவரிடம் பலவாறு அஹல்யையைத் தூஷிப்பதுமாய் நடந்து வந்தது. இப்படி யிருக்கையில், ஒருநாள் ருஷிகள் யாவரும் அவ்வனத்தை யடைந்து சந்தோஷமாக வசனித்துக்கொண்டிருக்கையில், ருஷிகள் ஒருவரையொருவர் நோக்கி நமது மனைவிமார் குளத்திற் சலங்கொள்கையில் அஹல்யாதேவி கண்டிக்கின்றனராம். அவர்கட்கு ஒருவாறு நல்ல வகையாகச் சிறிது சொல்லவேண்டும் என்று கூறினர். இதனைக்கேட்ட வேறு சில ருஷிகள் ஒருவேளை நாமெல்லோரும் இங்குவந்திருத்தலின் அஹல்யை அவ்வாறே செய்திருக்கலாமென்றும், இவர்கள் உண்மையே சொல்லியிருப்பார்கள். இவர்கட்கு அம்மங்கையாற் சங்கடங்கள் சம்பவித்தே யிருக்கலாமென்றும் யோசித்து, மேல் நடக்கப்போகிற தீயகருமத்திற்குப் பாத்திரமாக வேண்டியிருத்தலின், ஒருவரோடொருவர் கலந்து யோசிக்கத் தொடங்கினர்கள்.

கௌதமேசுவரமகிமை யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்துமூன்றாவது

கோதாவரியின் தோற்றமுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார் : அந்த முநிவர்கள் யாவரும் ஒன்றுகூடி ஆலோசித்த வகையும், கௌதமமுநிவர் செய்த காரியமுஞ் சொல்லுகிறேன். நைமிசாரண்ணிய வாசிகளே ! ருஷிகள் ஒருவரையொருவர் பார்த்து நாமெ



26. புலத்தில் மேய்ந்த விகாயகராகிய கிழப்பசுவின்மேல் கௌதமர் ஒரு பிடி வைக்கோலை யெறிய அம்மாயப்பசு உயிர்நீங்கிறப்ப, அங்கிருந்த முனிவர்கள் கௌதமரைக் கோஹத்தி செய்தனன் றென்று தூரத்தது.

கௌதமர் சாந்திராயணம் பிராயச்சித்தம் சிவலிங்கார்ச்சனைபுரிந்து கோதாவிரியை யெழுப்பித்து, கௌதமீயுமாம் இக்கதிசனம் பெற்றது.

ல்லோரும் பிழைப்பதாக விருந்தால் இந்தக் கௌதமாச்சிரமத்தில் இருக்கு மெல்லையுந் துக்கமின்றிச் சீவிக்கமாட்டோம். இதற்குத் தக்க யுக்தியை விரைவிற் செய்து நமது மானத்தைக் காத்துக்கொண்டு நமது தவத்திற்கு விக்கினமின்றி யிருக்கத்தக்க வகையைக் கண்டுபிடித்து, கௌதம முனிவரை இங்கிருந்து அப்புறப்படுத்தவேண்டியது. அப்பொழுதுதான் நாம் சுகமாக வாழ்ந்திருக்கலாம். கௌதமன் எங்கேயாவதுபோகட்டும்: நாமெல்லோரும் இவனை யடித்துத் துரத்திவிடலாம் என்று தீர்மானித்து, இந்த யோசனை கைகூடும்படி யாவரும் விநாயகரை யுபாசித்து அறுகு தாமரை அக்ஷதை சிந்தூர சந்தனம் தூபம் தீபம் மோதகம் முதலியவற்ருற் பூசித்தனர். இவர்கள் செய்த பூஜைக்கு விநாயகர் தயையுடையவராய்ப் பிரசன்னராகி, முனிவர்களே! உங்கட்கு யாதுகாரியம் நடக்கவேண்டும்? அதனை வெளியிடுவீர் என வினவ, முனிவர்கள் கணபதியைப் பார்த்து, ஸ்வாமீ! தேவரீர் அடியேங்கள் விஷயத்தில் தயையுடையவராயிருந்தால் இந்தக் கௌதம முனிவனை இந்த ஆச்சிரமத்திலிருக்கும்அவனுடையசிஷ்யப்பிரசிஷ்யருடன் துரத்திவிடவேண்டும். இதுவே யெங்கட்கு வேண்டிய வரம் என்று பிரார்த்தித்தனர். விக்கிநேச்சுவரர் இதனைக் கேட்டுச் சிரித்து, முனிவர்களே! நீங்கள் இப்பொழுது தீய்காரியத்தைச் செய்கின்றீர்கள். குற்றமின்றியே அவர் விஷயத்தில் நீங்கள் கோபித்தால் உங்கட்கு இடையூறு சம்பவிக்கும். உபகாரஞ்செய்தவருக்கு அபகாரஞ்செய்வது தகுதியல்ல. அப்படி அபகாரஞ் செய்யும்பக்ஷத்தில் இப்பொழுதே நாசமடைவீர்கள். அருந்தவஞ் செய்து என்னிடம் நல்ல வரத்தைக் கேட்டீர்கள். ஆ ஆ! நல்ல பலனை விரும்பாமல் நினைத்தற்குங் கூடாத இப்படிப்பட்ட வரத்தைக் கோருவது, கையிலிருக்கும் இரத்தினத்தை விட்டுக் கருமணியை விரும்பினதுபோலிருக்கின்றது! உங்கட்கு வேறு எது விருப்பமோ அதனைக் கேளுங்கள்: அவ்வாறே கொடுப்பேன் என், ருஷிகள் யாவரும் மீண்டுந் தமது மதிமயக்கத்தால் இதேவரம் வேண்டுமெனக் கேட்டனர். அப்பொழுது விநாயகர் மறுபடியும் அந்த ருஷிகளைநோக்கி, உலகத்திலே ஒரு துஷ்டன் சாதுசாங்கத்தியத்தால் ஒருகாலத்தில் சாதுவாகிருன். ஒருசாது துஷ்டசாங்கத்தியத்தால் ஒருகாலத்தில் துஷ்டனுகிருன். அந்தச் சாதுபுருஷனுக்கு ஒருவன் தீமைசெய்தால் இதுவும் நமது வினையயென்று கருதி அநுபவித்துத் தனக்குத் தீமைசெய்தவனுக்கு நன்மையே செய்கிருன். ஆகையால் உங்களை எப்பொழுதாவது கௌதமர் துன்பப்படுத்தினுல் அப்பொழுதே அவர் உங்கட்குச் சுகத்தைச் செய்ததாக நினையுங்கள். நீங்கள் அவருக்கு மீண்டும் அபகாரஞ் செய்யவேண்டுமென்பது யுக்தமல்ல. நீங்கள் மாதர்கள் மொழியால் மதிமயங்கி இவ்வாறுசெய்ய எத்தனித்தீர்கள். அல்லது நிஜமாயிருப்பினும் இச்சமையத்தில் நீங்கள் அடங்கியிருப்பதே உங்கட்குச் சுகத்தை யுண்டுசெய்யும். அந்தக் கௌதமரோ உங்கட்குச் சுகத்தை விரைவிற் செய்வார் என்று இதுபோன்ற பலவகையான நீதிகளைப் போதித்தனர்.

விநாயகர் பலவாறுகூறியும் முநிவர்கள் அதனைச் சம்மதிக்காமையாலும், தான் அவர்கட்கு வேண்டியவரத்தைக்கொடுக்கிறேனென்று முன்னர்ச் சொல்லிவிட்டமையாலும், முநிவர்களே! நான் பலவிதமாக நீதிகளைச்சொல்லியுங்கேளாமையின் உங்கள் விருப்பின்படியே நடக்க வரங்கொடுத்தேன்; ஆயினும் அதனால்வரும் நிந்தனையை நீங்கள் அநுபவிப்பீர்களென்று கூறி அந்தர்த்தானமாயினர். கௌதம முநிவர் முநிவர்களுடைய யோசனையை யொன்றுமறியாதவராய்த் தமது தவநிலையிலிருந்தனர். மேலே நடந்தவற்றையுஞ் சொல்லுகிறேன்.

கௌதமராசிரமத்திலிருந்தமுநிவர்வேண்டுகோளின்படி விநாயகர் நடக்கச்சக்தியற்ற கால்தளர்ந்த மிகவும் இளைத்த ஓர் கிழப்பசுவடிவேற்று, கௌதமருடைய கோதுமை முதலிய நன்றாய் விளைந்திருக்கிற அறுக்குந்தறியாயுள்ள பயிரில் மேய்ந்துகொண்டிருக்கையில், தெய்வகதியாய்க் கௌதம முநிவர் அங்கேவந்து பயிரில்மேயும் பசுவைக்கண்டு கையில் ஒருபிடிவைக்கோற்றாளையெடுத்தெறிந்தனர். அதுபட்டமாத்திரத்திலேயே கௌதமர் கண்ணெதிரிற்றானே அப்பசுவானது கீழேவிழுந்து இறந்துவிட்டது. அதனைக் கண்ட அங்குவந்திருக்கும் ருஷிகளும் ருஷிபத்தினிகளும் பேரிரைச்சலிட்டு, ஆ! கௌதமன் என்னகாரியஞ்செய்தனன்; கோஹத்திசெய்தான்; மகா துன்மார்க்கன்: என்று கூறினர்கள். கௌதமரும் அவர்பத்தினியாகிய அஹல்யையும் மிகவுந் துக்கித்து,என்னசெய்வது? எங்கேபோவது? நிஷ்காரணமாகக் கோஹத்தி ஸம்பவித்ததே. இதனை எவ்வாறொழிப்பது? எனத்துக்கித்துக் கொண்டிருக்கையில், ருஷிகள் யாவருங்கூடிக் கௌதமரைச் சமீபித்து உன் ஞானம் யாதாயிற்று? உன் தபம் எங்கொழிந்தது? உன்சர்வக்ஞத்துவம் என்னவாயிற்று? உன் ஓமம் எங்கேயோடியது? திரிகால சந்தியாவந்தனாதிகள் எங்கேசென்றன? உன்புத்திசாதுரியம் எங்கொளித்தது? உன்கல்வி எங்கேமறைந்தது? உன்சுகுணசம்பத்துகள் எங்கேநடந்தது? என்றிது போலத் தூஷித்து, கோஹத்திசெய்த உன்முகத்தையும்பார்க்கப்படுமோ? என்று பலவாறு கூறினர். அந்த ருஷிபத்தினிகளும் நானாவிதமாகக் கௌதமரையும் அஹல்யையும் தூஷித்தார்கள். ஓ கௌதமா! இனி நீ இங்கிராதே. எங்கள் கண்ணுக்குப் புலப்படாது உடனே ஓடிவிடு. நீ இங்கிருந்தால் நாங்கள்கொடுக்கும் அவிர்ப்பாகத்தை அக்கினிதேவன் அடையமாட்டான்; நாங்கள் செய்யும் சிரார்த்தத்தைப் பிதுர்க்கள் அடையமாட்டார்கள். என்றிவ்வாறுகணக்கின்றித்தூஷித்து அவர்கள்யாவருங்கல்லாலெறிந்தார்கள். கௌதமமுநிவர் இன்னும் யாதுநிகழுமோவென்றுகருதி ஹாவென்று, அந்தருஷிகளைப்பார்த்து, ஐயா ருஷிகளே! நான் இங்கிருந்து புறப்பட்டு உண்மையாகவே போய்விடுகிறேனெனச் சொல்லி, தன் ஆச்சிரமமாகிய அவ்விடத்தை விட்டு மனைவியும் சிஷ்யர்களும் உடனேவர, ஒரு குரோசதூரஞ்சென்று அங்கிருந்துகொண்டு, கோஹத்திபாபந் தீருமெல்லையும் பிதுர்கார்ய சந்தியாவந்த

ஞுதிகள் செய்யக்கூடாதாதலின் சூதகாசௌசமுற்றவன்போலத் தங்கியிருந்தனர்.

முநிவர்களாவது முநி பத்நினிமாராவது இவரைக்கண்டால் முகத்தில் வஸ்திரம்வைத்து மூடிக்கொள்வார்கள். இவ்வாறு பதினைந்து தினங்கள் கழித்து, கௌதமர் அங்கிருக்கும் முநிவர்களை வருவித்து, ஸ்வாமிகளே! நீங்கள் எவ்வாறாவது எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும். என் பாப மொழியும் வகை ஏதேனுமிருந்தால் அதனைத் தெரிவிக்கவேண்டும். பெரியோர் உபதேசமின்றி ஒருவருக்கும் பிராயச்சித்த சித்தி முதலியன கைகூடாது என்றிவ்வாறு அதிவிநயத்துடன் கேட்டுக்கொண்ட பொழுதும், ஒருவரும் பதில் சொல்லவில்லை யாதலின், அவர்களை அதிகவணக்கத்துடன் நமஸ்கரித்துத் தயை வரும்படி வேண்டிக்கொண்டதன்பேரில், அம்முநிவர்கள் யாவரும் ஒன்றுகூடிச் சமீபித்துவர, கௌதமமுநிவர் பாபாத்மாவானவன் பிராமணருக்குச் சமீபத்தில் வரக்கூடாமையின் தூரத்தே யிருந்து அவர்கட்கு நமஸ்கரித்துக் கையேற்று நின்று, ஸ்வாமிகளே! என்பாபம் போதற்குரிய வகையை எவ்விதத்திலேனும் யோசித்துச் சொல்லவேண்டும் எனப் பிரார்த்திக்க, அவர்கள் யாவரும் கௌதமரே! உலகத்திலே பாபங்கட்குப் பிராயச்சித்தமில்லாமலே பரிஹார முண்டாகமாட்டாது. ஆதலின் நீர் தேக சுத்தி யுண்டாம் வண்ணம் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டும். அதாவது முதலில் உன்பாபத்தை ஊரெங்குந் தெரியும்படிச் சொல்லிக்கொண்டு உலகவலம் வந்து "வயலிலிருந்து கோஹத்திசெய்த நான் பிக்ஷைக்கு வந்தேன்" என்று பசித்தவிடத்தில் வேதியருக்குணர்த்திஅவர்களிடம் ஏழுவீட்டில் ஒவ்வொரு கவளம் கையிலேற்றுண்டு, மீண்டும் இங்குவந்து ஒருமாச காலம் *சாந்திராயணவிரதமநுஷ்டித்து,இந்தப் பிரமகிரியை நூற்றொரு பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் நீர் பரிசுத்தராவீர். வேறொரு வகையாகவுஞ் சொல்லுகிறோம். கங்கையை இங்கே வருவித்து அதில் ஸ்நானஞ்செய்து கோடி பார்த்திவலிங்கார்ச்சனை செய்யவேண்டும். இப்படிச் செய்தாலும் பவித்திரமாவீர். முதலில் இப்பிரமகிரியைப் பதினொரு பிரதக்ஷிணஞ் செய்யும். பிறகு சதகும்பாபிஷேகஞ் செய்துகொண்டால் இப்பார்த்திவ சரீரம் சுத்தமாகும் என்றனர்.

சௌநகாதிமுநிவர்களே! இவ்வாறு கூறிய அம்முநிவர்கள் வார்த்தையைக் கேட்ட கௌதமர் கோடிபார்த்திவலிங்க பூஜையும் கிரிப்பிரதக்ஷிணமுஞ் செய்வேனென்று சங்கற்பஞ் செய்துகொண்டு அப்பிராமணர்களது உத்திரவுபெற்று, கிரிப்பிரதக்ஷிணஞ் செய்து சாஸ்திரோக்தப்படி, கோடி லிங்கார்ச்சனஞ் செய்து முடித்தனர். பதிவிரதையான அஹல்யையும் முறைப்படி சிவபூஜை செய்துகொண்டிருந்தனள். சிஷ்யப்பிரசிஷ்யர்களும் கௌத

* சாந்திராயணம்-சந்திரசம்பந்தமானது; அது சந்திரகலைகள் உயருந்தோறு முறையே நாளுக்கொரு கவளமாகஉயர்த்தியும், மீண்டுங் குறையுந்தோறும் முறையே நாளுக்கொரு கவளமாகக் குறைத்தும் புசிப்பது.

மரையு அவர் மனைவியையுஞ் சேவித்துக்கொண்டிருந்தனர். நைமிசாரணிய வாசிகளான சௌநகாதி முனிவர்களே! இவ்வாறு கௌதமர் சிவபூஜைசெய்துகொண்டிருக்கையில், சிவபெருமான் பக்தப்பிரியராதலின் இவர் பூஜைக்கு மகிழ்ந்து திருக்கைலாயகிரியினின்று பிரமதகணசகிதராய்ப் பார்வதிசமேதராய் இடபாரூடராகி வந்து தரிசனமளித்துக் கௌதமரைப்பார்த்து, உன் பூஜைக்கு மனமகிழ்ந்தேம். நீ வேண்டும் வரத்தைக்கேள் எனக் கூற, கௌதமர் சிவஸ்வரூபத்தைத் தரிசித்துப் பெருங்களிப்புற்று, இனிக் கைகூடாதது ஒன்றுமில்லையென்று கருதிக் கௌரீசங்கரரைப் பணிந்து துதிக்கின்றார்.

𑌶𑍍𑌲𑍋॥ “𑌨𑌿𑌰𑍍𑌗𑌣𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑍁𑌨𑌃 ॥ (௬௫)
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥ (௬௬)
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌚𑍈𑌵 𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌯 𑌸𑌂𑌶𑌯𑌚𑍍𑌛𑌿𑌦𑍇 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌾𑌯 𑌚 ॥ (௬௭)
𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌾𑌯 𑌚 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ।
𑌅𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌕𑍍𑌷𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤 𑌬𑍀𑌜𑌰𑍂𑌪𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃 ॥ (௬௮)
𑌨𑌿𑌰𑍍𑌗𑌣𑌾𑌯 𑌗𑌣𑌾𑌯𑍈𑌵 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ।”

நிர்குணய நமஸ்துப்யம் ஶங்கராய நம: புந: || ௬௫ || பஶ்சாத்ப்ரக்ருதிரூபாயபுருஷாயநம: புந: || பஶ்சாத்விஷ்ணுஸ்வரூபயா ததஸ்சப்ரஹ்மணே நம: || ௬௬ || ப்ரஹமணவிஷ்ணு நாசைவபூஜ்யாய ஸம்ஶயச்சிதே ! பஶ்சாத்ருத்ரஸ்வரூபாய ததஶ்சவ்யாபகாயச || ௬௭ || வ்யாப்யாயசநமஸ்துப்யம் ப்ரஹ்மணே பதமாத்மநே! அகாராதிக்ஷகாரந்த பீஜரூபாயதே நம: | ௬௮ | நிர்குணயகுணயைவ ஸ்வரூபாய நமோஸ்துதே.

குணரகிதரும், பக்தர்கட்குச் சுகஞ்செய்பவரும், ஸ்ருஷ்டி யாரம்பத்தில் பக்தாநுக்கிரகத்திற்காக மாயையோடுகூடிய ரூபமுடையவரும், எல்லாப்பிராணிகளின் சரீரத்திலும் அந்தர்யாமியாயிருப்பவரும், பக்தரக்ஷணைக்காக விஷ்ணுஸ்வரூபமுடையவரும், ஹிரண்யகர்ப்பரூபமுடையவரும், பிரமவிஷ்ணுக்களால் பூஜிக்கப்பட்டவரும், (அடியவர்களுக்காக) சர்வவியாபியானவரும், வியாபிக்கப்படுபொருளாயுள்ளவரும், தானே சர்வமயமானவரும், பரமாத்வஸ்வரூபியானவரும், அகாரமுதல் க்ஷகார இறுதியாகிய வர்ணமாலிகாஸ்வரூபரும், குணரகிதரும், குணஸ்வரூபரும், ஸகலஸ்வரூபரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: நமஸ்காரம் என்றுபலவாறு துதித்துக் கைமேயற்று நின்றுஎன்னைப் பாபரகிதனகச்செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்த கௌதமரைநோக்கிச் சிவபெருமான் சொல்லுகின்றார்.

கௌதமமுநிவனே! நீதன்னியன்: கிருதகிருத்தியன்: இத்துஷ்டவேதியர்கள் உன்னிடத்திற் பாபத்தைக் கபடத்தால் ஏற்றினர்களேயன்றி உனக்கு எப்பொழுதும் பாபமேகிடையாது. உன்னைத்தரிசித்தமாத்திரத்தி

லேயே சகலரும் பாபரகிதர்களாவார்கள். இத்துரோகசிந்தையுடைய முநிவர்கள் செய்ந்நன்றி மறந்தவர்களாதலின் இவர்கள்செய்த பாபங்கள் பிராயச்சித்தங்களாலும் பரிகரிக்கப்படமாட்டா. உனக்கு ஏதேனும் சிறிது பாபமிருக்கின் அதுவும் எனது தரிசனத்தால் ஒழிந்துவிடும் என்றுகூறி, அத்துஷ்டவேதியர்கள்செய்த சகலவஞ்சனைகளையுங் கௌதமமுநிவருடன் சொல்லினர். அவ்வந்தணரது வஞ்சகத்தைக்கேட்ட கௌதமர், ஸ்வாமீ! இம்முநிவர்கள் யாவரும் எனக்குத்தீமைசெய்திலர். ஐவரோ செய்தனர். ஆயினும் பெரிதல்ல; அவர்கள் என்விஷயத்தில் நன்மையேசெய்தார்கள். அவர்கள் அவ்வாறுசெய்யாவிடின் தேவரீரைத் தரிசிக்கமுடியாது. ஆதலின் அவர்கள் புண்ணியவான்களே யெனக்கூற, சிவபெருமான் கௌதமருடைய சற்குணவிசேஷத்திற்குக்களித்து, நீ மஹாபுண்ணியன்: உனக்குவேண்டியவரம் யாது? எனக் கேட்க, கௌதமர் யோசித்துத் தன்பெயர் நிலைநிற்பதாகவேண்டுமென்று நினைத்து, ஸ்வாமீ! தேவரீருக்கு என் விஷயத்தில் கருணையிருந்தால், சகலலோகங்கட்கும் நன்மைதரத்தக்க கங்கையைக் கொடுக்கவேண்டும் என்று சாஷ்டாங்கமாகப்பணிந்து நமஸ்கரிக்க, சிவபெருமான் பூலோகத்திலும் ஸ்வர்க்கலோகத்திலும் நிறைந்து பூரணமாயிருக்கத்தக்க தமது சடையிலிருந்த *கங்கையில் சிறிதினைக் கௌதமருக்குக் கொடுத்தருளினர். அக்கங்கையானவள் உடனே பெண்ணுருவெடுத்துக் கௌதமர் முன்னின்றனள். கௌதமர் கங்காதேவியைப் பலவாறுதுதித்து நமஸ்கரித்து, தாயே! நீ தன்னை: எல்லாவுலகங்களையும் புனிதமாகச் செய்யவல்லவளாதலின் என்னையும் பரிசுத்தனுக்கி யென்பாபங்களை யொழிக்கவேண்டும் எனக்கூறுகையில், சிவபெருமான் கங்கையைப்பார்த்து, பெண்ணே! இக்கௌதமமுநிவனை என் கட்டளைப்படி கிருதார்த்தனுகச்செய் : எனத் திருவாய்மலர்ந்தருளினர். கங்கையானவள் சிவாக்கினையையும் கௌதமர் வேண்டுகோளையுங்கருதி, நான் பரிவார சகிதமாகவுள்ள இம்முநிவனைப் பரிசுத்தனுக்கி மீண்டுஞ் சிவபெருமானிடஞ் சேருகிறேன் எனக்கூற, சிவபெருமான் கங்கையே! இருபத்தெட்டாவது மஹாயுகத்தில் நடக்கும் வைவச்சுதமநுவந்தரத்தில், கலிகாலம்வருதலின் அப்பொழுது மனிதர்கள் அற்பாயுவும் சுவல்பபுத்தியுமுடையவராவர். ஆதலின் அக்காலத்திலுள்ளவர்கள் உன்னைத்தரிசிக்கும்படி அதுவரையில் நீயிங்கேயே யிருக்கவேண்டியது எனக்கூற, கங்காதேவி, ஸ்வாமீ! நான் இங்கேயிருக்கும்படிக் கட்டளைபெறுவேனுயின் காசிக்ஷேத்திரத்திலிருந்து அங்கு வருவோரைப் புனிதமாக்க முடியாதாதலின், இவரைப்புனிதராக்கி நான் அங்கேயாவது போகின்றேன் என, கௌதமர் தாயே! நீ யெங்கும் போகப்படாதென்று விநயமாகக்கூறிப் பிரார்த்திக்க, சிவபெருமான், கங்கா! நீ யிங்கே கௌதமன் விருப்பின்படியிருக்கவும், காசிக்ஷேத்திரத்தில் விளங்கி, வருவோரைப் புநிதமாக்கவும் வல்லவளாதலின்,

* கங்கை - இது பூர்வத்தில் பிரமனுக்கும் விண்டுவுக்கும் இந்திரனுக்குங் கொடுத்து மிகுந்திருந்ததை என வடநூல் உரைகாரர் கூறுகின்றனர்.

இங்கு மங்கும் இருக்கக்கடவாய் என, கங்கை நான் அவ்வாறே எல்லாத் தீர்த்தங்களிலுஞ் சிறந்து இங்கே யிருந்துகொண்டிருப்பினும், கௌதமரை வஞ்சத்தால் வருத்திய அப்பாபிகளைப் புனிதமாக்க வல்லவளல்லேன். நிஷ்காரணமாக இவரைத்துன்புறுத்தியவர்களை மூகாலம்பனமுஞ்செய்ய விருப்பமில்லையாதலின் நான் அந்தர்த்தானமாகிறேன். அன்றியும் பார்வதி புத்திரர்களோடும் பிரமதகணங்களோடும் சிவபெருமான் இங்கெழுந்தருளியிருப்பதாயினும் நான் இங்கிருக்கக்கூடும் என, சிவபெருமான் கங்கையே! நீ புநிதை: நீ என்னைவிட வேறன்று. ஆயினும் நீ யென்னை யிங்கிருக்கக்கோருகின்றமையின் யானும் அவ்வாறே இங்கிருக்கின்றேன்; நீயும் இங்கேயே யிருக்கவேண்டும் என, கங்கை சந்தோஷித்துச் சிவபெருமானைப் பூஜித்தனள்.

கோதாவரியின் தோற்றமுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது
திரியம்பக லிங்கமகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்: இந்தச் சமையத்தில் பிரமாதி தேவர்கள் சப்தருஷிகள் நானாதீர்த்தங்கள் அநேக க்ஷேத்திரங்கள் யாவும் வந்து கௌதமரையும் கங்கையையும் சிவபெருமானையும் கண்டு ஜயஜயவென்றுபூஜித்து, அநேக வகையாகத் தோத்திரஞ்செய்து சந்தோஷத்தோடிருக்கையில், கங்காதேவியும் சிவபெருமானும் அவர்கள் விஷயத்தில் மகிழ்வுற்று யாது வரம் வேண்டுமென வினவ, ருஷிகள் நீங்கள் இருவரும் எங்கள் விஷயத்தில் தயையுடையராயின், நீங்கள் எப்பொழுதும் இவ்விடத்திலே யெழுந்தருளியிருந்து சற்கருமஞ் செய்யும் ருஷிகளை யெல்லாம் அநுக்கிரகிக்கவேண்டும் எனக்கூற, கங்கை அவர்களை நோக்கி நீங்கள் யாவருமே தீர்த்தஸ்ரூபமாக நிற்றலின், யானிங்கிருந்தென்ன இல்லாவிடினென்ன? நீங்கள் யாவருமே கௌதமரிடத்திலேயே யிருக்கவேண்டும். நான்மட்டும் தற்காலம் போகின்றேன். உங்கட்கெல்லாம் க்ஷேமமுண்டாகுக: நீங்கள் உலகத்தைப் பவித்திரஞ்செய்துகொண்டு இங்கிருங்கள் எனக்கூற, தேவர்கள் ருஷிகள் யாவரும் மீண்டும் கங்காதேவியைநோக்கி, தாயே! எங்களையெல்லாம் புனிதமாக்கு நிமித்தமாக நீயிங்கே யிருக்கவேண்டுமென, கங்கை உங்களைக்காட்டிலும் என்னிடத்தே என்னவிசேஷமிருக்கின்றது என, அவர்கள் கங்கையைப்பணிந்து நாங்கள் மாநுடர்செய்த பாபங்களை அவர்கள் எங்களைச் சேவித்தலாலும் எங்களிடத்தில் ஸ்நானதானாதிகளைச் செய்ததாலும் பதினொருவருஷமாகப் பெற்று அவற்றைப்பன்னிரண்டாவது வருஷத்தில் யாவரும் சிங்கராசியிற் பிரகஸ்பதி பிரவேசித்தபொழுது, உன்னிடம்வந்து ஸ்நானஞ்செய்துபோக்கடித்துக்கொண்டிருப்போமாகலின் நீ எங்களை அநுக்கிரகிக்கு நிமித்தமா

த்தமாகச் சிவபெருமானுடன் இங்கெழுந்தருளி யிருக்கவேண்டும். குரு சிங்கத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஒருவருஷகாலமும் இங்கேவந்து உன்னிடத்தில் ஸ்நானஞ்செய்து எங்கள்பாபத்தை யொழித்துச் செல்வோம் என்று யாவருந் தோத்திரஞ்செய்ய, அவர்கள் வேண்டுகோளுக்கும் கௌதமருக்குக் கொடுத்த வரத்திற்கும் இணங்கி, கங்காதேவியும் சிவபெருமானும் அங்கே எழுந்தருளி யிருக்கின்றனர். அந்தத் தினமுதல் சிங்கராசியிற் குரு பிரவேசித்தபொழுது பிரமாதி தேவர்கள் தீர்த்தங்கள் க்ஷேத்திரங்கள் யாவரும் வந்துகொண்டிருக்கின்றனர். ஆதலின் சிங்கராசியிற் குரு பிரவேசித்திருக்கையில் பிறதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வதனால் ஒரு பலனுமில்லை. அந்தச் சிங்ககுரு கழிந்தபிறகுதான் அத்தீர்த்தங்கள் தம்மிடத்திலிருத்தலின் அவ்வவற்றிற்குரிய பலன்களைக் கொடுக்கச் சக்தியுடையனவாம். எப்படியிருப்பினும் கங்கை, நருமதை, கயை, கோமதி இவற்றில் எக்காலமும் ஸ்நானஞ் செய்யலாம். சிங்ககுரு வென்பது கணக்கில்லை. தீர்த்தயாத்திரை செய்வோர் முதலிலே கோமதிநதிக்குப்போய்ப் பின்னர் *கோதாவரி நதியை யடைந்து, மீண்டும் கோமதிநதியிற் சென்று ஸ்நானஞ்செய்தால், சகலபாபங்களு மொழிவர். இக்கோதாவரிக்குக் கௌதமி யென்றும் பெயர். இப்பொழுது கௌதமிதீர்த்தக்கரையில் எழுந்தருளியிருக்கும் திரியம்பகேசுவர ஜோதிர்லிங்கமகிமையைச் சொன்னேன் என்று ஸூதமுனிவர் கூற, சௌனகாதி மகருஷிகள் ஸ்வாமீ! கங்கை ஜலமயமாக வந்ததாக இச்சரிதத்திற் கூறினீராதலின், அது எங்கிருந்து புறப்பட்டுவந்து சேர்ந்தது? கௌதமமுனிவருக்கு அபசாரஞ் செய்த துஷ்டப்பிராமணர்கள் அதற்காக என்ன கதியடைந்தார்கள்? இவற்றையுஞ் சொல்லியருளவேண்டும் என வேண்ட, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

மகருஷிகளே! கேளுங்கள்: நீங்கள் கேட்ட விஷயத்தைச் சொல்லுகிறேன். கௌதமமுனிவராற் பிரார்த்திக்கப்பட்ட கங்கையானவள் பிரமகிரியிலிருக்கும் அத்திமரத்தின்வேரிலிருந்து புறப்பட்டனள். அவ்விடத்திலே கௌதமர் ஸ்நானஞ்செய்து கிருதார்த்தரானார். அநேகருஷிகளும் மானுடர்களும் அங்கே ஸ்நானஞ்செய்து கிருதார்த்தர்களானார்கள். அது தோன்றிய விடத்திற்குக் கங்காத்துவார மென்னும் பெயர் பிரசித்தம். இதனைச் சொன்னேன். இனிக் கௌதமத் துவேஷிகளாயிருந்த முனிவர்கள் சங்கதியையுஞ் சொல்லுகின்றேன். அவ்வேதியர்கள் இக்கௌதமிதீர்த்தத்தில் பிரமாதிதேவர்கள்முதலானோர் வந்து ஸ்நானஞ்செய்வது கேள்வியுற்று, தாமும் அதில் ஸ்நானஞ்செய்யவிரும்பி அங்கேவரக்கண்ட கங்காதேவி, அப்பாவிகள் தன்னிடத்தில் ஸ்நானஞ்செய்வதை மனஞ் சகியாது அந்தர்த்தானமடைந்து கண்ட கௌதமமுனிவர், தாயே! அவ்வாறு மறையவேண்டாம். மறையவேண்டாம். இவ் வந்தணர்கள் யோக்கியராயினும் அயோக்கியராயினும் என்

* கோதாவரி - கௌதமர் பிரார்த்தித்துக் கொண்டுவந்த கங்கை. இப்பொழுது வாசிக்கும் மகிமை யுடையது.

னுடைய ஆச்சிரமத்தில்வந்து காலங் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்தகாரியங்களாலேயே யான் உன்னையும் சிவபெருமானையும் இங்கிருக்கப் பெற்றேன் எனக் கூறுகையில், இவர்கள் மகா கொடியவர்கள்; துரோகிகள்; செய்ந்நன்றி மறந்தவர்கள்; நீசர்கள்; அகங்காரிகள்; கபடவாதிகள்; வேஷதாரிகள். ஆதலின் இவர்களை விலக்கவேண்டும் என்று ஆகாயவாணி கூற, கௌதமர் தாயே! நான் சொல்வதைக் கேட்கவேண்டும். நான் சொல்லுகிறது கற்றவர்கள் நடை. அபகாரஞ் செய்தவர்கட்கு எவர் உபகாரஞ் செய்வரோ அவ்வகைய புண்ணிய புருஷர்களால் நான் பவித்திரமடைகிறேனென்று, உலகநாயனாகிய சிவபெருமானே சொல்லியிருக்கின்றனன். ஆதலின் அவ்விறைவன் வார்த்தையை நீ பரிபாலிக்கவேண்டும் என, ஆகாயவாணி மீண்டும் கௌதமரே! நீர் சொல்லிய வசனம் உண்மையேயாயினும், அவர்கள் உன்னோடுகூடி யிருக்கும் யோக்கியதை யடையவேண்டியதற்காக அவர்கள்முன் உன்னைப் பிரமகிரியை நூற்றெருருபிரதக்ஷிணஞ்செய்யச்சொன்னதுபோல இப்பொழுது அவர்களும் இப்பிரமகிரியை நூற்றெருருபிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். அதனால் அவர்கள் செய்த துஷ்கிருத்தியத்திற்குப் பிராயச்சித்தமுண்டாகி யோக்கியர்களாவார்கள் என, அதைக் கேட்டிருந்த ருஷிகள் அப்படியே பிரமகிரியை நூற்றெருரு பிரதக்ஷிணங்கள் சாஸ்திரோக்தமாகச் செய்தனர். பிறகு கௌதமர் கங்கையைத் தியானித்து இவர்களையெல்லாம் அநுக்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, கங்கை கௌதமர் விருப்பத்தின்படி அநுக்கிரகித்தனள். அதன்மேல் அவர்கள் * கங்காத்துவாரத்தின் கீழ்ப்பக்கத்தில், தருப்பையாற் பவித்திரமணிந்து முறைப்படி ஸ்நானஞ் செய்தார்கள். அந்த விடம் † குசாவர்த்தம் என்னும் பெயரை யுடையது. அவ்விடத்தில் கங்கை பிரத்தியக்ஷமாயிருந்தனள். அஹல்யாதேவியை அவமதித்துரைத்த ருஷிபத்தினிகளும் அவ்விடத்தில் ஸ்நானமும் சிவதரிசனமுஞ்செய்து எல்லையில்லாத சந்தோஷத்தை யடைந்திருந்தனர். கங்காத்துவாரம், குசாவர்த்தம், திரியம்பகேசுவர சந்நிதி, புண்ணியதீர்த்தங்களெல்லாம் வந்து கங்காதரிசனஞ் செய்த இடமாகிய கோடிதீர்த்தம், இவ்விடங்களில் ஓரிடத்திலாவது ஸ்நானஞ் செய்தவர்கள் மீண்டுங் கருப்பாசயப்பையை யடையமாட்டார்கள். அந்தக் கோதாவரி மகிமையை யான் என்னவென்று கூறுவேன். பிரம விஷ்ணு ருத்திரர்களும் பிரதிதினமும் அதனைச்சேவிப்பார்கள். கோதாவரியைச் சேவிக்காதவர்கள் தேவர்கள் ருஷிகள் பெரியோர்களில் ஒருவருமிலர். சாமானியனான மாநுடன் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சகல சுகங்களையு மநுபவித்து மோக்ஷமடைவான். இதன் மகிமையை யறிந்தவன் முறைப்படி ஸ்நானஞ் செய்தால் அவன் பெறும்பேற்றினை யென்னவென்றுரைப்பேன். பூர்வத்தில் ஸ்ரீராமன் இந்தக் கோதாவரி நதி

* கங்காத்துவாரம் - கங்கை பிறந்தவிடம்.

† குசாவர்த்தம் - என்பது, கங்காத்துவாரத்திற்குப் பதினைந்து யோசனை தூரத்திருப்பதாகவும் சில பிரதிகள் கூறுகின்றன.

யைக் கண்டு தான் உலகத்தைப் பவித்திரஞ் செய்விக்கும்படி * பஞ்சவடி தீரத்திலிருந்தனன். முதலில் கங்கையும், பின்னர் சிவபெருமானும், அதன் பின்னர் விஷ்ணுவுமாக இம்மூவர்கள் பொருந்தியிருக்கும் புண்ணியக்ஷேத்திரத்தில் வசிப்பவர்களுக்குத்துர்லபமானது ஒன்றுமில்லை. பிறந்ததுமுதல் மரணம்வரையிற் காசிக்ஷேத்திர வாசஞ்செய்தவன் அடையும் பலனை இப்பஞ்சவடி தீரத்தில் ஒரு ஜாமகாலம் வசித்தவன் பெறுவான். முதலில் உலக சங்கரனாகிய திரியம்பகேசுவரனையும், பிறகுஸ்ரீராமனையும், பின்னர் கங்காத் துவாரத்தையும் தரிசித்தவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவார்கள். இத்தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தவர்கள் ஜீவன்முத்தர்களாவார்கள். கௌதமரும் பிறமுநிவர்களும் ஒன்றுகூடி யாவரும் சுகித்திருந்தார்கள். இப்படிக் கௌதமிநதி மகத்மியத்தையும், திரியம்பகேசுவரமகிமையையும் உங்கட்குச் சொன்னேன். இவற்றைப் பக்தியோடு கேட்டவர்கள் இஷ்டகாமியங்களைப் பெறுவார்கள். இனி வைத்தியநாதேசுவரப் பிரபாவத்தைச்சொல்லுகிறேன்.

திரியம்பகேசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது

வைத்தியநாதேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்களே! நான்சொல்லுவதை அன்புடன் கேளுங்களென்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்: துர்அகங்காரியும் துஷ்டர்களையே விரும்புகிறவனும் இராட்சத சிரேஷ்டனுமான இராவணன் பூர்வம் கைலாசகிரியில் சிவபெருமானை யாராதித்துப் பெருமான் பிரத்தியக்ஷமாகாமையின், இமோத்கிரியின் தென்றிசையிலுள்ள ஒரு வனத்தில் ஒரு குண்டந்தோண்டி அதில் அக்கினியை வளர்த்தி அதன் அருகே பார்த்திவ லிங்கப் பிரதிஷ்டைசெய்து அக்குண்டத்தில் ஓமஞ்செய்தும் பிரசன்னமாகாமையின், தன் சிரங்களை ஒவ்வொன்றாக அறுத்து ஒன்பது சிரங்கள்வரையில் ஹோமாக்கினியி லிட்டனன். அப்பொழுதும் தரிசனமாகாமையின் பத்தாவது தலையையும் வெட்டிக்கொள்ள உடைவாளை யெடுக்கையில், சிவபெருமான் மனந்தாளாது பிரத்தியட்சமாய் இராவணன் கையைப் பிடித்துக்கொண்டு உனக்கு நான் பிரசன்னமானேன். உன் விருப்பமான வரங்களைக் கேள் எனக் கூற, இராவணன் ஸ்வாமீ! தேவரீர் என்பால் தயை வைத்துப் பிரசன்னமாயிருந்தால், சத்துருவுக் கிளைக்காதவன்மையும் அறுத்தெறிந்த சிரங்கள் எனக்குமீண்டும் உண்டாவதுமாய் அநுக்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, பக்த பராதீனராகிய சிவபெருமான் அவனிஷ்டப்படி அபரிமிதமான பலமும் முன்போலப் பத்துத் தலைகள்பெற்றிருக்கவும் நோயில்லாத வாழ்வும் அநுக்கிரகித்தனர். இராவணன் அதனைப் பெற்றுச் சிவபெருமானைப்

* பஞ்சவடி - ஐந்து ஆலமரங்களையுடைய விடம்.

பணிந்து விடைபெற்றுத் தனது நகரிற்கேகுவானாயினன். இதனையறிந்ததே வர்களும் முநிவர்களும் இவனால் நமக்கென்ன துன்பங்கள்விளையுமோவென் றுகருதிப்பயந்து, என்ன செய்வோம்? எங்கே போவோம்? இவனிடத்தில் துஷ்டர்களாகிய இராக்ஷதர்களெல்லோருஞ் சகாயஞ் செய்துகொண்டிருக் கிறார்களே? எவ்வகைய காரியத்தையுஞ் சாதிக்க வல்லபமுடையவனாயிருப் பானே என்று துக்கித்துக்கொண்டிருக்கையில், நாரதமுநிவர் அங்கே வரக் கண்டு அவரைச் சேவித்து, ஸ்வாமீ! நாரதமுநிவரே! சகல காரியங்களையும் நிறைவேற்றும் வல்லபமுடையவரே! துஷ்டனாகிய இராவணன் சிவப்பிரசாத மடைந்தமையால் எங்கட்குக் கஷ்டமுண்டாக்கச் சித்தமாயிருக்கின்றான். அவன் எங்களைத் துன்புறுத்தினால் எங்கே போவோம்? எனக் கூற, அத னைக் கேட்ட நாரதமுநிவர் தேவர்களே! ருஷிகளே! நீங்கள் துன்பத்தை விட்டுவிடுங்கள். நானொருபாயஞ் செய்கிறேன் எனக் கூறி அங்கிருந்து புற ப்பட்டுச் சென்று இராவணன் வரும் வழியில் தமது மகதிவீணையை மீட்டிக் கொண்டிருக்கையில் இராவணன் அவ்வழியே வந்தனன். நாரதமுநிவர் அவனை நோக்கி இராட்சத சிரேஷ்டனாகிய இராவணா! சிவபூஜையைப் பக்தி யோடு நீ செய்து வருவதுபற்றி மிகவுஞ் சந்தோஷமுற்றேன். நீ கிருதார்த் தன். உன்னிடத்துள்ள சந்தோஷத்தால் ஒன்றுகேட்கிறேன்; அதனைச் சொ ல்லவேண்டும். நீ பெருஞ் சந்தோஷத்தோடு எங்கே போகின்றாயென்பது தெரியவேண்டுகிறேன் எனக் கேட்க, இராவணன் நாரதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! நான் சிவார்ச்சனை செய்து பரமபதியின் அநுக்கிரகத்தாற் பெரும் வல்லபத்தை யடைந்து என் வீட்டிற்குச் செல்கின்றேன் என, நாரதர் இரா வணா! நீ சிவபெருமானை எவ்வண்ணமாக அருச்சித்தனை? நீ யெனக்கு ஆப் தனாதலின் அதனைச் சொல்லவேண்டும் என, இராவணன் முநிவரே! நான் பூர்வத்தில் கைலாயகிரியையடைந்து பெருந்தவஞ்செய்தேன். அங்கேயான் செய்த அரும்பெருந் தவத்திற்குச் சிவபெருமான் தரிசனங் கொடாமை யின் அங்கிருந்து புறப்பட்டு ஹிமவத்பர்வதத்தின் தென்றிசையிலுள்ள வன த்தில் கிரீஷ்மகாலத்திற் பஞ்சாக்கினி மத்தியிலும், மழைகாலத்தில் வெளி யிலும், குளிர்காலத்திற் சலத்திலுமிருந்து தவஞ்செய்தேன். இப்படித் தவ ஞ்செய்தும் சிவபெருமானுக்கு என்பேரிற் றயையுண்டாகவில்லை. அதனால் எனக்குப் பெருவருத்தமுண்டாகிப் பார்த்திவலிங்கத்தைக் கந்தபுஷ்ப தூப தீபங்களா லர்ச்சித்து நிவேதனஞ் செய்து நமஸ்கரித்து நிருத்திய கீதவாத் தியங்கள்செய்து அங்குசிவப்பிரீதியான யாகங்கள் செய்தும் பிரசன்னமாகா மையின் துக்கமிகுந்து செயலற்று என் தவத்தை நிந்தித்துக்கொண்டு அந்த யாகாக்கினியில் என் பிராணனை விட்டுவிடவேண்டுமென்று கருதி, சிரங்க ளைச் சந்தனாதிகளால் அலங்கரித்து ஒவ்வொன்றாக அறுத்து ஒன்பது சிரங் களை ஹோமஞ்செய்து, பத்தாவது தலையையும் அறுத்து எறிய உத்தேசிக் கையில், சிவபெருமான் தேஜோரூபியாய்ப் பிரசன்னமாகி, தலையை யறுக்க வேண்டாமென்று என் கையைப் பிடித்துக்கொண்டு, உன் இஷ்டமான வரங்



C.R.S.

27. இராவணன் கைலாயகிரியில் யாகஞ்செய்து வரங்கள்கொண்டு திரும்புகையில், நாரதமுனிவர் சூழ்ச்சியால், [illegible] டையெடுக்கச் சீக்கிரத்தில் அவன் கரங்களுஞ் சிரங்களுமழுமபடி சாபமேற்றது

களைச் சொல் என, அப்பொழுது சிவபெருமானைக் கண்களால் தரிசித்து, உலகத்திலுள்ளவர்களை யெல்லாம் ஜயிக்கத்தக்க பலத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் எனக் கேட்க, அப்படியே யாகுகவென வரங்கொடுத்து என் சிரங்களைப் பழயபடியே உண்டாகச் செய்து, நோயின்றி வாழ்கவெனக் கூறித் தயவுடன் பார்த்தனர். அந்தச் சிவப்பிரசாதத்தால் யாவும் எனக்குக் கிடைத்தன. அந்த வரத்தைக் கேட்ட பின்னர் யான் இவ்வாறே தேவரீர் இங்கிருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் வைத்தியநாதேசுவரரென்னும்பேருடன் அங்கெழுந்தருளியிருக்கின்றனர். பிறகு சிவபெருமானைப் பணிந்து திரிலோகங்களையுஞ் சயங்கொள்ளக் கருதி வந்தேன் என்று கூறினன்.

ஸூதர் சொல்லுகிறார்: நாரதர் இராவணனைப்பார்த்து அசுரேசா! உனக்கு இதமான வார்த்தையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சிவபெருமான் நீ கோரியபடியே உனக்குவரங்கொடுத்தனரெனக் கூறுகின்றனை. அவ்வாறு கொடுத்தது நிஜமென்றெண்ணவேண்டாம். அந்தச் சிவபெருமான் விஷபானஞ்செய்து தன்னை மறந்தவராதலின் என்னென்ன சொல்லமாட்டார்? அவற்றை நீ நம்பலாமா? ஆனாலும் நீ அவர் கொடுத்த வரம் கைகூடுமோ கூடாதோ என்பதை நான்சொல்லுங் காரியத்தைச்செய்து பரீக்ஷித்து அதனாலேயே தெரிந்துகொள்ளவேண்டும். நீ எனக்கு அன்பனாதலிற் கூறுகின்றேன்: அதாவது நீ எவ்வாறாயினுஞ் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வெண்ணிறமாய திருக்கைலாயகிரியை யெடுக்கவேண்டியது. அதை நீ தடையின்றி எடுத்தாயாகில் அவர் உனக்குக் கொடுத்த வரம் தடையின்றிக் கைகூடியிருக்கிறதென நினைத்து அதனை மீண்டும் முன்னிருந்தபடியே வைத்துவிடு என்றுகூறிய நாரதமுநிவர் வார்த்தையைச் சத்தியமாகக் கருதி, இராவணன் ஸ்ரீகைலாயகிரியையடைந்து, சிவபெருமான் பிரமதகணசகிதமாய்க் கொலுக்கொண்டிருப்பதும், திருமால் பிரமேந்திராதிதேவர்கள் நெருங்கிச் சிவசேவை செய்துகொண்டிருப்பதுஞ், கற்பாந்தத்திலும் சிறிது மசையாததுமாயுள்ள அவ்விரசிதகிரியைத் தனது இருபது கரங்களாலும் அசைத்தெடுத்தனன். அதனால் அம்மலையிலிருந்த விருக்ஷங்களெல்லாங் குலுங்கின. அருவிகள் வழிதவறின. பிரமன் நிலையினின்று தவறிவிழுந்தனன். விஷ்ணு மூர்ச்சையடைந்தனர். தேவர்கள் பிரமதகணங்கள் மகருஷிகள் முதலிய யாவரும் தம்மை மறந்து இறந்தாற்போலானார்கள். அந்தச் சமையத்தில் சிவபெருமான் இஃதென்னென்று யோசித்தனர். பார்வதிதேவியார் சிவசந்நிதானத்தில் அவர் பக்கலிலேயே யிருத்தலின் நிர்ப்பயமாகச் சிரித்து, சிவபெருமானைப் பார்த்துக் கைகூப்பி ஸ்வாமீ! தேவரீர் தங்கள் சிஷ்யனுக்குப் பெருவலி யுண்டாக வரங்கொடுத்தமையாலும், அவன் யோக்கியதை மிகுந்தவனானமையாலுந் தக்கபலனுண்டாயிற்று எனக்கூற, சிவபெருமான் இராவணன் விஷயத்திற் கோபங்கொண்டு, இராவணா! உன் கரங்களைச் சங்கரித்தற்காக ஒருபுருஷன் ஜனித்து அவற்றை விரைவிற் சங்கரித்

துவிடுவான் எனச் சாபமிட்டனர். அங்கு வந்திருந்த நாரதமுநிவர் அதனைக் கேட்டுச் சந்தோஷித்திருந்தனர். இராவணனும் கைலாயகிரியைப் பழயபடியே வைத்துவிட்டு, சிவபெருமான் கொடுத்தவரம் கைகூடியதென்றுகருதி, பெலகர்வத்துடன் தன்வழியே சென்று, அதுமுதல் உலகத்தைத்துன்புறுத்தித் தன் ஆக்கினையைச் செலுத்திவந்தான். இவ்வண்ணமாகவைத்தியநாதேசுவர மகிமையைச் சொன்னேன். இந்த மகாத்மியத்தைக் கேட்டவர்களுடைய பாபங்கள் பஸ்மமாகும். இனிப்போகேசுவர ஜோதிர்லிங்க மகிமையையும் அதன் உற்பத்தியையுஞ் சொல்லுகிறேன் என்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

வைத்தியநாதேசுவர மகிமையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தாறுவது

போகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

சௌநகாதிமுநிவர்களே! ஒருகாலத்தில் தாருகையென்னும் இராட்சதப்பெண் பார்வதிதேவியைப் பூஜித்து அப்பெருமாட்டியால் பெருவலிமைபெற்று அதனால் கர்வித்திருந்தனள். அவள் புருஷன் தாருகன் அவனும் மகாபலவான். அநேகமான பலவான்களானஅசுரர்களுடன்கூடிப் பலவிடங்களிற் போர்செய்து செயங்கொண்டு யாகங்களையும் தருமங்களையும் அழித்துக்கொண்டிருந்தனன். அந்தத் தாருகைக்கு, மேற்கடற்கரையில் பதினறு யோசனை விஸ்தீரணமுடைய வனமே வாசஸ்தானம். அந்த வனமானது தாருகையானவள் பார்வதியைநோக்கித் தவஞ்செய்து பெற்ற வரத்தால், நினைத்தவிடத்திற்குச் செல்லத்தக்கது. ஆதலின் அந்தத்தாருகை ஓடுமிடமெல்லாம் அந்த வனமும், அதிலுள்ள விருக்ஷங்கள் தடாகங்கள் மாடமாளிகைகள் அசுரர்கள் குடும்பங்கள் முதலிய யாவையும் உடன்கொண்டு செல்லத்தக்கது. தாருகையும் தாருகனும் அந்த வனத்துடன் ஆங்காங்குப்போய் எல்லோரையுந் துன்புறுத்த யாவரும் பயந்து ஔர்வமுநிவரிடஞ் சென்று ஸ்வாமீ! மகாநுபாவா! தேவரீர் தயைசெய்யாவிடின் நாங்கள் யாவரும் இவ்வசுரர்களால் இறப்போம். நீரோ சகலகாரியங்களையும் நிறைவேற்றும் வல்லமையுடையவர். பூமியில் உம்மையன்றி இரக்ஷிப்பவரொருவருமிலர். உம்மையன்றி வேறியாவரிடத்திற்போய் எங்கள் ஆபத்தை யகற்றுவோம். நீர் விழித்துப்பார்த்தால் எல்லோரும் ஓடிப்போய்விடுவார்கள். இல்லாவிடிற் சாய்மராவார்கள். தேவரீரிடத்தில் சிவதேஜஸு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. உம்மையடுத்தவர்கட்குச் சந்திரனைப்போலச்சுகங்கொடுக்கிறீர் என்றிவ்வாறு பலவிதமாக யாவருந்துதிக்கையில், ஔர்வமுநிவர் அடுத்தவரைக் காப்பாற்று மியல்புடையராதலின், நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். இரட்சிப்பேனென்று கூறி, அவ்விராக்கதர்கட்குச் சாபமிட்டதாவது:—இராக்

கதர்கள் இனியிவ்வாறு உலகத்திலுள்ள பிராணிகளைத் துன்பப்படுத்தினு லும் தர்மங்களையழித்தாலும் யாகங்களைச் சிதைத்தாலும் அவர்கள் உடனே மரணமடைவர் என்பது. இவ்வாறு ஔர்வமுநிவர் அரக்கர்களைச் சபித்துச் சரணமடைந்தவர்களைத் தமதிச்சையின்படியே போகவிடுத்து, தம்மைச் சர ணமடைந்தவர்கட்குச் சுகமுண்டாம்வண்ணந் தவஞ்செய்யத்தொடங்கினர். அவ்வசுரர்கட்கு ஔர்வமுநிவர் சாபமிட்டவகையை யுணர்ந்த தேவர்கள் யுத்தசந்நத்தராகிப் போருக்கெழுந்து சிறிதும் பயமின்றி அசுரரை யெதிர்த் துச் சண்டைசெய்தனர்.

அப்போரில் ஆயுதங்களால் அநேக அசுரரிறந்தனர். இவ்வாறு அபஜயமடைந்தஅசுரர்கள்என்னசெய்வோம்; எங்கேபோவோம்; போர்புரி யும்நம்மவர் இறக்கின்றனரேயன்றி வெற்றிபெற்றிலர் ; கஷ்டம்வந்ததே என யோசிக்கலாயினர். ஔர்வமுநிவர்சாபத்தால் அசுரர்கள் அபஜயமடை வதை வனத்தோடுடன்வந்துகொண்டிருந்த தாருகை கேள்வியுற்று, அசுரர் களே! யான் பூர்வத்தில் தவஞ்செய்து நான் சென்றவிடமெல்லாம் இவ்வ னம் இதிலுள்ள எல்லாவற்றோடும் பின்றொடர்ந்து வரப் பார்வதிதேவியால் வரம்பெற்றுள்ளேனுகையால், நமக்கு எவ்வகையிலுங் கஷ்டமே வரமாட் டாது. இவ்வனத்தைச் சலத்திலேயே நிறுத்திக்கொண்டு வசித்திருந்தால், சிறிதுகஷ்டமுமின்றிச் சுகமாக வாழலாம் எனக்கூறினள். அதனைக் கேட்ட இராக்ஷதர்கள் மிக்க சந்தோஷமடைந்து, நீ மகா புண்ணியவதி; யோக்கிய வதி; எங்கட்கு மகாராணியான உன்னால் நாங்கள் ஔர்வமுநிவர் சாபமேற் றும், இறந்துபோவதினின்று காப்பாற்றப்பட்டோமென்றுகூறி, அவள்இர க்ஷிப்பாளென்று தீர்மானித்து, இவ்வனத்தோடு நாம் அப்படியே விரைவா கச்சென்று எங்கேயாவது சுகித்திருப்போமெனப் பேசிக்கொண்டிருக்கை யில், தேவர்கள் யாவரும் மீண்டும் அங்கே போர்க்கருவிகளோடு வந்து சேர்ந்து அவர்களைத்தொந்தரவுசெய்தார்கள். அவ்வமரர்களால்அலைப்புண்டு அசுரர்கள் வருந்துங்காலத்தில், தாருகையானவள்அந்தவனத்தைச் சுகமான இடத்திற்குக் கொண்டுபோகக்கருதி, பார்வதிதேவியை ஜயஜயவென்று பல வாறு துதிக்க, சிறகுடைய பர்வதமானது எவ்வாறு விரைந்து பறந்துசெ ல்லுமோ அதுபோல அவ்வனமானது அங்கிருந்து மேலே கிளம்பிச் சமுத் திரமத்தியிற்போய்ச்சேர்ந்தது. அதனால் உபவனம்-நீர்நிலை-கோட்டை-மாட மாளிகைகள் - சுவர்க்கத்திலுஞ் சிறந்த சுகங்கொடுக்கும் உத்தியானவன முதலியவற்றுடன் அவ்வனம் வந்துசேர்ந்தமையின், அவர்கள் யாவரும் நிர் ப்பயமாயிருந்தனர். அதுமுதல் ஔர்வசாபத்திற்கஞ்சிப் பூமியில்வாராது சமு த்திரத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்து அங்கே யாவராயினும் மரக்கலங் களிலேறி வரக்கண்டால் அவர்களைக் கொலைசெய்வதும், விலங்கிடுவதும், காராக்கிருகத்தி லிருக்கச்செய்வதுமாகத் துன்புறுத்திவந்தனர். முன்னே பூமியிற்செய்த கஷ்டங்கள்போலவே சமுத்திரத்திலகப்பட்டோரைத் தொந் தரைசெய்துவந்தனர்.

இஃதிவ்வாறிருக்கையில், வியாபாரவிஷயமாகவாவது விநோதார்த்தமாகவாவது ஓடமேறிக் கடலில் எவரேனும் வரக்கண்டால், அசுரர்கள் தம் மாயையால் கண்ணுக்குப்புலப்படாது மறைந்துநின்று சமீபித்து வந்தபொழுது, அவர்களையெல்லாம் அந்த ஜலமார்க்கமாகவே யிழுத்துக்கொண்டுபோய், தங்கள் வனத்திற் பலவாறு துன்புறுத்துவாராயினர். இவ்வாறு பலமுறை வருவதும் மனிதர்களைப் பிடித்துக்கொண்டுபோவதும் கொலைசெய்வதுமாயிருந்தனர். அசுரர் செய்துவருந் துன்பத்தால் தேவர்களும் மாநுடரும் துக்கக்கடலிலாழ்ந்தனர். அசுரர்களால் காராக்கிருகத்தில் அடைபட்டிருந்தவர்களில் சுப்பிரிய னென்னும் ஓர் வைசிய சிரேஷ்டன் சிவபக்தனாதலின், தன்னுடனிருப்பவர்களைநோக்கிச்சொல்லுகின்றான். அன்பர்களே! நாம் சிவபூஜை செய்யுமெல்லையும் இக்கஷ்டங்களை யநுபவிக்கவேண்டியதே. நாம் விரைவிற் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டும் எனக் கூறி, சுப்பிரியன் அவர்கள் யாவர்க்கும் சிவமந்திரங்களை யுபதேசித்து, பார்த்திவலிங்க பூஜை செய்யப்பழக்கி, தானும் அவர்களோடிருந்து யாவருமாகச் சிவலிங்கார்ச்சனை செய்துவந்தனர். அதிற்சிலர் சிவத்தியானத்திலிருந்தனர். சிலர் மானத பூஜையாற் சகல துக்கங்களையும் நீங்கியிருந்தனர். அவ்வைசியப்பிரபு பார்த்திவலிங்கத்திற்கு விசேஷமான பூஜையை இடையறாது விதிப்படி செய்தும், தெரியாதவர்கட்கெல்லாம்கிரமத்தை நன்றாகவுணர்த்திச் செய்வித்தும்வந்தனன். இதனால் அக்காராக்கிருகத்திலிருந்த யாவரும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமந்திரத்தால் சிவத்தியானபரராகவிருந்தனர். சுப்பிரியனென்பவன் சிவப்பிரியனானான். அவன் சிவயோகத்தி லிருந்துகொண்டிருக்கையில் சிவபெருமான் அவன் விஷயத்திற் களிகொண்டு பிரத்தியக்ஷமாய், தன்னை மறந்திருக்குஞ் சுப்பிரியனைச் சிவயோகத்தினின்று விழிப்பித்தனர். இவ்வாறு இவர்கள் யாவரும் சிவபூஜை செய்துகொண்டிருந்த காலம் ஆறுமாதங்களானமையின், அசுரர்கள் இவர்கள் யாது செய்துகொண்டிருக்கின்றனரெனக் கண்டுவரும்படி தமது சேவகரை யனுப்ப, அச்சேவகர்கள் அப்படியே காராக்கிருகத்தையடைந்து காண்கையில், சிவபெருமான் பிரத்தியக்ஷமாயிருப்பதைப் பார்த்துத் தாருகனிடஞ்சென்று இச்செய்தியைக் கூற, தாருகன் உடனே காராக்கிருகத்திற்குவந்து சிவப்பிரியனைக்கண்டு, நீ என்னவகையாகத் தியானஞ்செய்கிறாய்? அதனைச் சத்தியமாகச் சொல் என, இவனும் அருகிருப்பவரும் ஒன்றுமுரையாது நீயே தெரிந்துகொள்வாய் எனக்கூற, தாருகன் கோபித்து அசுரர்களையழைத்து இவர்கள் எல்லோரையுஞ் சங்கரிக்கவேண்டுமெனக் கட்டளையிட, அசுரர்கள் யாவரும் உத்திரவின்படி அநேக ஆயுதங்களைத் தாங்கிவருகையில், வைசியசிரேஷ்டனாகிய சிவப்பிரியன் பயத்துடன் துன்புற்று, ஸ்வாமீ! அபயம். சங்கரா! அபயம். ஸர்வமுந் தானேயானவனே! அபயம் என்று தியானிக்க, பூமியினின்றொரு ஆலயம் நான்கு வாயில்களோடும், அதின்மத்தியில் திவ்விய தேஜோமயமான சிவரூபம் பரிவார தேவர்களால் துதிசெய்யப்படுவதாகவுந்தோன்றி, நான் உங்களைக்காக்கிறேனென்று அபயவார்த்தைகள்கூறி, பாசுபதாஸ்திரத்தைக்கொடுக்க, சுப்

பிரியன் தனக்குச் சிவபெருமான் பிரசாதித்த பாசுபதாஸ்திரத்தால் சகல ராக்ஷதர்களையுஞ் சங்கரித்துவிட்டனன். இவ்வாறு அசுரர்யாவரும் அழிந்த பின்னர், சுப்பிரியனைநோக்கி இவ்வனத்தில் இனி வருணாச்சிரம தருமங்கள் செவ்வனே நடந்தேறிவரும். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள் தருமங்கள் தவறார்கள். பிரமசரிய கிருகஸ்த வானப்பிரஸ்த சந்நியாசிகள் தங்கள் ஆச்சிரமவொழுக்கங்களை நீங்கார்கள். துஷ்டர்கள் இங்கிருக்க இடமில்லை எனக்கூறிக்கொண்டிருக்கையில், தாருகி உமாதேவியாரைத் தோத்திரஞ்செய்ய, பார்வதாதேவியார் பிரசன்னமாய் உனக்கு யாதுவேண்டும்? என, என்வமிசம் அழியாதிருக்கவேண்டும் எனவேண்ட, தேவி உன்வமிசத்தைச் சத்தியமாகக்காக்கிறேனென வரங்கொடுத்து, சிவபெருமானிடஞ்சென்று, ஸ்வாமீ! நான் அசுரவம்சத்தை இரக்ஷிக்கிறதாக வரங்கொடுத்திருத்தலின் தேவரீர் அவர்களைக் காப்பாற்றவேண்டும் என, சிவபெருமான் கோபிக்க, பார்வதி தேவரீர்சொல்லியவார்த்தை யுகாந்தத்தில் அவசியம் நிகழுமாக: அதுவரையில் இராட்சர்களிருக்கவேண்டும். இத்தாமத சிருஷ்டியில்லாவிடிற் பிரளயம் நடவாது. இத்தாருகை பலமுடையவள். இவள் அரசாக்ஷியில் அசுரவிருத்தியுண்டாகட்டும். அவர்கள் இவ்வனத்தில் வசித்திருக்கட்டும் என, சிவபெருமான் தேவியின்விருப்பங் கைகூடவும், காராக்கிருகத்திலிருந்தவர்கட்குக் கொடுத்தவரம் சரிவரநடக்கவுங்கருதி,நான் இங்கேயேயிருந்து இவ்வசுரரால் தீமைகள் நிகழாவண்ணஞ் செய்வேன். மகாசேனராஜன் குமாரனான வீரசேனன் கலியுகமுடிவுங் கிருதயுக ஆரம்பமுமாகுங்காலத்தில் என்னைத்தரிசித்து என்னைப்பூஜித்து அப்பலனால் சக்ரவர்த்தியாகப்போகின்றான். அவனுக்கு நானாதர்மங்களையுபதேசித்து விருத்திசெய்யவேண்டி யிருக்கிறது என்று சிவபெருமான் சொல்லினர். இவ்வாறு சிவபெருமானும் பார்வதியும் சம்பாஷித்துப் போகேசுவரனென்னும் பெயரால் அங்கு எழுந்தருளி யிருக்கின்றனர் என்று ஸூதமுநிவர்கூறினர். அதனைக் கேட்ட நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரே! வீரசேனன்யாதுகாரணமாக அங்கேபோயினன் எனக்கேட்க ஸூதமுநிவர் சொல்லுகின்றார்.

நைஷதமென்னும் பட்டணத்தில் க்ஷத்திரியகுலத்தில் மகாசேனனுக்குப் புத்திரனாகத்தோன்றி அகண்டமான பார்த்திவலிங்கபூஜையைப் பன்னிரண்டுவருஷகாலஞ்செய்து சிவபெருமானைத்தரிசித்து, மரத்தாலொருமீன்செய்து அதனை ஈயத்தாலலங்கரித்து அதற்குமாயாசக்தியுண்டாக்கிக் கொடுக்கப்பெற்று, 'அநேகமரக்கலங்களுடன் அப்பொழுதுவசிக்கும் மிலேச்சசேனையோடு தாருகையின்வனத்தையடைந்து, அவ்வனத்தில் ஒன்றியாய்ச்சென்று என்னாற் படைக்கப்பட்டுள்ள இத்திருக்கோயிலில் விளங்கும் போகேச்சுவரலிங்கத்திற்குப்பூஜைசெய்து பாசுபதாஸ்திரத்தைப்பெற்று,பார்வதிதேவியின் பரிபூரணகடாக்ஷம்பெற்ற தாருகைமுதலிய இராக்ஷதஸ்திரீகளையும் தாருகன்முதலிய இராக்ஷதர்களையுஞ் சங்கரிக்கக்கடவாய். உன்னைக் கண்டமாத்திரத்தில் தாருகையின் வலிமை சிறிதுமின்றி விலகும்' என வரம்

பெற்று, சர்வ சக்தனுகி யெல்லாவற்றையும் நிறைவேற்றக்கடவாய் என ஆசீர்வதிக்கப்பெற்று, அவ்வாறே அவ் வீரசேனன் அந்தவனத்தையடைந்து அங்கிருந்த அசுரர்களையுஞ் சங்கரித்து அங்கேயேஅரசுசெய்வான்: இதுவே போகேசுவர ஜோதிர்லிங்க மகாத்மியம்: இனி இராமேசுவர ஜோதிர்லிங்க மகாத்மியத்தைச் சொல்லுகிறேனென்று ஸூதமுநிவர் கூறியருளினர்.

போகேசுவரமகிமையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தேழாவது
இராமேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளான சௌநகாதி முநிவர்களே! மேலுமே லுஞ் சிவசரித்திரங்களையே கேட்கவிரும்பிய நீங்கள் இராமேசுவர ஜோதிர் லிங்க மகிமையைப் பக்தியுடன் கேளுங்கள். அது சகல பாபங்களையு மகற்ற வல்லது என்று ஸூதமுநிவர்சொல்லத்தொடங்கினர்: ஒருகாலத்தில் அயோத்திதேசத்தரசனுகிய தசரதசக்ரவர்த்தியின் குமாரராகிய ஸ்ரீராமர் தன் தம்பி இலட்சுமணரோடும் சுக்கிரீவன் முதலிய பதினெட்டுப் பதுமத்தொகையுடைய மகா பலசாலிகளான வானரவீரர்களோடுங் கூடித் தென் கடற்கரையையடைந்து அங்கே தங்கி, தம்பியாலும் சகல வானரவீரர்களாலுஞ் சேவிக்கப்பட்டு, ஜநகராஜன் மகளாகிய சீதாதேவி என்னுடன் எப்பொழுது கூடி வாழ்வாளென்று விசாரப்பட்டுக்கொண்டு, இந்தச்சமுத்திரமானது மிகப்பெரிதாயிருக்கின்றது. தாண்டிச்செல்லவேண்டிய சைநியங்கள் வானரங்களாயிருக்கின்றன. நமக்குச் சத்துருவான இராவணன் திருக்கைலாயபர்வதத்தை யெடுத்த மகாபல பராக்கிரமசாலி. இஃதெப்படிநடக்குமோ? என்று துக்கித்துக்கொண்டு, தன் தம்பியாகிய இலட்சுமணனைப் பார்த்து, தம்பி இலக்குமணு! யான் தாகமாயிருத்தலின் எனக்கு ஜலம் வேண்டும் எனக் கூறுமுன், அருகிருந்து கேட்ட வானரவீரர்கள் விரைவில் புனிதமான தீர்த்தத்தைச் சேகரித்துக்கொண்டுவந்து வைத்து, ஸ்வாமீ! சுத்தஜலங்கொண்டுவந்தோம் அதனைப் பருகலாமென, ஸ்ரீராமர் அந்த ஜலகும்பத்தைக் கையிலெடுத்து, சிவபூஜை செய்யாமையை நினைத்துக்கொண்டு, வானரவீரர்களே! யான் சிவபூஜைசெய்யும் வழக்கமுடைமையை நீங்களும் அறிவீர்களே: யான் இன்னும் அதனைச்செய்யாமையின் ஜலபானஞ்செய்தல் யுக்தமல்லவென்று கூறி, நீர் பருகுவதை நிறுத்தி, பார்த்திவலிங்கமொன்றியற்றி ஆவாஹநமுதல் நமஸ்காரம் இறுதியாயுள்ள பூஜைமுழுவதுங் கிரமப்படிசெய்து, சிவபெருமானை மஹாதுக்கியைந்த பலவிதமான தோத்திரங்களால் துதித்து, சங்கரா! இக்கடல்நீர் விசேஷமானது. என் சத்துருவான இராவணன் பெரும்பலவான். எனக்கோ மனோவிகாரமுடைய வானரங்களே சேனையாயிருக்கின்றன. இச்சமயத்தில் தேவரீர் கடாக்ஷம் மிகுதியும் இருக்கவேண்டும். இராவணன்



28. ஸ்ரீ இராமர் இலக்குமண் அநும வானரசேனா சகிதமாய்ச் சேதுவில் சிவலிங்கபூசைசெய்தது.

C.R.S.

கல்லவடம் - வாத்தியவிசேடம்

தேவரீருக்குஅன்பனுதலின் மாநுடரால் ஜயித்தற்கசாத்தியனுயிருக்கின்றுன். உலகோபகாரமான இந்த இராவணசங்கார விஷயத்தில் தேவரீர் கருணை வைத்தருளவேண்டும் எனப் பிரார்த்தித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து ஜயஜயவென்று புகழ்ந்து, சிவமந்திரத் தியானத்துடன் புனர்பூஜை செய்து கல்லவாத்திய முழக்குகையில், சிவபெருமான் அவரது பூஜைக்கு மகிழ்ந்து சகல பரிவாரங்களுடன் தனது நிஜவடிவாகப் பிரசன்னராகி, ஸ்ரீராமா! உனக்குச் சுபம் உண்டாகுகவெனக்கூற, சிவபெருமானது திவ்விய மங்கள தேஜோரூபத்தைத்தரிசித்து மீண்டும் முறைப்படியர்ச்சித்து அநேக விதமான தோத்திரங்களால் துதித்து நமஸ்கரித்து, எனக்கு இராவணனைச் செயிக்கத்தக்க வரங்கொடுக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறே உனக்கு ஜயமுண்டாகும் எனக் கூறினர். ஸ்ரீராமர் தான் பருகும்படி சேகரித்துவைத்த ஜலத்தைச் சிவபெருமானுக்குச் சமர்ப்பித்துப்பருகி, மீண்டும் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் இத்திருவுருவத்துடனே இங்கெழுந்தருளியிருந்து எல்லோரையும் புனிதமாக்கிவர வேண்டும் எனப் பிரார்த்திக்க,சிவபெருமான் அவ்வாறே ஸ்ரீராமரது வேண்டுகோளுக்கிரங்கி இராமேசுவரமென்னும் பெயருடன் திரிலோகத்தாராலும் புகழும்படி அங்கெழுந்தருளி யிருந்தனர். இந்த இராமேசுவர ஜோதிர்லிங்கப் பிரபாவத்தைக் கேட்டவர்களுக்குச் சகலபாபங்களும் விலகும் என்று கூறியருளினர்.

இராமேசுவரமகிமையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தேட்டாவது
குஸ்மேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளைநோக்கி, இனி குஸ்மேசுவர ஜோதிர்லிங்க மகிமையுங் கூறுகின்றேன் கேட்பீர்களாகவெனச் சொல்லத்தொடங்கினர்: ருஷிகளே! தென்தேசத்தில் தேவகிரி யென்றொரு பர்வதமுண்டு. அதனருகே ஒருபிராமண அக்கிரஹாரமுண்டு. அவ்வக்கிரஹாரத்தில் பாரத்துவாஜ கோத்திரத்திற்பிறந்த சுதன்மன் என்னும் பெயருடைய சிவஞானியாகிய உத்தமப்பிராமணனிருந்தனன். அப்பிராமணனுக்குப் பதிவிரதையும் தர்மமார்க்கத்தில் மனமுடையவளுமான சுதேகை யென்னும் அன்புள்ள மனைவியிருந்தாள். அந்தச் சுதன்மன் தேவபூஜை அதிதிபூஜை முதலியவற்றைக் கிரமப்படிசெய்பவனும், வேதவேதாங்கங்களைப் பாராயணஞ்செய்பவனும், திரிகாலத்திலும் அக்கினிகாரியஞ்செய்பவனும், சூரியனுக்குச் சமானமான சிவதேஜசுடையவனும், சீஷர்கட்கு வேதாத்தியயனமுதலியவற்றை நன்குணர்த்தவல்லவனும், தனவானும், யாசித்தவர்கட்குக் கொடுக்கக் குறையா மனமுடையவனும், பல நற்குணங்கட்கு இருப்பிடமானவனுமாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்து, ஆயுள்காலம் அதிகமாகச்சென்று

விட்டமையின், அவன்மனைவி ஸுதேஹை யென்பவளுடைய ருதுகால முழுவதும் வியர்த்தமாயிற்று. அவன் சிவஞானியாயிருந்தமையின் இவ்விஷயத்தை மனத்திற் கொள்ளவேயில்லை. தனக்கு மோக்ஷங்கொடுப்பவனும் சிவபெருமானே: சம்சார துக்கத்தினின்று புனிதமாக்குபவனும் சிவபெருமானே யென்று நினைத்து மனோதுக்கமின்றியிருந்தனன். இவனது மனைவியோ புத்திரப்பேறில்லாமற் போயிற்றேயென்று துக்கித்துத்தினந்தோறும் புருஷனைப்பார்த்து, ஸ்வாமீ! நமக்குச் சந்தானமுண்டாகத்தக்க விஷயத்திற் பிரயத்தினஞ்செய்யவேண்டுமெனக் கூற, ஸுதன்மன் மனைவியைநோக்கி, பெண்ணே! பிள்ளைகள்யாவர்? தாய்தந்தையர்யாவர்? பந்துயாவன்? பிரியன் எவன்? உயிருக்கும் உடலுக்கும் தொந்தமென்ன? ஆராயுங்கால் எல்லாம் மாயாவிலாசமேயன்றி வேறின்றே என்று இன்னணைய பலவெடுத்துக்கூறிக் கண்டித்துக்கொண்டு பிள்ளையில்லையென்னுந் துக்கத்தைவிட்டுவிடவேண்டும். தினந்தோறும் இவ்விஷயத்தை யென்னிடஞ் சொல்லவேண்டாம் எனக் கூறி, சிவதருமங்களில் மிக விருப்புடையவனுய்ப் பெருஞ்சந்தோஷத்துடன் சுகதுக்கங்களைநீக்கி யிருந்தனன். ஸுதன்மன் ஒருகாலத்தில் தன் வீட்டினின்று நீங்கி,மனைவியுடன் சத்புருஷரை யடைந்து விநோதமாகப்பொழுது போக்கிக்கொண்டிருக்கையில், ஸுதேஹையும் அவ்வேதியர் மனைவியருடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தனள். அப்பொழுது அம்மாதரிலொருத்தி, அம்மா! நீ சந்தானமில்லாதவள். சந்தானமில்லாதிருக்கையிலேயே யேன் கர்வமடைகிறாய்? அக்கர்வத்தா லென்ன பயனுண்டு? நான் புத்திரபாக்கியம் பெற்றவள். என்செல்வத்தை யென் புத்திரன் அநுபவிப்பான். உன் செல்வத்தை அநுபவிப்பவர் யாவர்? ஓ மலடீ! உன்பொருளை மன்னன் அநுபவிக்கவேண்டி வருமேயன்றி வேறெவர் அநுபவித்தற்குரியர்? என்று கூறி அவமதித்தாள். அதனைக்கேட்ட ஸுதேஹை மனவருத்தத்துடன் வீட்டிற்குவந்தனள். தன் கணவனும் சிறிதுநேரத்தில் வீட்டிற்குவந்துசேர, உடனே ஸுதேஹை தன்கணவனோடு நடந்தவிஷயத்தைவெளியிட, ஸுதன்மன் அவர்கள் என்னசொல்லினும் நமக்கென்ன? சொல்லிக் கொள்ளட்டும். நீயேன் அதனைக் கவனிக்கிறாய்? என்று பலவாறு கண்டித்து, தான் வருந்தாதிருந்தனன். அவமானமுற்றது சகியாத மனைவியானவள் கணவனை நன்மொழியாற்பணிந்து, ஸ்வாமீ! எவ்வகையிலாவது நாமொரு புத்திரனைத் தேடிக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தித்து, அவ்வாறுசெய்யாத பக்ஷத்தில் யான் உயிர்துறப்பேன் எனக்கூற, ஸுதன்மா மனவருத்தமுற்று, சிவாக்கினிவளர்த்திப் பூஜைமுடித்து, அதனருகே இரண்டு புஷ்பங்களைவைத்து, வலப்புறத்து மலர்கிடைப்பின் புத்திரபாக்கியமுண்டாகுமென்று நியமனஞ் செய்துகொண்டு மனைவியையழைத்து, பெண்ணே! நீ சிவபெருமானைத் தியானஞ்செய்து புத்திரபாக்கிய முண்டாவதற்கு உனக்கிஷ்டமான மலரை யெடுத்துக்கொள் எனக்கூற, ஸுதேஹை தன் கணவன் புத்திரப்பேறடைவதானுற் கிடைக்கவேண்டுமென்று நியமித்தமலரை யான் அடையவேண்டுமெ

ன்று சர்வலோகநாதனுகியசிவபெருமானைத்தியானித்து,அக்கினிதேவனையும் பணிந்து, தன் கணவன் வைத்த மலர்களிரண்டில் ஒன்றினை யெடுத்தனள். அது புத்திரஹீனமான மலராதலின் ஸுதன்மாபெருமூச்சுவிட்டு,பெண்ணே! ஈசுவராக்கினை யிவ்வாறிருக்கின்றது என்று அவளுக்குச் சமாதானங்கூறி, இனி நீ சிவத்தியானஞ் செய்யவேண்டுமென்றுகூறி, தானும் புத்திரப்பேற்றில் விருப்பற்று, சிவத்தியானபரனுகத் தருமகாரியத்திலிருந்தனன்.

இஃதிவ்வாறிருப்பினும் ஸுதேஹை புத்திரவிருப்பத்தினின்று நீங்காதவளாய்க் கணவனைப்பார்த்து ஸ்வாமீ! என்னிடத்திற் புத்திரோற்பத்தியில்லையாயினும் நீர் வேருெரு மனைவியை மணம்புரிந்தாவது நமது வமிசத்தை விருத்திசெய்யுமாறு புதல்வனைப் பெறவேண்டும், நீர் மறுமணஞ் செய்துகொள்ள நான் சம்மதிக்கிறேன்; இனி நீர் வேறு பெண்ணை மணம்புரியின் அவளிடத்திற் புத்திர சந்தான முண்டாவதற்குத் தடையில்லை எனப் பிரார்த்திக்க, ஸுதன்மன் மனைவியை நோக்கி, பெண்ணே! நான் மணஞ் செய்துகொள்வேனுயின் தற்காலஞ்செய்துவருந் தருமங்கட் கிடையூறு சம்பவிக்கும்; உனக்கும் எனக்கும் பலவித மனஸ்தாபங்கள் வருமாதலின் இனி யான் மணம் புரியச் சம்மதியேனெனக் கூறியும், ஸுதேஹை தனது தமயன் புத்திரியாகிய குஸ்மையென்னுங் கன்னிகையை மணஞ் செய்துகொள்ளவேண்டும் என, ஸுதன்மன் நான் இவளை மணம் புரிவது இப்போது உனக்குச் சம்மதமாயிருக்கிறது. நான் மணஞ் செய்துகொண்டு இவள் பிள்ளையைப் பெற்ருல் அப்போது உனக்கு வருத்தமாயிருக்கும். நீயே இவளுடன் சண்டைசெய்வாய்: வேண்டாமென, ஸுதேஹை இவள் என் தமயன் குமாரி, என் மருகி. ஆதலால் நீர் மணஞ்செய்துகொள்வதால் நான் இவளைக் கௌரவமாக நடத்தி, சந்தானவிருப்பமுடையவளாதலின் உங்களிருவருக்கும் ஊழியஞ்செய்துவருவேன். நீர் மணஞ்செய்துகொள்ளவேண்டுவதேயெனப் பிரார்த்திக்க, ஸுதன்மன் மணஞ் செய்துகொள்ள மனம் விரும்பி, அப்படியே அவளை மணவினை முடித்துக்கொண்டபின், குசுமை யென்னும் இளைய மனைவியைப்பார்த்து, இந்த ஸுதேஹையோடு நீ சண்டை செய்யாமலும் இவளைப்பிரியாமலும் அன்போடு பாதுகாக்கவேண்டியதென்று மூத்தாள் கையைப்பற்றி இளையாள்கையி லொப்புவித்தனன். இளையாளும் கணவன்கூறிய வார்த்தைகளைக் குருமொழியாகக் கொண்டனள். மூத்த மனைவியாகிய ஸுதேஹையும் தன் தமயன்குமாரி வயதிற்சிறியவளாதலாலும் தானேகோரிக்கொண்டுவந்து தன் கணவனுக்கு மணஞ் செய்வித்த பெண்ணுனபடியாலும் வீட்டுவேலைகளையெல்லாந் தானே செய்துவந்தனள்.

ஒருகாலத்தில் ஸுதன்மன் தன் இளைய மனைவியாகிய குஸ்மையை நோக்கி, பெண்ணே! இனி நீ சிவபூஜையைத் தினந்தோறுந்தவருமற் செய்யவேண்டுமெனக் கூறி, சிவபூஜாகிரமத்தையும் போதிக்க, அவள் அவ்வாறே நாடோறும் நூற்றெருரு பார்த்திபலிங்கங்களைப் பூஜித்து அருகிலுள்ள ஒரு தடாகத்தில் விட்டுவருவாள். அவள் அவ்வாறு ஒவ்வொரு தினமுந்

தவறாது செய்துவருகையில் அவள் பூஜித்த லிங்கங்களின் தொகை லக்ஷமா யிற்று. அப்பொழுது சிவபெருமானுக்குக் கிருபையுண்டாகி, அவள் கருப் பமுற்றுச் சுப்பிரிய னென்னும் புத்திரனைப் பெற்றனள். ஸுதன்மன் அப்புத் திரனைப்பார்த்துப் பெருங்களிப்புற்று, இதுவரையில் சமுசாரத்தில் அகப்ப டாதிருப்பினுங் காலத்தையநுசரித்து, மனைவி புத்திரர் முதலானோரிடத்தில் ஆசையடைந்தனன். அதனைக் கண்ட மூத்தமனைவியோ தன் கணவன் குஸ் மையினிடத்திலும் அவள் புத்திரனிடத்திலும் அதிக அன்புடனிருப்பதால் மனவருத்தங்கொண்டு சிறிது கடுகடுப்பால், முன்னிருந்த அன்பு சிறிது சிறி தாகக்குறைந்து இலேசமுமின்றிப் பெரும்பகைகொண்டவளாயினள். மேல் நடந்த விருத்தாந்தங்களையுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் முனிவர்களே! என்று ஸூதமுனிவர் சொல்லலுற்றனர்.

முனிவர்களே! ஸுதன்மனுடைய மனைவியரிருவரில் இளையவளா கிய குஸ்மையையும் அவள் புத்திரனையும் எல்லோரும் அன்போடு கண்டு பேசுவதால் ஸுதேஹையின் மனம் நெருப்புபோலெரிந்தாள். அக்குமாரன் சிவாநுக்கிரகத்திற் செனித்தவனாதலின் வித்தை புத்தி வயது முதலியன படிப்படியாய் விருத்தியாகக்கண்டு, உறவினராகிய வேதியர்கள் பெண்கொ டுக்கிறதாகவந்து பேசி முடிவுசெய்து சுபலக்கினத்தில் விவாகஞ்செய்து முடித்தனர். ஸுதன்மன் குஸ்மையை மணஞ்செய்ததால் தான் அடையவே ண்டிய புத்திரானந்தத்தை யடைந்தனன். வீட்டிற்குவந்த உறவினர்யாவரும் இளையாளிடத்திற் பேசுவதும் அன்பு செலுத்துவதுமேயன்றி மூத்தாளிட த்திற்பேசுவாருமிலராக, ஸுதேஹை மனவருத்தமுற்றிருந்தாள். ஸுதன் மன் தன் மகனையும் மருகியையும் குஸ்மையின் இருதொடைமீ துட்கார்ந் திருக்கக்கண்டு பெருங்களிப்படைந்தான். குஸ்மை மனங்களிப்பது கண்டு சுதேஹை இனி யென்னசெய்வேனென் றழுதுகொண்டு கீழேவிழுந்தாள். சுதன்மன் தன் மூத்த மனைவியிடத்திலேயே அதிக அன்புவைத்திருந்தும், குஸ்மை பக்திசெய்துவந்தும், புத்திரனும் மருகியும் அடங்கியிருந்தும் யா வர் செய்யும் நன்மைகளையுங் கவனியாது சுதேஹை மாத்திரம் தன் மனத்தி லேயே ஏதோ வொருவருத்தமிருப்பதாகவே காட்டிக்கொண்டிருந்தாள். அதுகண்ட குஸ்மை அவளைப்பார்த்து நீயேன் இப்படியிருக்கிறாய்? இவள் உன்மருகி; இவன் உன்மகன்; நீ ஜேஷ்டை; கணவர் உன்னிடத்தில் அதிக அன்புவைத்திருக்கிறார். அப்படியிருந்தும் நீவருத்தமாயிருப்பதுயாதுக்கு? என்று கூறியும், தன் கோபாக்கினி தணியாதவளாய் ஒன்றுங் கூறாது, என் கோபம் எப்படித்தணியுமென்று யோசித்து, இக்குஸ்மை கண்ணீர்விட்டழு தாலன்றி என்துக்கமானது சிறிதும் தணியாது என்றுகருதி, இதற்கு யாது செய்யவேண்டுமென்றால், குஸ்மையின் மகனை சுப்பிரியனை மாத்திரம் கொ ன்றுவிடவேண்டும். மேலே நடப்பது நடக்கட்டும் என்று தீர்மானித்து, (உலகத்திலே துஷ்டர்கள் இது செய்யத்தக்கது இது செய்யத்தகாதென்



C.K.S.

௨௯. குஸ்மேசர் - குஸ்மை பூசித்த லக்ஷம் பார்த்திவ சிவலிங்கங்களை விடுத்த தடாகத்தினின்று சிவபெருமான் தோன்றி அவள் கணவனுடைய மூத்தமனைவி கொன்ற புதல்வனை யெழுப்பியது.

பது தெரியாராகலின்) ஒருநாள் குஸ்மையின் மகனும் மருகியுஞ் சயனித்துக்கொண்டிருக்கையில், சுப்பிரியனைச் சுரிகையாற் பல துண்டங்களாக வெட்டி அப்பொழுதே ஒருவருமுணராது எடுத்துக்கொண்டுபோய், குஸ்மை சிவபூஜைசெய்த லக்ஷலிங்கங்களையும் விடுத்த அக்குளத்தில் ஒருபக்கத்திலே கொட்டிவிட்டு, வீட்டிற்குவந்து ஒன்று மறியாதவள்போலச் சயனித்துக்கொண் டிருந்தாள். பொழுதுவிடிவதாயிற்று. அப்பொழுது குஸ்மையெழுந்து ஸ்நானஞ்செய்து வீட்டுவேலை முடித்துச் சிவபூஜையிலிருந்தனள். ஸுதர்மனும் எழுந்து ஸ்நானம்-நித்யகருமசிவபூசைமுதலியன செய்துகொண்டிருந்தான். மூத்தவளும் எழுந்து, தினமும் வருத்தமாயிருப்பதுபோலன்றி மனத்திருப்தியாய் வீட்டுவேலையிலிருந்தாள். மருகி நித்திரை தெளிந்தெழுந்து பக்கத்திற் கணவனைக்காணாது, உதிரஞ்சிந்தியிருப்பதும் அவயவங்களைத் துண்டித்த துண்டுகளிற் சில விழுந்துகிடப்பதுங்கண்டு, துக்கத்துடன் தன் மாமியையழைத்து, உன்மகன் எங்கே? பக்கமெல்லாம் உதிரமயமாயிருப்பதேன்? அவயவத்துண்டுகள் காணப்படுவானேன்? எனக்கூறுகையில், மூத்தாள்கேட்டு உள்ளே சந்தோஷ நிறைந்திருப்பினும், ஐயோ அப்படியா முடிந்தது என்று மேலுக்கழுதாள். இளையாள் தன் மருகியின் முறைப்பாடுகேட்பதாயினுஞ் சிவபூஜைசெய்து தியானசமாதியிலிருத்தலின், அதனைக்கைவிடாமலும் மனமிளையாமலு மிருந்தாள். அவளுக்குப் புத்திரனிடத்தில் ஆசையிருப்பினும் அதனை நினையாது துக்கமின்றிக்கேவலம் சிவத்தியானத்திலிருந்தாள். ஸுதன்மனும் தன் சிவத்தியானத்துடனே இதனைக்கேட்பினும் இதில் மனஞ்செலுத்தாமற் சிவயோகத்திலேயே யிருந்தான். அவர்கள் சிவத்தியானம் முடிவதற்கு இரண்டுஜாமமாயின. அவர்கள் இருவரும் புத்திரனிறந்ததாகத் தெரிந்துகொண்டு, சிறிதுந் துக்கியாது இதுவரையில் நாம் யாரை உபாசித்துவந்தோமோ அவரே நம்மைத்திருப்திசெய்ய அப்புத்திரனை யெழுப்பித்தரவேண்டுமென்று கருதி மனந்தளர்ந்திலர். அப்படிப்பிரபுவான சிவபெருமான் நம்மை இரக்ஷிக்காவிட்டால் (மலர்கொய்வோன் கட்டிக்கொடுத்த மாலையானது சிறிதுநேரத்தில் வாடிவிடுமாயின் இதன்தன்மை யிவ்வளவேயென் றெண்ணுவதுபோல) நமது கர்மாநுசாரம் இவ்வளவேயென்று எண்ணிக்கொள்வோம் என்று தீர்மானித்தனர். குஸ்மைவழக்கப்படி தான் பூஜித்த இலிங்கங்களை யெடுத்துக்கொண்டுகுளத்திற்குப்போய் அதில்விட்டுவிட்டு, வீட்டிற்குத்திரும்புகையில், மூத்தாளால் துண்டித்து எறியப்பட்ட புத்திரன் அக்குளத்திலே உயிர்கொண்டு தோன்றி, அம்மா! நானும்வருகின்றேன். நான் இறந்துபிழைத்தேன் எனக்கூறக்கேட்டு, குஸ்மை முன்போலவே சந்தோஷித்தனள். அப்பொழுது சிவபெருமான் பிரசன்னராகி குஸ்மையைநோக்கி, நான் உனக்குவரங்கொடுக்கிறேன். உன்புத்திரனை மூத்தாள் கொன்றனள். அவனை உயிர்ப்பித்துக்கொடுத்தேன். அந்தச் சுதேஹையை எனது திரிசூலத்தாற் சங்கரிக்கிறேன் என, குஸ்மை ஸ்வாமீ! அவள் என் அத்தை. எனக்கு மூத்தவள். அபகாரஞ்செய்தவர்

கட்கு உபகாரஞ்செய்வதே தகுதி. தேவரீரது தரிசனத்தாலேயே அவளுக்குப் பாபங்களெல்லாமொழியும். அவளுக்கு நல்லபுத்திவரும். அவளுக்கு மீண்டும் அபகாரஞ்செய்விப்பது யுக்தமல்ல என, சிவபெருமான் இன்னும் ஏதேனும் வேண்டியவரத்தைக் கேட்டுக்கொள் என,குஸ்மை எனக்கு வரங் கொடுப்பதாயின் தேவரீர் உலகங்களை இரக்ஷிக்கவேண்டி இச்சுந்தரரூபத்துடன் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறே உன்பெயரால் குஸ்மேசனென்று இங்கெழுந்தருளியிருக்கிறேன். நீ சிவலிங்கங்களையெல்லாம்விடுத்த இத்தடாகமே ஆலயமாகுக. உங்கட்கு ஒருவனேபுத்திரன். அவன்மூலமாக இந்தவமிசத்தில் அநேக புத்திரர்களுண்டாகி, அவர்களில் தீர்க்காயுவுடையவரும், வித்தியாவான்களும்,புத்திமான்களும், தனவான்களும், யாகாதிகாரிகளும், மனைவிபுத்திராதிகளுடன்கூடினவருமாக விளங்குவர். இவ்வமிசம் விருத்தியடைந்திருக்குமென்று வரங்கொடுத்து, சிவலிங்கரூபமடைந்து குஸ்மேசுவரனென்னும் பெயரால் அக்குளமேகோயிலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். ஸுதர்மனும் குஸ்மையும் ஸுதேஹையை யழைத்து, சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும் நூற்றொரு பிரதக்ஷிணஞ் செய்யச்சொல்லி, அவள்கையாற் சிவபூஜைசெய்வித்து, சிவாநுக்கிரகத்தால் அவள் மனத்திலிருந்த பொறாமையைப் போக்கடித்து யாவருஞ் சுகித்திருந்தனர். இவ்வகைய பிரதாபத்தையுடைய குஸ்மேசுவரனைத் தரிசித்தமாத்திரத்திற் சகல பாபங்களுமொழியும். சுக்கிலபக்ஷசந்திரன்போலச் சம்பத்துகள் விருத்தியடையும். சௌநகாதிமுநிவர்களே! இதுவரையில் நீங்கள் கேட்ட ஜோதிர்லிங்கங்களின் சரித்திரங்களைச் சொல்லி முடித்தேன் எனக் கூறிய ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிய சரிதங்களாற் பெருங்களிப்புற்றோமாயினும் இன்னுஞ் சிவசரித்திரங்களையே கேட்க விரும்புகின்றோம் என, ஸூதமுநிவர் ஆநந்தமயமாய்ச் சிவத்தியானஞ்செய்து சொல்லத்தொடங்கினர்.

குஸ்மேசுவரமகிமை யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது

இரணியகசிபன் வரம்பெற்றதும்,

பிரகலாதனைப் படிப்பித்ததுமுரைத்த அத்தியாயம்.

மகருஷிகளே! சிவபெருமானுடைய திவ்விய கல்லியாண குணங்களை வருணித்துச் சொல்ல யாவராலுமுடியாது. ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்களையும் உலகத்திலிருக்கும் மணலையும் மழைத்துளிகளையும் எண்ணிமுடித்தாலும் முடிக்கக்கூடுமாயினும், சிவபெருமானுடைய லீலாவிநோத குணங்களைக் கண்க்கிடலாமென்றால் யாவரொருவரும் வல்லவராகார். ஆயி

னும் நீங்கள் யாவரும் என்னைக் கேட்பதால் என் புத்திக்குத் தோன்றியவரையிலும் என் குருவாகிய வியாஸபகவான் எனக்கு உரைத்தது போலவுஞ் சிறிது சொல்லுகிறேன் கேளுங்கள்: முன்னொரு காலத்தில் நரசிங்கரூபமெடுத்த விஷ்ணுவானவர் இரணியகசிபனைச் சங்கரித்துக் கோபாக்கினி தணியாமல் எவ்வெவர் தோத்திரஞ்செய்வதும் கொள்ளாதிருக்கக்கண்ட தேவர்கள் யாவரும் சிவபெருமானைப் பிரார்த்திக்க, சிவபெருமான் சரபரூபமடைந்து நரசிங்கத்தைக் கண்டமாத்திரத்தில், நரசிங்கமானது சிவபெருமானிடத்தில் ஐக்கியமாயிற்று. எனக்கூறக் கேட்ட நைமிசாரணியவாசிகள் ஸ்வாமீ! அடியேங்கட்குத் தேவரீர் நரசிங்காவதார சரித்திரத்தைச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

ஒரு காலத்தில், லக்ஷ்மியானவள் விஷ்ணுவைப்பார்த்து, ஸ்வாமீ! தேவரீர் திருவுருவம் மிகக்கோமள மாதலின் எவ்வாறு போர்புரிதற்கியலும் எனக்கேட்க, திருமால் பெண்ணே! நீ விரும்பினல் விரைவிற் பார்ப்பாய் என்று கூறினர். இதுநிற்க: முன்னே ஜயவிஜயரென்னுந் துவாரபாலர்கள் சநத்குமாரமுனிவர் முதலானருடன் போர்புரிந்தபொழுது, விஷ்ணு அங்கே சென்று அம்முனிவர்களை நீங்கள் வழிமறுத்தது பிசகு என்று தடுத்து, முனிவர்களை நோக்கி நீங்கள் அவர்கள் பதவியை யிழந்து உலகிற்பிறந்து துன்புறும்படி சபிக்கலாமா? அநுக்கிரகஞ் செய்யவேண்டும் என, முனிவர்கள் திருமாலைப் பார்த்து இவர்கள் உன்னைப் பக்திசெய்வதான ஜனனங்களெடுத்தால் ஏழுஜனனங்களினும், உன்னைப் பகைகொள்வதான ஜனனங்களெடுத்தால் மூன்றுஜனனங்களினும் மீண்டுந் தங்கள்பதவியையடைவார்கள். இதில் இவர்கள்விரும்பத்தக்கது எதுவோ அதை அடையட்டும் என, அதற்கு ஜயவிஜயர்கள் நாங்கள் ஏழுஜன்னமெல்லையும் ஸ்ரீலக்ஷ்மீபதியைப்பிரிந்திருக்கமாட்டோமாதலின் மூன்று ஜனனங்களிலேயே பகைமைகொண் டாயினும் எங்கள்பதவியையடைகிறோமென்றார்கள். அதுவே விஷ்ணு விருப்பமுமாகவிருந்தது. உடனேஜயவிஜயர்கள் தங்கள் பதவியினின்று நீங்கி உலகத்தில் காசிபர் வமிசத்தில்ஹிரணியாக்ஷன் ஹிரணியகசிபனென்னும்பெயரையுடையமகாபலபராக்கிரமசாலிகளான இராக்ஷதர்களாகத் தோன்றினர்கள்* சநகாதிமுனிவர்களும் பிரகலாதன்முதலியவர்களாகச் சனித்தனர். ஹிரணிகசிபனைச் சாபவிமோசனஞ்செய்யும்படி நரசிங்கரூபமாகவந்தனர். வேறொரு ஜனனத்தில் அவர்களே இராவண கும்பகர்ணர்களாகச் சனித்தனர். அப்பொழுது நரசிங்கமூர்த்தியே தசரதராமனக வந்தனர். அக்காலையில் சநகாதி முனிவர்கள் விபீஷணர் முதலியவர்களாகப் பிறந்தனர். இன்னும் பலதேவர்கள் சுக்கிரீவ அங்கதாதிவானரவீரர்களாக வந்தனர். மூன்றும் பிறவியில் அவர்களே சிசு

*சநகன் - சநந்தனன் - சநாதனன் - சநத்குமாரனென்னும் இம் மகருஷிகள் நால்வரும், விஷ்ணுவின் துவாரபாலகரான ஜய விஜயருக்குச் சாப மளித்தமையின் மீண்டும் அவர்களைக்கிருதார்த்தராக்கத் தாமும் மானுடப்பிறவியடைந்தனரெனக் கொள்க.

பால தந்தவக்கிரர்களாகத் தமகேஷனென்னும் க்ஷத்திரியகுலத்தில் வந்தனர். அப்பொழுது நரசிங்கமூர்த்தியே கிருஷ்ணவதாரஞ் செய்தனர். சநகாதிகள் அக்குரூரன் முதலியவர்களாகத் தோன்றினர். இனி பாபங்களை யொழிக்கத் தக்க நரசிங்கமூர்த்தியின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் அதனைக்கேளுங் கள் என்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

முநிவர்களே! ஹிரணியாக்ஷன் சிறுவனாயிருக்கையில் விளையாடு நிமித்தம் சூரியனைக் கூப்பிடுவான். அவன் வனங்களிலுள்ள சிங்கங்களையும் மதயானைகளையும் ஏறிச் சவாரிவிட்டு விளையாடுவதேயன்றிச் சாமானியமான குதிரையிலேறுவதில்லை. சண்டைசெய்ய வேண்டியிருப்பின் சிங்கமுதலிய துஷ்டமிருகங்களோடு சண்டை செய்வான். இப்படிப்பட்ட பலபராக்கிரமசா லியாதலின், தேவர்களைத் துன்பப்படுத்தவேண்டு மென்று நினைத்து, சாமா னியர்களைப்போல அடிப்பதும் பிடிப்பதும் வேதியர்களையும் யாகங்களையுஞ் சங்கரிப்பதுஞ் சரியன்றென்று, உலகத்தையே ஒரு பாய்போலச் சுருட்டி, நாயானது மாவு மூட்டையை வாயிற் கவ்விக்கொண்டு அநாயாசமாகச் செல்வதுபோல,இவ்விரணியன் பூமியைவாயிற்கவ்விக்கொண்டுஜலத்தில்மூழ் கியிருந்தான். இதனைக்கண்ட பிரமாதிதேவர்பெருவருத்தமடைந்து விஷ்ணு மூர்த்தியைப் பலவகையாகத் துதிசெய்ய, விஷ்ணுவானவர் பிரமதேவனு டைய நாசியிலிருந்து வராகவுருவத்தோ டவதரித்துச் சீக்கிரத்திலேயேவிரு

𑌶𑍍𑌲𑍋॥ 𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌤𑌥𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌨𑌾𑌸𑌾𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌾𑌚𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃। 𑌵𑌾𑌰𑌾𑌹𑌂𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌗𑌤𑌃॥ உரு॥ 𑌵𑌰𑌾𑌹𑌉𑌵𑌾𑌚॥ 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌯𑍁𑌧𑍍𑌯𑌤𑍇𑌤𑍇𑌨 𑌤𑌾𑌵𑌜𑍍𑌜𑌲𑌵𑌿𑌶𑍋𑌷𑌣𑌮𑍍॥ உடு॥ 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌞𑍍𑌚𑌤𑍍𑌵𑌯𑌾𑌚𑌾𑌤𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌕𑌥𑍍𑌯𑌤𑍇𑌮𑌯𑌾। 𑌤𑌤𑌸𑍍𑌚𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌨𑌾𑌤𑍇𑌨𑌜𑌲𑌂𑌨𑍀𑌤𑍍𑌵𑌾𑌮𑍁𑌖𑍇𑌤𑌥𑌾॥ உகூ॥ 𑌪𑍀𑌤𑌞𑍍𑌚𑌰𑍁𑌷𑌿𑌣𑌾𑌤𑌾𑌵𑌦𑍍𑌯𑌾𑌵𑌦𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌂𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇॥ உகூ ॥

ஸமுத்பந்நஸ்ததாவிஷ்ணுர்நாஸாரந்த்ராச்சப்ரஹ்மண: | வாராஹம்ரூபமா ஸ்தாயக்ரமேணவ்ருத்திதாங்கத: || உரு || வராஹஉவாச || யாவச்சயுத்யதேதேந தாவஜ்ஜலவிஶோஷணம் || உடு || கர்தவ்யஞ்சத்வயாசாத்ர இத்யேவங்கத்யதேமயா | ததஸ் சாஞ்ஜலிநாதேந ஜலந்நீத்வா முகேததா || உகூ || பீதஞ்சருஷிணாதாவத்யாவத்யுத்தம் ஸமாப்யதே || உகூஉ ||

த்தியடைந்து, அங்கிருந்து உலகத்தையடைந்து,உலகமுழுவதும் நீர் மயமா கவே யிருக்கக்கண்டு அதிற் பிரவேசிக்கப் போம்பொழுது நாரதமுநிவரைச் சந்தியாவந்தனஞ் செய்துகொண்டிருக்கப்பார்த்தார். நாரதமுநிவரும் அங்கு வந்திருக்கும் வராகமூர்த்தியைத்தரிசித்து நமஸ்கரித்து, யான் சந்தியாவந்த னஞ் செய்துகொள்ள உத்தரவளிக்க வேண்டுமென, வராகமூர்த்தி நாரத ரே! நான் ஹிரணியாக்ஷனைச் சண்டை செய்து சங்கரிக்குமெல்லையும் இந்த ச்சலத்தை உலர்த்துவிக்க வேண்டியது. இது உம்மாலேயே யாகத்தக்கது என,நாரதர் அதற்கிணங்கி இருகரங்களாலுமெடுத்துத் தான் வாயிற்பெய்து வராஹமூர்த்திக்கும் ஹிரணியாக்ஷனுக்கும் போர் முடிவுபெறுமட்டும் வைத் துக்கொண்டிருந்தார். பிறகு விஷ்ணுவானவர் ஹிரணியாக்ஷனைக்கண்டுபிடித்

து அவனுடன்*ஜலத்தில் ஐந்நூறு வருஷமும்,உலகத்தில் ஐந்நூறுவருஷமும் பெரும்போர் செய்து, †அவனைச்சங்கரித்து அந்தப் பூமியைத் தமது வாயி

* ஜலமென்றது-நாரதமுனிவர் சமுத்திரபானஞ் செய்கையில் சிறிது சேற்றுடன்கலந்து நின்ற ஜலமென வடமொழி வியாக்கியானக்காரர் எழுதியிருக்கின்றனர்.

† வராஹமூர்த்தியின் சரிதம் வேறு வகையாகவும் வழங்கும். அதாவது:—வராஹமூர்த்தி ஹிரணியாக்ஷனைச் சங்கரித்த வெற்றியால் மமதை யுற்று அஷ்டகுல பர்வதங்களை யிடித்தும், பலவுயிர்களை வாயிற் பெய்தும், சப்த மேகங்களும் அஷ்ட கஜங்களும் நாகலோகமும் நடுங்கக் கர்ச்சித்தும், பூமியைத் தாங்கும் நவநாகங்களும் நடுங்கும்படி தரையை மோந்தும், பூமியைக் குத்தித் தோண்டியும், கட்கடையில் ஊழித்தீயைச் சிந்தியுநிற்கக்கண்ட தேவர்கள் பயந்து நடுக்கமெய்தி, வெள்ளிமலையை யடைந்து சிவபெருமானிடம் விண்ணப்பஞ்செய்து முறையிட, சிவபெருமான் தேவர்களே! அஞ்சவேண்டாம் என்று அவர்களை யனுப்பி, ஓர் வேடுவவடிவு தாங்கி வராகத்தை யடைந்து தமது கைச்சூலத்தால் அதன் சிரத்திற் குத்தி, நிலமிசை வீழ்த்தி ஒரு கொம்பைப் பறித்தனர். அதனுல் அகந்தை கழிந்த வராகம் சிவபெருமானைப் பிரார்த்தக்க, சிவபெருமான் முன் ஒடித்த அக் கொம்பினைத் திருமார்பி லணிந்து, மற்றொரு கொம்புடன் விடுத்துச் சென்றனர். திருமால் பண்டைய வுணர்வுதோன்றிச் சிவலிங்கார்ச்சனைசெய்து, தேவர்கள் முனிவர்கள் கேட்கும்படி வராகபுராண மோதி வைகுந்தஞ்சேர்ந்து வாழ்ந்திருந்தனர் என்பதாம்.

பூர்வத்தில் தேவர்கட்கும் அசுரர்கட்கும் நடந்த போரில் தேவர்கள் தோல்வியடைந்து திருமாலைப் பிரார்த்திக்க, அவர் சங்கு சக்கர கதை கட்க கோதண்டங்களோடு போர்க்கள மடைந்து அசுரர் பலரைச் சங்கரிக்க,அவர்களிற் சிலர் புறங்கொடுத் தோடி, பிருகுமுனிவர் மனைவியாகிய கியாதியினிடத் தடைக்கலம்புக்கனர். விண்டு அவர்களைப் பின்றொடர்ந்து செல்ல, கியாதி பணிந்து நிற்கக்கண்டும் கோபாவேசத்துடன் கியாதியையும் அசுரரையுஞ் சக்கரத்தாற் கொன்றனர். பிருகுமுனிவர் இவர்க ளிரைச்சலால் யோகநீங்கி நடந்த துணர்ந்து, மாதவ! நீ உன் மாமியைக் கொன்ற பாபத்தாற் பத்துப்பிறவிக ளடைந்து துன்புறுக. நின்னடியார் வேதவிருத்தமாகத் தீக்ஷைபுரிக எனச் சபித்து, சுக்கிரனுல் உயிருற்ற கியாதியுடன் வாழ்ந்திருந்தனர். அச் சாபம் பெற்ற திருமால் பாசுபதவிரதம் பூண்டு விபூதி ருத்திராக்ஷ மணிந்து உருத்திரசமகமந்திரஞ் ஜபித்து, சருகு நீர் காற்று முதலியவற்றைப் பக்ஷித்துப் பலகாலந் தவஞ்செய்து சிவதரிசனம் பெற்று "அரகர" எனத் துதித்து அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து, பிருகு முனிவன் சாபத்தை நீக்கியருளவேண்டுமென்று வேண்ட, சிவபெருமான் நாரண! நம் மடியார்சொல் பிழையாது. ஆயினும் நீ நம்மை அருச்சித்தமையின் அவை யுலகிற் குதவியாகுக வென்றும், அப் பத்துப்பிறவியில் நாமே முதலைந்தில் உன்னைத் தண்டிக்கவும், இறுதி யைந்தில் அநுக்கிரகிக்கவும் பெறுவை யென்றும் அருளினர். விண்டு தேவரீர் திருவுள்ளத்தின்படியே யாகுகவென் றங்கீகரித்தனர். இதனுல் மச்சாவதாரத்தில் கண்ணைப் பறிக்கப்பட்டும், (தலையறுக்கப்பட்டும்), கூர்மாவதாரத்தில் ஓட்டினைப் பறிக்கப்பட்டும், வராஹாவதாரத்தில் கொம்பினை முரிக்கப்பட்டும், நரசிங்காவதாரத்தில் தோலை யுரிக்கப்பட்டும், வாமனாவதாரத்தில் முதுகெலும்பைப் பறிக்கப்பட்டுந் தண்டனை யெய்தினர். இதுவே இவர் தசாவதாரங்கட்குங் காரணமென ஸ்ரீகாந்தமஹாபுராணம் சங்கரசங்கிதையில், குமாரோற்பவகண்ட காளிகாகண்டங்களும், ஆதித்தியமஹாபுராண, லிங்கமகாபுராணங் களுங்கூறுநிற்கும். ☞ இவ்விபரங்கள் நமது சிவபராக்ரமத்திற் பரக்கக்காணலாம்

லேயே வைத்துக்கொண்டு வந்து பிரமனுக்கு ஒப்பித்துவிட்டு, செய்தற்கருமையான காரியத்தைச் செய்த விஷ்ணுமூர்த்தி அந்தர்த்தன மாயினர். இது நிற்க.

இவ்வாறு விஷ்ணுமூர்த்தியால் ஹிரணியாக்ஷன் இறந்தானென்னுஞ் செய்தியைக்கேள்விப்பட்ட ஹிரணியகசிபன், தம்பியைக்கொன்ற விஷ்ணுவைச்சங்கரித்துத் தன் துக்கத்தையொழிக்கக்கருதி, பிரமதேவனைநோக்கிப் பத்தாயிரவருஷம் கடுந்தவஞ்செய்துகொண்டிருந்தனன். அதுவரையில் இவன்பேரில் விருக்ஷங்கள் முளைத்து நாற்புறங்களிலுங்கிளைத்துப் பெருவனமாற்று. அம்மரங்களிற் பலவகைப் பக்ஷிகள் கூடுகட்டி வாசஞ்செய்து முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்தன. அவனோ தவத்தை நீங்கினதில்லை. அவனது தவாக்கினிதேவலோகத்திற் சென்று கொளுத்த, தேவர்கள் அதனைச்சகியாமற் பிரமதேவனிடஞ்சென்று உம்மை நோக்கியே தவஞ்செய்கின்றான். நீர் சும்மாயிருப்பது சரியல்ல. நாங்கள் அவனது தவச்சுவாலையால் இறக்க நேரிடும் எனப்பலவாறு கூற, பிரமதேவர் அவனுக்கு வரங்கொடுக்கக் கருதி, ஹிரணியகசிபனையடைந்து, உன்தவத்திற்காகப் பெருமகிழ் வுற்றேன். உனக்கு வேண்டியவரம் யாது? எனக்கேட்க, ஹிரணியகசிபன், ஸ்வாமீ! உமது படைப்பாகிய உலகத்தில் யாவனொருவனும் எவ்வகை யாயுதத்தினாலும் இரவிலும் பகலிலும் என்னைக் கொல்லப்படாது. இவ்வகையவரம் வேண்டுமெனக் கேட்க, பிரமதேவரும் அவ்வாறே வரங்கொடுத்துத் தன துலகஞ் சேர்ந்தனர். இரணியகசிபன் சோணிதபுரியையடைந்து சகல தைத்தியர்களையும் விளித்து, அசுரர்களே! நீங்கள் 'யாவரும் எங்கள் கட்டளைக்கடங்கியிருக்கவேண்டும். அவ்வாறிராதவர்களைச் சங்கிகரித்து விடுவோம். கட்டளைக்கடங்கினவர்களைக் காப்பாற்றுவோம். சுவர்க்கலோகமும் மத்தியலோகமும் எங்களால் ஜயிக்கப்பட்டன. திரிலோகங்களையும் தன்வசமாக்கி இரணியகசிபமகாராஜன் ஏகசக்ராதிபதியாய் விஷ்ணுத்வேஷத்துடன் அரசுசெய்துவருகிறான். எவ்விடத்திலும் யாக காரியங்கள்செய்யப்படாது' என்று—பலருமறியப் பறையறையுங்கள்: அவ்வாறே சுவர்க்கலோகத்திலும் பாதாளலோகத்திலும், 'மற்றலோகங்கள் கைக்கொள்ளப்பட்டன. போர்புரியவேண்டியவர்கள் போர்செய்ய வரலாம். சரணாகதி யெனவந்தவர்களைக் காப்பாற்றுவோம் எனப்பறையறையுங்கள்' என, அவர்கள் அவ்வாறே திரிலோகங்களிலும் பலருமறியப் பறையறைந்தனர். எங்கும் எதிரின்றி இரணியகசிபன் அரசுசெலுத்திவந்தனன். இதுநிற்க.

சிறிது காலத்தில், விஷ்ணுத்துவேஷ முடைய இரணியகசிபனுக்கு விஷ்ணுபத்தியுடைய பிரகலாதன் என்னும்புத்திரன் ஜனித்தான். அச்சிறுவன் பிள்ளைமைத்தன்மையினால் வாய்விட்டுஅழுகையிலேயும் விஷ்ணுவின் திருநாமங்களைக்கூறும் இயல்புடையவனேயன்றி வேறொருவழக்கமுடையவனல்லன் இச்சிறுவன் ஐந்து வயதடையவே, இரணியகசிபன் சகலவாத்திய கோஷத்துடன் அசுரச்சேனைகள்புடைசூழ்ந்துவரநிருத்தநாட்டியமுதலியவைபவங்க

ளோடு வித்தியாப்பியாசஞ் செய்விக்கக்கருதி உபாத்தியாயனுடைய வீட்டுக்குக் கொண்டுபோய் வித்தியாப்பியாசஞ் செய்விக்கும்படி கட்டளையிட, அசுரவுபாத்தியாயன் வழக்கப்படி சிறுவனைப்பார்த்து முதலில் இரணியாயநம: எனச்சொல்லும்படி சொல்ல, பிரகலாதன் ஓம் நமோநாராயணாய என்க்கூற, உபாத்தியாயன் அப்பா! அப்படிச் சொல்லாதே. சர்வலோகங்கட்கும் மகாப்பிரபுவாகிய உன் தந்தையின் பெயரையே முதலில் தோத்திரஞ் செய்யவேண்டும் என, பிரகலாதன் மீண்டும் அப்படியே கூற, உபாத்தியாயன் இரணியகசிபனைநோக்கிப் பிரபுவே! இது முதல்நாளாதலின் இதுவரையிலிருக்கட்டும். நாளையதினம் நான் கற்பிக்கிறேன். சிறுவனுஞ் சரியாய்ச் சொல்லுவான் என, பிரகலாதன் இன்றல்ல. நாளையல்ல. என்றைக்கும் நான் விஷ்ணுநாமத்தையன்றி வேறொன்றினைச் சொல்லவேமாட்டேன் எனக்கூற, பிரகலாதனை வீட்டிற்குக் கொண்டுபோயினர். சிறிது தினங்கள் சென்றபிறகு ஒரு தினம் இரணியகசிபன் தன் புத்திரரத்தினத்தினைத் தொடைமீதிருத்தி, குழந்தாய்! இதுவரையில் என்னவாசித்தனை? அதனைச்சொல்லென, பிரகலாதன் நான் ஓம் நமோ நாராயணாய என்பது படித்தேன் என, இரணியகசிபன் சினங்கொண்டு உபாத்தியாயனைவருவித்து என்பிள்ளைக்கு என்ன கற்பித்தனை? என வினவ, உபாத்தியாயன் ஐயா! உங்கள் புத்திரனால் என் கல்விச்சாலையிலிருக்குஞ் சிறியோரெல்லாங் கொடியராயினர். இஃதென்னால்ஆகத்தக்கதல்ல. இவன்எனக்குஅடங்கமாட்டான் என, இரணியகசிபன் தன் மனைவியாகிய கயாதுவை விளித்து, பெண்ணே! உன் பிள்ளை படித்ததைக்கேட்டுக்கொள்; அதற்கேற்ப அவனைத் தண்டனைசெய் என, கயாது தன் புத்திரனை அழைத்து அப்பா! இனி ஹரிநாமத்தைச் சொல்லாதே; உன் தந்தை திரிலோகங்கட்கும் பிரபுவாயிருக்கிறார்; அசுரர்கள் எவ்வளவு கௌரவமடைந்துள்ளார்? உன் சம்பத்து எப்படிப்பட்டது? இதனை யேன் அலக்ஷியஞ்செய்து ஹரிநாமத்தை விரும்புகிறாய்? என, பிரகலாதன், தாயே! நீயென்னசொன்னபோதிலும் பயன்படாது. ஒருகாலத்திலும் நான் விஷ்ணுநாமத்தை மறக்கவேமாட்டேன். ஒரு யானையானது தன்னைக் கொசுகு கடிக்குமென்று பயந்து அரசன் மாளிகைவாயிலிலிருந்து போய்விடுமோ? இந்த நீசனான இரணியகசிபன் வலிமை யெவ்வளவு? மகாநுபாவனான விஷ்ணுமூர்த்தியின் வலிமை யெவ்வளவு? இதனையறியாது நான் ஹரிபக்தியை விடுவேனா? நாவினால் விஷ்ணுவைத் துதிப்பதும், காதினால் ஹரிநாமங்களைக் கேட்பதும், தலையால் வணங்குவதும், கையால் பூஜைசெய்வதும், பாதங்களால் பிரதக்ஷிணஞ்செய்வதுமாக என்னுடைய அவயவங்களையெல்லாம் விஷ்ணுமூர்த்திக்கேசமர்ப்பித்து, அவருடைய கிருபையையடைய வேண்டுகிறேன். எது நடக்கத்தக்கதோ அஃது நடக்கக்கூடும். ஹரிநாமத்தை விடமாட்டேன் எனக் கூறக் கேட்ட, தாயாகிய கயாது பெருந்துயரத்துடன் தன் கணவனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் விடுத்து, இவன் எனக்கு அசாத்தியனாயிருக்கிறான் என, இரணியகசிபன் கடுங்கோபத்துடன் மந்திரிகளை விளித்து,

மந்திரிகளே! நமது அசுரகுலத்திற்கு ஒரு நெருப்பானது புத்திரரூபமாகப் பிறந்தது. குலத்துக்கு விரோதியான இச்சிறுவனை யெவ்வகையிலாவது— நெருப்பிலிட்டாவது, ஆயுதங்களால் துண்டுசெய்தாவது, விஷமூட்டியாவது, ஜலத்தில் முழுகச்செய்தாவது கொன்றுவிடவேண்டுமேயன்றி உயிரோடு வைத்திருக்கக்கூடாது. இவன் விஷ்ணுவை விட்டுவிடுகிறானோ உயிரைவிட்டு விடுகிறானோ பார்ப்போம் என்று உத்திரவு செய்து அவர்கள் வசத்தில் ஒப்புவிக்க, அவர்களும் அரசன் கட்டளையிட்டபடியே பலவித தண்டனைகள் செய்வாராயினர்.

பிரகலாதனை அழைத்துக்கொண்டுபோன மந்திரிகள் தண்டலாளர்களால் நெருப்பிலிடுவித்தனர்; அது அவனுக்குக் குளிர்ந்திருந்தது. பிறகு ஜலத்தில் எறிந்தனர்; அது மேடாக ஆய்விட்டது. மலைகளின் உச்சியிலிருந்து உருட்டிவிட்டனர்; அது பஞ்சுமெத்தைபோன்றிருந்தது. விஷமூட்டினர்; அஃதமிர்தமாயிருந்தது. ஆயுதங்களாலடிக்க அவை ஹரிநாமத்தியான பலத்தினால் புஷ்பங்கள்போலிருந்தன. இவர்கள் செய்த ஆக்கினைகளெல்லாம் பயன்படாவாயின. பிரகலாதனும் மென்மேலுஞ் சந்தோஷமடைந்திருந்தனன். மந்திரிகள் யாவருந் தாம் செய்த தண்டங்கள் பயன்படவில்லையென்னுந் துக்கமும், இவனுக்குக்கஷ்டமுண்டாகாததுபற்றிஆச்சரியமுமடைந்தவர்களாய், இனி அரசனிடத்தில் என்ன செய்தோமென்று சொல்வது? என யோசித்திருக்கையில், பிரகலாதன் அவர்களைப்பார்த்து, மந்திரிகளே! ஏன் ஆச்சரியமடைகிறீர்கள்? நீங்கள் எவ்வகையாகக் கஷ்டப்படுத்தினும் எனக்கு ஒருவருத்தமுமுண்டாகாது. ஏனெனில், விஷ்ணுமூர்த்திக்கு ஜலமே சயனஸ்தானம். அஃதென்னை யாதுசெய்யும்? அக்கினியே விஷ்ணுவின் திருவாய். [விஷமும் லக்ஷ்மியும் திருப்பாற்கடலிற் பிறந்தமையின்] விஷமோ என் மாமன். ஹிரணியாக்ஷனால் துன்புற்ற பூமியானது விஷ்ணுமூர்த்தியால் சுகம்பெற்றது. அஃதென்னையொன்றுஞ்செய்யாது. உலகமுழுவதும் நானும் நீரும் பராதீனமுடையவர்கள். உங்களால் என்னை யாதுசெய்ய முடியும்? எனக்கூறினன். அதனைக்கேட்டு முகஞ்சாம்பி மனம் வருந்தினவர்களாய் இரணியகசிபனிடம் வந்து சேர்ந்து, பிரபுவே! நாங்கள் இப்படிப்பட்டவனைப் பார்த்ததுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. இவனை வருத்தப்படுத்துவதால் ஒருபலனுமில்லை. நல்லவார்த்தைகளாற் சுவாதீனஞ்செய்துகொள்ளும் என்று இரணியனுக்குத் தாங்களியற்றியன யாவுமெடுத்துக்கூறினர்.

ஹிரணியகசிபன் மந்திரிகள்கூறியவார்த்தைகளால் மனமிகவருந்தி, புத்திரனை வசஞ்செய்துகொள்ளும்படி யானை குதிரை தேர் பல்லக்குமுதலிய வாகனங்களைக்கொடுத்தும் சிங்காசனத்திலிருத்தியும் சந்தோஷப்படுத்தினன். அப்பொழுதும் பிரகலாதன் ஹரிநாமத்தைவிட்டிலன். ஏனெனில், சமுசாரசுகத்தை வெறுத்த சுத்தஞானிகள் உலக சுகங்களெல்லாவற்றையுந் துரும்பாகவிடுத்து, பகவத் பக்திசெய்வதே பெரும்பேறெனக்கொள்வராதலின். இவ்வுபசாரங்கள் பிரகலாதனுக்கு ஒருவகையிலுந் திருப்தியுண்

டாக்கவில்லை. இரணியகசிபன் மீண்டும் உபாத்தியாயனை வருவித்து, இனி இவனைத் தண்டித்து வித்தியாப்பியாசஞ்செய்துகொண்டுவருக எனவிடுப்ப, உபாத்தியாயன் பிரகலாதனைப்பார்த்து, அப்பா! நீ இப்பிள்ளைகளோடு கூடி விளையாடிக்கொண்டு வாசிக்கலாம். உன்தந்தை அகண்ட ஐசுவரியத்துடன் மூவுலகங்களையும் அரசுசெய்கிறார். அவருக்குப்பின் இவற்றிற்கெல்லாம் நீயே அதிகாரி. எங்கட்கெல்லாம் நீயே அரசன். இப் பிள்ளைகட்கெல்லாம் நீயே உபாத்தியாயனாயிருப்பாய் என, பிரகலாதன் அப்படியானால் நான் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறேனென்று, நாராயணாயநம: எனச்சொல்லிக்கொடுத்தனன். பிரகலாதன் அச்சிறுவரை அந்தரங்கமான விடத்திற் கொண்டுபோய், தாய் இல்லை. தந்தையில்லை. உறவினரில்லை. சகோதரரில்லை. சிநேகிதரில்லை. மனைவியில்லை. இவர்களெல்லாம் சமுசாரசுகத்தையன்றிப்பிரமானந்தசுகத்தைக்கொடுக்க வல்லவரல்லர். சொப்பனமாத்திரமாக விளங்குவது. சாசுவித சுகம் வேண்டுமாயின் விஷ்ணுமூர்த்தியைச்சேவித்தே அடையவேண்டும் எனக்கூறினன். அதனைக்கேட்டபாடசாலைச் சிறுவரெல்லோரும் பெருஞ்சந்தோஷத்துடன் நாராயணஸ்மரணைசெய்துகொண்டிருக்கக்கண்ட உபாத்தியாயன், பிள்ளைகளே! என் ஜீவனத்தைக்கெடுக்கவா தொடங்கினீர்களென்று தண்டித்தான். அவ்வாறு தண்டனை பொறுக்கமுடியாத பிள்ளைகள் உபாத்தியாயனுக்கஞ்சி நாரணநாம பாராயணத்தைவிடுத்தனர். பிரகலாதன்மாத்திரம் உபாத்தியாயன்தண்டனைக்குச் சிறிதும் பயப்படாது பக்தியோடு ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தான். உபாத்தியாயன் பிரகலாதனைக்கண்டு, ஏது உன் பிதாவின் சொல்லைக்கடந்து நடக்கின்றாய் உன்னை அநேகவிதமாகத் தண்டிப்பேன். ஹரி நாமத்தைச்சொல்லாதே என, பிரகலாதன் ஐயா! நீர் சொல்வது சரியே. தந்தைசொல்லைக் கடக்கக்கூடாது. பாரமார்த்தமான பிதா வெளிப்படும் வரையில் சரீரசம்பந்தியான தந்தையின் சொல்லைக் கொள்ளவேண்டும். பாரமார்த்த பிதா வெளிப்பட்ட பின்னர் இப்பிதாவினால் காரியமில்லை. சகலலோகத்திற்குஞ் சுகத்தைக் கொடுத்துச் சகல பாபங்களையும் ஒழிப்பவர் அந்தப்பிதாவே. விளக்கொளியைக்கண்டு மகிழ்வதெல்லாம் சூரியோதய மாகுமட்டுமே. சூரியோதயத்தின்பின்னர்விளக்கினாற் சிறிதும் உபயோகமுண்டோ? அஞ்ஞானியாயிருக்குமெல்லையும் சுக்கில ரத்த சம்பந்தமான சரீரத்துக்குப் பிதாவினால் பிரயோசனமுண்டு. ஞானமுதித்தபிறகு அஞ்ஞானியாயிருக்கும் பிதாவினால் யாது பிரயோசனம்? ஒன்றுமில்லை. இதுவே யென்பிதாவுக்கும் எனக்குமுள்ள சம்பந்தம். இவ்விஷயத்தை நான் நன்றாய் விசாரித்திருக்கிறேன். சரீரபிதாவாகிய இரணியகசிபன் அடித்தால் ஆத்மபிதாவாகிய ஹரி யென்னைக்காப்பாற்றுவான். இவன் என்பிராணனையே வாங்கிவிட்டாலும் வாங்கிவிடட்டும், நான் விஷ்ணுநாமத்தை விடமாட்டேன் என்றான். அதனைக்கேட்ட உபாத்தியாயன் கடுங்கோபங்கொண்டு பலவிதமாகத் தண்டித்தனன். அவை சிறிதும் பிரகலாதனைக் கஷ்டப்படுத்தவில்லை. சாமானிய மனுஷனை ஒருவன்

தண்டிப்பதாற் கஷ்டம் வராதிருக்கிறது பிரத்தியக்ஷமாதலின், விசேஷ பக்தியை விஷ்ணுவினிடத்தில் வைத்துள்ள பிரகலாதனுக்குச் சிறிதேனும் ஆபத்துவருமா? உபாத்தியாயன் பிரயத்தினமெல்லாம் பலன்படாததுகண்டு, பிரகலாதனை அழைத்துக்கொண்டு, இரணியகசிபனிடம்போய், உன் சிறுவனை ஒப்பித்துக்கொள். இவனால் மற்றப்பிள்ளைகளும் ஹரிநாமஞ்சொல்லக் கற்றுக்கொண்டனர். என்னாற்கூடியவரையிற் சர்வவிதத்திலும் பார்த்துவிட்டுவிட்டேன் என்றுசொல்லித் தன்னிச்சையின்படியே போயினன். இதனைக்கேட்ட ஹிரணியகசிபன் தன்புத்திரன் விஷயத்தில் தீராக்கவலைகொண்டு மேல் நடத்திய காரியங்களைச்சொல்லுகிறேன். நைமிசாரணிய வாசிகளாகிய முநிவர்களே: கேளுங்கள்! என்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

இரணியன் வரம்பெற்றதும் பிரகலாதனைப் படிப்பித்தது முரைத்தது முற்றிற்று.

அறுபதாவது

பிரகலாதன் விஷ்ணுமகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்: தந்தையான இரணியகசிபன் புத்திரன் விஷயத்தில் மனம்பொறுது தன் மந்திரியினுடைய புதல்வர்களை வருவித்து, நீங்கள் யாவரும் யோக்கியர்; கிருதகிருத்தியர்; பிதாவாக்கிய பரிபாலனஞ் செய்பவராதலின், நீங்கள் என் புதல்வனைச் சிநேகங்கொண்டு அவனுக்கு நற்புத்தி கற்பிக்கவேண்டும் என, அவர்கள் ஆஹா! அப்படியே செய்வோமென்று, பிரகலாதனை அங்கிருந்து மறைவிடத்திற் கொண்டுபோய், சிநேகிதனே! நாங்கள் சொல்வதைக்கேட்டு அதனை யங்கீகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அதாவது மகாநுபாவனான தந்தையைக் கோபம்வருமாறுசெய்தால் நீ யாதுசுகத்தை யடையப்போகின்றனை? தந்தைசொல்லும் வார்த்தையைக்கேட்டு க்ஷேமமடைவாயாக: இதுவே யெங்கள் விருப்பம்; உனக்குச்சொன்னோம்; உன் விருப்பம் எப்படியோ அப்படி நடக்கலாம். எனப் பலமுறை போதித்தார்கள். அதனைக்கேட்ட பிரகலாதன் - சிறுவர்களே! தந்தையெவன்? பந்து யாவன்? தாய் யாவள்? சகோதரர் யாவர்? சிநேகிதர் யாவர்? மனைவி எவள்? இது முழுதும் தேகசுகத்திற்கே யன்றி மோக்ஷசுகத்திற்கல்ல. மாலைப்பொழுதில் பலவிடத்திலிருந்துவந்த பறவைகளெல்லாம் ஒருமரத்தைச் சேர்ந்திருந்து, பொழுதுவிடிந்த வுடனே தத்தங்காரியங்கட்குப் பறந்துபோகின்றன. இத் தாய்தந்தையர் சங்கதி அப்படிப்பட்டது. இது தேகசம்பந்தமான கர்மபோகத்தை யநுபவித்து மீண்டும் வேறு பிறவியைக் கொடுக்கத்தக்கது. சமுசாரத்தில் இதைவிடவேறே சுகமில்லை. இஃது சொப்பனமாத்திரமாகத் தோன்றுகிறது. வாஸ்தவமானதல்ல. பகலிற்பார்த்த விஷயங்கள் இரவிற் கனவாகின்றன. ஆதலின் நீங்கள் யாவரும் விஷ்ணுபக்திசெய்து கிருதார்த்தர்களாகி நித்திய சுகத்தை

யடையவேண்டும். அப்படிச்செய்யாது சமுசார சுகத்திலேயே யிருந்துவிட்டால் யமபாசத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படுவீர்கள். நாம் இதுவரையிற் பிள்ளைகளாகவும் பிதாக்களாகவும் சகோதரர்களாகவும் எத்தனையோமுறை தோன்றியிருக்கிறோம். இவை கர்மபந்தத்தாற் கருப்பாசய முற்றவையே யன்றி வேறன்று. முழுப்பாபியாயின் நரகத்தையடைவான். முற்றும் புண்ணியஞ்செய்தவனாயின் சுவர்க்கத்தைப் பெறுவான். புண்ணிய பாபங்கள் இரண்டுங் கலந்திருப்பதால் மாநுட ஜனனங்கிடைக்கும். புண்ணிப பாபங்கள் நசித்தவிடத்தில் நித்தமான முக்திகிடைக்கும். கர்மசம்பந்தமானதேகாபிமான மிருக்கு மெல்லையும் முக்திகிடைக்கமாட்டாது. கர்மநாசமுண்டாகும் நிமித்தம் விஷ்ணுவைத் தியானிக்கவேண்டியது. ஹரிநாமத்தால் கர்மங்க ளொழியும். ஹரிசேவையின்றிக் கர்மமொழியவேண்டுமாயின், அநுபவித்தாவது பிராயச்சித்தங்கள்செய்தாவது ஒழிக்கவேண்டும். அப்படியொழிக்காவிடின் பிறவியையடைந்து அநுபவித்தே தீரவேண்டும். அழுக்குத்துணியிற் சாயமேறாது; அழுக்கில்லாத வஸ்திரத்திலேயே சாயம்பிடிக்கும். அதுபோலத் தேகாபிமானத்தாலுண்டான மனத்திலுள்ள அழுக்கு ஹரிபஜனையால் ஒழியுமன்றி வேறொன்றனாலுமொழியமாட்டாது. நீங்கள்யாவரும் மூர்க்கர்கள். என்னசொல்லினும் என்தந்தைகட்டளைப்படி நடப்பவர்களாயிருக்கிறீர்கள். சத்தியத்தை யறியீர்கள். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். நான் மட்டும் விஷ்ணுவையே பக்திசெய்வேனன்றி, என் தந்தைகட்டளையைச் சிறிதுங் கேட்கமாட்டேன். என் விருப்பின்படி நடப்பேன். நீங்கள் போங்கள் என, மந்திரிபுத்திரர்கள் மனவருத்தத்துடன் ஹிரணியகசிபனிடம் வந்து, அரசனே! நாங்கள் எவ்வகையாகச் சொன்னபோதிலும் உங்கள் புத்திரன் கேட்கிறவ னல்லனென்று சொன்னார்கள்.

ஹிரணியகசிபன் எல்லையில்லாத சினங்கொண்டு, புத்திரனை வருவித்து வெளியே கோபத்தைக்காட்டாதவனாய், தன்சமீபத்தே உட்காரவைத்துக்கொண்டு போதிக்கின்றான்: மகனே! நான்சொல்வதைக்கேள்; பிடிவாதத்தை விடு; உலகத்தில் ஜனங்கள் ஹரியை யேன் சேவிக்கிறார்களோ அவ்வகைய ஐசுவரியத்தை நீ என்னாலேயே அடைந்திருக்கிறாய். உனக்குநானே ஹரியன்றி வேறு ஹரி யொருவன் வேண்டுமா? தேவர்கள் தானவர்கள் கந்தர்வர்கள் நாகர்கள் ருஷிகள் முதலானவர்களும் எனக்கு வசப்பட்டவர்களாயிருக்கின்றார்கள். சகலலோகங்களும் என்ஆதீனத்திலிருக்கின்றன. நிக்கிரகாநுக்கிரகசாமர்த்தியமுடைய என்னைக்காட்டிலுஞ் சிறந்த ஹரியாரவன்? என்னை விட்டுவிட்டு நீ சொல்லுகிற ஹரி எங்கே யிருக்கின்றானோ? நீ காட்டுவாயா? நீ அறியாமையால் என்னைச்சேவிக்கா திருக்கிறாய் என்றனன். இவ்வாறுகூறிய தந்தையின் வார்த்தையைக்கேட்ட பிரகலாதன், ஓ தைத்தியா! இரணியகசிபா! நானே விஷ்ணு; என்னைக்காட்டிலும் வேறே விஷ்ணுவில்லையென்று சொல்லுகின்றனையே! விஷ்ணு மூர்த்திக்கும் உனக்கும் அதிக ஏற்றத்தாழ்வுகளுள. இரத்தினத்திற்கும் பருக்கைக்கும், குயிலுக்குந் தவளைக்

கும், சந்தனத்துக்குஞ் சேற்றுக்கும், சாந்தமுடையவனுக்குங் கோபமுடையவனுக்கும், சூரியனுக்கும் மின்மினிப்பூச்சிக்கும்,வேதத்திற்கும்சாதாரணப் பேச்சுக்கும், பொன்னுக்கும் இரும்புக்கும், பசுவுக்கும் பன்றிக்கும் உள்ள வித்தியாசத்தைப்போல விஷ்ணுமூர்த்திக்கும் உனக்கும் அவ்வளவு உயர்வு தாழ்வுகளிருக்கின்றன. அவரோசாந்தசீலர். நீயோ அகங்காரி; பாபி; காமுகன்; தேகாபிமானி; நீச்சன்; இறப்பவன்; பிறரைத்தூஷிப்பவன். நீவிஞ்சந்தோஷமடைவதால்மோக்ஷமடையமாட்டாய். விஷ்ணுவைச்சந்தோஷிப்பித்தால்மோக்ஷமடைவாய்; நீயேவிஷ்ணுவென்றுசொல்லநாணமடைவையோ? எவ்வளவு தைரியத்துடன் சொல்லுகிறுய்? விஷ்ணுவுக்கும் உனக்குமுள்ள தாரதம்மியங்களை நான் எடுத்துக்காட்டினேன்; அதனையறிந்துகொள். யானையைவிட்டு நரியை யேறுவாருமுண்டோ? இல்லை ஆதலின்,விஷ்ணுவைச்சேவிப்பேன். விஷ்ணுவைச்சேவிப்பேன். உனக்குஏதாவதுசெய்யச்சக்தியிருந்தால் விரைவிற்செய்யலாம் எனத் தந்தைக்குச் சிறிதும் பயப்படாது கூறினன். இரணியகசிபன் மகனைநோக்கி, சரியே ; நீ எவனைச் சேவிக்கவேண்டுமென்கின்றனையோ அந்தவிஷ்ணு எங்கிருக்கின்றுன் ? அவனைக்காட்டு கென்றனன். இதனைக்கேட்டுப் பிரகலாதன் சொல்லியவற்றையும், மேல்நடந்த சரிதங்களையுஞ் சொல்லுகிறேன் கேளுங்களென்று ஸூதமுனிவர் சந்தோஷ சித்தத்துடன் சொல்லத்தொடங்கினர்.

பிரகலாதன் விண்டுமேகிமை யுரைத்தது

முற்றிற்று.

அறுபத்தோன்றுவது

நரசிங்க சரபாவதாரங்களின் சரிதங்களுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறுர்: முனிவர்களே! இரணியகசிபன் வினவியவற்றிற்குப் பிரகலாதன் விடைவிடுத்ததைச் சொல்லுகிறேன். உலகத்திற்காரணப்படும் சமுத்திரங்கள் பர்வதங்கள் விருக்ஷங்கள் மேகங்கள் நதிகள் சேதனசேதனப் பொருள்கள் கிராமங்கள் பட்டணங்கள் சூரியன் சந்திரன் வனங்கள் * சைத்திரரதம் ஸ்மசானம் நீ நான் முதலிய ஸ்தூல ஸூக்ஷமப்பிரபஞ்ச முழுவதிலும் நிறைந்திருப்பவனே நாராயணன். அவன் முன்பின் நடு முடிவு முதலிய எவ்விடத்திலும் எக்காலத்திலும் விளங்குவன். அவனுடைய உருவத்தை வர்ணிக்க எனக்குச் சக்தியில்லை. ஹரி இல்லாத இடமே கிடையாது என்று கூறிய பிரகலாதனுடைய வார்த்தையைக்கேட்ட இரணியகசிபன், அடா பிரகலாதா! அந்த ஹரி யென்பவன் எவ்விடத்திலு மிருப்பதாக நீ கூறுதலின் அவன் இந்தத்தூணிலிருக்கின்றனனு? சொல் என, பிரகலாதன் சர்வவியாபியாகிய விஷ்ணு இந்தத் தூணிலுமிருக்கின்றுன் தடையில்லையென, தன்னினு மிக்க கடவு ளில்லையென்று இனி வருவதறியாமல் மிகச் செருக்குற்ற இரணியகசிபன் அப்படி இத்தூணில் ஹரி இருப்பானுகில்

* சைத்திரரதம் - குபேரனது நந்தவனம்.

நான்அவனைப் பூஜிக்கிறேன்பார் என்று கூறி, கோபத்தாற் கண் செவந்து பற்களைக் கடித்து மீசைதுடிக்கக் கத்தியைக் கையிற்பிடித்துத் தான் உட்கார்ந்திருந்த பீடத்திலிருந்து விரைவிலெழுந்து தன்கையிலிருக்குங் கத்தியை யோச்சி அத்தூணை வெட்டினன். அப்படித் தூணை வெட்டியபொழுது மலையின்பேரில் இடிவிழுந்தாற்போற் சப்த முண்டாயிற்று. அதுபோது அந்தத் தூணிலிருந்து விஷ்ணுமூர்த்தியானவர் சந்தியாகாலத்தில் உக்கிரமான கோபவுருவத்துடன் தைத்தியர்கள்யாவரும் பயப்படத்தக்கதாய் அவதரித்தனர். அவ்விஷ்ணுமூர்த்தியின் பாதிசரீரம் சிங்கவடிவமும் பாதிசரீரம் மானுடவடிவமுமான நரசிங்கவடிவத்துடன், பிரளயகால மேககோஷம் போலக் கர்ச்சித்துக்கொண்டு, பிடரிமயிர்கள் ஆகாயத்திலுள்ள மேகங்களையுடைக்கவும், சிங்கநாதம் திசைகளைச் செவிடுபடுத்தவும், முகத்திலுற்பவிக்கும் அக்கினிச்சுவாலையால் அசுரர்கள் எரிந்துபோகவும், ஹுங்காரங்களால் அசுரமாதர் கற்பத்திலுள்ள பிண்டங்களெல்லாம் விழுந்துவிடவும், பெரிய கூர்மையான வளைந்த நகங்களோடுகூடியும்விளங்கும் நரசிங்காவதாரத்தை அசுரர்கள் யாவருங்கண்டு பயந்தும், இரணியகசிபனுடைய உத்தரவின்படி யுத்தசந்நத்தராய்ப் பயங்கரமான யுத்தத்தைச் செய்து, நரசிங்கத்தின் மூக்கிலிருந்து வந்த காற்றின் வேகத்தினாலேயே நாசமுற்றனர்.

அவர்கள் யாவரும் க்ஷணநேரத்தில் அழிந்ததுகண்ட இரணியகசிபன் தானே போர்புரியக்கருதி, சர்வாயுதங்களுந் தாங்கி வந்து, நரசிங்கமூர்த்தியோடுபோர்புரிகையில், பூமிதேவியானவள் மீண்டுந் தன்னுடைய நிலைமையில் இருப்பேனா என ஏக்கங்கொண்டனள். சமுத்திரங்கள் கலங்கின. ஆகாயமசைந்து நக்ஷத்திரங்களுதிர்ந்தன. இவ்வாறு நரசிங்கமூர்த்திக்கும் இரணியகசிபனுக்கும் ஒரு முகூர்த்தகாலம் போர் நிகழ்ந்தது. உலகத்திற்கெல்லாங் கஷ்டமுண்டுசெய்யும் இவனைச் சங்கரிப்பதற்கு இதுவே சமயமென்று நரசிங்கமூர்த்தி திருவுள்ளங்கொண்டு அத்தூணத்தின் துவார பீடத்தில் தன் தொடைமீதில் இரணியகசிபனையிருத்திச் சாயுங்காலவேளையில் தமது திருவிரல்களிலுள்ளநகங்களால் அவன் மார்பைப்பிளந்து பெருங்கர்ச்சனையுடன் அவன் குடலைப்பறித்துத் தமது கண்டத்தில் மாலையாகத் தரித்துநின்றனர். இவ்வண்ணமாக இரணியகசிபனானவன் சகல தேவர்களும் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே நரசிங்கப்பெருமானால் மரணமடைந்தான். தேவர்கள்யாவரும் இன்றன்றோ நாம் பெருங்களிப்பெய்துநாள்! இந்நாள் மிகநன்னாளாயிற்று. அசுரபாதை யகன்றோம். அகன்றோம் என்று சந்தோஷித்துப்புஷ்பமாரிசொரிந்து ஜயஜயவென்று நரசிங்கமூர்த்தியைத் துதித்து நிருத்தியம்நாட்டியம் கான முதலியவற்றைச் செய்து புகழ்ந்தனர்.

இப்பெரும்போரில் அநேகரிறந்தனர். பலர் இந்த யுத்தபயத்தைப் பார்க்கமுடியாது உலகத்தைவிட்டு மறைந்தோடிப்போயினர். பூமியில் இராக்ஷசப்பூண்டு சிறிதுமின்றியொழிந்தது. துக்கமென்பது இல்லையாயிற்று,

யாவருஞ் சந்தோஷபூர்த்தியாயிருந்தனர். முன் வைகுந்தபதவியில் விஷ்ணு மூர்த்தியை ஸ்வாமீ! கோமளதேகமுடைய தேவரீர் எவ்வாறுபோர்புரிகிறீர் எனக் கேட்டதிருமகள், இந்த நரசிங்காவதாரத்தில் உடனிருந்து இதனைக் கண்டு ஸ்வாமீ! எவ்வகைய உருவத்தை வகித்தீர்! என்று ஆச்சரியமடைந்து சந்தேக நீங்கினள். தேவதுந்துபிகள் முழங்கின. இரணியகசிபன் இறந்தமைக்காக மனம் வருந்தும் அவன் மனைவி கயாது தன் துக்கத்தை வெளியிற் காட்டாது தன் புத்திரனை பிரகலாதனைச் சாந்தப்படுத்து நிமித்தமாகத் துக்கிப்பதாகக் காட்டினள். பிரகலாதனும் யான் தன்னியனானேன்; விஷ்ணு மூர்த்தியின் தரிசனங் கிடைக்கப்பெற்றேன் ; துஷ்டனை இரணியகசிபன் இறந்தொழிந்தானென்று சந்தோஷமடைந்தனன்.

இவ்வாறிருக்கையில், நரசிங்கமூர்த்தியின்கோபாக்கினிதணியாமையின், தேவர்முதலியயாவரும் அக்கோபாக்கினிக்காற்றாது இதனால் என்ன துன்பமடைய நேரிடுமோவென்று துக்கித்திருந்தனர் என்றாலும், விஷ்ணு மூர்த்தியின் அருகிற் சென்று அவரைத் தோத்திரஞ்செய்து கோபந்தணித்தவரொருவருமிலர். தேவர்களில் ஒவ்வொருவரும் நீர் போம் நீர் போம் என்று நரசிங்கத்தினிடத்தே பிறரை அனுப்பப்பார்த்தார்களேயன்றி, தாம் போனால் தமக்கென்ன விபரீதம் விளையுமோவென்று அச்சத்தோடிருந்தனர். இந்திரனை நோக்கி நரசிங்கமூர்த்தியைச் சாந்தப்படுத்துமென, இந்திரன் ஆ! ஆ! இக் கோரரூபத்தினிடம் நான் செல்ல வல்லவனல்லேனென்றனன். பிரமனை வேண்ட, பிரமனும் என் உடல் பொரிந்துவிடும்; நான் போகமாட்டேனென்றனன். திருமகளை வேண்ட, திருமகளும் நான் இப்பயங்கர ரூபத்தை எப்பொழுதுங் கண்டிலன்; நான் போகமாட்டேனென்றனள். ருஷிகளும் தேவர்களும் யாவரும் அவரைச் சமீபிக்கப் பயந்துகொண்டிருந்தனர். யாவராயினுஞ்சென்று பிரார்த்தித்தாலொழியக் கோபசாந்தி உண்டாகாததலின் பிரகலாதனைநோக்கி நீதான் அவரைச்சாந்தப்படுத்தவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, பிரகலாதன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கியும் அவரிடத்தே நீங்காத பக்தியுடைமையாலும் நரசிங்கமூர்த்தியையடைந்து பிரார்த்தித்து ஸ்வாமீ! சாந்தமடையவேண்டும் எனப் பிரார்த்திக்க, நரசிங்கமூர்த்தி அவனைத் தூக்கிக்கொண்டு நாவினால் அவன் உடலை நக்கி, யாவருங் கேட்கும்படி, பிரகலாதா! நீ இதுகாறும் பலவகையாகக் கஷ்டமநுபவித்தனை ; இனி உனக்குக் கஷ்டமேயில்லையென்று கூறி ஆலிங்கனஞ் செய்துகொண்டு, என் மனம் இப்போது குளிர்ந்தது. துஷ்டனை இரணியகசிபனால் என் மனங்கொதித்தது; புத்திரனை உன்னை ஆலிங்கனஞ்செய்ததால் அது தணிந்தது. நான் எவ்வாறு உன்னை மார்போடணைத்துச் சுகமடைந்தேனோ அவ்வாறே நீயும் உன் புத்திராதிகளைத்தழுவிச் சுகமடைவாய். நீ புத்திரபவுத்திரர்களுடன்கூடி நெடுங்காலம் இராசரிகஞ் செய்வாய். உன் வமிசம் விருத்தியாகும். நீ பக்தனாதலின் உன்னைச்செயிக்க எனக்கும் அசாத்தியமே என்று வரங்கொடுத்து, பூத்காரஞ் [புஸ் ஓசை] செய்துகொண்டிருந்தனர்,



30. திருமால் நரசிங்கமாகி ஹிரண்யனைச் சங்கரித்து இறுமாந்து உலகை பழிக்க எத்தனிக்கையில் தேவர் வேண்டுகோளால் சிவபெருமான் சரபரூபமாகிவர நரசிங்கம் அதிலொடுங்கியது.

அச்சமையத்தில் தேவர்கள் யாவரும் நரசிங்கமூர்த்தி இன்னும் சாந்தமடையாமையைக்கண்டு பயந்து விநாயகக்கடவுளைத் தியானித்து அவரைநோக்கி ஸ்வாமீ! தாங்களே அவரிடஞ் சென்று தங்களாற் கூடிய விகட காரியங்களைச் செய்து அவரைச் சந்தோஷப்படுத்தவேண்டும் எனப் பிரார்த்திக்க, கணபதிதனதுயானைமுகமும் பெருவயிறுந்தோன்றச் சிறியதோர் ஆகுவாகனமிவர்ந்து செல்லுகையில், பெருச்சாளி விரைந்துநடவாமையின் கணபதி தனது வாகனத்தையடிக்க, அஃது காலொடிந்திடறியது. விநோதஞ்செய்யவந்தவிநாயகர் லீலாமாத்திரையாகநிலமிசைவிழ்ந்தனர். அருகிருந்த தேவர்கள் யாவரும் கைகொட்டி நகைத்தார்கள். நரசிங்கமூர்த்தியுஞ் சந்தோஷித்துச் சிரித்தனர். அவர் சிரித்ததுகண்டு கோபந் தணிந்தனவென்று தேவர்கள் யாவரும் சந்தோஷித்தார்களாயினும், நரசிங்கமூர்த்தியின் முகத்தினுண்டாயிருந்த அக்கினிச்சுவாலைமாத்திரம் தணியாமை கண்டு, திருக்கைலாயகிரியையடைந்து திருநந்திதேவர் விடைபெற்றுச் சிவபெருமான் திருச்சந்நிதியைச்சேர்ந்து சேவித்து ஸ்வாமீ! எங்கட்கு அடிக்கடி வருந் துன்பங்களை நீக்கி இரக்ஷிப்பவர் தேவரீரே. சமுத்திரத்தைக் கடைந்த காலத்தில் சுபகரமான பொருள்களையெல்லாம் எங்களுக்குக் கொடுத்து ஆலாலவிஷத்தைத் தேவரீர் புசித்து நீலகண்டரெனப் பெயரெய்தினீர். எங்கட்கு விபத்துவரும்பொழுதெல்லாம் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ்செய்தே அவ்விபத்தைப் போக்கடிக்கிறேம். இப்பொழுதும் நரசிங்கமூர்த்தியின் உக்கிரமான ஜ்வாலை எங்களைத் துன்பப்படுத்துகின்றது. அதனைத் தணித்துவிடத் தேவரீரே சமர்த்தராதலின் அதனைச் சாந்தி செய்து எங்களைக் காப்பாற்றவேண்டும் எனப் பலவாறு தங்கள் துன்பங்களைச் சொல்லிக்கொண்டனர். சிவபெருமான் அவர்கள் வேண்டுகோளை யங்கீகரித்து, தேவர்களே! நானென்னைச் சரணடைந்தவர்களுடைய துன்பங்களை யொழிப்பேனெனக் கொண்ட விரதத்தைக் காப்பாற்றுவேன். உங்கள் துக்கங்களொழிந்தனவென்று நினையுங்களென்று கூறுகையில், தேவர்கள்யாவருஞ் சிவபெருமானைநோக்கிக் கருணைமூர்த்தியாகிய தேரீர் அடியேங்களிடத்துக் கருணைவையாதொழிந்தால் எங்களுக்கு நேரும் ஆபத்தினின்று நீக்குபவரும் வேறுண்டோ என்று துதித்து விடைபெற்றுக்கொண்டு தத்தம் பதியை யடைந்து சிறிதுங் கவலையின்றி வாழ்ந்திருந்தனர்.

சிவபெருமான் தேவர்கட்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்ற சரபத்திருவுருவம் வகித்து நரசிங்கமூர்த்தியிருக்குமிடத்திற்குவருகையில், நரசிங்கமூர்த்தியானவர் அதிதூரத்திலே வருகின்ற கடும்பயமான சரபவடிவத்தைக் கண்களாற் கண்டு யோசிக்கையில், சரபவுருவமாக எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான், நரசிங்கமே! நீ இரண்யகசிபனையும் அசுரர்களையுஞ் சங்கரித்து உலகத்திற்குச் சுகத்தைச் செய்தனையல்லவா வெனக் கூறினர். அப்பொழுதே நரசிங்கமூர்த்தி, ஜய ஜயவென்று சொல்லிக்கொண்டு சரபனு

ளைப் பிரதக்ஷிணஞ்செய்து * அவரிடத்திலே லயமடைந்தனர். தேவர்கள் நிருத்தம் நாட்டியம் முதலியவற்றுடன் சரபனார்பேரில் புஷ்பமாரிபொழிந்து சந்தோஷித்து, சிவபெருமானையும் நரசிங்கமூர்த்தியையும் பிரகலாதனையும் புகழ்ந்தனர். சிவபெருமானும் தேவர்களை நோக்கி, இப்பொழுது இரணிய கசிபனைச்சங்கரித்த நரசிங்கனும் வேண்டியவரங்களை வேண்டியவர்கட்குக் கொடுப்பான் என்று விளம்பி வெள்ளிமலையை யடைந்தனர். பிறகு இரணியாக்ஷ இரணியகசிபர்களே, இராவண கும்பகர்ணர்களாகச்சனித்து ஸ்ரீராமனால் சங்கரிக்கப்பட்டனர். அவர்களே மீண்டும் தமகோஷனுக்குப் புதல்வ

* இச்சரிதம் வேறு வகையாகவும் வழங்கும். அதாவது:—நரசிங்கமூர்த்தி இரணியகசிபனுடைய உதிரத்தில் ஒருதுளியேனுங் கீழ்விழாமற் கையிலேற்றும் வாய்வைத்தும் பருகினர். அவ்வாறு உதிரமருந்தியதால், உன்மத்தங்கொண்டார்போலத் தன்னைச் சமீபித்தவர்களை வாரி வாயிற்பெய்து செருக்குற்று நின்றனர். அதனைக்கண்டு அமரர்கள்யாவரும் அவரருகே செல்வதற்கஞ்சி, இனி ஒருநொடியில் உலகமழிந்துவிடுமென்று கருதி யோடித் திருக்கைலாயகிரியை யடைந்து சிவபெருமான்திருச்சந்நிதியில் விண்ணப்பிக்க, சிவபெருமானார் "அமரர்களே! அஞ்சாதீர்கள்" என்று அவர்களையனுப்பி, இருசிரமும் இணையில்லாச் சிறகும் கூரிய நகமுடைய எட்டுக் காலும் கடுங் கோபமும் நெடிய வாலும் பேரிரைச்சலுமுடைய சரபத்திருவுருவுடன் நரசிங்கத்தை யடைந்து, இடிமுழக்குபோலிரைந்து, உதிரவெள்ளம் ஊற்றெடுத்தோட, சிங்கச்சிரத்தையுங் கைகளையுங் கறித்துத்தள்ளி, மேலுட்காந்து சிங்கத்தின் சருமத்தை யுரித்துப் போர்வையாகக்கொண்டு வெள்ளிமலையை யடைந்து எழுந்தருளியிருந்தனர். விண்டு பண்டையவுணர்வு தோன்றிச் சிவபெருமானைப் பூஜித்து, தேவர்கள் முனிவர்கள் கேட்கும்படி நரசிங்க புராணம் ஓதி வைகுந்தமடைந்து வாழ்ந்திருந்தனர்—என்பதாம். இதனைப் பின்வரும் பிரமாணங்களானறிக.

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍇॥ 𑌅𑌹𑌂𑌶𑌰𑌣𑌃𑌶𑌰𑌭𑌾𑌯 𑌋𑌷𑌿𑌬𑌨𑍍𑌧𑌵𑍇॥
𑌤𑍈𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌯𑍇॥ 𑌹𑌰𑌿𑌂𑌹𑌰𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌯𑌨𑍍𑌤𑌿𑌦𑍇𑌵𑌾𑌃
𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌂𑌵𑍃𑌷𑌭𑌂𑌮𑌤𑍀𑌨𑌾𑌮𑍍॥
𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇॥ 𑌹𑌰𑌿𑌂𑌹𑌰𑌨𑍍𑌤𑌂𑌶𑌰𑌭𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍।
𑌅𑌨𑍁𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑍁𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨𑌮𑍋𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌸𑍍𑌸𑌹𑌦𑍍𑌰𑍁𑌤𑌮𑍍॥
𑌕𑌾𑌶𑍀𑌖𑌣𑍍𑌡𑍇॥ 𑌪𑍁𑌰𑌾𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌂𑌦𑍈𑌤𑍍𑌯𑌰𑌾𑌜𑌂𑌮𑌹𑌾𑌬𑌲𑌮𑍍।
𑌹𑌤𑍍𑌵𑌾𑌤𑌦𑍍𑌰𑍁𑌧𑌿𑌰𑌾𑌪𑌾𑌨𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌂𑌯𑌾𑌚𑌿𑌤𑌃𑌸𑍁𑌰𑍈𑌃।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌃𑌶𑌰𑌭𑌰𑍂𑌪𑍇𑌣𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌮𑌪𑍀𑌡𑌯𑌤𑍍॥

ருக்வேதம். அஹம்ம்ருண: ஶரபாய ருஷிபந்தவே ||
தைத்திரீயம். ஹரிம்ஹரந்த மநுயந்திதேவா:
விஸ்வஸ்யேஶாநம் வ்ருஷபம்மதீநாம் ||
ஸ்ரீ ஸ்காந்தம். ஹரிம்ஹரந்தம் ஶரபம் விஸ்வஸ்யேஶாந மீஸ்வரம் |
அநுயாந்தி ஸுராஸ்ஸர்வே நமோவாக்யைஸ் ஸஹத்ருதம் ||
காசிகண்டம். புராஹிரண்ய கசிபும் தைத்யராஜம் மஹாபலம் |
ஹத்வாதத் ருதிராபாந ப்ரமத்தம் யாசித:ஸுரை: |
ருத்ர:ஶரப ரூபேண நரஸிம்ஹ மபீடயத் ||

ராய்ச் சிசுபாலதந்தவக்கிரராகஜனித்துக் கிருஷ்ணனாற் சங்கரிக்கப்பட்டனர். இவ்வாறு ஜயவிஜயர்கள் மூன்று ஜனனங்களெடுத்து விஷ்ணுவைப்பகைத்து அவராற் சங்கரிக்கப்பட்டு வைகுந்தத்தையடைந்து தமதுபதவியிற் சுகமாக வாழ்ந்திருந்தனர். ருஷிகளே! நரசிங்காவதார சரித்திரமும், சிவபெருமானு டைய சரபரூப சரித்திரமும் உங்கட்குச் சொன்னேன். எவரேனும் இந்தச் சரிதங்களைக் கேட்டவர்கள் துக்கங்களையொழித்துச் சகல சுகங்களையு மநு பவிப்பார்கள் என்று ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கூறினர்.

நரசிங்க சரபாவதாரங்களின் சரிதங்க ளுரைத்தது

முற்றிற்று.

அறுபத்திரண்டாவது

நளராஜனது பூர்வகதையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! நீர் மகா ஞான சீலர். புண்ணியசரித்திரங்களை இன்னுஞ் சொல்லவேண்டும். பூர்வத்தில் தேவர்களும்அரசர்களும் யாரைப் பூசித்துக் கிருதகிருத்தியர்களானார்கள்? எனக்கேட்ட நைமிசாரணிய வாசி களைநோக்கி ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்: முநிவர்களே! நீங்கள் நல்லவிஷயத்தைக் கேட்டீர்கள். உலகங்கட்குப் பிதாமகனான பிரமதேவ ரும் அவர் புத்திரர்களாகிய மரீசிமுதலிய மகருஷிகளும், பிரமருஷிகளும், காசிபர் முதலியவர்களும் சிவ பூஜையைச்செய்தே கிருதார்த்தர்களாயினர். எப்படியென்னில்,பார்த்திவலிங்கத்தையும் சுவர்ணமுதலியலோகங்களாலும் இரத்தினங்களாலும் செய்வித்த லிங்கங்களையும் அர்ச்சித்தும், மானசிக பூஜைசெய்துங் கீர்த்திபெற்றனர். இப்பொழுதும் அநேகர் பூஜித்து வருகி றார்கள். நாரதமுநிவர் விசேஷமான சிவபூஜைசெய்திருக்கிறார். ருஷிசிரேஷ்ட ராகிய வசிஷ்டரும் பதிவிரதா சிரோன்மணியான அருந்ததியுஞ் சிவபூஜை செய்தனர். காசிபரும் அதிதியும் பார்த்திவலிங்கபூஜைசெய்து இஷ்டபலன் களை யடைந்தனர். சுவாயம்புமநு முதலானவர் யாவரும் சிவபூஜைசெய்து இராச்சியபோகமடைந்தனர். சுவாயம்புவின் புதல்வன் பிரியவிரதனும் சிவ பூஜைபால் தன்னியனானன். இக்ஷுவாகு-மாந்தாதா-சகரன்-நகுஷன் - திலீ பன்-தசரதன்முதலியவர்களெல்லாரும் ஆயுள்காலம்வரையும்சிவபூஜைசெய் துவந்தனர்.அதில் தசரதன் எவ்வளவுகாலம் சிவபூஜைசெய்தும் புத்திரபா க்கியமின்றி அதனை யடையும்பொருட்டு, கோடிலிங்கார்ச்சனைசெய்து பின் னர் புத்திரகாமேஷ்டியைச் செய்கையில் சிவஸ்வரூபமான அக்கினிதேவன் விஷ்ணுரூபமாகப் பிரசன்னமாய், நான்கு புத்திரர்களாகப்பிறந்தனன். கௌ சலையும் வசிஷ்டர்கட்டளையால் பார்த்திவ லிங்கபூஜை செய்துவந்தனள். ஸ்ரீராமனுந் தினந்தோறும் பார்த்திவலிங்கபூஜை செய்துவந்தனன். அச்சூரி யவமிசத்திற் பிறந்தோர் யாவருங் கிரமப்படி சிவபூஜைசெய்து சகல ஐசுவரி யங்களையு மடைந்தனர். பார்வதியின் சாபத்தால் பெண்தன்மை யடைந்த

வந்து, மகாப்பிரபுவாகிய தருமராசனே! எங்கட்கு விசேஷமான அறுசுவை யோடுகூடிய அன்னமளிக்கவேண்டும் எனக்கேட்க,தருமராசன் ஸ்வாமீ! அவ் வாறேயாகுக: தாங்கள் ஸ்நானஞ்செய்துவாருங்கள் என்றனுப்பிவிட்டு, நாம் எவ்வாறு இவர்கட்கெல்லாம் அன்னமிடக்கூடும்? உயிர்விடுவதேநலம் என்று தீர்மானித்திருக்கையில், திரௌபதை தங்கட்கு ஆபத்துக்குதவுங் கிருஷ்ண னைத்தியானிக்க, கண்ணன் அவ்விடம்வந்து சங்கதியை யுணர்ந்து, அன்ன பாத்திரத்திலிருந்த இலைக்கறியைக் கையிலெடுத்துக்கொண்டு அதின்மேல் ஜலத்தை விடச்சொல்லி, பதினாயிரம்பேருக்கும் போதுமான அன்னபானாதி களை யுண்டுசெய்தனன். ஸ்நானத்திற்குச்சென்ற துர்வாசமுனிவர் தனது சிஷ் யப்பிரசிஷ்யருடன்வந்து சந்தோஷமாகப்புசித்துப்போயினர். கடவுள் தயை எவன் விஷயத்தில் உண்டோ அவனுக்குங் குறையொன்றிருக்குமோ ? ஆத லின் நீங்கள் கடவுளிடத்தே பக்தியுடையவர்கள் என்றுகூறி, கிருஷ்ணமூர் த்தி சந்தோஷித்திருக்கையில், பாண்டவ ரைவரும் கிருஷ்ணனைப்பார்த்து இன்று உம்முடைய தயவால் எங்களுக்குவந்த கஷ்டம் விலகிற்று. பலவா னை துர்யோதனன் எங்கட்குச் சத்துருவாயிருக்கிறான்; இனி என்ன நடக் குமோ ? என்னசெய்வோம் ? என வருந்திக்கூற, கிருஷ்ணமூர்த்தி பாண்ட வர்களே! நான் சொல்வதைச் செய்வீர்களாக. நான் துவாரகையிலிருந்து சத்துருக்களை வெற்றிகொள்ளக் கருதி உபமந்யு முனிவரால் சிவபூஜாக்கிர மத்தை உபதேசிக்கப்பெற்று, வடுககிரியில் ஏழுமாசம் தீக்ஷைவகித்து, சிவ பூஜை செய்கையில், சிவபெருமான் பிரசன்னராய் இஷ்டமான வரங்களைக் கொடுத்து வில்வேசுவரரென்னும் பெயரால் அங்கெழுந்தருளி யிருக்கின்ற னர். சிவானுக்ரகத்தால் சத்துருக்களை வெல்லத்தக்க பலத்தையடைந்து சத்துருக்களை வென்றேன். இப்பொழுதும் புக்தி முக்திகளைக்கொடுக்கும் சிவார்ச்சனையைக் கடைப்பிடித்து வருகிறேனாதலின், நீங்களும் சகல சுகங் களையுங்கொடுக்குஞ் சிவபெருமானைப் பூஜிக்க வேண்டுமென்று சொல்லிப் பாண்டவர்களைத்தேற்றி அந்தர்த்தானமாயினன்.

பிறகு பாண்டவர்கள், புத்திவானான ஒருவேடனைத் துரியோதன னிடஞ்சென்று அவன் குணங்களைப் பரிக்ஷித்துவரும்படி அனுப்ப, அவன் அவ்வாறேசென்று அவ்விடத்தில் நடக்கும் இராஜாங்க காரியங்களையும் துரி யோதனன் சரிவர நடத்தலையுந் தெரிந்துகொண்டுவந்து தருமராசன் சமு கத்திற்சொல்ல, பாண்டவர்கள் கேட்டு விசனத்தோடு என்னசெய்வோமெ ன்று, சத்தியத்தாற் பிணிப்புண்டிருக்குஞ் சமயத்தில், ஜடாமகுடதாரியாய் விபூதிதூளனஞ் செய்துகொண்டிருக்கும் வேதவியாஸ பகவான் தருமதேவ தைபோலவும் தேஜோரூபமாகவும் அங்கெழுந்தருளக்கண்ட பாண்டவர் கள் சந்தோஷித்து, துண்ணென்றெழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எதிர்நின்று, அவரை ஓர் ஆசனத்திலிருத்திச் சந்தோஷத்துடன் முறைப்படி பூஜித்து அநேகவகையாகத் துதித்து அவரைச் சந்தோஷப்படுத்தி,நாங்கள் இன்றுதான் தன்னியர்களானோம். இன்றுதான் எங்கள் ஜனனம் சபலமாயி

ற்று. எங்கள் சற்கருமங்கள் இப்பொழுதுதான் பலனளித்தன. தேவபிராமணர்களை நாங்கள் பூஜித்ததும், எங்கள்தவமுந் தானமுந் தேவரீரது தரிசனத்தாற் பயன்பெற்றன. எங்கள் கஷ்டங்களெல்லாம்விலகின. குரூராத்துமாக்களான பல துஷ்டர்கள் எங்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தனர். அவையெல்லாம் தங்களதுவருகையினல் நீங்கின. மஹாத்துமாக்களுடைய அநுக்கிரகங் கிடைத்தபொழுது துக்கமும் வருமா? எளியோரைக் காப்பதே பெரியோர்கடன். அடியவர்கள் செய்த தீக்கருமங்களை யொழித்து அவர்கட்கு நற்குணம்வருமாறு ஆசீர்வதிப்பதே பெரியோர் சுபாவம். அடியேங்களைக் காக்கவேண்டியது தங்கட்கு முக்கியமானகடன். ஒருவன்செய்ய வேண்டியது பெரியோர் சேவையே. தங்கள்தரிசனத்தால் எங்கட்குண்டாக வேண்டுவது சுபமேயன்றிப் பிறிதொன்றில்லை. தங்கள் தரிசனத்தால் அடியேங்கள் மனம் வாடிய பயிர் மழைபெய்யப் பெற்றாற்போலக் களிப்புற்றது எனப் பலவாறு துதிக்க, வியாஸபகவான் அவர்கள் விஷயத்தில் தயையுடையவராய்ச் சொல்லத்தொடங்கினர்.

கண்ணனும் வியாசனும் பாண்டவரிடம் வந்தது

முற்றிற்று.

அறுபத்து நான்காவது

வியாசருபதேசப்படி அருச்சுனன்தவஞ்செய்த அத்தியாயம்.

வியாஸபகவான் பாண்டவர்களை நோக்கிச் சொல்லுகிறார்: நீங்கள் ஐவரும் மகாபுண்ணியர்கள்; சத்தியவான்கள்; நீங்கள் தருமத்தைக்கைவிடாதிருத்தலின் உங்களை யொத்தவர் பிறரில்லை. சத்ஜனர் ஆயுளுக்கிறுதி வரும்பொழுதும் பொய்புகலார்; அப்படிப்பட்ட சத்தியத்தால்வருந் தருமமே சுவர்க்காதி நல்ல பலன்கட்குக் காரணமாகும். எனக்கு நீங்களுந் துரியோதனாதிகளுஞ் சமானமேயன்றி வேறில்லையாயினும், தருமவான்களிடத்திலேயே பெரியோருக்குக் கிருபை யிருக்கவேண்டுமாதலின், உங்களையே அதிகமாக விசுவாசிக்கிறேன். முன்னே துஷ்டனான திருதராட்டிரன் உங்கள் இராஜ்ஜியத்தைப் பேராசையாற் பறித்துக்கொண்டனன். அவனுக்கு நீங்களுந் துரியோதனாதியரும் புத்திரரே. உங்கள் பிதாமரித்து நீங்கள் சிறியவர்களாயிருப்பதற்காக உங்கள் விஷயத்தில் தயைவைக்கவேண்டியவன் சிறிதுந் தயைவைத்திலன். தப்பிதஞ்செய்த புத்திரனையுந் தண்டித்திலன். தடுப்பதால் விபரீதம் விளையுமோவெனப் பயந்து வாளாவிருந்தனன். நடக்கவேண்டிய காரியம் நடந்தே தீரவேண்டும். அத்திருதராஷ்டிரன் துஷ்டன். சத்தியவான்களாகிய நீங்கள் தர்மவான்கள். விதைத்தவிதைகள் முளையாமற்போகுமா? அவன்சுகத்தின்பின் சங்கடமும், உங்கள் துன்பத்தின்பின் சுகமும் வரப்போகின்றன. ஆதலின் நீங்கள் துன்பப்படவேண்டாம் என்றுகூறினர். அதனைக்கேட்ட தருமராசன் முதலானவர்கள் ஸ்வாமீ! தாங்கள் உண்மையேயுரைத்தீர்கள். நாங்கள் பட்டணத்தைவிட்டு வனத்திற்குவந்தும், துஷ்டர்க

ளான துரியோதனாதிகள் பெருங்கஷ்டங்களை யுண்டுசெய்கிறார்கள். அக்கஷ்டங்கள் ஒழியுங் காரணமாகவே தேவரீர் எங்கட்கு நற்கருமங்களை யுபதேசஞ்செய்யவேண்டும். கிருஷ்ணமூர்த்தி எங்களைச் சிவாராதனை செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறார். தாங்களும் அவ்வாறே கட்டளையிட்டுச் சிவபூஜா விதியை யுபதேசித்தால் உத்தரவின்படி செய்துவருகிறோம் என்றனர். அதன்மேல் வேதவியாஸர் பெருஞ்சந்தோஷமடைந்து, நானுஞ்சிவபூஜைசெய்து கொண்டுவருகிறேன். நீங்களும் அப்படியேசெய்தால், சாசுவதமானசுகத்தை யடைவீர்கள் என்று, பாண்டவர்கள் ஐவரில் அருச்சுனனே சிவபூஜைசெய்தற்குத் தக்கவனென்று நினைத்து, தவஞ்செய்யத் தக்க இடத்தையும் யோசித்துச் சொல்லலுற்றனர்.

பாண்டவர்களே! கேளுங்கள்: ஹிரணிய கர்ப்ப பிபீலிகா பரியந்தமான பிரபஞ்சமுழுவதுஞ் சிவரூபமே; வேறில்லை. கண்ணுக்குப் புலப்படும் யாவும் சிவரூபமேயெனத் தியானிக்கவேண்டும். தன்னை யுபாசித்த யாவரையுஞ் சிவபெருமான் சுகமடையச்செய்வார். சிவரூபமே வகித்த விஷ்ணுமூர்த்தி யிருக்கிறார். அவரை யாராதித்தால் நெடுங்காலத்திற் றரிசிக்கலாம். சிவபெருமானோ விரைவிற் பிரசன்னராய்ப் புத்தி முத்திகளை யளிப்பார். ஆதலின் சுலபமாகப் புத்தி முத்திகளை விரும்புவோர் சிவார்ச்சனையே செய்யவேண்டும். க்ஷத்திரியனுக்கு இந்திரன் இஷ்டமுடையவனாதலின் விரைவிற் பிரசன்னமாய் வேண்டிய அருள்செய்வான். இந்திர மந்திரத்தை முதலில் உபதேசிக்கிறேன் எனக்கூற, அருச்சுனன் ஸ்நானஞ்செய்து கிழக்குநோக்கியிருந்து, வியாஸபகவானால் இந்திர மந்திரோபதேசஞ் செய்யப்பெற்று, பின்னர்ப் பார்த்திவலிங்கபூஜை செய்யு முறைமையும் உபதேசிக்கப்பெற்றனன். வியாஸபகவான்—முதலில் இந்திரனையாராதித்து அவன்கட்டளைபெற்று, பின்னர் சிவாராதனை செய்யக்கடவை; நீ இப்பொழுதே இங்கிருந்துபுறப்பட்டு, கிருஷ்ணநதிக்கரையிலிருக்கும் இந்திரகீல பருவதத்திலிருந்து தவஞ்செய்க: தவஞ்செய்கையில் அநேகர் உன் தவத்திற் கிடையூறு செய்வார்களாதலின் சகலாயுதங்களையுந் தரித்துக்கொண்டு நீ யிருக்குமிடம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலிருந்து செய்வது தகுதி. தினந்தோறுஞ் சிவஸ்தோத்திரங்களையே ஜபித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறி, ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருக்கத்தக்க [அதிரிசிய] வித்தையை யுபதேசித்து ஆசீர்வதித்தனர். தருமராசன் முதலான நால்வர்களையும் நோக்கி நீங்கள் தருமத்தைப் பாதுகாத்து இங்கிருங்கள். சீக்கிரத்திற் சந்தேகமில்லாமற் காரியசித்தி யுண்டாகுமென்று கூறி, யாவரையும் ஆசீர்வதித்துச் சென்றனர்.

அப்பொழுதே அருச்சுனன் தான்பெற்ற மந்திரமகிமையால், சிவதேஜசுடன்விளங்கக்கண்ட தருமன்முதலியோர் காரியசித்தியுண்டாகும்; இக்காரியத்தைஇவனேசாதிக்கவல்லவன்; பிறர்சாதிக்கமாட்டார்கள்; வியாஸபகவான் மொழிந்ததுண்மையேயென்று கருதி, அர்ச்சுனனைப்பார்த்து நமது பிழைப்பைப் பயன்படுமாறு செய்வாயென்றுகூறி, தவத்திற்கனுப்பத் திட

ஞ்செய்து கொண்டனராயினும், அவனைப்பிரிய ஆற்றுதுபயந்து கடைசியாய் அப்பா! எவ்வகையிலாவது தவஞ்செய்து எங்கள் கஷ்டத்தை யொழிப்பா யென்று கூறித் தவத்திற்குச்செல்ல விடைகொடுத்தனுப்பினர். திரௌபதை, பெருந்துக்கமுற்றும், கண்ணீரையொழுக்கிக் காட்டாது மனத்திலேயே யடக்கிக்கொண்டு அருச்சுனனை நோக்கி, எவ்வகையாகவாவது காரியாநுகூலஞ் செய்துகொண்டு வரவேண்டுமென்று விடைகொடுத்து அனுப்பினள். தருமன்-பீமன்-நகுலன்-சகாதேவன்-திரௌபதையாகியஐவரும் ஒன்றுகூடித் துக்கித்துக்கொண்டு நாம் அருச்சுனனைப்பிரிந்துந் தைரியத்துடனிருப்பது என்ன மகிமையென யோசிக்கையில், மீண்டும் வேதவியாஸபகவான் அங்கெழுந்தருள, அவருக்கு ஆசனமளித்துப் பூஜித்துக் கஷ்டத்திலிருக்கும் எங்கட்குத் தங்கள் தரிசனத்தாற் சந்தோஷமுண்டாகிறது. தாங்கள் சிறிது காலம் இங்கிருந்து எங்கள் துயரத்தை யகற்றி ரக்ஷிக்கவேண்டும் எனவேண்ட, தயாளுவான வியாஸபகவான் அவ்வாறே அவர்கள் விருப்பிற்கிணங்கி நானுவிதமான புண்ணிய சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டு அங்கு வசித்திருந்தனர். அவ்வாறிருக்கையில் ஒருநாள் வியாஸபகவான் சொல்லிக்கொண்டுவந்த ஒரு சரிதத்தில் தருமராசன் ஒன்று கேட்கின்றனன். அதாவது—ருஷி சிரேஷ்டரான வியாஸ முனிவரே! நான் துக்கசாந்தி யடையவேண்டி ஒன்று வினவுகின்றேன். இப்பொழுது நாங்கள் அநுபவிக்குங் கஷ்டங்களைப் போலப் பூர்வத்தில் எவரேனும் அநுபவித்துள்ளாரா? அல்லது நாங்களே அநுபவிக்கின்றேமா? எனக்கேட்க, வியாஸபகவான் சொல்லுகின்றார்.

கேளும் தருமராசனே! நீங்கள் அநுபவிப்பதும் ஒருகஷ்டமா? மனைவியோடுஞ் சகோதரரோடும் முநிவர்களோடும் வசித்துக்கொண்டு சூரியன் கொடுத்த அன்னபாத்திரமகிமையாற் சுகித்திருக்கின்றீர்கள். மகாத்மாவான நளன் என்னும் மன்னவன் அடைந்த துக்கங்கள் அநந்தம். அரிச்சந்திரராசன் அதைக்காட்டிலும் பெருந்துயர மநுபவித்தான். எல்லோரைக்காட்டிலும் ஸ்ரீராமன் விசேஷ கஷ்டமடைந்தான். அவர்கட்கு உண்டான சங்கடத்தை யான் எவ்வளவுகாலஞ் சொன்னபோதிலுஞ் சொல்லிமுடியாது. இத்துக்கங்களைக்காட்டிலும் பிறக்கையிலும் இறக்கையிலும் உண்டாகுந் துன்பங்கள் கணக்கிட்டுரைக்க முடியா. முதலில் தாயின்வயிற்றிற் கருவாக உண்டான பொழுதுந் துக்கமே. அது பிறக்கும்பொழுதும் அழுகையே. யௌவனத்திற் சுகபோகங்களை அநுபவிக்கையிலேயும் பல குறைபாடுகளாலுந் துக்கமே. சமுசார தசையிலுங் கிருககாரியங்களிலுந் துக்கமே. இறக்கும்பொழுதுந் துக்கமே. ஆதலின் எப்பொழுதுந் துக்கமே யென்றுணர்ந்து, தேககசுகம் அநித்தியமென்று தள்ளி, திடமான சத்தியத்தையே ஆச்சிரயித்து பகவானுன சிவபெருமான் சந்தோஷிக்கும்படி நடந்துகொள்ளவேண்டியது. அவனைச் சேவித்தாற் சகல துக்கங்களும் விலகும் என்று கூறினர். அதனைக்கேட்ட பாண்டுபுத்திரர் எப்பொழுதாவது எங்கள் கஷ்டங்கள் விலகாதிருக்குமா? என்று நினைத்து வியாஸ வாக்கியத்தை நம்பியிருந்தனர்.

இஃதிவ்வாறிருக்கத் தவச்செயலை மேற்கொண்டு செல்லும் அருச்சுனன் வழியில் அநேக சுபசகுனங்களைக் கண்டு சத்துருக்ஷயமானதாக நினைத்துச்சென்று, தவத்திற்கு யோக்கியமான இடங்களைப் பார்த்துக்கொண்டு சந்தோஷத்தோடு இந்திரகீலபர்வதத்தில் கிருஷ்ணாதீரத்தில் அசோகவனத்தில்சுவர்க்கத்திற்குச்சமானமானவிடத்திற்றங்கி,வியாஸபகவான்உபதேசித்த மந்திரங்களை மனதிற்றியானித்து, குருவாகிய வியாஸமுநிவரைநமஸ்கரித்து, அவர் சொல்லியவகையே விபூதிருத்திராக்ஷங்களையணிந்து, முதலில் இந்திர ஜபஞ்செய்து, பிறகு பார்த்திவலிங்கபூஜை செய்யவேண்டி கௌதமதந்திர விதிப்படி (பஞ்சஸூத்ரப்ரகாரம்) பார்த்திவலிங்கமொன்றியற்றி, அச்சிவலிங்கத்தின் முன்னிருந்து அதனைப் பூஜித்து ஜபஞ் செய்துகொண்டிருந்தனன். திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து சிவபூஜை செய்துவந்தனன். இப்படியே கடூரமான தவத்தைச் செய்துகொண்டிருக்கையில் அவ்விலிங்கமூர்த்தத்தினின்று தேஜசு கிளம்பியது. அதனைக்கண்ட தேவர் முதலானோர் இவ்வக்கினியில் இவன் எவ்வாறு பூஜிக்கிறனென்று யோசித்து இந்திரனிடம் அப்பொழுதே சென்று யாவுமுரைத்து, தேவனே! சூரியனே! அக்கினிபோ! மகாமுநியோ! எவனோ உன் வனத்திற் றவஞ்செய்கின்றனன். அவன் தேஜஸால் உஷ்ணந்தாளாது உன் சமுகத்திற்கு வந்தோம் எனக் கூற, இந்திரன் தன் மைந்தனே தவஞ்செய்கின்றானென்றுணர்ந்து, ஒரு விருத்தவேதியவடிவாய், ஜடாதாரியாய், தண்டதரனாய், காற்றில்விழுவான்போல மான்றோலைப் போர்த்து, அடிக்கொருமுறை காலிடறி விழுவான்போல அருச்சுனனுக்கருகே வர, அருச்சுனன் கண்டு விரைவோடு சென்று பூஜித்து முன் நின்று துதித்து, ஸ்வாமீ! எங்கிருந்து வருகின்றீர்? எனக்கேட்க, இந்திரன் அருச்சுனனுக்குத் தைரியமுண்டாகும்படி, நீ இச்சிறுவயதில் முக்தியையா ஜயத்தையா வீதனைக்குறித்து இவ்வகைய கடுந்தவஞ் செய்கின்றனை? எனவினவ, அருச்சுனன் தனது சரித்திரமுழுவதையும் வெளிப்படக்கூறினன். அதனைக்கேட்ட இந்திரன் நீ நன்றாகத் தவஞ்செய்கின்றாயேனும், யுக்தமான காரியத்தைச்செய்யவில்லை. சுகமோ சொப்பனத்திற்குச்சமானமாயிருத்தலின், அதற்காக இவ்வளவு கடுந்தவஞ் செய்வதைக்காட்டிலும் இப்பொழுதே முக்தியையபேக்ஷித்துத் தவஞ்செய். இந்திரன் சுகத்தைக் கொடுப்பானேயன்றி மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டான். ஆதலின் நான் சொல்லுமாறு முக்தியை விரும்பித் தவஞ்செய்க என, அருச்சுனன் அதனைக் கேட்டுக் கோபித்து, நீயேன் என்னை இவ்வாறு கூறுகின்றனை? வியாஸபகவான் உத்திரவின்படி இத்தவஞ்செய்கின்றேன். என் தவத்தைக் கெடுக்கவா இப்படிக் கூறுகின்றனை? உடனே இங்கிருந்து போய்விடு எனச் சொல்ல, இந்திரன் கேட்டுச் சந்தோஷித்துச் சுந்தரமான திவ்வியவடிவத்தை வகித்துத் தனது இந்திரரூப தரிசனங்கொடுக்க, அருச்சுனன்கண்டு நாணமுற்றிருக்க, இந்திரன் அவனை மனந்தேற்றி, நீ தன்யன்; கிருதகிருத்தியன்; திடபுத்தியுடையவன்; துரியோதனாதிகளான உன் சத்துருக்கள் பலவான்கள். பீஷ்மன், துரோணன், கர்ணன்

முதலியவர்கள் ஜயித்தற்கு அசாத்தியமானவர்கள். அவர்களை நானும்ஜயிக்க வல்லவனல்லேன். அவர்களை ஜயிக்கத்தக்கவ னொருவனுமிலன். அவர்களை ஜயிக்கவேண்டுமாயின் சிவபெருமானே அவ்வகைய வல்லப மளிக்க முடியு மாதலின் சிவபூஜையைச்செய். சிவபெருமானே போகமோக்ஷங்களைக் கொடுப்பர். நானும் பிரமாதிதேவர்களும் விஷ்ணுவும் யாவருஞ் சிவபூஜைசெய்பவர்களே. இதுமுதற்கொண்டு என்னைத்தியானித்த இந்திரமந்திரத்தைவிடுத்து, சிவமந்திரத்தை ஜபித்துப் பார்த்திவலிங்கவிதானமாகச் சிவபூஜையைச்செய்வாயாகில் உனக்குச் சந்தேகமின்றிக்காரியசித்தியுண்டாகுமென்று வரங்கொடுத்து, மீண்டும் அருச்சுனா! என்று விளித்து, நீசெய்யுஞ் சிவபூஜை மனதிடத்துடன் செய்யத்தக்கது. புத்திப்பிரமையடையப்படாது. சற்கருமங்கட்குப் பல இடையூறுகள் நேரிடுமாதலின் தைரியத்துடனிருக்கவேண்டும். அப்படியிருந்தால் சிவபெருமான் நீ விரும்பிய பலனை விரைவிற்கொடுப்பர் என்று வரங்கொடுத்து அந்தர்த்தானமாயினன். அருச்சுனனுஞ் சிவபெருமானை நோக்கி அகண்டமான தவஞ்செய்துகொண்டிருந்தனன்.

வியாசருபதேசப்படி அருச்சுனன் தவஞ்செய்தது

முற்றிற்று.

அறுபத்தைந்தாவது

மூகாசுர சங்காரமுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகின்றார்:—அருச்சுனன் ஸ்நானஞ் செய்து நித்ய கருமங்களை முடித்து, மந்திராதி ஷடங்கநியாசங்களைச் செய்து, வியாஸமுநிவர் கூறியவகையே ஒருகாலின்மீது நின்று சூரியனிடத்தில் நாட்டத்தை நிறுத்திக்கொண்டு தியானயோகத்தில் இருந்தனன். இவனதுதவத்திற்குத்தேவர்கள் யாவருஞ் சந்தோஷித்திருந்தார்கள். மீண்டும் அமரர்கள் சிவலோகமடைந்து சிவபெருமானைத் தரிசித்து, ஸ்வாமீ! உலகத்தில் அருச்சுனன் தங்களைநோக்கித் தவஞ்செய்கின்றான். அவனுக்கு ஏன்வரங்கொடுக்கப்படாது? எனப் பலவாறு துதித்தனர். அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்டு, சிவபெருமான் தேவர்களே! நீங்கள் போகலாம். அப்படியே அருச்சுனனுக்குச் சந்தேகமின்றி வரங்கொடுக்கிறேனென்ன, தேவர்கள் தங்கள் விருப்பின்படி சென்றனர். இதற்குள் மூகன் என்னும் அசுரனொருவன் துரியோதனன் விருப்பின்படி பன்றியுருவேற்று அருச்சுனன் தவஞ்செய்யுமிடத்தையடைந்து அங்குள்ள பாறைகளைக் கொம்பாற் பொடிசெய்து மரங்களைப் பறித்தெறிந்து பலவிதமான இறைச்சலைச் செய்துகொண்டிருக்கையில், அருச்சுனன் அவனைப்பார்த்து யோசித்ததாவது—குரூரமான தொழில்களைச் செய்பவன் யாவன்? இங்கு வந்து என் காரியங்களைக் கெடுக்கின்றான். இவன் என் சத்துருவேயென மதிக்கிறேன் என்று நிச்சயித்து, நான் பூர்வத்தில் அநேக ராக்ஷசர்களைக் கொன்றிருக்கிறேனாதலின் அவர்களைச் சேர்ந்தவன் எவனோ

அப்பகைமை பாராட்டி இங்கு வந்திருக்கக்கூடும். அல்லது துரியோதன னுக்குச் சிநேகமான ஒரு ராக்ஷசனுகவிருக்கலாம். இவன் சத்துருவல்லாத பக்ஷத்தில் என் மனஞ் சந்தேகப்படாது. இவனைப் பார்க்கும்போதே மனம் வேறுபடுதலின் இவன் சத்துருவே யென்பதற்கையமில்லை. உலகத்தில் ஒருவனுடைய ஆசாரமானது அவனுடைய குலத்தை யுணர்த்துகின்றது. சரீரமானது அவனுடைய போஜனத்தையுணர்த்துகின்றது. வாய்மொழிகள் அவனுடைய கல்வியை யுணர்த்துகிறது. கண்பார்வை அவனுடைய மனக்குறிப்பை யுணர்த்துகிறது. நடக்கை செய்கை மொழி முதலியவற்ருல் ஒருவனுடைய எண்ணத்தை யறியலாம். கண்பார்வை நான்குவகை: உஜ்வலம் - சரசம்-வக்கிரம்-ஆரக்தம். இவை வெவ்வேறு வகையின. உஜ்வலம் சிநேகனைக் குறிக்கும். சரசம் புத்திரனைக்குறிக்கும். வக்கிரம் ஸ்திரீயையுணர்த்தும். ஆரக்தம் சத்துருவைக்குறிக்கும் ஆதலின், இவனைப் பார்க்கையிற் சர்வேந்திரியங்களுந் தகதகவென்றெரிவதால் இவன் சத்துருவேயாவன். இப்பகைவனைத் தடையின்றிச் சங்கரிக்கவேண்டும். குருவான வியாஸபகவானும் 'உன் தவத்திற்கு விக்கினஞ் செய்பவனைச் சங்கரித்துவிடு' என உத்தரவளித்திருக்கின்றனர். இதற்காகவே என்னுடன் ஆயுதங்களு மிருக்கவேண்டுமென்றுங் கட்டளையிட்டனர்—என யோசித்து, பாணத்தைக் காண்டீபத்திலேற்றியிருக்குஞ் சமையத்தில், சிவபெருமானும் தனது பிரமதகண சகிதமாய் வேடரூபந்தரித்து அருச்சுனனைக் தாக்கு நிமித்தமாகவும் பரீக்ஷிக்கு நிமித்தமாகவும் அவனருகே வருவாராயினர்.

அரையிற் கச்சைகட்டி, தலைமயிரைக் கொடிகளா லிறுக்கிக்கட்டி, உடலில் வெண்கீற்றுகளும் வில்லும் அம்பருத்தூணியுமாக வந்த சிவபெருமான் தம்போலவே வேடந்தரித்த பிரமதகணங்களுடன் வேடுவர்க்குரிய பலவகைக் கூச்சல்களுடன் வருவாராயினர். அவர்களிற் சேனுநாயகனும் தனது சைநியங்களைத் தன் கட்டளையி லடக்கிக்கொண்டுவந்தனன். பிரமதகணங்கள் செய்யும் வீரகோஷங்கள் பத்துத்திசையிலும் வியாபித்து, பருவதத்திலுள்ள மரங்கள் காற்றிலலையும் ஒலியுடன் கலந்தது. இதனுல் அருச்சுனன் சந்தேகமடைந்திருந்தனன். அம்மலையிலுள்ள பிறர்யாவருஞ் சங்கட்பட்டனர். அருச்சுனன் அப்பொழுது மனமயங்காது என்ன நடந்தாலும் நடக்கட்டும். சிவபெருமான் சுகத்தைச்செய்யாது விடமாட்டார். பூர்வத்திற் கிருஷ்ணமூர்த்தியுஞ் சிவபெருமானே சகல துக்கங்களையு மொழிப்பரெனக் கூறியுள்ளார். வேத புராண ஸ்மிருதிகளுஞ் சிவபெருமானே சுகங்கள் சுபங்கள் போகங்கள் மோக்ஷ முதலியவற்றைக் கொடுப்பரெனக் கூறுதலின், சிவநாமங்களை ஸ்மரிப்பவர்கட்குச் சத்தியமாகச் சுகமே விளையும். பாபத்தாலுண்டாகுந் துக்கங்கள் முதலியன நசிக்கும். அப்படியில்லாமற் சிவசேவை செய்துகொண்டிருக்கையிலேயே கஷ்டம் வருமாயின் கர்மத்தால் வந்ததெனக் கொள்ளவேண்டும். பெருந்துன்பங்களை யநுபவிக்க வேண்டியவன் சிவபக்தனுயிருந்து அப்பெருமானுக்குஅன்பிருந்தால் அவைசிறியவாம்.



LITH. BY C.R.S.

32. மூகாசுர சங்காரம்.

அல்லது அநுபவித்தே தீரவேண்டியதாயின் வந்து சம்பவிக்கட்டும். அவனிஷ்டத்துக்குமாறுகொள்வோர்யாவர்? சிவபெருமானுக்கே பரிபூரணமாகத் தயையிருக்கும்பக்ஷத்தில் எவ்வகையகஷ்டம் வருவதாயினும், அவையாவுஞ் சூரியனைக்கண்ட மின்மினிப்பூச்சிபோலப் போய்விடும். எம்பெருமான் திருவுள்ளங்கொண்டால் விஷத்தையே அமிர்தமாகவும் அமிர்தத்தையே விஷமாகவுஞ் செய்யக்கூடும். நான் சுகமே உண்டாகவேண்டுமென்று இத்தவத்தை யநுசரித்துவருகிறேன். அவ்விறைவன் பக்தர்களைக்காப்பதே விரதமாக அநுசரித்துவருகிறார். ஆதலின் நன்மையே நடக்கவேண்டும்; பிறிதொன்றில்லை: மரணம் சமீபத்திலிருக்கிறது! பிறர் நிந்தித்தாலென்ன? துதித்தாலென்ன? ஐசுவரியம் வந்தால் வரட்டும்: வராவிட்டால் ஒழியட்டும்: வருவது வந்தேதீரும். சிவபெருமான் சுகத்தையேகொடுப்பார். ஒருவேளை என்னைப் பரீக்ஷிக்க விரும்பித் துக்கத்தைக் கொடுத்தாலுந் தயாளுவாதலின் இறுதியிற் சுகத்தைக் கொடுக்காமற் கைவிடமாட்டார். சோதித்தபிறகே பொன் புனிதமாகின்றதல்லவா? இப்படியே வியாஸபகவான் திருவாக்கால் யான் கேட்டிருக்கிறேன். ஆதலின் சிவபூஜை செய்வதால் எனக்குச் சுகமேயுண்டாகத் தடையில்லை யென்று யோசித்துக்கொண்டிருக்கையில், ஸூகரவடிவமாக வந்த மூகன் சமீபித்தனன். அதன் பின்புறமே சிவபெருமான் கணசகிதராய்வந்தனர். சிவார்ச்சுனர்கட்கு மத்தியிலே பர்வதாகாரமான பன்றி நிற்கையில், சிவபெருமான் இது நமது பக்தனைக்கொல்லப்படாதெனக் கருதியிருந்தனர். அச்சமையத்தில் சிவபெருமானும் அருச்சுனனும் தமது கையிலிருந்த வில்லிற்பூட்டிய அம்புகளை விடுத்தனர். சிவபெருமான் பிரயோகித்த பாணம் அதின்வாலிற்பட்டது. அருச்சுனன் பிரயோகித்த பாணம் அதின் முகத்திற்றைத்தது. அதில் சிவபெருமானது அம்போ வாலினின்றுவாய்வழியுருகி நிலமிசை குத்திக்கொண்டு விழுந்தது. அருச்சுனன் பிரயோகித்த அம்போ தலையினின்று வால்வழியுருகிமீண்டும் அருச்சுனன் அம்பறாத்தூணியையடைந்தது. அப்போதே மூகசூகரம் மரணமடைந்துவிழுந்தது. அதைக்கண்ட தேவர்கள் சந்தோஷித்துப் புஷ்பமாரிபொழிந்தனர். சிவபெருமான் களித்தனர். அருச்சுனன் சுகமடைந்தனன். தைத்தியனான மூகன் (நிஜ) வடிவத்தைக்கண்ட சிவார்ச்சுன ரிருவரும் ஆச்சரியமடைந்தனர். அவர்களில், அருச்சுனன் அவனது மாயாரூபத்தைக்கண்டு சிவபெருமான் இவனைச்சங்கரிக்கும்படி நற்புத்தியைக் கொடுத்தனரெனக்கருதி, சிவஸ்மரணை செய்துகொண்டு சந்தோஷித்திருந்தனன்.

மூகாசுரசங்காரமுரைத்தது

முற்றிற்று.

அறுபத்தாருவது

சிவபெருமான் அருச்சுனனை யடைந்த அத்தியாயம்.

முநிவர்களே! மேல் நடந்தவற்றையுங் கேளுங்கள்; வேடரூபந் தரித்துவந்த சிவபெருமான் தன்னோ டிருக்கும் பிரமதர்களில் ஒருவனையனு ப்ப, அவன் அப்பாணத்தைக் கொண்டுபோம்படி வந்தனன். அருச்சுனன் தன் னெதிரேவிழுந்த அம்பினைக்கண்டு க்ஷத்திரியனுதலின் விடப்படாதென்னு நியாயத்தால் அதனை யெடுக்கவந்தனன். இவ்வாறிருவரும் அங்கடைந்த பொழுது, அருச்சுனன் வேடுவனை யடித்து அந்த அம்பைக் கைப்பற்ற, அவன் எங்கள்பாணத்தை யஜமானன் உத்திரவின்படி கொண்டுபோகவந் தால் அதனை நீ பறித்துக்கொள்ளலாமா? நியாயப்படி என்கையிற் கொடு த்துவிடு என, அருச்சுனன், நீ வனசஞ்சாரஞ்செய்யும் மூர்க்கன். அறியாமை யாற் பேசுகின்றனை. என்முன் விழுந்த பாணம் என்னுடையதே; அஃதுன் னுடையதல்ல. இதிலிருக்கும் ரேகை-ரூபம்-மயிற்குஞ்சம்-பெயர் இவற்றைப் பார். அவையெல்லாம் என்னுடையதே. உன்னுடையதாகுமா? உன் துஷ்ட சுபாவத்தால்உன்னுடையதென்று ஈண்டுரைக்கின்றனையென, வேடரூபியான கணன்சிரித்து, அடா! நீ யாதுகருதித்தவஞ்செய்கிறுய்? நீ வேடந்தரித்துத் தவஞ்செய்கின்றனையேயன்றி உண்மையிற்றவஞ்செய்திலை. உலகத்திற்றபசி யும் பொய்பேசுவானு? நீ என்னை ஒன்றியாகவந்தவனென நினையாதே. நான் சேனு நாயகனென்று நினை! எங்கள் தலைவன் வனசஞ்சாரஞ்செய்யும் வேடர் பலருடன் அதோ இருக்கின்றனன்; நிக்கிரகா நிக்கிரக சமர்த்தன். நீயெடுத் துக்கொண்டபாணம் அவனுடையது. உன்பாணமென்றெருபோது மூறை யாதே. அது உன்பாணமென்று பொய்கூறி நீசெய்யுந் தவப்பலனை யேன் இழக்கின்றனை? களவு-பொய்-அகங்காரம்-புத்திப்பிரமை - மோசம் ஆகிய இவற்ருல் தவமழியுமெனக் கேள்விப்பட் டிருக்கின்றேன். என்பாணத்தைக் கொடுத்துவிடு. இல்லாவிடிற் பாபியாவாய். உனக்கு ஆபத்துவருவது கருதி என் யஜமானன் அப்பாணத்தைப் பிரயோகித்தனன். அவன்மீண்டும் அப் பாணத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நீ சத்தியவானுயின் விரை வில் அவ்வம்பினைக்கொடு. சத்தியத்தை விட்டுவிட்டால் உன் இஷ்டகாமியங் கைகூடாது. உனக்குப் பாணம்வேண்டுமாயின் என்தலைவனைக்கேள். இது போல அநேகபாணங்கள் கொடுப்பான். என்தலைவன் அதோ விருக்கின்ற னன். நீ கேட்பாயாயின் அம்புமட்டுமல்ல; அநேகம் பொருள்களுங்கொடுப் பான். நற்கருமத்தையொழித்துப் பாபபாத்திரமாகாதே என்றுகூறினன்.

வேடன் கூறிய இவ்வகைய வார்த்தைகளைக் கேட்ட அருச்சுனன், அடா வேடா! நீயென்னைப் பொய்சொல்வதாகக்கூறி, நீயே பொய் பேசுகி ன்றனை! அஃதுன் ஜாதிக்கடுத்ததேயன்றி வேறன்று. நான் பிரபு. நீ திரு டன். உன்னுேடு போர் செய்வது எனக்குத் தகுதியல்ல. போர் செய்தலும் நட்பாடலும் ஸமானர்களுடனேயன்றி அஸமானருடன் செய்யப்படாது.

உன் யஜமானனும் உன்னைப்போன்றவனே. என் தலைவன் கொடுப்பானெனக் கூறினை. கொடுக்கத்தக்க பிரபுக்கள் க்ஷத்திரியர்களாகிய நாங்களேயன்றி வனசரர்களாகிய நீங்களல்லீர். அரசனான நான் வேடனான உன் தலைவனை எவ்வாறு யாசிக்கலாம்? பாணத்திற்காக அவனையாசிக்கும்படி என்னுடனே நீயேன் கூறுகின்றனை? என்னிடத்தும் அநேக பாணங்களுள. உன் எஜமானன் எனக்குக் கொடுக்கவேண்டுவதில்லை. இந்தப்பாணம் உங்களுக்கு வேண்டுமாயின், உன் தலைவன் ஏன் இங்கே வந்து என்னைக் கேளான்? அவன் வந்து என்னோடு சண்டை செய்து என்னைச் செயித்து இதனைப் பெற்றுக் கொண்டுபோய்ச் சுகமே யிருக்கட்டும். ஆலசியஞ் செய்யவேண்டாம் எனக் கூறினன். அதனைக்கேட்ட வேடுவன், நீ தெரியாதவனாயிருக்கிறாய்! விசாரிக்கையில் ஓரிருடியல்லை. உனக்கு நீயே மரணத்தையேன்தேடிக்கொள்ளுகின்றனை? பாணத்தைக் கொடுத்தாற் சுகமடைவாய்: இல்லாவிடின் துக்கமுண்டாகும் எனக்கூற, அருச்சுனன் அடா வேடா! உன்தலைவன் வந்தால் அவனுக்குத்தக்கபலனை உண்டுசெய்வேன். எனக்கும் உன் தலைவனுக்கும் சிங்கத்திற்கும் நரிக்குமுள்ள உயர்வு தாழ்வுகள் இருக்கின்றன. இவ்வார்த்தையை அவனுடன் சொல். அவனிஷ்டப்படி செய்யட்டும் என்றான். வேடுவன் இனி யிவனுடன் பேசுவதிற் பயனில்லை யென்று திரும்பி, சிவபெருமானை யடைந்து, நடந்த விர்த்தாந்தங்களெல்லாவற்றையுமுரைத்தனன்.

பிரமதக்கணத்தலைவனால் அர்ச்சுனன் கூறிய வார்த்தையைக் கேட்ட சிவபெருமான் சந்தோஷித்துப் புன்னகையரும்பி, தனது வேடுவபரிவாரங்களுடன் யுத்தத்திற்குவர, அருச்சுனன் அச்சைநியத்தைக்கண்டு எதிர்வந்து நின்றனன். அந்தச்சமையத்தில் சிவபெருமான் மீண்டும் அக்கணனை நோக்கி நீ அத்தவசியிடஞ்சென்று, “எங்கள் சைநியத்தைப்பார். தவத்தாற் கஷ்டப்படுகின்ற நீ மோசஞ்செய்யாது பாணத்தைக் கொடுத்துவிடு. அற்பத்துக்காக மரணத்தையடையாதே. உன் சகோதரர்களும் மனைவியுந் துக்கித்துக் கொண்டிருக்கின்றனர். நீ இறந்தால் இவ்வுலகசாம்பிராச்சியத்தை இழக்கின்றாய்” எனக்கூறுக எனவிடுப்ப, அக்கணநாதன் அவ்வாறேசென்று அருச்சுனனோடு கூறினன். அதனைக் கேட்ட அருச்சுனன் நான் க்ஷத்திரியனாயிருந்து என்முன் விழுந்துகிடந்த அம்பினை யெடுத்து மீண்டும் அதனை உனக்குக்கொடுத்தால், க்ஷத்திரியதர்மத்திற்குக் குறைவுவரும். என்சகோதரர் யாவரும் இதனைக்கேட்டாற் பெருவருத்தமுறுவர். என் கல்வி பயனற்றதாகுமாயின் நீ போர் செய்யலாம். சிங்கம் நரிக்குப் பயப்படாததுபோல நான் உனக்குப் பயந்தோடமாட்டேன் எனக்கூறினன். அதனை அவ்வாறே வேடுவன்சென்று சிவபெருமானிடங் கூற, சிவபெருமான் பக்தப்பிரியனாதலின், அருச்சுனன் வார்த்தைகட்கு அகமிகமகிழ்ந்து போர்செய்யக்கருதி, அருச்சுனனுக் கெதிரேவந்து நின்றனர்.

சிவபெருமான் அருச்சுனனை யடைந்தது

முற்றிற்று.

அறுபத்தேழாவது

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற அத்தியாயம்.

சௌநகாதிமுநிவர்களே! அருச்சுனன் தன்னெதிர்வந்து போர் புரியக்கருதி நிற்கும் வேடரூபமுடைய சிவபெருமானைப்பார்த்து, சர்வாந்தர்யாமியாகிய சிவபெருமானை மனதிற்றியானித்துத் தானும் போருக்குவந்து பயங்கரமான யுத்தத்தைச் செய்தனன். சிவகணங்களாகிய வேடர்களும் பலவகைப்பட்ட ஆயுதங்களை அருச்சுனன்மேற் பிரயோகித்துத் துன்புறுத்தினர். சிவபெருமானும் அருச்சுனனோடு பயங்கரமான போர்செய்தனர். அருச்சுனன் கணங்கள்விடுத்த பாணங்களையும் ஆயுதங்களையும் மத்தியிலேயே துண்டித்தெறிந்தனன். சிவகணங்கள் தாம் எவ்வளவு ஆயுதங்களை விடுத்தும் பயன்படாது, அருச்சுனன் விடுத்த அஸ்திரங்கட்கு ஆற்றமுடியாது நாற்புறமுங் கலைந்தோடினர். ஓடுகிறவர்களைப்பார்த்து, நீங்கள் பயப்படாது போர்செய்யுங்களெனச் சிவபெருமான் கூறியும், அவர்கள் அருச்சுனன்முன்னே நிற்பதற்கஞ்சினர். மேலே சிவபெருமானும் அருச்சுனனும் போர்புரியத்தொடங்கினர். சிவபெருமான் மனதில் தயையுடையராயிருந்தும் அருச்சுனனுடைய தைரியத்தைச் சோதிக்கும்படி போர் செய்ய வந்தவராதலின், சிறிதுந் தாக்ஷிணியம் பாராது சிறந்த அஸ்திரங்களை விடுத்தனர். அருச்சுனனும் அவற்றையெல்லாங் கண்டங்கண்டமாகச்செய்து ஓரஸ்திரத்தால் சிவபெருமானைக் காயப்படுத்தினன். சிவபெருமான் அருச்சுனனுடைய அம்புகளையெல்லாந் துண்டித்துவிட்டு, அவனணிந்திருந்த கவசத்தையும் உடைத்துவிட்டு வெற்றுடலாக்கினர். அதன்பின்னர் சிவபெருமானும் அருச்சுனனும் மல்யுத்தஞ் செய்யத்தொடங்கினர். அப்பொழுது பூமி நடுங்கிற்று; தேவர்கள் யாவரும் என்னவிபத்து நேரிடுமோவெனப் பயமுற்றனர். ககனமார்க்கத்திற்கிளம்பி ஒருவரோடொருவர் மற்போர்செய்தனர். சமயமறிந்து அருச்சுனன் சிவபெருமானுடைய சிரமேற் கதையாலடித்தனன். அவ்வருச்சுனன் அடித்த அடியானது எம்பெருமானுக்கே யன்றித் திருமால்பிரமன் முதலிய தேவர்கட்கும் கருடகாந்தருவ சித்த வித்தியாதராதி கணங்கட்கும் நாகர் மானவர்முதலியோருக்கும் சராசரப்பொருள்கள் முதலிய வெல்லோருக்கும்பட்டன. [இஃது இறைவனது சர்வபரிபூரணத்துவத்தை யுணர்த்தியது]. சிவபெருமான் யாவுஞ் செய்யவல்லரேனும், பக்தவாத்சல்யமுடையராய் அவ்வடியினைப் பட்டுக்கொண்டு அருச்சுனனுக்கு அபகாரமொன்றுஞ் செய்யாது புன்சிரிப்புடன் அவன்கையினின்றுந் தப்பித்துக்கொண்டு தன்னுடைய சுந்தரமான நிஜரூபத்தைக்காட்ட, அருச்சுனன் சிவபெருமானைத் தரிசித்து மனதில் நாணமுற்றவனாய், நான் யாரைக்குறித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தேனோ அந்தப் பிரபுவுடனே போர்புரியநேரிட்டது. ஐயோ! நான் இப்பொழுது எவ்வளவு கொடுங்காரியத்தைச் செய்தேன். சர்வலோகாதிகாரியாகிய சிவபெருமானுடைய மாயை உலகத்தையெல்லாம் மயங்கச் செய்யும். சர்வேசுவரன் இவ்வகைய வடிவெடுத்து வந்தமையின் மோசம்

போனேனென்று துக்கித்து, ஸ்வாமீ! மன்னிக்கவேண்டும்: மன்னிக்கவேண்டுமென்று பலவகையாகத் துதித்து, அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாகப் பணிந்து நமஸ்கரித்து, யான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அருச்சுனனையெழுப்பி மனந்தேற்றி, நீ எனக்கு மகாபக்தன்; புத்திரசிரேஷ்டன்; உன் வல்லமையைப் பரீக்ஷிக்கக் கருதியே இவ்வகைய வேடரூபத்துடன் வரலானேன். நீயென்னுடன் போர் புரிந்ததற்காக விசனப்படவேண்டாம் என்று கூறி, ஆலிங்கனஞ்செய்துகொண்டு, தம்மருகிலிருக்கும் பிரமதகணங்களுடன் இவனது பக்திமகிமையைக் கூறி, அருச்சுனனுடைய நாணத்தையகற்றி, அருச்சுனா! நான் பிரத்தியக்ஷமானேன்; வேண்டியவரத்தைக்கேள். நீ யென்னைப் பாணத்தாலடித்த அடிகளைப் புஷ்பார்ச்சனையாகக் கொண்டேன். அது என் விருப்பத்தால் நடந்தது. உன் குற்றமல்ல. உனக்குக்கொடுக்கத்தகாதது ஒன்றுமில்லை. வேண்டியவரத்தைக் கேள். நீ எவனிடத்தில் யுத்தஞ்செய்யினும், சிவபெருமானைப் போரிற்செயித்தவன் எனப் பிரதாபமுறச்செய்தேன். உன்மனதிற் பயமும் துக்கமும் வேண்டாம் என்று கூறினர். அருச்சுனன் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் பக்தப்பிரியராதலின் தேவரீர் திருவுள்ளத்தின்படி செய்யலாமென்று வேதசம்மதமான தோத்திரங்களாற் றுதிசெய்தனன்.

பிரமாதி தேவர்களிற் பிரகாசமுடையவனே! கைலாஸகிரியில் வசிப்பவனே! எப்பொழுதும் மங்களகரமானவனே! ஐந்து திருமுகங்களையுடையவனே! ஜடையையுடையவனே! திரிநேத்திரங்களையுடையவனே! சர்ப்ப ருத்திராக்ஷ மயமான கர்ண குண்டலங்களை யணிந்தவனே! பிரசன்னமான முகமுடையவனே! பிரசன்னமான திருவுருவ முடையவனே! புன்சிரிப்போடு கூடிய திருமுகத்தை யுடையவனே! நீலகண்ட முடையவனே! சத்யோஜாதஸ்வரூபியே! இடபக்கொடியைப் பிடித்தவனே! வாமபாகத்திற் பார்வதியை யமர்த்தியவனே! பத்துத் திருக்கரங்களை யுடையவனே! பரமாத்மஸ்வரூபியே! டமருககபாலங்களைத் திருக்கரத்தமைத்தவனே! சிரோமாலை தரித்தவனே! பரிசுத்தமான படிகக்கல்போன்ற தேககாந்தி யுடையவனே! கற்பூரம்போலச் சிறந்தவனே! பினாகவில்லைத் திருக்கரத் தேந்தியவனே! சிறந்த திரிசூலத்தையுடையவனே! புலித்தோலாடை தரித்தவனே! யானைத்தோலைப் போர்த்தவனே! சர்ப்பாபரணந் தரித்தவனே! கங்கையைச் சடையிலணிந்தவனே! மெல்லிய திருவடியை யுடையவனே! முக்தி கொடுப்பவனே! நிர்க்குண சகுண சொரூப முடையவனே! காணக்கூடிய பிரபஞ்ச முழுவதுந் தேவரீருடைய ஸ்வரூபமேயன்றி வேறன்று. உன் குணங்களை வர்ணிக்கச் சதுர்வேதங்களுஞ் சக்தி யுடையனவல்லவாயின் மந்த புத்தியையுடைய நான் யாதென வர்ணிப்பேன். யாவராலுங் கண்டறியப் படாத மகாநுபாவனாகிய உனக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: நமஸ்காரம்: என்னிடத்தே தயைவைத்து என்னை இரக்ஷிக்கவேண்டும். என்று பலவாறு துதித்து வணங்கிநின்றனன்.

அருச்சுனன் இவ்வாறு தோத்திரஞ்செய்ததைக் கேட்ட சிவபெருமான் சந்தோஷித்து, அருச்சுனா! உன்மனதில் அபேக்ஷித்ததை விரைவிற் கேள்: கொடுப்பேன் என, அருச்சுனன் சாஷ்டாங்கமாகப்பணிந்து, ஸ்வாமீ! தேவரீர் என் விஷயத்திற் சந்தோஷிக்க வேண்டும். என் சத்துருக்களால் நான் அடைந்த துன்பங்கள் தங்கள் தரிசனத்தாலே யொழிந்தன. இகலோகசுகத்தை நான் நன்றாய் அநுபவிக்கச் செய்யவேண்டுமென்று கூறிப் பணிந்து கைகட்டி எதிரே நிற்பக்கண்டு, சிவபெருமான் அவனுடைய எண்ணத்தையுணர்ந்து, இப்பிரமாண்டத்தில் ஒருவராலுஞ் சயிக்கமுடியாத பாசுபதாஸ்திரத்தை அருச்சுனனுக்குக் கொடுத்து, இவ்வஸ்திரத்தால் நீ ஜயமடைவாய். சத்துருக்களால் வெல்ல அசக்தனாயிருப்பாய். உனக்கு எல்லாச் சுகங்களும் உண்டாகும். நான் கிருஷ்ணனுடன் சொல்லுகிறேன். அக்கிருஷ்ணன் உனக்கு எல்லாச் சமையங்களினும் உதவிசெய்வான். மேலும் அவன் என் அமிசமாகப் பிறந்தவன். நீ அவனுடைய சகாயத்தால் சகல சத்துருக்களையுஞ் சயித்து, இராஜரீகத்தை யடைவாய் என்று வரங்கொடுத்து, தமது திருக்கரத்தை அவன் சிரமேல் வைத்து அருச்சுனனைப் புகழ்ந்து ஆலிங்கனஞ்செய்துகொண்டு, அருச்சுனனாற் பூஜிக்கப்பெற்று பிரமதகணங்களுடன் அந்தர்த்தானமாயினர். அர்ச்சுனனுஞ் சந்தோஷத்துடன் தனது ஆச்சிரமத்தை யடைந்து, தருமராசனைப் பணிந்து நின்றபொழுது தேவதுந்துபிகள் முழங்கின. மலர்மாரி வருஷித்தது. அப்ஸரஸ்திரீகள் நடித்தார்கள். இந்திராதி தேவர்கள் சந்தோஷித்துப் பல படைகளைக் கொடுத்துச் சென்றனர். இவ்வாறு பல வரங்களைப்பெற்று வந்திருக்கும் அர்ச்சுனனைக்கண்டு, திரௌபதையுடன் பாண்டவரைவரும், முன்போனபிராணன் மீண்டும் வந்ததாகக் கருதி, சுகமுற்றிருந்தனர். இவர்கட்குச் சுபமுண்டாவதற்கு அறிகுறியாக ஸுகந்த சந்தனங்கலந்த மலர்மாரி பெய்தது. சிவபெருமான் அருச்சுனனுக்கு வரங்கொடுத்ததுபற்றிப் புகழ்ந்து, தமது வனவாசஞ் செய்யவேண்டிய பதினொன்கு வருஷத்தினெல்லை சமீபத்து விட்டமையின் இனி நமக்கு ஜயமுண்டாகுமென்று கருதியிருந்தனர். அப்பொழுது அருச்சுனன் வந்ததை யறிந்த கிருஷ்ணமூர்த்தி அவனைப் பார்க்கும்படி வந்து அப்பா அருச்சுனா! சிவபெருமானே சகலதுக்கங்களையும் விலக்கிச் சுகத்தைக் கொடுப்பவராதலின், நானும் சிவபூஜை செய்வதுபோல, நீங்களுஞ் சிவபூஜை செய்யுங்களெனக் கூறினேனென்று சந்தோஷித்துத் துவாரகாபுரியையடைந்தனர் என ஸூத முனிவர் மகருஷிகளுக் குரைத்தனர்.

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது

முற்றிற்று.

அறுபத்தேட்டாவது

அருச்சுனன்செய்த சிவபூஜாவிதானமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி மகருஷிகள் ஸூதமுநிவரைப் பார்த்து, வியாஸ சிஷ்யரே! எல்லாமுணர்ந்தவரே! தேவரீர் சொல்லிய விஷயங்களாற் பெருங் களிப்படைந்தோம். அர்ச்சுனனுக்குச் சுகமுண்டாகும்படி வேதவியாஸ பகவான் பார்த்திவலிங்கபூஜையை யுபதேசித்த விதத்தையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, ஸூதமுநிவர் சந்தோஷித்துச் சிவத்தியானஞ்செய்து சொல்வாராயினர். ருஷிகளே! நல்ல விஷயத்தைக் கேட்டீர்கள். மாநுடனுக்கு எப்பொழுது அஸாத்தியமான துக்கமுண்டாகுமோ அப்பொழுது அந்தத்துக்கமொழியவும் சுகமுண்டாகவும் முக்தியடையவும் சத்குருவைப்பணிந்து, அச்சத்குருவால் மந்திரோபதேசம் பெறவேண்டும். பின்னர் நாடோறும் ஸ்நானஞ்செய்து குருவின் உபதேசக்கிரமப்படி ஆராதனை செய்யவேண்டும். *உஷ:காலத்திலெழுந்திருந்து, மலவிசர்ஜனம் தந்ததாவன முதலிய கருமங்களை முடித்து, சிவபக்தியோடு குருநமஸ்காரஞ்செய்து, சிவநாமங்களையுந் தீர்த்தநாமங்களையும் ஸ்மரித்துக்கொண்டு, ஸ்நானஞ்செய்து சிவநாமங்கூறிக்கொண்டு ஆசமனஞ்செய்து, தேகத்தில் பன்னிரண்டிடங்களில் திருவெண்ணீறணிந்து, சாஸ்திரோக்தமாகப் பூசுத்தி, பூதசுத்தி, பிராணப்பிரதிஷ்டைகளை மூலமந்திரத்தாற்செய்துகொண்டு, தேஜோரூபியான சிவபெருமான் இதயத்திலிருக்கின்றான்; இதயவாசியான சிவபெருமான் என் தேகத்தை ஜபசித்தியாகு நிமித்தம் பரிசுத்தப்படுத்துவாராக எனக்கருதி, சிவமந்திரத்தைச்சபித்து, பிதுர்த்தர்ப்பணஞ் செய்துமுடித்து, சூரியனுக்கு அர்க்கியதானஞ்செய்து, பின்னர் பூஜாக்கிரகத்தை யடையவேண்டும்.

முதலில் கணபதியையும் பரிவாரதேவர்களையும் பார்வதியாரையும் முறைப்படி பூஜித்து, பிறகு பார்த்திவலிங்க பூஜையை விதிப்படி செய்யவேண்டும். எப்படியென்றால், பரிசுத்தமானவிடத்திலுள்ள மிருத்திகையைத் தினந்தோறும் [[illegible] ஓம் ஸ்ரீம் அஷ்டமூர்த்தயே நம:] என்னும் மந்திரத்தைச் சபித்துக்கொண்டு, அதிற் பிராணிகளொன்றுமின்றிச் சோதித்து வைத்துக்கொள்ளவேண்டியது. அவ்வாறு இயலாத பக்ஷத்தில், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் ஒரு மாதத்திற்கு வரும்படியாகப் போதுமானஅளவு மேல்மந்திரத்தைச் சபித்து எடுத்துவந்து வைத்துக் கொள்ளலாம். மிருத்திகையைக் கொண்டுவந்தபிறகு "அத்யாதிப்பிரயோக புரஸ்ஸரமாக" அங்கநியாஸ கரநியாஸங்களைச் செய்யவேண்டியது. எப்படியென்றால்,—மமோபாத்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர முத்திஸ்ய ஸ்ரீ[illegible]யேஸ்வர ப்ரீத்யர்தம் ஶுபே ஶோபன முஹூர்த்தே ஸ்ரீஸம்போராஜ்ஞ்யா ப்ரவர்தமாநஸ்ய அத்யப்ரஹ்மண: த்விதீயபரார்தே ஶ்வேதவராஹகல்பே வைவஸ்வதமந்வந்தரே கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பரதவர்ஷே பரதகண்டே மேரோர்தக்ஷிணதிக்பாகே

*உஷக்காலம் இரவு இருபத்தைந்து நாழிகை; அதாவது விடியற்காலம் நான்குமணி.

ஸ்ரீசைலஸ்ய ஆக்நேயதிக்பாகே தேவப்ராஹ்மணஸந்நிதௌ க்ருஷ்ணா காவேரீ மத்ய
தேசே அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிக சாந்த்ர ஸௌரமாநேந ப்ரபவாதி ஷஷ்டி
ஸம்வத்ஸராணாம் மத்யே—ஸம்வத்ஸரே—அயநே—ருதௌ—மாஸே—பக்ஷே—சுப
திதௌ—வாஸரயுக்தாயாம் சுபநக்ஷத்ர சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷணவி
சிஷ்டாயாம் சுபதிதௌ ஸ்கந்த கணபத்யாதி பரிவாரஸமேத ஸ்ரீ பவாநீசங்கர மூர்த்தி
ம்ய ஸ்ரீபவாநீசங்கரப்ரீத்யர்தம் பார்திவவிதாநேந ஸ்ரீ பவாநீசங்கர பூஜாங்கரிஷ்யே |
என்று சங்கற்பஞ் செய்யவும். சிவாய அங்குஷ்டாப்யாந்நம:, பவாய தர்ஜநீப்யாந்நம:,
சர்வாய மத்யமாப்யாந்நம:, பசுபதயே அநாமிகாப்யாந்நம:, மஹாதேவாய கநிஷ்டிகா
ப்யாந்நம:, ஈசாநாய கரதல கரப்ருஷ்டாப்யாந்நம:, ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ:. சிவாய
ஹ்ருதயாயநம:, பவாய சிரஸேஸ்வாஹா, சர்வாய சிகாயைவௌஷட், பசுபதயே கவ
சாய ஹூம், மஹாதேவாய நேத்ரத்ரயாயவஷட், ஈசாநாய அஸ்த்ராயபட், பூர்புவஸ்
ஸுவரோமிதி திக்பந்த:. த்யாநம். "த்யாயேந்நித்யம் மஹேசம் ரஜிதகிரிநிபஞ் சாரு
சந்த்ராவதம் ஸம்ரத்நாகல்போஜ்வலாங்கம் பரசு ம்ருகவராபீதிஹஸ்தம் ப்ரஸந்நம்,
பத்மாஸீநம் ஸமந்தாத் ஸ்துதமமரகணைர்வ்யாக்ரக்ருத்திம் வஸாநம் விச்வாத்யம் விசுவ
வந்த்யம் ஸகலபயஹரம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம். கஎ. கர்பூரகௌரங் கருணாவ
தாரம்ஸம்ஸாரஸாரம்புஜகேந்த்ரஹாரம், ஸதாவஸந்தம்ஹ்ருதயாரவிந்தேபவம் பவாநீ
ஸஹிதந்நமாமி. கஅ. கைலாஸபீடாஸநமத்யஸம்ஸ்தம் பக்தைஸ்சநந்த்யாதிபிஸ்ஸேவ்ய
மாநம், பக்தார்த்தி தாவாநல மப்ரமேயந் தியாயே துமாலிங்கித விச்வ ரூபம். கக."
என்று தியானஞ் செய்து பின்னர் சிவபூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டியது.

அப்படியல்லாத பக்ஷத்தில், சிவபெருமானுடைய திவ்யமங்கள
ஸ்வரூபத்தைத் தியானிக்கிறேனென்று கருதியேனும் சிவபூஜை செய்யலாம்.

ஹரோ மஹேசுவரோ தேவ: சூலபாணி: பிநாகத்ருக். உக.
பசுபதிச் சிவச்சைவ யஜமாந இதிக்ரமாத்.

இந்த அஷ்டநாமங்களில் மிருதாஹரணம் [மண் எடுத்துக்கொள்வ
தும்], நீர் விட்டுப் பிசைந்து லிங்கஞ்செய்வதும், பிராணப்பிரதிஷ்டை செய்வ
தும், அழைத்தலும், ஸ்நானஞ்செய்வித்தலும், பூசைசெய்தலும், க்ஷமாபண
மும், விசர்ஜனமுஞ்செய்யவேண்டியது எப்படியென்றால், ஹராயநம: என்று
மண்ணையெடுத்துக்கொண்டு, மஹேச்வராயநம: என்று பிருதிவில் நீர் சேர்
த்துச் சிவலிங்கஞ்செய்து, சூலபாணயேநம: என்று பிராணப்பிரதிட்டை
செய்திருத்தி, பிநாகபாணயேநம: என்றும்,

கைலாஸசிகராத்ரம்யாத்சமாகச்சமமப்ரபோ. உங.
பூஜாம்சிமாம்க்ருஹாத்வாசயதோக்தபுலதோபவ |
யதோக்தரூபிணம்சம்புமஹாமாவாஹயாம்யஹம் || உச.

என்றும் ஆவாஹநஞ்செய்யவேண்டியது. [மேல்சொல்லப்போகிற மந்திரஜப
த்திற்குப் பத்திலொருபாகம் ஹோமமும், ஹோமத்திற்குப் பத்திலொருபா
கம் பிராமணபோஜனமும் செய்யவேண்டியது. ☞ இது பூஜாக்கிரமத்திற்
சேர்ந்ததில்லையாயினும் நூலிலுள்ளமையின் அப்படியே மொழிபெயர்க்கப்
பட்டது.] மஹாப்பிரதாபமுடைய நந்திதேவரையும் பிரமதகணங்களையும்
பூஜித்தபின்னரே சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும்.

நாமபிர்விவிதை:ஸ்தோத்ரைர் ம்ருத்யுஞ்ஜய புரஸ்ஸரை:. உசு.

ஸ்நாபயேச்ச ஶிவம்ஸம்யக்தே வஹ்யர்கோதகேநச என்றும் ஸநானஞ் செய்விக்கவேண்டியது. ஸ்ரீசிவாயநம: என்னு மந்திரத்தாலேயே வஸ்திரதாரணம் - யஜ்ஞோபவீதம் - விபூதிதாரணம் - கந்தம் - அக்ஷதை-அலங்காரம்-புஷ்பம் இவற்றைச் சமர்ப்பிக்கவேண்டியது. மேலும், தூபம் - தீபம் - நைவேத்தியம்-தாம்பூலம் - கர்ப்பூரநீராஞ்சனம் இவையும் சிவாயநம: வென்றே சமர்ப்பிக்கவேண்டும். யஜமாநாயநம: வென்று க்ஷமாபணஞ்செய்து, முன் கூறிய "பூதியாயேநித்தியம்" என்னும் தியானத்தைக்கூறி மந்திரஜபஞ்செய்ய வேண்டும். எப்படியென்றால், "அஸ்ய ஸ்ரீஸதாசிவமந்த்ரஸ்ய, வாமதேவருஷி:, தேவீபங்க்திஸ்ச்சந்த:, ஸ்ரீஶிவோ தேவதா, மமபுக்திமுக்திப்ராப்தயே மந்த்ரஜபேவிநியோக:" என்று குருவுபதேசஞ்செய்த மந்திரஞ்சேர்த்துச் சிவசந்நிதியிலே, அநந்த பலன்களைப் பெறுநிமித்தமாக ஜபிக்கவேண்டியது. மந்திரஜபஞ் செய்கையில், தன்மனதைப் பரிபூரணமாகச் சிவபெருமானிடத்திலேயே வைத்து ஜபிக்கவேண்டும். சக்திக்கேற்ப நூற்றெட்டுக்குக் குறையாது ஜபித்து, ஜபத்திற்குப் பத்திலொருபங்கு தர்ப்பணஞ்செய்து, தர்ப்பணத்திற் பத்திலொருபங்கு மார்ஜனம் [தன்சிரமேல் கும்பஜலத்தைப் புரோக்ஷித்தல்] செய்துகொண்டு, சிவத்தியானஞ்செய்து தன்பூஜை சத்பலன் கொடுக்கும்படி, சிவபெருமானது அஷ்டமூர்த்தங்களையும் "சர்வாய க்ஷிதிமூர்த்தயேநம:, பவாய ஜலமூர்த்தயேநம:, ருத்ராய தேஜோமூர்த்தயேநம:, உக்ராயவாயுமூர்த்தயேநம:, பீமாய ஆகாசமூர்த்தயேநம:, பசுபதயே யஜமாநமூர்த்தயேநம:, மஹாதேவாய ஸோமமூர்த்தயேநம:, ஈசாநாய ஸூர்யமூர்த்தயேநம:," என்று அக்ஷதை சந்தனம் புஷ்பமுதலியவற்றாற் பூஜித்து, நிருத்தியம் கீதம் கல்லவாத்தியம் முதலியன செய்து, அக்ஷதையும் புஷ்பமும் இருகையிலுந்தாங்கி,

தாவகஸ்த்வத்கதப்ராண ஸ்த்வச்சித்தோஹம் ஸதாம்ருட | க்ருபாநிதேஇதிஜ்ஞாத்வா பூதநாதப்ரஸீதயே || கூஅ. அஜ்ஞாநாத்யதிவாஜ்ஞாநாஜ்ஜபபூஜாதிகம்மயா | க்ருதந்ததஸ்துஸபலங் க்ருபயாதவசங்கர || கூகூ. அஹம்பாபீ மஹாநத்ய பாவநஸ்சமஹாந்பவாந் | இதிவிஜ்ஞாயதேவேஶயதிச்சஸிததாகுரு || கூசு. வேதை:புராணை: ஸித்தாந்தை:ருஷிபிர்விவிதைரபி | நஜ்ஞாதோஸி மஹாதேவ குதோஹம்த்வாம்ஸதாஶிவ || கூஎ. சதாததாத்வதீயோஸ்மி ஸர்வபாவைர் மஹேஸ்வர—என்றது, யான் உன்னவன். உன்னிடத்தே சித்தத்தையும் பிராணனையும் வைத்தவன். சகல சுகங்களையுங் கொடுப்பவனே! தயாசமுத்திரனே! சகலருக்கும் பிரபுவே! எனக்குப் பிரசன்னமாவாயாக: யான் தெரிந்துந் தெரியாதுஞ்செய்த ஜபமும் பூஜையும் உன் தயவாற் சபலமாகவேண்டும். யான் பெரும்பாவங்களைச் செய்தவன். நீ பவித்திரஞ் செய்பவரிற் சிறந்தவன். யோசித்து உனதுவிருப்பின்படி செய்யலாம். வேதபுராண சித்தாந்தங் கற்றும் அறியப்படாத நின்னை யானெவ்வாறுணரவல்லேன்? சர்வபாவங்களாலும் நின்னையே நம்பி நின்னவனாக விருத்தலின் என்னைக் காப்பாற்றவேண்டும்—என்று சொல்லி, சிவபெருமான் சிரத்திற் சமர்ப்பித்து, அநேகவித பிரார்த்தனைகளைச் செய்து, தேவாயநம: என்றும்—

யதேதாநீஞ்சதேவேஸக்ருபார்தம்ஸமுபாகத: || ௬௧.
ததாத்வயாபுநர்தேவஸமாகந்தவ்யமேவச.

ஸ்வாமீ! யான் பூஜைசெய்தற்குத் தயை செய்ததுபோலவே, இப்பொழுது யதாஸ்தானஞ் சென்று நான் நாளையதினம் செய்யும் பூஜைக்கு எழுந்தருளவேண்டுமென விசர்ஜனஞ் செய்யவேண்டியது. மீண்டும் அத்யாதிப் பிரயோகத்தைக்கூறி, "மந்த்ரஹீநங்க்ரியாஹீநம்பக்திஹீநம்மஹேச்சவர | யத்பூஜிதம்மயாதேவ பரிபூர்ணந்ததஸ்துதே || அநேகஸ்கந்தாதிபரிவாரஸமேத ஸ்ரீபவாநீஸங்கரபார்திவபூஜாவிதாநேந ஸகலதேவாத்மக ஸ்ரீபவாநீஸங்கர: ஸுப்ரீத ஸ்ஸுப்ரஸந்நோ வரதோபவது,ஏதத்பலம்ஸ்ரீசிவார்பணமஸ்து" என்று பூஜையை முடித்த பிறகு, சமுசாரவிஷயத்திற் சம்பந்தமான காரியங்களிற் பிரவேசிக்கலாம். இவ்வாறு சிவபூஜை செய்துவந்தால் இஷ்டசித்திகளெல்லாங் கைகூடும். இப்பூஜை ஆதிசைவவேதியர்களை வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லத்தான் செய்யவேண்டியது. அவ்வாறு அந்தணர் கிடைக்காதபக்ஷத்தில் தானே செய்துகொள்ளலாம். சிவபெருமானை அருச்சித்த புஷ்பம் அக்ஷதை முதலியவற்றைச் சிவாக்கினையாலெடுத்துச் சிரமேற் றரித்துக்கொள்ளலாம். இப்படிப் பூஜிப்பவருக்கு ஒருகுறையுமிராது. ஆறுமாதம் இவ்வாறு பூஜித்தவன் ஜீவன்முக்தனுவான். சாபாநுக்கிரக சாமர்த்தியனுவான். அவனைத் தரிசித்தால் சிவசேவை செய்த பலன் கிடைக்கும். இதற்குச் சமுசயமில்லை. இப்படி முனிவர்களாகிய வேதவியாஸாதிகள் கூறியிருக்கின்றனர். சிவபூஜாவிதியை எனக்குத் தெரிந்தவரையில் உங்கட்குச் சொன்னேன். இப்படியே கிருஷ்ணன் இந்திரன் முனிவர்கள் முதலானுர் பார்த்திவ லிங்கபூஜைசெய்தனர். இதனைக் கேட்டவர்கட்கு நீங்காத போகபாக்கியங்கள் கைகூடுமென்று ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கூறினர்.

அருச்சுனன்செய்த சிவபூஜாவிதான முரைத்தது

முற்றிற்று.

அறுபத்தோன்பதாவது

கண்ணன் சிவபூசைசெய்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! தேவரீர் எல்லாமுணர்ந்தவர்: கிருஷ்ணமூர்த்தி தினந்தோறுந் தான் சிவபூஜை செய்வதாகச் சொல்லியிருக்கிறுரல்லவா? அவர் எந்தச்சமயத்திற்பூஜித்தனரோ அதனைச்சொல்லவேண்டுமென்று வினவிய நைமிசாரணியமுநிவர்களைநோக்கி, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினுர்:—கிருஷ்ணமூர்த்தி பிருந்தாவனத்திலிருந்து வடமதுரையையடைந்து, கம்சன் முதலிய தீயோரைச் சங்கரித்து, வசுதேவன் தேவகி இவர்களை விலங்கினின்று விடுவித்து, சகல யாதவர்களையும் விளித்து, உக்கிரசேனனுக்குப் பட்டங்கொடுத்துப் பரிபாலித்துவந்தனன். பிறகு கிருஷ்ணமூர்த்தி தந்தையால் உபநயனஞ் செய்யப்பெற்று, அவந்திபட்டணத்திலுள்ள சாந்திவனென்



32. கிருஷ்ணமூர்த்தி உபமக்யு , வசிடம் சிவதீக்ஷைபெற்றுச் சிவபூஜை செய்தது.

C.R.S.

னுங் குருவையடைந்து சேவித்து, அவரால் சிவபஞ்சாக்ஷரமந்திர முபதேசிக்கப்பெற்று, அந்தச் சிவமந்திரப் பிரபாவத்தால் சுலபகாலத்திலேயே சகல வித்தைகளையுங் கற்றுணர்ந்து, முதலையால் விழுங்கப்பட்டு மறைந்த அக்குருவின் புத்திரனைக் கொண்டுவந்து குருகாணிக்கையாகக்கொடுத்து மதுராபுரியையடைந்து அநேக தைத்தியர்களுடன் போர்செய்தனர். மென்மேலுந் தைத்தியவீரர்கள் யாதவர்களைத் துன்புறுத்துவது கண்டு சமுத்திரத்தில் துவாரகாபுரியில் யாவரையுமிருக்கச்செய்து, அப்பட்டணத்துக்குச் சகலசம்பத்துக்களுமுண்டாக்கி, முசுகுந்தனை யநுக்ரகித்து, காலயவனன் முதலிய ராக்ஷஸர் மேன்மேலும் போருக்கு வருகையில் ஸாவதகிரியை யடைந்து, சிவபூஜாதுரந்தரரான உபமந்யுமுநிவரைத் தரிசித்து, சத்துருக்ஷயம் எவ்வாறுண்டாகுமென வினவ, உபமந்யுமுநிவர் நீ விஷ்ணுஸ்வரூபியாதலின் சிவபெருமானை யேன் ஆராதிக்கக்கூடாது? தன்னைச் சேவித்தவர்கட்குச் சகாயனுயிருக்கச் சிவபெருமான் காத்திருக்கின்றனராதலின் நீ சிவபூஜைசெய்யும்பக்ஷத்தில், சகல சத்துருக்களையுஞ் செயிப்பாயென்று கூறி, சிவமந்திரத்தை யுபதேசிக்க, ஸப்தமாச தீக்ஷையை வகித்து, கமலம் - வில்வம் - சதபத்திரம் - குசை - கரவீரம் - அறுகு - வெள்ளெருக்கு முதலிய அநேகவிதமான மலர்களைக்கொண்டும், தியானயோகத்தாலும் பூஜிக்கையில், சிவபெருமான் அக்கண்ணன் பக்திக்கு மகிழ்ந்து பிரசன்னராய், கிருஷ்ணனே! நீ விரும்பிய வரத்தைக்கேள் என, கிருஷ்ணமூர்த்தி சந்தோஷத்துடன் சொல்கின்றனர்.

ஸ்வாமீ! தவரீரது பரிபூரணகடாக்ஷத்தால் யாவும் எனக் கிருப்பினும், தைத்தியர்களுடைய தொந்தரவால் துன்புறும் என்னை, அவர்கள் தொந்தரையினின்று நீக்கும்படிக்கே தேவரீரைச் சரணடைந்தேன். பூர்வத்தில் என்பெரியோர் யாவரும் தேவரீரை யாராதித்திருக்கின்றனர். பிரமதேவனும் தேவரீரை யுபாசித்திருக்கிறான். ஆதலின், தேவரீர் என்னையும் அநுக்கிரகிக்கவேண்டும் என, சிவபெருமான் ஓ கிருஷ்ணா! உனக்குத் தனதான்னியங்களும், புத்திரர்களும், அநேக ஸ்திரீகளும், விசேஷமான சத்துருசங்காரசமர்த்தும் உண்டாகுக என வரங் கொடுத்தனர். அச்சமயத்தில் அருகிருந்த பார்வதாதேவியுஞ் சந்தோஷித்துப் பலவரங்களைக் கொடுத்தனள். சிவபார்வதி வசனங்களாற் சந்தோஷித்த கண்ணபிரான், ஸ்வாமீ! பூர்வத்தில் தேவரீராற் சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைக் கொடுத்துக் காக்கப்பட்டேன். அச்சக்கரத்தால் சகலமான ராக்ஷசர்களையுஞ் செயித்துக்கொண்டிருந்தேன். இப்பொழுதும் எல்லா வரங்களையுங் கொடுத்தீரென்று விசேஷமாகப்பூஜிக்க, கருணாமயமான சாம்பவமூர்த்தி நீ போக: உனக்கு விசேஷமான சுபங்கள் உண்டாகுமாறு தயை செய்வோமெனக்கூறிவிடுக்க, கிருஷ்ணமூர்த்தியானவர் துவாரகையைச்சேர்ந்து சந்தோஷத்துடன் வாழ்ந்திருந்தனர். இவ்வாறு கிருஷ்ணனுக்கு வரங்கொடுத்து வில்வேசுவரரென்னும் பெயருடன் அந்த ஸாவதகிரியில் எழுந்தருளியிருந்து, தன்னைச் சேவிப்பவர்கட்

குச் சுகங்களை யநுக்கிரகித்துக்கொண்டிருக்கின்றனர். கிருஷ்ணமூர்த்தி எழு மாதகாலமும் வில்வதளங்களாலேயே விசேஷமாக அருச்சனைசெய்த காரணத்தால் அச்சிவலிங்கமூர்த்திக்கு வில்வேசுவரரெனப்பெயராயது. அதுமுதற்கொண்டு கிருஷ்ணமூர்த்தி சகல சாம்பிராச்சியங்களையுங் கொடுக்குஞ் சிவபெருமானைச் சேவித்துவந்தனர். ருஷிகளே! நீங்கள் கேட்டவற்றைச் சொன்னேன். இச்சரிதத்தைக் கேட்டவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவரென ஸூதமுநிவர் கூறியருளினர்.

கண்ணன் சிவபூஜைசெய்தது

முற்றிற்று.

எழுபதாவது

திருமால் நேமிபெற்ற அத்தியாயம்.

ஸூதமுநிவரே! விஷ்ணுமூர்த்திக்குச் சிவபெருமான் சக்ராயுதங் கொடுத்ததாகக் கிருஷ்ணமூர்த்தி தோத்திரஞ்செய்தனரெனக் கூறினீரே; தேவரீர் யாவு மறிந்தவராதலின், அவ்விஷ்ணு சக்ராயுதம்பெற்ற சரிதத்தை அடியேங்கட்குச் சொல்லவேண்டுமெனக்கேட்ட நைமிசாரணியவாசிகளை நோக்கி, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். ருஷிகளே! ஒருகாலத்தில் பலவான்களான ராக்ஷஸர்கள் விசேஷமாகி உலகங்களைப் பீடித்துத் தர்ம விக்கினஞ்செய்கையில், தேவர்கள் யாவருஞ் சங்கடப்பட்டு விஷ்ணுமூர்த்தியையடைந்து, ஸ்வாமீ! எங்கள் விஷயத்தில் தயைவைக்கவேண்டும். தைத்தியர்களால் துன்பப்படுகிறோம். எங்கே போவோம்? என்ன செய்வோம்? திக்கற்றவுளாகிய தேவரீரை யடைந்தோம் எனப் பிரார்த்திக்க, திருமால் அத்தேவர் வார்த்தையைச் செவிசாத்தி, அமரர்களே! அஞ்சாதீர்கள். யான் சிவபெருமானை யாராதித்து அவரருளால் உங்களை ரக்ஷிப்பேன். சத்துருக்கள் பலவான்களாயிருத்தலின் பிரயத்தினஞ்செய்து வெல்லவேண்டியிருக்கிறது. சிவாராதனைசெய்கிறேன் என்றனர். அதனைக்கேட்ட தேவர்கள் தங்கள் இருப்பிடங்களை யடைந்து சந்தோஷித்திருந்தனர்.

விஷ்ணுமூர்த்தியும் தேவர்கட்கு ஜெயமுண்டாகும்படி ஸ்ரீகைலாய பர்வதத்திற்குச்சென்று, சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்யக்கருதி, ஹோமகுண்டமுண்டாக்கி யாகம் வளர்த்தி, பார்த்திவபூஜாவிதானமாகப் பலவிதமான ஸ்தோத்திரங்களாலும் மந்திரங்களாலுஞ் சேவித்து, † மானதசரசிலிருக்குங் கமலங்களாற் பூஜித்து, பத்மாசனத்திலிருந்து சிவபெருமான் பிரத்தியக்ஷமாகுமெல்லையும் அசையாதிருப்பதாக நியமனஞ் செய்துகொண்டு, தான் யோகத்திலமர்ந்து, அநேககாலம் பூஜித்தும் சிவபெருமான் பிரசன்னமாகாமையின், சாஸ்திரோக்தமாக யோசித்துக் கஷ்டமான தவத்தையும் சிவபூஜையையும் அநேககாலஞ்செய்தும் தரிசனமளிக்காமையின், சிவ

† மானதசரசு என்பது ஒரு தடாகம்.



33. திருமால் நேமிபெற்றது.

(LITHO-MEENAKSHIAMMAH-PRESS. MYLAPORE. 1889)

பெருமானது ஆயிரந் திருநாமங்களையுந் தியானித்து, ஆயிரங் கமலங்களால் (ஒருநாமத்திற்கொருகமலமாகப்) பூஜிப்பதாகச்சங்கற்பஞ்செய்துகொண்டு, ஆயிரங்கமலங்கள் சேகரித்துவைத்துக்கொண்டு ஒவ்வொரு திருநாமங்கூறி ஒவ்வொருமலர்சாத்திவர, சிவபெருமான் அவரதுபக்தியைப்பரீக்ஷிக்கக் கருதி கடைசியில் ஒருதிருநாமத்திற்கு ஒருமலர் குறையும்படிச்செய்ய, திருமால்சிவபூஜாநியமனத்துக்கு விக்கினம்வருவதுசகியாது, எனதுகண்ணுந் தாமரையாம்; இதனாலேயே அருச்சித்து நியமத்தை முடிப்பேனென்று,அதனைப் பறிக்கத்தொடங்குகையில், சிவபெருமான் பிரசன்னராய், விண்டுவே! உன் கண்ணைப் பறிக்கவேண்டாம். உன்பக்திக்குமகிழ்ந்தேன். வேண்டிய வரத்தைக்கேட்டால் கொடுக்கிறேன். உனக்குக் கொடுக்கக்கூடாததொன்றுமில்லையென, விஷ்ணு சங்கரா! தேவரீர்அறியாததொன்றுமில்லை. உலகமுழுதும் தைத்தியர்களால் துன்புற்றிருத்தலின், யாவரும் சுகமடையத் திருவுள்ளஞ் செய்யவேண்டும். தைத்தியசங்காரஞ் செய்தற்குத் தக்க ஆயுதம் என்கையிலில்லை! யான் யாதுசெய்வேன்! தேவரீரையே சரணடைந்தேன் என்று கூறி நமஸ்கரித்து எதிரேநிற்கையில், சிவபெருமான் தயாளபூதராய், சுதரிசனமென்னுஞ் சக்ராயுதத்தைக் கொடுத்தருளினர். அதனைப்பெற்று அத்திரு

"கமலாநாம்ஸஹஸ்ரந்து ஹ்ருதமேகங்கரோணச, நஜ்ஞாதவிஷ்ணுநாதச்ச மாயாகரணமத்புதம். கசு. ந்யூநந்தச்சாபிதத்ஜ்ஞாத்வா நேத்ரமேகமுதாஹ்ருதம், தந்த்ருஷ்ட்வாசப்ரஸந்நோபூச்சங்கரஸ்ஸர்வது:க்கஹா". கஎ.

"தைத்யாந்ஹந்துங்கதந்தேவ ஹ்யாயுதந்நப்ரவர்ததே, கிங்கரோமி க்வகச்சாமி ஶரணந்த்வா முபாகத:. உ0. இத்யுக்த்வாச நமஸ்க்ருத்ய ஶிவாய பரமாத்மநே, ஸ்திதஶ்சைவாக்ரதோதேவ: ஸ்வயஞ்சாஸுரபீடித:. உக. ததாதஸ்மைஸ்வயம்ஶம்பு: சக்ரஞ்சதத்தவாந்ப்ரபு:, தேநைவ பீடிதேவிஷ்ணு: தைத்யாம்ஶ்ச பலவத்தராந். உஉ.

மால் சிவபெருமானிடம் உத்திரவுபெற்றுச்சென்று சகலமான தைத்தியர்களையுஞ் சங்கரித்தனர் எனக் கூறின ஸூதமுநிவரைநோக்கி, விஷ்ணுமூர்த்தி சிவபெருமானைப்பூஜித்த சகஸ்திரநாமங்களெவை ? எந்தச் சகஸ்திரநாம பூஜையால் சிவபெருமான் மனங்களிகூர்ந்து விஷ்ணுவுக்குச் சக்கராயுத மநுக்கிரகித்தனரோ அந்தச் சகஸ்திரநாமத்தைச் சொல்லியருளவேண்டுமெனச் சௌநகாதி மகருஷிகள் கேட்க, ஸூதமுநிவர் சொல்லலாயினர்.

திருமால் நேமிபெற்றது

முற்றிற்று.

எழுபத்தோன்றுவது

சிவநாமங்களாயிரமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சொல்லுகின்றார். முநிசிரேஷ்டர்களாகிய நைமிசாரணியவாசிகளே! யான் வியாசமுநிவரால் எவ்வாறு கேட்டிருக்கின்றேனோ அவ்வகையேசொல்லுகின்றேன் கேளுங்கள். விஷ்ணுமூர்த்தியால் சிவபெருமான் சந்தோஷமடையும்படி தோத்திரஞ் செய்யப்பட்டதும் புண்ணியகரமு

மாயுமுள்ள சிவஸஹஸ்ரநாமங்களை இப்பொழுது சொல்லுகின்றேன். விஷ்ணு வாக்கியம்—

ஸ்ரீ விஷ்ணுருவாச || ஸ்ரீவோஹரோம்ருடோருத்ர: புஷ்கர:புஷ்பலோசந:, அர்திகம்ய:ஸதாசார:ஸர்வ:ஸம்புர்மஹேஸ்வர:. சந்த்ராபீடஸ்சந்த்ரமௌலிர் விஸ்வம் விஸ்வாமரேஸ்வர:, வேதாந்தஸார ஸந்தோஹ: கபாலீ நீலலோஹித:. த்யாநாதாரோ பரிச்சேத்யோ கௌரீபர்த்தாகணேஸ்வர:, அஷ்டமூர்திர்விஸ்வமூர்திஸ்த்ரிவர்க ஸ்வ ர்கஸாதந:. ஞானகம்யோ த்ருடப்ரஜ்ஞோ தேவதேவ ஸ்த்ரிலோசந:, வாமதேவோ மஹாதேவ: படு:பரிப்ருடோத்ருட:. விசுவரூபோவிரூபாக்ஷோ வாகீஸ:சுசிஸத்தம:, ஸர்வப்ரமாண ஸம்வாதீ வ்ருஷாங்கோ வ்ருஷவாஹந:. ஈஸ:பிநாகீ கட்வாங்கீ சித்ர வேஷஸ்சிரந்தந:, தமோஹரோமஹாயோகீ கோப்தாப்ரஹ்மாசதூர்ஜடி:. காலகால: க்ருத்திவாஸா: ஸுபக: ப்ரணவாத்மக:, உந்நத்ர:புருஷோஜுஷ்யோ துர்வாஸா: புர ஸாஸந:. திவ்யாயுத:ஸ்கந்தகுரு: பரமேஷ்டீபராத்பர:, அநாதிமத்யநிதநோ கிரீஸோ கிரிஜாதவ:. குபேரபந்து:ஸ்ரீகண்டோ லோகவர்ணோத்தமோம்ருது:, ஸமாதிவேத்ய; கோதண்டீநீலகண்ட:பரஸ்வதீ:. விஸாலாக்ஷோம்ருகவ்யாத: ஸுரேஸ:ஸூர்யதாபந: தர்மதாம க்ஷமாக்ஷேத்ரம் பகவாந்பகநேத்ரபித். உக்ர:பசுபதி ஸ்தார்க்ஷ்ய: ப்ரியபக்த: பரந்தப:, தாதாதயாகரோதக்ஷ: கர்மந்தீகாமஸாஸந:. கஉ. ஸ்மஸாநநிலய: ஸூக்ஷ்ம: ஸ்மஸாநஸ்தோ மஹேசுவர:, லோககர்த்தா ம்ருகபதிர் மஹாகர்த்தா மஹௌஷதி:, உத்தரோகோபதிர்கோப்தா ஜ்ஞானகம்ய:புராதந:, நீதி:ஸுநீதி:ஸுத்தாத்மா ஸோம: ஸோமரத:ஸுகீ. ஸோமபோம்ருதப:ஸௌம்யோ மஹாதேஜாமஹாத்யுதி:, தேஜோ மயோம்ருதமயோ ந்நமயச்சஸுதாபதி:. அஜாதஸத்ருராலோக: ஸம்பாவ்யோ ஹவ்ய வாஹந:, லோககரோவேதகர: ஸூத்ரகார:ஸநாதந:. மஹர்ஷி:கபிலாசார்யோ விசுவ தீப்திர்விலோசந:, பிநாகபாணிர்பூதேவ:ஸ்வஸ்தித:ஸ்வஸ்திக்ருத்ஸுதீ:. தாத்ருதாமா தாமகர:ஸர்வக:ஸர்வகோசர:, ப்ரஹ்மஸ்ருக்விசுவஸ்ருக்ஸர்க: கர்ணிகார: ப்ரிய: கவி:. ஸாகோவிஸாகோகோஸாக: ஸிவோபிஷகநுத்தம:, கங்காப்லவோதகோபவ்ய: புஷ் கல: ஸ்தபதி: ஸ்திர:. விஜிதாத்மா விஷயாத்மா பூதவாஹநஸாரதி:, ஸகணோ கணகா யச்சஸுகீர்திச்சிந்நஸம்ஸய:. உ0. காமதேவ:காமபாலோ பஸ்மோத்தூலிதவிக்ரஹ:, பஸ்மப்ரியோ பஸ்மஸாயீ காமீகாந்த: க்ருதாகம:. ஸமாவர்தோ நிவ்ருத்தாத்மா தர்ம புஞ்ஜ:ஸதாஸிவ:, அகல்மஷச்சதுர்பாஹுர்துராவாஸோ துராஸத:. துர்லபோதுர்க மோதுர்க:ஸர்வாயுதவிஸாரத:; அத்யாத்மயோகநிலய: ஸுதந்து ஸ்தந்துவர்தந:. உங. ஸுபாங்கோலோகஸாரங்கோ ஜகதீஸோஜநார்தந:, பஸ்மசுத்திகரோமேருரோஜஸ்வீ சுத்தவிக்ரஹ:. அஸாத்ய: ஸாதுஸாத்யச்ச ப்ருத்யமர்கட ரூபத்ருக், ஹிரண்யரேதா: பௌராணோ ரிபுஜீவஹரோபல:. மஹாஹ்ரதோமஹாகர்த்த: வித்தப்ருந்தாரவந்தித:, வ்யாக்ரசர்மாம்பரோவ்யாலீ மஹாபூதோமஹாநிதி:. அம்ருதாஸோம்ருதவபு: பாஞ்ச ஜந்ய ப்ரபஞ்ஜந:, பஞ்சவிம்ஸதி தத்வஸ்த: பாரிஜாத: பராவர:. ஸுலப:ஸுவ்ரத: சூரோப்ரம்ஹவேதநிதிர்நிதி:, வர்ணாஸ்ரமகுருர்வர்ணீ ஸத்ருஜிச்சத்ருதாபந:. ஆச்ரம: க்ஷபண:க்ஷாமோ ஜ்ஞானவாநசலேசுவர:, ப்ரமாணபூதோதுர்ஜ்ஞேய:ஸுபர்ணோவாயு வாஹந:. தநுர்தரோ தநுர்வேதோ குணராசிர் குணகர:, ஸத்ய:ஸத்யபரோதீனோ தர் மாங்கோதர்மஸாதந:. ௩0. அநந்தத்ருஷ்டிராநந்தோ தண்டோதமயிதாதம:, அபிவாத் யோமஹாமாயோ விசுவகர்மா விஸாரத:. வீதராகோ விநீதாத்மா தபஸ்வீ பூதபாவந:, உந்மத்தவேஷ: ப்ரச்சந்நோ ஜிதகாமோ ஜிதப்ரிய.. கல்யாணப்ரக்ருதி:கல்ப: ஸர்வ லோகப்ரஜாபதி:, தரஸ்வீதாரகோதீமாந் ப்ரதாந ப்ரபு ரவ்ய:. லோகபாலோந்தர்ஹி தாத்மா கல்பாதி: கமலேக்ஷண:, வேதசாஸ்த்ரார்த தத்வஜ்ஞோ நியமோ நியதாஸ்ரய: சந்த்ர:ஸூர்ய:சநி:கேதுர்வராங்கோவித்ருமச்சவி:, பக்திவசிய:பரப்ரஹ்மம்ருகபாணர்

பஞ்ஞேநக:. அத்ரிரத்ரியாலய:காந்த: பரமாத்மாஜகத்குரு:, ஸர்வகர்மாலயஸ்துஷ்டோ மங்கல்யோமங்கலாவ்ருத:. மஹாதபா தீர்கதபா: ஸ்தவிஷ்ட:ஸ்தவிரோத்ருவ:, அஹ: ஸம்வத்ஸரோவ்யாப்தி: ப்ரமாணம்பரமந்தப:. ஸம்வத்ஸரகரோமந்த்ர ப்ரத்யய:ஸர்வ தர்ஶந:, அஜ:ஸர்வேசுவர: ஸித்தோ மஹாரேதா மஹாபல:. யோகீயோக்யோ மீஹா தேஜா: ஸித்தி:ஸர்வாதிரக்ரஹ:, வஸுர்வஸுமநா:ஸத்ய: ஸர்வபாபஹரோஹர:. ஸு கீர்தி:சோபந:ஸ்ரீமா நவாங்மநஸகோசர:, அம்ருத: சாசுவத: சாந்தோ பாண ஹஸ்த: ப்ரதாபவாந். ௬0. கமண்டலுதரோதந்வீ வேதாங்கோ வேதவிந்முநி:, ப்ராஜிஷ்ணுற் போஜநம்போக்தா லோகநாதோதுராதர:. அதீந்த்ரியோமஹாமாய: ஸர்வவாஸஶ்சது ஷ்பத:, காலயோகீமஹாநாதோ மஹோத்ஸாஹோ மஹாபல:. மஹாபுத்திர்மஹாவீர் யோபூதசாரீபுரந்தர:, நிஶாசர:ப்ரேதசாரீ மஹாசக்திர்மஹாத்யுதி:. அநிர்தேஶ்யவபு: ஸ்ரீமாந்த்ஸர்வாசார்ய மநோகதி:, பஹுஶ்ருதோ மஹாமாயோ நியதாத்மா த்ருவோ த்ருவ:. ஓஜஸ்தேஜோ த்யுதிதரோ நர்தக:ஸர்வஶாஸக:, ந்ருத்யப்ரியோ ந்ருத்யநித்ய: ப்ரகாஶாத்மாப்ரகாஶக:. ஸ்பஷ்டாக்ஷரோபுதோமந்த்ர: ஸமாந:ஸாரஸம்ப்லவ:, யுகா திக்ருத்யுகாவர்தோ கம்பீரோவ்ருஷவாஹந:. இஷ்டோவிசிஷ்ட:சிஷ்டேஷ்ட: ஶால ப:ஶரபோதநு:, தீர்தரூபஸ்தீர்தநாமாதீர்தாத்ருஶ்ய:ஸ்துதோர்தத:. அபாந்நிதிரதி ஷ்டாநம் விஜயோஜயகாலவித், ப்ரதிஷ்டித:ப்ரமாணஜ்ஞோ ஹிரண்யகவசோ ஹரி:. விலோசந: ஸுரகணோ வித்யேஶோ பிந்து ஸம்ஶ்ரய:, பாலரூபோ பலோந்மத்தோ விகர்தாகஹநோகுஹ:. கரணங் காரணங்கர்தா ஸர்வபந்த விமோசந:, வ்யவஸாயோ வ்யவஸ்தாந: ஸ்தாநதோ ஜகதாதிஜ:. ௬0. குருதோ லலிதோ பேதோ பவாத்மாத்மநி ஸம்ஸ்தித:, வீரேஶ்வரோ வீரபத்ரோ வீராஸந விதிர்விராட். வீரசூடாமணிர்வேத்தா தீவ்ராநந்தோநதீதர:, ஆஜ்ஞாதாரஸ்த்ரிசூலீச ஶிபிவிஷ்ட:ஶிவாலய:. வாலகில்யோ மஹாசாப ஸ்திக்மாம்சுர்பதிர:கக:, அபிராம:ஸுஶரண:ஸுப்ரஹ்மண்ய:ஸுதாபதி:. மகவாந்கௌஶிகோகோமாந்விராம:ஸர்வஸாதந:, லலாடாக்ஷோ விஶ்வதேஹ: ஸார: ஸம்ஸாரசக்ரப்ருத். அமோகதண்டோமத்யஸ்தோ ஹிரண்யோப்ரஹ்மவர்சஸீ, பரமா ர்த:பரோமாயீ ஶம்பரோவ்யாக்ரலோசந:. ருசிர்விரஞ்சி:ஸ்வர்பந்துர்வாசஸ்பதிரஹர் பதி:, ரவிர்விரோசந:ஸ்கந்த:ஶாஸ்தாவைவஸ்வதோயம:. யுக்திருந்நதகீர்திஶ்ச ஸாநு ராக:பரஞ்ஜய:, கைலாஸாதிபதி:காந்த: ஸவிதாரவிலோசந:. வித்வத்தமோவீதபயோ விஶ்வபர்தாநிவாரித:, நித்யோநியதகல்யாண: புண்யஶ்ரவணகீர்தந:. தூரஶ்ரவாவிஶ் வஸஹோத்யேயோது:க்கப்ரநாஶந:, உத்தாரணோதுஷ்க்ருதிஹாவிஜ்ஞேயோ துஸ் ஸஹோபவ:. அநாதிர்பூர்புவோலக்ஷ்மி: கிரீடீத்ரிதஶாதிப:, விஶ்வகோப்தா விஶ்வ கர்தா ஸுவீரோருசிராங்கத:. ௬0. ஜநநோஜநஜந்மாதி: ப்ரீதிமாந்நீதிமாந்தவ:, வஸி ஷ்ட:கஶ்யபோபாநுர் பீமோ பீம பராக்ரம:. ப்ரணவ:ஸப்ததாசாரோ மஹாகாஶோ மஹாதந:, ஜந்மாதிபோமஹாதேவ: ஸகலாகமபாரக:. தத்த்வந்தத்த்வ விதேகாத்மா விபுர்விஶ்வவிபூஷண:, ருஷிர்ப்ராஹ்மணஐஶ்வர்யஜந்மம்ருத்யுஜராதிக:. பஞ்சயஜ்ஞ ஸமுத்பத்திர் விஶ்வேஶோ விமலோதய:, ஆத்மயோநி ரநாத்யந்தோ வத்ஸலோபக்த லோகத்ருக். காயத்ரீ வல்லப:ப்ராம்ஶுர் விஶ்வாவாஸ: ப்ரபாகர:, ஶிஶுர்கிரிரத: ஸம்ராட் ஸுஷேண: ஸுரஶத்ருஹா. அமோகோ ரிஷ்டநேமிஶ்ச குமுதோ விகத ஜ்வர:, ஸ்வயஞ்ஜ்யோதிஸ்தநுஜ்யோதி ராத்மஜ்யோதிரசஞ்சல:. பிங்கல: கபிலஶ்ம ஶ்ருர்பாலநேத்ரஸ்த்ரயீதநு:, ஜ்ஞாநஸ்கந்தோமஹாநீதிர் விஶ்வோத்பத்திருபப்லவ:. பகோவிவஸ்வாநாதித்யோ யோகபாரோதிவஸ்பதி:, கல்யாணகுணநாமாச பாபஹா புண்யதர்ஶந:. உதாரகீர்தி ருத்யோகீ ஸத்யோகீ ஸதஸந்மய:, நக்ஷத்ரமாலீநாகேஶ: ஸ்வாதிஷ்டாநபதாஶ்ரய:. பவித்ர:பாபஹாரீச மணிபூரோநபோகதி:, ஹ்ருத்புண்ட ரீகமாஸீந: ஶக்ர:ஶாந்தோவ்ருஷாகபி:. உஷ்ணோ க்ருஹபதி: க்ருஷ்ண: ஸமர்தோ

நர்தநாஶந:, அதர்மஶத்ருரஜ்ஞேய: புருஹூத:புருஶ்ருத:. ப்ரஹ்மகர்போ ப்ருஹத்
கர்போ தர்மதேநுர்தநாகம:, ஜகத்திதைஷீஸுகத: குமார:குஶலாகம:. ஹிரண்யவர்
ணோஜ்யோதிஷ்மா ந்நாநாபூத ரதோத்வநி:, அராகோ நயநாத்யக்ஷோ விஶ்வாமித்ரோ
தநேஶ்வர:. ப்ரஹ்மஜ்யோதிர் வஸுதாமா மஹாஜ்யோதி ரநுத்தம:, மாதாமஹோ
மாதரிஶ்வா நபஸ்வாந்நாகஹாரத்ருக். புலஸ்த்ய: புலஹோகஸ்த்யோ ஜாதூகர்ண்ய:
பராஶர:, நிராவரணநிர்வாரோ வைரஞ்ச்யோவிஷ்டரஶ்ரவா:. ஆத்மபூரநிருத்தோத்ரி
ர்ஜ்ஞாநமூர்திர்மஹாயஶா:, லோகவீராக்ரணீர்வீர ஶ்சண்ட:ஸத்யபராக்ரம:. எசு.
வ்யாலாகல்போ மஹாகல்ப: கல்பவ்ருக்ஷ: கலாதர:, அலங்கரிஷ்ணுரசலோ ரோசிஷ்
ணுர்விக்ரமோந்நத:. ஆயு:ஶப்த பதிர்வேகீ ப்லவந: ஶிகிஸாரதி:, அஸம் ஸ்ருஷ்டோ
திதி:ஶக்ர ப்ரமாதீபாதபாஸந:. வஸுஶ்ரவாஹவ்யவாஹ: ப்ரதப்தா விஶ்வபோஜந:,
ஜப்யோஜராதிஶமநோ லோஹிதாத்மாதநூநபாத். ப்ருஹதஶ்வோநபோயோநி: ஸு
ப்ரதீகஸ்தமிஸ்ரஹா. நிதாகஸ்தபநோமேக: ஸ்வக்ஷ: பரபுரஞ்ஜய:, அ௦. ஸுகாநில:
ஸுநிஷ்பந்ந: ஸுரபி ஶிஶிராத்மக:, வஸந்தோமாதவோக்ரீஷ்மோ நபஸ்யோபீஜவா
ஹந:. அங்கிரா குருராத்ரேயோ விமலோ விஶ்வ வாஹந:, பாவந:ஸுமதிர்வித்வாம்
ஸ்த்ரைவித்யேநரவாஹந:. மநோபுத்திரஹங்கார:க்ஷேத்ரஜ்ஞ: க்ஷேத்ரபாலக:, ஜம
தக்நிர்பலநிதிர்விகாலோவிஶ்வகாலவ:. அகோரோநுத்தராயேஜ்ஞ: ஶ்ரேயோநி:ஶ்ரே
யஸாம்பத:, ஶைலோககநகுந்தாபோ தாநவாரிரரிந்தம:. ரஜநீஜநகஶ்சாரு விஶா
ல்யோலோககல்பத்ருக், சதுர்வேதஶ்சதுர்பாவஶ் சதுரஶ்சதுரப்ரிய:. ஆம்நாயோத
ஸமாம்நாய ஸ்தீர்ததேவ ஶிவாலய:, பஹுரூபோ மஹாரூப: ஸர்வரூப ஶ்சராசர:.
ந்யாயநிர்மாயகோந்யாயீ ந்யாயகம்யோநிரந்தர:, ஸஹஸ்ரமூர்தா தேவேந்த்ர: ஸர்வ
ஶஸ்த்ரப்ரபஞ்ஜந:. முண்டோவிரூபோ விக்ராந்தோ தண்டீதாந்தோ குணோத்தம:,
பிங்கலாக்ஷோஜநாத்யக்ஷோ நீலக்ரீவோநிராமய:. ஸஹஸ்ரபாஹு: ஸர்வேஶ: ஶர
ண்ய:ஸர்வலோகத்ருக், பத்மாஸந:பரஞ்ஜ்யோதி: பரம்பார:பரம்பலம். பத்மகர்போ
மஹாகர்போர் விஶ்வகர்போ விசக்ஷண:, சராசரஜ்ஞோ வரதோ வரேஶஸ்து மஹா
பல:. கூ௦. தேவாஸுர குருர்தேவோ தேவாஸுர மஹாஶ்ரய:, தேவாதிதேவோ தே
வாக்நிர்தேவாக்நிஸுகத:ப்ரபு:. தேவாஸுரேஶ்வரோதிவ்யோ தேவாஸுர மஹேஶ்
வர:, தேவதேவமயோசிந்த்யோ தேவதேவாத்மஸம்பவ:. ஸத்யோநிரஸுரவ்யாக்ரோ
தேவஸிம்ஹோதிவாகர:, விபுதாக்ரவரஶ்ரேஷ்ட: ஸர்வதேவோத்தமோத்தம:. ஶிவ
ஜ்ஞாநரத:ஸ்ரீமாந் ஶிகிஸ்ரீபர்வதப்ரிய:, வஜ்ரஹஸ்த:ஸித்தகட்கீ நரஸிம்ஹநிபாதந:.
ப்ரஹ்மசாரீ லோகசாரீ தர்மசாரீ தநாதிப:, நந்தீநந்தீஶ்வரோநந்தோ நக்நவ்ரததர:
ஶுசி:. லிங்கத்யக்ஷ:ஸுராத்யக்ஷோ யோகாத்யக்ஷோயுகாவஹ:, ஸ்வதர்மாஸ்வர்கத:
ஸ்வர்க கர:ஸ்வரமயஸ்வந:. பாணாத்யக்ஷோபீஜகர்தா தர்மக்ருத்தர்மஸம்பவ:, தம்போ
லோபோர்த்தவிச்சம்பு: ஸர்வபூதமஹேஶ்வர:. ஶ்மஶாநநிலயஸ்த்ர்யக்ஷ:ஸேதுரப்ரதி
மாக்ருதி:, லோகோத்தர ஸ்புடாலோக ஸ்த்ரியம்பகோ நாகபூஷண:. அந்தகாரிர்மக
த்வேஷீ விஷ்ணுகந்தரபாதந:, ஹீநதோஷாக்ஷயகுணோ தக்ஷாரி:பூஷதந்தபித். கூகூ.
தூர்ஜடி: கண்டபரஶு: ஸகலோ நிஷ்கலோநக:, அகால:ஸகலாதார: பாண்டுராபோ
ம்ருடோநட:. க௦௦. பூர்ண:பூரயிதாபுண்ய: ஸுகுமார: ஸுலோசந:, ஸாமகேய ப்ரி
யோக்ரூர: புண்யகீர்திரநாமய:. மநோஜவஸ்தீர்த்தகரோ ஜடிலோஜீவிதேஶ்வர:, ஜீவி
தாந்தகரோ நித்யோ வஸுரேதா வஸுப்ரத:. ஸத்கதி: ஸத்க்ருதி: ஸித்தி: ஸஜ்ஜாதி:
காலகண்டக:, கலாதரோ மஹாகாலோ பூதஸத்ய பராயண:. லோகலாவண்யகர்தாச
லோகோத்தரஸுகாலய:, சந்த்ரஸஞ்ஜீவந:ஶாஸ்தா லோககூடோமஹாதிப:. லோக
பந்துர்லோகநாத: க்ருதஜ்ஞ:கீர்திபூஷண:, அநபாயோக்ஷர:காந்த: ஸர்வஶஸ்த்ரப்ரு
தாம்வர:. தேஜோமயோ த்யுதிதரோ லோகாநாம க்ரணீரணு:, ஶுசிஸ்மித: ப்ரஸந்

நாத்மா துர்ஜேயோ துரதிக்ரம:. ஜ்யோதிர்மயோ ஜகந்நாதோ நிராகாரோ ஜலேஸ்வர:, தும்பவீணோ மஹாகோபோ விஸோக: ஸோகநாஸந: த்ரிலோகபஸ்த்ரிலோகேஸ ஸர்வஸுத்திரதோக்ஷஜ:, அவ்யக்தலக்ஷணோதேவோ வ்யக்தாவ்யக்தோவிஸாம்பதி:: வரஸீலோ வரகுண: ஸாரோமாநதநோமய:, ப்ரஹ்மா விஷ்ணு: ப்ரஜாபாலோ ஹம்ஸோ ஹம்ஸகதிர்வய:. வேதாவிதாதாதாதாச ஸ்த்ரஷ்டா ஹர்த்தாசதுர்முக:, கைலாஸஸிகராவாஸீ ஸர்வாவாஸஸதாகதி:. கக0. ஹிரண்யகர்போத்ருஹிணோபூதபாலோ தபூபதி:, ஸத்யோகீ யோகவித்யோகீ வரதோ ப்ராஹ்மண:ப்ரிய:. தேவப்ரியோதேவநாதோ தேவஜ்ஞோதேவசிந்தக:, விஷமாக்ஷோ விஸாலாக்ஷோ வ்ருஷதோ வ்ருஷவர்தந:. நிர்மமோநிரஹங்காரோ நிர்மோஹோநிருபத்ரவ:, தர்பஹாதர்பதோத்ருப்த: ஸர்வர்துபரிவர்த்தக:. ஸஹஸ்த்ரஜிஸஹஸ்த்ரார்சி: ஸ்நிக்தப்ரக்ருதிதக்ஷிண:, பூதபவ்யபவந்நாத: ப்ரபவோபூதிநாஸந:. அர்த்தோநர்த்தோமஹாகோஸ: பரகார்யைகபண்டித:, நிஷ்கண்டக:க்ருதாநந்தோ நிர்வ்யாஜோவ்யாஜமர்தந:. ஸத்வவாந் ஸாத்விக:ஸத்யகீர்தி:ஸ்நேஹக்ருதாகம:, அகம்பிதோகுணக்ராஹீநைகாத்மாநைககர்மக்ருத். ஸுப்ரீத: ஸுமுக:ஸூக்ஷ்ம: ஸுகரோதக்ஷிணாநில:, நந்திஸ்கந்ததரோதுர்ய: ப்ரகட: ப்ரீதிவர்த்தந:. அபராஜித: ஸர்வஸத்வோ கோவிந்த: ஸத்வவாஹந:, அத்ருத:ஸ்வத்ருத:ஸித்த: பூதமூர்திர் யஸோதந:. வாராஹ ஸ்ருங்கத்ருக் ஸ்ருங்கீ பலவாநேக நாயக:, ஸ்ருதிப்ரகாஸ:ஸ்ருதிமா நேகபந்துரநேகக்ருத். ஸ்ரீவத்ஸலஸிவாரம்ப: ஸாந்தபத்ர ஸமோயஸ:, பூஸயோ பூஷணோபூதிர் பூதக்ருத்பூதபாவந:. க௨0. அகம்போபக்திகாயஸ்து காலஹா நீலலோஹித:, ஸத்யவ்ரதமஹாத்யாகீ நித்யஸாந்தி பராயண:. பரார்த்தவ்ருத்திர் வரதோ விவிக்துஸ்துவிஸாரத:, ஸுபத: ஸுபகர்தாச ஸுபநாமா ஸுப:ஸ்வயம். அநர்த்திதோகுண:ஸாக்ஷீ த்யகர்தாகநகப்ரப:, ஸ்வபாவபத்ரோமத்யஸ்த்த:ஸீக்ரக:ஸீக்ரநாஸந:. ஸிகண்டிகவசீஸூலீஜடீமுண்டிசகுண்டலீ, அம்ருத்யு: ஸர்வத்ருக்ஸிம்ஹ ஸ்தேஜோராஸிர்மஹாமணி:. அஸங்க்யேயோ ப்ரமேயாத்மா வீர்யவாந்வீர்யகோவித:, வேத்யஸ்சைவ வியோகாத்மா பராவர முநீஸ்வர:. அநுத்தமோ துராதர்ஷோ மதுரப்ரியதர்ஸந:, ஸுரேஸ:ஸரணம்ஸர்வ: ஸப்தப்ரஹ்மஸதாங்கதி:. காலபக்ஷ:காலகாரீகங்கணீக்ருதவாஸுகி:, மஹேஷ்வாஸோமஹீபர்தா நிஷ்களங்கோ விஸ்ருங்க்கல:. த்யுமணி ஸ்தரணிர் தந்ய: ஸித்தித:ஸித்தஸாதந:, விஸ்வத:ஸம்வ்ருதஸ்துல்யோ வ்யூடோரஸ்கோமஹாபுஜ:. ஸர்வயோநிர்நிராதங்கோ நரநாராயணப்ரிய:, நிர்லேபோ நிஷ்ப்ரபஞ்சாத்மா நிர்வ்யங்கோ வ்யங்க நாஸந:. ஸ்தவ்ய: ஸ்தவ ப்ரிய: ஸ்தோதா வ்யாஸமூர்திர் நிரங்குஸ:, நிரவத்ய மயோபாயோ வித்யாராஸீ ரஸப்ரிய:. ப்ரஸாந்தபுத்திரக்ஷுண்ண: ஸங்க்ரஹீநித்யஸுந்தர:, வைய்யாக்ரதுர்யோ தாத்ரீஸ: ஸாகல்ய:ஸர்வரீபதி:. பரமார்த்தகுருர்த்ருஷ்டி: ஸரீராஸ்ரிதவத்ஸல: ஸோமோரஸஜ்ஞோரஸத: ஸர்வஸத்வாவலம்பந:. ஏவம்நாம்நாம்ஸஹஸ்ரேண துஷ்டாவ வ்ருஷபத்வஜம், ப்ரார்த்தயாமாஸஸம்புஞ்ச பூஜயாமாஸபங்கஜை:. கரு.

இவ்வகையான ஆயிரந்திருநாமங்களால் இடபத்துவஜகாளகண்ட திரிநேத்திரதரராகிய சிவபெருமானை விஷ்ணுமூர்த்தியானவர் பிரார்த்தித்தும், தாமரைமலர்களாற் பூஜித்துஞ் சந்தோஷிக்கச் செய்துகொண்டிருக்கையில், உலகநாயகனாகிய சிவபெருமான் திருமாலின் பக்தியைப் பரீக்ஷிக்கு நிமித்தமாக அத்தாமரை மலர்களில் ஒன்றினை அவ்வருச்சனைக்காலத்தில் மறைத்தருள, விஷ்ணுமூர்த்தி ஓர் திருநாமத்திற்கு மலர்காணாது குறைந்த துணர்ந்து, போகட்டும்: போகட்டும்: தாமரையிழந்தபின்னர் இனி எனது

கண்களிருந்து ஆகும் பயன் யாது? ஒன்றுமில்லை. எல்லாப்பிராணிகட்கும் ஊன்றுகோலாக வுள்ள சர்வேசுவரன் சிவபெருமானென்றுணர்ந்து தனது நேத்திரமொன்றினைத் தோண்டியெடுத்து மனப்பூர்த்தியாய் அத்தோத்திரத்தினைக் கூறிப் பூசித்தனர். ஜகதீசுவரனாகிய சிவபெருமான் திருமால் செய்த தோத்திரங்களையும், விசேஷ பக்தியோடு கூடிய அவ்விஷ்ணுவையுங் கண்கூர்ந்து பிரத்தியக்ஷமாய் அதிசீக்கிரத்தில் பார்த்திவலிங்கமூர்த்தத்தினின்று தரிசனங்கொடுத்து நிற்ப, தேஜோரூபியாயும் பக்தர்களது இதயகமலங்களில் விளங்கும் பொருளாயுமுள்ள சிவபெருமானை விஷ்ணுமூர்த்தி சாஷ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்து எதிர் நின்று கைகட்டி விசேஷமாகத் துதிசெய்து பார்வதிசமேதராக விளங்கும் எம்பெருமானை மீண்டும் பூசித்து, சந்தோஷசித்தத்துடன் எதிர்நின்றனர். கோடிசூரியப் பிரகாசமாயும் எல்லாப்பிராணிகட்கும் காரணபூதமாயும் சுகத்தை யுண்டுசெய்பவராயும் இந்திராதிதேவர்கட்கெல்லாம் மஹாதேவனாகியும் விளங்கும் சிவபெருமான், தன்னெதிர் நின்றுகொண்டும் தன்னையே பார்த்துக்கொண்டும், கை குவித்துக்கொண்டும் அசையாமல் நிற்கும் விஷ்ணுமூர்த்தியைப்பார்த்து, ஓ! விஷ்ணுவே! சமஸ்த தேவகாரியங்களையுந் தெரிந்துகொண்டேனாதலின் ஸுதர்சனமென்னும் பெயருடைய சக்ராயுதத்தை உனக்குக்கொடுக்கின்றேன். அது மிகவும் மங்களகரமானது. அதன் வடிவத்தை நீ பார்த்திருக்கின்றனை. அது எல்லாவுலகங்கட்குஞ் சுகத்தைச்செய்யவல்லது. உன்னுடைய ஹிதத்திற்காக அது செய்யப்பட்டிருக்கிறது. நல்ல விரதத்தையுடைய நீ இவ்விஷயத்தை ஆலோசித்தறியவும். யுக்தகளத்தில் ஸ்மரித்தமாத்திரத்திலேயே தேவர்களுடைய துக்கத்தை யொழிக்கவல்லது. இதோ சக்ரம். இதோ எனது வடிவம். இதோ நீ செய்த சகஸ்ரநாமதியானம். (இம் மூன்றனையும்) கொடுத்தோம். இச்சரிதத்தைப் பக்தியோடு கேட்பவர்கள் இடையிலே நீங்காத சித்திகளையடைவர். ஶங்கர உவாச. ஜ்ஞாதம்மயேதம்ஸகலந்தேவகார்யஞ்ஜநார்தந, ஸுதர்ஶநாக்யஞ்சக்ரஞ்ச ததாமிதவஶோபநம். ௬௨. யத்ரூபம்பவதாத்ருஷ்டம் ஸர்வலோகஸுகாவஹம், ஹிதாயதவதேவேஶ ஶ்ருதம்பாவயஸுவ்ரத. ௬௩. ரணாஜிரேபிஸம்ஸ்ம்ருத்ய தேவாநாந்து:க்கநாஶநம், இதஞ்சக்ரம்இதம்ரூபம் இதுநாமஸஹஸ்ரகம். ஏஶ்ருண்வந்திததாபக்த்யா ஸித்திஸ்ஸ்யாதநபாயிநீ, ஏவமுக்த்யாததௌசக்ரம் ஸூர்யாயுதஸமப்ரபம். ௬௫. 𑌶𑌂𑌕𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥ 𑌜𑍍𑌞𑌾𑌤𑌂𑌮𑌯𑍇𑌦𑌂𑌸𑌕𑌲𑌂 𑌦𑍇𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 । 𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌖𑍍𑌯𑌂𑌚𑌕𑍍𑌰𑌂𑌚 𑌦𑌦𑌾𑌮𑌿𑌤𑌵𑌶𑍋𑌭𑌨𑌮𑍍 ॥ ௬௨ ॥ 𑌯𑌦𑍍𑌰𑍂𑌪𑌂𑌭𑌵𑌤𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 । 𑌹𑌿𑌤𑌾𑌯𑌤𑌵𑌦𑍇𑌵𑍇𑌶 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂𑌭𑌾𑌵𑌯𑌸𑍁𑌵𑍍𑌰𑌤 ॥ ௬௩ ॥ 𑌰𑌣𑌾𑌜𑌿𑌰𑍇𑌵𑌿𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂𑌦𑍁𑌃𑌖𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 । 𑌇𑌦𑌂𑌚𑌕𑍍𑌰𑌂𑌇𑌦𑌂𑌰𑍂𑌪𑌂 𑌇𑌦𑌂 𑌨𑌾𑌮𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௬௪ ॥ 𑌯𑍇𑌶𑍍𑌰𑍁𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿𑌤𑌦𑌾𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 । 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌦𑍌𑌚𑌕𑍍𑌰𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌯𑍁𑌤𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥ ௬௫ ॥ என்று திருவாய்மலர்ந்தருளி அநேக சூரியருடைய காந்திக்குச் சமானமான காந்தியையுடைய சக்ராயுதத்தைக் கொடுத்தருளினர்.

விஷ்ணுமூர்த்தியும் பெருஞ்சந்தோஷமுகத்துடன் அதனைப்பெற்றுக்கொண்டு மகாதேவனைப்பணிந்து, பிரபுவே! என் பிரார்த்தனையைக்கேட்கவேண்டும். அதாவது யான் துக்கநாசத்திற்காக தியானிக்கத்தக்கதும் துதிக்கத்தக்கதும் தரிக்கத்தக்கதுமாகவுள்ளது யாது? எனக்கேட்க, சிவபெருமான் சந்தோஷித்து, விஷ்ணுவே! என்னுடைய ரூபமே சமஸ்தமான துக்கங்களும் விலகும்படி தியானிக்கத்தக்கது. என்னுடைய சகஸ்ரநாமங்களே துதிக்கத்தக்கது. எவ்வகைப்பட்ட துன்பங்களும் ஒழியும்படி என் பிரசாதமாகிய சுதர்சனமே தரிக்கத்தக்கது எனத் திருவாய்மலர்ந்தருளி, மீண்டும், திருமாலே! இச்சரிதத்தை யாவர் வாசிக்கின்றனரோ அல்லது வாசிக்கச்செய்கின்றனரோ அவர்கட்குச் சொப்பனத்திலுந் துக்கமென்பது சம்பவியாது. அரசர்கட்குச் சங்கடமுறுங்காலத்தில் எனது சகஸ்திரநாமங்களை நூறுமுறை தியானித்தால் அவர்கள் சங்கடங்கள் விலகும். விதிமுறைப்படி ஜபித்தவன் சர்வசுகங்களையும் அடைவான்; சர்வரோகங்களையுமொழிவான். கல்வியை விரும்பினவன் கல்வியைப் பெறுவான். அரும்பெருங் காரியங்களையபேக்ஷித்தவன் அவற்றையடைவான். இதுவிஷயத்திற்சந்தேகமேயில்லை. இதுவே யெமக்குப்பெருங்களிப்பைத்தரும். நாடோறும் விடியற்காலத்திலெழுந்து என்னை முறைப்படி பூஜைசெய்து எனது சகஸ்திரநாமத்தால் துதிசெய்பவன் எப்பொழுதும் என்னிடத்திலேயே வாழும் சித்தியையடைவான். இகபரசித்திகளையெய்துவான். முறைப்படி நாடோறுமாக எட்டுமாதகாலம் தியானித்துத்துதித்தால் என்னுடைய் சாயுச்சியபதவியையடைவான். இதிற் சிறிதும் பிசகில்லை யெனச் சந்தோஷசித்தத்துடன் கூறி, ஆனந்தமயமாய் விஷ்ணுமூர்த்தியைத் தமது திருக்கரத்தாற்றடவி, யான் வரதனாதலின், உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக. உன்னுடைய தோத்திரத்தால் யான் சந்தோஷித்து உனக்கு வசமானேன் எனக்கூற, சர்வேசுவரனை சிவபெருமானைத் திருமால் சாஷ்டாங்கமாகப் பணிந்து, ஸ்வாமீ! தங்கட்கென் மீதில் இப்பொழுது தயை வந்திருப்பதைக்காட்டிலும் விரும்பத்தக்கது ஏதேனுமிருக்கும் பக்ஷத்தில், தாங்கள் தயாசொரூபியாயிருத்தலின், தாங்களே ஆலோசித்துத் திருவாய்மலர்ந்தருளவேண்டும்; ஆயினும் தங்களிடத்தில் எப்பொழுதும் நீங்காத திடபக்தி யுண்டாயிருக்கமட்டும் வரங்கொடுக்கவேண்டும். பகவானே! தேவரீரது அநுக்கிரகத்தால் யான் சர்வசம்பூரணமாயிருத்தலின் வேறொரு வரம் எனக்கு வேண்டுவதில்லை எனக்கூற, சிவபெருமான் விண்டுவே! உனக்கு என்னிடத்திற் றிடபக்தி யுண்டாகுக. நீ தேவர்கள் முதலிய யாவருக்கும் பூஜ்ஜியனாகுக. உலகரக்ஷணஞ்செய்யுஞ் சக்தியுங்கொடுத்தேன். உன்னுடையபெயரைத் தியானிப்போர் பாவங்கள் சந்தேகமின்றி ஒழியும் என்று வரங்கொடுத்து அந்தர்த்தானமாயினர். அதன்பின்னர் சந்தோஷமனத்துடன் திருமால் மங்களகரமான சக்ராயுதத்தை யடைந்து எப்பொழுதும் சிவஸ்தோத்திரங்களைத் தியானஞ்செய்துகொண்டு, தன்னை ஆச்சிரயிக்கும் அன்பர்கட்கும் இந்தத் தோத்திரத்தை அத்தி

யயனஞ் செய்விப்பாராயினர். இந்த சகஸ்ரந் திருநாமங்களால் துதிசெய்ப வர்கள் சிறந்த பலன்களைப் பெறுவார்கள். இதனைக் கேட்டவர்களுடைய பாபங்களெல்லாம் நசிக்கும். இஃதிவ்வகைய சிறப்பினையுடையது. நைமிசாரணியவாசிகளே! நீங்கள் கேட்டபடியே திருமால் தோத்திரஞ்செய்து சிவபெருமானிடஞ் சுதரிசனமென்னுஞ் சக்ரத்தையடைந்த சிவசகஸ்ர நாமங்களை வியாஸமுநிவராற் கூறக் கேட்டபடியே சொன்னேன். இனி நீங்கள் கேட்கவேண்டிய விஷயத்தைக் கேளுங்களென ஸூதமுநிவர் கூறினர்.

சிவநாமங்களாயிர முரைத்தது
முற்றிற்று.

எழுபத்திரண்டாவது
சிவராத்திரிவிரதமகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! தேவரீர் தன்னியர். கிருதகிருத்தியர். நாங்கள் முநிவர்களாற்கேட்டிருப்பினும் எங்கள் சந்தேகங்கள்நீங்கவில்லை. தேவரீர் சொல்லிவரும் விஷயங்களைக் கேட்பதாலேயே எங்கள் சந்தேகங்களொழிகின்றன. சிவார்ச்சனையிற் சிறந்த பக்திமானுதலின் தேவரீரையே கேட்கின்றோம். உலகத்தில் எந்தவிரதத்தை யாச்சிரயித்தால் சிவபெருமான் சந்தோஷித்துச் சகல சுகங்களையும் புக்திமுக்திகளையுங் கொடுப்பரோ அந்த விரதத்தை எங்கட்குச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். ருஷிகளே! சிறந்ததோர் விஷயத்தைக்கேட்டீர்கள். தெரிந்தவரையிற் சொல்கின்றேன் கேளுங்கள்: நீங்கள் என்னைக்கேட்ட இவ்விஷயத்தையே ஒவ்வொரு காலங்களில் பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் பார்வதி தேவியும் சிவபெருமானைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குச் சிவபெருமான் கூறிய, பாபங்களை யொழிக்கத்தக்க அந்தச்சம்பாஷணையை யுங்கட்குச் சொல்லுகிறேன்.

சிவபெருமான் திருமாலைநோக்கிச் சொல்லுகின்றார்: விஷ்ணுவே! உத்தமமான விரதத்தைச் சொல்லுகிறேன். நான்சொல்லும் விஷயம் வேதங்கள் உபவேதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் தர்மசாஸ்திரங்கள் இவற்றினுள்ளெல்லாஞ் சொல்லியிருக்கும் இரகசியங்களினும் அதிரகசியமான சாராம்சம். அநேகவிதங்களுள்ளும் இதுவே உத்தமமானது. உலகத்தில் மோக்ஷங்கொடுக்கத்தக்கவை நான்கு. அவை, சிவார்ச்சனை - உருத்திரபாராயணம் அஷ்டமி சோமவாரம் - கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி [பிரதோஷம்] இம்மூன்றுநாளுபவாசம், காசிக்ஷேத்திரத்தில் மரணம் எனப்படும் இந்நான்குமே முக்திகொடுக்கத்தக்கவை. இந்நான்கினும் சிவராத்திரிவிரதமே அதியுக்தமானது. ஆதலின் புக்திமுக்திகளை விரும்புவோர் இவ்விரதத்தை யநுஷ்டிக்கவேண்டியது. இதைக்காட்டிலுஞ் சிறந்தவிரதமொன்றுமில்லை யென

க்கூறினர். அதைக்கேட்ட விஷ்ணுவானவர் ஸ்வாமீ! அந்தச்சிவராத்திரி விரதத்தை யெளியேனுக்குச் சொல்லவேண்டும். எந்தமாதத்தில் எந்தவிதி யால் எப்படிப்பூஜிக்கவேண்டியது? உலகோபகார நிமித்தமாகக் கேட்கின் றேன். எவ்வளவுகாலம் அந்தவிரதத்தை யாச்சிரயிக்கவேண்டும். சதுர்த்தசி திதி எப்படி மற்றத்திதிகளினுந் தேவரீருக்குப் பிரியமானதாயிற்று. அத னைச்சொல்லவேண்டுமென வினவ, சிவபெருமான் சொல்லுகின்றார். இந்த விரதம் எல்லோருக்குந் தர்மசாதனமானது. பிராமணாதி வருணத்தவர்கட் கும் பிரமசரிய முதலிய ஆச்சிரமத்தவர்கட்கும் ஸ்திரீகட்கும் சிசுக்கட்கும் தாசிதாசர்கட்கும் இவ்விரதம் அநுஷ்டிக்கத்தக்கது. தேவர்கள் தானவர் கள் முதலாகிய சகலபிராணிகட்குந் தகுதியானது. இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கது. அதாவது மாசிமாசத்தில்வருங் கிருஷ்ணபக்ஷ சதுர்த் தசி அர்த்தராத்திரி பதினான்கு நாழிகை கோடிபிரமஹத்திகளையும் நசிக்கச் செய்யுமாதலின் அந்தத்தினத்திற் செய்யத்தக்க காரியத்தைச் சொல்லு கிறேன்.

விஷ்ணுவே! அன்று விடியற்காலத்தி லெழுந்திருந்து சந்தோஷத் துடன் மானுடப்பிறவியடைதல் அரிது. அது துக்கமுடையதும் சாரமற் றதுமா மாதலின் அம்மானுடப்பிறவியை இவ்விரதத்தாற் பயன்படுமாறு செய்கிறேனென்று நிச்சயித்துக்கொண்டு, அருகிருப்பவர்களையும் விரதமிருக் கச்செய்யவேண்டியது. பிறகு நல்ல தந்தகாஷ்டங்கொண்டு தந்தாவனஞ் செய்து, நதிமுதலான புண்ணிய தீர்த்தங்களில் தேசகால விரோதமின்றி ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பிறகு நைமித்தியாநுஷ்டானஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டியது. சிவாலயத்திலிரு ந்து எக்காரியஞ் செய்தபோதிலும் ஒன்று அநந்தமாகுமாதலின், சிவசந்நி தானத்திலிருந்து வழக்கப்படி சிவபூஜை செய்துமுடித்து நமஸ்கரித்து, ஸ்வாமீ! வாமதேவா! மஹாதேவா! நீலகண்டா! ஸதாசிவா! தேவரீரது கருணையால் சிவராத்திரி விரதத்தை யநுஷ்டிக்கவேண்டுமென் றிச்சையுற்றே னாதலின், அது நிர்விக்கினமாக முடியுமாறும், இவ்விரதமுடியு மெல்லையும் காமமுதலிய பகைகள் என்னைத்துன்புறுத்தாமலும் துஷ்டர்களோடு வசனி த்தல் - அசுத்தர்களைப் பரிசித்தல் - ஐம்புலன்வழி மனத்தைச் செலுத்தல் - பகல் நித்திரை - ஜலபானஞ்செய்தல் முதலியன விலகியிருக்கவும் அநுக் கிரகிக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு, பிறகு பூஜாத்திரவியங் களைச் சேகரித்துக்கொள்ளவேண்டியது. தான் வசிக்குமிடத்திற்கருகே எந் தச்சிவலிங்கமூர்த்தம் பிரசித்தமாயும் புண்ணியகரமாயும் பூஜிக்கத்தக்கதாயு முளதோ அந்தச் சிவலிங்கத் தருகேசென்று, அப்பரார்த்தலிங்கத்திற்குத் தென்றிசையிலாவது மேற்றிசையிலாவது பூஜைசெய்தற்குத் தக்க இடம் ஏற்படுத்திக்கொண்டு தான் சேகரித்துவந்த பூஜாத்திரவியங்களை வைத்துக் கொள்ளவேண்டும். மீண்டும் அந்தத்திருக்கோயிலிலேயே விதிப்படி ஸ்நா

னஞ்செய்து பரிசுத்தமான தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து மூன்றுதரம் ஆசமனஞ்செய்து பூஜைக்கு ஆரம்பிக்கவேண்டும். முதலில் அசரலிங்கமான அந்தப்பரார்த்தலிங்கத்திற்கு மந்திர பூர்வகமாய் உபசாரத்துடன் பூசை செய்விக்கவேண்டியது. மந்திரமின்றிப் பூஜைசெய்யப்படாது. எந்தெந்தத் திரவியங்கட்கு எந்தெந்தமந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தந்தத் திரவியங்களை அந்தந்த மந்திரங்களைக்கூறியே பூஜைசெய்யவேண்டும். பிறகு கீதம் நிருத்தம் நாட்டியம் வாத்தியம் இவற்றைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு முதற்சாம பூஜைசெய்து சிவமந்திரஞ் செபித்து, தான் பார்த்திவலிங்கபூஜையை நிதமும்செய்யும் வழக்கமுடையவனாயின் தன்வழக்கப்படி பார்த்திவலிங்கபூஜையைச்செய்யவேண்டும். அல்லது முன்னே பார்த்திவலிங்கபூஜை செய்தாலுஞ்செய்யலாம்.

பிறகு சிவபெருமான் தன்னிடத்தில் தயைவைக்கும்படி அநேக விதமான சிவஸ்தோத்திரங்களாற் றியானஞ்செய்யவேண்டும். சிவமகிமையைப் பிறர்க்குச் சொல்லவேண்டும். அல்லது பிறர்சொல்லச் சிரவணஞ் செய்யவேண்டும். இவ்வாறு நான்கு சாமங்களிலும் நான்கு பார்த்திவலிங்கங்களைச்செய்து ஆவாஹநாதி விசர்ஜனாந்தமான பூஜையைச்செய்துமுடித்து, ஸ்தாபிதலிங்கத்தையும் பூஜைசெய்வித்து, நித்திரையின்றி உத்ஸவமுதலிய சிவபணிவிடைகளுடன் விழித்திருந்து, இரவைக்கழித்து விடியுமுன், மீண்டும் ஸ்தாபிதலிங்கத்திற்குப் பூஜைசெய்வித்து, ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன முதலியவற்றை முடித்து, ஸ்வாமீ! தேவரீர் கிருபையால் யான் ஆச்சிரயித்த சிவராத்திரி விரதத்தை முடித்தேன். என்சக்திக்கேற்ப யான்செய்த தவத்திற்குத் தேவரீர் சந்தோஷித்து நல்ல பலனைக்கொடுக்கவேண்டும்: அடியேனிடத்திற் றயைவைக்கவேண்டுமென்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து நமஸ்கரித்து, பார்வதிதேவியையும் நமஸ்கரித்து, தான்செய்த பூஜாபலனைச் சிவப்பிரீதிசெய்து ஜலபானஞ்செய்து அவ்விரத நியமத்தைவிடவேண்டியது.

விஷ்ணுவே! அஃதெங்ஙனமெனின், யாமங்கள் நான்கினும், தன் மனதிலுள்ள கோரிக்கையைச்சேர்த்து அத்தியாதிப் பிரயோகமாகிய சங்கற்பஞ்செய்து, ஸ்தாபிதலிங்கத்தையும் பார்த்திபலிங்கத்தையும் பக்தியோடு பூசைசெய்யவேண்டும். பால் தயிர் நெய் தேன் சருக்கரை முதலியவற்றால் அவ்வவற்றிற்குரிய மந்திரங்களைக்கூறி யபிஷேகஞ்செய்யவும். பின்னர் உலர்ந்தவஸ்திரத்தினால் சிவலிங்கமூர்த்தியை உபசாரமாகவொத்தி, சுகந்த பரிமள சந்தனஞ்சாத்தி, முதல்யாமத்தில் அரிசி யக்ஷதையும், இரண்டாம் யாமத்தில் யவை யக்ஷதையும், மூன்றாம் யாமத்தில் கோதுமையக்ஷதையும், நான்காம் யாமத்தில் அரிசி உளுந்து பயறு தினை அல்லது எழுவிதமான தானியாக்ஷதையுஞ் சமர்ப்பிக்கவும். புஷ்பங்கள்-முதலாம் யாமத்தில் சதபத்திரம் கமலம் கரவீரம் முதலியனவும், இரண்டாம்யாமத்தில் கமலமும் வில்வமும், மூன்றாம் யாமத்தில் அறுகும் ஆத்தியும், நான்காம் யாமத்தில் நறு

மணங்கமழும் பல மலர்களுங்கொண்டு சிவநாமங்களாலாவது குருவுபதேசித்த மந்திரங்களாலாவது அருச்சிக்கவும். நிவேதனம்—முதலாம் யாமத்தில் சுத்தான்னமும் கறிவகைகளும் பலகாரமும், இரண்டாம் யாமத்தில் பரமான்னமும் லட்டுமுதலிய பலகாரமும், மூன்றும் யாமத்தில் மாவாற்செய்த நெய்சேர்த்த பலகாரவகையும் பாயசமும், நான்காம் யாமத்தில் கோதுமை சர்க்கரை நெய்சேர்த்துச்செய்த மதுரமான பலகாரங்களும் நானாவிதமான பழவகைகளும் நிவேதிக்கவும். முதல் யாமத்தில் வில்வப்பழமும், இரண்டாம் யாமத்தில் பலாப்பழமும், மூன்றும் யாமத்தில் மாதுளம்பழமும், நான்காம் யாமத்தில் பலவித பலங்களுஞ் சமர்ப்பிக்கவும். தாம்பூல தக்ஷிணைகளோடு யாமங்கள் நான்கினும் பிராமணபோஜனம் முதலியன செய்யவேண்டும். அவ்வவ் யாமத்தின் முதலிற் சங்கற்பஞ் செய்ததற்கேற்ப அவ்வவ் யாமபூஜையை முடித்து அவ்வவ் பார்த்திப லிங்கங்களை விசர்ஜனஞ்செய்துவிடவேண்டியது. பூஜாந்தத்தில் ஸ்ரீம் - பவாய - ஸர்வாய - ருத்ராய - பசுபதயே - உக்ராய - மஹாதேவாய - பீமாய - ஈசாநாய, ஸ்ரீம்பவாய-ஸர்வாய-ருத்ராய-பசுபதயே-உக்ராய-மஹாதேவாய-பீமாய-ஈசாநாய என்னும் அஷ்ட நாமங்களாலும் பூஜித்துப் புஷ்பாஞ்சலிசெய்து தமது கோரிக்கைகளைச் சொல்லிக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு யாமத்திலும் ஒரு பிராமணனுக்குக் குறையாமல் அன்னங்கொடுக்கவேண்டும். மறுநாள் போஜனத்திற்கும் அவ்வவ் யாமத்திலேயே பிராமணர்கட்குத் தக்ஷிணைகொடுத்து நியமித்துக்கொள்ளவும். அவரவர்கள் சக்திக்கேற்றபடி தானங்கள்செய்து பிராமணர் யதிதிகள் இவர்கட்கு இரவு நான்கு யாமத்திலும் சங்கற்பித்துக்கொண்டபடி அன்னமளித்து, சிவபெருமானை நமஸ்கரித்து நானாவிதமாகத்துதித்து, மந்திரபூர்வகமாகப் புஷ்பாஞ்சலிகொடுத்து, ஸ்வாமீ! நான் உன்னவன். என்பிராணன் உன்னிடத்துள்ளது. என்சித்தம் உன்னிடத்தேயுள்ளது. தயாசமுத்திரனை நீ உன்னிஷ்டப்படிசெய். தெரிந்தோ தெரியாமலோ யான்செய்யும் ஜெபபூஜைகளைப் பலன்பெறச்செய்யவேண்டும். சகலப்பிராணிகளுக்கும் பிரபுவான நீ எனக்குப்பிரசன்னமாகவேண்டும். நான்செய்த பூஜாகாரியங்களால் நீசந்தோஷித்துக் குறைந்துள்ளவற்றை நிறைவாக்கி விரதத்தைப் பூர்த்திசெய்யவேண்டியது. என்று புஷ்பாஞ்சலிசெய்து சிவநிர்மாலியத்தை ஆசீர்வசன பூர்வகமாகப்பெற்று, சிவபெருமானையும் பிராமணரையும் நமஸ்கரித்து, திரும்பவும் நான் பூஜைசெய்யுஞ் சமயத்தில் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, என்வமிசத்தில் உன்பூஜை எப்பொழுது மிருக்கவேண்டும். என்மனதிற்கு நீ எப்பொழுதும் சமீபித்திருக்கவேண்டும். இரவும்பகலும் உனது நாமஸ்மரணை எனக்கு உண்டாகவேண்டும் என்று பிரார்த்தித்து விசர்ஜனஞ்செய்து, பிராமணபோஜனஞ்செய்வித்தால் சகலபாபக்ஷயமுமுண்டாகும். இப்படி விரதஞ்செய்தவர்களுடைய சமீபத்திற் சிவபெருமான் எழுந்தருளியிருப்பர். இதன்

பலத்தைப் பதினுயிரவருஷஞ் சொன்னாலும் முடியாது. இவ்விரதத்தைப் பக்தியின்றிச்செய்தவனுக்கும் முக்தியுண்டாகும். இப்படியே பிரதி சிவராத்திரியிலுஞ் செய்யவேண்டும். பிறகு விரதசாந்த நிமித்தமாக உத்தியாபனம் விதிப்படி செய்யவேண்டும். என்று திருவாய்மலர்ந்தருளினர். இவ்வாறு சிவபெருமானாற் சொல்லக்கேட்ட விஷ்ணுமுதலிய சகல தேவர்களும் சந்தோஷித்துத் தங்கடங்கள் வாசஸ்தானங்களை யடைந்தார்.

சிவராத்திரிவிரதமகிமை யுரைத்தது

முற்றிற்று.

எழுபத்துமூன்றாவது
சிவராத்திரி உத்தியாபன விதி யுரைத்தது.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவரைநோக்கி, ஸ்வாமீ! சிவராத்திரி விரதத்தின் சாந்திக்காக உத்தியாபனஞ் செய்தாற் சிவபெருமான் பிரசன்னமாவாரெனக் கூறினீராதலின், அந்த உத்தியாபனவிதியையு முறைப்படி அடியேங்கட்குச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்: ருஷிகளே! நான் இதுகாறும் வியாஸபகவான் திருவாக்கால் கேள்விப்பட்டதுபோல சிவராத்திரி உத்தியாபன விதியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:--சிவராத்திரிவிரததினத்தில் நித்தியநியமவிதானத்தை முடித்துக்கொண்டு சிவாலயமடைந்து அங்கே சாஸ்திரப்படி சிவபூஜைசெய்து, குருநியமப்படி சிவராத்திரி விரதஞ் செய்வதற்காகச் சங்கற்பஞ்செய்துகொண்டு இரவுமுழுதும் நித்திரையின்றி, நான்குஜாமத்திலும் ஸ்தாபிதலிங்கத்திலாவது பார்த்திவலிங்கத்திலாவது கூடுமானால் இரண்டினிடத்திலாவது சிவபூஜைசெய்து, மறுநாள்விடியற்காலத்தில் ஸ்நானாதி நித்தியக்கிரியைகள் முடிந்தபிறகு, சிவசந்நிதியிற் சங்கற்பஞ்செய்து சிவப்பிரசாதத்தால் இவ்விரதத்தைச் செய்கிறேனென்று, பிரதிமாசமும் தேவரீர் கட்டளையால் இவ்விரதஞ்செய்யத்தக்கது. அது நிர்விக்கினமாக முடியும்படி அநுக்ஞை செய்யவேண்டும் என்று சிவாலயத்தில் நியமித்துக்கொண்டு, பிராமணர்களுடன் தானும் புசித்து, பிராமணாசீர்வசனமடைந்து நியமத்தை முடித்துக்கொள்ளவேண்டும். பின்வரும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் விடியற்காலத்தி லெழுந்து, தீர்த்தத்திலாவது வீட்டிலாவது ஸ்நானமுதலிய நித்யகருமங்களை முடித்துக்கொண்டு, சிவசந்நிதியிற்சென்று சிவபூஜைசெய்து, ஸ்வாமீ! இன்று தேவரீர் கட்டளையால் நிராகாரவிரதத்தை நிர்ச்சலமாகச்செய்ய நிச்சயித்திருக்கின்றேன். இவ்விரதத்தை யநுஷ்டிக்க உத்திரவு கொடுக்கவேண்டுமென்று நமஸ்கரித்து, காமக்குரோதாதிகளை விடுத்து, பகலைக்கழித்து, இரவில் நான்கு யாமங்களும் பூஜித்து மந்திரஜபஞ்செய்து கீதநிருத்தவாத்தியங்களாற் பக்திசெய்து விடியுமளவும் விழித்திருந்து பின்னர் ஸ்நானஞ் செய்து சிவபூஜை முடித்து பிராமணர் யதிதிகட்குப் போஜனஞ்செய்விக்க

வேண்டும். இவ்வாறுசெய்யச் சக்தியில்லாதவன் ஒரு வேதியனுக்காவது அன்னமிடவேண்டும். பிராமணாசீர்வாதம் பெற்றுக்கொண்டுதான் கிரககிருத்தியங்களைச் செய்யவேண்டியது.

இப்படியே மாசந்தோறும் உத்தமமான சிவராத்திரி விரதத்தைச் செய்துகொண்டு, மகாசிவராத்திரி வருமளவும் எல்லாச்சிவராத்திரிகளையும் அநுஷ்டித்து, மகாசிவராத்திரிதினத்தில் விதிப்படி உத்தியாபனம் செய்யவேண்டும். அவ்வாறு செய்கையில், சிவராத்திரிவிரதவுத்தியாபனஞ்செய்த பிராமணர்களை வருவித்து அவர்களைக்கேட்டும், சாஸ்திரங்களை யாராய்ந்தும் உத்தியாபனஞ் செய்யத்தக்கது. அஃதெப்படியென்றால், அதனையுஞ் சொல்லுகிறேன். கேளுங்கள்:—பிராதக்காலத்தில் ஸ்நானமுதலிய நித்தியாநுஷ்டானத்தை முடித்து, சிவாலயத்திலாவது தன் வீட்டிலாவது புனிதமானவிடத்தில், கௌரீதிலகமென்னும் பிரசித்தமான பெயரையுடைய அலங்காரமண்டபஞ்செய்து, அதில் மண்டிலஞ்செய்து, ஒன்பது கலசங்கள் வஸ்திர பல தக்ஷிணை சகிதமாய் அக்கௌரீதிலக மண்டபத்திற்குப் பக்கத்தில் வைத்து, ஒருகலசம் அம்மண்டபத்தில்வைத்து, அதிற்பார்வதிசமேதராகச் சிவபெருமானைப் பிரதிஷ்டைசெய்து, அச்சிவபெருமானுக்கு வலப்புறத்தில் தீபாராதனைகளைவைத்து, இரவிற் பூஜைசெய்யவேண்டும். இரவுமுழுதும் விழித்திருந்து பிரதியாமத்திலுஞ் சிவபூஜைசெய்துகொண்டு நிருத்தகீதமுதலியவற்றைச்செய்து, வேதோக்த விதியாற் பூஜைசெய்து, விடியற்காலத்தில், ஸ்நானமுதலியன முடித்துப் புனப்பூஜைசெய்து; ருஷிகட்குச் சமானமான வேதபாரகரான பிராமணர்கட்கு யஜ்ஞோபவீதம்-வஸ்திரம்-மிதியடி-பொன் மோதிரம் - கடுக்கன் முதலியவற்றைத் தானஞ்செய்து, நெய் பாயசம் முதலியவற்றால் ருத்ரமந்திரஜபத்துடன் ஹோமஞ்செய்யவேண்டும். முதலில் நவக்கிரகசாந்தி நவக்கிரகஹோமஞ்செய்யவேண்டும். சிவமந்திரஞ் சபித்துக்கொண்டே யவையோடு எள்ளையும்ஹோமஞ்செய்து, பிறகு தேவிமந்திரத்தால் ஹோமஞ்செய்து, பொன்னாற் சிவபெருமானும்,வெள்ளியாற் பார்வதியுஞ்செய்து, கட்டில் மெத்தைவைத்து, எழுவகைத்தானியங்களையதன்மேற்பரப்பி, பசுவுடன்வேதியனுக்குத்தானஞ்செய்யவேண்டும்.இவ்வாறுஹோமமுடித்து, பின்னர் ஆசாரியனை ஆடையாபரணம் புஷ்பமுதலியவற்றினால் அலங்கரித்து விசேஷமாகப் பூஜிக்கவேண்டும். பக்தியோடு விசேஷமான தக்ஷிணைகள்கொடுக்கவேண்டும். கொம்பிற் பொன்னும், குளம்புகளில் வெள்ளியும், வெண்கலப்பாத்திரமும், இரத்தினங்களால் வாலும், உடலில் வஸ்திரமும், முதுகில் தாமிரமும் மற்றுள்ள அலங்காரங்களுஞ்செய்து, நன்றாய்ப் பால்கொடுக்கும் சாதுவான இளம்பசுவைக் கன்றுடன் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். பிராமணர்கட்கு நெய் பாயசம் பலகார முதலியவற்றுடன் சிறந்த அன்னமளிக்கவேண்டும். அநேகமான தானங்களைச் செய்யவேண்டும். பன்னிரண்டு வேதியருக்குக்குறையாமல் பிராமணபோஜனஞ் செய்விக்கவேண்டும். அந்

தப்பலனைச் சிவப்பிரீதிசெய்து, ஸ்வாமீ சங்கரா! யான் செய்த இவ்விரதத்தால் என்னிடத்திற் கிருபைவைத்து என்னைத் தேவரீருக்கு உரியவனாக்கிக் கொள்ளவேண்டும். என் சக்திக்கேற்ப இவ்விரதத்தைச் செய்தேன். அஜ்ஞானத்தாலாவது, ஞானத்தாலாவது யான் செய்தது பயன் பெறுவதாக: என்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து நமஸ்கரித்து, மீண்டும் யான் பூஜிக்கையில் எழுந்தருளவேண்டும். உம்முடைய திருவடி என் இதயத்திலிருந்து நீங்காதிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கவேண்டும்.

இவ்வகையாகச் சிவராத்திரிவிரத உத்தியாபனஞ்செய்தவன் இஷ்டகாமியங்களையெல்லாம் பெறுவான். இவ்விரதத்தைத் தெரிந்து செய்தாலுந் தெரியாமற்செய்தாலுஞ்சிவபெருமான் சந்தோஷிப்பார். இவ்வாறு விரதஞ் செய்பவன் சிவலோகத்திற்சுகித்திருப்பான். மனவாக்குக்காயங்களால் வந்த துன்பங்கள் இவ்விரதத்தாலழியும். இவ்வாறு விரத முடித்துக்கொண்டு மறுநாள் அமாவாசையில் பிதுர்கட்குப் பிண்டப்பிரதான தர்ப்பண முதலியனசெய்துபிராமணபோஜனஞ்செய்விக்கவேண்டியது. அமாவாசையில் அன்னமளித்தால் அந்தப் பக்ஷம் பதினைந்துதினங்களிலும் அன்னமளித்த பலன் கைகூடும். பக்தியுடையவனும் வேதபாரகனும் சத்குலத்துதித்தவனுமுள்ள பிராமணனுக்கும் யதிதிக்குமே அப்பொழுது அன்னமளிக்கத்தகும். பிறகு பந்துக்களுடன் தானும் புசிக்கவேண்டும். இப்படிச் சிவராத்திரிவிரத உத்தியாபனவிதியை நீங்கள் கேட்டபடியே என்னாற்கூடியவரையிற் சொன்னேன். நற்பலனையடைய விரும்புவோர் சர்வப்பிரயத்தினத்தோடும் இவ்விரதத்தையாச்சிரயிக்கவேண்டும். இச்சரிதத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் சொன்னவர்களும் சிவகடாக்ஷம் பெறுவர் என்று ஸூதமுனிவர் சௌநகாதி முனிவர்களுக்குக் கூறியருளினர்.

சிவராத்திரி உத்தியாபன விதி யுரைத்தது

முற்றிற்று.

எழுபத்துநான்காவது

வேடுவன் சிவராத்திரிபலனை யடைந்தது.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! தேவரீரது திருவாக்கால் இந்தச் சிவராத்திரிவிரதமகிமையைக் கேட்டுப் பரமானந்தத்தை யடைந்தோம். இன்னும் இச்சிவராத்திரிவிரதத்தின் மகிமையையும் பலனையும் விஸ்தாரமாகச் சொல்லியருளவேண்டும். அஜ்ஞானத்தால் இவ்விரதத்தை ஆச்சிரயித்தால் ஏதாவது பலனுண்டாகுமா? எனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:— சௌநகாதி முனிவர்களே! ஒரு வேடனுடைய எல்லாப்பாபங்களையும் ஒழித்துள்ளதாகிய பூர்வ கதையொன்று சிவராத்திரி மகிமையிற் சொல்லப்பட்டுளது. அதனையும் உங்கட்குச் சொல்லுகின்றேன் கேளுங்கள். அதாவது;—



34. வேடுவன் சிவராத்திரிபலனையடைந்தது.

ஒருவனத்தில் பெருங்குடும்பஸ்தனும், மகாபலசாலியும், குரூரசுபாவமுடையவனும், குரூரமாகிய தொழிலையே செய்பவனும், எப்பொழுதும் வனத்திலுள்ள பல மிருகங்களைக் கொல்பவனும், அவ்வனத்தில் விசேஷமாக வழிபறிப்பவனும், இளம்பருவமுதல் ஒருபோதும் சத்கருமஞ் சிறிதுஞ்செய்யாதவனுமாகிய குருத்ருஹன் என்னும் பெயருடைய ஒரு வேடன் அநேககாலம் உயிர்பிழைத்திருந்தான். இவ்வாறிருக்கையில், சுபகரமான சிவராத்திரி சம்பவித்தது. அது இத்துராத்மனுக்குத்தெரியாது. அம்மஹாசிவராத்திரி தினத்தில், தன் தந்தை-தாய்-மனைவி முதலானோர் அவனை நோக்கி எவ்வகையிலாவது ஜீவஹிம்ஸைசெய்து தமக்கு ஆகாரங் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்க, அவனும் உடனே வில்லையெடுத்துக்கொண்டு அம்பறாத்தூணிதாங்கி மிருகங்களை இம்சிக்க வனத்தையடைந்து அங்குமிங்குந் திரிகையில், இவனுக்குத் தெய்வயோகத்தால் இரையாகும் ஒருமிருகமும் கிடைத்திலது. அப்பொழுது சூரியாஸ்தமனமாக, என்னசெய்வேன்? எங்கே போவேன்? மிருகபக்ஷிகள் ஒன்றுங் கிடைக்கவில்லையேயென்று துக்கமுற்று, வீட்டிற் குழந்தைகளுந் தாய் தந்தையரும் மனைவியும் ஆகாரமின்றி யெவ்வாறு வருந்துகின்றார்களோ? ஆகாரமின்மையால் இவர்கள் என்ன துன்பத்தையடைய நேரிடுமோ? என்று எண்ணமிட்டுக்கொண்டு, எவ்வகையிலேனுஞ் சிறிது ஆகாரந்தேடிக்கொண்டே வீட்டிற்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு, அருகிருந்த தடாகத்திற் சிறிது ஜலம் பருகி, ஓர் பாத்திரத்திற் சிறிது ஜலங்கொண்டு அத்தடாகக்கரையில் தழைத்துள்ள வில்வமரமொன்றிலேறி மறைந்துகொண்டு, தாகந்தணிக்கும் நிமித்தமாக அத்தடாகத்திற்கு மிருகங்கள் வரக்கூடும் அச்சமயத்தில் அவற்றைக்கொன்று இரைசெய்துகொள்ளலாமென்னுந்தெளிவுகொண்டு, மிருகங்களின் வருகையை நோக்கி யிருப்பவனுய், மிருகங்கள் எப்பொழுது வரும்? நான் எப்பொழுது அவற்றை யெய்வேன்? என்று நினைத்து, பசியுடன் வருந்தி, இன்று நமக்கு இரையில்லையே, உபவாசமிருக்க நேர்ந்ததே என்று சிந்தைநொந்து நிற்கையில், முதல் யாமத்தில் பெருந்தாகத்தோடும் பயத்தோடும் பயத்தாலுண்டான இரைச்சலோடும் ஓர் பெண்மான் அங்கே வரக்கண்டு, வேடுவன் மனத்திற் சிறிது சந்தோஷமடைந்தவனுய் ஆ ஆ இரை கிடைத்ததென்று அம்பினை வில்லிற் பூட்டுகையில், அவனதசைவால் கையிலிருந்த ஜலபாத்திரத்தினின்று சிறிதுஜலமும் வில்வமரத்தினின்று சிறிதுவில்வதளங்களும் அம்மரத்தடியிலிருந்த ஓர் சிவலிங்கத்தின்பேரில் விழுந்தன. இதனாலேயே அவ்வேடன் சிவராத்திரியில் முதற்கால பூசைசெய்தவனானன்; அப்பூசைசெய்த பலனால் அவனது மகாபாதகங்கள் நசிந்தன.

இஃதிவ்வாறிருக்க, வேடன் அம்பினை வில்லிற் பூட்டியதைச் சத்தத்தாலறிந்த பெண்மான் ஐயோ! என்னசெய்வேன்? எங்கேபோவேன்? இவ்வேடன் என்னை எப்படியும் பாணத்தாற் கொன்றுவிடுவான். ஆயினும் ஓர்

உபாயஞ்செய்வேனென்று யோசித்து வேடனைநோக்கி, வேடா! நீ யாதுசெய்யக்கருதியிருக்கின்றனை? எனக்கேட்க, வேடுவன் அதனைக்கேட்டு, மானே! யான் பெருங் குடும்பி, என் குடும்பமுழுதும் ஆகாரமின்றிப் பெருங் கஷ்டப்படுதலின் உன்னைக்கொன்று அவர்களுக்கும் எனக்கும் ஆகாரமாக்கப் போகிறேன் என்று கடினமாகக் கூறக்கேட்டு, பெண்மான் பாபாத்மனாகிய அக்கிராதனை நோக்கி, அப்படியாயின் யான் தன்னியையானேன். இப்பிரயோசனமற்ற வுடம்பின் மாமிசத்தால் உனக்கும் உன் குடும்பத்திற்கும் சுகமுண்டாகும்பக்ஷத்தில், பரோபகாரத்தால் உளதாகும் புண்ணியத்தை யான் பெறுவேன்; அப்பரோபகாரத்தாற் கிடைக்கும் புண்ணியத்தின் பலனைப் பலவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லி முடியாது. பலனற்ற என் தேகத்திற்குஞ் சாபல்லியங் கிடைத்தது. ஆனால் எனக்குச் சில குட்டிகள் என்னிருக்கையில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளும்படி என்னுடன் பிறந்த ஓர் பெண்மானை நியமித்துவிட்டு, என் கணவனுக்கு அதனையே மனைவியாயிருக்கவும் சாஸ்திரோக்தமாக ஒப்பித்து விட்டு மீண்டும் வருகின்றேன். என் இறைச்சியாலேயே நீங்கள் திருப்தியடைவதாயின் எனக்கு மிகவும் சுபமே யெனக்கூற, வேடன் கேட்டு அதனைச் சிறிதும் நம்பாமல், ஆபத்துக்காலத்தில் யாவரும் சமயோசிதமாகப் பொய்பேசுதல் வழக்கம் எனக்கூற, பெண்மான் கேட்டு, வனசரா! சத்தியத்தாலேயே சூரியன் முதலிய தேவர்கள் யாவரும் பிரகாசிக்கின்றார்களென்றும், சத்தியத்தாலேயே சமுத்திரம் அணையின்றியிருக்கின்றதென்றும், சத்தியத்தாலேயே இந்திரன் மழை பெய்விக்கின்றானென்றும், சத்தியத்தாலேயே யாவும் நிலைத்திருக்கின்றனவென்றும் அறிவாயாக. ஜீவஹிம்சை செய்கின்ற நீ என் சொல்லை அசத்தியமாகக்கொள்ளவேண்டாம் என, வேடன் அதனையும் நம்பாமையின், பெண்மான் சொல்லுகின்றது.

வேடனே! யான் சொல்வதைக்கேள். யான் சொல்லியபடி மீண்டும் உன்னிடம் வந்து உனக்கிரையாகத் தவறியபக்ஷத்தில் யான் பெரும்பாபத்தையடைவேன். எப்படியென்றால், வேதவிக்கிரயஞ்செய்த பிராமணன் பெறும்பாபத்திலும், திரிகால சந்தியாவந்தனங்களைச் செய்யாதவன் போகும் பாபத்திலும், கணவன்கட்டளையை நிராகரித்த மனைவியழுந்தும் பாபத்திலும், செய்நன்றிமறந்து தனக்கு நன்மைசெய்தவனுக்குத் தீமைசெய்தவன் அடையும் பாபத்திலும், சிவத்துரோகியும் விஷ்ணுத்துரோகியு மடையும் பாபத்திலும், குருத்துரோகிபெறும்பாபத்திலும், வேதவிருத்தமான ஆசாரத்தில் நடப்பவன் அடையும் பாபத்திலும், போவேனென்று பலவாறு கூற, வேடன் அதன் வார்த்தைகளைக்கேட்டு நம்பிக்கையுடையவனாய், மானே! நீ இனி உன்னிடத்திற்கு விரைவிற்சென்று திரும்பிவருக என விடைகொடுக்க, பெண்மான் பெருங்களிப்படைந்து, தாகந் தணித்துக்கொண்டு தன்னிடத்தை யடைந்தது. அதுவரையில் முதல்யாம முற்றும் வேடனுக்கு நித்திரையின்றிச் சென்றது.

அவ்வாறிருக்கையில், முன்வந்துபோன பெண்மானுடன் பிறந்த மற்றொரு பெண்மான் தன் மூத்தாள் தாக விடாயுடன் நீர்பருகச் சென்று நெடுநேரமட்டும் வராமையின், அதனைத் தேடிக்கொண்டும் இளைச்சலிட்டுக்கொண்டும் அக்குளக்கரையையடைய, வேடன் அதனைக்கண்டு குணத்தொனிசெய்தான். அப்பொழுதும் முன்போலவே சிறிது ஜலமும் சிலவில்வபத்திரங்களும் அம் மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின் பேரில் விழுந்தன. அதனால் சர்வேசுவரனாகிய சிவபெருமானுக்குச் சிவராத்திரிகாலத்தில் இரண்டாம்யாம பூஜைசெய்தவனானான். அவ்வேடுவனை அவனது பாணகர்ஷணஞ்செய்யும் ஒலியால் உணர்ந்த இளையமான் ஓ வேடா! யாதுசெய்யக் கருதினை? என வினவ, வேடன் முன் அதன் தமக்கைக்குக் கூறியவாறே கூறினன். அது அவன்வார்த்தையைக்கேட்டு மகாசந்தோஷமடைந்து யான் மகாதன்யை. ஓ வனசாரசிரேஷ்டா! அநித்தியமான இத்தேகம் பிறனுக்குபகாரமாயின் என்தேகம் பலனடைந்தது. ஆயினும் என்வீட்டில் இளம்பிராயமுடைய சில குட்டிகளிருத்தலின் அவற்றை என் கணவனுக்கு ஒப்புவித்துவிட்டு யான் மீண்டும் சத்தியமாக வருவேன் எனக்கூற, வேடன் யான் உன் வார்த்தையை நம்பமாட்டேன். தடையின்றி உன்னைக் கொல்லுவேன் என, பெண்மான்கேட்டு வியாதனே! யான் திரும்பவும் உன்னிடம் வராவிட்டால் அசத்திய வார்த்தைகள் கூறினோர் தாம் அதுகாறுஞ் செய்த புண்ணியங்களையிழந்து எவ்வகைய பாபத்திற்போவாரோ அவ்வகைய பாபத்திலும், அடிக்கடி பூமியைக் காலால் உதைப்பவர் உறும் பாபத்திலும், கற்புடைய மனைவியைவிலகிப்பிரஷ்டையான ஓர் சோரஸ்திரீயைப்புணர்ந்தவன்போகும் பாபத்திலும், வேதோக்தமான மார்க்கத்தை விடுத்துக் கல்பிதமான மார்க்கமாக நடப்பவர் அடையும் பாபத்திலும், விஷ்ணுபக்தி செய்துகொண்டு சிவதூஷணஞ்செய்வோரும், சிவபக்தி செய்துகொண்டு விஷ்ணுதூஷணஞ்செய்வோரும் பெறும் பாபத்திலும், தாய்தந்தையர்களது வருஷாப்திகத்தை விடுத்தவன் செல்லும் பாபத்திலும், முதலில் இதவார்த்தைகள் கூறிப் பரிதாபமுண்டாக்கிப் பின்னர் வஞ்சிப்பவர் அடையும் பாபத்திலும் போகக்கடவேன் எனக்கூற, வேடுவன் அதன்வார்த்தைகளைக்கேட்டு அதனிடத்தும் நம்பிக்கைவைத்து, ஓ மானே! நீ அப்படியே உன்னிடத்திற்குச்சென்று அதிசீக்கிரத்தில் வருகவென விடுப்ப, அந்த மான் சந்தோஷித்துத் தண்ணீர்பருகித் தன்னிடத்தையடைந்தது. அதுவரையில் அவ்வேடுவனுக்கு இரண்டாம்யாமமுற்றும் நித்திரையின்றி நீங்கியது.

இதற்குள் அவ்விருபெண்மான்களுக்குங்கணவனாயுள்ள ஆண்மான் அவ்விரண்டினையுந்தேடிக்கொண்டு அந்த நீர்த்துறையையடைந்தது. பருத்துயர்ந்திருக்கும் அவ்வாண்மானை வேடுவன் கண்டு பெருங்களிப்படைந்து, ஆ ஆ மிக்க மாமிசமுடையதாயிருத்தலின் நமக்குத் திருப்தியான ஆகாரமாகுமென்று கருதி வில்லை டங்காரஞ்செய்து, அதனை யெய்ய யத்தனிக்கையில், முன்போலவே அவன்வசமிருந்த ஜலபாத்திரத்திலிருந்து சிறிது ஜல

றும் மரத்திலிருந்து சில வில்வதளங்களும் அம்மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின்மேரில் விழுந்தன. அதனால் அவன் சிவராத்திரி காலத்தில் மூன்றும யாமபூஜை செய்தவனாயினன். சௌநகாதி முனிவர்களே! பக்தியின்றிச் சம்பவித்த செயல்கட்குங் களிகூர்ந்து பூஜைசெய்ததாகக்கருதிய சிவபெருமானுடைய கருணையை என்னென்று சொல்லக்கூடும்! வேடுவனது நாணெறிந்த வொலியைக்கேட்ட ஆண்மான் அவ்வேடுவனைநோக்கி நீ யாதுபுரியக்கருதினை? என வினவ, வேடன் முன்போலவே கூறினன். அதனைக்கேட்ட ஆண்மான் சந்தோஷித்து, யான் இப்பொழுதுதான் தன்யனானேன். பூரித்திருக்கும் என் தேக மாமிசத்தினால் உன்னைப் போன்றவர்கள் திருப்தியடைவது பற்றிப் பெரும்பிரயோசனமடைவேன். ஒருவன் தன்தேகத்தைப்பரமார்த்தமாகப் பிறர்க்குபகாரஞ் செய்யாவிடி லவன் பெற்றுள்ளயாவும் நிஷ்பலம். சமர்த்தனாயிருந்தும் பிறர்க்குதவாதவனது சௌரியம் பயன்பெறாது; ஆதலின், என் உடலால் உனக்கும் உன் குடும்பத்திற்குந் தடையின்றித் திருப்தியுண்டாகும். ஆயினும் எனக்குச் சிலகுட்டிகளிருத்தலின் அவற்றையென் பேடுகளிடம் ஒப்பித்துவிட்டு, அவைகட்கு நல்ல வார்த்தைகளாற் புத்தி கூறி நிச்சயமாக வந்து உனக்கு இரையாகின்றேன் எனக்கூற, வேடுவன் அதன் வார்த்தையைக்கேட்டு, ஓ மிருகமே! இதுகாறும் இங்குவந்த மிருகங்கள்யாவும் உன்னைப்போலவே இதவார்த்தைகள்சொல்லி என்னைவஞ்சித்துவிட்டுப்போயின. ஒன்றேனும் இதுகாறும் வரவில்லை. நீயும் அப்படியே ஆபத்துவேளையில் அபத்தமுரைத்துப்போய்விட்டால் எனக்கும் என்குடும்பத்திற்கும் எவ்வாறு ஜீவனம் நடக்கும்? எனக்கூற, ஆண்மான் அவன் வார்த்தைகளைக் கேட்டு, ஓ வனசரா! என்னிடத்திற் பொய்யென்பதே கிடையாது. சத்தியத்தினாலேயே சராசரப்பிரமாண்டமுழுதும் விளங்குகின்றது. பொய்பேசுகிறவன் பூர்வத்திற்செய்த புண்ணிய முழுவதையும் க்ஷணகாலத்திலே நாசப்படுத்துகிறான். இப்பொழுது நீ நம்பாதபக்ஷத்தில் யானோர்பிரதிக்கினைசெய்கிறேன். அதாவது—சந்தியாவந்தன காலத்திலும், இரதிகேளியிலும், சிவராத்திரி காலத்திலும் போஜனஞ்செய்தவன்பெறும் பாபத்திலும், பொய்ச்சாக்ஷி சொல்லுவோர் அடையும் பாபத்திலும், வைத்துவைத்திருக்கும் பொருளை அபகரித்தவன் போகும் பாபத்திலும், சந்தியாவந்தனத்தைவிடுத்த பிராமணன் பெறும் பாபத்திலும், லலாடசூனியமாயுள்ளவன்போகும் பாபத்திலும், பிறர்க்கு உதவிசெய்யாத மகா சமர்த்தனாயுள்ளவன் பெறும் பாபத்திலும், பகற்புணர்ச்சி செய்தவன் பெறும் பாபத்திலும், பர்வகாலத்திலும் விரதகாலத்திலும் புசிக்கத்தகாத பதார்த்தங்களைப் புசித்தவன் பெறும் பாபத்திலும், யான் வராதபக்ஷத்திற் போகக்கடவேன்—எனக்கூற, வியாதன் அதன் வார்த்தையில் நம்பிக்கையுடையவனாய்ப் போய்வருகவெனவிடுப்ப, ஆண்மான் அகமகிழ்ச்சியோடு நீர்பருகித் தனதிடத்தை யடைந்தது. அப்பொழுது அம்மூன்றுஞ்சந்தித்து நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டவைகளாய், சத்தியபாசத்தாற் கட்டப்பட்டவைகளாய், அவசியம் அவ்வேடுவனி

டம் போகவேண்டுமென நிச்சயித்துக்கொண்டு, குட்டிகளை நல்ல வார்த்தைகளால் இதமாக அவ்விடத்திலேயே விடுத்துப் புறப்பட்டன.

அப்பொழுது அவற்றுள் மூத்தபெண்மான் தன்கணவனைநோக்கி, இக்குட்டிகள் அநாதரவாகவிருத்தலின் எவ்வாறு ஜீவிக்கும்? யான் முதலில் வருகிறேனெனப் பிரதிக்கினைசெய்துவந்தமையின் யான்மட்டுமே போகவேண்டும். நீங்கள் இங்கேயிருக்கவேண்டும் எனக்கூற, அதனைக்கேட்ட இளைய பெண்மான் யான் உங்களிருவர்க்கும் பணிவிடை செய்யவேண்டியவளாயிருக்கிறேனாதலின் யான் அவனுக்கிரையாகப்போகிறேன். நீங்கள் இருக்கலாம் என, ஆண்மிருகம் அவ்விரண்டின் வார்த்தைகளையுங்கேட்டு, யான் ஒருவனே யவனிடம் போகின்றேன். நீங்களிருக்கலாம் என, பெண்மான்கள் ஐயோ! நீயிறந்தால் நாங்கள் விதவைத்தன்மையடைந்து ஜீவிப்பதைக்காட்டிலுங் கஷ்டம் வேறுண்டா? என்று கூறி, தமது குட்டிகளைத் தக்கபடியே சில மான்களிடம் விடுத்து, மூன்றும் ஒன்றுகூடி அவ்வேடுவனிருக்குமிடத்திற்கு வந்தன. வேடுவனும் அம்மான்கள் மூன்றும் எப்பொழுது வருமோவென்னும் எண்ணத்துடன் வழிபார்த்துக்கொண்டிருந்தான்.

சத்தியபாசத்தாற் கட்டப்பட்டு வருகின்ற அந்த மூன்று மான்களையுங்கண்ட வேடன் சந்தோஷப்பட்டு, ஆ! இம்மிருகங்கள் நம்மிடத்தே சொல்லிப்போனது போல மீண்டும் வந்தனவென நினைத்துத் தனது வில்லை டங்காரஞ்செய்தனன். அவ்வாறு டங்காரஞ்செய்கையில் அவன் கையிலிருந்த ஜலபாத்திரத்தினின்று சிறிது ஜலமும் அம்மரத்தினின்று சில வில்வபத்திரங்களும் அம்மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின்மேல் விழுந்தன. அதனால் அவன் சிவராத்திரி காலத்தில் நான்காம் யாம பூஜை செய்தவனானான். அவ்வேடுவனுடைய பாபங்கள் அப்பொழுதே அவனைவிட்டொழிந்தன. இதற்குள் அம்மிருகங்கள் மூன்றும் ஓ வனசரா! எங்கள் மாமிசங்களை விரைவில் உனக்கு உணவாக்கிக்கொண்டு எங்களைக் கிருதார்த்தர்களாக்கவேண்டும் எனக்கூற, வேடன் அவற்றின்வார்த்தைகளால் மிக்க வியப்படைந்து, தான் அன்றையதினம் அறியாமற்செய்த சிவபூஜாபலத்தினால் திவ்வியஞானமடைந்து ஆஹா! ஞானஹீனமாகிய இம்மிருகங்கள் தமது தேகத்தால் அன்னியருக்குதவிசெய்து எவ்வளவு தன்யமாகின்றன. யான் மனுஷஜனனமெடுத்து யாது புண்ணியஞ் சம்பாதித்தேன்? பிறரைத் துன்புறுத்தி என் உடலையும் என் குடும்பத்தையும் போஷித்தேன். பிறரை வருத்தியே உயிர்வாழ்ந்த எனக்கு என்ன கதி கிடைக்குமோ? நான் எவ்வெக் கஷ்டங்களை யனுபவிப்பேனோ? இந்தச்சரீரத்தால் நானாவிதமான பாபங்களைச் சம்பாதித்தேனல்லவா? இதுகாறுந் தீயகருமங்களையேசெய்து இப்பொழுது துக்கிக்கின்றேன். என்வாழ்க்கை நிந்திக்கத்தக்கது எனத் தனக்குள்தானே சொல்லிக்கொண்டு, அவற்றை யெய்யும்படி தன் வில்லிற் சந்தித்த பாணத்தை, இனி அவற்றைக்கொல்லப்படாதென்னுங் கருத்துடன் உடனே வில்லினின்று எடுத்துவிட்டு, ஓ உத்தமமான மிருகங்களே! நீங்கள் பரோபகாரஞ்செய்துவந்தமை

யின் தன்யர்களாயிருக்கின்றீர்கள். உங்களைக்கொல்லமாட்டேன். இனியுங்கள் வாசஸ்தானத்தையடையுங்கள் எனக்கூறுகையில், கடூரமனமுடையவனுயிருந்து திவ்யஞானத்தை யடைந்த அவ்வேடனாற் பூஜிக்கப்பட்ட சிவபெருமான் அவனதுபூஜைக்கு மனமிகமகிழ்ந்து, எக்காலமுந்தெளிந்த ஞானிகளால் தியானிக்கப்பட்ட ஐந்துதிருமுகங்களோடும் தமது திவ்யதிருவுருவ தரிசனங்கொடுத்து, தயாசமுத்திரமான சிவபெருமான் யாதுவரம் வேண்டுமோ அதனைக் கேட்டுக்கொள்; உன் விஷயத்தில் தயையுடையவனுயிருக்கிறேன் என, வியாதன் திவ்வியஞானமுடைய ஜீவன்முக்தனுய், சர்வேசுவரனுடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து எல்லாப் பாபங்களும் என்னுற்செய்யப்பட்டுள்ளன. அவற்றை க்ஷமித்து எளியேனையனுக்கிரகிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்க, மகாதேவனுகிய சிவபெருமான் அவனுக்குக் குகன் என்னும் பெயரளித்து, உன் மனத்திற்கருதிய சுகபோகங்களை யடைவாய்: நீயொரு இராஜதானியையுங்காக்க வல்லவனுவாய்: உன்வமிசம் விருத்தியாகும். தேவர்களாலேயுந் துதிசெய்யத்தக்க திவ்யமான கீர்த்தியை யடைவாய். அயோத்திமன்னனுகிய தசரதன் மதலையாய் விஷ்ணுவே இராமாவதாரஞ்செய்கையில் உன்னிடத்தில் வந்து உன்னுற்பூஜிக்கப்பட்டுச் செல்லுவன். தேவர்கட்கும் முனிவர்கட்குங் கிடைத்தற்குத் துர்லபமான முக்தியைப் பெறுவாய். உன் வமிசத்தவர்கள் என்னைப் பூஜைசெய்யும் விரதத்தை வகித்து மகா பலவான்களாயிருப்பார்கள் என வரங்கொடுத்தருளினர்.

இவ்வாறிருக்கையில், அந்த மான்களின் குட்டிகளும் தமது தாய் தந்தைகட்குண்டாகுங் கதியே தமக்குஞ் சம்பவிக்கட்டுமென உடனே அவ்விடம் வந்து சேர்ந்தமையின், அந்த மான்களுக்குங் குட்டிகளுக்குஞ் சிவ தரிசனங் கிடைத்தது. சிவதரிசனத்தால் அம்மிருகங்கள் சமுசாரவிருப்பத்தையும் மிருகதேகத்தையுமொழிந்து திவ்வியதேகம் பெற்று அங்குவந்திறங்கிய விமானத்திலேறித் தமது குட்டிகளுடன் சுவர்க்கலோகத்தை யடைந்தன. சர்வேசுவரனுகிய சிவபெருமான் அவ்விடத்தில் அற்புதாசலத்தில் வியாதனுகிய வேடுவனுற் பூஜிக்கப்பட்டமையின் வியாதேசுவரனென்னும் பெயரையடைந்து எழுந்தருளியிருக்கின்றனர். அக்குகவேடனும் அதுமுதல் அகண்ட ஐசுவரியமடைந்து இராமமூர்த்தியைத் தரிசித்துப் பலகாலங்கழித்து, ஆயுள்முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைந்தனன்.

அஜ்ஞானத்தாலாவது சிவராத்திரி விரதத்தை யாசரிப்பவர்கள் சிவசாயுச்சியத்தை யடைவதானுல் ஞானவான்களாய்ப் பக்தியோடு அவ்விரதத்தை யாசரித்தவர்கள் சிவரூபத்தையடைவார்களென்பதைச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. எல்லாச்சாஸ்திரங்களும் தருமங்களும் விரதங்களும் தீர்த்தயாத்திரைகளும் தானங்களும் பலன்களும் சிவராத்திரி விரதத்துடன் விசாரிக்கையிற் சமானமாகமாட்டா. ஆதலின் மிக்க சுபகரமான இச்சிவராத்திரிவிரதத்தை இதத்தை விரும்புவோராகிய நீங்கள் ஆசரிக்க



35-வேதநிதிசிவராத்திரிபலனையடைந்தது.


வேண்டியது. இந்த விஷயத்தைப்பற்றி இதுகாறுஞ் சொல்லியதேயன்றி, பாபத்தை யொழிக்கத்தக்க வேறொருசரிதமும் உங்கட்குச்சொல்லுகிறேன் என்று ஸூதமுநிவர் நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறத்தொடங்கினர்.

வேடுவன் சிவராத்திரிபலனை யடைந்தது
முற்றிற்று.

எழுபத்தைந்தாவது.
வேதநிதி சிவராத்திரிபலனை யடைந்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளைநோக்கிக் கூறுகின்றார். ஓ முநிவர்களே! கண்டோர் கண்ணுக்கு ரம்மியமான அவந்தி பட்டணத்தில், உயர்குலப்பிறப்பும், வைதிகஆசாரமும், மங்களகரமான செயல்களும், வேத சாஸ்திரங்களிற் பூரணஞானமும், கல்வி கேள்விகளிலும் போதிப்பதிலும் வன்மையும் உடைய ஒரு தீக்ஷிதரிருந்தனர். அவருக்கு நற்குலமும் பதி பக்தியுங் கணவன் கட்டளைப்படி ஒழுகுதலுமுடைய ஓர் மனைவியிருந்தனள். அவர்கட்கு ஸுநிதி-வேதநிதி யென்னும் இரண்டு புதல்வரிருந்தனர். அவர்களில் மூத்தவனாகிய ஸுநிதி தாய்தந்தைகட்குப் பணிவிடை செய்து வருவதில் விருப்பமிக்குடையவனாயிருந்தான். இளையவனாகிய வேதநிதி வேத முதலிய எல்லாவற்றிலும்வல்லவனாயினும், ஓர்வேசையுடன் கிரீடிக்கவேண்டுமென்னுங் கவலைகொண்டவனாய் அவ்வேசை வீட்டிலேயே எப்பொழுதும் ஸ்நான போஜனாதிகள் செய்பவனாயினன். இதனையறிந்த தந்தை தாய் தமயன் முதலானோர் இவனைக்கண்டித்து அடிக்கடி வற்புறுத்தியும் அவன் மகாபாபியும் துராத்மாவுமாதலின் தன்னியற்கையை விட்டிலன். இவ்வாறிருக்கையில், ஒருநாள் அந்நகரத்து மன்னவனுக்கு அத்தீக்ஷிதர்பேரில் தயையுண்டாகி விலையுயர்ந்த இரத்தினமயமான அங்குலியாபரணம் [மோதிரம்] ஒன்றினை அவன்வெகுமதிசெய்ய,அத்தீக்ஷிதர் அதனைத் தன்வீட்டிற்குக்கொண்டுபோய், தன் மூத்தமகனுக்குத் தெரியாமல் மறைத்துவைக்கவேண்டுமென்று மனைவியிடங் கொடுத்தனர். அவ் வம்மையும் அதனை யவ்வாறே மறைத்துவைக்க, அதனையறிந்த இளையகுமாரன் அதனை யபகரித்துக்கொண்டுபோய் அன்றிரவே தன் வேசைக்குக் கொடுத்தனன். அவ்வேசையோ அதனையணிந்துகொண்டு ஒருநாள் அரசன்சமூகத்தில் நிருத்தஞ்செய்யச்செல்ல, அரசன்அதனைக்கண்டு இஃதியாம் தீக்ஷிதருக்குக் கொடுத்ததாயிற்றேயென்றுணர்ந்து, அடிபெண்ணே! விலையேறப்பெற்ற இம்மோதிரம் உனக்கு யாராற்கிடைத்தது? எனவினவ,அவள் உண்மையுரையாமையின்,அரசன் அவளைப் பயமுறுத்திக்கேட்க, அவள் கடைசியாய் வேதநிதி தனக்குக் கொடுத்தனனென நிச்சயத்தைவெளியிட, அரசன் பலவந்தமாக அவ்வணியைவாங்கித் தன்னிடம் வைத்துக்கொண்டு மறுநாள் விடிந்தவுடன் தீக்ஷிதரைவருவித்து, யான் உமக்குக்கொடுத்த ஆபரணத்தை யென்னிடஞ் சிறிதுநேரங்கொடும்: மீண்டும் பெறுவீர் எனக்கேட்க, தீக்ஷிதர் தன்வீட்டையடைந்து மனைவியை

நோக்கி, யான் உன்னிடங்கொடுத்துப் பத்திரப்படுத்திவைக்கச்சொன்ன மோதிரத்தைத் தருகவென, அவர்மனைவி அதைவைத்தவிடத்திற்காணாமல், திரும்பிவந்து தன்கணவனிடம் அதுகாணப்படவில்லையென, தீட்சிதர் துக்கித்து அரசனையடைந்து மன்னவா! அப்பணி அகப்படவில்லை. அஃதெவ்வாறாயதோ அறியேன் என, வேந்தன் நடந்த விர்த்தாந்தத்தை வெளியிட, தீட்சிதர் தன்வீடுசேர்ந்து, மனைவியைக்கண்டித்து, இவ்வளவு அஜாக்கிரதையா? என்று கோபித்தனர். பின்னர் தீட்சிதரும் அவர் மனைவியும் வேத நிதியை நீ யினி யிங்கிருக்கப்படாது. பொள்ளெனப் புறப்பட்டுப்போ. உன்னாற் பிரயோசனமில்லை. நீ குலதூஷகன் என்று தூஷித்துத்துறத்திவிட, அவன் புறம்பேவந்து ஒருநாள் வெளியேயிருந்து, பசிதாகங்களால்வருந்தித் தன் தாசியையடைய, அவளும் இனி யிவனாற் பொருள்வராதென வுணர்ந்து துறத்த அநாதரவாயிருந்தனன். அந்தத்தினம் உலகமுழுவதுங் கொண்டாடத்தக்க சிறந்த சிவராத்திரிவிரதகாலமாயிருந்தது. அன்று அந்நகரவாசிகளிற் சிலர் சிவராத்திரிவிரதமிருந்து விசேஷமான பூஜையைச்செய்ய விரும்பிப் பலவித நிவேதன முதலியவற்றை உடன்கொண்டு சிவாலயத்துட் செல்ல, வேதநிதி கண்டு இவரோடுசென்றால் நாம் எவ்வாறாவது இவர்களை வயப்படுத்தி ஆகாரம்வாங்கிப் புசிக்கலாமென்று கருதிப் பின்றொடர்ந்துசென்று சிவாலயத்திற் பெரும்பசியோடிருந்து, அவர்கள்செய்யுஞ் சிவபூஜையைப்பார்த்துக்கொண்டு, அன்னபக்ஷணத்திலேயே அவாவுடையவனாய், எப்பொழுது இவர்கள் போவார்கள்? எப்பொழுது அன்னம்பட்சிப்பேன்? எவ்வாறு இவ்வன்னத்தைப்பெறுவேன்? என்றெண்ணித் தன் விருப்பங் கைகூடக் கண்விழித்துக் கொண்டிருந்தான். சிவபூஜைசெய்த ஜனங்கள் யாவரும் பிரதம யாம பூஜை முடித்து நிருத்தங் கீதம் முதலியன வியற்றித் தமது வாசஸ்தலத்தை யடைந்தனர். சிலபரிசனர்கள் அவ்விடத்திலேயே துயின்றனர். அங்குள்ளார் நித்திரைபோவது கண்ட வேதநிதி, சிவபெருமானுக்கு நிவேதித்து அங்குவைத்திருக்கும் பக்குவான்னத்தை இச்சமயத்திலேதான் கொண்டுபோகவேண்டுமென்று, சிவலிங்கத்தருகே மெல்லநடந்து அங்குள்ள தீபங்கள் பிரகாசக்குறைவா யிருந்தமையின் அவை கண்கட்குப் புலப்படாததால், அவற்றைக் களவாடவேண்டித் தன் உத்தரீயத்திற் சிறிதுகிழித்துத் திரித்துத் தீபத்தைத்தூண்டினதேயன்றிப் பரார்த்தத்தைக்குறித்துச் சிறிதுஞ்செய்ததன்று. இவனது தீபாரோபணத்தால் சந்நிதியிலிருந்த இருள்முழுதும் ஒழிய, தனக்கு வேண்டிய ஆகாரங்களை எடுத்துக்கொண்டு புறம்பேபோகையில், அங்கே சயனித்துக்கொண்டிந்தகோயிற்சேவகரின்கால்களை மிதித்ததனால், துயின்றோர் சிலர் விழித்து, இவன் யாவன்? திருடன்! திருடன்! எனச்சொல்ல, வேதநிதி அதனைக்கேட்டுப் பயந்து ஓடுகையில், சிலர் இவனைப் பின்றொடர்ந்து கூச்சலிட்டுச்செல்ல, இராசசேவகர்கள்கேட்டுத் திருடனைப் பின்றொடர்ந்துபிடிக்க யத்தனித்து அவன் அகப்படாமையின் பாணப்பிரயோகஞ்செய்ய, அது வேதநிதியின் உடலிற்பட்டுருவியதால் அவன் நிலமிசை வீழ்ந்திறந்தனன்.



36. வேதநிதி சிவராத்திரி பலனால் கலிங்கராஜனானது.

அவ்வேதியன் அஜ்ஞானத்தாலேயே சிவராத்திரி விரதமும் ஜாகரணமும் இருந்தவனானன். சர்வதயாளுவான சிவபெருமான் வேதநிதியை விரதபூர்த்தி செய்தவனாக அங்கீகரித்தனர். அப்பொழுது யமதூதர்களும் சிவகணங்களும் வந்தனர். அவ்விருதிறத்தவரும் இவனைக் கொண்டுபோக வேண்டுவது யாங்கள் யாங்களென்று சம்வாதஞ்செய்தனர். அதில் சிவகணங்கள் யமதூதர்களைநோக்கி, நீங்கள் ஏன் இங்கே தண்டதரர்களாக வந்தீர்கள்? என, யமதூதர்கள் சிவகணங்களை நோக்கி, அணுவளவும் புண்ணியஞ் செய்யாதவனும் மகா பாபியுமான இவனுக்காக நீங்கள் ஏன் வந்தீர்கள்?என, சிவகணங்கள் இவன் எவ்வளவு பாபவானாயினும் சிவராத்திரிவிரதமிருந்து ஜாகரணஞ் செய்ததாற் புனிதமாயினன் என, யமதூதர்கள் யமதர்மனிடஞ் சென்று கூற, யமன் நிஜமே! அவன்பாபங்கள் நசித்தனவென்று சிவகணங்களைப்பணிந்து, வேதநிதியைநோக்கி, நீ பாக்கியவானாகுகவென ஆசீர்வதித்தனன். அதனால் வேதநிதி மறுபிறவியில் களிங்கதேச மன்னவனாகப்பிறந்து சிவபூஜாபக்தியை விசேஷமாகப்பெற்று,சிவராத்திரிவிரதத்தை எக்காலமும் ஆசரித்து, தனது ராஜ்ஜியமுழுதுஞ் சிவாலயப்பிரதிஷ்டைகளும், சிவாலய நித்தியநைமித்திக பிராயச்சித்தாதிகளுஞ் செய்வித்து மோக்ஷமுற்றனன்.

பக்தியின்றிச் சிவராத்திரி விரதத்தால் இவ்வகைய இஷ்டபோகங்களும் மோக்ஷமும் பெறுவராயின், பக்தியோடு இவ்விரதத்தை ஆசரித்தவர்கள் சிறந்த முக்தியை அடைவார்களென்பதுஞ் சொல்லவேண்டுமோ? திருடுவதற்காகச் சிவாலயத்திருந்த தீபத்தைத் தூண்டியதால் இப்பலன் கிடைக்கின், ஞானத்தாற்சிவாலயத்தில் தீபம்வைத்தவர்கள் சுபமான மோக்ஷமடையார்களா? இக்காரணங்களால் இச்சிவராத்திரியைப்போன்ற வேறொரு விரதமில்லை. சிவபெருமானைக்காட்டிலும் ஒருவன் தயாளுவானவனும் பரிசுத்தமாக்குவோனும் இலன். முநிவர்களே! நீங்கள் கேட்ட விஷயத்தைச்சொன்னேன். மோக்ஷத்தைக்கொடுக்கத்தக்கது இவ்விரதமே. சிவபெருமான் ஒருவனே பரத்துவப்பொருள். அச்சர்வேசுவரனே முக்தி ஸ்தானமாக விளங்குபவன். அப்பெருமானே முக்திஸ்வரூபன். இந்தச் சிவராத்திரி விரதத்ினுஞ் சிறந்ததும் சமானமானதும் ஒருவிரதமுமில்லையென்றுஸூதமுநிவர்கூறினர்.

வேதநிதி சிவராத்திரிபலனை யடைந்தது

முற்றிற்று.

எழுபத்தாறுவது

முக்திலக்ஷணமும் சிவரூபமுமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! முக்தியென்று தேவரீர் கூறினீராதலின், அஃது எவ்வகையது? அஃது எவ் அவஸ்தையையுடையது? இதனை எளியேங்கட்கு விவரமாகக் கூறவேண்டுமெனக் கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். முநிவர்களே! நீங்கள்கேட்ட

முக்தி யென்பது சாரூப்பியம் சாலோக்கியம் சாந்நித்தியம் சாயுச்சியமென்று நான்குவகை. அம்முக்தி இவ்விரதத்தினுலேயே கிடைக்கும். அம்முக்தியை யாவராலடையவேண்டுமெனின்—உலகங்களையெல்லாஞ் சிருஷ்டித்து அவற்றை இரட்சித்துச்சங்கரித்துத் தன்னிடத்தொடுக்கி, அவற்றை விசித்திரமாக விஸ்தரிக்கச்செய்யுஞ் சிவபெருமானுலேயே யாம் – என்று புத்திமான்களால் சாகாசந்திர ஞாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிவபரம்பொருளை விஷ்ணுமூர்த்தி-பிரமதேவர்-சநத்குமாரர்-நாரதர் - மார்க்கண்டேயர்-ஸுகர்-பிரமபுத்திரர்-வேதங்கள் முதலிய யாவருமறியார். ஆனுல் வேதங்கள்மாத்திரம் அபரோக்ஷமாக, [ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம | சச்சிதானந்த ஸ்வரூபன் சிவபெருமான்] என்று சொல்லுகின்றன. நிர்க்குணமும், மாயாரஹிதமும், நிரஞ்சனமும், நித்தியமும், செம்மை - பசுமை-வெண்மை-கருமை முதலிய நிறமற்றதும், மநோவாக்குக் காயங்கட் கதீதப்பட்டதுமாக வுள்ளது சிவபரம்பொருள். அப்பொருள் ஆகாயத்தைப்போலவே சர்வமூர்த்தத்திலும் வியாபித்துள்ளது. அது ஸ்தூலஸூக்ஷ்மங்களாகாது. சுகதுக்கங்கட்கதீதப்பட்டது. மாற்சரியமற்றது. நிர்விகாரமானது. இகலோகத்திலும் பரலோகத்திலும் அப்பரம்பொருளை அர்ச்சிப்பதனுலேயே அதன் பிராப்தியாகிய முக்திகைகூடுமாதலின், சர்வேசுவரனுடைய சேவை முக்திப்பிராப்தத்திற்காகவே செய்யத்தக்கது. நீங்கள் கேட்டவிஷயத்தைக் கூறினேன். இதனைக்கேட்டவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவர் என்பதற்குச் சந்தேகமில்லை. இதனை விஸ்தீரணமாகச் சொல்லப்புகுந்தால் ஆதிசேடனுலுஞ் சொல்லிமுடியாது என்று ஸூதமுநிவர் திருவாய்மலர்ந்தருளினர்.

முக்திலக்ஷணமும் சிவரூபமு முரைத்தது

முற்றிற்று.

எழுபத்தேழாவது

சிவபெருமானது நித்தியத்துவமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்கள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமான் யாவர்? விஷ்ணு என்பவர் யாவர்? உருத்திரன் என்பவர் யாவர்? இவர்களில் இவ்வுலகங்கட்கெல்லாம் கர்த்தாவாக உள்ளவர் யாவர்? நிர்க்குணஸ்வரூபியானவர் யாவர்? நிர்க்குணசொரூபியாயிருந்தும் பஞ்சகிருத்தியகாரணமாகக் குணசொரூபியாய் உலககாரியங்களை நடத்துகிறவர் யாவர்? இவ்விஷயங்களில் அடியேங்கட்குச் சந்தேகமிருத்தலின் இவற்றை யெங்கட்கு விளக்கியருளவேண்டும் எனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

ருஷிகளே! நிர்க்குணனுயுள்ள எந்தப்பரமாத்மாவால் இந்த உலகங்கள் தோன்றினவோ அந்தப்பரமாத்மாவே சிவபெருமான் என உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. அவ்வகைய பரமாத்மாவினுல் இருவரும் படைக்கப்பட்டனர். புருஷனுகிய விண்டுவின் சந்தோஷத்தாலுண்டான ஜலமானது

சராசரப்பிரபஞ்சமுழுதும் வியாப்தமாகையில், விஷ்ணு தவஞ்செய்திளைத்து அந்த ஜலத்தில் நித்திரை செய்தனர். அந்த ஜலசயன முதல் புருஷனுக்கு நாராயணனென்னும் பெயராயிற்று. பிரகிருதிக்கும் நாராயணியெனப் பெயர் வந்தது. அவ்விஷ்ணு யோகநித்திரையிலிருக்கையில் அவருடைய உந்திக்கமலத்தினின்று பிரமன் தோன்றிப் பலகாலந் தவஞ்செய்து தனக்குக் காரணபூதனுன விஷ்ணுவைக் கண்டனன். அவ்விஷ்ணு, வைகுண்டபதவியிலிருந்து, மகாப்பிரளயத்திற் சிவபெருமானிடத்தில் முக்தி கைகூடுவர். அவ்வகைய விஷ்ணுவும் பிரமனும் ஜகத் கர்த்தாக்களென்று விவாதமடைந்தபொழுது பரமேசுவரன் அவர்கட்குக்காட்டியஉருவமே மகாதேவவுரு. இம்மகாதேவனுடைய கபோலத்தால் தோன்றிய வடிவம் உருத்திரன். அந்தமூர்த்தமே தியானயோக்கியமான சிவரூபம். மற்றத் திருமாலாதி தேவர்கள் பிரகிருதி சம்பந்தமானவர்களாதலின் காலாநுக்கிரமமாக நாசமடையத்தக்கவருந் தவஞ்செய்து முக்தியடையவேண்டியவருமாவர். உருத்திரன் அப்படி நாசமடையாமற் சிவபெருமானிடத்திலே ஐக்கியமாவான். பிரமாதி தேவர்கள் இருடிகள்மானவர்கள் யாவரும் உருத்திரனைத் தோத்திரஞ்செய்யவேண்டியவர்களே தவிர, உருத்திரமூர்த்தி ஒருவரையுஞ் சேவிக்கத்தக்கவரல்லர். ஆனால் பிரம விஷ்ணுக்களுடன் கூடி உலககாரியங்களைச் செய்துவருகிறார்.

பிரமவிஷ்ணுக்களைப் பக்திசெய்பவர்கள் அவர்களிடத்தைக்கியமுற்று, அத்தேவர்கள் காலக்கிரமத்தில் முக்திபெறும்போது அவர்களோடு முக்தியடைவார்கள். உருத்திரபக்திசெய்பவர்கள் இதராபேக்ஷையில்லாமலே தக்ஷணம் சிவசாயுச்சியம் பெறுவரென "க்ஷரம்-பிரதானமுதலிய" வேதங்கள்முறையிடுகின்றன. ஹிரண்ணியகர்ப்ப பிபீலிகாதிவரையிற் காணப்படும் உலகத்திலுள்ளவர்கட்கு அஜ்ஞானம் பல திறப்படும். விஜ்ஞானமோ நித்ய சுத்த புத்த முக்த சிவ ஸ்வபாவத்தால் பல திறப்பட்டதல்ல. ஆனால் அகண்ட ஏகரஸமாக ஒன்றியாயிருக்கும். இவையாவும் சிவஸ்ரூபமே. இதை விசாரிக்கவேண்டுவதில்லை. சர்வேசுவரனுக்குச் சதாசிவன் என்னும் பெயர் எவ்வாறுகிடைத்ததென்னில், சிவபெருமானே சிருஷ்டிக்கு முற்பட்டிருந்தவர் "ஸதேவஸௌம்யேதமக்ர ஆஸீதி" லயத்திற்குப் பிற்காலத்திலும் இருக்கிறார். "ஸவஹ்யயமுஷிஷ்டதேவாசதிவிஶ்வநிஷேஷ:"சிருஷ்டிக்குப் பிற்காலத்திலும் இருக்கிறார். "யஸ்மிந்நிதஂஸஂவிசைதி" ஆதலின் அச்சதாசிவனென்னும்பெயர் நிர்க்குணராகிய சிவபெருமானுக்குக் கிடைத்தது. முதலில் தனது நிசுவாசத்தாலுண்டான வேதமென்னும் பெயரையுடைய வாக்கையும் பலவகைப்பட்ட மந்திரங்களையும் தியானத்தையும் பூஜையையும், "ஈஶாநஸ்ஸர்வவித்யாநாம்" முதலிய ஶ்ருதிகளால் ஸர்வ வித்தைகளுக்கும் பிரபுவான சிவபெருமான், தன்னுற் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமுழுதும் நல்ல நிலைமையில் வரவேண்டுமென்னுங் கிருபாநோக்கமுடையவராய் விஷ்ணுமூர்த்திக்குக்கொடுத்தனர். ஆதலின் ஜகத்திற்குச் சிருஷ்டித்துவமும்,

இரக்ஷணத்துவமும், சாட்சியும், சம்ஹாரத்துவமும் ஜகதீசுவரனுகிய சிவபெருமானிடத்திலேயேயுள்ளனவன்றிப் பிறரிடத்தில்லை. விஷ்ணுவாதி இதர தேவர்கட்குக் காலவரையுள்ளதன்றிச் சர்வேசுவரனுன சிவபெருமானுக்குக் காலகணிதிகிடையாது. சிவபெருமானுக்கு மஹாகாலன் எனப்பெயர். இவர் கட்டளைப்படி காலம் நடப்பதன்றி, அஃதிவனாயொன்றுஞ் செய்யத்தக்கதன்று. எல்லாவற்றிற்கும் இவரேகாரணபூதர். விஷ்ணுவாதியர் காரியபூதர். சிவபெருமானுடைய இச்சையாலே சிருஷ்டிதிதிசங்காரமுலியகிருத்தியங்கள் நடக்கும். சிவபெருமானுக்குக் காரணபூதரும், சிவபெருமானைச் சங்கரிப்பவரும், சிவத்துவேஷியாயிருப்பவரும் ஒருவருமிலர். ஒரு விதையானது இலை கிளை பூ காய் முதலிய பல ரூபங்களாகக் காணப்பட்டுக் கடைசியில் யாவுமழிய அவ்விதையே மிகுதியாயிருக்கின்றதுபோல இவர் தமக்குத்தாமே காரணமாகவும்ஒன்றியாகவுமிருந்தும், சிருஷ்டியாதிகாரணமாக அநேகராய், பிரளயகாலத்தில் ஒன்றியாகின்றனர். இதனை ஞானிகளுணர்வார்கள். அவர் மனுேவாக்குகளுக்கெட்டாதவர் எனக்கூறிய ஸூதமுநிவரைநோக்கி,மஹருஷிகள்-சிவபெருமானே பிரபஞ்சமென்றும், பிரபஞ்சமே சிவபெருமானென்றுங் கூறினீர். இதனை யாங்கள் நன்குணர்ந்து சிவசாயுச்சியத்தை யடையவேண்டி, அஃதெங்கட்குப் புலப்படுமாறு திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றனர்.

சிவபெருமானது நித்தியத்துவ முரைத்தது.

முற்றிற்று.

எழுபத்தேட்டாவது

ஞானப்பிரகரணமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சௌநகாதிமுநிவர்களைநோக்கி, நீங்கள் கிருதகிருத்தியர்கள். மகாபுண்ணியர்கள். யான் பூர்வத்திற் கேள்விப்பட்டது போலவே சொல்கின்றேன் கேளுங்கள்—ஒருகாலத்தில் பிரமதேவர் நாரதர் ஸநத்குமாரர் வியாஸர் கபிலர் முதலியோர் சபைகூடி நிச்சயித்துக்கொண்ட விஷயமாவது—ஞாதுரு ஞானம் ஞேயம் இம்மூன்றும் பிரமாதித்ருணபரியந்தமாகக் காணப்படும் உலகமுழுவதும் சிவஸ்வரூபமே; பிறிதில்லை. இச்சையுண்டானபொழுது உலகஞ் சிருஷ்டிக்கப்படுகிறது. தன்னுற் படைக்கப்பட்ட சமஸ்தப் பிரபஞ்சத்தையும் தானே சாட்சிபூதமாகப்பார்த்துக்கொண்டிருக்கிறுர். பிரபஞ்சவாசிகள் யாவரும் மாயாசகிதராதலின் சிவபெருமானை ஒருவருமறிகிலர். சூரியன் ஆகாயத்திலிருந்து ஜலாதிகளிற் பிரதிபிம்பித்தவாறு எல்லாவற்றிலும் பிரவேசித்திருக்கிறுர். நிச்சயமாக விசாரிக்கையிற் பிரவேசமே கிடையாது. மீண்டும் தாம் தாமேயாக விளங்குகிறுர். அஜ்ஞானத்தால் துவிதமென்பது மனப்பிராந்தியாம். வைசேஷிக சாஸ்திரங்களிலே துவிதங்கூறப்படுகின்றது. சிவபெருமானுடைய அமிசமே ஆன்மாக்கள். அவை மலசம்பந்தத்தாற் சீவனெனப்படும். ஜீவஸ்வரூபமான யாமென்னும்

பதார்த்தத்தைப் பரமாத்ம ஸ்வரூபமெனத் தெரிந்துகொண்டவன் மலரகித னுய்ச் சிரவணுதிசாதனசம்பத்துகளடைந்து சிவரூபமடைகின்ருன். எங்கும் வியாபகமாகியுள்ள சிவபெருமானே எல்லாப் பிராணிகளிலும் வியாபித்து, சேதனுசேதனங்கள் யாவுந் தாமேயாகி விளங்குகின்ருர். விறகுகளிலெல் லாம் நெருப்பிருந்தும் மதிக்கப்பட்ட விறகிலேதான் அக்கினி பிரத்தியக்ஷ மாமாறு, ஆன்மாக்கடோறும் சிவபெருமான்வியாபித்தும், சிரவணுதி உபா யங்களைச் செய்பவனுக்குச் சர்வேசுவரராகிய சிவபெருமானுடைய தரிசனம் சந்தேகமின்றிக் கிடைக்கும். சிவபேருமானே பரத்துவம்! சிவபேருமானே பரத்துவம்! சிவபேருமானே பரத்துவம்! சிவபெருமானே அநேக ஸ்வரூப மாக எப்பொழுதும் பிரகாசிக்கின்றனர். சமுத்திரத்தில் உப்பும், மலரில் மணமும் மணியில் ஒளியும்போற் சிவபெருமான் பிரிவற்றவர். காரியபூத மானது நாஞ பேதமாகக் காணப்படினும் இறுதியில் விதை யொன்றே யெஞ்சிநிற்றலின், காரணத்தில் காரியம் உண்டானதாக அறிதல் வேண்டும். மாயை விதையென்றும், ஜகத்து மாயாஸ்வரூபமென்றும் உணரவேண்டும். இவ்வகைய நியாயத்தால் மாயை நீங்கிய பிரபஞ்சமுழுவதும் வியாபித்தவர் சிவபெருமானே. சிவபெருமானே மாயை நீங்கிய பிரபஞ்சமுழுவதுமென்ப தற்குச்சந்தேகமில்லை. ஜலாதிகளிற் பிரதிபிம்பித்தசூரியாதிபிம்பங்கள் வாயு வாதி சலனத்தால் தோஷஞ் சம்பவித்ததாகக் காணப்படினும் ஜலத்திற் சம் பந்தப்படாத சூரியாதி பிம்பங்கட்கு உபாதியில்லாததுபோல, சிவபெரு மான் வியாபகத்தால் அநேகத்துவமடைந்தபொழுதும் அவருக்கு அவித் யாசம்பந்தமான தோஷங்கள் சம்பவியா. சுத்தமான பொன் தாமிரத்துடன் கலந்திருப்பதால் மதிப்புக்குறைவுற்றுப் புடமிட்டபிறகு உயர்வடைவது போலவே, ஆன்மா அந்தக்கரண பந்தத்தாலடைந்த பசு என்னும் பெயரை, பக்தியாதிகளால் சர்வேசுவரனையாராதித்து நீங்கி, இறுதியிற் சிவசாயுச்சிய த்தையடையும். இதற்குச் சந்தேகமே கிடையாது.

மகருஷிகளே! சிவபேருமானே கடவுள். அவரை யடைந்தவர்கள் பிறவியடையார்கள். இவ்வகைய இறைவனிடத்தே பக்தியுண்டாவதற்கு ஆயிரம் பிறவிகளில் விசேஷமான தபம் தானம் விரத முதலியவற்றைச் செ ய்து, சிவபக்தனுகவேண்டும். பின்னர் அவன் ஜீவன்முக்தனுவான்—இச்சரி தம் அச்சபையில் நிச்சயித்துரைக்கப்பட்டது. இதனைச் சிவபெருமான் லிங்க ஸ்வரூபத்துடன் விஷ்ணுமூர்த்திக்கும், அவர் பிரமதேவனுக்கும், அவர் ஸநத்குமாரருக்கும், அவர் நாரதமுநிவருக்கும், அவர் வியாஸமுநிவருக்கும், அவர் எனக்குங் கூறினர்கள். யான் உங்களுக்குச்சொன்னேன். நீங்களும் பக்தஜனங்கட்கு விஸ்தீரணஞ் செய்யுங்கள். நீங்கள் என்னைக் கேட்ட விஷ யத்தை என் புத்திக்கு எட்டியவரையிற் சொன்னேனென்று ஸூதமுநிவர் சொல்லினர். அதனைக்கேட்ட முநிவர்கள் ஆநந்தமாகி, அடியேங்கள் மனத்தி லிருந்த சந்தேகங்கள் நீங்கின என, ஸூதமுநிவர் மீண்டும் சொல்லலாயினர்.

சௌநகாதி முநிவர்களே! இந்தச் சரிதங்களை வியாஸபகவானுடைய சிஷ்யன் சொன்னதென்று றுதியாகக்கொண்டு நாஸ்திகனுக்கும், சிரத்தையில்லாதவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், பணிவிடை செய்யாதவனுக்கும் சொல்லவேண்டாம். பதினெண் புராணங்களையும், அநேகமான இதிகாசங்களையும், வேதார்த்தங்களையும் பலமுறையாராய்ந்துணர்ந்து இதுவே ஸாரமானது என்று வேதவியாஸபகவான் கூறியருளினர். இவ்விஷயங்களைக் கேட்பதால், பக்திபற்றவர்களுக்கும் மிக்க பக்தியுண்டாம். பக்தியுடையவர்களுக்குப் பக்தி அதிகரிக்கும். ஒருமுறை கேட்டதனாலே அவனுடைய சகல பாபங்களும் நசிக்கும். இரண்டாமுறை கேட்டதனாலே சிவபக்தி கிடைக்கும். மூன்றுமுறை கேட்டதனாலே அச்சிவபக்தி விருத்தியடையும். நான்காமுறை கேட்டதனாலே சிவதரிசனங்கிடைக்கும். ஐந்தாமுறைகேட்டதனாலே விரும்பிய பலனையெல்லாம் நிர்விக்கினமாகப்பெற்று வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்கட்கு உலகத்திற்கிடையாதன வொன்றுமில்லை. பூர்வகாலத்தில் சில மன்னர் இஞ்ஞானசங்கிதையை ஐந்துமுறை கேட்டவர்களாய், சிவதரிசனம் பெற்று, சிறப்புடைய மனோபீஷ்டங்களைப்பெற்று வாழ்ந்திருந்தனர். ஆதலின் இதனை இப்போது கேட்பவர்களும் கிடைத்தற்கரிய உயர்பதவியடைவார்கள் எனக்கூற, முநிவர்கள் ஆநந்தமிகுந்தவர்களாய், விலையுயர்ந்த பீதாம்பர முதலிய வஸ்திரங்களையும் சந்தனபுஷ்பங்களையும் ஆபரணங்களையும் ஸூதமுநிவருக்குப் பாதகாணிக்கையாக வைத்து ஸூதமுநிவரைப் பூஜித்து, அநேகவிதமாக ஸ்தோத்திரங்கள் கூறி ஜயஜயத்தொனிகளாற் புகழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, பரமாநந்தத்திலிருந்தனர். ஸூதமுநிவரும் சந்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

இந்நூல் மிகவுஞ் சிறந்ததென்று மனத்திற் றிடமுறக்கருதி, சிவபெருமானைப்பணிந்து பக்தியுடன் சிவபூஜைசெய்து இச்சிவபுராண ஞானசங்கிதையைக்கேட்டவர்கள் இஷ்டகாமியங்களையடைந்து ஆயுள்முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைவார்கள். இதனை யெழுதிப் பொன் முதலிய தக்ஷிணையோடு சிவபக்தியுடைய வேதியருக்குத் தானமளித்தவன் எப்பொழுதுஞ் சிவலோகத்தில் வசித்துச் சிவரூபத்தை யடைவான். ஆதலின், எவ்வகையிலாவது இச்சிவபுராணத்தைச் சதுர்வருணத்தவர்களும் பலருக்குந் தானமாகக் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுப்பவர்கள் எப்பொழுதுஞ் சிவலோகத்திலேயே வாழ்வார்கள். இச்சிவபுராணத்தைச்சொன்ன புராணிகனுக்கு அன்னவஸ்திரங்களால் திருப்தி செய்தவன் சிவபக்தியடைவான்.

ஞானப்பிரகரண முனைத்தது
முற்றிற்று.

ஞானஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

தர்மஸம்ஹிதை.

காப்பு.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑌤𑍋 𑌜𑌯𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

நாராயணம்நமஸ்க்ருத்யநரஞ்சைவநரோத்தமம் |
தேவீம்ஸரஸ்வதிம்வ்யாஸம்ததோஜயமுதீரயேத் |

ஸ்ரீ மகாவிஷ்ணுவையும், மாநுடரிற்சிறந்த நரனையும், ஸரஸ்வதீ தேவியையும், வியாஸபகவானையும் வணங்கிப் பிறகு ஜயசப்தத்தைச் சொல்லக்கடவன்.

𑌜𑌯𑌤𑌿 𑌪𑌰𑌾𑌶𑌰𑌸𑍂𑌨𑍁𑌃 𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍀𑌹𑍃𑌦𑌯𑌨𑌨𑍍𑌦𑌨𑍋 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌕𑌮𑌲𑌗𑌲𑌿𑌤𑌂 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌮𑌮𑍃𑌤𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌿𑌬𑌤𑌿 ॥

ஜயதிபராஶரஸூநுஃஸத்யவதீஹ்ருதயநந்தநோவ்யாஸஃ
யஸ்யாஸ்யகமலகளிதம்வாங்மயமம்ருதம்ஜகத்பிபதி |

பராசரமுநிவருடைய குமாரரும், ஸத்யவதிதேவியின் மனதுக்கு ஆநந்தத்தைச் செய்பவருமாகிய வியாஸபகவான் யாவரினும் மேலாக விளங்குகின்றனர்; அத்தகைய வியாஸபகவானுடைய முக பங்கயத்தினின்று பெருகுஞ் சொற்களாகிய அமுதை உலகம் பருகாநின்றது.

𑌯𑍋 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌰𑌜𑌸𑍍𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃
𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑌾 𑌤𑌮𑌸𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀𑌂 𑌮𑌾𑌯𑌾𑌮𑌤𑍀𑌤𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌨𑌨𑍍𑌤𑌬𑍋𑌧𑌮𑌮𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌪𑌦𑌂
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑌧𑌿𑌗𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌧𑍀𑌮𑌹𑌿 ॥

யோதத்தேபுவநாநிஸத்வகுணவான்ஸ்ருஷ்டாரஜஸ்ஸம்ஶ்ரயஃ
ஸம்ஹர்த்தாதமஸாந்விதோகுணமயீம்மாயாமதீத்யஸ்திதஃ |
ஸத்யாநந்தமனந்தபோதமமலம்ப்ரஹ்மாதிஸம்ஜ்ஞாஸ்புடம் |
நித்யம்தத்வஸமந்வயாததிகதம்பூர்ணம்ஶிவம்தீமஹி |

எத்தகைய பகவான் ஸத்வகுணத்தை யடைந்து உலகங்களைக் காத்தும், ரஜோகுணத்தை யடைந்து உலகங்களைப்படைத்தும், தமோ குணத்தை யடைந்து உலகங்களைச் சங்கரித்தும்,இம்முக்குண ஸ்வரூபமாயுள்ள மாயைக்கு அதீதப்பட்டும் விளங்குகின்றாரோ, அத்தகைய ஸத்ய ஸ்வரூபியாயும் ஆனந்தஸ்வரூபியாயும் பேரறிவாளராயும் தோஷரஹிதராயும் பிரமம் முதலிய திருநாமங்களுக்கு வாச்யராயும் நித்யராயும் தத்வ ஆராய்ச்சியா லறியத்தக்கவராயும் ஸர்வ பரிபூரணராயும் விளங்குகின்ற சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

முதலாவது
சிவமஹாத்மிய முரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளை நோக்கி ஸூதமுநிவர் சொல்லுகின்றார்.

முநிவர்களே! ஒருகாலத்தில், தேவகீ நந்தனராகிய கிருஷ்ண மூர்த்தி தனிமையாயிருந்து தனக்குப் புத்திரபாக்கிய மின்மையால் அதனை யெவ்வாறடைவேனென்று சிந்தாக்கிராந்தையுற் றிருக்குஞ்சமயத்தில், வியாக்கிரபாத முநிவர் புத்திரராகியும், சிவபெருமானால் திருப்பாற்கடலைப் பானஞ்செய்தவராயுமுள்ள உபமந்யுமுநிவர் அங்கடைய, அவரைக்கண்ட கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரமுறைப்படி பூஜித்து, தகுந்ததோர் பீடமளித்து அதில் அம்முநிபுங்கவரை யெழுந்தருளி யிருக்கச்செய்து ஸ்வாமீ! தாங்கள் நாடோறும் அன்புடன் யாரை அருச்சனைபுரிகின்றீர்கள்? என வினவ, ருஷிசிரேஷ்டராகிய உபமந்யுபகவான் அகமிக மலர்ந்து கிருஷ்ணமூர்த்தியை நோக்கிக் கூறலாயினர். கிருஷ்ண! நான் பூர்வத்தில் அதிகமான தவத்தை அநேககாலஞ் செய்கையில், பகவானாகிய சிவபெருமான் பெருங்கருணையோடு பிரசன்னமாயினர். அப்பொழுது, முத்தலையோடு விளங்குவதும், தன்னை யெப்பொழுதும் பணிபவர்க்குச் சுகங்கொடுப்பதும், ஒருகாலையுடையதும், பயங்கரமான பற்களையுடையதும், ஜ்வாலையோடுகூடிய ஜோதிர்மயமாகிய முகங்களையுடையதும், இரண்டாயிரங் கிரணங்களோடு விளங்குவதும், எல்லா ஆயுதங்களுக்கும் சிரேஷ்டமானதும், எல்லாவற்றிற்கும் முதன்மையானதும், அநேகவித சின்னங்களையுடையதும், பலகோடி சத்துருக்களையும் அழிக்கத்தக்கதும், கல்பாந்தகாலத்தில் அண்ட ரண்ட பிரமாண்டங்களை யெல்லாம் சங்கரிப்பதும், பிரம விஷ்ணுவாதி தேவர்களாலும் ஜெயிக்கப்படாததும், மஹேசுவரனால் விடப்பட்டுத் திரிலோகங்களையும் சராசரங்களோடும் அரை விநாடிக்காலத்தில் சங்கரிப்பதுமாகிய சூலத்தைப் புறத்தில் விளங்கக்கண்டேன். இதற்குச் சமானமானதும் உயர்ந்ததுமாக ஓராயுதம் மூன்று உலகங்களிலுமில்லை. இதனைச் சர்வேசுவரனுடைய திரிசூலமென யாவரும் பிரசித்தமாகக் கூறுவர். சமுத்திரங்களையெல்லாம் உலரச்செய்யவல்லது.

இதனை மாந்தாதா வென்னும் பேரரசன் சிவானுக்கிரகத்தால் அடைந்து மன்னவர் அனைவரையும் வென்று அசுவமேதயாகஞ் செய்திருக்கின்றனன். இலவணாசுரன் சிவாநுக்கிரகத்தால் இதனைப்பெற்றுத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு கர்வமிகுந்து சத்துருக்கினன் என்னும் அரசனைப் போருக்கழைத்து அவனால் மாண்டனன். [சத்துருக்கினன் அவனைச் செயித்தபின்னர் அவன் பொருள்களைச் சுவாதீனஞ்செய்துகொண்டபொழுது அதி தீக்ஷண்யமானதும், யாவரையும் அஞ்சச்செய்வதும், சர்ப்பமணிந்ததும், சொல்லமுடியாத பிரபாவத்தையுடையதும், முத்தலைகளைப் புருவங்களாகக்கொண்டு பயமுறச்செய்பவன் போன்றதும், புகையில்லாத நெருப்புப்போன்றதும், பாலசூரியன்போன்றதும், பாசத்தைக் கையிற்றாங்கிய யமன் போன்றதுமான அந்தச் சூலாயுதம் அவனுக்குச் சுவாதீனமடையாமற் சிவபெருமானை யடைந்தது.]

கூர்மையானதும், அநேக சர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதும், பிரளயகாலாக்கினியாலேயே புருஷரூபமடைந்துள்ளதுமாகிய மழுவாயுதத்தை அம்மகாதேவனுடைய மற்றொருபக்கலில் விளங்கக்கண்டேன். இப் பரசு என்னும் ஆயுதத்தைப் பரசுராமன் க்ஷத்திரியர்களைச் சங்கரிக்குநிமித்தம் சிவாநுக்கிரகத்தாற் பெற்று, அது தன்னிடத்திருப்பதால் வலிமையும் ஆற்றலுமிகுந்து எழுபத்துமூன்றுமுறை க்ஷத்திரிய குலத்தைச் சங்காரஞ் செய்தனன்.

ஆயிரம் முகங்களையுடையதும், வியாப்தமானதும், இரண்டாயிரம் புஜங்களையுடையதும், புருஷாக்கிருதியானதும், இரண்டாயிரங் கண்களையுடையதும், ஆயிரங் கால்களையுடையதுமான சுதர்சன மென்னுஞ் சக்கரம் அப்பெருமான் பக்கலில் விளங்கப்பார்த்தேன். இவையேயன்றி வஜ்ராயுதம், சக்தி, தூணீரம், கட்கம், பாசம், அங்குசம், கதை முதலிய திக்குப்பாலகர்களுடைய ஆயுதங்களும் அச்சர்வேசுவரன் அருகிருக்கக் கண்டேன். இவ்வாறு எனது திடபக்தியைப் பரீக்ஷிக்குமாறு அவ்வெம்பெருமான் பெருங் கோரரூபமாகத் தரிசனங்கொடுத்தருளினர்.

அவருடைய வலப்புறத்தில் அன்னவாகனத்தைத் தூரத்திலிருத்தி நிற்கிற பிரமதேவனும், இடப்புறத்தில் சங்க சக்கர கதை கட்க கோதண்டங்களை யணிந்து கருடவாகனத்தைச் சமீபத்திலிருத்தி நிற்கிற விஷ்ணுமூர்த்தியும், பராசத்தியாகிய பார்வதிதேவியும், பார்வதி தேவியின் பக்கலில் மயூரவாகனமும் திவ்விய தேஜஸோடு வேலாயுதத்தை யேந்திநிற்கும் குமாரஸ்வாமியும், சூலப்படையைக் கையிற்றாங்கி முன்னே நிற்கிற நந்திதேவரும், அங்குசபாசங்களை யணிந்து ஒருபுறத்திருக்கும் விநாயகரும், பூதகணங்களும், சப்தமாதர்களும், பரிவாரங்களாகச் சூழ்ந்து பலவித தோத்திரங்களால் அவர்களெல்லோருந் துதிசெய்

யவும்,உலகிலுள்ள யாவும் அவரருகே விளங்கவுங்கண்டு, ஆநந்தத்துடன் அதிசயித்துத் தைரியத்துடன் கைகூப்பி நமஸ்கரித்துநின்று, சர்வேசுவரனைப் பார்த்துச் சந்தோஷத்தொனியால் மிக்க பக்தியுடன் தோத்திரஞ் செய்கையில், பகவானாகிய சாம்பவமூர்த்தி சந்தோஷித்தேனென்று புன்சிரிப்புடன், வேதியனே! யான் எவ்வளவு பயங்கரமாகத் தரிசனங் கொடுத்தும் உன் மனதைச் சலிக்கச்செய்யாமற் போனேனல்லவா? நீ நன்றாய்ப் பரீக்ஷிக்கப்பட்டவன்! எனது நிரதிசயமான பக்தியையடைந்திருக்கின்றாய். உனக்கு மங்களமுண்டாகுக. தேவர்கட்கும் அரிய வரத்தை விரைவிற் கேள் எனத் திருவாய்மலர்ந்தருள, யான் விரைந்து பக்திவலையிலகப்பட்ட அப்பரமபதியைப் பணிந்து, பகவானே! தேவரீருக்குச் சந்தோஷமுண்டானமையின், அடியேனுக்குத் தேவரீரிடத்தில் நீங்காத பக்தியிருக்கத் தயைசெய்யவேண்டும். அவ்வகைய பக்தியால் எனக்குத் திரிகாலஞானம் வரும். ஆதலின் பிறரிடத்திற் செல்லாத ஊர்ஜிதமான பக்தியைப் பிரசாதிக்கவேண்டும். என் வமிசத்தார்களும் யானும் பாலும் அன்னமும் குறைவின்றிப் புசிக்க வரங்கொடுக்க வேண்டும். பிரபுவே! என்னுடைய ஆச்சிரமத்தில் தேவரீர் எக்காலமும் தரிசனமளித்துக்கொண் டிருக்கவேண்டும் என வேண்ட, மனோபீஷ்டங்களையெல்லாங் குறைவறக் கொடுக்கவல்ல சிவபெருமான் - நீ நரை திரை மூப்புக்களை விலகுக. முநிவர்களிலே கீர்த்திவானாகி அவர்களாலேயும் புகழத்தக்கவனாகுக. சீலம் ரூபம் குணம் ஐசுவரியம் முதலியவை என் கருணையால் உனக்கு மென்மேலும் பெருகுக. நீ பாலையபேக்ஷித்தமையின் உனக்கு க்ஷீர சமுத்திரத்தைக் கொடுத்தோம். நீ விரும்பியபொழுது அஃதுன்னை யடைக. நீ விரும்பிய பொருள்கள் அப்பொழுதே உன்னை யடையும். அந்த க்ஷீராப்தி அமிர்தஸ்வரூபமாதலின் அதனை நீ பானஞ்செய்வதால் வைவசுவத மந்வந்தர முடியுமட்டும் உன் வமிசத்தார்களுடன் கூடி வாழ்வாய். உன் கோத்திரம் எப்பொழுதும் அபிவிருத்தியாகும். உன்னுடைய ஆச்சிரமத்தில் எப்பொழுதும் என் தரிசனத்தையும், உனக்கு நீங்காத பக்தியையுங் கொடுப்பேன், பிள்ளாய்! நீ தோத்திரஞ் செய்யும்படி திவ்ய தரிசனங் கொடுத்திருப்போம். இன்னும் உனக்கு வேண்டிய வரம் ஏதேனுமிருக்கின் அதனையுந் தருவோம். நீ விரும்பத்தக்கது பிறிதொன்றில்லை என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். கிருஷ்ணா! இவ்வாறு சிவபெருமான் கோடிசூரியப்பிரகாசமாகத் திவ்யதரிசனமளித்து வரங்களைக் கொடுத்தருளினர். அவர் கட்டளையிட்டபடியே அவர் கருணையால் யான் யாவுமடைந்தேன். கந்தர்வாதி கணங்களுக்கும் ருஷிகளுக்கும் வித்தியாதரர்களுக்கும் மநோரம்மியமான பூஞ்செடிகளையும், மணம் வீசுவதும் வருஷமுழுவதுங் குறைவின்றி மலருவதுமாகிய உத்தியானவனத்தையும், பிற

வற்றையும் அடைந்தேன். சர்வேசுவரனாகிய அச்சாம்பசிவனால் நினைத்த பொழுது நினைத்த பொருளை யடைய வல்லவனாயினேன் என்று உபமந்யு முனிவர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறினர்.

இரண்டாவது
மேற்படி அத்தியாயம்.

துவாரகாபுரவாசியாகிய கிருஷ்ணமூர்த்தியை நோக்கி உபமந்யு முனிவர் சொல்லுகின்றார்:—ஸ்ரீ சர்வேசுவரராகிய சூலபாணியின் அநுக்கிரகத்தினால் சர்வஞானமும், பூதபவிஷிய வர்த்தமானங்களும் உணர்ந்தேன். பிரம விஷ்ணுவாதி தேவர்களாலும் அர்ச்சித்தற்கரிய அமரநாயகனாகிய அரவாபரணனை யான் பிரத்தியக்ஷமாகத் தெரிசித்தேன். என்னிலும் தன்னியர் திரிலோகங்களிலும் யாவருளர்? இருபத்தாறுவதெனப் பிரசித்தமானதும், நித்தியமானதும், வேதமுணர்ந்த மகருஷிகளால் தியானிக்கப்பட்டதும், நாசமற்றதுமாக விளங்குகின்ற பரத்துவப்பொருள், எல்லாத் தத்துவங்களையும் படைத்துச் சாக்ஷிபூதமாக நின்று ஷட்குண ஐசுவரிய ஸம்பந்நனான மஹாதேவனேயாம். அவனே பிரதான புருஷேசுவரன். அக்கடவுளே தனது வலப்புறத்திலிருந்து உலகங்கட்குச் சிருஷ்டிகர்த்தாவான பிரமனையும், தனது இடப்புறத்திலிருந்து உலகரக்ஷணகர்த்தாவான திருமாலையும் படைத்தவர்; பிரளயகாலத்தில் தமது இதயத்திலிருந்து உலகசங்காரஞ் செய்யத்தக்க உருத்திரனைப் படைப்பவர்; யுகாந்தத்தில் ஊழிக்காற்றாயிருப்பவர்; காலஸ்வரூபமாயிருந்து சர்வபூதங்களையு மழிப்பவர்; சர்வவ்யாபியாயுள்ளவர்; சர்வ பூதாத்மகமானவர்; சர்வ பூதங்கட்கும் பிறப்பிடமானவர்; அவ்வகைய மஹேசுவரன் பெருந்தேவர்களாலுந் தரிசித்தற்கரியவர். அம்மஹாதேவனைப் புத்திரலாபமுண்டாகுநிமித்தம் நீ அவசியம் ஆராதிக்கவேண்டும். கிருஷ்ணா! இதுவரையில் சிவபெருமானை யாராதித்து அவனருளால் தங்கள் மனோபீஷ்டங்களை யடைந்தவர்களின் தொகையோ சொல்லமுடியாதாயினும், அவருட் சிலர் சரிதங்களை உனக்குச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

பூர்வத்தில், ஹிரணியகசிபன் பத்துலக்ஷவருஷம் சர்வதேவர்களுடைய ஐசுவரியத்தையும் சர்வேசுவரனுடைய அநுக்கிரகத்தால் அடைந்து இறுதியில் இரண்டாயிர வருஷ ஆயுளையுடைய பிரஹலாதனைப் புத்திரசிரேஷ்டனாக அடைந்தான். அப்புத்திரன் சிவாநுக்கிரகத்தால் இந்திரநந்தனனெனப் பிரசித்தமான பெயரெய்தி விஷ்ணுமூர்த்தியின் சுதரிசனமும், இந்திரனுடைய வச்சிரமும் தன் தேகத்திற் பட்டால் அவை பொடியாக வுதிர்ந்துபோகத்தக்க திவ்விய தேகமடைந்தவன். சர்வேசு

வரன் வரத்தால் ஓராயுதமும் அவன் தேகத்தை யணுகாத வரம்பெற்று க்ரஹன் என்னும் பெயரையுடைய மஹா பலசாலியான இந்திரநந்தனன் ஈசுவர வரமடைந்துள்ள தனது பரிவாரத்துடன் தேவர்களை யெதிர்த்துத் துன்புறுத்த, தேவர்கள் இவனைச் செயிக்கமுடியாமல் திகைத்தனர். இவன் விசேஷமாகச் செய்துவந்த சிவபூஜைக்குக் களிகூர்ந்த எம்பெருமான் திரிலோகசம்பத்தும், லக்ஷவருஷ ராச்சியபாரமும், அநேக புத்திரரும் உண்டாக அநுக்கிரகித்து, இறுதியில் சாயுச்சியமும், குசத்தீபத்தில் சுபகரமான இராஜபோகமும் உண்டாகுகவென்று வரங்கொடுத்தருளினர். கண்ணனே! பிரமதேவனாற் படைக்கப்பட்ட சதமகன் என்னும் தைத்தியன் சிவபெருமானைக் குறித்து நூறுவருஷம் கடுந்தவஞ்செய்து அவனருளால் ஆயிர நகரங்களை யடைந்தனன். பூர்வகாலத்தில் வேதங்களிற் பிரசித்திபெற்ற யாஞ்ஞவல்கிய மகருஷி சர்வேசுவரனை ஆராதித்து உத்தமஞானத்தை யடைந்தனன். வேத வியாஸ பகவான் சிவார்ச்சனை செய்து சமான ரகிதமான கீர்த்தியையும், ஞானத்தையும் பெற்றனன். இந்திரனால் அவமதிக்கப்பட்ட வாலகில்லியர் சர்வேசுவரனை யர்ச்சித்து, ஸோமஹர்த்தாவாய் ஒருவராலுஞ் செயிக்கமுடியாத கருடனைச் செயித்தனர். ஜடாதரனாகிய சிவபெருமானுடைய கோபாக்கினியால் ஜல முழுதும் வரண்டுபோக, தேவர்கள் யாவரும் ¶ ஸப்த கபால புரோடாஸத்தால் சிவபெருமானை யாராதித்து, தம திஷ்டப்படி மீண்டும் ஜலத்தை யுண்டாக்கிக்கொண்டனர். அத்திரி முனிவர் மனைவியாகிய அநுசூயை சிவபெருமானை நோக்கி முந்நூறுவருஷம் கொம்பின்மேனின்று கடுந்தவஞ்செய்து தத்தாத்திரேய முனிவரையும் சந்திரனையும் துர்வாச முனிவரையும் புத்திரராகப்பெற்றனள். விகர்ணன் என்னு மிருடி மஹாதேவனை யாராதித்து இஷ்டசித்திகளை யெய்தினன். சாகல்லிய முனிவன் மனசந்தோஷத்துடன் ஒன்பதினாயிரவருஷம் சிவாராதனை மானசீகமாகச் செய்து பகவத் கடாக்ஷத்தால் நீ கிரந்தகர்த்தனாகுகவென்றும், உன் கீர்த்தி அழியாது திரிலோகத்திலும் விளங்குக என்றும், மஹருஷிகள் பலர் உன் குலத்திற் பிறக்கவென்றும், உன் குலத்திற் பிறந்தவன் ஸூத்ர கர்த்தா வாவானென்றும், அவன் ஸாவர்ணி என்னும் பெயர்பெறுவானென்றும், அவன் கிருதயுகத்தில் ருஷியாயிருப்பானென்றும், அறுநூறுவருஷந் தவஞ்செய்வானென்றும், வரங்கொடுக்கப்பெற்றனன். இவ்விதமாகச் சர்வேசுவரன் பூர்வீகர்களான பெரியோர்களால் தோத்திரஞ் செய்யப்பட்டிருக்கின்றான். கிருஷ்ணா! நீயும் அவ்வகையாகச் சங்கர பகவானை ஆராதிப்பாயாகில் சர்வ மனோபீஷ்டங்களையும் அடைவாய். அவருடைய திவ்விய குணங்களை ஒரு நாவினையுடைய நான் அநேகவருஷங்கள் சொல்லினும், சொல்லி முடிக்குந் திறமுடையவனல்லேன்.

¶ ஸப்த கபால புரோடாஸம் - ஏழு பாத்திரங்களிற் படைத்துக்கொடுத்த அவிசு.

ஸநத்குமாரர் வியாஸமுநிவரை நோக்கிக் கூறுகின்றார்:—¶ உபமந்யு முநிவருடைய வார்த்தையைக்கேட்ட கண்ணபிரான் பரமாச்சரியத்தைப் பெற்று, புனிதமான மனதையுடைய உபமந்யுமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! பிராமண சிரேஷ்டரே! தேவரீர் தன்னியர், தேவரீருக்குச் சமானமான புண்ணியர் ஒருவருமிலர். தேவரீரது ஆச்சிரமத்தில் தேவாதிதேவனுடைய ஸாந்நித்தியம் விளங்குகின்றது. முநிசார்த்தூலரே! தேவரீரைப்போன்ற பெரியோருடைய தெரிசனத்தால் சர்வேசுவரனாகிய பரமசிவன் எனக்கும் அநுக்கிரகஞ்செய்வான் எனக்கூற, உபமந்யு முநிவர் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, நீ விரைவில் ஜகதீசுவரனான மஹாதேவனை அவனது கருணையால் தரிசிக்கப்போகின்றனை. பார்வதி சமேதனான அவ்வெம்பெருமானால் இருபத்து நான்கு வரங்கள் உனக்குக் கிடைக்கும். நீ சாக்ஷாத் விஷ்ணுவாதலின் உனக்கு நல் வரங்கொடாரா? நீ தேவர்களிலெல்லாம் பூஜ்யனாவாய். சத்குணங்களால் துதிசெய்யப்பட்டவனாவாய். அச்சுதா! சிரத்தையான மனமுடைய உனக்கு ஜபஞ்செய்தற்கு யோக்கியமான ஒரு மந்திரத்தை உபதேசிக்கப்போகிறேன். நீ அம்மந்திரோபாசனையால் பிரம்ஹண்யனாகி நிச்சயமாகச் சர்வேசுவரனை விரைவில் தரிசித்து, உனக்குச் சமான வலிமையுடைய புத்திரனைச் சிவாநுக்கிரகத்தால் அடையப்போகிறாய். ஏ கிருஷ்ணா! நீ சிவபெருமானைத் தரிசித்து, ஸ்வாமீ! யானுன்னைத் தரிசித்தேன். எனக்குப் புத்திரப்பேற்றினைக் கிருபைசெய்யவேண்டும் என வரங்கேட்பாய்எனக் கூறினர். இவ்வாறு உபமந்யு கிருஷ்ண சம்பாஷணையில் சிவப்பிரபாவங்களால் தினங்கள் எட்டு க்ஷணமாகக் கழிந்தன. ஒன்பதாவதுதினத்தில் கிருஷ்ணபகவான் உபமந்யு முநிவரால் தீக்ஷை செய்யப்பட்டனர். அதர்வசிகரமாக விளங்கும் சிறந்த சிவசம்பந்தமான ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை யுபதேசஞ்செய்யப்பெற்று, கிருஷ்ணமூர்த்திமுன் ஜடாதீரராகி, பின் முண்டிதஞ் செய்துகொண்டு சிவசம்பந்தமாகவே நிற்பேனென்று சங்கல்பஞ்செய்து, ஆசாரநியமத்துடன் யோகதண்டமேற்று, தருப்பையால் அரைநாண் அணிந்து, சிவதீக்ஷை செய்யப்பெற்றவராய்த் தவமேற்கொண்டு முதல் மாசத்தில் நிராகாரமாகவும், இரண்டாம் மாசத்தில் ஜலபானஞ் செய்துகொண்டும், அதன்பின் (மூன்று நான்கு ஐந்தாவதாகிய) மூன்று மாசங்களில் வாயு பக்ஷணஞ் செய்துகொண்டும், கால்பெருவிரல்களின்மேல் நின்றுகொண்டும், ஆறுமாசத்திலிருந்து பதினைந்தா மாசவரையில் தோள்களை யுயர்த்திக் கைகுவித்துக்கொண்டும், பதினாறு மாசத்தின் முதலில் இந்திர தனுசோடுகூடிய மேகங்கள் உலகமுழுதும்

¶ உபமந்யு கிருஷ்ண ஸம்வாதத்தை, ஸநத்குமாரமுநிவர் வியாஸருக்குச் சொன்னதாகவும், வியாஸர் ஸூதருக்குச் சொன்னதாகவும், ஸூதர் சௌநகாதி முநிவர்க்குச் சொன்னதாகவும் புராணமுள்ளதாதலின் மயங்கற்க.

வியாபித்திருக்கையில் சிவபெருமான் தரிசனமளிக்கப்பெற்றனர். பார்வதிசகிதராயும், சந்திரசேகரராயும், பிரமாதி தேவர்கள்சித்த வித்தியாதரர்கள் யக்ஷ கின்னர கருடகாந்தர்வர்களால் துதிசெய்யப்பட்டவராயும், பிறப்பிறப்பில்லாதவராயும், சர்வாச்சரியஸ்வரூபியாயும், விளங்கும் சர்வேசுவரனை சிவபெருமானைக் கிருஷ்ணமூர்த்தி தரிசித்து அஞ்சலியஸ்தராய் எதிர்நின்று நானுவிதமான தோத்திரங்களால் பூஜித்துச் ஸஹஸ்ரநாமங்களால் தேவேசுவரனை சங்கரனைத் துதிக்கையில், தேவர் கந்தர்வர் வித்தியாதரர் நாகர் முதலாயினர் புஷ்பமாரி பொழிந்தனர். அநேகமுறை புஷ்பவருஷம் பொழிந்திறுதியில் கிருஷ்ணமூர்த்தியின் சிரமீதும் புஷ்பமாரி பொழிந்தனர். சித்தர் முநிவர் அப்சரசுகள் முதலானோராற் புடைசூழ்ந்து விளங்கும் சிவபெருமான் தமது வாமபாகத்தில் விளங்கும் பார்வதிதேவியின் திருமுகத்தைப் பக்தவாச்சல்லியத்தோடு பார்த்து, இக்கண்ணன் செய்த தவத்திற்குக் களிகூர்ந்தேன், எனக்கூறி, கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, கிருஷ்ணு ! யான் உன் பக்தியையும் அறிவேன். நீ திடவிரதத்தை யுடையவனென்றும் அறிவேனுதலின், மூவுலகத்திலுங் கிடைத்தற்கரிய நீ விரும்பத்தக்க வரங்களில்எட்டுவரங்களைக் கேட்பாயாக எனக்கூற, அதனைக்கேட்ட கிருஷ்ணமூர்த்தி அஞ்சலியஸ்தராய், ஸ்வாமீ ! (க) என் மனம் எப்பொழுதும் தருமநெறியிலேயே யிருக்க வேண்டும். (உ) என் கீர்த்தி உலகிலுள்ளாருடைய கீர்த்திக்கெல்லாம் விசேஷித்திருக்கவேண்டும். (ந) யான் பெரும் பலசாலியாயிருக்கவேண்டும். (ச) தேவரீரது சாமீப்பியம் எனக்கெப்பொழுது மிருக்கவேண்டும். (ரு) தேவரீரிடத்தில் எப்பொழுதும் எனக்குத் திடபக்தி யுண்டாயிருக்க வேண்டும். (சு) பத்துப் புத்திரர் எனக்கு நிஷ்க்ருஷ்டமாயிருக்கவேண்டும். (எ) என் சத்துருக்கள் பலவான்களாயிருப்பினும் என்னை யெதிர்த்தால் அழியவேண்டும். (அ) யோகிகட்கெல்லாம் யான் தலைவனுகவிருக்கவேண்டும். என்று—இவ்வகையாக எட்டு வரங்கேட்டனர். சிவபெருமான் அவ்வரங்களையெல்லாம் அவ்வாறே பெறுக பெறுக என்று கூறி, உன் புத்திரர்களில் சாம்பன் என்னும் மகா பராக்கிரமசாலியான ஒரு புத்திரன் உளனுவான். அவனே பிரளயகாலசூரியன். முநிவர் சாபத்தால் மநுஷனுகப் பிறப்பான். இன்னும் நீ வேண்டியவை ஏதேனுமிருப்பின் அவற்றையும் அடைவாயாகவென்று வரங்கொடுக்க, கிருஷ்ணமூர்த்தி சிவபெருமானைப் பலவிதமான தோத்திரங்களாற் சந்தோஷிக்கச்செய்தனர்.

சௌநகாதி முநிவர்களே ! கிருஷ்ணமூர்த்தி அதன்பின்னர் பார்வதிதேவியாரையும் வேதோக்தமான தோத்திரங்களாற்றுதித்து நமஸ்கரித்துச் சந்தோஷப்படுத்த, பார்வதிதேவி கிருஷ்ணபகவானைப் பார்த்துக் கிருஷ்ணு ! நீ பரமபக்தன் ; நான் பெருங்களிப்படைந்தேன், உலகத்திலுள்ளாருக்குத் துர்லபமான வரங்களை யுனக்குக் கொடுக்கிறேன்.

வேண்டியவற்றைக் கேட்டுக்கொள் எனக்கூற, கிருஷ்ணசுவாமி அஞ்சலியஸ்தராய், மஹாதேவி ! தாயே ! நீ களிப்படைந்தபக்ஷத்தில் அவ்வண்ணமே அரிய வரங்களை யநுக்கிரகிக்கவேண்டும். ஜகத்ஸ்வரூபிணீ ! எனக்கு வேண்டிய வரங்களாவன:—ஜீவஹிம்ஸையில்லாத விரதத்தால் பிராமண சமானனுகவும், எனக்கெப்பொழுதுஞ் சத்துருக்க ளில்லாதிருக்கவும், பிராமணபூஜை செய்யத்தக்க பக்தியுடையவனுகவும், என் தாய் தந்தையர் எப்பொழுதுஞ் சந்தோஷித்திருக்கவும், சமஸ்த பூதங்களும் என்னிடத்தில் அநுகூலமனமுடைமையாயிருக்கவும்,எவ்விடத்திலும் என்னை யெதிர்ப்பவரில்லாமலும், தங்கள் சேவை கிடைத்த எனது வமிச பரம்பரை சதாசார சம்பத்துடையதாகவும், நூறு யாகங்கள் செய்து இந்திராதி தேவர்களைத் திருப்திசெய்பவனுகவும், எங்கள் வீட்டில் எப்பொழுதும் ஆயிரத்தேழு யதிகளும் ஆயிரத்தேழு அதிதிகளும் போசனஞ் செய்து திருப்தியடையும் வகையாகவும், பந்துக்களிடத்தில் எனக்குப் பிரீதியுண்டாயிருக்கவும், எப்பொழுதும் நல்ல சுகமுண்டாகவும், சுந்தரமான தேகத்தையுடைய ஆயிரம் மனைவிமாருக்கு நாயகனுய் அக்ஷீணரேதசுடையவனுகவும், அன்னத்தைக்காட்டிலும் எனக்குச் சத்தியவான் பிரீதியாயிருக்கவும் வரமளிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து வேண்ட, சர்வ மங்களப்பிரதையாக விளங்கும் பார்வதிதேவியார் கிருஷ்ணமூர்த்தியின் வார்த்தைகளைக்கேட்டு ஆனந்தமடைந்து அவ்வாறே யாகுகவென வரமளித்து, உனக்கு மங்களமுண்டாகுக என ஆசீர்வதித்தனர். அப்பொழுது பார்வதி பரமேசுவரர் பிரமதகண ஸஹிதமாக அந்தர்த்தானமாயினர். பின்னர் கிருஷ்ணமூர்த்தி கேசி என்னும் ராக்ஷசனைச் சங்கரித்து வெதிரிகாச்ரமமடைந்து தம் தீக்ஷாகுருவாகிய உபமந்யுமுநிவரைச்சிரசாற் பணிந்து நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் விண்ணப்பிக்க, உபமந்யுமுநிவர் கிருஷ்ணு ! சிறந்த வரங்களால் உலகத்திலுள்ளவரை யிரக்ஷிப்பவர் சர்வேசுவரனுன சிவபெருமானையன்றித் திரிலோகங்களிலும் யாவருளர் ? ஒருவருமிலர். அப்பரமசிவன் குரோதபுத்தியுடையாருக்கும் சிறிது கஷ்டத்துடன் தரிசனமளிப்பர். ஞானத்திலும் தபத்திலும் சௌரியத்திலும் தைரியத்திலும் சம்புவினுடைய மேம்பாடுகளைச் சொல்லுகின்றேன் எனக் கூறுகையில், கிருஷ்ணமூர்த்தி சிரத்தையோடு சந்திரமௌலியாகிய சிவபெருமானிடத்தில் மனஞ்செலுத்தியிருந்தனர். அவ்வாறிருக்கும் கண்ணனை நோக்கி உபமந்யு முநிவர் கூறலாயினர்.

கிருஷ்ணு ! பகவானுன சங்கரன் பூர்வத்தில் பிரமலோகத்தில் மஹாத்மாவும் பிரமயோகவானுமாகிய தண்டி யென்னும் மகருஷியால் ஸஹஸ்ரநாமங்களால் தோத்திரஞ்செய்யப்பட்டனன். மகா விசாலமானதும் நிகண்டும் ஞானசாத்திரமுமாகவுள்ள அந்தத் தோத்திரம் சாங்கிய மதத்தர்களாகிய சிலரால் படனஞ்செய்யப்படுகின்றது. மாநுடரோ

அதனைத் தோத்திரஞ்செய்ய அசக்தராயிருப்பர். ஆயினும் உலகத்தில் ஒரேவிடத்திற் சிலர் அதனைப் படனஞ்செய்து அதனாற் பெருமானை யாராதித்துச் சர்வேசுவரானுக்கிரகத்தால் இஷ்டமான வரங்களைப் பூர்வத்திற் பெற்றிருக்கின்றனர். அவ்வாறு வரம்பெற்ற மகருஷிகளிற் சிலருடைய சரிதங்களையும் உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக. அத்திரிமுநிவன் ¶ கோகர்ணக்ஷேத்திரத்திற் சர்வேசுவரனை நோக்கி நூறுவருடந் தவஞ்செய்து நூறு புத்திரர்களையும் அழியாத கீர்த்தியையும் பெற்று வாழ்ந்திருக்கின்றனன். ஜராமரணங்களை யொழித்தவர்களும், தர்மங்களை யுணர்ந்தவர்களும், திவ்விய தேஜஸையுடையவர்களும், அயோநிஜர்களும், நூறுயிரவருட ஆயுளையுடையவர்களுமான அப்புத்திரர்களில் ஒருவன் நிலத்தினெல்லை குறிப்பதில் அக்கிரமமான விவாதஞ்செய்து பிரமஹத்தியடைந்தான். சமஸ்தமான ருஷிகளும் அவனைப் பிரமஹத்தி செய்தவனென்று விலக்கினர். அவ்வாறு பாபியானவனைச் சிவபெருமான் பரமரகிதனும், தேஜோவந்தனும், வேதசாஸ்திரங்களில் வல்லவனும், சிவபக்த சிரேஷ்டனுமாகச் செய்தனர். பரசுராமன் சர்வ வியாபகனாகிய சிவபெருமானை யாராதித்து, க்ஷத்திரியர்களாற் கொல்லப்பட்ட தன் தந்தையாகிய ஜமதக்நி முநிவரைக் கருதிச் சிவசந்நிதியில் துக்கித்து, அவரது கடாக்ஷத்தால் மகா கடோரமான பரசு ஆயுதத்தை யடைந்து எழுபத்துமூன்றுதரம் க்ஷத்திரியவமிசத்தை நாசஞ்செய்து, பிரசன்னமாயிருக்கும் சிவபெருமானுடைய அநுக்கிரகத்தையடைந்து, க்ஷத்திரிய வதையால் தனக்கு நேர்ந்த உபபாதகத்தை மகேந்திரகிரியில் தவஞ்செய்து விலக்கி, பிறராற் செயிக்கமுடியாதவனாய்ச் சிரஞ்சீவியாகி, இன்னும் தவஞ்செய்துகொண்டும் சிவலிங்கார்ச்சனை செய்துகொண்டும் சித்தர் சாரணர் முதலானோருடன் மகேந்திரகிரியிற் காணப்படுகின்றனன். அவ்வனீகய சிரஞ்சீவியான பரசுராமன் கல்பாந்தத்தில் மீண்டும் தனது வைகுண்டத்தை யடைவான். அஸிதமுநிவருக்குத் தம்பியாகிய தேவலன் என்னும் முநிவன் பூர்வத்தில் இந்திரனாற் சபிக்கப்பட்டு அஜ்ஞானத்தாற் கோபமுற்று, உலகத்திற்கெல்லாந் தொந்தரை செய்ய யத்தனித்து, அதர்மமான தபசைச்செய்து, இறுதியில் இஷ்டகாமியங்களையெல்லாம் எளிதிற் கொடுக்கவல்ல சிவலிங்கபூஜை செய்து, ஸ்திரமான கீர்த்தியையும் தர்மத்தையும் ஆயுளையும் அடைந்தனன்.

மநுவிற்கு நேத்திரத்தாற் பிறந்த வசிஷ்ட முநிவர் சாமகானஞ்செய்வோர் சபையில் க்ருத்ஸமதன் என்னும் ருஷியை நீ மனங்கெட்டு ரதந்தரம் என்னும் சாமத்தை அபசுவரமாக ஏன் கானஞ்செய்கின்றனை ? என்று கோபித்து, இருபத்தொன்பதினாயிரவருஷம் நீர்த்துளியும் சருகுமில்லாததும், துஷ்டமிருகங்கள் சஞ்சரிப்பதுமான தண்டகாரண்யத்தில்

¶ உபமந்நியர் வாசம்.

அஜ்ஞானத்தோடு துக்கதரமுடைய ஒரு மிருகமாக இருக்கவெனச் சபித்தனர். அந்தச்சாபத்தால் துன்பப்படும் க்ருத்ஸமதன் மகா பயங்கரமும் ஜலமற்றதும் பழந்தரும் மரங்கள் ஒன்றுமில்லாததுமான விடத்தில் அப்பொழுதே மிருகமாகச்சென்று, சிவபெருமானைத் தியானித்துப் பல் விதமாகப் பணிந்து, மஹா பக்தியோடு பிரணவத்துடன்கூடிய சிவ பஞ்சாக்ஷர மந்திரத்தை மனதிற் றியானித்துக்கொண்டிருந்து, அதனுற் களிகூர்ந்த சிவபெருமானுல், ¶ மிருகமுகமுடைய ஒரு கணநாதனுகிச் சிவபெருமானையடைந்து, சாபத்தை விலக்கிக்கொண்டு லம்போதரர் கணத்தை யடைந்தனன். சிவலிங்கார்ச்சனையிலேயே எப்பொழுதும் விரும்பிச்செய்த் மகா தபசியாகிய ஜௌகீஷவ்யன் என்னும் முநிவன் பூர்வத்தில் காசிக்ஷேத்திரத்தில் சமஸ்த போகங்களையும் விடுத்து, நிஷ்காமிய மனமுடையவனுய், சிவபெருமானை யர்ச்சித்து அவ்வெம்பெருமான் கடாக்ஷத்தால் அணிமாதி அஷ்டசித்திகளும் பெற்றுத் தவ கஷ்டத்தினின்று நீங்கினன். சர்வேசுவரன் தன்னை நோக்கித் தவஞ்செய்த காக்கிய முநிவருக்கு மோட்சங்கொடுக்கத்தக்கதும் உலகத்தில் துர்லபமானதுமாக வரங்கொடுத்து, சரீரசம்பந்தமான பிரமாண்யமான விஷயத்தால் பிரத்தியக்ஷமாகும் நான்குஸ்கந்தங்களையுடைய ஜோதிஷசாஸ்திரமென்னும் கணிதசாஸ்திரத்தையும், ஸ்திரமான எல்லா வித்தைகளின் தேர்ச்சியையும், அவரைப்போன்ற ஆயிரம் புத்திரர்களையும் கொடுத்தருளினர்.

பராசரமுநிவர் தன்னைத் தியானித்தபொழுது நரை திரை மூப்பில்லாத வேதவியாஸரென்னும் யோகியைப் புத்திரராகச் சந்தோஷத்துடன் கொடுத்தருளினர். மாண்டவியமுநிவர் பத்துலக்ஷவருஷம் சூலாக்கிரத்தினின்று பிராணனை விட்டுவிடுவேன்என்று தன்னுள்நியமனஞ்செய்துகொண்டு தவஞ்செய்து, மனோவியாதி நீங்கி மிக்க சூலவியாதிகளினின்று சுகமுற்றனர். தரித்திரனுகவுள்ள ஒரு பிராமணன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சபித்துச் சிவாநுக்கிரகத்தால் காலவன் என்னும் புத்திரனைக் குருவின் வீட்டில் விடுத்து, மகா ரகசியமாகவுள்ள யாகசாலையிலிருந்து, தன் மனைவியை நோக்கி, பெண்ணே! யாராகிலும் அதிதிகள் வந்தால் நாம் தனமில்லாதிருத்தலின் வந்த அதிதியைப் பூஜிக்கச் சக்தியில்லையே; அதுபற்றி அவருக்கு நான் வெளியே போயிருக்கின்றேனெனக் கூறுகவென்று கூறியிருந்தனன். அப்படியிருக்க, ஒரு சமயத்தில் மிகப்பசியால் வருந்தும் அதிதியொருவர் அங்குவர, அப்பார்ப்பனி அவரை நோக்கி ஸ்வாமி! என் கணவர் எங்கேயோ போயிருக்கின்றனர் என, அதிதி தனது ஞானத்தால் உண்மையை யுணர்ந்துகொண்டு, பெண்ணே! அவன் அப்படியே யில்லாமற்போகுகவென, அவ்வக்நிசாலையிலிருந்த வேதியன்

¶ மிருகமுகம் வசிஷ்ட சாபத்திற்குப் பங்கமின்றிச் சிவபெருமானுற் கொடுக்கப்பட்டது.

அப்பொழுதே மரணமடைந்தான். பிறகு விஸ்வாமித்திரமுநிவன் கருணையைப்பெற்றுவந்த காலவனென்னும் புதல்வன், தாயால் நடந்தவிர்த்தாந்தங்களை யறிந்துகொண்டுசிவபெருமானை யாராதித்து, சாம்பவி யென்னும்யாகத்தைச்செய்ய, அதனால் தன் தந்தை உயிர்பெற்று அவ்யாகசாலையினின்றும்புறம்பேவர, அவனைக்கண்டு கைகுவித்துநின்றனன். பிராமணன் அவ்வாறு பணிந்துநிற்குங் குமாரனைக்கண்டு, நான் சிவாநுக்கிரகத்தால்கிருதார்த்தனானேன். தனவானாகவும்புத்திரவந்தனாகவுமானேன். உன்னைப்புதல்வனாகப்பெற்றதால்இறந்தும் பிழைத்தேனென்றான். கேட்டனையோ கிருஷ்ணா! நீயும் சமஸ்தகாமங்களையுஞ் சிவபெருமானாலடைந்தனை, இனி உன்னிடத்திற்குச் செல்கவெனக் கட்டளையிட, உபமந்யுமுநிவரைக் கிருஷ்ணமூர்த்தி சாஷ்டாங்கமாகப் பணிந்து விடைகொண்டு தமதுதுவாரகாபுரியை யடைந்தனர். முநிவர்களே! அப்பரமசிவனது குணாநுபவங்களை முற்றுமுரைத்தற்கு ஆதிசேடன்போல ஆயிரம் முகங்களையுடையவனாயிருந்தாலும் என்னாற் சிறிதுஞ் சொல்லத்தரமல்ல என்று ஸூத முநிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கிக் கூறினர்.

சிவமஹாத்மியமுரைத்தது

முற்றிற்று.

மூன்றாவது

திரிபுரசங்காரமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதிமுநிவர்கள் ஸூத முநிவரை நோக்கி ஸ்வாமீ! சிவபெருமான் திரிபுரசங்காரஞ்செய்ததைப் பூர்வம் வியாஸபகவானால் கேள்வியுற்றவண்ணம் தேவரீர் அடியேங்கட்குச் சொல்லியிருப்பினும், அதனை மீண்டும் அடியேங்கள் கேட்க விரும்புகிறோமாதலின், தயைவைத்து அதனைச் சுருக்கி யுரைக்கவேண்டும். மங்களகரமும் மனோகரமுமான சிவபெருமானுடைய அநந்த கல்லியாணகுணங்களை விசாரணைசெய்வோருக்கும், சிவாராதனைசெய்வோருக்கும் உண்டாகும்பலன்களையும் சங்கிரகமாகச் சொல்லியருளவேண்டும். திரிபுராசுரர் எவ்வமிசத்திற் சனித்தவரென்பதையும், அப்புரமூன்றும் ஒருகாலத்தில் ஒன்றுகூடியபொழுது ஒரே கணையால் மகாபல பராக்கிரமசாலியான சிவபெருமான் எவ்வாறு சங்கரித்தனரென்பதையும் கூறியருளவேண்டும் எனப் பிரார்த்திக்க, ஸூதமுநிவர் மகருஷிகளை நோக்கி, வேதவியாஸபகவானால் கேள்விப்பட்டவகையே உங்கட்கு முன் கூறியவற்றைச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேளுங்கள். திரிபுராசுரரில் தாரகாக்ஷன் ஜேஷ்டன்: கமலாக்ஷன் இரண்டாவான்: வித்யுன்மாலி இளையவன்: இவர்கள் மூவரும் சமானமான பலமுடையவர்களும் இந்திரியங்களைச் செயித்தவர்களும், உலகினை வெ

ல்ல விரும்பினவர்களும், சமதமாதிகுண சம்பந்திகளும், சத்தியவான்களுமாய் மேருமலையை யடைந்து, வசந்தகாலத்தில் தவஞ்செய்தற்குவேண்டி, புஷ்பமுதலிய போகங்களையும் வீணும்ருதங்கவேணுமுதலிய நாதங்களையும் வெறுத்தும், கிரீஷ்மகாலத்தில் சூரியகாந்தியை லக்ஷியஞ்செய்யாமல் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், தமது மனோபீஷ்டங்களைப் பெறும்வண்ணம் அன்போடுயாகஞ்செய்து மகாப்பிரதாபத்துடன் மழைக்காலத்தில் ஆறுகள் தலைமேலோடவும், சரத்காலத்தில் மிக்க ரம்மியமான நெய்முதலியவற்றுற் பக்குவஞ்செய்த மனதுக்கு விருப்பந்தரத்தக்க கிழங்குகளையும் பழங்களையும் பக்ஷணஞ்செய்துகொண்டும், இந்திரியநிக்கிரகத்தாற் பசிதாகங்களை வெறுத்தும், பசியுடையவர்கட்குக் கந்தமூலபலங்களைக் கொடுத்துதவியும், கலங்காத மனத்துடன் ஆகாரத்தை வெறுத்தும், ஹேமந்தருதுவில் தைரியத்தால் பர்வதத்துச்சியிற் பனிசலத்தால் உடல் நனையப்பெற்றவராகி, மெல்லிய நனைந்த வஸ்திரமுடையவராகியும், சசிருதுவில் ஜலத்திலிருந்துகொண்டும் மனவிருப்பங்கள் கைகூடுமென்று உற்சாகமுடையவர்களாய்க் கிரமங்கிரமமாகப் பெருந்தவஞ்செய்து இரவும்பகலும் பொழுதுதெரியாமல் நூறுயிரவருஷங்களை நொடிப்பொழுதாகக் கழித்தார்கள். பிறகு பிரமன் தேவ முநிகணங்களாற் புடைசூழப்பட்டு அவர்கள் தவத்திற்கிரங்கிப் பிரசன்னமாகிச் சந்தோஷத்துடன் அவர்களை நோக்கி நல்லவார்த்தைகளால் ஓ தைத்திரியசிரேஷ்டரே! நீங்கள் யாதுகருதி இவ்வளவு கடுந்தவஞ் செய்கிறீர்களோ? அதனைச் சொல்லவேண்டும். யான் உங்கட்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுப்பேன். உங்கள் கருத்தை வெளியிடவேண்டும் எனக் கேட்க, அசுரர் மூவரும் உலகங்கட்குப் பிதாமகனான பிரமதேவனைப் பணிந்து கைகட்டி நின்று, கடவுளே! இவ்வளவு பலமுடைய எங்களுக்குத்தக்க வீடு ஒன்று வேண்டியிருக்கின்றது. சத்துருக்களால் சயித்தற்கசாத்தியமானதும், சுகத்தைக்கொடுக்கவல்லதும், தேவர்களாலும் அழிக்கமுடியாததும், பொன்மயமானதுமாக விளங்கும் பட்டணத்தை விரும்பினேனெனத் தாரகாக்ஷனும், மிகச்சிறந்த வெள்ளியாற்செய்த பட்டணம் வேண்டுமெனக் கமலாக்ஷனும், வச்சிரம்போற் கட்டியாயிருக்கும் இரும்பாற்செய்த பட்டணம் வேண்டுமென வித்யுன்மாலியுங் கேட்டனர்.

தாரகாசுரன் புதல்வர்களாகிய அம்மூவர்க்கும்கேட்டபடியேகைகூடும் எனப்பிரமதேவர்கூற, மீண்டும் அம்மூவரும் எம்மையொருவருஞ் செயிக்கமுடியாது எங்கட்கு இறவாவரம் வேண்டும் எனவேண்ட, பிதாமகன் அசுரரே! மடியாதிருப்போர் வையகத்தில் ஒருவருமிலர். கற்பகாலங்கழியின் யானும் இந்திராதிதேவர்களும் திருமாலும் இறப்போம். ஈசனொருவனேயிறவாதவன். ஆதலின் அதனையன்றி வேறேதேனும்வேண்டியவற்றைக்கேட்க எனக்கூற, அசுரர்கள் அண்ணலே! அவ்வாறாயின்

பொன் வெள்ளி இரும்பிலைமையும் எமது புரங்கள் பூமி அந்தரசுவர்க்க மென்னுந் திரிலோகங்களில் ஆயிரவருடத்திற் கொருமுறை யொன்று சேர்வதும், மீண்டும் விரும்பியவிடத்திற்குச்செல்வதுமாக வரமளிக்கவேண்டும். அப்புரங்கள் மூன்றும் ஒன்றுபட்டபொழுது உலகங்கட்கெல்லாஞ் சுத்தவீரனைத் தனக்குத்தானே சமானனான சங்கரபகவானே வருஷாகாலத்தில் ¶ அபிஜித்முகூர்த்தநேரத்தில் அழித்தாலன்றி வேறொருவராலும் இறவாதிருக்கவும் வரமருளவேண்டும் எனக்கேட்க, கமலயோனி அவ்வண்ணமே கைகூடுகவென்றுரைத்துத் தமது சத்தியலோகஞ்சார்ந்தனர்.

தாரகாக்ஷன் முதலாயினோர் அளவிறந்த அவுணர்சேனையோடு மயன் என்னும் தானவத்தச்சனால் தமது விருப்பின்படி முப்புரங்களைச் செய்து கொடுக்கப்பெற்று, தமக்கு வேண்டியதொன்றுமின்றிச் சிவபூஜையைக் குறைவின்றிச் செய்துவந்தும், தமது குடிக்குணங் குறையாது வைகுண்ட முதலிய தேவ நகரங்களையும், உலகிலுள்ள பல பட்டணங்களையும் திரிபுரத்தோடு சென்று சிதைத்துவந்தமையால் திருமால் சினங்கொண்டு இந்திரன் முதலிய இமையவருடன் சென்று அசுரரை யெதிர்த்துப் போர்புரிந்து ஆற்றாமல் தேவர்களுடன் புறமுதுகிட்டுத் திரும்பி, மேருமலையிற் றவஞ்செய்து, சிவபெருமானைத் தரிசித்து முப்புராதிகள் செய்யுந்துன்பத்தை மொழிய, இறைவன் அவர் எம்மடியாராதலின் அவர்களை யழிக்கப்படாதென்றருளி மறைந்தனர். அதனால் மனம்வருந்திய விஷ்ணுமூர்த்தி புத்தவடிவேற்று நாரதமுனிவரைச் சீடராகக்கொண்டு திரிபுரத்தையடைந்து அவர்கட்குப் பலவகையாகப் போதித்து அவர்களைப் புத்தராக்கினர். அவர்களில் மயங்காது நின்றோர் மூவரே. நாரதமுனிவர் பதிவிரதாதர்மத்தாற் பயனில்லையென்று போதித்து மங்கையரையெல்லாம் மதிமயக்கினர். புத்தனும் நாரதனும் தமதுசீடர்களைநோக்கித் தமது மாயையிலகப்படாதமூவரையுங் கொடியோரென்று கூறி, அவர்களை முகாலம்பனஞ் செய்யாவண்ணம் வறபுறுத்திவிட்டு மேருமலையையடைந்தனர். திருமால் சிவபெருமானைப்பணிந்து ஸ்வாமீ! அவர்கள் வேதவிருத்தர்களா யிருத்தலின் இனியேனும் தேவரீர் அவர்களை யழிக்கவேண்டும் என வேண்ட, சிவபெருமான் விண்டுவே! அவ்வாறாயின் விரைவிற் போர்க்கருவிகளைச் சித்தஞ்செய்யக்கடவை என்றாஜ்ஞாபிக்க, விஷ்ணுமூர்த்தி தேவர்களுடன் யோசித்து, ¶ இரதம் வில் அம்பு குதிரை முதலியனவாகத் தேவர்களையும், இரதசாரதியாகப் பிரமனையும், பிறகருவிகளாகப் பிறதேவர்களையும் நியமித்துக்கொண்டு, சிவசந்நிதியில் விண்ணப்பித்தனர். அவர் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான் உமாதேவியாருடன் ரதாரூடராய் விநாயகர் சுப்பிரமணியர் பிரமன் இந்தி

¶ அபிஜித் - சந்திரபுஷ்ய நக்ஷத்திரம்.

¶ இரதம் வில் முதலியவற்றின் நிர்ணயங்களை ஞானஸம்ஹிதையில் முன் வந்துள்ளவிடத்திற் பரக்கக் காண்க.



LITHO. MEENAKSHIAMMAH. PRESS. MYLAPORE.
1900.

37. அந்தகாசுரயுத்தம்.

గు. జై. వెంగలపరాయరాజువ్రా

ரன் முதலிய தேவர்கள் தத்தம் வாகனங்களில் ஏறிப் புடைசூழ்ந்துவரவும் சத்தரிஷிகள் ஆசீர்வதிக்கவும் ருஷிகன்னியர் மங்கலப்பாட்டு பாடவும் திருநந்திதேவர் பொற்பிரம்பு ஏந்தி முன்செல்லவும், பானுகம்பன் வாணன், சங்குகர்ணன் முதலிய கணநாதர்கள் வாத்தியஞ்செய்யவும், திரிபுரத்தையடைந்தனர். அப்பொழுது புரங்கள் மூன்றும் ஒன்றுசேர்ந்து சரத்காலத்தில் அபிஜித் முகூர்த்தமாயிருக்க, தேவர்கள் சிவபெருமானைப்பணிந்து இவர்களை வெல்ல இதுவே சமயமென்றனர். சிவபெருமான் மேருவாகிய வில்லைவளைத்து வாசுகியாகிய நாணையேற்றி, அக்கினியைக் கூர்வாயாகவும் வாயுவைச்சிறகாகவுஞ் சேர்க்கப்பட்டுள்ள திருமாலாகிய அம்பினைக் கையிலெடுத்தனர். போர்க்கருவிகளாக அமைந்திருந்த தேவர்கள் யாவரும் தம்மாலேயே திரிபுரதகனம் நிகழ்வதாக இறுமாந்தனர். அதனை யுணர்ந்த எம்பெருமான் அவ்வஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யாமல் புன்னகை செய்தனர். அதனால் புரமூன்றும் பொடியாயின. முனிவர்களே! நீங்கள் கேட்ட விஷயங்களைச் சுருக்கிச் சொன்னேனென்று ஸூத முனிவர் கூறினர்.

திரிபுரசங்காரமுரைத்தது

முற்றிற்று.

நான்காவது

அந்தகாசுரன் கதையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளாகிய சௌநகாதிமுனிவர்கள் ஸூதமுனிவரைநோக்கி, ஸ்வாமீ! தாங்கள் சொல்லிய சிவசரித்திரங்களைக் கேட்டு ஆனந்தித்தோம். பரமாத்ம ஸ்வரூபியான சிவபெருமான் அந்தகாசுரனைச் சங்கரித்தாரல்லவா? அவ்வந்தகன் உலகத்திலே யாவர்வமிசத்திற் பிறந்தவன்? அவன் யாவனுடைய புதல்வன்? அவன் எவ்வாறு கொல்லப்பட்டான்? இந்த விபரங்களையெல்லாம் வேதவியாஸபகவானால் தாங்கள் விசாரித்துணர்ந்தவண்ணம் கிரமமாக அடியேங்கட்குச் சொல்லவேண்டும் எனக்கேட்க, ஸூதமுனிவர் அவர்கள் விருப்பத்தையுணர்ந்து அவர்களை நோக்கி, ருஷிகளே! ஸர்வலோகநாயகனுகிய சிவபெருமானுடைய விழிகளை ஒருகாலத்தில் மந்தரகிரியிலே ஜகன்மாதாவாகிய பார்வதிதேவியார் மாந்தளிர்போன்ற கரங்களால் விநோதமாத்திரமாக மூடினர். அவ்வாறு மூடிய ஓர் விநாடியிலே உலகமெங்கும் அந்தகாரம்நிறைந்தது. அவ்வாறு சிவபெருமானது கண்களைமூடிய பார்வதிதேவிக்கு உடனே உண்டான அச்சத்தால் வெயர்வுண்டாயிற்று. அவ்வெயர்வானது எம்பெருமானது லலாடநேத்திரமாகிய அக்கினியாற் சூடுண்டு அவ்விரலிலேயே பயமுறத்தக்கதும் கொடூரமானதும் குரூரபுத்தியுடையதுமான ஒரு கர்ப்பமாயிற்று. அவ்வகைய கர்ப்பத்தால் விலக்ஷணமும் விரூபமும் ஜடாமுடியும் தாடிமீசையும்

கருமையும் சுருண்டு நெரிந்தமயிரும் அழுகையும் சிரிப்பும் பாடலும் நடித்தலும் பசித்தாற்போன்றும் பிரளயகாலமேகம்போன்றுங்குரலுமுடைய ஒருவன் ஜனித்தான். மகா ஆச்சரியமான வுருவத்தோடுதித்த அவனைச் சிவபெருமான்கண்டு பார்வதியைநோக்கிச் சிரித்து, பெண்ணே! என் விழிகளை நீ வேடிக்கையாக மூடி இவ்வகையாகஒருவனைப்பிறப்பித்து என்னைப் பயப்படுத்துகின்றனையா? என விநோதமாகக்கூற, பார்வதிதேவியார் அவ்வார்த்தைகட்குச் சிரித்து அவ்விழிகளிற்பொத்திய கைகளையெடுத்தனர். இவ்வகைய கோரரூபத்துடன் அந்தகாரத்தாற் பிறத்தலின் அவன் கண்ணில்லாத அந்தகனாகவிருந்தான். அப்பொழுது மகாதேவி மகாதேவனை நோக்கி ஸ்வாமீ! இவன் யாவன்? குருடனும் விரூபியாயுமிருக்கிறான். எந்தநிமித்தத்தால் இவன் இவ்வாறு ஜனித்தான்? இவன் யாருடைய புதல்வன்? இந்தவுண்மையைச் சொல்லவேண்டும் எனக்கேட்க, சிவபெருமான் சொல்லுகின்றார்.

பார்வதி! இவன் மகாபராக்கிரமசாலி. என்விழிகளை நீ மூடினையே அப்பொழுது உன் கை வியர்விலுண்டாகி அந்தகனென்னும் பெயர்பெற்றனன். இவனுக்குத் தந்தையானே. நீ அநுகூலபுத்தியோடு உன் கணசகிதமாய் இவனை ஒருவருஷம் காக்கவேண்டும் எனக்கூற, பார்வதிதேவி சிவபெருமான் கட்டளைப்படி தோழிகளோடுகூடி அவ்வந்தகனைத் தன்புத்திரன் போலவே பாதுகாத்துவருகையில், சிலநாள் கழிந்தபின்னர், உலகத்தில் ஹிரணியாக்ஷன் என்னும் அசுரன் தனக்குப் புத்திரரின்றி வனத்தையடைந்து தேகமெல்லாம் இளைக்க இராக த்வேஷங்களின்றி சிவதரிசனத்தை விரும்பிப்பெருந்தவஞ்செய்ய,சிவபெருமான் அவன்தவத்திற்ககங்களித்து அவன் தவஞ்செய்யுமிடத்தை யடைந்து, பஞ்சேந்திரியங்களையடக்கி இவ்வகையதவம் யாதுகருதிச் செய்கின்றனை? உனக்குவேண்டிய வரத்தைக் கேள்; கொடுப்பேனென,ஹிரணியாக்ஷன் சர்வேசுவரா! எனக்குப் பராக்கிரமசாலியும் அசுரகுலத்தை யாதரிப்பவனுமாகிய புத்திரன் வேண்டுமாதலின் இவ்விதவிரதத்தை ஆச்சிரயிக்கிறேன். அவாவியவாறே யனுக்கிரகஞ் செய்யவேண்டும். என் தமயனுக்கு பிரஹலாதாதி நால்வர் புதல்வருளர். எனக்குமட்டுஞ் சந்ததியில்லாவிடில் என் கஷ்டத்தாற் சம்பாதித்த இராச்சியம் யாதாகும்? பிறனொருவனுடைய இராச்சியத்தைப் பராக்கிரமத்தாற் சம்பாதித்து, தந்தையின் இராச்சியத்தைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறவனே புதல்வன். அவ்வகைய புதல்வனாலேயே அவனைப்பெற்றோன் புகழ் பெறுவான். தர்மசிரேஷ்டர்களாகிய முனிவர்களாலே "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி" என்னுஞ் சுருதியால் புத்திரனே ஊர்த்துவகதிக்குக் காரணமென்று கூறப்படுதலின், சமஸ்தமானவர்களும் புத்திரப்பேற்றினைச் சிறந்ததாகக் கொண்டாடுவர். எனக்குக் கிரீடாதிபுத்திரர் எண்மரிருப்பினும் என் தர்மபத்தினியிடம் ஒரு புத்திரன் உண்டாகவேண்டும் எனப்பிரார்த்திக்க, சிவ

பெருமான் அவ்வார்த்தைகட்கு மனங்களித்து, ஓ தைத்தியாதிபனே! உன் வீரியத்தாற் சனித்தபுத்திரன் உனக்கிருக்கமாட்டானாதலின், எனக்குப் புத்திரனாயிருப்பவனும் உனக்குச்சமானமான பராக்கிரமமுடையவனும் பிறர் ஒருவராலுஞ் செயிக்க அசாத்தியமானவனுமான அந்தகன் என்னும் புத்ரனை நீ பெறுக. துக்கத்தைவிடுக எனத் திருவாய்மலர்ந்தருளி, உக்கிரனும் திரிபுராரியும் பூதநாதனும் உமாதேவிதலைவனுமாகிய சிவபெருமான் அந்தகனை ஹிரணியாக்ஷனுக்குக் கொடுத்தருள, ஹிரணியாக்ஷன் அந்தகனைப் பெற்றுக்கொண்டு, பரமசிவனையும் பார்வதிதேவியையும் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து பலவிதமான தோத்திரங்களால் துதித்து, சிவபெருமானிடம் விடைகொண்டு தனதிராச்சியத்தையடைந்து, அந்தகனை ரஸாதலத்திலேயே நிறுத்தி, தேவர்களையெல்லாஞ் செயித்து உலகமுழுவதையும் பாய்போலச் சுருட்டிக்கொண்டு தனது பாதலத்திற்குச் சென்றான். அதனைக்கண்ட தேவர்களும் ருஷிகளும் ஒன்றுகூடி விஷ்ணுமூர்த்தியை வேதோக்தமாகப் பூஜிக்க, திருமால் ஸ்வேதவராக அவதாரஞ்செய்து, மஹாபராக்கிரமசாலியாக மூக்கினருகுள்ள தந்தங்களால் தோண்டிக்கொண்டு பாதாளத்தையடைந்து, தனது தந்தமுதலியவற்றாலும் கோரைப்பற்களாலும் பலமுறை அசுரரைச் சூர்ணித்து, வஜ்ராயுதத்திற்குச் சமானமான கால்களின் அடியால் அசுரச்சேனையை அநந்தமுறையழித்து, கோடிசூரியப்பிரகாசமான காந்தியுடைய சுதரிசனமென்னுஞ் சக்ரத்தால் ஹிரண்யாக்ஷனைச் சங்கரித்து, அவனோடிருந்த துஷ்டர்கள் யாவரையும் நாசஞ்செய்தொழித்து, இறந்த ஹிரண்யாக்ஷன் மகனாகிய அந்தகாசுரனைப் பாதாளலோகாதிபதியாய்ப் பட்டாபிஷேகஞ் செய்து நிறுத்தி, ஹிரண்யாக்ஷன் பாதாளத்திற்குக் கொண்டுபோன பூமியைத்தன் கொம்பின்மேல்வைத்து எடுத்துக்கொண்டு வந்து பழயபடியேயிருத்தித் தனது வைகுண்ட பதவியை யடைந்தனர்.

சௌநகாதி முனிவர்களே! அதுமுதல் அந்தகாசுரன் உலகமுழுவதும் அரசுசெலுத்திக்கொண்டிருக்கையில், பிரமதேவர் அங்கடைந்து அந்தகனுக்குத்தரிசனங்கொடுக்க, அவன் பலவிதமாகத்துதித்துப் பணிய, கமலயோனி அந்தகனே! உனக்கு யாதுவரம்வேண்டும்? என வினவ, அஜ்ஞானத்தால் அந்தகன் சொல்கின்றான். ¶ பிரபிதாமகரே! எப்பொழுதும் எவ்வகைய அஸ்திர சஸ்திர பாச வஜ்ரமுதலிய ஆயுதங்களாலும், மரங்களாலும், மலைகளாலும், ஜலத்தினாலும், அக்நியினாலும், சத்துருக்களாலும், சுவர்க்க மத்திம பாதலங்களிலும், இரவிலும் பகலிலும் சந்தியாகாலங்களிலும் எனக்கு மிருத்யுபயமில்லாதிருக்க வரங்கொடுத்தருளவேண்டுமெனக் கோர, பிரமதேவர் அவனைநோக்கி அந்தகா! யான் அவ்வாறே யுனக்கு

¶ பிர பிதா மகன் - பாட்டனுக்குத் தந்தை. பிரமன் மகன் - காசிபன். காசிபன் மகன் - ஹிரண்யாக்ஷன். ஹிரண்யாக்ஷன் மகன் - அந்தகன். இது முறையென்க.

வரங்கொடுத்தேன். நீ எட்டுக்கோடிவருஷம் தானவராச்சியபரிபாலனஞ் செய்வாய் என்றுகூறித் தனது சத்தியலோகமடைந்தனர். இஃதிவ்வாறிருக்க, ஹிரண்யாக்ஷன் இறந்தமையானும் அந்தகாசுரன் இராச்சியாபிஷேகஞ் செய்யப்படினும் அந்தகனுயிருந்தமையானும், ஹிரண்யாக்ஷன் தம்பியாகிய ஹிரண்யகசிபனே அரசனுயிருந்தமையின் அவன் கதையை யிடையிலே சொல்லுகிறேன் கேளுங்கள்.

முநிவர்களே! ஹிரண்யகசிபன் தர்மங்களை யெல்லா மழித்துப் போர்செய்து தேவர்களையெல்லாம் ஜெயித்துத் துன்புறுத்த, இந்திரன்முதலிய தேவர்கள் க்ஷீராப்தியையடைந்து அங்கே யோகநித்திரையிலிருக்குந் திருமாலைக்கண்டு பலவிதமான தோத்திரங்களால் துதிசெய்ய, திருமால் சந்தோஷித்து, அமரர்களே! உங்களுக்கு யாது வேண்டும்! எனக் கூறி உணர்ந்து, சூரியகாந்திபோல் விளங்குந் திருமால் அவர்களை யாதரித்து, ஜடையும் வக்கிரதந்தங்களும்,கோரைப்பற்களும்,கூர்மையான நகங்களும், சிறந்த மூக்கும், குகைபோலத் திறந்துகொண்டிருக்கும் வாயும், கோடி சூரியப்பிரகாசமும், நல்ல கோரஸ்வரூபமும், பிரளயகாலாக்கினிபோன்ற ஸ்வரூபமுமுடைய வர்ணிக்கச் சாத்தியமில்லாத நரசிங்காவதாரமெடுத்து, சூரியாஸ்தமானவேளையில் அசுரர் புரத்தை யடைந்து அங்கிருந்த அசுரர்களைப் போர்புரிந்து வதைத்து, அகண்ட பராக்ரமத்தைக் காண்பித்துக் கிறுகிறுவெனச் சுழன்று, வனங்களை யழித்தும்,வன காவலரை வதைத்தும் விளங்கும் விஷ்ணுமூர்த்தியை அங்கிருந்த அசுரர்கள் சிங்கமேயென்றெண்ணித் திகைக்கையில், பக்தனுகிய பிரகலாதன் மாத்திரம் இவர் ஸ்ரீமந்நாராயணனே யென்று கருதி, ஹிரண்யகசிபனை நோக்கி இஃது சிங்கமன்று யுத்தஞ்செய்வதிற் பலனில்லை: இவர் விசேஷர்; ஷட்குணைசுவரிய சம்பன்னர்; முடிவில்லாதவர்; அவ்வகைய நாராயணனே உனது நகரத்தை யடைந்தனர். ஆதலின் யுத்தத்தை நிறுத்தி, அந்த நரசிங்கத்தை நீ சரணமடைந்தால் திரிலோகங்களிலும் அகண்டமான ராச்சியத்தையும் அனுபவிப்பாய். அவரைப் பணியவேண்டும் எனக்கூற, ஹிரண்யகசிபன் கோபித்து, அடா பிரகலாதா! இந்நரசிங்கம் எனக்கெவ்வளவு? இதற்கு நீ பயந்தனையா? என்று சொல்லி, தன்னருகே நிற்கும் சேவகர்களைப் பார்த்து நீங்கள் இந்தச் சிங்கத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென, சேவகர்கள் யாவரும் நரசிங்கத்தை யணுகித் தீயினையடைந்த சருகுபோலச் சாம்பராயினர்கள். அதுகண்ட ஹிரண்யகசிபன் அஸ்திர சஸ்திர சத்தி பாச அங்குச ஆக்நேயப்படை முதலிய படைகளால் நரசிங்கமூர்த்தியோடு ஒருமுகூர்த்தகாலம் யுத்தஞ்செய்து, இறுதியில் இருவரும் சமானமான மல்யுத்தஞ்செய்தனர். அது உலகினருக்குப் பெருங் கஷ்டமாயிருந்தது. ஹிரண்யாக்ஷன் சூலத்தால் பெருங்கடினமான போர்செய்கையில் நரசிங்கமூர்த்தி கோபமிகுந்து அவரது கைவிரல் நகங்களால் அவனைக் கழுத்திற்

குத்திப் பிளந்து கொன்றனர். இறந்துவிழுந்த அவனுடலைப் பலவிதமாகத் தும்சஞ்செய்து உதிரப்பெருக்கோடுகையில் அதனைச் சூர்ணஞ்செய்தனர். ஹிரண்யகசிபன் இறந்தபின்னர், பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துகொண்டிருக்கும் பிரஹலாதனைக் களித்துக் கோபசாந்தியாய் அழைத்து அன்புடன் அவனுக்குத் தந்தையின் இராச்சியத்தை முறைப்படி பட்டாபிஷேகஞ் செய்வித்து, உலகமுழுவதும் விஷ்ணுபக்தியைப் பிரசித்தஞ்செய்பவனாக்கித் தனது வைகுண்டபதவியை யடைந்தனர்.

அதன்பின்னர் பிரகலாதன் முதலிய சகோதரர்கள் வேடிக்கையாக, ஓ அந்தகா! உன் தந்தையாகிய ஹிரண்யாக்ஷன் அஜ்ஞானத்தால் பலகாலம் மேருமலையின் குகையிற்சிவபெருமானை நோக்கித்தவஞ்செய்து அவரது கருணையால் விரூபமும் கோரமும் குருடுமாயிருக்கும் உன்னைப் புத்திரனாக வரம்பெற்றனன். நீ உன் தந்தையின் இராச்சியத்திற்குரியவனல்லன். வேறியாருக்காவது புத்திரனாகாமற்போயினை எனக்கூற, அந்தகன் அவற்றைக்கேட்டு, மனதிலேயே யோசித்து வருந்தி, தன் வாய்மொழியால் அவர்கட்கேற்ற சமாதானஞ்சொல்லி, ஒருநாளிரவில் வனத்தையடைந்து, அநேகவருஷங்கள் ஒற்றைக்காலினின்று ஆகாரமின்றிக் கையை யுயரவெடுத்துக்கொண்டு தேவாசுரர்கட்குச் செய்யமுடியாத ஜபதபஞ்செய்தும், பின்னர் ஒருவருஷகாலம் கூர்மையான அம்புகளால் தன் தேகத்தைச் சிறிதுசிறிதாகக் கொய்து தினந்தோறும் யாகத்திலிட்டும், உதிரஞ்சொரியும் எலும்புமாத்திர மிருக்கப்பெற்றவனானன். அப்பொழுதும் பிரமன் பிரசன்னமாகாமையின் எஞ்சிநின்ற எலும்பினையும் ஹோமஞ்செய்ய உத்தேசித்திருந்தனன். அதுகண்ட பிரமதேவன் அவனுக்கு வரங்கொடுக்கக்கருதி வருகையில், வழியிற்கண்ட தேவர்களும் முனிவர்களும், ஸ்வாமீ! அவன் மகாபாவி. அவனுக்கு வரங்கொடுத்தாற் பெருந்தீமைகளுண்டாகும். கொடாவிட்டால் அவன் எலும்புகளையும் நெருப்பிற் போட்டொழிவான் எனத் தடுப்பவும், கேளாமல் அந்தகனை யடைந்து, அந்தகா! நீ வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள் என, அந்தகன் அகங்களித்து நமஸ்கரித்து, மகா பலசாலிகளாகிய பிரகலாதனாதி என் தம்பிமார்களால் இராச்சியம் கைக்கொள்ளப்பட்டதாதலின், அஃதெனக்குக் கைகூடவும், அவர்கள் என் சேவகர்களாகவும், யான் கண்பெறவும், இந்திராதிதேவர்கள் எனக்குக் கப்பங்கட்டவும், தேவ ராக்ஷச கந்தர்வ யக்ஷ மாநுடர்களாலும் என் தந்தையைக்கொன்ற நாராயணனாலும் இன்னும் வேறுவகையாலும் இறவாமலும் வரங்கொடுக்கவேண்டும் எனக் கேட்க, பிரமதேவர் அந்தகா! உனக்கு யாவுங் கைகூடுமாயினும் இறவாதிருக்க முடியாது. அவ்வாறு இறவாதவர் திரிகாலங்களிலுமிலர். உலகத்திற் சத்புருஷர்கள் தீர்க்காயுவைவிரும்பமாட்டார்கள் எனத் தந்திரவார்த்தை கூற, அந்தகன் முக்காலத்திலும் உள்ளவளும், மகா சிரேஷ்டமும், உத்தம மத்திம வயசும், அதிசுந்தரமுமான ஸ்திரீ

களுக்கிடையில், மகா அலங்காரபூதமாகியும், எனக்குந் தாயாகியும் மன வாக்குக்காயங்களாலும் பாவிக்கப்படாதஸ்திரீயை யான் மோகிக்கையில் எனக்கு நாசமுண்டாகுக எனக்கூற, பிரமதேவன் புன்சிரிப்புடன் அவ்வாறே யாகுகவென்று வரங்கொடுத்து, இனி தவச்செயலொழிக. பல பராக்கிரமசாலியாய்ப் போர்செய்ய வல்லவனுவாய் என, அந்தகன் நான் அஸ்திசேஷமாயிருத்தலின் என்னைத் தங்கள் திருக்கரத்தாற் பரிசித்துப் பூர்ணதேகமுடையவனுக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, பிரமன் அவ்வாறே செய்து தனது சத்தியலோகமடைந்தனன். அந்தகாசுரன் தான் பெற்றுக்கொண்ட வரத்தின் விசேஷத்தால் கண்களையும் பூர்ணதேகத்தையும் சிறந்த வல்லபத்தையும்பெற்றுத் தனது நகரத்தையடைந்தனன். இவனைக்கண்ட பிரகலாதனுதியோர் இவன் பிரமதேவனுல் வரம்பெற்றுள்ளானென்றுணர்ந்து அவனை யெதிர்க்கமுடியாமல் அரசாக்ஷி முழுவதையும் ஒப்புவித்துவிட்டு அவனுக்கடங்கியிருந்தனர்.

பின்னர் அந்தகாசுரன் சுவர்க்கலோகத்தைச் செயிக்கக்கருதி, தன் பரிசனங்களுடன் சுவர்க்கலோகத்தை யடைந்து, தேவர்களையும் அவர்கள் சைநியங்களையும்வென்று, இந்திரனைக் கப்பங்கொடுக்கச்செய்து, நாகர்களையும் ¶ ஸுபர்வர்களையும், அசுரர்களையும், கந்தர்வர்களையும், யக்ஷர்களையும், மாநுடரையும், பர்வதவிருக்ஷ முதலிய வெல்லாவற்றையும், சிங்கமுதலிய சதுஷ்பாத ஜந்துக்களையும்பொருந்திய திரிலோகத்தையும் பரிபூரணமாகச் செயித்து, அவர்களில் அதிரூபசவுந்தரியமான பாலிய வயதுள்ள மங்கையர்கள் நூற்றுவரை யபகரித்து, ரசாதலத்து ஸ்திரீகளைப் பூலோகத்திற் கொண்டுவந்து சுவாதீனப்படுத்திக்கொண்டு, ஏகாந்தமான நதி தீரங்களிலும் பல புஷ்பங்களோடு விளங்கும் பர்வதங்களிலும் பூந்தோட்டத்திலும் விளையாடிக்கொண்டு அவர்களைக் கிரீடித்துக்கொண்டிருந்தான். அன்றியும் உருசியான பழங்களையும் மதுவையும் அம்மங்கையர்கட்கு ஊட்டி அவர்கள் புசித்து எஞ்சியதைத் தான் உட்கொண்டும், விமானவாகனங்களிலிவர்ந்தும், மயனுல் நிருமிக்கப்பட்டு மலர்மணங்கமழும் திவ்விய மாடமாளிகைகளில் மதனுகமமுறைப்படி அவர்களைக்கூடியும், அயுதவருஷங்கள் கழித்தனன். இதுவரையில் அந்தகன் பாரார்த்தமானகிரியை ஓரணுவளவுஞ்செய்ததேயில்லை. தன் புதல்வரிற்சிறந்தவர்களைக் குதர்க்கவாதத்தால் வேதமார்க்க விரோதிகளாக்கித் தனக்குற்ற ஐசுவரியத்தால் ஆணவமிகுந்து, வேதபாரகராகிய பிராமணர்களையும் தேவர்களையும், குருவையும் மதியாது மரணம் அதிவிரைவில் வருகின்றதென்பதை யுணராது உலகமுழுதும் தன் சைநியங்களுடன் யாத்திரைசெய்து அநேககோடி வருஷங்கள் சந்தோஷமாகவேயிருந்தனன். அவ்வாறிருக்கையில் விநோதார்த்தமாக ஓர் சமயத்தில் மந்தரமலையை யடைந்து, ஆங்கு மகாப்பிரகாசத்துடன் சுவர்க்கலோ

¶ தேவயோனி விசேஷம்.

கத்தையொத்த குகையொன்றனைக்கண்டு, தன் சைநியத்துடன் மதுபானஞ் செய்து வெறிகொண்டு அங்கே யாடியும் பாடியும் இது நாம் வசித்தற்குத் தக்கதென்று கருதி ஆங்கிருக்கத் தீர்மானித்து, அதிவிநோதமான நகர மொன்று நியமித்துக்கொண்டு, அம்மந்தரகிரியின் குகையில் மயனுல் நிர்மாணஞ்செய்யப்பெற்ற அந்நகரத்தில் நகரப்பிரவேசஞ்செய்தனன்.

சௌநகாதிமுநிவர்களே! அந்தகாசுரன் இவ்வாறு அந்நகரத்திற் சிறிதுகாலம் ஆனந்தத்துடன் கழித்தபின்னர், அவன் மந்திரிகளாகிய துர்யோதனன் வைபவஸன் ஹஸ்தி யென்னுமூவரும் அதிசுந்தரமான ஓர் மங்கையைக்கண்டு விநாடிகாலத்திற்கும் விரைந்து அந்தகனையணுகிச் சொல்லலாயினர்:—யாங்கள் விநோதமாக விளையாடிக்கொண் டிருக்கையில் ஓர் குகையையும், அக்குகையில் தியானயோகத்திலமர்ந்து விழிகளைமூடிக்கொண்டிருக்கும் பேரழகுடன் அர்த்த சந்திரனுல் அலங்கரிக்கப்பெற்ற தலைமயிரும், இடையிற் புலித்தோலுடையும், ஆதிசேடனுடைய பணமுடிகளால் அலங்கரிக்கப்பட்ட தேகமும், கபாலமாலிகாபரணமும், ஜடையும், கையில் சூலாயுதமும், தோளில் அம்பறுத்தூணியும், வீரம்பொருந்திய வில்லும், ஜபமாலையும், கட்கமும் யோகதண்டமு முடைய ஓர் முநிவனையுங் கண்டோம். அவன் சமீபத்தில் ருஷபமுகமும் அதிகோரமும் திறந்தவாயும் சர்வாபரணமும், தீக்ஷணமானகாந்தியும் வெண்ணிறமுமுடைய ஒருவன் அம்முநிவனுக்குப்பணிவிடைசெய்கின்றனன். அவ்வாறுதியானயோகத்திலிருக்கும் முநிவனுக்கருகில் நல்ல திவ்வியரூபமும், யவ்வனபருவமும், மிருதுவான இனியவசனமும், பவளம் நவமணிகள் முத்துகள் இரத்தினங்கள் வஸ்திரங்கள் பொன் மலர்மாலைமுதலியவற்றுல் அலங்கரிக்கப்பட்ட திவ்ய தேகமுமுடைய மாதர்களுட் சிறந்த இரத்தினம்போன்ற ஓர் பெண்ணைக் கண்டோம். அவ்வனிதையைக் கண்டவனே கண்களைப் பெற்றதனுலுண்டான பலனை யடைவான். அவளைக் காணுதவன் கண்கள் பயன்பெறுவாதலின், அம்முநி மங்கை தேவலோகஸ்திரீயென்று நாங்கள் நினைத்தோம்—என்றனர். இவ்வாறு கூறிய மந்திரிகளின் வார்த்தையைக்கேட்ட அந்தகாசுரன் மன்மதபாணங்களால் காமாதுரனுகி, மந்திரிகளே! நான் சொல்லும் வார்த்தைகளை அம்முநிவனிடஞ் சென்று சொல்லவேண்டும் என்று கூறிவிடுப்ப, அவர்கள் அவ்வாறே அம்முநிவனை யடைந்து கூறலாயினர்.

முநிவனே! தைத்தியராஜனுன அந்தகாசுரன் சரிதத்தைச் சொல்லுகிறோம் அதனைக் கேட்டுக்கொண்டு உன்னுடைய சமாசாரத்தையுஞ் சொல்லவேண்டும். அந்தகாசுரனே ஹிரண்யாக்ஷனுடைய குமாரன்; மகாத்மா: நீயாவன்? இங்கேனிருக்கின்றனை? இளம்பருவமும் பேரழகுமுடைய இப்பெண் யாவள்? யோசித்துப்பார்க்கையில் உன்மனைவியென்றே நினைக்கின்றோம். இவளுடைய மெல்லியதேகமோ அதிகோமளமானது: உடல் முழுதும் பஸ்மதாரணஞ்செய்து என்புமாலையை ஆபரணமாகப் பூண்டனை:

ஏ விரூபி! அம்பருத்தூணி வில் அஸ்திரம் டமருகம் சூலம் மழு தோமரம் முதலியவற்றை யேந்தினை. உன்தேகத்தில் ஓர்நதி பிரவாகிக்கின்றது. சந்திர னொருவனிருக்கின்றான். முகத்தில் கோரமான நெருப்புப்பிரகாசிக்கின்றது. சர்ப்பங்கள் உன்மேல் உலாவுகின்றன. எருதுவாகனத்தை எதிர்நிற்கவைத் துக்கொண்டு அதனை எந்நேரமும் பார்த்துக்கொண்டிருக்கின்றனை. தர்ம வான்போலத் தியானயோகத்திலிருக்கின்றனை. உன் உணவுகள் எவையென் றுந் தெரியவில்லை. இப்படிப்பட்ட சாமானியனான உனக்கு அந்த சௌந்தர் யமான மங்கையுடன் சம்பந்தமானது விருத்தமாகவிருக்கின்றது. ஆத லின் எங்கள் பிரபுவான அந்தகாசுரனுக்கு அவளை நன்மையாகவே கொடு த்துவிடு. அப்படி நீ யிப்பொழுதே கொடாவிடில் அவன் திரிலோகங்களை யுஞ்செயித்தவனாதலின் அவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோய்விடுவான் இதிற் றடையில்லை. எங்கள் சொல்லைக்கேட்டு உன்னுடைய அஸ்திர சஸ்திர ங்களைவிடுத்து இவ்வணங்கினை யந்தகனுக்களித்து அதன்பின்னர் அருந்தவ ஞ்செய்க. இவ்விஷயம் நீ ஒத்துக்கொள்ளாத பக்ஷத்தில் யாங்கள் உன்னு டைய கருத்தை அந்தகாசுரனுக்கறிவிப்போம். அப்பொழுது உன் உடல் உனக்கு நிலைக்காது என்று கூறினர். அதனைக்கேட்ட முனிவேடங்கொண்ட சிவபெருமான் புன்சிரிப்புடன் அசுரர்களே! சிவபெருமானிருக்கும் பக்ஷ த்தில் என்னாலும் உங்களாலும் என்ன நடக்கலாம்: என்தந்தை யொ ருவனுமிலன். அவனை நானறியேன். இக்குகையிலிருந்து ஏதோவொன்றை ஸ்மரித்துக்கொண்டிருக்கிறேன். இதுவே யென் பாசுபதவிரதம். நான் தா யையறியேன். என் விரதமிது. இது விலக்கற்பாலதன்று. என் தவத்திற்குச் சித்திபூதமாகவிருக்கும் இச்சுந்தரவதியே என் மனைவி. உங்கட்குச்சாத்திய மானால் அவளைக்கொண்டுபோகலாமென்று கம்பீரமாகச்சொல்ல, அதனை க்கேட்ட அசுரர்கள் அம்முனிவனைப்பணிந்து, திரிலோக நாசகனாகவிளங் கும் தங்கள் அரசனான அந்தகாசுரனை யடைந்து, மதுபானத்தால் தன்னை மறந்து புரளும் அவனை நமஸ்கரித்துச் சொல்லலாயினர்.

அரசனே! அங்கிருப்பவர்களும் அம்முனிவனும் ஆ ஆ அந்த அந் தகாசுரனெவ்வளவினன்? அவன் வலிமை யெத்தகையது? என்று புன்சிரி ப்புடன் கேலியாக, ஜயஜயவென்று கூறினர். எனக் கூறிய மந்திரிகள் பேச் சைக்கேட்டு, குரூரனும் மகா பாபியுமான அந்தகாசுரன் சிரித்து அசுர னென்றாற் சாமானியனா? என் பெயரைக்கேட்ட இயமனும் அஞ்சுவான் இமாசலம்போன்ற புயங்களையுடைய எனக்குச் சமானமான வீரனொரு வன் உலகிலுளனா? என் பாணங்களுக்குச் சமானமான பாணங்கள் யாவ ரிடத்திருக்கின்றன? இயமனும் அஞ்சுமாறு போர்புரியவல்லேன். கிழப் பருவத்தால் உடல்வளைந்த அவ்வீரகனாகிய சேவகனெங்கே? மகா பலசா லியானவனெங்கே? மந்தபாக்கியனான அம்முனிவனுக்கு மகா ரூபவதி யான அந்தப்பெண் தகுதியா? என்று கூற, மந்திரிகள் அரசனே! அம்முனி

வன் வார்த்தைகளையெல்லாஞ் சொல்லுகிறோம். உம்முடைய பலம் எவ்வளவு? யான் பெருந்தவஞ்செய்து சிறந்த பலனை யடைந்திருக்கிறேன். கூடுமானால் என்னை யெதிர்த்து உங்கள் வலிமையைக் காட்டலாம். வஜ்ராயுதம் போன்ற பாணங்களிருக்கின்றன. உங்கள் தேகங்கள் மிருதுவானவையெனவும் அம்முநிவன் கூறினனாதலின் நீ அம்முநிவனுடன் அஸ்திர யுத்தஞ் செய்வது யுக்தமல்ல. அம்முநிவன் மகா கர்வமுடையவன். பலவிதமான யோசனையாற் பயனென்ன? அம்முநிவனை யெதிர்த்தால் நீ அபஜயப்பட்டுப் பலராலும் ஸ்மரிக்கப்படுபவனாவாய் எனக் கூறினர். அவ்வாறு கூறிய மந்திரிகள் வார்த்தையால், அந்தகன் மானத்தால் ரோஷமுற்று, நெய்சொரிந்த யாகாக்கினிபோலக் கொதித்தெழுந்து அம்மந்திரிகள் வார்த்தை சத்தியமாயினும் தனக்கு இதமாயிராமையின் கபடமாகக்கருதி, கட்கத்தைக் கையிலேந்தி, எனக்கு ஸ்திரமான வரமிருக்கையிற் பயமென்ன? என்று பெருந்தொனிசெய்து, மதுபானம் விசேஷமாகச் செய்து, கட்குடியாலும் கோபத்தாலும் கண்கள் செவந்து, மதயானைபோல நடந்து அக்குகையை யடைந்து, திரிநேத்திரதரனாகிய சிவபெருமானது சாரபூதமாகிய உமாபிராட்டியாரைக்கண்டு, சிவபெருமானையும் அவர் கரத்திலிருந்த அஸ்திர சஸ்திரங்களையும் நந்திதேவரையும் ஒரேபிடியாகப் பிடித்துக்கொண்டு போகவேண்டுமென்று நினைத்து, பார்வதிதேவியின் அழகைக்கண்டு மன்மதபாணங்கள் பட்டு மதிமயங்கி, அக்கினியில் விழும் புழுகுபோல, திருநந்திதேவரால் காவல்செய்யப்பட்டிருக்குங் குகைக்குட் புகுந்தனன். அந்தகன் அவ்வாறு புகுகையில் நந்திதேவர் பாறைகள் மரங்கள் வஜ்ரம் ஜலம் அக்நி நாகாஸ்திரம் முதலிய பயங்கரமான பல பொருள்களால் பாதித்து, அடா! நீ யாவன்? நீ என் இங்குவந்தனை? என வினவ, வீரகவாக்கியத்தைக்கேட்டு அந்தகன் தன் கருத்தைக்கூறி, இறுதியில் ஒரு முகூர்த்தகாலம் புத்திக்கெட்டாத ஆச்சரியகரமான யுத்தஞ்செய்து பராஜிதனாகி அவ்விடம் விட்டுப் பசிதாகங்களால் வருந்தி மதுவெறி தெளிந்து புறங்காட்டி யோடினன். கத்திமுதலிய பலபடைகளால் சின்னபின்னஞ்செய்யப்பட்ட தேகத்துடன் ஓடிப்போனபின்பு விகஸாதன் முதலிய மந்திரிகளும் பிரகலாதனாதி வீரர்களும் நந்திதேவரோடு அஸ்திரசஸ்திரங்களால் பயங்கரமான யுத்தஞ்செய்து நாணமென்னும் அங்குசத்தாற் குத்தியிழுக்கப்பட்ட புத்தியையுடையவர்களாய்ப் பிரிந்தனர். பிறகு விரோசனன்-பலி-பாணன்-சஹஸ்ரபாஹு-ரஞ்சன்-ஸுரஞ்சன்-சங்கரன்-விருத்திரன் முதலிய அசுரர்கள் பலர் நந்திபகவானோடு அகண்டமான யுத்தஞ்செய்து, செயிக்கப்பட்டவர்களாயிறந்தனர். இவ்வாறு போர்புரிந்திறந்த அசுரர்தொகையைக் கேட்ட சித்த சாரணர் ஜயஜயசப்தத்துடன் சிவபெருமானைப் புகழ்ந்தனர். கண்டபேருண்டபட்சிகளின் அபிநயமும், இராக்ஷஸசமூகத்தால் வியாகுலமும், பயங்கரமும், இரத்தத்தால் சேறுபட்டும், மாமிச ரத்த முதலியவற்றின் துர்மணமமைந்த போர்க்களத்தில், சர்வகாலனாகிய பிநாக

பாணி பார்வதிதேவியுடன் எழுந்தருளி, உமாபிராட்டியாரைப்பார்த்து, பெண்ணே! யான் எவ்வளவு கடினமான பாசுபதவிரதத்தை யாச்சிரயித்தேனோ அந்தவிரதத்தின் பலன் இதுவேயென்று நன்மொழிகளாற்கூறி, நான் இன்னுஞ் சிறிதுகாலம் இப்பாசுபதவிரதத்தை யாச்சிரயிக்க வெண்ணினேன். ஆதலின் நான் வேறோரிடத்தையடைகிறேன். நீ யிவ்விடத்திலேயேயிரு. உன் குமாரனான நந்தி உன்னைக்காத்திருப்பான். யான் இவ்விரதத்தை முடித்துவருமளவுந் துக்கமின்றிச் சந்தோஷத்துடன் நிர்ப்பயமாயிருக்கவென்று கூறிப் புறப்பட்டு, புண்ணியமயமான வேறொரு வனத்தையடைந்து தம்மைத்தாமே பூஜித்துக்கொண்டு ஆயிரவருஷகாலங்கழித்தனர். பார்வதிதேவியோ எப்பொழுதும் தனித்திருந்து பயமுற்றுத் தன் புத்திரனான வீரகனால் சம்பாஷிக்கப்பட்டு, தன் கணவன் வருகையைக் கருதித் துக்கித்து, அம் மந்தரபர்வத குகையில் சிவத்தியானத்துடனிருந்தனள்.

இவ்வாறிருக்கையில். வரதானத்தால் மகாமத்தனான அந்தகன் அநேக சைநியங்களுடன் பயமின்றி மீண்டும் போர்புரியக்கருதி அக்குகையையடைந்து, நந்திதேவரோடு இரவும் பகலும் பசிதாக நித்திரைகளின்றி நூற்றைந்துவருஷங்கள் கடுங்கோபத்துடன் கட்கம் குந்தம் பிண்டி பாலம் கதை புசுண்டி அஸ்திரங்கள் அர்த்தசந்திரபாணங்கள் எரிந்துகொண்டிருக்கும் நாராசங்கள் தீக்ஷணமான சூலம் மழு தோமரம் பர்வதம் விருக்ஷம்முதலிய பல திறப்படைகளால் அதி விநோதமான யுத்தஞ்செய்தனன், அவ்வாறு அவன் பிரயோகித்தபாணங்களால் நந்திதேவர் மிகுதியும் அடிபட்டு அக் குகைமார்க்கத்திலேயே தைத்தியர்கள் சந்தோஷிக்க க்ஷணநேரம் மூர்ச்சையாயினர். அசுரர்கள் சந்தோஷித்துக் குகையின் கதவைத்திறக்க யத்தனித்து,அஃதசாத்தியமென்றிருந்தனர். இதனையெல்லாமுணர்ந்த பார்வதிதேவி அச்சமுற்றுத் தோழியருடன்கூடி, பிரமவிஷ்ணுக்களையும், வீரபத்திரரையும் அவரது சைநியங்களையும் அஷ்டதிக்குப் பாலகரையும் ஸ்மரித்தனள். இவ்வாறு ஸ்மரித்தமாத்திரத்திலேயே பிரமன் விஷ்ணு முநிவர்கள் சித்தர்கள் நாகர்கள் குய்யகர்கள் யாவரும் அந்தப்புரத்திலிருக்கும் மகாராணியாதலின் அம்மகாதேவியைத் தரிசிக்கப் பெண்வடிவோடு தமது சைநியங்களுடன் குகைக்குட்சென்று தமது திவ்விய ரூபங்களைக் காண்பித்தனர். பெண்வடிவேற்றுவந்த தேவமுநிகணங்களும் பார்வதிதேவியாருடன் ஒன்றுகூடிப் பெருந்தொனியுடன் சம்பாஷித்தபொழுது குகைமுழுவதும் பிரதித்தொனியுண்டாயிற்று. அதன் பின்னர் பார்வதிதேவியார் அவர்களையெல்லாஞ் சேனையாகக்கொண்டு போர்புரியத் திருவுள்ளங்கொண்டனர் அப்பொழுது அவரவர் தமது சங்கங்களைப்பூரித்து, யுத்தபேரிகை முழக்கினர். அவ்வோசையைக்கேட்ட நந்திதேவர் மூர்ச்சைதெளிந்தெழுந்து இரதாரூடராய் அநேகவகையான

ஆயுதங்களால் அசுரர்களை யடித்துக்கொண்டிருந்தனர். இதற்குள் பிரமனிடத்திற்றோன்றிய பிராமியானவள்மகாகோரமாய்உக்கிரஸ்வரூபத்துடன் குகைமுகத்தினின்றும் புறம்போந்தாள். விஷ்ணுவினிடந்தோன்றிய நாராயணியென்னுஞ் சக்தி, கதை சங்கு சக்கரம் வில் பழுக்கக்காச்சின கத்தி முதலியவற்றை யேந்தி ரக்தநிறத்தொடு வந்தனள். இந்திரனிடந் தோன்றிய சக்தி வஜ்ராயுதமேந்தி ஆயிரங்கண்களோடு அசுரர்களஞ்சத்தோன்றினள். அக்கினியிடந் தோன்றிய சக்தி தண்டந்தாங்கி, கரத்தைத்தூக்கிக்கொண்டு வந்தனள். நிருதிசம்பந்தமான நைஸாசரீ மகா கொடூரத்துடன் கட்கமேந்தி வந்தனள். யமசம்பந்தமானசக்தி காலதண்டந்தாங்கிப் புறப்பட்டனள். வருணசம்பந்தமான சக்தி வருணாஸ்திரந்தரித்துப் போர்புரியக்கருதியும், வாயுசம்பந்தமான சக்தி அங்குசபாசந்தரித்துப் பிரளயகால வாயுவை வீசிக்கொண்டும், குபேரசம்பந்தமான சக்தி (யக்ஷேசுவரி) ஊழித்தீயை நிகர்த்தகதையைக் கரத்திலேந்தியும், ஈசானசம்பந்தமான சக்தி தீக்ஷண்யமானமுகமும் கோரரூபமும் பாம்பும் பயப்படத்தக்க நகங்களை ஆயுதமுமாகக்கொண்டும் அவ்வாறு அஷ்டதிக்குப்பாலர்கள் சக்தியும், பல தேவர்களாற்றோன்றிய எண்ணிறந்த சக்திகளும் ஒருசேரவந்து, யுத்தபூமியையும் அபாரமான அசுரச்சேனையையுங் கண்டு ஆச்சரியமடைந்து பயந்து திருநந்திதேவரைச் சேனாபதியாகக்கொண்டு, முன்னொரு காலத்தும் நடந்திராததும், கண்டோர் அதிசயிக்கத்தக்கதும், இயமனும் அஞ்சத்தக்கதுமான யுத்தத்தைப் பார்வதிதேவியாருடன்சேர்ந்து செய்தனர். இவ்வாறு பெரும்போர் நிகழுகையில், சேனாபதியான நந்திபகவான் பலவித யூகங்கள் கட்டியிருப்பதையுணர்ந்த அந்தகாசுரன் வேறொரு வகையான யூகம்வகுத்து, விலனென்னும் பெயருடன் உலகினை விழுங்குவான்போல் அங்காந்த வாயுடன் போர்புரிகையில், தம்மைத்தாமே பூஜித்துக்கொண்டிருந்த சிவபெருமான் சர்வவியாபியாதலின் உணர்ந்து, அப்பூஜையைநிறுத்தி, பிரளயகாலசூரியர் ஆயிரவர் ஒருசேர வுதித்தாற்போன்ற காந்தியோடுகூடிய தேகத்தோடு போர்முனையில் வந்தனர். சிவபெருமானது வருகையைக்கண்ட திருநந்திதேவரும் ஸ்திரீரூபமுற்ற தேவர்களும் பெருங்களிப்புடன் பயமின்றிப் போர்புரிந்தனர். பார்வதிதேவியும் சிவபெருமானைச் சிரத்தாற்பணிந்து விசேஷமான யுத்தஞ்செய்கையில், சிவபெருமான் எல்லாவற்றையுங்கண்டு பர்வதராச புத்திரியாராகிய உமாதேவியாரைத் திருக்கரத்தாலெடுத்துக்கொண்டு குகைக்குட்சென்றனர். பிராமி நாராயணிமுதலிய சக்திகளும் உடனே உட்சென்றனர். அப்பொழுது பார்வதிதேவியார் அச்சக்திகட்குத் தக்க பணிமணிமுதலிய வெகுமானங்களளித்து அவரவரிடங்களுக்கேக விடுத்தனர். குகாமுகத்தில் நந்திதேவர் ஒருவரோ தனித்துநின்று அசுரரோடு போர்செய்து பலகாயங்கள் பட்டுச் சிவசந்நிதியையடைந்து சிரத்தாற்பணிந்து, ஸ்வாமீ! அந்தகாசுரன் தனது விகஸனென்னு மந்திரியை அனுப்பினன். அந்தகனும் வருகின்றன்.

அவன் சொன்னது யாதெனில், பெண்ணுனைக்குப் பிரயோசனமில்லை யாதலின் அப்பெண்ணைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்பதே. அவ்வாறு விடுத்தபின்னர் உமது காரியங்களைச் செய்துகொள்ளலாம். அம்மங்கையைக் கொடுத்துவிடாதபக்ஷத்தில் உம்மையே விடும்படிச் செய்வான். அப்பொழுது முநிவனென் றழைக்கப்படமாட்டாய். சத்துருவாவாய் அசுரர்கட்கெப்பொழுதுந் துன்பஞ்செய்துவருதலின் தடையின்றி நீ கொல்லப்படுவாய் ஆதலால் உன்னுடையஸ்திரீயை உடனே அனுப்பிவிடவேண்டும்—எனக்கூறினன் என்றனர்.

அந்த வார்த்தையைக்கேட்ட கபால மாலிகாபரணராகிய சிவபெருமான் பெருஞ்சினங்கொண்டு பிரளய காலாக்கினிபோலக் கொதித்துத் திருநெற்றிவிழியைத்திறந்து அந்தகன் மந்திரியாகிய ¶விகஸனைப்பார்த்து, அடா! உங்கள் எண்ணம் நன்ருய்த்தெரிந்தது: உலகத்திற் சக்தியற்றவனுக்குச் சுந்தரமான மனைவியிருப்பினும் தனதானிய சம்பத்துக்களிருப்பினும் அவன் அவற்றையிழப்பான். நானும் அவ்வளவு துர்ப்பலனென உங்கட்குத் தோன்றும்பக்ஷத்தில் அதிகர்வமுற்றிருக்கும் அசுரச்சேனைகளை வரவழைக்கலாம். அசக்தன் தன்தேகத்தைப் போஷிப்பதும் அருமையே. நீங்கள் கருதிய காரியங்களையெல்லாம் அவ்வாறே செய்துகொள்ளலாம். நீங்கள் உங்கள் சைநியங்களோடு வரும்பக்ஷத்தில் யானும் என்னுற் செய்யக்கூடிய காரியங்களைச் செய்யச்சந்தேகமில்லை. நீங்கள் விரைவிற் போய் வரலாம் விரைந்து செல்க எனக்கூறினர். அதனைக்கேட்ட விகஸன் சர்வேசுரனுடைய வார்த்தைகளைக்கேட்டுக் களிப்புற்றுக் குதித்துக் கொக்கரித்துத் தலைவனான அந்தகாசுரனையடைந்தனன்.

அசுரராஜனான அந்தகாசுரன் சந்தோஷத்தோடுவரும் தன் மந்திரியாகிய விகஸனுடைய கருத்தை அவன் வருகையிலேயேயுணர்ந்து, தன் சைனியங்களுடன் போர்புரியச் செல்லவேண்டுமென்று ஆயுதங்களைச் சித்தஞ்செய்துகொண்டுபாதிசரீரம் சிங்கரூபமுற்று, இந்திரன்முதலிய தேவர்களாலும் ஜயிக்கமுடியாத வலிமையுடைய கிலாசுரன் என்னும் பெயர் வகித்துத் தன்பரிவாரங்களுடன் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் குகையையடைந்தனன். அப்பொழுது அவர்களிற் சில அசுரர் அக்குகை வாயிலைத் தம் ஆயுதங்களாற் புடைத்தனர். சிலர் நந்திபகவானைப் பலவிதமான பாணங்களாற் பலவிதமாக அடித்தனர். சிலர் பார்வதிதேவியாரைச் சூழ்ந்துகொண்டனர். சிலர் அக்குகைவாயிலில் அன்னியர் வரவொட்டாமல் காவலாய்நின்றனர். சிலர் அங்குள்ள பலபுஷ்பங்களையெல்லாம் அழித்துக்கொண்டிருந்தனர். சிலர் பழங்கள் கிழங்குகள் திவ்வியமான ஜலம் இவற்றைக் கெடுத்தனர். சிலர் உத்தியானவனங்களை யழித்தனர். சிலர் சந்தோ

¶ விகஸனுக்கு விகஸாதனனென்றும் பெயருண்டு.

ஷத்தால் மலை யுச்சியிலேறி அதின் சிகரங்களை யுருட்டித்தள்ளினர். இவ்வாறு அசுரச்சேனைகள் துவம்சஞ் செய்வதைக்கண்ட சிவபெருமான் கோபமிகுந்து விஷ்ணுமுதலிய தேவர்களையும் சிவகணங்களையும் பூதங்களையும் தத்தம் பரிவாரங்களோடு போர்க்கோலங்கொண்டு வரவேண்டுமென்று திருவுள்ளஞ்செய்த மாத்திரத்திலே கணநாதர்கள் யாவரும் தமது சைநியங்களோடும், ஆகாயத்திற் சஞ்சரிக்கும் விமானங்கள்-குதிரைகள்-ரிஷபங்கள்-பசுக்கள்-ஒட்டைகள்-பறவைகள்-சிங்கங்கள் முதலிய வாகனங்களி லிவர்ந்தும் வந்தனர். விஷ்ணுமூர்த்திமுதலிய தேவர்கள் தமது சைநியங்களுடன் புலி-மான்-பன்றி-சர்ப்பம்-பசாசம்-விமானமுதலிய வாகனங்களி லிவர்ந்து வந்தனர். உருத்திரர்கள்-நாகர்கள்-யக்ஷர்கள் - கருடர்கள் - கின்னரர்கள்-வித்தியாதரர்கள்-நதிநதங்கள் முதலிய யாவரும் கபர்த்தியாகிய கருணாமூர்த்தியின் திருச்சந்நிதானத்தினின்று நமஸ்கரித்துப் புறஞ்சூழ்ந்து நிற்கையில், சிவபெருமான் அங்கடைந்துள்ள யாவரையுங் கண்டு திருநந்திதேவரை அவர்கட்குச் சேனா நாயகராக்கிப் போர்புரிகவென்று கட்டளையிட்டு விடுத்தனர். அவ்விறைவனது கட்டளையைச் சிரமேற்கொண்டு எம்பெருமானால் ஆசீர்வதிக்கப்பட்டமையின் யாம் தடையில றிச்சயமடைவோமென்று சந்தோஷத்துடன் புறப்பட்டு விகஸனென்னும் பெயரையுடைய அசுரனுடன் சொல்லமுடியாததும் யுகாந்தத்திற்குச் சமானமானதுமான யுத்தத்தைச் செய்கையில், விகஸன் சினந்து பயங்கரமான யுத்தஞ்செய்து அந்த க்ஷணத்திலேயே தன்னோடு போர்புரிந்துகொண்டிருக்கும் திருமால் பிரமன் இந்திரன் முதலிய கணக்கிட்டுரைக்கமுடியாத தேவர்திரளையும், பூதகூட்டங்களையும், சிவகணங்களையும், பசியுற்றவன் தன் கண்ணெதிர்ப்பட்ட உணவைக் கபளீகரிப்பதுபோல, அந்தகாசுரன் கட்டளைப்படி விழுங்கிவிட்டனன். விகஸனாற் றனது சேனைமுழுவதும் விழுங்கப்பட்டுத் தனித்துநின்ற நந்தியெம்பெருமான் உடனே ஒன்றுந் தோன்றாது சிவபெருமான் எழுந்தருளியிருக்குங் குகைக்குட்பிரவேசித்துப் பெருமானைப்பணிந்து நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்துத் துக்கித்து ஸ்வாமீ! என் சேனைமுற்றும் விகஸனாற் கபளீகரிக்கப்பட்டது. இன்னும் உலகுக்குத் திதிக்கடவுளாய் அசுரச்சேனையை விநாடியில் துவம்சஞ்செய்ய வல்ல திருமாலையும் விழுங்கினன். சூரியசந்திரர்களும் உட்கொள்ளப்பட்டனர். பிரமதேவனும் இந்திரனும் இயமனும் வருணனும் வாயுவும் விழுங்கப்பட்டனர். யானொருவனே எஞ்சிநிற்கின் றேன். யானொன்றியாக யாதுசெய்யத்தகும்? அத்தைத்தியராஜனான அந்தகன் மகா சந்தோஷத்துடன் விளங்குகின்றான். அவன் வாயுவேகத்துடன் விரைந்து, அபஜயனென்றறியாது தேவரீரிடத்தும் வருகின்றான். ஆதலின் சர்வேசுவரா! யாதுசெய்யத் தக்கதோ அதனை விரைவிற் றிருவுள்ளஞ்செய்யவேண்டும். அந்தகன் சாமானியனல்லன். அவன் மந்திரியாகிய விகஸனும் வெல்லுதற்

கசாத்தியமானவன். உலகபயங்கரமான ஹிரண்யகசிபனைத் தனது நகங்களாற் கிழித்தெறிந்த ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தியும் அவன் கோபத்திற்கடங்கிவிட்டனர்.

இவ்விகஸன் பூர்வத்தில் உலகங்களை விழுங்கவேண்டுமென்று வாயைத் திறந்துகொண்டு புறப்படுகையில், உலகங்கட்குப் புனிதரும் சிரேஷ்டருமாகவுள்ள வசிஷ்டர் முதலிய ஸப்தருஷிகளாற் சபிக்கப்பட்டு, அவர்களைப் பிரியவசனத்தால் ஸ்வாமிகளே ! இச்சாபம் எனக்கு எப்பொழுது விலகும் என வேண்டிக்கேட்க, அவர்கள் விகஸா! நீ போர்க்களத்தில் சூரிய சந்திரர்களைக் கஷ்டப்படுத்துவாய். அப்பொழுது பலவித பாணங்களாலும் முஷ்டிகளாலும் நன்றாய் அடிக்கப்பட்டு நரநாராயணருக்கு வாசஸ்தானமாகிய வதரிகாரண்யத்தில் பவித்திரர்களாகிய அந்நரநாராயணர்களால் உன் பாபங்களொழிந்து சிறந்த பதவியையடைவாய் என்று கிருபையோடு சாபானுக்கிரகஞ்செய்தனர். அவர்கள் வாக்கியப்படி இவன் பெரும்பசியுடையவனாய் யுத்தத்திற் றிரிந்துகொண்டும் சந்தோஷித்துக்கொண்டும் அந்தகாசுரனுக்கு மந்திரியாயுமிருக்கின்றான். இவ்வகையதுஷ்டர்களாகிய அசுரர்கட்குச் சுக்கிரபகவான் பரம மித்துருவாகவும் குருவாகவும் நம்மையொத்தவர்கட்குச் சத்துருவாகவுமிருக்கின்றனன். அமரர்களாற் சங்கரிக்கப்பட்ட அசுரர்களை மிருத்யுஞ்சய மந்திரசக்தியால் உயிர்ப்பித்து யுத்தகாயமுதலியன வொன்றுமில்லாதவர்களாகச் செய்கின்றான். அவ்வாறு செய்து வருவதனாலேயே அசுரர்கள் உலகமாதாவாகிய உமாதேவியாரை யெடுத்துக்கொண்டு போவார்கள். இவ்விஷயம் நடப்பதற்கு முன்னரே யான் இறந்துபடுதல் உசிதமென்று திருநந்திதேவர்கூற, அதனைக்கேட்ட பூதபதியாகிய சிவபெருமான் தீர்க்காலோசனைசெய்து, திரிலோகங்களையுங் கண்கூசச்செய்யுங் கோடிசூரிய கிரணங்களின் காந்தியைப்போல வொளியையுடைய ஸோமமென்னும் பெயரையுடைய சாமத்தைக் கானஞ்செய்தனர். அப்பொழுது அந்தகன் சிறிதுவலிகுன்றியவனா யிருந்தனன். அவர் அச்சாமகானத்தை நிறுத்தவே அந்தகன் பழயபடியே மகாபல பராக்கிரமசாலியாய் நந்திபகவானை யெதிர்த்து நானாவிதமாகப் போர்புரிந்து, அநேககாலம் சலத்திலிருந்து கடுந்தவஞ்செய்து இயமனையுஞ் செயிக்கத்தக்க பல பராக்கிரமத்தையடைந்த நந்தி நாயனாரையும் கபளீகரித்துவிட்டனன். பின்னர் சிவபெருமான் அதனைக்கண்டு ஐயோ! பாணம் சூலம் கட்க முதலிய ஆயுதங்களையேந்தியவனும், போர்வீரர்களிற்சிறந்தவனும், ருஷிகளுக்கெல்லாம் மேலான மகிமையுடையவனும், வேதவேதாங்கமுதலிய வித்தைகளுக்கெல்லாம் வாசஸ்தானமானவனும், சம தம தைரியாதிகுணங்களால் நிரம்பப்பட்டுள்ளவனுமாகிய நந்தியையும் விழுங்கினானல்லவா? என்று கோபத்தோடு அந்தகனைப்பார்த்து இடபவாகனமிவர்ந்து அவனைச்சமீபித்துப் போருக்கழைத்துக்கொண்டு, இதுவரை

யில் விகஸ அந்தகரால் விழுங்கப்பட்டவர்கள் வெளியே வரத்தக்கவோர் மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு, இடிபோன்ற அம்பும் மகம்மேருவைப் போன்ற வில்லுந் தாங்கிநிற்கையில் விகஸனால் விழுங்கப்பட்டயாவரும் வீரகனாகிய நந்தியும், விஷ்ணு, பிரமன், இந்திரன்முதலியயாவரும் சிவபெருமானுடைய மந்திரஜபத்தால் அவர்கள் நெற்றிவழியாகப் புறம்வந்து சிவபெருமானையடைந்து சந்தோஷத்துடன் விளங்கினர். இவ்வாறுகூடிய சிவகணங்கள் முதலிய யாவரும் அந்தகனுடன் போர்புரிய, அசுரர்களிற் சிலர் புறமுதுகிட்டோடினர். அநேகர் இறந்தனர். அவ்வாறிருக்கும் அசுரர்களை மீண்டும் பிழைத்தவர்களாகச்செய்யும் பார்க்கவனை, இவனாலல்லவாயாமெல்லோருந் துன்புறுகின்றோமென்று கோபித்து, கைப்பிடியாகப் பிடித்து வந்து பூதபதிக்குப் பசுவைக் கொடுத்தாற்போலக் கொடுத்தனர். அச்சமயத்தில் சிவபெருமான் பார்க்கவனைவிழுங்கினர். பார்க்கவன் அவ்வாறு நஷ்டமானபின்னர் அசுரச்சேனையிற் பல மாண்டன, பல வோடின, பல காயமுற்றன. அந்த யுத்தபூமியில் பூதப் பிரேத பேதாள பிரமராக்ஷஸாதி கணங்களும், நரி முதலிய மிருகங்களும், அசுரர்களது மாமிசத்தைப் புசித்து உதிரத்தைப் பருகிக் குதித்துக் கொக்கரித்துச் சந்தோஷித்துக் கானஞ் செய்துகொண்டிருந்தன. பிரஹலாதனாதி அந்தகசகோதரர்கள் நெடுங் காலம் விஷ்ணுவாதி தேவர்களோடு பெரும்போர்செய்து தோல்வியடைந்து அங்கிருத்தற்கஞ்சி ஜலமார்க்கத்திலும் பூமார்க்கத்திலும் பாதாள லோகத்தையடைந்தனர்.

அந்தகன் தன் சைநியங்கள் நஷ்டமடைந்ததுபற்றித் தேவர்கள் மீது பெருங்கோபங்கொண்டு திருநந்திதேவரது சைநியங்களோடு பெரும் போர்செய்கையில், அச்சேனையில் ஒரு வீரனாகவிளங்கும் விஷ்ணுமூர்த்தியால் தேகமுற்றும் காயமுறும்படி அடிக்கப்பட்டும், யான் இவர்களால் இறவாது பிரமனால் வரங்கொடுக்கப் பெற்றுள்ளேனென்னுந் தைரியத்தால் யுத்தத்தைவிடாது நிற்கையில், மகேந்திரனால் மீண்டும் மூர்ச்சையுறத்தக்க அடிபட்டனன். அதனால் வீராவேசமுற்ற அந்தகன் தருக்கள் மலைகள் முதலியவற்றால் அவர்களை யடித்துவிலக்கிச் சிவபெருமானையடைந்து, இனி நீ போருக்குவருகவென்று கூற, சமீபத்திலிருந்த சிவகணங்கள் எதிர்த்தன. அவற்றையும் வென்று சிவபெருமானை எதிர்த்தனன். அப்பொழுது நந்திபகவான் எதிர்க்க, அவரையுஞ் செயித்தனன். சிவகடாக்ஷத்தால் நந்திதேவர் மீண்டும் வலிமையும் அஸ்திர சஸ்திரங்களும் பெற்று அந்தகனைப் பலவாறு அடித்தனர். அவன் உடலினின்றுஞ் சொரிந்த உதிரத்தினின்று இராக்ஷஸமாயையால் விஷ்ணு பிரமன் இந்திரன் அந்தகன் முதலிய அநேக ரூபங்கள் தோன்றுகையில், சிவபெருமான் பிரளய காலாக்நிபோலக்கொதித்து, அவர்களைச் சூலத்தாற்புடைத்தனர். அவர்களுதிரங்களினின்றும் பலர் தோன்றிச் சைநியங்கட்குச் சைநியங்களாய்ப் பெருகின.

அவ்வாறு அசுரச்சேனை பெருகவொட்டாமல், சிவபெருமான் விஷ்ணுயோகத்தாற் பயங்கரமானமுகமும், அநேகம் புயங்களும், இரண்டு விழிகளும், சர்ப்பங்களாகிய உரோமமுமுடைய எண்ணிறந்த ஸ்திரீகணங்களைச் சிருஷ்டித்தனர். அவ்வாறு சிருஷ்டிசெய்த சாம்பவமூர்த்தியின் வலதுதோளிலிருந்து நான்கு கால்களுடைய ஒரு சக்தி தோன்றி அந்த ஸ்திரீகணங்கட்குத் தலைவியாய், தேவர்களால் தோத்திரஞ்செய்யப்பட்டு சிவகடாக்ஷம்பெற்றுப் பெரும்பசியோடு அந்தகன் சைநியத்தையழிப்பதனால் உண்டாகும் உதிரத்தைப் பானஞ்செய்துகொண்டிருந்தனள். அதனால் அந்தகன் பலமற்றவனாய் உடலிளைத்துச் சிவபெருமானுடன் கத்தி வேல் அம்பு வாள் தோமரம் முசலம் பிண்டி பாலம் முதலிய ஆயுதங்களாலும் வச்சிராயுதம்போன்ற தனது நகங்களாலும் புயங்களாலும், க்ஷத்ரியதருமம் விடாது போர்புரிய, சிவபெருமான் அவனைத் தமது சூலத்தின் முனையிற் குத்தி யுயரத் தூக்கிச் சூரியகிரணத்தால் தகிக்கச்செய்தும் உயிர் விட்டிலன். விகஸன் முதலிய அந்தக சைநியம் ஹதமாயது. யுத்த முடிவில் தேவர்கள் யாவரும் சிவபெருமானைப்பணிந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தமக்குரிய தானங்களையடைந்தனர். சிவபெருமான் சக்திகளோடு தமது குகையையடைந்து பார்வதிதேவியாரைப் பார்த்து நடந்த விருத்தாந்தங்களைக் கூறிச் சந்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

அந்தகாசுரன் கதையுரைத்தது
முற்றிற்று.

ஐந்தாவது
அந்தகாசுரன் முத்திபெற்ற அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளைநோக்கிக் கூறுகின்றார்:— அந்தகாசுரனுடைய சரித்திரத்தைக் கேட்டுவந்த முனிவர்கள் வியாஸபகவானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிவந்த விஷயங்களால் யாங்கள் பரம சந்தோஷத்தை யடைந்தோம். முன்கூறிய அந்தகாசுரயுத்தத்தில் வெள்ளியானவன் சிவபெருமானால் கபளீகரிக்கப் பட்டனனன்றோ? அந்தச் சர்வேசுவரனுடைய உதராக்கினி கல்பாந்தங்களையெல்லாம் விநாடியில் அழிக்கும் ஆற்றலுடையதன்றோ? அவ்வகைய அக்கினி மகா தபோசம்பந்தமும் மகிமாதி ஐசுவரியமும் தேஜோரூபமும் உடைய இக்கவியைத் தகிக்காதகாரணம் யாது? அவ்விறைவன் திருவயிற்றினின்று வெள்ளி யெவ்வாறு வெளிவந்தனன்? எவ்வளவுகாலம் எம்மந்திரத்தால் தியானித்தனன்? அந்தகாசுரன் எவ்வாறு கணநாதனுக்கப்பட்டான்? இவ்விஷயங்களைப் பூர்ணமாக வுணரவேண்டுமென்று விரும்பியுள்ள எங்கட்குத் தெளிவாக விளக்கியருளவேண்டுமென வினவ, வியாஸபகவான் உண்மையாக நடந்தவற்றைக் கூறுகின்றேனென்று சொல்லத்தொடங்கினர்.



38. I. அந்தகாசுரன் காணாபத்தியமடைந்தது. II. சுக்கிரன் சிவவீரியத்தினின்று வெளிவந்தது.

அந்தகனுடைய பெரும்போரில் சிவபெருமானால் விழுங்கப் பட்ட பார்க்கவன் பனித்துளிபோன்றும் சந்திரன்போன்றுங் குளிர்ந்துள்ளதும், வருணதேவதாகமானதும், பெரும்பயம் விளைக்கும் மிருத்யுவை நாசஞ்செய்ய வல்லதும், எல்லாச்சித்திகளையுங் கொடுக்கவல்லதும், மங்கள கரமானதும், தொன்றுதொட்டு ஆன்றோரால் உபாசிக்கப்பட்டதுமான ம்ருத்யுஞ்சய மந்திரத்தை யனுஷ்டித்தான். அதாவது:—

ஓம் நமஸ்தே தேவேசாய - ஸுராஸுரநமஸ்க்ருதாய - பூதபவ்ய மஹாதேவாய-ஹரிபிங்களலோசனாய-பலாய-புத்திரூபிணே-வையாக்ரவஸநச்சதாய-அரணேயாய-த்ரைலோக்யப்ரபவே-ஈசுவராய. (க0) ஹராய-ஹரிதநேத்ராய-யுகாந்தகராணாய-அநலாய-கணேசாய-லோகஶம்பவே - லோகபாலாய-மஹாபுஜாய-மஹாஹஸ்தாய-சூலிநே. (உ0) மஹாதம்ஷ்ட்ரிணே - மஹேசுவராய-காலாய - காலரூபிணே - நீலக்ரீவாய - மஹோதராய - கணாத்யக்ஷாய-ஸர்வாத்மநே-ஸர்வபாவனாய-ஸர்வகாய. (ந0) ம்ருத்யவே-ம்ருத்யுஹூதாய-பாரியாத்ரஸுவ்ரதாய - ப்ரஹ்மசாரிணே - வேதாந்தகாய - பசுபதயே-அவ்யயாய-சூலபாணினே-வ்ருஷகேதவே-ஹரயே. (ச0) ஜடினே-முண்டினே-ஶிகண்டினே - லகுடினே - மஹயஶஸே - பூதேசுவராய - குஹாவாஸிநே - வீணாபணவதூணவதே - அமராய - தர்ஶநீயாய. (ரு0) பாலஸூர்யநிபாய-ஸ்மஶானசாரிணே-பகவதே-உமாபதயே - அரிந்தமாய - பகஸ்யாக்ஷிபாதினே-பூஷ்ணோதஶனநாஶனாய - க்ரூரகர்த்ரே - பாஶஹஸ்தாய - ப்ரளயகாலாய. (சு0) உல்காமுகாய-அக்னிகேதவே-முனயே-தீப்தாய-விஶாம்பதயே-உன்மாதாய-லேபனகாய-சதுர்தகாய-லோகஸத்தமாய-வாமனாய. (எ0) வாமதேவாய-வாக்தாக்ஷிண்யாய-வாமதோபிக்ஷவே-பிக்ஷுரூபிணே - ஜடினே - ஸ்வயம்ஜடிலாய - ஶக்ரஹஸ்தப்ரதிஷ்டம்பகாய - வஸூநாம்ஸ்தம்பகாய-ருதவே - ருதுகாரகாய. (அ0) காலாய-மேதாவினே - மதுகராய - அசலாய-வானஸ்பத்யாய - வாஜஸனே - நித்யமாஶ்ரமபூஜிதாய - ஜகத்தாத்ரே-ஜகத்கர்த்ரே-புருஷாய. (கூ0) சாசுவதாய - த்ருவாய - தர்மாத்யக்ஷாய - த்ரிவர்த்மனே-பூதபாவனாய-த்ரிநேத்ராய - பஹுரூபாய - ஸூர்யாயுதஸமப்ரபாய-தேவாய - தேவாதிதேவாய. (க00) சந்த்ராங்கிதஜடாய - நர்த்தகாய - லாஸகாய-பூர்ணேந்துஸத்ருஶானனாய-ப்ரஹ்மண்யாய - ஶரண்யாய - ஸர்வதேவமயாய-ஸர்வதூர்யநிநாதினே-ஸர்வபந்தமோசனாய - பந்தனாய. (கக0) ஸர்ப்பதாரிணே-தர்மோத்தமாய-புஷ்பதந்தாய-பிங்களாய-முக்யாய-ஸர்வஹராய-ஹிரண்யசிரவஸே - த்யாரிணே - ஶ்ரீமயாய-பீமபராக்ரமாய. (கஉ0) ஓம் நமோநமஃ

இவ்வகைய சிவநாமஸ்வரூபமான ம்ருத்யுஞ்சய மந்திரத்தை ஜபித்து, சிவபெருமானது லிங்கக்குறிவழியாக, சுக்கிலரூபமாகப் புறம்பே வந்தவரும், நாசமற்றவரும், மகாசம்பத்துடையவரும், மூவாயிரவருஷங்கள் சிவபெருமானது கர்ப்பத்திலிருந்து வேதநிதியுமான சுக்கிரமுனி ஶ்ரீபார்

வதிதேவிக்குப் புத்திரராகப் பரமேசுவராற் படைக்கப்பட்டாற்போலச் சனித்தனர். இதுநிற்க : சூலாயுதத்தின் முனையிற் கிடந்தும் தன் தைரியத்தைவிடாது தொங்கிக்கிடந்த அந்தகன்:—மஹாதேவம் - விரூபாக்ஷம்-சந்திரார்த்தக்ருதஶேகரம்-அம்ருதம் - சாசுவதம் - ஸ்தாணும் - நீலகண்டம்-பிநாகினம்-வ்ருஷபாக்ஷம்-மஹாஜ்ஞேயம். (க0) புருஷம்-ஸர்வகாமதம் - காமாரிம் - காமதஹநம் - காமரூபம்-கபர்த்திநம்-விரூபம்-கிரிஶம்-ஸ்ரீமம்-சிரக்விணம். (உ0) ரக்தவாஸஸம்-யோகிநம்-காலதஹநம் - த்ரிபுரக்நம்-கபாலிநம்-கூடவ்ரதம்-குப்தமந்த்ரம்-கம்பீரம் - பாவகோசரம் - அணிமாதிகுணதாரம். (ங0) த்ரிலோகைசுவரியதாயகம்-வீரம்-வீரஹணம்-கோரம்-விரூபம்-மாம்ஸலம்-படும்-மஹாமாம்ஸம்-வஸோந்மத்தம்பைரவம்(ச0) பரமேசுவரம்-த்ரைலோக்யடாமரம்-லுப்தம்- லுப்தகம் - யஞ்ஞஸூதநம் - க்ருத்திகாநாம்ஸுதேரக்தம்- உந்மத்தம்-க்ருத்திவாஸஸம் - கஜக்ருத்திபரீதாநம் - க்ஷுப்தம். (ரு0) புஜகபூஷணம்-தத்தாலம்பம்-ச-பேதாளம்-கோரசாகிநிபூஜிதம் - அகோரம் - கோரதைத்யக்நம் - கோரகோஷம் - வநஸ்பதிம்-பஸ்மாங்கம்-ஜடிலம். (சு0) சுத்தம்-பேருண்டஶதஸேவிதம்-பூதேசுவரம்-பூதநாதம்-பஞ்சபூதாசிரிதம்-ககம்-க்ரோதிநம் - நிஷ்குரம் - சண்டம் - சண்டீசம். (எ0) சண்டிகாப்ரியம்-சண்டதுண்டம்-க்ருத்மந்தம் - நிஸ்த்ரிம்ஶம்-ஶவபோஜனம்-லேலிஹாநம்-மஹாரௌத்ரம்-பத்யும் - ருத்யோரகோசரம்-ம்ருத்யோர்ம்ருத்யும். (அ0) மஹசேநம் - ஸ்மசாநாரண்யவாசிநம்-ராகம்-விராகம் - ராகந்தம் - வீதராகம் - சதார்சிஷம்-ஸத்வம்-ரஜஸ்தமோ-தர்மம். (கூ0) அதர்மம்-வாஸராநுஜம்-ஸத்யம்-அஸத்யம்-ஸத்ரூபம் - அஸத்ரூபம்-அஹேதுகம்-அர்த்தநாரீசுவரம்-பாநும்-பாநுகோடி. (க00) சதப்பிரபம் - யஜ்ஞும் - யஜ்ஞுபதிம் - ருத்ரம்-ஈஶாநம் - வரதம் - சிவம் - மஹாதேவம். (க0அ) என்று—அஷ்டோத்தர ஶத நாமங்களையும் நூற்றெட்டு மூர்த்திகளாகத் தியானித்துக்கொண்டிருந்தனன்.

சிவபெருமான் இத்தோத்திரத்தாற்களித்து, சூலத்தின்முனையில் குத்திவைத்துக்கொண்டிருந்த அவ்வசுரனை அச்சூலத்தினின்றும் நிலமிசையிறக்கி, அவனுக்கு உபதேசகரமாக நன்மொழிகளைச் சொல்லி, அவனுடலைக் கையாற் பரிசித்து, அந்தகனே! உனக்குண்டாகிய இந்திரிய நிக்கிரக[தபம்]த்தால் என்னையே இதுகாறும் தியானித்ததாலும் சௌரிய தைரியாதி சம்பத்துக்களாலும், பலகாலமாகப் பலரூபமாக என்னையே துதித்தமையாலும் யான் உன் விஷயத்திற் பெருங்களிப்படைந்தேன். நீயும் இதுகாறும் மதியீனத்தாற் செய்த பாவங்களையெல்லாம் விலகினவனுகுக. நல் விரதஞ்செய்தவனே! விரும்பிய வரத்தைக்கேள்? நானும்உன் விஷயத்தில் தடையின்றி வரங்கொடுப்பேன். நீயும் வரமேற்கத்தக்க பாத்திரவானுயிருக்கின்றனை ; உயர் பதவியை யிப்பொழுதே விரும்புக. மூவாயிரவருஷங்கட்குப்பின்னர் மோக்ஷமுண்டாகும் என, அந்தகன் அசக்தனுயிருந்தமையின் கை கால்களை ஊன்றிக்கொண்டெழுந்து உடல் நடுங்கிக்

கைகுவித்து நின்று, உமாபதியாகிய சிவபெருமானைப் பலவாறு துதித்து, பகவானே! மகா நீசனுயிருந்த யான் போர்க்களத்திற் செய்த துஷ்கிருத்தியங்களை க்ஷமித்தருளவேண்டும், காமதோஷத்தால் அடியேன் அறியாமையுற்று உலகமாதாவாகிய மகாதேவி விஷயத்திற்செய்த பெரிய அபராதத்தையும் மனம்பொறுத்தருளவேண்டும். உலகத்தில் கஷ்டத்தால் துக்கமுற்றவன் விஷயத்தில் தயைசெய்வது வழக்கம். அதிலும் பக்தி செய்துவரும் அடியார்களுக்கு விசேஷமாகச்செய்வது வழக்கம். ஆதலின் யான் பெருங் கஷ்டமநுபவித்தவன். தேவரீரையன்றி யெனக்கு வேறொருவருங் கதியிலர் என்னுந் தீனபாவமடைந்தவனுகவும், பக்தியுடையவனுகவுந் தேவரீரது திருவருளின் மகிமையாலேயே யானேன். தேவரீருக்கு நமஸ்காரம். ஜகன்மாதாவாகிய பார்வதிதேவியாரும் யான் செய்த அபராதங்களை மன்னித்துச் சிறிதுங் குரோதமின்றித் தயைவைத்து அம் மகாதேவியாருடைய அடிமையாகிய என்னைப் புத்திரபாவத்துடன் பார்க்கவேண்டும். குரோதமூர்க்காதிகுணங்களையுடையயானெங்கே? சந்திரசேகரபரமதயாளுவாய் லோகநாயகனுகிய தேவரீரெங்கே: காமாதி துர்க்குணங்களோடுகூடிய சாமானியனுகிய யானெங்கே. மகா பலசாலியாகிய தங்கள் சேனுநாயகனுகிய நந்திபகவானெங்கே: தங்கள் புதல்வராகிய நந்திதேவரும் அவரது கோபமொழிந்து தன் சேவகனுகிய என்னைக் கருணையோடு பார்க்கவேண்டுகிறேனென்று சொல்லி, பார்வதிதேவியாரைப் பார்த்து,ஓ ஜகந்மாதா! இதுவரையில் யான் அநேக அபசாரங்கள்செய்திருப்பினும் நாணமின்றி வேண்டிக்கொள்ளுகிறேன். தங்கட்கு நந்திதேவர் எப்படி கணுதிபதியாயிருக்கின்றுரோ அதுபோலவேயானும்அவர்க்குச்சமானனுகவிருக்கவேண்டும். மகா கௌரவமான புத்தியோடு தங்களைத் தாயாகக்கருதியிருக்கவும், சிவபெருமானையுந் தங்களையும் நாடோறும் பணிசெய்யவும், தேவர்களுடன் விரோதமின்றி ஒத்திருக்கவும், ஞானவானுகவும், சிவகணங்களில் ஒருவனுகவும், மீண்டும் எக்காலத்திலும் ராக்ஷஸப் பிறவியையடையாமலும் அநுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, திரிலோசனனுகிய பரமேசுவரனையும் ஜகந்மாதாவாகிய பார்வதிதேவியாரையும் சாஷ்டாங்கமாகப் பணிந்து கைகட்டிநின்றனன். சிவபெருமான் சந்தோஷத்துடன் புன்னகை செய்து அந்தகனைப் பார்த்து, அந்தகன் பிறந்ததையும், அவன் வலிமைபெற்றதையும், அவன் செய்கைகளையுஞ் சிந்தித்து, அந்தகன் நம்மிடத்திலேயே ஜனித்தவனன்றே? அவன் அவ்வரங்களைப்பெறுகவென்று கருதினர். அதனுல் அவன் அப்பொழுதே அவ்வண்ணமாயினன். அந்தகன் காணுபத்தியமடைந்து தனக்கு மாதாபிதாக்களாகிய பார்வதியையும் பரமசிவனையும் சாஷ்டாங்கமாகப் பணிந்து கிருதகிருத்தியனு யிருக்கையில், இவ்வகைய குமாரனைப் பார்வதி பரமே

சுவரிருவரும் ¶ மூர்த்தாக்ரஹணஞ் செய்து சந்தோஷித்திருந்தனர். சௌநகாதிமுநிவர்களே! அந்தகாசுரனது சரிதத்தையும், ம்ருத்யுவை நாசஞ்செய்யும் ம்ருத்யுஞ்சய மந்திரத்தையும் பக்தியோடு படனஞ்செய்தவர்கட்கு எல்லாக் கோரிக்கைகளுங் கைகூடும் என்று ஸூத முநிவர் கூறியருளினர்.

அந்தகன் முத்திபெற்றது

முற்றிற்று.

ஆறுவது

ருருவின் கதையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவரைநோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிய விஷயங்களாற் பெருங்களிப்படைந்தோம் ஆயினும், மகா பதிவிரதையாயும் உலகங்கட்கெல்லாம் தாயாகியும், சத்தியமே விரதமாகியும், தவசொரூபியாகியும் ஆத்மரக்ஷணஞ் செய்துகொள்ள அசக்தியா யிருக்கும் பார்வதிதேவியைச் சிவபெருமான் எவ்வாறு ரக்ஷித்தனர்? அப் பார்வதிதேவியின் உக்கிரப்பிரபாவம் எத்தகையது, அதனையுந் தேவரீர் வியாஸபகவானிடங் கேள்வியுற்றவகையே திருவாய்மலர்ந்தருளவேண்டும் எனக் கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

முநிவர்களே! எந்தக்காரணத்தால் எந்தக்காலத்தில் எந்த வகையாகத் தனக்கிதமானதும் இதமற்றதுமாகவுள்ள சுபாசுப காரியங்களை எவன் செய்கின்றானோ, அவன் அந்தக்காரணத்தால் அந்தக்காலத்தில் அந்தவகையாக அவ்வக்காலம்வரையில் தெய்வவசத்தால் அந்தக் கர்மபலனையநுபவிக்கின்றான். மநோஹரமான ரூபத்தையும் ஸ்தநபாரங்களால் முரியுமிடையையும் காந்திபொருந்திய தேகத்தையும் பிடியானையையொத்த நடையையும் பூர்ணசந்திரன்போன்ற திருமுகத்தையுமுடைய லோகமாதாவாகிய தாக்ஷாயணி தேவியை, பொதியமலையில் ஒருகாலத்தில் ருரு வென்னும் அசுரன் கண்டு மதியின்றி மன்மதபாணங்கள் மார்பிற்பட் டுருவப்பெற்று, அநேக கோடி வருஷங்கள் சூரியகிரணங்களாற் சுடப்பட்ட தேகமுடையவன் போன்றவனாய், ஆகார தேகாபிமானங்கள் நீங்கி, நிச்சலமான தபசுசெய்கையில், தாமரைமலர்போலுந் தேககாந்தியுடைய பிரமதேவர் பிரசன்னராகி, ஓ அசுரேசா! யாதுகருதி இவ்வகைய கொடூரமான கடுந்தவஞ் செய்கின்றனை? அதனை யுரைக்கவென வினவ, பிரமதேவருரைத்த வார்த்தையைக்கேட்ட ருரு தியானயோகத்தால் அரைக்கண் மூடிக் கொண்டிருப்பவனாயிருந்து, ஸ்வாமீ! பேரழகியாயிருக்கும் தாக்ஷாயணி

¶ உச்சியை முகர்தல் - இது புத்திரர்களிடம் அன்பாற் செய்யுந் தொழில்களிலொன்று.

யெனக்கு மனைவியாயிருக்கவும், சிவன் என்னிடத்தில் விருப்புடையவனு யிருக்கவும், மாதர் காரணமாக எனக்கு மரணம்வராமலும், மங்கைப்புருவ ஸ்திரீகள் அநேகர் எனக்கு மனைவியராயிருக்கவும், என்னைப் பகைத்தவர் கள் மகா தைரிய காம்பீரியவான்களாயிருந்தாலும் சாமானியர்களாய்ப் பல ஹீநர்களாகவும் வரங்கொடுக்கவேண்டும் எனக்கேட்க, பிரமதேவர் புன் சிரிப்புடன் சொல்லுகின்றார்—நீ விரும்பியவரங்கள் திரிலோகங்களிலேயும் கிடைத்தற்கு அசாத்தியமானவை. இவற்றிற் சில பெருங் கஷ்டத்துடன் கிடைப்பினுங் கிடைக்கலாம். ஆயினும் உலகமாதாவாகிய தாக்ஷாயணி திரி காலங்களிலும் உனக்கு மனைவியாகக் கிடைப்பாளென்பது கிடையவே கிடையாது. அடா துர்ப்புத்தி! சிவபெருமானும் உனக்கடங்கியிருக்கப்போ கிறதுமில்லை. அத் தாக்ஷாயணியாகிய பார்வதி உனக்கு மனைவியாகும் பக்ஷ த்தில் சர்வேசுவரனுகிய சிவபெருமான் வேறொரு ஸ்திரீயைத் தேடிக்கொ ள்ளவேண்டும். அப்பெருமானே அம்மகாதேவியை மனைவியாகக்கொண்ட மையின் அத் தேவிக்குச் சுகோதயநிமித்தமாகத் தனது ஜடாடவியில் கங் கையையும் சந்திரனையும் அணிந்துகொண்டு, அவ்வம்மைக்கு உபசாரஞ் செய்யுநிமித்தமாக அநேக மாதர்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அவ் வகைய பெருமாட்டி யுனக்குச் சாத்தியமானவளல்லள். நீ திவ்வியமான அப் ஸரஸ்திரீகளோடு கிரீடைசெய்துகொண்டு உன்பிராணனைக் காத்துக்கொள். நான்கூறிய வார்த்தைகள் உனக்கு இதமாகக் காணப்படாத பக்ஷத்தில் நீயே அம்மகாதேவியிடம் நேரிற் சென்று உன் விருப்பத்தைப் பிரார்த் தனை செய்து விண்ணப்பித்துக்கொள். அப்பொழுதே காளராத்திரியாகிய அத் தாக்ஷாயணியும் திரிபுராரியாகிய சிவபெருமானும் உன்னைச் சங்கரித்து விடுவார்கள்—என்று கூறி அந்தர்த்தானமாயினர்.

பிரமதேவர்கூறிய வார்த்தைகளைக்கேட்ட ருரு உடனே மலயாச லத்திற்குச் சென்று பரமசிவனைநோக்கிக் கடுந்தவஞ்செய்தனன். அவனது தவத்தின் விசேடத்தாற்றோன்றிய அக்கியானது அந்தப் பர்வதமுழுவதை யுந் தகிக்க ஆரம்பிக்கையில், சிவபெருமான் தாக்ஷாயணியை யழைத்துக் கொண்டு அவனது தபோக்நிக்குப் பயந்தாற்போலப் பிறவிடத்திற்குச் செல்ல எத்தனிக்கையில், பார்வதிதேவி, ஸ்வாமீ! என்னகாரணமாக இப் பொழுது இவ்விடம்விட்டுச் செல்கின்றீர்கள்? லோகநாயகராகிய தாங்கள் இவ்வக்கிநியை யடக்கப்படாதா? அவ்வாறடக்கிவிடாமல் வேற்றிடத் திற்குச் செல்வானேன். இதன் உண்மையை யுரைத்தருளவேண்டும் எனக் கேட்க, சிவபெருமான் ஓ பிரிய நாயகி! ருருவென்னும் அசுரன் உன்னை மனைவியாகப் பெறக்கருதி உக்கிரமான தவத்தைச் செய்கின்றான். அவன் தவத்தாலெழுந்த தபோக்நி திரிலோகங்களையுங் கொளுத்துகின்றது. நான் அதனை நிவாரணஞ்செய்ய வலியுடையவனல்லேன். உனக்குச் சக்தியி ருக்கும்பக்ஷத்தில் பிரயத்தனஞ் செய்து திரிலோகத்திலுமுள்ள சராசரங்

களையுங் காத்து ஆத்மரக்ஷணஞ் செய்துகொள்ளலாம். ஏன்பேரிற் கோபம் வேண்டாம். உனக்கோர் நமஸ்காரம். நீ வேற்றுருவெடுத்து அவனிடஞ்சென்று அவன் தவத்தை யழிக்கவேண்டும் எனக்கூறினர். பார்வதிதேவி அதனைக்கேட்டு அச்சமுற்று உடனே தைரியஞ் செய்துகொண்டு, பெருங்கோபத்துடன் பொதியமலையின் வனத்தில், ஒரு யானை மத்தகத்தைக் கைமுஷ்டியாலுடைத்து அதனை யுரித்து அதன் சருமத்தைப்போர்த்து, பல யானைகளைக்கொன்று புசித்து உடல்முழுதும் உதிரமயமா யிருக்குஞ் சிங்கமொன்றினைக்கண்டு அதனை விநோதார்த்தமாகச் சங்கரித்து அதன்தோலை உடையாக அணிந்து சிங்கத்தின் உதிரத்தைத் தலைமயிர் முழுதுந்தடவிச் செவக்கச்செய்துகொண்டு, பெருவயிற்றுடன் விகாரரூபமுற்று அண்டமுகடு பிளவுறத்தக்க அநேக ஹூங்காரஞ் செய்துகொண்டு அவ்வசுரனிருக்குங் குகையையணுகி, பாதங்களாலுங் கை முஷ்டிகளாலும் அக்குகையை அடைத்திருந்த கதவினையுடைத்து ஹ ஹ ஹ ஹ ஹ வென அட்டகாசமாகச் சிரித்து, பிரளயகால மேககோஷம்போலக் கர்ச்சித்து; அரைக்கண்பார்வையிலிருக்கும் அவ்வசுரனைக்கண்டு, இதோ நீ கோரியிருந்த தாக்ஷாயணியாகிய யான் வந்திருக்கின்றேன். யாதுசெய்யப்போகின்றனை ? இதற்காக ஏன் இன்னுங் கஷ்டமான தவஞ்செய்கின்றனை, உன் மனத்திலுள்ள கோரிக்கையைச் சொல்லுக. நீ தவஞ்செய்து அநுபவிக்கக்கருதிய கோரிக்கைகளை இப்பொழுதே சுலபமாக அநுபவிக்கலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கும், கோரப்பல்லோடுகூடிய மகாபயங்கர சுரூபமுடைய தாக்ஷாயணியைப் பார்த்து, மிக்க பயமுற்று உடல் நடுக்கத்துடன் நிலமிசைவிழுந்து மீண்டுந் தைரியத்துடன் எழுந்து, நீ தாக்ஷாயணியன்று ; உண்மையை யுரைக்கவேண்டும் ; நீ காளராத்திரியே ; தாக்ஷாயணியோ மிகரம்யமான தேகத்தையும், பூர்ணசந்திரன்போன்ற முகத்தையும், சௌந்தரியத்தையும், பூரித்த ஸ்தநபாரங்களையும் அடைந்திருப்பவள். நீயோ கோரரூபி, நீ பார்வதியல்லை ; யானோ என் தபோக்நியால் திரிலோகங்களையும் எரித்துவிடுவேன். நீ யிங்கிருந்தால் எரிந்துபோவாய். விரைவில் உயிர்பிழைத் தோடிப்போய்விடு. அவ்வாறு போகாதபக்ஷத்தில் இப்பொழுதே உன்னை யமபுரத்திற்கனுப்பிவிடுவேன் என்றுகூறிக் கதாயுதத்தால் பார்வதிதேவியையடிக்க, பார்வதிதேவி கடுங்கோபங்கொண்டு தமது கை முஷ்டியாலடித்தனள். அதனால் ருரு அம்மையாரை அஸ்திரசஸ்திரங்களாலடிக்க, மாதேவி மலைப்பாறைகளாலும் விருக்ஷங்களாலும் அநேகவிதமான ஜலாக்நி வருஷங்களாலும் விஷசர்ப்பங்களாலும், தந்தங்களாலும், நகங்களாலும் அடிக்க, குரூரனாகிய ருருவின் உடலினின்று சிந்தும் உதிரத்துளிகள் ஒவ்வொன்றினின்றும் ஒவ்வொரு ருருவடிவமாக விருத்தியாகி, பேருருவுடையவரும், இளைத்த வுடலுடையவரும், கோரரூபமுடையவரும், விகாரரூபமுடையவரும், சமானமற்ற பராக்கிரமமுடையவருமாக மாயையாற் காட்டினன்.



39. தாக்ஷாயணியானைகளையுஞ்சிங்கங்களையுமுரித்துப்போர்த்து, ருரு-வின்மேல், போருக்கெழுந்தது.



40. ருருவின்சங்காரம்.

எண்ணிறந்த ருருவடிவேற்ற ராக்ஷஸத்தொகுதியை உமாதேவியார்கண்டு, தனது நிஜயோகத்தால், அபாரமான சத்துருசேனையைப் பக்ஷிக்கத்தக்க வலிமையுடைய மகாவிகுர்த கோரரூபமுடைய சண்டிகா சைநியத்தைச் சிருஷ்டிக்க, அச்சண்டிகாகணம் ராக்ஷஸத்தொகுதியைக் கொன்று அவர்கள் உதிரத்தை ஒரு துளியுங் கீழேவிழாமற் பருகி, பிரமத்தனுகவிருக்கும் ருருவின் மாயையையுமழித்தனர். பார்வதிதேவியும் அவ்வசுர ருதிரத்தையருந்திக் கோரரூபத்துடன் எண்ணிறந்த புயங்களோடு எஞ்சிநின்ற மாயையையும் விலக்கி, மீண்டும் அர்ப்புதக்கணக்கான மாயையையுடைய ருருவுடன் போர்புரிந்தனள். அதனல் ருரு பெருங்கோபங்கொண்டு பார்வதியைப்பிரமிக்கச் செய்யவேண்டுமென்னுங்கருத்துடன்வாயுவேகமாய்த் திரிலோகங்களிலுந் திரிந்து க்ஷணநேரத்திற் சுவர்க்கலோகத்தை யடைந்து தக்ஷணமே பாதலத்தையடைந்து, போவதும் வருவதும் ஒருவர்க்குந் தெரியவொட்டாது விரைந்துசெல்லுகையில்,தேவியார் ஸ்தூலாகாரமாய்ச் சிறிதுநின்று,பிரளயகால சூரியர்போன்ற அதி யாச்சரியமும் பராக்கிரமமுமுடைய கணக்கிட்டுச் சொல்லிமுடியாத பெரியதோர் விசுவரூபமெடுத்து நின்றனர். இந்தச்சண்டிகா நாயகியின் உருவம் இவ்வளவு பிரமாணமிருந்ததெனக் கூறச் சதுர்முகப் பிரமனுக்கும் சாத்தியப்படாது. இதுவரையிலிருந்தவர்களிலாவது இப்பொழு திருப்பவர்களிலாவது இனிப் பிறப்பவர்களிலாவது ஒருவருக்குஞ் சாத்தியப்படாது. இந்தப் பிரமாண்டமானது ஒரு சுவல்ப வஸ்துவாயிருந்தது. பிரளயகால ருத்திரனும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத் தலைவர்களாகிய பிரமவிஷ்ணு ருத்திர மகேசுவராதிகள் அணுவளவாயிருந்தனர். இவ்வண்ணமாக ஜகதீசுவரியாகிய பார்வதிதேவியார் விசுவரூபங்கொண் டிருக்கையில், ருருவென்பவன் காலெடுத்துவைக்கவும் இடமற்றவனுய், அப்பொழுதும் தன் மூடத்தனத்தால் பராக்கிரமத்தைக் காட்டக் கருதிநிற்க, மகாதேவி அவன் கைகளைப்பிடித்து வஜ்ராயுதம்போற் பிரகாசிக்கும் தனது கை நகத்தால் அவன் சிரசைக் கிள்ளியெறிந்து அவன் தோலையுரித்துத் தனது உடலின்பேரிற் போர்த்துக்கொண்டு அவனுடலைக் கை முஷ்டிகளாற் குத்தி அதினின்று கொப்புளித்துக்கொண்டு புறப்பட்ட உதிரத்தை வாய்வைத்துப் பருகி, அவனது மாமிசத்தையும் புசித்துக் களிப்புற்று, அவன் தலையை மாமிச நீக்கிக் கபாலமாக்கிக் கரத்திற்றங்கி, அநேகமான பிரமதகணங்களாற் சேவிக்கப்பட்டு ஷட்குணைசுவரிய சம்பன்னனுகவிளங்கும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடத்திற்குச் செல்லுகையில், கபாலமாலிகாபரணராகிய சிவபெருமான் பார்வதிதேவியைக்கண்டு மனங்களித்து அநேகவிதமாக உபசாரவார்த்தைகள் கூறினர். அப்பொழுது உமாதேவி தன் கரத்திலேந்திய ருருவின் கபாலத்திலிருந்த அவனுதிரத்தில், அம்மகாதேவி பானஞ்செய்து மிகுந்ததில், சிறிது தானும் பானஞ்செய்ய விரும்பினவராயிருந்தமையின், உமாதேவியார் அதனைக்கொடுக்க வாங்கிப் பானஞ்செய்தனர். யானைத்தோலும்

சிங்கத்தோலும் ருருவின் தோலுமணிந்துகொண்டு அவ்வசுரவுதிரத்தால் நனைந்து விளங்கும் உமாதேவியின் தேகத்தை, சிவபெருமான் தன் தேகத்தோடணைத்துக் கொண்டனர். அத்தோற்றமானது ¶பலாசக்காடு புஷ்பித்துள்ள இமாசலத்தையொத்திருந்தது. பின்னர் உமாதேவியார் விநோதார்த்தமாக, சிங்கத்தோலையும் பெரிய யானைத்தோலையும் சந்தோஷ பூர்வமாகச் சிவபெருமானுக்குக் கொடுக்க, அவர் அவ்விரு சருமங்களையும் பெற்று, சிங்கத்தோலை இடையிற்கட்டி, விசாலமான யானைத்தோலை உடல் முழுதும் போர்த்துக்கொண்டனர். பார்வதிதேவி தன் சத்துருவான ருருவின் சருமத்தைத் தரித்துக்கொண்டு சந்தோஷத்துடன் தன் தோழிமாரோடிருந்தனள். இவ்வாறிருக்கையில் அநேக சுராசுரர்கள்-ருஷிகள்-கின்னரர்-கிம்புருடர்-பிரமன்-திருமால் முதலிய யாவரும் லோக ஸம்ரக்ஷண நிமித்தமாக ருருவென்னும் அசுரனைச் சங்கரித்து இவ்வகைய சண்டிகாரூபத்தைத் தரித்தீர்கள். பயங்கரமான இவ்வுருவத்தைத் தாங்கள் இனி நீக்கவேண்டும். சரத்கால சந்திரன்போன்ற காந்தியோடு விளங்கவேண்டும் என்று பலவாறு பிரார்த்தித்துப் பூஜித்தமையின், பார்வதி பரமேசுவர ரிருவரும் திவ்ய சுந்தரவடிவம் வகித்துச் சந்தோஷித்தனர்.

ருருவின் கதையுரைத்தது

முற்றிற்று.

ஏழாவது

சக்தி சிவங்களின் சிறப்புரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளாகிய சௌநகாதி முநிவர்கள் ஸூத முநிவருக்கு நமஸ்காரஞ்செய்து சிவசக்திஸ்வரூபமாகவிருக்கும் இப்பிரபஞ்சத்திற்குக் காரணபூதமாகவுள்ளவர் சிவபெருமானு சிவசக்தியா? குணதோஷங்களால் இவ்விருவரிற் சிறந்தவர் யாவர்? இவ்விஷயம் அடியேங்கட்குச் சந்தேகமாகவிருத்தலின் இச்சந்தேகத்தை விலக்கியருளவேண்டும் எனப் பிரார்த்திக்க ஸூத முநிவர் சொல்லத்தொடங்கினர். முநிவர்களே! உலகத்தில் ஸ்திரீகள் விசேஷப்பட்டவர். அவர்கட்கே குணதோஷங்கள் அதிகம். அவர்களே மாயாசுரூபிகள். இதில் ஓர் இரகசியமுள்ளது. என்னவென்றால்—உலகத்திலுள்ள ஸ்திரீகள் புருஷர்கள் பசு பக்ஷியாதி சமஸ்த ஜந்துக்கட்கும் எழுபத்தீராயிர நாடிகளுள்ளன. இந்நாடிகளேயன்றி ஸ்திரீகட்குமாத்திரம் ஜகந்யா என்னும் ஒரு நாடி விசேஷமாகவுள்ளது. கர்ப்ப தாரணத்திற் கந்நாடியே யோக்கியமானது. அந் நாடி யிருப்பதால் குண தோஷங்களால் அதிகப்பட்டவளான ஸ்திரீயைப் புருஷன் மாயாவசனுகி

¶ பலாசமலர் செந்நிறமுடையது. சிவபெருமான் திருவெண்ணீறு சண்ணித்த வெண்ணிறத்த திருமேனியையுடையவர்.

ஸ்திரீ பாவத்தாலாவது புருஷ பாவத்தாலாவது இருவரும் சம்போகிக்க, பெண்குழந்தையாவது ஆண்குழந்தையாவது பிறக்கின்றது. இவ்வகைய விசேடநாடியைத்தரித்தஸ்திரீ,புருஷனை யெப்பொழுதும் தன்மாயையால், வசியஞ் செய்துகொள்வதால் ஸ்திரீகளே உலகத்திற் சிறந்தவர்களாவர். ஸ்திரீகளே மாயாசத்தியாற் சிறந்தவர்களென்பதற்கு, புண்ணியகரமும் செவிக்கினிமையுமான ஒரு புராதன கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

பூர்வத்தில், பாணாசுரனது சோணிதபுரியை யடுத்த நதி தீரத்தில் சர்வேசுவரனான சிவபெருமான் தேவாசுரர்களோடுங் கூடி விநோதார்த்தமாக எழுந்தருளியிருக்கையில், அப்சரசுகள் நடித்தனர். கந்தர்வர்கள் கானஞ்செய்தனர். முனிவர்கள் பெருமானைப்பணிந்தும் பூஜித்தும் துதித்தும் இருந்தனர். சமஸ்தமான பிரமத கணங்களும் சேவித்துக்கொண்டிருந்தனர். ருஷிகள் ஹோமஞ்செய்தனர், சித்தர்கள் தமது மனசைச் சிவபிரானிடத்து நிறுத்திவைத்தனர். ஈசுவரனே யில்லையென்று குதர்க்கவாதஞ்செய்யும் நாஸ்திகர் சிவபெருமானைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட இருள்போலத் தமது அஜ்ஞானமொழிந்து ஆஸ்திக மதப்பிரவேசமாயினர். சத்துருக்கள் ஓடினர். சப்த மாதர்கள் எதிரே நின்றனர். உலகத்துக்கு மகா பயங்கரமாயுள்ளவர்கள் சாந்தபுத்தி யடைந்தனர். சிவபக்தர்கள் ஸம்சாரசம்பந்தமான தோஷங்களை ஒழிந்தனர். அங்கிருந்த சபையோர் பரமானந்தத்தை யடைந்தனர். அச்சபையில் அப்சரசுமுதலியோர் நடிப்பதுகண்டு அருகிருந்த சித்தர் முதலியோர் சந்தோஷித்தனர். வசந்தாதி ருதுக்களாறும் தத்தம் புஷ்பித்தல் பழுத்தல் முதலிய கிருத்தியங்களைச் செய்துகொண்டிருந்தன. மந்தமாருதமானது சுகந்தமாகிய மகரந்தத்துடன் வீசாநின்றது. புஷ்பபாரங்களால் வளைந்திருக்கும் விருக்ஷங்களின் மலர்களிலிருந்தவண்டுகள் அதின்தேனையுண்டு மகரந்தப்பொடிகளைப்பூசிக்கொண்டு ரீங்காரஞ் செய்துகொண்டிருந்தன. விரக்தர்களும் மன்மதாகாரமடையும்படி தேமாமரங்களில் மதுரமான குரலுடன் குயில்கள் கூவின. அப்பொழுது இதன்முன்னரே மன்மதனைச் செயித்திருக்கும் சிவபெருமான் பார்வதியோடிருப்பது உசிதமென்று கருதினர்போல விநோதமாக நந்தியை விளித்து, நீ கைலாயமடைந்து, புனிதையாய் மகா அலங்காரத்துடன் விளங்கும் பார்வதியை நான் விளித்ததாகக்கூறி அழைத்து வரவேண்டும் எனக் கட்டளையிட்டவுடன், நந்திதேவர் சிவாக்கினைப்படியே திருக்கைலாய கிரிக்குச்சென்று பார்வதிதேவியைக் கண்டு, மகாதேவீ! சிவபெருமான் தேவரீரைச் சர்வாபரண பூஜிதையாகக் காண விரும்பினர் எனக்கூற, பார்வதிதேவி அவ்வாறே யாகுகவென்று அலங்கரிக்கத் தொடங்கினர். உடனே நந்திதேவர் சிவபெருமானிடம் விரைவாக வாயுவேகத்துடன் உமாதேவியின் வருகையைக்கூறக் கருதிவர, சிவபெருமான் நந்தி! நீஉமையைஅழைத்துவருகஎன்றுபின்னரும்விடுப்ப,நந்திதேவர்கைலாயத்

தையடைந்து பார்வதியைநோக்கித் தாயே! அதிசுந்தராலங்காரஞ்செய்து கொண்டு விரைந்து வரவேண்டுமென எமது தந்தையாகிய சிவபெருமான் விரும்புகின்றனர் எனக் கூற, பார்வதிதேவி தன் தோழிகள் ஐவரை நந்திதேவருடன் விரைந்து சிவசந்நிதியை யடைந்து விரைவில் வருகின்றேனெனக் கூறுகவென்று கட்டளையிட்டனுப்பினர்.

இஃதிவ்வாறிருக்க, அச்சபையிலிருந்த அப்சரசுகள் நம்மில் எவளுக்குத் தேவதாசிகளிலெல்லாஞ் சிறந்தவளாயிருக்கும் பெருமையுண்டாகும்? ஸப்த மாதர்களில் எவர் கௌரீரூபமுடையவர்? என்றிவ்வண்ணம் யோசித்துச் சிவபெருமானை நாம் கேட்போமெனச் சமீபித்துச்சென்று, ஒருத்தியும் வாய்திறந்து கேட்க வல்லமையில்லாது வாளாவிருந்தனர். பின்னர் பாணசுரன் மந்திரியாகிய குபாண்டன் என்பவனுடைய குமாரத்தியாகிய சித்திரலேகை யானே கௌரீரூபம் வகித்துச் சிவபெருமானை இவ்விஷயத்தைப்பற்றிக் கேட்கிறேனென்று அவ்வப்சரசுகளை யுடன்கொண்டு உங்களில் ஒருத்தி நந்திகேசுவர வடிவமும், மற்றவர்கள் பார்வதியின் தோழிகள் வடிவமும் வகிக்கவேண்டும் எனக் கூறினள். அதனைக்கேட்டு, விஷ்ணுமூர்த்தியின் [ஊரு] தொடையினின்றும் ஜனித்தவளாகிய ஊர்வசியானவள் விஷ்ணுசம்பந்தமான மாயையால், சரியான நந்திதேவர் வடிவை யடைந்தனள். க்ருதாசியானவள் காளி ரூபத்தையும், விசுவாசி சண்டிகா ரூபத்தையும், ப்லம்லோசை சாவித்திரி ரூபத்தையும், மேநகை காயத்திரி ரூபத்தையும், ஸஹஜந்யா ஜயை வடிவத்தையும், புஞ்ஜகஸ்தலீ விஜயை வடிவத்தையும், க்ரதுஸ்தலி விநாயக ரூபத்தையும், வேறு சில அப்சரசுகள் ஸப்தமாதர் வடிவத்தையும் தரித்துக்கொண்டனர். அவ்வாறு வடிவேற்றவர்களைக்கண்ட,குபாண்டன் புத்திரியாகிய சித்திரலேகை சரியென்று மனதைத் திடஞ்செய்துகொண்டு விஷ்ணுசம்பந்தமான ஆத்மயோகத்தாலடைந்த ஞானத்தால் அத்தியற்புதஸ்வரூபமுடைய பார்வதிதேவியின் வடிவத்தை யடைந்தனள். அம் மகாதேவியின் திவ்ய திருவுருவம் எத்தன்மையதெனில், செந்தாமரைமலரின் காந்தியும் மேன்மையுமுடையபாதங்களும், முறையே யுயர்ந்த ரம்மியமான மலர்ந்ததளிர்போன்ற விரல்களும், சந்திரகிரணங்களாற் பிறந்து சந்திரிகையை வீசுகின்ற நகங்களும், எண்டிசையிலும் கல் கல்லென்றொலிக்கும் நூபுரமும், குறுகியுருண்ட பரடும், பொன்மலையாகிய மேருவைப்போன்ற புஷ்டங்களும், மிருதுவாகிய நுண்ணிய ரோமரேகையும், கனத்த வாழைத்தம்பம்போன்ற தொடையும், மதயானையின் கர்ச்சனைபோன்ற ஒலியையுடைய மேகலாபரணமும், விலையுயர்ந்த பல நிறம்வகித்த சித்திரப் பட்டாடையும், பாலசந்திர சூரியப் பிரதிமைகளாகிய சிரோபூஷணங்களும், சிறிது நாணமுற்றாற்போன்ற புன்சிரிப்புடன் கூடியமுகமும், வச்சிரரத்தினத்தாற்செய்த மேகலையணிந்த உடுக்கைபோன்ற இடையும், பொன்னாற்செய்த படியோவென்று சொல்

லத்தக்க உந்தியும், பொற்றாமரைத்தண்டுபோன்ற * பூர்ணமான மூன்று (வயிற்று) ரேகையும், புடமிட்ட பொன்போன்ற வயிறும், ஜாதரூப நிறமுடைய மார்பும், கோடிசந்திரர்கட்குச் சமானமானதும் முத்தாரங்களின் தேஜஸுடையதும் மிருதுவுமான புயங்களும், மலர் கொய்தலில் மிக்குப் பழகிய கைநகங்களும், பிரகாசிக்கும் அநேக விதமான விலையுயர்ந்தஆபரணங்களும் பதக்கங்களுமணிந்தகழுத்தும், செம்பவளத் துண்டுபோன்ற மெல்லிய அதரமும், பாலசந்திரர்கள் வரிசையாக நின்றிருந்தாற்போன்ற தந்தபந்தியும், செந்தாமரைமலர் மொட்டுபோன்ற நிறமுடைய நாவும், எள்ளின் மலரையொத்தபொன்னிறத்தநாசியும், விகாரமற்ற சிறியநாசிகாரந்திரங்களும், சந்திரமண்டலமும் சாணைக்கல்லும்போன்ற கபோலங்களும், ஆழமான வள்ளைக்கொடிபோன்ற செவியும், இரத்தினமயமான பொன்னாற்செய்த குண்டலங்களும், வெண்மை செம்மை கருமைகள் கலந்து பிரகாசிக்கும் விழிகளும், மன்மதன் வில்லையொத்த புருவங்களும், பிரகாசித்துக்கொண்டிருக்கும் விழிகளின் சிருங்காரசேஷ்டைகளும், சிறிது அசைந்து பிரகாசித்துக் கறுத்த நெற்றிமுன் மயிரும், அஷ்டமிச்சந்திரன் போன்ற முகமும், குங்குமமுதலிய பரிமளவஸ்துக்களாலாகிய திலதமும், நெற்றிமுன்மயிரிற்கலந்திருக்கும்பொன்மணிபவளங்களால் செய்யப்பட்ட தலைச்சாமானும், நவரத்தினகிரீடமும், நவரத்தினமயமான ஜடைநாகமும், அதிலணிந்துள்ள மணிகளின் கோகிலசுரமும், ஐவகை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அளகபாரமும் மலர்மாலைகளும் உடைத்தாகி, ஒவ்வோரணியையுங்கண்டோர் இது விசுவகர்மனாற் சிருஷ்டிக்கப்பட்டது தானோ வென்றுசொல்லத்தக்க சிறந்த மணிபணிகளோடு, பார்வதிதேவி வடிவையடைந்து, தனக்கேற்ப உடன் வருவோரெல்லாரும் வடிவேற்க, நந்திவடிவேற்றிருக்கும் ஊர்வசி தன் கணங்களுடன்கூடி, சர்வேசுவரனிடஞ்சென்று, ஸ்வாமீ! கைலாசகிரியினின்று பார்வதிதேவியை யழைத்துக்கொண்டுவந்தேன். ஸப்தமாதர்களும் சிவகணங்களும் வந்திருக்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் யாவுமுணர்ந்தவராயினும், அவர்கட்கேற்பத்தாமும் ஓர் திருவிளையாடல் செய்வான் திருவுள்ளத்திலுன்னி, பெருங்களிப்புற்றாற்போலப் பீடத்தினின்றும் விரைந்தெழுந்து எழடிதூரம் எதிர்சென்றனர். அப்பொழுது அவருடன் பிரமாதி தேவர்களும் தைத்திய தானவ ராக்ஷஸர்களும், மகருஷிகளும், சித்தர்களுந்தொடர்ந்து பார்வதி போலக்கபடவேடங்கொண்டிருப்பவள்முன்சென்று, பலவிதமான தோத்திரங்களால்துதித்துச்சந்தோஷித்திருக்கையில், சிவபெருமான் பார்வதிவடிவேற்று வந்திருக்குஞ்சித்திரலேகையைக் கைலாகுகொடுத்து அழைத்து வந்து நானாவித மலர்களாலலங்கரிக்கப்பட்ட சப்பிரகூடமஞ்சத்திலேறி அநேகவிதமாகக் கிரீடித்தனர். கபடவேடமேற்ற ஸப்தமாதர்களிற் சிலர் நடித்தனர். சிலர் கானஞ்செய்தனர். சிலர் உருத்திர ஜெபஞ்செய்தனர். சிலர்

* பூர்ணமான மூன்றுரேகைகள் என்றதால் ஸ்தூலமான தேகமுடையவளெனக் கொள்ளக்கிடந்தது.

கிரீடித்துக்கொண்டிருந்தனர். சிலர் நகைத்திருந்தனர். சிலர் இராகங்களை ஆலாபித்துக்கொண்டிருந்தனர். கபடபார்வதியும் பலவித கானஞ்செய்தனள். யாவுஞ் சிருங்கார ரசகோஷ்டமாக நாட்டியகான முதலியன நடந்துகொண்டிருந்தன. இந்த ஸ்திரீகள் செய்த கபடத்தையுணர்ந்தார் சிவபிரானையன்றிப் பிறரொருவருமிலர். கபடநந்தி முதலாயினர் சிவார்ச்சனையில் ஆசக்தியுடையவரா யிருந்தனர்.

இஃதிவ்வாறிருக்கையில், பார்வதிதேவி திருக்கைலாசகிரியினின்றுஞ் சர்வாலங்காரபூஜிதையாய், பிருங்கிமுநிவர் நந்திமகாகாளர் தண்டீசர் லம்போதரர் முதலிய பிரமதகணங்களால் துதிசெய்யப்பட்டு ஆகாசவீதியாய், தனது கணவராகிய சாம்பவமூர்த்தியின் சந்நிதானத்தை வந்தடைந்து, விஷயத்தை யுணர்ந்து, ஆஹா! இதுயார்? என்னைப்போலவே பார்வதியும் எனது பரிவாரங்களைப்போலவே பரிவாரங்களும், பிரமதகணங்களைப்போலவே கணங்களுமாகக் காணப்படுகின்றார்களே? என்றாலோசித்திருக்க, கபடவேஷதாரிகள்கண்டு பயமுற்றனர். அப்பொழுது கண்டவர்கள் இரண்டு பார்வதிகட்கும், இரண்டு ஸப்தமாதர்கட்கும், நந்திமுதலிய கணங்கட்கும் பேதங்கண்டிலர். பின்னர் சிவபெருமானருகிலிருக்கும் கபடவேஷப்பார்வதியாகிய சித்திரலேகை நிஜஸ்வரூபமாக வந்திருக்கும் பார்வதிதேவியைப்பார்த்து மனம்வருந்தி அஞ்சிநின்றனள். அதனைக்கண்ட பார்வதிதேவி இது அப்சரஸ்திரீகளின் கபடச்செயலெனச் சிறுநகைசெய்தனள். அப்பொழுது அங்கிருந்த அப்சரசுகளும் பூத பிரேத யக்ஷ ராக்ஷஸர் முதலிய யாவரும் கலகலவென்றுசிரித்தனர். சந்திரசேகரராகிய சிவபெருமான்கண்டு மாதர்களின் சமத்காரத்திற்காகப் பெருங்களிப்பெய்தினர். பின்னர் கபடபார்வதியாகிய சித்திரலேகையும் நந்திமுதலிய வடிவேற்றுநின்ற அப்சரசுகளும் தங்கள்நிஜவடிவையடைந்து தங்கள் தங்கள் பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தனர். மகருஷிகளே! ஸ்திரீகளாலே சர்வேசுவரனாகிய சிவபெருமான் இவ்வாறு சந்தோஷஞ் செய்யப்பட்டனன். பார்வதிதேவியார் பரமேசுவரருடன் கூடி எழுந்தருளியிருக்கையில், பார்வதிதேவியைக்கண்ட, வாணாசுரன் புதல்வியாகிய உஷை என்பவள் நானும் இவ்வாறு கணவனுடன்சேர்ந்து இந்நதிதீரத்தில் கிரீடித்துக்கொண்டிருந்தால் நன்றாயிருக்குமே: இவ்வாறு வாழ்வோரே புண்ணியர்கள். எனக்கு இப்பேறு எப்பொழுது கிடைக்கும்? என்று தனக்குட்டானே துக்கித்து, நியமமாகப் பார்வதிதேவியை யாராதித்து இவ்வகைய கோரிக்கையை யீடேறச்செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்து, இந்திரிய நிக்கிரகஞ்செய்து விரதமிருந்து பார்வதிதேவியை ஆராதித்திருக்கையில், விரதசீலையாயிருக்கும் உஷையின் கருத்தையுணர்ந்த உமாதேவியார் உஷையை நோக்கி, ஓ பாபமற்றவளே! இந்நதிதீரத்தில் அதிசீக்கிரத்தில் கணவனுடன்கூடிப் பலவிதமாகச் சுகமனுபவிக்கப் போகின்றனை எனக்கூற, உஷை அதனைக்கேட்டு மனத்தில் நம்பிக்கைகொண்டு, தாயே! நான் மந்தபாக்

கியமுடையவள். எப்பொழுது கணவனுடன்கூடிச் சுகமுறுவேன்? அதனைக்கூறவேண்டும் என, பார்வதிதேவி, இது கார்த்திகை மாதமல்லவா? இதன்மேல் ஏழு மாதங்கள் சென்று வைகாசிமாதத்தில் சுக்லபக்ஷத் துவாதசியில், நடுராத்திரியில் உபவாசமாயிருந்து நித்திரைசெய்யும் உன்னை எவன் அநுபவிக்கின்றானோ அவனே உன்கணவன். அவனுடனே சகலசுகங்களையுமநுபவித்து அவனுடனே செல்லப்போகின்றனை: நீ இளம்பருவத்திலிருந்து விஷ்ணுபக்தி செய்துவந்தமையின் உனக்கு இவ்வகைய புருஷப்பிராப்தியுண்டாகும் எனக்கூற, உஷை நாணத்தால் தலைகுனிந்து நின்றனள். சிறிதுகாலங்கழித்துச் சிவபெருமான் பார்வதி சிவகணங்களுடன் திருக் கைலாயகிரியை யடைந்தனர். பின்னர் அங்குவந்திருந்த தேவர்களும் அசுரர்களும் வாகனாதிகளி லிவர்ந்து ஆகாஸமார்க்கமாகத் தங்கள் வாசஸ்தானத்தை யடைந்தனர்.

சிறிதுகாலங் கழிந்தபின்னர் வாணாசுரன் சிவபெருமானையடைந்து அப்பெருமானை யருச்சித்துக் கைகூப்பிநின்று பெருந்துக்கத்துடனும் தெய்வகதியாகக் கர்வத்துடனுஞ் சொல்லுகின்றான்: சர்வேசுவரா! மலைகளையொத்த பூரித்த வன்மையுடைய எனது ஆயிரம் புயங்கட்கும் யுத்தமில்லாதிருத்தலின் யாது பிரயோசனம்? இந்திரன் அக்கினி யமன் முதலிய அட்டதிக்குப்பாலகர்களையும் வென்றிருக்கின்றேன். இவர்களில் தேவர்கட்கெல்லாம் அரசனாகிய இந்திரனை எனக்குக்கப்பங்கட்ட வேண்டியவனாகவுஞ் செய்திருக்கிறேன். யோகமாயைகளில் வல்ல ஸைரந்திரியையும் என் ஸ்வாதீனஞ் செய்துகொண்டேன். என் சத்துருக்கள் பிரயோகிக்கும் பாணங்களால் என் தோள்தினவு எப்பொழுது தீரப்போகின்றது? எப்பொழுது அவ்வகைய பெரும்போர்சம்பவிக்கும்? இவ்விஷயத்தைத் தேவரீர் சொல்லவேண்டும் எனக்கேட்க, சிவபெருமான் இவ்வாணன் வார்த்தையைக்கேட்டு,ஆஹா! இவனுக்கு இவ்வளவு கர்வமிருக்கின்றதா? என்று கருதிச் சினந்து அட்டகாசஞ்செய்து, ஓ தைத்தியாதமா! உன்கர்வம் விசேடித்தது. உனக்குள்ளவிசேடித்த கர்வமானது பங்கப்படத்தக்க கடினமான யுத்தம் விரைவிற் சம்பவிக்கப்போகின்றது. சத்துருக்களுடைய பாணங்களால் உன் மலைபோன்ற தோள்கள் துண்டிக்கப்பட்டுத் தீயிற்சொரிந்த காஷ்டம்போல நிலமிசை விழுந்துபோகும். உனது மயூரத்துவஜம் காற்று முதலியன வொன்றுமின்றி ஒடிந்துவிழும். அதுவே பெரும்போர் நிகழுங்காலமென்றறிக. அந்தயுத்தத்தில் நீ சர்வ சைனியங்களோடும் அபஜயமடைவாய். இப்பொழுது அம்மயூரத்துவஜம் நாட்டப்பட்டுள்ள இடத்திற்கு விரைந்துசெல்க. நீ இன்னும் ஒரு மஹோத்பாதத்தையுங் காணப்போகிறாய் என்று திருவாய்மலர்ந்தருளினர். சிவபெருமானுடைய வார்த்தைகளைக்கேட்ட வாணாசுரன் திவ்யமான மலர்களால் மகாதேவனை யருச்சித்துக் கைகூப்பி, சம்போ சங்கர மஹாதேவா என்று துதித்துவிடைபெற்றுத் தனது ஆயுதசாலையையடைந்து நடந்த விர்த்தாந்தங்களைக் கும்பாண்ட

னென்னும் தன் மந்திரியுடன் சொல்லி, மயூரத்துவஜம் உடைந்தவுடனே எனது சைநியங்களுடன் புறப்பட்டுச் *சங்கிராமயாகஞ்செய்து போருக்கு நீ வரச் சித்தமாயிருக்கவேண்டும் என்று கூறி, எக்காலத்தில், எல்லா அஸ்திரசஸ்திரங்களின் பிரயோகத்தையுமறிந்து, எவன் போர்செய்யவரப் போகின்றான்? எப்பொழுது என் தோள்களை வெட்டப்போகின்றான்? எப்பொழுது அவன் தலையை வெட்டிவிடப்போகின்றேன்? என்று காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன்.

இஃதிவ்வாறிருக்க, முன் பார்வதீதேவியார் வாணபுத்திரியாகிய உஷைக்கு வரமளித்தவகையே வைகாசிமாசஞ் சம்பவித்தது. அம்மாதத்தில் விஷ்ணுபக்தியுடைய உஷை ஸ்நானஞ்செய்து அலங்கரித்துக்கொண்டு விஷ்ணுமூர்த்தியைப் பூஜித்து மகாராத்திரியில் அந்தப்புரத்தில் மதனவேதனை பட்டுக்கொண்டு சயனித்திருந்தாள். அப்பொழுது கிருஷ்ணமூர்த்தியின் பேரனாகிய அநிருத்தன் பார்வதிதேவியாரது யோகமாயையால் பிரேரேபிக்கப்பட்டவனாய், சோணிதபுரத்தையடைந்து, உஷையைப் பலவந்தமாய்ப்புணர்ந்து பலவிதமான சுகத்தையநுபவித்து, நான் இப்பொழுது எங்கிருக்கின்றேன்? எப்படி யிங்குவந்தேன்? என்று துக்கித்துக்கொண்டிருக்கையில், மீண்டும் பார்வதிதேவியாரது யோகமாயையால் துவாரகையில்கொண்டுபோய்விடப்பட்டனன். பின்னர் உஷையானவள் சுரதலீலையால் மனவருத்தத்துடன்விழித்துக்கொண்டு ஒருவனையுங்காணாது தன்தோழியருடன் பலவிதமாகக்கூறி, யான் இந்தக்கணத்திலேயே உயிர்விடுகிறேன் என்று மூர்ச்சித்துவிழுந்தனள். அதனைக்கண்ட அவள்தோழியாகிய சித்திரலேகை பனிநீர்முதலியன தெளித்து சைத்தியோபசாரங்களால் மூர்ச்சை தெளிவிக்க, உஷையானவள் எழுந்திருந்து முன்னடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் மனோகரமானவாக்காற் சந்தோஷபூர்வமாகத் தன் தோழியை நோக்கி, சகியே! பூர்வத்தில் ஜகந்மாதாவாகிய பார்வதிதேவியாரைநோக்கி யான் விரதமிருந்தபொழுது அவ்வெம்பெருமாட்டி மகாதயாளுவாதையாய் உஷையே! உன்னை நித்திரையில்வந்து புணர்பவனே உனக்குக் கணவனாவானென்று வரங்கொடுத்திருக்கின்றனர். உன்னுடைய உபாயத்தால்தான் யான் விதிபூர்வமாக அந்நாயகனையடையவேண்டும். அவன் எக்குலத்தவனென்றுமுணரேனாயினும், என்மனது அவனாற்கவரப்பட்டது எனச் சொல்லினள். அதுகேட்ட சித்திரலேகை உஷையே! நீ சொப்பனத்திற்கண்டவன் இன்னவனென யானறியேனாதலின், அவன் யாவனோ எவ்வாறுகண்டுபிடிப்பேன்? என, உஷையே! நீயவ்வாறுசொல்வாயாயின், பிறரொருவரால் இது செய்ய முடியாததுபற்றி யான் இக் காமத்துயராலிறப்பேன் என, சித்திரலேகை அஃது உண்மையேயென்றுணர்ந்து, உஷையே! நீ யொன்றற்கும் அஞ்சற்க. உன்னைக் கரவிற்புணர்ந்து சென்ற கணவனை யான் எவ்வகையி

* சங்கிராமயாகம் போருக்குச் செல்வோர் தாம்வெற்றியுறுவதை கருதிச் செய்வதோர் யாகம்.

லேனும் எழுதினங்களிற் கொண்டுவந்து உன்னிடஞ்சேர்ப்பிக்கின்றேனென்று உறுதியாகக்கூறி, தனதுமாயையால் சமஸ்த அசுரர்களேயுந் துணையாகக் கூட்டிக்கொண்டு அவ்வாறு உஷையைப்புணர்ந்தவன் அநிருத்தனென்றறிந்துகொண்டு, மகாசந்தோஷத்துடன் நீ திருட்டுத்தனமாய் எதோவோருபாயத்தால் என் பிராணரத்தினமாகவுள்ள உஷா கன்னிகையைப்பரிசித்து அப்பொழுதே அவளுயிரைக் கொள்ளைகொண்டனே? நீ யெக்குலத்தவன்? எவ்வமிசத்தவன்? உன்பெயர்யாது? எனக்கேட்டு, அவன் விருத்தாந்தங்களேயுணர்ந்து, எவனைநீங்கி யென் தோழியாகிய உஷை க்ஷணநேரமும் பிழைத்திராளோ, அவனைக் கொண்டுவரத்தக்க வுபாயம் யாதென்று சிறிது தன்னுள்ளேயோசித்து, தன்சிநேகியாகியவாணபுத்திரியுடன் நல்லவார்த்தைகள்பேசி ஆனிமாச கிருஷ்ணசதுர்த்தசியில் உதயமுகூர்த்தத்தில் மனோவேகத்துடன் க்ஷணப்பொழுதில் யோகமாயையின் வன்மையால் ஆகாசமார்க்கமாகத் துவாரகையையடைந்து, அந்தப்புரத்திலுள்ள உத்தியானவனத்தில் அநேகஸ்திரீகளுடன் மதுபானஞ்செய்து விளையாடிக்கொண்டிருக்கும் அநிருத்தனைக் கண்டனள். அப்பொழுது அநிருத்தன் மலர்ப்பாயலும் பஞ்சணையுமுடைய தன் சப்ரகூடமஞ்சத்தில் ஏறினன்.

சித்திரலேகை அதனைக்கண்டு, அங்கிருப்பவரையும் அநிருத்தனையுந் தனது மாயாசக்தியால் ஒன்றுமுணராதவர்களாகச்செய்து, அநிருத்தனைக் கட்டிலுடன் தூக்கித் தன் சிரமேல்வைத்துக்கொண்டு, காமமயக்கத்தால் ஒன்றுமுணராது பலவிதமான சிங்காரபாவங்களைப் பித்தம்பிடித்தவள்போலச் செய்துகொண்டிருக்கும் உஷாகன்னிகையிருக்குஞ் சோணிதபுரத்தை விநாடியிற் சேர்ந்தனள். சித்திரலேகையால் இவ்வண்ணங்கொண்டுவரப்பட்ட அநிருத்தனைக்கண்ட உஷை, வலிமைமிக்க அசுரர்களாற் காக்கப்பட்டிருக்கும் அந்தப்புரத்தில் அவனுடன் கிரீடித்துக்கொண்டிருந்தனள். இதனைத் தம்துகரங்களில் ஆயுதங்களைத்தாங்கிக் காவல்செய்யும் அசுரர்கள் அங்கேநடக்கும் இங்கிதங்களால் தம்முட்சந்தேகித்து உஷையின் நடக்கையைக்கண்டுபிடித்து, அதிதிவ்வியதேகமும் இளம்பருவமும் கண்கட்குரம்மியமான அழகும் யுத்தப்பிரீதியும் தீரமுமுடைய ஒருமனுஷன் நம்முடையவாணாசுரபுத்திரியுடன் அந்தப்புரத்திலிருக்கின்றானென்று நன்றாகத்தெரிந்துகொண்டு, மாவலியின் புத்திரனும் தமது ராஜனுமாகிய வாணாசுரனிடஞ்சென்று, மன்னனே! எங்களாற் காக்கப்பட்டிருக்கும் அந்தப்புரத்தில் மகாபலசாலியாகிய தங்கள் புத்திரியைப் பலாத்காரமாக எவனோ சுவாதீனஞ்செய்துகொண்டு அங்கேயே வாழ்ந்திருக்கின்றான். தாங்களே போய் அவனைக்காணலாம் என்றனர். அவ்வாறுகூறிய அந்தப்புர துவாரபாலகர்வார்த்தையைக்கேட்டவாணன் சினந்து அந்தப்புரத்தையடைந்து நீலமேகம்போன்ற நிறமும் வாலிப வயதுமுடைய அநிருத்தனைக் கண்டு ஆச்சரியமும் குரோதமும் குரோதத்தாற் சிரிப்பும்பெற்று, இவன் எவ்வளவு பேரழகுடையவன்? எவ்வளவு தைரியசாலி? இவன் என் குலகௌர

வத்தையும் என்வமிசத்தையும் என்குமாரத்தியையுங் கெடுத்துப் பலர்
நகைக்கச்செய்தானன்றோ? என்றுகருதி, தன்வீரர்களை வருவித்து நீங்கள்
துர்மார்க்க சம்பன்னனான இவனை, உடனே அஸ்திரசஸ்திரங்களால் நறுக்
கிப்பாசத்தாற்கட்டிக் காராக்கிரகத்திற் சிறைசெய்து காலம்வருமளவும்
ஓடிப்போகவொட்டாமல் காத்திருங்கள் எனக்கூற, வாணவீரர்களில் ஓரி
லக்ஷம்பேர் அநேக ஆயுதங்களைத்தாங்கி அநிருத்தனைப் பிடித்துவரச் செ
ன்றார்கள். அதனைக்கண்ட அநிருத்தன் கர்ச்சித்து அந்தப்புர வாயிற்படியி
லிருந்த ஒரு தம்பத்தை யெடுத்துக்கொண்டு போர்செய்யப் புறப்பட்ட
னன். அக்கோலமானது இயமன் வச்சிராயுதமேற்று நின்றாற்போன்றிருந்
தது. உடனே அநிருத்தன் அவ்வீரர்களையெல்லாங்கொன்று மீண்டும் அந்
தப்புரமடைந்து உஷையுடன் சேர்ந்திருந்தனன்.

ருஷிசிரேஷ்டர்களே! கோபத்தால் உதிரம்போலச் செந்நிறம்
வாய்ந்த பரந்தகண்களையுடைய அநிருத்தன் அவ்வீரர்களையெல்லாங் கொ
ன்றசெய்தியை யறிந்த வாணாசுரன் பெருங்கோபங்கொண்டு தன் மந்திரி
யாகிய குபாண்டனையழைத்து நீ லக்ஷம் குதிரைவீரர்களை யுடன்கொண்டு
சென்று, மகாபராக்கிரமசாலியாயிருக்கும்அத்தீயோனைத்தொந்தயுத்தஞ்
செய்து செயித்துவரவேண்டும் என்றாஜ்ஞாபிக்க, குபாண்டன் அவ்வண்
ணமேபெருஞ்சேனையுடன் அநிருத்தன்பேரிற்போருக்குச்சென்று அவனை
யெதிர்த்துப் போர்செய்கையில், அநிருத்தன் அப்போரில் தனக்குக்கிடை
த்த ஒரு கட்கத்தால் அவர்களில் அநேகரைக் கொன்றனன். சிலர் ஓடிப்
போயினர். இதனையுணர்ந்த வாணாசுரன் பிரளயகாலாக்நிபோன்ற சுவா
லையையுடைய ஒருசக்தியை அநிருத்தன்பேரிற் பிரயோகிக்க, அநிருத்தன்
அச்சக்தியை விநோதார்த்தமாகப் பிடித்துக்கொண்டு, அச்சக்தியாலேயே
வாணாசுரனை யடித்தனன். வாணன் அவ்வடியால் இரத நீழலில் மூர்ச்சித்து
விழுந்து, மந்திரியாகிய குபாண்டன்செய்த சைத்தியோபசாரங்களால் மூர்
ச்சைதெளிந்து எழுந்திருக்க, வாணனை உபசாரஞ்செய்து கொண்டுபோயி
னர். அநிருத்தன் சிறிதுஞ் சலியாதுநின்றனன். அவ்வநிருத்தனது பராக்
கிரமத்தை வாணனுடைய மந்திரியின் சேனைகள் கண்டு, இவனோடு நியாய
மாகப் போர்செய்தாற் காரியங்கைகூடாது. கபடமார்க்கமாகவே வெல்ல
வேண்டுமென்று தீர்மானித்து, பலவிதமான அஸ்திரசஸ்திரங்களால் துன்
புறுத்தி வஞ்சமாக வீரர்கள் அநேகர் முன்னும்பின்னும் நின்று நாகாஸ்
திரத்தாற்கட்டி வாணாசுரனிடம் அழைத்துக்கொண்டுபோய் காட்டினர்.
வாணன் கடுங்கோபங்கொண்டு இவன் நமதுகுலத்துக்கு மானம்விளைத்த
வன். இவனைச் சிரச்சேதஞ்செய்யுங்கள். இவனுடலைத்துண்டந்துண்டமாகச்
செய்து அசுரர்கள் உண்ணும்படி கொடுத்துவிடுங்கள். அல்லது நரிகட்கா
வது இரையாக்குங்கள் அல்லது இவனை யாழமான பாழ்ங்கிணற்றிலிற்றள்
ளுங்கள் என்றுமிகக்கோபத்தோடுகூறினன். அதனைக்கேட்ட குபாண்டன்
மகா தர்மபுத்தியுடன், தலைவனே! இப்பொழுது தாங்கள் கோபசாந்தமாக

வேண்டும். இவனைநாம் இப்படிக்கொல்வோமாயின் நம்முடைய உயிரைக் கொன்றவர்களாவோம். இவன் பராக்கிரமத்தால் விஷ்ணுவுக்குச்சமான னாகவுஞ் சிவகடாக்ஷத்தைப்பெற்றவனாகவுமிருக்கின்றான்.இவ்வளவுகஷ்ட த்தில் அகப்பட்டுக்கொண்டும் வீரத்துடன் விளங்குகின்றானேயன்றிமனம் வருந்திலன். மகாசர்ப்பங்களால் கடிக்கப்பட்டிருக்கும் இவன் பல பராக் கிரமசாலிகளாகிய நம்மை,ஒரு துரும்பமாகநினைக்கின்றான் என்றுகூறி,அநி ருத்தனைக்கண்டு, நீயாவன்? எக்குலத்தினன்? எவ்வுபாயத்தால் இங்குவந் தனை? ஓ துராசாரசம்பன்னா! ஓ நராதமா! தைத்தியராஜனாகிய வாணாசுர னைத் தோத்திரஞ்செய். நமஸ்காரஞ்செய்.அடிக்கடி நான் உங்களாற்செயிக் கப்பட்டேனென்று சொல்லிக்கொள். இவ்வாறு செய்வாயாகில் நீ பாசத்தி னின்று நீக்கப்படுவாய் என்று கூறினன். அதனைக் கேட்ட அநிருத்தன் அடா தைத்தியாதமா! பரபிண்டோபஜீவிகா! நிசாசரா! துராசாரசம்பன் னா! க்ஷத்திரியதருமத்தையறியாமல் என்னைக்கேட்டுக்கொள்ளும்படி நீ கூறுகின்றனை. சூரனுக்கு மரணத்தைக்காட்டிலும் அவமானமுந் தோல்வி யும் புறங்கொடுத்தலுஞ் சிறந்தவையன்று. விருத்தமான அபகீர்த்தியைத் தேடிக்கொள்வதைக்காட்டிலும் நேர்முகமாகநின்று போர்புரிந்து உயிர் துரத்தலே புகழுடைத்து. இழிவானவார்த்தைகள்கூறி வேண்டிக்கொண்டு உலகத்தில் உயிர்வாழவேண்டுமென்னுங் கருத்து எனக்கிலது.இப்படி இழி வடைவதைக்காட்டிலும் மரணமாவது ஸந்நியாசமாவது பெறுவதே யுசி தம். உனக்குப் பேசத்தெரியாவிடில் ஊமைபோல் ஒன்றுமுரையாதிரு. அநேகராக்ஷஸர்களும் திரிலோகங்களும் எப்பொழுதும் என்பாட்டனுக் குப்பணிசெய்து துதிப்பவர்களாயிருக்கிறார்கள். அவ்வகைய வமிசத்தவன் யானே அறுத்தெறியப்பட்ட கைகளாகிய வனத்திற்சஞ்சரிக்கும் சிங்கம் போன்ற சுத்தவீரனென்றறிந்துகொள் எனக்கூறினன். வாணன் தன் மந் திரிவார்த்தைகளால் அநிருத்தனைக் கொல்லாதுவிட்டு, அந்தப்புரத்தை யடைந்து*வீரபானஞ்செய்திருந்தனன்.அநிருத்தன் மகாவிஷத்தையுடைய நாகாஸ்திரத்தாற்கட்டப்பட்டுத்தன்மனதை உஷையினிடத்திற்செலுத்தித் தன் இஷ்டதேவதையாகிய பார்வதியைத் தியானித்துத் தாயே! யான் நாகாஸ்திரத்தாற் கட்டப்பட்டு அதனாற் கடிக்கப்பட்டிருக்கின்றேன். உன் பக்தர்கட்குத் துவேஷிகளிடத்தில் உனக்கு ரோஷமிருந்தால் விரைவாக வந்துஎன்னைக்காக்கவேண்டுமெனத்துதிக்க,பார்வதிதேவிகருமலைபோன்ற வடிவுடன்வந்து ஆனிமாத கிருஷ்ணசதுர்த்தசியில் நடுராத்திரியில் அநிருத் தனையடைந்து, தனதுவலிபொருந்திய கைமுஷ்டியால் நாகாஸ்திரத்தை யுடைத்து,அந்த அஸ்திரத்தைப் பஸ்பஞ்செய்து அவனைத்துயர்தீர்த்து, அந் தப்புரத்தில் உஷையிடம்விடுத்து அந்தர்த்தானமாயினள். அநிருத்தன் சந் தோஷத்துடன் வாணபுத்திரியைக்கூடி இச்சைப்படியிருக்கையில், அங்கி ருக்கும் ஸ்திரீஜனங்கள் அவன்பட்ட கஷ்டங்களைக்கருதித் துக்கித்தனர்.

* வீரபானம் - போர்செய்துவந்தவன் தன் தேகத்துள்ள காயத்தின் வாதை நீங்கப் பருகுவதோர் உணவு.

இவ்விஷயங்களையெல்லாந் துவாரகாபுரியிலிருக்குங் கிருஷ்ணமூர்த்தி நாரத முனிவராற் கேள்வியுற்று, பிரத்யும்நன் பலராமன் முதலிய வீரர்களுடன் எண்ணிறந்த சேனைகளைக் கூட்டிக்கொண்டு உடனே சோணிதபுரியையடைந்து அக்கினி-யமன்-சிவபெருமான்-மூன்று சிரங்கள் மூன்றுகால்களோடுங் கூடிய சுரம்-குமாரக்கடவுள்-பிரமதகணங்கள்-மகா பயங்கரமான எண்ணிறந்த நாணமற்ற மர்மஸ்தானத்தைக் காட்டிச் சத்துருக்களின் வீரத்தைக் கொள்ளத்தக்க திகம்பரஸ்திரீகள் முதலானவருடன் போர்புரிந்து, இறுதியில் வாணசுரனுடன் போர்புரிந்தனர். பின்னர் மஹேசுவர சம்பந்தமான ஜ்வரங்கட்கும் போர்நிகழ்ந்தன.

வாணன் கிருஷ்ணமூர்த்தியை யெதிர்த்து தன் மந்திரி முதலான எண்ணிறந்த சேனையுடன் போர்புரிந்து தன் சைநியங்கள் யாவு மழியப்பெற்று, இறுதியில் கண்ணனால் விடப்பட்ட சுதர்சனத்தால் தனது ஈராயிரம் புயங்களும் அறுபட்டனன். கிருஷ்ணன் வாணன் சிரத்தைக் கொய்ய வேண்டுமெனக் கருதுகையில், சிவபெருமான் கண்ணனைப் பலவாறு சந்தோஷிக்கச்செய்து, அவனைக் கொல்லவேண்டாம் இதுவரையிற் செய்தது போதும் சுதரிசனத்தை வருவித்துக்கொள். இச்சுதரிசனம் பூர்வகாலத்தில் உனக்கு யான் கொடுத்தேன், நீயே ஜயமுற்றனை. நீ யோகவான், பக்தப்பிரியன், ஷட்குணைசுவரிய சம்பந்நனாகி யாவருக்கும் நன்மைசெய்யக் கருதுகின்றனை. வாணனுக்கு மிருத்யுபயமின்றி வரங்கொடுத்துள்ளேன். நீ அவனைச் சங்கரிக்காவிடின் என் சொல்லைக் காப்பாய்—என்று கூறினர். அதனைக்கேட்டு, கிருஷ்ணமூர்த்தி தன் சக்கிராயுதத்தை வருவித்துக்கொண்டு, தன் தேகத்திற் சிறிதுங் காயமின்றி ஜயமடைந்து தன் பேரனாகிய அநிருத்தனையும் அவன் மனைவியாகிய உஷையையும் ஆசீர்வதித்து அழைத்துக்கொண்டு, இரத்தினமுதலியவற்றைக் கொள்ளைகொண்டு, உஷையின் பிரியமுள்ள தோழியாகிய சித்திரலேகையையும் உடன்கொண்டு, தன் வாகனமான கருடனைவிடுத்து ஓடத்திலேறித் துவாரகாபுரியையடைந்து சந்தோஷமாக வீற்றிருந்தனர். கிருஷ்ணன் சென்றபிறகு ரக்தமயமான தேகத்துடன் துக்கித்துக்கொண்டிருக்கும் வாணனை நந்திபகவான் கண்டு நீ வருந்தற்க. சிவபெருமான் சந்நிதியில் நிருத்யமகோற்சவஞ் செய்க எனக் கூற, வாணன் அவ்வாறே நிருத்தஞ்செய்யக்கருதி, தன் இரண்டு கரங்களோடு நின்று உடலிற் பட்ட காயங்களால் உதிரமொழுக்கி பூமியை நனைத்து, * பிரத்தியாலீடமுதலிய நால்வகை நிலையினின்று, புருவமுதலியவற்றின் செயல்களாகிய அபிநயங்களமைய, ஸஹஸ்ர சிரக்கம்பனஞ்செய்து, அநேகமுறை பிரத்தியானீகஞ்செய்து பலவிதமாகச் சுழன்று சிவபெரு

* நால்வகைநிலைகள்—பைசாசம் - ஆலிடம் - பிரத்தியாலீடம் - மண்டிலம். அவற்றை'ஒருகானிலைநின்றொருகான்முடக்கும்-பரியாயமென்பபைசாசநிலையே. வலக்கான்மண்டலித்திடக்கான்முந்துறும் - அதற்பெயராலிடநிலையதாகும். இருகான்மண்டலித்திடுதன்மண்டிலநிலை. வலக்கான்முந்துற்றிடக்கான்மண்டலிப்பிற் - பிரத்தியாலீடமெனப்பெயராகும்' எனவருஞ் சூத்திரங்களால் உணர்க.

மான் கிருபைசெய்யுமாறு நடனஞ்செய்தனன். அன்பர்களிடத்தில் அதிக விசுவாசமும் நடனகீதங்களிற் பேரானந்தமுமுடைய சிவபெருமான் அவ் வாணன் செய்த நிருத்தத்திற்கு ஆனந்தமிகுந்து, வாணுசுர! உன் கருத்திற் கிசைந்த வரம் ஏதேனுங் கோருக எனக் கேட்க, வாணன் சிவபெருமா னைப்பணிந்து, ஸ்வாமீ! என் தோளிலுள்ள காயங்கள் நீங்க வேண்டுமென் றும், அழிவில்லாத காணுபத்தியத்தை யெனக்குக் கொடுத்தருளவேண்டு மென்றும், இச்சோணிதபுரியின் இராசரிகத்திற்கு என் குமாரத்தியின் கணவனுகிய அநிருத்தனது புதல்வன் அரசனுகவேண்டுமென்றும், எனக் குத் தேவர்களுடன் விரோதமில்லாதிருக்கவும், கல்பாந்தத்தில் விஷ்ணு மூர்த்தியால் எனக்கு மரணமுண்டாகவும், இராக்ஷஸத்தும் எப்பொழுது மில்லாதிருக்கவும், விஷ்ணு ஆராதனே யெனக்கெப்பொழுது மிருக்கவும், சர்வ ஜன மித்திரத்துவம் வேண்டுமென்றுங் கோரினன். சிவபெருமான் அவ்வாறே யாகுக்வென்று வரமளித்து அந்தர்த்தானமாயினர். பின்னர் வாணுசுரன் சிவகணத்தலைவர்களி லொருவனுயினன். உஷையினிடமாக விஸ்வஜித் என்னும் பெயரையுடைய ஒரு புத்திரன்தோன்றினன். கிருஷ்ண மூர்த்தியின் விருப்பத்தின்படி குபாண்டன் முதலிய மந்திரிகள் விஸ்வஜித் தை யரசனுக்கினர். அவ்வமிசத்கில் கல்பாந்தவரையிற் பிறந்தவர்களும் பிறப்பவர்களும் உஷையும் சித்திரலேகையும் விஸ்வஜித்தும் சிவபெருமா னுடைய திருவடிநீழலே யடைவார்கள். இவ்வண்ணமாக உலகத்திலுள்ள சகல குருவிற்குஞ் சற்குருவாய், சூலபாணியாய், மன்மதனென்னும் வனத் திற்கு அக்கினிவடிவமாய் விளங்குந் திரிநேத்திரதரனுகிய சிவபெருமா னுடைய சரித்திரத்தை என் புத்திக்கெட்டியவரையில் பெரியோர்களாற் கேள்விப்பட்டபடி உங்கட்குச்சொன்னேன். இச்சரிதத்தால்சிவபெருமான் சக்திசம்பந்தமாகவே நின்று எல்லாக் காரியங்களையும் நடத்துவரென்று உணரவேண்டும். சிவமும் சத்தியும் பூவு மணமும், மணியு மொளியும், தீயும் உஷ்ணமும், நீருந் தட்பமும்போல அபேதமாக விளங்குவர் என்று ஸூத முனிவர் சௌனகாதிமுனிவரை நோக்கிக் கூறினர்.

சக்தி சிவங்களின் சிறப்புரைத்தது

முற்றிற்று.

எட்டாவது

காமத்தின் கதையுரைத்த அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்கள் ஸூத முனிவரை நோக்கி, ஸ்வாமீ! காம மாகிய வனத்திற்கு அக்கினிபோன்ற சிவபெருமானுங் காமபாதையுற்றுற் போன்றனரெனத் தாங்கள் திருவாய்மலர்ந்தருளியது மிகவும் ஆச்சரியகர மாயிருக்கிறது. ஆதலின் சிவபெருமானையும் மோகிக்கச்செய்யவல்ல காமம் எத்தன்மையது? ஆகாயம் வாயு அக்கினி ஜலம் பிருதிவி புத்தி மனம் சித்தம்

அகங்காரமுதலியன யாவும் பிரகிருதியாலுண்டாயினவென்றும், புருஷன் அங்குஷ்டமாத்திரப் பிரமாணமாக விளங்குகின்றானென்றுங் கேட்டிருக்கின்றோம். இவ்விஷயம் எங்கட்குச் சந்தேகமாயிருத்தலின் எங்கட்கு நன்கு விளங்கும்படி கூறியருளவேண்டும் எனக் கேட்க, ஸூத முநிவர் சொல்லத்தொடங்கினர்.

மகருஷிகளே! அளவிறந்த தேஜஸோடுகூடிய வியாஸபகவான் சொல்லியவண்ணமே உங்கட்குச் சொல்லுகின்றேன் கேளுங்கள். காமத்தின் சொரூபமானது பிரம விஷ்ணு ருத்திராதிகளின் சொரூபமாயிருப்பதும், எல்லாப்பூதங்கட்கும் ஆத்மஸ்வரூபமாயிருப்பதும், ஸாத்விக ராஜஸ தாமஸமாகிய திரிகுணங்களுடையதும், பிரபஞ்ச ரூபமாகப் பரிணமித்திருப்பதும், தன்னைக்காட்டிலும் விரும்பத்தக்கது பிறிதொன்று மில்லாததுமாக விளங்கும். சிவபெருமான் நிஷ்காமமாய் விளங்குகையில், காமமானது இல்லாததாக முடியும். சிவபெருமானும் விஷ்ணுவும் பிரமனும் சூரியனும் சந்திரனுங் காமசொரூபிகளல்லர். இனிக் காமமென்பது யாதெனில், எதை யவலம்பித்து ஸ்நானம் தியானம் யோகம் இயமம் நியமம் ஜெபம் யஜ்ஞம் சிக்ஷை ஸ்வாத்யாயம் ஜ்ஞானம் தானம் வேதபாதம் ஸ்மிருதி விசுத்தி பரபீடை சுவர்க்கம் மோக்ஷம் சிநேகம் விரோதம் முதலியனவும், தேவர்களின் அஷ்டயோனிகள், மாநுடயோனி, பசு பக்ஷி மிருகங்களின் ஐவகை யோனிகள் ஆகக்கூடிய பதினொரு யோனிகளிற் பிறந்தனவும் பிறக்கின்றனவும் பிறப்பனவுமாக யாவும் உண்டாயினவோ அதுவேயாம். ஆதலின் அவ்வகைய காமத்தினாலேயே யாவுந் தோன்றிப் பெருகி நசிக்கின்றன. பலவித யோனிபேதமான அன்னியோன்னிய புத்தியுடைய தம்பதிகளுக்குக் கிரமமாக உண்டாகும் இச்சாபேதத்தாற் காமம் பலதிறப்படும். அஃதெவ்வாறெனில் பிறப்பும் இறப்புமுடைய சமுசாரத்தில் சப்தாதிகளாயிருக்கும் விஷயங்களால் நிஸ்ஸாரமானசமுசாரசுகத்தால் யான் பிரமன் யான் உபேந்திரன் உருத்திரன் தேவன் தானவன் சுகவான் கந்தர்வன் மநுஷன் பந்து மித்திரன் ஆசாரியன் ரக்ஷணகர்த்தா செய்பவன் கொடையாளி குரு கற்பகவிருக்ஷம் அண்ணன் தந்தை தாய் இயமன் என்று சொல்லிக்கொண்டு, நரகபாதையின்றிச் சொர்க்கப்பிராப்தி யுண்டாகவேண்டும் என்றிதுபோன்ற இச்சாவிசேஷம் பலவிதமாக விளங்கும். காமத்தின் குணத்தை இவ்வளவென்றும் இத்தகையதென்றுஞ் சொல்ல ஒருவராலுமுடியாது.

முநிவர்களே! இந்திரியாதி தத்துவங்கட்குப் பரமாயிருப்பதும், பூதங்கட்கெல்லாம் அந்தர்யாமியாயிருப்பதும், புத்திமாத்திரத்தா லுணரத்தக்கதும், ஸ்பரிசத்தால் அநுபவிக்கத்தக்கதும், ஆனந்தங்கட்கெல்லாம் ஆனந்தமானதும், அமிர்தமானதுமாக விளங்குவது பரம்பொருள். சூரிய சந்திராக்கினிகளின் தேஜசு எத்தேஜஸின்முன் இல்லாது மழுங்குமோ, எப்பொருளால் எல்லா விகாரங்களும், சூரிய சந்திர அக்கினி பிரமன் விஷ்ணு

வாதியர் மனுஷர் மிருகபசுபக்ஷியாதிகளும்பிறந்திறப்பரோ,அப்பொருளே பரம்பொருள். அப்பொருளைப் பரமாத்மாவென்றும் பரசிவமென்றுங் கூறுவர். அப்பரம்பொருளாலேயே யுண்டாகும் விகாரமானது காமமென்று சொல்லப்படுகிறது. சாக்கிர சொப்பனாதி அவஸ்தைகளை யுற்றவரிட்டத்தெல்லாம் இருந்து எல்லாக்காரியங்களையுஞ்செய்யும் அப்பொருளே பரம்பொருள். இவ்வாறு சர்வேசுவரனாற் செய்யப்பட்ட காரியத்திற்குக் காமமென்று பெயர். சக்தி சக்திமானாகிய இவ்விருவராலேயே பிரபஞ்சமானது சிருஷ்டிக்கப்படுகிறது. பிரியமும் அப்பிரியமுமான வார்த்தைகளும், ஸ்பரிசமும், ரூபமும், ரசமும், கந்தமும் எவன் அறிகின்றானோ, எவன் ஹிரண்யகர்ப்ப பிபீலிகாதிபரியந்தம் தானே விளங்குகிறானோ அவனே பரமாத்மா. அவனே செய்பவனும் செய்பொருளுமென்று நூல்கள் கூறும். காரியங்களெல்லாம் இறுதியில் அழிவுறுமாயினும் அவற்றையெல்லாஞ் செய்துவரும் பரமாத்மா ஒருகாலத்தும் நசிக்கமாட்டார். சித்திரவேலைக்காரன் பலவிதமான செயல்களைச் செய்யுமாறு, சர்வேசுவரன் நானாவிதமான சித்திர காரியங்களைச் செய்துவருகிறான். சர்வேசுவரன் ஒருவனாயிருந்து பல காரியங்களைச்செய்துவருதலை உலகினர் உணராது,பலர் பலகாரியங்களைச்செய்வதாகக் கூறுகின்றனர். சுயேச்சையால் எல்லாக் காரியங்கட்குங் கர்த்தாவாகவிளங்குபவன் சிவபெருமானொருவனே. உலகத்திலிருக்கும் எல்லாப் பொருள்களும் சர்வேசுவரஸ்வரூபமேயென்று நினைக்கவேண்டும். இவ்வாறு சர்வேசுவரன் உலகஸ்வரூபியாயிருப்பினும், உருவமற்றவன், மஹாகாசம்போலச் சர்வவியாபியாயுள்ளவன், தனக்குத்தானே தெரிந்துகொள்ளத்தக்கவன், பரதத்வஸ்வரூபன். அவ்வகைய சர்வேசுவரனாலேயே இவ்வுலகத்தில் காமமும் ஞானமும் பிறந்தன. சங்கல்பத்தாலேயே தோன்றிய காமமென்றுங் காமனென்றுங் கூறப்படுபவன் வெண்ணிறம் சதுர்ப்புஜம் மனோதரம் சங்குசக்கரதரமுமாய் நான்குமுகங்களுடன் விலையுயர்ந்த இரத்தின சுவர்ணபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு, சரஸ்வதி இரதி, முதலியவர்களுடன், பிரீதி கீர்த்தி சாந்தி புஷ்டி துஷ்டிகளோடும் கருடனுடனுங் கூடிக் கிருதயுகத்தில் பிரத்யும்னன் எனப் புருஷனாகப் பிறந்தனன். இலக்குமிசமேதனாகத் திருப்பாற்கடலில் ஆதிசேஷன்பேரில் யோகநித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்திக்குப் புத்திரனாகத்தோன்றிய அக்காமனே உலகங்கட்கெல்லாம் பிரியவானாகி, பூர்ணசந்திரன்போன்ற முகமும் சாமவர்ணமும் திவ்விய காந்தியையுடைய நேத்திரங்களும் வளைந்த தலைமயிரும் பொன்னாற்செய்த நவரத்தினங்களிழைத்த ஆபரணங்களும் பாசாங்குசங்களும் பெற்று மன்மதனென்னும் பெயருடன் தோன்றினன். அவனைத் தேவர்கள் யாவரும் சமீபித்துப் பிரார்த்தித்துக் கைலாசசிகரத்தில் சந்திரப்பிரபை என்னும் பட்டணத்தில் யோகத்திலிருக்கும் சிவபெருமானையடைந்து, அவரை யெவ்வகையிலேனும் மோகிக்கச் செய்யவேண்டும் எனக்கூற, மன்மதன் உடனே உம்பர் வேண்டுகோளுக்கிரங்கி அங்குநின்று புறப்பட்டு, அநேகவித மதுரசங்கீதத்தொனிகளுடன் புஷ்பபாணங்

களைத் தாங்கிச் சிவபெருமானையடைந்து, நீ யாவன் ? என வினவ, சிவபெருமான் மன்மதனைநோக்கி, நீ யாவன் ? எனக் கேட்க, யான் காமன் என, யாது கூறினை என மீண்டும் இறைவன் கேட்க, மன்மதன் நீயென்னையறியாயா? அறியாயாகில் அறிவிக்கின்றேன் என, சிவபெருமான் இங்கு நீ யாதுகாரணமாக வந்தனை? என வினவ, மன்மதன் உன்னை மோகிக்கச் செய்யவந்தேனென, எதனால் மோகிக்கச்செய்வாய் ? என, பலத்தாற்செய்வேன் என, உனக்கவ்வளவு பலமுண்டா? என, இதோ என் பாணங்களாகிய மலர்களைப் பார் என்று புஷ்பபாணங்களால் இறைவனை மோகிப்பிக்க யத்தனித்தனன். அப்பொழுது இறைவனது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிச்சுவாலையால் மன்மதன் சாம்பராயினன். அவ்வாறு மன்மதன் இறந்ததால் அவன் மனைவியாகிய இரதி சிவபெருமானைவேண்டினள். சிவபெருமான் நீ துவாபரயுகமுடிவில் மயன்என்பவனுக்குப் புத்திரியாகப் பிறப்பாய். சம்பரன் உன்னைக் கொண்டுபோவான். அப்பொழுது பிரத்யும்னன் அவனைச் சங்கரித்து உன்னை மனைவியாகக்கொள்வானென்று வரங்கொடுத்தனர். இது நிற்க:

முனிவர்களே! சிவபெருமானது தீவிழியாற் சாம்பராக்கப்பட்ட மன்மதன் துவாரகாபுரியில் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் பிரத்யும்னன் என்னுங் குழந்தையாகப் பிறந்தனன். இரதியும் மயன்புத்திரியாகப்பிறந்து மாயாவதி என்னும் பெயருடன் பேரழகியாக வளர்ந்துகொண் டிருக்கக் கண்ட சம்பரன் அவளது அழகுக்கு மனமகிழ்ந்து மனைவியாகச்செய்துகொள்ளக் கருதித் தனது நகரத்திற்குக்கொண்டுபோய் அன்புடன் போஷித்து வந்தனன். இஃதிவ்வாறிருக்க: சம்பரன் பிரத்யும்னனையுங் கொண்டுபோய் மாயாவதியிடம்விட்டு வளர்க்கச்சொல்ல,அவளும் அன்புடன் வளர்த்தனள். பின்னர் சம்பரனுக்கும் பிரத்யும்னனுக்கும் போர்நிகழ, அதிற் சம்பரனைக் கொன்று பூர்வம் சிவப்பிரசாதப்படி மாயாவதியை மனைவியாக்கிக்கொண்டு சம்பராரியென்னும் பெயர்பெற்று, அவளை யுடன்கொண்டு துவாரகையையடைந்து, சம்பரன் ராஜ்ஜியமுழுவதையுந் தந்தையாகிய கிருஷ்ணமூர்த்தி கிருபையால் அங்கிருந்தபடியே பாலித்துக்கொண்டிருந்தனன். துவாரகாபுரியில் உத்தியானவனத்தில் ஒருகாலத்தில் விநோதாற்புதமாக மனைவியுடனிருந்த பிரத்யும்னனைச் சும்பன் பிடித்துக்கொண்டுபோய்த் தன் தமயனாகிய நிசும்பனிடம்விட்டு இப்பசுவை நீபக்ஷணஞ்செய்கவென விடுப்ப, அவன் தன் தம்பிகொடுத்த இரையை ஆகாயமார்க்கமாக நெடுந்தூரங் கிளம்பி அங்கேவிடுப்ப, பிரத்யும்னன் தெய்வயோகத்தால் வாயுவசமுற்று, சும்பன்பட்டணத்திலிருக்கும் ஓர் பர்வதத்துச்சியில் விழுந்துமூர்ச்சித்துச் சிறிதுநேரத்திற்றெளிந்து அவ்வுத்யானத்திலுலாவிக்கொண்டிருந்தசும்ப புத்திரியாகிய லக்ஷ்மியென்னுங் கன்னிகைப்பெற்று, க்ஷத்திரிய தர்மமாகிய காந்தர்வமணத்தாற் கலந்தனன். இச்செய்தியையுணர்ந்தசும்பன் இவ்விருவரையும் நாகாஸ்திரங்களாற்கட்டி விந்தகிரியின் உச்சியில் பலதினம்

வைத்துக் கடைசியில் இமாசலத்திலுள்ள விதஸ்தாநதிதீரத்தில் வஜ்ரபஞ்சரங்கட்டி அதில்வைத்து அசுரச்சேனையாற் காத்துவந்தனன். விஷத்தைச் சொரியும் நாகங்களாற் கடிக்கப்படும் பிரத்யும்னன் மகாபலமுடைய விஷ்ணுசக்தியாகிய துர்க்காதேவியைநோக்கி இக்கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, உடனே பார்வதிதேவி அங்கடைந்து அவ்வஜ்ரபஞ்சரத்தை யுடைத்தலருமையாயிருத்தலின் நாகணவாய்ப் பறவை வடிவேற்று உட்சென்று ஓர் திவ்ய பேருருவம் வஹித்துப் பஞ்சரத்தைப் பஞ்சாக்கினள். அதுகண்ட அசுரச்சேனை யெதிர்க்க, பிரத்யும்னன் அவர்களோடு பெரும்போர்செய்து அனைவரையும் அரைவிநாடியிலழித்தனன். இவ்விவரங்களையெல்லாம் ஒற்றராலுணர்ந்த சும்பநிசும்பர்கள் தங்கள் சைநியங்களைக் கூட்டிக்கொண்டு போர்புரியக்கருதிவந்து, துர்க்கையின் அழகைக்கண்டு மோகித்துத் துர்க்கையையடைந்து தம்மைக் கூடும்படி இருவருங்கேட்க, துர்க்கை உங்களிருவரில் வல்லவனெவனோ அவனே என்னைப் பெறுகவெனக்கூற, சும்ப நிசும்பர் ஒருவரோடொருவ ரெதிர்த்துப் பெரும்போர்புரிந்து இருவரும் ஒருவராலொருவர் வெட்டுப்பட்டு உயிரொழிந்தனர். துர்க்காதேவி பிரத்யும்னனை மனைவியோடு துவாரகையில் விடுத்து, அந்தர்த்தானமாயினள். பிரத்யும்னனுக்கும் சும்பபுத்திரியான லக்ஷ்மிக்கும்பிறந்த விஷ்வக்சேனன் சம்பரநகரத்திற் கரசனுக்கப்பட்டனன். மாயாவதியிடம்பிறந்தவன் மயன்என்பபாட்டன்பெயர்பெற்று, சம்பரபுரத்திற்கு மன்னனுக்கப்பட்டனன். ருஷிசிரேஷ்டர்களே! காதுகட்கு இனிமையான வாக்குகளால் காமத்தின் மகத்துவத்தை யுங்கட்குச் சொன்னேன். உலகத்தையெல்லாம் வருத்தும்படி பிறந்த மன்மதனுடைய பிரபாவத்தையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்களென்று ஸூதமுநிவர் சொல்லலாயினர்.

காமத்தின் கதையுரைத்தது
முற்றிற்று.

ஒன்பதாவது
மன்மதன் கதையுரைத்த அத்தியாயம்.


ஸூத முநிவர் நைமிசாரண்யவாசிகளை நோக்கிக் கூறுகின்றனர்: மச்ச கூர்ம வராக நாரசிங்க வாமன பரசுராம ஸ்ரீராம பலராம கிருஷ்ண புத்த கலிகாவதாரங்கள் செய்து பிரசித்தராயும், யோகநிஷ்டாபரரிற் சிறந்தவராயும் சமுசாரத்தால் விளையுந் துன்பங்களை நாசஞ் செய்பவராயும் தீயோரைச் செகுப்பவராயும் விளங்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் மன்மதனால் பலவிதமாகப் பாதிக்கப்பட்டு க்ஷீரசமுத்திரத்தின் குமாரத்தியாகிய லக்ஷ்மிதேவியைத் தன் திருமார்பிலேயே தரித்துக்கொண்டிருக்கின்றனர் எனக் கூறுகையில், அதனைக்கேட்ட சௌநகாதிமுநிவர்கள், ஸூத முநிவரை நோக்கி ஸ்வாமீ! ஸ்ரீ மகாலக்ஷ்மி க்ஷீராப்திக்கு எவ்வாறு புத்திரியா

யினளென்பதையும் உரைத்தருளவேண்டுமெனக் கேட்க, ஸூத முநிவர் சொல்லலாயினர்.

மகருஷிகளே! பூர்வத்தில் அமரருக்கும் அவுணருக்கும் நேரிட்டபோரில், இருதிறத்தவரிலும் பலர்மடிதலால், அவர்கள் சத்தியலோகஞ் சென்று பிரமதேவனைக் கண்டு யாங்களிறவாது நெடுநாள் போர்புரியக் கருதினேமாதலின் பாற்கடலைக் கடைந்து அமுதளிக்கவேண்டும் என வேண்ட, பதுமன் திருமாலிடத்திற்கூறிக் கருதியது முடிப்பிப்பேன் என்றுரைத்து, அவர்களுடன் க்ஷீராப்தியடைந்து சேஷசயனத்திற் சநகனுதியர் பரவ யோகநித்திரைபுரியுந் திருமாலைவணங்கி அவர்கள் விருப்பை யறிவிக்க, விஷ்ணுமூர்த்தி யதற்கிணங்கினவராய் அவ்வாறே யாகுக என்று, மந்தரமலையை மத்தாகநட்டுச் சந்திரனை அடைதூணுக்கி அட்டநாகங்களுளொன்ருகிய வாசுகியென்னு மரவைத் தாம்பாகம்பூட்டி தேவர் ஒருபுறமும் அசுரர்மறுபுறமும் ஈர்க்கும்படி கட்டளையிட்டு, தாம் கூர்மவடிவேற்று மலையின் அடியையு முடியையு முதுகினுலுங் கைகளாலும் பற்றிநிற்க, தேவாசுரர் களையெய்தக் காலம் பல கடைந்தமையால், கயிருகிய வாசுகிவருத்த மாற்ருது, உடல் பதைத்து நாத் துடிக்கத் தனது ஆயிரம் வாய்களாலும் விஷஞ் சிந்தியது.

அவ்விஷம் எங்கும் இருளெய்தும்படி பரவ, தேவர் முதலாயினுர் பயந்தோடினர். அது கண்ட விஷ்ணு அமரர்களைக் காப்பேனென்று ஆற்றல்கூறி, அவர்கள்மேற் செல்லும் ஆலத்தைத் தாமெதிர்சென் றடர்த்தனர். அவ்விஷம் அவர் திருமேனியைக் கருநிறஞ்செய்ய, அவரும் நிற்றற்கஞ்சி யோடினர். அப்பொழுது யாவரும் ஒருங்குசென்று திருக்கைலாயகிரியை நண்ணி, திருநந்திதேவ ரநுஜ்ஞையினுல், திருச்சந்நிதானத்தினுட் சென்று கருணுநிதியாகிய கண்ணுதலைத் தரிசித்துக் கைகட்டி வாய்பொத்தி நின்றனர். சிவபெருமான் திருமாலைநோக்கி ஓ மாதவ! உருவம் வேறுபட்டுத் தேவர் குழுவுடன் வந்தது யாது? என்று அறியார்போல் வினவ, பரமபதியே! தேவரீர் கட்டளையின்றிப் பாற்கடலை மதித்தமையின் அமுது பெருது விஷம்பெற்ருேம்; அடியேங்களைக் காத்தருள்புரியவேண்டும் என்றிரந்து நிகழ்ந்தவற்றையிசைப்ப, சிவபிரான் தம திடப்பாகத்துள்ள பார்வதியைநோக்க, உமையம்மையார் இவர்களைக் காத்தருளவேண்டும் என்று விண்ணப்பித்தனர்.

சர்வான்மாக்களின் இடுக்கண்களையுஞ் சம்பு அதனைவாங்கித் திருக்கரத்தில் வைத்துக்கொண்டு ஓ தேவர்களே! இதனை யுண்ணவா விட்டுவிடவா? என, தேவர்கள் தேவரீரது திருக்கரத்தில் வரவே இது தன்னுருவஞ் சிறுத்தது; இதனை விட்டால் உலகை யழிக்கும். எவ்வெவற்றினும் முற்பாகந் தேவரீரதே யாதலின், விஷமாயிருப்பினும் இதனைத் தேவரீர் உட்கொண்டருளல்வேண்டும். என்றுபிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வா



(41) தேவாசுரர் திருப்பாற்கடல் கடைந்தது - தேவர் வேண்டுகோளால் சிவபிரான் விஷபானஞ் செய்தது.

LITHO, MEENAKSHIAMMAH, PRESS. MYLAPORE. 1900.

றே சம்மதித்துத் திருவதுசெய்கையில், அது கண்டத்தளவுசெல்ல அதனை யாவருங் கண்டு, எம்மை யுயிர்காத்தற்குச் சாக்ஷியாக இவ்விஷத்தைக் கண்டத்திலேயே தரித்தருளல்வேண்டும் என்று வேண்ட, எம்பெருமான் அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, அங்கேயே ஒரு நீலமணிபோன்று நிறுத்தி மணிகண்டர் நீலகண்டர் சிகண்டர் முதலிய திருநாமங்களைப் பெற்றனர். பிறகு பெருமா னருள்பெற்றுக் கடல்கடைகையில் லக்ஷ்மீ தேவி தந்வந்தரி சந்திர சூரியர் கல்பகத்தரு உச்சைச்சிரவசு காமதேனு கவுத்துவம் அமிர்தம் பிறந்தன. அமிர்தம் பிறக்குங்காலத்தில், அமிர்த பிந்துக்கள் வெளியே சிந்தினபடியால், பார்ப்பதற்குச் சௌந்தரியமான சொரூபமும் சரத்காலத்திற் பிரகாசிக்கும் பூரணசந்திரன்போன்ற முகமும் மின்னல் சூரியன் அக்கிபோலுந் தேககாந்தியு முடையவர்களாய், அவர்க ளிற் சிலர் நீலோத்பலநிறமும், சிலர் பொன்னிறமும், சிலர் பவளநிறமும், சிலர் இந்திரநீல நிறமும், சிலர் வெண்ணிறமும், சிலர் பதுமகர்ப்பம்போற் செம்மையும் வெண்மையுங் கலந்த நிறமும், சிலர் நீலமலர்நிறமும் வாய்ந் தவர்களாய், கணக்கில்லாத அநேககோடி அப்சரசுகள் தோன்றி, தங்கள் தேககாந்தியால் பத்துத் திக்குகளையும் விளக்கி, வயோதிகம் துக்கம் சோகம் மரணம் ரோகம் முதலியன நீங்கி, ஹாரங்கள் நூபுரங்கள் கடகங் கள் முதலிய இரத்தினாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாய், சிருங் காரமுதலிய [illegible]தமான மதுரமான குரலோசையால் யாவருடைய மனத்தையும் வசப்படுத்தி, காமாதுரராய், அமிர்ததுல்யமான கண்பார்வை யால் உலகமுழுவதையும் பிரமிக்கச்செய்துகொண்டிருந்தனர். க்ஷீராப்தி யிற்றோன்றிய பல பொருள்களில், காமதேனுவும் பாரிஜாதமும் உச்சைச் சிரவசுமாகியஇவற்றைஇந்திரன்பெற்றுக்கொண்டனன்.கவுத்துவமணியை யும் இலக்ஷ்மியையும் விஷ்ணுமூர்த்தியுற்றனர். தந்வந்தரியை எல்லாரும் (மருத்துவனாக) அடைந்தனர். அமிர்தம் எங்கட்கு எங்கட்கு என்று தே வாசுரர்கள் பிரளயகாலகோஷம்போற் கொதித்து, அக்கினி சூரியன்போ லக் குரூரத்துடன் கோபித்துப் போர்செய்து, அப்போரில் அசுரர்கள் தமது வலி மிகுதியால் அமிர்தத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். அதனைக் கண்ட விஷ்ணு காந்தியே சொரூபமாகவுள்ள லக்ஷ்மீ யென்னும் மாயை யோடுகூடி, அசுரர்களை விளித்து யான் உங்கட்கு அமிர்தத்தைப் பகிர்ந் தளிப்பேனென்று கேட்க, அசுரர்கள் அங்கிகரித்து அவ்வாறே சமபாகம் பெறத் தீர்மானித்து, தம்மை மோகிக்கச்செய்த விஷ்ணுமூர்த்தி கையிற் கொடுத்து, அப்பாற்கடலிற்றோன்றிய அப்சரசுகளைக்கண்டு விஷ்ணுமாயை யாற் காமமிகுந்து அவர்களை உடன்கொண்டு சுவர்க்கலோகத்திலுஞ் சிற ந்துவிளங்குந் தமது நகரங்களை யடைந்தனர்.

அவ்வாறு தங்கள் நகரங்களை யடைந்தபின்னர், ஐயோ! தேவர் கள்விட்டுவிட்ட இந்தஸ்திரீகளை வீணேகொண்டுவந்தோமே என்றுமனம் வருந்தி அவர்களைவிட்டு, தங்கள் பட்டணங்களை அகழி மதில் முதலிய

காவல்களிற் குறைவின்றி விளங்கச்செயது, தம்மைவஞ்சித்து அமிர்தத்தைக் கொண்ட தேவர்களோடு செருச்செய்யக்கருதி, ஆகாயமுழுதும் மறையும்படி புழுதியெழும்பக் கடுநடை நடந்து, சங்கநாதமும் வாத்திய முழக்கமுஞ் செய்துகொண்டு, அமிர்தத்திற் பாகம்பெற வேண்டுமென்று புறப்பட்டுவந்தனர். அவ்வாறு போர்க்கோலங் கொண்டுவந்த அசுரச்சேனையைக்கண்ட அமரர்களும் போர்க்கோலங்கொண்டனர், அவ்விரு திறத்தவருக்கும் பெரும்போர் நிகழ்ந்து அநேகவிதமான அஸ்திரசஸ்திரங்களால் அடித்துக்கொண்டனர். அப்போரில் அநேகந் தானவரைத் தேவர்களும், அநேகந்தானவரைத் திருமாலுங் கொன்றனர். இந்தயுத்தத்தில் உயிர்பிழைத்தாற்போதுமென்று சிலர் பாதாளலோகத்தையடைய, மகாபலபராக்கிரமசாலியான விஷ்ணுமூர்த்தியானவர் சக்ராயுதத்தைக் கையிற்றாங்கி, அவ்வாறு ஓடுவோரையுங் கொல்லவேண்டுமென்னும் உட்கிடையால், அவர்களைப் பின்றொடர்ந்து தானும் பாதாளலோகத்தை யடைந்து, ஒளித்துக்கொண்டவர்களைத் தேடிக்கொண்டிருக்கையில், அமிர்தசம்பவமும், பூர்ணசந்திரன்போன்ற முகமும், அதிக சௌந்தரியத்தால் தருக்குமுற்றிருக்கும் அநேகஸ்திரீகளைக்கண்டு மோகமுற்று, மன்மதபாணத்தாலடிபட்டு, தான்வந்தகாரியத்தை மறந்து அம்மாதர்களுடன் விளையாடிக்கொண்டும் பலவிதமாக மன்மத கிரீடை செய்துகொண்டும், அநேககாலமிருந்து, உலகத்திற்கண்டோர் யாவரும் அஞ்சத்தக்க ஆண்தன்மையும் போர்த்திறமுமுடைய புத்திரர் பலரைப்பெற்றனர். இவ்வாறிருக்கையில் பிரமதேவன் கைலாயகிரியையடைந்து சிவபெருமானைப்பணிந்து ஸ்வாமீ! தேவரீர் கட்டளையிட்டருளியபடி யான் சிருட்டியும் விஷ்ணு திதியும் செய்யவேண்டியவர்களன்றோ? விஷ்ணுமூர்த்தி இப்பொழுது காமாந்தகாரத்தில்மூழ்கிப் பாதாளலோகத்தில் மாதர்பலருடன் விநோதமாகக் காலங்கழித்துக்கொண்டிருக்கின்றனர். அவரது திதித்தொழில் நடக்கும்படி தேவரீர் அங்கெழுந்தருளி அவர்மனதைத் திருப்பி யருளவேண்டும் என வேண்ட, சிவபெருமான் அவ்வாறேயாகுகவென்று, இடபரூபந்தரித்துப் பயங்கரமாகக் கர்ச்சித்துக்கொண்டு, பிநாகவில்லைத்தாங்கிப் பாதாளத்தையணுகி மகாபயங்கரமான பலவித தொனிகளைச்செய்ய, அவ்வொலியால் அங்கிருந்த புரங்கள்யாவும் அஞ்சின. அப்பொழுது விஷ்ணுமூர்த்தியின் புதல்வர்கள் இவ்வாறு பேரொலியால் நம்மையும் நமது பட்டணத்தையும் பயமுறுத்துவோன் யாவனென்று கோபித்து, யுத்தஞ்செய்யக்கருதிப் புறப்பட்டனர். சர்வேசுவரனை உருத்திரபகவான் தனதுகுளம்புகளாலும் கொம்புகளாலும் அவர்கள் யாவரையுங் கொன்றனர். அவ்வாறு புத்திரர் இறந்தனரென்னுஞ் செய்தியைக் கேள்வியுற்ற அச்சுதன் மகாகோபத்துடன் யுத்தஞ்செய்யச் சிவபெருமானைச் சமீபித்து, பலவிதமான அஸ்திரசஸ்திரங்களை ருஷபரூபமாக வந்திருக்கும் பெருமான்பேரிற் பிரயோகிக்க, பகவான் அந்த எண்ணிறந்த திவ்யாஸ்திரங்களை விநோதார்த்தமாகக் கிரகித்துக்கொண்டனர். இதனைக்கண்ட விஷ்ணுமூர்த்தி ஓகோ! ஜகத்பதி



(42) பாதாளத்தில் திருமால் மதிமயக்கடைந்த பொழுது சிவபெருமான் இடபரூபராகி அவரையடக்கி, புதியசக்கிராயுதமருளியது.

யாகவுள்ள உமாசமேதனே இங்கு இடபரூபமாக வந்தனனன்றிப் பிறி தன்றென்றுணர்ந்து, கம்பீரமானவாக்காற் சர்வேசுவரா ! சங்கரா ! பக வானே! ஷட்குணைசுவரிய சம்பன்ன! ஸ்வாமீ ! யான்செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்விஷ்ணு மூர்த்தியின் பிரார்த்தனைக்கிரங்கி, கேசவா ! நீ இரக்ஷித்தற்றொழிலை யுடை யவனென்பதை யாதுகாரணத்தான் மறந்தனை? இனி இப்பாதாளத்தில் ஸ்திரீலோலனயிருப்பதைநீக்கவேண்டும் எனக் கட்டளையிட,அதனைக்கேட் டவுடனே, விஷ்ணுமூர்த்தி ஐயோ ! சிறியேனகிய யான்செய்த இவ்வறிவீன மான காரியத்தை ஜகதீசுவரன் தெரிந்துகொண்டா னல்லவாவென நாண முற்று, சர்வேசுவரா! அடியேனுக்குத் தேவரீர் பிரசாதித்தருளிய சுதர் சனமென்னுஞ் சக்ராயுதம் இவ்விடத்திலிருக்கின்றது;அதனையும் எடுத்துக் கொண்டு விநாடியில் வருகின்றேன் என, சிவபெருமான் அதனைக்கேட்டு, நாரண! இப்பாதாளம் அநேக துஷ்டராக்ஷஸர்கட்கு வாசமாயிருக்கின் றது. இவர்கள் எப்பொழுது கர்வித்துத் துன்மார்க்கஞ் செய்கின்றார்க ளோ அப்பொழுது இவர்கள் நாணமுறும்படி சிக்ஷைசெய்தற்காக இச் சக்கிராயுதம் இங்கேயே யிருக்கட்டும். உனக்கு இதற்குச்சமானமானதும் மகா பயங்கரமானதுமாகிய மற்றொரு சக்கிராயுதத்தைக் கொடுக்கின்றே னென்று கூறி, அவ்வாறு திருவுள்ளத்திற் சங்கற்பஞ் செய்தபொழுதே பிரளயகாலாக்கிபோன்றகாந்தியோடுகூடிய ஓர் சக்கிராயுதமுண்டாக, அத னைச் சிவபெருமான் விஷ்ணுமூர்த்திக்குக் கொடுத்தருளினர். விஷ்ணுமூர்த் தியும் மகாசந்தோஷத்துடன், பிரளயகால சூரியர் ஆயிரக்கணக்கினிருந் தால் அவரது கிரணங்களைப்போன்ற கிரணத்தையுடைய சக்கிராயுதத்தைச் சிவப்பிரசாதமாகப் பெற்றுக்கொண்டனர். திருமாலும் சிவபெருமானும் பாதாளத்தை விலகித் தத்தம் பதவியடைந்தனர்.

முநிவர்களே! அதன்பின்னர் விஷ்ணுமூர்த்தியானவர் இந்திராதி தேவர்களைப்பார்த்து, அமரர்களே! பாதாளத்தில் மகா யௌவனமான காந்தி லாவண்யங்களையுடைய எண்ணிறந்த ஸ்திரீகள் இருக்கின்றனர். அவர்களுடன் பலகாலம் பலவகையாகக் கலவி செய்தவனே கலவிசெய்த வனெனப் படுவான் எனக்கூற, அதனைக்கேட்ட அமரர் காமாக்கினியாற் றகிக்கப்பட்டு, எவ்வகையிலாவது பாதலத்தையடைந்து அம்மங்கையர் சுகத்தை யநுபவிக்கவேண்டுமென்று உறுதிகொண்டு புறப்படுகையில், ஷட்குணைசுவரியசம்பன்னனை சிவபெருமான் முற்றுணர்வுடையனுதலின் அவர்கள் கருத்தையுணர்ந்து, யாவனொருவன் இவ்வுலகைநீங்கிப் பாதலஞ் செல்கின்றானோ அவன் உடனே உயிரொழிக எனக் கடுஞ்சாபமிட்டனர். அதனைக்கேட்ட அமரர்கள் ஐயோ! இவ்வகைய கொடுஞ்சாபத்திற்கு யாதுசெய்வோமென்று தங்கள் மனதைத் திருப்பிக்கொண்டு தத்தம்புரத் தையடைந்தனர். சிறிதுகாலஞ் சென்றபின்னர், சிவபெருமான் ஒருகாலத் தில் சிந்தாகுலமுற்றாற்போன்றிருந்தனர். அந்தச் சமயத்தில் உமாதே

வியார் எம்பெருமானையடைந்து, ஸ்வாமீ! தாங்கள் எல்லாப் பூதங்களையும் படைத்தீர்கள்: சராசரப் பிரபஞ்சமுழுவதற்குங் காரணமாக விருக்கிறீர்கள்: இவ்வாறிருந்தும் தாங்கள் மனவருத்தமாக ஆலோசிக்கவேண்டிய காரணம் யாது? என வினவ, சிவபெருமான் பெண்ணே! பாதாளத்திலிருக்கும் ஸ்திரீகளுடைய திவ்ய வடிவத்தைக்கருதிச் சிந்திக்கின்றேன். திரிலோகங்களிலும் சிருஷ்டிமுதல் இதுவரையில் அவ்வகைய சிறந்த அழகு வாய்ந்த ஸ்திரீகளே கிடையார் எனக்கூற, பார்வதிதேவி ஸ்வாமீ! தங்களுக்கும் வியப்பினையுண்டாக்கத்தக்க அழகினையுடைய அப்பெண்களின் வடிவத்தைக் கட்டளையானால் அடியேன் போய்க்கண்டு வருவேன் எனக் கூற, சிவபெருமான் அவ்வண்ணமே பார்த்துவருக என அநுமதிகொடுக்க, பார்வதி விடைகொண்டு, கண்ணுடியில் முகபிம்பம் பிரதிபிம்பிக்குங் காலத்திற்குள் பாதலத்தையடைய, அங்கிருக்கும் மாதர்கள் சூரியன் இங்கு வந்தனனேவெனக் கூறத்தக்க வொளியுடைய மலையரச புத்திரியாகிய பார்வதியைக்கண்டு, ரூபலாவண்ணியத்தால் மகா மத்தர்களாய் நல்லமொழிகளால் உபசரியாதிருந்தனர். அம்மங்கையர்வடிவைப் பார்வதிதேவியார் பார்த்து, திவ்யமான உருவத்தையடைந்திருந்தும் கணவரின்றிப் பலனற்றிருக்கின்றீர்கள். அதியற்புத தேகமுடையவர்களாயிருந்தும், ஆகாயத்திற் புஷ்பங்களும் பலங்களுமிருந்தால் ஒருவர்க்கும் பயன்படாததுபோலவும்,ஆழமானதும் அகலமானதுமாகிய நீரிற்புஷ்பித்தகமலங்கள்போலவும், நிஷ்ப்புருஷமாகிய இப்பாதலத்திலிருந்து புருஷசம்பவமின்றி யுங்கள்வனப்பு அவலமாகின்றது. பிரமதேவன் ஸ்திரீகளைப் புருஷர்கட்குபயோகப் படும்படி படைத்திருந்தும், உங்களால் ஒருவருக்கும் பயனில்லையென்று கூறினள். அதனைக்கேட்ட கன்னியர்கள் இம்மகாதேவி யாவளென்று நெடுநேரம்யோசித்து,பார்வதிதேவியென்றுணர்ந்து சாஷ்டாங்கமாகத்தண்டஞ் செய்து, பலவிதமாகத் தோத்திரஞ்செய்து சந்தோஷிக்கச்செய்ய, உமாதேவியார் திருவுள்ளங்களித்து, ஓ கன்னிகைகளே! உங்கட்குப் புருஷராயிருக்கத்தக்கவர்கள் உங்களைக்கருதிப் பாதாளத்துக்குவர ஆயத்தமாயிருக்கையில், சிவபெருமான் அவர்களை நோக்கி நீங்கள் பாதாளலோகஞ்சென்றால் உடனே யிறப்பீர்களென்று சபித்தனராதலின்,அவர்களும் உங்கட்குப் புருஷர்களாகமாட்டார்கள். ஆதலால் ஞானவான்களாயும் மகா மந்திர பாராயணமுடையவர்களாயும் தபோ நிஷ்டர்களாயும் மனுஷரூபம் வகித்து, என்புதல்வர்களாகவும், சிவபெருமானுக்குக் கணங்களாகவு மிருக்கின்றார்கள். அவர்கள் அதிரூப யௌவன சம்பன்னர்களாகவு மிருத்தலின் அவர்களைப் புருஷர்களாகக்கொண்டு பலவிதமான இரதிகேளியை யநுபவிப்பீர்களாகவென்று கூறி அந்தர்த்தானமாயினர்.

முநிவர்களே! இவ்வண்ணமாக மகாவிஷ்ணுவும் ஒருகாலத்தில் தன் சகோதரர்களாகிய தைத்தியர்களைச் சங்கரித்து அவர்களில் ஓடினவர்களைப் பின்றொடர்ந்து அவர்கள் ஸ்திரீகளைச் சரச சல்லாப உல்லாசமாக

அநேககாலம் அநுபவித்துக்கொண்டிருந்தனர். திரேதாயுகத்தில் அவ் விஷ்ணுமூர்த்தியே ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து சீதையை மணந்து அநேககாலங் கூடி வாழ்ந்திருந்து அந்தச் சீதாதேவியின் தேகவியோகத்திற்குப்பின், மதனவஸ்தையைத் தாளமாட்டாது பலவிதமாகக் காமபாதையை யநுப வித்தாரல்லவா? துவாபரயுகாந்தத்தில் மீண்டும் அவ்விஷ்ணுவே மதுராபுரி யில் வசுதேவனுக்கும் தேவகிக்கும் புத்திரனாகத்தோன்றி மகா பலவானாகி, வாலிபத்திலேயே கோபிகாஸ்திரீகளுடன் பிருந்தாவனத்தில் விசேஷமான இரதிகிரீடையை நடத்தி, பத்துலக்ஷம் புத்திரரைப்பெற்று அதனோடு திருப்தியடையாமல் அதி யௌவனத்தால் ருக்மணி தேவியை இராக்ஷஸ மணமாகக் கொண்டுவந்து மணஞ்செய்து பிரத்யும்னனாதி புத்திரரைப் பெற்று, அதனோடு திருப்தியடையாது, பிராக்ஜோதிஷ பட்டணத்தின் மன்னனாகிய நரகாசுரனைப் பலாத்காரமாகச் சங்கரித்து அவனது ஆயிரமனை வியரையுங் கிரகித்துக்கொண்டு அவர்களோடுங் கிரீடித்துத் தொண்ணூறு புதல்வரைப்பெற்று, மீண்டுந் தன் அத்தையாகிய ராதாவென்னும் பெயரை யுடைய ஸ்திரீயைக்கூடி, அநேகவிதமாகச் சுகமநுபவித்தும் இன்னும் எண்ணிறந்த பலஸ்திரீகளுடனும் பலவகையாகச் சுகமநுபவித்துந் திருப்தி யடைந்திலர். சமானமான வயதுடைய ரூப யௌவன சம்பன்னர்களான ஸ்திரீ புருஷர்கட்கு மனவொற்றுமை யுண்டாயிருக்கும்பொழுது அது மோக்ஷசுகத்தைக் காட்டிலும் விசேடித்த சுகமென்று நினைக்கும்படியிருக் கும். இவ்வாறுகாமார்த்தமாயுள்ளவன் தர்மாதர்மத்தையுங் குலத்தையுங் கவனியான். அஃதெங்ஙனமெனில், சாந்தமும், சர்வேசுவரதியானத்திலே யே பொருந்திய மனதும், மகத்துக்கட்கெல்லாம் மகத்தும், செந்நிற தேக மும் நான்குமுகங்களும், அயோநிஜமும், வேதவேதாங்கவுணர்ச்சியுமுடைய உலககுரு வெல்லோருக்கும் பரமகுருவாகிய பிரமதேவன் ஒரு காலத்தில் திருமணக்கோலங்கொண்டிருந்த பார்வதிதேவியின் பாதத்தைக்கண்டு மனங் கலங்கி மீண்டும் ஜகந்மாதாவிஷயத்தில் அபராதியானேனேயென்று பரி ஹாரமாகப் பலவித விரதங்களிருந்து அம்மகாதேவியாரைப் பிரார்த்தித்து க்ஷமாபணஞ் செய்துகொண்டனன். இவ்வாறு மகாவிஷ்ணுவுக்கும், மன் மதனல் விளையவிருந்த தீமையைச்செயித்த பிரமதேவனுக்கும் சம்பவித்த காமவிசேஷங்களை உங்கட்குச் சொன்னேன்.

பத்தாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூத முநிவர் சௌநகாதி முநிவர்களை நோக்கிக் கூறுகின்றார்: மகருஷிகளே! வெண்மை செம்மை நீலமுதலிய நிறங்களையுற்றுப் பலவித ரூபங்களை யடைந்து, சாந்தம் கோபம் குரோதம் இந்திரியநிக்கிரகம் இச் சையின்மையாதியுடைய சிவபெருமானுக்குச் சிருஷ்டி செய்யவேண்டு

மென்னும் விருப்புண்டாகி, ஜலமும் பிராணிகளிதயமுந் தானமாகவுடைய நாராயணனைச் சிருஷ்டித்தனர். அவ்வாறு படைக்கப்பட்ட நாராயணன் தவஞ்செய்து இறுதியில் க்ஷீராப்தியில் அநேககாலஞ் சயனித்திருக்க, அந் நாராயணனது உந்தியினின்று ரஜோகுணத்தால் பிரமன் தோன்றி, முதலில் விருக்ஷமுதலிய ஐவகைத் தாமத சிருஷ்டியைச்செய்து, பின்னர் மனுஷர்முதலிய ராஜஸ சிருஷ்டியைச்செய்து, இறுதியில் தேவர்முதலிய எண்வகைச் சத்துவசிருஷ்டியையும், பின்னர் உலகங்கள் தர்மங்கள் பரிபாலனங்கள் ஜீவிதங்கள் ஆகாரங்கள்முதலிய சிருஷ்டிகளையும் செய்தனன். பரமாத்மா அச்சிருஷ்டிகளிலெல்லாம் பிரவேசித்து விளங்கினர். இச்செயல்களெல்லாம் முடிந்தபின்னர் நாராயணன் துயிலொழிந்து, தான் சிருஷ்டிகாமியாய் யோகநித்திரையி லிருந்தமையின் படைக்கப்பட்டிருக்கும் பிரபஞ்சத்தையும் ஜீவராசிகளையுங் கண்டு, இச்சகத்து யாவராற் படைக்கப்பட்டதென்று கருதியிருக்கையில் ஓர் அக்கினிமயமான தாணுலிங்கம் விளங்கக்கண்டனன்.

அது ஜ்வாலாகாரமாயும் மகா பயங்கரமாயும் திரிலோகங்கட்கும் ஒரேஸ்தம்பாகாரமாயும் ஆதிமத்தியாந்த மறிய வசமில்லாததாயும் அளவிட்டுரைக்க முடியாததாயும் தேஜோமயமாயும் விளங்கியது. பிரம விஷ்ணுக்களிருவரும் ஒருகாலத்தில் ஒருவரையொருவர் சந்தித்து, நான் பரம் நான் பரமென்று தருக்கெய்திச் செருச்செய்து, கடலிடையே ஜோதிமயமாக விளங்கும் அந்தத் தாணுலிங்கத்தை நோக்கி இங்கிவ்வாறு விளங்குவது யாது?என்று நினைத்து, இது நம்மிருவராலும் படைக்கப்பட்டதன்று இது தானகவே யுண்டானதாகக் காணப்படுகின்றது. ஆதலால் நாமிருவரும் ஜகத்காரணரென்று சொல்லிக்கொள்வது அவலம் என்று கர்வம் நீங்கி, இருவரும்சிநேகபாவமாக ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு இஃது யாது? இதனது வரலாற்றினை யுணரவேண்டுமென்று அடிக்கடி யோசித்து, இதனைக்கண்டறிவதே நலமென்று தீர்மானித்துக் கொண்டனர். அப்பொழுது யான் அடியைக்காண்பேனென விஷ்ணுவும், முடியைக் காண்பேனெனப் பிரமனும் நியமித்துக்கொண்டு புறப்படுகையில் அசரீரி 'பிரம விஷ்ணுக்களே! இது சிவபெருமானேயன்றிப் பிறிதன்று. அவர் உங்கள் வல்லபத்தை யறியக்கருதி ஜ்யோதிமயமாக நின்றனர். இந்தத் தாணுலிங்கத்தை நீங்கள் பூஜித்தால் மகத்தான இஷ்டசித்திகளை யடைவீர்கள். புஷ்பம்-கந்தம்-தூபம்-தீபம்-நிவேதனமுதலியவற்றால் தன்னையாராதித்தவர்கட்குச் சிவபெருமான் சந்தோஷமுற்றுப்பக்தவச்சலனதலின் இஷ்டகாமியங்களைக் கொடுத்தருளுவர்' என்று கூற, அதனைக் கேட்டு, பிரம விஷ்ணுக்கள் மலர்முதலிய பூஜாவுபகரணங்களால் விதிப்படி பூஜித்து, வேதோக்தமாகத் துதித்து இஷ்டசித்திகளையெல்லாமெய்தினர். மற்றொரு கல்பத்தில், சர்வேசுவரனும் காமாரியுமாக விளங்குஞ் சிவபெருமானும் மதனதுரத்தால் தனது தேவியாகிய பார்வதிதேவியாருக்குப் பாதி

சரீரங்கொடுத்து அர்த்தநாரீசுவரெனப் பெயரெய்தி, அடியவர்கட்கெல்லாம் சேவையளித்துக்கொண்டு விளங்குகின்றனர். மற்றொருகாலத்தில் பார்வதிதேவியைத் திருமணம்புரிந்து இமாசலத்திலுள்ள ஓர் குகையில் பூதசேனைகளுடன் அநேககாலம் எழுந்தருளியிருந்து விளையாடினர். அப்பொழுது பார்வதிதேவி தனக்கிருக்கும் * காளவடிவம் நீங்கிக் கௌரவவடிவத்தை யடைதற்கு விரும்பி அதனை யெவ்வாறு அடைவது என்று யோசித்து, தவஞ்செய்வதாகத்தீர்மானித்து, கணவன்தன் மணவினைமுன்னரே கங்கையை முடிமேலணிந்திருத்தலின் இதுபோல இன்னும் வேறெவரையேனும் விருப்பமுறாமல், தன் தோழியாகிய உத்தாமகுஸுமை யென்பவளையும் தன் புதல்வனாகிய ¶ வீரகனையும் ஒவ்வொரு வாயலிலிருத்தி வேறொரு ஸ்திரீயையும் உள்ளே விடப்படாதென்று உறுதியாகக் கட்டளையிட்டு அவர்கள் அவ்வாறே வாயில்காப்பதாகக் கூறக்கேட்டுக்கொண்டு தபோவனத்தையணுகி, தடாகங்களுடையதும் அரசர்கள் பூர்வம் வசித்துத் தவஞ்செய்ததும் ஜயந்தியென்னும் பெயருடையதுமான அங்கிருக்கும் ஒரு குகையைக்கண்டு இதுவே நல்லவிடமென்று துணிந்து அங்கேயே தவஞ்செய்துகொண்டிருந்தனள்.

முநிவர்களே! இவ்வாறு ஜகன்மாதாவாகிய உமாதேவியார் தவஞ்செய்துகொண்டிருக்கையில், ஆடி யென்னும் பெயருடைய அசுரனொருவன் பிரமனை நோக்கிப் பலவிதமாகத் தவஞ்செய்ய, பிரமன் பிரத்தியக்ஷமாய் யாதுவரம் வேண்டும்?எனக்கேட்க, யான் இறவாதிருக்க வரமளிக்கவேண்டும்எனக் கோர, பிரமன் உனக்கு இவ்வுடம்புடனே இறவாத்தன்மை கைகூடாது. அது கைகூடுதற்கு ஏதேனுங் காரணங்கோருக என, அதைக் கேட்ட தைத்தியன் கடவுளே! சந்திர தேவதாகமான நக்ஷத்திரத்தோடு கூடிய உருத்திர தேவதாகமான முகூர்த்தத்தில் இந்திரன் மேகசாலங்களாற் பெருமழை பெய்விக்கையில் யான் மகா கபடியாய் வேற்றுருவம் எப்பொழுதெடுப்பேனோ அப்பொழுது மரணமடையவேண்டும். எனக் கேட்க, பிரமதேவன் அவ்வாறே நடக்குமென்று கூறி அந்தர்த்தானமாயினன். அவ்வரத்தால் இறுமாப்புற்ற அசுரன் மதுபானஞ்செய்து மதங்கொண்டு ஹிமாசலத்தை யடைந்து சிவபெருமான் எழுந்தருளி யிருக்குங் குகையைக்கண்டு, குகாமுகத்திற் காவலிருக்கும் வீரகனையும் உத்தாமகுஸ்மையையும் பார்த்து அவர்களோடு வசனித்து அவர்களால் பார்வதிதேவி தவஞ்செய்யச்சென்றிருப்பது முதலிய சங்கதிகளை யறிந்துகொண்டு, இப்பொழுது சிவபெருமான் தன் மனைவியைப் பிரிந்திருப்பதால் மதன விரகமுற்றிருக்கலாமென்று நினைத்து, நான் இவ்வலிய வடிவுடன் உட்புகுவதானால் துவாரபாலகர் தடுப்பரென்று அவ்வடிவை நீங்கி, சர்ப்பரூபந்தரித்துத் துவாரபாலக ரறியவொட்டாமல் குகைக்குட் பிரவேசித்து, திவ்யமான கௌரீரூபத்தை க்ஷணநேரத்தில் வகித்துச் சிவபெருமான் சமீபத்

* காளநிறம் - கருநிறம். ¶ வீரகன் - நந்திதேவருக்கோர் திருநாமம்.

திற்சென்று, விரகவாதனை யுடையாள்போல எதிர்நின்று, சந்திரசேகரா! நான் பார்வதீதேவி. நான் அருந்தவஞ்செய்து பொன்னிறமான தேகத்தை யடைந்துவந்துள்ளேன். யான் விரகமுற்றிருக்கின்றேன். என்னைக் கலந்தணையவேண்டும் எனக் கூறினன். அதனைக்கேட்ட சிவபெருமான் ஒன்றுமறியார்போன்று அப்படியா? என் மனைவியா? வந்தனையா? என்று தனது திருக்கரத்தால் ஆலிங்கனஞ்செய்து புறத்தொழிலியற்றிக்கிரீடிக்க யத்தனிக்கையில், மாயாவிகாரமான அந்த ஸ்திரீயினிடத்தில் மயனால் நிர்மிக்கப்பட்டு விளங்கும் ஆண்குறியொன்றினைக்கண்டு, மாயைசெய்ய வந்தவன் மிக்க மதியீனனேயாம். இவனைத் திரிசூலத்தாற் சங்கரிப்பேனென்று கருதியும், அவன் கருதியபடியே தன்னைப் புணர்ந்ததாகத் திருப்தியடையட்டுமென்று திருவுள்ளங்கொண்டு விசேஷமாக ரதிக்கிரீடை செய்வார்போலத் தோற்றுவிக்க, ஸ்திரீவேஷமுற்று வந்திருக்கும் அசுரன் இச்சமையத்தில் சிவபெருமானை எவ்வகையிலாவது சங்கரிக்கவேண்டுமென்னுந் துன்மார்க்க எண்ணங்கொண்டு, இவருடைய குறியை யறுக்கவேண்டுமென்று எத்தனிக்கையில், சிவபெருமான் அவன் கருத்தை யுணர்ந்து, தனது குறியினின்றும் சூலம் பாசம் முதலியவற்றை யுண்டுசெய்தனர். அதனையுணர்ந்த ஆடி தன் பெண் வடிவு நீங்கிப் புருஷவடிவை யடைய, அவனை அவ்வாயுதங்களாலடிக்க, அவன் சிவபெருமானை நோக்கி, சர்வேசுவரா! நான் துர்ப்புத்தியுடைய அசுரன்! தேவரீரால் அடிபட்டனன். நான் இறந்த செய்தியை என் தமயன் கேட்டு மகா பல பராக்கிரமசாலியாய், தேவரீரைச் சங்கரிக்கக்கருதி, பார்வதிதேவியின் வடிவுகொண்டு இங்கு வந்து உம்மைக்கொல்வான்; அல்லது என்னைப்போலவே யிறப்பான் என்று சொல்லிக்கொண்டே நிலமிசை விழுந்து உயிர் நீங்கினன். அவனது தேகத்தை அப்புறப்படுத்திப் புத்திரனாகிய நந்திதேவருக்கு இச்செய்தியையும், மாதர்கள் மாயையில் விசேடித்தவர்களென்றுங் கூறி, அவ்வசுரன் வழங்கிய வார்த்தையை மனத்திற் கொண்டிருந்தனர். இது நிற்க.

சௌநகாதிமுநிவர்களே! தவச்செயல் மேற்கொண்டிருந்த பார்வதிதேவியார் புடபாக சோபிதமான ஜாம்பூநதநிறமுற்றுக் கௌரியென்னும் பெயருடன் திருக்கைலாயகிரியையடைய, உத்தாமகுஸ்மையென்னுந் தோழியானவள் தன் தலைவியும் லோகநாயகியும் பசுமைநிறமொழிந்து பொன்னிறமுமாக விளங்கும் பார்வதிதேவியைப்பார்த்துச் சமீபித்து நமஸ்கரித்து, தாயே! உன் நாயகராகிய சர்வேசுவரனைக் காமார்த்தனாகவொட்டாமற்காக்க எனக்குச் சக்தியில்லாமற் போயிற்று. உன் புத்திரனான வீரகனது அசாக்கிரதையால் அதி யௌவநஸ்திரீயொருத்தி சிவபெருமானை யடைய, இளஞ்சந்திரனையணிந்த நமதிறைவன் அவளுடன் அநேகவிதமாகக் கிரீடித்திருக்கையில், யானும் அவ்விரதிசின்னத்தைக் கண்டு நாணமுற்றேன் எனக் கூறினள். அதனைக்கேட்ட பார்வதிதேவி வீரகன்பேரிற் கடுங்கோபங்கொண்டு அவனைச் சபிக்கவேண்டுமென்று கருதி, கிழக்குமுக

மாகத் திரும்பி நீர்கொண்டு ஆசமனீயஞ்செய்து, என்புதல்வனான வீரகன் பிறஸ்திரீகளை உள்ளே அனுப்புவதில்லையென்று என்னிடம் நியமஞ்செய்து கொண்டு தவறிய குற்றத்தினால் நரை திரை மூப்பினையடையும் மானுட தேகமுற்று ஓர் பிராமணனுக்குப் புத்திரனாக என்று சபித்து, நான் இங்கே சிறிதுகாலம் இல்லாமையின், இவ்வளவு காரியங்கள் நடந்தனவென்று ஆச்சரியமுற்றுத் தன் அந்தப்புரத்தை யடைந்து, அங்கிருக்கும் தன் புத்திரனான வீரகனைக் கோபத்துடன் பார்க்க, வீரகன் பார்வதியின் கோபத்தைப் பார்வையாலேயே உணர்ந்து, தாயின் திருவடிகளில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தாயே! ஆடியென்னும் அசுரன் மாயையாற் சர்வேசுவரன் இறவாமற் பிழைத்தது உனது தவப்பலனே: நீயே பாக்யவதி: எனக் கூறக்கேட்டுத் துக்கித்து, வீரகா! உன் அஜாக்கிரதையாலல்லவா இவ்வளவு தீமைகள் விளைந்தன. ஆதலின் நீ அஜ்ஞானத்துடன் உலகத்தில் சிலாதன் என்னும் வேதியனுக்குப் புத்திரனாகத் தோன்றி, பன்னிரண்டு வருஷங்கள் அவனிடம் வளர்ந்து, பின்னர் சாபவிமோசனம் பெற்று அத்தேகத்துடனே யெனக்குப் புத்திரனாவாய் என்று கூறினள். அவ்வாறே வீரகன் சிலாதமுநிவன் புதல்வனாய்ச் சனித்து, தனக்கு நியமித்துள்ள பன்னிரு வருஷங்களும் தவஞ்செய்துகொண்டிருந்து கிரமமாகப் பார்வதி தேவியாரிடம் மீண்டும் புதல்வனாக வந்துசேர்ந்தனன் எனக்கூறிய ஸூத முநிவரை நோக்கி ஸ்வாமீ! வீரகன் சிலாதபுத்திரனாகப் பிறந்த சரிதத்தையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸூத முநிவர் சொல்லலாயினர்.

சிலாதர் என்றது காரணப்பெயர்: [சிலை - மலை. பெருமலையை ஹதஞ்செய்தவரென்பது பொருள்.] அவர் பிள்ளைமைப் பருவத்தில் தன் வீட்டிற்குப் பிச்சைக்குவந்த வேதியனது அன்னபாத்திரத்தில் அவ்வந்தணனறியாது ஓர் சிறுகல்லை யெறிந்தனர். அந்தணன் அச்சிறு கல்லுடன் உணவைப் புசித்தனன். அவர் வயது வளருந்தோறும் விவேகவானாகி ஞான முதலியன குறைவின்றிப் பெற்றுத் தமது தவப்பலனால் பரலோகங்களைத் தோழர்களுடன் சென்று பார்த்துவருகையில், யமபுரத்தில் அந்தகனது அரசிருக்கைக்கருகே ஓர் பெரும்பாறை யிருக்கக்கண்டு, இஃதென்ன? இந் நல்லவிடத்திற் பெரும்பாறை யிருக்கின்றதே யென விசாரிக்க, உலகத்தில் ஒருவன் சற்பாத்திரமான பிராமணனது போஜனத்தில் அவிவேகத்தாற் கல்லெறிந்தனன். அதுவேயிப்பெரும்பாறையாக வளர்ந்திருக்கிறது. அச்சிறுவனிறந்தபின்னர் இவ்வளவையும் எங்கள் தண்டனையைப் பட்டுக்கொண்டு அவன் புசிக்கவேண்டும் என்றார்கள். அப்பொழுது அவனுக்கு இது தன்னுடைய செயலேயென்று தெரிந்து மனந்துடித்து, இதற்கு ஏதேனும் பரிகாரமுளதோ? என வினவ, யமகிங்கரர் அவன் இவ்வளவு பாறையைப் பூமியிலேயே அரைத்துக் குடித்தால் இது கரையுமென்றார்கள். அதனை யுட்கொண்டு முநிவர் தனது நகரத்தையடைந்து அவ்வளவினையுடைய பாறையொன்றினைக் குறிப்பிட்டு, சிவயோகத்திருப்பதும்

அதிற் சிறிதுடைத்துப் பொடித்துக் கரைத்துக்குடிப்பதுமாக அம்மலை வடிவான பாறையைக் கரைத்துவிட்டனர். யமபுரத்துத் தனக்காக வளர்ந்திருந்த சிலையை ஹதஞ்செய்த காரணத்தாற் சிலாதரெனப் பெயரெய்தினர். பின் ஒருகாலத்தில் அவர் சகல வேதாகமங்களை யுணர்ந்த சிவஞானச் செல்வராயிருந்தும், புத்திரப்பேறில்லார்க்கு முத்தியின்று என்பதை யுணர்ந்தவராய், அதனை விரும்பித் திருவையாற்றை யடைந்து அயனரிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவபூசை முடித்துத் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ் செய்து, சிவபெருமானுடைய திருமுன்னே நின்று வணங்கி, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துப் பஞ்சாக்கினிமத்தியில் ஒருகாலினின்று அநேக நாள்கள் தவஞ் செய்துகொண்டிருந்தார். சிவபெருமான் அத் தவத்திற்கிரங்கி ருஷபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி வந்து, முனிவனே! நீ விரும்பிய வரத்தைக் கேளென்ன, அவர் எம்பெருமானே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்குப் பெருமான் மகிழ்ந்து, சகல சற்குணங்களும் நிரம்பியஒரு புத்திரன் பதினறுவயதுடையவனாய் நீ செய்யும் யாகபூமியில் உழுபடையின்மூலமாக வெளிப்படுவானென்று கூறி மறைந்தனர். பின்னர் சிலாத முனிவர் யாகஞ்செய்யப் பொன்னேர் பூட்டி யாகசாலையை யுழுதபோது, அக் கொழுவின்மூலமாக ஒரு மாணிக்கப்பெட்டி தோன்ற, அதனை முனிவர் திறந்துபார்த்தனர்; அதனுள்ளே நெற்றிக்கண்ணும், இளம்பிறை தவழுஞ் சடையும், நான்கு தோள்களுமாக விளங்குஞ் சிவமூர்த்தத்தைக் கண்டு மயங்கித் தோத்திரஞ்செய்து நின்றார். அப்போது சிவபெருமான் அசரீரியாக முனிவனே! அப்பெட்டியை மூடித் திற என்று கூறியருள, அவ்வாறே மூடித் திறந்தபொழுது, அவ் வெம்பெருமான் ஒரு இளங்குழவியாகி அழுதனர். முனிவர் அக்குழந்தையை யெடுத்துத் தமது மனைவியாரிடத்துக் கொடுத்துப் பாலூட்டி வளர்த்துச் செப்பேசுவரரென்று திருப்பெயர் தரித்து வளர்த்துவருங்கால், அவருக்குப் பதினறு வயது வர, அவரது தாய்தந்தையர் தம் புத்திரரது அற்ப ஆயுளைக்குறித்து வருந்துதலை யுணர்ந்து, அஞ்சாதீர்கள்; யான் அழியாவரம் பெறுகின்றேனென்று தேறுதல் கூறித் திருக்கோயிலை யடைந்து அயனரி தீர்த்த மத்தியினின்று அருந்தவஞ்செய்ய, பெருமான் ருஷபவாகனத்தின்மேல் உமாதேவியாரோடு எழுந்தருளி நித்தியதேகந் தந்து, அவரது திருமுடியின்மேல் திருக்கரம்வைத்து தீக்ஷை புரிந்து அவருக்குரிய பண்டைய சாரூப்பிய மளித்து, திருநந்திதேவர் என்று அபிஷேகத் திருநாமஞ்சாத்தி, குருசந்தானம் விளங்க வேதசிவாகமங்களைச் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு உபதேசிக்கக் கட்டளையிட்டருளி, சுயசை யென்னுங் கன்னிகையைத் திருமணம் புணர்த்திச் சிவகணங்களுக்குத் தலைவராயிருந்து சகல சிவாலயங்களிலும் அதிகாரஞ்செலுத்தும்படி சுரிகையும் பிரம்புங் கொடுத்துத் திருமுடிசூட்டியருளினர். முனிவர்களே! நந்தியெம்பெருமான் பார்வதிதேவி சாபப்படி சிலாத புத்திரராகத் தோன்றிய சரிதமுஞ் சொன்னேன்.

இது நிற்க : பொன்னிறத்துடன் வந்த பிராட்டி திரிபுரதகனராகிய சிவபெருமானைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தனள். சிவபெருமான் முன் ஆடியென்பான் கூறியபடி அவன் தமையன் வந்திலன்; பார்வதியே வந்தனள் என்று சந்தோஷத்துடன் வரவழைத்து ஆநந்தித்திருந்தனர்.

சிறிதுகாலஞ் சென்றபிறகு, தாருவன முநிபன்னியர் பேரழகிகளாய், கற்பின் மேம்பட்டுத் தருக்கெய்தி நிற்றலின், அவர்கள் கற்பையழிக்கவேண்டுமென்று சிவபெருமான் பிரமதகணங்களுடன் பச்சைக்கர்ப்பூரமுதலியன கூட்டிய விபூதியை உடல்முழுதும் உத்தூளனமாகவணிந்து, திகம்பரராய், மயிற்பிஞ்ச புஞ்சங்களைக் கரத்திற்றாங்கி, யோகதண்டத்தில் கட்கம் கதைமுதலியன கட்டித் தொங்கவிடுத்து, பூர்ணசந்திர கண்டமோவென்று சொல்லத்தக்க கபாலத்தைக் கரத்திலேற்று, காந்தியும் யௌவனமுமுற்று, ஸ்திரீகளைப் பிரமிக்கச்செய்து, புன்சிரிப்பாகிய சந்தோஷத்தால் விநோதங்கள் காட்டிக்கொண்டு, ஆகாயத்தில் தோரணமாகக் கட்டிய நீலமலர்களோவென்று சொல்லத்தக்க மனத்திற்கு ரம்மியமான வளைந்த முகத்திற் றொங்குந் தலைமயிரும், சுந்தரமான கறுத்த வளைந்த புருவங்களாற் பிரகாசிக்குந் திருமுகமும், முநிமங்கையர் மோகமுறும்படி பார்த்து அசைந்துகொண்டிருக்கும் மதர்த்துப் பரந்தவிழிகளும், பூரித்த தேகமும், செங்கமலம்போன்ற கரங்களும் பாதங்களும், நல்ல மலர்மாலைகளும், ஆபரணங்களுமுடையராய்த் தாருவனத்தை யடைந்து, பதினன்கு தோஷங்களற்றதும், மந்தர தார மத்திமஸ்வரங்களுடன் கூடியதும், பலவகைத் தாளங்களையுடையதும், ஆரோகண அவரோகணஸ்ருதி மூர்ச்சைகளையுடையதும், இசை ஏழினையுமுடையதுமாய்ப் பலவித பாஷா பேதங்களோடுகூடிய தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரம்புக்கருவியோடு கூடியதாயுள்ள கானத்தைப் பூதகணங்களோடு செய்தும், சிறிதுநேரம் ஆடிக்கொண்டும், ஆச்சரியமாகச் சிரித்துக்கொண்டும், வனத்திலுள்ள பலம் கிழங்கு முதலியவற்றைப் புசித்துக்கொண்டும், நதிகளின் கரையில் வசித்துக்கொண்டும், தன் கணங்களி லொருவராக வந்திருக்கும் விஷ்ணுமூர்த்திக்குத் தனது சாந்தரஸத்தோடுகூடிய நாட்டியத்தைக் காட்டிக்கொண்டிருந்தனர்.

அவ்வாறிருக்கையில்,வசிஷ்டர் மனைவியாகிய அருந்ததிநீங்கமற்ற ஸ்திரீகள் யாவரும் இந்நிச்சலமான வனத்தில் யாரோவொருவன் ஒரு கிராதஸ்திரீயுடன் வந்து மதுரமான திவ்ய பாடல்களைப் பாடிக்கொண்டு, முநிவர்களாச்சிரமமத்தியில் வெட்கமின்றி ஐயமேற்கின்றனன். இவனது சுந்தரமே யற்புதமானது என்று ஆலோசித்துக்கொண்டு அவர்களிற் சிலர் மூர்ச்சித்தனர்; சிலர் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்; சிலர் பெருங்களிப்பாற் கண்ணீர் விட்டனர்; சிலர் காமவிகாரத்தாற் காமசேஷ்டை செய்துகொண்டிருந்தனர்; சிலர் காமத்தால் உடைசோர்ந்தனர். இவ்வாறு அந்தஸ்திரீகள் மன்மதாவஸ்தை பட்டுக்கொண்டு வசிஷ்டபத்தினி நீங்க

மற்றெல்லோரும் காமக்கடலிலாழ்ந்து, அவரோடு எவ்வாறுவது பேச வேண்டுமென்று சில வார்த்தைகள் பேசுவாராயினர்: ஓ சுந்தரா! என் இத் தபோவேடந் தரித்தனை? இத்தவத்தால் யாது பயன்? தவத்தைப்போக சித்தி கருதிச் செய்கின்றது உலகவழக்காதலின் அவ்வகைய போகசித்தியும் உனக்குப் பரதாரங்களாகிய எங்களாற் சித்தியாகும். புண்ணியஹீனனாகிய புருஷனைப் பரஸ்திரீகள் ஒருபொழுதுங் கோரமாட்டார்கள். நாங்கள் உன்னிடத்திற் பெரு விருப்புடையேமாதலின் எங்களை நீ திரஸ்கரிக்க வேண்டாம். அநேக புண்ணியத்தாற் கிடைக்கவேண்டியது உனக்குச் சுலபத்திற் கைகூடும்போது விட்டுவிடவேண்டாம். திவ்விய தேகமுடைய உன்னைக் காணுந்தோறும் எங்கட்குக் கிருபையுண்டாகிறது என்றிதுபோலப் பல பேச்சுகளைப் பேசிக்கொண்டும், இறைவன் பிக்ஷார்த்தமாகச் செல்லுகையில் அவரைப் பின்றொடர்ந்துஞ் செல்வாராயினர். அத்தாருவன ருஷிகள் தமது மங்கையர் கற்புநிலை தவறியவற்றை யறிந்து மனந் தாளாராய், பலவித சாபமொழிகளைப் பகர, அவை சிவபெருமானைச் சிறிதும் அடைந்தில. ஆனால் வசிஷ்டரும் அருந்ததியும் திகம்பரராகவந்தவர் சிவபெருமானென்றும் உடன்வந்த மாது மலையரசபுத்திரியென்றும் கணங்களாக வந்தோர் விஷ்ணுவாதி தேவர்களென்றும் உணர்ந்து பலவிதமாகப் பூசித்தனர். சிவபெருமான் சந்தோஷித்து அருந்ததியை நோக்கி உன் கணவன் வாலிபனாகுகவென்று வரங்கொடுத்தருளினர்.

தாருவன முநிவர் திகம்பரனாகிய சிவபெருமானை யொன்றுஞ் செய்ய இயலாதவர்களாய், தாங்கள் திகம்பரனுக்கிட்ட சாபங்கள் பலியாவாயினும் அதற்குப் பதிலாகப் பலவித ரோகங்களாலும் வறுமையாதி துன்பங்களாலும் பீடிக்கப்பட்டவர்களாய், யாது செய்வோம்? என்று வசிட்டமுநிவரையும் பிரமதேவரையும் வினவி, அது சிவநிந்தையின் பலனென்றுணர்ந்து சிவலிங்கார்ச்சனைசெய்துஎம்பெருமானது கடாக்ஷத்தை யடைந்தனர்.

முநிவர்களே! இதனாற் காமபாதை சிவபெருமானைப் பாதித்ததென்று ஒருபோதுஞ் சொல்லப்படாது. சப்தாதி விஷயங்களும், மாயா சம்பந்தமான போகங்களும் மாயையும் யாவும் அச் சர்வேசுவரனிடத்து லயமடையவேண்டியனவேயாதலின், காமரூபமான சாஞ்சல்லிய தோஷமானது ஆத்மஸ்வரூபியான பரசிவத்துக்குத் தோஷமாகக் கொள்ளப்படாது. உலகத்தில் பதிவிரதாஸ்திரீகளும் சித்தர்களாகிய புருஷர்களுமாகிய இருவரும் இல்லறதருமம் நடத்தி, சற்பாத்திரமாகிய அதிதிகளைப் பூஜிக்கின்றார்களேயன்றி, நீசர்களாயும் தனவான்களாயும் அஜ்ஞானிகளாயும் மோக்ஷஞான மில்லாதவர்களாயும் ரோகவான்களாயும் பதிதர்களாயும் காமக்குரோதாதிகளாலும் சீதோஷ்ணங்களாலும் எப்போதும் துக்கமநுபவித்துப் புத்திரவாஞ்சைமுதலிய விருப்பத்தால் மனோ சாஞ்சல்யப்பட்டுக் கொண்டு அதிதிபூஜைமுதலிய சத்கருமங்களைச் செய்யாது காமத்தாற்

பிடிக்கப்பட்டிருக்குந் தீயோரைப்போன்று இல்லறத்தை மேற்கொண்டவர்களல்லர். உலகத்தில் கிரகஸ்தாச்சிரமத்தை யடைந்தவர்களில், சிவபெருமானையே அதிதியாகக்கொண்டு பன்னிரண்டுவருஷகாலம் ஆசன போஜனம் ஸ்தானமுதலியவற்றினால் உபசரித்தவர்கள் வசிஷ்டரையன்றி யாவரிருக்கின்றனர்? சிவபெருமானைக்கண்ட ருஷிபத்தினிகளில் அவரழகுக்கு மோகமுறாதவர் அவ்வசிஷ்ட முநிவர் மனைவியாகிய அருந்ததியையன்றி யாவரிருக்கின்றனர்? இப்பொழுதும் உலகத்தில் விவாககாலத்தில் வதூவரரிருவரையும் அருந்ததியைப் பார்க்கச்சொல்லி, இவ்வருந்ததியைத் தரிசித்தால் உனக்கு மகா பதிவிரதாஸ்வரூபமும் புத்திரபாக்கிய முதலியனவும் உண்டாகும். இவ்வருந்ததி பூர்வத்தில் சிவபெருமான் பாலவேடந்தரித்துத் திகம்பரராய் வந்தகாலத்திலும் மனங்கலங்காத கற்பினையுடையவள். ஆதலின் அவ்வருந்ததியைத் தரிசித்து, என் கணவன் எப்பொழுதும் என்னிடத்தில் அன்புடையவனாகவும், தனவானாகவும், அன்யஸ்திரீ சங்கமமின்றி யென்னையே கூடி வாழ்ந்து சந்ததிவிருத்தியை யுண்டு செய்யவுந் தயைபுரிய வேண்டுமென்று கூறச்செய்து, அவ்விருவரையும் நமஸ்கரிக்கச்செய்கிறார்கள். அவ்வருந்ததியின் கற்பின் விசேடத்தை யாதென்று சொல்லத்தகும்? சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவனும் மற்றெல்லோருங் காமத்தின்வழி மனஞ்செலுத்தினவர்களேயாவர்.

மகருஷிகளே! எல்லா முநிவர்கட்குஞ் சற்குருவும் பார்வதி நாயகனும் மதனவிகார சூனியனும் தேவதேவனுமாகிய சிவபெருமானுடைய லீலா காமவிகாரமுழுவதையும் உங்கட்குச்சொன்னேன். இன்னுஞ் சிலவற்றைச் சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று ஸூத முநிவர் மகருஷிகளை நோக்கிச் சொல்லலாயினர்.

பதினொன்றாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூத முநிவர் சௌனகாதிமுநிவர்களை நோக்கி, முநிவர்களே! இந்திரன் பூர்வத்தில் யக்ஷர் தானவர் தைத்தியர் முதலானோரைச் சயித்து தேவர் அசுரர் உரகர் முதலாயினோரைத் தன் சுவாதீனஞ்செய்துகொண்டு புலோமசை மனைவியோடும், பேரழகுவாய்ந்த எண்ணிறந்த அப்சரசுகளோடும் இன்பந் துய்த்து மூவுலகங்களையும் அரசுசெய்து காமவிகாரத்தால் மோகமுற்று, தவத்தால் என்புமாத்திரமாயிருக்க இளைத்த தேகமுடைய கௌதமமுநிவருடைய தர்மபத்தினியாகிய அஹல்யாதேவியைப் பர்ணசாலையில் தனித்திருக்கையில், அம்முநிவரை வஞ்சித்துக் காமசுகத்தை அநுபவித்து, அவளைவிட்டுப் பிரியமாட்டாது மோகசித்தத்தால் அங்கேயே யிருந்தனன். இந்திரன் அஹல்யையைப் புணர்ந்துகொண் டிருக்கையில், கௌதமமுநிவர் பழம் கிழங்கு முதலியனவற்றைச் சேகரஞ்

செய்துகொண்டு தன் பர்ணசாலையடைய அஹல்யை, ஐயோ! சர்வேசுவரனேபோன்ற என் கணவனை விட்டு மதியீனமாகக் கற்பழிந்தேனே என்று பயமுற்று ஒன்றுஞ் செய்யமுடியாமல் ஸ்தம்பாகாரமாக நின்றனள். கௌதமர் ஆச்சரியமுங் கோபமுங் கொண்டனர். இந்திரன் மகாமுநிவர் மனைவியைப்புணர்ந்தேனேயென்று பயமும்நாணமுமுற்றுத் துண்ணென்றெழுந்துசெல்ல, கௌதமர் பிரளயகாலாக்நி ருத்திரர்போலக் கொதித்துஅடா துஷ்டா! என்னை வஞ்சித்து என் மனைவியை நீ அந்தரங்கமாகப் புணர்ந்தமையின், காமாதுரத்தாற் பரதார சம்போகஞ்செய்த உனது பீஜங்கள் நிலமிசை விழக்கடவனவென்று தன் கரத்தே வைத்திருந்த யோகதண்டத்தைப் பூமியிலடித்துச் சபித்தனர். அவ்வண்ணமே இந்திரனுடைய விருஷணங்கள் விழுந்துபோயின. அதனால் அவன் வீரியமற்றவனாக, தேவர்கள் யாவருங்கூடி மேஷத்தின் அண்டத்தைக் கொண்டுவந்து இந்திரனுக்கு அண்டமாகச் சேர்த்து வீரியவந்தனாகச் செய்வித்து மேஷவிருஷணனென்று காரணப்பெயர் தந்தனர். இவ்வண்ணம் இந்திரன் மீண்டும் வீரியவந்தனாகச்செய்யப்பட்டதைக்கேள்வியுற்ற கௌதமமுநிவர் இவன் ஓர் பெண்குறியைக் கருதி இவ்வளவு பாடு பட்டமையின், இவன் உடலெல்லாம் பகக்குறி [பெண்குறி] யும் இலங்கையிலிருக்கும் இராவணன் முதலிய ராக்ஷஸர்களால் சுமார் இலக்ஷவருஷங்கள் சிறையிருப்பும் பெறுகவெனச் சபித்தனர். அச்சாபத்தால் இந்திரபட்டம் ஸ்திரமில்லாததாயது. பின்னர் அதி ரூபவதியாய்ப் பரபுருஷனைப் புணர்ந்த அஹல்யையைப் பார்த்து, பெண்ணே! நீ கல்லைப்போல நின்றிருத்தலின் அப்படியே கல்லாகுகவென்று சபிக்க, அஹல்யை தன் கணவனைப் பணிந்து ஸ்வாமீ! இச்சாபம் எனக்கெப்பொழுது நீங்கும்? அதனை விரைவில் விலகும்படி கிருபைசெய்தருளவேண்டும் எனக்கோர, அசுரகுலமாகிய காட்டிற்கு அக்கினியாகிய திருமால் இராமாவதாரஞ் செய்யப்போகிறார், அக்காலத்தில் அவருடைய பரிசத்தால் உன் நிஜவடிவை நீ மீண்டும் அடைவாய் என்று சாபாநுக்கிரகஞ்செய்ய, அஹல்யை அவ்வண்ணமே பாறையாய்க் கிடந்தாள். இந்திரனும் தான் பெற்ற சாபப்படி உடல்முழுதும் பெண் குறியுடையவனாகி, காணுதற்கும் அருவருப்புடன் விஷ்ணுமூர்த்தியை யாராதித்து அவர் கிருபையால் அக்கௌதமர் அநுக்கிரகிக்க அவை பிறர் கண்கட்குக் கண்களாகவும் தன் கண்கட்குமட்டும் யோனிகளாகவுங் காணுமாறு வரம்பெற்று மகிழ்ந்தனன்.

இந்திரன் கௌதமமுநிவரால் இவ்வளவு துன்பத்தை யநுபவித்தும் விவேகமுறாது மீண்டும் ஒருகாலத்தில் காமார்த்தனாகி, பாரிக்ஷிதனென்னும் அரசன் மனைவியும் ரூபலாவண்யங்களுடையவளுமாகிய வபுஷ்டமை யென்னும் பெயருடைய ஸ்திரீயைக்கண்டு அவளது யௌவன சௌபாக்கியத்தை மனத்திற்கொண்டு, எவ்வகையிலேனும் யான் இவளைச் சம்போகஞ்செய்யவேண்டுமென்று கருதிப் பலவகையாக முயன்றும்

பயனுறாது, இறுதியில் மாநுடதேகமாகி அவளது அந்தப்புரத்திற்சென்று பலவிதமாகச் சமயம்பார்த்து வஞ்சிக்க யத்தனித்துந் தன் கோரிக்கை முடிவுறாது வருந்தியிருக்கையில், அவ்வரசன் அசுவமேதயாகஞ் செய்ய, உத்தமலக்ஷணமமைந்த யாகப்பசுவாகிய அப்புரவியைக் கொல்லக்கண்டு, இதுவே நல்லசமையம் இதைவிட்டா லினிக்கிட்டுமோ? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்று கருதி, உயிர்நீத்த அப்புரவியின் தேகத்திற் புக்குநின்றனன்.* யாகமுறைப்படி இறந்த குதிரையின் களேபரத்திற்கும் யாககர்த்தாவின் மனைவிக்குந் தேகசம்பந்தஞ் செய்யவேண்டி அவ்வாறு செய்ய, குதிரையின் குறியை அவ்விராஜஸ்திரீயின் குறியிற்புகுத்த, குதிரையுட் பிரவேசித்திருந்த இந்திரன் தன் விருப்பங் கைகூடிற்றென்று சந்தோஷித்து அவ் வபுஷ்டமையைப் புணர்ந்து திருப்தியடைந்தனன். அந்த யாகத்திற்குப் பசுவாகவந்த புரவியில் இந்திரன் புகுந்து விபசாரஞ்செய்தனனாதலின் அவ் யாகம் பலனற்றதாயிற்று. இந்திரன் காமத்தால் இவ்வகைய அடாத காரியங்களையுஞ் செய்தனன்.

சௌநகாதிமுநிவர்களே! இன்னும் பிறதேவர்களின் காமச்செயல்களையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள்: ஒருகாலத்தில் அக்கினிதேவன் சப்தருஷிகளின் மனைவியர்மீது மோகித்துக் காமவிகாரமுற்று, அம்மாதர்கள் தனக்குச் சுகங்கொடாமையின், விரக்தனாகி வனத்தை யடைந்து மன்மதபாதையுற்றிருக்கையில், அவ்விடத்தில் தெய்விகமாகவும் விதிவசமாகவுஞ் சம்பவித்த கிருத்திகைப்பெண்கள் அறுவரும், மகா பதிவிரதையாகிய அருந்ததி நீங்க வனைய ருஷிபத்தினிகள் அறுவரது வேடந்தாங்கி அக்கினிதேவனுடன் கூடி, அவனைக் காமாதுரத்தினின்றுந் தப்பிப் பிழைக்கச்செய்தனர். அக்கினியும் ஷட்கிருத்திகைகளுடன் கூடிக் களித்தது போல, தன் மனைவியாகிய ஸ்வாகாதேவியுடன் கூடியகாலத்தும் மகிழ்வுற்றிலன். பின்னர் சிறிது காலஞ் சென்றபின்னர், தென்றிசையிலுள்ள மாஹிஷ்மதியென்னும் பட்டணத்தை வேதிபவடிவுடன் அடைந்து, அப்பட்டணத்தரசனாகிய நீலனது அதிசௌந்தரிய யௌவனமுள்ள மனைவியருடன் கிரீடிக்கக்கருதினன். அதனை யறிந்த அரசனாகிய நீலன் உடனே அக்கினிதேவனைப் பிடித்துத் தன் ஊழியக்காரனாகக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டனன். அக்கினிதேவன் அவ்வாறு அநேககாலம் இருந்துகொண்டு ஒருசமயம் மாயையால் ஜ்வாலாரூபமாகப் புறப்பட்டு விருப்பின்படி போயினன்.

* 𑌨𑌿𑌰𑌾𑌯𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌶𑌿𑌶𑍍𑌨𑌂 𑌮𑌹𑌿𑌷𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌥𑍇𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑍇 ॥ 𑌇𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌚𑌨𑌾𑌤𑍍॥
"நிராயத்யாஶ்வஸ்யஶிஶ்நம் மஹிஷ்யுபஸ்தேநிதத்தே"—என்றது ஶ்ருதிவசனம். அசுவமேதத்தில், இதுவேயன்றி, அத்வர்யுவாயுள்ளவனைப் பிரமதேவனாகக்கொண்டு அவனுக்கு அந்த ராஜஸ்ரீயின் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் பலவகையாகவுஞ் சொல்லப்படுகின்றது. ஆயினும் அவ்விஷயங்களை ஈண்டு விரித்தெழுதுவது மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாமாதலின் இதற்குமட்டும் வேதப்பிரமாணங் காட்டினோம்.

உலகங்களுக்கு ஆயுர்ப்பூதமும், மகா பலமுடையவனும் தாவர சங்கமங்களாகிய பிரபஞ்சத்தின் தேகத்தில் பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என ஐவகையாக இயங்குபவனும், உலக முழுதுஞ் சஞ்சரிப்பவனும், திதி புத்திரனாயிருந்தும் இந்திரன் கிருபையால் தெய்வத்தன்மையடைந்தவனும், எப்பொழுதும் யோகிகளாயிருப்பவர்களால் பரமாத்மஸ்வரூபமென்று தியானிக்கப்பட்டவனும், நித்தியனும், ஜகத்சிரேஷ்டனுமாகிய வாயுதேவன் காமத்தாற் பீடிக்கப்பட்டு, பிரமதேவனுக்குப் புத்திரனான குசன் என்பவனது புத்திரனான குசநாபன்பெற்ற நூறுபுத்திரிகள் உருவத்தாலும் இளமையாலும் தேககாந்தியாலும் நாணத்தாலும் சமானரகிதர்களாயிருக்க அவர்கள் கட்டழகைக்கண்டு காமபாணங்களாலடிபட்டு எவ்வகையிலேனும் இவர்களைப் புணரவேண்டுமென்று பலவித மானவுபாயங்களைச்செய்து அவையொன்றனாலும் அவர்களையணையச் சரிப்படாமல், பிரத்யக்ஷமாக அவர்கள்முன் சென்று அன்புடன் சொல்லுகின்றான்: ஓ நூற்றுவராயிருக்கும் ஸ்திரீகளே! யான் வாயுதேவன்; திரிலோகங்களிலுள்ளாராலும் எப்பொழுதும் பூஜிக்கப்படுபவன்; பரமாத்மஸ்வரூபமாகவுள்ளவன்; ஜகத்சிரேஷ்டன்; கிழத்தன்மையும் மரணமுங் கிடையாதவன்; எல்லா வஸ்துக்களையும் அநுபவிக்கிறவன்; எல்லா ஜந்துக்களையுஞ்சிருஷ்டித்தவன்; எல்லாப் பிராணிகட்கும்ஜீவபூதமாகவுள்ளவன்; அமிர்தமயமானவன்; இவ்வகைய சிறப்புவாய்ந்த யான் உங்களைப்பார்த்து யாசிப்பதென்னெனில், மகா காமாதுரமாய் நேரில் வந்திருக்கிற எனக்கு உங்கள் தேகங்களைப் போகார்த்தமாகக் கொடுத்துவிடவேண்டுமென்பதே என, ஸ்திரீகள் யாவரும் அவ்வார்த்தையைக் கேட்டுச் சிரித்து, நீ எவ்வகைய மகிமையுடையுவனாயினும், பரமாத்மாவாயினும், எவ்வித விசேடத்துடன் சிருஷ்டிசெய்யப்பட்டவனாயினும் எப்பரமாத்மாவுக்குப் பிரீதியான பக்தனாயினும், பரமாத்மாவின் அபரரூபியாயினும், காரியநிமித்தமாகச் சனித்தவனாயினுமாகுக. ஓ விருத்தா! நீ எங்கட்குக் கணவனாகவேண்டாம்: நாங்கள் கன்னிகைகளாய்த் தந்தையின் கட்டளையிலிருக்கின்றோமாதலின், எங்கள் பிதா விருப்பமுற்று யாருக்கு எங்களைக் கொடுப்பரோ அவருக்கே நாங்கள் வசியப்படுவோமென, வாயுதேவன் கேட்டு மாச்சரியத்துடன் கூடி, அந்தஸ்திரீகளையெல்லாம் குப்ஜர்களாகவும், விகாரரூபிகளாகவும், ரோகிகளாகவுஞ் செய்தனன். சிறிதுகாலஞ் சென்றபின்னர் அந்த மங்கையருக்குப் பிதாமகனான குசனென்னும் இருடி இவ் விருத்தாந்தங்களை யுணர்ந்து, தனது தபோபலத்தினால் அவ்வனிதையரைப் பண்டுள்ளபடியே திவ்ய யௌவன சௌந்தரிய பாலிகைகளாக்கி வாயுதேவனுக்கே மனைவியராகக் கொடுத்துவிட்டனன். இது நிகழ்ந்தவிடமாகிய குசநாபனுடைய ராச்சியத்திற்கு இப்பொழுதும் கன்யாகுப்ஜமென்னும் பெயர் வழங்குகின்றது. [குப்ஜர் - குறியதேகமுடையவர்.]

முநிவர்களே! பிரளய காலாக்கினியைப்போன்றவனும், பிரசண்டமான கிரணங்களுடையவனும், பயங்கரமான உரோமங்களால் அலங்கரிக்கப்பட்டு நெருப்புமலைபோன்ற விழிகளும், மின்னல்போலப் பிரகாசிக்கும் மீசைகளும், ஆகாயத்திலேயே வசித்தலும், யோகிகளுடைய தியானத்தால் புகழும், பிரமாதிதேவர்களால் ஸதா அர்ச்சனையுமுடைய சூரிய பகவான் துவஷ்டா என்பவனது குமாரத்தியாகிய சஞ்ஞிகையைக் கண்டு காமத்தால் துயருற்று, மனைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தால் பலவிதமான இன்சொல்லால் சஞ்ஞிகையைப் பிரார்த்திக்க; சஞ்ஞிகை சூரியனுடைய வடிவைக்கண்டு, நீ தீக்ஷணமான தேகம்பெற்றிருத்தலின் உன்னுடன் கிரீடிக்க எனக்குச் சத்தியில்லையென, சூரியன் பெண்ணே! யான் நீ விரும்பத்தக்க வடிவை யெடுப்பேன் எனக்கேட்டுப் புன்சிரிப்புடன், உன் அகோரதேஜஸை யொழிக. நீ யென் விருப்பிற்கிணங்குவதுண்மையாயின், என் தந்தையாற் செய்யப்படுஞ் சாணையிலேறுக. உன்னைத் தேவர்களும் என் தந்தையுஞ்சாணைபிடித்து உன் விசேடமான தேஜஸை நீக்குவார்கள். அதனால் மந்ததேஜஸடைவாய். அப்பொழுது உன்னை வரிப்பேன் என்றனள். சூரியன் காமமிகுதியால் அந்தச் சாணையிலேற, தேவர்களும் துவஷ்டாவும் சாணைசெய்ய, அவனுடலினின்றுதிர்ந்த பொடிகளை யெடுத்து, தேவர்கள் ஸுதர்சனாதி ஆயுதங்களைச் செய்துகொண்டனர். அதன்பின்னர் சஞ்ஞிகை சூரியனை மணந்து சிறிதுகாலம் வாழ்ந்திருந்து, மீண்டும் அவன் உடல்வெப்பஞ்சகியாது பெண்குதிரைவடிவேற்று, ஓட, அதனைக்கண்ட சூரியனும் ஆண்குதிரை வடிவேற்றுப் பின் செல்ல அதனைக்கண்ட சஞ்ஞிகை தன் பெண்குறியை மறைத்துக்கொண்டு எதிர்முகமாகநிற்க, சூரியனுடைய ரேதஸு பெண்குதிரையின் முகத்தினில் விழ, அதனை நாசிகாரந்திரவழியாக ஆக்கிராணித்தனள். அதனால் நாசிவழியாக இரண்டு புத்திரர்கள் பிறந்தனர். அவர்கள் தேவ வைத்தியர்களாகிய அச்சுவினிதேவர்கள் எனப்படுவர். பின்னுஞ் சிலகாலஞ் சென்றபின்னர் சஞ்ஞிகை-வைவசுவதமநு-யமன்-யமுனையென்னும் பெண் இவர்களைப் பெற்று, சூரியனது உடல் வெப்பத்திற்காற்றாது கபடமாகத் தன் சாயையை அவனிடம் இருத்த, சூரியன் தன் காமத்தாற் சாயையைப் புணர அதனால் சாயாதேவி சாவனிமநு-சனி-பத்திரையென்னும் பெண் இவர்களைப் பெற்றனள். சூரியன் கன்னிகையாயிருந்த குந்தியால் பிரார்த்திக்கப்பட்டுக் காமார்த்தனாக அவளுடன் சம்போகிக்க, கவசகுண்டலங்களோடு கூடிய ஓர் புத்திரன் [கர்ணன்] பிறக்க, அப்புத்திரனை அவளிடம் விடுத்து வந்தனன்.

க்ஷீராப்தி கடைகையினும், அத்திரிமுநிவர் மனைவியாகிய அநுசூயாதேவி கர்ப்பத்தினின்றுந் தோன்றி, உலகத்துக்கெல்லாம் ஆநந்தகரத்துடன் விளங்குஞ்சந்திரன் விஷ்ணுமூர்த்தியால் பயிர்கட்கும் ஸ்திரீகளுக்கும் பிராமணர்களுக்கும் பிரபுத்தன்மையடைந்து மகாபலபராக்கிரமசாலி

யாய் இராசசூய்யாகஞ்செய்து, தக்ஷபுத்திரிகளாகிய இருபத்தேழு பெண்களை மணஞ்செய்து காமவசத்தால் ரோகிணி யென்பவளிடத்திலேயே அன்புவைத்திருந்து தக்ஷசாபத்தால் க்ஷயரோகமடைந்து, கிருஷ்ணபக்ஷத்தில் தேய்பவனாகவும், எப்பொழுதும் சுரதப்பிரீதி யுடையவனாகவுமாயினன். அவன் வாலிபத்தில், பிருஹஸ்பதி முநிவனுடைய தர்மபத்தினியாகிய தாரையைக் குரு பத்தினியென்று கருதாது காமத்தாற் களவாடித் திருப்தியுறாது அதற்காகப் போர்புரிந்து இந்திராதிதேவர் விருப்பின்படி தாரையைப் பிரஹஸ்பதி முநிவனுக்குக் கொடுத்துத் தன் புத்திரனைத் தாரையினிடந்தோன்றிய புதன் என்பவனைமட்டுங் காத்துக்கொண்டனன்.

பூர்வம் அகோரமான தவஞ்செய்த மித்திராவருணர் விஷ்ணுமூர்த்தியின் தொடையினின்றுந் தோன்றி யாகங்கட்கு அநுசரணையாயிருக்கும் யௌவனமுடைய ஊர்வசியைக்கண்டு மோகித்தவர்களாய்த் தமது ரேதஸை ஒருவன் கும்பத்திலும் ஒருவன் ஜலத்திலுமாக விடுத்தனர். அதில் ஜலத்தினின்றும் வசிஷ்டருதித்தனர். கும்பத்தினின்றும் சத்த சமுத்திரங்களையும் ஆசமனீயஞ் செய்யும் வன்மையும் வடவாமுகாக்கினிபோன்ற காந்தியும் உடைய அகஸ்தியர் தோன்றினர். முநிவர்களே ! உங்களுக்கு இந்திரன் அக்கினி வாயு சூரியன் சந்திரன் மித்திராவருணர் முதலாயினோர் மன்மதவிகாரமுற்று வருந்திய சரிதங்களைச் சுருக்கிச்சொன்னேன்.

பன்னிரண்டாவது

மேற்படி அத்தியாயம்.

சௌநகாதிமுநிவர்களே ! மென்மைத்தன்மை உற்சாகம் பகவத்ஸ்மரணை துஷ்டி புஷ்டி விரக்தி சாந்தி ஸ்நானதானமுதலியவற்றாலும்பிரமசரிய முதலிய விரதங்களாலும் மேம்பட்டு விளங்கிய தக்ஷப்பிரசாபதியும் பூர்வகாலத்தில் காமார்த்தனாயிருந்து, வித்யுத்பர்ணை யென்னும் பரஸ்திரீயைக் கோரினன். எப்பொழுதும் பகவத்தியானமும் எல்லாவற்றிலும் வெறுப்புமுடைய நாரதமுநிவரும் அவ்வித்யுத்பர்ணை யென்பவளைப் பிரமலோகத்திற் கண்டு காமாதுரமாயினர். பிரமதேவரும் தன்னிடத்திற் சிறிதும் விருப்பில்லாத அவ்வித்யுத்பர்ணையைக் கண்டு மோகித்தபொழுது, அவள் பிரமனை விரும்பாமையின், கபிலவர்ணமுடைய பசுவடிவேற்றுப் பலவிதமாகத் துன்பஞ்செய்யப்பெற்று, அதன்பின்னும் தன் காமத்தை யடக்காது, தன் குமாரத்தியாகிய ஸரசுவதி தேவியை யடைந்து மானச வாசக காயிக சிருஷ்டிகளைச் செய்தனர். காசிபர் வமிசத்திற்றோன்றிய மரீசி யென்னும் மகருஷி காமார்த்தனாகித் தக்ஷப்பிரசாபதியை யணுகி அவரது புதல்வியைத் தனக்குக் கொடுக்கும்படி கோர, தக்ஷப்பிரசாபதி அவருக்குத் தன் புத்திரிகளிற் பதின்மூவரை மணஞ்செய்து கொடுக்கப் பெற்று அவர்களோடு பலவிதமாகச் சுகித்து, இப்பிரபஞ்சமுழுவதும்

பூர்ணமாக விளங்குந் தேவாதிகளான புதல்வரைப் பெற்றனன். மகா யோகியும், பிரளயகாலாக்கினிபோன்ற தேஜசுடையவரும், சமுத்திரஜலத்தை உழுந்தளவாகக்கொண்டு ஆசமனஞ்செய்தவரும், விந்தகிரியின் இறுமாப்பை யடக்கினவரும், வாதாவியென்னும் வலிய அசுரனை வாயிற் பெய்தவருமாகிய அகஸ்தியமுனிவரும் காமார்த்தராய் விதர்ப்பராசன் புத்திரியாகிய உலோபாமுத்திரையை மணந்து அவ்வம்மையார் சொற்படி நடந்தனர். தவசிரேஷ்டரும் பிரமநிஷ்டாபரருமாகிய சமீகருஷி ஆகாயத்தினின்று "நீ எனக்குப் பிரியவாளுகவிருந்து உன் பிராணனை யெனக்குக் கொடுத்து என்னைக் காக்கவேண்டும்" என்றுண்டான மதுரம்பொருந்திய வாக்கைக்கேட்டு, ஆஹா! யாரோ திவ்யமானஸ்திரீ என்பேரில் மோகமுற்று இப்படிக் கூறுகின்ருளென்று கருதி மனத்திற் காமங்கொண்டு, தன் சுக்கிலத்தை அங்கிருந்த உலர்ந்த சருகில் விடுப்ப, அச்சுக்கிலத்தால், மகா ரோஷமுடைய ப்ருங்கியென்பவன் ருஷபமுகத்துடன் சனித்தனன். பிருகு குலமாகிய ஆகாயத்துதித்தவர்களாகிய தவசிகளென்னுநக்ஷத்திரங்கட்குச் சந்திரன்போன்ற ருருவென்னும் ருஷி பிரமத்வரையென்னுங் கன்னிகையை மணந்து பலகாலங் காமசுகத்தை யநுபவித்து, பின்னர் அவள் விஷந்தீண்டி யுயிர்விட, ரதிபங்கமுற்றுத் துக்கித்து, என் மனைவியை யிழந்து உயிர் தரியேனென்று மன்மததோஷத்தால் வனத்தை யடைந்து உயிர் நீங்க யத்தனிக்கையில், தேவர்கள் அவனை நோக்கி, நீ பிராணச்சேதஞ் செய்துகொண்டால் மகா பாபியாவாய்: உயிர் நீங்கவேண்டாம்; உன் ஆயுளிற் பாதி அவளுக்குக் கொடுத்தால் அவள் உயிர்பிழைப்பாள்: நீ யவளை அநுபவித்துச் சுகமடையலாம் என, சந்தோஷித்து, அவர்கள் கூறிய வகையே தன் ஆயுளிற் பாதி அவளுக்குக் கொடுக்க, அவள் உயிர்பெற்றுத் தன் கணவனை யாலிங்கனஞ்செய்துகொள்ள, இருவரும் அதுமுதல் சந்தோஷித்து ஒன்றுகூடி வாழ்ந்திருந்தனர்.

அந்தகனுகிய சவனமகாருஷி மகா யோகதவசியாயிருக்கக் கருதி, மழைக்காலத்தில் ஜலத்திலிருந்த பரிசுத்தமான ம்ருத்திகையால் உடலெல்லாம் முத்திரைசெய்துகொண்டு, தன்விழிகளை நாசிமுனையில் நிறுத்திப் பல வருஷங்கள் தவஞ்செய்ய அவருடல் புத்தினுல் மறைக்கப்பட்டது. இவ்வாறிருக்கையில் மங்கைப்பருவமுடைய ஓர் கிராதஸ்திரீ அப்புத்தினைத் தோண்ட அம்மகருஷி அங்கிருந்தெழுந்துவர, அவ்வேடப்பெண் அவரை அரசன்முன் கொண்டுபோய் விடுத்து நடந்த சங்கதியை வெளியிட, அரசன் இவரை மகானென்று அர்க்கியபாத்திய ஆசமனுதிகளா லுபசரித்து அங்கிருத்தி, இவர் கண்கள் பெறவேண்டுமென்று கருதி, அச்சுவினி தேவர்களை வருவித்து அவர்களாற் கண்கள் பெறச்செய்தனன். இவ்வகைய மகாத்மாவான சவனருஷியும் பின்னர் அக்கிராதஸ்திரீயைக்கண்டு மோகித்து வாலிபமாகிய தேகமடைந்து அநேககாலம் அவளுடன் கூடி வாழ்ந்திருந்தனர். ஆமையைப்போலவே நீட்டுவதுஞ் சுருக்குவதுமாகிய

கழுத்தையும், காசிபர் மனைவியர் பதின்மூவரில் விநதையென்பவள் புத்திரரும், யோகத்தியானரும், பரமாத்ம ஞானமும், சாந்த சொரூபமும், எலும்புமாத்திரமான தேகமும், க்ஷீராப்தியிடையிலிருந்து அதிற் சில துளிகளைப் பருகிவருதலால் தாங்கும் உயிருமுடைய பக்ஷீசுவரனென்னு முநிவன் ஒருகாலத்தில் அச்சமுத்திரத்திடையே பெண்களுடன் கூடிச் சுகமநுபவிக்கும் ஆண்களாகிய மீன் நண்டு தவளைமுதலிய சலசரங்களைக் கண்டு, தானும் காமாக்கிரந்தனாய் நானும் இவ்வாறு ஸ்திரீகளுடன்கூடினால் சந்தோஷிப்பேனென்று, சுதன்மனென்னும் அரசனிடஞ் சென்று யாசித்து நல்லஸ்திரீகளை யடைவேனென்று தீர்மானித்து க்ஷீராப்தியை நீங்கி, சுதன்மராசனிடம் வர, அவ்வரசன் பக்ஷீசுவர முநிவனைக்கண்டு,பலவிதமாக வுபசரித்துப் பொற்பீடத்தமர்த்தி,மகாநுபாவரே! தேவரீர்யாது கருதி யிங்கெழுந்தருளினீர்? அதனை வெளியிட்டருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, ருஷீசுவரன் சந்தோஷித்து, அரசனே! யான் காசிப முநிவருக்கும் விநதைக்கும் பிறந்தவன். ஸ்திரீகளைக் கோரிவந்திருக்கின்றேன்; உனக்குக் குமாரத்தியிருப்பின் அவளை யெனக்குக் கொடுக்கவேண்டும் எனக்கேட்க, அவரது பக்ஷிஸ்வரூபத்தை நினைத்து, இவருக்குப் பெண் கொடேனென்றாற் சாபம் வரும்; கொடுப்பேனாகிற் பக்ஷிஸ்வரூபமும் விகாரமுமாயிருக்கின்றனர் என்று, புத்திசாலியாதலின் தீர்க்காலோசனை செய்து, உபாயமொன்று செய்யவேண்டுமென்று கருதி, மகருஷியே! திவ்ய தேகத்தையுடைய பதினைந்து புத்திரிக ளெனக்குளர். அவர்கள் தாமே விரும்பிய வரனை யான் மணம்புரிவிக்க வேண்டியவனேயன்றி என் ஸ்வாதீனமாக ஒருவருக்குக் கொடுக்கக்கூடாதவனாயிருக்கின்றேன். இவ் விஷயத்தைத் தங்களிடம் விண்ணப்பித்தேன் கோபஞ்செய்யவேண்டாம். தேவரீரே என் குமாரத்திகளிருக்கும் அந்தப்புரத்தை யடைந்து தங்களை விரும்பும் பெண் இவளென்றால் அவளை மணஞ் செய்விக்கிறேனென்று அவரை யுள்ளே விடுப்ப, அம்முநிவன் தனது யோகமகத்துவத்தால் மன்மதவடிவமெடுத்து ரூபலாவண்ய யௌவனங்களுடன் கூடி உட்புக, அக்கன்னிகைகள் இம் முநிவனைக்கண்டு, இவ்வகைய சொரூபமுடையவன் யாவன்? மன்மதனேயோ? என்று ஒவ்வொரு கன்னிகையும் தன்னை மணஞ்செய்து கொள்ளும்படி சொல்லினள். இவ்விர்த்தாந்தங்களைக் கேள்வியுற்ற சுதன்மன் அக்கன்னிகைகளையெல்லாம் பக்ஷீசுவர முநிவனுக்கே மணஞ்செய்து கொடுப்பேனென்று, சுக்கிரன்முதலிய கிரகங்கள் சுயக்ஷேத்திரத்தில் உச்சமாகிய திரிகோணமுற்று, புத்திர சௌபாக்கிய சம்பத்துகளைக் கொடுக்கத்தக்கவையாயிருக்கும் நல்ல திவ்ய முகூர்த்தத்தில் அவ்வாறே மணவினை செய்வித்தனன். அம்முநிவன் அம்மங்கையரைப் பெருங்களிப்புடன் கூடி இராஜபோக முதலிய சம்பத்துகளை நெடுங்கால மனுபவித்திருந்து, தன்னைப்போன்ற சிறப்பினையுடைய பல புதல்வர்களைப்பெற்று, ஆயுள் முடிவில் சொர்க்கலோகத்தையடைந்தனன். ஹிமாசலகுகையில் வசித்துக் கொண்டிருக்கும் அதிரூபவதியும் அக்கினிதேவன் குமாரியுமாகிய நல்ல

வயதும், சாண்டிலீயென்னும் பெயருமுடையவளைக் கருடன் கண்டு மதனவஸ்தையுற்று மோகித்து இவளை யெவ்வகையிலேனுஞ் சொர்க்கலோகத்திற்குக்கொண்டுபோகவேண்டுமென்று உத்தேசிக்க,அதனை அச்சாண்டிலீயறிந்து, இக்கருடன் கொடியோனென்று கருதிக் கோபத்துடன், உன் சிறகுகள் அழிக என்று சபிக்க, கருடன் தன் சிறகையிழந்து அப்பெண்ணைப் பலவாறு பிரார்த்திக்க, சிறிது தயையுடன் மீண்டும் சிறகினையடையுமாறு அநுக்கிரகிக்க, சொர்ணமயமான சிறகினை யடைந்து அவளைப் பலவாறு புகழ்ந்து தனது நகரத்தையடைந்தனன். நீண்ட மீசையும் சடையும், சுஷ்கித்த உடலும், கூர்மையான நகங்களுமுடைய விபாண்டக முநிவன் ஒருகாலத்தில் ஓர் நதியையடைந்து ஸ்நானஞ்செய்கையில், அதிதூரத்தில் வருகிற யௌவனமுடைய ஓர் ஸ்திரீயைக்கண்டு மன்மதவிகாரமுற்றுத் தன் சுக்கிலத்தை அந்நதி சலத்தில் ஒழுக்கினன். தெய்வகதியால் அந்தச் சுக்கிலசம்பந்தமான சலத்தை யோர் பெண் மான் பானஞ்செய்து கருவுற்று ருஷ்யசிருங்கமுநிவனைப் பெற்றது. அப்புத்திரனைக்கண்ட விபாண்டகருஷி சவரக்ஷணைசெய்து வளர்த்து முநிவனைப்போலவே உபநயனாதி கிரியைகளும் வேதாத்தியயனமுஞ் செய்வித்தனன். அச்சிறுவன் இளமையிலேயே சாந்தம் இந்திரிய நிக்கிரக முதலிய குணங்களையடைந்து தக்க வயதுற்றகாலத்திலும் சுத்த சாந்த பிரமசாரியாய் இலை கிழங்கு புன்செய் தானியங்களைப் பக்ஷித்துக்கொண்டும் தந்தைக்குப் பக்திசெய்துகொண்டும் வேதபாராயண முதலியன செய்துகொண்டும் ஸ்திரீ புருஷபேதமே தெரியாது இருக்கையில், அங்கதேசத்தில் மழையின்மையால் பெரும்பஞ்சமுண்டாக, அத்தேசத்து மன்னனாகிய உலோமபாதன் இந்த ருஷ்யஸ்ருங்கமுநிவரைத் தன் தேசத்திற்குக் கொண்டுபோனால் தேசம் க்ஷேமமடையுமென்று கருதி அவரை அழைத்துக்கொண்டு போயினன். அங்கே பலவகைப்பட்ட வேசைகள் பலவித சிருங்காரங்களால் இவரை மதிமயக்கவும், அவர் தன்னிடத்துப் பெரியோர் வரக்கண்டால் அவரையுபசரிப்பதுபோலவே அவ்வேசையரையும் உபசரித்து மரியாதை செய்தனர்.

பராவசு என்னும் மகருஷி ஓரரசனுக்கு யாகஞ்செய்விக்குநிமித்தமாகச் சென்றிருக்கையில், தனித்து வனத்திலிருந்த அதி யௌவன சுந்தரமுடைய அவருடைய மனைவியை யவக்கிரீதனென்னும் முநிவன் கண்டு காமாக்கிராந்த சித்தமுடையவனாய் அவளைக் கிரகித்துக்கொண்டு இரதிகேளி யநுபவித்திருக்கையில், பராவசு ருஷியின் தந்தையான ரைப்பியருஷி அதனை யுணர்ந்து, மருகியை விளித்துக் கடுங்கோபங்கொண்டு அவளுடலைத் துண்டித்து அம்மாமிசத்தை அக்கினியில் ஹோமஞ்செய்து, தனது யோகமாயையால் அவளது தோலைச் சேர்த்து மகா கொடுமையுடைய ஓரிராக்ஷஸஸ்திரீயை யுண்டுசெய்து, பெண்ணே! அயோக்கியனான அந்த யவக்கிரீவனை நீ விழுங்கிவிடவேண்டுமென்று விடுப்ப, அக்கொடியஸ்திரீ

தனது மாயாவல்லபத்தால் கோரரூபத்தை நீங்கித் தான் அந்த ருஷி பத்தினி வடிவேற்று, யவக்கிரீவனை யடைந்து, ஓ முநிவனே! என் மாமன் யர்கசாலையில் வந்திருத்தலின் நீ யவனைக் கொன்றுவிட்டால் நாம் பழய படியே சுகித்திருக்கலாமென, அவன் இவ்வஞ்சனையை யறியாது உடன் வந்துகொண்டிருக்கையில், அவ்வரண்யத்தில் சூலபாணியாயிருந்த அசுர னொருவன் யவக்கிரீவனைக் கொன்றுவிட்டு அந்தஸ்திரீயைக் கொண்டு போயினன். பின்னர் யவக்கிரீவன் தந்தை அவ்விடம் வந்து இறந்துகிடக் கும் புத்திரனைக்கண்டு, புத்திரசோகத்தாற் பெருங் கோபங்கொண்டு, ரைப்பியமுநிவனே என் மைந்தனைக் கொன்றவனென்று மனத்திற் சிந் தித்து ரைப்பியமுநிவரை யடைந்து, நீ யென் புத்திரனை மாய்த்தமையின் நீ யுன் புதல்வனு லுயிரொழிகவெனச் சபித்து அவ்வனத்திலேயே தீ மூட்டி மகனது தேகத்தைத் தகனஞ்செய்தனன். சிறிதுகாலஞ் சென்ற பின்னர் ரைப்பியமுநிவன் வனத்திற் சிறிது தூரத்திலிருக்குந் தடாகத்தில் சந்திபாவந்தனஞ்செய்ய, மான்றோலைப் போர்த்துக்கொண்டு போயிருக் கையில், பராவசுருஷி யாகத்தை முடித்துவிட்டு அவ்வரசன் கொடுத்த தானமாகிய பலவகைப் பொருள்களையுங்கொண்டு சந்தோஷத்துடன் தன் இருக்கையை யடைந்தனன். இதற்குள், ரைப்பியமுநிவன் சந்தியாவந்தன முடித்துத் தன் வாசஸ்தலத்திற்குத் திரும்புகையில், பராவசு கண்டு மானென்று சந்தேகித்துப் பயத்துடன் அஸ்திரப் பிரயோகஞ் செய்ய ரைப்பியமுநிவன் வீழ்ந்து உயிர்துறந்தனன். பின்னர்த் தந்தையே இறந் தவனென்று தெரிந்துகொண்ட பராவசுருஷி அன்றிரவிலேயே அவரைத் தகனஞ்செய்தனன். பொழுது புலர்ந்ததும் பராவசு தன் சகோதரராகிய பாரத்துவாஜரிடஞ்சென்று நமது தந்தையாகிய ரைப்பியமுநிவரை மிருக மென்று கருதி மிகவும் பயந்து அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்று விட்டேன். அத்தோஷ நிவிர்த்திக்காக யாது பிராயச்சித்தஞ் செய்யத் தக்கதோ அதனைக் கட்டளையிட்டு என்னை யனுப்பவேண்டும் எனக்கேட்க, பாரத்துவாசர் ஐயோ! இப்பெரும்பாவத்தை நீக்க நீ வல்லவனல்லை. நீ யிங்கேயேயிரு. உனக்காக யான் வனத்திற்குச் சென்று அகோரமான தவஞ்செய்து உன் பிரமஹத்தியை யொழிப்பேன் என்று வனத்தை யடைந்து அதிகமான கடுந்தவஞ்செய்து பிரமஹத்தியை யொழியச்செய்து சிறிது காலத்தில் தன் இருக்கையை படைய, பராவசு அவரைக்கண்ட வுடனே அடா துஷ்டா! தந்தையைக்கொன்று தவஞ்செய்யச்சென்ற நீ யென்னிருக்கையி னுழையற்க. புறம்பே செல்க எனக்கூற, பரத்துவா சர் ஒன்றுந் தோன்றாது ஸ்தம்பாகாரமாக நிற்கையில், அரசனது ராணுவ வீரர்கள் இதனை யுணர்ந்து பாரத்துவாசரைக் கட்டி யிழுத்துக்கொண்டு போய் நர ஹத்தி செய்தவனென்று பலவாறு துன்புறுத்தவும், மகா ஞானியாதலின் சிறிதுங் கோபமின்றி, தனது கையைச் சிரமேற்குவித்து இந்திரா! அக்னீ! வருணா! தேவர்களே! யான் என் தந்தையைக்கொன் றிருப்பேனுகில் மகா பாபியாகிய என்னை நீங்களே கொல்லுங்கள்: அவ்

வாறில்லாதபக்ஷத்தில் அமிருத தாரைகளால் என்னை நனைத்துக் குளிர்ச்சி செய்யுங்கள். யான் இதுவரையில் காலத்தில் ஹோமஞ்செய்தும் பெரியோருக்குப் பணிவிடைசெய்துமிருந்தால் இதுவரையில் இறந்திருக்குஞ் ரைப்பியமுநிவரும், யவக்கிரீவமுநிவரும் உயிர் பெறுவராக என்று பிரார்த்திக்க, தேவர்கள் அநுக்கிரகசித்தத்துடன் பிரசன்னராகித் திவ்வியமான அமிர்த பிந்துக்களால் பாரத்துவாசரை நனைத்து அவருடலிற்பட்ட காய முதலியவற்றை விலக்கி, ரைப்பியமுநிவனையும் யவக்கிரீவ முநிவனையும் மீண்டும் உயிர்பெறச்செய்தார்கள். பாரத்துவாசமுநிவர் சந்தோஷித்துத் தன்னிருக்கையை யடைந்தனர். காமத்தினால் இவ்வகைய தீமைகள் எண்ணிறந்தன நிகழ்ந்துள்ளன.

பிரமநிஷ்டரும் எப்பொழுதும் யோகசமாதியி லிருப்பவரும் க்ஷீணமான சமுசாரதோஷத்தினின்று விலகினவரும் வனத்திலேயே வசிப்பவருமாகிய கௌதமமுநிவர் பெருந்தவஞ் செய்துகொண்டிருக்கையில், இந்திரன் இவர் கடுந்தவஞ் செய்வதுகண்டு இதனால் என்னதீங்குகள் விளையுமோ? என்று பயந்து, இம்முநிவன் தவத்தையழித்து இவனது மனத்தைச் சாஞ்சல்யப்படுத்தவேண்டுமென் றுத்தேசித்து, பலவித புஷ்பங்களுமலர்ந்து திவ்யமான மந்தமாருதம் வீசும் வசந்தகாலத்தில் ஓர் அப்சரஸ்திரீயை அக்கௌதமரிடம் அனுப்ப,கௌதமர் அந்தஸ்திரீயைக் கண்டமாத்திரத்திலேயே மனங்கலங்க, அதற்குள் அவ்வப்சரசு வஸ்திரஹீனமாயெதிர்வர, கௌதமர் அத்திகம்பரியாயிருக்கின்ற ஸ்திரீயைக்கண்டு மன்மத க்ஷோபித மனசுடையவராய், தனது சுக்கிலஸ்கலிதமாக அதனைத் துரோணத்தில் விடுக்க, அத் துரோணத்தினின்றும் வில்லைப்பிடித்தவர்கட்கெல்லாம் ஆசாரியராகிய துரோணர் பிறந்தனர்.

ஒருகாலத்தில் பிரமதேவர் சூரியனைக்கண்டு நீ பூமியில் அரசனாயிருந்து பிரமசரியமுதலிய ஆச்சிரம சம்ரக்ஷணையைச் செய்யவேண்டும் எனக்கூற, அவ்வண்ணமே தேவர்களிற் சிரேஷ்டனாகிய சூரியபகவான் அயோத்தியாபுரியில் உபரிசரவஸு என்னும் பெயர்பெற்ற மன்னனாயிருந்து ஆச்சிரமதருமங்களை நிலைநிறுத்தி, புலி சிங்கமுதலிய துஷ்டமிருகங்களையும் சத்துருக்களையுங் கொன்று அரசுரிமைசெய்து, தருமத்தைநடத்தி * சேனம் வில் அம்புமுதலியன கையிற்றாங்கி ஆகாயத்திற்சஞ்சரிக்கும் விமானத்திலேறி ராச்சியங்களையெல்லாம் சுற்றிப்பார்த்துவருவான். அவ்வாறிருக்கையில் ஒருகாலத்தில் வசந்தருதுவானது சம்பவிக்க, தன் மனைவியர் யாரும் அருகிலிராதபொழுது மன்மதவிகாரமுற்று மனம்வருந்தித் தனக்குவெளிப்பட்டரேதஸைப் பலாச இலையாற்செய்ததொன்னையில்விடுத்து ஐயோ! இவ்வீரியம் வீணாயிற்றே. என் மனைவி அயோத்தியிலிருத்தலின் இது அவளையடைந்தால் அவளோர் புத்திரனைப்பெறுவளே என்று யோசித்து மனம்வருந்த, அதனைக்கண்டசேனம் அரசனே! அதனையெனக்

* சேனம் - டேகை ; இஃதோர் பறவை.

களித்துக் கட்டளைசெய்தால் யான் அயோத்தியையடைந்து உன் மனைவி கையிற் கொடுப்பேனென்று பெற்றுக்கொண்டு ஆகாயமார்க்கமாக அயோத்தியைநோக்கி வருகையில், அதன்மூக்கிற் கௌவப்பெற்றுவரும் பலாசத் தொன்னையைக்கண்ட மற்றொரு படைகை இது மாமிசம்போலும் இதனை நான் கைக்கொள்ள வேண்டுமென்று மனத்திற்கொண்டு அதனோடு சண்டைசெய்ய, அப் பலாசத்தொன்னையிலிருந்த ரேதசு யமுனையாற்றில்விழுந்தது. அந்தச்சலத்திற் பிரமசாபத்தால் மச்சவடிவுற்றிருக்கும் கிரிகையென்னும் அப்சரஸ்திரீ அந்த ரேதஸைப் பானஞ்செய்து அப்பொழுதே கர்ப்பமுற்றுப் பின் பிரசவவாதை யுறுகையில், வலைஞன் ஒருவனெறிந்த வலையிலகப்பட,அவன்அதனை வீட்டிற்குக்கொண்டுவந்துசேதிக்க,அதன் கர்ப்பத்தில் ஆண்குழந்தையொன்றும் பெண்குழந்தையொன்று மிருந்தன. அதனைக்கண்ட வலைஞன் தனக்குக்கிடைத்த பொருளில் சமபாகம் அரசனுக்குக் கொடுக்கவேண்டிய நியதியின்படி விலையுயர்ந்த ரத்தினத்திலுஞ் சிறந்த அப்புத்திரனை உபரிசரவஸுவுக்குக் கொடுத்துவிட்டனன். மன்னவன் அதனைப் பெற்றுக்கொண்டு அச்சிறுவனிடத்திற் பொருந்தியுள்ள ராஜலக்ஷணங்களைக்கண்டு தீர்க்காலோசனைசெய்து இவன் அரசபுத்திரனேயென்பதற்கையமில்லை யென்றுட்கொண்டு அவ்வலைஞனை இச்சிறுவன் வரலாறு யாதென்றுவினவ, வலைஞன் தான் வலையெறிந்ததிற்கிடைத்த மீனைச் சேதிக்க அதின்வயிற்றில் இரண்டு குழந்தைகளிருந்தன. எப்பொருள் ஒருவனுக்குக் கிடைப்பினும்அதிற்பாதிமன்னவனுக்குக்கொடுக்கவேண்டுமென்னும் முறைப்படி தங்கட்குப் புத்திரனை யளித்தனனென்றான். அதனால் அம்மன்னன் தன்வீரியத்தைச் சேனத்தின் மூலமாக அனுப்புகையில் அது யமுனையாற்றில் விழுந்ததால் அதினின்று தோன்றியதேயன்றி வேறன்றெனத் தெரிந்துகொண்டு மகாசந்தோஷத்துடன் அருமைபாராட்டி வளர்த்து வேதவிதிப்படி சமஸ்காரஞ்செய்து உபநயனமுடித்துத் தனது மச்சதேசத்திற்கு மன்னனாக்கி மகுடாபிஷேகஞ் செய்வித்தனன். அவ்வலைஞன் தன் புத்திரியைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து, தன் தந்தை வமிசத்திலிருந்த முதியள்பெயரால் மார்த்தண்டி யென்றும்,யமுனைநதியினின்று தோன்றினவளாகிய காரணத்தால் அந்நதியின் பெயர்களொன்றால் கோகினியென்றும், கிரிகையென்பவள் மச்சவடிவமாய்ப் பெற்றதால் கிரிஜாவென்றும் பெயருறத்தக்க அப்பெண்ணுக்குச் சத்தியவதி யென்று பெயரிட்டனன். அவள் தன் தந்தைக்குரிய படகினை யமுனையாற்றி லோட்டிக்கொண்டிருந்தனள். தெய்வகதியாகப் பராசரமுநிவர் அவ்வோடமிவர்ந்து நதியைத்தாண்டுகையில் அப்பெண்ணினுடைய பூரணசந்திரன்போன்ற முகமும் நீலோற்பலமலர்போன்ற தேககாந்தியும், செம்பவளத்துண்டுபோன்ற அதரமும், வள்ளைக்கொடிபோன்ற செவியும், சேற்கெண்டைபோன்ற விழியும், கமலமொட்டுபோன்ற குசங்களும், சுருங்கிய இடையும் அதிசுந்தர அவயவங்களும் தன்மனத்தைக் கிரகிக்க மன்மதவாதையுற்று மனம்வருந்தி மச்சகெந்தியென்று காரணநாமஞ் சொல்லும்படி துர்மணமு

டைத்தாயிருந்த அச்சுந்தரமாதைப் பரிமளகெந்தியென்னுஞ் சாரண நாமமுடையவளாகச்செய்து, அதன்பின்னர் அவளைப் புணர்ந்தனர். அப்பொழுது மகாத்மாவான வியாஸபகவான் தோன்றி, அவர் சாந்திசமதமாதி சற்குணங்களையுடையவராயிருந்தும் தேவர்களது நன்மையைக்கருதி விசித்திர வீரியன் சித்திராங்கதன் இறந்தபின்னர் அவன் மனைவியரைப்புணர்ந்து த்ருஷராஷ்டிரன் பாண்டு விதுரன் என்னும் மூன்று மன்னர்களை யுண்டுசெய்தனர். பின்னொருகாலத்தில் ஆரண்யத்தில் அரணிமிதித்து அதினிடமாக அக்கினியோடு ஸுகரென்னும் பரிசுத்தப் பிரமஞானியைப் புத்திரராகப் பெற்றனர். அந்த ஸுகமகாருஷி கௌரவம் கபிலம் கிருஷ்ணம் நீலம் என்னும் பெயரையுடைய மஹாத்மாக்களாகிய நான்குபுத்திரரையும்யோக சாரியான ஒரு புத்திரியையும் பெற்றுக்கொண்டனர். உடல்முழுதுங் கபால மாலையணிந்துள்ள வாமசிரமுனிவன் பூர்வத்தில் நாகலோகத்திருந்த ஒரு கட்கத்தைக்கொண்டு வரவேண்டுமென்று யத்தனித்து பாதாளத்தையடைந்து, ஓர் யாககுண்டம் நியமித்துச் சுற்றிலும் முளையடித்து அதனைப் பஞ்ச வர்ணமான நூல்சுற்றிக்கட்டி ஓர்வகையான ஜெபஹோமஞ்செய்து அதனால் பாதாளலோகத்தைச் சுஷ்கிக்கச்செய்ய, அங்கிருந்த நாகங்கள் வருந்தி அந்தக் கட்கத்தை அவருக்களித்தன. அப்பொழுது அங்கிருந்த ஒரு வேசை நிர்வாணமாயிருக்க அவளைக்கண்டு காமத்தால் மோகமுற்று, இக் கட்கத்தால் எனக்கு யாதுபலன் என்று நினைத்துத் தான் ஹோமஞ்செய்து கொண்டிருந்த ஸ்ருவத்தைவிட்டுவிட்டுப்பூர்ணாஹுதியுஞ்செய்யாதெழுந்து வியாகுலமானமனத்துடன் அந்த நாகதாசியுடன் ரமித்தனன். இவ்வாறு மஹருஷியான ஒருவன் காமாந்தமுற்று ஒருவேசையால் வஞ்சிக்கப்பட்டனனல்லவா? அந்தச்சுரதமுடிவில் இவர் விரதபங்கமுற்றமையின்பன்னகங்கள் அக் கட்கத்தைப் பண்டுபோலக் கொண்டுபோயின. சௌநகாதிமகருஷிகளே! மன்மதனால் காமபாதையுற்று வருந்திய மஹருஷிகளின் சரிதங்களையெல்லாம் ஒருவாறு உங்கட்குச் சுருக்கிச் சொன்னேன். இன்னும் சிலவற்றை யுங்கட்குச் சொல்லுகிறேன்.

பதின்மூன்றாவது

மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்களே! க்ஷத்திரிய குலமணியாயும் காதிராசன் புத்திரனாயும்விளங்கும்விஸ்வாமித்திரமுனிவர்பூர்வம்வசிஷ்டமுனிவருடைய விரதலக்ஷ்மியைக்கண்டு மனத்தில் அழுக்காறுற்றுத் தான் பிராமணத்துவமடைந்து திரிலோகங்களையும் வருத்தவேண்டுமென்று தீர்மானித்துத் தீக்ஷைசெய்து வனத்தையடைந்து உடல்முழுதும் இளைக்கும்படி அநேககாலம் அருந்தவஞ்செய்ய, தேவர்கள் கண்டு இவன் செய்யுந் தவத்தால் என்ன விபரீதம் விளையுமோவென்று மனம் வருந்தி அவனது தவத்தையழிக்கக்கருதி, அவ்விஸ்வாமித்திரரது ஆச்சிரமத்திற்கு மேநகை

யென்னும் அப்சரஸ்திரீயை யனுப்ப, அவர் அவளைக்கண்டு மோகித்து மனம் வருந்திக் காமராகங்களின் வசமாயினர். அதேமாதிரியாகத் தேவர் தானவர்களாலும் வெல்லற்கரிய வல்லபமுடைய சும்ப நிசும்பர் மகா ரூப யௌவன சுந்தரமுடைய * கோபேந்திர கன்னியைக்கண்டு மோகித்து இருவரும் ஒருவரோடொருவர் போர்புரிந்து மாண்டனர். அந்தச் சும்ப நிசும்பர்கட்குப் புத்திரரும் ஒருவராலுஞ் செயிக்கப்படாதவருமாகிய சுந் தோபசுந்தர் திலோத்தமை யென்னும் அப்சரஸ்திரீயைக் கண்டு காமத் தாற் கவரப்பட்ட மனமுடையவராய் இருவரும் ஒருவரோடொருவர் போர்புரிந்திறந்தனர். இக்ஷுவாகு வமிசத்திற்றோன்றிய ஒருவன் இந்திர புரியைப்போன்ற இராச்சியத்தை யரசுசெய்துகொண்டிருந்து ஒருகாலத் தில் தண்டகாரண்யஞ்சென்று சுக்கிரபகவான் குமாரியாகிய சூரியப்பிரபை யைப்பார்த்துக் காமமோகிதனாய் அவளைக் காந்தர்வமணத்தாற் கலக்க, சுக்கிராச்சாரியார் தெரிந்துகொண்டு அவனோடு எட்டுநாள் அகோரமான யுத்தஞ்செய்து தேவாசுரர்கட்கும் ஜெயிக்கமுடியாத அவனைப் பாசத்தாற் கட்டித்தண்டித்து, இறுதியில் அவனை இராச்சியத்துடன் சுட்டெரித்தனர். அந்த யுத்தபூமி பாணங்களாற் சுடப்பட்டு நாளதுவரையில் புல் பூண்டுமு தலியன வொன்றுமுளையாதிருக்கின்றது. பூர்வம் மன்மதன் சிவபெருமா னது தீவிழியாற் சாம்பரானபின்னர்,அவன் மனைவியாகிய இரதிதேவி மயன் வீட்டில் சுந்தரவடிவுடன் பிறந்திருக்க,சம்பரன் என்னும் அசுரன் அவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோக, அவ்விரதி மரத்தாற்பதுமையொன்று செய்து அதனை மணிபணிமுதலியவற்றா னலங்கரித்துத் தன் யோகமாயை யால் தன்னைப்போலும் வடிவுடையதாகச்செய்து பிராணதாரணைசெய்து தனக்குப்பதிலாக அப்பதுமையைச் சம்பரன் வீட்டிலிருத்தி அவனைமோ சஞ்செய்து தன் கணவனாகப்பிறந்திருக்கிற பிரத்யும்னனிடம் போயினள். அதன்பின்னர் கபடவேஷமுற்றுள்ள பதுமையை மயன் புத்திரியாகிய மாயாவதியேயென்று கருதிய சம்பரன் மகா காமசித்தத்தை யுடையவ னாய் அதனுடன் இரவும்பகலும்கிரீடித்துக்கொண்டிருந்தனன். இதுநிற்க: கருமலைபோன்ற தேகமும் பத்துமுகமும் பார்த்தற்குப் பயங்கரமான அகோரரூபமும் இருபதுபுயங்களும் உலகமுழுதிலும் பராக்கிரமமுமுடைய வனாய் விச்சிரவசுவுக்கும்கேசியென்பாளுக்கும்புத்திரனானஇராவணன்தனக் குச் சமானமான மேகநாதனென்னும் புத்திரனைச் சகாயமாகக்கொண்டு இந்திரனைப் பிடித்துப் பாசத்தாற்கட்டிச் சிறையிலிட்டுத் திரிலோகங்களி லும் அரசுசெலுத்தி, அதிரூபசௌந்தரியமுடைய அநேக அப்சரஸ்திரீக ளோடுங் கிரீடித்துக்கொண்டிருந்தும், மயன் என்பவன்புதல்வியாகிய மந் தோதரியை மணந்து சுகித்துக்கொண்டும், இவ்வாறு பெருஞ்செல்வமும் பலஸ்திரீகளின் சுகமுமுடையவனாயிருந்து, பரஸ்திரீகளைப் புணரவேண்டு மென்னுங் கருத்தாற் காம மோகிதமான சித்தத்துட னிருந்தனன்.

* கிருஷ்ணமூர்த்திக்கு முன்னுதித்த மாயை.

இச் சம்பரனுடைய மாயாமனைவியாகிய மரப்பதுமையின் கட்டழகினைத் தன் கண்களிருபதாலுங்கண்டு காமபாதையுட்கொண்டு, எவ்வகையிலேனும் அவளைக் கொண்டுவரவேண்டுமென்று கருதித் தன் சைநியங்களும் மந்திரிமார்களும் உடன்வரப் பாதாளலோகத்தையடைந்து அங்கேவிஸ்வகர்மனால் நிர்மிக்கப்பட்ட பலரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதாய்ச் சுவர்க்கலோகத்திலும் எண்மடங்கு விசேடித்த ஐசுவரியத்தையுடைய அச்சம்பரன் மாளிகையிற் பிரவேசித்த பொழுதே, மயனால் நிருமிக்கப்பட்டிருக்கும் சூத்திரபாசங்களாற் கட்டப்பட்டு வச்சிரமயமான காராக்கிரகத்திற் பந்திக்கப்பட்டு அங்குள்ள சூத்திரங்களாகிய மேஷங்களால் முட்டப்பட்டும் மிதிக்கப்பட்டுந் துன்புற்றான். அதனைக்கேள்வியுற்ற மந்தோதரி மிகவுந் துக்கித்துப் பாதாளமுற்று, தன் தந்தையாகிய மயனைப் பிரார்த்தித்து, எந்தையே! என்கணவனை எவ்விதத்திலேனும் தன் சைநியசகிதமாகச் சிறையினின்றும் நீங்கச் செய்யவேண்டுமென வேண்ட, மயன் துக்கமுற்றுத் தன் புத்திரியாகிய மாயாவதியை விளித்து இவ்விராவணன் என் குமாரியாகிய மந்தோதரியின் கணவனாதலின் உன் நாயகனுக்கு இத வார்த்தைகள்கூறி அவனை விடுவிக்கவேண்டும் எனச்சொல்ல, அவள் அவ்வாறே சம்பரனுக்குணர்த்து வச்சிரமயமான காராக்ருகத்திலிருந்த இராவணனைச் சைநியங்களுடன் விடுவிக்க, இராவணன் நெட்டுயிர்ப்புவிட்டு நாணத்தோடுந் தாகத்தோடும் பசியோடும் வெளியேவருகையில், மாயாதேவி கண்டு அவனோடு சாவகாசமாகப் பேசத்தொடங்கினள்.

இராவணா! உன்முகம் தசாவென்னும் பெயருடைய கரும்பாம்பு போல அகோரமாகவும், உன்ரூபம் பசாசம்போலப் பரம விகாரமாகவுமிருக்கின்றன. இவ்வகைய நீ தேவர்கட்குங் கிடைத்தற்கரிய என்னைப் போன்றஸ்திரீயைக்கிரகிக்கவரின், இஃதுனக்குச் சாத்தியமாமா? நிசாசரா! உலகத்தில் தன்வீட்டில் மனைவியிருக்கப்பரஸ்திரீகளைவிரும்பிப் பாசபத்தனாகித் துக்கமுறுவதேன்? அப்படிக் கோருவதற்காவது ஸ்வஸ்திரீயைக்காட்டிலும் பரஸ்திரீயிடத்தில் என்ன விசேஷமுள்ளது? உன்னைப்போன்ற துஷ்டனுக்குப் பரஸ்திரீகளிடத்தில் விருப்புண்டாவது அவனுடைய ஆயுவை க்ஷீணஞ்செய்து அவயவங்கட்கெல்லாம் பாதையுண்டாக்குவதற்கன்றி வேறு என்ன பிரயோசனத்தையுண்டாக்கும்? அல்லது, ஸ்திரீகளே மனம்விரும்புவார்களாயின் அப்பொழுது அவர்களைப்புணர்பவனுக்கு ஆயுள் குறையினுஞ் சிறிது சுகமேனும் உண்டாகும். அப்படியின்றி உலகத்தில் ரூபவதிகளாயுள்ள ஸ்திரீகளை யுக்தாயுக்தம்பாராது அவர்கள் சௌந்தரியத்திற்காக வீணாக மோகிப்பவர்களுக்கு ஆயுள் க்ஷீணமாதற்குத் திருஷ்டாந்தமாக அப்பொழுதே மரணம் சம்பவிக்கும். மிக்க அருவருக்கத்தக்கதும் கிருமியாதிகளுக்குப் பிறப்பிடமானதும் பெண்கள்பார்க்கவும் அஸஹ்யமானதுமாகிய தவளைபோன்ற தேகத்தையுடைய ஆடவர் சிலர் தமது தேகசுகத்தை யவாவி, பரதார கமனமுதலிய மகா பாதகங்களைத்

தேடிக்கொள்ளுகிறார்கள். புருஷருக்குப் பரதார கமனத்தாலுண்டாகுஞ் சுகம் அணுவளவாயிருந்து, பின்னர் அது மலைபோலப்பரிணமித்துத் துக்க ஸ்வரூபமாகும். உலகத்தில் புருஷர்களாவது மாதர்களாவது இவ்வுண்மை யறியாமலே உன்னைப்போல இவ்வகைய தீயகாரியத்தைச் செய்கின்றனர். உடலைத்தரித்த புண்ணியர்கள் அப்பொழுது சிறிது துக்கமாயிருப்பினும் அது பின்னர் சுகாத்மமாயும் எண்ணிறந்ததாயும் விருத்தியடையத்தக்க ஸத் கருமங்களையே செய்வார்கள். ஆதலால் உனக்கிவை நன்குவிளங்கு மாறு சிறிது எடுத்துரைத்தேன். இனி யெப்பொழுதும் இவ்வகைய காரியத்தைச் செய்யவேண்டாம்; விரைவில் ஓடிப்போ. இப்பாதாளலோக ஸ்திரீகள்எப்பொழுதுந்துன்புறுத்துவார்களேயன்றிச்சுகமுண்டாக்கமாட்டார்கள்: இனி அவர்களைக் கனவிலும் நினைக்கவேண்டாம்; அவர்கள் மேகத்தில் அக்கினியிருந்தாற்போன்றவர்கள்; விஷ சர்ப்பங்களையே கத்திகளாக வுடையவர்கள்; பலவித மாயைகளை யுணர்ந்தவர்கள்; துஷ்டபுத்தியுடையவர்களாகவு மிருக்கின்றார்கள்; இவ்வகைய ஸ்திரீகளை வஞ்சிக்க ஒருவனுஞ் சாமர்த்தியமுடையவ னாகமாட்டான். விரைவில் இவ்விடம்விட்டுப் போய் விடு என்று கூறினள். அதனைக்கேட்ட இராவணன் ஒன்றுமுரையாது தன் சைநியங்களுடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்பிலத்தின்வழியே பூலோகத்தையடைந்து அவிவேகியாதலின் உலகத்தில் இப்படியே சஞ்சரித்துக் கொண் டிருந்தனன்.

முநிவர்களே! இராவணன் இவ்வளவு கஷ்டங்களை யநுபவித்தும், மரவுரியுடுத்து விஷ்ணுமூர்த்தியையே யெப்பொழுதுந் தியானித்துக்கொண்டு சந்தோஷசித்தத்துடன் ரூபவதியாய் இந்திரிய நிக்கிரகசாமர்த்தியமுடையவளாய்க் கன்னிகையா யிருக்கும் ஆங்கீரசமுநி புத்திரியாகிய வேதவதி யென்பவளைக் கண்ணுற்று, மீண்டுங் காமமோகிதனாய் அவளைக் கேட்க, அவள் ஒன்றுமுரையாது அழுதுகொண்டிருக்கையில், பலாத்காரமாகப் பிடித்திழுத்தனன். அதனால் அவ்வேகவதி மகா பாபியாகிய இவன் பரிசித்த இத்தேகம் இனி வேண்டியதில்லையென்று தன் பிராணனை அக்கினியில் விடுத்து, இவ்விராவணனை யெப்படியுங் கொல்லவேண்டுமென்று, மிதிலாபுரியின் அரசனாகிய ஜநகராஜனுடைய யாககுண்டத்திற் புநர்ஜன்மமெடுத்து விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய ஸ்ரீராமனுக்கு ஏகபத்தினியாய்ப் பிரதிதினமுந் தன் கணவனாற் சந்தோஷமுற்று, முன் ஜன்மத்தில் தனக்குத் தீமைசெய்த இராவணனைத் தன் கணவனாற்கொன்று, இரண்டு புதல்வரைப்பெற்று இனி க்ஷீரசாகரத்தில் நமது கணவனுடன்கூடி வாழ்ந்திருக்கவேண்டுமென்று பூமிவழியாகச் சென்றனள். ஸ்ரீராமமூர்த்தி சீதாதேவியின் பிரிவாற்றாது மனம் வருந்தி மன்மதவாதையுற்று இனி யானும் க்ஷீராப்தியையடைந்து அவளுடன்கூடிச்சுகமநுபவிப்பேனென்று எண்ணிக்கொண்டிருந்தனர்.

பின்னொருகாலத்தில், கைலாயகிரிக்கருகில் குபேரன்புத்திரனான நளகூபரனையணையும்படி திவ்வியரூபத்தையுடைய அரம்பையானவள் அதிசுந்தரமாக அலங்கரித்துக்கொண்டுசெல்லுகையில் இராவணாசுரன் கண்டு, சுராபானத்தால் மத்தனாகவிருந்தமையின் தன் மருகியென்றுஞ்சிறிதும் யோசியாது பலாத்காரமாகப் பிடித்துச் சம்போகஞ்செய்தனன். அதனை அரம்பை தன் கணவனாகிய நளகூபரனிடஞ்சொல்ல,நளகூபரன் அப்பொழுதே பெருங்கோபங்கொண்டு, இனி இராவணன் பரஸ்திரீகளைப் பலாத்காரமாகப் புணர்ந்தால் உடனே அவன் சிரம் ஆயிரஞ் சுக்கல்களாகுக வென்று சபித்தனன். மீண்டுஞ்சிறிதுகாலங்கழித்து இராவணன் பாதாளலோகத்தைச் சயிக்கவேண்டுமென்று அங்கடைந்து அங்குள்ள ஓர் திவ்யமான வீட்டிலிருந்த, பார்ப்பதற்கு மனோகரமான உருவமும் நீலமேகநிறமும் செவ்வரிபரந்த விழிகளும்பிரளயகாலாக்கினியின்ஜவாலைபோன்றரோமரேகைகளும் மின்னல்போன்றதேகமும் மின்னல்போன்ற ஜடைகளும் ஆயிரஞ்சூரியர்போலத் தேககாந்தியும் சர்ப்பங்களின் விஷத்தாற்றோன்றிய அக்கினியே வஸ்திரமுமாகக்கொண்டு விளங்கும் மகாவிஷ்ணுவைக்கண்டு அப்புருஷன் சமீபத்திலிருக்கும் க்ஷீராப்தியின் புதல்வியாகிய மகா லக்ஷ்மீதேவியின் பேரழகைத் தனதிருபது கண்களாலுங்கண்டு பெருமயல்கொண்டு இந்த ஸ்திரீயை எவ்வகையிலேனும் அபகரித்துக்கொண்டுபோகவேண்டுமென்று யோசிக்கையில், அம்மகாபுருஷனுடைய நிசுவாசத்தினால் இராவணன் நூறு காததூரத்தில் எடுத்தெறியப்பட்டுச் செயலற்று விஷயமின்னதென்றுணர்ந்து, பயபக்தியுடன் அம்மகாபுருஷனையணுகி, பகவானே! அடியேனுக்குத் தேவரீருடைய கைளாலேயே மரணம் அடிக்கடி சம்பவிக்குமாறு அநுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்டு அவர் அவ்வாறே உத்திரவுகொடுக்கப் பெற்றுக்கொண்டு, முன்னரே அங்குச் சிறையிடப்பட்டிருக்கும் மாபெலிச்சக்ரவர்த்தியை விடுவிக்கவேண்டுமென்னுஞ்சித்தமுடையவனாய் அவனிடஞ்செல்ல, அந்தவாயிலிற் பெருங்கருமையாய இரு கரங்களுடன் இருப்புலக்கைதாங்கி, சங்குசக்கரங்களை ஏந்திக் காவலாகநிற்குந் துவாரபாலகனைக்கண்டு, ஓகோ இவன் விஷ்ணுமூர்த்திபோலிருக்கின்றான். நான் இங்கே சென்று சமீபித்தால் தீமைவிளையுமென்று அச்சமுற்று, உடனே பாதாளத்தைவிட்டு விலகிப்பூலோகத்தையடைந்தனன். மீண்டுஞ் சிலகாலத்தில், க்ஷத்திரிய வமிசத்தில் திருவவதாரஞ்செய்திருந்த ஸ்ரீராமமூர்த்தியினுடைய மனைவியாகிய சீதாதேவியைத் தண்டகாரண்யத்தில், மரவுரியுடுத்துக் கந்தமூலபலங்களைப் புசித்துக்கொண்டு, உடல் முழுவதும் புழுதியாகத் திரிந்துகொண்டு, தாய் தந்தையர் விருப்பத்தின்படி வனத்தையடைந்துள்ள தன் கணவனிடத்திற் பெரு விருப்புடன் தொடர்ந்து பர்ணசாலையில் வாழ்ந்திருக்கையிற் கண்டுகாமமோகிதனாய்அவளையெவ்வகையிலுங்கிரகித்துக்கொண்டுபோய்ச் சேரவேண்டுமென்று கருதி, தன்மந்திரியாகிய மாரீசனை விளித்துத் தன்

மோகத்தைக் கூறி, நீ பவளத்தாற் கொம்புகளும், வயிரேயத்தால் விழிகளும், மரகதத்தாற் புஷ்டபாகமும், பூர்ணசந்திரன்போன்ற முகமும், முத்துமாலையால் அலங்கரிக்கப்பட்ட தேகமும், பத்மராகத்தாற் கால்களுமுடையவோர் பொன்மான் வடிவெடுத்து, இராமபத்தினி யாகிய சீதை காணும்படி அவள் முன் உலாவுவையாகில், அவள் அம்மான்வடிவத்தில் மனம்விரும்பி, அதனைப் பிடித்துக்கொடுக்கவேண்டுமென்று கணவனைக் கேட்பள். அப்பொழுது இராமன் உன்னைப் பின்றொடர்வான். அந்தச்சமயத்தில் யான் ஸந்நியாசி வேடமுற்று அப்பர்ணசாலையை யடைந்து சீதையையெடுத்துக் கொண்டுபோகிறேன் எனக்கூற, மாரீசன் அதற்கிணங்கி, தனக்கு இராவணன் கூறியவகையே திவ்யசுந்தரமுடைய மான் வேடமெடுத்துச் சீதைமுன் விநோதமாக வுலாவ, சீதை அதனை விரும்பித் தன் பர்த்தாவாகிய இராமமூர்த்தியை அதனைப் பிடித்துக் கொடுக்கவேண்டுமெனக் கோர, இராமமூர்த்தி தன் தம்பியாகிய இலக்குமணனைச் சீதைக்குக் காவலாகநிறுத்தி அந்த மானைத்தொடர்ந்து சென்றனர். நெடுந்தூரம் பின்றொடர்ந்தும் அஃதகப்படாமையின் அஸ்திரப்பிரயோகஞ் செய்ய, மாரீசன் கீழே விழுந்து உயிர்துறக்கையில், தான் இராவணனுக்கு நன்மை செய்வதாகக் கூறிவந்ததை நினைத்து வஞ்சகமாக, சகோதரா! நான் இறந்தேன் என்று கூறி உயிர்விட்டனன். இவ்வாக்கியத்தைப் பர்ணசாலையிலிருக்கும் சீதா லக்ஷ்மணர் கேட்டபடியால், சீதை தன் கணவனுக்கு ஏதோ அபாயம் சம்பவித்ததென்று தன் மைத்துனனாகிய இலக்குமணனையனுப்ப, அச்சமயத்தில் இராவணன் சந்நியாசிவேடந் தரித்துப் பர்ணசாலையை யடைந்து க்ஷணகாலத்திற் சீதையைக் கொண்டுபோய்த் தன் இலங்காபுரியைச் சேர்ந்து தன்னை விரும்பும்படி பிரார்த்தித்துக்கொண்டு அநேக அசுரரையும் அசுரஸ்திரீகளையுங் காவலிட்டு அசோகவனத்திற் பாதுகாத்துவந்தனன். அதனை யுணர்ந்த தசரதராமன் தன்னைச் சந்தித்த ஹநுமான் சொற்படி சுக்கிரீவனைக்கண்டு வாலியை வதைத்துச் சுக்கிரீவனுக்கு முடி தரித்து எழுபதுவெள்ளம் வானரசேனைகளோடு தென்கடலையடைந்துசேதுபந்தனஞ்செய்து அவ்விராவணனோடியுத்தஞ்செய்யத் தொடங்கினர்.

அச்சமயத்தில் இராவணன் தன் தம்பியாகிய கும்பகர்ணனுதவியிருந்தால் ஜயமடையலாமென்று கருதி, அவன்மதுமாமிச பக்ஷணஞ் செய்து வாயைத்திறந்துகொண்டுபிரளயகாலாக்கினிபோலத் தந்நாவினைத் தொங்கவைத்துக்கொண்டு மகா பயங்கர ஸ்வரூபத்துடன் நித்திரை செய்துகொண்டிருத்தலின், இராவணன் தன் வீரர்களாற் பெருங் கோஷஞ் செய்வித்தும், குதிரை முதலியவற்றால் மிதிப்பித்தும், கத்தி கோடரி மரம் அக்கினி ஜலமுதலியவற்றாலடிப்பித்தும் நித்திரை தெளியாமையின் அநேக ஸ்திரீகள் அவன் மேல்விழுந்து குசங்களாலும் ஊருவுகளாலும் தாடனஞ்செய்ய, அவன் காமாக்கிராந்த சித்தமுடையவனாதலின் சிறிது

விழித்தனன். அதனைக்கண்டு இராவணன் சந்தோஷித்துத் தன் தம்பியாகிய கும்பகர்ணனைத் துணையாகக்கொண்டு இராமமூர்த்தியை யெதிர்ந்து பெரும்போர்புரிந்து, அவன் புத்திர மித்திர குடும்ப சகிதமாய் இராம பாணத்திற்கிரையாயினன். அவ்விராக்கதரில் இராமமூர்த்தியைச் சரணமடைந்த விபீஷணன் ஒருவனே உயிர் பிழைத்தனன். ஏனையோர் நெருப்புப்பொறிபட்ட பஞ்சுபோலாயினர். சவுநகாதி முனிவர்களே! காமக்ரோதாதிகளைக்களைந்து தர்மபுத்தியையுடைய மஹருஷிகளுடைய மன்மதாவஸ்தையையும், அரசர்களிற் சிறந்த காதிராசன் புத்திரரான விசுவாமித்திர முனிவருடைய காமத்துயரையும், திதிபுத்திரர்களாகிய சும்ப நிசும்பர்களும் அவர்கள் புத்திரராகிய சுந்தோப சுந்தரும் கொண்ட மன்மத விகாரத்தையும், சக்ரவர்த்தி திருமகளுகிய இராமமூர்த்தியின் மனைவியைக் கண்டுகாமத்துன்புற்ற பர்வதங்கட்குச் சமானமான புஜபலத்தையுடைய இராவணனது காமாதுரத்தையும், மிருக பக்ஷியாதிகளின் மாமிசங்களைப் புசிக்கும் பெருவயிற்றினையுடைய கும்பகர்ணனுடைய மதனவஸ்தையையும் உங்கட்குச் சுருக்கிச் சொன்னேன்.

பதினைன்காவது

மேற்படி அத்தியாயம்.

சௌநகாதி நைமிசாரண்ய வாசிகளாகிய மகருஷிகளே! இன்னுஞ் சில சரித்திரங்களையுஞ் சொல்லுகின்றேன். சூரியவமிசத்திற்பிறந்த தசரதசக்ரவர்த்தி மாநுட தேகத்தினுடனே சொர்க்கலோகத்திற்குப்போவதும் வருவதுமாயிருந்து அங்கேயே தன் பிதுர்க்களுக்குத் திலோதபிண்டங்களைக் கொடுக்குஞ் சாமர்த்தியமுடையவராயிருந்து, அறுபதினையிர வருஷம் ஏகசக்ராதிபதியாய் அரசுசெலுத்தியுங் காமாக்கிராந்தசித்தராய்த் தன் மனைவியாகிய கைகேசியின் சொற்களைக்கேட்டு, தன் பிராணத்தையும் இராச்சியத்தையும் புத்திரனையுந் துறந்தனர். அவருக்குப் புத்திரனும் போர்முனையிற் சுத்தவீரனும் மகாபுத்திமானும் தர்மவானும் இந்திரிய நிக்கிரகமுடையவனும் எல்லாருடைய மனத்திற்கும் ரம்மியமானவனும் எல்லாப் பூதங்கட்கும் பிரியவானும் மகாமானியும் திரிலோகங்களிலும் வெற்றியுடையனுமாகிய இராமமூர்த்தி காமத்தால் மோகிக்கப்பட்டு, கிஷ்கிந்தாபுரியில் அரசனுயிருந்த வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனேடு பெரும்போர் செய்து அவன் இராஜ்யத்தையும் மனைவியையும் அபகரித்துக்கொண்டது கேள்வியுற்று, நிரபராதியாகிய வாலியைப் பிரளய காலாக்கினிபோன்ற அஸ்திரத்தாற் கொன்றனன். அயோத்தியாபுரியிலிருந் தரசுபுரிந்த சூரிய குலத்திற்கு ஓர் சூரியன்போன்ற தசரத சக்கிரவர்த்தியும், எல்லாத்தேவர்களாலுந் துதிக்கப்பட்டகீர்த்தியையுடைய விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாய் அத்தசரதன் மதலையாய்த் தோன்றிய இராம

மூர்த்தியுங் காமாக்கிராந்தசித்தமுற்ற சரித்திரங்களையுஞ் சொன்னேன். ஆதலால் மன்மதன் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனும், தேவர் முநிவர் அசுரர் மாநுடர் பசு பக்ஷியாதி எல்லோருடைய இதயங்களிலுமிருந்து இவ்வாறுதன்கிருத்தியத்தை நடத்திக்கொண்டு வருகின்றானென்றறியவேண்டும். லோகநாயகனாகிய சிவபெருமான் இவன்பிறராற்சயிக்கப்படாதவனென்று உலகத்திற்கு நன்மையுண்டுசெய்யு நிமித்தமாகப் பார்வதியை மணந்து காண்பித்து,இலிங்கஸ்வரூபமாயினர். அவ்வகைய இலிங்கத்தைக்கண்ட ஆகாயவாணி முநிவர்களே! தேவர்களே! தைத்தியர்களே! உத்தமமான பத்தியால் நீங்கள் இதனைப் பூசைச்செய்யும்பக்ஷத்தில் உங்களுக்குள்ள இஷ்டகாமியங்களை யடைவீர்களென்று கூறினள் என்று ஸூதமுநிவர் மகருஷிகளைநோக்கிக்கூறினர்.

மன்மதன்கதையுரைத்தது
முற்றிற்று.

பதினைந்தாவது
நித்யநைமித்திக பூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகளாகிய முநிவர்கள் ஸூதமுநிவரைநோக்கி, ஸ்வாமீ! அநேக சாஸ்திரங்களில் வியாஸபகவான் தேவரீருக் குபதேசித்தவகையே எல்லாவற்றையுந் தேவரீர் அடியேங்கட்குச் சொல்லக் கேட்டுக் கிருதார்த்தர்களானோம். இக பர லாபங்களைக் கொடுக்கவல்ல சிவதருமங்களை யிப்பொழுது சிறிது சொன்னீர். அதனை யாங்கள் இதுகாறுங் கேட்டிலமாதலின், சிவலிங்கார்ச்சனை செய்வதால் வரும் பலனை, வியாஸபகவானாற் கேள்வியுற்றவகையே உலகுக்கிதமுண்டாகும்படி சவிஸ்தாரமாகச் சொல்லியருளவேண்டும். எப்பொழுதும் அசலமான மனத்துடன் ஈசுவரதர்மத்தைப் பிறருக்குச் சொல்லுகிறவன் அநேக யாகங்கள் செய்த பலனை யடைந்து ஜீவன்முக்தனாவான்.உலகத்திற்காக ஹிதாஹிதத்தைச் சொல்லுகிறவன் தர்மார்த்தகாம மோக்ஷங்கட்கு உத்க்ருஷ்டமான பலனை யடைவானென்று மகருஷிகள் சொல்லியிருக்கின்றனராதலின் தருமங்களில் முக்கியமானது யாது? சர்வேசுவரனுடைய வாக்கு எத்தகையது? இலிங்கமூர்த்தத்தில் எவ்விதியால் ஆவாஹனஞ்செய்து பூஜித்தாற் சிவபெருமான் பிரசன்னமாவான்? சிவதானம் சிவயாகம் எவை? இவ்விஷயங்கள் சுருதிகளிற் சொல்லப்பட்டிருப்பினும் யாவருக்கும் புலப்படுமாறு உரைத்தருளவேண்டும். புண்ணியங்களிலெல்லாஞ் சிறந்த புண்ணியத்தை எதனால் அடையலாம்? கிரகஸ்தன் எந்தச்செயலாற் சொர்க்கலோகத்தையடைவான்? எந்தச் செயலால் மாநுடனாகப் பிறந்து ஈசுவராநுக்கிரகத்தை யடைவான்? கர்மயாகம் தபோயாகம் ஸ்வாத்யாயயாகம் த்யானயாகம் ஜ்ஞாநயாகம் என யாகங்கள் ஐவகையில், எது உத்தமமானது? யாகங்களின் கதிகளெவை? இவ்யாகங்களால் யாது பலன்

கிடைக்கும்? தர்மாதர்மங்கள் எத்தனைவகைப்படும்? எவ்வெப் பாவத்தால் எவ்வெவ் வினையை யநுபவிக்கவேண்டும்? தர்மாதர்மங்களாகிய அலைகளாற் கலக்கப்பட்டு, காமாதிகளாலுண்டான துக்கங்களாகிய நுரைகளாற் பூர்ணமாயிருக்கிற சமுசாரமாகிய சமுத்திரத்தினின்று ஆன்மாக்கள் எவ்வாறு நீக்கமுறுகின்றன? இவற்றையெல்லாம் அடியேங்கட்குரைத்தருளவேண்டுமென்று கேட்க, ஸூத முனிவர் சௌநகாதி முனிவர்களை நோக்கிக் கூறலாயினர்.

மகருஷிகளே! பூர்வம் இதே விஷயத்தைத் தத்வதரிசிகளாகிய முனிவர்கள் வியாஸபகவானைக் கேட்க, வியாஸபகவான் சொல்லுகின்றார். நான் பூர்வகாலத்தில் இவ்விஷயத்தை ஸநத்குமார முனிவரிடங் கேட்டபொழுது, அவர் சொர்க்க மோக்ஷ பலன்களைக்கொடுக்கத்தக்க சருவேசுவரனைப் பணிந்து அவ்வெம்பெருமானாற் சொல்லப்பட்ட வகையே சிவதருமங்களைச்சொல்லுகிறேனென்றுசொல்லலாயினர்.சிவதருமம்சிரத்தைபூர்வமாகச்செய்யவேண்டும்; சிரத்தையே சிவதருமத்திற்கு ஆதரவாகும்; சிரத்தையே பிரதிஷ்டையாகுமாதலின்,சிரத்தாமயமாகவே சிவதருமங்கள் விளங்குகின்றன.அவைசிரவணஞ்செய்தமாத்திரத்திலேயே ஆனந்தங்கொள்ளத்தக்கவை; சூக்ஷ்மமானவை; பாசம் பசு பதியென்னும் இவற்றாற் பிரதிபாதிக்கப்பட்டவை; சிரத்தையாலன்றிக் கை கண் தேக கஷ்டம் தானம் முதலியவற்றாற் கிரகிக்கத்தக்கவையன்று. தேவர்களாயினும் சிரத்தையின்றி இதனைக் கிரகிக்க அசாத்தியராவர். சிரத்தையே பரமதர்மமும், சூக்ஷ்ம தத்வமும், தானமும், தவசும்,சுவர்க்கமும், மோக்ஷமும், ஜகத்துமாகும்.ஒருவன்சிரத்தையின்றிச்செல்வமுழுவதையும்பிராணனையுந் தானஞ்செய்யினுஞ் சிறிது பலனும் பெறமாட்டான்.ஆதலின் சிரத்தையே பரமபதம். சிரத்தாஸ்வரூபமாகவே சிவதருமங்களெல்லாஞ் சொல்லப்படுகின்றன. சிரத்தையாலேயே சர்வேசுவரனாகிய சிவபெருமானை யடையவுந் தியானிக்கவும்பூஜிக்கவுங் கூடுமாதலின், மகா ஸாரமானதும் மோக்ஷமளிக்கத்தக்கதும் சிவாக்கினியின் சித்தி ரூபமானதும் மனோகரமான வாக்குமயமானதும் சர்வேசுவரப் பிரதிபாதகமானதும் அநேக சித்திகளையளிப்பதும் உலகிலுள்ளவர்கள் யாவரும் விரும்பத்தக்கதும் உச்சரித்தற்குச் சுலபமானதும் எண்ணிறந்த பொருளைக் கொடுப்பதுமாகவுள்ள சிவமூலமந்திரத்தை உங்கட்குச் சொல்லுகின்றேன். சமஸ்த வித்தைகளுக்குங் காரணமானதும் அதி சூக்ஷ்மமானதும் தர்மார்த்தகாம மோக்ஷங்களைச் சம்பாதிக்கத்தக்கதும் ஆலவிருக்ஷத்தின் மரம் பெரிதும் விதை சிறிதுமாயிருக்குமாறு, மந்திரம் சிறிதாயினும் உபாசிப்பவர்க்கு அநந்த பலனைக் கொடுக்கத்தக்கதும், ஆதியக்ஷரத்துடன் ஆறு அக்ஷரங்களையுடையதும் ஆகிய ஓம் நமசிவாய என்பது சிவப்பிரதிபாதகமான மூலமந்திரமென்பதாம். உலகத்திலுள்ள சூக்ஷ்ம மந்திரங்களும் அலங்காரார்த்தமான விசேஷ மந்திரங்களும் இந்தச்சிவமந்திரத்தில் அடங்கியிருக்கின்றன. இவ்


வகைய ஷடக்ஷரமுடைய சூக்ஷுமமான மந்திரத்தில் குணத்திரயாதீதரும் சர்வஜ்ஞரும் சமஸ்தமுஞ் செய்பவரும் பிரபுவும் பிரபஞ்ச முழுவதினும் ஸ்தூலசூக்குமமாகப் பிரவேசித்திருப்பவருமாகிய ஜகதீசுவரன் பஞ்சப்பிரம தேகமுற்று வாச்சிய வாசகசம்பந்தத்தால் பிரத்யக்ஷமாக விளங்குகின்றனர். அநாதியாயுள்ள சமுசாரசாகரம் தோன்றியவுடனே அநாதியாயுள்ள சிவபெருமான் அதனை விலக்கும்படியிருக்கிறார். வியாதிக்கு ஔஷதமும் வைத்தியனும்போலச் சமுசார வியாதிக்குச் சிவபெருமான் பரமௌஷதமாகவும் பரமவைத்தியனாகவும் விளங்குகின்றார். சூரியனில்லாத பிரபஞ்சம் இருண்மயமாமாறு ஜகதீசுவரன் இல்லையென்று சொல்லும் பக்ஷத்தில் உலகமுழுவதுந் தமோகுணமாகும். ஆதலின் அநாதியாயும் சர்வஜ்ஞராயும் சுபாவமாகவே சர்வபரிபூரணரும் முக்திகாரணரும் ஜ்ஞானத்தைப் பிரகாசிக்கச்செய்பவருமாகிய பரசிவன் ஒருவனிருக்கின்றான். அப்பெருமானை யடையத்தக்கது இம் மகாமந்திரமே. அம்மந்திரத்தின் பொருள் சிவபெருமானே. அபிதான அபிதேய சம்பந்தத்தாற் சிவபெருமானே அம்மந்திரமாவன். முக்திகாமிகள் இம் மந்திரத்தை ஷடாக்ஷரரூபமாகச் சபிக்கவேண்டுமென வேதங்கூறும் அநேகவித மந்திரங்களாலும் சாஸ்திர விசாரணைகளாலும் பிரயோசனமில்லை. இம்மந்திரம் ஸ்திரமாக மனத்திலிருக்கப்பெற்றவன் எல்லாவற்றையும் வாசித்தவனும் எல்லாவற்றையுங் கேட்டவனும் எல்லாவற்றையும் அநுஷ்டித்தவனுமாவன். இம்மந்திரத்தை யெப்பொழுதும் அப்பியசித்தவன் உலகத்திற் பிரமசிரேஷ்டனாவான். மற்ற ஞானமும் கல்வியும் யாவும் இம்மந்திரத்திற்குப் பதினாறி லொருகலைக்கும் ஈடாகாது. இந்த மந்திரம் சிவஸ்வரூபமென்று உறுதிகொண்டிருக்குமெல்லையும் அவன் பரமபதத்தி லிருப்பவனாவான். இவ்வாக்கியம் விதிவாக்கியமன்றி அர்த்தவாதவாக்கியமன்று. இது சத்தியம். உலகரக்ஷகனாகியசிவபிரான் சர்வஜ்ஞனும் பரிபூரணனும்சர்வதோஷநிவர்ஜிதனுமா யிருந்து தீர்க்காலோசனை செய்துசொல்லியது இம்மந்திரம்.உலகத்திற்குக் கர்த்தாவாயிருக்கும் இறைவன்புண்ணியபாபபலன்களை உண்மையாகச் சொல்லுவானேயன்றி அபத்தமாகச் சொல்லமாட்டான். இதில் துவேஷாபிமானிகளாய் ஈசுவரனிடத்திற் பக்தியின்றி யிருப்பவர்கள் பலவாறு பொய் புகல்வார்கள் என்று, இவையெல்லாம் புனிதராகிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள வுணர்ந்தேன். இவை முழுதும் பிரமாணம். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. பெரியோர் கூறிய விஷயங்களை ஈசுவரவாக்கியமாக நம்பி நடக்கவேண்டும். சிரத்தையின்றி அசிரத்தையாற் பிரமாணமாகக்கொள்ளாது சந்தேகிக்கிறவன் அதோகதியடைவான். தர்மமான ஞானோபதேசஞ்செய்யும் புராணிகனைச் சர்வேசுவரனாகிய சாம்பவமூர்த்தியைப்போலவேபூஜிக்கிறவன் தர்மத்தையும்ஞானத்தையுமடைந்து இறுதியில் மோக்ஷத்தை யடைவான். உலகத்திற் பிரபுவா யுள்ளவன் ஹிதஞ்செய்யவேண்டுமென்னுங் கருத்துடன் சுபகரமான தருமங்களைப் பரோபகாரமாகச்செய்யவேண்டுமென்று கட்டளையிட்டு, தானே தர்ம தற்

பரனுயிருக்கும்பக்ஷத்தில், அவன் கட்டளையிலடங்கிய உலகினர் நம திறை வனைப்போல நாமும் தக்க சிந்தனையை யுடைத்தாயிருக்க வேண்டுமென் றுவது, நமது தலைவன் கட்டளையை மீறிநடந்தால் நாம் தண்டனையடைவோ மென்னும் அச்சத்தாலாவது, தமக்குக் கட்டளையிடப்பட்டுள்ள நல்ல தரு மங்களைச் செய்வார்கள். ஆதலின் பிரபுவாயுள்ளவன் எப்பொழுதும் தரு மத்தை யவலம்பித்தே பிரஜைகளைப் பரிபாலித்தால், அப்பிரஜைகளும் அவ்விறைவனது சுபகரமான கீர்த்தியைப் புகழ்ந்து தர்மார்த்த காமங் களில் தாந்தாம் மனம் விரும்பியவற்றை யடைவார்கள். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இப்பிரஜைகள் தர்மவான்களாயினும் அதர்மவான்களாயி னுஞ்சரி; அவர்கள் புண்ணியபாவங்களில் அரசன் அரைக்காற்பங்குபெறு வான். ஆதலின் பிரஜைகளிடத்திலிருந்து அரைக்காற்பங்கு புண்ணியத் தைக் கிரகிக்கும்படி யாவரையும் புண்ணியமான மார்க்கத்திலேயே நடக் கச்செய்யவல்ல அரசர் கிருதயுகமுதலிய நான்கு யுகங்களிலுமிருந்து மகா சமர்த்தராய், காமார்த்த சித்தமுடையவர்களா யிருப்பவர்களைத் தர்மார்த் தர்களாக்கவேண்டும். அரசன் இவ்வாறு தர்மமார்க்கத்தை விருத்திசெய் யாது பிரஜைகட்குப் பீடை யுண்டுசெய்யும்படி நடப்பானுயின், அப்பிரஜா பீடையால் உண்டாகிய அக்கினி அவ்வரசனது பிராணனையும் சம்பத்தை யும் குலத்தையும் ராச்சியத்தையுந் தகிக்காமல் விடாது. அரசன் தர்ம வானுயிருக்கவேண்டுமென்னும் விருப்பத்தினுலேயே சிவபெருமான் மந்த் ரௌஷதிமுதலிய ஷடங்கரூபமாக வேதங்களை நிருமித்திருக்கின்றுன். பிர கிருதி சாஸ்திரவாதத்தால் காமமார்க்கத்தை மட்டிலுங் கைக்கொண்டு நடக்கும் மன்னனை யோகத்தால் தர்மமார்க்கத்திற் றிருப்ப வல்லவனுகிய சர்வேசுவரனே சிவபெருமான். அவ்வெம்பெருமானே மன்னவருக்கும் மன்னவன். அவனே ஜகத்குரு. ஒருவன் அவ்வகைய ஜகத்குருவாகிய சிவபெருமானைத் தத்துவ சொரூபத்தாற் சர்வப் பிரயத்தனத்தோடுந் தெரிந்துகொண்டு, சமுசாரமாகிய சேற்றில் முழுகியும், அஜ்ஞானமாகிய நெருப்பினுற் சுடப்பட்டும் இருப்பவர்களை ஞானமாகிய அமிர்தத்தால் நனைத்துச் சமுசாரபாதையை யொழிப்பானுயின், அவனுக்குத் தந்தை யுஞ் சமானமாகமாட்டான்.

இவ்வகைய சர்வேசுவரன் தேகசிரமம் - யாகம் - தானங்கள் - பெருஞ்செல்வம் - அரசு முதலியவற்றுல் அறியத்தக்கவனல்லனென்று வேதங்கள் கோஷிக்கின்றன. சாந்தசீலராகிய முனிவர்களால்,சுவர்க்கமோ க்ஷங்கள் சித்திக்கத்தக்க சோபனமான வஸ்துவொன்றிருக்கின்றதென்று சொல்லப்பட்டுள்ளது. அர்த்தவாதத்தில் ராக த்வேஷ க்ரோத அபத்தங்க ளோடு கூடிக்கொண்டு அவித்யா ராக ஸ்வரூபமாகவும் மகா மிருதுவாக வும் பார்ப்பதற்குப் பலர் அநுஷ்டித்ததாகவும் சமுசாரத்தை யுண்டுசெய் தற்குக் காரணமாகவும் விளங்கும் வாக்கியங்கள் சிலவுள்ளன. அவை அதோகதியை யுண்டுசெய்யத்தக்கவை. எந்த வார்த்தையைக் கேட்ட

மாத்திரத்தில் காமக் குரோதாதிக ளொழிந்து, ஜகதீசுவரனுகிய சிவபிரா னிடத்தில், அஹேதுகமாகிய பக்தி ஞானங்கள் உண்டாமோ, அவ்வார்த்தை செவிக்கு இனிமையாயிராவிடினும், அதுவே மங்களகரமானது. பதினென் புராணங்களும் இதிகாசங்களும் வேதங்களும் சாஸ்திரங்களும், தர்மார்த்த மாக முனிவர்களாற் கர்ணபரம்பரையாகச் சொல்லப்பட்டுள்ளன. அவற் றுள், ஆன்மாக்கட்குப் புத்திர தார சமுசார பந்தமும், சத்யோகர்ப்ப முத லியனவற்றிற்கு ஹேதுவுஞ் சொல்லப்பட்டுள்ளன. இவைபோன்றவை மோக்ஷமார்க்கத்திற்குத் துணைசெய்யமாட்டா. உலகினருக்கு ஆயிரவருஷ காலம் ஆயுளிருப்பினும் எல்லா நூல்களையும் ஆராய்ச்சிசெய்ய இயலாது. நமக்கிருக்கும் ஆயுளோ சொற்பகாலம். பண்டிதனும் சமர்த்தனுமா யுள் ளவன் சாஸ்திரசமூகங்களையெல்லா மொழித்து, இகபர லோகங்கட்குச் சுபகரமான அக்ஷர தன்மாத்திரமாயுள்ளதை யுணர்ந்துகொள்ளும்பக்ஷத் தில், அவனே எல்லாச் சாஸ்திர ஞானத்தையு மடைந்தவனுவான். எல்லா நூல்களையுங் கற்றறிவேனென்று காலத்தைக் கழிப்பவனும் எல்லாவற் றையுங் கற்றுவிட்டேனென்பவனும் முழு மூடனேயாவன். அவன் சக்தி யடைந்திருப்பினும் அசக்தனேயாவான். சமுசார சேற்றிலிருந்து அவன் வெளியே வருவதற்கு ஒருகாலத்துஞ் சமர்த்தனுகான். சிவஞானத்தைச் சிரத்தை பக்திகளுடன் விசாரித்தறிபவனே பண்டிதன்; அவனே எல்லாச் சக்திகளுமுடையவன்; அவனே மகா தபஸ்வி, அவனே ஜிதேந்திரியன்; அவனே உலகமுழுவதையும் மேருமலையுடன் கூட்டித் தானஞ்செய்தவன்; அவன் அந்நியாயமாகக் கூறினும் சர்வேசுவரன் அதனை நியாயமாமாறு அநுக்கிரகிப்பான். ஆதலின் யான் நியாயமாக உங்களுக்குக்கூறுகின்றேன். சிவஞானத்தை யுள்ளபடி யுணர்ந்தவனே சிவசாயுச்சியத்தை யடைவான்.

முனிவர்களே! அவ்வகைய சிவஞானத்தை யடைதற்கு முக்கிய சாதனமாயுள்ளது சிவலிங்கார்ச்சனையேயாம். அச்சிவலிங்கபூஜையோ நித் யம் நைமித்திகம் காமியமென முத்திறப்படும். அதனைச்சுருக்கிச்சொல்லு கின்றேன் கேளுங்கள்: பஞ்சாமிர்தத்தாலும் ஸ்நானம் பாத்திய முதலிய வற்றாலும் அச்சர்வேசுரனை நித்யமாக ஆராதித்தால் அவர்கள் சீக்கிரமாக அநுக்கிரகிக்கப்படுவர். தேவாசுரர்களால் திருப்பாற்கடல் மதிக்கப்பட்ட காலத்தில் சமஸ்தலோகத்திற்கும் மாதுருபூதமாக நந்தை - பத்திரை - சுசீலை-சுரபி-சுமனையென்னும் ஐவகைப் பசுக்கள் தோன்றின. இவ்வைந் தில் சுரபியென்பது தேவர் முனிவர் மாநுடர் முதலிய யாவர்க்கும் உதவி செய்யவேண்டுமென்னுங் கொள்கையால் பூலோகத்தை யடைந்து, சர் வேசுவரனுகிய சிவபெருமானுக்குத் திருமஞ்சனத்திற்கு உபயோகமாக வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டே பூமியில் நின்றுவிட்டது. அப் பசு வின் கோமயமும் கோரோசனமும் கோசலமும் க்ஷீரமும் ததியும் நெய் யும் இவை உலகத்தில் எல்லாவற்றையும் பவித்திரமாகச்செய்யும் ஷடங் கங்கள். இவ்வாறனுள் ஒன்றுகிய கோமயம் ஒன்றினுலேயே சிவப்பிரீதி



(43)திலஹஸ்தி தானம்.

யாகவுள்ள வில்வமரமும் பதுமத்தின் விதைகளும் உதித்தன. இவற்றில் வில்வமரத்தை லக்ஷ்மீ முதலியவர்கள் ஸ்ரீ விருக்ஷமென்று கூறினர். பசுமையான கோரோசனம் சிவபெருமானுக்கு அபிஷேகத்திற்குரியசாமான்களிற் சிறந்த வொன்று. கோசலத்திலிருந்தே சாம்பிராணியாகிய தூபத் திரவியம் தேவப்பிரீதியாகத் தோன்றியது. எல்லாப் பிராணிகட்கும் வீரிய விருத்தியை யுண்டுசெய்யுந் தயிர் அப்பசுவின் க்ஷீரத்தினின்றும் உதித்தது. அத்ததியினின்றும் நெய் உண்டாயது. அந்த நெய்யினின்று தேவர்கட்குப் பிரீதியாயுள்ள அமிர்தம் தோன்றிற்று. ஆதலின் நெய் க்ஷீரம் தயிர் முதலியவற்றினால் இலிங்கரூபமாயுள்ள சிவபெருமானைப் பக்தியோடு அபிடேகித்து, பின்னர் திவ்ய மலர் மணம்பொருந்திய சுத்த ஜலத்தினாலும், சிறிது உஷ்ணமாயுள்ள ஜலத்தினாலும் மங்களவாத்தியயுக்தமாக ஸ்நானஞ் செய்வித்து, சந்தனம் பச்சைக்கற்பூரம் முதலியவை கூட்டிய சீதோதகத்தால் அபிஷேகித்து, கமலம் குற்றமற்ற மிருதுவான வில்வ பத்திர முதலியவற்றாற் பூசித்து,நெய்கலந்த பரிமளத்திரவியங்களாற்றூபங்கொடுத்து, க்ஷீரான்னமும் ஏழுதரஞ் சோதித்த சுத்தஜலமும் தயிரும் நெய்யும் நெய் கூட்டிச் சமைத்த பலவித பக்ஷியங்களும் மஹா நிவேதனமாகச் சமர்ப்பித்து, பலமுறை பிரதக்ஷிணஞ்செய்து "ஓம் ஹர ஹர நமசிவாய சர்வேஸ்வர சங்கர மஹாதேவா" என்று—சாஷ்டாங்க தண்டஞ்செய்து, பலவித பாபங்களைச் செய்த பாபியாதலின் என்னை மன்னிக்கவேண்டுமென்று க்ஷமாபணஞ்செய்து இவ்விதமான விதியால் சிவபெருமானை இலிங்கமூர்த்தத்திற் பூசித்தால், அவ்வகைய பக்தன் விஷயத்திற் கிருபைகொண்டு பிரசன்னராய், இகலோக பரலோகங்களிலும் அடைதற்குரிய அவன் விரும்பிய கோரிக்கைகளைக் கைகூடுமாறு அநுக்கிரகிப்பான். இவ்வண்ணமே நாடோறும் பூஜைசெய்யவேண்டும். இவ்விதியாக நித்தமும் பூசிப்பவனும், சதுர்த்தசி அஷ்டமிகளில் பூஜிப்பவனும் விசேஷ சிவபக்தியுடையவனாய் நரகத்தில் விழுந்துகிடக்கும் இருபத்தொரு தலைமுறைவரையினும் அநாயாசமாகச் சொர்க்கத்திற் செலுத்த வல்லவனாய்,இறுதியிற் அவன் சிவபதவியையடைவான். சிவார்ச்சனை செய்பவனிடத்தில் அவனுக்குப் பூஜாவுபகரணங்களைச் சேகரஞ்செய்துகொடுத்த உறவின்முறையாரும் ஊழியக்காரரும் பக்தியோடு பகவத் கைங்கரியத்தைச் செய்த பக்ஷத்தில் அவர்களும் இறுதியிற் கைலாயத்தை யடைவார்கள்.

ஒருவன் பூர்வத்தில் சிவபெருமானுக்கு நானாவிதமான மலர்களாற்றொடுத்த மாலைகளைச் சிவசந்நிதானத்திற் கொடுத்துக்கொண்டு பக்தி செய்ததால், சிவகடாக்ஷமுற்று அவர் அநுக்கிரகத்தால் உலகத்தில் ஏக சக்ராதிபதியாய் அரசு செலுத்தி ஆயுண் முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைந்தனன். ஆதலின் உலகத்தில் மாநுடப்பிறவியடைந்தோர் யாவரும் பக்திபூர்வமாகச் சிவப்பிரீதியாகிய இலிங்கார்ச்சனையை விதிப்படி செய்ய வேண்டியது. ஷடக்ஷரங்களையுடைய மந்திரசிரேஷ்டமாகவுள்ள பஞ்சா

க்ஷர மந்திரத்தினல் சர்வேசுவரனுகிய சிவபெருமானை ஏகாக்ரமானசமாய்த்யானஞ் செய்பவன் மகா சிவபக்தியுடையவனுய்த் தன் பிதுர்க்களை மோக்ஷத்திற் சேர்த்துத் தானுஞ் சிவபதவியை யடைவான். அவ்வகைய சிவாராதனைக்கு அநுகூலமாயுள்ளவனும் ஆயுள்வனாயில் இவ்வுலக இன்பத்தை அநுபவித்து, தான் அநுகூலஞ்செய்த பக்தனுடன் சிவ சாந்நித்யத்தை யடைவான். சிவநாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருப்பவர்களும், சிவஸ்தோத்திரங்களைப் பண்ணுசையுடன் பாடிவந்தவர்களும், சிவகீர்த்தனங்களைப் பாடினவர்களும் விதிப்படி சிவலிங்கபூஜை செய்தோர் அடையும் பலன்களை யடைவார்கள். இவ்வகையாக விதிப்படி பூஜிக்கப்படும் சிவலிங்கமூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருப்பவன் சமஸ்தமான யாக பலன்களையுஞ் சந்தேகமின்றி அடைந்தவனுவான். சிவ சரித்திரங்களைச் சொல்லவும் வாசிக்கவுஞ் செவிகொடுத்துப் பக்தியோடு கேட்டுக்கொண்டிருப்பவன் அந்த யாகபலனை யடைவானென்பது திவ்வியமான சிவபெருமானது திருவாக்கு. சிவபெருமானைப் பக்திசெய்துகொண்டும் அபிஷேகித்துக்கொண்டும் பூஜை செய்துகொண்டும் இருக்கையில், சிவபெருமானையும் அவ்வாறு செய்வோனையுங் கண்டு ஆனந்திக்கின்றவன், மேற்கூறிய சிவாராதனை செய்வோன் அடையும் பலன்போன்ற பலனை யடைவான். மனத்திற் பக்தியோடு சிவஸ்மரணை செய்பவனும், அத்தன்மையான பலனைச் சர்வேசுவரனுடைய கிருபையால் அடைகிறுன். சிவ - ருத்ர - ஹர என்னும் சிவநாமங்களாகவுடைய இரண்டெழுத்துப் பெயர்களில் ஒன்றை ஒருகாலத்தில் உச்சரித்தவனும், சர்வேசுவரனைப்போலவே புண்ணியஸ்வரூபமும், எல்லாப் பொருள்களும் நிறைந்திருக்கப்பெற்றதும், எண்ணிறந்த புண்ணியர்களாற் சேவிக்கப்பட்டிருப்பதுமாகிய ருத்ரலோகத்தை யடைவான். ருஷிசிரேஷ்டர்களே! பலவிதமான சிவதர்மங்களும் மகா சூக்ஷுமமாயிருப்பினும் பெரும் பலன்களைக் கொடுக்குமென்று அந்தச் சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். அவற்றை நீங்கள் நித்யபூஜை செய்பவர்களாதலின் சங்கிரகமாகச் சொன்னேன்.

நித்தியநைமித்திக பூஜாவிதியுரைத்தது

முற்றிற்று.

பதினுருவது

சிவலிங்கபூஜாபலனுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளான சௌநகாதி முனிவர்கள் ஸூதமுனிவரை நமஸ்கரித்து, ஸ்வாமீ! சிவபெருமானுடைய கிரியாயோகத்தை ஸநத்குமாரமுனிவர் வியாசபகவானுக் குபதேசித்தவகையை தேவரீர் அடியேங்கட் குரைத்தருளவேண்டும். அதனைக் கேட்கப் பேரவாவுடையவர்களாயிருக்கிறேம். எனக் கேட்க, ஸூத முனிவர் சொல்லத் தொடங்கினர்.

விலக்கற்கரிய சமுசார துக்கத்தினின்றும் விலகிய மகாமுனிவர்களே! சிவபெருமானுடைய கிரியாயோகத்தை வியாஸபகவானுக்கு ஸநத்குமார முனிவர் கூறியருளியவகையே சங்கிரகமாகச் சொல்லுகின்றேன்; கேட்பீர்களாக. ஒருகாலத்தில் வியாஸமுனிவர் ஸநத்குமாரரையடைந்து அவரது இருசரணாரவிந்தங்களையும் பணிந்து, ஸ்வாமீ! சிவபெருமானது கிரியாயோகத்தையும் அதனால் வரும் பலனையும் தேவதா * ந்யாசத்தையும் மானசிக பூசையையும் பாஹ்யபூஜையையும் இவ்வகையெனத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும். அன்றியும் பிரமசரிய மனத்தாலும் புண்யகரமான வாக்குக் காயங்களாலும் கிரியாயோகத்தைப்பெரியோர் அநுஷ்டித்த முறைப்படி அநுஷ்டித்தவன் எவ்வகைப்பலனையடைந்து எவ்வகையாகச் சிவபதமடைவான். சிவரூபமாகிய இலிங்கத்தை விதிப்படி அபிஷேகித்தருச்சித்தவன் பெறும் பலனும் யாது? எவ்வெம்மலர்கள் சிவபெருமானுக்குப் பூஜாயோக்கியமும் எவ்வெம் மலர்கள் அயோக்கியமுமானவை? எவ்வெத்தூபங்கள் சிவார்ப்பணஞ் செய்யத்தக்கவை? எவ்வெவை விலக்கத்தக்கவை? எவ்வெக்கனிகள் சிவபெருமானுக்கு நிவேதிக்கத்தகும், எவ்வெவை நீக்கத்தகும்? எவ்வெவ் வாத்தியங்கள் சிவசந்நிதியில் வாசிக்கத்தக்கவை? எவ்வெவை நீக்கத்தக்கவை? நெய் பால் முதலியவற்றால் சிவபெருமானை அபிஷேகித்தவன் யாது பலனை யடைவான்? சந்தனம் கஸ்தூரி முதலியவற்றை சிவபெருமானுக்கு உபலேபனை செய்தவன் பெறும்பயன் யாது? இன்னுமுள்ள மற்றைய சிவபணிவிடைகளின் பலன் யாவை? இவற்றையும் அடியேனுக்குச் சொல்லியருளவேண்டும் எனக் கேட்க, ஸநத்குமாரமுனிவர் சாற்றலாயினர்.

ஸத்யவதியின் புதல்வனே! வியாஸமுனிவனே! நீ யென்னைக் கேட்ட சிவபூஜாவிஷயங்களை யெல்லாந் தெளிவாகச் சொல்லுகின்றேன். முழுமனத்துடன் கேட்பாயாக: பரமாத்மாவாகிய பரசிவனிடத்திற் சித்தத்தைச் செலுத்திநிற்பதே ஞானயோகம்: பரசிவத்தின் பாஹ்யமாகிய அர்ச்சாரூபத்தில் எப்பொழுதும் பூஜைமுதலிய உபசாரங்களைச்செய்வது கிரியாயோகம். இதுவே சிவபெருமானைத் தியானிப்பதற்கு முக்கியமான சாதனம். இஷ்டகாமியங்களைக்கருதிச்சிவாலயநிர்மாணமுதலியசிவபுண்ணியங்களைச் செய்தவர்கள் பெறும்பலனைச் சொல்லுகின்றேன். சிவபெருமானுக்குக்கருங்கல்லாலாவது மரத்தாலாவது பொன் வெள்ளிமுதலிய லோகங்களாலாவது மண்ணாலாவது திருக்கோயில் கட்டுவித்தவன் நாடோறும் சிவயோகத்தால் அச்சர்வேசுவரனைப் பூஜிக்கிறவன் பெறும் பலனையடைந்து, தன் குலத்தி லிறந்த பிதுர்க்களை நூறுதலைமுறைவரையிலும் என்றும் ஆநந்தமயமாகிய சிவலோகத்திற் செலுத்துவான். சிவாலயம் ஒன்று பெரிதாகவேனும் சிறிதாகவேனும் நிர்மாணஞ் செய்யவேண்டுமென்று ஒருவன் தன் மனத்தில் நினைத்தவுடனே, தான் ஏழு ஜனனங்களிற்

* ந்யாஸம் - இருக்கச்செய்தல்.

செய்த பாபங்களினின்றும் புனிதமாவான். சர்வகர்த்தாவாகவுள்ள சிவபெருமானுக்கு ஆயலங்கட்டுவித்து அதிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்தமான லௌகிக போகங்களையு மனுபவிப்பான். புண்ணியஸ்தலங்களில் சிவாலயப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்த லோகங்களினுஞ் சிறந்த முத்திலோகத்தையடைவான். கருங்கல்லாற் சிவாலயஞ் செய்வித்தவன் அக்கற்கள் ஒவ்வொன்றினுக்கும் ஒவ்வோராயிரவருஷஞ் சிவலோகத்தில் வசிப்பான். சிவபெருமானது அர்ச்சாரூபங்களாகிய இலிங்கமூர்த்தத்தைச் செய்வித்தவன் ஒருகாலத்தும் அழிவில்லாத சிவலோகத்தையடைந்து அறுபதினுயிர வருஷம் பலவித சுகங்களையு மநுபவித்து அப்படியே ஒவ்வோர் பதவியினும் அறுபதினுயிரவருஷம் வசித்திருப்பான். புண்ணியகரமான சிவலிங்கப் பிரதிஷ்டை மாத்திரம் செய்த பக்ஷத்தில் இறந்தபின்னரும் இறவாதவனுகவேயிருந்து, தன் வமிசத்தி லிறந்தவர்களையும் இனிப் பிறப்பவர்களையும் கற்பாந்தகாலவரையிற் புனிதர்களாகச் செய்ய வல்லவனுவான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று மனத்தில் நினைத்தவன் தன் பிதுர்க்களை யெட்டுத் தலைமுறைவரையிலுந் தன்னோடு சிவசாயுச்சியம்பெறச் செய்வான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தவனைக்கண்டு நாமும் இவ்வாறு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தாற் சற்கதியையடையலாமென்று நினைத்தவன் அப்பொழுதே பரம புண்ணியனுகித் தான் முன்செய்த பாவங்களையெல்லா மொழித்து முக்திக்கு அருகனுவான்.

முநிவர்களே! பூர்வத்தில் பிரமதேவன் இயமனுக்கு அதிபத்தியமும் பாசமுந் தண்டமும் கிங்கரர்களோடு கொடுத்து, நீ உலகத்திற் சஞ்சரித்து தர்மாதர்மங்களை விசாரணைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்டுச் சொல்லத்தொடங்கினர். பிறதேவர்களைப் பணியாது தேவ தேவனுகிய சிவபகவானையே பரம்பொருளென்றுணர்ந்து அப்பெருமானையே சரணுகதியென்று உறுதிகொண்டிருக்குஞ் சிவ பக்தர்களையும்,உலகத்தில்மகேசுவரனை மனத்திற் றியானஞ்செய்துகொண்டிருப்பவர்களையும், நித்திரை செய்கையிலும், நடக்கையிலும், இருக்கையிலும் இரவும் பகலும் யாது செய்கையிலும் சிவத்யான மகலாது, சிவா! மஹாதேவா! சந்திரசேகரா! நீலகண்டா! சங்கரா! மஹேஸ்வரா! ஜகத்பதி! சச்சிதானந்தஸ்வரூபா! என்று பஜனை செய்பவர்களையும், சிவபெருமானை நித்திய நைமித்திக பூஜைகளால் சந்தோஷிக்கச் செய்பவர்களையும், சிவபெருமானைப் புஷ்ப தூப தீப முதலியவற்றால் ஆராதிப்பவர்களையும், சிவாலயத்தை ஜீரணோத்தாரணஞ் செய்பவர்களையும், சிவாலயத்தைக் காலை மாலையில் திருவலகிட்டுச் சுத்தஞ்செய்பவர்களையும் அவர்கள் முன்னோரது மூன்று தலைமுறைகளையும், சிவாலயத்தைக் கட்டுவிப்போர்களையும் அவர்கள் வமிசத்திற் பிறக்கும் நூறு தலைமுறைகளையும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவர்களையும் அவர்கள் வரன்முறையிற் பிறக்கும் அயுதபுருஷர்களையும்,நீங்கள் அடையப்படாது. அவர்கள் சிவகணங்கட்குச் சமானமானவர்கள். அவர்

களை நீங்கள் தண்டிக்க முடியாது என்று பிரமதேவன்கூற,இயமன் அதற்கிணங்கித் தன் சேவகர்களாகிய கிங்கரர்களுக்கு நாடோறும் இவ்விஷயங்களைச் சொல்லிக் கியாபகப் படுத்திக்கொண்டிருந்தனன்.

சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து முறைப்படி பூஜை செய்தவன் தன் மனத்தில் விரும்பிய கோரிக்கைகளையெல்லாம் சந்தேகமின்றி சித்திக்கப்பெறுவான். தேவர்களா லருச்சித்தற்குரிய அர்ச்சாரூபமான சிவலிங்கத்தை, தேன் பால் நெய் தயிர் முதலியவற்றால் அபிஷேகித்தவன் ஆயிரம் பசுக்களை அருமறையாளர்க்குத் தானமளித்தவன் பெறும் பலனையும், வேதபூர்ணர்களானவேதியருக்குப்பசுநெய்யைத்தானமளித்தவன் பெறும்பலனையும் பெறுவான். ஆடகப் பிரமாணமான நெய்யினால் அநாதியாகவுள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகித்தவன் சத்த சமுத்திரங்களாற் சூழ்ந்த உலக முழுவதையுந் தானஞ்செய்தவன் பெறும் பலனையடைவான். கிருஷ்ண சதுர்த்தசியில் சிவலிங்கத்திற்கு நெய்யினால் அபிஷேகித்தவன் தான்செய்த பாபங்களையெல்லாம் விலகுவான். பூரணை அமாவாசைகளில் அர்ச்சாரூபமான சிவலிங்கத்தைப் பிரயத்தனபூர்வமாகப் பூசித்தவன் சர்வ பாபங்களினின்றும் நீக்கப்படுவான். ஞானத்தாலாவது, அஞ்ஞானத்தாலாவது ஒருவன் செய்த பாபங்கள் சிவபெருமானுக்குப் பிரதோஷகாலத்தில் நெய்யபிஷேகஞ் செய்த க்ஷணமே அவனைவிட்டகன்றுபோம். தேவர்களிற் சிறந்தவன் சிவபெருமான், * ஹவ்யங்களிற் சிறந்தது நெய். இச்சர்வேசுவர கிருதசம்பந்தம் [சர்வேசுரனை நெய்யினாலபிடேகித்தல்] பாபங்களை வேரோடறுக்கத்தக்கது. சிவபெருமானுக்குப் பசுவின்பாலால் விசேஷமாக அபிஷேகித்தவன் இவ்வுலகத்தை நீங்குகையில் பாலே ஜலமாகப் பெருக்கெடுக்கும் நதியையும், பாலின் சம்பந்தமான சேற்றையுமுடைய வழியாகச் சிவலோகத்தையடைந்து சந்தோஷமும் சுகமும் ஸ்வஸ்தசித்தமும் ரோகமின்மையும் நல்ல வுருவமும்பெற்று வாழ்ந்திருப்பார்கள். தயிர்முதலிய பொருள்கள் யாவும் பாலினாலுண்டாகுமாறு, பெரும் போகங்களெல்லாம் சிவார்ப்பணமாக அபிடேகித்த பாலினாலேயே யுண்டாகும். தேகபுஷ்டியை யுண்டுசெய்யும் பாலினால் சிவலிங்கத்திற்கு அபிடேகித்தவன் திவ்வியமான ஞானவிருத்தியடைவான். சிவபெருமான் க்ஷீராபிஷேகத்தாற் களிகூர்ந்து, அவ்வாறு அபிஷேகித்தவனுக்கு நவக்கிரகங்களின் அநுகூலமும் புஷ்டியும் யாவரிடத்திலுங் கிருபையுமுண்டாகும். நெய்யும் பாலும் சிவபெருமானுக்கு அபிடேகித்தவுடன் சிவபெருமான் பிரசன்னமாவார். சிவபெருமானை யெப்பொழுதும் நெய்யினாலும் பாலினாலும் அபிஷேகித்தவனுக்கு உலகில் யாவும் நன்மையாகவே யிருக்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் பூர்வ சரிதஞ் சொல்லுகின்றேன்.

* ஹவ்யம் - தேவர்கட்காக ஹோமஞ்செய்யுந் திரவியம்.

பூர்வத்தில்,பூஷ்ணன் என்பவனும் அவனது அதிரூபவதியானசுமதி என்னும் யௌவனமுடைய மனைவியும் சுவர்க்கலோகத்தை யடைந்து பல விதமாகக் கிரீடித்துச் சுகமநுபவித்துக்கொண் டிருக்கையில்,கௌதமியென்பாள் கண்டு ஆச்சரியமுற்றுச் சுமதியை நோக்கி, சுமதீ! இச் சொர்க்க லோகத்தில் இந்திராதிதேவர்கள் எண்ணிறந்தவர்களிருக்கின்றனர். அவர்களுக்கும், உனக்குள்ள காந்தியும் உன்னைப்போன்றதேகமணமும் அதிக அழகும், அருவிலைப்பணிகளும்,பட்டாடைகளுங்கிடையா. இவை யாவற்றினும் இந்திராதி தேவர்களைக்காட்டினும் நீங்களிருவரும் மேம்பட்டிருக்கிறீர்கள். உங்கள் மனவொற்றுமையும் அவர்களுக்கில்லை. நீ இவ்வகைய சிறப்பினையெல்லாம் ஒருங்கே யடைந்து கணவனுடன் விளையாடிக்கொண்டிருக்கின்றனையே. இஃதுனக்குத் தவத்தாற் கைகூடியதா? தானபலத்தாற் கிடைத்ததா? யாகாதி கிருத்தியங்களாற் சம்பவித்ததா? இதனை முழுதுஞ் சொல்லவேண்டும் எனக்கேட்க, சுமதியானவள் சந்தோஷித்துச் சொல்லலாயினள்: என் பர்த்தாவின் மூதாதைகள் யாவரும் குல பூர்வமாகச் சிவபெருமானை யாராதித்துவந்து கடைசியில் என் கணவன் அந்தச் சாம்பவமூர்த்தியைக்குறித்து அநேக யாகங்களைச்செய்ய, அந்த யாகத்தால், யாகபதியாகிய சங்கரபகவான் திருவுளங்களித்து அநுக்கிரகித்தமையின், சுவர்க்கப்பிராப்திக்குக் காரணமாயிற்று. அந்த யாகத்தில் தீர்த்தோதகஸ்நானமும் கிருதஸ்நானமும் கணக்கின்றிச் செய்வித்தமையின் எங்களிருவருக்கும் திவ்வியமான தேக காந்தியும், மனவொற்றுமையும், மிருதுத்தன்மையும், சுகமும், யாவருக்கும் விருப்பமும் உண்டாயின. இவை யாவும் நெய்யினு லபிடேகித்த பலத்தினாலேயே கிடைத்தன. அந்த யாகத்தில் மனோபீஷ்டமான விலையுயர்ந்தவஸ்திரங்களையும் நவரத்ன கசிதமான பூஷணங்களையும் சந்தனமுதலியபரிமளவஸ்துக்களையும் அநேக விதமான மலர்மாலைகளையும் சிவார்ப்பணமாக்கினோமாதலின் அச்சிவார்ப்பணஞ் செய்தவை யாவும் இப்பொழுது எங்களுக்குச் சொர்க்கலோகத்தில் உண்டாயிருக்கின்றன. சிவபெருமானை நானாவித நிவேதனங்களால் திருப்தி செய்வித்தோமாதலின் நாங்கள் இவ்விடத்தில் எப்பொழுதும் திருப்தியாகவே யிருக்கிறோம். சுவர்க்க காமியாகிய என் கணவன் சிவார்ச்சனைசெய்கையில் யானும் அவருடனிருந்து அருச்சித்தமையின் எனக்கு அற்புதமான புஷ்டியுண்டாயிருக்கிறது. மன வாக்கு காயங்களால் எவ்வெவ் கோரிக்கையோடு ஒருவன் சிவபெருமானது அருச்சாரூபமான இலிங்கத்தைப் பூசித்தால் அவன் அவ்வவ் கோரிக்கையை விரும்பிய வகையே யடைவானென்பதிற் சிறிதுஞ் சந்தேகமேயில்லையென்று கௌதமியை நோக்கிச் சுமதி சொல்லினள். ஆனபடியால் ஒருவன் சிவபெருமானைப் பக்திபூர்வமாக அருச்சிப்பானாயின், அவன் தேவர்களுக்குந் துர்லபமான போகபாக்கியங்களை யநுபவிப்பான். சந்தனம் குங்குமப்பூ அகரு பச்சைக்கர்ப்பூரம் முதலிய சுகந்த திரவியங்களால் சிவலிங்கத்தை * உபலேபனஞ்செய்தவன் அப்பொழுதே சுபகரமான வரங்களைப் பெறுவான்.

¶ உபலேபனம் - பூசுதல்.

சிவபெருமானுக்குக் கருஞ்சந்தனமுங் கருந்தூபமும் விநியோகித்தவன் ரோகியாவான். நல்ல சுகந்தமுடைய வேதோக்தமான சாம்பிராணி முத லியவற்றினை நெய் கூட்டித் தூபங்கொடுத்தவன் தனக்குத் துஷ்டி புஷ்டிக ளுண்டாகப்பெறுவான்.

மனத்திற்கு ரம்மியமில்லாத மலர்மாலைகளைச் சிவபெருமானுக் குச் சாத்தப்படாது. மனோகரமான மலர்களாற்றொடுத்த மாலைகளையே தேவதேவனுக்குச் சாத்தலாம். சிவபெருமானுக்கு விருப்பத்தைத் தரத் தக்க மலர்கள் - மிருதுவானதும் மணமுடையதுமான எல்லா மலர்களும், தாமரைமலரும், உலர்ந்திருப்பினும் வில்வபத்திரமும், நீலோற்பலமும், ஜாதிபுஷ்பமும், மல்லிகையும், பாடலமும், கரவீரமும், ஆத்தியும், கொன் றையும், கோங்கும், சதபத்திரமும், துளசியும், அகத்திப்பூவும், முல்லையும், இருவாக்ஷியும், பலாசமுமாகும். ஆதலின் இவ்வகை மலர்களாலேயே சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும். இவையேயன்றி மனத்திற்குங் கண் ணிற்கும் ரம்மியமான மலர்கள் யாவும் சிவாராதனைக்குத் தக்கவையாம். செவந்த மலர்களும் கறுத்த மலர்களும் சிவலிங்கரூபத்தில் பூஷணார்த்த மாகச் சமர்ப்பிக்கவேண்டும். சிவபெருமானைச் செந்நிறத்த மலர்களால் நாடோறும் பூஜிப்பவன் சித்தர் வித்தியாதரர் அப்சரசு கணங்கள் முதலா னருடன் அநேககாலம் வாழ்ந்திருந்து சந்தோஷமடைவான். முள்ளையுடை யதும் உக்கிரகந்தமுடையதுமான ஊமத்தை முதலிய மலர்களாற் சிவலிங் கத்தை யருச்சித்தவன் சிவகணங்கட்குப் பிரீதிவானவான். மலர்கள் கிடைக்காவிடின் ப்ருங்கராஜபத்ரம் [கரசாங்கணி], அறுகம்புல், சமீபத்தி ரம், தமாலம் முதலிய பத்திரங்களாற் பூஜைசெய்யலாம். இவ்வாறு நித்த மும், பரமகாரணனை சிவபெருமானை இலிங்கமூர்த்தத்திற் பூஜிக்கிறவன் அப்சரசு கணங்களாற் பூஜிக்கப்பட்டுச் சிவலோகத்தில் வாழ்ந்திருப்பான். அவனுக்கொருகாலத்தில் உலகத்திலே ஜனனமுண்டாயினும், பேரரச னப்ப் பெருஞ்செல்வத்துடன் ஏகசக்ராதிபதியாயிருந்து கிரமமாக மோ க்ஷமுறுவான். தாழைமலர்களாற் சிவபிரானை யர்ச்சிக்கப்படாது. மரு தோன்றிமலர்களாற்பூசித்தவன் மிலேச்சராசனவான். சுகந்தமான மலர்க ளாலும் சுகந்த கர்ப்பூர சந்தனங்களாலும் பரிசுத்தமான ஜலத்தினாலும் சர்வேசுரனாகிய சிவபெருமானை யபிஷேகித்து, பட்டினாலாவது பருத்தி யினாலாவது செய்யப்பட்டுள்ள வஸ்திரத்தைத்தரித்து மனோகரமான உருசி யுள்ள விரும்பத்தக்க பக்ஷியங்களையும் சிரேஷ்டமான பலவித பழங்களை யும் சுவர்ணபாத்திரத்தில் வைத்து நிவேதித்து, சுவர்ணம் நவரத்தினங்கள் முதலியவற்றையுஞ் சமர்ப்பிக்கவேண்டியது. பின்னர் மகா யோகியும் சதாசார ஸம்பந்நனுமான பிராமணனைச் சிவபெருமானாகவே பாவித்து "ஶர்வாயவ்யக்த ரூபாய நாம்நா தஸ்மை" என்று சொல்லிக்கொண்டு, சிவார்ப்பணஞ் செய்த பொருள்களிற் சிலவற்றை அவ்வேதியனுக்குக் கொடுக்கவேண்டும். சங்கிராந்தி - விஷுவத்புண்யகாலம் - வ்யதிபாதம் -

தக்ஷிணாயண வுத்தராயணங்கள் - கிரஹணகாலம் - பூரணை - அமாவாசை-சதுர்த்தசி-அஷ்டமி முதலான புண்ணியகாலங்களிற் செய்யப்படும் பூஜை நைமித்திக பூஜையாதலின், அக்காலங்களிற் சிவலிங்கார்ச்சனை செய்தவர்கள் நித்ய பூஜை செய்வோரைக்காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமான பலனை யடைவார்கள். இது *சிவபெருமானாலேயே கூறப்பட்டவை. இவற்றை உள்ளபடியே உனக்குச் சொன்னேன் என்று ஸநத்குமார முனிவர் வியாஸபகவானுக்குக் கூறினரென்று ஸூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குரைத்தனர்.

சிவலிங்கபூஜாபலனுரைத்தது

முற்றிற்று.

பதினேழாவது

சிவனடியர்சிறப்பும்அடியவர்பூஜாபலனுமுரைத்தஅத்தியாயம்.

சௌநகாதி முனிவர்களே! வியாஸபகவான் ஸநத்குமார முனிவரைப் பணிந்து, மஹருஷியே! சிவபெருமானுக்குப் பரமபக்தராயிருந்து வேதாகமங்களில் விதித்த முறைப்படி பக்திசெய்யுஞ் சிவபக்தர்களைப்

* மேருபர்வதத்தின் மேலுள்ள சதசிருங்ககிரியின் நடுவில் பிரமதேவனது மனோவதி நகரத்தில் ஸநத்குமாரமுனிவர் அநேக இருடியர் புடைசூழ்ந்திருப்ப, புலித்தோலாசனத்தமர்ந்து காயத்திரி மந்திரத்தாலும் பஞ்சப்பிரம மந்திரத்தாலும் பரமசிவனைப் பலகாலந் துதித்து அசைவற்ற சிவயோகத்திலமர்ந்து ஆனந்தபரவசராய் அறிதுயில்கொண்டிருக்கையில், சிவபெருமான் அம்முனிவருக்குத் திருவருள்புரியத் திருவுள்ளங்கொண்டு பார்ப்பதிசமேதராய்த்தருமவிடை யிவர்ந்து கந்தர்வ யக்ஷ சித்த முனிகணங்கள் துதிசெய்யவும், தும்புரு நாரதர் வீணைவாசிக்கவும், ஆகாயவீதியிற் காட்சிதந்தருள, ஸநத்குமாரர் தாம்கொண்ட சிவயோகத்தால் அதனை யறியாராகி, யெழுந்திராதிருக்க, சிவபெருமான் இவன் என்னையே தியானித்துக்கொண்டிருக்கவென் றாசீர்வதித்துத் திருக்கைலைசேர்ந்தனர். அப்பொழுது அருகிருந்த நந்திதேவர் வெகுண்டு, இம்முனிவன் தன்னைச் சமீபித்த சிவபிரானைச் சேவைசெய்யாது ஒட்டகம் போல விருந்தமையின் ஒட்டகமாகுக வென்று சபிக்க, ஸநத்குமாரர் ஒட்டகமாகி உலகெங்குந் திரிந்து நல்வினைப்பயனால் காஞ்சிநகரை யடைந்து அங்கு அருந்தவஞ் செய்துகொண்டிருந்த தன் தந்தையாகிய பிரமதேவனைக் காண, பிரமன் மனம் வருந்தித் தனது ஞானத்தால் நிகழ்ந்தவற்றை யறிந்து, கச்சபேசுரருடைய சந்நிதானத்தை யடைந்து பலவிதமாகத் துதிக்க, சிவபெருமான் கருணைகொண்டு பிரசன்னராக, பிரமன் தன் மைந்தனுக்குற்ற விக்கினை மாற்றியருளவேண்டுமென, சிவபிரான் அது நந்தியினாலே விலகும். அவன் சதசிருங்கமடைகவென் றந்தர்த்தானமாயினர். பின்னர் பிரமதேவர் திருநந்திதேவரைப் பலவகையாகத் துதித்தனர். நந்திபகவான் அவர் தோத்திரத்திற்கிரங்கி ஸநத்குமாரமுனிவரைப் பழையவுருவமெய்தக் கடாக்ஷித்துத் தமது மாணாக்கராக்கிக்கொண்டு, சிவபெருமான் தமக்குபதேசித்த வேதாகம சாத்திரங்களையெல்லாம் அவருக்குப் பயிற்றியருளினர். அதனாற் சிவபெருமானாற் கூறப்பட்டவகையே கூறுகின்றேனென்றார்.

பூசைசெய்தவன் யாது பலனை யடைவானென்பதைச் சங்கிரகமாக எனக்குச் சொல்லவேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார்: வியாஸமுநிவனே! எப்பொழுதுஞ் சிவபெருமானிடத்திலேயே தமது மனவாக்கு காயங்களை யொப்புவித்த சிவபக்தர்களை அச்சிவபெருமானாகவே பாவித்துப் பூஜித்தவன் எண்ணிறந்த போகங்களை யநுபவித்துஆயுண் முடிவிற் சிவகடாக்ஷத்தாற் கைலாயபதவியை யடைவான். ஆதலின்சிறந்த போகங்களை யநுபவிக்கவேண்டுமென்று கருதுகிறவன் சிவபக்தருக்குத் தன் சக்திக்கியன்றவளவில் வஞ்சனையின்றி, வஸ்திரம் ஆபரணம் அன்னம் முதலியவற்றைத் தானமாகக் கொடுத்துப் பக்தியோடு பூஜிக்கக்கடவன். சிவபக்தனுக்கு வஞ்சனையின்றித் தன்னாலியன்றவளவில் விதிப்படி பணிவிடைசெய்தவன் பிரபுவாயினும் ஏழையாயினும் அவன் அடையும் பலனைச் சொல்லுகின்றேன்: அவன் உயிர்நீங்கினவுடனே சூரியகிரணங்களைப் போன்ற வொளியுடைய திவ்ய விமானத்திலேறி, தன் முன்னோரில் எழுதலைமுறைவரையிலும் அதோகதியி லிருப்போரையும் உடன்கொண்டு சிவமந்திரத்தை யடைந்து மனோகரமான போகங்களை யநுபவித்து, தேவமாந கணிதமான அநேக ஆயிரவருஷங்கள் பலராற் சேவிக்கப்பட்டுப் பின்னர் விஷ்ணுபதவியை யடைந்து அங்குள்ள போகங்களை யநுபவித்து மேற்கூறிய காலவளவு அவ்விடத்துள்ளவராற் சேவிக்கப்பட்டுப்பிரமலோகத்தை யடைந்து அங்குள்ள விமலமான ஸ்திரீமுதலிய போகங்களை மேற்கூறிய வளவுகாலம் அநுபவித்துமுறையே இந்திரலோகம் கந்தர்வலோகம் யக்ஷலோகம் இவற்றை யடைந்து ஆங்காங்குள்ள அளவிறந்தபோகங்களை யநுபவித்து மீண்டும் பூலோகத்திற் சிரேஷ்டமான வேதியகுலத்தில், தான் முன்னடைந்துள்ள விசேஷ ஞானகுணமுடையவனாய்த் தோன்றி, ஜந்மாந்தர புண்ணியவசத்தாற் சற்குருவை யுபாசித்து அக்குருவருளால் அகண்டமான சிவஞானத்தை யடைந்து யோகோபாசனை செய்து, சம்சாரபந்தத்தினின்றும் விலகிச் சிவசாயுச்சியத்தை யடைவான்.

வியாஸமுநிவனே! யாகம் கர்மயாகம் ஞானயாகமென்றிருவகைத்து. அதில் கர்மயாகமானது பலவிதமான தானம் பூஜை அக்கினிகாரிய முதலியவற்றாற் பிரசித்தமாயுள்ளது. தியானம் என்பது சர்வேசுரனை யடைய வேண்டுமென்னுங் கொள்கையோடுஞ் சாந்திராயணாசரணமும், சுவாத்தியாயமும், ஜெபமுமென மூவகையாகப் பிரசித்தி பெற்றிருக்கின்றது. இதில் ஜெபமென்பது எப்பொழுதும் அடிக்கடி சிவசிந்தனையுண்டாயிருத்தலின் அது ஞானயாகமெனப் பெயருற்றது. அந்த ஞானயாகம் அத்தியாபனம், அத்தியயனம், வியாக்கியானம், சிரவணம், சிந்தித்தலென ஐவகைப்படும். இவை ஐந்தனுள், முதலாகிய அத்தியாபனத்தைக்காட்டிலும் அத்தியயனமும், அத்தியயனத்தைக்காட்டிலும் வியாக்கியானமும், வியாக்கியானத்தைக்காட்டிலும் சிரவணமும், சிரவணத்தைக்காட்டிலும் சிந்தித்தலும் ஒன்றற்கொன்று அதிகமாகச்சொல்லப்பட்டிருத்தலின் ஞான

யாகத்தின் ஐவகையிற்சிந்தித்தலே சிவகடாக்ஷத்தால் முக்தியைக் கொடுக்கத்தக்கது. ஞானத்தையின்றித் தியானங் கைகூடாது. யோகமார்க்கத்தாலேயே ஞானம் பெறப்படும். ஆதலின் ஞானமுந் தியானமும் உடைத்தாயிருப்பவன் சமுசாரசாகரத்தை நீந்த வல்லவனுவான். ஞானமென்றது தாமசகுணமின்மையும், விவகாரமற்ற மனமும், அநித்தியப்பொருள்களில் அவாவின்மையுமுடையது. அவ்வகைய ஞானமும் எப்பொழுதும் யோக சாதனமுடைய பரிபூரண விரக்தனுக்கே யுண்டாகும். அந்த ஞானமே முக்திமார்க்கத்தைக் கொடுக்கவல்லது. ஒருவர் சொல்வதைக்கேட்டு உண்டான ஞானமானது விகல்ப புத்தியை யுண்டுசெய்து இராகத்துவேஷாதிகளை யுடைத்தாகிச் சஞ்சலமாமாதலின் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாது. யோகமார்க்கத்தால் சுத்தமாகவும் இராகத் துவேஷாதிகளின்றி விளங்கும் ஞானத்தைப் பண்டிதனானவன் சிறிதுசிறிதாக அப்பியசிக்க வேண்டும். முன் கூறிய கேள்வியால் வரும் ஞானமானது ஆரம்பத்திலும் சிரவணத்திலும் அப்பியாசத்திலும் நிஷ்டையிலும் இராகத்துவேஷாதிகளாற் பலவகையாகிப் பரிசுத்தமான ஞானமுண்டாவதற்கு வழியாகும்; பாத்திர சுத்தஞ்செய்யவேண்டினோர் முதலில் அழுக்குஜலத்தாலும் பின்னர் சுத்தஜலத்தாலுங் கழுவுகையில் முதலிற் கழுவிய நீரால்சிறிது அழுக்குப்போமாறு பயன் சிறிது தருமெனக் கொள்ளவேண்டும். புழுதியால் மறைக்கப்பட்ட ஆகாயமானது முறையே சிறிது சிறிதாகப் புலப்படுமாறு விகல்ப ஞானமானது சிறிதாகத் தோன்றி இறுதியில் பரிசுத்தஞானத்தை யுண்டாக்கும். அலைகளாற் கலக்கப்பட்ட சமுத்திரமானது அசைவற்று நின்றாற்போல விஷயவாதனையால் அலைந்துகொண்டிருந்த மனமானது சலனமற்றிருப்பதே ஞானமெனப்படும். மற்றவை அஞ்ஞானம். இராகத்துவேஷாதிக ளில்லாததும், பாவனமயமுமாகிய சிரேஷ்டமான ஞானமே முக்தியை யளிக்கவல்லது. அஞ்ஞானமாகிய பாசத்தாற் கட்டப்பட்டுள்ள புருஷன் அமுக்தனெனப்படுவானாயினும், ஞானத்தால் அஞ்ஞானத்தை யகற்றியபின்னர் அப்புருஷனே முக்தனென்று கூறப்படுவான். சமுசாரத்திற்குக் காரணமாகவுள்ளது அஞ்ஞானம். அஞ்ஞானியானவனே சமுசாரச்சேற்றி லழுந்திக்கிடப்பான். அகண்ட தேஜஸாய், தமசு நசிக்குமாறு ஞானத்தால் அஞ்ஞானம் ஒழியும். அஞ்ஞானமுள்ளவரையில் இராகத்வேஷாதிகளால் தர்மாதர்மங்கள் உண்டாகின்றன. தர்மாதர்மங்களுள்ளவரையில் அவனுக்குச் சரீரமுண்டாகும். சரீரமுள்ளவரையில் கிலேசங்களாற் பாதிக்கப்படுவான். கிலேசத்தை யொழிப்பதற்காக மீண்டும் பிறவியடையாத வுபாயத்தைத் தேடவேண்டியது.

அஃதெவ்வாறெனில், தத்துவஞான மடைந்தாலன்றி அஞ்ஞானம் நசிக்கமாட்டாது. அஞ்ஞான நாசமுண்டான க்ஷணத்திலேயே இராகத்வேஷாதிகள் உண்டாகா. இராகத் துவேஷாதிக ளொழிந்தவுடனே புண்ணிய பாப க்ஷயமுளவாகும். புண்ணிய பாப பரிக்ஷயத்தாற் பிறவி

யில்லையாகும். பிறவியில்லாதபொழுது கிலேசமுதலியன உண்டாவதற் கிடமில்லை. கிலேசங்களற்றவிடத்தில் முக்தனென்று சொல்லப்படுவான். ஆதலின் மாநுடருக்குப் பலவித துக்கங்களும் அஞ்ஞானத்தாலேயே தோன்றுகின்றன. அந்த அஞ்ஞானத்தை ஞானத்தாலன்றிக் கர்மாதிகளால் நசிக்கச்செய்யமுடியாது. ஞானமொன்றனலன்றி மற்றென்றால் புண்ணியபாப பரிக்ஷயமுண்டாகாது. ஆதலின் மோக்ஷத்தை யடைய வேண்டியவன் ஞானத்தையே யடையவேண்டும். வெண்கலம் புளியினற் புனிதமாகுமாறு ஒருவன் மனம் ஞானத்தாற் புனிதமாகும். ஞானமென்னும் அமிர்த ரசத்தை ஒருமுறை பானஞ்செய்தவன் எல்லாக் காரியங்களையும் விடுத்து மீண்டும் அதனையே பானஞ்செய்ய எப்பொழுதும் விரும்புவான். ஒருமுறையேனும் ஞானமிருத ரசபானஞ் செய்யாதவன் அதன் தன்மையை யுணரானுகி மற்ற விஷயங்களிலேயே மனத்தைச் செலுத்திநிற்பான். ஞானமிருதத்தால் திருப்தியடைந்த கிருத கிருத்தியனை சிவயோகி உலகத்திற் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமிராது. அப்படிச் செய்யத்தக்கதொன் றிருக்கும்பக்ஷத்தில் அவன் உண்மையான தத்துவஞானியல்லன். இகலோக பரலோகங்களில் அவன் செய்தற்குரிய காரியஞ் சிறிதுமில்லையாதலின், அவன் இவ்வுலகத்திலேயே முக்த தசையை யடைந்து பரிபூரணனுக விளங்குவான். ஞானத்தைக்காட்டிலும் பரிசுத்தமானதும் பரிசுத்தமாக்குவதும் பிறிதொன்றுமில்லை. அதனைப்படிப் படியாக அப்பியசித்தபக்ஷத்தில் ஆத்மசொரூபம் நன்கு விளங்கும். விரதாசரணங்கள் தானங்கள் தபசுகள் யாகங்கள் ஸந்நியாசமுதலிய ஆச்சிரம தருமங்கள் தீர்த்தயாத்திரைகள் முதலிய யாவுஞ்சுவர்க்கபதவியைமட்டும் உண்டுசெய்ய வல்லவையேயன்றிப் பிறவியை யொழிக்க வல்லவையன்று. சாந்தியை யளிக்கும் சிறந்த ஞானமொன்றே புநர்ஜன்ம நாசஞ்செய்ய வல்லது. எப்பொழுதும் இந்திரியநிக்கிரகமும் ஒரே மனதும் மகருஷிகளாற் கூறப்பட்ட புராண தர்மசிரவணமும் படனமும் உண்டாயிருக்கும் பக்ஷத்திற் பாபக்ஷயமுண்டாகி அவ்வகைய ஞானம் தோன்றி அதனுல் முக்தி கைகூடுகின்றது. யாகஞ்செய்தவன் தேவபோகங்களை யடைவான். தவஞ்செய்தவன் பிரமபதவியை யடைவான். தானஞ்செய்தவன் பலவித போகங்களை யடைவான். ஞானப்பியாசஞ் செய்தவன் மோக்ஷத்தை யடைவான். அஞ்ஞானி புண்ணியபாபங்களால் துன்புறுவான். ஞானியோ தன் ஞானமாகியகத்தியால், தன்னை ஜன்மத்திற்கிழுக்கும் புண்ணியபாபங்களாகிய சூத்திரத்தை யறுத்து, பரம்பொருளாகிய சிவத்தை யடைவான். ஞானிகளுக்குச் சுபாசுப கர்மங்களாற் பந்தமுண்டாயின், வினைக்கயிற்றாற் பந்திக்கப்பட்ட அவர்களுக்கு எவ்வாறு பரமுக்தி கைகூடுமென்பாயாயிற் சொல்லுகின்றேன். சுபாசுப கர்மங்கள் தேகமுள்ளவரையில் இகலோகத்திலாவது பரலோகத்திலாவது அநுபவித்தேதீரவேண்டும். தர்மாதர்ம பரிக்ஷயத்தால் முக்தி கைகூடுமென்றதால், தர்மத்தைச் செய்யாமலும் அதர்மத்தைச் செய்யாமலுமுள்ளவன் முக்திபெறுவானேவெனிற் பெற

மாட்டான். எவ்வாறெனில் தர்மஞ் செய்யாதபொழுது அதர்மஞ் சித்தித்து நிச்சலத்துவமுண்டாகாது. அதர்மஞ் செய்யாதபொழுது தர்மமுங்கைகூடாது. ஆதலால் தர்மாதர்மங்களைப் பயன் விரும்பாது செய்து அதனால் விளையும் புண்ணியபாபங்களை ஞானமாகிய அசியினால் நீக்கிமுக்தியடையவேண்டும்.

வியாஸமுநிவனே! அக்கினியானது உலர்ந்த விறகைக் தகிக்குமாறு, ஞானமென்னுந் தீயானது சுபாசுபங்களாலுண்டான தர்மாதர்மங்களாகிய விறகினைத் தகித்துவிடுகின்றது. மணிமந்திரௌஷதங்களை யுடையவன் பாம்பொடு பழகியிருப்பினும் விஷபாதை யடையாததுபோல, ஞானமுடையவன் இந்திரியங்களாகிய பாம்புகளுடன் கூடியிருப்பினும் அவற்றால் ஒரு துன்பமுமடையான். மந்திரௌஷதியுடையவன் விஷபானஞ்செய்யினுந் துன்புடையான்போல ஞானமுடையவனைப் பாபங்கள் துன்புறுத்தமாட்டா. ஞானத்தைப்போலவே தியானமும்விளங்கும். அவையிரண்டும் சமானமாக வுள்ளவை. ஞானத்தியானங்களையுடைய முநிவன் சௌக்கியமடைந்து ஆயுளிறுதியில் மோக்ஷத்தை யடைவான். தியானத்தால் அகண்டைசுவரியமும், ஐசுவரியத்தால் உத்தமமான சுகமுமுண்டாகும். பின்னர் ஞானத்தால் அந்தச் சுகத்தை வெறுத்துப் பிறவியையொழித்து முக்தியை யடைவான். உத்கீதாதி யுபாசனைகள்-யாகதானாதி அநுஷ்டானங்கள்-தியான சமாதி முதலியவற்றால், உண்டாக்கத்தக்க ஞானமானது நித்தமும் சுத்தமும் சூக்ஷமமும் பிரசன்னமும் தோஷரகிதமும் சிரேஷ்டமும் முத்திக்கேதுவுமானதாகும். தியானயாகமே பிற யாகங்களைக்காட்டிலுஞ் சிறந்ததென்று கொள்ளவேண்டும். அந்தர்யோகமான இந்தத் தியானயாகத்தால் எப்பொழுதும் சிவபெருமானைப் பூஜை செய்பவன் அடைதற்கரிய உயர் கதியை யடைவான். இந்திரியங்களை யடக்கி மனத்தைச் சிவபெருமானிடத்திலிருத்தி, பத்துத் திசைகளிலும் நடுவிலும் இன்னும் பிற விடங்களிலும் அச்சிவபிரானே யிருக்கின்றார் என்று தியானிப்பவனைப் பரமயோகியென் றுணரவேண்டும். கர்மயாகத்திலுந் தபோயாகம் பத்துப் பங்கு உயர்ந்தது. தபோயாகத்தைக் காட்டிலுந் தியானயாகம் நூறுபங்கு உயர்ந்தது. ஞானத்தியானஸ்வரூபமும் சூக்ஷமமுமான சிவயோகமே சிறந்த மஹாயாகமாம்.

சிவபூஜை செய்தவன் அகண்டமான பிரபல ராஜபோகமும், அக்கினிகாரியஞ் செய்தவன் சம்பத்தும், ஜபஞ்செய்தவன் பாபநிவாரணமும், ஞானத்தியானங்கள் செய்தவன் முக்தியும் பெறுவான். பாபக்ஷயஞ் செய்தவனுக்கே ஞானத்தியானங்களில் மனஞ்செல்லும். ஒருகோடி வருஷப் பிரயத்தனத்தால் யோகசித்தியும், அரைக்கோடி வருஷப் பிரயத்தனத்தால் அக்கினி காரியசித்தியும், காற்கோடி வருஷப் பிரயத்தனத்தாற் புண்ணியஸ்தலவாசமும் புண்ணிய தீர்த்தஸ்நானமுங் கைகூடும். அக்கினிகாரியஞ் செய்பவனுக்குப் பகவான் அக்கினியிலும், பண்டிதர்

களுக்கு அவர்கள் இதயத்திலும், அஞ்ஞானிகளுக்கு விக்ரஹங்களிலும், ஞானவான்களுக்கு எல்லாப்பொருள்களிலும் விளங்குவதாகக்கொள்கை. மகா யோகிகள் தங்கள் ஆத்துமாவே பரசிவமென்று கொள்வரன்றி விக்கிரஹங்களிற் றியானஞ் செய்யமாட்டார்கள். அவ்விக்கிரஹங்களும் யோகிகளின் மனத்திற் றரிசித்தவகையாகவே நிர்மாணஞ்செய்யப்பட்டுள்ளன. சாந்தஸ்வரூபியாகிய சிவபெருமானைச் சர்வவியாபகனென் றுணர்ந்து ஸ்மரணைசெய்பவன் எவனோ அவனிதயத்திலேயே சங்கரபகவானும் நீக்கமற எழுந்தருளியிருப்பர். இதயத்தில் தன்னுள்ளேயே விளங்குந் தலைவனைக்காணமாட்டாதவர்கள் இறைவனெங்கேயோஇருக்கிறனென்று திரிகிறார்கள். சர்வாந்தர்யாமியாய் எல்லாப் பொருள்களிலும் சிவபெருமானே நிறைந்திருக்கின்றார் என்றுணர்ந்த சிவயோகிகள் ஒருநாளாகிலும் அரைநாளாகிலும் வசித்த இடத்தின் பாக்கியமே பாக்கியம். அதுவே தீர்த்தம். அதுவே தபோவனம். யோகஞ் செய்யவேண்டுமென்று கருதியவன் அவ்வாறு நினைத்தமாத்திரத்திலேயே அடையும் பலனை அநேக யாகங்கள் செய்தவனும் அடையமாட்டான். நவமணியுங் கல்லும் இரண்டுங் கற்களேயாயினும், கல்லைச் சுமந்தவன் தேககஷ்டமுதலியன அநுபவித்தும் விசேஷ சுகத்தை யடையாமல், மணியைச் சுமந்தவன் சுகமடைவான்போல, கர்மயாகஞ்செய்தவன் கஷ்டமநுபவித்தும் விசேஷ பலனை யடையாமல் ஞானத்யான யாகஞ்செய்தவன் சிறந்த பலனை யடைவான். உலகத்தில் அரசனுயிருப்பவனுக்கு அவனருகிலிருக்கும்மந்திரிமுதலானோர் பிரீதியுண்டுசெய்து பிறர் பிரீதிசெய்யாததுபோல, தியானயோகஞ்செய்தவர்கள் சிவபெருமானுக்குப் பிரியவான்களாய்க் கர்மயாகஞ் செய்தவர்கள் பிரியவான்களாகமாட்டார்கள். யானையின் தந்தங்களில் உள்ளேயிருப்பவை அறுக்கப்படாமற் சுகமாயிருப்பவையும் வெளியே தோன்றுபவை அடிக்கடி அறுபட்டுக் கஷ்டமடைவனவும்போல, சிவபெருமானை அந்தரங்கமான தியானயாகத்தாற் பக்திசெய்பவர்கள் சுகமடைபவர்களாகவும் புறம்பே கர்மயாகத்தாற் பக்திசெய்பவர்கள் கஷ்டமடைபவர்களாகவுங் கொள்ளவேண்டும். ஆதலின் தியானயோகத்தால் மனத்துக்கு மாத்திரம் விஷயமாகவும் மகத்துவமுடையதுமான ஞானமுண்டாகும். அவ்வகைய தியானயோகத்தை அறிவுள்ள புருஷன்எப்பொழுதுஞ்சிவார்ச்சனையாகச் செய்யவேண்டியது. ஆனல் கர்மயாகத்தாற்பலனில்லையோ எனக்கேட்பாயாயின், வியாஸமுநிவனே! கர்மயாகத்தாலும் பயனுள்ளது. அஃதெங்ஙனமெனில், யானையைப் பிடிக்கவேண்டியவன் தன்னிடத்தில் நெடுநாளாகப் பழகிவந்த ஒரு யானையை உடன்கொண்டு வனத்தை யடைந்து ஆங்குப் பல யானைகளுடன் போர்செய்துகொண்டிருக்கும்யானையைத் தன் யானையாற் பிடித்துக்கொண்டுவருமாறு, அடைதற்கரிய ஞானயாகத்தைத்தான் நெடுநாள் பழகிவந்த கர்மயாகத்தினலேயே யடையவேண்டியது. ஆகாயத்திற் பறக்க விரும்பும் பறவையானது தன் ஒரு சிறகினற் சாத்தியப்படாது இரண்டு சிறகுகளாலும் பறக்குமாறு, சிவசாயுச்சியத்தையடைய

வேண்டியவன் கர்மயாகத்தால் அடைந்த தியானயாகவுதவியா லடைய வேண்டியது என்றும் பெரியோர் சிலர் சொல்லுவர். ஒருமுகூர்த்தகாலம் சிவபெருமானைத் தியானயாகத்தால் அர்ச்சித்தவன் பெறும்பேறுஇத்தன் மையதென்று அளவிட்டுச் சொல்ல ஒருவருக்குந் தரமன்று.தியானயாகஞ் செய்ய யத்தனித்தவனுக்குத் தெய்விகமாக அநேக விக்கினங்கள் சம்ப வித்தபோதிலும், சிரத்தையும் குருபக்தியுமட்டும் உண்டாயிருப்பதுபற்றி, உருத்திரலோகத்தை யடைந்து ஆங்குள்ள சகல சுகங்களையு மநுபவித்து யோகிகளது புனிதமான குலத்தில் ஜனித்து ஞானயாகம் பெற்றுச் சமு சார விரக்தியடைவான். அதமம் மத்திமம் உத்தமமெனச் சிரத்தையானது முத்திறப்படும். ஞானயோகமானது மூன்று ஜனனங்களிலுங் கைகூடப் பெறுதவனுக்கு அசிரத்தையுண்டென்று கொள்ளவேண்டும். பக்தியோடு சிவபெருமானைத் தியானஞ்செய்வோன் விரதத்தாலுந் தவத்தாலுங் கோ ரத்தக்கவை யாவும், பெற்று ஞானமடைந்து நித்யமான மோக்ஷசுகத்தை யடைவான். வியாஸமுநிவனே! இவ்வகையாகத் தியானயோக மகிமையை யும், அந்த ஞானயோகத்தை அப்பியசிக்கும் சாந்தமனமுடைய முனிவர்க ளது பிரபாவத்தையுஞ் சொன்னேன். இனி அவ்வகைய பெரியோர்களா கிய ஞானயாகஞ் செய்வோருக்குத் தானஞ்செய்தவன் பெறும் பேற்றி னையுஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

வியாஸமுநிவனே! கர்மயாகஞ்செய்வோருக்கு ஒருதரம் தானஞ் செய்தால், சாதாரணமான வேதியருக்குப் பத்துஜனனங்களில் தானஞ் செய்த பலனும், தபோநிஷ்டர்களுக்குத் தானஞ்செய்தால் நூறு ஜனனங் களில் தானஞ்செய்த பலனும், கர்மயாக தபோயாகமுடையவருக்குத் தானஞ்செய்தால் ஆயிரஞ் சனனங்களிற் செய்த பலனும், சிவபக்தர்க ளான தியானயாகமுடையவருக்குத் தானஞ்செய்தால் லக்ஷ ஜனனங்களிற் செய்த பலனும் உண்டாகி, அது அற்பதானமாயினும் எக்காலமும் பல னளிக்கத்தக்கதாக முடியும். இதில் தேசம் காலம் விதி சிரத்தை முதலிய வற்றூற் சற்பாத்திரமான சிவபக்தனுக்கு அற்பமாயினும் விசேஷமாயி னுஞ் சக்திக்கேற்பச் செய்த தானமானது அக்ஷயமான பதவியைக் கொ டுக்கும். தேசகாலங்களைக் கவனித்து விதிப்படி சிரத்தையோடு சத்பாத் திரனுக்குத் தானஞ்செய்தவனும், ஹோமஞ்செய்தவனும் அக்ஷயமான பலனடைவதிற் சிறிதும் ஐயமின்று. ஞானமாகிய ஜலத்தால் புனிதமாக் கப்பட்ட மனத்துடன் ஆசாரம் வமிசம் விபூதிதாரணம் முதலியனவுடைய வன் சற்பாத்திர சிரேஷ்டனும், தானஞ்செய்தவனது கோரிக்கைகளைக் குறைவறக் கொடுக்கவல்லவனுமாவான். ஞானமின்மையாகிய நுரையை யுடைய சமுசாரமாகிய சாகரத்தில், ஞானமாகிய தெப்பத்தால் தாண்டித் தன்னுடன் பலரையுந் தாண்டச் செய்கிறவனும், பெரும் பாவமாகிய சமுத்திரத்தை ஞானமாகிய படகினற் கரைகண்டு பலரையுந் தன்னுடன் வரச்செய்து அவர்களால்எண்ணிறந்தவர்களையுங் கரைகாணச்செய்விக்கிற

வனும், உத்தமபாத்திரமாவர். சிவயோகியானவன் எவன் வீட்டில் ஒரு வேளை பிக்ஷை யேற்கின்றானோ அவனுடைய வமிசத்திலிருப்பவர்கள் யாவரையும் முக்திக்கனுப்புவான். யாகத்தினாலும் தீர்த்தயாத்திரைமுதலிய வற்றினாலும் உண்டாகும் பலன்களெல்லாம் சிவபக்தர்களுக்கு அன்ன தானஞ்செய்வதனாலேயே உண்டாகும். சாந்தமும் சிவத்தியானமுமுடைய ஞானவானுக்குச் சிரத்தையுடன் ஒரு முறை அன்னமளித்தவன் தன் பாவங்களையெல்லாம் அப்பொழுதே ஒழித்து இஷ்டகாமியங்களை யெல் லாங் குறைவின்றி யடைவான்.

பிதுர்க்களையுத்தேசித்துச்சிரார்த்தகாலங்களிற்சிவபக்தர்களுக்கு அன்னமளித்தவன் தன் குலத்தவர்களைப் பதினொரு தலைமுறைவரையில் உடன்கொண்டுசிவலோகமடைவான். போஜனகாலத்தில் சிவா ! சங்கரா ! என்று பகவன் நாமத்யானஞ்செய்தவன் புசித்த உணவுகளெல்லாம் சிவப்ரீதியாய்ப்பலனையுண்டுசெய்யும். சாஸ்திரோக்தப்படி சிவநிவேதனஞ் செய்து, அக்கினிகாரியம் (வைசுதேவம்) முடித்துத் தன் குருபாகத்தைக் குருவிற்குக் கொடுத்து அங்குவந்த பிராமண அதிதிகளுக்கும் அன்ன மளித்துப்பின்னர்புசிக்கவேண்டும். அல்லாதவன் அன்னம்புசித்தவனாகாது சமஸ்த பாவங்களையும் பக்ஷித்தவனாவான். அஃதெங்ஙனமெனில் கிருஷி வ்ருத்தி வர்த்தகம் கோபம் ஸம்மார்ஜனம் முதலியவற்றாற் பலவிதமான பாவங்கள் புருஷருக்கு விருத்தியாகிக்கொண்டிருக்கின்றன. அப்பாவங் களின் விருத்தியால் ஸம்மார்ஜனம் அஞ்சனம் தோயம் அக்கினிகுண்டம் நிபேஷணமென்னும் பஞ்சஸூநங்கள் எப்பொழுதுங் கிரகஸ்தர்களை ஆச் சிரயித்தே யிருக்கின்றன. தான் புசிக்கும் பக்குவான்னங்கள் யாவும் சிவ அக்னி குரு அதிதிகளுக்கு நிவேதித்துப் புசித்தால் இப்பஞ்ச ஸூநங்க ளும் இதரமான அநேகபாவங்களும் இல்வாழ்வோரை யடையமாட்டா. ஆதலின் அவ்வுணவினைச் சிவாதிகளுக்கு ஆராதித்தே புசிக்கவேண்டும். சிவ அக்கினி குரு முதலியவர்க்கு எத்தனை பருக்கை நிவேதிக்கின் றார்களோ அத்தனையாயிர வருஷங்கள் சிவபுரத்தில் வசித்திருப்பார்கள். நெய் பக்ஷியங்கள் அன்னம் இவற்றை நிவேதித்தவன் நூறுபங்கு விசேஷ பலனையடைவான். சாஷ்டிகோதன நிவேதனஞ்செய்தவன் ஆயிரம்பங்கு பலனையுறுவான். சுகந்தமான சாலியரிசியாற் சமைத்த அன்னத்தை நிவேதித்தவன்முற்கூறியதிலும்பத்துப்பங்குபலனையடைவான். செஞ்சாலி யன்னம்படைத்தவன் முற்கூறியதிலும் பத்துப்பங்கு பலனைப் பெறுவான், கலமசாலியன்னம் நிவேதித்தவன் லக்ஷக்கணக்கான பலன் பெறுவான். இவ்வாறு ஒன்றற்கொன்று விசேஷபலன் கொடுக்கத்தக்கவை. நல்ல பதார்த்தங்களோடு கூட்டி அன்னம் படைத்தவன் புண்ணியவிருத்தி யடைவான். க்ஷீரான்ன நிவேதனத்தால் பத்துப்பங்கு விசேஷபலன் கைகூடும். தயிர் சர்க்கரை கூட்டிய அன்ன நிவேதனத்தால் முந்தியதினும் பத்துப்பங்கு அதிகபலன் வரும். நல்லசுவையும் குளிர்ச்சியும் பச்சைக்

கர்ப்பூரமுதலியவற்றின் மணமுமுடைய அறுசுவையோடுகூடிய அன்னம் படைத்தவன் பத்துக்கோடிப்பங்கு விசேஷ புண்ணியத்தையடைவான். நெய்யாற்செய்த அதிரசங்களைப் படைத்தவன் பெரும் புண்ணியத்தைப் பெறுவான். இப்படி உருசியுடையதும் நெய்யாற்செய்ததும் மணமுடையதுமாகிய இவற்றைப்பக்தியுடன் சிவ அக்னி குரு பந்துக்களுக்குச் சமர்ப்பித்துப் பின்னர்தான்புசித்தவளவில் அக்ஷயமானபலனையடைவான். சிவயோகிகளைப் பிதுர்தினத்தில் வருவித்து இப்படிச் சுவையோடு கூடிய உணவைப் பக்திபூர்வமாக அவர்களுக்குப் படைத்தவன் தன் பிதுர்க்கள் செய்த பாவங்களை நீக்கிச் சுவர்க்கலோக மடைவிப்பான். வஸ்திரம் அன்னம் பானமுதலியவற்றைச் சிவயோகிகளுக்குச் சிரத்தையுடன் ஒருமுறையாவது கொடுத்துப் பூஜைசெய்தவன் அப்பொழுதே பிரம விஷ்ணு ருத்திரர்களைப் பூஜித்த பலனையடைவான். சிரார்த்த தினத்திற் சிவாராதனை செய்து சிவயோகிகளைப் பிக்ஷைகொள்ளும்படி விளித்தபொழுதே அவனுடைய பிதுர்க்கள் ஆனந்தித்து நடனஞ்செய்தும் கானஞ்செய்தும் அவனை ஆசீர்வதிப்பார்கள்.

வியாசமுநிவனே! விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு உருத்திராக்ஷமணிமாலையணிந்து சிவாதிநாமங்களை யுச்சரித்துக்கொண்டு சிவயோகி யொருவன்வந்து வாயிலினின்றவுடனே, அவ்வீட்டிற்குத் தனதானியசம்பத்துகள்சேரும்.உத்தமமானசொர்க்கபதவியுமுண்டாகும்.ஆதலின் அதிதிவருவதுணர்ந்தவன் அவனை அஞ்சலியஸ்தனு யெதிர்கொண்டு அழைத்துவந்து சக்திக்கேற்றபடி பக்தியுடன் அன்னபானாதிகளால் அவனைத் திருப்திசெய்யவேண்டும். அவ்வதிதி தேஜோரூபமுடையவனாயினும் விரூபியாயினும் மலினனாயினும் மலினவஸ்திரமுடையவனாயினும் அவன் இவ்வகையினனென்றுவிசாரியாமல் இவன் சிவயோகியேயென்று உள்ளத்திற்கொண்டு உபசரிக்கவேண்டும். தன்வீட்டிற்குவந்தஅதிதியைத் துவேஷித்த இல்வாழ்வோன், சாக்ஷாத் சிவபெருமானையும் எல்லாத் தேவர்களையும் வேதங்களையும் யாகங்களையும் ஆகமங்களையும்துவேஷித்தவனாகிஅதோமுகனாயும் ஊர்த்துவபாதனாயும் நரகத்திற் பெருந்துயர் அனுபவித்து, பலவித புழுக்களாற் கடிக்கப்பட்டு, அக்கினியால் தகிக்கப்பட்டு, கல்பாந்தவரையில் அநேககோரமான நரகங்களிற் பாதிக்கப்படுவான். சிவயோகிகளை அபராதிகளென வொருவன்சொல்லுகையில்,கேட்டுக்கொண்டிருந்தவன் இன்னும்விசேஷமானநரகங்களில்இவ்வுலகமுள்ளவரையிற் பாதிக்கப்படுவான். சிவயோகியை அபராதியென்றுசொல்பவன் விசேஷமான பாவங்களை யநுபவிப்பானென்பதிற் சிறிதுஞ் சந்தேகமே யில்லையாயினும், சொல்பவனைக்காட்டிலும் கேட்பவன் இரட்டிப்புப் பாவத்தை யநுபவிப்பான். தூஷிப்பவன் தூஷணையைக்கேட்பவன் அதனையங்கீகரிப்பவன் தூஷிக்கலாமென்றவன் அவர்களோடு கூடியவனாகிய இவர்கள் ஐவரும் பஞ்சமகாபாவிகளென்று சொல்லப்படுவர்.

அஞ்ஞானமாகிய சேற்றிலழுந்தித் தன்னை யிரட்சித்துக்கொள்ளச் சக்தியற்றுப் பாவமாகிய மலைகளால் மறைக்கப்பட்டுச் சற்குணஞ் சிறிது மற்றுள்ளவன் அபாத்திரவானென்றறிந்து கொள்ளவேண்டும். அபாத்திரனுக்குத் தானங் கொடுத்தபக்ஷத்தில், சுடாத பச்சைமண்ணாற் செய்த பாத்திரத்திற் சொரிந்த ஜலமானது அதில்நிற்காது பாத்திரத்தை விரித்துக்கொண்டு கீழேபோய்விடுமாறு, அத்தானமும் பலனற்றதாகும், அத்தானம் வாங்கியதைப்பரிக்க வல்லபமில்லாது தானமேற்ற அபாத்திரனும் அழிவான். அன்றியும் அபாத்திரனுக்குக் கொடுத்த தானம் களர்நிலத்து விதைத்தவிதையையும், சாம்பலிற்சொரிந்த ஹோமதிரவியத்தையும்போல நிஷ்பலமாக முடியும். ஞானஹீனனாகிய அபாத்திர வேதியனுடைய ஜன்மமானது, ஸ்திரீயை யடைந்த நபும்ஸகனைப்போல நிஷ்பலமாகும். அபாத்திரனும் அவனுக்குத் தானங்கொடுத்தவனும், இருப்புத்தெப்பத்திலேறிச் சலத்தைத் தாண்டவேண்டியவன் தெப்பமுந் தானும் முழுகி யொழிதல்போல, இருவரும் அஞ்ஞானத்திலழுந்தி வருந்துவர். காருணியமாகவும் சிரத்தாபக்தியோடுஞ் சற்பாத்திரத்திற் றானஞ்செய்பவனது தானமே ஸமஸ்தமான உத்தம கோரிக்கைகளையெல்லாங் கொடுப்பது. குருடர் தரித்திரர் முடவர் திக்கற்றவர் பாலர்கள் விருத்தர்கள் யோகிகள் இவர்களை இல்வாழ்வோன் அதிதிகளைப் போஷிப்பதுபோலவே தன் சக்திக்கேற்ப உதவி செய்யவேண்டியது. ஞானிகளை அவர்களது யோக்கியதைக்காகவும்,பிறரை அவ்வாறில்லாதவராயினும்மாநுடஜனனம் வகித்ததற்கேற்பப் பரோபகாரசிந்தனையோடும் உதவிபுரியவேண்டியது. அதிதிகளும் சற்பாத்திரரும் தமக்குத் தானங்கொடுப்பவனுக்குதவிசெய்யவேண்டுமென்னுங்கருத்தால் யாசிக்கின்றனரேயன்றித் தமது சுயப்பிரயோசனத்திற்காகமாத்திரம் யாசிப்பவர்களல்லர். ஆதலின் தரித்திரனும் சாதுவுமாயிருப்பவனை அதிக பிரயத்தனத்தோடும் தயையோடும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவனே இல்வாழ்வோனென்னப்படுவான். தானஞ்செய்யாமையினாலேயே ஒருவனுக்குத் தரித்திரமும், தானஞ்செய்வதனாலேயே சம்பத்தும் உண்டாகின்றன. அதிதியானவன் கொடையாளிக்கு உதவி செய்யவேண்டு மென்னுங் கொள்கையினாலேயே தனக் குதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றான். அதனால் கொடுப்பவன் மேலுலகத்தும் வாங்குபவன் கீழுலகத்துமிருப்பார்கள். யாசகன் எனக்குக் கொடுக்கவென்று கேட்பது தாதாவுக்குச்சிலவிஷயங்களைப் போதிக்கின்றது. அவை:—யாசிப்பது மகாகஷ்டம். இது ஜன்மாந்தரத்தில் தானஞ் செய்யாமையாலுண்டானது. ஆதலின் இவனுக்குத் தானங் கொடாத பக்ஷத்தில் இவனைப்போலவே நமக்கும் சம்பவிக்கும் என்பதாம். ஆதலின் யாசகனைப் பூஜியாதவன் யாவன் ? தானஞ்செய்தவனாலேயே சொர்க்கத்தை யடைவான். இவ்வுலகத்தில் அதிதிகளைக்காட்டிலும் பரம பந்துக்கள் யாவருளர் ? கொடையாளிக்கு இகலோகத்திலும் பரலோகத்திலும்

பலனடையச்செய்பவர்களே யாசகர்கள் என்றுணரவேண்டும். நாடோறும் வந்து யாசிப்பவர்கள் அதிதிகளல்லர். திரவியவான்கள் யாசிக்க வருவாராயின் அவர்களு மதிதிகளாகார். படிகத்துக்குற்ற அழுக்கு துடைத்த மாத்திரத்திலேயே நீங்குமாறு, அப்போதைக்கப்போது தனக்குக் கிடைத்த பாவங்களைப் பரிகரிக்கும் வல்லபமுடையோரே அதிதிகள். அவ்வகைய அதிதி தானமேற்றுனாயின் தானும் தாதாவும் ஊர்த்துவ லோகப் பிராப்தியடைவர். தானங்கொடுப்போனும் ஏற்போனுமாகிய இருவரில்கொடுப்போன்மேலுலகத்தையும் பெறுவோன்கீழுலகத்தையும் பெறுவாரென்பதைத் தானகாலத்தில் அவர்கள் கைகளே புணர்த்துகின்றன. ஏழையாகிய யாசகன் தன் வீட்டை யடைந்து யாசிக்கையில், வணிக் தருமத்தை யநுசரித்து அவனைத் திரஸ்கரித்துப்பிறனை யெதிர்பார்ப்பவன் உண்மையிற் கொடையாளியாகமாட்டான். உலகத்தில் யாசகரில்லாவிடின் தர்மமென்பதே கிடையாதாதலின் யாசக ரிருக்க வேண்டுவதுதான். சாதுக்களான அதிதிகளுக்குத் தானஞ்செய்வதாற் பெறும் பலனை யாசகருக் குதவிசெய்வதாலும் அடையலாம். சாதுக்களை வித்யா விஷயமாகப் பரிக்ஷிப்பவன் உலுத்தன். அவனுக்குச் சத்பாத்திரத்திலாவது துஷ்பாத்திரத்திலாவதுஏழைகளிடத்திலாவதுதானம்தயை பரோபகாரம்முதலியன சிறிதுமுண்டாகமாட்டா. இல்வாழ்வோரிற் சிலர் வாயினல்மாத்திரம் மரியாதை பாராட்டி உபசாரவார்த்தைகள் சொல்லி, கடைசியில் ஒன்றுங் கொடாது அனுப்புவோருமுளர். அதிதிகளைக்கண்டவுடனே யெழுந்திருத்தல் எதிர்செல்லல் க்ஷேமம் விசாரித்தல் ஆசனங்கொடுத்து அதிலிருக்கச் செய்தல் கால்கழுவச்செய்தல் பிரியவாக்கியங்கூறல் அவர்கள்செல்லுகையிற் பின்றொடர்தல் என்னும் ஏழும் இல்வாழ்வோனைச் சுவர்க்கமடையச் செய்யுஞ் சோபானங்களாம். பொருளுள்ளவளவில் தன் சக்திக்கேற்பத் தானஞ்செய்யவேண்டுமென்று யோசனையுண்டானபொழுதே யாசகனுக்குக் கொடுக்கவேண்டும். இது தர்மராஜனான யமனுக்குத் துணையான தர்மமாய் முன்னின்று அவனை நரகத்திற் போக்காது தருமத்திற்குச் செலுத்தும். தானஞ்செய்வதிலேயே விருப்பமுடையவன் சொர்க்கவாசியேயாவன். பிரியவார்த்தையோடு செய்த தானஞ் சிறந்தது எனப் பெரியோர் கூறுவர். க்ஷேமத்தையடையக் கோருகிறவன் ஒருகாலத்திலாவது அன்பு பாராட்டிச் சத்பாத்திரனுயுள்ள ஒரு வேதியனுக்கு உபசார பூர்வமாகத் தன்னுற் கூடியவளவில் தானஞ்செய்தால் இஷ்டமான கோரிக்கையையும் சிறந்த கீர்த்தியையுமடைவான். தானஞ்செய்யச் சிறிதுஞ் சக்தியில்லாதவன் தன் வீட்டிற்கு வந்த யாசகனுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லிச் செல்லவிடுவதுஞ் சிறிது பலன்றருமென்று பெரியோர் கூறுவர். ஒருவன் வீட்டிற்கு வந்தவனைக் கடினமான வார்த்தைகளால் மனநோவச்செய்து அதிகமாகத் தானஞ்செய்யினும் அது தானபலனைச் சிறிதுங் கொடுக்கமாட்டாது. தானம் விரதம் நியமம் யாகம் தியானம் ஹோமம்

தவம் இவை யாவும் மனப்பூர்வமாகச் செய்யத்தக்கவை. அவ்வாறின்றி நிர்ப்பந்தத்தாற் செய்தவன் சிறிது பலனையும் அடையமாட்டான். சிரத்தையோடு தானஞ்செய்தவனும் பரிசுத்தமான மனத்துடன் தானமேற்றவனும் சுவர்க்கத்தை யடைவார்கள்; நரகம் ஒருகாலத்திலும் அவர்கள் கண்கட்குப் புலப்படமாட்டாது. உதாரகுணம் சத்சாவகாசம் சிநேகத்தன்மை தயை அசூயையின்மையாகிய ஐந்தும் வள்ளற்குரிய குணங்கள். இவை மகா பலன்களைக்கொடுக்க வல்லவை. காசி - குருக்ஷேத்ரம் - பிரயாகை - புஷ்கரம் - கங்காசமுத்திரசங்கமம் - நைமிசாரணியம் - ஸ்ரீ பர்வதம் - மஹா புண்ணியகரமான கோகர்ணம் - ஞானபர்வதம் இவை சுரர் சித்தர் முதலியோரால் எப்பொழுதுஞ் சேவிக்கப்படுகிற புண்ணியக்ஷேத்திரங்களென்று சொல்லப்படும். சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடங்களெல்லாம் புண்ணியக்ஷேத்திரங்களே. பர்வதங்களில் தோன்றும் நதிகள் யாவும் புண்ணியநதிகளே. பசுக்கள் சித்தர்கள் முனிவர்கள் வசிக்கும் இடங்கள் யாவும் புண்ணியக்ஷேத்திரங்களே. சிவக்ஷேத்திரங்களில் எவ்விடத்திலாவது அற்பதானங் கொடுப்பினும், அது சிவக்ஷேத்திர மகிமையால் எண்ணிறந்த பலனைக் கொடுப்பதாகும். சந்திரசூரியர் கிரகணகாலமும் விஷுவத் புண்ணியகாலமும் உத்தராயண தக்ஷிணாயண காலமும் வியதிபாதமும் ஷடசீத்முதலிய காலங்களும் மாதப்பிறப்பும் புண்ணியத்தை விருத்திசெய்யத்தக்க காலங்களென்று சொல்லப்படும். இவ்வகைய புண்ணியகாலங்களில் மகா பக்தியோடு தானஞ்செய்தால் அக்ஷயமாகும். ஞானத்திற்கும் சுகிர்தத்திற்கும் சிரத்தையே தாயாகும். ஆதலின் சிரத்தையோடு கூடிய மனமுடையவனுய் க்ஷேமங் கோருகிறவன் தானஞ் செய்யவேண்டும். சத்பாத்திர மானவனுக்குத் தேசமுங் காலமுமுணர்ந்து சிரத்தையோடு செய்த தானம் சமஸ்தகாமியங்களையும் அவன்விரும்பிய வகையே அடையச்செய்வதற்குச் சிறிதுஞ் சந்தேகமேயில்லை. இவற்றிற்கெல்லாங்காரணம் சிரத்தையேயாம் என்று ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவரை நோக்கிக் கூறினர் என்று ஸூத முனிவர் நைமிசாரணியவாசிகளுக்குச் சொல்லினர்.

சிவனடியவர் சிறப்பும் அடியவர் பூஜாபலனுமுணர்த்தது
முற்றிற்று.

பதினெட்டாவது
பாவவிவரணமுணர்த்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் சௌநகாதிமகருஷிகளை நோக்கிக் கூறுகின்றார்: மனவாக்குக் காயங்களினுற் றோன்றுவதும் நரகத்திற்கேதுவுமாகிய பெரும் பாவங்களைச் சங்கிரகமாகச் சொல்லுகின்றேன் கேளுங்கள். பரஸ்திரீயை யடைய விரும்புதல், அந்நியர் பொருளை யபகரிக்க விரும்புதல், அபகாரஞ் செய்யவேண்டுமென்றே நினைத்தல், செய்யத்தகாத காரியங்களையெல்

லாஞ் செய்ய விரும்புதல் இந்நான்கும் மானசிகபாவங்களெனப்படும். சம்பந்தமின்றிப்பேசுதல், பொய்பேசுதல், அப்பிரிய சம்பாஷணை, புறங்கூறல் இந்நான்கும் வாசிகபாவங்களெனப்படும். புசிக்கத்தகாதவற்றைப் புசித்தல், ஹிம்சித்தல், நிஷித்த காரியாசரணம், பிறர் பொருளை யபகரித்தல் இந்நான்கும் காயிகபாவங்களெனப்படும். இந்தப் பாவங்கள் பன்னிரண்டும் மாநுடருக்கு நரகமுண்டுசெய்யச் சாதனமானவை. எண்ணிறந்த துஷ்கர்ம பலனைக் கொடுக்கத்தக்க இப்பாவ பலன்களைச் சொல்லுகின்றேன்.

முநிவர்களே! சமுசாரமாகிய வனத்தைக் கடக்கச்செய்யும் சர்வேசுவரனைத் துவேஷிப்பவர்கள் மகா பாவிகள். ஈசுவரனையும் சாஸ்திரங்களையும் சர்வார்த்த சாதகமான ஞானத்தையும் தூஷிப்பவர்கள் மகா பாதகராதலின் அகோரமான நரகத்தையடைந்து அவர்கள்படும் பாட்டினை யொருவராலுஞ் சொல்லமுடியாது. சிவஞானத்தைச் சொல்லிக்கொண்டிருக்குந் தபோநிஷ்டனையும் குருவையும் பிதுர்க்களையும் நிந்திப்பவர்கள் சிறந்த நரகமான அதோகதியை யடைவார்கள். சிவநிந்தை குருநிந்தை சிவஞானநிந்தை தேவர் பொருளை யபகரித்தல் வேதியர் பொருளை யழித்தல் ஆகிய இவை மகா பாதகங்கள். மூர்க்கர்களானோர் சிவஞானத்தை யுணர்த்தும் நூல்களை யபகரித்ததனாலடையும் பாதகங்களும் மகா பாதகங்களேயாம். சர்வேசுவரனைப் பூஜித்துக்கொண்டிருக்கக் கண்டு சந்தோஷியாதவர்களும் நமஸ்கரியாதவர்களும் துதியாதவர்களும் பய பக்தி யற்றிருப்பவர்களும் இஷ்டப்படி நடப்பவர்களும், குருசந்நிதியிலும் அக்கினி சந்நிதியிலும் இவ்வாறிருப்பவர்களும் மகா பாதகர்களேயாவர். பருவ காலங்களில் சிவாலயத்தில் திருத்தொண்டினை விதிப்படி செய்யாதவர்களும், குருபூஜை செய்யாதவர்களும், ஞானயோகிகளின்றிக் கர்மயோகிகளாயிருப்பின் மகா பாதகர்களேயாவர். சிவாசாரநிவாரணம் சிவபக்தநிந்தை சிவாகமங்களைப்பூஜியாமை அத்தியயனஞ் செய்யாமை எழுதாமை அஞ்ஞானத்தால் சீலமில்லாத மொழிகளைக் கேட்டல் உச்சரித்தல் பொருளவாவினால் நிஷித்தமான உபசாரங்களைச்செய்தல் பரிசுத்தமில்லாதவிடங்களில் ஞானபாகமாகிய வேதமுதலியற்றை யுரைத்தல் சிவஞானமமைந்த கதைகளை யாக்ஷேபித்தல் வீண் கதைகளைக் கூறுதல் பொய்பேசுதல் சக்தியிருந்துந் தானஞ்செய்யாமை சுத்தமான விடங்களில் சிவசரிதஞ் சொல்லுகையில் அசுத்தமாகச் சென்று சிரவணஞ்செய்தல் குருவினால் நூலாராய்ச்சியுற்று யுக்தாயுக்தமுணர்ந்து அக்குருவுக்குப் பக்திசெய்யாது அவரை யவமதித்து அவர் கட்டளையைக் கடந்து எதிர்த்துப்பேசுதல் குருபூஜை செய்கையில் அலக்ஷியம், ரோகியும் அசக்தனும் பரதேசியும் சத்துரு பாதையுற்றவனுமாகிய குருவை அல்லது ஒருவனைத் திரஸ்கரித்தல், குருபத்னி புத்திர மித்திரரிடத்தில் அவமானஞ்செய்தல் தர்மமார்க்கத்தை யுணர்த்துங் குருவுக்கு விசேஷ அவமானஞ் செய்தல் ஆகிய இவை யொவ்வொன்றுஞ் செய்தோர் சிவநிந்தையா லடையத்தக்க பாவத்தை யடைவார்கள்.

நைமிசாரணியவாசிகளே! பிரமஹத்தி செய்தவனும், பொன் திருடினவனும், மதுபானஞ் செய்தவனும், குருபத்தினியைக் கூடினவனும், இவர்களோடு கூடியவனும் ஆகிய ஐவரும் பஞ்சமஹாபாதகர்கள். குரோதம் லோபம் பயம் துவேஷம் முதலியவற்றால் வேதியனைக் கொல்லவேண்டுமென்று கருதியவன், பொருள் கொடுப்பேனென்று வேதியனை விளித்துப் பின்னர் கொடாதவன், காரணமின்றி யொருவனைத் தூஷிப்பவன், வித்தியாபிமானத்தால் சபாநாயகனாக அமர்ந்திருக்கும் சத்பிராமணனை இறுமாப்பால் எதிர்த்து அவமதிப்பவன், தான் யாவும் வல்லவனென்று பிறரிடம் தற்புகழ்ச்சி செய்துகொள்பவன், பிறருடைய நற்குணங்களை மறைத்து அவர்கட்கில்லாத துர்க்குணங்களையெல்லாம் உடையோரெனக் கூறுவோன், பசிதாகத்தால் வருந்திய சத்புருஷனைத் தன் வீட்டிற் சேர்க்காதவன், பிறருக்குப் பயத்தையே யுண்டுசெய்பவன், பாவசுபாவத்தால் பிறர் தோஷங்களை மன்னனுடன் கூறி அவன் ஜீவனத்தைக் கெடுப்பவன், பசியால் வருந்திய பசு பார்ப்பார் குரு முதலியோரை விக்கினமுறச்செய்பவன், தேவபூமி பிராமணபூமி கோபூமியாகவுள்ளவற்றைத் தன் பலத்தால் கிரகித்துக்கொள்பவன் முதலானோர் பிரமஹத்தி செய்தவர்களே யாவர்.

தேவபிராமணருடைய சொத்துக்களைக் கிரகித்தல் பிரமஹத்திக்குச் சமானமான பாவமென் றுணரவேண்டும். அதற்குச் சந்தேகமேயில்லை. வேதத்தையும் சிவஞானத்தையுமறிந்தும் மூடனாய் அவற்றை விடுத்த வேதியனும், அநுசிதமான பூஜையைக் கைக்கொண்டு நியதியான பூஜையை விடுத்தவனும், பஞ்சயஜ்ஞங்களை விடுத்தவனும், சுராபானஞ்செய்தற்குச்சரியான பாபத்தை யடைவான். பிதா மாதாக்களை நீங்கியதால் வரும் பாவமும், வேதியனுக்கு விரோதமாகப் பொய்ச்சாக்ஷி புகன்ற பாவமும், சிவபக்தர்களை நிந்தித்துரைத்ததால் வரும் பாவமும், புசிக்கத்தகாதவற்றைப் புசித்ததால் வரும் பாவமும், வனத்தில் திரியும் மான்முதலிய மிருகங்களையும் பறவைகளையும் நிரபராதிகளாயிருக்கையிற் கொன்றதால் வரும் பாவமும், சிவபக்தனைச் சாதாரண வேதியனுக்குப் பணிசெய்கவெனப் பணிப்பதால் வரும் பாவமும், பசுக்கள் செல்லும் வழியிலும் வனத்திலும் கிராமத்திலும் நெருப்புவைப்பதால் வரும் பாவமும் மகா கோரமானவை. அவை பிரமஹத்திக்குச் சமானமானவை. அறிவு முதலியவற்றாற் குறைந்த ஒருவனுடைய செல்வத்தை யபகரித்தல், புருஷர்கள் ஸ்திரீகள் யானைகள் குதிரைகள் பசுக்கள் பூமி வெள்ளி வஸ்திரம் தானியம் இரசப்பொருள்கள் சந்தனம் அகரு கர்ப்பூரம் கஸ்தூரி தூபத்திரவியங்கள் முதலியவற்றைத் திருடுதல், பொன் திருடுதலுக்குச் சமானமான பாதகங்கள். விவாகதசையடைந்த கன்னிகையைக் கோரிவந்த தக்கவனுக்குக் கொடாது வீட்டில் வைத்திருத்தல், புத்திரன் மனைவியாகிய மருகியோடும் நட்பாளன் மனைவியோடும் உடன்பிறந்தவளோடும் புஷ்பவதியாகாத பெண்

ளோடும் சண்டாளஸ்திரீயோடும் தன் கோத்திரத்து ஸ்திரீகளோடும்புணர நினைத்தல், முதலியவற்றால் வரும் பாவங்கள் யாவுங் குருபத்தினியைப் புணர்வதால் வரும் பாவத்திற்குச் சமானமான பாவங்கள். இனி இவற் றிற்கியைந்த உபபாதகங்களையுஞ் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக.

சௌநகாதிமுநிவர்களே! வேதியனுக்குக் கொடுக்கிறேனென்று சொல்லிய பொருளை அவனுக்குக் கொடாது நிறுத்திக்கொள்வதும், பிரா மணனுக்குத் தானங்கொடுத்தபின்னர் கொடுத்துவிட்டோமேயென நினைப் பதும், வேதியன் பொருளை யபகரிப்பதும், சமயாசார தருமங்களை விடுப் பதும் மகா மானியாயிருப்பதும், கோபியாயிருப்பதும், டம்பமா யிருப் பதும், செய்ந்நன்றி மறப்பதும், ஸ்திரீ புஷ்பம் சந்தனம் முதலியவற்றிற் பெரு விருப்பும், கிருபையின்மையும், வஞ்சனையும்,பொறாமையும், பரதார கமனம், பதிவிரதைகளைத் தூஷித்தல், மூத்தவன் மணஞ் செய்துகொள்ளு முன்னர் இளையவன் மணமுடித்துக்கொள்ளுதல், இளையவன் மணமுடித்துக் கொள்ளக்கண்டு மூத்தவன் மனம் வருந்துதல், அவ்வகைய இருவருக்குந் தானங்கொடுத்தல், வஞ்சித்தல்,புத்திரர் மித்திரர் களத்திரர் யஜமானர் சாது பந்துக்கள் தவசிகள் முதலானோரைத் தனலோபத்தால் விடுத்தல், கோக் கள் மன்னர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் இவரை வதைத்தல், சிவால யத்திலுள்ள விருக்ஷத்தைச் சேதித்தல், நந்தவனத்தை யழித்தல், சிவ க்ஷேத்திரவாசிகளுக்குத் தோஷஞ்செய்தல், பசு தனம் தான்னியமுதலிய வற்றை அபாத்திரவானுக்குத் தானஞ்செய்தல், சுவர்ணம் பசு முதலிய வற்றைத் திருடுதல், சொல்லத்தகாதவர்களுக்கு வேதஞ் சொல்லுதல், யாகவிக்கிரயம், தர்மவனத்தை விற்றல், தர்மதடாகங்களை விற்றல், மனைவி புத்திரர் முதலானோரை விற்றல், தீர்த்தயாத்திரைசெய்வோருடைய விரதங் களை விக்கினஞ்செய்தல், ஸ்திரீ தனத்தாற் சீவனஞ்செய்தல், காமத்தால் பெண்களுக்குச் சுவாதீனப்படுதல், விபசாரி சாவகாசஞ்செய்தல், இழி குல மாதர்மீது விருப்புறல், விருத்ததிசையில் மணம்புரிந்துகொள்ளல், தானியங்களை வட்டிக்குக் கொடுத்தல், பாவியின் பொருளைத் தானமாக வாங்கல், நல்ல பொருள்களைக் கபடமாகக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளுதல், எருதை வாகனமாகக்கொள்ளுதல், உச்சாடனஞ் செய்தல், முறையறியாது வைத்தியஞ்செய்தல், தனக்குப் பிரயோசனப்படும்படி யாகவே சற்கருமஞ்செய்தல், சிவஞானப் பிரதிபாதகமான வேதத்தைப் பொருள் வாங்கிக்கொண்டு சொல்லுதல், விரதங்களை விடுதல், குலாசார தருமங்களை விடுதல், பொய்ந்நூல்களை யப்பியசித்தல், ஸ்ருதி ஸ்மிருதி களுக்கு விரோதமாக வாதித்தல், தேவநிந்தை குருநிந்தை சத்ஜனநிந்தை கோநிந்தை, பிராமணநிந்தை, இராஜநிந்தை, தேவபூஜாநிக்கிரகம், குரு பூஜாநிக்கிரகம், சீலமற்ற நாஸ்திகருடன் சேருதல், பருவகாலத்திலாவது பகற்காலத்திலாவது ஜலத்திலாவது ஸ்திரீசங்கமஞ் செய்தல், மனைவி புத்திர மித்திரர் முதலானோரைக் கடிந்துபேசுதல், தந்தையை வெறுத்தல்,

காலத்திற் கெடுத்தல், ஏரி குளம் முதலியவற்றின் கரையை யிடித்தல், உடனுண்ணும் உறவினரைப் பிரியச்செய்தல் முதலியவற்றால் உண்டாகும் பாவங்களையடைந்த ஸ்திரீகளாவது புருஷர்களாவது உபபாதகர்களென் றுரைக்கப்படுவர். இன்னும் இவற்றிற்குச் சமானமான சில பாவங்களை யுஞ் சொல்லுகின்றேன்.

பசு - பிராமணன் - கன்னிகை-சுவாமி - மித்திரன்-தவசி முதலானு ருடைய காரியங்களை யழித்தல், பிறர்செல்வத்தைக்கண்டுபொறாமையடை தல், பிறனுடைய பொருளை யபகரிக்கக்கருதல், பிறனைக் கெடுக்கத் தந் திரஞ்செய்தல், பிராமணனுக்குத் துக்கமுண்டாக்குதல், ஒருவனைப்பாணத் தாற் குத்தித் தொந்தரைசெய்து கொல்லுதல், வேதியன் சூத்திர சேவை செய்தல், விருப்பத்தால் மதுவாசனையைக் காணுதல், ஹிம்சை செய்வதி லேயே மனமுடைத்தாயிருத்தல், அயோக்கியனாயிருந்தும் பிறர் மதிக்கு மாறு தானம் யாகமுதலியவற்றைச் செய்தல், பசு கட்டுமிடத்தும் அக் கினிகாரியஞ் செய்யுமிடத்தும் ஜலத்திலும் வழியிலும் மரநிழலிலும் மலை களிலும் வனத்திலும் சிவாலயங்களிலும் ஜலாசயத்திலும் சத்திரத்திலும் மலமூத்திரங்களை விசர்ஜனஞ்செய்தல், மதுபானஞ்செய்ய விரும்புதல், சர்ப்பங்களை யாட்டிப் பிறனைப் பயமுறுத்தல், பிறரது குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலேயே விருப்பம், மூங்கில் செங்கல் கருங்கல் விறகு முள் முத லியவற்றால் வழியடைத்தல், அன்னியனுடைய புலத்தில் தன் புலத்திற்கு வரப்புப்போடுதல், கபடமாகத் தண்டித்தல், கபடகாரியங்களையே செய்ய விரும்புதல், கபடமாகப் போர்செய்தல், தகாத அன்னத்தைப் பிச்சை கொடுத்தல், தகுதியில்லாத வஸ்திரத்தைத் தானஞ்செய்தல், பயன்படாத வில் அம்பு முதலியவற்றைப் பிறருக்குக் கொடுத்தல், பெரு லாபந்தேடி வர்த்தகஞ்செய்தல், ஊழியக்காரரிடம் எப்பொழுதும் நிர்த்தயையாயிருத் தல், பசுக்களைப் பட்டியிலடைத்தல்,ஸ்வாமி குரு மித்திரர்களுக்குத் துரோ கஞ்செய்தல், சஞ்சலபுத்தியால் துன்மார்க்கமாக நடத்தல், மனைவி புத்தி ரர் ஆப்தர் மித்திரர் பாலர் ரோகிகள் முதலானோரையும் ஊழியக்காரரையும் பசியுற்றுத் தன்னிடம் வந்த அதிதிகளையுமொழித்துப் புசித்தல், பல வேதியர் தன் வாயிலில் வந்து புசிக்கக் கருதியிருக்க, அவர்களை யொழித் துத் தன்வரையில் திருப்திகரமாக உருசியுள்ள பதார்த்தங்களோடு புசித் தல், ஸந்நியாசமேற்றுப் பிரஷ்டத்துவமடைதல், அந்தரங்கமான சங்கதி களை வெளிப்படுத்தல், பசுக்களை யடித்தல், வலிமையற்றவரை மனங்களிக் கச்செய்யாது எப்பொழுதும் இழித்துப்பேசுதல், தன்னை யடைந்த ஏழை களைக் கஷ்டப்படுத்தி வேலைவாங்குதல், வண்டியிற் கட்டிய குதிரை மாடு களை இரண்டொரு நாழிகையில் அவிழ்த்துவிடாது எந்நேரமும் சவாரி செய்தல், தன் வீட்டிற் சுமையெடுத்து அலுத்துக் கிழப்பருவமடைந்த எருதைப் புல்முதலியவற்றாற் காப்பாற்றாது விடுத்தல், எருதுகளை விதை யடித்தல், மலட்டுப்பசுவைச் சுமையெடுப்பித்தல், பசிதாகத்தாற் சிரம

முற்று ஆதரணை விரும்பித் தன் வீட்டிற்குவந்த அதிதிகள்-சத்புருஷர்கள்-ஏழைகள்-பாலர்கள்-ரோகிகள்-விருத்தர்கள் முதலானோரை மூடபுத்தியால் தயைவையாமை முதலிய காரணங்களால் உண்டாகும் பாவங்கள் யாவும் உபபாதங்களேயாம்.

ஒருவன் மரணமடைந்து ஸ்தூலதேகத்தைவிட்டுச்செல்லுகையில், அவனது தனதானிய சம்பத்துகள் யாவும் வீட்டிலேயே யிருக்கின்றன; புத்திர மித்திர களத்திராதிகள் மயானம்வரையில் வருவார்கள். அவன் செய்த சத்கரும துஷ்கருமபலன்கள்மாத்திரம் அவனுடன் வரும். ஆதலின் யோக்கியனாகவுள்ள புருஷன் இதனை யறிந்து நடக்கவேண்டும். பிராமணராகப்பிறந்தும், ஆட்டுவர்த்தகஞ் செய்தல், எருமை வர்த்தகஞ்செய்தல், சமுத்திரயாத்திரை செய்தல், சூத்திரஸ்திரீயுடன் சம்போகஞ்செய்தல், க்ஷத்திரியவிருத்தியாற் சீவனஞ்செய்தல் முதலிய பாவங்களைச் செய்த பிராமணர்கள் பிராமணாதமர்கள் எனப்படுவர். லக்ஷணமறியாது சிற்பத்தொழில்புரிதல், பொன் வேலைசெய்து வஞ்சித்தல், முறை யறியாது வைத்தியஞ்செய்தல், பொருள் வாங்கிக்கொண்டு தன் தேகத்தைச் சுவாதீனஞ்செய்தல், துராலோசனை யுடையவர்களோடேயே கூடியிருத்தல் முதலியவற்றால் வரும் பாவங்களும் உபபாதகங்களே. இவற்றைச் செய்வோர் மகா நரகிகள் என்னப்படுவர். தன் நகரத்தில் வசிக்குங் குடிகளை வருத்திக் கிரமமான வரிப்பணத்தைக்காட்டிலும் விசேஷமாக வாங்கி அவர்களைக் கஷ்டப்படுத்துங் கிராமாதிகாரியானவன் அரசனாற் தண்டிக்கப்பட்டு, தனது செல்வத்தைக் கள்வர் அபகரித்துக்கொள்ளத் துக்கமெய்தி ஆயுண் முடிவில் நரகலோகத்தையடைவான். நரகத்தை யடையத்தக்க பாவகிருத்தியங்களைச் செய்வோரிடத்திலும், அவ்வகைய குடிகளை ஆண்டுவரும் மன்னவனிடத்திலும், தானம் வாங்கிய வேதியரும் கோரமான நரகத்தை யடைவார்கள். குடிகள்பொருளை அந்நியாயமாக அபகரித்து வேதியருக்குத் தானஞ்செய்யும் வேந்தனானவன் நரகவாதனையை அவ்வுலகத்தில் அடைந்து துன்புறுதல்போல, அக்குடிகளால் அவ்வரசன் இங்கேயே பாதிக்கப்படுவான். செங்கோல் முறைப்படி அரசுசெலுத்தாத க்ஷத்திரியனுக்குப் பரதாரகமனஞ் செய்வோனும் சோரனும் பெறும் பாவம் சம்பவிக்கும். அஞ்ஞானமுடைய அரசன் கள்வனல்லாதவனைக் கள்வனாகக்கருதியும், கள்வனைக் கள்வனன்றென்று கருதியும் விசாரணைக் குறைவால் திருடனை விடுத்துத் திருடனல்லாதவனைத் தண்டித்த அபராதியாகி அவ்வரசன் பெரு நரகமடைவான். நெய் எண்ணெய் அன்னம்பானம் மது மாமிசம் கள் வெல்லம் கரும்பு சர்க்கரை தயிர் கிழங்குகள் பழங்கள் விறகுகள் இலைகள் புஷ்பங்கள் மருந்துகள் வாகனங்கள் குடைகள் வண்டிகள் பீடங்கள் பாத்திரங்கள் ஈயம் தாமிரம் பித்தளை ஜலத்திற்றோன்றிய சங்குமுதலியவை வீணைமுதலிய வாத்தியங்கள் பட்டுவஸ்திரங்கள் பருத்திவஸ்திரங்கள் முதலியவற்றை விரும்பிப் பிறரை வஞ்சித்துக் களவாடுகிற

வர்கள் நரகத்தை யடைவார்கள். எஃதெவ்வாறிருப்பினும் இருக்க: பிறன் பொருளைக் கடுகளவேனும் அபகரித்தவன் சந்தேகமின்றி நரகமடைவா னென்பது சத்தியம்.

இவை முதலிய மஹா பாதகங்களும், மஹா பாதகத்திற்குச் சமானமான பாதகங்களும், உபபாதகங்களும் உபபாதகத்திற்குச் சமான மான பாதகங்களும், ஆகியவற்றைச் செய்த புருஷன் உயிர் நீங்கியபின் னர் யாதனுசரீரமடைந்து யமலோகத்தையுற்று, பெருந் துக்கத்தை யடை வான். அதர்மத்திலேயே மனமுடைய தேவர் மாநுடர் பசு பக்ஷியாதி களுக்கு இயமதருமராஜனே விசாரணை கர்த்தாவாயிருந்து பலவிதமான தண்டனைகளைக் கட்டளைசெய்வான். வேதோக்தமான ஆசாரமுடையவர் களாயிருந்து ஒருகாலத்தில் நீதி தவறினவர்களாயின், அவர்களுக்குக் குரு வே தண்டனைகர்த்தாவாயிருந்து பிராயச்சித்த முதலியவற்றைக் கட்டளை யிடுவான். அவ்வாறின்றி மனப்பூர்வமாகச் செய்திருப்பார்களாயின், இய மனே தண்டனைகர்த்தாவாயிருப்பான், பரதாரகமனஞ்செய்வோர் சோரர் கள் அநியாயவான்கள் இவர்களுக்கு அரசனே தண்டனை கர்த்தாவாவான். ஒருவர் கண்ணுக்கும் புலப்படாது வஞ்சனையாகப் பாவங்களைச்செய்வோ ருக்கு இயமனே சிக்ஷகன். ஆதலின் ஒருவன் செய்த பாவத்திற்கு அவ சியம் பிராயச்சித்தஞ் செய்யவேண்டியது. அரசன் குரு பிராயச்சித்த முதலிய வழியாகப் போக்கிக்கொள்ளாதவனுடைய பாவமானது கற்ப கோடிகாலங் கழியினும் அவனைவிட்டு நீங்காது. பாவஞ் செய்வோனும் பாவஞ்செய்விப்போனும் பாவஞ்செய்கையில் அநுமோதிப்பவனும் பாவ பலனை யநுபவித்தல் சத்தியம்.

பாவவிவரணமுரைத்தது

முற்றிற்று.

பத்தோன்பதாவது

பாவிகள் பெறுந் தண்டனையுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் வியாஸபகவானுக் குரைத்தவகையே யின் னுஞ் சொல்லுகின்றேன் கேளுங்களென்று சௌநகாதிமுநிவர்களை நோக்கி ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். முநிவர்களே! மேற்கூறிய நால் வகைப்பட்ட பாவிகள் பயத்தையுண்டுசெய்யும் மகாகோரமான இயமலோ கத்திற்கு இயமபடர்களாலடித்துப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோகப் படு வார்கள். கர்ப்பத்திலிருப்பவர்களாயினும், பிறந்தவர்களாயினும், பாலர்க ளாயினும், யவ்வனர்களாயினும், ஸ்திரீகளாயினும், புருஷர்களாயினும், சுபாசுப கர்மங்களைச் செய்ததற்கேற்ப அநுபவித்தேதீரவேண்டுமென்று, சித்திரகுத்தாதிகளும் வசிஷ்டாதி மகருஷிகளும் இதுவாயில் விசாரித் தறிந்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள பிராணிகள்யாவும் இயமசந்நிதானத்

தைக் காணுமற்போவதில்லை. அங்கடைந்து அவர்கள் புண்ணியபாவங்களை ஒப்புவித்து இயமதர்மனால் சுவர்க்கநரகங்களை யடைய விதிக்கப்படுவார்கள். அவர்கள் இயமலோகத்தை யடைவதெங்ஙனமெனில் அதனையுஞ் சொல்லுகிறேன்:—சாந்தசித்தர்களும் தயாளவான்களும் புண்ணியர்களும் கிழக்குவழியாக இயமபுரத்தை யடைவார்கள். பாவிகளும் தானாதிகள்செய்யாதவர்களும், பயங்கரமான தக்ஷிணவழியாக இயமபுரியையடைவார்கள். இப்பாவிகளுக்கு இயமாலயம் எண்பத்தாறாயிரயோசனை தூரமாகக்காணப்பட்டு அநேகவித கோரஸ்வரூபமாகவுந் தோன்றும். புண்ணியர்களுக்கு அதிசமீபத்திலிருப்பதாகவும் அலங்கார ரூபமுடையதாகவுந் தோன்றும். அஃதேதெனெனில், பாவிகள் செல்லும் வழி பயங்கரமானதும் சுற்று வழியுடையதும், ஊசிபோன்ற கூர்மையான முட்களும், இலந்தை முதலிய முண்மரங்களிலுள்ள முட்களால் செல்வோரைப் பிடித்திழுப்பதும், கத்தியைப்போலக் கூர்மையுங் கடினமுமான பாறைக்கற்களும், அதிக பந்தமான சேற்றினாற் சிறிதுதூரம் காலடிபெயர்த்து வைக்க முடியாததும், சிறிதுதூரம் இருப்பூசிகளைப் பதித்ததும், சிறிதுதூரம் பேராழமான குளமுதலிய ஜலாசயங்களும்,சிறிதுதூரம் உயர்ந்தபர்வதங்களும், சிறிதுதூரம் நெருப்பு எரிவதும், சிறிதுதூரம் புல் முளைத்திருப்பதுபோலத் தோன்றிக் கால்வைத்தவுடன் சருக்கி அளவுகடந்த ஆழத்தில் வீழத்தக்க மாயாசலாசயமும், சிறிதுதூரம் நெருப்புப்போலச் சுடும் மணலும், சிறிதுதூரம் பழுக்கக் காய்ச்சி நட்ட இருப்பு முளைகளும், சிறிதுதூரம் தழைத்த மூங்கிற்புதரும், சிறிதுதூரம் இருள் வழியும், சிறிதுதூரம் சிறுவழியாய்த் தவறினால் இருபுறத்திலும் விழத்தக்க பெரும் பள்ளங்களும், சிறிதுதூரம் * தாவானலமும்,சிறிதுதூரம் சுடுபாறைகளும், சிறிதுதூரம் மிகக்குளிர்ந்த பனிக்கட்டிகளும், சிறிதுதூரம் கால்வைத்தவுடன் கழுத்துவரையிற் பூமியிற் இறங்கிவிடத்தக்க வெண்மணலும், சிறிதுதூரம் கொதிஜலமும்,சிறிதுதூரம் வரட்டிநெருப்பும், சிறிதுதூரம் சிங்கங்கள், கோனாய்கள், பெரும் புலிகள், பெருங் கொசுக்கள், அட்டைகள், மலைப்பாம்புகள், கரோமான ஈக்கள், விஷசர்ப்பங்கள், மத்தகஜங்கள், காட்டுப்பன்றிகள், நெடுங்கொம்புகளையுடைய எருமைகள், கனத்துப் பருத்த ஒட்டகங்கள், பயங்கரமான டாகினியாதிபசாசங்கள்,கோரைப்பற்களையுடையராக்ஷஸர்கள்,வியாதிகள், தூளிமயமான சுழல்காற்றுகள் முதலியன இடையிடையே வந்து தத்தம் இயற்கைக்குணங்களால் அவ்வழியே இயமபடர்கள் கொண்டுவரும்யாதனா சரீரத்தைத் துன்புறுத்தத் தக்கதுமானது. அவ்வழியிலுள்ள துன்பங்களையெல்லாம் அநுபவித்துக்கொண்டு மேமேல யின்னுஞ் செல்லுகையில், தாமொரு துயரு மனுபவியாது உடன்வரும் தூதர்கள், அநுபவி அநுபவியென்று சொல்லிக்கொண்டுவர, பாறைமழை சொரிந்தாற்போலக் காற்றினாலெறியப்படும் பாறைகளும், பயமுறக் குமுறி விழும் இடிகளும், அவ

* தாவானலம் — சூழ்ந்து பின்தொடரும் நெருப்பு.

யவமுழுவதுங் காயப்படத்தக்க பாணவருஷமும், கண்களைத் திறக்கமுடியாத மின்னல்களும் நக்ஷத்திர விழுகைகளும், நெருப்புமழையும், பெருங் காற்றினால் புழுதிகள் நவத்துவாரங்களையும் மூடிக்கொண்டு வழிதெரியாமல் திக்பிரமைசெய்தலும், மேககர்ஜனையும், ஆயுதவருஷமும், உப்புநீர் மழையும், அதி சீதளமான காற்றும், அதி உஷ்ணமான காற்றும், சிறிதுசிறிது யோசனையில் பலவித பேதங்களையுடைய வழியில், அன்ன பானாதிகளின்றி மூடர்களாகிய அப்பாவிகளை நிர்த்தாக்ஷணியமுடைய இயமகிங்கரர்கள் பலாத்காரமாக இழுத்துக்கொண்டு செல்வார்கள். அப்பொழுது அப்பாவிகள் திக்கற்றுத் தேற்றுவாரற்றுத் தாம் செய்த பாவச் செயல்களை நினைத்தும் சொல்லியும் துக்கித்துப் பிரேதத்துவமடைந்து வஸ்திரமின்றி, பெருந் தாகத்தால் நாவும் நெஞ்சுமுலர்ந்து சுஷ்கித்த தேகமுடையவர்களாய் இயமதூதர்களுடைய அடி உதை குத்துக்களுக்கு அடிக்கடி பயந்து, பசியாகிய அக்கினியால் தபிக்கப்பட்டு இயமபுரத்தை யடைகையில், அவர்களை இயமகிங்கரர் செய்யுந் தொழில்களைச் சொல்லுகின்றேன்.

முநிவர்களே! இயமகிங்கரர் அவ்வுபாதிகளையுடைய மார்க்கத்திற் பாவிகளை எவ்வாறு கொண்டுபோவார்களென்றால்:—சிலரை யிருப்புச்சங்கிலியாற் பிணித்தும், சிலரைச் சங்கிலி பாசக்கயிறு முதலியவற்றாற்கட்டியும், சில பாவிகளை நெற்றியில் அங்குசத்தாற் குத்தி அதனைப் பற்றியும், சில பாபாத்துமாக்களை முட்களாற் குத்தியும், சிலரை நெருப்பில் வீழ்த்தி யிழுத்தும், சிலரைத் தோள்களிற் பிணித்தும், சிலரை வயிற்றில் அங்குசத்தாற் குத்தியும், சில தீயோரைக் கையிற் கனமான இருப்புக்கட்டிகளைக் கட்டிவிட்டும், சிலரைக் கழுத்தில் அங்குசஞ் சேர்த்தியும், சிலரை நாவில் அங்குசத்தாற் குத்தியும், சிலரை மூக்கினிற் குத்திக் கயிறு கட்டியும், சிலரைக் காதைப்பிடித்தும், சில துன்மார்க்கரை மோவாயைப்பற்றியும், சிலரைக் கைகால்களையும் காதுகளையும் உதடுகளையும் நாசியையும் சிசனத்தையும் விருஷணத்தையும் அறுத்து ஹிம்சைசெய்துகொண்டும், குந்தத்தாற் குத்தியும், அஸ்திரங்களால் அடித்தும், ஆதரவற்றுத் துடிக்கச்செய்தும், சிலரை முசலத்தால் அடித்தும், சிலரைச் செஞ்சூரியன்போலப் பிரகாசிக்கும் பழுக்கக்காய்ச்சிய இருப்புமுட்களாற் குத்தியும், பிண்டிபால முதலிய ஆயுதங்களாலடித்து உதிரமொழுக இலந்தைமுட் புதரிற் றள்ளியும், அங்கிருக்கும் நானாவிதமானகிருமிகளைவிட்டுப்பக்ஷிக்கச்செய்தும், மூர்ச்சையுற்றபின் கீழே வீழ்த்திச் சிறிதுநேரத்தில் மூர்ச்சை தெளிந்து பசி தாகமுற்று அன்னம் வேண்டும் பானம் வேண்டும் நிழல் வேண்டும் எனக் கேட்கும்படி, தானஞ்செய்யாத தீயோராகிய பாவிகள் யமதூதர்களாற் கஷ்டத்துடன் அந்தக் கொடிய வழியாற் கொண்டுபோகப்படுவார்கள்.

தான தருமங்களைச் செய்த புண்ணியர்கள் பசி தாகம் முதலிய தொந்தரையின்றி வேண்டிய விடங்களிலெல்லாம் அன்னம் ஆகாரம் நிழல்

முதலியன குறைவின்றி மனத்துயர் சிறிதுமில்லாமல் சித்தசாந்தத்துடன் இயமபுரத்தை யடைவார்கள். அவ்வாறு புண்ணியர்களும் பாவிகளும் யமாலயத்தை யடைந்தபின்னர், தூதர்கள் தமது தலைவனாகிய இயமதருமராஜனிடஞ் சென்று பிராணிகள் வந்திருப்பதைத் தெரிவித்து இயமன் அப்பிராணிகளைக் கொண்டுவருகவென்று கட்டளையிடப் பெற்றுக்கொண்டு தூதர்கள் தாம் கொண்டுவந்த பிராணிகளை அத்தருமன் சந்நிதியிலிருத்துவார்கள். அப்பொழுது அவர்களில் இயமன் புண்ணியவான்களாயுள்ளவர்களைச் சந்தோஷத்துடன் பார்த்து க்ஷேமலாபங்களை விசாரித்து அவரவர்க்குத் தக்கபடி ஆசனமுதலியன கொடுத்து, நீங்கள் புண்ணியர்களாதலின் மேம்பட்டவர்கள்; நீங்கள் சிறந்த போகபாக்கியங்களை யநுபவிக்கவேண்டியவர்களென்று பலவிதமாக நன்மொழியோடு உபசாரமாகப் பேசி, திவ்வியஸ்திரீ முதலிய சிறந்த போகங்களை யநுபவித்து, திவ்வியமான விமானங்களிலேறிச் சுவர்க்கலோகத்தை யடைந்து எண்ணிறந்த போகங்களை யநுபவித்து, புண்ணிய முடிந்தபின்னர் சிறிது பாவச்செய விருப்பின் இங்குவந்து அதன்பலனை யநுபவியுங்கள் என்று சொல்லுவன். ஏனெனில், ஆத்துமாக்களுக்கு மித்திரபூதமான புருஷர்கள் இயமதருமனை இவ்வாறு சாந்தமாகவும் தயாளபுருஷனாகவுங் காண்கின்றார்கள்.

பாவகருமங்களையேசெய்துவந்தபாவிகள்எவ்வாறுஇயமதரிசனஞ் செய்வார்களெனில்,கோரமான வக்கிரதந்தங்களுடன் திறந்துகொண்டிருக்கும் வாயும், கோபமிகுதியால் நெரித்த புருவமும், ஊர்த்துவகேசமும், பெரிய நீண்ட மீசையும், உதறிக்கொண்டிருக்கும் பூரித்த உதடும், மலைபோலப் பருத்த பதினெண் புயங்களும், நீலமலைபோன்ற திடகாத்திர தேகமும், சர்வாயுதங்களையுந் தாங்கிநிற்குங் கைகளும், பலவிதமான தண்டனைசக்தியும், மதித்த மகிஷவாகனமும், எரிந்துகொண்டிருக்கும் பெருநெருப்புபோன்ற விழிகளும், செந்நிறமான வஸ்திரமும், செவந்த மலர்மாலையும், மேருமலைபோன்றுயர்ந்த தேகமும், பிரளயகால மேகத்தொனி போன்ற கர்ச்சனையும், சமுத்திரமுழுவதையும் க்ஷணகாலத்திற் பானஞ் செய்யவல்ல ஆற்றலும், வாயைத் திறந்துகொண்டிருத்தல் பர்வதங்களையெல்லாங் கபளீகரிக்க வல்லவனென்று பயமுண்டாக்கவல்லதும், பேசும்பொழுதே நெருப்புக்கண்டங்கள் சொரிவானைப்போலக் கடின வார்த்தையும், பிரளயகாலாக்கினிக்குச் சமானமான காலம்ருத்யு, அஞ்சனநிறமான காலபாசன், கிரிதாந்தன், மாரீசன், கிரஹமாரி, காளராத்திரி, நானாவிதமான பயங்கரமுண்டுசெய்யும் வியாதி ரூபங்கள்முதலியன சமீபத்தில் விளங்கவும், சக்தி - சூலம் - அங்குசம் - பாசம் - சக்கிரம்-கத்தி-வஜ்ஜிரம்-துண்டம்-சூரி-அம்பறுத்தூணி - வில் முதலியவற்றைத் தரித்தும், பயங்கரமான கணக்கில்லாத கரிய மலைகள்போலத் தேகமுடைய பல ஆயுதங்களை யேந்திய மகா வீரர்களான இயமதூதர்களாற் புடைசூழப்பட்டும் விளங்குவதாக இயமதருமராஜனையும் சித்திரகுத்தனையுங் காண்பார்கள். அப்பொழுது இயமன் அவர்களை நோக்கிக் கடுஞ்சொல் கூறுவான்.

பிறர் பொருளை யபகரிக்க விரும்பினவர்களே! ரூபவிசேஷத்தால் அந்நியஸ்திரீகளைப் புணர்ந்தவர்களே! நீங்கள் செய்த கருமங்களை நீங்களே யநுபவிக்கவேண்டும். உங்கள் ஆத்துமாவை நாசஞ்செய்வதற்காகப் பாவகாரியங்களைச் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது என் தவிக்கின்றீர்கள்? அவரவர்கள் பாவத்திற்கேற்ப அவரவர்களே அநுபவிக்கவேண்டும். இங்கே யாவரும் ஒருவரை வீணே துன்புறுத்தமாட்டார்கள் என்று இயமதருமன் கூறுவான். பாவிகளான அரசர்கள் இயமபுரத்தை இவ்வாறு வழி வருத்தத்துடன்சென்று இயமாலயத்தையடைந்தபொழுது, இயமதருமன் அவர்களை நோக்கி, பிரஜைகளைக் கஷ்டப்படுத்திய துராசாரமுடைய அரசர்களே! அற்பகாலம் அநுபவிக்கத்தக்க ஒரு ராச்சியத்தைக் கருதி இராச்சியயோகத்தால் பிரஜைகளை அந்நியாயமாகப் பீடித்தபடியால் உங்களுக்கு விசேஷ பாவம் சம்பவித்தது. அதன் பலனை இப்பொழுது நுகருங்கள். பூமி விஷயமாகவும், மனைவி விஷயமாகவும், புத்திர மித்திரர் விஷயமாகவும் இப்பெருந் தீமைகளைச்செய்து இப்பொழுது அவர்களையெல்லாம் விடுத்துத் தனியே வந்தீர்களே? பிரஜைகளைத் துன்புறுத்துகையில் உங்களுக்கிருந்தவல்லப முழுதுந் தூதர்கையிலகப்பட்டபொழுதே போய்விட்டன வென்று எண்ணுங்கள் என்றிவைபோலப் பலவகையாக அவர்களை நிந்தித்து உங்கள் கர்மங்களை யநுபவியுங்களென்று சொல்லுவான். அம் மன்னர்கள் ஒன்றுஞ் சொல்லமுடியாமல் அழுதுகொண்டும், தமது கஷ்டங்களை நினைத்தும் நிற்பார்கள். அப்பொழுது இயமதருமராஜன் அவர்கள் நிலைமையைத் தருமமாக ஆலோசித்து, அவர்களுடைய பாவமாகிய சேற்றினைக் கழுவ நினைத்து, தன் தூதர்களாகிய சண்டன், மகாசண்டன் என்பவர்களை விளித்து, நீங்கள் இவ்வரசர்களைப் பிடித்துக்கொண்டு போய் முறைப்படி நரகாக்கினியில் வீழ்த்திப் பரிசுத்தஞ் செய்யுங்கள் என்று கட்டளையிட, அத்தூதர்கள் அவ்வரசர்கால்களைப் பற்றிக்கொண்டு கிருகிரு கிருவென வேகத்துடன் சுழற்றிக் கீழே வீழ்த்துவதும் மேலே தூக்குவதுமாகச் செய்து, சுடுபாறைகளிற் கிடத்திப் புரட்டி, இரத்தப்பிரவையிலிட்டு முழுக்கி, நிச்சேஷ்டையாளராக்கி, மீண்டும் மூர்ச்சை தெளிந்ததின் பின்னர் அவர்களைப் பாவ நீக்கஞ் செய்விக்குநிமித்தம் நரகத்திற்றள்ளுவர்.

முனிவர்களே! நரகங்களிற் சிறந்தவை இருபத்தெட்டு:—அவை ஸப்தலோகங்கள் வரையிலுந் தாழ்ந்து ஆழமாயிருக்கும். முதலிலுள்ளது கோரம், இரண்டாவது சுகோரம், மூன்றுவது அதிகோரம், நான்காவது மகாகோரம், ஐந்தாவது கோரரூபம், ஆறுவது தலாதலம், ஏழாவது பயாநகம், எட்டாவது காளராத்திரி, ஒன்பதாவது பயோத்கடம், பத்தாவது சண்டம், பதினொன்றுவது மகாசண்டம், பன்னிரண்டாவது சண்டகோலாகலம், பதின்மூன்றுவது பிரசண்டதரநாயகம், பதினான்காவது பத்மம், பதினைந்தாவது பத்மவதி, பதினாறுவது பீஷ்டை, பதினேழாவது பீமப்பிரணயகம், பதினெட்டாவது கராளம், பத்தொன்பதாவது விகராளம், இருபதாவது வச்சிரம்,

இருபத்தொன்றாவது திரிகோணம், இருபத்திரண்டாவது பஞ்சகோணம், இருபத்துமூன்றாவது சுதீர்க்கம், இருபத்துநான்காவது பரிவர்த்துலம், இருபத்தைந்தாவது ஸப்தபௌமம், இருபத்தாறாவது அஷ்டபௌமம், இருபத்தேழாவது தீப்தம், இருபத்தெட்டாவது மாயை என்னும் பெயர்களோடு முறையே ஒன்றன்கீழொன்றாக விளங்கும். இந்நரகங்கள் தத்தம் பெயராலேயே பெருந் தீமை விளைக்கத்தக்கவையென்று தெரிந்துகொள்ளவேண்டும். இவையோ யாதனாசரீரத்துடன் பாவிகள் தமது பாவத்தின் பயனையநுபவிக்கும் ஸ்தானங்கள். இன்னும் இந்நரகங்கள் இருபத்தெட்டனுள்ளும் ஒவ்வொன்றிலும் ஐயைந்து முக்கிய யாதனாஸ்தானங்கள் உண்டு. அவையாவன:—ரௌரவம், மகாரௌரவம், தமசு, சீதம், உஷ்ணம், சுகோரம், மகாதீக்ஷணம், பத்மஸஞ்சீவனம், சிவம், மகாதமவிலேபம், சுலோமம், கண்டகம், தீவிரவேகம், கராளம், விகராளம், பிரகம்பனம், மகாவக்கிரம், வக்கிரம், காலம், பிரகர்ஜனம், ஸூசீமுகம், ஸூநேமி, காதகம், சுப்பிரபீடனம், கும்பிபாகம், சுபாகம், கிரகசம், தாருணம், அங்காரராசி, பவனம், மேதப்பிரஹிதம், அஸ்ருக்பிரஹிதம், தீக்ஷணதுண்டம், சகுனி, மகாசம்வர்த்தகம், கிரது, ஸப்தஜந்து, பங்கலேபம், பிரதிமாசஸ்ரம், பூத்பவம், உச்வாஸம், நிருச்வாசம், ஸூதீர்க்கம், கூடசால்மலி, பிரதீபத்மம், ஸூமஹாநாதம், பிரவாஹம், சுப்பிரவாகனம், மேகம், விருஷம், சல்லியம், சிம்ஹம், வியாக்கிரம், கஜம், சுவராஜம், சூகராஜம், மகிஷம், அவிகாரம், விருகானனம், கிரஹாக்யம், மீனவக்திரம், சர்ப்பம், கூர்மம், வாயசம், குர்த்ரம், [பருந்து], உலூகம் [ஆந்தை], ஜலௌகம் [அட்டை], சார்த்தூலம், விகர்க்கடகம், மண்டூகம், பூதிவக்த்ரம், இரஜிதம், பூதம்ருத்திகை, கணதூமம், கணாக்னி, கிருமிசமூகம், அக்கினிகாஸம், பிரதிஷ்டம், ருதிராம்பம், ஸ்வபோஜனம், லாலாபக்ஷணம், ஆத்மபக்ஷணம், ஸர்வபக்ஷணம், ஸூதாருணம், ஸூகண்டம், ஸூவிசாலம், விகடம், கடபூதனம், அம்பரீஷம், கடாஹம், கஷ்டம், வைதரணிநதி, சுதப்லலோகசயநம், ஏகபாதம், பிரபூரணம், அசிதாலவனம், கோரம், அஸ்திபங்கம், ஸூபூரணம், திலாதசி, சுயந்திரம், கூடபாசம், பிரமர்த்தனம், மகாசூர்ணி, சுசூர்ணி, தப்தலோகமயம், பர்வதத்திலிருந்து விழும் ஜலப்பெருக்கு, மலவர்த்ததம், மூத்திரவிஷ்டம், சுக்லபம், தாரகூபம், சீதலம், முசலம், உலூகலம், யந்திரம், சிலை, சாகடம், லாங்கலம், தாலபத்திரம், கஹனம், மகாசகடமண்டபம், ஸம்மோஹம், ஹஸ்திபங்கம், தப்தம், மலயம், குடம், பஹூதுக்கம், மகாதுக்கம், கஸ்மலம், ஸ்யமலம், மலம், ஹாலாஹலம், விரூபம், கரூபம், யமானுகம், ஏகபாதம், திரிபாதம், தீவிரம், அர்வீசரம் என்று சொல்லப்பட்ட பெயருடையனவாய் முறையே அவ்விருபத்தெட்டிலும் ஐயைந்தாகவுள்ள பிரதானஸ்தானங்களாம். அம்மகாநரகங்களிருபத்தெட்டிலும் வகைக்கொருகோடியுண்டு. ஆதலின் நரகங்கள் இருபத்தெட்டுக்கோடியென்பர்.

இவ்வகைய இருபத்தெட்டுக்கோடி நரகங்களிலும் ஒவ்வொன்றிலும் ஐயைந்து பிரதானஸ்தானங்களாக ரௌரவம்முதல் அர்வீசரம் இறுதியாக நரக முக்கியஸ்தானங்கள் நூற்றுநாற்பதுகோடி. இந்நரகங்களிலே பாவிகள் பதைபதைப்பார்கள். அவரவர்கள் கர்மநாச மெய்தும்வரையில் நானாவித பாதைகளை யநுபவிப்பதில் மனஞ்சகியாது இங்கும் அங்கும் ஓடியலைவர். அவர்கள் கர்மத்திற்கேற்ப இயமதூதர்கள் அவர்களது கால்கைகளை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, பழுக்கக் காய்ச்சிய இருப்புச்சங்கிலிகளாற் கட்டி, பெருமரத்தின் உயர் கிளைகளில் தூக்கி, முழுபலத்துடன் ஊசலாட்டுவதால் அவர்கள் பத்துக்காத தூரத்திற்குக் குறையாமல் ஒவ்வொரு புறமும் போயுந் திரும்பியும் மூர்ச்சையடைவர். அதுவேயன்றி இருப்புப்பாறைகளை அவர்கள் கால்கைகளிற் கட்டிச் சுமக்கச்செய்வர். அப்பொழுது அடிக்கடி தாங்கள் செய்த பாவகருமங்களை யெண்ணிப் பரிதவிப்பர். எரிந்துகொண்டிருக்கும் அங்குசத்தாலும், இருப்புத் தண்டங்களாலும் உடல் முழுதும் நறுக்குவர். பின்னர் நெருப்பைப்போலச் சுடும்படியான ஓர் பொடியைத் தேகத்திற் பூசுவர். அதனால் பின்ன தேகமடைவார்கள். மீண்டும் அப்பாவிகளின் அவயவங்களைத் தனித்தனி கொய்து காய்ச்சியுள்ள இருப்புக்கடாரங்களிற் புரட்டுவர். மலகூபங்களிலும், கிருமி கூபங்களிலும் மேதைக்கிணற்றிலும், உதிரவாவிகளிலும், அப்பாவிகளை வீழ்த்துவர். அங்கிருக்கும் கூர்மையான வாயினையுடைய கிருமிகளும், இருப்புத்துண்டங்களையுடைய காகங்களும் அவர்களைப் புசிக்கும். நாய்கள் கோநாய்கள் புலிகள் பயங்கரமான சிங்கமுதலிய மிருகங்கள் பலவிதமாகக்கடித்துத் துன்புறுத்தும். பின்னர் அங்காரராசியென்னு நரகத்தில் இவர்களை மீன்போலச் சமைப்பார்கள். செக்கில் எள்ளினைப்போட்டாட்டுவதுபோல,சக்கிரகம்என்னு நரகத்தில்இவர்களைப்போட்டுத்திருப்பி உருண்டையாக்குவார்கள். மீண்டும் அவ்வுருண்டையை மிகவுஞ் சுடுகையுடைய இருப்புச்சட்டியிற் போட்டு வறுப்பார்கள். அதன்பின்னர் கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெயிலிடுவார்கள். அசத்தியவார்த்தைகள் சொன்னவனுடைய நாவினை அநேகந் துண்டுகளாகக் கொய்து பழுக்கக் காய்ச்சிய இருப்புச்சலாகையால் நாவிலும் மார்பிலுங் குத்துவார்கள். பொய்ந்நூல்களைப் பழக்குவித்தவனுடைய நாவினை, சுடுகின்ற சூட்டுக்கோலினாற் பலவிதமாகத் தண்டிப்பார்கள். தாய் தந்தை குரு முதலிய பெரியோரைப் பயமுறுத்திய பாவிகளது மூக்கினை வச்சிர மூக்குக்களையுடைய நீரட்டைகளாற் குத்தவிடுத்து நெருப்புப் பொடிகளை அவர்களுடல்முழுதும் பூசித் தகித்து, கொதிக்கும் எண்ணெயை முகத்திலொழுக்கி அநேகவிதமான ஆயுதங்களாலடித்து மலமூத்திரக் குழிகளிற் றள்ளிவிடுவார்கள். சிலரை விரைவில் துண்டுசெய்யத்தக்க கிரகசநரகத்திலிடுவார்கள். அப்பொழுதே அதிலிருக்கும் அரங்கள் அவர்கள் வினைக்கேற்பத் தோன்றியிருத்தலின், துண்டுதுண்டாகச்செய்த தங்கள் மாமிசத்

தையே புசித்து, தங்கள் உதிரத்தையே பானஞ்செய்வார்கள். அதிதிமுதலானருக்கு அன்னபானாதிகளுதவாது தன் வயிற்குடும்ப சகிதமாய்ப் போஷணைசெய்துகொண்ட பாவிகளை வாளினாற் கரும்பைத் துண்டித்தல் போலத் துண்டித்து அசிதாலவனமென்னும் நரகவிசேஷத்திலிட்டு ஊசிகளால் உடல்முழுதுங் குத்தி யெரிந்துகொண்டிருக்குஞ்சூலத்தின்முனையிற் கழுவேற்றிப் பலவிதமாகக் கஷ்டப்படுத்துவர். பின்னர்நிருச்வாசமென்னு நரகத்தில் வீழ்த்திச் சுவாசமும் விடவொட்டாமல் வைத்திருப்பர். அப்பொழுதும் அப்பாவிகளிறவார். யாதனாதேகமானது துன்பமனுபவிக்கவும் சுகமநுபவிக்கவும் பாத்திரமாயிருக்குமேயன்றி, துண்டந்துண்டமாகவெட்டினாலும் பொடியாகச் சூர்ணித்தாலும் மொத்தமாக அரைத்தாலும் அழியுந்தன்மை யுடையதன்று.

பின்னர் அவர்களை யெடுத்துப் பிரக்ஞைவரச்செய்து வாலுகாவிதனமென்னும் நரகத்திற் சிறிது காலமிருத்தி, அதன்பின்னர் கனவான்களும் விழுந்துகிடந்து துன்புறும் இரௌரவம் என்னும் மகாநரகத்தில் வீழ்த்தி, அப்பாவிகள் துக்கமுறும்படி பலவித வாதைகளைச் செய்துகொண்டு, அவர்களதுபாதம் முகம் குய்யம் விழி கழுத்து மார்பு தலை முதலிய அவயங்களில் பழுக்கக்காய்ச்சிய இருப்பு முளைகளைக் கொண்டு குத்தி, அடிக்கடி நெருப்புக்குச் சமானமான சுடுகையுடைய மணலில் வீழ்த்தி யுருட்டி யெடுத்து, கொதித்துக்கொண்டிருக்கும் அரக்குக் கடாரத்திலிடுவார்கள். பரதாரசங்கமஞ் செய்தவர்களை இயமதூதர்கள் விளித்து, பூர்வம் அவனணைந்த பெண்வடிவாகவே எழுகினாற்செய்யப்பட்டுப் பழுக்கக்காய்ச்சிய பதுமையை முன் இவளை ஆலிங்கனஞ்செய்துகொண்டது போலவே இப்பொழுதும் ஆசையாய் ஆலிங்கனஞ் செய்துகொள்கவென்று அணையச்செய்வார்கள். அதுபோலவே அன்னியபுருஷனையணைந்த ஸ்திரீயையும் அழைத்து அவ்வாடவனுருவம்போல எஃகினாற் செய்த பதுமையைப் பழுக்கக்காய்ச்சி அவளைஅப்பதுமையை யணையச் செய்வார்கள். அவள்அப்பாதையைச் சகியாது இங்குமங்கும் ஓட, இயமதூதர்கள் அவளைப் பிடித்து வந்து நீயுன் கணவனை வஞ்சித்துப் பிறபுருஷனை யிச்சித்தனையன்றோ ? இப்பொழுதும் அவனை யணைகவென்று அணையச்செய்து பின்னர் அவளை இருப்புப்பாத்திரத்திலேற்றித் தீயிட்டெரிப்பார்கள். வேறு சிலபாவிகளை உரலிலிட்டுப் பொடியாக இடித்து அந்தகாரமான கிணறுகளில் வீழ்த்துவர். அங்கிருக்குங்கிருமிகள் அவர்களைப்பலவிதமாகத் துளைக்கும். அதன்பின்னர் * க்ஷாரகூபத்தில் தள்ளுவார்கள். மீண்டும் அவர்களை யநந்தமாகத் துன்புறுத்தி அவர்கள் சகியாமல் ஓடுகையில் கட்டிக்கொண்டுவந்து வீழ்த்துவர். மானிகள் துன்மார்க்கர்கள்சோரர்கள் ஒருவர் கீர்த்தியைக் கெடுத்தவர்கள் முதலானரை நரகவிசேஷங்களை விசேஷமாக அநுபவிக்கச்செய்து இருப்புச் சங்கிலிகளாற்கட்டி மஹா

* க்ஷாரம் - ஓர்வகையுப்பு; இது மிகச் சுடுகையுடையது.

ஜ்வாலமென்னும் நரகத்தில் கிருமியாதி ஜந்துக்களாற் பலவித துக்கங்களை யெல்லாம் அனுபவிக்கச்செய்து அவர்களுயிர்வருந்தும்படி எண்ணெய்க் கொப்பறைகளிலேற்றி யெரித்து மகா உப்புமிகுந்த நீரைக் குடிக்கச் செய்து அவர்கள் பாவமொழியும் வரையும் முண்மயமான பாறைக்கற்களிலிட்டுச் சந்தனமரைப்பதுபோல அரைப்பார்கள். அப்பொழுது அவர்கள் தேகங்களினின்று நசுங்கி விழுந்த துண்டுகளிற் றோன்றிய புழுக்கள் அவர்களைப் பலவிதமாகக் கடித்துக் கஷ்டப்படுத்தும். பின்னர் துர்க்கந்த மிகுந்த மாமிசராசியாகிய நரகத்தில் வீழ்த்துவர். அதன் பின்னர் மலைப்பாறைகளையெடுத்து அவர்களையடித்தும் அவர்களால் மலைப்பாறைகளை யடித்தும், மீண்டும் அதோமுகமாகவும் ஊர்த்துவபாதமாகவும் அப்பாவிகளைநிறுத்தி அடியில் அக்கினியைக் கொளுத்தியும், பழுக்கக்காய்ச்சிய இருப்புக் குண்டுகளை விழுங்கச் செய்தும், விழுங்காவிடில் உலக்கையாலிடித்து வாயினுட் புகுத்தியுந் துன்புறுத்துவர். சிவபெருமானுடைய திருக்கோயில் புஷ்பவனம் தடாகம் கிணறு முதலியவற்றிற்கும் பிராமணரது வீட்டிற்கும் உபத்திரவமுண்டுசெய்து அவ்விடங்களை அபகரித்துக்கொண்டு, தம்முடைய உபயோகமாக ஸ்தானம் பானம் அப்பியங்கனம் கிரீடை மைதுனம் சூதம் முதலிய காரியங்களை அவ்விடங்களில் செய்து கொண்டிருந்த பாவிகள் அநேக வித கோரமான கரும்பாலை போன்ற நரகங்களையடைந்து பிரளயகாலம்வரையில் கோரமிகுந்த நரக வேதனையை யநுபவித்துக்கொண்டிருப்பார்கள். பெரியோர்களை நிந்தனை செய்கையிற் கேட்டுக்கொண்டிருந்தவனுடைய காதுகளில் உஷ்ணமேறிய இருப்பு முளைகளை யடித்திறக்கி ஈயமுதலிய உலோகங்களையுருக்கி அவனது காதில் வார்த்து அநேகவிதமானதுன்பங்களை அனுபவிக்கச்செய்வார்கள். தத்தமது ஒவ்வோரிந்திரியங்களாற் செய்த பாவங்களுக்கும் அவ்வாறே அவ்வவ் விந்திரியங்களை வருத்தி நானாவிதமான கஷ்டங்களை யநுபவிக்கச் செய்வார்கள். பரஸ்திரீகளை விரும்பி அவர்களைப் பெறுதல் அசாத்தியமென்று, கைகளாற் சமயத்திற் பரிசித்தல் முதலியன செய்தவர்கள் அக்கினிமயமான இருப்புப்பொடிகளைக் கையிற்றுங்கி க்ஷாராதிகளால் உடல் முழுவதும் பூசப்பெற்றுப் பலவிதமான யாதனாஸ்தானங்களில் பலவிதமானகஷ்டங்களை யநுபவிப்பார்கள். தாய்தந்தையர்களைக்கையாலடித்தும், காலாலுதைத்தும், கண்ணாற் பயமுறுத்தியும், துன்புறச்செய்தவர்களும், பரஸ்திரீகளைக் காமாதுரத்தால் பார்த்தவர்களும் ஆகியபாவிகளின் விழிகளில் நெருப்புமயமான ஊசியாற்குத்தி க்ஷாராதிகளை யுடல்முழுதும்பூசி, முறையே அநேக நரகங்களில் அநேகவிதமான பாதைகளை யநுபவிக்கச் செய்வார்கள்.

தேவர் - குரு - அக்கினி - பிராமணர் முதலியோருக்குச் சமர்ப்பியாமல் முறைதவறிப் புசித்தவனுடைய நாவையும் முகத்தையும் காய்ச்சிய இருப்புச்சலாகைமுதலியவற்றாற் குத்துவர். சிவபெருமானுடைய திரு

நந்தவனத்திலுள்ள மலரை ஆசையுடன் திருடிக்கொண்டுபோய்த் தலையிற் சூடிக்கொண்டவனுடைய சிரத்தையும் நாவினையும் அநேக இருப்புமுளைகளாற்குத்தி, க்ஷாராதிகளைப்பூசி, சமஸ்தவேதனைகளையும் அநுபவிக்கச்செய்வார்கள். மகாத்மாக்களையும்குருவையும்அக்கினியையும் சிவபெருமானையும் சாசுவிதமான மநுவாதி தர்மசாஸ்திரங்களையும்நிந்தித்தவர்களுடையமார்பு கழுத்து நாக்கு பற்சந்துகள் தவடை உதடு சிரம் முதலிய அவயவங்களில் அக்கினிவர்ணமான முத்தலையுடைய இருப்பு முளைகளைவைத்து இருப்புத்தண்டங்களால் மேலே யடித்திறக்குவார்கள். பின்னர் எரிந்துகொண்டிருக்கும் க்ஷாரத்தாற் பூசி உடல் முழுவதும் சித்திரவதைகள்செய்து எல்லாநரகங்களிலும் எல்லாத்துயரங்களையும் அநுபவிக்கச் செய்வார்கள். அந்நியருடைய பொருளைத்திருடினவனும், பிராமணனுடைய பொருளையும் சிவபெருமானுடைய பொருள்களையும் காலாலிடறினவனும், இயமதூதர்களுடைய கைமுஷ்டிகளாலும் கால்களாலும் இடிக்கப்பட்டும் உதைக்கப்பட்டும் தத்தமது கைகால்களிலுண்டாகிய அதிக கஷ்டமான துன்பமாகிய நரகவாதனைகளை நுகர்வார்கள். சிவாலயத்தருகிலும் நந்தவனத்தருகிலும் மலமூத்திரவிசர்ஜனஞ்செய்த பாவிகள் இருப்பு உலக்கைகளால் தமது சிசனவிருஷணங்களைப் பொடிக்கப்பட்டு, இருப்பூசிகளாற் குத்தப்பட்டு க்ஷாரம் பூசப்பெற்று,காய்ந்திருந்த எண்ணெயை அவ்விரண்டிடங்களிலும் ஊற்றப்பெறுவார்கள். மனதுக்கு விருப்புண்டாகவேண்டு மென்னும் இச்சையே காரணமாக ஜனங்கள் பாவங்களைச்செய்து அவற்றால் விளைந்த நரகவேதனைக்கு ஆளாகிறார்கள். பொருளிருந்தும் உலோபத்தால் தானஞ்செய்யாமலும், அதிக கஷ்டப்பட்டு வந்து தன் வீட்டை யடைந்த அதிதியை அவமதித்தும் இருப்பவன் மனவாக்குக் காயங்களுக்கும் பொருந்தாத பெருங்கஷ்டமான நரகத்தையடைவான். சுவானங்களுக்கும் காகங்களுக்குட் பலியிடாது அன்னம் புசித்தவனுடைய முகமானது வச்சிரத்தினால் விகாரமுறச்செய்யப்பட்டு, பலவித புழுக்களாலும்,இருப்புத்துண்டங்களாகிய மூக்கினையுடைய காகங்களாலும் பக்ஷிக்கப்பட்டுப் பலவித உபத்திரவத்துடன் வருந்துவான். சுநகத்திற்குப் பலியிடுகையில் "ஸ்யாமஸ்சஸபளஸ்சைவ யமமார்க்காநுரோதகௌ | யௌஸ்வஸ்தாப்யாம் ப்ரயச்யாமி தௌக்ருண்ஹீதமிமம்பலிம்||—யமமார்க்கத்தைத் தடைசெய்யும் ஸ்யாமம் ஸபளமென்னும் இரண்டு சுநகங்களின் நிமித்தமாகப் பலியைக்கொடுக்கின்றேன்; அந்தப்பலியை அவ்விரண்டுங் கிரகிக்குமாக" என்று சொல்லிக்கொண்டு பலியிடவேண்டும். வாயசத்திற்குப் பலியிடுகையில் "ஐந்த்ரவாருணவாயவ்ய யாம்யாநைர்ருதவாயஸாః | வாயஸாః புண்யகர்மாண ஸ்தே மேக்ருண்ஹந்த்விமம்பலிம் || ஐந்திரம் வாருணம் வாயவ்யம் யாம்யம் என்னும் பெயருடன் கறைந்துகொண்டிருக்கும் புண்ணியகருமங்களைச்செய்த வாயஸங்கள் யான் கொடுக்கும் பலியைக் கிரகிக்குமாக" என்று சொல்லிக்கொண்டு பலியிடவேண்டும். பிரயத்தனபூர்வமாகச் சிவ மூலமந்திரங்களாற் சிவபெருமானை யாராதித்துப் பின்னர் விதிப்படி அக்கினிகாரிய

முடித்து, அதன்பின்னர் பலியைக்கொடுத்தவர்கள் இயமதெண்டனை பெற மாட்டார்கள். அவர்கள் சுவர்க்கபதவியை யடைவார்கள். ஆதலின், நாடோறும் பூமியில் நான்கு மூலைகளையுடைய மண்டலஞ்செய்து, அம்மண்டலத்தைக் கந்தபுஷ்ப தூபதீபங்களாற் பூசித்து ஈசானதிக்கில் தந்வந்தரிக்கும், கிழக்குத்திக்கில் இந்திரனுக்கும், தென்றிசையில் யமனுக்கும், மேற்றிசையில் வருணனுக்கும், தக்ஷணத்தில் பிதுரர்க்கும், கீழ்த்திசையில் சூரியனுக்கும், பூமியில் தாதா - விதாதா - துவாரபாலகர் - சுவானங்கள் - சுவபதிசள் - வாயசங்கள் முதலானருக்கும் பலியைக் கொடுக்கவேண்டும்.

தேவர் - பிதுரர் - மாநுடர், காணப்படாத பிரேதத்துவமடைந்து வாயசரூபமாக இல்வாழ்வோனை யாச்சிரயித்திருத்தலின், வாயச முதலியவற்றிற்குப் பலியிடவேண்டியது ஆவசியகம். சுவாஹாகாரம் - சுவதாகாரம் - வஷட்காரம் - ஹந்தகாரம் என்னும் நான்கும் தேனுவினுடைய ஸ்தனங்கள். அவற்றுள் சுவாஹாகாரமென்னும் ஸ்தனத்தைத் தேவர்களும், சுவதாகாரமென்னும் ஸ்தனத்தைப் பிதுரர்களும், வஷட்காரமென்னும் ஸ்தனத்தைப் பூதேசுவரர் முதலிய இதர தேவர்களும், ஹந்தகாரமென்னும் ஸ்தனத்தை மாநுடரும் எப்பொழுதும் பானஞ்செய்கிறார்கள். ஆதலின் மாநுடன் பசுவைச் சிரத்தையோடு நாடோறும் விதிபூர்வமாகப் பூஜிக்கவேண்டும். அவ்வாறு செய்வோனுக்கு அத்தேனு அக்கினிகாரியத்துக்குப் பஞ்சகௌவியங்களைக் கொடுக்கும். தேனுவைப் பூஜியாத கிரகஸ்தன் தாமிசிரம் [அஞ்ஞானம்] என்னும் நரகத்தை யடைவான். ஆதலின் அவசியம் கோபூஜைசெய்து, பின்னர் ஒரு க்ஷணநேரமேனும் அதிதியின் வருகையைப் பார்க்கவேண்டியது. நாளொன்றுக்கு ஒரு கிராமத்தில் வசிக்கும் அதிதியைத் திவ்வியமான அன்னபானாதிகளுடன் தனது சக்திக்கேற்றபடி தன்னுடன் போஜனஞ்செய்விக்கவேண்டியது. ஒருவன் வீட்டிற்குவந்த அதிதி உணவின்றிச் செல்வானாயின், அவ்வதிதியின் பாவம் கிரகஸ்தனையும், கிரகஸ்தன் பெற்ற புண்ணியம் அதிதியையுஞ்சேரும். அதிதி பூஜை செய்யாது ஆவலுடன் தன்வாயில் புசித்தவன் நரகத்தில் இருப்புச்சங்கிலியாற் கட்டப்பட்டு நெடுங்காலந் துன்புற்று வீழ்ந்துகிடப்பான். அப்பொழுது இயமதண்டலாளர் அவன் மாமிசத்தையே யறுத்து அவனையுண்ணச்செய்தும், அவனுதிரத்தையே அவனைப் பானஞ்செய்யச்செய்துங் கஷ்டப்படுத்துவர். பசிதாகங்களுடன் பலவித நரகவேதனையையடைவான். விசேஷமான பாவத்தையும் சிறிது புண்ணியத்தையுஞ் செய்தவனும், விசேஷமான புண்ணியத்தையும் சிறிது பாவத்தையுஞ் செய்தவனுமடையுங் கதியையுஞ் சொல்லுகின்றேன். அதிகமான பாவஞ்செய்தவன் தான் செய்த சுவல்ப புண்ணியத்தின் பலனை முதலில் அநுபவிப்பான். அவன் புண்ணியபலனை யநுபவித்தாலும் அது அவனுக்குச் சுகமாகத் தோற்ற மாட்டாது. அவன் புண்ணியம் குறையக்குறையச் சுகமுங் குறைந்து பாவாநுபவம் பின்னர் விரைவில் சம்பவிக்கும். உபவாசமிருந்து மகா

புண்ணியங்களைச்செய்த இல்வாழ்வோன் தான் செய்த சுவல்ப பாவ பலனை முதலிலநுபவிப்பினும், மகா தனவந்தனுக்குக் கொஞ்சங் கஷ்ட மடைந்தகாலத்தில் அது தோன்றுதது போல இலேசாக அநுபவித்துப் பின்னர் புண்ணியவசத்தால் விசேஷமான சுகங்களை யநுபவிப்பான். புண்ணியபாவங்களிரண்டும் தம்மைச் செய்தவர்கள் அனுபவிக்கும்படி ஒன்று அநந்தமாக விருத்தியாகும்.

பாவிகள் பெறுந் தண்டனையுரைத்தது

முற்றிற்று.

இருபதாவது

புண்ணியர் பெறும் பதவியுரைத்த அத்தியாயம்.

வேதவியாஸபகவான் ஸநத்குமாரமுநிவரை நோக்கி வினவுகின்றார்: மகருஷியே! பாவிகள் பெருந்துக்க மநுபவித்துக்கொண்டு இயமபுரத்தை யடைவரெனக் கூறியருளினீர். இயமலோகத்துக்குச் செல்லுவோரைச் சுகமாகச் செலுத்தத்தக்க தருமங்களிவையெனக் கூறியருள வேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவரை நோக்கி, அவற்றையுஞ் சொல்லுகின்றேன் சாவதானமாகக் கேளுமென்று சொல்லத்தொடங்கினர். வியாஸமுநிவனே! சாஸ்திரங்களை யதிக்கிரமித்துச்செய்யும் அசுபகர்மங்களும், சாஸ்திரயுக்தமாக விளங்குஞ் சுபகர்மங்களுஞ்செய்தோர் அவற்றின் பலனை அவசியம் அநுபவித்தேதீரவேண்டும். ஆதலின் சுகத்தைக்கொடுக்கவல்ல தருமங்களைச்சொல்லுகின்றேன்: இவ்வுலகத்தில் சாந்தமான மனத்துடன் தயையோடு சாஸ்திரசம்பந்தமான கருமங்களைச் செய்வோர் யாவரும் இயமமார்க்கம் மகா பயங்கரமாகவிருப்பினும் தாம் செல்லுகையில் சுகமானதாகவே காணப்படுவர். அவ்வகைய சுகமான வழியால் இயமபுரத்தை யடைவர். வேதியர்களுக்குச் செருப்பையாவது பாதுகையையாவது தானஞ்செய்தவன் சிரேஷ்டமான குதிரையிலேறிச் சுகமாக இயமாலயத்தை யடைவான். பிராமணனுக்குப் பக்தி சிரத்தைகளுடன் குடையைத் தானஞ்செய்தவன் பட்டுக்குடை பிடித்துக்கொண்டு இயமமார்க்கத்தைக் கடப்பான், பல்லக்கு தானஞ்செய்தவன் திவ்வியமான இரதத்திலேறிக்கொண்டு இயமமார்க்கத்தைத் தாண்டுவான். கட்டில்முதலிய படுக்கைகளைத் தானஞ்செய்தவன் சுகமாக இயமமார்க்கத்தைத் தாண்டுவான். வீதிகளில் விருக்ஷங்களை வைத்து வளர்த்தவனும், நந்தவனங்களையுண்டுசெய்தவனும், தோப்புகள் வைத்து நிழலுண்டாக்கினவனும், புஷ்பவிமானங்களிலேறி இயமமார்க்கத்தைக்கடந்து சுகமாக இயமாலயத்தை யடைவர். தேவாலயங்களையும் அநாத மண்டபங்களையும் சத்திரங்களையும் முநிவர்களுடைய ஆச்சிரமங்களையுஞ் செவ்வையாகச் செய்வித்தவர்களும், தேவர் அக்கினி குரு பிராமணர் தாய் தந்தையர்முதலா

ஞை நாடோறும் பூஜித்தவர்களும் தாம் விரும்பியவகையே சுகமாக இயமமார்க்கத்தைக்கடந்து செல்லுவர். தீபதானஞ் செய்தவர்கள் சோதி மயமாகவிருக்க இயமமார்க்கத்தைக் களிப்புடன்தாண்டுவர். சத்திரஞ்சாவடிகள் கட்டுவித்து வழிச்செல்வோரை யாதரித்தவர்கள் சிறிதுந் துன்பமின்றிச் சந்தோஷத்துடன் இயமவழியைத் தாண்டுவர். மந்திரோபதேசஞ்செய்த குருவைப் பக்தியோடு பணிவிடை செய்துவந்தவன் இயமமார்க்கத்தில் தாம் விரும்பியபடி திவ்வியமான தோப்பு குளம் பூந்தோட்டம்முதலியன விளங்க, சந்தோஷத்துடன் போவான். நோயுற்றுத் துக்கித்துக்கொண்டுவந்து தன் வீடுசேர்ந்த வொருவனை யாதரித்து மருந்துமுதலியவற்றால் அவனைச் சுகப்படுத்தினவன் சுகத்தோடு இயமமார்க்கத்தைக் கடப்பான். பிராமணருக்குக் கோதானஞ்செய்தவனும், பிராமணர்களை அன்னபானாதிகளால் திருப்திசெய்தவனும், இயமமார்க்கமுழுதிலும் இஷ்டகாமியங்களை யநுபவித்துக்கொண்டே செல்லுவான். வேதியனுடைய கால்களைச் சுத்தஜலத்தாற் கழுவிப் புனிதஞ்செய்வோர் குளிர்ந்த பூஞ்சோலை வழியாகக் குதிரையின்மீதேறி இயமவழியைத் தாண்டுவர். வேதியருடைய கால்களைக் கழுவி வஸ்திரங்களாற் றுடைத்து அன்னபானாதிகளளித்து, இடங்கொடுத்து உபகாரஞ்செய்தவன், சந்தோஷமாக இயமமார்க்கத்தைத் தாண்டி, இயமனால் மரியாதை செய்யப்பெறுவான். நவரத்தினங்களையும் சுவர்ணத்தையும் அந்தணருக்குத் தானமளித்தவர்கள் கஷ்டமான வழிமுழுதுஞ் சுகமாகத் தாண்டிச்செல்வார்கள். வெள்ளியாற்செய்த இடபத்தைத் தானஞ்செய்தவன் திவ்வியமான வாகனங்களிலேறிப்போவான். பூமிதானஞ் செய்தவன் அருமையான வழியாகச்செல்லுவான். இவ்வாறு நல்ல சௌக்கியத்துடன் சென்று இயமதரிசனஞ்செய்து சுவர்க்கபோகங்களை யநுபவித்துக்கொண்டிருப்பார்கள். முன் சொல்லிவந்த எல்லாத் தானங்களிலும் அன்னதானமே சிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், அப்பொழுதே பிரீதியையும் திருப்தியையும் உண்டுசெய்யவல்லதும், மனோகரமானதும், உடலுக்கு வலிவையும் புத்தி விருத்தியையும் உண்டாக்கத்தக்கதுமாம். ஆதலின் வியாஸமுநிவனே! அன்னதானத்திற்குச் சமானமான தானம் உலகத்திற் பிறிதொன்றில்லை. அன்னத்தினாலேயே பூதங்களெல்லாம் ஜீவிக்கின்றன. அன்னமில்லாதபக்ஷத்தில் சமஸ்தபூதங்களுமழியும். உதிரம் மாமிசம் நிணம் சுக்கிலம் முதலியன அன்னத்தினாலேயே பெருகுகின்றன. அன்னத்தாலுண்டான சுக்கிலத்தினாலேயே பூதங்கள் உண்டாகின்றன. இத்தியாதி நியாயங்களால் சராசரப் பிரபஞ்சமுழுவதும் அன்னமயமாகவே விளங்கும். அன்னமின்றிப் பசியாயிருப்போருக்கு, பொன் இரத்தினங்கள் குதிரைகள் யானைகள் ஸ்திரீகள் புஷ்பமாலைகள் சந்தனமுதலிய திவ்விய வஸ்துக்களைக் கொடுப்பினும் ஆனந்தமுண்டாகமாட்டாது. வயிற்றிலிருப்போரும்பிறந்தவர்களும்பாலர்களும் விருத்தர்களும் யவ்வனர்களும் தேவர்களும் அசுரர்களும் ஆகாரத்

தையே கோருகின்றார்கள். பசியானது எல்லா நோய்களிலுஞ் சிறந்து முற்பட்டுள்ளது. பசியாகிய வியாதி அன்னமாகிய அவுஷதத்தால் நசிக்கின்றது. பசிக்குச்சமானமான துக்கமும் வியாதியுங்கிடையா. நோயற்றிருப்பதுபோன்ற சௌக்கியமும், குரோதத்தைப்போன்ற சத்துருவுங் கிடையா. அன்னதானத்தாலுண்டாகும் புண்ணியம் அளவிட்டுச்சொல்லிமுடியாதது. பசியாகிய அக்கினியால் தகிக்கப்பட்டுப் பிராணிகள் யாவும் இறக்கவேண்டியதுதானுதலின், அன்னத்தைக் கொடுத்தவனே பிராணனைக் கொடுத்தவனுவான். பிராணனைக்கொடுத்தவன் எல்லாவற்றையுங் கொடுத்தவனுவான். ஆதலின் அன்னதானஞ்செய்தவன் தானங்களெல்லாவற்றையுஞ் செய்த பலனை யடைவான். ஒருவனுடைய அன்னத்தைப் புசித்துச் சீவித்துத் தர்மமார்க்கத்தில் நடப்பவன் சம்பாதித்த தர்மத்திற் பாதி தருமம் அன்னமளித்தவனுக்கும், பாதி தருமம் அதனைச் செய்தவனுக்குஞ் சித்திக்குமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. திரிலோகங்களிலுமுள்ள இரத்தினங்கள் ஸ்திரீகள் வாகனங்கள் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்கள் யாவும் அன்னதாதாவுக்கு இவ்வுலகத்திலேயே கைகூடும். அறம் பொரு ளின்பம் வீடென்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையுமடைதற்குத் தேகமே முக்கியமான சாதனம். அன்னமே பிரமம். அன்னமே விஷ்ணு. அன்னமே சிவம். ஆதலின் அன்னதானத்தைப்போலச் சிறந்த தானம் திரிலோகங்களிலுந் திரிகாலங்களிலுங்கிடையாது. திரிலோகங்களுக்கும் ஜலமே பிராணமயம். அதுபுனிதமானது அமிர்தமானது சமஸ்தரசங்களுக்கும் பிராணபூதமானது. ஒருவன் எல்லாப் பாவங்களையுஞ் செய்தவனுயினும், பின்னர் அன்னபானுதிகளைத் தானஞ்செய்வானுயின், அவன் அப்பாவங்களினின்று நீங்கிச் சுவர்க்கலோகத்திற்குப் போவான். அன்னதானம் பானதானம் கோதானம் வஸ்திரதானம் படுக்கைத்தானம் ஆடைதானம் ஆதனதானம் பாதுகாதானமென்னுமெட்டும் பிரேதலோகத்திற் சிறந்தபலனை யளிக்குந் தானங்களென்று சொல்லப்படும். இவைபோன்ற விசேஷ தானங்கள் இயமபுரத்தில் சுகத்தை யநுபவிக்கத்தக்க பலனளிக்க வல்லவையாயநந்தமுள்ளன—என்று கூறிய ஸநத்குமாரமுனிவரை நோக்கி, வியாஸமுனிவர் ஸ்வாமி ! அப்பிரேதலோகம் மகாகஷ்டமானது. அவ்வகைய வுலகத்தில் சுகத்தையடைய வேண்டியவர்கள் மேற்கூறிய சிறந்த தானங்களைச்செய்து அப்பெருங்கஷ்டங்களை நீங்குவரெனக் கூறக் கேட்டு, மிகவும்அஞ்சுகின்றேன். ஆதலின் சுகமானது எதனாலுண்டாகுமோ அதனையும் போதித்தருளவேண்டுமென்று கேட்க, ஸநத்குமார முனிவர் கூறலாயினர்.

வியாஸமுனிவனே ! ஆச்சரியகரமான விஷயத்தைக் கேட்டனை ; நீ விரும்பியபடியேசொல்லுகின்றேன். எவன் எவ்வகைக்கர்மத்தால் எவ்வகைக்கதியையடைகின்றானே அவன் அக்கர்மத்தால் அக்கதியையேமரணமடைந்த பின்னும் அநுபவிப்பான். தவஞ் செய்வதால் சுவர்க்கம் கீர்த்தி

ஆயுள்விருத்தி சந்தோஷம் போகம் ஞானம் விஞ்ஞானம் ஆரோக்கியம் அழகு சௌபாக்கியம் சுகம் முதலியன கைகூடும். தவத்தினைச் செய்யாதவர்களுக்கு உயர்கதியாகிய சிவலோகம் சம்பவிக்காது. தவஞ்செய்வதால் சுவர்க்காதி பதவிகள், கஷ்டசாத்தியமான ஞானம், அதிதூரமான சிவலோகபதவி, பாவநாசம் முதலியன யாவும் சுலபமாக அடையக்கூடும். அரும்பெருங்கஷ்டத்தா லடையத்தக்க செல்வமும், சகலரும் மதிக்கத்தக்க மதிப்பும் தவத்தாலேயே கிடைக்கத்தக்கவை. உலகத்தில் தானஞ்செய்வதால் செய்தவனுக்குச் சமஸ்தமான போகங்களும் சித்திக்கும். பிரமசரியாச்சிரமத்தைச் சரியாக நடத்தினவன் ஆயுர்விர்த்தியடைவான். அஹிம்ஸையால் வலிமையும் திவ்விய ரூபமும் உண்டாகும். சிவதீக்ஷையால் நற்குடிப்பிறப்புண்டாகும். பழங்கள் கிழங்குகளைப்புசிப்பதால் அரசுரிமை கைகூடும். இலைகளைப் புசித்துத் தவஞ் செய்தவர்களுக்குச் சுவர்க்கங் கைகூடும். பாலைப்பருகித் தவஞ்செய்தவர்களுக்கு உயர்பதவி சித்திக்கும். குருவுக்குப்பணிவிடைசெய்தவன் விசேஷவித்தியாவானுவான். சிரார்த்தாதிகளால்பிதுர்த்தேவர்களைத்திருப்திசெய்தவனுக்குச் சந்ததிவிர்த்தியடையும். சாகதீக்ஷைசெய்துகொண்டவர்களுக்குப்பசுக்கள்அபிவிருத்தியாகும். புல்முதலியவற்றைப் புசித்துத் தவஞ்செய்தவன் சுவர்க்க மடைவான். காலையுச்சிமாலைகளில் முறைப்படிஸ்நானஞ்செய்யும் நியதியுடையவனுக்கு ஸ்திரீலாபமுண்டாகும். வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு தவத்திலிருப்பவனுக்கு யாகபலன் சம்பவிக்கும். காலையுச்சி மாலைகளில் ஜபஞ்செய்தவன் நித்தியஸ்நானஞ்செய்த பலனையடைவான். மௌனமாகத் தியானஞ்செய்வோனுக்கு இராஜ்ஜியசம்பத்துண்டாகும். அன்னத்தைவெறுத்துத் தவஞ்செய்வோனுக்குச் சுவர்க்கபதவி சித்திக்கும். நிலமிசைப்படுத்து, [ஸ்தண்டிலசாயி] தவஞ் செய்வோனுக்குத் திவ்வியமான வாகனமும் நல்ல வீடுகளுங் கைகூடும். மரவுரியுடுத்துவோருக்குத் திவ்வியமான பட்டுவஸ்திரங்களுண்டாகும். படுக்கை ஆசனம் முதலியவற்றைத் தவசிக்குத்தானஞ்செய்தவனுக்கும், நியதியாக அக்கினிகாரியஞ்செய்தவனுக்கும் பிரமலோகங் கைகூடும். மதுரமுதலிய அறுசுவைகளை வெறுத்தவர்கட்குச் சம்பத்துகளுண்டாகும். மாமிசபக்ஷணத்தை விடுத்தவனுடைய புத்திராதிகள் ஆயுர் விருத்தியடைவர். உதயகாலத்தில் விழித்துக்கொண்டிருப்பவன் இராஜ்யாதிகாரியாவான். சத்தியவசனனுயிருப்பவன் தேவர்களுக்குப் பிரியவானுவான். எந்தப் பொருளையாவது தானஞ்செய்தவன் கீர்த்தியைப் பெறுவான். ஜீவஹிம்சை ஒருகாலத்திலுஞ் செய்யாதவன் ஆரோக்கியத்தை யடைவான். பிராமணபக்தி செய்தவன் பெரிய இராச்சியத்தை யடைவான்; அல்லது வேதியவமிசத்தில்தோன்றி நன்னடக்கையோடு விளங்குவான். சுத்தஜலத்தை நல்ல வேனிற்காலத்தில் தானஞ்செய்தவனுக்கு இஷ்டகாமியங்கள் கைகூடும். சமஸ்த பூதங்களிடத்தும் பச்சாத்தாபமுடையவன் சகலதுக்கங்களையுமொழிவான். தேவபக்திசெய்தவன் அகண்டராஜாதிபத்தியத்தையாவது தேவபதவியையாவது அடை

வான். தீபதானஞ் செய்தவன் பிரபுவாகி நேத்திரவியாதியை ஒருகாலத்தும் அடையான். சர்வேசுவர ஞானப்பிரதிபாதகமான சாஸ்திரங்களைத் தானஞ்செய்தவன் விசேஷஞானவானுவான். கந்தபுஷ்ப சந்தனுதிகளைத் தானஞ்செய்தவன் சிரேஷ்டமான கீர்த்தியை யடைவான். வானப்பிரஸ்த ஆச்சிரமத்தை மேற்கொண்டு சடைமுடி முதலியன வளர்த்தவன் சிரேஷ்டமான சந்தானத்தை யடைவான். உபவாசமிருத்தல் சிவதீக்ஷை தரித்தல் சிவார்ச்சனைசெய்தல்முதலிய கருமங்களிலிருந்தவர்கள், யுத்தபூமியிலுயிரிழந்து வீரசுவர்க்க மடைவோர்போல, அப்பதவியில் பன்னிரண்டுவருஷம் வீற்றிருப்பார்கள். வேதோக்தப்படி சத்பாத்திரனுக்குத் தனது கன்னிகையைத் தானஞ் செய்து, தாசி தாசர்கள் பூமி பொன் அசுவம் முதலியவற்றை ஸ்திரீதனமாகக் கொடுத்தவன் உத்தமமான கதியையடைவான். தீர்த்தயாத்திரை செய்து உபவாச மிருப்போருக்கு உண்மையாகச் சுவர்க்கபதவி கிடைக்கும். பலம் புஷ்பங்களைத் தானஞ்செய்வோன் அழியாத மோக்ஷத்தை யடைவான். பொன்னுற்செய்த கொம்பணி பூட்டிய ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்தவன் தேவலோகத்திலும் புகழ்ந்துபேசத்தக்க சிறந்த கதியையடைவான். பொன் முதலியவற்ருல் நன்ருக அலங்கரித்த காராம் பசுவைக் கன்றுடன் தானஞ்செய்தவன் தான் விரும்பிய இஷ்டசித்திகளை யெல்லாம் குறைவின்றி யடையப்பெறுவான். ஒருவன் கோதானஞ்செய்த பசுவானது அத் தானவானையும் அவன் சந்ததியில்வரும் எழுதலைமுறையாரையும் தனக்குள்ள உரோமமொன்றிற்கொருவருஷம் தேவபதவியில் இருத்தவல்லதாகும். பொன்னுற் கொம்பும், வெண்கலத்தால் தேகமும், விலையுயர்ந்த வஸ்திரமும், தக்ஷிணையும் வைத்துச் சத்பிராமணனுக்குத் தத்தஞ்செய்தவன் வசுலோகத்தைச் சுலபமாகப் பெறுவான். தமது வினைக்கேற்ப அந்தகாரமான நரகத்தில் விழுந்து பரிதவிப்பவனுக்கு, சமுத்திரத்தைத்தாண்ட ஓடம் பயன்படுமாறு, கோதானமே அவனைக் கஷ்டத்தினின்றுங் கரையேற்றத்தக்கது. கன்னிகாதானஞ் செய்தவனும், பூமிதானஞ் செய்தவனும், நானுவித திரவியங்களைத் தானஞ்செய்தவனும், இந்திரலோகத்தை யடைவார்கள். எல்லாப் பொருள்களும் நிறைந்துள்ள வீடுமுதலியவற்றை வேதபாரகனுயுள்ள வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நித்தியமான சத்பதவி பெறுவான். எருதுகளைத்தானஞ் செய்தவனும், குதிரை முதலிய வாகனங்களைத் தானஞ்செய்தவனும் வசுலோகத்தை யடைந்து வசிப்பார்கள். வெள்ளி பொன் முதலியவற்றைத் தானஞ்செய்வோருக்குச் சுவர்க்கபதவி யுண்டாகுமென்று சொல்லுகிருர்கள். குடைகளைத் தானஞ்செய்வோருக்கு நல்ல வீடுகிடைக்கும். பாதரக்ஷை முதலியவற்றைத் தானஞ்செய்தவருக்கு விசேஷமான வாகனங்கள் கிடைக்கும். வஸ்திரதானஞ் செய்தவன் நல்ல அழகினை யடைவான். கந்ததானஞ் செய்தவன் திவ்விய தேகத்தையடைவான். புஷ்பம் பழம் முதலியவற்ருேடு கூடிய விருக்ஷத்தை வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நல்ல வீட்டையும் ஸ்திரீயையும் செல்வத்தையும் பெறுவான். பக்ஷியம்

அன்னம் பானம் அறுசுவை முதலியவற்றைத் தானஞ்செய்தவன் இச்
சித்த ரஸங்களையெல்லாம் பெறுவான். யாத்திரைவாசமாக வந்தவர்களுக்
குத் தங்கியிருக்க இடங்கொடுத்தல், மறைவுகட்டிக் கொடுத்தல் முதலி
யன செய்தவன் மறுஜனனத்தில் விசேஷமான போகபாக்கியங்களை யடை
வான். புஷ்பமாலை - சந்தனம் - சுண்ணப்பொடி முதலியவற்றைத் தா
னஞ்செய்தவனும், ஸ்நான தானஞ்செய்தவனும் மகா ஆரோக்கியர்களாகி
நல்ல ரூபத்துடன் அரசனைப் போன்ற சம்பத்தை யடைவார்கள். தான்
னியங்களை நிரம்பவு முடைத்தாய், பாத்திரங்களை யுடையதாய் விளங்கும்
வீட்டினை வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நல்ல உத்தியானவனத்திற்
குச் சமானமான சிறந்தமாளிகையை யடைவான். மெத்தை தலையணை
திண்டு முதலியவற்றுடன் கட்டிலைத் தானஞ்செய்தவன் ரூபவதியும் புத்
திரவதியுமாகிய மனைவியைப் பிரயத்தனமின்றியே பெறுவான் எனக்
கூறிய ஸநத்குமார முநிவரை நோக்கி வியாஸமுநிவர் வினவலாயினர்.

ஸ்வாமீ! தேவரீர் சிறந்ததானங்களை யெல்லாம் அடியேன் அறி
ந்து கொள்ளும்படி திருவாய் மலர்ந்தருளினீர். ஆயினும் இவற்றுள்
முக்கியமாக அநுஷ்டிக்கத்தக்க தானங்களெவையோ அவற்றையுந் திரு
வாய் மலர்ந்தருள வேண்டும் எனக்கேட்க, ஸநத்குமார முநிவர் சாற்ற
லாயினர். வியாஸமுநிவனே! சமஸ்தபிராணிகளுக்கும் துன்பமுண்டா
யிருக்கும் பொழுது அபயங் கொடுத்து அநுக்கிரகஞ் செய்தலும், தன்னை
வந்துயாசித்தவனுடைய விருப்பத்தையறிந்து அவன் விரும்பியபொருளை
அவனுக்குத் தானஞ்செய்தலும், தானஞ்செய்தவனுக்குத் துணையாக
நின்று அவனுக்கு உதவிசெய்தலின் இவையே சிறந்தவை. இன்னும்
அவனையுடன்பற்றிச் செல்லத்தக்க சிலதானங்களையுஞ் சொல்லுகின்றேன்.
மதிவாணனே!சுவர்ணதானம்கோதானம்பூதானம்கன்னிகாதானம்என்று
சொல்லப்பட்டவை, ஒருவன்செய்தபாவங்களை விலக்கத்தக்கவை. இத்தா
னங்களைச் சத்புருஷருக்குச் செய்தபக்ஷத்தில் அதிகஷ்டமான நரகத்தி
னின்று நீங்குவான். உலகத்திற் சிறந்தபொருளையாவது, தன் வீட்டி
லுள்ளவற்றிற் சிறந்ததாக மதித்திருக்கும் பொருளையாவது குணவந்த
னுக்குத் தானஞ்செய்தால் அழியாத பதவி கிடைக்கும். வாங்குவோ
னுக்கு விருப்பமான பொருளைத் தானஞ்செய்தவன் எந்த லோகத்திலும்
தனக்கு விருப்பமான பொருளையடைந்து, இகலோகத்திலும் பரலோகத்
திலும் சமஸ்த பூதங்களுக்கும் பிரியமானவனாவான். யாசியாதவனும்,
தேகாபிமானம் விடுத்தவனும், தரித்திரனுமாகிய யாசகனுக்குச் சக்தி
யானுசாரம் பூஜைசெய்து உதவிசெய்யாதவன்,நராதமனும் மகாபாவியுமா
வான். சத்துருவாயிருப்பினும் தன்னைக் காக்கவேண்டுமென்று சரண
மடைந்தவனை அந்த ஆபத்துவேளையில் ஆதரிப்பவனே புருஷனென்று
உலகத்திற் சொல்லப்படுவான். ஏழையும் அபிமானியும் ஜீவனோபாய
மில்லாதவனுமாகிய ஒருவனைக் காத்துவந்தவனும் புருஷனேயாவான்.

தரித்திரத்தால் துன்புற்றவனும், மனைவிபுத்திரர்களை யுடையவனும், நியத விரதமுடையவனும்,நாணத்தால்யாசியாதவனுமாகவுள்ளசத்புருஷனைநல்ல தான காலத்தில் சமஸ்த உபசாரங்களோடும் உபகாரஞ் செய்தவன் பெறும் புகழ் முதலியவற்றை, உலகத்தில் மாநுடராவது தேவராவது பெற மாட்டார்கள். உண்மையை யுரைப்போரும் நியாயவழியிலேயே ஜீவிப்போரும், முறைப்படி வேதவாராய்ச்சியோடும் விரதங்களை யெல்லாம் அநுஷ்டித்தவரும், முக்திமார்கத்தையே விரும்பினவரும், பெருமைகருதாது தவஞ்செய்வோரும், பரதாரகமன மில்லாதவரும், சக்திக்கேற்பத் தானஞ்செய்ய விரும்புவோரும், ஸ்ருதி ஸ்மிருதி புராணங்களையுணர்ந்தவரும், யாகாதிகாரியங்களைச் செய்தோருமாகியமகாத்துமாக்களும், அவர்களது ஆசாரியர்களும், புரோகிதர்களும் எப்பொழுதும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள். தர்மத்தையே செய்யவேண்டுமென்று விருப்புற்று இதரரைத் தமது புத்திரர்போலவே பரிபாலனஞ் செய்வோரும், சுபகாரியங்களையே செய்வோரும், பூஜிதர்களே. தன்னுடைய தர்மங்களை நியதியாக அநுஷ்டிக்கிறவன் பிராமணரை யெப்பொழுதும் நமஸ்கரிக்க வேண்டியது. வேதியனைத்தாய்போல மரியாதைபாராட்டிப் பணிபவனுடைய பாவங்கள் அவனுடைய பக்தியாகிய கத்தியினாலே கழிக்கப்படும். க்ஷத்திரியர்களும் பிராமணர்களை நமஸ்கரித்தே சிறந்தபலனை யடையவேண்டும். பிராமணர்களிடம் பக்திவையாதும் பூஜியாதுந் திரஸ்கரித்தவனை உலகத்தார் நிந்திப்பார்கள். அவர்கள் மறுபிறவியிலும் கஷ்டமநுபவிப்பார்கள். இது அநாதியாயுள்ள தருமமாதலின் இதனையுனக்குச் சொன்னேன். க்ஷத்திரியன் எப்பொழுதும் பிராமணனைப்பணிய வேண்டும். வைசியன் க்ஷத்திரியனையும் பிராமணனையும் வணங்கவேண்டும். சூத்திரன் வைசிய க்ஷத்திரிய பிராமணரை நமஸ்கரிக்கவேண்டும். இவ்வகைய நான்கு ஜாதியிலும் மேன்மையும் ஸத்தியகுணமும் தர்மாநுஷ்டானமுமடைந்துள்ளவர்களைக் குடிப்பிறப்பு நோக்காது வணங்கத்தகும் என்று ஸநத்குமார முனிவர் கூறினர்.

வியாஸமுனிவர் ஸநத்குமார முனிவரைநோக்கி ஸ்வாமீ! வித்தையில் மேம்பட்டவனும் வயதில்மேம்பட்டவனுமாகிய இருவரில்,தானபாத்திரனாக வுள்ளவன் யாவன்? என்னும் விஷயத்தை அடியேனுக்கு விளக்கியருளவேண்டும் என வினவ, ஸநத்குமார முனிவர் கூறலாயினர்: வியாஸ முனிவனே! வித்தையால் சிறந்தவனும், வயதால் மூத்தவனும் சிறந்த தானபாத்திரராகமாட்டார்கள். சதாசார சம்பத்தையுடைய பிராமணனே தான பாத்திர சிரேஷ்டன். யாசித்தவனுக்குக் கொடுக்குந் தானத்தைக் காட்டிலும் யாசியாதிருக்கிற பிராமணனுடைய விருப்பத்தையறிந்து கொடுத்த தானமே சிறந்தது. அப்படி யாசியாதிருப்பவர்களிலேயும் தேகாபிமானத்தால் மிக்க சிரமத்தை யனுபவிப்பவனைப்பார்க்கிலும் விரக்தனாயிருப்பவன் சத்பாத்திரன். யுத்தத்திலேயே பெருவிருப்பினையுடைய க்ஷத்திரி

யனும், யாககாரியத்திலேயே மனமுடைய பிராமணனும் தேவர்களைத் திருப்தி செய்பவர்களாவார்கள். பிராமணன் ஒருபொருளை யாசித்தலால், திருடன் ஊராரைத் தொந்தரை செய்வதுபோல, பிறருடைய பஞ்சேந்திரியங்களைத் துன்புறுத்துகின்றான். ஆனால் யாசித்தவன் மரணத்திற்குச் சமானமான துக்கத்தை யடைகிறான். அவ்வாறு யாசித்தவனுக்கு இல்லையென்றுசொல்வது அதைக்காட்டிலுந்துக்ககரமானது. கொடையாளியோ தன்னாலியன்றவரையில் தானஞ்செய்து தன் ஆத்துமாவை உச்சீவிக்கச் செய்கின்றான். ஜீவஹிம்சை செய்யாதிருப்பதே உத்தமமான தருமம். குடும்பம் வருத்தமடையும் பொழுதும் யாசிக்கப்படாதென்னுங் கொள்கையால் துக்கமுற்றிருப்போரைக் கண்டுபிடித்துப் பிரயத்தின பூர்வமாகத் தானஞ்செய்யவேண்டும். எந்த அரசாக்ஷியில் யாசியாத விரதம் பூண்ட வேதியர் வாழ்ந்திருப்பரோ அந்த அரசாக்ஷயிலுள்ளோர் நீறுபூத்த நெருப்புப்போல விளங்கும் அவர்களுடைய தரிசனத்தால் தமது பாவங்களையொழிந்து கிருதார்த்தர்களாக்கப் படுவார்கள். ஞானம்-விஞ்ஞானம்-பிரபாவம் - அந்தரங்கமான தவம் - வேதவேதாங்கவுணர்ச்சி - விரதாசரணம்- சந்ததிவிருத்திக்காக ஸ்திரீ சங்கமம் முதலிய செயல்களையுடைய பிராமணர்களைப் பிரியமான உபசாரங்களால் உத்தமமான தானகாலங்களிற் பூஜிக்கவேண்டியது. அவ்வகையாகச் சத்திக்கேற்பத் தானங்கொடுக்கையில், வாங்குவோன் பொருளாசையுடன் வாங்காது, கொடுப்போனை உச்சீவிக்கச்செய்ய வேண்டுமென்னுங் கருத்தோடு வாங்கிக்கொள்ள வேண்டியது. பயிரானது வாட்டமடைந்து மேகம் எப்பொழுது வருஷிக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல தானவான் சத்பாத்திரமானவன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்தவனா யிருக்கவேண்டும். இவ்வகைய தாதாவுக்குச் சந்தேகமின்றி மோக்ஷமானது கரதலாமலகமாகச் சித்திக்கும்.

முனிவனே! க்ஷத்திரியனானவன் இராசரிகவிஷயத்தில் பரிபாலிக்க வேண்டி அநேக தீயகருமங்களைச் செய்யினும், அதனால் விளையும் பாவங்களை யொழிப்பதற்கு அநேக யாகங்களையும் சிறந்த தானங்களையுஞ்செய்ய வேண்டும். பாவிகளான அரசர்கள் கொடுக்குந் தானத்தைப் புண்ணியசீலர்களாகிய பிராமணர்கள் பெறமாட்டார்கள். பாவிகளான அரசர்கள் நாடோறுந் தானஞ்செய்து தமது பாவங்களைப்போக்கிக்கொண்டுவருவார்களாயின், புண்ணியர்களான அந்தணரும் அவர்களிடந் தானம்பெறுவர். தனவான் மித்திரனையும் புத்திரனையும் வேதபாரகனையும் சதாசார சம்பன்னனையும் விசேடமாகச் சன்மானித்து, தன் வீட்டையடைந்த விப்பிரனுக்குத் தானஞ்செய்யவேண்டும். பசுக்கள் எருதுகள் அன்னம் குடை வஸ்திரம் பாதுகை அசுவம் முதலிய வாகனங்கள் வீடுகள் சயனங்கள் என்று சொல்லப்பட்டவை சிரேஷ்டமான பலனைக்கொடுக்கத்தக்கதானங்களாம். ஜீவனோபாயமில்லாத பிராமணருக்குச் சீவனம் உண்டுசெய்வானாகில் எல்

லாப்பாவங்களினின்றும் நீங்கிச் சுவர்க்கமடைவான். தன் ஊழியக்காரரைப் புத்திரர்போல அன்புபாராட்டி நடத்தவேண்டியது. தன் பிரஜைகளைத் தன் சேவகராகமதித்துப் பரிபாலிக்கவேண்டியது. வேதியர் யோகக்ஷேமங்களை நாடோறும் விசாரித்துக்கொண்டிருக்கவேண்டியது. குடிகளை வருத்தி விசேஷமாக வரிமுதலியவற்றை வாங்கிக் கஷ்டப்படுத்துகிற மன்னவன் பெரும்பாவியென்று மதிக்கப்படுவான். நியாயமார்க்கமாக வரிவாங்கித் தானதருமங்களைச்செய்யும் அரசன்கொடுத்த தானம் சிறிதாயிருப்பினும் மேலோர் அதனை அநந்தமாகக்கொள்வார்கள். நல்ல முறைப்படி தேடிய பொருளால் செய்த யாகத்தைத் தேவர்கள் திருப்தியடைவார்கள். சமுத்திரஜலத்தைப் பானஞ்செய்து சூல்கொண்டெழுந்த மேகமானது பெருமழையைச் சொரியுமாறு மன்னவன் குடிகளிடத்திற்றேடிய பொருளைக்கொண்டு யாகஞ்செய்து அந்தணருக்கு அபரிமிதமாகத் தானங்கொடுக்கவேண்டும். பாலர் விருத்தர் அந்தகர் விவேகஹீனர் முதலானோருடைய பொருளை அரசனே காத்து அவர்களுக்கு உபயோகப்படுத்தவேண்டியது. பூமியிற் புதைபட்டிருந்தபொருளையும், தானாவது பெரியோராவது தானஞ்செய்த பொருளையும் அரசன் ஏற்றுக்கொள்ளப்படாது. இவ்வண்ணமின்றி அதிக்கிரமித்துப் பொருள்தேடும் மன்னவன், தனது இராச்சியத்தைத் தானேயழிப்பவனாவான். பண்டிதரும் வேதபாரகரும் சீவனமின்றித் தனது இராச்சியத்திலிருக்கும்படி அரசுசெய்வோன் உயிர்பிழைத்திருத்தல் அவலம். அவ்வரசன் வேதோக்தமாக அப்பண்டிதர் முதலானோருக்குச் சீவனோபாயம் உண்டுசெய்யவேண்டுமென்று சிபிச்சக்ரவர்த்தி முதலானோர் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு செய்யாதவனுடைய இராச்சியத்தையும் குடும்பத்தையும் வடவாமுகாக்கினி தகித்துவிடும். பதிவிரதா தருமங்கெட்ட ஸ்திரீகள் வாழும் இராச்சியாதிகாரி மகா நரகத்தையடைவான். தானம் யாகம் நீதி முதலிய நற்செய்கைகளில்லாத அரசனை அவனது இராச்சியத்திலுள்ளவர்கள் பலரும் நிந்தித்து அவமானப்படுத்துவார்கள். நன்றாய் அரசுபுரிவேனென்று கூறி முறைதவறி நடத்தும் அரசனைப் பலருங்கூடி அடித்துக்கொல்லுதல் நியாயமாகும். அரசனது ஆக்கினைக்குறைவால் பிரஜைகள் செய்யும் பாவத்தில் அம்மன்னவன் காற்பங்கு பெறுவானென்று கூறுகின்றாராயினும், அஃதென்மதமன்று; அவன் அப்பாவமுழுதையும் அல்லது அரைப்பங்கையேனும் அடையவேண்டும். வேந்தன் சரிவர நடத்துவதாற் பிரஜைகள் செய்யும் புண்ணியத்தில் அவன் காற்பங்கு பெறுவானென்பதற்கு ஐயமில்லை என்று ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவரை நோக்கித் திருவாய்மலர்ந்தருளினர்.

புண்ணியர் பெறும் பதவியுரைத்தது

முற்றிற்று.

இருபத்தோன்றாவது

அன்னதான பலனுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமார முநிவரை நோக்கி, ஸ்வாமீ! உத்தம குண சிரேஷ்டர்களான வேதியருக்குத் தானஞ்செய்வதிலேயே விருப்பமுடைய அரசன், இவ்வுலகத்தில் யாது தானத்தைச் செய்யவேண்டும்? அதனையும் எனக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டும் என வினவ, பிரமபுத்திரராகிய ஸநத்குமார முநிவர் சொல்லத் தொடங்கினர்: தேவர்களும் ருஷிகணங்களும் அன்னமே சிறந்ததென்று சொல்கின்றார்கள். அன்னத்திலேயேயாவும் விளங்குகின்றனவாதலின், சத்ஜனங்கள் அன்னதானத்தையே விசேஷமாகச்செய்ய விரும்புவார்கள். அன்னதானத்திற்குச் சமானமான தானம் இதுவரையில் ஒன்றுங்கிடையாது, இனிமேலும் உண்டாகமாட்டாது. அன்னமே சராசரப் பிரபஞ்சமாகிய எல்லாவற்றையும் நிலைபெறச்செய்கின்றது. அன்னமே உலகத்தில் வலிமையை யுண்டுசெய்யும். அன்னத்திலேயே பிராணன் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. தன் ஆத்துமத்திற்கு இதத்தைச்செய்ய விரும்புவோன், குடும்பத்தைப் பீடித்தாயினும், தன்வீட்டையடைந்த சந்நியாசிக்கும் அதிதிக்கும் அன்னமளிக்கவேண்டும். தன் ஆத்துமாவிற்கு இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகத்தை யுண்டுசெய்ய விரும்புகிறவன் தன்வீட்டை யடைந்த அதிதிக்கு அன்னமளிப்பானாயின் அது மேலுலகத்திற்குப் பெருந்துணையான நிதியாகவிருக்கும். கீர்த்தியை விரும்பினவன் நடுப்பகலில் மகாசத்ஜனனாய், தூரதேசத்தினின்று வந்தவனாய்த் தன்வீட்டையடைந்த அதிதியைப் பூஜைசெய்யவேண்டும். வியாஸமுநிவனே! அன்னத்தையளிப்பவன் சாந்தசீலனாகவும் சத்குணனாகவும் நின்று அதிதி பூஜைசெய்யும் பக்ஷத்தில் இம்மை மறுமைப்பலன்களை யடைவான். தூரதேசத்தினின்று வந்த அதிதியை ஆதரணை செய்யாது திரஸ்கரிப்பவன் மகாபாவத்தையடைவான். தன்வீட்டை யடைந்தவனுடைய குடிப்பிறப்பு, குணம் முதலியவற்றை விசாரணை செய்யவேண்டுவதில்லை. ஒவ்வொருவனுக்கும் அன்னதானங் கொடுப்பதே விசேஷபலனையளிக்கும். முன்பின் அறியாதவனை அதிதிக்குச் சிரேஷ்டமான அன்னத்தை யளித்தவன் சகல சாம்பிராஜ்ஜியங்களையும் பெறுவான். பிதுரர்களும் தேவர்களும் வேதியர்களும் அதிதிகளுமாகிய இவர்களை, அன்னத்தால் ஆனந்திக்கச்செய்பவன் அநந்தமான புண்ணியத்தை யடைவான். பெரும்பாவியாயிருப்பினும் அதிதிக்கு அன்னமளித்தவனுடைய பாவங்களெல்லாம் நெருப்புப் பொரிபட்ட பஞ்சுப் பொதிபோல நசிக்கும்; அதிலும் அவ்வதிதி அந்தணனாயிருப்பின் விசேஷ பலன் கைகூடும். பிரமணனுக்கு அன்னதானஞ் செய்தால் அழியாத பலனைக் கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னதானஞ்செய்தால் மகத்தான பலனைக்கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னபானங்களைத் தானஞ்செய்தால்

அதிலுஞ்சிறந்த பலனைக்கொடுக்கும். அதுவே பிராமணருக்குக் கொடுக்கச் சம்பவித்தால் அக்ஷயமாகும். ஆதரணையற்றுவந்த அதிதியைக் கோத்திரம் சரணம் ஸ்வாத்தியாயம் தேசம்முதலியவற்றை விசாரியாது அவ்வதிதிக்கு அன்னதானஞ் செய்யவேண்டும். அன்னதானஞ்செய்தவன் திவ்வியமான சம்பத்துகள் உண்டாகப்பெற்று, தன் புத்திரமித்திராதிகளால் மதித்து உபசரிக்கப்பட்டு, அவ்வாறே சுவர்க்கலோகத்தில் காமதேனு கற்பகவிருக்ஷ முதலியவற்றால் தனது பணிகள் செய்யப்பெறுவான். வியாஸமுநிவனே! அன்னதானத்தினால் சுவர்க்கலோகத்தையடைந்து அதனைப் பிரகாசிக்கச்செய்வார்கள். அவ்விடத்தில் அவர்கள் விரும்பிய சுகங்கள் யாவும் சித்திக்கும். பொன்னாற்செய்த கிணறுகளும், மனோகரமான தடாகங்களும், மலர்ச்சோலைகளும், வெண்ணிறத்த வாகனங்களும், சிறந்த பக்ஷியங்களும், தேவான்னமும், சீனிசீனம்பரங்களும், நவரத்தினகசிதமான ஆபரணங்களும் அவர்களுக்குண்டாகும். அவ்வுலகத்தில் நதியாகப் பால்பெருக்கெடுத்தோடும். தவளமாளிகைகள், பொன்நிறத்த கட்டில்கள் முதலியவற்றுடன் தாம் விரும்பிய இடங்களிற்சென்று திரும்புவர். புண்ணியகரமான அன்னதானத்தால் இவ்வகைய சிறந்த பதவிகள் கைகூடுவதால் அன்னதானமே விசேஷமாகச் செய்யத்தக்கது. சிராத்தகாலத்தில் சத்பாத்திரனான வேதியனுக்குப் பக்தியோடு அன்னதானஞ்செய்தவன் தனது பிதுர்க்களை அக்ஷயமான பதவியிலிருத்துவான்.

அன்னதானபலனுரைத்தது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

தானம் தவமுதலியவற்றின் சிறப்புரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவரை நோக்கிக் கூறுகின்றார்: பானீயதானம் எல்லாத்தானங்களிலுஞ் சிறந்தது. ஆதலின் வாவி கூபம் தடாகமுதலியவற்றை ஒருவர் உண்டுசெய்யவேண்டும். கிணறெடுக்கவேண்டுமென்று கருதியவனுக்கு அப்பொழுதே அவனுக்குள்ள பாவத்திற் பாதிதொலையும். பசுக்கள் விப்பிரர் சத்ஜனர் சாதாரண மானுடர்முதலிய வெல்லோருக்கும் உபயோகப்படும்படி, ஒரு ஜலாசயத்தைத் தோண்டுவித்த புருஷன், தன் வமிசத்தர்கள் எல்லோரையும் புனிதர்களாக்க வல்லவனாவான். அந்த ஜலாசயம் வேனிற்காலத்திலுங் குறையாத ஜலமுடையதாகவும், சாதாரணமாக இறங்கி யேறக்கூடியதுமாக விருக்கவேண்டும். தடாகம் நிர்மாணஞ்செய்தவன் திரிலோகங்களிலும் மற்றெவ்விடத்திலும் பூஜிக்கத்தக்கவனாகவாவது சூரியலோகத்திலாவது வீற்றிருப்பான். இவ்வுலகத்திலும் சிரேஷ்டமான கீர்த்தியுண்டாகும். திவ்வியமான தேசத்தில் ஒரு க்ஷேத்திரமத்தியில் விசாலமான ஒரு தடாகத்தையாவது

கிணற்றையாவது பலர்க்கும் பயன்படுமாறு செய்வித்தபக்ஷத்தில் அவனுக்குத் தர்மார்த்தகாமங்கள் கைகூடுவதுடன் உத்தமமான சம்பத்துங் கைகூடும். இவ்வகைய ஜலாசயத்தைத் தேவர்களும் மானுடரும் கந்தர்வரும் பிதுரரும் உரகரும் இராக்ஷஸரும் தாவரங்களும் எப்பொழுதும் விரும்புகின்றார்கள். வருஷருதுவில் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு எப்பொழுதும் நித்யாக்கினிவளர்த்திய பலன் சித்திக்குமென்று பெரியோர் சொல்லுவர். சரத்காலத்திற் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு ஆயிரங்கோதானஞ்செய்த பலன் சந்தேகமின்றிக் கிடைக்கும். ஏமந்தசிசிருதுக்களில் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு விசேஷமான சுவர்ணதக்ஷிணை கொடுத்து மகாயாகஞ் செய்வித்த பலன் கைகூடும். வசந்தகிரீஷ்மருதுக்களில் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு அதிராத்திரம் அசுவமேதம் என்னும் யாகங்கள்செய்த பலன் சம்பவிக்கும்.

பலவிதமான விருக்ஷங்களை நிழலில்லாதவிடங்களில் உண்டாக்கி வளர்த்து வழிச்செல்வோருக்கு நிழலுண்டாக்கினவன் தனது வமிசத்தில் இறந்தவர்களையும் இனிப் பிறப்பவர்களையும் பாவிகளாயிருப்பினும் உத்தரித்துப் பிதுரர்களுக்குப் பிரீதியுண்டுசெய்பவனுவான். ஒருவனிறந்த பின்னர் அவனது புத்திரர் அவனைச் சத்கதியடையுமாறு பலவித கிரியைகளைச் செய்வார்போல ஒருவன் வளர்ப்பித்த விருக்ஷங்களும் அவனைச் சத்கதியடையச்செய்விக்கும். விருக்ஷங்கள் புஷ்பத்தினுல் தேவகணங்களையும் பழத்தினுல் பிதுர்தேவர்களையும், நிழலினுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன; புஷ்பம் பழம் முதலியவற்றுடன் கூடிநின்று பூலோகத்துள்ளவர்களையும் திருப்திபெறச்செய்கின்றன; கின்னரர் உரகர் இராக்ஷஸர் தேவர் கந்தருவர் மானவர் ருஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிறார்கள். இகலோகத்திலும் பரலோகத்திலும் இவ்விருக்ஷங்கள் தம்மை வளர்த்தவனுக்குப் புத்திரர்களென்று சொல்லப்படுகின்றன. ஜலாசயங்களையுண்டுசெய்தவர்களும் விருக்ஷங்களைவைத்து வளர்ப்பித்தவர்களும், யாகங்களைச்செய்த வேதியர்களும், சத்தியவான்களும் ஒருகாலத்திலும் சுவர்க்கலோகத்தைவிட்டு நீங்கமாட்டார்கள்.

வியாஸமுநிவனே! கேட்பாயாக. சத்தியமே பரப்பிரமசொரூபம். சத்தியமே சிறந்த தவம். சத்தியமே சிறந்த யாகம். சத்தியமே சிறந்தது என்று சொல்லப்படும். சத்தியமே வேதங்களிற் சொல்லப்பட்டுள்ளது. சத்தியமே மேம்பட்ட பதவி. சத்தியமே தேவ ருஷி பிதுர்பூஜைகட்குரியதாயிருக்கின்றது. சத்தியமே வைதிகதருமமுஞ் சிறந்த பிரமயஜ்ஞமுமாம். சத்தியமேவிரதாசரணம். சத்தியஸ்வரூபமேஓங்காரம். சத்தியத்தினுலேயே காற்று வீசுதலும், சூரியன் தகித்தலும், அக்கினி யெரிதலுமென்றுணரவேண்டும். சத்தியத்திலேயே ஸ்வர்க்கம் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது. சத்தியவானுக்குச்சர்வவேதபாராயணமும் சகலதீர்த்தஸ்நானமுஞ்செய்த

பலன்கைகூடுவதுடன் தன்கோரிக்கைகளெல்லாவற்றையும் அடையக்கூடும். ஆயிரம் அசுவமேதங்களைச் செய்தபலனையும் சத்தியத்தின் பலனையும் நிறுத்துப்பார்த்தவிடத்தில், சத்தியத்தின் பலனே விசேஷமாயிருக்கும். சத்தியத்தினாலேயே தேவர்களும் முனிவர்களும் திருப்தியடைகிறார்கள். சத்தியமே கவனிக்கத்தக்கது. முனிவர் முதலானோர் சத்தியத்தினாலேயே சிறந்த சித்திகள்பெற்று அப்சரசுகளுடன்கூடி, திவ்விய விமானங்களிலேறி விரும்பிய விடங்களிற் சென்று திரும்புகிறார்கள். ஆழ்ந்தும் பரந்தும் விளங்குந் தீர்த்தமாகிய புனிதமுள்ள சத்தியத்தில் நல்ல மனத்துடன் ஸ்நானஞ்செய்யவேண்டும். அதுவே சுத்தமான ஸ்நானமாகும். தன்னிமித்தமாகவாவது, பிறனிமித்தமாகவாவது பொய்புகலாது சத்தியத்தையே சொல்பவர் எப்பொழுதும் சுவர்க்கபதவியிலேயேயிருப்பர். பிராமணரிடத்தில் வேதம் யாகம் மந்திரம் முதலியன எப்பொழுதும் இருக்கின்றன வெனினும், அவர்கள் அசத்தியர்களாயின் ஒரு பலனையும் அடையமாட்டார்கள். ஆதலால் மனப்பூர்த்தியாகச் சனங்கள் யாவரும் சத்தியத்தையே உறுதியாகக்கொள்ளவேண்டியது எனக்கூறிய ஸநத்குமார முனிவரைநோக்கி வியாஸமுனிவர் வினவலாயினர்.

பிரமபுத்திரராகிய ஸநத்குமாரமுனிவரே ! எல்லாவருணத்தவர்களுக்கும், விசேஷமாகப் பிராமணர்களுக்கும் நிதியாகவிளங்குந் தவத்தின் பிரபாவத்தை விரிவாகக் கூறியருளவேண்டும் என வியாஸமுனிவர் கேட்க, ஸநத்குமாரமுனிவர் சொல்லலாயினர். வியாஸமுனிவனே! எல்லாக் காமியங்களையுங் கொடுக்கவல்லதும் பிராமணர்களாலேயே பெருங்கஷ்டத்துடன் செய்யத்தக்கதுமாகிய தவத்தின் மகிமையைச் சொல்லுகிறேன். தவமே பரப்பிரமஸ்வரூபமென்று பெரியோர் கூறுவர். தவத்தினாலேயே பெரும்பலன்கள் கைகூடும். தவத்தில் விருப்புடையவர் தேவர்களுடன் கூடிச்சுகமநுபவிப்பர். தவத்தாலேயே சுவர்க்கம் கீர்த்தி மோக்ஷம் ஈசுவர தரிசனம் ஞானம் விஞ்ஞானம் சௌபாக்கியம் ரூபம் இஷ்டசித்திகள் முதலியன கைகூடும். தவஞ்செய்யாதவர்கள் ஒருகாலத்திலும் பிரமலோகத்தைக்காணமாட்டார்கள். எந்தக்கோரிக்கையோடு தவஞ்செய்தாலும் அந்தக்கோரிக்கையை யீடேற்றும். கள்குடித்தவனும் பரதாரகமனஞ் செய்தவனும் பிரமஹத்திசெய்தவனும் குருபத்தினியைக்கூடினவனும் முதலானவர்கள் தவத்தைச்செய்தே தமது பாவங்களை யொழித்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் என்ன விசேஷமென்று சொல்வது. சர்வேசுவரனாகிய சிவபெருமானும், விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவனும், அக்கினியும், இந்திரனும், பிறதேவர்களும் தவத்தின் சொரூபமாகவிளங்குகின்றார்கள். பிரமசரியத்தை மேற்கொண்ட எண்பத்தாறாயிரமுனிவர்களும் தவத்தையாச்சிரயித்தே சுவர்க்கலோகத்தில் தேவர்களுடன்கூடி ஆனந்தித்திருக்கிறார்கள். இந்திரன் எண்ணிறந்தகாலம் பெருந்தவஞ்செய்து திரிலோகாதிபதித்துவமடைந்து சத்துருக்களைச் செயித்தனன். சூரியசந்திரர் நக்ஷத்

திரங்கள் நவக்கிரகங்கள் சர்வலோகங்களுக்கும் இதமுண்டாக மகத்தான தவத்தைச்செய்து உலகங்களைப் பிரகாசிக்கச்செய்கின்றார்கள். தவத்தை மேற்கொள்ளாத பக்ஷத்தில் இகலோகத்திலும் பரலோகத்திலும் சிறிதுஞ் சுகமென்பது உண்டாகமாட்டாது. தவத்தையே கடைப்பிடித்துச் செய்தவர்கள் பலவிதமான பலன்களை யடைவார்கள். எல்லாவற்றையும் மனிதன் தவத்தினாலேயே யடையவேண்டும். வனத்திலுள்ள கந்தமூல பலங்களைப்புசித்துத் தபோவனத்திலே தவஞ்செய்து கொண்டிருப்பவன் மகாசுசியுடையவனாய் வேதத்தை முறைப்படி அத்தியயனஞ் செய்தவன் பெறும்பலனை யடைவான்.

ஸத்யவதி புதல்வனே! இவற்றையெல்லாங் கிரமமாக அறிந்து கொள்வதற்குப் புராணங்கள் விசேஷம். புராணசிரவணத்தினாலேயே பரத்தின்றன்மை யித்தகையதென ஒருவனுணரக்கூடும். புராண சிரவணமும் சத்தியவானாகித்தவத்தை மேற்கொண்டு வனத்திலேயேயிருக்கும் புண்ணிய சொரூபியான வேதியனாற் செய்யத்தகும். புராணங்களின் விஷயங்களையெல்லா முணர்ந்த குருவே சத்பாத்திரங்களிலெல்லாம் மேலான உத்தமபாத்திரன். பாத்திரனென்பதற்குப் பாவத்தால் நரகமடையவேண்டியவனிடம் சிறிது பொருளைப்பெற்றுக்கொண்டு அவனுடைய பாவத்தை விலக்கிப்புண்ணியத்தை யுண்டுசெய்ய வல்லவனென்று அருத்தம். தனம் தான்னியம் யௌவனம் தீரம் முதலிய வஸ்துக்களைச் சிரேஷ்டமான உத்தமபாத்திரவானுக்குத் தானஞ்செய்தவன் உத்க்ருஷ்டமான கதியையடைவான். பசுவும் இரதமும் எருமையும் யானையும் குதிரையும் சத்பாத்திரன் பெறும்படி தானஞ்செய்தவன் எல்லாப்பலன்களையுங் கொடுக்கத்தக்க அசுவமேதஞ் செய்தபலனை யடைவான். கருமையாயும் விசேஷவிளைவு கொடுப்பதாயுமுள்ள பூமியைத்தானஞ்செய்தவன் தன்வமிசத்தில் முன்சென்ற பத்துத் தலைமுறையையும் மேல்வரும் பத்துத் தலைமுறையையும் கடைத்தேறச்செய்து, தானுந்திவ்வியமான விமானத்திலேறிச்சிவலோகத்தை யடைவான். புராணசிரவணத்தால் திருப்தியடைவதுபோல, யாகத்தாலாவது புஷ்பபூசையாலாவது தேவர்கள் திருப்தியடையமாட்டார்கள். சிவாலயத்திலாவது விஷ்ணுவாலயத்திலாவது சூரியனெதிரிலாவது பிறதேவர் சந்நிதியிலாவது தர்மப்பிரதிபாதகமான புராணத்தைப் பிரசங்கித்தவன் இராசசூய அசுவமேதங்கள் செய்தபலனைப்பெறுவான். புராணேதிகாசங்களுடைய சிரவணத்தால் இஷ்டகாமியங்களையெல்லாம் பெற்று, சூரியமண்டலமார்க்கமாகப் பிரமலோகத்தையடைந்து, நூறுகற்பகாலம் வாழ்ந்திருந்து மீண்டும் பூலோகத்திற் பேரரசனாகச் சனிப்பான். தேவர் சந்நிதியில் ஜயஜயவென்று புகழ்ந்தோர் ஆயிரம் அசுவமேதபலனையடைவார்கள். ஆதலின் சர்வப்பிரயத்தினத்தோடும் சர்வேசுவரனான சிவபெருமானது சுபகரமான ஆலயத்தில் புராணேதிகாச சிரவணஞ்செய்த பக்ஷத்தில், சிவபெருமானுக்கும் பிறதேவர்களுக்கும் பெருங்களிப்புண்டா

கும் என்று ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவருக்குரைத்ததாக ஸூத முநிவர் நைமிசாரணியவாசிகளுக்குரைத்தனர்.

பானதானம் தவமுதலியவற்றின் சிறப்புரைத்தது முற்றிற்று.

இருபத்துமூன்றாவது

புராணசிரவண மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூத முநிவர், நைமிசாரணிய வாசிகளாகிய சௌநகாதி முநிவர்களே! பூர்வம் புராணசிரவண பலனெத்தகையது? எனக்குச் சொல்ல வேண்டுமென ஸநத் குமார முநிவர் தமது தந்தையாகிய பிரமதேவரைக்கேட்க, பிரமதேவர் அதனை ஸநத்குமார முநிவருக் குரைத்தனர். ஸநத்குமார முநிவர் பின்னொருகாலத்தில் அதனையே வியாஸபகவானுக்கு வெளியிட்டனர், அவ்வியாஸபகவான் எனக்குக் கூறியருளிய வகையே யான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாகவென்று சொல்லத் தொடங்கினர்.

பிரமதேவர் ஸநத்குமாரமுநிவரைநோக்கிச் சொல்லுகின்றார். புத்திரனே! யானொருகாலத்தில் இயமலோகத்திற்கு விநோதார்த்தமாகச் சென்றபொழுது இயமதருமன் என்னைப் பலவிதமாகப் பூசித்து அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளாலுபசரித்தனன். பின்னர் ஓர் திவ்வியமான பீடத்தில் இருவரு மிருந்து விலாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அற்புதமொன்றனைக் கண்டேன், அஃதென்னெனில் வைடூரிய மணிகளாற் செய்யப்பட்ட வோரமுடையதாய், பலவித ரத்னங்களாலும் முத்தங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் மணிமாலைகள் கட்டப்பட்டுக் கணகணவென்னு மொலியுடையதாகிய திவ்விய விமானத்திலேறி யோர் திவ்விய புருஷன் வர, இயமன் அப்புருஷனைக் கண்டு துண்ணென் றெழுந்து சுபகரமான வார்த்தைகளைச்சொல்லி, சுகமாவென்று விசாரித்து, தர்மமுணர்ந்தவனே! உனதுதரிசனத்தாற் சந்தோஷமடைந்தனன். உனக்கு இங்கிருக்க விருப்பமுள்ளவரையிலிருந்து பின்னர் நீ பிரமலோகத்திற்குச் செல்லலாம் எனக் கூறினன். அப்பொழுதே மற்றொருவன் அவ்வகைய திவ்வியவிமானமிவர்ந்து இயமதருமனிடம் வந்துசேர இயமதருமன் அவனையும் அன்புடன் பூசித்து முன்வந்தவனுக்குக் கூறியதுபோலவே உபசாரவார்த்தைகள் கூறி க்ஷேமம் விசாரித்தனன். இவ்வண்ண நிகழ்ந்ததுகண்டதிசயித்த யான் இயமனை நோக்கி, உன்னிடம் இப்பொழுது வந்த இருவரும் யாவர்? அவர்கள் செய்துள்ள நற்கருமங்கள்எவை? அவர்களை நீ கனப்படுத்திய காரணம்யாது? இவற்றையறியவிரும்புகின்றேன். தேவர்களாலேயெல்லாம் பூசிக்கப்படும் உன்னாற் பூசிக்கப்பட்டவர்கள் யாவர்? எனக்கேட்க, இயமதருமன் சொல்லலாயினன்.

பூலோகத்தில் வைதிசமென்னும் பட்டணத்தில் தராபாலனென்னும் அரசன் சிறந்துவிளங்கினன். அந்தச் சமயத்தில் பார்வதி தேவியார் தமக்கு அபசாரஞ்செய்த ஓர்தோழியைப் பன்னிரண்டுவருஷம் நரியாய்த் திரியும்படி சபித்து விதஸ்தா வேத்திரவதி யென்னும் நதிகளின் சங்கம க்ஷேத்திரத்தில் உன்சாப மொழிகவென்றும் சாபாநுக் கிரகமுஞ் செய்தனர். அதனால் அத்தோழி நரிவடி வேற்று உலகத்தில் பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரித்து ஒருகாலத்தில் விதஸ்தா வேத்திரவதி நதிகளின் சங்கமஸ்தானத்தை யடைந்து, அங்கு ஆகாரங்கிடைக்காது உயிர் நீங்கித் திவ்வியமான சரீரத்தை வகித்து விமானத்திலேறிச் சிவசந்நதியடைந்து பண்டையபணிவிடையி லிருந்தனள். அதனை யச்சமயத்தருகிருந்து கண்டதராபாலனென்னும் மன்னவன் ஆ! ஆ! அந்நரிவுயிர்விட்ட வுடனே திவ்விய விமானமேறிப் பரகதியடைந்ததன்றோ? இஃதுத்தம க்ஷேத்திரமென்று கருதி அங்கேயோர் சிவாலயங்கட்டுவித்து அதிற் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பரிவார தேவர்களையு நிறுத்தி, திவ்வியமான மண்டப கோபுர பிரகார முதலியனயாவு முடித்து யாவரும் பூசித்துப் பணியச்செய்தனன். இவ்வாறிருக்கையில், புராணேதிகாசங்களை நன்ருகக் கற்றுப்பிறருக் குரைத்து, பிரமஞானமுற்ற முநிசிரேஷ்டனை ஓர் வேதியன் வர, அவனைப் பூசித்து அவன்பாலிருந்த புஸ்தகத்தையும் கந்த புஷ்ப தூபதீபங்களால் முறைப்படி பூசித்து, வினயத்துடன் அப்பிராமணனை நோக்கி, யான் சிவாலயமொன்று இங்குக் கட்டுவித்தேன். அச்சிவ சந்நிதியிற் புராணசிரவணஞ் செய்யவேண்டு மென்றுகருதிய நாற்குலத்தவர்களுங் கேட்கும்படி புராணஞ் சொல்லவேண்டும். நீர் புராணஞ் சொல்லுகையில் வருஷமொன்றிற்கு நூறு பொன்*நிஷ்கம் ஜீவனத்திற்காகக்கொடுத்துவருகிறேன். உமக்கும் இதுநல்ல வுத்தியோகமாமென்று கூறி அவரைச் சம்மதிப்பித்துப் புராணஞ் சொல்லுவிக்க ஆரம்பிப்பித்து ஆறுமாதம் ஊராருடன் புராண சிரவணஞ்செய்து தன் ஆயுர் முடிந்ததால் அரசன் காலகதியாயினன். அப்பொழுதே சிவகடாக்ஷத்தால் திவ்வியமான விமானத்தைக் கொண்டுபோய் அழைத்துக்கொண்டுவந்தேன். இது இவனுடைய சுககர்மபலன். இது புண்ணியசரிதம். புராண சிரவணஞ்செய்வதால் சகல தேவர்களுக்குந் திருப்தியுண்டாவதுபோல, கந்தபுஷ்பாதி உபகரணங்களாற் செய்த பூஜையாலும், கோதானம் சொர்ணதானம் வெள்ளிதானம் வஸ்திரதானம் முதலியவற்றின் தானத்தாலுந் திருப்தியுண்டாகமாட்டாது. தர்மங்களைச்சொல்லும் புராணசிரவணத்தாலேயே தேவர்கள் பிரீதியடைவார்கள். புராணேதிகாச சிரவணத்தால் யானும் அதிக சந்தோஷமடைகிறேன். அதனையே யானும் புகழ்வேன். இவன் இவ்வாறு புராணசிரவணஞ்செய்த நரசிரேஷ்டன். சத்சாவகாசத்தால் தர்மபுத்தியுண்டாகி, தர்மங்களையெல்லாம் நன்குணரப் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால், சிரத்தை பக்திக

* நிஷ்கம் - ஓர் நாணயம். இதுசுமார் மூன்று உளுந்திடைடையுள்ளது.

ளுடன்கூடிப் புராணஞ்சொல்லச்செய்து சிரவணஞ்செய்து விசேஷமான பக்தியடைந்தனன். ஆதலின் மாநுடன் புராணஞ்சொல்லும் பெரியோரிடஞ்சென்று பிரதக்ஷிணநமஞ்காரஞ்செய்து உலோபாதிகளின்றி, சுவர்ணத்தைத் தக்ஷிணையாகக் கொடுத்தால், சாசுவதமாகப் பிரமபதவியையடைவான். இரண்டாவது விமானத்தில் வந்தவனும் இதேசத்கருமஞ்செய்தவனன்றிப் பிறிதொன்று செய்தவனல்லன். இவன் புராணிகனுக்கு விசேஷமான பூசைசெய்துள்ளானாதலின் அதனைக்கருதியே யான் இவனையும் பூசித்தேன். புராணஞ்சொல்பவனைப் பூசித்தலால் யானும் பிரம விஷ்ணு ருத்திரர்களும் பூசிக்கப்பட்டவர்களாவோம். சிரார்த்தாதிகாலங்களில் உத்தமமானபக்ஷிய போஜனங்களுடன் ஒருமுறை பூஜைசெய்கின்றவர்கள் என்னைப்பதினைந்து வருஷங்கள் பூசித்தபலனை யடைவார்கள். புராணப்பிரசங்கியை ஒருமுறை திருப்திசெய்தபக்ஷத்தில் அநேகவருஷங்கள் யான்திருப்தியடைவேன். யான்மட்டுமன்றி, இந்திராதி சகலதேவர்களும் பிரமவிஷ்ணுசிவாதிகளுந் திருப்தியடைவார்கள். புராணப்பிரசங்கி சந்தோஷிப்பானாயின் சமஸ்ததேவர்களும் திரிமூர்த்திகளும் சந்திர சூரியர்களும் கிரகங்களும் சந்தோஷிப்பார்கள். ஸ்நானம் பூஜை ஜபம் ஹோமம் சாஸ்திரம் சவுசம் அஹிம்ஸை விரதாசரணம் உபவாசம் தைரியம் மௌனவிரதம் இந்திரியநிக்கிரகம் பிரமஞானம் குரோதமின்மை தானம் க்ஷாந்தி தயை தவம் வாவி கூப தடாகங்களின் பிரதிஷ்டை சாந்திராயணம் யாகங்கள் தீர்த்தங்கள் ஆச்சிரமங்கள் முதலியனவெல்லாம் தர்ம சாதனத்திற்காகவே யிருக்கின்றனவென்று பெரியோர் கூறுவார். தர்மத்தாலேயே பொருளும் காமமும் மோக்ஷமும் உளவாகும். சதுர்வித புருஷார்த்தங்களாலேயே இகபரங்களில் நிரந்தரசுகமுண்டாகும். பாவத்தால் துக்கமுண்டாகுமாதலின் பாவத்தைச்செய்யாமல் தர்மத்தை யாச்சிரயித்துப்புண்ணிய கருமங்களையே செய்யவேண்டியது.

அவ்வகையதருமமும் ஸத்வமயம் ரஜோமயம் தமோமயமென முத்திறப்படும். ஸத்வமயமான தருமம் தவத்தால் பிரமஞானமடைந்த முநிவர் சித்தர்களிடத்தில் எப்பொழுதும் நித்தியமாகவிருக்கும். ரஜோமயமான தருமம் தேவர்களிடத்திலிருக்கும். தமோமயமான தருமம் தானவதைத்தியரிடமிருக்கும். பரிசுத்தமான இவர்களுடைய சத்கருமம் சொல்லப்பட்டது. இதுசத்தியம். அத்திவ்வியபுருஷர்களிருவரும் மகா புண்ணியர்கள். அவர்களுடைய சரிதத்தை நீ கேட்டனையாதலின் நீ புண்ணியபுருஷனென்பதிற் சந்தேகமில்லை. இயமன் கூறியவை யாவும் சத்தியமென்றுயாவரும் நம்பவேண்டும். புத்திரனே! எனக்கு ஐந்தாவது முகமொன்றிருந்தது. அம்முகத்திலிருந்தே புராணங்கள் பலவிதமாக வெளிப்பட்டு உலகத்திற்கு இதத்தைச்செய்கின்றன. புராணங்கள் எனக்குப்பிரீதிகரமானவை. வேதவேதாங்கங்களும் எனக்குப் புராணங்கள் போலப் பிரீதிகரமானவையன்று. இப்புராணேதிகாசங்களைச்சிரத்தைபக்திகளுடன்

புராணிகனுக்குச் சீவனோபாய விருத்தியையுண்டுசெய்து, எப்பொழுதுஞ் சிரவணஞ்செய்வோர் உத்தமமான கதியை யடைவார்கள். தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பூலோகத்தில் நன்றாக விளக்குவதற்காகவே புராணேதிகாசங்கள் எல்லாவற்றையுஞ் சொன்னேன். இவைவேதார்த்தத்தை விஸ்தீரணமாகச் சொல்லத்தக்கவை. சுலபபாண்டித்திய முடையவர்கள் வேதார்த்தத்தையுணரா ராகையின் அவர்களும் நன்குணருமாறு விஸ்தீரணமான புராணேதிகாசங்களைச் சொன்னேன். தர்மப்பிரதிபாதகமான இவ்வகைய புராணேதிகாசங்களைச் சிரவணஞ் செய்பவனும் பக்தியோடு பாராயணஞ்செய்பவனும் உத்கிருஷ்டமான ஸ்தானத்தை யடைவார்கள். புராணசிரவணகாலத்தில் தக்ஷிணைகொடுத்துக் கேட்கும்பக்ஷத்தில் பரமார்த்த ஸ்வரூபத்தில் ஐக்கியமாகின்றான். இஃதொரு ஆச்சரியமல்ல. பாத்திரனுக்குத்தானஞ் செய்தபக்ஷத்தில் அவனுக்குயாவுங் கைகூடும். தீர்த்தங்களில் கேதாரம், விரதங்களில் மஹாவிரதம்,பர்வதங்களில் மேரு, பக்ஷிகளிற் கருடன், நதிகளிற் கங்கை, தேவர்களிற் சர்வேசுவரனாகிய சிவபெருமான், பாத்திரங்களில் வாசகன் [புராணிகன்] சிரேஷ்டமாம். இவ்விஷயத்திற் சிறிதுஞ் சந்தேகமில்லை. புராணஞ் சொல்லுகையில் பக்தியோடு பூஜைசெய்தவன் சகலதேவர்களையும் பூஜை செய்தவனாவான். புராணபாராயணம்சிரவணஞ்செய்தவர்கள்பெறும்புண்ணியம் ஆச்சரியம். விசேஷமான தானங்கொடுத்துச் சிரவணஞ்செய்தவனுடைய பலன் இன்னும் விசேஷமானது. நாடோறும் பக்திசிரத்தையோடுசிவசந்நிதானத்திலிருந்து சிரவணஞ் செய்தவன் சிவசாயுச்சியத்தை யடைவதிற் சிறிதும் ஐயமில்லை இது சத்தியம் என்று கூறியருளினர்.

புராண சிரவண மகிமை யுரைத்தது

முற்றிற்று.

இருபத்துநான்காவது

சுவர்ணதான பூதானங்களின் மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார். வியாஸமுநிவனே! உலகினுள்ள தானங்களிற் சில சிரேஷ்டமானவையும், கோரமானவையுமாக வுள்ளன. இவற்றையறிந்து தானவான்கள் சத்பாத்திரத்திற்றானஞ்செய்ய வேண்டியது. சுவர்ணதானம் கோதானம்பூதானம் முதலியவற்றை வாங்குவோர் தானஞ்செய்வோரைப் பவித்திரராக்குவதுடன் தாமும்பவித்திரராவர். இச்சிரேஷ்டமான தானங்களைச் செய்தோர் சகலபாவங்களின்றும் நீங்குவர். கோதானம் பூதானம் வித்தியாதானம் இம்மூன்றும் சமானமான பலனைக் கொடுக்கவல்லவை. இவற்றில் கோதானம் பூதானம் என்பவற்றைக் காட்டிலும் வித்தியாதானம் சிறிது சிறந்ததேயாம். எருது பசு குடை பாதுகை பானம் அன்னம் இவற்றைத்தக்கவர்களாகிய வேதிய

ருக்கு நல்ல மனத்துடன் தானஞ்செய்தபக்ஷத்தில், சிரத்தையுடன் பெருந் தக்ஷிணை வைத்துச் செய்தயாகமாம். அசூயையின்றித்தானஞ்செய்வதே எல்லாயாகங்களினுஞ் சிறந்தது. சத்பாத்திரமாயுள்ளவர்களது பிராமணத் தன்மையையும் நீக்கிவிடத்தக்க கோரமான தானங்களாவன—இறந்தவனுடைய படுக்கை மான்றோல் சண்டாளன்கைப்பொருள் மிலேச்சன்கைப் பொருள் உபயகோமுகி துலாவேறியபொருள் குருக்ஷேத்திரத்தில் தானம் வாங்கல் எள் பதிதன்கைப்பொருள் விசேஷதக்ஷிணைக்கு விரும்பி ஒருவன் பாவத்தைவாங்கல் என்று சொல்லப்பட்ட இவைபத்தும் துர்த்தானங்களாமாதலின், இவற்றுள் ஒன்றினைவாங்கிய வேதியன் ஞானஹீனனாகிக் கோரமான நரகத்தையடைவான். இவற்றைத்தானஞ் செய்தவன் களிமண்ணிற் கல்லைவைத்து அதின்மீது காலூன்றி அதனைக்கடந்து செல்வான்போல, தன் பாவ கர்மத்தில் அவ்வேதியனை வைத்து, தான் உத்தம பதவியையடைவான். தானங் கொடுப்பவனும் வாங்குபவனும் அடையும் பலனைச்சொன்னேன். இன்னும் மகாதானங்களையும் துர்த்தானங்களையும் வாங்குவோன் பலனை விசதமாகச் சொல்லுகின்றேன்.

வியாஸமுநிவனே! புத்திமானாகிய கொடையாளி எப்பொழுதும் சத்பாத்திரமான வேதியருக்குத் தானஞ்செய்துகொண்டேயிருக்கின்றான். ஆயினும் வாங்குவோன் பொன் வெண்மையாகிய எள் யானை கன்னிகை தாசி வீடு இரதம் அசுவம் பூமி காராம்பசு என்னும் பத்துச் சிறந்ததானங்களையும் வாங்குவானாயின் தானஞ்செய்தவனைப் பரிசுத்தனாக்குவதுடன் தானும் ஞானவிர்த்தியடைந்து, புனிதனாவான். சுவர்ணம் முதன்மையானது. அதுவே சிறந்த தக்ஷிணை; அதுவே உத்க்ருஷ்டமானது; மங்களகரமானது. அதனைத் தானஞ்செய்தவன் தன்முன்னவர் பதின்மரும் பின்னவர் பதின்மரும் தானொருவனுமாகிய இருபத்தொருவரையும் பாவரகிதராக்குவான். சுவர்ணத்தைச் சுத்தமான மனத்துடன் தானஞ்செய்தவன் சகல தேவர்களாலும் சகல கோரிக்கைகளும் ஈடேறப்பெறுவான். சுவர்ணதானத்தால் எல்லாத்தேவர்களையுந் தானஞ்செய்த பலன் கிடைக்கும். அக்கினியாதி சகல தேவர்களும் சுவர்ணசொரூபிகளாயிருக்கிறார்கள். புனிதமான சுவர்ணமானது புனிதமற்ற பிறபொருள்களுடன் கூடியபொழுது அவற்றையும் புனிதமாக்கும். பிதுரர்க்கும் தேவர்க்கும் மாநுடர்க்கும் சுவர்ணமே யெப்பொழுதும் இஷ்டமானது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பரிசுத்தமாக்குவது ஜலமெனினும் அந்த ஜலத்தையும் கனகமே பரிசுத்தமாக்கும். நாடோறும் விடியற்காலத்தில் அக்கினிகாரியத்தை முடித்துச் சுவர்ணதானஞ்செய்தவர்கள் தாம் விரும்பிய பொருள்களையெல்லாம் அடைவார்கள். சுவர்ணதானஞ்செய்தவன் சகல தானங்களையுஞ் செய்த பலனை இந்நிலவுலகத்திலேயே யடைவான். அப்சரசு கந்தர்வாதிகளால் நிருத்தகீதஞ் செய்யப்பட்டு ஹம்ஸங்களாற் சுமக்கப்பட்ட விரும்பிய இடத்திற்குச் செல்லத்தக்க பிரகாசம்பொருந்திய பொன் விமா

னத்திலேறிச் சுவர்க்கலோகத்தில் தான் விரும்பிய இடத்தில் இஷ்டகாமியங்களை யநுபவிப்பான். ஆதலின் சக்திக்கேற்ப அதிதிகளுக்குச் சுவர்ண தானஞ் செய்யவேண்டியது. இதனைக்காட்டிலும் பாவத்தை யொழிக்கத் தக்க வேறு தானங் கிடையாது. சுவர்ணதானஞ் செய்தவன் புனிதமான மனத்துடன் எண்ணிறந்த வருஷங்கள் தேவபோகங்களை நுகர்வான் என்று கூறிய ஸநத்குமாரமுநிவரை நோக்கி வியாஸமுநிவர் கூறுகின்றார்.

ஸநத்குமாரமுநிவரே! மங்களகரமான சிரேஷ்ட தானங்களெல்லாவற்றையுந் தேவரீர் திருவாய்மலர்ந்தருளக்கேட்டேன். இன்னும் பூதானத்தின் பிரபாவத்தைக் கேட்க விரும்பினேனாதலின் அதனையும் விவரமாகச் சொல்லியருளவேண்டும். தாங்கள் முன்னர் சங்கிரகமாகக் கூறியிருப்பினும் அதனை விரித்துரைத்தருள வேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர். சிரேஷ்டமான தானபாத்திரனுக்குக்கொடுத்த தானங்கள் சிறந்தபலனை யளிக்குமெனக் கூறினேனன்றோ. அவையெல்லாவற்றிலும் பூதானம் மிகவுஞ்சிரேஷ்டமானது. அப்பூதானமே சிறந்ததென்பதைப்பற்றிய ஓர் பூர்வசரித்திரஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக: பூர்வம் சித்திரரதன் என்னும் பெயர்பூண்ட மன்னனொருவனிருந்தனன். அவன் ஸப்ததீவுகளுக்கும் பிரபுவாகிச் சகல சுகங்களையுமநுபவித்துக்கொண்டிருந்து, ஒருகாலத்தில் திவ்வியமான இரதத்திலேறிச் சுவர்க்கலோகத்தையடைந்து தேவசைனியங்களோடுகூடிய இந்திரனை வென்று தன் ஆக்கினையை அங்கேயும் வியாபிக்கச்செய்து திரிலோகங்களையுங் காத்து, தனக்குத்தானே இப்பெருஞ் செல்வமெவ்வாறுண்டாயதென்று யோசித்து ஆச்சரியமுற்று, ஆறுயிரம் புதல்வரைப்பெற்று, அக்ஷயமான பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு, பிரஜைகளுக்கு உதவியாகவிருந்து சிறந்தவாகனங்களைப்பெற்று அகாலமரணமுதலியனவின்றி நீதியோடுஅரசு செய்துகொண்டு இருந்தனன். அவனுக்கு அதிரூபசௌபாக்கியமுடைய மனைவியிருந்தனள். அவ்வாறிருக்கையில், அம்மன்னன் இவ்வகைய பெருஞ்செல்வம் மறுஜனனத்திலும் அடையத்தக்க பிரயத்தனம் யாதெனக் கருதி, தர்மங்களையெல்லாம் நன்குணர்ந்த வசிஷ்டமுநிவனை யடைந்து, நமஸ்கரித்து முநிசிரேஷ்டரே! தமது அநுக்கிரகத்தால் அளவில்லாத செல்வத்தை யநுபவிப்பதுடன், திவ்வியமான மனைவியும், தானசக்தியும், ஐசுவரியமும், அநேகஸ்திரீகளும், அன்னபானாதிகளை யனைவர்க்குங் கொடுக்கும் சாமர்த்தியமும், ஆயிரம்யானையின் வலிமையும், சத்துருநாசமும், நற்புத்திரரும், உத்தமசேவகரும், அநுராகமுதலிய தோஷமற்ற குடிகளும், தருமமுறைப்படி அரசாளுஞ்சக்தியும்அடைந்திருக்கின்றேன். யான்விரும்பியயாவுந் தடையின்றி அப்பொழுதே கைகூடுகின்றன. இவையாவும் ஜன்மாந்தரத்திற் செய்ததர்மாசரணத்தாலுண்டானவை யென்று தெரிந்து கொண்டேனாயினும் யான்செய்த புண்ணியகருமம் யாதென விசதமாகத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனக்கேட்க, வசிஷ்டமுநிவர்

சிறிதுயோசித்துக் கூறலாயினர்—அரசனே! நீ பூர்வஜன்மத்தில் தாழ்ந்த குலத்திற்றோன்றி அவந்தி பட்டணத்திலிருந்தனை. அந்நகரத்துத் தர்மபால னென்னும் மன்னன் தர்மவானாயினும், அவனையடையக் கூடாமல் உன் குலத்தியற்கையின்படி நடந்துவந்தனை. நீயங்கிருக்கையில் அந்நகரவருஷ காலம் மழையின்றி க்ஷாமமுண்டாயிற்று. அதனால் உனக்கு ஆகாரங்கிடையாமல் வனத்தையடைந்தனை. கந்தமூல பலங்களைப் புசித்துக்கொண்டிருக்கும் பெரியோர் அநேகர் அவ்வனத்திலிருந்தனர். அநேகர் அங்கடைந்தமையாலும் அனாவிருஷ்டியாலும் அவ்விடத்திலும் உணவின்றிக்கஷ்டமநுபவிக்க நேர்ந்தது. அப்பொழுது உன்மனைவியுடன் விருக்ஷங்களைக் கொளுத்தி அந்தக்கரியை விற்றுக் காலங்கழித்தனை. ஒருகாலத்தில் ஓர் சுமைவிறகினைச் சிரமேற்றாங்கி அந்நகரத்துவீதியில் விலைகூறித்திரிந்தனை. அச்சுமையையெடுத்துத் தெருக்களெல்லாந் திரிந்தும் அதுவிலை படாதாயிற்று. அந்தத்தினமோ மாசிமாசபூரணையும் இராகுக்கிரஸ்த சந்திரக் கிரகணமுமாயிருந்தது. அதனால் அந்நகரத்திலிருந்த வேதியர் சிலர் ஓர் வைசியன் வீட்டில் ஓமஞ்செய்து கொண்டிருக்கக்கண்டு விறகுதலையனாய நீ உன்மனைவியுடன் அங்கடைந்து வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்து, விலைபடாதவிறகினை அவ்வோமகுண்டலத்திலிட்டு அவ்வந்தணருக்குச் சீதநிவாரணஞ்செய்து அங்கிருக்கையில், தனவானான அவ்வைசியன் நூறு பலங்களின் எடையுள்ள பொன்னைப் பூதானப் பிரதிநிதியாக அவ்வந்தணருக்குத்தானங் கொடுக்கக்கண்ட நீ, ஐயோ இதுநல்ல வுத்தமபுண்ணிய காலம்; இக்காலத்தில் வேதியருக்கு இப்படித்தானங்கொடுக்க நம்மிடத் தொன்றுமில்லையே என்று மனம்வருந்தி, நான் ஏழையாதலின் மானஸீகமாகத்தானஞ்செய்தேனென்று உனக்குள் நீயே பச்சாத்தாபத்துடன் கருதிக்கொண்டமையின் இவ்வகைய சிறந்தபோகங்களெல்லாம் உண்டாயின. ஆதலின் இப்பொழுது நீ பூதானஞ்செய்துகொண்டிருக்கக்கடவை. அவ்வாறு பூதானஞ்செய்வையாயின் தேவர்களுக்குந் துர்லபமான பதவியையடைவாய். உன் பூர்வஜன்மவிர்த்தாந்த முழுவதையும் யான்சொல்லக்கேட்டனையன்றோ! அரசசிரேஷ்டனே! எப்பொழுதும் சுவர்க்கலோகத்தினின்று உன்னையகற்றாத பிருதிவிதானத்தையேசெய்து கொண்டிருப்பாயாக. பூதானஞ் செய்வதைக்கண்டு, தாமுஞ்செய்ய வேண்டுமென்று உள்ளத்திற் கொண்டவர்களே சிறந்த பதவியையடைவார்களாயின் பூதானஞ் செய்தவர்கள் பெறும்பேற்றினைச் சொல்லி முடியுமோ?

பூர்வம் தேவமாநுடராக்ஷஸர்களையெல்லாம் அடக்கி உலகமுழுவதும் ஏகசக்ராதிபதியாய்ப் பிருதுசக்ரவர்த்தி அரசுசெய்து, தான்கொடுத்த அன்னபானாதிகளைப்புசித்த உரகர் சித்தர் முனிவர் முதலியோராற் புகழப் பெற்றனன். ஸப்ததீவுகளிலும் தன்செங்கோலினைச்செலுத்தி அநீதியென்பதைக்கடிந்துநீதியுடன் அரசுசெலுத்தலால், பரிசுத்தமற்றவர்கள்-நோயாளிகள்-திருடர்கள்-வஞ்சகர்கள்-அங்கஹீனர்கள் கிடையார். அவ்விசேஷ

அற்புதங்களைக்கண்ட அவ்வரசன்மனைவி அதிசயித்து எமக்கு இப்பெருஞ் சம்பத்துமுதலியன யாம் பூர்வத்திற்செய்த எவ்வகைப் புண்ணியத்தாற் கிடைத்தனவென்று யோசித்து, தன்கணவனைப்பணிந்து, தன்விருப்பத்தையுணர்த்த, அப்பிருதுசக்கிரவர்த்தியும் உண்மையுணராது ஆச்சரியமடைந்து, சர்வஜ்ஞர்களான வேதியரையடைந்து சாஷ்டாங்கமாகப்பணிந்து, வேதியசிரேஷ்டர்களே! தாங்கள் என்விஷயத்தில் தயையுடையவர்களாயிருப்பீர்களாயின், தமது விசேஷ ஞானத்தால் யான் கேட்பதற்குப் பதில்சொல்லவேண்டும். யான் தங்களுக்கு வேண்டுவனவற்றைக் குறைவறக்கொடுப்பவ னன்றோ? தாங்கள் யாவர்க்கும்உபகாரஞ்செய்யுந்தயாளவான்களன்றோ? எனக் கேட்க, முனிவர்கள் மொழியலாயினர். அரசனே! உன் மனத்திலுள்ள சந்தேகம் யாது? நீ சந்தேகிக்கத்தக்கது யாது விஷயம்? அதனை யெங்களுக்குணர்த்துவையாயின் யாம் அதின் விபரத்தை வெளியிடுவோம். நீ ஸப்ததீவுகளையும் முறைப்படி அரசுபுரிதலின் உன்னிடத்தே பெருங் களிப்புற்றிருக்கிறோம். தக்க நியமமுடைய முனிவர்களிடத்திலேயே தர்மங்களை யறியவேண்டும். உன் கருத்தை யுரைக்கவெனக் கேட்க, ஆதிராஜனான பிருதுசக்கிரவர்த்தி வேதியரைப்பணிந்து, யான் பூர்வத்திற்செய்த சுகிர்தத்தையும் என் பிறப்பையும் அதிசௌந்தரியமுடைய என் மனைவி செய்துள்ள சத்கருமங்களையும், எங்களிருவருக்கும் நீங்காத பெரு விருப்புற்றதற்குக் காரணமும், தருமாதி புருஷார்த்தங்கள் உண்டாயிருக்கும்வரலாறும், மன்னர்கள் யாவரும் எனக்குக் கப்பங்கட்ட நேர்ந்ததும், அளவிடப்படாத என் பொக்கிஷம் விருத்தியானதின் விபரமும், தோள்வலிமையிற் சிறந்துள்ள ஹேதுவும், நோயற்ற வாழ்வுற்ற வரலாறும், அறிய விரும்புகின்றேனாதலின் இவற்றை விவரமாகத் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்க, பிராமணோத்தமர்களாகிய ருஷிகள் யாவரும் ஒன்றுகூடி மரீசிமுனிவரை விடைவிடுக்குமாறு பிரேரேபித்தார்கள். மரீசி மகருஷி சிறிதுநேரம் யோகநிஷ்டையிலிருந்து விருத்தாந்தங்களெல்லாவற்றையுமுணர்ந்துகொண்டு, கைகட்டி யெதிர்நிற்கும் அம்மன்னர் பெருமானை நோக்கிக் கூறலாயினர்.

சக்கிரவர்த்தியே! நீ சமஸ்தமான போகங்களையும், இப்பொழுது அநுபவிப்பதற்கெல்லாங் காரணம் பூர்வஜன்மத்தில் உன் மனைவியுடன் கூடிச் செய்த சத்கருமத்தின் பலனேயன்றி வேறன்று. அதனையும் விவரமாகச் சொல்லுகின்றேன். சாவதானமாகக் கேட்பாயாக—நீ ஜன்மாந்தரத்தில் ஜீவஹிம்சை செய்வதிலேயே விருப்பமுடைய ஓர் சூத்திரன். உன் மனைவியோ மகா பதிவிரதையாதலின் உன் விருப்பின்படி நடந்து உனக்குப் பணிவிடைசெய்வதிலேயே மனமுடையவள். நீ மிகுதியும் ஏழ்மைத்தன்மையால் உன் மனைவியை நீங்கி ஒருவனிடம் ஊழியத்திற்கமர்ந்தனை. நீயுன் மனைவியைப் பிரிந்தபோதிலும் அவள் உன்னைப்பிரியாது அப்போதைக்கப்போது உன்னைக்கண்டு உன் பணிசெய்வதையே உறுதியாகக்கொ

ண்டிருந்தனள். இவ்வாறிருக்கையில் அயோத்தியில் மகா தனிகனுயிருந்த மகாராஜாவானவன் பக்தி சிரத்தைகளுடன் ஆங்கோர் விஷ்ணு ஆலயம் நிர்மாணஞ்செய்து அங்கே விஷ்ணுமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்கையில், பொன்மயமான பூதானத்தைச் சத்பிராமணருக்குச்செய்து அந்தக் கோயில் முழுதும் பொன்மயமாக்கினன். அந்தத் தேவாலயத்தில் நடந்தவற்றை நீயும் உன் மனைவியும் அதிக ஆவலோடு கண்டு அடிக்கடி நிலத்தை விளக்கியும் மெழுகியுஞ் சுத்தஞ்செய்துகொண்டிருந்தீர்கள். ஆலயத்தில் அலகிடுதல் முதலிய தொண்டு செய்துவந்ததால் அப்பொழுதே உங்களுக்கிருந்த பாவங்களெல்லாம் நசித்தன. அன்றியும் யொன்றைச்செய்த பசுவினைத் தானஞ்செய்த பலனை யடைந்தாய். அதனால் இந்தச் சமஸ்தமான சம்பத்தும் இப்பூமியும் உனக்குச் சொந்தமாயின. ஜன்மாந்தரத்திற் சூத்திரனுயிருந்து நீ செய்த சுகிர்தத்தால், இந்தச் சனனத்திற் பேரரசனுயினை. இனி யிச்சனனத்திற் சிறந்தபூதானத்தைச் செய்க. வேறென்றுஞ்சொல்ல வேண்டியதில்லை. எவன் சுவர்ணவிகாரமான பூதானத்தைச் சத்பாத்திரனுக்குக் கொடுப்பனே அவன் தன் பிதுரர்களையும் தன் வமிசத்தி லினிப் பிறப்பவர்களையுந் தன்னேடுகொண்டு சூரியசந்திரருள்ளவரையில், சுவர்க்கலோகத்திலேயே வாழ்ந்திருப்பான். தருமார்த்த காம மோக்ஷங்களும் பூதானத்தினுலேயே கைகூடும். உன் ஜன்மாந்தரத்தை நன்குணர்த்தினேனன்றே? சமஸ்தமான காலத்திலும் பூதானஞ்செய்வாயாகில் உன் கோரிக்கைகளையெல்லாம் ஈடேறப்பெறுவாய். துவிஜர்களேயன்றிச் சூத்திரராயினும் பூதானஞ்செய்யும்பக்ஷத்தில் சமஸ்த பாவங்களினின்றும் நீங்குவர். பூதானஞ்செய்யவேண்டுமென்று மனத்திற் கருதியவனும் சுவர்க்கபதவியை யடைவான். இந்தச் சரித்திரத்தைக் கேட்டவர்களும் பக்தியோடு படித்தவர்களும் எல்லாப்பாவங்களையுமொழிந்து சுவர்க்கபதவியை யடைவார்களென்று பிரமபுத்திரராகிய மரீசிமுனிவர் கூறியருளினர்.

சுவர்ணதான பூதானங்களின் மகிமையுரைத்தது

முற்றிற்று.

இருபத்தைந்தாவது
பூதானவிதியுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஸ்வாமீ! மகருஷியே! மகாபிரசித்தமுற்ற வேனபுத்திரனுகிய பிருதுசக்கிரவர்த்தி பூதானத்தை எவ்வகைவிதியுடன் எந்தக்காலத்தில் தானஞ்செய்தனன்? அதனையுணர அவாவினேன் எனக்கூற, ஸநத்குமாரமுனிவர் சொல்லலாயினர். வியாஸமுனிவனே! சக்திக்குவஞ்சனையின்றித் தானஞ்செய்வோரில் உத்தமர் மத்திமர் அதமரென மூன்றுவகையினருளர். அவர்கள் தம்வகைக்கேற்ற பலன்களை யநுபவிப்பார்கள். சுவர்ணப்பொடிகளையாவது, தாமிரப்பொடியையாவது, பிருதிவியையாவது தனதுகையால் மூன்றுகையாவது, இரு

கையாவது ஒருகையாவது குப்பலாகவைத்து, அதன்மேல் தக்ஷிணையாகச் சுவர்ண நிஷ்கங்கள் இலக்ஷமாவது ஆயிரமாவது நூறுவது ஐம்பதாவது வைத்து, அதன்பேரில் நவரத்தினங்களையாவது பொற்பொடியையாவது வைத்து அக்குவியலை மேருமலையாகக்கொண்டு, அதன்கிழக்கில் மந்தரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் நீலமும், வடக்கில் விபுலமும், அம்மேருவினுச்சியில் வைடூரியமயமான வீடும், அவ்வீட்டின் கிழக்கில் நானுவிதரத்தினங்களும், தெற்கில் பவளமும், மேற்கில் நீலமும், வடக்கில் பதுமராகமும் வீட்டின்மேல் நானுவிதமான ரத்தினங்களும் (அல்லது சுகந்தமுடைய சுண்ணங்களும்) தாம்பூலமும்வைத்து, இவற்றைப் பூமண்டலமாகக்கொண்டு இதனைச்சுற்றிலும் இலவணசமுத்திர மிருப்பதாக உப்பினைப்பெய்ய ஜம்புத்தீபமாம். அதனைச்சுற்றிச் சிறிதுதூரத்திற் கரும்புரசத்தைப்பெய்தால் அதுபிலக்ஷதீபமாம். அதன்வெளியே நெய்யைச்சொரிய,சான்மலித்தீபமாம்.அதன்புறம்பேதயிரையொழுக்கக்குசைத்தீபமாம். அதன்சுற்றிலும் பாலைச்சொரியக் கிரவுஞ்சதீபமாம். அதன்புறத்தில் மதுவைச்சொரியச் சாகத்தீபமாம். அதன்வெளியே நல்லஜலத்தைவார்க்கப் புஷ்கரதீபமாம். இவ்வகைய ஸப்ததீவுகளோடு கூடியதாகச்செய்து அந்தப் பூமியை வைதிகனுகவுள்ள தானபாத்திரனுக்குக் கொடுக்கவேண்டும். வியாஸமுநிவனே! உத்தமமான பிருதிவிதானத்தின் முறைமையையுனக்குச் சுருக்கிச்சொன்னேன். இதனைவிரித்துச் சொல்லவேண்டுமானுல் அநேக ஆயிரவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லிமுடியாது. இந்தத்தானஞ்செய்த பின்னர் தாதாவின் கையளவாக ஓர்குண்ட முண்டாக்கி அதில் அக்கினியை வளர்த்தி, யவை கடுகு எள் இவற்றைக்கலந்து, திக்குப்பாலகர்களுக்கும், நவக்கிரகங்களுக்கும் அவரவர்கட்குரிய மந்திரங்களைக்கூறி மும்முறையும், விஷ்ணுப்பிரீதியாக மும்முறையும், வருணனுக்கும் வசுவுக்கும் மும்முறையும் ஹோமஞ்செய்யவேண்டும். அதன்பின்னர் பிருதிவியைக்குறித்து ஒருமுறை ஹோமஞ்செய்யவேண்டும். அதன்பிறகு சிவபெருமானைக்குறித்து அவரே உலகுக்கு ஆதாரவாயிருப்பவரென்றும், யாவராலுந் துதிக்கத்தக்கவரென்றும, தேவதேவரென்றும், பயபக்தியுடன் உன்னையான் பூஜிக்கின்றேன். நீயே உலகினைப்படைத்துக்காத்துத் தானஞ்செய்து அதனைபெற்றுக்கொண்டவன் என்று கூறித்தானமேற்ற பிராமணனையாராதித்து, வஸ்திராபரணங்களையும் விசேஷமாகக்கொடுத்து என் கோரிக்கைகளெல்லாம் ஈடேறுமாக என்று நமஸ்கரிக்கவேண்டியது. சிரேஷ்டமான தானகாலத்தில் சத்பாத்திரனுக்குஇவ்வாறு தானஞ்செய்த பக்ஷத்தில், தன்முன்னோர் நூற்றுவரையும் தன் பின்பிறப்போர் நூற்றுவரையும் சுவர்க்கமேற்றி, தானுஞ் சுவர்க்கபதவியை யடைவான். இந்த வகையாகச்செய்யப்படும் பூதானத்தால் அடையக்கூடாத இஷ்டசித்தி கிடையவே கிடையாது என்று ஸநத்குமாரமுநிவர் கூறியருளினர்.

பூதானவிதியுரைத்தது
முற்றிற்று.

இருபத்தாறுவது

திலஹஸ்திதானமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரைநோக்கி ஸ்வாமீ! சிறந்ததானமாவது தவமாவது செய்யச்சக்தியில்லாதவனுக்குப் பிரமஹத்தியாதி தோஷங்கள் எப்படி நசிக்கும்? இவ்விஷயத்தைத் தேவரீர் பிரமதேவரிடங் கேட்டுணர்ந்தபடி அடியேனுக்குவிவரமாகச்சொல்லியருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார். ஒருவனுடைய தேகமானது பரிசுத்தமாகும் பக்ஷத்தில் அவனுடைய எல்லாப்பாவங்களும் சிறிது சிறிதாகக்கழிந்து போகுமென்று முன்னரே கூறியிருக்கிறேனன்றோ? உடலினடுவிலிருக்கும் பிராணனே ஜீவனெனப்படும். உடலின் வெளியிலுள்ள தனமும் பிராணனேயாம். ஜீவனைக்கஷ்டப்படுத்தித் தவஞ்செய்தாவது பொருளை விரயப்படுத்தித் தானஞ்செய்தாவது முக்தியடையவேண்டும். ருஷிசிரேஷ்டனாகிய வியாஸமுநிவனே! இன்னும் நீயறிய வேண்டிய விஷயமேதேனுமிருப்பின் அதனையுங்கேட்க என, வியாஸபகவான்— பாவபூதமாகிய இக்கலியுகத்தில் மாநுடர் ஆசாரஹீனர்களாகி, பாவங்களைச் செய்வதிலேயே விருப்பமுடையவர்களாயும் ஞானமற்றவர்களாயுமிருந்து பலவிதபாவங்களைச்செய்து ரௌரவாதிபேதங்களாகிய நரகவிசேஷங்களில் விழுந்து கஷ்டங்களை யநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வகைய நரகவேதனையை யடையாது தப்பித்துக்கொள்ளத்தக்க தானம் யாது? எந்தத் தானத்தைச் செய்தால் நரகத்தைக்கண்ணிலுங் காணாமலிருக்கலாம். இவற்றைச் சொல்லியருளவேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார்.

நல்ல விரதத்தையுடையவனே! கேள். கார்த்திகைமாச பூரணையிலாவது, நரகசதுர்த்தசியிலாவது, எள்ளினைக்கொண்டு யானைவடிவாகச் செய்து கந்தபுஷ்ப அக்ஷதைகளாற் பூசித்து நைவேத்தியஞ்செய்து விஷ்ணுபூஜைசெய்து, கன்றையுடைய பசுவினை யொருபுறங்கட்டி, தீபம்வைத்து, எள்ளாற்செய்த யானையின் கண்களில் முத்துக்களும், பற்களில் வெள்ளியும், சுற்றிலும் பவளமும், நெற்றியில் திலகமாகப் பொன்னும், கர்ணங்களிற் சாமரையும் வெண்கலமணி இரண்டும், உடலிற் பட்டுவஸ்திரமும், கும்பஸ்தானத்தில் முத்தங்களும், சிரசிற் சிந்தூரமும் வைத்து, முத்துமாலை பாதுகை குடை கிண்ணம் ஆசனம் கண்ணாடி முதலியவற்றைச் சக்திக்கேற்பப் பொன்னாற் செய்துவைத்து அந்த யானையின்முன்னர் குங்குமத்தால் அஷ்டதள பதுமம் வரைந்து, அதன் இடையே சர்வலோககாரணபூதரான சிவபெருமானையும் விஷ்ணுவையும் ஆவாஹனஞ் செய்து, அப்பதுமத்தின் கிழக்கில் தேவர்தலைவனான இந்திரனையும், அதன் பக்கலிலுள்ள தளத்தில் அக்கினியையும், தென்பக்கலில் பிதுர் தேவப்பிரபுவும்

தர்மவான்களுக்கு இன்பங்கொடுப்பவனுமாகிய இயமனையும், அதற்கடுத்த தளத்தில் இராக்ஷஸப் பிரபுவாகி நரகலோகத்திற்குச் சமீபமாகவுள்ள லோகத்தில் வசிக்கும் நிருதியையும், அதற்குப்பக்கலில் ஜலத்திற்கு நாயகனும் சகல ஜனங்களின் சவுக்கியத்தை யுண்டுசெய்பவனுமாகிய வருணனையும், அதன்பக்கலில் பொன் விமானத்திற் சஞ்சரிப்பவனும் எல்லோருக்கும் ஆயுர்ப்பூதமாயிருப்பவனுமாகிய வாயுவையும், அதன்பக்கலில் தனுதிபதியான குபேரனையும், அதன்பக்கலில் பசுக்களாகிய பிராணிகட்கெல்லாம் பதியாகவுள்ள ஈசானனையும் தனித்தனி நமஸ்காரமென்று துதித்து முறையே ஆவாஹனஞ்செய்து, துர்க்கமான மார்க்கத்தினின்று இரக்ஷிக்கத்தக்கவனும், திரிமூர்த்திஸ்வரூபமும் விசுவரூபமும் சுகத்தைக்கொடுப்பவனுமாகிய சிவபெருமானுக்கு நமஸ்காரமென்று துதித்து, பரிவார தேவர்களைப் பூசித்து, உலக பாலன கர்த்தாவாகிய திருமாலை மீண்டும் பூசித்து அஞ்சலியஸ்தனுகி, இந்த யானை என்னை இயம துர்க்கவழியிற் சுகமாகச்செலுத்தி, எனக்கு மங்களகரமான பூரணகும்பமும் காமதேனுவும் கற்பகவிருக்ஷமும் சிந்தாமணியும், ஐராவதமும் உண்டாக்குமாக என்று சொல்லிக்கொண்டு சக்திக்கேற்ப, சத்பாத்திரனுன பிராமணனுக்குப் பொன்னுபரணங்களை யளித்து, அத் திலஹஸ்தியையும் தானஞ்செய்து அன்று முழுவதும் உபவாசமிருந்து, மாலையில் தீபதானஞ்செய்து அதன் பின்னர் போஜனஞ்செய்யவேண்டியது.

வியாஸமுநிவனே! இவ்வகையாக விதிப்படி தமது சக்திக்கேற்பத் திலஹஸ்திதானஞ் செய்தவர்கள் கோரமான நரகஸ்வரூபமாக விளங்கும் இயமமார்க்கத்தைக் காணுமலே, எல்லாப் பாவங்களையுமொழித்து, பந்துமித்திரர்களுடன் கூடிச் சுவர்க்கலோகத்திற் பதினன்கு இந்திரபட்டங் கழியுமெல்லையும் வாழ்ந்திருப்பார்கள். அவர்கள் ஜேஷ்டா புஷ்கரத்தில் காராம்பசுக்கள் ஆயிரந் தானஞ்செய்த பலனும், உபயமுகி கோதானம் நூறு செய்த பலனும் அடைவார்கள். இராகுக்கிரஸ்தமான சூரியக்கிரகணகாலத்தில் பூதானஞ்செய்த பலனும் இத்தானபலத்திற்குச் சமானமானதல்ல. இந்தத் தானமானது கிருஷ்ணுசன தானத்தாலுண்டாகும் பலனைக்காட்டிலும் நூறுபங்கு விசேஷ பலனை யளிக்கும். யானை-குதிரை-இரதம் - எருதுமுதலியவற்றை ஒரேகாலத்தில் தானஞ்செய்த பலனைக் கொடுக்கும். எள் நெய் ஜலம் பசுமுதலிய தானபலனைக்காட்டிலும் நூறு பங்கு விசேஷ பலனைக்கொடுக்கும். இவ்விதியை யுணர்ந்து திலஹஸ்தியைப் பூசித்து, மஹேசஸ்வரூபமானதும் திக்கஜஸ்வரூபமானதுமாக இவ்யானையைத் தானஞ்செய்கிறேனென்று சங்கல்பஞ்செய்து காந்தாரஹஸ்தியைத் தானஞ்செய்தபக்ஷத்தில் சர்வேசுவரனுன சிவபெருமானும், தைத்திய சங்காரனுகிய திருமாலும் சந்தோஷிப்பார்கள். குடும்பியாயும் ஏழையாயுமிருக்கிற சிரேஷ்டமான வேதியனுக்கு இதனைத் தானஞ்செய்ய வேண்டும். இந்தத் தானம் பாவத்தை யொழித்துப் புண்ணியத்தைக்

கொடுப்பதும், நரகத்தை யொழித்து மோக்ஷத்தைக் கொடுப்பதுமாம். இத்னைப் படித்தும், வாசித்தும், சிந்தித்தும் உள்ளவர்கள் சுவர்க்கபதவி யடைவார்கள் என்றுகூறி யருளினர்.

திலஹஸ்திதானமுரைத்தது

முற்றிற்று.

இருபத்தேழாவது
சதுர்த்தசிவிரத மகிமையுரைத்த அத்தியாயம்.

பிரமபுத்திரராகிய ஸநத்குமார முநிவரைநோக்கி வியாஸமுநிவர் ஸ்வாமீ! சர்வேசுவரனை சாம்பவமூர்த்தியை ஒருதினம் பூஜித்து உபவாச மிருந்தால், எல்லாவிரதங்களையும் ஆசரித்து எல்லாத்தானங்களையுஞ்செய்த பலனை யடையத்தக்க ஒருவிரதத்தை அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேண்டும். குருவுகளெல்லோருக்குங் குருவாகிய தாங்கள் கூறும் ஒவ்வொன்றும் பெரும்பலன் கொடுக்கவல்லவையாயிருக்கும் ஆதலின் அவ்வகைய விரதமொன்றனையும் அதனைப்பற்றிய திருஷ்டாந்தமாக ஓர் சரித்திரத்தையுஞ் சொல்லவேண்டுமென வேண்ட, ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர். வியாஸமுநிவனே! சிவபெருமானை நியமத்துடன் ஒருநாள் ஆராதித்தால் அவருடைய அநுக்கிரகத்தை யடையலாம்! தேககஷ்டமான அநேக விதவிரதங்களைச்செய்து அதனாலடையும் பலனைச் சுக்கிலபக்ஷ சதுர்த்தசியிற் சிவார்ச்சனைசெய்வதாலேயே, இரத்தினவியாபாரி ஒருபொருளாற் பெரியலாபத்தைத் தேடிக்கொள்வதுபோல, அதிசுலபமாக அடையலாம். எனக்கூற, வியாஸமுநிவர், ஸ்வாமீ! அந்தவிரதத்தை இதுகாறும் யாவர் ஆசிரயித்தனர்? அதன்விதியாது? அவற்றையெல்லாம் விரிவாக விளங்கக் கூற வேண்டுமென, ஸநத்குமாரமுநிவர் கூறுகின்றார்.

ஸத்யவதிபுத்திரனே! பூர்வயுகத்தில் ஜம்புத்தீவில் தர்மங்களை யுணர்ந்தவனும், நூறு அக்குரோணி சேனைகளை யுடையவனும், வில்லாளிகளில் மேம்பட்டவனும், வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையும், சத்திய வாக்கும், ஈகைத்தன்மையும், சகலபோகாநுபவமும், அதிதிகளிடத்தில் விருப்பமும், பொன் வஸ்திரமுதலியவற்றை நாடோறுந் தானஞ்செய்தலு முடைய ஓர் மன்னவனிருந்தான். அவனுக்கு எண்ணிறந்த சைநியங்களிருப்பினும் சதாநீகன் என்பது பெயராயிருந்தது. அவன் தனதுராச்சியத்தை அநேககாலம் பாலித்து ஓர் புத்திரனைப் பெற்றுமரண மடைந்தனன். அப்புதல்வன் குலமுறையாக அநுபவித்துவந்த இராச்சியத்தைத் தருமமுறைப்படி காத்து, காந்தியாற் சந்திரனையும் பிரதாபத்தாற் சூரியனையும் போன்று, சத்துருபயமின்றி அரசுபுரிந்து வந்தும், தனதுதந்தையைப்போலத் தானஞ்செய்த லொன்றுமாத்திரம் இல்லாதவனாயிருந்தான். இவ்வாறிருக்கையில், நியதியான விரதமுடைய வேதியர் யாவருங்

கண்டு, அரசன்பால் தானச்செயலின்மையால் ஏழைகளாகிய நாமெல்லோ ரும் அரசனைக்கண்டு இவ்விஷயத்தைக் கேட்கவேண்டுமென்று யோசித்து, அரசனிடம்வர, அரசன் அவ்வந்தணரை முறைப்படி பூசித்து ஆசனமளித் தனன். அவர்கள் அப்பூசையாலேயே மனங்களித்துக் கூறுபவராயினர். அரசனே! நாங்கள் ஒருவிஷயத்தை வெளியிடக்கருதியிருக்கின்றோம். அதனைச்சாவகாசமாகக் கேட்கவேண்டும். உனது தந்தைநாடோறும் வஸ் திரம் போஜனம் சுவர்ணம் முதலியவற்றை யெங்களுக்குத் தானங்கொடுத் துத் திருப்திசெய்து வந்தனன். நீயோ சிறிதுந்தானஞ் செய்யாமையின் அநேக பிராமணர் அன்னமின்றித்தேசாந்தரஞ்சென்றிருக்கின்றனர். நாங் களோ பெரிய குடும்பிகள்; தங்களிடத்தில் இதனையுணர்த்தி நாங்களும் இன்னுஞ்சிலதினத்திற் செல்லக்கருதியிருக்கிறோம். எங்களுக்குள்ள தரித் திரத்தினலேயே யிந்தயோசனை யுண்டாயிற்று எனக்கூறினர். அதனைக் கேட்ட மன்னவன் புன்னகைசெய்து, வேதியர்களே! அந்தணருக்குத் தானங்கொடுப்பதாற் புண்ணியங் கிடைக்குமென்பதெனக்குத் தெரிந் திருப்பினும், யான்கேட்கத்தக்கதொன்றுண்டு. அதற்குப்பதில் சொல்ல வேண்டும். தானஞ்செய்வன் இவ்வுலகினின்று சுவர்க்கத்திற்குச்சென்று ஆங்குள்ள போகங்களை நுகர்ந்து மீண்டும் பூமியையடைந்து சுகமாக வாழ் கின்றானென்று நீங்கள் சொல்லுகிறீர்களல்லவா. பிராமணர்களே! என் பிதாவானவன் இப்பொழுது சுவர்க்கத்தில் எவ்வாறாகவிருக்கின்றானென் பதை நீங்கள் நன்றாக அறிந்துகொண்டு அதனை யெனக்குச் சுருக்கிற் சொல்லவேண்டும் எனக்கூற, வேதியர் ஒன்றுந்தோன்றாது அரசன் முகத்தைப் பார்த்துக்கொண்டு சிறிதுநேர மிருந்து புறத்தேசென்று ஒருவரோடொருவர் யோசிக்கலாயினர். அதாவது இவ்வரசன்பிதா மகா தார்மிகனாதலின் இப்பொழுது எவ்வுலகிலிருக்கின்றானோ. அதனை நாம் எப்படிச் சொல்லக்கூடும் என்று பலவாறு யோசித்து நெடுநாள் தமது நித்யகரும சந்தியாவந்தன அக்கினிகாரியாதிகளையெல்லாம் மறந்தனர்.

முனிவனே! வேதியரொழுக்கங் குன்றியதால், சூரியன்முதலிய கோள்கள் நிலைதவறி, மழையில்லாமையாய் க்ஷாமம் சம்பவித்தது. அக்கி னியில் ஹோமஞ்செய்தவை சூரியனையடையும். சூரியன் அந்த ஆகுதி யாற் சந்தோஷித்து மழைபொழியச் செய்வான். அந்தமழையால் ஜீவ கோடிகளுக்கெல்லாம் ஆகாரம் உண்டாகும். அன்னத்தால் உலகுக்கு எப் பொழுதுந் திருப்தியுண்டாகும். அவ்வாறின்றி நிலைமாறியதால், உலகத் தில் வேதியர் யாககருமஞ்செய்யாது மழைமாறி உலகமழிகின்றது. அவர் களை நான்கண்டு வசனித்து அவர்கள் கருத்தையறியவேண்டுமென்று சூரிய பகவான் கருதிப்பிராமண வேடம்பூண்டு பூலோகத்திற்குவந்து அவ்வந்த ணரை யடைந்து, நீங்கள் ஏன் துக்கமுற்றிருக்கிறீர்கள்? உங்கள் குலாசார தருமங்களை யேன்கைவிட்டீர்கள்? பஞ்சயஜ்ஞங்களின்பலன் எண்ணிறந்த தன்றோ? நித்தியகருமஞ்செய்யாது நைமித்திக கர்மத்தைச்செய்து பலனை

யடையக்கருதுவோர் அதனையடையார். சுவகர்மங்களை விடுத்தோர் தீர்த்த யாத்திரை செய்யினும் பலன்பெறார். நால்வகையாச்சிரமத்தவர்க்கும் பஞ்சயஜ்ஞபலன் நித்தியமானதும் புக்திமுக்திகளைக் கொடுப்பதுமாம். ஆதலின் நீங்கள் அதனைவிடக்கூடாது. நித்தியகர்மத்தை யநுஷ்டித்து நைமித்திகத்தைச் செய்வோர் நூறுபங்கு பலனையும், காமியத்தைச்செய்வோர் ஆயிரம்பங்கு அதிகபலனையும் அடைவார்கள். தானங்கொடாத அரசனை உயிரிழந்தவனாக நினைத்துக்கொண்டு தானத்தை விரும்பாது தவத்தை மேற்கொண்டொழுகும் அந்தணன் மகாசிரேஷ்டன். அப்படிப்பட்ட அந்தணனையுபசரித்தால் எல்லாப்போகங்களுங் கிடைக்கும் எனக் கூற, வேதியர் யாவரும் அதனால் மனந்திரும்பினவர்களாய், தானமேற்காது தவஞ்செய்யும் மறையோனை வழிபடுதலே சிறந்ததெனக்கொண்டு, வேதியவடிவோடடைந்த சூரியனை நமஸ்கரித்துச் சந்தோஷத்துடன் நாற்புறமுஞ்சென்று அத்தகைய பிராமணனை யெங்கெங்குந்தேடிக்கொண்டு போய், கடைசியில் ஓரிடத்தில் கைகளை மேலேயெடுத்துயர்த்தி, ஓர்காலில் நின்று மற்றோர்காலை மடக்கிக்கொண்டு தவத்திலிருந்த பார்க்கவ முனிவனைக்கண்டு, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து எதிர்நின்று கொண்டிருந்தனர். பார்க்கவமுனிவர் சூரியன் மேற்கே திரும்பியபொழுது கண் விழித்து, தேவபிதுர்த்தர்ப்பணஞ்செய்து முடித்து, தன்னெதிர் நிற்கும் பிராமணரைக்கண்டு கைகூப்பி, சாத்திரமுறைப்படி அவர்களைப்பூசித்து, கந்தமூலபலங்களையளித்துக் களிக்கச்செய்தனர். அப்பொழுது அந்தணர் யாவரும் தங்கள் அரசன் செயலைப் பார்க்கவமுனிவருக்குக் கூறினர். அவ்வரசனது துர்க்குணங்களை வேதியராற் சொல்லக்கேட்ட பார்க்கவ முனிவர் யான் அதுகாறுஞ் செய்த தவத்தையாவது தனத்தையாவது செலவுசெய்து இவ்வேதியருக்குற்ற துன்பத்தை யகற்றுவேன். ஒருவருடைய துக்கத்தை யொழித்தலே தவத்திலுஞ் சிறந்தது. பயமுற்றவர்களுக்கு அபயங்கொடுத்தலாற் சகல தானங்களுஞ்செய்த பலன் கிடைக்கும். தயையே சிறந்த குணம் என்று தனக்குள் யோசித்து, தற்கால மன்னனுடைய தந்தையிருக்கும் அந்தவுலகத்தினையடைவேனென்றுறுதி கொண்டு புறப்பட்டனர். பார்க்கவமுனிவருடைய தவப்பலனால் சூரியபகவான் சாந்தமுடையவனாய் வேதியவடிவேற்று அவருக்குவழிகாட்டுவோன் போல முன்சென்றனன்.

இவ்வாறு பார்க்கவமுனிவர் புறப்பட்டு எண்பத்தெட்டுக்காத தூரஞ்சென்று, தண்ணீரும் மரநிழலுமில்லாததும், சீதோஷ்ணங்களால் துன்பகரமானதும், தேவ தானவர்களாலுஞ் சகிக்கமுடியாததுமான வழியைக்கடந்து இருபத்தெட்டுக்கோடி நரகங்களையும் அதில் வாதனைப்படுவோரையும் பார்த்துக்கொண்டு சூரியன்முன் செல்ல, முனிவரர் பின்னே சென்றனர். நரகவேதனையை யநுபவிப்போரது கூக்குரலைக்கேட்டுக்கொண்டு அவ்விடத்தை நீங்கி மஹாபதவியைக்காணச் செல்லுகையில், பார்க்

கவமுநிவரை ஓர் வேதியன் தன் கையிற் பெரிய தண்டந்தாங்கி, யான் உனக்கு முன்னர்க் கொடுத்தவற்றை யிப்பொழுது எனக்குக் கொடுத்து விட்டு தான் செல்லவேண்டுமெனத் தடுக்க, பார்க்கவர் தன்னைத் தடுத் தவனை நோக்கி நீ எக்காலத்து யாதுகொடுத்தனை? எனக்கேட்க, அவ்வந் தணன் யான் முன்ஜனனத்தில் உனக்கோர் புராணமுரைத்துளேன். அதனை நீ கேட்டுச் செல்லுகையில், எனக்கொன்றுங் கொடுத்திலையேயென யான் கேட்க, நீ என் வீட்டிற்குச்சென்று ஏதேனுங் கொண்டுவந்துகொடுப்பே னென்று சென்று, மீண்டும் என் கண்ணிற் புலப்படாதொழிந்தனையென, பார்க்கவர் கேட்டு ஒருவேளை யான் சொல்லித் தவறியிருக்கினுமிருக்க லாம். அது மத்தியலோகத்தில் நடந்ததாதலின் நாம் அங்கே போய்த் தீர்த்துக்கொள்ளலாம். இவ்விடத்தில் என் கையில் ஒன்றுமில்லையெனக் கூற, அவ்வேதியன் பார்க்கவரை நோக்கி நீ செய்த புண்ணியத்திற் பாதி யெனக்குக் கொடுத்ததாகச் சொல்லுகவென, பார்க்கவர் என் தர்மபல னிற் பாதி உனக்குக் கொடேனென, அதனைக் கேட்டுக்கொண்டு அவருட னிருந்த சூரியபகவான் அவ்விருவரையும் நன்மொழியாற் சமாதானப் படுத்தி அவ்வேதியன் புராணஞ்சொல்லியதும், நீ சிரவணஞ்செய்ததும் பின்னர் பொருள் கொடுப்பதாகக்கூறியது முண்மையேயாதலின், உன் தருமத்தில் அரைப்பங்கு கொடாது ஆறிலொருபாகங் கொடுக்கலா மென்று கூறினர். அதனால் அவ்விருவரும் இணங்கினர். பார்க்கவர் தன் புண்ணியத்தில் ஆறிலொருபங்கு கொடுத்தனர். அவரைத்தடுத்த வேதி யன் அதனைப் பெற்றுக்கொண்டு சென்றனன்.

மீண்டும் சூரியனைப் பின்றொடர்ந்து பார்க்கவர் செல்லுகையில் ஓர் யாதவன் அவரைத்தடுத்து, யான் முன்ஜனனத்தில் உன் பசுக்களை மேய்த்ததில் நீ எனக்கு எட்டுக்*கவுடிகள் கொடுப்பதாகக் கணக்குத் தீர்த் துக்கொடாமற்போயினை. அதனை யிப்பொழுது கொடுத்துச்செல்க எனக் கூற, பார்க்கவர் ஐயோ சுலபமானதையுங் கடன்வைத்துக்கொண்டேன். இஃதெம்மாத்திரம்? என யோசிக்க, யாதவன் உன் தருமத்தை யெனக் குக் கொடுக்க எனக்கேட்க, பார்க்கவன் துக்கித்து, சூரியபகவான் தீர் மானித்தபடி மற்றும் ஆறிலொரு பங்கு புண்ணியத்தை யவனுக்குக் கொடுத்து அவனை விலக்கி மேலுஞ்செல்லுகையில், ஓர் சாலியன் அவ ரைத் தடுத்து நீ யென்னிடம் வஸ்திரங்கள் வாங்கியதில் விசேஷ பாக்கி வைத்துக்கொண்டிருக்கின்றனை. அதனைத் தீர்த்துவிடுக என, பூர்வப்பிர காரமே இருவரும் விவாதமுற, சூரியபகவான் தீர்மானித்தபடி விசேஷ பாக்கிக்காகத் தன் புண்ணிய மிச்சத்தை அவனுக்குக் கொடுத்தனுப்பி விட்டு, தன் புண்ணியமுழுதும் போய்விட்டமையின் பிரமதேஜஸு நீங்கி மேலே செல்லச் சக்தியற்றிருக்கையில், அவர் பார்க்கக்கருதிய அரச

* கவுடி - பலகறை. இது பூர்வம் நாணயவகையிலொன்றாய் மதிக்கப்பட்டது.

னிருக்கும் உலகத்திற்கு அம்முநிவன் கையைப்பற்றிக்கொண்டு சூரியபுக
வான் கொண்டுபோயினன்.

அச்சமயம் அவ்வரசனை இயமகிங்கரர்கள் ஓர்பாத்திரத்திலிட்டு
அடுப்பிலேற்றிச் சமைத்துக்கொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட பார்க்
கவமுநிவர் ஐயோ ! மகாபுண்ணியனாகிய இவனுக்கும் இவ்வகைய தீமை
சம்பவித்ததே யென்றாச்சரியமுற்று, சிறிதுநேரம் இளைப்பாறி, சதாநீக
மகாராஜனே ! நீ ஷோடச மகாதானங்களையுஞ் சத்பிராமணருக்குச் செய்
தனையென்றும், இரத்தினங்கள் வஸ்திரங்கள் கிராமங்கள் தானஞ்செய்தனை
யென்றும் பிராமண சிரேஷ்டர்களாற் கேள்விப்பட்டிருக்கின்றேன். தவஞ்
செய்தாலும் பகவத்பக்தி செய்தாலும் தானஞ்செய்தாலும் சுவர்க்க
மடையவேண்டியிருக்க, மகாதானங்களைச்செய்த உனக்கு எந்தப்பாவபல
னிருந்து இங்குத் தகிக்கப்படுகின்றனை. அஃதுனக்குத் தெரியுமே! அத
னைச் சொல்லுக வெனக்கேட்க, ஸதாநீகன் கேட்டு, வேதியனே ! என்வர
லாற்றினைக்கேள். யான் அநேகவிதமான தானங்களை அந்தணருக்குப்பரி
பூரணமாகக் கொடுத்தவனாயினும், அஞ்ஞானத்தினாற் பிரஜாபீடையாற்
பொருள்தேடினேனாதலின் இந்தப்பாவத்தை யநுபவிக்கிறேன். தேவரீர்
என்விஷயத்தில் தயைசெய்து என்புத்திரனிடஞ்சென்று யான்விமுக்த
னாகும்படி சுகிர்தவிசேஷத்தை யாசரிக்கும்படி சொல்லியருளவேண்
டும். இல்லாவிடின் இப்பாவத்தை யான் அநுபவித்தல் பெருங்கஷ்டமாம்.
சத்ஜன சாங்கித்தியத்தாலேயே இதுநீங்கவேண்டியது. தாங்களும் இச்
சமயம் இங்குவந்தீர்கள் எனக்கூற, பார்க்கவர் தன்புண்ணியங்களொழிந்
தமையின் தனக்கு இதமுண்டாகவும், இவ்வரசன் வாதனைநீங்கவும், உலகி
னர் சுலபமாக நற்கதியடையவும் விரும்பினவராய், சூரியதேவனை நோக்கி,
ஸ்வாமீ! சத்ஜனதரிசனம் மகாபுண்ணியகரமானது. சத்ஜனர் தீர்த்தசமான
ரன்றோ! தீர்த்தயாத்திரை காலக்கிரமமாகப்பலனளிக்கும். சாதுசங்க
மம் அப்பொழுதே பலன்கொடுக்கும். புண்ணியமில்லாதவனுக்குஞ் சர்
வேசுவரனாகிய சிவபெருமானிடத்திலும் வேதியரிடத்திலும் சத்ஜனரிடத்
திலும் தவசிகளிடத்திலும் பக்தியென்பதுண்டாகாது. புருஷனுக்குப் பாவ
க்ஷயமுண்டானபொழுது தானந்தியானம் முதலியன செய்யவேண்டுமெ
ன்று நினைவுண்டாகும். யான் தங்களைத்தேவதேவனாகச் சந்தேகமின்றி
நினைத்திருக்கின்றேன். தங்கள் தரிசனத்தாலேயே இந்த நரகவாசிகள்
யாவரும் சுகமடைவர். யான் தங்கள் சந்நிதியிலிருந்தும் சுகமடைந்தி
லேன். ஆதலின் சிறிதும் தர்மமென்பதில்லாத எனக்குத்தர்மத்தை யுண்டு
செய்வதும், அதனையநுசரிப்பவர்கள் யாவரும் சொர்க்கமடையச் செய்ய
வல்லதும், மண் பெண் பொன் என்னும் ஈஷணாத்திரவியங்களால் துன்
புறுவார்களைக் கடைத்தேற்றுவதும், தர்மாசரணையற்றவர்களையும் உத்தா
ரணஞ்செய்ய வல்லதுமான விரதமொன்றினைச் சொல்லவேண்டுமெனக்
கேட்க, சூரியதேவன் பார்க்கவரது வார்த்தைக்குக்களித்து, வேதியனே !

உலகினுக்கு இதமுண்டாக நீ யென்னை வினவினை. உன் தருமமும் விருத்தியாகத்தக்க விரதமொன்றனைக் கூறுகின்றேன் கேட்பாயாக வெனச்சொல்லத் தொடங்கினர்.

பார்க்கவமுநிவனே! தருமத்தைப்பிறருக்குக்கூறுவோன் அந்தத் தருமாசரணஞ்செய்த பலனையடைவான். தருமத்தைச்சொல்லும் நாவே சிறந்தது. உலகினுக்கு இதமுண்டாக்கத்தக்க தர்மமார்க்கஞ்சொல்லவேண்டுவதேயாம். ஆதலின் சர்வபாவக்ஷயமான விரதத்தைச் சொல்லுகின்றேன். வருஷமுழுவதிலும் முதற்பாகமாகிய சித்திரைமாசமானது சிவபெருமானுக்கும் சர்வதேவர்களுக்கும் பிரீதிகரமானது. அம்மாதத்தில் தேவர்கள் விநோதார்த்தமாகச் சந்தோஷித்துப் பூமியில்வந்து தமதுஸ்தானத்தை யடைகிறார்கள். சிவபெருமானும் பாலரூபத்தோடு பார்வதிதேவியாருடன் விளையாடிக்கொண்டிருப்பர். பார்வதி தேவியின் தோழிகள் சிறந்த ஆடையாபரணாலங்கிருதராகி அம்மகாதேவிக்கு உபசாரஞ்செய்வார்கள். இந்தச் சித்திரைமாசத்துச் சதுர்த்தசிதிதியில் தீபதானஞ்செய்துவருவோர் சிவபெருமான்முதலிய எல்லாத்தேவர்களுக்கும் நேத்திரங் கொடுத்தபலனையும் மோக்ஷத்தையுமடைவர். அதன்விதியையுஞ் சொல்லுகின்றேன்.

சித்திரைமாசத்தில் பூர்வபக்ஷத்திலாவது அபரபக்ஷத்திலாவது சம்பவிக்குஞ் சதுர்த்தசியில் உபவாசமிருந்து சர்வேசுவரனை சிவபெருமானையுத்தேசித்து ஓர் கோதானஞ்செய்து தீபதானமுதலியனசெய்தவன் எல்லாப்பாவங்களையுமொழிந்து சுவர்க்கபதவியைச் சந்தேகமின்றி யடைவானெனச்சூரியபகவான் அதன்விவரங்களைச்சொல்லக்கேட்ட பார்க்கவர் விடைகொண்டு ஜம்புத்தீபமடைந்து அவ்வேதியருடன் கூடி அம்மன்னன் புதல்வனைக்கண்டு அவனும் அவன்மந்திரிமார்களும், அவனது கொலு மண்டபத்திலிருந்தவர்களுமாகிய யாவருமறியும்படி சதாநீகராஜனுடைய நிலைமையையும், அவன் அத்துன்பத்தினின்று நீங்கத்தக்க வழியையும், சதுர்த்தசிவிரதபலனையும், அதன்முறையையும் விவரமாகச் சொல்லினர். அவ்வரசன் பார்க்கவர் வார்த்தையைக்கேட்டு அப்பொழுதே புறப்பட்டுச் சமீபத்திலுள்ள ஓர் புண்ணியக்ஷேத்திரத்தையடைந்து பெரும் பொருளைச் செலவிட்டு ஓர் தடாகமெடுத்து நானாவிதமாகக் கோதானம் பூதானமுதலியன செய்து, பார்க்கவமுநிவர் சொல்லியபடி சதுர்த்தசி விரதத்தையாசரித்துச் சந்தோஷத்துடன் தனது நகரத்தை யடைந்தனன். அவன் முறைப்படி சதுர்த்தசிவிரதாசரணஞ்செய்து பலவகைத் தானங்களைக் கொடுத்ததால் அவன் பிதா தனக்குற்றிருந்த நரகவேதனைகளை நீங்கிச் சுவர்க்கமடைந்து தன் மூதாதைகளுடன் பலவகைச் சுகங்களையு மநுபவித்துக்கொண்டிருந்தனன். ஒருபகல் உபவாசமிருக்கவேண்டிய இந்த விரதத்தை யநுஷ்டித்தவன் சகல பாவங்களையு நீங்கிச் சுவர்க்கத்தை யடைவான்.

வியாஸமுநிவனே ! சித்திரைமாச சதுர்த்தசியில் சிவபெருமானைப் பூசித்து உபவாசமிருந்து சிரேஷ்டனான பிராமணனுக்குக் கோதானமாவது நெய்நிறைந்த பாத்திர தானமாவது செய்து அன்னபான வஸ்திராதிகளால் உபசரித்தபக்ஷத்தில் எல்லாப் பாவங்களையுமொழித்துச் சுவர்க்கலோகத்தையும் பின்னர் உருத்திரலோகத்தையுமடைந்து அநேககாலம் அங்குள்ள சுகத்தை யநுபவித்து மீண்டும் இவ்வுலகில் தருமசீலனான அரசனாகப்பிறப்பான். வசந்தருதுவிற் சங்கரப்பிரீதிகரமான சதுர்த்தசிவிரதத்திற்குரிய மந்திரவிசேஷத்தைச் சொல்லுகின்றேன். மந்திரத்தைக்காட்டிலும் பிராமணன் சிரேஷ்டன். க்ஷத்திரியனும் வைசியனும் சுத்தர்களே. மந்திரபலமில்லாவிடினுந் தானவிருப்பமுடையவனாயின் சூத்திரனும் பரிசுத்தனே. இவர்களெல்லாரும்முக்தியடைவார்கள். மந்திரங்கள் சர்வதேவபிதுர் யக்ஷ ஸ்வரூபமாகவுள்ளன. மந்திரங்களை யுணர்ந்தவனுக்கு யாவரும் மரியாதைசெய்கிறார்கள். மந்திரமறியார்களை யாவரும் அவமதிக்கிறார்கள். ஆதலின் உமாபதியின் விரதமுழுவதும் மந்திரபூர்வமாகவே செய்யவேண்டியது. எல்லாப் பாவங்களையுமொழித்துச் சுவர்க்கமடையச்செய்யும் மந்திராதி விதிகளைச் சொல்லுகின்றேன்.

முதலாவது ஏகாதசியில் ஒரேகாலபோஜனமும் தாகமுஞ்செய்து, துவாதசியில் யாசியாது புசித்து, திரயோதசியினிரவில்மட்டும் புசித்து, சதுர்த்தசியன்று நிராகாரமாயிருந்து, பூரணையில் கோதானஞ்செய்யும் பக்ஷத்தில் அந்தச் சதுர்த்தசிவிரத பலனையடைவான். அதனால், சிவபெருமான் பெருங்களிப்படைவர். அவனுக்குச் சிறந்தபலன் கைகூடும். இவ்விரதத்தை முறைப்படிசெய்யப் பொருளும் தேகவலிமையு மில்லாதபக்ஷத்தில், ஓர் பொற்கிண்ணஞ்செய்து அதுநிறையும்படி நெய்யைவிட்டு அதற்குவஸ்திரமாவது நூலாவது சுற்றி, ஸ்தாணுவும், ஈசனும், ஜகத்பிரபுவும், சூலபாணியும், உலகநாயகனும், பூதநாதனும், கபாலமாலிகாபரணனும், கட்வாங்கதாரியும், ஜகந்நாதனும், அர்த்தசந்திரதாரியும், சர்வாபரணபூஷிதனும், உமாநாதனும், ஞானிகளுடைய மனத்தில் விளங்குபவனும், என் இதயத்திலிருப்பவனும், அஹங்காரமற்றவனுமாகவுள்ள சர்வேசுவரனை நான் நமஸ்கரிக்கின்றேன் : அவன் என்பாவங்களை யொழிப்பானாக—என்றுகூறிச் சிவபிரானைப் பூசித்துப் பிராமண சிரேஷ்டனாகவுள்ளவனுக்கு இந்த நெய்ப்பாத்திரத்தை[சர்வேசுவரன்சந்தோஷிப்பானாக—என்றுசொல்லிக்கொண்டு] தானஞ்செய்தபக்ஷத்தில் அவர்கள் திவ்விய தேஜோரூபமுற்றுத் தனவான்களாவார்கள். மனவாக்குக்காயங்களால் காலை உச்சிமாலை சந்தியாதிகாலங்களில் மாநுடர் செய்யும் பாவங்களெல்லாம் இந்த விரதத்தை யநுஷ்டித்தபக்ஷத்தில், ஜலத்திலிட்ட லவணம்போல இல்லாதனவாகி, சுகவான்களாயிருப்பார்கள். முன்யுகத்தில் குமுதனென்னும் அரசன் இவ்விரதாசரணத்தால் தன்பாவங்களையொழித்துச்சுவர்க்கத்தையடைந்தான். இவ்விரதத்தை யநுசரித்தவன் அடையும் புண்ணியத்தை

யளவிட்டுரைக்கமுடியாது. இவ்விரதபலனானது, நியமம்-ஆசாரமுதலியவற்றுடன் சிவபெருமானிடத்திலேயே மனத்தை நிறுத்தி அவ்விறைவனது ஆயிரந் திருநாமங்களையுந் துதித்துக்கொண்டிருப்பவன் பாவமொழிந்து சிவலோகத்தையடைவானாதலின், அவன்பெறும் பலனுக்குச்சமானமாகச் சொல்லக்கூடுமன்றி வேறொன்றும் அதன்பலனுக்குச் சமானபலனுடையதாகமாட்டாதென்று, ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

சதுர்த்தசிவிரதமகிமையுரைத்தது

முற்றிற்று.

இருபத்தேட்டாவது

சதுர்த்தசிவிரத சமானமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! உலகத்திற்கு இதமுண்டாகும்படி, இகலோகத்திலும் பரலோகத்திலும் பலனைக் கொடுக்கத்தக்க சிவ ஸஹஸ்ரநாமங்களையும் சொல்லியருளவேண்டும் எனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் சந்தோஷித்தத்துடன் சொல்லலாயினர். வியாஸருஷியே! எல்லாப்பாவங்களையும் ஒழிக்கத்தக்க சிவபெருமானது ஆயிரந் திருநாமங்களையுஞ் சொல்கின்றேன். அது யானாகச்சொல்வதல்ல. சிவபெருமானது திருநாமங்களையெல்லாம் சொல்வதற்கு அவ்விறைவனது திருவருளே அவசியமிருக்கவேண்டுமாதலின், வரதனும் விசுவேஸ்வரனும் சாந்தனும் சர்வகர்த்தாவும் அவ்யயனும் சர்வஜ்ஞனும் ஸ்வபாவதப்பிரகாசனும் அசலனும்அமேயனும்அநாதியும், அதுலனும், சூக்ஷ்மனும், மஹானும், சித்தனும், வியாபியும், முக்தப்பிரியனும், அமலனும், சதாசிவனும், பூதநாதனும், சர்வவேதாகமப்பிரதிபாதகனும், தைரியவானுமாகிய அந்தச் சர்வேசுவரனைப் படிகநிறம் - சடைமுடி - ஐந்து திருமுகம் - பத்துக்கரங்கள் - ஒரு தேகம் - இரண்டு திருவடிகள் - வலக்கரத்து இச்சாஞானக்கிரியை யென்னும் மூவிலைச் சூலமும், பராசத்தி ரூபமான மழுவும், கர்த்துருபாவமான கட்வங்கமும், வாளும், பீஜாபூரகமும், வஜ்ரமும், ஜநநபயத்தைப் போக்குவதான அபயமும்,இடக்கரத்து ரித்திகுணமாகிய நாகமும், தூல சூக்கும பூதங்களை நடத்தும் மாயாரூபமாகியபாசமும், குணமாகிய நீலோற்பலமும், அங்குசமும், சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணமான தமருகமும், போகத்தைத்தரும் வரதமும், நாதகுணமாகிய மணியும், சங்காரகுணமாகிய அக்கினியும், திரோதாயி யென்னும் பரிவட்டமும், அருளாகிய சுகந்தமும், பரையாகிய மாலையும், அநுக்கிரகாங்குரமான சிறுநகையும்பொருந்தியவனாகத் தியானஞ்செய்து, என் தந்தை யெனக்குபதேசித்த சிவநாமங்களாயிரத்தையுஞ் சொல்லுகிறேன். அவை பதினாயிரந் திருநாமங்களாயிருந்தவை. அவற்றை யென் பிதாவாகிய பிரமதேவர் கண்டு மனத்தால் அவற்றின் பொருளைக் கிரகித்து அவற்றின் சாரபூதமாகிய இந்த ஆயிரந்திருநாமங்களை, தயிரைக்கடைந்து

வெண்ணெயை யெடுப்பார்போலவும், பர்வதத்தை யிடித்து அதனுள்ளிருக்குஞ் சாரமாகிய பொன்னை யெடுப்பார்போலவும், நான்குவேதங்கட்குஞ் சம்மதமாயுள்ளவையா யெடுத்து, இவ்வண்ணமாகத் துதிப்போர் சகல பாவங்களையு மொழிப்பரென்றுரைத்தனர். உலகினர் பெருந்தவஞ் செய்தாலன்றி இந்நாமங்களைப் படனஞ்செய்தற்கு இயலாது. இது சாந்தியையும் புஷ்டியையுங் கொடுக்கவல்லது. யக்ஷ ரக்ஷ பிசாசங்களையெல்லாம் விலக்கவல்லது. இது மிகவும் புனிதமானது. பக்திமானும் ஆஸ்திகனும் சிரத்தையுடையவனுமாகிய புருஷனுக்குபதேசிக்கத்தக்கதன்றிச் சிரத்தையற்றவர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் இந்திரியநிக்கிரகமற்றவர்களுக்கும் உபதேசிக்கத்தக்கதன்று. பூதாத்மகனும் தேவதேவனும் பிநாகபாணியுமாகிய சிவபெருமான் விஷயத்தில் அசூயையுடையவன் தனது மூதாதைகள் அதிக புண்ணியஞ்செய்து சுவர்க்காதிபதவிகளை யநுபவித்துக்கொண்டிருப்பினும், தன் பகவதபசாரதோஷத்தால் அவர்களையும் தன்னோடு நரகவேதனையை யடையச்செய்வான். இதுவே ஞானம் தியானம் யோகம். இது வேதியானிக்கத்தக்கது. இது ஒருவனது ஆயுண்முடிவில் ஸ்மரிக்கும்படி ஜன்மாந்தர புண்ணியவசத்தாற் சம்பவித்தால் அவன் பெரும்பாவியாயிருப்பினும் உத்தமமான கதியை யடைவான். இது புண்ணியகரமானது, உத்தமமானது; மங்களகரமானது. இந்த ஸஹஸ்ரநாமங்களே எல்லாத் தோத்திரங்களிலும் உத்தமமான தோத்திரம். இதனைச்சொல்லுகிறேன் கேள். இதனையும் இன்னும் அநேக தோத்திரங்களையும் பூர்வம் பிரமதேவன் வைத்துக்கொண்டு இவற்றின் தாரதம்மியங்களை விசாரித்து இதுவே எல்லாத்தோத்திரங்களுக்கும் அரசனென்று அதற்கு அரசத்தன்மையுங் கொடுத்திருக்கின்றனன். அதுமுதற்கொண்டு மஹாத்மாவாகிய சிவபெருமானுடைய இந்தத் தோத்திரமானது, உலகத்தில் மாநுடராலும், சுவர்க்கத்தில் தேவர்களாலும் பூசிக்கப்பட்டு, ஸ்தவராஜம் [தோத்திரராஜா] என்று பிரசித்திபெற்றிருக்கின்றது. இத்தவராஜம் முதலில் பிரமலோகத்தினின்று தோன்றி அங்கிருந்து இவ்வுலகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதனால் இது பரமான தோத்திரங்களிலும் பரமானது. தேஜஸ்களுக்கெல்லாம் தேஜஸானது. தவத்திற்கெல்லாம் தவமானது. சாந்திக்கெல்லாஞ் சாந்தியானது. தைரியத்திற்கெல்லாம் தைரியமானது. யோகத்திற்கெல்லாம் யோகமானது. காரணத்திற்கெல்லாங் காரணமானது. சத்தியத்திற்கெல்லாஞ் சத்தியமானது. சிறந்தவற்றிற்கெல்லாஞ்சிறந்தது. எதனால் உலகங்களெல்லாம் பிறக்கின்றனவோ, எதனால் உலகங்களெல்லாம் பிறவாதிருக்கின்றனவோ அதுவே யிதுவாகும். இது சர்வேசுவரனுடைய தேஜோரூபம். இவ்வகைய பிரபாவத்தையுடைய சாம்பவமூர்த்தியின் ஸஹஸ்ரநாமங்களையுஞ் சொல்லுகின்றேன். சிரத்தை பக்திகளுடன் நீ இதனைக்கேட்டபக்ஷத்தில், சகலமான கோரிக்கைகளையும் சிறிதும் ஐயமின்றிப் பெறுவாய் என்று கூறத்தொடங்கினர்.

அஸ்திராய ஸ்தாணவே ப்ரபவே பாநவே ப்ரவராய வரதாய வராய சர்வாத்மநே சர்வவிக்யாதாய சர்வாய (௧0) சர்வகராய உத்பவாய ஜடிநே வர்மிணே ஶிகிநே கட்கிநே ஸர்வாங்காய ஸர்வபாவநாய ஹராய ஹரிணாக்ஷாய (௨0) ஸர்வபூதஹராய ப்ரபவே ப்ரவ்ருத்தயே நிவ்ருத்தயே நியதாய சாசுவதாய த்ருவாய ஸ்மசானசாரிணே பகவதே கேசராய (௩0) கசரோத்பவாய அபிவந்த்யாய மகாகர்மணே தபஸ்விநே பூதபாவனாய உன்மத்தவேஷாய ப்ரசன்னாய சர்வலோகப்பிரஜாபதயே மஹீரூபாய மகாகாயாய (௪0) ஸர்வரூபாய மகாசனாய விசுவரூபாய விரூபாய விசுவபுஜே வாமனாய மனவே லோகபாலாந்தர்ஹிதாத்மனே ப்ரசாதாய ஹயாய. (௫0) கர்த்தபிநே பவித்ராய மகதே நியமாய நியமாஶ்ரயாய ஸர்வவர்மணே ஸ்வயம்புவே அநாதயே ஆதயே அவ்யயாய (௬0) ஸௌக்யரூபாய விரூபாக்ஷாய ஸோமாய நக்ஷத்ரசாதகாய சந்த்ராய ஸூர்யாய சநயே கேதுக்ரஹாய க்ரஹபதயே வராய (௭0) அத்ரயே அத்ரியாலயாய கர்த்ரே ம்ருகபாணார்ப்பணாய அநகாய மஹாதபசே தீர்க்கதபஸே அதீனாய தீனசாதகாய சம்வத்சரகராய (௮0) மந்த்ராய ப்ரமாணாய பரமாய தபஸே யோகிநே யாஜ்யாய மகாபீஜ்யாய மகாமாத்ராய மகாதபஸே சுவர்ணரேதஸே (௯0) ஸர்வஜ்ஞாய சுபீஜாய வ்ருஷவாகநாய தஶபாகவே அநிமிஷாய நீலகண்டாய உமாபதயே விசுவரூபாய ஸ்வயம்சிரேஷ்டாய பலயே (௧00) வைரோசனாய அரிக்நே கணகர்த்ரே கணபதயே திக்வாஸஸே காம்யாய பவித்ராய பரமாய மந்த்ராய ஸர்வபாவஹராய (௧௧0) ஹராய கமண்டலுதராய தந்விநே பாணஹஸ்தாய ப்ரதாபவதே அசநயே ஶதக்நயே கட்கிநே பட்டிசிநே ஆயுதிநே (௧௨0) மகதே சுருவஹஸ்தாய சுரூபாய தேஜஸே தேஜஸ்கராய மஹதே உஷ்ணீசிணே சுவக்த்ராய அத்யுக்ராய விநதாய (௧௩0) தீர்க்காய ஹரிநேத்ராய சுதீர்த்தாய க்ருஷ்ணாய ஸ்ருகாலரூபாய ஸர்வார்த்தாய முண்டாய குண்டிநே கமண்டலவே அஜாய (௧௪0) ம்ருகரூபாய கந்தமாலிநே கபர்த்திநே ஊர்த்வரேதஸே ஊர்த்வலிங்காய ஊர்த்வசாயிநே நபஸ்தலாய த்ரிஜடிநே சீர்வாசஸே ருத்ராய (௧௫0) சேனாபதயே விபவே அஹஸ்சராய நத்தஞ்சராய திக்மமன்யவே சுவர்ச்சஸே கஜக்நே தைத்யக்நே லோகாய லோகதாத்ரே (௧௬0) குணாகராய சிங்கசார்த்தூலரூபாய ஆர்த்தசர்மாம்பராய காலயோகிநே மகாநாதாய சர்வாவாசாய சதுர்பதாய நிசாசராய ப்ரேதசாரிணே பூதசாரிணே (௧௭0) மகேசுவராய பகுபூதாய பகுதனாய சர்வதாராய அமிதாய கதயே ந்ருத்யப்ரியாய ந்ருத்யத்ருப்தாய நர்த்தகாய ஸவிலாசகாய (௧௮0) போஷாய மகாதபசே ப்ராம்ஶவே நித்யாய கிரிசராய நபஸே ஸகஸ்ரஹஸ்தாய விஜயாய வ்யவசாயாய அநிச்சிதாய (௧௯0) அமர்ஷணாய மர்ஷணாத்மனே யஜ்ஞக்நே காமநாசகாய தக்ஷயஜ்ஞாபஹாரிணே சுபதாய மத்யமாய தபோபஹாரிணே பலவதே முதிதாய (௨00) அர்த்திநே அஜிதாய வராய கம்பீரகோஷாய கம்பீராய கம்பீரபலவாகனாய ந்யக்ரோதரூபாய ந்யக்ரோதாய வ்ருக்ஷகர்ணாய அபயே (௨௧0) விபவே ஸுதீக்ஷ்ணதஶநாய மகாகாயாய மகானனாய விஷ்வக்சேனாய அரயே யஜ்ஞாய ஸம்யுகாபீடவாகநாய தீக்ஷணபாஹவே ஹர்யக்ஷாய (௨௨0) மகாங்காய கர்மகாலவிதே விஷ்ணுப்ரஸாதிதாய யஜ்ஞாய ஸமுத்

இந்த ஸஹஸ்ரநாமங்களைத் துதிக்கையில் முதலில் ஓம் என்றும் இறுதியில் நமஃ என்றுங் கூட்டி, ஓம் அஸ்திராயநமஃ, ஓம் ஸ்தாணவேநமஃ என்று முறையே உச்சரித்துக்கொள்க. இதில் 'மகா' என வருந்தோறும் 'மஹா' எனக்கொள்க.

ராய வடவாமுகாய லம்பனாய லம்பிதோஷ்டாய பகுமாயாபயோகிதயே மகாங்காய (உகூ0) மகாதம்ஷ்ட்ராய மகாஜிஹ்வாய மகாமகாய மகாநகாய மகாரோம்ணே மகாகேஶாய மகாஜடாய அஸபத்னாய ப்ரஸாதாய ப்ரத்யயாய (உச0) கிரிஸாதகாய ஸ்நேஹனாய அஸ்நேகனாய அஜிதாய மஹாமுநயே வ்ருக்ஷகாராய வ்ருக்ஷகேதவே தரளாய வாயுவாகனாய மண்டலினே (உரு0) வாயுதாம்னே தேவதானவதர்ப்பக்னே அதர்வசீர்ஷாய ஸாமாஸ்யாய ரிபுஹஸ்தாய மிதேக்ஷணாய யஜுர்வேஷ பாதபுஜாய குஹ்யாய ப்ரகாசாய (உகூ0) ஜங்கமாய அமோகாய அர்த்தப்ரசாதாய அபிகம்யாய ஸுதர்சனாய உபகாராய ப்ரியாய சர்வாய கநகாய காஞ்சனஸ்திராய (உஎ0) நந்திநே நந்திகராய பவ்யாய புஷ்கராய ஸ்தபதயே ஸ்திராய தபனாய தாபனாய ஆத்யாய க்ரிணினே (உஅ0) யஜ்ஞாய ஸமாஹிதாய நக்தாய கலயே காலாய மகராய காலபூஜிதாய சுகுணாய கணகாராய பூதபாவனாய (உகூ0) சாரதயே பஸ்மசாயினே பஸ்மருக்ஷாய பஸ்மரூபாய தரங்கணாய அகணாய லோபாய மகாத்மனே ஸர்வபூஜிதாய சங்கவே (௩00) சங்குசம்பன்னாய சுசயே பூதநிஷேவிதாய ஆஸ்ரமஸ்தாய கபோதஸ்தாய விஸ்வகர்மபதயே வராய சாகாய விசாகாய கும்பாண்டாய (௩க0) அர்த்தஜாலாய ஸுநிச்சயாய கபிலாய அகபிலாய சூராய ஆயுஷே அபராய உரகாய கந்தர்வாய அதிதயே (௩உ0) தார்க்ஷ்யாய அவிஜ்ஞேயாய சுசாரதயே பரஸ்வதாயுதாய தேவாய அர்த்தகாராய ஸுதியே வராய தும்பவீணாய மஹாகோபாய (௩௩0) ஊர்த்வரேதசே ஜலேஶயாய உக்ரவம்ஶகராய வம்சாய வம்சதாராய அநிந்திதாய சர்வாங்கரூபாய மாயாவிநே சுகிர்தாய அநிலாய (௩ச0) அநலாய பாந்தவாய பந்துகர்த்ரே ஸுபந்தவே அவிலோசனாய சுயஜ்ஞாரயே சுகாமாரயே மஹாதம்ஷ்ட்ராய அஸமாய பாஹவே (௩ரு0) அநிந்திதாய சர்வாய சங்கராய தனதாய தனாய அமரேசாய மஹாதேவாய விசுவதேவாய சுராரிக்நே திதிதயே (௩கூ0) அஹிர்புத்ன்யாய சேகிதானாய ஹரயே அஜாய ஏகபாதாய காபாலிநே த்ரிஶங்கவே அஜிதாய சிவாய தந்வந்த்ரிணே (௩எ0) தூமகேதவே ஸ்கந்தாய வைசிரவணாய தாத்ரே ஶக்ராய விஷ்ணவே மித்ராய த்வஷ்ட்ரே த்ருவாய தனாய ப்ரபாவாய (௩அ0) ஸர்வகாய வாயவே அர்யமாய ஸவித்ரே ரவயே உதக்ராய விதாத்ரே மாந்தாத்ரே பூதபாவனாய ஹூததீர்த்தாய (௩கூ0) வாக்மிநே ஸர்வமாலகுணாவஹாய பத்மவக்த்ராய மகாவக்த்ராய சந்த்ரவக்த்தாய மனோஜவாய பலவதே உபசாந்தாய புராணாய புண்யசஞ்சரிணே (ச00) குரவே கர்த்ரே காலரூபிணே குருபூதாய மகேஶ்வராய சர்வாசனாய தர்ஶஶாயினே சர்வப்பிராணிபதயே தேவதேவாய ஸுகாஶக்தாய (சக0) ஸதே அஸதே ஸர்வரத்னவிதே கைலாசகிரிவாசினே ஹிமவத்கிரிஸம்ஸ்ரயாய கூலஹாரிணே கூலகர்த்ரே பகுபீஜாய பகுப்ரதாய வணிஜாய (சஉ0) வர்த்தனாய வ்ருக்ஷாய நகுலாய சந்தனச்சதாய ஸாரபீடாய மஹாஜந்தவே அலோகாய மஹௌஷதாய சித்தார்த்தகாரிணே சித்தார்த்தாய (ச௩0) சந்தாய வ்யாகரணாந்தராய ஸிங்கநாதாய ஸிங்கதம்ஸ்ட்ராய ஸிங்ககாய ஸிங்கவாகனாய ப்ரபாவாத்மனே ஜகத்காலாய தலாய லோகஹிதாய (சச0) ஜ்ஞானசாராய நவக்ரகாங்காய கேதுமாலினே சுபாவனாய பூதாஶயாய பூதபதயே அகோராத்ராய அநிந்திதாய வாமனாய ஸர்வபூதாத்மனே (சரு0) நிலயாய விபவே பவாய அமோகாய ஸஞ்சயாய பார்ஸ்வாய ஜீவனாய ப்ராணதாரணாய த்ருதிமதே ஆத்மவதே (சகூ0) தக்ஷாய ஸத்க்ருதாய யுகாதிகாயா

கோபாலாய கோபுத்யே க்ராஹாய கோசர்மவசனாய அராய ஹிரண்ய
பாகவே குஹாபாலாய (௪௭0) ப்ரவேசிதாய ப்ரதிஷ்டாயினே மகாஹர்
ஷாய ஜிதகாமாய ஜிதேந்த்ரியாய காந்தாராய ஸுராலாய தனவே ஆத்
மனே கதயே (௪௮0) வராய மகாகீதாய மகாந்ருத்யாய அப்சரோகண
சேவிதாய மகாகேதவே தனுஷே தாதவே விகர்த்ரே சரேசுவராய
ஆவேதநீயாய (௪௯0) ஆவாஸாய ஸர்வகந்தசுகாவஹாய தோரணாய
தாரணாய வாயவே பர்ஜன்யாய ஹுதாஶனஸஹாயாய ப்ரசாந்தாத்மனே
ஹுதாஶனாய உக்ரதேஜஸே (௫00) மகாதேஜஸே ஜயாய விஜயகால
விதே ஜ்யோதிஷே அயனாய சித்தயே ஸந்திவிக்ரகாய ஶிகினே தண்டினே
ஜடினே (௫௧0) ஜ்வாலினே மூர்த்திஜாய தூர்த்தராய வணிஜே வைணவினே
வண்வினே தாளினே காலாய காலகடங்கராய நக்ஷத்ராய (௫௨0) விக்ர
காய வ்ருத்தயே குணவ்ருத்தயே அயோகமாய ப்ரஜாபதயே திஶா
பாஹவே விபாகாய ஸர்வதோமுகாய விமோசனாய சுரகணாய (௫௩0)
ஹிரண்யகவசோத்பவாய மேட்ரஜாய பலசாரிணே மகாசாரிணே ஸு
தாய சர்வதூர்வநிநாதினே சர்வவாத்யபரிக்ரஹாய பாலரூபாய பிலா
வாசாய எமமாலினே (௫௪0) தரங்கவிதே த்ரிதஶாய த்ருவிருதாய
சந்தஸே சர்வபந்தவிமோசனாய பந்தனாய சுரேந்த்ராய சத்ருவிநாயனாய
சாங்க்யப்ரசாதாய துர்வாசசே (௫௫0) சர்வசாதுநிஷேவிதாய ப்ரஸ்கந்த
னாய விபாகாய அதுலாய யஜ்ஞஸாமவிதே சர்வாவாஸாய சர்வசாரிணே
துர்வாசசே வாசவாய அமராய (௫௬0) எமாய எமகராய யஜ்ஞாய
சர்வதாரிணே தரோத்தமாய லோகிதாக்ஷாய மகாக்ஷாய விரூபாக்ஷாய
விஶாரதாய சங்க்ரகாய (௫௭0) விக்ரகாய காமாய சர்ப்பசீரநிவாஸநாய
முக்யாய வியுக்ததேகாய தேகாரயே சர்வகாமதாய சர்வகாலப்ரசா
தாய சுபலாய (௫௮0) பலரூபத்ருஸே சதாகாசாய நிரூபாய நிபான்யே
உரணாய ககாய ரௌத்ரரூபாம்ஸவே ஆதித்யாய வசவே அக்னயே (௫௯0)
சுவர்ச்சினே வசுவேகாய மகாவேகாய மனோவேகாய நிசாகராய சர்வா
வாசாய ப்ரியாவாசினே உபதேசகராய ஹராய முநயே (௬00) ஆத்மாக
ராய லோகாய ஸம்போஜ்யாய ஸகஸ்ரபுஜே பக்ஷிணே பக்ஷிரூபிணே
விசுவதீபாய விஶாம்பதயே உன்மாதாய மதனாகாராய (௬௧0) அர்த்தாய
அர்த்தகராய நாமதேவாய வாமாய ப்ராக்தேவாய வாமனாய சுத்தயோகா
பசாரிணே சித்தாய சித்தார்த்தசாதகாய பிக்ஷவே (௬௨0) பிக்ஷுரூபிணே
விஷாணினே ம்ருதவே அவ்யயாய மகாசேனாய விசாகாய சஷ்டிநாகாய
திசாம்பதயே வஜ்ரஹஸ்தப்ரதிஷ்டம்ஹினே வஜ்ரஸ்தம்பனாய (௬௩0)
ஸ்தம்பனாய க்ஷமாவ்ருதகராய காலாய மனவே மதுகராய சலாய வானஸ்
பத்யாய வாஜிமேதாய நித்யாய ஆசிரமபூஜிதாய (௬௪0) பிரஹ்மசாரிணே
லோகசாரிணே சர்வசாரிணே சுசாரவிதே ஈஶானாய ஈசுவராய காலாய
நிசாசாரிணே அநேகத்ருஸே நிமித்தஸ்தாய (௬௫0) நிமித்தாய நந்தினே
நந்திகராய ஹராய நந்தீசுவராய நந்தினே நந்திவதே நந்திவர்த்தனாய
பகஸ்யாக்ஷிநிஹந்த்ரே காலாய (௬௬0) பிரமவிதாம்வராய சதுர்முகாய
மகாலிங்காய சதுர்லிங்காய லிங்காத்யக்ஷாய மகாத்யக்ஷாய லோகாத்
யக்ஷாய யுகாவஹாய பீஜாத்யக்ஷாய பீஜகர்த்ரே (௬௭0) அத்யாத்
மாநுகதாய பலாய இதிஹாஸகர்த்ரே கல்பாய ஸோத்தமாய ஜலேசுவராய
தம்பாய தம்பகராய ரம்ஹாய வசியாய (௬௮0) வசியகராய கலயே லோக
கர்த்ரே பசுபதயே மகாகர்த்ரே மகௌஷதாய அக்ஷராய பரமாய
பலவதே சுக்ராய (௬௯0) நீதயே அநீதயே சுத்தாத்மனே சுத்தமானாய

கதிப்ரதாய பகுப்ரசாதாய சுஸ்வப்னாய தக்ஷிணௌகாய அமித்ரஜிதே வேதகராய (௭௦௦) சூத்ரகாராய வித்வாம்சாய பரமாய தபஸே மகாமேகநினாதினே மஹாகோரவசீகராய அக்னிஜ்வாலினே மகாஜ்வாலினே அதிதூமாய ஹுதாய (௭௧௦) ஹவிஷே வ்ருஷணாய ஸங்கராய நித்யாய வர்சஸ்வினே தூமகேதனாய நீலாய ஸதத்தாங்கலுத்தாய சோபனாய நிரவக்ரஹாய ஸ்வஸ்திதாய (௭௨௦) ஸ்வஸ்திபாகாய பாகினே பாககராய பகவே உத்ஸங்காய மகாங்காய மகாகர்பபுராய பகுமேன க்ருஷ்ணவர்ணாய சுவர்ணாய (௭௩௦) சர்வதேஹினாமிந்திரியாய மகாபாதாய மகாஹஸ்தாய மகாகாயாய மகாயஸஸே மகாமூர்த்னே மஹாநேத்ராய மஹாமாத்ராய விசாலாய மகாதந்தாய (௭௪௦) மகாகர்ணாய மகேஷ்வே மகாநுகாய மகாநாதாய மகாகம்பவே மகாக்ரீவாய சுசாந்தத்ருஸே மகாசக்ஷுஷே மகாவக்த்தாய அந்தராத்மனே (௭௫௦) ம்ருகாலயாய மகாகடினே மகாக்ரீவாய மகாபாஹவே ப்ரதாபவதே ஸம்யோகாய வர்த்தனாய வ்ருத்தாய நித்யவ்ருத்தாய குணாதிகாய (௭௬௦) நித்யாய தர்மஸகாயாய தேவாசுரபதயே பதயே அயுக்தாய யுக்தபாஹவே த்விவிதாய சுபர்வணாய ஆஷாடாய சுஷாடாய (௭௭௦) த்ருவாய ஹரிஹராய ஹராய வஸவே ஆவ்ருத்திமதே நித்யாய வசுஸ்ரேஷ்டாய மகாரதாய சிரோஹாரிணே விஸர்ப்பிணே (௭௮௦) ஸர்வலக்ஷணபூஷிதாய அக்ஷராய க்ஷராய யோகினே சர்வயோகினே மகாபலாய சமாம்னாயாய சமாம்னாயாய தீர்த்ததேவினே மகாரதாய (௭௯௦) நிர்ஜீவாய ஜீவனாய வாசினே நீரசாய பஹுகர்க்கசாய ரத்னப்பிரபுதாய ரத்னாங்காய மஹாஹ்ருதநிநாதக்ருதே மூலாய விசாகாய (௮௦௦) நிர்வ்ருத்தாய யக்தாய அவ்யக்தாய நிதயே ஆரோஹணாய நிரூஹாய சயிலஹாரிணே மகாதபஸே சேனாகல்பாய மகாகல்பாய (௮௧௦) யோகாய யோககராய ஹராய யுகரூபாய மகாரூபாய அயனாய ககனாய நராய நாட்யநிர்வாபணாய பாதாய (௮௨௦) பண்டிதாய விசுவலோசனாய பஹுமாலாய மகாமாலாய சுமாலாய பஹுலோசனாய விஸ்தாராய பவனாய க்ரூராய குசுமாய (௮௩௦) சுபலோதயாய வ்ருஷபாய வ்ருஷபாங்காய மல்லிபில்வாய ஜடாதராய இந்தவே விசர்க்காய சுமுகாய சுகாய சுவாயுததராய (௮௪௦) நிவேதனாய சுதன்மனே ஸங்காதாராய மகாஹனுஷே கந்தமாலினே பகவதே உத்தானாய மந்தானாய பஹுளாய பாஹவே (௮௫௦) சகலாய சர்வலோசனாய உரஸ்தாளீகராய தாளினே ஊர்த்வஸம்ஹனனாய வடவே சத்ரபத்ரசுவிக்யாதாய சர்வலோகாஸ்ரயாய மகதே முண்டாய (௮௬௦) விரூபாய விகிர்தாய தண்டினே முண்டாய விகர்ஷணாய ஹரியக்ஷாய கோகசாய சக்ரிணே தீப்தஜிஹ்வாய ஸகஸ்ரபாதே (௮௭௦) ஸகஸ்ரமூர்த்னே தேவேந்த்ராய சர்வபூதமயாய குரவே ஸகஸ்ரபாஹவே சர்வாங்காய சரண்யாய சர்வலோகக்ருதே பவித்ராய த்ருமதவே (௮௮௦) மந்த்ராய கனிஷ்டாய க்ருஷ்ணபிங்களாய ப்ரஹ்மதண்டவிநிர்மாத்ரே சதக்னினே சதபாசத்ருதே பத்மகர்ப்பாய பிரமகர்ப்பாய ஜலகர்ப்பாய ஜலோத்பவாய (௮௯௦) கர்ப்பஸ்தாய ப்ரஹ்மவிதே பிரஹ்மணே பிரமஜ்ஞாய பிராஹ்மணாய கதயே அனந்தரூபாய நைகாத்மனே திக்மதேஜஸே தமோநுதாய (௯௦௦) ஊர்த்வகாத்மனே பசுபதயே வாதரம்ஹஸே மனோஜவாய சந்தனினே பத்மநாளாக்ராய சுரப்யுத்தரணாய நராய கர்ணிகாராய மசாசக்ராய (௯௧௦) நீலமாலபிநாகத்ருதே உமாபதயே உமாகாந்தாய ஜான்னவீஹ்ருதயங்கமாய வராய வராகாய வரதாய வரேசாய சுமகாசுவனாய மகாப்ரசாதாய (௯௨௦)

அநகாய சக்ரக்னே சுவேதபிங்களாய பீதாத்மனே ப்ரயதாத்மனே ஸம்ய தாத்மனே பிரதானவிதே சர்வபார்சுவசுதாய தார்க்ஷ்யாய தர்மசாதாரணய (௯௩0) தராய சராசராத்மனே சூக்ஷ்மாத்மனே சுவர்ஷாங்கீய வ்ருஷேசுவராய சாத்யாய ருஷயே வசவே ஆதித்யாய விவசுவதே (௯௪0) சவித்ரே அர்ச்சிதாய வியாசாய சர்வார்த்தசம்க்ஷேபாய விஸ்தாராய பரியயாய பயாய ருதவே ஸம்வத்சராய மாசாய (௯௫0) பக்ஷாய ஸந்த்யாஸமாபகாய கலாய காஷ்டாய லவாய மாத்ராய முகூர்த்தாய அன்னேக்ஷபாய (௯௬0) க்ஷணய விசுவக்ஷேத்ராய பீஜலிங்காய பீஜாய ஆத்யாய அநிந்திதாய சர்வாதயே ஸதே அஸதே வியக்தாய (௯௭0) பித்ரே மாத்ரே பிதாமஹாய சுவர்க்கத்வாராய பிரஜாத்வாராய மோக்ஷத்வாராய திரிவிஷ்டபாய நிர்வாணய ஹ்லாதனய ப்ரஹ்மலோகபராகதயே (௯௮0) தேவாசுரவிநிர்மாத்ரே தேவாசுரபராயணய சுராசுரகதயே தேவாய தேவாசுரநமஸ்க்ருதாய தேவாசுரமகாமாத்ராய தேவாசுரமசாஸ்ரயாய தேவாசுரகணத்யக்ஷாய தேவாசுரகணக்ரணயே தேவாசுரகுரவே (௯௯0) தேவாய தேவாசுரபரிஷ்க்ருதாய தேவேசுரமகாமந்த்ராய தேவாசுரமகேசுவராய சர்வதேவமயாய அசிந்த்யாய சிந்த்யாய தேவாத்மசம்பவாய உத்பிஜாய சுக்ராய (௧000) ஆவேத்யாய விரஜாய விரஜாம்பராய ஈஜ்யாய ஹஸ்தினே சுரவியாக்ராய தேவசிங்காய நரர்ஷபாய நிராயுதாய வரஸ்ரேஷ்டாய(௧0௧0) சர்வதேவோத்தமோத்தமாய குரவே காந்தாய நிஜாய சர்வாய பவித்ராய சர்வவாகனய ப்ரயுக்தாய சோபனய வஜ்ராய(௧0௨0) ஈஸாநாய ப்ரபவே அவ்யயாய சிருங்கிணே சிருங்கப்ரியாய ராஜ்ஞே ராஜராஜாய நிராமயாய அபிராமாய சுரகணய (௧0௩0) விராமாய சுவர்க்கசாதனய லலாடாக்ஷாய விசுவதேகாய ஹரிணய ப்ரஹ்மவர்ச்சஸினே ஸ்தாவராணம்பதயே நவமாய இந்திரியவர்த்தனய சித்கார்த்தாய (௧0௪0) சர்வபூதார்த்தாய நித்யாய சத்யவிரதாய சுசயே வ்ரதாதயே பரமாய ப்ரஹ்மணே பக்தானம் பரமாகதயே விமுக்தாய (௧0௫0) தீப்ததேஜஸே ஸ்ரீமதே ஸ்ரீவர்த்தனய கஜாய—நமஸ்தே நமஸ்து.

வியாஸமுநிவனே! பிரஹ்மேந்திராதி தேவர்களுங்காண்டற்கரிய சிவபெருமானை முன்னோர்காலத்தில் யான் இந்த ஆயிரந்திருநாமங்களாற் சிரத்தைபக்திகளுடன் தோத்திரஞ்செய்தேன். இந்தத்தோத்திரத்தால் நாடோறும் பக்தியோடு துதித்தவன் மேலானபதவியையடைவான். இது பிரமதேவராற் சொல்லப்பட்டது. ருஷிகளும் தேவர்களும் நாடோறும் இந்தத்திருநாமங்களால் துதிசெய்கிறார்கள். பக்தியுடன் தினந்தோறும் இதனைற் றுதிசெய்த பக்தர்களைச் சிவபெருமான் கருணைகொண்டு தமிடத்திற் சேரச்செய்கின்றார். பூலோகத்தில் ஆஸ்திகர்களாய் நம்பிக்கையுடைய சாதுக்கள் அநேகர் இந்த ஆயிரந்திருநாமங்களைத்துதித்துச்சத்கதியடைந்திருக்கிறார்கள். இதனையேதோத்திரஞ்செய்து ஆநந்தித்திருக்கிறார்கள். மாநுடஜனனங் கோடியுண்டானல் அதில் ஒருஜனனத்திற் சிவபெருமானிடத்திற் பக்தியுண்டாகிறது. அப்பக்தி ஸ்திரமாயிருக்கும்பக்ஷத்தில் அதுவே முக்திக்குக்காரணம். இந்தத் தோத்திரம் தேவர்களுக்குங்கிடைத்தற்கரியது. சிவபக்தியோ அவ்விறைவனது பிரசாதத்தினலேயே யுண்டாகத்தக்கது. எந்தவகையிலேனும் சிவபெருமானையே யிடைவிடாது

தோத்திரஞ்செய்பவர்கள் சமுசாரசாகரத்தினின்று கறையேறுவார்கள். தேவர்களும் சிவபெருமானைப் பூசித்தே தமது உயர்பதவிகளை யடைந்தனராதலின் மாநுடர் முக்தியடைதற்கு மகாதேவனைத் துதித்தலை நீங்க வேறொருமார்க்கமுங்கிடையாது. இந்தத்திருநாமங்களாற் சிவபெருமானை யிடைவிடாது துதிசெய்து வந்த தண்டியென்பவர் உயர்ந்த சிவகதியை யடைந்தார். பிரமாவானவர் இந்தத்தோத்திரங்களை இந்திரனுக்குபதேசித்தனர். இந்திரன் மிருத்யுவுக்கும், மிருத்யு உருத்திரருக்கும், உருத்திரர் தண்டிக்கும் முறையே உபதேசஞ்செய்தனர். தண்டியென்பவர் அநேககாலந் தவஞ்செய்து இந்த மந்திரரூபமான சிவஸஹஸ்ரநாமங்களைத் தனக்குக் கிடைக்கப்பெற்றார். தண்டியென்பவர் சுக்கிரனுக்கும், சுக்கிரபகவான் கௌதமருக்கும், கௌதமர் வைவசுவதமநுவுக்கும், வைவசுவதமநு பதரிகாசிரமத்திற் றவஞ்செய்து கொண்டிருந்த தனக்கிஷ்டராகிய நாராயணனுக்கும், தர்மப்பிரஜாபதியின்புதல்வனுன நாராயணன் இயமனுக்கும், இயமன் மிருகண்டுவுக்கும், மிருகண்டு மார்க்கண்டேயருக்கும், மார்க்கண்டேயர் புத்திசாலியான நாசிகேதருக்கும், நாசிகேதர் உபமன்யுவுக்கும், உபமன்யுவானவர் செல்வமுண்டாகும்படி கிருஷ்ணமூர்த்திக்கும் முறையே உபதேசிக்கப்பட்டுவந்தது. இந்தஆயிரந்திருநாமங்களும் இவ்வண்ணமாக உலகத்திற் பிரசித்திபெற்றன. இந்தஸஹஸ்ர நாமஸ்தோத்திரமானது காமபோகத்தையும், சர்வசித்தியையும்,சுவர்க்கத்தையும், தேகாரோக்கியத்தையும், தீர்க்காயுளையும், தனதானியவிருத்தியையும் உண்டுசெய்யும். இதனைநாடோறும் படிப்பவர்க்கு யக்ஷ தானவ பசாசாதிகளால் ஒருவித விக்கினமும் உண்டாகமாட்டாது. யாவர் ஜிதேந்திரியராயும், பிரமசாரிகளாயும் பூரணமனத்துடன் இதனை ஒருவருஷகாலம் ஜபிப்பரோ அவர் பசுபதியாகிய சிவபெருமானைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிப்பார். இதனைச் சிவசந்நிதியில் தோத்திரஞ்செய்தவர்கள் சகலபாவங்களையு மொழித்து அசுவமேத பலனையும், சதுர்த்தசிவிரத பலனையு மடைவார்களென ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

சதுர்த்தசிவிரதசமானமுரைத்தது

முற்றிற்று.

இருபத்தோன்பதாவது
துலாபுருஷதானமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமார முநிவரைநோக்கி ஸ்வாமீ! தருமமொன்றினுலேயே சதுர்வித புருஷார்த்தங்களையு மடையலாமெனக்கூறினீர்; ஆதலின் பண்டிதனுயிருப்பவன் தருமத்தைச் செய்யவேண்டுமென்று புலப்படுகிறது. சாத்விகமாகிய தவம் தானம் விரதம் நியமமுதலியவற்ருல் ஸ்வர்க்கலோகத்தையடையலாம். உலோபாதி தீக்குணங்களையொழித்து மாநுடஜனனத்தில் தானஞ்செய்தவர் சிவபதவியையடைவர்.



(44) துலாபுருஷதானம்.

ரஜோகுணமாகிய தவஞ்செய்தவர்கள் அதியாசையுடையவர்களாய் உலகத்திற்பிறந்து சுவர்க்கபோகத்தை விரும்புவார்கள். தமோகுணமானதவஞ்செய்தவர்கள் குரூரமானகுணத்துடன் உலகத்திற் பிறப்பார்கள். தாமசகுணமுடையோருக்கு நேத்திராதி இந்திரியங்களாலேயே பாவமுண்டாகிறது. ஆனபடியால் ரஜோகுண தமோகுணங்களின்றிச் சத்துவகுணத்துடன் செய்யுந்தவத்தையே தவமென்று சொல்லப்படும். சருகுபக்ஷண வாயுபக்ஷணங்களுடன் வனசஞ்சாரஞ்செய்து இந்திரியநிக்கிரகஞ்செய்யாதவர்களைக்காட்டிலும் தமதுவாசஸ்தலத்திலேயேயிருந்துகிருகஸ்தாச்சிரம தருமத்தை யநுசரித்து இந்திரிய நிக்கிரகஞ் செய்தவர்களே சிறந்தவர்களாவர்கள். ஆசையையொழித்துப் பிறர்க்குத் தீமைபுரியாது தம்மிடத்திலேயே யிருப்பவர்களுக்கு அதுவே தபோவனமாகும். நான்காவதும் மேம்பட்டதுமாகிய ஸந்நியாசாச்சிரமம்சிறந்ததாயினும் இந்திரியநிக்கிரகமின்றி அஃது கைகூடாதாதலின் புத்திமான்கள் இல்வாழ்க்கையிலிருந்தே இந்திரிய நிக்கிரகஞ்செய்து பரமபதமடைவார்கள். தபோவனத்திலிருந்து தவஞ்செய்து பசித்து ஊனையடைந்தவர்களுக்கு, இல்வாழ்க்கையிலேயிருந்து அன்னபானாதிகளைக்கொடுத்து உபசரித்தவன் அத்தவசியின் புண்ணியத்தில் ஒரு பாகத்தைப்பெறுவான். ஆதலின் பிரமசரியாதி சதுர்வித ஆசிரமங்களில் இல்வாழ்வோனே ஏனைய மூன்று ஆச்சிரமிகளுக்குத் துணையாக நிற்பதுடன், அவன் இவ்வுலகத்தில் இஷ்டபோகங்களை யநுபவித்து, பின்னர் சுவர்க்கலோகத்தை யடைந்து சந்தோஷத்துடன் வாழ்ந்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், அக்கிரகஸ்தர்கள் பாவஞ்செய்துவிட்ட பக்ஷத்தில் யாது தானஞ்செய்வதால் தமது பாவத்தையொழித்துச் சுவர்க்கத்தை யடைவார்களோ அதனை அடியேனுக்குச் சொல்லவேண்டுமெனக்கேட்க ஸநத்குமாரமுநிவர் சொல்லலாயினர்.

ஸத்யவதியின் புத்திரனே! பாவத்தையொழித்து, சர்வசம்பத்துக்களையுமளித்து, இம்மை மறுமைப்பலன்களைக் கொடுக்கவல்லதாகிய ஒருதானத்தை யுனக்குச்சொல்லுகின்றேன். அதுவோ, நித்ய நைமித்ய கருமங்களை முடித்துச் சுபகரமான முகூர்த்தத்திற் சிவபெருமானைத் தியானித்துச்செய்யத்தக்கது. நரகத்தை யடையாது விலக்க விரும்புகிறவன் சுத்தமான திரவியத்தினால் இந்தத் தானத்தைச்செய்து தேவர் பிராமணர்களுக்கு உபயோகித்துச் சிரேஷ்டமான கதியையடைகிறான். பூர்வம் இந்தத்தானத்தைச்செய்த புத்திரர்களால் சதாநீகமுநிவர் கடைத்தேறினர். தர்மசாஸ்திரத்திற் சொல்லியபடி புண்ணியக்ஷேத்திரத்தில் தானகாலமறிந்து சத்பாத்திரர்களுக்குச் செய்யும்பக்ஷத்தில் விசேஷபலனையடையலாம். பெரும்பொருளாற் செய்யத்தக்கதும், தேகசுத்தியுண்டாக்கத்தக்கதும், சுவர்க்கபதவியை யடையச்செய்வதும், மஹாபாதகங்களை யொழிப்பதுமாகிய இந்தத்தானத்தைச் செய்யும்பக்ஷத்தில், சத்தியமாக மோக்ஷத்தை யடைவான். பிருகுவமிசத்திற் பிறந்த பரசுராமர் இருபத்தொரு தலை

முறைவரையில் க்ஷத்திரியவதஞ் செய்தபாவத்தை யொழிக்கப் பலவித தானஞ்செய்தும் அசுவமேத முதலியன நடத்தியும் அதனையகற்ருது வருந்தியிருக்குஞ் சமயத்தில் திரிநேத்திரதரராகிய சிவபெருமானுல் இந்தத் துலாபுருஷ தானமானது அவருக்கு உரைக்கப்பட்டது. பாவத்தையே செய்துவந்தவனும், பலரைச்சிறையிலிட்டவனும், அநேகரைக்கொன்றவனும், பரஸ்திரீயைப்புணர்ந்தவனும், மதுபானஞ்செய்தவனும், மாமிசபக்ஷணஞ்செய்தவனும், புசிக்கத்தகாதவற்றைப் புசித்தவனும், சிசுஹத்தி செய்தவனும், குருபத்தினியைப் புணர்ந்தவனும், யாகஞ்செய்தற்கு அருகரல்லாதவருக்கு யாகஞ்செய்வித்தவனும், ஒருதினம் உபவாசமிருந்து இந்தத்தானத்திற்கு எத்தனஞ் செய்யவேண்டும்.

வியாஸமுநிவனே! துலாபுருஷதானஞ் செய்பவன் முதலில் இந்திரன் வருணன் வாயு நிருதி புதன் அக்கினி முதலிய தேவர்களுக்குப் பிரீதியாக ஹோமஞ்செய்யவேண்டியது. கிரகதேவதை இஷ்டதேவதைகளுக்கு வியாஹ்ருதியால், அதன்பின்னிட்டு, ஓமஞ்செய்யவேண்டியது. "யத்தேவா தேவஹேடனம்", என்னும் மந்திரத்தினுலும் "யதிதிவா" என்னும் மந்திரத்தினுலும், "யஜ்ஜாக்ரதா" என்னும் மந்திரத்தினுலும் பசுநெய்யினுல் சாகல்லியசூத்திரோக்தமாக ஹோமஞ்செய்யவேண்டியது. இவ்வாறு தேவப்பிரீதியாக ஹோமஞ்செய்து இரண்டுயஜ்ஞஸ்தம்பங்களை நிறுத்தி, அவற்றிற் கணபதியையும் ஸ்கந்தரையும் ஆவாஹனஞ்செய்து கந்தபுஷ்ப தூபதீபங்களால் ஆராதித்து அவர்களனுக்கிரகத்தைப்பெற்று, பிநாகபாணியாகிய சிவபெருமானை ருத்ரஸூக்தத்தால் ஆசனம் முதலான ஷோடசோபாசாரங்களோடு பூஜித்து, பல பக்ஷியங்களை நிவேதித்து, யானைத்தோலையணிந்தவனே! உமாபதியே! சூலபாணியே! என்று துதித்து, அடியேன் செய்த பூஜையை அங்கீகரித் தருள்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்து, பிரமகூர்ச்ச பவித்திரமணிந்து, "ஸூர்யஸ்யைவது" என்னும் மந்திரத்தினுல் ஹோமஞ்செய்து தூபதீப நைவேதனமுடித்து, "துலாபுருஷாயஸ்வாஹா" என்று ஆஹுதிசெய்து, பூர்ணுஹுதியை முடித்து, துலாவைச் சித்தஞ்செய்து அதின் ஒரு தட்டில் திரவியத்தை வைத்து மற்றொரு தட்டில் தான் ஏறவேண்டியது. அதன்பின்னர், துலையே! பூமிதேவியே உன் தாயும், பிரமதேவன் உன் தந்தையுமாயிருப்பது ஸத்தியமானுல், நீ சத்திய தருமரூபமாகி உன்பேரி லேறியிருக்கிறவென்னைத் தரிக்கவேண்டியது. சத்தியத்தினுலேயே தேவர்களும் முனிவர்களும் நற்கதியடைந்திருக்கிருர்கள். அந்தச் சத்தியரூபமாகிய நீ யென்னுற் செய்யப்பட்ட தானத்தை யங்கிகரித்து என் பாவத்தைப் போக்கடிக்கவேண்டும் என்று பிரார்த்தித்து, துலையினின் றிறங்கிவிடவேண்டியது. பாரமான தனது தேகத்தைக்காட்டிலும் திரவியத்தைச் சாமானியமாக நினைப்பவனே இந்தத் தானஞ்செய்தற் கருகனுவான். இந்தத் தானத்தை ஒருதரஞ் செய்தவன் சகல பாவங்களுமொழிவான். இரண்டா

முறை செய்தால் சிவகணத்தலைவர்களி லொருவனுகச் சந்தேகமின்றி யாவான். மூன்றுமுறை செய்தால் சிவசாரூப்பியத்தையடைவான். இந்தத் தானம் பூர்ணை, வருஷப்பிரவேஸம், கிரஹணகாலம்முதலிய புண்ணிய காலங்களில், புண்ணியக்ஷேத்திரத்திலாவது, தீர்த்தக்கரையிலாவது செய்யத்தகும். அப்படிச்செய்தவன் கிருதகிருத்தியனுவான். இந்தச் சரித்திரத்தைக் கேட்டவனும், அதனைச்செய்ய விரும்பியவனும் பாவங்களை விலகிச் சுவர்க்கலோகத்தை யடைவார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

துலாபுருஷதானமுரைத்தது

முற்றிற்று.

முப்பதாவது

பரசுராமர் சரிதமுரைத்த அத்தியாயம்.

வியாஸபகவான் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ ! பரசுராமர் இந்தத் தானத்தைச் சிவபெருமானுல் உபதேசிக்கப்பெற்றுச் செய்தனரெனக் கூறியருளினீரன்றே ? அவர் பரிசுத்தராயிற்றே. க்ஷத்திரிய குலத்தை அவர் இருபத்தொருமுறை வதஞ்செய்தற்கும், சிவபெருமான் அவருக்கு இவ்விரதத்தை யுபதேசித்தற்குங் காரணங்களெவை ? அவற்றையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார். வியாஸமுநிவனே ! சிவபக்தனுயிருக்கிற பரசுராமருடைய ஜனனத்தையும், அவர் சௌரியவீரியங்களைப்பெற்ற வகையையும், துலாபுருஷதானஞ்செய்த காரணத்தையும் நீ விரும்பியவகையே சொல்லுகின்றேன்.

பூர்வத்தில் தர்மவானுன குசிகனென்னும் அரசனெருவனிருந்தான். அவன் பலசாலியான ஒரு புத்திரபாக்கியத்தை விரும்பி, தன்னுடல் மிகவும் வருந்தப் பெருந்தவஞ்செய்து, ஆயிரங்கண்களையுடைய இந்திரனைத் தரிசித்து அவனையே புத்திரனுகப்பெற்றனன். அப்புதல்வனுக்குக் காதி யென்று பெயராயிற்று. காதியென்பவனுக்கு ஸத்யவதி யென்னும் ஒரு புதல்வியுண்டானுள். அப்புதல்வியை ரிசிகமுநிவன் மணஞ்செய்தனன். ரிசிகமுநிவன் காதிராசனுக்குச் சந்ததி விருத்திசெய்ய விரும்பி ஓர் யாகஞ்செய்து, அதினின்று ஜனித்த சருவிரண்டனையுந் தன் மனைவிகையிற் கொடுத்து, உன் தாயின் கர்ப்பத்தினின்று பிறராற் செயிக்கமுடியாத க்ஷத்திரிய சிரேஷ்டனெருவனும், உனக்குப் பிராமணதர்மங்களிற் குறைவின்றி யென்னைப்போல விளங்கும் புதல்வனெருவனும் பிறப்பார்கள். நீ யிதனையும் உன் தாய் இதனையும் புசித்திர் எனக்கூறி அவற்றைக்கொடுத்து, வனத்தையடைந்து தவச்செயலிலிருந்தனர்.

அந்தச்சமயத்தில் காதிராசன் தன்மனைவியுடன் ரிசிகமுநிவனது ஆச்சிரமத்தையடைய, ஸத்யவதிகண்டு சந்தோஷித்தத்துடன் விரைந்து தன் கணவன் கொடுத்த சருக்களிரண்டையுந் தன் தாயினிடங் கொடுத்

து தன் கணவன் கூறியதை வாய்விண்டுகூற, தாயானவள் சந்தோஷத்துடன் அவற்றை வாங்கி, வஞ்சனைசெய்ய விரும்பினவளாய்த் தான் புசிக்கவேண்டிய சருவைக் குமாரத்திக்குக்கொடுத்து,குமாரத்தியுட்கொள்ளவேண்டிய சருவைத் தான்புசித்தனள். அதனால் ஸத்யவதியானவள் க்ஷத்ரியகுலகாலனானபுத்திரனைக் குரூரதேஜஸுடன் கர்ப்பத்தி லடைந்தனள். பின்னொருகாலத்தில் ரிசிகமுநிவர் தன்மனைவியின் பயங்கரமான கர்ப்பத்தை ஞானதிர்ஷ்டியாலுணர்ந்து ஸத்யவதியைநோக்கி, பெண்ணே! நீயுன் தாயால் வஞ்சிக்கப்பட்டனை. மஹாதபசியாக உன் தம்பி பிறக்கப்போகிறான். அவன் தன் வேதியத்வத்தால் சர்வலோகப் பிரசித்தனாவான் எனக்கூறினர். அதனைக்கேட்டஸத்யவதியானவள் ரிசிகமுநிவனைப்பணிந்து, நாயகா! பிராமணர்களுக்குள் துஷ்டனான பிள்ளை யெனக்குப் பிறப்பானென்று சர்வ சாஸ்திரங்களையுமுணர்ந்த தேவரீர்சொல்வது தகுதியன்று என, முநிவர் அடிபெண்ணே! அஃதென்கருத்தன்று; உன்தாயின்செயலே அவ்வகையாகச்செய்தது என, ஸத்யவதி ஸ்வாமீ! அந்நியலோகங்களையுஞ் சிருஷ்டிக்கவல்லவராகிய நீர் எனக்குச் சத்புத்திரோத்பத்தி கைகூடும்படிதயைசெய்யவேண்டும் என, ரிசிகர் ஐயோ! நான் அக்கினிதேவனை நோக்கி அந்தச்சருவை யுண்டுசெய்கையில், ஜெபித்த மந்திரம் அத்தகையதன்று; யான் விளையாட்டிற்கும்பொய்சொல்லமாட்டேன் என, ஸத்யவதி ஸ்வாமீ! அப்படியாயின் அவ்வகையவொருவன் நம்மிருவருக்கும் பவுத்திரனாகத் தோன்றட்டும் என வேண்ட, ரிசிகர் பெண்ணே! யான் புத்திரனிடத்திலாவது பவுத்திரனிடத்திலாவது தாரதம்மியம் வைக்கத்தக்கவனல்லன். உன் விருப்பின்படியே யாகுகவெனக்கூறினர். அதனால் அவர்கள் பவுத்திரராகவும் ஜமதக்கினிமுநிவருக்குப் புத்திரராகவும், தவம் இந்திரிய நிக்கிரக முதலிய சத்குணங்கள் நிறைந்தவராகவும் பரசுராமர் தோன்றினர். காதிராசன் மனைவி தவத்தில் மேம்பட்டு அக்கினிக்குச்சமானமான பிரமதேஜஸோடுகூடிய விசுவாமித்திரமுநிவனைப் பெற்றனள். அதுநிற்க.

வியாஸமுநிவனே! அவ்வாறுதோன்றிய பரசுராமர் க்ஷத்திரியர்களுக்குசிதமான புஜபலத்தோடும், தநுர்வேதத்தின் எல்லையுணர்ந்தவராயும், சகலசாஸ்திரங்களையு மறிந்தவராயும், ஜ்வாலையோடுகூடிய அக்கினிக்குச் சமான காந்திமானாயும் விளங்கிச் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்துகொண்டிருந்தனர். அப்படி யிருக்கையில் ஒருகாலத்தில், ஹைஹய வமிசத்தில் தோன்றிய கிருதவீர்யன் புதல்வனான அதிதேஜஸும் ஆயிரங்கைகளும் சூரியசமானமான காந்தியுமுடைய கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன், திரிஷிதரென்னும் முநிவரைப்பூசித்து அவரருளால் அக்கினி பகவானையே அஸ்திரமாகவிருக்கப்பெற்று, அவ்வஸ்திரத்தால் அநேகநகரங்கள் கிராமங்கள் நந்தனவனங்கள் முதலியவற்றைச் சுட்டெரித்து, ஒருகாலத்தில் சமுத்திரத்தையும்ருஷியாச்சிரமங்களையுங் கொளுத்திக்கொண்டு, ஆபஸ்தம்பமுநிவரிருக்கும் ஆச்சிரமத்தையுங்கொளுத்த,

அம்முநிவர்முனிந்து அவனைநோக்கி, நீ விரைவிற் பரசுராமனாற் சிரமொழிக வெனச்சபிக்க அதனைப்பெற்றுக்கொண்டு, சிலகாலஞ்சென்ற பின்னர் ஜமதக்கினி முநிவரது ஆச்சிரமத்தை யடைந்தனன். ஜமதக்கிநி முநிவர் கார்த்தவீரியனுக்கு மரியாதை செய்திருத்தினர். அப்பொழுது அவரிடத்தில் இருந்துகொண்டிருந்த காமதேனுவைக்கண்டு இதுநான் நினைத்தவற்றையெல்லாங் கொடுக்குமாதலின் இதனைப்பெற வேண்டுமென்று கருதிய கார்த்தவீரியன் அவரைநோக்கி, யான் உமக்கு அநேகம் பசுக்களைக் கொடுப்பேன், இக்காமதேனுவைக்கொடுக்க வேண்டுமெனக்கேட்க, அவர் மறுக்க, கார்த்தவீரியன் போர்செய்ய எத்தனிக்க, அந்தச்சமயத்தில் அருகிருந்த பரசுராமர் தனது ஆயுதங்களால் அவனுடன் போர்செய்து அவனது ஆயிரம் புயங்களையும் அறுத்தெரிந்து, மகேந்திரகிரியையடைந்து சிவசந்நிதியில் தவஞ்செய்து கொண்டிருந்தனர். அதனையறிந்த அர்ச்சுனனுடையபுத்திரர்கள் ஜமதக்கினிமுநிவனிடம் வந்து அவரைக்கொன்றுவிட்டனர். பின்னர் மகேந்திரகிரியிற் றவஞ்செய்துகொண்டிருந்த பரசுராமர் சிவப்பிரசாதமடைந்தவராய்த் தனதிடத்தை யடைந்து தன் தந்தையிறந்ததற்காக வருந்தி, பழிக்குப் பழிவாங்கக்கருதி, கார்த்தவீரியனையும் அவனது புத்திர பௌத்திரர்களையுங் கொன்று, தன் தந்தையின் உடலிற் பட்ட அஸ்திர காயங்களைக்கண்டு மனங்கலங்கி, இந்த க்ஷத்திரியகுலத்தை நிர்மூலமாகச்செய்வேனென்று சபதஞ்செய்துகொண்டு அவ்வாறே க்ஷத்திரியர்களையெல்லாங் கொன்று பூமிமுழுவதும் எவ்விடத்திலும் க்ஷத்திரியப்பூண்டென்பது சிறிதுமின்றிச் செய்து, பூமியைப் பிராமணருக்குத் தானஞ்செய்துவிட்டுத் தவச்செயல் மேற்கொண்டு அநேககாலங்கழித்து மீண்டும் வந்து பார்க்கையில், அந்த க்ஷத்திரியஸ்திரீகள் பிராமணர்களைக்கொண்டு சந்ததி விர்த்திசெய்துகொண்டதால் அப்புத்திரர்கள் பிராமணர்களிடம் இராச்சியத்தை வாங்கிப் பரிபாலனஞ் செய்ய, அந்தக் குலம் தலையெடுக்கவொட்டாது ஆங்காங்குஞ்சென்று க்ஷத்திரியர்களைக் கொன்றனர். இவ்வாறு இருபத்தொருமுறை க்ஷத்திரியகுலத்தைக் கருவறுத்தொழித்தனர். அதிற் சில க்ஷத்திரியஸ்திரீகள் பிராமணருடைய கிருபையால் சில பிள்ளைகளைக் காப்பாற்றிக்கொண்டனர். பரசுராமர் தான்செய்த க்ஷத்திரியகொலை நீங்கும்படி பூமிமுழுவதையும், அநேக பசுக்களையும் காசிபமுநிவருக்குத் தானஞ்செய்து, அதனாலேயுந் தீராது, அசுவமேதஞ்செய்து அதனாலேயும் ஒழியாது, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, இப்பாவம் எவ்வகையாக நீங்குமெனக்கேட்க, சிவபெருமான் அவரை நோக்கித் துலாபுருஷதானஞ் செய்யும்படி சொன்னார். சர்வேசுவரனாகிய சிவபெருமானாற் சொல்லப்பட்ட சிறந்த துலாபுருஷதானத்தைப் பரசுராமர் செய்து தன் பாவங்களினின்று நீங்கிப் புனிதமானவராய்த் தவச்செயலை மேற்கொண்டு சென்றனர். வியாஸமுநிவனே! க்ஷத்திரியகுலத்தைப் பலமுறை துவம்சஞ்செய்த பாவத்தைப் போக்கடிக்கும்படியாக, இந்தத் தானம் பரசுராமராற் செய்யப்பட்டது. பிரமஹத்தியாதி பெரும்

பாவங்களையெல்லாம் அழிக்கத்தக்க இந்தத் துலாபுருஷதானத்தைப் பொன்னைக்கொண்டு செய்யச் சக்தியில்லாதவர்கள் வெள்ளி-தேன்-நெய்-வெல்லம்-வஸ்திரம்முதலிய பொருள்களையாவது துலாவிலேற்றிச் சுவர்ண தக்ஷிணையுடன் தானஞ்செய்தால், கீர்த்தியையடைந்து சுவர்க்காதிபோகங் களை யடைவார்கள். மனவாக்குக்காயங்களாற் செய்த பாவங்களும், கொலை முதலியவற்றாற் சம்பவித்த பாவங்களும் இந்தத் துலாபுருஷதா னத்தால் நசிக்கும். எந்தப் பாவத்தைச்செய்தபோதிலும் துலாபுருஷ தானஞ்செய்தவன் அவற்றினின்று நீங்கிப் பரிசுத்தனாவானென்பதற்குச் சந்தேகமில்லை. 'பால்யத்திலாவது யவ்வனத்திலாவது விருத்ததிசையிலா வது யான் செய்திருக்கும் பாவங்களை க்ஷமித்தருளவேண்டும்; துலாபுருஷ ரூபமாயிருக்கும் பரசிவனே! யான் துலாவிலேறிப் பொன்னை நிறைகாட்டி யும்மை நமஸ்கரிக்கின்றேன்' என்று பிரார்த்தித்துப் பல பிராமணருக்கு விநியோகப்படுத்தவேண்டியது. துலாபுருஷதானத்தை ஒரே வேதியனுக் குக் கொடுக்கப்படாது. அப்படி ஒருவனுக்கே கொடுத்தால் தாதாவி னுடைய பாவம் பரிகரிக்கப்படமாட்டாது. இந்தத் துலாபுருஷதானத் தைச் செய்தவன் பதினான்கு இந்திரபட்டம்வரையிற் சுவர்க்கலோகத்தில் இஷ்டகாமியங்களை யநுபவித்து வாழ்ந்திருப்பான் என்று ஸநத்குமார முநிவர் வியாசபகவானுக்குரைத்தனர்.

பரசுராமர் சரிதமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தோன்றாவது

பாதாளலோகவர்ணனை யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! எந்தத் தானத்தைச் செய்வதாற் சகல தானங்களையுஞ்செய்த பலனை யடையக் கூடுமோ அந்தத்தானத்தை எனக்காகவும் மாநுடர்க்காகவுஞ் சொல்லி யருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லலாயினர். எல் லாத் தானங்களையுஞ்செய்த பலனை யளிக்கவல்லதும் முக்தியைக்கொடுக்க வல்லதும் சமுசார துக்கத்தினின்று கரையேறச்செய்யவல்லதும் சப்த லோகங்களுக்கும் அதிபனாகச்செய்யத்தக்கதும் சூரியசந்திராதிகளுள்ள வரையில் சுவர்க்கபதவியில் தன் வமிசத்தாருடன் வாழ்ந்து பின்னர் விஷ்ணுபதவியைப் பெறச்செய்யத்தக்கதுமாகவுள்ளது பிரமாண்டதானம் எனக்கூற, வியாஸமுநிவர் பிரமாண்டதானமென்பது எத்தகையது? என வினவ, ஸநத்குமாரமுநிவர் வியாஸனே! அண்டாண்ட பிரமாண்டங்களை யும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளுடன் படைத்தளித்தழிக்கும் ஆற்ற லுடையவன் சிவபெருமானேயென்று தனது ஞானத்தாலுணர்ந்து, யான் எனது என்னுந் தற்போதமொழிந்து, யாவுஞ் சிவன் செயலெனக்

கொண்டு, சுகதுக்கங்களுங் கர்மஞானங்களும் அவனாலேயே திருவுள்ளஞ் செய் தருளப்பட்டனவென்னு மனத்துடன் உலகவியாபாரமின்றி இறைவனிடத்திலேயே மனதைப் பதித்திருத்தல் பிரமாண்டதானமெனப்படும். அத்தகையினர் எல்லாப் போகபாக்கியங்களையும் இம்மை மறுமைப்பலன்களையும் ஐயமின்றி யடைவரெனக் கூறக்கேட்ட வியாஸமுநிவர் மேலும் வினவலாயினர்.

ஸநத்குமார முநிவரே ! பிரமாண்டம் எப்படி யுண்டுசெய்யப் பட்டது? அஃதியாவரால் படைக்கப்பட்டது ? அஃதெவ்வளவு விஸ்தீரணமுடையது? அதற்கு ஆதாரம் யாது ? இவற்றை யெனக்கு விளங்கச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவனே ! இந்தப் பிரமாண்டத்தின் விஸ்தீரணத்தையும் உயரத்தையும் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். இந்தப் பிரமாண்டத்திற்குக் காரணமாயும் அவ்யக்தமாயும் அநாமயமாயும் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயும் எல்லாவற்றிற்கும் லயத்தானமாயும் விளங்குஞ் சிவத்தினின்றும் ஆகாயம் உண்டாயிற்று. ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று ஜலமும், ஜலத்தினின்று பிருதிவியுந் தோன்றின. பஞ்சபூதாத்மகமான பிரமதேவர் உண்டாகிப் பிரமாண்டத்தைச் சிருஷ்டிசெய்தனர். அவற்றுள் பாதலலோகங்கள் ஏழு, சுவர்க்கலோகங்கள் ஏழு. இந்த வுலகங்களுக்கு ஆதாரமாக வெண்ணிறமான ஆதிசேஷன் விளங்குவான். அவனை விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். பிரமன் வாக்கின்படி அவ்வாதிசேஷன், சகல லோகங்களையுந் தாங்கிநிற்பான். அந்தச் சேடனுடைய குணானுபவங்களைத் தேவர் முநிவர் முதலானவர்களாலுஞ் சொல்லிமுடியாது. ஆயிரஞ் சிரங்களும் தேவர் முநிவர்களாற் செய்யப்படும் பூசையும், சித்தர்களாற் சொல்லப்படும் அனந்தனென்னும் பெயரும், எல்லாத்திக்குகளையும் பிரகாசிக்கச்செய்யும் ஸ்வஸ்திகாபூஷணம் போன்ற ஆயிரம் பணாமுடிகளும், நெருப்போடு பிரகாசிக்கும் வெண்மலை போலச் சுவாலையோடு சுழன்றுகொண்டிருக்கும் ஈராயிரம் விழிகளும், நவமணிகளிழைத்த கிரீடகுண்டலங்களும், திவ்விய மணம்பொருந்திய மலர்மாலைகளும், வெண்ணிறத்த ஹாரமும், நீலநிறத்த வஸ்திரமும், கைலாயகிரியைப்போன்றுயர்வும், கலப்பை இருப்புலக்கைகளாகிய ஆயுதங்களும், வருணன் கன்னிகையாகிய வாருணி அருகிருந்து செய்யும் உபாசனையும், பிரகாசித்துக்கொண்டிருக்கும் விஷஜ்வாலையும், * சங்கர்ஷணாத்மகமும், ருத்திரரூபமும், பிரளயகாலாந்தத்திற் சர்வலோகங்களையுந் தன்னிடத்தொடுக்கும் வல்லபமும், சர்வாண்டங்களையும் ஓர் கடுகுபோலச் சுமக்கும் ஆற்றலும் உடையவராக விளங்கும் ஆதிசேஷனுடைய உருவத்தை ஒருவருக்கும் வர்ணிக்கச் சாத்தியப்படமாட்டாது. அவனுடைய சிரோரத்தினங்களின்பேரிற் படிந்திருக்கும் பூமியானது அம்மணிகளின்

* சங்கர்ஷணம் - சகலத்தையும் இழுக்குஞ் சக்தி.

பிரதிபிம்பத்தாற் குசுமமாலைபோல விளங்காநிற்கும். அந்தச் சேடன் சோர்வுற்றகாலையில், சமஸ்த பர்வதங்களோடுகூடிய உலகமுழுவதும் அசையும். அது பூகம்பமெனப்படும். அவனுடைய குணவிசேடங்களை சித்தர் முநிவர் கந்தர்வர் உரகர் கின்னரர் யக்ஷர் தைத்தியர் தானவர் முதலானவர்கள் அறியாதவர்களாகி அநந்தனென்று சொல்லுவார்கள். அழிவில்லாதவனாக விளங்கும் அந்தச் சேஷன் தன் மார்பிலணிந்திருக்குஞ் செஞ்சந்தனத்தைத் தனது பெருமூச்சாற் பரக்கச்செய்து திக்குகளாகிய மாதர்களையடையச்செய்யவல்லவன். அவனிடத்தில் அநேககாலந் தவஞ்செய்த கர்க்கர் (முநிவர்) நிமித்தசாஸ்திரத்தையும் சகலமானஜோதிஷசாஸ்திரத்தையும் அடைந்தனர். பாதலலோகங்கள் ஏழுந் தனித்தனி பதினாயிரயோசனை விஸ்தீரணமும், இருபதினாயிரயோசனை யுயரமும் உடையன. பாதாளலோகங்களில் ரத்தினமயமான பூமியும், ரத்தினங்களிழைத்த உப்பரிகைகளும், மதில்களும், தங்கம் விளையும் பூமியுமுள்ளன. அவ்விடத்தில் திதி புத்திரர்களான தைத்தியர்களும் நாகராசர்களும் இராக்ஷஸர்களும் வசிக்கிறார்கள். காந்தியோடு கூடிய இரத்தினங்களையுடைய பாதாளலோகமானது சந்தோஷத்தை அளவின்றி யுண்டுசெய்யும். அதற்குச் சமானமான லோகங் கிடையவேகிடையாது. தேவ தானவ கன்னிகைகளாலுண்டாகும் மோகத்தை விடுத்த விரக்தனுக்கும் பாதாளலோகத்தில் விருப்பமுண்டாகத் தடையிராது என்று திரிலோகசஞ்சாரியாகிய நாரதபகவான் ஸ்வர்க்கலோகவாசிகளாகிய இந்திராதி தேவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவ்விடத்தில் பகலிற் சூரியவொளியும் இரவிற் சந்திரகாந்தியுங் கிடையா. குளிர்ச்சி வெப்பங்களும் இல்லை. இரத்தினவொளியே இவை யாவுமாக விளங்கும். அங்கே தேவாமிர்தத்திற்குச் சமானமான பக்ஷியபோஜ்யங்களும், திருப்தியை யுண்டுசெய்யத்தக்க அன்னபானாதிகளும், ருதுக்களாறிலும் புஷ்பிக்கும் புஷ்பசாதிகளும், அம்மலர்களிலுள்ள தேனைப் பருகி ரீங்காரஞ்செய்யும் பொன்மயமான வண்டுக்கூட்டங்களும், வைடூரியமயமான விருக்ஷத்தளிர்களையுண்டு களித்த கோகிலங்களின் குரலோசையும், ஸ்படிகத்தினாற் செய்த படிக்கட்டினையுடைய தடாகங்களிற் புஷ்பித்த சுவர்ணமயமான தாமரைமலர்களும், அமிர்தமயமான சலத்தைப்பெருக்கும்நதிகளும், இரத்தினமயமான நீலாம்பர பீதாம்பரங்களைக்கொடுக்கும் விருக்ஷங்களும், வச்சிர கோமேதகங்களாலாக்கிய பூஷணங்களைக் கொடுக்கத்தக்க பர்வதங்களும், வாடாது வாசனை வீசும் மலர்களையுஞ் சந்தனத்தையுங் கொடுக்கும் மரங்களும், வீணை வேணு மிருதங்கமுதலிய வாத்தியங்களை யெப்பொழுதும் வாசித்துக்கொண்டிருக்கும் நாககன்னிகைகளும் நிரம்பப்பெற்றுள்ள பாதாளலோகத்தில், எவ்வளவு காலம் ஒருவன் வாழ்ந்திருப்பினுங் காலங்கழிந்ததாகவே தோன்றாது.

பாதாளலோகவர்ணனை யுரைத்தது

முற்றிற்று.

முப்பத்திரண்டாவது
நரகலோகவர்ணனை யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பாதாளலோகத்தின்மேலே யிருக்கும் நரகலோகத்தையும், அதிற் பாவிகளிருந்தனுபவிக்குந் துன்பங்களையுஞ் சொல்லுகிறேன். ரௌரவம் சூகரம் ரோதம் தாலம் திவசனம் மகாஜ்வாலை தப்தகும்பம் தப்தலவணம் விலோஹிதம் வைதரிணி பூயவாஹி கிரமில: கிருமிபோஜனம் அசிபத்திரவனம் லாலாபக்ஷம் அபாயம் வன்னிஜ்வாலை அதசிரசு ஸந்தம்சம் காலசூத்ரம் தமசு விசிரோதனம் ஸ்வபோஜனம் அதிர்ஷ்டம் மஹாரௌரவம் சான்மலி முதலிய நரகங்களிற் பாவிகள் சமைக்கப்படுவார்கள். வேதியர் முதலியோருக்கு விரோதமாகப் பொய்ச்சாக்ஷி சொன்னவன் ரௌரவத்தையும், சிசுஹத்தி செய்தவனும் பிறர் பொருளையபகரித்தவனும் கோஹத்தி செய்தவனும், விசுவாசகாதகனும், சுருபானஞ்செய்தவனும், பிரமஹத்தி செய்தவனும், பொன் திருடினவனும், இப்பாவிகளோடு சிநேகஞ்செய்தவனும் சூகரமென்னும் நரகத்தையும், ஆசாரியனைக் கொன்றவனும், உடன்பிறந்தாளுடன் போகித்தவனும், தாயைப் புணர்ந்தவனும் தப்தகும்பமென்னும் நரகத்தையும், பதிவிரதைகளைப் பலாத்காரமாகப் புணர்ந்தவனும், தன் ஸ்திரீயைப் பிறனுக்குச் சேர்ப்பித்தவனும், தப்தலோஹமென்னு நரகத்தையும், ஆசிரியனை யவமதித்தவனும், தன் தாய் தந்தையர் குழந்தைகள் முதலானோரை வஞ்சித்துப் புசித்தவனும், தேவதூஷணஞ் செய்தவனும், வேதவிக்கிரயஞ்செய்தவனும், சேரத்தகாத ஸ்திரீகளைச் சேர்ந்தவனும், தப்தகலமென்னும் நரகத்தையும், தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவன் அவிசிரோதமென்னு நரகத்தையும், தேவ பிதுர்க்களைத் துவேஷித்தவனும், இரத்தினங்களைக்குறைத்து மதித்தவனும், புனிதமான ரத்தினங்களுக்குத் தோஷஞ்சொன்னவனும், தேவர் பிதுர் முதலியோருக்கு நிவேதியாது புசித்தவனும், லாலாபக்ஷமென்னு நரகத்தையும், அன்னபானங்களில் விஷங்கலந்து கொடுத்தவன் விச்சனமென்னு நரகத்தையும், அசத்தியவான்களோடு சிநேகித்தவனும், புசிக்கத்தகாதவற்றைப் புசித்தவனும், யாகஞ்செய்ய அருகரல்லாதவர்க்கு யாகஞ்செய்வித்தவனும், யாகத்திற் செய்யும் ஸோமவிக்ரயணமென்னுந் தானத்தை வாங்கினவனும் ருதிராந்தமென்னு நரகத்தையும், சிநேகிதனைக் கொன்றவனும், மதுவைக் காரணமின்றி விரும்பியபொழுது பருகினவனும், வாலிபத்தால் மத்தனாகிச் தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவனும், தன் ஜீவனமார்க்கத்தை விடுத்துக் கபடமார்க்கமாகச் சீவித்தவனும், வைதரிணி நரகத்தையும், பசுமையான மரங்களை வெட்டுகிறவன் அசிபத்திரநரகத்தையும், மிருகங்களை ஹிம்சிப்பவனும் வீடுமுதலியவற்றை நெருப்பாற் கொளுத்தினவனும் வன்னிஜ்வாலையென்னு நரகத்தையும், தனது ஆச்சிரமதருமத்தை விடுத்தவனும் பிறருடைய விரதங்களைக் கெடுத்தவனும் சந்தம்ஸம் என்னும் நரகத்தையும், பகற்காலத்தில் ரேதஸ்கலனஞ் செய்தவன்

ஸ்வபோசனமென்னு நரகத்தையும் அடைந்து,பலவித கஷ்டங்களை யநுப விப்பார்கள். இப்படிப்பட்ட நரகங்கள் அநேகமுள்ளன. வருணுசிரமங் களுக்கும் தர்மசாஸ்திரத்திற்கும் விரோதமாய் மனவாக்குக்காயங்களாற் பாவஞ்செய்தவர்கள் யாவருந் தலைகீழாய்க் கஷ்டத்தை யநுபவிக்கிருர் கள். அந்நரகவாசிகள் ஒருகாலத்திலுந் தேவர்களைப் பார்க்கிறதில்லை. அவ் விதமான நரகங்களை யநுபவித்தபின்னர் விருக்ஷம் பசு பக்ஷி மிருகங்களா கப் பிறப்பார்கள். தர்மமாஸ்திரத்திற் கூறியபடி நடந்தவர்கள் சுவர்க்க போகத்தை யநுபவித்து, நல்ல பிறவியை யடைந்து, கிரமமாக மோக்ஷத் தையடைவார்கள். எவ்வளவு புண்ணியர்கள் சுவர்க்கத்திலிருக்கிருர்களோ அவ்வளவு பாவிகள் நரகத்திலிருக்கிருர்கள். எந்தப் பாவத்தைப் புத்தி யில்லாமற் செய்துவிட்டபோதிலும், அந்தப் பாவத்திற்குத் தக்கபடி சுலபமாகவுங் கஷ்டமாகவும் பிராயச்சித்தங்களை மநுவாதி பெரியோராற் கூறிய ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்டிருப்பினும், அதனைச்செய்து தமது பாவத்தை விலக்கிக்கொள்ளாது பராமுகமாக விருப்பவர்கள் இவ்வாறு நரகலோகத்தை யடைந்து கஷ்டங்களை யநுபவிப்பார்கள். பிராயச்சித்தங் களைச் செய்துகொள்ளச் சக்தியில்லாதபக்ஷத்தில், நாம் பாவஞ்செய்தோ மேயென்னும் பச்சாத்தாபத்துடன் சிவபெருமானை நோக்கித் தன் பாவங் கள் பரிகரிக்கப்படுமாறு காலை யுச்சி மாலைகளில் சிவஸ்மரணை செய்து கொண்டிருந்தால் அவை யொழியுமென்றும், பாவநீக்கத்தினுலும் புண்ணி யப்பிராப்தியாலும் சுவர்க்கத்தை யடைவார்களென்றும் வேதங்கள் கூறு கின்றன. ஜபம் ஹோமம் தியானமுதலியவற்ருற் சிவபிரானையே தோத்தி ரஞ்செய்தவன் சர்வகர்மபந்தங்களையுமொழித்து தேவேந்திராதிபோகங் களை யநுபவித்துச் சிவஞானத்தை யடைவான். சிவபெருமானிடத்திற் பக்தியுடையவனுக்கு ஒருகாலத்திலும் நரகமென்பது சித்திக்கமாட்டாது. வியாஸமுநிவனே! சுகத்திற்குந் துக்கத்திற்குங் காரணமாகவுள்ளது மன மாதலின் அதனைச் சிவபெருமானிடத்திலேயே நிறுத்தித் தியானிக்கும் பக்ஷத்திற் பிரமஞானமுண்டாகிறது. ஞானமே பரப்பிரமம்; ஞானமே தத்துவசொரூபம்; ஞானமே சராசராத்மகமான ஜகத்ரூபம்; ஆதலால் ஞானத்தைக் காட்டிலும் சிறந்தது பிறிதொன் றில்லை. சிவஞானத்தை யடைந்து முக்திபெறுவதற்கு இதுவே வழியாகும். பாதாளத்தின்மே லுள்ள நரகலோகம் இப்படிப்பட்டது. அதற்குமேலுள்ள பூலோகத்தின் விபரத்தைச் சொல்லுகிறேன்.

நரகலோகவர்ணனை யுரைத்தது

முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது

பூமண்டல விஸ்தீரணமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பூமண்டலத்தின் விஸ்தீரணத்தைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். அது ஜம்புத்தீவு - பிலக்ஷதீவு-சான்மலித்தீவு-குசைத்தீவு - கிரௌஞ்சத்தீவு - புஷ்கரத்தீவு - சாகத்தீவு என்னும் ஏழு தீவுகளாய், உவர்நீர்க்கடல் - கருப்பஞ்சாற்றுக்கடல் - தேன்கடல்-நெய்க்கடல் - தயிர்க்கடல் - பாற்கடல் - சுத்தநீர்க்கடலென்னும் ஏழு சமுத்திரங்களாற் சூழப்பட்டுள்ளது. அவற்றில், ஜம்புத்தீவு எல்லாத் தீவுகளுக்கும் நடுவிலுள்ளது. அதன் மத்தியிற் பொன்மயமான மேருபர்வதமானது பூமியில் பதினாயிரயோசனை வேரூன்றியும் எண்பத்துநான்காயிரயோசனை யுயர்ந்துமுள்ளது. அதன் சிகரம் முப்பத்திரண்டாயிரயோசனையகலமுடையது. மேருமலையானது பூமியாகிய தாமரைமலருக்கோர் மொட்டுப்போல் விளங்கும். ஹிமாசலம் ஏமகூடம் நிஷதமென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் தென்றிசையிலும், நீலம் சுவேதம் சிருங்கியென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் வடதிசையிலும், பதினாயிரயோசனை யகலமும், இருபதினாயிரயோசனை யுயரமும், நவரத்தினமயமான சாரலும், பதுமராக மணியைப்போன்ற செந்நிறமும், அக்கினிஜ்வாலைபோன்ற பிரகாசமுமுற்று விளங்குகின்றன. மேருவின் தென்பக்கலில் பாரதம் கிம்புருஷம் ஹரிவர்ஷமென மூன்று வர்ஷங்களுண்டு. வடபக்கலில் ரம்யகம் ஹிரண்மயம் உத்தரகுருவென மூன்று வர்ஷங்களுண்டு. இவ்வர்ஷங்களோவ்வொன்றும் ஒன்பதினாயிரயோசனை விஸ்தீரணமுடையன. நடுவிலுள்ள இளாவிரதகண்டத்தின் மத்தியில் மேருமலை மிகவும் உன்னதமாயிருக்கும். மேருவின் கிழக்கில் மந்தரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் விபுலமும், வடக்கில் சுபார்ஸ்வமுமென நான்கு பர்வதங்கள் நாற்புறத்திலும் நின்று, பதினாயிரயோசனை யகலமும், ஒன்பதினாயிரயோசனை யுயரமுங்கொண்டு, அம்மேருவுக்கு உறுதியாக விட்கம்பசைலங்களாய் நிற்கும். இப்பர்வதங்களில் மந்தரகிரியில் கடப்பமரமும், கந்தமாதனகிரியில் ஜம்புவிருக்ஷமும், விபுலகிரியில் அரசவிருக்ஷமும், சுபார்சுவகிரியில் ஆலமரமும் விளங்கும். இம்மரங்கள் ஆயிரயோசனை விஸ்தீரணமுடையன. நாவன்மரத்தினாலேயே இந்தத் தீபத்திற்கு ஜம்புத்தீவென்று பெயர். அம்மரத்தின் பழங்கள் ஒவ்வொன்றும் யானையைப்போல வுருவமுடையனவாய்ப் பழுத்து நிலமிசை விழுந்து, அப்பழச்சாற்றினின்று பெருகும் ஆறானது ஜம்புநதியாகிறது. அதன் சாரத்தைப் புசிப்போர் துக்கம் நோய் விருத்ததசை இந்திரியநாசமுதலியனவின்றி எப்பொழுதும் சந்தோஷத்துடன் வாழ்ந்திருப்பார்கள். அந்நதிதீரத்திலுள்ள மண் பொன்மயமாக்கவல்லது. மேருவுக்குக்கிழக்கே பத்ராசுவமும், மேற்கே கேதுமாலமும் என இரண்டு விருக்ஷங்களுள. அவற்றிற்கிடையிலேதான் இளாவிரதகண்ட முள்ளது. கிழக்கில் மந்தரமலையடியில் அருணமும், தெற்கில் கந்தமாதனத்தடியில்

மானதசரசும், மேற்கில் விபுலகிரியடியில் சிதோதமும், வடக்கில் சுபார்சுவகிரியடியில் மகாமடுவும் என நான்கு மடுக்களுண்டு. இம்மடுக்களில் முறையே சயித்திரக்கா விசித்திரை வைப்பிரசை திருதாக்கியமென்னு நான்கு நந்தவனங்களுண்டு. இந்நந்தவனங்களினடுவில் முறையே தாமரை மலருடன்கூடிய தாகமும், குமுதங்களோடுகூடிய மானதசரசும், செந்தாமரையுடன்கூடிய விமலோதகமும், நீலோற்பலத்துடன்கூடிய மனோரதமுமென நான்கு ஓடைகளுண்டு. சிதரஞ்சனம் குமுதஃ குரரஹா மால்யவான் என்னும் பர்வதங்கள் பூர்வபாகத்திலும், கேசரபர்வதம் தக்ஷிணபாகத்திலும், திரிகூடம்-சிசிரம்-பதகம்-ரஜதம் - நிஷதம் இவைகள் தக்ஷிணபாகத்திலுமுள்ளன. மேற்புறத்தில், சிசிவாசஸசு - வைதூரியம் - கபிலம்-கந்தமாதனம்-ஜாருதி என்னும் பர்வதங்களும், வடபாகத்தில் சங்கசூடமென்றும், ரிஷபமென்றும், ஹம்சமென்றும், காலஞ்சரமென்றும், பர்வத கேசரங்களுமுள. இந்த மேருமலையினுச்சியில் பதினாலாயிரம் யோசனை விஸ்தாரத்தோடு கூடியதாயுள்ளது பிரமலோகம். இதன்சுற்றிலும் அஷ்ட திக்குப்பாலகர்களின் லோகங்களுள்ளன. அந்தப்பிரமலோகத்தின்எட்டுத் திக்குகளிலும், சந்திரமண்டலம் பிரகாசிக்கிறது. விஷ்ணுபாதத்திலுண்டாகிய கங்கையானது, அவ்விடத்தில் சீதையென்றும் அலகநந்தாவென்றும், சுசக்ஷாசுவென்றும், பத்ராவென்றும், நான்கு திக்குகளிலும் பிரவாகிக்கின்றது. சீதையென்னும் நதிகீழ்த்திக்கிலும், அலகநந்தா தென்திக்கிலும், சுசக்ஷாஸ்சு மேற்கிலும், பத்ராவடதிக்கிலும், பிரவாகித்துப் பர்வதங்களையதிக்கிரமித்து, சமுத்திரத்தையடைகின்றன. சுநீலம் நிஷதம், மாலியவான் கந்தமாதனமென்று சொல்லப்பட்ட நான்கு பர்வதங்கள், தாமரைமொட்டுபோன்ற மேருமலையின் நாற்புறத்திலுமுள்ளன. பரத, கேதுமால, பத்ராசுவ, குருவென்னும் நான்கு வர்ஷங்கள், மேருவாகிய தாமரைக்கிதழ்கள்போ லிருக்கின்றன. அதன்மத்தியில் தேவகூடமும், தென்னண்டை கந்தமாதனமும், வடவண்டை கைலாசமும், முறையே கீழ் மேல்பாகங்களில் நிஷத நீலபர்வதங்களும் மேருவின் நான்குபுறத்தின் சிகரங்களில் ஒவ்வொருபாகத்திலும் இரண்டு கேசர பர்வதங்களுமுள்ளன. அதில் சைலத்துரோணி யென்னுமோர் ஓடையுண்டு. அதைச்சுற்றிலும் மனரம்மியமான புஷ்பங்கள் பூத்த நந்தவனங்களும், காடுகளும்மற்றவையுமுள்ளன. அந்தக்காடுகளில் எப்பொழுதும் யக்ஷர்களும், கின்னரர்களும், கந்தர்வர்களும் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பூலோக சுவர்க்கமென்னும் பெயருண்டு. தருமஞ்செய்தவர்கள் இந்தலோகத்திற் சுகத்தையனுபவிப்பார்கள். இதனைப் பாவிகள் பார்க்கவும் அடையவுங் கூடாது. கிம்புருஷாதி எட்டுவர்ஷங்களில் வசிப்போர்களுக்கு, கோபம், துக்கம், ஆயாசம், துவேஷம், பசி, தாகம், பயம், சோம்பல் முதலியன கிடையா. எப்போதும் நோயற்றதேகமும், துக்கமில்லாமையும் இருபத்திரண்டாயிர வருஷ ஆயுளுமடைவார்கள். கிருதமென்றும், திரேதாவென்னுஞ் சொல்லப்பட்டநதிகள் அப்பூமியில் எங்கும் பிரவாகித்துக்கொண்

டிருக்கின்றமையால் மழைகிடையாது. அப்பூமியின் போகம் அளவிடப் பட்டுள்ளது. அதிகமாக அனுபவிக்கமுயன்றாலும் பிரயோஜனப்படாது. அப்பூமியின் நதிதீரத்திலுள்ள மணற்பராகங்கள் பொன்னிறமாகவும், புட்பங்கள் சுவர்ணமயமாகவும், கரைப்புறம் இரத்தினமயமாகவும், வைடூரியமயமான பசும்புல்லுள்ள திட்டுகளுமாக விளங்குதலின் அங்குள்ளவர்கள் விளையாடி பொழுதுபோக்குவார்கள்.

பூமண்டலவிஸ்தீரணமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்துநான்காவது

பாரதவர்ஷ விஸ்தீரணமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! இனி ஹிமவத்பர்வதத்தின் தக்ஷிணபாகத்துள்ள பாரதவர்ஷத்தின் விஸ்தாரத்தைச் சொல்லுகிறேன். இப்பாரதவர்ஷமானது, ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தாரத்தோடுகூடியது. இதற்குக் கர்ம பூமி யெனவுமோர் பெயருண்டு. இப்பூமியில் புண்ணியஞ்செய்தோர் புண்ணிய பூமியாகிய தேவலோகத்தையும், பாவம்பண்ணினோர் நரகத்தையும், ஞானவான்கள் மோட்சத்தையுமடைவார்கள். அன்றியும் இப்பாரதவருஷமானது நவகண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்திரத்திம்னம், கசேரு, தாம்ரபர்ணம், கபஸ்திமான், நாகத்தீபம், சௌமியத்தீபம், காந்தர்வம், வாருணம், பரதமென்னும் பெயர்களோடுவழங்கும். இவைகளில் ஒன்பதாவதாகிய பரதகண்டமானது, நான்கு சமுத்திரங்களாற் சூழப்பட்டதும், வடக்குத்தெற்கில் ஆயிரயோசனை விஸ்தாரத்தோடு கூடியதுமாகவிருக்கும். இக்கண்டத்தின் கீழ்ப்புறத்தில் கிராதர்களும், மேற்புறத்தில் யவனர்களும், தக்ஷிணபாகத்தில் ஆந்திரரும், வடக்கில் துருஷ்கர்களும் வசிக்கிறார்கள். இக்கண்டத்தின் மத்தியில், பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய சதுர்வருணத்தோர்கள் கோடாகோடியாய் வசிக்கிறார்கள். இவர்கள் அசுவமேதாதியாகங்களாலும், புண்ணியதீர்த்தஸ்நானங்களாலும், தேவதாப்பிரதிஷ்டைகளாலும், கோதானமுதலிய தானங்களாலும் நற்கதியடைகிறார்கள். இப்பூமியில் மஹேந்திரமென்றும், மலயமென்றும், சகியமென்றும், சுக்திமானென்றும், ரிக்ஷமென்றும், விந்தியமென்றும், பாரியாத்திரமென்றும் எழுகுலபர்வதங்களிருக்கின்றன. வேதஸ்மிருதியென்றும், நர்மதாயென்றும், சுரஸாயென்றும் பேர்பெற்ற நதிகள் பாரியாத்திரமென்னும் பர்வதத்திலுற்பத்தியாகி நான்கு புறத்திலும் பரவி, இப்பூமியைப் பரிசுத்தஞ்செய்கிறது. விந்தியபர்வதத்தினின்று கோதாவரி, பீமரதி, தாபிமுதலிய மகாநதிகள் தோன்றி, தங்களிடம் ஸ்நானபானஞ்செய்வோரது பாவங்களைப்போக்கிப் பரிசுத்தஞ்செய்கின்றன. கிருஷ்ணவேணி, காவேரிமுதலிய மகாநதிகள் சகியபர்வதத்திற்றோ

ன்றித் தக்ஷிணதேசத்தைப் பரிசுத்தஞ்செய்கின்றன. கிருதமாலா தாம்ரபர்ணி முதலிய நதிகள் மலயபர்வதத்தி லுற்பத்தியாகி அவ்விடங்களைச் சுத்தி செய்கின்றன. மகேந்திரபர்வதத்தினின்று திரியாமா, ரிஷிக்குல்யா என்னும் நதிகளுற்பத்தியாகி அப்புரங்களைப் பரிசுத்தஞ்செய்கின்றன. குமாரியென்னும் நதி சுக்திமானென்னும் பர்வதத்திலுண்டாகிப் பரவுகிறது. இப் பூமியில் நான்கு வருணங்களும், ஸ்நான பானங்களைச் செய்து இவைகளால் சுகத்தையும் பரிசுத்தத்தையுமடைகிறார்கள். இக்கண்டத்தில் நான்கு யுகங்களுண்டு. மற்றத் தீபங்களில் இவ்விதயுகங்களில்லை. இப்பரதகண்டத்திலுள்ள ஜம்புத்தீபமானது கருமபூமியானதால், இதிலுள்ள ஜனங்கள் கோதானமுதலிய தானங்களையும், அக்கினிஹோத்திரமுதலிய சத்கருமங்களையும், தவமுதலிய யோகங்களையுஞ்செய்து நற்கதியடைகிறார்கள். ஒன்பது வகையினவாகிய வருஷங்களுள் பாரதவருஷஞ் சிறந்தது. மற்றவைகளெல்லாம் போகபூமிகளேயன்றிப் புண்ணியஞ்செய்து நற்கதியடையத்தக்கவையல்ல. ஆதலின் ஜனன மனேகமாகத் தோன்றினும் இப்பரதகண்டத்தில் ஓர் ஜனனமெடுப்பது அருமையினுமருமை. சுவர்க்கமோக்ஷங்களடையக்காரணமாயிருக்கிறது இப்பரதகண்டமாகையால், தன்னியர்களாயிருக்குந் தேவர்களும், இப்புண்ணிய பூமியில் தோன்றினால் மறுபடியும் தேவாம்சமடையலாமென்று விரும்புகிறார்கள். இவர்கள் இப்பூமியில் தோன்றி, சிவபெருமானைத்தியானித்து உயர்பதவியையடைகிறார்கள். ஆகையால் இப்பரதகண்டத்தில் தோன்றி ஈசுவரனைத்தியானித்து, பதவியடைவதினுஞ்சிரேஷ்டமானது வேறேஇன்மையால் இதுவேமேலானது. இப்பரதகண்டம்முப்பத்துநாலாயிரம்யோசனைவிஸ்தீரணமுடையதாகும். உவர்நீர்க்கடல் இலட்சம் யோசனை விஸ்தீரணமுடையதாய், ஜம்புத்தீபத்தைச் சூழ்ந்திருக்கும். இதற்கிரட்டிப்புள்ளது பிலட்சத்தீபம். அதில்கோமேதகம் சந்த்ரம் நாரதம் துந்துபி சோமகம் சுமனஸ் விப்பிரராஜம் எனவர்ஷாசலங்களுள. அப்பர்வதங்களில் எப்போதுந் தேவர் கந்தருவர் சந்தோஷத்துடன் வசிப்பர். அநுதப்தா சிகா பாபக்னி த்ருதிவா கிருபா அமிருதா சுகிர்தா வென்னும் எழுநதிகள் பிரவகிக்கும். அநேகசிறு நதிகளும் உள. அங்குள்ளோருக்கு மனோவியாதி தேகபீடைமுதலியன கிடையா. அந்நதிகளில் ஸ்நானஞ்செய்து நீர் பருகினோர்பதினாயிரவருஷகாலஞ் சீவித்திருப்பர். அவ்விடத்தில் ஜம்புத்தீவைப்போல யுகாவஸ்தையில்லை. எப்பொழுதுந் திரேதாயுகத்திற்குச் சமானமாகவேயிருக்கும். பிராமணாதி சதுர்வர்ணத்தார்களுமிருக்கின்றனர். பிலக்ஷத்தீவு என்னும் பெயர்அவ்விருக்ஷத்தினாலே யுண்டாயிற்று. அவ்விடத்தில் சங்கரனையும் திருமாலையும் பிரமதேவனையும் வேதமந்திரங்களாற் பூசிக்கிறார்கள். அதுகருப்பஞ்சாற்றுக்கடலாற் சூழப்பட்டிருக்கும்.

அதன்பின்னர் சான்மலித்தீபத்தில் ஸ்வேதம் ஹரிதம் சீமூதம் ரோஹிதம் வைத்யுதம் மானவம் சுப்பிரபமென எழுவர்ஷ பர்வதங்க

ளுள. சான்மலி என்னும் பெயர் அங்குள்ள அவ்விருக்ஷத்தாலேயே யுண் டானது. அதற்கிரட்டிப்பாகச் சுருக்கடல் சூழ்ந்திருக்கும். சுக்லா ரக்தா ஹிரண்யா சந்த்ரா சுக்ரா விமோசனு நிவிர்த்தியென்னும் ஏழு நதிகள் அவ் வர்ஷங்களினின்றும் பெருகும். அப்பூமியில் சதுர் வருணத்தாரும் உளர். யஜ்ஞமுதலியவற்றால் விஷ்ணுவை வணங்குவர். அவ்விடத்தில் தேவர்கள் உல்லாசமாக வசிப்பார்கள். அதற்கிரட்டிப்பாகிய குசத்தீபத்தில், அசுர ரும் தேவரும் கந்தர்வ கிம்புருஷாதிகளும் மாநுடரும் சதுர்வருணத்தவர் களும் வாழ்வார்கள். ஆசார அநுஷ்டாநங்கள் தவறமாட்டார்கள். அங்குள் ளவர்கள் சிவபெருமானையுந் திருமாலையும் பூசிப்பார்கள். குசேசயம் ஹரி ஜாதிமான் புஷ்பவான் மணித்ருமம் மஹாசைலம் மந்தராசலம் என்னும் ஏழு பர்வதங்களும், தூதபாவை சிவை பவித்திரை சம்மதி வித்யை தம்பா மஹீ என்னும் ஏழு நதிகளும், இன்னும் பலநதிகளும் உள. இது அங் குள்ள குசையினாலே அப்பெயருற்றது. இதனை நெய்க்கடல் சூழ்ந்திருக் கும். அதற்கிரட்டிப்பாகித் தயிர்க்கடலாற் சூழப்பட்ட கிரௌஞ்சத்தீபத் தில் கிரௌஞ்சம் வாமனம் அந்தகாரம் திவாவிருத்யம் புண்டரிகம் துந் துபி சுமனசு என்னும் ஏழுவர்ஷ பர்வதங்களும், பலவிதமான விருக்ஷங் களும், புஷ்பவனங்களும், தேவர் கந்தர்வர்களும், சதுர்வருணத்தவர்களும் நோயில்லாத வாழ்க்கையுமுடையதாயிருக்கும். கௌரீ குமுத்வதி சந் தியா ராத்ரீ மனோஜவா கியாதீ புண்டரீகா என்னும் ஏழுநதிகளுண்டு. அங் குள்ளவர்கள் சிவபெருமானை யோகமார்க்கத்தால் தியானிக்கிறார்கள்.

அதற்கிரட்டிப்பாகிய க்ஷீரசமுத்திரத்தாற் சூழப்பட்ட சாகத்தீ வானது உதயகிரி ஜலதாரம் பரேதா சாமம் அஸ்தகிரி அம்பிகாகிரி கேசரி யென்னும் ஏழுவர்ஷ பர்வதங்களையுடையது. சதுர்வருணத்தவர்களு மங் குளர். சுகுமாரிகுமாரி நலினி வேணுகா இக்ஷுஃ ரேணுகா கபஸ்திஃ என ஏழு நதிகளும், அநேக மலைகளும் நதிகளுமுள. அங்குள்ளவர்கள் தர்ம வான்களாயிருப்பார்கள் ; சந்தோஷமாயிருப்பார்கள் ; அவர்கள் சூரியனை யே யெப்பொழுதும் யாகாதிகருமங்களாற் பூசிப்பார்கள். அதற்கிரட்டிப் பாகிய புஷ்கரத்தீவானது மானதசரசு என்னும் ஆயிரயோசனை விஸ்தீரண மான தடாகத்தையும், அதில் தாமரைமலர்கள் ஐந்துயோசனை யுயர்ந்தும் விளங்கும். அவ்விடத்துள்ளவர்கள் இராகத்துவேஷாதிகளும், உத்த மோத்தம பேதமுமின்றிச் சத்தியவான்களாய்ச் சுவர்ணமய அலங்காரத் துடன் சமானஸ்தர்களாய்ஜராதிரோகங்களின்றிப்பதினாயிரவருஷம்வாழ் வார்கள். அது சுகமானவிடம். புஷ்கரம் தாதகி கண்டம் மகாவீதம் நியக் ரோதம் என்னும்இடங்களில்தேவாசுரர்களாற் பூசிக்கப்பட்டவராய்ப் பிரம தேவர் எழுந்தருளியிருப்பர். அது சுத்தநீர்க்கடலாற் சூழப்பட்டிருக்கும். இவ்வாறு சப்தசமுத்திரங்களாற் சூழப்பட்டிருப்பன சப்ததீவுக்களாம். சமுத்திரஜலங்கள் சந்திரன் விருத்தியாகையில் விருத்தியாகி, அவன் குறை கையிற் குறைந்துவிடும். சமுத்திரத்திலுள்ள வடமுகாக்கினி அந்த ஜலப்

பெருக்கைப் பருகிவிடும். புஷ்கரத்தீவிலுள்ளோர் அறுசுவையோடுகூடிய அன்னபானாதிகளைப் புசிப்பர். சுத்தநீர்க்கடலுக்குப் புறம்பே உலகங்களில்லை, பிராணிகளுமில்லை. ஆயினும் பொன்னிறமானபூமி அதற்கிரட்டிப்பு விரிவாக ஆயிரயோசனை யுயரமாகவிருக்கும். அவ்விடத்திற்கப்புறம் அண்டச்சுவர் உள்ளது. அதுவரையிலுந்தான் பூமி. இந்த ஸப்ததீவுகளும் ஐம்பதுகோடி யோசனை விஸ்தீரணமாம். இதுவே எல்லாப் பிராணிகளுக்கும் ஆதாரகாரணமாக விளங்கும்.

பாரதவர்ஷ விஸ்தீரணமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தைந்தாவது

மிருத்யுஞ்சய மந்திரமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! சூரியசந்திரருடைய கிரணங்கள் செல்லுமெல்லையும் பூலோகமென்று சொல்லப்படும். சூரியமண்டலமானதுபூமியினின்றும் லக்ஷயோசனை யுயரத்திலும், சந்திரன் மண்டலமானது அதன்பேரில் லக்ஷயோசனை யுயரத்திலும், அதன்பேரில் கிரஹ மண்டலமும், நக்ஷத்திர மண்டலமும், புதனும், சுக்கிரனும், அங்காரகனும், பிரகஸ்பதியும், சனியும், அதன்பேரில் சப்தருஷிகளின் மண்டலமும், அதன்மேல் லக்ஷயோசனையில் ஜோதிசக்கரமுடைய துருவமண்டலமும் உள. இதுவரையில் மூன்று லோகங்களும் கோடியோசனையுமாயின. அதன்பேரில் மகாலோகம் அதில் சநகர் சநந்தனர் சநாதனர் கபிலர் ஆசரி ஒடஃ வஞ்சசிகஃ என்னும் வேதியர் எழுவர் அநேக சத்புருஷர்கள் சூழ்ந்து பணி செய்ய வாழ்ந்திருப்பார்கள். அதன்பேரில் சனலோகம். அங்கே வைராஜரென்னுந் தேவர்கள் பசிதாகமின்றி வாழ்வார்கள். அதன்பேரில் தபோலோகம். அங்கே தேவர்களும் வேதியர்களும் வசிப்பார்கள். அதன்பேரில் பிரமலோகம். அங்குள்ளோர் நிர்மலமான மனதும், தருமத்தில் விருப்பமும், ஞானமும், இந்திரிய நிக்கிரகமும், சத்தியமே நித்தியமென்னுஞ் சிந்தையும் உடையவர்கள். இவ்வகையாக மேலேழுலோகங்களையும், கீழேழுலோகங்களையும் உனக்குச்சொன்னேன். இதுவே இந்த அண்டத்தின் விஸ்தீரணம். இவ்வண்டகடாகத்தில் பத்துப்பங்கு ஜலமும், பத்துப்பங்கு அக்கினியும், பத்துப்பங்கு வாயுவும், பத்துப்பங்கு ஆகாயமும், பத்துப்பங்கு பிராணிகளுமாயிருக்கும். இவ்வண்டத்திற்குப் பிரதான புருஷன் சிவபெருமான். அவர் ஆதியந்தமற்றவராயும் அளவிடப்படாத பிரபாவத்தையுடைய அநந்தராயும், எல்லாவற்றிற்கும் ஆதாரபூதமாயுமிருப்பர். அவரிடத்தினின்றும் அநேககோடி அண்டங்களுண்டாயின. விறகில் நெருப்பும், பாலில் நெய்யும், எள்ளில் தயிலமும் விளங்குவதுபோல, சர்வப்பிராணிகளிடத்திலுஞ் சிவபெருமானே அந்தர்ப்பூதமாக விளங்குவர். சரா

சராத்மகமென்னும் விருக்ஷங்கட்கு விதையாக விருக்கின்றனர். அந்த இறைவனிடத்திலிருந்து மனம் புத்தி சித்தம் அகங்காரமுதலியன தோன்றும். அவருடைய இச்சையில் மூலப்பிருகிருதி தோன்றி, அதினின்றும் தேவாசுரர் ஜனிப்பர். விதையினின்று விருக்ஷமும், சூரியகாந்தியினின்று அக்கினியும் உண்டாவதுபோல, சிவபெருமானிடத்திலிருந்து ஜகத்து உண்டாகிறது. சிவசக்தி சிவங்களின் ஐக்கியத்தில் எல்லாத்தேவ மாநுட கதி பேதங்களும், கர்மங்களும் உண்டாகும். சிவபெருமானே திரிமூர்த்தி ஸ்வரூபமாயிருந்து சிருஷ்டியாதி காரியங்களை நடத்துகிறார். எவரிடத்தினின்றுஞ் சர்வலோகங்களுந்தோன்றி எவரிடத்தில் லயமடையுமோ. எவர் சர்வத்திற்குங் காரணரோ அவரே சிவபெருமானென்று ஸநத்குமார முனிவர் சாற்றினரென ஸூதர் கூறினர்.

இவ்வாறு கூறிய ஸூதமுனிவரை நோக்கி நைமிசாரண்ய ருஷிகள் வினவுகிறார்கள். ஓ ஸூதமுனிவரே! சிவபிரானுக்கத்தியந்தப்பிரியமாகவும், சகலசாஸ்திர ரகஸ்யமாகவும், தர்மார்த்த காம மோக்ஷமாகிய புருஷார்த்தங்கள் நான்கையுங் கொடுக்கவல்லதுமான ஷடாட்க்ஷர மந்திரத்தைப் பூர்வங் கேட்டுச் சந்தோஷித்தோம். இன்னும் சிவத்திற்குப் பிரியமாயும், அஷ்டமாசித்திகளை யளிக்கத்தக்கதாயும் உள்ள எந்த மந்திரத்தால் மாண்டவ்யாதி மகருஷிகளெல்லாந் தேவத்வத்தை யடைந்தனரோ அந்த மந்திரத்தை யுபதேசிக்கவேண்டுமென்று கேட்ட நைமிசாரண்யமுனிவர்களுக்கு ஸூதமுனிவர் சொல்லுகின்றார். ஓ நைமிசாரண்ய முனிவர்களே! பூர்வத்தில் பரமசிவனானவர், குமாரக்கடவுளுக்குபதேசித்த மந்திரத்தையும், அதன் மான்மியத்தையுஞ் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக. அம்மந்திரத் துவக்கத்தில் பிரணவத்தை யுச்சரிக்கவேண்டும். அகாராதிகணங்களில் மூன்றாவதாகிய ச கணத்தின் மூன்றாவது. அக்ஷரமாகிய ஜ என்னுமெழுத்தை, பஞ்சமசுரமாகிய உ காரத்தோடு கூட்டி, இறுதியில் பிந்துவாகிய 0 பூர்ணாநுசுவாரம் (மகாரம்) சேர்த்தும்; எட்டாவது ய வர்க்கத்தில் மூன்றாவது அக்ஷரமாகிய ஸ வென்னு மெழுத்தை இரண்டு பிந்துக்களுடன் கூட்டி, (ஃ) இவ்விரண்டு எழுத்துக்களுக்கும் பிரணவத்திற்கு மத்தியில் ஹௌம் என்னும் பீஜாட்சரத்தைக் கூட்டி ஜபிக்கவேண்டியது. இதுவே மிர்த்யுஞ்சயமந்திரம் இது சிவபெருமானுக்குப் பிரீதியானதும், சர்வசித்தியையும் இக போகத்தையும் பரலோக முத்தியையும் மனசுத்தியையும் கொடுக்கவல்லதுமாம். பிரமஹத்தி, அகம்யாகமனம், சுராபானஞ்செய்தல், பொன்திருடல், சிசுஹத்தி, குருபத்தினியைக் கருதுதல், நம்பிக்கைத்துரோகம், ஆசாரியரைக்கொல்லுதல், பிதா மாதா ஸ்திரீகள் முதலியோரைக்கொல்லுதல், முதலிய பாதகங்கள் இம்மந்திரத்தை யுச்சரிக்க, அக்கினியிலகப்பட்ட இலவம்பஞ்சுபோலப் பஸ்பமாகும். ஒருவன், இம்மந்திரத்தைப் பக்தி பூர்வமாய் நூறுமுறை ஜபித்துச் சிவபெருமான் சிரசில் ஒரு மலராயினும் சமர்ப்பித்தால், கோடிமுறை இம்மந்திர ஜபஞ்செய்த பலனை யடை

னுடைய சிவலோகத்தில் உருத்திரரூபமடைந்து வாழ்வார்கள். உலகமுழுவதும் யான் வியாபித்திருப்பவனென் றுணர்ந்தவனே என்னை யுள்ளபடியேயுணர்ந்த உருத்திரபதவியடைவான். தாவரசங்கமங்களிலும் ஆத்மாவிலும் சமதிருஷ்டியுடையவன் உருத்திரனவான்.

உமையே! சுவர்ணத்தினலாவது வெள்ளியினலாவது இரத்தினங்களாலாவது சிலையினலாவது பிருதிவியினலாவது இலிங்கரூபஞ்செய்து தன்சக்திக்கேற்றபடி பூஜோபகரணங்களால் என்னை நாடோறும் பூசிக்க வேண்டியது. புசிக்கையிலும், நடக்கையிலும், நிற்கையிலும், இருக்கையிலும், கிடக்கையிலும், எக்காலத்திலும், தன்பக்கங்களிலும் முன்னும் பின்னும் மேலுங் கீழும் யானிருப்பதாகநினைத்து என்னையே பூசிக்கப்பட்டவன் முக்தியடைவான். கங்காசலத்தினலும் பசுநெய்யினலும் செஞ்சந்தனத்தாலும் சுகந்ததூபத்தினலும் கர்ப்பூரத்தினலும் கீதவாத்திய சப்தங்களினலும் நவரத்தினமயமான ஆபரணங்களினலும் வெண்பட்டு முதலியவஸ்திரங்களினலும் பக்தியுடன் என்னைப்பூசித்து நமஸ்கரித்து என்னையே சரணகதியடைந்தவனும், என்சரிதங்களைக் கேட்க விரும்பினவனும், எனது பக்தர்களுடைய சரிதங்களைக்கேட்க விரும்பினவனுமாகவுள்ளவர்கள் தமதுமனதில் விரும்பியபதவிகளையும் சர்வலோகத்திற்கும் நாயகரான சிறப்பினையும் பெறுவார்கள். சித்தத்தினிடத்திலே என்னையமையப் பெற்றவன் தாவரசங்கமங்களுக்கெல்லாம் கர்த்தாவுங் காரியமுமாக விளங்குவான். இவ்விதமாக என்னைக் காரிய கர்த்துரு ஸ்வரூபமென்றுணர்ந்தவனும் நாடோறுஞ்செய்கின்ற சத்கருமாநுஷ்டானங்களைத் தன்னுடைய தென்னுங் கருத்தின்றி யெனக்கு அர்ப்பணஞ்செய்கிறவனும், ஒன்றிற்கனந்தமாக விசேடபலனையடைவார்கள். இவ்வாறு நடப்பவர்கள் ஜீவன்முக்தராவார்கள். சமுசாரபயத்தை யொழிக்கவேண்டியவர்களுக்கு நல்லவழியை நீ விரும்பியவகையே சொன்னேன். கிரியாயோகம் ஞானயோக மென்னுமிரண்டில், இந்திரிய நிக்கிரகமின்றி ஞானயோகங்கைகூடாதாதலின், கிரியாயோகத்தைக் கடைப்பிடித்தவன் முறையே ஞானத்தையும் முக்தியையும் அடைவான். கிரியாயோகத்தினல் தேவத்துவமுண்டாகிப் பின்னர் சிறந்த ஜனனங்களையெடுத்து முக்தியை யடையக்கூடும். அக்கினியானது காற்றுடன் சேர்ந்து திருணகாஷ்டாதிகளை நாசஞ்செய்வதுபோலச் சிவலிங்கார்ச்சனமானது சர்வபாவங்களையும் நாசஞ்செய்துவிடும். என்னுடைய நாமத்தைவிளையாடற்கு உச்சரித்தபோதிலும், அவர்கள் கர்மநாசமடைவார்கள். கர்மபூமியிற்பிறந்து என்னையாராதிக்காதவனுடைய ஜனனம் பிரயோசனமற்றது. இரத்தினம் புஷ்பம் சந்தனம் முதலியவற்றல் பூசித்தாலும் பக்தியில்லாவிடின் எனக்குத் திருப்தியில்லை. அவைகுறைந்திருப்பினும் பக்திமாத்திரமிருக்கும் பக்ஷத்தில் எனக்குத்திருப்தியுண்டாகும். எத்தனையோகோடி ஜனனங்களில் ஒருஜனனம் இக்கர்மபூமியிற் கிடைப்பதருமை. அதிலும் மாநுடதேகங்கிடைப்பது துர்லபம். அப்படிக்கிடைத்த

அரியதேகத்தாற் சிவலிங்கார்ச்சனை செய்யாதிருப்பது என்ன துக்ககரமானது? என்றுகூற, பார்வதிதேவியார் சிவபெருமானைநோக்கி ஸ்வாமீ! சதுர்வருணத்தவர்களும் என்ன மந்திரங்களாற் சிவலிங்கார்ச்சனைசெய்யத் தகுமெனக்கேட்க, சிவபெருமான் கூறுகின்றார். பிராமணர்கள் வேதமந்திரங்களாலேயும் புராணோக்தத்தாலேயும் பூஜித்து, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் யஜ்வா ஆக எட்டும் சிவமூர்த்தமென்று கருதவேண்டும். எல்லாத்தேவர்களும் மந்திரத்தை ஆச்சிரயித்திருக்கிறார்கள். மந்திரமோ பிந்துவையும், பிந்து நாதத்தையும், அவ்வகைய நாதம் பரமாத்துமாவையும் ஆச்சிரயித்திருத்தலின், அப்பரமாத்மாவைப் பூர்வங்கூறிய ம்ருத்யுஞ்சயமந்திரத்தால்தியானிக்கவேண்டும். யகரத்திற்குஎட்டாவதெழுத்தாகிய ஹ என்னுமெழுத்தைத் தீர்க்கமாக்கி[ஹா]அதன்பின்னர் பிந்து 0 [ம்] சேர்ந்து அங்கநியாச கரநியாஸமாகச் சபிக்கவேண்டியது. இவ்விதமான கிரமமாகப் பூசிப்பவர்களுக்குச் சர்வகாமியங்களுங் கைகூடுமென்று பெரியோர்களெல்லாருஞ் சொல்லியிருக்கிறார்கள். இகலோகத்திலும் பரலோகத்திலுஞ்சிவபூசையே சர்வசித்திகளையுங்கொடுக்கவல்லது. உலகத்தில் என்னைப்பூசித்து எல்லாப்பலனையும் அடையவேண்டுமென்றிப் பிறிதொன்றுங் கிடையவே கிடையாது. என்னுடைய பஞ்சப்பிரமஸ்வரூபத்தையுணர்ந்து நாடோறும் என்னுடைய ஐந்துமூர்த்திகளையும் பூசிப்பவன் என்னுடைய சாரூப்பியத்தையடைவான். அப்* பஞ்சபிரமமந்திரத்தைச்சொல்லுகின்றேன் என்று கூறியருளினர். இதுசர்வமந்திரங்களிலுஞ் சிரேஷ்டமானது. இதனை யப்பியசித்துப் பூசிப்பதனால் கிடைத்தற்கரிய தேவத்துவம் கந்தர்வத்வம் முதலிய யோக்கியதையும், அணிமாதி அஷ்டமகாசித்தியும் அடைவார்கள். ம்ருத்யுபயம் கிரகபய முதலியன இம்மந்திரஸ்மரணையாலேயே நீங்கும். இதனைச்சபிப்போருக்கு இடி மழை காற்று முதலாகிய பஞ்சபூதங்களாலுண்டாகும் ஆபத்துகளும் தாவர சங்கமங்களால் உண்டாகும் ஆபத்துகளும் ஒருபோதுஞ் சம்பவிக்கமாட்டா. இம்மந்திரத்தை நூறுமுறை ஜபித்தவன் நூறு ஜனனங்களிற்செய்த எல்லாப் பாவங்களையு மொழிவான் என்று சிவபெருமான் கூறியருளினரென ஸநத்குமாரமுநிவருரைத்தனர்.

மிருத்யுஞ்சயப் பிரபாவமுரைத்தது

முற்றிற்று.

* உரு - உச - வது பக்கங்களிற் பதித்துள்ள மந்திரங்களே பஞ்சப்பிரமமந்திரமெனப்படும். இவற்றையே மேல்வரும் இரண்டத்தியாயங்களுங் கூறும்.

முப்பத்தேழாவது

பஞ்சப்பிரம மந்திரமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவரைநோக்கி ஸநத்குமாரமுனிவர் சொல்லுகின்றார். முனிசிரேஷ்டனே! பஞ்சப்பிரமமந்திரத்தின் பிரபாவத்தை விளக்கிச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. அந்தரங்கமான பரிசுத்தமான இடத்தில், தான் பரிசுத்தனுகவும் ஏகமனமுடையவனுகவுமிருந்து இந்தப்பஞ்சப் பிரமமந்திரத்தைப் பிரித்து அங்கநியாஸ கரநியாஸங்களைச் செய்யவேண்டியது. எப்படியென்றால்,—ஓம்ஹாம் ஹ்ருதயாயநம: | ஓம்ஹ்ரீம் அகோரேப்பியஃசிரசேஸ்வாஹா | ஓம்ஹ்ரூம்கோரகோரதரேப்யஃசிகாயவஷட்— ஓம்ஹ்ரைம் ஸர்வதஸ்ஸர்வேப்யஃ கவசாயநமஃ | ஓம்ஹ்ரௌம் நமஸ்தே ருத்ரரூபேப்யஃ நேத்ராப்யாம்வஷட் | ஓம்ஹ்ரஃ அஸ்த்ராயபட் | பூர்புவஸுவரோமிதி திக்பந்தஃ—என்று அங்கநியாஸமும் இதுபோலவே கரநியாஸமுஞ் செய்யவேண்டியது. இவ்விதமாய் அகோரமூர்த்தியை நாத பிந்துகலைகளுடன் தன்னுடைய இதயத்திற் பூசிக்கவேண்டும். அதன் மத்தியில், தண்டம் இளஞ்சந்திரன் அங்குசம் கொடி இவற்றையுடைய அகோரேசுவரியென்னுந் தேவியைப் பூசிக்கவேண்டும். 'ஓம் அகோரேசிஹ்ரீம் ஹூம்பட்' என்னும் மூலமந்திரத்தால் ஜபிக்கவேண்டும். இப்படி ஏகமனத்துடன் பூசிக்கும்பக்ஷத்தில் இஷ்டகாமியங்களெல்லாஞ் சித்திக்கும். தியானம் "கபால மாலாபரணஞ் சதுர்ப்புஜம் வக்த்ரேக்ஷணம் ஶூலதராபயப்ரதம் | த்ரிலோசனங்கண்ட ஶஶாங்கதாரிணம் த்யாயேத்தரம்யஃ ஸலபேத ஈப்ஸிதம்." மகாபாபியாயிருப்பினும் இந்தத்தியானத்தாற் சங்கரனைப்பூசித்து லக்ஷவில்வங்களாற் சிவலிங்கார்ச்சனஞ்செய்தவன் சகல பாவங்களையு நீங்கிப்பரிசுத்தனுகிறான். இந்த மந்திரத்தினுலே இலக்ஷஹோமஞ் செய்தவனுக்குச் சிவபெருமான் பிரத்தியக்ஷமாவர். இலக்ஷந் தாமரைமலரால் அருச்சித்து ஓமஞ்செய்தவன் அணிமாதிசித்திகளை யடைவான். பயற்றினுற்பூசித்து அதனுலே ஓமஞ்செய்தவன் ஜராமரணங்களில்லாத உலகத்தையடைவான். எள்ளினுல் ஓமஞ்செய்தால் கிரகபீடைகள் நசிக்கும். நெய்யோடுஞ்சர்க்கரையோடும் பூசித்துப்பாலுள்ள மரத்தின் சமிதைகளால் ஓமஞ்செய்தவனுக்கு ஆயுள்விர்த்தியுண்டாகும். அகோரேசுவரிசமேதராகிய அகோரமூர்த்தியின் பூசையையிவ்வாறு செய்தவன் திரிலோகங்களிலும் துர்லபமான உயர் பதவியையடைவான். இந்தப் பூசையைச்செய்கையில் அகோரமூர்த்திக்குப் பிரீதியாக அகோரேஸ்வரி முத்திரையைக்காட்டி மனப்பூர்வமாகத் தியானிக்கும் பக்ஷத்தில் பூதப்பிரேத பசாசங்கள் கிரகபேதாளங்கள் சாகினிடாகினிகளாற் சிறிது துன்பமுமின்றித் தேவாசுர மநுஷர் சுவாதீனமடைவார்கள். இந்தப் பூசையைச்செய்தே மஹருஷிகளெல்லாரும் மோக்ஷசித்தியை யடைந்தார்கள். ஸத்தியோஜாதக் கிரமத்தால் பூசிப்போர் மோக்ஷத்தையும், ஈஶாநக் கிரமத்தாற் பூசிப்போர் சுவர்க்காதிபோகத்தையும் பெறுவார்கள். எந்த

வகையிலாவது சிவபிரானைப் பூசித்தவன் இஷ்டசித்தியையும் மோக்ஷத்தையுமடைவான் என்பதற்குச் சந்தேகமில்லையென்று கூறினர்.

பஞ்சப்பிரமமந்திரமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தெட்டாவது

ஈசான கல்பமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! ஆன்மகோடிகளுக்குப் புத்திமுக்திகளைக் கொடுக்கவல்லவர் சிவபெருமானே: அவர் தன்னை மந்திரோக்தமாகப் பூசியாவிடினும் பக்தியுடையவர்களுக்கும் அவரவர்களுடைய இஷ்டகாமியங்களைக் கொடுக்கும்பக்ஷத்தில் மந்திரபூர்வமாக அர்ச்சிக்கின்றவர்க ளடையும் பலனை எடுத்துச் சொல்லவேண்டுமா? சர்வலோகத்திற்கும் ஈசுவரனும், மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கவனும் மஹாதேவனே யன்றி வேறே யில்லையென்று சந்தேகமறத் தெரிந்திருந்தும், விழித்துக்கொண்டிருந்தும் தூங்குவதுபோ லுழலும் மாந்தர்கள் விஷ்ணுவின் மாயையிலகப்பட்டு மோக்ஷமார்க்கத்தை யடைய வழியறியாதுழலுவதற்குக் காரணமென்னை? என்று கேட்ட வியாஸபகவானை நோக்கி ஸநத்குமாரமுநிவர் சாற்றலாயினர். தாவரசங்கமங்களாகிய பிராணிகளியாவும் தங்கடங்கள்வினைக்கீடாகத்தநுகரணபுவனபோகங்களை யநுபவிக்கிறார்கள். மாநுடருக்கு ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம்முதலியன பொதுவாயிருப்பினும், ஞானிகளுக்கே மாநுடரென்னும் பெயர் தகுதியுடையதும், ஞானிகளல்லாருக்கு மிருகங்களென்னும் பெயர் தகுதியுடையதுமாகும். பிராமணர் முதலிய சதுர்வருணத்தோராக இப்பூமியி லவதரித்தவர்கள் எவ்விதப் பிரயத்தனப்பட்டுஞ் சிவஞானத்தை யடையவேண்டுவ தாவசியகம். அப்படியில்லாது மாநுடர் சமுசாரமாகிய காட்டில் நெடுங்காலமுழன்று பெருந் துன்பங்களை யநுபவித்தும், அதனை வெறுத்தும், சிவபெருமானுடைய கடாக்ஷவீக்ஷண்யத்தை யுணர்ந்து, அவ்வெம்பெருமானுடைய திருவடியை யடையாது நரகத்தை யடைந்து கஷ்டங்களை யநுபவித்து, இறந்தபின்னர் புல் பூண்டுமுதலிய தாவரங்களாகச் சனித்தும் மீண்டுந் * திரியக்குயோனியிற் பலமுறை பிறந்தும், பின்னர் மாநுடரில் இழிந்தோராய்ப் பிறந்து சர்வலோக காரணபூதராகிய சிவபெருமானை யடையாது மீண்டும் மீண்டுஞ் சமுசாரதுக்கத்தில் அழுந்தி வருந்துவர் என்று ஸநத்குமாரமுநிவர் கூறி முன் நீ கேட்ட பஞ்சப்ரமவிதானத்தைப்பற்றிப் பூர்வம் பார்வதிதேவியாருக்கும் பரமசிவனுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன்.

* திரியக்கு - பக்ஷி.

வியாஸமுநிவனே ! பஞ்சப்ரம்மசொரூபியான சிவபெருமானைக் காராம்பசுவின் பஞ்சகௌயங்களா லபிடேகித்து, எள்ளினால் ஆயிரத் தெட்டு முறை ஹோமஞ்செய்யும்பட்சத்தில் சர்வ பாவங்களினின்றும் நீங்குவர். அவ்விதமாகவே ஒவ்வொருதினமும் நூற்றெட்டுக் கும்பங்களில் மஹாநதி தீர்த்தங்களை நிரப்பி, சிவபெருமானை யபிஷேகித்தவன் கிரகத்தில், மகாலக்ஷ்மி நீங்காமல் வசிப்பாள். அவன் ஜனனந்தோறும் புத்திர பாக்கியமுடையவனா யிருப்பான். ஒருநாள் முற்றும் உபவாசமிருந்து அஸ்தமித்தபின்னர் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் பஞ்சாமிர்தத்தா லபிஷேகித்து, முத்கமென்னும் பயற்றினால் ஆயிரத்தெட்டுமுறை ஹோமஞ் செய்தவர்கள் யக்ஷ ராக்ஷச பைசாசங்களைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு யுத்தரங்கத்தில் ஜயத்தை யடைகிறார்கள். மேலும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்திலேயே மூன்று தினங்களில் ஆயிரத்தெட்டுத் தடவைக்குக் குறையாமல் காராம்பசுவின் நெய்யோடு சமித்தினால் ஹோமஞ்செய்தும், அதன் தயிர் கலந்த அன்னத்தைக்கொண்டு ஹோமஞ்செய்தால் மனரம்மியமான புத்திரபாக்கியங் கிடைக்கும். தாமரைப்புட்பங்களால் ஆயிரத் தெட்டுமுறை பூசித்தோர், பிரமஹத்திமுதலிய பாவங்களை நீங்கிச் சிவ சாயுச்சியமடைவார்கள். பிச்சையெடுத்துண்ணும் ஏழையாயினும் தீர்த்தத்தா லபிஷேகித்து வில்வத்தைக்கொண்டு பூசித்தவன் அஸ்வமேதஞ் செய்த பலனையடைவன். பஞ்சகௌவியங்களாலபிஷேகித்து பவித்ரபாணியாய் பரிமளமுள்ள சந்தனத்தாலலங்காரஞ்செய்தவன் அபயப்பிரதானஞ் செய்த பலத்தை யடைவான். நெய்யோடு ஹோமஞ்செய்தவன் தரித்திரம் நீங்கிச் செல்வத்தைச் சதா அனுபவித்திருப்பான். இந்த ஈசான மந்திரத்தைத் தன் ஆபத்துவேளைகளில் சூரியனுக்கெதிர்முகமாய் நின்று கைகளை மேலேயுயர்த்தி ஜபிப்போன் சர்வ பாவங்களையுஞ் சந்தேகமின்றி நீங்குவான். இம்மந்திரத்தை (ஜலபானமட்டுஞ் செய்துகொண்டு) ஜலத்திலிருந்து ஏழுநாள்ஜபஞ்செய்வோன் சுராபானம், மலமூத்திராதிபட்சணம், தங்கத்தை திருடினது, குருதாரகமனம் முதலிய மகா பாவங்களினின்றும் நீங்கிப்புனிதனாவான். அரசர்களிடத்தில் வாங்கத்தகாத தானத்தைப் பெறுதல், சூத்திரனுடைய அன்னத்தைச் சதா புசித்தல் முதலியன செய்திருக்குமொருவன் திரிகாலங்களி லிம்மந்திரஜபஞ் செய்தால், தான் செய்த பாவங்களைப் போக்குவான். மந்திரத்தை மனதினால் ஜபிப்பவனுக்கு யானை, சிங்கம், சத்துருமுதலியவைகளால் ஒருக்காலும் தீங்குண்டாகாது. இந்த ஈசானமந்திரத்தை மனதினால் தியானிப்போன் இந்தத் தேகத்தோடே சிவசாரூப்பியத்தை யடைகிறான் என்று ஸநத்குமார முனிவர் கூறினர்.

ஈசானகல்பமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது

தற்புருஷ கல்பமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! தற்புருஷமூர்த்தியின் பூசாபலனைச் சவிஸ்தாரமாகச் சொல்கிறேன். வில்வம், அத்தி இவற்றின் சமிதையால் தற்புருஷ மந்திரஞ் ஜபித்து ஆயிரத்தெட்டுமுறை ஹோமஞ்செய்தால் பிரமஹத்தி முதலிய பாவங்களைப் போக்கலாம். தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் இம் மந்திரத்தை ஒருமாதகாலஞ் சபித்தால் யக்ஷணி பிரசன்னமாகி வேண்டியவைகளை யளிப்பாள். தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் கரவீரபுட்பத்தால் அர்ச்சிக்கின் வசியசித்தியாகும். ஆறுமாசகாலம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் கர்ணிகார புஷ்பத்தா லர்ச்சிக்கின்றவன் இஷ்டார்த்தத்தைத் தேவ கந்தர்வ கன்னியர் பூர்த்திசெய்வர். பிரதிதினம் சிவலிங்கத்தைப் பூசிப்போர் மாநுடதேகத்தோடு முத்தியடைவர். இம்மந்திரத்தால் உப்போடு திலத்தைக்கூட்டிப் பூசிப்போன் சத்துருக்களை வசப்படுத்துவான். கீர்த்தியை விரும்பினோன் நெய்யினாலும், ஆயுள்விர்த்தி விரும்பினோன் அருகம்புல்லினாலும் ஹோமஞ்செய்யவேண்டும். சிவசந்நிதானத்தை மெழுகிச் சுத்திசெய்து கோலமிட்டவன் சர்வரோக நிவாரணனாவான். கடுகினால் ஹோமஞ்செய்தோன் சர்வஜன ரக்ஷகனாவான். சந்திர சூரிய கிரஹண புண்ணியகாலங்களில் இம்மந்திரத்தைத் தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் ஆயிரத்தெட்டுமுறை ஜபிப்போன் மனோபீஷ்டத்தை யடைவான். ஒருவருடகாலம் தியானிப்போனுக்குப் பரமசிவனே பிரசன்னமாகிவேண்டுவனவளிப்பர். பஞ்சகவ்வியத்தை யாகாரஞ்செய்துகொண்டு இம்மந்திரத்தை ஜபிப்போன் சந்தேகமின்றி மோக்ஷத்தையடைவான். பர்வகாலத்தில் இம்மந்திர ஜபஞ்செய்வோன் சர்வயாகங்களுஞ் செய்தபலனை யடைவான். மயானத்தில் ஜபஞ்செய்வோனுக்குச் சர்வபிராணிகளும் வசமாகும். சாந்தியடைய விரும்பினோன் வெண்கடுகாலும், வசியஞ்செய்ய விரும்பினோன் செவந்தபுட்வங்களாலும், கொல்லுந்தொழிலை விரும்பினோன் கறுப்புப்புட்பங்களாலும், துவேஷத்தை விரும்பினோன் மஞ்சள் நிறப் புட்பங்களாலும், உச்சாடனம் விரும்பினோன் மேகநிறபுட்பத்தாலும் ஹோமஞ்செய்யவேண்டும். சர்வசித்தியைக்கொடுக்கக் கூடியதாகிய இம்மந்திரத்தை ஜபிப்போன் தர்மார்த்தகாமங்களை இங்கு அனுபவித்து அவ்வுலகத்தில் மோக்ஷத்தையடைகிறான்.

தற்புருஷ கல்பமுரைத்தது

முற்றிற்று.

நாற்பதாவது

அகோர வாமதேவ ஸத்தியோஜாத கல்பங்களுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! அகோரமூர்த்தியின் பிரபாவத்தையுமுனக்குச் சொல்லுகின்றேன். அகோரமூர்த்தியை ஸ்மரிப்பதற்குத் திதி வார நக்ஷத்திரங்கள் கவனிக்கவேண்டியதில்லை. அவரை எந்தச்சமயத்தில் ஸ்மரித்தபோதிலும் அப்பொழுதே சர்வபாவங்களினின்றும் நீங்கலாம். ஸ்நானஞ்செய்து நித்யகருமமுடித்து அகோரமூர்த்தியைப் பஞ்சகௌவியத்தால் அபிடேகித்து அகோரமந்திரத்தைப் பதினாயிரந்தரம் ஜபித்துப் பசுநெய்யினால் ஆயிரமுறை ஓமஞ்செய்தவன் திரிலோகங்களையுஞ் சுவாதீனஞ்செய்து கொள்ளுவான். சதுர்த்தசியிலாவது அஷ்டமியிலாவது தக்ஷிணாமூர்த்திசந்நிதியில் எட்டாயிரஞ் சபித்து மண்டுகத்தின் கொழுப்பினால் ஆயிரம் ஓமஞ்செய்தவனும், மாநுடனது கபாலத்தில் தவளைநெய்யினால் தாமரைநூல் சேர்த்துத் தீபமேற்றி அதிற்றோன்றிய மையையெடுத்துத் திலதமிட்டவனும் பிறர்கண்கட்குப் புலப்படாதவனாகிறான். இவ்வாறே எருக்கநூலினால் விளக்கெரித்துத் திலதமிட்டவன் அதிரிசியவித்தையும், பிரமலோகாதிலோகங்களுக்குச் செல்லும் ஆற்றலும், எல்லாப்பொருள்களையுங் காணும் வல்லபமும் அடைவான். காரெள்ளினால் பதினாயிரம் ஓமஞ்செய்து பஞ்சுத்திரிசேர்த்திய நெய்த்தீபத்தின் மையைத் திலதஞ்செய்தவன் பிறர்கண்கட்குப் புலப்படாது சஞ்சரிப்பான். கோரோசனத்தால் ஆயிரம் ஓமஞ்செய்தவனுக்குப் பூதப் பிரேத பசாசங்களெல்லாம் ஸ்வாதீனமாகி, டாகினி சாகினி ஜ்வரமுதலிய பீடைகள் நசிக்கும். அரிதாளத்தால் எண்ணாயிரஹோமஞ்செய்து ஐயாயிரஞ் சபித்தவன் அணிமாதி அஷ்டசித்திகளையடைவான். தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் லக்ஷவில்வங்களால் அருச்சித்து லக்ஷம் ஜபஞ்செய்து பதினாயிரம் ஓமஞ்செய்தவன் திரிலோகசித்தியும் ஜ்வராதி ரோகங்களின் நீக்கமும் அடைவான். அம்மந்திரத்தை யெப்பொழுதுஞ்சபிப்பவன் அடையக்கூடாதசித்தி ஒன்றுமில்லை. பிரமசரியநிலையினின்று பஞ்சகௌவியங்களையே புசித்து ஒருமாசகாலம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் இம்மந்திரத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்தவன் சுவர்க்கத்தையும் பாதாளலோகத்தையும் இந்தத்தேகத்துடனே அடையும் வல்லபம் பெறுவான். காய்கனிகளைப்புசித்து ஏகலிங்கார்ச்சனை செய்தவன் பிரமஹத்தியாதி பாவங்களினின்று நீங்குவான். கரபிக்ஷையேற்றுப்புசித்து ஆறுமாதகாலம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் சிவபூஜை செய்து இம்மந்திரஞ் சபித்தவன் சமஸ்ததுன்பங்களின்றும் விலகுவான். நாளொன்றுக்கு நூறுமுறை இம்மந்திரஞ் சபிப்பவன் எல்லாப் பாவங்களையுமொழிவான். இது அகோரமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுநிவனே! இனி வாமதேவமூர்த்தியின் வைபவத்தைச் சொல்லுகின்றேன். தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில், பஞ்சகௌவியங்களால் அபிஷேகஞ்செய்வித்து வெண்மலர்களால் அருச்சித்து வாமதேவமந்திரத்தை எண்ணாயிரஞ்சபித்து வெண்மை செம்மை மஞ்சள் நிறமுடைய பதினாயிரமலர்களால் ஓமஞ்செய்தவனுக்கு மனோரத சித்தியுண்டாகும். மூன்று தினங்கள் உபவாசமிருந்து வாமதேவமந்திரத்தை நாளொன்றுக்குப் பதினாயிரஞ்சபித்து [ஹாஸபக்ஷி] பருந்தின் எலும்பைக் கையிற்கட்டிக் கொண்டவன் பூதப்பிரேதராக்ஷஸ மாநுடமிருகபக்ஷியாதிகள் வசியமாகப் பெறுவான். காராம்பசுவின் நெய்யினால் எண்ணாயிரம் ஓமஞ்செய்து வாமதேவமந்திரத்தை எண்ணாயிரஞ் சபஞ்செய்தவனுக்கு யக்ஷணியானவள் சுவாதீனமாகிச் சம்பத்து முதலியவற்றைக்கொடுப்பாள். பரிமளமிகுந்த எண்ணாயிரமலர்களை வாமதேவமந்திரஞ் சபித்துத் தக்ஷிணாமூர்த்திக்குச் சமர்ப்பித்தால், இஷ்டகாமியங்களெல்லாஞ்சித்தியாகும். யவையினாலாவது நெல்லினாலாவது, வாமதேவமந்திரஞ்சொல்லி, லக்ஷம் அருச்சனை செய்தவன் குபேரசம்பத்தை யடைவான். நாகபுஷ்பம் புன்னாகமலர் அசோகமலர் கர்ணிகாரம் பாதிரிமுதலிய மலர்களை வாமதேவ மந்திரங்கூறி, தேன் நெய் கூட்டி ஆயிரம் ஹோமஞ் செய்தவன் ஐசுவரிய விர்த்தியையடைவான். கடுகினால் ஹோமஞ்செய்தவனுக்குக் கிரகபாதைகள் நீங்கும். பெருங்கடுகினால் ஹோமஞ்செய்தவன் கிரகபந்தனஞ் செய்யும்வல்லபமடைவான். பலவிதமான மலர்கள்கொண்டு வாமதேவ மந்திரத்தால் அர்ச்சித்தவன் தரித்திரநீங்கிச்சுகமடைவான். தகரம்மல்லிகைசெந்தாமரைமுதலிய மலர்களாற் பூசித்தவன் நஷ்டராஜ்ய லாபமடைவான். சுக்லபக்ஷ பிரதமை முதல் பூர்ணிமவரையில் தினந்தோறும் எண்ணாயிர மலர்கட்குக் குறையாமல் அருச்சித்தவன் சிவசாரூப்பியத்தையடைவான். திவ்யசந்தனத்தினால் அபிஷேகித்துப் பரிமளமலர்களால் எண்ணாயிரம் ஓமஞ்செய்தவன் சம்பத்துள்ளவனாகவும், தீர்க்காயுஷ்மானாகவும், பிறராற் சயிக்கமுடியாதவனாகவுமாகிறான். இந்த வாமதேவ மூர்த்தியே சூரியனாகப்பிரகாசித்தும், பர்ஜன்யரூபமாக வர்ஷித்தும், சர்வபூதங்களையுஞ் சிருஷ்டியாதி காரியங்களைச் செய்தும், சர்வகாமியங்களைக் கொடுத்தும் விளங்குவர். இதுவே வாமதேவமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுநிவனே! ஸத்யோஜாதமூர்த்தியின் பிரபாவத்தையுஞ் சொல்லுகிறேன். ஸத்யோஜாதமூர்த்தியைக் கிருஷ்ணயஜுஸ்ஸம்ஹிதையிற் கூறியபடி, எண்ணாயிரமுறை ஸத்யோஜாதமந்திர ஜபஞ்செய்து ஆத்மார்த்தமாக எண்ணாயிர ஹோமஞ்செய்தவன் மனோவிருப்பமுழுவதையும் அப்பொழுதே யடைவான். தேன் நெய்கூட்டிய எண்ணாயிரம் புஷ்பங்களைக் கொண்டு ஓமஞ்செய்தவன் யக்ஷராக்ஷஸபைசாசாதிகள் வசியமாகப்பெறுவான்; இரசாயன சித்தியையுமடைவான். காமக்குரோதங்களைப்போக்கி நிராகாரனாய் மௌனவிரதத்தோடு சுக்லவஸ்திரமணிந்து இந்திரிய நிக்கிர

கஞ்செய்து பயற்றினால் எண்ணுயிர ஹோமஞ்செய்து ஸத்யோஜாதமூர்த்தியைப் பூசித்தவன் அஷ்டமகாசித்தியும் சத்துருக்ஷயமுமடைவான். தேன் பால் இவற்றால் எண்ணுயிர ஹோமஞ்செய்தவன் நஷ்டராஜ்ய லாபத்தை யடைவான். வில்வம் எருக்கு அத்தி அரசுமுதலிய சமிதைகளால் எண்ணுயிரமுறை சிவசந்நிதியில் ஸத்யோஜாதமூர்த்திக்குப் பிரீதியாக ஓமஞ்செய்தவன் அளவிறந்த இராச்சிய போகத்தையடைவான். இந்த ஸத்யோஜாத மந்திரத்தை நாடோறும் ஆயிரமுறை அன்புடன் சபித்தவன் நோயின்றிக் கோடிமன்மதாகாரமான அதிசுந்தரதேகத்தையடைவான். வஸ்திரம் ஆயிரம் மலர்மாலை முதலியவற்றால் அருச்சித்தவன் ஸௌபாக்கியத்தையடைவான். இம்மந்திரத்தை வடவிருக்ஷத்தின் கீழிருந்து இலக்ஷமுறை ஜபித்தவனுக்கு யக்ஷணிசித்தியுண்டாகும். ஜலமத்தியினின்று ஐயாயிரஞ் சபித்தவன் பிரமஹத்தியாதி பெரும்பாவங்களை யொழிப்பான். ஐம்பதினுயிரஞ் சபித்தால் மஹாபாதகங்களும், இருபத்தையாயிரஞ் சபித்தால் உபபாதகங்களு மொழியும். ஏகலிங்கார்ச்சனஞ்செய்து இலக்ஷமுறை இம்மந்திரஞ்சபித்தவன் சிவதரிசனம் அடையப்பெறுவான். இவையெல்லாம் இகலோக சுகத்தை விரும்பினவர்கள் பெறும்பலன்களாம். நிஷ்காமியனாய் இம்மந்திரஜபஞ் செய்தவன் ஞானத்தையடைந்து சிவசாயுச்சியமுறுவான். இதுவே ஸத்யோஜாதமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுநிவனே! சிவலிங்க மூர்த்தியின் பேதங்களும், சாத்துவிக பூஜாவிதியும், அதனாலடையும் சாதனங்களும் உனக்குச்சொல்லுகின்றேன். சுயம்புலிங்கம் பாணலிங்கம் ஜோதிர்லிங்கம் எனப் பலனளிக்க வல்லமூர்த்திகள் மூன்று. இவையே சேவிக்கத்தக்கன. பரிசுத்த மனத்துடன் நித்திய நியமமுடித்து பக்தியோடுகூடிய மனத்துடன் ஆசாரமுடையவனாகி, மிதமான உணவுகொண்டு, சர்வபூதங்களினிடத்தும் இதமுடையவனாய், மௌனவிரதம் பூமியிற் படுத்தல் இந்திரியநிக்கிரகமுடையவனாய், முதியோராகிய சமயாசாரியரிடத்தில் சிவபூஜாவிதானத்தைத் தெரிந்துகொண்டு, பிரதக்ஷிண நமஸ்கார ஜப தியானயோகாப்பியாச முதலியவற்றால் சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் பக்தியேகாரணம். மகேசுவரனைப் பக்தியினாலேயே யடையவேண்டும். எல்லாவருணாச்சிரமிகளும் பாலர் விருத்தர்களும் ஆஸ்திகபுத்தியோடும் சிரத்தையோடும் நாடோறும் சர்வபூதாந்தர்யாமியான பரமசிவனைத் தியானிப்பார்களாயின் சர்வசித்திகளுமடைவார்கள். உலகமுழுவதும் சிவஸ்வரூபமேயென்றுணர்ந்து தியானித்தவன் ஆறுமாதகாலத்தில் யோகியாவான். சிவபெருமானிடத்திலேயே மனம்பதிந்துள்ள சமாதியும், யோகாப்பியாசசாமர்த்தியமும் உடையவனாய் தியானம் ஜபம் மனன முதலியன செய்தவன் ஜீவன் முக்தனாவான். இனி மந்திரபலன்களைச் சொல்லுகின்றேன். கங்கைமுதலிய நதிகள், நருமதை முதலிய நதங்கள், க்ஷீரமுதலிய சமுத்திரங்கள், மகேந்திரமுதலிய பர்வதங்கள், சிவாலயங்கள் முதலிய பரிசுத்தமான விடங்களி

னும், மேற்றிசைநோக்கிய சுயம்புலிங்கமுள்ள இடங்களிலுங் காராம் பசுவின் சாணத்தினாற் சுத்தஞ்செய்து, அவ்விடத்திற் சிவபெருமானைப் பஞ்சகௌவியங்களால் ஸத்யோஜாதமந்திரங்கொண்டுஅபிஷேகித்து, வாம தேவமந்திரத்தாற் பிரதிஷ்டைசெய்து, தற்புருஷமந்திரத்தாற் பஞ்சா மிர்தத்தாலும் சுத்தஜலத்தாலும் அபிஷேகஞ்செய்து, அகோரமந்திரத் தாற் கந்தபுஷ்ப சந்தனாதிகள் சமர்ப்பித்து, ஈசானமந்திரத்தால் அருச்சனை செய்யவேண்டும். சிவலிங்கமானது ஸ்வயம்புலிங்கமாயினும் பாணலிங்க மாயினும், தேவாசுரர்களாற் பிரதிஷ்டிக்கப்பட்டதாயினும், லக்ஷணஹீன மாயிருப்பினும், உடைந்திருப்பினும், அசைவுற்றிருப்பினும், அது சித்திகளை யெல்லாங் கொடுப்பதென்று கருதிப்பூசிக்கவேண்டும். சாமானியமாகக் கருதப்படாது. இவ்வாறு சிவலிங்கப்பெருமானை ஆறுமாதகாலம் அருச் சித்தவன் சர்வசித்தியையும் அடைவான். ஈசானமந்திரத்தை இடையளவு ஜலத்தினின்று இலக்ஷஞ் சபித்தவன் ஈசானதிருஷ்டி யடைவான். சிவ பிஜாக்ஷரத்தை யெண்ணாயிரஞ்ஜபஞ்செய்து சிவபெருமானைத் தனதிதயத் திற் பிராணாயாமாதிகளாற் றியானித்தவன், எல்லாத்துயரங்களையு மொழி த்து நிர்ப்பயனாகவாழ்வான். பர்வதத்துச்சியிலிருந்து இதனைச் சபித்தவன் இந்தத் தேகத்துடன் சிவதரிசனஞ்செய்வான். புசிக்கத்தகாத அன்னபா னாதிகளும், பகல்நித்திரையும், ஸ்வப்பனத்தில் ரேதஸ்கலனமும், பிராமண நிந்தையும், கோநிந்தையும், தேவநிந்தையும், பதிவிரதாநிந்தையும், தர்ம சாஸ்திரவிரோதமான நடத்தையும் ஆகியவற்றால் வரும்பாவங்கள் ஈசான மந்திரசபத்தாற் பஸ்மமாகும். இதுவரையில் பஞ்சப்பிரமவிதானத்தைச் சொன்னேன். இனிச் சிவபக்தர்களுடைய பிரபாவத்தைப் பூர்வம் பரம சிவன் பார்வதிக்குரைத்தவகையே சொல்லுகின்றேனென்று ஸநத்குமார முனிவர் கூறுகின்றார்.

வியாஸமுநிவனே! பரிசுத்தமான பக்தியோடுந் தவத்தோடுஞ் சிவபெருமானை யிடைவிடாது அருச்சித்தும் தியானித்தும் யோகஞ்செய் துங் காலங்கழிப்பவர்களைச் சிவபெருமானாகவே பாவிக்கவேண்டும். நாச ரகிதமான சிவலோகத்தைத் தவஞ்செய்யாதவர்கள் ஒருபோதும் அடைய மாட்டார்கள். தவத்தாலேயே தேவர்கள் தங்கள் உயர்பதவியை யடை ந்து வாழ்கின்றார்கள். ருஷிகள் பிரமானந்தத்தை யடைகிறார்கள். இதனைச் சத்தியமென்று நினைக்கவேண்டும். தன்னால் அடையக்கூடாதவொவ்வொ ன்றையுந் தவத்தினாலே யடையலாம் ஆயினும் தவமொன்றே கடினமா னது. அந்தத்தவத்தைத் திரிமூர்த்திகளும் இன்னுங் கடைப்பிடித்திருக் கிறார்கள். சிவபெருமானை யாதுகருதிப் பூசிக்கிறார்களோ அவர்கள் அந்தப் பலனையடைவது சத்தியம். அந்தத்தவம், சாத்விதம் ராஜசம் தாமசமென முத்திறப்படும். தேவர்கள் தமது தேவபதவியை யடையச் செய்ததும் ஊர்த்வரேதசுகளாகிய முனிவர்கள் செய்வதும் சாத்விகதவமாம். உலகினர் பலவிதபோகபாக்கியங்களை விரும்பிச்செய்யுந்தவம் ராஜஸதவமாம். அக

ரர் ராக்ஷஸர் முதலானோர் உடலைக் கஷ்டப்படுத்திப் பிடிவாதத்தாற் செய்யுந் தவம் தாமஸமாம். அவற்றுள் சாத்விகமேசிறந்தது. அது ஜபம் தியானமுதலிய கர்மங்களால் பக்தியோடு தேவர்களையுஞ் சிவபெருமானையும் பூஜிப்பதாம். அவ்வாறு சாத்விக தவஞ்செய்தோர் இகலோகத்திற் சர்வசுகங்களையுமநுபவித்துப் பரலோகத்தில் மோக்ஷத்தையடைவார்கள். உத்தமமான தர்மத்திலேயே மனம் - நாடோறும்ஸ்நானம் - சிவபூசை-காயத்ரிமுதலிய ஜபம் - ஔபாசனாதிஹோமம் - ஆசாரம் - அஹிம்சை - சிவவிரதங்கள் - மௌனநிலை இந்திரிய நிக்கிரகம் - மனத்தை வித்யாவிஷயத்திற் செலுத்தல் - சத்தியம் - குரோதமின்மை - கோதானமுதலிய தானங்களைச் செய்தல் - பொறுமை - அந்தக்கரணவொடுக்கம் - தயை - வாவிகூபங்களையெடுத்தல் - தேவாலய நிர்மாணஞ்செய்தல் - சத்திரம் மடம் தோப்பு ஆச்சிரமம் முதலியன நியமித்தல் - தீர்த்தயாத்திரை - பிராஜாபத்திய முதலிய கிருச்சிரங்களை யநுசரித்தல் - சாந்திராயணஞ் செய்தல் - மாசப்பிறப்பிற் பிதுர்தர்ப்பண மியற்றல் - கிரகணமுதலிய புண்ணிய காலங்களில் ஸ்நானதானாதிகளைச் செய்தல் முதலியவை, இகலோகத்திற் சௌக்கியத்தையநுபவித்து இந்திராதி லோகங்களிலும் இஷ்டகாமியங்களை நுகரச்செய்யவல்லனவாம். அந்தியகாலத்தில் பரமசிவனைத் தியானித்து அவருடைய ஸ்வரூபத்தை மனத்தில் தியானித்தலும் ரேசகபூரக கும்பகங்களால் பிராணவாயுவைநிறுத்திச் சிவத்தியானஞ் செய்தலும், பிராணாயாம முதலியவற்றாற் சர்வேசுவரனை த்தியானித்தலுமாகிய இவை ஞானத்தாலடையத்தக்கவையும் மோக்ஷத்தைக்கொடுக்க வல்லவையுமாம். ஸ்திரீ - சயனம்- ஆசனம் - வஸ்திரம் - வாசனைத்திரவியம் - தூபம் - தாம்பூலபக்ஷணம் - இராஜ்யபோகம் - சுவர்ணம் - தாமிரமுதலியவை - வீடு-குதிரைகள் - பசுக்கள் - விதவத்தன்மை - வேதசாஸ்திரங்கள் - கீதநிருத்திய வீணாம்ருதங்கத்தொனிகள் - யானை - குடை - சாமரம்முதலியவை போகரூபமாதலின், இவற்றை விரும்பினவன் யோகமார்க்கத்தை யடையமாட்டான். எள்ளினுள் தைலரசமிருந்து அந்த எள்ளினைச்செக்கிலிட்டு ஆட்டச்செய்வதுபோல, மேற்கூறிய போகங்களின் இச்சையானவை ஒருவன் மனத்திலிருக்குமாயின் அவை அவனைநல்ல யோகமார்க்கத்திற்செல்லவொட்டாது தடுத்து, உலகவியாபாரமாகிய செக்கிலிட்டு ஆட்டுவிக்கும். ஜாமரணபீடையுடைய பிராணிகள் ஏற்றத்தின் துலாக்கோல் போல, பலபிறவிகளில் உயர்வுமிழிவு மடைந்து துன்புறுகிறார்கள். எண்ணிறந்த பிறவிகளடைந்த பின்னர் மாநுடதேகம் ஒன்றுகிடைப்பதுந் துர்லபம். புண்ணிய கருமவிசேஷத்தினாலேயே மாநுடசரீரங்கைகூடு மாதலின் கர்மகதிகள் விசேஷமானவை. சுவர்க்கமோட்சங்கட்குச் செல்லத்தக்க அரியமாநுட தேகத்தையடைந்தும் உயிர்க்குறுதிதேடிக் கொள்ளாதவன் இறந்த பின்னர் நெடுங்காலம் பெருந்துக்கத்தையநுபவிக்கிறான். தேவாசுரஜனனங்களிலும் மாநுடஜனனஞ் சிறந்ததாயிருக்க, அவ்வகைய மாநுடத்தையடைந்தும் நரகவாதையடையாதவழியையேன் தேடிக்கொள்ளாதிருக்கிறார்கள்? தர்மத்

திற்கு மூலமாயிருக்கும் மாநுடதேகமெடுத்தும், மோட்சத்தைத் தேடாவிடினும் நரகத்தையாவது தாவரஜனனத்தையாவது சம்பாதித்துக் கொள்ளாதிருப்பது உசிதம். இலாபங்கருதி வியவர்த்தகஞ்செய்பவன் இலாபங்கை கூடாவிடினும் நஷ்டமடையா திருக்கவும் மூலதனத்தையாவது காத்துக்கொள்வதும் விசேஷமன்றோ ? அது போலத் தனதுமூலதனமாகிய மாநுடதேகத்தை யிழந்து போகாதிருப்பது சிறப்பு. மாநுடதேகத்திலும் பிராமணத்துவத்தைப்பெறுவது மிகவும் அருமை. அப்படிப்பட்ட பிராமணத்துவத்தை யடைந்தும், ஆத்துமரட்சணஞ் செய்து கொள்ளாதவனைக்காட்டிலும் இழிந்த ஜந்து யாதுள்ளது? புண்ணிய பூமியாகிய ஜம்புத்தீவில், கிடைப்பது நிச்சயமென்று கருதப்படாத துர்லபமான மாநுடயோனியிற் சனித்தும், ஆத்மாவுக்கு நல்லகதியைத் தேடிக்கொள்ளாதவன் ஆத்மத்துரோகியாவான். இதுவே கர்மபூமியாதலின், இவ்விடத்தில் தேடியவற்றை யிதரபூமியில் அநுபவிக்கலாமன்றி அங்கேயொன்றுந் தேடமுடியாது. பஞ்சேந்திரியங்களும் நல்லநிலையிலுள்ள பொழுதே ஆத்மாவிற்குச்சத்கதியைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது. நித்தியமில்லாத இந்தத்தேகத்தையடைந்தவன் நித்தியமான மோக்ஷத்தையடையப்பிரயத்தனஞ் செய்யாவிடின், தேகநஷ்டமும் மோக்ஷநஷ்டமுமடைந்துஉபயப்பிரஷ்டனாவான். மாநுடனுக்குள்ள ஆயுள்சுலபம். அதிலும் இரவில் நித்திரை பாதியைக்கொண்டுபோகும். மற்றப்பாதியில் வாலிப வார்த்திகங்கள் பாதி கொண்டுபோம். அதிலும் ஜ்வரமுதலியபிணிகள் மனக்கவலைகள் அரைப்பங்கினைக்கொண்டுபோம். எப்பொழுது தான்மரிப்பானென்பதை ஒருவ மறியான். வருங்காலமறியாத மரணத்துக்கஞ்சிப் புண்ணியகருமங்களைச்செய்யாது தைரியமாயிருப்பது தகுதியா? தருமமே பரலோக யாத்திரைக்குப் பொதிசோறாகும். தானஞ்செய்திருப்பானாகில் அவன் சுவர்க்கலோகஞ் செல்கையில் அங்கு உதவியுண்டாகும். தனத்தை வீட்டில் வைத்துவிட்டு இறந்தால் அஃதவனோடு வரமாட்டாது. அவனும் வழியிற் சாப்பாடுகொண்டு போகாதவன் கஷ்டப்படுவதுபோல அநேக துன்பங்களை யநுபவிப்பான். அதிதிகளை யெதிர்கொண்டழைத்து அர்க்கிய பாத்தியாதிகளாற் பூசித்தோர் அன்னபானாதிகளை யமமார்க்கத்திற் பெறுவார்களென்பதை நம்பிப் புண்ணியத்தைச்செய்து பாவத்தை நிவர்த்திக்க வேண்டியது. புண்ணியத்தால் சுவர்க்காதிலோகங்களையும், பாவத்தினால் நரகவாதனையையும் அடைகிறார்கள். ஒருமுறையேனும், சிவபெருமானையே சரணாகதியென்று நம்பினவன் கோரமான நரகத்தையும் இயமனையுங் காணமாட்டான். அவன் சிலகாலம் மாநுடதேகத்தையடைந்து கிரமப்படி புண்ணியமிகுதியால் மோக்ஷத்தையடைவான். சிவபெருமானையே கதியென்று எப்பொழுதும் மனத்தில் திடங்கொண்டுள்ளவன் தாமரையிலையில் ஜலம் ஒட்டாததுபோல, பாவத்தில் தோயாதவனாகி மோக்ஷமடைவான். சிவசிவ ஹரஹர வென்று சிவநாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருப்பவன்

நரகவேதனையும் யமபாதைையுமடைகிறதேயில்லை. ஆகையால் மானுடதேக மெடுத்த புத்திமான் சிவபெருமானிடத்தில் இடையறாது பக்தி செலுத்த வேண்டியது என்று ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவருக்குரைத்தருளினர்.

அகோர வாமதேவ ஸத்தியோஜாத கல்பங்களுரைத்தது முற்றிற்று.

நாற்பத்தோன்றுவது

க்ஷத்திரிய தர்ம முரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமார முநிவரை நோக்கி ஸ்வாமீ! பிரமதேவனுடைய முகத்தினின்று தோன்றிய பிராமணர்களும், தோளினின்று தோன்றிய க்ஷத்திரியர்களும், தொடையினின்று தோன்றிய வைசியரும், பாதத்தினின்று தோன்றிய சூத்திரரும் என உலகத்திலுள்ள பிரஜைகள் சதுர்வர்ணத்தவர்களாயிருக்க, அவர்களில் உயர்ந்தோர் இழிகுலத்தோராகவும் இழிந்தோர் உயர்குலத்தோராகவும் ஜனனமாறுவதற்கு நியாயம் யாதோ அதனையும் அடியேனுக்குரைக்க வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமார முநிவர் கூறலாயினர். வியாஸமுநிவனே! உயர்ந்தபிறவியை யடைந்தும் அந்தப்பிறவியைக் காத்துக்கொள்ள வகையறியாது இழிந்தபிறவியை யடைகிறார்கள். ஆதலின் புத்திமான் தன்பிறவியைக்காக்க முயலவேண்டும். பிராமணன் க்ஷத்திரிஸ்திரீயினிடத்திற் சந்ததியையுண்டு செய்வானாயின் அவன் பிராமணத்துவநீங்கி க்ஷத்திரியனாகிறான். இவ்வாறு தன்னிலுங் குறைந்தகுலத்தாருடன் சங்கமஞ்செய்வதால் அநேக ஜாதிகளுண்டாகின்றன. ஔபாசனாக்னிஹோத்ரங்களைச் செய்தவனும், வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவனுமாகிய பிராமணன், சூத்திரான்னத்தைப்புசித்து அதுவயிற்றி லிருக்கையிலேயே இறப்பானாயின் சூத்திரஜனனமடைவான். சுபகரமான பிராமணனாகப்பிறந்தும் புசிக்கத்தகாதபதார்த்தங்கள் அதாவது மாமிச பக்ஷணஞ் செய்தவன் க்ஷத்திரிய னாகப்பிறப்பான். சூத்திரனாயிருப்பனும் புத்திமானாகிச்சத்தருமங்களைச் செய்தபக்ஷத்தில் வைசிய ஜனனத்தையடைவான். சூத்திரன் தன்குலதர்மத்தை யநுசரித்து, தன்மேற்குலத்தார் மூவருக்கும் பணிவிடைசெய்யும் பட்சத்தில் வைசியனாகப்பிறப்பான். வைசியன் தர்மசாஸ்திரங்களை யுணர்ந்து அதிதிகளைப்பூஜித்து, அதன் சேடத்தைப் புசிப்பானாயின் க்ஷத்திரியனாகப்பிறப்பான். க்ஷத்திரியனாகப் பிறந்தவன் நல்வழியிற் சம்பாதித்த திரவியத்தால் யாகங்களைச்செய்து தேவர்களைத் திருப்தி செய்வித்து, வேதசாஸ்திரங்களை யப்பியாசித்துக் காருகபத்திய ஆகவனீய தக்ஷிணாக்கினிகளைப்பூசித்து, எப்பொழுதுந் தானங்கொடுப்பதால் நனைந்தகையை யுடையவனாய்ப் பூமியைப்பரிபாலித்து, தன்பாரி

யையை * ருதுகாலகமனஞ்செய்து, தர்மார்த்த காமியங்களை யனுபவிக்க விரும்பி, கோப்பிராமணர்களைக்காத்து, புறமுதுகுகாட்டாதுபோர்செய்து தேகங்கழிப்பானாயின், அவன் பிராமண ஜனனமடைந்துவேதசாஸ்திரங்களை யுணர்ந்து யாகாதி காரியங்களைச்செய்து தேவபதவியை யடைவான். ஆதலின், பிராமணத்துவம் பெரும்பிரயாசத்துடன் சம்பாதிக்கவேண்டியதாயிருக்க, அதனையடைந்துங் காத்துக்கொள்ளாது கைவிடுதல் உசிதமல்ல என க்கூறிய ஸநத்குமாரமுநிவரை நோக்கி, ஸ்வாமீ ! யுத்தரங்கத்திலிறந்த க்ஷத்திரியன் பிராமணனாகப்பிறப்பானெனக் கூறினீராதலின், அந்தயுத்த மஹாத்மியம் யாது? அதனைக்கேட்கவிரும்புகின்றேனெனக் கேட்ட வியாஸ முநிவரைநோக்கி, ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர்.

வியாஸருஷியே ! யாககாலத்திற் பெருந்தக்ஷிணை கொடுத்ததனால் வரும்பலனும், யுத்தபூமியில் உயிர்விடுத்தோன் பெறும்பலனுக்குச் சமான மாகமாட்டாதென்று பெரியோர்கள் கூறுவாராதலின் க்ஷத்திரியர்கள் தங்கள் ஆயுதத்தினால்அடையும்பலனைச்சொல்லுகின்றேன்: சத்துருக்களுடைய சைநியத்தை யழித்து, சயமடையுஞ் சூரனுக்குத் தர்மார்த்தகாமமென்னுந் திரிவிதபுருஷார்த்தங்களுங் கைகூடும்; அன்றியும் கீர்த்தியையும் யாகஞ்செய்தபலனையுமடைவான். சத்துருவைச்சயித்து அவனுடை யவாகனத்திலேறிக்கொண்டவன், விஷ்ணுபதவியை யடைவான். யுத்தரங்கத்திற் சத்துருக்களைத்தன் ஆயுதத்தினாலடித்து, சத்துருக்களுடைய ஆயுதத்தாலடிபட்டு உயிர்துரப்பவன் அசுவமேதஞ்செய்தபலனையடைவான். அரசன் மந்திரி சேனாதிபதி யுத்தபடன்முதலியவர்களில் யாராலாவது விடப்பட்ட ஆயுதங்களால் உடலினுள்ள உரோமங்கள் எத்தனை அழிகின்றனவோ அவ்வளவுகாலம் புண்ணிய லோகத்தையும் வீரசுவர்க்கத்தையும் அடைவான். கோஹத்தி செய்தவனாயினும் பிரமஹத்தி செய்தவனாயினும், பசுவினிமித்தமாகவும் பிராமணனிமித்தமாகவுந் தன்யசமானனிமித்த மாகவும் யுத்தரங்கத்தில் உயிர்விடுத்தவன் சுவர்க்கத்தையடைவான். யுத்தரங்கத்திற் பயமின்றித் தன் சைனியங்களைக் காத்துப்போர்செய்தவனும், தன்னாற்சாத்தியமின்றி உயிர்விடுத்தவனும் மேற்கூறியபலனையே யடைவான். யுத்தகளத்தில் உயிர்நீங்கித் தன்தேகத்தைப் பூதப்பிரேத பசாசங்களுக்கும் கழுகு கூளி பருந்து நரிமுதலிய பிராணிகளுக்கும் விநியோகஞ்செய்தவன் அட்சயமான பதவியையடைவான். தானம் தருமம் யாகம்முதலிய யாவுஞ்செய்யக்கூடும். பிராணனை விடுத்தற்குமாத்திரம் ஒருவனுக்கும் மனந்துணியாதலின் அதனைவெறுத்துத் தைரியத்துடன் போர்புரிந்தவன் எல்லாத்

* ருதுகாலம் - ருதுகாலமென்றதால், மாதருதுவடைந்த ஸ்திரீயை அன்று முதல் நான்கு தினங்கள்வரையில் நீங்கி, அதன்பின்னர் பன்னிருதினங்களிற் புணரலாமென்பது விதி. இதனை "பூத்தகாலையிற் புனையிழை மகளிரை — நீராடியபின் னீராறு நாளுங்—கருவயிற் றுறூஉங் கால மாதலாற்—பிரியப் பெறூஅன் பரத்தையிற் பிரிவோன்" என்னும் அகப்பொருட் சூத்திரத்தானறிக.

தானங்களையுஞ்செய்தபலனையடைவான். கொல்லத்தக்கவர்களையுங்கொல்லலாதுவிடத்தக்கவர்களையுஞ் சொல்லுகிறேன்: வீட்டைத்தீயிட்டெரிப்பவன், விஷமூட்டுபவன், அஸ்திரத்தாலடிப்பவன், சமயமறிந்துமோசஞ்செய்யக்கருதியவன் முதலானோர் வேதியர்களாயிருப்பினும் அவர்களைக்கொல்லலாம். அவர்களைக் கொல்வதாற் பிரமஹத்திதோஷம் சம்பவியாது. சிறிது தோஷமிருப்பினும் அது சுவல்பபிராயச்சித்தத்தாலொழியும். தன்னைக் கொல்லத்தக்க சத்துருவாயிருப்பினும் யுத்தபூமியில் தாகத்திற்கு ஜலம் வேண்டுமென்று கேட்டவனும், வியாதியஸ்தனும், பலவீனனும், வாலிபனும், ஸ்திரீகளும், வில்லொடிந்தவனும், நிராயுதனும், நாணியறுந்தவனும் ஆகிய இவர்களைக்கொன்றவன் பிரமஹத்திதோஷத்தையடைவான். குடுமியவிழ்ந்தவனும், வெறிபிடித்தவனும், சருகைக் கையிற் பற்றினவனும், பூமியை வாயாற் கௌவினவனும், உன் ஊழியனென்று சொன்னவனும், என்னைக் காக்கவேண்டுமென்றவனும், விருத்தனும், யுத்தப்பயிற்சியில்லாதவனும், நபும்சகனுமாகிய இவர்களைக்கொன்றவனும், பிரமஹத்திதோஷத்தைச் சந்தேகமின்றியடைவான். வியாஸமுநிவனே! பெரிய யாகங்களாற் கஷ்டப்பட்டு அடையத்தக்க உயர்பதவியை, யுத்தகளத்தில் தன்தேகத்தை விடுப்பதனால் சுலபமாக அடையலாம். இருக்கு யசுர் சாமம் அதர்வணமென்னும் வேதங்களையும், சிட்சை வியாகரணம் சந்தஸ் நிருத்தம் சோதிடமென்னும் ஷடங்கங்களோடு அத்தியயனஞ்செய்து வனத்தையடைந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தை யேற்று யோகத்தை யப்பியசித்தவர்கள் அடையக்கூடிய கதியைச் [சங்கிரமயாகம்] யுத்தமாகிய யாகத்தில் தன்சரீரமாகிய அவிசைக்கொடுத்தவன் சந்தேகமின்றி யடைவானென்று கூறினர்.

க்ஷத்திரியதர்மமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

கர்ப்பவாச கஷ்டமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! கர்ப்பவாசத்திற் பிராணிகள் அடையுந் துன்பங்களை விவரமாகச்சொல்ல வேண்டுமெனக்கேட்க ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர். வியாஸமுநிவனே! நரகவாதனையிலிருந்த பிராணிகள் கர்ப்பவாசத்தை யடைகிறார்கள். அதில் அவரவர்களுடைய புண்ணியபாவமிசிரத்தால் நால்வகையோனியிற் பிறக்கின்றார்கள். அவை செடிமரமுதலிய உத்பீஜமும், கிருமி கீடமுதலியஸ்வேதஜமும், முதலை ஆமை பறவைகள் முதலிய அண்டஜமும், சதுஷ்பாத ஜந்துக்களாகிய மிருகங்களும் மானுடருமாகிய சராயுசமு மெனப்படும். பூமியானது ஜலத்தால் நனைந்தும், சூரியன்முதலிய தேஜஸால்தபிக்கப்பட்டும், வாயுவினால் வீசப்பட்டும் ஆகாசசம்பந்தமாக ஓர்விதை யுண்டாகப்பெற்

று தகுதியான ருதுவிற் பரிபக்குவப்பட்டு மீண்டும் மழையினால் நனைக்கப்பட்டு அதினின்று முளையுண்டாகி, அம்முளையினின்றும் இலைகள் வெடித்து, இலைகளினின்றுங் காம்புண்டாகி, அதினின்றுங் கிளைகள் தோன்றி, அவற்றினின்றும் மலர் காய் பழமுதலியன வுண்டாகின்றன. யவைமுதலியவை பதினெழுவகைப்பட்ட திருணங்களினின்றுந் தோன்றும். ஔஷதிகளெல்லாம் பலனையே முக்கியமாக வுடையவை. இவற்றை அறுத்தல் இடித்தல் சமைத்தல் முதலிய தொழில்களைச்செய்து அறுசுவையோடு உண்டு ஆன்மாக்கள் விருத்தியாகின்றன. இவ்வகைய அன்னமானது தன்னைப்புசித்தவர்களுடைய பிராணனைப்பாதுகாக்கும். அவ்வாறு புசிக்கையிற் பிராணவாயுவானது அன்னம் வேறும் ஜலம் வேறுமாகப்பிரிக்கின்றது. அதனால் ஜடராக்கினியின் மேலே ஜலமும் ஜலத்தின்மேலே அன்னமுமாகநிற்கும். அபானவாயுவானது ஜடராக்கினியையெழுப்ப ஜடராக்கினி வயிற்றிலுள்ள ஜலத்தை அதியுஷ்ணமாக்கும். அந்தஜலத்தின்உஷ்ணத்தினால் அன்னமானது மீண்டும் பசனஞ்செய்யப்பட்டு அன்னரசம் வேறாகவும், அதன்திப்பி வேறாகவும் பிரிக்கப்பட்டு, காதுகள் - கண்கள் - நாசி - கை - நா - தந்தம் - சிஸ்னம் - குய்யம் - நகம் - கபம் வெயர்வு என்னும் பன்னிருமூலங்களால் மலமூத்திரங்கள் வெளிப்படும். அன்னரசமோ,இதயதாமரையில் எல்லாநாடிகளுந் தொந்தமுற்றிருத்தலின், பிராணவாயு அந்த இதயகமலத்திற் சந்தித்துள்ள நாடிகளின் முகத்திற்செலுத்த,அந்த நாடிகள் நன்றாக இரசமயமாகித் தமது மூலமாக அதனை உடல்முழுவதும் பரவச்செய்யும். இதயத்தில் வந்தபொழுதும் நாடிகளின் நடுவிலுள்ளபொழுதும் அந்த அன்னரசத்தைச்சரீரத்தின் அக்கினியானதுஇரண்டாகப் பிரித்து, ஒருபாகம் துவக்காகவும் ஒருபாகம் உதிரமாகவும் மாற்றும். உதிரத்தால் மாமிசமும் உரோமங்களும் உண்டாகும். மாமிசத்தினின்று நரம்புகளும் தலைமயிரும் உண்டாகும். நரம்புகளின்று எலும்புகளும் நகங்களும்உண்டாகும். எலும்பிலிருந்து கொழுப்புண்டாகும். கொழுப்பினின்று சுக்கிலமுண்டாகும். இதுதான் பிரசவத்திற்குக்காரணமாகும். சுக்கிலமானது ஸ்திரீயினுடைய ருதுகாலத்தில் அவளுடைய குறியிற் சுரோணிதத்துடன் கலந்து ஸ்திரீயினுடைய உதிரசம்பந்தத்தால், ஜீவன் தனது கர்மத்தினாற் செலுத்தப்பட்டுப் பிண்டமாகும். சுக்கிலசுரோணிதங்கள் கட்டியபொழுது ஒருதினத்திலேயே சிறிதுகடினமாய் ஐந்துதினவரையில் அப்படியேயிருந்து அதன்பேரில் புற்புதம்போலாகி, ஏழுதினங்களின்மேல் பதினான்கு தினங்களில் ரக்த மாமிசங்கணிரம்பிய மாமிசபையாகி,இருபத்தைந்துதினங்களுள் அந்தப்பீஜத்தின் முளைதோன்றுவதாகி, ஒருமாதத்தில பஞ்சபூதசம்பந்தமடைந்து, இரண்டுமாசத்தில் ஸ்தூலபிண்டமாகி,மூன்றுமாசத்தில்எல்லாஅவயவங்களின் ஆரம்பமுற்று,நான்குமாசத்தில் கைவிரல்களுண்டாகி, ஐந்துமாசத்தில் முகம் நாசி காதுகளுண்டாகி, ஆறுமாசத்தில் பல்வரிசை குய்யம் நகம் காதுத்துவாரமுண்டாகி, எழுமாசத்தில் கொப்பூழ்குறி பிற அங்கங்களின் முழுத்தோற்றமுண்டாகி,

எட்டுமாதத்தில் தலைமயிர் முதலியவற்றுடன் பூரணமாகிப் பரிபக்குவமடைந்து தாய்புசிக்கும் அன்னரசத்தைக் கொப்பூழ்வழியாகவுட்கொண்டு ஜன்மாந்தர வுணர்ச்சியுண்டாகித் தான்பெற்ற சுகதுக்கங்களும் பிறவிகளையுங்கருதி, தானநேகவிதயோநிகளிற் ஜனித்திருந்தனுபவித்த கஷ்டங்களையறிந்து இனிப் பூவுலகிற் ஜனனமெடுக்காதிருக்கும் படியான மார்க்கத்தை யோசிக்கிறான். ஜனனமெடுத்த உடனே சிவஞானத்தையடைய வேண்டுமென்னு மெண்ணத்தோடு, ஜீவனானவன் கருமத்திற்கேற்ப துக்கங்களையநுபவித்து, மோக்ஷோபாயத்தை நாடி எண்ணமிட்டுக்கொண்டு, வழிப்போக்கன் மலை - செடி - கொடிமுதலியவைகளாற் றடைபடுவான்போலக் கர்ப்பாசயப்பையாற் கட்டப்பட்டுத் துன்புற்றும், சமுத்திரத்தில் வீழ்ந்தான் றுன்புறுதல்போலக் கர்ப்பத்திற் பூரித்தஜலத்தால் வருந்தியும், இருப்புக்கொப்பறையில் ஜலத்தோடிட்டுச் சமைத்தாற்போல உதராக்கினியால் வருந்தியும், காய்ச்சிய இருப்பூசியாற் குத்தப்படுவான் போலத் தாயின் கர்ப்பத்திலுள்ள நரம்புகளாற் குத்தப்பட்டும் வருந்துகிறான். துக்கங்களிலெல்லாம் கர்ப்பத்திலநுபவிக்கின்ற துக்கத்தைவிட அதிகமான தொன்றுமில்லை. இவ்வாதனைகளெல்லாம் ஏழுமாதத்திற்கு மேல் ஜீவனுக்குப்புலப்படும். ஆலையிலிட்ட கரும்பைப்போலவும், செக்கிலிட்ட எள்ளைப்போலவும், பாபமாகிய இருப்புலக்கையால் அடிக்கப்பட்டும் ஜீவன் துன்பமடைகிறான். இரக்த மாமிசங்களால் நிரம்பப்பெற்று மலமூத்திரங்கள் பொதிந்து, தலைமயிரால் மூடப்பட்டு, ரோகங்களுக்கெல்லாம் வாசஸ்தானமாயும், வாயே பெருந்துவாரமாகவும், உதடுகளில் சொள்ளும் ஈழைநீருமுதலியன சொரியவும், போகத்திலத்தியந்தமான மோகத்தோடும், இராகத்துவேஷாதிகளால் நிரம்பப்பெற்றும், திரும்புதற்கும் இடமின்றி யிருக்கையில், பிரசூதவாயு முரித்துத்தள்ள யோநிவழியில் நெருக்குண்டு ஸ்மரணையின்றி நிலமிசைத்தோன்றி, பூமியைப்பரிசித்த மாத்திரத்திற் றன்னெண்ணமெல்லாம் மறந்து அஞ்ஞான மூடப்பட்டும், மீண்டும் பிறவியைத்தரத்தக்க உலக வின்பத்தையே யவாவுகிறான். மலமூத்திரத்தில் நனைந்து நிலமிசை வீழ்ந்த ஜீவனுக்கு எலும்பின் கூடாகிய தேகத்தில் மூன்றரைக்கோடி உரோமங்களும், மூன்றரைக்கோடி நாடிகளும் முப்பத்திரண்டு பற்களும், இருபது நகங்களும், ஒருபடி பித்தமும், குருணிகபமும், இருபதுபல நிணமும், பத்துப்பலங் கபிலரக்தமும், பனிரண்டரை பல மேதையும், மூன்று பல மகாரக்தமும், பனிரண்டுபல மச்சையும், அரைப்படி வீரியமும், ஆயிரம்பலம் மாமிசமும், நூறுபலம் இரக்தமும், ஆகாரத்திற்கேற்ற மலமூத்திரமுங்கூடிய அநித்தியமாகிய தேகமானது அசுத்தமாயிருப்பினும் பரிசுத்தராகிய பரமபதியா லருளப்பட்டதாய் நித்தியமான ஆன்மாவிற்கு வாசஸ்தானமாயிருக்கிறது. அந்தப்பரமபதியால் ஆன்மாக்களின் வினைக்கீடாகச் சுக்கில சுரோணிதங்களால் இந்தத் தேகமாக்கப்பட்டது. சதா மலமூத்திரங்களால் நிரம்பப்பெற்று அசுத்தமானதாய், பஞ்சகௌவ்ய முதலிய பரிசுத்தவஸ்துக்களால் பரிசுத்தஞ்

செய்தாலுஞ் சீக்கிரத்தில் அசுத்தமாக்கக்கூடியதாய், சுகந்தவாசனைத் திரவியங்கள் பூசினும் துர்க்கந்தம் வீசச்செய்யும் இந்தத் தேகத்தைக் காட்டிலுந் துர்க்கந்தமானது பிறிதொன்றில்லை. பர்வதத்தினின்றும் அருவியாறுகள் பாய்வதுபோல இந்தத் தேகத்திலிருந்து கபம் மூத்திரம் மலம் புரீடாதிகள் நாடோறும் வெளியாகின்றன. தன்னுடைய தேகமாயிருப்பினும் மலமூத்திராதிகள் வரும்வழியை மண் கொண்டும் நீர் கொண்டுந் தேய்த்தலம்பி அருவருத்தும், மாநுடர் அந்தத்தேகத்திற்கே ஊழியஞ்செய்து கொண்டும், கந்தபுஷ்ப வாசனாதிகளைச்சேர்த்து அழகு படுத்தியும் வருகிறார்கள். தன் தேகத்தினின்று வெளியாகும் புரீடங்களைக் கண்டும் அதனிடத்துவிரக்தி யடையாததேன்? இந்த வுலகத்திலுள்ள மாநுடர் தமது தேகத்தினின்று தோன்றும் அருவருப்புக்களைக்கண்டும் அதன்பால் அபேக்ஷையைவிடாது மோகங்கொண்டிருப்போரைப் பற்றி யென்னசொல்லப்போகிறேன். கங்காஜல முதலிய புண்ணிய தீர்த்தங் களினால் இடைவிடாது சுத்திசெய்யினும் மாநுடதேகம் புனிதமாவதல்ல. அது அவனுடைய மனசுத்தியினாலேயே புனிதமாகவேண்டும். நெருப்பி லிட்டுக்கொளுத்தினும் மனோசுத்தியில்லாதவனுக்குமோக்ஷமுண்டாகாது. எப்படியெனில், கங்கையாதி தீர்த்தங்களில் மச்சம் முதலிய நீர்வாழ் வனவும், சிவாலயங்களில் பக்ஷிமுதலிய நிலமிசை வாழ்வனவும், சதா ஜீவித்திருந்தாலும் புனிதமாகாததுபோல், சித்தசுத்தியில்லாதவன் முக்தி யடையமாட்டான். ஆனபடியால் சகலவிதபாவங்களைச் செய்தாலும் மோக்ஷமடைய மனத்தின் சுத்தியே காரணமாகவிருக்கிறது. அஃதெப்படி யெனில் ஸ்திரி புருஷர்கள் ஆலிங்கனகாலத்தில் வேறு எண்ணத்தோடு சம்மந்தப்படுவார்களாயின் அதனால் உற்பத்தியாகுங் குழந்தை, தாய் தந்தையர்போலல்லாது வேறே வடிவமாவதேசான்றும். தன் மனரம்மிய மில்லாத ஸ்திரியொருத்தி தன்னைப்பலவந்தத்தி லாலிங்கனஞ்செய்தாலுந் தான்பிரியப்படுகிறதில்லை. புசிப்பதற்காக விளங்கும் பதார்த்தங்கள்யாவும் சமமாகவிருப்பினுஞ் சிலர் ஒவ்வொன்றில் தம் மனத்தைச் செலுத்துவது போல காமக்குரோத லோபங்களில் பிரவிர்த்திப்பதும் இம்மனமே யாகிறது. அவைகளால் மனிதன் வசப்படுத்தப்படுகிறான். அப்படி வசப் பட்டதினின்று விலகிப் பாவத்தை யொழிப்பானாயின் மோக்ஷமடைகிறான். மனஞ்சுத்தமாகவே தானம் யோகம் யாத்திரைமுதலியன செய்கிறார்கள். ஞானமாகிய நிர்மல ஜலத்தாலும் வைராக்கியமாகிய மண்ணினாலும் அஞ் ஞானமாகிய இராகத்துவேஷாதிகளாலும் மலத்தைச் சுத்திசெய்து போக் குவானாயின் அவனே பிரமக்கியானியாகிறான். எவ்வித ஜனமமெடுத்தோர் களுக்கும் அஞ்ஞானத்தாலும், நானாகர்ம தோஷத்தினாலுஞ், சம்சாரத் தைச்சுகமாக அநுபவிப்பவர்கள் சுலபமாக மோக்ஷமடைய அநேக கோடிகிரந்தங்களிற் சொல்லியிருப்பதைச் சுலபமாகச் சுருக்கிச்சொல்லு கின்றேன். அதாவது: யானென்னுந் தற்போதமுடையதே பெருந்துக்க மும் அதையொழிப்பதே பெருஞ்சுகமு மாகும். இவ்விதமாக ஒழித்தே

அநேக அரசர் மோக்ஷமடைந்திருக்கின்றனர். கர்ப்பவாசஞ் செய்கையில் உண்டாகும் ஞானமும், மயான ஞானமும், புராணசிரவண காலத்து ஞானமும், ஸ்திரி சங்கமாந்தத்தில் உண்டாகும் ஞானமும், ஒருவனுக்கு நீங்காதிருக்கும் பட்சத்தில், அவன் உலகசுகத்தைவெறுத்து மோக்ஷ சுகத்தை யடைவதற்குச் சந்தேகமில்லை. ஜன்மத்தையெடுத்தவன் பெரியோரால் ஞானோபதேசஞ் செய்யப்பெற்றும் வினைவசத்தா லதனைக் கடைப்பிடியாமல், நல்வழியிற் செல்கையிற் றவறுவான்போல, மோக்ஷ வழியினின்று நீங்கி உலகவியாபாரங்களிலுழலுகின்றான். வாலிபத்தில் இந்திரியங்களெல்லாம் நிரம்பப் பெறாமையால் தன் விருப்பத்தைத் தெரிவிக்கவுஞ் செய்து முடிக்கவும் சக்தியற்றவனாகி, பற்கள் முளைக்கையில் துன்புற்று, பாலக்கிரகங்களாற் பீடிக்கப்பட்டு, சாமான்ய வியாதிகளையும் பெரிதாக அனுபவித்து, மலமூத்திராதிகளைப் புசித்து, பசிதாகமடைந்தகாலங்களில் அன்னபானாதிகளைப்பெறாது வருந்தி, பலவகையிலுந் துன்புறுவான். கௌமார பருவத்திற் காதுகுத்துதலால் வருந்தியும், வித்தியாப்பியாசத்தால் அடிபட்டும், தன்மனம் போனபடிசெல்லாமல் தன் தாய்தந்தையால் திருத்தப்பட்டுத் துன்பமடைவான். யௌவன காலத்தில் பிறன் கல்வி, செல்வம், உருவமுதலியவற்றைக்கண்டு பொறாமை கொண்டும், ஒருவன் சொல்லிய அற்பவார்த்தைகளுக்கும் மானத்தாற் கோபமுற்றும், பகற்காலத்திற் பொருள்தேடக்கருதி வருந்தியும், இரவில் மன்மதாக்கினியால் தகிக்கப்பட்டும்,மனத்தை மாதர்கள்பால்செலுத்தி மெய்மறந்து இந்திரிய ஸ்கலிதஞ்செய்துகொண்டு பலவீனனாகியும்,மலமூத்திரங்களது குழியாகியும்,தான்பிறந்த இடமாகியும், மற்றும் அசங்கிதங்களெல்லாம் பொதிந்துகிடக்கு மிடத்தையுடையோராகிய ஸ்திரீகள்பால் விருப்புற்று அதில் உழல்வதே பரமசுகமாக எண்ணுகிறான். துன்பங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகிவிளங்கும் ஸ்திரீகளிடத்தில் அணுவளவுஞ் சுகமில்லையென்று பூர்வம் பஞ்சசூடை யென்பவள் சொல்லியிருக்கிறாள். புருஷன் ஸ்திரீகளளவில் வைத்தபிரியத்தால் அவர்கள் பிரியுங்காலத்தில் மிகவும் வருந்தி யௌவனகாலத்தையொழித்து,தேகங்கன்றி மயிர்நரைத்து, சந்திபந்தங்கள் தளர்ந்து பல்லுதிர்ந்து, பூர்வத்தில் ஸ்திரீபுருஷர்களுக்கு ஆவலையுண்டுசெய்த அவயவங்கள் பிரியமற்றனவாகி, கிழத்தன்மையால், மனைவி புத்திரர் பந்துக்கள் மித்திரர் ஊழியர் முதலானோரால் அவமதிக்கப்பட்டு மனம்வருந்துகிறான். இவ்வகைய துன்பங்களை யநுபவிக்கும் மாநுடதேகத்தைக் கண்டு வெறுக்காதவனைக்காட்டிலும் அசேதனன் ஒருவனுமில்லன். யௌவனகாலத்திற்றான் தருமார்த்த காமியங்களை நடத்தி மோக்ஷோபாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமேயன்றி வயோதிகத்தில் ஒன்றுஞ் செய்ய வியலாது என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

கற்பவாசகஷ்டமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்துமூன்றாவது

ஸ்திரீகளின் ஸ்வபாவமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமார முனிவரைநோக்கி, ஸ்வாமீ! பஞ்சசூடையென்பவள் ஸ்திரீகளின் தோஷத்தைச்சொல்லி யிருக்கிறாளெனக் கூறினீராதலின் அவற்றை யெனக்குவிளக்கிக்கூற வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுனிவர் கூறுகின்றார். வியாஸமுனிவனே! ஸ்திரீகளே தோஷங்களுக் கிருப்பிடமாயும், அற்ப புத்தியுடையவர்களாயுமிருக்கிறார்கள். பூர்வம் நாரதமுனிவருக்கும் விபசாரியாயிருந்த பஞ்சசூடையென்னப்பட்ட அப்சரப்பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன். நாரதர் உலகசஞ்சாரஞ்செய்து திரும்புகையில், பிரமதேவனிடத்திற் பிறந்த பஞ்சசூடையைக்கண்டு, பஞ்சசூடையே! என் மனத்தில் ஒரு பெருஞ்சந்தேகமிருக்கின்றது, அதனை நீதான் சொல்லவேண்டும் என, பஞ்சசூடை நாரதமுனிவரை நோக்கி அஃதெனக்குத் தெரிந்தவிஷயமாகிற் சொல்லத்தடையில்லை என, நாரதர் உனக்குத் தெரியாத விஷயத்தை உன்னைக் கேட்கவில்லை. அழகோடு கூடியவளே! ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை நிச்சயமாக அறியவேண்டுகின்றேன் எனக்கூற, பஞ்சசூடை பகரலாயினள்: நாரதமுனிவரே! ஸ்திரீகளை ஸ்திரீயே நிந்திப்பது தர்மமல்ல. இவ்விஷயந் தேவரீருக்குந் தெரிந்ததே. இதனைப்பற்றி நீர் என்னைக் கேட்பது தருமமன்று என, நாரதர் பெண்ணே! உண்மையைச் சொல்வதில் ஒருபொழுதுந் தோஷமில்லை. பொய்யைச் சொல்வதினால்தான் தோஷம் வரும் எனக்கூற, பஞ்சசூடை பகரலாயினள்.

நாரதமுனிவரே! சத்குலத்துதித்தவர்களும் ரூபவதிகளும் கணவனோடுகூடியவர்களுமாயிருப்பினும் மாதர்கள் கட்டுப்பாட்டிலிருக்கமாட்டார்கள். உலகத்தில ஸ்திரீகளைக்காட்டிலும் பாவப்பிராணிகள் கிடையாவென்பதைத் தேவரீருமறிவீரன்றோ? கணவன் வேதசாஸ்திர முணர்ந்து செல்வந்தனாகியும் அழகையுடையமனைவிக்குச்சுவாதீனனாகியுமிருப்பினும் ஸ்திரீகள் அவனை அன்புபாராட்டி யணையாது, சந்தர்ப்பம் வாய்க்கும் பக்ஷத்தில் பரபுருஷனைவிரும்பிக் கூடுவார்கள். பிரபுவே! மாதர்களாகிய எமக்குக் கணவன் பேரழகனாயிருப்பினும் வெட்கமின்றிப் பிறபுருஷனைக் கலப்பதே பெருந் துர்க்குணமாகும். சமீபத்திலிருப்பினுந் தன்னை அன்போடுநடத்தினுங் கணவனைவிடுத்துத் தாம்விரும்பியவன் தூரத்திலிருப்பினுந் தம்பால்சிறிது அன்பும்பாராட்டாதிருப்பினும் அவ்வயலானிடத்திலேயே மனஞ்செலுத்தி மகிழ்வர். மாதர்கள் ஒருபோதும் பதிபக்திசெய்கிறதில்லை. ஆனால் தம்மைப்பிரார்த்திப்போரில்லாமையாலும் பலர்கண்டு அவமதிப்பார்களென்னும் பயத்தாலுஞ் சந்தர்ப்பம் நேரிடாமையாலும் பதிபக்திசெய்பவர்களாகக் காணப்படுகிறார்கள். மாதர்கள் தக்கவனென்றும் தகாதவனென்றும், வாலிபனென்றும் முதியோனென்றும், அழகின

னென்றும் குரூபியென்றுங் கருதார்கள். கணவனாகிறதை மாத்திரம் திருப்தி கரமாகக் கொள்வார்கள். பயம் - தயை - செல்வம் - உணவு - தாய் - தந்தையர் - கணவன் இவர்கட்கஞ்சியும் கணவனுக்குச் சுவாதீனப் படமாட்டார்கள். நல்லகுலஸ்திரீகளும் ஆடையாபரணங்களை யணிந்து மனவிருப்பின்படிதிரியுந் தாழ்குலப்பெண்களுக்குச் சமானமாக நடக்க விரும்புகின்றார்கள். கணவன் அதிக அன்போடுநடத்தி வருவானாயினுங் கூனன் குருடன் மொண்டி மூடவன் குரூபி முதலிய அன்னிய புருஷனையே விரும்புவர். மாதர்கள் மனம்விரும்பாத ஆடவனே உலகத்திலில்லை. மாதர் தமக்குப்பரபுருஷர் கிடைக்காதபக்ஷத்தில் தமது சிருங்காரசேஷ்டைகளால் அவர்களை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளுவார்கள். புருஷர்தாம் விரும்பியபடி கிடையாமையாலும் பந்துமித்திரர்களுணர்ந்தால் தண்டிப்பார்களென்னும் பயத்தினாலும் பயந்திருக்கிறார்களன்றிச் சத்தியத்திற்குப் பயந்து நடக்கிறதில்லை. ஸ்திரீகள் மரத்தின் இலைபோலவும் சமுத்திரத்தின் அலைபோலவும் அலையும் மனமும், சமுத்திரத்தின் ஆழத்தினைப்போலக் கண்டறியப்படாத மன ஆழமுமுடையவர்கள். எவ்வளவு விறகினாலும் திருப்தியடையாத நெருப்புப்போலவும், எவ்வளவு நதி ஜலங்களாலும் நிரம்பாத சமுத்திரம்போலவும், எவ்வளவு பிராணன்களாலும் பூர்த்தியடையாத இயமபுரம்போலவும், எத்தனை புருஷர்களை யடைந்தபோதிலும் திருப்தியடையமாட்டார்கள். தேவருஷியே ! மற்றொரு இரகசியமுள்ளது அதனையுஞ் சொல்லுகின்றேன் : சுந்தரமான புருஷனைக் கண்டஸ்திரீயின் குறியானது திரவிக்கின்றது. ஸ்நானம்செய்து ஆடையாபரணாலங்கிருதனாக எதிர்போந்த விடபுருஷனைக் கண்டவளுக்குக் காமரசமானது தானே பிரவாகிக்கின்றது. இச்சித்த பொருள்களையெல்லாங் கொடுப்பவனாயினுந் தன் கணவினிடம் மனம்விரும்பி நில்லார்கள். ஆடை ஆபரணம் மலர்வாசனைத் திரவியம் முதலியவற்றை அவாவடங்கக் கொடுப்பினும் காமத்தில் திருப்தியடைவதுபோல அவற்றைப் பெற்றுத் திருப்தி யடையமாட்டார்கள். அந்தகன் சமனன் ம்ருத்யு பாதாளம் வடவாக்கினி வாளின்முனை விஷம் கிருஷ்ணசர்ப்பம் பிரளயாக்கினி இவற்றின் குரூரமெல்லாம் ஸ்திரீயின் குரூரத்துக்குச் சமானமாகா. பிரமதேவர் பஞ்சபூத சிருஷ்டியை யுண்டுசெய்தபொழுதே பாவங்களையெல்லாஞ் சேர்த்து மாதராக உண்டு செய்திருக்கிறார் என்றனள். இவ்வாறு கூறினாள் என்ற ஸநத்குமாரமுனிவரை நோக்கி வியாஸபகவான் வினவுகின்றார்.

ஸ்வாமீ ! ஸநத்குமாரமுனிவரே ! புருஷர்கள் மன்மதனாற் பீடிக்கப்பட்டு மந்தபுத்தி யுடையவர்களாய் மேற்கூறிய துர்நடக்கைகளையே யியற்கையாக வுடையமாதர்களை எப்படி ரமிக்கிறார்கள். ஸ்திரீகளினும் புருஷர்களினும் மன்மதனைச் செயித்தவர்கள் ஒருவருமிலரென்று தெரிய வருகிறது. மாதர்களை மணஞ் செய்து கொள்கையில் "என்னோடுகூடித் தர்மங்களை யநுஷ்டிக்கவேண்டும்," என்று அக்கினிசாக்ஷியாகச் சத்தியஞ்

செய்து கொள்வது விருத்தமென்று நினைக்கின்றேன். ஸ்திரீகள் சபலபுத்தியுடையவர்களென்று வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க விவாஹகாலத்திற் பதிவிரதாதர்மத்தை யனுசரிக்கும்படி சொல்லுகிற மந்திரங்களெல்லாம் உபசாரமாகத் தோன்றுகின்றதன்றி உண்மையென்று புலப்படவில்லை. இதுவிஷயத்தில் என்மனம் மிகுதியுஞ் சந்தேகமடைந்திருத்தலின் தேவரீர் கேள்விப்பட்டவகையே விசதமாக இன்னுஞ் சொல்லவேண்டு மெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் கூறுகின்றார். வியாஸ முநிவனே! பூர்வத்தில் அஷ்டாவக்ர ரென்னும் முநிவருக்கும் திஸா வென்னும் பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன். அஷ்டாவக்ரமுநிவர் வதான்ய னென்பவனைக்கண்டு அவனுடைய பிரபா வென்னுங்கன்னிகைகுணவதியும் பதிவிரதையும் நன்னடக்கையுடையவளும் ரூபவதியுமாயிருத்தலின், அவளை யெனக்கு மணஞ்செய்து கொடுக்க வெனக்கேட்க, வதான்யமுநிவன் அஷ்டாவக்ரரை நோக்கி நீர் வடதிசைக் கன்னியைக்கண்டு வந்து மணஞ்செய்து கொள்கென, அஷ்டாவக்ரர் வடதிசையிலெவ்வாறுசென்று எங்கடைந்து யாரைக் காணவேண்டும்? எனக்கேட்க, வதான்யர் சொல்லுகின்றார்: நீ இமாசலத்தை யடைந்து குபேரலோகத்தைக்கடந்து சித்தசாரணர் வசிக்கும் உருத்திர லோகத்தைக் கடந்து சென்றால், நீர்கொண்ட மேகம்போலக் கருமையாய்ப் பசும் புல்லையுடைய மனோக்யமான வனமொன்றினைக் காண்பாய்; அவ்வனத்திற் பெருந்தவமுடையவளாய்ப் பேரழகியாய் தீக்ஷையுடையவளாய்விளங்கும் ஓர்ஸ்திரீயிருப்பாள். அவளை நீ அவசியம் பார்க்கவேண்டும். நீர் அவளைக்கண்டு திரும்பி வருவீராகில் என்பெண்ணை மணஞ்செய்து கொடுக்கத்தடையில்லை. நீர்சத்தியந்தவறாமல் அவ்விடத்திற்குப் போய்வரவேண்டும் எனக்கூற, அஷ்டாவக்ரர் அப்படியே நீர் கூறிய விடத்திற்குப்போய் அவளைக் கண்டுபேசிவருகின்றேன். நீர்மாத்திரம் சத்தியந் தவறாமல் நும்பெண்ணை மணஞ்செய்விக்கவேண்டும், என்றுகூறி, அங்கிருந்து புறப்பட்டு, சித்தசாரணர்கள் வசிக்கும் இமாசலத்தைத்தாண்டி, சர்வபாவங்களையு மொழிக்கும் பாஹுதாவென்னு நதியைக்கண்டு விதிப்படி அதில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானமுடித்து, அன்று அவ்விடத்திருந்து மறுநாள் உதயத்தில் அங்கேயே ஸ்நானஞ்செய்து உருத்திராணி கூபத்தில் மூழ்கி ஆங்கோர்நாளிருந்து மறுநாள் கைலாயத்தை நோக்கிச்செல்லுகையில், யக்ஷர் குய்யகர் முதலானோர் வசிக்குந் தீரத்தையுடைய மந்தாகினி நதியில் ஸ்நானஞ்செய்து அதன்கரையிலிருந்து அநுஷ்டானஞ் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கிருந்த யக்ஷர்கள் அவரைநோக்கி ஐயா! எங்கள் தலைவனான குபேரன் உம்மைக் காணவருதலின் நீர்சிறிதுநேரம் இங்கிருக்க வேண்டுமென, அவ்வாறேயிருந்தனர். குபேரன் அவ்விடம்வந்து முநிவரைவிதிப்படி பூசித்து, ஸ்வாமீ! தேவரீர் என்பட்டணத்திற்கு வந்து என்னாற் செய்யப்படும் பூசையை அங்கீகரிக்கவேண்டுமென, அஷ்டாவக்ரரிணங்கி அவனுடன் அளகாபுரியையடைந்தனர். குபேரன் அம்முநிவனை

அர்க்கிய பாத்தியாதிகளாலுபசரித்துத் திவ்வியாசனமுதவி, மதுபர்க்கங்
கொடுத்து உபசரித்தனன். முனிவர் குபேரனை உட்காருக வெனக்கூற,
குபேரனும் அவனுடனிருந்த பரிசனர்களாகிய யக்ஷர்களும் உட்கார்ந்த
னர். அப்பொழுது குபேரன் ஸ்வாமீ! என்னிடத்திருக்கும் அப்சரசுகளை
நாட்டியஞ்செய்ய உத்தரவுகொடுத்தால் நடிக்கச்செய்கின்றேன். நீர் சந்
தோஷிக்கலாம் எனக்கேட்க, முனிவர் இணங்கினர். அதனால் கிருதாசி
மிசிரகேசி ஊர்வசி அரம்பை அலம்புசை விசுவாசி சுகேசி சுமுசி ஹாசினி
முதலிய அப்சுரசுகள் வீணை வேணு ம்ருதங்கமுதலிய வாத்தியங்களோடும்
பாடல்களோடும் நர்த்தனஞ்செய்தார்கள். அந்த ஆநந்தத்திலேயே தேவ
வருஷம் ஒன்று கழிந்தது. அதுகண்ட குபேரன் அஞ்சலியஸ்தனாய் இவ்
வளவு காலங்கழிந்ததென்று விண்ணப்பித்து இனியான் யாது செய்யத்த
கும்? எனவினவ, அஷ்டாவக்ரர் குபேரனை நோக்கி நான் உன்னால் விசே
ஷமாகப் பூசிக்கப்பெற்றுப் பெருஞ்சந்தோஷத்தையடைந்தேன். இனி
என் விருப்பின்படி செல்லவிடை யளிக்கவேண்டும் எனக்கூறி அவனது
விருப்பையடைந்து புறப்பட்டு வடதிசைநோக்கி, கைலாயம் மந்தரம்
ஹேமம் ஹரபர்வதம் இவற்றைப்பார்த்துச் சாஷ்டாங்கமாகப் பணிந்து
மேலும் வடதிசைநோக்கிச்சென்று, சமபூமியாயும் மனோக்யமாயும் புண்
ணியபூமியாயும் விளங்கும் ஒருவனத்தைக் கண்டார்.

வியாஸமுநிவனே! இரத்தினமயமான பர்வதங்களும் இந்திரநீல
முதலியரத்தினங்களாற் படிக்கட்டுகட்டியதாமரைத்தடாகங்களும்சுவர்ண
மயமான விருக்ஷங்களும் வைடூரிய மயமான புல்லுகளும் சுவர்ணமயமான
பறவைகளும் அமிர்தமயமான ஜலத்தையுடைய நதிகளும் நிரம்பியஅவ்வன
த்திற் பார்ப்பதற்கு அதியற்புதமான ஓர் ஆச்சிரமத்தைக்கண்டனர். அந்த
ஆச்சிரமத்திற் சந்திரமண்டலத்தைப்போல வெண்ணிறமாயும், வச்சிரத்
தாற் றம்பங்களும், வைடூரியத்தால் திண்ணைகளும் சந்திர காந்தத்தாலி
ழைத்த சுவர்த்தலங்களும், நிலைக்கண்ணாடிகள் நாட்டப்பெற்றுள்ள அறை
களும், பொற்கலசங்களும், ஸ்படிகத்தினாற் சாளரமும், முத்தாற்செய்யப்
பட்ட திரைகளும், வச்சிரத்தாற்செய்த தளவரிசையும், கோடி சூரியோத
யம்போன்ற வொளியும், தேவர்கள் சஞ்சரிக்கும் பலவித விமானங்களும்,
முத்துத்தோரணங்களும் உடைய ஓர்வீட்டினைக்கண்டு, அதின் வாயிற் படி
யையடைந்து நானெப்படி உள்ளே செல்லலாம்? என்னை அதிதியென்று
யாவர் உபசரிப்பர்? என்று கருதி நின்றுகொண்டிருக்கையில், நானாவித
ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஏழுகன்னிகைகள் உள்ளேயிருந்து
வெளிவந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் சமானமான அழகும் ஆபரண
மும் யௌவனமும் இரதி தேவிபோன்ற வடிவுமுடையவர்கள். அவர்கள்
வரைக் கைகூப்பி, ஸ்வாமீ! தேவரீர் எங்கள் கிரகத்திற்குள் வரவேண்டு
மென்று பிரார்த்திக்க, தங்கக்கொடிபோன்ற அம்மாதர்களின் வீணா
கானம்போன்றவொலியால் தம்மை யழைத்ததற்காகமகிழ்ந்துஆச்சரியத்

துடன் உள்ளேசெல்ல, அவ்விடத்தில் ஓர் சப்ரகூட மஞ்சத்தின் பேரில் நிர்மலமான வஸ்திரமணிந்து சர்வாபரண பூஷிதையாய், திவ்வியமான பேரழகுடன் மின்னற்கொடிபோல விளங்கும் ஒருகன்னிகையைக் கண்டனர். அக்கன்னிகை அவரைக்கண்டவுடன் துண்ணென்றெழுந்து நமஸ்கரிக்க, முநிவர் ஆசீர்வதித்தனர். அவள் அவருக்குத்திவ்யமான ஆசனங் கொடுத்திருக்கச் செய்தனள். அப்பொழுது அஷ்டாவக்கிரர் அவர்கள் எண்மரையும் நோக்கி, பெண்களே! நான் சிரமபரிகாரஞ் செய்துகொள்ளவேண்டியிருத்தலின் உங்களில் மனஞ்சலியாதவள் யாரோ அவ்வகைய ஒருத்தி மாத்திரஞ் சிறிதுநேரம் என்னிடம் பணிவிடைசெய்ய இவ்விடத்திருக்கலாம்: ஏனையோர் தங்கள் இருப்பிடமாகிய அந்தப்புரத்தை யடையலாமென்றனர். அதனைக்கேட்ட அவ்வனிதையரில் எழுவர் அஷ்டாவக்கிர முநிவரைப்பணிந்து அந்தப்புரமடைந்தனர். முநிவர் ஆங்கோர் சயனத்திற் படுத்துக்கொண்டனர். அருகிருந்த கன்னிகை மனச்சலிவின்றி அநந்தவிதமாக வுபசரித்தனள். அப்பொழுது அம்முநிவர் தனக்கு ஊழியஞ்செய்பவளை நோக்கி, பெண்மணி! இரவுவந்தது, இனி யானும் நித்திரைசெய்யவேண்டும், நீயும் நித்திரைசெய்ய வேண்டுமாதலின், நீ வேறு படுக்கையிற் படுத்துறங்குகவென, அவள் அப்படியே யாகுகவென்று கூறி, மற்றோர் படுக்கையிற் சிறிது நாழிகை படுத்திருந்து, நித்திரை யடையாமல், குளிருகின்றதென்றோர் பொய்ந்நிமித்தங் காட்டி, அஷ்டாவக்கிரருடைய சயனத்தை யடைந்து அவர் பக்கலிற் படுத்துக்கொண்டு என் சமீபத்தில் வாரும், எனக்குக் குளிருகிறது என்று அவரை யிறுகத்தழுவி யாலிங்கனஞ்செய்து கொண்டனள். ருஷியோ மரம்போலுங் கல்போலுஞ் சலனமற்ற மனமுடையவரா யிருந்தனர். அந்தப்பெண்ணானவள் அவர் மனங் கலங்காமையால் துக்கித்து மன்மதபாணங்களால் வருந்தி, பிராமணசிரேஷ்டரே! புருஷர்களைக்காட்டிலும் மாதர்களே காமவிஷயத்தில் தைரியசாலிகளென்பார்கள். நீர் என் விஷயத்திற் றயவுசெய்யாதிருப்பதற்குக் காரணம் யாது? நானாகவே மோகித்து உம்மிடம்வந்தேனாதலின் என்னை மனவிருப்பத்துடன் ஆலிங்கனஞ்செய்து சந்தோஷித்து, என்னையுஞ் சந்தோஷிப்பிக்கவேண்டும். அநேககாலம் உடல்வருந்தித் தவஞ்செய்து பெறவேண்டிய சுவர்க்கசுகத்தை யான் இப்பொழுதே கொடுக்கிறேன். இதனால் உம்முடைய தவங் குறையமாட்டாது. என்னைத்திருப்தி செய்யும்பக்ஷத்தில் சகல சுகங்களையுந் தடையின்றிப்பெறுவீர். என்வீட்டையுஞ் செல்வப்பெருக்கையும் பாரும். நீரே இவற்றிற்கெல்லாம் யஜமானனாவீர். இவ்விருக்ஷங்களின் அமிர்தமயமானபலங்களைப்புசித்து ரமணீயமான வாவிகூபதடாகங்களிற் கிரீடித்து, யானும் என்தோழிகளுஞ்செய்யும் விநோதகானத்தாற் களித்துச் சந்தோஷித்திருக்கலாம். மாதர்களாகப் பிறந்தோர்க்குப் புருஷசுகத்தைக்காட்டிலும் வேறுசுகமில்லை. இதுவே தானம் தவம் முதலிய யாவுமாகும். மாதர்கள் மன்மதவாதையுற்று ஆடவரைவேண்டிப் புணர்ந்தால் அதனாற் பாவஞ்சம்பவியாது. ஸ்வயமாக ஆலிங்கனஞ்செய்ய

வந்த மங்கையின் சுகத்தைக்காட்டிலுஞ் சிறந்தசுகம் மற்றொன்றுமில்லை. இதனை நீர் இழந்துவிடவேண்டாம் என்று பலவாறுகூற, அவளைநோக்கி அஷ்டாவக்கிரர் கூறுகின்றார்.

ஸுந்தரவதியே! பரதாரங்களை யான் கையாற் பரிசிக்கவும் மாட்டேன். அன்றியும் யான் மணஞ் செய்துகொள்ள விருப்புற்றிருக்கிறேன். மாதர் முயக்கம், புத்திரப் பேற்றினைக் கருதியே செய்யத்தகுமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன வாதலின், யான் மணவினைமுடித்துச் சத்புத்திரரைப்பெற்று உயர்பதவியைச் சம்பாதிக்கப் போகிறேன். இந்த நியாயத்தைச் சத்திய மென்றுணர்ந்து உனக்கு என்னிடத்திலுண்டான ஆசையை யொழிப்பாயாக வென்றனர். அதனைக்கேட்ட அவ்வரிவை ஓ மகருஷியே! வாயு அக்னி வருணன்முதலிய தேவர்கள் ஒன்றாக வந்தும் பதிவிரதாதர்மத்தைப் பாராட்டவேண்டுமென்று சொன்னபோதிலும், மாதர்கள் மன்மதாவஸ்தையை நீக்கவேமாட்டார்கள். அவர்கள் என்றும் போகத்திலிலேயே விருப்பமுடையவர்கள். ஸ்திரீகளில் மேலுக்குப்பதிவிரதையாகக் காணப்படுபவள் ஆயிரத்திலொருத்தியும்,வாஸ்தவத்தில் மனமொழி மெய்களாலும் பரபுருஷகமனஞ் செய்யாத உத்தமியோ லக்ஷத்திலொருத்தியுங்கிடைப்பது துர்லபம். ஸ்திரீகள் காமவிருப்பமுற்றபொழுது தமது தாய்வழி - தந்தைவழி - பெற்றோர்கௌரவம் - சகோதரனுடைய கன்னியம் - கணவனுடைய நல்லொழுக்க வாசாராதிகள் முதலியவற்றைக் கனப்படுத்துவது கருதாது, நதிகளோடுகையிற் கரையையிடிப்பதுபோலத் தமது குலாசாரமுதலியவற்றைக் கெடுத்துவிடுவார்கள். உலகத்திலுள்ள தோஷங்களை யெல்லாஞ்சேர்த்துப் பெண்ணுருவாகச் செய்த பிரமதேவர் அவர்களுக் குரிய தோஷத்தைச் சாமானியமாகச் சொல்லினர் எனக்கூறினள். அதனைக்கேட்ட அஷ்டாவக்கிரர் பெண்ணே! யான்செய்ய வேண்டுவதாக நீயாது விரும்புகின்றனை? என, அவள் நீரென்னோடுகூடிச் சிறிதுகாலஞ் சுகமநுபவிக்க வேண்டுமென்றனள். அப்படியே யாகுகவென்று முனிவர் அவளைக்கண்களாற் கண்டு, விருத்தையாகி ஒவ்வோரவயவங்களுங் கண்களுக்கு ரமிக்காதனவாகி விளங்குதலின், இவள் இவ்விட்டிற்கு யஜமானியாகவும், சாபத்தினல் இவ்வகை யுருவுற்றவளாகவு மிருக்கவேண்டு மென்று கருதி, இவளுக்கிவ்வகைய சாபம் வந்தகாரணத்தை யறியவேண்டுமென்று ஞானதிருஷ்டியால் நோக்கிக் கொண்டிருக்கையில், சந்தியாகாலஞ் சம்பவிக்க, அந்தஸ்திரீயானவள் முனிவரே! அநுஷ்டானத்திற்கு எழுந்திருக்க வேண்டுமெனக் கூற, முனிவர் எனக்கு ஸ்நான ஜலம்வேண்டுமென,அவள் உடனேசென்று,ஓர்துண்டு வஸ்திரமும் திவ்வியமான தயிலமுங்கொண்டுவந்து, அவருத்திரவு பெற்று உடல்முழுவதும் பரிசித்துத் தயிலமிட்டுஸ்நான சாலையிலழைத்துக்கொண்டுபோய், ஆங்கு உட்கார்ந்துஸ்நானஞ்செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இரத்தினமயமான பீடத்திலிருத்தி,ஸ்நானஞ்செய்வித்து, சந்தியாவந்தனுதி

கிரியைகள் முடிந்தபிறகு, சமையல் அறையிற் கூட்டிக்கொண்டு போய் ஷட்ரஸோபேதமாய்த் தேவாமிர்தத்திற்குச் சமானமான அன்னத்தைப் புசிக்கச்செய்தனள். உடல்முழுவதுநன்ருகத்தேய்த்துஸ்நானஞ்செய்யப் பெற்று, சுவையான அன்னம்புசித்த காரணத்தால், முனிவர் சயனத்திற் படுத்தனர். சந்திரகாந்தி வீசிக்கொண்டிருந்த அன்றிரவுமுழுதும் அவருக் குத் தெரியாமலே கழிந்தது. மறுநாள் விடியலில் விழித்துக்கொண்டு இரவு கழிந்ததற்காக அதிசயித்து, அந்தமங்கையை நோக்கி யான்யாது செய்யவேண்டும்? என, அவள் முறைப்படி அன்னபானுதிக ளளிக்க வுண்டு பகற்பொழுதைக் கழித்தனர். அஷ்டாவக்கிரர் அநுஷ்டானுதிகள் முடித் துக்கொண்ட வுடனே, படுத்து நித்திரை செய்யலாமென்று அவள் சொல்ல, அவ்வாறே அவர்படுக்கையிற்படுத்திருக்கையில்அவரருகேயிவள் தன் படுக்கையைக்கொண்டாள். அப்படி யருகே படுக்கையைக் கொண்ட வளை நோக்கி ஏ! சுந்தரி என்மனதாற் பரஸ்திரீகளை ஒருக்காலுஞ்சிந்தியே னுகையாற் படுக்கையை விட்டெழுந்து வேறேசயனங் கொள்வாய் என்று பலகால் சொல்லி அகலும்படிச் செய்ய, அவள்என்னைப் பரஸ்திரியென்று கருதவேண்டாம், நான் யாருக்குஞ் சுதந்தரியல்ல, என்னைப்புணர்வதால் உமக்குத் தருமநாசமுண்டாகாது. என்னைச் சொந்தஸ்திரியாகவே பார்க் கலாமென, அவளைப்பார்த்து அஷ்டாவக்கிரர் சொன்னதாவது: ஒருக்கா லும் ஸ்திரி சுதந்தரியா யிருக்கமாட்டாள் என்றே பிரமதேவர் சொல்லி யிருக்கிருரென, அதற்கு அவள், ஐயா! என்னை மன்மதாக்கினி தகிக்கின்ற மையால் நான் உம்முடைய பத்தினியா யிருக்க உமது பாதத்திற் சரணுகதி யடைகிறேன்; நான்பரஸ்திரியா யிருக்கிறேனென்று கருதி ஞல் என்னைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு சுகமனுபவிக்கலாம், ஒருக்காலுந் தோஷஞ் சம்பவியாது. சுதந்தரியா யிருக்கின்றமையால் என்னைச் சேர்வதா லடையுந் தோஷம் என்னைச் சேருமேயன்றி உம் மையடையவே யடையாது. இப்படிப்பிரார்த்திக்கு மென்னை யாதரியாது விடுத்தால் அதனுல் உமக்குப்பெருந்தோஷஞ்சித்திக்கும் என, பெண்ணே! நீ பரபுருஷனைப் பலவந்தப்படுத்தி யிணங்க வைப்பதா லாகும் பாவம் என்னைச்சேருமேயன்றி உன்னைச் சாராது, ஆகையால் நான் உன்னிடஞ் சிநேகஞ் செய்யேன் ஓடிப்போய்விடு அன்றியும் அஷ்டாவக்கிரமுநிவர் ஸ்திரீகள் பால்ய கௌமார யௌவன வார்த்திகபர்வங்களிலும் சுவாதீன முடையவர்களல்லராயிருக்க நீ சுவாதீன முடையளென்று சொல்வது யாதுபற்றி? என்ருர். அதற்கவள் உத்தரமாக: நான் கௌமார தசையி லிருந்து பிரமசரிய விரதத்தை யனுஷ்டிக்கிறேன், (அதாவது நான்கன்னி கையே) நான் பரஸ்திரியென்று கருதாது, என்னை மணஞ்செய்யக்கடவீர் என, அஷ்டாவக்கிரர் நான்கலியாணஞ் செய்துகொள்ள முயன்றதாலேற் பட்ட தடையை நிவர்த்தித்துக்கொள்ள இங்குவந்தேன், அவ்வாறு வந்த விடத்தில் நீ என்னை மணஞ்செய்து கொள்ளச் சொல்கின்றனை, யான் வேருர் பெண்ணை விரும்பியுள்ளேன், அவள்பிதாவென்னைச் செலுத்

துதலால்யான் இங்குவந்தேன்; இதனால் இருவர் மனோபீஷ்டமும் நிறை
வேறுவதாக வில்லையென்றுசொல்லி, இவள் இவ்வளவு ரூபவதியாகவிரு
ந்தும், ஆபரணம் வஸ்திரம் முதலியவைகளிற் குறைவற்றிருந்தும், தன்
னுருவம் பங்கப்பட்டிருப்பதற்குக் காரணந் தெரியவில்லை, அப்படிநாம்
கலியாணஞ் செய்து கொண்டாலும் நமது பிரமசரிய விரதத்திற்குலோப
மில்லாமற் சாதிக்க வேண்டுமெனத் தன்னுள் யோசித்துத் தீர்மானித்
தார் என்று ஸநத்குமார முனிவர் கூறினர்.

வியாஸபகவான் ஸநத்குமார முனிவரைநோக்கி ஸ்வாமீ! அஷ்டாவக்கிரர் கொடுந்தபசியாயும், சாபங்கொடுக்கச் சக்தியுள்ளவராயிருந்தும் அந்த ஸ்திரிசெய்யுந் தொந்தரைகளுக்காக ஏன் சாபங்கொடாதிருந்தனர்? என்றதிசயித்துரைத்தனர். வியாஸமுனிவனே! நெடுநேரம் யோசித்திருந்த அஷ்டாவக்கிரர் அவளை நோக்கி உன் தேகத்திற் கிவ்விதமாகிய குரூர கிழத்தனம் வந்தகாரணத்தைச் சத்தியமாகச் சொல்லென்றார். அப்படி மொழிந்த அவரது வார்த்தையைக்கேட்டு, ஓ ஜிதேந்திரியரே! இப்பூமி தேவி ஆகாயவாணியறிய உண்மையைச்சொல்கிறேன் என்று சொல்வதானாள். சுவாமி! என்னை உத்தரதிக்காகிய ஸ்திரியென்றறியும்; மிருகபக்ஷி முதலியவைகளுக்கே ஸ்திரீசம்போகத்திற் பிரியமிருக்கையில் மாநுட தேகிகளுக்கிருக்கச் சந்தேகமென்னை? ஸ்திரீயின் சாபல்ய மித்தகையதென்று நன்றாயறிந்து கொண்டீரா? உமக்குப் பிரமசரியத்திலுண்டாகிய உண்மையைச் சோதிக்கவெண்ணியே இவ்விதமாகச்செய்தோம். எங்கள் சிருங்கார சேஷ்டைகளைக்கண்டுஞ் சலியாத உம்முடைய இந்திரிய நிக்கிரகத்தைக்கண்டு இந்திராதிதேவர்கள் சர்வலோகங்களிலுந் தடையின்றிப் போக்குவரவுசெய்யச் சுதந்தரங்கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். நீர் எந்த வதான்யரென்னும் விப்பிரரது கன்னிகையை வதுவைசெய்யக் கேட்டீரோ அவரே ஸ்திரீ சுபாவமித்தகையதென் றறிந்துகொள்ள எங்களிடமனுப்பினார். எங்களாற் பேதிக்கப்படா மனதைக்கண்டு சந்தோஷித்தோம். நீர் க்ஷேமமாக வழியைக்கடந்து சென்று அந்தக்கன்னிகையை மணந்து நல்லபுத்திரனைப் பெறப்போகிறீர். நீர் சத்தியமாக வினவியபடியால் இவ்வித ரகசியங்களையுமக்குப் போதித்தேன். இன்னும் என்ன கேட்கவேண்டுமென் றிச்சிக்கின்றீரென, அவளைக்கண்டு, அஷ்டாவக்கிரர் அஞ்சலிசெய்துகொண்டு உத்தரதிக்காகிய ஸ்திரீயே! இனி நான் உன்னிடங்கேட்க வேண்டியதொன்று மில்லையென்று உத்தரவு பெற்றுக்கொண்டு, தனது சொந்தநாட்டையடைந்து இளைப்பாறிப் பந்துஜனங்களைப் பூசித்து, வதான்யரென்னும் பிராமணரை யடைந்தார். அப்படித் தம்மிடம் வந்தடைந்த அஷ்டாவக்கிரரைக்கண்ட வதான்யர் நான் கூறியவிடத்திற்குப்போய் வந்தீரா? என்று கேட்க, ஓ வதான்யரே! நீர் கூறியபிரகாரம் கந்தமாதனங்கடந்து, உத்தரதிக்கிலுள்ள நந்தனவனத்தில் வசிக்கும் ஸ்திரியைக்கண்டு சம்பாஷித்து அவள் உத்தரவைப்பெற்றுத் தங்களிடம் வந்தே

னெனக்கூறிய அஷ்டாவக்கிரர் விஷயத்திற் சந்தோஷமெய்தி, ஓ இந்திரிய நிக்கிரகஞ்செய்த சத்தியவானே! நல்லலக்கினத்தில் என்கன்னிகையை விவாகஞ்செய்து சந்தோஷிக்கக்கடவாயென்று சொன்னவதான்யருடைய சம்மதத்தால் அதிசவுந்தரியவதியான அவர் பெண்ணை மணஞ்செய்து களித்தார். ஆகையால் வியாஸமுநிவனே! ஸ்திரீகளது சுபாவமித்தகையது. இலட்சம்பேர்களில் ஒருத்திதான் பதிவிரதையாயிருக்கக்கூடும், அவர்கள் பேரை ஸ்மரித்தமாத்திரத்திற் சர்வபாவங்களுமொழியும். அஷ்டாவக்கிரரைப்போன்ற புருஷர்களகப்படுவதுந் துர்லபம். ஆகையால் இம்மகாத்மியத்தையெவர்கள்படித்தாலுங்கேட்டாலும்சர்வபாவங்களையுமொழித்து, ஸ்திரிகளாயின் பதிவிரதைகளாயும், புருஷர்களாயின் இந்திரியநிக்கிரகமடைந்தவர்களாயும் வாழ்வார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

ஸ்திரீகளின் ஸ்வபாவமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்துநான்காவது

அருந்ததியின் கற்பியல்புரைத்த அத்தியாயம்.

ஸநத்குமார முநிவர் வியாஸமுநிவரை நோக்கி, பூர்வம் வசிஷ்டமுநிவர் மனைவியாகிய அருந்ததி, அந்தஸ்திரீகளின் இயற்கையைப்பற்றிக் கூறியதையுஞ் சொல்லுகிறே னென்று சொல்லத் தொடங்கினர். ஒருகாலத்தில், இந்திரன் சூரியன் அக்கினி இம்மூவரும் தங்களைப் பூலோகத்தில் விசேஷமாகப் பூசிப்பதற்கு நால்வகை யாச்சிரமங்களிற் கிரகஸ்தாச்சிரமமே சிறந்தது. இல்லறத்திற்கு மனைவி குணவதியாயும் பதிவிரதையாயு மிருக்கவேண்டும். பிராமணர் மற்றமூன்று வருணத்தோராற் பூசிக்கப்படுவதுபோல நாம்மூவரும் இல்லறத்தாராற் பூசிக்கப்படுகிறோம்: நம்மைப்பூசிப்பதால் திரிமூர்த்திகளைப் பூசைசெய்த பலனைப் பெறுவார்கள். அதனால் இகலோக சுகத்தையும் பரலோக சுகத்தையும் அடைவார்கள். ஸ்திரீகளிடத்தில் அசத்தியம் சாஹசம் மாயை மூர்க்கம் உலோபம் ஆசாரக்குறைவு தயையின்மை முதலிய துர்க்குணங்கள் சுபாவமாயிருப்பினும், அதனையொழித்தவர்களும், இல்லறதருமத்தைச் சரியாக நடத்திய பிராமணாதி சதுர்வருணத்தவர்களும், முறைப்படி அரசுசெய்த மன்னர்களுந் தேவர்களுக்குச் சமான மாவார்க ளென்று யோசித்து, அம்மூவரும் மாதர்களுடைய பதிவிரதைத்தன்மையைப் பரிசோதிக்க விரும்பி அருந்ததிதேவியிடஞ்சென்றனர். கணவனையே தெய்வமாகப்பாவித்திருக்கிற அருந்ததி, ஜலங்கொண்டு வரும்படி பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு செல்லுகையில் எதிர்கண்டுநிற்க, அருந்ததி அவர்களைத் தேவரென்றறிந்து மரியாதைசெய்து தாங்கள் இங்கு என்னைநாடிவந்த காரணமென்ன? எனக் கேட்க, சூரியன் இந்திரன் அக்கினி யென்னும் மூவரும்

யாங்களுன்னை யொன்றுவினவ விரும்பி வருகின்றோம் என, அருந்ததி தேவர்களே! நீங்கள் வினவுங் கேள்விக்கு விடையையும், மாதர்களியற்கையையும் யானே ஜலங்கொண்டுவந்த பின்னர் சொல்லுகின்றேன். தாங்கள் எனது பர்ணசாலையிலிருந்து வழிநடந்த ஆயாசத்தை யகற்றுங்கள் என, தேவர்கள் நீ ஜலத்திற்குச் செல்லவேண்டாம். நாங்கள் அந்தக்குடத்தை யிங்கேயே நிரப்பிவிடுகிறோம், எங்கள் வினவுக்கு விடைதந்து எங்களை விரைவி லனுப்ப வேண்டுமென, அருந்ததி ஆயின் அவ்வாறே யாகுகவென, அவர்களில் இந்திரன்—ஜன்மத்தினுல் பிராமணனிடத்தில் எனக்குப் பயமில்லாததும், தவம் பிரமசரியம் அக்னிஹோத்திராதி அநுஷ்டானங்களால் என்பதவியை ஒருவன் அடைவதும் சத்தியமாயிருந்தால் அந்தச் சத்தியத்தால் இக்கும்பம் காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது—என்றும், அக்கினி—யாகம் பிதுர்சிரார்த்தம் இவற்றைக்காட்டிலும் அதிதியைப் பூசித்து அன்னமளிப்பதில்யான் திருப்தியடைவதுசத்தியமாயின் அதனுல் இது இன்னுமோர் காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது என்றும்—சூரியன்—நாடோறும் என துதயத்தில், மந்தேஹாள் என்னு மிராக்ஷதரை வேதியர் செய்யும் அர்க்கியப்பிரதானமாகிய பிரமாஸ்திரம் நீக்குவது சத்தியமானுல் இன்னுங்காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது என்றுங் கூறினர். அவற்றைக்கண்ட அருந்ததி—இரகசியஸ்தானமும் இதர புருஷசம்பாஷணையுங் கிடைக்குமெல்லையும் ஸ்திரீகள் பதிவிரதைகளா யிருக்கிருர்கள் ஆதலின் ஸ்திரீகளை அதிசாக்கிரதையாகக் காக்கவேண்டும். இது சத்தியமாயின், இதனுல் இன்னுங்காற்பங்கு ஜலநிரம்பிப் பூரணகும்பமாகக்கடவது என்றனள். இவர்கள் சொல்லியபடியே குடம் சிறிதுசிறிதாக முழுவதும் நிரம்பியது. அதனைக்கண்ட தேவர்கள் அருந்ததியை நோக்கி, பதிவிரதாரத்தினமே! ஸ்திரீகளுடைய மனோபாவத்தைப் பரிசோதிக்க வந்தோம்; நாங்கள் போகிறோம்; மாதர்களிலேயும் உத்தமர் மத்திமர் அதமரென மூன்றுவகையினராக விருக்கின்றனரென்று கூறித் தமதிருக்கையை யடைந்தனர்.

வியாஸமுநிவனே! இன்னும் அருந்ததியின் சரித்திரத்தையும், விவாககாலத்தில் அருந்ததியைப்பார்க்குங் காரணத்தையும், அருந்ததியைப்பார்ப்பதனுல் வரும் பலனையும் உனக்குச் சொல்லுகின்றேன். முன்னொருகாலத்தில் அக்கினிதேவன் ஸப்த ருஷிகளின் மனைவியர்பேரில் மோகங்கொண்டவனுகித் துன்புற்றுக் காமாக்கினியாலே தகிக்கப்படுவதைக்கண்ட அவன்மனைவி ஸ்வாஹாதேவி தன் பதிவிரதாதர்மத்தால் அந்த முநிமங்கையர் வடிவம் ஒவ்வொன்ருக வகித்துத் தன்கணவனைத் தழுவி அவனுக்குச் சுகங்கொடுத்து வருகையில் அருந்ததி நீங்கிய மற்றை அறுவ ருருவெடுக்கச் சாத்தியப்பட்டனள். அருந்ததியின் வடிவந்தனக்கு அமையாமைகண்டு பெரிதும் அதிசயித்து அவ்வருந்ததியைக்கண்டு பதிவிரதாசிரோன்மணியே! உலகத்தில் அநேக ஸ்திரீகளைக்கண்டிருக்கிறேன்.

உன்னைப்போன்ற பதிவிரதையைக் கண்டதேயில்லை. நான் சர்வதேவர்களுக்கும் முகமாயிருக்கிற அக்கினிதேவனுக்குப் பாரியையாயிருந்தும், காமரூபங்களைத் தரிக்கச் சக்தியுடையவளாயிருந்தும், உன்னுடையவடிவத்தை யெடுக்க எனக்கே சக்தியில்லாவிடின் பிறரொருவர்க்குச் சாத்தியமாகுமா? நீயே உத்தமி. ஆகையால் எந்த ஸ்திரீகள் விவாஹகாலத்தில் அக்கினிப்பிராமணபந்து மித்திர சந்நிதானத்தில் உன்னைத்தரிசித்து ஸ்மரிப்பார்களோ அவர்கள், சுகத்தையும் தனத்தையும் புத்திரசம்பத்தையும் பெற்றுப் பதிமதியாய் வைதவ்யமில்லாமல் பூலோகத்திற் தமதுவாணாளைக் கழித்து உன்னைப்போலக் கீர்த்தியடைந்து புண்ணியலோகத்தை யடைவார்கள் என்று அநுக்கிரகித்தனள். இதனால் அருந்ததிதேவியின் பிரபாவமும், வதூவரர்கள் அருந்ததி தரிசனஞ்செய்யுங் காரணமும் அறிந்து கொள்வாயாக. இந்தச் சரித்திரத்தைப் பக்தியோடு கேட்டவர்கள் ஸ்திரீகளாயின் அருந்ததிபோலப் பதிவிரதாதர்மத்தையும் புருஷர்களாயின் இந்திராதி தேவர்போலக் கீர்த்தியையும் பெற்று இல்லறத்தை யநுபவித்து இறுதியிற் சிவபதவியை யடைவார்கள் எனக் கூறினர்.

அருந்ததியின் கற்பியல் புரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

சாவித்திரியின் சரிதமுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவரைநோக்கிச் சொல்லுகின்றார்! வியாஸமுநிவனே! கற்பின் சிறப்பினைப்பற்றி மற்றோர் உபந்நியாசஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக. பல்வளங்களு நிறைந்தோங்கிய மத்திர தேசத்தில் மநுமுறைப்படி செங்கோல்செலுத்து மன்னனாகிய அஸ்வபதியென்போன் நெடுங்காலம் புத்திரப்பேறின்றிச் சரஸ்வதிதேவியை உபாசித்து அவளைப் பிரத்தியட்சமாகத் தரிசித்துத் தாயே! எனக்குச் சந்ததி விருத்தியுண்டாகும்படி யநுக்கிரகஞ்செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க, சரஸ்வதிதேவி மன்னனே! உனக்கோர் புதல்வியுண்டாவளென்று வரமுதவினள். அதனைப்பெற்ற மன்னவன் மனமகிழாது மீண்டும் பிரார்த்திப்ப நீ யவளாற் பலசெல்வங்களுமடைவையென்று கூறி அந்தர்த்தானமாயினள். சிறிது காலத்திலவன் மனைவி ஓர் புத்திரியைப்பெற அசுவபதி அவளுக்குச் சாவித்திரியென்று பெயரிட்டு வளர்த்து வந்தனன். அந்தச் சாவித்திரி அவையவங்களெல்லாம் நன்ராய் அமையப்பெற்று மங்கைப் பருவமுற்றது கண்டு, அவளுக்கு மணவினை முடிக்கத்தக்க கணவனைத் தேடுவதில் மன்னவன் கவலைகொண்டிருக்கையில் நாரதமுநிவர் ஆங்குற, அவரைப்பூசித்துத் தன்மாளிகையிற் கொண்டுபோய்த் திவ்யாசனத்திருத்தி, தன்புதல்வியை வருவித்து அவருக்குக்காட்டி, முநிபுங்கவரே! என்

தவப்புதல்வியாகிய இக்கன்னிகைக்குத் தக்க மணமகனை யடையப்பெறாது வருந்துகின்றேனென்று விண்ணப்பித்தனன். அதைக்கேட்ட நாரத முனிவர் அரசனே! நீ பெற்ற அரும்புதல்வியை உன்மனக்கருத்தின்படி மணஞ்செய்து கொடாது அவள் விரும்பியவரனை மணமுடிப்பிக்கவேண்டு மென்றுகூறிச் சாவித்திரியின் கருத்தைக்கேட்க, அவள் சாலவதேய மன்னவனாகிய சத்தியவானென்றவனை மணஞ்செய்ய விரும்பினளென் றனள். அதனைக்கேட்ட அரசன் நாரதமுனிவனைநோக்கி ஸ்வாமி, அச்சத் தியவானுடைய குணானுபவங்களெத்தகையின? எனக்கேட்க, எல்லா மறிந்த நாரதமுனிவர், அவன் பரிசுத்தன், சொற்றவறாதவன், கரும்பு வில்லினையுடைய மன்மதனையொத்தவன், எல்லாவகையிலுஞ் சிறந்தவன் ஆயினும் ஆயுள்காலம் ஓராண்டேயுள்ளவன் எனக்கூற, அசுவபதிதுணுக் குற்றுத் தன்புத்திரியின் முகத்தைப்பார்த்து மகளே! திரிகாலஞான முணர்ந்த பிரமபுத்திரராகிய நாரதபகவான் கூறியவார்த்தைகளைக் கேட்ட னையா? அன்றியும் அவன்பிதா இராஜ்யத்தைச் சத்துருக்களுக்கிழந்து மனைவியையும் புத்திரனையு முடன்கொண்டு வனத்தில் வசித்தனன். இவற்றையெல்லா நோக்காது யானுன்னையவனுக்குக்கொடுக்கினும் அவன் ஒருவருடமே உயிர் வாழ்வானென்னில் அதனைக்காட்டிலும் வேறோர் துன்பமுளதா? ஆதலின் நீ வேறோர் நாயகனை வரிப்பாய் எனக்கூற, சாவித்திரிகூறுவாள். எந்தையே! பலமாதர்களால் அம்மன்னனது சிறப் பைக்கேட்டு அவன்மேல் ஆசைகொண்டுள்ளேனாதலால், பிறனொருவனை நான் மணஞ்செய்யேனென, அருகிருந்த நாரதமுனிவர் அரசனே! இவள் கற்பிற்சிறந்தவளா யிருப்பளாதலின், தன் கணவனாயுளைப்பெருக்கி விதி யினைவெல்லுவள்; நீ அவள் கருத்தின்படியே மணஞ்செய்து கொடுக்கலா மெனக்கூறினதால் மன்னவன் மறுக்காது இசைய, முனிவர் ஆசீர்வதித்துத் தன்னிச்சைப்படி சென்றனர். அதன்பின்னர் அசுவபதி தன்மனைவியாகிய மாளவியோடும், புத்திரியாகிய சாவித்திரியோடும் ரதாரூடனாய் நீரதவனத் தையடைய, அங்கிருந்த சாலவதேசத்தரசன் எதிர்கொண்டனன். அவ்வரசரிருவரும் ஒருவரையொருவர் தழுவிக் குசலம் வினவியபின்னர் அசுவபதி, என்மகள் சாவித்திரி நின்புதல்வனை வரித்தனளாதலின் நானவ ளோடிங்குற்றனன் என்றனன். அதைக்கேட்ட சாலவமன்னன் தீனனாயி ருத்தலின் துக்கிக்க அசுவபதி அவனைத்தேற்றிப் பிராமணர்களேற்படுத் திய சுபமுகூர்த்தத்தில் மணவினைமுடிப்பித்துத் தன்புத்திரிக்கு மணி, ஆடை, ஆபரணம், பொன், பணிப்பெண் முதலியன குறைவற வளித்துத் தன்னகரமடைந்தனன். சாவித்திரியோ கற்பிலருந்ததிபோலத் தன்கணவ னுக்குப் பணிவிடைசெய்தும், மாமன்மாமிகளை விசேடமாக உபசரித்தும் வந்தனள். இவ்வாறிருக்க நாரதமுனிவர் கூறியபடி வருடம் ஒன்றும் தின ங்கள் நான்குங்கழிந்தன.

வியாஸமுனிவனே! சாவித்திரியானவள் உமாதேவியினை நோக்கி, தன்கணவனாயுள் விருத்தியினைக்கருதி விரதமிருந்தாள். அச்சமயத்தில்

சத்தியவந்தன் வனத்திற்கேக விருப்புற்றானாதலின் மாமன்மாமி உத்தரவு பெற்றுச் சாவித்திரியுமுடன் சென்றனள். வனமடைந்த மன்னவன் மரத்திலேறிக் காய்கனிகொய்தும் தருப்பையையறுத்தும் சமிதைகளை யொடித்தும் மரமேறியும் இறங்கியுஞ் செல்லுகையில், சாவித்திரியும் அவன் நிழல்போலப் பிரியாது செல்ல, ஓர்மரநிழலில்வந்து மனைவியை நோக்கி, பெண்ணே! கைகால்கள் நடுங்குகின்றன, கண்கள் சுழல்கின்றன வென்று தன்சிரசை அவள் மடியில் வைத்து நிலமிசைப்படுத்தனன். அப்பொழுது வாடாத மலர்மாலையை மார்பிலணிந்து பாசமுந் தண்டுங் கரத்திற்கொண்டு இயமதருமன் அவ்விடம்வந்து அவனுயிரைக் கவருந் தன்மையைக்கண்டு, தன்கணவன் தலையைத் தரையிற் கிடத்தி மனம் வருந்தாது இயமதருமனைப்பணிந்து என்கணவனுயிரைப்பிரித்துக் கவருவதென்னென? தருமன் கற்புக்கரசியே! நின்புருஷன்வாணாள்கழிந்ததாலும் அவன் நற்குணத்தனாதலாலும் யானேவந்து அவனுயிரைக்கொண்டேன்; பிறப்பனவெல்லாமழிவனவே. நீகற்பிற் சிறந்தவளாதலின் எனதுருவத்தை உன்னுயிரோடுகண்டனை; உன்புகழென்னென்று சொல்வேன். யான் போகின்றேன். நீதிரும்பிப்போக என்றுசெல்ல, சாவித்திரியும்பின்றொடர, உடலோடுகணவனைப் பின்றொடர்ந்த கற்பினள் ஒருத்தியுமில்லை, உன் கணவனைநீங்க நீகேட்கும்வரத்தைக் கொடுக்கின்றேனென, சாவித்திரி என் மாதுலன் விழிபெறுமாறருள்செய்கவென, அந்தகன் அவ்வாறே ஆகுக வென்று கூறிச்செல்ல, சாவித்திரி மேலுந்தொடர்ந்து செல்ல, காலன் உன்கணவனைநீங்க இன்னோர் வரங்கேட்பாயாகவென, என்மாமன்தனது நஷ்டராச்சியத்தை யடையுமாறருள் செய்கவென, தருமன் அவ்வாறே யநுக்கிரகித்துச் செல்ல, மீண்டும் சாவித்திரி விடாது பின் செல்ல, கூற்றுவன் பதிவிரதையே! உன்கணவனை யன்றி இன்னுமோர்வரம் வேண்டுமாயிற் கேட்கவென, சாவித்திரி என்றந்தைக்குப் புதல்வர் உளராக வேண்டுமென, அவ்வாறே நூற்றுவர் பிறப்பார்களென்று கூறி மேலுஞ் செல்ல, சாவித்திரியும் விடாது சென்றனள். இயமதருமன் சாவித்திரியை நோக்கி,பெண்பால் வனத்திற்றனித்து வருதல்தகுதியல்ல;நின்னிருக்கைக் கேகுகவென, சாவித்திரி தருமதேவனே! நல்லோர் பெரியோரைக் கண்டவர் தமது துயரங்க ளெல்லாம் நீங்குவரென மேலோர் கூறியிருக்க, தருமநாயகனாகிய உன்னைத்தரிசித்துப் பணிந்து சரணமடைந்து இன்னும் மனக்குறை வுற்றிருப்பது உனக்குத்தருமமா? உயிர்நீத்த உடலை யாடையாபரண சுகந்த மலர்மாலை யாதியவற்றால் அலங்கரிப்பதுபோல என்னுடலை இனிப்பாதுகாத்து வருவதிற் பலனென்னை? என்கணவனைப் பிரிந்து நான்செல்லகில்லேன் என்றுபலவாறு துக்கிக்க, பாசத்தன் அவளது பதிவிரதா தருமத்திற்குப் பயந்தவனாகி நீவேண்டிய வரத்தைக்கேட்க வென, யான் கற்பிற்றிரியாது பலபுதல்வரைப்பெற்று என் மாமன் அவர்களோடுவிளையாடிச்சந்தோஷிக்குமாறு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க, செங்கோற்கடவுள் மனமிரங்கி அவ்வாறே கைகூடுமெனக்

கடாட்சித்து மறைந்தனன். சிறிது நேரத்திற் றன்கணவன் கிடக்குமிட மடைந்து அவனையுபசரிப்பாள் போன்றிருக்க, உடனே கண்விழித்தனன். சாவித்திரி தன்கணவனை யாலிங்கனஞ் செய்துபசரித்துத் தன் மாமன் மாமியரிடங் கொண்டுபோய், மாமன் கண்பெற்றிருக்கவும் நஷ்டராச்சிய லாபமடையவுஞ் சந்தோஷித்து, பலபுத்திரரைப் பெற்று அநேககாலம் வாழ்ந்திருந்தனள். ஆதலின், மணவினை செய்துகொள்ள வேண்டியவன் உத்தம சாமுத்திரிக லக்ஷணமும், பரிசுத்தமான வழியில் தோற்றிய தாய் தந்தையராற் பிறப்புமுடைய சிறந்த கன்னிகையை மணஞ்செய்து கொள்ளும் பக்ஷத்தில் அவன்தேவனுக்குச் சமானமாவான். பதிவிரதை யாகிய உத்தமஸ்திரீயைமணந்து பிரமசரியமுதலிய நால்வகையாஶ்ரமி களுக்குந் துணைநிற்கும் பக்ஷத்தி லவர்கள் சிவலோகத்தில் வாழ்ந்திருப் பார்கள் என்று ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

சாவித்திரியின் சரிதமுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தாறுவது
மரணகாலமறிவதுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுனிவர் வியாஸபகவானை நோக்கிச் சொல்லுகின் றார். வியாஸமுநிவனே! முன் பார்வதிபரமேஶ்வர ஸம்வாதத்திற் பஞ்சப் பிரமவிதானத்தைக்கூறி வருகையில், பார்வதிதேவியார் விரும்பியபடி பிண்டோற்பத்தி முதலிய கர்ப்பாவஸ்தைகளை யுரைத்தபின்னர், அழியக் கூடிய இந்தத்தேகத்தின் முடிவுகாலத்தையும் இதனால் முக்தியடையும் வழியையும் விளக்கியருளவேண்டும். சுவாமீ! உமது பூஜாவிதிகளெல்லாங் கேட்டுமிகவுஞ் சந்தோஷித்தேன். காலசக்கரத்தைப்பற்றியோர் சந்தேக மிருக்கிறது. காலாந்திகத்தை மானுடர் முன்னரேயறிந்து உமதுபாதார விந்தத்திற்குப் பக்தி செய்யவேண்டுதலின், அதனைத் தெரிந்துகொள்ளக் கூடியவழியை எனக்குச் சொல்ல வேண்டுகிறேன் எனப் பார்வதி தேவியார்கேட்க, பரமேஶ்வரர் பிருதிவியாதிய பஞ்சபூதாத்மகமான சரீரத்தை யெடுத்தோர்கள், மரணக்குறியையறிந்து கீர்த்தியைச் சம்பா திக்கும்படியான் மார்க்கங்களைச் சொல்லுகின்றேன்.

ஸுந்தரீ! தேகமெல்லாம் வெளுத்தும், காது, நேத்திரம் நாசிமுதலியன சத்த ரூப ரசங்களை யறியச் சக்தியற்றும் உள்ளவன் ஆறுமா சத்தில் மரிப்பான். எந்தச்சத்தத்தைக் கேட்பினும் அது மிருகசத்தத்தைப் போலக் கேட்டால் அவன் ஆறுமாசத்தில் மரணமடைவான். சூரிய சந்திர மண்டலங்கள் கறுத்திருக்கக் கண்டவன் ஆறுமாசத்திலிறப்பான். இடதுகை ஏழுநாள் துடித்தாலும், சர்வாங்கங்களுந் துடித்து நாவுலர்ந்

தாலும், அவன் ஒருமாதத்தில் உயிர் துறப்பான். நாவின்வழி வாதபித்த கபங்களொழுகப்பெற்றவன் ஒருபக்ஷத்தில் இறப்பான். நெஞ்சும் வாயும் உலரப்பெறுவானாயின் ஆறுமாசத்தி லழிவான். நாத்தடித்தும் குளிர்ச்சியாற் பல்லிறுகக்கட்டப்பெறுவானாயினும் ஆறுமாதத்திலிறப்பான். ஜலம், நெய், எண்ணெய், கண்ணாடி முதலியவற்றில் தன்றேகச் சாயையைக் காணாமலிருப்பானாயின் ஆறுமாதத்திலழிவான். தன்றேகச்சாயலைக்காணாவிடினும், சிரமில்லாதமுண்டமாய்க் காணப்படினும், ஒருமாசத்திலிறப்பான். இதுவரை அங்கத்தைப்பற்றிச் சொன்னேன். இனி வெளிக்குறியைப்பற்றி விவகரிக்கின்றேன் என்றுசொல்வதானார். சந்திர சூரிய மண்டலங்களைக் காந்தியின்றி வஸ்திரத்தால் மூடப்பட்டதுபோல மங்கலாகக்கண்டவன் பதினைந்துநாளிலிறப்பான். அருந்ததியை ஆகாயத்தில் வாகனமின்றியும், சந்திரனிடத்துக்களங்கமின்றியும், இரவில் ஆகாயத்தில் நட்சத்திரம் பிரகாசமின்றியும், மேகமின்றி மின்னவுங் கண்டவன் ஆறுமாசத்தில் இறப்பான். திக்குகளைக்கண்டு மயங்குபவன் ஆறுமாசத்தில் உயிர் துறப்பான். ஆகாயத்தில் இராக்காலத்தில் இந்திரதநுஸைக் கண்டவனும் பகற்காலத்தில் விண்வீழ்கொள்ளி விழக்காண்பவனும், காகம் கழுகு முதலிய பக்ஷிகள் தலைக்குமேல் வட்டமிடக்கண்டவனும் ஆறுமாசத்திலிறப்பர். ஆகாயமார்க்கத்திற் சத்தருஷி மண்டலத்தையும் ஸ்வர்க்கமாகிய சுவாதிமார்க்கத்தையும் எவன் காணவில்லையோ, அவன் ஆறுமாசத்திலிறப்பான். பருவம் அமாவாசியை யின்றியே சந்திரசூரிய மண்டலத்தை இராகு மறைப்பதுபோலக் காண்பவனும், திக்குகள் சுழலக்காண்பவனும், ஆறுமாசத்தி லழிவான். நீலவர்ணமாகிய ஈக்கள் சாதாரண தேகத்தை மொய்க்கக்கண்டவன் ஒருமாசத்தில் மரணமடைவான். தன் சிரசில், கழுகு காக்கை மாடப்புறாமுதலியன உட்காரக்கண்டவன் ஒருமாசத்திலுயிர்துறப்பான். ஆகாயத்திற்கரிய யானை காணப்படின் ஆறுமாசத்தில் மரிப்பான். நிறம் ஐந்தும் சுவை ஆறும் பிறழ்வுற்றுக் காணப்படின், ஆறுமாசத்திலிறப்பான். நாவின் முனையும் மூக்கின் முனையும் புருவ நடுவுங் காணாவிடின் மூன்றுமாசத்திலிறப்பான். சேற்றிடையில் மிதித்த காலின் சுவடு சிதைவுற்றுத் தோன்றுமாயின் மரணஞ் சமீபித்தவனாவான். நான்குபுறத்தினும் இந்திரதநுசு தோன்றினும், பகலிற் கண்ணெதிரிற் பேயாடினும் ஒருமாசத்தில் உயிர் துறப்பான். பூரித்த தேகமுடையோர் இளைத்தாலும், இளைத்த தேகமுடையோர் பூரித்தாலும் ஒருமாசத்திலொழிவர். பேய் பூதம் நரி கழுதை அசுரர் கருங்காக்கை புலி செந்நாய் பருந்து குரங்கு முதலியவை தன்மேலேறவும், அவை தன்னைத் தின்னவும், அவற்றைத் தான் தின்னவுமாகிய இவற்றிலொன்றைக் கனவிற் கண்டவன், பதினைந்துதினங்களிற் பூவுலகினின்றகல்வான். குரங்கின்மேலேறிக் கீழ்த்திசை நோக்கிச் செல்லக் கனவுகண்டவன் ஒருபட்சகாலத்தி லிறப்பான்.

ஒருவன் தனது மரணதினத்தை யறிந்துகொள்ள விரும்புவா ருயின், ஸ்நானஞ்செய்து புனிதமான வஸ்திரமணிந்து நித்தியகருமத்தை முடித்து, சுக்கிலபட்சமும் அபரபட்சமுமென்று முறையே சொல்லப்படு கிற வலதுகையையு மிடதுகையையும் ஜலத்திலலம்பி, மீண்டும் பாலினு லலம்பி, சுத்தவஸ்திரத்திற் றுடைத்து, சுகந்த சந்தனத்தை இரு கரங் களிலு மெடுத்துக்கொண்டு உள்ளங்கைக ளிரண்டனுலுஞ் சிறிதுநேரங் குழைத்து, அஞ்சலியஸ்தனுய் ஒரேமனதுடன் உமாபதியைத் தியானித்து நூற்றெட்டுதரந் தேவிமந்திரத்தைச் சபித்து, கைகளைப் பிரித்து நோக்க விரல்களின் கணுக்கவொன்றில் கருமைநிறமாகக் காணப்படும். சிறுவிரல் முதல் பெருவிரலிறுதியாகக் கணுக்கவொவ்வொன்றிற்கு மும்மூன்ருய்ப் பதினைந்து திதிகளாதலின், எந்தக்கையில் கருமை தோன்றுகிறதோ அந்தக் கைக்குரியபட்சத்தி லிறப்பானென்றும், கனிட்டைவிரலின் அடிக் கணுமுதல் மேல்நோக்கிப் பிரதமையாதி திதிகளாக வெண்ணிக்கொண்டு செல்கையில், எந்தத் திதியிற் குறி காணப்பட்டதோ அந்தத் திதியி லிறப்பானென்றுந் தெரிந்துகொள்வாயாக.

வியாஸமுநிவனே! இனி ஸ்வாசத்தினு லுணரத்தக்க மார்க் கங்களாவன: க்ஷணம் துடி லவம் நிமிஷம் காஷ்டை கலை முகூர்த்தம் இராப்பகல் பக்ஷம் மாசம் ருது வருஷம் யுகம் கற்பம் மஹாகற்பமென் னுங் கிரமத்துடன் இம்முறையாகச் சிவபெருமான் சங்கரித்துவருகிருர். நாசிவழியிலோடுஞ் சுவாசமானது பிங்கலைவழியாக ஐந்து தினங்கள் செல்லுமாயின் மூன்றுவருஷத்திலும்,பத்துத்தினங்களோடுமாயின் இரண்டு வருஷத்திலும், பதினைந்துதினங்களோடுமாயின் ஒருவருஷத்திலும் உயி ரொழிவான். இரண்டு நாசிகளிலும் இருபதுநாள் சுவாசமோடுமாயின் ஆறுமாதத்திலும், இருபத்தைந்து தினங்களோடின் மூன்றுமாதத்திலும், இருபத்தாறுதினங்களோடின் இரண்டுமாதத்திலும், இருபத்தேழுதினங்க ளோடின் ஒருமாதத்திலும் உயிரொழிவான். வலது நாசிவழியாக ஆறு தினங்கள் சுவாசஞ் சென்ருல் இரண்டுவருஷம் எட்டுமாதம் பதினெட்டு நாள் ஜீவிப்பான். ஏழுதினங்கள் சென்ருல் இரண்டுவருஷம் ஏழுமாதம் ஆறு நாள் ஜீவிப்பான். எட்டுத்தினங்கள் சென்ருல் இரண்டு வருஷம் நான்கு மாதம் இருபத்துநான்கு நாள் வாழ்வான். ஒன்பது தினங்கள் சென்ருல் ஒருவருஷம் ஏழுமாதம் பன்னிருதினங்கள் பிழைத்திருப்பான். பதினொரு தினங்கள்சென்ருல் ஒன்பதுமாதம் எட்டுநாள் உலகிலிருப்பான். பன்னிருதினங்கள் சென்ருல் ஏழுமாதம் பன்னிருதினங்கள் பிராணனோ டிருப்பான். இருபத்துமூன்று தினங்கள் சென்ருல் நான்குமாதம் ஆறு நாள் இருப்பான். முப்பது தினங்கள் சென்ருல் ஒருமாதம் பத்து நாள் ஜீவிப்பான். முப்பத்தொருதினம் அப்படியே சுவாசஞ் சென்ருல் ஐந்து தினங்கள் பிழைத்திருப்பான். வாய்வழியே சுவாசஞ் செல்லுமாயின் மூன்று தினங்களில் இறப்பான். இதுதான் காலசக்கிரம். இதனை யுனக்குச்

சொன்னேன் என்று சிவபெருமான் பார்வதிதேவியாருக்குத் திருவாய் மலர்ந்தருளியபடியே ஸநத்குமாரமுநிவர் வியாஸபகவானுக்குரைத்தனர்.

மரணகாலமறிவதுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தேழாவது
யோகநிலையுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பார்வதிதேவியார் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய மரணகாலக்குறிகளைக் கேட்டறிந்தேன். உலகினருயிரை இயமன் வஞ்சித்துக் கவர்ந்துகொண்டுபோகின்றானெனக் கூறுகின்றீரே, அவன் அப்பிராணனை யெவ்வாறு வஞ்சித்துப் பிடித்துக்கொண்டுபோகின்றான்? அதனையும் விவரமாகச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் உமையே! உலகினருக்கு இதமுண்டாகும்படி அதனையுஞ் சொல்கின்றேன். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூதங்களுஞ் சேர்ந்தது சரீரம். அவற்றுள் ஆகாயம் சர்வவியாபியாயுள்ளது. மற்றப் பூதங்களெல்லாம் ஆகாயத்திலேயே யொடுங்கி மீண்டும் அதினின்றே தோன்றுகின்றன. இந்தப் பஞ்சபூத சரீரம் காரணத்துடன் கூடியதாதலின் ஞானிகளாயிருப்பினும் அவர்கள் சரீரத்திற்கும் நாசமுண்டாகும். அஃதொருபொழுதும் ஸ்திரமானதல்லவெனக்கூற, பார்வதிதேவியார் பரமசிவனை நோக்கி, ஸ்வாமீ! பூர்வம் மன்மதனைத் தேவரீரே தகனஞ்செய்துவிட்டு அவன் மனைவி இரதி பலவாறு துக்கித்துப் பிரார்த்திக்க அவளுக்கிரங்கி மீண்டும் உயிர்பெறச்செய்தீர். இயமனையுதைத்து அவனதுயிர்போக்கிப் பூமிதேவியின் பிரார்த்தனைக்கிரங்கி அவனுக்கு மீண்டும் உயிர்தந்தருளினீர். இயமனைச் செயித்தவர்கள் தேவரீரையன்றி யெவரேனுமுளராகில் அவர்யாவரென்று அடியேனுக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்கச் சிவபெருமான் கூறுகின்றார்: தேவர்கள் அசுரர்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் உரகர்கள் மாநுடர்கள் முதலியோர்களாலுஞ் செயிக்கமுடியாத இயமதருமராஜனை தியானத்தால் யோகஞ்செய்பவர்கள், சரீரத்துடனே வெல்லுவார்கள் என்று கூறியருளினர். திரிலோகநாயகனாகிய சிவபெருமானுடைய திருவார்த்தையைக்கேட்டுப் பார்வதிதேவியார், ஆச்சரியத்துடன் புன்னகைசெய்து ஸ்வாமீ! அத்தகைய ஞானிகளுடைய சரித்திரத்தை எனக்கு விபரமாகச் சொல்லவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் ஏ சந்திரவதனே! பஞ்சபூதாத்மகமான தேகமானது பூதகுணத்தையுடையது. பஞ்சபூதங்களில், ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று ஜலமும், ஜலத்தினின்று பிருதிவியுந் தோன்றும். இவ்வைந்துஞ் சேருவதாற் சரீரமாகின்றது, பிருதிவிக்கு ஐந்து குணங்களும், ஜலத்திற்கு நான்கு

குணங்களும், தேயுவுக்கு மூன்றுகுணங்களும், வாயுவுக்கு இரண்டுகுணங்களும், ஆகாயத்திற்குச் சப்தமென்னும் ஒரு குணமும் உண்டு. பூதங்கள் தத்தமது குணங்களை நீங்கியகாலத்திற் சரீரம் நாசமடைகின்றது. ஞானியானவன் சரீரத்தையடைய விரும்பியபொழுது அப்பஞ்சபூத குணங்கள் அவ்வவற்றினின்றுண்டாகின்றன. இயமனை வெல்லவேண்டுமென்று விரும்பியவன், அவனது பூததேகத்தில் விளங்கும் ஆகாயத்தைத் தன்னுள்ளே கண்டு அதனிடத்திலேயே சர்வகுணங்களுமிருப்பதாகத்தெரிந்து மனத்தைப் புறஞ்செல்லாதொடுக்கி யோகத்தில் நிற்கவேண்டியது என, பார்வதிதேவி ஸ்வாமீ! தியானம் யோகம் இவற்றால் இயமனை வெல்லலாமென்பதை விளக்கிச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் தேவியே! அந்த யோகமார்க்கம் சிரத்தாபக்தி யுடையவர்களுக்கன்றி நாஸ்திகனுக்கும் புனிதமில்லாதவனுக்கும் அதர்மிக்கும் கூறத்தகாதது. அதனைச் சாதுக்களாகிய யோகிகளின் இதத்தைக்கருதி உனக்குச்சொல்லுகின்றேன்.

சுகமான ஆசனத்திலிருந்துகொண்டு யோகத்தை அப்பியசிக்கவேண்டும். நாடோறும் ஏகாந்தமான விடத்திலிருந்து தர்ஜனியால் இரண்டு நாழிகை காலம் காதுகளை மூடிக்கொண்டு சிவபெருமானைத்தியானிக்கும் பக்ஷத்தில், வயிற்றிலுள்ள ஜடராக்கினியினின்று மோர்சத்தமுண்டாகி அவனுக்குக்கேட்கும். அன்றியும் அந்தவோசை ஊதுவதுபோலக்கேட்டு வயிற்றிலுள்ள ஆகாரத்தையெல்லாம் பசனஞ்செய்துவிடும். ஜ்வராதி ரோகங்களைப்போக்கி உபத்திரவங்களை நீக்கிவிடும். இவ்வாறே பிரதிதினமும் இரண்டுநாழிகை வரையில் அப்பியசித்து வந்தவன் மிருத்யுவைச் சயித்துச் சுயேச்சையாகத் தரிசித்து எல்லாவற்றையுங்கண்டு சர்வசித்தியையுமடைகிறான். மழைக்காலத்தில் ஆகாயத்திலுண்டாகும் மேககர்ச்சனைபோன்ற சத்தத்தைக்கேட்டு அப்பியாசித்தவன் யோகியாய் ஜனன மரணங்களை நீங்கிச் சூக்ஷமத்திலுஞ் சூக்ஷமமாயுள்ள பிரமத்தைத் தரிசித்து, பதரை நீக்கி மணியைக்கொள்வான்போல, சமுசாரதி துக்கங்களை யொழித்து பிரமஞானத்தையடைகிறான். இது சப்தப்பிரமயோக மெனப்படும். இந்த யோகாப்பியாசமுடையோர் பசிதாகங்களைப்போக்கி, தாம் விரும்பியவற்றையடைவர். இதுவே முக்திக்குக் காரணம். இதுயாவருக்குஞ் சொல்லக்கூடாதது. நாச கிரதமானது. உபாதி வர்ஜிதமாகவுள்ளது. காலபாசத்தினால் மோகிக்கப்பட்டவர்களும், பாவிகளும், துர்ப்புத்திகளும் சப்தப்பிரமத்தை யறியார்கள். சப்தப்பிரமஞானமுண்டாகும் வரையில் சமுசாரபந்தம் விலகமாட்டாது. சப்தப்பிரமத்தை யறிந்தவர்கள் ஜன்மபந்தத்தினின்றும் நீங்குவார்கள். தன்தேகத்திலுண்டான நித்திரை சோம்பல் ஆலசியம் காமக்குரோதாதிகள் முதலியவற்றை நீக்கிச் சுகமான ஆசனத்திலிருந்து நூறுவயதுசென்ற கிழவனாயிருப்பினும் இந்தயோகத்தை அப்பியசிக்கும் பக்ஷத்தில் ம்ருத்யுஞ்சய சரீரத்தையும்

ஆரோக்கியத்தையும் தீர்க்காயுளையும் அடைகிறான். இதனை அப்பிய சித்தவனுக்குச் சர்வேசுரனிடத்தில் மிக்கநம்பிக்கை யுண்டாகிறது. இந்த யோகத்திற்கு ஓங்காரமந்திர பீஜாக்ஷரங்கள் வேண்டுவ தில்லை. அப்பியா சத்தினாலேயே இவற்றையடையலாம். இந்தச் சப்தத்தில் ஒன்பது வகைப் பேதங்களுள்ளன. அவற்றையுஞ் சொல்லுகின்றேன். அவை கோஷம், காம்ஸ்யம், ஶ்ருங்கம், கண்டா, வீணை, புள்ளாங்குழல், துந்துபி, சங்கம், மேகம்போன்ற ஒன்பது சப்தங்களாம். விவேகியானவன் இவ்வகைய வொலிகளைக் கேளாது விடுத்தால், ஓங்காரத்தின் ஓசையுண்டாகும்; அதனையே கேட்கவேண்டும். அதுவே சிறந்தது. அவ்வோங்கார சத்தத்தை யதோக்தமாக அப்பியசிக்கு மொருவனைப் புண்ணிய பாவங்க ளணுகாது. ஆறுமாதத்திற்கு அச்சத்தத்தை யப்பியசித்தவன் மஹா யோகியாய்ச் சர்வலோகங்களிலுஞ் சஞ்சரிப்பன். கோஷ மென்னுஞ் சத்தத்தை யப்பியசிப்பவன் ஆத்மசுத்தியும், சர்வவியாதிகளினின்று நீங்குதலும், வசியகரமுதலிய சித்திகளையுமடைவான். காம்ஸ்யம் என்பதை யப்பியசிப்பவன் சமஸ்தபிராணிகளின் கமனத்தைத் தடுக்கக்கூடியவ னாவான். அன்றியும் விஷங்களைத்தடுக்கவும், பூதம் பேய் முதலியவற்றை யடக்கவும் வல்லவனாவான். மூன்றாவதாகிய ஶ்ருங்கமென்னுஞ் சத்தத்தை யப்பியசித்தவன் சத்துரு நாசஞ்செய்யவும், தன்னிஷ்டப்படி அவர்களை நடக்கவைக்க வல்லமையுடையனுமாவான். கண்டாவென்னுஞ் சத்தத்தை யப்பியசிப்பவன் சகல தேவர்களையுந் தன்னிடம் வரவழைக்குந்திற முடையவனாவான். அல்லாமல் யக்ஷர் கின்னரர் கிம்புருடர் மாநுடர் முதலானவர்களையும் வசப்படுத்த வல்லவனாவான். வீணை யென்னுஞ் சத்தத்தை யப்பியசிக்கும் ஒருவன் தூரதிருஷ்டியடையான். புள்ளாங்குழ லென்னுஞ் சத்தத்தை யாசரிப்பவன் சர்வஜ்ஞனாகிறான். துந்துபி யென்பதை யப்பியசிப்பவன் ஜராமரணங்களை நீக்கிச் சுகியாயிருப்பான். சங்கநாதத்தை யப்பியசிப்பவன், நினைத்த உருவமெடுக்கவல்லவனாவான். மேகநாதத்தை யப்பியசிப்பவன் ஆகாயத்திற் சஞ்சரிக்க வல்லவனும், சர்வத்தையும் பார்க்க வல்லவனும் சர்வசித்திமானுமாவான். இவ்வாறாகச் சத்தத்தின் விஷயத்தைப்பற்றி விவகரித்தேன். இனி எதைப்பற்றியறிய விரும்புகின்றனையோ அதை வினவுவாயாக, எனக்கூறிய சிவபெருமானை நோக்கித் தேவிவினவுகிறாள். சுவாமீ! எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாகிய ஆகாயத்தினின்றும் வாயுதோன்றுதலின் வாயுமயமான தேகத்தினால் ஆகாயசொரூபமாகிய பிரமத்தை யெப்படி யறியலாம் எனக்கேட்ட தேவியை, ஈசன் விளித்து பெண்ணே! பூர்வத்தில் யோகிகளினிதத்தின் பொருட்டு விஸ்தரித்துக்சொல்லிய அவ்விஷயத்தை உனக்குச் சொல்லு கின்றேன்: இவ்வாயுமயமானசரீர மழிந்துபோகுமென்று காலக்கியானத் தாலறிந்து சரீரியானவன் பிராணாயாம மென்னும் யோகத்தை யப்பிய சிக்கும்பக்ஷத்தில், தனக்குண்டாகு மரணத்தைப்பதினைந்து நாளில் விலக்க வல்லவனாவான். அவன் இதயத்திலிருக்கும் வாயுவானது ஸதா ஜடராக்

கினியோடுகூடி உள்ளும்புறமுஞ் சஞ்சரித் திருக்கின்றது. அவ்வாயு எங்கும் வியாபகமுள்ளது. அத்தகைய வாயுவைப் புறஞ் செல்லாது தன்னுளடக்கும் யோகி உலகத்தைச் சயிக்கிறான். வாயுவானது துருத்தியுளிருந்து அதனைப்பூரிக்கச் செய்கிறதுபோல, பிராணவாயு ஒருவனுளடங்கியிருந்தா லவனை யோகியாக்கும். ரேசகபூரககும்பங்களாற் பிராணவாயுவைச் சுவாதீனஞ்செய்து கொள்பவன் மகத்தாகிறான். அவன் பல்லாயிரஞ் சிரங்களும் பல்லாயிரங் கரங்களும் பல்லாயிரம் பதங்களுமமைந்த விராட்டின் சொரூபமாகிறான். இவ்வகைபிராணுயாமமானது, காயத்திரிமந்திரத்தைச்சிரசோடுகூட்டிவியாஹ்ருதிபூர்வமாய்ப்பிராணவாயுவையடக்கி ரேசகாதிநிலைகளினின்று மும்முறை சாவதானமாய் ஜபிப்பதே பிராணுயாம மெனப்படும். அதைக் காட்டிலுஞ் சிறந்த யோகமில்லை. அதுவே சர்வசித்தியையுங் கொடுக்கக்கூடியது. சந்திரசூரியாதி கிரகங்களிறக்குமாயினும் பிராணுயாமஞ் செய்வோர் ஒருகாலத்திலு மிறவார். அவர்கள் மீண்டும் பிறப்பெய்தார். நூறுவருடகாலவளவாயிற் புண்ணிய தீரத்திலிருந்து தருப்பைநுனியின் ஜலத்தை யருந்தி உயிர்காத்துக் கடுந்தவஞ் செய்தவன் பெறும்பலனை மேற்சொல்லியபடி ஒரு பிராணுயாமஞ் செய்தவன் பெறுவான் என்றால் அதன்பலனை யென்னென் றுரைப்பது? காலையிலெழுந்து ஒருதரமாவது விதிப்படி பிராணுயாமஞ் செய்த பிராமணர் பிரமலோகத்தை யடைவார்கள். தனிமையாய்த் திவ்யாசனத்திலிருந்து இப்பிராணுயாமத்தை யப்பியசிக்கும் பட்சத்தில், ஜராமரணங்களை நீக்கி வாயுவைப்போல ஆகாயத்திற் சஞ்சரிக்கும் வல்லபமும், சித்தனைப்போல ரூபமும், மின்னலைப்போன்ற தேககாந்தியும், அறிவின் விசேடமாகிய ஆற்றலும், பராக்கிரமும், வாயுவேகமும், ஆரோக்கியமும், தேவர்களுக்குந் துர்லபமானபதவியும் அடையச்செய்யும். இதுவே பிராணுயாமத்தின் பலன். இதனை உனக்குச் சொன்னேன்.

இனி, தேயுவினுலடையுஞ் சித்தியைச் சொல்கின்றேன். புனித ஆசனத்திற் சுத்தனுயிருந்து, நிர்ஜனமான பனி குளிர் முதலிய விடையூறுகளில்லாத விடத்தில் ஒரேமனதாய் மேல்நோக்குடன் அரைமுகூர்த்த காலம் இருபுருவங்களின் மத்தியில் ஈஶ்வரசம்பந்தமான வெண்மை செம்மை கருமை பசுமை இந்திரதநுசுபோன்ற சித்திரம் என்னும் நிறங்களமைந்த ஜோதியை இளஞ்சூரியனைப்போல விளங்கத் தரிசித்தவன் இந்திரியநிக்ரகமும், பரகாயப்பிரவேசமும், அணிமாதி அஷ்டசித்திகளும், ஞானநோக்கமும், தூரசத்த முணருமுணர்ச்சியும், பார்ப்பதற்கருமையானவற்றைப்பார்க்குஞ் சக்தியும் அடைகுவான். இதனை யெப்பொழுதும் பழகுபவன் ஆகாயசஞ்சாரஞ் செய்பவனுவான். வேதாத்தியயனஞ்செய்தவர்களாயினும் ஞானிகளாயினும் பூர்வகர்மவசத்தினுல் என்னுடையவுருவத்தைப்பார்க்க வல்லபமிருப்பினும் பார்க்கமாட்டார்கள். என்பிரபாவத்தைக்கேட்கச் சத்தியிருப்பினுஞ் செவிடர்போலக் கேட்கமாட்டார்கள்.

மூடத்தன்மையாற் குருடர்களைப்போல் என்னையறியமாட்டார்கள். அவ்வகைய வஸ்துவை யானே யறிந்தவன். அணுவுக்கணுவாயும் மஹத்துக்கு மஹத்தாயும் அஞ்ஞானவிருளுக்கு அதிகரித்த ஜோதிமயமான தேஜஸைத் தரிசித்தவன் ம்ருத்யுவைச்சயிக்கிறான். இதைக்காட்டிலும் ஆன்மாக்களைக் கடைத்தேற்றும் மார்க்கம் பிறிதொன்றில்லை. தேஜஸினால் உண்டாகுஞ் சித்தியையுனக்குச்சொன்னேன். இதனையப்பியசித்தோர் அமரத்துவத்தை யடைவார். ஜலத்தாலுண்டாகுஞ் சித்தியைச் சொல்லுகின்றேன். ஸ்நாநாதிகளைச்செய்து பரிசுத்தனாய் நிர்மலமான ஸ்தானத்தில் ஏகாந்தமாக விருந்து சுகமான ஆசனத்திலுட்கார்ந்து மனத்தைப்புலன்வழி செலுத்தாது சரீரத்தை நிமிர்த்திக் கைகளைக்கூப்பி, வாயைப்பறவையின் மூக்குப்போலக் குவித்து வாய்வழியாக வாயுவையுட்கொள்ளும் பக்ஷத்தில், தாடையின் உட்பிரதேசத்தினின்றும் ஒருவகையான ஜலமுண்டாகும். பிராணனை விருத்திசெய்யும் அந்த ஜலத்தைப் புசிக்கவேண்டும். அது சீதளமாகிய அமிர்த ஜலம். அதனைப்பானஞ்செய்தவன் திவ்வியசரீரத்தை யடைந்து, மகாதேஜஸுடையவனாய்ப் பசிதாகங்களைப்போக்கி, வலிமையால் யானையையும் வேகத்தினாற் குதிரையையும்போன்று, அதிதூரதிஷ்டியையும் அதிதூர சிரவணத்தையும், கந்தர்வ வித்தியாதராதி கணங்களைப்போன்ற தேஜஸும், புத்தியாற் பிரகற்பதியையொப்பும், தேவவருஷங்கள் நூறுவரையில் வாழ்வுமடைவான். இன்னும் ஒரு இரகசியத்தைச் சொல்லுகின்றேன். அது தேவர்களுக்கும் அடைதற்கசாத்தியமானது. அஃதென்னெனில், நாவைவளைத்து அதின்முனையை உண்ணாக்குடன் சேர்க்க, அதினின்றும் அமிர்தமயமான சீதளத்தோடுகூடிய ஜலமுண்டாகும். அந்த அமிர்த்தத்தைப்புசித்தவன் அமரத்துவத்தையடைகிறான். நாவினை (ர) ரேபம்போலவும் மணிநாக்கின் (?) வளைவுபோலவும் வளைத்து, மூலாதார ஸ்தானத்தைப்பந்திக்கும் பக்ஷத்தில், புனிதமான இதய தாமரையினின்றும் ஓர் பிந்து உண்டாகி நாநுனியையடையும். ஆநந்தகரமும் ஜகத்சாரமும் சமுசாரதுன்பநீக்கமும் நிர்மலமான பிரமஸ்வரூபவுணர்ச்சியும் இயமனை வெல்லுதலும் அமரத்துவமும் பசிதாகநீக்கமுஞ் செய்யவல்லது அவ்வமிர்தமேயாம். இதனை லம்பிகாயோக மென்பர். மேற்கூறியவகைகளில் ஒன்றனை யப்பியசிக்கும்பக்ஷத்தில் அவனுடைய தைரியத்தினாலே இயமனைவென்று பிரமானந்தத்தையடைகிறான். உலகவின்ப முழுவதுஞ் சொப்பனம் போலுமென்றுணர்ந்து அவற்றில் வெறுப்புற்றுச் சுவர்க்காதி போகங்களைக் கருதாது, சாசுவிதமான எனது திருவடியில் மனத்தைச் செலுத்தினவர்கள் எனது சாயுச்சியத்தை யடைந்து கற்பகோடிகாலம் வாழ்ந்திருப்பார்கள் என்று சிவபெருமான் பார்வதிதேவியாருக்குக் கூறினவகையே ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவருக்குரைத்தருளினர்.

யோகநிலையுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

சாயாபுருஷ தரிசனமும் புராணசிரவணமுமுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார்: வியாஸமுநிவனே! பார்வதிதேவியார் பரமசிவனை நோக்கி, இறைவனே! தேவரீர் கூறிய காலக்கியானத்தையும் யோகசாதனத்தையு முணர்ந்தேன்; இன்னும் இந்தச்சம்பந்தமான விஷயங்களைச் சொல்லவேண்டுமென வினவ, சிவபெருமான் பார்வதி! சகலபாவங்களையு மொழிக்கத்தக்க சாயா புருஷ லக்ஷணத்தைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக. ஸுந்தரீ! பகலிற் சூரியனையாவது இரவிற் சந்திரனையாவது தனக்குப் பின்புறமாக்கி, ஸ்நானஞ்செய்து புனிதமான வஸ்திரமணிந்து சந்தன புஷ்பாதிகளா லலங்கரித்துக் கொண்டு, எனது பஞ்சாக்ஷர மந்திரத்தையுந் தேவியாகிய உனது நவாக்ஷரமந்திரத்தையும் ஜபித்துத் தனது தேகசாயையை முதலிற் பூமியிற் பார்த்துச் சிறிதுநேரத்தில் ஆகாயத்தில் மீண்டும் அவ்வகையே பார்க்கவேண்டும். ஆகாயத்திற் றோன்றுஞ்சாயை யென்னுடையது. அதனை நிர்மலமான மனத்துடன் தரிசிக்கும்பக்ஷத்திற் பிரமஹத்தியாதி பாவங்க ளெல்லாம் ஒழியும். அந்தச்சாயை சிரமின்றித் தோன்றினால் ஆறுமாதத்திலிறப்பான். கர்மசீலர்களும் தவசிகளும் யாகஞ்செய்தவர்களும் அடையுங் கதியை யடைவதற்கு யோகசாஸ்திரத்தை யப்பியசிக்கவேண்டும். அந்த யோகத்திற்கு முக்கியமாக வேண்டியது ஞானம். அந்த ஞானமானது கிரமமாக அடையத்தக்கது. அதுகிரமமாக உண்டாவதற்குப் பாவநாசம் வேண்டும். பாவநாசத்திற்குப் புராணசிரவணஞ் செய்ய வேண்டும். புராணங்களைக் கேட்பதனாலேயே சமுசாரபந்தத்தை நீக்கி ஞானத்தை யடையலாம். தர்மார்த்த காமங்கட்குக் காரணமாயும் மோக்ஷத்திற்கு வழியாயுமிருக்கின்றது. ஆதலின், மாநுடஜனன மெடுத்தோர் அவசியம் புராணங்களை வாசித்துங் கேட்டுந் தமது ஜன்மசாபல்யத்தை யடைய வேண்டும். யாகம் தானம் தவம் தீர்த்தயாத்திரை முதலியவற்றால் வரும் பலனைப் புராணசிரவண மொன்றனாலேயே பெறலாம். தர்ம மார்க்கத்தை விளக்கத்தக்க புராணங்களில்லாத பக்ஷத்தில், மாநுடர் இகலோகத்திலேனும் பரலோகத்திலேனுஞ் சுகமடைய மாட்டார்கள். உலகத்தின் சிருஷ்டியாதி கிரமங்கள்வேதத்திற் சொல்லப்பட்டிருப்பினும் யாவர்க்கும் அதுவிளங்காமையின், அநேககாலம் சாஸ்திராராய்ச்சி செய்யமுடியாதவர்கள் சாமானியமாகப் புராணசிரவணத்தாலேயே அவற்றை யெல்லாம் உணரலாகும். புராணங்களில் ஆதிசிருஷ்டியும், சூரியசந்திர வமிசவிருத்தியும், மந்வந்தரக்கிரமமும், தானக்கிரமமும், ஆசாரமுறையும், கற்பபேதங்களும் பிரமதேவராற் சுயம்புவாய்ச் சொல்லப்பட்டுள்ளன. இவ்வகைய தர்மங்களைச் சொல்லத்தக்க புராணங்கள் முப்பத்தாறுள்ளன.

அவற்றுள் ஒருபுராணத்தை யாவது பக்தியோடு பூரணமாகச் சிரவணஞ் செய்தால், வனத்திலிருந்து சதுர்வேதங்களையும் ஒருமுறை பாராயணஞ் செய்து முடித்தபலனை யடையலாம். யாகம் தானம் தவமுதலியவற்று லுண்டாகும் பலனைத் தர்மசாஸ்திரங்களை வாசித்து உணரவேண்டும் என்று சிவபெருமான் பார்வதி தேவியாருக்குக் கூறியவகையே ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவருக்குக் கூறினர். அவ்வியாஸ பகவானிடங் கேட்டுணர்ந்தபடியே யான் உங்களுக்குச் சொன்னேனென்று ஸூத முநிவர் சௌநகாதி முநிவர்களுக் குரைத்தனர்.

சாயாபுருஷ தரிசனமும் புராணசிரவணமுமுரைத்தது

மு ற் றி ற் று.

நாற்பத்தோன்பதாவது

திரிமூர்த்திகளின் தோற்றமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளாகிய சௌநகாதி முநிவர்கள் ஸூத முநிவரை நோக்கி, ஸ்வாமி! சிவபெருமானை இலிங்கமூர்த்தத்திலும், பிறதேவர்களை விக்கிரக மூர்த்தத்திலும் உலகினர் பூசித்துவருங் காரணமென்னை? என்பதனை விளக்கி அடியேங்களுக்குக் கூறவேண்டும் என, ஸூதமுநிவர் பூர்வம் இவ்விஷயத்தை வியாஸபகவான் ஸநத்குமாரமுநிவரிடங் கேட்டு அவரால் எனக்குக் கூறப்பட்டபடியே சொல்லுகின்றேன், நைமிசாரண்ய வாசிகளே! பூர்வத்தில் தாவர சங்கமங்க ளெல்லாம் நசித்துப் பூமிமுழுதும் ஜலத்தால் மூடப்பட்டிருந்தது. பிரம விஷ்ணு ருத்திரர் அச்சலத்தினின்று தோன்றினர். அவர்க ளுண்டான வழியைப் பண்டிதர்களு மறியார்கள். தாவரசங்கமங்கள் நசித்து ஜலமயமாயிருக்க, பெரிதாகியவாயு தோன்றி அதனைஉலரச்செய்தது. அதனோடு துவாதசாதித்தர்கள் நான்குதிக்கிலும் நால்வரும் ஆகாயத்தில் எண்மருமாகப் பிரகாசித்து உலரச்செய்தனர். பாதலலோகத்தினின்று காலாக்கினி ருத்திரர் சர்வதேஜஸோடு உதித்தனர். அவரும் சூரியதேஜஸோடு நீரை யுலர்த்தி யாருமறியாமற் பாதலஞ்சேர்ந்தனர். இவ்வாறுக நீருலர்த்தப்பட்டபின்னர் ஸப்தமேகங்கள்தோன்றிவருஷித்து முன்போல்எங்குஞ்சலமயமாக்கியது. இப்படியே மாறிமாறியுண்டாவது இயற்கை. அத்திரிமூர்த்திகளில் அதிதீக்ஷண்ய தேககாந்தியோடுகூடிய ருத்திரமூர்த்தியை நோக்கிப் பிரமவிஷ்ணுக்கள் நமஸ்கரித்து உலகசிருஷ்டி செய்ய வேண்டுமென்று சொல்ல, அவ்வாறேயாகுக வென்று ருத்திரர் ஜலத்தில்மூழ்கி மறைய, பிரமவிஷ்ணுக்கள் ஆயிரவருஷவரையிலும் அவர் திரும்பி வராமைகண்டு வருந்தி, பிரமன் விஷ்ணுவைநோக்கிச் சிருஷ்டியெவ்வாறுவதென்று வினவ, விஷ்ணு என்வாக்கியத்தையே கொள்க; காலதாமதம்வேண்டாம், பிரபஞ்சசிருஷ்டியில் நீபிரயத்தினப்படுவாயாகில் அதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்

கிறேன் என, பிரமன் சிருஷ்டிசெய்யத் தொடங்கி, அண்டசம் சுவேதசம் உற்பிசம் சராயுசம் என்னும் நால்வகை யோனியாகிய தேவாசுர கந்தர்வ யக்ஷ ராக்ஷச பைசாச மாநுட மிருக பசு பக்ஷி தாவராதிகளைப் படைத்தார். இவ்வாறாயபின்னர் ஜலத்தில் மூழ்கிய ருத்திரர் சிருஷ்டிசெய்ய மீண்டு மெழுந்தபொழுது பிரபஞ்சம் படைத்திருக்கக் கண்டு கோபங்கொண்டு, தன்முகத்தினின்றும் ஓர் தேஜஜை விடுப்ப, அது காலாக்கினியாகிப் பிரமனது சிருஷ்டிப்பொருள்களை முற்று மழித்தது. அதைக்கண்டு ருத்திரமூர்த்தியை, ஈசானமூர்த்தியே! காலஸ்வரூபியே! அநேக கண்களையுடையவனே! திரிநேத்திர தாரியே! வரதனே! நீலகண்டனே! பைரவனே! சம்போ! கபர்த்தினே! பசுபதயே! திரிசூலதாரியே! கபாலமாலினே! தேவதேவா! சந்திரசேகரா! சங்கரா! சரணம்! சரணம்! என்று பிரமன் தோத்திரஞ்செய்தனன். அவரது தோத்திரத்திற்குக் களித்த இறைவன் பிரமனே! உன் தோத்திரத்திற்குச் சந்தோஷித்தோன். என்னை வேண்டியவர்களை இரட்சிக்கின்றேன் ஆகையால், உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக என்றதைக்கேட்ட பிரமன் நான் சிருஷ்டிசெய்த பிரபஞ்சம் முன்போலவே யிருக்கவேண்டுமென்றான். அதைக்கேட்ட ருத்திரர் என் முகத்தினின்றுண்டாய தேஜஜை எவ்விடத்தொடுக்கலாம்? எனப் பிரமன் சற்றாலோசித்து, பிரபஞ்சத்திற் கநுகூலமாயிருக்கச் சூரியனிடத்து இந்தத் தேஜஜை வைத்துவிடவும், நீரே சூரியனிடமிருந்து சிருஷ்டியாதி தொழில்களைச் செய்யவும், பிரபஞ்சத்திலுள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களால் திரிகாலமும் பூசிக்கப்பட்டு, கற்பாந்தத்தில் நீரே நாசஞ் செய்யவும், வேண்டுகின்றேன் என்றனன். இவ்வாறுகூறிய பிரமனைப் பார்த்துப் புன்னகைசெய்து, என்னை இலிங்கமூர்த்தத்திற் பூசித்தத்தாலன்றி உனக்குச் சிருஷ்டி கைகூடாதென்று தேசோமயமான லிங்கரூபமாயினர். அந்த ரூபமானது பாதலத்திற் கடியிற் படிந்தும் அண்டாண்ட சராசரங்கட்கப்புறம் உயர்ந்தும் ஓங்கியது. இவ்வாறாகிய தேஜோமயலிங்கத்தின் அடியையும் முடியையு மறியுமாறு விஷ்ணுவும் பிரமனும் முயன்று பாதலத்திலும் ஆகாயத்திலுஞ் சென்று தேடுகையில், ஆகாயத்தினிடத்து அசரீரியாய்ச் சர்வமயமாகிய பரமேசனது தேஜோமயமான லிங்கமாகிய இதனைப் பூசிப்பவர்கள் தர்மார்த்த காமிய மோட்சங்களும், அணிமாதி சித்தியுஞ் சர்வலோக சஞ்சாரத்துவமும் சிருஷ்டி திதியாதியவற்றைச் செய்ய யோக்கியதையும் பெறுவர். மேன்மையாகிய பதவியை யடைய லிங்கபூசையையன்றி வேறு கதியில்லை. ஆகையால் இவ்விலிங்கத்தை யர்ச்சித்து உங்கள் மனோரத மடைவீர்களாகவெனக் கூறக்கேட்டு அவ்விருவரும் அதனைத் தேடி யறிய விரும்பியதை விடுத்து அநேககாலம் பூசித்துக்கொண்டிருந்தனர்.

திரிமூர்த்திகளின் தோற்றமுரைத்தது

முற்றிற்று.

ஐம்பதாவது
பிரம விஷ்ணுக்கள் வரம்பெற்ற அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்களே! இவ்விதமாகத்தோன்றிய இலிங்கத்தை விஷ்ணுமூர்த்தி சர்வோபசாரத்துடனும் விதிவழுவாது பூசனை செய்து பலவாறு தோத்திரஞ்செய்து, சதருத்திரிய நாமங்களாலுமர்ச்சித்து திவ்ய நாமங்களாற் பூசிக்க, விஷ்ணுவின் பூசனைக்கு மகிழ்ந்து, இலிங்கத்தினின்று மகாதேவராயுற்பவித்துக் கருணைகடாட்சத்தோடு பிரமவிஷ்ணுக்களைநோக்கி உங்களாற் சொல்லப்பட்ட தோத்திரங்களைக்கேட்டு மிகவுஞ் சந்தோஷித்தேன். நீங்கள் ஸ்வயமாகச் செய்யுந் தோத்திரத்திற்கே சந்தோஷமடையும் நான் வேதத்தின் ஸ்லோகங்களாற் தோத்திரிப்பதற்காக மகிழ்வதைச் சொல்லவேண்டியதில்லை. விஷ்ணுவே! தேவாசுர மாநுடர்களாற் பூசிக்கப்பட்டவனுய்ச் சர்வசத்துருக்களையுஞ் சயிக்க வல்லவனுய் ஒருக்கால் என்னையுஞ் சயிக்கவல்லவனுய் வரங்கொடுத்தேன். பிரம! உனக்கு அழியாத சிருஷ்டியும் மந்வந்தராதி கிரமங்களையும் இந்திராதிபதங்களையும் ஏககாலத்தில் நான்குவேதங்களை நான்கு முகத்தாலுச் சரிக்கவல்லபமுங் கொடுத்தேன் என்றறைந்து மறைந்தார். ஆகையால் சௌநகாதி முநிவர்களே! உலகத்திற் புருஷார்த்தங்களைக் கொடுக்க வேறுதபசில்லை. இந்தலோகத்திற் புத்திர பௌத்திராதி இராச்சிய சம்பத்துக்களையும் சுவர்க்கபோகங்களையும் மோக்ஷ சாம்பிராச்சியங்களையுங்கொடுக்கவல்லது சிவலிங்கபூசையன்றி வேறில்லையென்று எனது குருவாகிய வியாஸமுநிவராற் கேட்டதை உங்களுக்குச் சொன்னேன். இன்னுங் கேட்கவேண்டியதுளவாயின் கேட்பீர்களாகவென்றார்.

பிரம விஷ்ணுக்கள் வரம் பெற்றது
முற்றிற்று.

ஐம்பத்தோன்றாவது
உலக சிருஷ்டி யுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்கள் ஸூதமுநிவரைநோக்கி, ஸ்வாமீ! தேவரீர் இதுகாறுஞ் சொல்லிவந்த விஷயங்களாற் சாலவுஞ் சந்தோஷித்தோம். இனியிவ்வுலகம் பிரமதேவனால் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டதோ அதனையும் விபரமாகச் சொல்லவேண்டும் எனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். நைமிசாரணியவாசிகளே! செவிப்புலனுக்கினிமையாயும் மோக்ஷானந்தத்தைக் கொடுக்க வல்லதாயும் வேதங்களுக்குச் சமானமானதாயும் அதனைக் கேட்போரைச் சிவலோகமடையச்செய்ய வல்லதாயுமுள்ள அந்த விவரத்தையும் உங்கட்குச் சொல்லுகின்றேன். அகண்டாகாரமானவராயும், ஸத்துமசத்துமானவராயும், மமதாதிகளற்றவராயும், விஷ்ணுபக்தி யுடையவராயும், பெருந்தேஜ

ஸங்கையுடையவராயும், கற்பம் காலமுதலியவற்றை வரையறுப்பவராயும், வேதங்களில் ஹிரண்யகர்ப்பரென்று சொல்லப்படுபவராயும் விளங்கும் பிரமதேவருக்கு நமஸ்காரம். மகருஷிகளே! சிருஷ்டிகர்த்தா பிரமனென்றும், திதிகர்த்தா விஷ்ணுவென்றும், சங்காரகர்த்தா உருத்திரனென்றும், இவர்கள் மூவரும் சுத்த சாக்ஷாத்கார பரசிவத்தினின்றுந் தோன்றினவர்களென்று முணர்வீராக. பிரமதேவர் அநேகவித சிருஷ்டிகளைச்செய்யக் கருத்துடையவராய் முதலில் ஜலத்தைப்படைத்து அதில் தன் வீரியத்தை விடுத்தார். அது சொர்ணமயமான ஓர் அண்டமாயிற்று. பிரமதேவர் தான் சிவபெருமானிடம் பூர்வம் பெற்றுள்ள வரத்தினால் சிருஷ்டிசெய்ய வல்லமையுடையராய், அந்தப்பொன்னிறத்த அண்டத்தினின்றுந்தோன்றிச் சுயம்புவானார். அவர் சிறிதுகாலம் அந்தஜலத்தில்வசித்துக்கொண்டிருந்து, பின்னர் அந்த அண்டத்தை இரண்டாக்கி அதிலொன்றனைச் சுவர்க்கமாகவும், ஒன்றனைப் பூமியாகவும், பதினான்கு லோகங்களாகவும், பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் இடையே ஆகாயமாகவுஞ் சிருஷ்டித்தார். இந்தப்பூமியானது பத்துத்திக்குகளுடன்கூடி ஜலத்தின்பேரில் மிதந்துகொண்டிருக்கின்றது. இப்பூமியில் காலம் மனது வாக்கு காமம் குரோதம் ஆசை இவற்றைச்சிருஷ்டித்தார். பின்னர் மரீசி அத்திரி அங்கிரஸ் புலத்தியர் புலகர் கிருது வசிஷ்டர் என்னும் எழுவரை மானசிகபுத்திரராகப் படைத்தார். இவர்கள் ஸப்தப்பிரமாக்கள் என்று சொல்லப்படுகின்றார்கள். அதன் பின்னர் ஸநத்குமாரமுநிவரை யுண்டுசெய்தனர். அந்த ஸநத்குமாரர் ஸப்தப்பிரமாக்களினுஞ் சிறந்தவராக விளங்கினர். இந்த ருஷிகள் எழுவரிடம் அநேக வமிசங்களுண்டாயின. மின்னல் இடி மேகம் இந்திர தனுசு பர்ஜன்யன் இவற்றைப்படைத்தார். இருக்கு யஜுர் சாமம் அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும் யாகத்தையும் படைத்தார். அந்த வேதங்களிற் கூறிய முறைப்படி அநேகர் அநேக யாகங்களை நடத்தி தேவர்களைத் திருப்தி செய்திருக்கின்றார்கள். மீண்டும் பிரமதேவர் முகத்தினின்று தேவர்களையும், மார்பிலிருந்து பிதுர்தேவர்களையும், இடையிலிருந்து மாநுடரையும், புஷ்டத்திலிருந்து அசுரரையும், பிற அவயவங்களினின்று நாநாவிதமான பூதங்களையுஞ் சிருஷ்டித்தார். இவ்வாறு படைக்கப்பட்ட பிராணிகள் விருத்தியடையாது நசிக்கக்கண்டு பிரமதேவர் தனது தேகத்தை இரண்டாக்கி ஸ்திரீ புருஷ ரூபங்களாய்த் தனது மகிமையால் மீண்டும் பண்டுபோலப்படைப்புத் தொழில்செய்ய மநுவைப்படைத்தார். அந்த வைராஜனென்னும் மநுவானவர் அநேக பிராணிகளை யுண்டுசெய்தார். இவ்வாறு ஆதியாகிய சிருஷ்டிக்கிரமத்தை வாசிப்போருங் கேட்போருங் கீர்த்தியும் தீர்க்காயுளும் புத்திரபாக்கியமும் அகண்டைசுவரியமும் அடைந்து வாழ்ந்து இறுதியில் சிவலோகத்தை யடைவார்கள்.

உலகசிருஷ்டியுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது
உலக விருத்தி யுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளாகிய மஹருஷிகளே! இவ்வாறு சிருஷ்டியிலே விருப்புடைய பிரமதேவரது மகிமையால் சதரூபையென்னும் ஒரு ஸ்திரீயுண்டானாள். தர்மத்தினாலே அயோனிஜமாகத்தோன்றிய அந்தச் சதரூபை அநேககாலந் தவஞ்செய்து சுவாயம்புவென்று சொல்லப்படுகிற அந்த மநுவை மணஞ்செய்து, பிரியவிரதன் உத்தானபாதனென்னு மிரு புதல்வரைப் பெற்றனள். இந்தச் சுவாயம்பு மநுவினாலேதான் எழுபத்தொரு யுகங்கள் ஒரு மநுவின் காலமென்று வரையறுக்கப்பட்டது. சுவாயம்பு மநுவுக்கும், சதரூபைக்கும் அநேக ஸ்திரீகள் ஜனித்தார்கள். கர்த்தமப்பிரஜாபதிக்குக் காம்யை யென்னுங் கன்னிகை தோன்றினள். காம்யை யென்பவளிடத்தில் சாம்ராட் அகுஷி விராட் பிரபு வென்னும் நான்கு புதல்வர் தோன்றினர். உத்தானபாதன் இந்திரனுக்குச் சமானமான புதல்வனைப்பெற்றனன். தர்மத்தின் கன்னிகை சுநீதியின் கர்ப்பத்தில் உத்தான பாதனுக்குப் புதல்வனாகத் துருவன் தோன்றினன். அந்தத் துருவன் வாலிபத்திலேயே மூவாயிரவருஷந் தவஞ்செய்து அழியாத உயர்பதவியை யடைந்து, ஸப்த ருஷிகளின் மண்டலத்துக்கு மேலேயிருந்து நவக்கிரகங்கட் காதாரமாய் ஜோதிஸ் சக்கரத்தின் சூத்திரத்தைக் கைப்பற்றி விளங்குகின்றான். துருவனுக்குப் புஷ்டியென்னுங் கன்னிகையும், தான்யன் என்னுங் குமாரனுந்தோன்றினர். புஷ்டியென்பவளிடம் ரிபு ரிபுஞ்சயன் விப்பிரன் விரகலன் விருகதேஜஸன் என ஐந்து புத்திரர் ஜனித்தனர். ரிபு வென்பான் புஷ்கரிணி யென்பாளை மணந்து சாக்ஷுஷனென்னு மநுவைப்பெற்றனன். வைராஜ மநுவினிடத்தில் அநட்வலை யென்பாளுக்கு ருரு பூரு சதத்விம்னன் தபஸ்வி ஸத்யஸித்து கவி அக்னிஷ்டோமன் அதிராத்திரன் அதிமன்யு சுயேசசன் எனப்பதின்மர் புத்திரர் பிறந்தனர். ருருவென்போன் ஆக்னேயியென்னும் பெண்ணை மணந்து அங்கன் சுமனஸ் கியாதி கிருதி ஆங்கிரஸ் ஸ்ரஜியென அறுவரைப் பெற்றனன். அங்கன் ஸுநீதியென்பவளிடத்தில் வேனராஜனைப்பெற்றான். அந்த வேனனுடைய அரசாக்ஷியிற் சிறிது குறைபாட்டினால், சந்ததிவிர்த்தியில்லாது வருந்துகையில், வேதியர் அவனது கையை மதனஞ்செய்ய, அவனது வலதுகையினின்றும் பிருதுசக்கிரவர்த்தி வில்லுமம்பும் ஸூர்ய தேஜஸும் சகலசாஸ்திர வுணர்ச்சியும் க்ஷத்திரிய முதல்வனுமாகப் பிறந்து, உலகினைச் சமமாகத்திருத்தி அரசுபுரிந்தான். அநேக இராசசூய அசுவமேதாதிகளைச் செய்தான். பிருது வென்பவனால் திருத்தப்பட்டதாதலின் உலகுக்குப் பிருதிவியென்று பெயராயிற்று. தேவர் ருஷிகள் பிதுர்க்கள் கந்தர்வர்கள் முதலிய வெல்லோருக்கும் உணவுண்டாகும்படி பலவிதமான தானியங்கள் விளையத்தக்க பயிர்களும் செடிகளும் மரங்களும் விருத்திசெய்து இப்பூமி முழுதுக்கும் சக்கிரவர்த்தியாயிருந்தான். அவனது

கொடையினாலேதான் யாவரும் பசிதணிக்க வழியறிந்தார்கள். அந்தப் பிருதுவுக்கு ஸூதமாகதர் என இரண்டுபுதல்வர் தோன்றினர். அவர்களைத் தனது சைநியங்களுக்குத் தலைவர்களாக்கிக் கொண்டனன்.

ஐம்பத்துமூன்றாவது
மேற்படி அத்தியாயம்.

ருஷிவர்களே! அந்தப்பிருது சக்ரவர்த்தியி னிடத்தில் ஹவிர்த்தானி ஹவிர்த்தாமனென இரண்டுபுதல்வர் மீண்டும் பிறந்தனர். ஹவிர்த்தாமன் சிகண்டினியை விவாகஞ்செய்து பிராசீனபர்ஹி யென்பவனையும், ப்ராசீனபர்ஹி சமுத்திரதனயையை மணந்து பிரசேதஸ் என்னும் பெயர் வாய்ந்த பத்துப் புதல்வரையும் பெற்றனர். அவ்வாறு தோன்றிய அப்பதின்மரும் தநுர் வேதவல்லவர்களும் ஒரேமாதிரி தர்மாநுஷ்டானஞ் செய்வோருமாய்ப் பத்தாயிரவருஷஞ் சமுத்திரத்தில் மூழ்கி உக்கிரமான தவத்தைச் செய்தார்கள். அப்பொழுது உலகத்தை அரசுசெய்வோரின்றி உலகமுழுவதுஞ் செடிகளும் மரங்களுமாகிப் பிரஜைகள் குறைந்தன. இவ்விதமாகச்செடி கொடி யடர்ந்து வளர்ந்தமையைக்கண்ட தசபிரசேதசுக்கள் தங்கள் கோபாக்கினியால்அவைகளையும்ஜனங்களையும்நாசஞ்செய்ய எத்தனித்தார்கள். இவ்வாறு செய்வதைக் கண்ட சோமராஜன் அவர்களை யவ்வாறு செய்யாதிருக்கும் படியும், கோபத்தைத் தணிக்கும் படியும் வேண்டிக் கொண்டான். மீண்டும், நானொரு கன்னிகையைத் தங்களுக்காகவே வைத்துக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் இவ்வாறு செய்வதாற் பிரபஞ்சம் நசித்துவிடுமென்று கருதியே யவளைக் காப்பாற்றி வருகிறேன். அவளை நீவிர் வதுவைசெய்தாற் பிரபஞ்சவிர்த்தியாகும். அவளிடத்தில் என்னுடைய அரைப்பாகத் தேசசாலும், உங்களுடைய அரைப்பாகத்தேசசாலும் தக்ஷப்பிரஜாபதி யுற்பத்தியாகப்போகிறான். அவன் உக்கிரமான பிரமதேசசோடு பிரபஞ்ச சிருஷ்டி செய்யப்போகிறான் என்று அரசன்கூற, அதற்கியைந்த பதின்மரும் அவ்வாறே அவளைத்தருமமார்க்கமாக மணமுடித்துக்கொண்டனர். அவளிடம் தக்ஷப்ரஜாபதிசந்திரனம்சத்தாலும், இருவரம்சத்தாலும் உண்டானான். தக்ஷன் சராசரங்களையும், சதுர்ப்பாத ஜந்துக்களையும், திரியக்குகளையுஞ்சிருஷ்டிக்கவெண்ணிப் பிரதமத்திற்சில கன்னியர்களை யுண்டாக்கி, அக்கன்னியரிற் பதின்மரைத் தான் மணந்தும், பதின்மூவரைக் காசிபருக்கும், மற்றோரை நக்ஷத்திரங்களுக்குங்கொடுத்தான். அந்தக்கன்னியரிடமிருந்துதேவாசுரர்களும்பக்ஷிகளும் நாகங்களு மின்னு மநேகமானவையு முண்டாயின. அதுமுதற் கொண்டே சம்போகஞ்செய்வதாற் சிருஷ்டியாகின்றதன்றி, அதன் முன் மனசங்கற்பத்தினாலும், தரிசனார்த்தத்தினாலும், பரிசத்தினாலும் சிருஷ்டி யுண்டாயிருந்ததென்று கூறிய ஸூதமுநிவரைப் பார்த்து, சௌனகாதி முநிபுங்கவர்கள் கேட்கலாயினர். ஸூதமுநிவரே! முன் தக்ஷப்

பிரஜாபதி பிரமனது பெருவிரலினின்றுந் தோன்றினரென முற்கூறி, இப்போது தசப்பிரசேதசுக்களுக்குப் புத்திரராயவதரித்தாரென்றும், தன் பெண் புத்திரியைச் சந்திரன் வதுவை செய்தானென்றுஞ் சொல்லுகின்றது சந்தேகமா யிருத்தலின், அதை விளக்கும்படி வேண்டுகின்றோம் என்ற நைமிசாரண்ணிய முநிவர்களை நோக்கி, முநிவர்களே! உற்பத்தி நாசம் பிரமனுதியருக்குக் கற்பந்தோறு முண்டாகிற படியாலும் பூர்வத்தில், சிருஷ்டி மானசிகமாயிருந்தபடியாலும், ஜேஷ்டகனிஷ்ட கிரமமும் பெண் புத்திரனென்ற கிரமமும் முறையை யநுசரித்துக் கலியாணஞ் செய்யுங் கிரமமும் கிடையா. ஸ்திரி புருஷாள் கூடியபின்பே இத்தகைய முறைகளேற்பட்டன. இதைப்பற்றிப் பண்டிதர்களா யுள்ளவர்கள் சந்தேகப்படுவது தவறு. தக்ஷப்பிரஜாபதியா லேற்பட்ட பிரபஞ்ச சிருஷ்டியினுரம்பத்தைப் பக்தியோடு கேட்பவர்களும் படிப்பவர்களும் புத்திரசம்பத்தும் தீர்க்காயுவும் சிவலோக சாம்பிராச்சிய முதலியனவும் அடைவார்களென்று ஸூதமுநிவர் கூறினர்.

உலக விருத்தி யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது

காசிபர் முதலானோர் பரம்பரையுரைத்த அத்தியாயம்.

சௌநகராதி நைமிசாரண்யவாசிகள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! தேவர் தானவர் கந்தர்வர் இராக்ஷசர் முதலானோருடைய சிருஷ்டியை விரித்துச் சொல்லவேண்டும் எனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். முநிசிரேஷ்டர்களே! பூர்வத்தில் தக்ஷப்பிரஜாபதி தன் மனசினுற் சிருஷ்டிசெய்து, அது விருத்தி யடையாமையை யோசித்து வீரணப்பிரஜாபதியின் குமாரத்தியைப்புணர்ந்து அவளிடத்தில் ஐயாயிரம் புத்திரர்களை யுண்டுசெய்தனர். இவ்வாறு உண்டுசெய்த ஐயாயிரம் புதல்வர்களையும், முன்னமே பிரமதேவரிடத்தினின்று தோன்றிய நாரத முநிவர் பார்த்து, சிறுவர்களே! உங்களுக்குச் சிருஷ்டிவிஷயத்தில் யாது தெரியும்? காசிபமுநிவர் தக்ஷப்பிரஜாபதியின் புதல்வியி னிடமாகச் சிருஷ்டி செய்யப் போகிறுர். பூமியின் திக்குகளையும் பிரதேசங்களையும் செவ்வையாகத்தெரிந்துகொண்டுசிருஷ்டிசெய்யத்தொடங்குங்களென்று சொல்ல, அவர்வார்த்தையைக்கேட்டு, அவர்கூறியபடி பூமிமுழுவதையும் பார்த்துவரும்படி சென்றுர்கள். அவர்கள் இவ்வாறு சென்றமையைத் தெரிந்துகொண்ட தக்ஷப்பிரசாபதி மீண்டும் ஹரியஸ்வா னென்னும் பெயருடைய ஐந்நூறு புதல்வரை யுண்டுசெய்து, அவர்களைச் சிருஷ்டி செய்யும்படி விரும்ப, அவர்கள் தந்தைகட்டளைப்படி சிருஷ்டிக்கு யத்தனிக்கையில் நாரதபகவான் அவர்களையுங்கண்டு, மதியில்லாச் சிறுவர்களே!

பூமியின் பிரமாணத்தை யறியாது எவ்வாறு சிருஷ்டி செய்வீர்கள்? என, அதனைக்கேட்டு அவர்களும் பூமியின்பிரமாணத்தை யுணரச்சென்று, பலதிக்குகளிலு மலைந்து சுழன்று அவற்றின் பிரமாணத்தை யுணராது, சமுத்திரத்தை நோக்கிச் சென்ற நதியானது திரும்பிவராதது போல அவர்கள் அவ்வாறே சென்றனர். அப்புதல்வர்களுந் திசைகளின் மேற் சென்றதை யறிந்துகொண்ட தக்ஷப்பிரஜாபதி வீரணியென்னும் தன் மனைவி யிடமாக அறுபது கன்னிகைகளை யுண்டுசெய்து, அவருள் பத்துப் பெண்களைத் தர்மப்பிரஜாபதிக்கும், பதின்மூன்றுபெண்களைக் காசிபருக் கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், நான்கு பெண்களை அரிஷ்டநேமிக்கும், இரண்டுபுத்திரிகளைப் பிரமபுத்திரருக்கும், இருவரை ஆங்கிரசுக்கும், இருவரைக் கிருசாசுவர்க்கும் மணம்புணர்த்தினர். அவருள் அருந்ததி வசு ஜாமி லம்பை பாநு மருத்வதி சங்கல்பா முஹூர்த்தை ஸாத்யை விசுவை யென்னும்பதின்மர் தர்மப்பிரசாபதியின் மனைவியர். அவரில் விசுவையென்பவள் விசுவே தேவர்களையும், ஸாத்யாவென்பவள் ஸாத்தியாளையும், மருத்துவதி மருத்துக்களையும், வசு வசுக்களையும், பாநு பாநுக்களையும், முஹூர்த்தை முகூர்த்தங்களையும், லம்பை யென்பவள் கோஷத்தையும், ஜாமி யென்பவள் நாகவீதியென்னும் பெண்ணையும், அருந் ததி பூப்பிரதேசங்களையும், சங்கல்பா வென்பாள் சங்கற்பத்தையும், சத்தி யத்தையும் பெற்றனர். வசுவென்பவள் பெற்றமக்கள் அயன் துருவன் சோமன் தரன் அநிலன் அநலன் பிரத்தியூஷன் பிரபாசன் எனப்படுவர். அந்த வசுக்க ளெண்மரில் அயன் என்பவன் வேதண்டன் சிரமன் சாந்தன் முநி யென நால்வரையும், துருவ னென்பவன் காலன் லோகப்பிரபாவன் என விருவரையும், சோமனென்பான் வர்ச்சான் என்பவனையும், தரனென் பான் மனோஹரையினிடத்தில் திரவிணன் ஹூதஹவ்யவஹன் சிசிரன் பிராணன் ரமணன் என்பாரையும், அநிலனென்பான் சிவையென்னு மனைவியிடம் புரோஜவனையும், அநலனென்பான் கிருத்திகைப் பெண்கள் அறுவரைமணந்து அக்கினிபுத்திரன் குமாரன் சரஸ்தம்பன் சாகன் விசாகன் நைகமேயனென அறுவரையும், பிரத்தியூஷனென்பவன் தேவல னென்னு மிருடியையும் உண்டுசெய்தனர். தேவலவிருடி பிரஜாவான்க ளானவிருவரைப் பெற்றனன். பிரகற்பதியின் தங்கையை எட்டாவது வசுவான பிரபாசன் மணந்து தொஷ்டா என்பவனைப் பெற்றனன். அவன் தேவதச்சனைச் சர்வாபரணங்களையும் விமானங்களையுஞ் செய்யவல்லப மடைந்தனன். தொஷ்டா விசுவரூபனைப்பெற்றனன். இதுவே தர்மப்பிர ஜாபதியின் வமிசமாம்.

முநிவர்களே! அதிதி திதி தநு அரிஷ்டை சுரசை இலை சுரபி விந்தை தாம்ரா குரோதை சமை கத்துரு சனி யென்னும் பதின்மூவர் காசிபருடைய மனைவியர். அவருள் அதிதி யென்பவள் சாக்ஷூஷ மன்வந் தரத்தில் விஷ்ணு சக்ரன் அரியமான் தாதா த்வஷ்டா பூஷா விவஸ்வான்

சவிதா மித்ராவருணன் அம்சோ பகன் அதிதேஜன் என்போரைத் துஷிதா வென்னும் பெயருடன் பெற்றனள். இவர்களே ரைவதமன்வந்தரத்திலும் துவாதசாதித்தர்களாயிருந்தார்கள். சந்திரன் மனைவியராகிய அசுவினி முதலிய இருபத்தேழு மாதர்களிடம் அதிரூப தேக முடைய அநேக புத்திரர்களுண்டானார்கள். அரிஷ்டநேமி தன் மனைவியர் நால்வரிடம் பதினாறு பிள்ளைகளைப்பெற்றனன். கிருசாசுவன் தேவர்களது ஆயுதங்களாகிய அஸ்திர சாஸ்திரங்களை யீன்றனன். சூரியன் நாடோறுந்தோன்றி அஸ்தமாவான் போல இவ்வாறு வரன் முறையாகத் தோன்றிய முப்பத்துமுக்கோடி தேவர்களும் கற்பங்கடோறும் உண்டாகி லயமடைகிறார்கள். காசிபர் மனைவியரில், திதி யென்பவளிடம் இரணியகசிபு இரணியாக்ஷன் என்னும் பராக்கிரமசாலிகளான இரண்டு புதல்வரும், சிம்ஹிகை யென்னுங் கன்னிகையுந் தோன்றினர். இரணியகசிபு அநுக்கிலாதன் ஹிலாதன் பிரஹலாதன் ஸம்ஹிலாதனென நான்கு புதல்வரைப் பெற்றனன். ஹிலாதனுக்கு ஹிலதனும், ஹிலதனுக்கு ஆயுஷ்மான் சிபி காலனென மூவருந் தோன்றினர். பிரஹலாதனுக்கு விரோசனனும், விரோசனனுக்குப்பலியும், பலிக்கு வாணாசுரன் முதலிய நூற்றுவரும் பிறந்தனர். ஹிரண்யாக்ஷனுக்கு குருகரன் சகுனி பூதசந்தாபனன் மகாநாதன் காலநாபனென ஐவர் பிறந்தனர். தநுவென்பவள் காசிபரால் வீரியபராக்கிரமத்தோடு கூடிய நூறு புதல்வரைப்பெற்றனள். அதிற் பிரதான மானவர்கள் த்விமூர்த்தன் சகுரன் பலி சிவன் பிரபு அயோமுகன் சம்பரன் கபிலன் வாமனன் விசுவாநரன் புலோமன் வித்திராவணன் மகாசரன் சுவர்ப்பானு விருஷபர்வன் விப்பிரசித்து எனப்படுவர். இவருள் சுவர்ப்பானு வென்பவன் பிரபாவையென்பவளையும், புலோமன் சசியென்பவளையும் பெற்றார்கள். விருஷபர்வா வென்பவன் மகளாகச் சர்மிஷ்டையைப் பெற்றான். வைஸ்வானவனுக்குப் புலோமை காளிகையென்னும் இருகன்னியர் தோன்றினர். மரீசியின் வமிசத்தில் அறுபதினாயிரம் தானவர்களும், பௌலோமர், காலகஞ்சர் ஆகிய பேதமுள்ளவர்கள் தோன்றி, பிரமனைக்குறித்து வெகுகாலந்தவஞ் செய்து, சுவர்ண மயமான பட்டணங்களைச் சம்பாதித்து தேவர்களாற் சாகாவரம்பெற்று வாழ்ந்தார்கள். விப்ரசித்தியென்போன் சிம்ஹிகையை மணந்து உக்கிர பராக்கிரமத்தோடு கூடிய சைமிகேயாளான இராகு சல்லியன் சுபலி பலன் மகாபலன் வாதாபி நமுச்சி வில்வலன் சுவசுருபன் அரகன் நரகன் காலநாபன் சரமாணன் சரகற்பன் என்னும் பதின்மூன்று பிள்ளைகளுண்டாகி, அவர்களால் அநேகம் புத்திரபௌத்திரரைப் பெற்றனன். இரணிய கசிபுன் பிள்ளையாகிய சமக்கலாதனனுக்கு நிவாதகவசிகளாகிய அதிபராக்கிரமசாலிகள் உண்டானார்கள். தாம்ரையென்னும் காசிபர் மனைவிக்கு ஸ்வரத்தைச்சத்திக்கும் பக்ஷிகள் தோன்றின. அவர் மனைவியருள் காகியென்பாள் காக்கையையும், உலூகியென்பாள் கோட்டான் வகைகளையும், சேனியென்பாள் பெண் பருந்தையும், பாசியென்பாள் ஆண்பருந்தையும், கிருத்ரி யென்பாள் கழுக்களையும், சுகியென்பாள் கிளிகளையும்,

சுக்கிரீவி யென்பாள் சுகமான பக்ஷிகளையும், தாம்ரையென்பாள் குதிரை கழுதை முதலியவற்றையும் பெற்றார்கள். வினதையென்பாள், பக்ஷிஜாதியிற் சிரேஷ்டனாகியும் வேகத்தில் வல்லவனாகியுமிருக்குங் கருடனையும் அருணனையுமீன்றாள். கத்துருவென்பவள் பலசிரங்களோடு கூடியதாயும் ஆகாயத்திற் சஞ்சரிக்கவல்லதாயும், காமரூபியாயும் உள்ள, சேஷன் வாசுகி தக்ஷகன் ஐராவதன் மகாபத்மன் கம்பளன் அசுவதரன் ஏலாபுத்திரன் பத்மன் கார்க்கோடகன் தனஞ்சயன் மகாநீலன் மகாவர்ணன் திருதராஷ்டிரன் பலாக்கன் குகன் புஷ்பதந்தன் துர்முகன் சுமுகன், பகுசன் கரரோமன் பாணி முதலிய நாகர்களைப்பெற்றாள். * வரையென்பவள் அண்டசமாகிய பக்ஷிகள் பசுக்கள்முதலியவற்றைப் பெற்றாள். ஹநுவென்பாள் பலவான்களாகிய ஐம்பது புத்திரரையும் விருக்ஷம் செடி கொடி முதலியவற்றைப்பெற்றாள். சுரபையென்பவள் முயல்களையும் எருமை வகைகளையும் பெற்றாள். இலை யென்பவள் புல் பூண்டு முதலிய ஔஷதிகளையும், சுவசை யக்ஷராக்ஷசர்களையும், முனியென்பவள் அப்சரசுகளையும், அரிஷ்டாயென்பவள் நானாவித ஜந்துக்களையும் பெற்றார்கள். மேற்காட்டிய காசிபர் சந்ததியில் அநேக புத்திர பௌத்திரர்கள் தோன்றி உலகத்திற் பரவினார்கள். இந்தச்சிருஷ்டிகளியாவும் சுவாரோசிஷ மந்வந்தர சிருஷ்டி யென்னும்பெயரையுடையன. இனி வைச்சுதமந் வந்தரசிருஷ்டியின்வகையைக் கூறுகின்றேன்.

முநிவர்களே! இந்த மந்வந்தர சிருஷ்டியினாரம்பத்திற் பிரமதேவர் யாகங்களைச்செய்து பூர்வத்திலுண்டு பண்ணின பிரகாரம் மானசிகமாய் எழுபுத்திரரை யுண்டாக்கினர். முன்னுண்டான தேவதானவர்களுக்குள், பெரிய கலகமுண்டானதால் அசுரர்கள் நசித்துப் போனதைக் கண்ட திதி யென்பவள் காசிபரைச் சரணடைந்து, தேவர் தலைவனான இந்திரனைக்கொல்லக்கூடிய புத்திரன் வேண்டுமென்று பிரார்த்தித்தாள். காசிபர்அதற்கிசைந்து, நீ ஆயிரவருஷகாலம் நியமமாகப் புண்ணிய பூமியில் விரதத்தை யநுஷ்டிக்கும் பக்ஷத்தில் இந்திரனைக் கொல்லவல்ல புத்திரனுதிப்பான். இவ்விரதநியமத்திற் றவறினால் உன்மனோரதம் நிறைவேறாதென்றுவிடைதந்து தவத்துக்குச் சென்றனர். அவ்வாறே திதியென்பவள் பூலோகத்தில் தவஞ்செய்திருக்க இந்திரன் இவள் கருப்பத்தில் தனக்கு விரோதியுண்டாகிறானென்றறிந்து அவள் கருப்பத்தைக் கலைக்கவேண்டுமென்னு மெண்ணத்தோடு தாயாரென்னும் முறைபாராட்டி பணிவிடை செய்ய மாறுகோலங்கொண்டு வந்தான். இவள் விரதத்தின் ஆயிரவருடத்தில் நூறுவருடங் குறைவாயிருக்கையில் திதியென்பவள் அதிக பிரயாசையினாற் சோர்வடைந்து பகற்காலத்தில் தலைமயிரைப் பாதத்தில் அவிழ்த்துவிட்டுத் தன்னைமறந்து நித்திரை யோயினள். அந்த சமயத்தில் இந்திரன் வச்சிரபாணியாய் பெண்குறி வழியாய்க் கருப்பத்திற் பிரவேசித்துப்

* காசிபருக்கு மேற்கூறிய பதின்மூவரன்றிப் பல மனைவியருளரென்க.

பிண்டத்தைக் குலிசத்தால் வெட்டுகையில், கருவிலுள்ள குழந்தை சத்தமிட்டலற, இந்திரன் மாரோதீ:! மாரோதீ:! [அழாதே அழாதே] என்று சொல்லிக்கொண்டே எழுபிளவாக்கிப் பின்னரும் எவ்வேழுபிளவாக்கி வெளியில் வந்தான். அவ்வாறு வந்த இந்திரனைக்கண்டு திதியானவள் துக்கிக்க, இந்திரன் தாயே! நீ நியமந்தப்பி யிருந்தமையால் கருப்பத்திலிருந்த என் சத்துருவைத் துண்டித்தேன். ஆகையால் என்னளவிற் கோபிக்கவேண்டாமென, அவனைக்கண்ட திதி, என்னுடைய குற்றத்தினாலேயே நாசமடைந்த கருப்பம் பலவாகு மாகையால் அவற்றை நின் லோகத்தில் வைத்திருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அவ்வாறே இந்திரன் எழுலோகத்திலும் எவ்வேழு பெயர்களாக மாருதாளென்னும் பெயரோடு வசிக்கும்படி வரங்கொடுத்துத் தன்னுலகஞ் சாரந்தான். இவ்விதமாகப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்து, பிருது முதலிய சக்கிரவர்த்திகளையும், இந்திரன், பிரஜாபதிகள், பர்ச்சன்யன், குபேரன், முதலிய சுவர்க்கவாசிகளையு முண்டாக்கினார். வேனனுடைய பிள்ளையாகிய பிருது சக்கிரவர்த்தியை அகண்ட பிரபஞ்சத்தைப் பலவேறு பாகங்களாக்கும்படி யாக்கியாபித்தார் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினார்.

காசிபர் முதலானார் பரம்பரையுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது

உலகநாயக ருரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! பிரபஞ்ச சிருஷ்டியைச் சொன்னீர்களே! இவர்களில் எவ்வகையாக எவ்வெவர் எவ்வெவர்க்குத் தலைவர்களா யிருந்தனரோ அதனையுமறிய விரும்புகின்றோமெனக் கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். முநிசிரேஷ்டர்களே! பிராமணர், நக்ஷத்திரம், நவக்கிரகம்,ஓஷதிகள், யக்கியம், தவம் முதலியவற்றிற்கு அதிபதியாக சந்திரனையும், ஜலத்திற்கு வருணனையும், அரசர்களுக்குக் குபேரனையும், ஆதித்தர்களுக்கு விஷ்ணுவையும், அஷ்டவசுக்களுக்கு அக்கினியையும், பிரஜாபதிகளுக்குத் தக்ஷனையும், மருத்துக்களுக்கு இந்திரனையும், தைத்திய தானவர்களுக்கு பிரகலாதனையும், பிதுர்க்களுக்கு யமதருமனையும், விரதங்கள் மாதாக்கள் மந்திரம் பசு (ஆன்மாக்கள்) யக்ஷராக்ஷசர் அரசர்கள் சர்வபூத பைசாசங்களுக்குஞ் சூலபாணியாகிய பரமேசனையும், பருவதங்களுக்கு ஹிமவானையும், நதிகளுக்குச் சமுத்திரத்தையும், மிருகங்களுக்குச் சார்த்தூலத்தையும், பசுக்களுக்கு விருஷபத்தையும், கொடி செடிகளுக்கு விருக்ஷங்களையும் எஜமானர்களாக நியமித்தும், அஷ்டதிக்குகளுக்குள் கிழக்கில் சுதன்மனையும், தென்றிக்கில் தெய்வதனென்பானையும், மேற்றிக்கில் கேதுமானையும், வடதிக்கில் ஹிரணியரோமனையும் அரசராக ஸ்தாபித்தார். வைவஸ்வத

மநுவின சிருஷ்டியை இதுகாறுஞ்சொன்னேன். இச்சிருஷ்டியின் வைபவங்களைப் படிப்போருங்கேட்போருந்தீர்க்காயுள்பெற்றுக்கீர்த்திமான்களாயிவ்வுலகில் வாழ்ந்து இறுதியிற் சிவபதமடைவர் என்று கூறியருளினர்.

உலகநாயகருரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்தாறுவது

பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்கள் ஸூதமுநிவரைநோக்கி ஸ்வாமீ ! வேனனுடைய சரித்திரத்தை யாமுணர விஸ்தரித்துரைக்க விரும்புகின்றோமென, அவர்களை நோக்கி ஸூதமுநிவர் கூறுகின்றார்: பூர்வத்தில் தருமவானும் அத்திரி யென்னும் பிரஜாபதிக்குச்சமமான வல்லமையோடு கூடியவனுமான அங்கப் பிரஜாபதியென்பான் றோன்றினன். அவனுக்கும் மிருத்தியுவின் பெண்ணாகிய சுநிதி யென்பவளுக்கும் வேனனென்னுமோர் புத்திரன் உதித்தான் அவன் தருமஞ்செய்வதில் மனமற்றிருந்தான். அவன் மிருத்தியுவின் தௌஹித்திரன் (பெண்வயிற்றுப்பேரன்) ஆனதால் மிருத்யு தோஷத்தால் சுதர்மத்தைவிட்டுக் காமத்திற் பிரியமுள்ளோனாய்த் தருமசாத்திரத்திற்கு விரோதமாகிய ஏற்பாடுகளை யுண்டுசெய்து, வருணாச் சிரமங்களைச் சரிவர நடத்தச் செய்யாமல் அதருமவானா யிருந்தான். அவனரசாட்சியில் யாகாதி கிருத்தியங்கள் குறைந்தும், வேதசாஸ்திர பாராயணம் மட்டுப்பட்டும், தேவாலயபூசை நடவாமலும், யாகஞ்செய்ய வெத்தனிக்கும் பிராமணர்களைச் சேவர்களால் தடுத்தும், தவஞ்செய்வோரது நிலையைக் கெடுத்தும் அரசுசெய்தான். அவ்வேனனுடைய அக்கிரமத்தைக் கண்டு மரீசி முதலிய முநிவர் அவனை நோக்கி, நாங்கள் அநேககாலஞ்செய்து முடிக்கவேண்டிய யாகங்களைச் செய்து முடித்து உலகத்திற்கு க்ஷேமமுண்டு செய்ய, தீக்ஷைசெய்து கொண்டோம். அவ்விரதத்தைக் கூடாதென்று தடைசெய்யவேண்டாம், நீ இப்படிசெய்வது கிரமமன்று. நாங்கள் செய்வது அநாதியாகிய தருமம். இவ்வித தருமத்தையுங் குடிகளையுங் காத்து இரக்ஷிக்கும்படியே நீ படைக்கப்பட்டிருக்கிறாய். குடிகளை (ரஞ்சனை) இரக்ஷணைசெய்வதால் இராஜாவென்னும் பேர் கொடுக்கப்பட்டது, அந்தப்பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டாமென, அம்முநிபுங்கவர்களை நோக்கி, புத்தியில்லாத வேன சக்கிரவர்த்தி நகைத்து, என்னைக்காட்டிலுந் தருமத்தை யுண்டு பண்ண வல்லவன்யார்? யாருடைய தருமத்தைக் கேட்டு நடக்கவேண்டும்; எனக்குமேலோர் அதிகாரியில்லை. என்னை அதர்மனென்று சொல்லவந்த உங்களுக்குத் தருமந்தெரியாது. நீங்கள்தான் மூடர்கள் என்று பலவாறு இகழ்ந்து திரிலோகத்திலுந் தனது அதர்மம் பரவச்செய்தனன். மீண்டும் முநிவர்கள்

சாம பேத தான தண்டோபாயங்களால் வேண்டியது கூறியும் பலன் படாமையாற் கோபங்கொண்டு, அதிகபலிஷ்டனுயுங் கொடியவனுயு முள்ள வேனசக்கிரவர்த்தியின் இடது தொடையிற் பலாத்காரமாகத் தங்கள் தவவல்லமையாற் கடைய, அத் தொடையினின்றுங். குறுகிய வடிவும், பருத்தசரீரமும், கரியநிறமும் உள்ள ஓர் புருஷன் தோன்றி, அஞ்சலியஸ்தனுய் ருஷியைப்போல நிற்ப, அவனை அத்திரி முனிவர்கண்டு சிறுவ! உட்காருவாயாக வென்றூர். அவன் மூலமாகவே நிஷாதவமிசத்தில் வேனனுக்குச்சமானமான காந்தியோடே புளினரென்போர் தோன்றி விந்திய பர்வதத்தில் வசித்து அவனைப்போல அக்கிரமத்தர்களா யிருந்தார்கள். மீண்டும் வலதுகையிற் கடைய, அதனுல் தாமரைபோன்ற அவனுள்ளங்கையிற் கோடி சூரியபிரகாசத்தோடும் அக்கினிக்குச் சமானமான தேசசோடும், அஜகவமென்னும் வில்லோடும், பலவித அஸ்திரங்களோடும், சுவர்ணமயமான கவசத்தோடும், பிருதுவென்னு மன்னவன் தோன்றினுன். அவன் தோற்றத்தினுல் திக்குகளியாவும் பிரகாசித்துக் குடிகள் சந்தோஷமடைந்தார்கள். இவ்வித புத்திரோற்பத்தியிற் றகப்பனுகிய வேனன் பெரும்பாவங்களைச் செய்திருந்தாலும் புத் என்னும் நரகத்தைப்போக்கிச் சற்புத்திரனுற் புண்ணியலோக மடைந்தான். ஆகையால் மாதா பிதாக்கள் பாவஞ்செய்தவர்களா யிருப்பினுஞ் சற்புத்திரனுல் நற்கதியடைவ ரென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதமுண்டான பிருதுவைச் சக்கிரவர்த்தியாக்கவேண்டுமென்று பிரமாதி தேவர்களும், சப்த சமுத்திரங்களும், மகா நதிகளும் தங்களிட முள்ள இரத்தினங்களை வாரிக் கொண்டு புண்ணிய தீர்த்தங்களோடுவந்து, சர்வப்பிரஜைகளையும் இரக்ஷித்துத் தருமத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று கூறி, அவனுக்குப் பட்டாபிடேகஞ் செய்தார்கள். அவன் பூமண்டலங்களுக்கெல்லாம் அரசனுகி மகாதேசசுடையவனுயும் பிரதாபவானுகியும் பிருது சக்கிரவர்த்தி யென்னும் பெயரோடுந் தன்பிதாவால் திரஸ்கரிக்கப்பட்ட தருமங்களையுங் குடிகளையும் தான் அதிக அன்போடு விருத்திசெய்து பாதுகாத்து அரசனென்னும் பெயருக்கு இலக்கியமாயிருந்தான். அவனரசாக்ஷிகாலத்து, குடிகளடைந்த சந்தோஷத்தை யென்னென்று கூறுவேன்? அவன் ரதாரூடனுய்ச் செல்லுங்காலத்து, நதிகள் நீர் விலகி வழிவிடவும், பருவதங்கள்தாழ்ந்து சம வழிகாட்டவும், பூமி தானியத்தை விசேஷித்துக் கிருஷித்தொழிலின்றிக் கொடுக்கவும் பசுக்கள் எவ்வித ரசபதார்த்தங்களையும் சகலவித வஸ்திரங்களையுங் கொடுக்கவும் அரசன் சந்தோஷித்திருந்தனன்.

இவ்வகையாகப் பிருது சக்கிரவர்த்தி செங்கோல் செலுத்திக் கொண்டு வருகையில் பிரமதேவர் ஒரு யாகஞ்செய்தனர். அப்பொழுது அப்பூர்ணுகுதியில் ஸூதன் மாகதனென இருவர்தோன்றினர். அருகிருந்த மகருஷிகள் அவ்விருவரையும் பார்த்து நீங்கள் பிருது சக்கிரவர்த்தியின் கீர்த்தியைத் துதிசெய்யுங்களெனக்கூற, அதனைக்கேட்ட ஸூதமாகதர்

முநிவர்களே! யாங்கள் இப்பொழுதே தோன்றினேமாதலின் இவ்வரசனது பிரபாவங்களை யெப்படி யறிவோம்? என, முநிவர்கள் இனி நடக்கப்போகிற விஷயங்களை யெடுத்துத் துதிசெய்யுங்களென, அவ்விருவரும் அவ்வாறே துதிசெய்ய, அதனைக்கேட்ட பிருது சக்கிரவர்த்தி பெருங்களிப்புடன் அவர்களில், அநூபதேசமென்னும் இராச்சியத்தை ஸூதனுக்கும், மகதராச்சியத்தை மாகதனுக்குங் கொடுத்தனன். அப்பொழுது அருகிருந்த தேவர்கள் அவ்விருவரையு நோக்கி, இவ்வரசன் உங்களிருவருக்கும், உலகத்தாருக்கும் விருத்தி யுண்டுசெய்யப்போகிறானென்று கூறினர். அவ்வமரர் வார்த்தையைக்கேட்ட ஸூதமாகதரும் பிராமணர்களும் பிறரும் பிருது சக்கிரவர்த்தியை யடைந்து, எங்களுக்குச் சிவஞேபாயத்தைக் கற்பிக்க வேண்டுமெனக் கேட்டனர். அதனை யவ்வாறே யுண்டுசெய்யவேண்டு மென்னுங் கருத்துடன் பிருதுசக்கிரவர்த்தி வில்லையும் அம்பையுமெடுத்துப் பூமியினின்று, இவர்கட்கு ஆகாரத்தை யுண்டுசெய்ய நினைக்கையில், பூமிதேவி பயமடைந்து பசுவடிவேற்று உலகமுழுவதுந் திரிய, சக்கிரவர்த்தியும் தனுஷ்பாணியாய்ப் பின்றொடர்ந்து துரத்த, பூமிபயந்து இந்திராதிதேவர்களைச் சரணடைந்து தன்னை ரக்ஷிக்கவேண்டுமென்றுகேட்டும் ஒருவருஞ் சரணங்கொடாமையால் மீண்டு பிருதுசக்கிரவர்த்தியையே சரணமடைந்து அஞ்சலியத்தஞ்செய்துகொண்டு அரசனே! யானில்லாமல் இவ்வுலகத்தை நீ யெவ்வாறு பரிபாலனஞ் செய்வாய்? சர்வஜனங்களும் என்னிடத்தில் வசிக்கிறார்கள். சர்வஜகத்திற்கும் நான் ஆதாரமாயிருக்கிறேன். என்விஷயத்திற் சண்டைசெய்து கற்பங்கடோறும் அநேக மன்னர்கள் மாண்டு போயினர். நீ கீர்த்தியை யடைய வேண்டுமென்று விரும்புகிறபக்ஷத்தில் என்னை யிம்சிக்கவேண்டாம். நீ தந்திரத்தினல் முயற்சிசெய்யும் பக்ஷத்தில் உன் மனோரதங்களெல்லாஞ் சித்திக்கும்; இப்பிரஜைகளை யெல்லாம் நீ பாதுகாப்பாய். என் விஷயத்திற் கொண்டகோபத்தை நான்பெண்ஜனன மாதலின் பாராட்டவேண்டாம். பிருதுவிபாலனென்னும் பெயரை யடையப்போகிறாய், அதற்கு விரோதமாகத் தருமத்தை நாசஞ்செய்யாதே என்றிவ்வாறு பலவிதமாக நல்ல வார்த்தைகள் சொல்லினள். அவ்வளது வார்த்தையைக் கேட்ட தர்மசீலனாகிய பிருது சக்கிரவர்த்தி கோபத்தையடக்கி, பூதேவியே! ஒருவன் நிமித்தமாக அநேகரைக் கொல்வது தர்மமல்ல. அநேகருடைய நன்மை நிமித்தமாக ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் ஒருவரைக்கொல்வது தர்மமேயாம். இப்பிரசைகளை யிரக்ஷிக்கவேண்டி யுன்னை யிம்சிக்க விரும்புகின்றேன். நீ என் சொல்லை யிதமாகப்பாராட்டி வசுந்தரா [வசு - சொத்து, தரா - தரித்தவள்] என்னும் பெயரைப் பிரசித்தப்படுத்தி என் விருப்பத்தின்படி ஜனங்களை யிரக்ஷிக்கவேண்டியது என்று கூறினன்.

பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவமுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தேழாவது

பூமிதேவி பசுவடிவுற்ற அத்தியாயம்.

முநிவர்களே! பூமிதேவியானவள் பிருது சக்கிரவர்த்தியை நோக்கி, அரசனே! யான் கோரூபமாக நிற்றலின் எனக்கேற்ற கன்றொன்றுதேடி, பர்வதமுதலிய மேடுபள்ளங்களைத் திருத்தினால் என்பாலைச் சர்வ விடங்களிலும் பாயும்படி செய்கின்றேனென, பிருது சக்கிரவர்த்தி கேட்டுச் சந்தோஷித்து, தனது வில்லின் முனையாற் பர்வதங்களையுடைத்து வழிகளுண்டாக்கிப் பூமியைச் சீர்திருத்தினன். பூர்வ சிருஷ்டியில் இப் பூமியைச் சீர்திருத்தினவர்கள் ஒருவருமிலாமலும், கிராம நகர அக்கிரார தேசமுதலிய பேதங்களில்லாமலும், பயிர் பசு கிருஷிவர்த்தகம் கடைவீதி முதலியன வில்லாமலுமிருந்தன. அதுநிற்க, பிருது சக்கிரவர்த்தியால் திருத்தப்பட்ட சமபூமியிலே பிரஜைகள் வசித்திருந்தார்கள். ஆகாரங்கள் பல மூலங்கள் விருக்ஷங்கள் புஷ்பங்கள் தேன்முதலிய பொருள்கடோன்றின. பிருதுசக்கிரவர்த்தியின் பிரார்த்தனைப்படி,சுவாயம்புமநு ஓர் கன்றுக் குட்டியாய் வந்து பூமிதேவியாகிய பசுவின் மடியைப்பருக, அதினின்றும் பால் பெருகிப் பூமியெல்லாம் நனைந்து அநேகமான பயிர்களும் இரச வஸ்துக்களும் உண்டாயின. அவ்வாறு தோன்றியவற்றை ஜனங்கள் ஆகாரமாகப்புசித்து ஜீவித்தார்கள். அதன் பின்னர் முநிவர்கள் சந்திரனைக் கன்றாகக்கொண்டு கறந்து வேதம், தவம், விரதமுதலியவற்றை இதனாலுண்டுசெய்தார்கள். தேவர்கள் இந்திரனைக்கன்றாக்கிக் கறந்து தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை யடைந்தார்கள். சூரியன் சுவர்ணபாத்திரத்தில் பூமியைக்கறந்து தன்தேஜஸையுண்டுபண்ணினன். பிதுர்தேவர்கள் மயனைக் கன்றாக்கி அந்தகனால் வெள்ளிப்பாத்திரத்திற் சுதாவென்னும் பாலைக் கறந்துகொண்டனர். நாகர்கள்தக்ஷகனைக்கன்றாக்கிச்சுரைப்பாத்திரத்தில் ஐராவதனால்விஷத்தைக்கறந்துகொண்டார்கள். அதுமுதற்கொண்டேசர்ப்பங்களெல்லாம் வாயுபக்ஷணஞ்செய்து வருகின்றன. அசுரர் விரோசனனைக் கன்றாகச்செய்து இருப்புப்பாத்திரத்தில் மாயையாகியபாலை மதுவென்னும் அசுரனைக்கொண்டு கறந்தனர். அதுமுதற்கொண்டு அசுரர் மாயாவிக ளாயினர். யக்ஷர்கள் குபேரனைக்கன்றாக்கி ஆமபாத்திரத்தில் மறைதலாகிய பாலைக்கறந்தார்கள். இராக்ஷசர்கள் தங்களரசன் சுமாலியைக் கன்றாக்கி இரத்தமயமான பாலைக்கறந்தார்கள். அப்சரசுகளும் கந்தர்வர்களும் சித்ரரதனைக் கன்றாக்கி வசுர்ஜியைக்கொண்டு தாமரையிலையாகிய பாத்திரத்திற் றமக்குவேண்டிய பாலைக்கறந்தார்கள். பர்வதங்களெல்லாம் ஹிமவானைக்கன்றாக்கி மேருவைக்கொண்டு இரத்தினங்களையும் ஔஷதிகளையுங் கறந்துகொண்டன. பூர்வம் மதுகைடவர்களை விஷ்ணுமூர்த்தி சங்கரித்த பொழுது அவர்களது மேதை [கொழுப்பு] எங்கும் பரவியதால் உலகுக்கு மேதினியென்றும், பிருது சக்கிரவர்த்தியால் இவ்வுலகம் பாகுபாடு செய்யப்பட்டதாதலின் பிருதிவியென்றும் பேருண்டாயின. முநிவர்களே! பிர

ஜைகளை இரக்ஷிப்பதில் காருண்ணியனும், தேவ மாநுடரால் புகழத்தக்க வனும், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களால் அரசனாயிருக்க விரும்பப்பட்டவனும், மாநுடருக்குள் முதல்வனும், யுத்தத்தை முத லில் நியமித்தவனும், மற்றெல்லாவித பொருள்களையும் ஆகாரநிமித்த மாகக்கண்டு பிடித்தவனும் விளங்கிய இந்தப் பிருதுசக்கிரவர்த்தியினது பிரபாவம்விசேஷமாக வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வகைய சிறப்பினையுடைய பிருதுசக்கிரவர்த்தியின் கீர்த்தியை க்ஷத்திரியன் யுத்தத் தில் ஸ்மரித்தால் சத்துருக்களை ஜயிப்பான். வைசியன் ஸ்மரித்தால் தன லாபமடைவான். சூத்திரன் ஸ்மரித்தால் புண்ணியமடைவான். கீர்த்தி யடைய விரும்பியோர் யாவராயினும் பௌர்ணமிகாலத்திற் பிருது சக்கிர வர்த்தியைத் தியானித்துச் சரணமடையவேண்டியது.

பூமிதேவிபசுவடிவுற்றது
முற்றிற்று.

ஐம்பத்தேட்டாவது
மந்வந்தரமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரண்யவாசிகளை நோக்கி, வியாஸபகவான் எனக்குச்சொன்னபடியே உங்களுக்குக் கூறியுள்ளேன். இன்னுங்கேட்க வேண்டியதுளவாயின் கேட்பீர்களாகவெனக்கூற, சௌநகாதிமுநிவர்கள் அவ்வாறே கேட்பதானார்கள்: மந்வந்தரகிரமமும், மநுக்களின் பெயரும் விவரமாயறிய விரும்புகின்றோமென, அம்முநிவர்களை நோக்கி ஸூதமுநி வர் சொல்லலாயினர்: சுவாயம்பு, வைவசுவதன், சாவர்ணி, பௌத்தியன், ரௌச்சசியன், அசாவர்ணி, முதலாகத்தோன்றிய மநுக்க ளநேகர். அவர் களிற் சிலர் தங்கள் வாணாளைத்தும் இனி கழிக்கவேண்டியவர்களாயு மிருக்கின்றனர். இனி ஸப்தருஷிகளையும் அவர்கள் புத்திரவர்க்கங்களையுங் கூறுகின்றேன்: மரீசி அத்திரி அங்கிரசு புலகர் கிருது புலஸ்தியர் வசிஷ் டர் ஆகிய இவ்வெழுவரும் பிரமபுத்திரர். இவர்கள்வடக்கே சுவாயம்பு மந்வந்தரத்தில் இருந்தவர்கள். ஆக்நிதரர் அக்நிவாகர் மேதசு மாதா திதி வசு ஜோதிஷ்மான் துதிமான் அவ்யர் சவனர் சுபுரு ஆகிய இவர்கள் துஷிதா ளென்னுந் தேவர்களோடு சுவாரோசிஷ மந்வந்தரத்தி லிருந்தவர்கள். ஹரிக்நர் சுகிர்தி ஜோதிரயன் மூர்த்திரயன் ஸ்மயன் பிரதிதன் மநஹ்யன் நபன் சூரியன் ஆகிய இவர்கள்வீரியபராக்கிரமத்தோடுகூடி,சுவாரோசிஷ மநுவின் புத்திரராயிருந்தார்கள். வசிஷ்டருக்கு வாசிஷ்டா ளென்றும், ஊர்ஜாளென்றும் பெயருடைய இஷர் ஊர்ஜாதர் ஊர்ஜர் மது மாதவர் சுசி சுக்கிரவகர் நபசர் நபர் ஆகிய புதல்வர்கள் வைவசுவத மந்வந்தரத்திலிருந் தார்கள். சாவர்ணியமந்வந்தரத்தில் காசியர் பிருது அக்நி ஜன்மியர் தாதா கபீநகர் கபீவான் என்னும் எழுமுநிவரும் சத்தியாளென்னுந் தேவர் களுமிருந்தார்கள். தாமசமநுவின் புத்திரராகிய துதி போதன் சௌதபசி

யன் தபசூலன் தாபன் தபோலதி அகல்மாஷன் தந்வி தந்விசூலன் மகருஷி ஆகிய பதின்மரும் சோமபரார் என்னுந் தேவர்களோ டிருந்தார்கள். சைப்பியமந்வந்தரத்தில் சைப்பிய மநுவிற்குத் திருதிமான் அவ்யயன் அவ்யக்தன் சத்தியதரிசி நிருச்சவன் அரண்யன் பிரகாசன் நிர்த்துரோகன் சத்தியவாக்கு பிருதி என்னும் புத்திரரிருந்தனர். சாட்சுசமந்வந்தரத்தில் கிருகு, நகர், விசுவர், சுதர்மா, விரஜசு, ஜாதிநாமா, அசகிஷ்ணு ஆகிய ஸப்தருஷிகளும், ஆத்தியர் பிரசூதர் ரிபுக்கள் லேகர் என்னுந் தேவ கணங்களும், அங்கிரசு மகருஷியின் புத்திரராகிய நத்வலேயர் என்போர் சிலருமிருந்தார்கள். அத்திரி வசிஷ்டர் கசியபர் கௌதமர் பரத்துவாசர் விசுவாமித்திரர் ஜமதக்கினி ஆகிய ஸப்தருஷிகளும், ஆதித்தர்கள் மருத்துக்கள் உருத்திரர் அசுவினிதேவதைகள் பாஸ்கரர் வசு மகாராஜிகர் சாத்தியர் என்னுந் தேவர்களும், இக்ஷுவாகுமுதலிய அரசர்களும், அவர்கள் புத்திரர்களும் வைவசுவதமந்தந்தரத்தில் தரும காரியங்களைச் சரிவர நடத்திக்கொண்டும் லோகசம்ரட்சணை செய்தும் அசுவமேத முதலியவற்றைச் செய்தும் புண்ணியபதவி யடைந்தார்கள். பரமேஷ்டியின் புதல்வராயும் தக்ஷப்பிரஜாபதிக்குத் தௌஹித்ரராயும் பிரியாவென்னும் ஸ்திரீயினிடந்தோன்றி மேருசாவர்னியென்னும் பெயரை யடைந்தசிலர் மேருவினுச்சியில் தவஞ்செய்து அங்கு வாழ்ந்திருந்தார்கள்.

ருசி யென்னும் பிரஜாபதிக்கு ரௌச்சியென்னும் மநு தோன்றினன். பூதையென்பவளிடத்தில் பௌத்தியனென்னும் மநு உதித்தான். இவர்கள் பௌஷியகற்பத்தில் மநுவாவார்கள். பௌஷியகற்பத்திலேயே இராமன் வியாசன் ஆத்திரேயன் தீப்திமான் சுபருஷ்டுதன் அசுவத்தாமா கிருபன் கௌசிகன் காலவன் ருரு ஆகிய இவர்கள் இருஷிகளாயிருந்தார்கள். மரீசி முநிவருக்கு விரவான் வனிவான் சுமந்தன் திருதிமான் வசு வரிஷ்ணு ஆரியன் விஷ்ணு இராஜா சுமதி என்னும் புதல்வரிருந்தனர். சாவர்னி மநுவிற்கு மேருசாவர்னி யென்போன் ஜேஷ்டபுத்திரன். மோததிதி பௌலசியன் காசிபன் வசு ஜோதிஷ்மான் பார்க்கவன் த்விதிமான் அங்கிரசு சவனன் வாசிஷ்டன் ஆத்திரேயன் அவ்வியயன் பௌலகன் என்னும் புதல்வர் பதின்மூவரில் மூவர் தேவகணங்களாயிருந்தார்கள். ரோகிதரென்னும் பிரஜாபதிக்குத் தீக்ஷையென்னும் ஸ்திரியினிடந் திருஷ்டகேது தீர்த்தகேது பஞ்சஹஸ்தன் நிராகிருதி பிருது ஸ்ரவசு பூரித்திம்நன் ரசீகன் பிரகதன் கயன் என்போர் தோன்றினர். இந்தப் பிரஜாபதிக்கே அவரது வம்சத்திலேயே இரண்டாம் மந்வந்தரத்தில் அவிஷ்மம்நன் புலகன் சுகிர்தி பார்க்கவன் ஆயோமுத்தி ஆத்திரேயன் வசிஷ்டன் அவ்யயன் பௌலஸ்தியன் பிரியதி நாபாகன் காசிபன் அங்கிரசு நபசன் சத்தியன் எனுந் தேவகணங்களும் இருஷிகளுமுண்டானார்கள். அவர்களுள் தேவர்களுக்கு த்விஷிவந்தாளென்று பெயராயிருந்தது. மூன்றும் மந்வந்தரத்தில், அக்ஷத்வான் உத்தமோஜன் பூரிஷேணன் சதாநீகன் நிரமித்திரன் விருஷ

சேனன் ஜயத்திரதன் பூரித்திம்நன் சுவர்ச்சாவென்போரும், அவிஷ்மா காசிபன் வபுஷ்மான் வாருணன் அத்திரேயன் வசிஷ்டன் அநகன் அங்கிரசு க்ஷராதீஷ்யன் பௌலஸ்யன் அக்கிநிசுவரன் அக்கினிதேஜசு என்போருள் மூவர் தேவகணங்களும் மற்றையோர் ருஷிகளுமாயிருந்தார்கள். அதே மந்வந்தரத்தில் பிரமபுத்திரராகச் சர்வத்திரகன் சுசர்மா தேவாநீகன் க்ஷேமகன் திரிடேஷு பண்டகன் தரிஷன் பாகு ஊரு என்போரிருந்தார்கள். நான்காவது மந்வந்தரத்தில் த்விதி வசிஷ்டபுத்திரர் ஆத்திரேயர் சுதபசு அங்கிரசு மூர்த்தி தபசிவி கசியபர் தபோசனர் தௌலஸ்தியர் பௌலகர் தபோரதி ஆர்க்கவர் என்போரில் ஐவர் தேவகணங்களாகவும் மற்றையோர் ருஷிகளாகவுமிருந்தார்கள். ரௌச்சிய மந்வந்திரத்தில் அங்கிரசு திருதிமான் பௌலஸ்தியன் அவ்யவான் பௌலகஸ்தன் அதருஷி பார்க்கவன் நிருச்சுவன் நிஷ்பிரபஞ்சன் ஆத்திரேயன் நிர்மோகன் காசியன் சுதபசு வாசிஷ்டுவென்போருள் மூவர் தேவகணங்களாகவும் மற்றையோர் ருஷிகளாகவுமிருந்தார்கள். ரைப்பிய மந்வந்தரத்தில் சித்திரன் வைசித்திரன் தர்மவிரதன் சுநேத்திரன் க்ஷத்திரவிருத்தகன் நிர்ப்பயன் சுதபசு காடன் என்னும் புத்திரருண்டானார்கள். ஆக்கிநிதன் காசிபன் பௌலஸ்தியன் மாகதன் பார்க்கவன் அதிபாகியன் சுசி ஆங்கிரசன் யுக்தன் ஆத்திரேயன் சக்ரன் வாசிஷ்டன் அஜிதன் என்போரில் எழுவர் தேவகணங்களாகவும்மற்றையோர் ருஷிகளாகவுமானார்கள். பௌத்திய மந்வந்தரத்தில் தரங்கன் பேரு பிரத்தன் தசத்திரன் அநுவுக்கிரன் அதிமானி பிரவீணன் விஷ்ணு சங்கிரந்தனன் தேஜஸ்வி சம்பலன் என்போருள், ஐவர் தேவகணங்களும், மற்றவர்கள் ருஷிகளுமாயிருந்தார்கள். இதுகாறுஞ் சென்றுபோன மந்வந்தரங்களையும் செல்லவேண்டிய மந்வந்தரங்களையும் வியாஸபகவான் சொன்னவாறு சொன்னேன். இவ்வாறே மீண்டும் மீண்டுந் தோன்றியழிவதை எவ்வளவுகாலஞ் சொல்லினும் முடிவுறாது. இம்மநுக்களையும் அவர்களாலுண்டான தேவருஷிகளையும் ஸ்மரணைபண்ணுபவர் தீர்க்காயுளுடையோராய்ப் புண்ணியலோகமடைவார்கள். தேவவருடத்தாலாயிரவருடம் ஆனகாலத்துச் சூரியன் தனது தீட்சண்யமான கிரணங்களாற் பிரபஞ்சத்தைக் கொளுத்தி நாசஞ்செய்கிறான். உலகத்திலுள்ளோர் பிரமனைச்சரணடைய, பிரமன் ஆதிநாராயணனை யடைவான். அக்காலத்துப் பிரளயகால உருத்திரன் தோன்றி ஸம்ஹரிப்பான். இப்படி அநேக மந்வந்தரங்களும் அநேகபிரளயங்களு முண்டாகியும் ஜகம் விருத்தியாகாமல் கடைசியாக வைவசுவதமந்வந்தரத்தில் கொஞ்சம் விருத்தியானது. இப்புண்ணிய சரித்திரத்தைக் கேட்போரும் படிப்போரும் கைலாய பதவியை யடைந்து களித்துவாழ்ந்திருப்பார்கள் என்று ஸூதமுநிவர் கூறினார்.

மந்வந்தரமுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது
சஞ்ஞிகை சாயையின் சரிதங்களுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரை நோக்கி நைமிசாரண்யவாசிகள் சுவாமி! வைவசுவத மந்வந்தரத்தின் கிரமத்தை விவரமாகச்சொல்லவேண்டு மென்று விரும்புகின்றோ மெனக்கேட்க, ஸூதமுநிவர் கூறுவதானார்: முநிவர்களே! பூர்வத்தில், காசிபமுநிவருக்குத் தக்ஷப்பிரஜாபதியின் புதல்வியி னிடமாக விவசுவானென்னும் ஆதித்தனுண்டானான். அவன்துவஷ்டாவென்னு முநிவரின் புதல்வி சஞ்ஞிகையைமணந்து வாழுங்காலத்து அவள் ஆதித்தன் தேஜஜைச் சகிக்கச் சக்தியற்றவளாய் நீங்காத்துக்கத்திலாழ்ந்திருந்தாள். அவளிடத்தில் முதலில், மநுவென்னும் பிரஜாபதியும், யமனும் யமுனையென்னும் பெண்ணும் இரட்டைப்பேறாகப்பிறந்தார்கள். சூரியரூபம் அதிதேஜசா யிருந்தமையால், தன் ஆத்மசக்தியால் ஒரு ஸ்திரியைத் தன்னைப்போலுண்டாக்கிச் சாயையென்னும் பெயரோடழைத்த காலத்துஅந்தப் பெண் சஞ்ஞிகையை நோக்கி என்னையுண்டுசெய்த காரணமியாதென்று வினவினள். அதற்கு அவள் நான்பிதாவின் கிரகத்திற்குப்போய்வரு மெல்லையும் என்கணவனுக்குச் சந்தேகமின்றிச் சுகத்தைக்கொடுத்துப்பணி செய்வதுந் தவிர, இச்சிறுவர்களையும் பேதமின்றி இரக்ஷிப்பாயாக வென்றாள். அதைக்கேட்ட சாயை என்னாற் கூடியமட்டும் உண்மை வெளியாகும்வரையிற் செய்கிறேன். என்னுடைய மாறுகோலம் வெளியாகுங் காலத்து உண்மையை வெளியிடுவேனென, அவ்வாறே ஆகுகவென்று பிதாவின்சமுகஞ்சென்றனள். புத்திரியைக்கண்ட துவஷ்டா கோபித்து பதியின் உத்தரவின்றி என்னிடம் வந்தமையால் நீ பெண்குதிரையாகுகவெனச் சபிக்க, அச்சாபத்தைப்பெற்று உத்தரகுரு வென்னு மிடத்திற் சஞ்சரித்துவந்தாள். சஞ்ஞிகையானவள் தன் பிதாவின் சமுகஞ் சேர்ந்ததுணராத சூரியன் அவளாலுண்டாய சாயையின் மாறுபாடறியானாய்க் கலக்க, சாவர்ணி மநு, சனி, பத்திரையென்னும் பெண்ணையும்பெற்றனள். இவள் சஞ்ஞிகை கேட்டுக்கொண்டபடி புத்திரர்களைச் சமமாய்நடத்தாது தன்புத்திரரிடத்து அதிக வாஞ்சையாயும் மாற்றவள் புத்திரரிடத்து வெறுப்பாயும் வஞ்சனை செய்துவந்தாள். அவ்வஞ்சனையை யமன் சகிக்காதவனாய் வாலிபமுதற்கொண்டு பேதம் பாராட்டுதலிற் கோபித்துக் காலாலுதைக்க, அதனைப் பொறுதமாற்றாந்தாய் உன்கால் புழுக்கக்கடவது என்று சபித்தாள். அதற்காகயமன் மனவருத்தமுற்றுச்சாபத்திற்குப்பயந்து தன்றந்தையாகியசூரியனை யடைந்து, எந்தையே! எங்கள்தாய் மூத்தோர் மூவரையுமுனிந்து இளையபுத்திரரிடம் அன்புபாராட்டுவதைக்கண்டு மனந்தாளாது, தாய் ஒரு வழியாகப்புத்திரரைச்சமதிருஷ்டிசெய்யாமையின்உதைப்பதாகச்சொல்லி என்காலை எடுத்தது பிசகே. பிள்ளையின் குற்றத்தைச்சகியாது தாய் சபிப்பதுந் தருமமா? அவ்வாறு தூக்கியகால் புழுச்சொரிகவெனச் சபித்துவிட்டனளாதலின், அச்சாபத்தைமாற்றி என்குற்றத்தையும் பொறுத்தருள

வேண்டுமென வேண்ட, சூரியன் புத்திரனைக்கண்டு புத்திரா! தாயின் சாபத்தை விலக்குவதரிது, சத்தியவானாயுள்ள உன்னை இவ்வாறு சபிப்பதற்கு ஏதாகிலும் பெரியகாரண மிருக்கவேண்டும், அதை விசாரித்தறிவேனென்றுகூறிச் சம்மதப்படுத்திச் சாயையிடஞ்சென்று அதிகோபத்தோடு புத்திரரைச்சமமாய்ப் பாராமையால் வெறுப்படைந்தஇவனைக்கோபித்துச் சாபமிடலாமாவென்று கேட்டான். இவ்வாறு கேட்டதற்குச் சாயை இனி நாம் நமது மாறுகோலத்தைத் தெரிவிக்காதிருப்பது தவறென்று உண்மையைத் தெரிவித்தாள். இவற்றைக்கேட்ட சூரியன் அதிக கோபத்தோடு மாமனான துவஷ்டாவினிடஞ்சென்றுவிண்ணப்பிக்கஅவனையதோக்தமாய்ப் பூசித்து நல்லவார்த்தைகளாற் கோபத்தைமாற்றி, உன்தேஜசின் வெப்பத்தைச்சகிக்கச் சத்தியற்றவளாய்த் தன்மேனிகெட்டு உத்தர குருவென்னும் பசுமையாகிய காட்டில் ஆத்மபலத்தாற் பெண்குதிரை வடிவுகொண்டு நின்வரவை எதிர்பார்த்துக்கொண்டு சஞ்சரிக்கிறாள் என்றுகூறி, இதனாற் கோபநீங்கிய சூரியனை மீண்டும் நோக்கி என் இஷ்டப்படி நடக்கின் உன்தேஜசை யாருஞ் சகிக்கும்படியாயும் பார்வைக்கு ரம்மியமாயிருக்கும்படியாயுஞ் செய்கிறேனென, அதற்கிசைந்த சூரியனைச் சாணையிலேற்றிச் சாணைசெய்து அதனால்தீட்சண்யமடக்கிப் பார்ப்போர்சந்தோஷிக்கக்கூடிய ரூபமளித்தனன். துவஷ்டாவினிடம் உத்தரவுபெற்றுத் தன்மனைவியானசஞ்ஞிகையை யடையவேண்டுமென்னு மவாவால் தன் யோகபலத்தால் தன்னுருவைமாற்றிஆண்குதிரைவடிவுகொண்டு, உத்தரகுருவையடைந்து மனைவியாகியபெண்குதிரையைக்கலக்க யத்தனிக்குங்காலத்து, அவள் பரபுருஷனென்னுஞ், சந்தேகத்தால் விலகக்கண்ட சூரியனாகிய ஆண்குதிரை நாசிவழியில் தன்வீரியத்தைவிட்டுவிட அவ்வீரியத்தினால் அசுவினி தேவதைகள் நாசத்தியரென்றும் தசரரென்றும் பெயரடைந்து மிகவும் அழகிய உருவத்தோடு தோன்றித் தேவவைத்தியரானார்கள். அவர்களைக் கண்டு சூரியன் சந்தோஷிக்க அதனைக்கண்ட பெண்குதிரையாகிய சஞ்ஞிகை தன் கணவனென்றும் அவன் தேஜசு குறைந்து அணுகக்கூடிய விதமாயிருத்தலையுங்கண்டு சந்தோஷித்தாள். இயமன் தாயின் சாபத்தாற் பீடிக்கப்பட்டு, தருமத்தாற் பிரஜைகளை இரக்ஷித்து, தன் நல்லொழுக்கம் தவம் முதலியவற்றால் தென்றிசைக் கிழவனாகவும், பிதுரர்களுக்குத் தலைவனாகவுஞ் சாஸ்தாவென்னும் பெயருற்றுவாழ்ந்தான். முன் சாயையினிடமுதித்த சாவர்ணிமநு மேருவரையினுச்சியில் மநுபதவியை யடைய வேண்டுமென்னு மவாவால் தவஞ்செய்து வருகிறான். அவன் தம்பியாகிய சனிபகவான், கோரதவஞ்செய்து நவக்கிரகங்களிலொருவனானான். இயமன் தங்கையான யமுனை வெகுகாலந் தவஞ்செய்து பூமியிலுள்ளோரைச் சுத்தி பண்ண யமுனையென்னும் நதியாகப் பிரவாகித்துயாவரையும்புனிதராக்கிச் சகலவித சௌக்கியங்களுக்கு மாதாரமாய்க் காளிந்தியென்னும் பெயரில் நதியாய்ப் பிரவாகித்துவருகிறாள். இச்சரித்திரத்தைப் பக்திசிரத்தையுடன் பூசித்துப் படிக்கின்றோருங் கேட்போருஞ் சகலபாவங்களையும் போக்கிப்

புனிதராய் இகபரலோகசாம்பிராச்சியங்களை யடைவார்கள் என்று, ஸூத முனிவர் நைமிசாரணிய வாசிகளான சௌநகாதி முனிவர்களுக்குக் கூறியருளினர்.

சஞ்ஞிகை சாயையின் சரிதங்களுரைத்தது
முற்றிற்று.

அறுபதாவது

வைவசுவதமநு மரபுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களை நோக்கி, சூரியபுத்திரராகிய வைவசுவதமநுவினிடத்து, வீரியவான்களாயும் சூரியதேஜசையொத்தவர்களாயும், தருமக்கிரமப்படி நடப்போர்களாயும், இக்ஷுவாகு சிபி நாபாகன் திருஷ்ணு சையாதி நரிஷியந்தன் நாபாகன் கருஷன் பிரியவிரதனென்னும் நவபுத்திரர் தோன்றினர். இவர்களல்லாமலும் வேறே புதல்வனையுண்டாக்கப் பலகாலம் யாகஞ்செய்து ஒருவருந்தோன்றாது கடைசியாக இடையென்னும் பெண்ணொருத்தி, மின்னற்கொடிபோலுஞ் சாயலும், சிறுத்த இடையும் பெருத்த தனமும் சந்திரனைப்போன்ற முகமும் மேகம்போன்ற கூந்தலும் ஒள்ளிய தேகமுங்கொண்டு திவ்யாலங்கிர்த பூஷிதையாய்த் தோன்ற, அவ்வாறுதித்தவளைநோக்கிப் பெண்ணே! என்னோடுகூடிப் புத்திரனையுண்டு பண்ணுவாயென்று சொன்ன மநுவை நோக்கித் தருமோக்தமாகச் சொல்வதானாள். ஓ சக்கிரவர்த்தியே! நான் மித்திராவருணனுக்காகவுண்டாக்கப்பட்டவள். அவர்களைப்போய் அடையவேண்டும், உம்மால் என்னை அதர்மம் அடைய வேண்டியதில்லையென்று மித்திராவருணரிடஞ் சென்று நமஸ்கரித்து உங்களுக்காகவே மநுவின் யாகத்திலுண்டாக்கப் பட்டேனாகையால் என்னை யாதரிக்க வேண்டுமென்றாள். அவர்கள் இடையைக்கண்டு, தருமந்தெரிந்தவளே! உன்நடையாலும் ஒழுக்கத்தாலும் குணத்தாலும் அழகாலுஞ் சந்தோஷமடைந்தோம், நீ மகத்தாகிய கீர்த்தியை எங்களாற்பெற்று மநுச்சக்கிரவர்த்தியின் குலத்தை விருத்திசெய்யக்கூடிய சுத்தியும்நனென்னும் பெயருடைய புத்திரனாகப் போகின்றாய் என்றார்கள். இதைக்கேட்ட இடை பிதாவின் சமுகஞ் செல்லும்வழியில், சந்திரன் புதல்வனாகிய புதன் சந்திக்க, இவள் ரூபலாவண்யாதிகளைக்கண்டு மோகங்கொண்டுதன்னைச்சேரவேண்டுமென, அவன் விருப்பத்திற் கியைந்தவளாய் இருவருமங்கேகூட, புரூரவச்சக்ரவர்த்தி தோன்றினன். இடையாளவள் உடனே தன் பெண்வடிவு மாறுபட்டு, சுத்தியும்நன் என்னும் புருஷனானாள். (இடையென்பவளுக்கு ஸ்திரிபுருஷரூபமிரண்டு முள்ளதாகையால்) இவளை சுத்தியும்நனென்னும் புருஷனாகவும் இடையென்னும் பெண்ணாகவுந்தோன்றி இருவருங்கூடி உத்கலன் கயன் விநதாசுவன் என்னும் மூன்று புத்திரர்களைத் தந்தனர். அவருள் உத்கலனென்பானுக்கு உத்கலமென்னுந் தென்றிக்கையும்,

விந்தாசுவனுக்கு மேல்திக்கையும் கயனுக்குக் கயநாட்டையுங் கொடுத்துப் பாதுகாக்கும்படி ஏற்படுத்தப்பட்டது.

வைவசுவதமநு சூரியனுபீஷ்டப்படி இப்பிரபஞ்சத்தைப் பத்துப் பிரிவாக்கித் தன் புதல்வருக்குக் கொடுத்தனர். அவருள் ஜேஷ்டனுகிய இக்ஷுவாகு மத்தியநாட்டைப் பரிபாலித்துப் பிரதிஷ்டானமென்னும் நகரமொன்றனை யுண்டாக்கி அதில் வசித்துவந்தான். சுத்தியும்நன் பிரதிஷ்டமென்னும் நகரத்தை யுண்டுசெய்து புரூரவனை யதில் வைத்தான். மநுச்சக்கரவர்த்தியாலுண்டான ஸ்திரிபுருஷ ரூபமான சுத்தியும்நன், நரிசிதரனுக்கு ஷகையென்னும் பெண்ணை விவாகஞ்செய்து புத்திர விருத்தி செய்தான். அம்பரீஷனுக்குப் பாக்கிலீகனென்னும் புத்திரனும், சையாதிக்கு ஆநர்த்தரென்னுஞ் சில புத்திரரும், சுகன்யாவென்னும் பெண்ணுமுண்டானுர். சுகன்யா சவனமகருஷியை மணந்தனள். ஆநர்த்தனுக்கு ரேவனென்னும் புதல்வனுண்டாகி, ஆநர்த்தராச்சியத்தில் குசஸ்தலியென்னு நகரத்தை நியமித்து அதில் வாழ்ந்து, ரைவதன் ககுத்மியென இரு புதல்வரை யீன்றனன். அவர்களில் மூத்தவன் குசஸ்தலி இராச்சியத்தை யடைந்து பிரமலோகமுதலிய விடங்களுக்குச் செல்லும் வல்லபமடைந்து, அநேககாலம் பிரமலோகத்தில் வசித்து இஷ்டமான ரூபங்களையெடுக்கச் சாமர்த்தியனுய்,ஒருகன்னிகையை ரேவதியென்னும்பெயருடன் உண்டுசெய்து அவளைத்துவாரகையிற் பலராமனுக்கு மணஞ்செய்வித்து மேருமலையில் தவஞ் செய்கின்றான். ககுத்மி யென்பவன் குசஸ்தலியையடைந்து, சிலகாலம் அரசுசெய்து ஜராமரணமின்றி வாழக்கருதிப் பிரமலோகத்தை யடைய, அப்பொழுது இராக்ஷஸர்கள் அந்த இராச்சியத்தைக் கொண்டனர். அந்தக் ககுத்மியென்பவன் தவச்செயலி லிருந்தமையாலும் அரசாக்ஷியைத் தானவர் கைக்கொண்டமையாலும் அவன் புதல்வர் நூற்றுவரும்நானுதேசங்களிற் பரவினர். இக்ஷுவாகுபுத்திரரில் அந்நூற்றுவருடைய வமிசங்கள் பலவிடங்களிற் பரவின. நாபாகனுக்குக் காரூடனென்பவ னுண்டாகித் தன்பெயரால் இராச்சியமுண்டுசெய்து அநேக க்ஷத்திரியரை யுண்டுசெய்தனன். அவர்களில் ஒருவனே வமிச விருத்திசெய்தவன். அரிஷ்டனுக்குப் பிரஷத்தவனென்போனுண்டாகி, குருவின் பசுவைக் கொலைசெய்து, அதனுற் சாபமேற்றுச் சூத்திரத்துவத்தை யடைந்தான். வைவசுவதமநுவின் ஜேஷ்டபுத்திரனுகிய இக்ஷுவாகுவுக்குச் சூரத்தன்மையுடைய நூறுபுதல்வர்களுளர். அவர்களில் விருக்ஷியென்பான் மூத்தவன். அவன் அயோத்தியாபுரியில் சக்கிரவர்த்தியாக வீற்றிருந்து, ஐம்பத்தாறு தேசங்களையும் அரசுசெய்தனன். அவனுக்குச் சகுனிமுதலிய பதினைந்து புதல்வர்தோன்றி வடதேசங்களைக் காத்தனர். இதுநிற்க: இக்ஷுவாகு அரசுபுரிகையில் அவன்விட்டில் சிரார்த்ததினத்திற் சமைக்கப்பட்டிருந்த முயற்கறியை, அவன்புத்திரனுன விருக்ஷியென்பான் சுவைக்க, தந்தையாகிய இக்ஷுவாகு உணர்ந்து மனம் வருந்திச்

சினந்து ஆசிரியரை வினவ, அவர் அவனை அரசுரிமைக் குடையவனுக்காது அனுப்பிவிடுகவென, இக்ஷுவாகு குருமொழியைக்கொண்டு விருக்ஷி யென்னுந் தனதுபுதல்வனை அவ்வாறே அனுப்பிவிட்டு, தானே அரசுரிமை செய்து, சிலகாலஞ்சென்றபின்னர், விருக்ஷி யென்பானுக் கிளையவனான ஆயோதனென்பவனை மன்னனாக்கினன். ஆயோதனுக்குக் ககுஸ்தனும் ககுஸ்தனுக்கு அரிநாபனும், அரிநாபனுக்குப் பிருதுவும், பிருதுவுக்கு விஷ்டராசுவனும், விஷ்டராசுவனுக்கு இந்திரனும், இந்திரனுக்கு யுவநாசுவனும், யுவநாசுவனுக்குச் சிராவனும் புதல்வராகத்தோன்றி வமிசவிருத்தி யாயிற்று. சிராவன் தன் பெயராற் சிராவஸ்தியென்னு நகரத்தையுண்டு செய்து, தர்மசீலனாய் இராசரிகஞ்செய்து வந்தான். சிராவனுக்குப் பிருகததசுவனும், பிருகததசுவனுக்குக் குவலாசுவனும் உண்டாயினர். குவலாசுவன் இராசநீதிதவறாது அரசுசெலுத்துகையில், அவனுக்கு வில்லாளிகளாகிய நூறுபுத்திரர்கள் உண்டாக, அப்புத்திரர்களுக்குத் தனது இராச்சியத்தை யொப்பித்துவிட்டு வனத்தையடைந்து தவஞ்செய்ய வேண்டுமென்று கருதியிருக்கையில், அக்குவலாசுவனிடம் உத்தங்க முநிவர் வந்து, இக்ஷுவாகு குலத்தரசனே! இப்பூமியை நீயே காக்க வேண்டும்; நீ வனத்தையடைவது தகுதியன்று; என் ஆசிரமத்திற்கருகே நிர்ஜனமான மணற்பிரதேசத்தில் ஓரசுரன் பிரமதேவனிடம் பெற்றவரத்தால் தேவர்களாலும் வெல்லமுடியாத பலிஷ்டதேகமுடையவனாய்ப் பூமியின் கீழே வசிக்கின்றான். அவன் பெயரோ துந்து. மதுவின் மைந்தனான துந்துவென்போன் உலகத்தை நாசஞ்செய்ய வேண்டுமென்று பூமியின் கீழேயிருந்து தவஞ்செய்து, வருஷத்திற் கொருமுறை சுவாசம் விடுகிறான். அப்பொழுது அநேகபர்வத விருக்ஷமுதலியவற்றுடன் கூடிய பூமி ஏழுநாள்வரையில் நடுங்குகின்றது. கருந்தூள் செந்தூள் பரவிச்சூரிய மண்டலத்தை மறைக்கின்றது. அவன் கண்களினின்று தோன்றும் நெருப்புப்பொறிகள் பிரளயகாலாக்கினிபோல உலகமுழுவதையும் எரிக்கின்றன. அவனது கொடுமைகளைச்சகிக்க என்னாலும் உலகினராலுஞ் சாத்தியப்படாது. அவனை நீயே கொல்லவேண்டும். நீயவனைக் கொன்றுவிடுவையாகில் உலகினர் யாவருஞ் சுகமடைவார்கள். பூர்வத்தில் அவனை நிக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று யான் நெடுங்காலந் தவஞ்செய்ய, விஷ்ணுமூர்த்தி பிரசன்னராகி, உத்தங்கரே! நீர் இந்தத் துந்துவை நிக்கிரகிக்க விரும்புவீராகில் உலகத்தில் க்ஷத்திரியர்களிலே சிரேஷ்டனாக விளங்குங் குவலாசுவனென்னும் அரசனைக்கொண்டு சங்கரிக்கலாம். அந்தச் சமயத்தில் அக்குவலாசுவனுக்கு எனது வல்லமையைக் கொடுக்கின்றேன். துஷ்ட நிக்கிரகஞ்செய்து பிரஜைகளைக்காப்பது க்ஷத்திரியனுக்குரிய தர்மமென்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு செய்வதைக்காட்டிலுந் தவஞ்செய்வது சிறந்ததன்றெனக் கூறினர். அதனைக்கேட்ட குவலாசுவன் முநிபுங்கவரே! நான் இனி ஆயுதங்களை யெடுக்கிறதில்லை யென்று பிரதிக்கினை செய்திருக்கின்றேனாதலின் என்புத்திரர் அவனை வதஞ்செய்யக்

தடையிராது என்றுகூறித் தன்புதல்வரை முநிவருடனனுப்ப, அவர்
அப்புத்திரரால் அவ்வசுரனைக்கொல்ல வியலாதெதன,அரசனும் தன்புதல்வர்
களையுடன் கொண்டு அந்த வனத்தையடைந்து அவனிருக்கு மிடத்தை
வெட்டுகையில்,துந்துவினுடைய சுவாசத்தால் அவன்புதல்வரில்மூவர்நீங்க
ஏனையோர் உயிர் நீங்கினர். அப்பொழுது உத்தங்கமுநிவர் விஷ்ணுவைப்
பிரார்த்திக்க அவர் குவலாசுவனுடலில் தனது அமிசத்தைச் செலுத்தினர்.
தேவர்கள் புஷ்பமாரி சொரிந்து இனி யிவன் துந்துமாரனென்னும் பெய
ரடையப் போகிறனென்று தேவதுந்துபிகளை முழக்கினார்கள். குவலா
சுவன் துந்துவென்பவனை நேரிற் பார்த்தபொழுது, துந்து தன் வாயி
னின்று ஓர் ஜலவேகத்தை யுண்டுசெய்ய, அதனைக் குவலாசுவன் அடக்கித்
தன்னிடத்திருந்த திவ்விய அஸ்திரங்களாலும் விஷ்ணுவின் கருணையாலும்
அவனைச்சங்கரித்துத் துந்துமாரனென்னும் பெயரையடைந்தனன். உத்தங்க
முநிவர் உள்ளக்களிப்புடன் அவ்வரசனை நோக்கி நீ செல்வமுதலியவற்றாற்
குறைவின்றி வாழ்ந்து சத்துருக்களைச் செயித்துச் சிலகாலம் அரசுசெய்து
தவச்செயலை மேற்கொண்டு அழிவில்லாத உத்தமமான பதவியையடைவா
யாக வென்று ஆசிர்வதித்தனர், அக்குவலாசுவன் சிலகாலம் அரசுசெய்து
பின்னர் தவச்செயலிலிருந்தனன். இதுநிற்க, துந்துவாலிறவாது தப்பிய
புதல்வர் மூவரில் திருடாசுவனென்பவன் மூத்தவன். ஹம்சன் கபிலன்
என்போரிளையோர். அவர்களிற் சிரேஷ்டனான திருடாசுவனுக்கு ஹரிய
சுவனும், ஹரியசுவனுக்கு நிகும்பனும், நிகும்பனுக்கு யுத்தபராக்கிரம
முடைய சங்கதாசுவனும், சங்கதாசுவனுக்கு அக்ஷாசுவன் கிருதாசுவ
னென்னும் புதல்வரும், திருஷத்வதியென்னும் பெண்ணும் பிறந்தனர்.
திருஷத்வதிக்குத் திரிலோகங்களிலும் பிரசித்திபான பிரசேனஜித் தென்
பவன் தோன்றினன். அவன் கௌரியென்னும் பெண்ணை விவாகஞ்செய்து,
யுவனாசுவனைப்பெற்று வாழ்ந்திருக்கையில், அவள் பேரிற் கோபங்
கொண்டு நதிபுருவடைகவெனச் சபித்தனன். யுவனாசுவன் மகன் மாந்
தாதா திரிலோகங்களிலும் ஏகசக்கிராதிபத்தியஞ்செய்து, சசிபிந்துவின்
மகளாகிய சைத்திரரதை யென்பவள் ரூபத்தில் ரதியைப்போலும் பதிவிர
தத்தினால் அருந்ததிபோலும் விளங்கி, பதினாயிரஞ் சகோதரர்களோடு
விளங்குதலின் அவளை மணந்து, தருமசீலர்களான புருகுற்சன் முசுகுந்த
னென்னும் இரண்டு புதல்வரைப் பெற்றனன். புருகுற்சனுக்கு நர்மதை
யென்னும் ஸ்திரீயினிடத்தில் திரிசதசியுவென்பவன் பிறந்தனன்.
அவனுக்குச் சத்துரு நாசஞ்செய்யத்தக்க திரிதன்வாவும், அவனுக்குத்
திரையாருணியும், அவனுக்கு மகாபலிஷ்டனான சத்தியவதனனும் பிறந்
தனர். சத்தியவதனன் தன்னுடைய அரசாகூியில் நூதன விவாகஞ்செய்து
கொண்டவருடைய மனைவியரையும், வாலிபமான கன்னிகைகளையும்
பலாத்காரமாகப் புணர்வதில் விருப்பமாயிருந்தான். அவனுடைய துஷ்
கிருத்தியங்களைக் கண்டு மனஞ்சகியாத தந்தையாகிய திரையாருணியென்
போன் தன்புத்திரனை முனிந்து, தன் ராச்சியத்திலில்லாமல் வனத்தில்

வேடருடன்கூடி வாழும்படி அனுப்பிவிட்டனன். சத்தியவதனன் தன் றந்தை கட்டளைப்படி அவ்வாறே வாழ்ந்தனன். திரையாருணி தன் மைந்தன் செய்த அக்கிரமத்தை மனஞ்சகியாது விரக்த மனதுடன் வனத்தையடைந்து தவஞ்செய்தனன். அப்பொழுது துவாதசவருஷ க்ஷாமம் சம்பவித்துப் பிரஜைகள் பெருங்கஷ்டத்தை யடைந்தனர். அந்தச் சமயத்தில் அவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த விசுவாமித்திரர் தனது புத்திரர்களை விடுத்துச் சமுத்திர தீரத்தையடைந்து அங்கே தவச் செயலிலிருந்தனர். அதனால் அம்முநி பத்தினி தன்புத்திரர்களைச் சவ ரக்ஷணை செய்யச்சக்தியற்றுத் தன்புத்திரர்களில் ஒருவனைக் கழுத்திற் கட்டிக்கொண்டுபோய்ச் சத்தியவதனனுக்கு விற்று அப்பொருளைக் கொண்டு ஏனைய புதல்வரைப் பரிபாலித்தனள். சத்தியவதனன் விசுவா மித்திரரிடத்தில் வைத்த பிரீதியால் அப்பிள்ளையைப் பொருள்கொடுத்து வாங்கிக் காப்பாற்றினன். [களமாகிய கழுத்திற் கட்டிக்கொண்டு வந்த மையின் அப்புத்திரனுக்குக் காலவனெனப் பெயராயிற்று.] அக்காலவன் மகாதபசியா யிருந்தான்.

அறுபத்தோன்றுவது

மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளே! சத்தியவதனன் விசுவாமித்திரமுநிவ ருடைய புத்திரனை யாதரித்ததேயன்றி அம்முநிவருடைய மனைவியையும் பிறபுத்திரருடன் மாமிசமுதலிய ஆகாராதிகளையுதவி அவருடைய ஆசிர மத்தையும் அதிலுள்ள தீர்த்தங்களையும் இரட்சித்து வந்தான். சத்திய வதனனைத் திரையாருணன் வனத்திற்கோட்டுகையிலும்,வனத்திலே அவன் மிருகாதிகளை யிம்சிக்கையிலும் திரிகால வர்த்தமானங்களையு மறிந்த வசிஷ்டமுநிவர் சமீபத்திலிருந்தும், மேல்நடக்க வேண்டியவற்றை யறிந் திருந்தும் சிறிதுந் தடைசெய்யவில்லையாயினும், சிறிதுகாலங்கழித்துச் சத்தியவதனனைக்கண்டு, நீ துஷ்கிருத்தியங்களை யொழிந்திருப்பாயாகில் உன் தந்தையினிடஞ்சொல்லி உனக்கு இராச்சியத்தைக் கொடுப்பிக்கிறே னென்று சொல்லினர். அவன் அதனையுங் கேளாதவனாய்த் தன் இச்சைப்படி நடந்துவருவதுகண்ட அவன்பிதா திரையாருணன் தன்குருவாகிய வசிஷ்ட பகவானைநோக்கி, ஸ்வாமீ! என் இராச்சியத்திற்குச் சந்ததியில்லையே; யாது செய்வேன்? எனக்கேட்க, வசிஷ்டர் இவன் இன்னுஞ் சிலகாலம் வனத் திலேயேயிருந்தால் இவனதுபாவங்கள் ஒழிந்துவிடும். உன் ஆயுள்முடிவில் இவனுக்கே இராச்சியத்தைக் கொடுத்துவிடலாமென்று கூறி விடுத்து, சத்தியவதனனை விளித்து யான்பன்னிரண்டுவருஷத் தீக்ஷையிலிருத்தலின் நீ சிறிதும் அக்கிரமமின்றி யெனக்குப்பணிவிடை செய்கவென, அவன் அதற்கிணங்கி அவருக்குத்தொண்டு செய்திருக்க, முநிவர் யோகத்தி லிருந்தனர். அந்தச்சமையத்தில் விசுவாமித்திரர் குடும்பத்தைக்காக்க

உணவொன்றுங் கிடையாமல், வசிஷ்டராசிர்மத்திலிருந்த காமதேனுவின் வமிசத்திற்றோன்றி இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கவோர் பசுவைக் கொன்று தானும்புசித்து விசுவாமித்திரர் மனைவிமுதலானருக்கும் ஊட்டி னன். அதனையுணர்ந்த வசிஷ்டமுநிவர் அவனைமுனிந்து அடாகொடியோய்! உன் அபசாரத்திற்காக உன்னையிப்பொழுதே கொல்லுவேன், ஆயினும் உன் தந்தைக்கு உன்னை அரசனுக்குவேனெனக் கொடுத்தவாமும், நீ யெனக்குப் பன்னிரண்டு வருஷம் பணிவிடைசெய்வதாக வொப்புக் கொண்டதுந் தடைசெய்கின்றன. அவ்விரண்டுதடைகளு மில்லாவிடின் உன்னையிப்பொழுதே சபித்துவிடுவேன். அன்னிய ஸ்திரீகளை நீ புணர்ந்த தும், வேடுவர்போல ஜீவஹிம்சை செய்து வாழ்ந்ததும், பசுவைக் கொன்றதுமாகிய மூன்றுகுற்றங்களைச் செய்தனை. உன் குற்றத்திற்காக முன்னமே உன் சிரசிற் சங்கினை யடிக்கவேண்டும். உன்தந்தையை நோக்கி அவ்வாறு செய்யாதிருந்தேன். இப்பொழுது அவை மூன்றனையுஞ்சேர்த்து அடித்துவிடுகிறேனென்று திரிசங்கு எனக்கூப்பிட்டனர். அதுமுதல் சத்தி யவதனனென்னும் பெயர்நீங்கி அவன் திரிசங்குஎன்னும்பெயரெய்தினன். அதுமுதல் விசுவாமித்திர முநிவருடைய ஆசிர்மத்திலிருந்தனன். அப் பொழுது, ஒருசமயத்தில் விசுவாமித்திரர் தன்றவத்தை நிறுத்திப் புத்திரர் முதலானரைப் பார்க்கவிரும்பி அங்கடைந்து, தன்குடும்பத்தைச் சத்திய வதனன் பாதுகாத்து வருவதுகண்டு சந்தோஷித்து, உனக்கு யாதுவரம் வேண்டும்? எனக்கேட்க, திரிசங்கு அவரைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து ஸ்வாமீ! வசிஷ்டர் எனக்கு இராச்சியமில்லாமற் செய்து என்னைப் பாவி யாக்கிவிட்டனர். யான் என திராச்சியத்தை யடையக் கிருபைசெய்ய வேண்டும் எனக்கேட்க, விசுவாமித்திரர் அஞ்சாதே! உன் பாவங்களை யெல்லாம் ஒழித்து உன்னை அரசனுக்கிப் பட்டாபிஷேகஞ் செய்துவைப் பேனென்று, அந்த இராச்சியத்திலிருந்த கருப்பு நீங்கும்படி மழைபெய் யச்செய்து, யாகாதிகளைச்செய்து அவனுக்குப் பட்டங்கட்டி, அவனையே அரசனுக்கித் தனது விருப்பின்படி சென்றனர். திரிசங்கு சிலகாலஞ் சென்றபின்னர், கேகயவமிசத்தில் தோன்றிய சத்தியவிரதை யென்பவளிடம் அரிச்சந்திரனைப் புத்திரனுகப்பெற்று, அவன் வயதடைந்தது கண்டு, அவனுக்கு இராச்சியாபிஷேகஞ் செய்வித்து, வனத்தையடைந்து வசிஷ்ட முநிவரைக்கண்டு பணிந்து பழயடியே குருவாகக்கொண்டு, யான் இந்தத் தேகத்துடனே சுவர்க்கத்தை யடையத் தயை செய்யவேண்டும் எனப் பிரார்த்திக்க, வசிஷ்டர் அஃதசாத்தியமென, திரிசங்கு வசிஷ்டபுத்திரரை யடைந்து அவர்களைக்கேட்க, அவர்களும் அசாத்தியமேயென, எனது குருவுங் குருபுத்திரருமாகிய வுங்களால் முடியாதாயின் அவ்வாறு செய் வோரைக் குருவாகக் கொள்ளுவேனென, வசிஷ்டபுத்திரர் திரிசங்குவை நோக்கி, நீ யெங்களை யவமதித்ததால் நீசனுகுகவெனச் சபித்தனர். அந்தச் சாபத்தை யடைந்தபின்னர் மீண்டும் விசுவாமித்திரரைச் சரண மடைந்து, அவரால் யாகஞ்செய்வித்து மானுடதேகத்துடன் சுவர்க்க

லோகத்தை யடைய, தேவர்கள் தடுத்தனர். அதுகண்ட கௌசிகர் தனது தவப்பலனால் திரிசங்கு சுவர்க்கமென்னு மிடமொன்றனை நியமித்து அங்கு அவனைத் தங்கச்செய்தனர்.

முநிவர்களே! அரிச்சந்திரன் சக்கிரவர்த்தியாயிருந்து அநேக இராசசூய அசுவமேதாதிகளைச் செய்து மூவுலகத்திலும் சத்தியவானென்னும் பெயரையடைந்தான். அரிச்சந்திரனுக்கு ரோகிதாசுவனும், அவனுக்கு விருகனும், அவனுக்குப் பாகுவுந் தோன்றினர். பாகுவென்பான் அரசுசெய்கையில் * ஹைஹயவமிசத்தில் தோன்றியவர்களும் தாலஜங்க வமிசத்தில் தோன்றியவர்களும், அவனோடு சண்டைசெய்து அவனை வனத்திற்குத் துறத்தினர். பாகுவென்னும் அரசன் இராச்சியத்தையிழந்து வனத்தில், பிருகு வமிசத்துதித்த ஔர்வராசிரமத்திற் புத்திரவிருப்பாற் றவஞ்செய்கையில், அவர் ஓர் கனியினைக்கொடுத்து அவன்மனைவியைப்புசிக்கச்செய்கவென, அருகிருந்த அவ்வரசனது மற்றோர் மனைவி அதில் நஞ்சு கலந்து வஞ்சனையாகக் கொடுத்தனள். சிலநாளில் பாகு இறந்தனன். அவன் மனைவியர் உடன்கட்டையேற யத்தனிக்கையில், ஔர்வமுநிவர் விஷத்தோடு கருவுற்றிருப்பவளை, கர்ப்பவதி உடன் கட்டையேறப்படாதெனத்தடுத்து, அவள் வயிற்றிலிருந்த விஷம் அந்தச்சிசுவைத் துன்புறுத்தாது தன் மந்திரத்தாற்றடுப்ப, விஷத்தோடே அக்குழந்தை பிறந்தது. அது காரணமாக, சகரன் [கரம் - விஷம்; சகரன் - விஷத்தோடு தோன்றினவன்] என நாமகரணஞ் செய்து வேதசாஸ்திரங்களைப் பயிற்றினர். பின்னர் அவன் தன் தந்தையின் நஷ்டராச்சியத்தை யடைந்து மிலேச்சர் முதலானரைச் சயித்து, ஏகசக்கிராதிபதியாய் அரசு செலுத்திவந்தான். அவன் ஔர்வமுநிவ ரநுக்கிரகத்தா லடைந்த ஆக்நேயாஸ்திரத்தாற் பல மன்னரை வெல்வது கண்டு, அரசர்கள் மனஞ்சகியாது சகரனுடைய குருவாகிய வசிஷ்டமுநிவரை யடைந்து அவர்பால் விண்ணப்பித்துக்கொள்ள, அவர் சொல்லவுங் கேளானுய்ச் சத்துருக்களை வதைத்துப் பிரஜைகளைப் பாதுகாத்துவந்தான். அம்மிலேச்சர்களிற் சகர் என்பவர்களைக் குடுமியைக் கத்திரித்துச் சஞ்சரிக்கவென்றும், யவனரை முழுத்தலையும் முண்டிதமாயிருக்கவென்றும், காம்போஜரை மோவாயில் மயிர் வைத்திருக்க வென்றும், அக்கிரமஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாக இது போன்ற தண்டங்கள் விதித்து, அரசுசெய்து வந்தான். இதுநிற்க: சந்ததி விருத்தியை விரும்பிய சகர சக்கிரவர்த்தி வனத்தையடைந்து தவஞ்செய்து, ஓரிருடியின் கிருபையால் வரம்பெற்று, அதனால் அவன் மனைவியரிருவரில் மூத்தவளிடம் வம்சோத்தாரகனும் அற்பாயுவுடையவனுமாகிய அசமஞ்சனும், இளையவளிடம் அதிசூரரான அறுபதினாயிரம் புதல்வருந்தோன்றினர். அசமஞ்சன் தன்வாலிப தசையால் அந்நகரத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் நதியிற் போட்டுக் கொன்று வந்தனன். அதனையறிந்த சகரன் தன் குருவாகிய வசிஷ்டரிடம் தருமசாஸ்

திரத்தை விசாரித்து, அவனைக் காட்டிற்கனுப்பி விடுவது தருமமென்றுணர்ந்து, அவனை யவ்வாறே வனத்திற்கு அனுப்பிவிட்டனன். அப்பொழுது அசமஞ்சன் மனைவி கர்ப்பவதியாயிருந்தனள். சில தினங்களில் அக்குழந்தை பிறக்க அதற்கு அம்சுமான் எனப் பெயரிட்டனர். மிலேச்சர்களாற் குன்றவுற்ற தானம் யாக முதலியவற்றை முன்போலவே விருத்திபாக்கி நிலைநிறுத்தி அசுவமேதஞ் செய்ய யத்தனித்து, இலக்கணமமைந்த அசுவத்தை யலங்கரித்துப் பூப்பிரதக்ஷிணஞ் செய்விக்க, அது கீழ்க்கடற் கரையிற் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், இந்திரன் சகர சக்கிரவர்த்தியினிடம் பகைமைகொண்டு அந்த அசுவத்தை யபகரித்துக் கொண்டு, பாதலத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த கபிலமுநிவருடைய ஆசிரமத்திற் கட்டிச்சென்றனன். சகரசக்கிரவர்த்தி தன் அசுவமேதப் புரவியைக்காணாது தன் புதல்வர் அறுபதினாயிரவரையும் அதனைத்தேடும்படி யனுப்ப, அவர்கள் உலகெங்குந் தேடிக்காணாது பூமியை வெட்டிக்கொண்டு பாதலஞ்சென்று, அங்கே கபிலமுநிவர் தவச்சாலையிற்குதிரையிருக்கக்கண்டு இம்முநிவனே இதனை யபகரித்தவனென்று, அவரைப் பலவாறு தூஷித்து இறைச்சலிடுகையில், முநிவர் யோகுநீங்கி ஹூங்காரஞ்செய்ய, அவர்கள் யாவருஞ் சாம்பராயினர். நெடுநாள் கழிந்த பின்னர், சகரன் தன் பௌத்திரனைய அம்சுமானை நோக்கி, யான்தீக்ஷைசெய்து கொண்டிருக்கின்றேன். என் புதல்வரிறப்பினும் யாகத்தை விடப்படாது. நீ அப்புரவியைக் கொணர்கவென்ன, அம்சுமான் அவ்வாறே தேடிச்சென்று பாதலத்தை யடைந்து முநிவரையும் புரவியையும் சகர புத்திரரெரிந்ததனாலாய சாம்பர் மலையையுங்கண்டு, விஷயத்தை யுணர்ந்து, முநிவரைப் பிரார்த்தித்துக் குதிரையை அவரனுமதியாற் பெற்றுக்கொண்டு, தன் மூதாதைகளுக்குக் கிரியைசெய்து முடிக்கயத்தனிக்கையில், தன் மாதுலனாகிய கருடபகவான் பிரசன்னனாகி, நீ ஆகாயகங்கையை வருவித்தாலன்றி இவர்கள் கதியடையார்கள். சாபத்தீயினால் நரகத்தை யடைந்துள்ளார்களென, அது தன்னால் முடியாதென்று கருதி, குதிரையைக் கொண்டுவந்து தன் பாட்டனாகிய சக்கிரவர்த்தியிடஞ் சேர்த்து யாகத்தை முடிப்பித்தான். சகரன் சிறிது காலத்தில் அம்சுமானுக்குப் பட்டங்கொடுத்துக் காலகதியடைந்தனன். அம்சுமான் அநேக காலம் அரசுசெய்து, தன் புதல்வன் திலீபனுக்குப் பட்டங்கட்டித் தேகநீங்கினன். திலீபன் தன் காலமுழுதுஞ் சகரபுத்திரரைச் சற்கதியேற்றச் சாத்தியப்படாது பகீரதனென்னுந் தன் புதல்வனுக்கு அரசுரிமைகொடுத்து நற்கதி யெய்தினன். பகீரதன் தன் பெரியோர் கபிலர் சாபத்தாற் கடுநரகடைந்திருப்பதுணர்ந்து அவர்களை நற்கதியை யடையச்செய்ய வேண்டுமென்று கோகர்ண க்ஷேத்திரத்திற் றவஞ்செய்து ஆகாயகங்கையை வருவித்து, அவர்களையெல்லாம் நற்கதி யடையச் செய்தனன். பகீரதனுக்குச் சுருதசயனனும், சுருதசயனனுக்கு நாபாகனும், நாபாகனுக்கு அம்பரீஷனும், அம்பரீஷனுக்குச் சிந்துதீபனும், அவனுக்கு அயுதாஜீயும், அவனுக்கு ருதுபர்ணனும் புத்திரராகத்

தோன்றினர். ருதுபர்ணன் அக்ஷஹ்ருதயமென்னும் மந்திரத்தை யறிந்தவனாய், நளச்சக்கிரவர்த்தியை நட்பு கொண்டிருந்தனன். ருதுபர்ணனுக்கு ஆநுபர்ணனும், அநுபர்ணனுக்குக் கல்மாஷபாதனென்னுங் காரணப்பெயர் வாய்ந்த மித்திரசகனும், கல்மாஷபாதனுக்குச் சர்வகர்மாவும், சர்வகர்மாவுக்குத் தன்னைவென்ற இராவணனை நோக்கித் தன் வமிசத்திற்றோன்றிய ஒருவனாலிறக்கவெனச் சாபமிட்ட அநரண்ணியனும், அநரண்ணியனுக்கு முண்டித்துருவனும், முண்டித்துருவனுக்கு நிஷதனும், நிஷதனுக்குத் தீர்க்கபாகுவும், தீர்க்கபாகுவுக்கு ரகுவும், ரகுவுக்கு அஜனும், அஜனுக்குத் தசரதனும், தசரதனுக்குத் தர்மத்திற் கிருப்பிடமாகவும் இராக்ஷஸகுல காலனாகவும் நூறு அசுவமேதஞ் செய்தவனாகவுமுள்ள ஸ்ரீராமனும், ஸ்ரீராமனுக்குக் குசனும், குசனுக்கு அதிதியும், அதிதிக்கு நிஷதனும், நிஷதனுக்கு நளனும், நளனுக்கு நபசும், நபசுக்குப் புண்டரீகனும், புண்டரீகனுக்கு க்ஷேமதன்வாவும், க்ஷேமதன்வாவுக்குத் தேவாநீகனும், தேவாநீகனுக்கு அஹீநகுவும், அஹீநகுவுக்குச் சகஸ்வானும், சகஸ்வானுக்கு வீரசேனனுமாகப் புத்திரர்களாக அநேக அரசர்கள் தோன்றினார்கள். இந்த மன்னர்கள் வைவசுவதமநுமரபிற்றோன்றிய ஜேஷ்டர்கள். இவர்கள் வமிசமுழுவதையுஞ் சொல்லிமுடிக்க யாரொருவருக்குஞ் சாத்தியமானதன்று. இந்த வைவசுவதமநு மரபைக் கேட்டவர்கள், ஆயுஷ்மான்களாகவும் புத்திரவான்களாகவும் சூரியமண்டல வழியாகச் சிவலோகத்தை யடைந்து நித்தியமான வாழ்வை யடைவார்களென்று ஸூதமுனிவர் கூறினர்.

வைவசுவதமநுமரபுரைத்தது

முற்றிற்று.

அறுபத்திரண்டாவது
பிதுர்தேவர் சிறப்புரைத்த அத்தியாயம்.

சௌநகாதி நைமிசாரணிய வாசிகள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமி! சூரியபகவானுடைய பரம்பரையைக்கேட்டுப் பேரானந்தமடைந்தோம். இனிச் சிரார்த்த தேவர்கள்யாவர்? பிதுர்கள்யாவர்? அவர்களை எவ்வாறு பூஜிக்கவேண்டும்? அவர்கள் எவ்வகைய பலனைக்கொடுப்பர்? இவற்றையெல்லாம் விரிவாகச்சொல்லவேண்டு மெனக்கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்: முனிவர்களே! அருமையான விஷயத்தைக் கேட்டீர்கள். இவ்விஷயம் ஸநத்குமாரமுனிவரால் மார்க்கண்டேய முனிவருக்கும், மார்க்கண்டேயராற் பீஷ்மருக்கும், பீஷ்மரால் தர்மராஜாவுக்குஞ் சொல்லப்பட்டன. அவ்விஷயத்தைச் சொல்லுகிறேன்: பிதுர்கள் சிரார்த்தாதி கருமங்களாலேயே சந்தோஷத்தை யடைவார்கள். அவர்களுக்கு வேண்டிய பொருள்களைக்கொடுத்துப் பூசிக்கவேண்டும். அவ்வாறு சிரார்த்தங்களை

முறைப்படி செய்தவர்கள் பிதுர்களால் இஷ்டகாமியங்களை யடைவார்கள். சிலருடைய பிதுர்கள் புண்யவசத்தாற் சுவர்க்க லோகத்தையும், சில பிதுர்கள் பாவவசத்தால் அதோலோகத்தையும் அடைந்திருப்பார்களாதலின்,ஒருவன் செய்யுஞ்சிரார்த்தம் அவர்களையெவ்வாறு சென்றடையுமென்று கேட்பீர்களானால், அதனையுஞ் சொல்லுகின்றேன். சுவர்க்கவாசிகளாகிய தேவர்களும், தங்கள் பிதுர் சிரார்த்தத்தைச் செய்துவருகிறார்களென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். பூர்வம் பீஷ்மர் தருமராஜனை நோக்கிச்சொன்னதாவது: தருமநந்தன ! யானொருகாலத்தில் என்பிதாவாகிய சந்தனுமகாராஜனுக்குச் சிரார்த்தஞ்செய்கையில், பூமியைக்கீறிப் பிதுர் ஆவாஹநஞ்செய்தவிடத்திலிருந்து என் தந்தைதோன்றி அப்பிண்டத்தைக் கைநீட்டிக்கேட்க, யான் அதனை யவர் கையிற்கொடாது தருப்பையின் பேரிலேயே வைத்தனன். அவர் அதனைக் கையிற்கொண்டு பெருமகிழ்ச்சியோடு எனக்குச் சிலதருமங்களைச் சொல்லினர். அதாவது: நீ தருமவான். உன்னாலேயே யான்புத்திரவந்தனானேன். உன்னாலேயே யான் கடைத்தேறினேன். அரசன் செய்கிற காரித்தையே பிரஜைகள் பிரமாணமாகக் கொண்டு நடக்கிறார்கள். யானே நேராகவந்து உன் கைப் பிண்டத்தைக் கையேற்றுக் கேட்டும் என்கையிற் கொடாது வேத மார்க்கத்தை நம்பித் தருப்பையின் பேரில் என்னை யுத்தேசித்து வைத்தமையால், உலகத்தில் தருமம் சாசுவதமாகவிருத்தி யடையப்போகிறது. யான் சந்தோஷித்தேன். நீ விரும்பியகாலத்திலன்றி யுன்னுயிர் நீங்காது வாழ்வாய் என்று கூற, யான் அன்னியலோகத்தை யடைந்த பிதுர்கள் சிரார்த்தத்தால் எவ்வாறு திருப்தியடைகிறார்கள் எனக்கேட்க,என்றந்தை மைந்தனே! ஆதிதேவனுடைய புத்திரர்களாகிய பிதுரர்கள் தேவர் அசுரர் மாநுடர் யக்ஷர் ராக்ஷஸர் கந்தர்வர் கின்னரர் உரகர்களாலேயும் பூஜிக்கத் தக்கவர்கள். எந்தவருணாச்சிரமத்தில் ஜனித்தவர்களாயினும் பிதுர்பூஜை அவசியஞ்செய்யவேண்டியவர்களே. தங்கள் பிதுர்கோத்திர நாமங்களைக் கூறிச் சிரார்த்தங்களைச் செய்தால், பிரமதேவனாற் படைக்கப்பட்டுள்ள சிரார்த்ததேவர்கள் அதனையடைந்து, பிதுரர்களாகிய நாங்கள் சுவர்க்க நரகங்களில் எவ்விடத்திலிருப்பினும் எங்களை அவர்கள் திருப்தி செய்கிறார்கள். இன்னும் இதுவிஷயத்தில் உனக்குற்ற சந்தேகங்களை மார்க்கண்டேயமுநிவரிடத்திற்கேட்டு அறிந்துகொள்க என்று கூறி, எனது தந்தை அந்தர்த்தானமாயினர். அதன்பின்னர், சிலகாலஞ் சென்று யான் இவ்விஷயத்தை மார்க்கண்டேயமுநிவரிடஞ் சென்று கேட்க, மார்க்கண்டேய முநிவர் கூறுகின்றார். பீஷ்மனே ! நானும் நீயும் பிறரும் பிதுர்களுடைய அநுக்கிரகத்தினாலேயே கீர்த்தி முதலியவற்றை யடைந்திருக்கிறோம். யான் அநேக யுகங்களுக்கு முன்னர் மேருமலையினுச்சியிற் கடுந்தவஞ்செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய தேஜசால் சுவர்க்கலோகத்திலிருந்து திவ்வியமான விமானமொன்று அங்குவரக்கண்டேன். அவ்விமானத்தில் பிரகாசித்துக்கொண்

டிருக்கும் அக்கினிபோலவும், சூரியவொளியும் மழுங்கத்தக்க பேரொளியாகவும் விளங்கிய ஒரு அங்குஷ்ட அளவுடைய ஒருவரிருக்க, அவரைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து, நீர்யாவர் ? யானெப்படி உம்மையறிவேன்? எனக்கேட்க, அவர் மார்க்கண்டேயனே ! நீ யென்னையறியுஞ் சக்தியுடையவனே. ஆயினும் நான்சொல்லுகிறேன். யானே சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவருடைய மாநஸபுத்திரனாகிய ஸநத்குமாரமுநிவன். என் தம்பிகளாகிய மாநஸபுத்திரர்களுடைய வமிசந்தான் உலகமுழுவதும் பரவியிருக்கின்றது. யான் ஸந்நியாசாச்சிரமத்தை மேற்கொண்டுள்ளேன். நெடுநாளைக்கு முற்றோன்றி அதுமுதலாகக் குமாரனாகவே யிருத்தலின், ஸநத்குமாரனென் றழைக்கப்படுகிறேன். நீ பெரும்பக்தியுடன் தவஞ் செய்தமையின் உனக்குத் தரிசனந் தந்தேன். நீயாதுவரம்வேண்டுகின்றனை? எனக்கேட்க, யான் ஸநத்குமாரமுநிவரை நோக்கி, ஸ்வாமீ ! பிதுர்களுடைய உற்பத்தியைப்பற்றி யெனக்கு நன்றாகச் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகிறார்.

முநிவனே! பூர்வத்திற் பிரமதேவர் சிறிது தேவர்களைச் சிருஷ்டிசெய்து தன்னைப் பூசிக்கும்படி உபதேசித்தனர். அவர்கள் பிரமன் வாக்கியத்தைத் தவறித் தங்களைத் தாங்களே பூசித்துக்கொண்டனர். தன்னைப் பூசியாத அந்தத் தேவர்களை வெகுண்டு, அதனால் ஞானவீனர்களாகுக வெனச் சபிக்க, அவ்வாறே அவ்வமரர் ஞானநீங்கி, பிரமதேவனைப் பணிந்து, எங்களுக்கு ஞானமுண்டாகும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டுமெனப்பிரார்த்திக்க, பிரமதேவர் தேவர்களே ! என்புத்திரரைக்கேட்டு அதற்குப்பரிகாரந் தேடிக்கொள்ளுங்களென, அவர்கள் பிரமபுத்திரரை வேண்ட, அவர்கள் தேவர்களே ! உங்களை யந்தச் சாபம் பாதியாது, உங்கள் விருப்பின்படி செல்லுங்கள் புத்திரர்களே! என்று, அவர்கள் சாபத்தை விலக்கினர். அப்பொழுது பிரமதேவர் அவர்களைவிளித்து அமரரே ! நீங்கள் என்புத்திரராற் புத்திரர்களே என்றழைக்கப் பெற்றமையின், அவர்கள் பிதுர்களாகவும், நீங்கள் புத்திரர்களாகவும் விளங்குமின் என்றனுக்கிரகித்தனர். அவ்வகையாக வுள்ள பிதுர்களைக் குறித்துப் பிண்டதான சிரார்த்தாதிகளைச் செய்தால் அப்பிதுர் தேவர்கள் திருப்தியடைந்து செய்தவனுடைய பிதுர்களையுந் திருப்திசெய்து, அவனுடைய இஷ்ட காமியங்களையுங் கைகூடச் செய்வர். ஆதலின் விசுவேதேவர் முதலாயினரைச் சிரார்த்தகாலங்களிற் பூசித்து இஷ்டகாமியங்களை யடைய வேண்டியது என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

பிதுர்தேவர் சிறப்புரைத்தது

முற்றிற்று.

அறுபத்துமூன்றாவது
பிதுர் பக்தியின் பலனுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் பீஷ்மரைநோக்கி இன்னுங் கூறுகின்றார். இராஜசிரேஷ்டரே! பிதுர்தேவர்கள் எழுவர்; கவ்வியவாகன் அனலன் சோமன் யாமன் அரியமன் அக்நிஷ்வாத்தன் பர்ஹிஷதன் எனச் சொர்க்கலோகத்திலிருக்கின்றனர். இவருள்நால்வர் தேகத்தோடும் மூவர்தேகமின்றியும் விளங்குவர். அன்றியும் இவர்களில் மூவரைத்தேவர்களும் ஏனைய நால்வரைப் பிராமணாதி வருணத்தவர்களும் பூசிக்கின்றனர். பிதுர்கட்குச் சிரார்த்தகாலத்தில் வெள்ளிப்பாத்திரத்தினாற் சிரார்த்தஞ்செய்ய வேண்டும். (பாரியையோடுகூடிய) அக்கிமானுயின் சுதாவென்னும் சத்தத்தினால் ஹோமஞ் செய்யவேண்டும். அல்லது ஜலத்திலாவது பிராமணனுடைய கையிலாவது ஹோமஞ் செய்யவேண்டும். அவ்வாறு செய்வோர் இகலோக சவுக்கியத்தையும் பரலோகத்திற் சுவர்க்கபோகத்தையும் அடைவார்கள். தேவகாரியத்தைக்காட்டிலும் பிதுர்காரியஞ்சிறந்தது. அதனையதிக பக்தியோடு செய்யவேண்டும். பிதுர்காரியத்தினால் அடையுங்கதியை யோகபலத்தினாலும் அடைய முடியாது என்று ஸநத்குமாரமுநிவர்கூறி, திவ்வியமான ஞானத்தையளித்து ஆகாய மார்க்கமாகச் சென்றருளினர். பீஷ்மரே! பூர்வத்தில்நடந்த ஒரு சரிதத்தைச் சொல்லுகின்றேன்: பரத்துவாசமுநி மைந்தர் யோகதருமத்தை யடைந்தும், தமது துர்நடத்தையாற் பிரஷ்டர்க ளானார்கள். வாக்துஷ்டன் - குலோதனன் - ஹிம்சிரன் பிசுனன் [கோளன்] கபி [குரங்கு] பிதுர்வர்த்தி என அவர்கள் நடக்கை காரணமாகப்பெயருற்றனர். ஸ்வஸ்ருபன் [தங்கையையிரட்சித்தவன்] என ஓர்புத்திரனுமிருந்தனன்.

இவர்களெழுவரும் பிரஷ்டர்களாகவேயிருந்து அந்தஜனனத்தையொழிந்து கௌசிகமுநிவருக்குப் புதல்வர்களாகத்தோன்றிக் கர்க்கமுநிவர் சிஷர்களாகிக் குருக்ஷேத்திரத்தில் தமதாசிரியருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கையில், கர்க்கமுநிவர் அவர்களை நோக்கி வேறோர் ஆசிரமத்திலிருந்து பசுவுங்கன்றும் ஓட்டிக்கொண்டு வரும்படிசொல்ல, அவர்களெழுவரும் அவ்வாறேசென்று பசுவைக்கன்றுடன் பிடித்துக்கொண்டுவருகையில், அவர்களிற்சிலருக்குப் பசியினாலும் அறியாமையினாலும் பாவத்தினாலும் அப்பசுவைக்கொன்று புசிக்கலாமென்று குரூரமான யோசனையுண்டாகிக்கூற, கபி ஸ்வஸ்ருபன் என்போர் அதுபாவம் அவ்வாறு செய்யப்படாதென்று தடுப்ப, பிதுர்வர்த்தியென்போன் பிதுர்பக்தியுடையவனாயிருந்தமையின், நீங்கள் இதனைக்கொல்வதானாற் பிதுர்பிரீதி செய்துகொன்று புசிக்கலாமென்றனன். அதனையேயாவரும் அங்கிகரித்து அப்பசுவைக்கொன்று சிரார்த்தத்திற்குபயோகித்து எழுவருமாக அதனைப்புசித்துவிட்டு, கன்றினை மட்டுங் குருவினிடங் கொண்டுபோய்ச்சேர்த்து ஸ்வாமீ! பசுவினைப் புலிகொன்றுவிட்டதெனக்கூற, முநிவர்கபடமின்றி அதனை யொப்புக்கொண்டனர். அவர்களெழுவருங் குலாசாரதருமத்தை விடுத்து கோவதை செய்து அதனைப் புசித்த பாவத்தாலும் குருவினிடம் பொய் பேசிய பாவத்தாலும் தசார்ணமென்னு மிடத்தில் வேடுவகுலத்திற் சகோதரர்களாகப்பிறந்தனர். கீழ்க்குலத்திலுதிப்பினும் அக்குலத்திற்கேற்ற ஆசாரத்தோடு நடப்பினும் பிதுர்பக்தியுடையவர்களாயிருந்தமையாலும் பூர்வஜன்மஞானமுண்டாகிச் சிலகாலம் மன

வருத்தத்துடன் கழித்து, காலஞ்சரமென்னுமலையில் மிருகங்களாகப் பிறந்தனர். அப்பொழுதும் பூர்வஜனனக் கியானத்துடன் இந்த ஜனனத்தை யொழிக்கவேண்டுமென்று கழித்து, சரத்தீபத்தில் சக்ரவாக பக்ஷிகளாகப்பிறந்து ஜன்மாந்தரஞானத்துடன், குருவினிடம் பொய் கூறினும் பணிவிடையை முறைப்படிசெய்தமையால், கோவதைசெய்த பாவத்தை யொழிக்கவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாயிருந்தார்கள். சுமனஸ் சுவாக் சுத்தன் பஞ்சாலன் சித்திரத்ரிசகன் சுநேத்திரன் சுதந்திரன் என்னும் பெயர்பெற்று அவர்கள் சக்ரவாகங்களாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், நீபதேசராசன் வேட்டையாடவந்தனன். சுதந்திரனென்னும்பறவை அவனுடைய செல்வத்தைக்கண்டு பொறாமைகொண்டு நான் இவனைப்போல ராஜாவாகப்பிறக்கும்படி பூர்வஜனன புண்ணியமேதேனு மிருக்குமோவென்றுரைசையுற்றுக் கூறியது. அதனைக்கேட்டுக் கொண்டருகிருந்த அதன் உடன்பிறந்த இரண்டுபறவைகள் நீயரசனுயின் யாங்கள் மந்திரிகளாகிறோமென்றன. அப்பொழுது சுவாக் என்னும் பறவை நீங்கள் ஞானத்தையடைய விரும்பாது இராச்சிய செல்வத்தை விரும்பினீர்களாதலின் அவன் அரசனுகவும் நீங்கள்மந்திரிகளாகவுஞ் சில காலத்திற் காம்பிலியதேசத்தை யடைவீர்கள் எனக்கூற, அம்மூவரும் சுவாக் என்னும் சகோதரனைநோக்கி நாங்கள் போகத்தையடைந்தால் எங்களுக்கு எப்பொழுது எப்படிஞானம் வரும்? எனக்கேட்க, சுவாக், பிதுர்பக்தியுடையவர்களாதலின் மற்றொருஜனனத்தில் நாமெல்லோரும் ஒன்றுகூடி மானுடஜனனமடைந்து ஞானவான்களாவோம் என்று விடை கொடுத்தது.

அறுபத்துநான்காவது

மேற்படி அத்தியாயம்.

அந்தஏழுசக்ரவாகங்களும்மானதசரசில்அன்னப்பறவைகளாய்ப் பிறந்து ஜலத்தையும் வாயுவையும் பக்ஷித்துக்கொண்டு தவசினுல் உடலையிளைக்கச்செய்து கொண்டிருந்தன. வனத்தையடைந்த நீபதேசராசன் பலவிதமாகவேட்டையாடித் தன்சைநியங்களுடன் நகரத்தையடைந்து சிலகாலங்கழித்துத் தன்புதல்வனை ஹநூஹனென்பவனுக்குப் பட்டங் கட்டி விடுத்து வனத்தையடைந்து தவஞ்செய்துகொண்டிருந்தனன். அவனது தவத்தினல் அந்தவனம் பிரகாசித்தமையின் அதற்கு வைப்பிராஜமெனப் பெயராயிற்று. அந்த அன்னங்களுள் நான்கு யோகநிலையாகிய தவத்திலேயே விருப்புடனும் மூன்று மோகவிருப்பத்துடனும் அந்த ஜனனத்தையொழித்து, காம்பில்லிய நகரத்தில் சுதந்திரன் அரசன் புதல்வனுக ஹநூஹன் என்னும்பெயருடன் பிறந்தது. சித்ரத்ரிசகன் சுநேத்திரனென்போர் அந்நகரத்திலே யோர்வேதியனுக்குப் புத்திரராகி வேத வேதாங்கங்களை யுணர்ந்து சாஸ்திரவான்களாயிருந்தார்கள். பஞ்சாலனென்போன் ருக்வேதியாகத்தோன்றி ஆசாரியனுக விளங்கினன். சுத்தனென்போன் வேதியனுகத்தோன்றி இரண்டுவேதங்களை யுணர்ந்திருந்தனன். சுவாக் என்போன் சாமவேதமுணர்ந்த வேதியனுயினன். சுமனஸ் என்போன் யாகஞ்செய்விக்கும் யோக்கியதையுடைய ஆசிரியனுகப்பிறந்தான். இவ்வாறு சிலகாலஞ் சென்றபின்னர் ஹநூஹனென்னு மரசன் பிரமதத்தனென்னுந் தன்புதல்வனுக்குத் தனது அரசுரிமையைக் கொ

டுத்துவிட்டு வனத்தை யடைந்து பெருந்தவஞ்செய்து உயர்பதவியை யடைய விரும்பிக்காலங்கழித்தனன். அவ்வரசன் அவ்வாறுவனத்திற்குச் செல்லுகையில், பஞ்சாலனும் சுத்தனும் அவனுடன் தபோவனத்தை யடைந்து தவஞ்செய்து சிறந்தபதவிகளை யடைந்தார்கள். ஏனைய நால்வரும் அந்தக் காம்பிலிய தேசத்திலேயே ஓர் ஏழைப்பிராமணனுக்குப் புத்திரர்களாகி, திருதிமான் சுமஹாத்மா தத்துவதரிசி நிருத்சுகனென்னும் பெயருடன் சாஸ்திரங்களையெல்லாங்கற்று யோகமார்க்கத்திலிருந்து முக்தியையடைந்தார்கள். கேட்டீரோ பீஷ்மரே! கோவதையாகிய பெரும்பாவத்தைச் செய்தவர்களாயினும் பிதுர் திருப்திசெய்வித்த விசேஷத்தினால் அநேக ஜனனங்களைக் கழித்தபிறகும் ஜன்மாந்தர வுணர்ச்சியோடும் முக்தியை யடைந்தார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் பிதுர்காரியத்தைச் சிரத்தை பக்தி முதலியவற்றுடன் அவசியஞ்செய்யவேண்டுமென்று மார்க்கண்டேய முனிவர் எனக்குச் சொல்லியிருக்கிறாரென்று, பீஷ்மர் தருமநந்தனனை நோக்கிக் கூறினரென்று ஸூதமுநிவர் நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறியருளினர். மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைந்து சிவபெருமானுடைய திருவடி நீழலை யடையவேண்டுமென்று விரும்புவோர் யாவரும் இச் சிவபுராணத்தைப் படித்துங்கேட்டும் பிறருக்குரைத்துஞ் சிவபெருமானுடைய திருவடியில் மனதைச்செலுத்தியும் நல்வழியில் நிற்கக்கடவர். மஹாதேவா வென்றொருமுறை சொன்னமாத்திரத்திலேயே பிரமஹத்தியாதி பாவங்களெல்லாம் ஒழிந்துபோகுமாயின் அந்தப்பெருமானுடைய சிவமஹாபுராணத்தைப் பக்தியோடு வாசிப்போரும்கேட்போரும் நீங்காது சிவலோகத்தில் வாழ்வார்களென்பது சொல்லவும்வேண்டுமா? சந்தேகமின்றி அவர்கள் மோக்ஷத்தையடைவார்கள்.

இந்தச் சிவமஹாபுராணத்தைச் சொல்லிய பிராமணசிரேஷ்டனை வஸ்திரபூஷணாதிகளால் சிவபெருமானாகப் பாவித்து விஷ்ணுமூர்த்தியின் அபராவதாரமாகிய வியாஸரூபியே! தேவரீருக்கு நமஸ்காரஞ் செய்கிறோமென்று பூஜிக்கும்பக்ஷத்தில், சர்வலோக நாயகனாகியசிவபெருமான் பெருங்களிப்படைந்து தனதுபதவியையளிப்பன். இப்புராணத்தைச் சொல்லிவந்த புராணிகருக்குக் கன்றும்பசுவுமாகப் பெருந்தக்ஷிணை வைத்துத் தானஞ்செய்யவேண்டியது. சுவர்ணத்தினாற் செய்தசிவலிங்க மூர்த்தத்தை யவருக்குக்கொடுத்து, சாஷ்டாங்கமாகப்பணிந்து தாங்கள் சொல்லியபுராணத்தைச் சிரவணஞ் செய்தபலன் எமக்குக் கைகூடுமாக வென்று சொல்லவேண்டியது. அவ்வாறுசெய்தவரோ சிவபுராணசிரவண பலனை யடைவர். ஆதலின் இப்புராணஞ் சொன்னவனைச் சிவமாகவே பாவிக்கவேண்டுவது அவசியம்.

பிதுர்பக்தியின்பலனுரைத்தது.

முற்றிற்று.

தர்மஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.



கைலாஸஸம்ஹிதை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

கைலாயஸம்ஹிதை.

காப்பு.

𑌨𑌮𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌯𑌸𑌾𑌂𑌬𑌾𑌯 𑌸𑌗𑌣𑌾𑌯𑌸𑌸𑍂𑌨𑌵𑍇।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌶𑌾𑌯𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌹𑍇𑌤𑌵𑍇॥

நமஸ்ஸிவாயஸாம்பாய ஸகணுயஸஸூநவே |
ப்ரதாநபுருஷேஸாய ஸர்கஸ்தித்யந்தஹேதவே||

பார்வதிதேவியோடும், கணபதி ஸ்கந்தர் முதலிய புத்திரர்களோடும் பிரமதகணங்களோடும், பிரகிருதி புருஷர்களுக்குத் தலைவராகவும், சிருட்டி திதி சங்காரங்களுக்குக் காரணபூதராயும் மங்கலசொரூபராயுமுள்ள பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம்.

முதலாவது

சத்திரயாகஞ்செய்த அத்தியாயம்.

பூர்வத்தில் ஹிமாசலத்திற் றவஞ்செய்திருந்த ருஷிகளெல்லாம் சிவதரிசனஞ்செய்யக் காசியம்பதியை யடைந்தார்கள். அவ்விடத்துள்ள புண்ணியதீர்த்தமாகிய கங்காநதியில் ஸ்நானஞ்செய்ய மணிகர்ணிகைத் துறையையடைந்து ஸ்நானஞ்செய்து, தேவர் ருஷி பிதுரர் முதலினோர்க்குத் தருப்பணஞ்செய்து விசுவநாதனைத் தரிசித்துப் பூசனைசெய்து, சதருத்திரமென்னும் வேதவாக்கியங்களால் துதிசெய்து, ஒவ்வொருவருங் கிருதகிருத்தியர்களானோமென்று சந்தோஷித்துக் காலங்கழிக்குநாளில், பஞ்சகுரோசமென்னும் க்ஷேத்திரத்தைத் தரிசிக்கவேண்டி ஸூதபுராணிகர் அங்குற்றனர். ஒருநாள் அவரைக்கண்டு ஆனந்தங்கொண்டு அவருடன் மற்றவர்களுங்கூடி, ஸ்வாமிசந்நிதானஞ்சென்று விசுவநாதனைத்தரிசித்து முத்திமண்டப மடைந்தனர். அவ்விடத்துள்ள திவ்யாசனத்திலுட்கார்ந்த புராணிக சிரேஷ்டரான ஸூதமுநிவரை அர்க்கிய பாத்தியங்களாற் பூசித்து ஆநந்தக்கண்ணீர் துளித்தனர். ஸூதமுநிவர் அத்தகைய முநிவர்களை நோக்கி க்ஷேமமாயென வினவ, சிவாநுக்கிரகத்தாலும் பெரியோராசீர்

வாதத்தாலும் சுகமேயிருக்கிறோமென்று கூறி, ஸூதர் சந்தோஷத்தோடிருப்பதையறிந்து பிரணவார்த்தத்தையறிய விருப்புடையராய்க் கேட்கலாயினர். வியாஸபகவானிட சீடரே! மகாபுராணிகரே! சத்தியவதிபுதல்வரான வியாஸபகவானாற் சகல புராணங்களையும் எம்போலியருக்கு உபதேசிக்குந் தன்மையாகப் புராணிகோத்தமரென்று பட்டாபிஷேகஞ்செய்யப் பெற்றவரே! புராணங்களின் சாரமுழுவதையுங் கருப்பத்திலடக்கி ஆனந்திக்கின்றவரே! புராணங்கள், வேதத்தின் சொரூபத்தையும் அதனங்கங்களையுமுணராதாரு மறியும்படி யாவருக்கும் பயன்படுமாறு சொல்லப்பட்டுள்ளவை, வேதமோ பிரணவத்தின் பொருளைக்குறிக்கும், பிரணவமோ மகேசுவர சொரூபம், மகேசுவரனோ தேவரீருடைய இதய கமலத்தில் எழுந்தருளியிருக்கின்றனன். தேவரீருடைய முகமாகிய தாமரைமலரினின்றுந் தோன்றுகின்ற சிவசரிதமாகிய அமுதத்தை அடியேங்கள் பானஞ்செய்து,எமது தீவினையை யொழித்துப் பரமானந்தத்தை யடையச் செய்யவேண்டும். தேவரீரையன்றி யெளியேங்கட்கு அத்தகைய அரும் பொருள்களை யுபதேசிக்கவல்ல பரமார்த்த குரு யாவரிருக்கின்றனர்? என்று உடல் புளகித்துக் கூறினார்கள். அதனைக்கேட்ட வியாஸரது தவப்பேறாகத்தோன்றிய ஸூதமுநிவர், விநாயகர் - சுப்பிரமணியர் - மலையரசபுத்திரியாகிய பார்வதியார் - பரமேசன் - சிலாத முநிவர் புதல்வரும் சுயசையின் கணவருமாகிய நந்திதேவர் - ஸநத்குமாரமுநிவர் - வியாஸபகவான் ஆகிய இவர்களைத் தோத்திரஞ்செய்து சொல்லத்தொடங்கினர்.

புண்ணிய சீலர்களே! மிகவும் நுட்பமான கேள்வியைக்கேட்டீர்கள். இதனையே எனதாசிரியராகிய வியாஸமுநிவர் பூர்வம் நைமிசாரண்ய வாசிகளுக்குரைத்தனர். அவ்வாறே சொல்கின்றேன், அதனை இந்திரியங்களைப் புறஞ்செல்லாதடக்கிப் பக்தியோடு கேட்பீர்களாக: பூர்வத்தில் ஸ்வாரோசிஷ மந்வந்தரத்தில் அதிபுண்ணிய பூமியாகிய நைமிசாரண்ணியத்தில்முநிவர்களெல்லாருங்கூடிப்பரமேசனைத்தீர்க்கசத்திரயாகமியற்றிச் சந்தோஷிப்பித்து ஈசுவரசொரூப மித்தகையதென்றறிந்து கொள்ள வேண்டுமென்று விருப்புடையராய் வியாஸபகவான் வருகையை யெதிர்பார்த்திருந்தனர். விஷ்ணுவினமிசமாயும், ஜகத்குருவாயும், சகல புராணகர்த்தராயும், வேதங்களைப் பாகுபாடு செய்தவராயும், பராசரமுநிவரின் தவப்பலனும் பகவானுமுள்ள வியாஸமுநிவரது வரவைக்கண்டு,யாவருந் தீவிரத்திலெழுந்து எதிர்கொண்டழைத்து மலர்ந்த முகத்துடன் அர்க்கிய பாத்தியாதிகளாற் பூசித்து யாகசாலையிற் சுவர்ணமயமான ஆசனத்திலிருத்தி, மகாவிநயத்தோடு அஞ்சலியஸ்தராய் நிற்க வியாஸமுநிவர் நைமிசாரணிய முநிவர்களைக்கண்டு கூறலாயினர்: முநிவர்களே! நீவிராரம்பித்தயாகம் நிர்விக்கினமாய் நடைபெற்றதா? இந்தயாகத்திற் பரமேசனைப் பூசித்ததற்குக் காரணமென்ன? இவ்வாறு அவரை அர்ச்சிப்பதற்குக்காரணம் ஈசுவரசொரூபத்தை யறியவேண்டுமென்னும் எண்ண

முடையோரானீர்களென்றுந் தெரிவிக்கிறதென்றார். இதைக் கேட்ட முநிவர்கள் வியாஸபகவானை வணங்கி, நாராயணனுடைய அமிசமாகத் தோன்றியவரே! நீரே ஜகத்திற்குக் குருவாவீர். சிவபெருமான் திருமால் பிரமன் முதலானோருடைய பிரசாத முழுவதையும் அடைந்திருக்கிறீர். பாவிகளுக்குத் துர்லபமான உம்முடைய பாதாரவிந்தத்தைத் தரிசித்தோமாதலின் நாங்களே கிருதகிருத்தியர்கள். புண்ணியமான நைமிசாரணியத்திற் சத்திரயாகத்தை முடித்தும் பிரணவஸ்வரூபமான பரமசிவத்தையறிய வேண்டுமென்று கருதிய எங்கள் கருத்து நிறைவேறாமையால் அதனைத் தேவரீர் அடியேங்களுக்குக் கூறியருளவேண்டும். எங்கள் இதயத்திலுள்ள சந்தேகங்களைப் போக்குதற்குத் தேவரீரை யன்றித் திரிலோகங்களிலும் யாவரிருக்கின்றனர்? அபாரமான பவசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் எங்களைச் சிவஞானமாகிய ஓடத்தினால் முத்தியாகிய கரையையடையச் செய்வீராக எனக்கூறினர். அதனைக்கேட்ட வியாஸமுநிவர் வேதாந்தசாரமும் பிரணவஸ்வரூபமும் சமுசார மோசகமுமாகிய பரமேசுவரரை இதய புண்டரீகத்திற்றியானித்து, சந்தோஷ சித்தத்துடன் சொல்லத்தொடங்கினர்.

சத்திரயாகஞ்செய்தது

முற்றிற்று.

இரண்டாவது

பார்வதி பரமசிவ ஸம்வாதமுரைத்த அத்தியாயம்.

பிராமணசிரேஷ்டர்களே! விசேஷமான கேள்வியைக் கேட்டீர்கள். சிவஸ்வரூபத்தை விசாரித்தறியவேண்டுமென்னு ஞானம் உலகத்தில் உண்டாவது துர்லபம். சிவப்பிரசாதமுடையவர்களுக்கே பக்தியுண்டாகுமென்று வேதங்கள் கூறுகின்றன. தீர்க்கசத்திர யாகத்தினால் அம்பிகாபதியை யருச்சனை செய்தபடியால் அப்பரமபதியின் லக்ஷணங்களை விசாரித்தறியத்தொடங்கினீர்கள். பூர்வத்தில் நடந்த உமாமஹேசுவர ஸம்வாதமான ஓர் இதிகாசத்தையுங்கட்குச் சொல்லுகின்றேன். ஜகன்மாதாவாகிய ஈசுவரியார் தக்கனுடைய தவப்புதல்வியாகத்தோன்றிச் சிவபெருமானையடைந்தபொழுது, தன் தந்தையாகிய தக்கன் சிவநிந்தை செய்தமையின் அவனாற் போஷித்து வளர்த்த வுடலையும் அவன் மகளென்பதனாலாகிய தாக்ஷாயணியென்னும் பெயரையும் மாற்றவேண்டுமென்று கருதிச் சிவாநுக்கிரகத்தால் இமாசலமன்னனுக்குப் புத்திரியாக உமையென்னும் பெயருடன் தோன்றித் தவஞ்செய்து சிவபெருமானை மணஞ்செய்துகொண்டு அவ்விறைவனுடைய துடையின்மேரில் உட்கார்ந்து கொண்டிருந்து சிவபெருமானை நோக்கி, பகவானே! சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களையும் நடத்துபவரே! சர்வஜ்ஞரே! பக்திஸ்வரூபரே! எனக்கு இந்த

அவதாரத்தில் மந்திரதீக்ஷைசெய்து என்னைப் பரிசுத்தையாக்கவேண்டும் எனக்கேட்க, சந்திரசேகரராகிய சங்கரன் தேவி! உனக்கு அவ்வகைய யோசனை யிருக்கும்பக்ஷத்தில் நீ கைலாயகிரிக்கு வந்தால் அவ்வாறே செய்விக்கின்றேனென்று, தேவியோடு வெள்ளிமலையையடைந்து விதிப்படி உமைக்குத் தீக்ஷைசெய்து பிரணவஸ்ரூபத்தை யுபதேசித்து, சுத்த தத்துவஸ்ரூபமாகிய உத்தியான வனத்தையடைந்தனர். உமாதேவியார் சுமாலினிமுதலிய தோழியர் கொண்டுவந்த மலர்களால் அலங்கரித்துக் கொண்டு சிவபெருமானது மடியில் எழுந்தருளியிருந்தனர். அந்தச்சமயத்திற் சிவபெருமான் பார்வதிதேவியின் திருமுகத்தைப்பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருக்க, பார்வதிதேவி எம்பெருமானை நோக்கி, ஸ்வாமீ! பிரணவமந்திரத்தை யுபதேசிக்கப்பெற்ற யான் அதன்பொருளை யறிய விரும்புகின்றேன். அப்பிரணவம் எவ்வாறு தோன்றியது? அதற்குப் பிரணவமென்னும் பெயர் எப்படி வந்தது? அதினின்றும் எவ்வளவு மந்திரங்கள் தோன்றின. வேதாதி யென்று அதனைச் சொல்வானேன்? அப்பிரணவ மந்திரத்திற்குத் தேவர்யாவர்? அப்பிரணவ தேவர்களை யெவ்வாறு பாவிப்பது? அதனையெப்படிப் பூஜிப்பது?பிரணவமே யெப்படி பிரபஞ்சத்திற்கு ஆத்மஸ்வரூபமென்பது? பிரணவமந்திரத்தை ஜபிக்கத்தக்க அதிகாரிகள் யாவர்? அதனாலுண்டாகும் பிரயோசனத்தையும் அதன் பூஜாஸ்தானத்தையும் அதற்குரிய மண்டலப்பிரமாணத்தையும் அதற்குரிய ருஷிகளையும் நியாஸக்கிரமங்களையும் என்னிடத்தில் தயையுண்டாகி விஸ்தாரமாகச் சொல்லவேண்டு மெனக்கேட்க, சர்வலோக நாயகனாகிய சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்.

மூன்றாவது

மேற்படி அத்தியாயம்.

பார்வதி! நீ வினவிய விஷயத்தைச்சொல்லுகின்றேன். அதனைக் கேட்டமாத்திரத்திலேயே ஜீவர்கள் எனது தன்மையை யடைவார்கள். பிரணவார்த்தத்தை யறிவதே என்சொரூபத்தையுணர்தலாம். அது எல்லா வித்தைகளுக்கும் விதையாயுள்ளது. அதிசூக்ஷ்மமானது. விசேஷ அர்த்தத்தையுடையது. சாமானியர்களாலறியச் சாத்தியமில்லாதது. சர்வஜ்ஞத்வமும் குணத்திரயமும் சர்வ வியாபியுமாகிய யான் ஓம் என்னும் அந்தப்பிரணவத்திலேயே பூர்ணனாக விளங்குவேன். உலகத்திலுள்ள தாவரசங்கமாதி யெல்லாரூபங்களையுங் காணப்படுவது பிரணவார்த்தமே. அதுவேபரப்பிரமம். அதுவே ஏகாக்ஷரமென்றும் ஆதிமந்திரமென்றும் சர்வசாதகமானதென்றும் சொல்லப்படுவதால் எல்லாவற்றிற்கும் ஆதியில் அப்பிரணவம் உச்சரிக்கப்படுகிறது. பிரணவமே நான். நானேபிரணவம். பிரணவமே யான். எனக்கும் பிரணவத்திற்குஞ் சிறிதும் பேதமேயில்லை. ஆதலின் ருஷிகளெல்லாரும் என்னை ஏகாக்ஷரரூபியென் றறிகிறார்

கள். பிரணவமே வாச்சியம். யானே யதன்வாசகம். மோக்ஷமடைய விரும்பிய முமுக்ஷுக்கள் அதனையே யறியவேண்டும். பிரமாதி தாவரமீறாகவுள்ள எல்லாவற்றிற்கும் பிராண ஸ்வரூபமாயிருத்தலின் அது பிரணவமெனப்பெயருற்றது. அது பஞ்சவர்ணாத்மகமானது. அகார உகார மகாரங்களாகிய மூன்றுஞ்சேர்ந்து மூன்றுமாத்திரையுடையதாக வுச்சரிக்கப் பிரணவமாகும். மேலும் அதனோடு அரைமாத்திரை கூட்டி யுச்சரித்து ஈசாநமந்திரத்தைச் சபித்தால் நாதபிந்துக்களின் மூலமாக என்னையறியலாம். அப்பிரணவஸ்வரூபியான என்னிடத்திலிருந்தே வேதங்கள் தோன்றின. வேதமுதல்வன்யானே - பிரணவமே எனது வாசகம். அகாரமானது ரஜோகுணத்துடன் நான்கு முகங்களையுடைய பிரமனாய்ச் சிருஷ்டியைச் செய்யும்; உகாரமானது ஸத்வகுணத்துடன் பிரகிருதியென்னும் யோனியாகிய விஷ்ணுசொரூபமாய் உலகத்தைரக்ஷிக்கும்; மகாரமானது தமோகுணத்துடன் உருத்திரனாகிய புருஷனாய் உலகத்தைச்சங்கரிக்கும். பிந்துவானது மஹேசுவரசொரூபமாய்த் திரோபவத்தைச்செய்யும். நாதமானது சதாசிவரூபமாய் எல்லாவற்றையும் அநுக்கிரகிக்கும். சதாசிவமூர்த்தியை நாதாந்தத்திற் சர்வகர்த்தாவாகவும் சர்வஜ்ஞனாகவும் சர்வேசனாகவும் நிர்மலனாகவும் பிரமாநந்தஸ்வரூபனாகவும் தியானிக்கவேண்டும். அகார உகார மகார பிந்து நாதங்களாகிய பஞ்சவர்ணங்களில் முறையே ஒன்றற் கொன்று மேம்பட்டன. ஸத்யோஜாதம் அகாரமும், வாமதேவம் உகாரமும், அகோரம் மகாரமும், தற்புருஷம் பிந்துவும், ஈசாநம் நாதமுமாகும். அகாரரூபியான ஸத்யோஜாத மூர்த்தியினின்று எட்டுக்கலைகளும், உகாரரூபியான வாமதேவமூர்த்தியின்று பதின்மூன்றுகலைகளும், மகாரரூபியான அகோரமூர்த்தியினின்று எட்டுக்கலைகளும், பிந்துரூபியான தற்புருஷமூர்த்தியினின்று நான்குகலைகளும், நாதரூபியான ஈசாநமூர்த்தியினின்று ஐந்துகலைகளுந் தோன்றும். மந்திரம் - யந்திரம் - தேவதை - பிரபஞ்சம் - குரு - சீடனென்னும் அறுவகைச் சாதனங்களால் என்னையறிந்து ஐக்கியாநுசந்தானஞ்செய்து கொள்ளவேண்டும். சமஷ்டிஸ்வரூபமான மந்திரத்தைச் சொன்னேன். அம்மந்திரமே யந்திரமாவதையும், அதன் மண்டலக்கிரமத்தையும் உனக்குச் சொல்லுகின்றேன்: ஆறு ஆதாரங்களுக்கு மதிதப்பட்டிருக்கு மென்னைத் தியானிக்கவேண்டியது. வைராக்கியமுடைய புருஷனே என்னை அவ்வாறு பாவிக்கவல்லவன். அவனுக்கே நான் விஷயமாவேன். ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமின்றி யென்னைப்பாவிக்கவேண்டும். என்னை அவ்வாறுணர்தற்கு, விரதம் சாந்தம் தவம் இந்திரியநிக்கிரகம் சௌசம் ஆசாரம் வேத வேதாங்க ஞானம் பிராமணத்துவம் விஷயவிரக்தி முதலிய குணங்களையுடையவன் சகல சாஸ்திரஞானத்தையும் யோகநிலையையும் உடைய உத்தமாசிரியனாகிய பதியை நமஸ்கரித்துச் சந்தோஷிக்கச்செய்து, சிவமாகவே பாவித்து, தன் மனநிலைமையை யறிந்துகொள்ளவேண்டியது. அவர தற்கிணங்கி அநுமதிகொடுப்பாராயின், பனிரண்டுதினங்கள் பாலை ஆகாரஞ்

செய்துகொண்டு, சமுத்திரக்கரை, நதி, மலை, சிவாலயம் முதலிய விடங்களிற் சுக்கிலபக்ஷத்துப் பஞ்சமி அல்லது ஏகாதசிகளில்,காலையில்ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்து, சுத்தமனசுடன் குருசந்நிதானமடைந்து வந்தித்து, நாந்திமுகத்தால் பிதுராயர்ச்சித்து, கண்டத்திற்குமேல் சௌளஞ்செய்துகொண்டு நகங்களைந்து ஸ்நானஞ்செய்து இருபத்தைந்து நாழிகைக்குமேல் பொரிமாவைப் புசித்து, மாலைக்கடனைமுடித்து ஔபாசனஞ்செய்து குருகாணிக்கை கொடுத்துக் குருவைப்பூசித்து ஓமத்திரவியங்களைக்கொண்டு தங்கள் சூத்திரத்திற் கூறியுள்ளபடியே பிரஜாபத்தியமென்னும் இஷ்டியை வேதமந்திரத்தினற் செய்து,வேதியருக்குத்தக்ஷிணை கொடுத்து, தான் அதுவரையிற் செய்துவந்த ஓமாக்கினியை ஆத்மாரோபணஞ்செய்யும் மந்திரங்கூறி, அன்னத்தையும் ஓமஞ்செய்து புருஷஸூக்த மந்திரத்தினல் ஓமாந்தஞ்செய்யவேண்டியது. அந்த அக்கினியில் வடதிசையில் தர்ப்பாசனத்தில் மரவுரி மான்றோல் முதலியன அணிந்து உட்கார்ந்து மௌனமாகக் காயத்திரியை மனோதிடத்துடன் விடிய ஐந்து நாழிகைவரையில் அப்பியசிக்கவேண்டும். பிராமமுகூர்த்தத்தில் அவ்விடத்தைநீங்கி ஸ்நானமுடித்துச் சருவைப்பசனஞ்செய்து விரஜாஹோமத்தை வாமதேவ மதத்தினலாவது சௌநகாதி மதத்தினலாவது செய்யவேண்டும். இவ்வாறு செய்வோன் கர்ப்பவாச கஷ்டத்தினின்றும் விடுபடுகிறன். ஓமத்தை முடித்துக் காலைக்கடன் கழித்து நித்தியாக்கினையை வளர்த்தி, அதனை யாத்மாரோபணஞ்செய்து, சூரியோதயமாகு மெல்லையும் காயத்திரியை ஜபித்து, உலகவின்பத்தை விடுத்துப் பிரணவத்தை யுச்சரித்து, சிகை உபவீதம் கடிசூத்திரம் முதலிய விவற்றை விலக்கிக் கிழக்கு முகமாகவாவது வடக்கு முகமாகவாவது சிறிது தூரஞ்சென்று [விரக்தி முற்றப்பெருவிடின் தண்டம் கமண்டலம் கடிசூத்திரத்தை யணைந்து கொள்ளலாம்] ஆசிரியரையடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவர் திருவடியிற் பக்தியோடு நிற்கவேண்டும். அப்பொழுது ஆசிரியர் விரஜாஹோமஞ் செய்துள்ள பஸ்மத்தையெடுத்து "அக்கினிரிதி" முதலிய மந்திரத்தால் உடல் முழுவதும் பூசி, நெற்றியில் திரிபுண்டரமணிந்து தேவியே இவன் தனது இதயத்தில் உன்னையும் என்னையும் தியானிக்கும் யோக்கியதையுடையனுகக்கடவன் என்று கூறி,அவரது வலதுகையைச்சீடனுடைய சிரமேல்வைத்து அவனது வலதுகாதிற் பஞ்சவர்ணுத்மகமான பிரணவ மந்திரத்தை அதற்குரிய ருஷி சகிதமாய் உபதேசிக்கவேண்டியது. மந்திர யந்திராதி ஷட்வித சாதனங்களால் அதனை யறிந்துகொண்டு குருவைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து தினந்தோறும் அவருக்குப் பணிவிடைசெய்ய வேண்டியது.

உமையே! அதன் பின்னர் அவன் என்னை யொருபொழுதும் மறவாது குருவினிடத்தில் ஞானுப்பியாசஞ் செய்யவேண்டியது, சமதமாதி குணங்களும் வேதசாஸ்திர ஞானமும் இராகத் துவேஷாதிகளினீக்கமும்

உடையவனுக்கு யதியென்னும் பெயரும் என்னை யுபாசிக்கும் யோக்கியதையும் உண்டாகும். இதய கமலத்தில் ஆதார சத்திமுதல் திரிதத்துவம் வரையில் அந்தராகாசத்தில் ஓமென்னும் ஏகாக்ஷர சொரூபமாகிய பிரமத்தையே தியானிக்கிறவன் என்லோகத்தை யடைந்து சிவஞானத்தைச் சம்பாதித்துச் சாயுச்சியத்தை யடைகிறான். மேலும் அவனநுஷ்டிக்க வேண்டிய நியமங்களாவன: காலையில் எழுந்து சுத்தபடிக ஒளிபோன்றவராயும், பரமசிவமாயும் உள்ளவராக மனதால் குருவைத் தியானித்து சோடசோபசாரங்களுடன் அஞ்சலியஸ்தனாய் அவர் சந்நிதானஞ்சென்று அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, நான் உதயமுதல் மாலைவரையிற் செய்யுஞ் செயல்களையெல்லாம் சந்நிதானத்துப் பூஜையாகப் பாவித்து எனக்கநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, அவரநுக்கிரகத்தைப்பெற்று, ஜிதேந்திரியனாய்ப் பரிசுத்த தலத்தில் திவ்யாசனத்திலிருந்து, மூலாதி பிரமரந்திரபரியந்தம் பிரணவத்தை உச்சரித்து, சிரசோடுகூடிய பிராணாயாமத்தால் தேகத்தைச் சுத்தஞ்செய்து, திருணத்தைப் பூமியிலிட்டு மலஜலங்களைக்கழித்து, ஜலசமீபஞ்சென்று சற்று விலகியிருந்து சௌசஞ்செய்ய வேண்டியது. கைகால்களைச் சுத்தஞ்செய்தபின் ஆசமனஞ்செய்து பிரணவ தியானமுள்ளவனாய் மௌனத்தோடு வடக்குமுகமாய்ப் பழுத்த மாவிலை முதலியவற்றால் தந்ததாவனஞ்செய்தும் அமாவாசை ஏகாதசி முதலிய நாட்களில் பன்னிருமுறை வாய்க்கொப்பளித்து முகத்தைப் பரிசுத்தஞ் செய்தும் இருமுறை ஆசமனியஞ்செய்து, நெல்லிக்காயளவு மண்ணைக் கொண்டு கைகால்விளக்கி, அருணோதயகாலத்தில் தேகமுழுதும் மண்ணைப் பூசி முதலில் ஸ்நானஞ்செய்து; பின்னர் என்னையும் குருவையும் தியானித்து ஸ்நானஞ்செய்யவேண்டியது.

தேவி! பின்னர் ஜலத்திலிறங்கிச் சங்கமுத்திரையை யெழுதி, பிரணவத்தால் பன்னிரண்டுமுறை ஸ்நானஞ்செய்து கரையேறி, கௌபீனம் பரிசுத்தஞ்செய்து ஆசமனியஞ்செய்து பிரணவத்தால் தேகந்துடைக்கும் வஸ்திரத்தைப் புரோக்ஷித்து முதலில் முகந்துடைந்து, சிரமுதல் பாதம் வரை நன்றாய்த்துடைத்து, குருசந்நிதானத்தில் வந்து மௌனமாய்ச் சுத்தமாயிருந்து, புது அரைஞாண் பூண்டு கௌபீனந்தரித்து இருமுறை ஆசமனியஞ்செய்து ஜலக்கரைசென்று விபூதியை ஸத்தியோஜாத மந்திரத்தால் எடுத்து "அக்கினிரிதி" என்னும் மந்திரத்தாற் தூளனஞ்செய்து "ஆபோவா" வென்னும் மந்திரத்தால் மானசிகமாய் ஜலம் புரோக்ஷித்து "ஓமாபு" வென்னும் மந்திரத்தாலும் "மானஸ்தொக்க" மென்னும் மந்திரத்தாலுங் குழைத்து சிரம், நெற்றி மார்பு தோள் நாபி முதலிய தானங்களில் ஈசானதிமந்திரங்களால் திரிபுண்டரந்தரித்து பிரணவத்தால் தேக முழுதும் தூளனஞ்செய்து கையலம்பி, இரண்டாமுறை பஸ்மத்தை யெடுத்து மேற்சொன்ன மந்திரங்களாலேயே குழைத்து, "திரியாயுஷம் திரியம்பகம்" என்னும் மந்திரத்தைப் பிரணவத்துடன் ஜபித்து, சிரம் நெற்றி

மார்பு தோள் நாபி கை சந்தி இவ்வாறு ஸ்தானங்களினும் யதாக்கிரமமாய்த் தரித்துக் கையலம்பிப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் குருவைத்தியானிக்க வேண்டியது. (இதில் முதலிற் சொல்லியது தூளனமும் பின்னர் சொல்லியது திரிபுண்டரமுமென்க). ருஷிசந்தசுகளோடுகூடி யதோக்தமான ஆறு பிராணாயாமங்களைச்செய்து பிராணவாயுவையடக்கி இந்திரிய துவாரங்களிற் பிரணவத்தால் மும்முறை தொட்டு ஆசமனியஞ்செய்து, ஓங்கார சொரூபியான ஈஸ்வரனைத் தியானித்துச் சூரியமண்டல மத்தியில் சர்வ தேஜோமயமாகியும் பரமாகியும் எட்டுக்கரங்கள் நான்கு முகங்களுடன் அர்த்தநாரீஸ்வர சொரூபமாயும், சர்வாலங்கார சர்வாச்சரியங்கட்கிருப்பிடமாயும் இருக்கின்றவனுக்கு மூன்றுமுறை அர்க்கியங்கொடுத்து நூற்றெட்டுமுறை ஜபஞ்செய்து, பன்னிருமுறை தர்ப்பனஞ்செய்து மறுபடி ஆசமனியஞ்செய்து, ருஷியாதி கிரமங்களுடன் மும்முறை பிராணயாமத்தைச்செய்து மௌனமாய்ப் பூஜைபண்ணுமிடஞ்சென்று அங்குகாலலம்பி இருமுறை ஆசமனியஞ்செய்து பூஜையிடத்தில் வலதுகாலை முதலில் எடுத்து வைத்துப் பின்னர் சென்று, விதிப்படி மண்டலத்தைச் செய்ய வேண்டும்.

பார்வதி பரமசிவ ஸம்வாதமுறைத்தது

முற்றிற்று.

நான்காவது

பஞ்சாவரண பூஜாமண்டலமுரைத்த அத்தியாயம்.

முனிவர்காள்! பரிசுத்ததலத்தைக் கந்தபுஷ்பங்களால் பூசனை செய்து அலங்காரமாகிய பந்தலொன்றமைத்து அதன்கீழ் இரண்டுமுழ அகலநிகளத்திற்குக் கோமயங்கொண்டு மெழுகி, ஓலையைக்கொண்டு பதின்மூன்று பாகமாகக்கிழித்து, மண்டலத்தின் கீழ்ப்பக்கத்திருந்து மேல்முக நோக்கி முன்செய்த பதின்மூன்று கீறலையும்ஒவ்வொன்றைப்பதின்மூன்று கூறுக நூற்றறுபத்தொன்பது கூறுக்கி, மத்தியகூறைத் தாமரைப்பொருட்டுப்போலாக்கி அதன் சுற்றிலும் இதழுள்ளனபோல எட்டுப்பாகஞ்செய்து, அதன் நுனி நீலவர்ணமாகவும் அடிவெண்ணிறமாகவும் பொகுட்டு மஞ்சணிறமாகவு மிருக்கச்செய்யவேண்டும். மேற்கண்ட எட்டுப்பாகத்தின் தக்ஷிணபாகத்துள்ள இதழை ஆதியாகக்கொண்டு பிரதக்ஷிணகிரமத்தில், ஒன்று கறுப்பும் மற்றொன்று பொன்னிறமாகவும் மாறிவர நிறங்களமைக்கவேண்டியது. அன்றியும் பொகுட்டின் நடுவில் பிரணவாக்ஷரமெழுதியிருக்கவேண்டும். இவ்வகைய பீடத்தின்மேற் பரமேசனை அமைக்க வேண்டும். அவர்மேல் அமரேசனையும் மகாகாளனையுமெழுத வேண்டும். இவ்விருவுருவங்களின் சிரசில் தண்டமொன்று வரையவேண்டும். மேற்கண்ட பீடத்தை நீலவர்ணமாகவும் பரமேசனைப் பொன்னிறமாகவும்

அமரேசனையும் மகாகாளனையும் முறையே இரத்தநிறமாகவுங் கருநிற மாகவும், தண்டத்தைப் புகைநிறமாகவும், அத்தண்டத்தின்மேல் சிவபெரு மானைப் படிகநிறமாகவும் வரைந்து, சத்தியோஜாத மந்திரத்தினால் இரத்த மயமான வட்டஞ்செய்ய வேண்டியது. இதற்கு அஷ்டகோணங்களுண்டு செய்து, நான்கு மூலைகளில் நான்கு துவாரஞ்செய்து, அக்கினி திக்கில் மஞ்சள் நிறமாக எட்டிதழ்களுள்ள தாமரையொன்றெழுத வேண்டும். அம்மலர்க்கிடையே பொன்னிறப் பொகுட்டொன்றமைக்க வேண்டும். இவ்வகைய பொகுட்டின் மத்தியில் ஹகாரமெழுதியிருக்கவேண்டும். நிருதி திக்கில் முன்போந்தவாறே மலரும் பொகுட்டுஞ்செய்து மத்தியில் ஸ வென்னுமெழுத்தெழுத வேண்டும். அடுத்த பொகுட்டில் உகர ஊகா ரங்களும் அதற்கடுத்த தளத்தின் பொகுட்டில் ஔரமும், ஈசானதிக்கில் முன்போல மலரும் பொகுட்டு மெழுதி, அதன் மத்தியில் ம கவென்னு மெழுத்தெழுதி அதற்கு உகாரஞ்சேர்த்து மத்தியில் விந்துவையெழுதி அதன் வெளிப்புறத்தில் ஐந்து கோணங்கள் செய்து அதன் மத்தியிலுள்ள பொகுட்டை இரத்தமயமாகவும் பொன்மயமாகவுஞ்செய்தும், இதழ்களைச் செந்நிறமாகவும், அதைச்சுற்றிலும் கருநிறமாகவுமாக்கி, அதன்சுற்றி லும் மீண்டும் வெண்ணிறமுண்டாக்கி இதன் கிழக்குப்பக்கத்தில் ஆறு கோணங்களுடன் கருநிறத்திலும், தென்புறத்தில் முக்கோணத்துடன் இரத்தநிறத்திலும், உத்தரபாகத்தில் திரிகோணத்துடன் வெண்ணிறத் திலும், மேல்பாகத்தில் பொன்னிறமாகவும் உண்டாக்கி, நான்குமூலை களிலும் நான்கு விந்துவையெழுதி, உத்தரதிக்கில் உகாரமும் மேல்புறத் தில் மகாரமும் பூர்வபக்கத்தில் அகாரமும் அமைக்கவேண்டியது. இவ்வாறே அக்கினிதிக்குமுதல் மற்றதிக்குகளுக்கெல்லாம் அமைத்துக் கொள்ளவேண்டியது. [இதை விளக்கமாகக் குருமூர்த்தத்தானறிக.] இவ்வி தமாக மண்டலத்தையெழுதி, சூரியனைப்பூசைசெய்பவன் பிரமத்தையறிய யோக்கியதை யுடையவனாகிறான் என்று கூறினார்.

பஞ்சாவர்ண பூஜாமண்டலமுரைத்தது

முற்றிற்று.

ஐந்தாவது

பஞ்சாவரண பூஜாவிதியும்
அங்கநியாஸ கரநியாஸமுமுரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! மேல்போந்த அத்தியாயத்தில் விரித்த மண்டலத் தின் தென்றிக்கில் வடக்குமுகமாகப் புலித்தோலில் ஜலந்தெளித்து அதன்மேலுட்கார்ந்து "சக்திகமலாய" என்னு மந்திரத்தை நமவென்ப தோடு கூட்டிப் பன்முறை தனக்குக் கூடுமான அளவு ஜபிக்கவேண்டும். அதன்பின்னர் பிரணவபூர்வமாகப் பிராணாயாமத்தை விதிப்படி செய்து

"அக்கினிரிதி" என்னு மந்திரத்தினல் விபூதியைத்தேகமுழுதும் தூளனஞ் செய்து குருவைநமஸ்கரித்து மண்டலஞ்செய்யவேண்டியது. எவ்வாறெனில்: நான்குபுறம் சதுரமாகவும் மத்தியில் திரிகோணமாவும் அதற்குள் விருத்தமாகவுஞ்செய்து ஓமென்னும் மந்திரத்தினல் பீடஞ்செய்து சங்கம் வைத்து அதில் நீர்நிரப்பி, பரிமளபுஷ்பங்களாற் பிரணவத்துடன் அருச்சனைசெய்து பிரணவத்தைமீண்டும் ஜபித்து ஏழுமுறை ஜலந்தெளித்து, தேனுமுத்திரைகாட்டவேண்டியது. மீண்டும் பிரணவத்தாற்புரோக்ஷித்து, சங்கமுத்திரைகாட்டி அஸ்திரமந்திரத்தினல் தன்னையும் கந்தபுஷ்பாதி பூஜாத்திரவியங்களையும் புரோக்ஷிக்கவேண்டும். மேலும் பிராணயாமத்தை விதிப்படி மூன்றுமுறை செய்து ருஷியாதிகிரமங்களைச் செய்யவேண்டியது. அதன் விபரத்தையு மெடுத்துக் கூறுகின்றேன். மந்திரத்தின் பெயர் ஸௌரம். ருஷிதேவபாகரென்பார். காயத்திரியெனும் சந்தசு எழுத்தின் கணக்கு. தேவதை சூரியமகேசுவரராவர். ஹ்ரா முதலிய ஆறு அக்கரங்களைச்சபித்து அங்கநியாச கரநியாசங்களைச் செய்யவேண்டியது. முன்னெழுதிய சக்கரத்தில் அக்கினிமூலையிலுள்ள பதுமத்தில் அக்கினி மந்திரத்தினல் ஜலந்தெளித்து, பிரபூதம், விமலம், சாரம் என்னுந்தேவதைகளை ஆவாகனஞ்செயது, காலாக்கினிருந்திரரையும் ஆதார சத்தியையும், அநந்தரையும், பிருதிவியையும், இரத்தினதீபத்தையும் அதற்குமேல் ஆவாகனஞ்செய்து, மாநசிகமாய் நவரத்தின கசிதமான கிரகமும் அதனருகே விருக்ஷங்களும் உத்தியானவனமுமிருப்பதாகப் பாவித்து, தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியமென்னும் நான்குவகையுங்கொண்டு அருச்சித்தும், பின்னர் அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியமென்னும் நான்கால் அருச்சிக்கவேண்டும். அம்மண்டலத்திலேயே மாயையைக்கீழ்ப்பீடமாக்கி விதானத்தை ஞானத்தால் மூடி அதனல் ராஜஸதாமஸஸாத்விக குணங்களை யாவாகனஞ்செய்து பூர்வதிக்குமுதல், தீப்தை சூக்ஷமி ஜயை பத்ரை விபூதி விமலை அமோகை வைத்யுதை முதலிய ஆவரண சத்திகளைச்சுற்றிலும்ஆவாகனஞசெய்வதுடன் பிரம விஷ்ணு ருத்திரர்களையும், அந்தராத்மாவையும், ஞானரூபமான பரமாத்மாவையும் ஆவாகனஞ்செய்து, யோகபீடத்தை வேதவிதிவழி யருச்சனைசெய்து அதன்மேல் மூலமந்திரத்தினல் ஆதாரசத்தியை ஸ்தாபித்து, பிராணயாமஞ்செய்து இடகலையால் சுவாசத்தை யுட்கொண்டு பிங்கலையால் வெளியிட்டு, புஷ்பாக்ஷதைகளைக்கொண்டு செந்தூரம்போன்ற மேனியுடைய அர்த்தநாரீசுவரரை உருத்திராக்கமாலிகை, பாசம், கட்வாங்கம், கபாலம், அங்குசம், பங்கயம், சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களும், சதுர்முகங்களும் பன்னிரு கண்களும் உடையராய், மாநசிகமாய் இருதயகமலத்தில் ஆவாகனஞ்செய்து ஹ்ராம் ஹ்ரீம் என்னும் பீஜாக்ஷரங்களால் அர்ச்சிக்கவேண்டியது. அதன்மேல் பிரகாசசக்தியுடன் சூரியனை ஆவாகனஞ்செய்து தேனு முதலிய முத்திரைகளைக் காட்டி, ஹ்ராம் ஹ்ரீம் என்னு மந்திரத்தினல் பஞ்சோபசாரஞ்செய்து மூலமந்திரத்தாற் பூசிக்கவேண்டும். முன்

கண்ட கமலதளத்தின் இதழ்களில் அக்கினி ஈசானன் நிருதி வாயுவாகிய இவர்களை முதலாவரணத்தி லாவாகனஞ்செய்து பூசனைசெய்து, இரண்டாவது ஆவரணத்தில் பூர்வாதி திக்குமுதல் ஆதித்தன் பாஸ்கரன் பானு ரவி யென்னும் சூரியர்களை நாமபேதங்களா லாவாகனஞ்செய்து பூசிக்கவேண்டும். மூன்ருவது ஆவரணத்தில் ஈசானதிக்குமுதல் அர்க்கன் பிரமன் உருத்திரன் விஷ்ணு ஆகிய நால்வரைப் பூசிக்கவேண்டும். சந்திரன் அங்காரகன் புதன் பிரகற்பதி சுக்கிரன் சனி ராகு கேது முதலியவர்களைப் பூர்வதிக்குமுதல் சுற்றும் ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டியது. அன்றி இன்ஞெருவாறு கூறுவேன் கேட்பாயாக :

முதலிற் கூறியவாறே பிரதமத்திற் செய்து அதன்பின் இரண்டாம் ஆவரணத்தில் துவாசதாதித்தர்களையும் மூன்ருவது ஆவரணத்திற் சூரியன் நீங்க எட்டுக்கிரகங்களையும் ஆவாகனஞ்செய்தும், கடைசியில் கங்கையாதி புண்ணியதீர்த்தங்களையும், ருஷீஸ்வரர்களையும், தேவர் கந்தருவர்களையும் ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டியது. இவ்வகைய மூன்று ஆவரணங்களுக்குள் வேதமயமான குதிரைகளையுடைய சூரியனைப் பூசித்து அதனருகிற் சதுரமான மண்டலமொன்றெழுதி, குருணி நீர்கொள்ளக்கூடிய குடத்தில் சுகந்த நீர் நிரப்பி, சந்தநத்தா லருச்சனை செய்து முழந்தாளிட்டு நமஸ்கரித்து, சிந்துரவர்ணுயநம: சுமண்டலாயநம: சுவச்சராபரணுயநம: என்று தோத்திரஞ்செய்து, புஷ்பம் அக்ஷதை குங்குமம் வாசனைத்திரவியங் கலந்த நீரைப் பொற்பாத்திரத்திலெடுத்து மேற்கூறிய மந்திரங்களாலேயே துதித்து அர்க்கியத்தை யங்கீகரித்து எனக்கநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டியது. சாம்பாய சிவாய ஸகணுயஆதிஹோதவேருத்ராயவிஷ்ணவே பிரம்மணேசூரியமூர்த்தயேஎன்னும் நாமங்களை நமோந்தமாய்க்கூறி நமஸ்கரிக்கவேண்டும்: கையைச் சுத்தஞ்செய்து முன்சொன்னமந்திரங்களை யுச்சரித்து விபூதி தூளனஞ்செய்து மூலமந்திரத்திஞல் கரநியாசஞ்செய்து பஞ்சோபசாரத்தாலருச்சித்து ஓம் குருவேநம: என்றருச்சனைசெய்யவேண்டியது. பஞ்சாத்மகவான பிரணவத்தைப் பஞ்சமசுவரத்துடன் கூட்டியும், இருபுறத்திலும் ஔகாரங் கூட்டியும் (க்ஷௌ) உச்சரித்து இருகரம் புறம், இருதொடை முதலியன படியும்படி, குரு, கணபதி, துர்க்கை, க்ஷேத்திரபாலகன் முதலியவரை நமஸ்கரித்து, பிரணவ பூர்வகமாய் ஹிருதய நியாசஞ்செய்து அதற்கு மேல் உபஸ்தானஞ்செய்து, "அபஸர்ப்பந்து" என்னுமந்திரத்திஞல் பிரணவபூர்வமாய் அஸ்திரமந்திரத்துடன் அருகேயுள்ள விக்நகரானவர்களையும் ஆகாயத்திலுள்ளவர்களான யக்ஷராக்ஷசர்களையும் விலக்கி, திவ்யாசனத்திலுட்கார்ந்து பிராணவாயுவையடக்கி பிரமநாடியிஞல் அமிசமந்திரத்தால் ஜீவசைதன்னிய சொரூபியான பரமேசுவரனை இதயத்தில் சித்துருவமாய்த் தியானித்து, ரேசககிரமத்திஞல் பிராணுயாமஞ்செய்து நூற்றுப் பன்னிரண்டு பீஜாட்சரங்களால், வாயு அக்கினி, வருணன் முதலிஞேர்

மந்திரத்தாலும் தத்தமது வேதமந்திரத்தினாலும் பிராணப்பிரதிஷ்டை செய்து ஏகாக்ரசித்தனாய் மாதுருகாக்ஷரத்தைப் பிரணவத்துடன் ஆவாஹனஞ்செய்து பூசிக்கவேண்டும்: மீண்டும் பிராணாயாமஞ்செய்து ருஷிக்கிரமமாய் ருஷிகளைத்தியானிக்கவேண்டியது.

தேவி! இதற்கு ருஷி பிரமன், சந்தஸ் தேவிகாயத்ரம், தேவதை யான். பீஜம்-அகாரம், சக்தி-உகாரம், கிலகம்-மகாரம், என்றுணர்ந்து ஜபித்து மோக்ஷார்த்தத்தில் விநியோகிக்கவேண்டியது. இரு கரங்களின் தர்ஜனிகளால் அங்குஷ்டங்களைத் தொட்டு ஓங்காரபூர்வமாகவும் நமோந்தமாகவும் அகாராயவென்று [ஓம் அகராய அங்குஷடாப்பியாம் நமஃ வென்றும்,] அங்குஷ்டங்களால் தர்ஜனிகளைத் தொட்டு ஓம் உகராய தர்ஜநீப்பியாம்நமஃ வென்றும், மத்தியமங்களைத் தொட்டு ஓம் மகாராய மத்தியமாப்பியாம்நமஃ வென்றும், அநாமிகைகளைத்தொட்டு ஓம் பிந்தவே அநாமிகாப்பியாம்நமஃ என்றும், கனிஷ்டிகைகளைத்தொட்டு ஓம் நாதாய கனிஷ்டிகாப்பியாம்நமஃ என்றும், அகார வுகார மகார நாதபிந்துக்களைச் சேர்த்து இருகரங்களையும் மேலுங்கீழுந் தடவி, கரதலகரப்ருஷ்டாப்யாம் நமஃ என்றுஞ் சபித்துக் கரநியாஸ முடித்து, அம் பிரம்ஹாத்மனேஹ்ருதயாயநமஃ என்றும், உம் விஷ்ணுவாத்மனே சிரசேஸ்வாஹா என்றும், மம் ருத்ராத்மனே சிகாயவஷட் என்றும், அம் பிரம்ஹாத்மனே கவசாய ஹூம் என்று இருதோள்களையுந் தொட்டும், உம் விஷ்ணுவாத்மனே நேத்திரத்திரயாய வெள்ஷட் என்றும், மம் ருத்திராத்மனே அஸ்திராய பட் என்றும், வியாஹ்ருதிகளைப் பிரணவாந்தமாகத் (திக்பந்த ஃ என்று) திக்பந்தஞ்செய்து, பின்னர் முகமுதலிய அவ்யவங்களில் ஈசானாதிகலைகளை விநியாஸஞ்செய்யவேண்டியது. அதாவது சிரம் முகம் இதயம் குய்யம் பாதமென்னுமிடங்களில் ஐந்து ஈசான கலைகளை நியாயஞ்செய்து, நான்குதிசைகளிலும் தற்புருஷாதி நான்குமுகங்களையும் ஆவாஹநஞ்செய்து, இதயம் கண்டம் தோள் நாபி வயிறு ப்ருஷ்டம் மார்பு என்னுமிடங்களில் அகோர கலைகள் எட்டையும் நியாஸஞ்செய்து, குதம் ஆண்குறி தொடை முழங்கால் முழங்காலின் கீழ்ப்பிரதேசம் புஷ்டம் இடைபக்கம் என்னுமிடங்களில் வாமதேவ கலைகள் பதின்மூன்றையும் நியாஸஞ்செய்து, பாதம் கை பிராணன் சிரம் தோள் என்னுமிடங்களில் ஸத்யோஜாத கலைகளெட்டையும் நியாஸஞ்செய்து, இவ்வகையாக சிவகலைகளில் முப்பத்தெட்டினையும் நியாஸஞ்செய்து முடித்தபின்னர் இதில் விடுபட்ட அவயவங்களிலும் பிரணவமந்திரத்தினால் நியாஸமுடித்து, தேவியினுடைய ஹம்ஸமந்திரத்தினாலும் நியாஸஞ்செய்யவேண்டியது.

பஞ்சாவர்ண பூஜாவிதியும் அங்கநியாஸ கரநியாஸமுமுரைத்தது

முற்றிற்று.

ஆருவது

பூஜாமந்திரமும் சதாசிவரூபமுமுரைத்த அத்தியாயம்.

சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறுகின்ருர் : தேவி! தான் உட்கார்ந்திருக்கும் பீடத்தின் இடப்பாகத்திற் சதுரமாக ஓர் மண்டலஞ்செய்து அதில் ஓரிடத்தில் ஆசனங் கற்பித்து அஸ்திரமந்திரத்தாற் சங்கத்தை ஸ்தாபித்துப் பிரணவத்திஞல் அதனை யர்ச்சித்து, சுத்த ஜலத்தை யதில் நிரப்பி, கந்தபுஷ்பாதிகளாற் பிரணவமந்திரத்தைக் கொண்டர்ச்சித்து ஏழுமுறை பிரணவத்தை ஜபித்து, தேனுமுத்திரையைக் காட்டிப் பின்னர் சங்க முத்திரையைக்காட்டி, அம்மண்டலத்தினிடையே அர்த்த சந்திராகாரமாயும் அதன் மத்தியில் திரிகோணமாயும் அதன் மத்தியில் அறுகோணமாயும் எழுதி, அதிற் பீடத்தின்பேரில் அருக்கிய பாத்திரத்தை வைத்து அதில் தருப்பை எள் நெல் யவை அக்ஷதை கந்தம் புஷ்பம் வெண்கடுகு விபூதி இவற்றைப்போட்டு, ஸத்தியோஜ மந்திரத்திஞல் அபிமந்திரித்து, முற்கூறிய படியே அங்கநியாயஞ் செய்து கவச மந்திரத்தாற் கவசஞ்செய்து அஸ்திர மந்திரத்தால் அவகுண்டம் [மூடுதல்] செய்து, தேனுமுத்திரை காட்டி, அதன் பின்னர் அந்தச் சங்க தீர்த்தத்தை யெடுத்து அஸ்திர மந்திரத்தாற் பிரணவபூர்வமாய்ப் பூஜாதிரவியங்களையுந் தன்னையும் மண்டலத்தையும் புரோக்ஷணஞ்செய்து, முன் எழுதியுள்ள பதுமத்தின் ஈசானபாகத்தில் ஓம் குர்வாஸநாயநம: என்று குருவுக்கு ஆசனங்கற்பித்து, குங்குருப்யோநம: என்று குருவை வரதாபய அஸ்தங்களும் இருநேத்திரங்களும் சிவரூபமும் தென்முகமும் படிகம் போல நின்மல சரீரமும் பிரசன்ன முகமுங்கொண்டு எழுந்தருளியிருப்பதாகப்பாவித்து, கிரமப்படி கந்த புஷ்பாதிகளால் அர்ச்சித்து, பதுமத்தின் நிருதிபாகத்தில் விநாயகமூர்த்தியைக் "கணநாந்த்வா" என்னு மந்திரத்தாற் செந்த தேகமும் சர்வாபரணமும் பெரியசரீரமும் பாசம் அங்குசம் தந்தம் மோதகம் இவற்றை யேந்தியகரங்களும் யானை முகமுமுடையவராய் விக்கினங்களை யெல்லாம் விலக்கும் கணபதியே யென்று ஏகமனதாய்த் தியானித்து, கந்தபுஷ்பாதிகளால் யதாவிதியாக அர்ச்சித்து, வாழை மா முதலியபழங்கள் தேங்காய் மோதகம்முதலியன நிவேதித்து, நமஸ்கரித்து, அப்பதுமத்தின் வாயுதிசையில் ஆசனமொன்று கற்பித்து ஸ்கந்தமூர்த்தியை ஸ்கந்தகாயத்திரியைப் பிரணவத்தோடு கூட்டி ஆவாஹனஞ்செய்து உதயசூரியன் போன்ற காந்தியும் மயில்வாகனமும் சதுர்ப்புஜமும் திவ்விய தேகமும் மகுடஹாரங்களும் வரதாபயஹஸ்தமும் உயர்த்திய சேவற்கொடியுந்தரித்த இருகரங்களுமுடையராய்ப் பாவித்துக் கந்தபுஷ்பாதிகளாற் கிரமமாகப்பூசித்து நமஸ்கரித்து, அப்பதுமத்தின் கிழக்குவாயிலின் தென்றிசையில் ஆசனங் கற்பித்து, அந்தப்புறத்தலைமையும் தங்கமலை போன்ற சரீரமும் சர்வாபரண பூஷிதமும் சந்திரசூடமும் அழகும் திரிநேத்திரங்களும் சதுர்ப்புஜமும் சூலம் மான்மழு பொற்பிரம்புகளைத்தரித்த

கோலமும் சிங்கம்போன்ற உக்கிர முகமுமுடைய நந்திதேவரை ஆவாஹனஞ்செய்து பூசித்து, அப்பதுமத்தின் கிழக்குவாயிலின் வடதிசையில் மருத்தின் மகளாகியும் நந்திதேவராகிய கணவரைப் பாதசேவைசெய்து கொண்டிருப்பவருமாகிய சுயசையைவிதிப்படி பூசித்து, அதன் பின்னர் அப்பதுமத்தைச் சங்கதீர்த்தத்தினுல் பிரணவமந்திர மோதிப் புரோக்ஷணஞ்செய்து, ஆதாரசத்தியைச் சாமவர்ணமாகப் பாவித்துத்தியானித்து அந்த ஆதாரசத்தியின்பேரிற் குண்டலாகிருதியாயும் வெண்ணிறமாயும் பரந்தபடமும் அந்தப்படத்தால் ஆகாயத்தையளாவுவதாயும் ஆதிசேடனை ஸ்தாபித்து, அவ்வனந்தன்பேரில் ஓர் சிங்காதனம் நிர்மாணஞ்செய்து தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியமென்னு நான்குங் கால்களாகவும் ஆக்கினேயாதி மூலைகளில் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியமென்னும் நான்கும் மூலைகளாகவும் பாவித்து, அச்சிங்காதனம் இரத்தினமயமானவிதானங் கட்டப்பட்டதாகச்செய்து, அந்தச்சிங்காதனத்தின்பேரில் தாமரைக்கொடி படர்ந்து இலைகள் முள்ளுகள் முதலியவற்றைப் பொருந்திய ஓர் மலர் பல இதழ்களோடும் அதனிடையே மொட்டும் பாவித்து, இதழ்களிற் சித்திகளையும், கேசரங்களிற் சத்திகளையும், அஷ்டப்பிரதான தளங்களில் * வாமதேவாதி உருத்திரர்களையும், கர்ணிகையில் வைராக்கியத்தையும், விதையில் * நவசத்திகளையும், கிழக்கிற் சிவாத்மகமான தர்மத்தையும், நாளத்திற் சிவஞானத்தையும், கர்ணிகையின்பேரில் அக்கினி சந்திரன் சூரியன் என்னு மூன்று மண்டலங்களையும், அதற்கப்புறம் சிவதத்துவத்தை எல்லா ஆசனங்களுக்கும் உச்சியிற் பலவித புஷ்பங்களோடும் ஆகாயமயமான சரீரத்தோடும் விளங்குகிறதாகத் தகரவித்தையால் ஆவாஹனஞ்செய்யவேண்டும். ஆதாரசத்திமுதல் சுத்தவித்தியாதத்துவம் வரையிலுள்ள அவருடைய சொருபத்தைப் பிரணவபூர்வமும் நமோந்தமுமாக வுச்சரித்துப் பூசிக்கவேண்டியது. பூஜாக்கிரமம் இவ்வகையது.

பார்வதீ! இன்னும் தேகம் முகம் கலை இவற்றின் பேதங்களைச் சொல்லுகின்றேன். என்னைப்பூசிக்கும் விஷயத்தில் முத்திரைகளைத் தெரிந்துகொண்டு புஷ்பாஞ்சலிகளால் ஸத்தியோஜாத மந்திரந் தொடங்கி ஸதாசிவோம் என்பதுவரையில் உச்சரித்து அப்பொழுது மூலாதாரத்தினின்று பன்னிருசக்கரங்களைப் பிளந்துகொண்டு பிரமரந்திரம் வரையில் உண்டாகும் நாதத்தை ஓங்காரகோசரமாகி யானைத்தியானிக்கவேண்டியது. சுத்தஸ்படிகம்போல நிர்மலராயும், ஆநந்தரூபியாயும், நிஷ்களராயும், அக்ஷரரூபியாயும், சர்வலோககாரணரூபியாயும், சர்வலோக மயனையும் பராத்பரனையும், உள்ளும்வெளியும் விளங்குபவனையும், அணுவுக்கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும், பக்தர்கட்கு எளியனையும், ஈசுவரனையும், நாசரகிதனையும், பிரமேந்திரவிஷ்ணு ருத்திராதிகளுக்கு அரியனையும், வேத

* இவ்விரண்டும் வாயுசங்கிதையில் நன்குவிளங்கும்.

வேதாந்தசாரமாயும், வித்வான்களுடைய வாக்குக் கெட்டாதவனுயும், அப்பிரமேயமாயும், ஆதிமத்தியாந்தரகிதனுயும், சமுசாரரோகிகளுக்கு மருந்தாயுமுள்ள என்னை மனப்பூர்வமாகப் பாவனுமாத்ரையாய் ஆவாஹனம் ஸ்தாபனம் ஸந்நிரோதம் நிரீக்ஷணம் நமஸ்காராதிகளை மாநசிகமாகச்செய்யவேண்டியது. சதாசிவராயும், நிஷ்களராயும், சுத்தஸ்படிகமேனியராயும் குளிர்ந்தபார்வையும் மின்னற்கொடிபோற் படர்ந்த ஜடாடவியும் புலியதளும் புந்நகையும் பதுமவதனமும் செந்தாமரை போன்ற கைகால் இதழ்களும் ஐந்துமுகமும் பத்துக்கரங்களும் சந்திரசூடமும் உள்ள மூர்த்தியைத் தியானிக்கவேண்டியது. அச் சதாசிவமூர்த்தியின் கிழக்குமுகமானது, தாமரைபோன்றதும் திரிநேத்திரங்களும், சந்திரனைத்தரித்த முடியையுமுடையது. தென்புறத்துள்ள முகத்தை, நீர்கொண்டமேகம்போன்ற கருநிறமுடையதும் செவந்த திரி நேத்திரங்களும் கோரப்பற்களும், கோரபார்வையும் துடித்த உதட்டுடனும் பாவிக்கவேண்டியது. வடபுறத்துள்ளது பவழம்போன்ற நிறமும், நெற்றியின் கறுத்த முன் தொங்கல்மயிரும் திரிநேத்திரங்களும், பிறையணிந்த முடியும் உடையதாகப் பாவிக்கவேண்டியது. மேல் நோக்கியதாயுள்ளதை சந்திரகாந்தியும், புந்நகையும் திரிநேத்திரங்களும் சந்திரபூடணமுமுடையதாகப் பாவிக்கவேண்டியது. படிககாந்தியும் சந்திரனைத்தரித்த முடியும் மலர்ந்த திரிநேத்திரங்களும் முடையதாக ஐந்தாவது முகத்தைப் பாவிக்கவேண்டியது. இவரை வடபுறத்தில் சூலம் பரசு வச்சிரம் கட்கமும், இடப்புறத்தில் பிநாகம் நாராசம் மணி, பாசம், அங்குசமுமுடையவராகப் பாவிக்கவேண்டும். முழந்தாள் முதல் கண்டம் வரையில் வித்தியாகலை பொருந்தியதாயும், அதுமுதல் நெற்றிவரையிற்சாந்திகலையோடும் அதற்குமேற் சாந்தியதீத கலையுடனும், ஈசானமகுடமும் தற்புருடமுகமும் அகோர இதயமும் வாமதேவ குஹ்யமும் சத்தியோஜாதபாதமும், முப்பத்தெட்டு கலைகளோடு கூடியவராயும், சர்வலோகத்திற்கும் உற்பத்திகாரணமாயும், ஈசானுதிபஞ்சபூதசொரூபமாயும், ஓங்காரமயமாயும், அம்சமயமாயும், பஞ்சாட்ர சடாட்சர சொரூபியாயும் ஷடங்க ரூபியாயும், ஷாட்குண்யபரிபூரணமாயும், உள்ளவராகத் தியானிக்கவேண்டியது.

தேவி! மனோன்மணியாகிய உன்னை எனது வாமபாகத்திற் பிரணவபூர்வமாய் "கௌரீமிமாய" என்னு மந்திரத்தினுல் ஆவாகனஞ் செய்து ஏகாக்கிரசித்தனுய்த் தியானிக்கக்கடவான். நீலோற்பலம்போன்ற திருமேனியும் பரந்த விழியும் பூரணசந்திரனைப்போன்ற முகமும் நீலநிறம்பொருந்திய சிறு மயிர்தொங்கப்பெற்ற நெற்றியும், சந்திரதாரணமும், பூரித்த தனபாரங்களும், நுண்ணிய இடையும் பீதாம்பரவாடையும், சர்வாபரண பூஷிதமும், திலதமணிந்த நுதலும், மணம்வீசும் பல மலர்களணிந்த அளகபாரமும் எனக்குச் சமானமான குணங்களும், சிறிது நாணத்தாற் குனிந்த திருஷ்டியும், வலதுகையிற் பொற்றாமரையுங்கொ

ண்டு திவ்யாசனத்தில் வீற்றிருப்பதாக உன்னையும் என்னையும் புநிதமான மனதுடன் பாவித்து சங்கஜலத்தால் பிரணவ மந்திரத்தைக்கொண்டு புரோக்ஷித்து அபிஷேகஞ் செய்யவேண்டியது. பவாயநமః என்று பாத்தியமும், வாமதேவாயநமః என்று ஆசமனீயமும், ஜேஷ்டாயநமః என்று யஜ்ஞோபவீதமும், ருத்திராயநமః என்று புநராசமனீயமும், காலாயநமః என்று கந்தமும், கலவிகரணாயநமః என்று அக்ஷதையும், பலவிகரணாய நமః என்று புஷ்பமும், பலாயநமః என்று தூபமும், பலப்பிரமதகாயநமః என்று தீபமும், பஞ்சப்பிரமமந்திரத்தாற் கரநியாசமுஞ் செய்து பிரணவத்தால் எனக்கும் உனக்கும் முத்திரைகளைக்காட்டி முதலில் என்னையருச்சிக்கவேண்டியது. இரண்டாவது உன்னை யருச்சிக்கையில் மேற்கூறிய மந்திரங்களை ஸ்திரீலிங்கமாகக் கூறிப் பஞ்சாவரணபூசையைச் செய்யவேண்டியது. கணபதி ஸ்கந்தர்களை முதலிற் பூசித்தபடியே மீண்டும் கந்தபுஷ்பாதிகளாற் பூசிக்கவேண்டியது. அதன்பின்னர் மண்டலத்தை நாற்புறத்திலும் அங்கநியாஸ கரநியாஸங்களுடன் பூசிக்கவேண்டியது. அத்தாமரையின் எட்டுப்பாகத்தின் பூர்வதிக்கிலுள்ள இதழில் அநந்தனையும் தக்ஷிணபாகத்திதழில் சூக்ஷ்மனையும், மேற்புறத்திதழில் சிவோத்தமனையும், உத்தரபாகத்துள்ளதில் ஏகநேத்திரனையும், ஈசானதிக்கிலுள்ளதில் ஏகருத்திரனையும், அக்னிதிக்கில் திரிமூர்த்தியையும், நிருதிதிக்கில் ஸ்ரீகண்டனையும், வாயுதிக்கிலுள்ளதில் சிகண்டீசனையும் இரண்டாமாவரணத்திற் பூசிக்கவேண்டியது. மூன்றுமாவரணத்திற் கிழக்குத்திக்கில் விரஷேசானனையும், இதற்கு வடபுறத்தில் நந்தியையும், இடதுபுறத்தில் மகாகாளனையும், தக்ஷிணபாகத்தில் பிருங்கிசனையும் இருபுறத்திலும்விநாயகரையும் மேற்புறத்தில் விருஷபனையும், வடபுறத்தில் பவன், சருவன் ஈசானன் உருத்திரன் பசுபதி உக்கிரன் பீமன் மகாதேவன் என்னு மிவர்களை "யோவேதாதௌ" என்னு மந்திரத்தாற் பூசிக்கவேண்டியது. தாமரைப்பொகுட்டின் பூர்வபாகத்தில் ஈசுவரனையும், தக்ஷிணபாகத்தில் விசுவேசனையும் உத்தரபாகத்தில் பரமேசனையும் மேற்குப்பக்கத்திற் சர்வேசனையும் பூசிக்கவேண்டியது. அக்கர்ணிகைக்குத் தக்ஷிணபாகத்தில் உருத்திரனை "ஆவோராஜா" என்னு மந்திரத்தாற் பூசிக்கவேண்டியது. அக்கர்ணிகையின் தளத்தின் பூர்வதிக்கிலுள்ளதிற் சிவபிரானையும், தக்ஷிணதிக்கிலுள்ளதில் அரனையும், உத்தரதிக்கிலுள்ளதில் மிருடனையும், மேற்பக்கத்திலுள்ளதிற் பவனையும், யதோக்தமாகப் பூசித்தும், அக்கர்ணிகையின் உத்தரபாகத்தில் விஷ்ணுவை "பிரதத்விஷ்ணு" என்னு மந்திரத்தாற் பூசித்தும், பூர்வதிக்கிலுள்ள பூர்வ தளத்தில் வாசுதேவனையும், தக்ஷிணதளத்தில் அநிருத்தனையும், வடபுறத்திற் சங்கர்ஷனையும் மேற்பக்கத்திற் பிரத்தியும்நனையும் பூசித்து ஆவாகனஞ்செய்யவேண்டும். அப்பதுமத்தின் மேற்பாகத்திற் பிரமதேவனை "ஹிரண்யகர்ப்பா" என்னு மந்திரத்தினால் ஆவாகனஞ்செய்தும், பூர்வபாகத்தில் ஹிரண்யகர்ப்பனையும், தக்ஷிணபாகத்தில் விராஜனையும், உத்தரதிக்கிற் புருஷனையும், மேற்புறத்தில்

காலனையும் பூசிக்கவேண்டியது. அப்பதுமத்தின் பூர்வதிக்குமுதலெட்டுத் திக்குகளிலும் முறையே திக்குப்பாலகர்களை அவர்கள் பீஜாக்ஷரமாகிய மந்திரங்களைக் கூட்டிப் பூஜிக்கவேண்டியது. எவ்வாறெனில் இந்திரனுக்கு "ஓம் அம் லாம் இந்திராயா" என்றும், அக்கினிக்கு "ஓம் அம் ராம் அக்னேயே" என்றும், இயமனுக்கு "ஓம் அம் மாம் யமாயா" என்றும், நிருதிக்கு "ஓம் அம் க்ஷாம் நிர்தியே" என்றும், வருணனுக்கு "ஓம் அம் வாம் வருணாயா" என்றும், வாயுவுக்கு "ஓம் அம் யாம் வாயவே" என்றும், குபேரனுக்கு "ஓம் அம் சாம் குபேராயா" என்றும், ஈசானனுக்கு "ஓம் அம் ஹாம் ஈசானாயா" என்றும் பூஜிக்கவேண்டியது. நிருதிதிக்கின் வடபாலில் பிரமனையும், ஈசானதிக்கின் வடபாலில் விஷ்ணுவையும் பூஜிக்கவேண்டியது. வெளியிலுள்ள ரேகையின் ஈசானதிக்கிற் சூலத்தையும் கிழக்கில் வஜ்ரத்தையும், அக்கினிதிக்கிற் பரசுவையும், தென்றிக்கிற் பாணங்களையும், நிருதிதிக்கிற் கட்கத்தையும், மேற்றிக்கிற் பாசத்தையும், வாயுதிக்கில் அங்குசத்தையும், வடபுறத்திற் பிநாகத்தையும், மேற்குமுகமாக க்ஷேத்திரபாலனையும் ஆவாகனஞ்செய்து பூஜிக்கவேண்டும். இவ்விதமாக ஆவாகனஞ்செய்த தேவர்களையெல்லாம் சமஸ்த ஆவரணங்களிலும் இருப்பதாகப்பாவித்துப் புஷ்பாஞ்சலியெடுத்துப் பிரதக்ஷிணஞ்செய்து பிரணவபூர்வமாய்ச் சிவநாமத்தா லருச்சித்து, கந்தாதிகளான சோடசோபசாரங்களாலும் பூசனைசெய்து, சுத்தமாய் நிவேதனத்தைச்சித்தஞ்செய்து பதார்த்தவகை பலகாரம், பழவகைகளுடன் நிவேதித்து ஆசமனீயங்கொடுத்து முன்போல அர்க்கியங்கொடுத்து, பரிசுத்தமாகிய தீர்த்தத்தையுட்கொள்ளும்படி பிரார்த்தித்து, தாம்பூலம் சமர்ப்பித்து, கர்ப்பூரநீராஞ்சனம் பண்ணுவதோடு எஞ்சிய பூஜைகளை முடித்து, சத்திரசாமரைகளால் உபசரித்து, தேவிதேவர்களாகிய இருவரையுந் தியானிக்கவேண்டியது. பரமசிவத்துக்குரிய பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுமுறை தியானிப்பதுடன் தேவிமந்திரத்தையும் ஜபித்து, எழுந்துநின்று புஷ்பத்தைக் கையிற்கொண்டு "யோதேவாநா" என்னு மந்திரத்தாலும், "யோவேதாதோ" என்னு மந்திரத்தாலும் மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து அப் புஷ்பத்தை மந்திரபுஷ்பமாகச் சமர்ப்பித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அடிக்கடி பிரதக்ஷிணஞ் செய்து திவ்யாசனத்தி லிருந்து சிவாஷ்டோத்தரங்களா லருச்சித்து "மகாதேவரே! அடியேன் செய்த பூசனை மந்திரத்தாலும் தந்திரத்தாலும் நியமனத்தாலும் யந்திரம் ஆவாகனம் திரவியம் சத்தி காலம் முதலியவற்றாற் குறைந்திருந்தபோதிலும் அவற்றை யதோக்தமா யங்கீகரித்து என்னை யாட்கொள்ளவேண்டுமென்று" பிரார்த்தித்து, சங்கதீர்த்தத்தாலும் தேவி தேவர்களிருவரையும் புரோக்ஷித்து, தேவியஷ்டோத்தரசத நாமங்களை ஜபிக்கவேண்டும். * ஆதியந்தசூனியரையும்,

* சிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிதாமகன், சமுசார வைத்தியன், சர்வஜ்ஞன், பரமாத்மாவென்னும் எட்டு நாமங்களோடு விளங்குகிறவராகிய பரமேசனைத் தியானிக்கவேண்டியது. இந்நாமங்களுக்கு இனி பொருள் சொல்கின்றேன்.

எப்போதும் பரிசுத்தமான ஆத்மாவோடிருப்பதாற் சிவமென்றும், சமஸ்த மங்களங்களைக்கொடுப்பதாற் சிவமென்றும் சிவதத்துவத்தையறிந்த பெரியோர்கள் யாவரும் உச்சரிக்கிறார்கள். மஹதாதி தத்துவங்களைக் காட்டிலும் சிரேஷ்டமானது பிரகிருதியெனப்படும். அப்பிரகிருதிக்கும் பரமாயும் புருஷராயு மிருக்கிறார் என்பர். வேதாதிகளிற் பரமேசனை சுவரூபமாயிருப்பதாக மேதாவிகள் சொல்கிறார்கள். ஆகையால் வேதாதிகளிலறியத்தக்க சொரூபர் வேதாந்தத்தி லமையப்பெற்றவர். அந்தப் பரமேசனே பிரகிருதியில் மறைந்தும் அதையே யநுபவித்தும் வருகிறார். அம்மறைந்திருக்கும் புருஷனிலுஞ்சிரேஷ்டமானவர் மகேசுவரனெனப்படுவார். சர்வமும் அவருக்கே யதீதமாயிருக்கிறது. அப்பிரகிருதி புருஷனிடமிருந்தே சமஸ்தமுந் தோன்றுகிறது. அன்றியும் ஸத்வரஜோதமோகுணங்களான மாயையே பிரகிருதியென்றும், அம்மாயையை யடக்க வல்லவர் தாமேயென்றும் அவ்வகையால் மகேசுவரனென்றும், அன்றியும் அம்மாயையையழிக்க வல்லவராதலின் மகேசுவரனென்றும், உருத்திரனென்பதற்கு "ருத்" என்றால் துக்கமென்றும் அத்துக்கத்தை நசிக்கச்செய்வதால் "த்ராவைதி" என்றும் பொருள்படும். அன்றியும், "ருத்" என்பதற்குச் சத்தமென்றும், அச்சத்தத்தால் அஞ்ஞானத்தையொழித்து நாதப்பிரமத்தைத் தெரிவிப்பதால் ருத்திரரென்றும் அன்றியும், சங்காரகாலத்திற் பிரஜைகளை ரோதனஞ்செய்து சங்கரிப்பதால் ருத்திரனென்றும் பெயரெய்தி விளங்குவர். சிவதத்துவமுதற் பிருதிவி தத்துவம்வரையில் வியாபித்திருப்பதால் விஷ்ணுவென்றும், ஜகத்துக்கெல்லாம் பிதுர்பூதராய் இருப்பதால் பிதாமகனென்றும், சமுசார வைத்தியரென்றும் பெயருடையவராவர். வைத்திய னெவ்வாறு பிணியைப் போக்கடிக்கிறானோ அவ்வாறே ஆன்மாக்களின் பிணியைப் போக்கடிக்கின்றார். அன்றியும் போகமோக்ஷங்களைத் தரவல்லராதலின் அப்பெயரடைகிறார். ஸ்தூலசூக்ஷ்மங்களாயும் அணுவிற்கணுவாயும் மகத்திற்கு மகத்தாயும், இந்திரியங்களிருந்தாலும் விஷயங்களாற் கிரகிக்கப்படாதவராயும் பிரயத்தனமின்றிச் சர்வத்தையுமறிய சக்தியுள்ளவராதலின் சர்வஜ்ஞரெனப்படுகிறார். சிரேஷ்டமான குணங்களாலுமறியச்சாத்தியமில்லாதவராதலாலும் இவரினும் மேலான ஆத்மா யாருக்குமில்லாதமையால் பரமாத்மாவென்றும்பெயருடையவராவர். இத்தகையோரைப் பிரணவசொரூபியாய்த் தியானித்துப் பூசித்துத் தன் மனோரதம் நிறைவேறவேண்டுமென்று அர்க்கியங் கொடுத்துப் பிரணவத்தால் அர்ச்சனைசெய்து புஷ்பாஞ்சலிகொண்டு பிரதக்ஷிணஞ்செய்து மேற்கண்ட மந்திரத்தால் மந்திரபுஷ்பங்கொடுத்து, பிரமநாடிபரியந்தம் பஞ்சாக்ஷர சொரூபியாயும், நாதப்பிரமமாயும் வியாபித்திருக்கும் தேவியை இடது நாசிகையால் வெளியில் விடவேண்டியது. வலது நாசிகாத்துவாரமாய்ச் சிவானந்தத்தை யுட்கொண் டநுபவித்து வெளியில் விடவேண்டியது. பூர்வத்தில் பூசித்தபிரகாரமே சர்வாபரண தேவதைகளையும் யதாக்கிரமமாக உத்வாசனஞ்செய்து வித்யாபூஜை குரு

பூஜைசெய்து, சங்கத்தையும் அர்க்கியபாத்திரத்தையுமெடுத்து அதில் எஞ்சிய ஜலத்தைச் சிரத்திற் புரோக்ஷணஞ் செய்து, அப்பாத்திரங்களை நேத்திரத்திலொத்திக்கொண்டு நிர்மாலிய வஸ்துக்களைச் சண்டேசுவரருக்குச் சமர்ப்பித்து, பிராணாயாமஞ் செய்துருஷிசந்தசுகள் பூர்வகமாய் ஷடங்கங்களைச்செய்து சதாசிவமூர்த்தியைத் தியானிக்கவேண்டும்.

தேவி! மேற்சொன்ன மண்டலத்தைக் கைலாசபிரஸ்தரமென்பர். இது சிவதத்துவமறிந்தவர்களுக் குபதேசிக்கத்தக்கது. இதுவேதாந்தங்களின் சாரமானபாகம். முநிவர் மனதிற்கும் அகோசரமானது. இது ரகசியமான மண்டலமென்றறிவாயாக. இம்மண்டலத்தை நிர்மாணஞ்செய்து மேற்கூறியபடியே பிரதிதினமுமருச்சிக்கவேண்டியது. அப்படிச் செய்யச்சக்தியில்லாவிடின் பட்சத்திற்கொருமுறை செய்யவேண்டும். அல்லது மாசமொருமுறையாகிலும் சாதுர்மாசிய பௌர்ணமியிலாகிலும் வருடத்திற்கொருமுறையாகிலும் செய்யவேண்டியது. இப்பூஜாவிஷயத்திலேயேயின்னுமோர் விசேஷஞ்சொல்கின்றேன்: குருவினிடம் எந்தத்தினம் உபதேசஞ்செய்துகொள்கின்றனரோ, அன்றே அவர்சந்நிதானத்தில் மேற்கண்ட தினங்களில் எதை யநுஷ்டிக்கச்சக்தியுண்டோ அதைப் பிரமாணிக்கம்பண்ணிக்கொள்ளவேண்டியது. அந்நாட்களிற் பூர்வோக்தவிதியாய்த் தவறாது பூஜித்துவரவேண்டியது. ஈசானியபாகத்திற் சண்டேசுவரருக்கு நிருமாலியத்தை நிவேதனஞ்செய்து லிங்கத்தை வஸ்திரத்தினாற் சுற்றிப் பரிசுத்தமானதானத்தில் நிறுத்திப் பிரணவத்தாற் புஷ்பத்தை அதன் சிரத்தில் வைத்து ஆதாரசத்திமுதற் சுத்தவித்தியாபரியந்தம் மனதாற் பாவித்து, பரமேசனைப் பஞ்சகௌவியங்களா லபிஷேகிக்கவேண்டியது. அன்றியும் பஞ்சாமிர்தத்தாலும் பரிமளமுள்ள புண்ணியதீர்த்தத்தாலும் "பாவமானம் ருத்திரம் நமகம் சமகம் லிங்கசூக்தம் அதர்வணசூக்தம் ரிக்வேத" மந்திரத்தாலும் சாமவேதத்திலுள்ள சாமகானத்தாலும் பஞ்சப்பிரமமந்திரங்களாலும், பஞ்சாக்ஷரத்தாலும் சிவநாமங்களாலும் ஜபித்து அபிஷேகஞ்செய்து லிங்கத்தைப் பரிசுத்த வஸ்திரத்தால் துடைத்து ஆரோபணஞ்செய்து பீடத்தில் வைக்கவேண்டியது. புஷ்பத்தால் மீண்டும் இலிங்கசிரசி லருச்சிக்கவேண்டியது. பின்னர் சூரிய பூஜைசெய்து ஆதாரசத்தியையும் அநந்தனையும் அப்பீடத்தின் கீழ் ஆவாகனஞ்செய்து பூஜித்து அதன்மேற் சிங்காசனத்தை நிர்மாணஞ் செய்து, மேல் ஆவரணமுண்டுபண்ணி இலிங்கத்தில் உன்னையும் என்னையும் ஆவாகனஞ்செய்து பூஜிக்கவேண்டும். சுந்தரீ! மிகவும் ரகசியமாகிய இச் சிவபூஜாகிரமத்தை உனக்கு விளக்கினேன். இது மிகவும் பாதுகாக்கத்தக்கது. பத்தியில்லாதவர்களுக்கு உபதேசிக்கத்தகாதது. எனது பத்தராயும் சந்நியாசியாயும், ஆசையையொழித்தவராயும் குருபக்தியுள்ளோராயும் சமாதிகுணமுள்ளவராயும், ஜிதேந்திரியராயும் உள்ளவர்களுக்கே உபதேசிக்கத்தக்கது. மேற்கண்ட பத்தியில்லாத மூடனுக்கு இச்சிவரகசியத்தை யுபதேசிக்கின்,

அத்தகையோன் சிவத்துரோகத்தால் நரகத்திற்கு ஆளாகிறன். என் பத்தர்களுக்கு எவ்வித தானங் கொடுத்தாலும், பூசித்தாலும், உண்பித்தாலும் அழியாத பதவியைக்கொடுப்பேன் அதற்கு நானுந் திருப்தியடைவேன்.

ஸூதமுநிவர் நைமிசாரண்ணிய முநிவர்களை நோக்கி, இவ்விதமாகச சிவபூஜாகிரமத்தையும், சிவமண்டல பரிமாணத்தையும், யந்திரக்கிரமத்தையும், ஆவாகனமுறையையும் உமையம்மையார் கேட்டுச் சந்தோஷித்து, சதருத்திரீய வாக்கியங்களாற் பரமசிவனைத் தோத்திரஞ்செய்து, பத்தர்களின் மனோபீஷ்டத்தை நமஸ்காரமாத்திரத்தில் நிறைவேற்ற வல்ல பாதாரவிந்தங்களை நமஸ்கரித்து அத்தியந்த சந்தோஷத்தை யநுபவித்தாள் என்று கூறினர். இம்மகா ரகசியமான சாத்திரத்தைச் சிவஞானமுள்ளவர்களே யறியவேண்டும். உங்கள் மனோவியாதியைநீக்கிச்சிவஞானத்தைக் கொடுக்க வல்லது. இவ்விதமாகப் பரமசாதுவும் மகா தபசியும், ஷாட்குண்யபரிபூரணரும் ஆகிய வியாஸபகவான் முநிவர்களுக் குபதேசித்து, அவர்கள் வந்தனுதிபூஜையை உட்கொண்டு ஸ்ரீ கைலையங்கிரியையடைந்தனர். அம்முநிவர்களும் சந்தோஷசித்தர்களாய், பத்தியுடன் சத்திரயாகத்திற் சந்திரசூடரான பரமேசனை யர்ச்சித்து இயமாதி அஷ்டாங்க யோகப்பிரியராயும் சிவத்தியானத்திற் பிரீதியுள்ளவராயும், சிவனைப் பூஜித்துச் சிவானந்தத்தை யநுபவித்தனர். இந்த ரகசியமான சிவபூஜாக்கிரமத்தை, பரமேசன் பார்வதிக்கும், பார்வதியார் சுப்பிரமணியருக்கும், அவர் நந்தியெம்பெருமானுக்கும், அவர் ஸநத்குமாரமுநிவருக்கும் அவர் என் குருவாகிய வியாஸருக்கு முரைத்தனர். அவரிடமிருந்து நானும் அடைந்தேன். அதை நானறிந்தவிதமாக உங்களுக்குபதேசித்தேன். நீங்கள் பெரியவர்களிடத்திற் பக்தியுடன் வசித்தும் உங்களிடம் பக்தியுள்ளவர்களுக்கும் உபதேசிக்கக்கடவீர்கள். முநிவர்களே! இச்சிவரகசியத்தை, சமாதிகுணங்களுள்ள மேதாவிகளுக்கும் பார்வதி பரமேசனிடம் அத்தியந்த விசுவாசமுள்ளவர்களுக்குமே உபதேசிக்கக்கடவீர்கள். இவ்வித சிவபூஜாகிரமத்தையும் மண்டலகிரமத்தையும் பக்தியுடன் கேட்பவர்களும் படிப்பவர்களும் எழுதுபவர்களும் பிறப்பிறப்பற்று மோக்ஷாநந்தத்தில் சதா வாழும்படி ஸ்ரீகண்ட பரமேசன் அருள்செய்வார். இவ்விதமாக ஸூதபுராணிகர் காசியம்பதியிற் சிவபூஜாக்கிரமத்தை ருஷிகளுக் குபதேசித்து பஞ்சக்குரோச யாத்திரையை முடிக்கச்சென்றனர். முநிவர்களெல்லாருங் காசியிலேயே சிலகாலமிருந்து இச்சிவபூஜையைச் செய்து பரமயோகிகளடையத்தக்க கைலாயபதவியை யடைந்தார்கள்.

பூஜாமந்திரமும் சதாசிவரூபமுமுரைத்தது.

முற்றிற்று.

ஏழாவது

வாமதேவர் முருகப்பிரானையடைந்த அத்தியாயம்.

முனிவர்கள் பலர் இவ்விதமாக வியாஸமுனிவரிடத்தில் உபதேசம் பெற்ற வாமதேவமதபூஜாக்கிரமத்தை மறந்து மீண்டுந் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், தங்கள் சமுசாரபந்தங்களெப்போது ஒழியுமென்றும், சிவப்பிரசாதம் எப்போது சித்திக்குமென்றும், அச்சிவப்பிரசாத மடைதற்கு வியாஸபகவானே காரணராயிருத்தலின் அவர்வருகையெப்போது கிடைக்குமென்றுந் தங்கள் இதயத்திற் சதா எண்ணிக்கொண்டிருந்தனர். இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்க ஒருவருஷக்கடைசியில், சூரியப்பிரகாசம்போன்ற தேஜஸோடு ஸூதபுராணிகர் தோன்றினர். அவரது வருகையைக்கண்ட முனிவர்கள், பசுவைக்கண்ட கன்றைப்போல மிகுந்த ஆவலோடு அருகேசென்று அர்க்கியபாத்தியாதிகளாற் சோடசோபசாரஞ்செய்து, உயர்ந்த ஆசனத்திலிருத்தி, வந்தனை வழிபாடு செய்து களித்தனர் : இவ்வித உபசாராதிகள் செய்த முனிவர்களின் க்ஷேமாதிசயங்களைவினவி, புன்சிரிப்புடன் சந்தோஷித்து, அவர்களுடன் கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, பிதுர்தேவதைகளுக்கும் ருஷிகளுக்குந் திலதர்ப்பணஞ்செய்து, கரையையடைந்து சுத்தவஸ்திரமணிந்து இரண்டுமுறை ஆசமனியஞ்செய்து விபூதியை ஸத்யோஜாத மந்திரத்தாலபிமந்திரித்துத் தூளனமாய்த் தாரணஞ்செய்து, உருத்திராக்கமாலையணிந்து நித்தியகருமங்களையதோக்தமாய் முடித்து, உமை பாகனை விசுவேசனைச்சகணங்களுடன் அருச்சித்து, அத்தியந்த பக்தியுடன் நமஸ்கரித்து, காலபைரவனையும் முறைப்படியருச்சனைசெய்து பன்முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாய்ப்பணிந்து பஞ்சாக்ஷரமந்திரத்தை ஆயிரத்தெட்டுமுறை ஜபித்து, பரமசிவனை மன்னிப்புக்கேட்டுக்கொண்டு சண்டேசரை அர்ச்சித்து முனிவர்குழாஞ்சூழ முத்திமண்டபமடைந்து, அவர்களால் நியமிக்கப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்து, தன்னிடத்தில் விசுவாசத்துடனும் சிவபக்தியுடனும் இருக்கும் முனிவர்களை நோக்கி அவர்கள் சித்தசுத்தமாகும்படி சிலவாக்கியங்களைச்சொல்வதாயினர். முனிவர்களே! யான் காசிக்ஷேத்திரத்தினின்றுந் தென்றிசைநோக்கிச்சென்று கன்னியாகுமரியைக் கண்டு அங்கே சமுத்திரஸ்நானஞ்செய்து பராசக்தி ஸ்வரூபிணியாகிய கன்னியாகுமரியைத்தரிசித்து, மீண்டு பொன்முகரிநதி தீரத்தையடைந்து அதில் ஸ்நானஞ்செய்து பிதுர் தர்ப்பணஞ்செய்து காளத்திக்ஷேத்திரத்தைச் சேர்ந்து, மேற்றிசை நோக்கிப் படிகநிறமாய் ஐந்து சிரங்களுடன் கூடித் தெரிசித்த மாத்திரத்தில் எல்லாப்பாவங்களையு மொழிக்கவல்ல காளத்திசரையும் ஞானப்பூங்கோதையாரையும் அருச்சித்து நமஸ்கரித்து அநேக பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து நான்குமாசகாலம் அவ்விடத்தில் வசித்தேன். இவ்வாறிருக்குங்காலத்தில், ஓர்நாள் ஞானப்பூங்கோதையின் சந்நிதானத்திற் றருப்பாசனத்தி லுட்கார்ந்து இந்திரியங்களை யடக்கி மௌனவிரதத்

தோடு பிராணாயாமக்கிரமத்தினால் மூச்சடக்கிப் பரமசமாதியிற் சிவயோகத்திலிருந்தேன். கருணாநிதியும், நீர்கொண்டமேகம்போன்ற அழகிய சரீரமும், மின்னல்போன்ற ஜடையும், கமண்டலம் தண்டம் கிருஷ்ணாஜலமுதலியவைகளோடு விபூதி சண்ணித்தமேனியும், திரிபுண்டரந்துலங்கும் நெற்றியும், உருத்திராக்கமாலிகை பூண்ட அவயவங்களும், மலர்ந்த செந்தாமரைபோன்ற நேத்திரங்களும் உடையவராக எனது குருவாகிய வியாஸபகவான் இதயத்தில் ஆவிர்ப்பவித்திருக்கக்கண்டேன். உடனே சமாதிகலைந்து கண்விழித்துப் பார்த்து ஒருவரையுங்காணாமையால், கண்ணீர்பெருக்கிச் சத்தமிட்டழுதேன். இப்படித் துக்கிக்கையில் ஆகாயத்தில் அசரீரியாகப்பூர்வத்தில் உன்னிடத்திற் சிவபூஜாக்கிரமத்தைக் கேட்டறிந்த முனிவர்கள் உன்வருகையையெதிர்பார்த்திருக்கின்றமையால் அங்குச்செல்வாயாக என்று சொல்லக்கேட்டு எழுந்திருந்து ஸ்ரீகாளத்தீஸ்வரரையும் ஞானப்பூங்கோதையாரையும் பணிந்து அரிதில் நீங்கி, பனிரண்டுமுறை மீண்டும் பிரதக்ஷிணஞ்செய்து, சிவாக்கினையைச் சிரமேற்றாங்கி நாற்பதுநாளாக விடாது நடந்து இங்குற்றேன். ஆகையால் என்னையனுக்கிரகிக்கவேண்டும். என்னிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமேதாகிலு மிருந்தால் தெரிந்து கொள்வீர்களாக என்றார்.

இவ்வாறு ஸூதமுனிவர் கூறியதைக் கேட்டுச் சந்தோஷமனதுடையராய், வேதார்த்தப்பிரகாசராயும் புராணகர்த்தராயு முள்ள வியாஸபகவானை நமஸ்கரித்து, ஸூதமுனிவரே! நாங்களியாவருந் தங்களைக் குருவாகப்பாவித்திருக்கின்றோம். எப்போதும் சிஷ்யர்களிடம்சிநேகத்தன்மை பாராட்டுபவரென்றும் காரணமின்றி அநுக்கிரகிக்கின்றவரென்றும் தங்களாலேயே நாங்களறிந்திருக்கிறோம். ஆகையால் பூர்வத்தில் வாமதேவராற் சொல்லப்பட்ட விரஜாஹோமத்தைச் சுருக்கமாகச் சொல்லக்கேட்டிருக்கின்றோமாயினும் நாங்கள் நன்றாயுணருமாறு விரிவாகச்சொல்லவேண்டுமென்றனர். அதைக்கேட்ட ஸூதமுனிவர் சந்தோஷத்தினால் மயிர்க் கூச்செறிந்து, உமாபதியையும் வியாசனையும்பணிந்து, அம்முனிவர்களை முதலில் வாழ்த்தி, மேகம்போன்ற தொனியோடுஞ் சொல்லலாயினர்: பரமரகசியமாயும், அதியற்புதமாயும் உள்ள விரஜாஹோம மான்மியத்தை என் குருமூலமாய்க் கேட்டுள்ளேன். அந்த ரகசியம் வெளிப்படுத்தக்கூடாதென்றே இதுவரை ஒருவருக்குஞ் சொல்லவில்லை. நீவிர் அதிகமாய்ச் சிவபக்தியிலும், அதைச்சார்ந்த கதைகளிலும் பிரியமுள்ளவர்களாயிருப்பதால் அதை யுங்களுக்கு உபதேசிக்கின்றேன், சாந்தசித்தத்துடன் கேட்பீர்களாகவென்று கூறலாயினர்.

பூர்வத்தில் கருப்பவாச மொழித்தவராயும், சிவஞானங்களை யுபதேசிக்கவல்லவராயும், வேதாகமபுராணாதி சாஸ்திரார்த்தங்களையும் உபநிடதார்த்தங்களையும் நன்றாயறிந்தவராயும், தேவாசுரமானுடர்களுடைய க்ருமத்தின் கரையைக்கண்டவராயும் உள்ள வாமதேவமுனிவர், தேகமுழு

தும் விபூதி தூளனமும் உருத்திராக்கமாலையும் பூண்டு ஜடாமகுடத்துடன் ஆசையையொழித்து அகங்காரத்தை நீக்கி அஞ்ஞானாதி பயங்களைப் போக்கித் திகம்பரராய்ச் சர்வலோகங்களிலுஞ் சஞ்சரித்துவந்தனர். அவர் தமக்குச் சமானமான சிஷ்யகூட்டங்களோடு பூலோகத்திற் பாதம் படிவதாற் பரிசுத்தஞ்செய்து சர்வதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பரமாத்மாவிடம் வைத்த சிவசிந்தனையோடு எங்குஞ் சஞ்சரிக்குநாளில் லோகாநுக்கிரகார்த்தமாய் ஒருக்கால் மகாமேருவினுச்சில் தக்ஷிணபாகத்திற் குமார சிகரத்தையடைந்தனர். அங்கே பரமேசன் புத்திரராயும் மயில்வாகனாரூடராயும், ஞானசத்தியையுடையராயும், அசுரராகிய காட்டையழித்தவராயும், சர்வதேவர்களாற் பூசிக்கத்தக்கவராயும் தெய்வயானை வள்ளியம்மைகள் சமேதராயும் உள்ள சுப்பிரமணியரை நமஸ்கரிக்கவேண்டுமென்று, ஆங்குள்ள சமுத்திரம்போன்று விசாலமாயும் சந்திரகிரணம்போல் அதிக குளிர்ச்சியுடையதாயும் அமுதம்போலப் பருகவல்லதாயும் அதிக பரிசுத்தமாயும் அளவு காணப்படாத ஆழமுள்ளதாயுமுள்ள சரவணப்பொய்கையிற் சிஷ்யவர்க்கங்களோடு கிரமமாக ஸ்நானஞ்செய்து தேவருஷி பிதுரர்களுக்குத் தருப்பணாதிகள் செய்து, விபூதி தூளனஞ்செய்து, அக்குமாரகிரியில், நாரதாதிமுநிவர்குழாம் புடைசூழ ஸநத்குமாரராதியோகியர் நெருங்கியிருக்கக் கோடி இளஞ்சூரிய ருதித்தாற்போல மயூரவாகனத்திற் சதுர்ப்புஜங்களுள்ள காம்பீர தேகத்தோடும் மகுடாதி ஆரகேயூரகங்கணாதிகளா லலங்கரிக்கப்பட்ட சர்வ அவயவங்களோடும் ஞானசத்தி கிரியாசத்திகளால் உபாசிக்கப்பட்டவராயும் கோழிக்கொடி வரதாபய அஸ்தங்களோடும் விளங்கும் சாட்சாத் குமர குருபரனைக் கண்டு ஆநந்தங்கொண்டு புளகாங்கிதராய் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தன்னை மறந்தவராய்த் தோத்திரஞ்செய்யலாயினர்: பிரணவார்த்தாய - பிரணவார்த்த வ்யாபினே - பிரணவாக்ஷரபீடாய - பிரணவாய - வேதாந்தார்த்த சொரூபாய - வேதாந்தார்த்த விதாயினே - வேதவேத்தியாய - குகாய - குகாசுநிகாதாய - குகியாய - குகியரூபாய - குகியாகமவிதே - அணவே - அணீயசே - மகதே - மகீயசே - பராவாக்கியாய - பரமாத்மசொரூபிணே - ஸ்கந்தாய - ஸ்கந்தரூபாய - சிந்தூராருணதேஜசே, மந்தாரமேலோத்தியன் மகுடாதி பிருதே - சிவசிஷ்யாய - சிவபுத்திராய - சிவதாயினே - சிவப்பிரியாய - சிவாநந்தநிதையே - காங்கேயாய - கார்த்திகேயாய - தீவதே - மாதுருபுத்திராய - மகதே - சரகானசாயினே - ஷடாக்ஷரசரீராய - ஷட்விதார்த்தவிதாயினே - ஷட்துவாதீதரூபாய - ஷண்முகாய - துவாதசாயதநேத்திராய - துவாதசாயவபாகவே - துவாதசாயுததாராய - துவாதசாத்மனே - சதுர்புஜாய - சாந்தாய - சத்திகுக்குடதாரிணே - வரதாபய ஹஸ்தாய - அசுரவிதாரிணே-கஜாவல்லிகுசாலிப்தகுமங்குமாங்கிதவக்ஷசே - கஜானநாநந்தாய - கரிம்ணே - நந்திதாத்மனே—பிரமாதிதேவமுநிகந்தருவ கின்னராதியோர் பரவப்பெற்ற கீர்த்திப்பத்துத்திக்கிலும் பரவப்பெற்றவனே, இரத்தினங்களிழைத்துப் புஷ்பாரம்பூண்ட

முடிகளையுடையதேவர்கள் பணிவதால் முடிகளிலுள்ள இரத்தினங்களுதிர்ந்தும் பூக்களிலுள்ள மகரந்தம் ஒழுகியும் உள்ள செந்தாமரை போன்ற பாதமுள்ளவனே! உன்னைப்பணிகின்றேன், என்றிதுபோற் பன்முறைதோத்திரஞ்செய்து, மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாய்ப் பன்முறை நமஸ்கரித்து, ஸுப்ரமண்யோம் என்னும் சாமவேதசுரத்துடன் அஞ்சலியஸ்தராய்ப் புளகாங்கிதமுடையராய் ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து கொண்டு விநயத்துடனிற்கக்கண்ட தேவசேனாபதியான சுப்பிரமணியர் பூர்ணகடாக்ஷத்துடன் அவரை நோக்கிச் சொல்லலாயினர்.

வாமதேவமுநிவனே! உன்னிட தோத்திரத்தினாலும் பக்தியினாலும் பூஜையினாலும் அத்தியந்த ஆநந்தத்தை யடைந்தேன். உனக்கு மங்களமுண்டாகக்கடவது. நீ யோகியர்களுட் சிரேட்டன். நித்தியசுத்தனும் பரிபூரணனும் ஆசையை யொழித்தவனுமுள்ள நின்போன்றோர் எதையும் அடையவேண்டிய கோரிக்கையற்றவர்களா யிருந்தபோதிலும் உலகக் காப்புநிமித்தம் சாதுசொரூபிகளாய் உன்னைப்போலவே சஞ்சரிப்பார்கள். ஆகையால் நானுனக்குச் செய்யவேண்டிய காரியமென்னை? எந்த விஷயத்தை என்னிடங் கேட்க விரும்புகின்றனை? என்னாலறிந்துகொள்ளவேண்டிய தேதேனுமிருக்கின் அதைப் பரமசீடனான உனக்கு லோகாநுக்கிரகநிமித்தம் உபதேசிக்க யோக்கியதையுடையவனாகின்றாய். அவ்வாறே கேட்பாயாகவென, அவ்வாக்கியத்தைக்கேட்ட வாமதேவர், விம்மிதத்துடன் வணங்கின சரீரமுடையராய் உரைகுழறி, பகவானே! பரமேசனே! பராபரவஸ்துவே! ஐசுவரியத்தைக் கொடுக்கவல்லவனே! சர்வவல்லவனே! சர்வகர்த்தாவே! சர்வசத்திரனே! வள்ளலே! உம்முடைய சந்நிதானத்தில் ஜீவர்களான என்போலிய ஆன்மாக்கள் எந்தச் சந்தேகத்தையுங் கேட்டறிய வல்லவர்களாவேம். ஆயினும் மேருவைச்சார்ந்த கருங்காகமும் பொன்னிறமடைவதுபோலவும், பாலொடு கலந்தநீரும் அப்பானிறமடைவது போலவும் தேவரீரது சந்நிதானத்திலிருக்கப்பெற்ற யான் அறியாமையால் தவறாகக் கேட்பினும் மன்னித்துப் பரமரகசியப்பொருளை யுபதேசிக்க வேண்டுகின்றேன். பிரணவசொரூபமே பரமேசுவரவாசகமாயும் ஜீவாத்மாக்களுடைய பாசங்களை விடுவிப்பதாற் பசுபதியாயும், உலகத்தில் வழங்கிவருகிறது. சர்வஜகமும், வேதவேதாங்கங்களியாவும் பிரணவத்தினின்றேதோன்றுகிறதென்று அநாதியாகச்சொல்லப்படுகிறது. அப்பிரணவமே பிரமமென்றும் அப்பிரமமே சர்வஜகத்ரூபமென்றும் வேதாந்தங்களும் முறையிடுகின்றன. ஆகையால் தேவசேனாபதயே! தேவர்பதயே! பதினும்பதயே! பரிபூரணா! அநேககோடிவந்தனம், சிவத்தைக்காட்டிலும் பிரணவம் அந்நியமென்றேற் படவில்லை. சிவத்திற் கந்நியமான தொன்றுமில்லை என்றுங் கேள்விப்பட்டுள்ளேன். அச்சிவமயமான பிரணவார்த்தத்தை ஆசாரக்கிரமத்துடனும் உபதேசக்கிரமமாக உபதேசித்து என்னைக் கிருதார்த்தனாக்கும்படிப் பிரார்த்திக்கின்

றேன். சர்வ ஜகத்திற்குங் காரணகர்த்தராயும் பிராணிகளின் ஜன்ம கருமங்களையொழித்து மோக்ஷலக்ஷ்மியின் சாம்ராச்சிய பட்டாபிஷேகத்தைச் செய்ய வல்லவராயுமுள்ள தேவரீரைக்காட்டிலும் பரமாச்சாரியர்களாரிருக்கின்றார்கள் என்று கூறிப் பணிந்தனர்.

இவ்வாறு கூறியதைச் செவியேற்றுவந்தசுப்பிரமணியர் ஆனந்தமுடையராய்,சதாசிவசொரூபியாயும் பிரணவசரீரியாயும்முப்பத்தெட்டுக் கலைகளுடன் உமைசகாயராய் நந்திதேவராதியர் நமஸ்கரிக்கும் பதாம்புயராயும் உள்ள பரமேசனைச்சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வேதங்களுக்கு மதிதப்பட்ட ரகசியார்த்தத்தை உலோகாநுக்கிரகமாய் வாமதேவ முனிவருக்கு உபதேசிக்கத் தொடங்கினர்.

வாமதேவர் முருகப்பிரானையடைந்தது

முற்றிற்று.

எட்டாவது

ஸந்நியாசக் கிரமமுணாத்த அத்தியாயம்.

இவ்வாறு வணங்கிக்கேட்ட வாமதேவரை நோக்கிச் சுப்பிரமணியர் சொல்லுகின்றார்: வாமதேவரே! நீர் சிவபெருமானிடத்தில் அத்தியந்த பக்தியுள்ளவர். சிவஞானிகளுள்ளே அதிக சிரேட்டர். மூன்றுலகங்களிலும் நீரறியாததொன்றுமில்லை. நீர் யாவுந் தெரிந்தவராயினும் லோகாநுக்கிரகநிமித்தம் நீர் கேட்டதைக் கூறுகின்றேன். இவ்வுலகத்தில் ஜீவர்கள் தத்துவத்திலுழன்று நாஞசாஸ்திரங்களில் அவாவுடையராய் மாயையால் பசுக்களைப்போலகப்பட்டு,பரமசிவத்தை யடைவதை அம்மாயையினாலே வஞ்சிக்கப்பட்டு அவரையறியாமலே ஒழிகிறார்கள். இதை என் வலக்கரத்தை யுயர்த்தி உண்மையாகக் கூறுகின்றேன். எல்லா உபநிடதங்களிலும் பரமசிவமே பிரணவார்த்தமென்று முறையிடுகின்றன. அப்பிரணவார்த்த சொரூபியான பரமசிவன் மனோவாக்குக்களுக் கெட்டாதவரும், ஆனந்தரூபியும் ஞானரூபியும் நிர்ப்பயருமாவர். அவரிடத்தினின்றே சராசராத்மகமாகிய உலகமும், விஷ்ணு பிரம ருத்திரேந்திராதிகளும் உதிக்கின்றனர். அவரிடமிருந்து எல்லாந் தோன்றினும் தான் எதினின்றும் யாராலும் பிறப்பிக்கப்பட்டிலர். அவரது தேகதேஜசின் முன் மின்னலும்சூரியனும் சந்திரனும் அக்கினியும் ஒளிமழுங்கும். அவரது தேஜசினாலே யாவும் பிரகாசிக்கும். அவர்சர்வைசுவரியங்களோடுங் கூடியிருப்பராதலின் சர்வேசுவரரெனப்படுவார். தகராகாசமத்தியிலுள்ளவராதலின் முமுக்ஷுக்களாலுந் தியானிக்கத்தக்கவர். அவரது பராசத்தி மனோஹரியாயும் நிர்க்குணியாயும் நிஷ்களையாயும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறாள். அச்சத்தியினிடமிருந்தே இச்சகம் விருத்தியாகின்றது. அவருக்கு மூவித உருவங்களுள. அவை ஸ்தூல சூக்ஷ்ம பரமெனப்படும்.

எல்லாத் தேவர்களுக்கு மதிதேவராயும், நிஷ்களராயும், அநாதியாயும், ஞானக்கிரியாசுவபாவராயும் உள்ளவரே பரமேசரெனப்படுகிறார். அவரது மூர்த்தமே சதாசிவமெனப்படும். அவரே சத்தியோஜாதாதி பஞ்சப்பிரம ரூபியாய்க் கலாபஞ்ச விக்கிரக சுத்தஸ்படிகநிறமாயுள்ளவர். சந்திரனைப் போன்ற குளிர்ந்த பார்வையும் ஐந்து முகமும் பத்துக்கரங்களும், பதினைந்து நேத்திரங்களும், ஈசானமகுடமும், தற்புருட முகமும் அகோர இதயமும், வாமதேவ குஹ்யமும், சத்தியோஜாத பாதமும், சர்வஜ்ஞத்வாதிஷ்ட சத்திகளோடுகூடிய தேகமும் உடையராய்த் தன்னை யுபாசிக்கின்றவர்க ளிதயத்திற் பிரகாசிக்கின்றார். அவரது சத்தியாகிய மனோன்மனியாற் பகிர்ந்துள்ள வாமபாகமுடையவரைச் சமஷ்டியாயும் வியஷ்டியாயும் பாகுபாடுபடுத்திக் கூறுகின்றேன். அதை உபதேசக்கிரமமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

வாமதேவரே! இவ்வுலகில் பிராமணர் முதல் நால்வருணத்தவரிருக்கின்றார்கள். அவர்களில் முதல் மூன்று வருணத்தவரே வேதாத்தியயனஞ்செய்ய உரியர். நான்காம் வருணத்தராய சூத்திரர் அதைக்கேட்க யோக்கியதையுடையரே யன்றி வாசிக்க அருகரல்லர். முதல் மூவருணத்தவர்களும் வேதத்திலுள்ள தருமங்களையே யநுஷ்டிக்கவேண்டியது. அதே முக்கியமானது. சுருதி ஸ்மிருதிகளிற்கூறிய வருணாச்சிரம தருமங்களைத் தவறாமல் அநுஷ்டித்துப் பரமேசனைப் பூசித்து அநேகமுநிவர்கள் சாயுச்சியபதவியை யடைந்திருக்கிறார்கள். பிரமசரியத்தினால் ருஷிகளின் கடனையும், எக்கியத்தினால் தேவர்கடனையும், சிராத்தத்தினாற் பிதுரரின் கடனையும் முடிக்கவேண்டியதென்று வேதங்கூறுகின்றது. இவ்வகைய மூன்றுகடனையும் விலக்குவதாற் கிரகஸ்தாச்சிரமத்தையொழித்து வானப்பிரஸ்தாச்சிரமத்தை யடைந்து, மனைவியோடு வனத்தையடைந்து இந்திரிய நிக்கிரகஞ்செய்து சிதோஷணங்களைச்சகித்து, ஆகாரத்தை மட்டுப்படுத்தித் தவத்திலிருந்து சமதமாதி குணங்களடையப்பெற்று, இயமாதி யோகங்களை யப்பியசிக்கவேண்டும். இவ்வாறு அப்பியசிக்கின் புத்தி சலியாது ஒடுங்கும். இவ்வகையாய்ச் சுத்தாத்மாவாகிச் சர்வகருமங்களையுஞ்செய்து யாவுஞ்சிவார்ப்பணஞ்செய்துஎல்லாக்கருமங்களையுமொழித்துஞானபூஜையைச் செய்யவேண்டும். இதனால் சிவஞானத்தையடையின் ஜீவன்முத்தர்களாய்ப் பிரமானந்தத்தை யநுபவிப்பார்கள். அத்தகைய ஜீவன்முத்தியடையச் சிவஞானமுண்டாகவேண்டும். அதனையடைய உத்தமாசிரியனைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவர் சர்வசாஸ்திரார்த்தங்களையு முணர்ந்து வேதாந்தத்தின் கரையையுணர்ந்தவராயும் புத்திமானாயும், உத்தமகுலத்துதித்தவராயும், யதியாயுமிருக்கவேண்டும். அப்படிப்பட்டவருக்குத் தண்டாகாரமாய்ப்பணிந்து தோத்திரங்களாற் சந்தோஷத்தையுண்டாக்கவேண்டும். சிவபெருமானே குருவாவர். குருவே சிவபெருமானாவர். அவரை அபேதமாகப் பாவித்துத் தான் அப்பியசிக்கவேண்டிய பிரணவார்த்தத்தை

யுணர்த்த வேண்டுமென்று கேட்டு, அவரது திருவருளைப்பெற்று, பன்னிரண்டுதினம் பாலைப்பருகிச் சுக்கிலபட்ச சதுர்த்தி தினத்திலாகிலும் தசமிதிதியிலாகிலும் உதயத்திலெழுந்து நியமத்துடன் ஸ்நானஞ்செய்து பரிசுத்த வஸ்திரந்தரித்து நித்தியகருமங்களைமுடித்து ஒரேமனதாய்க் குருவை வணக்கஞ்செய்து, அழைத்து நாந்திசிராத்தஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டியது. அப்பூஜையில் சத்தியவசு என்னும் பெயருடைய விசுவேதேவர்களைப் பூஜிக்கவேண்டியது. தேவசிராத்தத்தில் பிரமவிஷ்ணு மகேசுவரர்களையும், ருஷிசிராத்தத்தில் தேவமாநுடரையும் திவ்ய சிராத்தத்தில் வசுருத்திர ஆதித்தர்களையும், மாநுடசிராத்தத்தில் சனகாதிமுநிவர்களையும் பூதசிராத்தத்தில் பஞ்சமகா பூதங்களையும், பிதுர்சிராத்தத்தில் பிதாவையும் அவர் பிதாவையும் அவர் பிதாவையும், மாதுர்சிராத்தத்தில் மாதாவையும் பிதாவின் மாதாவையும் அவர் மாதாவையும், ஆன்மசிராத்தத்தில் தனக்குத்தானும் முற்கூறிய பிதாவின் பிதாவையும் அவர் பிதாவையும் அவர்கள் பத்தினிகளுடன் பூஜிக்கவேண்டியது. தாயைப்பெற்ற பாட்டன் சிராத்தத்தில் அவரையும் அவர் பிதாவையும் அவர் பிதாவையும் பூசிக்க வேண்டியது. இச்சிராத்தங்களெல்லாவற்றிலும் விசுவேதேவர்களைப் பூசிக்கவேண்டும். சிராத்தத்தில் பிராமணர் இருவருக்குக் குறையாமல் வருவித்து, சுத்தஜலத்தினால் அவர்கள் பாதத்தை யலம்பி எல்லாச்சம்பத்துகளையும் அடைவதற்குக் காரணமாயும் ஆபத்துக்களுக்குத் தூமகேதுவாகவும், கரைகாணாத சமுசாரசாகரத்திற்கு அணையாகவும், விபத்தாகிய இருளுக்குக் கோடிசூரியராகவும், மனோரதங்களைக்கொடுக்கத்தக்க காமதேனுவாகவும், புண்ணியதீர்த்தங்களையும் பரிசுத்தஞ்செய்வதாகவும் உள்ள அவர்களது பாததூளிகள் என்னை யிரக்ஷிக்குமாகவென்று பிரார்த்தித்து,அவர்கள் காலைக்கழுவிய ஜலத்தைச் சிரசிற்புரோக்ஷணஞ்செய்து அவ்வேதியரை நமஸ்கரித்து, மனதினாற் பரமசிவனைத் தியானித்துக் கிழக்குமுகமாக நல்ல ஆசனத்திலுட்கார்ந்து ஆசமனியஞ்செய்து புனிதமான யஜ்ஞோபவீதமணிந்து பவித்திரந்தரித்து ரேசகக்கிரமத்தினால் மூன்றுபிராணாயாமங்களைச்செய்து, வருடமாச திதிகளைச் சொல்லி, யான் வைசுவதேவாதிபலிகளையும் அஷ்டவித சிராத்தங்களையும் அக்கினிமூலமாய்ச்செய்து முடித்துச் சந்நியாசம் பெறப்போகிறேன், நீங்கள் அனுஜ்ஞை கொடுக்கவேண்டுமென்று அவர் விருப்பத்தையடைந்து,விசுவேதேவார்த்தமாய்ப் பிராமணர்களை நியமித்து விசுவே தேவர்களையும் பிதுர் மாதுருமாதா மகவர்க்கங்களையும் அப்பிராமணரிடத்தில் ஆவாகனஞ்செய்து, கிரமப்படி ஓமஞ்செய்து புனிதமான வாழையிலையில் அறுசுவையோடு கூடிய பதார்த்தம் அன்னம் பலகார முதலியவற்றைப் படைத்துத் தத்தம் ஆசாரமுறைப்படி தங்கள் சூத்திரத்திற்கேற்ப நாமகோத்திரங்களைச் சொல்லிப் பிதுர்களின் பொருட்டுத் தத்தஞ் செய்கிறேனென்று தேவர்களுக்கு அக்ஷதையும், பிதுர்களுக்குத் திலமும், ஜலத்துடன் கூட்டியும், தேவர்களுக்கு ஸ்வாஹாவென்றும், பிதுர்களுக்கு ஸ்வதாவென்றுந் தத்

தஞ்செய்து, "யத்பாதபத்ம ஸ்மரணாத் யச்சரீநாம் ஜபாதபி - ந்யூநங்கர்ம பவேத்பூர்ணம் தம்வந்தே ஸாம்பமீஸ்வரம்"—எந்தப்பரமசிவனுடைய திருவடித்தாமரையை ஸ்மரித்தமாத்திரமும், அவருடைய திருநாமத்தை ஜபித்தமாத்திரமும் செய்கருமங்கள் பரிபூரணமாகுமோ, அந்தச் சாம்ப சிவனை இக்கருமஞ் சம்பூரண பலனையடையும் பொருட்டு நமஸ்கரிக்கி றேன் என்று பணிந்து, பிராமணரைப்பணிந்து யான்செய்யும் சிராத் தத்தை நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று அவர்கள் கையில் ஜலத்தை விடுத்து இது அமிர்தமாகட்டுமென்று கூறிப் போஜனஞ் செய்விக்க வேண்டும்.

அவ்வாறு அவர் போஜனஞ் செய்துகொண்டிருக்கையில் மற் றவர்களைக் கொண்டு உருத்திரம் நமகம் சமகம் புருஷஸூக்தம் பஞ்சப் பிரமமந்திராதிகளால் போஜனந்தம்வரையிற் பாராயணம் பண்ணுவித்து மீண்டும் பிராமணர்கள்கையில் உத்தரா போஜனங் கொடுத்து அவர்களை எழுந்திருக்கப் பிரார்த்தித்துக் கைகால் பரிசுத்தஞ்செய்வித்துத் தானும் பரிசுத்தஞ்செய்துகொண்டு யாவரும் ஆசமனியஞ் செய்து ஓமஸ்தானத் திற் கிழக்குமுகமாகத் திவ்யாசனத்தி லுட்காரவேண்டியது. பிராணாயா மத்துள் மூவித பிராணாயாமங்களைச்செய்து, சங்கற்பம்பண்ணி நான்செய்த சிராத்தாங்கமாய்ப் பிண்டப்பிரதானங் கொடுக்கின்றபடியா லதை யுட்கொள்ளவேண்டுமென்று பிதுர்க்களைப் பிரார்த்தித்து, தங்கள் சூத் திரப் பிரகாரம் பிதுர்களை யாவாகனஞ்செய்து, ஒவ்வொருவருக்குங் கிரமமாய்ப் பிண்டதானஞ்செய்து பரமாத்வான பரமசிவனை, இதயதா மரையில் தியானித்து முற்கூறிய "யத்பாத—வாம்" மந்திரத்தைப்படனஞ் செய்து, தன் சத்தியாநுசாரம் பிராமணர்களுக்குத் தக்ஷிணைகொடுத்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, நான் கூட்டியுங்குறைத்தும் முடித்த குற் றங்களை மன்னித்துக் கிருதார்த்தனாக்க வேண்டு மென்று பிரார்த்தித்து எழுந்திருக்கச் செய்யவேண்டும். பிண்டப் பிரசாதத்தைப் பசுக்களுக் காகிலும் நீரிலாகிலும் இடவேண்டியது. புண்ணியாசனஞ்செய்து இஷ்ட பந்துக்களுடன் எஞ்சிய அன்னத்தைப் புசிக்கக்கடவன். அற்றைப் பொ ழுதைச் சிவத்தியானத்திற் கழித்து அடுத்த நாட்காலையில் நித்திய கருமங் களை முடித்து, கால்தவிர மற்றைத்தானங்களிற் சௌளஞ்செய்து கொண்டு புண்ணிய தீர்த்தமாடிப் புனிதவஸ்திரந்தரித்து இருமுறை ஆசமனியஞ் செய்து மௌனவிரதம்பூண்டு விபூதிதூளனஞ்செய்து பிராமணர்களுடன் புண்ணியாவாசனஞ்செய்து, தீர்த்தத்தினால் புரோக்ஷணஞ்செய்து, மிகுந்த ஓமத்திரவியங்களைத் தக்ஷிணையுடன் சிவரூபியான குருவிற்கு வஸ்திரத் துடன் கொடுத்து, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து எழுந்து புதிதான கடி சூத்திரம், கௌபீனம் வஸ்திரம் தண்டம் கமண்டலம் சமித்து முதலியன எடுத்துக்கொண்டு, சமுத்திரக்கரை, நதிக்கரை, மலையடிவாரம், சிவா லயம், இருடிகள் வசிக்கும் ஆச்சிரமம் பசுக்கட்டுமிடம், பரிசுத்தத்தலம்

ஆகிய இவற்றிலொன்றிற் சென்று ஆசமனீயஞ்செய்து, மாநஸிகமாய்த் தேவி மந்திரத்தையும் பஞ்சப்பிரம மந்திரத்தையும் ஓங்காரத்துடன் மூம்முறை ஜபித்து "அக்நிமீடே புரோகிதம் இஷேத்வோஜேத்வா அக்நாயா யாகிவிதயே பின்னோதேவீரபிஷ்டையே" என்னும் மந்திரங்களாகிய நான்கு வேதங்களின் ஆதியையும் பீஜாக்ஷரங்களுடன் சேர்த்து ஜபித்து, அவ்வேதங்களுக்கங்கமான சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், ஜோதிஷம் கல்பம் ஆகியவற்றின் அடிகளான "விருத்திராதைச்" ஆதியாக உள்ளனவற்றை ஜபித்து, பின்னர் "அதாதோதர் மஜிக்ஞாஸா" என்னுந் தருமசாஸ்திரத்தினடியையும் "அதாதொ பிரமஜிக்ஞாஸா" என்னும் வேதாந்த சூத்திரத்தின் அடியையும் ஜபித்து, பிரமன், இந்திரன் சூரியன் சந்திரன் பிரஜாபதி ஆத்மா அந்தராத்மா ஞானாத்மா பரமாத்மா முதலியோரைப் பிரவண பூர்வமாய் நமவந்த சதுர்த்தியந்தங்களுடன் உச்சரித்து நமஸ்கரித்து, பொரிமாவில் ஒருபிடி எடுத்துப் பிரணவத்தாலதை யுட்கொண்டு இருமுறை ஆசமனீயஞ்செய்து முற்கூறிய ஆத்மா முதலிய நாமங்களால் நாபி முதலிய தானங்களைப் பரிசித்தும், அவர்களுடைய நாமங்களையே மீண்டும் ஸ்வாஹாந்தமாய்க் கூறியும், பால் தயிர் நெய் இவைகளால் மும்முறைப் பிராசனஞ்செய்து, இருமுறை ஆசமனீயஞ்செய்து கிழக்குமுகமாய் மூன்று பிராணாயாமங்களைச் செய்யக்கடவன்.

ஒன்பதாவது
மேற்படி அத்தியாயம்.

இவ்வாறு கூறிவந்தனவற்றைக் கேட்டுவந்த வாமதேவரை நோக்கிச் சுப்பிரமணியர் மீண்டுங்கூறலாயினர்: வாமதேவரே! முற்கூறிய படியே கருமங்களை யெல்லாங் காலையில் முடித்துப் பகற்காலத்திற் புண்ணிய தீர்த்தமாடிப் பரிசுத்தவஸ்திரந்தரித்து ஒரே மனதுடையவனாய் வனஞ்சென்று நறுமணமுள்ள புஷ்பங்களையும் சந்தனாதிகளையுஞ் சேகரித்து பூஜாதானத்தில் நிருதிதிக்கில் தேவதேவனையும் கணநாயகனையும் விளங்கும் விக்நேசுவரனைக் "கணாநாந்த்வா" என்னும் மந்திரத்தால் யதாவிதியாய்ச் செந்நிறம், பருத்த உடல், சமஸ்த ஆபரங்களாலலங்கரிக்கப்பட்ட அவயவங்கள், நான்குகரங்களிலும் பாசம் அங்குசம் உருத்திராக்கமாலை அபயம் ஏந்தியிருக்கும்படி ஆவாகனஞ்செய்து, சோடசோபசாரங்களுடன் தூபதீபங்களாலருச்சித்து, பாயசம் மோதகம் தேங்காய் பழவகைகள் முதலிய நிவேதனத்தாற் சந்தோஷிப்பித்து, மும்முறை பிரதக்ஷிணஞ் செய்து *நமநோந் நமனஞ்செய்து என்காரியம் நிர்விக்கினமாக நடைபெறவேண்டுமென்று பிரார்த்தித்து, உபாசனாக்கினியில் தங்கள் சூத்திரப்படி பிரதிஷ்டைசெய்து பிரமனை நிர்மாணித்து வியாஹ்ருதிகளால்

* இதைத் தமிழில் தோப்புகண்டமென்றும், தோப்புக்கரணமெனவுங் கூறுவர்.

ஓமஞ்செய்து, பூரணாகுதி முடித்துக் காயத்திரியைக்கிரமமாய் அபரான்ன பரியந்தஞ் செபித்து, மாலைப்போதில் சந்தியாவந்தனம் முடித்து அக்கினி பூஜைசெய்து மௌனத்துடன் குருவின் கட்டளைப்படி உபாசனாக்கினியில் அன்னத்தைப்பசனஞ்செய்து அவ்வக்கினியிலேயே ருத்திரஸூக்தத்தினாலும், சத்தியோஜாதாதி பஞ்சப்பிரம மந்திரங்களாலும், கௌரீமிமாய்ாய என்னும் மந்திரத்தினாலும் உமையும் பரமேசனும் இருப்பதாகப் பாவித்து ஓமஞ்செய்து, ஸ்விஷ்டகிருத ஓமம் ஒருமுறை அக்கினிக்காகச் செய்து, மற்றும் ஓமசேஷத்தைமுடித்து உத்தர பாகத்தில் திவ்யாசனத்திலிருந்து மௌனமாய் அருணோதய பரியந்தஞ் சித்தசுத்தத்துடன் காயத்திரியைச் செபிக்கவேண்டும். காலையில் ஜபத்தினின்றும் நீங்கிப் புண்ணிய தீர்த்தமாடி விபூதி தாரணஞ்செய்து முன்னுள்ள உபாசனாக்கினியில் அன்னத்தைப் பசனஞ்செய்து வடபுறத்திலிருந்து நெய்யாற் பரிசுத்தஞ் செய்து வியாஹ்ருதிகளையும்உருத்திரஸூக்தத்தையும்பஞ்சப்பிரமமந்திரத்தையுஞ் செபித்து,தகராகாசத்திற் சிவபாதாம்புயத்தைத் தியானித்து,பிரஜாபதி இந்திரன் விசுவேதேவர் பிரமன் முதலியவர்களுக்குப் பிரணவ பூர்வமாய்ச் சுகாந்தமான ஓமஞ்செய்து பின்பு புண்ணியாவாசனஞ் செய்து அக்கினி திருப்திக்காக அக்கினிஸ்வாஹாவென்று ஓமஞ்செய்து, பஞ்சப்பிராணர்களுக்குப் பஞ்சப்பிராண மந்திரத்தால் ஓமஞ்செய்து,† மஹேசாதி சதுர்வியூகங்களைச் சத்தியுடன் பாவித்துத் திருப்திகரமாக ஓமஞ்செய்ய வேண்டியது. ஸ்விஷ்டகிர்தாஹோமஞ்செய்து உருத்திர ஸூக்த பஞ்சப்பிரம ஸூக்தாதிகளைச்செய்து முறைப்படி சேஷத்தையும் முடித்து அவ்வத்தேவர்களையும் நினைத்துத் தான்செய்த கருமங்களைத் தியாகஞ்செய்து முடிக்கவேண்டியது. இதுவரையிற் கூறிவந்தது அக்கினியிற் செய்ய வேண்டிய கருமங்களென் றறிவாயாக.

வாமதேவரே! இனி இந்த ஓமத்தை ஆத்மாவிற்செய்யவேண்டிய விதத்தை விளம்புகின்றேன். இத்தேகம் இருபத்தாறு தத்துவங்களா லாக்கப்பட்டுள்ளது. இத்தத்துவங்களினுள்ளிருக்கும் ஆன்மா பரிசுத்தமடையும்படி ஸ்மரித்து அத்தத்துவங்களுளொன்றான ஆன்ம தத்துவசுத்திக்காகத்தைத்திரீயசாகையில் அருணபாடத்திற்படிக்கப்பட்டபிருதிவியாதி புருஷாந்தமாக உள்ள மந்திரக்கிரமத்தால் நெய் அன்னம் முதலிய சமித்துகளோடு சிவபாதாம்புயங்களைத் தியானித்து மௌனவிரதத்துடன் பிருதுவியாதி பஞ்சபூதங்களையும் பஞ்சேந்திரியங்களையும் ஸப்ததாதுக்களையும் பிராணவாயுக்களைந்தையும் அன்னாதி பஞ்சகோசங்களையும் சங்கற்பாதி குணங்களையும், பிரகிருதி புருஷர்களையும் குறித்து மேற்கூறிய முறைப்படி ஓமஞ்செய்யவேண்டியது. இதனை வித்தியாதத்துவமெனவும் சிவதத்துவமெனவும், பிரமவாக்கியங்களாற் கூறுவாருமுளர். பிருதுவிமுதல் சிவதத்துவம்வரையிலிருக்குந் தத்துவங்களை யான்ம ஞானத்தாலறிந்து

† வாயுசங்கிதையில் நன்கு விளங்கும்.

பரிசுத்தஞ்செய்யவேண்டும். பின்னர் பதினொரு மந்திரங்களாற் "பாஸ்மீ பதபூருவ" மாயும் சதுர்த்தியாந்தமாயும், ஓங்காரத்துடன் நமஃ சத்தத்தை இறுதியிற் கூட்டி ஆகுதிசெய்யவேண்டும். அப்பதினொருபெயர்களாவன: ஓம் சிவஜோதிஷநமஃ ஓம் பரமாத்மநே, விவடகாய, கஷோத்காய, வியாபகாய, விசுவபூதாய, கசஞைத்சுகாய, லோகத்திரயாய, லோகவியாபிநே, தேவாய, விவித்யாய, பரப்பிரமனே ஆகிய இவற்றை யதாக்கிரமமாயும் விசுவரூபாய, பரமபுருஷாய, சிவாய என்பனவோடு கூட்டி ஓமஞ்செய்து தங்கள் ஸூத்திரத்திற் கூறியபடி ஓமத்திற்குரிய பூர்வாங்கங்களையும் உத்தராங்கங்களையு முடித்து, ஆஜ்யத்துடன் ஓமஞ்செய்து மிகுந்த அன்னத்தைப் பிரசாதமாக வுட்கொண்டு, ஆசாரியருக்குத் தக்ஷிணைகொடுத்து முன் செய்த ஓமத்திற்குச் சாக்ஷிபூதராயிருந்த பிரமனை உத்வாசனஞ்செய்து அன்றிரவைக்கழித்து, விடியற்காலத்திலெழுந்து, காலைக்கடனை முடித்து அக்கினிக்கடனைச் செய்து "சமஞ் சந்து மறுதைதி" என்னு மந்திரங்களைச் செபித்து "யாதேயக்நே" என்னு மந்திரத்தைக் கூறி, அவ்வக்கினியில் தனது வலக்கரத்தைச் சூடேற்றி, அதனையேமீண்டுந் தனது ஆன்மாவிலாரோபணஞ்செய்து, சூரியனுக்குச் செய்யவேண்டிய கடனை முடித்து, நதிக்கரையடைந்து நாபியளவு ஜலத்திலிறங்கி, பிரஜாபத்தியேஷ்டியை முடித்து, கிரகஸ்தாச்சிரமத்தை விட்டுச் சந்நியாசாச்சிரமத்திற்குப் போக வேண்டியதற்காக வேதங்களில் விளம்பியுள்ளபடி காயத்திரி முதலிய திவ்ய மந்திரங்களை ஓங்காரத்தி லைக்கியஞ்செய்து அப்பிரணவத்தை யுபதேசித்துக்கொள்ளவேண்டும். அக்காயத்திரியை வியாஹ்ருதிகளுடன் பாதம்பாதமாய் உச்சரித்து அவளது சொரூபமான பரமேசுவரியும் சங்கரரது பாதி சரீரத்தைப் பெற்றவளும், ஐந்து முகங்களுடையவளும், பதினைந்து கண்களும், நவரத்தினங்களாலும் சந்திரகலைகளாலு மலங்கரிக்கப்பட்ட பஞ்சமுடியும், சுத்தஸ்படிக சமானமான காந்தியும், வரதம், அபயம், அங்குசம், குறடு, கபாலம், பாசம், சங்கு, சக்கரம் கதை, தாமரை முதலியன வேந்திய பத்துக் கரங்களும், கங்கையின் வெள்ளம்போன்ற வெள்ளிய முத்துமாலையா லலங்கரிக்கப்பட்ட கண்டமும், இரத்தின கங்கணங்களா லலங்கரித்த மணிக்கட்டுகளும், மேகலையணிந்த இடையும், தண்டை சிலம்புமுதலியவற்றா லலங்கரித்த பாதங்களும், வெண்பட்டணிந்த மேனியும்பெற்று ருஷிகள் கந்தருவர் யக்ஷர் தானவர்— மாநுடர் முதலியோரால் சேவிக்கப்பட்டவளும், சர்வாத்மசொரூபினியும் திரிலோக வியாபினியும் சிவசொரூபியும், சதாசிவ பத்தினியும், அழகிய அவயவங்க ளுடையவளுமாகத் தியானிக்க வேண்டும். எவன் அச் சிவசொரூபியாகிய காயத்திரியைக் கிரமமாக வுபாசிக்கவில்லையோ அவன் பிரமகற்பபரியந்தம் ரௌரவாதிநிரயத்தை யநுபவிப்பான். அக் காயத்திரி வியாஹ்ருதியினின்றுந் தோன்றி அதிலேயே லயமடைவள். அவ்வியாஹ்ருதி பிரணவத்திற்றோன்றி அதிலேயே லயமடையும். அப் பிரணவம் எல்லா வேதங்களுக்குமாதி. அதுவே சிவவாசகசத்தம்.

அச்சிவமே பிரணவம். அப்பிரணவமே சிவம். வாச்சிய வாசக சத்தங்களுட் கொஞ்சமேனும் பேதமில்லை. ஆகையால் அப்பரமசிவமே ஏகாக்ஷரமாகிய பிரமம். அதுவே பரம்பரமான வஸ்து. அதுவே எல்லாவற்றிற்குங் காரணம். அதுவே அகண்டாகாரமாயும், நிருமலமாயும்,சர்வதேஜோமயமாயும், நிஷ்கள நிரஞ்சன நிராமய சச்சிதாநந்தமாயும் விளங்குவது. அதனையே துறவிகளெல்லாரும் மனமாகிய தாமரையின் மத்தியில் வெகுகாலமாகத் தியானித்து ஆனந்தமடைந்து பிறவியை யொழிக்கின்றார்கள். இத்தகைய வடிவெடுத்த காயத்திரியாகிய பிரணவத்தை யநுசந்தானஞ்செய்யவேண்டும். "அகம் ரக்ஷஸ்ய" "எத்சந்தசாம் ரிஷபம்" "கோபாயந்தம்" என்னும் மூன்று அநுவாக மந்திரங்களால் ஈஷணாத்திரயங்களாகிய மண் பெண் பொன்னளவிலுள்ள ஆசையை யொழித்து, பிரணவத்தை வியாஹ்ருதியுடன் ஜபித்து "ஓம்பூஃ ஸந்நியஸ்தம்மயா" "ஓம்புவஃ ஸந்நியஸ்தம்மயா" "ஓம்சுவஃ ஸந்நியஸ்தம்மயா" என்று சர்வ மந்திரங்களையும் விட்டு, பிரணவத்தை மீண்டும் முன்னேகூறி, வியாஹ்ருதித்திரயங்களைச் சமஷ்டியா யுச்சரித்து சந்நியஸ்தமென்று சொல்லவேண்டும். சதாசிவமூர்த்தத்தை இதயத்திற் றியானித்துப் பிரேஷமந்திரத்தை ஜபித்து சாவதானமனதுடன் சர்வபிராணிகளுக்கு மென்னிடத்தில் அபயமுண்டாகக்கடவதென்று சுவஃ அந்தத்தினால் ஜலத்தை எடுத்துக் கீழேவிடவேண்டியது. பின்னர் காயத்திரியை ஜபித்துத் தன் கையால் தான் பூண்டிருக்கும் பூணூலையும் சிகையையும் எடுத்து வியாஹ்ருதிகளுடன் பிரணவத்தை யுச்சரித்து "வன்னிஜாயாம்" என்னும் மந்திரஞ் சபித்து சமுத்திரகச்ச சுவா:என்றுஜலத்துடன்விடவேண்டியது. ஜலத்தைப் பிரஷமந்திரத்தினால் அபிமந்திரித்து மும்முறை ஆசமனியஞ்செய்து அரையிலுடுத்திய வஸ்திராதிகளைக் கீழேபோட்டு விடவேண்டியது. இவைமுடிந்தபின்பு வடக்கு முகமாகவாயினும் கிழக்கு முகமாகவாயினும் எழுடி நடக்கவேண்டியது. அப்படி நடக்கையில் ஆசாரியர் அணுகி "நடவாதே நடவாதே" என்று கூறித்தடுத்து வியவகாரநிமித்தமாய்க் கோவணத்தையுந் தண்டத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டியதெனக் கூறுவதற்கிணங்கி அவற்றைப்பெற்றுக்கொண்டு சூத்திரத்துடன் காவி வஸ்திரத்தைத் தரிக்கவேண்டியது. ஆசாரியர் சீடனைப்பார்த்து "இந்திரஸ்ய வஜ்ரோசி" என்னும் மந்திரத்தாற் கொடுத்த தண்டத்தைப் பிரார்த்தனையுடன் வாங்கி அதனைத்தனக்குச் சிநேகனாயிருக்க வேண்டிக்கொள்ளவேண்டும். ஆசாரியது சமீபஞ்சென்று சிவபாதாம்புயத்தைத் தியானித்து அவரை மூன்றுமுறை சாஷ்டாங்கமாய்ப்பணிந்து, அஞ்சலியஸ்தனாய் அவரது பாதத்தருகே நிற்கக்கடவன். முன்செய்துள்ள விரஜாஹோமத்தின் பஸ்மத்தை ஆசாரியர் சீடனது தேகமுழுதும் அக்கினிரித்யாதி மந்திரத்தாலும், ஈசானாதி மந்திரங்களாலும் தூளனஞ்செய்து, திரிபுண்டரத்தைத் திரியாயுஷ்திரியம்பகம் மந்திரங்களால் தரிக்கவேண்டும். அவ்வாசாரியரே இதயபுண்டரீகத்திற் பார்வதிசகிதராய்ச் சதாசிவத்தைத் தியானித்துச் சீடனது சிரசில் வலதுகையை

வைத்துச் சந்தோஷமனதுடன் ருஷிஸஹிதமாய்ப் பிரணவத்தை அவன் வலதுகாதில் உபதேசிக்கவேண்டும். அப்பிரணவத்தை மூன்றுபிரகாரமாய் அதனர்த்தத்தை ஷட்விதார்த்த பரிஜ்ஞானத்துடன் சொல்லவேண்டும். இவைமுடிந்தபின் சீடன் ஆசாரியனைப் பன்னிருமுறை சாஷ்டாங்கமாய்ப் பணிந்து அவரது சுவாதீனமாகி எக்காலத்திலும் பக்தியிற்றவறுமற் பணிவிடைசெய்து வேதாந்தார்த்தங்களையும் பிரணவ சொரூபத்தையும் சிவஞானத்தையும், தெரிந்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தனை செய்யக்கடவன். விடியற்காலத்தில் ஸ்நானஞ்செய்து குருவைவணங்கி அன்றன்று செய்யவேண்டிய அநுஷ்டானங்களை அவராலறிந்து கிரமமாய் முடித்து மூலமந்திரத்தை ஒவ்வொருவேளை பன்னீராயிரத்திற்குறையா மல் ஜபஞ்செய்யவேண்டியது. இத்தகைய ஜபத்தைமுடித்து முற்கூறிய கைலாயப்பிரஸ்தரமென்னும் மண்டலத்தைக் கிரமப்படி நியமித்துப் பூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டும். பிரதிதினமுந் தவறுமல் இப்பூஜையைச் செய்து வரவேண்டும். படிகமயமான இலிங்கத்தையும் பூசனைசெய்து வரவேண்டும். அப்படிப் பூசனைசெய்ய யத்தனிக்கையிற் குருசந்நிதானத் தில் என்பிராணனொழிந்தாலும்சிரச்சேதமடையநேரிட்டாலும் திரிநேத் திரனைப் பூசிக்காமல் ஆகாராதிகளைச் செய்வதில்லையென்று சத்தியங்கூறி மகாதேவரிடத்திலே புனிதமான மனதுடனும் அத்தியந்த பக்தியுடனும் பஞ்சாவரணக்கிரமத்துடன் பூசிக்கக்கடவன்.

ஸந்நியாசக் கிரமமுணாத்தது

முற்றிற்று.

பத்தாவது

ஷட்விதார்த்தமுணாத்த அத்தியாயம்.

மேற்கூறியவற்றைக் கேட்டுவந்த வாமதேவர் மீண்டும் சுப்பிர மணியனை நோக்கி, பகவானே! விசேஷஞானமிர்தவாரியே! சமஸ்த லோகங்களுக்கும் பரமேசனே! வழிபடுவோராபத்தையகற்றுவோனே! என்று வணங்கி, யகண்டமான சிவசம்பத்தையடைதற்கு, ஷட்விதார்த்த பரிஜ்ஞானமே முக்கியமானதென்று திருவாய்மலர்ந் திருக்கின்றீர்கள். அதைவிளக்கி அர்த்தத்தின் வழியையும் ஞானத்தின் வழியையும், அவ் வர்த்தத்தாலறியக்கூடிய வஸ்துவின்னதென்பதையும், அவ்வஸ்துவை யடைதலாற்கூடும்பலன் முதலியவற்றையுங்கூறவேண்டும். இதையறியாது பசுசாத்திரங்களால் மோகிக்கப்பட்டுழலுகின்றேன். இதைவிட்டுச்சிவபாத மாகிய தாமரையினின்றும் பெருகும் அமுதத்தையுண்டு இவ்வஞ்ஞானத் தினின்றும் நீங்கிச் சிவாநந்தத்தை யநுபவிக்கத் தங்கள் கிருபையாகிய அமுதத்தினால் நிறைந்த நோக்கத்தைச் சரணாகதியடைந்த என்மீதுபரப்பி அநுக்கிரகிக்க வேண்டுமென்று கூறியவாமதேவரை நோக்கி, கையில்

ஞானசத்தியை யேந்தியவராயும், ஜகத்பிரபுவாயுமுள்ள அறுமுகர் சிவ பக்தியில்லாதவர்களுக்குப் பயங்கரமாயும், அஃதுள்ளவர்களுக்குச் சிவா நந்தத்தை யதிகரிக்கச் செய்வதாயுமுள்ள வாக்கியத்தால் திருவாய்மலர்ந் தருள்கின்றார். வாமதேவமுநிவனே! ஆதரவுடனே பரமேசனுடைய பிரண வார்த்த சொரூபத்தையும் ஷட்விதார்த்த பரிஜ்ஞானத்தையுங்கேட்டமை யாலவற்றை விரித்துக் கூறுகின்றேன். முதலாவது மந்திரம், இரண்டாவது யந்திரம் மூன்றாவது தேவதை பொருள், நான்காவது பிரபஞ்சம், ஐந்தா வது குரு, ஆறாவது சிடன், ஆகியவற்றைத்தான் ஷட்விதார்த்தமென்பது. இவ்வாறனுள் முதலாவதாகிய மந்திர சொரூபத்தைச் சொல்கின்றேன். * ஆதியக்ஷரமாகிய அகாரமும் ஐந்தாவதாகிய உகாரமும், ப வர்க்கத்தில் ஐந்தாவதாகிய மகாரமும், ஆகிய இம்மூன்றக்ஷரங்களை விந்துநாதங்களு டன் சேர்த்தாற் பிரணவமாகும். இதுவே வேதத்திற் காதியென்றும் சம ஷ்டியென்றும், வேதாந்தங்கள் சொல்லப்படுகின்றது. இதில் நாதமென் பது சர்வசமஷ்டி சொரூபமாகும். இதுவே சிவசொரூபமாகும். இரண் டாவதாகிய யந்திரக்கிரமத்தை உனக்குச் சொல்கின்றேன். இப்போது சொல்லப்போகின்ற யந்திரத்தையே சிவலிங்கமாகப்பாவிக்கவேண்டியது. அவ்வியந்திரத்திற்குக்கீழ் ஆதாரசத்தியை ஸ்தாபித்து அதன்மேற் பிரண வமயமான பீடத்தை நிர்மாணஞ்செய்து அதற்குமேல் பிரதமசுவரமாகிய அகாரத்தையும் பஞ்சமவர்ணமான உகாரத்தையும் அதன்சிரசில் மகா ரத்தையும், அதன்சிரசில் விந்துவையும் அதன்சிரசில் நாதத்தையுமெழு திச் சுற்றிலும் பிரணவத்தினால் மதில்களுண்டாக்கி, அதற்கு நாதத்தி னாலே வாயிலுண்டாக்கவேண்டியது. மூன்றாவதாகிய பரமசிவனாலேயே சொல்லப்பட்டுள்ள தேவதார்த்தத்தைக் கூறுகின்றேன். சத்தியோ ஜாதம் பிரபத்யாமி என்று ஆரம்பித்து சதாசிவோமென்னும் பஞ்சப்பிரம மந்திரபரியந்தம், பஞ்சப்பிரம சொரூபமாயும் பிரணவ பிரமரூபிணிக ளாயும் தேவதா சொரூபிகளாயும், வேதங்களின் சிவமூர்த்த பேதங்களைப் பஞ்சப்பிரமங்களென்றும் பிரணவசொரூபமென்று முற்கூறியுள்ளபடி ஈசானாதி மகுடக்கிரமமாயுமுள்ள சிவவிக்கிரகத்தைப் பாவிக்கவேண்டும். அவ்வைந்து முகங்களும் சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்குக் காரண மாக விருக்கின்றன. இவ்விதமான சதாசிவம் எழுந்தருளியிருக்கும் பீடமானது பரமபதமென்றும், யோகிகளாலும் யதிகளாலுமடையத்தக்க தென்றும், அவரை யுபாசிக்கின்றவர்களுக்கும் பிரணவத்திற் பிரீதியுள்ள வர்களுக்கும், சிவசாம்பிராச்சியத்தை இச்சித்தவர்களும் உரியதாயுள்ள ஸ்தானமாம். அத்தானத்தையடைந்து இச்சித்தபோகங்களை யநுபவித்துப் பிரளயாந்த பரியந்தம் பிரமானந்தத்துடன் விளையாடி மகாப்பிரளயகாலத் தில் சிவசாரூபத்தை யடைகின்றார்கள் "தேப்பிரமலோகயிதி" என்னும் வேதத்தின் அர்த்தப்படி சாதசிவத்தின் ஐசுவரியத்தையுமடைகிறார்கள்.

* இது வடமொழியிலென்றறிக.

அவர்களே சர்வைசுவரிய சம்பன்னர்களென்று அதர்வசிகோ உபநிடதங் கூறும். அத்தானத்தையடைந்தோன் மீண்டும் பிறப்பதில்லையென்று சாந்தோக்ய உபநிஷத்து கூறும். அவ்விதமேதைத்திரியசாகையில் சமகமந்திரத்தில் பஞ்சப்பிரம ஸ்தானத்தைக்காட்டிலும் அடையத்தக்கின ஸ்தானம் வேறில்லையென்றிருக்கிறது. அப்பஞ்சப் பிரமத்தினிடத்திருந்தே நிவிர்த்தியாதி கலைகள் ஸூக்ஷ்மரூபிகளாய்த் தோன்றின. பிரபஞ்சமென்பது ஸ்தூலஸூக்ஷ்மபேதங்களாயுள்ளது. அது ஐந்து பிரகாரமாகப்பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வைந்துள் ஒன்று, புருஷன் சுரோத்திரம் வாணி, சத்தம், ஆகாயம், ஆகிய இவ்வைந்தாய் விரிந்து ஈசானப்பிரமத்தினல் வியாபரிக்கப்பட்டுள்ளது. இன்னென்று, பிரகிருதி, * துவக்கு, பாணி, பரிசம், வாயு, தற்புருடப்பிரமத்தினல் வியாபரிக்கப்பட்டுள்ளது. மற்றொன்று அகங்காரம் நேத்திரம் பாதம் ரூபம் அக்கினி அகோரப்பிரமத்தினல் வியாபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது, புத்தி, நாக்கு, ¶ பாயு, ரசம், ஜலம் வாமதேவபிரமத்தினல் வியாபரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது மனம் மூக்கு குறி பரிமளம் பூமி சத்தியோஜாதப்பிரமத்தினல் வியாபரிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையினல் பிரபஞ்சம் பஞ்சப்பிரமங்களாலேயே வியாபரிக்கப்பட்டுள்ளது. இயந்திரரூபத்தினலேயே சிவவாசகமான பிரணவத்தையுபதேசித்தேன். அச்சிவபெருமானலே யுபதேசிக்கப்பட்டதாகப் பாவிக்கக்கடவாய். வாமதேவமுனிவனே! சதாசிவப்பிரமம் சமஷ்டிரூபமாயும் ஆகாசாதிபதியாயும் பிரபுவாயும் ஆதியந்த சூனியராயும் உள்ள சதாசிவத்தின் யஷ்டிரூபத்தைச் சொல்லுகின்றேன். மகேசுவரனும் உருத்திரனும் விஷ்ணுவும் பிரமனும் அச்சதாசிவத்தின் அம்சமாய்த் தோன்றுகின்ருர்கள். அம்மகேசனே வாமபாகத்தில் மாயாசத்தியை யேந்தி அருவுருவராய் விளங்குகின்ருர். அம்மகேசரூபம் நான்குவகையன: அவை ஈசன் விசுவேசன் பரமேசன் சர்வேசுவரனெனப்படும். இதுவே திரோபாவசக்கரமெனப்படும். அத்திரோபாவசக்கரம் இருவகைத்து. அதில் உருத்திரமூர்த்தி பேதமென ஒன்றும் ஜீவசொரூபமென மற்றொன்று முள்ளன. ஜீவசொரூபிகள் போகங்களைக்கருமத்திற்கிடா யநுபவித்துப் புண்ணியபாவாந்தத்தில் பரமேசரநுக்கிரகத்தால் ஜனனமடைகின்ருர்கள். இதுகாறும் சர்வேசுவராதி பேதங்களைக் கூறிவந்தேன். இதே திரோபாவசக்கரமாயும் சாந்திகளாமயமாயும் மகேசுவரரெழுந்தருளியிருக்கப்பட்டதாயும் உத்தமோத்தமமாயும் உள்ளது. இத்தானத்தை அநேகர் விரும்புகின்ருர்கள். இதுவே சாலோகக் கிரமமாய் முத்தி யடையவேண்டியது. மேற்கூறியபடியே அம்மகேசுவரரது ஆயிரத்திலோரம்சத்தில் உருத்திரமூர்த்தி அகோரமுகமும், தேஜஸ்தத்துவங்களுக்கதிபராயும், வாமபாகத்திற் கௌரிசத்தியுடனும், சர்வசம்மாரகாரகராயும், உதிப்பார். அவ்வுருத்

* தோல். ¶ கை.

திரமூர்த்தியின் வியஷ்டிரூபம் நான்குவகை பேதங்களையுடையது. அது சிவன், அரன், மிருடன், பவன் எனப்படும். இதனைச் சம்மார சக்கிர மென்பர், இச்சம்மார சக்கரம் மூவகைத்து. அவை நித்திய நைமித்திக மகாப் பிரளயமென்ப. சத்தியமென்பது ஜீவவொடுக்கமும், (சுஷுத்தி) நைமித்திகம், பிரமனொடுக்கமும், மகாப்பிரளம் பிரமன் பரப்பிரமத்தி லொடுங்குங்காலமுமாகும். இவ்வாறு வேதங்கள்கூறும், இவ்வகைய ஜன்மதுக்கத்தில் ஜீவராசிகள் உழன்று ஆயாசமடைந்து ஆன்மசொரூப மறியாதவர்களாயிருப்பர் அவர்கள் வருத்தத்தைப் போக்கடித்தற்கு அவரவர் கர்மாநுசாரமாக உருத்திரமூர்த்தியினாற் சங்காரஞ் செய்யப்படுகிறார்கள். அச்சங்காரம் மூவகையென்பர். இச்சங்காரகாலத்திலும் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களில்லாது போகவில்லை. எவ்வாறெனில்? பவாதிதேவர்களக் காலத்தினு மிருப்பதால் சூக்ஷமரூபமாய்ச் சிருஷ்டிபஞ்சகம் நடக்கும். இது வித்தியாரூபமாயும், களாமயமாயும், நிராமயமாயும், உருத்திரனெழுந்தருளி யிருக்கப்பட்டதாயுமுள்ளது. இதனை அறியவிரும்பியோர் அவனை ஆராதித்து உருத்திரசாலோக்கியக்கிரமமாய்ச் சாயுச்சியபதவியைப் பெறுவார்கள். அவ்வுருத்திர மூர்த்தியின் ஆயிரத்தி லோரம்சராக விஷ்ணு உதிப்பர். அவர் வாமதேவ சக்கரத்தினின்றுந் தோன்றி ஜலதத்துவத்திற்கு நாயகனாகி இடதுபாகத்தில் ரமாசத்தியையேந்தி எல்லாவற்றையும் இரக்ஷிக்கவல்லவராயும், மகாத்மாவாயும் விளங்குவர். அவருடைய வியஷ்டிரூபத்தைக் கிரமமாகச் சொல்கின்றேன். வாசுதேவன், அநிருத்தன் சங்கருஷணன் பிரத்தியும்னன் என நான்குபெயரோடு கூடியிருப்பர். இதனை ஸ்திதி சக்கரமென்பர். எல்லா உலகங்களுக்கும் பிரமனாதிசிருஷ்டிகருத்தர்களுக்கும்இரக்ஷகர்கள். சரீரமெடுத்தவர்கள்செய்துள்ள புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபலனைக் கொடுப்பவரிவரே ஆவர். இத்தகைய ரக்ஷகக்கிரமமிவருடையதாகும். இப்பரிபாலனத்திலும் பஞ்சகிருத்தியங்கள் சூக்ஷுமரூபமாய் விளங்கும். இதற்கே ஸ்திதி சக்கரமென்றும், பிரமபிரதிஷ்டா ஸ்தானமென்றும், பரமபதமென்றும் ஜனார்த்தனர் வசிக்குமிடமாயும் விஷ்ணுபக்தி யுள்ளவர்களடையுந் தானமாயும், விஷ்ணுபக்தர்கள் சாலோக்கியக்கிரமத்தினால் முத்தியடையத் தக்கினதாயுமுள்ளது. இவரது ஆயிரத்திலோரம்சராய் சத்தியோஜாத முகாத்மகராய்ப் பிருதிவியாதி தத்துவங்களுக்கு நாயகராய் வாமபாதத்தில் வாணிசகிதராய் ஜகத்திற்குப் பிரபுவாய், சிருஷ்டிகர்த்தாவாய்ப் பிதாமகன் தோன்றுவர். அவருக்கு ஹிரணியகருப்பன் விராட் புருஷன் காலன்என நால்வகை நாமங்களுண்டு. இதற்கும் சிருஷ்டி சக்கரமென்ன வோர்பெயருண்டு. இப்பிரமனிடத்திலிருந்தே சுவாயம்புவாதி மநுக்களும் ஸனகாதிமுநிகளுந் தோன்றுவர். பிரகிருதியிலடங்கியிருக்கும்ஜீவராசிகளைக் கருமங்களுடன்பிணித்துப் புத்திரமித்திர களத்திராதிகளுடன் சுகதுக்கங்களை யனுபவிக்கச்செய்வதேசிருஷ்டி. இச்சிருஷ்டி காலத்திலும் பஞ்சகிருத்தியங்களுண்டு. இதுவேசிருஷ்டி சக்கரம். நிவிர்த்தி களாமயம் பிதாமகர் எழுந்தருளியிருப்பதும் பிரமனை யநு

சந்திப்போ ரடையத்தக்கதும் சாலோக்கியக் கிரமத்தால் முத்தியைப் பயக்கத்தக்கதுமாகவுள்ளது.

இவ்விதமான நான்கு சக்கரங்களுக்கும் பிரணவமே காரணமாக வுள்ளது. இதையேஜகத்சக்கரமென்றும்சிருஷ்டியாதிபஞ்சவட்டங்களோடு கூடியதென்றும் வேதங்கூறுகின்றது. இந்தச்சக்கரம் சம்புவின்சத்தியாற் சுற்றப்பட்டதாய்,சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களோடு கூடியிருப்பதாற் பஞ்சாரமென்றும், குயவன் சக்கரம் நில்லாது சுழல்வதுபோற் சிருஷ்டிதிதி ஒய்வின்றி நடப்பதாற் காலசக்கரமென்றுஞ் சொல்லப்படுகின்றது. சம்புவின் தேஜசினுலும் சத்தி காரியத்தினுலும் இச்சக்கரம் சுழன்றும், ஹிரண்ய ஜோதிஸென்னும் பெயருடன் விளங்குகின்றது. அச்சோதியானது ஜலத்தினுலும் அது அக்கினியினுலும் அது காற்றினுலும், அது ஆகாயத்தினுலும், அவ்வாகாயம் அகங்காராதிகளாலும், அவ்வகங்காரம் மகத்தாலுமாகிய ஆவரணங்களால் வியாபரிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய சக்கரத்தினும்ஜலம் பதின்மடங்கு அதிகமாம். இம்முறையே ஏழு ஆவரணங்களும் பப்பத்து அதிகப்பட்டதாகவிருக்கும். இவ்வர்த்தத்தை 'ஹிரண்ய ஜோதி ஹிசலிலஸ்யமத்ய'என வேதங்கூறும். சர்வவியாபியான பரமேசனை ஜலநடுவில் இருப்பதாக எவ்வாறு கொள்ளலாம்? எனின், ஸத்தியோஜாத மூர்த்தியின் அநேகாம்சத்தி லோரம்சம் ஹிரண்யகருப்பனுக விருத்தலின் அவ்வாறிருக்கக்கூடும். இவ்வாறு அநுக்கிரகம் திரோபவம் சங்காரம் ஸ்திதி சிருஷ்டியாகிய பஞ்சகிருத்தியங்களைத் தமது சத்தியுடன்கூடி லீலையாகச் சிவபெருமான் இடைவிடாது செய்கிறார். வாமதேவ முநிவனே! அதிகமாகக் கூறுவதி லென்னபயன்? சாரத்தைமாத்திரஞ் சொல்லுகின்றேன். பஞ்சப்பிரம சொரூபியான சதாசிவமே சமஸ்த பிரபஞ்ச சொரூபியென்றும், சர்வசத்தியுடன் கூடியவரென்று மறியக்கடவாய்.

நைமிசாரணியவாசிகளே! ஆதிகுருவாகிய சுப்பிரமணியரா லுபதேசிக்கப்பட்ட வேதார்த்தத்தையறிந்து பரமேசரது வாக்கியங்களுட்டனக்குத் தெரியாதவற்றை வாமதேவமுநிவர் கேட்கின்றார். ஞானசத்தியைத்தரித்த பரமாநுக்கிரகரான சுப்பிரமணியரே! தேவரீர் முகமாகிய தாமரையினின்றும் பெருகிய பிரணவமாகிய அமிர்தத்தையுண்டு திடமனமுடையனுயினேன். சந்தேகமு மொழிந்தது. சுதாசிவப்பிரமமுதல் கிருமிவரையிலுள்ள ஜீவராசிகளின் ஸ்திதியை யறிந்துகொண்டேன். எல்லா ஸ்திரி புருடரூபமாய்க் காணப்படுகிற ஜகத்திற்கும் ஆதிகாரணம் ஸ்திரி ரூபமா? அல்லது புருடரூபமா? அல்லது நபும்சகமா? இம்மூவகையிலெது உத்தமமானது? இம்மூவகை உருவன்றி வேறேயேதாகிலுமுண்டா? இதன்விஷயமாக அதிகமாக யோசனைசெய்தும் ஒன்றுந் தோன்றவில்லை. பண்டிதர்கள் சாஸ்திரங்களால் மோகிக்கப்பட்டுச் சிருஷ்டிகளை அநேகவிதமாய்ச் சொல்லுகிறார்கள். அவ்வித ஜகத்தும் ஸ்திரிபுருஷரூபமான சதாசிவமும் ஒரேசொரூபமென்பதன் உண்மை எனக்குத்தோற்றவில்லை

யாதலின், இவற்றின் சித்தாந்தத்தை விரித்துச்சொல்ல வேண்டுகிறேன் என்று கேட்டுக்கொண்ட வாமதேவரை நோக்கி, மலர்ந்தமுகமண்டல முடைய சுப்பிரமணியர் இரகசியார்த்தத்தை விவரிக்கின்றார். நீர் இப்போது கேட்ட விஷயத்தை நான் முன் என் தாயாரிடம் அமுதமுண்ணுகையில் அவளுக்குப் பரமேசனே உபதேசிக்கக் கேட்டிருக்கின்றேன். அதையே உனக்குச் சொல்கின்றேன். இச்சகத்திற்குக் காரணப்பொருளை அநேக விதமாகக்கூறி வாதிடுவர். உன்னுலுபதேசமடைந்த சீடருள் உனக்குச் சமானுதிகரிலர். கபிலராலுண்டு பண்ணிய சாஸ்திரங்களில் அநேகர் உழல்கின்றனர். இன்னுஞ் சிலர், நந்தி, ததீசி, கௌதமர் முதலியோரது சாபங்களாற் சிவநிந்தை புரிந்து அஞ்ஞானத்திலகப்பட்டவலமுறுகின்றார்கள். அவருளநேகர் நிரீசுவரவாதிகள். அவர் வார்த்தையையொருவருங் கேட்கலாகாது. கேவல அநுமான பிரமாணங்களாலும் பிரத்தியக்ஷ பிரமாணங்களாலும், ஐந்தொழில்களோடு கூடிய பரமேசனில்லையென்று வாதிடுவர். பிரத்தியக்ஷ பிரபஞ்சத்தைப் பொய்என்றுகூறி அப்பிரத்தியக்ஷமான பரமேசனெப்படி யிருக்கக்கூடும்? என்பார்கள். அத்தகையோர்கள் நாஸ்திகரும், பரலோகத்தை நம்பாதவரும், சிவபத்தி அடியார்பத்தி குருவிசுவாசம் முதலியன இல்லாதவரு மாவார்கள். அவர்களுடன் கூடுதலுங்கொடிது; வசனிப்பதும் அணுகுவது மதனினுங் கொடிது.

ஆகையால், பரமேசனும் பரமாத்மாவாயும் நிர்க்குணநிராமய நிரஞ்சன நிராதாரமாயுமுள்ள எங்கும் நிறைந்து எக்காலத்திலு மழிவற்ற சின்மயாநந்த பிரமமான சதாசிவப்பிரமமே அறியத்தக்கது. அதுவே வுண்மையென்று பன்முறை வலக்கரத்தை யுயர்த்திக் கூறுகின்றேன். வாமதேவமுநிவனே! எல்லாப்பிரபஞ்சமும் ஸ்திரிபுருடரூபமாகவே காணப்படுகின்றன. அப்பிரபஞ்சத்தில் ஷட்கோசமயமான [தேகங்களே] பிண்டங்களே உண்டாகின்றன. ஸ்திரிபுருட சம்பந்தமில்லாமல் ஷட்கோசமயமான தேகம் ஒருகாலு முண்டாகாது. அப்பிண்டம் பிதாமாதாக்களின் சங்கமங்களாற் றோன்றுகின்றன. இவ்விதமாகவே எல்லாச்சரீரங்களும் பிதாவினம்சத்தால் தோல் மாமிசம் உதிரம் முதலியவும், மாதாவினம்சத்தால் எலும்பு நரம்பு கொழுப்புமாக ஷட்கோசங்கள் கூடினதேகமாகும். ஆகையாலெப்போது மழிவற்ற பரமாத்மாவாய், சர்வாத்தும சொரூபியாயிருக்கும் பரமேசனிடத்து ஸ்திரிபுருடபாவ மிருப்பதாகப்பண்டிதர் கூறுவர். உபநிடதங்கள் அவ்வஸ்து சச்சிதானந்த சொரூபமென்றும் நிர்க்குணமென்றும், நாமரூபமற்றதென்றும் சொல்லுகின்றன. அவ்வித பிரமத்தில் ஸ்திரிபுருட ரூபமெப்படி கற்பிக்கலாமெனின், அதனைவிவரிக்கின்றேன். அசத்தை நிவர்த்திப்பதாற் சத்துண்டாகும். அஞ்ஞானத்தைப் போக்குவதால்ஞானமுண்டாகும். அதனையே சித்தெனப்படும். அச்சத்துச் சத்தமானது மூன்று இலிங்கத்திலும் விரவியிருப்பதா லதனைப்புருடரூப

மென்றும், சித்தென்பது பிரகாசமுண்டாக்குவதற்குக் காரணமாயிருத்தலால் ஸ்திரிரூபமென்றுங் கூறப்படும். அப்பிரகாசமயமான சித்தும் அழிவற்ற ஆனந்தமயமான சத்தும் ஒன்று சேர்வதால் உலகத்தோற்றத்திற்குக் காரணமாகின்றன. சத்துச்சத்தமான பிரமத்தையே புருடனென்றும் விவகரிப்பர். சித்துச்சத்தத்தையே ஸ்திரியென்பர். எப்போதும் பிரகாசமாயிருந்தாலும் தீபத்திற்கு நெய் வர்த்திமுதலியவற்றின் தோஷத்தால் பங்கம் நேர்வதுபோலச் சத்பதார்த்தத்தோடு சித்பதார்த்தங் கூடுவதாற் சகந் தோன்றும். அக்கினி எல்லாவற்றையும் பரிசுத்தஞ்செய்வதாக விருப்பினும், அது சுடுகாட்டி லிருக்கையில் தனித்து, ஓர் கருநிறமும், மற்றவர் அணுகக்கூடாததாகவு மிருப்பதுபோலப் பிரமம் எப்போதும் சுயம்பிரகாசமாகவிருந்தாலுஞ் சித்துசேர்வதால் அழியும் பிரபஞ்சமாகும். இவ்விதசத்தி ஜீவாத்மாவையடைந்து எல்லாச்சகத்தையும் பிரகாசப்படுத்தும். எல்லாக்காலத்திலும் சத்தி சம்பந்தமின்றி யொன்றுஞ் சலிக்காது. சத்தி சம்பந்தத்தினலேயே உலகத்திற் பலவானென்றும், சத்தியவானென்றுஞ் சொல்லுகிறார்கள். வாமதேவரே! பரமாத்மாவிடத்திற் சிவதத்துவம் சத்திதத்துவ மிரண்டு மிருக்கின்றன. இச் சிவ சத்திகளுடைய கலப்பால் உண்டாவதே ஆனந்தமென்று சொல்லப்படுகிறது. அதனையே சச்சிதாநந்தமென்பதுமுண்டு. அவ்விதமானதைப்பற்றி முனிவர்களெல்லாரும் பாவத்தைப்போக்கி அழிவற்றுள்ள பரப்பிரமத்தினிடத்து அடக்கக்கூடாத மனதைச் சமாதியிலிருத்தி அநாமயமாயும் ஆதியந்த சூனியமாயும் அகண்டமாயும் எண்ணற்றதாயுமிருக்கும் ஆனந்தத்தை அநுபவிக்கின்றார்கள். சிவசத்திகளையே சர்வாத்மாவென்றும் சத்தியமென்றும் ஞானமென்றும் நித்திய சுத்த சொரூபமென்றும் உபநிடதங்கூறும். அகண்டமாய் ஒன்றிலுமடங்குதலின்றி யெல்லாவற்றிற்கும் பெரிதாயுள்ளதாற் பிரமமென்னும்பெயரோடு பிரமணத்துவம் பிரகத்துவமிரண்டும் சத்துப்பதார்த்தத்திலேயே யடங்கியிருக்கின்றன. நித்தியசுத்தராயிருப்பதாற் பிரகத்தென்றும் சர்வவியாபியாயிருப்பதாற் பஞ்சப்பிரம சொரூபியென்றும், அப்பஞ்சப் பிரமத்தினிடத்தே இப்பிரபஞ்சமானது தோன்றப்படுகிறதென்றும், அதனாலேயே பிரமமென்றும் விவகரிக்கின்றார்கள். ஸகாரம் சிவாத்துமகமாயும், ஹகாரம் சத்தியாத்துமகமாயும் இருப்பதால் இதுவே மகாமந்திரமாகவும், யோகியர் உச்சரிக்கும் மூலமந்திரமாகவு மிருக்கின்றது. குருவின் உபதேசகாலத்திற் சத்தியாத்துமகமான மந்திரத்தை யுச்சரிக்கின்றார்கள். இதனையே பசுவான ஜீவன் உச்சரித்துச் சமுசாரசாகரத்தைத் தாண்டவேண்டும். சத்தியாத்துமகமான சிவஞானம்வந்தால் அவனே சிவசாரூபமடைகிறான். பிரமவாக்கியத்திற் சாஸ்திரஞானமே பிரமமென்று சுருதிகூறும். சாஸ்திரஞானமாவதே சைதன்னியம். அச்சைதன்னியமே ஆன்மசொரூபமென்று சைவாகமங்கள் கூறும். சமஸ்த ஜகத்திலு மிருக்குஞ் சைதன்னியம் எங்கும் ஞாதிருத்தமகமாகவும் சுதந்திரமாகவுமிருக்கப்பட்ட சுபாவமே ஆன்மாவென்று சிவஸூத்திரஞ் சொல்லும்.

இவ்விதமாகப் பரமாத்மசொரூபத்தை இதுகாறும் விவரித்தேன். இனி ஜீவசொரூபத்தை விளக்குகின்றேன்.

சிவஸூத்திரத்தில் ஞானமென்ப தொன்றுண்டு. அந்தஞானம் ஜீவர்களுக்குக் கொஞ்சமாகக் கிடைத்திருக்கும். ஞானசத்தியெனவுங் கிரியாசத்தியெனவும் பிரமத்தினிடத்து இரண்டுண்டு. அச்சத்திகள் சிருஷ்டிக்குக் காரணமாயிருக்கும். அச்சத்திகளையே சுவேதாசுவதர வுபநிடதம் பராசத்தி யெனக்கூறும். பரமேசனுக்கு ஞானம், கிரியை, இச்சையாகிய மூன்றுகண்களுண்டு. அக்கண்களை இந்தியத் துவாரகோசரமாகச் சீவன் மனத்திற்பியானித்துச் சத்தாய் அறிகிருன். ஆகையால் ஆன்மாவிடத்திருந்தே இச்சொரூபங்காணப்படும். வாமதேவரே! பிரபஞ்சசொரூபமான பிரணவார்த்தத்தைக் கூறுகின்றேன். "ஓம் இதி" என்கிற வாக்கியமே பிரமமெனத் தைத்ரீய வுபநிடதங்கூறும். பிரணவத்தினின்றே பிரபஞ்சந் தோன்றியதென்று அவ்வுபநிடதம் மேலுங்கூறும். அவ்வுபநிடதத்தின் தாற்பரியத்தைக்கூறின் சிவசத்தியின் சம்யோகமே பரமாத்மாவென்று நிச்சயமாகும். அப் பரமாத்மாவி னிடமிருந்து ஆகாயமும் அதினின்று வாயுவும், அதினின்று அக்கினியும், அதினின்று ஜலமும் அதினின்று பிருதிவியுந் தோன்றும். மாயையே பிரகிருதியும், அப்பிரகிருதியுடன் கூடியவரே மகேசுரருமெனச் சர்வசாஸ்திரங்களுங்கூறும். அப்பரப்பிரமத்தை யதிஷ்டித்த சத்தியே பராசத்தியென்று விவகரிக்கின்றூர்கள், அப்பராசத்தியினின்றும் சித்சத்தியுதித்தாள். அவளிடமிருந்து ஆனந்தசத்தியும், அவளிடமிருந்து இச்சாசத்தியும்,அவளிடமிருந்து ஞானசத்தியும், அவளிடமிருந்துகிரியாசத்தியுமாகஐவிதசத்திகளுதிப்பர்.இவரிடமிருந்து நிவிர்த்தியாதி கலைகளுதிக்கும். சித்து ஆனந்தமென்பவற்றினிடமிருந்து நாதவிந்துக்கள் தோன்றும். இச்சாசத்தியினின்று மகாரமும், ஞானசத்தியினின்று உகாரமும்,கிரியாசத்தியினின்று ஹகாரமுமுண்டாயின.சிவபிரானிடமிருந்து ஈசானரும், அவரிடமிருந்து தற்புருடரும், அவரிடமிருந்து அகோரரும், அவரினின்று வாமதேவரும், அவரினின்று சத்தியோசாதருந் தோன்றினர். பஞ்சப் பிரமங்களிடமிருந்தே அகாராதி * மாதுருகணங்களும், அவற்றினிடமிருந்து முப்பத்தெட்டுக் கலைகளுந்தோன்றும். ஈசானரிடமிருந்து சாந்தியதீதகலையும், தற்புருடரிடமிருந்து சாந்திகலையும், அகோரரிடமிருந்துவித்தியாகலையும்,வாமதேவரிடமிருந்துபிரதிஷ்டாகலையும்,சத்தியோஜாதரிடமிருந்து நிவிர்த்திகலையுந்தோன்றும். ஈசானரும் சிற்சத்தியுஞ்சேர்வதால் அநுக்கிரகாதி பஞ்சகிருத்தியங்களுதிக்கும். அவரிடமிருந்தே கலாவருணசொரூபமான பஞ்சபூதங்கள் உதிக்கும். அப்பஞ்சபூதங்களை ஈசசிற்சத்தி சொரூபமென்றே கூறுவர். அவற்றின் குணங்களாவன: ஆகாயம் சத்தத்தையே குணமாகவும், வாயு சத்த ஸ்பரிசங்களையே குணமாகவும், அக்கினி சத்த ஸ்பரிச ரூபங்களையே குணமாகவும், ஜலம் சத்த ஸ்பரிச ரூப

* மாதுருக்ணம் - தாயெழுத்துக்கள். இவை முதலெழுத்துக்கள்.

ரசங்களையே குணமாகவும், பிருதிவி சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களையே குணமாகவுமுடையன. இவ்விதமாகவே பிரபஞ்சங் காணப்படும். சர்வ சமஷ்டியாய் எங்கும் வியாபித்திருக்கும் விராட்டே பிரமாண்டமென்று கூறப்படும். பிருதிவி தத்துவமுதல் சிவதத்துவம்வரையிற் பரமேசுவரனிடத்தில் ஒடுங்கும். ஜீவரூபத்தில் விராட் ஒடுங்கும். மீண்டுஞ் சத்தியுடன் சிருஷ்டிக்கு ஆரம்பித்தலால்,சத்திமூலமாக மேற்சொன்ன தத்துவங்களும் ஸ்தூல சூக்குமரூபமான பிரபஞ்சங்களுந்தோன்றும். பிரளயபரியந்தம் ஜீவித்திருக்கும் மகேசன் தனதிச்சையாற் சகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டால் அதனையே சிவதத்துவமெனவும், இச்சாசத்தி தத்துவமெனவுங் கொள்ளப்படும். ஞானசத்தி கிரியாசத்திகளிரண்டுங்கூடினால், ஞானமதிகரித்திருந்தால் சதாசிவ தத்துவமென்றும், ஞானத்தினுங் கிரியை யதிகரித்திருந்தால் மகேசுவர தத்துவ மென்றுமறிவாயாக. ஞானக் கிரியாசத்திக்குச் சமானமாயும், சுத்த வித்தியாத்துமகமாயும், தன்னங்கரூபங்களின் அவயவங்களினின்றுந் தோன்றிய பூதங்களுக்குத் தனது சுத்தசொரூபத்தை மாயாதத்துவத்தால் மறைத்து, அம்மாயையினால் ஜகத்துண்டாவதை மற்றையோருக்குத் தெரிவிக்காது உண்மையாகிய தனது பரமைசுவரியரூபத்தையும் அம்மாயையினாலேயே மறைத்தும் விளங்குபவனையே புருஷனென்று வேதங்கூறும். சமுசாரர்களாயிருக்கும் ஜீவர்கள் ஈசுவரனைச் சமுசாரியென்று அவரது மாயையினாலேயே மோகித்து அவரினும்ஜகத்துவேறென்றும் தாங்கள்வேறென்றும் ஆன்மாவேறென்றும், பிரமைபடைகிறார்கள். அவரது மாயையையறிந்து சிவத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் பேதமில்லையென்று அறிந்தபின் ஒருகாலும் அஞ்ஞானமணுகுவதில்லை. இந்திரஜாலத்தைக் காண்போர் பிரமையடைந்தும், காட்டுவோர் பிரமையடையாது மிருப்பார்போல, யோகிகள் பிரமையடையார். இவ்விதமாகக் குருவாற் சிவசொரூபத்தை யறிந்தவன் குருவை ஞானசொரூபியாய்ப் பாவித்துத் தான் சிவசொரூபியாகின்றான். அச்சிவத்திற்குச் சர்வகர்த்துருசொரூபிணி, சர்வஞ்ஞத்துவசொரூபிணி, பூரணத்துவரூபிணி, நித்தியத்துவசொரூபிணி, வியாபசொரூபிணியென ஐந்து சத்திகள் உளர். அவர்கள் சத்தியினாலேயே சூரியர்கள் பிரகாசிக்கின்றார்கள். கலை வித்தை இராகம் காலம் நியதி என்னும் தத்துவ பஞ்சகரூபங்கள் கலையென்று சொல்லப்படும். அதிற்கலையென்பது கொஞ்ச தத்துவமறியச் சாத்தியமாயுள்ளது. வித்தை முன்னையதினுங் கொஞ்சமதிகமாக அறியச் சாதகமாயுள்ளது. இராகமென்பது, விஷயங்களில் ஆசையை யுண்டுபண்ணத்தக்கது. காலமென்பது பாவாபாவங்களையும், கணிதங்களையுங் காண்பிக்கும். நியதியென்பது இதைச்செய்யலாம் மற்றதைச் செய்யக்கூடாதென்று தீர்மானத்தை விளைப்பது. இவ்வைந்துமே பரமேசனது சொரூபத்தை வெளிப்படுத்தாது மறைப்பதாற் பஞ்ச (சட்டை) கஞ்சுகமெனப் பெயரெய்தின எனக் கூறினர்.

இவ்வாறு கூறிவந்த சுப்பிரமணியரைநோக்கி வாமதேவர் நியதிக்குக்கீழ் பிரகிருதியென்றும் அதற்குமேல் புருஷனென்றுந் தங்களால் முன்கூறியுள்ளது. இப்போது மாயையாலது மறைக்கப்படுகிறதென்றும் அம்மாயைக்குக் கீழிருக்கிறதென்றுந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றீர்கள். இதனை விளக்கியருள வேண்டுமெனக்கேட்க, முருகப்பெருமான் கூறலாயினர். நான் அதை மீண்டும் உனக்குரைப்பேன். சர்வ கருத்தாவாகிய பரமேசனே தன்னுடைய மாயையினால் தனது உருவத்தை மறைக்கிறவர்போலக் காணப்படுகின்றார். அவர் கலாபஞ்சகங்களாற் பிரகிருதியின்பேரிலிருந்து புருஷனாகி அதன்குணங்களை யநுபவிக்கின்றார். அவரது சமஷ்டிரூபம் சத்துவாதிகுணவயப்பட்டது. அதற்குப்பிரகிருதி தத்துவமென்றும் பெயருண்டு. அதனிடமிருந்தேசத்துவரசதமோகுணங்களுண்டாகின்றன. அக்குணங்களினிடமாக வஸ்து நிச்சயஞ்செய்யும் புத்தியுண்டாகும். அப்புத்தியினிடமிருந்து அகங்காரந்தோன்றும். அவ்வகங்காரம் மூவகைத்து. அவை ஜீவனசாதகமெனவும், வேகம்எனவும், கர்வம்எனவும் பெயரெய்தும். அக்குணங்களா லுண்டான சத்துவாதிகள் மீண்டும் மூவகையாகப்பிரிந்து, தேஜசினின்றுந்தோன்றிய அகங்காரத்தினிடமாக மனோபுத்தி யிந்திரியாதிகள் தோன்றும். மனம் சங்கற்ப விகற்பத்திற்குள்ளாயது. புத்தியாலறியத்தக்க இந்திரியம் பத்துவகைத்து. அவை சுரோத்திரம், தொக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆதியன புத்திக்குக்கோசரம். விகாரத்தினாலுண்டான கருமேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகும். இது சூக்குமரூபத்தால் விளங்கும். மேற்கூறிய இந்திரியங்களிலிருந்தே ஆகாயம் வாயு அக்கினி ஜலம் பூமி கோசரமாகும் எனக் கூறிய சுப்பிரமணியரை நோக்கி வாமதேவர் வினவலாயினர்.

ஷண்முகா! இதுகாறும் பூதசிருஷ்டி வகையைக்கேட் டறிந்தேன். முன் பூதசிருஷ்டியைப்பற்றிக் கூறியதற்கும் இப்போது கலைகளினின்றுஞ் சிருஷ்டியாகின்றதென்று கூறியதற்கும் முரணுடைகின்றதே. இப்போதிதனை இவ்வாறு ஏன்கூறவேண்டும்? அதனைவிளக்கியருளல்வேண்டும். ஆன்மதத்துவம் மகாரத்தினின்றும், வித்தியாதத்துவம் உகாரத்தினின்றும், சிவதத்துவம் அகாரத்தினின்றும், விந்துநாதங்கள் சர்வதத்துவங்களினின்றுந்தோன்றும். மேற்கூறிய ஐந்தெழுத்துகளினின்றே பிரமவிஷ்ணுவுருத்திர மகேசுவர சதாசிவர் தோன்றுகிறார்களென்றும், அவரவர் அம்சங்களின் ஒவ்வொரு பாகத்திலிருந்து மற்றையோர் தோன்றுகிறார்களென்றுங் கூறியருளியது சந்தேகமா யிருத்தலினதையும் விளக்கியருள வேண்டுகின்றேனென்னக்கூற, அதற்கு அவ்வாறே விளக்கத்தொடங்கினர். வாமதேவமுநிவனே! பஞ்சபூதாத்மகமான பிரபஞ்சம் கலைகளினிடமாக உண்டாகுமென்று சொல்வது: பிரபஞ்சம் ஸ்தூலசூக்குமங்களா லிருவகையாகும். அப்பஞ்சபூதங்கள் பசுபதியின் சரீரமாகும். சிவதத்துவ

முதல் பிருதிவி தத்துவபரியந்தம் சிவசத்தி சம்யோகத்தால் தத்துவந் தோன்றுகையில் அவற்றினின்றே பிரபஞ்சம் தோன்றும். தத்துவங்களின் பாகுபாடே கலைகளெனப்படும். அக்கலைகளின் பகுதியும் பஞ்சபூதங்களும் ஐக்கியமாவதால் ஸ்தூல சூக்குமபேதமாவதைப் பிரமஞானிகளறிகிறார்கள். தூல சூக்குமாத்துமகமான பிரபஞ்சத்திற் சந்திரசூரியாதி நவக்கிரகங்களும் அசுவினியாதி நக்ஷத்திரங்களும் பிரமவிஷ்ணு மகேசாதி தேவர்களும், இந்திராதி அஷ்டதிக்குப் பாலகர்களும், மற்றைத்தேவ கணங்களும், பிதுர்தேவதைகளும் அசுரர்களும், இராக்ஷச மாநுடர்களும், பசு பக்ஷி புழு பாம்புமுதலிய பேதங்களுள்ள சங்கமபிராணிகளும், விருக்ஷம், கொடி, புதர், பருவதம், ஓஷதிகள், அஷ்டகுலாசலங்கள், கங்காதி மகாநதிகள், சத்தசாகரங்கள் மற்றும் புலப்படு மெல்லாப் பொருள்களும் உற்பத்தியாகின்றன. ஸ்திரிபுருஷ ரூபமான சிவசத்திகளின் சம்யோகத்தினால் ஏற்பட்டுவிளங்கும் ஞானியருட் சிரேட்டனை நின்போன்ற ஞானிகள், பிரபஞ்சமே பிரமமும் அப்பிரமமே பிரபஞ்சமுமாகவிருப்பதால், அவ்வாறே உபாசிக்கக்கடவர். ஸர்வோவைருத்திரஃ என்னும் தைத்ரீயசுருதி இவ்வாறுகூறும். வாமதேவரே! இதனால் பிரபஞ்சாத்மகமாகவே சதாசிவர் விளங்குகின்றார். முப்பத்தெட்டுக் கலைகளின் கிரமங்களைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டவனே ஸதாசிவோஹம் என்னும் ஞானத்துடன் பிரபஞ்ச தேவதா யந்திர மந்திராத்மா என்னும் ஞானமும் உடையவனாவான். அவனேகுரு. இவ்வகைய குருவின் கிருபையால் எல்லாப் பந்தங்களு மறுபடும். அக்குருவின் பாததாமரையில் மிகுந்த அவாவினாற் பணிவிடைசெய்து அவரையே சிவமாகப்பாவித்துக் குருகுல வாசஞ்செய்தால் தானும் சிவசொரூப முடையவனாகிறான். குணபேதங்களா லறியக்கூடிய எல்லாவஸ்துக்களும் பிரணவசொரூபமாகும்.

வாமதேவரே! இராகத்துவேஷாதிகளை யொழிக்க வல்லதாயும் வேதங்களுட் சாரமுள்ளதாயும் சிவஞானப்பயிரைத் தழைக்கச்செய்வதாயும், உபநிடதார்த்தமயமாயும், இரகசியங்க ளெல்லாவற்றிற்கும் இரகசியமாயும், எல்லாப்பிரபஞ்ச சொரூபியாயுமுள்ள பஞ்சப்பிரமத்தாற் சொல்லியவாறே யுனக்குச் சொன்னேன். இந்த ஷட்விதார்த்த ஞானப்பொருளில் நம்பிக்கைவையாது மதகருவங்கொண்டு இராகத்துவேஷ யுக்தனாய்த் தேவ ராக்ஷச மாநுட யக்ஷ கந்தருவ சித்த கின்னராதியரில் யாராவது பிசகென்று சந்தேகிப்பாராகில் அத்துராத்மாக்களின் சிரங்களைச்சத்துருக்களை யதஞ்செய்யுங் காலாக்கினிபோன்ற எனது வேலாயுதத்தாற் றுணித்து விடுவேன். சிவாத்துவித வித்துக்களுட் சிறப்புடையவனாகிய உனக்கு இவ்வர்த்தத்தை யுபதேசித்தேன். இதைப் பானம் பண்ணின உன்னுடைய கடைக்கண்பார்வையால்எப்படிப்பட்டஅற்பனனபசுவும் பசுபதியாவான், உன்னைவணங்கி வழிபடுவோர்களுக் கநுக்கிரகிக்க லோகாநுக்கிரகத்தினிமித்தமாகவே இவ்வரியபொருளை உபதேசஞ்செய்துள்ளேன். நீ அழி

யாத சிவபதவியை யடையக்கடவாய்—என அனுக்கிரகஞ் செய்தனர். அதனைக்கேட்ட வாமதேவமுநிவர் சுப்பிரமணியரின் பாதமாகிய தாமரையில் வண்டுகள் எவ்வாறு படிந்துகிடக்குமோ அவ்வாறு பன்முறை பணிந்து ஆனந்தத்தை யனுபவித்துக் களித்திருந்தார்.

ஷட்விதார்த்தமுரைத்தது

முற்றிற்று.

பதினொன்றாவது

ஆசாரியாபிஷேகமுரைத்த அத்தியாயம்.

வாமதேவமுநிவர் சுப்பிரமணியரைநோக்கி, அறுகுணச்செல்வனே! ஷண்முகா! அமுதவாரிதியே! மேற்கூறிய சந்நியாசிகளுக்குக் குருத்துவமெவ்வாறு கிடைக்கும்? எவ்வித குருவையடைந்த ஜீவராசிகளுக்குப் போகமோக்ஷங்கள் சீக்கிரத்திற்கிட்டும்? குருத்துவம் வாழையடிவாழையாகப் பரம்பரையாக வந்தால்தான் உபதேசஞ்செய்ய யோக்கியதையுண்டென்று மிருத்தலி னதனையும், சந்நியாசிகள் க்ஷௌளஞ்செய்துகொள்ள வேண்டியவிதி, அவர்கள் ஸ்நானஞ் செய்யவேண்டியமுறை முதலியவற்றையும் விளக்கிக் கூறவேண்டுமென்று கேட்க, சுப்பிரமணியர் சொல்லலாயினர். வாமதேவரே! ஆசாரியத்தன்மைச் சித்தித்தற்குச் சாதனமாயுள்ள யோக பட்டாபிஷேகத்தைப்பற்றி முதலிற் கூறுகின்றேன். வைசாகம், சிராவணம், மாகம், ஆசுவைஜம், கார்த்திகம் மார்க்கசீரிஷம் ஆகிய இம் மாதங்களொன்றனுள் சுபதினத்திற் பஞ்சமி பூரணை ஆகிய இவ்விரு திதிகளிலொன்றில் உதயத்திலெழுந்து காலைக்கடனைமுடித்து, குருவநுஜ்ஞைபெற்று, ஓரோமனதாக ஸ்நானஞ்செய்து, தன் வஸ்திரங்களை நனைத்துவைத்து இரண்டுபுரியாகச் சூத்திரந்தரித்து,சுத்தகௌபீனந்தரித்துக் கைகாலலம்பி, இருமுறை ஆசமனீயஞ்செய்து, ஸத்தியோஜாதாதி மந்திரத்தால் உத்தூளன அவகுண்டன திரிபுண்டரங்களாக விபூதியை யணிந்து, குருவின் கையைப்பற்றிக் கிழக்குமுகமாக அலங்காரமுற்ற மண்டபத்திற் குருவாற் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆசனத்திலிருந்து, ஆசாரியராற் சங்கதீர்த்தம் புரோக்ஷிக்கப்பெற்று முற்கூறியுள்ளபடி மண்டலத்தையும் யந்திரத்தையும் ஆவரணதேவர்களையும் பிரணவத்தா லாவாகனஞ்செய்து புஷ்பாதிகளாலருச்சித்து அஸ்திரமந்திரத்தால்மூடி, கவசமந்திரத்தா லாவரணஞ்செய்து, தேநு சங்கம் முதலிய முத்திரைகளைக்காட்டி, தூபதீபங்கொடுத்து, ஐந்துவிதபுஷ்பம் ஐவகைப்பத்திரங்களாற் பூசித்து மணமுள்ள மலர்களாலலங்கரித்து நல்ல பழவகைகளால் நிவேதித்து, நீலம், மாணிக்கம், பவளம், தங்கம், கோமேதகம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து, ஆதாரசத்திமுதல் முன்சொன்னபடி மூலமந்திரங்களால் முறைப்படி அருச்சித்து, மண்டபத்தின் ஈசானதிக்கிற் சதுரமாக மண்டலமொன்

யியற்றி அதன்மேல் திவ்யாசனங்கற்பித்து அவ்விடத்தில் தானிருந்து, முன்னே கும்பத்திலாவாகனஞ்செய்துள்ள ஜலத்தை மந்திரபூர்வமாகக் கொண்டுவந்து பிரதக்ஷிணமாக அபிஷேகஞ் செய்யவேண்டியது. இதனிடையே எழு ஆவர்த்தி பிரணவமந்திரத்தையும், பஞ்சப்பிரம மந்திரத்தையுஞ் செபித்து, சங்கஜலத்தாலபிஷேகஞ்செய்து தூபதீபங்கொண்டு, சுத்தவஸ்திரத்தாற்றுடைத்து,தோய்த்துள்ள சூத்திரம் கௌபீனம் வஸ்திரம் அணிந்து கைகாலலம்பி, ஆசாரியர் விபூதியைக் கையிலெடுத்துச் சீடன் கைகளைப் பிடித்துக்கொண்டு மண்டபமத்தியிலுள்ள ஆசனத்திற் கிழக்குமுகமாக உட்காருவித்து,தான் வடக்குமுகமாக உட்கார்ந்து தத்துவஞானத்தில் அவாவுள்ள சீடனே! நிருமலனுகுக—என்றனுக்கிரகித்து, ஆசாரியர் தான் பரிபூரணனுகவும் சிவோகமடைந்தவனுகவும் இரண்டுநாழிகை கண்மூடியிருந்து, பின்னர் கண்விழித்துச் சாவதானமனதுடனும், பூரண கடாக்ஷத்துடனும் சீடனை நோக்கித் தனது விபூதிபூசிய கையை யவனது சிரத்திலிருத்தி வலதுகாதில் "ஹம்ஸஃ ஸோஹம்" என்னுமிவ்வக்ஷரங்களை யுபதேசிக்கவேண்டியது. அவற்றுள்ள முதலக்ஷரமான ஹகாரம் சத்தியாத்மகமும், ஸகாரம்சிவாத்மகமுமாம். சர்வாத்மகராயும் சம்புவாயும் ஹம்ஸபதவாச்சியராயும் பஞ்சப்பிரமசொரூபியாயும் இருக்கப்பட்டவன் நானே எனப் பாவிக்கக்கடவாய். பிரஜ்ஞானம்பிரமா-சர்வம் கல்பிதம்பிரமா-ஸோஹமஸ்மி-பிரஹ்மாஹமஸ்மி-பிராஞேஹமஸ்மி-ஹிரண்யபாஹவே-ஸப்பிரமஸஙிவ - இத்யாதிவாக்கியங்களை யுபதேசித்து, தன்னையே சிவமாகப் பாவிக்கத்தக்க மந்திரங்களை அவன் மனதில் நிறுத்தி, பஸ்மம் பூசியுள்ள கையினுற் சங்கதீர்த்தத்தையெடுத்து அஸ்திரமந்திரத்தினுல் ஓர் தலத்தைச் சுத்திசெய்து, அவ்விடத்திலேயே சங்கத்தை வைத்துப் பிரணவமந்திரங்கூறி, கந்தபுஷ்பாதிகளாலலங்கரித்து, பரிசுத்தஞ்செய்து, பிரணவத்தினுற் சங்கத்திற் சலத்தை நிரப்பிப் பிரணவத்தை ஏழுவியாஹ்ருதிகளுடன் ஜபித்து, அந்தச் சங்கதீர்த்தத்தை யெடுத்துக்கொண்டு, காணப்படும் உலகத்தை யொழித்து நித்தியப்பொருளாகிய சிவபெருமானை யடையும் ஞானங் கைகூடுமாக என்று ஆசீர்வதித்து, அவன்பேரிற் புரோக்ஷிக்கவேண்டியது. சிஷ்யனையே சிவசொரூபமாகப் பாவித்து சிஷ்யபீடத்தை யதோக்தமாயருச்சித்து, அப்பீடத்திற் சிவாதனத்தை நியமித்து, அவனுடைய பாதமுதற் சிரம்வரையில் ஈசானுதி பஞ்சப்பிரம கிரமமாய் ஆவாஹனஞ்செய்து, பிரணவத்தினின்றுண்டான முப்பத்தெட்டுக்கலைகளையும் அங்கங்களில் நியாசஞ்செய்து, அவனுடைய சிரசிற் சிவபெருமானை யாவாஹனஞ்செய்து, தேகத்திற் சங்கு தேனு முதலிய முத்திரைகளைக்காட்டி, ஷோடசோபசாரங்களோடு அருச்சித்து, பாயசான்னத்தைப் பிரணவமந்திரத்தால் நிவேதித்து, கைகால்களைச் சுத்தஞ்செய்வித்து ஆசமனீயஞ் செய்யச்செய்து தூபதீபங்காட்டி, பவாதிநாமங்களாலருச்சித்து, வேதாங்க சம்பன்னர்களை அவ்விடத்திற்கு வரவழைத்து அவர்களுடன் குரு "ப்ரஹ்மவிதாப்னோதிபரம்" ப்ரஹூர்வை "வாரு

ணிஹி'' ''யோதேவானும்'' முதலாக தஸ்யப்ரஹ்ருதிலீனஸ்யய: பரஸ் ஸமஹேஸ்வர: பரியந்தம் ஜபித்து, செங்கழுநீர்ப் புட்பங்களாற் புனைந்த மாலையைக்கழுத்துமுதல்பாதம்வரையில்தொங்கும்படி சீடனுக்குச்சூட்டி, குலக்குறியை அவனது நெற்றியிற்றரிக்கவேண்டும். குடை, பாதுகை, சிவமந்திரங்களை யறியச்சத்தி, தான் இச்சீடனுக்கெவ்வாறு குருவானுரோ அவ்வாறே இச்சீடன் பிறருக்குக் குருவாயிருக்கத் தகுந்த யோக்கியதை முதலியவற்றைக் கொடுக்கவேண்டியது. இதன்மேல் சிவரூபியான சீடனைப்பார்த்து, சீடனே! இந்த நிமிஷமுதல் எப்போதும் சமாதியிற்றவ ருமலிருக்கக்கடவாய் என்று தானும் அச்சிவரூபியான சீடனுக்கு நமஸ் காரம் புரியவேண்டியது. அவ்விடத்துள்ளவர்கள் சந்நியாசமடைந்ததால் குருவான சீடனை முறைப்படி நமஸ்கரிக்கவேண்டியது. இவைமுடிந்த பின், சீடன் ஆசனத்திலிருந்தெழுந்து தனது குருவையும் அவரது குரு வையும் குருவின் சீடர்களையும் கிரமப்படியே நமஸ்கரிக்கவேண்டியது. இவ்வாறுசெய்யுஞ் சீடனைக் குரு பிரணவத்தாலநுக்கிரகித்து, இதுமுதல் லோகாநுக்கிர நிமித்தமாக ஒரு இரவிற்கதிகமாக ஓரிடத்திற்றங்காது, சர்வலோகங்களிலுஞ் சஞ்சரிக்கக்கடவாய். யாராகிலும் உன்னிடஞ் சிவ ஞானம் போதித்துக்கொள்ள வந்தாலவர்களை ஒருவருடகாலஞ் சோதனை செய்து பின் உபதேசிக்கக்கடவாய். இராகாதிதோஷங்களை யொழித்துக் கோபத்தை நீக்கி ஞான கருமேந்திரியங்களை யடக்கிச் சற்புருஷர்களான சிவஞானிகளின் கூட்டுறவோடு எப்போதுஞ் சிவஞானத்திற் பதிந்திருக் கக்கடவாய். சிவபத்தியில்லாதவர்களுடன் ஒருபோதுங் கூடவேண்டாம். உன் பிராணனுக் கவஸ்தைவந்தாலுஞ் சிவபூஜையின்றி எதையும் புசிக்க வேண்டாம். எவ்வித ஆபத்து சங்கடம் வந்தபோதுங் குருபத்தியிற்றவற வேண்டாம். எப்போதும் சிவாநந்தத்திலேயே ஆழ்ந்திருப்பாயாகவென் றுபதேசிக்கவேண்டியது.

வாமதேவரே! இதுகாறும் யோகபட்டாபிஷேக முறைமையைக் கூறிவந்தேன். யதிகளுக்குப் பரிசுத்தத்தை யுண்டாக்கத்தக்க சௌளக் கிரம ஸ்நானக்கிரமங்களை யினிக்கூறுகின்றேன். சீடன் முதலிற் குருவை நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்று, சிரஸ்நானஞ்செய்து ஆசமனீயஞ் செய்து, வஸ்திரந்தரித்து, சௌளத்திற்குட்கார்ந்து, பரிசுத்த நீரால் மிருத் திகையைக்கொண்டு க்ஷவரகன் கைகளையுங் கத்தியையும் பரிசுத்தஞ்செய் வித்து, சிவம் சிவம் என்று தானுச்சரித்துத் தனது இருநேத்திரங்களையும் இரண்டு கட்டைவிரலால் அஸ்தமந்திரத்தால் மூடி, பிரணவத்தை ஜபித்து அம்மந்திரத்தாலேயே கண்ணைத்திறந்து பன்னிருமுறை அம்மந்திரத்தி னற் கத்தியைப் புரோக்ஷணஞ்செய்து, பிரணவத்தை உச்சஸ்வரமாக உச்சரித்துத் தனது சிரத்தின் வலப்பக்கத்து மயிரைக்களைவித்துப் பூமியில் இலையையிட்டு அதன்மேல் அம்மயிரைவைப்பிக்கவேண்டியது. இவையான பின்பு பிரதக்ஷிணக்கிரமமாகச் சிரத்தின் மயிரைக்களைந்து முகத்திலுள்ள

தற்கும் அவ்வாறே செய்வித்து, கால் கை நகங்களைக்களைவித்து, எழுந்து வில்வம், அரசு, துளசி இவற்றினொன்றின் அடியில் மண்ணெடுத்துக்கொண்டு மகாநதிசென்று கொப்பூழிற்குக்கீழுள்ள ஜலத்திலிருந்து பன்னிருமுறை ஸ்நானஞ்செய்து பரிசுத்த தானத்திலிருந்து தான் கொணர்ந்த மண்ணை மூன்றாகப்பிரித்து, அதனை மும்மூன்றாகப்பிரித்து அஸ்திர மந்திரத்தாற் புரோக்ஷணஞ்செய்து, அப்பிரிவின் ஒருபாகத்தை எடுத்துக் கைகளைப் பன்னிருமுறை சுத்தஞ்செய்யவேண்டியது. மற்றொருபாகத்தை எடுத்துப் பாதங்களிலும், மற்றைப்பாகத்தைச் சிரம் முதலிய அவயவங்களிலுங் கிரமப்படி பூசி ஜலத்திலிறங்கிப் பன்னிருமுறை சிரசிற்றடவிப் பன்முறை மூழ்கவேண்டியது. ஒவ்வொரு ஸ்நானத்திற்குங் கரையேறிப் பதினாறு முறை வாய் கொப்புளித்து, பதினாறுமுறை பிரணவத்தாலாசமனீயஞ் செய்து யதாவிதியாகப் பிராணாயாமத்தை எட்டுமுறைசெய்து, வேறே மண்ணையெடுத்து முன்சொன்ன கிரமப்படி பிரித்து ஒருபாகத்தாற் குறிகளையும் பாதங்களையும், மற்றப்பாகங்களால் வேறே இடங்களையும் பரிசுத்தஞ்செய்து, இருமுறை ஆசமனீயஞ்செய்து, பதினாறு பிரணவ சத்தத்தாற் பிராணாயாமஞ்செய்து ஸ்நானஞ்செய்து, சந்நியாசி ஆச்சிரமத்திற்காகச் சொல்லியுள்ள முறைப்படி, மண்ணைப்பூசி ஸ்நானஞ்செய்து தண்டத்தை யதாவிதியாகப் பரிசுத்தஞ்செய்து பூமியில்வைத்து ஆசாரியனையும் சிவபிரானையும் ஸ்மரித்து, சூரியனைப்பார்த்து மூன்றுமுறை பணிந்து பஞ்சாங்கங்களால் வந்தனஞ்செய்து, ஜலத்திலிறங்கி நடுவிலிருந்து தான் முன்பிரித்துள்ள மண்ணுள் மிகுந்திருந்தவற்றைப்பூசி மூன்றுமுறை பிரணவத்தால் ஸ்நானஞ்செய்து சிவபாதத்தைத் தியானித்து, சங்கமுத்திரையை ஜலத்திலெழுதிப் பன்னிருமுறை ஸ்நானஞ்செய்து கரையேறி வேறே மண்ணாற் கைகாலலம்பி இருமுறை ஆசமனீயஞ்செய்து மறுபடி ஆசமனீயஞ்செய்து விரஜாபஸ்மத்தை எடுத்துத் தேகமுழுதும் உத்தூளனக்கிரமமாய்த் திரிபுண்டரந்தரித்து, மத்தியானகிரியைமுடித்துக் குருவையும் புண்ணியதீர்த்தத்தையும் நமஸ்கரித்து, முன்சொன்ன பஞ்சாவர்ணக்ரமமான கைலாசப்பிரஸ்தரமென்னு மண்டலத்திற் பரமேசனை முறைப்படி யருச்சித்துக் குருவை ஸ்மரித்து, சுத்தமான வீட்டிற்குச்சென்று பிச்சையெடுத்துக் கிடைத்ததைப் புசிக்கக்கடவன்.

ஆசாரியாபிஷேகமுரைத்தது

முற்றிற்று.

பன்னிரண்டாவது

தகனகனன விதியுரைத்த அத்தியாயம்.

வாமதேவரே! க்ஷவர ஸ்நானவிதிகளை முறைப்படி கூறியுள்ளேன். இன்னுங் கேட்கவேண்டியதுளவாயின் கேட்டறிந்து கொள்வாயாக

வென்று சுப்பிரமணியர் வினவ, அதனைக்கேட்ட வாமதேவர், முத்தர்களாகிய சந்நியாசிகளைத்தகனஞ்செய்யவேண்டுமென்றும்,அவர்களைச்சமாதிவைக்கவேண்டுமென்றும், அவர்களினும் முத்தர்களாய்ப் பிரமத்தை யுபாசித்துச் சர்வாத்மக சொரூபனான பரமேசனைச் சிவோகம்பாவனை செய்யும் ஞானிகளாகி, உபாசனா கிரமத்தால் தேகமாகிய கூட்டைவிட்டு முத்தியடைவோர்களது தேகத்தைக் கனனஞ்செய்யுங்கிரமத்தையும், அவரவரடையும் புண்ணியலோகப் பிராப்தி விசேஷங்களையும் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க,அவ்வாறே விளக்கத்தொடங்கினர். வாமதேவரே! சிவரகசியங்களுள் முக்கியமாகிய இவ்விரகசியத்தைப் பூர்வம் ஜகத்குருவாயும், எனது பிதாவாயும் பிநாகபாணியாயுமுள்ளவர், சிவயோகிகளுட் சிரேட்டரான ரிபுயோகிக் குபதேசித்தவாறே உனக்குச்சொல்கின்றேன். இது மற்றையோருக் குரைக்கக்கூடாது. சந்நியாசாச்சிரமத்தையடைந்தயதியானபுருஷன் இடைவிடாது சமாதியிலிருந்து சிவோகம்பாவனையால் தேகத்தைத்தரித்திருப்பின் பரிபூரணனாவான். அவனே தீரன். சிவசொரூபியாவான். சந்நியாசாச்சிரமத்தை யடைந்திருந்தும் சித்த சுவாதீனமின்றிச் சமதமாதிகுணங்களற்றவனாய்ச் சமாதிகைகூடாதுமிருந்தால், ஞாதுரு ஞான ஞேய விலக்ஷணமாகிய மூன்று பதார்த்தங்களையும், சமாதியையையுங் குருமுகமாய்த்தெரிந்து யோகாப்பியாசஞ்செய்து எப்போதும் பிரணவத்தை ஜபஞ்செய்து அத்துவிதாநந்தத்தை அநுபவிக்க வேண்டுமென்னு மவாவுடனே தேகத்தைத் தியாகஞ்செய்வானாயின், சதாசிவத்தி னநுக்கிரகத்தால் நந்தி யெம்பெருமான் மூலமாக அதிவாஹியர் என்னும் அக்கினிக்கதிபன், பகற்காலத்திற் கதிபன், சுக்கிலபக்ஷத்திற் கதிபன், உத்தராயணத்திற்கதிபன்,தேஜசிற்கதிபனாகிய ஐவர் உத்திராயண காலத்திற் பிராணன்விடுஞ்சமையத்தில் தோன்றி ஜோதிர்மார்க்கமாய்ப் புண்ணியலோகங்களைச் சேர்ப்பார்கள். அன்றியும் தக்ஷிணாயனத்திற் பிராணனைவிடுவோர்களை இருளுக்கதிபன், இரவிற்கதிபன், கிருஷ்ணபக்ஷத்திற் கதிபன்,புகைக்கதிபன்ஆகியஐவர் தூமாதிமார்க்கமாய்ப் புண்ணியலோகத்திற் சேர்த்துப் புண்ணியமுடிவில் மாநுடதேகமெடுக்க அனுப்புவார்கள். முற்கூறிய உத்தராயண அபிமானதேவர்கள் பூலோகத்திலிருந்து ஜீவர்களைத் திவ்வியதேகத்துடன் ஜோதிர்மார்க்கமாய்ப் பரத்திற் பரமாயும்,அஞ்ஞானத்திற்கதீதமாயும் இருளிற்கு ஒளியாயும் வாசாமகோசரமாயும்உள்ள சதாசிவ பதத்திற் சேர்த்துத் தாங்கள் அச்சதாசிவத்தை நமஸ்கரித்து ஒருபுறத்தில் நிற்பார்கள். அங்குப் பாதாரவிந்தத்தையடைந்த ஜீவர்களைச் சர்வலோகேசுரனான சதாசிவர் தமதுபூரண கடாட்சத்தினா லநுக்கிரகித்து, விரக்தனாயிருந்தால்மகாமந்திரதாற்பரியத்தையுபதேசஞ்செய்து,திரிநேத்திரம், சதுர்புஜம்,சந்திரகலை, கங்கை முதலியவும் தமதுதேஜசுங்கொடுத்து, சிவகணத்தி லொருவனாக விருக்க அபிஷேகித்து, எங்குந்தடையின்றிச் செல்லத்தக்க விமானமுங்கொடுத்து, சாரூபபதவியை யடையச்செய்கிறார். இவ்வாறுதன்னிடங் கொணர்ந்தவர்கள் போகத்தி லிச்சையுள்ளவர்களா

யிருப்பின், அதை யநுபவிக்க உருத்திரகணிகையர்கள், நிருத்தகீத மிருதங்க தொனிகள் கோஷித்திருக்கவும், வஸ்திரம், சந்தனம், ஆபரணம், அமுதகுடங்கள், மனரம்மியமான ஆசனம்பொருந்திக் கோடிசூரியப்பிரகாசமாய்ச் சந்திரகலையுடன் மற்றும் லக்ஷணங்கள் பொருந்திய விமானத்தைக்கொடுத்து அநுக்கிரகஞ்செய்து, விரக்திவரும்வரையிற் போகத்தையநுபவித்துப் போகாந்தத்தில்,அவர்களது அஞ்ஞானமொழியும்படி, சமுசாரமாகிய காட்டையொழிக்க, அக்கினிபோன்றிருப்பதாகிய சத்திமந்திரத்தையுபதேசித்துத் தமது அநுக்கிரகத்தினற்சூரியனைப்போற் பிரகாசிக்குந்தன்மையையும், அஷ்டமகாசித்திகளையும், முப்பத்தெட்டுக் கலைகளையும், தொண்ணூற்ருறு தத்துவங்களையும்,பிரமப்பிரளயத்திலும் அழியாத முத்தியையுங் கொடுக்கின்ருர். இந்தப்பதமே யாவராலு மடையத் தக்கது. எல்லாச்சம்பத்தையு மளிக்கத்தக்கது. (இது முத்திகண்டாபதமென்னும் பெயருடன் இருப்பதென்று வேதாந்தங்களால் நிச்சயமாகும்.) பிராணனை விட இச்சையுள்ள சந்நியாசியின் அந்தத்தில், சந்நியாசக்கிரமங்களைச் சந்தேகமின்றியறிந்த மற்றைச் சந்நியாசிகளும், வேதவேதாங்க சம்பன்னர்களான பிராமணர்களுஞ் சுற்றிலுமிருந்து, பிரணவத்தை ஜபித்து, உபநிஷத வாக்கியங்களை யுபதேசித்து விளங்கச்செய்து, பிராணவாயு பிரியும்பரியந்தம் இடைவிடாது ஓங்காரசத்தத்துடன் இருக்கவேண்டும். இவ்விதமாகச் சந்நியாசிகள் பிராணனை விடும்பரியந்தம் செய்யவேண்டிய நியமனமேயன்றி அதன் பின்னர் அவர்களுக்குத் தேகத்தைப்பற்றிய சம்பந்தமொன்றுமில்லை. அப்படி அவர்களுக்குத் தங்கள் தேகங்களைத் தகனகனனங்கள் முறைப்படி செய்யாமையால் துர்க்கதியொன்று மணுகுவதில்லை. ஏனெனில்: எல்லாக்கருமங்களையுமொழித்துப் பஞ்சபூதாத்மகமான சரீரத்தை மறந்து, இவ்விடத்திலேயே முக்தர்களான சந்நியாசிகள், சரீரம் பிராணவாயுக்களுடன் கூடியிருக்குங் காலத்திலும் அதற்குண்டாகுங் கஷ்டசுகங்களையும் வெயில் மழைகளையுஞ் சகித்தவர்களாதலாற் பிராணவாயுக்கள் விலகியபின்பு துர்க்கதியொன்றும் அடையமாட்டார்கள்.

அப்படி அவர்களுக்குச் சமஸ்காராதிகளைச் செய்யாததால் ஆங்குள்ள அரசர்முதலினேருக்கு க்ஷேமக்குறைவுண்டாகும். அத்தோஷ நிவாரணமாம்பொருட்டு "நஃஇரிண்யாய" என்று தொடங்கி "நஃஆமிவித்கேத்பியஃ" என்னும் வரையிலுள்ள உருத்திர வாக்கியங்களைப் பிரணவத்துடன் கூட்டி ஜபஞ்செய்துகொண்டே பரிசுத்தமான நதிக்கரை முதலியதானங்களிற் பள்ளம்வெட்டி,புத்திரரிருந்தால் அவர்களாற்கிரமமாகச் சமஸ்காரத்தை முடிப்பிக்கவேண்டியது. அவர்களில்லாவிடின், சந்நியாசியின் குலத்தார் யாராயினும்சீடராயினும் அதனை முடிக்கலாம். சந்நியாசி தங்கியவிடத்திலேஅவரைச்சுத்தஜலத்தாலபிஷேகித்துத்திவ்வியபுஷ்பங்களைக்கொண்டு உருத்திரமந்திரங்களாலருச்சித்து எதிரில் மண்டலமொன்றியற்றிச் சங்கந்தாபித்து, பிரணவ வுச்சரிப்புடன் அதில் ஜலம் நிரப்பிக் கிரமப்

படி அதனைப்பூஜித்து, அத்தீர்த்தத்தா லபிஷேகித்து, புஷ்பங்களாற் சிரசை "பரிநேருத்ரஸ்யா" என்று சுத்தஞ்செய்து, கௌபீன சூத்திரங்களைக் களைந்து புதிதாகச்சாத்தி, விபூதியால் விதிப்படி சர்வாங்கத்திலும் உத்தூள்னக்கிரமமாகத் திரிபுண்டரந்தரித்து, மாலிகைகளா லலங்கரித்துப் பஞ்சப்பிரமமயமான விமானமியற்றி அதனை அம்மந்திரத்தாற் பூசித்து, புஷ்பங்களாலலங்கரித்து, தேகத்தை அதில் உட்காரவைத்து வாத்திய கோஷம் வேதபாராயணம் உபநிடதபடனத்துடன் கிராமப் பிரதக்ஷிணஞ் செய்து முற்கூறியபள்ளத்திற்குக்கொண்டுபோகவேண்டியது. அப்பள்ளம் கிராமத்திற்கு வடபுறங் கீழ்ப்புறங்களிலாகிலும், நதிதீரம் நாட்பட்ட மரத்தடி தேவாலயத்தருகாகிலுமிருக்கலாம். அக்குழியைப் பிரணவவியாஹ்ருதிகளாற் பரிசுத்தஞ்செய்து, வன்னிபத்திரங்களையும் தருப்பைகளையும் வடக்கு நுனியாகப்போட்டு சரீரத்தைக்குழியிலிட்டு, பிரணவத்தாலபிமந்திரித்துப் பஞ்சகௌவியங்கொண்டு, பஞ்சப்பிரமமந்திரம் உருத்திரஸூக்தம் ஜபித்து, சங்கஜலத்தாலபிஷேகித்து, புஷ்பத்தைச் சிரத்திலிட்டு வேதபாராயணத்துடன் யோகத்திலிருப்பதுபோல உருவங்கற்பித்து, தூபதீபங்கொடுத்து விஷ்ணு ஹவ்யமிதி என்று கூறி, வலது கையிற்றண்டத்தையும் இடதுகையிற் கமண்டலத்தையும் பிரஜாபதேதநஃ என்னும் மந்திர பூர்வமாகக்கொடுக்கவேண்டியது. அவரது சிரசில் வலக்கரத்தைவைத்து பிரஜைஜ்ஞானமென்னு மந்திரத்தைப் படனம்பண்ணிக்கொண்டே தடவி, உருத்திரஸூக்தத்தால் நெற்றியைத்தடவி, மீண்டும் அக் கரத்தைச் சிரசிலிருத்தி மாநேமகாந்தம் என்னும் நால்வகை மந்திரங்களை யுச்சரித்துக் கொண்டே தேங்காயைச்சிரசி லடித்துக் கபாலந்திறந்தபின்பு குழியை மூடி, பஞ்சப்பிரமமந்திரத்தா லவ்விடத்தைப் பரிசுத்தஞ்செய்து "யோதேவானம்" என்பதுமுதல் "ஸமஹேஸ்வரஃ" வரையில் ஜபித்து, சமுசாரரோகநிவாரணகாரணராயும், பரப்பிரமமாயும், ஆதியந்த சூனியராயும், மகாதேவராயும் சர்வஞ்ஞராயும் அபராதீனராயும் சர்வாநுக்கிரககாரகராயும் உள்ள சதாசிவமூர்த்தத்தை ஜாணளவு பீடத்தில் ஸ்தாபித்து, சுகந்த புஷ்பம் வில்வம் துளசிமுதலியனவால் அருச்சித்துத் தூபதீபங்கொடுத்து, பால், பரிசுத்தஅன்னம் நிவேதித்துப் பத்தியுடன் ஐந்து பிரதக்ஷிணஞ் செய்து, நமஸ்காரஞ்செய்து பிரணவத்தைப் பன்னிருமுறை உச்சரித்து, பத்துத்திக்குகளுக்கும் பிரணவத்தா லர்க்கியங்கொடுத்துப் பூசனைசெய்ய வேண்டும். இவ்வாறே பத்துநாள்செய்துவருத லாவசியம். பதினோராநாளில் ஓர் வேதிகை நிர்மாணஞ்செய்து புண்ணிய தீர்த்தத்தைப் புரோக்ஷித்து வடக்குமுகமாக இருந்து கிழக்கிலும் மேற்கிலுஞ் சதுரமாக மண்டலமியற்றி, அதனுள் திரிகோண ஷட்கோணங்களைக்கிரமமாக ஏற்படுத்தி, சங்கபூஜாக்கிரமப்படி பூஜைசெய்து, பிராணயாமஞ்செய்து முற்கூறியுள்ள ஐந்துதேவதைகளைப்பூசிக்கப்போவதாகச் சங்கற்பம்பண்ணிக்கையிலிருக்குந் தருப்பையை வடபுறத்திலிட்டு நல்ல தீர்த்தத்திற் கையலம்பி மேற்புறந்தொடங்கி ஆறுகோணங்களிலும் புஷ்பங்களை ஓம் ஹ்ரீம் அக்கினி

ரூபா அதிவாகிகாம் தேவதாம் ஆவாஹயாமி என்ற விதியாகவே இவர்களையு மாவாஹனஞ்செய்து, முத்திரைகளைக்காட்டிப் பூரணுங்கங்களையும் பாவிக்கவேண்டியது. அவை பாசம் அங்குசம் அபயம் வரதம் ஏந்தியும், சந்திரகாந்தத்திற்குச் சமமான இரத்தினம், பதுமராகச் சமானமான நககாந்திகளா லலங்கரித்த கைகள்,கோவைபோற் செவந்த அதரம், மாலைக்காலம்போற் செவந்தவஸ்திரம், செந்தாமரையையொத்த உள்ளங்கைகால், ஷோடசகலைகளோடுகூடிய சந்திரனைப்போன்ற முகமண்டலம், கிருபாசமுத்திரமாகிய மூன்று நேத்திரம், சந்திரகலை, கங்கைதரித்த ஜடை, மாணிக்கமகுடம் வச்சிரகுண்டலம், கண்ணாடிபோன்ற தாடை, உன்னதமான ஸ்தனமண்டலம், ஆரகேயூர கடக ஒட்டியாணங்களா லலங்கரித்த அவயவங்கள், சிறுத்த இடை, மாணிக்கத் தண்டையா லலங்கரித்த பாதம், மகேசனைப்போற் சர்வத்தையும் அநுக்கிரகிக்க வல்லமை, சிவமூர்த்தசொரூபம் சத்தியாத்மகசொரூபம் சாபாநுக்கிரகசத்தி முதலியன பொருந்தினவா யிருக்கவேண்டும். இவ்வைந்து தேவர்களுக்குஞ் சங்கதீர்த்தத்தாற் பாதத்திற் பாத்திய ஜலத்தையும், கையில் ஆசமனீய தீர்த்தத்தையும், சிரத்தில் அர்க்கிய ஜலத்தையுங்கொடுத்து, அத்தீர்த்தத்தினாலேயே அபிஷேகித்து இரத்தமயமான வஸ்திரங்களாலும் சுவர்ணமயமான மகுடங்களாலும், விலையுயர்ந்த ஆபரணங்களாலு மலங்கரித்து, வாசனையுள்ள செந்நிறச் சந்தன அக்ஷதைகளாலும் பரிமளமுள்ள மலர்களாலும், மூலமந்திர பாராயணத்துட னருச்சனை செய்யவேண்டியது. பரிமள தூபமும், நெய்த்தீபமுங் காண்பித்து,தேன்கூட்டிய பாயசம் நெய் சர்க்கரையாலாக்கிய பலகாரவகைகள், வாழை பலா முதலிய பழங்கள் தனித்தனி நிவேதித்து வேண்டிக்கொள்ளவேண்டியது. இவை யெல்லாவற்றிற்கும் பிரணவாதி மூலமந்திரத்தையே யுச்சரிக்கவேண்டியது. பின்னர் தீர்த்தம் ஆசமனீயங்கொடுத்துக்கைகாலலம்பச்செய்து அர்க்கியங்கொடுத்து, தாம்பூல தூபதீபங்களாற் சந்தோஷிப்பித்து,பிரதக்ஷிண நமஸ்காராதிகளைச்செய்து அஞ்சலியஸ்தனாய் "லோகமாதாக்களே! என் பூஜையை யேற்றுச் சிவபதமடைய இச்சைகொண்டிருந்த இச்சந்நியாசி அவ்வாறே அடையும்படி நீங்கள் சிவசந்நிதானத்தில் விஞ்ஞாபனம் பண்ணிக்கொள்ளவேண்டியது" என்று பிரார்த்தித்து அவரவர் தானத்தையடைய விசர்ஜனஞ் செய்யவேண்டியது. முற்கூறியுள்ள வட்டித்துள்ள பலகார பழ அன்னவகைகளைக் கன்னிகைகளுக்காவது பசுக்களுக்காவது ஜலத்திலாவது இடவேண்டும். அவ்விடத்திலேயாவது தானிருக்குங் கிருகத்திலேயாவது அடைந்த சந்நியாசியைக்குறித்துப் பார்வணசிராத்தஞ் செய்தலாவசியம். ஒருபோது சந்நியாசிகளா யடைந்தவர்களுக்குச் சிராத்தாதிகள் ஒருவருக்கதிகமாகச் செய்யக்கூடாது.

வாமதேவரே! இனிபார்வண சிராத்தமுறையைக்கூறுகின்றேன்: கேட்பாயாகவென்றுசுப்பிரமணியர்கூறலாயினர். கருத்தாவானவன்முறை

ப்படி ஸ்நானஞ்செய்து பிராணாயாமம் முடித்து ஒரேமனமுடையவனாய்ப் பவுத்திரமணிந்த கையுடன் தருப்பையையெடுத்துப் பரலோகமடைந்த யதிக்காகப்பார்வணசிராத்தஞ்செய்யப்போகின்றேனென்றுசங்கற்பித்து, கையிலுள்ள தருப்பையை வடபுறத்திலெறிந்து, கையலம்பிச்சிவபத்தர்களாயும் வேதவேதாங்க சம்பன்னர்களாயுமுள்ள நான்கு பிராமணர்களை யழைத்து, அப்பியங்க ஸ்நானம் பண்ணுவித்து, தான்செய்யுஞ் சிராத்தத்திற்குச் சிராத்ததேவர்களாயிருந்து அநுக்கிரகம் புரியவேண்டுமென்று, விசுவேதேவருக்காக ஒருவரையும், ஆன்மசொரூபிக்காக ஒருவரையும், அந்தராத்மகருக்காக இன்னொருவரையும், பரமாத்மாவுக்காக மற்றவரையும் நியமித்து, பாதபிரக்ஷாளனஞ்செய்து கந்தபுஷ்பங்களாலருச்சித்துத் தூபதீபங்கொடுத்துச் சிவசொரூபிகளாகப் பாவித்துத் திவ்வியபோசனங்களாற் றிருப்திசெய்வித்து, அவர்கள் சந்நிதானத்திற் கிழக்குமுகமாகத் தருப்பையையிட்டுப் பிராணாயாமஞ்செய்து சிவரூபியான பதிக்குப் பிண்டதானஞ்செய்கின்றேனென்று சங்கற்பம் பூண்டு, கீழேயிட்ட தருப்பையை மூன்று மண்டலஞ்செய்து அப்பிராமணர்களுக்குச் சதுர்த்தியாந்தமாகப் பிரணவ பூர்வகமாய்த் தீர்த்தத்துடன் பிண்டத்தைத் தருப்பாசனத்தி லிட்டு எழுந்து அவர்களையுமெழுப்பிக் கைகாலலம்பி ஆசமனீயஞ்செய்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து தக்ஷிணைகொடுப்பதால் திருப்தியாக்குவித்து, முறைப்படி விசர்ஜனஞ்செய்து வீட்டிற்கனுப்பி, அதேதானத்திற் சந்நியாசிகளைக்குறித்து உருத்திரபலியைச் செய்யவேண்டியது. பன்னிரண்டாநாள் விடியற்காலையிலெழுந்து காலைக்கடனைமுடித்து முறைப்படிஸ்நானஞ்செய்துசந்தியாவந்தனாதிகளைமுடித்துச்சிவபத்தர்களாயும்ஜிதேந்திரியர்களாயும், வேதவேதாங்க சம்பன்னர்களாயும் உள்ள பிராமணர்களைப் பிரார்த்தித்து வரவழைத்து,பகற்காலத்தில் எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்வித்து, சிவசந்நிதானத்திற் பூர்வமுரைத்த பஞ்சாவர்ணக் கிரமப்படி பூஜைசெய்து மும்முறை பிராணாயாமஞ்செய்து, சிற் சொரூபியான எனது குருவிற்குப் பூஜைசெய்யப் போகின்றேனென்று சங்கற்பம் பண்ணிக்கொண்டு பவுத்திரவிரலுடன் பிராமணர்களுக்குப் பாதபூஜைசெய்து திருபுண்டரமணிவித்துத் தானுமவ்வாறே புரிந்துகொண்டு மௌனத்துடன் கிழக்குமுகமாக இருத்திச் சதாசிவக்ரமமாக எட்டுப்பிராமணர்களைவகித்து, மிகுந்த நால்வர்களைக் குருவாயும், பரமகுருவாயும் பராத்பர குருவாயும் பரமேஷ்டி குருவாயுந் தியானித்து, ஸ்தூலமாக இவர்களைச் சாம்பசிவனாகவே பேதமின்றிப் பாவித்துப் பிரணவத்தால் ஒவ்வொரு நாமங்களையும் த்விதியாந்தமாக ஆவாஹனஞ்செய்து,ஆசன ஆசமனீய பாத்திய அர்க்கிய வஸ்திர கந்த அக்ஷத புஷ்பங்களாற் பிரணவ பூருவமாக நாமங்களைச் சொல்லிச் சதுர்த்தியாந்தமாகப் பூஜிக்கவேண்டியது. பின்னர் தூபதீபங் கொடுத்து வாழையிலையில் நானாவிதமான பழவகைகளுடன் அறுசுவையோடுகூடிய அன்னத்தை வட்டித்து "விஷ்ணு! இந்தஹவ்யத்தை இரட்சிக்ககடவன்" என்றுபிராத்தித்து ஆபோசனங்கொடுத்து, சதாசிவாதி பன்

னிரண்டுதேவர்களையுந் தனித்தனியாகக் கூப்பிட்டு "ஏதேவா" என்னு மந்திரத்தை ஜபித்து அக்ஷதையோடுகூடிய ஜலத்தைஅப்பன்னிருவர்மத்தியிற் றத்தஞ்செய்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து, இவர்களுக்குநான்கொடுத்த தீர்த்தம் அமுதமாகட்டுமென்றுகூறிப் போஜனஞ்செய்விக்கவேண்டியது. அவ்வாறு அவர்கள் போஜனஞ்செய்யுங்காலையில் "கணாநாந்த்வா" என்னும் ருக்கை யாரம்பித்து வேதாதி உருத்திர சமக பஞ்சப்பிரம மந்திரங்களை ஜபஞ்செய்து, அவர்கள் புசித்தபின்பு உத்தராபோஜனங்கொடுத்து கைகால் பரிசுத்தஞ்செய்வித்து, ஆசமனீயஞ்செய்தபின்பு ஆசனத்திலுட்காரப் பிரார்த்தித்து, பரிசுத்தஜலத்தினால் அவர்களைத் திருப்திகேட்டு, கர்ப்பூராதிவாசனைகளோடுகூடியதாம்பூலத்தைத்தக்ஷிணையுடன்கொடுத்து, பாதுகை, குடை, விசிறி, மணை, தண்டங்களைக்கொடுத்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து சந்தோஷப்படுத்தி அவர்களா லாசீர்வாதம்பெற்று, குருசொரூபிகளாயும் சதாசிவ சொரூபிகளாயுமுள்ள பிராமணோத்தமர்களே! எனக்கு எக்காலத்திலுங் குருபக்தி தவறாதிருக்க அநுக்கிரகிப்பீர்களென்று வேண்டிக்கொண்டு, ஆசனத்திலிருந்து உபசாரத்துடனெழுப்பி வாசற்படிவரையிற் பின்றொடர்ந்து உபசாரத்துடன் அனுப்பி, அவர்களால் தன்னைத் திரும்பிப் போவாயாகவென்று சொல்லியபின்பு தான்திரும்பித் தன்னுடைய பந்துவர்க்கங்களுடனும் பிராமணர்களுடனுஞ் சேஷமான அன்னத்தைப்புசித்துத்தன்னோடுண்ணும்பிராமணர்களது ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வானாக. இம்முறையே இக்குருவாராதனையைப் பத்தியுடன் செய்பவன் இவ்வுலகிற் சர்வபோகங்களையு மநுபவித்து, வாணாள் முடிவில் யோகியர்களுக்குந் துர்லபமான சிவலோகத்தை யடைகின்றான் என்று சுப்பிரமணியப் பெருமான் வாமதேவமுநிவருக் குரைத்தருளி, வாமதேவமுநிவனே! இதனைநீ ஸநத்குமாரமுனிவனுக்கும் வியாஸமுநிவனுக்குஞ் சொல்லுகவென்றநுக்கிரகித்தனர். அவ்வாறே வாமதேவர் ஸநத்குமாரருக்குரைப்ப, ஸநத்குமாரர் சுகருக்குக்கூறினர். வைசம்பாயனர்-பைலர்-ஜைமினி-சமந்துஎன நால்வர் வியாஸமுநிவருடையசிஷ்யர்கள். அகஸ்தியர் புலஸ்தியர் புலகர் கிருது என நால்வர் வாமதேவருடையசிஷ்யர்கள். ஸநகர் ஸநந்தனர் ஸநாதனர் ஸநத்சுஜாதர் என நால்வர் ஸநத்குமாரசிஷர்களாய்ச் சிவயோகிகளாகிச் சகலவேதார்த்தங்களையு மறிந்தவர்கள். இந்நால்வர்களும் குரு பரமகுரு பராபரகுரு பரமேஷ்டிகுருவென்று சர்வலோகப் பிரசித்தர்களாக விளங்குவர். பிரணவார்த்தப் பிரகாசிகமாயும், புருஷார்த்தங்களில் நான்காவதாகிய மோக்ஷ சாம்பிராச்சியத்தைக் கொடுப்பதாயும், கைலாசப்பிரஸ்தரமென்றும் மண்டலமாயும், சிவபூசாவிதியாயும், சந்நியாசாச்சிரமக்கிரமமாயும், சதாசிவப்பிரமத்தைச் சந்நியாசத்தினாலடையுங் கிரமமாயும் விளங்கும் விஷயங்களை யுனக்குச் சொன்னேன். சர்வ யதீந்திரர்களாலும் பூஜிக்கத்தக்கதாயும் வேதவேதாந்தங்களின்சாரமாயும் எல்லோருக்குஞ் சந்தோஷமுண்டுசெய்வதாயும் உலகுக்குக் கீர்த்தி யுண்டுசெய்வதாயும் மங்களகரமாயும் தகரவித்தியா ரகசிய

மாயும் வேதாந்தங்களிற் சித்தாந்தமாயும் உலககுருவாகிய என்பிதா சிவ பெருமானாற் சொல்லப்பட்டதாயுமுள்ள இந்த இரகசியத்தையான் என் தந்தையிடங் கேட்டபடியே யுனக்குச்சொன்னேன். இனியிதுவாமதேவ மதமென வழங்குக. இந்த வாமதேவ மதப்படி சிவபூஜை செய்வோர்கள் சிவஞானத்தினாற் பிறவிகடோறும் ஞானவான்களாய்ப் பிரம விஷ்ணு ருத்திராதி கிரமமாய் மோக்ஷத்தை யடைவரென வாமதேவ முனிவருக் குபதேசித்து, முருகக்கடவுள் ஸ்கந்தகிரியிலிருந்து கைலாயசிகரத்தை யடைந்தார். இந்தக்காரணத்தினால் இந்தப்பாகத்திற்குக் கைலாயஸம் ஹிதை யென்று பெயராயிற்று.

தகனகனன விதியுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்றாவது
ஸூதமுநிவர் விடைகொண்ட அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளே! இவ்வாறு உபதேசிக்கப்பெற்ற வாம தேவரும் பக்திமுதிர்ச்சியுடன் கைலாயத்தையடைந்து பரமபதியைத் தரி சித்து உடல்நடுங்க உரைகுழற உடல்முழுதும் மயிர்க்கூச்செறியச் சாஷ் டாங்கமாக நமஸ்கரித்து, பலவேதவாக்கியங்களால் துதித்துச் சிவாநுக் கிரகத்தையடைந்துவிடைகொண்டு வாழ்ந்திருந்தனர். ஆகையால் இப்பிர ணவார்த்தத்தை நீங்களும் அறிந்துகொண்டு இந்தக்காசி க்ஷேத்திரத்தில் வசித்து விசுவநாதனுடைய திருவடியிற் பக்திசெய்து சிவசாயுச்சியத்தை யடையுங்கள். யானும் எனதுகுருவாகிய வியாஸபகவானுடைய சேவைக் காக வெதிரிகாச்சிரமஞ் செல்கின்றேன். தங்களைப்போன்ற சாதுக்களு டைய தெரிசனமெப்பொழுதும் எனக்குண்டாகும்படி அநுக்கிரகஞ்செய் வீர்களாக. நீங்கள் கேட்டவிஷயங்களைச் சொன்னேன். இது சிவமஹா புராணத்தில் உருத்திரஸஹஸ்ரமென்றுஞ் சொல்லப்படும். இது மங்களங் களுக்கெல்லாம் மங்களமாயும் சதாசிவப்பிரமத்தை யறியத்தக்கதாயும் பாவங்களையும் ரோகங்களையும் ஒழிக்கத்தக்கதாயும் இஷ்டசித்திகளைக் கொடுப்பதாயும் இவ்வுலகத்திற் போகத்தையும் பரலோகத்தில் மோக்ஷத் தையுங் கொடுக்கத்தக்கதாயும் உள்ளதென, இந்த ஸம்ஹிதையைக்கேட்ட முநிவர்கள் ஆநந்தசாகரத்தில் மூழ்கினவர்களாய் உரைகுழற, ஸூதமுநி வரை நோக்கி, ஸ்வாமீ! அடியேங்கள் மனத்திலிருந்த அஞ்ஞானம் அறவே யொழிந்தது என்று அஞ்சலியஸ்தர்களாக நின்றார்கள். அப்பொழுது ஸூதமுநிவர் அம்முநிவர்களைநோக்கி இதனை ஞானமற்றவர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் பக்தியற்றவர்களுக்கும் சிவத்துவேஷிகளுக்குஞ் சொ ல்லப்படாது. வேதாந்தத்துச்சியில் விளங்கும்பொருள் சிவபெருமானென் றுணர்ந்தபெரியோர்களுக்கே சொல்லத்தக்கது. என்னுடைய குருவாகிய

வியாஸமுநிவர் அநேகவேதாந்தங்களையும் வேதசாரங்களையும் அஷ்டாதச புராணங்களையும் அநேகமுறை யோசித்துப்பார்த்து இதுவே சாரமான தென்றெனக் குபதேசித்தனர்.

முநிவர்களே! சிவபக்தியற்றவன் இதனைக் கேட்டாலும் பக்தி முதிரப்பெறுவான். ஒருமுறை குருமுகமாகக் கேட்டவன் பாவங்களை யொழிப்பான். இரண்டுமுறை கேட்டவன் சிவபக்தி யில்லாவிடினும் சிவபக்தியடைவான். மூன்றுமுறை கேட்டவன் சிவபக்தி முதிரப்பெறு வான். நான்குமுறைகேட்டவன் சிவஞானமடைவான். ஐந்துமுறை கேட் டவன் சிவபதவியையடைவான். ஆகையாற் போகமோக்ஷங்களைப் பெற விரும்பினவன் இதனை யடிக்கடி கேட்கவேண்டியது. ஐந்துமுறை கேட்க வேண்டுமென்றே என்குரு உபதேசித்திருக்கின்றார். எந்தப்பலனை நாடி இதைப்படித்துக் கேட்கின்றானோ அதையவனடைவானென, இவ்விதமா கக் கூறிவந்தனவற்றை ஐந்துமுறை கேட்டுச்சிவானந்தத்திலாழ்ந்து காசி க்ஷேத்திரத்தில் வாழ்ந்திருந்தார்கள். இவ்விதமாக ஐயமற உபதேசித்த ஸூதமுநிவரை, நைமிசாரணியவாசிகள் வஸ்திரம் சந்தனம் புஷ்பம் அக்ஷதை ஆபரணாதிகளா லருச்சித்து, பன்முறை நமஸ்கரித்து, பிரியவா க்கியங்களாலுந் தோத்திரஞ்செய்து வேதவாக்கியங்களாலும் எப்போதும் இவ்வாறே சிவசரிதங்களைக் கூறிக்கொண்டிருக்க வேண்டுமென்று விடை கொடுத்தனுப்பி ஸூதமுநிவர் திருவாய்மலர்ந்த இரகசியப்பொருளினும் அறியத்தக்கது வேறில்லையென்று, திருக்கைலாய திக்கைநோக்கி நமஸ் கரித்துத் தாங்கள் எக்காலத்துஞ் சிவபிரானையே வழிபட்டுவந்தார்கள். இக்கைலாய ஸம்ஹிதையைப் பத்தியுடன் படித்துக் கேட்போர்கள் தரு மார்த்தகாமியங்களை யநுபவித்துச் சிவஞானத்தாற் சிவசாம்பிராச்சியத் தை யடைவார்கள். அவர்கள் ஜன்மங்க ளெடுக்கவேண்டி வந்தாலும் அந்த ஜன்மங்கடோறுஞ் சிவத்தியானமுடையவர்களாயிருந்து அந்தத்தில் அழி யாப்பதவியை யடைவார்கள். சுபம். சுபம். சுபம்.

ஸூதமுநிவர் விடைகோண்டது

முற்றிற்று.

கைலாயஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சாம்பசிவார்ப்பணமஸ்து.



ஸநத்குமாரஸம்ஹிதை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

ஸநத்குமாரஸம்ஹிதை.

காப்பு.

𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌦𑍇𑌵𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌮𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 |
𑌸𑌂𑌭𑌵𑌂𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌅𑌨𑌾𑌦𑌿𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ||௧||

ப்ரபத்யேதேவமீஶாநம் ஸர்வஜ்ஞமபராஜிதம் |
ஸம்பவம்ஸர்வபூதாநாம் அநாதிம்விஶ்வதோமுகம்||௧||

தேவதேவனும் ஈஶாநசுருதியினுற் பிரதிபாத்தியனும் எல்லா முணர்பவனும் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனும் ஸர்வபூதங்கட்கும் உற்பத்திகாரணனும் ஆதியற்றவனும் எங்கும் வியாபித்தவனும் விளங்கும் பரமசிவனைச் சரணமடைகிறேன்.

𑌵𑍇𑌦𑌾𑌦𑍌𑌯𑌃𑌸𑍍𑌵𑌰𑌃𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤 𑌓𑌂𑌕𑌾𑌰𑌾𑌖𑍍𑌯𑍋𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 |
𑌸𑍃𑌜𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚𑌭𑍂𑌤𑍈𑌸𑍍𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌃 ||௨||

வேதாதௌயஃஸ்வரஃப்ரோக்த ஓங்காராக்யோமஹேஶ்வரஃ |
ஸ்ரஜதேஸர்வபூதாநி பஞ்சபூதைஸ்ஸதாஶிவஃ||௨||

வேதங்களின் ஆதியக்ஷரமாகிய ஓங்காரஸ்வரூபியும் மஹேசுவரனுமாகிய சதாசிவமூர்த்தியே பஞ்சபூதங்களாற் சகல பூதங்களையுஞ் சிருஷ்டிக்கிறார். (அப்படிப்பட்ட) பரமசிவனைச் சரணமடைகிறேன்.

முதலாவது

ஸநத்குமாரமுநிவர்நைமிசமடைந்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கி, யான் உலகநாயகனாகிய ஸ்ரீஅர்த்தநாரீசுவரரைத் திரிகரண சுத்தியாகப்பணிந்து சொல்லுகின்றேன். மகாபுண்ணியகரமான நைமிசாரணிய க்ஷேத்திரத்தில் உலகத்திற்கும் எனக்குங் குருவும், பராசரமுநிவர் புத்திரரும், சத்தியவதி தேவியின் தவப்பலனும், பிரமருஷியும், தர்மாத்மாவும், காலஞானமறிந்தவரும், பிரமசரிய நியமந்தவறாதவரும், தவநிதியும், இலக்ஷத்திருபத்தையாயிரங் கிரந்தங்களையுடைய மகாபாரதத்தைச் சொன்னவரும்,

நான்கு வேதங்களையுஞ் சீர்திருத்திப்பிரித்து வியாஸ்முநிவரென்று பெயர் பெற்றவருமாகிய என்குருவானவர், நான்கு வேதங்களாலுஞ் சூழப்பட்ட சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவனைப்போல அநேக ருஷிகளாற் சூழப் பட்டவராய், அவர்கட்கு அநேக திவ்யசரிதாமிருதங்களை யூட்டிக்கொண் டிருக்கையில், ஞானவித்தையைக் கரைகண்டவரும் மங்களமூர்த்தியும் பிரமபுத்திரருமான ஸநத்குமாரமுநிவர் உலகாநுக்கிரக நிமித்தமாய் அந்த நைமிசாரணியத்தையடைந்து தரிசனங்கொடுத்தனர். இவ்விதமாகத் தரி சனங்கொடுத்த ஸநத்குமாரமுநிவரை நைமிசாரணியத்திலிருந்த எல்லா ருஷிகளுங்கண்டு ஆநந்தமேலீட்டாற் றுண்ணென்றெழுந்து அர்க்கிய பாத்திய ஆசமனீயங்கொடுத்துத் திரிகரணங்களாலும் பூசித்துப் பத்தி வினயத்துடன் அஞ்சலியஸ்தர்களாய் நின்றனர். அப்பொழுது ஸநத் குமாரமுநிவர் அவர்களைத் தமது மதுரமானவாக்கியங்களால் அநுக்கிர கித்து, அவர்களாற் கொடுக்கப்பட்ட திவ்யாசனத்திலுட்கார்ந்தனர். முநிவர்கள் ஸநத்குமாரரை நோக்கி, பிரமபுத்திரரே! லிங்கார்ச்சனவிதி யையும், தேவதேவனுடைய பூஜாகிரமத்தையும், அவரநுக்கிரகத்தினு லுண்டாகும் புண்ணியபலனையும், பரமசிவனை ஒருவருடகாலம் இடை விடாது பூசிப்பதனாலும் அநேகமுறை பூசிப்பதனாலும் உண்டாகும் பலனையும், சிவமூர்த்திபேதங்களையும், சிவமந்திரசொரூபத்தையும், அம் மந்திராநுஷ்டான விதியையும், அடியேங்கட்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, அம்முநிவர்களை நோக்கி யோகீசரரான ஸநத்குமாரமுநிவர் தபோ மூர்த்திகளான பிராமண சிரேஷ்டர்களே! ஆசனத்திலிருங்களென்று அநுக்கிரத்து அவர்களையிருத்தி அவர்கட்கிடையே பிரகாசித்துக்கொண்டு, நக்ஷத்திரங்களாற் சூழப்பட்ட சந்திரன்போலும், கிரணங்களாற் சூழ்ந்த மத்தியான சூரியன் போலவும் விளங்கினர்.

ஸநத்குமாரமுநிவர் நைமிசமடைந்தது

முற்றிற்று.

இரண்டாவது
உலகோற்பத்தி யுரைத்த அத்தியாயம்.

தேஜோமூர்த்தியும் திரிகாலஞானியும் ஷாட்குண்ணிய பரிபூர ணருமாகிய ஸநத்குமாரமுநிவரை நோக்கி நைமிசாரணிய முநிவர்கள் பகவானே! தேவரீருடைய திருவாக்கால் ஸநாதனமாயும் புண்ணியகர மாயும் பஞ்சப்பிரமஸ்வரூபத்தை நன்குணர்த்தவல்லதாயும் உள்ள சிவ மஹாபுராணத்தைக்கேட்க விரும்புகின்றோம். தேவரீர் ஸர்வஜ்ஞராதலின் தேவரீருக்குத் தெரியாத விஷயமொன்று திரிலோகங்களிலுமில்லை யென்று விண்ணப்பிக்க, ஸநத்குமாரமுநிவர் அவர்களை நோக்கிக் கூறிய படி சொல்கிறேனென ஸூதமுநிவர் சொல்கின்றார்:

தவசிகளான பிராமண சிரேஷ்டர்களே! தேவதேவனான பரம சிவனாற் சொல்லப்பட்டதும் அதிக ரகசியமுமான சிவமஹாபுராணத்தைக் கேட்கக்கடவீர்கள். அந்தச் சிவமஹாபுராணத்தை யத்தியந்த பக்தியுடன் கேட்பவர்களே உத்தமர்கள். அவர்களே அத்தியாத்மகயோகிகள். அவர்க ளே கிருதகிருத்தியர்கள். இப்புராணம் புண்ணியத்தைக் கொடுக்கவல்ல தும், தேஜஸையுண்டாக்கவல்லதும், ஆயுள்விருத்தியடையச் செய்யவல் லதும், தருமார்த்தகாமமோக்ஷங்களுக்குக் காரணமானதும், வேதத்திற்குச் சமானமானதுமாக வுள்ளது. பரமேசனது புராணபடனமே எல்லாப் பாவங்களையுமொழித்துப் பரிசுத்த மாக்கத்தக்கது. அந்தணசிரேஷ்டர்க ளே! வியாஸபகவான் முன் கூறியுள்ளபடி நான் உங்களுக்குச் சொல்கின் றேன். இச்சிவமஹாபுராணப் பெருமையை நூறுவருடகாலமாகச் சொன்ன போதிலும் அளவுபடுத்தமுடியாது. அதனைச் சுருக்கிச்சொல்கின்றேன். பிருதிவியாதி பஞ்சபூதங்களின் தோற்றமும், பிரமவிஷ்ணுக்களின் ஞெடக் கமும், அவர்களின் சம்வாதமும், ஜம்புத்தீவாதி பிரமாணங்களும், பார தாதிவருஷக்கிரமங்களும், பாதாளாதிலோகக்கிரமங்களும், சந்திரசூரிய மண்டலங்களின் கிரமங்களும், காலசக்கரசுதியும், ஸநத்குமார பராக் கிரமும், அவர் மகாதேவனைப்பூஜித்தவிதியும், அவர் மகாதேவராலடைந்த வரப்பிரசாதமும், மேருவினுச்சியிலவர் வாசஸ்தானங் கிடைக்கப்பெற்ற தும், அங்குச் சிஷ்யகூட்டங்களுக்குச் சிவஞானம் போதித்தமுறையும், அவர் பிரமவிஷ்ணு உருத்திரர்களைத் தரிசித்து அவர்களுடன் சம்வாதஞ் செய்ததும், விபீஷணனுக்கும் உருத்திரமூர்த்திக்கும் நேர்ந்த சம்வாதமும், எல்லாத்தீர்த்தங்களின் மகிமையும், சிவலிங்கபூசைக்கிரமமும், இலிங்க உற்பத்தியும், பிரளயகிரமமும், மூர்த்திபேதமும், பிரமவிஷ்ணுக்களுக் குண்டானமாயையை யகற்றத்தோன்றிய சிவலிங்ககோலமும், சிவலிங்கப் பிரதிஷ்டையின்பலனும், அவனைப்புஷ்பங்களா லருச்சித்தலாலடையும் பல னும், தூபதீபங்கொடுத்து ஆராதித்தலாலடையும் பலனும், பழவர்க்கங் கள் கொண்டு நிவேதித்தலாலடையும் பலனும், மாசபூஜாபலனும், உபவாச மிருந்து அருச்சனைசெய்தலாலடையும் பலனும், தானமகிமையும், சதுர்த் தசி அஷ்டமியின்பலனும், அதிற் பூஜைசெய்யுங்கிரமங்களும், நாமாஷ்டமி யின்கிரமமும், வைலக்ஷணாஷ்டமியின்கிரமமும், விபூதி மான்மியமும், சௌசமுறையும், ஆசாரக்கிரமமும், யோகாப்பியாசக்கிரமமும், யோக நாடியின்முறையும், அவிமுத்தமான்மியமும், ஓங்காரவருணனையும், யஜ்ஞே சுவரமான்மியமும், தீர்த்தக்கிரமமும், நந்தியெம்பெருமான் பூஜாக்கிரம மும், அவனை யபிஷேகித்தமுறையும், நீலகண்டமான்மியமும், திரிபுர தகனமும், வாசுதேவப்பிரபாவமும், அவர் பூஜாக்கிரமமும், தருமப்பிர பாவமும், மகாதேவநாமசங்கீர்த்தனபலனும், ஞானவிசாரணையும், மோக்ஷ கிரமமும் ஆகியனவெல்லா மிதிலடங்கியிருக்கின்றன.

முநிவர்களே! ஈசுவரனுடைய சித்திரகிருத்தியத்தை விரித்துச் சொல்லுகின்றேன். பூர்வத்தில் எல்லாப் பிரபஞ்சமும் இருண்மயமாய்

அறியமுடியாததும்நாமரூபமற்றதுமாயிருந்தது. அப்பொழுதுமகாயோகியான உருத்திரமூர்த்தியானவர் தன்னுடைய ஆத்தும இச்சையினால் மனதையும் அதன் பின்னர் அகங்காரத்தையுஞ் சிருஷ்டித்தனர். அகங்காரத்தினின்றும் பஞ்சபூதங்களும், மூலப்பிரகிருதி மஹத் அகங்காரம் பஞ்சதன்மாத்திரைகள் விகாரம் முதலியன உண்டாயின. ஸப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்கள், பிராணன் அபானன் வியானன் சமானன் உதானன், சத்வ ரஜ தமோகுணங்க ளவற்றேடுண்டாயின. இவற்றினின்றும் பிரம விஷ்ணுக்கள் பிறந்தனர். இவ்விருவருக்கும் மோகத்தையுண்டுசெய்ய நிமித்தமாக, சரீரமில்லாதவரும் மகாதேவரும் பிறப்பற்றவரும் அயோனிஜரும், ஆதியந்தமற்றவருமாகிய பரமசிவன் தோன்றிப் பிரமவிஷ்ணுக்களைத் தன் மாயையினால் மோகிக்கச்செய்து தன் தேஜஸை சர்வப்பிரபஞ்சங்களிலும் வியாபரிக்கச்செய்தபடியால் அந்தப்பரமசிவனைக் காட்டிலும் பரமான வஸ்துகிடையாது. பிரமவிஷ்ணுக்களிருவரும் பரமசிவத்தினிடத்திலேயே ஜனித்துக் கற்பங்கடோறும் ஜகத்சிருஷ்டியாதிகளைச் செய்கிறார்கள். மகாதேவர் ஹரரூபியாய் அப்பிரபஞ்ச சிருஷ்டிகளான சர்வபூதங்களையுஞ் சங்கரிக்கின்றார். கற்பங்களில் அநேகயுகங்களும் மநுவந்தரங்களு மடங்கியுள்ளன. எழுபத்தொருயுகங்கள் ஒருமனுவந்தரமாம். அதுவே பதினான்கு முறை திரும்பினால் ஒருகற்பமாம். அக்கற்பமே பிரமதேவனுக்கு ஒரு பகல். அவ்வளவுகாலமே [நிசாகற்பம்] இரவாகின்றது. இவ்விதமான நாட்கணக்கின்படி மாசம் வருஷம் பக்ஷங்கள் கணக்காகி நூறுவருஷங்கள் கழிந்தாற் பரார்த்தமாம். அப்பரார்த்தமே ஹரனுக்கு ஒரு நிமிஷம். அவர் பிரமாதி துருணபரியந்தமான சராசரங்களையும், சூரிய சந்திராதி நவக்கிரகங்களையும், பூலோக புவர்லோக சுவர்லோக மகர்லோக ஜனோலோக தபோலோக சத்தியலோக பாதாள சுதல அதல விதல தராதல ரசாதல மகாதலலோகங்களென்னும் பதினான்குலகங்களையுஞ் சிருஷ்டித்து, அந்த ஒரு நிமிஷத்திலேயே பிரளயஞ் செய்து சங்கரித்து, தானேசர்வலோகங்களிலுஞ் சர்வவியாபியாயிருந்து, பிரபஞ்ச காரியத்தை யியற்றிவருகின்றார். பிரமலோகமுதல் பாதாளலோகம் வரையிலுள்ள பதினான்குலகங்களின் விஸ்தாரமும், பர்வதங்களின் கிரமமும், சமுத்திரபரிமாணமும், தீபங்களின் பேதமும், திக்குகளின் நிலைமையுஞ் சொல்லுகின்றேன். தாவரங்களைக்காட்டிலுஞ் சங்கமம் ஆயிரமடங்கும், சங்கமங்களைக் காட்டிலும் மற்றவைகள் ஒவ்வோராயிரம் பங்கதிகமுமாகவிருக்கும்படி சிருஷ்டிக்கிறார். இவரே சர்வகிருத்தியங்கட்குங் காரணராயிருத்தலின் மேற்கண்ட தேகங்களெடுத்த ஒவ்வொருசீவனும் அவரிடமே பத்திசெலுத்தவேண்டியது. இவரையே பஞ்சபூதாத்தமகராயும் ஞானசொரூபியாயும் நிர்குணராயும் நிருமலராயும் விளங்கும் பரம்பொருளென்று ஞானவான்கள் தியானிக்கின்றார்கள். அப்பரமேசனே லீலார்த்தமாய்ச் சத்தியுடன் கூடி ஜகத்தைச்சிருஷ்டிக்கிறார். அவரினின்று மூலப்பிரகிருதியும், அப்பிரகிருதியினின்று விஷ்ணுவும், அவரினின்று பிரமனும் தோன்றுவர். அப்பிரம

தேவர் சிவாக்கினையை மேற்கொண்டு தனது முகத்தினின்று பிராமணர்களையும், புயத்தினின்று க்ஷத்திரியர்களையும், தொடையினின்று வைசியர்களையும், பாதத்தினின்று சூத்திரர்களையும், முன்னையர்களின் ஆசாரகிருத்தியாதிகளில் ஒவ்வொரு பங்கு குறைவாகப் பின்னையோர்கள்செய்யும்படியாகவுஞ் சிருஷ்டித்தார். இப்படியாய சிருட்டியால் தாவரசங்கமாதிகள் விசேடமாகப்பெருகும். யுகாந்தத்தில் உருத்திரர் காலரூபியாகத்தோன்றிச் சங்கரிப்பார் என ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

இவ்வாறு கூறியதைக்கேட்ட வியாஸபகவான் வினவுகின்றார், ஸநத்குமாரமுநிவரே! பிரமோற்பத்தியையும், இவ்வுலக சிருஷ்டிக்கிரமத்தையும், இச்சகத்தையழியாது பாலிக்குந்திறத்தையும், அதனாலவருக்குப் பிரமத்துவங் கிடைத்ததையுஞ் சொல்லவேண்டுகின்றேனென, அவ்வாறே ஸநத்குமாரமுநிவர் சொல்லலாயினர். ஆரம்பத்தில் இருள் எங்கும் வியாபரித்துத் திக்குகள் நிலைதெரியாதிருக்கையில், மஹேசுவரன் யோகத்தின் பிரிவால் அவ்விருளைப்போக்க ஓர் ஒளியையுண்டாக்கினர். அவ்வொளி செந்நிறமாய் ரஜோகுணமமைந்து அக்கினி உருவமெடுத்தது. அவ்வக்கினி சத்துவகுணத்துடன்கூடி, தமோகுணத்திறாற் பிருதிவியையுண்டாக்கியது. அம்மூன்றினின்றும் ஜலந்தோன்றியது. அதினின்று அகோராத்திராதி காலங்கள்தோன்றின. அக்காலத்திற் கதிபரான சூரியாதிகள் உண்டாயினர். அதிற்சூரியன் பிரபலனாய்த் தனது கிரணங்களாலிருளைப் போக்கி ஜலத்தைவற்றச்செய்கிறான். அக்காலத்திற் சங்கரன் ஜலரூபியாகத்தோன்றுவன். அந்தஜலத்தினின்றும் அண்டமொன்று தோன்றும். அவ்வண்டத்தினின்று நாராயணன் தோன்றுவன். அவனிடத்துப் பிரமனும், அவனிடத்துக் காலம் திக்கு முதலியனவுந் தோன்றும்.

மூன்றாவது
மேற்படி அத்தியாயம்.

அவ்வியக்தத்தினின்று மகத்தும் அதினின்று பிரமனுந்தோன்றினமையால் இதற்குப்பிரமாண்டமெனப் பெயரெய்தியது. அவ்வண்டத்திற்குச் சமுத்திரங்களே உதிரமும், ஆகாயமே வயிறும், வாயுவே சுவாசமும், அக்கினியே தேஜசும், ரஸங்களே நதிகளும், முற்கூறிய ஆகாயமே மற்றவகையாற் காதும், சந்திர சூரியர்களே கண்களும், மேருமலையே தொடையும், மேதினியே மார்புமாகும். அப்பூமியினெல்லையே சமுத்திரமும் அதனெல்லையேபாதலலோகமுமாகும். அப்பாதலலோகத்தின்கீழ் ஜலமும்அந்தஜலத்தினெல்லையில் நாகராஜாக்கள் வசிக்குந்தானமும், அத்தானமுடிவில் இருளும், அதனிறுதியில் அக்கினியும், அதன் கடைசியிற் பிருதிவியும் ஆக இவ்வெழுவகையாற் சூழப்பட்டிருக்கும்.

இவ்வகையாக ஆக்கப்பட்டுள்ள பிரபஞ்சத்தைப் பிரமதேவர் சிருஷ்டிக்க இச்சையுள்ளவராய்க் கருப்பவாசத்திலிருந்து பிறக்கும்

மாநுடவர்க்கங்களை(ஜராயுஜத்தை)யும், முட்டையிலுண்டாகும்(அண்டஜம்) பக்ஷிவர்க்கங்களையும், (உத்பிஜம்) தாவரங்களையும், சுவேதஜமென்னும் புழுப்பூசிகளையும், தேவயோனிபேதமாகியவித்தியாதரர், அப்சரசுகள், யக்ஷர், இராக்ஷசர், பிசாசர், கின்னரர், குஹ்யகர், சித்தர்களையும், பிருதிவி யந்தரிக்ஷம், திருதிவமென்னு மூன்றுலோகங்களையுஞ் சிருஷ்டிக்கின்றார். இவ்வாறுண்டாக்கப்பட்ட சமுத்திரம்பிருதிவியினும்இருமடங்கதிகமாகும். பூமியிலும் சமுத்திரத்திலும் பலவகைப்பட்ட பிராணிகள் வசிக்கும். இப் புவனம்ஆதியிற் கடவுளால் ஒன்றாகவே தோன்றினும்,தேவமாநுடர்களாற் சுவர்க்கமத்தியபாதல மென்னும் மூவகைப் பெயர்களோடு அழைக்கப் பட்டுவருகிறது. இப்பிரிவி னுட்பிரிவுக ளொவ்வொன்றினும் உருத் திரமூர்த்தி உபாசிக்கப்பட்டு வருகிறார். இம்மூன்றுலகங்களுக்குங் காரணராயிருப்பவர் உருத்திரனே யென்று உபாசித்துச் சிருஷ்டியாதி தொழிலையுஞ் செய்து வருகிறார்கள். வியாஸமுநிவரே! இவ்வகையினால் பிரபஞ்சத்தின் அளவையும், காரணத்தையும் தவத்தா லறியத்தக்கது. இப்பூமியில் பலதீவுகளும் வருஷபேதங்களு முண்டாயிருக்கின்றன. அவ் விடங்களிற் பிராணிகள் அற்பாயுளுடனும் அற்பபுத்தியுடனுங் கூடியிருப் பதாலவர்களுடைய எண்ணங்களைநிறைவேற்றக்காருண்ணியமூர்த்தியாகிய சிவபெருமான் நாமபேதங்களோடு எழுந்தருளியிருக்கின்றார். ஜம்புத் தீவிற் கோமேதமென்னுந்தலத்திற் கிரிஜேசுவரரென்னும் பெயருடனும், சான்மலித்தீவிற் பசுபதி என்னும்பெயருடனும், குசத்தீவில் அரனென் னும் பெயருடனும், கிரவுஞ்சத்தீவில் விருஷத்துவஜ னென்னும்பெயருட னும், சாகத்தீவிற் சங்கரனென்னும் பெயருடனும், புஷ்கரத்தீவிற் பால லோசனனென்னும் பெயருடனும், அங்கங்குள்ள ஜீவராசிகள் வழிபட்டு பூசைசெய்து, இஷ்டபோகங்களை யநுபவிக்க எழுந்தருளிஇருப்பார். அத் தீவுகளுள் ஜம்புத்தீவில் ஜம்புவிருக்ஷம் ஆயிரயோசனைதூர முயர்ந்து புடை பரந்து அமுதத்திற்குச்சமானமான ரசமுள்ளபழங்களைக்கொடுத்திருக்கும். அத்தீவின் விஸ்தீரணத்திற்கிருமடங்கு ஜலமதனைச்சூழ்ந்திருக்கும். அத் தீவு எழுவகைவருஷங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதனுள் பாரத வருஷமென்பது ஒன்பதுகண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அஷ்டகுல பரு வதங்களோடு விளங்கும். இதில் இளாவிரதகண்டம் மத்தியிலுள்ளது. மேற்கூறிய விருக்ஷத்தின் பழச்சாறு ஓர் ஆறாகப்பாயும். அதற்கு உத்தர திக்கில் மஹாமேரு இருக்கின்றது. இம்மலையை ஜம்புநதி பிரதக்ஷிணக் கிரமமாகச்சுற்றிவரும். மேருமலையினுச்சியில் எண்பத்துநான்காயிர யோ சனை உயர்ந்து பதினாயிரயோசனை ஆழ்ந்து இருபத்தாறாயிர யோசனை விசாலித்து அழகோடுகூடிய கைலாயபர்வதம் விளங்கும். அவ்விடத்திற் சூரியாதி கிரணங்கள் கிடையா. அதனொளியே கிரணமாக வீசியிருக்கும். காமக்குரோதங்களைச் செயித்த ஜிதேந்திரியர்களே அங்கடையக் கூடும். சிவத்தினிடத்துப் பத்தியில்லாதவரும் யாகாதிதருமங்களை யியற்றாதவரு மங்கடைய வியலாது. அதைச்சுற்றிலும் நீலம், நிஷதம், ஏமகூடம், இம

வானென்னும் நான்குபருவதங்களுண்டு. அதன் தென்பக்கலிலுள்ள மலை இருபைத்தையாயிரயோசனை யுயரமுள்ளதாகவிருக்கும். அதில் நளினி, ஹ்ராதினி, பலாவனி என்னும் மூன்றுநதிகள் மேற்குமுகமாகவும், கங்கை என்னும் மகாநதி அநேக உபநதிகளுடன் ஜம்புத்தீவிலும் பாயும். இவை யன்றி அநேக புண்ணியதீர்த்தங்கள் இந்த ஜம்புத்தீவிலுண்டு.இவ்விதமாக மற்றத்தீவுகள் ஒவ்வொன்றிற்கு இருமடங்கு அதிகவிஸ்தீரணமும் மற்ற வையுங் கொண்டனவாகும். இத்தீவுகளெல்லாம் ஆங்குள்ள விருக்ஷங்க ளின் நாமங்களே பெயராக அடையும். ஆங்குள்ளவர்கள் அவ்வவ்விருக்ஷங் களின் பழச்சாற்றையே ஆகாரமாக உட்கொள்வார்கள். இந்த ஜம்புத்தீ வல்லாது மற்றத்தீவுகளில் உள்ளவர்கள் நோய், மூப்பு, சோகம், துக்கம், ஆயாசம், ஆயுள்வித்தியாசம், முதலியனவின்றிச் சந்தோஷத்தையே யநுப வித்துவருவார்கள். அவ்விடம்நவரத்தினமயமாகவிளங்கும். எங்கும் பொற் குன்றுகளும், காலவேறுபாடுகளால் மாறுதலடையாது ஒரேகாலம் போ லப் பழங்களைக்கொடுத்துவரும் விருக்ஷங்களுமுண்டு. அவ்விடத்துள்ள நதிகள் அநேக கிளைநதிகளோடு கூடி அவ்வவ்விடங்களைப் பரிசுத்தஞ் செய்துவரும். அங்கு ருஷி கந்தருவ சித்த தானவ வித்தியாதர நாக யக்ஷ கிம்புருடராகிய புண்ணியபுருஷர்களே வசிப்பார்கள். சூரிய சந்திராதிகளா லாகு முஷ்ண சீதளங்களும், வாயுவருணர்களாலாகு மாறுதல்களும் அங்குக்கிடையா. ஒவ்வொரு தீபங்களிலுமுள்ள குலபருவதங்கள் அறு பதினாயிரம் சிறு பருவதங்களின் மத்தியிலிருக்கும். அவ்விடங்களிலும் மேற்கூறியபடி சவுக்கியங்களை யநுபவித்தே புண்ணியபுருஷர்கள் வசித்தி ருப்பார்கள். அப்புண்ணிய புருஷர்கள் நாளடைவில் மரணமடையாது கற்ப விறுதியில் உருத்திரராற் சங்கரிக்கப்படுவார்கள்.

இனி ஜம்புத்தீவின் காலவளவைக் கூறுகின்றேன். இத்தீவில் நான்குவகை யுகங்கள் வழங்கிவரும். அவை கிரேதாயுகம் திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமெனப்படும். அவற்றிற்குக் காலம் பதினேழு லக்ஷத்திருபத்தெண்ணாயிரம், பன்னிரண்டுலக்ஷத்து ஆறாயிரம், எட்டுலக்ஷ த்து எண்ணாயிரம், நாலுலக்ஷத்து முப்பத்தீராயிரம் வருஷங்களுடையன வாகும். இவ்வகைய எழுபத்திரண்டு சதுர்யுகங்கள் கொண்டது ஓர் மங் வந்தரமாகும். இத்தகைய பதினான்கு மங்வந்தரங்கொண்டது ஓர் கற்பம். இக்கற்பம் பிரமனுக்கோர் நாளாகும். இம்மாதிரியான நாள் முந்நூற் றறுபதுகொண்டவருடம் ஒன்றின்படி, நூறுவருடங்களாகப் பிரமன்ஜீவித் திருப்பான். இப்படிப்பட்ட பிரமகற்பம் அரனுக்கோர் நிமிஷமாம். அந்த நிமிஷத்தின் அரைப்பாகத்திற் பிரமாதிகளின் தோற்றமும் மற்றைய அரைப்பாகத்தில் அவர்கள் ஒடுக்கமுமாகும்.

மேற்கூறியுள்ள ஜம்புத்தீவின் விஸ்தீரணத்திற்குள், இந்திரத்தீவு கசேரு, தாமிரபரனு, கபஸ்திமானு, நாகத்தீவு, சௌமியம், காந்தருவம், சாரணம் ஆகிய எட்டுத்தீவுகளுள. இப்பூமி சுற்றிலும் பலவித சமுத்

திரங்களாற் சூழப்பட்டு, கடைசியிற் சுத்தஜல சமுத்திரத்தாற் சூழப்பட்டிருக்கும். இதற்கப்புறம் லோகாலோகபர்வதம் பூமியின் அளவிலும் மும்மடங்கு பருத்து விசாலித்துள்ளதாக விருக்கும். அப்பருவதத்தில் லோகேசர்களென்னும் நால்வர் வியாதியற்றவர்களா யதனைப்பரிபாலித்து வருகிறார்கள். அதற்கப்புறம் சூரியசந்திரகிரணங்கள் கிடையா. இவ்வளவுதான் பூமியின் பிரமாணமாகும்.

உலகோற்பத்தியுரைத்தது

முற்றிற்று.

நான்காவது

பாதாளவர்ணனையுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் கூறுகின்றார். முநிவர்களே! இதுகாறும் பூமியின் பிரமாணத்தைக் கூறிவந்தேன். இனி பாதாளலோகத்தின் அளவையும் மற்றவைகளையுங் கூறுகின்றேன். போகவதியென்னும் நகரம் நவரத்தின மயமாகிய உப்பரிகைகளுடன் பாதாளலோகத்தில் விளங்கும். அந்நகரத்தில் வாசுகி தக்ஷகன் கார்க்கோடகன் தனஞ்சயன் காலியன் பவனன் பூரணன் மணிமாலன் பத்திரன் கௌசிகன் வசுலந்துமாறன் கம்பளன் அசுவதரன் தித்திரி அரிபத்திரன் ஜம்புபத்திரன் பலாககன் காவீரன் புண்டரீகன் மகோரகனென்னும் நாகராஜர்கள் வசிப்பார்கள். இவர்களன்றிப் பிரதாதி சித்தமுநிகணங்களும் அநந்தாதி மகாநாகங்களும் அங்குச் சுகமாக வாழ்ந்துவருவார்கள். அங்குள்ளவர்கள் வெண்பட்டு நீலப்பட்டு உடுத்துச் சந்திரஹாரகேயூரங்களணிந்து மின்னல்போலொளியுள்ள அப்சரசுகள் செய்யும் நடன கீதங்களைக்கேட்டுச் சந்தோஷமடைந்திருப்பார்கள். அந்நாகர்கள் ஜ்வரம் பீடை துன்பம் அசங்கிதம் முதலியனவற்று வேண்டியதை அப்சரசுகளாலடைந்து சுகமனுபவிப்பார்கள். அந்நகரமத்தியில் வச்சிர வைடூரியங்களாலிழைத்த ஆயிரந் தம்பங்களாலாக்கப்பட்டுள்ள மண்டபமத்தியில், கோமேதகத்தாலிழைத்த சிம்மாசனத்தில், நாகராஜர்களிருந்து அரசாட்சிபுரிந்து வருவார்கள். அவ்விடமெங்கும் முத்துத் தோரணங்களும், சந்திரகாந்தக்கற்களாலிழைத்த மேல்மாடிகளும், சூரியகாந்தக்கற்களாலாகிய மதில்களும், அதைச்சுற்றிலும் சுத்தோதகம் நிரம்பிய அகழிகளும், அவற்றுட் சுவர்ணபங்கயம்போன்ற தாமரைமலர்களும் நிறைந்திருக்கும். இம்மண்டபத்தைச்சுற்றிலும் பசும்புல் படர்ந்து பாயசம், நெய், தயிர், பால் நிறைந்துள்ள கிணறுகளோடு, ஆறு ருதுக்களிலும் மாறுபடாத புஷ்பங்களைக்கொடுத்து அங்குள்ளவர்களைச் சுகிச்கச்செய்திருக்கும். சங்கமலைபோன்ற அன்னக்குவியல்களும் மதுக்கிணறுகளும் நரைதிரைமூப்பணுகாத யௌவனகன்னிகள் விரும்பியோருக்கு வெறுக்காது சுகங்கொடுத்துவரு மிகுதியும் நீங்காதிருக்கும். இவ்வகைய

அழகோடுஞ் சிறப்போடும் விளங்கிய நாகலோகம் கோடியோசனை அகல நிகளங்களுடன் விளங்கும். இவ்வளவு விஸ்தீரணமுள்ளபாகத்தின் சிறப்பில் ஒருபாகத்தினைமாத்திர முனக்குக் கூறியுள்ளேன். இதுவேயன்றி, இரணியபுரமென்னும் நகரம் கோடியோசனை விஸ்தீரணமுள்ளதாய் வச்சிர வைடூரிய கோமேதகங்களாலிழைத்துப்பொன்னாலாகிய விதானங்களுடன் விளங்கும். அங்குக் காலவேறுபாடுகளின்றி ஒரேவிதமாகச் சிறந்த புஷ்ப பழங்களைக்கொடுத்துக்கொண்டு செடிகளும் மரங்களும் விளங்கும். இரத்தினபீடங்களினிடையே உன்னதமாய்இனியஅமுதநீரை ஒழுக்கிக்கொண்டு அருவிகள்பெருகிச்சுற்றிலுமுள்ளனவற்றைச் செழிப்பாக்கும். அங்குள்ள கன்னியர்கள் வெண்பட்டுடுத்தி முத்தாரம் முதலிய ஆபரணங்கள் பூண்டு விமானத்திலேறிப் புருஷர்களுக்குச் சுகத்தைக்கொடுத்துக் கொண்டிருப்பார்கள். ஆங்குள்ளோர் பயம் லோபம் பிணி மூப்பு வியாதி அசங்கித முதலியன அடையாது,அழகியமாளிகையில் வசித்துவருவார்கள். அங்குப் பிரகலாதன் முதலிய தைத்தியர்களும் மற்றவர்களும் நிறைந்திருப்பார்கள். சுரபிஎன்னுமசுரன் நாராயணனநுஜ்ஞையாற்பூமியைத்தாங்கிக்கொண்டங்ஙனே இருப்பான். இவனைச்சுற்றிலும் சுதன்மா சர்வாங்கன் சுசர்வாங்கன் சுலபன் ஆகிய நால்வரிருப்பர். இவர்கள் வசிக்கும் இடம் காமியபுரியெனப்படும். அங்கேயும் பாயசம் தயிர் பால் தேன் முதலியவற்றை நிரம்பியுள்ள கிணறுகளும், குளிர்ந்தகாற்றும், எக்காலத்திலும் பலனைத்தருமரங்களும், ஆறிருதுக்களிலும் மலரத்தக்க நந்தவனங்களும், சரத்கால சந்திரன் போலுந் தவளமாளிகைகளும், அமிர்தமயமான குண்டங்களுமுள்ளன. அவ்விடத்திற் புண்ணியபுருஷர் வந்து அப்போகங்களை யநுபவிப்பார்கள். இப்பாதாளலோகத்தின் சிறப்பைச் சாமானியமாகச் சொன்னேன். அநேககோடிவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லிமுடியாது. இனி அநந்தன்வசிக்குங் குஹ்யபுரியானது நவரத்தினமிழைத்த மாளிகைகளும் அமிர்தமயமான வாவிகளும் வைடூரியம்போலப் பசும்புற்றரைகளும் விரும்பியவற்றைக் கொடுக்கத்தக்க விருக்ஷங்களும், கொடிகளும், கோடி சூரியருதித்தாற்போன்ற பிரகாசமும், பிரமதேவனது சத்திய லோகத்தையும் விஷ்ணுமூர்த்தியின் வைகுண்டத்தையும் போன்ற சிறப்புமுடையது. இனி இயமபுரத்தைச்சொல்லுகின்றேன் : இரௌரவம் போதம் சூகரம் பாலம் கும்பிபாகம் களக்கிரகம் பிரவாசி அதோமுகி வைதரணி அசிபத்திரவனம் யமசூலி பைரவம் ஏகபாஷாணம் அசிதாலவனம் ஊர்த்துவகம் சூலம் கரம்பவாலுகை சிருங்காடகவனம் அந்தகாரம் தமசுதோரம் மக்ஷிகம் என்னும் பேதமுள்ள நரகங்களில் தங்கடங்கள் கர்மத்துக்கேற்ப அவரவர் கிலேசத்தை யடைவார்கள். இன்னும் அந்நரகங்களில் உரிவாள் முதலியவற்றால் வெட்டியும் அறுத்தும் வைதரணிநதியில் நீந்தச்செய்தும், உடலின் தோலையுரித்து விட்டு உப்பு ஜலத்தை யிறைத்தும், சான்மலி யென்னும் விருக்ஷத்திற்போட்டு மேலிருந்திழுத்

தும், சிலரைச்செக்கிலிட்டாட்டியும், சிலரைக் கும்பிபாகத்தில் உடலை வெட்டிச்சமைத்துந் துன்புறுத்துவர். பொய்ச்சாக்ஷி சொன்னவன் ரௌரவத்தையும், பரஹிம்சை செய்தவன் போதகத்தையும், மித்திரபேதஞ் செய்தவன் சூகரத்தையும், பிராமணசொத்தை யபகரித்தவன் கும்பிபாகத்தையும், கொடுத்தவற்றை மீண்டும் வாங்கிக்கொண்டவன் களக்கிரஹத்தையும், ஸ்திரீஹத்திசெய்தவன் துர்க்கந்த மாமிசமுடைய நரகத்தையும், பிறருடைய தனதான்னிய சுவர்ண ரஜிதாதிகளை யபகரித்தவன் யமசூலத்தையும், மாதாவைக்கொன்றவன் சூசிமுகத்தையும், பிதாவைக் கொன்றவன் அதோமுகத்தையும், சிவசொத்தையபகரித்தவன் சர்ப்பங்களாற்கடிக்கப்பட்டு வைதரிணி நதியையும், ஊரைக்கொளுத்தினவன் அசிபத்திரவனத்தையும், வேதசாஸ்திரங்களை நிந்தித்துத்தர்மமார்க்கத்தை யழித்தவன் அநேக ஆயிரவருஷம் பைரவத்தையும், சிநேகிதன்மனைவியை யிச்சித்தவன் ஏகபாஷாணத்தையும், சரணங்கொடுத்துக் கைவிட்டவன் அசிதாலவனத்தையும்,பரஸ்திரீகமனமும் பரசொத்துக்களையபகரித்தலுஞ் செய்தவன் பொருள்வாங்கிக்கொண்டு பொய்சாக்ஷிசொன்னவன் இவர்கள் சூலத்தையும் அடைவார்கள் - பிராமணருடைய யஜ்ஞோபவீதம் ஆசாரம் காயத்திரிமுதலியவற்றையும், சிவலிங்கத்தையும் சிவபூஜையையும் நிந்தித்தவனுடைய நாவையறுத்து அநேகநாள் வைதரணிநதியிற் கஷ்டமடையச்செய்வார்கள். பிரஜைகள் செய்தகுற்றத்திற் கேற்பத் தண்டனை கொடாது அதிக்கிரமித்துக் கைகால்களைவாங்கிவிட்ட அரசனைச் சிருங்காடகவனத்தில் இயமதூதர்களிழுத்துக் கொண்டுபோய்த் துண்டுதுண்டாக வெட்டிவிடுவார்கள். வீட்டைக்கொளுத்தினவன் அந்தகாநரகத்தை யடைந்துகாட்டுக்களாற் கடிக்கப்பெறுவான். நரகங்களைச் சங்கிரகமாகச்சொன்னேன். பாவஞ்செய்தவர்களே யமபுரத்தை யதிகஷ்டத்துடன் அநேக காலங்கழித்து அவ்வழியைத்தாண்டுவார்கள் - புண்ணியஞ்செய்தவர்களோ அதிவிரைவில் வாகனம் பல்லக்கு குடைமுதலியவற்றுடன் குளிர்ந்த நந்தனவனத்தின் வழியாக ஆங்காங்குப் பசிதாகங்களைத் தணித்துக் கொண்டு சந்தோஷகரமாகச் செல்லுவார்கள். ஜனனமெடுப்போருக்குப் பிறக்குங்காலத்திலும் பிராணனைவிடுங்காலத்திலும் வருந்துக்கமும், சமுசாரதுக்கமும், பலவித ஆசைகளாலடையுந் துக்கமும், அடையக்கூடாத பெரும்போகங்களை யவாவியடையுந் துக்கமுமாக எப்பொழுதுந் துக்ககரமாகவேயிருக்குமாதலின் ஞானத்தையடைந்தவன் ஒருவனே துக்கநிவாரணமடைவான் - அந்தஞானமோ சிவசரிதங்களைச் சிரவணஞ்செய்வதனாலேயே யுண்டாகவேண்டும் - அவ்வகையாக அடைந்த ஞானமே சகல துக்கங்களையுங் கிலேசங்களையும் ஒழிக்கவல்லது. புண்ணிய மிகுதியாற் சுவர்க்காதிபதவிகளை யடைந்தவர்களும் அப்புண்ணியங் கழிந்தபின்பு மீண்டும் இவ்வகைய துன்பங்களை யநுபவிக்கவருமாதலின், ஒருவன் சமுசாரத்தினின்றும் விலகிச் சிவசக்கரத்தை யடைந்து ஞானவானுகி

எப்போதும் சிவோகம்பாவனையி லிருப்பது எல்லாவற்றிலும் உசிதமானது. சிவஞானமடைந்தவன் தனது ஞானவன்மையால் எல்லாத்தோஷங்களையும் விலக்கி, இராகத்துவேஷாதிகளி னின்று நீங்கி, மகேசுவரனுக்குப் பிரியமடைந்தவனாய், அந்த ஞானக்கினியால் ஜனனக்கூட்டமாகிய காட்டினைப் பஸ்பஞ்செய்துவிடுகிறான்.

பாதாளவர்ணனையுரைத்தது

முற்றிற்று.

ஐந்தாவது

மேலுலகவர்ணனை யுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுனிவர் சொல்லுகின்றார் : பூமியின் பரிமாணத்தையும் சப்ததீபங்களின் விசேஷத்தையும் நாகலோகச்சிறப்பையும் இதுவரையிற் சுருக்கமாகச்சொன்னேன். இனி மேலுலகங்களின் பெருமையைக்கூறுகின்றேன். பூவுலகத்திற்கு மேலுள்ள புவர்லோகத்திற் பிசாசகுஹ்யக யக்ஷ கின்னர கிம்புருட சித்த வித்தியாதராதி தேவவர்க்கத்தினரும்,புட்கலாவர்த்தமாதிமேககூட்டத்தினரும் வசிப்பார்கள். இதற்குமேல் இலட்சம் யோசனை தூரத்திற் சூரியமண்டலமிருக்கும். அதனைச் சுற்றிலும் சூரியவொளிபோன்ற விமானகூட்டங்களும், அவற்றுள் அறுபதினாயிரம் ருஷிகள் வேதசாஸ்திரங்களை யப்பியசித்தலும், நாககந்தருவர்களாற் சூழப்பட்டும், அறுபதினாயிர அப்சரஸ்திரீகளின் நிருத்தமும், ஹா ஹா ஹூ ஹூ என்னும்பெயருள்ள இரண்டு கந்தருவ புருஷர்களும், காவியநாடகாலங்களாற் சூரியனைப்போற்றுங் கூட்டமும், அவர்கள் வாயுவேகமனோவேகங்களாகச் சஞ்சரிக்கத்தக்க விமானத்தொகுதிகளும்,புண்ணியவான்களாகிய இராஜருஷிகள் அம்மண்டல மார்க்கமாகச் செல்லுதலும், புண்ணியபுருடர்களெல்லாம் இஷ்டகாமியங்க ளடையச்சென்று வசித்திருக்குந்தானங்களும் பொருந்தியிருக்குஞ் சூரியலோகத்தி னவாந்தரபேதமான வைவசுவதலோகம் ஒருபுடையிருக்கும். அந்தலோகத்திற் புண்ணியர்கள் திவ்ய விமானங்களில் அலங்காரமேனியுடன் அப்சரஸ்திரீகள் சகிதமாகச் சுகமநுபவித்துவருவார்கள். மேற்கூறிய சூரியலோகத்திலும் பெருமையுடைத்தாய் அதனினும் இருமடங்கு விசாலமுள்ள சந்திரலோகம் மேலேயிருக்கும். அந்தலோகத்தில் மந்திரஜபங்களாற் சித்தியடைந்த உத்தமபிராமணர்களும், சோமபானஞ்செய்த வேதியரும், அசுவமேதமுதலிய மகாயாகங்களைச்செய்த உத்தம இராஜருஷிகளும், பூதானஞ்செய்த புண்ணிய மூர்த்திகளும், வஸ்திரம், பொன், வெள்ளி, பசுமுதலிய தானங்களைச்செய்த மற்றப் புண்ணிய புருஷர்களும் வசித்துவருவார்கள். இதற்குமேல் அங்காரகன்முதலிய நட்சத்திரங்களின் லோ

கம் மேற்கண்ட சிறப்புகளுடன் விளங்கும். அங்கு ஆகாயகங்கை அலக நந்தாவென்னும் பெயருடன் சுத்த ஜலமாகப் பிரவகிக்கும். இதற்கு மேல் மிகவும் பிரகாசம்வாய்ந்த மகருஷிகளின் லோகம் இருக்கும். இதற்குமேல் அமராவதிபோன்று சிறப்புடைய, யுத்தகளத்திற் பகைவருக்கிளைக்காதுபோர்புரிந்துவெற்றிகொண்டக்ஷத்திரியர்வாழும்லோகம்விளங்கும். இதற்குமேற் கோடிசூரியப்பிரகாசம் போன்று தேவலோகத்தினும் நான்குபங்கு விசாலமுள்ளதாகத் துருவலோகமிருக்கும். அதில் அநேககோடி சாத்தியர்கள் போகங்களை யநுபவித்து வசித்துவருவார்கள். சூரியலோகமுதல் துருவலோகம்வரையில் அநேகபேதங்களிருப்பினும் சுவர்க்கலோகமென்றே கூறப்படும்: இதன்மேல் மகர்லோகமென்னும் புண்ணியநாடு அநேகபுண்ணியர்களாலுஞ்சித்தர்களாலுஞ்சூழப்பட்டு ஒளியுடன்ஆநந்தத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும். அதன்மேல் ஜனோலோகம் ஒன்றுண்டு.அங்குத்தேஜோமயமான சரீரங்களுடன் அநேகமுநிவர் கூட்டங்களும்,சித்தகூட்டங்களும் தத்தம் புண்ணியங்களை யநுபவித்துவருவார்கள். இதற்குமேல் தபோலோகம் இருக்கும். இதில் விரத உபவாசங்களாற் றேகமிளைக்கச்செய்த புண்ணியவான்கள் புண்ணியபலனை யநுபவிப்பார்கள். இதற்குமேற் சத்தியலோகமிருக்கும். அங்குச் சநக சநந்தன சநத்குமார கார்த்திகேயாதி சத்தருஷிகளும், அந்தரபேதமுள்ள பிரமர்களும் வசிப்பார்கள். இச்சத்தியலோகத்தின் உட்பிரிவொன்றில் எல்லா லோகங்களையுஞ் சிருட்டிக்கும் பிரமதேவர் வசிப்பார். இதற்குமேல் விஷ்ணுலோகமாகிய வைகுண்டமிருக்கும். அதில் பலவிஷ்ணு பத்தர்களும், பூதர் கூட்டங்களும் திவ்யதேகத்துடன் நித்திய சூரிகளாய் வசிப்பார்கள். இவ்வைகுண்டத்தின் அவாந்தரபேதமான கோலோகமென்னுமோர் லோகம் ஓர்புறத்தில் இருக்கும். அதில் வைணவபத்தர்கள் வசித்துவருவார்கள். இதுவரையுங்கூறிவந்தது புண்ணியம் புரிந்தோர் அடையும்பதவிகளாகும். இதன்மேற் கோடியோசனை விஸ்தாரத்தோடு கூடிய புண்ணியதானமிருக்கும். அத்தத்தானம் யோகாப்பியாசத்தாலும் நைஷ்டிக பிரமசரிய விரதத்தாலும், தேவாநுக்கிரகத்தாலும் அடையக்கூடாததாகவிருக்கும். ஆனால்அதுசிவஞானத்தினாலேயே யடையக்கூடியது. அதன்சிறப்பை என்னாற்கூறியளவுபடுத்தமுடியாது.

மேற்கூறிய லோகங்களைச் சிருட்டிக்க வல்லமையுள்ள பிரமதேவர் நான்குவேதங்களாலும் பிரமஞானிகள் பலராலுஞ்சூழப்பட்டிருக்கையில், இந்திராதி தேவர்களும், பலமகருஷிகளும், இராஜருஷிகளும், அவரைக்காணும்படிவர, பிரமதேவர் அவ்வாறு வந்தவர்களை யாதரவுடன் க்ஷேமவிசாரணைசெய்து யாதுவரம் வேண்டுமென்று வினவினர். அதற்குப் பதிலாகத் தேவர்கள் சந்தோஷத்துடன் தங்களநுக்கிரகத்தால் ஒன்றுங் குறைவில்லை, அநேகலோக சுகத்தையடைய நீங்களனுப்பச் சென்று

அவற்றையநுபவிப்பதிலும் உங்களைத்தரிசித்திருப்பதேமேலானதென்று கூறி, எங்களுக்கிருக்கும் பெரிய சந்தேகத்தை விலக்கத்தங்களையன்றி வேறில்லாமல் தங்களையேகேட்டுத் தெளியவந்தோம். அதாவது: சர்வ வேதாந்தங்களின் இரகசியார்த்தமாயும் "தமஸஃபரஸ்தாத்" என்னும் சுருதிக்கு வெளியில் விளங்கும் ஒளியாயுமிருப்பதனை யறிந்துகொள்ள வேண்டுமென்றனர். அதற்கு அவர் அவ்வாறே விளக்கப்புகுந்தார். எல்லாச் செகத்திற்குங் காரணகர்த்தராயிருப்பவர் சிவபெருமானே ஆவர் - அவரினும் அன்னியமானது வேறொன்றில்லையென்பதே நீவிர்கேட்டதின் பொருளாகும். அவரே பலமூர்த்திகளாகப்பிரிந்து பஞ்சகிருத்திய நடாத்திவருவர். நீவிர்கேட்ட சந்தேகம் என்னால் அளவறுத்துக்கூறக்கூடாதது. அப்பரமசிவனே அளவுபடுத்தி விளக்கக்கூடும் என்று ஆநந்தமேலீட்டால் தேவர்களுக்குபதேசஞ்செய்தார். அவ்வகைய இரகசியப்பொருளை நானும் அவரால் ஒருவாறு கேட்டிருக்கின்றேனாகலின், அதனை உங்களுக்குக் கூறுகின்றேனென்று ஸநத்குமார முநிவர் கூறலாயினர்.

மேலுலகவர்ணனையுரைத்தது

முற்றிற்று.

ஆறுவது

உருத்திரமூர்த்தியின் பிரபாவமுரைத்த அத்தியாயம்.

முநிவர்களே! நைமிசாரணியத்தை யடைந்த ஸநத்குமார முநிவரைநோக்கி வியாஸபகவான் அறுகுணச்செல்வரே, அடியேனுக்குள்ள சந்தேகங்களை வேறேயாரும் விலக்குவாரில்லாமையாலும், தாங்களே சிவ ஞானத்தை யுபதேசிக்கவல்ல குருவாகவிருப்பதாலும் உருத்திரமான்மியத்தைக் கூறியருளவேண்டுமென்ன அவ்வாறே அவர்கூறினர். அதனை நான் என் குருமுகமாகக்கேட்டவாறுஉங்களுக்குக்கூறுகின்றேன் என்று ஸூதமுநிவர் சொல்லுகின்றார். முற்காலத்தில் இப்பிரபஞ்சமுழுவதுஞ் சலஞ்சூழ்ந்திருந்தது. அக்காலத்தில் அக்கினி வாயு சூரியன் சந்திரன் நட்சத்திரம் பூமி திக்குகள் முகூர்த்தம் கரணம் தேவாசுர கந்தருவர் பிசாச ராக்தராகியசிருஷ்டியேகிடையாது. எல்லாவிஷயமும் உருத்திரமூர்த்தியின் தேஜசில் வியாபரிக்கப்பட்டிருந்தது. அதனை இவ்வாறு தானிருந்ததென்று என்னாற் கூறிமுடியாது. அவ்வகைய தேஜசைக்கண்டு அஞ்ஞானத்தினாற் கைகாலசைக்கச்சக்தியற்றவனாய்ப் பிரபஞ்சம்ஒடுங்கியதென்று சந்தேகங்கொண்டு அதனையறிய அவாவுற் றலைந்துகொண்டிருந்தேன். அவ்வாறிருக்கையில், கோரைப்பற்களுடனும், பார்க்கப்பயமுள்ளதாயும், உற்றுநோக்குங்கால் மங்களகரமுள்ளதாயும் உள்ள ஓர்முகத்தைக்கண்டேன். அதனருகிற் செல்லவேண்டுமென்று ஜலத்திற் போகை

யில், துந்துபி சத்தத்தைப்போலநகைத்து அம்முகமாகிய ருத்திரமூர்த்தி ஒருவார்த்தை கூறினர். அதாவது. "ஸநத்குமாரரே! நீர் என் இவ்வாறு சுற்றியுழல்கின்றீர்? நானொருவனே அத்துவிதமான வஸ்து, யுகந்தோறும் நானேதருமங்களை நிலைநிறுத்துபவன், இதைச் சிருட்டிக்கின்றவனும், பின் அழிக்கின்றவனும், இரக்ஷிப்பவனும் நானேயாவன்: எல்லாம் என்னிலடங்கும்: என்மாயையின்னதென்றறிந்தவர்களே என்னைப் பஞ்சகிருத்திய சொரூபியென்றறிவார்களென்று சொல்லி மறைந்துபோயினர். ஆகையால் அவரது பெருமை யிப்படிப்பட்டதென்று எப்படி வரையறுக்க முடியும்? முதலிற் பிரபஞ்சகாரணத்தைக் கூறுகின்றேன். அவ்வுருத்திரமூர்த்தியினின்றே பிரமதேவர்தோன்றி, அவர்முதலில் அன்னத்தைச் சிருஷ்டிப்பர். அவ்வன்னத்தினாலே பிராணன்களைப் பிரதிஷ்டைசெய்து பூதங்களை விருத்தி செய்வர். அவ்வன்னம் யஜ்ஞத்தினாலுண்டாகும். அவ் யஜ்ஞங் கருமத்தினாலுண்டாகும். அக்கருமத்திற் காதாரமாகிய யக்ஞத்தினாலேயே பர்ஜன்யன்தோன்றிவருஷித்து அன்னத்தை விருத்திசெய்வான். அந்த யஜ்ஞத்திற்கு, இருக்கு யஜசு, சாமம் ஆகிய வேதங்களும் அநேககற்பங்களும் உபநிடதங்களும், ஆரண்ணிய பிராமணங்களும், அதர்வணசுருதிகளும் இன்றியமையாதனவாகும். வேதங்கள் ஏகாக்ஷரமாகிய பிரணவத்தினிடந் தோன்றும். அப்பிரணவமே பிரமசொரூபம். அதுவே ஆறங்கங்களோடுகூடியவேதமெனவுங்கூறப்படும். சாங்கியயோகத்தாலறியத்தக்கது அப்பிரணவ சொரூபமே. வேதத்திற்குத் தாயான காயத்திரிக்கும் அப்பிரணவமே காரணமாக விருக்கின்றது. உருத்திரன் சத்தி பிரமன் விஷ்ணு ஆகியவர்களாலும் பூஜிக்கத்தக்கது அதுவேயாகும். ஆகையாற் சிருஷ்டிக்குக்காரணம் யஜ்ஞமேயாகுமென்று உருத்திரமூர்த்தியே கூறியுள்ளார். அவரது உபதேசத்தினாலேயே பிரமதேவர் இந்த ஜகத்தைச் சிருஷ்டிக்க யத்தனித்தார். அவ்வகையைக் கூறுகின்றேன்.

பரமேசபேதமாகிய பஞ்சரூபங்களில், மேல்நோக்கிய உரோமங்களோடும், பயங்கரமாயும் அக்கினிசொரூபமாயுமுள்ள ஓர்முகமும், சூரியனைப்பிரகாசிக்கும் இரண்டாமுகமும், சந்திரனைப்பிரகாசிக்கும் மூன்றாமுகமும், குபேரசம்பந்தமுள்ள நான்காமுகமும், பரமபதசொரூபத்தை விளக்கும் ஐந்தாவது முகமுமாகிய அவற்றி னமிசங்களைக் கொண்டே ஐந்துபேதங்களாகப் பிரமதேவர் சிருஷ்டிப்பர். இவ்வைந்துமூர்த்தங்களே தியானிக்கத்தக்கவை. இவற்றுள் முதல்மூர்த்தம் இலக்குமியோடுகூடி விளையாடிப் பரிபாலித்தும், இரண்டாமூர்த்தந் தவஞ்செய்தும், மூன்றாமூர்த்தம் எவற்றையுஞ் சம்ஹரித்தும், நான்காவதுமூர்த்தம் சிருஷ்டித்தொழிலியற்றியும், ஐந்தாவதுமூர்த்தம் ஞானத்தைக்கொடுத்தும் விளங்கும். இதனாற் சர்வபூதங்களுக்கும் இரக்ஷகர் ஈசானனென்றேற்படும். உற்பத்தி, பிரளயம், ஆகதி, கதி, வித்தியை, அவித்தியை யாகியஆறையு மறிந்த

தாற்பகவானும், மகான்களாற் றியானிக்கத்தக்கவராயும், பெரிதினும் பெரிதாயிருப்பதால் மகாதேவராயும், பிரமாதி ஸ்தம்பபரியந்தமுள்ள சராசரத்தைப் பாலனம்பண்ணிச் சங்கரிப்பதாற் பசுபதியாயும், ஜகத்திற் கெல்லாம் தானே மாதுருசொரூபியாயும் பிதுர்சொரூபியாயும் இஷ்டரா யும் தன்னாற்றோன்றியவராயு மிருப்பதாற் சுவயம்புவாயும், பிரமன்சிரத்தி லொன்றை யறுத்துக் கபாலமேந்தியதாற் கபாலியாயும், பிரளயகாலத் தில் மூவுலகங்களையுஞ் சங்கரிப்பதாற் சம்வர்த்தராயும், மீண்டுமவற் றைச் சிருஷ்டிப்பதால் தாதாவாயும், எல்லாருக்குஞ் சுகமுண்டுபண்ணுவ தாற் சங்கரராயும், எல்லாப்பூதங்களிலு மிவரினுமதிகமான வஸ்துவைக் கண்டிராததனால் விசுவேசுவரராயும், எக்காலத்திலுந் தியானிப்பவர்க ளுக்கு அழியாத ஆநந்த ஐசுவரியத்தைக்கொடுப்பதால் மகேசுவரராயும் அவரினின்றேதோன்றுஞ் சராசரத்திலுள்ள பிராணிகள் அவரையறிய வேண்டிப்பலகாலம் யோகஞ்செய்து,மனவாக்குக்கெட்டாத அவரையறிய விரும்பலிற் பிரமமாயும், மேலானதற்கும் மேலானதாயும், பரத்திற் குப்பரமாயுமிருப்பதாற் பரப்பிரமமாயும் விளங்குவர். அதனைக்காண்பிப் பதற்கும் சொல்லுவதற்கும் யாராலுமியலாது.அவரே நீலலோகிதராயும் ஏகாக்ஷரசொரூபியாயும் பிராணமயமாயும் அன்னமயமாயும் விளங்குவர். அவர் தரிசனத்திலு மின்பங் கொடுக்கக்கூடியது வேறில்லை. எல்லாத் தேவர்களுக்கு மவரே தேவராவர். அவரது மான்மியத்தை யறிந்து பத்தி யுடன் தியானிப்பவர்கள் உருத்திர மூர்த்தியென்று எண்ணப்படுவார்கள். பிரபஞ்சசொரூபியான உருத்திரமூர்த்தியின் சரிதத்தைப் பத்தியுடன் கேட்டுப்படிப்பவர்கள் அவர்கிருபையால் எல்லாச்சம்பத்தையு மடைந்து சிவஞானமு மோங்கப்பெறுவார்கள்.

ஏழாவது

மேற்படி அத்தியாயம்.

முநிவர்களே! எல்லாப்பேதங்களுடைய சராசரங்களும் விரூ பாக்ஷனிடமிருந்தே தோன்றுகின்றன. அவர் இலிங்கரூபியாய் விளங்கு வர். அவரினின்றே விஷ்ணு வுதிப்பர். அவ்விலிங்கத்தி னிடமிருந்தே எல் லாத்தேவவர்க்கத்தினரு மவதரிப்பர். அவரது ரகசியத்தை மேலுங்கூறு கின்றேன். அவரது நிமைகொட்டு நேரத்திக்குள் பிரமவிஷ்ணு முதலியோ ருக்கு அநேக கற்பங்களாகின்றன. அவரது அளவிறந்த பெருமையானது ஆதிசேடன்முதலிய அறிவினர் அநேககாலமாக வரைந்தாலு மளவிடப் படாது. அவரது திருநாமங்களை இடைவிடாது உச்சரிப்போரடையும்பலனை விரித்துக்கூறுகின்றேன். திரிகரணசுத்தியுட னவரைச்சரணடைந்துதோத் திரிப்போர் உருத்திரலோகத்திலென்றும் வசிப்பார்கள். பஞ்சமாபாதகங் களிழைத்தோர்களாயினும் அவரதுநாமங்களை யுச்சரித்தோர் அப்பாதகங்

களினின்று நீங்கி இன்பமடைவார்கள். நூறு அசுவமேதமியற்றினோரும் உருத்த ஜபஞ்செய்தோரடையும் பலனையடையார். பயமடைந்தோர் உருத்திரமூர்த்தியையே யுபாசித்து அதனைப் போக்கடித்துக்கொள்ள வேண்டும். ஏனையோராலொருபோது மகலாது. அவரை யுபாசித்து விஷ்ணு பதவிமுதலெப்பதவியுந் திரிலோகாதிபத்தியமு மடையலாம். பிற பதவியை மற்றத்தேவரை யுபாசித்துஅடையினும் அவை நீடித்துநிற்பனவல்ல. கற்பபேதங்களிலழியும். எம்பெருமானை யுபாசித்தடையும் பதவியோவப்படியல்ல. எக்காலத்திலும் அழியாது. ஆதிதேவராயும், மகாதேவராயுமுள்ள இவரை யடைந்தோர் எக்காலத்திலு மஞ்ஞானமணுகப் பெறுர். அவரது நாமத்தியானத்தினுற் பிராமணத்துவமுண்டாகும். வேத சாஸ்திரமுறைப்படி நடவாது வருணுச்சிரம தருமமீறினவனுயினும் "சிவ" என்னும் நாமத்தையுள்ளன்புட னுச்சரித்தமாத்திரத்தி லப்பாதகங்களினின்று நீங்கி நற்கதியடைகிருன். எழுவகையோநியிற் செனித்து,சமுசாரமாகிய காட்டிலுழுன்றுகாமக்குரோதாதிகளானபுலிகரடிகளாற்றுரத்தப்பட்ட ஆன்மாக்கள் சிவபெருமானுகிய சிங்கத்தைச் சரணடைந்தாலன்றி இரட்சிக்கப்படமாட்டார்கள். சிவபெருமானை மனதினுல் ஒருமுறையாவது தியானித்தவர்கள்பாவமாகிய சட்டையைப்போக்கித் தோலுரித்த சருப்பத்தைப்போற் பிரகாசிப்பார்கள். இருகாலங்களி லக்கினிஹோத்திரத்தைத் தவருதியற்றினும், பௌண்டரீக முதலிய யாகங்களை விதிப்படி குறைவின்றித் தக்ஷிணைகொடுத்து முடித்தாலும், உருத்திர பத்தர்களடையும் பலனிற் பதினறில் ஓர்கலை யளவேனு மடையார்கள். அநேக கருமயோகங்களாலுந் தியானயோகங்களாலும் பத்தியோகங்களாலும் எந்தப்பதவியை நாடி யுபாசிக்கின்றுர்களோ அதனையடையக் கருணைபாலிக்கின்றுர். சாங்கியயோகத்தினு லறியப்பட்டவரும், அப்பிரமேயமான பராக்கிரமமுடையவரும்,நாசரஹிதரும்,நிஷ்களரும்,அஞ்ஞானமுடையோரால் அணுகப்பெருதவருமாகவுள்ள விரூபாக்ஷியை யடைந்து இஷ்டசித்தி பெருதார் யாவர் ? தீர்த்தங்களுட் புண்ணியதீர்த்த சொரூபியாயும் மங்களங்களுள் மங்களமாயும், பரிசுத்த வஸ்துக்களுள் பரிசுத்தருமாகவுள்ளவர் பரமேசனே. அவர் பாலில் மறைந்துகிடக்கும் நெய்போலவும், விறகில் நெருப்புப்போலவும், பூமியில் ஜலம்போலவும், தீயில் வெப்பம்போலவும், ஜலத்திற் குளிர்ச்சிபோலவும் வியாபித் திருப்பர். அவரைத்தேவ கந்தருவ யக்ஷ சித்த வித்தியாதரராதியருமறியச் சத்தியிலரெனில் மாநுடரோ அறியவல்லவர் ?

இவ்வரிய பெருமைகள் வாய்ந்த உருத்திரமூர்த்தியை யநுதினமருச்சித்து வருபவர்கள் யமனைச்செயித்து எல்லா லோகங்களுக்குந் தடையின்றிச்செல்லும் விமானங்களிலேறித் தேவர்கள் வழிபட உருத்திர லோகத்தில் வாழ்ந்துவருவார்கள்.

எட்டாவது
ஸநத்குமாரர் வரம்பெற்ற அத்தியாயம்.

இவ்வாறு கூறிய பிரமதேவரை நோக்கி, சிவபிரானை எவ்வாறு பூசிக்கவேண்டியது? அவர் எவ்வித பூசனையிற் பிரியமடைவர்? அவரைப் பூசித்து யாவர் யாது பலனையடைந்திருக்கின்றனர்? என்றுவினவிய ருஷிகளை நோக்கிப் பிரமதேவர் கூறலாயினர். ருஷிகளே! முன்னாளில் இருஷிகேசனாகிய விஷ்ணுமூர்த்தி அறுபதினாயிரத்து அறுநூறு ஆண்டுகளாகப் பூசித்து அவரை நேரிற் றரிசித்துத் தாம் அடைய விரும்பிய சக்கிரமும் எல்லாத்தேவர்களுட்டலைமையும், போரில் ஒருவராலும் வெல்லமுடியாத வல்லமையும், அவருக்குச்சமானமானதேஜசும், எல்லா லோகங்களையுங் காக்குஞ் சத்தியுமடைந்திருக்கின்றார். நான் பலகாலமாக விரூபாக்ஷசொரூபியும், புஷ்கராக்ஷசொரூபியும், மஹேசுவரரும், சூலபாணியும் ஆனமஹாதேவனை யாகாதிகிருத்தியங்களாலும் பத்திபூர்வகமான பூசையினாலும் வேதவாக்கிய அருச்சனைகளாலும் தியானத்தினாலும் பூசித்து, அவரைக்கண்டு நான் நினைத்திருந்தபடி ஒரேகாலத்தில் நான்குவேதங்களையுச்சரிக்க நான்குமுகங்களும், தேவமானுடர் என்னைப்பூசித்தாலப் பூசனைக்கிரங்கி அவர்கள் கோரியதைக்கொடுக்கச் சத்தியும், சராசரங்களைச்சிருஷ்டிக்கும் வல்லமையும், பூத பௌஷிய வர்த்தமான காலங்களையறியு ஞானமும், பிரமபட்டமும், வேதங்களுக் கங்கமான ஆறுசாஸ்திரங்களும், சாங்கியாதியோகங்களும், அறுபத்துநான்கு கலைகளும், தொண்ணூற்றாறு தத்துவங்களும், நிருமலமனதும், சத்தியலோகப் பட்டாபிஷேகமுங் கிடைக்கப்பெற்றுள்ளேன். இப்பரமேசனைக் குறித்தே இந்திரன் பாசுபதமென்னும் விரதத்தை யநுஷ்டிக்கச் சங்கற்பித்து, ஜலம் வாயுக்களைப்பட்சித்துச் சுகங்களை நீத்து ஆடையாபரணங்களை நீக்கி மான்றோல் புலித்தோலை யுடுத்து அநேககாலமாகத் தவத்திலிருந்து பிநாகபாணியான பரமேசனைத்தரிசித்து, திரிலோகாதிபத்தியமும், தேவர்களுக்கு எஜமானத்துவமும், வச்சிராயுதமும், பெருவலியும், பிராமண க்ஷத்திரியர்களாலியற்றும் யாகத்திற் கதிதேவதையாயிருந்து அவ்வவ்யாகங்களுக் குண்டாய பலன்களைக் கொடுக்கச் சத்தியும் பெற்று, சுவர்க்கலோகத்தையரசு செய்து போகத்தை யநுபவிக்கின்றான். என்மனதினின்றுந் தோன்றிய *ஸநத்குமாரமுநிவன் பரமேசனைத்தியானித்தே அடைந்த மேன்மைகளைக் கூறுகின்றேன். பூர்வம் நான்கைலாயத்தைத் தரிசிக்கப்போகையில், பகற்காலத்திற் பிரகாசிக்குஞ் சூரியனைப்போன்று விளங்கும் ஏழாயிரம் விமானங்கள் பத்துத்திக்குஞ் செவிடுபடும்படியாகச் சத்தத்தை யுண்டாக்கும் மணிகள் கட்டப்பெற்றனவாய், மின்னற்கொடிபோன்று வெண்பட்டணிந்த தேகமும், வண்டுகள் பாடுங்கூந்தலும், வச்சிரவைடூரிய கங்கணங்களும், கலீல் கலீலென்னுந்தண்டைகளும், தாமரைமலரைப் பழிக்கும்

* ஈண்டுக் கூறப்படும் ஸநத்குமாரர் கற்பபேதத்திருந்தவர்.

நேத்திரங்களும்,கொவ்வைக்கனியையொத்த அதரமும்,மல்லிகையரும்பை யொத்த தந்தபந்தியும், குயிலோசைபோன்ற கீதமும், எள்ளின்பூவைப் போன்ற நாசியும், மன்மதன் வில்லைப்போன்ற புருவமும், பிறைபோன்ற முகமண்டலமும், அதனினின்றுந் தோன்றும் புன்னகையே அச்சந்திர னிடத்துதிக்குஞ் சந்திரிகையைப்போன்றும், யானைமத்தகம்போன்ற ஸ்தனமும் பொருந்தி அநேககன்னியர்கள் மின்னல்போ லொளிவீசுந் தோள்வளைகளணிந்த கைகளில் வெண்சாமரைகளெடுத்து வீசிவரக்கண் டேன். அவ்விமானத்தில் அப்சரசுகளின் வாத்தியமும் சங்கீதகோஷமும் மிகுந்திருந்தன. இவ்வகைய விமானங்களினிடையே மிகவும் அழகுபொ ருந்திய சில விமானங்களில் திவ்யாலங்காரராய்ச் சூரிய தேஜஸோடு சில புருஷரிருக்கக்கண்டேன். அப்படிப்பட்ட விமானங்களின் மத்தியில் ஸநத் குமாரமுநிவர் தேஜோமயமான சரீரத்துடன் அநேக புண்ணிய புருஷர் கள் மத்தியில் உட்காருஞ் சமயத்திருந்தனர். அங்கே பல இராஜருஷிக ளுங்கூடியிருந்தனர். அவர்களுக்குந் தனித்தனி விமானங்க ளநேகமிருந் தன. பிருதிவியிலும், அந்தரிக்ஷங்களிலும், பாதலத்திலும் நக்ஷத்திரமார்க் கத்திலும், பருவதங்களிலும், யோகத்தானத்திலும், உள்ள கணக்கற்ற உருத்திரமூர்த்திகள் திவ்யதேஜசுடன் உருத்திராக்கமாலை தரித்து விபூதி யணிந்து திரிநேத்திரங்களுடன் ஒருவருக்கொருவர் கிஞ்சித்தும் வித்தி யாசமற்று மேருமலைபோன்ற தேகமுடையோராய்ச் சூழ்ந்திருக்க அவர் கள் மத்தியில் விளங்கும் உருத்திரமூர்த்தியை ஸநத்குமார முநிவர் நமஸ் கரித்துக்கொண்டிருந்தனர். அக்காலத்தில் ஸநத்குமார முநிவருக் கிருந்த தேஜசையும் பிரபாவத்தையும் என்னுற் சொல்லமுடியாது. என் புதல்வராகிய ஸநத்குமாரருக்கு இவ்வகைய பிரபாவமுண்டானது அந்த ருத்திரபூஜாபலனாலேயேயென்றுணர்வீராக.அந்தவுலகத்தில் ஸநத்குமார ருக்குச் சமானமான கீர்த்தியோடு அநேககணங்கள் வசிக்கக்கண்டேன். அவர்களுடைய நாமஸ்மரணையினாலேயே சகல பாவங்களுந் தொலையும். அந்த ருத்திரகணங்களுடைய பெயர்களைப் பர்வகாலத்திலும் அமாவாசை யிலும் பிதுர்தினத்திலும் ஸ்மரித்தபக்ஷத்தில், பிதுர்கள் பெருந்திருப்தி யடைவார்கள். ஸ்திரீகள் ஸ்மரித்தாற் புத்திரபாக்கியம் பெறுவார்கள். க்ஷத்திரியர்கள் ஸ்மரித்தால் யுத்தத்திற் செயமடைவார்கள். நாடோறும் திரிகாலத்திலும் ஸ்மரித்தவர்கள் சதருத்திரபாராயணஞ் செய்தபலனை யடைவார்கள். மகாபாவங்களைச் செய்தோராயினும், உருத்திரமகாத்மியத் தைக்கேட்டால் அவர்கள் தமது பாவங்களை யெல்லாமொழித்து உருத்திர லோகத்தையடைவார்கள்.அநேகம்பெரியோர்உருத்திரோபாசனையிற்சித் தர்களாகி உலகமுழுவதையும் ஜயித்துச் சமானமற்றவர்களாய் எங்குஞ் சஞ்சரித்தார்கள். அதிகமாகச்சொல்வதிற் பயனில்லை. முநிவர்களே! யா னும் என்பிதாவாகிய நாராயணனும், அந்தப்பகவானுடைய ஊர்த்துவ நேத்திரமாகிய திருநெற்றிக்கண்ணைத் தரிசித்துப் பிரமத்துவத்தையும் விஷ்ணுத்துவத்தையு மடைந்தோம். அவருடைய பிரபாவத்தை யென்

னுற்சொல்லிமுடியாது. அவ்வகைய பிரபாவங்களையுடைய உருத்திரமூர்த்தியின் சந்நிதானத்தில் நிற்கும் ஸநத்குமாரமுநிவரிடம் யான்சென்றபொழுது, ஸநத்குமாரர் என்னைக்கண்டு விரைந்து நமஸ்கரித்துச் சொல்லுகின்றார்.

வாரீர் பிதாமகரே! எல்லாவுலகங்களிலுந் தடையின்றிச் செல்லும் விமானத்தையுந் திவ்விய தேகத்தையும் பெற்றிருக்கின்ற யான் இவ்வுருத்திரலோகத்திலுள்ள சிசுவையும் ஜயிக்கச்சக்தியற்றவனாயிருக்கிறேனாகையால், இச்சரீரத்தையான் விட்டுவிடவேண்டுமென்று இச்சிக்கிறேனென, அதைக்கேட்ட யான் தியானயோகத்தினால் ஒருமுகூர்த்தகாலம் தியானித்து, ஸநத்குமாரருக்கு இவ்விதமான கஷ்டம் நேர்ந்தகாரணம் யாதென யோசிக்க, பராத்பரமான ஜகதீசனுடைய சுரூபமே அங்குள்ளவை யாவுமென்றுதெரிந்து கொண்டு, சர்வவியாபியான மகாதேவருடைய மகிமையினாலேயே ஸநத்குமாரன் திரஸ்கரிக்கப் பட்டிருக்க வேண்டுமென்று யோசித்து, விமானத்தினின்றிறங்கி அஞ்சலியஸ்தனாய்ச் சென்று தேவதேவனையும் சர்வதோமுகனையும் ஆதியந்த சூனியனையும் நாசரகிதனையும் காரணங்கட்கெல்லாம் மூலகாரணனையும் விளங்குஞ் சிவபெருமானைத்தரிசித்து நமஸ்கரித்து, ஸநத்குமாரனைப்பார்த்து, மகனே! எல்லாவுலகங்கட்கும் பிரபுவான மகாதேவனைக் காட்டிலுஞ்சிறந்தவர்கள் ஒருவருமிலர். யோகத்தினாலறியத்தக்கவர் அவரே. தேவர்களில் உத்தம தேவர் அவரே. அந்த ஜகதீசனுடைய மாயையை யென்னாலும் என்பிதாவாலும் அறியமுடியாது. இது விஷயத்தில் துக்கித்துச் சரீரத்தையிழக்க வேண்டாம். பூர்வம் லோகநாயகனாகிய மகேசுவரனைக்குறித்து நந்திதேவர் அநேகநாள்தவஞ்செய்து அகண்டசாம்பிராச்சியபதவியை யடையவிரும்பி அது கிட்டாமையாற் சரீரத்தைவிடத் தீர்மானித்தபொழுது சிவபெருமான் காட்சியளித்து, மகனே! வீணாகத்துக்கியாதே; சரீரத்தைவிடாதே; யாவராயினும் என்மயமாவது கஷ்டம். என்னுடைய தத்துவங்களையெல்லாம் உனக்குபதேசிக்கின்றேன். எனது ஆத்மசொரூபத்தை யொருவரறிவது துர்லபம். ஆகையால் நீ காணாபத்தியத்தை யடைந்து என்னைச் சேவைசெய்து கொண்டு சிலகாலங்கழித்து என் சொரூபத்தை யுணரக்கடவாயென்று அநுக்கிரகித்தனர். நந்திதேவருக்குச் சமானனான நந்திமுகனென்னுங் கணன் ஓர்கால் சிவபிரானைப் பலகாலஞ் செய்த தவத்தால் தரிசித்து, தேவரீருடைய ஆத்துமசொரூபத்தை யுபதேசிக்க வேண்டுமெனவினவ, சாம்பவமூர்த்தி - நீ ஈசானனென்னும் உருத்திரனிடம் யோகசாஸ்திரத்திற் பழகி அநேககாலஞ்சென்றபின் அறியக்கடவாயென்றருளினர். ஈசானருத்திரனை யுபாசித்தே என்தந்தையாகிய விஷ்ணுவுங்காணாபத்தியத்தை யடைந்தனர். நீ துக்கப்படாது இன்னுஞ் சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தால், சிவபெருமான் உனக்குத் தரிசனங்கொடுப்பர் என்று கூறினர். அதன்பின்னர் ஸநத்குமார முநிவர் இருக்கு யசுர் சாம

அதர்வண வேதங்களாலும் உபநிஷத்துகளாலும் சிவபெருமானை யநேக விதமாகத் தோத்திரஞ் செய்யலாயினர்: சராசரங்களுக்கெல்லாங் கர்த்தாவாகிய பரமசிவனே! சர்வபூதங்களின் அந்தராத்மஸ்வரூபியே! தேவதேவரே! சர்வபூதங்களையுஞ் சங்கரிப்பவரே! உலகங்களை யிரக்ஷிப்பவரே! சாங்கியயோகத்தினால் அறியத்தக்கவரே! கர்மஸ்வரூபியே! கர்மபலன்களைக்கடாக்ஷிப்பவரே! கோடிசூரியோதய சமானமான நேத்திரமுடையவரே! தேவரீரே சிலகாலம் நான்குமுகங்களோடு பிரகாசிக்கின்றீர்! நான்கு கைகளோடு பிரகாசிக்கின்றீர்! கிருதயுகாதி நான்கு ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்றீர்! நான்கு வேதங்களின் ஸ்வரூபியே! சதக்கிருது நீரே! வாயுஸ்வரூபியே! காலாக்கினி ருத்திரஸ்வரூபியே! தர்மத்தை நிலைநிறுத்தி அதர்மத்தை யொழிப்பவரே! விஷ்ணுவுக்குச் சக்கிராயுதமளித்தவரே! காலகூடபக்ஷணஞ்செய்தவரே! தேவாசுரர்களை யிரக்ஷிப்பவரே! உற்பத்தி நாசங்களற்றவரே! சரணமடைந்தவரை யிரக்ஷிப்பவரே! தவசிகளுக்குப் பரதத்துவமானவரே! காலங்களைக் கணிக்கச்சூரியஸ்வரூபமாயுள்ளவரே! பிரமதேவரை யுற்பத்திசெய்பவரே! இருக்குமுதலிய வேதங்களின் அர்த்தஸ்வரூபியே! ஆயிரஞ்சிரங்களையுடையவரே! ஆயிரம்நேத்திரங்களையுடையவரே! ஆயிரம் பாதங்களையுடையவரே! காலஸ்வரூபியே! தேவரீருடைய சரீரத்தினின்றே பதினான்குலகங்களுந்தோன்றி நாசமடைகின்றன. இவ்வாறு யாவுந் தேவரீரிடந்தோன்றி யழிதலை ஒருவருமறிந்திலர். யோகேசுவரரே! தேவரீருக்கு நமஸ்காரம் நமஸ்காரமென்று பலமுறை பணிந்த ஸநத்குமார முனிவரைச் சந்தோஷித்த சிவபெருமான் பிரசன்னமான முகமண்டலமும், திரிநேத்திரங்களும், தண்ட கமண்டல மேந்திய கரமும், சந்திரசூடமும், புலித்தோலுடையும், சிங்கத்தோற்போர்வையும், சர்ப்ப உபவீதமும், உருத்திராக்ஷாபரணங்களும், கங்காதரமும், கட்வாங்கம் - அசனி - சூலம் - மழு - சக்தி - வில் - முத்கரம் - சங்கசக்கிரம் - அலம் - கபாலமிவற்றைத் தாங்கியும், விருஷபாரூடமும், அநேக சிவகணங்களாற் சூழப்பட்டும், நந்திதேவர் சூலாயுதமேந்தி முன்னே செல்லவும், கோடிசூரியோதயத்திற்குச் சமானமுமாகக் காட்சிகொடுத்து, ஸநத்குமாரமுனிவரை நோக்கி ஒருவார்த்தை சொல்லுகின்றார்.

திடபக்தியுடைய ஸநத்குமார முனிவனே! உன்னுடைய தியானஸ்தோத்திரங்கட்குச் சந்தோஷமடைந்தேன். நிருமல சித்தத்தோடு கூடிய உனக்கு மங்கலமுண்டாகக்கடவதென்று அநுக்கிரகித்து, உனக்கு இஷ்டார்த்தமாகவுள்ளதின்னதெனக் கேட்கலாம். உனக்கு மகத்தான கீர்த்தியை யுண்டுசெய்யவேண்டுமென்று விரும்பியே பிரசன்னமாகத் தரிசனங்கொடுத்தேன் எனக்கூறிய சிவபெருமானை நோக்கி, ஸநத்குமார முனிவர் கூறலாயினர்: சர்வலோகேசுவரனாகிய மகேசுவரனே! என்னுடைய தந்தையாகிய பிரமதேவரால் ஸநாதனமாயும் பராத்பரமாயுமுள்ள உம்மைத்தரிசிக்கப்பெற்றதே சிரேஷ்டமானது. அதைக்காட்டிலுஞ் சிறந்

தது ஒன்றுமில்லை. ஆயினும் யான்வரம்பெறுதற்குப் பாத்திரனாயிருந்தால்' எந்தக்காலத்திலும் தங்களுடைய பாதாரவிந்தத்தினின்று என்மனம் நீங்காது அன்பு கொண்டிருக்கும்படி வரமருளவேண்டும். நான் இவ்வித மாகிய உம்முடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல், அநேககாலம் தியானஞ்செய்துகொண்டிருக்கையில் என்மனமானது சலித்துக் காமக் குரோதாதிகளிற் பிரவேசித்துச் சுகதுக்கங்களை யனுபவித்திருக்கக்கூடு மாதலின், அவற்றையெல்லாங் குற்றங்களாகப் பாராட்டாது பொறுத் தருளவேண்டும். நான் பிராணாயாமஞ்செய்து தங்களுடைய பிரமானந்த ஸ்வரூபத்தை யநுசந்தானஞ் செய்துகொண்டிருக்கையிலேயே ஜகத்வா சனையால் பிரமானந்தத்திற்குப் பின்னமுண்டாக்காவண்ணம் அநுக்கிரகஞ் செய்யவேண்டும். எவர்களுக்கு மனப்பரிசுத்தமில்லையோ அவர்களுடைய ஹவ்வியகவ்வியங்களைத் தேவர்களும் பிதுரர்களும் புசிக்கமாட்டார்கள். உம்மிடத்தினின்றே தோன்றிச் சகல லோகங்களையுஞ் சிருஷ்டிசெய்யும் பிரமதேவரது பதவியைக் கொடுப்பினும் எனக்குவேண்டாம். நீரே யக்ஷ கின்னர கிம்புருஷ கந்தர்வ சித்த வித்தியாதர வுரக மாநுட சராசரமாகத் தோன்றுகின்றீர்; நீரே பிரபு; ஆகையால், உம்மைக்காட்டிலும் வேறு தெய்வத்தைச் சரணமடையமாட்டேன். வேறொருவரைப் பக்திசெய்ய மாட்டேன். எக்காலத்திலும் அழிவற்று விளங்குகின்ற சுயஞ்சோதியே! என்னை யநுக்கிரகஞ் செய்யவேண்டும் என விண்ணப்பிக்க, அதனைக் கேட்டு ஆனந்தித்த சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுகின்றார். யோகீச னான ஸநத்குமாரமுநிவனே! என்னைப் பக்திசெய்யத்தக்க சிவபக்தர்களில் நீயே சிறந்தவனாயும், முநிவர்களிலே சிலாக்கியனாயும், எப்போதுங் குமார ஸ்வரூபனாயும், ஸர்வலோக சஞ்சாரியாயும், எக்காலத்தும் அழி யாத சரீரமும், சிவதத்துவவுணர்ச்சியும் பெற்றவனாயும் விளங்குக. என் னுடைய நாமங்களும் என்னுடைய லோகவிபவங்களும் என்னுடைய ரகசி யங்களும் உனக்கு நன்கு விளங்குமாக. எல்லாவிடங்களிலும் நீ நினைத்தபடி செல்லத்தக்கதும், நிர்மலமான நவமணிகளிழைத்ததும், முத்துச்சரங்கள் தொங்கவிட்டதும், ஸ்படிகத்திண்ணையுடையதும், சந்திரமண்டலம்போல ஆகாயத்திற் செல்லத்தக்கதும், வைடூரிய சாளரமுடையதும், திவ்விய தூபங்களமைந்ததும், சுகமான காற்றும் உயர்ந்த துவசங்களுங்கொண்ட திவ்வியவிமானத்திலேறிச்சஞ்சரித்து அநேககாலஞ் சென்றபிறகு, பராசர முநிவருடையதேஜஸால் விஷ்ணு அம்சமாகத் தோன்றும் வியாஸனுக்குச் சிவதத்துவங்களை யுபதேசிக்கக்கடவாய். அவன் உன்னால் ஞானமடைந்து வேதங்களைப் பாகுபடுத்திப் புராணங்களைச் சொல்லிப் பிரசித்தனாவான். அவனே உனக்குச்சத்பாத்திரசிஷ்யனாதலின் நீ யவனுக்கு எல்லாவற்றை யும் உபதேசஞ் செய்கென்றருளி அந்தர்த்தானமாயினர்.

ஸநத்குமாரர்வரம்பெற்றது

முற்றிற்று.

ஒன்பதாவது
பிரமகீதையுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் இவ்வகையாகத் தேவதேவனாகிய பரமேசனால் அழியாத தேகத்தையடைந்து, பார்வதி தேவியாற் புத்திரனாக ஸ்வீகரிக்கப்பட்டுச் சர்வலோக சஞ்சாரியாய், தாமே தாதாவாய், தாமே ஜகத்கர்த்தராய், அழிவற்று வாழ்ந்தார். மகருஷிகளே! பரமசிவனே யஜ்ஞபதியும், உமாபதியும், யஜ்ஞஹோதாவும், ஹோமஸ்வரூபியு மெனப் பெரியோர் சொல்லுவர். இந்திரியங்களால் அறியத்தக்க பொருள்களும் அவரே! வியக்தமாகவும், அவ்வியக்தமாகவுங் காணப்படுபவர் அவரே! சாங்கிய யோகத்தினுல் அறியத்தக்க வஸ்துவும் அவரே! யோகிகளெல்லாருந் தமது யோகத்தினற் பராத்பரவஸ்துவென்றுணர்ந்து தியானிக்கப் படுபவரும் அவரே! மோக்ஷங்கொடுக்கவல்லவரும் அவரே! அவரை நோக்கித் தியானுதிகளைச் செய்வோர் சர்வபாவங்களையுமொழித்து அவருடைய திருவடிகளையடைவர். தாமரையிலையானது ஜலத்திலிருந்தும் அந்த ஜலமொட்டப்பெறுததுபோல அவருடைய ஸ்வரூபத்தை யறிந்தவர்கள் ஜகத்திலிருந்தாலும், குடும்பகோஷங்களால் தொந்தரையடைய மாட்டார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர். இவ்வாறு சிவப்பிரபாவத்தை ஸநத்குமாரமுநிவர் மூலமாகக்கேட்ட ருஷிகள்யாவரும் புளகாங்கிதராய் ஆநந்த பாஷ்பத்துடன் அவருடைய பாதங்களிற் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துச் சொல்லுகின்றூர்கள்.

சிவஞானத்தில் வல்லவரான முநிசிரேஷ்டரே! தேவரீருடைய அநுக்கிரகத்தினுல் வேதாந்தங்களினுடைய ரகசியத்தையும் சிவத்தியான கிரமத்தையுந் தெரிந்துகொண்டோம். சிஷ்ய பூதர்களான எங்களால் தங்களுடைய நிஷ்டைக்கு இது காறுந்தடை நிகழ்ந்தது. இனித்தாங்கள் நிஷ்டையிலிருக்கலாமென்று கேட்டுக்கொள்ளுகிறேமென்று விண்ணப்பித்து, அம்முநிவர்கள் ஸநத்குமாரரிடம் விடைபெற்றுக்கொண்டு இச்சையற்றவர்களாய், அது முதற் சிவபஞ்சாக்ஷரங்களாலும், விபூதி ருத்திராக்ஷங்களாலும், ஓங்காரத்தினுலும், கானவித்தைகளாலும், சாமகானத்தினுலும், ஸவ்வியாபஸவ்வியப் பிரதக்ஷிணங்களாலும், வாமதேவாதி விரதங்களாலும், சதருத்திரியாதி ஸ்தோத்திரங்களாலும், சிவபூஜைசெய்துவந்தார்கள். இவ்விதமாகப் பூசித்த முநிவர்களுக்கெல்லாம் மனவாக்குக்காயங்களுக்கெட்டாத உருத்திரமூர்த்தியானவர் அநுக்கிரகஞ்செய்து அவர்களுடைய இஷ்டார்த்தத்தைக் கொடுத்திருக்கிறூர். ஆகையால் எவன் பூலோகத்திற்சிவபூசையை முறைப்படி செய்கிறுனே அவன் மனோரதம் பூர்த்தியாகின்றது. அவரே கோரிக்கைகளையெல்லாங்கொடுப்பவர். அவரே பக்தவச்சலர். அவரே ஸர்வதீர்த்தஸ்வரூபி. அவரே நாசமற்றவர். அவரே பிராமணுதி ஸர்வவர்ணங்களிலும் பக்திசெய்வோரைத் தாரதம்மியமின்றி யிரக்ஷிப்பவர். எந்தப் பக்தனுவது இந்தப் பூலோகத்தில் மூன்று நாட்கள்

சமுசாரசிந்தையினாற் கஷ்டமடைந்து அதற்காவது சிவபூஜை செய்தால் அதுவுஞ் சிறந்ததேயாம். பாவமிகுதியையுடையவனாயினும் சிவநாம ஸ்மரணை செய்தமாத்திரத்தில், தனது பாவங்களை யொழித்துச் சிவஞானி யாவான். சிவபெருமானை யாசிரயித்தவன் ஒருபொழுதுந்துர்க்கதியடை கிறதில்லை. இந்த அத்தியாயத்திற்குப் பிரமகீதையென்றும் பெயர். இது பூர்வத்திற் பிரமதேவராற் சில ருஷிகளுக்குச் சொல்லப்பட்டது. இதனைப் பக்தியோடு நாடோறும் படிக்கின்றவர்களுங் கேட்கின்றவர்களும், படிக் கச்செய்பவர்களுமாகிய அவர்கள் யாவரும் எல்லாப்பாவங்களினின்றும் நீங்கிப் புனிதராவார்கள். இந்தப் பிரமகீதையைப் பிராமணர்கள் சிவசந் நிதியில் நாடோறும் பாராயணஞ்செய்தால் இவ்வுலகத்திற் சித்தர்களா யிருந்து பின்னர் மோக்ஷத்தையடைவார்கள். இந்தப் பிரமகீதையை அர்த்தத்துடன் தெரிந்துகொண்டு பரமசிவனைப் பூசித்தவர்கள் ஜராமர ணங்களையும் சர்வபந்தங்களையுமொழித்துச் சிவபதத்தை யடைவார்கள்.

பிரமகீதையுரைத்தது

முற்றிற்று.

பத்தாவது

திரிமூர்த்தி நகரங்களுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமாரமுனிவரை நோக்கி ஸ்வாமீ! பிரம லோகம் விஷ்ணுலோகம் உருத்திரலோகங்களின் கிரமத்தையும் அவற்றின் சிறப்பையுங் கேட்க விரும்புகின்றேன் எனக்கூற, ஸநத்குமாரமுனிவர் சொல்லத்தொடங்கினர். எண்பத்துநான்காயிரயோசனை யகல நிகளங்களை யுடையதும், அநேக நதிகளையுடையதும், சுவர்ணமயமானதும், பூமிக்கோ ராதார ஸ்தம்பமானதும், இரத்தினமயமான கும்பங்களும் அமிர்தமயமான சுனைகளுமமைந்ததும், ஆறிருதுக்களிலும் பலபுஷ்பங்களைக் கொடுக்கவல் லதும், சக்கிரவாக சகோராதிபக்ஷிகள் சஞ்சரிக்கப்பெற்றதும், ஐராவத குலத்திலுண்டாகிய யானைகளும், புலிகளும், கரடிகளும், வானரங்களும், சிங்கங்களும் வாழப்பெற்றதும், அநேக கொடுமுடிகளுடையதும், ரத்தின மயமான மாளிகைகள் விளங்கப்பெற்றதும், குபேரன்முதலிய யக்ஷர்களும், சித்திரசேனன் முதலிய கந்தர்வர்களும், வித்தியாதரகணங்களும், தங்கள் ஸ்திரீகளுடன் விளையாடிக்கொண்டிருக்கப்பெற்றதும் ஹாஹாஹூஹூக்க ளாகிய காயகாளும், விசுவாவசுவும், தும்புருநாரதருங் கானஞ்செய்யப் பெற்றதுமாகவுள்ளது மேருபர்வதம். அவ்விடத்தில் மயில்கள் நடிக்கவும், சந்திரகிரணத்திற்குச் சமானமான காந்தியையுடைய ஜலமாகக்கங்காதேவி பிரவாகிக்கவும், அந்தத்தீரத்தில் அநேக தேவர்கள் தங்கள் ஸ்திரீகளுடன் கூடி அங்குள்ள பொற்றாமரை மலர்களைக்கொய்துகொண்டு அருகிலுள்ள வெண்மணற் குன்றுகளில் விளையாடவும், குளிர்ந்த நறுமணங்கமழும் மந்த மாருதம் வீசவும், எப்பொழுதும் ஆனந்தமயமாயிருக்கும். இன்னும்

சிறிது மேற்பாகத்தில் சூரியகிரணமும் சந்திரகிரணமும் நவக்கிரககதியும் சப்தருஷிகளும், மேகமும் இந்திராக்கினியுங் கிடையா. அந்தப்பாகம் தேவமாநுடர்களால் மனதாலுங் காணுதற்கருமையானது. அவ்விடத்தில் தேவாதி தேவனுடைய நகரம் விளங்கும். அது பதினெண்ணாயிரயோசனை விஸ்தீர்ணமும், சுவர்ணமயமான மதிலும், மேல்மாடியில் ஸ்படிகங்களிழைக்கப்பெற்றதும், வைடூரியமயமான வீடுகளும், மாளிகைகளின்பேரில் துவசங்கள் நாட்டப்பெற்றதுமாகவுள்ளது. அந்த நகரத்திற்கு ஆயிரம் வழிகளுண்டு. அவ்வழிகளில் அநேக ஆயிரம் மாளிகைகளுள. அவை சூரியனைப்போன்ற பிரகாசமும், இரத்தினமயமான பீடங்களும், மரகதத் திண்ணைகளும், வயிடூரியக்கட்டில்களும், முத்துத்திரைவிடுத்த சன்னல்களும், மாணிக்க ஊஞ்சல்களும், அமிர்த நிறைகும்பங்களும், அகருசந்தன தூபமும், நறுமணங்கமழ்ந்து வாடாத மலர்மாலைகளுமுடையன. நரைதிரைமூப்புக்க ளகன்ற துவாரபாலர்கள் அம்மாளிகைகளைக் காப்பார்கள். அம்மாளிகைகளின் காந்தியானது பிரளயகாலாக்கினியின் தேஜசுபோலச் சுவாலிக்கும். ஒருபாகத்தில் இரத்தினங்களின் காந்தியும், மற்றொரு பாகத்திற் சுவர்ணத்தின் ஒளியும், வேறொருபாகத்தில் வச்சிரத்தின் நிறமும், இன்னொருபாகத்தில் வயிடூரியவிளக்கமுமாக நவரத்தினவொளியால் நானாவகையாகப் பத்துத்திக்குகளிலும் பரவிச்சுவாலிக்கும். அவ்வகைய சிறப்பினையுடைய நகரத்தின் நடுவில் ஓர்சிறந்த மாளிகையுண்டு. அதுவே சிவஸ்தானமாம். அவ்விடத்தில் நவரத்தினங்களிழைத்த ஏழாயிரம் ஸ்தம்பங்களையுடைய ஒரு மண்டபமும், இரத்தின கசிதமான அநேக பிரகாரங்களையுடைய ஓர் கோபுரமும் உண்டு. அம்மண்டபத்தைச்சுற்றிலும் வைடூரியநிறம் பொருந்திய பசும்புல்லுள்ள பிரதேசங்களும், தங்கத்தகட்டினையொத்த தளங்களையுடைய வில்வமரங்களும், அம்மண்டபத்தில் இந்திர நீலங்களிழைத்த அறைகளும், அவற்றிற்கு வச்சிரங்களாற் சாளரங்களும், மரகதத்திறற் றிண்ணைகளும், கோமேதகத்திறற் பீடங்களும், அங்கங்கேயும் புஷ்பபலங்களையிடைவிடாது கொடுக்கும் மரங்களும், அம்மண்டபமுழுதும் அநேக வாயிற்படிகளும், பலநிறமுடைய துவசங்களும், சுவர்ணமயமான மலர்களையுடைய பாரிசாதங்களும், மரகதநிறமான கதலிகளும், நறுமலர்களைச்சொரியுங் கடப்பவிருக்ஷங்களும், அமுதம் பெருகுந் தடாகங்களும், செந்தாமரை வெண்டாமரை மலர்போலப் பல மலர்கள் நிரம்பிய வாவிகளும், இந்திர நீலங்களை மாலைகட்டினாற் போலஎப்பொழுதும் வண்டுகள் நின்று பண்பாடுங் குளங்களும், தளிர்களைப்புசித்துச் சிவநாமங்களைப் பஞ்சமஸ்வரத்துடன் பஜிக்குங் குயில்கள் வாழாநின்ற சோலைகளும், அச்சோலையிற் படர்ந்துள்ள அமிர்தமாரிபொழியும் மேகங்களைக்கண்ட பொன்னிறமான சிறகுகளையுடைய மயில்கள்தாமும்சிவபெருமானைப்போலவே நீலகண்டமென்னும்பெயர்பெற்றிருப்பதையெண்ணிக் களிகூர்ந்து சிவநாமஸ்மரணை செய்வனபோலக் கேகயத்தொனிகளைச் செய்யுஞ் சிறப்பும், மரகதரத்தினம்போலப் பசுமைவாய்ந்த கிளிகள்

பார்வதிதேவியின் சாரீரத்தொனியைக் கற்றுக்கொள்ளும்படி அவ்விளஞ்சோலையிற்றவஞ் செய்வோரைப்போலத்தேவியின் நாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருக்கும் வனப்பும், மந்தமாருதம் வீசுதலும், துக்கமற்றதும், குளிர்ந்துள்ளதும், ஒளிமயமானதுமாகவுள்ள அந்த மண்டபத்திற்கு எட்டுத்துவாரங்களிருக்கின்றன.

அவற்றுள், கிழக்குத் துவாரம் ஸ்ரீதுவாரமெனப் பெயருறும். அவ்வுயர்ந்த கோபுரத்தில், மகாசித்தனென்னும் பெயர்கொண்ட ஓர் சிவகணநாதன் தாமரைமாலையணிந்து பெருந்தவசியாய் அந்த வாயிலைக்காப்பான். தென்றிசையில் லக்ஷ்மித்துவாரத்திற் காளமேகம்போல மிகவுயர்ந்து, கறுத்த தேகத்தையுடையவனுய்ச் சூலந்தாங்கி மகாகாயனென்னும் ஓர் சிவகணன் அவ்வாயிலைக் காத்திருப்பான். தென்றிசையிற் சிவநாமபுரமென்னும் வாயிலிற் சிவாக்கினைப்படி மகாவீரியவானுகிய கண்டகர்ணனென்பான் புண்ணியர்களாகிய பல சிவகணங்களோடு காத்திருப்பான். நிருதிதிக்கிலுள்ள வாயிலிற் பீமநாதனென்போன் காத்திருப்பான். மேற்றிசைத்துவாரம் வாருணமெனப்படும். அங்கே நந்தீசுவரகணங்கள் காக்கின்றனர். வடமேற்கு வாயிலை ஹவிஜிஹ்வனென்னுங் கணநாதன் காப்பான். வடவாயிலுக்குக் கீர்த்தித்துவாரமெனப்பெயர். அங்கே மகேசனென்னுஞ் சிவகணநாதன் காவல்செய்வான். ஈசானவாயிலிற் சிலருத்திரகணங்கள் தொகுதியாகக் காத்திருப்பார்கள். எட்டுத்துவாரங்களிருப்பினும் ஈசானவாயிலே ஈசுவரனுக்கு மிகவும் பிரீதியானது. அவ்விடத்திற் கோபத்தைச் செயித்து இந்திரியநிக்கிரகஞ்செய்து சாந்தத்தையடைந்து, பசுபதியினிடத்திற் பக்திசெய்தவர்களும், சாங்கியயோகாப்பியாசஞ் செய்தவர்களும், ஆகமவிதிவழுவாது சிவபெருமானைப் பூசித்தவர்களும், கிரகஸ்தாச்சிரமதருமத்திலிருந்து முறைப்படி புண்ணியஞ் செய்தவர்களும், திரிகாலங்களிலுஞ் சோம்பலின்றிச் சிவார்ச்சனை செய்தவர்களும்,சிவபிரானைப்பார்த்திவலிங்கத்திலும் பாணலிங்கத்திலும் பூசித்தவர்களும், க்ஷத்திரியர்களாயிருந்து நியாயந்தவருது இராசநீதியைச் செலுத்தினவர்களும், யுத்தரங்கத்தில் இராசநீதிதவருது போர்புரிந்து சரீரத்தை விடுத்தவர்களும், கோப்பிராமண விஷயத்தில் தமது பிராணனை விடுத்த க்ஷத்திரியர்களும், சுயதர்மந்தவருது சத்தியவாதிகளாயிருந்து வர்த்தகத்தில் அநியாயஞ் செய்யாத வைசியர்களும், உருத்திரன் இந்திரன் விஷ்ணுமுதலியோருக்கு யாகங்களால் ஆகுதிகொடுத்த பிராமணர்களும், நாடோறும் ஆயிரங் கோதானஞ் செய்தவர்களும், சாஸ்திரப்படி பூதானஞ்செய்தவர்களும், வீடும் அதற்கு வேண்டிய சாமான்களும்போசனபதார்த்தங்களும் ஆயுள்வரையில் அவன் குடும்பசவரக்ஷணைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களுமடங்கிய [ஸோபஸ்கர] தானஞ்செய்தவர்களும், சுவர்ணதானஞ் செய்தவர்களும், துலாபுருஷதானஞ் செய்தவர்களும், யாவரிடத்தும் பிரியமாக வசனிக்கிறவர்களும், முறைப்படி பிரமசரியந்தவருது வேதாத்தியயனஞ்

செய்தவர்களும், பவுண்டரிக வாஜபேய அசுவமேத அப்தோர்யாம கருடசயன முதலிய யாகங்களை விதிப்படி தக்ஷிணை கொடுத்துத் தவறுதலின்றி நடத்தினவர்களும், அவ்விடத்தில் ஆனந்தத்தை யனுபவித்து அநேக கற்பகாலம் வசித்து மீண்டும் பூலோகத்தையடைந்து சிறந்த ஜனனங்களையெடுத்துத் தருமத்தையும் சிவஞானத்தையும் உலகத்திற் பிரபலப்படுத்திச் சிவதத்துவத்தையடைந்து மோக்ஷத்தைப் பெறுவார்கள். இதுவே தேவதேவனான மகாதேவனுடைய ஸ்தானம். எல்லாக்கோரிக்கைகளையும், அணிமாதி அஷ்டசித்திகளையுங் கொடுக்கவல்லது. சிவபுரத்தைப் பற்றியுங்கட்குச் சொன்னேன்.

முநிவர்களே! அந்தச்சிவபுரத்தருகில், மேருவின் மற்றோர் கொடுமுடியில், தேவதேவனாலேயே நிருமாணஞ்செய்து புண்டரீகாக்ஷனுக்குக்கொடுத்த விஷ்ணுநகரமொன்றுண்டு. அந்நகரம் சந்திர கிரணத்திற்குச் சமானமான வெள்ளியாற் செய்த மதில்களும், க்ஷீரசாகரம்போல அழகுவாய்ந்த தடாகங்களும், மூவாயிரயோசனை விஸ்தீரணமும், எங்கெங்கும் கட்டப்பட்டிருக்கும் உன்னதமான பதாகைகளும், நவரத்தினங்களிழைத்த ஆயிரம் வாயில்களும், இரத்தினங்களாற் செய்த ஈராயிரக்கால் மண்டபமும், அம்மண்டபத்திடையே நவரத்தின பொற்பராகங்களாற் செய்யப்பட்ட விஷ்ணுபதமும், அவ்விஷ்ணுபதத்தின் நாற்புறமுங் கைலாஸ சிகரத்தைப்போன்ற நான்குகோபுரவாயில்களும், சுவர்ணமயமான விருக்ஷங்களும், எப்பொழுதும் புஷ்பிக்குங் கொடிகளும், கோகிலங்களுங் கிளிகளுமுடையது. கீழ்த்துவாரத்தில் மேகம்போன்ற சரீரத்தையுடைய யஜ்ஞகரனென்னும் பிரதாபமுடையவனும், மேற்றுவாரத்தில் ஹரிபத்திர னென்பவனும், மற்றிருவாயில்களில் விஷ்ணுகணங்களுங் காவல் செய்கிறார்கள். அவ்விடத்தில் விரும்பியவற்றைக் கொடுக்கும் மதுநதியென்னும் நதியானது பொற்றாமரைமுதலிய மலர்களையுடையதாய் வெண்ணிறமாகப் பிரகாசிக்கும். அதில் வான்கோழி சக்கரவாக சகோரமுதலிய பக்ஷிகள் வசிக்கும். சத்தியவான்களும், இடைவிடாது அக்கினி காரியஞ் செய்தவர்களும், தேவர்பிராமணர்களைப் பூசித்தவர்களும், திரிகாலங்களிலும் விஷ்ணுபக்திசெய்தவர்களும், விஷ்ணு சரிதங்களை வாசித்தோர்களும் அவ்விடத்தில் துக்கசோகங்களின்றி அநேககாலம் வசித்துத் தங்கள் புண்ணியங்களுக்குத் தக்கபடி பூலோகத்திற் சனனமெடுத்துத் தர்மங்களை நிலைநிறுத்தி விஷ்ணுபதவியை யடைவார்கள். விஷ்ணுபதவியின் பிரபாவத்தைச் சொன்னேன். இனி, பிரமபதவியைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக.

மேருவின் மற்றோர் சிகரத்தில் ஹிரண்யகர்ப்பனாகிய பிரமதேவனது நகரம் விளங்கும். அஃது இரண்டாயிர யோசனை விஸ்தீரணமும் விசோகம் [சோகமற்றது] என்னும்பெயருமுடையது. சுவர்ணமயமான மதில்களும், எப்பொழுதும் புஷ்பம் பலமுதலியவற்றைக் கொடுக்கும்

விருக்ஷங்களும், வாவி கூப தடாகங்களும், கோகிலங்களும், சோலைகளும், பொன்னிறமான சிறகினையுடைய அன்னங்கள் சஞ்சரிக்கு மிடங்களும், கோடிசூரியருக்குச்சமானமான காந்தியும், சூரிய சந்திரமண்டலங்களுக்குச் சமானமான மாளிகைகளும், அதியுன்னதமான மூன்று கோபுரதுவாரங்களும், இடையே ஓர் ஆயிரக்கால்மண்டபமும், அதில் வைடூரியத்தாற்செய்த அறைகளும், அம்மண்டபத்திற்கு நான்குவாயில்களும் உடையது. அந்நான்குவாயில்களில், கிழக்கே துவாராதிபனும், வடக்கே செந்நிறம்வாய்ந்த பிரமயோனியென்னும் பெயருள்ளவனுங் காவல்செய்வார்கள். அந்நகரத்திற் சிருஷ்டிகர்த்தாவான பிரஜாபதி வசித்திருக்கின்றார். அப்பட்டணத்தில் அமிருதாவென்னும் நதிபிரவாகிக்கின்றது. அந்நதியில் முத்துப்போன்ற மணலும், செந்தாமரை வெண்டாமரை முதலிய மலர்களும் விளங்கும். அங்குள்ளவர்கள் அந்நதிநீரைப் பானஞ்செய்து நரைதிரை மூப்புக்களின்றிச் சந்தோஷகரமாக வசிப்பார்கள். வேதங்களை யிடைவிடாது அத்தியயனஞ்செய்தவர்களும், அஷ்டவிரதங்களைச் செய்தவர்களும், வேதங்களை அத்தியயனகாலத்தி லாரம்பித்து உத்ஸர்ஜனகாலத்தில் விட்டவர்களும், அவ்வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் சொரித முதலிய ஸ்வரபேதமுணர்ந் துச்சரித்து அநேகமுறை அத்தியயனஞ் செய்தவர்களும், சத்தியவாதிகளும், வேதவிதிப்படி நடந்தவர்களும், இந்திரியநிக்கிரகஞ் செய்தவர்களும், யாகங்களைச் செய்தவர்களும், குருபக்தி செய்தவர்களும், முறைப்படி பிக்ஷையேற்றுப் புசித்தவர்களும், தீர்த்தயாத்திரை செய்தவர்களும், பிராமண ஜனனமெடுத்துக் கோபமொழிந்தவர்களும், தியானயோகஞ்செய்தவர்களும், யோகசாஸ்திரத்தை யப்பியசித்தவர்களும், சாங்கியத்தைக் கற்றவர்களும், வேதாந்தங்களை வாசித்தவர்களும், அந்தப் பிரமபதவியை யடைந்து சோகமோகங்களைப் போக்கி அநேக அவாந்தர கல்பங்கள் அவ்விடத்தில் வசித்து மீண்டுங் கர்மபூமியை யடைந்து விதிப்படி பரமசிவனை யர்ச்சித்து நற்கதியடைவார்கள். அது ஸத்வகுணப்பிரதானமான ஞானத்தினாலேயே யடையத்தக்க ஸ்தானமாம். அந்தப் பிரஜாபத்தியஸ்தானம் இவ்விதமானது. இவ்விதமாகப் பர்வதசிரேஷ்டமான மேருபர்வதத்தி னுச்சியில் இம்மூன்று ஸ்தானங்களும் இப்புவனத்திற்கு ஆத்மஸ்தானங்களாக விளங்குகின்றன. இவற்றில் வசிக்கும் புண்ணியவான்களே மகா மங்கலங்களோடுகூடி, சிலர் மேகரூபிகளாகி வருஷித்தும், மின்னல்களாகிப் பிரகாசித்தும், கிரக நக்ஷத்திரங்களாகி விளங்கியும், இந்திராதிலோகங்களுக்கு அதிபத்திய மடைவார்கள். அவர்களே எவ்வுலகிலுஞ் சஞ்சரிக்கும் வல்லபமும், அநேககாலம்வசிக்குந் தீர்க்காயுளும் பெற்றவர்கள். இந்த விஷயமானது பூர்வம் பிரமதேவராற் சொல்லப்பட்டது. இதனைப் பூரணகாலங்களில் வாசிப்பவர்கள் இஷ்டார்த்தங்களை யெல்லா மடைந்து துக்கசோகங்களைப் போக்கி ஆனந்தத்தை யநுபவிப்பார்கள். வியாஸமுநிவனே! இவ்வத்தியாயத்தைக் கேட்

டவர்கள் பிரமஹத்தியாதி பாவங்களை யொழித்துச் சுகஜீவிகளாக வாழ்வார்களென்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

திரிமூர்த்தி நகரங்களுரைத்தது
முற்றிற்று.

பதினொன்றாவது
பலதேவருலகுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி, உலகங்களின் கிரமத்தைத் தேவரீராற் கேட்டேன். உருத்திரமூர்த்திகளுடைய அண்டங்களையுஞ் சங்கியைகளையும் எனக்கு விவரித்துச் சொல்லவேண்டு மென்று கேட்க, ஸநத்குமாரமுநிவர் சாற்றலாயினர். பிரமலோகத்தைக் காட்டிலும் மகேசுவரலோகம் இருமடங்கு விசாலமானது. பிரமவிஷ்ணு மகேசுவர லோகங்கள் மூன்றையுஞ் சேர்க்கச் சரிபாதியாகவுள்ளதுருத்திரலோகம். அவ்வுலகத்தில் அநேகமாயிரம் உருத்திரமூர்த்திகளும் அநேகங்கோடி விஷ்ணுக்களும் வசிப்பார்கள். அங்குள்ளவர்கட்குப் பரிமள தேகமும், சிவாநுக்கிரகமும், சூலாயுதமும், பொறுமை யின்மையும், சந்திர சூடமும், விருஷபவாகனமும் உண்டு. பிரமலோகத்திலிருந்து எண்ணிறந்தவர்களும் விஷ்ணுலோகவாசிகளும் நிர்மலமனதுடன் மூவுலகங்களையுஞ்செயித்தவர்களாய்ச் சந்தோஷ சித்தத்துடன் எல்லாமுணரும் வன்மையோடு வசிப்பார்கள். மணிமயமான பூமியும் நுண்ணிய பொற்பராகம் போன்ற மணலும் விளங்கும் அவ்விடத்திற் சூரிய சந்திரகிரணங்களும் வாயுவின் சஞ்சாரமுங் கிடையாவாயினும், ஒளியுங் காற்றுங் குறைவிலாது விளங்கும். எவ்வகைய உயர்ந்த தேவபதவியை யடைந்தவர்களாயினும், சந்திரசேகரமாகிய உருத்திரபதவியை யடைந்தாலன்றி அவ்வுலகை யடைய ஒருவருக்குஞ் சாத்தியப்படாது. அங்குள்ளவர்கள் யாவருஞ் சுயம்பிரகாசஸ்வரூபிகள். இரத்தினமயமான கோபுரங்களும், எவ்விடத்திலுஞ் செல்லத்தக்க விமானங்களும் உண்டு. பூமண்டலத்திற் கிரகஸ்தாச்சிரமத்தை விதிவழுவாது நடத்திச் சிவபூஜையைக் காலந்தவறாது செய்த வேதியர்கள் அவ்விடத்திலுஞ் சந்தோஷசித்தத்துடன் சிவபூஜை செய்துகொண்டிருக்கிறார்கள். கந்த புஷ்ப தூப தீப சதருத்திரீயமந்திர முதலியவற்றுடன் மகாதேவப்பிரசாதம் பெற்றவர்களே யிந்தலோகத்தை யடைவார்கள். முன்சொல்லிய எல்லாவுலகங்களும் இந்த உருத்திரலோகத்திற்குக் கீழுள்ளனவென் றறிவாயாக. அதன்மேல் இரண்டுபங்கு அதிகமான பிரமாணத்துடன் மாயேசபவனம் என்னும் பெயருள்ள லோகமுண்டு. அதில் அநேகமான பூதகணங்களோடு மனோ உல்லாசமான கிரகங்களில் யோகிகளாயும் மாயேசரென்னும் பெயர் பெற்றவர்களாயுமுள்ள உருத்திரகணங்கள் வசிப்பார்கள். அதன்மேல் இரண்டுபங்கு அதிகமானபிரமாணத்துடன் பவலோகமுண்டு. அவ்விடத்தில் ஹராளென்னும் பெயர்கொண்ட உருத்திர

கணங்கள்வசிப்பார்கள். அதற்கு ஸர்வநாமபுரமெனவும்பெயருண்டு. அதன் மேலே அக்கினிஸ்தானமென்னும்லோகத்தில், உருத்திரபகவானை நோக்கி அக்கினி காரியஞ்செய்து சிவகணங்களானோர்கள் வாழ்வார்கள். அதனி லும் இருபங்குயர்ச்சியில் உக்ரமென்னும் லோகத்தில், பாசுபதவிரதத் தையநுட்டித்த புண்ணியர்கள் பஸ்மருத்திராக்ஷதாரிகளாய்வசிப்பார்கள். லோகாநுக்கிரகார்த்தமாய்ப் பரமேசனும் அவ்விடத்தில் தானொருபஸ்ம ருத்திராக்ஷதாரியாய் வசித்திருக்கிறார். சமதமாதிகுண சம்பன்னர்களும் பூததயையுடையவர்களும் அபயங்கொடுத்து ரக்ஷித்தவர்களும், சத்தியவான் களும், இந்திரியநிக்கிரகஞ் செய்தவர்களும், பாசுபதயோகிகளும், இடை விடாது சிவபூசைசெய்தவர்களும், அந்தலோகத்தை யடையப்பெறுவார் கள். அந்தப்பாசுபதஸ்தானத்தைக் காட்டிலும் இருபங்கு மேம்பட்டதாய் மாஹேசுவரஸ்தானமொன்றுண்டு. அவ்விடத்தில் அநேக மகேசுவரர்களு டன் லோகநாயகனாகிய மகேசுவரர் வசிப்பர். அங்கே சர்வலோகேசனும் ஈசுவரனும் காமரூபியாயும் அந்தராத்மாவாயும் விளங்குஞ் சிவபெருமான் எல்லாப்பிராணிகளுக்கும் ஆனந்தத்தை யுண்டுசெய்து, அநேகபிரமலோக விஷ்ணுலோகாதிகளைச் சிருஷ்டித்து விரும்பியவற்றை யநுக்கிரகித்து வசித் திருப்பர். அவருடைய பிரபாவத்தையென்னாற் சொல்லிமுடியாது. அதைக் காட்டிலும் மேலாக ஸ்திரஸ்தானமென ஓர் ஸ்தானமுண்டு. அதுவே எல்லா வுலகங்களிலுஞ் சிறந்தது என ஸநத்குமாரமுநிவர் கூறியருளினர்.

பலதேவருலகுரைத்தது

முற்றிற்று.

பன்னிரண்டாவது

அழியாப்பதவி யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! தாங்கள் கூறிய ஸ்திரஸ்தானத்தின் பிரபாவத்தையுமறிய விரும்புகின்றேன். அடி யேன் அதனைக்கேட்டறிய அருகனாயிருக்கும் பக்ஷத்தில் அதனையுந் திரு வாய்மலர்ந்தருளவேண்டு மெனக்கேட்க ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர்: வியாஸமுநிவரே! தேவதேவனான பரமேசனுடைய மகாத்மியத்தையும், அந்தஸ்திரலோகப் பிரபாவத்தையும், பிரமாதிதேவர்களும், சாங்கியயோக கர்த்தாக்களும், மீமாம்சையுணர்ந்தவர்களும், உள்ளபடியே யறிவார்கள். உமா கணேச விஷ்ணு ருத்திராதிகளாலேயும் அது துதிக்கத்தக்கது. அவ் வகைய விஷயத்தையான் அந்த ஈசுவரப்பிரசாதத்தினாலேயே யறிந்தேன். அந்த ஸ்திரஸ்தானத்தில் அநேக ஆயிரயோசனை விசாலமான ஓர் நகர மிருக்கும். அங்கேயுள்ள வுயர்விடத்தில் அதிநிர்மலமாயும் ஞானமயமாயும் விளங்கும் ஓர் பீடமிருக்கும். அந்தப்பீடத்தில், திரிகாலங்களிலுமழிவற்ற அவ்யய நிஷ்கள நிரஞ்சன நிராமய சச்சிதானந்த சொரூபியான பரமசிவன்,

எழுந்தருளியிருப்பார். அவருடைய இடது கண்ணினின்றும் உமாதேவி தோன்றி அவருடைய இடப்பாகத்தில் வீற்றிருந்தமையின் வாமலோசனை யெனப்பெயரெய்தினள். அவருடைய கண்ணினின்று வெண்ணிறமாக முத்துப்போன்ற ஓர் நீர்த்துளிதோன்றி அதுவே கங்கையென்னும் பெய ருடன் மூவுலகங்களிலும் வியாபித்தது. பிரமதேவனுடைய சிரசைக்கிள்ளிய உருத்திர பரிவாரங்களும், விஷ்ணுமூர்த்தியானவர் ஆயிரந்தாமரை மலர் களாற் பூசித்து அதிலோர் மலர்குறையத் தனது கண்ணைப்பறித் தர்ச்சித்த பொழுது அவருக்குச் சக்கிரப்பிரசாதஞ் செய்த சமயத்துண்டாகிய பரி வாரங்களும், தக்ஷயாக சங்காரத்திற்காக வீரபத்திரனை யனுப்பியபொழு துண்டாகிய பரிவாரங்களும், அந்தகாசுர சங்காரஞ் செய்கையில் ஹிமா சலத்தையடைந்தபொழுது தோன்றிய பரிவாரங்களும், சுவர்ணமயமான சரீரத்தையுடைய முப்பது கோடித்தொகையுள்ள வேறு பரிவாரங்களும், கருமைநிறமுடைய எண்பதுகோடித் தொகையுள்ள வேறு பரிவாரங் களும், அவரது மனதினால் இவ்வாறு எண்விதமாகச் சிருஷ்டிக்கப்பட்டு அங்கே வசிக்கிறார்கள்.

வியாஸமுநிவனே! அந்தஸ்தானத்தைப் பார்க்கவும், திருஷ்டாந் தத்தினாலுணர்த்தவும், வர்ணித்துச்சொல்லவும் ஒருவருக்கு முடியாது இந்த எண்வகைப் பரிவாரத்தவர்களும் அநேககோடி பிரமவிஷ்ணுக் களையும் அநேககோடி யண்டங்களையுஞ் சிருஷ்டித்துக் காத்துச்சங்கரிக்கும் வல்லபமுடையவர்கள். இதுவே அநாமயமும் சாசுவதமுமாகிய ஸ்தான மாம். அவ்வகைய சிவபெருமானை இந்த வுலகத்திற் சிவலிங்கமூர்த்தத்தில் அன்புகொண்டு ஆராதித்தவன், மாதாபிதாக்களைக்கொன்றவன் கோஹத்தி செய்தவன் குருமனைவியை விரும்பினவனாயினும் அப்பாவங்களை நீங்கி அந்த ஸ்தானத்தையடைவான். இவ்வகைய பாவியுஞ் சிவலிங்கார்ச்சனை யினாலவ்வுலகையடைவானாயின் மனப்பூர்வமாகப் பக்தியோடு பூசித்தவன் அதனை யடைவானென்பது சொல்லவும் வேண்டுமா? இதுவே தகராகாச வித்தையாலறியுஞ் சிவபுரமாகிய அழியாப்பதவியென்றறிவாயாகவென்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

அழியாப்பதவியுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்றுவது
சிவக்ஷேத்திரங்களுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுநிவர் கூறிவந்தவற்றைக்கேட்ட வியாஸமுநிவர் ஸநத்குமாரரைநோக்கி, ஸ்வாமீ! எவ்விதபூசையினால் எல்லாம் வல்ல வனும் லோகநாயகனும் கபர்த்தியும் விருஷபத்வஜனுமாகிய சிவபெரு மானுக்குக் களிப்புண்டாகுமோ அவ்வித பூசையை யடியேனுக்குபதேசி

க்கவேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரர் சொல்லலாயினர்: எல்லாப் பாவங்களையுமொழிப்பதாயும்,மோக்ஷத்தைக் கொடுப்பதாயும்,விரைவிற் சிவபெருமானைச் சந்தோஷிக்கச் செய்வதாயுமுள்ள சிவபூஜாவிதியைச் சொல்லுகின்றேன். ஜாக்கிரதையாகக் கேட்கக்கடவாய். பூர்வத்தில் முப்பத்துமுக்கோடி தேவர்கள் - நாற்பத்தெண்ணுயிர விருடிகள் - சப்த மருத்துகள் - துவாதசாதித்தர்கள் - அஷ்டவசுக்கள் - நாகர்கள் - கந்தர்வ யக்ஷ கின்னரர்கள் முதலானோர் ஒருங்குசேர்ந்து மேருபர்வதத்துச்சியில் ஈசானமூர்த்தியையடைந்து சிவமகாத்மியத்தை யுணரவிச்சித்திருக்கையில், சத்தியவானும் ஜிதேந்திரியனும் பக்தியுள்ளவனுமுள்ள விபீஷணன் பக்தியோடு அங்கடைந்து சிவபெருமானைச் சேவித்து அஞ்சலியஸ்தனாய்த் தேவதேவனே! எவ்வகையாகச் சிவபூசைசெய்தால் இஷ்டசித்திகள் கைகூடும். இவ்விஷயத்தை எனக்குத் தெளிவுண்டாகச் சொல்லியருள வேண்டுமெனக்கேட்க, ஈசானர் சொல்லுகின்றார். இராசராசனே! விபீஷணனே! நீ வினவிய விஷயம் மிக்க ரகசியமானது. சர்வசாத்திரங்களின் சாரமாயுள்ளது. அதனைப் பிரமாதிதேவர்களு மறியார்கள். அதனை யென் பக்தனான வுனக்குபதேசிக்கின்றேன். எனக்குப் பிரீதியான ஸ்தலங்க ளநேகமுள்ளன. அவற்றில் யான் அநேக மூர்த்தங்களாக விளங்கியிருப் பினும், அவ்வகைகளிற் பூசிப்பதைக்காட்டிலும், இலிங்கமூர்த்தத்தில் என்னைப் பூசிப்பதற்கே நான் பெருமகிழ்வடைகிறேன். சீக்கிரத்தில் இஷ்டகாமியங்களைக்கொடுக்கும் ஸ்தலங்களைச் சொல்லுகின்றேன். சாகலாங்கம் - பத்திரகர்ணம் - கோகர்ணம் - அவிமுத்தம் - ஓங்காரம் என்னும் ஐந்து ஸ்தானங்களே பஞ்சாயதனமெனப்படும். இவையே யுத்தமஸ்தானங்கள். இவ்விடங்களிலென்னைத் தரிசித்தஜீவராசிகள் மோக்ஷமடையும். இது பரமரகசியம். இவ்வைந்து க்ஷேத்திரங்களிலும் அவிமுத்தம் எனக்குப் பெருவிருப்பைச் செய்வது. ருத்திரவாசமென்றும் ஆனந்தகானனமென்றுஞ் சொல்லப்படுகிற அவிமுத்த க்ஷேத்திரத்திலிறப்போருக்கு யானே தாரகோபதேசத்தாற் சகலபாவங்களினின்றும் நீக்கி முத்தியைக் கொடுக்கிறேன். ஓங்கார க்ஷேத்திரத்தைத் தியானித்தவனுக்கு யான் மகிழ்வுற்று அசுவமேதபலனைக் கொடுக்கிறேன். இப்பஞ்சாயதன ஸ்தானங்களேயன்றி, அரிச்சந்திரபதத்தில் உருத்திரமூர்த்தமாக வசிக்கிறேன். அங்கே யநேக முனிவர்களென்னைப் பூசித்துச் சித்திகளை யடைந்தார்கள். சுவர்ணாசலத்தில் யோகீசுவரனென்னும் பெயர்கொண் டிருக்கிறேன். அவ்விடத்தில் என்னைப் பூசித்தவர்கள் விஷ்ணு பதவியையடைந்திருக்கிறார்கள். தருவனத்திற் பத்ததண்டியென்றும் மகாகாளனென்றும் வசிக்கிறேன். கமலாலயத்திற் பைரவமூர்த்தமாக வசிக்கின்றேன். காளஞ்சரத்திற் கற்கடேசுவரனென்றும், வாமகூடத்திற் பூதேசுவரனென்றும், கேதாரத்தில் மகேசுவரனாகவும், தேவதாருவனத்தில் சுந்தரேசனாகவும் வசிக்கின்றேன். இவ்வெட்டு ஸ்தானங்களும் எனக்கு விருப்பத்தையுண்டு

செய்யும் க்ஷேத்திரங்களாம். இவ்விடங்களில் என்னையாராதிப்போர் நெற்றிக்கண்ணும் நீலகண்டமும் பெற்று உருத்திரர்களாய் வாழ்வார்கள்.

விஷ்ணு! முதலிற் கூறிய ஐந்தும், பின்னர்க்கூறிய எட்டும் ஆகிய பதின்மூன்று ஸ்தானங்களிலே யென்னைப் பூசித்தவர்கள் அநேக கோடி யுருத்திரர்களாயுள்ளார்கள். இவ்விடங்களில் மிலேச்சர்களாயினும் குரூர ஜந்துக்களாயினும் மரணமடைந்தால் அவையாவும் மகேசுவர கதியையடையுமென்றறிவாயாக. அந்த க்ஷேத்திரங்களில் எனது சிவலிங்கத்தை யர்ச்சித்தால் அவர்கள் பாவிகளாயினும் பிராயச்சித்தமில்லாமலே தமது பாவங்களை யொழிப்பார்கள். கோரமான தவஞ்செய்வோரும் சிவலிங்கபூசாபலனை யடையமாட்டார்கள். பிரயாகையில் நூறுவருஷகாலமாக ஸ்நானஞ்செய்த பலனும், நூறுமுறை சாந்திராயண விரதமநுஷ்டித்தபலனும், ஆயிரம் பொன்னைத்தானஞ் செய்தபலனும், கோமூத்திரம் யவை சருகுபக்ஷணஞ்செய்து விரதமிருந்தபலனும், திலதானஞ் செய்தபலனும், லிங்கபூசைக்குச் சமானமாகமாட்டா. நானே எல்லாவுலகங்களுக்குங் கர்த்தா, நானே சிருஷ்டிக்கிறவன், சங்கரிக்கிறவன், யுகந்தோறுந் தர்மத்தை நிலைநிறுத்துகிறவன், நானே பிரமன், விஷ்ணு, சூரியன், சந்திரன், நானே கண்ணுக்குப் புலப்படும் எல்லாப்பொருள்களும், நானே மன்மதன், வாயு, அநேகமான ருஷிகள், பூசிக்கத்தக்க சாஸ்திரஸ்வரூபி, லக்ஷணஸ்வரூபி, நானே குபேரன், இந்திரன், நானே ருஷபம், தர்மம், நானே ஸ்கந்தன், நானே ஷட்ருதுக்கள், நானே அஷ்டமகாநாகங்கள், நானே மேருமந்தரகைலாசாதிபர்வதங்கள், நானே பிரகலாதனுதி அசுரர்கள், நானே க்ஷீராப்திமுதலிய சமுத்திரங்கள், நானே வருஷமாசாதிகாலங்கள், நானே தாவரசங்கமங்கள். இவ்விதம் சர்வாத்மஸ்வரூபியாக விளங்கும் என்னை யர்ச்சிப்பவர்கள் இஷ்டார்த்தத்தை யடைந்து பிறவியில்லாத மோக்ஷத்தையடைவார்கள். எனக்குப் பிரியமான திதிகளிற் சத்பிராமணனுக்குத் தீபதானஞ் செய்தவர்கள் என்னுலகத்தையடைவார்கள். இலிங்கபூசைசெய்து சுவர்ணதானஞ் செய்தவர்களும், என்பூசைக்காக அர்க்கிய பாத்தியமும், தூப தீபமுங் கொடுத்தவர்களும் காணபத்தியத்தை யடைவார்கள். முறைப்படி யாகத்தைச்செய்து விசேஷதக்ஷிணை கொடுத்தவன் சிவலிங்கார்ச்சனை செய்தபலனை யடைவான். என்னுடைய லிங்கத்தைப் பாலினாலலம்பியவன் தனது பிறவியாகிய அழுக்கைக் கழுவிவிடுவான். ஏகலிங்கார்ச்சனை யொருவருஷகாலஞ் செய்தவன் காணபத்தியமடைவான். சிவபூசையில் மனலயப்பட்டவனுக்குப் பிரயாகை புஷ்கர முதலிய தீர்த்தங்கள் வேண்டியதில்லை. பலமுறை புண்ணிய தீர்த்தஸ்நானஞ்செய்தவர்களும் சிவலிங்கார்ச்சனையில் வரும்பலனை யடையமாட்டார்கள். எல்லாவற்றிற்குங் காரணமாகிய மனதைப் பரிசுத்தஞ்செய்து என் பூசனையில் ஸ்திரமாகநிறுத்தவேண்டும். சிலபேர் தவஞ்செய்கிறார்கள் சிலர் யாகஞ்செய்வார்கள்; சிலர் மாசோபவாச பக்ஷோபவாசங்களிருப்பார்கள்.

அவைதரும் பலன்களையும் என்பூசையினலேயே யடையலாம். என்னுடைய மூர்த்தியை வீடு காடு மலை நதிதீரம் மனமுதலிய எவ்விடத்திலாவதுஅருச்சித்தவன் காணுபத்தியமடைவான். என்னுடைய நாமஸ்மரணைசெய்தாலும் என்னுடைய மஹாத்மியங்களைப்படித்தாலும் எல்லாப்பாவங்களையு மொழித்து ருத்திரலோகத்தை யடைவார்கள். என்னுடைய மகாத்மியத்தை யறிந்து சிவபூசையைச்செய்து சிவஞானத்தையடைந்து சிவோகமென்னும் பலனையடைந்தவர்கள் சந்திரசூரியர்க ளில்லாதவிடங்களிலும் பிரகாசத்தை யுண்டுசெய்வார்கள். சூரியனைக்கண்ட விருள்போலவும், கருடனைக்கண்ட நாகசர்ப்பம்போலவும், எனது நாமஸ்மரணை செய்பவனைக் கண்டவுடனே சகலபாவங்களும் நடுங்கும் என்று சிவபெருமான் கூறியருளினர். அதனைக்கேட்ட விபீஷணன் சர்வபூதேசுவரனே ! சர்வதோமுகனே ! நாசமில்லாப்பொருளே ! அப்பிரமேயஸ்வரூபியே ! புராணபுருஷனே ! நீரேவாயு ! நீரேஅக்னி ! நீரேதக்ஷிணமூர்த்தி! நீரே பரிசுத்தமுள்ளவர் ! நீரேசப்தசமுத்திரங்கள்! பக்தர்களுக்குக் காமதேனுவுங் கற்பகவிருக்ஷமுமாக எல்லாவற்றையுங் கொடுப்பவர்! நீரே சர்வேசுவரர்! எனக்கு அஷ்டமகாசித்திகளையுங் கைகூடச் செய்யவேண்டியது. நான் தேவரீருக்குத்தாசன். சரணங்கொடுக்கவேண்டும் என்று பலவாறு பிரார்த்தித்தனன். சிவபெருமான் அவனது வேண்டுகோளுக்கிரங்கி, விபீஷணு! என்னுடைய இலிங்கார்ச்சனமே அஷ்டமகாசித்திகளையுங் கொடுக்கத்தக்கது. அதைக்காட்டிலுஞ் சிறந்த மந்திரமுங்கிடையாது. அதுவே அசுமேதாதி மகாயாகபலன்களையுங் கொடுக்கவல்லது. இன்னும் அது சீக்கிரத்திற் கைகூடும்படி ஓரிரகசியத்தைச் சொல்லுகின்றேன். சதுர்த்தசி அஷ்டமி இவ்விருதினங்களில் எட்டுயாமங்களிலும் இடைவிடாது பூசித்தவன் அதிசீக்கிரத்திற் சித்தியடைவான். இதுபரமரகசியம். இதனைச் சிவபக்தர்களுக்கே யுபதேசிக்கத்தக்கது. சிவபக்தியில்லாதவனுக்கு இதனைச் சொல்லலாகாது, உன்னுற் செய்யப்பட்ட தோத்திரங்களைப் பக்தியுடன் படித்தவர்கள் சிவபூசாபலனை யடைவார்கள் எனக் கூறினர். அதனைக்கேட்ட விபீஷணன் சிவபெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னிச்சையின்படி இலங்காபுரியை யடைந்துதான் உபதேசிக்கப்பட்டபடியே அஷ்டமி சதுர்த்தசி திதிகளில் எட்டு யாமங்களிலும் ஏகமனதாய்ச் சிவலிங்கபூசையை விதிவழாது செய்து அஷ்டமகாசித்திகள் கைகூடப்பெற்றனன். சிவலிங்கபூசாபலன் இத்தகையது என்றறியக்கடவாயென்று ஸநத்குமாரர் கூறினர்.

சிவக்ஷேத்திரங்களுரைத்தது

முற்றிற்று.

பதினான்காவது

சிவபூசாபலனுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! ஜ்யோதிஷ்டோமம் தீர்த்தஸ்நானம் உபவாசம் ஷோடசதானம் இவற்றைச் செய்யச்சக்தியற்ற பிராமணன் எவ்விதமாக நற்கதியடைவான்? என்பதை விளக்கியருளவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர்கூறலாயினர். வியாஸமுநிவனே! கௌசிகி - கங்கை - குருக்ஷேத்திரம் - பிரயாகை - நைமிசம் - புஷ்கரம் - திரிசிரோதா - க்ஷீரநதி - கண்டகி - பிரமவர்த்தம் யமுனை - கங்காத்துவாரம் - சகச்சிராசுவம் - பத்திரகர்ணம் - த்ருஷத்வதி - கரதோயை - லோகிதை - சரபு - கோசை - அருணை - தாமிரை - சோணமடு - கோதாவரி - நருமதை - வேத்திரவதி - காவிரி - கிருஷ்ணை - விதஸ்தா - சரஸ்வதி - ஸப்தசமுத்திரங்கள் முதலியனவும், சிவலிங்க நமஸ்காரத்தினாலடையும் பலனிற் பதினாறிலொருபங்கு பலனையுங் கொடுக்கமாட்டா. பிரமாண்டத்தில் அறுபத்தெட்டுக்கோடி புண்ணிய தீர்த்தங்களுள்ளன. அத்தீர்த்தங்களெல்லாவற்றிலும் ஸ்நானஞ் செய்தவனுடைய பலனை யொருமாதகாலம் கோபமின்றிச் சாந்த சித்தமடைந்து சிவலிங்க பூசைசெய்தவன் அடைவான். நான்கு வேதங்களையும் ஒருமுறை பாராயணஞ் செய்தபலனை யொருமுகூர்த்தம்சிவலிங்கபூசைசெய்தவன் அடைவான் ஆகையால் யாகம் - தானம் - தவம் முதலிய எவற்றினுஞ் சிவலிங்க பூசையே சிறந்தது. சராசரங்களும் சிவலிங்கத்தினின்றே தோன்றி அதிலேயேலயமடையுமெனக்கூறினர். வியாஸமுநிவர் அதைக்கேட்டு,ஸ்வாமீ! ஜகத்முழுவதும் எப்படி இலிங்கத்தினின்றுந்தோன்றி அதிலேயே லயமடையும்? இலிங்கபூசையெப்படிச் செய்வதாற் சிவபெருமான் சந்தோஷித்து விரும்பிய வரங்களை விரைவிற் கொடுப்பார்? அநேகமான ருஷிகளும் பிதுர்களும் தக்ஷிணாமூர்த்தியை யுபாசித்திருப்பதற்குக் காரணம் யாது? சிவபூசைசெய்து ருத்திரலோகத்தை யடைந்தவர்களும் பூலோகத்திற்குத் திரும்பி விடுவதேன்? பிறவியை யொழிக்கத்தக்க சிவபூஜாவிதியாது? இவற்றையெல்லாஞ் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகின்றார். மகேசுவரர் ஆதிகாலத்தில் சிருஷ்டியைவிரும்பி, பிரகிருதியைச்சிருஷ்டித்தார். பிரகிருதியினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று லிங்கமுந்தோன்றின. அந்த லிங்கமானது கோடிசூரியனை யதிக்கிரமித்த வொளியும், இரத்தின மயமான காந்தியும், ஊனக்கண்ணாற் காணமுடியாத பேரொளிப் பிழம்பும், நூறுயோசனை யகலமும், ஆயிரயோசனை யுயரமுமானதாய்த் தோன்றியது. இலிங்கத்தினிடத்தே பிரமாதிதேவர்கள் யாகங்கள் விஷ்ணு சந்திர சூரியாதி நவக்கிரகங்கள் முதலானோர் தமது ஒளியிழந்தவர்களாய் அங்கே வந்து பரமசிவனைத்தோத்திரஞ்செய்ய எத்தனித்தார்கள். அப்பொழுதே சத்வ ரசோ தமோகுணங்கள்பிரகிருதி சாங்கியயோகம் நதிகள் பர்வதங்கள் சாகரங்கள்

பிருதிவி அந்தரிக்ஷம் திக்குகள் நக்ஷத்திரங்கள் மாசாதிகாலங்கள் முதலிய யாவும் அந்த லிங்கத்தில் லயமடைந்தன. அதனால் லிங்கம் ஒன்றே யநேககாலம் விளங்கியது. மீண்டும் உலகத்தைப்படைக்க விரும்பிய பரமேசுவரர் லிங்கத்தினின்றே விஷ்ணுவையும் பிரமனையும் படைத்து, ஞானோபதேசஞ்செய்து, பிரமனே! நீசிருஷ்டிசெய்க,விஷ்ணுவே! நீபாலனஞ்செய்க வென்றருளி யந்தர்த்தானமாயினர். இவ்விதமாக லிங்கோற்பவத்தைச்சொன்னேன். இவ்வுலகம் பிரளயகாலத்தில் யாவுஞ் சலமயமாகி அநேக ஆயிரவருஷம் அவ்வண்ணமேயிருந்து,சிவதேஜஸினால் அந்த ஜலம் சோஷிக்கப்பட்டொழிய, அதிலுள்ள ஜலராசிகளழிந்தது. அப்பொழுது பைரவநாத மொன்றுண்டாகி மீண்டும் அத்தேஜஸு லிங்கமயமாயிற்று.

அதன்பின்னர் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் பரமசிவனை நோக்கி! பரமசிவனே! நீயே குமாரசுவாமீ! நீயே ஓங்காரஸ்வரூபி! வஷட்காரஸ்வரூபி! தண்டநீதி! பிரமவிஷ்ணுக்கள் முதலானோர்பிரளயத்திலும் மையேயடைகிறார்கள்! நீரே யாகஸ்வரூபி! உம்முடைய மாயையினாலே இந்தஜகத்முழுவதும் மறைக்கப்பட்டிருக்கிறது. உம்முடைய ஞானஸ்வரூபத்தை யெங்களுக் குபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் தேவர்களே! இதுமுதல் என்ஞானத்தை யடைந்தவர்களாயும் ஜராமரணங்களை யொழித்தவர்களாயும் இச்சையின்படி சிருஷ்டியாதி காரியங்களைச்செய்து உலகத்தை நடத்துவீர்களென்று அந்தர்த்தானமானார். ஆதலால் உலகமுழுவதுக்குங் காரணகர்த்தர் சிவபெருமான். அவரைப்பூசித்தே பிரமதேவர் சிருஷ்டிசெய்கிறார். சிவபெருமானைப்பூசிப்பதே விசேஷபலனை யளிக்கத்தக்கது. நூறுவாசபேயபலனும், நூறுஅசுவமேதபலனும், ஆயிரம் இராசசூயபலனும் ஒன்பதுமாசம் நியமத்துடன் சிவலிங்கார்ச்சனை செய்வதாலடைந்துசிவஞானிகளாவார்கள். மேரு மந்தர விந்திய மலயாசல மகேந்திர பர்வதராசாக்கள் வாலகில்லியர் நைமிசாரணியர் மாதுருகணங்கள் நக்ஷத்திரங்கள் நவக்கிரகங்கள் பிதுர்கணங்கள் முதலானோர் யாவரும் சிவலிங்கார்ச்சனையே சிறந்ததென்று செய்து அதனால் இஷ்டசித்தியை யடைந்திருக்கிறார்கள். பாகயாகம் அவிர்யாகமென்னும் இரண்டின்பலனையும் முறைப்படி சிவபூசையை ஒரு நாள்செய்தவன் பெறுவான். புலஸ்தியர் - புலகர் - கிருது - தக்ஷன் - நந்தீசர் - பிருகு - அங்கிரசு - மரீசி - ததீசி - சம்வர்த்தர் - சைமினி - சஞ்சகேஷு-சுக்கிரன்-பிரகஸ்பதி-தியவனர்-ஜமதக்கினி-உத்தங்கர் - அகஸ்தியர் - மநு-பிரஹலாதன்-அத்திரி-வசிஷ்டர் - காசிபர் - கௌதமர் - பரத்துவாசர் - விசுவாமித்திரர் - சமுத்திரராசர்கள் ஆகிய இவர்களும் சிவலிங்கார்ச்சனை யாற்சித்திபெற்றார்கள். புற்றுமண்ணைக்கொண்டு பார்த்திவலிங்கஞ்செய்து ஒருவருஷம் நியமப்படி பூசித்தவன் காணுபத்தியத்தையடைவான். சிவலிங்கார்ச்சனை செய்வதிலும் சிவாலயத்தை விளக்குதல் பத்துப்பங்கு

விசேஷபலனும்,மெழுகுவது நூறுபங்கு பலனுமுண்டாக்கும். ஒரேமுறை இலிங்கத்திற்குச் சலத்தினாலபிஷேகித்தவன் பத்துக் குற்றங்களையும், பாலினாலபிஷேகித்தவன் நூறுகுற்றங்களையும், நெய்யினால் அபிஷேகித்தவன் ஆயிரங்குற்றங்களையும், தேனினால் அபிஷேகித்தவன் பதினாயிரங் குற்றங்களையும் க்ஷமிக்கப்பெறுவான். சிவபெருமான் அபிஷேகத்தினாலேயே பெருந்திருப்தியடைவர். புஷ்பங்களாலருச்சித்தவன் இருபதினாயிரங்குற்றங்களையொழிவான். தூபத்தினால் முப்பதினாயிரங்குற்றங்களையும், தீபத்தினால் நாற்பதினாயிரங்குற்றங்களையுமொழிவான். சிவபெருமானை யர்ச்சிப்பவன் தன்குற்றங்களையு நீங்கி இஷ்டகாமியங்களை யடைவான். ருத்திராக்ஷமாலைகளா லலங்கரித்தவன் எண்ணிறந்த பலனையடைவான். விதியாற் செய்யும் யாகங்களைக்காட்டிலும் சிவமந்திரஞ் சபித்து ருத்திராக்ஷத்தைப்பூண்டவன் பெரும்பலனையடைவான். *உபாம்சமாகச் சபித்தவன் அதனிலும் நூறுபங்கு பலனையும், மானசிகமாகச்சபித்தவன் ஆயிரம்பங்குபலனையும் அடைவார்கள். திருணம் ஒஷதி முதலிய சிவபூஜாவுபகரணங்களைச் சேகரிப்பதாலும், சிவாலயத்திற்கு விரோதமாயுள்ள செடிகொடி மரங்களைச் சேதிப்பதாலுந் தோஷங்கள் சம்பவியா. பூஜாவுபகரணங்களைக்கொடுத் துபகரித்தவனும் சிவபூசைசெய்த பலனையடைவான். சிவநிர்மாலியத்தைக் காலடிமுதலியன படாது தகுந்தவிடத்தில் விடுப்பவன் ஆயிரங்கோதானபலனையடைவான். சிவபிரானுக்கு ஷட்ரசபேதமான வுணவுகளையுபயோகித்தவன் நூறுவருஷம் சிவபூசைசெய்த பலனையடைவான். ஸ்திரீகள் மிலேச்சர் முதலியவர்கள் பிரணவமந்திரோச்சாரண மில்லாமலே நூறுபிரதக்ஷிணஞ் செய்தால், சிவபூசைசெய்த பலனையடைவார்கள் ஆதலால் யாவராயினும் பக்தியோடு உபவாசமிருந்து சிவபூசைசெய்யவேண்டும். தாமரை நீலோற்பலம் வில்வம்,பவளம் முத்து முதலிய நவரத்தினங்கள் முதலியவற்றாலர்ச்சித்துக் கீதவாத்தியங்களாற் பஜனஞ்செய்தவர்கள் இகலோகத்தில் எல்லாப்போகங்களையுமநுபவித்து உருத்திரலோகத்திற் சுகமடைவார்கள். மாநுடயோனியிற் பிறந்தோர் திரிகாலங்களிலுஞ்சிவபூசைசெய்யவேண்டும், [‡சிவபெருமானை யோசமூர்த்தி இந்திரமூர்த்தி தக்ஷிணாமூர்த்தி வருணமூர்த்தி வரதமூர்த்தி குபேரமூர்த்தி யாகமூர்த்தி விஷ்ணுமூர்த்தி அக்கினிமூர்த்தி நிஷ்களமூர்த்தி முதலிய பேதங்களில், அவரவர் விரும்பிய மூர்த்தங்களிற் பூசிக்கலாம். அவ்வாறு பூசித்தவன் பாசுபதவிரதத்தை யநுசரித்தவனாவான். இவ்வகைய மூர்த்தியை யுபாசித்து அநேகருஷிகள் சிறந்த கதியையடைந்திருக்கிறார்கள்.] தக்ஷிணாமூர்த்தியைப் பூசிப்பது சிலாக்கியம். அப்பூசையினால் ஜீவனோபாயம் சிரத்தை நம்பிக்கை தயை சுகம் இஷ்டார்த்தம் ஞானம் முதலியயாவும் அடையுமாதலின் தக்ஷிணாமூர்த்தியை யுபாசித்தே சிவோ

* உபாம்சம் - மெத்தெனச்சபித்தல்.

[‡] இக்குறியினுள் உள்ள ஸ்லோகங்கள் சில பிரதிகளிலில்லை.

கம்பாவனையடையவேண்டும். பராசரபுத்திரனே! இந்தலிங்கோற்பவ கதனம் எல்லாவியாதியையு மொழிக்கும். சிவலிங்கதரிசனஞ் செய்தாலும் சிவசரிதங்களைச் சிரவணஞ்செய்தாலும், சிவநாமங்களை ஸ்மரித்தாலும் சகல பாவங்களையுமொழித்து அசுவமேத பலனையடைவார்கள். இது பிரமதேவருக்குச் சிவபெருமானு லுபதேசிக்கப்பட்டது. இதனைப் படித்தவர்களும் கேட்டவர்களும் கோபம் மோகம்முதலியன நீங்கி உருத்திரலோகத்தை யடைவார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

சிவபூசாபலனுரைத்தது

முற்றிற்று.

பதினைந்தாவது

புண்ணிய க்ஷேத்திரங்க ளுரைத்த அத்தியாயம்.

முநிவர்களே! இவ்வாறுகூறிய ஸநத்குமாரமுநிவரை வியாஸமுநிவர் நோக்கி ஸ்வாமீ! திரியம்பகனுடைய ஸ்தானங்கள் எவ்வெவை? அவருடைய மூர்த்தங்களெத்துணையன? அம்மூர்த்தங்களைப்பூசிப்போர் அடையும்பலன்களெவை? எந்தமூர்த்தத்தைப் பூசிப்பதால் இஷ்டசித்திகளெளிதிலடையக்கூடும் எனக்கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகின்றார். ஆதிதேவனும் மகாதேவனும் கபர்த்தியாயும் எல்லாத்தேவர்களாலுந் துதிசெய்யப்பட்டவனும் பக்தர்களை யநுக்கிரகிப்பவனுமுள்ள சிவபெருமானை நமஸ்கரித்துச் சொல்லுகின்றேன். வியாஸமுநிவனே! ஷாட்குண்ய பரிபூரணரான சிவபெருமான் நானு பூதங்களிடத்தும் வியாபரித்திருக்கின்றார். அவரையே பலபேதமான நாமங்களால் தோத்திரஞ்செய்து பூசிப்பவர்கள் போகங்களையடைகிறார்கள். அவரே சூரியனுகிச் சர்வலோகங்களிலும் பிரகாசிக்கிறார். அவரையே பிராமணர்கள் பூசித்துப்பலனடைகிறார்கள். சூரியனே திரிமூர்த்திஸ்வரூபமென்று கூறப்படும். அவரேவிஷ்ணுவென்னும் பெயருடன் எல்லாவுலகங்களிலும் வியாபரித்துப் பாலனஞ்செய்து தசாவதாரங்களெடுத்துத் தருமத்தை நிலை நிறுத்துகிறார். அந்தமூர்த்தத்தைப்பூசித்து அநேகர் சித்தியடைந்திருக்கிறார்கள். அவரே சுப்பிரமணியராயிருந்து தேவசேனுதிபத்தியத்தை வகித்து அசுரர்களைக்கொன்று எப்போதும் பகவானுடன் கூடி ஸோமாஸ்கந்த மூர்த்தியாய் விளங்குகிறார். இன்னும் சந்திரன் குபேரன் வருணன் சப்தமருத்துக்கள் உமாபதிமுதலிய மூர்த்திகளாகவும் விளங்குவர். எவ்வெவர் எவ்வெம்மூர்த்தங்களிற் பக்திசெய்கிறார்களோ அவ்வவர்கட்கு அவ்வம் மூர்த்தங்களிலிருந்தே எல்லாவபீஷ்டங்களையுங் கொடுக்கின்றார். ஆகையால் அவர்வசிக்குமிடங்களை அநேகவருஷங்கள் சொன்னுலுஞ் சொல்லிமுடியாது. எங்கும்நிறைந்த மகேசுவர சுருபத்தை அகண்டமன்றிக் கண்டமாகக்கூறமுடியாது. ஆயினுஞ் சுருக்கிச்சொல்லுகின்றேன். சீக்கிரத்திற்சித்திகளைக் கொடுக்கத்தக்க உருத்திரபதமென்னும் க்ஷேத்திரமும், சிலேஷ்மாதகமும், அவிமுக்தமும்,

1 2 3

மகாலயமும், கோகர்ணமும், பத்திரகர்ணமும், சுவர்ணசலமும், மாஹேசுவரமுமாகிய ஸ்தானங்களில் இடைவிடாதெழுந்தருளியிருப்பர். மாஹேசுவரக்ஷேத்திரம் இரண்டுயோசனை யகல நிகளங்களையுடையது. அங்கே உயிர்துறந்தவர்களுக்குப் பூர்வம் சிவபெருமானைப் பிரார்த்தித்து உமாதேவியார்வரமேற்றப்படி உருத்திரதேகங்கிடைக்கும். சிலேஷ்மாதகமென்னும் ஸ்தலம் பதினன்குயோசனை விஸ்தீரண முடையது. அங்கே சிவபெருமானைப்பூசித்தவர்கள் இஷ்டசித்திகளை யடைவார்கள். அவ்விடத்தில் அநேகர் பூசித்துக் காணுபத்தியமடைந்திருக்கிறுர்கள். விஷ்ணு சந்திரன் இந்திரன் சூரியன் மருத்துக்கள் அசுவினிதேவர்கள் பூசித்து மேலான பதவியை யடைந்தார்கள். சுவர்ணசலமென்பது மேருவின் சிகரத்தில் அரையோசனை விஸ்தீரணமுடையது. அங்கேயும் சித்தர் முநிவர் முதலானேர் பூசித்துப்போகபாக்கியங்களை யடைந்துளர். அவிமுக்தமாகிய காசிக்ஷேத்திரத்தில், பிரணவஸ்வரூபியான பகவான் விசுவேசுவரனென்னும் பெயருடன் விளங்குகின்ருர். இது தேவர்களுக்கும் அடையத் துர்லபமான ஸ்தானமாகும். இந்தக்கலிகாலத்திற் பகவான் அவ்விடத்திற் பிரத்தியக்ஷமாக வசிக்கிருர். காசியிலேயே கர்த்தமேசுவரம் பீமசண்டேசுவரம் இராமேசுவரம் விருஷபத்துவஜேசுவரம் மணிகர்ணிகை என்னும் ஐந்துக்ஷேத்திரங்களிற் பஞ்சாயதனமாக விளங்குகின்ருர். அங்கே அநேகமான யோகிகள் எக்காலமும் பூசித்துக்கொண்டிருக்கிருர்கள் - அங்கேயிறப்பவர்களுக்கு வாசாமகோசரமான ஆனந்தஸ்வரூபங் கிடைக்கிறது. பரமசிவன் அதனை நீங்காதிருத்தலின் அவிமுக்தமெனப்பெயர்வந்தது. [அவிமுக்தம்= நீங்காதது] அந்த க்ஷேத்திரத்தில் பிரமாதிதேவர்கள் உபாசிக்கிருர்கள். பத்திரகர்ணமென்னும் க்ஷேத்திரம் அதிசீக்கிரத்தில் மனேபீஷ்டங்களைக் கொடுக்கவல்லது. தமக்குத்தாமே சமானமாக விளங்கும். உஜ்வலம் சுபுண்யமென்னும் இரண்டு க்ஷேத்திரங்கள் அதிபுண்ணியகரமாயும் பார்ப்பதற்கு ரம்மியமாயும் கங்காத்துவாரத்தில் விளங்குகின்றன. அந்தக்ஷேத்திரங்களை யதர்மவான்களும் பாவிகளும் ரஜோ தமோ குணங்களுடையவர்களும் அடையார். களங்கமற்ற மனமுடையவர்களே அங்குவசிப்பார்கள். பிரமவர்த்தமென்பது மகாபுண்ணியகரமானது. அங்கே பரமசிவனைப்பூசித்தாற் சீக்கிரஞ் சித்திகளையடையலாம். வியாஸமுநிவனே! மகாபுண்ணியகரமான ஸ்தானங்களைச்சொன்னேன் இந்த ரகசியஸ்தானங்களைச்சிவபக்தியுடையவர்களுக்கும் வேதத்தில் நம்பிக்கை வைத்தவர்களுக்கும் உபதேசிக்கக்கடவாய் என்று சொல்லினர்.

பதினாறாவது

மேற்படி அத்தியாயம்.

இவ்விதமாய்க்கூறிய ஸநத்குமாரமுநிவரை நோக்கி வியாஸமுநி வர் வினவலாயினர். பகவானே! பரமசிவனுடைய ஸ்தானமஹாத்மியங்களையும், தீர்த்தமகிமைகளையுங் கேட்கக்கேட்க எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. மறுபடியுந் தேவதேவனான மஹாதேவனுடைய சரித்திரங்களை விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென, ஸநத்குமாரமுநிவர் சொல்லத் தொடங்கினர்: வியாஸமுநிவனே! சர்வபாவங்களையும் ஒழிக்கத்தக்கதாயும் ஆச்சரியகரமாயும் பர்வகாலங்களில் ஒருமுறை படித்ததினால் இந்திராதிலோகங்களைக் கொடுக்கவல்லதாயும் லோகாநுக்ரகார்த்தம் மகாதேவனாற்சொல்லப்பட்டிருக்கும் இரகஸ்யங்களை உனக்குச் சொல்கிறேன். பக்தியுடன் கேட்பாக. பரமசிவனுக்கு அத்தியந்த பிரியமுள்ள ஸ்தானங்களாவன: ஸாகலாண்டம், குரண்டம், முகுண்டம், மண்டலேசுவரம், காலஞ்சரம், கதகண்டம், பலேசுவரம் என்னும் ஸ்தலங்களிற்பரமசிவன் அநேகவிதமான பூதகணங்களோடும் தேவர்கள், ருஷிகள், கந்தர்வர்கள், சித்தர்கள் முதலானவர்களாற் பூசிக்கப்பட்டு மிகவும் ப்ரீதியுடனே அவ்விடங்களிலிருப்பார். பிராணிகள் இந்த ஸ்தலங்களை ஒருமுறையாவது அடைந்து பரிசுத்தமனதோடு கூடி அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து தேவபிதுர்களுக்குத் தர்ப்பணங்களைச்செய்து பரமசிவனைப் பூசித்து நியமத்துடன் ஒருநாள் வசிக்கும்பக்ஷத்தில் ராஜஸூய அசுவமேதயாகங்களைச்செய்த பலனையடைவார்கள். மேற்சொன்னவிடங்களிற் பிராணிகள் பாபங்களைச்செய்யாமல் வாஸஞ்செய்து அந்தியகாலத்திற் சரீரத்தை விடும்பக்ஷத்தில், சாங்கிய முதலிய யோகங்களுக்குந் துர்லபமாயும், அஜ்ஞானிகளுக்கு அப்ரத்தியக்ஷமாயும், பாசுபதாதி விரதங்களாற் சாதிக்கத்தக்கதாயும், சிவகணங்களால் வசிக்கத்தக்கதாயுமுள்ள மஹாதேவபதவியை யடைவார்கள் என்று கூறியருளினர்.

பதினேழாவது

மேற்படி அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஷாட்குண்ய பரிபூரணரான என்குருவே! மேற்கூறிய ஸ்தலங்களிற் கோரிக்கையுடன் பூசைசெய்தால், பரமசிவன்கொடுக்கும்பலனை விவரமாய்ச் சொல்லவேண்டுமென, வியாஸமுநிவரைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்: வியாஸமுநிவனே! அதிகரகஸ்யமான சரித்திரங்களை உமக்குச் சொல்லுகிறேன். பூர்வம் ஒருகாத்தில் அநேகமான வாலகில்யாதி மகருஷிகள் அநேகநாள் பரமசிவனைப் பூசித்து அவருடைய அநுக்கிரகத்தைப் பெறவேண்டுமென்று, த்ரிகாலங்களிலுந் தப்பாமற் பூசித்தனர். அவ்வாலகில்யருடைய பூசைக்குப் பரம

சிவன் சந்தோஷப்பட்டுத் தரிசனங்கொடுக்கஅவர்கள்மகாதேவரைச்சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய், தேவதேவனே! பரத்துக்கும் பரமான பரம்பொருளே! வாசாமகோசரஸ்வரூபியே! வரதமூர்த்தியே! எதுபார்க்கமுடியாததோ எது சொல்லமுடியாததோ அப்பொருளை நாங்கள் பிரத்தியக்ஷமாய்க் கண்டோம் எங்களுக்குப்பதினன்கு லோகங்களிலும் துர்லபமானவஸ்து ஒன்றுங்கிடையாதென்று ஆனந்தப்படுகிறோம் ஆகையால், எங்கள்பேரிற் கிருபைசெய்து நீர் வசிக்கும் இரகஸ்யமானஸ்தலமகாத்மியங்களையும் அவ்விடங்களிற் பூசித்தால் அடையும்பலன்களையும் லோகாநுக்கிரகார்த்தமாய் அநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, வாலகில்யாளை நோக்கிருத்திரமூர்த்தி திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். அதையுமக்குச்சொல்லுகிறேன் முனிவர்களே! எனக்கு முக்கியமானஸ்தானங்கள் அநேகமுண்டு அவை மகாபுரம், சக்கரபுரம், ஸ்ரீபர்வதம் ஜாப்பியேசுவரம், ஆம்ராதிகேசுவரம், மகாகாளபுரம், மத்யமேசுவரம் தேவதாருவனம், மகாபைரவம், குஹ்யஸ்தானமாம். இவை யாவும் எனக்குப்பிரியமுள்ள ஸ்தலங்களாம். இவ்விடங்களில் எந்தவர்ணத்தாராயினும் என்னை ஒருமுறை தெரிசித்தாற் சீக்கிரத்தில் இஷ்ட சித்தியடைவார்கள். குஹ்யஸ்தானத்தில் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர மிலேச்சர்கள் பாவிகள் ஸ்திரீகள் முதலிய யாவராயினும் என்னைப்பூசித்தால் அவர்கள் இந்திரலோகத்தில் அநேககாலம்வசித்து மீண்டும் பூலோகத்திற் பிரபுக்களாய்த்தோன்றிச் சர்வசுகங்களையு மநுபவித்துக் காணுபத்தியத்தை யடைவார்கள். இந்தஸ்தானங்களிற் பிதுர்களைக்குறித்துச் சிராத்த தர்ப்பணங்களைச் செய்தவர்கள் பிதுர்களுடன் சுவர்க்கலோகத்தில் வசிப்பார்கள். இவை அடைதற்குத் துர்லபமானஸ்தலங்கள். இவற்றை யுனக்குச் சொன்னேன். இவற்றின் மகாத்மியத்தை யறிந்து அந்தியகாலத்தில் அங்கடைந்து உயிர்துறந்தால் அவர்கள் உருத்திரசாரூப்பியத்தை யடைவார்கள். எல்லாப்புண்ணியஸ்தானங்களிலும் கங்காத்துவாரத்தில் விளங்குங் குஹ்யஸ்தானமே விசேஷப்பட்டது. அதன்மகிமையைத் தேவர்களும் அறியார்கள். இது சிரத்தையில்லாதவனுக்குச் சொல்லப்படாது. சிஷ்யனுயும் புத்திரசமானனுயுமுள்ள சிவபக்தனுக்கே சொல்லத்தகும். இந்த அத்தியாயத்தைப் பக்தியுடன் பர்வகாலங்களில் வாசித்தவர்கள் சதுர்வித புருஷார்த்தங்களை யடைவார்கள் என்று ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

புண்ணிய க்ஷேத்திரங்க ளுரைத்தது

முற்றிற்று.

பதினெட்டாவது

சிவபெருமானது பிரபாவமுணாத்த அத்தியாயம்.

இவ்வாறு கூறிய ஸநத்குமாரமுநிவரை நோக்கி, வியாஸமுநிவர் ஸ்வாமீ! மகாதேவன் விஷ்ணு பிரமன் ஆகிய விவர்களிற் கிருத்தியங்களாற் சிறந்தோர் யாவரென்பதை விளக்கியருளவேண்டுமெனவினவ, ஸநத்குமாரர் சொல்லத்தொடங்கினர். பூர்வத்தில் மூவுலகங்களையும் வென்ற பலிச்சக்கிரவர்த்தி தானே பிரபுவாயிருக்கையில், விஷ்ணுமூர்த்தியானவர் தேவர்களாற் பிரார்த்திக்கப்பட்டு அவனிடஞ்சென்று திரிலோகங்களையுந் தானமாகவாங்கி அம்மாபலியைப் பாதாளலோகத்திற் கனுப்பி க்ஷீரசமுத்திரத்தில் யோகநித்திரையிலிருந்தனர். அக்காலத்திற் பிரஹலாதனாதி யசுரர்கள் புண்டரீகாக்ஷனாகிய விஷ்ணுமூர்த்தியைத் தரிசிக்க விரும்பி க்ஷீரசமுத்திரத்தையடைந்தார்கள். அச்சமயத்தில், சித்தர் வித்தியாதரர் நாகர் கந்தர்வர் தேவர்கள் பிரமருஷிகள் அப்சரசுகள் முதலானவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் யாவரும் ஒன்றுகூடிப் பீதாம்பரதாரியாய்ச் சேஷசயனத்திற் றிருக்கண் வளருந் திருமாலையடைந்து சாஷ்டாங்கமாகப்பணிந்து துதிக்கின்றார்கள்: ஜகத்ரக்ஷகராகிய விஷ்ணுமூர்த்தியே! நீரே கர்த்தா! நீரே காம குரோத லோபங்களைவென்றவர்! நீரே ஸத்வகுணமுடையவர்! நீரே திரிலோகங்களையும் பரிபாலனஞ்செய்கிறீர்! உலககண்டகர்களாகிய அசுரர்களை யடிக்கடித் துவம்சஞ்செய்து எங்கள் பதவியை நிலைநிறுத்துவோரு நீரே! வேதங்களைக் களவாடிக்கடலிலொளித்த சோமுகாசுரனைக்கொன்று அவற்றை யெங்களுக்குக் கொடுத்தவரு நீரே! வர்ணசங்கரமாகுங் காலத்தி லவதரித்துத் தருமமார்க்கத்தை நிறுத்துபவரு நீரே! இவ்வுலகம் ஜலத்தில் மூழ்கியபொழுது அதனை நிலைப்படுத்தி யிரக்ஷித்த வராகமூர்த்தியு நீரே! உம்மைக்காட்டிலு மெளியேங்கட்குக் கதிவேறில்லையென்று தோத்திரஞ்செய்தார்கள். அப்பொழுது தேவாசுரர் முதலிய எல்லோரையும்பார்த்து விஷ்ணுமூர்த்தி விளம்பலாயினர்.

தேவர்களே! ருஷிகளே! அசுரர்களே! எல்லாவுலகிற்குங்காரணபூதனாகிய ஜகதீசனுடைய மகிமையைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக: சிவபெருமானை யர்ச்சனைசெய்தே யானும் பிரமனும் இவ்வகைய உயர்ந்த பதவியையடைந்திருக்கிறோம். பூர்வத்தில் யானும் பிரமனும் தனித்தனி ஜகத்கர்த்தாக்களென்று விவாதஞ்செய்துகொண்டிருக்கையில், ஓர்ஜோதி தோன்ற, நாங்கள் அதன் அடியையு முடியையுந்தேடி யறிவோமென்று ஆயிரவருஷங்கள் அலைந்தும் காணமுடியாது அந்தச்சோதியையடைந்து தோத்திரஞ்செய்தோம். அப்பொழுது சிவபெருமான் பிரசன்னராகி, மைந்தர்களே! நீங்களிருவரும் விவாதங்கொள்ளவேண்டாம். பிரமனே! நீயென் வலப்புறந்தோன்றினை, விஷ்ணுவே! நீயென்னிடப்புறந்தோன்றினை, உங்களிருவருக்கும் என்கிருபை பரிபூரணமாக விளங்கும். நீங்கள்

சமானஸ்தர்கள். பிரமனே நீ சிருஷ்டியும், விஷ்ணுவே நீ ஸ்திதியுஞ்செய் வீர்களாக வென்றருளிப் பலவரங்களளித்து அந்தர்த்தானமாயினர். ஆனபடியால் அண்டாண்ட பிரமாண்டங்களுக்குங் காரணபூதராகிய சிவ பெருமானே யெல்லோருடைய மனோபீஷ்டங்களையுங் கொடுக்கவல்லவர். நீங்கள் அவரைத்துதிசெய்தே உங்கள் விருப்பங்களைக் கைகூடப்பெறு வீர்களென்று கூறினர். ஆனபடியால் வியாஸமுநிவனே! சுவயம்புவாகிய சிவபெருமானே ஸர்வதேவ சிரேஷ்டனென் றுணர்வாயாகவென்று ஸநத் குமாரமுநிவர் கூறினர்.

சிவபெருமானது பிரபாவமுரைத்தது

முற்றிற்று.

பத்தோன்பதாவது

மலர்களின் மகிமையுரைத்த அத்தியாயம்.

திரிகாலங்களையுமுணர்ந்த ஸநத்குமார முநிவரைநோக்கி, வியாஸ பகவான் வினவுகின்றார். சிவலிங்கப் பிரதிஷ்டையாலடையும் பலனும், சிவபூஜையிற் புஷ்பார்ச்சனைசெய்வதால் வரும்பலனும்,பாலினாலபிஷேகஞ் செய்தலால் வரும் பலனும், இவையென்று விரித்துச்சொல்லவேண்டும். எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார். பராசரபுத்திரனே! அக்கினிஷ்டோமம் - அத்தியக்கினிஷ்டோமம் - உக்த்யம் - வாஜபேயம் - பௌண்டரீகம்-அதிராத்திரம்-அப்தோர் யாமம் என்னும் ஏழுயாகங்களை யும் முறைப்படி தக்ஷிணைகொடுத்து அன்னதானங்கள் செய்து முறைப்படி முடித்தவர்கள் எந்தப்பலனையடைவார்களோ அந்தப்பலனையொருசிவலிங் கப்பிரதிஷ்டை செய்தவன் அடைவான். ஸ்திரீகளோ புருஷர்களோ சூத்திரர்களோ நபும்சகர்களோ சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்தவர்கள் எவ் வகையினரேனும் அற்புதவருஷங்கள் உருத்திர பதவியில் வாழ்வார்கள். மானுடஜனன மெடுத்ததுமுதல் வைசாக துலா கார்த்திகை மாகமாசங் களில், கங்காதி மகாநதிகளில் ஸ்நானஞ்செய்தவர்கள் அடையும் பலனைச் சிவபூஜைக்குச் சந்தனதானங் கொடுத்தவன் அடைவான். சிவாராதனைக் காகப் பூதானஞ்செய்தவர்கள் அநேக கோடிகாலம் உருத்திரசாரூப்பி யத்தையடைந்து உருத்திரலோகத்தில் வாழ்வார்கள். சிவலிங்காபிஷேகத் திற்குத் தைலதானஞ் செய்தவர்கள் அதனினும் நான்குபங்கு விசேஷ பலனையடைவார்கள். நெய்யைத்தானஞ்செய்தவன் அறுபதுகோடிவருஷ மும், கபிலைப்பசுவின் பாலைத் தானங்கொடுத்தவன் எண்பதுகோடிவருஷ மும் உருத்திரபதவியில் வாழ்வார்கள். திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து மாசோபவாச பக்ஷோபவாசங்களை ஆயுள் காலம் வரையிலுஞ் செய்தவர் கள் அடையும்பலனைச் சிவலிங்கத்திற்கு க்ஷீராபிஷேகம் ஒருமுறை செய் வதனாலடையலாம். நூறுகோதானஞ் செய்வதால் வரும்பலனைச்சிவபெரு மானுக்குச்சாத்திய ஒரு மலராலடையலாம். சிவபெருமானை நிருத்த கீத

வாத்தியங்களாற் சந்தோஷமுண்டாக்கினவன் தான் செய்த நூறுகுற்றங்கள் க்ஷமிக்கப்படுவான். கருநெய்தன் மலராற் சிரவணமாசத்திலும், தாமரையாற் புரட்டாசிமாசத்திலும், நாயுருவி தருப்பை முதலியவற்றால் அற்பசிமாசத்திலும் பூசிக்கத்தகும். உற்பலம் - கரவிதம் - வெள்ளெருக்கு - சம்பகம் - வில்வம்-அறுகு முதலியவற்றால் எக்காலமுஞ் சிவபெருமானைப் பூசிக்கலாம். சிவபிரானுக்கு வெள்ளிய மலர்களில் விருப்பமாம். [பகபுஷ்பம்] கொக்குமந்தாரை - கரவீரம் - வெள்ளெருக்கு - ஊமத்தம் இந்நான்கு மலர்களின் கந்தத்தையும் சிவபெருமான் ஆக்கிராணிப்பார். கொக்குமந்தாரையும் பத்மமும் நிர்மாலியமாகமாட்டா. ஒருற்பலம் ஆயிரங்கரவீரமலரையும், ஓர்வெள்ளெருக்கு ஆயிரம் உற்பலத்தையுமொக்கும். ஓருமத்தை ஆயிரம் சம்பகத்தையும், ஓர் நாககேசரம் ஆயிரம் சம்பகத்தையுமொக்கும். சுரபுன்னை ஒன்றுக்கு ஆயிரம் சிந்துபுஷ்பங்கள் சமானமாகும். கர்ணிகாரம் ஒன்றுக்கு ஆயிரம் சுரபுன்னையொக்கும். சிந்துபுஷ்பம் ஆயிரத்திற்கு ஓர் கண்டங்கத்திரி மலரொக்கும். எல்லா மலர்களைக்காட்டிலும் வில்வபத்திரமே விசேஷம். வில்வபத்திரத்திற்குச் சிவபெருமான் சந்தோஷிப்பதுபோல வேறெந்த மலருக்குஞ்சந்தோஷிக்கமாட்டார். சிறந்த மலர்களாற் பெறும் போகங்க ளெல்லாவற்றையும் ஒன்று கூட்டினால் அதனைக்காட்டிலும் அறுபத்துநான்குபங்கு பலனை வில்வத்தாலடையலாம். சிவபெருமானுக்கு அருச்சிக்கத்தக்க நல்லமலர்களைப் பிரயத்தனப்பட்டுத்தேடி அஷ்டமி திரயோதசி சதுர்த்தசி முதலிய தினங்களில் அவற்றாற் பூசிக்கவேண்டும். அப்படி மலர்கள் கிடையாத பக்ஷத்தில் அவற்றின் பத்திரங்களாலாவது அர்ச்சிக்கலாம். சிவபெருமானைப்பத்திர புஷ்பங்களா லருச்சிப்பவன் துர்கதி யடையமாட்டான். சிவசந்நிதியில் எப்பொழுதும் திருவிளக்குத் தொண்டு செய்தவன் உருத்திரலோகத்தை யடைவான். சிவாலயத்திற்கு நைவேத்தியகட்டளை நியமித்தவன் உருத்திர சாரூப்பியமடைவான். சிவபெருமானே சர்வலோக காரணபூதரென்றுணர்ந்து திரிகரணங்களுமொத்துப் பூசித்தவன் உருத்திரசாயுச்சியமடைவான் என்று ஸநத்குமார முநிவருரைத்தனர்.

மலர்களின் மகிமையுரைத்தது

முற்றிற்று.

இருபதாவது

சிவபுண்ணியமுரைத்த அத்தியாயம்,

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி, ஸ்வாமி! சிவபெருமானை யெவ்வாறு ஆராதிக்கவேண்டுமென்பதை விவரமாகச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் கூறுகிறார். வியாஸமுநிவரே! பூர்வம் ஸ்ரீகைலாயகிரியில் பார்வதி சமேதராக எழுந்தருளியிருந்த சிவபெருமானைத் திருநந்திதேவர் இவ்விஷயத்தைப்பற்றி வினவுகையில்

அவர் திருவாய்மலர்ந் தருளியவற்றை யான் நந்திதேவராற் கேள்வியுற்ற வகையே சொல்லுகிறேன் கேட்பாயாக : சிவபெருமான் சொல்லுகின்றார். என்னுடைய சந்நிதியொன்று நியமித்து அதற்குப் பொற்கலசம் அமைத்தவன் அப்படிப்பட்ட அநேககலசங்கள்வைத்த உயர்ந்த மாளிகையில் வசிப்பான். என்னை யுத்தேசித்துப் பசுக்கள் - பொன் - வஸ்திரம் முதலியவற்றைத் தானஞ்செய்தவன் உலகமுழுவதுக்கும் ஏகசக்கிராதிபதியாய் அரசுசெய்வான். எனக்கு உற்சவத்திற்காக ருஷபவாகனஞ்செய்து வைத்தவன் சர்வபாவங்களையும் போக்கி யென்னோடு கூடிவசிப்பான். நிவேதனம் - நிருத்த கீத வாத்தியங்கள் - தீப தூப முதலியன நடக்கும்படி ஆலயக்கட்டளைகள் நியமித்தவர்கள் பிரமலோகத்தில் வசிப்பார்கள். சிவநாமங்கங்களைச் சொல்லிக் கரதாளஞ்செய்தோர் பிரமஞானிகளாவார்கள். அக்கினிஷ்டோமாதி யாகங்களால் என்னைப்பூசித்தோர் இந்திரபதவியடைவார்கள். திரிகால சந்தியாவந்தனாதிகளாற் கைவல்லிய சித்தியடைவர். இயக்கர்களுக்கு நானே குருவாயிருக்கிறேன். மத்தியானகடன்களால் என்னைப்பூசித்தோர் உலகபாலகராவார்கள். என்னுடைய ஆலயத்தைத் திருவலகிடுதல் ஐந்நூறுபங்குபலனும், ஆலயத்தை மெழுகிக் கோலமிடுதல் ஆயிரம்பங்கு பலனுங்கொடுக்கும். இலிங்கக்குறியைச் சுவர்ணத்தினாலும் வெள்ளியினாலும் அர்ச்சித்தவர்கள் காணபத்தியமடைந்து அநேககாலம் உருத்திரபதவியில் வாழ்வார்கள். தைலாபிஷேகஞ் செய்தவன் ஐந்நூறுபங்குபலனும், பனிநீர் பச்சைக்கர்ப்பூரமுதலியன கலந்த சந்தனாபிஷேகஞ் செய்தவன் ஆயிரம்பங்கு பலனும், க்ஷீராபிஷேகம் செய்தவன் ஐந்நூறுபங்குபலனும், மலர்மாலையாலலங்கரித்தவன் அறுநூறு பங்குபலனும், கீதவாத்தியங்கள் செய்வித்தவன் எழுநூறுபங்கு பலனும் அடைவார்கள். அகருசந்தனங்கலந்த தூபங்கொடுத்தவன் ஆயிரங்குற்றங்கள் க்ஷமிக்கப்படுவான். சிவாலயத்தில் நெய்யினால் தீபம்வைத்தவன் நந்திதேவருக்குச் சமானனாவான். நெய்யினாற் சமைத்த அன்னத்தை நிவேதித்தவன் காணபத்தியமடைந்து, தன்பிதுர்களை நற்கதிக்குப்புகச்செய்வான். சிவநிர்மாலியங்களைக் கால்கைகள்படாமல் அதிதூரத்திற் சேர்த்தலாகிய கைங்கரியத்தைச் செய்தவன் பதினான்கு மந்வந்தரவளையில் அழியாப் பதவியை யடைவான். பூஜாகாலத்தில் வேதியருக்குச் சரியான தக்ஷிணை கொடுத்தவன் ஒருகாலத்தும் இயமதருமனை யடையான். சிவபூஜை செய்யும்பிராமணர்கட்குத் தீபதானஞ்செய்தவன் உருத்திர சாரூப்பியமடைந்து வாழ்வான். திருவீதிமகோற்சவத்திற்குக் குடையைத் தானஞ்செய்தவன் இந்திரலோகத்தில் திவ்வியவிமானத்திலேறிச் சாமரைமுதலியன வீசப்பெற்றுச் சந்தோஷித்துச் சஞ்சரிப்பான். அஷ்டமி சதுர்த்தசி தினங்களிற் பிரமசரிய நியமத்துடன் சிவார்ச்சனை செய்து பிராமணர்களையும் சுமங்கலிகளையும் பூசித்தவன் தன் விருப்பின்படி திவ்வியவிமானங்களிலேறி இந்திராதிபோகங்களில் வாழ்வான். சிவநாமத்தை ஸ்மரணஞ்செய்தவன் காணபத்தியமடைவான். சிவாலயங்களைத் தரிசித்தவன் மிருத்தியு

பயத்தையொழிப்பான். மனவாக்குக் காயங்களால் ஒரு குற்றமுஞ்செய்யாது ஏககாலபோசனஞ்செய்து சிவார்ச்சனை செய்து கொண்டிருந்தவன் பிரமபட்டம்வரையில் என்னுடைய சிவலோகத்தில் வசிப்பான். அநேக விக்கினங்களும் வியாதிகளும் வந்தவிடத்தும் அவற்றை விலக்கிக்கொண்டு சிவபூசையை முற்றச்செய்தவனுக்குப் பிராகிருதப் பிரளயமேகிடையாது. விஷ்ணுவாதி தேவர்களை யநேககாலம் உபாசித்து வைகுந்தமுதலிய பதவிகளையடைந்தவர்கள் அநேககாலத்திற்குப்பின்னர் மீண்டும் பூவுலகத்தை யடைவார்களேனுஞ் சிவபதவியையடைந்தவன் ஒருகாலத்திலும் பிறவியடையவேமாட்டான். சராசராத்மகமான பிரபஞ்சமுழுதும் நசிக்குங் காலத்திலும் என்பதவிமாத்திரம் நசியாமலே விளங்கும். என்னையெந்த மூர்த்தத்திலே பூசிக்கினும் யானே அப்பூசையைப் பெற்றுக்கொள்ளுகிறேன். என்னையே யெல்லாம்வல்ல சர்வசக்திமானென்றுணர்ந்த உண்மை ஞானியும், நானுமே யெப்பொழுதும் நாசரகிதர்களாக விளங்குகிறோம். உலகவியாபாரத்தி லிருப்பினும் சுகதுக்கங்களை யெனக்கு அர்ப்பணஞ் செய்தவன் உருத்திரலோகத்தில் வாழ்வான். எண்பது சுவர்ணபுஷ்பங்களாலர்ச்சித்தபலனை யோர்கொக்குமந்தாரை மலர்கொடுக்க வல்லதாதலின், அவ்வகைய கொக்குமந்தாரை யாயிரத்தால் என்னை யர்ச்சித்தவன் எனக்குச்சமானமான தேகத்தை யடைந்து காளகண்டமும் சதுர்ப்புஜமும், திரிநேத்திரங்களும் ருஷபத்துவஜமும் பெற்று அநேககோடிகாலம் வாழ்வான். என்னுடைய நிர்மாலியத்தை மிதித்தவன் ஆயிரவருஷம் மிருகபக்ஷியாதி ஜனனமெடுத்து வருந்துவான். முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் இருடிகளும் யக்ஷ கின்னர கந்தர்வர்கள் தானவர்கள் நாகராஜர்கள் முதலிய எல்லோரும் என்னைப்பூசித்தே உயர் பதவியை யடைந்திருக்கிறார்கள். இந்தவிஷயத்தை வாசித்தும் பிறர்க்குரைத்தும் எனக்கு அர்ப்பிதஞ் செய்தவர்கள் உருத்திரபோகத்தை யடைவார்கள் என்று கூறியருளினர்.

சிவபுண்ணியமுணாத்தது
முற்றிற்று.

இருபத்தோன்றாவது
சுவர்ண புஷ்ப சமானமுணாத்த அத்தியாயம்.

இவ்விதமாகச் சிவபெருமான் கூறியவற்றைச்சொல்லிவந்தஸநத்குமாரமுநிவரைநோக்கி, வியாஸமுநிவர் வினவுகின்றார். மலர்கள் எப்படிப்பட்டன? மலர்கள் கிடையாவிடின் அதற்குப்பிரதியாக எதைக்கொண்டர்ச்சிக்கலாம் இதனைத் தெரிவிக்க வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் கூறலாயினர். பூர்வம் இவ்விஷயத்தைப்பற்றிச் சிவபெருமான் சொல்லியவாறே சொல்லுகின்றேன். நந்தீ! செந்நிறமும் பொன்னிறமும் வெண்ணிறமுந் தனித்தனி யுடையமலர்களும், சூக்ஷ்மமான முட்களையுடைய

மரங்களிலுள்ள மலர்களும் எனக்கு விருப்பத்தை யுண்டுசெய்யும். தேவர்களுக்கு வெண்மலர்களும், அசுரர்களுக்குத் தூர்வாசனையுடைய மலர்களும், இராக்கதர்களுக்கு முட்களையுடைய புஷ்பங்களும் பிரீதிசெய்யும். எல்லாப்பொருள்களிலுஞ் சுவர்ணமே பிரதானமாதலின், சுவர்ணபுஷ்பத்தாலென்னை யர்ச்சித்தவன் எனது சாரூப்பியத்தை யடைந்து, அப்சரசுகளுடன்கூடி அநேககாலம் வாழ்வான். சுவர்ணபுஷ்பமாவது ஒரு * கர்ஷமாகிலும், பதினொருளுந்தளவாகிலும் எடையுடைய சுவர்ணத்தாற் செய்யப்படுவது. துரோணம் † குந்தம் இவற்றின் மலர்கள் சுவர்ணபுஷ்பங்கட்குச் சமானம். செவ்வரத்தை நரகேசரம் இவற்றின்மலர்கள் இரண்டு சுவர்ணபுஷ்பங்கட்கும், சிறுசண்பகம் மல்லிகை இவை ஐந்து சுவர்ணபுஷ்பங்கட்கும், சாதிமல்லிகை முல்லை யிவற்றின் மலர்கள் ஆறு சுவர்ணபுஷ்பங்களுக்கும், செந்தாமரைமலர் ஏழுசுவர்ணமலர்கட்கும், அசோகமலர் பத்துச் சுவர்ணபுஷ்பங்கட்கும், நாகமலர் பதினொரு சுவர்ணபுஷ்பங்கட்கும், ‡ விருக்ஷோத்பலம் பன்னிரண்டு சுவர்ணபுஷ்பங்கட்கும், காரகிற் புஷ்பம் பதின்மூன்று சுவர்ணபுஷ்பங்கட்கும், பத்ம புஷ்பம் முப்பத்திரண்டு சுவர்ணபுஷ்பங்கட்கும், குசேசயமலர் [நூறுஇதழ்களை யுடையதாமரை] எண்ணுயிரம் சுவர்ணபுஷ்பங்கட்கும், கரவீரம் இரண்டாயிரம் சுவர்ணபுஷ்பங்கட்கும், வெள்ளெருக்கு மூவாயிரத்திற்கும், கொக்குமந்தாரை நாலாயிரம் புஷ்பத்திற்கும், ஊமத்தை ஐயாயிரம் புஷ்பத்திற்கும், வில்வதளம் இலக்ஷம் சுவர்ணபுஷ்பத்திற்குஞ் சமானமாம்.

இந்தப் புஷ்பங்கொண்டு அஷ்டமி சதுர்த்தசிமுதலிய திதிகளில் சாயங்காலத்தில் சகஸ்திரநாமங்களால் அர்ச்சனை செய்தவன் தானே சிவமூர்த்தியாவான். இவ்விதமாகப் பூசிப்பவனுக்கு யக்ஷ ராக்ஷச பைசாசாதிகளால் ஒருவிபத்தும் உண்டாகமாட்டாது. என்னைப்பூசிப்போருக்கு வேறு விரதம் தானம் தவம் முதலியன ஒன்றும் வேண்டியதில்லை. மேற்கூறிய மலர்களில் ஏதேனும் ஒன்றைக்கொண்டு கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் சகஸ்திர நாமார்ச்சனை செய்தவன் அநேககோடிகாலம் என்னுடன் சமீபித்து வாழ்ந்திருப்பான். அகரு தேவதாரு முதலியவற்றால் தூபங்கொடுத்தவன் முப்பத்திரண்டு சுவர்ணங்களைத் தானங்கொடுத்த பலனை யடைவான். ஒருவருஷகாலம் சந்நிதியில் தீபம்வைத்து வந்தவன் அறுபதினுயிரவருஷம் என் உலகத்தில் வாழ்ந்திருப்பான். இவ்விதமாகப்பக்திசெய்தவர்கள் பெரும்புண்ணியசாலிகளாய் உயர்பதவிகளையடைந்து அநேககோடிகாலம் இஷ்டபோகங்களை யனுபவித்து வாழ்வார்கள் என்று சிவபெருமான் கூறினர். கேட்டீரோ வியாஸமுநிவரே யென ஸநத்குமார முநிவர் உரைத்தருளினர்.

சுவர்ண புஷ்ப சமானமுரைத்தது
முற்றிற்று.

* கர்ஷம் என்பது எண்பது குன்றிமணியெடை. † குந்தம்-குருந்தைமலர்.
‡ விருக்ஷோத்பலம் - மரக்குவளை. இது இத்தேசத்திலில்லை.

இருபத்திரண்டாவது
மாசோபவாச மகிமையுணர்த்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமானை நோக்கி எவ்விதமாக, எந்தமாசத்தில் விரதமிருக்கவேண்டும்? எந்தத் திர்த்தங்கள் சிவபெருமானுக்கு விருப்பையுண்டுசெய்யும்? எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் பூர்வம் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியவகையே சொல்லத்தொடங்கினர். சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறியது. பூர்வம் வாலகில்லியர்களுக்கு இவ்விஷயத்தைச் சொல்லியிருக்கின்றேன். நீயுங்கேட்பாயாக. பஞ்சமி சஷ்டி பூர்ணிமை முதலிய தினங்களில் உபவாசமிருந்து என்னை யர்ச்சிக்கும்பக்ஷத்தில்,சிறந்த ரூபவானும் பாக்கியவானுயுந் தோன்றுவான். கிருஷ்ணபக்ஷ அஷ்டமி சதுர்த்தசிகளில் ஒருநாள் உபவாசமிருந்து இராத்திரி நான்கியாமங்களிலும் என்னைப்பூசித்தவன், குபேர சம்பத்தோடு வித்தியாவானும் புத்திர பாக்கியவானும் பிறப்பான். சுக்கிலபக்ஷ அஷ்டமி சதுர்த்தசி திதிகளில் பூசித்தவன் மன்மதசரீரத்துடன் ஞானவானுகத் தோன்றுவான். நவமியில் ஏககாலபோஜனஞ்செய்து என்னைப்பூசித்தவன் விசாலமான பூமியையடைவான். துவாதசியில் ஏககாலபோஜனத்துடன் விரதமிருந்து பூசித்தவன் வித்தியர்வானும் தனவானும் ரூபவானுமாகச்சனிப்பான். ஒருவருஷகாலம் அமாவாசை விரதமிருந்து என்னைப்பூசித்தவனும், மாதந்தோறும் மூன்றுதினங்கள் எனக்காக விரதமிருந்து ஒருவருஷங்கழித்தவனும் இலக்ஷ வருஷங்கள் சுவர்க்கவாசஞ்செய்வார். கார்த்திகைமாதத்திற் சிவப்பிரீதியான தினங்களில் உபவாசமிருந்து அந்திப்பொழுதில் எனக்குத்தீபம் முதலியன வைத்து என்னைத்தரிசித்து நியமமாக விருந்தவன் சக்கிரவர்த்தியாவான். ஒருமாதகாலம் என்னைநோக்கி ஜலபானஞ்செய்துகொண்டு விரதமிருந்து விரதபூர்த்தியான பின்னர் பிராமணர்களுக்குத் தக்கதக்ஷிணை கொடுத்துச் சமாராதனை செய்வித்துப் போஜனஞ்செய்தவன் அழகான அன்னங்களால் அலங்கரிக்கப்பட்ட திவ்விய விமானத்திலேறி அநேக கோடிகாலஞ் சர்வாண்டங்களிலுஞ் சஞ்சரித்துப்பின்னர் ஜந்மாந்தரவுணர்ச்சியுற்றுத் தர்மவானுய்ப் பிரபுவாகவிளங்கிக் குறைவின்றி வாழ்வான். தைமாசத்தில் நாளொன்றிற்கு ஒருமுறை புசித்து அம்மாத முழுதும் விரத மநுஷ்டித்து மாசாந்தியத்திற் பிராமணர்கட்குத் தக்ஷிணை கொடுத்துப் போசனஞ் செய்வித்து எனக்கர்ப்பிதஞ்செய்தவன் அறுபதினுயிரவருஷம் சுவர்க்காதி போகங்களை யநுபவித்து மீண்டும் உயர் ஜனனத்தையடைவான். மாசிமாதத்தில் நாளொன்றிற் கொருமுறை புசித்தாவது, மூன்றுநாள்முற்றும் உபவாசமிருந்தாவது மாசவிரத மநுஷ்டித்தவன் தொண்ணூறுயிர வருஷங்கள் வரையில், தான்விரும்பிய வுலகங்களிற் சஞ்சரித்து மீண்டும் பூவுலகத்திற் சனித்துப் பிரமஞானியாவான். பங்குனிமாசத்தில் ஒருவேளை புசித்து அம்மாதமுழுவதும் விரதமிருந்து

பூர்த்திசெய்தவன் பிரமலோகத்தை யடைந்து மீண்டும் பூலோகத்திற் பிராமணஜனனமெடுத்து நான்கு வேதங்களையும் அத்தியயனஞ் செய்து அவ்வேதங்களிற் சொல்லியபடி யாகங்களை யநுஷ்டித்துப் பிரமஞானத்தையடைந்து மோக்ஷத்திற்கு அருகனுவான். சித்திரைமாதத்தில் ஒருமுறைபுசித்துப் பக்தியுடன் என்னைப்பூசித்து விரதபூர்த்திசெய்தவன் எண்பதினுயிரவருஷம் வருணலோகத்தில் வசிப்பன். வைகாசிமாதத்தில் ஒருமுறைபுசித்துப் பக்தியுடன் என்னைப்பூசித்து விரதபூர்த்திசெய்தவன் முப்பதினுயிரவருஷம் சுவர்க்கலோகத்தில் வாசஞ்செய்து மீண்டும் பூமியில் அரசனுய் ஜனித்து அநேக கோதானஞ்செய்வன். ஆனிமாசத்தில் ஒரு ஒருமுறைபுசித்தாவது, மூன்றுநாள் அல்லது ஒரு நாளாவது உபவாசமிருந்தாவது பக்தியுடன் என்னைப்பூசித்து விரதபூர்த்தி செய்தவன் சிசுஹத்தி, பிரமஹத்தி, குருபத்தினியைக் காமுறுதல் முதலிய பாவங்களைச் செய்திருந்தாலும் அவற்றினின்று நீங்கி நற்கதியடைவன். உலகத்தில்இவ்வித உபவாசபூஜைகளாலேயே யாவரும் நற்கதியடைவார்களாதலின் என் பூசையே எல்லாவற்றிற்குங் காரணம். நான்குவேதங்களையும், வியாகரண முதலிய சாஸ்திரங்களையும் அத்தியயனஞ் செய்து சமஸ்த யாகங்களையுஞ் செய்து குடும்பியாயும் பிரமஞானியாயுமிருக்கும் பிராமணனுக்குக் காராம் பசுவைக் கன்றுடன் தானஞ்செய்து எனக்கர்ப்பணஞ்செய்தவன் சூரியனுக்குச்சமானமான விமானத்திலேறித் திவ்ய சரீரத்துடன் அப்சரசுகளுபசாரஞ்செய்ய, பதினுயிரம் வருஷம் சுவர்க்கலோகத்தில் வசித்து மீண்டும் பூலோகத்தில் உத்தமமான க்ஷத்திரியகுலத்தில் ஜனித்து நோயற்ற வாழ்வையடைவன். பார்வதி! எந்தக்குலத்திற் பிறந்தோராயினும் என்னைப் பக்தியுடன் பூசிக்கும் பக்ஷத்தில் எப்போதும்துர்க்கதியையடையமாட்டார்கள். ஆடிமாதத்தில் சப்தமிதிதியில் உபவாசமிருந்தாவதுஅல்லது அம்மாசமுழுதும் பழங்களைப்பூசித்தாவது என்னைப் பக்தியுடன் பூசித்து விரதபூர்த்திசெய்தவன், பிரமகற்பபரியந்தம் சுவர்க்காதி போகங்களை யனுபவித்து, மீண்டும் பூலோகத்தில் ஜநித்துக் குபேரனுக்குச் சமானமான சம்பத்துடனும், தீர்க்காயுசுடனும் வாழ்வான். ஆவணிமாசத்தில் ஒருமுறை புசித்தாவது அஷ்டமிதினத்தி லுபவாசமிருந்தாவது விரத முடிவில் எனக்குத் திருப்தியாய்ப் பிராமணர்களை என்னுடைய மூர்த்தியென்றுபாவித்துப் பூசித்தவன் வாயுவேகமாகச் செல்லும் அம்சங்களாலலங்கரித்த திவ்யவிமானத்தில் திவ்யதேகத்துடனும், தன் பிதுர் கூட்டங்களுடனும், பத்தாயிரவருஷகாலம் சுவர்க்கலோகத்தில் வசித்து மீண்டும் பூலோகத்திற் சிவஞானியாவான். புரட்டாசிமாதத்தில் ஒருமுறை புசித்துப் பக்தியுடன் என்னைப்பூசித்து விரதபூர்த்தி செய்தவன் நூறுயிர வருஷம் வாயுலோகத்தில் வசித்து மீண்டும் பூலோகத்தில் வேதசாஸ்திர சம்பன்னனுயிருப்பான். அற்பசிமாச விரதமிருந்தவன் அறுபதினுயிர வருஷம் சுவர்க்கலோகத்தில் வசித்துக் குபேரசம்பத்துடன் வாழ்வான்.

எட்டுவருஷகாலம் முன்சொன்ன நியமப்படி என்னையர்ச்சித்தவன் நூறு அசுவமேதஞ்செய்த பலத்தையடைவான். ஒருநாள் புசித்தும் ஒருநாளுபவாசமிருந்தும் ஐந்து வருஷகாலம் என்னைத்தவறாமற் பூசித்தவன் ஆயிரம் அசுவமேதஞ்செய்த பலத்தையடைவான். ஒருபக்ஷம் உபவாசமிருந்து முறைப்படி பூசித்தவன் பத்து அக்கினிஷ்டோமஞ்செய்த பலத்தையடைவான். மாசோபவாசமிருந்து பூசித்தவன் பௌண்டரீக யாகஞ்செய்த பலத்தையடைவன். கந்தமூல பலங்களைப்புசித்து என்னைப் பூசித்தவன் வாஜபேயஞ் செய்த பலத்தையடைவன். ஜலபானஞ்செய்துகொண்டு என்னைப்பூசித்தவன் அப்தோரியாமஞ்செய்த பலத்தையடைவான். பிரமசரிய நியமத்துடனிருந்து என்னைப் பூசித்தவன் கருடசயன யாகஞ்செய்த பலத்தையடைவான். ஒருவருஷகாலம் தினமும் இருபத்தைந்து நாழிகைவரையில் என்னைப் பூசித்துச் சாயங்காலம் புசித்தவன் சத்திரயாகஞ்செய்த பலத்தையடைவான். ஒவ்வொருநாளும் உதயகாலத்தில் என்னைப்பூசித்து ஒருமுறை புசித்து மறுநாள் தான்புசிக்கும்வரையில் ஜலபானஞ்செய்யாமல் ஆறுமாசம் விரதமநுஷ்டித்தவன் அதிராத்திரமென்னும் யாகஞ்செய்தபலத்தையடைவான். நான்குமாசகாலம்வீராசனத்திலிருந்து ஒருவருக்கும் ஹிம்சைசெய்யாது என்னைப்பூசித்தவன் பதினாயிரவருஷம் சுவர்க்கலோகத்தில் வாழ்ந்து மீண்டும் பூமியிற் சற்குலத்துதித்து நோயற்றுத் தீர்க்காயுளுடன் வாழ்வான். பன்னிரண்டு வருஷம் இரவில்மாத்திரம் புசித்து ஒருவர்க்கும் ஹிம்சை செய்யாது ஜிதேந்திரியனாயிருந்து பூசித்தவன் எல்லாயாகங்களையுஞ் செய்தபலனையடைந்து விமானத்திலேறித்தான் விரும்பியவுலகங்களில் நூறாயிரவருஷஞ் சஞ்சரித்து மீண்டும் பூமியிற் சக்கிரவர்த்தியாகத்தோன்றி ஷோடசமகாதானங்களையுஞ்செய்து வாவிகூபதடாகங்களின் நிர்மாணமும் தேவாலய அக்கிரஹார நிர்மாணங்களும் எல்லாத்தீர்த்தஸ்நானங்களுஞ்செய்து அழிவில்லாதசிவகதியையடைவான். சிவபஞ்சாக்ஷர சத்திபஞ்சாக்ஷரங்களை நாடோறும் இருகாலத்திலும் ஆயிரத்தெட்டு முறை தன்னாயுள்வரையில் ஜபித்தவன் திவ்விய விமானத்திலேறி இஷ்டபோகங்களை யநுபவித்து உத்தமமான வமிசத்திற்றோன்றி மாணிக்கங்களும் யானைகளும் குதிரைகளும் அநேக அப்சரசுகளுமாகிய செல்வத்தையுடையவனாய் வாழ்வான். எனக்குப் பிரீதியாகப் பிராமணர்கட்குத் தக்ஷிணையுடன் தீபதானஞ்செய்தவன் அழியாப்பதவியையடைவான். வேதியருக்குத் தீர்த்ததானஞ்செய்தவனும் தண்ணீர்ப்பந்தல் வைத்தவனுஞ்சிவலோகத்திற் புண்ணியதீர்த்தமத்தியில் வாழ்வார்கள். வேதியரைத் திவ்வியமான சந்தனத்தாலலங்கரித்துப் பூசித்தவன் சந்திரமண்டலத்திற்குச் சமானமான விமானங்களிற் சஞ்சரிப்பான். பிராமணர்கட்குப் பசுவைத்தானஞ்செய்தவன் அதற்குள்ள உரோமக்கணக்காகிய வருஷங்கள் தேவலோகத்தில் வாழ்ந்து பின்னர் மன்மதாகாரமுடையவனாய்வித்தியாவானாகித்தோன்றுவான். அந்தணருக்குவஸ்திரதானமளித்தவன் ஒன்பதினாயிரவருஷம் சுவர்க்கத்திலிருந்து பின்னர்

உயர்குலத்துதிப்பான். கன்னிகாதானஞ்செய்தவன் பிரமலோகத்தில் அநேககாலம் வாழ்ந்து போகியாகப்பிறப்பான். என்னுடைய மூர்த்தியைச்செய்து அலங்காரமான சயனத்திலமர்த்திச் சிவவேதியருக்குத்தானஞ்செய்தவன் அறுபதினாயிரவருஷம் சுவர்க்கலோகத்தை யநுபவித்து வித்தியாவானாகத்தோன்றுவான். சுவர்ணதானஞ்செய்தவன் சுவர்ணசரீரத்துடன் சுவர்க்கபோகத்தை யநுபவித்துக் குபேர சம்பத்துடன் வாழ்வான். உபவீததானஞ்செய்தவன் பத்துஜனனம் பிராமண ஜனனமெடுத்து வேதவித்தாக விளங்குவான். திலதானஞ்செய்தவனுக்கு அபமிருத்து அணுகாது தீர்க்காயு உண்டாகும் என்று சிவபெருமான் கூறியருளினர். வியாஸமுநிவனே ! உன்னிடத்துள்ள அன்பினால் உபவாசபலனையுந் தானபலனையும் உனக்குச் சொன்னேன். இந்த அத்தியாயத்தை வாசித்தவர்களும் படித்தவர்களும் கேட்டவர்களும் சொன்னவர்களும் துர்கதி துக்கம் சோகம் பயம் அஞ்ஞானமுதலியன நீங்கிச் சுவர்க்காதி போகங்களை யநுபவித்துத் தர்மந்தவறாது வாழ்ந்து சிவஞானமடைந்து சிவபக்தர்களாவார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

மாசோபவாச மகிமையுரைத்தது

முற்றிற்று.

இருபத்துமூன்றாவது
நாமாஷ்டமி விதியுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமான் எவ்வித பூசையால் திருப்தியடைந்து இஷ்டகாமியங்களை யநுக்கிரஹிப்பார் எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் பூர்வம் சிவபெருமான் பார்வதிதேவிக்கருளிய வகையைச் சொல்லத்தொடங்கினர். பார்வதி! அஷ்டமி திதியில் இந்திரிய நிக்கிரகஞ்செய்து உபவாசமிருந்து பசுவின்பாலினால் என்னுடைய லிங்கத்தை யபிஷேகஞ்செய்து தூபதீபங்கொடுத்துப் பழங்களால் நிவேதனஞ்செய்து என்னைப் பூசித்தவன் மந்திரசித்தியடைவான். சிலை-லோகம்-தரு-பிருதிவி இவற்றொன்றில் என்மூர்த்தியைச்செய்து திவ்யாசனத்திலுட்கார்ந்து வேதமந்திரங்களாலென்னைப்பூசித்துத் தான் புசிக்கும் எல்லாவஸ்துக்களையும் நிவேதனஞ்செய்தால் அக்ஷயமான திருப்தியையடைகிறேன். * சுவாத்தியமாகிய † காத்தியபதார்த்தங்களில் நான் பெருந்திருப்தியடைகிறேன். ஆயினும் பக்தியின்றி எதைச்செய்யினுந் திருப்தியடையமாட்டேன். அஷ்டமியின் பூஜாவிதியைச் சொல்லுகிறேன்.

தமஹம் புண்டரீகாக்ஷம் ருத்ரமோங் காரயாம்யஹம் | ஆயாந்து தேவாஸ்ஸகணு உமாதேவீ மஹேஸ்வரீ | ஓம்பகவதே மஹாதேவாய பார்ஸ்வகதாய அநுசராய ஸ்வாஹா | ஆமலகம் ஸூக்ஷ்மமயம்ஸிவஸ்நாநம் புநர்பஜஸ்வாஹா||என்னும் மந்திரங்கூறி நெல்லிக்கனியைக்கொண்டபிஷேகித்து, ப்ரதக்ஷிணம் ப்ராவர்தே ஸர்வமேவ

* சுவாத்தியம் - உருசியுடைய. † காத்தியம் - பக்ஷணம்.

உமாயுதேஸ்வாஹா||என்று மந்திரத்தாற் பிரதக்ஷிணஞ்செய்து, இமாஆபஃ ஶாந்தாஃ ஶாந்ததமாஃ அம்ருதாஃ அம்ருததமாஃ ஆபஃபூதாஃ ப்ரஹ்மபவித்ரேணபூதாஃ ஸூர்யஸ்ய ரஶ்மிபிஃ | என்று மந்திரத்தினாலபிஷேகித்து, ஆஹாரஸ்ஸர்வ தேவாநாம் கந்தோயம் ப்ரதிக்ருஹ்யதாம் | ஸ்வஹாகந்தம் தத்தம்மயா பக்த்யாப்ரதிக்ருஹ்ண நமோஸ்துதே | என்று சந்தனஞ்சாத்தி, ஸுகந்தம் ஸுமநோதிவ்யைஃ ஸவ்ரகந்தோ ரலங்க்ருதம் | பூதம்ப்ரஹ்மபவித்ரேணபூதம்ஸூர்யஸ்யரஶ்மிபிஃ | புஷ்பந்தத்தம் மயாபக்த்யாப்ரதிக்ருண்ஹ நமோஸ்துதே | என்று மந்திரத்தாற் புஷ்பாஞ்சலிசெய்து, நமஃ ப்ரஜாநாம் பதயே நமோபக்தகணார்ச்சிதா | ப்ரதிக்ருஹ்ய இமந்தூபம் ஶிவலிங்க நமோஸ்துதே | ஸ்வாஹா | என்று தூபங்கொடுத்து, ஆபோஜ்யோதிஶ்ச தேஜஶ்ச தேவாநாம் ப்ரபவஸ்ம்ருதஃ | பூதோப்ரஹ்மபவித்ரேண பூதஸ்ஸூர்யஸ்யரஶ்மிபிஃ | ப்ரதிக்ருஹ்ய இமந்தீபம் ஶிவலிங்க நமோஸ்துதே||என்று தீபங்கொடுத்து, நிவேத்ய மநஸாயுக்தம் தேவாநாம் கந்தமுத்தமம் | பூதோப்ரஹ்மபவித்ரேண பூதஸ்ஸூர்யஸ்ய ரஶ்மிபிஃ | ஆஹாரஸ்ஸர்வ தேவாநாம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம் ஸ்வாஹா|| என்று நைவேத்தியஞ்செய்து, அர்ச்சிதஃ பூஜிதஶ்சைவ மயாபக்த்யா நிவேதிதாஃ | கந்தபுஷ்போபஹாரேண தத்க்ருபாம் கர்த்துமர்ஹஸி|| என்றுக்ஷமாபணஞ்செய்து பூசிக்கவேண்டியது.

இதுகாறும் அஷ்டமி பூஜையைச்சொன்னேன். இனி சதுர்த்தசி பூஜாவிதியையுஞ் சொல்லுகிறேன். சதுர்த்தசி தினத்தில் உதயகாலத்தெழுந்து ஸ்நானஞ்செய்து நித்தியகடனைமுடித்துசிவபூஜைக்காக,சிகப்புச் சந்தனத்தையும், கரவீரம், கதம்பம், முதலாகிய புஷ்பங்களையும் புண்ய நதி தீர்த்தங்களையும் அபிஷேகதிரவியங்களையும் சம்பாதித்து இந்திரிய நிக்கிரகத்துடன் ஆகாரமில்லாதவனாய்ப் பரிசுத்தமான ஸ்தலத்தில் முற் சொல்லிய நான்கு மூர்த்தங்களில் எந்த மூர்த்தத்திலாவது விதிப்படி வேதமந்திரங்களால் அர்ச்சிக்கக்கடவன். அவ்வேத மந்திரங்களையுச்சரிக்க யோக்கியதையில்லாதவர்களுக்கு என்னைப் பூசிக்கும் முறையைச்சொல்லுகிறேன். ஓம் நமோபகவதே மகாதேவாய, த்யாயாமி, பக்தவத்ஸலாய, ஆவாஹயாமி, த்ரைலோக்கியாதிபதயே ஆசனம் ஸமர்ப்பயாமி, விஷ்ணவேபாதயோ: பாத்தியம் ஸமர்ப்பயாமி, ஹராய அர்கியம் ஸமர்ப்பயாமி, ஸ்ரீவத்ஸதாராய ஆசமனம் ஸமர்ப்பயாமி, ஜேஷ்டபுஜாய மதுவர்க்கம் ஸமர்ப்பயாமி, பிநாகதாரிணே பஞ்சாமிருதம் ஸமர்ப்பயாமி, கங்காதராயஸ்நாநம் ஸமர்ப்பயாமி, த்ரிபுவனேசுவராய வஸ்திரம் ஸமர்ப்பயாமி, உமாபதயே உபவீதம் ஸமர்ப்பயாமி, ஜம்பூத்வீப நிவாஸிநே கந்தம் ஸமர்ப்பயாமி, பரசுஹஸ்தாய அக்ஷதாம் ஸமர்ப்பயாமி, சோமசூரியாக்கிநி நேத்திராய புஷ்பாணி ஸமர்ப்பயாமி, காலகண்டாய தூபம் ஸமர்ப்பயாமி, கபர்த்திநேதீபம்ஸமர்ப்பயாமி,மஹாஸேநஜநகாய நைவேத்தியம் ஸமர்ப்பயாமி, தேஜோமூர்த்தயேகல்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி, ஸர்வலோகேசுவராய ப்ரதக்ஷிணம் ஸமர்ப்பயாமி, ப்ரஹ்மாதி தேவவந்தியாய நமஸ்காரம் ஸமர்ப்பயாமி, என்று மேற்சொல்லிய நாமங்களைப் பிரணவபூர்வமாயும், நமோந்தமாயு முச்சரித்துப் பூசித்தவன் தினந்தோறும் மனோவாக்குக் காயங்களாற் செய்தபாவங்களை யொழித்து நிர்மலமான ஞானத்தை

யடைந்து என்னுடைய பாதஸேவைக்கு யோக்கியனுவான். இம்மகாரகசிய மாகிய பூசாவிதியைப் பக்தியில்லாதவர்களுக்கும், பரிசுத்தமில்லாதவர் களுக்கும், செய்ய யோக்கியதையில்லாதவர்களுக்கும், சூதகத்துடனிருக் கிறவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், உபதேசிக்கக்கூடாது. மேற்சொன்ன இரண்டுதிதி பூசைகளையும் தன் கிரகத்திலாவது பிறர் கிரகத்திலாவது தேவாலயங்களிலாவது நதிதீரங்களிலாவது தப்பாமற் செய்தவன் சந்தே கமின்றி என் பாதாரவிந்தங்களை அடைவான். சத்தியமாய்ச் சொல்லு கிறேன். இன்னும்யாது வினவுகின்றனையென ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி ஸ்வாமி! அஷ்டமிகளில் உபவாசமிருந்து பரமசிவனைப் பூசிப்பதால் அவருக்குத் திருப்தியென்று சொன்னீராகலின், அந்த நாமாஷ்டமியில் எவ்வகையாகப் பூசிக்கவேண்டு மென்பதையுஞ் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர்சொல் லலாயினர். பூர்வம் சிவபெருமான் இமாசலத்திற் பார்வதிதேவியை நோக்கிச் சொல்லுகின்றார். பார்வதீ! மார்கழிமாசத்திற் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் கோமூத்திரத்தைப் புசித்து என்னை நோக்கி விரதமிருந்து சகத்திர நாமார்ச்சனைசெய்து மறுநாள் பாரணஞ்செய்தவன் சர்வபாவங் களினின்றும் விடுபட்டு மோக்ஷத்தையடைவான். தைமாசத்திற் பசுவின் நெய்யைப்புசித்து என்னை நோக்கி விரதமிருந்தவன் பிரமஹத்தி முதலிய பாவங்களையொழித்து அக்ஷயமான லோகத்தையடைவான் மாசிமாச அஷ்டமியில் பசுவின்பாலாற் பாயசஞ்செய்து தக்ஷிணுமூர்த்திக்கு நிவே தித்து விரதமிருந்தவன் சுவர்க்கலோகத்தையடைவான். பங்குனிமாச அஷ்டமியில் எள்ளுப்பொடியைப் புசித்து விரதமிருந்தவன் நல்லகதியை யடைவான். சித்திரைமாசத்தில் யவையைத்தக்ஷிணுமூர்த்திக்குநிவேதித்து ப்புசித்து விரதமிருந்தவன் சிறந்த தர்மங்களைச்செய்த கதியையடைவான். வைசாகமாசத்தில் சலத்தைப்பானஞ்செய்தும், ஆனிமாச அஷ்டமியில் கோமயம்புசித்தும், ஆடிமாச அஷ்டமியில் பழங்களைப்புசித்தும், ஆவணி மாச அஷ்டமியில் உப்பு ஜலத்தைப்பருகியும், புரட்டாசிமாச அஷ்டமியில் தயிரைக்குடித்தும், அற்பசிமாச அஷ்டமியில் வெந்நீர் பருகியும், கார்த் திகைமாச அஷ்டமியில் தேனைப்புசித்தும் என்னைப் பூசித்தவர்கள் அள வில்லாத பாவங்களையொழித்துப் பெரும்புண்ணியர்களாய் அழியாத மோக்ஷலோகத்தை யடைவார்கள். இந்த அஷ்டமிவிரதம் தக்ஷிணுமூர்த்தி சந்நிதியிலேயே பூசைசெய்யத்தக்கது. இப்பன்னிரண்டு மாச அஷ்டமி களுக்குந் தனித்தனி நாமங்களைச் சொல்லுகிறேன். மார்கழிமாசத்திற் சங்கராஷ்டமியும், தை - தேவதேவாஷ்டமியும், மாசி - மகேசுவராஷ்ட மியும், பங்குனி - திரியம்பகாஷ்டமியும், சித்திரை - ஸநாதனுஷ்டமியும், வைகாசி - சதாசிவாஷ்டமியும், ஆனி - பகவதஷ்டமியும், ஆடி - நீலகண் டாஷ்டமியும், ஆவணி - ஸ்தாணு அஷ்டமியும், புரட்டாசி - சம்பு அஷ்டமி யும், அற்பசி - ஈஸ்வராஷ்டமியும், கார்த்திகை - உருத்திராஷ்டமியுமாகு

மாதலின், அவ்வம்மாதங்களில் அவ்வப்பெயர்களைக்கூறி என்னைத் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலர்ச்சித்து மேற்கூறியபடி விரதமிருந்து பிராமணபோசனஞ்செய்வித்துப் பெருந்தக்ஷிணைகொடுத்து மறுநாள் பாரணஞ்செய்ய வேண்டும். இவ்வகையாகப் பன்னிரண்டு அஷ்டமிகளிலும் விரதமிருந்தவர்கள் நீலகண்டமும் சதுர்ப்புஜமும் மான்மழுவும் தரித்து உருத்திரசாரூபத்துடன் நெடுங்காலம் வசித்துப்பின்னர் பூவுலகத்தில் மேலான பிறவியையடைந்து கிரமங்கிரமமாக முத்தியடைவார்கள் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

நாமாஷ்டமி விதியுரைத்தது
முற்றிற்று.

இருபத்துநான்காவது
லக்ஷணாஷ்டமி விதியுரைத்த அத்தியாயம்.

பார்வதிதேவி பரமசிவனை நோக்கி, ஸ்வாமீ! உலகத்தில் அநேகர் கூன் குருடு நொண்டி செவிடு முதலிய அங்கவீனர்களாகப் பிறக்கிறார்களே! அநேகர் சுந்தரதேகமும் செல்வமும் வசித்திருக்கிறார்களே! அவற்றிற்குக் காரணமின்னதென்பதை விரித்துரைக்க வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லுகின்றார். பெண்ணே! கார்த்திகை மாதமுதல் அஷ்டமிதோறும் இராப்பகல் என்னை நோக்கி உபவாசமிருந்து விதிப்படியர்ச்சித்தவன் இந்திராதி போகங்களைக்காட்டிலுஞ் சிறந்த போகங்களையிந்தலோகத்திலேயே யநுபவிப்பான். என்னைப் பாதாதிகேசமாக அங்கங்களை முறைப்படி பூசித்தவன் மன்மதனுக்கொப்பான வடிவத்துடன் அங்கஹீனமின்றிப் பெருஞ்செல்வத்துடன் வாழ்வான். இந்த விதிதெரிந்து என்னைப் பூசியாதவர்கள் அங்கவீனர்களாகவுந் தரித்திரர்களாகவும் பிறக்கிறார்கள். அங்கபூஜாவிதியைச் சொல்லுகிறேன்.

ஓம் ஶங்கராயநமஃ	பாதௌபூஜயாமி	திருவடி
ஓம் லோகநாதாயநமஃ	குல்பௌபூஜயாமி	கணுக்கால்
ஓம் ருத்ராயநமஃ	ஜங்கேபூஜயாமி	முழங்காலின்கீழ்
ஓம் மஹேஶ்வராயநமஃ	ஜாநுநீபூஜயாமி	ஜாநு-முழங்கால்
ஓம் ஈஶாநாயநமஃ	ஊரூபூஜயாமி	தொடை
ஓம் த்ரியம்பகாயநமஃ	மேட்ரம்பூஜயாமி	குறி
ஓம் கபர்த்திநேநமஃ	கடிம்பூஜயாமி	கடி-இடை
ஓம் தக்ஷிணாமூர்த்தயேநமஃ	நாபிம்பூஜயாமி	உந்தி
ஓம் த்ரிலோகஜநகாயநமஃ	உதரம்பூஜயாமி	வயிறு
ஓம் சூலபாணயேநமஃ	வக்ஷஃபூஜயாமி	மார்பு
ஓம் வ்யோமகேஶாயநமஃ	ஹ்ருதயம்பூஜயாமி	மார்க்குழி
ஓம் ஜகத்பித்ரேநமஃ	ஸ்தநௌபூஜயாமி	ஸ்தனம்
ஓம் வ்ருஷபத்வஜாயநமஃ	கக்ஷம்பூஜயாமி	அக்குள்
ஓம் உமாபதயேநமஃ	ஸ்கந்தம்பூஜயாமி	தோள்

ஓம் மஹாஸேநஜநகாயநமः	பாஹூந்பூஜயாமி	கைகள்
ஓம் நீலகண்டாயநமः	கண்டம்பூஜயாமி	கழுத்து
ஓம் ஸர்வதோமுகாயநமः	முகம்பூஜயாமி	முகம்
ஓம் விஷ்டரஸ்ரவஸேநமः	ஸ்ரோத்ரேபூஜயாமி	காது
ஓம் சந்திரஸூர்யாக்நிநேத்ராயநமः	நேத்ராணிபூஜயாமி	விழிகள்
ஓம் வேதஜிஹ்வாயநமः	ஜிஹ்வாம்பூஜயாமி	நா
ஓம் பஸ்மோத்தூளிதவிக்ரஹாயநமः	தந்தாந்பூஜயாமி	பற்கள்
ஓம் கஜசர்மாம்பராயநமः	ஓஷ்டம்பூஜயாமி	உதடு
ஓம் காமாரயேநமः	நாசிகாம்பூஜயாமி	மூக்கு
ஓம் ஸ்மஸாநவாஸிநேநமः	ப்ருவௌபூஜயாமி	புருவம்
ஓம் அர்த்தேந்துசூடாமணயேநமः	லலாடம்பூஜயாமி	நெற்றி
ஓம் தக்ஷயஜ்ஞவிநாஸிநேநமः	ஸிரःபூஜயாமி	சிரசு
ஓம் கங்காதராயநமः	ஜடாம்பூஜயாமி	சடைமுடி
ஓம் ஈஸாநமூர்த்தாயநமः	ஊர்த்தாநம்பூஜயாமி	உச்சி
ஓம் ஸிவாயநமः	ஸர்வாண்யங்காநிபூஜயாமி	சர்வாங்கம்.

என்று இவ்வகையாகப் பன்னிரண்டுமாச அஷ்டமிகளினும் என்னை அங்கபூசைசெய்து உபவாசமிருந்து விரதஸமாப்தியில் வேதவேதாங்க சம்பன்னர்களாக இருபத்து நான்கு பிராமணர்களை வருவித்து, செப்புப்பாத்திரத்திற் கும்பாலங்காரஞ்செய்து என்பிரதிமையை அதன்பேரில் வைத்துச் சிவாயவென்னு நாமத்தினால் ஆவாஹனஞ்செய்து ஷோடசோபாசாரஞ்செய்து திரியம்பக மந்திரத்தினால் சமித்து அன்னம் திலங் கூட்டி ஆயிரத்தெட்டு முறை ஹோமஞ்செய்து பிராமணர்கட்குக் கலசம் வஸ்திரம் பிரதிமை முதலியவற்றைத் தானங்கொடுத்து ஆசாரியனுக்குக் கோதானஞ்செய்து சக்திப்படி தக்ஷிணைகொடுத்துப் பிராமணபோசனஞ் செய்வித்து, தானும் புசித்து விரதமுடித்தவன் சுவர்க்காதிலோகங்களிற் பெரும்போகங்களை யநுபவித்துக் கிரமமாக என்னுடைய சாரூப்பியத்தை யடைவானென்று கூறியருளினர். வியாஸமுநிவரே! யறியக்கடவீரென ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

லக்ஷணாஷ்டமி விதியுரைத்தது

முற்றிற்று.

இருபத்தைந்தாவது

தானபல னுரைத்த அத்தியாயம்.

சிவபெருமான் பார்வதிதேவியைநோக்கி, பெண்ணே! உலகுக்கு இதமுண்டாக்கக் கருதித் தானதர்மங்களை யுனக்குச் சொல்லுகின்றேன். பூலோகத்திலுள்ள எல்லாத் தானங்களினும் அன்னதானத்தினாலேயே யான்திருப்தியடைகிறேன். அன்னத்திலிருந்தேபூதங்களெல்லாந்தோன்றுகின்றன. அவ்வித மகிமையுடைய அன்னத்தைப் பிராமணர்க்குத் தானஞ் செய்த பக்ஷத்தில், சூரியகாந்திக்குச் சமானமாகிய வொளியையுடைய

திவ்விய விமானத்திலேறி அநேககாலஞ் சஞ்சரித்து, மீண்டும் பூலோகத்திற் பிறந்து குபேரசம்பத்தை யநுபவித்துக் கிரமமாக என் பாதத்தை யடைவார்கள். பரிமளமமைந்த குளிர்ந்த தீர்த்தத்தை யெனக்காகத் தானஞ்செய்தவன் வருணலோகத்தில் அநேககாலம் வாழ்ந்து பூமியில் உயர் குலத்திற் பிறந்து வாவி கூப தடாகங்களை நிர்மாணஞ்செய்து அகண்டசாம்பிராச்சிய பதவியை யடைவான். அன்னத்தைப் பாத்திர சகிதமாய்த் தக்ஷிணையுடன் தானஞ்செய்தவன் சுவர்க்கலோகத்தில் அமிர்த பானஞ்செய்து பூலோகத்தில் மகத்தானசம்பத்தை யனுபவிப்பான். வாசனையுள்ள தீர்த்தத்தைப் பாத்திரத்துடன் தானங்கொடுத்தவன் சுவர்க்காதி போகங்களை யனுபவித்துக்கிராமாதிபதியாவான். தடாகநிர்மாணஞ்செய்து பலர்க்கும் உபயோகித்தவன் தன் வமிசத்திற் றோன்றிய பிதுர்களுடன் பதினயிரந் தேவவருஷங்கள் சுவர்க்கத்தில் வசித்துப்பூலோகத்தில் மகாராசனாகப்பிறந்து நோயற்றதேகமும் வள்ளற்றன்மையுமடைந்து அநேக யாகங்கள்செய்வான். வீட்டினைத்தானஞ் செய்தவன் அழகுள்ள எட்டு அன்னங்கள் தாங்கப்பெற்றதும் பல துவசங்கள் கட்டப்பெற்றதும் இரத்தினகசிதமுமான திவ்விய விமானத்திலேறி இந்திரலோகத்தில் ஐம்பதினாயிரவருடம் அப்சரசுகளுடன் கூடிவாழ்வான். பொன்னைத் தானங்கொடுத்தவன் அக்கினியையொத்த தேஜசுடன் அக்கினிலோகத்தில் வாழ்வான். வெள்ளியைத் தானஞ்செய்தவன் திவ்விய விமானமூர்ந்து குபேரலோகமடைவான். பூதானங்கொடுத்தவன் அலங்கார விமானமேறிப் பிரமலோகத்தில் வாழ்ந்து மீண்டும் பூலோகத்திற் சக்கிரவர்த்தியாகப் பிறப்பான். எனக்குப் பிரீதியாக எள்ளை இரத்தினங்களுடன் தானங்கொடுத்தவன் பிரமகற்பவரையில் இந்திராதிலோகங்களில் வாழ்ந்து என் பாதத்தையடைவான். வழிகளில் நிழல் தரும்படி சோலைகளைவைத்து வளர்த்தவன் அநேக வருஷங்கள் சுவர்க்கபதவியில் வாழ்வான். பழவர்க்கங்களைத் தானங்கொடுத்தவன் சந்திரலோகமடைந்து அப்சரசுகளுடன் சுகமனுபவித்துப் பூமியில் ரூபவானாக உயர்குலத்திற் றோன்றித் தனிகனாயிருப்பான். வெள்ளிப்பாத்திரத்தை நெய்யுடன் தானங்கொடுத்தவன் கந்தர்வலோகத்தில் வசிப்பான். சுவர்ணபாத்திரத்தில் தேனைத் தானஞ்செய்தவன் பிரமகற்பவரையில் அப்சரசுகளுடன் கூடிப் பிரமலோகத்தை யடைவான். தாமிரபாத்திரத்தில் தீர்த்தத்தைத் தானஞ்செய்தவன் யக்ஷபதவியை யடைவான். வியாதியஸ்தனுக்கு மருந்துகளைத் தானமாகக் கொடுத்துச் சுகஞ்செய்தவன் சந்திரலோகத்தில் ஆயிரவருஷம் வசித்து நோயற்றவுடலுடன் யோகியாகப்பிறப்பான். பசுவைப் பொன் வெள்ளி முதலியவற்றாலாய பணிகளும், கறப்பதற்கு வெண்கல பாத்திரமும் முதலியவையும்சேர்த்து,கன்றுடன் தானமளித்தவன்கோலோகத்தில் அநேககாலம் வாழ்ந்திருப்பான். தந்தமயமான கட்டிலை மெத்தை தலையணை முதலியவற்றுடன் விதானபூர்வமாகச் செய்து உமாமகேசுவரமூர்த்தியை யெழுந்தருளச்செய்து விதிப்படி பூசித்துத் தானங்கொடுத்தவன் நினைத்த

வுலகங்களுக்குச்சென்று லக்ஷவருஷங்கள் இஷ்டபோகங்களை நுகர்ந்து உயர்குலத்துதித்து நவரத்தினங்களை யுடையவனாய், சந்திரமுகிகளாகிய ஸ்திரீகளும், ஐராவதம்போன்ற யானைகளும், உச்சைச்சிரவம்போன்ற குதிரைகளுங் கணக்கின்றி யமையப்பெற்று அநேககாலங்கழித்து எனது அழியாப்பதவியை யடைவான். உத்தமலக்ஷணம் வாய்ந்த குதிரையைப் பொன்மயமான ஆபரணத்துடன் தானஞ்செய்தவன் வாயுலோகத்தில் வசிப்பான். இரதத்தைச் சிற்பவிதிப்படி செய்து என் ஆலயத்திற்கு விநியோகித்தவன் சந்திரசூரியருள்ளவரையில், விமானரூடனாய்ச் சர்வலோகங்களிலுஞ்சஞ்சரித்து அநேகரதங்களுக்கதிபனாயிருப்பான். திவ்வியமான கன்னிகையைத் தானஞ்செய்தவன் பிரமலோகத்தில் வாசஞ்செய்து அரசனாகத்தோன்றுவான். தண்ணீர்ப்பந்தல் நிர்மாணஞ்செய்தவன் பிதுர்களுடன் பிதுர்லோகத்தில் வாழ்வான். பானகதானஞ்செய்தவன் எண்ணிறந்த கந்தர்வர்களுடன் கானசுகத்தை யனுபவித்துப் பூலோகத்திற் பரதசாஸ்திரவல்லவனாகப் பிறப்பான். மணமுடைய மலர்மாலைகளை யெனக்காகக் காட்டிக்கொடுத்தவன் சுவர்க்கபோகமடைந்து சுவர்ணமயமான மணிமாலைகளைச் சன்மாந்தரத்தில் அனுபவிப்பான். பலகாரவகைகளைச் செய்து என்னைத் திருப்திசெய்வித்துப் பிராமணர்களுக் குபயோகப் படுத்தினவன் எப்பொழுதும் அன்னவானா யிருப்பான். சிராத்தகாலத்திற் பிதுர்தர்ப்பணங்காலந்தவறாது செய்தவன் மகாதாதாவாகச் சனித்துத்திருப்தியுடன் வாழ்வான். பிராமணனுக்கு இடபதானஞ் செய்தவன் தானியவானாயிருப்பான். வஸ்திரங்களைத் தானஞ்செய்தவன் வைகுண்டத்தில்வாழ்வான். என் சந்நிதியில் நெய்யினால் தீபாராதனை செய்வித்தவன் தேஜோமயமான சரீரத்துடன் யமதருமன் சபையில் தருமவிசாரணைசெய்பவனாயிருப்பான்.

பார்வதீ! திரவபதார்த்தங்களி லெல்லாம் நெய்யே விசேஷப்பட்டதாகும். அஃதென்னெனிற் சொல்லுகிறேன்: சகலதேவர்களும் பசுவின்தேகத்தை யடைந்திருக்கிறார்கள். அதாவது பிரமன் சிரசிலும் இந்திரன் நெற்றியிலும், சந்திர சூரியர் நேத்திரங்களிலும், பிராணவாயு வாயிலும், அக்கினி முகத்திலும், சந்திரன் நாவிலும், அசுவினிதேவர்கள் காதுகளிலும், உருத்திரமூர்த்திகள் எல்லா அவயவங்களிலும், லோகபாலர்களும் நாகராசர்களும் பாதங்களிலும், துவாத சாதித்தர் கழுத்திலும், சத்தசமுத்திரங்கள் வயிற்றிலும், கங்கை ஸ்தனங்களிலும், அஷ்டவசுக்கள் பக்கங்களிலும், புண்ணிய தீர்த்தங்கள் உபஸ்தத்திலும், லக்ஷ்மீ கோமய [சாண] த்திலும், விசுவேதேவர்களும் சாத்தியர்களும் வாலிலும், மந்திரங்கள் யாகங்கள் தானம் நியமங்கள் ருஷிகள் நக்ஷத்திரங்கள் நவக்கிரகங்கள் காயத்திரி விஷ்ணு ஜகதி பங்தி திருஷ்டுப் ருக்கு யஜுஸ் சாமம் அதர்வணம் லோகமாதாக்கள் மேகங்கள் வருஷங்கள் தர்மம் நாராயணர் நதிகள் பூதங்கள் யக்ஷர்கள் முதலானோர் ரோமகூபத்திலும், இராக்ஷசர்

கள் பைசாசர்கள் பக்ஷிகள் சுவாஹா சுவதா தக்ஷிணை மேதை அப்சரசு கள் முதலானோர் கொம்புகளிலும் ஆச்சிரயித்திருக்கிறார்கள். இவ்விதமாக எல்லாத்தேவர்களுக்கும் வாசஸ்தானமாயுள்ள புனிதமான தேனுவை யலங்காரஞ்செய்து என்னுடைய சந்நிதியிற் பவித்திர பாணியாய்ச் சுவர்ண முந் திலமுங்கையிற் கொண்டு ஸர்வதேவமயமாயும் ஸர்வலோகமயமாயு முள்ள இந்தத்தேனுவைத்தானஞ்செய்கிறேன். "ஸர்வ லோக நிமித்தாஞ்ச ஸர்வலோக நமஸ்க்ருதாம் | ப்ரயச்சாமிமஹாமூர்த்திமக்ஷயாம்மேஸ்ஸ்பிர மிதி||" என்னு மந்திரங்கூறி எவனொருவன் தானஞ் செய்கின்றானோ அவன் தான் விரும்பிய வுலகங்களிற் காமசாரியாய் அநேககாலஞ் சஞ் சரித்து மீண்டும் பூலோகத்தில் உத்தமனாகிய சக்கிரவர்த்தியாய்ச் சனித் துப் பூர்வசன்ம ஞானத்துடனும் அநேக புத்திரர்களுடனும் வாழ்ந்து அணி மாதி சித்திகளையடைந்து யோகீசுவரனாவான்.

பர்வதராச புத்திரியே! திவ்வியாலங்காரஞ்செய்த பசுவைவிதிப் படி *உபயகோமுகியாகத் தானஞ்செய்தவன் நரகவாதனை சிறிதுமின்றி நீங்குவான். கிருஷ்ணாஜிநத்தைப் பிராமணருக்குத் தானஞ்செய்தவன் பூதானஞ் செய்தபலனை யடைந்து யோகியாவான். யோகிகள் கிரகஸ்தர் கள் பிரமசாரிகள் முதலானோர்க்குத் தங்கியிருக்க இடம்விட்டவன் அசுவ மேதபலனை யடைந்து ஜன்மாந்தரவுணர்ச்சி யுண்டாகி ஞானியாவான். ஸந்நியாசிகளுக்குக் கமண்டல தானஞ் செய்தவன் பவுண்டரீக யாகஞ் செய்தபலனை யடைந்து ஞானியாவான். அவர்கட்குத் தண்டதானஞ் செய் தவன் ஆயிரங் கோதானஞ்செய்த பலனைப் பெறுவான். ஆதரவற்றதரித் திரனுக்குற்ற நோயை நீக்கிக்காத்தவன் பிரமஹத்தியாதி பாவங்களையுமொ ழிப்பான். நித்திய தரித்திரனும் குடும்பியுமாயுள்ளவனுக்குச் சுவர்ணதா னஞ்செய்தவன் பத்து அசுவமேத பலனைப்பெறுவான். இவ்விதமாகச் சொல்லிய வெல்லாத் தானங்களையும் எனக்குப் பிரீதியாகச் செய்தவன் எல்லாலோகங்கட்கும் யசமானனாவான். தானங்களை யிதுபோலச் செய் யச் சக்தியற்றவர்களாயினும், செய்வோரைப்பார்த்து மகிழ்வடைவோ ரும் இந்த அத்தியாத்தை வாசித்துப் பலர்க்குஞ் சொல்வோரும் சுவர்க் காதிலோகங்களை யடைவார்களென்பதைச் சந்தேகமின்றி நம்பக்கடவாய் என்று சிவபெருமான் கூறியருளினர்.

தானபலனுரைத்தது

முற்றிற்று.

* உபயகோமுகி-சூல்முதிர்ந்த பசு பிரசவிக்கையில், அக்கன்று தாயினின்று முற்று நீங்கு முன்னர்த் தானஞ்செய்தலாம். இதனை அவ்வாறு கொடுக்க இயலாதவர் கள் பொன்னாலாவது வெள்ளியாலாவது செய்து கொடுப்பது முண்டு.

இருபத்தாருவது
உபவாச பலனுரைத்த அத்தியாயம்.

சிவபெருமான் பார்வதி தேவியை நோக்கிச் சொல்லுகின்ருர்: பெண்ணே! மேற்கூறியபடி தானஞ்செய்யச் சக்தியில்லாதவர்கள் விரதங்களினுல் அவ்வகைய புண்ணியத்தையடையலாம். அதாவது மார்கழிமாசத்தில் ஒருவேளை புசித்து என்னை நோக்கி விரதமிருந்தவன் இந்திரலோகமடைவான். தைமாசத்தில் ஒருவேளைபுசித்து உபவாசமிருந்து வேதாகமாதிகளைப் பாராயணஞ்செய்தவன் ஞானியாவான். மாசி மாசத்தில் ஒருவேளை புசித்து விரதமிருந்தவன் சம்பத்தும், பங்குனி மாசத்திலிருந்தவன் உத்தமஸ்திரீகளும், சித்திரை மாசத்திலிருந்தவன் உயர்குலப்பிறப்பும் தனமும், வைகாசி மாசத்திலிருந்தவன் எல்லாராலும் பூசித்தலும், ஆனி மாசத்திலிருந்தவன் அரசர்களிலெல்லாம் மேம்பாடும், ஆடி மாசத்திலிருந்தவன் இஷ்டசித்திகளும், ஆவணி மாசத்திலிருந்தவன் சேனுபத்தியமும் வல்லமையும், புரட்டாசி மாசத்திலிருந்தவன் நவரத்தினங்களும், அற்பசி மாசத்திலிருந்தவன் வர்த்தகலாபமும், கார்த்திகை மாசத்திலிருந்தவன் அசுவமேத பலனும் அடைவார்கள். ஒரு வருஷம் ஒரேகாலபோஜனத்துடனிருந்தவன் சூரியனுக்குச் சமானமான விமான மூர்ந்து சர்வலோகங்களிலுஞ் சஞ்சரித்துச் சக்கிரவர்த்தியாகத்தோன்றி அநேக சிவாலயங்களை நிர்மாணஞ்செய்வான். ஒருநாள் உபவாசமிருந்து என்னைத் திருப்திசெய்தவன் பத்துப்பொன்னைத் தானஞ்செய்த பலனையடைவான். மாசந்தோறும் மூன்றுநாள் உபவாசமிருந்தவன் குபேரலோகத்தையடைவான். மாசோபவாசமிருந்தவன் இந்திரபோகத்தை யனுபவித்துப்பேரரசனுகப்பிறப்பான். தீக்ஷைசெய்துகொண்டு குறித்தகாலம் வரையில் உபவாசமிருந்தவன் அக்கினிக்குச் சமானமான தேஜஸுடன் சொர்க்கபோகத்தை யனுபவிப்பான். உருத்திரகாயத்திரியை ஜபித்து அத்தனை பிராமணர்கட்கு அன்னங்கொடுத்துச் சுவர்ணம் வஸ்திரமுதலியவற்றைத் தானஞ்செய்து புசித்தவன் கைலாயத்தில் வசிப்பான். கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலாவது அமாவாசையிலாவது திலத்தைப் பாத்திரத்துடன் தக்ஷிணைவைத்துத் தானஞ்செய்தவன் உருத்திரலோகமடைவான். சாந்திராயண விரதமநுஷ்டித்தவன் தனது பிதுர்களுடன் பிதுர்லோகத்தையடைவான். பிரஜாபத்திய கிருச்சிரத்தை யனுஷ்டித்தவன் மகாபாவங்களையொழிப்பான். கோமூத்திரம் கோமயம் க்ஷீரம் தயிர் நெய் சுத்தஜலம் இவற்றினை முறையாக நாளொன்றுக்கு ஒவ்வொன்ருகப் புசித்து இறுதி நாளில் உபவாசமிருத்தலாகிய சாந்தமன கிருச்சிரமநுஷ்டித்தவன் அக்கினிலோகத்தில் தேஜோரூபியாக வசிப்பான். மகாசாந்தமன கிருச்சிரஞ்செய்தவன் பூர்வஞானத்துடன் பிரமலோகமடைவான். துலாபுருஷகிருச்சிரமநுஷ்டித்தவன் சர்வபாவங்களினின்றும் ஒழிவான். அதிகிருச்சிரமநுஷ்டித்தவன் சர்வலோகத்தையும், கிருச்சிராதி கிருச்சிரமநுஷ்டித்தவன்

காணுபத்தியத்தையும், பாவக்கிருச்சிரமநுஷ்டித்தவன் சர்வகாமங்களையும் பஞ்சாக்ஷர மந்திரத்தை யொருவருஷஞ் சபித்தவன் உருத்திரசாரூப்பியத்தையும், ஒருவருஷகாலம் யவையைப்புசித்தவனும், கோமூத்திரத்தைப் பருகினவனும், எள்ளுப்பொடியைச் சாப்பிட்டவனும், வாயுபக்ஷணஞ்செய்தவனும், அசுவமேதஞ்செய்த பலனையுமடைந்து திவ்விய விமானத்திலேறிப் பிரமலோகத்தில் வாழ்ந்து மீண்டும் பிரமதேஜசோடு பூமியில் தோன்றுவார்கள். பார்வதி! தானங்களை விதிப்படி செய்யச்சக்தியில்லாதவர்கள் இவ்வாறு விரதங்களையுங் கிருச்சிரங்களையு மநுஷ்டிப்பார்களாயின் தானங்களைச்செய்த பலனையடைந்து புண்ணியலோகங்களில் வாழ்வார்கள். இக்கிருச்சிரங்களைச் சூத்திரர்களும் மந்திரமின்றி யனுஷ்டிக்கலாம். ஸ்திரீகள் கணவரனுமதிபெற்றுதான் விரதம்தானம் தவம் பாராயணம்முதலியன செய்யக்கடவர். அப்படிச்செய்தவர்கள் யாவரும் பெரும் பதவிகளையடைந்து வாழ்வார்கள் என்று கூறியருளினர்.

உபவாசபலனுரைத்தது

முற்றிற்று.

இருபத்தேழாவது
நியமப்பிரபாவமுரைத்த அத்தியாயம்.

சிவபெருமானை நோக்கிப் பார்வதிதேவியார் ஸ்வாமீ! பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரஜாதிகள் எவ்வித நியமாநுஷ்டானத்தாற் சற்கதியடையலாம்? நியமமாவது யாது? இவ்விஷயத்தை யெனக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் சொல்லத்தொடங்கினர். பர்வதராசகுமாரியே! நியமத்தில் அநேகவகையுண்டு, அதில் இந்திரியநிக்கிரகஞ்செய்தலே முக்கியமானதாம். மானுடதேகமானது நீரிற் குமிழி போன்றது. நியமப்படி நடப்பவர்கள் தேவர்களென்று சொல்லப்படுவார்கள். பஞ்சபூதாத்மகமான சரீரத்திற் காமக் குரோத லோப மோகங்களும் ஹிம்சை முதலியதும் எப்போதுங் குடிகொண்டிருக்கும். அத்தீக்குணங்களை விலக்கி நான் இவ்வாறு நடக்கிறேனெனத் தன்னுட்டானே பிரதிக்கினை செய்துகொண்டு கத்தியின் முனையில் நடப்பவன்போலச் சாக்கிரதையாய் நல்வழியில் நடந்து கொள்ளவேண்டும். இவ்வாறு நடந்தவர்களே தெய்வத்தன்மையடைந்து நக்ஷத்திரரூபிகளாய் ஜோதிமயமாய் விளங்குகிறார்கள். நியமத்தாலேயே கடல்கரைகடவாதும் அக்கினி ஜ்வாலித்தும், சூரியன் பிரகாசித்தும், வாயுசஞ்சரித்தும், பூமியாவரையுந் தரித்தும் விளங்கும். அதுபோலவே நீயும் உன்நியமத்தாலேயே அருந்தவஞ்செய்து எனக்கு மனைவியாயிருக்கின்றனை. ஒருவருஷகாலம் நியமத்தையநுஷ்டித்தவனைப் பிரமதேவனென்று சொல்லவேண்டும் அற்ப நியமமாயினும் அது பெரும்பலனையளிக்கும். இது விஷயத்தில் ஆச்சரியகரமான இதிகாசமொன்று சொல்லுகின்றேன்.

பூர்வம், காசிநகரத்தில், பிறப்பினாலேமாத்திரம் பிராமணனாயுள்ள ஒருவன் விகாரசரீரமும், கர்மப்பிரஷ்டத்துவமும், பரபொருளையும் பரஸ்திரீகளையும் விரும்புதலும், எப்பொழுதுங் குரூரசுபாவமும், ஜந்துக்களை யிம்சித்தலும், மதுமாமிசபக்ஷணமும், தேவப்பிராமணவேதாதி நிந்தனையும், கோள்சொல்லுதலும், துவேஷகுணமும், பொய்சாக்ஷிகூறலும், தீக்கருமங்களைச்செய்தலும், நாஸ்திகமத்கொள்கையும், யாவரும் அஞ்சத்தக்க பலகொடுஞ் செயல்களுமுடையவனாயிருந்தான். விஷமில்லாத பாம்பு போலவும் கொம்பில்லாத எருதுபோலவும் சிறகில்லாத பறவைபோலவும் மலரில்லாத மரம்போலவும் முலையில்லாத மங்கைபோலவும், சந்தியாதிசெயல்களில்லாது சிறிதும் பயனற்றவனாயிருந்தான். அவன் வீதியில் வரக்கண்ட வர்த்தகர்கள் கடைகளைச் சாத்திவிடுவார்கள்; ஸ்திரீகள் வீட்டுக்கதவை யடைப்பார்கள். பலர் கூடிச்செய்யும் நற்கருமங்களையெல்லாங் கெடுத்து விட்டுத்திரும்புவது அவன் வழக்கம். இவ்விதமாக நடந்து வந்த அந்தப் பாவிக்குத் தொண்ணூற்றொரு வருஷங்கள்சென்றன. அவ்வாறிருக்கையில், அவ்வாராணசியிலுள்ள ஓங்காரேசுரரை யோர்சித்தன் நாடோறும் பூசித்துப் பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து கொண்டிருக்கக்கண்ட அப்பாவிப் பிராமணன் நீ யாவன்? உன்வடிவத்தையும் நடக்கையையும் பார்க்க நீ யந்நியலோகத்தவனென்று நினைக்கின்றேன். இவ்விதமாகப் பேரழகுடையவன் பூமியிலில்லையாதலின் சுவர்க்கத்திலிருந்து தவறிவிழுந்தவனெனவுங் கருதுகின்றேன் எனக்கூற, சித்தன் அவனை நோக்கி, பிராமணா! நீ மஹாஞானியென்றறிகிறேன். நான் சுவர்க்கத்திலிருந்து வந்ததை நீயெப்படியறிந்தனை? நான் சுவர்க்கத்திலிருந்து வந்தது சத்தியமென்று நம்பக்கடவாய். உனக்குச் சுவர்க்கலோகத்தில் நண்பரிருக்கும் பக்ஷத்தில் அதைப்பற்றிச் சொல்லுகிறேனெனக்கூற, வேதியன் சித்தனை நோக்கி, சுவர்க்கமென்பதொன்றுண்டோ? அங்கே வசிப்பதற்கு இடமுண்டோ? அரம்பையென்னும் அப்சரசையறிவையா? அவற்றைக்கூறுகவென, சித்தன் அரம்பை முதலிய அப்சரசுகளிருப்பதும் அவர்கள் விருப்புறுவதும் யானறிவேனென, வேதியன் ஆயின் அவற்றையும் நீ யங்கிருக்கையில் எவ்வாறிருந்தனை யென்பதையுஞ் சொல்லவேண்டும். அரம்பையென்பவளையறியார் யாவர்? நீ மீண்டுஞ் சுவர்க்கத்திற்குச் சென்றபொழுது அவளை க்ஷேமமாவென்று நான் வினவியதாகச் சொல்லவேண்டும் என, சித்தன் யான் சுவர்க்கஞ் சென்றவுடனே அந்தரம்பையைக் காண்பேனென்று, வாயுவேகமுடையவனாய்ச் சுவர்க்கமடைந்து ஆகாயத்திற் பிரகாசிக்குஞ் சந்திரன்போலவும், தாமரைமலரில்லாத லக்ஷ்மீபோலவும், பூரணசந்திரன் போன்ற காந்தியும், மன்மதவிக்கிரகம் போலவும், யானையின் கும்பஸ்தலம்போன்ற குசங்களும், பூரித்தவிசாலமான சகனமும், அகன்றமார்பும், மான்குளம்புபோன்ற உபஸ்தமும், விரிந்து செந்தாமரைபோன்ற பாதமுமுடையவளாய், தனது கையிலுள்ள வீணாநாதத்தால் அங்குள்ள அமரர்களை மனமயக்கியும், விளங்கும் அரம்பையை நோக்

சிச் சித்தன் சொல்லலாயினன். அரம்பையே! வாராணசியில் யான் வசித்திருக்கையில் ஒரு பிராமணன் உன்னுடைய க்ஷேமத்தை விசாரிக்கச் சொல்லினன். அவனை நீ யறிவையா? எனக்கேட்க, அரம்பை சித்தனை நோக்கி, நான் அவனை யறியேனாயினும் நீ வினவிய பின்னர் ஆலோசித்தும் ஞாபகப்படவில்லை யென்றனள். அதுகேட்டு, சித்தன் அப்படியாவென விடுத்துத் தன் நியமப்படி வாராணசியில் ஓங்காரேசத்தையடைந்து வழக்கப்படி பூசித்துக்கொண்டிருந்தனன். அவ்வேதியன் மீண்டும் சித்தனைக் கண்டு, நீ யரம்பையைக்கண்டு க்ஷேமம் விசாரித்தனையா? அவள் என்ன சொல்லினள்? யாது கேட்டனள்? அவற்றைச் சொல்லவேண்டுமென, சித்தன் அந்தணனை நோக்கி, நீ கூறியவாறே யான் அரம்பையிடஞ்சொல்ல அவள் என்வார்த்தைகட்குச் சிரித்து நெடுநேரம் யோசித்தும், யான் அவ்வேதியனை யறியேனென்றனளென, பிராமணன் நீ மீண்டுஞ் சுவர்க்கமடைகையில், உன்னை யப்பிராமணன் நாடோறும் விசாரிக்கின்றனன். அவள் உன்னை யறியும்பொழுது நீ யவனை யறியாயா? எனக் கேட்கவென, அவனிணங்கித்தன் பூசையை முடித்துச் சுவர்க்கமடைந்தபொழுது மீண்டும் அரம்பையைப் பார்த்து, அதிசுந்தரவதி! நாடோறும் உன்னிடத்து அதிவிருப்பத்தால் க்ஷேமம் விசாரிக்கின்றான். நான் நாடோறுங் காசிக்குச்செல்பவன். அதுவே யெனக்கு விருப்புள்ள விடம். நான் போகாமலிருக்கமுடியாது. நான்போகும் போதெல்லாம் அவன் தொந்தரை செய்கிறான். எனக்கூற, அரம்பை சித்த சிரேஷ்டனை நோக்கி, அவ்வேதியன் என்னைக்காண விரும்பின் நிச்சல மனமுடைய நியமத்துடன் தவஞ்செய்கவென யான் கூறியதாகச் சொல்லவேண்டுமென்று கூறித் தன்னிச்சையின்படி நந்திவன முதலிய விடங்கட்குச் சென்றனள். அதன் பின்னர் சித்தன் தேவர்களெல்லாம் புடைசூழ்ந்து விளங்குங் காசிநகரமடைந்து அவ்வந்தணனைப் பார்த்து, நடந்த விர்த்தாங்களைச்சொல்லி, பிராமணனே! உன் மனதில் அரம்பையைக்கூட ஆசையிருக்கும் பக்ஷத்தில், தெய்வத்தன்மையுண்டாக்கும்படியான நியமத்தையுணர்ந்து அதனைச்செய்வாயாக வெனக்கூற, பிராமணன் அதுமுதல் அன்னத்தை வெறுத்துப் பால் பழங்களைப் புசித்துத்தனது நாஸ்திகக் கொள்கையொழித்து ஆஸ்திகனாய்ச் சிவசேவை செய்துவரு நியமங்கொண்டு சிலகாலத்திற் சிவகடாக்ஷமடைந்து பிரமலோகத்தில் வாழ்ந்து அரம்பைமுதலிய தேவதாசிகளுடன்கூடிச் சுகமனுபவித்துக் கிரமமாக முத்தியடைந்தான். பார்வதி! சாமானிய நியமமானது இவ்வளவு பலனைக் கொடுத்ததல்லவா? யாவனாயினும் நியமமுடையவன் பலவகையான கோரிக்கைகளையுங் கைகூடப் பெறுவான் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

நியமப்பிரபாவமுரைத்தது

முற்றிற்று.

இருபத்தெட்டாவது
சந்திரதாரணமும் விஷபானமுமுரைத்த அத்தியாயம்.

சிவபெருமான் கூறியவற்றைக்கேட்ட பார்வதிதேவியார் ஸ்வாமீ! பகவானே! தேவரீர் அடியேனை அர்த்த சரீரத்திற்றரிப்பதுபோல அர்த்த சந்திரனைச் சடைமீதணிந்திருப்பதும், விஷபானஞ்செய்ததுமாகிய இவற்றின் காரணத்தைத் தெரிவிக்க வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லலாயினர். தேவி! பூர்வம் தக்ஷயாகத்திற்குப் பிறகு நீ உடல் நீங்கிய காலத்தில், நான் மகாவிரக்தனாய் அநேக வனங்களில் திரிந்து உன்னையே நினைத்துக்கொண்டு சஞ்சரிக்கையில், ரமணீயமான வனங்களிலும் நதிதீரங்களிலும், விருக்ஷங்களினடியிலும், தடாகங்களிலும், மலரோடைகளிலுஞ் சேர, அவ்விடங்களெல்லாம் அக்கினிமயமாகிப் புகைந்து ஜ்வாலித்து எரிந்துபோயின. சந்திர சூரியர்களு மொளிமழுங்கினர். யமனும் நடுங்கினன். திரிலோகங்களிலுள்ளாரும் என் தேஜசைச்சகிக்க முடியாதவர்களாய் இருப்பதுணர்ந்த தேவர்கள் பிரமதேவனுடன் மந்தரமலைவருகிற் கூடினர். அப்பொழுது இந்திரன் பிரமனை நோக்கி எம்முடைய தேகத்தைக் கொளுத்துகின்ற அக்கினி எவ்விடத்தினின்றுந் தோன்றியது அது எப்படி தணியும்? இதனை யோசித்துச் சொல்லவேண்டும் எனக் கேட்க, பிரமன் மேககர்ச்சனைபோலக் கம்பீரமாக, சிவபிரபாவத்தையறிய ஒருவருக்குஞ் சாத்தியமில்லை. அவருடைய தேஜசினாலேயே மூவுலகங்களுந்தகிக்கப்படுகிறது. அத்தேஜசையடக்க வென்னாலாகாது. ஆகிலும் உலகத்துக்கு நன்மையுண்டாக்கும்படி யோசித்துச்சொல்லுகிறேன். அதாவது அமிர்தமயமான கிரணங்களையுடைய சந்திரனை அவருடைய சிரசில் எப்பொழுதும் வசிக்கும்படி செய்தால் அவருடைய தேஜசு நம்மைத்துன்புறுத்தாதென்றனர். அதைக்கேட்ட இந்திராதி தேவர்களும் மகருஷிகளும் சந்திரனை நோக்கி, உலகிற்கு இதமுண்டாகும்படி சிவபெருமான் சிரசில் நீ வசிக்க வேண்டுமென்றுகூறிச் சந்திரனை யழைத்துக்கொண்டும், அவனுக்கு முன்னரே பாற்கடலிற்றோன்றிய ஆலாலவிஷத்தையுங் கொண்டு சென்று சிவபெருமானையடைந்து அமுத கும்பங்களாலவனை யபிடேகித்து, சந்திரனைத் தரித்துக்கொள்ளும்படி பிரார்த்திக்க, யான் அவனது ஒருகலையை வாங்கிச் சிரமிசைச்சூடினேன். பின்னர் இவ்விஷத்தையுந் தேவரீர் புசிக்கவேண்டுமென வேண்ட அதனைப் பருகிக்கண்டத்தில் நிறுத்தினேன். இவற்றாற் சந்திரசேகரனென்னும் நீலகண்டனென்றும்எனக்குப் பெயர்களுண்டாயின. அதுமுதல் யான் மனத்திருப்தியடைந்தேன். இந்தச் சரிதத்தைப் படித்தவர்களுங் கேட்டவர்களும் எல்லாப் பாவங்களையுமொழித்துக் காணபத்தியத்தை யடைவார்களென்று சிவபெருமான் கூறியருளினர்.

சந்திரதாரணமும் விஷபானமு முரைத்தது
முற்றிற்று.

இருபத்தோன்பதாவது

பர்ணாதன்தவமும் விபூதிமகிமையு முரைத்த அத்தியாயம்.

பார்வதி தேவியார் சிவபெருமானை நோக்கி, சர்வலோக நாயகராகிய நீர் எல்லாப் பாக்கியங்களூ முடையவராயிருக்கவும், நவநிதிகளுக்கும் இறைவனான குபேரன் உமக்கு நண்பனாயிருக்கவும், சந்தன முதலிய வாசனைத்திரவியங்களையும் நவரத்தினாபரணங்களையும் விட்டு, விபூதியைப் பூசிக்கொண்டு பூதங்களுடன்கூடி மயானத்தில் நிர்த்தஞ்செய்துகொண்டிருக்கிறதற்கும், என்னுடைய ஆலிங்கனத்தைக் காட்டிலும் விபூதிதாரணத்தில் அதிக விருப்படைகிறதற்குங்காரணமென்னவென்பதைச்சொல்லவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லத்தொடங்கினார். உமையே! முன் பிருகு வமிசத்திற் பிறந்த ஒரு வேதியன் தீவிரமான நியமத்தினின்று கிரீஷ்மகாலத்திற் பஞ்சாக்கினிமத்தியிலும், ஹேமந்தகாலத்தில் ஜலத்திலும், வருஷாகாலத்தில் வானத்தை நோக்கியும் நின்று, பசியெடுத்தால் மாலைப்பொழுதில் மித ஆகாரஞ்செய்துகொண்டு மிருகபக்ஷிகள் போலத் தேகத்தைமறந்து சஞ்சரிப்பார். அவருடைய தவத்திற் கிரங்கிய பக்ஷிகள் திவ்வியமான பழவர்க்கங்களையும் மாமிசங்களையும் அவருக்குக்கொடுத்துவரும். புலிசிங்க முதலிய துஷ்டமிருகங்களும் அவரிடத்தில் வைரமின்றிச் சஞ்சரித்தன. உப்புங்காரமுஞ் சேர்க்காமலே அவர் புசித்துவந்தனர். சருகு பக்ஷணமே விசேஷமாகச் சாப்பிட்டு வந்தமையின் பர்ணாதனென்று பெயரெய்தி, அவ்வாறு நெடுங்காலந் தவத்திலிருந்து இனிச்சாக பக்ஷணமும் உதிரமாகமதிக்கு மெல்லையுந்தவத்தைக் கைக்கொண்டிருப்பேனெனநியமித்திருக்கையில், ஒருநாள் அவர் தருப்பைகொய்ய அது அவர்கையிற்பட்டு உதிரமோடியதால் அவருக்கு ஓர்வித திருப்தியுண்டாகித் தன்னை மறந்து கூத்தாடிக்கொண்டிருந்தனர். அவருடன் கூடிவாழ்ந்த மிருகபக்ஷிகள் இது யாதெனமயங்கிப் பயந்தன. அப்பொழுது யானோர் பிராமண வடிவுடன் அங்கடைந்து நீ யிப்படியேன் குதிக்கின்றனை? விசேடதவஞ் செய்து விட்டதாக இறுமாப்படைந்தனையா? பிரமாதி தேவர்களுந் தவத்தினாலேயே சிறந்திருக்கிறார்கள் என்றிதுபோலப் பலவாறு கூறியும், அவ்வந்தணன் அதனைச் சிறிதுஞ் செவிகொடுத்திலன். அதன்மேல் யான் அவன் கையைப்பற்றி அறுபட்டுத் தொங்கிக்கிடந்த விரலையகற்ற அதினின்றும் பாலொழுகியது. சிறிது நேரங்கழித்து அதினின்றும் விபூதியொழுகியது. அவ்வற்புதத்தைக் கண்ட அவ்வேதியன் என்னைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து நீ யார் எனக்குணர்த்த வேண்டுமெனப் பலவாறு பிரார்த்திக்க, யான் எனது நிஜவடிவுடன் காட்சியளித்து அவனுக்குப் பலவரங்களைக் கொடுத்து, உன் தவத்திற்குக்களித்தேன். உன் கையிலிருந்தொழுகிய உதிரம் நீங்கும்படி விபூதியையுண்டுசெய்தேன். நீ இனிமேருவில் வசித்துக் காணபத்தியத்தை யடைவாயாகவென்று வரங்கொடுத்தேன். பார்வதி! விபூதியிலேயே யெனக்கு விருப்பம் விசேஷம். விபூதியே

யெனக்குச் சந்தனம் போலும். அவ்வகைய விபூதியை உடலிற்றரித்துக் கொள்ளுகிறவன் பிரயாகை புஷ்கரம் உருத்திரவாசம் துவாரகை ஹரித்துவாரம் பிரபாசம் முதலிய விடங்களில் தீர்த்தஸ்நானஞ் செய்வதினும் விசேடபலனையடைவான். பிரமன் விபூதி தாரணத்தினலே சிருஷ்டி காரியஞ் செய்கிருன். விஷ்ணுவும் எப்பொழுதும் விபூதிதரித்துக் கொண்டேயென்னை ஸ்மரிக்கின்ருர். இந்திரன் அக்கினி வருணன் யமன் துவாதசாதித்தர் அஷ்டவசுக்கள் ஏகாதசஉருத்திரர் ஸப்தமருத்துகள் தேவ கந்தர்வர்கள் முதலானவர்கள் விபூதிஸ்நானமே செய்து இதையே தரிக்கிருர்கள். விபூதிதாரணத்தினலே அநேகர் தமது பாவங்களை யொழித்தே சித்திகளை யடைந்திருக்கிருர்கள். விபூதிதாரணத்தினலேயே உத்தமமான பிறவியை யடைந்து மோக்ஷத்தை யடைந்திருக்கிருர்கள். விபூதி தரிப்பவர்கள், பசாசுகள் இராக்ஷசர்கள் யக்ஷர்கள் கிரகங்கள் முதலானுராற் பயப்படமாட்டார்கள். அதனை யணிவோர் நெற்றிக்கண்ணும் மான்மழுவும் பெற்று என்னைப்போலக் கைலாயத்தில் வசிப்பார்கள்: பூர்வம் பிரமன் விபூதியையும் சுவர்க்காதிலோகங்களையுந் தராசில் வைத்து நிறுத்துப்பார்த்து விபூதியேசிறந்ததென்று மதித்தனன். வாயவியம் வாருணம் ஆதபம் ஆக்னேயம் அவகாஹம் என்னும் ஐவகை ஸ்நானங்களில் இது ஆக்னேயஸ்நானமாம். கங்கைக்குச் சமானமான தீர்த்தமும், வேதத்திற்கொத்த பிரமாணமும், மிருத்யுவுக்கொத்த தண்டகனுமில்லாதது போல விபூதிஸ்நானத்திற்குச் சமானமான தவமில்லை. அசுசியாயிருப்பினும், ரோகங்களாற் பீடிக்கப்பட்டிருப்பினும், வெறிபிடித்திருப்பினும், விபூதி ஸ்பரிசத்தாலே புனிதமாவான். பர்ணுபனையுத்தேசித்து இந்த விபூதியையுண்டுசெய்தேன். அதனலேயே இது எனக்கு அதிக விருப்புடையதாயிற்று. எனக்கு உன்னிடத்திலும் சூரிய சந்திராக்கினிகளாகிய விழிகளிடத்திலுமுள்ள விருப்பத்தைக்காட்டிலும் விபூதியினிடத்தில் அதிக விருப்பமுற்றிருக்கின்றேன்.

பர்ணுதன் தவமும் விபூதி மகிமையு முரைத்தது

முற்றிற்று.

முப்பதாவது

சிவநாம மகிமையுரைத்த அத்தியாயம்.

பார்வதி தேவியார் சிவபெருமானை நோக்கி, சர்வலோகங்கட்குங் கர்த்தாவாகிய தேவரீர் மாளிகைகளினும் நந்தவனங்களினும் வாசஞ் செய்யாது, அநேகமாயிரம் பிணங்களைச்சுடுவதாயும், எலும்பு கொழுப்பு உதிரம் மாமிசமுதலிய வற்றினின்றுந் துர்க்கந்தமுண்டாவதாயும், பூதப் பிரேத பசாசுகள் வாசஞ்செய்தவதாயும், காக்கை கழுகு பருந்துமுதலிய பறவைகளும் செந்நாய் முதலிய மிருகங்களும் வசிப்பதாயும், பிரேதமங்

திரங்களை யுச்சரிக்கு மிடமாயும் உள்ள மயானத்தில், யானைத்தோலையும் புலித்தோலையுமுடுத்து, பிரமகபாலத்தை மாலையாகப்பூண்டு எப்பொழுதும் அட்டகாசஞ்செய்து திரிலோகங்களு நடுங்கச் சிரித்துக்கொண்டு பித்தம்பிடித்தவனைப்போல வசிப்பதேன்? வேதங்கட்கும் அதீதப்பட்ட சொரூபியாகிய உமக்கு அம்மயானத்திற் பிரீதியுண்டாயிருக்குங்காரணம் யாது? உம்முடைய மசானவாசத்தைக் கருதி யென்மனம் சுழலுகின்றது. சர்வதேவமயமாயும், சர்வதேவர்களாலும் பூசிக்கத்தக்தவராயும் மகாதேவராயும் விளங்கும் உமக்கு இது யுக்தமல்லவென யோசிக்கிறேன். இஃதெனக்கு ஆச்சரியகரமாயுந் துக்ககரமாயுமிருக்கிறது. இவ்விஷயஞ் சொல்லக்கூடாத பரமரகசியமாயிருப்பினும் பக்தையான எனக்குத் தேவரீர் அநுக்கிரகிக்க வேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் மலர்ந்த முகத்துடன் உலகமாதாவாகிய பார்வதிதேவியாரை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

உமையே! உலகிலுள்ள பிராணிகளுக்கெல்லாம் பிரளயமானது நான்குவகைப்பட்டு நிகழ்கின்றது. அதை நித்தியம் நைமித்திகம் பிராகிருதம் ஆத்தியந்திக மென்பனவாம். நித்தியமென்பது தமக்கு அளவிட்ட காலங்கழிய இறத்தலாம். நைமித்திகம் சிற்சில காரணங்களாற் பலர் குழுமி இறத்தலாம். பிராகிருதம் பிரமகற்பத்தி லொழிதலாம். ஆத்தியந்திகமென்றது இவ்வண்ணமாக அழிந்தழிந்து தோன்றுந் தேகிகள் யாவும் முத்தியடையும்படி சர்வசங்காரகாலத்தில் அண்டாண்ட பிரமாண்டங்களையும் பிரமாதி தேவர்களையுந் தானவ யக்ஷ கருடாதி கணங்களையும் எல்லாவற்றையும் அழிக்கத்தக்கதாய்ப் பஞ்சபூதங்களிலொன்றாற் சங்கரித்து யாவுமழியும்படி ஒருவனே யாக நின்று சங்காரகிருத்தியஞ் செய்வேன். அப்பொழுது நீயொருத்தியேயாக என்னருகிலிருப்பாய். அச்சமயத்தில் நான் நடனஞ்செய்யவும் நீ நடனத்திற்கேற்பக் கைத்தாளம் போடவுமிருப்போம். அவ்வண்ணம் அந்தப் பெருந்தேவர்களது உடல்கள் விழுந்துகிடக்கும் மயான முழுதுஞ்சுற்றி நடித்தலின் எனக்குச்சுடலையாடி யென்பதோர் பெயர்வழங்கும். அதுவுமன்றி ஒருகாலத்தில் நான்மயானத்தில் ஆனந்தமாக நடனஞ்செய்து கொண்டிருக்கையில், அநேகமான பூதவேதாளங்களெல்லாம் தாளம்போடவும் பாடவுமிருந்தன. அச்சமயத்தில் விஷ்ணுவானவர் பலதேவர்களுடன்கூடி அங்கடைந்து என்னைக்கண்டு சந்தோஷித்து, தேவரீர் இவ்வண்ணமாக இங்கு நடனஞ்செய்யவும் பூதப்பிரேதபசாசடாகினிசாகினிகள்பாடவுந்தாளம்போடவுங்கொக்கரிக்கவுங் கூத்தாடவுமிருப்பது மிகச்சிறந்ததுதான். அவ்வாறு செய்யாவிடின் இக்கணங்கள் உலகெங்கும் பரவிப் பலரையுந் துன்புறுத்தும். அவை துன்பு செய்யாவகையாகவுந் தேவரீருக்குத் தொண்டுசெய்வனவாகவும் இதுவே உத்தமமான காரியம் என்று பலவாறு புகழ்ந்து கூறினர். அவர்களில் விஷ்ணு என்னைநோக்கி, ஸ்வாமீ! சகலபாவங்களையும் ஓடும்படி செய்வதாலும்,எல்லோரையும் பயப்படுத்துகிற பூதப்பிரேத பசாசாதிகளையும் அழச்

செய்வதாலும் உருத்திரனென்றும், சங்காரகாலத்தில் எல்லாரையுஞ் சங்கரிப்பதால் ஹரனென்றும், காலரூபியாயிருந்து உலககாரியங்களை நடத்தலாற் காலனென்றும், பிரளயகாலத்திற் சர்வலோகங்களையும் வயிற்றிலடக்கும் வல்லபத்தால் ஸர்வனென்றும், உற்பத்திகாலத்தில் கர்மபீஜத்தைக்கொண்டே முக்குணங்களையும் லோகங்களையும் படைத்தலாற் பவனென்றும், உக்கிரமான யாகங்களாலுந் திருப்தியடைதலால் உக்கிரனென்றும், பூமிமுழுதுக்கும் உற்பத்திகர்த்தாவும் சர்வதேவபூஜ்யனுயும் மகத்திற்கு மகத்தாயும் விளங்குதலால் மகாதேவனென்றும் விளங்குகிறவரே! சிருட்டியும் ரக்ஷிப்பும் கொடையும் சங்காரமும் செய்யும் ஆற்றலுடைய மகாதேவரே! தேவரீர் இவ்வண்ணம் மயானத்திலேயே யெப்பொழுதும் நடித்துக்கொண்டிருக்கவேண்டும் எனப் பலவாறு பிரார்த்தித்தனர். அவ் விஷ்ணுவும் அவருடன் வந்த தேவர்களுஞ் செய்த வேண்டுகோளுக்கிணங்கி அதையே யென் வாசஸ்தானமாகக்கொண்டேன்.

மேற்கூறிய பெயர்களில் எனக்கு விருப்பமதிகமாகவுள்ளது. அப் பெயர்களைக்கொண்டு என்னைப்பூசித்தவர்கள் தேவர்களாற் பூசிக்கப்பட்டு உயர்பதவியை யடைவார்கள். இந்தப்பெயர்களைப் படனஞ்செய்தவர்கள் காணபத்திய மடைவார்கள். நானே காலரூபி. நீயே காளராத்திரி. என் சுரூபத்தை நீயேயறிவாய். உன் சுரூபத்தை நானே யறிவேன். நீயே நாரயணனுகவும் விளங்குகின்றனை. ஆதலின் நீயும் நாராயணனும் சமானர்கள். நீயும் நானும் சமானர்கள். யாவும் நானேயாக விளங்குகின்றேன். அநேக புண்ணியஸ்தானங்களைக் காட்டிலும் எனக்குமயானத்தில் விருப்பம். புண்ணிய ஸ்தல புண்ணியதீர்த்த பலன்களை யெல்லாம் மேற்கூறிய நாமங்களை ஸ்மரித்தவர்கட்குக் கொடுப்பேன். இந்தச்சரிதத்தைப் பக்தியோடு வாசித்தவர்கள் சகல பாவங்களையு நீங்கி இஷ்டபோகங்களை யனுபவிப்பார்கள் என்று சிவபெருமான் கூறினரென, வியாஸமுநிவருக்கு ஸநத்குமார முநிவருரைத்தனர்.

சிவநாமமகிமையுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தோன்றுவது

அறுபத்தெட்டு ஸ்தலங்களுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமான் அறுபத்தெட்டு ஸ்தானங்களில் எழுந்தருளியிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேனுதலின், அவ்விஷயத்தை விளக்கியருளவேண்டும் எனக் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிருர். பூர்வம் சிவபெருமான் திருவோலக்கங்கொண் டெழுந்தருளியிருக்கையில் பிரமதேவர் அவரைப்பணிந்து ஸ்வாமீ! தேவரீர் எவ்வெவ்விடங்களில் எவ்வெப்பெயர்களுடன் வாழ்கின்

நீரென்பதைத் தெரிவிக்கவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்ல லாயினர். வாராணசியில் மகாதேவனும், பிரயாகையில் மகேசுவரனும், நைமிசவனத்தில் தேவதேவனும், கயையில் பிதாமகனும், குருக்ஷேத்தி ரத்தில் காலேசனும், பிரபாசத்தில் சசிபூஷணேசனும், புஷ்கரத்தில் கந் தேசனும், விமலேசுவரத்தில் விசுவேசனும், அட்டகாசத்தில் மகாநாதேச னும், மருகோடத்தில் மகோற்கடேசனும், சங்குகர்ணத்தில் மகாதேஜ சனும், கோகர்ணத்தில் மகாபலேசனும், உருத்திரகோடியில் மகாயோகீ சனும், ஸ்தலேசத்தில் மகாலிங்கேசனும், அவந்தியில் மகாகாளேசனும், மத்தியமேசத்தில் ஸர்வேசனும், கேதாரத்தில் ஈசானேசனும், இமாச லத்தில் உருத்திரேசனும், சுவர்ணாக்ஷத்தில் காசிராக்ஷசனும், விருக்ஷத்தில் இடபத்துவஜேசனும், பைரவத்தில் பைரவேசனும், பத்திரபதத்தில் பத்திரேசனும், கனகலேயில் உக்கிரேசனும், பத்திரகர்ணத்தில் இருதபேச னும், தேவதாருவனத்தில் பின்னேசனும், கபிஜங்கலத்தில்சண்டேசனும், சுரண்டத்தில் ஊர்த்வகேதுவும், மங்களாண்டத்தில் கபர்த்தீசனும், கிருத் திவாசத்தில் வரதேசனும், ஆமிராடிகத்தில் சூக்குமேசனும், காளஞ்சரத் தில் நீலகண்டேசனும், மண்டலேசுரத்தில் ஸ்ரீகண்டேசனும், சித்தேசத் தில் தியானசித்தேசனும், உத்தரேசத்தில் காயத்திரியேசனும், காஸ்மீ ரத்தில் விஜயேசனும், சமருகேசத்தில் ஜயேசனும், யமசியாங்கத்தில் தா ணேசனும், கரவீரகத்தில் காபிலேசனும், காயாவதாரத்தி லிலகுடீசனும், தேவிகாவில் உமாபதியும், ஹரிச்சந்திரத்தில் ஈசுவரனும், புரசந்திரத்தில் சங்கரனும், காலேசுவரத்தில் ஜடேசனும், குக்குடேசத்தில் சௌமியேச னும், சந்தியாக்ஷேத்திரத்தில் தாமிரேசனும், வெதிரியில் திரிலோசனே சனும், ஜலேசத்தில் திரிசூலியும், ஸ்ரீசைலத்தில் திரிபுராந்தகேசனும், லேபனத்தில் பசுபதியும், அங்கேசத்தில் தீப்தேசனும், கங்காசாகரசங்க மத்தில் அமருகேசனும், அமரகண்டகத்தில் ஓங்காரேசனும், சப்தகோதா வரியில் பீமேசனும், பாதாளத்தில்ஆடகேசனும், கர்ணிகாரத்தில் கணாத் தியக்ஷனும், கைலாசத்தில் திரிபுராந்தகேசனும், ஏமகூடத்தில் விரூபாக்ஷ னும், கந்தமாதனத்தில் பூர்புவஸ்ஸுவஸ்வேசனும், திடீசத்தில் அனலே சனும், தலேசத்தில் ஜ்வலலிங்கேசனும், பூதேசத்தில் கணாத்தியக்ஷனும், கிராதத்தில் கைராதேசனும், விந்தகிரியில் அசுரநாசஞ்செய்ய வராகே சனும், கங்காஹ்ருதத்தில் ஹிமஸ்தானேசனும், வடவாமுகத்தில் மான வேசனும் தீர்த்தத்தில் சிரேஷ்டிகோடீசனும், இஷ்டகாபதத்தில் விசிஷ் டேசனும், குசுமபுரத்தில் பிரகாசேசனும், இலங்கையில் அலகேசனு மென, அறுபத்தெட்டு ஸ்தானங்களில் அறுபத்தெட்டுத் திருநாமங்க ளுடன் விளங்குகின்றேன். இந்தத் திருநாமங்கள் அறுபத்தெட்டினையும் பக்தியுடன் ஒரேமனதாகப் பாராயணஞ் செய்தவர்கள் பத்து அசுவமே தஞ்செய்த பலனையடைவார்கள் என்று சிவபெருமான் கூறியுள்ளார். இதனை யுனக்குரைத்தேன். அன்றியும் அவ்விறைவருடைய விபூதியைப் பூர்வம் சிவபெருமானே மந்தரகிரியில் நந்திதேவருக்குக் கூறியவிதமாகச் சொல்லு

கின்றேன். ஏகமனதாகக் கேட்பாயாக. சிவபெருமான் ஜகத்முழுவதும் அக்கினிபோலப் பிரகாசித்தும், வாயுபோலச் சஞ்சரித்தும், உன்னத பர்வதங்களிலும் வசிக்கிருர். அவ்வகைய பர்வதங்களைப் பிரதக்ஷிணஞ்செய்தவர்கள் நூறுகோதானஞ்செய்த பலனை யடைவார்கள். பசுக்களிடத்திலும்,சந்திரனிடத்திற்சந்தோஷமும்,வருணனிடத்திற் சீதளத்தன்மையும், பூமியில் பரிமளமும், மத்தியானத்தில் கர்மமும், மிருத்யுவுக்குக் காலமும், நவக்கிரகங்களையுஞ் சுழற்றத் துருவனும், வேதங்களிற் சந்தசும், நேத்திராதி இந்திரியங்களில் கிரகிக்குஞ் சக்தியும், உலகங்கட்கு விருத்தியும், யுத்தத்தில் ஜயமுமாக விளங்குவர். அவரே சிருட்டி திதி சங்காரங்கட்குக் கர்த்தா. அவரே தருமங்களை நிலைநிறுத்துகிறவர் ; தாரகாதி தைத்தியர்களை நாசஞ்செய்தவர்; எல்லாப்பூதங்கட்கும் பிறப்பிடம்;ஆத்மஸ்வரூபியாயுள்ளவர். இதிகாசபுராணங்களின் அர்த்தஸ்வரூபி ; புஷ்பவிருக்ஷங்களின் வாசமுடையவர். ஸ்திரீகளிடத்தில் ரூபயௌவனமும், இரத்தினங்களிற் காந்தியுமாக விளங்குவர். சிவபிரானில்லாதவிடமே கிடையாது. அவ்வாறறிந்தவன் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து உபவாசமிருந்தபலனை யடைந்து காமக்குரோதாதிகளை யொழிப்பான். இவ்விபூதியை வாசித்தவர்கள் பிரமசரிய மநுஷ்டித்தபலனையடைவார்கள். சிவபெருமானைத் தியான யோகத்தினுலே யறியவேண்டும். அசுவமேதாதி யாகங்கள் அநேகஞ் செய்வதைக்காட்டிலும் தியானயோகஞ்செய்தலே சிறந்தது. தியானயோகி யொருவனுக்கு அன்னங்கொடுத்தால் அநேககோடி வேதியருக்கு அன்னமளித்தபலனை யடைவான். ஆயிரம் கிரகஸ்தர்கள் ஆயிரம் வானப்பிரஸ்தர்கள் நூறு பிரமசாரிகள் இவர்களைக்காட்டிலும் தியானயோக முணர்ந்தவொருவன் விசேடம். அவனுக்குக் கொடுத்த அன்னம் யாகத்திலிட்ட அவிசுக்கொப்பாகும். தியான யோகியைக் கோபிக்கச்செய்தவன் நாசமாவான். யோகியைச் சந்தோஷிக்கச் செய்தவனுடைய குலம் அபிவிர்த்தியாகுமென் றறிகவென ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

அறுபத்தெட்டு ஸ்தலங்க ளுரைத்தது

முற்றிற்று.

முப்பத்திரண்டாவது

பிரணவோச்சாரண பலனுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவரை நோக்கி யான் நந்திதேவரிடங் கேள்விப்பட்ட விதமாகச் சொல்லுகின்றேன். உருத்திரமூர்த்தியின் வலப்புறத்திற் பிரமதேவரும், இடப்புறத்தில் விஷ்ணுமூர்த்தியும் விளங்குவர். இவர்கள் மூவரும் ஒரேசுரூபமானவர்கள். பரசிவத்தை உதயத்திற் பிரமனுகவும், பகலில் விஷ்ணுவாகவும், மாலையில் உருத்திரனுகவுந் தியானிக்கவேண்டும். ஒருமூர்த்தியே முத்தொழில் காரணமாக மும்மூர்த்திக

ளாகநின்று நடத்துவர். அகாரம் விஷ்ணுவும், உகாரம் பிரமனும், மகாரம் உருத்திரனு மாவரென்று தியானயோகிக ளறியவேண்டும். அகாரத்தை இதயத்திலிருத்தி உகாரத்துடன் கூட்டி மிருதுவாக மகாரத்தையுஞ் சேர்த்து விந்து நாதங்களைப் பொருத்தப் பிரணவமாகின்றது. அதைத்தான் "ஏகாக்ஷரம் பிரஹ்மா" வென்று சுருதிகள் கூறும். அதனை யுணர்ந்தவனுக்கு ஜனனங்களில்லா தொழியும். ஓங்காரஸ்வரூபத்தை யறிந்தவன் திரிமூர்த்திகளை யறிந்தவனே. மாயையின் சிரசிலிருந்துண்டான ஓங்காரத்தினையே அப்பியசிக்கவேண்டும். அப்படி யப்பியசித்தவனுக்கு மனோதிடமுண்டாகும். அங்குஷ்டமாத்திரையாக வுள்ள சிவபெருமானை இதயத்தில் தியானித்து, புருவமத்தியில் சாங்கியயோக முறைப்படி சந்திரசமான காந்தியும் அழிவின்மையும் அவ்வயமும் சூக்ஷமமும் அநாதியுமாக விளங்குந் தேஜஜைத் தரிசிக்கவேண்டும். ஓமென்னும் பிரணவத்தைச் யுச்சரிக்காமல் மனதினுலேயே தியானிக்கவேண்டும். அரைமாத்திரை ஒருமாத்திரை இருமாத்திரை மும்மாத்திரை காலங்களாக விருத்தி செய்து அதனைத் தியானிக்க வேண்டும். திரிமாத்திராகாலமாகத் தியானிக்க வுணர்ந்தவன் தத்துவத்தை யறிந்தவனுவான். அதனை யுச்சரிக்கையில் மனமானது விஷயவாதனைகளிற் செல்லாது அடக்கிப் பிராணயாமத்தினின்று மானசிகமாக உச்சரிக்கவேண்டும். அவ்வாறு ஒருநிமிஷகாலமேனுஞ் செய்வது யோகமாகும். அவ்வாறு யோகஞ் செய்வோன் ஐந்து அவயவங்களையடக்கிய ஆமைபோலும், காற்றில்லாத விடத்தி லெரியுந் தீபம்போலுஞ் சந்தோஷமாக விளங்குவான். தயிலதாரை யொழுகுகையில், பின்னமில்லாது ஒழுகுவதுபோலவும், நித்திரைசெய்கையில் சுவாசம் விடுவதுந் தெரியாததுபோலவும், இடைவிடாது யோகத்திலேயே லயமுற்றிருக்கவேண்டும். அசைவற்றிருந்து பிராணயாமஞ் செய்பவனுக்கு மனமானது ஸ்திரமாக நிற்கும். மனம் ஸ்திரப்படலால் வஸ்துவானது பிரதிபலிக்கும். அதுவே அக்ஷரசுவரூபி. அதுவே பிரமவிஷ்ணுருத்திராதிக்ய மென்றறிக என்று நந்திதேவரெனக்குக்கூற, அவரை யான் ஆலிங்கனஞ்செய்து அநேகமுறை பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து ஆனந்தமயமாக விளங்கினேனென்று ஸநத்குமார முனிவருரைத்தனர்.

பிரணவோச்சாரண பலனுரைத்தது
முற்றிற்று.

முப்பத்துமூன்ருவது
பிராணயாம விதியுரைத்த அத்தியாயம்.

இவ்விதமாகச்சொன்ன ஸநத்குமார முனிவரை நோக்கி, வியாஸ முனிவர் அறுகுணச்செல்வரே! தியானயோக கருமத்தை விஸ்தாரமாய்க்கேட்க விரும்புகின்றேன் என்று வேண்ட வியாசரை நோக்கி ஸநத்குமாரர் கூறத்தொடங்கினர். வியாஸமுனிவரே! முன்னுளில் நந்தியெம்

பெருமானுக்குச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் யான் கூறுகின்றேன். பிராணாயாமம், தியானம், பிரத்தியாகாரம், தாரணை, யோகம் என ஐந்து விதமாய்ச் சொல்லப்படுகின்றன. பிராணாயாமம் என்பது பிராணவாயுக்களை இழுத்து ஓரிடத்தில் நிறுத்துவதாம். அது உத்தமம், மத்திமம், அதமம் என மூன்றுவகையாகும். அம்மூன்றனுள்ளும் மந்த மத்திம உத்தமமென மும்மூவகையாம். அவற்றுள் பிராணாதிவாயுக்களைப் பன்னிரண்டு மத்திராகாலம் நிரோதம் செய்கிறதென்றும், அதற்கு *உத்காதமென்றும், அதுவே மந்தமென்றும் யோகசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் மத்திமம் இருபத்துநான்கு மாத்திராகாலம் பிராணன் முதலிய வாயுக்களை ஓரிடத்தில் நிறுத்தவேண்டும். முப்பத்தாறு மாத்திராகாலம் பிராணன் முதலிய வாயுக்களை நிறுத்துதல் திருருக்காதம் என்றும், உத்தம பிராணாயாமம் என்றும் சொல்லப்படும். இவ்விதமான பிராணாயாமங்களை அநேகமுறை செய்வது யோகங்களின் பேதமாய்ச் சொல்லப்படும். இதனைச் சிறிது சிறிதுகாலமாய் அப்பியசித்துப் பழகிக் கொண்டுவரவேண்டும். இந்த விஷயத்தில் எவனுக்கு அதிகமான வழக்கமிருக்கிறதோ அவனுக்குச் சிங்கங்கள், யானைகள், புலிகள், மான்கள், பட்சிகள், முதலைகள் முதலிய ஜந்துக்கள் அடங்கிவசியமாகும். இப்படிச் சர்வ ஜந்துக்களையும் சுவாதீனப் படுத்திக்கொள்வதே வசித்துவம் என்று சொல்லுவார்கள். இவ்வித பிராணாயாமத்தை ஒருமுறை செய்தாலும் ஜனனம் எடுத்தது முதல் செய்த பாவங்கள் தொலையும். அக்நிஷ்டோமம் முதலாகிய யாகத்தினாலும், கங்காதி புண்ணியதீர்த்த ஸ்நானங்களாலும், ஏகாதசி விரதங்களாலும், தபோநியமங்களாலும், ஸர்வ தானங்களாலும், இந்தப் பிராணாயாமத்தை யனுஷ்டித்தவர்கள் அடையும் பலனை யடைய முடியாது. பிராணாயாமத்தினாற் பாவங்களை யொழித்துத் தாரணையினால் மனதைநிறுத்தி, பிரத்தியாகாரத்தினால் இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாமல் அடக்கி, தியானத்தினால் எப்பொழுதும் அழிவில்லாததாய், நாசமற்றதாய், பரிபூரணமாய், தேஜோமயமாய்விளங்கும் பரப்பிரம்மத்தைத் தைலதாரையைப்போல் அவிச்சின்னமாய்த் தியானிப்பது யோகமென்று சொல்லுவார்கள். இவ்விதமாய் யோகம் செய்வதற்குப் பலவகையான ஆசனங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஸொஸ்திகம், பத்மாசனம், பத்திராசனம், வீராசனம் முதலியனவாம். இரண்டு முழங்கால்களையும்சமமாகச் செய்து இரண்டு பாதங்களையுந் தொடைக்குக் கீழாகச்செய்து நேராக உட்கார்ந்து மனதுவிஷயங்களிற்பிரவர்த்திக்காது நிறுத்தித் தியானிப்பதை ஸொஸ்திகாசனமென்று சொல்லுவார்கள். பத்மாசனமிட்டுத் தியானிப்பவன் பாவத்தையொழிப்பான். பத்திராசனமிட்டு யோகத்தை யப்பியசிப்பவன் விஷரோகத்தை யொழிப்பான். இவ்விதமாக ஆசனபேதங்களை முறைப்படியறிந்து இந்திரியங்களை விஷயங்களிற் பிரவர்த்திக்க வொட்டா

* உத்காதம் - பன்னிரண்டு எழுத்துக்களை யுச்சரிக்குங் காலம்.

மல் நிறுத்திக்கல்லைப்போல் அசையாமல் நின்று, தமோகுணத்தை ரஜோகுணத்தால் மறைத்து, ரஜோகுணத்தை ஸத்துவகுணத்தால் மறைத்து, நாவையும் அசைக்காமல் நிர்ச்சலமாய் முற்கூறிய பிராணாயாமங்களைச் செய்வதே நான்காவதாகிய மோட்ச புருஷார்த்தத்திற்குச் சாதகமாம். இந்திரியங்களை விஷயங்களிற் பிரவேசிக்காமல் தடுத்தல் பிரத்தியாகாரமாம். பன்னிரண்டு பிராணாயாமங்கள்கூடிய காலம் தாரணை. அந்தத்தாரணையையே சிறிது சிறிதாக உயர்த்திப்பழகியவன் வேதவித்தாகிப் பரமாத்மாவைத் தரிசித்து, பிறவியை யொழிப்பான். இவ்விதமாகத் தாரணையை விசேடமாகப் பழகிய பின்னர் அதனைமெல்ல விடுதலே பிரத்தியாகாரமாம். பிராணவாயுவைத் தகைதலினாற் பிராணாயாமமென்றும், அந்த வாயுவையோரிடத்துத் தரித்தலால் தாரணையென்றும், விஷயங்களை நிக்கிரகித்தல் பிரத்தியாகாரமென்றுஞ் சொல்லப்படும். இம்மூன்றுஞ் சேர்ந்தவிடத்து யோக சித்தியுண்டாகும். அந்த யோகசித்தியால் ஆத்மாவைச்சலத்திற் சந்திரன்போலப் பார்ப்பான். அப்படிப் பார்ப்பதால் மோக்ஷமுண்டாகும். இந்தத் தத்துவலக்ஷணங்களைச் சத்பாத்திரனுக்கே யுபதேசிக்கவேண்டும் என்று எனக்கு நந்திதேவர் கூறியுள்ளாரென, ஸநத்குமார முனிவர் வியாஸமுனிவருக்குரைத்தனர்.

பிராணயாமவிதியுரைத்தது முற்றிற்று.

முப்பத்துநான்காவது

தாரணையுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமாரமுனிவரை நோக்கி, இந்த ரகசியமான தத்துவங்களையெல்லாம் தங்களிடத்திற் கேட்க விரும்புகின்றேனென, ஸநத்குமாரமுனிவர் கூறுகின்றார். பூர்வம் ஒருகாலத்தில் ஸ்ரீகைலாயத்திற் சுயம்புவாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கையில், சிவபக்தர்களில் முதலாகக் கருதத்தக்க துர்வாச முனிவர் அவர் முன்னின்று அஞ்சலியஸ்தராய், பகவானே! உலகத்திற் பாவஞ்செய்துள்ள சதுர்வருணத்தவர்கள் மாமிசபக்ஷணஞ்செய்பவர்கள், மிலேச்சர்கள், சண்டாளர்கள், பசுபக்ஷிகளை யிம்சிக்கிறவர்கள், செய்ந்நன்றி மறந்தவர்கள், காமவிருப்பமறவாதவர்கள், வேதநிந்தைசெய்தவர்கள், கன்னிகைகளைக் கெடுத்தவர்கள், நபும்சகர்கள், மாதாபிதாக்களை நிந்தித்தவர்கள், அரசனைக் கொன்றவர்கள், பரபொருளை யபகரித்தவர்கள், க்ஷத்திரியனாகப் பிறந்து யுத்தத்திற்குப் பயந்து முதுகு காட்டி யோடினவர்கள் முதலிய பாவிகள் அப்பாவங்களினின்றும் எவ்வாறு விடுபடுவார்கள் என்பதைப்பற்றி அடியேனுக்கு நன்குவிளங்குமாறு திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கைகட்டி வாய்பொத்திநின்ற துர்வாச முனிவரை நோக்கிச் சிவபெருமான் சொல்லத்தொடங்கினர். துர்வாச முனிவனே! எவ்வகைய மகாபாவியாயினும் என்னைப் பக்தியோடுதியானஞ்

செய்தால், பாம்பானது தோலையுரித்து விளங்குவதுபோல அப்பாவங்களினின்றும் விடுபடுவான். என்னை யுள்ளத்திற் பொருந்தத் தரித்தலே தாரணையென்னும்யோகமாம். அதனாலேயே சந்நியாசத்துவம்சித்திக்கும். தியானமில்லாத சந்நியாசத்துவம் பயனில்லை. ஆகையால் என்னைப்பூசிப்பதிலும் என்னைத் தரிசிப்பதிலும் என்னைத் தியானிப்பதிலுமே மனவாக்குக்காயங்களைச் செலுத்தினவன் மோக்ஷத்தையடைவான். அல்லது இந்திரன் சந்திரன் குபேரன் விஷ்ணு பிரமன் முதலிய தேவருலகங்களை யடைந்து கிரமமாக மோக்ஷத்தையடைவான்.

தாரணையுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தைந்தாவது
பாஹ்யாந்தர யோகங்களுரைத்த அத்தியாயம்.

துர்வாசமுநிவர் சிவபெருமானை நோக்கி, தேவதேவனாகிய சிவபெருமானே! தியானஞ்செய்யுங் கிரமமெப்படி? என்பதை விளங்கவுரைத்தருள வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லலாயினர்: துர்வாச முநிவனே! என்னைத் தியானிக்க விருப்பமுடையவன் சற்குருவைத்தேடி அவரைப் பணிந்து அவரிடத்தில் மந்திரோபதேசஞ்செய்துகொண்டு அவ்வோங்கார மந்திரத்தைத் தியானஞ்செய்யவேண்டியது. அவ்வோங்காரத்தை மண்டலக்கிரமமாக என்னை யர்ச்சித்துத் தனது இதயதாமரையில் ஆவாகனஞ்செய்து பிராணாதிவாயுக்களையடக்கித் தியானிக்கவேண்டும். அப்படிச் செய்தவனே யோகவித்தாவான். யோகாப்பியாசஞ்செய்வதில் சோமமண்டலம் பத்மமண்டலம் சுவஸ்திகமண்டலம் ருத்திரபீடம் வச்சிரதண்டம் வச்சிரோன்மதம் எனப் பலதிறமாக யோகநூல்கள் கூறும். அம்முறைகளிலொன்றைத் தெரிந்துகொண்டு அதனைப் பழகவேண்டும். அப்படியோகஞ் செய்பவன் ஆகாரத்தையொழித்துக் கோபத்தையடக்கி ஏகாந்தமானவிடத்திற் சாத்திரப்படி தியானஞ்செய்யு வேண்டியது. அவ்வாறு ஒரே மனதாகத் தியானித்தால் உலக உற்பத்தி நாசங்களையும் சீதோஷ்ண துக்கங்களையும் இவ்வகைய தென்றுணர்ந்து யாவும் ஈசுவரனிடத்திலிருந்தே தோன்றுகின்றதென்னும் ஞானத்தை யடைவான். இந்தச்சரீரம் அநித்தியமென்றும், எழுவகைத்தாதுக்கள் நாடிகள் நவத்துவாரங்கள் மலமூத்திரங்கள் துர்க்கந்த ஜலங்கள் வியாதி சோகம் அகங்காரம் முதலியவற்றுடன் கூடியதென்று முணர்ந்து, யாவும் நானென்றுணர்ந்தவன் யோகியாவான். இந்த யோகமார்க்கம் பாஹ்யம் ஆப்பியந்தரமென இருவகைப்படும். அதில் இதுகாறுங் கூறியவை ஆப்பியந்தரயோகமாம். அவிமுக்தமாகிய காசிக்ஷேத்திரம் ஈசுவர வாசமென்றும், அங்குள்ளார் உருத்திரகணங்களென்றுந் தெரிந்து, ஆங்கடைந்து வாழ்ந்து உயிர்நீத்தல் பாஹ்யயோகமாம். ஸ்ரோத்திரம் தொக்கு சக்ஷு சிங்

குவை ஆக்கிராணம் பிரிதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் இவற்றின் தன்மைகளை யறிந்து மனதைச் சுவாதீனப் படுத்தி யோகாப்பியாசஞ்செய்வதே உத்தமம். அது அநேக ஜனனங்களிற் சாத்தியப்படுமாதலின் பாஹ்யயோகத்தைச்செய்து அப்பியாசித்து உயிர் நீத்தால் அந்தர்யோகம் சீக்கிரத்தில் சித்தியாகுமெனச் சிவபெருமான் துர்வாசமுநிவரை நோக்கிக் கூறினர்.

பாஹ்யாந்தர யோகங்க ளுரைத்தது
முற்றிற்று.

முப்பத்தாறுவது
இதய சோமமண்டலமுரைத்த அத்தியாயம்.

சிவபெருமானை நோக்கித் துர்வாசமுநிவர் சொல்லுகின்றார்: ஸ்வாமீ! ஸர்வதேவநாயகரே! சோமமண்டலமத்தியில் ஈசுவரனைத் தியானிக்க வேண்டுமெனத் தேவரீர் கூறினமையின் அவ்விவரத்தை விளக்கியருள வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்: பிராணன் அபானன் சமானன் உதானன் வியானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் எனத் தசவாயுக்களுள. அவற்றுள் இதயத்திற் பிராணனும், உச்சர்க்கஸ்தலத்தில் அபானனும், கந்தரசக்குழிச் சந்திற் சமானனும், நாபியில் உதானனும், சரீரமுழுதிலும் வியானனும், வாக்குத்துவாரத்தில் [வாயில்] நாகனும், உரோமம் புளகித்திமைப்பதிற் கூர்மனும், தும்மல் சினம் வெம்மைகளிற் கிருகரனும், ஒட்டம் இளைப்பு வெயர்ப்புகளில் தேவதத்தனும், உயிர் நீங்கினும் போகாது உடலைவீக்கித் தலைகிழித்துச்செல்வது தனஞ்சயனுமாம். உடல் முழுவதும் வியாபித்திருக்கின்ற தசவாயுக்களை அவ்வாறு சஞ்சரிக்கவொட்டாது யோகசாதகத்தால் நிறுத்து மெல்லையுந் தன்னுள்ளேயுள்ள சந்திரமண்டலம் விளங்கமாட்டாது. நாபியின்மத்தியில் அநேக ஜ்வாலாமாலிகைகளோடும் கோடி சூரியப்பிரகாசமாயும் அதிக அழகாயும் விளங்குஞ் சந்திரமண்டல மத்தியில், எலும்பு நரம்பு மாமிசம் துக்கம் முதலியனவற்று, சூரியதேஜசுக்குச் சமானமான தேஜசோடும் விளங்குகின்ற அவரே ஈசுவரன்; பவன்; பரமாத்மா; சுத்தஸ்படிகநிறமுடையவன்; கண்ணுற் காணமுடியாதவன், ஸர்வ ஜகத்தும் அவரிடத்திலேயே வியாபித்திருக்கின்றது. விளையாட்டாகப் பிரபஞ்ச சிருஷ்டியைச் செய்கிறவர் அவரே! உலகமெங்கும் வியாபரித்த எல்லாப்பொருள்களிலும் இலைகளிலுள்ள நரம்புகள்போல வியாபரித்திருக்கிறார். ஒவ்வொரு பொருளையும் அப்பியாசத்தினலேயே யறிய வேண்டியதாதலின், தன்னுள்ளேயுள்ள பொருளைக் காண்பதற்கு நெடுநாள் பிரயத்தினஞ்செய்யவேண்டும். யோக சாதனத்தினலேயே வஸ்துவை யுணரலாம். பிராணதிவாயுக்களுக்கு ஆதாரமாக எழுபத்திராயிர நாடிகள் தேகமெங்கும் பொருந்தியுள்ளன. இந்த நாடிக்கிரமத்தை யறிந்து நாபி

மத்தியிற் சோமமண்டலத்திற் குற்றமற்ற சுத்தஸ்படிகமயமாயும் சாசுவதமாயும் நிரஞ்சனமாயும் நிர்க்குணமாயும் அக்ஷயமாயும் விளங்கும் பரமாத்மாவைப் பார்க்கவேண்டும். இவ்வகையான யோகத்தைச்செய்து பரமாத்மாவைத் தரிசிக்கச் சக்தியற்றவனுயினும், என்னைத் தீர்த்தஸ்வரூபி நீயே, தாதா நீயே, விதாதா நீயே, பிரசித்தமானவன் நீயே, ஞாதுரு ஞானஞேயங்களும் நீயே, சிருஷ்டிகர்த்தா நீயே, இரக்ஷிப்பவன் நீயே, சங்கரிப்பவன் நீயே, தர்மம் அக்னி ஆதித்தன் முதலிய யாவும் நீயே, என்றிதுபோலத் தியானஞ்செய்துகொண்டிருந்தாலும் ஞானமடைந்து என்னைச் சோமமண்டல மத்தியில் தரிசிக்க அருகவானுவானென்று கூறினர்.

[இவ்வத்தியாயம் சில பிரதிகளிலில்லை.]

முப்பத்தேழாவது
மேற்படி அத்தியாயம்.

துர்வாசமுநிவர் சிவபெருமானை நோக்கி ஸ்வாமீ! ஷடங்கவிதியையும் எனக்குபதேசிக்கவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லலாயினர்: அஹிம்சை சத்தியவசனம் சோரத்தனமின்மை எண்ணமின்மை பிரமசரியம் இந்திரியநிக்கிரகம் கோபமின்மை குருபணிவிடை சௌசம் சந்தோஷம் முதலியன யோகத்திற்குச் சாதனங்களாம். இவ்வகைய நியமங்களுடனே ஓங்காரஸ்வரூபியாக என்னைத் தியானிக்கிறவன் எல்லாவற்றையும் பார்க்கவல்லவனுகிறுன். பரம்பொருள் ஞானத்தாலறியத்தக்கதும் நிரஞ்சனமானதுமாம். அதுவே சாந்தம் - புருஷம் - சூக்குமம் சாசுவதம்-பார்க்கத்தக்கது. அதையறிந்தவனே சிவசொரூபி. புத்தி மனம் அகங்காரமும்,அவியக்தம் திரிகுணத்துமகமாகிய சிவமும்தேகத்தினிடத்திலேயே விளங்குமேனும் ரஜஸ் தமஸ் முதலியவற்றுல் மறைக்கப்பட்டபொழுது சிறிதும் பிரகாசமில்லாதிருக்கும். ஸத்துவகுணம் உண்டாகும் பொழுது விளங்கும். அப்பொழுது தான் நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷத்திற்குரியவனுகிறுன். அந்த வஸ்துவையறிய உற்பத்திலயங்களையும் மானுபமானங்களையும், சீதோஷ்ண சுகதுக்கங்களையும் அறியவேண்டும். அவனே தத்துவங்களை யறிந்தவனுகிறுன். அது அநுமானப்பிரமாணத்தாலறிய முடியாதது ஆனபடியால் மாநுடஜனன மெடுத்தவன் தத்துவங்களை யாராய்ந்தறியவேண்டும். அவனே அவ்யயனுயும் ஈசானனுயுமுள்ள பராத்பர வஸ்துவையறிய வல்லவனுவான். அது கூடாதபக்ஷத்தில் அவிமுக்த க்ஷேத்திரத்தில் ஓங்காரேசுவரத்தை யடைந்து தவஞ்செய்தால் அவ்விறைவனுடைய திருவருளாற் சித்தசுத்தியுண்டாகித் தத்துவங்களின் இலக்கணங்களையறிந்து, எதைப் பார்த்தால் துக்கப்படமாட்டார்களோ, எதை யடைந்தாற் பிறவியில்லையோ, எது அழியாததோ, நிரஞ்சனமானதோ, நரைதிரை மூப்புக்களற்றதோ, எதை யதிகளெல்லாரும் சிந்திக்கிறுர்களோ, அந்தப் பொருளையறிய வல்லவர்களாவார்கள். அந்

தத்தேவனே மத்ஸோதரியென்னுந் தடத்தருகில் வாழ்கின்ற... ஓங்காரேசனாயுள்ள அந்தப் பகவானுடைய பிரசாதத்தினால் நிஷ்கல்மஷத்வத்தையடைந்து மோக்ஷ சாம்பிராச்சியமடைவான். சரீரமே பிரமமயமென எப்பொழுது ஒருவன் அறிகின்றானோ அவன் அப்பொழுது எல்லாக்கர்மங்களினின்றும் பிறவித்துன்பத்தினின்றும் விடுபடுகிறான். ஆதலால் ஓங்காரமே பரப்பிரமம். அந்த ஓங்காரத்தை அகார வுகார மகார நாதபிந்துக்களாகிய பஞ்சமாத்திராத்துமக மாகச்சொல்லப்படும். இதில், அகாரம் வைத்யுதா, உகாரம் அக்ஷரகாமினி, மகாரம் நிமிஷம், நாதம் பிபீடிதை, பிந்து பிரமமென யோகசாஸ்திரங்கள் சொல்லுகின்றன இவற்றையறிந்தவன் சரீர சுகதுக்கங்களை நீங்குவான். அகாரம் பிரமரூபம், உகாரம் விஷ்ணுரூபம், மகாரம் உருத்திரரூபம், அகார உகார மகாரங்களோடு நாதபிந்துக்களைச் சேர்த்து வாயாலுச்சரியாது மானசிகமாகத் தியானித்தால் விஞ்ஞானமென்பதுண்டாகிநதிபோலப்பெருகும். அவ்வாறு அவிச்சின்னமாகத்தியானிக்கவேண்டும். அப்பொழுது மனதை, விஷயங்களிற் செல்லவொட்டாது, அம்பைத்தீயூட்டுகிறவன் நெருப்பைப்பாராது குறியைப்பார்ப்பதுபோல, வஸ்துவினிடத்திலேயே செலுத்தவேண்டும். அப்படிமனதை ஒரே வழியாகச் செலுத்தினவன் அந்த வஸ்துவையடைவான்.

இதய சோமமண்டலமுணர்த்தது
முற்றிற்று.

முப்பத்தெட்டாவது

தேகந் தெய்வமயமென்பதுணர்த்த அத்தியாயம்.

துர்வாசமுநிவனே! தேகமானது சர்வதேவமயமானது. ஒவ்வோரவயங்களிலும் அநேக தேவர்கள் வசிக்கிறார்கள். அதனை யுனக்குச் சொல்லுகிறேன். பாதத்தில் விஷ்ணுவும், முழங்காலின்கீழ் ஸப்தமருத்துக்களும், முழங்காலில் அசுவினிதேவர்களும், தொடைகளில் வருணனும், குய்யத்தில் மித்திரா வருணரும், குறியிற் பிரசாபதியும், இடையிற் குபேரனும், வயிற்றில் அநேக நதிகளும் சமுத்திரங்களும், இதயத்திற் சாவித்திரியும், மார்பிற் சந்திரனும், கைகளில் இந்திரனும், தோளில் மின்னல்களும், நகத்திற் கொடிகளும், கேசத்தில் விருக்ஷங்களும், ரோமகூபத்தில் தர்மங்களும், சிரசில் ஆதித்தனும், சந்திகளிற் சப்தருஷிகளும், நேத்திரங்களிற் சூரியனும், காதுகளில் திக்குகளும், புருவத்திற் பர்வதங்களும், நெற்றியில் அஷ்டவசுக்களும், கீழுதட்டில் யமனும், மேலுதட்டிற் பிரமனும், முதுகில் இரவும், பக்கங்களில் தேவர்களும், கண்டத்திற் பிராணாதிவாயுக்களும், புத்தியில் அகங்காரமும் உருத்திரனுமாக இவ்வண்ணம் சர்வதேவமயமாகும். இதனை யிவ்வகையாக அறிந்துகொண்டவன் உத்தமமானகதியை யடைவான் என, துர்வாசர் சுவாமீ! பிராணாகுதி செய்கையால் எந்தத்தேவர்கள் எவ்வகைய திருப்தியடைகிறார்க ளென்

பதையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் சொல்லத் தொடங்கினர்.

துர்வாசமுநிவனே! பிராணன் அபானன் சமானன் உதானன் வியானன் என்னும் ஐந்துவாயுக்கள் சரீரத்தில் விளங்கும். இவ்வாயுக் களிற் பிராணனையுத்தேசித்து அன்னத்தினுல் ஆத்மாவில் ஆகுதிசெய்தாற் சாவித்திரியும் நான்குவேதங்களும் ஷட்ங்கங்களும் பதக்கிரமங்களும் ஔஷதிகளும் விருக்ஷங்களும் சந்திரனும் சூரியனும் ஸப்தமருத்துக்களுந் திருப்தியடைகிருர்கள். இரண்டாவதாகிய அபானனை யுத்தேசித்து அன்னத்தினுல் ஆகுதிசெய்தால் நாகங்கள் சமுத்திரங்கள் புண்ணியநதிகள் ருஷிகள் பிதுர்கள் தேவர்கள் இந்திரன் முதலானுர் திருப்தியடைகிருர்கள். சமானனை யுத்தேசித்து அன்னத்தை ஆகுதிசெய்தால் அசுவினிதேவர்கள் மருத்துக்கள் விஷ்ணு வருணன் யமன் பிரசாபதி குபேரன் சர்வ யக்ஷ கணங்கள் வித்தியாதரர்கள் சித்தர்கள் முதலானோர் திருப்தியடைகிருர்கள். உதானனை யுத்தேசித்து அன்னத்தைக்கொண்டு ஆத்மாவில் ஆகுதிசெய் தால், பவனும் நந்தியும் கணேசுவரரும் உமையும் பிரமனும் மனமும் பிராணன்களுந் திருப்தியடைவார்கள். வியானனை யுத்தேசித்து ஆத்மாவில் ஆகுதிசெய்தால் நக்ஷத்திரங்கள் ருஷிகள் சப்ததீபங்கள் பூமி சப்தலோகங்கள் பிரமாண்டங்கள் உரகர் இராக்ஷதர் பிராணிகள் முதலிய எல்லாம் திருப்தியடையும். இவ்விதமாக ஆகுதிக் கிரமத்தை யறிந்து பூசித்தவன் தீயோனுடைய அன்னத்தைப் புசித்தாலும் அப்பாவத்தினின்றும் விடுபடுகிருன். பிராமண க்ஷத்திரிய வைசியர்கள் "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்கிற சுருதிப்பொருளை யுணரவேண்டும். ஆத்மாவிலே ஹோமஞ்செய்கிறவன் அப் புருஷனை யறிவான். அப்புருஷனையறிய வேறு வழியேகிடையாது. நம்முடைய சரீரத்திலேயே உண்மைப்பொருள் விளங்குமென்பதை யுணர்ந்தவன் ஆலாகலத்தைப் புசித்தாலும் மரணமடையமாட்டான். இதை எந்தவருணத்தவராயினும் வாசித்துக் கேட்டபக்ஷத்தில் மோக்ஷத்திற்கு அருகராவார்களென்று சிவபெருமான் துர்வாசமுநிவருக் குரைத்தனரென்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

தேகந் தெய்வமயமேன்பதுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது

பிரமநாடியுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! சாங்கிய யோகவல்லவரே! யோகநாடியெனச் சொல்லிய விஷயத்தை விளக்கியருளவேண்டும். அது சரீரத்தில் எவ்விடத்துள்ளது? அஃதெவ்வகைத்து?

அதனைத்தெரிந்து தியானிக்கும் வகை யாது? எனக்கேட்க, ஸநத்குமார முநிவர் அக்ஷயமாயும், புவனேசுவரராயும், பக்தபராதீனராயும் விளங்கும் பரமசிவனையும் பார்வதிதேவியையும் நமஸ்கரித்துச் சொல்லத்தொடங்கினர்: வியாஸமுநிவனே! இவ்விஷயம் ஹரி ஹர ஹிரண்யகர்ப்பர்களாற் சொல்லத்தக்கதன்றி யென்னுற் சொல்லமுடியாதது. அந்தயோக நாடியின் கிரமத்தை யறிந்தவர்களே பரிசுத்த ஞானியாவார்கள். விசுவமூர்த்தியான சிவபெருமான் தேகத்தையாச்சிரயித்துப் பாலில் நெய்யிருப்பது போலப்புலப்படாது விளையாடுகிறார். அவருடைய கிரணங்கள் இவ்வளவெனக் கணக்கிடமுடியா. அவை சூரியகிரணங்களைப்போல ஜகத்தையுந் தேகத்தையும் வியாபரித்திருக்கின்றன. இதயத்திலேயே எல்லா நாடிகளுமுள்ளன. அதிற் பூர்வபாகத்திலுள்ள நாடிகள் வெண்மையாகவும், தக்ஷிண பாகத்திலுள்ளவை கறுப்பும் பிங்களமுமாகவும், உத்தரபாகத்திலுள்ளவை மஞ்சளுங் கறுப்பும் பிங்களமுங் கலந்துள்ளவையாகவும், கீழ்ப்பாகத்துத் தேவநாடிகள் மஞ்சளுஞ் செம்மையும் பிங்களமுங் கலந்தவையாகவும் மேலுள்ள நாடிகள் கருமையாகவும் விளங்கும். பத்துவாயுக்கள் இதயத்தை யாசிரயித்தே யிருக்கும். அதுவே யவற்றிற்குப் பிறப்பிடம். சில சாங்கிய யோகத்தர்கள் நூற்றொரு நாடிகளுளவென்றும் அவற்றை யாச்சிரயிக்க வேண்டுமென்றுங் கூறுவார்கள். அவற்றை விடுத்துப் பிரம நாடியையே யாச்சிரயிக்கவேண்டும். சூரியன் மேல்நின்று உலகத்தைப் பிரகாசிக்கச்செய்வதுபோல, பரமாத்மா பிரமநாடியிலிருந்து எல்லாவற்றையும் ஜீவனுக்குத் தெரிவிக்கின்றார். நாபிநாடியினாலேயே சரீரியானவன் அஞ்ஞான சங்கல்பாதிகளை விடுத்துச் சுத்த சாக்ஷாத்கார வஸ்துவினிடத்தில் ஆனந்தத்தை யநுபவிக்கிறான். சிலர் தொண்ணூற்றாறுயிர நாடிகள் இதயத்திலுள வென்று கூறுவர். அப்பேதங்களையறிவது துர்லபம். பிராணாதி பத்து நாடிகளே யறியத்தக்கவை. அந்தப்பத்துநாடிகளை யடக்குவதனாலேயே பிரமநாடியை யறியலாம். பிரமநாடியைக் கண்டபின் தசநாடிகள் சிரசைப்பிளந்து கொண்டு வெளிப்படுந் தன்மையும் கேசர சஞ்சாரவல்லபமும் உண்டாகும். இந்த நாடிகள் பத்தே சுக்கிலம் மூத்திரம் மலம் இவற்றைத் தனித்தனி பிரிக்கும். இவற்றைவிடுத்துப் பிரமநாடியை யடையவேண்டும். எலும்புகளும் மலமூத்திரங்களு நிரம்பிய சரீரத்திற் பரமாத்மாவின் வாசஸ்தானத்தை யறிந்தவனே நிர்மலனாவான். பரமாத்மாசோமசூரியாக்கினிகட்குச் சமானமான தேஜசுடன் இதயபுண்டரீகத்தில் எழுந்தருளியிருக்கிறார். அணுவுக்கணுவாயும் சர்வப்பிரகாசமாயும் விளங்குவர். அதையுணர்த்தும் நாடி சிரமுதல் உள்ளங்கால்வரையில் வியாபரிக்கும். இந்த வகையை யறிந்தே அநேகமானதேவர்கள் தேவத்துவத்தையடைந்து விளங்குகிறார்கள். இந்த யோகசாஸ்திரத்தையே பிரமதேவர் ருஷிகளுக்குக் கூறியுள்ளார். உத்தராயனத்திற் பிராணவாயுவை விடுத்தவன் பிறவியை யொழிப்பான். துர் நாடிகளை யொழித்து, பிரமநாடியையாசிரயித்தவன் சகல துன்பங்களையு மொழித்து, சமுத்திரத்திலலை

பவன் ஓடத்தை யடைந்தாற்போலச் சற்கதியையடைவான். நாவின் மத்தியிலிருந்து சிரமீறாக வியாபரிக்கும் யோக நாடியை யுணர்ந்தவன் வாயுபோலச் சஞ்சரித்து, சூரியன்போல விளங்கி, எல்லாவற்றையும் பார்த்து மோக்ஷத்தை யடைவானென்று கூறினர்.

பிரமநாடியுரைத்தது
முற்றிற்று.

நாற்பதாவது

அவிமுக்த மகாத்மிய முரைத்த அத்தியாயம்,

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, எல்லாமறிந்தவரே! பிரமபுத்திரரே! அவிமுக்த மகாத்மியமும் ஓங்காரேசுவரரது பிரபாவமுஞ் சொல்ல வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரர் சொல்லத்தொடங்கினர். வியாஸமுநிவனே! தேவர்களுக்குந் துர்லபமானதும் பரமரகசியமானதுமாகிய அவிமுக்த மகாத்மியத்தைச் சொல்லுகின்றேன். சாவதானமாகக் கேட்கக்கடவாய். ஆதியில் தேவதேவனை சிவபெருமானை நோக்கிப் பார்வதிதேவியார் வினவுகின்றார். ஸ்வாமீ! மிகப்பரிசுத்தமானதும், தேவரீருக்குப் பெருமகிழ்ச்சியை யுண்டுசெய்வதுமான ஸ்தலம் எது? என்பதையெனக்குக் கூறவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் கூறலாயினர்: தேவி! நான் சர்வபூத அந்தராத்மகமாக விளங்கினும் வாராணசி க்ஷேத்திரமே எனக்குச் சந்தோஷகரமானது. நான் ஸர்வபூததயாபரனாயிருப்பினும் உன்னிடத்தில் விசேடப்பிரீதி வைத்திருப்பதுபோல யான் உலகமுழுவதும் விளங்கினும் அந்தக் காசிக்ஷேத்திரத்தில் விருப்பமதிகமாக வைத்திருக்கிறேன். சதுஷ்பாத ஜந்துக்களிற் காமதேனுவைப்போலவும், சதுர்வர்ணங்களில் அந்தணரைப்போலவும், நான்கு வேதங்களிற் சாமவேதத்தைப்போலவும், வேதார்த்தங்களிற் பிரணவத்தைப்போலவும், அவயவங்களுக்குள் கண்ணைப்போலவும், பதினான்கு லோகங்களிலும் அதுவேசாரமான ஸ்தலம். அந்த ஸ்தானத்தையடைந்தால் ஆத்மஞானமடைந்து மோக்ஷமடையலாம். அவ்விடத்தில் நான் ஸ்திரமாக வசிக்கிறேன். பஞ்சாயதன ஸ்தானமாகிய அவ்விடத்திலடைந்து தன் மனதில் என்னைத் தியானிப்பவன் அகார உகார மகார ஸ்வரூபியாய் திரிலோகங்களையுஞ் சயித்தவனாகிறான். அநேக யதிகளும், சாங்கியயோக வித்துக்களும், பாசுபதவிரதமநுஷ்டித்தவர்களும் அவிமுக்தத்தையடைந்து எனது சூக்ஷ்மசொரூபத்தைத் தியானித்து முக்தியடைகிறார்கள். பஞ்சபூத சம்பந்தமான தேகமெடுத்தவர்களிற் பஞ்சாயதன ஸ்தானத்தையடைந்து என்னை ஸத்தியோஜாதாதி பஞ்சப்பிரமாத்மகமென்று தியானித்தவர்கள் என் சொரூபமாவார்கள். எதிகளும் புண்ணியர்களும், யோகாப்பியாசஞ்செய்வது அசாத்தியமென்று பஞ்சாயதன ஸ்தானமடைந்து விதிப்படி சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து முத்திக்கு அருகராகிறார்கள். கிரகஸ்தர்கள் தீர்த்தவாசி

கள் வானப்பிரஸ்தர்கள் சந்நியாசிகள் சைவர்கள் பாசுபதவிரதிகள் தவசிகள் முதலானோர் மௌனவிரதத்தால் அந்தஸ்தலத்தில் உபாசிக்கிறார்கள். அந்த க்ஷேத்திரத்திலே என் சொரூபமான வைரவனை யுபாசிக்கிறார்கள். அவர்கள் தியானங்கட்குத்தக்கபடி யான் அவர்கட்கு அம்மூர்த்தியாகவே நின்று இஷ்டபலன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். யக்ஷ கின்னர கிம்புருஷ வித்தியாதரர்களால் துதிசெய்யப்பட்டவனாய் நான் எப்பொழுதும் நிர்த்தஞ்செய்து கொண்டிருக்கின்றேன். அவ்விடத்தில் வசித்து உயிர் நீங்குவோருக்குத் தாரகமந்திரத்தை யுபதேசிக்கின்றேன். சமுசார துக்கத்திற்குப் பயந்தவர்கள் அங்கடைந்து சரீரத்தையுங் கர்மவாசத்தையு மொழித்து அவ்வியக்தமான சுயம்பிரகாச சொரூபத்தை யடைவதனால் அதுவே யெனக்குப் பிரியமானஸ்தானம். நான் எப்பொழுதும் அவ்விடத்தை நீங்காது வசிப்பதால் அதற்கு அவிமுக்தமென்று பெயராயிற்று. அதற்கு விசுவேசுவர க்ஷேத்திரமென்றும், ஓங்காரஸ்தானமென்றும், பஞ்சாயதனமென்றும், சித்தக்ஷேத்திரமென்றும், தபக்ஷேத்திரமென்றும், வாராணசியென்றும், காசியென்றும் பெயர்விளங்கும். அங்கே ஞானவாவியென்னுந் தீர்த்தம் தன்னைத் தரிசித்தாலும் பரிசித்தாலும் ஆசமனியஞ் செய்தாலும் பாவங்களை யெல்லாமொழித்து, துர்லபமான மோக்ஷத்தைக் கொடுக்கவல்லதாக ஒன்றுண்டு. அந்த ஞானவாவியின் ஸ்நானமும், தீர்த்த பானமுங் கலியுகத்திற் சுலபமாகக் கிடைக்கமாட்டாது. சயகீய சவ்விய ரென்னு முனிவர் அவ்விடத்தில் ஞானவாவியில் முக்காலங்களிலும் ஸ்நான அநுஷ்டானங்களைச்செய்து மிருத்யுவைவென்று மோக்ஷ சாம்பிராச்சியத்தையடைந்துள்ளார். அதிகமாகச்சொல்வதிற் பயனென்ன. ஒருமுறையாவது அந்தத் தீர்த்தத்திற் சந்தியாவந்தனஞ்செய்யும் பக்ஷத்தில், பத்து அசுவமேதஞ்செய்த பலனுண்டாகும். காசியை ஸ்மரித்த மாத்திரத்திலேயே கங்காஸ்நான பலனைக் கொடுக்கவல்லதாயிருப்பின், அந்த க்ஷேத்திரத்தில் யார் தான் வசிக்க விரும்பமாட்டார்கள்? என்று சிவபெருமான் கூறினரென ஸநத்குமார முனிவருரைத்தனர்.

அவிமுக்த மகாத்மிய முரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தோன்றாவது

ஹரிகேசன் சரிதமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பூர்வத்தில் பூர்ணபத்திரனென்னும் யக்ஷன் மகாபிரதாபத்தோடு உலகப் பிரசித்தனாயிருந்தான். அவனுக்கு ஹரிகேசனென ஓர் புத்திரனிருந்தான். அவன் பிறந்தது முதல், தர்மபுத்தியும், பிராமண விசுவாசமும், சர்வலோகேசுவரனான சிவபெருமானிடத்தில் உத்தமபத்தியுங்கொண்டு, சிவநாம பாராயணம் எக்காலத்தும் நீங்காது செய்துகொண்டு, சிவ சிந்தனையுடனிருந்தான். பூர்ணபத்திரன் ஒருகா

லத்தில், அப்புதல்வனை நோக்கிப் புத்திரனே! உன்னை யென்புதல்வனாக மதிக்ககில்லேன். நீ யெனக்கு அந்நியமாகச் சனித்திருக்கவேண்டும். என் குலத்தியற்கை யுன்னிடத்திற்காணேம். யக்ஷகுலத்திற் பிறந்தவர்களுக்கு உன்னைப்போன்ற நடக்கைகள் கிடையா; சுபாவமாகவே குரூரபுத்தியுடைய வர்கள். நீயோ குய்யகரிற் கெட்டவன். இது உன்குலத்தியற்கையன்று. குலதருமத்தையும் ஆசிரமதருமத்தையும் விட்டு மாறினவனுக்குப்பாவஞ் சித்திக்குமென்று பிரமதேவர் கட்டளையிட்டிருக்கிறார். அதைத் தவறின வன் நரகத்திற்காளாவான். அன்றியுங் கீழ்ப்பிறவியையடைய நேரிடும். நீ செய்யுந்தொழில்கள் நமது குலத்திற்குத் தக்கவையல்ல. நீ யென்புதல் வனாயினுந் தீக்கருமங்களைச் செய்தலின் உன்னைச்சேதிக்க இச்சிக்கின் றேன். ஒருகுலம் ஒருபுத்திரனாற் கெடுவதாயின் அப்புதல்வனைக்கொல்வ திற் பாவமில்லையெனத் தர்மசாஸ்திரமுளது. இதனையறிந்து விரைவில் இவ்விடம் விட்டோடி யுயிர்பிழைப்பாயாகவென, ஹரிகேசன் தந்தை சொல்லைக்கேட்டு, உடனே தன் வீட்டை விட்டுவிலகி வாராணஸி க்ஷேத்தி ரத்தையடைந்து மகத்தாகிய தவத்தைச்செய்ய யத்தனித்து, தனது குலத் தியற்கையை மறந்து, தம்பம்போலவுங் கல்லைப்போலவும் நிச்சலமா யிருந்து விஷயவாதனைகளில் மனதைச் செலுத்தாது சிவபெருமானைக் கோகர்ணேசத்திற் றியானித்துப் பக்தியோடு, ஆயிரந் தேவவருஷங்கள் அரைநாழிகைபோலக் கழித்தனன். அநேக காலமாய் விட்டமையின் உடல்முழுதும் புற்றுமூடி, உக்கிரமான தேள் பாம்பு முதலிய துஷ்டப் பிராணிகள் அதில் வசிக்கலாயின. மாமிசத்தையும் உதிரத்தையும் பெரு கச்செய்யும் அன்னத்தைமறந்து சிவபெருமானை அநுசந்தானஞ்செய் வதே ஆகாரமாகக்கொண்டிருக்கையில்,பார்வதிதேவி பரமசிவனை நோக்கி, உலகநாயகரே! உத்தியானவனத்தை யான் பார்க்கவிரும்புகின்றேன். அதிலுள்ள விநோதங்களைக் காண்பிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, பரமசிவன் பார்வதியுடனே உத்தியானவனத்தையடைந்து அங்குள்ள விபவங்களை யுரைக்கலாயினர்:

பெண்ணே! இவ்வுத்தியான வனத்திற் புஷ்பித்துள்ள மரங்களின் தோற்றமானது சர்வாபரணங்களா லலங்கரிக்கப்பட்டுள்ள உன்னைப் போன்றிருக்கின்றது, பச்சிலைமரத்திற் புதர் மூடியிருத்தலும் அதினின் றும்வண்டுகள் வெளியேவந்து பண்பாடுதலும், அஞ்ஞானமாகிய உலக மாயையினின்றும் வெளிப்பட்டு நாதப்பிரமத்தை யடைந்த தன்மையை யுணர்த்துகின்றது. அசோகமரம் புஷ்பித்திருத்தல் ஒருதோழியானவள் கைகளை யலங்கரித்துக்கொண்டு உனக்குப் பணிசெய்ய நிற்பதுபோலிருக் கின்றது. உயர்ந்துள்ள மரங்கள் புஷ்பபாரந் தாங்கமாட்டாதனவாய் வளைந்துள்ள தோற்றமானது நம்மிருவருடைய வருகையை நோக்கி நமக் குப்புஷ்பாஞ்சலி செய்யத் தலைகுனிந்து நிற்பனபோல் விளங்குகிறது. அம்மலர்களில் வண்டுகள் மொய்த்துத்தேனைப்பருகி ரீங்காரஞ்செய்வது,

யோகவான்கள் மனதையடக்கி என்னிடத்திற்சேர்த்து அமிர்தபானஞ் செய்வதைக்காட்டுகின்றன. மலர்களின் மகரந்தங்கள் காற்றினால் எங்கும் பரவுதல், யான் விபூதியை உத்தூளனஞ்செய்துள்ளேனாகலின் என்னை இவ்வனம் விபூதியாற் பூசிப்பது போலிருக்கின்றது. ஹம்சங்கள் சஞ்சரிப்பவைஹம்ஸமந்திரத்திற்குப் பொருளாயிருக்கும்சிவபெருமான் இங்குவருதலின் நாமும் அவருடனே யிருக்கவேண்டுமென்றுவந்தனபோலும் விளங்கும். அவை நீரில்விளையாடுகிற தோற்றமானது முநிவர்களது மனதில் யான் விளையாடுகின்ற திவ்வண்ணமெனக் காட்டிப்பரிகசிப்பது போலுமிருக்கின்றது. ஒருபால் வண்டுகள் தேனைப்பருகி ஜங்காரஞ்செய்வதும், கோகிலங்கள் சந்தோஷித்துக் கூவுவதும், மயில்கள் கலாபத்தைவிரித்து நடித்துக் கேகயத்தொனிசெய்வதும், இன்னும் பலபக்ஷிகளின் சப்தமும் ஒன்றுகூடி, எழு நரம்புகளையுடைய வீணையினோசை போலப் புலப்படுத்தி நம்மைக்கானவித்தையாற் களிப்புறச்செய்வது போலும் விளங்குகின்றன. மயில்கள் நடனஞ்செய்யுங் கோலமானது என்னைப்போல நீலகண்டம் வாய்ந்துள்ளனவென்றும், தயையாகிய மாரியைப்பொழிகின்ற மேகமாகிய உன்வருகையைக் கண்டும் (மேகத்தைக்கண்டு நடிக்குந் தமதியற்கையின்படி) ஆனந்தித்து நிர்த்தஞ்செய்வன போலும். மரங்களிற் படர்ந்த கொடிகள் செம்மலர்களைப்பூத்து அவற்றில் வண்டுகள் மொய்த்திருக்குந் தோற்றமானது, மரமாகிய ஆடவனைத்தழுவிய கொடியாகிய நங்கையின் மலராகிய அதரத்தில், வண்டு மொய்த்திருத்தலாகிய தந்தக்குறியின் கருமைவாய்ந்துள்ளனபோலும். மரங்களிற் கொடிகள் சுற்றியிருப்பன, என்னைத் தழுவிக்கொள்ளும் உன்செயலை யுணர்த்துகின்றன. யானைகள் தருக்குடன் நடக்கின்ற தோற்றமானது, அவை தமதுதோலை யான் ஆடையாக அணிந்துள்ளதும் நீ பிடியானைபோல நடக்குமியற்கையுமாகவுடையோமென்றும், அர்த்தநாரீசுவரமாயின நாம் இரண்டுருவாக வந்து காட்சியளித்தது கருதியுங்களித்து நம்மைப்போல ஆணும் பெண்ணுமாக நடப்பனபோலும். கிளிகள் தாம் கேட்ட சொல்லையப்படியே சொல்லும் இயற்கையினவாதலின் உனது குரலோசையைக் கற்கவிரும்பிப் பிரயத்தனப்பட்டு அதனைத்தெரிந்து தாம் பழக்கிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பால் இடைவிடாது ஒலிசெய்து கொண்டிருக்கின்றன. மல்லிகைக் கொடி புஷ்பித்துள்ள தோற்றமானது, தோழியாகிய அக்கொடி யசமானியாகிய உன் வருகையைக்கண்டு களிப்பாற் சிரித்ததுபோல விளங்குகின்றது. நாகமரங்கள் பழுத்துள்ள தோற்றமானது நங்கனியோலச் சிவபெருமான் நீலகண்டராயிருந்து புகழுறுதலின் நாமும் அவ்வாறு புகழுறவேண்டுமென்னுங் கருத்தாற் பழுத்துள்ளனபோலும். இவ்வனத்தில் மலர்கள் விழுந்து கிடக்குந்தோற்றம், நமது வருகையை யறிந்த வனதேவதை நமது கால்கள் வருந்தாது வழிமுழுதும் மலர்கள் பரப்பி வைத்தாற்போலும் விளங்கும். வாழைமரமானது குலைவிட்டுப் பூவினை வீழ்த்துத் தலைசாய்த்து நிற்பது உன்னை நோக்கி, தாயே! நீயென்னை உருவத்தாற்

செயித்தனை; எல்லோரும் உன்னைப் பணிந்து பலபலன்களை யநுபவித்து அநேக பிரசவங்களைச் செய்திருப்பார்போல், யானும் பலபிரசவங்களை யடையுமாறு தயைசெய்ய வேண்டுமென்று புஷ்பாஞ்சலி செய்வது போலும். நீர் நிலையிற் பூத்ததாமரை மலர்களில் வசிக்கும் அன்னமுதலிய பறவைகள் நீரிற் சிறகினையடித்துப் பாசிமுதலிய அழுக்கினை யகற்றிப் புனிதமான நீரில் விளையாடுந் தோற்றமானது நம்முடைய திருவடியை விரும்பிப் பாசபந்தங்களையுதறி இருவினையைக் கழித்தவர் மோக்ஷானந்தத்தையடைவதை யுணர்த்துகின்றன. பசும்புற்றரையில் மான் படுத்துறங்குந் தோற்றமானது உன்மடியிலே தலைவைத்துறங்கிய என்னைப்போன்றிருக்கின்றது. மயில்கள் நீலகண்டத்தைப்பெற்றது போதாதென்று என்னைப்போல நடனத்தையுங் கற்க விரும்பி நடிக்கின்றனபோலும். தாமரைமலர்கள் உன்பாதத்திற்கொத்திருப்பது சாலாதென்று உன்முகத்திற்கொப்ப விளங்க விரும்பித் தவஞ்செய்வனபோலச் சூரியன்முன் நிற்கின்றனவாகும். பலபக்ஷிகளும் சத்திப்பது வேதியர்கள் நமது வரவுக்காக வேதபாராயணஞ்செய்வார்போலும். தாழைமரமானது புஷ்பித்து மணம் வீசுவது எல்லாமலர்களையும் விரும்பும் யான் தாழைமலரை விலக்கியதை நோக்கி, வேசையானவள் அலங்கரித்துக்கொண்டு ஓர் ஆடவனை மயங்கச் செய்வதுபோலத் தன் மலர்களால் மணமூட்டி நம்மை மயக்குவது போலும். புலிகள் இங்குத்திரிவது தமதுதோலை எனக்கு ஆடையாகக் கொடுத்தும், கோபகுண மடங்கும்படியான ஆதனமாகப் பெரியோர்களுக்குத் தமது தோலைக்கொடுத்தும் தங்களைக் குரூரஜந்துக்களென்று பலர் சொல்வதை நீக்கியருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ள வந்துள்ளனபோலும். எருதுகள் முக்காரஞ்செய்வது தமது குலத்திற்கிறைவரான நந்திபகவானை வாகனமாகக்கொண்ட யஜமானர்வருதலின் நம்மவர்கள் யாவரும் அவரைச் சேவித்துக்கொள்ள வாருமென்று கூப்பிடுவது போலுமுள்ளது. எருமைகள் நீரில்மூழ்கித் தலைதூக்கிக்கொண்டிருக்குந் தோற்றமானது என்னை நோக்கி எமது தலைவனாகிய இயமதர்மனை முன் உதைத்துவிட்டதுபோல இனிமேலுங் கோபங்கொள்ள வேண்டாமென்று கும்பித்துத் தவஞ்செய்வனபோலும். செம்மை வெண்மை கருமை வாய்ந்த மலர்கள் வீழ்ந்து கிடப்பன ஸத்வ ரஜ தமோகுணங்கள் தமதியற்கைப்படி யகலவேண்டுமென உலகினருக் குரைப்பனபோலும் விளங்கும். மிருகபக்ஷிகளின் வெவ்வேறு வகைப்பட்ட ஒலிகள் வேதாகமபுராணாதிகளொவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாகச் சொல்லப்படுமென்பதை யுணர்த்துகின்றன. வாயுவானது மலர்த்தாதுக்களை நம்மீது படியச் செய்து வீசுவது, யோகிகள் பிராணாதி வாயுக்களைப் பந்தித்துத் துன்புறுத்துதலின் அதனைத் தான் சகியாது பரிமளப்பொருளுடன் நம்மைச் சரணமடைவதுபோலுமிருக்கின்றது.—என்றிவ்வாறு சிவபெருமான் அவ்வனத்தின் அலங்காரங்களை வர்ணித்துப் பார்வதிதேவிக்குக் காட்டிக்கொண்டுவந்தனர். தேவியார் பரமேசுவரரை நோக்கி, ஸ்வாமீ! வனத்தின்

அலங்காரங்களைக்கண்டு சந்தோஷித்தேன். இனி க்ஷேத்திரமகிமையைச் சொல்லவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லலாயினர்: தேவி! இந்த வாராணசிக்ஷேத்திரமே எல்லோருக்கும் மோக்ஷத்திற்குக் காரணமானது. அநேகமான சித்தர்களெல்லாம் என்னைக்கருதி விரதமிருந்து இந்த க்ஷேத்திரத்திலேயே சித்திகளை யடைந்தார்கள். ஏனைய ஸ்தலங்களில் அடையமுடியாதயோகசாதனம் ஓங்காரஸ்தலத்திலேயே எளிதிற் கைகூடுகின்றது. இந்த வனத்திலிருப்போர் யாவரும் என்னிடத்திலேயே மனதை நிறுத்தித் தமது செயல்களை யெனக் கர்ப்பிதஞ்செய்து என்னிடத்திலேயே பக்திசெலுத்துகின்றார்கள். ஆதலின் எனக்கு இவ்வனத்திலே விருப்பமுண்டாயிருக்கின்றது. பிரமாதிதேவர்களும் இந்த க்ஷேத்திர பிரபாவத்தை யறியமாட்டார்கள். அவிமுக்தத்திலே எவ்வகைய பாவியிறப்பினும் அவனுக்கு முக்தி கைகூடத் தடையில்லை. நைமிசம் குருக்ஷேத்திரம் கங்காத்துவாரம் புஷ்கரம் இவ்விடங்களில் வசித்து ஸ்நான தர்ப்பணாதிகளைச்செய்து, தவமிருப்பினுங் கிடையாத பலன்கள் இக்காசியில் வசிப்போருக்குச் சுலபமாகக் கைகூடும். பிரயாகையைக்காட்டிலும் இதுவேசிறந்தது. சயகீயசவ்வியமுநிவர் இவ்விடத்திற்றவஞ்செய்துயோகிகளிற் சிறந்த பதவியை யடைந்திருக்கிறார். குபேரன் இவ்விடத்திலே தவஞ்செய்து எனக்குத் தோழனாகி உலகபாலத்துவமடைந்து சந்தோஷித்து வாழ்கின்றான். சம்வர்த்தர் இங்குத் தவம்புரிந்துசிவஞானமடைந்து சிவாகமங்களைக்கூறிச் சர்வலோக பிரசித்தராயினர். பராசரபுத்திரனாகிய வியாஸமுநிவன் இவ்விடத்தில் அநேககாலந்தவஞ்செய்து வேதவுணர்வும் புராண கர்த்திருத்துவமும் அநேகசீடர்களும் உலகபூஜிதமும் பெற்று இன்னும் இவ்விடத்தில்வாழ்ந்து கொண்டிருக்கிறான். பிரமதேவர் அநேககாலந்தவஞ்செய்து சிருஷ்டிகர்த்தாவாய் நாடோறும் வந்து என்னைத்தரிசித்துத் துதித்துக்கொண்டு பிரமலோகத்தி லுள்ளவர்கட்கு இந்த ஸ்தல பிரபாவத்தைக் கூறுகின்றார். இவ்விடத்துத் தவத்தால், சூரியன் தன் பதவியை யடைந்தான். இந்திரன் திரிலோகாதி பத்தியம் பெற்றான். சர்வலோக ரக்ஷகனாகிய விஷ்ணுவும் அவிமுக்தத்திலே தவஞ்செய்து சர்வதேவபூஜியனாயும் உலகரக்ஷணாதிபத்தையும் பெற்றான். பாவியேனும் கொடியோனேனும் லோபியேனும் செய்ந்நன்றி மறந்தவனேனும் இந்த க்ஷேத்திரத்திலிறந்தால் அவனுக்குப் பிறவியேகிடையாது. பாவிகளே முக்தியடைவராயின் புண்ணியரடைவரென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அநேகபிறவிகளில் மாநுடஜனன மொன்றுண்டாவது துர்லபம். ஆயிரம்மாநுடஜனனமெடுத்தால் ஒருஜனனத்தில் யோகஞ்செய்யவேண்டுமென்கிற கருத்துண்டாகும். ஆயிரம் ஜனனங்களிற் பழகினால் ஒரு ஜனனத்தில் முக்தியடையலாம் அவ்வகைய அருமையான முக்தியும் இந்தக் காசிக்ஷேத்திரத்தில் உயிர் நீங்குவதனாலே யெளிதில் உண்டாகும். பார்வதீ! இந்தக் காசிக்ஷேத்திரமே திரிலோகங்களுக்குஞ் சாரபூதமாகவுள்ளது. அதியழகானது. என்னால் உன்னைப்போல விரும்பத்தக்கது. இந்த

க்ஷேத்திரமகிமையை உனக்குக்காண்பிக்கின்றேன். இதோ என்னுடைய பக்தனொருவன் நெடுநாளாகத்தவஞ்செய்துகொண்டிருந்ததால் அவனைப் புற்றுமூடி அவன்பேரில் விருக்ஷங்கள் முளைத்துவிட்டன. நீ நேரிற்காணப் போகிறாய் என்னுடன் வருகவென்று, ஹரிகேசனென்னும் இயக்கன் தவஞ் செய்யுமிடத்தையடைந்து அவனை மேலே மறைத்துக்கொண்டிருந்த புற்றினைக்கையாற் பரிசித்து, ஹரிகேச! உனக்குத் தயைபுரிய வந்திருக்கின்றேன். தவத்தை நிறுத்துக எனக்கூற, நெடுங்காலமாகத் தவஞ்செய்து கொண்டிருந்த ஹரிகேசன் தவத்தை நீங்கியெழுந்து, இடபாரூடமும் பார்வதிசமேதமும் கங்காதரமும் புலித்தோலுடையும் நாகோபவீதமும் விபூதிதாரணமுமாக விளங்குஞ் சிவபெருமானைச் சேவித்துச் சாஷ்டாங்கமாகப்பணிந்து எழுந்து நின்று ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து இறைவருடைய தேஜஸைக்காணமுடியாது வருந்த, சிவபெருமான் அவனுக்கு ஞானநோக்கினைக்கொடுக்க, அதனால் இறைவருடையதிவ்வியவுருவத்தைக் கண்கள் களிக்கக்கண்டு நிற்கையில், சிவபெருமான் ஹரிகேசனை நோக்கி, புத்திரனே! திரிலோகங்கட்குந் துர்லபமான வரத்தைக் கொடுக்கின்றேன். கேட்பாயாகவென, ஹரிகேசன் மீண்டும் பணிந்தெழுந்து நின்று கைகட்டி, ஸ்வாமீ! எனக்கு அழியாதசரீரமும் தேவரீருடைய திருவடியினின்றும் பிரியாத திடபக்தியும் எல்லாருக்கும் அன்னதானஞ்செய்யும் வல்லபமும், நீங்காத காணபத்தியமும் இந்த அவிமுக்த ஸ்தானத்தில் நீர் வசிப்பதுபோல யான் வசித்திருக்கவும், தேவரீரைத் தரிசிப்போர் என்னையுந் தரிசிக்கவும் வரங்கொடுக்க வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் யக்ஷசிரேஷ்டா! நீஜராமரணங்களை யொழித்துக் காணபத்தியமும், வரங்கொடுக்கும் வல்லபமும், தேவர்கள் பூசிக்கும்பதமும், வெல்லமுடியாத பராக்கிரமமும், யோகேசத்துவமும், உலகங்கட்கு அன்னமளிக்குமாற்றலும், இந்த க்ஷேத்திரத்துக்கு பாலகத்துவமும் பெற்று, எனக்குப் பிரியவானாகித் திரிநேத்திரங்களுடன் தண்டபாணியாக வசிக்கக்கடவாய். என்னைத் தரிசிப்பவர்கள் உன்னைத் தரிசித்தாலன்றி அப்பலனையடையமாட்டார்கள். காசியிற் கங்கா ஸ்நானஞ்செய்கையில் உன்னைத் தியானித்தே ஸ்நானஞ் செய்யக்கடவர். உத்பிரமன் சம்பிரமன் என்னும் இருவரை உனக்கு அடிமைகளாகக் கொடுத்தேன். அவர்கள் உன் கட்டளையினாற் குணங்களாகி உலகிலுள்ளாரையடைந்து விளங்குவரென்று இவ்விதமாக வரங்கொடுத்து ஹரிகேசனைத் தண்டபாணியாக்கி, பார்வதி பரமேசுவரரிருவரும் உருத்திரவாசமாகிய காசியை யடைந்தார்கள். இவ்வத்தியாயத்தை வாசித்தவர்களும் கேட்டவர்களும் தண்டபாணியின் அநுக்கிரகத்தைப் பெறுவார்களென ஸநத்குமாரர் கூறினர்.

ஹரிகேசன் சரிதமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

பிரதாபமகுடன் சரிதமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பூர்வம் இரதந்தரகல்பத்தில் காசிக்ஷேத்திரத்தில் நடந்த ஓர் ஆச்சரியத்தைச் சொல்கின்றேன் கேட்பாயாக. அதாவது காசிக்ஷேத்திரத்தில் சிவாலயத்தில் அபிஷேக ஜல தீர்த்தத்தொட்டில் ஓர் தவளை அநேகநாள் வசித்து அந்தஜலத்தைப்பருகி வாழ்ந்திருந்து, சிவநிர்மாலியங்களையே புசித்துக்கொண்டிருந்த புண்ணிய வசத்தால் அநேககாலம் சுவர்க்கபோகத்தை யனுபவித்து மீண்டும் பூலோகத்தில் சுமனசனென்னு மன்னனுக்குப் புத்திரனாகத் தோன்றி வாலிபகௌமார பருவங்களைக்கழித்து யவ்வன பருவமடைந்து அக்காலத்தில் ஜன்மாந்தர ஞானமுண்டாகி வாராணசியிலேயே மனவிருப்புற்று அங்கடைந்து தவஞ்செய்து கொண்டிருந்து மோக்ஷத்தையடைந்தது.

வியாஸமுநிவனே! அகார வுகார மகார நாத பிந்துமயமான சர்வேசன் அங்குவசிப்பதால் அவ்விடத்திற்குப் பஞ்சாயதனமெனப் பெயரெய்தியது. அந்தக்ஷேத்திர மகத்மியத்தைப் பற்றி வேறோர் இதிகாசமுஞ் சொல்லுகிறேன். ஒருகிருத யுகத்தில், பிரதாபமகுடனென்னும் அரசனொருவன் தர்மவானும் ஜிதேந்திரியனும் பிராமண விசுவாசியாயும் சிவபக்தனுயு மிருந்தான். அம்மன்னனுக்கு அநேககாலம் மகப்பேறின்றிச் சிவானுக்கிரகத்தால் ஓர் புத்திரன் ஜனித்தான். அவன் இளம்பருவத்திலேயே வேதசாஸ்திரங்களை யுணர்ந்து ஞானவானாய் விரக்தனானான். இவ்வகைய வைராக்கியாயுள்ள புதல்வனை நோக்கித் தந்தையானவன் மகனே! நெடுங்காலந் தவஞ்செய்ததாற் பிள்ளையாகப்பிறந்த நீ வைராக்கியவானாகவாவிருக்கவேண்டும்? யான் உன்னாற் சுகமடையத் தக்க செயல்களை யேன் செய்யப்படாது? பிதுர்களுக்கு நற்கதியை யுண்டுசெய்ய இல்லறமே சிறந்ததாதலின் நீ மணஞ் செய்து கொள்ளவேண்டும் எனக்கூற, மைந்தன் தந்தையே! நீர்சொல்லிய இவ்விஷயம் எனக்கு அங்கீகாரமில்லையென, தந்தை மகனே! உலகிற் பிரத்தியக்ஷமான தேவர்கள் தாய்தந்தையர்களே யாதலின் என் சொல்லைக்கேள். அவ்வாறு மணஞ்செய்து கொள்ளாவிடின் நமது குலம் நரகத்தில் மூழ்கிவிடும். அவ்வாறு செய்யவேண்டாம் என, மகன் புன்சிரிப்புடன் யாவுமுணர்ந்த பிதாவே! யான் சொல்வதைக் கேட்கவேண்டும். யான் ஜரா மரண வியாதியாதிகளுடன் கூடிய எண்ணிறந்த ஜனங்களெடுத்துள்ளேன். உம்மைப்போல ஆயிரம்பிதாக்களைக்கண்டிருக்கிறேன். ஜன்மாந்தரங்களில் உம்மைப்போலவே அப்பிதாக்கள் கோரினவண்ணம் அநேககலியாணங்கள் செய்துகொண்டுள்ளேன். எனக்குப்பிறந்த அநேக பிள்ளைகளுக்குக் கலியாணஞ் செய்து கொள்ளும்படி உம்மைப்போல நானுஞ்சொல்லியிருக்கிறேன். நான் மணஞ்செய்த மனைவிகள் எத்தனையோ பேர்களிறந்து அவர்களது மரணதுக்கங்களை

யநுபவித்திருக்கிறேன். நான் செய்த கர்மங்கட்கேற்க, திருணங்களாகவுஞ் செடிகளாகவும் மரங்களாகவும் மலைப்பாம்பாகவும் பக்ஷிகளாகவும் நாற்காலிகளாகவும்பிறந்திருக்கிறேன். அதிகமாகச்சொல்வதிற் பயனில்லை. அண்டசம் சுவேதசம் உற்பிசம் சராயுசமென்னும் நால்வகை யோனியிலும் அநேக ஜனனங்க ளெடுத்தொழித்தேன். யக்ஷனாகவும் கின்னரனாகவுமிருந்தேன். சிலகாலம் அரசனாகவுமிருந்தேன். ஆனபடியால் மனைவியை மணப்பது அப்பிரயோசனமும் பிறவிக்குக்காரணமுமாயிருப்பது. இராச்சியத்திலும் புத்திரதாராதிக ளிடத்திலும் விருப்பமுடையவனுக்குச் சித்தியுண்டாகமாட்டாது. சரீரத்தை நம்முடையதன் றென்று மறந்துவிடுத்தவனுக்கே சித்தியுண்டாகும். மணஞ்செய்து கொள்வதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. சரீரமெடுத்த பொழுதே யவனுக்குச் சித்தமாக மரணமிருக்கின்றது. சரீரம் மிருத்யுபயமில்லாது நித்தியமாக விருப்பதாயின் மணஞ்செய்து கொள்ளலாம். உம்முடைய விருப்பின்படி எனக்கு மணவினை முடித்து இராஜபாக்கியத்தைக் கொடுப்பினும் என்னபலன்? யான் எனது என்னுந்தற்போத முள்ளவனுக்கே அவை பயன்படுமன்றி யென்போன்றவனுக்கு, அவற்றாற் பயனில்லை. வனத்தில் தவஞ்செய்து கொண்டிருப்பவன் பொருளாசையடைவானாயின் அவனுக்கு அத்தவத்தாற் பயனுண்டோ? அதுவுமில்லை. இந்திரியங்களை விஷயவாதனையிற் செலுத்துபவன் அவற்றாற் படுகுழியிற் றள்ளிய யானையைப்போல நரகத்திற்றள்ளப்படுவானாதலின் இந்திரிய நிக்கிரகஞ்செய்தலே அவசியமானது. காமாத்துமாவைக் காமிகளே புகழ்வார்களன்றி ஞானிகள் புகழார்கள். வேதங்களும் தீர்த்தஸ்நானஞ் செய்க, யாகஞ்செய்க, தவஞ்செய்கவென்றும், அவ்வாறு செய்தவற்றைச் சிவார்ப்பிதஞ் செய்கவென்றுஞ் சொல்லுகின்றனவாகலின், புண்ணிய பூமியாகிய பஞ்சாயதன ஸ்தானத்தை யடைந்து பஞ்சேந்திரியங்களை யடக்கித் தவஞ்செய்யப் போகின்றேன். மோக்ஷத்தையே யபேக்ஷித்திருக்கிறேன். இன்றையதினமே அந்தப்பரமானந்த கானத்திற்குப் பிரயாணப் பட்டவனாக என்னையறிந்து கொள்வீராக. உலகிலுள்ள எண்ணிறந்த க்ஷேத்திரங்களை விடுத்துப் பஞ்சாயதன ஸ்தலமாகிய காசித்தலத்தில் எனக்கு விருப்புண்டா யிருக்கிற காரணத்தையும் விபரமாகச் சொல்லுகின்றேன்.

தந்தையே! இதற்கு மூன்றாவது ஜனனத்தில் யான் வைசியனாகவும் தனிகனாகவும் தர்மவானாகவு மிருந்து தீர்த்த யாத்திரை செய்துகொண்டுவருகையில், ஒரு கால் வாராணசியை யடைந்து ஓங்காரேசுரனைத் தரிசித்து அவனைப்பூசித்து அவ்விடயத்திலேயே சிலகாலம் வசித்து ஓங்காரேசுர சந்நிதானத்தில் வைகாசிமாசத்தில் ஓரிரவு நித்திரையின்றிச் சிவநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது தேவ யக்ஷ கந்தர்வர்கள் சிவதரிசனத்திற்கு அங்குவந்தார்கள் அவர்களைக் கண்டேன். அந்தப்புண்ணியத்தினாலேயே இதன்முன் ஜனனத்திலும் ஓர் அரசகுமார

னுகப்பிறந்து அர்ச்சனத்திலுஞ் காசிப்பதியைச் சேவித்தேன். அவ்விரு புண்ணியங்களாலும் உமக்குப் புதல்வனாகத் தோன்றித் தேவர்கட்குந் துர்லபமான பூர்வஜனனஞானத்துடன் விளங்கினேன். ஆனபடியால் உமக்கும் உம்மாற் சொல்லப்படுங் கலியாணத்திற்கும் நமஸ்காரஞ் செய்கின்றேன். தயைசெய்து எனக்குச் செலவு கொடுக்கவேண்டும். சமுசாரத்திலிருக்குமெல்லையுஞ் சுகமில்லையெனத் தெரிந்துகொண்டிருக்கின்றேன். இனி முத்தியைக்கொடுக்கவல்ல நிரஞ்சன நிஷ்கள பரவஸ்துவையடைய விரும்புகின்றேன். ஓங்காரேசுவரரைத் தரிசிக்கச் செல்கின்றேனென்று தந்தைக்குக் கூறி அவ்விடத்தி னின்றும் புறப்பட்டனன். அப்பொழுது பிதா தன் மைந்தனை நோக்கி அறிஞனாமைந்தனே! நீசெல்லும் இடத்திற்கு யானும் வருகின்றேன். சமுசாரத்திலிருந்து எனக்கு வைராக்கியமுண்டாகவில்லை. சந்ததி விருத்தி செய்யவேண்டுமென்கிற விருப்பமேயுண்டாகிறது. மானாபமானம் சீதோஷ்ண சுகதுக்கங்களைச் சகித்து யானென்னுமமதையை யொழித்து எல்லாக்கர்மங்களையும் பகவதர்ப்பிதஞ் செய்யவேண்டு மென்னுஞ் சாஸ்திரத்தை நானும் படித்திருக்கிறேன். ஆயினும் எனக்குச் சமுசாரத்திலிருக்கும் ஆசையானது அகலவில்லை. சற்புத்திரனாகிய வுன்னை யடைந்ததால் எனக்குஞ் சிறிது விரக்தியுண்டாயிருக்கிறது. அதுவும் ஸ்திரமாக வில்லை. வைராக்கியம் நிலைபெறாதார் காசியையடைந்த மாத்திரமே அதனைப்பெற்று இந்திரிய நிக்கிரகமாதிய நன்மைகளை யடைவார்களெனப் பெரியோர்கள் சொல்ல நானுங் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று கூறி, ஓங்காரேசத்தை மனதிற்றியானித்துக்கொண்டு, தன் இளைய புத்திரனை விளித்து அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து அங்கிருந்து தன் மூத்தமகனை யழைத்துக்கொண்டு காசிக்ஷேத்திரத்தை நோக்கி இருவருமாகச் சென்றனர். அவ்வாறு செல்கையில் அப்பிதா தன் மூத்தமகனுடைய சாவகாசத்தால், தான் ஜன்மாந்தரத்திற் காசிக்ஷேத்திரத்திற சிவாலயத்திலேயே புறாவாக வாழ்ந்திருந்தவனென ஜன்மாந்தர ஞானமடைந்தான். இருவருங் காசியை யடைந்து ஓங்காரேசரைத் துதித்துப் பணிந்து அங்கு அநேக காலந் தவஞ்செய்து கொண்டிருந்து முத்தியடைந்தார்கள். இவ்வத்தியாயத்தை வாசித்தவர்களும் எழுதினவர்களும் படித்தவர்களும் பிறர்க்குச் சொன்னவர்களும் இஷ்டகாமியங்களையடைந்து சிவபெருமானுடைய திருவடியிற் கலப்பார்களென்று ஸநத்குமாரமுநிவர் சாற்றியருளினர்.

பிரதாபமகுடன் சரிதமுரைத்தது

ஊ ற் றி ற் ரு.

நாற்பத்துமூன்றாவது

சிவபெருமானது காசிவாஸ காரணமுணர்த்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமாரரை நோக்கி, ஸ்வாமீ! ஓங்காரேசுவர மகத்மியத்தை யின்னுங்கேட்க விரும்புகின்றேனெனக் கூறியதற்கு ஸநத்குமாரமுனிவர் கூறலாயினர். வேதத்திற் சொல்லப்பட்டுள்ள ஓர் சரிதத்தைச்சொல்லுகின்றேன். பூர்வத்தில் பரமேசுவரியானவள் காளியென்னும் பெயருடன் சிவபெருமானிடம் பிரீதியும் நற்குணமுமுடையவளாய்த் தன் கணவருடன் கிரீடித்துக்கொண்டு அநேககாலம் அப்பஞ்சாயதன ஸ்தானத்தில் இருந்தனள். சந்தியாகாலங்களிற் கந்தர்வ கருட வித்தியாதராதியர் அவ்விடத்தில் தமது சந்தியாவந்தனாதிகளை முடிக்கவருவர். சிவபெருமான் அவர்கட்கு நடனஞ்செய்து தரிசனங்கொடுப்பர். அப்பொழுதொருநாள் நடனஞ்செய்கையில், அவரது திருமேனியில் வெயர்வுண்டாகி அவ்வெயர்வினின்றும் அநேககணங்கள் தோன்றின. அக்கணங்களும் இறைவனது நடனத்தைக்கண்டு ஆனந்தித்து நடனஞ்செய்வாராயினர். அச்சமயத்திற் பார்வதிதேவியார் சிவபெருமானை நோக்கிப்பகவானே! விரூபாக்ஷியே! மந்தரம் காளஞ்சரம் பாருண்டம் கைலாயமுதலிய அநேக இடங்களில், தேவரீருடன் அடியேன் வசித்திருக்கிறேனாயினும் அவ்விடங்களிலெல்லாஞ் செய்திராத இவ்வகைய அற்புதமான நடனத்தை இவ்விடத்தில் மாத்திரம் செய்வதற்குக் காரணம் யாது? எனக்கேட்க, சிவபெருமான் புன்னகை செய்து பார்வதி தேவியாரை நோக்கிச் சொல்லத்தொடங்கினர். பர்வதராஜ புத்திரீ! நாதப்பிரமஸ்வரூபமாக பஞ்சாயதனஸ்தானத்தில் வசிக்கின்றேன். அகார வுகார மகார நாத பிந்துக்களாகிய ஐந்தும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயங்களாகிய ஐந்தும் ஆன ஸ்வரூபங்களாக இவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கின்றேன். பிரமாண்டத்திலுள்ள அநேக க்ஷேத்திரங்களுள் நான் வசித்திருப்பினும் உன்னுடைய முகமண்டலத்தைக் கண்டு, சந்தோஷ மடைவதுபோலவே இவ்விடத்தில் வசித்துச் சந்தோஷமடைகிறேன். இவ்விடத்தில் என்னை நோக்கித் தவஞ்செய்து கொண்டுவந்தவன் திவ்விய ஞானத்தையடைவான். இவ்விடத்திலேயே அநேக தேவ கந்தர்வாதியர் என்னைத் திரிநேத்திரனும் சூலபாணியும் இடபத்துவஜனுமாகத் தியானிக்கிறார்கள். அவர்கட்கெல்லாம் யான் அவ்வண்ணமே காட்சியளித்து அநுக்கிரகிக்கின்றேன். என்னை யிவ்விடத்தில் நிர்குணமாக வுபாசித்துச் சாயுச்சியபதவி யடைந்திருக்கிறார்கள். இந்தப்பூமண்டலத்தி லுள்ள எல்லாத் தீர்த்தங்களும் புண்ணிய ஸ்தலங்களும் ஆகிய விவற்றின் கலைகளெல்லாம் இந்தப்பஞ்சாயதன க்ஷேத்திரத்தில் வைகாசி மாசசதுர்த்தசியில் வந்து சேருகின்றன. அந்தக்காலத்திற் பதினெண் கணங்களும் எல்லாத் தேவர்களும் என்னைச் சேவிக்க இங்குவருவார்கள். இந்த மத்ஸோதரி தீர்த்தக்கரையிலிருந்து பிரமனும் விஷ்ணுவும் எனது ஓங்காரஸ்வரூபத்

தைத் தரிசித்துக் கொண்டிருக்கிறார்கள். கோடி உருத்திரர்கள் இவ்விடத்தில் என்னை யுபாசித்து என் வலது பாகத்திலிருக்கிறார்கள். வாமதேவர் மேருசாவர்ணி - அகோரமுனிவர் - கபிலர் - முதலானோர் உத்தரபாகத்திலிருந் துபாசித்துச் சித்தியடைந்திருக்கிறார்கள். மேற்புறத்திலுள்ள கிருத்திவாசேசரை யுபாசித்து அநேகர் முத்தியடைந்துளர். ஸப்தகோடி மகாமந்திரங்களும் நான்குவேதங்களும் இருபத்தெட் டாகமங்களும் தொண்ணூற்றாறு தத்துவங்களும் அறுபத்து நான்கு கலைகளும் இவ்விடத்தை யிரக்ஷித்துக்கொண் டிருக்கின்றன. இவ்விடத்தில் வசிப்போர் காமக்குரோதாதிகளை யொழிப்பர். அதிகமாகச்சொல்வதிற் பயனென்ன. என்னை யிவ்விடத்திற் றரிசித்த சமஸ்த ஜந்துக்களும் முத்தியடையுமென்று கூறினர்.

சிவபெருமானது காசிவாஸகாரண முரைத்தது

முற்றிற்று.

நாற்பத்துநான்காவது

புஷ்பவாகனன் சரிதமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவனே! அங்கே நிகழ்ந்த வேறோ ரதிசயமான சரித்திரமுஞ் சொல்லுகின்றேன். கேட்பாயாக. பூர்வம் இரதந்தர கற்பத்திற் புஷ்பவாகனனென்னு மரசன் தர்மவானாயும் ஜிதேந்திரியனாயும் சூரிய சமானனாயுமிருந்தான். அவன் ஓங்காரேசத்தை யடைந்து நிராகாரனாய் வாயுபக்ஷணஞ் செய்துகொண்டு அநேக காலந் தவஞ்செய்து ஓங்காரேசனைப் பிரத்தியக்ஷமாகத் தரிசித்துப் பலவாறு துதிக்க, ஓங்காரேசர் சந்தோஷித்து ஓர் பொற்றாமரைமலரை யவனுக்குக்கொடுத் தருளினர். அம்மலரின் பேரிலேறினமாத்திரத்தில் அது அவன் நினைத்த விடத்திற்குக் கொண்டுபோகத்தக்கது. இக்காரணத்தினாலேயே அவனுக்குப் புஷ்பவாகனனெனப்பெயராயது, அவன் அம்மலரி லேறித்தேவலோகம் நாகலோக முதலிய லோகங்கட்குச் சென்று சஞ்சரித்து வந்தான். அவ்வாறு பலவிடங்களிலுஞ் சென்றுவருகையில், பிரமதேவர் பிரசன்னராகி அவனைப் புஷ்கரதீபத்திற் கண்டு அவ்விடத்திலேயே யிருக்கவேண்டுமென் றமர்த்தி அதற்கு அரசனாக்கினர். அந்தப் புஷ்பவாகனனுக்கு அதிரூப சௌந்தரியங்களுடன் கூடிய லாவண்யவதி யென்னுமொரு மனைவியிருந்தாள். அவளிடத்திருந்து சுத்த வீரர்களான பதினாயிரம் புத்திரருண்டானார்கள். அப்புதல்வருடைய விளக்கத்திற்காக மனங்களித்திருந்த புஷ்பவாகனனிடம் பிரசேதஸ முனிவரென்பவர் வர, அரசன் அவரை அர்க்கிய பாத்தியாதிகளாலுபரித்து ஆதனத்தமர்த்தி உபசாரத்துடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அரசன் முனிவரை நோக்கி எனக்குத் தோஷமற்ற இச் செல்வமும், பலபராக்கிரம முடைய புத்திரபாக்கியமும், ஆசாரம் நன்ன

டைமுதலிய சிறப்போடு கூடிய உத்தமமனைவியும் இவ்விராச்சியமும் புஷ்பவாகனமும் முதலிய யாவும் எவ்வாறுண்டாயின. தேவரீர் திரிகாலஞானிகளாதலின் யான் ஜன்மாந்தரத்திற்செய்த புண்ணியங்க ளிவ்விவையெனத்தெரிவிக்கவேண்டும் என வினவினன். அதைக் கேட்ட பிரசேதஸ முனிவர் சொல்லத் தொடங்கினர்.

மண்டலாதிபதீ! உனது ஜன்மாந்தரத்தைச் சொல்கின்றேன். நீ பூர்வம் பயங்கரசுரூபமும் விகாரமான நகங்களும் செங்குஞ்சியும் தவமுதலிய நற்கருமங்களை யழித்தலுமுடைய வோர் வேடன். உனக்கு மனைவியன்றிப் பந்துஜன மித்திராதியர் ஒருவருமிலர். அப்படி யிருக்கையில் அநாவிருஷ்டி யுண்டாகிச் செடி கொடி முதலியன யாவுமழிந்து ஆகாரங்கிடையாது பசியால் வருந்தித் திரிந்து கொண்டிருந்தனை. அப்பொழுது அங்கிருந்த தடாகமொன்றில், சிறிது தண்ணீரும் அதில் நிரம்ப மலர்ந்த தாமரை மலர்களும் அந்நீரைச்சுற்றி விசாலமாகச் சேறும் விளங்கக்கண்டனை. அதைக்கண்டவுடன் நீயும் உன்மனைவியும் அச்சேற்றிலிறங்கி நீரை யடைந்து அதிலிருந்த தாமரை மலர்களைப் பறித்துக்கொண்டு அவிமுக்தத்தை யடைந்து, அம்மலர்களை விற்றுப் பொருள்தேடிச் சீவிக்க விரும்பித் தெருக்கடோறுந் திரிந்து வந்தீர்கள். அதனால் அந்நகர முழுவதையும் ஒருமுறை சுற்றினவ ரானீர்கள். அம்மலர்களை யொருவரும் விலைகொடுத்துப் பெற்றிலர். அப்படித் திரிந்து கொண்டு ஓங்காரேசத்தருகே வருகையில், தேவர் முதலாயினர் ஓங்காரேசத்திற் ஜேருத்திரஞ்செய்யு மோசை செவியிற்பட, அங்குள்ளார் எவரேனும் விலைகொடுத்து வாங்கக்கூடுமென்று அவ்வோங்காரேசத்தை யடைந்தீர்கள். அங்குள்ளவர்கள் வேதபாராயணமும், ஓங்காரமனனமும், நடனமும், கீதமும், சிவபூசையும், நிஷ்டையும் செய்வோராய்ச் சிற்சிலர் ஒவ்வொரு வகையாகவிருக்கக்கண்டு நெடுநேரம் அவற்றை விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்து, ஓங்காரேசத்தைத் தரிசித்த பலனால் உனக்கும் உன் மனைவிக்குஞ் சிவபெருமானிடத்திற் பக்தியுண்டாகி, இனி இம்மலர்களை விற்கப்படாது. ஆயிரம் பொற்காசுகள் கொடுப்பினும் இவற்றை விற்கமாட்டோமென்று அவ்வோங்கார லிங்கத்தின் பேரில் அம்மலர்களைக் கொட்டிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் பிரியமனமற்றவர்களாய் அன்றிரவெல்லாம் பரமசிவனைத் தரிசித்துக்கொண்டே கண்விழித்திருந்தீர்கள். அன்று விடியற்காலத்தில், சிவபெருமான் உங்கட்குக் காட்சியளித்து அந்தர்த்தான மாயினர். அதனால் அற்புத மடைந்த நீ யுன் மனைவியுடன் அவ்விடத்திலேயே யிருந்து அந்த ஆலயத்தைச் சுத்தஞ்செய்து கொண்டும் அருகிலுள்ள பூண்டுகளைவெட்டியெறிந்துகொண்டும்,திருத்தொண்டுசெய்துங்காலங்கழித்து, சிலகாலத்தில் நீ யிறந்தனை. உன்மனையும் பதிவிரதா பாவத்தால் அவ்வக்கினியிலேயே உயிர்விட்டனள். இதுவே யுனது ஜன்மாந்தர விர்த்தாந்தம். நீ ஓங்காரேசனுக்குப் புஷ்பங்களைச் சமர்ப்பித்ததனாற் பொற்றாமரை வாக

னத்தையும் புஷ்பவாகனனென்னும் பெயரையும் அடைந்தாய். உன்மனைவியும் உன்னைப்பிரியாது சிவபணிவிடை செய்திருந்தமையின் உனக்கு மனைவியாயினள். ஓங்காரேசத்தினாலேயே உனக்கித்தகைய சிறப்புக்களெல்லாமுண்டாயின. நீயிப் புஷ்கரதீபத்தை யரசுசெய்துகொண்டிருந்து வாராணசியையடைந்து ஓங்காரேசனுக்குப் பக்திசெய்யக்கடவாய். என்று கூறினர்.

புஷ்பவாகனன் அம்முநிவருடைய வார்த்தைகளுக்கு மனங்களித்துத் தேவரீரே பிராம்மண சிரேஷ்டர். திரிகாலஞானி - அநேக ஜனனங்களிற் செய்த புண்ணியத்தால் தேவரீருடைய தரிசனத்தையடைந்தேன். உன்மத்தனான எனக்குத் தாங்கள் தரிசனமளித்ததும் பஞ்சாயதன வாசியாகிய ஓங்காரேசனுடைய மகிமையே யென்று பலவாறு துதித்து அவருக்கு விடைகொடுத்தனுப்பி விட்டு, தன் மனைவியுடன் வாரணாசியையடைந்து மத்ஸோதரியின் வடபுறமும் ஓங்காரேசத்துக்கு எதிருமாக விளங்குந் தேவஹ்ருதம் [ஹ்ருதம் - மடு] என்னும் தீர்த்தத்தில் தன் மனைவியுடன் ஸ்நானஞ்செய்து அநுட்டான முடித்தனன். [இந்தத் தீர்த்தம் கலிகாலத்தில் ஒருவர் கண்ணுக்கும் புலப்படமாட்டாது. சிவாநுக்கிரகமுடையவர்கட்கே காணப்படும்.] பின்னர் ஓங்காரஸ்தானத்தை யடைந்து அர்ச்சித்து வேதகீதங்களால் துதிசெய்து முத்தியடைந்தனர். இவ்வகையாக மாநுடஜனன மெடுத்தவர்களுக்கு அடையத் துர்லபமான ஸ்தானம் அந்தக் காசிநகரமே. அந்த க்ஷேத்திரத்திற் சிவபூசைசெய்தவர்களெல்லாரும் உருத்திர கணங்களாவார்கள். இதுவே சித்திகளையடைதற்கும் யோகசாதகத்திற்கும் மூலமான ஸ்தானம். மோக்ஷ லோகத்தையடைய இதுவே சோபானமாகவுள்ளது. அதிகமாகச் சொல்வதிலென்ன பிரயோசனம். ? உலகிலுள்ள எல்லா ஸ்தானங்களையுந் தரிசித்து எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து முடித்த பலனைக்காசிக்ஷேத்திரத்திலொருநாள் வசித்தவர்களும் அடைவார்கள். அங்குள்ள ஓர் உத்தியான வனமானது தேவலோகத்திலுந் துர்லபமானது. அந்த உத்தியான வனத்தைக் கண்டு மனங்களிக்காதவர்களொருவருமிலர்.

வியாஸமுநிவனே! சிவபெருமான் அந்த வனத்தை ஒருகாலத்தில் பார்வதி தேவியாருக்குக் காண்பிக்கும்படி அந்தத் தேவோத்தியானத்திற்குத் தேவியாரை யுடன்கொண்டு சென்றனர். அதில் வில்வம் - சண்பகம் - கடப்பு - ஆல் - அத்தி - தெங்கு - வாழை - சுரபுன்னை - பாரிசாதம் - மந்தாரம் - மா - இலுப்பைமுதலிய மரங்களும் தாழை மல்லிகை முல்லை முதலிய செடிகளும் மலர்ந்துங் காய்த்தும் விளங்கின. வண்டுகள் மலர்களிற் படிந்து தேனுண்டுபண்பாடின. கந்தர்வர்கள் கானஞ்செய்யவுங் கின்னரர்கள் சஞ்சரிக்கவுங் காணப்பட்டன. சக்கரவாக சகோராதி பக்ஷிகள் வசித்தன. யானை புலி கரடி முதலிய மிருகங்களும் மயில்முதலிய பறவைகளும் விளங்கின. அப்பொழுது சிவபெருமான் பார்வதியை

நோக்கி, பெண்ணே! கோகிலசுவரங்களுங் கிளிகளின் பேச்சுங் கேட்டனையா? தேவலோக விஷ்ணுலோகாதிகளினின்றும் பாரிசாதாதி விருக்ஷங்கள் ஈங்குவளர்ந்துள்ளனவற்றைக் கண்டனையோ? கைலை வைகுண்ட சத்திய லோகாதிகளிலுள்ள விருக்ஷங்களும் புஷ்பபலங்களும் எனக்கு இவற்றைப்போலத் திருப்தி செய்வதில்லை. பர்வதராசகுமாரி! இந்த வுத்தியானவனமானது சிவலோகத்திலும் பெருவிருப்பை யெனக்குண்டு செய்கின்றது. இவ்விடத்தில் விஷ்ணுமூர்த்தி யென்னைப்பூசித்து ஓங்கார ஸ்தானத்தை யறிகிறுர். பிரமனும் தனது பரிவாரங்களுடன் தவஞ்செய்து என்னையே தியானிக்கின்றுன். முப்பத்துமுக்கோடி தேவர்களும் அநேக பிரமருஷிகளும் யக்ஷகின்னராதியர்களும் மாலைப்போதில் இந்தத்தீர்த்தத்தில் மூழ்கி எனது ஓங்காரஸ்தானத்தைத் தரிசித்துப்போகிறுர்கள். இதோ விருப்பது கபிலாஹ்ருதமென்னுந் தீர்த்தம். இது பூர்வம் பிரமதேவன் சத்தியலோகத்தினின்று நாடோறும் பால் கொண்டுவந்து என்னைப்பூசிப்பது வழக்கம். ஒருநாள் அப்பசுக்கள் பிரமனுக்குப்பால் கொடாமையின் அவன் வருந்தி என்னைப் பிரார்த்திக்க யான் அப்பசுவையண்ணுந்து பார்த்தேன். அதனுல் அவை கபிலவர்ணமாய்ப் பாலைப்பெருக்கின. அப்பால் விழுந்த விடமேயாம். இதன் கரையிற் கோக்ஷீரேசனென விளங்குகிறேன். இக்கபிலாஹ்ருதத்தில் ஸ்நானஞ்செய்து கோக்ஷீரேசனைத் தரிசித்தவர்கள் சிவலோகத்தில் வாழ்வார்கள். பிரமனுற் பிரதிஷ்டைசெய்த ஹிரண்யகர்ப்பேசனுகவும், விஷ்ணுவினுற் பூசிக்கப்பட்ட ஸ்ரீநீலேசுவரனுகவும், விளங்குகிறேன். அவற்றைத் தரிசித்தவர்கள் பெரும்போகத்தை நுகர்வார்கள். இவ்விடத்திற் பூர்வம் சில அசுரர்கள் புலியுருவாகப் பலரையுந் துன்புறுத்தினுர்களாதலின் தேவர்கள் என்னைச் சிவலிங்கத்திற் பூசித்தார்கள். அதனுல் யான் புலியுருவேற்று அவ்வசுரர்களைச் சங்கரித்தேன். அக்காரணம்பற்றி வியாக்கிரேசனுனேன். அந்த வியாக்கிரேசனைத் தரிசித்தவர்கள் நற்கதியடைவார்கள். பார்வதி! நீயோர் காலத்தில் உற்பலன் விமலன் என்னுமசுரர்க்குப் புருஷர்களால் இறவாமையுஞ்சிறந்தவரங்களையும் தர, அவர் பலரைத் துன்புறுத்த, தேவர்கள் வேண்டுகோளின்படி நீயே அவர்களையழித்து அப்பொழுதோர் இலிங்கப்பிரதிட்டைசெய்து உன்னுலிறந்த அசுரர்கட்கு முத்திவேண்டுமென வினவ அவ்வாறே யளித்து அதிலும் விளங்கினேன். அது நிர்வாணேச மெனப்படும். [நிர்வாணம் - மோக்ஷம்.] நிர்வாண ஸ்தானத்தைக்கண்ட மாத்திரத்திலேயே பசுபாசங்கள் விலகும். நான் அநேகமான கணங்களுடன் இவ்விடத்தில் முதலிற்றங்கினேன். அதனுல் ஜேஷ்டேசமென்றும் அமலேசமென்றும் பெயர் வழங்கும். அதனைத் தரிசித்தோர் ஒருபொழுதுந் துக்கமடையமாட்டார்கள். பார்வதி! இவ்வகையாக அநேககோடி லிங்கங்கள் இந்த க்ஷேத்திரத்திலுள்ளன. அவற்றைக்கண்ணுற் கண்டமாத்திரமே அகங்காரமொழிந்து மோக்ஷப்பிராப்திக்கு இடமுண்டாகும். பூர்வத்தில் தேவாசுரர்களெல்லாரும் என்னைத் துதித்துத் தவஞ்செய்து பூசித்தார்கள். அப்

பொழுது நான் இவ்விடத்தில் இலிங்கரூபமாகப் பூமியினின்றுந்தோன்றிக் காட்சியளித்தேன். அது முதற்கொண்டு அவர்களால் மகாதேவஸ்தானமென்றும் பெயரெய்தியது. இந்த லிங்கத்தைத் தரிசித்தோர் முத்தியடையும்படி வரங்கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டபடியே அநுக்கிரகித்து அந்த அவிமுக் தேசலிங்கத்திலிருக்கிறேன். இங்கே யிறப்போருக்கு முக்திகொடுத்துக் கொண்டிருக்கிறேன். பார்வதி! உன் தந்தையான பர்வதராசன் பிரதிட்டைசெய்த சயிலேச லிங்கத்திலிருந்து என்னைத் தரிசித்தவர்கட்குச் சிவலோகங்கொடுக்கிறேன். வரணை அசி என்னும் இருநதிகளின் சங்கமஸ்தானத்திலிருக்கிற சங்கமேசத்தைத் தரிசித்தோர் பிறவியை யொழிப்போராவார். அவ்விரு நதிகளுங்கூடுங் காரணத்தாலேயே காசிக்கு வாராணசி யெனப்பெயர். இந்த க்ஷேத்திரத்தின் மத்தியில் மத்திய மேசமானது போகங்களையெல்லாங் கெடுக்கவல்லது. இன்னும் சித்தேசம் - போகேசம் - சுக்கிரேசம் - பூர்வம் நரிவடிவாகிப் பலரையுந் துன்புறுத்திவந்த அசுரர்களைச் சங்கரித்து எழுந்தருளிய சம்புகேசம்-சூரியனாற் பூசிக்கப்பட்டுத் தரிசித்தவர்கட்குச் சிவலோகத்தைக் கற்பகாலவரையிற் கொடுக்கவல்ல கம்பீரேசம் - இயமனாற் பிரதிஷ்டிக்கப்பட்டு இயமபாதையை யொழித்து விளங்கும் இயமேசம்- சிறந்த காணபத்தியத்தைக் கொடுக்கவல்ல கேதாரேசம் - ஈசானனாற் பிரதிஷ்டிக்கப்பட்டுத் தரிசித்தவர்கட்குஉலோகபாலக பதவியையளிக்கும் ஈசானேசமாகிய அநேக புண்ணிய மூர்த்தங்களாகவும் விளங்குகின்றேன் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறி அவ்விடத்திற் றவஞ்செய்து கொண்டிருந்த நந்தி தேவருக்குத் திருக்கைலாயகிரிக்குக் காவல் செய்யும் அதிகாரமும், கணங்களுக்கெல்லாந் தலைமையுங் கொடுத்தருளினரென ஸநத்குமார முநிவர் கூறினர்.

புஷ்பவாகனன் சரிதமுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

சிலாதமுநிவர் தவஞ்செய்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி ஸ்வாமீ! நந்திதேவர் யாவருடைய புத்திரர்? அவர் சிவபெருமானை யெவ்வாறு பூசித்து அவ்வகைய உயர்பதவியை யடைந்தனர்? என்பதை விரிவாகச் சொல்ல வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமார முநிவர் சொல்லலாயினர். பூர்வம் ஜிதேந்திரியனும் தர்மவானும் சிவபக்தனும் சிலாதரென்னும் பெயர்பெற்றும் ஓர் முநிவரிருந்தார். அவர் சிவலோகத்தை நாடிச் செல்லுகையில் தனது பிதுர்கள் நரகத்திலிருந்து துன்படைவது கண்டு நீங்கள் யாரென்று வினவ, நாங்கள் சிலாதனுடைய பிதுர்கள், அவன் தவஞ் செய்து சுவர்க்

கத்திற்கு வந்தானன்றிப் புத்திரர்களைப் பெற்றிலனென, சிலாதர் யானே அவன். எனக்குப் புதல்வருண்டாக வில்லையே என, அவர்கள் நீ மகா தேவனை யாராதித்து மகனைப் பெறுகவென, அதை மனங்கொண்ட சிலாதர் பூமிக்குத் திரும்பிச் சிவபெருமானை நோக்கி, ஆயிரந் தேவவருஷங்கள் தவஞ்செய்தனர். சிவபெருமான் அவர் தவத்திற் கிரங்கி இடபாரூடமும் கங்காதரமும் நாகாபரணமும் விபூதியுத்தூளனமு முடையராய்க் காட்சி யளித்து உனக்கு வேண்டிய வரம் யாது? எனச் சிலாதமுனிவர் துண்ணென்றெழுந்து சந்திர சேகரைத் தேவியாருடன் பிரதக்ஷிண நமஸ்காரதிகள் செய்து கைகட்டி வாய்பொத்தி எதிரில் நின்று துதிசெய்யலாயினர். பரமதேவனே! மகேசனே! மகாத்மாவே! சிருஷ்டியாதி பஞ்சகிருத்திய கர்த்தனே! பிராமணபதயே! மன்மதனையெரித்தவனே! யோகிகளாற் றியானிக்கப்பட்டவரே! பர்வதவாசியே! ஞாதுருஞானஞேயஸ்வரூபியே! தேவதேவரோ! யோகிகள் தலைவரே! வரதரே! சர்வவியாபியே! லோகநாயகரே! இஷ்டகாமியங்களை யெல்லாங் கொடுக்கவல்ல பஸ்ம ருத்திராக்ஷதாரியே! தேஜசுக்குப் பதியே! கங்காதரரே! சந்திரசேகரரே! சரணாகதவத்ஸலரே! அடியேனுக்கு அநுக்கிரகம் புரிந்து எனக்குச் சற்புத்திரனாக ஒருவனை யளிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து மீண்டும் பணிந்து ஸ்வாமீ! அவ்வகைய மைந்தனை யெனக்குத் தேவரீர் கொடுக்கும் பக்ஷத்தில் அவன் அயோநிஜனும் மிருத்யுவற்றவனும் சர்வசக்திமானும் தேவரீருக்குச் சமானனும் தேவரீரைத் தரிசிப்போரால் தரிசிக்கத் தக்கவனுமாகவிருக்கும்படி தயைபுரிய வேண்டுமெனக்கேட்க, திரிலோசனராகிய சிவபெருமான் சந்தோஷித்து அப்படியே கொடுத்தேன். நீ செய்த இந்தத் தோத்திரங்களைத் துதிசெய்தவர்கள் அப்மிருத்யு அடையமாட்டார்கள். பூத பிரேத பசாச யக்ஷ ராக்ஷஸதுன்பங்க ளடையார்கள் என்று திருவாய் மலர்ந்தருளி யந்தர்த்தான மாயினர். சிலாதர் அதன்பின்னர்ச் சந்தோஷத்துடன் தமதாசிரமத்தை யடைந்து ஆங்குள்ளோருக் குரைத்து, சிலகாலஞ்சென்ற பின்னர், தாமோர் யாகஞ்செய்யக் கருதி ஓர் பூமியை உழுவித்தபொழுது அக்கலப்பையின் படைச்சாலிற் கோடி மன்மதருக்குச் சமானமான அழகும் அக்கினிபோன்ற காந்தியு முடைய ஓர் குழந்தையிருக்கக் கண்டு, சிலாதரும் அங்குள்ள முனிவர்களும் இது இராக்ஷதமாயையாயிருக்கு மென்று அவ்விடத்தைவிட்டுச் செல்ல எத்தனிக்கையில், அக்குழந்தை அப்பா! அப்பா! என்று கூப்பிட்டுக்கொண்டு மெல்ல நடந்து சிலாதமுனிவரை யணுகும்படி செல்ல, சிலாதர் அக்குழந்தையின் குரலொலியையு நம்பாதுவிரைந்து செல்லுகையில், ஆகாயவாணி சிலாதனே! இவனுன் புதல்வன். சிவபெருமானுன் தவத்திற்கிரங்கி மைந்தனைக் கொடுத்திருக் கின்றார். நீ யெடுத்து வளர்ப்பாயாக. உனக்கும் உன் பிதுரர்கட்குஞ் சந்தோஷமுண்டு செய்ததால் இவனுக்கு நந்தி என்று பெயருண்டாகப் போகிறது எனக்கூற, அதைக் கேட்டசிலாதர் அக்குழந்தையையெடுத்து அணைத்துக் கொண்டு தமதாசிர

மத்தை யடைந்து, சாதகர்மம்-சவுளம் - உபநயன முதலிய கிரியைகளை த்தக்க காலங்களிற் செய்தனர். இருக்கு யசுர் சாம அதர்வணங்கள் - வேதாங்கங்களான சிக்ஷை வியாகரணம் - சந்தசு - நிருத்தியம்-ஜோதிஷம் கற்பங்கள் - வேதத்திற்குரிய பதக்கிரமங்கள் - புராணங்கள் - தர்மசாஸ் திரங்கள் - ஆயுர் வேதம் - தநுர் வேதம் - காந்தர்வவேதம் - சிற்பசாத் திரம் - சகுனம்-சர்ப்பவித்தை - பரகாயப்பிரவேசம் - அஷ்டவியாகரணங் கள் - உபபுராணங்கள் - இதிகாசங்கள்-தேவயாகம் பிதுர்யாகம் மாநுட யாகம் பூதயாகம் பிரமயாகமென்னும் ஐந்து - மந்திரங்கள் - மாதுருதத் துவம் - யோகம் முதலியவற்றை நந்திபகவான் ஐந்து தினங்களில் தன் தந்தைபாலறிந்தவராய் எல்லாவற்றிலும் சாமர்த்தியமும் கம்பீரமும் பிரியவசனமும் அசூயையின்மையுமுற்று, சர்வலோகப் பிரியரும் மனத் திற்கும் விழிக்கும் ஆனந்தமுண்டுசெய்பவருமாக வளர்ந்து ஏழுவயதாகி விளங்குகையில், மித்திராவருணர் இரண்டு வேதியர் வடிவாக மகாதவசிக ளான சிலாதருடைய ஆசிரமத்தை யடைந்து, சிலாதமுநிவராற் கொடுக் கப்பட்ட ஆதனத்தி லமர்ந்து சிலாதரை நோக்கி க்ஷேமமா? இவ்வாசிர மத்தில் யாவருஞ் சுகமா? உன்புதல்வன் சரியாக வேதாத்தியனஞ்செய் கின்றனா? நியமந்தவறாது அநுஷ்டானஞ் செய்கின்றனா? தாய்தந்தை யர்க்குப் பணிவிடை செய்கின்றனா? உனக்குச் சந்தோஷமுண்டு செய்கின் றனா? என்று வினவ, சிலாதமுநிவர் சொல்லலாயினர். க்ஷேமம் அவனே யெனதுவமிசத்தைவிருத்திசெய்யத் தக்கினவனென்று தன்மைந்தனை வரு வித்து அவர்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கச் சொல்ல, அவர் அங்ங னமே நமஸ்கரிக்க. மித்திரா வருணர் - குருபணி விடைசெய்து கொண்டு அழியாப்பதவியை யடைக என்றாசீர்வதிக்க, சிலாதர் சிறிது பயந்துமைந் தனைச் சிறிது தூரத்திற் கனுப்பிவிட்டு ருஷிகளே! நீங்கள் மகாதவசிகள்; சர்வஜ்ஞர்கள், திரிகால ஞானிகள்; இவ்வாறிருக்க என் மைந்தனைத்தீர்க் காயுவாயிருக்கவென்று ஏன் ஆசீர்வதிக்க வில்லை? பெரியோர்கள் தங்க ளைச் சேவித்த குமரர்களுக்குத் தீர்க்காயுவோ டிருக்கவென்றாசீர்வதிக்க வேண்டியிருக்க, நீங்கள் என்புதல்வனை அப்படி யாசீர்வதியாமை பற்றி நான் சந்தேகிக்கிறேன். அவ்விஷயத்தை எனக்குச் சொல்லவேண்டு மெ னக்கேட்க, மித்திராவருணர் சிலாதனே! உன் மைந்தனுக்கு எட்டுவய துகளே ஆயுள்காலமாதலின் யாங்கள் அவ்வாறு ஆசீர்வதித்திலமென, அதனைக்கேட்ட சிலாதர் துக்க மாற்றாது மூர்ச்சையாகி நிலமிசை விழுந் தனர். அப்பொழுது அவர்கள் சிலாதரைத் தேற்றி வினைக்கென் செய்வ தென்று சமாதானங்கூறி விடுத்துத் தமதிச்சையின்படி சென்றனர்.

வியாஸமுநிவனே! சிலாதமுநிவர் அவர்கள் சொல்லிய சமாதா னத்தாலும் மனந்தேறாது கூக்குரலிட்டழ, நந்திதேவர் அதனைக் கேட்டு விரைந்தோடிவந்து தந்தையைப் பணிந்து நீர் துக்கப்படுங் காரணத்தை யெனக்குச் சொல்லவேண்டுமெனக்கேட்க, சிலாதர் மகனே! இங்குவந்த

மித்திராவருணர்களுடைய சொல்தவறமாட்டாது. அவர்கள் நீயின்னும் ஒரு வருஷத்திலிறப்பாயெனக் கூறினமையின் மனந்தாளாது துக்கிக்கிறேனென, நந்திதேவர் தந்தையே! தேவதானவ யக்ஷ ராக்ஷஸர்களுடன் இயமன் வந்தபோதிலும் என் உயிரை யொருவருங்கொண்டுபோக முடியாது. இதற்காக நீ வருத்தப்பட வேண்டாம் என, சிலாதர், மைந்தா! நீ என்ன தவஞ்செய்தனை? இதுகாறும் யாரை உபாசித்தனை? இந்த ஆபத்தினின்றும் எப்படிக் கரையேறுவை? யாவராலுந்தடுக்க முடியாத மிருத்யுவை நீ யெப்படித் தடுக்கப்போகின்றனை? என, தந்தையே! யான் இயமனை என்தவம் தானம் வித்தை முதலியவற்றால் வெல்லக்கருதினேனல்லன். பிநாகபாணியாகிய மகாதேவனைக் காட்டிலுஞ் சிறந்தவரிலர். அவரே மிருத்யுஞ்சயர். அவருடைய பெயரை மறந்துவிட்டீரோ. அவரே யவனைச் சயித்துவிடுவாரென, சிலாதர் ஐயோ மகனே! யான்ஆயிரந் தேவ வருஷங்கள் சிவபெருமானை நோக்கி அருந்தவஞ்செய்து, உன்னை மகனுகப்பெற்றேன். நீ யிவ்வொரு மாநுடவருஷத்திற் பரமபதியையெவ்வாறு தரிசிக்கப்போகின்றனை? அடைதற்கரிய சிவபெருமானை யான் தரிசித்து மிருத்யுவை வெல்வேனென்று யாது தைரியத்தாற் கூறுகின்றனை? என, நந்திதேவர் தந்தையே! சிவபெருமான் தானம் வித்தை தவமுதலியவற்றிற்குச் சந்தோஷிப்பவரல்லர். நிர்மலமான பக்திக்கே மனங்களிப்பவர். அப்படிப்பட்ட பரமசிவனை யான் தடையின்றித் தரிசிப்பேன். நீர் புத்திர வாஞ்ஞையைவிடுத்து என்னைத்தவஞ்செய்யத் தைரியத்துடனனுப்புக. உம்முடைய மனமானது விரைவிற் சந்தோஷிக்குமாறு யான் விரைவிற்செய்துகொள்வேன். நான் நின்றுந் திரிந்தும் ஓடியும் காட்டிலிருந்தும் எவ்வகையிருப்பினும் என்னை மிருத்யுவானவன் பார்க்கவே மாட்டானென்று தைரியமாக வெண்ணவேண்டும். *மிருத்யுக்கள் ஆயிரவரும், அந்தகர்கள் நூற்றுவரும், காலர்கள் ஆயிரவரும், இயமதருமர்கள் கோடியரும் தண்ட சூல பாச பாணிகளாய் மகாகோபத்துடன் ஒன்று கூடிவரினும் என் சரீரத்திலுள்ள ஒரு ரோமத்தையும் அசைக்கமாட்டார்கள். அவர்களாலெனக்கொன்றும் பயமில்லை. வீணேயென்னைப் பயப்படுத்தவேண்டாம். யான் இங்கிருந்து சென்றவுடனே செய்யவேண்டியது - நீரிலிறங்கிப் பாவசத்தியுடன் சதருத்திரீயத்தை ஜபித்து மகாதேவரைத் தியானிப்பதேயாம். அப்படி யான் செய்கையில் மிருத்யு கால யமாதிகள் என்னை வெல்லவல்லவர்களல்லர். மிருத்யுவைவெல்லப் பசுபதியையன்றிப் பிறர்க்குத் துர்லபம். விரைவிலென்னை யனுப்புகவென்று கூற, சிலாதர் மைந்தன் வார்த்தையை நம்பிச் சிறிது தைரியத்துடன் மிருத்யுவைவென்று வருகவென்றாசீர்வதித்து, மகனே! நிர்விக்கினமாகத் தவஞ்செய்கவென்று கூறினர். நந்திதேவர் தன் தந்தையைப் பிரதக்ஷிணஞ்செய்து காலில் வீழ்ந்து பாதங்களைக்கரத்தாற் பற்றிக்கொண்டு தைரியத்துடனிருக்க வேண்டு

* மிருத்யு - அந்தகன் - காலன் - இயமன் - என்பனமிருத்யுபேதங்களெனப்படும்.

மென்றுகூறி, அவரிடம் விடைகொண்டு, ஏழுவயதாக விருப்பினுஞ் சிவத்தியானத்துடன் மிருத்யுவைச் சயித்து வரும்படி திடங்கொண்டு கம்பீரமாக நடந்து தவஞ்செய்யும் விருப்புடன் சென்றனரென்று ஸநத்குமாரமுநிவர் வியாஸமுநிவருக் குரைத்தருளினர்.

சிலாதமுநிவர் தவஞ்செய்தது

முற்றிற்று.

நாற்பத்தாறுவது

நந்திதேவர் பேறுபெற்ற அத்தியாயம்.

நந்தியானவர் நதிகளிற் சிறந்த புவனைநதியில் மூழ்கி நின்று மனதைச் சிவத்தினிடத்திலொழுக்கி உருத்திரமந்திரஞ் சபித்து மிருத்யுவைச் சயிக்கவேண்டுமென்னுங் கருத்தாற் சீதோஷ்ணங்களைக்கருதாது உலகத்தை மறந்து பரசிவத்தில் ஐக்கியமானவரைப்போல விளங்கினர். உருத்திரமந்திர ஜபம் ஓர் கோடிமுடிய, பரமசிவன் அவருடைய தியானத்திற்குக் களித்துப் பிரசன்னராகி, நந்தீ! உன் ஜபத்திற்கு யான் மிகவுங் களித்தேன். நீ விரும்பிய வரத்தைக்கேட்டுக்கொள் என, நந்திதேவர் தமது தியானத்தை நிறுத்திச் சிவபெருமானை நமஸ்கரித்து, மிருத்யுஞ்சய மூர்த்தியே! யான் மற்றொரு கோடிதரம் உருத்திர ஜபஞ்செய்து முடிக்கும்படி யநுக்கிரகிக்க வேண்டுமென, சிவபெருமான் அவ்வாறேயாகுக வென்றந்தர்த்தானமாயினர். நந்தியானவர் மீண்டும் நீரிலிழிந்து ஓர்கோடி ஜபஞ்செய்து முடித்தனர். அப்பொழுதுஞ் சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சிதந்து யாது வேண்டும்? எனக்கேட்க, நந்திதேவர் ஸ்வாமீ! இன்னொரு கோடிமுறை ஜபிக்கும்படி யருளவேண்டுமென, அவ்வாறே விடையளித்துச் சென்றனர். இப்படியே ஆறுமுறை வரங்கொண்டு ஏழுகோடி ஜபமுடித்துப் பிரளயகாலாக்கினிபோன்ற தேஜசினாற்சுவாலித்துக்கொண்டிருந்தனர். அதனைக் காணமுடியாத தேவர்களும் இயமன்முதலிய திக்பாலர்களும் பயமுற்றார்கள். அப்பொழுது நந்திதேவர் எட்டாவது கோடியுமுடிக்கக் கருதினர். சிவபெருமான் நந்தியின் திடசித்தத்திற்கு மனங்களித்து, காளகண்ட சதுர்புஜ நாகபூஷண வியாக்கிரசர் மாம்பரதாரியாய் வேதங்கணான்கும் புடைநின்று முழங்கவும், பிரமனும் விஷ்ணுவும் இருபுறநிற்கவும், கணபதி கந்தர்களுடனிருப்பவும், தேவியாருடன் காட்சியளித்துத் தமது கரத்தால் அவரது கையைப்பற்றிக்கரைமிசை வருவித்து உடலைத் தடவி ஆசையுடன், சிலாதபுத்திரனே! உன் ஜபத்திற்கு நான் பெருவிருப்படைந்தேன். நீ நல்லதவத்தைச் செய்தனை. உன் மனதிலிருப்பதைச் சொல்க. சிறிதும் பயப்படவேண்டாம் எனக்கூற, நந்திதேவர் ஸ்வாமீ! அடியேன் இன்னுமொரு கோடி ஜபஞ்செய்ய வேண்டுமென்றே விரும்புகின்றேனென, சிவபெருமான்

நந்தீ! இதுகாறும் நீ செய்த எழுகோடி ஜபத்திற்கே உனக்கு எல்லாப் பதவிகளையுங் கொடுக்கவேண்டியது. நீயின்னுஞ் ஜபஞ்செய்யவேண்டாம். மீண்டும் ஜபத்தைச்செய்து யாது பெறப்போகின்றனை? பிரமத்வம் விஷ்ணுத்வம் இந்திரத்வம் சூரியத்வம் உருத்திரத்வம் மோக்ஷம் அல்லது எனக்குச் சமானத்வம் இவற்றுள் எதனை விரும்பினுங்கொடுக்கிறேனென, நந்திதேவர் ஜபஞ்செய்ய விரும்பியதை நிறுத்திச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கைகட்டி எதிரில் நின்று தோத்திரஞ்செய்யலாயினர்.

ஓம் தேவாதிதேவாயநம: - மகாதேவாய - காமாங்கநாசாய - திரிலோகஸம்ஹாராய - நீலகண்டாய - ஸஹஸ்ரஶிரஸே - ஸஹஸ்ரசரணாய - ஸர்வத:பாணிபாதாய - ஸர்வதோக்ஷிமுகாய - ஸர்வத:ஶ்ருதயே - அதீந்திரியாய - சந்த்ரசூர்யாக்நிநேத்ராய - ஶூலமுத்கரபாணயே - பரஶ்வததராய - த்ரிசூலஹஸ்தாய - ஸஹஸ்ரபாஹவே - ஸஹஸ்ரநேத்ராய - ஆதித்யாநாம்பதயே - யோகாதிகம்யாய - யோகப்பிரதாய - காளகண்டாய - யஜ்ஞாய - அம்ருதாய - ஸர்வதேவஸ்துதாய - உமாருத்ரேந்த்ரரூபாய - நாராயணாய - த்ரிபுரக்நாய - லலாடாங்கிதநேத்ராய - மஹிஷாந்தகஹர்த்ரே - தக்ஷிணாமூர்த்தயே - குமாரகுரவே - குமாரவரதாய-மஹாஹாஸாய-ம்ருத்யுபாஶோக்ரஹஸ்தாய - ஹிமவத் விந்த்ய மேருபர்வதவாஸிநே - கைலாயவாஸிநே - தநேஶ்வரஸகாய - விஷ்ணுதேஹார்த்த ஸம்ஸ்தாய - விஷ்ணுவரதாய - அந்தர்ப்பூதாதிவாஸாய - ஸூக்ஷ்மாய - க்ஷேத்ரஜ்ஞாய - விஷ்ணவே - லோககர்த்ரே - ஸப்தருஷயே - துர்வாஸஸே - சில்பிநே - வசிஷ்டாய - அவத்யாய - அஜராய - அமராய - அக்ஷயாய - புண்யரூபினே - ஓம் மஹாத்மநேநம: என்று, பலவாறு தோத்திரஞ்செய்து, ஸ்வாமீ! எனக்கு இந்திரத்வமும் பிரமத்வமும் விஷ்ணுத்வமும் லோகபாலகத்வமும் சூரியத்துவமு முதலியவை வேண்டுவதில்லை. அடிக்கடி பிறந்தும் இறந்தும் ஜனன மரணதுக்கங்களை யநுபவியாதொழிய வேண்டுகிறேன். அன்றியும் தேவரீர் தேவிமைந்தர்களுடன் எழுந்தருளியுள்ள அந்தப் புறத்தில் யானுமுடனிருக்கவேண்டும். பகிர் முகத்தில் தேவரீரைத் தரிசிப்பதுபோல அடியேன் அந்தர் முகத்திலுந் தரிசித்துக் கொண்டேயிருக்கவேண்டும். தேவரீரே யெனக்குக்கதி; எனக்குநாதன்; தேவரீரது அநுக்கிரகமடையாதவர்கள் அழிவார்களாதலின் மரணத்தை யொழிக்க வல்லபமில்லாத கடவுளை யான் ஆச்சிரயிக்கமாட்டேன். அத்தியந்தமான சுகத்தைக்கொடுக்கவல்ல வஸ்துவை யான் பார்த்து விட்டேன். அடியேன் உம்மிடத்தில் நீங்காத அன்பும் பக்தியும் பெற்று, உம்மையே யாசிரயித்தவனாகி ஜனன மரண துக்கங்களை யொழிக்கும் வல்லபமும், என்னாற் சத்கதியடையவிரும்பி என்னை யுண்டுசெய்த எனது பிதுர்வர்க்கத்திற்கு அழியாத சிவபதவியும், என்னால் துதிசெய்யப்பட்ட தோத்திரத்தை வாசித்தவர்கட்குக் கைலாயவாசமும், சதுர்த்தசி திதியில் இந்நாமங்களால் அர்ச்சித்துச் சதருத்திரீயஞ் சபித்தவர்கட்குக் காணபத்

தியமும் கொடுத்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் தன்னைப்பணிந்து நின்று இவ்வகைய வரங்கேட்டுத் தனது விழிகளினின்றும் பெருகும் ஆனந்த பாஷ்பத்தாற் சிவபெருமானுடைய திருவடிகளை யபிஷேகித்து அவரது திருவடிகளை இருகரங்களாலும்பற்றி நின்ற நந்திதேவரைச் சிவபெருமான் தமது திருக்கரத்தாலெடுத்து விபூதியாலலங்கரிக்கப் பட்டுள்ள தேகத்துடனணைத்துத் தழுவி, தாமரைமலர் போன்ற தமது கரங்களால் அவருடலைப் பரிசித்து, இவன் எம்மை ஆனந்த பாஷ்பத்தினால் ஓரபிடேகஞ் செய்தவனாதலின் இவனுக்கு இரண்டபிடேகங்கள் செய்யவேண்டுமென்று கடாக்ஷத்தினாலும் வாக்காகிய அமிர்தத்தினாலும் அபிஷேகித்தனர். [திருக்கண் சாத்தித் திருவாய் மலர்ந்தருளினரென்பது] புத்திரனே! என்னைத் தரிசித்தவர்கள் ஒருபோதும் மிருத்யு பயமடையார்கள். என்னிடத்தில் உனக்கு ஸ்திரமான பக்தியிருப்பதை யான் அறிவேன். நீ கேட்டவண்ணம் மூப்பு சாக்காடு தாபத்திரயங்கள் இவற்றை யொழித்து உன்னுடைய பிதுரர்களுடன் என்னுடைய பாதாரவிந்தத்தில் வாழக்கடவாய். உன்னைத் தரிசித்தவர்களுந் தியானித்தவர்களும் எனது சிவலோகத்தில் வாழ்வார்கள். நீ எனக்கு இஷ்டனும் எனது கணங்கட்கு அதிபனும் எனக்குச் சமானமான பராக்கிரமமும் யோகபலமும்பெற்று என் சமீபத்திலேயே வாழகடவை. எல்லா வளங்களுநிறைந்துள்ள க்ஷீரசாகரமத்தியில் விளங்குந் தீபத்தினையும் எப்பொழுதுங் கிழியாது பரிமளத்துடன் விளங்கும் வெண்பட்டுடையும், ஆயிரந் தாமரைமலர்களாலாய மாலிகையும் உனக்குக் கொடுத்தேனென்று, அவ்வுடையை யுடுத்தி அம்மாலையைக் கழுத்திலணிந்தனர். அதனால் நந்திதேவரானவர் திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் பத்துப் புயங்களுடன் விளங்கினாற்போல விளங்கினார். அப்பொழுது மகாதேவன் நந்தியைக் கையிற்கொண்டு, நந்தீ! உன்னாற் பூசிக்கப்பட்ட இந்த க்ஷேத்திரம் ஜாப்யேஸ்வரம் [ஜபஞ்செய்தவிடம்] என்னும்பெயரால் விளங்குக. இங்கே நாற்புறமும் யோசனை விஸ்தீரணவரையிற் சித்தக்ஷேத்திரமென்று பிரசித்தமாகுமாதலின், இவ்விடத்தில் அநேகர் தவஞ்செய்யப் போகிறார்கள். மனவாக்குக் காயங்களாற் சொற்பபுண்ணியத்தையேனும் இங்கே செய்யின், அவை ஆலின்விதை பெருமரமாதல்போல விசேஷ பலனைக்கொடுக்கும். இந்த க்ஷேத்திரத்தில் நீ செய்த ஜபத்தை ஒருவருஷ காலம் ஸ்மரித்தால் உருத்திர சாரூப்பியத்தையடைவார்கள் என்றுகூறினர். அப்பொழுது நந்திதேவர் ஆனந்தித்து நதியின் ஜலத்தைக் கரத்தாலெடுத்துச் சிவபெருமானை நோக்கி ஸ்வாமீ! இந்த நதியிதுமுதல் நந்தீபவனையெனப் பெயரெய்த வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் அவ்வாறே யருளினர். உடனே தாமரைமுதலிய மலர்கள் நிரம்பிவிளங்கும் அந்நதியினின்றும் அந்நதி நங்கையானவள் செந்தாமரைமலர்போலும் விழியும் பொற்சாயலும் மேகம்போலுங் கூந்தலும் பர்வதங்கட்குச்சமமான குயங்களுமுடையளாய்ச் சர்வபூஷணங்களா லலங்கரிக்கப்பட்டவ

ளாய்த் தேவதேவனான சிவபெருமானைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துக் கைகட்டி நின்றனள். அப்பொழுது சிவபெருமான் பெண்ணே! நந்தி என்னை நோக்கி உன்னிடத்திருந்து ஆத்மயஜ்ஞஞ் செய்தமையின் உனக்கு யஜ்ஞோதகமென்றும் பெயர்வருக என, நதியானவள் ஸ்வாமீ! இந்நந்தி என்னிடத்தினின்றுந் தவஞ்செய்தபடியால் அவர் எனக்குப் புதல்வனென்றும் யான் அவர்க்குத்தாயென்றும் புலப்படுமாறு நந்திமாதாவென்னும் பெயரெனக்கு வேண்டுமெனக்கேட்க, அவ்வண்ணமே யாகுகவென்று நந்தியை நோக்கி நீ யிவளைப் பணிகவென, நந்திதேவர் உடனே சாஷ்டாங்கமாகப் பணிந்து அவளது இருபாதங்களையும் பிடித்துக்கொண்டனர். அதனால் ஆனந்தமடைந்த அவளது தனத்தினின்றும் பால்பெருகி மூன்றுவழிகொண்டு சென்றது. நந்தியானவர் அதனைக் கண்டு சந்தோஷித்து ஓர் நாதஞ்செய்ய அதினின்றும் ஓர் நதி பிரவகித்து நந்திநாதோத்பவமென விளங்கியது. சிவபெருமான் சுவர்ணத்தாற் செய்த நவரத்தின சகிதமான மகுடத்தை நந்திதேவருக்கணிய, நந்திதேவர் சூரியனைக்காட்டிலுஞ் சிறந்து தேஜஸுடன் விளங்கினர். அதுகண்ட தேவர்கள் யாவரும் இவர் தேவர்கட்கெல்லாம் இறைவராயிருக்கவேண்டுமென்று அபிஷேகித்தனர். அந்த அபிஷேக ஜலம் ஓர்நதியுருக்கொண்டு சுவர்ணோதகமென்றும் ஜாம்பூநத நதியென்றும் பெயர்பெற்றது.

வியாஸமுநிவனே! ஜாப்பியேசத்துக்கருகில் அந்த ஜாம்பூநத நதியுள்ளது. அதில் ஸ்நானஞ்செய்து சிவபெருமானைச் சேவித்து மூன்று தினங்கள் சிவபூசைசெய்து பிராமண சந்தர்ப்பண முடித்து விரத பூர்த்தி செய்தவன் கைலாயத்தை யடைவான். ஜாப்பியேசத்தில் தேகத்தை விடுத்தவன் நந்திதேவருக்குச் சமீபமான பதவியை யடைந்து நெடுங்காலம் வாழ்ந்திருப்பான் என்று திருவாய்மலர்ந்தருளித் தமது வாமபாகத்திலிருந்த உமாதேவியாரை நோக்கி, பெண்ணே! நந்தியை எல்லாக் கணங்கட்குந் தலைவனாக மகுடாபிஷேகஞ் செய்வித்தேன் அவனைப் பூசித்தவர்கள் என்னைப் பூசித்தவர்களும், அவனைப் பக்திசெய்தவர்கள் எனக்குப் பக்திசெய்தவர்களு மாவர் என்றுகூறி, நந்திதேவரை நோக்கி, நந்தி! ஜாப்பியேசுவரம் பஞ்சநதமென்னும் க்ஷேத்திரங்களில், தமது சரீரத்தை விடுத்தவர்கள் உனக்குக் கீழ்ப்பட்ட கணநாதர்களாகவும், உனக்குச் சமானமான தேகமும் உன்னோடு வாசமும் இடைவிடாது என் தரிசனமுமடைவார்கள் என்று கூறியருளினர்.

நந்திதேவர்பேறுபெற்றது.

முற்றிற்று.

நாற்பத்தேழாவது
கணங்களின்வருகை யுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமார முனிவர் வியாஸரை நோக்கிச் சொல்லுகின்றார். நந்தீசனுடைய தவச்செயல் முதலியவற்றைச் சொன்னேனல்லவா? அதன்பின்னர்ச் சாம்பசிவன் உமாதேவியாரை நோக்கி, மங்களகரமுடையவளே! இந்த நந்திக்குக் காணுபத்தியங் கொடுப்பதில் நீ யாது கருதுகின்றனை? உன்கருத்தை வெளியிடுகவெனக் கூற, பார்வதிதேவியார் பகரலாயினர்: மகாநுபாவராகிய தேவரீருக்குப் புத்திரனான நந்திக்கு எல்லாங்கணங்கட்கும் இறைமையேயன்றிச் சகலலோகங்கட்கும் இறைவனுகுந் தன்மைமையையுங் கொடுக்கலாமென்பது என்கருத்தாகுமென, பகவானான மகாதேவன் தேவ சித்த கணங்களாற் சேவிக்கப்பட்டுக் கிழக்குமுகமாகவிருந்து அவ்வத் திசைகளிலுள்ள எல்லா வுருத்திர கணங்களும் வரவேண்டுமென்று திருவுள்ளஞ் செய்ய, அப்பொழுதே மிக்க சந்தோஷசித்தத்துடன் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு மேல் கீழாகிய திசைகளிலுள்ள உருத்திர கணங்கள் யாவரும் சூலம் அம்பறுத்தூணி முதலியன தாங்கி நீலகண்டம் பிரகாசிக்கும் அக்கினி நேத்திரங்கள் கொண்டு எண்ணிறந்தவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களன்றியுங் கபாலீசன்-விசோகன் - சதநேத்திரன் - சதாநிலன் - அநந்தருத்திரன் - நூறுபாதமுடையவர்கள் - நூறுமுகமுடையவர்கள் - முதலாகச் சர்வலோகாதிபதிகளாகிய அநேகர் வந்துசேர்ந்தனர். அஞ்சத்தக்க முகமும், பயமுறுத்தத்தக்க புருவங்களும், இருபது யோசனை அகலமும் உயர்வுமுடைய கராளவதனனும், நான்கு முகங்களும், சங்கம் போலுஞ் சந்திரன்போலும் வெண்மை வாய்ந்த தேகமும், ஐந்து நாக்களும் மேனோக்கிய காதுகளும், பாசஹஸ்தமும்,மனோவேகமுமுடைய பாரபூதி யென்பவனுந் தம்போன்ற பராக்கிரமமுடைய நூறுகோடி சைநியங்களுடன் வந்து சேர்ந்தனர். கட்கவேகம்போன்ற வேகத்தையுடைய தியான யோகமே சிறந்ததென்று கொண்டவர்களாய்த் தனக்குச் சமானமான அநேககோடி கணங்களுடன் சோமவர்ஷன் வந்து சிவபெருமானைப்பணிந்து முன்னின்றனன். மனைவியுடன்கூடி மங்கள கரனுக விளங்கி, மகாபலவானுகி, பிரளய காலாக்கினி தேஜசுபெற்ற மகாகாயன் வந்தனன் - சந்திரசூடமும் சதுர்புஜமும் நீவிழியும் பெற்றுள்ள மகாகாயனைச் சூழ்ந்து ஒரு பாதமும் பூரித்த தேகமும் திரிநேத்திரங்களு முற்று, கரத்திற் சூலந்தாங்கிய நூறுகோடியுருத்திரர்கள் வந்தனர். இவ்வகைய சிவபக்தனன்றோ சர்வதேவர்களாலும் பூசிக்கத்தக்கவன். பத்மாசனம் - குறுங்கால்கள் - புனிதம் - ஆயிரங்கைகள் - ஆயிரம் விழிகள் - பயங்கரமான முகங்கள் - கோரமான சர்ப்பாபரணங்கள் - சந்திரதாரணம் - அநேக விசித்திர மாலைகளணிந்த சடைமுடிகள் முதலிய வற்றுடன் சோமன் தன்னைப்போன்ற அநேக கோடியுருத்திரர்கள் தன்னைப்பணி செய்துவரச் சிவபெருமானைப் பணிந்து முன்

நின்றனன். நான்கு வாய்களும் தேஜோரூபமும் இருபத்துநான்கு லக்ஷணங்களும் ஆயிரம் புயங்களும் திறந்த வாய்களும் கராளவதனமும், சங்குகர்ணமும், மகாபராக்கிரமமும், கத்தியேந்திய கரமும், அகண்டதேஜஸூம் நூறுகால்களும் சிறியவயிறும் மின்னல்போல் விளங்குஞ் செங்குஞ்சியும் பெரிய முகமும்பெற்றுச் சிவசந்நிதியை யடைய விருப்பங்கொண்டுள்ளவனும் ஒருகாலத்திற் சிவபெருமானுக்கு வாகனமாக வந்தவனு மாகிய அஜைகபாதன் தன்னைப்போன்ற நூறுகோடி சேனைகளுடன் பொன்மயமான மலர்களைக் கரத்திலேற்றுச் சிவசந்நிதியை யடைந்தான். பலபராக்கிரமசாலியும் தேகமுழுதும் வாயுடையவனும் பிரபாவ முடையவனும் எண்ணிறந்த கைகால்களும் குறுகிய தோள்களுமுடையவனும் வச்சிராயுதந்தாங்கித் தன்னைப்போன்ற நூறுகோடி யுருத்திரர்கள் சூழ்ந்துவரப் பெற்றவனுமாய் நிகும்பன் வந்தான். அக்கினிபோன்ற செவந்த தலைமயிரும், பெருவலியும் சந்திரமாலையும் திவ்வியமான ஆயிரங் கைகளும் தண்டாயுதமும் விசாலமான சக்கிராயுதமும் முல்லை மலர்போலும் வெண்ணிறத்த தேகமும்பெற்ற சங்கரனும், கணக்கில்லாத கோடாகோடியுருத்திரர்களுடன் சர்ப்பமாலை யணிந்து, பெருந்தவஞ்செய்து சிவபெருமானுக்குப் பெருவிருப்புண்டாக்கி விளங்கும் சூரியாப்பியானனும் வந்துசேர்ந்தனர். வச்சிரா பரணங்களா லலங்கரிக்கப்பட்ட - ஸர்வமானி - சந்திராயுதன் - மகாதேஜன் - சக்ரம்போலவளைந்த கைகளையுடைய கடாகடன் என்போர் தத்தமக்குரிய ஆறு கோடி யுருத்திர கணங்களுடன் வந்துற்றனர். கோடி சைநியத்துடன் மகா பலனாகிய சங்கு கர்ணனும், பத்துக்கோடிசேனையுடைய நந்திகனும், எட்டுக்கோடி சேனையுடைய பிங்காக்ஷனும், அறுபத்துநான்குகோடி சேனையுடைய விநாயகனும், ஆறுகோடி சேனை யுடையவனும் பொன்மயமான தேகங்களை யுடையவனு மாகிய கூஷ்மாண்டனும், ஏகபாதனும், பன்னிரண்டுகோடி சேனையுடைய தூமிரகேசனும், பத்துக்கோடி சேனையுடைய பாதகியும், பதினெட்டுக்கோடி சேனையுடைய சதமுக்தனும், ஆறுகோடி உருத்திரகணங்களுடைய வீரனும், எட்டுக்கோடி கணங்களையுடைய கும்பகர்ணனும், ஆயிரகோடி கணங்களையுடைய விசுவபலனும், நூறுகோடி கணங்களையுடைய மனனும், எட்டுக்கோடி கணங்களுடைய நாதேசனியும், ஏழுகோடியுடைய சுந்திரவதனனும், ஆயிரகோடியுடைய மஹீதரனும், கோடியுருத்திர கணங்களுடைய பிரவாதித்ய மூர்த்தியும், பத்துக்கோடி யுடைய சந்தோஷனும், எட்டுக்கோடியுடைய குருதனும், பதினைந்துகோடி யுடைய கும்பனும், சங்கோசனனும், கோடிபூதசேனையுடைய அமோகனும், மோகனும், பூதிதனும், அறுபத்தெட்டுக் கோடியுடைய ஏகபாதனும், ஸப்தசிரோகனனும், பத்துக்கோடியுடைய மகாபலனும், அபஸ்மாரனும், நீலோற்பவனும், தேவேசனும், கண்வபத்திரனும், ஏழுகோடியுடைய விகுர்தியுமாகிய உருத்திரகணநாதர்கள் தங்கடங்கள் சைநியங்களுடன் சிவசந்நிதானத்தையடைந்தார்கள். அநேக ஆயிரகோடி உருத்திரகணங்களாற் புடைசூழப்பட்

டும் மகாயோகபலமுடைய அநேகவாயிரகோடி பூதகணங்களாற் புடை சூழப்பட்டும் விளங்கும் வீரபத்திரனும், அறுபத்து நான்குகோடி யுடைய தூஷகனும், ஒன்பதுகோடி கணங்களுடைய மேக சௌதாமனியும், இருபது கோடி கணங்களுடைய பிரகாரனும், எண்ணிறந்த கணங்களை யுடைய மகாபலனும், மிருத்யுவும், இயமனும், காலனும், விஷதரனும், சதமாயனும், மகாமாயனும், பர்வதாபரணனும், ஏகசிருங்கனும், பிருங்கியும், ரிட்டனும், இன்னும் எண்ணிறந்தவர்களும் தமது பரிவாரகணங்களுடன் சிவபெருமானிடம் வந்து சேர்ந்தார்கள். இவர்களே யன்றிக்கணக் கற்றவர்கள் நானுவிதமான வாத்திய கோஷஞ் செய்துகொண்டு வந்து சேர்ந்தார்கள். சிலகணுதிபர்கள் இரதாரூடர்களாகவும், வேறு சிலகணநாதர்கள் கஜாரூடர்களாகவும் இன்னும் சில தலைவர்கள் அசுவாரூடர்களாகவும், மற்றுஞ் சில கணேசர்கள் வானர-வியாக்கிர - சிம்ஹ - விமான - சர்ப்ப - பக்ஷி - சுநக - [சுனகம் - நாய்] முதலியன வாரோகணித்து, சர்வாபரணர்களாகவும் வந்தார்கள். மயில்களையும் சிங்கங்களையும் பூட்டிய இரதங்களிலேறி அநேக கணநாதர்கள் வந்து சேர்ந்தார்கள். வேறு பலபிரமத கணங்கள் பேரிகை முழக்கிக்கொண்டும், பலர் சங்கங்களைப் பூரித்துக்கொண்டும், பலர் மிருதங்கங்களை வாசித்துக்கொண்டும், பலர் பறைமுழக்கியும், பலர் கோமுக வாத்தியஞ் செய்துகொண்டும், பலர் நாகசுரங்க ளூதிக்கொண்டும் இவ்வண்ணமாகப் பலவித வாத்திய கோஷங்களுடன் வந்தார்கள். டமருகம் அடிப்பவர்களும், வேணுநாதஞ் செய்பவர்களும், வீணுகானஞ்செய்பவர்களும், கரதலவாத்தியஞ் செய்பவர்களுமாக எண்ணிறந்தவர்கள் சிவசந்நிதானத்தை யடைந்தார்கள். அன்னவாகன மூர்த்தி எல்லாவுலகங்கட்கும் பிதாமகனுகிய பிரமதேவன் பலவித சித்த கணங்களாற் சேகரிக்கப்பட்டும் தென்புறத்தில் கமண்டரூபமாக இருக் வேதமானது வரவும், பின்புறத்தில் நானுரூபமாகச் சாமவேதமானது வரவும், வடபுறத்தில் அக்கினிபோலப் பிரகாசித்து அதர்வணவேதமானது வரவும், கீழ்ப்புறத்தில் மின்னல்போல யசுர் வேதமானது வரவும், இதிகாசபுராணுதிகள் பலரூபங்களுடன் எதிரில் முன் செல்லவும் சங்கர சமீபத்தை யடைந்து பணிந்து நின்றனன். திருமால் கருடவாகனமிவர்ந்து வந்தனர். பின்னர், திவ்வியமான சபாமத்தியில், தேவசிரேஷ்டனும் யஜ்ஞ ரூபியும், மங்கள ரூபியுமான சாம்பவமூர்த்தி விஷ்ணுவை நோக்கிக் கம்பீரமாகச் சொல்லத் தொடங்கினர். விஷ்ணுவே! நந்தி சகலதேவர்களிற் பூஜிதனுகும்படி, இப்பொழுது நந்திக்குக் காணுபத்தியங்கொடுக்க உத்தேசித்து அபிஷேகஞ் செய்யப்போகின்றேன். அது வுனக்குச் சம்மதமா? உனக்குச் சம்மதமானுல் அபிஷேகஞ் செய்கிறேனெனக் கூற, விஷ்ணு மூர்த்தி நகைத்து, தேவதேவனே! தேவரீர் எல்லாத் தேவர்கட்குந் தேவரென்று நானும் இங்குள்ளாரும் அங்கீகரித்துள்ளோம். தாங்கள் உத்தரவு செய்த பிரகாரம் யான் நடக்கின்றேன் எனக்கூறினன். அச்சமயத்தில் இந்திரன் ஐராவதத்திலேறியும் வாயு வசுக்கள் முதலானுர் தமது

வாகனங்களிலேறியும் ஆகாயமறையும்படி சிவசந்நிதியை வந்துசேர்ந்து, பிரணவப் பொருளாயும் நாசரகிதனுயும் விளங்கும் சிவபெருமானைப் பல வகையாகத் துதிசெய்து சந்தோஷிக்கச் செய்து தாமும் சந்தோஷித் திருந்தனர். கணங்களின்வருகை யுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

நந்திதேவர் பட்டாபிஷேக முரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! பலவான்களான உருத்திரகணங்கள் யாவரும் சர்வேசனை சங்கரபகவானை நமஸ்கரித்து, பகவானே! தேவதேவனே! எல்லாராலும் நமஸ்கரிக்கப்படும் நாதனே! அடியேங்களை வருவித்த காரணம் யாது? உத்திரவானுற் சமுத்திரங்களையும் வற்றச்செய்கிறோம். மலைகளைப் பொடிபடுத்துகிறோம். இயமனையுங் கொல்லுகிறோம். எத்தகை யனையாயினும் சுகதுக்கங்களை யடையச் செய்கிறோம். யாதுசெய்யவேண்டு மெனக்கேட்க, சர்வேசனாகிய சிவபெருமான் அவர்களை யெல்லாம் நல்ல வசனத்தால், பிரமத கணாதிபர்களே! உலகற்கு இதத்தை யுண்டுசெய்யும் நீங்கள் என் உத்தரவையெதிர் பார்த்து அவ்வண்ணஞ் செய்யக்கடவீர்கள் அதாவது இந்த நந்திதேவனை எல்லாக் கணாதிபர்கட்கும் நாயகனாகச் செய்ய எல்லாத்தேவர்களும் இயைந்துளர்.யானும் சம்மதித்திருக்கிறேன். நீங்களும் அதற்கிணங்கி யுங்கட்கெல்லாம் சேனாபதியாகக் கொள்ளவேண் டும். இதுமுதல் அவனே யுங்கட்கெல்லாந் தலைவன் எனக்கூறினர். அந்தச் சமயத்தில், பார்வதி தேவியாரது தோழிகள் ஆஹா இது மகாநற்கரும மென்று சம்மதித்து, சமையற் பண்டங்களைச் சேகரித்தனர். சாம்பூநதப் பொன்னாற் செய்த மண்டபத்தில் முத்துச் சரங்கள் தொங்கவிட்டு, பல ரத்தினங்களா லலங்கரித்து, வைடூரியத் தம்பங்களும், பொற்சதங் கைகளுந் தொங்கவிட்டு நான்கு தறைகளாகச்செய்து, அம்மேரு வைப்போன்ற மண்டபத்தில், உயர்ந்த ஆசனமென் றமர்த்தி, துருவம் [ஸ்திரமாயிருக்க] என்று பலருமாசீர்வதிக்க, நந்திதேவரை யப்பீடத்தி லிருத்தி யாவரும் அபிஷேகித்து, மங்களார்த்தமாக திவ்வியமான வஸ்தி ரங்களையும், திவ்வியகந்தத்தையும், வச்சிரகுண்டலங்களையும், வாகுவலயத் தையும், கிரீடத்தையும், நவரத்தினமயமான ஹாரத்தையும், திரிசூலம் வச்சிரம் முதலிய வற்றையுங்கொடுத்து, குடைபிடித்து ஆலவட்டம் பணி மாறினர் - பிரமன் முதலிய தேவர்களும் மகருஷிகளும் சந்தோஷித்தி ருந்து,

நமஃகூஷ்மாண்டரூயாய வஜ்ரோஜ்ஜதகராயச (௧௬)
ஸாலங்காயநபுத்ராய ஹலமார்கோத்திதாயச
ஶிலாதஸ்யசபுத்ராய ருத்ரஜாப்யபராயச (௧௭)
ருத்ரபக்தாயதேவாய நமஸ்தேஜலஶாயிநே
நமோகணாதிபதயே மஹாயோகீஶ்வராயச (௧௮)

தண்டகண்டாயசண்டாய ஏகாதஶஶதாயச
அக்ஷயாயாம்ருதாயைவ அஜயாயாவ்யயாயச (கக)
பஶுநாம்பதயேசைவ ருத்ரரூபதராயச
நமஃப்ரபலகேஶாய ஸர்வஜ்ஞாயாதிதாயச (உ0)
அநேகஶிரஸேசைவ அநேகவதநாயச
கிரீடிநேகுண்டலிநே மஹாபரிகபாஹவே (உக)
பாஹிஸர்வகணும்ச்சைவ பாஹிதேவநமோஸ்துதே|| (உ௩௨)

என்று—தோத்திரஞ்செய்து எதிர் நின்று கைகூப்பி நமஸ்கரித்து ஜயஜயவென்று கூறினர்கள். தேவர்களும் இராக்ஷதர்களும் தனித்தனி ஜயஜயவென்று புகழ்ந்தார்கள். பின்னர்ப்பூதங்களும்பிரமனும்இந்திரனும் அவ்வண்ணமே ஜயஜயவென்றார்கள். யக்ஷ அசுரபன்னகர்கள் டிண்டிமா-தேணுகை - மிருதங்கம் - சங்கம் - பேரிகை - வேணு - வீணை - தாளம் - பூரி - கொம்புகள் - முதலிய வாத்தியங்களைப் பிரளயகால மேககோஷம் போல ஒலிக்கும்படி செய்தனர். நந்தீசனைத் தேவர்கள் துதிசெய்த தோத்திரங்களைப் பாராயணஞ் செய்வோர் சிவகதியையடைவார்கள். நமோநந்தீஸ்வராய என்று துதிப்பவன் பூதப் பிரேத பசாசாதிகளால் ஒரு போதுந்துன்படையமாட்டான். பக்தியோடு உதயகாலத்தில் நாடோறும் இத்துதிகளைச் செய்வோர் நந்தீசாநுக்கிரகத்தையடைவர். இத்தோத்திரத்தால் நந்திதேவனைப் பூசித்தவர்கட்கு ஒருகுறைவும் வரமாட்டாது. நந்தீசனை ஏகமனதுடன் நாடோறும் பூசிப்போர் சிவபெருமானைப் பூசித்த பலனையும் சிறந்த கணநாதனுந் தன்மையும் அடைவார்கள்.

நந்திதேவர் பட்டாபிஷேக முணாத்தது

முற்றிற்று.

நாற்பத்தோன்பதாவது

நந்திதேவர் திருமண முணாத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! அதன் பின்னர்த் தேவநாயகனுகிய சிவபெருமான் நந்திதேவருக்கு மகுடாபிஷேகஞ்செய்யும்படி வருவித்த இந்திராதி தேவர்களை நோக்கி, அமரர்களே! நீங்கள் மகாபாக்கியவான்கள்;பலவான்கள்; தேஜோவான்கள் என்றுகூறிச் சந்தோஷிக்கச்செய்து,இனி இந்நந்தீசனுக்கு ஓர் தேவகன்னிகையை மணம்புணர்த்த வேண்டுமென்று கருதுகின்றேன். நீங்கள் விரும்பியவளாக ஓர் பாக்கியவதியும் ரூபவதியும் புனிதையும் பதிவிரதையுமாகிய ஓர் கன்னிகையைத் தேடி விரைவிற் கூறவேண்டும் எனக்கூற, தேவர்கள் யாவரும் உலகநாதனே! இந்த நந்திதேவனாத்தேவரீருக்குப் பிரியமானவரும் எல்லாவுலகங்கட்கும் பிரபுவுமாகத் தாங்களே நியமித்திருக்கிறீர்கள். தேவர்கள்யாவரினும் உத்தமமானவர் தேவரீரே! தேவரீரைக்காட்டினுஞ் சிறந்தவர் யாவரிருக்கின்றனர்? ஞானேபதேசஞ் செய்யவல்ல பரமார்த்த குருவாயுள்ளவர் தேவ

நீரே. காசிபர் புலகர் மரீசி முதலானோர்க்குத்தந்தை பிரமன். அப்பிரமதேவனுக்குத் தேவரீரே கடவுளாக விருக்கிறீர். அப்பிரமனே எங்கட்குப் பிதாமகனாகவிருக்கின்றான். ஆதலின்யோசித்துப்பார்க்குமிடத்தில், சராசரமாகிய இப்பிரபஞ்சத்திற்குத் தெய்வம் குரு பிரபு சுதந்தரமுதலியயாவும் நீரே யென்றுணருகின்றோம். தேவரீர் எங்களை நோக்கி ஒரு கன்னிகையை நாங்கள் நியமித்தால் நந்திதேவருக்கு மணவினை முடிப்பதாகக் கூறுவது விநோதமே. தேவரீர் கட்டளையிட்டபடி யாங்கள்செய்வோமென, சிவபெருமான் அவர்களது வார்த்தையைக் கேட்டு, யான் கன்னிகையைத் தேடமுடியாது உங்களைக்கொண்டு நடத்துவிக்க முயன்றேனல்லன். பிள்ளைகட்கு மணஞ்செய்ய வேண்டுவோர் ஓர் கன்னிகை வேண்டுமென்று கேட்டு, அவர்கள் பாற்பெற்று மணஞ்செய்விப்பது பிரசித்தியான உலக வழக்கு எனக்கூறக்கேட்டு, தேவர்கள் சிவத்தியானஞ்செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது மருத்தின் மகளாகிய சுயசையென்னுங் கன்னிகையை மணப்பெண்ணாக நியமித்துச் சர்வாடம்பரபூர்வமாய் விவாகச் சடங்குகள் செய்தனர்.

இவ்வண்ணமாக விவாகநடத்தும்படி உலகங்கட்குப் பிதாமகனை பிரமதேவனைப் புரோகிதனாகவும், கந்தர்வர்கள் சாரணர்கள் வாத்தியங்க ளிசைப்போராகவும், நாரதர் பர்வதர் சித்திராவாசனன் ஸுபார்ஷிதன் ஸர்வாஸ்வன் ஸுருசி ஆஹா ஊஹூ முதலிய பிறகணங்கள் மதுரத்தொனியுடன் வீணை வேணு மிருதங்க தாள முதலிய வாத்தியங்களை முழக்கினர். ஊர்வசி அரம்பை கிருதாசி திலோத்தமைமுதலிய அப்சரசுகள் அதிசுந்தரமாகப் பரதநாட்டியஞ் செய்தார்கள். இவ்விதமாக உலகத்தில்எங்கும்இதுகாறும் நடந்திராத விபவமாக மணவினைகள் நிகழ்ந்தன, அதன் பின்னர் நந்திதேவர் தமது மனைவியுடன் சர்வலோக நாயகனாகிய சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்கரித்தனர். அப்பொழுது சிவபெருமான் நந்தீ! நீயும் உன் மனைவியும் விரும்பிய வரங்களைக்கேட்கக் கடவிரென, நந்திதேவர் ஸ்வாமீ! தேவரீர் சந்தோஷித்த துண்மையாயின் அடியேனுக்கு நீங்காத திடபக்தியும், என் தந்தையாகிய சிலாதமுநிவருக்கு அநுக்கிரகமுஞ் செய்தருள வேண்டுமெனக்கூற, சிவபெருமான் அவ்வாறேயாகுக. நீயே யாவர்க்குஞ் சிறந்தவனும் யோகியும் வில்லாளிகளில் மேம்பாடுடையவனும் பிறராற் சயிக்கமுடியாதவனும், பூசிக்கத்தக்கவர்களில் முதல்வனும், என்னுடன் வசிப்பவனுமாக விளங்குக. உன் தந்தையாகிய சிலாதனும் உன்னைப்போன்ற ஐசுவரியவானாகிக் கணநாதரிலொருவனாகுக. உன் பிதுர்கள் யாவரும் என் சமீபத்தையடைக. நினைத்தவிடத்திற்குச் செல்லத்தக்கதும் பல புஷ்பங்களுடன் கூடிய சோலைகளையுடையதும் விரும்பிய பொருள்களைக் கொடுக்கவல்லதுமாகிய இப்பர்வதத்தையு முனக்குக்கொடுத்தேன் என்றுகூறி ஓர் பர்வதத்தையுங்கொடுத்தருளினர். மகாபாக்கியவதியாகிய பார்வதி தேவியார் நந்தியைநோக்கி

என்பாற் பெறவேண்டிய வரங்களிருப்பின் வினவுகவென, நந்திதேவர் தாயே! நீங்காது விளங்கும் பக்தியை யநுக்கிரகஞ் செய்யவேண்டுமென, அவ்வாறே வரங்கொடுத்து, மருத்தின் மகளாகிய சுயசையை நோக்கி, உனக்கு நல்லவரங்கொடுக்கின்றேன். நீ யென்னுடனே வாழ்ந்து திரிநேத்திரங்களுடன் விளங்குக. ஞானமுடையவளாய் என்னிடத்தும் உன்கணவனிடத்தும் பக்திசெய்து வருகவென்று கூறினர்.

வியாஸமுநிவனே! சிவபெருமான் அருகிருந்த பிரமவிஷ்ணுக்களை நோக்கி, உங்களைப்போல இந்நந்தியும் என்புத்திரனே இவனுக்குங் காணுபத்தியங் கொடுத்துள்ளேனாகலின், நீங்கள் இனி இவன் கட்டளையைக் கொண்டு நடப்பீர்களாக இவன் இனியென் துவாரபாலகனு மாவானென்று கூறினர். எல்லாத்தேவர்களும் உருத்திரகணங்களும் அதனையுணர்ந்து அவ்வண்ணமே யங்கீகரித்தனர்கள். அப்பொழுது நந்திதேவர் உருத்திரகணங்களை நோக்கி உங்களிடத்தில் எனக்கு விருப்பும் என்னிடத்தில் உங்களுக்கு விருப்பு மிருக்குமாகவென, உருத்திரகணங்கள் யாவரும் நந்திதேவரை நமஸ்கரித்து, ஸ்வாமீ! எங்கட்கும் பிறதேவர்கட்கும் தேவரீரே தலைவர். ஜகதீசனுடைய சந்நிதியில் விளங்குவோரில் உத்தமோத்தமர் தேவரீரே. ருஷிகள் தேவர்கள் பிரதமகணங்கள் இவர்களினும் தேவரீரே சிறந்தவர். மகாபலவானும் யோகவானுமாக எப்பொழுதும் விளங்குவீராக. எங்கட்குத் தலைவராயுள்ளார்க்குந் தலைவராக விருப்பீராக. நீங்கள் தேவர்களாற் பூசிக்கப்பட்ட லக்ஷ்மீ நாராயணரைப்போலவும், வள்ளிநாயகி சமேதகுமார சுவாமியைப் போலவும் வாழ்ந்திருக்கக் கடவீர்கள். ஸர்வகணங்கட்கிறைவர்களாகிய எங்கட்கெல்லாம் இறைவராகிய தேவரீர் சிவபெருமானுக்குச் சிறந்தவிடமென்று கூறுமிடமே யாவராலும் போற்றப்பட்ட முக்கிய க்ஷேத்திரமும், அந்த க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்தியே இஷ்டசித்திகளை யெல்லாங் கொடுப்பவராகவும் விளங்குக. எல்லாச் சம்பத்துக்களையுங் கொடுக்கவல்லவரு நீரே. எல்லாருக்குங்குருவும் நீரே. தேவர்கட்கெல்லாம் பிரபுவு நீரே என்று உருத்திர கணங்கள் யாவருந் துதிசெய்தார்கள்.

வியாஸமுநிவனே! அதன் பின்னர் உருத்திர கணங்கள் யாவரும் இந்த நந்தீசன் குழந்தைப்பருவ முடையவனும், அழகுடையவனும், நிர்க்குணனும்,பொறுமையும் அந்தக்கரண புறக்கரணங்களையடக்கும்வன்மையுமுடையவனும், எப்பொழுதும் நமக்கு நன்மையே யுண்டுசெய்பவனுமாவானென்று சிவபெருமான் தங்களைச் சொல்லியபடியால், சிவ சந்நிதியில் அவ்வண்ணமே யங்கீகரித்துத் தேவரீருக்கு மகுடாபிஷேகமுஞ் செய்தோம். ஆதலின் தேவரீரே எங்கட்கு எப்பொழுதுஞ் சுகத்தை யுண்டுசெய்து விளங்கவேண்டும் என்று, தங்கள் சிரமேற் கையைத்தூக்கிக் குவித்துப் பலவாறு தோத்திரஞ் செய்தார்கள். நந்திதேவர் அவர்கள் செய்த பிரார்த்தனைகட்கு மனங்களித்து, சிவகடாக்ஷத்தினாலும் உங்

கள் எல்லாருடைய கோரிக்கைகளாலும் யான் சுகமாக விருக்கவேண்டும். உங்களால் எனக்கு எவ்வகைய குறைபாடும் அபஜயமுமின்றி விளங்கி உங்களைக்காப்பேனென்றனர். [இந்த நந்தி உருத்திரகண சம்பாஷணையை வாசித்தவர்கள் அசுவமேத யாகத்தை முடித்து அவமிருதஸ் நானஞ் செய்த பலனை யடைந்து எல்லாப் பாவங்களையு மொழிப்பர். சந்தியாதிகளில் வாசித்தவர்கள் அந்த ஜனனத்திற் செய்தபாவமுழுவதையு மொழிப்பர்.] அவ்வாறு நந்திதேவர் அருளிச்செய்த பின்னர், உருத்திரகணங்களுந் தேவர்களும் நந்திதேவரைப் பணிந்து விடைகொண்டு, சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்கரித்துக் கட்டளைபெற்றுத் திவ்விய போசனஞ்செய்து சந்தோஷ சித்தர்களாய்த் தங்கடங்கள் வாசஸ்தானங்களை யடைந்தார்கள். ருஷிகளும் முனிவர்களும் தாங்கள் ஆச்சிரமங்களைச் சேர்ந்தார்கள். சர்வேசனாகிய சிவபெருமானும் லோகமாதாவாகிய உமாதேவியாரும் கைலாயகிரியை யடைந்தனர். நந்திதேவரும் சிவபெருமானது திருக்கோயிலின்வாயிலில் சிவசந்நிதிக்கும் அம்மைக்கும் அதிகாரியாகப் பொற் பிரம்பும் கத்தியும் கையிற்றரித்து விளங்கும் பாக்கியத்திலமர்ந்தனர். இந்த நந்திதேவருடைய பிறப்பும் தவஞ்செய்த வகையும் பேறுபெற்றதும் மகுடாபிஷேகமுற்றதும் விவாகமும் ஆதியவற்றை வாசித்தவர்கள் நந்தீச சாரூப்பியமும், பிறர் சொல்லக்கேட்டவர்கள் நந்தீச சமானமுமடைவார்களென்று ஸநத்குமாரர் கூறினர்.

நந்திதேவர் திருமணமுரைத்தது

முற்றிற்று.

ஐம்பதாவது

நீலகண்ட வரலாறுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரை நோக்கி ஸ்வாமீ! சர்வலோகநாயகராகிய சிவபெருமானுக்கு நீலகண்டம் வந்த காரணத்தையும் விளக்கி யருள வேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரர் கூறலாயினர். பிராமண சிரேஷ்டரே! சூலபாணியாகிய சிவபெருமானுக்கு நீலகண்ட முதலியன வுண்டான விஷயங்களைப் பற்றி உலகத்திற்குப் பிராணபூதரான வாயுபகவான் நூறுவருஷகாலம் இடைவிடாது கூறியுள்ளார். அவற்றைக் கூறுகின்றேன். நியமத்துடன் கேட்கவேண்டும்.

வடதிசையில், கைலாயகிரியென்னுஞ் சிறந்தவெள்ளிமலையொன்றுள்ளது. அப்பர்வதத்திற்கு அநேககொடுமுடிகளுண்டு. அவற்றில் அதிவிநோதமான உத்தியானவனங்கள் புண்ணிய தீர்த்தங்கள் தேவர் வாசங்கள் பூந்தோட்டங்கள் முதலியனபெற்று மிகவுயர்ந்துள்ளன. அவ்விடத்தில் சிவபிரானிடத்தினின்றும் பிரியாத திடபக்தியையே நியமமாகவுடைய ருஷிகள் யாவரும் மிக்கபக்தியுடன் ஓர் திவ்வியமான உச்சிகாலத்தில்,

ஏகமனதுடன் சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தனர். அச்சமயத்தில் வாயுபகவான் "ஓம் நீலகண்டாயநம:" என்று கூற, அதனைக்கேட்ட ருஷிகளில், ஊர்த்துவரேதஸ்களும் வாயுவையும் ஜலத்தையும் பக்ஷணஞ் செய்பவர்களுமாகிய எண்பத்தெண்ணாயிரவர்களாகிய வாலகில்லியர்கள் வாயுவைப்பார்த்து, சிரேஷ்டமானவரே! புண்ணியர்களிற் புண்ணியரே! சிவஸ்தோத்திரஞ் செய்கையில் தாங்கள் நீலகண்டா என்று கூறினமையின், அதன் கருத்தியாது? அதனைக் கேட்டறிய விரும்புகின்றோம். சிவபெருமானுக்குக் கண்டத்தில் நீலநிறம் வந்த சரிதமுங்கேட்க இச்சிக்கின்றோம். இவ்விஷயத்தை யாங்கள் சூக்குமமாக இதுகாறுங்கேட்டவர்களாயிருப்பினும், தங்கள் வாக்கினால் அதனை விஸ்தீரணமாகக் கேட்க விரும்புகின்றோம். பிராணவாயுவைப் பிராணியின் முயற்சியா லெழுப்ப அதினின்றெழுந்த அணுத்திரள் மார்பு கண்டம் உச்சி நாசியாகிய இடங்களிற் பொருந்தி, இதழ் நா பல் மேல்வாய் இவற்றின் தொழில்களால் வெவ்வேறு வகையாக்கப்பட்ட எழுத்துக்களாய்ப் பிறத்தல் முறையென்பராதலின், அப்பிராணவாயு சொரூபி நீரே அச்சப்தத்தின் பொருள் பிறரொருவர்க்குத் தெரியமாட்டாது. நீரே சர்வவியாபியாயுள்ளவர். வேதங்களின் எல்லை கண்டறியாத பரம்பொருள் பிறரொருவர்க்குந் தெரியமாட்டாது. நீரே சர்வவியாபியாயுள்ளவர். வேதங்களும் எல்லை கண்டறிய முடியாத பரம்பொருளினிடத்தும் கலந்துள்ளவர் நீரே. உலகுக்குப் பிரத்தியக்ஷமாகவுள்ளவர் நீரே ஆதலின் மங்கள கரமானதும் சகலபாவங்களையு மொழிக்கவல்லதுமான நீலகண்டாய என்னுஞ் சப்தத்தின் பொருளை விளக்கியருளவேண்டுமெனக் கேட்க, வாயுதேவர் சொல்லலாயினர். வேதவேதாங்கங்களை யுணர்ந்த ருஷிசிரேஷ்டர்களாகிய வாலகில்லியர்களே! நான் சொல்வதைக் கேட்பீர்களாக: கிருத்திகா புத்திரரும் மயூர வாகனரும் கிரௌஞ்சகிரியைச் சங்கரித்தவரும் பார்வதியின் மனக்கிளர்ச்சிக்குக் காரணரும், அசுரமாதர்களின் கண்களிலுள்ள மைகளைத் துடைக்கச்செய்தவரும், சேனாபதியும், மகாத்துமாவும், மேகம்போலக் கம்பீரமான தொனியை யுடையவருமாகிய பாலரூபமுடைய குமாரசுவாமியைப் பூர்வம், பிரமதேவரது மானத புத்திரரும் தர்மஸ்வரூபியுமாகிய வசிஷ்டமுனிவர் நமஸ்கரித்து, மகாத்மாவே! எண்ணிறந்த மங்களங்களை யுண்டு செய்யும் புண்ணியகரமான ஓர் சரிதத்தைப் பக்தனாகிய அடியேன் விஷயத்தில் தயையுடையவராயும் உலகிற்கு இதமுறச் செய்யுங்கருத்துடையவராயும் உரைத்தருள வேண்டுமெனக் கேட்க, குமாரக்கடவுள் வசிஷ்ட வாக்கியத்தைக் கேட்டு, யான் சொல்கின்றேன். வசிஷ்டமுனிவனே! யான் குழந்தைப் பருவத்தில் என் தாயாகிய பார்வதிதேவியாரது தொடையில் உட்கார்ந்திருக்கையில், தேவதேவனாகிய என் பிதாவுக்கும் சர்வலோக மாதாவாகிய என் தாய்க்கும் நடந்த சம்பாஷணையை உலக நன்மையை நாடி யுனக்குச் சொல்லுகின்றேன் அதனை நீ யாவர்க்கும் அறிவிக்கவேண்டும். அநேக நிறமமைந்த கற்களால் பாலசூரியன்போல் பிரகாசித்து,

புடமிட்ட பொன்னால் அலங்கரிக்கப்பட்டு, வச்சிரத்தாற்செய்த சோபானங்களைப்பெற்று, சித்திரமான பளிக்குக் கற்களால் அழகுசெய்து, பல விருக்ஷங்களும் செடிகளும் வளரப்பெற்று, ருதுக்களாறிலும் பலங்களையும் புஷ்பங்களையுங் கொடுக்கத்தக்க இடமாகி, அன்னம் காரண்டமுதலிய பறவைகள் வசிப்பதாய், கின்னரர்கள் வாழ்வதாய், பலபக்ஷிகளி னொலிக்குப் பிரதித்வனிதருவதாய், கோகிலசுரங்களால் நிரம்பியதாய், சித்தசாரணர்களாற் சேவிக்கப்பட்டதாய், கஸ்தூரி மிருகங்கள் வசிப்பதாய், விநாயகனென்னுங் கணநாயகனுக்கஞ்சிய கின்னரர்களால் விடப்பட்ட குகைகளுடைதாய், வேணுமுதலிய தொளைக்கருவிகளும், மிருதங்கமுதலிய தோற்கருவிகளும் தாளமுதலிய கஞ்சக்கருவிகளும் வீணைமுதலிய நரப்புக்கருவிகளும் ஆதியவற்றுற் செவிப்புலனுக்கு இனிமை செய்வதாய், உல்லாசார்த்தமாகத் தேவர்களால் உலாவப்பெற்றதாய், சந்திரிய சூரியர்களை யளாவிய துவசங்கள் கட்டப் பெற்றதாய், விநோதமாகப் பலகோஷங்களையுடைய எண்ணிறந்த சிறு குகைகளுடையதாய் விளங்கும் ஸ்ரீ கைலாயகிரியினுச்சியில், விசித்திரமான நாநாவித ரத்தினங்களிழைத்தசிறந்தோர் பொற்சிங்காதனத்தில், மகாபயத்தை யுண்டு செய்வதும் அஞ்சத்தக்க காட்சியுமுடைய முகங்களும், பலபலநிறமுடைய தேகங்களும், விநோதமான திவ்விய தேகங்களுமுடைய எண்ணிறந்த வியாக்கிர சிங்கமுகங்களும், ஒருவராலும் வெல்லமுடியாமையும், மிருகமுகங்களும் மேஷமுகங்களும், யானைமுகங்களும், வானரமுகங்களும் நரிமுகங்களும், மிகக்குறுமையும், மிகவுயர்வும் இளைத்ததேகமும், பூரித்தவுடலும், பெருவயிறும், தொங்கிய வுதடுகளும், தடித்த கால்களும், பசுவின் காதுபோன்ற காதுகளும், ஒற்றைக் காதுகளும், பெருங்காதுகளும், காதின்மையும், ஒற்றைக்கால்களும், பல கால்களும், பெருங்கால்களும் பாதமின்மையும், ஒருசிரமும் இரண்டு சிரங்களும், நான்கு சிரங்களும், பல சிரங்களும் சிரமின்மையும், ஒருவிழியும், இரண்டு விழிகளும், நான்குவிழிகளும், மகாவிழிகளும், விருப்பின்மையும் உடைய அநேகவகைப்பட்ட கணக்கற்ற பூதகணங்கள் பணிசெய்ய எழுந்தருளியிருக்குஞ் சர்வலோகநாயகனும் சகலதேவ பூஜிதனுமாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கையில் என் தாயாகிய பார்வதிதேவியார் வினவலாயினர். ஷட்குணைசுவரிய சம்பன்னரும் தேவர்களுக்கெல்லாந் தலைவரும், ருஷபவாகனருடருமாகிய தேவரீரது கண்டத்தில், கார்காலமேகம்போல விளங்கி மைமலைபோலக்கறுத்து மங்கலகரமாயுள்ளதற்குக் காரணம் யாது? இது எக்காலத்துண்டாயது. இதன்விவரத்தை யறிந்துகொள்ள அவாவுற்றிருக்கின்றேன். விவரமாகச் சொல்லவேண்டும் எனக்கேட்க, சிவபெருமான் பார்வதி தேவியாரிடத்தில் மகிழ்வுற்று, சுபகரமான ஓர் இதிகாசங் கூறலாயினர். ஓ பார்வதி! பூர்வத்தில் க்ஷீரசமுத்திரமானது தேவர்கள் தானவர்களென்னும் இருதிறத்தாராலுங் கடையப்பட்டபொழுது, முதலிற் பிரளய காலாக்கினிக்குச் சமானமான தீக்ஷணமுடைய ஆலாஹலம் ஜனித்து அமரர்களையும் அசுரர்

களையும் அழிக்க யத்தனிக்க, அதுகண்ட தேவாசுரர் நாணமுற்ற முகத்துடன் உபத்திரவத்திற்கஞ்சி, அத்துயரினின்று நீங்க விரும்பி அவ்வளவு ஆற்றலின்றி, சதுர்முகப் பிரமனிடஞ்சேர்ந்து பணிந்து நிற்க, பிரமன் தேவர்களே! நீங்கள் மனக்கலக்கத்துடன் அச்சமெய்தியிருப்பதற்குக் காரணம் யாது? உங்கள் யாவருக்கும் அஷ்டைசுவரியங்களுண்டல்லவோ உங்களுக்கு குறையுமுண்டோ? யாவருக்கும் பயப்படாதிருக்க வேண்டாமோ? விமானாதிகளிலிவர்ந்து நினைத்தமாத்திரத்தில் நினைத்தவிடங்கட்குச் செல்லும் ஆற்றலுடையவர்க ளல்லீரோ? பிராணிகள்செய்த வினைக்கீடாக நன்மைதுன்மைகளை யவர்கட்குக் கொடுக்கும் வல்லபமுடையீர்க ளல்லீரோ? இவ்வகைய சிறப்புடைய நீங்கள் சிங்கத்தினைக்கண்ட மான்கள்போல யாதுக்காகப் பயந்து என்னிடம் வந்தீர்கள்? இவ்விபரத்தை யெனக்கு விரைவிற் சொல்லுங்கள் எனக்கேட்க, பரமாத்ம சுரூபனாகிய பிரமதேவன் வார்த்தையைக் கேட்ட தேவர்கள் ருஷிகள் தானவர்கள் யாவருஞ் சொல்லலாயினர்.

பிரமதேவரே! நாங்கள் யாவரும் பாற்கடலில் மந்தரகிரியை மத்தாகநட்டு வாசுகியைத் தாம்பாகப் பூட்டி அதன் வாய்ப்புறத்து அசுரரும் வாற்புறத்துத் தேவருமாகநின்று கடைந்தோம். அவ்வரவு எங்கள் வேகத்தைத் தாங்கமுடியாது தன்வாயினின்றும் விஷத்தைச் சிந்தியது. அவ்விஷமானது மேகம்போலக் கறுத்ததும், கரிய மை மலை போலப் பெருத்ததும், பிரளயகாலாக்கினிபோலக் கோரமானதும், காலகூடமென்னும் பெயர்பெற்றதும், அதிவேகமுடையதும், பற்பலவற்றையும் பற்பஞ்செய்யத் தக்கதுமாய் வர, நாங்கள் கண்டு பயந்து, ஐயோ நல்லபொருள்க ளுண்டாகுமென்று கருதி இதனை மதிக்கையில், இவ்வகையவிஷம் பிறந்ததேயென்று பயந்து சரணாகதியென்று தேவரீரிடத்திற்கு வந்தோம் எனக்கூறினர். தேவாசுரர்கள் வார்த்தையைக்கேட்ட பிரமதேவன் அவர்களையெல்லா முடன்கொண்டு எனது சந்நிதியை யடைந்து நமஸ்கரித்து நின்று,

நமஸ்துப்யம்விரூபாக்ஷ நமஸ்தேதிவ்யசக்ஷுஷே (ருஎ)
நமஃபிநாகஹஸ்தாய வஜ்ரஹஸ்தாயவைநமஃ
ஸாங்க்யாயசைவயோகாய பூதக்ராமாயவைநமஃ (ருஅ)
நமஸ்த்ரைலோக்யநாதாய பூதாநாம்பதயேநமஃ
நமஸ்ஸுராரிஹந்த்ரேச ஸோமஸூர்யாக்நிசக்ஷுஷே (ருக)
ப்ரஹ்மணேசைவருத்ராய விஷ்ணவேசைவதேநமஃ
மதநாங்கவிநாஶாய காலகாலாயவைநமஃ (சுo)
ருத்ராயவஸுரேதாய தேவதேவாயரம்ஹஸே
கபர்த்திநேகராளாய ஶங்கராயஹராயச (சுக)
கபாலிநேவிரூபாய ஶிவாயவரதேநமஃ
த்ரிபுரக்நேமகக்நாய மந்த்ராணாம்பதயேநமஃ (சுஉ)
புத்தாயசைவஶுத்தாய முக்தாயகேவலாயச
நமஃகமலஹஸ்தாய திக்வாஸாயஶிகண்டிநே (சுங)

அக்ராயசைவசோக்ராய விப்ராயாநேகசக்ஷுஷே
ரஜஸேசைவஸத்வாய நமஸ்தேவ்யக்தயோநயே (௬௪)
அநித்யாயசநித்யாய நித்யாநித்யாயவைநமঃ
அசிந்த்யாயசசிந்த்யாய சிந்த்யாசிந்த்யாயவைநமঃ (௬௫)
பக்தாநாமார்த்திநாஶாய நாராயணப்ரியாயச
உமாப்ரியாயஸர்வாய நந்திவக்த்ராநலாயச (௬௬)
பக்ஷமாஸார்த்தமாஸாய ருதுஸம்வத்ஸராயச
பஹுரூபாயமுண்டாய தண்டிநேஸசவல்கிநே (௬௭)
வல்கிநேதந்விநேசைவ ஜடிநேப்ரஹ்மசாரிணே
ருக்யஜுஸ்ஸாமரூபாய புருஷாயேஶ்வராயச (௬௮)
லோகாக்ஷயநிபாதாய இந்த்ராயவருணாயச. (௬௮௨)

என்றிதுபோற் சதுர்முகப்பிரமதேவன் தோத்திரஞ்செய்து, பகவானே! தோத்திரஞ்செய்து தேவரீரது அநுக்கிரகம் பெற்றவனே எல்லாப் பாக்கியங்களையும்பெறுவான். தேவரீரைத் தோத்திரஞ்செய்யாதவனுக்குஞான மும் பக்தியுஞ் சித்திக்கவேமாட்டா. தேவரீரது சந்நிதியைச் சரணமாக அடைந்தேனுக்கு ஞானமுண்டாகத் தயைபுரியவேண்டும். அதிசூக்ஷ்மரா யிருந்து தேவாசுரர்களாலுங் கண்டறியப் படாதவர் தேவரீரே! என்று மேலுங் கூறினன். பர்வதராசபுத்திரியே! அதனைக்கேட்ட யான் மிகவுங் களித்து, பிரமனே! உன்னிடத்தில் உனக்குப் பெருவிருப் புண்டாயது. பூதபவ்வியனும் தவமுடையவனும் பூதங்கட்கிறைவனுமாகிய உனக்கு யான் செய்யவேண்டியது யாது? என வினவ, பிரமன் என்தலைவனே! தேவர் தேவனே! கமலபாதனே! தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைகையில், மேகம் போலக் கறுத்த கோரமான பிரளயகாலாக்கினிபோலத் தகிக்கத்தக்க பெருந் தீமைபுரியும் ஹாலாஹலமானது பிரள்யகாய சூரிய தேஜசுடன்தோன்றி அங்குள்ளாரை யெல்லாஞ் சாம்பராக்க வருகையில், அவர்கள் யாவரும் பயந்து என்னிடம் வந்துமுறையிட, யான் அவர்கள் வார்த்தையைக்கேட்டு அவர்களைப்போலவே பயந்து அவர்களுடன் கூடித் தேவரீரைச் சரணமடைந்து இவ்வாபத்தை விலக்கிக்கொள்ளச் சந்நிதானத்திற்கு வந்தேன். தேவரீரைக் காட்டிலுஞ் சிறந்த தேவனும், எங்களுக்கெல்லாம் வரங்களை யளிப்பவனும் ஒருவனுமிலன். ஜநார்த்தனராகிய விஷ்ணுமூர்த்தி அவ்விஷந்தோன்றிய வேகத்தாலேயே கருநிறமடைந்தனர். ஆதலின் திரிலோகங்களிலும் அதன்வேகத்தைத் தணிக்கவல்லோர் ஒருவருமிலர். அதனை உலக ஹிதத்திற்காகத் தேவரீரே பக்ஷணஞ் செய்யவேண்டும் என்று கூறினன். பார்வதீ! யான் அப்பொழுது பிரமனை நோக்கி நீ யஞ்சவேண்டாம். அந்தகனை யொத்த அவ்விஷத்தை யானே பானஞ்செய்கின்றேன் என்று அருளிச்செய்து, மிக்க கோரமானதும், தேவாசுரர்களைக் கொல்லச் சித்தமாயுள்ளதும், கருங்குவளை யிதழ்போலக் கறுத்ததும், பிரளய காலாக்கினிபோலத் தீக்ஷணமுள்ளதும், உலகங்களை யெல்லாம் விழுங்கவல்ல சர்ப்பராசனுகிய தக்ஷகனென்று சொல்லத்தக்கதுமான அவ்விஷத்தைப் பானஞ் செய்

தேன். அவ்விஷம் கண்டத்திற் சேர்கையில், பிரமன் கண்டு, ஸ்வாமீ! அவ்விஷம் தேவரீர் கண்டத்திலிருப்பது அதிக அழகாயிருக்கிறது என்றனன். அவ்வண்ணமே யங்குவந்திருந்த தேவராக்ஷச பசாசாதி கணங்கள் யாவருங் கூறிச் சந்தோஷ சித்தத்துடன் சிரமீது கரங்களைக் குவித்துத் தூக்கி, சர்வேசா! தேவரீரது வல்லபமும் வீரியமும் பராக்கிரமமும் தேவரீருடைய மகிமையும் சமானமற்றவை. தேவரீரே விஷ்ணுவும் பிரமதேவனும் மிருத்யுவும் குபேரனும் அக்கினியும் பரமமும் சூக்ஷுமமும் அதிசூக்ஷுமமும் யோகத்தாலடையும் பரமஸ்தானமும் சராசரங்கட்குப் பிரபுவும் பிராணகோடிகளைப் படைத்தளித் தழிப்பவனும் பிரளய காலத்தில் எஞ்சி நிற்பவருமாவீர் என்று துதிசெய்து, உத்திரவுபெற்று மீண்டும் பாற்கடல் கடைந்து அமிர்தத்தை யடைந்து தத்தம் வாகன விமானங்களிலேறித் தமதுலகையடைந்து சுவர்க்காதி லோகங்களில் இச்சரிதையைப் பிரசித்தஞ் செய்தார்கள்.

பார்வதீ! நீலகண்டனென்று மூவுலகங்களிலும் பிரசித்தியான பெயரை யான் பெறச்செய்த இவ்விஷயம் மிகச்சிறந்ததாம். இரகசியங்களுக்கெல்லாம் இரகசியமானது. யாவருடைய பாவங்களையுமொழிக்வல்ல பிரமனாற் செய்யப்பட்ட இத்தோத்திரத்தையும் இச்சரிதத்தையும் உலகத்தில் தியானஞ்செய்தவன் இகபரலோகங்களில் நற்கதியை யடையும்படி யானே அநுக்கிரகஞ் செய்கிறேன். அவனுடைய தேகத்தைத் தாவர சங்கமங்களா லுண்டாய விஷங்கள் பாதிக்க முடியா. துஷ்டசொப்பனங்கள் அசுபங்கள் முதலியன ஒழியும். கன்னிகைகள் இதனைத் தியானஞ் செய்தால், தமது கணவருடன் தீர்க்கசுமங்கலிக ளாகச் சகல பாக்கியங்களையும் பெற்று வாழ்வார்கள். கவிவல்லோர் சபைகளினின்று துதிசெய்வாராயின் ஜயமுதலியன பெற்று என்னுலகத்தை யடைவர். மன்னர் சபையில் துதித்தவன் வழக்குவெல்வான். யுத்தபூமியில் துதிசெய்தவன் சூரத்துவ மடைவான். யாத்திரையிற் றுதித்தவன் சரீரபீடை யொழிவான். இந்த நீலகண்டநாமப் பிரபாவத்தையே எப்பொழுதுந் தியானஞ் செய்வோன் நீலகண்டம் சந்திரசேகரம் - நந்தியைப்போன்ற பராக்கிரமம் சம்பத்து திரிநேத்திரம் சூலம் சிரேஷ்டமான வாகனம் யோகசித்தி முதலியனபெற்றுச் சப்தலோகங்களிலும் என் கட்டளையால் தடையின்றிச் சஞ்சரிப்பான். பிரளயகாலவரையில் வாயுவானது சஞ்சரிப்பதுபோலச் சுகமாக வாழ்ந்திருப்பான். என்னிடத்திற் பக்திவைத்து இந்தச் சரிதையைக்கேட்பவர்கள் நூறுகோதானம் விசேஷ தக்ஷிணைவைத்து உத்தம பிராமணர்க்குத் தானங்கொடுத்தபலனை யடைவார்கள். பிரமன் செய்த தோத்திரத்தில் ஒரு சுலோக மேனும், சுலோகத்திற் பாதியேனும், ஒரு பாதமேனும், ஒருபாதத்திற் பாதியேனும் தினந்தோறுந் துதிசெய்தவர்கள் உருத்திரலோகத்தை யடைவார்கள். பார்வதீ! உன்னிடத்திலுள்ள அன்பினால் இவ்விதிகாசத்தை உனக்குரைத்தேன் என்று கூறிப் பார்வதி

தேவியாரை யுடன்கொண்டு கைலாயகிரியின் குகையிலுற்றனர். இவ்விஷயத்தை என்தாயின் மடியிலுட்கார்ந்திருந்து கேட்டவகையே யுனக்குச் சொன்னேனென, குமாரசுவாமிகள் கூறியதாக வசிஷ்டமுநிவ ரெனக்குரைத்தருளினரென்று வாயு தேவர் கூறினர். அதனைக்கேட்ட வாலகில்லிய மகருஷிகள் யாவரும் சந்தோஷித்துச் சிவத்தியானஞ் செய்துகொண்டு தத்தம் இடத்தை யடைந்தனரென்று ஸநத்குமார முநிவர் கூறினர்.

நீலகண்ட வரலாறுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்தோன்றுவது

முப்புரத்தோற்றமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி, மகருஷியே! பக்தர்கட்கு அநுக்கிரகஞ் செய்தருளும் பிநாகபாணியானவர் பூர்வம் திரிபுரங்களை ஹதஞ்செய்த சரிதத்தை யடியேன் கேட்க விரும்புகின்றேன். அதனை விவரமாகச் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுநிவர் சொல்லுகின்றார்: மைந்தனே! தைத்திய சிரேஷ்டனுன ஹிரணியாக்ஷ சுதன் மரணமடைந்த பின்னர் அவனுடைய பரிவாரங்களா யிருந்தோர் துக்கமுற்று மயனிடஞ்சென்று வருந்த, மயனும் இரதியைப்பிரிந்த மதனன்போல, வருந்தி, தாரகாக்ஷனையும் விஷ்ணுவுக்குச் சமானமான வலிமையுடைய வித்யுத்பிரமனையு முடன்கொண்டு தவஞ்செய்யக் கருதி மழைக்காலத்தில் ஹிமாசலத்துச்சியிலும். வேனிற்காலத்தில் பஞ்சாக்கிநி மத்தியிலும், ஆகாயத்திலும், பனிக்காலத்தில் கழுத்தளவு நீரிலுமிருந்து இருபதினுயிர வருஷம் உக்கிரமான தவத்தைச் செய்து எலும்புந் தோலுமாக இளைத்து, சுகாசுகங்களை மறுத்து ஒரேமனதாயிருக்கையில், பிரமதேவர் பிரசன்னமாகி, நீங்கள் பெருந்தவஞ் செய்தீர்கள் எனக்கூற அவர்கள் மூவரும் நமஸ்கரித்தனர். அப்பொழுது மயன் கூறுகின்றான். பிதாமகரே! எங்கட்கு இறவாமையும் சமானமில்லாத வலிமையும், பிறராலடைய முடியாததும் எங்கட்குப் பெருஞ்சுகஞ் செய்வதுமான இடமும், பிறரால் மரணமின்மையும் அருளவேண்டுமென, பிரமதேவன் அசுரரே! பிறரால் அடையமுடியாத இடம் வேண்டுமாயிற் கொடுப்பேன். இறவாதிருக்க வரங்கொடுக்கமாட்டே னுதலின் எவ்வகையிலாவது இறக்கத்தக்கதையே கேளுங்களென, மயன் எங்கள் மூவருக்கும் பொன் வெள்ளி இரும்புகளாலாகிய முப்புரங்கள் வேண்டும். அவற்றில் ஒவ்வொன்றில் நாங்கள் வசித்து அந்நகரத்துடன் நினைந்த விடங்கட்குச் செல்லவும், அவை யாயிர வருஷங்கட்கொருமுறை ஒன்றுசேரவும், அந்த க்ஷணநேரத்தில் அம்முப்புரங்களையும் ஒரேகணையால் அழிக்கவல்ல மஹாவீரனிருந்தால் அவன் கையால் முப்புரங்கள் அழியும்படி வரமருளவேண்டும் எனக்கேட்க, பிரம

தேவர் அவ்வாறே வரங்கொடுத்து அந்தர்த்தானமாயினர். அதன் பின்னர் சந்திரமண்டலமளாவிய மேடைகளும் பலங்களும் புஷ்பங்களுங் குறையாத மரங்களும், வாவி கூப தடாகங்களும், விநோதமான தொனிகளையுடைய பக்ஷிகளும், அதிரூப சவுந்தரியமுடைய மாதர்களும் பொருந்திய பொன் வெள்ளி இரும்பினாலாகிய முப்புரங்களையமைத்து அதில் வசித்து அவர்கள் சத்துருக்களைவென்று திரிலோக சுகங்களையு மனுபவித்து வந்து, சிலகாலத்திற் கர்வத்தாலும் அஜ்ஞானத்தாலும் தேவர்களை யவமதித்துத் தொந்தரைசெய்து அவர்களது நந்தவன முதலியவற்றை யழித்து அவ்வமரரைக் கொல்லவேண்டுமென்று கருதியிருந்தார்கள். இந்திராதிதேவர்கள் மனம்பொறுது கோபித்துப் பிரமதேவரிடஞ்சென்று விண்ணப்பிக்கப் பிரமதேவர் அமரர்களே! அவர்கள் பலவான்கள் அவர்களைவெல்ல நம்மாலாகாது. ஆதலின் நாமும் விஷ்ணுமூர்த்தியும் ஜகதீசனாகிய சிவபெருமானிடஞ் செல்வோமென்று அவ்வாறே திருமாலையும் உடன்கொண்டு சிவபெருமானை யடைந்து நமஸ்கரித்து, திரிலோகங்களிலும் பூசிக்கத்தக்கவனே! யாவருக்கும் பிரியமாகவுள்ளவனே! சந்திர சேகரா! பிநாகபாணி! பரசுபாணியே! திரிசூலபாணீ! ஆபத்திற்புணையே! ஜகந்நாதனே! யஜ்ஞேசா! விசுவநாதரே! பரமேசுவரரே! திகம்பரரே! நீலகண்டரே! என்று பலவாறு துதிசெய்ய, சிவபெருமான் களிப்படைந்து, தேவர்களே! உங்கட்கு வேண்டிய வரங்களைக் கேட்பீர்களாக. நான் உலகுக்கு ஹிதஞ் செய்பவனாதலின் உங்கள் கருத்தை வெளியிடுவீர்களாகவெனக் கேட்க, தேவர் தம்மை முப்புரத்தவர் செய்யுந் துன்பங்களைக் கூறி, அவர்களை யழிக்கவேண்டுமென்று மீண்டும் பலவாறு துதிசெய்தார்கள்.

முப்புரத்தோற்றமுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது
முப்புரங்களைப் பொடித்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! சிவபெருமான் அத்தேவர்களுடைய தோத்திரங்கட்கு மனங்களித்து அம்முப்புரத்தவரை வெல்வதற்கு நம் பக்கலிற் போர்க்கருவிகளைச் சித்தஞ்செய்கவென்று கட்டளையிட, தேவர்கள் பூமியை இரதமும், மேருமலை வில்லும், வாசுகி நாணும், பிறதேவர் பிற போர்க்கருவிகளுமாக நியமித்து, வேதங்கள் நான்கையும் புரவிகளாகப் பூட்டி, பிரமன் சாரதியாகி, பிரணவம் குதிரை தூண்டுங்கோலாகக்கொண்டு சர்வாடம்பர பூர்வமாகச் சித்தப்படுத்திய விஷயத்தைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்தனர். அப்பொழுது சிவபெருமான் தேவியாருடனெழுந்து அவ்விரதத்திலேறினர். பிரமன் இரதத்தைத் தூண்டினன். இந்திரன் முதலிய இமையவர்களும் பிரமவிஷ்ணுக்களும் கணபதி ஸ்கந்த

ரும் பல பூதகணங்களும் புடைசூழ்ந்து வந்தனர். இவ்வாறு யாவருஞ் சேர்ந்து அப்புரத்தை யடைகையில், வழக்கப்படி புரங்கள் மூன்றும் ஒன்று சேருங்காலமாயிருத்தலின் அவை மூன்றும் ஒன்றுகூடின. அது சரத்காலமும் சந்திரபுஷ்ய யோகமும் அபிஜித் முகுர்த்தமுமாயிருந்தமையின் சிவபெருமான் அப்புரங்களை யெய்ய எத்தனித்தனர். அப்பொழுது அமரர்கள் அண்ணலே! இச்சமயத்தில் தேவரீர் அம்புதொடுக்கவேண்டும். இதனை விடுத்தால், பின்னர்ச்சமயம் வாய்க்காது எனக்கூற, சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்துப் பின்னர் முப்புரங்களையும் பார்த்துப் புன்னகைசெய்ய, அவை நெருப்புற்றெரிந்தன. அதன் பின்னர் தமது கரத்திலேந்திய மேருவில்லை வளைத்து நாணேற்றித் திருமாலாகிய பாணத்தைச் செலுத்த அது அவற்றையெல்லாமழித்தது. அமரர்கள் ஜயஜயவென்று சிவபெருமானைப் புகழ்ந்து அவர்பால் விடைகொண்டு தத்தமது நகரங்களை யடைந்தார்கள். சிவபெருமானும் பார்வதி தேவியாரும் கணபதி ஸ்கந்தர் முதலியோரும் திருக்கைலாயகிரியை யடைந்தனர்களென்று ஸநத்குமார முனிவர் கூறினர்.

முப்புரங்களைப் போடித்தது

முற்றிற்று.

ஐம்பத்துமூன்றாவது
பாவருசியின் சரிதமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரை நோக்கி ஸ்வாமீ! சிவபெருமான் உமாதேவியாருடன் கைலாயகிரியை யடைந்து யாதுசெய்தனர்? எனக் கேட்க, ஸநத்குமாரர் சொல்லலாயினர். வியாஸமுநிவனே! சிவபெருமான் கைலாயகிரியை யடைந்தபின்னர் உமாதேவியார் பரமசிவனைப் பணிந்து, ஜகதீச! பிச்சையெடுத்துப் புசித்து நைமிசாரணியத்தில் வசித்து, சௌசம் தவம் - பக்தி - சாந்திமுதலியவற்றுடன் கூடியுள்ள ஹிரண்யனென்னும் வேதியன் வீட்டையடைந்து பூசையைப் பெற்றீரன்றோ? வேதியசிரேஷ்டர்களது மகிமை மிகவும் ஆச்சரியகரமானதன்றோ? தேவர்களுக்கும் பிராமணர்களே சிறந்தவர்களென்று யான் நினைக்கின்றேன். அவ்வகைய வேதியர்களது மகிமையைக்கேட்க விரும்புகின்றேன். என்விஷயத்தில் தயைசெய்து அதனைக்கூறவேண்டுமெனக் கேட்க, சர்வேசனாகிய சிவபெருமான் சொல்லலாயினர்.

பார்வதீ! அக்கினியைப்போன்ற தேஜசுடைய பிராமணர்கள் எவ்விடத்திலும் வாழ்வார்கள். அவர்களில்லாவிடமே கிடையாது. சாத்துவிதகுணத்தை விருத்திசெய்வதும் அஜ்ஞானத்தை யொழிப்பதுமாகிய ஆர்ஜவம் [நியாயவழிநடத்தல்] ஸமதை [எவற்றிலும் ஸமானமான புத்தி] என்னுமிரண்டும் அந்தணர்களிடத்துள்ளன. ஆர்ஜவமானது தவ

மும் வித்தையுமென்னு மிரண்டிலுஞ் சிறந்தது. ஸமதையானது மோகத்தாலுண்டான பலவித அசாத்தியமான பாவங்களையும் நாசஞ்செய்யவல்லது. அவ்விரு குணங்களும் வேதியர்களநுஷ்டானத்திலிருத்தலின் அவர்கட்கு இவ்வகைய மகிமையுண்டாயிற்று. இதற்கோர் இதிகாசஞ்சொல்கின்றேன் கேட்பாயாக.

பூர்வம் கங்கைக் கரையிலுள்ள ஓரக்கிரகாரத்தில் வசித்த வோர் பிராமணன் எல்லாத் தர்மசாஸ்திரங்களையும், வேதவேதாங்கங்களையுமுணர்ந்து, சர்வபூதங்களுக்கும் பிரியவானுகி, தனது தர்ம பத்தினியுடன் கூடி அக்நிகாரிய நடத்தி, வயல்களிற் சிந்திய தானியங்களைக்கொண்டு ஜீவனஞ் செய்தான். பாவருசி என்னும் அவ்வேதியன் மூன்றுதினங்கட் கோர்முறை புசிக்கு நியமமுடையவனுய், அதிதி பூஜை நியமமாகமுடித்துப் பின்னர்ப் புசித்து அநேக காலங்கழித்து, தனது தவமுதலியவற்ருல் சூரிய தேஜஸுக்கும் விசேஷமான தேஜஸை யடைந்திருந்தான். அவனுடைய நியம நித்யாக்கிநி ஹோத்திரத்திற்கு அக்கினியுங்களித்து அவனிடத்திற் களிப்படைந்து அவ்வந்தணன் விரும்பியவற்றை யெல்லாங்கொடுத்து வருவானுயினன். அவ்வாறிருக்கையில், ஒருநாள் அவன் புசிக்கச் செல்லுகையில் மழையுங் காற்றும் அதிகரித் திருந்தமையின் ஒரு அதிதியும் வராமையால், அன்றெல்லாங் காத்திருந்து ஒருவருங் கிட்டாமையால் அதிதிபூஜை செய்யாது புசிக்கப்படாதென்னு நியமத்தால் உபவாசமிருந்து வாசுதேவனைத் தியானித்துக் கொண்டிருந்தான். அவன் மனைவியுங் கணவனிடத்து விசேடபக்தியுடைமையின் தானும் உபவாசமிருந்தனள். அச்சமயத்திற் அக்கிநிதேவன் அவனுடைய திடத்திற்காக மகிழ்ந்து, ஓர் நீசனுகவும், அசகியமான தேகமுற்றும் அருகிலுள்ள ஓர்மரத்தடியில் உட்கார்ந்திருந்தனன். அந்தணனே பசியைச் சகிக்கமாட்டாது அதிதிகளைத் தேடிவரலாமென்று குளிரையும்பாராது வெளியே புறப்பட்டு, மரத்தடியில் விகுர்த ரூபமாகக் குளிரால் வருந்தி உடல்முழுதும் இரணமாகி அவ்விரணத்திற் புழுக்கள் சொரியவும், அப்பா அப்பாவென்று குரலிட்டழுகையு மாக விருந்த சண்டாளனைக் கண்டு, உபசாரவார்த்தை கூறி, நெருப்பைமூட்டிக் குளிர்காயச்செய்து, அன்னமிடுகிறேன் வரலாமென்று அன்புடன் கூப்பிட, அச்சண்டாளன் ஸ்வாமீ! அடியேன் சண்டாளன். பிராமணர்கள் தேவாரதனை செய்த அன்னத்தைப் புசிக்க யோக்கியதை யற்றவன். மகா துன்மார்க்கன். ஆயினும் ஆபத்காலமாயிருத்தலின், பசு பக்ஷி மிருகங்களுக்கிடுவதுபோல ஏதேனுஞ் சிறிது வீதியிற் கொண்டுவந்து கொடுத்தாற் புசிப்பேனென்றனன். அப்பொழுது அவ்வந்தணன் தனது ஞானத்தால், வந்தவன் அக்கினிதேவனென்றும் சண்டாளனல்லனென்று முணர்ந்து கொண்டு, யான் அர்க்கியபாத்திய ஆசமனுதிகளால் உன் குலத்தைப்பூசிப்பதில்லை. சமஸ்த பிராணசரீரங்களிலுமுள்ள சிரேஷ்டமான சர்வவியாபியும் பரமாத்மாவுமாகிய பரமசிவனைப் பூசிக்கின்றேன். ஆயினும் குலவிஷய

மாக உலகத்தார் அநுசரிக்கும் நிந்தையும் உன் விஷயத்தில் யான் கொள்ளவில்லை. தவசிலர்கள் எல்லாரையுந் தேவனாகவே பாவித்து, கிருமி கிரீட பிராமணாதி யெல்லாரிடத்தும் சமானபுத்தியுட னிருப்பார்கள். அது போலவே கொள்கையுடைய வெனக்கு உன்தேகாதிஷ்டானமான பரமாத்மஸ்வரூபத்தில் நிந்தை தோன்றவில்லை. நிந்தை அநிந்தையென்னும் பேதங்களே எனக்குக் கிடையா? ஆதலின் சந்தேகமின்றி யுன்னைப்பூசிப்பேன். என் வீட்டிற்குவந்து சம்ஸ்கரிக்கப்பட்டுள்ள அன்னத்தைப் புசித்து எங்களை யநுக்கிரகிக்கவேண்டும் என்றனன். அதைக்கேட்ட நீசவேடன் அவர்களை யநுக்கிரகிக்க வேண்டுமென்னுங் கருத்துடன் அவர்கள் வீட்டையடைந்தனன். அப்பொழுது அந்தணன் புனிதமானமனத்துடன் விதிப்படி அதிதிபூசைசெய்ய, அக்கினிதேவன் அப்பூசையை யேற்றுப் புசித்து மனங்களித்து, அவ்வேதியனுக்கு உத்தமமான யோகைசுவரியத்தை யநுக்கிரகித்தனன். பின்னர் சிலகாலஞ்சென்றபின் அவ்வேதியன் தன்மனைவியுடன் கபிலனென்னும் ருஷி சிரேஷ்டன் முத்தியடைந்தாற்போல முத்தியடைந்தனன், இவ்வாறு சத்குண சம்பன்னனான வேதியன் தான்செய்த நன்மை துன்மைகட்கேற்ற சுகாசுகங்களை யநுபவியாமலே முத்தியடைந்தனன். பார்வதி! யான்சொல்லிய இவ்வுத்தம பிராமண மகாத்மியத்தை நாடோறும் வாசித்த புனிதமான மனமுடையவன் தான் விரும்பிய பலனையும் தேஜசையும் பெறுவானென்று சிவபெருமான் கூறினரென வியாஸமுநிவருக்கு ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

பாவருசியின் சரித முரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது

சிவயோக விபூதி யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரைநோக்கி ஸ்வாமீ! தேவரீர் முன்னர், பிரமாதிதேவர்க ளெல்லாரும் பாசுபதயோகத்தை யநுசரித்துச் சிவகடாக்ஷம் பெற்றுப் பெரும்பதவியி லிருக்கின்றனரெனக் கூறியிருக்கின்றீராதலின், அடியேன்பேரில் அன்புவைத்து அந்தப் பாசுபதயோகமும் அதனாலடையும் ஞானமும் இத்தகையினவெனத் தயையோடு கூறியருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமார முநிவர் சாற்றலாயினர். வியாஸமுநிவனே! பிரமாதிதேவர்கள் யாவரும் தக்ஷயாகத்தில் வீரபத்திரமூர்த்தியாற் பீடிக்கப்பட்டவர்களாய் மரணமடைந்த பின்னர், உமாதேவியார் சிவபெருமானை வேண்டி யென்காரணமாக இவர்களிறவாது எல்லாரையும் எழுப்பியருளவேண்டுமென, தேவநாயகன் அவ்வாறே யவர்களை யெழுப்பினமையின், உயிர்த்தெழுந்த தேவர்கள் யாவரும் சிவபெருமானைச் சரணமடைந்து, விபூதி தாரணஞ் செய்துகொண்டு சிவபக்தர்களாகவே சிவத்தியானத்தை மறவாது செய்துகொண்டிருப்பது கண்டு

மனங்களிகொண்ட அம் மகாதேவன் அவர்கட்குப் பாசுபதயோகத்தை யுபதேசித்தனன். அந்த யோகமானது அநேக ஆயிரம் பிறவியிற் செய்த புண்ணிய பலன்களையெல்லாம் சிவார்ப்பிதஞ்செய்த பரமபுருஷர்கட்கன்றி உபதேசிக்கப் பிராரப்தமாகாதது. பாசுபத தீக்ஷையைப்பெற்று, சர்வஜ்ஞானமுற்று, தபோதனர்களுந் துதிசெய்யும் சிவபெருமானை யடையத் தரும். அதர்மத்தாலன்றிப் பாவமும் தர்மத்தாலன்றிப் புண்ணியமுமாகிய பலன்கள் சித்திக்கமாட்டா. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று பெரிதாக உலகத்தில் அநாதியாயிருக்கின்றன. புண்ணிய பாவ பலன்களில் விருப்புவெறுப்புக்களை யொழித்துப் பாசுபத யோகத்தை யப்பியசித்தவர்கள் அளவிட்டுரைக்க முடியாத அகண்டைசுவரிய மடைந்தவர்களாவார்கள்.

வியாஸமுநிவனே! விபூதியைப் பரிசித்தமாத்திரத்திலேயே அஜ்ஞானபந்தங்களொழியும். அந்தப் பஸ்மதாரணத்தினாலேயே ஜீவன்முக்தனாகிறான். சோமாக்கினியாற் செய்யப்பட்ட விபூதியைத் தரித்த பிரமாதி தேவர்கள் அவ்விபூதியின் பிரபாவத்தால் வீரியவான்களாய்ப் பரமாத்மஸ்வரூபியான சங்கரனை ஸ்மரித்து எல்லாப்பாவங்களையு மொழித்துப் பாசுபத யோகஞ்செய்து முக்தர்களானார்கள். தேவர்கள் யாவரும் சோமத்தாலுண்டானவர்களும் பிதிரர்யாவரும் அக்கினியா லுண்டானவர்களுமாதலின், உலகமுழுதும் அக்கினிஸோமாத்மகமா யிருக்கின்றது. சாம்பசிவனே அக்கினியும் சோமமுமாக விளங்குகின்றான். அக்கினிசொரூபமும் சோமசொரூபமுமாகிய சிவபெருமானது தேஜஸே விபூதியாம். அவ்வகைய விபூதியை யணிந்தவர்கள் எல்லாப்பாவங்களையு மொழித்து முக்தர்களாவார்கள். வைதிகாசாரமும் சாங்கியாசாரமும் ஞானமும் தவமும் சிறந்ததருமங்களும் ஆதியவற்றை விட்டுவிடினும் அதர்மரூபியாயிருப்பினும் அநேகதர்மங்களில் அவாவுடையவனாயினும் விபூதிஸ்நானமாத்திரத்தாலேயே பரமசிவனுடைய பாதாரவிந்தங்களை யடைவான். பஸ்மதாரணை செய்தவுடனே முன் சிவபக்தியென்பது சிறிதுமில்லாதவனாயினும், அதிசீக்கிரத்தில் சமுசாரபந்தங்களினின்றும் விடுபட்டுச் சிவபக்தியை யிடைவிடாதடையத்தக்க நன்மனமடைவான். இவ்வகையாகவே பூர்வம் திடசித்தமுடையவர்களாய் அநேகர் பாசுபதவிரதத்தை யாசிரயித்து நற்கதி யடைந்தார்கள். ஆதலின் சிவசம்பந்தமான இந்தவிஷயம் பரமரகசியமும் அதியவசியமுமானது. இதனை யாவரும் அப்பியசிக்க வேண்டியது. ஞாதுரு ஞானஞேயங்களாகிய மூன்றும் சரீரத்திற் பரமாத்மஸ்வரூபமாய் நாடிகளில் வியாபரிக்கின்றன. பாலிற்கலந்துள்ள நெய்யைப்போலப் பூதங்களிலெல்லாம் பரமாத்மா சூக்குமரூபமாக வியாபித்திருக்கின்றான். ஆதலின் தன்னிடத்துள்ள பரமாத்மஸ்வரூபத்தை யுணர்வதனாலேயே முத்திகைகூடும். அந்தப்பரமாத்மாவை ஞானத்தாலேயே யடையவேண்டும். ஞானத்தாலன்றி உருவமும் ஓசையும் முதலியன ஒன்றுமில்லாத ஜகதீசனைப்பிறி தொருவகையாலுங் காணமுடியாது.

வியாஸ முநிவனே! சொரூபாதீதனாகிய பகவானுடைய குணானுபவங்களை அவ்விறைவனுடைய அநுக்கிரகத்தால் அறியத்தக்க ஒருபாயஞ் சொல்கின்றேன். இவ்வுலகமானது ஓர் காலத்திற் சூனியமாயிருந்ததன்றோ? அப்பொழுது தேவர்கள் அசுரர்கள் நதிகள் சூரிய சந்திரர்கள் முதலிய ஒன்றுங் காணப்படவில்லை யன்றோ? அப்பொழுது சுத்த புத்த சச்சிதானந்த பரப்பிரமஸ்வரூபமொன்றே சேஷித்திருந்தது. அவ்வஸ்து அழிவற்றதும், மாத்திராதீதமும், நிர்விகாரமும், நிரஞ்சனமும், உள்ளும் புறமும் விளங்குவதும், சுயம்பிரகாசமும், விகாரரகிதமும், பரமும், நித்தியமும், ஞானசொரூபமுமானது. அந்தப் பரமான பொருளிலிருந்து ஓம் என்பது பிறந்தது. அவ்வோங்காரமும் மூன்று மாத்திரைகளின் அளவுள்ளதும், மூன்று எழுத்துக்களின் வடிவானதுமாம். அதுவே பரப்பிரமம். அவ்வோங்காரத்திலுள்ள அகார வுகார மகாரங்கள் திரிமூர்த்திகளும், மாத்திரைபிரகிருதியுமாம். சர்வேசனாகிய சிவபெருமான் அந்தப் பிரகிருதியைப்பாரியையாகக் கொண்டிருக்கின்றான். அகார உகார ஸ்வரூபிகளான பிரமவிஷ்ணுக்கள் ஈச்சுரஸப்த முடையர்களாகவே விளங்குவர். மாயோபாதியையுடைய அப்பிரமவிஷ்ணுக்களையும் மாயையாகிய பிரகிருதியையும் மாயாரஹிதமாகிய சுத்தசிவம் தன்னிடத்தொடுக்கியும் மீண்டும் படைத்தும் அவர்களால் உலககாரியங்களை நடத்திவருவது இயற்கை.

வியாஸ முநிவனே! இது பரமரகசியமானது, அழிவில்லாதது. உன் விஷயத்திற் கிருபையுடையவனாகக் கூறினேன். இவ்வகைய ஓங்கார ஸ்வரூபமான பரமமந்திரத்தை யாவனொருவன் தியானஞ்செய்தானாயினும், கிருதார்த்தனாய் முக்தனாவான். பிறமதங்களிற் பிரவேசித்தவர்கள் முக்தியடையார்கள். பாசுபதயோகத்திற் பிரவேசித்துள்ள புண்ணியர்கள் பாலிலுள்ள நெய்யைப்போலக் கலந்துள்ளதும், பிரகிருதியைக்காட்டிலும் பரமானதும், தத்துவசொரூபத்திலுள்ளதும், ஓங்காரஸ்வரூபமாக விளங்குவதுமாகிய தமது சொரூபமே பரசிவமென்றுணர்ந்தவர்களாய்ச் சமுசார பந்தங்களையொழித்துச் சிவாநுக்கிரகத்தால் முக்தியடைவார்கள். பிரகிருதியோ ஈசுவரனன்று; குணபேதங்களைப் பொருந்தியுள்ளது; அநேகரூபங்களையுடையது; வியாபகமாகவுள்ளது; யானென்னும் அபிமானத்தால்சிருட்டியெனப் பெயருடையது; அவ்வகைய மாயைக்கு நாயகனாகவுள்ளவன் மகேசன். அப்பிரகிருதியானவள் எட்டுப்புயங்கள் மூன்றுகால்கள் ஐந்து முகங்கள் மூன்றுவிழிகள் ஐந்தொழில்கள் இந்திரியாதி எழுபுரவிகள் பூட்டியதேர் முதலியவற்றுடன், உலகுக்குத்தாய் போனின்று, சத்வாதி குணங்களாற் பிறந்து, வித்தை அவித்தையென்னும் இருவடிவாகிவிளங்குவள். அம்மாயையினாலேயே பிரபஞ்சமுழுது முண்டாயது. நிர்குணமான பரசிவத்தினின்று ஓங்காரந்தோன்றியது. அப்பரசிவமும் ஓங்காரத்திலேயே விளங்கும். மகாயோகிகளான கபிலர் முதலானார் பாசுபதத்தையநுசரித்து நிர்விகற்ப சமாதியிலிருக்கிறார்கள். நிர்குணமான பரப்பிர

மமே எல்லாவற்றிற்கும் காரணமாக விளங்கும். பிரமவிஷ்ணுவாதியர் பிரகிருதி சம்பந்தமும் மாயாவிசிஷ்டமுமுற்று ஓங்காரத்திலே தோன்றிக் குணாத்மகர்களாய்த் தேவயஜ்ஞ நாமங்களுற்று, தர்மாதர்மபந்த மற்று, மோகவிசிஷ்டர்களாயினும் ஞானவான்களாய், தேவர்களாக விளங்குவர். ஈசுவர மகாத்மியத்தாற் பிரகிருதி அவரிடத்திலேயே லயமாகின்றது. அப் பிரகிருதிக்கு ஈசுவரனைப் பந்திக்குஞ் சக்திகிடையாது என்னும் விவரங்களைத் தியானயோக முணர்ந்தவனே யறிந்து சமுசார சாகரத்தைத் நீந்தி மோக்ஷ கரையைக் காண்பான்.

சிவயோகவிபூதியுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது
நாடிவிசேஷணமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! ஆத்துமா சூக்குமமானது. மனம் புத்தி சித்தம் அகங்காரமென்பன குணங்கள். ஞானேந்திரியங்களைந்துங் கன்மேந்திரியங்களைந்தும் பிராணாதி பஞ்சவாயுக்களும் சாக்கிர சொப்பனாதி அவஸ்தைகளி லெல்லாம் தேகத்தில் இருக்கின்றன. அதில், சொப்பனாவஸ்தையில், ஜ்வாலினி - ஸ்திமிதை - உஸ்ரை - வித்யை - அவித்யை - விசாலினி - மாலினி - சங்கரி - சுமித்ரை - போதினி யென்னும் பத்து நாடிகளுஞ் சேர்ந்துள்ள எல்லாப்பிராணிகளின் இதய கமலத்திலும், பிறகுணங்களொன்று மின்றி ஆத்மா சூக்கும தேகமாக விளங்குமெனச் சிவயோகிகள் தீர்மானித்துள்ளார்கள். இந்த நாடிகளும் சீவான்மாவுடன் எப்பொழுது மிருக்கும். சொப்பனாவஸ்தையில் சப்தாதி விஷயங்களை விடுத்த ஜீவன் சர்வகதனாகிச் சாக்ஷியாகத்தானே காண்கின்றான். அகங்காரம் மனம் புத்தி சித்த மென்பன குணங்களாதலின் தேகத்தை யொருபோதும் விட்டுப் பிரியமாட்டா. அகங்காரமாதி நான்கனோடும் ஐந்தாவதாகத் தேகத்தில் வசிக்குஞ் சீவன் இதய கர்ணிகையில் புரீதத் நாடிப்பிரவேசஞ்செய்து மனதில் அதிசூக்குமசொரூபமாகப்பிரவேசித்து விளங்குவான். அச்சீவகுணம் பலதிறப்படும். சமானமற்ற அப்புருஷன் பிரமனைப் படைத்துச் சூரியமண்டல சஞ்சாரஞ்செய்யும் அகங்காரகுணமுண்மையின், பிரமனும் ஞானமும் தர்மமும் ஆசையும் ஒஷதியுமாகப்பிரபஞ்ச காரணமாக விளங்குவன். விஷ்ணு புத்திஸ்வரூபமாய் உலககாரணனாகிறான். புத்தியால் ஞான வைராக்கியங்களும் ஆகாயமும் விஸ்தரித்தன. ஜீவமத்தியிற் புகையில்லாத அக்கினிஜ்வாலையொன்று விளங்கும். அதுவே எல்லா ஆன்மாக்கட்கும் அடையத்தக்க பரமமுக்தி ஸ்தானம். அந்த அக்கினியின் மத்தியில் பரமாத்மா புலப்படாது, அந்தர்க்கதமாய் விளங்கும். அவ்விடத்தில் ஸரஸை - லோஹிதை - முக்யை - புரோதை - ரஸவதி - விதரமா - அமிர்தா - நந்தினி - பப்ரு விஸ்தரா என்னு நாடிகள்

அதிசூக்குமமாக எக்காலமுந் திரிந்துகொண்டிருக்கும். இது சோமஸ்வரூபம். இந்த நாடிகளால், பரமாத்மா திருப்தியடைந்து ஜீவமத்தியிலுள்ள மங்களகரமான அக்கினி சிகையைச் சத்திக்கச் செய்கின்ருன். அதன் அசைவே அமிர்தமெனப்படும். அதுவே அப்பரமாத்ம ஸ்வரூப சாக்ஷாத்காரத்தைக் கொடுப்பதென்று சொல்லப்படும். சாக்கிராவத்தையில் பிராக்ஞன் எனப்படும். எல்லாத் தேகத்திலும் பரமாத்ம சம்பந்தமான நாடி சுழுமுனையெனப்படும். யோகத்திற் பிரவேசிக்கையில் சுப்தனென்பர். முநிவனு யுள்ளவன் சாக்கிர சொப்பனங்களை விலக்கி, தியானயோகத்தைச் சிந்திக்கக்கடவன். கமனுதிபாவனைகளையும், மனதிற்குரிய அசூயையாதிகளையுமொழித்து, வைராக்கியத்தைத் தேடிக்கொண்ட யோகபுருஷர்கள் மனதைத் தொந்தவிகற்பஞ் செய்யாது, அகங்காரத்தாற் செய்யுங்கிரியைகளை விலக்கித் தியானயோகஞ் செய்யவேண்டும். கர்மங்களிற் பலனை விரும்பு மெல்லையும் க்ஷேமமுண்டாகாது. கர்மங்களைச்செய்து புனிதமான மனதை யடைந்து கர்மபலனைப் பரித்தியாகஞ்செய்தவனே முக்தன். அவஸ்தாந்தரத் துண்டான சோமத்தாற் சம்பவித்த விஷயங்களுக்கு அக்கினியே அநுபவிப்பவன். பரமயோகியானவன் இவ்விகற்பங்களை யறிந்து விலக்கவேண்டும். இவ்வவஸ்தையில், தர்மாதர்மங்களாலுண்டான புண்ணிய பாவங்களும், உலகத்திலுள்ள இச்சா விசேஷமும் அவனைப் பாதிக்க மாட்டா. போகஞானமுடையவன் சங்கரவிரதத்தை ஆசரித்துத் தேகநீங்கி மாயையைச் சயித்து முக்தனுவான். சூக்குமமான வேருெர் வகையுமுண்டு. பாசுபததீக்ஷவகித்தவர்கள் யாவருக்கும் முக்தியுண்டாக்கும் ஞானமானது எல்லோருக்குஞ் சாதாரணமாக வுண்டாகமாட்டாது. மனம் புத்தி சித்தம் அகங்காரம் இந்திரியசமூகங்கள் யாவும் ஆத்மாவைச் சம்பந்தப்படா; ஆயினும் ஆத்மாவிற்கு விகாரத்தையுண்டுசெய்யுங் குணங்களாம். ஆத்மா எல்லாப்பிராணிகளிடத்தும் விளங்கினுங்காணப்படாதது; சூக்ஷ்மமானது; சிந்திக்க அகோசரமானது. அதனை ஞானயோகத்தால் அறிந்தவர்களே சிறந்த முநிவர்க ளாவார்கள். பரமாத்மாவின் சாயையானது கண்மணியின் பாவையாக விளங்கும். அச்சாயை யேகாக்ஷரனென்னும் பெயருடன் இதயகர்ணிகையில் விளங்கும். அச்சிவ சொரூபத்தில் அநேககோடி நாடிகள் சேர்ந்திருக்கும். காந்தாரி - விஜயையென்னு நாடிகளைவகித்தது பிராணவாயு. நாபியிலுள்ள தாலகந்தாதி நாடிகளையும், யோகன்முதல் ஊஷ்மனென்பத னிறுதியாக வுள்ள பத்துநாடிகளையும் வகித்தது நாகன். அந்த நாகஸ்வரூபமான வாயு அக்கினிஸ்வரூபனுய் உள்ளும் புறமுஞ் சிவனுக்குத் திருப்திசெய்து சிவனுக்கு வாயுஸ்வரூபத்தால் வலிமையுண்டு செய்யும். சோம வன்னிகளிலுள்ள சுழுமுனைநாடியானது யவ்வன விருத்த சரீரங்களில் வலிமையைக்கொடுத்துக்கொண்டு துர்வாயுவை யொழித்து நல்ல வாயுவையுண்டு செய்யும்; சமானமான தேகத்திலிருந்து உதிரபுஷ்டியையும் உண்டு செய்யும். கூர்மன் என்பது நாபியிற்றங்கி, உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் வாயுவை ஏறவும்

இறங்கவுஞ் செய்யும். செய்தொழில்களைத் தூண்டுவது தேவதத்தன் என்னும் வாயு. அத்தேவதத்தன் அக்கினிரூபமும் சோமரூபமு முற்று அக்கினியைச் சுவாலிக்கச்செய்தும், சோமனைத் திருப்திசெய்தும் விளங்கும். தேவதத்த - நாக - குருகர - கூர்ம - தனஞ்சய வாயுக்கள் பிராணமயமாய், சக்கிரயோகத்தைக் காத்திருக்கும். கண்ணிற்குப் புலப்படுந் தேஜோரூபமும் ஈசுவரஸ்வரூபம்; அதுவே சூக்ஷ்மமான தத்துவஸ்வரூபம்; அது ஞானத்தாலேயே யடையக்கூடிய தென்றும், அதைக்காட்டிலும் யோகத்தையும் ஞானத்தையுங் கொடுக்கவல்லது வேறொன்றில்லையென்றும் தெரிந்துகொண்டு, சாஸ்திர முறைப்படி யாகஞ்செய்வதால், சோமமுண்டாகமாட்டாது என்றறிந்து கொண்டு, முக்குண வசத்தாலுண்டான மோக அஞ்ஞானாதிகளை விடுத்துப் பரம்பொருளை நிரஞ்சனமும் நிர்விகல்பமுமாக அறிந்தவர்களே சர்வலோகநாயகனாகிய சிவபெருமானை யடைவார்கள். நான் இதுகாறுஞ் சொல்லிவந்ததே நாமரூப ரகிதமான பரிபூரண பிரமஸ்வரூபம் என்று ஸநத்குமார முநிவர் கூறினர்.

நாடிவிசேஷண முணாத்தது.

முற்றிற்று.

ஐம்பத்தாறுவது

நாடிசக்கிரமும் பிராண உத்க்ரமணமுமுணாத்த அத்தியாயம்.

ஸநத்குமார முநிவர் வியாஸமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! எல்லாராலும் வணங்கப்படும் தேவரீர் அஜ்ஞானத்தை யொழிக்கவல்ல ஞான மார்க்கத்தை அடியேனுக் குபதேசித்தருளினீர். அதனால் இப்பொழுதே யான் மகாதேவனே பரவஸ்து வென்பதிற் சந்தேகமொழிந்தவனானேன். சங்கரபகவானால், பிரமவிஷ்ணு ருத்ராத்மகமான பிரகிருதி யுதித்ததென்றும், இவற்றிற்கெல்லாம் பிரபுவாயுள்ளார் சிவபெருமானே யென்று முணர்ந்தவன் யோகமார்க்கத்தையும் சமுசார சம்பந்தத்தையும் விடுத்து, நிஷ்கள ஸ்வரூபமாகவே எல்லாவற்றையுங் கருதி, எல்லாப் பந்தங்களினின்றும் விடுபட்டு, சுயம்பிரகாசமாகப் பிரகாசிக்கிறான் என்பதையும் எனக்கு உணர்த்தியருளினீர். யான் தேவரீரது அநுக்கிரகத்தால், சாந்தி யடைந்தவனானேன். இனி யான் வினவத்தக்கது ஒன்றுமில்லை யாயினும், விஞ்ஞான சம்பந்தமான பரமயோகியானவன் யோகபலத்தாற் கஷ்டமின்றித் தேகத்தைவிடுத்து நிஷ்களமான உத்தம பரவஸ்துவை யெவ்வாறடைகிறான்? அதற்குத் தகுதியான உபாயம் யாது? என்பவற்றை மாத்திரம் எனக்குக் கூறியருளவேண்டும் எனக்கேட்க, மகாத்துமாவான வியாஸ முனிவரை நோக்கி ஸநத்குமாரர் சொல்லலாயினர்.

சிவசித்தாந்த ரகசியமான ஞானவிசேடத்தைச் சொல்லுகின்றேன். அந்த ஞானத்தை இது காறும் மகாயோகிகள் அநேகர் அப்பியசித்து அதிலேயே விருப்புடையராய்ச் சுயேச்சையாக முக்தர்களா

ளுர்கள். அஃதெவ்வகைய தெனில், ஞானோபதேசஞ்செய்யுஞ் சற்குருவைச் சிவபெருமானாகவே பாவித்து அவர் உபதேசித்ததையே எப்பொழுதும் அப்பியசித்துத் தனது தேகத்தைவிடுத்து நியமத்தையடைந்து, சரீரத்தில் வாயுவாற் கட்டப்பட்டுச் சஞ்சரிக்கும் நாடிகளின் கர்ணிகையில் அந்த நாடிகளுக்குள் சூக்குமமாக வியாபரித்திருப்பவன் பரமாத்மாவென்றும், அந்நாடிகளொவ்வொன்றும், ஸ்தூல சூக்கும பேதங்களாக விளங்குகின்றனவென்றும், அந்தப் பிராணநாடிகளில் அதிசூக்ஷ்மமாகப் பரமாத்மா அதிஷ்டித்துளனென்றும், உணர்ந்து, யாவும் சிவசொரூபமேயென்றுணர்கின்றான். அந்தத் தேஜோரூபமான பரமாத்மஸ்வரூபமே எல்லாத் தேகங்களிலும் வெவ்வேறு நாடிரூபமாகநின்று காணப்படும். இந்நாடிகள் யாவும் மனத்துடன் கூடுதலின் மனமானது சங்கற்பவிகற்பங்களையடைகின்றது. பரப்பிரமம் நேத்திரத்திலும் நாடிகளிலும் விளங்குமென்று மனதை ஒருவழிப்படுத்தி அம்மனதைப் பரம்பொருளினிடத்தே செலுத்தவேண்டும். இதயத்தில் வர்ணஜயனென்னும் வாயு எப்பொழுதும் இருப்பதாகத்தோன்றினும், அதற்குச் சிரம் நாபி இதயம் என்னும் மூன்றும் இடங்களாம். முற்கூறிய கூர்மன் முதலிய வாயுக்கள் தனஞ்சயனுக்குச் சுவாதீனமானவை. அவற்றிற்குத் தனஞ்சயனை நீங்கிப் புறஞ்செல்லச் சக்தியில்லை. இவ்வகையாக நாபிபந்தனமாகிய நரம்புகளை யாசிரயித்து நாடிசக்கிரமிருக்கின்றது. இதய கர்ணிகை புருவமத்தியம் கபாலமென்னு மூன்றனுள் ஓரிடத்தினின்றும் பிராண உத்க்ரமணஞ் சொல்லப்படுகின்றது. இவற்றுள் இதய கர்ணிகையினின்றுஞ் செல்வதற்குத் த்விதீயமென்றும், புருவமத்தியினின்றுஞ் செல்வதற்குச் சூலமென்றும், கபாலத்தினின்றுஞ் செல்வதற்குத் திருதீயமென்றுஞ் சொல்லுவர். இம்மூன்றிடத்திலிருக்கும் நாடிகளையும் இதய கர்ணிகையிற் பிரயோகிக்கவேண்டும். சித்தத்தை ஆத்மசொரூபத்திற் சம்பந்தப்படுத்த வேண்டும். இவ்வண்ணம் யோகாப்பியாசஞ்செய்த முநிவர்கள் அப்பொழுதே ஸ்தூலதேகத்தை விடுத்து முக்தர்களாவார்கள். ஆனால் அவ்வாறு முக்தியடைபவர்கள் ஜன்மாந்தர புண்ணியபாவங்களாற் பந்திக்கப்படமாட்டார்கள். வியாஸமுநிவனே! பாஹ்யமென்றும் சரீரஜமென்றும் மிருத்யு இருதிறப்படும். விஷம் சஸ்திரங்கள் துஷ்டமிருகங்கள் அக்கினி ஜலமுதலியவற்றாலுண்டாகும் மிருத்யு பாஹ்யமெனப்படும். ரோகஜம் காலஜமென அச்சரீரஜம் இருவகைத்து. அவற்றுள் வியாதியாலுண்டான மிருத்யுவை ரோகஜமென்றும், வயசாலுண்டான மிருத்யுவைக் காலஜமென்றுஞ் சொல்லப்படும். இவையே யன்றி யோகபுருஷன் சுயேச்சையாகச் சரீரத்தைவிடுத்தல் ஓர்வகை. அதுவுங் காலஜமேயாம். ஆயினும் யோகபுருஷர்களது பதவிபேதமுடையது. யோகாப்பியாசத்தாலுண்டாகிச் சுரோத்திர பந்தத்தாலழியத்தக்க சப்தமானது கூர்மவாயுவிற்கலந்து அங்குள்ள அக்கினியின் தேஜஜை நசிக்கச்செய்யும். தேஜசு நீங்கிய அக்கினியானது யோகத்தில் இலயமடைகின்றது. தேவதத்தன் கிருகரன் நாகன் உதானன்

என்னும் வாயுக்கள் கர்ணிகையிற் பிரவேசிக்கும். இந்திரியங்கள் மனதிலடங்கும். மனம் பிராணனில் ஒடுங்கும். இவையாவும் லீனமானபின்னர், பிராணவாயு ஆத்ம ஸ்வரூபத்தில் இலயமடையும். அச்சமயத்தில் எல்லா வாயுக்களும் பிராணனை விட்டுவிடுகின்றது. இவ்வளவும், ஒரேகாலத்தில் நடந்தேறுகிறது. இந்த யோகமார்க்கத்தை யறிந்து சர்வேசனையடைய ஒருவருக்குஞ் சாத்தியப்படாது. அவ்வகைய யோகி இருக்கையிலும், சயனிக்கையிலும், தத்துவஞானியாதலின் சுயேச்சையாகத் தேகத்தை விடுத்து முக்தியையடைந்து, சுரிகை சூலம் மழுமுதலியவற்றை யேந்தி, சிவசாரூபத்தையடைகிறான். இந்திரிய சம்பந்தமான விகாரங்கள் யாவும் அவனைவிட்டு விலகுகின்றன. மனமானது தேகத்திற்குரோகத்தை யுண்டு செய்யவல்லது. அவ்வகைய மனோரோகி ஞானத்தை ஒருபொழுதும் அடையமாட்டான். ஆதலின் அறிவுடையோர் மனோரோகத்தை யடையாது யோகமார்க்கத்தைக் கடைப்பிடித்துப் பரமேசுவரனையடையவேண்டும். நன்மனமும்பஸ்மதீக்ஷையும் யோகசாதனமும் உடையவன் ஸத்யோஜாதாதிபஞ்சப்பிரம ஸமானத்துவமடைவான். சர்வேசுவரனிடத்திலேயே மனதைச்செலுத்திய யோகியானவன் எப்பொழுதும் யோகத்தை அப்பியசிக்கின்றான். அநேக யாகங்கள் செய்தபோதிலும், சங்கர சம்பந்தமான இந்த யோகமார்க்கத்தாலன்றிப் பரமுக்தி கைகூடமாட்டாது. சர்வஜ்ஞர்களாயினும் பாசுபதவிரதாநுஷ்டானத்தாலன்றிச் சமுசாரபந்தங்களொழியார்கள். மஹாதேவனே பரதத்வ சொரூபனென்னும் பரதத்வ ஞானத்தை யடையவேண்டும். சிலர் பிறதேவர்களைப் பரதத்வமென்று நினைப்பர். அவர்களுஞ்சிவப்பிரசாதமடையாது முக்தர்களாகமாட்டார்கள். இதுதான் மோக்ஷவிதி. இனி எல்லாவுலகங்கட்கும் மேம்பட்ட, சிவபுரத்தின் பிரபாவத்தைச் சொல்லுகின்றேன். பக்தியுடையவர்களடையத்தக்க அச்சிவபுரமகிமையைப் பக்தியுடன் கேட்பாயாக என்று ஸநத்குமார முனிவர் கூறலாயினர்.

நாடிசக்கிரமும் பிராண உத்க்ரமணமு முரைத்தது.

முற்றிற்று.

ஐம்பத்தேழாவது

சிவபுரத்தின் பிரபாவமுரைத்த அத்தியாயம்.

வியாசமுநிவனே! ஸத்யலோகம் மகர்லோகம் முதலிய உலகங்களைக்காட்டிலும் மேலே பிரத்தியக்ஷ பிரமாணனான சாக்ஷாத் சங்கர பகவான் வசிக்கும் உலகங்கள் விளங்குகின்றன. அவையாவும்சிவலோகத்தைச் சுற்றிலுமிருக்கும். பிரமாண்ட முழுவதும் அச்சிவலோகத்திலேயே இருக்கும். அது எப்பொழுதும் ஸ்திரமாயிருப்பது. ஒரு பொழுதும் அழியாதது. அவ்விடத்திற் சநகாதியர்கள் - பிரமன் - பிதாமகன் - வாலகில்லியாதியர்கள் - யோகசித்தி யுடைய கபிலாதியர்கள் - முதலானோர்கள்

சிவயோகத்தை விசேடமாகச் செய்து முக்குணங்களை யொழித்து, ஓராசையு மின்றி, சிவபெருமானிடத்திலேயே மனதைச் செலுத்தி வாழ்கிறார்கள். பரமாத்ம ஸ்வரூபியும், யோகிகட்கெல்லாம் மோக்ஷங் கொடுப்பவனுமாகிய சர்வேசன் விசேஷமான மகிமாதிசயங்களுடன்கூடிச் சரீரியாக அங்குத் தரிசனங் கொடுத்துக்கொண்டிருப்பார். அந்தச் சர்வேசனிடத்தில், பொறுமை - சத்தியம் - தைரியம் - தவம் - வைராக்கியம் - வியாபகத்வம் - ஜகத் சிருஷ்டித்வம் - பாலகத்வம் - சங்காரத்துவமுதலியன நித்தியமாகவிருக்கும். இதனால், சிவபெருமான் பரனும், பரமாணுஸ்வரூபியும் பிரகிருதி சம்பந்தமான மனதிற்கு ஒளிசெய்பவனுமாக விருப்பன். அந்தப்பெருமான் சர்வவியாபியும் சர்வப்பிரபுவு மாயினும் விவகார விஷயமாகத் தனதன்பர்கட்குக் கொடுக்கத்தக்க ஓர் மண்டல முண்டு. அம்மண்டலத்திற்கு விக்ரஹரூபியாயிருக்கும் பெருமானே பிரபு. அவரிடத்தினின்று வைஷ்ணவி யெனும் பெயருடைய பிரகிருதி தோன்றியது. பிரமஸ்வரூபமான அப்பெருமானுக்குப் பிரகிருதியால் ஓர்நகரமுண்டாயது. அதற்குப் பிரமலோகமென்று பெயர். அதற்கெதிரில், தேஜோ ரூபமான விக்ரஹேஸ்வரருக்கு இருப்பிடமாய், சித்தமுநிவர் முதலானோராற் சேவிக்கத்தக்க சிவமண்டலம் ஒன்றுண்டு. அது கோடியோசனை அகலநிகளங்க ளுடையது. அம்மண்டல மத்தியில், சூரியனைப்போலப் பிரகாசிப்பதும், அக்கினியைக் காட்டிலுந் தேஜஸுடையதும், பொற்கோபுரங்களமையப்பெற்றதும், அநேகமான நவரத்தின மயமான கோபுரவாயில்கள் வாய்ந்ததும், சித்தர்களாற் சேவிக்கப்பட்டதும், ஜரா மரணம் துக்கம் வியாதி மோகம் கோபம் பயமுதலியனவில்லாததும், எல்லாச்சம்பத்துக்களும் வாய்ந்ததும், அமராவதியைப்போன்ற பூமியுடையதும், பரிச்மாத்திரத்திலேயே சுகமளிக்கவல்லதும், களங்கமற்றசந்திரன்போலவெண்மையானதும், பாலசூரியன்போலச் செம்மையானதும், திவ்வியமான சரசுகளில் தோன்றியதும் பரிமளயுக்தமானதும், இந்திர நீலமணிகள் போன்றதுமாகிய வெண்டாமரை செந்தாமரை நீலோற்பல மலர்களுடையதும், அமிர்தம்போன்ற சலத்தையுடையதும், பலநிறமுடைய மலர்கள் வாய்ந்த வரதா - வரேண்யை - வரேசை - வரவர்ணிநி - வராரோஹை - வாரியத்ரா - வராமுதலிய பெயர்களுடைய நதிகளுடன் கூடியதுமாக, சிவபெருமானுக்கு வாசஸ்தானமாகிய இராசதானி நகரம் ஸர்வ மங்களாகாரமாக விளங்கும். தேவர்கள் முநிவர்கள் அசுரர்கள் மாநுடர்கள் முதலியோர் ஒருவரும் அப்பட்டணத்தைக் கண்டறிய மாட்டார்கள். நன்மனமும் இடைவிடாப் பக்தியுமுற்றுச் சிவயோகத்தையே யெக்காலமுஞ் செய்தவர்கள் மாத்திரம் அவ்விடத்தில் எப்பொழுதுஞ் சந்தோஷித்து வசிப்பார்கள். சூரியாக்கினி சமானமாக விளங்கும் அந்நகரின் மத்தியில், மேருகிரியின் சிருங்கம் போன்றுயர்ந்ததும், சிறிதும் நாசோற் பத்திகளில்லாததும், பகலிரவு முதலிய காலபேதங்களில்லாததும், எல்லாக் கோரிக்கைகளையுங் கொடுக்கவல்லதும், பொன்னிறமானதும், பக்தியற்ற

வர்கட்குக் காணவுங் கேட்கவும் வாயினாற் சொல்லவுஞ் சாத்தியப்படாததும், வெண்மையும் கருமையும்வாய்ந்த ரத்தினங்கள் பவளங்கள் இந்திர நீலமணிகள் முதலியவற்றாற்செய்து பிரகாசிக்குந் தம்பங்களும், அக்கினிக் கொழுந்துபோல ஒளிவீசுவதும், சூரியகாந்தி யமைந்ததுமாகிய பலதுவசங்கள் கட்டப்பெற்றதும், திவ்வியமான இளந்தென்றல் வீசும் சாளர வாயில்களும், எல்லாருதுக்களினு முண்டாகும் புஷ்ப பலங்களை இடைவிடாது கொடுக்குங் கற்பக விருக்ஷங்களமைந்த கிருகோத்தியானவனங் களும் பொருந்திய அநேக சிங்கார மண்டபங்களில், பல பர்வதங்களினுஞ் சிறந்த மேருபர்வதம்போல அம்மகா மண்டபம் விளங்கும். அம்மகா மண்டபத்தில், பூதங்களும் தத்துவங்களும் பரிசாரகஞ்செய்யச் சர்வேசனாகிய சிவபெருமான் தன் மனைவியுடன்கூடி அங்கே வசித்துக்கொண்டிருக்கிறார். திருமகள் - மேதா - த்ருதி - ஸ்ரீ - கீர்த்தி - சரஸ்வதி முதலானவர்கள் சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியாருக்குப் பணிவிடை செய்து ஆனந்தமுற்றிருக்கிறார்கள். தேவர்களும், குப்ஜவாமனகாமரூபங்களுடன் கணாதிபர்களும், பிரமதகண சிரேஷ்டர்களும், அவ்விடத்திற் பணிவிடை புரிந்திருப்பார்கள். மகாகாளேசன் நந்தீசன் கணேசன் குமரேசன் சண்டேசன் முதலானோர் எப்பொழுதும் அந்தச் சந்நிதானத்திலே வாழ்வார்கள். ஜயை விஜயைகள் ஆயுதபாணிகளாய்ப் பார்வதி தேவியார் பக்கலில் வாழ்வார்கள். பெரிய முசுப்பும் முக்காரத்தொனியும் வெண் மேகம்போன்ற நிறமும் பொருந்திப் பொற்பிரம்புஞ் சுரிகையுங் கைக் கொண்டு அதிகார நந்திதேவர் தன்தந்தையாகிய சிவபெருமான் பக்கலில் விளங்குவர். சாகன் - விசாகன் - நைகமி - முதலிய குமாரர்கள் உலகபாலன நிமித்தமாக அங்கமர்ந்திருக்கிறார்கள். அவ்வகைய திவ்வியமான சிவபுரத்திலே, அநேககோடி சூரியர்களுடைய காந்திக்குச் சமானமாகப் பிரகாசிப்பதும், பொன்மயமான சார்த்தூல சிங்கங்களைக் கட்டப்பட்டதும், நவரத்தினங்களிழைத்த அநேக பொற்றம்பங்களுடையதும், அநேககோடி ருத்திரகணங்களாற் புடைசூழப்பட்டதும், மகா விசாலமானதும், இரத்தினமயமாகிய நிலங்களுடையதுமான திவ்விய இரதமானது சர்வலோகேசனாகிய அவ்விக்கிரமேசனுக்குப் பிரீதிகரமாகவிருக்கின்றது.

வியாஸமுநிவனே! இத்திவ்வியசரித்திரமானது எக்காலத்திலும் சிவபெருமானையேநம்பி, மனவாக்குக்காயங்களை அவ்விறைவனுக்கே அர்ப்பிதஞ்செய்தவர்கள் எவ்வகைய தாழ்விடத்தில் இறப்பார்களாயினும், எவ்வகைய தீக்கருமங்களைச் செய்வார்களாயினும், மேற்கூறிவந்த மிக்கமேம்பாடுடைய சர்வ நகரநாயகமாகிய சிவபுரத்திற் சேர்க்கத்தக்கது. பிரசித்தி பெற்ற சிவபக்தர்களைச் சொல்கின்றேன்: யானும், ஸநந்தனனும், ஸநகனும், ஸநாதனனும், இப்பொழுதுள்ள பிரமன், முன்னிருந்த பிரமர்கள், நரநாராயணர்கள், யோகசித்தனான கபிலன், கபில சிஷ்யனான பஞ்சசிகன், உதயவதனன், யாஞ்ஞவல்கியன், பிரமசரியவிரதத்தை யனுஷ்டித்த தவ சிரேஷ்டர்களாயுள்ள ருஷிகள், முக்குணங்களையும் விடுத்து ஈசுர தத்துவ சொரூபத்தைத் தரிசித்துக்கொண்டு, மகாப்பிரளயகாலத்தில் அந்தச் சிவ

புரத்திலேயே சர்வேசனுடைய சந்நிதியிற் சுகமாக விருக்கின்றோம். இன்னும் பூமியிற் பலவிடங்களிற் சர்வேசுவரன் நானாவகைய திருக்கோலமுற்றுப் பல திருநாமங்களுடன் எழுந்தருளியிருந்து தமதடியவர்கட்கு இஷ்டசித்திகளை யநுக்கிரகிக்கின்றார். அவ்வகைய க்ஷேத்திரங்களில், சிவபெருமானை நோக்கித் தவந்தானம் பணிவிடைமுதலியன செய்தவர்கட்கு இந்தச் சிவபுரமானது சித்திக்கும். வியாஸமுநிவனே! இதுவரையிற் கூறிய வகையே பாசுபதவிரதத்தை யாசரித்துப் பக்தியுக்தர்களாயுள்ள புருஷசிரேஷ்டர்கள், தேகத்தைவிடுத்த பின்னர் அந்தச் சிவபுரத்தை யடைந்து மகாபல பராக்கிரமசாலிகளாய் நந்தீசனுடைய சைநியங்களாய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

வியாஸமுநிவனே! யான் சிவதத்துவங்களை யிதுகாறும் உனக்கு விசேஷமாகச் சொன்னேனல்லவா? நீயவற்றை யெல்லாம் மனத்திற் கொண்டு, தர்மப்பிரவர்த்தகனாக உலகிற் பலருக்கும் இதனை யுணர்த்திக் கீர்த்தியும் ஞானமுமடைவாயாக. நீ கூறுமவற்றை உலகினர் ஏற்றுக்கொள்வார்களாக. நீ உலகிற்குக் குருவாயிருப்பாயாக. நீ சிவவிரதங்களையாசரித்துப் பாசமோசனமடைந்து இறுதியிற் சர்வேசுவரனிடத்தில் ஐக்கியமடைவாயாக என்றாசீர்வதித்தனர். அப்பொழுதே மகா ஞானியாயுள்ள வியாஸமுநிவர் திருவெண்ணீற்றினை யுத்தூளனஞ்செய்து ஸநத்குமாரமுநிவரைப்பணிந்து அவருபதேசப்படி பாசுபதவிரதமநுஷ்டித்துச்சித்திகளைப் பெற்று ஸநத்குமாரமுநிவரிடம் விடைகொண்டு பூவுலகத்தையடைந்து, சர்வேசனுடைய மகிமையையும், மந்வந்தர கிரமத்தையும், சிவயோகதாரணையையும்பிறவற்றையுமெனக்குபதேசித்தருளினராதலின், அவ்வகையே யானும் உங்கட்கு அவற்றைச்சொன்னேன். நீங்களும் அவற்றை யநுஷ்டித்துக் கடைத்தேறுவீர்களாக. இது முக்கியமான புராணம். இதனால் தர்மார்த்த காமமோக்ஷமென்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களையடையக் கூடும். தேவர்களெல்லாரினும் சிவபெருமானும், விரதங்களெல்லாவற்றினும் சிவவிரதமும் சிறந்துள்ளவகையே புராணங்களெல்லாவற்றினும் இப்புராணமேசிறந்தது. இப்புராணத்தை வாசித்தவர்கள் மரணதசையில் துன்பமடையார்கள்; கேட்டவர்கள் சாயுச்சியமடைவார்கள்; தியானித்தவர்கள் முத்தியடைவார்கள்; தேவர்கள் முனிவர்கள் முதலானோர் யாவரும் இப்புராணத்தை வாசித்தும் கேட்டும் பிறர்க்குரைத்தும் எல்லாப் பாவங்களையுமொழித்துச் சிறந்த பதவியையடைந்திருக்கிறார்கள். பக்திசிரத்தைகளுடன் இப்புராணத்தைப் படனஞ்செய்தவர்கள் இம்மையில் இஷ்டசித்தியும் மறுமையில் முத்தியும் அடைவார்கள். சிராத்தகாலத்தில் வாசித்தால் பிதுரர்கள் திருப்தியடைவார்கள். சயனகாலத்தில் ஒரு அத்தியாயமாவது ஒரு சுலோகமாவது ஒரு பாதமாவது ஒரு பதமாவது தியானித்தவர்கள் சகலபீடைகளையுந் துஷ்டசொப்பன முதலியனவற்றையுமொழித்துச் சிவகடாக்ஷத்தால் மங்களகரமாக வாழ்வார்கள். சுபம்.

சிவபுரப் பிரபாவமுரைத்தது
முற்றிற்று.

ஸநத்குமாரஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.



வாயுஸம்ஹிதை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

வாயுஸம்ஹிதை.

(பூர்வபாகம்.)

காப்பு.

𑌨𑌮𑌸𑍍𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌂𑌸𑌾𑌰 𑌚𑌕𑍍𑌰𑌭𑍍𑌰𑌮𑌣𑌹𑍇𑌤𑌵𑍇।
𑌗𑍌𑌰𑍀𑌕𑍁𑌚𑌤𑌟𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌵𑌕𑍍𑌷𑌸𑍇॥

நமஸ்ஸமஸ்தஸம்ஸார சக்ரப்ரமணஹேதவே
கௌரீகுசதடத்வந்த்வ குங்குமாங்கிதவக்ஷஸே.

ஸமஸ்தவிதமான சமுசாரசக்கிரத்தைத் திருப்புகிற காரணனும், பார்வதிதேவியாருடைய உபயதனங்களிற் படிந்த குங்குமத்தால் அடையாளஞ் செய்யப்பட்ட திருமார்புடையவனுமாகிய சாம்பவ மூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன்.

முதலாவது
வித்யாவதாரமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கிச் சொல்லுகிறார்.

சர்வலோக நாயகனாகிய சிவபெருமானது கடாக்ஷத்தால் உபமந்யு முனிவர் உணர்ந்த அநேக நியமங்களை வாயுதேவனுக்குரைப்ப, வாயுபகவான் அந்நியமங்களை யெல்லாம் அநுஷ்டானஞ்செய்து ஒருநாள் மத்தியானகாலத்தில் வந்துகொண் டிருக்கையில், மிகப்பெருந் தவசிகளாகிய மகருஷிகள் அநேகர் உச்சிக்காலக்கடனை முடித்துக்கொண்டிருந்தவர்கள் வாயுதேவனைக் கண்டு இவரால் நம்முடைய சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாமென்று சந்தோஷ சித்தர்களாய், அவரை யெதிர்கொண்டு சென்று அழைத்துவந்து, சிறந்த ஆதனமளித்து அவரை யதிலிருக்கச் செய்துதாமும் அவரைப் புடைசூழ்ந்துட்கார்ந்திருந்தனர். அவரை நோக்கி வாயுதேவன் சர்வேசனுடைய மகிமாதிசயங்களை யிதயத்திலிருத்தினவனாய்ச் சாக்ஷாத் சாம்பவமூர்த்தியின் விபூதியே சராசரப் பிரபஞ்சமுழுதுமன்றோ ? அவ்வகைய சர்வஜ்ஞனும் அபராஜிதனுமாகிய மகாதேவனை

நான் நமஸ்கரிக்கிறேன் எனக்கூறினன். அவ்வார்த்தையைக் கேட்ட ருஷிகள் யாவரும், தமது பாவங்களை யொழித்தவர்களாய், வாயுதேவரே! சர்வலோக நாயகனாகிய சாம்பவமூர்த்தியின் மகிமைகளைக் கேட்க விரும்புகின்றோம். தேவரீர் இதுவரையில் உபமந்யு முனிவர் கிருஷ்ண மூர்த்திக்குப் பாசுபத தீக்ஷை செய்வித்ததாகச் சொல்லியிருக்கின்றீராதலின், அக்கிருஷ்ணமூர்த்தி ஞானவானாகிப் பாசுபத விரத மநுசரித்த வகை யாது? என்பதை அடியேங்கட்குச் சொல்லவேண்டு மெனக் கேட்க, வாயுதேவன் சொல்லியவகையையே ஸூதமுனிவர் சொல்லுகின்றார்:

ஸநாதன னாகிய விஷ்ணுமூர்த்தியின் அவதாரமா யிருப்பினும், கிருஷ்ணாவதாரத்தில் தன்னுடைய மாநுடதேகத்தை நிந்தித்துக்கொண்டு உருத்திராக்க மாலிகாபரணரும், ஜடாமண்டலாலங்காரரும், சாஸ்திரங்களாற்சூழப்பெற்றுள்ள வேதத்தைப்போல உத்தமமுநிசிஷ்யர்களாற்சூழப்பெற்றவரும், சிவத்தியானத்தையே யெப்பொழுது முடையவரும், ருஷிகளிலெல்லாம் உத்தமருமாகிய உபமந்யு முநிவரைத் தரிசித்து உடல்முழுதும் மயிர்க்கூச்செறிந்து பக்தியுடன் அம்முநிபுங்கவரை மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து நிற்கையில், அம்முநிவரது தரிசனத்தாலேயே மகாபுத்திமானாகிய கிஷ்ணமூர்த்தியின் எல்லாத் தோஷங்களும் மாயா சம்பந்தமான கர்மங்களும் நசித்தன. அப்பொழுது கிருஷ்ணபகவான் உபமந்யு முநிவரை நோக்கி எனக்குத் தேவரீர் சிவதீக்ஷை செய்விக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, உப்மந்யு முனிவர் தம்மையடுத்த கிருஷ்ணமூர்த்திக்கு விதிப்படி "அக்நிரிதிபஸ்மா—இத்தியாதி" மந்திரத்தால், கிரமமாக பஸ்மதாரணஞ் செய்வித்துப் பாசுபதவிரதோப தேசஞ்செய்து, பன்னிரண்டு மாசங்கள் அநுஷ்டானஞ் செய்வித்து, அற்புதமான ஞானத்தை யநுக்கிரகித்தனர். அதுமுதல் சிறந்த பாசுபதஞானிகளும் கிருஷ்ணபகவானைப் புடைசூழ்ந்து இவரே சிறந்த பாசுபத ஞானியென்று கொண்டாடுவாராயினார்கள். அதன்பின்னர், கிருஷ்ணமூர்த்தி தனதுகுருவின் கட்டளையேற்றுத் தனக்குச் சற்புத்திரனுண்டாகவேண்டு மென்னுங் கருத்தாற் பார்வதி தேவியையும் பரமசிவனையுங் குறித்து ஒருவருஷங் தவஞ்செய்கையில் சிவபெருமான் பார்வதி தேவியார் சகிதமாகவும் சிவகணங்களோடுங் காட்சி யளித்தனர். அப்பொழுதே கிருஷ்ணமூர்த்தி சுவாமீ! எளியேனுக்கோர் புத்திரனைத் தயைசெய்யவேண்டுமென வரமேற்ப, இறைவர் அவ்வாறே வரமுதவினர். அதனால், கிருஷ்ணனுடைய அஷ்டபாரியைகளில் ஜாம்பவதி யென்பவளிடமாக ஓர் புதல்வன் பிறந்தனன். அம்பாள் ஸகிதமான சாம்பவமூர்த்தியின் கிருபையாற் பிறந்த புதல்வனாதலின் அக்குழந்தைக்குச் சாம்பனென்று நாமகரணஞ் செய்யப்பட்டது. இனிச்சிவபெருமான் சர்வவித்தைகளுக்கும் உற்பத்தி ஸ்தானனென்பதைச் சொல்லுகின்றேன். புராணம் தர்மசாஸ்திர முதலிய வித்தைகள் பதினான்கு ஆயுர்வேதம் தநுர்வேதம் காந்தர்வ வேதம் அர்த்த சாஸ்திரமென்னு

நான்கையு முடன்கூட்டிப் *பதினெட்டென்று சொல்வது வழக்கு இவ்வாறு பலதிறப்பட்ட பதினெட்டு வித்தைகளும் ஆதி கவீசுவரனாகிய சூலபாணியாலேயே செய்யப்பட்டன. எல்லா வுலகங்கட்கும் நாயகனாகிய சிவபெருமான் சராசரப் பிரபஞ்சங்களையும் சிருஷ்டி செய்யவேண்டுமென்னும் விருப்புடையவராய், பிரமனென்னும் ஓர்புத்திரனை முதலிற் படைத்து, பிரபஞ்சத்திற்கு முக்கியகாரணனான பிரமனென்னும் அப்புத்திரனுக்கு அவ்வித்தைகளை யெல்லாங்கொடுத்து இனிப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்கவென்று கூறினர். அவ்வாறு திருவருளை மேற்கொண்ட பிரமதேவன் பிரஜாசிருஷ்டியைச் செய்துகொண்டு, சமஸ்த சாஸ்திரங்கட்கும் மத்தியில் முதலாகவுள்ள புராணத்தைப் பிரமதேவன் கூறினன். அதன்பின்னர் அப்பிரமனுடைய முகத்தினின்று வேதங்கள் பிறந்தன. பின்னர்ச் சகல சாஸ்திரங்களும் அவன் முகத்தினின்றே தோன்றின. இவ்வாறு பிரமதேவனிடமாகத் தோன்றிய வேதசாஸ்திர புராணங்கள் விசேஷமாக விளங்கலின் பிரஜைகள் அவற்றையெல்லாம் ஓதியுணர்ந்து அத்தியயனஞ் செய்ய அசாத்தியமாயிருந்தமையின், அவ்வசக்தியை யொழிக்கும்படி திருமால் சிவாக்கினைப்படி துவாபரயுகாந்தங்களில் வியாஸரூபமாகத் திருவவதாரஞ் செய்து, அவரோ யிந்தத் துவாபரயுகத்தில், அரணியில் அக்கினிபோலச் சத்தியவதியிடமாகக் கிருஷ்ணத்வைபாயனராக ஜனித்தனர். வேதமாகிய பெருங்கடலில் வியாஸருடைய புத்தியாகிய மத்தினை நாட்டிக் கடைய உலகத்திற் சிறந்துள்ள பாரதமென்னுஞ் சந்திரன் பிறந்தான். மீண்டும் வேதங்களைச் சுருக்கி நான்காகச் செய்தனர். அதனால் அவருக்கு வேதவியாஸரென்றும் பெயருண்டாயது. இப்பொழுதுந் தேவலோகத்தில் நூறுகோடி கிரந்தங்களை யுடைய புராணங்களை நான்கு லக்ஷமாகத் தொகுத்தனர். நான்கு வேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் எல்லாவுபநிஷத்துகளையு முணர்ந்த பிராமணனாயினும் புராணங்களை வாசியாதவன் புத்திசாலியாகமாட்டான். வேதங்களின் பொருளைப் புராண இதிகாசங்களாலேயே யறியத்தகும். புராணத்தைக் கொஞ்சமாக ஆராய்ந்தவிடத்து வேதத்தின் பொருள் நன்றாக விளங்கமாட்டாது. சர்க்கம் - பிரதிசர்க்கம் - வமிசம் - மந்வந்தரம் - வமிசாசாரமென்னும் ஐந்து லக்ஷணங்களையுடையது புராணம். அப்புராணம் பதினெண்வகையாகச் சொல்லப்பட்டுள்ளது. அவையாவையெனில், பிரமம் - பதுமம் - வைணவம் - சைவம் - பாகவதம் - பவுடியம் - நாரதீயம் - மார்க்கண்டேயம் - ஆக்நேயம் - பிரமகைவர்த்தம் - இலிங்கம் - வராகம்-காந்தம்-வாமனம்-கூர்மம் - மச்சம் - காருடம் - பிரமாண்டம் என்பனவாம். இவற்றின் முறையில்

* பதினெட்டு வித்தைகளாவன:—இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணமென்னும் வேதம் நான்கு. சிக்ஷை - வியாகரணம் - சந்தசு - நிருத்தம் - சோதிடம் - கற்பமென்னும் வேதாங்கம் ஆறு. மீமாம்சை - நியாயம் - புராணம் - ஸ்மிருதி என்னும் உபாங்கம் நான்கு. ஆயுர்வேதம் - அர்த்தவேதம் - தநுர்வேதம் - காந்தர்வவேதமென்னும் உபவேதம் நான்கு.

சைவம்நான்காவது. இதுசிவபெருமானுடையபுகழையெடுத்துரைப்பதும், எல்லாப் புருஷார்த்தங்களையுங் கொடுக்கச் சாதகமானதும், இலக்ஷ கிரந்தங்களையுடையதும்,பன்னிரண்டு ஸம்ஹிதைகளாகப் பிரிக்கப்பட்டதுமாக, எல்லாத் தருமங்களும் நன்கு விளங்கும்படி சாக்ஷாத் சிவபெருமானாலே திருவாய் மலர்ந்தருளப்பெற்றது. அச்சைவபுராணத்திற் கூறிய ஆசாரங்களை யநுஷ்டித்தவர்கள் சாம்பவமூர்த்தியின் திருவருளால் ஒரே ஜனனத்தில் முக்தர்களாவார்கள். ஆதலின் முக்தியை விரும்புகிறவர்கள் சிவபெருமானே சர்வலோக நாயகனென்று அவருக்குத் தொண்டுசெய்யவேண்டும். தேவர்கள் முதலானவர்களும் சிவபெருமானை யாராதித்தே தமது பதவிகளை யடைந்தார்கள். அவரையன்றி வேறொருவரு முக்திகொடுக்க வல்லவரிலர். வேதத்திற்குச் சமானமான இச்சைவபுராணத்தின் பாகங்களைச் சொல்லுகின்றேன். வித்யேசுவர ஸம்ஹிதை - ருத்திரஸம்ஹிதை-சிரேஷ்டமான விநாயகஸம்ஹிதை - உமாஸம்ஹிதை - மாத்ருஸம்ஹிதை - ஏகாதசருத்திரஸம்ஹிதை-கைலாஸஸம்ஹிதை-சதருத்திரஸம்ஹிதை -கோடிருத்திரஸம்ஹிதை-ஸஹஸ்ரகோடி ருத்திரஸம்ஹிதை - வாயுஸம்ஹிதை - தர்மஸம்ஹிதை எனப் பன்னிரண்டு பாகங்களையுடையதா யிருக்கும்.அவற்றின் கிரந்த ஸங்கியையுஞ் சொல்லுகின்றேன். வித்யேசுவரம் பதினாயிரமும், ருத்திரம் விநாயகம் உமா மாத்ருஸம்ஹிதைகள் எவ்வெண்ணாயிரமும், ஏகாதசருத்திரம் பதின்மூவாயிரமும், கைலாயம் ஆறாயிரமும், சதருத்திரம் கோடிருத்திரம் சகஸ்ர கோடிருத்திர ஸம்ஹிதைகள் பப்பத்தாயிரமும், வாயு நாலாயிரமும், தர்மம் ஐயாயிரமுமாகிய கிரந்தங்களையுடையன. ஆகப்பன்னிரு ஸம்ஹிதைகளுங் கூடிய சிவமஹாபுராணமானது *லக்ஷங்கிரந்தங்களை யுடையது. அவற்றுள் வாயுஸம்ஹிதையானது பூர்வம் அபரமெனவென இருபாகங்களை யுடையது. அவற்றைச் சொல்லுகின்றேன். இந்த ஸம்ஹிதையை வேதமறியாதவனுக்குஞ் சிரத்தை யில்லாதவனுக்கும் புராண ஞானமில்லாதவனுக்குஞ் சொல்லப்படாது. ஒருவனை அசூயை முதலிய துர்க்குணங்களின்றி, சிவபத்தி தர்மசிந்தனை முதலிய நற்குணமுடையவனாகப் பரிசோதித்துப் பின்னரே இதனைச் சொல்லத்தகும். உத்தமகுருவாகிய வியாஸபகவானுடைய கிருபையால் இந்த ஸம்ஹிதைகளை யெல்லாம் உணர்ந்தேன் அவ்வகைய வியாஸபகவானுக்கு நமஸ்காரம் என்று ஸூதமுநிவர் மேலுஞ் சொல்லலாயினர்.

வித்யாவதாரமுரைத்தது.

முற்றிற்று.

* "சிவமஹாபுராணத்தில் லக்ஷங்கிரந்தங்களுந் தேவலோகத்திலே யிருந்தவற்றுள், இருபத்து நாலாயிரங் கிரந்தங்களே பூமியில் வந்து வழங்கினவென்றும், ஞானஸம்ஹிதை மேற்காட்டிய பன்னிரு ஸம்ஹிதைகளில் காட்டப்படா திருப்பினும் தேவலோகத்தில் நின்றுவிட்ட ஸம்ஹிதைகளில் அந்தர்ப்பாவமாயுள்ளதென்றுந் தெரிந்து கொள்ளவேண்டும்" என்பது வடநூல் வியாக்கியானஞ் செய்தோர் கருத்து.

இரண்டாவது
ருஷிகள் பிரமலோகமடைந்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளே! அநேககற்பங்கள் நடந்தேறியபின்னர், இச்சுவேதவராககற்பத்தில், சிருஷ்டித்தொழில் வியாபரிக்கையில், மாநுடர் யாவரும் விசேட புத்திமான்களாகுகையில், ஆறு குலத்திலுதித்த அந்தணர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், பரதத்துவப்பொருள் விஷயமாக விவாதமுண்டாயது. அப்பரதத்துவப் பொருளைத் தீர்மானித்துக் கொள்ளக்கூடாமையின் உண்மையறியாது தத்தமக்குள் தோன்றியவாறு கூறினவர்களாய், அவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, பகவானாகிய பிரமதேவனை யடைந்து நம்முடைய சந்தேகத்தை நீக்கிக்கொள்வோமென் றுறுதிசெய்துகொண்டு, மங்களகரமானதும், மனோரம்மியமானதும், தேவசமூகங்களையுடையதும், சித்த சாரண யக்ஷ கந்தர்வராதிகளாற் சேவிக்கப்பட்டதும்,அநேகவிதமான பக்ஷிகள் தொனி செய்வதும், முத்து பவளம் இரத்தினமுதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்றதும், புதர் வீடுகளும் குகைகளும் அமையப்பெற்றதும், மலையருவிகள் பாயப்பெற்றதுமாக விளங்கும் மேருபர்வதத்தின் சிருங்கத்தில், பலவிதமான மிருகங்கள் வசிப்பதும், பத்துயோசனை யகலமும், நூறுயோசனை யுயரமும், சுவையமைந்த நல்ல சலத்தினால் நிரம்பப்பெற்ற சரசுகளுமுடையதும், மதர்த்த வண்டுகள் மொய்த்து ரீங்காரஞ்செய்யும் மலர்கள்பொருந்திய விருக்ஷங்களுடையதுமான பிரமவனத்தில், உதயகால சூரியன் போன்றதும், மதவெறிகொண்ட தைத்திய தானவர்களாலும் அசைக்க முடியாததும், புடமிட்ட பொன்னாற்செய்த கோபுர மாட மாளிகைகளையுடையதும், பலவகை ரத்தினவொளியால் ஆகாயமளாவியதும், எண்ணிறந்த விசித்திர மாளிகைகளால் அலங்கரிக்கப்பட்டதுமான பிரமநகரத்தை யடைந்து, நாசரகிதனும், சுராசுரர்களால் தோத்திரஞ் செய்யப்பெற்றவனும், சாதுக்களாற் சூழப்பெற்றவனும், பரமாத்மஸ்வரூபனும், எல்லாவுலகங்கட்கும் பிதாமகனும், பரிசுத்தமான பொன்னைப்போன்ற காந்தியுடையவனும், தேவ ராக்ஷஸ ருஷிகணங்களாற் சேவிக்கப்பெற்றவனும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனும், மலர்ந்த முகமண்டலமுடையவனும், செந்தாமரைமலர்போன்ற நெடிய விழிகளையுடையவனும், திவ்விய சந்தன கந்தபுஷ்பாதிகளால் அலங்கரிக்கப்பெற்றவனும், வெள்ளிய பட்டாடையுடுத்தவனும், தேவேந்திரன் முதலிய தேவசிரேஷ்டர்களும் முநிசிரேஷ்டர்களும் அசுரசிரேஷ்டர்களும் நமஸ்கரிக்கும் பாததாமரைகளையுடையவனும், சரஸ்வதிதேவியோடு கூடி வசிப்பவனுமாகிய பிரமதேவனைத் தரிசித்து, அகமும் முகமுமலர்ந்து சிரமிசைத்தமது கரங்களைக் குவித்துப் பலவாறு தோத்திரஞ்செய்ய லானார்கள்.

பகவானே! திரிமூர்த்திஸ்வரூபனும், சுவர்க்காதி போகங்களைக் கொடுக்குங் காரணனும், புராணபுருஷனும், பரமாத்மனும், திரிகுணாத்மக

மான பிரகிருதி சரீரனும், மஹதாதிதத்வபேதனும், விகாரமற்றவனும், பிரமாண்டத்திற்குக் காரணமானவனும், அப்பிரமாண்டத்திலேயேயுள்ளவனும், பிரமாண்டத்தில் உண்டான பஞ்சீக்ருத மஹாபூதாத்மக ஸ்ருஷ்டியாதி காரியங்களுடையவனும், சர்வமுங் காணவல்லவனும், எல்லாவுலகங்களிலுள்ள பிராணிகட்கெல்லாஞ் சையோக வியோகலிபிக்குக் காரணனுமாகிய தேவரீருக்கு நமஸ்காரம். தேவரீரே எல்லாம் படைப்பவரும், எல்லாங் காப்பவரும், எல்லாம் அழிப்பவருமாயிருக்கிறீர். தேவரீரை நாங்கள் அறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கிறோம் என்று பலவாறு தோத்திரஞ்செய்தார்கள். அவ்வகைய தோத்திரங்களால், மனங்களிதுளும்பிய பிரமதேவன் கம்பீரமான வார்த்தைகளாற் சொல்லலாயினன். மகிமையுந் தேஜோரூபமுமுடைய ருஷிசிரேஷ்டர்களே! நீங்கள் யாவரும் ஒன்றுகூடி யிங்கு எதற்காக வந்தீர்கள்? அதனைச் சொல்வீர்களாக எனக்கூறிய பிரமதேவனை நோக்கி ருஷிகள் யாவரும் அஞ்சலியஸ்தர்களாய் அதி விநயவார்த்தைகளால், ஸ்வாமீ! நாங்கள் பெரிய அந்தகாரத்திலகப்பட்டவர்களாய், ஜகத்காரணமானவஸ்து இன்னதென்றுணராது விவாதஞ்செய்துகொண்டு தேவரீரால் அதனை யறிந்துகொள்ளும்படி வந்திருக்கின்றோம். எல்லா வுலகங்களையும் படைத்தவரும் எல்லாக் காரணங்கட்கும் பரமகாரணரும் தேவரீரேயாதலின், தேவரீர் அறியாத விஷயம் ஏதேனுமில்லை. ஜீவகோடிகளெல்லாவற்றிற்கும் புராண புருஷன் யாவன்? மாயாரகிதன் யாவன்? பரிபூரணன் யாவன்? நித்தியன் யாவன்? யாவனுடைய சித்திர கிருத்தியத்தினால் இந்த உலகமானது இவ்வாறு சித்திரிக்கப்பட்டது? இது மீண்டும் எவனிடத்தில் இலயமடையும்? எவனுக்கு எல்லாப்பூதங்களும் வசியமாயிருக்கும்? எவன் எல்லாவற்றையும் நடத்துகிறவன்? அவ்வகைய புருஷனை நாங்கள் எவ்வாறு காணவல்லவர்களாவோம்? இவற்றையெல்லாம் திருவாய்மலர்ந்தருளவேண்டும் எனக்கேட்க, பிரமதேவன் ஆச்சரியமும் ஆசையுமடைந்து அவர்களை நோக்கி, தேவ தானவ ருஷிகள் முன்னிலையில் துண்ணென்றெழுந்து இருகரங்களையுஞ் சிரமிசை சேர்த்துக் குவித்து, "ருத்ரா" என்று சொல்லிக்கொண்டு ஆநந்தமயமாகி, ‹‹யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ| ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந||" எந்தப் பிரமசமீபத்திலிருந்து மனத்துடன் கூடிய வாக்குகள் அப்பிரமத்தை யுணராதனவாய் மயங்குகின்றனவோ, எந்தப் பரப்பிரமஸ்வரூபத்தின் நிரதிசயானந்த சுகத்தைப் பிரமஞானி தெரிந்துகொண்டு எதனாலும் பயப்படாதிருப்பானோ, எந்தப் பரமாத்மஸ்வரூபத்தில் எல்லாப் பூதேந்திரியங்களுடன் பிரம விஷ்ணு ருத்திர இந்திரன் முதலியவர்களுடன் இப்பிரபஞ்சம் முதலில் உதித்ததோ, எவன் சிருஷ்டிகாரணமாகவுள்ள ஆகாசாதிகளுக்குக் கருத்தனோ, எவன் பரமகாரணமாகத் தியானிக்கத்தக்கவனோ, எவன் அன்னியனாலும் வேறொன்றும் உண்டாகவொட்டாது யாவும் படைத்தவனோ,

எவன் எல்லா ஐசுவரியங்களையுமடைந்து சர்வேசுவரனென்று பெயர்பெற்று, மோக்ஷ விருப்புடைய முனிவர்களுடைய இதயாகாசத்தில் தியானிக்க விளங்குபவனோ, எவன் என்னைப் புதல்வனாகப்பெற்று எனக்கு ஞானத்தைக் கொடுத்தவனோ, எவனுடைய அநுக்கிரகத்தினால் யான் பிரஜாபத்தியமென்னும் உன்னதத்தை யடைந்துள்ளேனோ, எவன் திவ்வியாகாசத்தில் விருக்ஷம்போலத் தனியாக ஈசுவரனாக விளங்குகின்றானோ, எந்த மகாத்மாவால் இந்த வுலகம் நிறையப்பெற்றிருக்கின்றதோ, எவன் எல்லாப் பிராணிகட்குங் கிரியைகளையெல்லாங் கற்பிக்கின்றானோ, எவன் ஒருவனாயிருந்தும் எண்ணிறந்தவற்றிற்குங் காரணனாக விருக்கின்றானோ, எவன் இவ்வுலகையும் அது நிறையப் பலசிருஷ்டிகளையுஞ் செய்து அவைகட்குப் பிரபுவாகவிருக்கின்றானோ, எவன் எப்பொழுதும் எல்லாப் பிராணிகளின் இதயத்திலு மிருந்துகொண்டு விருப்பு வெறுப்புக்களை யுண்டு செய்கின்றானோ, எவன் தான் காணப்படாது பிரபஞ்சத்தைப் பிரகாசிக்கச்செய்துகொண்டு அதிலேயே விளங்குகின்றானோ, எவன் காலம் புத்தி முதலியவற்றுடன் கூடிய ஆகாசாதி பூதங்களையும் அநந்த சத்தியுடன் அதிஷ்டித்துள்ளவனோ, எவனால் புத்தி யொவ்வோரிடத்திலும் பிறக்கின்றதோ, எந்தப் புராணபுருஷனுடைய பராசக்தி பாவகம்மியமாகவுஞ் சிறந்ததாகவுங் குணங்களால் மறைக்கப்பட்டதாகவும் நிஷ்களமாகவும் மங்களமாகவும் நித்திய ஞான கிரியாரூபமாகவும் ஸ்வபாவசித்தமாகவு மிருக்கின்றதோ, எவனுக்குச் சமானனாவது அதிகனாவது இல்லையோ, எவன் க்ஷரனும் அக்ஷரனுமாக விளங்குகின்றானோ, அக்ஷராக்ஷகஸ்வரூபமாக உள்ள ஒரே தேவன் எவனோ, ஜீவனாகவுள்ளவனுக்கு யாருடைய கிருபையால் மாயையானது ஒழிக்கப்படுமோ, எவனுடைய பிரகாசமில்லாமையாற் சூரிய சந்திராதிகள் பிரகாசிக்கமாட்டாவோ, எவனுடைய பிரகாசத்தாற் சூரிய சந்திராதிகள் பிரகாசிக்கின்றனவோ, எவன் அத்விதீயனோ, எவன் ஏகனோ, அவனே மகாதேவன். அவனே சர்வேசுவரனென்று நீங்கள் அறியக்கடவீர்கள். அந்தப் பகவானைக்காட்டிலும் உயர்ந்தவர்களாவது, அந்தப் பகவானுக்குச் சமானமானவர்களாவது ஒருவருங் கிடையார். அந்தச் சதாசிவனுக்கு ஆதியந்தங்களில்லை. அந்தச் சர்வேசன் சுபாவமாகவே நிர்க்குணன்; சுதந்திரன்; பரிபூரணன்; சுயேச்சையால் சராசரப் பிரபஞ்சங்களைச் சுவாதீனமாகவுடையவன்; திவ்விய தேகமுடையவன்; அளவிடப்படாத ஆற்றலுடையவன்; தன்னைப் பணிபவர்களுடைய மாயாவிகாரத்தை யொழிப்பவன்; இறப்பு நிகழ்வெதிர் வென்னுங் காலத்திரயங்களில்லாதவன்; காலங்களை நடத்துகின்றவன்; யாவர்க்கு முயர்ந்த பதவியுடையவன்; எல்லாப்பூதங்களிலும் வசிப்பவன்; யாவுமறிந்தவன்; உலகத்திற்கெல்லாங் காரணன்; உத்தமர்கட்கெல்லாம் உத்தமன்; தனக்குமேல் ஒருத்தனுமில்லாதவன்; மகிமைகட்கெல்லாம் வாசஸ்தானமானவன்; சர்வைசுவரியவான்; தன் சக்தியாகிய அமிர்தபானஞ்செய்பவன்; நல்ல வயதுடையவன்; ஆனந்தசமூகமாகிய மகரந்தத்

தில் மொய்த்துள்ள வண்டுபோன்றவன் ; சர்வாண்டங்களையும் க்ஷணகாலத்திற் சங்கரிக்க வல்லவன் ; உதாரம் வீரியம் காம்பீரம் மாதுரிய முதலியவற்றிற்குச் சமுத்திரமானவன் ; ஒப்புயர்வற்றவன் ; தேவநாயகன் ; பூதநாதன் ; அவ்வகைய பரம்பொருளைப் பக்தியொன்றனாலன்றி வேறொன்றனாலுங் காணமுடியாது. விரதங்களும் தானங்களும் தவங்களும் நியமங்களும் பெரியோர்களாற் கூறப்பட்டிருப்பிது ஈசுவரசிந்தனை கருதியேயன்றி வேறன்று. இவை யாவும் பக்திக்குச் சமானமாகமாட்டா.

முனிவர்களே! விஷ்ணுவும் நானும் இந்திரனும் சுராசுரர்களும் சர்வேசுவரனுடைய தரிசனத்தை விரும்பி உக்கிரமான தவங்களை இப்பொழுதுஞ் செய்துவருகிறோம். பதிதர் மூடர் துர்ச்சனர் குச்சகர் முதலானோர் ஈசுவரதரிசனத்தை ஒருகாலத்திலும் அடையமாட்டார்கள். பக்திமான்களே சர்வேசுரனை உள்ளும் புறம்புங்கண்டு அவரைப் பூசிக்கிறார்கள். ஈசுவரஸ்வரூபம் ஸ்தூலம் சூக்குமம் பரமென மூவகைப்படும். எம்மைப் போன்றவர்களாற் காணக்கூடிய தேகமானது ஸ்தூல தேகம். யோகிகளாற் காணக்கூடியது சூக்குமம். நித்தியமாக ஞானானந்தமயமாகவுள்ளது பரம். அந்தத்தேகமானது சர்வேசுரனிடமாக நிஷ்டையுடையவர்களும், சிவ விரதங்களையே யநுஷ்டித்து வருவோர்களுந் தரிசிக்கத்தக்கது. பலவார்த்தைகள் சொல்வதாற் பயன் யாது? பரமானது இரகசியத்திலும் இரகசியமானது. நிச்சலமான சிவபக்தியுடையவர்கள் பரத்தையடைவார்கள். அப்பக்தியானது சிவாநுக்கிரகத்தினாலேயே யுண்டாகத்தக்கது. அந்த ஈசுவராநுக்கிரகம் பக்தியினாலேயே யுண்டாகத்தக்கது. மரத்திற்கு விதையும் விதைக்குமரமுங் காரண காரிய சம்பந்தமாமாறு பக்திக்கு அநுக்கிரகமும் அநுக்கிரகத்திற்குப் பக்தியுங் காரண காரியங்களாம். அநுக்கிரக சாதனம் பெற்றவர்கட்கே ஆயுண் முடியிற் பரமசிவ சாந்நித்திய முண்டாகும். அநுக்கிரக ரூபமான சாதனம் தர்மமென்று வேதங்களிற் சொல்லப்படும். அவ்வேதத்தை யப்பியசிப்பதால் ஜந்மாந்தர புண்ணிய பாவங்களின் சாம்மியமுண்டாகும். சாம்மியத்தால் பிரசாத சம்பந்த முண்டாகும். பிரசாத சம்பந்தத்தால் தர்மவிர்த்தியாகும். தர்மவிர்த்தியால் பாபக்ஷய முண்டாகும். பாப க்ஷயத்தால் சர்வேசனிடத்தில் பக்தியுண்டாகும். பக்தியினால் சர்வேசனுடைய அநுக்கிரகமுண்டாகும். அநுக்கிரகத்தினால் காமிய கரும பரித்தியாகமுண்டாகும். அதனால் சிவதரும பரிக்கிரகமுண்டாகும். அது குருகடாக்ஷத்தாலுண்டாவதும் குருவின்றி யுண்டாவதுமென இருவகைத்து. குருகடாக்ஷத்தாலுண்டாகுஞ் சிவதரும பரிக்கிரகமே நூறுபங்கு மற்றதைக்காட்டிலுஞ் சிறந்தது. சிவதரும பரிக்கிரகத்தால் சிவஞானபம்பந்தமுண்டாகும். சிவஞானசம்பந்தத்தால் சமுசாரநிக்கிரகமுண்டாகும். அதன்பின் விஷய வைராக்கிய முண்டாகும். வைராக்கியத்தால் மனோசுத்தி யுண்டாகும். மனோசுத்தி யுண்டானவனுக்குத் தியான நிஷ்டையுண்டாகும். தியான

நிஷ்டையால் யோகமுண்டாகும். யோகத்தாற் பக்தியும், பக்தியால் ஈசுவராநுக்கிரகமுமுண்டாகும். ஈசுவராநுக்கிரகத்தால் முக்தனுகிறான். ஒவ்வொருவர்கருவிலிருந்தபடியாகவும்; பிறந்தவுடனேயும், பிறக்கையிலேயும், வாலிப யவ்வன கௌமார விருத்ததசைகளிலேயும் முக்தியடைவதன்றி, திரியக்கு முதலிய யோனிகளிற் பிறந்தும் முக்தியடைகிறார்கள்; சுவர்க்காதிபதவிகளை யடைந்தும் மீண்டும் மத்தியலோகத்தையடைந்தும் முக்தியடைகிறார்கள்; சுவர்க்காதி லோகங்களிலேயே அநேககாலமிருந்து அப்படியேமுக்தியடைகிறார்கள். ஆதலின் மாநுடருக்கு முக்திமார்க்கம் ஒரே வகையாகவுள்ள தன்று. பக்தி ஞானங்களாலுளதாகும் ஈசுவராநுக்கிரகமே பரமானந்த சுகத்தைக்கொடுக்கவல்லது.

ஆகையால் நீங்கள் யாவரும் அந்தச் சர்வேசுவரனுடைய அநுக்கிரகத்தைச் சம்பாதிக்கவேண்டி, கிரகஸ்தாச்சிரம தர்மத்தை யநுசரித்து, மனவாக்குகளாலுந் தோஷமின்றி, பரசிவத்தினிடத்திலேயே மனோபக்தியுடையவர்களாய் அவரிடத்திலேயே தொண்டுசெய்பவர்களாய், சிவபெருமானையே யாசரித்துச் சமஸ்த கிரியைகளையுஞ் செய்துகொண்டு, சிவபெருமானே கதியென்று தீர்மானஞ்செய்து, ஆயிரவருஷங்கள் செய்யக்கூடிய சத்திரயாகஞ் செய்யக்கடவீர்கள். அந்தயாகாந்தத்தில் மந்திரப்பிரபாவத்தால், அவ்விடத்திற்கு வாயுதேவன் வருவான். வாயுதேவன் உங்கட்கு நன்மையுண்டாகும்படி சிவஞானத்தை யுபதேசிப்பான். நீங்கள்வாராணசி பட்டணத்தையடைந்து, பக்தாநுக்கிரக காரணமாகப் பார்வதி சமேதனுக எழுந்தருளி யிருக்கும் விசுவநாதனைத் தரிசித்து மீண்டும் என்னிடம் வருவீர்கள். அப்பொழுது மோக்ஷோபதேசஞ்செய்து ஒரு ஜனனத்திலேயே அஃதுண்டாகும்படி பக்தியைப் பிறப்பிப்பேன் என்று கூறி மாநசிகமாக உண்டாக்கிய சூரியகாந்திக்குச் சமானமான ஒளியையுடைய சக்கரத்தைக்காட்டி இஃதுருண்டுசென்று விழுமிடமேயுங்கட்குச் சித்திகளையளிக்கவல்ல இடமாமென்றுகூறி அதனை விடுத்தனன். முனிவர்களும் பிதாமகனைப்பணிந்து விடைகொண்டு அதனைத் தொடர்ந்து சென்றனர். அந்தநேமியானது நெடுந்தூரஞ் சுழன்றுவந்து நல்லபுனிதமான நீர் முதலியன நிரம்பிய ஓர் நிர்மலமானவிடத்தில் நிலமிசை விழுந்தது. அது விழுந்தகாரணத்தினுல் அவ்வனம் நைமிசவனமெனப் பெயரெய்தியது. அவ்விடந்தான் முற்காலத்தில்பலமுனிவர்களும் வேதவேதாங்கங்களைப்பழகினவர்களாய் நாஸ்திகர் முதலானோரை வாயடக்கி யாவர்க்கும் நன்மையுண்டாகும்படி யாககிருத்தியங்களை இடைவிடாது செய்துவந்தவிடம். அவ்வகைய சிறப்புடையவனமே பின்னர் நைமிசவனமாக விளங்கியது.

ருஷிகள் பிரமலோகமடைந்தது

முற்றிற்று.

மூன்ருவது
வாயுபகவான் நைமிசவனமடைந்த அத்தியாயம்.

இவ்வகைய புண்ணிய பூமியாகிய நைமிசாரணியத்தில், மகாபாக்கியசாலிகளும் நியமமான விரதாநுஷ்டானமுடையவர்களுமாகிய ருஷி சிரேஷ்டர்கள் யாவரும் ஒன்றுகூடி, மகாதேவனாகிய சிவபகவானை யாராதித்துக்கொண்டு, பூர்வகாலத்தில் உலக சிருஷ்டிசெய்யக் கருதிய பிரமதேவன் செய்தவகையே மிகச்சிறந்த சத்திரயாகஞ் செய்யும்படி ஆரம்பித்தார்கள். அவ்வாறு அநேககாலங்கழிந்த பின்னர் அவபிருதஸ்நானமும் பூரிதக்ஷிணையுஞ் செய்து யாகமுடிவாகுகையில், பிரமதேவர் அம்முநிவர்கட்குப் பூர்வங்கொடுத்தவரத்தை நிறைவேற்றக் கருதி, தனது சிஷ்யனும், எல்லாவற்றையும் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடியவனும், இந்திரியநிக்கிரகஞ் செய்தவனும், நாற்பத்தொன்பது மருத்துக்கணங்கள் புடைசூழ்ந்து பணிசெய்யப்பெற்றவனும், பிராணுபானுதி விருத்திபேதங்களாற் சரீரங்களையெல்லாம் பிரேரேபணை செய்பவனும், அணிமாதி அஷ்டைசுவரியங்களுடையவனும், உதகபாகத்தைச் சூரிய கிரணங்களால் மேகரூபமாகச் சேர்த்து உலகங்களைப் போஷிப்பவனும், ஆகாயத்தையே பிறப்பிடமாகக் கொண்டவனும், சப்த பரிச குணங்க ளிரண்டையுடையவனும், அக்கினி முதலியதேஜசுகளுக்குக் காரணனுமாகிய வாயுதேவனை நோக்கிக் கட்டளையிட, வாயுதேவன் அவ்வகையே நைமிசாரணியமடைந்து, அம்முநிவர்களாச்சிரமத்தைச் சமீபிக்க, அங்கிருந்து நெடுங்காலந் தவஞ் செய்துகொண்டிருந்த ருஷிகள் யாவருங்கண்டு, பூர்வம் பிரமதேவர் கூறிய வார்த்தைகளை நினைந்து பரமசந்தோஷமுடையவர்களாய், எதிர்கொண்டு அவரை நமஸ்கரித்து, பொன் மயமான ஆதனமளித்து அவரை அதில் வீற்றிருக்கச் செய்து, அர்க்கிய பாத்திய ஆசமனுதிகளா லுபசரித்து நிற்க, வாயுபகவான் அம்முநிவர்களை நோக்கி நீங்கள் யாவரும் பெரும்புண்ணியர்கள் மகான்கள் என்று புகழ்ந்து, முநிவர்களே! நீங்கள் சிறந்ததோர் யாகத்தைச்செய்தவர்களாதலின், பகவானுடைய கடாக்ஷத்தினுல் க்ஷேமமாயிருக்கின்றீர்களா? இந்தயாகமானது ராக்ஷஸபாதைமுதலிய இடையூறுகளின்றிப் பரிபூரணமாக நிறைவேறியதா? யாகநடந்தேறுகையிற் பிராயச்சித்தஞ் செய்யவேண்டிய இடையூறுகள் சம்பவியாம லிருந்தனவா? சிறிதுங்குறைபாடின்றி உங்கள் கருத்தின்படி யாகபூர்த்திசெய்தீர்களா? இந்த யாகமுடிந்த பின்னர் என்னசெய்தீர்கள்? என்று சிவசிந்தனையுடையவாயுபகவான் முநீஸ்வரர்களை வினவ, முநிவர்கள் யாவரும் சந்தோஷசித்தமுடையவர்களாய், விநயமாக வாயுபகவானை நோக்கி, ஸ்வாமீ! எங்கள் கீர்த்திவிளங்கும்படி தேவரீர் இங்கெழுந்தருளினமையால் இப்பொழுது தான் எங்கட்கு எல்லாக்ஷேமங்களும் உண்டாயின. எங்கள் தவத்திற்குப் பலனையும் இப்பொழுதே யடைந்தோம். பூர்வம் நாங்கள் அஜ்ஞானம் பொருந்திய மனமுடையவர்களாய் எங்கட்கு ஞானமுண்டாகவேண்டு

மென்று கருதிப் பிரமதேவனை யடைந்து உபாசிக்க. அவருக்கு எங்கள் பேரிற் கருணையுண்டாகி, எல்லாருக்குஞ் சிறந்தவனும் பரமகாருண்யஸ்வரூபியுமாகவுள்ளவன் உருத்திரன். அவ்வுருத்திரனைக் குதர்க்கஞ்செய்யாது உண்மையாகப் பக்திசெய்பவனே தரிசிப்பான். அச்சர்வேசனுடைய பக்தியானது அம்மகாதேவனுடைய அநுக்கிரகத்தினாலேயே யுண்டாகும். அவ்வகைய அநுக்கிரகத்தால், பரமாநந்தசுக முண்டாகும். ஆதலின் அந்தப்பகவானுடைய அநுக்கிரகத்தை நீங்கள் அடையவேண்டி மந்திரசாமர்த்தால் நைமிசாரணியத்திலிருந்து தீர்க்கமான சத்திரயாகத்தைப் பரமகாருண்யனாகிய சிவபெருமானை நோக்கிச் செய்வீர்களாக. அப்பெருமானுடைய திருவருளாலேயே உங்கள் யாகமானது பரிபூரணமாகுங் காலத்தில் வாயுபகவான் அங்கேவருவான். அவ்வாயு தேவனால் நீங்கள் ஞானவான்களாவீர்கள். ஞானத்தினால் நல்ல கீர்த்திமான்களாவீர்கள் என்று கூறி யெங்களை யனுப்பினார். நாங்களும் அதுமுதல் தேவரீருடைய வருகையை எக்காலமும் அபேக்ஷித்தவர்களாய் ஆயிரந் திவ்விய வருஷங்களாக இந்தச் சத்திரயாகத்தைச் செய்திருக்கின்றோம். தேவரீர் யாகாந்தத்தில் எழுந்தருளினீராதலின், யாங்கள் விரும்பத்தக்கது வேறொன்றுமில்லையென்று முன்னடந்த விர்த்தாந்தங்களைச் சொன்னார்கள். வாயுதேவன் அவர்களுடைய சொற்களைக்கேட்டு ஆனந்தித்து அவர்களுடைய ஞானவிர்த்தியை விரும்பி, சிருஷ்டிகாலமுதற்கொண்டு நடந்தேறிய சர்வேசுவரனுடைய மகிமாவிசேஷங்களை யெல்லாஞ் சங்கிரகமாகச் சொல்லினன்.

வாயுபகவான் நைமிசவனமடைந்தது

முற்றிற்று

நான்காவது

சிவஞான நிலைமையுணர்த்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளாகிய ருஷிகள் வாயுபகவானை நோக்கி ஸ்வாமீ! தேவரீர் எவ்வகையாக இச்சிவஞானத்தை யடைந்தீர்கள்? பிரமதேவருக்கு எப்படிச் சீடரானீர்கள்? இவ்விஷயங்களை அடியேங்கட்குச் சொல்லவேண்டுமென வணக்கமாக வினவ, வாயுதேவன் கூறுகின்றனன். மஹாருஷிகளே! இப்போதைக்குப் பத்தொன்பதாக நிகழ்ந்த சுவேதலோஹிதகல்பத்திற் சதுர்முகப் பிரமதேவன் சிருஷ்டிசெய்ய விருப்புற்றவனாய் மஹாகடினமான தவத்தைத் தன்றந்தையாகிய பரமசிவனைநோக்கி அநேககாலஞ்செய்ய, பரமபதி அத்தவத்திற்குப் பெருங்களிப்படைந்து, ரூபவான்களில் ரூபவானாகிய கௌமார பருவத்துடன் சுவேதனென்னும் பெயர்வகித்த முநிவனாகித் திவ்விய வாக்குடன் தரிசனமளிக்க, பிரமதேவன் தன் பிதாவும் தலைவனும் ஸர்வலோக நாயகனுமாகிய தேவதேவனைத் தரிசித்து நமஸ்கரித்துக் காயத்திரியுடன் சிறந்த ஞானத்தை யடைந்து

பிரபஞ்ச சிருட்டியில் விசேஷ புத்திமானய்ச் சமஸ்தமான சராசரப்பிரபஞ்சத்தையும் படைத்தனன். சாக்ஷாத் சர்வேசனுடைய திருவருளால் ஞானமடைந்த பிரமதேவனல் என்னுடைய தவமகிமை காரணமாக யான் அதனை யடைந்தேன் எனக்கூற, முனிவர்கள் ஸ்வாமீ! தேவரீர் பிரமதேவராலடைந்த உண்மைகட்கெல்லாம் உண்மையாகிய ஞானம் எது? எந்த ஞானநுஷ்டானத்தாற் புருஷன் திவ்வியமான சுகத்தையடைவான். அவ்வகைத்தான சிவஞானஸ்வரூபத்தை யெங்களுக் குரைக்கவேண்டுமெனக் கேட்க வாயுதேவன் கூறலாயினன்.

முனிவர்களே! பசு பாசம் பதி யென்பவற்றின் விபாகமாகிய ஞானத்தை யான் முதலிற் பிரமதேவன லுணர்ந்தேன். சுகத்தைவிரும்புகிறவன் அவ்வகைய ஞானத்தில் அநுஷ்டானஞ் செய்யவேண்டும். அவித்தையாலுண்டாகிய துக்கமானது ஞானத்தால் நிவிர்த்தியாகின்றது. வஸ்து பரிச்சேதமான ஞானமானது மூவகையாக விளங்கும். அவை அஜடம் ஜடம் அஜடஜடங்கட்கதிபதி என்பன. அவற்றுள், அஜடம் பசுவென்றும் ஜடம் பாசமென்றும் அஜடஜடங்கட்கதிபதி பசுபாசங்கட்கு நியமகனகிய பதியென்றுஞ் சொல்லப்படும். தத்துவமுணர்ந்தவர்கள் அக்ஷரம் க்ஷரம் க்ஷராக்ஷரவிலக்ஷணன் என இவற்றையே கூறுவார்கள். அவற்றுள் அக்ஷரம் பசு, க்ஷரம் பாசம், க்ஷராக்ஷரபரம் அக்ஷரக்ஷரங்கட்குப் பிரபு எனப்படுமெனக்கூற, முனிவர்கள் அக்ஷரமென்பதெது? க்ஷரமென்பதெது? இந்த அக்ஷரக்ஷரங்கட்குப் பிரபுவான வஸ்து எது? இவற்றைச் சொல்லவேண்டுமெனக்கேட்ப, வாயுதேவன்: க்ஷரமென்பது பிரகிருதி, அக்ஷரமென்பது புருஷன், இவ்விரண்டையும் பிரேரணை செய்யும் மூன்றும்பொருள் பரமேசுவரன் எனக்கூற, முனிவர்கள் பிரகிருதியென்பதியாது? புருஷன் யாவன்? இப்பிரகிருதி புருஷர்கட்கு எப்படிச் சம்பந்தம்? பிரேரகன ஈசுவரன் யாவன்? எனக்கேட்ப, வாயுதேவன்: மாயையென்பதே பிரகிருதி, மாயையால் வியாபிக்கப்பட்டவன் புருஷன், ஞானத்தை ஆவரிக்குந் தமசும் கர்மமுமாகிய இரண்டினல் முற்கூறிய பிரகிருதிபுருஷர்கட்குச் சம்பந்தமுண்டாகிறது. பிரேரகனகவுள்ளவன் சாக்ஷாத் சர்வேசுவரனகிய சிவபிரான் எனக்கூற, முனிவர்கள்: மாயையாவதுயாது? மாயையால் வியாபிக்கப்பட்டபுருஷன் எவ்வகையினன்? அப்புருஷனுக்கு எவ்வகைய அஜ்ஞானம் எக்காரணத்தால் உண்டாகின்றது? எதனல் சிவபிரானுக்குச் சிவத்துவம் உண்டாயிருக்கின்றது? எனக்கேட்க, வாயுதேவன்: மாயையென்பது மஹேசுவரசம்பந்தமான ஓர் சக்தி. ஞானத்மகனே மாயாவரணமுடையவன். ஞானஸ்வரூபனுக்கு மாயாவரணமுண்டாகக்காரணம் யாதெனின், ஞானத்தை மறைக்கத்தக்க தமோகுணமேயாம். சிவபெருமான் எப்போதும் தமோகுணமில்லாத விசுத்தன் எனக்கூற, முனிவர்கள்: மாயையானது சர்வவியாபியான ஈசுவரனை யெந்தக் காரணத்தால் ஆவரிக்கின்றது? அம்மாயையானது புருஷனைவிட்டு எதனல் அகலும்? எனவினவ,

வாயுதேவன்: அம்மாயாவரணமும், கலாதிகளும், சர்வவியாபியாயுள்ளவனுக் குண்டாகின்றன. போகார்த்தமான கர்மமானது மலக்ஷயத்தால் நசிக்கின்றது எனக்கூற, முனிவர்கள் கலாதியென்பனயாவை? கர்மமானது எதை யாதியாகவும் அந்தமாகவுமுடையது? அதற்குப் பலம் யாது? அதுஎதை யாசிரயித்துள்ளது? அது யாவனுடைய போகார்த்தமாகவுள்ளது? போக்கியமாவது யாது? போக சாதனம் எது? மல க்ஷய முண்டாவதற்குக் காரணமென்ன? மலமற்றவன்எவ்வகையினன்? இவற்றையெல்லாஞ்சொல்லவேண்டுமென வினவ, வாயுபகவான்: கலை அவித்தை ராகம் காலம் நியதியென்னுமைந்துங் கலாதிகளெனப்படும். புண்ணிய பாவ ஸ்வரூபமாக வுள்ளது கர்மம். அது சுகதுக்கங்களைப் பலனாகவுடையது. அதற்கு ஆதியில்லை. புண்ணிய பாவக்ஷயமடைவதே அதற்கந்தமாம். கர்மமானது அஜ்ஞானத்மாக்களிடமே யாசிரயித்துள்ளது. போகமென்பது கருமநாசத்திற்காகவாம். போக்கியமென்பது அவ்வியக்தம். கண்முதலிய இந்திரியங்களும் மனமுதலிய அந்தக்கரணங்களும் பொருந்திய சரீரமே போக சாதனம். சிவதத்துவசிந்தனையால் விசேஷமான சர்வேசுரானுக்கிரகமுண்டாகும். அவ்வநுக்கிரகத்தால் மலக்ஷயமுண்டாகும். அவ்வகைய மலநாசத்தால் சிவசம்பந்தமடைகிறான் எனக்கூற, முனிவர்கள்: கலாதி ஐந்திற்குந் தனித்தனி தொழில்களெவை? ஆத்மா புருஷன் என்றும் போக்தாவென்றும் என் சொல்லப்படுகிறது? அவ்வியக்தமென்பதன் ஸ்வரூபம் யாது? அவ்வவ்யக்தத்தை எந்தவுருவத்துடன் அநுபவிக்கிறான்? அதனை யநுபவிக்கையில் எது சரணம்? சரீரமென்பதெது? எனக்கேட்க, வாயுதேவன் கூறத்தொடங்கினன்.

புருஷனுடைய ஞானத்தையுங் கிரியையுங் காணச்செய்கின்ற சக்திகள் வித்தையென்றுங் கலையென்றும்பெயர்பெறும். இராகமென்பது இரஜோகுணத்தாலுண்டான விஷயவிருப்பம். காலம் விவச்சேதகமானது. நியதிநியமத்தைச்செய்வது. சத்துவாதிகுணங்களின் உற்பத்திக்குக்காரணமானதாய், பிரதானமென்றும் பிரகிருதியென்றும்பெயர்களுடையதும், காலத்தால்சிருஷ்டிக்குப் பூர்வத்திற் காணப்படாததாய்ச் சிருஷ்டிக்குப்பின்னர்க் காணப்படுவதுமாக வுள்ளது அவ்வியக்தம். இந்த அவ்வியக்தத்தைச் சுகதுக்கங்களாற் பிரமிக்கப்பட்ட மனதுடைய குணவிசிஷ்டனான புருஷன் மூவகையாக அநுபவிக்கின்றான். இப்பிரகிருதியில்சத்வரஜோதமோகுணங்கள் மூன்றும் பிறந்தன. அவை அப்பிரகிருதியில் எள்ளில் தைலம்போல அதிசூக்ஷ்மமாயிருக்கின்றன. சுகஸ்வரூபமும் சுகத்திற்கு ஏதுவுமாகவுள்ளது சத்துவகுணம். துக்கஸ்வரூபமும் துக்கத்திற்கு ஏதுவுமாகவுள்ளது ரஜோகுணம். மோஹஸ்வரூபமும் ஸ்தம்ப மோஹாத்மகமுமாகவுள்ளது தமோகுணம். சத்துவகுணத்தால் ஊர்த்துவகதியும், தமோகுணத்தால் அதோ கதியும், ரஜோகுணத்தால் மத்தியமகதியும் உண்டாகுமென்று சொல்லப்படும். சப்தாதி சூக்கும தன்மாத்திரைகளைந்தும், ஆகாசாதிபூதங்களைந்தும், சக்ஷுராதி ஞானேந்திரியங்களைந்தும், வாக்குமுத

வியக்ன்மேந்திரியங்களைந்தும், பிரதானம் மஹத்தத்வம் அஹங்காரம் மனமென்னு நான்குமுண்டாகுகையில் அவற்றிற்குக் காரணபூதமாகவுள்ளது போக்கியரூபமான அவ்வியக்தம். அது சரீராதி காரிய தசையிற் பரிணமித்த காலத்தில் மண்ணானது குடமானாற்போல நாமரூபாதிகளுடன் பரிணமித்துப் பேதமுற்று வியக்தமாகின்றது. இந்தத் திருஷ்டாந்தத்தால், குடமானது மண்ணைக் காட்டிலும் வேறாகாததுபோல,சரீரமானது அவ்வியக்தத்தைக் காட்டிலும் வேறானதல்ல. இதுவே போக்கியம். இதரமான புருஷாதிகமன்று எனக்கூற, முனிவர்கள்: இதுவரையிற் கூறிய புத்தி இந்திரிய சரீரங்களைக் காட்டிலும் வேறாகவுள்ள ஆத்மாவென்னும் பெயரையுடைய வஸ்து எங்கிருக்கின்றது? என வினவ, வாயுதேவன்: புத்தி இந்திரிய சரீரங்களுக்கு வேறாயும், சர்வவியாபகமாயும், நித்தியமாயும், விளங்கும் ஆத்மாவென்னும் வஸ்து ஒன்றுள்ளது. ஆயினும் அதனை நிரூபிப்பது மிகக்கஷ்டத்தா லடையக்கூடியது. சொப்பனாவஸ்தையி லிருந்தெழுந்தவன் யான் நன்றாகத் துயின்றேன் எனக்கூறலின், புத்திக்கும் ஸ்மிருதிக்கும் அபேதமுண்மையாற் புத்தியை ஆத்மாவென்று சொல்லப்படாது. சக்ஷுராதியிந்திரியங்கள்தத்தமதுநியமமானரூபாதிகளை மாத்திரங்கிரகிக்குமன்றிஅந்நியதமானஎல்லாவிஷயங்களையுங்கிரகிக்கமாட்டாவாதலின், இந்திரியங்களைஆத்மாவென்றுசொல்லப்படாது.நசிக்குமியற்கையுடையதேகமானது உள்ளவரையில் தேகவேதனை யொழிகின்றது. தேகத்தில் அதிஷ்டானமாயுள்ள பரவஸ்துவில்லாவிடின் அத்தேகாந்தத்தில் அப்புண்ணிய பாவங்கள் முடியவேண்டியதல்லவா? அவ்வாறின்றித் தேகாந்தரப்பிராப்தியிலும் ஜன்மாந்தர புண்ணிய பாவபலன்களை யநுபவிக்கிறோ மாதலின், தேகத்தை ஆத்மாவென்றுரைக்கப்படாது. ஆதலின் அந்தரியாமியாயுள்ள ஆத்துமஸ்வரூபம் வேறேயொன்றுண்டென்று சாஸ்திரங்கள் கூறும். அந்தப்பரமாத்வஸ்வரூபம் எல்லாப்பொருள்களிலும் வியாபரித்திருக்கின்றது. எல்லாப்பொருள்களும் அந்தப்பரமாத்மாவில் இருக்கின்றன. அவ்வாறிருப்பினும், அதனைப்பார்த்தவர்கள் ஒருவருமிலர். சக்ஷுராதி யிந்திரியங்களாலும் யோகாப்பியாசத்தாற் பழகின மனோ இந்திரியத்தாலும் கிரகிக்கத்தக்கதன்று. அந்த ஆத்மா ஆணல்ல பெண்ணல்ல அலியல்ல; சரீரமுடையவர்களிற் சரீரமில்லாதவன்; சலிப்பவற்றுட் சலியாததாணு; இப்படிப்பட்ட ஆத்மசொரூபத்தைத் தீரனாயுள்ள புருஷன் சிரவணாதி அப்பியாசத்தால் எப்பொழுதுந் தரிசித்துக் கொண்டிருக்கின்றான். விசேஷமாகச்சொல்வானேன். தேகத்தைக் காட்டிலும் பரமாத்மஸ்வரூபம் வேறானது. அதனை வேறன்றென்றும், தேகமே பரமாத்மாவென்றும் நினைப்பவர்கள் சரியான ஞானிகளல்லர். புருஷனுக் குண்டாயிருக்குஞ் சரீரமானது புனிதமில்லாததும்,சுவாதீனமில்லாததும், துக்க முடையதும், அநித்தியமானதும், விபத்துக்கட்குக் காரணமானதுமாம். இவ்வகைய சரீரத்தையுடைந்த புருஷன் தன்னுடைய கர்மாநுகுணமாகச் சுகதுக்கங்களையும் மூடத்தன்மையையு முடையவனுமாகிறான். ஜலத்தால் நனைக்கப்பட்ட

பூமியானது முளைகளை யுண்டு செய்வதுபோல அஜ்ஞானத்தாலுண்டான கர்மமானது நாசமுடையதும் துக்கங்கட்கிடமானதும் ரோகவிசிஷ்டமானதுமான தேகத்தையுண்டுசெய்கின்றது. அவ்வகைய தேகங்கள் எத்தனையோகழிந்தன. எத்தனையோ யிப்பொழு திருக்கின்றன. எத்தனையோ இனிவரவிருக்கின்றன. அத்தேகங்களிலெல்லாம் ஜீவபுருஷர்களிருந்துகொண்டு நாசரகிதமான பரமாத்மஸ்வரூபத்தைக் காணமலே யிருக்கின்றார்கள். இப்புருஷன் மாயையால் மறைக்கப்பட்டு, மாயைக்குந் தனக்குஞ் சம்பந்தமின்றி, ஆகாயத்தில் அசைகின்ற மேகசமூகத்தில் மறைந்த சந்திரன்போலத் தேகங்களாற் காணப்படுகின்றனன். ஆத்மாவிற்குத் தாரபுத்திராதிகளுடைய சம்பந்தமென்பதே கிடையாது. அவ்வாறிருக்க, சமுத்திரத்திற் பலநதிகளின் மூலமாக வந்துசேர்ந்த விறகுகளுக்குள்ள சம்பந்தம்போலவும்,அவை அலைமுதலியவற்றின்உபாதிகளாற் பிரிந்துவிடுவதுபோலவும், ஆன்மாவிற்குத் தாரபுத்திராதிகளின் சையோக வியோகங்களுண்டாகின்றன. புருஷன் மாத்திரம் சரீரத்தைக் காண்கின்றானன்றி, சரீரம் அப்புருஷனைக் காணமாட்டாது. சரீரத்தையும் ஜீவனையும் பரமாத்மாவாகிய பரமனே காண்பானன்றி அவ்விரண்டும் அவனைக்காணமாட்டாதுகள். ஹிரண்யகர்ப்பாதி பிபீலிகாந்தமான யாவும் பசுக்கள். ஞானமானது பசுக்கட்கே யுண்டாகத் தரும். பாசத்தாற் பிணிக்கப்பட்டுச் சுகதுக்கங்களை யநுபவிக்கும் பசுவை ஈசுவரனுடைய லீலாபூதசாதனமானவனென்றுபெரியோர்கூறுவார்கள். அஜ்ஞானமுடையஜீவனேபசுபதியைக்கண்டறியாது மோட்சமடையாமல் தனக்குச் சுகதுக்கங்கட்கநுகுணமான சுவர்க்க நரகங்களைச் சர்வேசுவர பிரேரணையால் அநுபவிக்கிறான் எனக்கூற, முநிவர்கள் வினவுகின்றார்கள்.

ஸ்வாமீ! வாயுதேவரே! தாங்கள் பசுவுக்கும் பாசத்திற்கும் அதீதனாய் விளங்கும் பிரபுவாகிய பதியாவன்? என்பதையும் எங்கட்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் கூறுகின்றான். அநந்தகல்யாணகுணங்கட்கிருப்பிடமாய், பிரபஞ்சசிருஷ்டிகர்த்தாவாய், பசுபாசவிமோசகனாய்விளங்கும்பிரபு ஒருவனுளன். அப்பிரபுவில்லாதபட்சத்தில் இந்தப் பிரபஞ்ச சிருஷ்டி எப்படி நடக்கும்? பசுபாசங்களாற் பிரபஞ்ச சிருஷ்டி விருத்தி யடையாதாவென வினவுவீராகில், ஒருகாலும் அது சரிவராது. ஏனெனில், அவையிரண்டும் அசேதனஸ்வரூபமும் அஜ்ஞானமயமுமாக விளங்கலினென்க. ஜகத்தென்பது புத்திமானாலன்றி அஜ்ஞானமுடையவனாலாகத் தகுந்ததன்று ஆதலின் பதிக்கே ஜகத்சிருஷ்டி காரணத்துவமுண்டன்றிப் பசுபாசங்கட்குக் கிடையாது.குருடனாயுள்ளானை யொருவன் கரம்பற்றி யழைத்துக்கொண்டு செல்லுகையில், அவனும் நடப்பதுபோற் பசுவானது ஈசுவரப் பிரேரேபணையாற் சிறிது ஜகத்கர்த்திருத்துவ முடையதாகவும் விளங்கும். இவ்வகைய நியாயங்களால் ஜீவன் வேறென்றும் ஜீவர்கட்குத் தலைவனான பரமாத்மா வேறென்றும் தேகம் வேறென்று

முணர்ந்து, ஈசுவரனால் ஜீவன் அநுக்கிரகிக்கப் படவேண்டுமென்னு ஞானமுடையவனே மோட்சமடைவான். பதி பசு பாசங்கட்குத் தாரதம்மியமுணர்ந்தவனே பிரமவித்தாகிறான். ஜன்மரகிதனுகிறான். க்ஷராக்ஷரங்களுடன்கூடிய பரமாத்மஸ்வரூபமே வியக்தாவ்வியக்தரூபமான பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துங் காத்தும் அழித்தும் விளங்கும். பதிபசுபாசலட்சணங்களே யறியத்தக்கவை. இம்மூன்றை யன்றி யறியத்தக்கவை பிறிதொன்றுமின்று. திலத்தில் தைலமும், தயிரில் நெய்யும், நதியில் சலமும், விறகில் தீயும் விளங்குவனபோல, ஜீவாத்மாவிற் பரமாத்மா விளங்குவன். அவ்வகைய பரமாத்மாவைச் சத்தியமும் தவமுமுடைய உத்தமன் காண்கின்றான். இந்திரஜாலவித்தைசெய்பவன்தன்சக்திகளால் அநேகரூபமாகக் காணப்படுமாறு, பதியாகிய சங்கரபகவான் தானொருவனுகவே நின்று தன்சக்திகளால் பலவித அண்டாண்ட பிரமாண்ட ஜீவகோடிகளாகக் காணப்படுகின்றான். "ஏகஏவருத்ரோ ந த்விதீயோஸ்திகஶ்ச ந - ஸம்ஸ்ருஜ்யவிஶ்வம்புவநம் கோப்தாந்தேஸம்சுகோசஸ: । ஏகஏவருத்ரோ

நத்விதீயோஸ்திகஶ்சந - ஸம்ஸ்ருஜ்யவிஶ்வம்புவநம் கோப்தாம்தேஸம்சுகோசஸ:."

இரண்டாம் பொருளற்றவனும் ஒன்றியானவனும் ருத்திரபகவானன்றி பிறனொருவனுமல்லன். அப்படிப்பட்ட சாம்பவமூர்த்தி சகலலோகங்களையும் சிருஷ்டி திதிசங்காரங்கள் செய்துவருகின்றான். அவ்விறைவன் எங்கும் விழியுடையவன்; எங்கும் முகமுடையவன்; எங்குங் கரங்களுடையவன்; எங்கும் பாதமுடையவன்; அந்தப்பகவான் ஆகாயத்தையும் பிற பூதங்களையும் படைத்தவன்; "யோதேவாநாம்ப்ரதமம்புரஸ்தாத்விஶ்வாதிகோருத்ரோமஹர்ஷிரிதிஶ்ருதி:" யோதேவாநாம்ப்ரதமம்புரஸ்தாத்விஶ்வாதிகோருத்ரோமஹர்ஷிரிதிஶ்ருதி:" எல்லாத்தேவர்கட்குங்காரணபூதன்; பிரமனைத் தேவர்களுக்குள் முதலிற் சிருஷ்டித்தவன்; ஆதலின் யாவரைக்காட்டிலும் அதிகனென்றும், மஹருஷியென்றுஞ் சுருதிகூறும். பரமபுருஷனும் நாசரகிதனும் ஸ்திரனும் சூரிய வர்ணமுடையவனும் மாயையைக் காட்டிலும் பரமானவனும், அணு அண்டமாகவும் அண்டம் அணுவாகவும் சிறிதும் பெரிதுமானவனும், தனக்குமேற் பரமற்றவனுமாகிய பரம்பரனால் இப்பிரபஞ்சம் நிறைந்துள்ளது. தானொருவனே அசையாமல் விருக்ஷம்போலுள்ளவன். ஊர்த்துவலோகத்தி லிருப்பவன். அந்தப்பகவானுடைய சங்கற்ப மாத்திரத்தாலேயே சராசரப் பிரபஞ்சமுழுவதும் பிறந்தது. "ஸர்வாநநஶிரோக்ரீவ: ஸர்வபூதகுஹாஶய: । ஸர்வவ்யாபீசபகவாம்ஸ்தஸ்மாத்ஸர்வகத:ஶிவ: । ஸர்வத:பாணிபாதோயம் ஸர்வாக்ஷிஶிரோமுக: । ஸர்வத:ஶ்ருதிமாம்லோகே ஸர்வமாவ்ருத்யதிஷ்டதி । ஸர்வேந்த்ரியகுணாபாஸ: ஸர்வேந்த்ரியவிவர்ஜித: । ஸர்வஸ்யப்ரபுரீஶாந: ஸர்வஸ்யஶரணம்ஸுஹ்ருத் । ஸர்வாநநஶிரோக்ரீவ: ஸர்வபூதகுஹாஶய:, ஸர்வவ்யாபீசபகவாம் ஸ்தஸ்மாத்ஸர்வகத:ஶிவ:, ஸர்வத:பாணிபாதோயம் ஸர்வாக்ஷிஶிரோமுக: ஸர்வத:ஸ்ருதிமாம்லோகே ஸர்வமாவ்ரு

த்யதிஷ்டதி ஸர்வேந்த்ரியகுணாபாஸ: ஸர்வேந்த்ரியவிவர்ஜித: ஸர்வஸ்யப்ரபுரீஸாந:
ஸர்வஸ்யஸரணம்ஸுஹ்ருத்'' அந்தப்பகவான் உலகிலுள்ள எல்லாமுகங்களும்
எல்லாச்சிரங்களும் எல்லாக்கிரீவங்களும் தன்னுடையதாகவுடையவன்.
எல்லாப்பூதங்களின் இதயமே வாசஸ்தானமாகக்கொண்டு ஸர்வவியா
பியாக நிற்றலின் ஸர்வஜ்ஞன். எவ்விடத்துமுள்ள கரசரணங்களும், நேத்
திரங்களும், சிரங்களும், முகங்களும் தனதாகவுடையவன். எவ்விடத்து
முள்ள புத்திகளும் அகண்டாகாரமான தன்புத்தியாகவுடையவன்.
ஆதலின் அண்டாண்டமுழுவதும் ஆவரித்துள்ளவன். ஆனால் மேற்கூறிய
இவையாவும் பாரமார்த்திகமன்று. சமஸ்த இந்திரியங்களின் குணங்
களுக்கும் ஆபாசன். இந்திரியங்களில்லாதவன். இவ்வாறிருப்பினும்
எல்லாவற்றிற்கும் பிரபுவும், இரக்ஷகனும், மித்திரனும் அப்பரசிவனே.
கண்களின்றிக் காண்பவன்; செவிகளின்றிக் கேட்பவன்; எல்லாமுணர்
பவன்; தன்னை ஒருவருமறியமாட்டாதவன். அவ்வகையவன் பரமபுருஷ
னென்று பெரியோர் சொல்லுவர். அணுவுக்கணுவானவனும், மஹத்
துக்கு மஹத்தானவனும், நாசரகிதமானவனும், ஆன்மாக்களுடைய புத்
தியில் எப்பொழுதும் வாசஞ் செய்பவனுமாயினும், யஜ்ஞரகிதனும் யா
வரும் தனக்காக யஜ்ஞங்களைச் செய்யும்படியுள்ள தலைவனும், விசேஷ
மான மகிமாதிசயமுடையவனுமாவன். பழமையாயுள்ளவனாயினுங் கிழப்
பருவமில்லாதவனும், எல்லாப்பிராணிகளிடத்தும் வியாபித்திருப்பினும்
பிறப்பற்றவனும், பிரபுவானவனுமான பரமாத்மா வொருவனாயிருப்பினும்
தன் சத்தியால் எல்லாவுலகங்களையும் படைத்து இறுதியில் நசிக்கச்
செய்பவனும் அந்தச்சிவபகவானே. அந்தப்பகவானை அவனுடைய கருணை
யினாலேயே சமுசாரதுக்கங்களை யொழித்த புண்ணிய புருஷர்கள் தரிசிப்
பார்கள். உலகத்திற்குத்தாயும், அஜாவென்னும் பெயருடையதும், சத்வ
ரஜஸ்தமோகுணாத்மகமானதும், சிவசம்பந்தமானதுமாகிய சத்தியே பிர
கிருதி. அப்பிரகிருதியை அஜனாணபுருஷன் சேவிக்கின்றான். அதேபிர
கிருதியை யநுபவித்து மற்றொருவன் விட்டுவிடுகிறான். ஜீவேசுரரிருவரும்
சமானரூபமுடையவர்களாய், தேகத்திலிருப்பவர்கள். அவர்களில் ஜீவன்
கர்மபலனை மகாசாதுவாய் அநுபவிக்கிறான். ஈசுவரன் அதைக்காண்கிறான்.
பிரகிருதியினாலுண்டான சமுசாரத்தில் ஜீவனென்பவன் மூழ்கித் துக்க
மடைந்து, தன் நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கும் பரமகாருண்
ணியனான சர்வேசுவரனை யெப்பொழுது காண்பானோ அப்பொழுது
துக்கங்களை யெல்லாமொழித்துச் சுகவானாகிறான். வேதங்களும் யாகங்
களும் கிரியைகளும் பூதபவிஷ்யாதிகாலங்களுங் கூடிய பிரபஞ்சத்தை
மாயாவிசிஷ்டனான அந்தச் சர்வேசுவரன் சிருஷ்டித்து அதில் மாயை
யுடன் கூடியிருக்கிறான். மாயையைப் பிரகிருதியென்றுணரவேண்டும்.
அம்மாயையினாலேயே சமஸ்த பிரபஞ்சமுஞ் சிருஷ்டிசெய்யப்பட்டது.
இப்பிரபஞ்சத்திற்குச் சூக்ஷ்மத்திற்குஞ் சூக்ஷ்மமாகவிளங்கும் ஈசானனே
பிரபுவென்று தெரிந்துகொள்ளவேண்டும். பிரபஞ்சத்திற்குச் சிருஷ்டி

கர்த்தாவும், கிரியைகளைச் செய்விப்பவனும், அப்பரமசிவனே யென்று தெரிந்துகொண்ட பக்ஷத்தில் அவனுக்கு அகண்டமான மோக்ஷசாம் பிராச்சியமுண்டாகத் தடையில்லை. அவ்வகைய பரசிவனேகாலஸ்வரூபனும், பிரபஞ்சத்திற்குப் பாலகனும், பிரபுவுமாக விருக்கின்றானெனத் தெரிந்துகொண்டவனே மிருத்யுபாசத்தினின்று விடுபடுகிறான். க்ஷீரத்தில் நெய்யானது அதிசூக்ஷ்மமாக விருப்பதுபோலச் சமஸ்த பூதத்திலும் பரமாத்மாவாகிய சிவபெருமான் அதிசூக்ஷ்மமாக விளங்குகின்றானெனத் தெரிந்தபக்ஷத்தில் எல்லாப்பாவங்களும் விலகும். இந்தச் சிவபெருமானே பரமானதேவன். பிரபஞ்சத்திற் கெல்லாம்பிரேரணகர்த்தா சிவபிரானே யாவன். எல்லாருடைய இதயத்திலும் வசிப்பவன் சிவபெருமானே யென்பதை யுணர்ந்தவன் முக்தியை யடைகிறான்.

முநிவர்களே! அந்தச்சிவபெருமானுடைய பிரளயகாலஸ்வரூபத்தைச்சொல்லுகிறேன். இராப்பகல்சதசத்ரூபமானபிரபஞ்சம் - ஊர்த்துவ அதோ மத்யபாகங்கள் முதலியயாவும் இல்லாதிருக்கையில், ஒருவனாகிய பரசிவனே ஞானஸ்வரூபனாக விளங்குவன். அவ்விறைவனுக்கு ஒப்பானவன் ஒருவனுமிலன். சிவாவென்னும் பெயர்மாத்திரையாக விளங்குகின்றானன்றி ரூபாதி குணங்களற்றவன். பிரளய காலத்தில் ஆன்மாக்கள் அந்தப்பகவானுடைய தக்ஷிணமுகத்தை யடைவார்கள். அதில் பிரம பரமாகவுள்ள அநந்தமான வித்யை அவித்யை யென்னும் பெயருடைய க்ஷரம் அக்ஷரமென்பன சூக்ஷ்மமாகவிருக்கின்றன. அதில் அக்ஷரம் வித்தையும், க்ஷரம் அவித்தையுமாம். இவ்விரண்டிற்கும் பிரபுவாயிருக்கும் அன்னியன் அப்பரசிவனே. சிவபெருமான் இந்திரஜாலக்காரன்போல, அந்த க்ஷராக்ஷரங்களை நானாவகையாகக் காண்பித்து, திசாதிசைகளாகப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருத்தலின், அப்பரமசிவனையே சமஸ்த காரணகாரணனெனச் சொல்லப்படும். சுபாவமும், எல்லாவகைப்பட்ட சப்தமும், எல்லா அர்த்தமும், எல்லாக்குணமும், பரிணமிக்கச்செய்து போக்கிய போக்திருத்துவமான பிரபஞ்சத்தைத் தானே யதிஷ்டித்துளன். மஹருஷிகளும் தேவர்களும் பரமாத்மாவான அப்பரசிவனையே குஹ்யோப நிஷத்தில் பராத்பரனென்றும், காரணகாரணனென்றும், இதுவரையில் எண்ணிறந்த சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்தவனென்றும் உணர்ந்திருக்கின்றார்கள். மனதாற் கிரகிக்கத்தக்கவனும் பிரபஞ்சத்திற்குஸ்தானபூதனும் பிரபஞ்சத்தின்உற்பத்திலயங்களையுண்டுசெய்பவனும், கலாசர்க்கஞ் செய்பவனுமாமென்று, அந்தப்பரமசிவனையுணர்ந்து தேகத்தைவிடுத்தவர்களுக்குமுக்திகரதலாமலகமாம். சிலர்இப்பிரபஞ்சத்தில் உற்பத்திநாசங்களை யியற்கையென்று கருதுகின்றார்கள். வேறு சிலர் மோஹிதர்களாய், காலத்தால் ஜனனமரணங்கள் நடக்கின்றனவென்பார்கள். அவைசரியல்ல. ஆனால் சர்வேசுவரனுடைய மகிமையினாலேயே நிகழ்கின்றன. காலத்திற்குங் காலஸ்வரூபன் பரசிவன். அப்பரசிவனாற் சொ

ல்லப்பட்ட கர்மங்களால் இந்தவுலகத்தில் பிறப்பும் இறப்பும் உண்டாகின்றன. அந்தப்பகவான்கர்மத்தை நானாவகையாகச்செய்து அதைப்பலவாறு பரிணமிக்கச்செய்து, கலாதிதத்துவங்களின் சத்துவகுணத்துள் சம்பந்தமடைந்து, ஆகாசாதி அஷ்டமூர்த்திகளாலும், ஸத்வாதிமுக்குணங்களாலும், வித்யாவித்தைகளாலும், ஒன்றாகிய காலத்தாலும், ஆத்மகுணங்களாலும், சமஸ்தமான இப்பிரபஞ்சத்தைச் சுயமாக நடத்துகின்றான். பிரபஞ்சத்தின் குணங்களை யநுசரித்துக் கர்மங்களையும் சுபாவங்களையும் அவற்றிற்கேற்பக் கொடுக்கின்றான். அவ்வகைய கர்மங்களும் விருப்பு வெறுப்புக்களின்றிச் செய்த பட்சத்தில் அவற்றின் பலன்கள் செய்தோனைச்சேரமாட்டா. இவ்வாறு கர்மக்ஷயமான பின்னர் யாதொன்றுமின்றித் தத்துவசொரூபமுண்டாகும். இதுவே போக்த்ரு போகங்கட்கு ஆதியாயிருக்கும் யோகநிமித்தம். ஆதலின், இறப்பு நிகழ்வெதிர்வென்னுங் காலத்திரயங்கட்கும் வேறானவனும், நிர்க்குணனும், பிரபஞ்சோற்பத்திக்குக் காரணனும், ஜகத்பதியும், பூஜிதனும், எல்லாருடைய இதயகமலத்திலுமிருப்பவனுமாகிய சாம்பவமூர்த்தியை யுபாசிக்கவேண்டியது. காலாதிகளைக்காட்டிலும் பிரபஞ்சம் வேறாகப்பரிணமித்துள்ளது. எப்பொழுதும் தர்மங்களை வகித்துள்ளவனும், பாவங்களை யொழிக்கத்தக்கவனும், போகேசனும், பிரபஞ்சமே இடமாகவுடையவனும், தேவர்கட்கெல்லாந் தேவனும், ஈசுரர்கட்கெல்லாம் பரமேசனும், பதிகட்கெல்லாம் பரமபதியும், சமஸ்தலோகங்கட்கும் பிரபுவும், பிறரால் தனக்கொரு காரணகாரியமில்லாதவனும், சமானாதிகரகிதனுமாக வுள்ளவன் பரமசிவன். அவனுடைய பலதிறப்பட்ட சக்தியே சுவாபாவகியென்று ஸ்ருதிகளாற் சொல்லப்படும். ஞானபலகிரியைகளால் இப்பிரபஞ்சம் நிர்மிக்கப்பட்டது. இப்பிரபஞ்சத்திற்குப் பர்த்தா பிறனொருவனுமிலன்; சங்கரிப்பானொருவனுமிலன். காரணங்கட்கெல்லாங் காரணனே இவ்வுலகிற்குப்பிரபு. அப்பிரபுவுக்குக் காரணனொருவனுமிலன். அப்பரமேசனுடைய பிறவி யெவ்விடத்துமில்லை. ஜன்மத்திற்குக் காரணமான மலமாயாதிகள் அந்தப்பகவானுக்கு இல்லை. அவ்விறைவனே யெல்லாப்பூதங்களிலும் வியாபரித்து, சர்வாந்தராத்மாவாயும், தர்மஸ்வரூபமாயும், எல்லாவற்றிற்குஞ் சாட்சியாயும், நிர்க்குணமாயும், சஞ்சலமனமுடையோரது கர்மங்கட்கெல்லாம் சாரோகனாயும், சமயோசிதமாகப் பிரஜோற்பத்தி செய்பவனாயும்விளங்குவன், அம்மூர்த்தியை மனதில் தரிசிப்பவர்களே நித்யசுகத்தை யடைவார்கள். அந்தப்பகவானை நித்தியர்கட்கும் நித்தியனும், சேதனர்கட்குஞ் சேதனனும், அநேகமாயுள்ளவர்கட்கெல்லாம் ஒருவனாயுள்ளவனும், சாங்கியயோகத்தால் அடையத்தக்கவனும், ஜகத்காரணனும், ஜகத்பதியுமாகவுள்ளவனுமாவானென்றுணர்ந்தவர்கள் எல்லாப் பாசபந்தங்களினின்றும் விடுபடுவார்கள். பிரபஞ்ச நிர்மாணகர்த்தாவும், சர்வமுமுணர்ந்தவனும், ஜீவர்களின் கர்மஸ்வரூபத்தின்காரணமறிந்தவனும், காலத்தைநடத்துபவனும், அநந்தகல்யாணகுணவிசிஷ்டனும், மாயாஜீவர்கட்குப்பிரபுவாயுள்ளவனும், ஸத்வாதி

குணங்கட்கு ஈசனும், பாசத்தைக் கடக்கச் செய்ய வல்லனுமாகி முதலிற் சதுர்முகப்பிரமனைச் சிருஷ்டித்து வேதங்களைப்பயிற்றியவனும், நிஷ்களங்கனும், நிஷ்கிரியனும், சாந்தனும், தோஷரகிதனும், நிரஞ்சனனும் அமிர்த எரிக்கு அணையாயுள்ளவனுமாகிய பரமசிவனே நமக்கு நாயகனென்று ஞானத்தாலுணர்ந்தவனே முத்தியை யடையவல்லவன். பிறவியையும் மரணத்தையும் இடைவிடாதுபெற்றுத் துன்புற்றுத்திரியும் ஆன்மாக்கள் 'சிவதத்துவத்தை யுணர்ந்தாலன்றி அவற்றை யொழித்து மோட்சத்தையடைய வல்லவர்களாகார்கள். மஹாருஷிகள் யாவருந் தமது தவமகிமையாலும் வேதாத்தியயன முதலியவற்றாலும், பூர்வகல்பத்தில் வேதாங்கங்களில் இரகசியமானதும் பாவங்களையொழிப்பதும்,புனிதமானதும், சந்நியாசாச்சிரமத்திற்கு உசிதமானதுமாகிய இந்த ஞானத்தைப் பிரமதேவனால் உபதேசிக்கப் பெற்றார்கள். அதை யான் உங்கட்குச்சொன்னேன். இந்த ஞானத்தைப் பொறாமையில்லாதவனுக்கும் அசூயை யுடையவனுக்கும் சிறுபிள்ளைகளுக்கும், சிஷ்யனல்லாதவனுக்கும் தன்னைப் பணியாதவனுக்கும் உபதேசஞ் செய்யலாகாது. சர்வேசனாகிய பரமசிவனிடத்தும்,குருவினிடத்தும், தாய் தந்தை தமயன் முதலானாரிடத்தும், பக்தியுடைய உத்தமனுக்கே இந்தஞானம்உபதேசிக்கத்தக்கது. ஆதலின் சுருக்கமாக இன்னுஞ் சொல்லுகின்றேன். பரமாத்வஸ்வரூபனை அந்தப் பரமசிவன் சிருஷ்டிகாலத்தில் தானே எல்லாப்பொருள்களையுஞ் சிருஷ்டிசெய்து சங்காரகாலத்தில் எல்லாவற்றையுஞ் சங்கரிப்பவன் என்றுணர்வீர்களாகவென வாயுதேவன் முனிவர்கட்குரைத்தருளினன்.

சிவஞானநிலைமையுரைத்தது

முற்றிற்று

ஐந்தாவது

காலஸ்வபாவமுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! உலகத்தில் யாவும் காலரூபமான ஈசுவரதேஜசினாலேயே யுண்டாகின்றன. காலத்தையபேக்ஷியாமல் எவ்விடத்திலும் எதுவும் இல்லை. காலரூபமான ஈசுவரனுடைய அந்தர்க்கதமாகவிருக்கும் சமுசாரரூபமான இப்பிரபஞ்சமானது அடிக்கடி உற்பத்திலயங்களாற் சக்கரம்போற் சுழல்கின்றது. பிரமனும் விஷ்ணுவும் உருத்திரனும் தேவாசுரர்களும் யாவரும் அந்தக்காலரூபனை சர்வேசனுடைய நியதியை யநுசரித்து நடக்கின்றார்களேயன்றி யதனை யதிக்கிரமித்து நடக்க முடியாதிருக்கின்றார்களாதலின், இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் பேதங்களடைந்து பிரஜைகட்கெல்லாம் வயோதிகத்தை யுண்டுசெய்து எல்லர்வற்றிற்கும் பிரபுவாயிருந்துகொண்டிருக்குங் காலம்யாது? அந்தக்காலம் யாவனுடைய சுவாதீனத்திலிருக்கின்றது? அக்காலத்தின் சுவாதீனத்தில் எவன் அடங்கியிரான்? இவ்விஷயங்களை விரித்துச்சொல்ல

வேண்டுமெனக்கேட்க,வாயுதேவன்சொல்லலாயினன். அது கலை காஷ்டை நிமிஷம் முதலிய பேதங்களையுடைய கலைகளால் வியாப்தமான தேகமுடையதும் காலஸ்வரூபமென்னும் பெயராற் பிரசித்திபெற்றதுமான மகேசுவர சம்பந்தமான சிறந்த தேஜசு. தாவர சங்கமாத்மகமான பிரபஞ்சத்திற்கு அது நீக்கமுடியாதது. சர்வேசனுடைய ஆக்ஞாரூபமாகவுள்ளது. காலஸ்வரூபமான பரமாத்மாவிடத்தில் அக்கினியினின்றும் தாஹகதாசக்தி யுண்டானாற்போல, அநேக அம்சங்களிலோரம்சமாக 'ஓர்சக்தி யுண்டாயிற்று. காலத்தின் சுவாதீனத்திலேயே யிப்பிரபஞ்சமுழுதும் நடவாநிற்கும். இப்பிரபஞ்சத்தின் சுவாதீனத்தில் அக்காலம் இல்லை. அவ்வகைய காலமானது சர்வேசனாகிய் சாம்பவமூர்த்தியின் சுவாதீனத்திலிருக்கின்றது. சிவபெருமான் அந்தக்காலத்தின் சுவாதீனத்திலிருப்பவனல்லன். ஆனபடியால் அந்தக்காலத்தினிடத்தில் சிவசம்பந்தமான தேஜசுவிளங்குகின்றது. காலத்துடன் சிவதேஜசு சம்பந்தித்திருத்தலின் அந்தக்காலத்திற்கு ஓர் எல்லையில்லை. காலத்தை யதிக்கிரமிப்பதற்கு ஒருவருக்குஞ் சாத்தியமில்லை. காலத்தால்வந்த கர்மத்தை யொருவனுந் தப்பித்துக்கொள்ளமாட்டான். ஈசுவரானுக்கிரகத்தாலுண்டாகிய காலத்தை, ஒருகுடைக்கீழுலகாளும் அரசனும், சமுத்திரமானது கரையைக் கடவாததுபோல, அதிக்கிரமிக்க வல்லவனாகான். இந்திரியநிக்கிரகணஞ் செய்து ஜகமுழுவதையும் வென்ற மகாநுபாவர்களுக்குங் காலத்தையதிக்கிரமிக்கமுடியாது. அவர்களையுங் காலமானது அதிக்கிரமிக்கின்றது. ஆயுர்வேதத்தை நன்றாயுணர்ந்து சிறந்த அவிழ்தங்களை முடித்துப் புசித்தவர்களாயினுங் காலத்தாலுண்டாகும் மரணத்தைத் தவிர்க்கவல்லவர்களல்லர். சம்பத்தாலும் திவ்வியரூபத்தாலும் ஆசாரத்தாலும் வல்லமையாலும்ஒருவன்ஒன்றைச்செய்யஆலோசித்தபொழுது,அதுகாலபலத்தாற் கைகூடிவரலாமன்றி அவனாலேயே செய்து முடிக்கமுடியாது. விருப்பற்றதும் விருப்புற்றதும் யோசியாததும் யோசித்ததும் சம்பவிப்பதும் சம்பவியாதொழிவதுங் காலமேயன்றி வேறன்று. ஒரேகாலத்தில் ஒருவன் துக்கிக்கின்றான்; ஒருவன் சந்தோஷிக்கின்றான்; இவ்விருவரும் காலத்தின் ஸ்வரூபம் இப்படியெனத் தனித்தனி கூறுவரன்றி. அக்காலத்தை யறிய மாட்டார்கள். இளவயதுள்ளவன் விருத்தனாகிறான். பலவான் துர்ப்பலமுள்ளவனாகிறான். ஐசுவரியவான் வறியவனாகிறான். இவைபோல்வன வாகிய மாறுதல்கள் காலத்தால் வந்த விசித்திரங்களாம். ஓர்தொழிலை முடித்தற்கு உயர்குடிப்பிறப்பு, சீலம், பலம், சமத்காரம் முதலியன யாவுங்காரணமாகா. ஆனால் காலமே அதனை முடித்தலாவது தடுத்தலாவது செய்ய முடியும். புருஷத்தன்மையின்றி நிருத்த கீத வாத்தியாதிகளால் ஜீவனஞ் செய்வோர் சம்பன்னர்களாகவும், சம்பன்னர்கள் ஏழ்மையால் யாசிப்பவர்களாகவு மாறுகின்றார்கள். இவற்றிற்கு நிபுணத்தன்மையும் நிபுணத்தன்மையின்மையுங் காரணமல்ல. காலமே யவற்றிற்குக் காரணம். காலத்தின் அநுகூலமில்லாவிடின் சாஸ்திரோக்தமாகச் செய்தசுத்தமான அவுஷத

முன் குணத்தைக் கொடுக்கமாட்டாது. காலாநுகூலத்தால் அவ்வவுஷதமே அதிவிரைவிற் பலனைக்கொடுக்கும். அகாலத்தில்ஒருவனிறவான்; பிறவான். சிறந்த புஷ்டியை யடையான்; சுகதுக்கங்களை யநுபவியான்; ஒன்றுமடையான். காலத்தினாலே காற்றுவீசுவதும், மேகம்பொழிவதும், பயிர்கள் விளைவதும், ஜீவலோகம் ஜீவிப்பதுமாம். இவ்வகையாகக் காலத்தின் ஸ்வரூபத்தை உண்மையாக உணர்ந்தவன் காலாத்மஸ்வரூபத்தை யதிக்கிரமித்துக் காலாதீதனான பரசிவனை யடைவான். அவ்வகைய ஞானிக்குக் காலமாவது பந்தமாவது பிரகிருதியாவது பிரபஞ்சமாவது கிடையாது. இவ்வகைய காலமாகிய விசித்ரரூபத்தையுடைய பரமேசுவரனுக்கு நமஸ்காரமெனவாயுதேவன் கூறினன்.

காலஸ்வபாவமுரைத்தது

முற்றிற்று.

ஆறுவது

காலவளவுந்தேவராயுவுமுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! காலத்தின் பரிமாணம் எவ்வாறு நிர்மிக்கப்பட்டது? காலத்திற்கு ஆதியும் அந்தமும் யாவை? இவ்விஷயங்களைச் சொல்லவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் கூறலாயினன்: காலத்திற்கு ஆதியாகக் கணக்கிடத்தக்கது நிமிஷம். சாந்தியாதீதபதவியே அதற்கு அந்தமாகவுள்ளது. நிமிஷம் பதினைந்துகொண்டது காஷ்டை. காஷ்டை பதினைந்துகொண்டது கலை. கலைமுப்பதுகொண்டது முகூர்த்தம். முகூர்த்தம்முப்பதுகொண்டது இராப்பகலாகிய ஓர்திதி. திதிமுப்பதுகொண்டது ஓர்மாதம். அது கிருஷ்ணபக்ஷம்சுக்லபக்ஷமெனத் தனித்தனி பதினைந்து திதிகளையுடையது. மாதம் இரண்டுகொண்டது ஓர் இருது. இருதுக்கள் மூன்றுகொண்டது ஓர் அயநம். அயநம் இரண்டு கொண்டது ஓர்வருடம். இது மாநுடருடைய காலவளவை. இதில் மாநுடமாதம் ஒன்றுகொண்டது பிதுரர்கட்கு இராப்பகல் கூடிய ஓர்நாள். இதில் கிருஷ்ணபக்ஷம் பிதுரர்க்குப் பகலும், சுக்லபக்ஷம் இரவுமாம். இம்மாநுடவருஷம் ஒன்றுகொண்டது தேவர்கட்கு ஓர் நாள். அதில் உத்தராயனம் பகலும் தக்ஷிணாயனம் இரவுமாம். இவ்வகைய தினங்கள் முப்பதுகொண்டது தேவர்கட்கு ஓர்மாதம். அவ்வகைய பன்னிருமாதங்கள் கொண்டது (மாநுடவருஷங்கள் முந்நூற்றறுபதுகொண்டது) தேவர்கட்கோர்வருஷம். அவ்வகைய தேவவருஷங்கள் நாலாயிரங்கொண்டது முற்பட்டதாகிய கிருதயுகம். அதற்குச் * சந்திசந்தியமிசங்கள் தனித்தனி நானூறு தேவவருஷங்கள். தேவவருஷங்கள் மூவாயிரங்கொண்டது இரண்டாவதா

* சந்தி - யுகந்தோன்றுமுன் அதன் சம்பந்தமான காலம். சந்தியமிசம் - யுக முடிந்தபின் அதன் சம்பந்தமான காலம்.

கிய திரேதாயுகம். இதற்குச் சந்திசந்தியமிசங்கள் தனித்தனி முந்நூறு தேவவருஷங்கள். தேவவருஷங்கள் இரண்டாயிரங்கொண்டது மூன்றாவதாகிய துவாபரயுகம். அதற்குச் சந்திசந்தியமிசங்கள் தனித்தனி இருநூறு தேவவருஷங்கள். தேவவருஷங்கள் ஆயிரங்கொண்டது நான்காவதாகிய கலியுகம். அதற்குச் சந்திசந்தியமிசங்கள் தனித்தனி நூறு தேவவருஷங்கள். இவ்வகையாகச் சந்திசந்தியமிசங்களுடன் கூடிய நான்கு யுகங்கட்கும் தேவவருஷங்கள் பன்னீராயிரம். அவ்வகைய சதுர்யுகங்கள் எழுபத்தொன்று கழிந்தால் ஓர்மந்வந்தரம். சதுர்யுகங்கள் ஆயிரங்கொண்டது ஓர்கற்பம். ஓர்கற்பத்திற் பதினான்கு மந்வந்தரங்கள் கடக்கின்றன. இவ்வகையகற்பங்கள் ஆயிரம்பதினாயிரங்களாக இதுவரையில் அநேகங் கழிந்துள்ளன. அவற்றை விரிக்கமுடியாமையாலுங் கணக்கின்மையாலும் ஒருவருமறியமாட்டார்கள்.

முனிவர்களே! ஒருகற்பமானது சதுர்முகப்பிரமதேவனுக்கு ஓர் பகல். அவ்வகைய பகல் ஆயிரங்கொண்டது பிரமனுக்கு ஓர்வருஷம். அவ்வகைய வருஷங்கள் எண்ணாயிரங்கழிந்தாற் பிரமனுக்கோர் யுகம். அவ்வகைய பிரமயுகங்கள் ஆயிரங்கழிந்தால் பிரமனுக்கோர் சவனம். அவ்வகைய சவனம் ஒன்பதினாயிரங் கழிந்தால் பிரமதேவனுடைய ஆயுண் முடிவாகும். அவ்வகைய பிரமதேவனுடைய ஓர்பகலிற் பதினான்கு இந்திர பட்டங்கள் கழியும். பிரமனுடைய ஓர்மாதத்தில் நானூற்றிருபது இந்திர பட்டங்களும், ஓர்வருஷத்தில் ஐயாயிரத்து நாற்பது இந்திரபட்டங்களும், ஆயுண்முழுவதுக்கும் ஐந்திலக்ஷத்து நாற்பதினாயிரம் இந்திரபட்டங்களும் மாறுபடும். அவ்வகைய பிரமன் ஒருவனிறந்தால் விஷ்ணுவுக்கு ஓர்தினமாகும். அவ்வகைய தினங்கொண்ட கால அளவையாக நூறு வருஷங்கழிந்தால் விஷ்ணுவுமிறப்பன். அவ்வாறு விஷ்ணு இறந்தால் உருத்திரனுக்கு ஓர்தினம். அவ்வகையஉருத்திரன்இறந்தால் மகேசுவரனுக்குஓர்தினம். மகேசுவரன் இவ்வாறு காலங்கழியின்சதாசிவனுக்கு ஓர்தினம். அவ்வகையசதாசிவனும்சிவத்தின்ஓர்பகலிலிறப்பான். இவ்வகையாக யாவருக்குங் காலவளவை பரமேசுவரனால் நிர்மாணித்து அவனுடைய விருப்பின்படி நடந்தேறுகின்றது. பரசிவத்திற்கு ஆயுள்வரையறை கிடையாது. அவருடைய ஆயுளுக்கு அளவே இல்லை. அவர் ஒருகாலத்தினும் பிறப்பவரல்லர். சிவபெருமானுடைய பகற்காலத்திற் சிருஷ்டியும் இராக் காலத்தில் மகாப்பிரளயமும் நிகழும். உலகிற்கு இதத்தைக்கருதிய சர்வேசன் இவ்வகையாகக் காலநிர்மாணஞ் செய்திருக்கின்றனன். பிரஜைகளும் பிரஜாபதிகளும் மூர்த்திகளும் சுராசுரர்களும் இந்திரியங்களும் இந்திரிய விஷயங்களும் மகாபூதங்களும் தன்மாத்திரைகளும், புத்தியும், தத்தம் அதிஷ்டானதேவர்களுடன் பிரளயகாலத்திற் சர்வேசனுடன் லயமடைகின்றார்கள். சிவத்தின் பகற்காலத்தில் அவன் கட்டளையால் தமது வடிவுடன் விளங்குவர். விசுவாத்மாவும் காலஸ்வரூபனுமாகிய பரசிவத்தின்

சக்தியாதீனமாகச் சகலமும் விளங்கும். அவ்வகைய சங்கரபகவானுக்கு நமஸ்காரம் என்று வாயுதேவன் கூறினன்.

காலவளவும்தேவராயுவுமுரைத்தது

முற்றிற்று.

ஏழாவது

சக்தியாதிபிரளயாந்தமுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி ஸ்வாமீ! எல்லாவுலகங்களையுஞ் சர்வேசுவரன் எப்படிச் சிருஷ்டித்தனன்? எப்படிப்பிரதிஷ்டித்தனன்? முதலிற் பிறந்தது யாது? எதனால் இந்தப்பிரபஞ்சம் விரிந்ததாயது? எதனிடத்தில் இவையாவும் லயமடையும்? எனவினவ, வாயுதேவன் கூறலாயினன். சக்திவிசிஷ்டமான சர்வேசுரனிடத்தில் மாயைபிறந்தது. அம்மாயையால் அவ்வியக்தம் பிறந்தது. மாயாசக்திவிசேஷமே அவ்வியக்தம். அம்மாயாசக்தியால் சாந்தியதீதபதமும், சாந்தியதீதபதத்தாற் சாந்தியபதமும், சாந்தியபதத்தால் வித்தியாபதமும், வித்தியாபதத்தால் பிரதிஷ்டாபதமும், பிரதிஷ்டாபதத்தால் நிவ்ருத்தி பதமும் பிறந்தன. இவ்வகையாகச்சிருஷ்டி கலையைந்துமாம். முறைதவறிய விடத்தில் முற்கூறிய சிருஷ்டிகள் யாவும் அடியோடு அழிந்துவிடும். அவ்வியக்தத்தை ஜகத்காரணமென்றும் அதுவே சிருஷ்டியைச் செய்கிறதென்றுஞ் சொல்வார்களாயினும், பரமாத்மஸ்வரூபத்தால் அதிஷ்டிக்கப்பட்ட அவ்வியக்தத்திற்கு ஜகத் காரணத்துவமுண்டன்றி, தனியே அவ்வியக்தமானது அசேதனமாதலின் கருத்தாவாகமாட்டாது. சுவல்பமான அறிவுடைமையின் புருஷனுங் கர்த்தாவாகமாட்டான். இச்சராசரப் பிரபஞ்சமுழுதும் சர்வஜ்ஞத்துவமுடைய கர்த்தாவாற் செய்யப்படவேண்டுதலின், அறிவுசிறிதுமில்லாத அவ்வியக்தமும், சாமானிய அறிவுடைய புருஷதத்துவமும் கர்த்தாக்களென்று சொல்லப்படா. சமர்த்தனும், சுதந்திரனும், அநந்த சக்திவிசிஷ்டனும், சர்வஜ்ஞனும், அநாதி நிதனனும், மகைசுவரியமுடையவனுமாகிய மகாதேவனே ஜகத்கர்த்தாவாவன். புருஷனுடைய பிரவிர்த்தியும், அவ்வியக்தத்தின் மஹதாதிதத்துவவிகாரங்களும், சத்தியவிரதனாகிய சாம்பமூர்த்தியின் ஆக்கினையினாலேயே நடக்கின்றன. இந்த அநாதியான விஷயங்கள் சத்புருஷர்களுடைய மனதில் எப்பொழுதும் விளங்கும். அற்பர்கள் இதனை யங்கீகரிக்கமாட்டார்கள். தாங்களேகர்த்தாக்களென்று கூறுவார்கள். பிரமதேவனுக்கு நூறுவருஷங் கழிந்தால் பரார்த்தமாம். பரார்த்த மிரண்டொழிந்தால் மகாப்பிரளயம் வரும். அப்பொழுது அவ்வியக்தமானது எல்லாக்காரியங்களையும் ஒடுக்கிக்கொள்ளும். புருஷன் பிரகிருதிசம்பந்தமுடையவனாகத் திரிபில்லாமலிருப்பான். பிரகிருதி புருஷர் குணசாம்மியமுற்றுப் பரசிவத்திலைக்கியமாவர். புருஷனுக்குமேல் சிவனே ஏகனாயிருப்பான். இவ்வாறு இரவாகிய மகாப்பிரளய மொழிந்தபின்னர்,

சிவபெருமான் தன்மாயையால், புருஷனைப் பிரகிருதியிற் பொருந்தச் செய்து ஆகவேண்டிய பரிணாமங்களையுங் கொடுப்பான். இம்முறையாகவே பின்னர் அவ்வியக்தத்தில் எல்லாச்சகமும் உண்டாகும். மந்திராத்துவா - பதாத்துவா - வன்னாத்துவா - புவனாத்துவா - தத்துவாத்துவா - கலாத்துவா என்னும் ஆறத்துவாக்களுக்குந் தலைவனும், அநந்த சக்திஸஹிதனும், தன் சக்திகளில் ஒரு சக்தியின் எண்ணிறந்த அமிசங்களில் ஓர் அமிசத்தால் எல்லாப்பிரபஞ்சத்தையும் படைத்தளித் தழிப்பவனுமாகிய சதாசிவமூர்த்திக்கு நமஸ்காரஞ் செய்கிறேனென்று கூறினர்.

சக்தியாதிபிரளயாந்தமுரைத்தது

முற்றிற்று

எட்டாவது

அண்டோற்பத்தியுரைத்த அத்தியாயம்.

வாயுதேவன் சிவபெருமானை நமஸ்கரித்து, முநிவர்களே! அவ்வியக்தத்தினின்று புத்தி-அகங்காரம் - மனம் - இந்திரியங்கள் - தன்மாத்திரைகள் - பூதங்கள் யாவுந்தோன்றும். அக்காலத்தில் ஜகத்காரணபூதர்களாகிய பிரமன் விண்டு உருத்திரன்பிறந்தார்கள். அம்மூவர்களுக்கும் சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழில்கள் கைகூடும்படி சிவபெருமான் தனது சக்தியால் திருவருள்புரிந்து அவர்களால் அக்காரியங்களை நிறைவேற்றுவான். அவனே எல்லாருக்குங் கடவுள். அந்தக்கடவுளர் மூவரும் சமானர்கள். அவர்கள் ஒருவரிடத்தொருவர் பிறந்தும், ஒருவரையொருவர் பாலித்தும், ஒருவராலொருவர் விருத்தியடைந்தும் இவ்வகையாக மும்மூர்த்திகளாய் விளங்குவர். அவர்களெல்லோருக்குங் கடவுளாகிய மகேசுவரன் சர்வாத்மாவும், சர்வத்திற்கும் ஆதாரமானவனும், சக்திக்கு உற்பத்திகாரணனும், மும்மூர்த்திகட்கும் பிரகிருதி புருஷர்கட்குங் காரணனும், விலாசார்த்தமாகச் சிருஷ்டிசெய்த பிரபஞ்சத்திற்குப் பிரபுவும், எல்லாருக்கும்பரனும், நித்தியனுமாவான். அவனே பரதத்துவப்பொருள். பிரகிருதியினின்று புத்தி கியாதி மதியென்னும்பெயர்களுடைய மகத்தத்துவம் பிறந்தது. மகத்தத்துவத்தால் மூவகைப்பட்ட அகங்காரங்கள் பிறந்தன. அம்மூவகை யகங்காரங்களில் பூததன்மாத்திரைகளும் இந்திரியங்களும்பிறந்தன. சத்துவகுணத்துடன் கூடிய அகங்காரம் வைகாரிகமெனப்படும். வைகாரிகத்தால் ஞானேந்திரியங்களைந்தும், கர்மேந்திரியங்களைந்தும் மனமும்பிறந்தன. சாத்துவிக சம்பந்தமான அகங்காரத்தில் ஞானேந்திரியங்களைந்துக்கும் கர்மேந்திரியங்களைந்துக்கும் மனதுக்கும் திக்குமுதலிய அதிஷ்டான தேவதைகள் பிறந்தன. தமோகுணசம்பந்தமான அகங்காரத்தினின்று சப்தம் பிறந்தது. அக்காரணத்தாலேயே தமோகுணாகங்காரத்திற்குப் பூதாதியென்று பெயர். சப்தத்தினின்று

ஆகாயமும், ஆகாயத்தினின்றுபரிசமும், பரிசத்தினின்றுவாயுவும்,வாயுவினின்று உருவமும், உருவத்தினின்று தேஜசும், தேஜசினின்று ரசமும், ரசத்தினின்று ஜலமும், ஜலத்தினின்று வாசனையும், வாசனையினின்று பிருதிவியும், பிருதிவியினின்று ஔஷதிகளும், பூதங்களினின்று சராசரப் பிரபஞ்சங்களும் பிறந்தனவென்று பெரியோர் கூறுவர். புருஷதத்துவத்துடன் பிரகிருதியானது பொருந்த உண்டாகிய மகான்முதலாகப்பிருதிவியீருகவுள்ள தத்துவங்கள் இப்பிரமாண்டத்தை யுண்டுசெய்தன. இப்பிரமாண்டத்திற்காரியங்களும் பலசாதனங்களுஞ் செய்யும்படி, இவ்வண்டத்திலேயே ஜனித்து க்ஷேத்திரஜ்ஞனென்னும் பெயருடைய பிரமன் தோன்றுவன். அப்பிரமனே முற்பட்ட ஜீவனென்றும் பூதங்கட்கெல்லாம் ஆதிகர்த்தாவென்றுஞ் சொல்லப்படுவான். அப்பிரமனுக்கு ஞானவைராக்கியங்களை லக்ஷணமாகவுடையதும் தர்மசுரூபமுமாகவுள்ள புத்தியால் தான் நினைத்த கருமங்கள் அவ்வியக்தத்தாலுண்டாகின்றன. முக்குணங்களையும் அங்கீகரித்து உலகத்தைப் படைத்து அளித்து அழிக்கும் இயற்கையனுகிறுன். சிருஷ்டிசெய்யுங்காலத்தில் சதுர்முகங்களையுடையவன்; பாலகத்தில் விஷ்ணு; சங்கரித்தலில் உருத்திரன் என விளங்குகின்றுன். இவ்வகையாக முக்குணங்களுடைமையின் பிரமனைத் திரிகுணனென்றும், நால்வகை விபாகமுடைமையின் *சதுர்வியூகனென்றும், முற்பட்டவனுகலின் ஆதிதேவனென்றும், பிறவாதவனுகலின் அஜனென்றும், பிரஜைகளைப் பாலிப்பதாற் பிரஜாபதியென்றும் பெரியோர் சொல்லுவர். பர்வதங்களும் சமுத்திரமும் யாவும் அப்பிரமனுடைய கர்ப்பத்திலேயே விளங்கும். சூரிய சந்திரர் நக்ஷத்திரங்கள் கிரகங்கள் வாயு உதகம் தேஜசு முதலியவற்றுடன்கூடியுள்ளது அண்டம். அவ்வகைய அண்டமானது பதினன்கு லோகங்களைத் தன்னுட்பொருந்தியுள்ளது. அந்த அண்டத்திற்குப் பத்துப்பங்கு அதிகமாய் ஜலமும், ஜலத்திற்குப் பத்துப்பங்கு அதிகமாய்த்தேயுவும், தேயுவுக்குப் பத்துப்பங்கு அதிகமாய்வாயுவும், வாயுவுக்குப்பத்துப்பங்கு அதிகமாக ஆகாசமுஞ்சூழ்ந்திருக்கும். ஆகாசத்தையகங்காரமும், அகங்காரத்தை மகத்தத்துவமும், மகத்தத்துவத்தை அவ்வியக்தமுஞ் சூழ்ந்திருக்கும். இவ்வகையாக அண்டமானது ஏழு ஆவரணங்களால் மறைக்கப்பட்டிருக்கும். இவ்வகையாகவே இவையொன்றிலொன்றுதித்து, அவ்வுதித்தவகையே ஒன்றிலொன்று லயமடையும். குணங்கள் காலவிசேஷத்தாலேயே சமமும் அசமமுமாகின்றன. சாம்மியமுண்டானபொழுது லயமும், குணவைஷம்ய முண்டானபொழுது சிருஷ்டியுமுண்டாகும். இவ்வண்டத்திற்கு க்ஷேத்திரமென்றுபெயர். இந்த க்ஷேத்திரத்திற்குப் பிரபுவாயிருப்பவனுகிய பிரமன் க்ஷேத்திரஜ்ஞனெனப்படுவான். இவ்வகையான அண்டங்கள் அநேகவாயிரகோடி நாலுதிசைகளிலும் நேராகவுங் குறுக்காகவும் நீரிற் கிடக்கும். இவ்வண்டங்களில் நான்கு

* பிரம கால விஷ்ணு புருஷ ரூபங்களால் வெவ்வேறுனவன்.

முகங்களையுடைய பிரமன் விஷ்ணு ருத்திரன் தத்தங்காரியங்களைச் சிவாக்கினைப்படி செய்வார்கள். அவ்யக்தத்தினின்று தோன்றிய இவ்வண்டத்திற்குப் பரமாகவுள்ளவன் சிவபெருமான். அவனே லீலாமாத்திரையாகப் பிரபஞ்ச காரியத்தை நடத்துகிறான். அவ்வகைய பரமேசுவரனுக்கு நமஸ்காரமென்று வாயுதேவன் கூறினன்.

அண்டோற்பத்தியுரைத்தது

முற்றிற்று.

ஒன்பதாவது

சுவேதவராககற்பமுரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! காலநியமமுடைய சதுர்முகப்பிரமனது ஆயுட்காலத்திற் பூர்வபாகம் முதற்பரார்த்தமென்றும், அவ்வளவு காலமுடைய உத்தரபாகம் இரண்டாம்பரார்த்தமென்றுஞ் சொல்லப்படும். அவ்விருபரார்த்தங்களினிறுதியில் அவாந்தரப்பிரளயஞ் சம்பவிக்கும். அப்பொழுது எல்லாப்பிராணிகளும் நாசமாகும். பிரமதேவனுடைய ஒவ்வொரு தினத்திலும் பதினன்கு மனுக்கள் மாறுகிறார்கள். அநாதியாயும் அநந்தமாயும் எண்ணிறந்த கர்மங்களும் மந்வந்தரங்களுங் கழிந்துள்ளமையின், அவையிவ்வளவு சென்றனவெனக் கூறச் சாத்தியப்படா. அதிக கஷ்டத்துடன் இத்தனை கழிந்தனவெனக்கூறினும் உங்கட்குப் பயன்படாமையின், அவ்விஷயத்தைச் சொல்வதில் எனக்கும் உற்சாகமில்லை. கீழ்ப்போன கற்பங்களிலெல்லாம் முதலிற் சிருஷ்டியும் இறுதியிற் சங்காரமும் இவ்வாறே நடக்கும். இப்பொழுது நடக்குங் கற்பம் சுவேதவராககற்பம். இக்கற்பத்திலும் * மநுக்கள் பதினல்வர். சுவாயம்புமுதலிய எழுவரும், சாவர்ணிகர்முதலிய எழுவருமாவர். இவர்களில் வைவச்சுதன் ஏழாவான். ஒருகற்பங்கழிந்து மற்றொருகற்பம் வருகையில், அளவில்லாத மழையுடன் பெருங்காற்றுவீசி, மரங்கள்செடிகள்அழியும். அக்கினிபகவான் அவற்றையெல்லாம் பற்றி மூவுலகங்களையு மெரிப்பான். சிலகாலம் பெருமழை பெய்துசமுத்திரங்களெல்லாம்ஒன்றுசேரும். திசைகள்தெரியா. முன் ஒரு காலத்தில் பிரளயவெள்ளம் பெருக்கெடுத்து உலகமுழுவதையும் அழிக்கும். அந்தச்சமயத்தில், பிரமதேவன் நாராயணனாகிச் சிவயோகநித்திரை செய்துகொண்டுஅகண்டமானஜலமத்தியில்துயில்புரிந்தனன். ஜனலோகத்தில் வசிக்குஞ் சித்தர்கள் யாவரும் பலவிதமாகத் தோத்திரஞ்செய்ய, நாராயணன் யோகநித்திரை நீங்கி, திசைகளை நோக்கி ஒன்றுங் காணாமையால், மிகவும் ஆச்சரியமடைந்து, பர்வதங்கள் விருக்ஷங்கள் நதிகள் முத

* மநுக்கள் பதினல்வர்: சுவாயம்பு, சுவாரோசிஷன், உத்தமன், தாமசன், இரைவதன், சாக்குஷன், வைவசுவதன், சூரியசாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, உருத்திரசர்வர்ணி, பௌதியன்.

லியவற்றுடன்கூடியுள்ளதும் விசாலமானதுமாகிய பூமியெங்கேசென்றது? என்றாலோசித்து ஒன்றுமறியாதவனாய், தன் தந்தையாகிய திரிநேத்திரங்களையுடைய சாம்பவமூர்த்தியை ஸ்மரணைசெய்து, அவ்வுலகம் நீரில் மூழ்கியது என்பதுணர்ந்து, அவ்வுதகத்தில் மூழ்கி, அப்பூமியை அதன் நிலையிலிருத்தவேண்டுமென்னுங்கருத்தால் அதற்கேற்றவராகவுருவெடுக்க நினைத்து, எனக்குத் திவ்யமான வெண்பன்றி யுருவமுண்டாகவேண்டுமென்று கோரியமாத்திரத்தில், மலைபோன்ற பேருருவும், மேககோஷ்டம்போன்ற தொனியும், பயங்கரமான பார்வையும், பருத்துருண்ட துடைகளும், உயர்ந்த புஷ்டமும், உருண்டு திரண்ட முழங்கால்களும், கூர்மையான குளம்புகளும், பதுமராகமணிபோன்று செம்மைவாய்ந்து உருண்டுகொண்டிருக்கும் விழிகளும், பூரித்த தேகமும், நீண்ட செவிகளும், பிரளயகாலசமுத்திரகோஷம்போன்றொலிக்கும் உசுவாச நிசுவாசங்களும், பிடரிமயிரால் மறைக்கப்பட்ட கன்னங்களும், மின்னிக்கொண்டு பிரகாசிக்குமேகம்போலப்பலநிறமுற்று விளங்கும் வராகரூபத்தையடைந்து, பூமியைக்கொண்டுவரவேண்டுமென்று ரஸாதலத்தை யடைகையில், ஜோதிலிங்கரூபமெடுத்த சிவபெருமானுடைய திருவடியின் எல்லையைக் காணும்படி வராகவடிவெடுத்துச்செல்வதுபோன்றிருந்தது. அவ்வாறுசென்று நீரிலமிழ்ந்த பூமியைத் தன் கொம்புகளாற் றோண்டி யெடுத்துவருகையில், ஜனலோகத்திலுள்ளோர் அவ்விஷ்ணுவைக்கண்டு மகா சந்தோஷத்துடன் நிருத்தகீதங்கள் செய்துகொண்டு புஷ்பமாரி பொழிந்தார்கள். அதனால் வராகமூர்த்தியானவர் மின்மினிப்பூச்சிகளுடன் விளங்கும் மலையைப்போல விளங்கினன். இவ்வகையாகப் பூமியைக்கொண்டுவந்து சமானமாக நிலைநிறுத்தித் தன் பழைய வுருவாகிய பிரமரூபமடைந்து, பழையபடியே மலைகளை யிருத்தி அசையவொட்டாமற்செய்து, அதன்பேரில் நான்குலகங்களையு மமர்த்தினன். அதன்பின்னர் பிரமதேவன் சிவாக்கினையால் உலகசிருஷ்டியைச் செய்யக்கருதினன்.

சுவேதவராககற்பமுரைத்தது

முற்றிற்று.

பத்தாவது

பலவகைச் சிருஷ்டியுரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! பிரமதேவன் இல்வகையாகச் சிருஷ்டி செய்யக் கருதியிருக்கையில், தமம் மோகம் மஹாமோகம் தாமிசிரம் அந்ததாமிசிரம் என்னும் ஐவகையாக அவித்தையானது பிரமனிடந் தோன்றிற்று அவ்வைந்தினின்றும் ஐவகைச் சிருஷ்டிகள் பிரகாசமற்றவையாகவும், குடத்திலிட்ட விதைகள் அக்குடத்தால் மறைக்கப்பட்டிருக்குமாறு தமத்தினால் மறைக்கப்பட்டுமிருந்தன. அப்படைப்புகள் இந்திரியங்களால் கிரகிக்கத்தக்கவை யிவையென்றுணராவாயின. முதலிற் படைக்கப்பட்ட பர்

வதங்களுஞ் விருக்ஷங்களுஞ் சஞ்சரிக்கமாட்டாதனவாயிருப்பதுகண்டு சந்தோஷமின்றி இவற்றால் உலகவிருத்தியாகாதென்று கருதி, விலங்குகளைப் படைத்து அவை உள்ளத்தில்மாத்திரம் யாவுமுணருஞ் சக்தியுடைத்தாயிருந்தும் பகிர்ப்பிரகாசமின்றி நன்மார்க்கவன்மையின்மையாயினமையின் இரண்டாஞ் சிருஷ்டியாகிய பசுவாதிகளாலுஞ் சந்தோஷியாது ஊர்த்துவ லோகத்தில் தேவர்களைப்படைத்தனன், அவர்கள் எப்பொழுதுஞ் சுகத்தை யநுபவித்து உள்ளும் புறமும் ஞானவிசிஷ்டர்களாயிருத்தலின் அவர்களைத் தேவர்களென்று சொல்லப்பட்டார்கள். அதன்பின் அதோலோகத்தில் மாநுடரைச்சிருஷ்டித்தனன், அவர்கள்துக்கமும், பிரகாசமும், தமோகுண ரஜோகுணங்களு முடையவர்களானார்கள். அதன்பின் பேய் பூத முதலியன ஜனித்தன. இவ்வகையாகப் பிரபஞ்சத்தோற்றமுண்டாது. வேறொரு சிருஷ்டியுஞ் சொல்லுகிறேன்.

முநிவர்களே! முதலிற் பிரமதேவரிடத்தினின்று மகத்தத்துவம் பிறந்தது. அதன்பின் தன்மாத்திரைகளும் பூதங்களுந்தோன்றின. அதன் பின் விகாரங்களை யுண்டுசெய்யும் இந்திரியங்கள் ஜனித்தன. இவை பிரகிருதிசம்பந்தமாய்ப் பிறந்தன. அதன்பின் பர்வதங்களும் விருக்ஷங்களுமாகியதாவரசிருஷ்டியும், திரியக்கு முதலியசிருஷ்டியும், அதன்பின் ஊர்த்துவலோகத்திலுள்ள தேவசிருஷ்டியும், அதோலோகத்திலுள்ள மாநுடசிருஷ்டியும், அதன்பின் குமாரசிருஷ்டியுஞ் செய்யப்பட்டன. முதற்கூறிய மூன்றும் பிரகிருதியிற் பிறந்து ஜடஸ்வரூபமாதலின் பிராகிருத சிருஷ்டியென்றும், பிற்கூறியவை புத்திபூர்வமாதலின் வைகிருத சிருஷ்டியென்றும் பெயர்பெறும். இனிக் குமாரசிருஷ்டியை விரித்துக் கூறுகின்றேன்.

பிரமதேவன் தன்மனதால் ஸநந்தனன், ஸநகன், ஸநாதனன், ஸநத்குமாரன், ரிபு இவர்களைவர்களையுஞ் சிருஷ்டித்து, நீங்கள் உலகசிருஷ்டியைச் செய்யுங்களெனக் கூறிவிடுப்ப, அவர்கள் சிருஷ்டிசெய்ய விரும்பாது, சிவபெருமானுடைய திருவடிகளைத் தமதிதயதாமரைகளி லிருத்தி ஐம்புலன்களையடக்கி அகண்டமான பெருந்தவஞ் செய்துகொண் டிருந்தார்கள். அது கண்ட பிரமதேவன் மனஞ் சகியாதவனாய்ப் பெருந்தவஞ் செய்து அத்தவத்தால் ஓர்பலனையு மடையாது மனம்வருந்தித் தனது தாமரைமலர்போன்ற கண்களினின்றும் புகைதோன்றி நீர்த்துளிகளைச் சொரிய, அந்நீர்த்துளிகளிலிருந்து பூதங்கள் பசாசங்கள் முதலியன தோன்றின. அவற்றைக்கண்டு பெருவருத்தமடைந்த பிரமதேவன் துக்கக்கடலின் மூழ்கி மூர்ச்சித்து உயிர்மாய்ந்தனன். அப்பொழுது சிவபெருமான் அந்தப் பிரமனுடைய முகத்திற் பதினோருருத்திரர்களைச் சிருஷ்டித்து நீங்கள் சிருஷ்டிகாரியத்தை நடத்துங்களென, அவர்கள் மழுப்படை முதலியவற்றை யேந்தியவர்களாய், படைப்புத்தொழில் மிகக் கடினமானதென்று இயையாதவர்களாய்த் துக்கித்துக்கொண்டோடினர். அக்காரணத்தால் அவர்கள் உருத்திரர்களென்று அழைக்கப்பட்டார்கள். அதன்பின்

னர், சிவபெருமான் அங்கு இறந்துகிடக்கும் பிரமனைக் காத்து உயிர்த்தெழுக எனக்கூற, பிரமதேவன் துயில்புரிந்தெழுந்தவன்போல விழித்துக்கொண்டு சிவபெருமானைக்கண்டு சந்தோஷிக்க, சிவபெருமான் தமது திருக்கரத்தாற் பிரமனைத் தடவி, நீ முன்போலச் சிருஷ்டி காரியத்தைச் செய்கவென்று கூறி, மலரோய்! இவர்கள் உன் படைப்பு கைகூடும்படி உன்னிடத்தினின்றும் என்னாற் படைக்கப்பட்டவர்கள் எனக்கூறினர். மகாதேவனிடம் இவ்வகைய வரத்தையேற்ற மலரோன் மனங்களித்து, "𑌏𑌵𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾 𑌹𑍍𑌯𑌭𑍂𑌤𑍍! 𑌨𑌾𑌮𑌾𑌷𑍍𑌟𑌕𑍇𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌵𑌾𑌚॥ 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌾𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍇 । 𑌨𑌮𑍋 𑌭𑌵𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌯 𑌰𑌸𑌾𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌮𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥ 𑌶𑌰𑍍𑌵𑌾𑌯 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌯 𑌸𑌦𑌾 𑌸𑍁𑌰𑌭𑌿𑌣𑍇 𑌨𑌮𑌃 । 𑌈𑌶𑌾𑌯 𑌵𑌾𑌯𑌵𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥ 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌪𑌤𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌪𑌾𑌵𑌕𑌾𑌯𑌾𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍇 । 𑌭𑍀𑌮𑌾𑌯 𑌵𑍍𑌯𑍋𑌮𑌰𑍂𑌪𑌾𑌯 𑌶𑌬𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮𑌃 ॥ 𑌉𑌗𑍍𑌰𑌾𑌯𑍋𑌗𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 । 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌯 𑌸𑍋𑌮𑌾𑌯 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍃𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥ 𑌏𑌵𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑌂 𑌗𑌿𑌰𑌾 𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌯𑌾 ॥

ஏவம்பகவதாப்ரோக்தோ ப்ரஹ்மாப்ரீதமநாஹ்யபூத்
நாமாஷ்டகேநவிஸ்வாத்மா துஷ்டாவபரமேஸ்வரம். (௪௦)
ப்ரஹ்மோவாச| நமஸ்தேபகவந்ருத்ர பாஸ்கராமிததேஜஸே
நமோபவாயதேவாய ரஸாயாம்புமயாத்மநே. (௪௧)
ஸர்வாயக்ஷிதிரூபாய ஸதாசுரபிணேநமః
ஈஸாயவாயவேதுப்யம் நமஃஸ்பர்ஸமயாத்மநே. (௪௨)
பஸூநாம்பதயேசைவ பாவகாயாமிததேஜஸே
பீமாயவ்யோமரூபாய ஸப்தமாத்ராயதேநமః. (௪௩)
உக்ராயோக்ரஸ்வரூபாய யஜமாநாத்மநேநமః
மஹாதேவாயஸோமாய நமோஸ்த்வம்ருதமூர்தயே. (௪௪)
ஏவம்ஸ்துத்வாமஹாதேவம் ப்ரஹ்மாலோகபிதாமஹః
ப்ரார்தயாமாஸவிஸ்வேஸம் கிராப்ரணிதிபூர்வயா. (௪௫)

என்றிவ்வகையாக மகாதேவனை உலக பிதாமகனான பிரமதேவன் தோத்திரஞ்செய்து கம்பீரமான வார்த்தைகளாற் பிரார்த்தனைசெய்து திவ்விய வரங்கொண்டு தனது சிருட்டித்தொழிலைப் பண்டுபோற் செய்யத்தொடங்கினன். தர்மம்சங்கற்பம் மரீசி பிருகு அங்கிரசன் புலத்தியன் புலகன் கிருது தக்ஷன் அத்திரி வசிட்டன் இவர்களை மாநசிகமாகப் படைத்தனன். இவர்கள் வேதமார்க்கத்தைக் கைக்கொண்டு யாக கிருத்தியாதிகளைச் செய்துகொண்டு புராணாதிகளால் துதிசெய்யப்பட்டவர்களாயிருந்தார்கள். பிரமதேவன் உருத்திரர்களுடைய சகாயத்தால், தன் முகத்தினின்று தேவர்களையும், * கக்ஷத்தினின்று பிதுரர்களையும், பிற்பாகத்தி

* இதனைத் தமிழ் வாயுசங்கிதையில் புயத்தினின்றென்று கூறப்பட்டுள்ளது.

னின்று அசுரர்களையும், குறியிலிருந்து மாநுடர்களையும், குதத்தினின்று இராக்ஷஸர்களையும், தமோரஜப்பிரியர்களான பலவான்களாகிய பிசாசர்களையும், சர்ப்பங்களையும், யக்ஷர்களையும், பூதங்களையும், கந்தர்வர்களையும் படைத்தான். பார்சுவத்தினின்று பக்ஷிகளையும், மார்பினின்று செம்மறியாட்டையும், முகத்தினின்று வெள்ளாட்டையும், பார்சுவங்களிலிருந்து உரகங்களையும், பாதங்களிலிருந்து குதிரை யானை சரபம் கவயமா ஒட்டை மான் முதலிய மிருகங்களையும், விலாப்புறத்தில் பசுக்களையும், 'மயிர்களினின்று ஒஷதிகளையும் மரங்களையுஞ் செடிகளையும் படைத்தனன்.

இவ்வகையாகப்பிரமதேவனுடைய அவயவங்களிலிருந்து அநேக விதமான பூதகணங்கள் யக்ஷர்கள் பிசாசங்கள் அப்சரசுகள் நரர்கள் கின்னரர்கள் ராக்ஷஸர்களும் பசு பக்ஷி முதலிய யாவுங்கூடிய சராசரப் பிரபஞ்சம் ஒன்றன்பின்னொன்றாக நித்தியமாயிருக்கத்தோன்றின. இவற்றின் கர்மங்கள் முதலிற்சிருட்டிசெய்தகாலத்தில் நியமிக்கப்பட்டுள்ளன. அவை கற்பங்கடோறுந் தோன்றிநிற்கும். அவை ஹிம்ஸாஹிம்ஸைகள், மிருதுக் குரூரங்கள், தர்மாதர்மங்கள், சத்தியாசத்தியங்களாம். ஜீவர்கள் தமது கர்மாநுபவங்களால் அவற்றை யநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். மகா பூதங்களிலும்,இந்திரியங்களிலும்,இந்திரியார்த்தங்களிலும், சாரூப்யியாதி பேதமுடைய முக்திகளிலும், பூதங்கட்குப் போகார்த்தமான பிரவர்த்தனையும், அநேகவகையாக அப்பிரமதேவனே ஏற்படுத்தியுள்ளான். பூதங்கட்கெல்லாம் நாமரூபங்களும், பிராகிருதமான பூதங்கட்கு வியாப்தமும், முதலில் வேதசப்தங்களாற்கிரகித்துச்செய்தனன். வேதத்திற்கூறிய ஞானவிசேஷங்களைப் பிரளயாந்தத்திற் பிறந்த ஜீவர்கட்குப் பிரமதேவன் கொடுத்தனனன்றி,தன்னிச்சைப்படி செய்தவனல்லன். சிருட்டியந்தரத்திலிருந்த அநேகவிதமான ருதுலிங்கங்களை அவ்வப்பூதங்கட்கு யுகங்களிற் பிரவர்த்திக்கச்செய்கிறான். இதுவே பிரமதேவனுடைய அங்கத்தாலுண்டான உலகசிருட்டி. மஹதாதி விசேஷாந்தமாக விளங்குவன பிரகிருதியாலுண்டான சிருட்டி. அவ்யக்தமென்னும் பீஜத்தாற் பிறந்ததும், சர்வேசனாகிய சாம்பவமூர்த்தியின் அநுக்கிரகமே விருத்திக்குக் காரணமாகப்பெற்றதும், புத்தியென்னுங் கிளைகளுடையதும், இந்திரியாந்தரங்களாகிய பொந்துகளுடையதும், மகா பூதப்பிரமாணமுடையதும், அமலமான குணங்களே தளிர்களாகவுடையதும், தர்மாதர்மங்களென்னும் மலர்களுடையதும், சுகதுக்கங்களென்னும் பழங்களுடையதும், சமஸ்தபூதங்கட்கும் ரக்ஷகமுடையதுமாகிய அநாதியாயுள்ள விருக்ஷம்போன்ற பிரமதேவன் முன்னர்க்கூறிய பிரமவனத்திற்பொருந்திச் சிருட்டிக்குக் காரணபூதமாக விளங்குவன். அப்பிரமதேவனுக்கு ஆகாயமே சிரம், சந்திர சூரியர்களே விழிகள், திசைகளே செவிகள், பூமியே பாதம், வாயுவே முகம், இவ்வாறு விராட்சுவரூபமாக விளங்கும் அவ்வகைய பிரமதேவனுடைய முகத்திலிருந்து பிராமணரும், தோளிலிருந்து க்ஷத்திரியரும், தொடையி

லிருந்து வைசியரும், பாதத்திலிருந்து சூத்திரரும் பிறந்தார்கள். இவ்வகையாகச் சராசரப் பிரபஞ்சமுழுதும் பிரமதேவனாலேயே படைக்கப்பட்டனவென்று கூறினன்.

பலவகைச்சிருஷ்டியுரைத்தது
முற்றிற்று.

பதினொன்றாவது

பிரம விஷ்ணு வுற்பத்தியுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிய சிருட்டிக்கிரமமானது ஈசுவரானுக்கிரகத்தாலுண்டானதாயிருக்க, அதனைச் சதுர்முகப்பிரமனால் உண்டானதென்று கூறியவிஷயம் எங்கட்குச் சந்தேகமாயிருக்கிறது. தேவசிரேஷ்டனும் விருபாக்ஷியும் சூலபாணியும் காலரூபனும் ஷட்குணைசுவரிய சம்பன்னனும் கபாலதாரியும் நீலலோஹிதனுமாகிய பரமேசுவரன் சமஸ்தமான பிரம விண்டு திக்பாலகர் முதலானோரைச் சிருட்டித்து அவர்கட்காகப் பிரபஞ்சத்தையு முண்டுசெய்து பாலனார்த்தமளித்து விளங்குகின்றானன்றோ? பிரம விஷ்ணுக்களிருவரும் அந்தப் பரமேசனைப்பணிந்து அவனுடைய கட்டளைக்குட்பட்டிருக்கிறார்களன்றோ? அந்தச் சர்வேசன் தன்னுடைய அவயவங்களிலிருந்து பிரம விஷ்ணுக்களைப் பூர்வம் படைத்தனனாதலின், அவர்களுடைய யோகக்ஷேமங்களை யெப்பொழுதுஞ் செய்துகொண்டிருக்கும் அநாதிநாதனாகிய சிவபகவான் பிரமதேவனுக்கு எவ்வாறு புத்திரனாயினான்? பிரமனும் விஷ்ணுவும் ஒருவரிடம் ஒருவர் பிறந்ததாகவும் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். சமஸ்த பூதங்கட்கும் ஏதுபூதர்களான இவர்கட்குப் பிறப்பு எப்படி யுண்டாயது? வாயுபகவானே! தேவரீர் பிரமதேவருடைய சிஷராதலாலும் உமக்குத்தெரியாத விஷயங்கள் கிடையாமையாலும் இவ்விஷயத்தைப்பிரமதேவராற்கேள்வியுற்றவகையேயெங்கட்குச்சொல்லவேண்டுமெனக்கேட்க, வாயுதேவன் முனிவர்களை நோக்கிக் கூறலாயினன். ருஷிசிரேஷ்டர்களே! அருமையான விஷயத்தை வினவினீர்கள். இதே சங்கதியை யான் பிரமதேவனைக் கேட்டகாலத்தில், அவர் எனக்குக் கூறியவகையே சொல்லுகின்றேன். மகேசுவரனிடத்தில் ருத்திர விஷ்ணு பிரமர்கள் முறையே பிறந்தார்கள். இம்மூவரும் சர்வேசனாகிய பரமசிவனை நோக்கிப் பெருந்தவஞ்செய்து மகிமாதிசயங்களை யடைந்தார்கள். அவர்களில் உருத்திரன் பூர்வகாலத்திற் பிரம விஷ்ணுக்களிருவரையும் படைத்தனன். மற்றொருகற்பத்திற் பிரமதேவன் விஷ்ணுவையும் ருத்திரனையும் உண்டுசெய்தனன். வேறொரு கற்பத்தில் விஷ்ணு உருத்திரனையும் பிரமனையும் உண்டுசெய்தனன். இவ்வகையாக ஒருவர் மற்றவரைப்படைத்தும், ஒருவரையொருவர் வெல்லக் கருதியும், வென்றும், கற்பங்களில் நடத்திய விசேஷங்களைக்கண்ட முனிவர்கள் அவர்கள் பிரபாவங்களைச் சொல்லிக்

கொள்வார்கள். முன் நடந்த தற்புருஷகற்பத்தில், ஆயிரந் தேவவருஷங்கள்வரையில், நாராயணன் மேகவடிவாகி, சர்வலோகநாயகனுகிய சாம்பவமூர்த்தியைச் சுமந்தனன். அக்காரணத்தால், அது மேகவாகன கற்பமென்று பெயர்வழங்கலாயிற்று. சிவபெருமான் விஷ்ணுவைச் சந்தோஷித்துச் சிறந்த வரங்களைக்கொடுத்து அவ்விஷ்ணுவால் உலகங்களைப் படைக்கச்செய்கையில், பிரமதேவன்கண்டு அசூயைகொண்டு, விஷ்ணுவே! உனக்கு இவ்வகைய பிரபுத்துவம் வந்தகாரணம் இன்னதென்றறியானறிவேன். யானும் அந்தச்சர்வேசனைநோக்கித் தவஞ்செய்து உன்னைப்படைப்பேனென்றுகூறி, அரும் பெருந் தவஞ்செய்து, சிவபெருமானைப் பிரத்தியக்ஷமாகத்தரிசித்து, பகவானே! விசுவேசுவரா! மகேசுவரா! தேவரீருடைய வலப்புறத்தில் யானும் இடப்புறத்தில் விஷ்ணுவுமாகப்பிறந்தோம். எனக்குச்சமானமாக அந்த விஷ்ணுவுஞ் சிருஷ்டியைச் செய்கின்றான். தேவரீருடைய வரவிசேஷத்தால் என்னை யவமதிக்கின்றான். எனக்குத் தேவரீரிடத்திலிருக்கும் பத்தியைக்காட்டிலும் விஷ்ணுவுக்கு விசேஷபக்தியுண்டோ? நாங்கள் சமானஸ்தர்களாயிருக்க, அவனுக்குமாத்திரம் மேம்பட்ட அதிகாரங்களைக் கொடுத்தீர்கள். எனக்கும் அவ்வகைய சிறப்பையளிக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய, பகனென்னுஞ் சூரியனுடைய கண்களைப்பறித்த சங்கரன் தயாமூர்த்தியாய்ப் புன்சிரிப்புடன் அப்பிரமனுக்குஞ் சிறந்த சத்தியைக்கொடுத்தனன். உடனே பிரமன் கம்பீரமாக நடந்து திருப்பாற்கடலையடைந்து சூரியகாந்தியையொப்பப் பிரகாசித்து, பொன்னாலும், இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற திவ்வியவிமானத்தில் ஆதிசேஷனுடைய சரீரமாகிய சயனத்தில் யோகநித்திரை செய்துகொண்டிருக்குஞ் செந்தாமரைக்கண்ணும், சதுர்ப்புஜமும், கம்பீரமான சரீரமும், நவரத்தினகஜிதமான ஆபரணமும், சங்கசக்கரதாரணமும், சந்திரவிம்பம்போன்ற முகமும், ஸ்ரீவற்சம்பொருந்திய மார்பும், சிறுநகையும், பூதேவியின் மெல்லியகரங்களாற் பரிசித்தலாற் செவக்கும்பாதங்களுமுடையவனுய் விளங்குகின்ற விஷ்ணுமூர்த்தியைக் கண்டு, கம்பீரமான வார்த்தைகளால், விஷ்ணுவே நீ பூர்வம் என்னை விழுங்கிப்படைத்த வகையே இப்பொழுது யானும் உன்னை விழுங்கிப் படைப்பேனென்று கூற, விஷ்ணு உடனே எழுந்து புன்னகைசெய்துகொண்டிருக்க, பிரமன் அவ்விஷ்ணுவை விழுங்கி, மீண்டுந் தன்புருவங்களினிடையே தோற்றுவித்தனன். அந்தச்சமயத்தில் அவ்விருவருடைய வன்மையையுங் காணக்கருதிய கடவுணாயகன் அருந்தவத்தாலறியக் கூடிய திருமேனி வெளிப்பட்டுநிற்ப, பிரமவிஷ்ணுக்களிருவரும் பெருங்களிப்புடன் சாஷ்டாங்கமாகப் பணிந்து துதிசெய்ய, அவர்கட்கு அநுக்கிரகஞ்செய்து அந்தர்த்தானமாயினன்.

பிரமவிஷ்ணுவுற்பத்தியுரைத்தது

முற்றிற்று.

பன்னிரண்டாவது

உருத்திரோற்பத்தியுரைத்த அத்தியாயம்.

வாயுதேவன் கூறுகின்றான்: முனிவர்களே! பிரதிகற்பங்களிலும் பிரமதேவனுடைய சிருஷ்டி நிறைவேறும்படி சிவபெருமான் அநுக்கிரகிக்க உருத்திரன் தோன்றுவான். அவ்வரலாற்றினைச் சொல்லுகின்றேன். அண்டங்களில் விளங்கும் பிரமன் கற்பங்கடோறும் பிரஜைகளைப் படைத்து அவர்கள் விருத்தியடையாமையின் தன் படைப்புப்பரவாமைக்காக மனம்வருந்த, அத்துக்கத்தை விலக்கவும் பிரஜைகள் விருத்தியடையவும் அவ்வக்கற்பங்களில், காலஸ்வரூபனும் பரமசிவனாற் கட்டளைசெய்யப்பட்டவனும் நீலலோகிதனும் உருத்திரகணாதிபனுமாகிய உருத்திரபகவான் பிரமனிடந்தோன்றி அப்பிரமனை யநுக்கிரகிக்கின்றான். அந்த ருத்திரனே ஷட்குணைசுவரிய சம்பன்னனும், ஈசனும், தேஜோமயசுவரூபனும், அநாமயனும், சமஸ்தபூதங்களையுங் கற்பாந்தரங்களிற் சங்கரிப்பவனும், சிறந்த ஐசுவரியவானும், பரமேசனாற் பிரேரேபிக்கப் பட்டவனும், பரமேசுவரசம்பந்தமான சக்தியுடன் கூடியிருப்பவனும், சிவசின்னங்களுடையவனும், சிவநாமந் தரித்தவனும், சிவரூபமே யுடையவனும், எல்லாத்தொழில்களிலுஞ் சமர்த்தனும், சிவசமானமானவனும், சிவாக்கினையைப் பரிபாலிப்பவனும், ஆயிரஞ்சூரியர்கள் ஒரேகாலத்திற் பிரகாசித்தாற்போன்ற திருமேனியுடையவனும், சந்திரரேகையைப் பூஷணமாகவுடையவனும், சர்ப்பங்களையே ஹார கேயூர குண்டல கங்கண கடிசூத்திரங்களாகவுடையவனும், முன்னே காலஞ்செய்த பிரமவிஷ்ணுக்களுடைய கோடாகோடிசிரங்களை மாலையாகவணிந்த தோள்களையும் மார்பையுமுடையவனும், கங்கையின் அலைகளால் நனைக்கப்பட்ட ஜடையுடையவனும், கைலாயகிரியைப்போன்ற பெரிய வெள்ளிய இடபவாகனமுடையவனும், மேககோஷம்போன்ற கண்டத்தொனியுடையவனும், பிரளயகாலாக்கினிபோன்ற காந்தியுடையவனும், கோரரூபதாரியுமாகப் பிரத்தியக்ஷமாய்த் தரிசனந்தந்து பிரமனுக்கு ஞானத்தையளித்துச்சிருட்டியிற் சகாயஞ்செய்கின்றான். இவ்வகைய உருத்திராநுக்கிரகத்தாற் பிரதிகற்பங்களிலும் பிரமதேவன் பிரவாகரூபமும் நித்தியமுமாகிய சிருட்டியைச் செய்கின்றான். ஒருகற்பத்தில், நீலலோகிதனாகிய இவ்வுருத்திரன் சிருஷ்டி செய்யவேண்டுமென்னும் விருப்புடைய பிரமனாற் பிரார்த்திக்கப்பட்டவனாய், ஜடையையுடையவர்களும், பயமற்றவர்களும், நீலகண்டர்களும், திரிநேத்திரர்களும், ஜராமரணமற்றவர்களும், சூலபாணிகளும், தனக்கொப்பானவர்களுமாக எண்ணிறந்த ருத்திரர்களை மனத்தாற் சிருட்டி செய்ய, அவ்வுருத்திரர்களைப் பிரமன்கண்டு, சர்வேசனாகிய உருத்திர பகவானே! யான் இவ்வகைய பிரஜைகளைக்கண்டதேயில்லை. இறக்கத்தக்கவர்களாகவுஞ் சிலரைப்படைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, பரமேசன்சிரித்து, ஜராமரணமுடைய பிரஜைகளைச் சிருட்டிசெய்யமாட்டேன்.

அவ்வகையவர்களை நீயே படைக்கக்கடவாய். என்றுற் படைக்கப்பட்ட இவர்கள் உன் சிருட்டிக்குத் துணைநிற்பவர்களாய், எப்பொழுதும் என்னுடன் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்களென்றுகூறி, உருத்திரகணங்களுடன் கூடிச் சிருட்டித்தொழிலை நிறைவேற்றிக்கொண் டிருந்தனன். அதுமுதற் கொண்டு சர்வேசன் மரணயுக்தமான சிருட்டியைச் செய்யாதிருக்கிறுன்.

உருத்திரோற்பத்தியுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்ருவது

பிரமன் உருத்திரனைத்துதித்த அத்தியாயம்.

பிரமதேவன் செய்த சிருட்டிகளெல்லாம் விருத்தியடையாமல் மனத்திருப்தியின்றித் துக்காக்கிரந்தனுய், இனி மாதர் முயக்கத்தால் உண்டாகுஞ் சிருட்டியைச் செய்யவேண்டுமென்று கருதியவனுய், சர்வேசனுற்பெண்கள் சிருட்டிசெய்யப்படாமையின், தானே சுதந்தரமாக மாதர் சிருஷ்டிசெய்யவலியற்றவனுய் இவ்வகையாகவே சிருஷ்டிசெய்யவேண்டுமென்று தீர்மானித்து, சர்வேசுவரானுக்கிரகத்தையடையவேண்டுமென்று விரும்பி, முதற்பட்டதும் பரமானதும் அநந்தமானதும் உலகங்களிற் பாவிக்கத்தக்கதும் சூக்குமத்திற்குஞ் சூக்குமமானதும் பரிசுத்தமானதும் மனதாலடையத்தக்கதும் மனோகரமானதும், நிர்க்குண நிஷ்பிரபஞ்ச நிட்கள நிரந்தர நித்தியமானதும், ஈசுவரனைப்பிரியாததுமாகிய சக்தியென்னும் உமாதேவியைப் பாகமாகவுடைய சிவபெருமானை இதயதாமரையிலிருத்தி உக்கிரமான தவத்தைச்செய்கையில், சர்வேசன் அத்தவத்திற்கு மிகுதியும் மனங்களித்துத் தன்னுடைய ஓரமிசத்தால் அர்த்தநாரீசுவரமூர்த்தியாகிப்பிரத்தியட்சமாயினன் அப்படிக்காட்சியளித்தபராத்பரனும், ஜகத்துக்குக் காரணனும், அவ்வியக்த சுரூபனும், அத்விதீயனும், பாவிகளாற் காணப்படாதவனும், உலகங்களையெல்லா முண்டுசெய்பவனும், சர்வலோகமாதாவைப்பாகத்திலுடையவனும், சாந்தனும், அநந்தமகிமைகளுடையவனும், சர்வவியாபியுமான பகவானைப் பிரமதேவன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலியஸ்தனுய்ப் பக்தி சிரத்தைகளுடன் மதுரமான வியாகரணலக்ஷண சப்தத்துடன் கூடிய ஸ்தோத்திரங்களால் மஹாதேவனையும் மஹாதேவியையுந் தோத்திரஞ் செய்யலாயினன்.

„𑌜𑌯 𑌦𑍇𑌵 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌜𑌯𑍇𑌶𑍍𑌵𑌰 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰 । 𑌜𑌯 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣
𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌜𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌰𑌾𑌧𑌿𑌪 ॥ 𑌜𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌿 𑌜𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌨𑌾
𑌯𑌿𑌕𑍇 । 𑌜𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌦𑍂𑌰𑌾𑌂𑌗𑌿 𑌜𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍁𑌂𑌦𑌰𑌿 ॥ 𑌜𑌯𑌾𑌮𑍋𑌘𑌮𑌹𑌾
𑌮𑌾𑌯 𑌜𑌯𑌾𑌮𑍋𑌘𑌮𑌨𑍋𑌰𑌥 । 𑌜𑌯𑌾𑌮𑍋𑌘𑌮𑌹𑌾𑌲𑍀𑌲 𑌜𑌯𑌾𑌮𑍋𑌘𑌮𑌹𑌾𑌬𑌲 ॥
𑌜𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌗𑌨𑍍𑌮𑌾𑌤 𑌜𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌗𑌨𑍍𑌮𑌯𑌿 । 𑌜𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌗𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌰𑌿 𑌜𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌗𑌤𑍍𑌸𑌖𑌿 ॥

𑌜𑌯𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯 𑌜𑌯𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑌾𑌲𑌯 । 𑌜𑌯𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑌾𑌕𑌾𑌰 𑌜𑌯𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑌾𑌨𑍁𑌗 ॥ 𑌜𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌿 𑌜𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑌪𑌾𑌲𑌿𑌨𑌿 । 𑌜𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍍𑌰𑌿 𑌜𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑌨𑌾𑌯𑌿𑌕𑍇 ॥ 𑌜𑌯𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌾𑌯𑌤𑍍𑌤 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌬𑍃𑌂𑌹𑌣 । 𑌜𑌯𑍋𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍋𑌤𑍍𑌥 𑌹𑍁𑌤𑌭𑍁𑌗𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕 ॥ 𑌜𑌯𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑍃𑌶𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑍇 । 𑌜𑌯𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌤𑍍𑌮𑌶𑌾𑌕𑍍𑌤𑍍𑌯𑌂𑌶 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌵𑌿𑌶𑍍𑌵𑌚𑌰𑌾𑌚𑌰𑍇 ॥ 𑌜𑌯𑌨𑌾𑌨𑍈𑌕𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯 । 𑌜𑌯𑌾𑌸𑍁𑌰𑌶𑌿𑌰𑍋𑌨𑌿𑌷𑍍𑌠 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑍁𑌗𑌕𑌦𑌮𑍍𑌬𑌕 ॥ 𑌜𑌯𑍋𑌪𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌾 𑌸𑌂𑌵𑌿𑌧𑌾𑌨𑌪𑌟𑍀𑌯𑌸𑌿 । 𑌜𑌯𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌿𑌤𑌸𑌂𑌸𑌾𑌰 𑌵𑌿𑌷𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑍋𑌦𑍍𑌗𑌮𑍇 ॥ 𑌜𑌯𑌪𑍍𑌰𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑍌𑌰𑍍𑌯𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌣 । 𑌜𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑍂𑌤 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌪𑌰𑌵𑍈𑌭𑌵 ॥ 𑌜𑌯𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌥 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌪𑌰𑌮𑌾𑌮𑍃𑌤 । 𑌜𑌯𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍁𑌧𑌾𑌸𑍍𑌰𑍋𑌤𑌃𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑌿 ॥ 𑌜𑌯𑌾𑌤𑌿𑌘𑍋𑌰𑌸𑌂𑌸𑌾𑌰 𑌮𑌹𑌾𑌰𑍋𑌗𑌭𑌿𑌷𑌗𑍍𑌵𑌰 । 𑌜𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌮𑌲𑌾𑌜𑍍𑌞𑌾𑌨 𑌤𑌮𑌃𑌪𑌟𑌲𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌕𑍇 ॥ 𑌜𑌯𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑍇 𑌜𑌯𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌭𑍈𑌰𑌵𑌿 । 𑌜𑌯𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤 𑌜𑌯𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌮𑌰𑍍𑌦𑌿𑌨𑌿 ॥ 𑌜𑌯𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌜𑌯𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌿𑌕𑍇 । 𑌜𑌯𑌪𑍍𑌰𑌚𑍁𑌰𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌙𑍍𑌗 𑌜𑌯𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌦𑌾𑌯𑌿𑌨𑌿 ॥ 𑌕𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑍇𑌪𑌰𑌂𑌧𑌾𑌮 𑌕𑍍𑌵𑌚𑌤𑍁𑌚𑍍𑌛𑌂𑌵𑌚𑍋𑌮𑌮 । 𑌤𑌥𑌾𑌪𑌿𑌭𑌗𑌵𑌨𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍𑌤𑌂𑌕𑍍𑌷𑌮𑌸𑍍𑌵𑌮𑌾𑌂 ॥

ஜயதேவமஹாதேவ ஜயேஶ்வரமஹேஶ்வர, ஜயஸர்வகுணஶ்ரேஷ்ட ஜய ஸர்வஸுராதிப. (௧௬) ஜயப்ரக்ருதிகல்யாணி ஜயப்ரக்ருதிநாயிகே, ஜயப்ரக்ருதிதூராங்கி ஜயப்ரக்ருதிஸுந்தரி. (௧௭) ஜயாமோகமஹாமாய ஜயாமோகமநோரத; ஜயாமோகமஹாலீல ஜயாமோகமஹாபல. (௧௮) ஜயவிஶ்வஜகந்மாத ர்ஜயவிஶ்வஜகந்மயி, ஜயவிஶ்வஜகத்தாத்ரி ஜயவிஶ்வஜகத்ஸகி. (௧௯) ஜயஶாஶ்வதிகைஶ்வர்ய ஜயஶாஶ்வதிகாலய, ஜயஶாஶ்வதிகாகார ஜயஶாஶ்வதிகாநுக. (௨௦) ஜயாத்மத்ரயநிர்மாத்ரி ஜயாத்மத்ரயபாலிநி, ஜயாத்மத்ரயஸம்ஹர்த்ரி ஜயாத்மத்ரயநாயிகே. (௨௧) ஜயாவலோகநாயத்த ஜகத்காரணப்ரும்ஹண, ஜயாபேக்ஷாகடாக்ஷாத்த ஹுதபுக்புக்தமௌக்திக. (௨௨) ஜயதேவாத்யவிஜ்ஞேய ஸ்வாத்மஸூக்ஷ்மத்ருஶோஜ்வலே, ஜயஸ்தூலாத்மஶாக்த்யம்ஶ வ்யாப்தவிஶ்வசராசரே. (௨௩) ஜயநாநைகவிந்யஸ்த விஶ்வதத்வஸமுச்சய, ஜயாஸுரஶிரோநிஷ்ட ஶ்ரேஷ்டாநுககதம்பக. (௨௪) ஜயோபார்ஜித ஸம்ரக்ஷா ஸம்விதாநபடீயஸி, ஜயோந்மூலிதஸம்ஸார விஷவ்ருக்ஷாம்குரோத்கமே. ஜயப்ராதேஶிகைஶ்வர்ய வீர்யஶௌர்யவிஜ்ரும்பண, ஜயவிஶ்வபஹிர்பூத நிரஸ்தபர வைபவ. (௨௫) ஜயப்ரணீதபஞ்சார்த ப்ரயோகபரமாம்ருத, ஜயபஞ்சார்தவிஜ்ஞாந ஸுதாஸ்ரோதஃ ஸ்வரூபிணி. (௨௭) ஜயாதிகோர ஸம்ஸார மஹாரோக பிஷக்வர, ஜயாநாதிமலாஜ்ஞாந தமஃபடலசந்த்ரிகே. (௨௮) ஜயத்ரிபுரகாலாக்நே ஜயத்ரிபுர பைரவி, ஜயத்ரிகுணநிர்முக்த ஜயத்ரிகுணமர்திநி. (௨௯) ஜயப்ரமதஸர்வஜ்ஞ ஜய ஸர்வப்ரபாதிகே, ஜயப்ரசுரதிவ்யாங்க ஜயப்ரார்திததாயிநி. (௩௦) க்வதேவதேபரந்தாம க்வவயம்க்வசநோவசஃ, ததாபிபகவர்பக்த்யா ப்ரலபந்தம்க்ஷமஸ்வமாம். (௩௧)

இந்தத்தோத்திரங்கள் பிரமதேவனாற் பரமசிவனையும் பார்வதிதேவியையு நோக்கிச்செய்யப்பட்டன. இதனைப் பக்திசிரத்தைகளுடன்

துதிசெய்பவர்கள் இஷ்டகாமியங்களையும் மோக்ஷத்தையும் அடைவார்கள். அர்த்தநாரீசனாகிய சர்வலோகநாயகனுடைய திருவருளினால், சர்வாபீஷ்டங்களையும்பெற்றுப் புண்ணியலோகத்தில் வாழ்வார்கள்.

பிரமன் உருத்திரனைத்துதித்தது

முற்றிற்று.

பதினான்காவது

மாதர்சிருஷ்டியுரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! இவ்வாறு துதிசெய்த பிரமதேவன் விஷயத்திற் சந்தோஷித்த அர்த்தநாரீசனாகிய பகவான் மேகம்போன்ற தொனியும், மதுரகரமும் கம்பீரமுமாகிய சிறந்தபொருளமைந்த வாக்கியத்தாற் புன்னகையுடன், மகனே! உன்தோத்திரத்திற்குக் களித்தேன். பிரஜாவிர்த்திகருதி நீதவஞ்செய்தனை. உன்விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்று, தன் வாமபாகமாகிய திவ்விய குணமுடைய பராத்பரையாகிய சக்தியும், ஜன்மமிருத்யுஜராதிகளற்ற உலகமாதாவும் மனோவாக்குகளுக் கெட்டாதவளுமான பார்ப்பதியைத் தன்சரீரத்தினின்று பிரித்தனன். பரமேசுவரியும் சமஸ்தலோகங்கட்கும் மகேசுவரியும் சர்வஜ்ஞையும் சர்வவியாபியுமாகிய மாதேவியைப் பிரமதேவன் நமஸ்கரித்து, தேவி! தேவனாகிய சாம்பவமூர்த்தியால் யான்பிறப்பிக்கப்பட்டுப் பிரஜைகளைப் படைக்கும்படி நியமிக்கப்பட்டு, மனதால் தேவாதியரையும் சமஸ்த ஜகத்தையும் படைத்தேன். அவ்வாறு என்னாற்படைக்கப்பட்ட படைப்புகள் விருத்தியடைந்தில. ஆதலின் இனி ஸ்திரீபுருஷசங்கமத்தால் உலகவிருத்தியை யுண்டுசெய்யவேண்டுமென்று இச்சைகொண்டேன். பூர்வம் சர்வேசுவரனால் ஸ்திரீசமுகங்கள் படைக்கப்படாமையின் அதனைப்படைக்க எனக்குச் சாத்தியப்படவில்லை. எல்லாச்சக்திகளும் உன்னாலேயே யுண்டாதலின் உன்னையான் அதுவிஷயமாகப் பிரார்த்திக்கின்றேன். சராசரப்பிரபஞ்சம் ஈடேறும்படி உன்னுடைய ஓரம்சத்தால் என் புதல்வனான தக்ஷனுக்கு மகளாய் அவதரிக்கவேண்டுமெனப்பிரார்த்திக்க, பார்ப்பதி தேவி தன் புருவமத்தியில் ஓர்சக்தியை யுண்டுசெய்தனள். அப்பொழுது சிவபெருமான் அத்தோன்றிய சக்தியைநோக்கி, நீ பிரமன் விருப்பின்படிசெய்கவெனக்கட்டளையிட்டு உமாதேவியுடன் திருக்கைலாயகிரியை யடைந்தனன். சிவபெருமானுடைய வலப்புறத்துதித்த பிரமதேவன் பார்ப்பதிதேவியின் புருவமத்தியிற்றோன்றிய சக்தியைப்பணிந்து, நீ என்மகனாகிய தக்ஷப்பிரஜாபதிக்குமகளாகி உலகவிருத்தியை யுண்டுசெய்யவேண்டுமென்றிரப்ப, அச்சக்தி அப்படியே தக்ஷப்பிரஜாபதிக்குத் தனயையாயினள். அதுமுதலாக மாதர்களும் புருஷர்களுஞ் சையோகஞ்செய்து மக்களைத் தருவாராயினர்கள். இந்தச்சரித்திரத்தை வாசித்தவர்களும் கேட்டவர்

களும் சொன்னவர்களும் சற்புத்திரர்களைப்பெற்று நெடுங்காலம் ஜீவித்திருப்பார்களென்று வாயுதேவன் கூறிச் சிவபெருமானைப் பணிந்தனன்.

மாதர்சிருஷ்டியுரைத்தது முற்றிற்று.

பதினைந்தாவது

பிரமவமிசோற்பத்தியுரைத்த அத்தியாயம்.

சிவகடாக்ஷம்பெற்ற பிரமதேவன் தனக்குக்கிடைத்த நாசரகிதமான சத்தியால் மிதுனசம்பந்தமாகப் படைக்கக்கருதித் தான் இருகூறாக, விராஜனென்னும் புருஷனும், சதரூபையென்னும் ஸ்திரீயுமானன். விராஜனென்பவனைச்சுவாயம்புமநுவென்றுங்கூறுவர். சதரூபையென்பவள்தவஞ்செய்து சுவாயம்புமநுவைக் கணவனாகக்கொண்டு பிரியவிரதன் உத்தானபாதனென்னும் இருபுதல்வர்களையும், ஆகூதி பிரசூதியென்னும் இரு புத்திரிகளையும் பெற்றனன். இந்நால்வரேயுலகிலுள்ள மாநுடர்கட்கெல்லாங் காரணபூதர்கள், சுவாயம்புவானவன் ஆகூதியை உருசியென்னும் பிரஜாபதிக்கும், பிரசூதியைத் தக்ஷப்பிரஜாபதிக்கும் மணமுடித்தனன். ஆகூதிக்கு யஜ்ஞனென்னும் புதல்வனும், தக்ஷிணையென்னுங் கன்னிகையும் மக்களாகத் தோன்றினர். தக்ஷப்பிரஜாபதிக்கும் பிரசூதிக்கும் உலகமாதர்க்களாகிய இருபத்துநான்கு புத்திரிகள் பிறந்தார்கள். அவர்களில், சிரத்தை லக்ஷ்மீ திருதி புஷ்டி துஷ்டி மேதை கிரியை புத்தி லஜ்ஜை வபு சாந்தி சித்தி கீர்த்தி யென்னும் பதின்மூவரையுந் தருமனென்பவனுக்குக் கொடுத்தனன். மற்றைப்பதினொருவரில், கியாதியென்பவளைப் பிருகுவுக்கும், சதியை ருத்திரனுக்கும், சம்பூதியை மரீசிக்கும், ஸ்மிருதியை அங்கிரசுவுக்கும், பிரீதியைப்புலகனுக்கும், க்ஷமையைக் கிருதுவுக்கும், சந்நதியைப் புலஸ்தியனுக்கும், அநசூயையை அத்திரிக்கும், ஊர்ஜையை வசிட்டனுக்கும், சுவாஹாதேவியை அக்கினிக்கும், சுவதாதேவியைத் தென்புலத்தார்க்குங் கொடுத்தனன். மூத்தபுத்திரிகள் பதின்மூவரைமணந்த தருமன் அவர்களிடமாகக் காமமுதல்யசசீறாகிய பதினைந்தையும் பெற்றனன். அவருள், சிரத்தையென்பவள் காமமும், லக்ஷ்மி சர்ப்பமும், திருதி நியமமும், புஷ்டி சந்தோஷமும், துஷ்டி லாபமும், மேதை சுருதமும், கிரியை தண்டமும், சமயமும் புத்திபோதமும், அப்பிரமாதமும், லஜ்ஜை விநயமும், வபுவிவசாயமும், சாந்திக்ஷேமமும், சித்திசுகமும், கீர்த்தி யசசும் முறையே பெற்றார்கள். அதர்மனுக்கும் இம்சைக்கும் அதர்மலக்ஷணமுடைய நிகிர்திமுதலிய புத்திரர்கள் பிறந்தார்கள். உருத்திரபாரியையான சதிதேவி தன் கணவனை யிகழ்ந்தகாரணத்தால், தாக்ஷாயணி யென்னும் பெயருடன் பொருந்திய பாஞ்சபௌதிக சரீரத்தைவிடுத்துத் தக்ஷனையும் அவன் மனைவி முதலானரையு மிகழ்ந்து

இமாசலமன்னனுக்கும் மேனைக்கும் புதல்வியாயினள். அது கண்ட சிவபெருமான் கோபத்தால் அநேக உருத்திரர்களைப்படைத்தனன்.

பிருகுவின் மனைவியாகிய கியாதியென்பவள் லக்ஷ்மியென்னும் பெண்ணையுந் தாதா விதாதாவென்னும் பிள்ளைகளையும் பெற்றனள். மரீசியின் மனைவியாகிய சம்பூதி யென்பவள் பௌரணனென்னும் புதல்வனையும் துஷ்டி திருஷ்டி கிருஷ்டி அபசிதி யென்னும் நான்குபுதல்வியரையும் பெற்றனள். அங்கிராவின் மனைவிஸ்மிருதியென்பாள் வயிற்றில் ஆக்கினித்திரன் பரதன், சரபனென்னும் புதல்வரும், குரு சினீவாலி இராகை அநுமதியென்னும் நான்கு புதல்வியரும் பிறந்தார்கள். புலஸ்தியன் மனைவியாகிய பிரீதியென்பாள் * தந்நோதாக்கினியென்னும் புதல்வனைப் பெற்றனள். இப்புதல்வனே சுவாயம்பு மந்வந்தரத்தில் அகத்திய னாயினன். புலகன்மனைவி க்ஷமையென்பவள் கருத்தமன் ஆசுரியன் சயிட்டுணு இவர்களைப்பெற்றனள். கிரதுவின்மனைவி சந்நதியென்பவள் வாலகில்லியரென்னும் அறுபதினாயிரவரைப் பெற்றாள். இவ்வாலகில்லியர்கள் சூரியனைப் புடைசூழ்ந்து ஆகாயத்திற் சஞ்சரிப்பார்கள். அத்திரியின் மனைவி அநசூயையென்பவள் சத்தியநேத்திரன் ஹவ்வியன் ஆபோமூர்த்தி சனீசன் சோமன் என்னுமைந்து புதல்வர்களையுஞ் சுருதியென்னும் புதல்வியையும் பெற்றாள். சுருதி சங்கபதனைப் பெற்றாள். வசிஷ்டன் மனைவி ஊர்ஜையென்பவள் இரஜன் காத்திரன் ஊர்த்தவாகு சவனன் அநயன் சுதபா சுக்கிரனென்னும் ஏழு புத்திரர்களையும் புண்டரீகை யென்னும் புதல்வியையும் பெற்றாள். அக்கினியின் மனைவி சுவாஹா தேவியானவள் பாவகன் பவமானன் சுசியென்பவர்களைப் பெற்றாள். இவருள் மின்னலிற் பாவகனும், அரணியிற் பவமானனும், சூரியனிடத்திற் சுசியும் விளங்குவரென்று பெரியோர்கூறுவர். இம்மூவர்க்கும் முறையே ஹவ்வியவாகனன் கவ்வியவாகனன் ஸஹரக்ஷனென மூவருதித்தனர். இவர்கள் தேவர் தென்புலத்தோர் அசுரர்கட்கு அக்கினியாக முறையே பொருந்தியிருப்பார்கள். இம்மூவருடைய வமிசமாகத் தோன்றிய நாற்பத்தொன்பது வகை அக்கினி காரியஞ்செய்தால், காளகண்டமும் திரிநேத்திரமும் சதுர்ப்புஜமும் ருஷபவாகனமும் பார்ப்பதிபாகமும் சந்திரசூடமும் சர்ப்பாபரணமும் கங்காநதி பிரவாகிக்குஞ் சடைமுடியுமுடைய உமாபாகராகிய சாம்பவமூர்த்திக்குப் பிரீதியுண்டாகி அவர்கருணையால் ஜன்மாந்தர வினைத்தொடக்கொழிந்து இஷ்டசித்திகளை யெய்தப் பெறுவார்கள். தென்புலத்தோர் அக்கினிஷ்வாத்தன் முதலியோரும், பர்ஹிஷதன் முதலியோருமாவர். இவரில் முற்கூறப்பட்டவர் அயஜ்வரும் பிற்கூறப்பட்டவர் யஜ்வருமாவர். இவர் மனைவியாகிய ஸ்வதாதேவியென்பாள் முறையே மேனை தரணியென்னு மிருபெண்களைப் பெற்றாள். அவருள் மேனை இமவானைக்கூடி மைந்நாகனையும் கிரவுஞ்சனையும் கங்கையையும்

* அகத்தியனே தோன்றினனெனத்தமிழ் வாயுசங்கிதை கூறும்.

உமாதேவியையும் பெற்றுள். தரணிமேருமன்னனைக்கூடி மந்தரகிரியையும் ஆயதி நியதி வேலையென்னு மாதர்களையும் பெற்றுள். அவருள் ஆயதியும் நியதியும் பிருகுபுத்திரர்களாகிய தாதா விதாதாவென்பவர்களை முறையே மணந்தார்கள். வேலை யென்பவள் கடலைக்கலந்து சாவன்னியென்னும் பெண்ணைப்பெற்று, பிராசீன பர்ஹிசுக்குக்கொடுத்தாள். பிராசீனபர்ஹிசுக்கும் சாவன்னிக்கும் பிராசேதசரெனப் பெயர்பெற்ற பத்துப்புத்திரரைப்பெற்றுள். சிவபெருமானுடைய கோபத்தால் தக்ஷன் சாக்ஷுஷமந்தவந்தரத்திற் சாபமேற்று, சுவாயம்பு மந்வந்தரத்தில் அந்தமரபிற் புதல்வனகத் தோன்றினன். இவ்வகையாக அம்மரபு விருத்தியாயது. கேட்டீரோமுநிவர்களே! பிரமவமிசமுழுவதையும் உங்கட்கு விரித்துச்சொன்னேன். இனி மன்னவர் மரபையுங் கூறுகின்றேன். வெற்றிபொருந்திய இக்ஷுவாகு - அம்பரீஷன் - யயாதி நகுஷன்முதலிய அரசர்கள் சூரிய சந்திரவமிசங்களிற் பிறந்த பேர்ப்போனவர்கள். இம்மன்னர் சரிதங்களை வரன்முறையாகக் கூறுவதாற் சொல்கின்ற எனக்கும் கேட்கின்ற உங்களுக்கும் உண்டாகும் பலன் சிறிதுமில்லையாதலின் அவற்றைவிலக்கி, நாம் புண்ணியம்பெறும்படி சிவசரிதங்களையே யின்னுஞ்சொல்ல விரும்புகின்றேனென்று வாயுதேவன் கூறினன்.

பிரமவமிசோற்பத்தியுரைத்தது

முற்றிற்று.

பதினாறுவது

தக்கன்முதலானோர் சாபமேற்ற அத்தியாயம்.

முநிவர்கள் வாயுதேவனைப்பணிந்து ஸ்வாமீ! சிவபெருமானே சர்வலோகநாயகனாதலின் அந்தப்பகவான் விஷயத்திலேயே அடியேங்களுடைய திரிகரணங்களும் விநியோகிக்கத்தகும். நாங்கள் இராஜாக்களின் கதைகளைச் செவிப்புலன் களிப்படையும்படி கேட்க அவாவடைந்தவர்களல்லேம். தேவதேவனாகிய சங்கரபகவானுடைய சரிதங்களையே கேட்க விருப்பமுடையவர்களா யிருக்கின்றேம் ஆதலின் தக்கன்மகளானதால் தாக்ஷாயணியெனக் காரணப்பெயர்பூண்ட சர்வலோகமாதாவாகிய பார்ப்பதிதேவி பர்வதராஜகுமாரியாக அவதரித்தவகையும், தக்ஷப்பிரஜாபதி சிவபெருமானை யகந்தைகொண்டிகழ்ந்தவகையும், சிவபெருமான் அவனைச்சினந்தவிதமும், இவைமுதலியனவுங் கூறவேண்டுமெனக்கேட்க, வாயுதேவன் மனங்களித்துச் சிறிதுநேரம் சிவத்தியானத்திலிருந்து கூறத்தொடங்கினன். முநிவர்களே! காமதேனு கற்பகத்தரு சங்கநிதி பதுமநிதி சிந்தாமணிமுதலிய செல்வத்தையுங் கற்பகச்சோலையையும் அரமகளிர் சுகத்தையும் அநுபவித்த இந்திரன் முதலிய இமையவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து நாம் இதுவரையிற் சுகத்தையநுபவித்துப் பலவகைப்

பட்ட பாவங்களையுஞ் செய்திருக்கிறோம். ஐயோ! அவை எவ்வகையாகக் கழியும்? என்றேங்கி, ஆகாயமுகட்டையுருவி யுயர்ந்து எண்ணிறந்த முனிவர்கள் தவஞ்செய்துகொண்டிருக்குங் குகைகளாலும், பலவகை விருக்ஷங்களாலும், அருவியாறுகளாலும் அழகுற்று விளங்கும் இமாசலத்தை யடைந்தார்கள். பார்வதி பரமேசுவரிருவரும் அத்தேவர்க்குக் காட்சியளிக்கும்படி ஓர் திவ்வியாதனத்திலெழுந்தருளியிருந்து, அவரவர்க்கேற்ற உபசாரவார்த்தை கூறினர். தேவர்கள் முறையே சிவபெருமானையும் உமாதேவியையும் பணிந்து பல வரங்களைக்கொண்டு தமது நகரங்களை யடைந்தார்கள். அந்தச்சமயத்தில் தக்ஷன் தன்குமாரத்தியாகிய சதிதேவியையும், தன்மருகனான சங்கரனையுங் காணவேண்டி அவ்விமாசலத்திற்குத் தேவருடன் வந்திருந்தனன். பார்வதிதேவி அங்குற்ற தேவர் முனிவர் முதலானோருடன் தக்ஷனையுஞ் சமானமாகக்கருதி வசனித்தனள். தக்ஷன் தன் அஜ்ஞானத்தால், சதிதேவியைச் சர்வலோகமாதாவென்றுணராது, தன்னைத் தன் மகள் விசேஷமாக மரியாதை செய்யவில்லையேயென்று துவேஷமடைந்து, தன்விதிவசத்தால் தன் மருகனாகிய சர்வேசனையுந் தன்குமாரியாகிய சதிதேவியையும் அவமானப்படுத்தவேண்டுமென்று கருதி, சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் அவிர்ப்பாகங் கொடாது ஓர் யாகஞ்செய்யத் தீர்மானித்துத் தன் நகரமடைந்து இவர்களை விளியாமற் பிற புத்திரிகளையும் மருகர்களையும் பத்திரிகைகளால் வருவித்தனன். அதனாற் சதிதேவியுஞ் சிவபிரானும் நீங்கிய எல்லாத் தேவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அதனை யுணர்ந்த நாரதமுநிவர் சிவபெருமானையுஞ் சதிதேவியையுமடைந்து நடந்த விர்த்தாந்தங்களை யுரைக்க, சதிதேவியானவள் தானும் அந்த யாகத்தைக் காணவேண்டுமென்று சிவபெருமானிடஞ் சொல்ல, சிவபெருமான் நீ அங்குச்சென்றால் அவமானமடைவாய் எனக் கூறி, மீண்டுந் தேவி விருப்பின்படி விடைகொடுப்ப, சதிதேவி எல்லாத் திக்குகளிலுமுகங்களும் திவ்வியசோபானங்களுமுடைய புடமிட்டபொன்னாற்செய்யப்பட்டதும், இரத்தினங்களிழைக்கப்பெற்றதும், முத்துவிதானமுடையதும், புஷ்பமாலிகைகள் தொங்கவிட்டுள்ளதும், நூறு சித்திரப்பதுமைகள் கட்டப்பெற்றதும், நவரத்தினகசிதமான தூண்களையுடையதும், பவளத்தால் தோரணங் கட்டப்பெற்றதும் மலர்மெத்தை பரப்பியுள்ளதுமாகிய விமானத்தில், சித்திர விசித்திர ரத்தினங்களிழைக்கப்பட்டு வச்சிரரத்தினத்தால் விளிம்பிழைக்கப்பெற்றதுமாகிய சிங்காதனத்தில் உட்கார்ந்தனள். அவ்விமானத்திற்கு இடபத்துவஜங் கட்டப்பெற்றது. பார்வதி புறப்படுகையில், வச்சிரத்தாற்செய்த கஞ்சுகமணிந்தவர்களும், விசித்திரமான பிரம்புகளை யேந்தினவர்களும், நானாவித வேஷமணிந்தவர்களும், பலவான்களும், மிருதங்க வீணை வேணு முதலிய வாத்தியங்களை முழக்குவோர்களுமாகிய எண்ணிறந்த பரிசனமாதர்கள் தேவியைப் புடைசூழ்ந்து அவ்விமானத்தில் மெய்க்காப்பாளர்களாயேறினார்கள். அவர்களில், இருவர் வச்சிரதண்டம்பொருந்திய சாமரைகளை விசினர். அவை இரண்டன்

னங்களையும், அச்சாமரைகட்கிடையிலுள்ள தேவியின் முகம் ஓர் தாமரை மலரையும்போன்றிருந்தன. சுமாலினியென்னுங் கன்னிகை பூரணசந்திரன்போன்ற குடையினைப் பிடித்தாள். சுபாவதியென்பவள் தேவியுடன் விநோதமாகக் கவருடினள். தேவியின் பாதுகைகளை ஓர் கன்னி மார்பிலணைத்து நின்றனள். ஒருத்தி கண்ணாடி காட்டிக்கொண்டு நின்றனள். ஒருத்திவிசிறினள். ஒருத்தி தம்பலப்படிக்கமேந்தினள். ஒருத்தி கிளியைக் கரத்திலேந்தி நின்றனள். ஒருத்தி மலர்மாலைகளை யேந்திநின்றனள். ஒருத்தி ஆபரணப்பெட்டகமேந்திநின்றனள். இப்படி யெண்ணிறந்த மாதர்கள் தத்தமக்கு விதித்துள்ள பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள்மத்தியில் விளங்குஞ் சதிதேவி நக்ஷத்திரசமூகங்கட்கிடையே விளங்குஞ் சந்திரரேகையைப்போலப் பிரகாசித்து விளங்கினள். பிரயாணத்தை விளக்கத்தக்க பேரிகை சங்கம் பூரி வேணு மிருதங்கமுதலிய வாத்தியங்களும் அநேக ஆயிரங் காஹளங்களுமொலிக்கவும், எண்ணாயிரங் கணநாதர்கள் முழக்குடன் முன்செல்லவும், குமாரக்கடவுள் கஜாரூடராக வந்தாற்போலச் சோமநந்தியென்னுங் கணநாயகன் இடபாரூடனாய் முன் செல்லவும், தேவ துந்துபிகள் முழங்கவும், அப்சரசுகள் நடிக்கவும், முநிவர்களுஞ் சித்தர்களும் யோகீசுவரர்களுஞ் சந்தோஷிக்கவும், மேகங்கள் புஷ்பமாரி பொழியவும், விமானமானது புறப்பட்டது. இவ்வகையாகப் புறப்பட்ட விமானத்துடன் சகலரும் புடைசூழ்ந்துவர, சதிதேவியானவள் தன் தந்தையாகிய தக்ஷன் யாகசாலையைச் சேர்ந்தனள். சதிதேவியின் வருகையைக்கண்ட தக்ஷன் சிறிதும் மரியாதை செய்யாமலும் உபசாரவார்த்தைகள் சொல்லாமலும் தன் அழிவுகாலத்தால் மிகவுங் கோபங்கொண்டு சதிதேவியைக்காட்டிலுந் தாழ்ந்த பிற புத்திரிகளை விசேஷமாகப் பூசித்துக்கொண்டிருந்தனன். அதுகண்ட சதிதேவி பெருங்கோபமுற்றுப் பல தேவர்கட்கிடையே தன் மனைவியாகிய வேதவல்லியுடனிருக்குந் தன் தந்தையாகிய தக்ஷனைப்பார்த்து, பிரமன்முதற் பசாசமிறுதியாகவுள்ள வுலகத்திற்கு நாயகனாகிய சங்கரபகவானைப் பூசைசெய்ய மறந்தது யாதுகாரணம்? அஃதொருவாறிருப்பினு மிருக்கட்டும். உன் புத்திரிகளில் மூத்தவளாகிய என்னைப் பிற புத்திரிகளுடன் சமானமாகக் கருதி மதியாமல் என் கணவனைப்போல என்னையும் அவமதித்த காரணம் யாது? கூறுகவென, தக்ஷன் பெருங்கோபங்கொண்டு சொல்லுகின்றான்: ஓ சதி! உனக்கிளையவர்களாகிய என் குமாரத்திகள் யாவருங் குணத்தால் விசேடித்தவர்கள். உன் கணவனாகிய திரியம்பகனைக்காட்டிலும் என் மருகர்கள் யாவரும் விசேஷ புத்திமான்களும் பலவான்களுமாயிருக்கிறார்கள். ஆதலின் உங்களிருவரைப்போலன்றி அவர்கள் யாவரும் என்னாற் பூசித்தற்குரியவர்களே. உன் கணவனோ பித்தம்பிடித்து மயானத்திற் பேய் பசாசுகளுடன் அக்கினியிற் கூத்தாடுகிறவன்; உத்தமலக்ஷணஞ் சிறிதுமில்லாதவன்; என்புமாலையுங் கபாலமாலையும் அணிந்தவன்: அவன் எனக்கு விரோதி. ஆதலின் அவனும் அவனுக்கு மனைவியாகிய நீயும் இவ்யாகத்

திற்குவரும் யோக்கியதையுடையவர்களல்லீர் என்று கூறினன். சதிதேவி சாலவுங் கோபித்து, தக்ஷனை நோக்கி யாகசாலையிலிருந்த வெல்லோருங் கேட்கும்படி, அடா கொடியோய்! சிவபெருமானைத் தூஷித்த நீகுருத் துரோகியாதலின் மகா பாவியாவாய். உலகநாயகனாகிய மகேசனுடைய கோபத்திற்கு இரையாகுக.விரைவில் தண்டிக்கப்படுவாய்என்று சபித்து, தன் தக்ஷசம்பந்தமான சரீரத்தை மாயாசம்பந்தமாக வொழித் தனள். இது நிற்க: நெடுங்காலமாகப் பார்வதிதேவியைப் புத்திரியாகப் பெறவேண்டுமென்னுங் கருத்தால் இமாசலமன்னன் பெருந்தவஞ் செய் திருத்தலின் அவன்பாலடைந்து அநுக்கிரகிக்கக்கருதி அவனை யடைந்து அவனுக்குப் புத்திரியாயினள்.

முனிவர்களே! சதிதேவி தக்ஷனை வெகுண்டு பிரிந்தவுடனே மந் திரங்கள் மறைந்தன. யாகமும் நிறைவேறாதென்றுணர்ந்த தேவர்களும் முனிவர்களும் உடல் நடுங்கினார்கள். இந்தச் செய்தியைச் சிவபெருமா னுணர்ந்து அவ்வகைய யாகத்தைச்செய்த தக்ஷன்பேரிற் சினங்கொண்டு, தக்ஷா! நீ யென்னையும் என் மனைவியையும் அவமதித்துப் பிற புத்திரி களையும் மருகர்களையும் பூஜைசெய்தனை யாதலின், நீமாநுடனாகப் பிறக்கக் கடவாய். அப்பொழுதும் நீயாகஞ்செய்ய யத்தனிப்பாய். அந்தயாகத்தை யும் யானேயழிப்பேனென்றும், உன்னாற் பூஜைசெய்யப்பெற்ற மருகர்கள் வைவசுவதமன்வந்தரத்தில் மாநுடராகுகவென்றும், உன் காரியங்களெல் லாம் விக்கினமடைகவென்றும் சபித்து, அந்தவகையே அவர்கள் தோன் றியகாலத்தில் சிவபெருமான் அவர்களை யழித்தனன் எனக்கூறிய வாயு தேவனைநோக்கி முனிவர்கள் அத்தக்ஷன் செய்த யாகம் அழிவுற்ற வகை யையுஞ் சொல்லவேண்டுமெனக்கேட்க வாயுதேவன் கூறலாயினன்.

தக்ஷன் முதலானோர் சாபமேற்றது

முற்றிற்று.

பதினேழாவது

வீரபத்திராவதாரமுரைத்த அத்தியாயம்.

வாயுதேவன் கூறலாயினன்: முனிவர்களே! சகலலோகமாதாவா கிய உமாதேவியை நோக்கி நெடுங்காலந் தவஞ்செய்து புத்திரியாகப் பெறக்கருதிய இமாசலமன்னன் மனங்களிக்கும்படி அவ்விறைவியே புதல் வியாகி அவன்பால் வளர்ந்துவருகையில், சிவபெருமான் பார்வதியை மணவினை முடித்து அவ்விமோற்கிரியின் சிகரத்தில் நெடுங்காலந் தேவி யுடன்கூடி வாழ்ந்திருந்தனர். அநேகயுகங்கள் இவ்வாறு சென்றபின், தக்ஷன் சிவபெருமானுடைய சாபப்படி பிரசேதசு என்பவனுக்குப் புத்திர னாகி மோக்ஷவிருப்பத்தால் அசுவமேதஞ்செய்ய விரும்பி, இமாசலத்தில் முனிசிரேஷ்டர்களுஞ் சித்தர்களும்நிரம்பியகங்காத்துவாரமென்னும் இடத்

தில், யாகாரம்பஞ் செய்தனன். அந்த யாகத்திலே இந்திரன் முதலிய தேவர்களும் ஆதித்தர்களும் வசுக்களும் உருத்திரர்களும் மருத்துக்களும் பிதுர்களும் ஆத்தியபர்களும் தூமபர்களும் அசுவினிதேவர்களும் பலருஷிகளும் விஷ்ணுமூர்த்தியும் தத்தம் யாகபாகத்தைப்பெறக்கருதி வந்தார்கள். எண்ணிறந்த முநிவர்களுடன் கூடிவந்த ததீசிமுநிவர் ஆங்கிருந்த தேவர்களையெல்லாங்கண்டு சிவபெருமானைக் காணாது கோபங்கொண்டு அறிவில்லாதவனாகிய தக்ஷனை நோக்கிச்சொல்கின்றார். பூஜிக்கத்தகாதவர்களைப் பூஜித்தலாலும்,பூஜிக்கத்தக்கவர்களைப்பூஜியாவிட்டமையாலும்மாநுடன்பெரும்பாவத்தைச்சந்தேகமின்றியடைவான். அசத்துக்களுடைய ஆதரணையைக்கொண்டு சத்துக்களையவமதித்தாற் சர்வேசன் அப்பொழுதே தண்டிப்பான். சர்வலோகநாயகனாகியசங்கரனையேன்நீபூஜைசெய்யவில்லை? எனக்கேட்க, தக்ஷன் ததீசிமுநிவரைநோக்கி, முநிவனே! இடபமூர்ந்து ஜடைமுடிதரித்துச்சூலமேந்திய பதினொருருத்திரர்கள் வந்திருக்கிறார்கள். இவர்களையன்றி வேறே உருத்திரனொருவனிருக்கின்றானோ? எனக்கூற, ததீசிமுநிவர் யாதுகூறினை? இந்தயாகத்திற்குக் கர்த்தாவாகிய முதல்வனைவிடுத்து, பின்னவர்களாகிய பிரமவிஷ்ணுமுதலியோர்க்குப் பூஜைசெய்வதாற் பயனென்ன? பிரமன் முதலானவர்களைப் படைத்தவனும், பிரகிருதிபுருஷர்கட்குத்தலைவனும், திருமால்முதலியதேவர்களையெல்லாம் ஏவலர்களாகவுடையவனும், தத்துவஞானிகளாலுணரத் தக்கவனும்,நாசரகிதமானவனும், அக்ஷரசொரூபனும், பரம்பொருளும், சிருஷ்டியாதி தொழில்களை நடத்துபவனும், ஆதிமந்தியாந்தரகிதனும், மனோவாக்குகட் கெட்டாதவனும், அநாதிபுருஷனும், திரிமூர்த்திசொரூபனுமாகிய சர்வேசனே இந்த யாகத்திற்பூஜிக்கத்தக்கவன். அந்தப்பகவானையேபூஜிக்கவேண்டும். அந்தச் சர்வேசன்வந்திராமையால் உன்யாகம் பலனளிக்கமாட்டாது எனக்கூறிய ததீசி முநிவரைநோக்கி, தக்ஷன் சொல்லுகின்றான்.

முநிசிரேஷ்டரே! இந்தயாகத்திற்குப் பிரபுவுஞ்சமானரகிதனுமாகிய விஷ்ணுபகவானுக்குச் சாஸ்திரவிதிப்படிப்புனிதமாகிய அவிசைச் சுவர்ணபாத்திரத்தில் மந்திரபூர்வமாகக் கொடுக்கப்போகிறேன் எனக்கூற, ததீசிமுநிவர் முன்னினும் கோபமிகுந்து, தக்ஷா! சர்வேசனை யாராதியாமையின் இந்த யாகம் யாகமாகமாட்டாது. இது விரைவிலழிந்துபோகக்கடவதென்று கூறி, சிவத்தியானத்துடன் தனதாசிரமத்தை யடைந்தனர். மகாபுத்திசாலியாகிய ததீசிமுநிவர் நிரீசுவர யாகத்தைக் காணக்கூடாதென்று சென்றது பார்த்திருந்தும் அங்கிருந்த தேவர்கள் யாக அவிசை யுண்ணக் கருதியதாலும்,தமக்குநேரிடுந்துன்பத்தையநுபவிக்கவேண்டிய விதிவசத்தாலும்அங்கிருந்துநீங்காதவரானார்கள். அவ்விவரங்களையெல்லாமுணர்ந்த சர்வேசுவரியாகிய உமாதேவியானவள் தன் கணவனாகிய சங்கரபகவானைப்பணிந்து, நம்மை யிகழ்ந்து செய்யுந் தக்ஷனுடைய யாகத்தை யழிக்க வேண்டுமெனக்கூற, சிவபெருமானுந் தேவியினுடைய வேண்டுகோளுக்

கிரங்கி, மகா பராக்கிரமசாலியும், கணங்கட்கெல்லாந் தலைவனும், ஆயிரந்
தலைகளும் ஆயிரங் கண்களும் ஆயிரங் கரங்களுமுடையவனும், சூலம் டங்
கம் வேல் வாள் வில் சக்கரம் வச்சிரமுதலிய ஆயுதங்களை யேந்தியவனும்,
சந்திரனைச் சிரசிலணிந்தவனும், மின்னல்போல விளங்குந் தலைமயிரும்
வக்கிரதந்தங்களும் பெருவாயும் செவந்த நாவும் தொங்கிய உதடுகளும்
சமுத்திரகோஷம்போன்ற தொனியு முடையவனும், உதிரஞ்சொரியும்
புலித்தோலை யுடையாக அணிந்தவனும், பிரம விஷ்ணுக்களுடைய கபா
லங்களை மாலையாக அணிந்தவனும், வீரக்கழல் வாகுவலயம் இரத்தின
பரணமும், சரப சார்த்தூல சிங்கங்களைப்போன்ற பராக்கிரமமும், மத
வேழத்தைப்போன்ற நடையும், சங்க சாமர முதலியவற்றைப்போன்ற
வெள்ளிய தேகமும், பனித்துளிகளுடன்கூடிய இமாசலம் நடந்துவந்தாற்
போல முத்துமாலைகளசைய நடந்துவருகையுமுடைய பிரளய காலாக்
கினிக்குச் சமானமான வீரபத்திரனைச் சிருஷ்டித்தனன். அந்த வீரபத்தி
ரக்கடவுள் சிவபெருமானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவர் சந்நிதியி
லிருந்தனர். அப்பொழுது உமாதேவியுந் தன் கோபததால் அநேக ஆயி
ரஞ் சிரங்களும் கரங்களும் கரிய மேனியுமுடைய காளியைச் சிருஷ்டித்
தனள். சிவபெருமானும் பார்வதிதேவியும் வீரபத்திரரை நோக்கி,உனக்கு
மங்களமுண்டாகுகவென் றாசீர்வதித்தனர். அப்பொழுது வீரபத்திரர்
சிவபிரானை நோக்கி எனக்கு யாது கட்டளை? என வினவ, சிவபெருமான்
வீரபத்திரா! பிரசேதச புத்திரனான தக்ஷன் கங்காத்துவாரத்தில் யாகஞ்
செய்கின்றான். நீ இக்காளியுடன் அங்குச்சென்று அந்த யாகத்தை யழிக்
கக்கடவாய். நானும் பார்வதிதேவியுடன் சமீபத்தில்வந்து ரைப்பியமுனிவ
ராசிரமத்திலிருந்து பார்த்திருக்கிறேன் எனக் கட்டளையிட, பார்வதிதேவி
யானவள் வீரபத்திரனையுங் காளியையும் ஆலிங்கனமும் மூர்த்தாக்ரஹண
முஞ் செய்துகொண்டு; சிறுநகையுடன் குழந்தாய்! வீரபத்திரா! எனக்
குப் பிரியமுண்டாகும்படி நீ பிறந்தாய். ஆதலின் நீ யென் கோபத்தை
யொழிக்கவேண்டும். அஃதென்னவென்றால், நீ காளியுடன் சேர்ந்து, சிவ
பெருமானைப் பூசியாது செய்யுந் தக்ஷனுடைய யாகத்தையழித்து, தக்ஷனை
யும் அங்குள்ளவர்களையுங் கொன்றுவிட்டு வரவேண்டுமெனக்கூற, வீர
பத்திரர் அவ்விரு முதுகுரவர் சொல்லையுஞ் சிரமேற்கொண்டு, காளியுடன்
புறப்படுகையில், தனக்குத் துணைவரைப் படைக்கவேண்டுமென்று கருதி,
தன் கோபத்தால் தன் உரோமங்களிலிருந்து உரோமஜர்களென்னுங்
கணங்களையும், தக்ஷிணபுயத்திலிருந்து நூறுகோடி கணங்களையும், வாம
புயத்திலிருந்து மனைவியருடன்கூடிய அநேக புத்திர கணங்களையும், பாதத்
திலிருந்து கடுங்கோபமுடைய அநேக ருத்திரர்களையும், தொடை புஷ்டம்
பக்கம் முகம் குய்யம் முதலிய அவயவங்களிலிருந்து எண்ணிறந்த கணங்
களையுஞ் சிருஷ்டிசெய்தனன். அவர்கள் யாவருந் தன்னைப்போலவே கண்
கரம் சிரமுதலியன ஆயிரம் ஆயிரங்களாகவுடையவர்களும் அநேக சூலம்
வாள் கதை வேல்முதலிய ஆயுதங்களைத் தாங்கினவர்களும், ருத்திரனைப்

போன்ற தோள்வலியுடையவர்களும், திரிநேத்திரர்களும், ஜடாதரர்களும், சிங்கவாகனமுடையவர்களுமாய் ஆகாயமார்க்கத்திற் குதித்துங் கூத்தாடியுங் கொக்கரித்தும் மேகம்போலக் கோஷித்தும்விளங்க, வீரபத்திரர்அவர்களை யுடன்கொண்டு பிரளயகாலாக்கினி ருத்திரபகவானை யொத்தவராய் இடபவாகனத்திலேறி இடபக்கொடி தாங்கிப் புறப்பட்டுச் செல்லுகையில் சிலர் முத்துக்குடை தாங்கினர், சிலர் சாமரை யிரட்டினர், சிலர் தத்தமக்கேற்ற பணிசெய்தார்கள். பாநுகம்பன் தன் ஆயிரம் வாய்களாலுஞ் சங்கத்தை முழக்கினன். தேவதுந்துபி முழங்கின. புஷ்பவருஷஞ் சொரிந்தது. மலர் மணத்துடன்கூடிய மந்தமாருதம் வீசியது. கணங்கள் யாவரும் போர்செய்ய விருப்புமிக்கவர்களாய்ச் சந்தோஷத்தால் மெய்ம் மறந்து நிருத்த கித முதலியவற்றைச் செய்தார்கள். பத்திர கணங்கட்கிடையே காளியுடன் விளங்கும் வீரபத்திரன், உருத்திரகணங்கட்கிடையே உமாதேவியுடன் விளங்குஞ் சிவபெருமானை யொத்திருந்து, அந்த க்ஷணத்திலேயே தக்ஷன் யாகஞ்செய்யுமிடத்தைநோக்கி, பிரளயகாலத்திற் பிரளய கால வுருத்திரன் புனங்களைநோக்கிச் செல்வதுபோலச் சென்றனன்.

வீரபத்திராவதாரமுரைத்தது

முற்றிற்று.

பதினெட்டாவது

தக்ஷயாகத்தையடைந்த அத்தியாயம்.

வாயுதேவன் கூறுகின்றான்: முனிவர்களே! விஷ்ணுமுதலிய மகிமாதி சயங்களையுடைய தேவர்கூட்டத்தையும், சித்திரத்துவசங்கள் கட்டித்தர்ப்பாசனங்கள் விரித்து நல்லசமித்துகளை யடைந்து மூவகை யக்கினிகளுடன் விளங்கும் யாகசாலையையும், விதிவிலக்குகளறிந்த முனிவர்களும், வேதபாகங்களை யுணர்ந்த அத்வர்யுமுதலிய பெரியோர்களும், அநேக ஆயிரந்தேவஸ்திரீகளும், அப்சரகணங்களும், வேணுவீணாநாதங்களும், வேதகோஷங்களுமாகிய இவற்றையுங்கண்டு சிங்கநாதஞ்செய்ய, அதைக்கேட்ட கணநாதர்கள் ஆகாயமுழுவது நிறையும்படி பெருங் கூச்சலிட்டார்கள். அந்த யாகசாலையிலிருந்த தேவர்களிலும் முனிவர்களிலும் அநேகர் பயமடைந்து தமது தண்டம் கமண்டலம் வஸ்திர முதலியவற்றைவிடுத்து ஓடிச்சென்றார்கள். சிலதேவர்கள் மேருமலைபிளந்ததோ! பூமிவெடித்ததோ! அண்டகடாகம் வெடிப்பட்டதோ! இவ்வளவு பேரொலி யெதனாலுண்டாயது? என்று ஒருவரோடொருவர் சொல்லிப்பயத்துடன் சரீரவாஞ்சையை விடுத்தார்கள். அந்த ஒலியால் மலைகள் பிளந்தன. பூமிநடுங்கின. கடல்கலங்கியது. சூரியனும் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் அக்கினியுந் தத்தமொளிமழுங்கின. அந்த நிலைமையாயிருக்கையில், வீரபத்திரர் காளியுடனும் தன் சைநியங்களுட

னுந் தக்ஷனுடைய யாகசாலையினுட் பிரவேசித்தனர். தக்ஷன் வீரபத்திரரைக்கண்டு மிகவும்பயந்தபோதிலும் மேலுக்குப் பயத்தைக்காட்டாது தைரியசாலியைப்போல, நீயாவன்? இங்கு ஏன்வந்தனை? எனவினவ, வீரபத்திரர் துஷ்டனாகிய தக்ஷனைநோக்கிச்சிரித்து, தக்ஷனையும் அங்குள்ளாரையும்பார்த்து மேககம்பீரமான தொனியுடன் அக்காலத்திற்கேற்ப, நாங்கள் மகாமகிமையுடைய சிவபெருமானுடைய புதல்வர்கள். உன்னுடைய யாகத்தில் எங்களுக்குச் சேரவேண்டிய பாகத்தைக் கொடுத்துவிடு. ஆனால் இந்தயாகத்தில் உங்களுக்குப்பாகமில்லையென்று சொல்லும்பட்சத்தில், அப்படிச்சொல்வோர் என்னுடன் போர்புரியவேண்டும். அல்லதுசரியானகாரணமாவது சொல்லவேண்டுமெனக் கூறியபொழுது, தக்ஷனை முதலாகவைத்த தேவர்கள் சொல்லுகிறார்கள். உனக்கும் உன் தலைவனான சங்கரனுக்கும் அவி கொடுக்கும்படி ஆதியாகிய வேதங்கள் கூறுமாயின் அவ்வாறே கொடுப்போம் எனக்கூற, ஆங்கிருந்த வேதங்கள் ஐயோ! இப்படியுஞ் சொல்வதுண்டோ? இஃதடாது. நாங்களும் இங்கிரோமென்று வேதங்களனைத்தும் விரைந்து பிரமலோகத்தை யடைந்தன. அவ்வாறு வேதங்களு மறைந்தபின்னர், வீரபத்திரர் தமது கோபாக்கினியாற் கொதித்து யாகசாலையில் தீப்பற்றும்படி தீவிழியால் எரிமூட்டினன். அவருடனிருந்த கணநாதர்கள் தேவர்களைத்தொடர்ந்து ஆங்கமைத்திருந்த யூபஸ்தம்பங்களிற் பலதேவர்களை யுடல்பதைக்கும்படி கட்டினார்கள். வேதிகைகளையிடித்தார்கள். கும்பங்களையுடைத்துப்பொடிசெய்தார்கள். சிலர்யாகப்பசுவைத் தீக்கடைக்கோலாற் பசனஞ்செய்து கங்காசலத்தைப் பருகினர். சமைத்திருந்த அன்னமுதலியவற்றின் குவியல்களையெல்லாம் புசித்தனர். இனி யாகத்திற்காக மிகுந்திருக்கும் மாமிசமுழுவதையுமுண்டனர். நெய்யும் பாலும் தயிரும் சமைத்தனவும் சமைக்காதனவுமாகிய பதார்த்த வகைகள் தானியங்கள் முதலிய வெல்லாவற்றையுந் தின்றனர். தேக்கெறிந்தார்கள். தேவர்களே! யாகப்பசுவின் தசையைப்புசிக்க விரும்பினீர்களே; அது சுவையுடையதோ இது சுவையுடையதோ சுவை பார்த்துச் சொல்லுங்களென்று அவர்களில் ஒருவர் தோட்சதையை யரிந்து ஒருவர் வாயில் வைத்துச் சிரித்தார்கள். அண்டங்குலுங்கக் கைகொட்டினார்கள். அவி யுண்ணவந்தவர்களே! வாருங்களென்று சிலர் வாயில் தீக்கொள்ளியைச் செருகி நகைத்தார்கள். சிலர் மார்பில் வேல் வாள் முதலிய ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். அவர்கள் மார்பினின்று பெருகிய உதிரநீரானது இரத்தநதியாகப் பிரவகித்தது. அப்படி, வீரபத்திரரும் பத்திரகணங்களுஞ் செய்துகொண்டிருக்கையில், காளியானவள் தேவமாதர்களது தோளையுங் கூந்தலையும் நாசியையும் முலையையுங் காதையும் வாளாயுதத்தாலரிந்து அவர்களைக் காலாலுதைத்து நிலமிசைத் தள்ளினாள். அவ்வாறு வருந்தும் அமரமாதர்கள் தங்கள் கணவர்கட்குச் சம்பவித்த துன்பத்தை யுணராதவர்களாய், விரைந்து வந்து தங்கள் துன்பத்தை விலக்கும்படி கூவியழைத்தார்கள்; நிலத்தில் வீழ்ந்து புரண்டார்கள்;

அழுதார்கள்: இவ்வகையாகத் தக்ஷயாகத்தில் வந்திருந்த தேவமாதர்களிற் காளிகாதேவியால் தண்டிக்கப்படாதவர் ஒருவருமிலர். தேவர்களிற் பத்திரகணங்களால் துன்புறாதவர் ஒருவருமிலர்.

தக்ஷயாகத்தையடைந்தது

முற்றிற்று.

பத்தோன்பதாவது

தக்ஷயாகத்தையழித்த அத்தியாயம்.

முநிவர்களே! அந்தச்சமயத்தில் வீரபத்திரக்கடவுள் பெருங் கோபத்துடன் கொதித்தெழுந்து சூலம் வேல் வாள் தண்டம் சக்கர முதலிய ஆயுதங்களைக்கரத்திற்றாங்கிக் கடலைக்கலக்கிய மந்தரகிரியைப் போலத் தேவர்களைக்கலக்கினர். எப்படியென்றால், நான்குகொம்புகளையுடைய வெள்ளையானையாகிய ஐராவதத்தை வாகனமாகவுடைய இந்திரனைத்தண்டாயுதத்தாலடித்து அவனுடம்பிலிருந்த ஆயிரங்கண்களையும் வீழ்த்தி, அக்கினிதேவனுடைய கையையும் நாவையுந்துண்டித்து நிலமிசைவீழ்த்தி, சமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்கினியைக் குளிர்ச்சி பெறச்செய்து, இயமனைப்பிடித்து அவனை யுள்ளங்கையாற் பிழிந்து உயிர் பருகித்திசையின்மேலெறிந்து, நிருதியின் தோளையறுத்து,வருணனுடைய உந்தியைத்தோண்டி, அவன்குடலைக் கூளிகள் மாலையாகவணிந்து கூத்தாடச்செய்து, அவனுடலைச் சுவாசத்தாற் பறக்கச்செய்து, வாயுவைக்கடலில்வீழ்த்தி, அவன்சேனையை வாளுக்கிரையாக்கி, குபேரனைக் கச்சாற் கட்டிக் குறவன்கையிலகப்பட்ட குரங்குபோலாட்டினர். உமாதேவிபாகனே பரம்பொருளென்று கூறும் எண்ணிறந்த நூல்களை வாசித்துணர்ந்துஞ் சிவபக்தியின்றி விண்டுவையேபொருளெனமதித்த புல்லறிவினர்களேயென்று அத்தேவர்களை யொருவரோடொருவர் குழையும்படி மோதினார்கள். பொற்பேழையானது முத்துக்களைச் சிந்திநாற்போலப் பூஷாவென்னும் பானுவின் பற்களை யுதிர்த்து, பகனென்னும் பகலோனுடைய கண்ணினை யகழ்ந்து, சந்திரனை யிழுத்துக் காலின்கீழ்ப்போட்டு மிதித்துத் தரையே அம்மியாகவுங் காலே குழவியாகவுஞ் சந்திரனே கறியாகவுங்கொண்டு அவனுடலிலிருந்து அமுதகிரணங்களொழுக்கெடுக்கும்படி தேய்த்து விடுத்தனர். அந்த யாகத்திற்கு வந்திருந்த தக்ஷன் மருகர்கள் பதின்மரையும் வாளுக்கிரையாக்கினர். தேவர்கட்குத் தாயாகிய அதிதியென்பாள் மூக்கினையும், அக்கினிதேவன் மனைவியாகிய சுவாகாதேவியின் வலமூக்கையும், இடப்புறத் தனத்தையும் நகங்களாற் கிள்ளியெறிந்தனர். தக்ஷன் மனைவியாகிய வேதவல்லி தலைவிரித்து வயிற்றிலடித்துக்கொண்டு புலம்பும்படி தக்ஷனுடைய தலையை அழற்படையாற் கொய்து தன் பக்கலிலிருந்த காளிகாதேவி கையிற் கொடுத்து, அவளைப் பந்துவிளையாடச்செய்தனர். அந்தச்சமயத்தில் அருகிருந்த பத்திரகணங்

களாகிய பேய்களும் பூதங்களும் அரம்பாஸ்திரீகளைப்பற்றி முத்தங்கொடுத்தும், தனங்களை வருடியும், அணைத்தும் புணர்ந்துங் காமவெறி தீர்ந்தன. இவ்வகைய துன்பங்கண்டு மனஞ்சகியாது இனி யாவதொன்று மில்லையென்று ஏக்கங்கொண்ட யஜ்ஞன் கலையுருவமெடுத்து அங்கிருந்தோடயத்தனிக்கையில், வீரபத்திரர் கண்டு தமது கரத்திலிருந்த வில்லை வளைத்துக் கணையொன்றினாற் கணப்பொழுதில் அவன் றலையை யறுத்துக் ,கைகொட்டி யார்ப்பரித்து வீராட்டகாசஞ் செய்தனர். சிங்கம்போன்ற வன்மையுடைய பத்திரகணங்கள் சோமன் அரிஷ்டநேமி தர்மன் பிரஜாபதி அங்கிரசு அவனுடைய எண்ணிறந்தபுத்திரர்கள் காசிபன்முதலியோர்களைப் பலவந்தமாகக் கழுத்தையிறுக்கிக்கொண்டும், வாய்சென்றவழிவைதும், தலைமிசைக்குட்டியும் உதைத்தும் இடித்துந் துன்புறுத்தினார்கள். அந்த யாகத்திற்கு வந்திருந்த தக்ஷபுத்திரிகளைப் பலவகையாகப் பலாத்காரஞ் செய்தார்கள். இவ்வகையாக உடைந்தகலசங்களும், வெட்டிய யூபஸ்தம்பங்களும், அநேகதேவர் முனிவர்கள் வீழ்ந்திறந்துகிடந்து அடியோடெரிக்கப்பட்ட சாலைகளும், கீழேவீழ்த்தி மிதிக்கப்பட்ட வாயிற்படிகளும் தோரணங்களும், பூதபிசாசங்கள் இறந்தோருடலைப்பருகுவதும், வேதகோஷங்களொழிந்ததும், இறந்தார்க்காக அழுங்குரலோசையும், கரஞ்சிரந்தோள் முதலியனவின்றிப் பரிதவித்திருப்போருமாகியவற்றால் நிரம்பிய தக்ஷனுடைய யாகசாலையானது ஆரணியத்தை யொத்திருந்தது. அவ்வாறிறந்தவர்களும் கால்முதலியன வொடிந்தவர்களும் நடக்கச்சக்தியற்றவர்களுமல்லாத பிறதேவர்களுமுனிவர்களும் ஓடிப்பிழைத்தார்கள்.

இவ்விதமான செயல்களைக்கண்டு மனம்பொறாத விஷ்ணுமூர்த்தி கருடவாகனமிவர்ந்து இன்னும் இறவாதிருக்கும் இந்திரன்முதலிய தேவர்களைத் துணைவரக்கொண்டு போருக்கெழுந்தனர். அச்சமயத்தில் ஆயிரஞ்சூரியருக்குச்சமானமான காந்தியும் உத்தமலக்ஷணமுடைய குதிரைகளும் அநேக அஸ்திர சஸ்திரங்களுமமைந்துள்ள தேரொன்று சிவகடாக்ஷத்தினால் ஆகாயத்திலிருந்திறங்க, பிரமன் சாரதியாகவந்து அதனை வீரபத்திரர்முன்னிறுத்தி வணங்கி, இதனையேறுகவென்றும், இது சிவபெருமானாலனுப்பப்பட்டதென்றும், இதற்குச் சமீபத்திலுள்ள ரைப்பிய முனிவருடைய ஆசிரமத்திலிருந்து பார்வதி பரமேசுவரிருவருந் தேவரீருடைய பராக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதாகச் சொல்லச் சொன்னார்களென்றும் விஜ்ஞாபனஞ்செய்ய, வீரபத்திரர் பிரமதேவனை யநுக்கிரகித்து அவ்விரதத்திலாரோகணித்து நின்றனர். அதனை விஷ்ணுமூர்த்தியுங் கண்டனன். அப்பொழுது பாநுகம்பன் தாவள்யமான சந்திரன் போன்ற சங்கத்தைவாயில்வைத் தூதினன். அச்சங்கநாதத்தைக்கேட்ட தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பயவிசேடத்தினாற் குடர்கள் குழம்பின; உடல் நடுங்கின. யக்ஷ வித்தியாதர பன்னக சித்தர்களும் யுத்தஞ்செய்யவிரும்பியிருந்த ஏனையோரும் அச்சங்கமுழக்குக் காற்றாதகன்றார்கள். வீரபத்

திருடைய தேரைப் பிரமதேவன் விஷ்ணுமூர்த்திக்கெதிராக நடத்திக் கொண்டுசென்றனன். வீரபத்திரர் விண்டுவைக்கண்டு சிங்கமானது நரியைப்பார்த்து அலக்ஷியமாகநகைப்பதுபோல நீயோயினிப்போர்செய்பவனென்று நகைத்தனர். விண்டு கோபங்கொண்டு சார்ங்கமாகிய வில்லை வளைத்து எண்ணிறந்த அக்கினிக்கணைகளைவிடுத்தனர். பாணவருஷங்களைச் சொரியும்மாலின்மேற் சாலவுஞ்சினந்து சிவபெருமான் திரிதகனகாலத்திலேந்திய மேருமலைபோன்ற வலியவில்லையெடுத்து வளைத்து நாணேற்றி டங்காரஞ்செய்து, விஷ்ணுவின் லலாடத்தில் விஷசர்ப்பத்தையொத்த அநேகபாணங்களை விடுத்தனர். விஷ்ணு கர்வமும் அபிமானமுமுற்று, எருதானது சிங்கத்தையெதிர்த்துக் கோபிப்பதுபோல வீரபத்திரர்பேரிற் பெருங்கோபமுற்று, இடிக்குச்சமானமான ஓர்பாணத்தை வீரபத்திரர் தோளில்விடுப்ப, வீரபத்திரர் கோடிசூரியர்கட்குச்சமானமான தீக்ஷணமுடைய பாணத்தால் விஷ்ணுவின் தோளிலடித்தனர். இவ்வகையாக விஷ்ணுவும் வீரபத்திரரும் ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்று கருதி, சித்திரவிசித்திரமான திவ்விய பாணங்களா லடித்துக்கொண்டு பெரும்போர் செய்தார்கள். அப்பொழுது வீரபத்திரர் ஓர்கணையை விஷ்ணுவின் மார்பிற் கடினமாகச் செலுத்தினர். அதனால் விஷ்ணுவானவர் பிரக்ஞை தவறி நிலமிசை வீழ்ந்தனர். சிறிதுநேரத்தில் மூர்ச்சைதெளிந்து கருடன்மீதிலேறித் தன்பெயரெழுதிய எண்ணிறந்த பாணங்களைப் படபடவென்று செலுத்தினர். வீரபத்திரரும் அதற்கெதிராகத் தம்பெயர் தீட்டிய வெண்ணில்லாத பாணங்களைவிடுத்து அவை யொவ்வொன்றையுங் கண்டித்தனர். மீண்டும் ஓர்கணையைவிடுத்து விஷ்ணுவின் கரத்திற்பிடித்த சார்ங்கத்தையும், அவருடைய வாகனமாகிய கருடனது சிறகுகளையும் வெட்டியெறிந்தனர். திருமால் தமது மாயாசக்தியால் அநேகதேவர்களையுண்டுசெய்து சங்க சக்கரதரர்களாக்கி வீரபத்திரர் மேற் போருக்கு விடுப்ப, வீரபத்திரர்கண்டு பூர்வம் சிவபெருமான் தமது தீவிழியால் திரிபுரங்களை க்ஷணகாலத்திற் பொடிபடுத்தினற்போல, அம்மாயவிஷ்ணுக்களைத் தமது நெற்றிக்கண்ணுல் நீறுக்கினர். இதனைக்கண்ட விஷ்ணு கடுங்கோபங்கொண்டு இனி வீரபத்திரரை யெவ்வகையிலாவது வெல்லவேண்டுமென்னுங் கருத்துட்கொண்டு விஷத்தைச் சிந்துஞ் சக்கராயுதமொன்றனையேந்தி வீரபத்திரரை நோக்கிவரவும், வீரபத்திரர் இடியேறுபோலக் கர்ச்சிக்க, விஷ்ணுவானவர் சித்திரக்காரனெழுதிய சித்திரப் பதுமை அசையாது நிற்பதுபோலத் தூக்கிய கரத்துடன் ஸ்தம்பித்து நின்றனர். அவ்வாறு நிற்கையில் தான் யாதுசெய்யக் கருதினும், கொம்பில்லாத எருதைப்போலவும், பல்பிடுங்கின பாம்பைப்போலவும், நகமிழந்த புலியைப்போலவும் ஒன்றுஞ்செய்யச் சாத்தியப்படாது நின்றனர்.

அதுகண்ட இந்திராதிதேவர்கள் பலர் விஷ்ணுவுக்குப் பதிலாக வீரபத்திரரையெதிர்க்க, வீரபத்திரர்செய்த அட்டகாசத்தாலேயே அவர்

கள் யாவரும் அங்கங்கேயே அசைவற்று நின்று விஷ்ணுவுக்கு வந்தகதி யின்னதென்று தெரிந்துகொண்டார்கள். சிலர் பிறமுதுகுகாட்டி யோடினார்கள். சிலர் ஆகாயத்திலும், சிலர் கடலிலும், சிலர் மலைக்குகைகளிலும், சிலர் தேவலோகத்திலும் போய்மறைந்தார்கள். வீரபத்திரர்செய்த யுத்தத்தாற் பூமிநடுங்கியது; கடல் கலங்கியது; உதிரவெள்ளமானது யாகசாலைமுழுவது மழித்துக் கடலிற்சென்று கலந்தது. இந்த யாகமோ அசுவமேதம். யஜமானனோ பிரமபுத்திரனுன தக்ஷப்பிரஜாபதி. சபையாரோ தர்மாதிகள். ரக்ஷகனோ கருடத்துவஜனுன நாரணன். பாகங்களைப்பெறநேரே வந்தவர்களோ இந்திராதிதேவர்கள்: இவ்வாருயினும் யஜமானுக்கும்யாகத்துக்கும் ருத்விக்குகளுக்குந் தக்ஷணமே சிரச்சேதமான பலன் உண்டாயது. ஆனபடியால் வேதத்தில் விலக்கப்பட்டதும் சொல்லப்படாததும் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகங்கொடாமையும் அசத்துக்களால் நல்லதென்று சொல்லத்தக்கதும் ஒருவரும் ஒருகாலத்துஞ் செய்யப்படாது. அவ்வாறு அநேக யாகங்களைச் செய்தாலும் சிறிது புண்ணியத்தையும் பெருமற் பெரும்பாவத்தையே யடைவான். பெரும்பாவியாயினும் சிவபிரானைநோக்கி யாகஞ்செய்வானுயின் அப்பாவங்களினின்று நீங்கிப் புண்ணியனுகிருன். புண்ணியனுயினுஞ் சிவபெருமானை நீங்கலாக யாகஞ்செய்தவன் ஒருகாலத்துங் கடைத்தேறமாட்டான். இது விஷயத்திற் சந்தேகமேவேண்டாம். ஈசுவரபக்தியில்லாதவன் செய்யுந் தானம் தவம் ஓமம்முதலிய யாவும் பலனளிக்கமாட்டா. பார்த்தீர்களா முனிவர்களே! ஈசுவரபக்தியில்லாத நாராயணனும் தக்ஷனும் இந்திரனும் சந்திரனும் பிறரும் என்ன கதியை வீரபத்திரரால் அடைந்தார்கள்? என்று வாயுதேவன் கூறினன்.

தக்ஷயாகத்தையழித்தது முற்றிற்று.

இருபதாவது
தேவர்களுக்கருளிய அத்தியாயம்.

முனிவர்களே! அந்தச்சமயத்திற் சகலதேவர்கள் பேரினுந் தமததிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருந்த வீரபத்திரக்கடவுள் அருகிருந்த பத்திரகணங்களை நோக்கி, கணநாதர்களே! இப்பொழுது இங்குள்ள தேவர் முனிவர் முதலானுரை விலங்கிடுவீர்களாகவென ஆஜ்ஞாபிக்க, உடனே கணநாதர்கள் அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு திருமால் இந்திரன் முதலிய இமையவர்களையும் எண்ணிறந்தமுனிவர்களையும் தத்தம் விருப்பின்படி கையிலுங் காலிலுந் தோளிலும் மார்பிலும் இருப்புச்சங்கிலிகளைப்பிணித்துப் பலவாறு அடித்தும் உதைத்தும் குத்தியுந் துன்புறுத்தி ஆர்ப்பரித்தார்கள். அவ்வனர்த்தங்களையெல்லாம் வீரபத்திரக் கடவுளுக்கு இரதசாரதியும், சமீபித்திருப்பவனுமாகிய பிரமதே

வன் கண்டு சிறிதும் மனஞ்சகியாது வீரபத்திருடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து, சுவாமீ! சிறியோர் செய்த பிழையைப் பொருளாக மதிப்பது தேவரீருக்கழகோ? இவர்கள் எளியவர்கள். இவர்கள் விஷயத்தில் தயைவைத்து இவர்கள் செய்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும் என்று பலவாறு துதிசெய்ய, வீரபத்திரர் சிறிது மனமிரங்கி அப்பிரமதேவனுக் கருள்செய்திருந்தனர். அதனுல் முன்னிறந்தவர்களும் அஞ்சி யோடினவர்களு நீங்க அங்கிருந்தவர்கள் வீரபத்திரமூர்த்தியைத் துதிசெய்வாரானுர்கள்; சிவரூபியே! சிவபக்தனே! சூலபாணியே! ஆயிரங்கரசிரங்களையுடையோய்! யஜ்ஞனைச்சங்கரித்தவனே! எண்ணில்லாத தேவர்களை யழித்தவனே! தக்ஷன் தலையையறுத்தவனே! திரிநேத்திரங்களையுடையவனே! சந்திரனைக் காலாற்றேய்த்தவனே! பாநுவின் பல்லையுடைத்தவனே! சூரியன் கண்ணைத்தொலைத்தவனே! அதிதியின் மூக்கையரிந்தவனே! அரமகளிரைத்தண்டித்தவனே! விண்டுமுதலானைப் பிணிபூட்டியகன்யனே! சரணம் சரணம் க்ஷமிக்கவேண்டும க்ஷமிக்கவேண்டுமெனப் பலவகையாகத் துதிசெய்து, நாங்கள் அறிவீனர்களாகச் சிவநிந்தை செய்த தட்சனுடன் சேர்ந்திருந்த குற்றத்தைப் பொறுக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய வீரபத்திரர் தயாளபூதராய்த்தமதுகணங்களால் அவர்கட்குற்ற தளைகளை யவிழ்ப்பித்து, அவர்களையுடன்கொண்டு சிவபெருமானை யடைந்துசேவிப்ப, அவ்வமரர்களும் பணிந்தார்கள். அப்பொழுது மகாதேவராகிய சாம்பவமூர்த்தி மதியீனர்களே! இதுகாறும் நீங்கள்செய்த குற்றங்களைப் பொறுத்தோமெனக்கூற, அவர்கள் மானமற்று மகிழ்வுபெற்று ஆர்ப்பரித்துக் குதித்துக்கூத்தாடினுர்கள். சிவபெருமான் களிப்புற்று விளங்குவது கண்ட கமலாசனன் கடவுளைப்பணிந்து, சர்வலோகசரண்யா! என்தந்தையே! உன்னுடைய திருவடியில்வந்து நிற்கும் அடியார்கள் செய்த குற்றத்தை க்ஷமித்தருளினை. இனி வீரபத்திரரால் உயிரிழந்த தேவர்கள் யட்ச கின்னர கருடசித்த வித்தியாதரர்கள்ருஷிகள் தவசிகள் முதலியயாவரும் உயிர்பெற்றெழுந்திருக்கும்படி திருவருள் புரியவேண்டும் எனப்பிரார்த்திக்க, சிவபெருமான் தேவியின் திருமுகத்தைப் பார்த்துப் புன்னகைசெய்து அப்படியேயாகுகவென்று திருவாய்மலர்ந்தருள, திருமால் முதலாகத் தப்பித்துக்கிடந்தவர்களும், கரஞ்சிரமுதலியன அறுபட்டு வீழ்ந்துகிடந்தவர்களும் இறந்துபட்டோர்களும், சுவாதீனப்பட்டும், தமதவயவங்கள் வளரப்பெற்றும், உயிர்பெற்றும் ஒன்றுகூடி இந்திரன்முதலிய திக்பாலகர்களுடன் சிவசந்நிதியை யடைந்து சாஷ்டாங்கமாகப்பணிந்து கைகட்டி வாய்பொத்திநின்றுர்கள். பிரமன் இதுதான் நல்லசமயமென்றுட்கொண்டு மீண்டும் பெருமானைப் பணிந்து, எந்தையே! எல்லோரும் உயிர்பெற்றுர்கள். இவர்கட்கு இத்தகைய விபத்து விளைத்த கொடியோனுகிய தக்ஷனையும் எழுப்பும்படி திருவருள் செய்யவேண்டுமென்றிரப்ப, கருணாநிதியாகிய சிவபெருமான் மனங்களித்து, தக்ஷனுடைய மதியின்மை யாவர்க்கும் விளங்

கும்படி அவனுக்கு மேஷசிரமளித்தெழுப்பினர். தக்ஷன் சங்கரனைப் பணிந்து தலைவணங்கி நிற்ப, சிவபெருமான் அவன்விஷயமாகத் தயை வைத்து அவனையோர் கணநாதனுக்கினர்.

விஷ்ணுதேவர் பிரமனுடன் அச்சமயத்திற் பணிந்து அடியேன் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டுமென்றனர். அப்பொழுது சிவபெருமான் விஷ்ணுவை முதலாகவுடைய தேவர்களையும் உருத்திரர்களையும் முநிவர்களையும் நோக்கி, நீங்கள் யாவருஞ் செய்த குற்றங்கள் அறியாமையாலாதலின் அவற்றை மனம்பொறுத்தோம். இனி யாதுக்கும் அஞ்சவேண்டாமென்று அவர்களைத் தேற்றிப் பரிபூரணமான கடாக்ஷத்துடன் விடைகொடுப்ப, அவர்கள் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் பணிந்து விடைகொண்டு வீரபத்திரரையும் நமஸ்கரித்துப் புறப்பட்டுத் தாம் தக்ஷயாகத்தை யடைந்து துன்புற்றவற்றையும், வீரபத்திரருடைய பராக்கிரமத்தையும், காளிகாதேவியின் வல்லபத்தையும் பேசிக்கொண்டு, தங்கடங்கள் நகரங்களை யடைந்தார்கள். பிறகு உமாதேவி வீரபத்திரரையுங் காளிகாதேவியையும்அருகழைத்துஆலிங்கனஞ்செய்துகொண்டுசந்தோஷ வார்த்தைகள் கூறிப் பலவரங்களளித்து வீரபத்திரருக் கோருலகமளித்து விடுத்தனள். சிவபெருமானும் உமாதேவியாரும் தாம் தக்ஷயாகத் துவம்சத்தைக் காணும்படி தங்கிய விடத்துள்ள தைப்பியமுநிவனுக்கு அநுக்கிரகஞ்செய்து அந்தர்த்தானமாய்ச்சென்றார்களென்று வாயுதேவன் கூறினன்.

தேவர்களுக்கருளியது
முற்றிற்று.

இருபத்தோன்றாவது
தேவி கௌர நிறம்பெற்ற அத்தியாயம்.

முநிவர்கள் வாயுதேவனைப்பணிந்து, ஸ்வாமீ ! சிவபெருமான் அங்கிருந்து சென்றனரெனக் கூறினீராயினும், அந்தப்பகவான் எங்குச் சென்றனன்? யாது செய்தனன்? என்பதையுங் கூறியருளவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் சிவத்தியானபரனுயிருந்து சொல்லத்தொடங்கினன். தவவன்மையுடைய முநிசிரேஷ்டர்களே ! பூர்வம் மந்தரபர்வதமானது சிவபெருமான் பார்வதிதேவியாரோடுங் கணேசர் முதலிய புதல்வர்களோடும் பரிசனர்களோடுந் தன்னிடத்தில் வசிக்கவேண்டுமென்று நெடுங்காலம் பெருந்தவஞ்செய்தமையின் அத்தவத்திற்கிரங்கிச் சிவபெருமான் உமாதேவியாரோடும் பிரமதகண சகிதராய் அப்பர்வதத்தை யடைந்தனர். அம்மந்தரத்துச்சியில் வெண்ணிலா விளங்குந் தோற்றமானது அது சிவகடாக்ஷத்தாற் பெற்றதாவள்யமான முத்துக்குடைபோன்றிருந்தது. அம்மலை யுச்சியிலிருந்து அருவியாறுகளிழியுங் காட்சியானது அதற்கு மலை

களிற்றலைமை சிவகடாக்ஷத்தா லுண்டாவதுபற்றி மங்கலஸ்நானஞ் செய்விப்பதுபோன்றிருந்தது. அம்மலைச்சாரலிற் கவரிமான்கள் தமது வாலையசைத்தலானது அம்மலைக்குச் சாமரை யிரட்டுவதுபோன்றிருந்தது. கொன்றை முதலிய மரங்கள் மலர்சொரிவன அம்மலைக்குத் தலைமைவந்தமையின் யாசகருக்குச் சுவர்ணதானஞ்செய்வோரை யொத்திருந்தன. அங்குள்ள பறவைகள் இரைச்சலிடுவது தேவமாதர்கள் மங்கலப்பாடல்கள் பாடுவனபோலுமிருந்தன. அண்டத்தை யூடுருவிநின்ற அம்மலைக்குநேரே கடலிற்றோன்றிய சூரியன் அம்மலைக்குக் காட்டுங் கண்ணாடிபோன்றனன். அவ்வகைய சிறப்பினையுடைய அம்மந்தரகிரியிற் சிவபெருமான் தேவியாரோடுங்கூடி, அநேககாலம் வாழ்ந்திருந்தனன். அப்படி யிருக்குங்காலத்தில், சும்பன் நிசும்பனென்னும் இரண்டசுரர்கள் பிரமனைநோக்கிப் பஞ்சாக்கினி மத்தியினின்று அநேககாலம் அன்னபானாதிகளை வெறுத்து அருந்தவஞ்செய்தார்கள். அவர்கள் தவத்தையுந் திடபக்தியையுங்கண்டு மனமகிழ்ந்த மலரோன் அவர்கட்குக் காட்சியளித்துத் தவத்தாலிளைத்த வுடலைத் தன் கரத்தாற்றடவிப் பூரிக்கச்செய்து நீங்கள் யாது கருதி இவ்வகையாகத் தவஞ்செய்தீர்கள்? அதனைச் சொல்வீர்களாகவென, சும்ப நிசும்பர்கள் சதுர்முகனைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து எதிர்நின்று இரு கரங்களை விரித்து, கடவுளே! எங்களிருவர்க்கும் இறவாவரம் வேண்டும். அல்லது சர்வலோகமாதாவாகிய உமாதேவியார் தேகத்தினின்றும் ஓர் கன்னிகை தோன்றின் அக்கன்னியா லிறக்கவேண்டும். அவ்வாறின்றி உலகினருள் ஒருவராலும் இறவாவரங் கொடுக்கவேண்டும் என்று பலவாறு பணிந்து துதித்து வரங்கேட்ப, பதுமாசனன் அஃதங்ஙனமே நிகழுமென்று நிகழ்த்தித் தன் சத்தியலோகஞ் சார்ந்தனன். அவ்வரத்தால் தருக்கெய்திய தானவர் தேவருலகத்தை யடைந்து இந்திரனை யெதிர்த்து அவனை முறியவடித்து அவன் வளங்களையெல்லாங் கொள்ளைகொண்டு, அமரர்களையும் அரம்பையர்களையும் ஏவலர்களாக்கி, தேவலோகமுழுவதையுந் தமது கட்டளைக்குட்பட்டு நடக்கச்செய்து பெருங்கீர்த்திமான்களா யிருந்தார்கள்.

இஃதிவ்வாறிருக்கையில், தேவேந்திரன் முதலிய தேவர்கள்படுங் கஷ்டங்களையெல்லாங் கண்டு மலரோன் மனம் வருந்திச் சிவபெருமானுடைய சந்நிதியை யடைந்து சங்கரா! ஜகதீசா! கொடியோராகிய சும்ப நிசும்பர்கள் செய்யும் உபத்திரவங்களைத் தாளமுடியாமல் தேவேந்திரன் முதலானவர்கள் திருடர் விழிப்பதுபோலச் செய்வதறியாது தவிக்கின்றார்கள். தேவலோகமும் பூலோகமும் பெரும்பாடுபடுகின்றன. அமரர்களும் அரம்பையர்களும் சிறைப்பட்டார்கள். ஆதலால் அவ்வசுரர்களுயிரை யழிக்கும்படி தேவரீர் திருவுள்ளஞ் செய்தருளல்வேண்டும். அதாவது உமாதேவியார் திருமேனியினின் றோர்கன்னிகை தோன்றி அவர்களை யழித்தாலன்றி அவர்கள் வேறொருவராலு மிறவாதிருக்கும்படி அடியேன் வரங்கொடுத்துளேன், அவர்களை விரைவிலழிக்கவேண்டுமென்று

விண்ணப்பஞ்செய்து பிரமதேவன் விடைகொண்டு சென்றனன். சர்வலோகநாயகனாகிய பகவான் பதுமன் சொல்லியதை மனங்கொண்டு உமாதேவியை நோக்கி லீலாமாத்திரையாக, ஏ காளீ! [கருநிறமுடையவளே] வருகவென விளிப்ப, உமாதேவி கூறுகின்றாள். ஸ்வாமீ! நீரும் அடியாளும் சிறுபிள்ளைகளல்லோம். இன்றுதான் மணஞ்செய்து ஒருவரையொருவர் நூதனமாகவா முகம் பார்த்தோம்? நன்றாயிருந்தது. இப்பொழுதுதான் உமக்கென்னிடத்தில் வெறுப்புண்டாயதோ? உலகப் பிராணிகளையெல்லாஞ் சையோகத்தி லழுந்தச்செய்யும் மன்மதனை நெற்றிக்கண்ணா லெரித்துக் காவிவஸ்திரமும், உருத்திராக்ஷமாலையும், பிரமகபாலங்களுமணிந்து தவவுருவாக விளங்குவீருக்குக் காமவிருப்புண்டாயது விநோதமே? இவ்வளவுகாலம் என்னுடன் கூடியிருந்து இப்பொழுது யான் அழகற்ற கருநிறமுடையவளென் றிகழ்ந்துரைத்தீர். அங்கஹீன முதலியனவின்றி உத்தமலக்ஷணங்க ளமைந்திருப்பினும், சிறந்த ஆடையாபரணங்க ளணிந்திருப்பினும், அழகுடன் விளங்குங் கணவன் கண்டு மனங்களியாத மனைவி பெண்களிற் பதரென்பதற்குச் சந்தேகமில்லை. தேவரீருக்கு என் கருநிறத்தில் விருப்பின்றி வெறுப்பு விளைந்தமையின் இனி யிக்காருருவை யொழிக்கும்படி தேவரீரை நோக்கிப்பெருந்தவஞ்செய்து இவ்வடிவை யொழித்துத்தேவரீர் திருவருளாலேயே பொன்னிற மேனியையடைந்து தேவரீருக்கு மனைவியாகிறேன் என்று கூறி, கண்களினின்றும் முத்துத்துளிகள் சிந்தினாற்போலக் கண்ணீருகுத்தனள். உமாதேவியின் துயரைக் கண்ட சிவபெருமான் மனந்தாளாது தேவியை இருகரங்களாலுமணைத்து, பெண்ணே! நீ வருந்தற்க. யான் விநோதமாகக்கூறியதன்றி வேறொன்று மின்று. அதற்காக நீ கவலைகொள்ளவேண்டாம். தவமுஞ் செய்யவேண்டாம். நாமிருவருங் கலந்திருந்தாலன்றி யுலகம் விருத்தியுற்று க்ஷேமமடையாமையின், நீ கோபந்தணிகவென்று கூறினன். உமாதேவி தன்னை யணைத்துக்கொண்டிருக்கும் ஸ்வாமியின் கரங்களை மெல்ல நெகிழ்த்தி, இவ்வகையாகவே காலமெல்லாம் என்னை யெத்தி யாசைபோலக் காட்டிக் காலத்தைக் கழிக்கிறீர். ஒன்றும் வேண்டாம். இனி வேறோர் தேகத்தைப் பொன்னிறமுடையதாய்ப் பெறவேண்டுகிறேனெனக் கூறிச் சிவபெருமானை முறைப்படி பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து உத்திரவுகேட்டுப் புறப்பட்டு இமாசலத்தை யடைந்து ஆங்குள்ள ஓர் சரசின் கரையில் ஓர் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து அதனை வேதாகம விதிப்படி பூஜைசெய்து ஒரேமனதாக நித்திரை அன்னம் ஆகாரம் முதலியனவின்றி அவ்விடத்தில் தவச்செயலிலமர்ந்தனள். அம்மையானவள் தவஞ்செய்தவிடத்திற்கருகே ஒரு பெரும்புலி கைகால்களி னியக்கமின்றிப் பசியால் வருந்தியிருப்பதைத் தேவி கடைக்கண் சாத்தியருளினள். அதனால் அப்புலி தனது ஆணவமுதலிய மலங்களையும் பிணியையும் விலகிப் பேருணர்ச்சிபெற்றுப் பண்டைய ஞானத்துடன் இவள் பரமேசுவரியென்று தெரிந்

துகொண்டு, இவ்விடத்திற்கு யான் வந்ததும் தேவி யிவ்விடம் வந்ததும் என் பாக்கியமேயென்று பரமசந்தோஷத்தை யடைந்திருந்தது.

முநீசுவரர்களே! தேவியின் செயல்களிப்படியிருக்க: சும்ப நிசும்பர்கள் செய்யும் உபத்திரவங்களைச் சகியாத தேவர்கள் பிரமதேவனை யணுகி, பிதாமகனே! எங்களையும் படைத்து இவ்வசுரர்கட்கும் பெருவரங்களையுங்கொடுத்து எங்களைத் துன்புறுத்துவது உமக்கழகோ. இத்துயரத்தினின்று நீங்கும்படி யநுக்கிரகிக்கவேண்டுமென்று முறையிட, பிரமன் அத்தேவர்களையெல்லாம் உடன்கொண்டு உமாதேவியார் தவஞ்செய்திருக்கும் இமாசலத்தை யடைந்தனன். இமாசலத்தின் உச்சியிலேயித் தேவியானவள் செய்யுந் தவமகிமையால் அங்குள்ள மரங்கள் ருதுக்களின் வேற்றுமையின்றி அரும்பும் பூவுங் காயுங் கனியும் நிரம்பப்பெற்றும், பசும் புற்கள் வளர்ந்தும், மிருகங்கள் தம்மில் வேற்றுமையின்றி உறவுகொண்டும், எல்லா வளப்பங்களும் பொருந்தியுள்ள அத்தபோவனத்தை யடைந்து, பிரமனும் அவனுடன் வந்த அமரர் கூட்டத்தாரும் பணிந்தார்கள். வேதங்களும் தேவர்களும் முநிவர்களும் தவசிகளும் தவஞ்செய்து தரிசித்தற்குரிய சர்வ ஜகந்மாதாவாகிய நீ யாது கருதித் தவஞ்செய்கின்றனை? தாயே! தவச்செயல் இவ்வகைய நியமங்களையுடையதென்றெம்போலியர் உணர்தற்காகத் தவஞ்செய்து காட்டுகின்றனையோ? உன் உள்ளக்கருத் தென்னவென்றுணர அவாவினே னெனப் பிரமதேவன் கேட்க, உமாதேவி பிரமனை நோக்கி, யானென் கரியவுருவை யொழித்துப் பொன்னுருவை யடைய விருப்புற்றுத் தவஞ்செய்கின்றேன். இதுவிஷயத்தில் உன் கருத்தேது? உரையென, பிரமன் பணிந்து, தாயே! இதற்கோ தவஞ்செய்வது? நீ யுன் சரீரத்தினின்றும் நீங்கிப் பொன்னுருவை யடைந்து முன்னுரைந்த வுருவால் ஓர் கன்னியைப்படைத்து, இத்தேவர்களை யலைத்துக்கொண்டிருக்குஞ் சும்ப நிசும்பர்களைத் தொலைத்து, அவர்களால் அமரருக்குண்டான துயரை யகற்றி, தேவர்கட்குச் சுகத்தை யுண்டுசெய்வாயாகவென் றாசீர்வதித்தனன். உமாதேவி உடனே தன் காருருவிடுத்துப் பொன்மலைபோன்ற பேருருவெடுத்தனள். அப்பொழுது தேவர்கள் ஆகாயத்தினின்றும் மலர்மாரிசிந்தி ஆனந்தத்தாற்பாடி நிருத்தஞ்செய்து ஜயஜயவென வாழ்த்தினர்கள். ஈசுவரியானவள் விழ்த்திய அக்கரியவுருவானது எட்டுக்கரங்களையும் பாசம் அங்குசம் தண்டம் சூலம் வாள் வேல் வச்சிரமுதலிய ஆயுதங்களையுந்தாங்கி உலகிலுள்ள கொடியோரைச்செகுக்கும் ஆற்றலுடைய துர்க்கையாய் ஈசுவரியைப்பணிந்து எதிரிற் கைகட்டி நிற்ப, பார்ப்பதி அத்துர்க்கையை நோக்கி, அடி பெண்மணே! நீ பிரமன் கட்டளை கோடாது அவன் சொற்படி நின்று சிறிதும் நன்மையென்பதறியாத அசுரர்களை ஹதஞ்செய்து தேவர்களுக்குச் சுகத்தை யுண்டுசெய்யக் கடவாயென் றாஜ்ஞாபித்தனள். அப்பொழுது பிரமன் ஓர் சிங்கத்தைச் சிருஷ்டிசெய்து அவளுக்கு வாகனமாகக்கொடுத்து, ஆகாயமளாவிய விந்த

கிரியில் வாசஞ்செய்து தேவமானவர்களின் மாமிசத்தையுண்டு உலகைத் துன்புசெய்யும் அசுரர்களை யழிக்கவேண்டுமெனக்கூற, துர்க்கை உடனே தனக்குண்டான சிங்கவாகனத்திலேறி அநேக முழைகளையுடைய விந்த மலையை யணுகி அவர்களோடு பலவகையாகப் போர்செய்து அவர்களைச் செயித்துத் தினந்தோறும் தன்னைத் தேவர்கள் வந்து பணிசெய்து வாழ்த்தும்படி வசித்திருக்கின்றனள்.

தேவிகௌரநிறம்பெற்றது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

கௌரி மந்தரமடைந்த அத்தியாயம்.

வாயுதேவன் முனிவர்களை நோக்கிச் சொல்லுகின்றான்: அதன் பின்னர் உமாதேவி பிரமதேவனை நோக்கி, இதோவிருக்கும் புலியானது யான் தவஞ்செய்யும்படி இவ்விடத்திற்கு வந்ததுமுதல் என்னை விட்டுப் பிரியாது இங்கேயே ஓர் காவலாளனைப்போலிருக்கின்றது. இது காலுங் கையும் நோயுற்று நடக்க வலியற்றுத் துன்புற்றிருந்தது. அதுகண்டு மனந்தாளாது அதன் நோயை யகற்றினேனெனக்கூற, பிரமதேவன் பணிந்து, அன்னையே! இஃதோர் புலியென்றெண்ணற்க. ஓரசுரன் தன் மாயையாற் புலியுருவேற்றிருக்கின்றான். பாம்பிற்குப் பால்வார்த்தாற்போலத் தீயோனுக்கருள்செய்தனையே. அது தருமமன்று. அவனால் யாருக்கென்ன தீங்கு விளையுமோ? எனக்கூற, கௌரி பிரமனை நோக்கி, அசுரனாயினுமாகுக. அல்லாவிடினுமிருக்க. பிரயாசப்பட்டுக்கொண் டிருந்தது நோக்கி மனந்தாளாது அவ்வாறு நோய்தீர்த்தேனென்று கூற, பிரமன் தேவியைப் பணிந்து, தேவி! உன் திருவருள் இப்பிராணியின்பேரிற் பரிபூரணமாக வுண்டாயிருத்தலை யான் அறியாது கூறினேன். மன்னிக்கவேண்டும். உன் பாதபங்கஜத்திற் பத்தியுடையவர்கள் பெரும் பாவிகளாயினுஞ் சிறிதுந் துக்கமடைதற் குரியவர்களாகமாட்டார்கள். உன் திருவடிக்கு அன்புசெய்யாதவர்கள் மகா புண்ணியர்களாயினும், எண்ணிறந்த யாகம் தானம் தவமுதலியவற்றைச் செய்தவர்களாயினுஞ் சிறிதும் பலனடையமாட்டார்கள். உன்னுடைய திருவருட்பிரகாசமுண்டாயின்சிறு துரும்பும் பிரமபட்டத்தை யடையும். உன்னுடைய திருவருளில்லையாயின் பிரமனும் தன் பதவியை யிழந்து துரும்பாவான். நீயே உலக சிருஷ்டியாதி காரியங்கட்கெல்லாம் தலைவி. ஆதலின் உன் கிருபை யிருக்கும்பக்ஷத்தில் இப் புலியுருவைக் கடைத்தேறச்செய்கவென்று கூறி, பரமேசுவரியிடம் உத்திரவுபெற்றுக் கொண்டு தன்னைப் புடைசூழ்ந்துவந்த தேவர்குழுவுடன் தனது நகரத்தை நோக்கிச் சென்றனன். இப்பால், கௌரியானவள் அப்புலியைத் தன்னுடன் வரச்செய்து, தன்னைக் குமாரியாகக்கொண்ட தாய் தந்தையர்பால்

விடைகொண்டு அநேக மங்கையர் பணிசெய்ய, தன் பொன்னுருவுடன் மந்தரமலையை யடைந்தனளென வாயுதேவன் முனிவர்கட்குரைத்தனன்.

கௌரி மந்தரமடைந்தது முற்றிற்று.

இருபத்துமூன்றாவது
சோமநந்தியின் சரிதமுரைத்த அத்தியாயம்.

முநிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! உமாதேவியார் கௌரநிறம் பெற்று மந்தரகிரியை யடைந்தனரெனக் கூறினீராதலின், அவள் அங்குச் சென்றவகையும் அதன்பின்னடந்த விவரங்களும் இவ்விவையெனக் கூறவேண்டுமெனக் கேட்ப, வாயுதேவன் கூறலாயினன்: ருஷிசிரேஷ்டர்களே! கௌரியானவள் மந்தரகிரியை யடைந்தகாலத்தில் சிவபிரான் முதலிய யாவர்க்குமுண்டான சந்தோஷத்தை யிவ்வளவென்று விரித்துச்சொல்ல வொருவராலுமுடியாது. தேவியானவள் மந்தரபர்வதத்தை யடைந்தவுடனே நந்திதேவர் முதலான சிவகணநாதர்கள் எதிர்கொண்டுவந்தார்கள். பாநுகம்பன் சங்குகன்னன் குண்டோதரன் முதலிய கணத்தலைவர்களும் பல்கோடி யுருத்திரர்களுந் தேவியைப்பணிந்து இருபுறத்திலும் ஒதுங்கிநின்றார்கள். வாணன் குடமுழா விசைத்தனன். சங்குகன்னன் பாநுகம்பன் முதலானார்கள் பற்பல வாத்தியங்களை முழக்கினார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. அப்சரசுகள் நடித்தார்கள். தும்புரு நாரதர் பாடினார்கள். தேவருஷிகள் ஆசீர்வதித்தார்கள். அரம்பாஸ்திரீகள் மங்கலப்பாடல்கள் பாடினார்கள். அவ்வகையாக யாவருங் களிகூர்ந்திருக்கத் தேவியானவள் சிவசந்நிதிக்குட் பிரவேசித்துச் சிவபெருமானைப் பணிந்து எழுந்திருக்கையில், சிவபெருமான் சந்தோஷித்து இருகரங்களாலுமெடுத்துத் தொடைமிசை யிருத்தி, கௌரியின் தேகச்சாயலைக் கண்களாற் கண்டு கண்களும் மனமுங் களிப்புற்று, பெண்ணே! கௌரீ! இப்பொழுதுதான் உன் கோபமாறியதோ? என் சொல்லுக்குங் கோபங்கொள்ளலாகுமோ? நாமிருவரும் மாறுபட்டால் உலகமுழுவதும் அக்கினியாலழிந்துவிடும். என்னுடைய உருவமோ அக்கினி. உன்னுடைய உருவமோ சந்திரன். நீ யென்னுடன் கூடியிருப்பதே யுலகவிர்த்திக்குக் காரணம். அக்கினியுஞ் சோமனுஞ் சம்பந்தப்பட்டுள்ள இவ்வுலகமானது சொல்லும் பொருளுமாகிய இவற்றின் தன்மையாம். அவற்றில் நீ சொன்மயமும் யான் பொருண்மயமுமாவோம். நீயே வித்தையும் யானே அவ்வித்தையாற் பெறக்கூடிய அறிவுமாம். நீயே யென் ஆணையாதலின், நீ யென் ஆணையைக்கடந்தால் யான் ஈசுவரனாக விளங்கலாகுமோ? இவ்வகைய நியாயங்களால் நீ யென்னை நீங்கும்வகை யாது? தேவர்கள் துயரகன்று அவர்கட்குச் சுகமுண்டாகும்படி விநோதார்த்தமாக உன்னைக்

காளியென்று விளித்தேன். அதற்காக நீ சினங்கொண்டனை. அதுவும் உலகுக்குதவியாயிற்று என்று கூறினன். இவ்வகையாகச் சிவபிரான் கூறியது கேட்ட கௌரி மிகவும் மனங்களித்துப் புன்னகைசெய்து, தான் தவஞ்செய்கையில் துர்க்கை தோன்றியதும், அவளாற் சும்பநிசும்பர்களைக் கொன்று தேவர்கள் சந்தோஷித்ததும், அவளைப் பிரமன் கட்டளையிலிருத்தியதும் யாவுங்கூறி, பின்னர் சிவபிரானைப் பணிந்து, எம்பெருமானே! யான் தவஞ்செய்துகொண்டிருக்கையில், இப்புலியானது என்னைப் பணிந்து காவல்புரிந்து தான் உச்சிவிக்கக்கருதி யென்னருகிலேயே வசித்திருந்தது. இதை யான் என்னுடன் கொண்டுவந்தேனாதலின் இஃதோர் கணநாதனாகி நம்முடைய நந்தியோடுவாயிற்படி காத்துக்கொண்டிருக்கும்படியருள்புரியவேண்டுமென விண்ணப்பிக்க, சிவபெருமான் அந்தப் புலியின் விஷயத்திலும் மனமிளகி யருள்செய்ய, அது கஞ்சுகம்பூண்டு பொற்பிரம்பும் வாளுமேந்தி நந்திதேவருடன் வசித்து அதிகாரஞ்செலுத்துஞ் சோமநந்தியென்னும் பெயர்பூண்டது. அதனைக்கண்ட அமரர்களும் முநிவர்களும் ஆனந்தமடைந்தார்கள். உமாதேவியும் பெருங்களிப்படைந்தனள். சிவபெருமான் கௌரிக்கு அநேக ஆபரணங்களும் மலர்மாலைகளும் பீதாம்பரங்களு மணிவித்து அத்தேவியுடன்கூடி வாழ்ந்திருந்தனனென்று வாயுதேவன் முநிவர்கட்குரைத்தனன்.

சோமநந்தியின் சரிதமுரைத்தது

முற்றிற்று.

இருபத்துநான்காவது

உலகம் அக்கினிசோமமயமென்பதுரைத்த அத்தியாயம்.

இந்தப்பிரபஞ்சம் அக்கினிசோமாத்மகமாகவும், சப்தார்த்தஸ்வரூபமாகவுமிருக்கிறதென்றும், சிவாக்கினையே சிவசக்தியென்றும், சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறிச் சமாதானஞ்செய்ததாகச் சொன்னீர்களாதலின், அவற்றை விரிவாகச் சொல்லவேண்டுமெனக்கேட்க, வாயுதேவன் கூறுகின்றான்: முநிவர்களே! அக்கினியென்பது ஈசுவரசம்பந்தமான கோரதேஜோரூபம். சோமமென்பது சிவசக்தியின் அமிர்தரசஸ்வரூபம். அக்கினியில் அமிர்தமுண்டாதலும், அதனால் அவ்வக்கினி * விருத்தியடைதலும், அவ்வக்கினியிலே அவிசொரிதலாற் பயிர் விருத்தியாகும்படி மழையுண்டாதலுமாம். இக்காரணங்களால் உலகம் அக்கினி சோமாத்மகமாம். அக்கினியானது அமிர்தத்துடன் ஸ்தூலசூக்ஷ்மங்களாகி, நெருங்கிய பூதமுதலியவற்றிற் பொருந்திச் சாரமாகவு மொளியாகவு

* அக்கினி - அக்கினிதேவன். யாக அவியையேற்றுக்கொள்ளும் அதிதெய்வங்கட்கு அந்தஅவியின் பிரயோசனத்தால் சிரேயஸ்கர முண்டாகுமென்பது, வேதசம்மதம்.

மிருக்கும். ஒளியானது சூரியனுமக்கினியுமாம். அமிர்தமானது சந்திரனும் அலைகள்பொருந்திய சலமுமாம். இவ்வாறே யுலகுக்குப் பயன்படும். அக்கினியே சிவமயமாகும். அமிர்தமே சத்திமயமாகும். இவ்வக்கினி சோமாத்மகமாகவே யுலகம் விளங்கும். அக்கினியினின்று அமிர்தந்தோன்றி யவ்வக்கினியிலேயே யொழுகும். ஆதலின் உலகஞ் சிவசக்திமயமாகும். அவ்வக்கினியால் உலகத்தை [யானென்னும் அகப்பற்றையும், எனதென்னும் புறப்பற்றையும்] நீறுபடுத்திய பஸ்மத்தை யணிந்தவர்கள் பாவமொழிந்து சிவமயமாவார்கள். மூலாதாரத்திலுள்ள அக்கினியினுல்தேகத்தைக்கொளுத்தி அந்தச் சாம்பரை மேலுள்ள அமிர்தத்தினுல் நனைத்தவர்கள் மரணத்துயரொழிந்து நித்திய முக்தியை யடைவார்கள். யோகாப்பியாசமுடைய பெரியோர்கள் தமது யோகவன்மையால் சூரியகலை சந்திரகலையென்னு மிரண்டையும் அக்கினிகலையினுலொடுக்கி அவ்வமிர்தத்தைப்புசித்து நிரதிசயானந்த மோக்ஷத்தையடைவார்கள்.

உலகம் அக்கினிசோமமயமேன்பது

முற்றிற்று.

இருபத்தைந்தாவது

ஷடத்துவாக்களுரைத்த அத்தியாயம்.

வாயுதேவன் கூறுகின்றுன்: முநிவர்களே! இந்த ஜகமுழுதும் சப்தார்த்த ஸ்வரூபமா யிருக்கிறதெனச் சொல்லும் விஷயத்தில் ஷடத்துவாக்களின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றேன். சப்தமில்லாத அர்த்தம் உலகத்திற்கிடையவே கிடையாது. அர்த்தமில்லாத சப்தமுங்கிடையாது. ஆதலால் அவ்வச்சப்தங்களுக்கு அவ்வவ்வர்த்தங்கள் அநாதியாகவே சங்கேதங்களாக விளங்குகின்றன. இது பிரகிருதியின் பரிணமம். இது சப்தமென்றும் அர்த்தமென்றும் இரண்டு பிரிவுகளாயிருக்கும். பரமாத்மஸ்வரூபிகளான சிவசக்திகளின்விபூதியாகத்தெரிந்துகொள்வீர்களாக. அதில், சப்தஸ்வரூபமான விபூதியானது ஸ்தூலமென்றும் சூக்ஷமமென்றும் பரையென்றும் மூவகைப்படும். அவற்றுள் ஸ்தூலமென்பது கேட்பது. சூக்ஷமமென்பது மனதிற் சிந்திப்பது. பரையென்பது சிந்தனையற்றிருப்பது. அந்தப்பரையானது கிரியாசக்தி ஞானசக்தி இச்சாசக்தியென மூவகைப்படும். அதில், பரையானது சிவதத்துவத்தையாசிரயித்தலால் கிரியாசக்தியும், யோகசம்பந்தத்தினுல் ஞானசக்தியும், ஈசுவர இச்சையுடன் கூடியிருத்தலினுல் இச்சாசக்தியுமாம். இந்தப்பரையானது மூன்று சக்திகளாகவிருத்தலின் சக்திதத்துவமெனப்பெயருற்று எல்லாக் காரியங்கட்கும் மூலகாரணமானது. அதற்குக் குண்டலினி யென்றும், மாயையென்றும், பரிசுத்தமான முக்கியமார்க்கஸ்வரூபமாகவுள்ள சதியென்றும் பெயர்கள். அந்தப்பராசக்தியே ஆறத்துவாக்களாக விளங்கும். அவற்றுட்சப்தாத்துவாக்கள் மூன்று. அர்த்தாத்துவாக்கள் மூன்று. இந்த

ஷடத்துவாக்களும் லயபோகாதிகாரங்களைச்செய்கின்றன. சப்தாத்துவாக்கள் மந்திராத்துவா பதாத்துவா வர்ணாத்துவா வெனமூன்று. அர்த்தாத்துவாக்கள் புவனாத்துவா தத்துவாத்துவா கலாத்துவாவென மூன்று. அத்துவாக்களாறும் ஒன்றுக்கொன்று வியாப்பிய வியாபகத்துவமுடையன. மந்திரங்கள் பதங்களாலாக்கப்படுதலின், மந்திராத்துவாவைப்பதாத்துவா வியாபரித்துள்ளது. பதங்கள்வர்ணத்தால் [எழுத்தாற்] சேர்க்கப்படுதலிற் பதாத்துவாவை வர்ணாத்துவா வியாபரித்துள்ளது. அண்டாந்தர்க்கதமான அநேகபுவனங்களிலும், சிவாகமங்களிற் சொல்லப்பட்டுள்ள அநேக புவனங்களிலும் வர்ணங்கள் பிறத்தலின், வர்ணாத்துவாவைப் புவனாத்துவா வியாபரித்துள்ளது. சாங்கியயோக பிரசித்தமான தத்துவங்களிலும், சிவாகமத்திற் பிரசித்தமான தத்துவங்களிலும் அநேகபுவனங்கள் பிறத்தலின் புவனாத்துவாவைத் தத்துவாத்துவாவியாபரித்துள்ளது. தத்துவாத்துவைக் கலாத்துவா வியாபரித்துள்ளது. பிரகிருதியானது நிவிருத்தி பிரதிஷ்டை வித்யை சாந்தி சாந்தியதீதையென்னும் ஐந்துகலைகளாகி, ஷடத்துவாக்களையும் வியாபரித்துள்ளது. சிவதத்துவமானது தன் சக்தியால் எல்லாத்தத்துவங்களையும் வியாபரித்துள்ளது. சிவசொரூபத்தாலேயே மண்ணானது குடமானாற்போலப் பிரபஞ்சத்தை நடத்துகின்றது. சிவதத்துவமே ஷடத்துவாக்களால் அடையத்தக்கது. சக்திகளின்ஐவகையை இனிச்சொல்லுகிறேன். நிவிருத்தியானது ருத்திரபதம் வரையும் சுத்தியாம். வித்தையானது வித்தியேசுரபதமளவுஞ் சுத்தியாம். சாந்தியானது அத்துவாந்தமளவுஞ் சுத்தியாம். சாந்தியதீதையானது பரமவியோமமளவுஞ் சுத்தியாம். இவ்வைந்துகலைகளாற் சமஸ்தபிரபஞ்சமும் வியாபரித்துள்ளது. ஆதலின் சாதகர்கள் இவ்விஷயங்களை நன்றாகக்காணவேண்டும். அத்துவாக்களின் தன்மையறியாது முக்திபெறக் கருதுகிறவன் பலனடையமாட்டான். சக்தியின் வியாப்தியை யுணராது தத்துவங்களும் அவற்றின்வியாப்தியும் விசுத்தியுந்தெரியா. பரசிவனுடையவாமபாகத்தில் எல்லாவற்றிற்குங் காரணபூதமாக விருக்குஞ் சக்தியென்பது சிவசம்பந்தமானஆக்கினை. இது ஆத்துமாவின்மாயையுமன்று. விகாரமுமன்று. பந்தவுமன்று. முக்தியுமன்று. ஆனாற் பந்தமுக்திகளை யுண்டுசெய்வதும், எல்லாப்பாக்கியங்களையுங் கொடுப்பதும், ஈசுவரனை யொருபோதும்பிரியாததும், சிவத்தின் பாவாநுகுணமாகத் தருமங்களை யாசிரயிப்பதுமாம். அந்தச்சர்வேசனுக்கு அந்தச்சக்தியாற் கிரகஸ்தனென்றும், அந்தச்சர்வேசனால் அதற்குக் கிருகிணியென்றும் எப்பொழுதும் பெயர்கள் விளங்குகின்றன. இவ்விருவர்க்குஞ்சமஸ்தபிரபஞ்சமும் பிள்ளைகள். ஆகையால் ஜகமுழுதிற்குஞ் சிவபெருமானே கர்த்தாவென்றுஞ் சிவசக்தியே கரணமென்றும் இருவர்க்கும் பேதமுண்டாயிருக்கும். சிலர் சிவபிரானே ஸ்திரீபுருஷரூபமாயிருக்கிறானென்றும், சிலர்சூரியனிடத்தில்ஸம்வாயசம்பந்தத்தால் [ஸம்வாயம் - நித்தியம்] எப்படி பிரபையானது வேறுபட் டிருக்குமோ

அப்படியே பரசிவனிடத்திற் சித்ரூபமான பராசக்தி வேருக விளங்குமென்றுஞ்சொல்லுவர். ஆனல் பரசிவனே எல்லாவற்றிற்குங் காரணன். அவனுடைய ஆக்கினுரூபமே பரமேசுவரி. ஆக்கினுரூபமான பரமேசுவரியாற் பிரேரேபிக்கப்பட்ட சிவசம்பந்தமான மூலப்பிரகிருதி நாசரகிதமாயிருக்கின்றது. அதற்கே மகாமாயையென்றும், மாயையென்றும், பிரகிருதியென்றும் முக்குணங்கள் விளங்கும். அதுகாரியபேதத்தால் மேற்கூறிய மூவகைப்பேதமுற்று ஷடத்துவாக்களை யுண்டுசெய்கின்றன. சப்தார்த்தசொரூபமான இந்த அத்துவா ஆறுவகைப்பட்டு ஜகத்ஸ்வரூபமாயிருக்கின்றது. இதையே யெல்லாச்சாஸ்திரங்களும் விரித்துக்கூறிக் கிரந்தங்கள் பெருகியிருக்கின்றன.

ஷடத்துவாக்களுரைத்தது

முற்றிற்று.

இருபத்தாருவது

சிவ விஜயமுரைத்த அத்தியாயம்.

இவ்வாறு கூறிய வாயுதேவனை முனிவர்கள் நோக்கி, பிரமசிஷ்ராகிய தேவரீர் கூறுவனயாவும் எங்கட்குப் பெருங்களிப்பையும் பேரறிவையும் ஊட்டுகின்றன. தாங்கள் கூறிய இயல்பினையுடையஎல்லாம் வல்ல இறைவனுகிய சிவபகவான் பற்பலகருமங்கட்காகப் பற்பலதிருவுருவங்களைப் பெற்றிருத்தல் தகுதிதானே வென்பதைப் பற்றியுந் தேவரீர் எளியேங்கட்கு நன்கு விளங்கும்படியுரைத்தருள வேண்டுமெனக் கேட்க, வாயு தேவன் முனிவர்கள் விஷயத்தில் விருப்பு மிகுந்து கூறத்தொடங்கினன். முநிசிரேஷ்டர்களே! காளகண்டமும் சடாடவியும் சர்ப்பாபரணமும் புலித்தோலுடையும் யானைத் தோற்போர்வையும் சடையும் சந்திரசூடமுமுடைய அந்தப்பகவான் எந்தக்காலத்திலும் அனைவர்க்குந் திருவருள்புரிந்துகொண்டே யிருப்பவனல்லன். எண்ணிறந்தோரை அவரவர் முறைதவறி நடக்கக்கண்டு தண்டனையுஞ்செய்துளன். அவன்செய்த விஜயங்கங்களிற் சிலவற்றையுஞ் சொல்கின்றேன். கேட்பீர்களாக: முன்னொருகாலத்திற் பிரமனும் விண்டுவும் ஒருவருக்கொருவர் செருச்செய்து தங்களில் ஒருவருக்கொருவர் பெரியோரென்று உலகினையழிக்க எத்தனிக்கையில், சிவபெருமான் அவர்கள் விவாதத்தை யொழிக்கக் கருதி, ஆங்குப்பிரசன்னமாக, பிரமன் தன்அகந்தையால் நீ யென் புருவமத்தியி அதித்த புதல்வனன்றோவெனக் கூறி நடுத்தலையாற் சிரிப்ப, அவனுடைய நடுத்தலையைத் தனதுநகநுதியாற் கிள்ளியெறிந்தனன். அதுமுதற்பிரமன் சதுர்முகனுயினன். ஒருகாலத்திற்றனவர் தலைவனுன ஹிரணியகசிபனென்பான் தேவர்கட்குத் துன்புசெய்துவருகையில், திருமால் நரசிங்கமாக அவதாரஞ்செய்து தன் கணக்கற்றகைகளாலவனைப்பற்றி மடியில் வைத்

துக்கொண்டு அவனுடலைக் கிழித்துக் குடலைமாலையாக வணிந்து உலக மழியவும் தேவமுனிவர்கள் முதலானோர் நடுங்கவும் அனர்த்தங்களைச்செய் வது கண்டு தேவர்கள் முறையிட்டார்கள். அப்பொழுதும் சிவபெருமான் எண்காற்புள்ளாகிய சரபத்திருவுருவெடுத்து அச்சிங்கத்தைப்பற்றி அதன் சர்மத்தை யுரித்து ஆடையாக வணிந்தனன். சிவபெருமான் தன்மருக னென்றும் ஜகந்மாதாவாகிய பார்ப்பதி தன்புத்திரியென்றும் இறுமாப் புற்ற தக்ஷனையும் அவனுடையயாகத்தையும் அங்குவந்திருந்ததேவர்களையு மழித்தனன். அன்றியும், தாரகன் புதல்வர்கள் மூவரும் பிரமனிடம் பெற்ற வரத்தின்சிறப்பாற் பொன் வெள்ளியிரும்பாலாகிய மும்மதில்களையுடைய முப்புரத்துடன்நினைத்தவிடத்திற்குச் சஞ்சரித்துஅங்குள்ள பிராணிகளையும் மரஞ் செடிகளையும் அழைத்துவருவது கண்டு தேவர்கள்முறையிட, சிவ பெருமான் பூமியேயிரதமாகவும்சூரியசந்திரர்களேதேருருளாகவும்நான்கு வேதங்களே நான்குகுதிரைகளாகவும், பிரமனேசாரதியாகவும், மேருமலை யே வில்லாகவும், ஆதிசேடனே நாணாகவும், விஷ்ணுவே பாணமாகவும், அக்கினியே கூர்முனையாகவும், வாயுவே அவ்வம்பிற்றொடுத்தசிறகாகவும், பிற தேவர்கள் பிற கருவிகளாகவுங்கொண்டு திரிபுரத்தை யணுகி, அப் பொழுது தேவர்கள் யாவரும் நம்மாலேயே திரிபுரமழிக்கப்படுவதெனத் தனித்தனி நினைக்க, அதனை யுணர்ந்த சிவபிரான் தமது தீவிழியினால் அம் முப்புரத்தை யழித்தனன். இதுவேயன்றிக் கோலோகத்திலிருந்த சில பசுக்கள் ஓயாமற் பாலினை யொழுக்கிப் பயன்படக்கருதுகையில், சங்கரன் அவற்றை யுற்றுப்பார்த் தெரித்துவிட்டனன். சலந்தரனென்னும் அசுர னொருவன் பிரமேந்திராதி தேவர்களை வென்று தான் பெற்ற சிவப்பிரசா தத்தால் தருக்குற்று, கைலாயகிரியை யடைந்துசிவபெருமானை வெல்லக் கருதிச் செல்லுகையில், சிவபிரான் ஓர் கிழவுருவேற்று வழிமறித்து எங்கே செல்கின்றனை யெனக் கேட்டறிந்து, நீ சிவனை வெல்வதன்முன்னர் நீ யவ்வளவு வலியுடையவனோ வென்று பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறித் தன் பாதத்தினால் நிலத்தில் வலயமாகக் கீறி, இதனை யெடுத்துச் சிரமிசைத் தாங்குவாயாகில் நீ பலவானென்பதற்குத் தடையில்லையென, சலந்தரன் இதுதானோ பெரிது? என்றிறுமாப்புடன் அதனைத் தோண்டியெடுத்து மார்பினுந் தோளினு மணைத்துச் சிரமிசை யமர்த்த, அது சக்கராயுதமாகி அவன் றலையிலிருந்து இருபிளவாக வுட லைப் பிளந்தது. அதனாற் சலந்தரனொழிந்தான். மிருகண்டு புத்திரரான மார்க்கண்டேயர் சிவபூஜை செய்துகொண்டிருக்கையில், அவருடைய வா ணாள் கழிய இயமன் அவரை யணுக, மார்க்கண்டேயர் சிவபிரானை யிரப்ப அப்பொழுது அவ்விலிங்கத்தினின்றுந் தோன்றித் தன்கையிலிருந்த சூலா யுதத்தால் இயமன் மார்பிற் குத்தி அவனை யுதைத்து உயிர்குடித்தனன். ஒருசமயத்தில் விஷ்ணுவை ஆதிசேடனாற் பிணித்து நூறுயோசனை தூரத் திற் சென்று விழும்படி விசிறி யெறிந்தனன். துர்க்காதேவியாற் சும்ப நிசும்பர் முதலான அசுரர் தொகுதியைத் தொலைத்தனன். முருகப்பெரு

மானைப் புதல்வனாகப்பெற்றுத் தாரகாசுரன் முதலிய தீயோரை யொழித்தனன். அந்தகாசுரனுடைய மார்பிற் சூலாயுதத்தாற் குத்தி அவனைத் தோளின்மேற்றூங்கி அநேககாலம் வருத்தினன். கயிலாசகிரியை அடியோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு செல்லக்கருதிய இராவணாசுரனை ஒரு விரலினால் மலையின்கீழமுத்திப் பெருந்துயருறுத்தினன். இவை சிலவேயாம். இவைபோல்வனவாகிய எண்ணிறந்த விஜயங்களையுஞ் செய்துள்ளாரென்னக்கூற, முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, தேவரீர் சிவபெருமான் செய்த தண்டங்களையெல்லாங் கூறியதுபோலச் சிவபெருமான் எவ்வெவ்வகையாக அருள்செய்தனரோ அவற்றையும் விரிவாகச் சொல்லியருளவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் பெருங் களிப்புடன் சொல்லத்தொடங்கினன்.

சிவ விஜயமுரைத்தது
முற்றிற்று.

இருபத்தேழாவது
சிவாநுக்கிரகவியல்புரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! பாவத்தை யொழிக்கத்தக்க அற்புதமான விஷயத்தை வினவினீர்கள். அந்தச் சிவபெருமானை உருவமாக விளங்கும்பொழுது காணக்கூடுமன்றி, அருவமாயிருக்கையில் அறியவல்லவர் யாவர்? ஒருவருமிலர். வேதசாரத்தை யுணர்ந்த புத்திமான்களே! விறகிற் பற்றியெரிகின்ற தீயைக்கண்டு தீயின்ஸ்வரூபாதிகள் இத்தன்மையனவென்றுணரலாமன்றி, அவ்விறகில் அந்தர்க்கதமாக விளங்கும் அக்கினியைக் காண வல்லவர்களில்லை. பரம்பொருளாகிய சர்வேசுவரன் அருவமாதலேயன்றி ஆன்மகோடிகளீடேறும்பொருட்டுச் சதாசிவன் மகேசன் உருத்திரன் விண்டு பிரமன் முதலிய மூர்த்தியாகித் திருவருள் புரிகின்றனன். அந்தக் கடவுள் பிரமன் முதலிய ஜீவகோடிகள் செய்த பாவங்களொழியும்படி தண்டங்களை அவரவர்கள் குற்றத்திற்கேற்பச் செய்கின்றனன். இந்த நியாயத்தாலல்லவோ அரசர்கள் குற்றஞ்செய்த பிரஜைகளைத் தண்டிக்கிறார்கள். குற்றஞ்செய்தோரைத் தண்டித்தலால் மன்னவருக்குச் சிறிதுந் தோஷமில்லை. பிதாவானவன் பிசகான காரியங்களைச்செய்த புதல்வரைத் தண்டிப்பது அவர்கள்பேரில் வைத்த அன்பினாலன்றி வேறன்று. அதுபோலவே கருணாமூர்த்தியாகிய எம்பெருமான் அவர்களுடைய பந்தங்களை யகற்றும்படி தண்டங்களைச்செய்து, தன் கிருபாநோக்கத்தைச் செலுத்துகின்றான். துன்புறுத்துகின்ற கட்டிமுதலிய நோயுற்றவனுடைய அந்தப்பாகத்தை யரிந்தாவது சுட்டாவது வைத்தியன் ஒழிப்பதுபோலத் தயாமூர்த்தியாகிய சங்கரன் ஆன்மாக்களுடைய வினையொழியும்படி வருத்தப்படுத்திப் பின்னர் அவ்வருத்தத்தையு மொழிப்பான். பல மூர்த்திகளாக அந்தப் பகவான் விளங்கினும் ஆசைமுதலிய தீமைகளையடையான்.

குற்றமுள்ள பொருள்கள் எல்லாவற்றையுங் கொளுத்திச் சாம்பராக்குந் தீயினுக்கு அக்குற்றஞ் சிறிது மில்லாதிருப்பதுபோலவே வினைச் சம்பந்தத்தை யொழிக்கும் ஈச்சுரனுக்குச் சிறிதும் வினையென்பது சம்பந்தப்படமாட்டாது. நெருப்பானது இரும்புமுதலிய உலோகங்களைச் சுடுவது போல ஈச்சுரன் எல்லாமூர்த்திகளையுந் தத்தமக்கியன்றவாறு ருழுகச்செய்கின்றான். அந்தப்பகவான் சர்வவியாபியாக எல்லாப் பொருள்களிலும் விளங்குகின்றானாதலின், அந்த ஈசுவரனை மண், கல், மரம், மணிமுதலிய வெல்லாப்பொருள்களிலும் பூசிக்கத்தகும். தத்தமக்கியன்ற ஒருபொருளில் அர்ச்சித்தவர்கள் இஷ்டசித்திகளையடைவார்கள். சித்தும் அசித்துமாகிய பொருள்களை யொன்றுசேர்த்தாலும் அவைகட்குள்ள குணங்கள் மாறுபடா. எதுபோலெனிற் சூரியனுதிக்கத் தாமரை விரிதலும், அதனோடுள்ள பிறமலர்கள் விரியாமையும்போலுமென வுணர்வீர்களாக. மலசம்பந்திகளுக்குச் சிவபெருமான் ஒருகாலத்திலும் மோக்ஷத்தைக்கொடுக்கமாட்டான். மலத்தை யொழித்தவர்கட்கே சிவபெருமான் மோக்ஷத்தைக் கொடுப்பான். ஆனாற் சிவபெருமானுக்கு அம்மலங்களில்லை. மலமானது ஆன்மாக்கட்கேயுரியது. ஆதலின், சீவன் இன்பதுன்பங்களையனுபவிக்க மாயாசம்பந்தத்தாற் கருமங்களைச்செய்யும். கருமமாயைகளின் அநுபந்தமான சமுசாரம் ஜீவனுக்கேயன்றிச் சிவனுக்கு எவ்வளவுங்கிடையாது. ஜீவனுக்குச் சுதச்சித்தமாகத் தானேவரத்தக்கதோர் மலமுள்ளது. அது தானே வருமாயினுங் காரணநிமித்தமாகவரக்கூடியது. அக்காரணம் ஒன்றாயினும் பலசக்திகளுடையதாகவிருக்கும். கருமமாயைகள் சிவனுக்குச் சிறிதுமில்லை. ஆத்துமாவானது யாவர்க்குஞ் சமானமாயிருப்பினும், சிலர் பந்தமுடையவர்களும், சிலர் முக்தர்களும், சிலர் பரர்களுமாயிருக்கிறார்கள். சிலர் லயபோகாதிகாரிகளாய் ஞானைசுவரியாதிகளின் தாரதம்மியங்களையடைகிறார்கள். சிலர் மூர்த்திகளாகிறார்கள். அன்றியுஞ் சிலர் சிவசொரூபிகளாய் அத்துவாக்களின் சிரசிலிருப்பார்கள். சிலர் மகேசர்களாய் அத்துவாக்களினிடையிலிருக்கிறார்கள். சிலர் உருத்திரர்களாய் அத்துவாக்களினடியிலிருக்கிறார்கள். மாயாசம்பந்தமற்றுச் சிவசந்நிதியிலிருப்பவர்களில், ஆத்மஸ்வரூபங் கீழேயும், அந்தராத்மஸ்வரூபமத்தியிலேயும், பரமாத்மஸ்வரூபம்மேலேயும் விளங்கிப் பிரம விஷ்ணு ருத்திரர்களென்று சொல்லப்படுவார்கள். இம்மூன்றுபதவிகளில் அநேகர்வசிக்கிறார்கள். சாந்தியதீதபதவியிற்சைவர்களும், சாந்திபதத்தில் மகேசர்களும், வித்தியாபதத்தில் உருத்திரபக்தர்களும், பிரதிஷ்டாபதத்தில் விண்டுபக்தர்களும், நிவிர்த்திபதத்திற் பிரமபக்தர்களும் வாழ்வார்கள். இவையே தேவயோனி*யஷ்டகமாம். இவையே யுச்சஸ்தானத்திலிருப்பனவும் உத்த

* தேவயோனி யஷ்டகமென்றது - வித்தியாதரர், யக்ஷர், ராக்ஷஸர், கந்தர்வர், கின்னரர், பசாசர், குய்யகர், சித்தர், பூதர், அரம்பையரென்னும் பத்துவகையினுள் யக்ஷரும் குய்யகரும் ஒன்றென்றும், பூதரும் பசாசரும் ஒன்றென்றுங்கொண்டு எட்டுவகைப்படுமெனத் தமிழ் வாயுசங்கிதைக்குறிப்பு கூறுகின்றது.

மமுமாம். ஒன்பதாவது மாநுடயோனி. அது மத்தியத்திலிருப்பதும் மத்திமமுமாம். பசுயோனிகள் ஐவகை. அவை தாழ்விலிருப்பனவும் அதமமுமாம். ஆகப்பசுவர்க்கம் பதினான்குவகைப்படும். ஜீவனுக்கு மலத்தின் ஏற்றக்குறைவுகளால் இவ்வகைய யோனிகள் உண்டாகின்றன. சமுசாரகாரணமான மலங்கள் ஆமமென்றும் பக்குவமென்றும் இருவகைப்படும். ஆமமலத்தால் ஜீவர்களுக்குத் தாழ்ந்தயோனியும், பக்குவமலத்தால் உத்தமயோனியுஞ் சம்பவிக்கும். பசுக்களாகிய ஜீவர்களுக்குள் ஒருமலமுடைமையிலும் இருமலமுடைமைதாழ்ந்தும், இருமலமுடைமையினும் மும்மலமுடைமை தாழ்ந்தும், உத்தம மத்திம அதமர்களாவார்கள். இம்மூவகையினரைக்காட்டிலுஞ் சாம்பவமூர்த்தியே சிறந்தவன். உருத்திராத்மகமான இந்தஜகமானது உருத்திரனால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. ஜீவஸ்வரூபமான வெல்லாவற்றையுஞ் சிவபெருமானே யதிஷ்டித்துளன். அண்டாந்தமான பூமியானது சதருத்திரர்களால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. மாயாந்தமான அந்தரிக்ஷமானது அமரேசனாதி யுருத்திரர்களால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. அங்குஷ்டமாத்திரமான ஜீவர்களால் யாவும் வியாப்தமாயிருக்கின்றன. மகாமாயாவசானாதிகளான புவனாதிபதிகளும் அத்துவாக்களிலுள்ளவர்களுமாகிய தேவர்களால் யாவும் அதிஷ்டிக்கப்படாவிடினும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் அதிஷ்டிக்கப்பட்டும், யாவும் சாம்பவமூர்த்தியால் அதிஷ்டிக்கப்பட்டும் விளங்கும். இவ்வகைய மூவகை மலசம்பந்தத்தால் ஜீவர்களுக்குச் சமுசாரமென்னும் நோய் உண்டாகின்றது. அந்தச் சமுசாரரோகத்தை யொழிப்பதற்குச் சர்வேசனுடைய அநுக்கிரகத்தாலுண்டான சிவஞானமே பரமௌஷதம். நோயாளிக்கு வைத்தியன் அந்நோயைத் தீர்ப்பதுபோல, பரம காருண்யனான சர்வேசன் சமுசாரரோகிக்கு நியாமகனாயிருந்து, அநாயாசமாக அதை யொழித்துச் சுகப்படுத்துகின்றான். துக்கமுண்டாவதற்குச் சமுசாரமே காரணம். சுகமுந்துக்கமுஞ் சுபாவமாகவே யுண்டாகும். ரோகமானது வைத்தியனால் உண்டாக்கப்படாததுபோலன்றிச் சர்வேசனாலேயே சமுசாரபந்தங்களுண்டாக்கப்படினும், அந்தப்பகவானுக்கு ஒருதோஷமுமுண்டாகாது. அவை சுபாவமாம். சமுசாரகாரணமான மலமே மாயை. அது அசேதனமானது. அது இரும்பைக் காந்தமிழுப்பதுபோல, சிவபெருமான் கருதியமாத்திரமே ஸ்வயமாகத் தொடருகின்றது. அம்மாயையை யொழிப்பதற்குச் சாந்நித்யமே காரணம். சிவபெருமானுடைய கட்டளையின்றி யாதொருகாரியமும் நிகழமாட்டாது. யாவுஞ்சர்வேசனாற் செய்யப்படுமாயினும், சுகதுக்கங்கட்காக நிந்திக்கப்படத் தக்கவனல்லன். சர்வேசனுடைய சக்தியே சர்வதோமுகியாயுள்ளது. அந்தச்சக்தியால் எல்லாப்பிரபஞ்சமும் வியாப்தமாயிருப்பினும், சர்வேசன் தூஷிக்கத் தக்கவனல்லன். அநாதியாக எல்லாப்பிரபஞ்சமும் ஈசுவரனுக்கு அடங்கியதாகவும், ஈசுவராக்ஞாரூபமான சக்தியே பிரபுவாகவுடையதுமா யிருத்தலின், ஈசுவரன் தூஷிக்கப்படமாட்டான். ஈசுவரசக்தியா லுண்டாகும்

மலசம்பந்தமான சமுசாரபந்தத்தை அந்த ஈசுவரனாலேயே யுண்டாகிறதென்றும், அவனே தூஷிக்கத்தக்கவனென்றும் நினைக்கின்ற துன்மதியுடையவன் அஜ்ஞானத்தால் நசிக்கின்றான் என்று வாயுதேவன் மஹருஷிகட்குச் சொல்லினன். அச்சமயத்தில் சத்தியமான வாக்கொன்று ஆகாயத்திலிருந்து "இதுசத்தியம் ஓம்" என்றுண்டாயிற்று. அதனைக்கேட்ட ருஷிகள்சந்தோஷித்துச் சந்தேகமற்று வாயுதேவனைத் துதிசெய்தார்கள். வாயுதேவன் அம்முநிவர்கள் இன்னுந் திடமாகவுணர்ந்திலரென்றுட்கொண்டு மேலுஞ்சொல்லலாயினன். முநிவர்களே! ஞானமானது பரோக்ஷமென்றும் அபரோக்ஷமென்றும் இருவகைப்படும். அதிற் பரோக்ஷஞானம் ஸ்திரமில்லாததென்றும், அபரோக்ஷஞானம் ஸ்திரமானதென்றுந்தெரிந்து கொள்ளவேண்டும். அநேகமான காரணங்களாலுண்டாவது பரோக்ஷஞானம். சிரேஷ்டமான அநுஷ்டானத்தாலுண்டாவது அபரோக்ஷஞானம். அபரோக்ஷஞானத்தை விடுத்தால் மோக்ஷம் ஒருகாலத்திலுஞ் சித்திக்காதென்று மனதிற்கொண்டு ஜாக்கிரதையாக அநுஷ்டானங்களைப் பிரயத்தனப்பட்டுச் சம்பாதியுங்களென்று கூறினன்.

சிவாநுக்கிரகவியல்புணர்த்தது

முற்றிற்று.

இருபத்தேட்டாவது

பாசுபதயோகமும் அஷ்டநாமமுமுணர்த்த அத்தியாயம்.

முநிவர்கள் வாயுதேவனை நோக்கி, எந்தச்சிரேஷ்டமான அநுஷ்டானத்தால் அபரோக்ஷ ஞானமுண்டாகி முத்தியெய்துமோ அந்த, அபரோக்ஷ ஞானமடைதற்குச் சாதனமான அநுஷ்டானம் யாது? அதனையடியேங்கட்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் கூறலாயினன். முநிவர்களே! சிரேஷ்டமான சைவதர்மங்களே சிறந்த அநுஷ்டானமென்பதன் அர்த்தமாம். அந்தச் சைவதர்மத்தினாலேயே அபரோக்ஷ ஞானமுண்டாகி முக்தியைக் கொடுக்கவல்ல சிவபெருமானைப் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடும். அந்தச் சைவதர்மம் கிரியை தவம் ஜபம் தியானம் ஞானம் என்னும் ஐவகையாக விளங்கும். பரோக்ஷ அபரோக்ஷ ஞானங்களை யுண்டுசெய்யும் சைவதர்மங்கள் பரமென்றும் அபரமென்றும் வேதங்களிற் சொல்லப்பட்டுள்ளன. தர்மசப்தத்திற்கு இவ்விதமாகப் பொருள் செய்வதற்கு வேதமே பிரமாணம். வேதங்களின் முடிவில் பரமானதர்மமும் பூர்வபாகங்களில் அபரதர்மங்களுஞ் சொல்லப்படும். ஞானிகளே பரதர்மத்தை யநுஷ்டித்தற்குரியவர்கள். எல்லோரும் அபரதர்மத்தைச்சாதாரணமாக அநுஷ்டித்தற்குரியவர்கள். அபரதர்மாநுஷ்டானமே பரதர்மங் கைகூடுதற்கு முக்கியமான மார்க்கமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுளது. பரதர்மமேசிரேஷ்டாநுஷ்டான சப்தத்திற்குப் பொ

ருளென்று இதிகாசபுராணங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்தத் தர்மம் சைவாகமங்களில் அங்கவுபாங்கங்களாற் பிரசித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாகமங்களுட் சிலவாகமங்கள் வேதத்தைத் தழுவியனவும் சிலதழுவாது சுதந்தரமானவையுமா யிருக்கும். அதிற் சைவ தீக்ஷா சமுஸ்காரமும் விரித் துரைக்கப்பட்டது. சைவாகமங்கள் காமிகாதி இருபத்தெட்டு வகையுடையன. அவற்றுட் காமிகாதி முதலிற் கூறிய பத்தும் சிவ பேதமென்றும், விசயமுதலிய பதினெட்டும் உருத்திர பேதமென்றும், அவை சித்தாந்த மென்றும் சொல்லப்படும். உத்கிருஷ்டமான பாசுபத விரதத்தையும் ஞானத்தையும் பிரதிபாதிக்கும் பரதர்மமானது சதகோடியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அவ்வவ் யுகங்களில் ஆன்மாக்களின் உஜ்ஜீவனார்த்தமாகப் பரமசிவனே ஆசாரியனாகவிருந்து பிரவர்த்திக்கச்செய்கின்றான். அநேகமாக விரிந்துள்ள ஆகமங்களை ருரு - ததீசி - அகஸ்தியர் - உபமன்னியரென்னும் நான்கு மஹாருஷிகளே உலகிற் பிரசித்தப்படுத்தினார்கள். அவர்கள் பரம்பரையில்வந்த அநேக ஆயிரர்கள் பாசுபதாசாரியர்களாய்ப் பின்னர்ப் பரவினார்கள். அவ்வாகமங்களிற் பரதர்மமானது சரியை கிரியை யோகம் ஞானமென நால் வகையாக விரித்துரைக்கப்பட்டுள்ளது. இவ்விதமாகச் சொல்லப்பட்ட பாசுபத யோகமானது திடமாகச் சிவபிரானைத் தரிசிக்கச்செய்யவல்லது. ஆதலாற் பாசுபதயோகமே சிரேஷ்டமான அநுஷ்டானம். அதுவே பரம தர்மம்.

முனிவர்களே! அந்தப் பாசுபதயோக சித்திக்காகச் சிவபெருமானே ஆன்மாக்களின்மீதுள்ள கருணையால் எட்டுத் திருநாமங்களைக் கூறியிருக்கின்றனன். அவற்றினாலேயே பாசுபதயோகத்தை யடையலாம். பாசுபதயோகத்தாலேயே பரமேசனைத் தரிசிக்கலாம். சிவபெருமானுடைய தரிசனத்தால் மாயை விலகும். அதனால் ஜீவன்முக்தனாகிறான். அந்த *நாமாஷ்டகமாவது சிவ:-மஹேசுவர:-ருத்ர:-விஷ்ணு:-பிதாமஹ:-ஸம்ஸாரவைத்திய:-ஸர்வஜ்ஞ:-பரமாத்மா: இவ்வெட்டுப்பெயர்களுமே எப்பொழுதும் சர்வேசுவரப் பிரதிபாதகமாகும். அவற்றுள் முதலிற் கூறிய ஐந்தும் சாந்தியதீத பதத்திலுள்ள சதாசிவாதியர்க்குப் பெயர்கள்: இவை சர்வேசனுடைய பரியாய நாமங்கள். ஏனைய மூன்றும் மாயாவலம்பன வசத்தாலுண்டாயின. இவை ஈசனுக்கேயுரிய சிறப்புப்பெயர்கள். அவையென்னெனில்,

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌲𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷 𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 ॥ 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑌰𑌿
𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑍇 𑌤𑍍𑌯𑌤𑍋𑌽𑌯𑌂𑌶𑌿𑌵𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌥𑌵𑌾𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌗𑍁

* 𑌶𑌿𑌵𑍋𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌃𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌃॥
சிவோமஹேஸ்வரஸ்சைவ ருத்ரோவிஷ்ணுஃபிதாமஹஃ
ஸம்ஸாரவைத்யஸ்ஸர்வஜ்ஞஃ பரமாத்மேதிமுக்யதஃ.

[illegible]

அநாதிமலஸம்ஶ்லேஷ ப்ராகபாவாத்ஸ்வபாவதஃ. (௨௮) அத்யந்தபரிஶுத்தாத்மே த்யதோயம்ஶிவஉச்யதே, அதவாசேஷகல்யாண குணைகநாஶ்வரஃ. (௨௯) ஶிவஇத்யுச்யதேசத்பி ஶ்ஶிவதத்வார்த்தவேதிபிஃ, த்ரயோவிம்ஶதிதத்வேப்யஃ பராப்ரக்ருதிருச்யதே. (௩௦) ப்ரக்ருதேஸ்துபரம்ப்ராஹுஃ புருஷம்பஞ்சவிம்ஶகம், யம்வேதாதௌஸ்வரம்ப்ராஹுர் வாச்யவாசகபாவதஃ. (௩௧) வேதைகவேத்யயாதாத்ம்யாத்வேதாந்தேச ப்ரதிஷ்டிதஃ, ஸஏவ ப்ரக்ருதௌலீநோ போக்தாயஃ ப்ரக்ருதேர்மதஃ. (௩௨) தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய யஃபரஸ்ஸமஹேஶ்வரஃ, தததீநப்ரவ்ருத்தித்வாத் ப்ரக்ருதேஃபுருஷஸ்யச. (௩௩) அதவாதிகுணந்தத்வம் மாயேயமிதம்வ்யயம், மாயாந்துப்ரக்ருதிம்வித்யாந் மாயிநந்துமஹேஶ்வரம். (௩௪) மாயாவிக்ஷேபகோநந்தோ மஹேஶ்வரஸமந்வயாத், ருத்துஃகம்துஃகஹேதுர்வா தத்ராவயதிநஃப்ரபுஃ. (௩௫) ருத்ரஇத்யுச்யதேஸத்பிஃ ஶிவஃபரமகாரணம், ஶிவதத்வாதிபூம்யந்தம் ஶரீராதிகடாதிச. (௩௬) வ்யாப்யாதிதிஷ்டதிஶிவ ஸ்ததோருத்ராஇதஸ்ததஃ, ஜகதஃபித்ருபூதாநாம் ஶிவோமூர்த்யாத்மநாமபி. (௩௭) பித்ருபாவேநஸர்வேஷாம் பிதாமஹஉதீரிதஃ, நிதாநஜ்ஞோயதா

வைத்யா ரோகஸ்யவிநிவர்தக꞉. உபாயைர்பேஷஜைஸ்தத்வ ல்லயபோகாதிகாரத꞉, ஸம்ஸாரஸ்யெ ஸ்வரோநித்யம் ஸமூலஸ்ய நிவர்தக꞉. (௩௯) ஸம்ஸாரவைத்ய இத்யுக்தஸ்ஸர்வதத்வார்த்தவேதிபி꞉, தஸார்த்தஜ்ஞாநஸித்யர்த மிந்த்ரியேஷ்வேஷு ஸத்ஸபி. (௪௦) த்ரிகாலபாவிநோபாவாந் ஸ்தூலாந்ஸூக்ஷ்மாநபேக்ஷத꞉, அணவோ நைவஜாநந்தி மாயாணவமலாவ்ருதா꞉. (௪௧) அஸத்ஸ்வபிசஸர்வேஷு ஸர்வார்த்தஜ்ஞாநஹேதுஷு, யத்யதாவஸ்திதம்வஸ்து தத்ததைவஸதாஶிவ꞉. (௪௨) அயத்நேநைவஜாநாதி தஸ்மாத்ஸர்வஜ்ஞஉச்யதே, ஸர்வாத்மாபரமைரேபி ர்குணைர்நித்யஸமந்வயாத். (௪௩) ஸ்வஸ்மாத்பராத்மவிரஹாத்பரமாத்மாஶிவஸ்வயம், நாமாஷ்டகமிதம்சைவ லப்த்வாசார்யப்ரஸாதத꞉. (௪௪)

அநாதியாகவுள்ள மலசம்பந்தத்தை யெக்காலத்து மில்லாமையாலும் அத்தியந்த பரிசுத்தனாயிருப்பதாலும் சிவனென்றும், அல்லது அநந்த கலியாணகுண முடையவனாதலின் சிவனென்றுஞ் சொல்லப்படுகிறான். இருபத்துமூன்று தத்துவங்கட்கும் பரமானது பிரகிருதி. அந்த இருபத்து நான்காவது தத்துவத்துக்கும் பரமாயுள்ளவன் புருஷன். எவனை வாச்சிய வாசகபாவத்தால் வேதாரம்பகாலத்தில் ஓம் என்று பிரணவஸ்வரூபமாகவும் வேதாந்தங்களில் வேதத்தாலேயே தெரியத்தக்கவனாகவுஞ் சொல்லப்படுகின்றானோ அவனே பிரகிருதியில் லீனமாய் அதனை யநுபவிப்பவனுமாகவிருந்து பிரகிருதி புருஷர்களைத்தன் சுவாதீனஞ்செய்துகொண்டமையின் அவன் மகேசனெனப்படுகிறான். அல்லது திரிகுணஸ்வரூபமான அநாதியான மாயையே பிரகிருதி. அந்த மாயையைச் சுவாதீனஞ்செய்துகொண்டு மாயையை யொழித்து அநந்தனாகவிருப்பவன் மகேசனெனப்படுவான். பக்தர்களுடைய துக்கத்தையும் துக்கஹேதுவையும் போக்கடித்துச் சுகத்தைக்கொடுத்தலின் உருத்திரனெனப்படுகிறான். சிவதத்துவமுதற் பூமிவரையில் எல்லாப்பொருள்களிலும் வியாபித்துள்ளமையின் விஷ்ணு எனப்படுவான். உலகிற்குப் பிதுர்பூதமான பிரமாதிகளுக்கும் பிதாவாதலின் பிதாமகனெனப்படுகிறான். ரோகமுடையவனுடைய ரோகங்களைக் கண்டுபிடித்து அதற்குத்தக்க ஔஷதங்களைக் கொடுத்துப் பரிகரிக்கும் வைத்தியனைப்போல, ஜீவனுடைய சமுசாரரோகத்தைக்கண்டு தன் கருணையால் அச்சமுசார ரோகத்தைச் சிவஞானயோகாதி ஔஷதங்களைக் கொடுத்துப் பரிகரிக்கிறதினால் சமுசாரவைத்தியனெனப்படுகிறான். சப்தாதி விஷய ஞானசித்திக்காக, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களில் திரிகாலங்களிலுமுள்ள ஸ்தூல சூக்ஷ்ம பாவங்களை மலசம்பந்தமுடைய ஜீவர்கள் உணரமாட்டார்கள். சமஸ்த ஞானங்கட்குங் காரணமான ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் யாவுமில்லாவிடினும் வஸ்துவின் உண்மையான ஸ்வரூபத்தை அநாயாசமாகத் தெரிந்துகொள்ள வல்லவனாதலின் ஸர்வஜ்ஞனெனப்படுகிறான். ஸர்வஜ்ஞத்துவாதி குணங்களெப்பொழுதுந் தன்னிடத்தில் விளங்குகின்றமையாலும், தன்னைக்காட்டிலும் பரம்பொருளில்லாமையாலும் பரமாத்மாவெனப்படுகிறான். இவ்வகைய சிறப்புடைய இந்த நாமாஷ்டகத்தை உத்தமாசிரியனாலடைந்து நிவிர்த்தியாதி கலைகளிலுள்ள திருநாமங்களாகத் துதிசெய்து உச்சரித்தவன் சகலசுகத்தையுமடைவான்.

ஆவர்த்திதங்களான சிவாதி ஐந்துதிருநாமங்களால் சுவஸ்வாவாதிஷ்டான கிரமமாகஸ்மரணைசெய்து அவ்வக்குணங்களை யதிக்கிரமிக்காது சோதனைசெய்து பிரேரேபிக்கப்பட்ட பிராணவாயுவாற் பீடிக்கப்பட்ட அபானவாயு ஊர்த்தஸ்தானத்தையடையத்தக்க உத்தூதத்துடன் கூடியதும், உத்தூதமல்லாததுமாகிய ஐந்துதிருநாமங்களை இதயம் கண்டம் தாலு புருவமத்தியம் பிரமரந்திரம் இவ்விடங்களிலிருக்கும் நிவிர்த்தியாதிய கலாகிரந்திகளை முறைப்படி சுத்திசெய்து, மனம் புத்தி வாசனை பஞ்சதன்மாத்திரைகளின் சம்பந்தமான புரியஷ்டதேகத்தையுஞ் சுத்திசெய்து, பன்னிருதளங்களுடன் கூடிய கமலமலரின்பொகுட்டில் விளங்குஞ் சந்திரனுக்கு மேற்பாகத்திற் பிரகாசித்துக்கொண்டிருக்குஞ் சிவதேஜசில் மத்தியநாடியாகிய சுழுமுனை நாடியால் தன்ஆத்துமாவை யடையச்செய்து, சக்திசம்புந்தமான அமிர்தமாரியால் நனைக்கப்பட்ட தேகமுடையவனுய்த் தன் ஆத்மசுவரூபத்தை யிறக்கி, துவாதச தள சுவேத கமலத்துள்ள சந்திரனைக்காட்டிலும் பரமாகவிருக்கும் அமிர்தாத்மஸ்வரூபனும் நிர்மலனும் மனோகரஸ்வரூபியும் சுத்தஸ்படிமயமானவனும் பிரசன்னனும் குளிர்ந்த காந்தியுடையவனுமாகிய அர்த்தநாரீசுவரனை இதயத்தில் நாமாஷ்டகத்தால் தியானஞ்செய்து, பக்தியாகியமலர்களா லருச்சித்துப் பிராணுயாமஞ்செய்து மனதை நிர்மலமாகச்செய்து அஷ்டநாமங்களைச்சபித்து, நாபியில் நாமாஷ்டகத்தால் ஆகுதிசெய்து, பூர்ணுகுதியுமுடித்து நமஸ்கரித்து,எண்வகைப்புஷ்பங்களாற் புஷ்பாஞ்சலிசமர்ப்பித்து, கையிற்சலங்கொண்டு தன் ஆத்துமாவை நிவேதித்து நிலமிசை நீரைவிடுக்கவேண்டும். இவ்வகையாகப் பாசுபதயோகத்தைச் செய்தவனுக்கு அதிசீக்கிரத்திற்சிறந்த பாசுபதஞானம் உண்டாகி முக்தியானது கைகூடும். இவ்விஷயத்திற் சிறிதுஞ்சந்தேகமில்லையென்று வாயுதேவன் கூறினன்.

பாசுபதயோகமும் அஷ்டநாமமு முரைத்தது

ஜ௱ற்றிற்ரு.

இருபத்தோன்பதாவது

பாசுபத விரதமுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! பிரமன் முதலிய தேவர்கள் எந்தப் பாசுபதவிரதத்தை எவ்வகையாக அநுஷ்டித்துச் சிறந்த பதவிகளை யடைந்தார்களென்பதை யெங்கட்குச் சொல்லவேண்டுமெனக்கேட்க வாயுதேவன் கூறலாயினன். எல்லாப் பாவங்களையு மொழிக்கவல்லதும், அதர்வசிரோபநிஷத்திற் சொல்லப்பட்டதுமாகிய பாசுபத விரதம் மிக்க ரகசியமானது அதனை யுங்கட்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்: அதற்குக்காலம் சித்திரைமாச பூரணை. இடம்சிவஸ்தலமாவது சிவா

லயமாவது புண்ணியக்ஷேத்திரமாவது தக்கதாம். அவ்வகைய விடத்தில் அதன் முற்பட்ட திரயோதசியில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானத்தை முடித்து ஆசாரியனை யடைந்து அவரைப் பூசித்துப் பணிந்து விசேஷ பூஜைகளுஞ்செய்து, வெள்ளிய வஸ்திரமுடுத்து வெண்மலர்மாலை யணிந்து திருவெண்ணீறுஞ் சந்தனமும் பூசிக்கொண்டு, கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் தருப்பாசனத்திலிருந்து, தருப்பையாற் பவித்திரமணிந்து மும்முறை பிராணயாமஞ்செய்து சிவபெருமானையும் உமாதேவியையும் குருப தேசப்படி தியானஞ்செய்து, இம்மஹா பாசுபதவிரதஞ் செய்கின்றேனென்று சங்கற்பஞ் செய்துகொண்டு தீக்ஷவஹித்து, அதுமுதல் தன் ஆயுள் வரையிற் பாசுபதவிரதத்தை யநுஷ்டிக்கவேண்டும். அல்லது பன்னிரண்டு வருஷங்களாவது ஆறுவருஷங்களாவது மூன்றுவருஷங்களாவது ஒரு வருஷமாவது ஆறுமாசங்களாவது மூன்றுமாசங்களாவது ஒருமாசமாவது பன்னிரண்டு தினங்களாவது ஆறு தினங்களாவது மூன்று தினங்களாவது ஒருதினமாவது அநுஷ்டிக்கவேண்டும். பிறகு அக்கினியைக் கொண்டு வந்து சமஸ்கரித்து விரஜாஹோமகிரமமாக நெய் சமிதை செரு முதலிய வற்றைஹோமஞ்செய்து பூர்ணாஹுதிமுடித்துத் தத்துவசுத்தியை யுத்தேசித்து மேற்கூறிய சமிதை முதலியவற்றாற் பஞ்சாக்ஷர மந்திரத்தைக் கொண்டு ஹோமஞ்செய்து என் தேகத்திலுள்ள தத்துவங்களெல்லாஞ் சுத்தியடையுமாகவென்று ஸ்மரணைசெய்து சுத்திசெய்யவேண்டும். அவ்வாறு செய்பவன் பரிசுத்தனாகிறான். புனிதமான கோமயத்தைக்கொண்டு வந்து உருட்டி அபிமந்திரித்து அக்கினியில் வைத்து அதனருகிலேயேயிருந்து இரவைக்கழித்து, சதுர்த்தசிதினமாகிய மறுநாள் காலையில் தன் நித்திபகடன் முதலியவற்றை முடித்து அன்று முழுதும் உபவாசமிருந்து காலங்கழித்து மறுநாளாகிய பூரணையில் தன் செய்கடன்களை நிறைவேற்றி, அக்கினியை யவித்து, தான் நீற்றிய நீற்றினையெடுத்து, சடையுடனாவது முண்டிதஞ் செய்துகொண்டாவது குடுமி வைத்துக்கொண்டாவது நீரில் மூழ்கி, சர்வவிரக்தனாகின் திகம்பரனாகவாவது, மனந்திடப்படாவிடின் ஓர் காவிவஸ்திரமாவது, நார்மடியாவது, பருத்தியாடையாவது தரித்தாவது, தண்டமொன்று கையிற்பற்றி, அரையில் முஞ்சிப்புல்லாற்றிரித்த நாணணிந்து, கைகால்களை யலம்பி, இருமுறை யாசமனீயஞ்செய்து விரஜாக்கினியாற் செய்த திருநீற்றை யெடுத்து உச்சிமுதற் பாதம்வரையில் உத்தூளனஞ்செய்து விதிப்படி திரிபுண்டரமணிந்து மனதிற் சிவபாவனைசெய்து சிவயோகத்தைச் செய்யவேண்டும். இவ்வகையாக நாளொன்றுக்கு மும்முறை பாசுபதவிரதத்தைச் செய்துகொண்டு, நவரத்தினங்களிழைத்த கர்ணிகை கேசரங்களுடன் கூடிய பொன்னாற் அஷ்டதளகமலமாவது, சக்தியில்லாவிடின் செந்தாமரைமலராவது, விபூதியாற் சித்திரித்தமலராவது, பாவனமாத்திரையாகவாவதுள்ள ஓர் கமலத்தில், ஸ்படிகலிங்கமூர்த்தியைப் பீடத்துடன் சாஸ்திரப்படி எழுந்தருளச்செய்து, பிராணப்பிரதிஷ்டை முதலியவற்றைச்செய்து, ஐந்து திருமுகங்களுடன்கூடிய பரமேசு

வரனேயென்று தியானித்து, பஞ்சகவ்வியங்களா லபிடேகித்து, சந்தனங் குங்குமம் கஸ்தூரி முதலிய வாசனைத்திரவியங்களா லபிடேகித்து ஆபரணாதிகளணிந்து, வில்வம் செந்தாமரை வெண்டாமரை கருங்குவளை முதலிய பல சிறந்தமலர்கள் சாற்றி, அறுகு அக்ஷதை முதலியவற்றுற் கிடைத்தவரையில் விசேஷமாகப்பூசித்து, தூப தீப அர்க்கியங்களளித்து, இஷ்டமுடைய சிறந்த நியாயமான அன்னம் பக்ஷியம் போஜ்யங்களை நிவேதித்து ஜயஜயவென்று பலமுறை கூறினவனுக்கு அநேக ஜனனங்களிற் செய்த பாவங்கள் நெருப்புப்பொறிபட்ட பஞ்சுபொதிபோல் ஒழியும்.

முநிவர்களே! வில்வபத்திரம் கமலமலர்கள் செங்குவளைகள் முதலிய மலர்கள் ஆயிரத்திற்குக் குறையாமற்கொண்டு அர்ச்சிக்கவும். கிடைக்காவிடின் நூற்றெட்டாவது, பொன்னுற்செய்த ஒரு மலராவதுகொண்டு பூசிக்கலாம். மலர்கள் ஆயிரத்தினல் உண்டாக்கும்பலனைச் சுவர்ணபுஷ்பம் ஒன்று அளிக்கும். இதர புஷ்பங்களுக்கு நியமமில்லாமையின் கிடைத்தவரையிற் பூசிப்பது விசேஷமே. இவ்வாறு அர்ச்சித்தபின்னர் அஷ்டாங்க அர்க்கியம் சமர்ப்பிக்கவேண்டியது. அகோரமுகத்திற் கரிய அகிலும், சத்தியோஜாதமுகத்தில் வெள்ளரிதாரமும், வாமதேவமுகத்திற் சந்தனமும், தற்புருஷமுகத்திற் பொன்னரிதாரமும், ஈசானமுகத்திற் பஸ்பமும் அணியவேண்டும். இவ்வகையாகக் கந்தமிடுதல் சிறப்பெனப் பெரியோர் சொல்லுவர். அகோரமுகத்திற்கு வெள்ளிய அகிலும், சத்தியோஜாத முகத்திற்குச் சௌகந்திக [நீலோற்பலக்கிழங்கு]ம், வாமதேவமுகத்திற்குக் காரகிலும், தற்புருஷமுகத்திற்குக் குங்கிலியமும், ஈசானமுகத்திற்கு வெட்டிவேர் முதலியவற்றின் பொடியுந் தூபங்கொடுக்கவேண்டும். சர்க்கரை மது கர்ப்பூரம் காராம்பசுவின் நெய் சந்தனம் அகரு முதலியவை கலந்த தூபத்தை யெல்லாமுகங்கட்குங் கொடுக்கலாகும். நெய்யால் திரி நனைக்கப்பட்ட தீபங்களையும் அதன்பின்னர் கர்ப்பூரத்தையுந் தீபாராதனை செய்யவேண்டும். அதன்பின் ஒவ்வொருமுகங்கட்கும் அர்க்கியங்கொடுக்க வேண்டும். அதன்பின்னர் முதலாவரணத்தில் விநாயகனையும், முருகக் கடவுளையும், பஞ்சப்பிரமங்களையும், இரண்டாம் ஆவரணத்தில் அநந்தன் முதலிய * வித்தியேசுவர்களையும், மூன்றும் ஆவரணத்தில் பவன் முதலிய † அஷ்டமூர்த்திகளையும், மாதேவன்முதலிய ‡ பதினேருருத்திரர்களையும், நான்காம் ஆவரணத்தில் எல்லாக் கணநாதர்களையும், ஐந்தாம் ஆவரணத்

* வித்தியேசுவரர்கள்: அநந்தன் - ஸூக்ஷ்மேசன் - சிவோத்தமன் - ஏகநேத்திரன் - ஏகருத்திரன் - திரிமூர்த்தி-சீகண்டன் - சிகண்டேசனெனப்படுவர்.

† அஷ்டமூர்த்திகள்: பவன் - சர்வன் - ஈசானன் - ருத்திரன் - பசுபதி - உக்கிரன் - வீமன் - மகாதேவன் எனப்படுவர்.

‡ பதினேருருத்திரர்கள்: மாதேவன் - அரன் - ருத்திரன் - சங்கரன் - நீலலோகிதன் - ஈசானன் - விஜயன் - வீமதேவன் - பவோற்பவன் - காபாலி - சௌமியனெனப்படுவர்.

தில் திக்குப்பாலகர்களையும் பிரமபுத்திரர்களையும், ஜோதிர் கணங்களையும், எல்லாத் தேவர்களையும், தேவமாதர்களையும், கேசரர்களையும், நாகலோகத்தில் வசிக்கும் பலவகைத் தேவர்களையும், முனிவர்களையும், யோகீசுவரர்களையும், கோமாதாக்களையும், க்ஷேத்திரபாலகர்களையும், அவரவர் கணங்களையும், சராசரப் பிரபஞ்சமுழுவதையும் பூசைசெய்யவேண்டும். இவ்வாறு ஆவரணபூசை முடிந்தபின்னர், சர்வேசனாகிய சாம்பவமூர்த்தியைப் பூசித்து, ஹோமஞ்செய்து நெய் தயிர் முதலியவற்றுடன் கூடிய நிவேதனத்தைச் சமர்ப்பித்து, பரிமள திரவியங்களுடன் கூடிய தாம்பூலமளித்து, மீண்டும் மலர்மாலைகளும் ஆபரணங்களுஞ் சாத்தி, கர்ப்பூர நீராஜனஞ் சமர்ப்பித்து, விசேஷ பூஜைகள் முடித்து, உபசாரங்கள் செய்து பலவாறு துதித்து, பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து குருவையும் குருவாலெழுதப்பட்ட சுவடியையும் பூசித்து நமஸ்கரித்து அர்க்கியமுதலியன வளித்து, * அஷ்டபுஷ்பங்கள் சாத்தி, சிவலிங்கத்தினின்றும் பெருமானை ஆத்துமாரோபணஞ்செய்து ஓமாக்கினியையும் ஆத்துமாரோபணஞ் செய்துகொள்ளவேண்டியது. இவ்வகையாக நாடோறும் மநுஷனானவன் பூசிக்கக்கடவன். இவ்விதமாகப் பூசித்தபின்னர் அந்தச் சிவலிங்கத்தையும் பூஜாவுபகரணங்களையுங் குருவுக்குக் கொடுக்கவேண்டும். அல்லது சிவசந்நிதானத்திற் சேர்க்கவேண்டும். அவ்வாறு கொடுத்தபின்னர், குருமுதலிய எண்ணில்லாத அந்தணர்களுக்கும் சிவபக்தர்களுக்கும் அன்னபானாதிகளளித்துப் பூசைசெய்யவேண்டும். சக்தியிருந்தால் ஏழைகள்முதலானோர்க்கும் அன்னங்கொடுக்கவேண்டும். விரதமிருப்போன் அன்றுநிராகாரனாயிருக்கவேண்டும். சக்தியில்லாவிடின் காய் கிழங்கு பழ முதலியவற்றை. யுண்ணக்கடவன். அல்லது பசுவின்பாலைப் பருகக்கடவன். அல்லது நியதிபிக்ஷையெடுத்துப் புசிக்கக்கடவன். அதுவுஞ் சாத்தியப்படாவிடிற் சிவபிரானைச்சிந்தித்து ஒருவேளை யன்னம்புசிக்கக் கடவன். அன்றிரவில் தரையிலாவது சருகுகளைப்பரப்பி அவற்றின்பேரிலாவது மரவுரியின்பேரிலாவது படுத்துப் பிரமசரியவிரதத்தை யநுஷ்டிக்கவேண்டியது. ஆதிவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் பூரணை அமாவாசியை அஷ்டமி சதுர்த்தசி இத்திதிகளிற் சக்திக்கேற்ப உபவாசமிருக்க வேண்டியது. பலவிதபிரயத்தினங்களாலும், சண்டாளர்கள் பதிதர்கள் பாஷண்டர்கள் அசூயையுடையவர்கள் முதலானவர்களைக் காணவும் பரிசிக்கவும் அவருடன் வசனிக்கவும் அவரோசைகேட்கவுங் கூடாது. அடக்கம் தானம் தயை சத்தியம் அஹிம்சை முதலியவற்றைச் சுபாவமாகவுடையவனாய்ச் சந்தோஷமடைந்து சிவத்தியானத்துடன் திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்துகொண்டும், சக்தியில்லாவிடின் பஸ்மஸ்நானமாவது செய்துகொண்டும், மனோவாக்குக்காயங்களால் விசேஷமான பூஜையைச் செய்யவேண்டியது. விசேஷமாகச் சொல்வானேன். இந்தப் பாசுபதவிர

* அஷ்டபுஷ்பங்கள்: அலரி - தாமரை - வெள்ளெருக்கு - நீலம் - சண்பகம் - புன்னை - வலம்புரிபாதிரி யென்பனவாம்.

தத்தைச் செய்பவர்கள் குருமூலமாக அதன்ஆசாரங்களை விசாரித்து, பூஜை ஜபம் ஹோமமுதலியவற்றில் ஏதேனுங் குறைவுவந்தால் தக்கபடி பிராயச்சித்தங்களைச் செய்துகொண்டு, விரதமுடிவில் கோதானமுஞ் செய்து, இடபத்தைச்சிவப்பிரீதியாக விடுத்து வேதியருக்குப் பூஜை செய்யவேண்டியது. மாசந்தோறுஞ் செய்யத்தக்க பூஜாவிதியை இனி விரித்துக்கூறுவாம். வைகாசிமாதத்தில் வச்சிரத்தாற்செய்த லிங்கமும் ஆனிமாசத்தில் மரகதலிங்கமும், ஆடிமாதத்தில் முத்துலிங்கமும், ஆவணிமாசத்தில் நீலலிங்கமும், புரட்டாசிமாதத்தில் பதுமராகலிங்கமும், அற்பிசிமாதத்திற் கோமேதகலிங்கமும், கார்த்திகைமாசத்திற் பவளலிங்கமும், மார்கழிமாசத்தில் வயிடூரியலிங்கமும், தைமாசத்திற் புஷ்பராகலிங்கமும், மாசிமாசத்திற் சூரியகாந்தமணியாற் செய்த லிங்கமும், பங்குனிமாசத்திற் சந்திரகாந்தலிங்கமுமாகிய இவற்றையும் முறையே பூஜைசெய்யவேண்டும். இவ்விரத்தினங்கிடையாவிடின், பொன்னாலாவது வெள்ளியாலாவது தாமிரத்தாலாவது சிலையாலாவது மிருத்துவாலாவது சந்தனத்தாலாவது சிவலிங்கஞ்செய்து அதனைப்பூசிக்கலாம். விரதாநுஷ்டானகாலத்திற் சர்வேசனுக்கெதிரே நின்று கரங்களையேற்று யான்சிறியேன் பூசைமுதலியவற்றுள் தவறியிருப்பேன். அவற்றைமனம் பொறுத்து என்னை யநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும். இவ்வாறுசெய்து ஆசாரியரநுஜ்ஞையை யடைந்து, கிழக்குநோக்கியாவது வடக்குநோக்கியாவது தர்ப்பாசனத்திலிருந்து பவித்திரமணிந்து பிராணாயாமஞ்செய்து மூலமந்திரஞ்செபித்து, சாம்பவியுடன் கூடிய சர்வேசனைத் தியானித்துக் கைகளைச்சிரமேற்குவித்து, ஜகதீசா! தேவரீருடைய திருவருளால் இவ்விரதத்தையான் அநுஷ்டித்தேனென்று விண்ணப்பித்து, தருப்பையை வடபுறத்திலெறிந்து, தண்டம் ஜடை மரவுரி முஞ்சியரைஞாண் முதலியவற்றை விலக்கி, வெள்ளியவஸ்திரமணிந்து, மூன்றுதரம் ஆசமனஞ்செய்து பஞ்சாக்ஷர ஜபஞ் செய்யவேண்டும். இவ்வகையாகப் பாசுபதவிரதத்தைத் தன் ஆயுள்வரையிற்செய்பவன் நைஷ்டிகன் [நிஷ்டையுடையவன்] அவனே அத்தியாசிரமன் [நால்வகை யாசிரமமுடையவர்களுக்குமேம்பட்டவன்.] மஹாபாசுபதன். அவனே தவசிகளிற்சிறந்தவன். அவனே மஹாவிரதன். மோக்ஷாபேக்ஷையுடையவர்களிற் பாசுபதவிரதமுடையவனுக்குச் சமானன் ஒருவனுமிலன். இப்பாசுபதவிரதத்தை யநுஷ்டித்த யதியை நைஷ்டிகோத்தமனென்று சொல்லப்படும். பன்னிரண்டு தினங்கள் அன்னத்தை விலக்கி விரதாநுஷ்டானஞ் செய்தவனும், நெய்யைமாத்திரம்பருகி மூன்றுதினங்கள் விரதாநுஷ்டானஞ் செய்தவனும் நைஷ்டிகனென்றே சொல்லப்படுவோர்கள். நாடோறும் இவ்விரதாநுஷ்டானஞ்செய்வதே நம்முடைய கடனென்று செய்துவருபவன் பெறுங்கதியை யாவர் அளவிட்டுரைப்பார்கள். உருத்திரஸ்வரூபமான விரஜாஹோமத்தாற் செய்யப்பட்ட பஸ்மத்தையுடலிற் பூசினவனுடைய பாவங்கள் யாவும் விரைவிலழியும். அவனுக்கு விரைவில் மோக்ஷமுஞ் சித்திக்கும்.

சிவாக்கினிக்கு வீரியமாகவுள்ள பஸ்மத்தை யணிபவர்களேயும், பஸ்ம பக்ஷணஞ்செய்பவர்களேயும் பேய்பூதமுதலியன துன்புசெய்யமாட்டாதுகள். பாவங்களேயெல்லாமொழித்தலிற் பஸ்மமென்றும், எல்லா ஐசுவரியங்களேயுங் கொடுத்தலின் விபூதியென்றும், யாவரையுங் காத்தலின் ரக்ஷையென்றுஞ் சொல்லப்படும். பலவகையாகச் சொல்வானேன். பஸ்மதாரணத்தை விடாதுசெய்தவன் சாக்ஷாத் சங்கரனேயாவன். பூர்வம் உபமந்யு முனிவர் தன்குற்றவினைச்சம்பந்தங்களேயொழிக்கவும், தமதிஷ்டசித்தியையெய்தவும், சிவகடாக்ஷம் பெறவும், பாசுபதாசாரியராகவுந் திருவெண்ணீற்றை யணிந்துள்ளார். அவ்விபூதியே யெல்லாப்பாக்கியங்கட்கும் காரணமென்று வாயுதேவன் முனிவர்களுக்குரைத்தனன்.

பாசுபதவிரதமுரைத்தது.

முற்றிற்று.

முப்பதாவது

உபமந்யு பேறுபெற்ற அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி உலகமுழுவதும் வியாபித்துள்ளவரே! இளவயதாகிய அந்த உபமந்யுமுனிவர் எவ்வாறு சிவாகமங்களேக் கற்று அவற்றின்பயனையும் திருநீற்றின் மகிமையையுமுணர்ந்து அதனைத் தரித்துப் பாசுபதவிரதத்தையாசரித்துச் சிவஞானத்தையடைந்துள்ளார்? என்னும் விவரத்தையும் எங்கட்குரைத்தருளவேண்டுமெனக் கேட்க, வாயுதேவன் சந்தோஷித்தனுகச் சொல்லத்தொடங்கினன் : முனிசிரேஷ்டர்களே! அருமையான விஷயத்தை ஊகித்துக்கேட்டீர்கள். உலகத்திலுள்ள சிறுபிள்ளைகளேப்போல உபமந்யுமுனிவரோர் சிறுபிள்ளேயல்லர். வயதிற் சிறுவராயிருப்பினும் மிக்க ஞானசிரேஷ்டர் அவரே. ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சித்தர்களிலொருவராக வெண்ணக்கடவீர். அவ்வகைய சித்தராகிய அவர் பூமியிற்றவவிசேஷமுடைய வியாக்கிரபாதமுனிவர் செய்த தவப்பயனுற் சிவாக்கினைப்படி அவருக்குப் புத்திரராகப்பிறந்தனர். அப்புதல்வர் பிறந்தகாலத்தில் வியாக்கிரபாதமுனிவரும், வசிஷ்டமுனிவர் தங்கையாகிய அவர் மனைவியும், அக்குழந்தையைச் சீராட்டி வளர்க்கக்கருதி வசிஷ்டமுனிவருடைய ஆச்சிரமத்திற்கனுப்பினர். அங்கே காமதேனுவின் பாலேக்களிப்புடன் பருகி வளர்ந்துவந்தனர். அவ்வாறு வளர்கையில் ஒருநாள் அவருடைய தாய்தந்தையர்கள் அங்கே வர உபமந்யுமுனிவர் அவர்களுடன் வந்துவிட்டனர். அங்கொருசமயத்தில் உபமந்யுமுனிவர் தாம் பருகிய காமதேனுவின் பாலேக்கருதி யழுகையில், அவருடைய தாய் பாலென்றுகூறி மாவைக்கரைத்துக்கொடுப்ப, அவர் அதனைப் பருகி இது பாலன்றென மீண்டுந் துக்கிக்க, அன்னை, மகனே! சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ்செய்து அவனுடைய திருவருளேப்பெருத நமக்குப் பசுவின்பால்

எங்ஙனங் கிடைக்கும்? என வருந்திக்கூற, உபமந்யுமுநிவர் அப்படிச் சிவபெருமா னிருப்பாராகில் யான் திருப்பாற்கடலேயே சொந்தமாகப் பெறுவேன் என்றனர். அதனைக்கேட்ட தாய், மகனே! சிவபிரான் இல்லாமற்போயினனு? பிரமன் முதலிய தேவர்களையெல்லாஞ் சிருஷ்டி செய்து அவர்கள் தன்கட்டளைக்குட்பட்டு உலககாரியங்களைச்செய்ய விடுத்துளன். ஆதலின் அவனே யுலகநாயகன். அவனுடைய திருவடிகளுக்கே பக்திசெய்யக்கடவாய். அவனுடைய திருவடியை யடைதற்குப் பஞ்சாக்ஷர மந்திரமே காரணம். நீயப் பஞ்சாக்ஷரமந்திரத்தையே ஜபிப்பாயாக. இது விரஜாஹோமத்தாற்செய்த திருநீறு. இதுவும் உன்றந்தையாலே யெனக்குக் கொடுக்கப்பட்டது. இதனை யணிந்துகொள்வாயாக. இதனை அகோர மந்திரத்தாலணிவாயாகில் உன்னுடைய வினைகளெல்லா மொழியுமென்று கூறித் திருவெண்ணீற்றைக் கொடுக்க, அதனையேற்றுத் தேகத்திலணிந்து செங்கல் மண் முதலியவற்றுற் சிறுகோயிலுஞ் சிவலிங்கமுஞ் செய்து கொண்டு அநேககாலம் அச்சிவலிங்கப்பெருமானை மலர் முதலியவற்றுற் பூசித்துச் சிறந்த தவத்தை மனவொற்றுமையுடன் செய்திருந்தனர். அந்தச்சமயத்தில், மரீசிமுநிவர் சாபமொழியாற் பேயுருவேற்றிருந்த சில முநிபுத்திரர்கள் ஆங்கடைந்து அவர் தவத்தை விக்கினஞ்செய்யும்படி அட்டஹாசஞ்செய்ய, உபமந்யுமுநிவர் பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்க, அதனுல் அம்முநிமக்கள் தமது பேயுருவொழித்து இயற்கை வடிவேற்றுர்கள்.

அந்தச்சமயத்தில், சிவபெருமான் தேவேந்திரனுடைய வுருவத்தையெடுத்து உபமந்யுமுநிவரையடுத்துச் சிவபெருமானைப் பலவகையாக நிந்தித்துக்கூற, உபமந்யுமுநிவர் மனந்தாளாது சிவநிந்தை செய்யுமிவனைக் கொல்வதே தகுதியென்று அகோராஸ்திர மந்திரத்தையுச்சரித்துத் திருக்கரத்தில் திருநீற்றை யெடுத்துக் கோபத்தோடெறிந்தனர். அவ்வாறெறிந்த அகோராஸ்திரத்தை, இந்திரவடிவுடனிற்குஞ் சிவபெருமானுக் கருகிலிருந்த நந்திதேவர் தடுக்க, உபமந்யுமுநிவர் மனம் வருந்தி இனியென்னுயிரை விடுவேனென்று தீர்மானித்து, மூலாக்கினியை யெழுப்பச் சிவபெருமான் அவ்வக்கினியை யவித்து இடபாரூடராய்க் காளகண்டமும் மான் மழுவும் உமாதேவியாரும் விளங்கக் காட்சியளித்தனர். பிரமன்முதலிய தேவர்கள் புடைசூழ்ந்து நின்றுர்கள். தேவதுந்துபிகள் முழங்கின. புஷ்பமாரி பொழிந்தது. அப்சரசுகள் நடித்தார்கள். அதனைக்கண்ட உபமந்யுமுநிவர் பிரத்தியக்ஷமாகச் சேவித்து ஆனந்தக்கண்ணீர் சிந்தும்படி கைகட்டி வாய்பொத்தி நின்றனர். சிவபெருமான் அவ்வாறு பணிந்து நின்ற உபமந்யுமுநிவரை யருகே யழைத்து, உச்சிமோந்து உடலைத்தழுவி, உமாதேவியை நோக்கி, மலைமகளே! இவனுன் புத்திரனெனக்கூறினன். உமாதேவியு மனங்களித்துத் தன் கரத்தை அவர் சிரமிசை யிருத்தி இறவாப்பதவியை யடைகவெனக் கூறினள். அலைகள் புரளுந் திருப்பாற்கடலை அவருக்குக்கொடுத்து, மேருமலையும் பின்னிடும்படி பெருஞ்செல்வத்தைக்

குபேரனுற் கொடுப்பித்து, மேலுஞ் சிவபெருமான் அவருக்குப் பாசுபத ஞானமும் பாசுபதவிரதமும் பாசுபதயோகமும் உண்டாகுக. ஆகமங்கள் ஸம்ஹிதைகள் புராணங்கள் முதலியவற்றைச்செய்யும் ஆற்றல் பெருகுக வென்று வரங்கொடுத்து, தேவ முநிகணங்களுடன் அந்தர்த்தானமாகிக் கைலாயகிரியை யடைந்தனரென்று வாயுதேவன் முநிசிரேஷ்டர்களுக்குக் கூறினன்.

உபமந்யு பேறுபெற்றது

முற்றிற்று.

பூர்வபாகம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

வாயுஸம்ஹிதை.

(உத்தரபாகம்.)

காப்பு.

𑌨𑌮𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌯𑌸𑍋𑌮𑌾𑌯 𑌸𑌗𑌣𑌾𑌯𑌸𑌸𑍂𑌨𑌵𑍇।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌶𑌾𑌯 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌹𑍇𑌤𑌵𑍇॥

நமஶ்ஶிவாயஸோமாய ஸகணாயஸஸூநவே
ப்ரதாநபுருஷேஶாய ஸர்கஸ்தித்யந்தஹேதவே.

மங்களங்களைக் கொடுப்பவனும், ஸோமஸ்வரூபியும், (அஷ்டாதச)கணங்களோடும் புத்திரர்களோடுங் கூடியிருப்பவனும், பிரகிருதிக்கும் புருஷனான நாராயணனுக்கும் பிரபுவும், சிருஷ்டி ஸ்திதிசங்காரங்கட்குக் காரணபூதனுமாகிய சாம்பவமூர்த்திக்கு நமஸ்காரம்.

𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌯𑌸𑍍𑌯 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂𑌚𑌾𑌪𑌿𑌸𑌰𑍍𑌵𑌗𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂𑌚𑌵𑌿𑌭𑍁𑌤𑍍𑌵𑌂𑌚 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥
𑌤𑌮𑌜𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂𑌶𑌿𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍍𑌰𑌜𑌾𑌮𑌿𑌶𑌰𑌣𑌂𑌶𑌿𑌵𑌮𑍍 ॥

ஶக்திரப்ரதிபூயஸ்ய ஐஸ்வர்யஞ்சாபிஸர்வகம்
ஸ்வாமித்வஞ்சவிபுத்வஞ்ச ஸ்வபாவம்ஸம்ப்ரசக்ஷதே.
தமஜம்விஶ்வகர்மாணம் ஶாஶ்வதம்ஶிவமத்வயம்
மஹாதேவம்மஹாத்மாநம் வ்ரஜாமிஶரணம்ஶிவம்.

எவ்விடத்துந் தடைபடாத சக்தியும் எல்லாரிடத்திலுமுள்ள ஐசுவரியமும், சுவாமித்துவமும், சர்வவியாபித்துவமும் எவனுக்குச் சுபாவமாகவிருக்கின்றதோ, அப்படிப்பட்ட பிறப்பில்லாதவனும், பிரபஞ்சத்தையெல்லாஞ் சிருஷ்டித்தவனும், ஸ்திரமாயிருப்பவனும், மங்களஸ்வரூபனும், (தனக்கொத்த) இரண்டாம்பொருளில்லாதவனும், பரமாத்மஸ்வரூபனுமாகிய மஹாதேவனைச் சரணமடைகிறேன்.

முதலாவது

கண்ணன் சிவதீக்ஷைபெற்ற அத்தியாயம்.

முநிவர்கள் வாயுதேவனைநோக்கி, ஸ்வாமீ! சிவகடாக்ஷம் பெற்ற உபமந்யு முநிவரிடம் விஷ்ணுவின் அவதாரமாகிய கிருஷ்ணமூர்த்திவந்து தன்வினைச்சம்பந்த மொழியும்படி ஞானதீக்ஷை செய்துகொண்ட வரலாற்றையுங்கேட்க விரும்புகின்றோமாதலின், அதனையுந் தேவரீர் கூறியருள வேண்டுமெனக்கேட்க, வாயுதேவன்கூறலாயினன். உலகபாரமொழிக்கும்படி திருவவதாரஞ்செய்த கிருஷ்ணமூர்த்தி சிவஞானத்தையடையவும் ஓர் நற்புத்திரனைப்பெறவுங்கருதி, உபமந்யு முநிவரிடம் வந்து அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து பணிந்தனர். அப்பொழுது உபமந்யுமுநிவர் தமது கரத்தாற் றிருநீற்றையெடுத்து கண்ணன் தேகத்திலணிந்து பாசுபத தீக்ஷைசெய்து பன்னிரண்டு மாசகாலங்கள் பாசுபதவிரதத்தை யநுஷ்டிக்கச்செய்து குற்றமில்லாததும் உயர்கதியைக் கொடுக்கவல்லதுமாகிய சிவ ஞானத்தையுபதேசித்தனர். அதனைப்பெற்ற கிருஷ்ணமூர்த்தி ஓர் நற்புத்திரனையடையக் கருதிச் சந்திரசேகரனாகிய சிவபெருமானைத் துதித்துப் பெருந்தவங்களைச் செய்துகொண்டிருக்கையில், அத்தவத்திற்குக் களிகூர்ந்த சிவபெருமான் உமாதேவியாரோடுங் காட்சிகொடுப்ப, கிருஷ்ணமூர்த்தி சாஷ்டாங்கமாகப்பணிந்து துதித்துநிற்க, சிவபெருமான் உனக்கு யாதுவரம்வேண்டும்? என வினவ, எனக்கோர் வல்லபமிக்க நல்லபுதல்வன் வேண்டுமென விண்ணப்பிக்க, அன்பர்கள் விரும்பியவற்றை யெல்லாங்கொடுக்கும் விரதத்தை மேற்கொண்டசிவபிரான் அவ்வாறேயோர் புத்திரனுண்டாவனென்று அருள்செய்து அந்தர்த்தானமாயினர். அவ்வகையவரத்தைப்பெற்ற கண்ணமூர்த்தி களிப்புமிகுந்து தன்மனையையடுத்து வாழ்ந்திருக்கையில், தன்னுடைய சாம்பவதியென்னும் மனைவியானவள் கருப்பமெய்தி, உடல்மதர்ப்புற்று இடைபருத்து நடைதள்ளாடி சிவகடாக்ஷத்தால் மகாபலசாலியான ஓர்புத்திரனை உத்தம முகூர்த்தத்திற் பெற்றனள். அப்புதல்வனைக்கண்டு மனங்களித்த கண்ணபிரான் அந்தணர் யர்சகர்முதலியோர்க்கு மணியும் பொன்னும் வஸ்திரமும் மனமகிழும்படி தானஞ்செய்தனன். அம்பையுடன்பொருந்திய சிவபிரானருளியபுத்திரனாதலின் அவனுக்குச் சாம்பனென்று பெயரிட்டனன். கண்ணன் தன் மனைவியோடும் புதல்வனாகிய சாம்பனோடும் மகிழ்ச்சிமிக்கு வாழ்ந்திருக்கையில், சாம்பன் பால்பருகியும் தவழ்ந்தும் நடந்தும் சிறுதேருருட்டியும் வளர்ந்து முநிவர்களான் ஞானமடைந்து யானை குதிரை தேர் இவற்றைச்செலுத்தும் வல்லபமும், வில் வாள் அஸ்திரமுதலியவற்றின்பயிர்ச்சியுங் கற்றறிந்தனன். இச்சரிதத்தை வாசித்தவர்கள் வைகுந்த பதவியில் திருமாலினால் ஞானமடைந்து சிவகதியடைவார்களென்றனன்.

கண்ணன்சிவதீக்ஷைபெற்றது.

முற்றிற்று.

இரண்டாவது

சிவனே பசுபதியென்பதுரைத்த அத்தியாயம்.

முனிவர்கள் வாயுதேவனை நோக்கி, ஸ்வாமீ! பாசுபத ஞான மென்பதியாது? சிவன் எங்ஙனம் பசுபதியாயினன்? கிருஷ்ணமூர்த்தி இவ்விஷயத்தை உபமந்யுமுனிவரை எவ்வகையாக வினவினர்? இவ்விஷயங்களைச் சொல்லவேண்டுமெனக்கேட்க வாயுதேவன் கூறலாயினன். பூர்வம் மந்தரகிரியில் நீலகண்டனாகிய சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த விஷயமே பாசுபதஞானம். அந்த ஞானத்தையே கிருஷ்ணபகவானுக்கு உபமந்யுமுனிவர் கூறியவாறே சொல்லுகின்றேன்: பூர்வம் உபமந்யு முனிவரிடம் கரிய தேகத்தையுடைய கண்ணபிரான் வந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து, முனிவர் தலைவரே! சிவபெருமான் உமாதேவியாருக்குபதேசித்துள்ள பாசுபதஞானத்தைக் கேட்கவேண்டுமென்றும், பசுக்கள் யாவரென்றும், பசுக்கள் எவ்வகையாகப் பாசத்தாற் பிணிக்கப்பட்டுளவென்றும், அப்பசுக்கள் தம்மைப் பந்தித்துள்ள பாசத்தினின்று விடுபடும் வகையின்னதென்றும் அறிய விரும்புகின்றேன். இவ்விஷயங்களைத் தயைசெய்து எனக்குணரக் கூறவேண்டுமெனக் கேட்க, உபமந்யுமுனிவர் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் நமஸ்கரித்துச் சொல்லத்தொடங்கினர். பிரமன்முதல் தாவரமீறாகவுள்ள யாவும் பசுக்களே! அப்பசுக்கட்கெல்லாம் பிரபுவாயிருக்கின்ற சிவபெருமான் பசுபதி. இவ்வகையாக வேதங்கள் நான்கும் சிவனே பசுபதியெனக் கூறுநிற்கும். மாயாமலங்களாகிய பாசத்தால், பசுக்களைப் பதியாகவுள்ளபகவான் கட்டுகின்றான். மாயாபோக்தர்கள் சிவபெருமானை நன்றாக வுபாசித்தபக்ஷத்தில் அதே சர்வேசுரன் அம்மலசம்பந்தத்தை யகற்றுகின்றான். இருபத்துநான்கு தத்துவங்களும் மாயாகர்மகுணங்கள். விஷயமென்றுஞ் சொல்லப்படும். இவையே ஜீவர்களுக்குப் பந்தனைசெய்பவை. பிரமாதி ஸ்தம்பபரியந்தமான பசுக்களை மஹேசுரன் பாசத்தாற் கட்டி அவரவர்கள் செய்யவேண்டிய காரியங்களைச் செயவிக்கின்றான். அம்மஹாதேவனுடைய ஆக்கினையாலேயே பிரகிருதியும் புருஷனுங் கூடிப் புத்தியை யுண்டுசெய்யும். புத்தி அகங்காரத்தை யுண்டுசெய்யும். அகங்காரமானது மனதையும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களையும் பஞ்சதன்மாத்திரைகளையும் படைக்கும். அவை பஞ்சமஹாபூதங்களைப் பிறப்பிக்கும். அப்பஞ்சபூதங்களும் பிரமன்முதல் எறும்பீறாகிய வெல்லா வுயிர்கட்குந் தேகத்தை யுண்டுசெய்யும். புத்தி நிச்சயத்தைச்செய்யும். அகங்காரம் அதியாசையால் நானென்று அபிமானிக்கும். சித்தமானது நிச்சயத்தை யுண்டுபண்ணும். மனம் ஸங்கற்பத்தை யுண்டுசெய்யும். ஞானேந்திரியங்களைந்தும் விஷயங்களையுணரும். கர்மேந்திரியங்களைந்தும் ஐந்து கருமங்களைச்செய்யும். இவையாவும் சர்வேசன் கட்டளையால் தத்தந் தொழிலைச் செய்கின்றன. அவருடைய கட்டளையில்லாது வேறு கருமங்களைச் செய்யமாட்டா. அந்தச் சர்வேசனுடைய ஆக்கினை

யெல்லோருக்கும் அதிக்கிரமிக்க முடியாதது. ஆகாயம் சர்வேசனுடைய ஆக்கினையாலேயே சர்வவியாபியாயிருந்து எல்லாப்பூதங்களுக்கும் அவகாசத்தைக்கொடுக்கின்றது. வாயு பிராணுபானுதி பெயர்களை வெவ்வேருகவடைந்து எல்லாப்பிரபஞ்சத்தையும் பரிக்கின்றது. அக்கினி தேவர்கட்குரிய ஹவ்யத்தையும் பிதுர்கட்குரிய கவ்யத்தையும் பிறர்க்குப் பாகத்தையுஞ் செய்கின்றது. ஜலம் எல்லாப்பிராணிகட்கும் பிழைப்பைக்கொடுக்கின்றது. பிருதிவி ஜகமுழுவதையுந் தாங்குகின்றது. இந்திரன் அந்தச் சர்வேசனுடைய ஆக்கினையாலேயே தேவராஜனுகித்தேவர்களைக்காத்தும் அசுரர்களையழித்தும் மூவுலகங்களையுங் காக்கின்றுன். இயமன் பாவிகளாயிருந்திறந்தவர்களுக்கு நரகவாதனையையும் பிழைத்திருப்பவர்களுக்கு வியாதிகளையுங் கொடுத்துத் தருமனெனப்படுகின்றுன். நிருதி சாஸ்திரஹீனமாகச் செய்த கர்மபலன்களை யழித்து ராக்ஷஸர்கட்குப் பிரபுவாயிருக்கின்றுன். வருணன் ஜலத்திற்குப்பிரபுவாயிருந்து பாவிகளைப்பாசத்தாற்கட்டுகின்றுன். குபேரன் பிராணிகள் செய்த புண்ணியங்கட்கேற்ப நவநிதிகளையுங் கொடுக்கின்றுன். ஈசானன் நல்லபுத்திமான்கட்குச் சம்பத்தையும் ஞானத்தையுங்கொடுத்து, துன்மார்க்கர்கட்கு நிக்கிரகத்தையும் ஈசுவராக்கினையாலேயே செய்கின்றுன். சர்வேசனுடைய கட்டளையாலேயே ஆதிசேஷன் உலகமுழுவதையுந் தன் சிரமிசை வைத்துச் சுமக்கின்றுன். பிரமன் சிவாக்கினையாலேயே சிருஷ்டிசெய்கின்றுன். தானே மும்மூர்த்திகளாகி முத்தொழில்களையுஞ் செய்கின்றுன். விஷ்ணு உலகமுழுவதையுஞ் சிவாக்கினையாலேயே பாலிக்கின்றுன். உருத்திரன் சிவாக்கினையாலேயே உலகத்தை யழிக்கின்றுன். இம்மூர்த்திகள் ஒவ்வொருவரும் மும்மூர்த்திகளாகி முத்தொழில்களையுஞ் செய்கின்றுர்கள். காலமானது ஈசுவராக்கினையால் எல்லாவற்றையும் உண்டுசெய்து காத்து அழிக்கின்றது. இவ்வகையாக ஈசனே யெல்லாவகையிலும் உலககாரியங்களைச் செய்துவருகின்றுன். ஆகாயத்திலுள்ள சூரியன் மேகங்களால் மழைபெய்வித்தும், பனிபெய்வித்தும், வெயிலைச்செய்தும் விளங்குவான். சந்திரன் சிவாக்கினையால் மலர்களை மலர்த்தி எல்லாப்பயிர்களையும் வளர்த்தி, காய்கனிமுதலியவற்றை யுண்டுசெய்து தேவர்முதலியோருக்கு ஆகாரங்கொடுத்துதவுகின்றுன். ஆதித்தர்கள் வசுக்கள் உருத்திரர்கள் அசுவினி தேவர்கள் மருத்துக்கள் கேசரர்கள் ருஷிகள் சித்தர்கள் நாகர்கள் மாநுடர்கள் மிருகங்கள் பக்ஷிகள் கீடாதிகள் நதிகள் சமுத்திரங்கள் பர்வதங்கள் வனங்கள் சரசுகள் வேதங்கள் சாஸ்திரங்கள் மந்திரங்கள் யாகங்கள் முதலியவை யாவும் பசுக்கள். காலாக்கினியாதி சிவபரியந்தமான யாவும் பசுக்களே. பிரமாண்டங்களும் அவற்றின் ஆவரணங்களும், சென்றவையும் இனிவருவனவும் எண்ணிறந்தனவும், திக்குகளும் காலபேதங்களும் நாம்காண்பனவுங் கேட்பனவுஞ் சங்கரனுடைய கட்டளையாலேயே நிலைபெற்றுள்ளன. சர்வேசனுடைய உத்திரவினுலேயே பூமிநிலைத்துள்ளதும் பர்வதங்

கள் இருப்பதும் மேகங்கள் சமுத்திரங்கள் ஜோதிஷ்கணங்கள் இந்திராதி தேவர்கள் சராசரமுழுதும் தம் நிலையிலிருப்பதுவுமாம்.

சிவனேபசுபதியேன்பதுரைத்தது
முற்றிற்று.

மூன்ருவது.

யாவுஞ்சிவன்செயலென்பதுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முனிவர் கிருஷ்ணபகவானை நோக்கி, கிருஷ்ணா! சிவபெருமானைப்பற்றி வேதத்திற் சொல்லப்பட்ட அதியற்புதமான கதை ஒன்றுண்டு கேட்பாயாக. பூர்வத்தில் இந்திரன்முதலிய தேவர்கள் போர் செய்து இராக்ஷஸர்களைச்செயித்து, ஒருவரோடொருவர் நான்வென்றேன் நான்வென்றேனென்று கலகப்பட்டிருக்கையில், சாம்பவமூர்த்தி தன் ஸ்வரூபத்தை விலக்கி ஓர் யக்ஷவடிவேற்று, தேவர்களே! ஏன் போர் செய்கிறீர்களென்று ஓர் துரும்பை நிலமிசைவைத்து, இதனையசைத்து விகாரப்படுத்தினவனே இராக்ஷஸர்களை வென்றவனெனக்கூற, தேவர்கள் முன்னே சசிபதியாகிய இந்திரன் கோபத்துடன் புன்னகைசெய்து, அத்துரும்பையெடுக்க யத்தனித்துத் தன்னால் முடியாதிருந்தனன். பின்னர், தன் வச்சிராயுதத்தை யதன்மீது செலுத்த அது கூர்வாய் மழுங்கி நிலமிசை விழுந்தது. இந்திரன் இவ்வகையாக ஆற்றலிழந்தபின்னர் அக்கினி நானிதனை யெரித்துவிடுவேனென்று சமீபித்து அதனை யெரிக்கமுயலுகையில் அவனே யெரிந்தனன். அதுகண்ட வாயு அத்துரும்பை யானே பெயர்ப்பேனென்று பிரளயகாலத்தில் வீசும் பிரசண்ட வேகத்துடன் மோதியும் அது இடம்பெயராது தானே தூரமாகச் சென்றுவிழுந்தனன். வருணன் இதனையொழிப்பேனென்று பிரவாகத்தையுண்டு செய்ய அப்பிரவாகமொழிந்ததேயன்றி அத்துரும்பு அசையவேயில்லை. இவற்றை யெல்லாங்கண்ட இந்திரன் மிக்க ஆச்சரியமடைந்து ஆங்கிருந்த யக்ஷரூபமுடைய சிவபிரானைப்பார்த்து, நீயாவன்? எனவினவ, யக்ஷரூபியொன்றுமுரையாது அந்தர்த்தானமாயினன். அந்தச்சமயத்தில் உலகமாதாவாகிய உமாதேவி அவ்வமரர்கட்குற்ற அகந்தையையும் சந்தேகத்தையும் விலக்கக்கருதி, தேவர்களெல்லாருக்குந்தெரியும்படி ஆகாயத்திலே தங்கினள். ஈசுவரியைக்கண்ட இமையவர்கள் கூட்டமாகச்சென்றுதேவியைப்பணிந்து பலவகைத்துதிகள் சொல்லி, இங்குவந்து துரும்பொன்றை நட்டு எங்கள் வலியைத்தொலைத்துச்சென்றவன் யாவனென்பதை யெங்கட்குக் கூறவேண்டுமெனக்கேட்ப, தேவியானவள் அந்தரர்விஷயத்தில் சிந்தைமகிழ்ந்து, அங்ஙனஞ்செய்தவன் மனம் வாக்கு காயமென்னுந் திரிகரணங்களாலும் அறியத்தக்கவனல்லன். தேவர் மாநுடர் சராசரங்களோடு அண்டாண்ட பிரமாண்டங்களையும் படைத்தும் அவற்றைப் பாலித்தும் அழித்தும் விளங்குகின்றவன். அவனே சிவபிரான். அவனே நமது தலைவன். அவனே

உங்களுடைய வன்மையை யுங்கட்குணர்த்தும்படி அத்துரும்பை யளவறி கருவியாக அமர்த்தினனென்று கூறி, ஜகந்மாதாவாகிய பார்ப்பதிதேவியும் அந்தர்த்தானமாயினள். தேவர்கள் யாவரும் விஷயத்தையுணர்ந்து சிவபெருமானுடைய கருணையை வியந்து தமக்குள் கலகமொழிந்து சந்தோஷசித்தர்களாகித் தங்கள் வாசஸ்தானங்களை யடைந்தார்களென்று கூறி, அந்தச்சிவபெருமானாலேயே உலகமுழுவதும் நிலைத்துள்ளவகையுங் கூறுவேனென்று உபமந்யுமுநிவர் கண்ணனை நோக்கி மேலுங்கூறினரென்று வாயுதேவன் முநிவர்கட்குரைக்கலாயினன்.

யாவுஞ்சிவன்செயலென்பதுரைத்தது

முற்றிற்று.

நான்காவது

பஞ்சப்பிரமஅஷ்டமூர்த்தங்களுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ண! சர்வாத்துமஸ்வரூபியான சாம்பவமூர்த்தியின் மூர்த்திவிசேஷத்தினால் இப்பிரபஞ்சமுழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானே தன்மூர்த்திபேதங்களால் எங்கும் வியாபித்திருப்பதனாலேயே சராசரப்பிரபஞ்சமுழுதும் அவனைச் சிவனென்றுகூறும். அவை பிரமன் விஷ்ணு ருத்திரன் மஹேஸ்வரன் சதாசிவனென்னும்மூர்த்திகளாம். அவையன்றிப் பஞ்சப்பிரமமென்று சொல்லப்படும் ஐந்துமூர்த்தங்களுமுள. அம்மூர்த்தங்களால் வியாபரிக்கப்படாதது யாதொன்றுமில்லை. ஈசானந் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோஜாதமென்னும் ஐந்துமே பஞ்சப்பிரமமூர்த்தங்களாம். முற்பட்டதாகிய ஈசானமூர்த்தி மிகச்சிறந்தது. அது பிரகிருதியை யநுபவிக்கும் புருஷனைச் சாக்ஷாத்தாக அதிஷ்டித்துள்ளது. தற்புருஷ மூர்த்தியானது திரிகுணாத்தும சொரூபமும் போக்கியமயமுமான அவ்வியக்தத்தை அதிஷ்டித்துத் தொழில்களை நடத்தும். மஹாபூஜியமாயுள்ள அகோரமூர்த்தி தர்மாதி அஷ்டாங்கசம்யுக்தமான புத்திதத்துவத்தைநடத்தும். வாமதேவமூர்த்தி அகங்காரத்தை அதிஷ்டித்துள்ளதென்று ஆகமங்கள்கூறும். சத்தியோஜாதமூர்த்திமனதை நடத்துமென்று விவேகிகள் சொல்கிறார்கள். ஈசானன் செவி வாய் சப்தம் ஆகாயம் இவற்றிற்குத் தலைவன். தற்புருஷன் துவக்கு பாணி ஸ்பரிசம் வாயுக்களுக்குத் தலைவன். அகோரமூர்த்தி சக்ஷு பாதங்கள் உருவம் அக்கினி இவற்றிற்கு ஈசுவரன். வாமதேவமூர்த்தி நாகுதம் இரசம் ஜலம் இவற்றிற்குப்பிரபு. சத்தியோஜாத மூர்த்தி நாசி உபஸ்தம் கந்தம் பூமி இதற்றிற்குப் பிரபு என்று உபமந்யுருரைத்தருளினர்.

பஞ்சப்பிரமஅஷ்டமூர்த்தங்களுரைத்தது

முற்றிற்று.

ஐந்தாவது

சிவஞ்சக்திகளின்விபூதியுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணமூர்த்தியானவர் ஷட்குணைசுவரிய சம்பன்னரான உபமந்யுமுனிவரைநோக்கி, ஸ்வாமீ! உலகமுழுவதும் ஈசுவரனுடைய அஷ்டமூர்த்திகளால் வியாப்தமாயுள்ளதென்பதைத் தேவரீர் சொல்லவுணர்ந்தேன். பார்வதி பரமேசுவரருடைய விபூதியை உண்மையாகவுணரவேண்டுமென விரும்புகின்றேன். அப்பார்வதி பரமேசர்கள் எப்படிப் பிரபஞ்சத்தை யதிஷ்டித்துள்ளார்களெனக் கேட்க, உபமந்யுமுனிவர் சிவபகவானைத் துதிசெய்து சொல்லத்தொடங்கினர். கிருஷ்ணா! நீகேட்ட பார்வதி பரமேசருடைய விபூதியையும் உண்மைநிலைமையையுஞ்சுருக்கமாகச்சொல்லுகின்றேன். விஸ்தாரமாகச் சொல்வதற்குப் பிரமதேவனுக்குஞ் சாத்தியமானதன்று. உமாதேவியே சக்தி. சிவபிரானே சக்தியையுடையவன் சக்தி சக்திமான்களுடைய விபூதி லேசமே இப்பிரபஞ்சமுழுதுமாம். ஜடரூபமான பொருளும், சித்ரூபமானபொருளும் ஆகிய இரண்டுஞ் சுத்தமென்றும் அசுத்தமென்றும் பெயர்கள்பெறும். அன்றியும்பரமென்றும் அபரமென்றும் பெயர்கள் பெறும். சித்ரூபமானது ஜடத்தைப் பொருந்திப் பிரகிருதியை யுண்டுசெய்யும். அந்த ஞான ரூபமே சுத்தமென்றும் பரமென்றுஞ்சொல்லப்படும். ஜடமும் அசுத்தமும் அபரமென்று சொல்லப்படும். சித்தும் அசித்தும் முதலியவற்றிற்கெல்லாஞ் சிவனுஞ் சக்தியுமே தலைவர்கள். ஆனபடியால் பிரபஞ்சமுழுவதுஞ்சிவசக்திகளின் சுவாதீனத்திலிருக்கும். அவ்வாறன்றி இவர்கள் பிரபஞ்சத்தின் வசத்திலிருப்பவர்களல்லர். இவர்களிருவரும் பிரபஞ்சத்திற்குப் பாலகர்களாதலின் விசுவேசுரரென்று சொல்வார்கள். சந்திரிகையின்றிச் சந்திரனும், பிரபையின்றிச்சூரியனும் பிரகாசியாததுபோல, சிவபெருமானிருப்பினும் சக்தியையின்றிப் பிரகாசிக்கமாட்டான். ஆதலின் சிவனைப்போலவே சக்தியுஞ் சக்தியைப்போலவே சிவனுமாகும். இவர்கட்குத்தாரதம்மியங் கிடையாது. சக்தியையன்றிச் சிவனிலன். சிவனையன்றிச்சக்தியில்லை. சிவன் சக்தியுடன் கூடியிருந்தே தேகிகளுக்குப் பக்திமுக்திகளைக் கொடுக்கவல்லவனாவான். ஏகமாகிய பராசக்தி அபரசக்திகளைச் சிருஷ்டிசெய்யும். அச்சக்தியே மூலப்பிரகிருதி மாயை முக்குணங்களென்று சொல்லும்படி பிரியும். பராசக்தியே சிவதத்துவமுதலாகப் பிரகிருதியீறாக ஜகமுழுவதையும்விரிக்கும். எம்பெருமானைப்பிரியாமல் எள்ளிலெண்ணெய்போல விளங்கும் பராசக்தி சிருட்டிகாலத்தில் ஜனித்தும் அதனிடமாகக் கிரியாசக்திதோன்றும். அந்தக்கிரியாசக்தியே மூலப்பிரகிருதியை யதிஷ்டித்து நாததத்துவத்தை யுண்டுசெய்யும். நாததத்துவத்தினின்று விந்து ஜனிக்கும். விந்துவினின்றுஞ் சதாசிவனுதிப்பான், சதாசிவத்தினின்றுமஹேசுவரனுதிப்பன். மஹேசுவரனிடத்தில், சுத்த வித்தைதோன்றும். அச்சுத்தவித்தையை வாகீசுரர்க்குச் சக்தியாகிய வாகீசுவரியென்றுங் கூறப்படும். இவ்

வகையாகச் சுத்ததத்துவங்களைந்துந் தோன்றியபிறகுஅனந்தனென்னும் வித்தியேசுவரனால் மாயையானது காலம் நியதி கலைவித்தைதகளைத் தோன்றச்செய்யும்.கலையினின்று இராகதத்துவமும்புருஷதத்துவமும்பிறக்கும். மாயையினின்றுந்திரிகுணப்பகுதிஜனிக்கும். அவற்றினின்றுந் திரிகுணங்கள் தோன்றும். அம்முக்குணங்களின்றுந் திரிமூர்த்திகளும் இருபத்துமூன்றுதத்துவங்களும்பிறக்கும். அவற்றினின்றும் எண்ணில்லாத அண்டங்களுந் தேகங்களும் ஜனிக்கும். ஆதலின் உலகமுழுவதுஞ் சக்திமயமேயாம். இச்சாசக்தி ஞானசக்திகிரியாசக்திகளாற்சிவபிரான் இவ்வுலககாரியத்தை நடத்துகிறான். அவற்றில், இச்சாசக்தியறியும். ஞான்சக்தி இதற்கிது காரணமென்றுணர்த்தும். கிரியாசக்தி விரும்பிய தொழிலைச்செய்யும். பராசக்தியின் ஏவலால் அபரசக்தி உலகையுண்டுசெய்யும். சிவனுஞ்சக்தியுமாகப் படைத்த உலகைச் சாத்தமென்பார்கள். தாய்தந்தைகளில்லாது குழந்தையில்லாததுபோல, சிவனுஞ்சக்தியு மில்லாவிடில் ஜகத்தில்லையாகும். சிவனே தந்தை சக்தியே தாய். சிவனே பரமான்மா சக்தியே மனோன்மணி. சிவனே மஹேசுவரன் சக்தியே மாயை. சிவனே புருஷன் சக்தியே பிரகிருதி. அன்றியும் அச்சிவனுஞ்சக்தியுமே உருத்திரனும் உருத்திராணியும், திருமாலுங் கமலையும், பிரமனும் பிரமாணியும், சூரியனும் பிரபையும், இந்திரனும் இந்திராணியும், அக்கினியும் ஸ்வாஹாதேவியும், இயமனும் யாமியும், நிருதியும் நைருதியும், வருணனுங் கௌரியும், வாயுவுஞ் சிவையும், குபேரனும் *புத்தியும், சந்திரனும் உரோகிணியும், ஈசானனும் ஈசானியும், அனந்தனும் அனந்தையும், காலாக்கினி ருத்திரனுங் காளியும், சுவாயம்புமநுவும் சதரூபையும், தக்கனும் பிரசூதியும், ருசியும் ஆகூதியும், பிருகுவுங் கியாதியும், மரீசியும் சம்பூதியும், அங்கிராவும் ஸ்மிருதியும் புலஸ்தியனும் பிரீதியும், புலகனும் க்ஷமையும், கிருதுவுஞ் சந்நதியும், அத்திரியும் அநுசூயையும, காசிபனும் அதிதியும், வசிஷ்டனும் அருந்ததியுமாக ஆணுருவங்களெல்லாஞ் சிவனும் பெண்ணுருவங்களெல்லாஞ்சக்தியுமாம். விஷயங்களெல்லாஞ் சக்தி. அவைகளை நுகர்வோன் சிவன். கேட்பவன் சிவனும் கேட்கிடப்படுவதுசக்தியும், தொடுவோன் சிவனுந் தொடப்படுவது சக்தியும், காண்பவன் சிவனுங் காணப்படுவது சக்தியுமாம். சுவைகள் சக்தியும் சுவைப்போன் சிவனும், மணங்கள் சக்தியும் அவற்றையநுபவிப்போன் சிவனுமாம். அறிபவன் சிவனும் அறிபவை சக்தியுமாம். உயிரேசிவனும் உடலே தேவியும், பகல்சிவனும், இரவு சக்தியும், ஆகாயஞ்சிவனும் பூமிசக்தியும், சமுத்திரஞ் சிவனும் அதன் கரைசக்தியும், மரங்கள் சிவனும் அவற்றிற்படர்கொடி சக்தியும், சொல் சக்தியும் அதன்பொருள் சிவனுமாம். இவ்வகையாகச் சிவனுஞ்சக்தியும் எப்பொருளிலும் ஒருவரையொருவர் பிரியாதுறைவார்கள். இவ்வகையாகச் சிவஞ்சத்திகளின் விபூதியிற் சிறிதினைக்கூறினேன். அநேகவாயிர வருஷங்கள் சொன்னாலும் அது சொல்லிமுடியாதது. பிரகிருதிமுதலாகிய

* புத்திமையை இருத்தியையென்று தமிழ்வாயுசங்கிதை கூறுகின்றது.

விபூதியானது இப்பொழுது நான்கூறிய விபூதியாம். பிரகிருதிக்கு மேம்பட்டவிபூதியை எனக்குத்தெரிந்தவரையிற் சிறந்த சிவபக்தனான உனக்காகச்சொன்னேன். இச்சிவஞ்சக்திகளின்விபூதியைப் பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், சிஷரல்லாதவர்களுக்குஞ் சிவனடியாரல்லாதவர்களுக்கும், சொல்லப்படாது. இதுவே நான்குவேதங்களிலுஞ் சொல்லப்பட்டுள்ள பரமரகசியப்பொருள். இந்தக்கதையைச் சொன்னவர்களும் கேட்டவர்களும், தமதுறவினரோடு நெடுங்காலம்வாழ்ந்துஉத்தமமைந்தர்களைப்பெற்று, சிவபக்த சிரேஷ்டர்களாகி, தமது பாவங்களையெல்லாமொழித்துச் சுகவாழ்விலமர்வார்களென்று உபமந்யுமுனிவருரைத்து மேலுங்கூறுகின்றனர்.

சிவஞ்சக்திகளின்விபூதியுரைத்தது

முற்றிற்று.

ஆறுவது

ஈசுவரப்பிரபாவமுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ண! தாவரசங்கமங்களாகிய பிரபஞ்சமுழுதுஞ் சிவசொரூபமேயாம். இவ்வுலகமுற்றுஞ் சிவரூபமென்பதைப் பசுக்கள் அறியமாட்டா. அந்தச் சிவபிரானை உள்ளபடியேயுணர்ந்த பெரியோர்கள் அபரபிரமமென்றும், பரபிரமமென்றும், மஹாதேவனென்றும், சிவனென்றும், சர்வசாக்ஷியென்றும் பலவகையாகச் சொல்வார்கள். பூதங்கள் இந்திரியம் அந்தக்கரணம் விஷயம் பிரகிருதி யெனக்கூறிய இவற்றின் சொரூபமென்று சிலர் சொல்வார்கள். பூதமுதற் பிரகிருதியீறாகவுள்ளவை அபரபிரமமாம். ஞானரூபமே பரபிரமமாம். எல்லாவற்றையும் படைக்குந்தன்மையாலும் பரம் அபரமென்பவற்றை யறியும் மேம்பாடுற்றவர்கள் பிரமமென்பார்கள். வித்தை அவித்தைகளின் வடிவமாமென்றும், சத்து அசத்துக்களுக்கு முதற்பொருளென்றுஞ் சொல்வார்கள். க்ஷரமென்றும் அக்ஷரமென்றும், அந்த க்ஷராக்ஷரங்கட்குப் பரமென்றும், சமட்டியென்றும் வியஷ்டியென்றும், இரண்டிற்குங் காரணமென்றும், பிரதானமென்றும் புருஷனென்றும், மகாவியக்தமென்றும், காலமென்றும், விராட்டென்றும், ஹிரணியகருப்பனென்றும், அந்தரியாமியென்றும், பரனென்றும், விசுவனென்றும், தைசதனென்றும், பவனென்றும், பர்க்கனென்றுஞ் சொல்வார்கள். கருத்தாவுடன் கிரியைகூடுவதே காரியமென்பதாம். குற்றமற்ற தவமுடையவர்கள் கரணம் - காரணம் - சாக்கிரம் - சொப்பனம் - சுழுத்தி - துரியம் - துரியாதீதம் - விகுணன் - குணன் - சுதந்திரன் - சுதந்திரனல்லாதவன் - குரூரன் - சவுமியன் - ஆசையுடையவன் - நிராசையுடையவன் - கிரியாவான் - கிரியையில்லாதவன் - இந்திரியமுள்ளவன் - இந்திரியமில்லாதவன் - அக்ஷரன் - அழிவுடையவன் என்று பலவாறாகக்

கூறுவார்கள். உருவம் - அருவம் - காணப்படுவது - காணப்படாதது - சொல்லப்படுவது - சொல்லப்படாதது - சிந்தாஸ்வரூபம் - சிந்தாதீதம் - ஞானம் - அஜ்ஞானம் - உணர்வு - உணர்வற்றது - என்றிவ்வகையாக அப்பொருளைப் பலர் பலவகையாகவுஞ் சொல்வார்கள். எவ்வகையாகக்கூறினும் இறுதியில் அந்தச் சிவபகவானையே யடைந்து அவன் திருவடிநிழலிலேயே வசிப்பார்கள். சிவபெருமானை யுணரமாட்டாத பசுக்கள் சக்கரம் போலச் சுழன்றுவரும் ஜனனங்களிற் சிவபிரானை நன்றாக வுணர்வார்களாயின் பசுத்துவமும் பாசமுமொழிந்து சிவசொரூபமடைந்து சிவபெருமானுடைய திருவடியிற் கலப்பார்கள் என்று கூறி உபமந்யுமுனிவர் மேலுஞ் சொல்லுகின்றார்.

ஈசுவரப்பிரபாவமுரைத்தது
முற்றிற்று.

ஏழாவது

நிஷ்களமுஞ் சகளமுமுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணா! யாதவசிரேஷ்டா! இன்னுங் கேட்பாயாக. அந்தச்சிவபெருமானுக்கு ஆணவங் காமியம் மாயையென்னு மும்மலங்களும், பிரகிருதி புத்தி அகங்காரம் மனம் சித்தம் இந்திரியமுதலியவற்றால் பந்தமுமில்லை. பூதங்கள் தன்மாத்திரைகள் காலம் கலை வித்தை நியதி ராகம் இவற்றாலும் பந்தங்கிடையாது. விருப்பு வெறுப்புக்களில்லை. இருவினையுமில்லை. கருத்தா வொருவனுமிலன். காரணமுங்கிடையாது. ஆதியுமந்தமுமில்லை. பகையுமில்லை. உறவுமில்லை. குருவுமில்லை. தலைவனுமில்லை, இறப்பும் பிறப்புமில்லை. அவனே பிரமன் விஷ்ணு முதலிய யாவர்க்கும் மேம்பட்டவனாய் அநந்தகல்யாணகுணமுடையவனாய்ப் பாவிகளாலறியப்படாது புண்ணியர்களுக்கே காணப்படுபவனாதலின் ஞானிகள் அவனைத் தாணுவென்று சொல்வார்கள். அந்தச் சிவபெருமானே யாவுமாகி விளங்குதலின் சருவனென்றும், மஹானென்றும், புருஷனென்றும், ஒப்பற்றவனென்றும், நீலலோகிதனென்றும் ஞானிகளுணரும்படி விளங்குவன். சரீரத்தினிடத்திலே தகராகாயத்தில் தமது ஞானத்தினாலே காணும் முனிவர்களுக்குக் காட்சியளிப்பவன், மோகத்தையுடையோருக்கு ஒருபொழுதுங் காட்சிதரமாட்டாதவன், சூரியனும் மின்மினிபோல ஒளிகுன்றும்படி பெருஞ்சோதிப்பிழம்பாயுள்ளவன், கிருபாமூர்த்தி, உக்கிரரூபி, சாந்தமுங் கோபமுங் கலந்த குணமுடையவன், நிர்க்குணன், அக்கரங்களின் வடிவாயுள்ளவன், அமிர்தசொரூபி, உலகிற்கு முழுமுதல்வன், அந்தகனுக்கு அந்தகன், சின்முத்திரையுடையவன், அத்தகைய சிறப்புவாய்ந்த சிவனுடைய சக்தியே சுத்தமாயிருக்கும். அவனையே பிரணவமானது உண்மையுணர்ந்து கூறும். பிரணவத்தைக் குருமூலமாக உபதேசிக்கப்பெற்று முறைப்படி ஜபஞ்

செய்தாற் சிவபெருமானைத் தரிசிக்கலாகும். சிவபெருமானைத் தரிசித்தால் அதனிற் சிறந்தது பிறிதொன்றுமில்லை. சிவசொரூபத்தை யுணர்வதற்கு ஆகமங்களை ஐயந்திரிபறக்கற்று மாயாசம்பந்தத்தை யொழித்து அப்பிரணவமே சிவசொரூபமென்று தெரிந்துகொள்ளவேண்டுமென மேலோர் சொல்வார்கள். அந்தப்பிரணவமானது அகர உகர மகரங்களுடன் நாதமென்பது கூடியதாய்ச் சொல்லப்படும். அந்தப்பிரணவமானது மூன்றரை மாத்திரைக்கால உச்சரிப்புடையதாய் விளங்கும். அவற்றுள் அகரமானது இருக்குவேதமும் மகானும், பீஜமும், இராஜதகுணமும், பிரமனுமாயிருக்கும். உகரமானது யசுர்வேதமும், பிரகிருதியும், சாத்துவிக குணமும், விஷ்ணுவுமாயிருக்கும். மகரமானது சாமவேதமும், புருஷனும், தாமதகுணமும், ருத்திரனுமாயிருக்கும். நாதமானது அதர்வணவேதமும், செயலற்றதும், சிவசொரூபமுமாயிருக்குமென்றுசொல்லப்படும். பிரணவமானது நாததத்துவத்தாற் சிவனை யறியச்செய்யும். சர்வத்திற்கும் ஆதிகாரணனாகிய சிவபெருமானே சர்வவியாபியாக அமர்ந்துள்ளானாதலின் அந்தப்பகவானையே பக்தி சிரத்தைகளுடன் உபாசித்துச் சிறந்த கதியை யடையவேண்டுமென்று உபமந்யுமுநிவர் கிருஷ்ணபகவானுக் குபதேசித்தனர்.

நிஷ்களமுஞ் சகளமுமுரைத்தது

முற்றிற்று.

எட்டாவது

உமாமஹேசுவரோபாசனையும் ஆகமோற்பத்தியுமுரைத்த அத்தியாயம்.

இவ்வாறுரைத்த உபமந்யுமுநிவர் மேலுஞ் சொல்லுகின்றார். கண்ணா! தேவர்கட்கெல்லாந் தேவனான பரசிவன், பராசக்தி இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி மாயாசக்தி முதற் சக்திகளாகப் பிரிந்து தானே விளங்குவன். அச்சக்திகளிற் பராசக்தி சதாசிவனையும் மகேசனையும் வித்தியேசுரர்களையும் புருஷர்களையும் பிரகிருதியையும் தத்துவங்களையும் பிரமன் முதலானவர்களையும் படைக்கும். அந்தச்சக்தியே சர்வவியாபியாய் அணுமயமாய் ஞானமயமாய் ஒப்பற்றதாய் விளங்கும். சிவன் சக்தியோடு விளங்கலின் சிவனைச்சக்திமானென்று தவசிகள் சாற்றுவார்கள். தவசிகள் சிவபெருமானைத் தமது அறிவாலறிதலால் வேத்தியன் [அறிவாலறியத்தக்கவன்] என்றும், சிவனைச் சக்தியறியச் செய்தலால் அதனை விஞ்ஞையென்றுஞ் சொல்வார்கள். மேற்கூறிய பராசக்தி பிரமன் முதலிய வெல்லோரையும் மயங்கச்செய்து அம்மயக்கத்தை யொழித்து முக்தி யுதவலால் அச்சக்தியாகிய மாதேவியின் பாதங்களைப் பணிந்து முக்திவீட்டை யடையவேண்டும். பூர்வத்தில் முநிவர்கள் உலகமுண்டாதற்குக் காரண

மென்ன? யாமெல்லோரும் எங்கிருந்து பிறந்தோம்? யாவராற் பிழைத்திருக்கின்றோம்? இச்சுக துக்கங்களை நமக்குக் கொடுப்போர் யாவர்? கடல் சூழ்ந்த இப்பூமியைப் படைத்தோர் யாவர்? என்னுஞ் சந்தேகங்களை யடைந்து யோகநிஷ்டையிலிருந்து எமது சிவபெருமானுடைய வாமபாகத்திற் பொருந்திய உமாதேவியைத் தரிசித்தார்கள். அவ்வுமாதேவியினுடைய திருவருளாற் பாசங்களை யொழித்து மயிலின் சாயலையுடைய அத்தேவியேர்டுஞ் சிவபெருமானையுந் தமது ஞானதிருஷ்டியாற் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்து மனமகிழ்ந்து இவனே யெல்லாப்பொருள்களுமாக வியாபரித்துள்ளவனென்று சந்தேகமொழிந்து இவனே பரம்பொருளென்று தெளிந்து மோக்ஷமடைந்தார்கள். சிவபெருமானையும் உமாதேவியையும் மனதிற்கொண்டு தியானஞ்செய்பவர்களே மோக்ஷமடையத்தக்கவர்கள். கர்மயோகமும் ஞானயோகமும் இது விஷயத்தில் வேண்டுவதில்லை. சிவபெருமானுடைய கடாக்ஷத்தை யடையவேண்டுவதே ஜீவனுடைய தொழில். அந்தச் சிவபகவான் கருதியமாத்திரத்தில் தேவர்கள் முதற் கிருமியீறாகவுள்ள ஜீவர்கள் யாவரும் பந்தமொழிந்து முக்திபெறத் தடையேயில்லை.

கிருஷ்ணா! ஆன்மாக்கள் தாய்வயிற்றிற் கருப்பாசயப்பையிற் கட்டுண்டு கிடக்கையிலாயினும், பிறக்கையிலாயினும், இளமையிலாயினும், வயோதிகத்திலாயினும், நரகமனுபவிக்கையிலாயினும், சுவர்க்கமனுபவிக்கையிலாயினும் நமது சங்கரன் திருவுள்ளஞ்செய்தால், உடனே அந்த ஆன்மாவுக்கு முக்திநிலை கைகூடுவது நிச்சயம். அவனுடைய திருவருளாலேயே பக்தி யுண்டாகவேண்டும். சிவபக்தியினாலேயே சிவகடாக்ஷமுண்டாகவேண்டும். அந்தப்பக்தி யெண்ணிறந்த ஜனனங்களில் வேதோக்தமாக நற்கருமங்களைச் செய்துள்ள புண்ணியபலனும் சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்ய உண்டாவதாகும். சிவபக்தியுண்டாவதால் அது சிவதருமங்களைச் செய்விக்கும். சிவதருமஞ் செய்தலால், சிவபெருமான் திருவருள் செய்வான். திருவருளால் இருவினைத்தொடக்கொழியும். இருவினைத்தொடக்கொழிவதால் முக்தியுண்டாகும். சிவபெருமானுடைய திருவடியிற் சிறிது ஒருவகையாகப் பக்திசெய்தவர்களும் மேலே பிறவியடையமாட்டார்கள். தேகத்தாற் பணிதலே பக்தியாம். உடலாற் பணிதலும் வாக்கினால் அவனைத் துதித்தலும் மனதால் அவனைத் தியானித்தலும், கையாற் பூஜைசெய்தலும் ஒவ்வொரு அவயவங்களாலும் அவனைப்பணிவிடைசெய்தலுஞ் சிவதருமங்களாம். தவம் கருமம் ஜபம் தியானம் ஞானமெனப்படும் அவற்றுள் சாந்திராயணமுதலியன தவங்கள். சிவலிங்கபூஜையே கருமம். பஞ்சாக்ஷர மந்திரஞ்சபித்தலே ஜபம். சிவபெருமானை மனதிற்றியானித்தலே தியானம். சிவாகமங்கள் முறையிடுவதே ஞானம். பூர்வம் சிவபெருமான் ஆன்மகோடிகள் கடைத்தேறும்படி உமாதேவிக்கு விரித்துக்கூறிய சிவாகமங்க ளிருபத்தெட்டே ஞானத்தை யுதவ வல்லனவாம். அவை

காமிகம் - யோகசம் - சிந்தியம் - காரணம் - அசிதம் - தீப்தம்-சூக்ஷமம் - ஸஹஸ்ரம் - அம்சுமான் - சுப்ரபேதம் - விஜயம் - நிஸ்வாஸம் - ஸ்வயம்பூதம் - ஆக்நேயம் - வீரம் - ரௌரவம் - மகுடம் - விமலம் - சந்தாஞாநம் - முகபிம்பம் - ப்ரோத்கீதம் - லளிதம் - சித்தம் - சந்தாநம் - சர்வோத்தமம் - பாரமேச்சுரம் - கிரணம் - வாதுளமென்பன. காமிகம் - யோகஜம் - சிந்தியம் - காரணம் - அசிதம் என்னுமைந்தையும் ஸத்தியோஜாதமுகத்தினின்று கௌசிக ருஷியின்பொருட்டும், தீர்த்தம் - சூக்குமம் சகச்சிரம் - அஞ்சுமான் - சுப்பிரபேதம் என்னு மைந்தையும் வாமதேவ முகத்தினின்று காசிபருஷியின்பொருட்டும், விஜயம் - நிச்சுவாசம் - சுவாயம்புவம்-ஆக்கிநேயம் - வீரம் என்னுமைந்தையும் அகோரமுகத்தினின்று பாரத்துவாஜவிருஷியின்பொருட்டும், ரௌரவம் - மகுடம் - விமலம் - சந்திரஞானம் - முகவிம்பம் என்னுமைந்தையும் தற்புருஷமுகத்தினின்று கௌதம விருஷியின்பொருட்டும், புரோற்கீதம் - இலளிதம் - சித்தம் - சந்தாநம் - சர்வோக்தம் - பாரமேசுவரம் - கிரணம் - வாதுளம் என்னுமெட்டையும், ஈஸாநமுகத்தினின்று அகஸ்திய விருஷியின்பொருட்டும் அருளிச்செய்தனர் என்பதும் நூல்வழக்கு. ஆகமமென்னு மொழியில் ஆ என்பது ஞானமும், க வென்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாம். ஆகவே ஆன்மாக்கட்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தலால் ஆகமமெனப் பெயராயிற்று. வேதமும் ஆகமமும் சிவபெருமானாலேயே அருளப்பட்வையாதலின், அவை தம்முட் சிறிதும்பேதமின்றி யியலுந்தன்மையன.

சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகசம் கணைக்கால்களும், சிந்தியம் திருவடிவிரல்களும், காரணம் கெண்டைக்கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தந் தொடைகளும், சூக்குமங் குய்யத்தானமும், சகச்சிரங் கடித்தானமும், அஞ்சுமான் முதுகும், சுப்பிரபேதங் கொப்பூழும், விசயம் உதரமும், நிச்சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக்கினேயங் கண்களும், வீரம் கழுத்தும், ரௌரவம் செவிகளும், மகுடம் திருமுடியும், விமலம் கைகளும், சந்திரஞானம் மார்பும், முகவிம்பந் திருமுகமும், புரோற்கீதந் திருநாக்கும், இலளிதம் கபோலங்களும், சித்தம் திருநெற்றியும், சந்தானம் குண்டலமும், சருவோத்தம் உபவீதமும், பாரமேசுவரம் ஆரமும், கிரணம் இரத்திநாபரணங்களும், வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம் திருமேற்பூச்சும், மற்றை உபாகமங்களெல்லாம் பரிமள திரவியங்களும், புஷ்பங்களும், சைவ சித்தாந்தம் நைவேத்தியமுமாம். அவற்றுள், காமிகத்துக்கு மூன்று. யோகஜத்துக்கு ஐந்து. சிந்தியத்துக்கு ஆறு. காரணத்துக்கு ஏழு. அசிதத்துக்கு நான்கு. தீப்தத்துக்கு ஒன்பது. சூக்குமத்துக்கு ஒன்று. சகச்சிரத்துக்குப் பத்து. அஞ்சுமானுக்குப் பன்னிரண்டு. சுப்பிரபேதத்துக்கு ஒன்று. விசயத்துக்கு எட்டு. சுவாயம்புவத்துக்கு மூன்று. ஆக்கினேயத்துக்கு ஒன்று. வீரத்துக்குப் பதின்மூன்று. ரௌரவத்துக்கு ஆறு. மகுடத்துக்கு இரண்டு. விம

லத்துக்குப்பதினாறு. சந்திரஞானத்துக்குப்பதினான்கு. முகவிம்பத்துக்குப் பதினைந்து. புரோற்கீதத்துக்குப் பதினாறு. இலளிதத்துக்கு மூன்று. சித்தத்துக்கு நான்கு. சந்தானத்துக்கு ஏழு. சர்வோத்தத்துக்கு ஐந்து. பாரமேசுவரத்துக்கு ஏழு. கிரணத்துக்கு ஒன்பது. வாதுளத்துக்குப் பன்னிரண்டு உபபேதங்களுள. இவ்வாகமங்களுள் முதலிய கூறிய பத்துஞ் சிவபேதமென்றும், இறுதியிற்கூறிய பதினெட்டும் ருத்திரபேதமென்றுஞ் சொல்லப்படும்.

இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்குபாதங்களுடையனவாயிருக்கும். இவற்றுள், ஞானபாதத்தில், பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தியென்னும் பாசங்களின் சொரூபமும், சக்தியின் சொரூபமும், சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவவரை முப்பத்தாறு தத்துவங்கள துற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாமுறைமையும், புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப்பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்தியமப்பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபமும், அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருஷ்டியாமுறைமையும், பாசுபதம் மகாவிரதங் கபாலமுதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும். இனிக் கிரியாபாதத்தில், மந்திரங்களினுத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபமோமங்களும், சமய விசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்களும், புத்தி முத்திகளுக் குபாயமாகிய தீக்கையுங் கூறப்படும். இனி யோகபாதத்தில், இந்த முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும் ஜகத்துக்குக் காரணமாகிய மாயை மஹாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதிசித்திகளுண்டாமுறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தியானம் தாரணம் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதாரமுதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும். இனிச் சரியாபாதத்தில், பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும், சிவலிங்க லக்ஷணமும், உமாமகேசுரமுதலிய வியக்தாவ்வியக்த லிங்கங்களின் லக்ஷணமும், நந்தி முதலிய கணநாதர் லக்ஷணமும், செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டல முதலியவற்றின் லக்ஷணமும், அந்தியேஷ்டி விதியும், சிராத்தவிதியுங் கூறப்படும்.

சிவபேதம் 'பத்தையுங்கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கு மும்மூன்றுபேராம் அணுசதாசிவருடனேவராகிய பிரணவர் முதன் முப்பதின்மராவர். அவர்பெயர் வருமாறு:—காமிகங்கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர். யோகசங் கேட்டவர் சுதாக்கியர், பஸ்மர், விபு. சிந்தியங் கேட்டவர் சுதீப்தர், கோபதி, அம்பிகை. காரணங்கேட்டவர் காரணர், சர்வருத்திரர், பிரசேசர். அசிதங் கேட்டவர்

சுசிவர். சிவர், அச்சுதர், தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர் சூக்ஷமங் கேட்டவர், சூக்ஷமர், வைசிரவணர், பிரபஞ்சனர், சகஸ்ரங் கேட்டவர் காலர், விமர், தருமர். அஞ்சுமான் கேட்டவர் அம்பு, உக்கிரர், ஆதித்தியர். சுப்பிரபேதங் கேட்டவர் தேசேசர், விக்கினேசர், சசி. உருத்திரபேதம் பதினெட்டையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கு இவ்விரண்டுபேராய் அநாதிருத்திரர் முதன் முப்பத்தறுவராவர். அவர்பெயர் வருமாறு:—விசயங்கேட்டவர் அநாதிருத்திரர், பரமேசர், நிச்சுவாசங்கேட்டவர் தசார்ணர், பரர்ப்பதி. சுவாயம்புவங்கேட்டவர் நிதனேசர், பத்மபூ. ஆக்கிநேயங்கேட்டவர் வியோமர், உதாசனர். வீரங்கேட்டவர் தேசர். பிரசாபதி ரௌரவங்கேட்டவர் பிரமேசர், நந்திகேசர், மகுடங்கேட்டவர் சிவர், மகாதேவர் விமலங் கேட்டவர் சருவாத்மர், வீரபத்திரர். சந்திரஞானங்கேட்டவர் அநந்தர், பிருகஸ்பதி. முகவிம்பங்கேட்டவர் பிரசாந்தர், ததீசி. புரோற்கிதங்கேட்டவர் சூலி, கவசர். இலளிதங்கேட்டவர் ஆலயேசர், இலளிதர். சித்தங் கேட்டவர் விந்து, சண்டேசர். சந்தானங்கேட்டவர் சிவநிஷ்டர், அசம்பாதர். சருவோத்தங்கட்டவர் சோமதேவர், நிருசிங்கர். பாரமேசுரங் கேட்டர் சிதேவி, உசனர். கிரணங்கேட்டவர் தேவவிபு, சம்வர்த்தர். வாதுளங்கேட்டவர் சிவர், மகாகாளர். விஷயவாதனையில் மனஞ்செல்லாதடக்கி அவ்விறைவனுடைய திருவடியை இவ்வகைய,ஆகமமார்க்கத்தாலேயே யடையவேண்டுமென்று உபமந்யுமுநிவருரைத்தருளினர்.

உமாமஹேசுவரோபாசனையும் ஆகமோற்பத்தியுமுரைத்தது

முற்றிற்று.

ஒன்பதாவது

தேவர்களுக்குச்சிவாகமமளித்த அத்தியாயம்.

கண்ணமூர்த்தி உபமந்யுமுநிவரைநோக்கி ஸ்வாமீ! சந்திரசேகரனும் சர்ப்பாபரணனுமாகிய சிவபெருமான் உமாதேவியாருக்குச் சிவாகமங்களைக்கூறியவகையே தேவரீர் அடியேனுக்கு அதன்விவரங்களைச் சொல்லவேண்டுமெனக்கேட்க, உபமந்யுமுநிவர் சொல்லத்தொடங்கினர்: பூர்வத்தில், சிவபெருமான் அவ்வியக்தத்தினின்றுந் தோன்றிப் பதுமாசனனாகியபிரமதேவனைப்படைத்தான். அந்தப்பிரமதேவன் உலகு வர்ணம் ஆச்சிரமம் * சோமம் என்பனவற்றைப்படைத்தனன். சோமத்தினின்றும், உலகையெல்லாந் தன்னிடத்தொடுக்கியுள்ள ஆகாயந்தோன்றியது. அதன்பின்னர் ஆகாயத்தினின்று பிறபூதங்களும் அவற்றினின்று எல்லாப்பொருளுமாக முறையே தோன்றின. பிரமன்முதலிய தேவர்கள் உருத்திரமந்திரத்தினாலே சிவபகவானைத் துதிசெய்ய,சிவபெருமான் அவர்கட்கு நேரேநின்று அவர்களறிவைமயக்க, அவர்கள் இறைவனை யுணரா

* சோமம் - யாகத்தில் உபயோகப்படுவதோர் கொடி.

ராகி நீயாவன்? எனவினவினர்கள். அப்பொழுது சிவபகவான் அமரர்களே! யானே இறப்பு நிகழ்வு எதிர்வென்னுங் காலத்திரயங்களினுமுள்ளவன். பகைப்புலன்கள் துன்புசெய்யவொட்டாமல் அவற்றைத் தடுத்து எம்மையடைந்தவர்கள் மோட்சமடைவார்கள். எம்மையடையாதவர்கள் ஒருகாலத்திலும் மோக்ஷமென்பதைக் கண்ணினுங்காணமாட்டார்களென்றுகூறி அந்தர்த்தானமாயினன். அங்கிருந்த தேவர்கள் சிவபெருமானே யிவ்வாறருளிச்செய்து சென்றனரென்று தெரிந்துகொண்டு சிவபக்தியுடையவர்களாய்ப் பாசுபதவிரதத்தை மேற்கொண்டு சிவத்தியானபரர்களாய் நெடுங்காலங்கழிப்ப, சிவபெருமான் அவர்களுடைய அன்பிற்கு அகங்களித்துத் தமதுஸ்வரூபத்தைத் தரிசனந்தந்தனர். அதனால்தேவர்கள் சிவபெருமானையும் வாமபாகத்திலிருக்கும் மலைமகளையும் மான் மழு திரிசூல முதலியவற்றையுங்கண்கள் களிக்கக் கண்டு அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு, சிவபெருமானையும் உமாதேவியையும் பலவாறு துதித்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்துநிற்ப, சந்திரசேகரனாகிய சங்கரன், தேவர்களே! உங்கள் தோத்திரத்திற்காக மனமகிழ்ந்தோம். தேவர்கள் கடவுளே! தேவரீரையாங்கள் பூஜிக்கவிரும்புகின்றோமென விண்ணப்பஞ் செய்ய, அப்படியேசெய்வீர்களாகவென்று அவர்கட்கு அநுமதிகொடுத்துச் சூரியமண்டலமத்தியிற்பிரகாசிக்கும் நான்குமுகங்களுடன் காட்சி தந்தனன். அதனையுணர்ந்த தேவர்கள் அவ்விறைவனுக்கு அர்க்கியங்கொடுத்துப் பலவாறு பூசைசெய்தார்கள். அவர்கள்செய்த பூசைக்கு அகங்களிகொண்ட சிவபகவான், பூர்வம் உமாதேவியாருக்குபதேசித்த ஆகமங்களை அவர்கட்கு முழுதுங் கூறியருளி மறைந்துபோயினன். அவ்வாறு சிவபெருமான் மறைந்தபின்னர் தேவர்கள் அவ்வாகமங்களை யுணர்ந்து இதனால் வேதியர் அரசர் வணிகரென்னுங்குலத்தினர் பூசைசெய்தற்குரியவர்களென்று தீர்மானித்துக்கொண்டு சுயேச்சையாகச்சென்றார்கள். இமையவர்கள் அப்படிச்சென்றபின்னர் அநேககாலங்கள்கழிய, இறைவர் கொடுத்த ஆகமங்களிற் சிற்சிலவிறந்தன. அதுகண்ட உமாதேவி மனங்கனிந்து சிவபிரானைப்பார்த்து, கடவுளே! இறந்த ஆகமங்களை மீண்டும் சரிவரநடக்கச் செய்யவேண்டுமெனக்கேட்ப, சிவபெருமான் தேவியின் விருப்பை யங்கீகரித்து ஓரிரவில் அதனைமீண்டும் உரைத்தருளினன். அவ்வாகமங்களைச் சிவகடாக்ஷத்தால் அகஸ்தியமுநிவரும், யானும், ருருவுந் ததீதியுங் கற்றுணர்ந்து உலகிற்பலருக்கும் வெளிப்படுத்தினோம். கலியுகங்கடோறும் அந்தச்சங்கரபகவானே யோகாசாரியராகத் தோன்றிச் சிவாகமங்களை விளக்குவான். அந்தச்சமயத்தில் அவருக்குச் சிஷர்களாக நால்வர்தோன்றி அதனைப்பிரசித்தப்படுத்துவார்கள். ஆகமத்தை யுணர்ந்து சிவபெருமானே கடவுளென்னு முறுதிகொண்டு அவ்விறைவனை யடைந்தவர்களே முக்தியிற்கலப்பார்களென உபமந்யுமுநிவருரைத்தனர்.

தேவர்களுக்குச்சிவாகமமளித்தது

முற்றிற்று.

பத்தாவது

ஆசிரியர் பெயரும் மாணாக்கர் பெயருமுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணபகவான் உபமந்யுமுனிவரைப் பணிந்து ஸ்வாமீ! கலியுகங்கடோறும் ஆகமத்தை விளக்கும்படி வருகின்ற ஆசாரியர்கள் பெயர்களையும் அவர்கள்பாற் கற்று உலகினருக்குரைக்கும் மாணாக்கர்கள் பெயர்களையும் அடியேன் கேட்க விரும்புகின்றேன். அவற்றைச் சொல்லவேண்டுமெனக்கேட்க, உபமந்யுமுனிவர் உரைக்கலாயினர்: அவ்வாசிரியர்கள் சுவேதன் சுதாரன் தமனன் சுகோத்திரன் கங்கன் லோகாக்ஷி சைகிஷவ்யன் திவாகரன் ருஷபன் ருத்திரன் அத்திரி ஜ்வாலகன் கௌதமன் வேதசிரன் கோகர்ணன் குஹாவாசி ஜிகண்டி ஜடாமாலி அட்டகாசன் தாருகன் இலாங்கலி மஹாகாயன் சூலி ஜண்டி முண்டிசன் சயிஷ்ணு சோமசன் லகுளேசன் என்று சொல்லப்பட்டவர்கள். அந்த யோகாசாரியர்களுக்கு மாணாக்கர்கள். சுவேதன் சுவேதாசியன் சுவேதலோகிதன் துந்துதி சதரூபன் ருஷீகன் கேதுமான் விகோசரன் விசேகன் விசாபன் சாபசாதனன் சுமுகன் துன்மதன் துன்முகன் துரதிக்கிரமன் சனகன் சனந்தன் சனாதனன் சனற்குமாரன் சுதர்மன் விரசன் சங்கவான் விரதன் சாரசுதன் மேஹன் மேஹவாகனன் சுவாஹனன் கபிலன் ஆசுசி பஞ்சசிகன் பயிலன் பராசரன் கற்கன் பார்க்கவன் அங்கிரா நிராமித்திரன் பலவேந்தன் தபோதனன் லம்போதரன் லம்பன் லம்பாக்ஷன் லம்பகேசன் சர்வஜ்ஞன் சமபுத்தி சாத்தியன் சுதாமா சத்தியன் காசிபன் அத்திரி வசிஷ்டன் உக்கிரன் சிரவணன் சிரவிஷ்டகன் குணி குணிவாகு குசரீரன் குநேத்திரன் காசிபன் உசன் சியவனன் உசத்தியன் பிருஹஸ்பதி வாமதேவன் மஹாகாயன் மஹாநிலன் வாசச்சிரவா சுவாசன் சியாவாசுவன் யதீசுவரன் ஹிரணியநாபன் கௌசலியன் லோகாக்ஷி சிகிரதுமிசு ஜைமினி கவந்தன் குசிகந்தரன் பிலக்ஷன் தாக்ஷாயணி கிருதுமான் கௌதமன் மதுபிங்கன் சுவேதன் கேது உசிதன் பிருஹதுக்கதன் தேவலன் சாலிகோத்திரன் சுவசியன் உவஞசுவன் சரத்துவசு குண்டகன்னன் மஹாகும்பன் சகலன் பிரபாகுகன் உலூகன் சம்புகன் வித்யுதன் ஜ்வலாயனன் அக்ஷபாதன் குமாரன் உத்தியோதனன் அச்சன் குசிகன் கர்ப்பன்மித்திரகனென்றுரைக்கப்படுவோர்கள். இவர்கள் யாவரும் அவ்வக்கலியுகங்களினுண்டாகும் ஆசிரியர்களைப் பணிந்து அவர்கள்பாற் சிவதீக்ஷை பெற்றுத் திருவெண்ணீறு பூசி உருத்திராக்ஷ மாலையணிந்து பஞ்சாக்ஷர மந்திரமோதி வேதசிவாகமங்களை யாய்ந்தறிந்து பாசுபத விரதிகளாகிச் சிவபெருமானை யிடைவிடாது தொழுது அவ்வெம்பெருமானுடைய மஹிமாதிசயங்களை விளங்கச்செய்வார்கள். இவகள் யாவரும் ஆசிரியர்களாதலின் அவர்கள் பாதங்களைப் பணிந்து சிவபெருமானிடத்துப் பக்தியுடன் சிவபூஜை செய்பவர்கள் அழியாத முக்தி

வீட்டை யடைவார்களென்று உபமந்யு முநிவர் கிருஷ்ணமூர்த்திக்கு உரைத்தருளினர்.

ஆசிரியர் பெயரும் மாணாக்கர் பெயருமுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்றாவது

சிவபெருமானுமாதேவிக்கருளிய அத்தியாயம்.

உபமந்யுமுநிவர் அவ்வாறுகூறவும், கிருஷ்ணபகவான் அவரை நோக்கி, மாநுடதேகங் கொண்டுவந்த கடவுளே! அந்தச்சிவபகவானை உமாதேவி வினவியவகையும் அவ்வினாவுக்குச் சிவபிரான் விடைபகர்ந்த வகையும் இவையெனத்தெளிவாகக் கூறவேண்டுகின்றேனெனப்பணிய, உபமந்யுமுநிவர் சந்தோஷசித்தராகிச் சிவத்தியானஞ்செய்து சொல்லத் தொடங்கினர். யாதவசிரேஷ்டா! முன்னொருகாலத்தில் மந்தரபர்வதத்தின் சாரலிலே ஓர் நந்தவனத்திலே சிவபெருமான் உமாதேவியோடு மெழுந்தருளி யிருக்கையில், உமாதேவியின் தோழிகளி லொருத்தியாகிய சுபாவதியென்பவள் பலமலர்களைக் கரத்திற்றாங்கிவந்து அவற்றால் விநோதமான மாலைகள் தொடுத்துத் தேவியின் அளகத்தைச்சீவி அழகுபடுத்திப் பின்னி அதில் அம்மலர்மாலைகளையணிந்தனள். சிவபெருமான் அப்பொழுது உமாதேவியையெடுத்துத் தன்தொடைமிசை யிருத்திக் கணங்களெல்லாந்துதிசெய்யும்படி ஓர்சிங்காசனத்திலெழுந்தருளியிருந்தனர். அந்தச் சமயத்தில் உமாதேவி சிவபெருமானைநோக்கி, தலைவரே! தேவரீர் அறியாமையுடைய மாநுடருக்கு எவ்வகையாக எதனாற் கிருபைசெய்கிறீர்? அவ்விவரத்தை யெனக்குக் கூறவேண்டுமெனக்கேட்ப, சிவபெருமான் சொல்கின்றார். பிராணநாயகி! கேட்பாயாக. கருமம் தவம் ஜபம் சமாதி ஞானம்முதலியவற்றைச் செய்பவர்களுக்கு யாம் சுவாதீனமல்லேம். ஆனாற்பிறருக்குத் தீமைசெய்யாது எம்மிடத்திலேயே இடையறாப்பக்தியுடையவர்களுக்கே சுவாதீனமாயிருப்போம், அவர்கள் மனதிலேயே வசிப்போம். பிரமதேவன் கூறியவகையாக வருணாச்சிரமதர்மங்களைநிறைவேற்றுதல் அசாத்தியமென்று நாம்வேறுவகையாகக் கூறியுள்ளேம். நம்முடைய அன்பர்கள் அதனையே கடைப்பிடித்தொழுகுவார்கள். அவ்வாறுசெய்து நம்மிடத்தில் அன்புவைத்துப் பூஜிப்பவர்கள் மும்மலங்களும் பாசபந்தங்களுங்கெட்டொழியத் தேவருலகத்தையடைந்து நம்முடைய உலகத்தைப்பெற்று மேலோராலும் அடைதற்கரிய மோக்ஷசுகத்தையநுபவிப்பார்கள். ஆசாரியனிடத்தில் முறைப்படி தீக்ஷைசெய்துகொண்டு சிவதருமத்தைக் கடைப்பிடித்து நடப்பார்களாகிற் சிவதீக்ஷையில்லாதவர்களுக்குச் சொல்லிய தர்மப்படி நடப்போரடையும் பலனைக் காட்டிலுங் கோடிபங்கு விசேஷபலனை யடைவார்கள். ஆனபடியால்,

சிவதீக்ஷை செய்துகொண்டே வருணாச்சிரம தர்மங்களை விதிப்படி செய்ய வேண்டும். கலியுகங்களிலெல்லாம் இவ்வேற்பாடுகள் நிலைதவறுதலின் நாமே மனங்கனிந்து யோகாசாரியராகி மாணாக்கர்கள் புடைசூழ வந்து சிவதருமங்களை நிலைபெறச்செய்வோம். நம்மிடத்தில் விசாரணைசெய்தறிந்த மாணவர்களை வழிபட்டு அவர் கூறியபடி சிவதருமங்களைச் செய்தவர்களே உண்மையை யறிந்து மோக்ஷமடைவார்கள். அவ்வாறன்றி அவர்கள் சொல்லியதைக் கொள்ளாது வெவ்வேறு மார்க்கங்களைக் கைக்கொள்வோர்கள் தீயநெறியிற் பிரவேசித்து இம்மை மறுமைப்பயன்களையு மிழந்து துன்பமடைவார்கள். முக்திகொடுக்கவல்ல உத்தமவழியிற் பிரயத்தன பூர்வமாகச் செல்லாதவர்கள் உத்தமர்களாகமாட்டார்கள். ஆனால் அவர்கள் அறிவிருந்தும் அறிவினர்களும், கண்களிருந்துங் குருடர்களும், வாயிருந்தும் ஊமைகளும், செவியிருந்துஞ் செவிடர்களுமாவார்கள். மோக்ஷப்பிராப்தமான சிவதருமமானது ஞானம்கிரியைசரியையோகமென நான்கு பாதங்களை யுடையதாய் அநாதியாயிருக்கும். பதி பசு பாசங்களி னிலக்கணங்களை யுணர்தலே ஞானம். தவம் ஜபமுதலியவற்றாற் சாதிக்கத்தக்க ஷடத்துவாக்களின் சுத்திசெய்தலே கிரியை. வருணாச்சிரமங்கட்குத் தக்கபடி நடத்தலே சரியை. என்றுக் கூறப்பட்டவகையே என்னிடத்திலேயே பக்தியும் பிறதேவர்களிடத்திற் பக்தியின்மையுமே யோகம். என்னிடத்திலேயே மனதை நிறுத்திப் பிறவிடங்களிற் செலுத்தாதிருப்பது நூறு அசுவமேதஞ்செய்த பலனைக்காட்டிலும் உயர்ந்த பலனைக் கொடுக்கும். விஷய விருப்புடையவர்களுக்கு அது சாத்தியப்படாது. இயம நியமாதிகளால் இந்திரியநிக்கிரகஞ் செய்து விரக்தனானவனுக்கு எல்லாப் பாவங்களையும் விலக்கத்தக்க சித்தப்பிரசாதனரூபமான இந்த யோகங் கைகூடும். ஞானயோகத்திற்குச் சாதனங்களையுஞ் சொல்லுகின்றேன். வைராக்கியத்தால் ஞானமும் ஞானத்தால் யோகமுமுண்டாகவேண்டும். அதனை யுணர்ந்தவன் பெரும் பாவியாயிருப்பினும் எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுகிறான். தயை அஹிம்சை ஞானவுணர்வு சத்தியம் களவாடாமை ஆஸ்திக்யம் சிரத்தை இந்திரியநிக்கிரகம் அத்தியாபனம் அத்தியயனம் யஜ்ஞஞ்செய்வித்தல் யஜ்ஞஞ்செய்தல் தியானம் ஈசுவரபாவம் ஞானசீவத்துவம் இவை யாவுமிருந்தாலன்றி ஞானயோகஞ்சித்திக்கமாட்டாது. அவ்வாறிருந்தால் அதிசீக்கிரத்தில் ஞானமுண்டாகி, அந்த ஞானத்தால் யோகசித்தி யுண்டாகும். அவ்வகையஞானி தனது ஞானாக்கினியால் இந்தத் தேகத்தைத் தகிக்கச்செய்து என் அநுக்கிரகத்தாற் கர்மபந்தங்களை யொழிப்பான். புண்ணியபாவஸ்வரூபமான கர்மமே முக்திக்குத் தடையாயுள்ளது. ஆதலால் யோகவான் தன் யோகத்தாற் புண்ணியபாவங்களை விலக்கிக் கர்மங்களிலே பலாபேக்ஷையில்லாமற் கர்மங்களை மட்டுஞ் செய்கிறான். கர்மங்களை யறவே யொழிக்கப்படாது. பார்வதீ! என்னை முதலிற் கர்மயாகத்தாலேயே பூஜைசெய்யவேண்டும். அதன்பின்னர் ஞானயாகத்தில் விருப்புண்டாகும். பின்னர் யோகத்தை யப்பிய

சிக்கவேண்டும். என்னுடைய உண்மை நிலையை யுணர்ந்தவர்கள் கர்மயாகத்தால் என்னைப் பூசிக்கமாட்டார்கள். நித்தியமாக என்னிடத்திலேயே பொருந்திய மனமுடைய ஞானயோகிகளாகி என்னுடைய சாயுஜ்யத்தை யடைவார்கள். என்னை யாசிரயித்து விரக்தர்களாயிருக்கிறவர்கள் ஞான சரியா கிரியைகளிலே சிறந்தவர்களென்று சொல்லப்படுவார்கள்.

பார்வதீ! என் பூஜையானது பாஹ்யபூஜையென்றும், ஆப்யந்தர பூஜையென்றும் இருவகைப்படும். அவற்றுட்புறத்திற் செய்கின்ற பாஹ்ய பூஜையைக்காட்டிலும் மனத்திற்செய்யும் ஆப்யந்தரபூஜையே சிரேஷ்டமானது. அது மனவாக்குக்காயங்களால் மூன்று பேதப்படும். சிலர் அதை ஜபம் கர்மம் தவம் தியானம் ஞானமென்று ஐவகைப்படுமென்பர். பிறரறியும்படி என்னைப் பூஜாதிகள் செய்வது பாஹ்யம். அதையே தனக்குமாத்திரம் தெரியும்படி செய்வது ஆப்யந்தரமெனப்படும். என்னிடத்தில் ஆசக்தியுடைய மனமும், என்னுடைய நாமங்களை யிடைவிடாது உச்சரித்தலையுடையவாக்கும், என்னுடைய சின்னங்களாகிய திரிபுண்டர முதலியவற்றுடன் கூடி என் உபசாரத்தையே செய்யத்தக்க காயமும் ஆகிய இம் மூன்றும் மூவகைப்படும். யாகாதிகளால் என்னை யாராதிப்பதே கர்மம். எனக்காகத் தேகத்தைச் சோஷிக்கும்வண்ணம் சாந்திராயணாதி விரதங்களைச்செய்தலே தவம். பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்தலே ஜபம். பிரணவத்தை ஜபித்தலும் ஜபமாம். வேதத்தைமாத்திரமே அத்தியயனஞ் செய்தல் ஜபமாகமாட்டாது. என்னையே தியானித்து வேறொன்றையுஞ் சிந்தியாமலிருப்பதே தியானம். என்னாற் சொல்லப்பட்ட சிவாகமங்களை உணர்தலே ஞானம். சிவாகமங்களுக்கு வேறான நூல்களை யுணர்வது ஞானமன்று. பாஹியபூஜையிலாவது ஆப்பியந்தரபூஜையிலாவது ஜந்மாந்தர வாசனையாலுண்டாகும் மனோவிருப்பின்படி நிஷ்டையை யாசரிக்கவேண்டும். பாஹ்யத்தைக்காட்டிலும் ஆப்பியந்தரம் நூறுபங்கு அதிகப்பட்டதாயிருக்கும். ஆப்பியந்தரபூஜையிற் சிறிதுந் தோஷமுண்டாகாமையினாலுஞ் சுககரமாகச் செய்யக்கூடியதாலும் அதுவே சிறந்ததாயிற்று. ஆப்பியந்தரசௌசமே சௌசமன்றிப் பாஹியசௌசம் சௌசமாகமாட்டாது. மேலே பரிசுத்தனைக் காணப்படினும் அந்தரத்திற் புனிதனல்லாதவன் அசுசியானவனே. பாஹ்யபூஜையாயினும் ஆப்பியந்தரபூஜையாயினும் பக்திபூர்வமாகச் செய்வதே சேவை. பக்தியின்றிச்செய்வது பிறரை வஞ்சிக்கச்செய்வதன்றி உண்மையிற் சேவையன்று. மானுடர் செய்யும் அன்பினை மாத்திரமே அவர்களிடத்திலிருந்து யான் பெறுகின்றேன். அந்தப் பக்தியை மனவாக்குக்காயங்களாற் பிறிதொன்றனை விரும்பாது என்னிடத்திலேயே செலுத்தியபக்ஷத்தில் யான் அதற்கே மனமகிழ்ந்து அவர்கட்குத் திருவருள்புரிவேன், பலனைவிரும்புமொருவன் என்னிடத்துப் பக்தி செய்வது அதனைப் பெறுமெல்லையும் அல்லது அதில் விரக்தியுண்டாகுமெல்லையுமன்றி, அவன் எக்காலத்தும் இடைவிடாது என்னிடத்துப் பக்தி

செய்யானுகையால், அவ்வகைய பக்தி லகுபக்தியாம். பலாபேக்ஷையாற் பக்தி செய்பவர்கட்கும் யானே பலன்களைக்கொடுப்பவன். பலாபேக்ஷை யின்றி எவர்களுடைய மனம் என்னிடத்திற் பக்தியுக்தமாகப் பொருந்தி யிருக்கிறதோ அவர்களே எனக்குப் பிரீதியைச்செய்யும் பக்தர்கள். அவர் களும் பின்னொருகாலத்திற்பிறர் பலாபேக்ஷயால் தம்மைத்தியானிக்கத் தக்கவர்களாவார்கள். பூர்வ ஜனன புண்ணியவிசேஷத்தாற் பலாபலன்களை விசாரியாமல் என்னிடத்திற் பக்திசெய்பவர்கள் எனக்குப் பிரியதமர்கள். என்னுடைய லாபத்தைக்காட்டிலும் அவர்கட்கு வேறே லாபம் ஒன்று மில்லை. அவர்களுடைய லாபத்தைக்காட்டிலும் எனக்கும் வேறே லாபம் இல்லை. அவர்கட்கு என்னுடைய அநுக்கிரகத்தால் என்னிடத்தில் நீங் காத பக்தியுண்டாகிறது. அதற்குப்பலன் உத்கிருஷ்டமான சுகத்தைக் கொடுக்கும்.

மலைமகளே! மகாத்துமாக்களும், என்னிடத்திலன்றிப் பிறரிடத் தில் மனதைச் செலுத்தாதவர்களுமாகி என்னுடைய சிவதருமத்தையே அநுஷ்டானஞ்செய்யும் பக்தர்களுக்கு எட்டுவகை லக்ஷணங்களுள. அவற் றைச் சொல்லுகிறேன்: என்னுடைய பக்தர்களிடத்தில் மிக்க விருப்பும், என்னுடைய பூஜையையும் பக்தபூஜையையும் விரும்பிக் காண்டலும், தாமே பூஜைசெய்தலும், எனக்காக உத்தம விரதங்களை யாசரித்து உட லைச் சோஷிக்கச்செய்தலும், என்னுடைய பிரபாவங்களைச் சிரவணஞ்செய் தலும், சிரம் கரம் நேத்திரமுதலியவற்றை யெனக்கே விநியோகித்தலும், மனதில் என்னையே ஸ்மரித்தலும், முக்திப்பிரதாயக மென்னிடத்திலேயே யுண்டென்று நம்பி என்னையே யாசிரயித்தலுமெனப்படும். இவ்விதமான எண்வகைச் சின்னங்களையுமுடையவன் மிலேச்சனுயிருப்பினும் அவனே சிரேஷ்டமான பிராமணன். அவனே மஹத்தான முநிவரன். அவனே ஸ்ரீ யுக்தன். அவனே யதி. அவனே பண்டிதன். இவ்விதசின்னங்களையுடை யவன் நான்கு வேதங்களையுங் கரைகண்டவனைக்காட்டிலும் எனக்குப் பிரியமானவன். தானங்கொடுப்பது அவ்வகையினனுக்கே தகுதியாம். அவ் வகையினனே உத்தமனான தாதாவுமாவான். என்னைப்போலவே அவ னும் பிறராற் பூஜித்தற்குத்தக்கவன். அவ்வகையினனுக்கே ஞானதிகளைக் கொடுக்கத்தகும். பத்திரம் புஷ்பம் பலம் ஜலம் முதலிய எதையாவது பக்திபூர்வமாக எனக்குக் கொடுத்தவனுக்கு நான் பிரசன்னனாகி அதனை யன்போடு பெறுகின்றேன். அவன் எனக்கு யாவுங் கொடுத்தவனாகிறான். என்னுடைய பக்தர்களுடைய வருணதர்மத்தைச் சங்கிரகமாகச் சொல் கின்றேன்: திரிகாலங்களிலும்ஸ்நானம் - அக்கினிகாரியம் - சிவலிங்கார்ச் சனம் - தானம் - ஈசுவரபாவம் - தயை - சத்தியம் - சந்தோஷம் - ஆஸ் திக்கியம் - அஹிம்சை - சிரத்தை - அத்தியாபனம் - அத்தியயனம் - யோ கம் - வியாக்கியானம் - சிவதருமஉணர்ச்சி - பிரமசரியம் - சிவாகமசிரவ ணம் - தவம் - பொறுமை - சௌசம் - சிகாயஜ்ஞோபவிததாரணம் -

விபூதிதாரணம் - உருத்திராக்ஷமணிதல் - நிஷித்தவுணவுகளை விலக்கல் - பர்வகாலங்களிற் பூஜை - சதுர்த்தசியில் விசேஷபூஜை - மாசந்தோறும் பஞ்சகவ்விய பிராசனம் - பிரமகூர்ச்சத்து நீரினால் விசேஷமாக என்னை யபிஷேகித்தல்- அந்நீரை யுட்கொள்ளல்-சிரார்த்தான்னம் விக்கிரயான்னம் நியமமல்லாத அன்னம் ஈசுவர நிவேதனமில்லாத அன்னம் பழஞ்சோறு முதலியவற்றை விலக்கல் - கட்குடியாமை - கள்ளின் மணம் பெறாமை முதலியனவாம். இனி வேதியருக்கு அவசியமான தர்மத்தைச் சொல்லுகிறேன். பொறுமை - சாந்தி - சந்தோஷம் - சத்தியம் - திருடாமை-பிரமசரியம் - சிவஞானம் - வைராக்கியம் - பஸ்மதாரணம் - சர்வசங்க நிவிருத்தி யென்னும் பத்தும் விசேஷமாம். சந்நியாசிகளும் வானப்பிரஸ்தர்களும் பகற்காலத்தில் மாத்திரம் பிக்ஷையெடுத்துப் புசிக்கலாகும். இவர்கள் நிலமிசையே துயின்று இராப்பொழுதில் உணவு கொள்ளாதிருக்க வேண்டும். பிரமசாரிகளுக்கு அத்தியாபன அத்தியயனங்களே விசேஷ தர்மங்கள். அவர்கள் இரவிலும் விருப்பமிருந்தாற் புசிக்கலாம். க்ஷத்திரியர்கள் அத்தியயனஞ்செய்தல்-பிரஜைகளைக்காத்தல்-யுத்தத்திற் சத்துருக்களைக்கோறல் - துஷ்டத்தனமான பக்ஷி மிருகாதிகளையும் மநுஷர்களையுஞ் சிக்ஷைசெய்தல்-சிவபக்த விசுவாசம்-காலத்தில் ஸ்திரீசம்போகம் - சேனாரக்ஷணம்-உலகநிலைமையை விசாரித்தறிதல்-அஸ்திர சஸ்திரங்களைத் தரித்திருத்தல் - பஸ்மதாரணம் - யாகஞ்செய்தல் இவற்றை என் தர்மங்களாயநுசரிக்கவேண்டும். வைசியன் கோரக்ஷணம்-வாணிபம் - உழவு செய்தல் முதலியவற்றைத் தர்மங்களாயநுசரிக்கவேண்டும். சூத்திரன் மேற்கூறிய மூவர்க்கும் பணிசெய்தல் - என்னுடைய க்ஷேத்திரங்களில் உத்தியானவனங்களை வளர்த்தல் இவை யென்னுடைய தர்மங்களாகும். கிருகஸ்தன் ருதுகாலங்களில் தன்னுடைய தர்மபத்தினியுடன் கூடியிருத்தல் தகுதியாகும். சந்நியாசி வானப்பிரஸ்தன் பிரமசாரி இவர்கள் மூவருக்கும் ஸ்திரீ சாங்கித்தியம் எப்பொழுதுங் கூடாது. ஸ்திரீகளுக்குக் கணவனைப் பணிசெய்தலேயன்றி வேறே பணியொன்றுமில்லை. கணவன் விருப்பமிருந்து உத்திரவு கொடுத்தாலன்றி என்னைப் பூஜைசெய்தலும் அவசியமில்லை. கணவன் கருத்தின்றி என்னைப் பூஜித்தாலும் அந்த ஸ்திரீ நரகத்தை யடைவாள். கணவனையிழந்த விதவையானவள் விரதம்-தானம்-தவம்-பரிசுத்தம் - நிலமிசை யுறங்கல் - புருஷ சையோகமின்மை-சக்திக்கேற்ப ஸ்நானம்-சக்தியில்லாவிடின் பஸ்மஸ்நானம் - சாந்தி - மௌனம் - க்ஷமை - என்னைப் பூஜித்தல்-துஷ்டர்களைக் கலவாமை - ஒருவேளை பகலிலேயே புசித்தல் - அஷ்டமி சதுர்த்தசி பூரணை ஏகாதசி இத்தினங்களில் உபவாசம் முதலியவைகளைக்கொண்டு என்னுடைய க்ஷேத்திரத்தில் வசிக்க வேண்டும்.

பார்வதி ! பிராமணர் - க்ஷத்திரியர் - வைசியர்-சூத்திரர் - பிரமசாரி - கிருகஸ்தர் - வானப்பிரஸ்தர் - சந்நியாசிகள் - ஸ்திரீகள் முதலான

வர்களுடைய தர்மத்தைச் சங்கிரகமாகச் சொன்னேனாதலின் என்னையே யெப்பொழுதுந் தியானித்துப் பஞ்சாக்ஷர ஜபத்தைப் பிரணவசகிதமாகச் செய்யவேண்டியது. வேதாகமங்களிற் கூறியுள்ள சிவதருமங்களிவையே யாம். பூர்வபுண்ணிய விசேஷத்தால் என்னிடத்தில் விசேஷ பக்தியுடைய வர்களாய் விளங்குஞ் சிவஞானிகள் விலாசார்த்தமாகத் தேகத்திற்கேற்ப ஸ்திரீ முதலிய விஷய விருப்புடையவர்களாயினும், விரக்தியுடையவர்களா யினும், தாமரையிலையிலுள்ள நீர் அவ்விலைகளில் ஒட்டாதிருப்பதுபோல, பாவங்கள் அவரை யடையமாட்டா. பரிசுத்தர்களும் விவேகிகளும் என் அநுக்கிரகம்பெற்றவர்களுமாகிய அவர்கள் ஆத்மஞான முண்டாயிருத் தலின் அவர்கட்குவருணாச்சிரமதருமம்அவசியமில்லை. ஆதலின்அவர்கட்குச் செய்யத்தக்க கருமங்களுஞ் செய்யத்தகாத கருமங்களுமாக விதி நிஷே தங்களில்லை. பரிபூரணனை எனக்குக் கோரிக்கை யெப்படியில்லையோ அப்படியே கிருதகிருத்தியர்களான அவர்கட்கும் அடையத்தக்க ஒன்றிற் கோரிக்கையில்லை. பிரமாதி தேவர்கட்கும் ஒவ்வொரு பிராணிகட்கும் என் ஆக்கினையே சிறந்து விளங்கும். என் ஆக்கினையாலாவது என்னிடத்தி லுள்ள பக்தியாலாவது சிவதருமங்களைக் கடைப்பிடித்தவர்கட்குப் பாப க்ஷயமுண்டாகி என் லோகவாசமுண்டாகும். என் பக்தர்களுடைய லக்ஷ ணங்கள்: உடல்நடுங்கல் - வியர்வு - கண்ணீர் - கண்டத்திற் சுவரம்பேதித் தல் - பரமானந்தம் முதலியனவாம். இவை யாவும் ஒருவனுக்கிருக்கும் பக்ஷத்தில் அவன் நரோத்தமன். இரண்டொன்று குறைவாகவிருந்தால் என் பக்தர்களில் மத்திமன். ஒன்று இரண்டுமாத்திரமிருப்பின் அவன் அதமன். அக்கினியும் இரும்புஞ் சேர்ந்தகாலத்திற் சாமானிய இரும்பெ ன்று கருதக்கூடாததுபோல, மேற்கூறியஉத்தம மத்திம அதமர்களாகிய என் பக்தர்கள் என்னுடைய சாந்நித்தியம் பெற்றிருத்தலின், அவர்களைச் சாதாரணமான மநுஷரென்றுநினைக்கப்படாது. அவர்கள் கரஞ்சிரமுத லியவற்றுடன் மாநுஷதேகமெடுத்துத் தோன்றிய உருத்திரர்களென்று நினைக்கத்தக்கவர்கள். அவர்களை மநுஷரென்று தீர்மானித்தவன் பண் டிதனல்லன். முழுமூடன். மேற்சொன்ன மஹாத்துமாக்கள் விஷயத்தில், அஜ்ஞானிகள் அபசாரஞ்செய்தால் அவர்களுடைய செல்வம் குலம் ஸ்திரீ முதலியன நசித்துக்கடைசியில் நரகத்தையடைவார்கள். என்னையே விரும் பிப் பிற தேவர்களைப் பணியாத ஞானிகள் பிரம விஷ்ணுவாதியர் பதவி களைத் துரும்பாக மதிக்கிறார்கள். பிரம விஷ்ணு சுரேசர்கள் முதலானூர் குணவிசிஷ்டர்களாதலின் அவர்களை யாசிரயிப்போர்கள் உயர்பதவியை யடையார்கள். குணாதீதபதவியை விரும்புவோருக்குப் பிரமாதி பதவிகள் சாமானியமாகக் காணப்பட்டு விலக்கத்தக்கவையேயாம். விசேஷமாகச் சொல்லவேண்டுவதில்லை. கீர்த்தியைப்பெற விரும்புவோன் எவ்வேதுவினு லாவது என்னிடத்தில் மனதைச் செலுத்துவதே முக்கிய சாதனமாம் என்று சிவபெருமான் உமாதேவியாருக் குரைத்தருளினர்.

கிருஷ்ண! பரமாத்துமஸ்வரூபனான ஸ்ரீகண்ட பரமேசுவரன் உலக ரக்ஷணார்த்தமாக ஞானசாரார்த்தத்தை இவ்வகையாகச் சுருக்கிக் கூறினன். இதுவே எல்லா வேதசாஸ்திரங்களாலு முண்டாகும் ஞானத்தின் சுருக்கமாம். இதிகாச புராணங்களின் தாற்பரியம் விஸ்தாரமாயிருக்கின்றது. ஆனால் ஞானம் ஞேயம் அநுஷ்டேயம் அதிகாரம் சாதனம் சாத்தியம் என்னுமிவற்றின் சங்கிரகமேயாம். ஞானமென்பது குருவாலுபதேசிக்கப்பட் டுணர்ந்துகொள்வது. ஞேயமென்பது பசு பதி பாசமென்பன. அநுஷ்டேயமென்பது சிவலிங்கார்ச்சனை முதலியன. பிரம க்ஷத்திரிய வைசியர்கள் அதிகாரிகள். சாதனமென்பது ஸ்ரீ பஞ்சாக்ஷர முதலியன. சாத்தியமென்பது சிவசமானத்துவம். இந்த ஆறர்த்தங்களையும் நன்றாக வுணர்ந்தவனே சர்வஜ்ஞனென்று சொல்லப்படுவான். முதலிற் பக்தியுடன் திரவிய லோபமின்றிக் கர்மயாகங்களாற் சிவபெருமானைப் பாஹ்யபூஜை செய்யவேண்டும். பின்னர் மனதிற் சிவபக்தியுண்டாவதே ஆப்பியந்தர பூஜையெனப்படும். அது பாஹ்யபூஜையைக்காட்டிலும் விசேஷமானது. அந்தப்பூஜை செய்பவன் பாஹ்யகர்மஞ் செய்யவேண்டுவதில்லை. ஞானமிருதத்தால் திருப்தியடைந்த சிவசொரூபிக்குப் பஹிர்பூஜையென்றும் அந்தர்பூஜையென்றும் அவசியமில்லை. ஆதலிற் கிரமமாகப் பாஹ்யாப்பியந்தர பூஜைகளை விட்டு, ஞானத்தால் ஞேயத்தைக்கண்டு, பின்னர் ஞானத்தையும் பரிகரித்து, சிவத்தினிடத்தில் மனதை ஏகமாகச் செலுத்திய பக்ஷத்தில் அவன் கர்மத்தா லனுபவிக்கவேண்டிய தொன்றுமில்லை. ஏகாக்கிர மனமடைய விரும்பியவன் பாஹ்யாந்தர கர்மங்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் எவ்வுபாயத்தாலேனும் சிவத்தினிடத்தில் மனதைச் செலுத்தவேண்டும். சிவத்தினிடத்திலேயே மனதைச் செலுத்திய பரம புருஷர்களுக்கு இகலோகத்திலும் பரலோகத்திலுஞ் சுகமே யுண்டாகும். பஞ்சாக்ஷர மந்திரோபாசனையாலேயே சித்தர்களாயிருப்பவர்கள் பராபர விபூதிக்காக அந்தச் சர்வேசனை யாராதித்துப் பொருந்தியிருக்கிறார்கள் என்று உபமந்யுமுனிவர் கூறினர்.

சிவபெருமான் உமாதேவிக்கருளியது

முற்றிற்று.

பன்னிரண்டாவது

பஞ்சாக்ஷரமந்திரபிரபாவமுரைத்த அத்தியாயம்.

இவ்வகையாகக்கூறிய உபமந்யுமுனிவரை நோக்கி, கிருஷ்ணபகவான், எல்லாவகைப்பட்ட ஞானங்கட்கும் பிறப்பிடமாகிய மஹாருஷியே! பஞ்சாக்ஷரமந்திர மகத்துவத்தை விசாரித்தறிய விருப்பமுள்ளமையின் அதனையடியேனுக்கு உபதேசித்தருளவேண்டுமென வினவ, உபமந்யு முனிவர் சொல்லத்தொடங்கினர். யாதவசிரேஷ்டா! பஞ்சாக்ஷரமந்திர

பிரபாவத்தை ஒருகோடிவருஷங்கள்கழியினும் விஸ்தாரமாகச்சொல்ல ஒருவருக்கும் இயலாது ஆதலின் அதனைச் சுருக்கிச்சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்தப்பஞ்சாக்ஷரமே பிரணவத்துடன்கூடிச் சடக்ஷரமாயிருக்குமென்று வேதசிவாகமங்கள் பிரதிபாதிக்கும். இதுமந்திரங்கட்செல்லாஞ்சிறந்த மந்திரராஜமாகும். இதுசில எழுத்துக்களாயினும் விசேஷார்த்தத்தையுடையது ; சிவபக்தர்கள் இதனையுச்சரித்தலால் முத்திவீட்டையடையச்செய்வது ; எல்லாமந்திரங்கட்கும் ஆதி மந்திரமாயுள்ளது ; பலனைச்சந்தேகமின்றிக் கொடுக்கவல்லது. இம்மந்திரமே சிவசொரூபமாயுள்ளது; அநேகசித்திகளையளிக்கவல்லது; மங்களகரமானது; ஜனங்களின் சித்தத்திற்கு ரஞ்சகமானது ; சுகமாகவுச்சரிக்கத்தக்கது ; சர்வஜ்ஞனை சிவபெருமானால் எல்லாஜீவர்கட்கும் இதமுண்டாகும்படி, ஆலமரத்தின் இலை கிளை காய் கனிமுதலியவற்றிற்கெல்லாஞ் சிறுவிதை காரணமாயிருத்தல்போல, எண்ணிறந்த பொருள்கட்கெல்லாம் இடமாயுள்ள இப்பஞ்சாக்ஷரமந்திரமுண்டாக்கப்பட்டது. அம்மந்திரத்தில் குணத்திரயாதீதனும் சர்வஜ்ஞனும் சர்வகர்த்தாவும் சர்வவியாபியுமாகிய சிவபெருமான் அந்தப் பஞ்சாக்ஷரங்கட்கு முன்னுள்ள பிரணவத்தில் விளங்குவன். பஞ்சப்பிரமங்கள் பஞ்சாக்ஷரங்களிலு முறையே விளங்குவர். ஷடக்ஷரமாகிய இந்த மஹாமந்திரத்திற் பஞ்சப்பிரமசுவரூபமாகவுந் தானாகவுஞ் சிவபெருமான் வாச்சியவாசகசம்பந்தத்தாற்பிரத்தியக்ஷமாகவுஞ்சுபாவமாகவுமிருக்கின்றனன். வாச்சியன் சிவன். வாசகம் மந்திரம். இவ்விரண்டிற்குஞ் சம்பந்தம் அநாதியாயிருக்கின்றது. சமுசாரமானது அநாதியா யிருப்பதுபோல அதற்கு மோசகன் [நிவாரணன்] ஆகிய பரமசிவன் அநாதியேயிருக்கிறான். அவிழ்தங்கள் வியாதிக்கு விரோதமாயிருப்பதுபோலவே சிவபெருமான் சமுசாரரோகத்திற்கு விரோதியாயிருக்கின்றான். சூரியனில்லாவிடின் உலகமுழுவதும் இருண்மயமாகி அல்லலுறுமன்றோ? இதுபோல ஈசுவரன் இல்லாவிடின் உலகமுழுவதும் அஜ்ஞானத்தினால் மயங்கி யழியும். ஈசுவரனில்லாவிடின் உலகசிருஷ்டியும் நிகழாது. பிரகிருதி புருஷர்களாற் சிருஷ்டிநடவாதோவெனின், சிருஷ்டியென்பது புத்திமானாற்செய்யத்தக்கது. பிரகிருதி அசேதனமானது. புருஷன் கிஞ்சிஜ்ஞன். ஆதலின் சிருஷ்டிநடவாதென்று தெரிந்துகொள்க. தர்மாதர்மங்களும்பந்தமோக்ஷவிசாரணையுஞ்செய்யச் சர்வேசுரனையன்றி வேறே காரணமில்லை. வைத்தியனில்லாவிடின் ரோகிகள் இறப்பதுபோல, சர்வேசனில்லாவிடின் உலகமுழுவதும் வருந்தியொழியும். ஆனபடியால், அநாதியும், சர்வஜ்ஞனும், பரிபூரணசுரூபியும், மங்களகரனும்,எல்லாரையும் சமுசாரபந்தத்தினின்று இரக்ஷிப்பவனும், ஆதிமத்தியாந்தரஹிதனும், விமலனும், சிவாகமங்களாலறியத்தக்கனுமாகிய சிவபெருமான் உளனென்று வேதங்கள் முறையிடுவதுண்மை. அவ்வகைய சர்வேசனையறிந்து சொல்லத்தக்க மந்திரம் இப்பஞ்சாக்ஷரமந்திரமேயாம். இப்பஞ்சாக்ஷர மந்திரத்திற்குப் பொருளாவான் அந்தப்பரமேசனேயாம். அர்த்தமில்லாது சப்தமில்லை. 'சப்த

மில்லாது அர்த்தமில்லையென்னும் அபிதாநாபிதேய சம்பந்தத்தால் அம் மந்திரமே பரசிவன். இதுவே சிவஞானம். இதுவே பரமபதம். இப்பஞ் சாக்ஷரவாக்கியம் சிவசம்பந்தமான விதிவாக்கியமன்றிச் சிவசம்பந்தமான அர்த்தவாதவாக்கியமன்று. ஏனெனில், சர்வஜ்ஞனும்சர்வபரிபூரணனுஞ் சுபாவவிமலனுமாகிய ஈசுவரன் உலக அநுக்கிரககாரணமாக, குணதோஷ முடையவஸ்துக்களை அக்குணதோஷங்களுடன் உண்மையாகக் கூறுவ னன்றி அபத்தமாகக்கூறமாட்டான். ஆனால் இராகத்துவேஷாதிகளையுடை யவர்களே யங்ஙனங்கூறமாட்டுவார்கள். இந்தமந்திரம் சர்வேசனாலேயே சொல்லப்பட்டதாதலின் இதனிடத்தில்,சிரத்தைபக்திகளுடன்நடக்கவேண் டியது. ஆன்மாக்களின் உஜ்ஜீவனார்த்தமாகச் சொல்லப்பட்ட இம்மந் திரத்தை அசிரத்தைசெய்தவன் நரகத்தையடைவான். சிவபெருமானாற் சாந்தர்களாகிய முநீசுவரர்களுக்கே சொல்லப்பட்டு இந்தப்பஞ்சாக்ஷர மந்திரம் நன்மைதருவதாற் சுபாஷிதமாகும். இராகத்துவேஷாதிகளை யுடையவர்களாற் பொய்யர்கள் கேட்கும்படி சொல்லப்பட்ட பிறமந்திரங் கள் சமுசாரஹேதுவை யுண்டுசெய்தலால் துர்பாஷிதமாகும். பிறமந்திரங் களை ஜபித்தலாற் பிரயோசனமில்லை. நரகமுண்டாகும். கேட்டமாத்திரத் திரத்திலேயே காம குரோதாதிகளை யொழித்துக் கீர்த்தியைக்கொடுக்கத் தக்க மந்திரமெதுவோ அதுவே பரமமங்களமானது. மந்திரங்கள் அநேக மிருப்பினும் சாம்பவமூர்த்தியாற் சொல்லப்பட்ட நிர்மலமான இம்மந் திரத்திற்குச் சமானமானமந்திரம் வேறொன்றுமில்லை. வேதவேதாங்க முதலியன யாவும் பிரணவபூர்வமான பஞ்சாக்ஷரத்திலேயே விளங்கும். ஆதலின் இதற்கிணையாக ஒரு மந்திரத்தையுஞ் சொல்லப்படாது. ஸப்த கோடி மகா மந்திரங்களையும் அநேக உபமந்திரங்களையுஞ் சபிப்பதால் வரும் பலனைப் பஞ்சாக்ஷர மந்திரமொன்றே கொடுக்கும். சிவஞான பிரதிபாதகமான நூல்களும், பிரமவித்யாப் பிரதிபாதகமான நூல்களும் பஞ்சாக்ஷர மகாமந்திரத்திற்குச் சங்கிரகமான பாஷியங்களாகும். அநேக மான மந்திர சாஸ்திராதிகளாலும் வரும் பலன் யாதுமில்லை. எவனுடைய இதயத்தில் பிரணவசகிதமான பஞ்சாக்ஷரமந்திர மிருக்கின்றதோ அவன் எல்லாச் சாஸ்திரங்களையுங் கேட்டவன். எல்லாச் சாஸ்திரங்களையும் படித் தவன். எல்லாவற்றையும் அநுஷ்டித்தவன். சிவாய என்னும் மூன்றெழுத் துக்கள் எவனுடைய நாவில் எப்பொழுதும் விளங்குமோ அவனுடைய வாழ்வே உயிர்வாழ்வதாம். நீசனாயினும் அதமனாயினும் மூர்க்கனாயினும் பண்டிதனாயினும் பஞ்சாக்ஷர நிஷ்டையுடையவனாயின், பாவபஞ்சரத்தி னின்றும் விடப்படுவர்ன் என்று சிவபெருமான் உலகத்தாருக்கு நன்மை யுண்டாகும்படி பூர்வம் உமாதேவியாருக்குச் சொல்லியருளினர். உமா தேவியானவள் அவ்வாறு சொல்லிய சர்வேசனைப்பணிந்து, ஸ்வாமீ! கலி யுகம் மிக்க பாவமுடையதன்றோ? அக்காலத்து மநுஷர்கள் அஜ்ஞான மும்பாவமுமடைந்து வருணாச்சிரம தர்மங்களை விடுத்துச் சர்வஜாதிகளுஞ் சங்கரமாகி யாவரும் மந்திராதிகாரிகளாயிருத்தலின், குரு சிஷ்ய கிரம

மில்லாமையின் உன்னுடைய பக்தர்கள் எவ்வாறு முக்தியடைவார்களென்பதைக் கூறவேண்டுமெனக் கேட்க, சங்கரபகவான் சாற்றலாயினன்.

பார்வதி! என்சம்பந்தமான சிறந்தபஞ்சாக்ஷரவித்தையையாசிரயித்துப்பக்தியுடன்கூடிக்கலிகாலத்திலிருக்கும்என்பக்தர்கள் முக்தியையேயடைவார்கள். மனவாக்குக்காயங்களாற் செய்த தோஷங்களால் தூஷிக்கத்தக்கவர்களும் தயையே சிறிதுமில்லாவர்களும் லுப்தர்களுமாகிய துஷ்டமனமுடைய பாவிகளும்என்னிடத்திற் பக்திமாத்திரம் உடையவர்களாயின் என்னுடைய பஞ்சாக்ஷரவித்தையே அவர்களை எல்லாப்பாவங்களினின்றும் விலக்குமென்று இப்பூவுலகத்தில் யான்பலமுறை பிரதிக்ஞைசெய்திருக்கிறேன். பதிதனாயினும் என்பக்தனாகிப் பஞ்சாக்ஷரோபாசனைசெய்தபக்ஷத்தில் முக்தனாவான் என்றுகூற, உமாதேவி ஸ்வாமீ! பதிதன் எப்பொழுதுங் கர்மங்களைச்செய்தற்கு அயோக்கியனன்றோ? அவ்வகையினன் எவ்வகையகர்மத்தைச் செய்யினும் அதன்பலனை யடையாமலே நரகத்திற்கு ஏதுவாவானன்றோ? அவ்வாறிருக்க, பதிதன் இப்பஞ்சாக்ஷரமந்திரத்தால் எப்படி முக்தனாவான்? என்பதையுங் கூறியருளவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் பெண்ணே! நீ நன்குவினவினை. அதுரகசியமானது. பதிதன் தன்னைப்புனிதனாகக்கருதிவேதமந்திரங்களால் என்னைப் பூஜைசெய்வானாயின் தடையின்றி நரகத்தையே யடைவான். ஆனாற் பஞ்சாக்ஷரமந்திரத்தால் என்னைத் தியானிப்பானாயின் அடைதற்கரியமோக்ஷத்தையேயடைவான். உதகபக்ஷணமும் வாயுபக்ஷணமுஞ் செய்துகொண்டு எண்ணிறந்த விரதங்களைச்செய்து உடலைச்சோஷிக்கச்செய்து பலமந்திரங்களால் என்னைத் தியானஞ்செய்தாலும் என்னுடைய சாலோகபதவி கிடைக்காது. இப்பஞ்சாக்ஷரமந்திரத்தினாலே ஒருமுறை என்னைத் தியானஞ்செய்யினும் என்னுடைய லோகத்தையடையச்சந்தேகமில்லை. ஆதலால் தவம் யாகம் நியமமுதலிய யாவும் பஞ்சாக்ஷரமந்திரோபாசனைக்குக் கோடியமிசத்திலோர் அமிசத்துக்கும் நிகராகாது. பாசபத்தனாயினும் முக்தனாயினும் எவன் பஞ்சாக்ஷரமந்திரத்தால் என்னைப்பூஜிப்பானோ அவனே ஐயமின்றிமுக்தியடைவான். சிவபக்தியுடையவனாயினும், சிவபக்தியில்லாதவனாயினும், பதிதனாயினும், மூடனாயினும், ஒருமுறை என்னைப்பஞ்சாக்ஷரமந்திரத்தாற் பூஜைசெய்தால் அவன் முக்தனாகிறான். பஞ்சாக்ஷரங்களாலேனும் சடக்ஷரங்களாலேனும் என்னைப்பக்தியோடு ஜபித்தபக்ஷத்தில் முக்தனாகிறான். குருமுகத்தாலுபதேசிக்கப்பெற்றாவது உபதேசிக்கப்பெறாதாவது இப்பஞ்சாக்ஷரமந்திரத்தாலென்னைப் பூஜித்தவன் என்பக்தன். உபதேசம்பெறாதவனைக் காட்டிலும் உபதேசம்பெற்றவன் கோடிபங்கு அதிகன். ஆதலின் என்னுடைய பஞ்சாக்ஷரமந்திரத்தைக் குருமுகமாக உபதேசிக்கப்பெற்றுக்கொண்டே உபாசிக்கவேண்டியது. குருமுகமாக உபதேசிக்கப்பெற்றுப் பஞ்சாக்ஷரோபாசனைசெய்துகொண்டிருக்கும் பிரமசாரி என்னுடைய சாரூப்பியத்

ணைதயடைவான். விசேஷமாகச் சொல்லவேண்டியதென்ன. என்னுடைய பக்தர்கள் யாவரும் இம்மந்திரோபாசனைக்கு அதிகாரிகள், அதில் குருபதேசம்பெற்றவன் சிரேஷ்டன். இப்பஞ்சாக்ஷர பிரபாவத்தாலேயே உலகங்கள் - வேதங்கள் - மகருஷிகள் - தர்மங்கள் - தேவர்கள் - சமஸ்தமான ஜகத்தும் யாவும் சாசுவிதமாக நிலைத்துள்ளன. பிரளயம் சம்பவித்த காலத்தில், தாவரஜங்கமங்கள் யாவும் நசிக்கையில் யாவும் பிரகிருதியிலடங்க, அப்பிரகிருதி என்னிடத்தில் லயமடையும். அப்பொழுது யான் ஒருவனேயிருப்பேன். எனக்கிரண்டாவதாக ஒருவனுமிரான். அச்சமயத்தில் வேதங்கள் சாஸ்திரங்கள் வித்தைகள் யாவும் பஞ்சாக்ஷரமந்திரத்திலிருக்கும்படி என் சக்தியாற் செய்கின்றேன். அவை என்னுடைய சக்தியால் நாசமடையாதிருக்கும். சிருஷ்டியாரம்பமும் என்னாலேயே பிரகிருதி புருஷபேதத்தாற் செய்யப்பட்டது. அப்பொழுது சமுத்திர மத்தியிற் சேஷசயனத்தில் மாயனாகிய நாராயணன் துயில்செய்தனன். அவனுடைய நாபியினின்றும் பிறந்த சதுர்முகப்பிரமன் சகாயமில்லாமல் திரிலோகங்களையும் படைக்கச்சக்தியற்று, மகா தேஜோவான்களான பத்துமுனிவர்களைச்சிருஷ்டித்து அவர்கட்குச் சிருஷ்டிசெய்யும் ஆற்றல் உண்டாகவேண்டுமென்று விருப்புற்று, அவர்களுடன் என்சமீபத்தில் வந்து, ஜகதீசா! என்மக்களான இவ்விருஷிகளுக்குச் சிருஷ்டி வல்லபமுண்டாகத் தயைபுரியவேண்டுமெனப் பிரார்த்திக்க, யான் ஐந்துதிருமுகங்களுடன் விளங்கி ஐந்து அக்ஷரங்களையுங் கிரமமாகப் பிரமதேவனுக்குரைக்க, அப்பிரமதேவனும் ஐந்துமுகங்களால் அவ்வைந்தெழுத்துக்களையுங் கிரகித்துக்கொண்டு வாச்சிய வாசக சம்பந்தத்தாற் சர்வேசனை பரமாத்மா யானென்றுணர்ந்து, அம்மந்திர விநியோகத்தையுமுணர்ந்துகொண்டு அதனையநுஷ்டித்துச் சித்திசெய்துகொண்டு தன்புத்திரர்களான பத்துமுனிவர்கட்கும் விதிப்படி உபதேசிக்க, அவர்கள் அம்மந்திரரத்தினத்தையடைந்து, தமது தந்தைகட்டளைப்படி என் ஆராதனையிற் பெருவிருப்புடையவர்களாய் மேருகிரியின் சிகரத்திலுள்ள எனக்குப்பிரியமானதும் எப்பொழுதும் என்னுடைய கண்களாற் காக்கப்பட்டதுமாகிய முஞ்சவானென்னுஞ் சிகரத்தையடைந்து, அதனுச்சியில் உலகசிருஷ்டியை விரும்பி ஆயிரந்தேவவருஷங்கள் வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு பஞ்சாக்ஷரமந்திரஜபத்துடன் உக்கிரமான தவத்தைச் செய்தார்கள். அவர்கள் தவத்திற்கு யான் களிகொண்டு பிரத்தியக்ஷமாசி, சிருஷ்டித்தொழில் விர்த்தியடையும்படி அவ்விருஷிகட்குப் பஞ்சாக்ஷரமந்திரத்தின் ருஷி சந்தஸ் கீலம் பீஜம் சக்தி தெய்வதம் நியாசம் ஷடங்கதிக்பந்தம் விநியோகமுதலியவற்றை யுபதேசஞ்செய்கையில், அவர்கள் அம்மந்திர மகிமையால் அதிக தவசம்பன்னர்களாய், தேவ அசுர மநுஷர்களின் சிருஷ்டியைச்செய்தார்கள்.

சுந்தரீ! பரமவித்தையாகிய இப்பஞ்சாக்ஷரமந்திர ஸ்வரூபத்தை இப்பொழுது சொல்லுகின்றேன் கேட்பாயாக. முதலில் நம: என்னும்

பதத்தை யுச்சரிக்கவேண்டியது. பின்னர் சிவாய என்னும் பதத்தை யுச்சரிக்கவேண்டியது. இவ்வைந்தெழுத்துக்களே சங்கிரகமாகவுள்ள பீஜம். அதுமுதலில் என்னாலேயே சொல்லப்பட்டது. அது எனக்கே வாசகமாயிருக்கிறது. அந்தப் பஞ்சாக்ஷரீ புடமிட்டெடுத்த பொன்மயமும் பூரித்துயர்ந்த கொங்கைகளும், நான்குகரங்களும், மூன்றுவிழிகளும், ஜடாமுடியிற் சந்திரதுண்டமும், ஆறு சிரங்களும், கரங்களில் பதுமம், உத்பலம் வரதம் அபயங்களும், சர்வலக்ஷணங்களும், விசேஷ ஆபரணபூஷிதமும், புண்டரீகாசனமும், கரிய சுருண்டமயிர்களும், கொண்டுவிளங்குவதைப் பரஞானிகளே யுணர்வார்கள். இவ்வைந் தெழுத்துக்களும் முறையே * மஞ்சணிறம் கருநிறம் புகைநிறம் பொன்னிறம் செந்நிறங்களாகவிளங்கும். இவ்வைந்தெழுத்துக்களை விந்து நாதங்களுடன் கூட்டி யுச்சரிக்கவேண்டும். விந்து அர்த்த சந்திரஸ்வரூபமானது. நாதம் தீபசிகையைப்போன்றது. இரண்டாமெழுத்து பீஜம். நான்காமெழுத்து தீர்க்கபூர்வமானது. ஐந்தாமெழுத்து சத்தி. இம்மந்திரத்திற்கு வாமதேவன் ருஷி பங்க்தி சந்தஸு. தேவதை சிவனானயான். இவ்வைந்தெழுத்துகளுக்கும் கௌதமன் அத்திரி விசுவாமித்திரன் அங்கீரசு பரத்துவாசன் முறையே ருஷிகள். காயத்திரி அநுஷ்டிப்பு திரிஷ்டுப்பு சந்தஸு பிருஹதி விராட்டென்று சொல்லப்படும். இந்திரன் உருத்திரன் விஷ்ணு பிரமன் குமாரசுவாமி இவர்கள் தேவர்கள். இவ்வைந்தெழுத்துக்களும் என் ஐந்துமுகங்களிலேயே பொருந்தியிருக்கும். அவற்றுள் கிழக்கு முகத்தில் நகாரமும் தக்ஷிணத்துள்ளமுகத்தில் மகாரமும் மேற்கிலுள்ள முகத்திற் சிகாரமும் வடக்கிலுள்ளமுகத்தில் வாகாரமும் ஊர்த்துவத்திலுள்ள ஈசானமுகத்தில் யகாரமும்பொருந்தும். அவற்றுள் முதலெழுத்தும் நான்காமெழுத்தும் உதாத்தம். இரண்டாமெழுத்தும் ஐந்தாமெழுத்தும் ஸ்வரிதம். மூன்றாமெழுத்து அநுதாத்தம். இவ்வைந்தெழுத்துக்களும் மங்களகரமாகக் கோவைசெய்யப்பட்டுள்ளன. இதுவேமூலவித்தை. என்ஸ்வரூபமான இவற்றின் பெயர்கள் தெரியத்தக்கன. நகாரம் சிவன், மகாரம் சிகை, சிகாரம் கவசம், வாகாரம் நேத்திரம், யகாரம் அஸ்திரம், நமஃ ஸ்வாஹா வஷட் ஹூம் வௌஷட் பட் என்னும் இவை அவற்றினிறுதியிற்கூட அங்கத்துவமடைகின்றன.

பெண்ணே! இப்பஞ்சாக்ஷர மந்திரத்தின் ஐந்தாவதெழுத்தாகிய யகாரத்தைப் பன்னிரண்டாம் ஸ்வரமாகிய ஐகாரத்துடன் சேர்த்து உச்சரித்தால்[சிவை]உனக்குமூலமந்திரமாகும். ஆதலால்இம்மந்திரத்தால்மனவாக்குக் காயங்களால் நம்முடைய இருவர் பூஜையையும், ஜப ஹோமாதிகளையும் ஞானத்தோடும் சிரத்தையோடும் காலத்திலே புத்திபூர்வமாய்ச் சக்திக்கேற்ப, சம்பத்து முதலியவற்றை மதியாமல், அன்புடன் செய்யத்தகும். ஒருவன் எவ்விடத்திலேனும் எக்காலத்திலேனும் பக்தியுடன் நம்

* இம்முறையில் முதலாவதையும் நான்காவதையும் மாற்றித்தமிழ்நூல் கூறுகின்றது.

மைப் பூஜிப்பானயின் முக்தியையடைவான். என் பக்தர்கட்காகவே சாஸ்திர நியமங்கள் செய்யப்பட்டுள்ளன. மந்திரத்தைக் கிரகிக்கவேண்டிய முறையைக் கூறுகின்றேன் : குருபதேசமில்லாமலும் கிரியாஹீனமாகவும் சிரத்தையில்லாமலும் குருதக்ஷிணை கொடாமலும் பெற்ற மந்திரத்தை எப்பொழுதும் ஜபித்தாலும் பலனுண்டாகமாட்டாது. குருபதேசம் பெற்றுக் கிரியாபூர்வமாய்ச் சிரத்தையுடன் குருதக்ஷிணை கொடுத்து என் ஸ்வரூபமான மந்திரத்தைப்பெற்று ஜபித்தபக்ஷத்தில் மகா பலன்களைக்கொடுக்கும். ஆசாரியஸ்தானத்திற்கு யோக்கியதையும், வேதவேதாங்க வுணர்ச்சியும் ஜபசிலமும் நற்குணமும் தியானயோகத்தில் விடாத சித்தமுமுடைய உத்தம பிராமணனாகிய குருவின் சந்நிதியை யடைந்து, பக்தியுடன் மனவாக்குக் காயங்களாற் பூசித்துச் சந்தோஷப்படுத்தி ஆசிரிய பக்தி வகிக்கவேண்டும். ஆசாரியனுக்கு யானை குதிரை தேர் இரத்தினம் பூமி வீடு பூஷணம் வஸ்திரம் தானியம் தனம் முதலியவற்றைத் தத்தம் சக்திக்கேற்ப வஞ்சனையின்றிக் குருதக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். மந்திர சித்தி யுண்டாகவேண்டுமென்று கருதுபவன் தன்பாலுள்ள பொருளை ஆசாரியனுக்கு மறைக்கக்கூடாது. அவ்வாசிரியனுக்குத் தன் உடல் பொருள் ஆவி மூன்றனையும் ஒப்புவிக்கவேண்டும். இவ்வகையாக ஆசாரியனைச் சந்தோஷப்படுத்தி அவன் மூலமாக மந்திரத்தையும் ஞானத்தையும் கிரமமாகக் கிரகிக்கவேண்டும். அவ்வாறு களிப்புற்ற குருவானவன் தன்னை ஒருவருஷகாலம் பணிவிடை செய்து வந்து அகங்கார மொழிந்து பரிசுத்தனாய் உபவாசாதி விரதங்களை யநுஷ்டிக்குஞ் சிஷனை மந்திர பூர்வமாகப் பூர்ணகும்ப ஜலத்தால் ஸ்நானஞ்செய்வித்து, கந்தம் புஷ்பம் ஆடை ஆபரணம் முதலியவற்றால் அலங்காரஞ்செய்வித்து, புண்ணியாஹவாசனஞ் செய்வித்துப் பிராமண பூஜை செய்வித்து, கடற்கரை நதிக்கரை பசுக்கள்தங்குமிடம் சிவாலயம் புண்ணியபூமி தன் வீடு ஆகிய விடங்களில் ஓரிடத்தில், சுபநக்ஷத்திரமும் சுபயோகமும் சுபகரணமுமாகிய நல்ல காலத்தில், ஏகாந்தமாகவிருந்து சந்தோஷசித்தத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தை உதாத்தாதிஸ்வரயுக்தமாக உபதேசித்து, அவனையவ்வகையே கிரமமாக உச்சரிக்க வல்லவனாகச்செய்து, உனக்குச் சுபமுண்டாகுக நீ யாவர்க்கும் பிரியவானாகுகவென் றாசீர்வதித்து, இவ்வகையாக மந்திரத்தைக்கொடுத்து அவன் நடக்கவேண்டிய செயல்களைக்குறித்து ஆக்கினை செய்யவேண்டியது. இவ்வகையாகக் குருவினால் மந்திரத்தையும் ஆக்கினையும் அடைந்த சிஷன் நாடோறும் சங்கற்பஞ்செய்து தான் பிழைத்திருக்குமெல்லையும் ஆயிரத்தெட்டுமுறை ஜபஞ்செய்தபக்ஷத்தில், அவ்வகையானவன் உத்தமகதியை யடைவான். இம்மந்திரத்தில் ஒவ்வொரு * அக்ஷரத்துக்கு நான்கிலக்ஷ ஜபஞ்செய்துகொண்டு இரவில் மாத்திரம் புசி

* அக்ஷரத்திற்கு நான்கிலக்ஷ ஜபமென்பது-எழுத்துக்கள் ஐந்துக்கும் தனித்தனி நான்கிலக்ஷமாக ஜபித்து அவற்றின் முடிவில் அதன் பலனை அந்த அதிதேவதைக்குப் பிரீதியாக தர்ப்பணம் ஹோமமுதலியன முடித்து, இவ்வகையாக இருபதுலக்ஷஞ் ஜபித்து முடிக்கலாம்.

த்துவருபவன் நியமமாகஜபம் [புரஸ்சரணை] செய்தவனெனப்படுவான். புரஸ்சரணை செய்த பின்னரும் ஜபத்தை நிறுத்தாமல் மேலுஞ் செய்துகொண்டு வருபவனுக்குச் சமானமான மந்திரசித்தி யுடையவன் ஒருவனுமிலன். ஸ்நானஞ்செய்து புனிதமானவிடத்தில் ஆசனத்தின்மேரில் வடக்குமுகமாகவாவது கிழக்குமுகமாகவாவது ஏகமனதுடன் உன்னையும் என்னையும் ஆசாரியனையுந் தியானித்து, பஞ்சபூதங்களையும் தஹனப்லாவனாதிகளாற் சுத்திசெய்து நியாசங்களைச் செய்து பிராணயாமமுடித்து ஆசாரியனு லுபதேசிக்கப்பட்ட மந்திரம் ருஷி சந்தஸ் அதிதேவதை பீஜம் சக்தி முதலியவற்றுடன் ஸ்மரணைசெய்து பஞ்சாக்ஷர ஜபஞ்செய்ய வேண்டியது. மானஸமான ஜபம் உத்தமம். மெல்லெனப் பிறர் கேளாவகையாகச் செய்யும் ஜபம் மத்திமம். யாவர்க்குங் கேட்கும்படி யுயர்த்தி ஜபித்தல் அதமம். மேற்கூறிய மூவகைகள் ஜப பேதத்தா லுண்டாகுமிடத்து உத்தமத்திற்குத் தெய்வம் உருத்திரனும், மத்திமத்திற்கு விஷ்ணுவும், அதமத்திற்குப் பிரமனுமாவர். உதாத்தாநுதாத்த ஸ்வரித ஸ்வரங்களுடன் மந்திராக்ஷரங்களை யுச்சரித்துச் செய்யும் ஜபம் வாசிகம். நாவினை மாத்திரம் அசைத்துப் பிறருணராவண்ணஞ் செய்யும் ஜபம் உபாம்ஸு [இரகசியம்] மனதிலேயே தியானரூபமாக ஜபித்தல் மாநசிகம். வாசிகமாக ஜபித்தற்கு ஜபித்த அளவே பலன். உபாம்ஸு ஒன்றுக்கு நூறு வாசிகபலனும், மாநசிகம் ஒன்றுக்கு ஆயிரம்வாசிக பலனுமுண்டாகும். ஸகர்ப்பம் ஒன்றுக்கு நூறு வாசிகத்துக்கு அதிக பலனுண்டாகும். ஆதியந்தங்களிற் பிராணயாமங்களையுடைய ஜபம் ஸகர்ப்பமென்றும், ஆதியந்தங்களிற் பிராணயாமமில்லாத ஜபம் அகர்ப்பமென்றுஞ் சொல்லப்படும். பிராணயாமமாவது ரேசக பூரகங்களைச்செய்து நாற்பதுரு ஜபிக்கு மெல்லையும் வாயுபந்தனஞ் செய்தலாம். அசக்தனயிருப்பவன் நாற்பதுரு ஜபிக்கு மெல்லையும் நிறுத்தக்கூடாமையின் ஐந்துரு மூன்றுரு அல்லது ஒருருவாவது ஜபிக்குமளவுகாலம் வாயுவைப் பந்தித்தலும் பிராணயாமமென்பர். ஸகர்ப்ப அகர்ப்பங்களில் ஸகர்ப்பம் சிறந்தது. ஸகர்ப்பத்தைக்காட்டிலும் ஸத்தியானம் ஆயிரம்பங்கு விசேஷமானது. இவ்வகைய ஜபங்களில் தன் சக்திக்கேற்ப ஓர்வகையான ஜபத்தைச் செய்யவேண்டியது.

பார்வதி! ஜபஞ்செய்கையில் விரலாற் கணக்கிடுதல் அவ்வளவு பலனையே கொடுக்கும். விரலிரேகையாலளவிடல் எட்டுப்பங்கு அதிகம். *புத்திரஜீவமணியாற் ஜபித்தல் பத்துப்பங்கு அதிகம். சங்கமணியால் ஜபஞ்செய்தல் அதில் நூறுபங்கு அதிகம். பவளத்தால் ஜபித்தல் அதில் ஆயிரம்பங்கு அதிகம். ஸ்படிகமணியால் ஜபித்தல் அதிற் பதினயிரம் பங்கு அதிகமாம். முத்து மணியாற் ஜபித்தல் அதில் இலக்ஷம் பங்கு அதிகம். தாமரைமணியால் ஜபித்தல் அதிற்பத்திலக்ஷம்பங்கு அதிகமாம்.

* புத்திரஜீவம் - ஓர் மரத்தின் பெயர்.

பொன்னாற்செய்தமணியாற் சபித்தல் அதிற் கோடிபங்கு அதிக பலனுண்டாம். உருத்திராக்ஷமணியாலாவது தர்ப்பை முடியாலாவது ஜபிக்கும் பலத்திற்கு அளவு சொல்லமுடியாது. இனி ஜபமாலை முப்பது மணிகள் கொண்டதாயின் ஐசுவரியமுண்டாம். இருபத்தேழுக்குப் புஷ்டியும், இருபத்தைந்துக்கு முக்தியும், பதினைந்துக்கு அபிசார மந்திரசித்தியும் உண்டாம். அங்குஷ்ட [பெரு] விரலால் ஜபித்தால் முக்தியுண்டாகும். தர்ச்சனி [சுட்டு] விரலால் ஜபித்தாற் சத்துருநாசமுண்டாகும். மத்திம [நடு] விரலால் ஜபித்தாற் பொருளுண்டாகும். அநாமிகை [மோதிர] விரலால் ஜபித்தாற் சாந்தியுண்டாகும். கனிஷ்டிகை [சிறு] விரலால் ஜபித்தால் யாவும் உண்டாகும். பெருவிரலைக்கூட்டாது ஜபித்தால் நிஷ்பலமாம். வீட்டில் ஜபித்தலைக்காட்டிலும் பசுமந்தை தங்குமிடத்திற் ஜபித்தால் அதைப்போல நூறுபங்கும், நந்தவனத்திலும் வனத்திலும் ஜபித்தால் அதில் ஆயிரம்பங்கும், புண்ணியபர்வதங்களில் அதிலும் அயுதமும், நதிகளில் லக்ஷமும், தேவாலயத்திற் கோடியும், நம்முடைய சந்நிதியில் அநந்தமுமாக விசேஷ பலனளிக்கும். சூரியன் சந்திரன் அக்கினி ஆசாரியன் விளக்கு ஜலம் வேதியர் பசு இவற்றின் முன்னர் ஜபித்தல் நலம். கிழக்குமுகம்பார்த்து ஜபித்தல் வசியமும், தக்ஷிணம் அபிசாரமும், மேற்கு தனமும், உத்தரம் சாந்தியும் உண்டுசெய்யும். சூரியன் அக்கினி குரு பிராமணர் பெரியோர் வரின் அவர் முன்னிலையிலிருந்தன்றி அவர்களை விலகி ஜபிக்கப்படாது. ஜபஞ்செய்கையிற் சிரமிசைத்துகில் சுற்றிலும், உடலை வஸ்திரத்தாற் போர்த்தியும், தலைமயிர் விரித்துக்கொண்டும், திகம்பரனாயும், பவித்திரமணியாதிருந்தும் ஜபஞ்செய்யப்படாது. வார்த்தையாடிக்கொண்டும், புனிதமில்லாமலும், கோபம் சாந்தம் தும்முதல் கொட்டாவிவிடுதல் உமிழ்தல் முதலியன செய்யாமலும், புலையர் நாய் முதலிய அசுத்தங்களைப் பாராமலுமே ஜபஞ்செய்யவேண்டும். தும்மல் இருமல் முதலியன தேகதர்மங்களாதலின் அவ்வகைய உடற்குற்றங்கள் சம்பவிக்குமாயின் மும்முறை ஆசமனீயஞ்செய்து என்னையும் உன்னையுந் தியானிக்க வேண்டும். அல்லது சூரியன் அக்கினி தீபம் இவற்றுளொன்றைப் பார்க்க வேண்டும். அல்லது பிராணாயாமஞ் செய்யவேண்டும். ஆசனமில்லாமலும் சயனித்தும் நடந்தும் நின்றும் கால்நீட்டியும் குக்குடாசனமிட்டும் வாகனமிவர்ந்தும் கட்டிலிலிருந்தும் மனசிற் சிந்தனையுற்றும் தெரு அசுசியானவிடம் இருள் முதலிய விடங்களிலும் மந்திரத்தை ஜபிக்கக்கூடாது. சக்தியிருக்குமளவும் இந்த நியமங்களைக் கவனிக்கவும். சக்தியில்லாவிடின் சக்திக்குத்தக்கபடி ஜபிக்கலாம். விசேஷமாகச் சொல்லவேண்டியதில்லை. ஓரேவாக்கியஞ் சொல்லுகின்றேன். சதாசாரசம்பன்னனாய், சுத்தமாக மந்திரஜபஞ் செய்பவனுக்கு எல்லா மங்கலங்களுஞ் சித்திக்கும். ஆசாரமே முதலான தர்மம். ஆசாரமே உத்கிருஷ்டமான தனம். ஆசாரமே மேம்பட்ட வித்தை. ஆசாரமே உயர்வான கதி. ஆசாரஹீனமான புருஷன்

இகலோகத்தில் நிந்திக்கப்படுவான். பரலோகத்திலும் சுகமடையமாட்டான். ஆதலால் மந்திரம் ஜபிப்பவன் ஆசாரத்துடனிருக்கவேண்டும். ஏவனுக்கு வேதசாஸ்திரங்களில் எவ்வெக்கருமங்கள் விதிக்கப்பட்டுளவோ அவற்றை யாசரிப்பதே சதாசாரம். ஏனையவை சதாசாரமாகா. சற்புருஷர்களால் ஆசரிக்கப்படுதலின் சதாசாரமெனப்படும். சதாசாரத்திற்கு மூலகாரணம் ஆஸ்திக்கியம். ஆஸ்திகனுயிருந்து விதிவலியாற் சதாசாராநுஷ்டானத்திற்கு இடையூறு சம்பவிக்குமாயின் அவன் தூஷிக்கத்தக்கவனல்லன். ஆதலின் ஆஸ்திக்கியனு யிருக்கவேண்டும். புண்ணியபாவங்களால் இவ்வுலகத்திற் சுகதுக்கங்க ளுண்டாவதுபோல, பரலோகத்திலும் சுகதுக்கங்களை யநுபவிக்கவேண்டுமென்னும் நம்பிக்கையுண்டாயிருத்தலே ஆஸ்திக்கியம்.

பார்வதி! மிக்கரகசியமாகப்போற்றத்தக்க வேறொன்றுஞ்சொல்லுகிறேன். அது நாஸ்திகர் முதலிய பாவிகளுக்குச் சொல்லக்கூடாதது. அஃதென்னெனில், சதாசாரமில்லாதவனுயினும் பதிதனுயினும் சண்டாளனுயினும் ஒருவனை ரக்ஷிக்கத்தக்கது பஞ்சாக்ஷர மந்திரத்தைக்காட்டிலும் பிறிதொன்றின்று. நடந்துகொண்டிருந்தாலும் நின்றுகொண்டிருந்தாலும் தன் விருப்பின்படி துஷ்டகாரியங்களைச் செய்துகொண்டிருப்பினும் அசுசியாயினும் சுசியாயினும் ஷடத்துவ பரிசோதனமின்றி அநாசாரமுடையவனுயினும், இம்மந்திரம் குருவால் உபதேசிக்கப்படினும் உபதேசிக்கப்படாவிடினும் சிறிது ஜபிக்கினும் பெரும்பலனைக் கொடுக்கும். எல்லாத்தோஷங்களையு முடையவனுயினும் என்னிடத்திற் பக்தியென்பதொன்றுமாத்திரமிருக்குமாயின் அவனுக்குச்சந்தேகமின்றி மந்திரசித்தியுண்டாகும். அவ்வகையபக்தனுக்கு லக்கினம் திதி வாரம் நக்ஷத்திரமுதலியன நன்றென்றுந் தீதென்றும் அவசியமில்லை. அவன் நித்திரைசெய்கையிலும் விழித்துக்கொண்டிருப்பவனே யாவான். ஒருவனுக்கும் அவன் ஒருகாலத்துஞ் சத்துருவாயிருக்கமாட்டான். அவன் சுசித்தனுகவாவது, சித்தனுகவாவது, சாத்தியனுகவாவது ஆவான். மந்திரசித்தியடைந்த குருவையடுத்து உபதேசம்பெற்றவன் சுசித்தன. சுசித்தனை குருவையடுத்து உபதேசம்பெற்றவன் சித்தன். உபதேசமில்லாது ஜபிப்பவன் சாத்தியன். என்னிடத்தும் மந்திரத்தினிடத்தும் குருவினிடத்தும் சிரத்தை பக்திகளுடையவர்கள் இதர மந்திரங்களைவிடுத்துப் பஞ்சாக்ஷரமந்திரத்திலேயே நிர்விக்கினமாக மனதைச் செலுத்தி ஜபிக்கவேண்டும். இதரமான அநேகமந்திரங்கள் சித்தித்தாலும் இம்மந்திரஞ்சித்திக்கமாட்டாது. இம்மந்திரமே சித்திக்குமாயின் எல்லா மந்திரங்களுஞ்சித்தியடைந்தனவேயாம். அநேகதேவர்கள் சுவாதீனர்களாயினும் யான் ஒருவனே சுவாதீனனாகாதவன். நானே சுவாதீனமானேனுயின் எல்லாத்தேவர்களும் சுவாதீனர்களாவார்கள். பிறமந்திரங்கட்குள்ள தோஷங்களிலொன்றும் இம்மந்திரத்திற்குக்கிடையாது. இம்மந்திராநுஷ்டானத்திற்கு ஜாதிநியமந்

களுமில்லை. ஆதலின் சண்டாளர் முதலியயாவரும் இதை ஜபிக்கலாம். ஆதலாலேயே இம்மந்திரம் பிரபலமானது. அகண்டமான பலனைக்கொடுப்பதாமென்று உமாதேவிக்குச் சர்வலோகநாயகனாகிய பரமேசுவரன் உலகசுகத்தைக் கருதிக் கூறினனென்று உபமந்யுமுநிவர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறினர். இம்மந்திரத்தைப் பக்தியுடன் ஜபித்தவனுஞ் சொன்னவனுங் கேட்டவனும் எல்லாப்பாவங்களையு மொழிந்து உத்தமமான பதவியை யடைவார்கள்.

பஞ்சாக்ஷர பிரபாவமுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்றாவது
குருதீக்ஷாவிதியுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணமூர்த்தி உபமந்யுமுநிவரை நோக்கிப் பகவானே! தேவரீர் பஞ்சாக்ஷர பிரபாவத்தை நன்றாக அருளிச்செய்தீர்கள். சாக்ஷாத் வேதத்துடன் சமானமான அம்மந்திர விதானத்தையும் உத்தமமான அதின் ஸம்ஸ்காரத்தையுங் கேட்க அவாவுகின்றேன். ஆனால் பூர்வம் மந்திரபிரபாவங் கூறுகையிற் சுருக்கிச் சொல்லியபடியால் அந்த ஸம்ஸ்காரத்தை விரித்துரைக்கவேண்டுமெனக்கேட்க, உபமந்யுமுநிவர் முகமலர்ச்சியுடன் சொல்லலாயினர். கிருஷ்ணா! பாசபந்தங்களை யெல்லா மொழித்து உண்மை ஞானத்தைக் கொடுக்கவல்லதும் உலோகநாயகனாகிய சிவபெருமானாற் சொல்லப்பட்டதுமான ஸம்ஸ்காரத்தைச் சொல்லுகிறேன். ஈசுவர பூஜையில் மாநுடனுக்கு அதிகாரத்தை யுண்டுசெய்தலின் இதற்கு ஸம்ஸ்காரமென்று பெயராயிற்று, ஸம்ஸ்காரத்தாலேயே ஷடத்துவ பரிசோதனமுண்டாகின்றது. விஜ்ஞானத்தைக்கொடுப்பதாலும் பாசபந்தத்தை நசிக்கச்செய்வதாலும் இந்த ஸம்ஸ்காரமே தீக்ஷையென்றுஞ் சொல்லப்படும். [தீ - ஞானத்தைக்கொடுப்பது; க்ஷா - பாசபந்தத்தை நசிக்கச்செய்வது] தீக்ஷையைச் சாம்பவி சாக்தி மாந்திரியென மூவகையாகச் சிவாகமங்களிற் சர்வேசுவரனாற் சொல்லப்பட்டது. ஆசாரியனுடைய பார்வையாலாவது பரிசத்தாலாவது சப்தத்தாலாவது ஒருவனுடைய பாசபந்தங்களொழிந்து அந்தக்ஷணமே ஞானோற்பத்தியுண்டாவதே சாம்பவி தீக்ஷையென்றும் விஞ்ஞானதீக்ஷையென்றும் பெயர்பெறும். அது தீவிரம் தீவிரதரம் என்றிருவகைத்து. அவற்றுள் அப்பொழுதே பரசுகத்தைக் கொடுப்பது தீவிரதரம். பிழைத்திருக்கும் ஜீவனுக்குப் பாவத்தை விலக்குவது தீவிரம். ஆசாரியன் தன் யோகமார்க்கத்தாற் சிஷ்யனுடலிற் பிரவேசித்து, தன் ஞானநோக்கத்தால் அவனுடைய மோகத்தை யொழிப்பது சுகதீக்ஷையெனவும் ஞானவதி தீக்ஷையெனவும் பெயர்பெறும். யாகசாலையும் குண்டமும் மண்டலமுஞ் செய்து ஆசிரியன் கிரியாபூர்வமாகச் செய்

யுந் தீக்ஷை மாந்திரிதீக்ஷையென்றும் கிரியாவதி தீக்ஷையென்றும் பெயர் பெறும். மந்தமதிகளுக்கும் ஞானஹீனர்களுக்கும் இக்கிரியாதீக்ஷையே செய்யத்தகும். சிவதர்மாநுசரணத்திற்சாமர்த்தியப்பிராப்தியையுணர்ந்தே சிஷனைக்கொண்டு உபதேசஞ் செய்யக்கூடும். சக்தியில்லாதவிடத்தில் மந்திர சித்தியும் வித்தையும் சைவாசாரமும் முக்தியுங் கைகூடமாட்டா. குருவானவன் ஞானத்தாலுங் கிரியைகளாலுஞ் சிஷனைச் சோதித்தே கொள்ளவேண்டியது. ஆராய்ந்தறியாமல் ஒருவனைச் சிஷனைக்கொண்டு உபதேசித்த குருவானவன் பிரஷ்டனுவான். ஆதலால் எல்லாவகையிலும் பிரயாசப்பட்டுக் குரு தன் சிஷனுகுவோனைப் பரீக்ஷை செய்தேதீரவேண்டும். சத்திபாதத்திற்கு அடையாளமாவது சிவதருமங்களை யுபதேசிக்கையிலுணர்ந்துகொண்டு ஆனந்தித்தலேயாம், ஆநந்தம் ஞானம் இவ்விரண்டுக்கு மடையாளங்கள்: மனம் உலக விவகாரங்களை விலகுதலும் உடல் நடுக்கம் மயிர்க்குச் செறிதல் சுவரபேதம் நேத்திரபேதம் முதலியனவுமாம். இவ்வகையலக்ஷணங்களுடன் கூடிய குருவும் சிஷனும் வாய்க்கவேண்டும். அவ்விதமான குருவின் சம்பந்தத்தையும் சிவாராதனையின் முதலிற் சிஷனவன் பார்த்துக் கொள்ளக்கடவன். குருவும் சிஷனும் இவ்வகையாய்ச் சமானத்துவமுடையவர்களா யிருக்கையில் குரு சிஷபேதம் ஏதுக்கென்றால், சிஷன் தண்டிக்கத்தக்கவனும் குரு கௌரமுடையவனு மாவார்கள். குருவே சிவன் சிவனே குரு. குருவும் சிவனும் வித்தியாஸ்வரூபத்தாலேயே விளங்குவரென்பது விவேகிக்கே தெரியும். வித்தைசிவனைப்போன்றேகவுரவமுடையது, குரு வித்தைபோலவே கவுரவமுடையவன். சிவன் குரு வித்தை இம்மூவருக்கும் பூஜை செய்வதாற் சமானமான பலனுண்டாகும். சர்வ தேவதாஸ்வரூபன் சிவபெருமான். சர்வமந்திரங்களுமுணர்ந்தவன் குரு ஆதலின் சர்வ பிரயத்தனங்களாலுங் குருவைப் பூஜைசெய்யவேண்டியது. கீர்த்தியை விரும்புவோர் குருவின் கட்டளையை மனதிலேயுங் குறை கூறப்படாது. குருவின் ஆக்கினையைப் பரிபாலனஞ் செய்பவன் ஞான சம்பத்தை யடைகிறுன். நடந்தாலும் நின்றாலும் எழுந்தாலும் இருந்தாலும் சயனித்தாலும் ஒவ்வொரு கருமங்களுக்கும் குருவின் ஆக்கினையாலேயே யாவுஞ்செய்வதாயிருக்கவேண்டும். குருவே தேவன். குருவின் வீடே தேவகிருஹம் ஆதலின் குருவின் வீட்டிலாவது குருவின் எதிரிலாவது இஷ்டப்படி ஆசன முதலியவற்றிலிருக்கப்படாது. பாவிகளின் கூட்டுறவாற் பதிதனுவதுபோல ஆசாரியன் கூட்டுறவால் தர்மவானுகிறுன். பொன்னைப் புடமிடுதலால் அதன் மாசுகழிவதுபோல ஆசாரியனுடைய சாந்நித்தியத்தாற் சகலபாவமு மொழியும். நெருப்புக் கருகிலிருக்கும் நெய்யானது உருகுவதுபோல, குரு சமீபத்திலிருக்குஞ் சிஷனுடைய பாவமுங் கரைகின்றது. சுழித்துக்கொண் டெரியுந்தீயானது சருகுகளைப் பஸ்மஞ் செய்வதுபோலச் சந்தோஷமுடைய குருவானவன் சிஷனுடைய பாவங்களை யெல்லாம் பஸ்மஞ் செய்கிறுன். மனவாக்குக் காயங்களாற்

குருவினிடத்தில் ஒரு பொழுதுங் கோபங் கொள்ளப்படாது. அவ்வாறு கோபங்கொண்டவனுடைய செல்வம் ஆயுள் ஞானம் புண்ணியம் யாகபலம் யோகபலன் முதலியன அழியும். குருவுக்கு விரோதமான வார்த்தைகளை யொரு காலத்துஞ் சொல்லப்படாது. அவ்வாறின்றிச் சொன்னவன் ரௌரவ நரகத்தையடைவான். கீர்த்தியை விரும்புவோன் குருவிஷயத்தில் ஆசாரஹீனமாக நடக்கப்படாது. குருவின்பேரில் தோஷத்தை யாரோபணஞ்செய்தவன் நூறுபங்கு தோஷத்தை யடைவான். குணத்தை யாரோபணஞ்செய்தவன் புண்ணியம் பெறுவான். குருவின் கட்டளையைப் பெற்றாவது பெறாதாவது அவருக்கு நன்மையையே செய்யவேண்டியது. நேரிலாவது மறைவிலாவது குருகாரியத்தையே யெப்பொழுதுஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். இவ்வகையாகக் குருவுக்குப் பிரீதிசெய்து வருபவனே உத்தம சிஷன்; சிவதர்மங்களை யுபதேசிப்பதற்கு அவனே தக்கவன்.

யாதவசிரேஷ்டா! குணவானாகவும் பண்டிதனாகவும் பரமானந்த மநுபவிப்பவனாகவும் பரமானந்தத்தைப் பிரகாசிக்கச் செய்பவனாகவும் தத்துவ வுணர்வுடையவனாகவும் சிவபக்தியுடையவனாகவு முள்ளவனே குரு. அவனே முக்தியைக் கொடுப்பவனன்றிப் பிறர் சமர்த்தரல்லர். சிறந்த பிரமஞானத்திற்குக் காரணமான தத்துவத்தை யுணர்ந்தவனே ஆனந்தத்தைத் தரிசிக்கச் செய்வான். இவ்வகைய குரு சிஷர்களிருவரும் ஒருவரையொருவர் முக்திக்கேற்றுவர். தத்துவ வுணர்வின்றிப் பெயர் மாத்திரம் வகித்த குருவானவன் சொல்லளவாக முக்தியைக் கொடுப்பானன்றி உண்மையின் முக்தி கொடுப்பவனல்லன். அக்குருவும் முக்தி யடையமாட்டான்.

சிவதத்துவத்தை யுணர்ந்தவனே பிறரைக் கடைத்தேற்ற வல்லவன், தத்துவ முணராதவனுக்கு ஞானமில்லை. ஞான மின்மையால் ஆத்ம ஞானமுண்டாகாது. ஆத்ம ஞான மின்மையால் அவன் பசுவே யாவான். அவ்வகைய பசுவால் மற்றொரு பசு கடைத்தேறுமோ? ஒரு பொழுதுங் கடைத்தேறாது. ஆதலின் தத்துவவுணர்வுடையவனைக் குருவாகக்கொள்ளத்தகும். லக்ஷணங்களெல்லா மமைந்திருப்பினும், வேதசாஸ்திர உபாய விதிகளையெல்லா முணர்ந்திருப்பினும், சிவதத்துவ மறியாதவன் பிரயோசனமில்லாதவன். அபரோக்ஷ ஞானம்வரையிற் புத்தியுடையவனைக் காண்பதனாலேயே சிறந்த ஆனந்த முண்டாகும். அவ்வகைய குருவையே புத்திமானான சிஷன் ஆசிரயிக்கவேண்டும். பலகாலம் பணிவிடை செய்து பரீக்ஷித்துப் பின்னர் ஸ்திரமான பக்தியுடன் குருவாகக் கொள்ளவேண்டியது. சிறிதும் இடைவிடாது ஒருவருஷகாலம் பணிவிடைசெய்துங் குருவினால் ஞானானந்த மடையாதவன், அந்தக் குருவை விடுத்து வேறு குருவைத் தேடிக் கொள்ளலாம். ஆனால் முதலிற் குருவாயிருந்தவனை யவம

திக்கப்படாது. வேதியனும், வேதவுணர்வும், கல்விவல்லமை நல்லசுபாவம் நல்ல வுருவம் தயை முதலியனவு முடையவனான குருவை யடைந்து திரிகரணங்களாலும் அவர்மனங் களிப்படையும் வகையாகப் பூஜிக்கவேண்டும். அவர் மன மகிழ்ந்தவுடனே சீஷனுடைய பாவங்களெல்லாம் நசிக்கும். தனம் இரத்தினம் பூமி வீடு மனை பூஷணம் வஸ்திரம் படுக்கை பான பாத்திரம் ஆசனம் முதலியன தன் சக்திக்கேற்ற பக்தியுடன் ஆசிரியனுக்குக் கொடுத்தவன் உயர் கதியையடைவான். குருவே தந்தை தாய் தமயன் தம்பி பந்து தனம் சுகம் ஸ்வாமி மித்திரன் ஆதலின், எல்லாவற்றையும் ஆசாரியனுக்கே அர்ப்பணஞ் செய்து, பின்னர் தன் ஆன்மாவையும் நிவேதனஞ் செய்து, எப்பொழுதும் அவருடைய சுவாதீனத்திலேயே யிருக்கவேண்டும். குருஸ்வரூபமான சாக்ஷாத் சர்வேசனுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்த தேஹி அப்பொழுது தான்சைவனானன். அவனுக்கு மேலே ஜனனங்கிடையாது. ஈசுவரன் உலகத்தில் ஆசாரியரூபமாக ஆன்மாக்களின் பாசத்தை யொழித்து முக்தியைக் கொடுக்கிறானென்று வேதசிவாகமங்களெல்லாம் பிரதிபாதிக்கின்றன. குருதன்சீஷர்களிற் பிராமணனை ஒரு வருஷமும், க்ஷத்திரியனை இரண்டு வருஷங்களும் வைசியனை மூன்று வருஷங்களும் பரிசோதித்து அவர்களில் உயர்ந்தவனை யிழிதொழிலிலும் இழிந்தவனை உயர்தொழிலிலும் விடுத்துப் பரீக்ஷித்தே தெளியவேண்டும். அஹிம்சை தயை மோக்ஷவிருப்பு கர்வமின்மை புத்தி குரோதமின்மை உண்மை சாந்தம் விநயம் திடசித்தம் சௌசம் சிவபக்தி முதலியவற்றை யுடையவர்களை இவ்வாறு தெளிந்து, அவனைப் பலவாறு துன்புறுத்தியுந் தன்னைப் பிரியாதவனுக்கே சிவதீக்ஷை செய்யத்தகும்.

மாதர்களுக்குச் சிவஸம்ஸ்காரத்திற் சுயேச்சையான அதிகாரமில்லை. சிவபக்தி யுண்டாயிருப்பின் கணவன் கட்டளைபெற்றே சிவபக்தி செய்யலாம். கணவனை யிழந்த விதவையானவள் தன் புத்திரரையும் முதியோரையும் அநுமதிகேட்டுச் சிவஸம்ஸ்காரஞ் செய்துகொள்ளலாம். மணவினை செய்துகொள்ளாத கன்னிகைகள் தந்தையர் கட்டளைபெற்றே ஸம்ஸ்காரஞ் செய்துகொள்க. சூத்திரர் பதிதர் முதலியவர்கட்கு ஷடத்துவசுத்திசெய்ய வேண்டியதில்லை. அவர்கள் சிவபக்தியடைந்தாற் குருவின் பாததீர்த்தத்தைக் கொடுத்தே அவர்களுடைய பாவத்தை விலக்கவேண்டும். அநுலோமர்கள் சிவபக்தியடைந்திருந்தால் தாயின் குலத்திற்கேற்றபடி அத்துவசுத்தி முதலானவை செய்யலாம். தந்தை கட்டளைப்படி சிவஸம்ஸ்காரஞ்செய்துகொண்ட கன்னிகையைச் சிவபக்தனுக்கே மணஞ்செய்து கொடுக்கவேண்டும். ஒருவேளை பிறனுக்குக் கொடுக்க நேரிட்டாலும் அவனுக்குஞ் சிவஸம்ஸ்காரஞ் செய்யவேண்டும். அவன் அதனைக் கடைபிடிக்காதிருப்பின் அக்கன்னிகை அவனை விலகிச் சிவதருமத்தையும் அவனுக்கேற்பப் பிறதருமங்களையும் ஆசரிக்கவேண்டியது. பூர்வத்தில்,

*அநுசூயையென்பவள் பெரியோரனுமதியின்றிச் சிவபக்தி செய்து பெருவரங்களையும் அத்திரிமுநிவரையு மடைந்தனள். * நளாயினியும் சிவபூஜை செய்து பாண்டவர்களைக் கணவர்களாகப்பெற்றனள். சிவபக்தியை யுடையவள் சுதந்திரமாகச் செய்த கருமங்களால் தோஷமடையமாட்டாள். சிவசம்பந்தமான ஸம்ஸ்காரம் குருவின் சுவாதீனத்திலிருப்பினும் அதிகாரி பேதத்தால் வெவ்வேறாயிருக்கும். குருவின் பார்வை பரிசம் சம்பாஷணை முதலியவற்றாற் சிஷனுக்கு ஞானமுண்டாகும் வகையொன்று. அது மனத்தில் யோகமார்க்கத்தாற் செய்யப்படும் ஸம்ஸ்காரம் இரகசியமானது. குண்ட மண்டப பூர்வமாகச் செய்யப்படுவது கிரியாமார்க்கமான ஸம்ஸ்காரம். அதனையுஞ் சங்கிரகமாகச் சொல்லுகின்றேன்.

குருதீக்ஷாவிதியுரைத்தது

முற்றிற்று.

பதினன்காவது
சமயதீக்ஷாவிதியுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முநிவர் கூறுகின்றனர்: கிருஷ்ண! சிவதீக்ஷாவிதியைச் சொல்லுகின்றேன். குருவானவன் பஞ்சாங்க சுத்தமான தினத்தில், சமுத்திரதீரம் - நதிதீரம் - பசுமந்தையிருக்குமிடம்-பர்வதத்தருகு-தேவாலயம்-வீடுமுதலியவிடத்தில், சமயசமுஸ்காரத்தை முற்படச் செய்யவேண்டியது. அஃதெங்ஙனமெனில், பூமியைக் கந்தவர்ணரசாதிகளாற் பரீக்ஷித்து, சிற்பசாஸ்திர விதிப்படி மண்டபத்தைச் செய்யவேண்டியது. அம்மண்டப மத்தியில் ஓர் வேதிகை யேற்படுத்தி, அவ்வேதிகையில் குண்டங்கள் எட்டாவது நான்காவது செய்யவேண்டும். ஈசானதிக்கிலாவது மேற்குத்திக்கிலாவது வேறே பிரதான குண்டத்தை நியமித்துக்கொண்டு, மண்டபத்தையுங் குண்டங்களையும் விதானம் துவஜம் புஷ்பமாலிகை † ரங்கவல்லி முதலியவற்றாற் பலவகையாக அலங்கரித்து, வேதிகை மத்தியில் ஈசுவராராதனைக்குத்தக்க இரத்தினங்கள் பொன் முதலியவற்றா லலங்கரிக்கப்பட்ட மண்டலமொன்று செய்யவேண்டும். எளியவனாயின் செம்மண் அரிசிமா முதலியபொடிகளாலாவது மலர்மாலைமுதலியவற்றாலாவது அலங்கரித்துக் கொள்ளவேண்டியது. அம்மண்டலம் ஒரு கஜம் அல்லது இரண்டுகஜ விஸ்தீரணமாய்ச் செம்மையா யாவது வெண்மையா யாவது கமலாகாரமாக விருக்கவேண்டும். ஒருகஜ விஸ்தாரமாகச்செய்தால் உயர்வும் ஒருகஜமேயிருக்கலாம். அக்கமலத்தின் இடையிலுள்ள கர்ணிகை [மொட்டு] எட்டு அங்குலமும், சுற்றியிருக்குங் கேசரங்கள் நான்கு அங்குலமுமாக எட்டுத்

* அநசூயை சிவபக்தியில்லாத அத்திரிமுநிவரை விலகிச் சிவபூஜையால் மேன்மையடைந்தாளென்றும், * திரௌபதி கிருஷ்ணனைப் பூசித்தாளென்றும் வடநூல் கூறுகிறது.

† ரங்கவல்லி - மஞ்சள் குங்குமமுதலிய வர்ணப்பொடிகளாற் சித்திரிக்கும் மொக்கு.

தளங்களுடனிருக்கவேண்டும். இரண்டுகெஜ விஸ்தீரணமான மண்டல நியமித்தால், கர்ணிகை பதினாறங்குலமும் கேசரங்கள் எவ்வெட்டங்குலமுமாயிருக்கவேண்டும். இவற்றைப் பலவகையாக அலங்கரித்து, மண்டலங்கள் கமலாகாரமாக வேதிகையின் மத்தியிலும் ஈசானதிக்கிலுஞ் செய்யவேண்டும். பின்னும் வேதிகையிலேயே ஒரு மண்டலம் ஒருகஜம் அல்லது அரைகஜ விஸ்தீரணமாகச் செய்யவேண்டியது. நெல் - அரிசி - வெண் கடுகு - எள் - மலர்கள் - தர்ப்பை - இவற்றா லலங்கரிக்கப்பட்ட அம்மண்டலத்திற் சிவகும்பத்தை யமைக்கவேண்டும். அந்தச் சிவகும்பம் பொன் வெள்ளி தாமிரம் மண் முதலியவற்றாற் சக்திக்கேற்பச்செய்து அக்கும்பத்தைக் கந்த புஷ்ப அக்ஷதை அறுகு தர்ப்பை முதலியவற்றால் அலங்கரித்து மேலே நூல்சுற்றி இடையே கிழிக்காத இரண்டு வஸ்திரங்கள் சுற்றி, அதற்குள் பூரணமாக ஜலம் பெய்து தர்ப்பையாற் செய்யப்பட்ட கூர்ச்சத்தை அதன் முடிமேலே தெரிய உள்வைத்து, பரிமள திரவியங்கள் போட்டு, ரத்தினங்கள் முத்தங்கள் பொன் வெள்ளி முதலியவற்றையும் உள்ளிட்டு, அதன்மேலேமூடி மத்தியபாகத்தில் வைக்கவேண்டியது. பானபாத்திரம் சங்கம் சக்கிரம் இவற்றிற்கு நூல்சுற்றாமல் மண்டலகமலத்தின் வடக்கிலுள்ள தளத்தில் வைக்கவேண்டியது. [இது உமாதேவிகும்பமாம்] வேறொரு கும்பத்தை யலங்கரித்து மேற்றிசை யிதழில் அஸ்திரதேவனுக்காக வைக்கவேண்டியது. கமலத்தின் ஈசானதளத்தின் கிழக்கே மந்திரகும்பம் வைத்து ஈசுவரனுக்கு மகாபூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டியது. மேற்கூறிய வகையாக மண்டபஞ் செய்துகொள்ளச் சக்தியில்லாவிடின் வேதிகை மண்டலம் அக்னிகுண்டம் இவற்றைமாத்திரம் செய்துகொள்ளலாம்.

பின்னர், குருவானவன் சந்தோஷசித்தனாகிச் சங்வமங்களங்களுடன் கூடி நித்தியாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவபூஜை முடித்து மண்டலமத்தியிலிருக்குஞ் சிவகும்பத்திற் சிவபெருமானை ஆவாஹனஞ் செய்து, கிழக்குமுகமாகத்திரும்பி, மேனோக்குஞ் சிவபெருமானைப்பூஜிக்கவேண்டியது. யஜ்ஞரக்ஷகனாகிய ஈசுவரனை யிவ்வாறு பூஜித்துத் தியானஞ் செய்து, அதன் பின்னர் மேற்றிசைத் தளத்திலுள்ள அஸ்திர கும்பத்தில் அஸ்திரதேவனை யாவாகனஞ்செய்து பூஜித்து, அதன்பின்னர் ஈசானத்தின் கிழக்கிலுள்ள மந்திரகும்பத்தில் மந்திரத்தை யாவாகனஞ்செய்து, முத்திரைகளைக் காட்டி மந்திரகும்பத்தைப் பூஜித்து, மந்திரயாகத்தைச் செய்யவேண்டியது. பூர்வங்கூறிய சிவகுண்டத்திற் சிவாக்கினியை வளர்த்தித் தேசிகோத்தமன் நெய் முதலியவற்றைப் பெய்து ஓமஞ்செய்யவேண்டும். பிற குண்டங்களில் அவனுடைய சிஷர்களும் பிற வேதியர்களும் முறைப்படி ஆசிரியன் செய்யும் ஓமத்திற் கரைப்பங்கேனும் காற்பங்கேனும் ஓமஞ்செய்யவேண்டும். அப்பொழுது சிலவேதியர்கள் வேதமோதவும், சிலர் சிவஸ்தோத்திரங்கள் செய்யவும், சிலர் பஞ்சாக்ஷர ஜபஞ்செய்

யவும், நிருத்தம் கீதம் வாத்தியம் முதலியன விளங்கவும், மீண்டும் சிவபெருமானைப் பூஜித்து, சபையில் வந்திருக்கும் அந்தணர் பெரியோர் முதலியவர்களை உருத்திரசுவரூபமாகப் பாவித்துப் பூஜித்து, புண்ணியாஹவாசனஞ் செய்வித்து, மீண்டும் சிவபெருமானைப் பூஜித்து, ஆசிரியன் தன் மாணாக்கனைக் கடைத்தேறச் செய்யவேண்டு மென்னுங் கருத்துடன் ஸ்வாமீ! தயாசமுத்திரரான தேவரீர் என் தேகத்திற் பிரவேசித்து இந்த என் சிஷனைத் தயையுடன் பாவவிமோசனஞ் செய்து காக்கவேண்டும் என்று பிரார்த்தித்து, அவ்வாறே செய்கிறேனென்று சிவகடாக்ஷத்தைப் பெற்று, முன்னாள் உணவை விலக்கியும், நாடோறும் அவிசைப்புசித்தும் இந்திரியநிக்கிரகஞ்செய்தும், ஸ்நானஞ்செய்தும், நித்தியாநுஷ்டானத்தைப் பிராதக்காலத்தில் முடித்தும், பிரணவத்தை ஜபித்துக்கொண்டுஞ் சிவத்தியானத்துடனிருக்குஞ் சிஷனை, மண்டலத்தின் மேற்றுவாரத்திலாவது தக்ஷிணதுவாரத்திலாவது தருப்பாசனத்தில் வடக்குநோக்கி உட்காரச் செய்து, குருவானவன் கீழ்த்திசைநோக்கி நின்றுகொண்டு, அஞ்சலியஸ்தனாயிருக்குஞ் சிஷன்மேல் ஜலத்தைப் புரோக்ஷித்து, அவன் சிரசில் அஸ்திரமுத்திரையைக்காட்டி, * புஷ்பத்தாலடித்து, புனிதமான பட்டுவஸ்திரத்தால் அவனுடைய இருவிழிகளையு மறைத்துக்கட்டி, மேல்வாயிலால் அவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் அம்மண்டலத்தை மும்முறை பிரதக்ஷிணஞ்செய்வித்து, சுவர்ண புஷ்பாஞ்சலியைச் சிவகும்பத்தின் அடியிற் சமர்ப்பிக்கச்செய்து, கிழக்கு அல்லது வடக்குமுகமாக நமஸ்காரஞ் செய்வித்து, தான் மூலமந்திரத்தால் அவன் சிரசில் ஜலம் புரோக்ஷித்து, முற்கூறியபடி அஸ்திரமந்திர முச்சரித்து மலராலடித்து அவனுடைய கண்ணிற் கட்டிய ஆடையை யவிழ்த்துவிடவேண்டும்.

அதன்பின்னர்ச் சிஷனானவன் அம்மண்டலத்திடையிலுள்ள சிவபெருமானை நமஸ்கரிக்கவேண்டியது. ஆசிரியன் அப்பொழுது மண்டலத்தின் தென்பக்கலில் சிஷனைத்தன்வாமபாகத்தில் தர்ப்பாசனத்திலிருக்கச்செய்து, சிவபூசைசெய்து மங்களகரமான சிவதேஜோரூபமான சிவஹஸ்தத்தை அவன் சிரமிசை வைத்து, சிவமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, அவனுடைய பாவங்களெல்லா மகலும்படி அவனுடலைத் தடவவேண்டியது. சிஷ்யன் அதன்பின்னர் சிவரூபியான குருவுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்யவேண்டியது. சிவாக்கினியில் அவி முதலியவற்றைச் சொரிந்து சிவபிரானைப் பூசைசெய்து மூன்று ஓமங்கள்செய்து, முன்போலவே சிஷனை யிடப்புறத்தமர்த்தி, தர்ப்பைமுனையால் தன்னுடலைத்தொடுவித்து, † நாடிசந்தானஞ் செய்யவேண்டியது. சிவசாஸ்திரத்திற் கூறிய

* இதனை "நறுமலர் தூவி" எனத் தமிழ் வாயுசங்கிதையும், "புஷ்பக்ஷேபேண ஸந்தாட்யா" என வடநூலுங் கூறும்.

† நாடிசந்தானமாவது ஆத்ம சமரசபாவஞ் செய்யும்பொருட்டு ஆசிரியன் சிடனுக்குந் தனக்கும் தர்ப்பையினாலே சம்பந்தமுண்டாக்கல்.

முறையாகத் தன்னுடைய ஆன்மாவைச் சீஷனுடைய தேகத்திற் புகுத்திச் சிவமந்திரங்களால் தர்ப்பணஞ்செய்து, மூலமந்திரத்தினுற் பத்து ஓமங்கள் செய்து, அங்கதேவதைகளுக்கும் பிரீதியுண்டாக அவரவர்கட்குரிய மந்திரங்களால் ஓமஞ்செய்து, பிராயச்சித்தங்களுஞ்செய்து, மூலமந்திரத்தாற் பத்து ஓமங்கள் செய்து, சிவபெருமானைப் பூஜைசெய்து நமஸ்கரித்துப் பூர்ணாகுதிசெய்துமுடித்து, சீஷன் வைசியனாயின் அவனை க்ஷத்திரியனாகவும், பின்னர் பிராமணனாகவும் பின்னர் உருத்திரனாகவுஞ் செய்ய வேண்டியது. சீஷன் க்ஷத்திரியனாயின் அவனைப் பிராமணனாக்கிப் பின் உருத்திரனாக்கவேண்டும். பிராமணனாயின் அவனை உருத்திரனாக்கவேண்டும். சிவகும்பத்திலுள்ள ஜலத்தினால் அவன் சிரமிசை புரோக்ஷணஞ் செய்து மலராலடித்து, முன் சீஷனுடலிற் புகுத்திய ஆன்மாவைத் துன்பு செய்யும் அவனுடைய பாவங்களை யகற்றி, அவனுடைய ஆன்மாவையுந் தன்னுடைய ஆன்மாவையும் வாங்கித் தன்னுடலிற் புகுத்தி, அவனுடைய ஆன்மாவைப் புனிதமாக்கி, பின்னர் அவனுடைய ஆன்மாவை அவனுடைய உடலிலே புகுத்தவேண்டும். அந்தச் சீஷனைக் கரத்திற் பிடித்துக் கொண்டு உருத்திரனாகப்பாவித்துப் புதிதாக உபவீதந்தரித்து மூன்று ஓமங்கள் செய்து பூர்ணாகுதி செய்து தன் இடப்புறத்தில் அவனைத் தர்ப்பாசனத்தில் வடக்குநோக்கிக் கைகட்டிக்கொண்டு சுவஸ்திகாசனமாக விருக்கச்செய்து, தானும் வடக்குநோக்கி உயர்வான தர்ப்பாசனத்திலிருந்து, மங்களவாத்தியங்களொலிக்கவும், மந்திரங்கள்முழங்கவும், பிரதான கும்பமாகிய சிவகும்ப முதலாகவுள்ள கும்பங்களில் நிறைத்துள்ள நீரால் அவனை அபிஷேகிக்கவேண்டும்.

சீஷன் அதன்பின்னர் உடலைத்துடைத்துக்கொண்டு வேறு ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு, திருவெண்ணீறணிந்து ஆசமனஞ்செய்து அலங்கரித்துக்கொண்டு கைகளைக் கட்டிக்கொண்டு மண்டபத்திற் பிரவேசித்து, ஆசிரியனுடைய இடப்புறத்திருந்து சிவபூசைசெய்து கரநியாசஞ் செய்துகொண்டபிறகு, ஆசிரியன் சிவத்தியானத்துடன் திருநீற்றை யெடுத்து, நீ சிவனாயினையென்று அவனுடலிற்பூசி, சோஷண தஹன ப்லாவனங்களைச்செய்து மாதுருகாநியாஸமார்க்கமாகச் சகளீகரணஞ்செய்து அவனுடைய சிரசின்பேரிற் சிவபெருமானை யாவாஹனஞ்செய்து சிவனாகவே தியானித்துப் பூஜைசெய்து கையேற்று எதிரே நின்று, எம்பெருமானே! தேவரீர் எக்காலமும் இவனிடத்தில் இடைவிடா தெழுந்தருளி யிருக்க வேண்டுமென்று பலமுறை பிரார்த்தித்து, சிவதேஜஸோடு பிரகாசித்துக் கொண்டிருக்குஞ் சீஷனுடைய வலச்செவியிற் சிவமந்திரத்தை யுபதேசிக்கவேண்டும். சீஷனும் அப்பொழுது கைகட்டி வாய்பொத்தி அதைப் பெற்றுக்கொண்டு அதனை யுணர்ந்துகொண்டு ஆசிரியனைச் சாஷ்டாங்கமாகப்பணிந்து நிற்கவேண்டும். அப்பொழுது ஆசிரியன் சக்திமந்திரத்தை யவனுக்குபதேசித்து, அம்மந்திரார்த்தத்தையும், சிவஸ்வரூபத்தையும்

உணர்த்தி யோகத்தையும் ஆசனத்தையும் போதிக்கவேண்டும். பிறகு குரு கட்டளையாற் சிஷனனவன் சிவாக்கினி குரு இவ்விருவர் சந்நிதியிற் பக்தியாற் குரு தனக்குக் கூறியவற்றையெல்லாஞ் செய்து தீக்ஷாவாக்கியத்தைச் சொல்லவேண்டியது. அஃதென்னெனில், என் பிராணனொழியினும், சிரமிழப்பினும், சிவபூஜை செய்யாமல் யான் புசிக்கமாட்டேன் என்பது. இவ்வாறுகூறி அதுமுதல் தன் புத்தி தனக்குச் சுவாதீனமாகவுள்ள வரையில், 'சிவபக்தி பூரணனுக்ச் சிவபூஜையை முறைப்படி செய்யவேண்டியது. இவ்வகையாகக் குரு கடாக்ஷத்தாற் சமயதீக்ஷை செய்யப்பெற்ற பின், சிஷனுக்குச் சிவமந்திரத்தால் அபிமந்திரித்த உருத்திராக்ஷமும் விபூதியும்,சிவவிக்கிரகமும் சிவலிங்கமும் பூஜை ஹோமம் ஜபம் தியானம் இவற்றிற்குச் சாதனமான மந்திரங்களுங் கொடுக்கவேண்டியது. சிஷன் அந்தச் சிவாசாரியனிடம் இவற்றைப் பெற்றுக்கொண்டு சிரமிசை வைத்துக்கொண்டு சிவாலயத்திலாவது திருமடத்திலாவது தன் கிருகத்திலாவது அவற்றைக் காப்பாற்றிக்கொண்டு சிவபூஜை செய்துவரவேண்டியது. பக்தி சிரத்தை புத்தி முதலியவற்றிற்கேற்ப ஆசிரியனுற் கூறப்பட்ட சிவாசாரங்களை மாணுக்கன் தவருமல், அதுபோல நடந்துகொள்ளவேண்டியது. சிவாகமத்தைக் கிரகித்தல் அவற்றை வாசித்தல் சிரவணஞ்செய்தல் இவை யாவும் ஆசாரியனுடைய கட்டளையின்றிச் செய்யக்கூடாதன. யாவும் ஆசிரியன் கட்டளைப்படியே செய்யத்தகும். சிவசமயதீக்ஷையைச் சங்கிரகமாகச் சொன்னேனென்று உபமந்யுமுநிவர் கூறியருளினர்.

சிவசமயதீக்ஷாவிதியுரைத்தது

முற்றிற்று.

பதினைந்தாவது

விசேஷ தீக்ஷாவிதியுரைத்த அத்தியாயம்.

உபமந்யுமுநிவர் சொல்லுகின்ருர்: குருவானவன் சிஷனுடைய யோக்கியதையை நன்ருகச் சோதித்து, பந்தநீக்கத்திற்காகச் சடத்துவ சுத்தியைச் செய்யக்கடவன். அத்துவாக்கள் கலை - தத்துவம்-புவனம்-வர்ணம்-பதம்-மந்திரமென அறுவகைத்து. அவையே ஷடத்துவாக்களெனப்படும். அவற்றுள் நிவ்ருத்தி பிரதிஷ்டை வித்யை சாந்தி சாந்தியதீதை என்னும் ஐந்தும் கலாத்துவாக்களாகும். அந்தக் கலாத்துவாவினுலேயே ஐயைந்து வகையாக, ஐந்து அத்துவாக்களு முண்டாகின்றன. அவை யெப்படியெனில், சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவம் வரையிலுள்ள *தத்துவங்கள் சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தமாய், அவை யாவும் தத்துவாத்துவாவாகும். ஆதாரமுதல் உன்மனியிறுதியாகவுள்ள அறுபது புவனங்களும் புவனத்துவாவாகும். ஐம்பது உருத்திரர்களின் வடிவாக விளங்கும்

* தத்துவங்கள் ~~இருபத்தைந்தென~~ வடநூலும், முப்பத்தாறெனத் தமிழ்நூலுங் கூறும்.

ஐப்பதெழுத்துக்களும் வர்ணாத்துவாவாகும். அநேக பேதங்களுடன் கூடிய எண்பத்தொருவகைப்பட்ட பதசமூகங்கள் பதாத்துவாவாகும். மந்திரங்களும் உபமந்திரங்களுமாகியவற்றிற்கு அங்கமாகி விளங்கும் மந்திராத்துவாவானது ஐந்து பதங்களாக விளங்கும். அதுவே பஞ்சாக்ஷர மகாமந்திரம். மந்திராத்துவாவில் மந்திரநாயகமாகவுள்ள பஞ்சாக்ஷரத்தைச் சத்தகோடி மகாமந்திரங்களில் ஒன்றாகக் கருதப்படாது. ஏனெனில் இப்பஞ்சாக்ஷரமந்திரத்தாலேயே அவையாவும் நிறைக்கப்படுதலின் அவற்றோடொப்ப நோக்குந் தன்மையுடையதா? எல்லாத்தேவர்கட்கும் ஈசனே யிறைவனாவான்போல, பஞ்சாக்ஷர மூலமந்திரமே எல்லா மந்திரங்கட்குந் தலைமையாயிருக்கும். கலாத்துவாவானது பிற ஐந்தத்துவாக்களையும் நிறையச்செய்யும். ஏனைய ஐந்தும் வியாப்பியங்கள். இவ்விவரத்தையறியாத ஆசாரியன் தன்மாணவனுக்கு அத்துவசுத்தி செய்வதற்கு அருகனாகமாட்டான். இந்த ஷடத்துவாக்களின் வியாப்பிய வியாபக லக்ஷணங்களை யுணராதவன் பிரயோசனமற்றவனாவான். ஆதலின் இவற்றை நன்கு ஆராய்ந்து அத்துவசுத்தியைச் செய்யவேண்டியது. அத்துவசோதனைக்காக மேற்கூறிய சமயதீக்ஷாவகையே குண்டமண்டலாதிகள் செய்யவேண்டியது. எப்படியென்றால், பிரதான மண்டலத்தின் கிழ்ப்புறத்தில் இரண்டு அஸ்த பரிமாணமாக மண்டலஞ்செய்து, ஆசிரியன் ஸ்நானஞ்செய்து நித்தியாநுஷ்டானத்தை முடித்து, சிஷனுடன் கூடி முதலாவதான மண்டலத்திற் புகுந்து சமயதீக்ஷையிற் சொல்லியபடியே சிவபூஜையைச் செய்யவேண்டியது. ௯௨-படிகொண்ட ஆடகத்திற்கதிகமான அரிசியாற் பாற்சாதஞ்சமைத்து அதிற் பாதியைச் சிவபிரானுக்குநிவேதித்து மற்றப்பாதியை ஓமத்திற்காக நிறுத்தி, முற்பட்டுச்செய்துள்ள மண்டலத்தில் நானாவித அலங்காரங்களைச்செய்து ஐந்து கலசங்களைப் பஞ்சாக்ஷர மூலமந்திரத்தில் விந்துநாதங்களுடன்கூடிய ஐந்தெழுத்துக்களாகிய நம் மம் சிம் வாம் யம் என்பனவற்றால், பஞ்சப்பிரமங்களை யாவாகனஞ்செய்யவேண்டியது. ஈசான கும்பம் நடுவிலும், தற்புருஷ கும்பம் கிழக்கிலும், அகோர கும்பம் தெற்கிலும், வாமதேவ கும்பம் வடக்கிலும், சத்தியோஜாதகும்பம் மேற்கிலுமிருக்கவேண்டும். அக்கலசங்களை ரக்ஷணஞ்செய்து முத்திரைகளைக்காட்டி, கும்பங்களை யபிமந்திரித்து, சிவாக்கினியில் ஓமஞ்செய்ய ஆரம்பித்து, முன்னிறுத்திய பாலன்னத்திற் பாதியை அதிற்பெய்து, மிகுதி அன்னத்தை மாணாக்கன் புசிக்க நிறுத்திவைத்து, தர்ப்பணஞ்செய்து, பூர்ணாகுதியை முடித்து, ஓம் ஹூம் நமஶிவாய பட் ஓம் ஹூம் நமஶிவாய ஸ்வாஹா என்னு மந்திரங்களால் மூன்று ஆகுதிகள் செய்து, பிராம்மணகன்னிகை நூற்ற முப்புரிநூலைச் சிஷனுடைய குடுமியின் முடிந்து கால்வரையில் தொங்கவிடவேண்டும். சாந்திமுத்திரையைக் காட்டி மூலமந்திரத்தால் மூன்று ஓமங்கள் செய்து சாந்திமுத்திரையின் சாந்நித்யஞ் சிஷனுக்குக் கற்பித்து, மலர்மாலையாலவனை இதயத்தில் க்ஷேபணஞ்செய்து சிஷனுடைய ஜீவசக்தியைத் தன் துவாதசாந்தத்திலிருத்தி, (அவனுக்குக் கட்டிய கயிற்றில்

அவனுடைய சுழுமுனை நாடியை யாவாகித்து) அஸ்திரம் கவசம் இவற்றி ஞல் அதை யிரட்சித்து, பின்னர் அந்தச் சூத்திரத்தைச் சுற்றிச் சிஷ்ய தேகத்தை யாலோசிக்கவேண்டியது. எப்படியென்ருல், போகம் போக் கியம் போக்தாவென்பதை லக்ஷணமாகவுடைய ஜாதி ஆயுர் போகரூப மான மும்மலங்களையும், ஆகாயமுதலிய ஐம்பூதங்களின் வடிவாகி விளங் கும் சாந்தியை முதலாக வுடையாக ஐந்து கலைகளையுங் கருதி, ரேமாந்த மாக அந்தச் சூத்திரத்தில் ஆவாகனஞ்செய்து பூஜிக்கவேண்டியது. அப் படி யல்லாதபக்ஷத்தில், தத்துவத்தை மும்மலங்களடையும் வகையையும் மும்மலங்களைக் கலைகள் வியாபிக்கும் வகையையுங் கருதி ஓமஞ்செய்து கலைகளைப் பிரகாசிக்கச்செய்து சிஷனுடைய குடுமியில் முடிந்த கயிற்றிற் சிவமந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு சாந்திபதிதையிலிருப்பதாகத் தியா னஞ்செய்து, இவ்வகையாகச் சாந்தியதிதைமுதல் நிவிருத்திவரையில் ஒவ் வொன்றுக்கு முடித்து மூன்று ஓமங்கள் செய்து நான்கு பூதங்கட்கும் இவ்வாறே செய்யவேண்டும். பிறகு மூன்று ஓமங்கள் செய்து மண்டலத் தின்மேல சிவபெருமானைப் பூசைசெய்து, மண்டலத்தின் தென்பக்கலில் தர்ப் பாசனத்தில் வடதிசை நோக்கி யிருக்கும்படி சிஷனை யமர்த்தி, முன்னி ருத்திவைத்த சேடமாகிய பாலன்னத்தைச் சிஷன் புசிக்கும்படி கொடுக்க வேண்டும். சிஷன் தனக்குக் குரு கொடுத்த பாற்சோற்றைச் சிவமந்தி ரோச்சாரணத்துடன் புசித்து இருமுறை ஆசமனஞ்செய்து சிவமந்திர ஜபஞ்செய்யக்கடவன். இவ்வகையாகவே குருவானவன் இரண்டாமண்ட லத்திலுஞ் செய்து பஞ்சகவ்வியத்தைக் கொடுக்கவேண்டும். சிஷன் அத னையும் பருகி ஆசமனஞ்செய்து முடித்தபின்னர், குருவானவன் அவனைக் கொண்டு மற்றொரு மண்டலத்தை யடைந்து பன்னிரண்டங்குல நீளமும் ஒரு சிறுவிரலளவு கனமுமுள்ள ஓர் தந்த காஷ்டத்தைக்கொடுக்க, சிஷன் அதனைக்கொண்டு கிழக்கு அல்லது வடக்கு நோக்கி யிருந்து பிறரொடு வார்த்தைசொல்லாது பற்களை விளக்கி, அக்கொம்பினை நீராற் கழுவி யெ றிந்து, ஆசமனஞ்செய்து சிவத்தியானஞ்செய்துகொண்டிருந்து, குருவின் கட்டளைபெற்றுச் சிவமண்டலத்திற் கைகட்டிக்கொண்டு பிரவேசித்தபிறகு, அவன் எறிந்த பற்குச்சின் முனை கிழக்கு வடக்கு மேற்கு நோக்கி விழ்ந் திருப்பின் நலமென்று கொள்க. தெற்குநோக்கி விழின் தீதென்று கொ ண்டு ஆசிரியன் நூறு ஆகுதிகள் செய்து அவனைப் பற்றிக்கொண்டு அவன் செவியிற் சிவமந்திரமோதவேண்டும்.

அதன்பின்னர் சிவபெருமானுக்குத் தென்பக்கலில் தர்ப்பை யைப் பரப்பி அதன்மேலே புதிய வஸ்திரம் விரித்து அதன்மேல் அச் சிடனை அன்றிரவு படுக்கச்செய்து புதியவஸ்திரத்தாலவனை மூடி, அவனைச் சூழத் திருநீற்றால் மூன்றிரேகைகள் வரிந்து, அஸ்திர மந்திர ஜபஞ்செய்த எள் கடுகு இவற்றால் அஷ்டதிக்குப்பாலர்களுக்குப் பலியிடவேண்டும். அவ்வாறு துயின்ற சிஷன் தான் கண்ட சொப்பனத்தை ஆசிரியனுக்கு

உரைக்கவேண்டும். பின்னர் பிராதக்காலத்தில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களை முடித்து ஆசிரியன் கட்டளைபெற்று, கைகட்டிக்கொண்டு மண்டலத்தருகே வரவேண்டும். ஆசிரியன் வெண்பட்டினாற் சிஷ்னுடைய கண்களைக்கட்டி அவன் கையில் மலர்களைக்கொடுத்து அவற்றை மண்டலத்தில் இடச்சொல்லவேண்டும். அவன் சொரிந்த மலர்கள் எந்தமுகத்தில் விழுந்தனவோ அந்த முகத்தின் பெயரை அவனுக்கு இடவேண்டும். அங்குள்ள நிர்மாலியங்களை யப்புறப்படுத்திச் சிவபிரானைப் பூஜைசெய்து சிவாக்கினியில் ஓமஞ்செய்யவேண்டியது. சிஷனுக்குத் துஷ்டசொப்பன முண்டாயிருந்தால் அந்தத்தோஷம் சாந்தியாகு நிமித்தமாக மூலமந்திரத்தால் நூறு அல்லது ஐம்பது அல்லது இருபத்தைந்து ஆகுதிகள் செய்யவேண்டியது. அவன் சிகையிற்கட்டிய கயிற்றை முன்போலத் தொங்கவிடுத்து, நிவிர்த்தி கலையை யாசிரயித்த ஆசாரபூசை முதலாக வாகிசுவரி பூசைவரையிற் கிரியைகளை ஓமங்களுடன் முடித்து, வாகிசுவரியைப் பணிந்து நமஸ்கரித்து மண்டலத்திற் சிவபிரானைப் பூசைசெய்து மூன்று ஓமங்கள் செய்து, சிஷ்யனுடைய சூத்திரதேகத்திற் புஷ்பதாடனமும் மந்திரோதக புரோக்ஷணமும் செய்து அவனுடைய ஆத்துமாவை வாங்கித் துவாதசாந்தத்தில் வைத்துச் சிவமூலமந்திரத்தால் அதை வாங்கிப் பிரவேச முத்திரையாற் குருவானவன் பதினான்கு யோனிகளிலுஞ் சிஷனைப் பிரவேசிக்செய்து, பின்வாகீசுவரியினிடத்திற் பிரவேசிக்கச்செய்து, கர்ப்பத்தினின்றும் வெளியே வருவதற்காகச் சிவபூஜையும் சிவநமஸ்காரமுஞ்செய்து ஓமஞ்செய்து, சிசு வெளிவருஞ்சமயமாகக்கருதி, கர்ப்போற்பத்தியாகிக் கர்மங்களைச்செய்வதாகவும் புத்தியடைந்ததாகவும், சுகத்தை யநுபவிப்பதாகவும் எல்லா விஷயத்திலும் விருப்புற்றதாகவும் நினைத்து, ஜாதி ஆயுர் போகமென்னுமிவற்றின் சித்திக்காக மூன்று ஓமங்கள்செய்து தேவனைப் பிரார்த்திக்கவேண்டும். பின் சிஷனை விஷயங்களிற் செல்லவொட்டாமற் செய்து ஜாதியாதி பாசத்திரயங்களைச் சேதிக்கவேண்டும். நிவிருத்தி கலையாற் கட்டப்பட்ட பாசச்சேதனத்தைச்செய்து சிஷ்யனுடைய ஆத்துமா பரிசுத்தமானதாக நினைத்துப் பூர்ணாகுதி செய்யவேண்டியது.

முநிவனே! பிரமனைப்பூஜித்து மூன்று ஓமங்கள்செய்து, பிரமதேவனே! சிவசம்பந்தமான ஸ்தானத்தையடையும் இந்தத் தீக்ஷாபரனான சிஷனுக்கு நீயொன்றுந் தடைசெய்யப்படாது. இவ்வகையாக மேம்பட்ட சிவாக்கினையுள்ளது என்று கூறிப் பிரமனைப் பூசித்து விட்டுவிடவேண்டியது. மீண்டும் சிவபிரானைப் பூசித்து மூன்று ஆகுதிகள் செய்து நிவிருத்தியாற் பரிசுத்தமான சிஷனுடைய ஆத்மாவைச் சூத்திரதேகத்திற் பிரவேசிக்கச்செய்து மீண்டும் வாகீசுவரியைப் பூசித்து, மூன்று ஓமங்கள் செய்து சிவபெருமானை நமஸ்கரித்து வாகீசுவரியை விசர்ஜனஞ்செய்ய வேண்டியது. பிரதிஷ்டை நிவிருத்திகளை யாவாகனஞ்செய்து பூசித்து மூன்று ஆகுதிகள் செய்து சிஷனுடைய ஆத்மா யதாஸ்தானத்தி லிருப்பதாகப்பாவித்து மீண்டும் பிரதிஷ்டையை யாவாகனஞ்செய்து முன்போல

மூன்று ஆகுதிகள் செய்து நமஸ்கரித்து அதை விட்டுவிடவேண்டியது. பிரதிஷ்டையின் வியாத்தியைத் தியானித்துப் பூசைசெய்து மூன்று ஆகுதிகள் முடித்து, பூர்ணசந்திரன்போல விளங்கும் வாகீசுவரியைப் பூசித்து, கிரியைகளை முடித்து விஷ்ணுவைப் பூஜைசெய்து அவனுக்குச் சிவாக்கினையை யுணர்த்தி மூன்று ஆகுதிகள் செய்து விஷ்ணுவை விசர்ஜனஞ் செய்ய வேண்டியது. பிரதிஷ்டாகலையை வித்தியாகலையுடன் கூட்டி முன்போலக் கிரியைகளைச்செய்து வித்தியாகலையின் வியாத்தியையுணர்ந்து அக்கினி போலப் பிரகாசிக்கும் வாகீசுவரியைப்பூஜித்துத் துதிசெய்து நீலருத்திரனைப் பூஜைசெய்து மலர்களானருச்சித்து அவனுக்குச் சிவாக்கினையை யுணர்த்தி மூன்று ஆகுதிகள்செய்து நீலருத்திரனை விசர்ஜனஞ்செய்ய வேண்டியது. வித்தியாகலையைச் சாந்திகலையுடன் கூட்டிச் சாந்திகலா வியாத்தியைத்தியானித்து, சூரியனைப்போலப் பிரகாசிக்குந் திருமேனியையுடைய வாகீசுவரியைப்பூஜைசெய்து, பிறகருமங்களை முற்கூறியது போல முடித்து மகேசுவரனுடைய பாதங்களை மலர்தூவி யர்ச்சித்து அவனுக்குச் சிவாக்கினையையுணர்த்தி மூன்று ஆகுதிகள்செய்து மகேசுவரனை விசர்ஜனஞ்செய்யவேண்டியது. சாந்திகலையையும் சாந்தியதீதகலையையுங் கூட்டி அதீதசாந்திகலா வியாப்தியை மனதிற்றியானித்து ஆகாயநிறமாகப் பொருந்திய வாகீசுவரியைப் பூசைசெய்து முற்கூறியதுபோலப் பிறகருமங்களையு முடித்து, சதாசிவனைப் பூஜையெய்து சிவாக்கினையைக் கூறி மூன்று ஆகுதிகள்செய்து சதாசிவனை விசர்ஜனஞ் செய்யவேண்டியது. பிறகருமங்களையும் முறைப்படிசெய்து மலர்களானருச்சித்துச் சாஷ்டாங்கமாகப் பணிந்து வாகீசுவரியையும் விசர்ஜனஞ்செய்து, கும்பஜலத்தைச் சீஷனுடைய சிரசின்பேரிற் புரோக்ஷித்து, உயர்ந்துள்ள சாந்தியதீதையை வியாபரித்துநிற்குஞ் சத்தி தத்துவத்தில் அம்மாணுக்கள் ஒடுங்கினதாக நினைக்கவேண்டும்.

அத்துவாக்களுக்கெல்லாம் மேம்பட்டு இருளொழித்துப் பிரகாசிக்குஞ் சூரியர் கோடியருதயமானாற்போல விளங்குஞ் சிவசக்தியைத் தியானஞ்செய்து சுத்த ஸ்படிகமயமாக விளங்குஞ் சீஷனுடைய ஆத்மாவை அந்தச் சத்திபதத்திற்கு மேம்பட்டுச் சென்றதென்று பாவித்து, முன் அவன்குடுமியிற் கட்டியுள்ள கயிற்றைக் குடுமியுடன் சூரியாலறுத்துப் பசுவின்சாணத்தில்வைத்து ஜ்வலித்துக்கொண்டிருக்குஞ் சிவாக்கினியில்வைத்துச்சுட்டு, முன்வாங்கிய சீஷனுடைய ஆன்மாவை அவனுடலிற் புகுத்தி, அவன் ஸ்நானஞ்செய்து வந்தபிறகு மண்டலத்தைப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்வித்து, தானும் சிவபெருமானைப்பணிந்து, சுவாமீ! இதுகாறுஞ்செய்த மந்திரம் ஓமம் ஜபமுதலியவற்றில் என்னையறியாமற் 'குறைபாடுகள் நேர்ந்திருப்பினும்' அவற்றை க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து ஓமஞ்செய்து நூறு ஆகுதிகள்கொடுத்து, சிவபெருமானையும் பார்வதிதேவியையும் பூஜைசெய்து மீண்டும் ஓமஞ்செய்து பணிந்து

கைகட்டிநின்று, சங்கரா! இவனுக்கு அத்துவசுத்தி செய்தேன். இவனை உன்திருவடியில் வசிக்கும்படி அருள்புரிகவென்று பிரார்த்தித்து, அவனுடலில் நாடிசந்தானஞ்செய்து ஓமஞ்செய்து பூதசுத்தியை விதிப்படி செய்யவேண்டும். பூதாதிபதிகளைப் பூதங்களுடன் அவற்றின் பிணிப்பொழியப் புறத்தே செலுத்தி, சீஷனுடைய ஆன்மாவைச் சிவபெருமானிடத்திற் செலுத்தி, அவனுடம்பைச் சோஷண தஹன பிலாவனங்கள் செய்து, சிவபெருமானிடத்துவைத்த அவனுடைய ஆத்துமாவைவாங்கி அவனுடைய தேகத்திற் பிரவேசிக்கச்செய்யவேண்டும். அவ்வாறு ஆன்மாவை அவனுடலிற் பிரவேசிக்கச்செய்த பிறகு அவனைச் சுத்தவத்துவாவின் சொரூபமாகக்கருதி, சாந்தியதீதகலையைச் சிரசிலும், சாந்திகலையை முகத்திலும், வித்தியாகலையைக் கழுத்திலிருந்து உந்திவரையிலும், பிரதிஷ்டாகலையை உந்தியினின்று முழங்கால்வரையிலும், நிவ்ருத்திகலையை முழங்காலினின்று பாதம் வரையிலும் நியாசஞ்செய்து, மூலமந்திரத்தால் ஷடங்கநியாசஞ் செய்யவேண்டும்.

அவ்வாறு செய்தபின்னர், சீஷனைச் சிவனாகக்கருதி அவனுடைய ஞானமயமான இதய கமலத்தின் கர்ணிகையில் உமாமகேசுவரரை மலர்களாலருச்சித்து, இவனிடத்தினின்று பிரியாது எழுந்தருளியிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, பிறகு அணிமாதிகுணங்களை அவனுக்குக் கொடுத்து, ஒவ்வொருகுணங்களுக்கும் மும்மூன்று ஆகுதிகள் செய்யவேண்டும். பின்னர் சர்வஞ்ஞம் நித்தியதிருப்தி அநாதியறிவு குறைவிலாற்றல் தன்வயமாதல் எல்லையில்லாத ஆற்றல் ஆகிய விவற்றை யவனுக்குக் கொடுக்கவேண்டும். சத்தியோஜாதமுதலிய ஐந்து குடங்களில் நீரைநிரப்பிச் சிவபெருமானைப் பூஜைசெய்து பிரணவபூர்வமாகச் சக்திமந்திரஞ் சிவமந்திரம் இவற்றைஜபித்து ருஷி சந்தசு தெய்வம் கடவுள் உமை உருவம் ஆவரணம் இவற்றுடன் சிவபெருமானைப் பூசைசெய்து ஆசனங்களினியற்கையை நன்றாகவுணர்த்திச் சிவபெருமானை யிருவருமாகப் பூசைசெய்து, அடியேன்செய்த கருமங்களையெல்லாம் அங்கீகரித்துக்கொள்க வென்று பிரார்த்திக்கச்செய்து தானும் சீஷனுடன் சாஷ்டாங்கமாகப் பணிந்து சிவாக்கினியையும் சிவபெருமானையும் மண்டலத்தினின்று விசர்ஜனஞ் செய்ய வேண்டியது. அப்பொழுது சீஷன் ஆசிரியனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து என்பிறவிகளெல்லாம் புனிதமாகுக. இனிப் பிறவியொழிக. எனக்குச் சிவகடாக்ஷம் உண்டாகுகவென்று பிரார்த்தித்துச் சிவபெருமானைப் பணிந்து தன்கருமங்களைச் செய்யவேண்டியது. தன் பாசபந்தங்களை யொழித்த ஆசிரியனுக்குப் பொன் பொருள் ஆடை முதலியவற்றைக் குறைவின்றித் தன் சக்திக்கேற்பக் கொடுக்கவேண்டியது என்று உபமந்யுமுநிவர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறினர்.

விசேஷதீக்ஷாவிதியுரைத்தது
முற்றிற்று.

பதினொருவது
ஸாதக தீக்ஷாவிதியுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முநிவர் சொல்லுகின்றார்: கிருஷ்ணா! ஸாதக தீக்ஷா விதியைச் சொல்லுகின்றேன். மந்திர மஹாத்மியத்தைக் கூறியவிடத்து ஸாதகதீக்ஷா விவரணஞ் சொல்ல ஆரம்பித்து முடித்திலேன். அதனை யிப்பொழுது கேட்பாயாக. முன்போற் குண்டமண்டலங்களைச்செய்து பூரண கும்பம் வைத்து மண்டலத்தினடுவே சிவபிரானைப் பூசைசெய்து ஓமமுடித்து, சிஷனை மண்டலத்தின் சமீபத்திற் கொண்டுவந்து மீண்டும் நூறு ஓமஞ்செய்து பத்துத் தர்ப்பணஞ்செய்து கும்பத்தாலபிஷேகித்து, சலத்தைக் கையிற்கொண்டு மந்திரோபதேசஞ் செய்யவேண்டியது. சாங்கோபாங்கமாக மூலமந்திரத்தைத் தெளிவித்து, மலர்களோடு கூடிய நீரை அவன் கையிற்பெய்து இவ்வித்தையை யுனக்குக்கொடுத்தேன். இம்மந்திரம் சகலசித்தியுங்கொடுக்குமாக என்று கூறவேண்டியது. குருவானவன் சிவனுடைய ஆக்கினையை யடைந்து மந்திர சாதன விநியோகங்களைச் சிஷ்யனுக்குபதேசிக்கவேண்டும். (குருவாற் கூறப்பட்ட விஷயங்களைச் சிஷன் நன்றாகத் தெரிந்துகொண்டு குருவின் சந்நிதியில் மூலமந்திர சாதனமும் ஜபித்தல் முறையும் தெரிந்துகொண்டு நாடோறும் அவ்வண்ணம் செய்து வரவேண்டியது.) நல்ல தினத்தில் தோஷரகிதமான சுபமுகூர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து புனிதமான வஸ்திரமணிந்து நித்தியகடனை முடித்து, கந்தபுஷ்பாதிகளா லலங்கரித்துக்கொண்டு திருவெண்ணீறணிந்து வெண்ணிறமான கோலத்துடன் சிவாலயத்திலாவது மனோகரமான விடத்திலாவது சுகாசனத்திலிருந்து சிவசாஸ்திரத்தால் தன் சரீரத்தைச் சிவசரீரமாக்கி * லகுளேசுவரரைப்பூசித்து, பாலன்ன நிவேதித்து, பூசையை முடித்து அவரை நமஸ்கரித்து அவருடைய அநுக்கிரகத்தை யடைந்து, கோடி, ஐம்பதுலக்ஷம், இருபத்தைந்துலக்ஷம், இருபதிலக்ஷம், பத்திலக்ஷமாவது சக்திக்கேற்ப ஜபிக்கவேண்டியது. அஹிம்ஸை க்ஷமை சாந்தி அடக்கம் இவை நியதியாகக்கொண்டு, காரம் உப்புக்களைநீக்கி மிதமாகப் பாற்சோற்றை ஒருவேளை புசித்துக்கொண்டு, பாற்சோறுங் கிடைக்காவிடின் பழம் கிழங்கு காய் இவற்றை மிதமாகப் புசித்துக்கொண்டு ஜபிக்கவேண்டியது. பால் தயிர் நெய் பலகாரம் முதலியவற்றையும் புசிக்கலாம். எதைப் புசிக்கினுஞ் சிவப்பிரீதி செய்து புசிக்கவேண்டும். ஆகாரவிஷயத்தைக் குறைப்பது விசேஷம்; ஜபத்தை அதிகமாக்குவது விசேஷம் ஆகாரஞ் செய்கையில் மௌன விரதத்தைக்கொண்டு ஆயிரத்தெட்டு மந்திர ஜபஞ் செய்யவேண்டும். புண்ணியதீர்த்தத்தில் ஹர ஹரவென்று சிவநாமங்களை எண்ணூறுமுறை ஜபித்து ஸ்நானஞ்செய்து, பஸ்மஸ்நானஞ்செய்து, விபூதி உருத்திராக்ஷகண்டிகை யணிந்து விரலிற்பவித்திரந்தொடுத்து, திரிபுண்டரமணிந்து மார்ஜனம் [சிரமிசைத் தெளித்துக்கொள்ளல்] செய்து, தர்ப்ப

* இது நகுளேசுவரரென வடநூல் கூறும்.

ணஞ்செய்து, ஏழுவகை அல்லது ஐந்து அல்லது மூன்று அல்லது நெய் இவற்றால் ஓமஞ்செய்து, இவ்வகையாகப்பக்திகொண்டு சாதகனைசிஷன் செய்துவரவேண்டியது. இவ்வாறு செய்வோனுக்குப் பூலோகத்தில் அரிய பொருள் ஒன்றுமில்லை. அல்லது நாடோறும் ஏகமனமுடையவனாய் எத் தொழிலைச் செய்தாலும் ஜபத்திலேயே மனதைச் செலுத்தவேண்டும். ஆயிரஞ் சபமாவது செய்துமுடித்தே போஜனஞ்செய்யவேண்டும். அப்ப டிப்பட்டவனுக்குத் துர்லபமானது ஒன்றுமிராது. அசுபங்கள் வரமாட்டா. இவ்வுலகில் வித்தை சம்பத்து சவுக்கியம் இவற்றை யடைந்து அவ்வுலகிற் சிவசாயுச்சியத்தை யடைவான்.

ஸாதக தீக்ஷாவிதியுரைத்தது
முற்றிற்று.

பதினேழாவது
ஆசாரியாபிஷேகமுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முனிவர் சொல்லுகின்றார்: இவ்வகையாகப் பாசுபத தீக்ஷையை யடைந்த சிஷனை ஆசாரியாபிஷேகஞ் செய்ய யோக்கியதை யடைந்திருக்கின்றானென்று ஆசிரியன் தெரிந்துகொண்டு ஆசாரியாபி ஷேகஞ் செய்யவேண்டியது. அஃதெங்ஙனமெனில், முற்கூறியபடியே மண்டல முதலியவற்றை நியமித்துச் சிவபிரானைப் பூஜைசெய்து, வேறோர் மண்டலஞ்செய்து புனிதமான ஜலபூரிதமான ஐந்து கும்பங்களை வைக்க வேண்டும். அவ்வைந்தனுள் நிவ்ருத்திக்காகக் கிழக்கிலும், பிரதிஷ்டைக் காக மேற்கிலும், வித்தியைக்காகத் தெற்கிலும், சாந்திக்காக வடக்கிலும், சாந்தியதீதைக்காக நடுவிலும் ஒவ்வொரு கலசங்களாகவைத்து முறையே ஐந்து கலைகளையும் அவ்வைந்திலும் ஆவாகனஞ்செய்து பூஜித்து, தேனு முத்திரையைக்காட்டி, மேற்கூறியபடி ஓமமுதலியவற்றைப் பூரணாகுதி வரையிற் செய்து, சிஷனை மண்டலத்திற் புகுத்தி, தர்ப்பணமுதல் ஓமம் வரையில் யாவுஞ்செய்து சிவபெருமானைப் பூஜித்துச் சிவாநுக்கிரகமடை ந்து அபிஷேகநிமித்தமாகச் சிஷனைப் பீடத்தில் உட்காரச்செய்து, சகளீ கரணம் [பஞ்சகலைகளினியாசம்] செய்து ஐங்கலைகளின் சுரூபமுடையவ னாக்கி, மந்திர நியாசஞ்செய்து, சகல பாவமுமொழிந்த மந்திர மூர்த்தியா கக் கொண்டு, சிவபெருமானுக்கு ஒப்புவிக்கவேண்டும். முன்னமர்த்திய ஐந்து கலசங்களிலுமுள்ள ஜலத்தையெல்லாம் சிவ்பெருமானே அபிஷே கித்ததாகப் பாவித்து அச்சிஷனுக்கு அபிஷேகஞ்செய்து, தன் கரத்தைச் சிவகரமாக அவன் சிரமிசை வைத்துச் சிவாசாரியனுயினையெனக் கூறிச் சிவாசாரியனாக்கி, ஆபரணங்களையணிந்து அன்புடன் சிவபிரானைப்பூஜித்து, பத்து ஓமஞ்செய்து பூர்ணாகுதி முடித்து, மீண்டும் சிவபூஜைசெய்து சாஷ் டாங்கமாகப் பணிந்து சிரமீது கரங்களைக் கூப்பி, சுவாமி! தேவரீருடைய அநுக்கிரகத்தால் இவனை ஆசாரியனாகச்செய்தேன். இவனைத் தேவரீரு

டைய கட்டளையைக் கடவாதவனாகச் செய்துகொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து, சிஷனோடு மீண்டும் சிவபெருமானை நமஸ்கரித்துச் சிவாகமத்தைப் பூஜைசெய்து சிஷனுக்குக் கொடுக்கவேண்டியது. சிஷன் அவ்வாகமத்தை யிருகரங்களாலுமேற்றுப் புஸ்தகபீடத்தில் வைத்து மலர்களாலர்ச்சித்துப் பூஜை செய்யவேண்டியது. அதன்பின்னர் அவனுக்கு யானை குதிரை குடை கொடி முதலிய ராஜவரிசைகளைக் கொடுக்கவேண்டியது. சிவாகமங்களிற் கூறியபடியே சிவபூஜையைக் காலத்திற் செய்க. சிவாகமங்களை நன்றாக வுணர்க. சிவாகமங்களை நன்காராய்ந்த மாணாக்கர்களுக்கே கொடுப்பாயாக. அவ்வகைய வுத்தமனுக்கே பஞ்சாக்ஷர மந்திர முபதேசிக்க. சிவலிங்கப்பிரதிஷ்டை செய்க. சௌசம் - சாந்தி - தயை - கோபமின்மை முதலியவற்றையடைக. உத்தமர்களுக்காகப் பூஜைசெய்க வென்று சிஷனுக்கு ஆசிரியன் கட்டளையிட்ட பிறகு, மண்டலத்திற் சிவபெருமானை யுத்வாசனஞ்செய்து, கும்பம் அக்கினி முதலியவற்றை நீக்கி, ஆங்குள்ள பெரியோர்களைப் பூசைசெய்யவேண்டும்.

தீக்ஷைகள் ஒன்றும் இரண்டும் அல்லது மூன்றும் ஒரேகாலத்துஞ் செய்யலாமென்று நூல்வல்லவர்கள் சொல்லுவார்கள். அவ்வாறு ஒரேகாலத்தில் எல்லாத் தீக்ஷைகளுஞ்செய்ய நேருமாகில், அத்துவாக்களின் சுத்திக்குச்செய்யும் முறையாகவே கலசங்களை வைத்து, சமய தீக்ஷைக்குச் செய்வதுபோலவே கிரியைகளைச்செய்து, சிவபெருமானைப் பூஜித்து ஷடத்துவ சுத்திசெய்து, சிவபிரானை மீண்டும் பூஜித்து, மந்திர முந் தருப்பணமுஞ்செய்து சிவமந்திரத்தை மாணாக்கனுக்குக்கொடுத்துத் தீக்ஷாகருமங்களை முறைப்படி முடிக்கவேண்டும். உலகமுழுவதும் மூன்று தத்துவங்களின் சுரூபமென்று கருதி, அபிஷேகம் வரையிற் செய்து அத்துவசுத்தியை முடிக்கவேண்டும். தத்துவசுத்தி செய்தால் சாந்தியதீக்ஷைமுதலாகச் சொல்லிய கலைகளுக்கு மேற்சொன்னவகையே செய்ய வேண்டும். சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆத்துமதத்துவமென்னு மூன்றனுள், சத்திதத்துவத்தினின்று சிவதத்துவமும், சிவதத்துவத்தினின்று வித்தியாதத்துவமும், வித்தியாதத்துவத்தினின்று ஆன்மதத்துவமுந் தோன்றும். சிவதத்துவத்தினால் சாந்தியதீக்ஷையும் அத்துவாக்களும் வியாபிக்கப்பட்டுள்ளன. ஏனைய அத்துவாக்களை வித்தியாதத்துவம் வியாபிக்கும். ஆன்மதத்துவம் எல்லா அத்துவாக்களையும் நிறைக்கும். சாம்பவிதீக்ஷை சூக்ஷ்மமென்றும், சாத்ததீக்ஷை ஸ்தூலமென்றும் பெரியோர் சொல்லுவர். நால்வகையான தீக்ஷாவிதியையும் உனக்குச் சொன்னேன். இன்னும் நீ கேட்க விரும்பியவற்றையுங் கேட்பாயாகவென்று உபமந்யு முனிவர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறினர்.

ஆசாரியாபிஷேகமுரைத்தது

முற்றிற்று.

பதினெட்டாவது

நித்திய நைமித்திக கருமமுரைத்த அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் உபமந்யு முநிவரை நோக்கி ஸ்வாமீ! சிவசமஸ்காரஞ்செய்துகொண்டவர்கள் செய்யத்தக்க கருமங்களும் சிவசாஸ்திரத்திற்கூறிய வகையாகச் செய்யவேண்டிய நித்திய நைமித்திக கருமங்களும் இவையெனஅடியேனுக்குச் சொல்லவேண்டுமெனக்கேட்க, உபமந்யுமுநிவர் சந்தோஷசித்தராகிச்சொல்லத்தொடங்கினர்:பிராதக்காலத்தில் துயிலெழுந்து கௌரீ சங்கரர்களைத் தியானித்து, செய்யத்தக்க கருமங்களை யோசித்து, வீட்டைவிட்டுப் புறஞ்சென்று, நிர்ஜனமான விடத்தில் மலஜல விஸர்ஜனஞ்செய்து, சௌசமுடித்து, தந்ததாவனஞ்செய்துகொள்ளவேண்டியது. அஷ்டமிமுதலிய தந்ததாவனஞ் செய்யப்படாத தினங்களில் ஜலத்தினற் பன்னிருமுறை வாயைக்கொப்புளித் துமிழ்ந்துவிடுக. பிறகு ஆசமனஞ்செய்து நதியிலாவது குளத்திலாவது தீர்த்தங்களிலாவது வீட்டிலாவது விதிப்படி மண்பூசிக்கொண்டு மூழ்கி, பிறகு கோமயம் பூசிக்கொண்டு மூழ்கி மீண்டும் நீரில்மூழ்கி, வஸ்திரத்தாவுடலைத் துடைத்துக்கொண்டு வஸ்திரமணிய வேண்டும். பிரமசாரியும் விதவையும் தவசியும் மீண்டுந் தந்ததாவனமுங் கந்தமுடைய நீரில் ஸ்நானமுஞ் செய்யலாகாது. துகிலணிந்து சிகையைமுடிந்து வேறே நீரிற் பிரவேசித்து ஆசமனஞ்செய்து ஸ்நானஞ்செய்து மும்மண்டலங்களை நினைந்து சிவபெருமானையும் உமாதேவியையுந் தியானித்து ஸ்நானஞ்செய்து, தருப்பை சுற்றிய பசுவின் கொம்பு பலாசிலை தாமரையிலை யிவற்றாலுங் கையாலும் நீர்முகந்து ஐந்துமுறைசிரமிசைப் புரோக்ஷணஞ்செய்துகொள்ளவேண்டும். உத்தியானத்திலாவது கிருகத்திலாவது ஸ்நானஞ்செய்கையில், பாத்திரத்திலுள்ள நீரேயல்லாமல் வர்த்தநீகலச நீராலும் மூழ்கவேண்டும். மேற்கூறியபடி ஸ்நானஞ்செய்யச் சக்தியில்லாதவன் பரிசுத்தமான ஈரவஸ்திரத்தாற் சிரமுதற் கால்வரையிற் றுடைத்துக்கொள்ளலாம். அதற்குஞ் சக்தியில்லாவிடின் ஆக்கிநேயஸ்நானம் [உடல் முழுதும் விபூதியணிதல்] செய்யவேண்டும். அல்லது மந்திரஸ்நானஞ் செய்யவேண்டியது. சிவபெருமானையே எப்பொழுதுந் தியானிப்பதாகிய மாநதஸ்நானமே யோகிகள் செய்தற்குரியது. அவனுடைய சூத்திரத்திற்கேற்றபடி ஆசமனஞ்செய்து, *சூரியமண்டலத்திலிருக்கிற மகாதேவனைத் தியானஞ்செய்து சாஸ்திரோக்தமாகப் பூஜைசெய்து, ஆதித்தரூபியான பரமசிவனுக்கு அர்க்கியங்கொடுத்து,பிரமயஜ்ஞாந்தமானகருமத்தைச் செய்து,

*𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑍍𑌥𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌤𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑌿𑌵𑌾𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌿𑌣𑍇 ॥" (கசா)

மண்டலஸ்தம்மஹாதேவந்த்யாத்வாப்யர்ச்யயதாவிதி |
தத்யாதர்க்யம்ததஸ்தஸ்மைஶிவாயாதித்யரூபிணே|| (சச)

தேவ ருஷி பிதுர்தர்ப்பணஞ்செய்து, சிவபெருமானைப் பூஜித்து, ஸ்வாமீ!
என்பாவங்கள் பரிகரிக்கப்படவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும்.
அல்லது தன்னுடைய சூத்திரத்திற்குத் தக்கபடி கருமங்களைச்செய்து*கர
நியாசமுஞ் சகளீகரணமுஞ் செய்து சந்தனம் வெண்கடுகு ஜலம் இவற்
றை இடக்கையிலேந்தி வேதவிதியால் வலக்கையிற் றருப்பைகொண்டு
அதன் முனையால் தோய்த்து முடிமிசைத் தெளித்துக்கொண்டு, பின்னர்
மிகுந்த நீரை இடப்புற மூக்கினால் அதைமோந்து அதன்பின் விட்டுவிட
வேண்டும். தான்மோந்த அந்நீரானது உடம்பினுட்சென்று அவனது
பாவங்களையெல்லா மொழிக்க, அதனால் அப்பாவம் வலப்புறமூக்குவழி
யாலோர் கருங்கல்லின்மேல் வீழ்ந்தொழுகியதாகப் பாவிக்கவேண்டும்.
பின்னர், தேவர்கள் ருஷிகள் பிதுர்கள் பூதங்கள் இவர்கட்குத் தனித்தனி
அர்க்கியங்கொடுத்து, செஞ்சந்தனக்குழம்பான் மண்டலமெழுதி இரத்
தினப்பொடிகளா லலங்கரித்து ஆவரணதேவர்களுடன் சூரியனை "ககோல்
காயா" என்னும் மந்திரத்தினாற் பூஜை செய்யவேண்டும். அம்மண்டலத்
திற் பொற்பாத்திரத்தையும் வெள்ளிப்பாத்திரத்தையும் வைத்து அதிற்
செஞ்சந்தனத்தை நிறைத்து, செம்மலர்கள் எள் தர்ப்பை அரிசி அறுகு
நாயுருவி பசுவின்பால் தயிர் நெய் இவற்றைச் சலத்துடன் பெய்து முழங்
காலின்மேல் நின்று அன்புடன் கையினால் அக்கிண்ணத்தை யெடுத்துச்
சிரமிசை வைத்துக்கொண்டு, சூரியமண்டலமத்தியில் எழுந்தருளி யிருக்
குஞ் சிவபெருமானுக்கு அதனால் அர்க்கியங்கொடுக்கவேண்டும். அவ்வா
றல்லாவிடின், அக்கலசநீரையே கரத்தில் வைத்துக்கொண்டு தருப்பையாற்
பெய்து காங்களால் அர்க்கியங்கொடுக்கலாம். அதன்பின்னர், கைகளையலம்
பிக்கொண்டு கரநியாசஞ்செய்யவேண்டியது. தன்னைச் சிவசொரூபமான
பஞ்சப்பிரமமாகப்பாவித்து, சிவபெருமானது திருவெண்ணீற்றினைக் கையி
லெடுத்து வைத்து நீரைச்சொரிந்து குழைத்து யகாரமுதல் நகாரமிறுதி
யாக முறையே சிரம் முகம் மார்பு †குய்யம் முழங்கால் இவ்விடங்களில்
பஞ்சாக்ஷர மோதி யணிந்து, பிறகு மூலமந்திரத்தால் உடல்முழுவதும்
பூசிக்கொண்டு அவ்விடம்பெயர்ந்து வேறு வஸ்திரமணிந்து இருமுறை
சுத்தாசமனஞ்செய்து, பதினொருவிசை மூலமந்திரஞ் சபித்து அந்நீரைச்
சிரமிசைப் புரோக்ஷணஞ்செய்துகொண்டு வேறோர் வஸ்திரமணிந்து மீண்
டும் இருமுறை ஆசமனஞ்செய்து சிவபெருமானை ஸ்மரித்துக் கரநியாசஞ்
செய்து திருவெண்ணீற்றினாற் கோணலில்லாமலும் நீளமாகவும் யாவர்க்
கும் புலப்படுவதாகவும் திரிபுண்டரமாக அணியவேண்டும். திரிபுண்டர
மாகவாவது வட்டமாகவாவது சதுரமாகவாவது பொட்டாகவாவது பிறைச்
சந்திரன் போலவாவது திருவெண்ணீற்றை யணியலாம். அவ்வகையாக
வே சந்தனத்தையு மணியவேண்டும். நெற்றியிலணியும் வகையாகவே

* இவைமுன் விரிக்கப்பட்டுள்ளன.

† குய்யத்திற்குப் பிரதியாக நாபியென்று தமிழ் வாயுசங்கிதை கூறும்.

சிரம் மார்பு முதலிய விடங்களிலுந் தரிக்கவேண்டும். சர்வாங்கமுந் திருவெண்ணீற்றினை உத்தூளனஞ்செய்யவேண்டியது. எதுசெய்யினுந் திரிபுண்டரமாக வணிதலே சிறப்புடையது ஆதலின் உத்தூளனமில்லாவிடினுந் திரிபுண்டரமாகவே அவசியம் அணிந்துகொள்ளவேண்டியது. சிரம் கண்டம் காது கழுத்துமுதலிய விடங்களில் உருத்திராக்ஷமணிந்துகொள்ளவேண்டியது. பின்னமில்லாததும் உருட்சியானதுமாகிய உருத்திராக்ஷங்களைக்கொள்வது சிறப்புடைத்து. அவ்வாறு ருத்திராக்ஷதாரணஞ் செய்கையில் வெண்ணிறமுடையதை வேதியனும், பொன்னிறமுடையதை க்ஷத்திரியனும், செந்நிறமுடையதை வைசியனும், கருநிறமுடையதைச் சூத்திரனுமணியத்தகும். உயர்ந்தவர் தாழ்ந்ததையும், தாழ்ந்தவர் உயர்ந்ததையுந் தரிக்கக்கூடாதாயினும், உருத்திராக்ஷங்கள் அவரவர்கட்கேற்றபடி கிடையாவிடில் மாறியும் அணிந்துகொள்ளலாம். ஆயினும் இழிந்தோர் உயர்ந்தமணிகளை யணியப்படாது. உருத்திராக்ஷத்தைப் புனிதனாகவிருக்கையிலேயே யணியவேண்டும். பரிசுத்தனல்லாத சமயத்தில் உருத்திராக்ஷத்தை யணியப்படாது. இவ்விதமாக உருத்திராக்ஷமணிபவர்கள் நாளொன்றுக்கு மும்முறை இருமுறை அல்லது ஒருமுறையேனும் ஸ்நானஞ்செய்து பரிசுத்தர்களாக அணியவேண்டும். உருத்திராக்ஷமணிந்து பூஜாமண்டபத்திற் பிரவேசித்துத் தமக்கியைந்த ஆசனத்திற் கிழக்கு அல்லது வடக்குநோக்கி உட்கார்ந்து சிவபெருமானையும் உமாதேவியையும் பூஜைசெய்யவேண்டியது. அப்பொழுது சுவேதன்முதல் இலகுளீசனிறுதியாக வுள்ள ஆசிரியர்களைப் பணிந்துதுதித்து, தன்னுடைய ஆசிரியனுக்கும் நமஸ்காரஞ்செய்து, சிவபெருமானை நமஸ்கரித்து, *சிவஃ மஹேஸ்வரஃ ருத்ரஃ விஷ்ணுஃ

𑌶𑌿𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑌾𑌷𑍍𑌟𑌕𑌮𑍍॥ (கஎ)

ஶிவோமஹேஸ்வரச்சைவருத்ரோவிஷ்ணுஃபிதாமஹஃ |
ஸம்சாரவயித்யஸ்ஸர்வஜ்ஞஃபரமாத்மிதசாஷ்டகம்||" (கஎ)

பிதாமஹஃ ஸம்ஸாரவைத்தியஃ ஸர்வஜ்ஞஃ பரமாத்மஃ என்று இந்த அஷ்டநாமங்களையும் ஜபித்துக்கொண்டிருக்கவேண்டும். அவ்வாறல்லாவிடின் 'சிவ' என்னுந் திருநாமமொன்றனையே பதினொருமுறைகட்கதிகமாக ஜபிக்கவேண்டியது. வியாதிமுதலியன வொழிவதற்காகத் தேஜோமூர்த்தியான சிவபெருமான் தன் நாவின்முனையில் எழுந்தருளியிருப்பதாகத் தியானித்துக்கொண்டு கைகளைச்சுத்திசெய்து அக்கைகளில் பரிமளகந்தமணிந்து கரநியாசஞ்செய்யவேண்டும். கரநியாசமானது மூவகைப்படுமென்று சிவாகமங்கள்கூறும். அவை ஸ்திதி உற்பத்தி லயமெனப்படும். அவற்றுள் அங்குஷ்டமுதல்கனிஷ்டிகை வரையில் நியாசஞ்செய்வதை ஸ்திதி நியாசமென்றும், வலக்கை அங்குஷ்டமுதல் இடக்கை யங்குஷ்டமிறுதியாகச்செய்வதைச் சிருஷ்டி நியாசமென்றும், சிருஷ்டி நியாசத்திற்

கெதிராகக்கனிஷ்டிகைமுதற்பெருவிரல்வரையில் நியாசஞ்செய்வதை லய நியாசமென்றுஞ் சொல்லப்படும். இம்மூன்று நியாசங்களில் ஸ்திதிநியாசமானது கிருகஸ்தர்களுக்குஞ் சுமங்கலிகளுக்குமாகும். உற்பத்தி நியாசமானது பிரமசாரிகளுக்குங் கன்னிகைகளுக்குமாகும். லயநியாசமானது யதிகளுக்கும் வானப்பிரஸ்தர்களுக்கும் விதவைகளுக்குமாகும். விந்துவுடன்கூடிய நகாராதி பஞ்சாக்ஷரங்களைவிரல்களில்நியாசஞ்செய்து, கைத்தலத்திலும் அநாமிகையிலும் சிவமந்திரத்தையும், பத்துத்திக்குகளிலும்அஸ்திரமந்திரத்தையும் நியாசஞ்செய்யவேண்டும். இதயம் கண்டம் தவடை புருவமத்தியம் பிரமரந்திரமென்னு மிடங்களை யாசிரயித்த நிவ்ருத்தியாதி ஐந்துகலைகளையுஞ்சுத்திசெய்யு நிமித்தமாகப் பஞ்சபூதங்களாகச் சிந்தித்து பஞ்சாக்ஷர மந்திர ஜபஞ்செய்யவேண்டியது. உசுவாச நிசுவாசங்களை யடக்கிக் கும்பகஞ்செய்து மேற்கூறிய ஐந்திடங்களிலுள்ள பூதக்கிரந்தியை அஸ்திரமந்திரத்தா லறுத்துவிடவேண்டும். பின்னர், சுழுமுனைநாடியாற் சஞ்சரிக்கும் வாயுவைவிட்டு விளங்கும் ஆன்மாவைப் பிரமரந்திரத்திற் சிவதேஜசுடன் சேர்த்து வாயுமந்திரத்தாற் சோஷணஞ்செய்து, கலைகளைக் கீழ்மேலாகச்செய்து, காலாக்கினியால் அவற்றையெரித்து, அமிர்தத்தால் நனைத்து, கலைகளைப்பழயபடியே யமைத்துத்தேகமாகக்கொள்ள வேண்டியது. சிவதேஜசில் ஆன்மாவைப் பிரமரந்திர வழியாகக்கொண்டு வந்து தேகத்தில் இதயகமலத்திலிருத்தி அமிர்தமாரியால் உடல்முழுவதையும் நனைக்கவேண்டும். பின்னர், கரநியாசம் கரசோதனம் தேகநியாசம் இவற்றை மஹாமுத்திரையாற் செய்து, அவயவங்களையெல்லாம் சிவாகமப்படிநியாசஞ்செய்து அஸ்தபாதங்களின் சந்திகளில் வர்ணநியாசஞ்செய்து, ஆறுவகைப்பட்ட ஷடங்க நியாசஞ்செய்யவேண்டியது. அக்கினிமுதலாகிய பத்துத்திசைகளிலும் பந்தனஞ்செய்யவேண்டியது ; அல்லது உச்சிமுதல் அடிவரையிற் பஞ்சாங்கங்களுடன் ஷடங்கநியாசஞ்செய்து, இவ்வகையாக உடலையும் ஆன்மாவையுஞ் சுத்திசெய்யும்படி நியாசஞ்செய்து சிவபெருமானையும் உமாதேவியையும் பூஜிக்கவேண்டியது. இதுசுருக்கமாக என்றுசொல்லப்பட்டது. திடபுத்தியுடையவனும் விருப்புடையவனும் விஸ்தாரமான விதிப்படி நியாசகர்மங்களைச் செய்துகொள்ளலாம். அஃதெப்படியென்றால் மாதருகாநியாசம் பஞ்சப்பிரமநியாசம் பிரணவநியாசம் அம்ஸநியாசம் பஞ்சாக்ஷரநியாசம் என்னும் இவ்வைந்துநியாசங்களுஞ் சிவாகமங்களில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருத்தலின் அவற்றுள் தான் விரும்பிய ஒன்றையேனும் ஐந்தையுமேனும் பூஜாகாலத்திற் செய்துகொள்ளவேண்டும்.

அவற்றுள், மாத்ருகா நியாசமெப்படி யென்றால், உச்சியில் அகரம், நெற்றியில் ஆகாரம், நேத்திரங்களில் இ ஈ, செவிகளில் உ ஊ, கபோலங்களில் ரு ரூ, நாசிகளில் லு லூ, உதடுகளில் ஏ ஐ, பல்வரிசைகளில் ஓ ஔ, நாவில் அம், தவடையில் அః, வலக்கையின் ஜந்து சந்தி

களில் கவர்க்கம் [கவமவங] இடக்கரத்தின் ஐந்து சந்திகளில் சவர்க்கம் [வஊஜஸஞ] பாதங்களில் டவர்க்க தவர்க்கங்கள் [டஂஙஙண தயஓய ந] பக்கங்களில் ப ப்ப [வஹ] முதுகு நாபிகளில் [வ ஹ] இதயத்தில் ம, துவக்கு மாமிசம் உதிரம் மேதை மச்சை அஸ்தி ஸ்நாயு வென்னுஞ் சத்த தாதுகளில் முறையே ய ர ல வ ஶ ஷ ஸ, இதயாந்தத்தில், ஹ, புருவ மத்தியில்க்ஷ இவ்வகையாகஐம்பதெழுத்துக்களால் வர்ணமாத்ருகாநியாசஞ்செய்யவேண்டியது. அதன்பின்னர், கரநியாசஞ்செய்து சிரம் முகம் மார்பு குய்யம் பாதம் இவ்விடங்களில் முறையே பஞ்சப்பிரமங்களை நியாசஞ்செய்யவேண்டும். தனக்கு ஐந்து முகங்களுள்ளனவாகக் கருதி, ஈசான கலையைந்தையும் முகம் இதயம் குஹ்யம் இருபாதங்களிலும் நியாசஞ் செய்து, தற்புருஷ கலைகள் நான்கையும் கிழக்குமுதலிய திசைகளிலுள்ள நான்கு முகங்களிலும் நியாசஞ்செய்து, அகோரகலைகளெட்டையும் இதயம் கண்டம் தோள் நாபிவயிறு முதுகு மார்பு இவற்றில் நியாசஞ்செய்து, வாமதேவகலைகள் பதின்மூன்றையும் குதம் குறி தொடைகள் முழங்கால்கள் கணைக்கால்கள் துடைசந்திகள் இடை பக்கங்களில் முறையே நியாசஞ் செய்து, சத்தியோஜாத கலைகளெட்டையும் *பாதங்கள் கரங்கள் நாசி சிரம் தோள்களில் நியாசஞ் செய்யவேண்டியது. இவ்வகையாக முப்பத்தெட்டுக் கலைகளைப் பஞ்சப்பிரம நியாசமெனப்படும். கைகள் முழங்கைகள் மணிக்கட்டுகள் பக்கங்கள் வயிறு தொடைகள் கணைக்கால்கள் பாதங்கள் முதுகு இவ்விடங்களிற் பிரணவத்தை நியாசஞ்செய்யவேண்டியது. நேத்திரங்கள் மூக்குகள் செவிகள் தோள்கள் முலை நெற்றி இடை அக்குள் பக்கங்கள் பரடு கைகள் கணைக்கால்களாகிய இவ்விடங்களிற் பஞ்சாக்ஷராம்ச நியாசஞ் செய்யவேண்டும். பிறகு தன்னை முன்போலச்சிவனுகப் பாவித்து,முன்போலவே பஞ்சாக்ஷரங்களை நியாசஞ் செய்யவேண்டும். இவ்வாறு செய்யாதவன் சிவதருமங்களைச் செய்யப்படாது. சிவதருமமானது கர்மயாகம் தபோயாகம் ஜபயாகம் தியானயாகம் ஞானயாகமென்று ஐவகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றை யொவ்வொருவர் கடைப்பிடித்துள்ளார்கள். இவர்களில் முறையே யொருவருக்கொருவர் உயர்ந்தவர்களாவார்கள். அவற்றுள் கர்மயாகம் காமியமென்றும் அகாமியமென்றும் இருவகைப்படும். அவற்றிற் காமியயாகஞ் செய்பவன் போகங்களை யனுபவித்து மீண்டும் பிறவியடைவான். அகாம்ய யாகஞ் செய்பவன் சிவசந்நிதியிற் போகங்களை யனுபவித்துப் பின்னர்த் தபோ யாகமுடையவனுகப் பிறந்து தவத்தைச்செய்து யோகங்களை யநுபவித்து ஜபயாகஞ் செய்பவனுகத் தோன்றி ஜபஞ்செய்து ஞானத்தை யடைந்து நெடுங்காலஞ் சிவசாயுச்சிய மடைவான். ஆதலின் முக்தி யடைவதில், சிவபெருமானுடைய ஆக்கினையை யடைந்து கர்மயாகத்தை

* இதனைத் தாள்கள் கண்டம் மூக்கு தலை முழங்கால் என்னுந் தமிழ் நூல்.

யாவது செய்யவேண்டும். அகாமியத்தை யநுஷ்டிப்பவன் ஒரேகாலத்தில் காமியத்தைச் செய்தால் பந்தமடைகிறான் ஆகையால் இந்த ஐந்து யாகங்களில் தியானயாகமும் ஞானயாகமுமே சிறந்தன. அவற்றையே செய்ய வேண்டியது ஆவசியகம். தியான ஞானயாகங்களைப் பழகினவன் சமுசார சாகரத்தைக் கடந்தவன் இம்மைமுதலிய குரூரங்களை விடுத்து, மனதைப் புனிதஞ்செய்து தியான யாகத்தைச் செய்பவன் இவர்கள் மோக்ஷமடைவார்கள். பலரறியும்படி கிரியைகளைச் செய்பவர்கள் பெரும் பலனடையமாட்டார்கள். இராசகிருகத்திற் சேவை செய்வோரில் வாயில் காப்பவனைப் பார்க்கிலும் அரண்மனையினுள்ளிருந்து சேவைசெய்வோன் பெருஞ்செல்வ மடைவதுபோல, சிவபெருமானை நோக்கிக் கர்மயாகஞ் செய்பவனைக் காட்டிலுந் தியானயாகஞ் செய்பவன் விசேஷமான பலன்களை யடைவான். கர்மயாகஞ் செய்பவர்கள் சிலை தரு லோகமுதலிய வற்றாற் செய்த மூர்த்தங்களைக்கண்டு சந்தோஷிப்பதுபோல, தியானயாகஞ் செய்பவர்கள் சிவசொரூபத்தைத் தமதிதயதாமரையிற் சேவித்துக் களிப்படைகின்றார்களாதலின், தியானயாகஞ் செய்பவர்கள் கல்மண் முதலியவற்றாற்செய்த மூர்த்திகளில் மனதைச் செலுத்தமாட்டார்கள்.

ஒருவன் தன்னுடைய ஆன்மாவினுள்ளேயே எழுந்தருளியிருக்குஞ் சங்கரபகவானைத் தரிசித்துப் பூசைசெய்யமாட்டாமல், பாஹ்யத்தில் சிலை தரு முதலிய மூர்த்தங்களில் வருத்தப்பட்டுப் பூசைசெய்வது கையிலுள்ள பாற்சோற்றைப் பார்த்துப் புசிக்காமற் புறங்கையிலொழுகுவதை நக்குதல்போலிருக்கும். ஞானத்தால் தியானமுண்டாகும். தியானத்தால் ஞானம் விருத்தியடையும். ஞான தியானங்களால் முக்தியுண்டாகும். ஆதலின் புருஷன் தியானத்தில் ஆசக்தியுடையவனாக வேண்டும். துவாதசாந்தம் தலை நெற்றி புருவமத்தியம் நாசிமுனை வாய் கண்டம் இதயம் நாபி மூலாதாரமாகிய விடங்களில் சிரத்தாபக்தியுடன் கர்மயாகத்தைப்போலச் சிவபெருமானையும் பார்வதி தேவியையும் பூஜை செய்யவேண்டியது. அவ்வாறல்லாவிடின் சிவலிங்கத்திலாவது விக்கிரகத்திலாவது அக்கினியிலாவது பூமியிலாவது சலத்திலாவது பக்தியோடு சக்திக்கேற்பப் பூஜைசெய்யவேண்டியது. அல்லது அந்தர்முகத்திலாவது பஹிர் முகத்திலாவது பூஜை செய்யலாம். ஆனால் அந்தர்முகத்திற் பூஜை செய்பவன் பஹிர் முகத்திற் பூஜைசெய்தாலும் செய்யலாம் செய்யாது விடுத்தாலும் விடலாமென்று உபமந்யு முனிவர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறியருளினர்.

நித்திய நைமித்திக கருமமுணர்த்தது

முற்றிற்று.

பத்தோன்பதாவது

மாநஸ பூஜாவிதி யுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முநிவர் கூறுகின்றார். கிருஷ்ண! பூர்வம் சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறிய சிவபூஜா விதியைச்சொல்லுகின்றேன்: அக்கினி காரியத்தை யிறுதியாகவுடைய நித்திய கருமங்களையெல்லாஞ் செய்து அல்லது மனதால்முடித்து, பூஜாவுபகரணங்களை மனதாற் சேகரித்து, தன்தேகத்தின் இதய பங்கயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு வலப்புறத்தில் விநாயகக்கடவுளையும் இடப்புறத்தில் நந்திதேவரையும் அவர் பத்தினியாகிய சுயசையையுஞ் சிந்தித்துப் பூஜைசெய்து பின்னர், இதயகமலத்தில் சிங்காசனம் யோகாசனம் பத்மாசனமுதலிய ஆதனங்களுளொன்றில்,தத்துவத்திரயத்துடன்கூடிய கமலாசனத்தில் எழுந்தருளி யிருப்பவனும், பார்வதிசமேதனும், சகலலக்ஷணங்களுமுடையவனும், சுந்தரமான அவயங்களுடன் கூடியவனும், அநேகமான ஆபரணங்களை யணிந்தவனும், செவ்விய முகங் கரம் பாதமிவற்றை யுடையவனும், மல்லிகை யரும்புபோன்ற புன்னகையுடையவனும், சுத்தஸ்படிக நிறமான வெண்ணிறத்த விபூதி யணிந்த திருமேனியுடையவனும், மலர்ந்த தாமரையிதழ்களை யொத்த கண்களையுடையவனும், சதுர்புஜங்களும் கம்பீரமான சரீரமும் மனோகரமான சந்திரகலையைச் சிரசிலணிந்தவனும், வரத அபய மிருக டங்கங்களைத் திருக்கரங்களி லணிந்தவனும், சர்ப்பாபரணங்களைத் தரித்தவனும் நீலகண்டனும்,சமானாதிகரகிதனும்,பரிவாரங்களுடன் கூடியவனுமாகிய சிவபெருமானைத் தியானித்து, அவனுடைய இடப்பாகத்தில் விகசித்த நீலோற்பலமலர்போன்ற காந்தியும், பரந்துநீண்ட கண்களும், பூர்ணசந்திரனை யென்ற பிரகாசத்தையுடைய திருமுகமும், கறுத்துச் சுருண்ட நெற்றியின் முன்மயிரும், அர்த்தசந்திரனாகிய கிரீடமும், பூரித்து உயர்ந்து முனைவாய்ந்த குசங்களும், நுண்ணிய இடையும், பச்சைப்பட்டாடையும், சகலாபரணபூஷிதமும், நெற்றியிலணிந்த திலகத்தின் பிரகாசமும், நானாவித நிறம் வாய்ந்து சுகந்தமிகுந்த மலர்களையணிந்த அளகபாரமும், சிவபெருமானுக்குச் சமானமான குணமும் திருவுருவும், சிறுநாணமுடைய முகமும், வலக்கரத்திற் பொற்றாமரையும், துடையின் மீதூன்றிய இடக்கரமும், பிராணகோடிகளின் பாசவிமோசனஞ் செய்யுங் கருணையுமுடைய சச்சிதானந்த ரூபியாகிய பார்வதி தேவியையும் மங்களகரமான பீடத்திலெழுந்தருளி யிருப்பதாகத் தியானித்துச் சர்வோபசாரங்களோடும் பக்திபூர்வமாக மனதாற் சேகரித்த திவ்விய மலர்களா லருச்சிக்கவேண்டியது. அல்லது சதாசிவனை அல்லது மகேச்சுரனை அல்லது இருபத்தாறாவது தத்துவமாகிய மூர்த்தியை அல்லது ஸ்ரீகண்டனைத் தியானித்துத் தன் சரீரத்தில், மந்திரநியாசஞ்செய்து சிவனேயான தன் மந்திர தேகத்தின் இதயதாமரையிலிருத்

தித் தன் தேகத்திற் செய்த நியாசங்களை இறைவன்தேகத்தில் நியாசஞ் செய்து, பகிர்பூஜையைப் போலவே மாநசிகமாகப் பூஜைசெய்யவேண்டியது. பின்னர், சமிதை நெய் முதலியனகொண்டு நாபியில் மாநசிகமாக ஓமஞ்செய்ய வேண்டியது. புருவமத்தியில், தீபசிகைபோலப் பிரகாசிக்குஞ் சிவபெருமானைத் தியானஞ்செய்யவேண்டியது. இவ்வகையாகத் தன் சரீரத்தில் தியானத்துடன்கூடிய யோகத்தில் அக்கினிகாரியாந்தமாகவுள்ள சகலமான பூஜாவிதானமுஞ் செய்துமுடிக்கவேண்டியது. இவ்வண்ணம் பூஜையை அந்தர்முகத்தில் முடித்துப் பகிர்பூஜையைச் செய்யத்தொடங்கிச் சிவலிங்க சொரூபத்திலாவது அக்கினியிலாவது பூமியிலாவது முறையே சிவபூஜை செய்யத்தொடங்க வேண்டும்.

மாநஸ பூஜாவிதி யுரைத்தது

முற்றிற்று.

இருபதாவது

கிரியாபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முநிவர் சொல்லுகிறார்: மூலமந்திரத்தால் பூஜா ஸ்தானத்தைப் பரிமளமுடைய சந்தனநீரைத் தெளித்து மலர்களையிட்டு, அஸ்திர மந்திரத்தால் விக்கினங்களை யொழித்து, பத்துத்திக்குகளிலும் அஸ்திர மந்திரத்தால் திக்பந்தனஞ்செய்து, பூஜாஸ்தானத்தை நியமித்து, அங்கே தர்ப்பையைப் பரப்பி புரோக்ஷண மந்திரத்தால் ஜலத்தைப் புரோக்ஷித்துப் பாத்திரங்களைச் சுத்திசெய்து, பூஜாதிரவியங்களைச் சுத்திசெய்து, புரோக்ஷண பாத்திரம் அர்க்கியபாத்திரம் பாத்தியபாத்திரம் ஆசமன பாத்திரமாகியநான்குபாத்திரங்களைச்சுத்திசெய்துவைத்துக்கொண்டு அவற்றில் தனித்தனியாகப் புனிதமானநீரைப்பெய்து,புஷ்பமுதலியதிரவியங்களைத் தன் சக்திக்கேற்பச்சம்பாதித்து வைத்துக்கொண்டு,இரத்தினம் பொன் வெள்ளி கந்தம் புஷ்பம் அக்ஷதை பழங்கள் பத்திரங்கள் தர்ப்பை முதலிய திரவியங்களைச் சித்தப்படுத்திக்கொண்டு அபிஷேக ஜலத்தில் பரிமள திரவியங்களையும், பானீய ஜலத்தில் மலர்களையுஞ் சீதள வஸ்துக்களையுஞ் சேர்க்கவேண்டியது. வெட்டிவேரும் சந்தனமும் பாத்திய பாத்திரத்திற் சேர்க்கவும். ஜாதிக்காய் கர்ப்பூரம் கங்கோலம் தமாலம் முதலிய வஸ்துக்களைப் பொடித்து ஆசமனபாத்திரத்திலிடவும். ஏலம் கர்ப்பூரம் சந்தனமிவற்றை எல்லாப் பாத்திரங்களிலுமிட வேண்டியது. பச்சைக் கர்ப்பூரம் சந்தனம் தர்ப்பாங்குரம் அக்ஷதை யவை நெல் எள் நெய் கடுகு மலர்கள் விபூதி இவையாவும் அர்க்கிய பாத்திரத்திலிட வேண்டியது. தர்ப்பை மலர்கள் யவை நெல் பகுமூலம் பச்சிலை விபூதி இவற்றைப் புரோக்ஷண பாத்திரத்திலிடவேண்டியது. பிரணவ மந்திரத்தால் பாத்

திரங்களிலெல்லாம் புரோக்ஷண ஜலத்தைத் தெளித்து அஸ்திர மந்திரத்தால் ரக்ஷணசெய்து தேனுமுத்திரையைக் காட்டி, பூஜாதிரவியங்களையெல்லாம் புரோக்ஷண ஜலந்தெளித்துப் புனிதமாக்கிக் கொள்ளவேண்டியது. இவ்வகையாகப் பாத்திரங்கள் சேகரிக்க ஏலாவிடின் புரோக்ஷண பாத்திரமொன்றனுலேயே யெல்லாவற்றையுஞ் செய்துகொள்ள வேண்டியது.

விநாயகக்கடவுளைப் பக்ஷியபோஜ்யங்களால் விதிப்படி வலப்புறத்திற் பூஜைசெய்து, பொன்மலைபோலுயர்வும் சகலாபரணபூஷிதமும் பாலசந்திரகிரீடமும் அழகிய சரீரமும், திரிநேத்திரமும், சூலம் மான் டங்கம் பிரம்பு இவற்றையேந்திய சதுர்ப்புஜமும், சந்திரபிம்பத்திற் கொப்பான முககாந்தியுங் கொண்டு விளங்கும் நந்தீசுவரனையும், மருத்துவின் மகளும் பதிவிரதையும் பார்வதிதேவியின் பாதங்களைபலங்கரிப்பதில்விருப்புடையளுமாகிய அவர் மனைவி சுயசையையும் வடதிசையிலே பூஜைசெய்து, இவ்வகையாகத்துவாரபூஜையைமுடித்துப் பூஜாக்ரஹத்தினுட்பிரவேசித்து மஹாலிங்கத்தை விதிப்படி பூஜைசெய்து நிர்மாலியத்தை விலக்கி, புனிதமான ஒருமலரைச் சிவபிரானுர் சிரமிசையணிந்து, மலர்களைக் கரத்திற்கொண்டு தான் பரிசுத்தனுகும்படி சக்திக்கேற்பப் பஞ்சாக்ஷரமந்திரஜபஞ் செய்யவேண்டியது. பின்னர் ஈசானதிசையிற் சண்டீசனை யாராதித்து நிர்மாலியத்தையவருக்கு ஒப்புவிக்கவேண்டியது. பிறகு உமாமகேசுவரருக்கு ஆசனங்கற்பிக்கவேண்டியது. நாற்புறமுங் கடல்சூழ்ந்துள்ள பூமிக்குக் கீழ்ப்பாகத்திலிருக்கும் மங்களகரமான ஆதாரசக்தியைத் தியானித்து அதன்மேலே குண்டலாகாரமாயும் வெண்ணிறமாயும் ஐந்துபணமுடிகள் கொண்டு விளங்கும் அநந்தனையும், அதன்மேலே *தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியமென்னு நான்கையும் நான்கு கால்களாகவுடைய சிங்கமாகப்பொருந்தி நால்வகை நிறமுடையதாய், இடையிடையே அதர்ம (கிழக்கிலும்) அஜ்ஞானம் (தெற்கிலும்) அவைராக்கியம் (மேற்கிலும்) அநைசுவரியம் (வடக்கிலும்) நான்கு உபகால்களாக இராஜாவர்த்த மணிநிறமாகவுங்கொண்டுள்ளதாகவும் அணிமாமுதலிய எட்டுத்தளங்களையுடையவெண்டாமரைமலர்போன்ற சிங்காசனம் பாவித்துப் பூசிக்கவேண்டியது. அதன்பின்னர் அதச்சதனம் ஊர்த்தச்சதன மிவற்றைப் பூசித்து, அப்பதுமதளமெட்டிலும் அஷ்டசித்திகளையும், உபதளங்களெட்டிலும் அவற்றுள் வாமதேவன் ஜேஷ்டன் உருத்திரன் காலன் கலவிகரணன் பலவிகரணன் பலப்பிரமதனன் சர்வபூததமனனென்னும் அஷ்டருத்திரர்களும் வாமை ஜேஷ்டை இரௌத்திரி காளி கலவிகரணி பலவிகரணி பலப்பிரமதனி சர்வபூததமனியென்னும் அஷ்டசத்திகளுடன் கூடியிருப்பதாகத் தியானித்து மலர்

* தருமம் அக்கினிதிசையில் வெண்மையாயும், ஞானம் நிருதிமூலையில் செந்நிறமாயும், வைராக்கியம் வாயுதிசையில் பச்சையாயும் ஐசுவரியம் ஈசானதிசையில் கருமையாயுமிருக்கும்.

களானருச்சித்து, அப்பதுமத்தின் கிழங்கைச் சிவதருமமாகவும், நாளத்தைச் சிவஞானமாகவும், அதன் பொகுட்டை வயிராக்கியமாகவுந் தியானித்துப் பூஜைசெய்யவேண்டும். அப்பொகுட்டின்பேரிற் சூரிய சோமாக்கினி மண்டலங்களைத் தியானித்து, மூன்று தத்துவங்களையுந்தியானித்து, அதன்மேலே வித்தியாமயமான ஆசனத்தை மிக்க அன்போடு மலர்கொண்டர்ச்சித்துப் பூஜித்து,அதன்மேலே உமாமகேசுவரனை ஆவாஹனம் ஸ்தாபனம் சந்நிரோதம் நிரீக்ஷணம் நமஸ்கார முதலியன செய்து வெவ்வேறான முத்திரைகளைக்காட்டி, பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கந்தம் புஷ்பம் தூபம் தீபம் தாம்பூல முதலியன சமர்ப்பிக்கவேண்டியது. அல்லது பஞ்சகவ்வியம் தேன் வாழைமா பலா முதலிய பழங்கள்,எள் யவை கடுகு உழுந்து இவற்றாலபிடேகித்து, வெந்நீர் கஸ்தூரிமஞ்சள் நெல்லிக்கனி நீர் சந்தனம் பொன் இரத்தினம் இவற்றைக்கூட்டிய ஜலத்தை, சங்கு கலசமுதலியவற்றா லபிஷேகிக்கவேண்டியது. சக்தியில்லாவிடின் தக்கபடியாவது பவமாநஸூக்தம் ருத்ரம் நீலருத்ரம் த்வரிதருத்ரம் லிங்கசூக்த முதலான ஸூக்தங்கள் அதர்வசிரசு ருக்கு சாமம் பஞ்சப்பிரம முதலான வேதமந்திரங்களாலும் பிரணவ மந்திரத்தினாலும் அல்லது பஞ்சாக்ஷர மந்திரத்தாலேனும் அபிஷேகிக்கவேண்டும். சிவபெருமானைப்போலவே பார்வதிதேவிக்கும் அபிஷேகஞ்செய்யவேண்டும். அது சிவாக்கினையைப் பெற்றே செய்யத்தக்கது. அர்த்தநாரீசுவரமூர்த்தம் பூசிக்கப்படுவதாயின் முதலிற் சிவபாகத்தும் இரண்டாவது தேவிபாகத்துமாக முறைமுறையே பூஜைசெய்யவேண்டும். அபிஷேக முடிந்தபின்,புனிதமான வஸ்திரத்தால் துடைத்துப்பட்டுவஸ்திரமும் உபவீதமுமணிந்து பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கந்தம் புஷ்பம் அலங்காரம் தூபம் தீபம் நைவேத்தியம் பானீயம் தாம்பூலம் முகவாசம் குடை சாமரை ஆலவட்டம் கண்ணாடி இவற்றைச் சமர்ப்பித்து, சகல வாத்தியகோஷங்களுடன் கர்ப்பூர நீராஜனஞ் சமர்ப்பித்து, சுவையுடைய பாற்சோறும் தாம்பூலமும் நிவேதனஞ்செய்து முகவாசங்கொடுத்து, சாமரை கண்ணாடி ஆலவட்டமுதலியன காண்பித்து, மீண்டும் அர்க்கியங்கொடுத்து, திருவெண்ணீறணிந்து புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து, சிவபெருமானையும் உமாதேவியையும் மும்முறை பிரதக்ஷிணஞ் செய்து துதிசெய்து,என்புக ளுருகும்படிசாஷ்டாங்கமாகநமஸ்கரித்து எம்பெருமானுக்குத் தன்னுயிரையே நிவேதனமாகக் கொடுத்து மீண்டும் அர்க்கியமளித்துப் புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து, சமானாதிகரஹிதனே! அடியேன் செய்த குற்றங்களை மன்னித்தருளவேண்டுமென்று க்ஷமாபணஞ் செய்து, தன்னுடைய ஆன்மாவிற் சிவபெருமானை யாவாஹனஞ்செய்து எப்பொழுதுந் தியானஞ்செய்யவேண்டும். ஒருவன் தன்னுடல் ஜீவித்திருக்கு மெல்லையும் சிவபூஜையை எவ்வகை யசந்தர்ப்பங்கள் வந்தகாலத்துந் தினந்தோறும் முறைப்படி செய்தே முடிக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் அன்னபானாதிகளில் விருப்புடையவனாய் ஆகாரஞ் செய்யப்

படாது. அப்படிச் செய்வானாயின், அவற்றைச் * சந்திசெய்து புனிதமான ஜலத்தில் ஸ்நானஞ்செய்து அன்று செய்யத்தவறிய பூஜைக்கு அபராதமாக இருமுறை சிவபெருமானையும் பார்வதிதேவியையும் தன் நியமத்திலும்விசேஷமாகப் பூஜித்து, தன்பசியையும் நாவின் உருசியறிதலையும் வெறுத்து அன்றுமுழுதும் உபவாசமிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர மகாமந்திரத்தைப் பதினாயிரமுறை ஜபித்து, மற்றைத்தினத்திற் சர்வலோகங்கட்குங் காரணபூதராகிய சங்கரபகவானுக்கு விசேஷமாகப் பூஜைசெய்து, சிவாலயத்திற்குஞ் சிவனடியார்க்கும் வேண்டிய பொருள்களைத் தானஞ்செய்து, பூஜைசெய்யாமற் புசித்த பாவத்தைப் போக்கடிக்கவேண்டும். விரித்துச் சொன்னால் எல்லையில்லையாகுமென்று கருதிச் சிவபூஜாவிதியை மிகச் சுருக்கமாக உனக்குச் சொன்னேன். இன்னுஞ் சிலவற்றைச் சொல்லுகின்றேன். தூப தீபங்களைக் கொடுத்துப் பாற்சோற்றை நிவேதனஞ் செய்யுமுன்னர் ஆவரணபூஜை செய்யத்தக்கது ஆதலின் அதனையுங் கேட்பாயாக.

கிருஷ்ணா! முதல் ஆவரணத்திலே, பஞ்சப்பிரமத்தையும் நான்கு திசைகளையும் ஷடங்கங்களையுங் கிரமப்படி அன்புடன் பூசைசெய்துதிக்குப் பாலகர்களையும் பூசித்து, பின்னர் நிருதிதிக்கிலே விஷ்ணுமூர்த்தியையும் ஈசான திசையிலே பிரமதேவனையும் பூசித்து, ஆவரணத்தின் புறத்திலே இந்திரதிக்கு முதலாக ஈசானதிசை யிறுதியாகத் திசைகளெட்டிலும் முறையே வச்சிரம் சத்தி தண்டம் கட்கம் பாசம் அங்குசம் கதை சூலமென்னுந் திக்குப்பாலகர் ஆயுதமெட்டையும் சக்கரம் பதுமமென்னும் விஷ்ணு பிரமர்களின் படைகளிரண்டையு மேலேகுறித்த அவ்விரு தேவர் நிலைப்புறத்தும் பூசிக்கவேண்டும். அவ்வாறு பூசிக்கையில் அந்த ஆவரணத்திலுள்ள தேவர்கள் யாவருஞ் சிவபெருமானைக் கைகூப்பிப் பணிவதாகப் பாவனைசெய்து பூசிக்கவேண்டும். பருப்பு பால் தயிர் நெய் தேன் சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்துப் பாகஞ்செய்த அன்னமும் பழங்களும் பலகார வகைகளும் நிவேதனஞ்செய்து, ஏலம் சந்தனம் மலர்முதலியவற்றால் மணங்கமழும் நீரால் தன் வினைச்சம்பந்த மொழிய பானங்கொடுத்து, பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ இவற்றுடன் தாம்பூலங்கொடுத்து, வாசனையூட்டிய சந்தனக்கலவையை யளித்து, பட்டு வஸ்திரமும் பொன்னாலும் இரத்தினத்தாலுஞ் செய்த ஆபரணங்களு முதவி, சந்தனம் கர்ப்பூரம் அகில் குங்கிலியம் பசுநெய் கோஷ்டம் இவற்றைக் கூட்டிய தூபமும், மிக்க உயர்வுடைய கபிலைப்பசுவின் நெய்யிற்றோய்த்த கர்ப்பூரதீபமுங் கொடுக்கவேண்டும். சிவபூஜையில், பஞ்சகவ்வியங்களும் தயிர் பாலும் கடற்கரைக் கருகிருந்த ஜலமும் அபிஷேகத்திற்குச் சிறப்புடையன. பொன்னினாலும் இரத்தினத்தினாலுந் தந்தத்தினாலுஞ் செய்த பீடங்கள் உயர்ந்தன. தலையணையுடன்கூடிய பஞ்சசயன

* சந்திசெய்தல் - மேலெடுத்தல்.

மும், முத்துக்கோவைகள் தொங்கவிடுத்த இரத்தினக்குடையும், பொன்னாற்செய்த காம்பையுடைய சாமரையும், வெண்ணிறம்வாய்ந்த வலம்புரிச்சங்கமும், பருத்த நவமணிகளும், தாவள்யமான கண்ணாடியும், வெண்கலத்தாலாக்கிய மணியும், மிருதங்க முதலிய வாத்தியங்களும், தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப்பாத்திரங்களும் ஆகிய இவ்வகைய சிறந்த பொருள்களே சிவபிரானுக்கு ஏற்றவையெனச் சாஸ்திரங்கள் கூறுகிற்கும். சிற்ப லக்ஷண விதிமுறையாகச் செய்யப்பெற்றுப் பல கோபுரங்கள் வாய்ந்த திருக்கோயிலே எப்பெருமானை யெழுந்தருளச் செய்வதற்குரிய தானமாம்.

சிவபெருமானை மண் மரம் செங்கல் கருங்கல் தந்தமுதலியவற்றாற் செய்த கோயிலினும், மலையுச்சியினும், நந்தவனத்தினும், நதிதீரத்தினும் தன்வாசஸ்தலத்தினும் பூசிக்கத்தகும். ஒருவன் வஞ்சனை முதலியவற்றாற் பொருள்தேடாது தரும மார்க்கத்திற் சம்பாதித்த திரவியத்தைக் கொண்டு, ஆசிரியன் தனக்குபதேசித்த முறையை நன்றாகவுணர்ந்து, அதன்வழியாற் பக்திபூர்வமாகப் பூசைசெய்வானாகில், அவனுக்கே முக்தி கைகூடுமன்றி, இவ்வுலகில் எண்ணிறந்த காலம் அருந்தவஞ்செயினும், வேதங்களிற்கூறிய வகையே கோடியாகங்களைச் செயினும் முக்திகை கூடுமோ? ஒருகாலுங் கைகூடாது. சிவமந்திரஞ் சபித்தலும், வேத சாஸ்திரங்களை யாராய்தலும், தியானம் - யாகம் - ஓமம் - தவம் - தானம்- தருமமுதலியவற்றைச் செய்தலும், பிறவியை யொழிக்கத்தக்க சிவோகம் பாவனையுண்டாவதற் கேதுவாம். சாந்திராயண முதலிய விரதங்களை யாசிரயித்தாலுஞ் சிவபக்தியில்லாவிடின் யாது பலனுண்டாகும்? அவர்கள் வீணே உடல்வருந்தி மெலிவரன்றிச் சிறிதும் பயனடையமாட்டார்கள். சிவபக்தர்களோ சிவோகம் பாவனையெய்தி உயர்பதவியை யடைவார்கள். சத்துவகுணமுடைய யோகியர்கள் மோக்ஷமளிக்கத்தக்க சத்துவ கருமத்தையும், இரசோகுணமுடையவர்கள் இஷ்டசித்திகளைக் கொடுக்கத்தக்க இராசத கருமத்தையும், தமோகுணமுடைய அசுரர்களும் அரக்கர்களும் மனிதர்களும் இம்மையிலேயே விரும்பிய பலனைக்கொடுக்குந் தாமத கருமத்தையும் ஆசையாற் செய்வார்கள். முக்குணவசத்தாற் செய்யுங் கருமங்கள் சிவபெருமானைப் பக்திசெய்வதாற் சற்கருமங்களாம். தீமையே செய்யும் நீசர்களானாலுஞ் சிவகடாக்ஷத்தினாலே தேவர்களாவார்களென்றால், திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமானுடைய திருவடியில் ஒவ்வொருவரும் பக்திசெய்யவேண்டியது கடமைப்பாடாம். பிரமஹத்தி-பொற்களவு-கட்குடி - குருதாரகமனம்-குரு பிதா மாதா மன்னன் முதலியோரைக் கொல்லலென்னும் இப்பஞ்ச மஹாபாதகங்களைச் செய்தவர்களானாலும் பன்னிரு வருஷகாலம் பக்தியுடன் சிவபூஜை செய்யிற் பாவத்தை யொழித்துப் புனிதராவார்கள். எண்ணிறந்த பிறவிகளிலே கிடைத்தற்கரிய மாநுடதேகத்தை யடைந்தும் விவேகத்தாற்

சிவபெருமானைப் பூசியாதவர்கள் பிற்காலத்தில் இயமன் பற்களைக் கடித்துக்கொண்டு கோபத்துடன் கொடிய நகரத்திற்றள்ள மயங்கிவருந்தி உயிர் துடிப்பார்கள். மானுடருக்குச் சிரங் கரமுதலிய அவயவங்கள் யாவும் தன்பணி செய்வதற்காகவே சிவபெருமானாற் கொடுக்கப்பட்டிருத்தலின் அவையொவ்வொன்றனையும் அவ்வெம்பெருமான் விஷயமாகவே யுபயோகிக்கவேண்டுமென்றறிந்து அவ்வாறு செய்பவனே விவேகியாவான். தமக்குச் சுகம் நித்தியமாக வேண்டுமென்பவர்கள் யாவரும், தமது பஞ்சேந்திரியங்கள் கெடுவதன் முன்னும் வயோதிக பருவம் வருமுன்னும், உமா சமேதனாகிய சங்கரபகவானை அன்புடன் பூசித்துப்பணிந்து அவனுடைய திருவருளையவனாற் கடாக்ஷிக்கப் பெறவேண்டும். வேதங்களாலுந் தேடிக் காண்டற்கரிய சிவபெருமானைப் பக்தியோடு பூசித்தவர்கள் கடல்புடை சூழ்ந்த பூவுலகத்திலே குளிர்ச்சிவாய்ந்த முத்தாற்செய்த சந்திரவட்டக் குடைநிழலிலே யிருந்து அரசர்களாகப் பூமியைக்காத்துத்தேகாந்தத்திற் சிவபெருமானுடைய திருவடி நிழலையடைவார்கள். சிவாலயத்திலேயே சிவபூஜை செய்கையில், துவாரபூஜையை முற்படச்செய்து திரைச்சீலையைப் பின்னர்ப் பூசித்து, பரிவார தேவர்களுக்குப் பலியிட்டு விழாசெய்தல் முறையாகும். சிவபெருமானுக்கு நிவேதனஞ்செய்த பிறகு துதி செய்யத்தக்க பரிவாரங்கட்குப் பலிகொடுத்து, வாத்திய கோஷத்துடனே தேவர்களுக்கெல்லாம் பலிகொடுக்கவேண்டும். வடதிசை நோக்கிப் பலி பீடத்தருகே நின்று பலியைக்கொடுத்து, சிவபெருமானுக்கு நிவேதித்த நிர்மாலியத்தைச் சண்டேசருக்குக் கொடுத்து, பின்னர், அக்கினிகாரியஞ் செய்து சிவமந்திரஞ்சபித்து, செந்தாமரை மலரிட்டு வைத்த பொன் அல்லது வெள்ளிக்கிண்ணத்திலே மிக்க பராக்கிரமத்தையுடைய பாசுபதாஸ்திரத்தை வைத்துப்பூசித்து வேரோர் வேதியன் சிரமிசை யமர்த்தித் திருவாயிலின் புறத்தெய்தித் திருக்கோயிலை மும்முறை பிரதக்ஷிணஞ்செய்த பின்னர், பலிபீடத்தையு மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து, அந்தணன் சிரத்தில் வைத்த பாத்திரத்தையெடுத்துச் சிவாலயத்தை யடைந்து அவ்வஸ்திரத்தைவிடுத்து, சிவசந்நிதியை யடைந்து சிவபிரானுக்கு அஷ்டபுஷ்பங்கள் சமர்ப்பித்துச் சிவபூஜையை முடிக்கவேண்டுமென்று உபமந்யு முநிவர் கூறியருளினர்.

கிரியாபூஜாவிதி யுரைத்தது
முற்றிற்று.

இருபத்தோன்றாவது
சிவஹோமமுரைத்த அத்தியாயம்.

உபமந்யுமுநிவர் சொல்லுகின்றார்: கிருஷ்ணா! சிவஹோமஞ்செய்யும்வகையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக: குண்டத்திலாவது பூமியிற்செய்த வேதியிலாவது இரும்பாற்செய்த பாத்திரத்தில் தீயைச்சொ

ரிந்து அதனை மந்திரசுத்திசெய்து சிவபெருமானை ஆவாகனஞ்செய்து பூசித்து, பக்திபூர்வமாகச் சிவஹோமஞ் செய்யவேண்டும். இரண்டு முழ அகலமும், ஒருமுழ ஆழமுங்கொண்ட குண்டத்தைச் சதுரமாகவாவது வட்டமாகவாவது சிவாகம விதிப்படிசெய்து, அக்குண்டமத்தியிலே இரு விரற் கனமாவது நால்விரற்கனமாவது அஷ்டதளங்களையுடைய பதும மொன்றியற்றிச் செய்யவேண்டிய மூன்று மேகலைகளேயன்றி இன்னும் இரண்டு மேகலைகளையுஞ் செய்யவேண்டும். யானைத்துதிக்கைபோலச் செய் யாது அரசிலைவட்டம்போல யோனியைச்செய்து குண்டத்தினுள்ளே யனை கள் கிழித்து, புனிதமான கலசநீரைச்சொரிந்து தருப்பையையிட்டுப் பாத்திரங்க ளெல்லாவற்றையும் புனிதமாக நீராலலம்பிவிட வேண்டியது. சூரியகாந்தக் கல்லானது கக்கிய அக்கினியையாவது அரணியிற்பிறந்த அக்கினியையாவது வேதியர்விட்டிற் சனித்த அக்கினியையாவது புனித மான அகலிற்றுங்கிவந்து, நியமித்துள்ள ஓமகுண்டத்தை மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து, அவ்வக்கினியைக் குண்டத்திற் பெய்து,தன்மனதிற் பொருந்திய அக்கினியையுமெடுத்துக் குண்டத்திலிட்ட அக்கினியோடு சேர்க்கவேண்டும். மேற்சொல்லிய அக்கினி மூன்றிற் சூரியகாந்தக்கல்லி னின் றுதித்தது உத்தமமென்றும்,அரணியினின்று தோன்றியது மத்திப மென்றும், அந்தணர்விட்டிற் பிறந்தது அதமமென்றுங் கொள்க. அவ் வகைய அக்கினியிற் சிவபெருமானை மூலமந்திரத்தா லருச்சித்து,தன்வலப் பக்கலில் நெய்வார்த்து வைத்திருக்கும் பாத்திரத்தை யமர்த்தி, மந்திர மோதித் தேனுமுத்திரையைக் காண்பித்து, பொன் வெள்ளி இரும்பு ஈயம் செம்பு முதலியவற்றாலாவது, யாகத்திற்குச் சொல்லிய மாவிலை பலாசிலை யாலாவது அழகுறச்செய்த சுருக்கு சுருவங்களைக் கைக்கொண்டு, தீயிற் காய்ச்சித் தருப்பையாற் றுடைத்து நீரைப்புரோக்ஷித்துச்சிவாக்கினியைச் சூழ நீரொழுக்கி, சிவநாமங்களெட்டையு முச்சரித்து, நீயே யுண்பவனெ ன்று ஆகுதிசொரிந்து, அக்கினிதேவனுக்கு அவிசுகொடுக்கவேண்டும். மீண்டும் அக்கினிமத்தியிலே ஆகுதிகொடுத்து நீரைச்சூழச்சொரியவேண் டும். அவ்வாறுசெய்தால், அது சிவாக்கினியாகும். அச்சிவாக்கினியிலே உமாசமேதனாகிய சங்கரபகவான் எழுந்தருளியிருப்பதாகக் கருதிப் புஷ் பாஞ்சலி சமர்ப்பித்துத் தூபதீபங்கள்காட்டி நீரைப்புரோக்ஷித்து, ஒரு சாண் நீளமுடைய பலாசஞ் சமிதையையிட்டுப் பசுநெய்யைப் பெய்து அன்னத்தையுமெடுத்திட்டு, பொரி எள் யவை கடுகு பசுநெய்தோய்த்த நல்ல அப்பம் முதலியவற்றால் ஆகுதிசெய்யவேண்டும்.ஓமஞ்செய்கையில் சுருவத்தாலே நெய்யையும் கையினாலே சமிதையையும், சுருக்கினாலே மற்றெல்லாவற்றையும் ஆகுதிசெய்வது முறையாகும். மேற்கூறியவை யாவும் அருமையாயிருப்பின் ஒன்றாலேயே யாகுதிசெய்யலாம். பின்னர், இவ்வோமத்திற் சம்பவித்த குற்றங்குறைபாடுக ளெல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளவேண்டுமென க்ஷமாபணஞ் செய்து, நெய்யினாலே மும்முறை ஆகுதிசெய்து, வாசந்தங்கிய மலரைச் சுருக்கில் வைத்து நெய்

பெய்து அதனைச் சுருவத்தால் மூடிக்கொண்டு அவ்வோமத்திற் பெய்யவேண்டும். பின்னர் நீராற்சுற்றிச் சந்திரசேகராகிய சிவபெருமானை விசர்ச்சனஞ்செய்துவிட்டு, சிவாக்கினியைத் தன் நாபியிற் புகுத்தவேண்டும். அல்லது அவ்வக்கினியைக் கொண்டுவந்து, சந்திரன்போன்ற நெற்றியையும் நீலோற்பல மலர்போன்ற கண்ணையுமுடைய வாகீசுவரி அதனை வயிற்றுட்கொண்டனளென்று கருதிக் குண்டத்திலிட்டுயாககுண்டத்தின் நாற்புறத்து மேகலையிலுஞ் சமித்துகள் பாய்த்தி, பாத்திரத்திலே நீர்பெய்து தூரமாக வைத்து, வேறோர் பாத்திரத்தை வைத்து அதில் நெய்யைநிரப்பிச் சுத்திசெய்து, பின்னர், சுருக்கு சுருவங்களைச் சுத்திசெய்து, கர்ப்பாதானம் சீமந்தம் இவற்றிற்கு ஓமஞ்செய்து அக்கினி பிறந்ததாகச் சிந்தனை செய்யவேண்டும். அவ்வாறு தோன்றிய அக்கினிக்கு மூன்று கால்களும், ஏழுகைகளும், இரண்டு சிரங்களும் நான்கு கொம்புகளும், ஆறு செங்கண்களும், சடைமுடியும், அதன்மேற் சந்திரதாரணமும், ரக்த வஸ்திரமும், முஞ்சிப்புல்லாலாகிய உபவீதமும், வலக்கரங்களில் வேல் அக்கினி சுருக்கு சுருவங்களும், இடக்கரங்களில் வல்லயம் ஆலவட்டம் நெய்பெய்வட்டிலும் பெற்றுவிளங்குவதாக மனதிற்கொண்டு விதிமுறையே சாதகருமஞ்செய்து பெருஞ்சிறப்புடைய சிவாக்கினியாக்கி, அதிலே மந்திரங்களைச் சொல்லி ஆகுதியளிக்கவேண்டும். அதன் பின்னர், பேரழகுடையு வாகீசுவரியையும் அவளோடுடனுறையும் வாகீசுவரனையும் விசர்ஜனஞ்செய்து சவுளம்உபநயனம்திருமணம்யாகமுதலியவற்றையெல்லாம் முறைப்படிசெய்து நீராற்சுற்றி, பிரமன் விண்டு உருத்திரன் ஈசுவரன் திக்குப்பாலகர்களின் ஆயுதங்களைத் தியானித்துப் பூசைசெய்து, சிவாக்கினி மத்தியில் ஆசனமொன்றைத் தியானித்து அதிற் சிவபெருமானையும் உமாதேவியையும் ஆவாகனஞ்செய்து வாசந்தங்கிய மலர்களா லர்ச்சித்துப் பூர்ணாகுதிசெய்யவேண்டும். அல்லது அவ்வவ் வாச்சிரமி தத்தமக்கியன்ற வகையுஞ் செய்யலாகும்.

கபிலைப் பசுவின் சாணத்தைக் கீழேவிழாமற் கையிலேந்தி யாகாக்கினியில் அல்லது சிவாக்கினியில் அல்லது* ஔபாசன அக்கினியில் வேகவைத்து அது நீறான பின்னரெடுத்துப் பொன்வெள்ளி தாமிரம் மரம் மண் இவற்றுளொன்றாற் செய்த பாத்திரத்தில் வைத்துக்கொண்டு புனிதனாகவிருந்து அதனை யணியவேண்டும். புனிதரல்லாதவர்கட்குத் திருநீற்றினைக்கொடுக்கக்கூடாது. தன்னிடத்திலுள்ளதிருநீற்றைப்பொருளைப்போலப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது. நெடுந்தூரஞ்சென்ற காலத்திலுந் திருநீற்றையுடன்கொண்டு செல்வது தகுதி. சிவஹோமஞ்செய்து முடிந்தபிறகு பலியிட்டுப்பின்னர்,சிவசாஸ்திரத்தைப் பூசித்துமண்டலமெழுதிக் குருவை மனதிற் பாவனைசெய்து பூசைபுரிந்து,பெரியோர்களையும் அதிதிகளையும் பூசித்து, சிவபெருமானுக்கு நிவேதித்த அன்னத்திற் சண்

* ஔபாசனம் - வைதிகச்சடங்கு.

டேசனுக்கு நிவேதனஞ்செய்யாத உணவையுட்கொண்டு பாவத்தை யகற்ற வேண்டுமென்று சிவாகமங்கள்முறையிடுகின்றன. அவ்வாறு புசித்தபிற்கு கைகளைச் சுத்திசெய்து ஆசமனமுடித்து, பெரியோருடன் அளவளாகிச் சைவநூல்களைப் பாராயணஞ்செய்து, சூரியன் மேற்கடலிற் சங்கமமான பிறகு சிவபெருமானையும் உமாபிராட்டியையும் மீண்டும் பூசித்து அவ்விருவர்க்கும் புஷ்பசயனமளித்து அவர்கள் பாததாமரையிலே ஐம்புலன்களை யொடுக்கித் துயில்புரியக்கடவன். துறவியன்றி இல்வாழ்வோனாயின் தன் மனைவியுடன் துயில்புரியக் கடவன். அவ்வாறு துயின்றவன் சூரியோதயத்திற்கு முன்னரே துயிலொழிந்தெழுந்து சிவபெருமானையும் உமாதேவியையும் மனதிற் றியானித்துக்கொண்டு புறத்தேசென்று காலைக் கடன்கழித்து ஸ்நானஞ்செய்து சங்கம் தாளம் மத்தளமுதலிய வாத்தியங்களொலிக்கச் சிவபெருமானையும் உமாபிராட்டியையும் பணிந்து துதிசெய்து துயிலெழுப்பிப் பூசைசெய்யவேண்டும். இவ்வாறாகவே சிவஹோமந் தினந்தோறுஞ் செய்யத்தக்கதென்றறியக் கடவாய்.

சிவஹோம முரைத்தது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

மாஹபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

உபமந்யு முனிவர் கிருஷ்ணமூர்த்தியை நோக்கிச் சொல்லுகின்றார்: கிருஷ்ண! இத்தகையினர் செய்யத்தக்க கருமங்கள் இன்னுஞ் சிலவுள. அவற்றையுமெடுத்துச் சொல்லுகின்றேன். மாசந்தோறும் வருகின்ற அஷ்டமி சதுர்த்தசி அமாவாசியை பூரணை உத்தராயன தக்ஷிணாயனங்கள் சூரிய சந்திர கிரஹணகாலங்கள் சித்திரை யைப்பசி சேர்காலங்கள் ஆகிய இக்காலங்களிற் சர்வேசுவரனாகிய சிவபிரானுக்கு அன்புடன் பிரமகூர்ச்சத்தா லபிடேகித்துப் பூசைசெய்து பின்னர்ப் புசிக்கவேண்டியது. தைமாசத்தில் வரும் பூசநக்ஷத்திரத்திலே நீராசனமும், மாசிமாசத்தில் வரும் மகநக்ஷத்திரத்திலே கிருதகம்பளமும், பங்குனிமாசத்தில் வரும் உத்திர நக்ஷத்திரத்திலே திருவிழாவும், சித்திரைமாசத்தில் வருஞ் சித்திரை நக்ஷத்திரத்திலே திருவூஞ்சலும், வைகாசி மாசத்தில் வரும் விசாக நக்ஷத்திரத்திலே மலர்ப்பந்தரும், ஆனிமாசத்தில் வரும் மூலநக்ஷத்திரத்திலே சீதகும்பமும், ஆடிமாசத்தில் வரும் உத்திராட நக்ஷத்திரத்திலே பவித்திரோற்சவமும், ஆனிமாசத்தில் வரும் அவிட்ட நக்ஷத்திரத்திலே மண்டபபூசையும், புரட்டாசி மாசத்தில் வரும் பூராட நக்ஷத்திரத்திலே தெப்பவுற்சவமும், ஐப்பசி மாசத்தில் வரும் அசுவினி நக்ஷத்திரத்திலே புதிய பாற்சாத நிவேதனமும், கார்த்திகை மாசத்தில் வருங் கார்த்திகை நக்ஷத்திரத்திலே எண்ணிறந்த தீபங்களும், மார்கழி மாசத்தில் வருந் திருவா

திரை நக்ஷத்திரத்திலே பசுநெய் முதலியவற்றால் விசேடமாகத் திருமஞ்சனமுஞ் சிவப்பிரீதியாகச் செய்யவேண்டியது.

கிருஷ்ணு! மேற்கூறிய வகையே சிவதருமங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள் தாம்பெற்றுள்ள ஒரே பிறவியிற் பிறவித் துன்பத்தையொழித்து மோட்சவீட்டை யடைவார்கள். இங்குக்கூறிய வகையிலே முக்காற்பங்கினைச் செய்தவர்கள் சிகண்டனுலகத்தை யடைந்து, நூறுகோடி கற்பகாலம் வாழ்ந்திருந்து மீண்டும் உமாதேவி யுலகத்திலும், முருகக்கடவுளுலகத்திலும், உருத்திரனுலகத்திலும், விஷ்ணுலோகத்திலும், பிரமலோகத்திலும் முறையே வசித்து மீண்டுஞ் சிகண்டனுலகை யடைந்து அழியாதசிவபதத்திற் சேர்வார்கள். மேற்கூறியவற்றில் அரைப்பங்கினைச் செய்தவர்கள் இவ்வுலகங்களிலெல்லாம் வசித்து இருமுறை பூமியிற் பிறந்து ஞானவான்களாய்ச் சிவபெருமானுடைய திருவடித் தாமரையைச் சேர்வார்கள். மேற்கூறியவற்றிற் காற்பங்கினைச் செய்தவர்கள் பிரமாண்டத்தின் உள்ளும் புறமுமுள்ள உலகங்களிற் புருடபதத்திலே உருத்திரபதவி யடைந்து வாழ்ந்து பூலோகத்திலே யாவருந் துதிசெய்யத்தக்க குலத்திலேபிறந்து ஞானவான்களாய்ச் சிவதருமத்தை யியற்றி, உருத்திரபதவியடைந்து வித்தியேச்சுரர்களாய் அண்டத்தின் அகத்தும் புறத்துஞ் சிலகாலம் பொருந்திச் சிவஞானமுற்றுச் சிவபெருமானுடைய திருவடிநிழலை யடைவார்கள். விஷயவாதனையிற் படாது எக்காலத்திலுஞ் சிவபக்தியையுடையவர்கள் சிவதருமத்தைச் செய்தாலுஞ் செய்யாதிருந்தாலும் உமாசமேதனாகிய சிவபெருமானுடைய திருவடியைச் சேருதல் சத்தியம். உண்மையாகவே நன்மையை விரும்பினவர்கள் சிவதருமங்களைச் செய்யவேண்டுமென்று உபமந்யு முனிவர் கிருஷ்ணமூர்த்திக்குரைத்தருளினர்.

மாஸபூஜாவிதியுரைத்தது

முற்றிற்று.

இருபத்துமூன்றாவது
காமியகன்மபலமுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணபகவான் உபமந்யு முனிவரை நோக்கி, ஸ்வாமீ! குற்றமற்ற காமியகருமங்களும் அவற்றின் பலன்களும் இவையெனக்கூறியருளவேண்டுமெனக்கேட்க, தவச்செல்வராகிய உபமந்யுமுனிவர் சொல்லத்தொடங்கினார்: கிருஷ்ணு! காமிய கர்மங்களிற் சில பூமியிலேயே பலனைக்கொடுக்கும். சில கர்மங்கள் தேவலோகத்திலேயே பலனைக்கொடுக்கும். சில கர்மங்கள் பூமியிலேயுஞ் சுவர்க்கத்திலேயும் பலனைக்கொடுக்கும். காமிய கர்மங்கள் ஐவகைப்படும். அவற்றுள் ஒன்று கிரியாமயமும், ஒன்று தவமயமும், ஒன்று ஜபமயமும், ஒன்று தியானமயமும், ஒன்று மேற்கூறிய

நான்கின் மயமுமாம். அவ்விருதியிற்கூறிய நான்கின் மயமுமாகிய இம்மைப்பலனையும் மறுமைப்பலனையுங் கொடுக்கக்கூடிய அதனைவிரித்துச் சொல்கின்றேன் : அது சைவர்களாலும் மகேச்சுரர்களாலும் அந்தர்முகத்திலும் பகிர்முகத்திலுஞ் செய்யப்படும். சைவர்கள் மாநசிகமாகப் பூசைசெய்வார்கள். மகேச்சுரர்கள் புறத்திலே பூசைசெய்வார்கள். அஃதெங்ஙனமெனின், பூமியைச் சாணங்கொண்டுமெழுகி, அழகிய மலர்கள்பட்டு முதலியவற்றால் மேலேவிதானங்கட்டி, இரத்தினப்பொடிகளாற் கமலம்போலச் சித்திரித்து, அதன் அஷ்டதளங்களில் முறையே அஷ்டசித்திகளையும், அகவிதழ்களெட்டில் வாமைமுதலிய சத்திகளுடன் சேர்ந்து வசிக்கும் வாமதேவாதி அஷ்டருத்திரர்களையுங் கிழக்குமுதல் வடகிழக்கீறாகிய எட்டுத்திக்குகளிலும் முறையே பூசைசெய்து, அத்தாமரைப் பொகுட்டில் வைராக்கியத்தையும், விதைகளில் வேல்போலும் விழியையுடைய நவசத்திகளையும், கிழங்கிற் சிவகர்மத்தையும், நாளத்திற் சிவஞானத்தையுந் தியானஞ்செய்து பூசித்து, சூரிய சந்திராக்கினி யென்னும் பிரகாசம்பொருந்திய மும்மண்டலங்களையும், சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆன்மதத்துவ மென்பனவற்றையும் பொகுட்டின் மேலாகக் கருதித்தண்ணிய மணமமைந்த மலர்களா னருச்சித்து நன்றாகப் பக்திபூர்வமாகப் பூசைசெய்து, பரமாகாசத்திலே வித்தியாமயமான ஆசனத்தை விதிப்படி பூசித்து அவ்வாசனத்திலே சுத்தஸ்படிக நிறமும் திவ்விய தேஜசும்பெற்று, பிரகாசிக்கின்ற மின்னலைப்போல விளங்குஞ் சடைமுடியும் புலித்தோலுடையும் சிங்கத்தோற் போர்வையும் புன்சிரிப்பும் செந்தாமரை மலர்போன்ற திருவடியுந் திருக்கரமுங்கொண்டு, நானாவிதரத்தினுபரணங்களும் சர்ப்பாபரணங்களு மணிந்து, வாசமூட்டிய சந்தனக்குழம்பணிந்து சந்திரனைச் சிரோமாலையாகச் சூடி, ஐந்து திருமுகங்கள்கொண்டு, அவற்றுள் சூரியனைப்போற் பிரகாசிக்குங் கீழ்முகமுங் கடலைப்பருகி யெழுந்த காளமேகம்போன்று வக்கிரதந்தம் வாய்ந்த தென்முகமும், பூர்ணசந்திரன்போன்று விளங்கும் மேன்முகமும், கடலிற்றேன்றிய பவளநிறத்ததாய் விளங்கும் வடமுகமும், ஸ்படிக நிறம்பொருந்திய உச்சிமுகமும், அம்முகங்களொவ்வொன்றினுந் திரிநேத்திரங்களும் விளங்கவும், பத்துத் திருக்கரங்கள்கொண்டு அவற்றுள் வலப்புறத்திற் சூலம் மழு வச்சிரம் வாள் அக்கினியென்னும் ஐந்துமேற்ற வலக்கரமைந்தும், இடப்புறத்திற் பாம்பு நாராசம் மணி பாசம் அங்குசமென்னும் ஐந்துமேற்ற இடக்கரமைந்தும் விளங்கவும், முழங்கால்வரையில் நிவிர்த்திகலையும், நாபிவரையிற் பிரதிஷ்டாகலையும், கழுத்துவரையில் வித்தியாகலையும், நெற்றிவரையிற் சாந்திகலையும், சிரம்வரையிற் சாந்தியதீதகலையுமாகவும், முடி ஈசானமாகவும், முகந் தற்புருஷமாகவும், இதயம் அகோரமாகவும், குய்யம் வாமதேவமாகவும், திருவடிகள் சத்தியோசாதமாகவும் விளங்கிய மூர்த்தியாய், முப்பத்தெட்டுக் கலைகளின் வடிவமாய், மாதிருகை யுருவமாய், பஞ்சப்பிரமமயமாய், குடிலாமயமாய், பஞ்சாக்ஷர சொரூபமாய்,

சடக்ஷர சொரூபமாய், ஷடங்கமயமாய், யாவர்க்கும் அடைதற்கரிய பொருளாய், மலர்மணநிறைந்த கூந்தலையும் வாள்போன்ற விழியையு முடைய இச்சாசத்தியைத் தன் துடைமிசையிருத்தி, வலப்புறத்தில் ஞானசத்தியையும் இடப்புறத்திற் கிரியாசத்தியையுமமர்த்தி, திரிதத்துவ ஸ்வரூபியாய், வித்தியாமயமாய் விளங்குஞ் சதாசிவப் பிரமம் எழுந் தருளி யிருப்பதாகத் தியானித்துப் பராசக்தியோடு அப்பீடத்தில் ஆவாகனஞ்செய்து வலப்புறத்தில் விநாயகக்கடவுளையும் இடப்புறத்தில் குமாரக்கடவுளையும் பூசைசெய்து, மனதைப் பஞ்சேந்திரியங்களின்வழியே விடய வாதனையிற் செல்லவிடாது ஒரேமனதாய்ப் பஞ்சப்பிரமங்களை யும் பராசத்தியுடன் பூசைசெய்து ஷடங்கங்களையும் பூசைசெய்து, வாமை முதலிய சத்திகளுடன்கூடி விளங்கும் வாமதேவன் முதலிய அஷ்டருத் திரர்களையும் மலர்கள்தூவிப் பூசைசெய்யவேண்டும்.

இரண்டாவது ஆவரணத்திலே, அநந்தன் சூக்ஷமேசன் சிவோத் தமன் ஏகநேத்திரன் ஏகருத்திரன் திரிமூர்த்தி சீகண்டன் சிகண்டீசன் என்போரைச் சத்திகளுடன் அஷ்டதளங்களிலும் முறையே பூசைசெய்ய வேண்டும். மூன்றுவது ஆவரணத்திலே பவன் சர்வன் ஈசானன் உருத் திரன் பசுபதி உக்கிரன் வீமன் மகாதேவன் இவர்களைச் சத்திகளுடன் எட்டுத்திக்குகளிலும் பூசைசெய்து, மாதேவன் சிவன் உருத்திரன் சங் கரன் நீலலோகிதன் ஈசானன் விசயன் வீமன் தேவதேவன் பவோற் பவன் கபாலீசன் என்போரைச் சத்திகளுடன் பூசைசெய்து, பின்னர் இடபம் நந்தி மஹாகாளன் சாத்தன் சத்தகன்னியர் விநாயகன் முருகன் சேட்டை கவுரி ஜண்டன் ருஷபமுனி பிங்கலன் பிருங்கீசன் வீரபத்திரன் வாணி திருமகள் மோகினி இவர்களையுந் தான்செய்த பாவமகலப் பூசை செய்து, உருத்திரர்களையும் பிரமத கணங்களையும் பூதகணங்களையுஞ் சத்தி யுடன் பூசைசெய்து, உமாதேவியின் சேடியரையும் பூசிக்கவேண்டும். நான் காவது ஆவரணத்திலே சூரியனையும் பிரமதேவனையும் உருத்திரனையும் விண்டுவையும் ஆவரணத்துடன் இந்தச் சரீரத்துயரகலப் பூசைசெய்ய வேண்டும். ஐந்தாவது ஆவரணத்திலே சூலம் வச்சிரம் மழு கணை வாள் பாசம் அங்குசம் பிநாகவில் இவற்றைப் பூசித்து, வடுகக்கடவுளையும் இடபதேவரையும் பூசைசெய்து, பகர் கேசரர் ருஷிகள் சித்தர்கள் தயித் தியர்கள் அரக்கர்கள் யக்ஷர்கள் அஷ்டமாநாகங்கள் இடாகினிகள் பூதங் கள் வேதாளங்கள் வயிரவர்கள் பாதாளவாசிகள் நதிகள் சமுத்திரங்கள் பர்வதங்கள் நீர்நிலைகள் பசுக்கள் பக்ஷிகள் தாவரங்கள் கிருமிகீடங்கள் மனிதர்கள் மிருகங்கள் பிரமாண்டத்தினுள்ளும் புறம்புமுள்ள புவனங்கள் புவனபதிகள் அண்டங்கள் பத்துத்திசைகள் அவற்றிலுள்ள ருத்திரர்கள் முதலிய சித்தும் அசித்துமாகிய யாவுஞ் சர்வேசனாகிய சிவபெருமானைத் தியானித்துக் கைகுவித்து, எம்பெருமானே! எமது தேவனே! அருள் அருள்! ஜய ஜயவென்று துதித்துப்பொருந்துவனவாகத் தியானித்துப்

பக்திபூர்வமாக விதிப்படி பூசைசெய்து, அத்தனே! அண்ணலே! அடியேன் பூசையிற்றவறிய குற்றங்களைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து மீண்டும் பூசைசெய்து ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தைச் சபித்து, ஷட்ரஸோபேதமான உணவாதிகளைச் சிவபிரானுக்கு நிவேதித்து, தாம்பூலம் நீராஜன முதலியவற்றை யளித்து ஓமஞ்செய்து பூசையைமுடித்து, சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து, வித்தியா பூசைசெய்த் பின்னர், குருபூசையும் பெரியோர் பூசையுமுடித்துச் சிவ பெருமானை விசர்ச்சனஞ்செய்து, பூசையிற்சேர்த்த பொருள்களெல்லா வற்றையுஞ் சிவபக்தர்களுக்கு விநியோகஞ் செய்யவேண்டும்; அல்லது அப்பொருள்களைச் சிவப்பிரீதி செய்யலாம். இவ்வகைய பூசையை மகேச்சுரமெனப் பெரியோர்கள் கூறுவார்கள். கிருஷ்ணா! சிந்தாமணிபோல எண்ணியவற்றையெல்லாங் கொடுக்கத்தக்க இந்தப் பூசையை உயர்பொருளை விரும்பியே செய்து, எந்தையே! அதனை யளிக்கவேண்டுமெனக் கூறிச் செய்க. இப்பூசையானது கைகூடத்தக்க தோத்திரமொன்றுள்ளது. அது தான் இப்பூசையைக் கைகூட்டிப் பலனளிக்கவல்லது. அது மாஸோபவாசமிருந்து துதிசெய்த மாத்திரத்தில் விரும்பிய பலனை யளிக்குமென உபமந்யுமுநிவர் கூற, குவலயாபீடமென்னும் யானையைச் சங்கரித்த கிருஷ்ணபகவான் அதனைக் கூறியருளவேண்டுமென வேண்ட உபமந்யு முநிவர் கூறுகின்றார்.

காமியகன்மபல முரைத்தது

முற்றிற்று.

இருபத்துநான்காவது

ஸ்தோத்திரமுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணா! நான் சொல்வதை மிகவுங் கவனமாகக் கேட்பாயாக: எல்லாவுலகங்கட்குந் தலைவனே! ஞான சொரூபியே! முதற்காரணனே! திரிகரணங்கட்கு மெட்டாதவனே! சக்திபாகனே! குணரகிதனே! தேவதேவனே! உனக்கு ஜயமுண்டாகுக. சமானரகிதனே! எண்ணற்கரியவனே! முழுமங்கலஸ்வரூபியே! தாணுவே! காரணரகிதனே! பரமானந்த ஸ்வரூபியே! ஆனந்தகாரணனே! ஈசுவரனே! தலைவனே! திருவருள் ஸ்வரூபனே! உனக்கு ஜயமுண்டாகுக. சர்வாண்டங்களிலும் வியாபித்து விளங்குபவனே! எல்லாவற்றிற்கும் மேலானவனே! உனக்கு மேலாயொன்று மில்லாதவனே! அழிவில்லாதவனே! உற்பத்தியில்லாதவனே! மாயாதீதனே! இந்தப் பூசையை அடியேன் செய்ததனாலுண்டாகிய பலனை எளியேன் அடையும்படி திருவருள் செய்யவேண்டும். உலகங்களெல்லாவற்றிற்குந் தாயாகியுள்ளவளே! உலகஸ்வரூபியானவளே! பேரழகுடையவளே! மனதிலுண்டாகும் அஞ்ஞானத்தை யொழிப்பவளே! எல்லாச்சமயங்கட்குந் தலைவியே! குணஸ்வரூபியே! நிர்குணஸ்

வருபியே ! ஞானிக ளிதயத்திலெழுந்தருளி யிருப்பவளே ! ஜய ஜய. சர்வ லோகங்கட்குந் தலைவனாகிய சிவபெருமானுடைய மனைவியாக விளங்குப வளே ! தேவர்முதலிய யாவருந் துதிசெய்யப் பெற்றவளே ! உலகத்தைச் சிருட்டிசெய்பவளே ! மங்கலங்களை யெல்லாம் உண்டுசெய்பவளே ! உன்னுடைய திருவடியை எனதிதயத்திலிருத்தி என்னாவாற்றுதித்து, என்சிரத்தாற் பணிகின்றேன். தேவியே ! உன்னிடத்திலேயே சர்வாண்டங்களும் உதிக்கின்றன. உன்னிடத்திலேயே சர்வாண்டகளும்லயமடைகின்றன. சூலாயுதமேந்திய எந்தையாகிய சிவபெருமானுன்னையன்றிப் பலனளித்தலில்லையாதலின் அண்டகோடிகளிலுள்ள ஆன்மாக்கள் யாவும் உன்னுடைய திருவடியைப் பணிசெய்யும். உன்னுடைய திருவருளை யெனக்குப் பிரசாதிக்க வேண்டும். ஐந்து திருமுகங்களும் பத்துத்திருக்கரங்களும் படிகநிறமுமுடைய அக்ஷரரூபியும் பிரமரூபியுங் கலாரூபியுமாகிச் சகளநிஷ்கள வடிவமைந்த சிவமாய், சாந்தியதீதத்திலமர்ந்தருளிய சதாசிவமூர்த்தி நன்றாகத் திருவருள் புரிவாராகலின், அப்பெருமானுடைய திருத்தொடையின் மேல் இச்சாசத்தி வடிவாகப் பொருந்தி எல்லாவற்றிற்குந் தாயாகியுள்ளவளே ! என்னைப் பாவமானது சேராதவகையாக விலக்கி அழியாத உயர்பதவியைக் கொடுத்தருளவேண்டும். சடாமுடியுடைய சங்கரபகவானும் பர்வதராஜ புத்திரியாகிய உமாபிராட்டியும் அன்புடையவர்களாய்த் திருவாய்மலர்ந்தருளுஞ் சிவஞானமாகிய இனிய அமுதத்தை யருந்தும் பிரமதேவனுந் திருமாலும் பணிந்து துதிசெய்ய விளங்கும் விநாயகக்கடவுளும் முருகக்கடவுளும் எனக்குத் திருவருள் புரியவேண்டும்.

ஒளிவிளங்கும் ஸ்படிக நிறமுற்று அடியார்கள் துதியையே யாபரணமாக வேற்குஞ் சதாசிவ வடிவாய், பாலசூரியன்போலு நிறமமைந்த பகவன் சிரோமூர்த்தியாய்க் கூறப்பட்டு, சாந்தியதீத பதமாய், விண்ணிடைப் பொருந்தி அளவிடற்கரிய பஞ்சாக்ஷரங்களில் இறுதியிலுள்ள யகாராக்ஷரமாகி ஐந்து கலைகளுடன்கூடி அறிதற்கரியதாய் விளங்கும் ஈசானப்பிரமம் உமாதேவியுடன் அடியேன் பூசைசெய்ததற்குத் திருவுளமிரங்கி, என் பாவங்களை யகற்றியருளவேண்டும். பாலசூரிய வடிவமாகி விளங்கித் தண்ணருள்புரியுஞ் சிவபெருமானுடைய கீழ்முகமாகி, சாந்திபதமாய் ஆன்மாவாய் வாயுவில் வசிப்பதாய், பஞ்சாக்ஷரங்களில் நான்காவதாகிய வாகாராக்ஷரமாய் நான்குகலைகளுடன்கூடி யமர்வதமாய் விளங்குந் தற்புருஷபிரமம் நெடிய கண்களையுடைய உமாதேவியுடன் கூடி அடியேன் மலர் தூவி யர்ச்சித்தபூசைக்கு மனங்களித்து என் மனமயக்கத்தை யறவே யொழித்து மகிழ்வுடன் திருவருள் செய்யவேண்டும். அஞ்சனகிரிபோன்ற ஆகாரமுடையதாய் ஈச்சுரனது தென்முகமாகிக்கொடுமைவாய்ந்த அகோரமூர்த்தியாய் வித்தியாபதமாய் அக்கினியிற் பொருந்தியதாய், பஞ்சாக்ஷரங்களில் மூன்றாவதாகிய சிகாராக்ஷரமாய் எட்டுக்கலைகளுடன் விளங்குவதாயுள்ள அகோரப்பிரமம் எளியேன் குற்றங்களை க்ஷமித்து, உமா

தேவியுடன் என்பூசையை மகிழ்ந்து என் பாவங்களை யொழித்துத் திருவருள் புரியவேண்டும். குங்கும நிறமுடையதாய் ஈச்சுரனது வடமுகமாய்ப் பிரதிஷ்டாபதமுடையதாய், ஜலத்தில் விளங்குவதாய், பஞ்சாக்ஷரங்களில் இரண்டாவதாகிய மகாராக்ஷரமாய், பதின்மூன்று கலைகளுடன்கூடி விளங்கும் வாமதேவப் பிரமம் உமாதேவியுடன் பொருந்தி, அடியேன் புல்லறிவாற் செய்த பூசைக்குமனங்களித்து என்பாவமாகிய கோடையைத் தணித்து அமுதமாரியைப் பெய்து என்னைக் கடைத்தேற்றவேண்டும். சங்கம்போலும் வெண்ணிறமுடையதாய்ச் சங்ககுண்டலங்களணிந்த சிவபிரானுடைய மேற்றிசைமுகமாய், நிவிர்த்திபதமுடையதாய், பூமியில் விளங்குவதாய், பஞ்சாக்ஷரங்களில் முதலெழுத்தாகிய நகாராக்ஷரமாகி எட்டுக் கலைகளுடன் விளங்குஞ் சத்தியோசாதப் பிரமம் உமாதேவியுடன் பொருந்தி யான் விதிமுறையே செய்த அர்ச்சனைக்கு அகமிக மகிழ்ந்து என் வினைச் சம்பந்தத்தை யொழித்துத் திருவருள் புரிந்து நல்லபலனைக் கொடுக்கவேண்டும்.

சிவபெருமானும் உமாதேவியுமாகிய விருவரும் எனக்கெப்போதும் நல்லபலனைக் கொடுப்பார்களாக. குற்றமில்லாத வரதாபயகரங்கள் நல்ல பலனை நாடோறும் அளிக்குமாக. அவ்விருவருடைய சிகைகள் யான் விரும்பியவற்றைக் கொடுக்குமாக. யாவராலுந் துதிசெய்யத்தக்க அவர்கள் கவசங்கள் குற்றமற்ற பலன்களை யுதவுக. அவர்கள் திருவிழிகள் வேண்டிய பலன்களைக் கொடுக்குமாக. அவர்கள் ஆயுதங்கள் நல்லபலனை யருள்புரிக. வாமதேவாதி அஷ்டருத்திரர்களும் தத்தஞ் சத்திகளுடன் சிறந்த பலனை யுதவுவராக. அநந்தனாதி அஷ்டவித்தியேச்சுரர்கள் சத்திகளோடு நற்பலனைக் கருணைபுரிக. பவன்முதலிய எண்மரும், மாதேவன் முதலிய பதினொருவருந் தத்தஞ்சத்திகளுடன் நல்லபலனை யருள்புரிக. இடபதேவன் என் எண்ணமுற்ற பலனையீக. நந்தி மகாகாளன் சாத்தன் சத்தகன்னியர் விநாயகன் முருகன் இவர்கள் உயர்பலனை யுதவுக. சேட்டை நல்லபலனைக் கொடுக்க. கணம்பிகை சதி மேனை பார்வதி உருத்திராணி மிக்கபலன்றருக. சண்டன் இடபன் பிங்கலன் பிருங்கி வீரன் இவர்கள் எனக்குமிக்க வல்லபத்தைத்தருக. கலைமகள் திருமகள் மோகினி துர்க்கை உருத்திரர்கள் பிரமதகணங்கள் பூதங்கள் உமாதேவியின்றோழிகள் உருத்திர கன்னிகைகள் சூரியன்முதலிய இவர்கள் ஆவரணத்துடன் நல்லபலனை விரைவிற் கொடுப்பார்களாக. பிரமதேவன் சூலப்படைதாங்கிய உருத்திரன் விஷ்ணுமுதலியவர்கள் தம்ஆவரணத்துடன் அழியாப்பலனைக் கொடுத்தருள்க. அவர்கள் தேவிமார் கெடாத பலத்தைக் கொடுப்பார்களாக. சநகாதி நால்வர்களும், தக்ஷன்முதலிய பதினொரு பிர்மாக்களும் நல்லபலனைக் கொடுப்பார்களாக. தர்மம் சங்கற்பம் வேதம் இதிகாசம் புராணம் சாஸ்திரங்கள் வித்தைகள் திசைகள் திக்பாலர்கள் சூலமுதலிய ஆயுதங்கள் ஆகாயத்திலுள்ள கோமாதாக்கள்

வடுகக்கடவுள் நான் விரும்பிய பலனைக்கொடுத்திடுக. அஷ்டவயிரவர்கள் யோகியர்கள் நாரதன் முதலிய முநிவர்கள் சாத்தியர்கள் தேவர்கள் கந்தர்வர்கள் அக்கினிக்கொழுந்துபோலுஞ் சிகையையுடைய பேய்களீறாகிய தேவயோனிகள் அசுரர்கள் அரக்கர்கள் நாகங்கள் கருடர்கள் இவர்கள் நற்பலனைக்கொடுக்க. கடல்கள் தீவுகள் நதிகள் ஓடைகள் மலைகள் காடுகள் பசுக்கள் பறவைகள் மரங்கள் கிருமிகள் புவனங்கள் புவனபதிகள் அண்டங்கள் அண்டத்தலைவர்கள் பலனைக் கொடுக்கவேண்டும். வர்ணங்கள் பதங்கள் மந்திரங்கள தத்துவங்கள் தத்துவங்களில் விளங்குந் தலைவர்கள் பிரமாண்டத்தைக் காக்கும் உருத்திரர்கள் சிவவித்தை சிவசாஸ்திரம் சிவதர்மம் சிவபுராணம்சிவாகமம்மேம்பட்ட பலனைக்கொடுக்கவேண்டும். சுவேதன்முதல் இலகுளீசனீறாகவுள்ள குரவர்கள் அவர்கள் புதல்வர்கள் சைவர்கள் மகேச்சுரர்கள் வேதியர்முதலிய வருணத்தவர்கள் சாங்கியமுதலிய சாஸ்திரத்தின் வழிபட்டவர்கள் இவர்கள் யாவரும் யான் சற்கருமஞ்செய்ய அருள்புரிவராக. சௌரமுதலிய மதங்களில் உள்ளவர்களும் உயர்ந்த சைவசித்தாந்த மார்க்கத்திலொழுகுபவர்களும், பாசுபதத்தில் இருப்பவர்களும், காபாலிகத்திற் பொருந்தினவர்களும் அடியேன் நற்கருமஞ்செய்யக் கிருபை புரிவார்களாக. உத்தரதக்ஷிண நெறிகளிலுள்ளவர்கள் ஞானத்தைக் கொடுப்பார்களாக. மோக்ஷலோகமும் ஈச்சுரனுமில்லையென்பவர்களும், செய்ந்நன்றிமறந்தவர்களும் பாஷண்டிகளும் என்னைச் சேராது அகல்வார்களாக. தகுதிப்பாடுடையவர்கள் அருள்புரிக. சத்துக்களானவர்கள் மங்கல வசனங் கூறுவர்களாக. உமாதேவியாரோடும் விநாயகக்கடவுளோடும் முருகக்கடவுளோடும் விளங்குஞ் சிவபெருமானே! திருவருள் புரிவாயாகவென்று மிகுதியாகத் துதித்து அன்புடன் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து துதிசெய்து பஞ்சாக்ஷரத்தைச் சபித்து, பிறகு உமாதேவியாருடைய மந்திரத்தையும் நன்றாகச் சபித்து, சிவபெருமானுடைய திருவடிக்குத் தன் பிராணனைச் சமர்ப்பித்து, அடியேன்தவறுற்ற குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று புஷ்பாஞ்சலிசமர்ப்பித்து க்ஷமாபணஞ்செய்து பூசையை முடிக்கவேண்டும். செய்ந்நன்றி கொன்றவர்கள் கோவதை செய்தவர்கள் மன்னனைக்கொன்றவர்கள் அடைக்கலம்புக்கவர்களை வதைத்தவர்கள் கர்ப்பஸ்திரீகளைக்கொன்றவர்கள் தாய்தந்தையரைக் கொன்றவர்கள் முதலிய பெரும்பாவிகள் இந்தத் தோத்திரத்தைப் பாராயணஞ்செய்தாலுஞ் சிரவணஞ்செய்தாலுந் தங்கள் பாவத்தையொழித்துப் பரிசுத்தர்களாவார்கள். இந்தத் தோத்திரத்தைப் படிப்பவர்கள் பூசைசெய்யாவிடினுந் தாம் அடையும் பலனையளவிட்டுச் சொல்லிமுடியாது. இந்தத் தோத்திரத்தை வாயாற்கூறுகைகையிற் சிவபெருமான் உமாதேவியோடும் பிரமதகண சமேதனாய் ஆகாயத்திலிருந்து களிகூறுவனாதலின் இந்தத்துதியை இடைவிடாது தியானஞ் செய்வதுசிறந்ததாமென்று உபமந்யுமுநிவர் கிருஷ்ணமூர்த்திக்குக்கூறினர்.

ஸ்தோத்திரமுரைத்தது
முற்றிற்று.

இருபத்தைந்தாவது

அக்கினிகாரியமுரைத்த அத்தியாயம்.

இவ்வகையாகத் துதிசெய்யவேண்டுமென்று உபமந்யு முனிவர் கிருஷ்ணபகவானை நோக்கிக்கூறி, நினைத்தவகையே நினைத்த இஷ்டசித்திகளைக் கைகூடச் செய்யும் பூசை ஓமம் செபம் தியானம் தவம் என்னுமிவற்றையும் உன்னிடத்துள்ள அன்பினாலே யெடுத்துச் சொல்கின்றேனென்று மேலுஞ் சொல்லத்தொடங்கினர்: தனக்குச் சம்பவிக்கத்தக்க எவ்வகை யிடையூற்றினையும் தன்னையடையாவண்ணமாகத் தடுத்து மந்திரசித்திபெற்று, செய்யத்தக்க கருமங்களைச் செய்யத்தொடங்கின தினமுதல் இறுதிபெறுமளவும் நன்றாக விளங்கிப் பிரமசரிய ஆச்சிரமமுடையவனாகவிருக்கவேண்டும். பகற்பொழுதில் ஒன்றும் புசியாதுபவாசமிருந்து இரவுவந்தவுடன் மாலைக்கடன் கழித்து, அவியுணவாவது கனிகளாவது புசித்து, கொலைமுதலிய பாவச்செயல்கள் புரியாதொழித்து, திருவெண்ணீற்றை யுடல்முழுதுஞ் சண்ணித்து, பூமியைக் கோமயத்தால்மெழுகி, மலர்விதானங்கட்டி, பசும்பொன்னாற் கமலஞ்செய்து அதனை அம்மெழுகிய தரையிலிருத்தி அக்கமலதளமெட்டிலும் அணிமாதியஷ்டசித்திகளைப் பூசித்து, அகவிதழ்கள்சூழ மேலெழுந்து பிரகாசிக்கும் பொகுட்டிலே படிகத்தாலாயினும் பொன்னாலாயினும் இரத்தினத்தாலாயினுஞ் சிவலிங்கமொன்றமைத்து அதிலெழுந்தருளச்செய்து, நான்கு திருமுகங்களும், மழு மான் அபயம் வரதந்தாங்கி விளங்கும் நான்குதிருக்கரங்களுங்கொண்டு எழுந்தருளி யிருப்பதாகத் தியானஞ்செய்க. அல்லது வலப்புறக்கரங்கள் நான்கில், சூலம் மழு வாள் வச்சிரமும், இடப்புறக்கரங்கள் நான்கிற் பாசம் அங்குசம் பரிசை நாகமுமேந்தி யெட்டுக்கரங்களுடன் விளங்குவதாகத் தியானஞ்செய்க. கீழ்முகம் முக்கண்களோடு சூரியன்போல விளங்கவும், தென்முகங் கருநெய்தல்போன்று திரிநேத்திரங்களோடும் விளங்கவும், வடமுகம் பவளம்போன்று திரிநேத்திரங்களோடும் விளங்கவும், மேன்முகம் பால்போன்று திரிநேத்திரங்களோடு விளங்கவும், சந்திரனைச் சடையிலணிந்து பொற்கொடிபோன்ற உமாதேவியைத் தன் றுடைமிசையமர்த்தி வசிக்கின்ற மஹேச்சுரனை இவ்வகையாகச் சிவலிங்கத்தி லெழுந்தருளி யிருப்பதாகத் தியானித்து, கபிலைப்பசுவின் பஞ்சகவ்வியத்தால் மந்திர பூர்வமாக அபிஷேகஞ்செய்யவேண்டும். இரத்தின சூர்ணத்தால் அஷ்டதள கமலமொன்றெழுதி அதன்பொகுட்டில் ஈசான கலசத்தையும் அதைச்சூழ்ந்த கிழக்குமுதலிய நாற்புற விதழ்களில் சத்தியோசாத முதலிய நான்கு கலசங்களையும் அமர்த்தி, எட்டுத்திசைகளில் அஷ்டவித்தியேசுர கலசங்களையுமமர்த்திப் பூசைசெய்து, நூல்சுற்றிக் குளிர்ந்த நீரைச் சொரிந்து தருப்பையிட்டுப் பட்டாடையுடுத்து விளங்குங் கலசங்களையெல்லாமெடுத்து முறைப்படி சிவலிங்கத்திற் கபிஷேகித்து, சந்தனமணிந்து பலமலர்கள் சாத்தி, அகிற்றூபமும், கர்ப்பூரதீபமுங் கொடுத்து,

சர்க்கரைகூட்டிய பாற்சோற்றை நிவேதித்து, நீராஜனஞ் சமர்ப்பித்து, பச்சைக்கர்ப்பூரம் ஏலமுதலியன கூட்டிய தாம்பூலமளித்து, இரத்தினாபரணங்களும் பீதாம்பரமுமணிந்து கீதங்களைப்பாடி முழவமுதலிய வாத்தியங்களை யொலித்து மங்கையர் நடனஞ்செய்ய இவ்வகையாகத் தினந்தோறும் பக்திபூர்வமாக ஒருமுறையே யல்லாமல் இருமுறையாவது, மும்முறையாவது பூசைசெய்யவேண்டும். அப்பொழுது ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை இலக்ஷமுறை ஜபித்தல் சிறப்புடைத்தென மேலோர் சொல்வார்கள்.

செக்கிறமுடைய அக்கினிகாரியஞ் செய்கையில், பகைவரைக் கொல்ல விரும்பினால் இருப்புச்சுருவை கொள்க. சாந்தி கர்மங்கள் செய்கையிற் பொற்சுருவை கொள்க. மரண பயத்தைப் போக்கவேண்டுமாயின் அறுகுடன் அன்னமும் பாலும் நெய்யுந் தேனுந் தோய்த்து அக்கினியிலோமஞ் செய்க. பிணிதவிர்க்க விரும்பின் எள்ளினாலும், வறுமையை விலக்கவேண்டின் நெய்யையும் பாலையும் தாமரைமலராலும் அக்கினியிற் சொரிக. வசியஞ்செய்யக் கருதிற் பிச்சிப்பூவினால் ஓமஞ்செய்க. எல்லோரையும் வணங்கச்செய்ய இச்சித்தால் அலரிப்பூவினாலே ஆகுதியைச் சொரிக. சத்துருக்களை ஊர்கடக்கவோட்ட வேண்டுமாயின் எள்ளெண்ணெயாலும், அவர்களை யடக்கவேண்டுமாயின் தேனினாலும் இறக்கச்செய்ய வேண்டிற் கடுகினாலும் உள்ளியினாலும், ஒருவரால் அடிபடச் செய்யவேண்டுமாயின் கழுதை ஒட்டகம் இவற்றின் உதிரத்தாலும் அக்கினியிலே ஆகுதிகொடுக்கவேண்டும். அடியோடு வீழ்த்தவேண்டினும் உயிரொழிக்கவேண்டினும் எள்ளாலும் விஷவித்துக்களாலும், பகைவர்கள் கலகப்படவேண்டின் தேங்காய் நெய்யாலும், தன்மேல் வந்து போர்புரியுஞ் சைநியத்தைச் சேரவொட்டாமல் அடக்கவேண்டிற் கடுகாலும், பகைவர்மேல் ஆபிசாரஞ் செய்யவேண்டிற் செக்கிலிட்டாட்டாத எள்ளெண்ணெய் உமி பருத்திவிதை கடுகு காரெள் இவற்றாலும் ஆகுதி செய்க. சுரபீடை யொழியவேண்டுகையிற் பாலினால் ஓமஞ்செய்க. பால் தயிர் நெய் தேன் யவை அரிசி சோறு முதலியவற்றால் நன்றாக ஓமஞ்செய்தாற் சித்திகளெல்லா முண்டாகும். வில்வத்தால் ஓமஞ்செய்தாற் சாந்தியும், வசியமும், நல்லபொருள்களும், பகைவரைத் தோற்கச்செய்யும் வெற்றியுமுண்டாகுமென்று நூலாராய்ச்சியுடைய பெரியோர்கள் சொல்வார்கள். மன்னவர் சிவனடியர் மாதர்கள் இவர்கள்பேரில் இந்த ஆபிசாரத்தைச் செய்தவன் அற்பாயசுடையவனாயிறந்து தீராநரகத்தை யடைவான். மேலே பூசித்தவற்றிற்குச் சொல்லிய பொன்முதலியவற்றாலான பொருள்களை யெல்லாந் தன்னாசிரியனுக்காவது சிவாலயத்திற்காவது கொடுத்துவிடவேண்டும். விதிமுறையாக ஓமஞ்செய்தவர்களுக்குப் பகைவரால் துயரும் மிருத்துவாற்பயமும் வறுமையால் இடுக்கணும் உண்டாகமாட்டா. அவர்கள் பெருஞ்செல்வர்களாவார்கள். அழ

இல்லாதவர்களாயினும் பேரழ கடைவார்கள். விருத்தர்கள் வாலிபர்களாவார்கள். தமக்குப் பகைவராயுள்ளோர் அடிமையாக அடங்குவார்கள். அவர்களைவிட்டுத் திருமகளுங் கலைமகளும் ஒருகாலத்திலும் பிரியமாட்டார்கள். அவர்கள் இசைவல்லவர்களாகவும், கூர்மையான புத்திமான்களாகவும் விளங்குவார்கள். விஷமும் அமுதமயமாகும். இனிவரப்போகிற சுகாசுகங்கள் யாவும் அவர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகப் புலப்படும். அஷ்டமகாசித்திகளுமுண்டாம். பலவிதமாக விரித்துச் சொல்வதிற் பயனென்ன? அவர்கள் விரும்பிய வெல்லாவற்றையும் விரும்பிய வகையே சிவகடாக்ஷத்தாற் பெறுவது சத்தியம்.

அக்கினிகாரிய முறைத்தது

முற்றிற்று.

இருபத்தாறுவது
சிவவிரதமுரைத்த அத்தியாயம்.

உயர்வாகிய மோக்ஷலோகத்திலே இச்சித்த பலன்களை யெல்லாங் கொடுக்கத்தக்க கருமமாகிய சிவவிரதத்தையுஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாகவென்று, பாஞ்சஜன்யமென்னுஞ் சங்கத்தையேந்திய கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, சந்திரசேகரனும் உமாசமேதனுமாகிய சங்கரபகவானைத் தியானித்து, வேதசாஸ்திரவன்மையுடைய உபமந்யு முநிவர் உரைக்கத் தொடங்கினர்: இதற்குச் சமானமானதும் மேம்பாடானதுமாக ஒரு கருமமுந் திரிகாலங்களிலுங் கிடையாது. செந்தாமரை மலர்மொட்டிலே யெழுந்தருளியுள்ள நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன் - பிரகாசிக்கின்ற சுதர்சனமென்னுஞ் சக்கிராயுதத்தால் அசுரர் துயரகற்றி இமையவரையும் மாநுடர்முதலிய யாவரையும் புரக்குந் திருமால் - திரிநேத்திரங்களையுடைய உருத்திரன் - இந்திராதி அஷ்டதிக்குப் பாலர்கள் - துதிசெய்யத்தக்க பிறதேவர்கள் - சூரியன் முதலிய நவக்கிரகங்கள் - வேதப்பொருளை யாராய்ந்து ஐயந்திரிபறத் தெளிந்த வசிஷ்டமுநிவர் முதலிய முநிவர்கள் - நம்மைமுதலாகவுடைய சிவபக்தர்கள் - நந்திசன் முதலிய சிவகணநாதர்கள் - பாதலலோகத்தில் வசிக்கும் அசுரர்கள் - அக்கினியைச் சிந்தும் நாகங்கள் - சித்தர்கள் - கந்தர்வர்கள் - யக்ஷர்கள் - அரக்கர்கள் - பூதர்கள் - பேய்கள் முதலானவர்கள் இக்கருமத்தை இனிதாகச்செய்து தங்கடங்கள் உயர்பதவிகளைப் பொருந்தி மனங்களித்து வாழ்கின்றார்கள். தேன்சொரியப்பெற்று இயற்கைமணங்கமழுங் கூந்தலையுடைய உமாதேவியோடுஞ் சிவபெருமானைச் சிவலிங்கத்திலே தியானித்து, வெண்சந்தனக்குழம்பு முதலியவற்றா லபிஷேகித்துத் தாவள்யமான புஷ்பங்களாலர்ச்சித்து, பொற்பொடி முதலியவற்றாற் கமலமொன்று சித்திரித்து, அதன் பொகுட்டிலே சந்தனத்தாற்செய்த சிவலிங்கமூர்த்

தியை யெழுந்தருளச்செய்து, தக்ஷிணதிசையில் அகிற்சந்தனமும், மேற்றிசையில் மனோசிலையும், உத்தரதிசையிற் சந்தனமும், கீழ்த்திசையில் அரிதாரமும் வைத்து, பட்டாடையணிந்து, தேன்சொரியும் வாசனைமிக்க நல்ல மலர்களைச்சாத்தித் தூபதீபங் கொடுத்து, முனைமுரியாத அரிசியாற் சுவைபொருந்தச் சமைத்த பாற்சோற்றை நிவேதனஞ்செய்து, பிரதக்ஷிணம் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, வேதவாக்கியங்களால் துதித்து, பூசையைமுடித்து, அப்பூசாத்திரவியங்களை யாசிரியனுக்காவது, சிவாலயத்திற்காவது பலன்பெறவேண்டுமென்னுங் கருத்தால், சிவலிங்கத்துடன் கொடுத்துவிடவேண்டும். இவ்வகையாகச் சிவவிரதமிருந்து பூசித்தவர்கள் தமது கொடிய பாவங்களொழிய உயர்ந்த சிவலோகத்தையடைந்து வாழ்வார்கள். சிவவிரதத்தின்றன்மையை உனக்கு எடுத்துச் சொன்னேன். இதனை நீ யெல்லோருக்குஞ் சொல்லப்படாது. இது சிவபக்தர்களுக்கே சொல்லத்தக்கது. நாம் அடையவேண்டிய பலன்கள் யாவுஞ் சிவலிங்கப் பிரதிஷ்டை யொன்றனாலேயே யடையலாகுமென்று உபமந்யு முநிவருரைத்து மேலுங்கூறலாயினர்.

சிவவிரத முரைத்தது
முற்றிற்று.

இருபத்தேழாவது
இலிங்கோற்பவமுரைத்த அத்தியாயம்.

௧ பிரமன் விஷ்ணு உருத்திரன் முதலிய பெருந்தேவர்கள் யாவருஞ் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த நல்லபலனால், தத்தம் உயர் பதவியிலே நிலைபெற்று விளங்குகின்றார்கள். சிவபெருமானும் ஒருகாலத்திலே கங்காதீரத்திற் காசிக்ஷேத்திரத்திலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதனைப்பூசித்து யாவரும் அவ்வாறுசெய்ய அதன்மகிமையை யுணர்த்தினர். இம்மைமறுமைப் போகங்களை விரும்பினவர்களில் யார் தாஞ் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யாதவர்கள்? என்று உபமந்யு முநிவர் கூறுகையிலே, இலிங்கமென்பது என்ன? அவ்விலிங்கத்திற் சர்வேசுவரன் எப்படிப் பொருந்தியுள்ளான்? இலிங்கபூசை யெவ்வாறு செய்வது? இவற்றையுங் கூறவேண்டுமெனக் கிருஷ்ணமூர்த்தி கேட்க, உபமந்யு முநிவர் சொல்லலாயினர் :

௨ கிருஷ்ண! அவ்வியக்தமென்றும், மூலப்ரகிருதியென்றும், மாயையென்றும் பலபெயர் புனைந்து சொல்லப்படும் அதினின்று சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தமென்று சொல்லப்படும் பரந்த உலகமானது ஜனித்தது. சதாசிவன் மகேச்சுரன் உருத்திரன் விஷ்ணு பிரமன் தோன்றினர். பூதங்கள் இந்தியங்கள் முதலியனவும் அவ்வியக்தத்திலேயே தோன்றியொடுங்கும். ஆனபடியாற் சிவபிரானே இலிங்கி. அவ்விறைவன் கட்டளையில்லா

மல் அவ்வியக்தமானது உலகைச் சிருட்டிசெய்யமாட்டாது. உலகமானது அவ்வியக்தத்தி லொடுங்குதலாலே அதனை இலிங்கமென்று சொல்வார்கள். இலிங்கமென்பதற்குப் படைப்பு காப்பு முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதென்று பொருள். இலிங்கத்தையே தலைவனாகவுடையவள் ஈசுவரியாவாள். சிவலிங்கத்தையுஞ் சிவசக்தியையும் மலர்தூவிப் பணிந்தவர்கள் மனமகிழ்ந் தருள்செய்யப்பெறுவார்கள். இதனை யறிதலே ஞானமாம். அவ்வகைய ஞானிக்குச் சரீரமில்லையாகும். இவற்றை நீ யறிந்துகொள்ளும்பொருட்டுக் கூறினேன். சிவாக்கினையினாலேயே உலகங்கள் யாவும் நிலைபெறும். அவையொருகாலத்திற் சிருஷ்டிக்குமுன்னர், சிவமாயையாலே மயங்கிச் சத்தசமுத்திரங்களு மொன்றுபட்டுக் கோத்துக்கொண்ட பிரளயப் பெருக்கிலே துயில்புரிந்துகொண்டிருந்த திருமாலைக்கண்ட பிரமதேவன் அவனுடைய மார்பிற்புடைத்தெழுப்பி, நீயாவன்? எனவினவ, திருமால் விழித்துக்கொண்டு, என்னைத் துயிலுணர்த்திய நீ யென்புதல்வன்! எங்கிருந்து வந்தனை? எனக்கூற, பிரமன் விண்டுவைநோக்கி, நீ யின்னும் நித்திரை தெளிந்திலை. தெளிந்திருப்பின் இவ்வாறு சொல்லமாட்டாய். குருவானவன் சிஷனைநோக்கி யுரைத்தல்போலக் கூறுவதென்ன? இவ்வுலகத்தை யானேபடைத்தேன். இவ்வுலகம் என்னைப்பணிய விளங்குவேன். யானே முக்கூறாகிச் சிருட்டி திதி சங்காரங்களைச் செய்கின்றேன். என்னைவிட உலகுக்கு வேறே கடவுளில்லையென, விட்டுணு பிரமனைநோக்கி நானே முத்தொழிற்கடவுள். நீ யென் மகனென, பிரமன் கோபங்கொண்டுற்றுப்பார்க்க, நாராயணனுங் கோபித்தனன். இவ்விருவருங் கோபத்தால் ஒருவரோடொருவர் போர்செய்தனர். அப்பொழுது அப்போரை யொழிக்கவேண்டி அவர்கட்கிடையே சிவபிரான் அடிமுடி தெரியாது அழற்பிழம்பாகச் சோதிலிங்கமாயினன். அதனைக்கண்ட விருவரும் இதன் அடிமுடியைக்கண்டவர் தலைவரெனத் தம்முட்டீர்மானித்துப் பிரமன் அன்னமும், நாரணன்பன்றியுமாகிச் சோதியின் முடியையும் அடியையுந் தேடலாயினர். அவர்களிற் பிரமன் அண்டமுகட்டைக் கிழித்துக்கொண்டு அநேகவாயிர வருஷங்கள் தேடியும் முடியைக்காணாது மனமயங்கிப் பூமியையடைந்து யாதுசெய்வதெனக் கருதியிருந்தனன். கரிய வராகவடிவேற்ற நாரணன் பாதலமேழுங் கடந்து அண்டப்பித்திகையின் அடியையுமுடைத்து அநேக ஆயிரவருஷங்கள் தேடியும் அடியைக்காணாது பதைத்துத் திரும்பிப் பூலோகமடைந்து பிரமனைப்போலவே யோசித்து நின்றனன். அவ்வாறுநின்ற விருவரும் அச்சோதி யுருவைப் பிரதக்ஷிணஞ்செய்து பணிந்து அதனையறிய வேண்டுமென்று யோசிக்கையில், பிரணவவொலியுண்டாயிற்று. அவர்கள் அதனையின்னதென்றுணரமாட்டாது வருந்துகையில், அப்பிரணவமானது அகார உகாரமகாரநாதங்களாகப்பிரிந்தது. இலிங்கத்தின்வலப்பக்கலில்அகரமும், இடப்பக்கலில் உகரமும் ஒளிமேல் நடுவில் மகரமும், மேலே நாதமுமாக விளங்குவதைக் கண்டும், உண்மை யின்னதென்று தெரியாதவர்களா

யிருக்க, அகரத்தினின்று முதலாவதாகிய இருக்குவேதமும், உகரத்தினின்று இரண்டாவதாகிய யசுர்வேதமும், மகரத்தினின்று மூன்றாவதாகிய சாமவேதமும், நாதத்தினின்று நான்காவதாகிய அதர்வண வேதமும் பிறந்தன. அவற்றுள் இருக்குவேதமானது இராசதகுணமும் பிரமனும் சிருட்டியும் பூமியும் ஆன்மதத்துவமும் நிவிர்த்திகலையும் சத்தியோசாதமும் இலிங்கத்தினடியும் பீஜமும் புத்தியயிசுவரியமும்இவையெனவுணர்த்தியது. யசுர்வேதமானது சத்துவகுணம் விஷ்ணு ஸ்திதி ஆகாயம் வித்தியாதத்துவம் பிரதிஷ்டாகலை வாமதேவம் இலிங்கநடு யோனி பகுதியைசுவரியம் என்னுமிவற்றையுணர்த்தியது. சாமவேதமானது தமோகுணம் உருத்திரன் சங்காரம் சுவர்க்கம் சிவதத்துவம் வித்தியாகலை அகோரம் இலிங்கமேற்பகுதி புருஷவயிசுவரியம் என்னுமிவற்றை யுணர்த்தியது. அதர்வணவேதமானது நிர்குணம் மகேசுவரன் சதாசிவன் திரோபவம் அநுக்கிரஹம் சேரமலோகம் சாந்தி சாந்தியதீதை தற்புருஷம் ஈசானம் இலிங்கமுடி பரமதத்துவம் என்பனவற்றையும், மகேச்சுரனுக்குஞ் சதாசிவனுக்கும் நிரோதீச்சுரனுக்குஞ் சிவதத்துவத்திறகும் மேலாகிப் பரமாகாயத்திற் பிரகாசிக்கும் அருமையாகிய பரமசிவஸ்வரூபத்தையும் விளக்கியது. சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தியென்னுமூன்றையும் முதன் மூன்று வேதங்களும், துரியந் துரியாதீதமென்னு மிரண்டையும் நான்காவது வேதமுங் கூறின. முக்குணப் பிரவர்த்தியை முதன் மூன்றுவேதங்களும், அமிர்தபதமும், துரியாதீதமும் நாதமும் நாதாந்தமுமாகியவற்றை நான்காம்வேதமு முணர்த்தின. உலகிலுள்ள பொருள்கள்யாவும் பிரணவத்தின் பொருளாகும். அப்பிரணவத்தை யுச்சரித்தே சிவபெருமான் சர்வலோகங்களையும் படைத்தனன். சொல்லுமிடத்திற் பிரணவமே சிவபிரான். சிவபிரானே பிரணவம். வாக்கும் மனமும் வேதங்களும் அறியமுடியாத சிவபெருமானைப் பிரணவந்தான் நன்றாக விளக்கும். அகர வுகர மகரங்கள் முறையே பிரமவிஷ்ணுருத்திரர்களைக் கூறின. இம்மூவரும் முறையே சிவபெருமானுடைய வலம் இடம் இதயமென்னு மிடங்களிலுதித்தனர். இவர்களே முறையாகச் சிருட்டி திதிசங்காரங்களைச் செய்பவர்கள். இவர்களில் உருத்திரன் முதன்மையானவன். இவர்கட்கெல்லாம் மேம்பட்டு விளங்குதலாலே சிவபெருமானைப் பரமகாரணனெனச் சொல்வார்கள் என்றிவற்றையெல்லாஞ் சொல்லியும், அவர்கள் தெளிவுறாமையின், நான்காம் வேதமானது, பிரமனே! விஷ்ணுவே! உங்கள் விவாதத்தை யகற்றும்படி சிவபெருமானே இச்சோதிலிங்க வடிவுடன் இங்கெழுந்தருளினனென்று அறியக்கடவீர்களென்றது. மற்ற வேதங்களும் அப்படியே கூறின. அவ்வேதங்களின் மொழியைக்கேட்டும் உண்மையுணராதிருக்கையில், பரமகாருண்யராகிய சிவபெருமான் அவர்களுக்குக் கிருபை மிகுந்து தன் திருவுருவம் விளங்கக்காட்டினன். அதனால் அவர்கள் மாயையகன்று சிறிது ஞானமெய்தினார்கள். அவ்விலிங்க மூர்த்தியினின்று உலகங்களுதித்ததும், மீண்டும் ஒடுங்கியதும், பிரமவிஷ்ணுக்களாகிய்தாம்

உதித்தவகையும், ஷடத்துவாக்களையும், மேலாகிய பதவியையும், மோலோர் துதிசெய்யத்தக்க சிவபெருமானையும், உமாபிராட்டியையும் ஞானத்தாலறிந்து தரிசித்தார்கள். அவ்விருவருந் தமது கரங்களைச் சிரமிசையமர்த்தி உளங்கனிந்து உடலுருக நின்றனர். அப்பொழுது பிரமன் எந்தையே! தேவரீரே அடியேனைப் படைத்தவர். அடியேன் அறிவிலியாய் மாயாவசத்தனாய் ஏதேதோ குழறினேன். தேவநாயகா! அவற்றைப் பொறுத்தருளல் வேண்டுமென்றனன். விஷ்ணுவும் பணிந்து கைகளைக் கட்டிக்கொண்டு சிறிதுந் தேவரீரை யளவிட்டறிய முடியாத அடியேன் தேவரீருடைய மாயாவசத்தனாய்த் தேவரீரைத்தேட யத்தனித்தேன். அப்பிழையைப் பொறுத்தருளவேண்டு மென்றனன். அவ்விருவர் விண்ணப்பத்தையுங் கேட்ட சிவபெருமான் கிருபையுடன் புன்சிரிப்பு செய்து, இவ்வகையாகத் திருவாய்மலர்ந்தருளினர்: பிரமவிஷ்ணுக்களே! நீங்கள் எம்மக்கள். பிரமனே! உன்னையெம் வலப்புறத்திற் பெற்றேம். விஷ்ணுவே! உன்னை யெம்மிடப்புறத்திற் பெற்றேம். நீங்கள் எம்முடைய மாயையால் மதிமயக்குற்று இறுமாப்புடன் எம் அடிமுடியைத் தேடினீர்கள். போர்செய்தீர்கள். அவற்றையெல்லா மொழிக்கக்கருதித் தேஜோலிங்க ரூபியாய் எழுந்தருளினோம். செவ்வையாகிய பஞ்சாக்ஷரத்தையும் ஞானசக்கிதையையுந் தந்தோம். அவற்றை மறந்தீர்கள். அவற்றையுடைத்தாயிராவிடின் உங்கள் சிருட்டி திதிகள் கைவரமாட்டாவென்று கூறி, மீண்டும் பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்தனர். அதனைப் பெற்ற பிரமனுந் திருமாலுஞ் சாஷ்டாங்கமாகப் பணிந்து நின்றனர். அழற்பிழம்பாக நின்ற சிவலிங்க ரூபம்மறைந்தது. அதனால் அவ்விருவரும் ஆச்சரியமடைந்து ஒருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்து தமது சத்தியலோகத்தையும் வைகுந்தத்தையு மடைந்தார்கள். அன்றுமுதலாகத் தேவர்கள் முதலானவர்கள் சிவலிங்க ரூபஞ்செய்து அதனையர்ச்சிக்கலானார்களென்று உபமந்யுமுநிவர் கூறியருளினர்.

இலிங்கோற்பவமுரைத்தது

முற்றிற்று.

இருபத்தேட்டாவது
சிவலிங்கஸ்தாபன விதியுரைத்த அத்தியாயம்.

இவ்வகையாகக்கூறிய உபமந்யுமுநிவரைக் கிருஷ்ணமூர்த்தி நோக்கி, ஸ்வாமீ! கொன்றைமாலையணிந்த சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தையும் விக்கிரகங்களையும் வேதவிதிப்படி பிரதிஷ்டை செய்யும் வகையையுந் தெரியச்சொல்லவேண்டுமெனக்கேட்க, தவமகிமையான் மேம்பட்ட உபமந்யுமுநிவர் சொல்லத்தொடங்கினர்: பூர்வபக்ஷத்திலே குற்றமற்ற சுபதினத்திலே சிவலிங்கரூபத்தைச் சிற்பவிதிப்படி செய்து,

விநாயகக்கடவுளைப் பூசித்து, புனிதமானவிடத்தில் வைத்து, பொன்னாற் செய்த சலாகையினாலே நேத்திரமெழுதி, எட்டு மண் அல்லது ஐந்து மண்ணிட்ட நீரினாலும் பஞ்சகவ்வியத்தினாலும் ஆவுடையாரையும் இலிங்கத்தையும் அபிஷேகித்து மலர்களாலர்ச்சித்து, நல்ல தெய்விகமுடைய நீரிலே சிலதினங்களிருத்தி, அவ்விடத்திலே தர்ப்பையைப்பரப்பி மலர்மாலைகள் தொங்கவிட்டுப் பலகொடிகள் நட்டு, எட்டுத்திசைகளிலுங் கும்பங்களை வைத்து அவற்றிலே திக்குப்பாலர்களைப்பூசித்து, மரத்தாலாவது வெள்ளியாலாவது பொன்னாலாவது தாமரைமலர்போலச்செய்து, அப்பதுமத்தின்மேலே இரண்டு பீடங்களை யமர்த்தி, வீரன் முதலிய திருவாயில் காப்போர் நால்வரையும் பூசித்து, நீராலபிஷேகஞ்செய்து, தருப்பையும் வஸ்திரமுமணிந்து, கிழக்கிலுள்ள பீடத்தின்பேரில், கிழ்பாலிற் சிரமானது பொருந்தச் சிவலிங்கத்தை யிருத்தி, மேல்பாலிலுள்ள பீடத்தின்பேரில், அந்த ஆவுடையாரை யிருத்தி, ஐந்து தினங்கள் அல்லது மூன்று தினங்கள், அல்லது ஒரேதினம் அப்படியே யிருக்கச்செய்து, மனதிற்றியானித்துப் பூசைசெய்த தேவர்களையெல்லாந் தத்தமிடஞ்செல்லவிடுத்து, நமஸ்காரஞ்செய்து இலிங்கத்தையும் ஆவுடையாரையுமெடுத்து மலர்களானலங்கரித்துள்ள மண்டபத்திலெழுந்தருளச்செய்து, நல்ல புனிதமான நீர்முதலியவற்றா லபிஷேகித்து, சுகந்த மலர்களா னருச்சனைசெய்து, ஈசானதிக்கிலே பதுமமொன்றெழுதி அதிற் கும்பமொன்று வைத்து அதிலே சிவபிரானை யாவாகித்துப் பூசித்து, சிற்பசாஸ்திரத்திற்கமைந்த தினத்திற் செய்த மண்டப மத்தியில், வெண்டாமரையொன்று வரைந்து, அதன் மேலே வெண்பட்டு விரித்து, சுவர்ணபுஷ்பங்களா லர்ச்சித்துக் கமலத்தின் கிழக்கே இலிங்கத்தை வைத்து, கமலத்தின் மேற்கே ஆவுடையாரை வைத்து ஆடையணிந்து, அவற்றிற்குக்கிழக்கே அஷ்டதளகமலமொன்று வரைந்து, அதன் மத்தியிலே சிவகும்பமும் ஒரு கரகமும் வைத்து எட்டிதழ்களிலும் அஷ்டவித்தியேசுர கும்பங்களை வைத்து அப்பதுமத்தைச் சூழ எண்மர் ஓமஞ்செய்யவேண்டும். ஆசிரியன் ஈசானதிக்கிலும் மேற்கிலும் ஓமஞ்செய்யவேண்டும். மேற்கூறியவகையன்றி ஆசிரியனே அக்கினியில் அவி சொரியினும் பொருந்தும். இலிங்கத்திற் சிவவத்தம் வைத்துப் பின்னர் ஓமஞ்செய்து, வேதியருக்குத் தக்ஷிணையுங் குருவுக்கு விசேஷ தக்ஷிணையுங்கொடுத்து, சிற்பலக்ஷணங்களையெல்லாம் நன்குணர்ந்த ஸ்தபதிக்கு அதிற் பாதிதக்ஷிணை கொடுத்து, பொன்னாலே அழகிய இடபமாவது ஆமையாவது ஒன்றமைத்து இலிங்கப்பிரதிஷ்டை செய்யத்தக்க குழியில் வைத்து, அதன்மேலே பிரமசிலையை வைத்து நவரத்தினங்களிட்டுச் சிவலிங்கத்தை யெடுத்து அதில் ஸ்தாபிக்கவேண்டும். அதன்பின்னர் ஆவுடையாரையுமெடுத்து இலிங்கத்துடன் சேர்த்துவிட்டு அஷ்டபந்தனஞ் செய்து, பூசித்து அர்க்கியமளித்து முன்னே அழகுறச்செய்து பட்டாடை சாத்தியுள்ள சிவகும்பத்திலுள்ள நீரால் அபிஷேகஞ்செய்து, ஆவுடையாரைக் கரகநீரா லபிஷேகஞ்செய்து, சிவலிங்கத்தினடியை வித்தியேசுர

கும்பங்களா லபிஷேகஞ்செய்து, ஆதாரசத்தியை முதலாகக்கொண்ட பீடத்தை யர்ச்சனைசெய்து, பஞ்சகலாநியாசஞ்செய்து, இலிங்கதீபன முணர்ந்து, கிழக்கு அல்லது வடக்குமுகமாகப் பொருந்தி இருகரங்களை யுங் குவித்து, பேரன்போடும் உமாசமேதனுகிய சிவபெருமானை இலிங்கத்தில் ஸ்தாபிக்கவேண்டும். சிவபெருமானும் உமாதேவியுந் தம்மைப் பிரமன் விஷ்ணு ருத்திரன் இந்திரன் சூரியன் சந்திரன் முதலிய தேவர்களும் முநிவர்களும் அசுரர்களும் பிறரும் இருபுறங்களிலுஞ் சேவிக்க, ஆகாய மார்க்கமாக இடபாரூடராக வந்து சிவலிங்கத்திற் பொருந்தியதாக மனதிற் பாவித்துப் பஞ்சோபசாரங்கள் செய்து பூசையை அன்போடு செய்து முடிக்கவேண்டும். சிவவிக்கிரகங்களையும் இவ்வகையாகவே செய்து பிரதிஷ்டைசெய்யவேண்டும். இந்தப் பிரதிஷ்டைகள் மேகமண்டலவளாவி உயர்ந்த கோபுரங்களையுடைய சிவாலயத்திற் செய்யில் அதிக பலனை யளிக்கும். இனித்தங்கள் வீடுகளிற் பிரதிஷ்டை செய்யும் வகையையுஞ் சொல்கின்றேன்.

மேற்கூறியவகையே சிவலிங்கத்தையாவது சிவவிக்கிரகத்தையாவது செய்வித்து, யாவருந் துதிசெய்யத்தக்க உத்தராயணத்திலே பூர்வ பக்ஷத் துத்தமதினத்திலே, வேதிகையிட்டு அவ்வேதிகையின்மேல் அஷ்டதள கமலமொன்று வரைந்து மலர்களானர்ச்சித்து, அதன்மேலே கும்பம் வைத்து நாற்புறத்தும் நான்கு கலசங்களமர்த்தி, பஞ்சப்பிரம மந்திரத்தாற் பூசைசெய்து, அவ்விலிங்கத்தை நல்ல நீரானபிஷேகித்து, ஓராசனத்தில் வைத்து, மலரைச் சிரத்திற்றூவி, புரோக்ஷண ஜலத்தாற் புரோக்ஷித்து, பெரிய மலர்மாலை சூட்டி, சிவநாமத்தை யுச்சரித்து மேற்கூறிய வகையே பூசையைச் செய்யவேண்டும். வாணலிங்கங்கள் முன்னரே சிவபெருமானுற் புனிதஞ்செய்யப்பட்டுள்ளனவாகலின் அதனை ஸ்தாபிதலிங்கமாகவாவது சரலிங்கமாகவாவது பூசைசெய்யலாம். ஸ்வயம்பு லிங்கங்களுக்கும்,தேவர் பிரதிஷ்டை செய்த லிங்கங்களுக்கும், ருஷிகள் ஸ்தாபித்த லிங்கங்களுக்கும் ஆவுடையாளில்லாவிடின் அதனைச்செய்து சேர்த்து அபிஷேக முதலியன வியற்றிப் பூசிக்கலாம். வெந்த லிங்கத்தையும் உடைந்த லிங்கத்தையுந் தரிசிக்கப்படாது. உடைந்த லிங்கத்தைப் பொருத்தக்கூடுமாயின் அவ்வாறே பொருத்திச் சந்தோஷத்துடன் பூசைசெய்யலாம். ஒருநாட் பூசை தடைபட்டால் இரண்டுமுறை பூசைசெய்க. இருநாட் பூசை தடைபட்டால் மகாபூசை செய்து பின்னர் முறைப்படி பூசை செய்க. மூன்று தினங்கள் முதலாகப் பலதினங்கள் பூசை தடைபட்டால் கலசஸ்தாபன முதலியனவும் ஓமமுஞ்செய்து விசேஷ பூசை முடித்துப் பின்னர் முறைப்படி பூசைசெய்க. பூசைசெய்தபின்னர், சிவமூர்த்தத்தைத் தன் ஆன்மாவிலே ஸ்தாபிக்கவேண்டும். ஐந்துமண் அல்லது எட்டுமண் தருப்பைநீர் பஞ்சகவ்விய முதலியவற்று லபிஷேகித்துப் புரோக்ஷண ஜலத்தால் நூற்றெட்டுமுறை புரோக்ஷணஞ்செய்து, தருப்பை

யைச் சிவலிங்கத்தின் முடிமேலமர்த்தி, நூற்றெட்டுமுறை மூலமந்திரத்தை யுச்சரித்து அடிவரையிற் பரிசித்து, தான் ஆன்மாவில் வைத்த சிவமூர்த்தத்தை யதிலமர்த்தி மலர்களானர்ச்சித்து, விஷபானஞ்செய்து தேவர்களுயிரையெல்லாங் காத்தருளிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானுக்குப் பக்திபூர்வமாகப் பூசைசெய்யவேண்டும். ஸ்தாபித லிங்கமும் பார்த்திவலிங்கமு மில்லாவிடின், பூமியிலாவது அக்கினியிலாவது நீரிலாவது பரந்துவிளங்கும் ஆகாயத்திலாவது சூரியனிலாவது, சர்ப்பாபரணராகிய சிவபெருமானைப் பாவனைசெய்து பூசைசெய்யலாகுமென்று உபமந்யு முனிவருரைத்தனர்.

சிவலிங்கஸ்தாபனவிதி யுரைத்தது

முற்றிற்று.

இருபத்தோன்பதாவது

ஞானயோகமுதலியனவுரைத்த அத்தியாயம்.

கிருஷ்ணமூர்த்தி உபமந்யு முனிவரை நோக்கி, ஸ்வாமீ! ஞானம் கிரியை சரியையென்பவற்றின் சாரமுழுவதையுந் தேவரீர் கூறியருளினீர். யோகமென்பதையும் அடியேனுணரும் வகையாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமெனக் கேட்க, சந்திரனையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானைத் தியானித்து முனிசிரேஷ்டராகிய உபமந்யு முனிவர் கூறலாயினர்: கிருஷ்ணா! அரிய விஷயத்தை வினவினை. ஏகாக்கிர சித்தமுடையவனாய்க் கேட்பாயாக. மனதை ஐம்புலன்களின் வழியே விஷயவாதனையிற் செலுத்தாது சிவபெருமானையே யன்புடன் மனதிற்கொண்டு விளங்கிய மனப்பிரவர்த்தியே யோகமெனப்படும். அது மந்திரயோகம் பரிசயோகம் பாவயோகம் அபாவயோகம் மகாயோகமென்று ஐந்துவகைப்படும். அவற்றுள், மந்திரத்தை ஜபித்து அதன்கருத்தை யறிந்து மனதைத் தத்துவத்திற் செலுத்தியிருப்பது மந்திரயோகமும், பிராணாயாமத்துடன்கூடிச் சிந்தனைசெய்யும் யோகம் பரிசயோகமும், மந்திரஜபஞ் செய்யாமலும் மந்திரார்த்தத்தையுந் தியானிக்காமலுமிருந்து மனதைத் தத்துவத்திலொடுக்குவது பாவயோகமும், அவயவங்களுடன் பிரபஞ்சமொடுங்கும்படி ஆகாயமாகக் கருதிப் பாவித்திடுதல் அபாவயோகமும், உலகமுழுவதையு மறந்து சிவபெருமானையே மனதில் நன்றாகத் தியானிப்பது மகாயோகமுமாம். விஷயவாதனையிலே மனதைச் செலுத்தாது நிற்பவனே யோகசாதனத்திற்குரியவனாவான். விஷயங்கள் துன்பங்களையுண்டுசெய்வனவென்று தெளிந்து சிவபிரானுடைய திவ்யகுணநுபவங்களையே சிந்தனைசெய்து கொண்டிருப்பின், அவனுடைய ஆசைமுழுவதுமொழிந்து மனோநிட்டமுண்டாகும். யோகம் ஆறுவகைப்படும். அதற்கு அங்கம் எட்டு வகைப்படும். பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணை

ஜபம் தியானம் சமாதியென்னுமாறும் அங்கங்களென்றும், இயமம் நியமென்பனவற்றையுங்கூட்டி அங்கங்களெட்டென்றுஞ்சிவாகமங்கள்கூறும். கொல்லாமை படிறொழிதல் கள்ளாமை பிரமசரியம் யாசியாமை யிவை இயமமெனப்படும். சவுசம் சந்தோஷம் தவம் ஜபம் சித்தநிலை யிவை நியமமென்றும் நூல்கள்கூறும். ஸ்வஸ்திகம் பதுமம் அர்த்தசந்திரம் வீரம் பிரசாரிதம் பரியங்கம் சித்தமென்னுமிவை ஆசனங்களாம். பிராணாயாமமென்றது வாயுவைப் புறஞ்செல்லாதடக்குதலேயா மென்று யோகசாஸ்திர முணர்ந்தவர்கள் சொல்லுவார்கள். அது இரேசகம் பூரகம் கும்பகமென மூவகைப்படும். இரேசகமென்பது விரலினாலே ஒரு நாசியை மூடிக்கொண்டு மற்றொரு நாசிவழியாற் சுவாசித்தலாம். அவ்வகையே ஒருநாசியை மூடிக்கொண்டு மற்றொரு நாசிவழியால் மூச்சேற்றுதல் பூரகமாம். மூச்சை யுட்கொள்ளலாகிய உசுவாசமும், புறத்தேவிடுதலாகிய நிசுவாசமுஞ்செய்யாது உடலுள்ளேயே பொருந்தச்செய்வது கும்பகமாம். பன்னிரண்டு மாத்திரையுடன்கூடிய *உற்காதமுடைய பிராணாயாமம் அதமம். இருபத்துநான்கு மாத்திரையுடன்கூடிய இரண்டுற்காதங்களுடைய பிராணாயாமம் மத்திமம். முப்பத்தாறு மாத்திரையுடன் கூடிய மூன்றுற்காதங்களுடைய பிராணாயாமம் உத்தமமென்று யோக சாஸ்திரங்கள் கூறும். இவற்றுள் உத்தமமான பிராணாயாமத்தைச் செய்யின் இஷ்டசித்திகள் கைகூடும். அது கைகூடிய விடத்தில் உடல் நடுங்கும் ; வியர்வும் சந்தோஷமும் ஜனிக்கும் ; மயிர்க்கூச்செறியும். கையால் நொடிக்குங்காலமே ஓர்மாத்திரை யெனப்படும். ஸகர்ப்பபிராணாயாமமாவது வேதமந்திரத்தை யுச்சரித்து அதன் சிறந்தபொருளை மனதில் தியானித்துணர்ந்து செய்யத்தக்கது. மந்திரத்தையுந் தியானத்தையும் விலக்கிச்செய்யும் பிராணாயாமம் அகர்ப்பப்ராணாயாமமாம். கர்ப்பமில்லாத பிராணாயாமத்திலேயுஞ்சகர்ப்பபிராணாயாமமாகுமாதலின்யோகிகள் அகர்ப்பப்ராணாயாமத்தையே செய்வார்கள். அதனாலே தச [பத்து] வாயுக்களையும் வெல்லுதலாகும். அவற்றுள், பிராணவாயு மேலேயெழும். அபானவாயு கீழ்நோக்கிச் செல்லும். வியானவாயு உடல்முழுவதும் வியாபரிக்கும். உதானவாயு சரீர வுறுப்புகளை யெல்லாம் ஒடுங்கச்செய்யும். சமானவாயு உடலைச் சமமாகச் செய்யும். நாகவாயு உண்டவற்றையெல்லாம் எதிரெடுக்கச் செய்யும். கூர்மவாயு கண்ணையிமைக்கும். கிரிகரவாயு தும்மச்செய்யும். தேவதத்தவாயு கொட்டாவிவிடச்செய்யும். தனஞ்சயவாயு சரீரத்தில் உயிரிறந்தாலும் பிரியாது அதிலேயே வசிக்குமென்று பெரியோர்கள் சொல்வார்கள். மேலே சொல்லிய இந்தத் தசவாயுக்களும் பிராணாயாமத்தினாலே வெல்லப்பட்டால் இருமலமும் பாசபத்தங்களுங் குறைவுறும். விரும்பியவற்றைப் புசிக்க

* உற்காதமென்றதற்கு கைந்நொடிப் பொழுதாலாகிய மாத்திரை பன்னிரண்டு கொண்டது என்பது நூலாசிரியர் கருத்து.

லாகும். வாயுபந்தனஞ் செய்யலாகும். வாயுவேகமாகச் செல்லக்கூடும். சரீரம் இலேசாகும். ஓசையானது வேய்ங்குழலொலிபோல் இனிமையாகும். வியாதிகளகலும். அழகுண்டாகும். வலிமையுண்டாகும். நுட்பமாகிய அறிவுவரும். இந்தப் பரிசுத்தமான பிராணாயாமத்திற்குத் தவம் யாகம் தானமுதலியன பதினாறிலொருபங்குக்கும் இணையாகமாட்டாது. விஷயவாதனையிலே யிடையீடின்றி, விடாது ஈடுபட்டழியும் இந்தியங்களைப் புறஞ்செல்லாதடக்குதலே பிரத்தியாகாரமாம். மனதை இந்தியங்களின் வழியே செல்லவொட்டாமல் தடுத்தலே தாரணையெனப்படும். அந்தப் புனிதமான மனதாற் சிவபெருமானை யிடைவியாது தியானஞ்செய்தலே தியானமாம். பெருமைவாய்ந்த தியானத்தினாலேயே சித்திமுத்திகளுண்டாகும். பன்னிரண்டு பிராணாயாமங்கள் செய்தலே தாரணையென்பதுவாம். பன்னிரண்டு தாரணைகள் தியானமாம். பன்னிரண்டு தியானங்கள் சமாதியாம். சமாதியென்பது பிறிதொன்றையும் அறியாதது. வேதமுடிவிலே விளங்குஞ் சர்வசத்திமானும் நித்தியனுமாகிய சிவபெருமானை நன்றாகவுணர்ந்து தன்னையு மறந்திருத்தலாம்.

இவ்வகையாக யோகாநுஷ்டானஞ் செய்பவர்களுக்குச் சோம்பல் பிணி பிரமாதங்கள் சந்தேகங்கள் மனநிலையாமை பிராந்தி தரிசனம் சிரத்தையின்மை துக்கம் விஷயவிருப்பு முதலியவற்றாற் பன்முறை இடையூறுகள் சம்பவிக்கும். ஆனால் யோகசாதனத்திலேயே மனதைச் செலுத்திப் பக்குவமான நிலையினின்று யோகத்தைச் செய்பவர்களுக்கு அவை யணுக மாட்டாவென்றாலும், யோகத்தில் வல்லவர்களுக்கும் அதீதம் [முன்சென்றன] அநாகதம் [பின்வருவன] விப்பிரகிருஷ்டம் [தூரத்திலிருப்பன] வியவஹிதம் [சமீபத்திலுள்ளன] சூக்ஷ்மம் [சிறியன] என்னுமிவற்றை யறிதலும், பிரதிபையும் [எல்லாமறிந்து கொண்டிருத்தலும்] என்னு மிவ்விடையூறுகளுண்டாகும். அன்றியும், அதிதூரத்திலிருந்து கேளாமலொலிக்கு மொலியைக் கேட்டலாகிய சிரவணமும், மிருகம் பக்ஷி முதலியவற்றின் சம்பாஷணையை யறிதலாகிய வார்த்தையும், தேவலோகம் பாதலலோக முதலிய உலகங்களிலுள்ள வெல்லாவற்றையும் பார்த்தலாகிய தரிசனமும், கற்பகத்தரு முதலிய விருக்ஷங்களிலுள்ள பழங்களின் சுவைமுதலிய சுவைகளை யெல்லாம் அறிதலாகிய ஆசுவாதமும், கற்பகத்தரு முதலிய தருக்களிலுள்ள மலர்களின் வாசனையும் உலகிலுள்ள எல்லா மணங்களையு மறிதலாகிய வேதனையும் என்று சொல்லப்பட்ட ஆறு இடையூறுகளு முண்டாகும். மேலும், உடல்குறுதல்-உடல் தடித்தல் - இளம்பருவமெய்தல்-அழகுறல்-விருத்ததிசையாதல்-நானாகுலத்திற் சேர்தல்-வாசனையுண்டாக்குதல்-நான்கு பூதங்களா லுடல் பெறல் என்னு மெட்டுக்குணங்கள் பிருதிவிபதமெனப்படும். நீர் மண் கால் இவற்றிற் பொருந்துதல் - அது சரீரத்திற்படாதிருத்தல் - சமுத்திரத்தைப் பானஞ் செய்தல்-எண்ணியவிடத்தில் நீருண்டாக்கல் - சலத்தைத்திரட்டி யெடுத்

தல் - உருசியில்லாத பொருள்களை யுருசிபெறச்செய்தல் - மூன்று பூதங்களோடுகூடிய தேகமெடுத்தல் - உடலிற்சிறிதும் வடுவின்றி மன்மதனைப் போல விளங்குதல் என்று முறையே சொல்லிய குணங்களெட்டும் முற்கூறிய குணங்களெட்டுடன் சேர்ப்பதினாறும், பதினாறு குணங்களோடும் விளங்குவது அப்புவின் பதமென்று சொல்லப்படும். தன் சரீரத்திலழலுண்டாக்கல்-அச்சமின்றிச் சலத்தில் வசித்தல்-உலகமுழுவதையுந் தீயாற்சுட்டெரித்தல் - அக்கினியை நீரிற்காத்தல் - நெருப்பைக் கையிலேற்றல் - தீயாற்பற்றிய பொருள்களை முன்போலக் காட்டுதல் - நினைத்தவற்றை யெல்லாஞ் சுடுதல் - இரண்டு பூதங்களாலாகிய உடலைப்பெறுதல் என்னுமெட்டுக் குணங்களுடன் முற்கூறிய பதினாறு குணங்கள்சேர இருபத்து நான்கு குணங்களோடும் விள்ங்குவது சதமென்று சொல்லும் பதமாம். மனவேகத்தாற் செல்லல் - உடம்பொடு செல்லல் - மலையைக் கையிலேற்றல் - மிகக்கனமாதல் - பஞ்சினுமெல்லியதாதல் - காற்றைக்கையி லடக்கல் - உலகமுழுவதையும் ஒருவிரலினால் அலையச்செய்தல் - ஓர்பூதத்தாலாகிய உடம்பினை யெடுத்தலென்று சொல்லும் எட்டுக்குணங்களுடன் முற்கூறிய இருபத்துநான்கு குணங்களுஞ் சேர்ந்து முப்பத்திரண்டு குணங்களாகி வாயுபதமுண்டாகும். இந்தியங்களா லறியக்கூடாதிருத்தல் - நிழலில்லாதிருத்தல் - அருவாயிருத்தல் - புத்திவழியே விஷயங்களையநுபவித்தல்-வெளியிடைச் சேர்தல் - ஆகாயத்தைத் தாண்டுதல் - ஆகாயத்திலிருத்தல் - அதைப் பந்தாக்கல் என்னுமெட்டுக் குணங்களுடன் மேற்கூறிய முப்பத்திரண்டு குணங்களுங்கூட நாற்பது குணங்களுடன் விளங்குதல் ஆகாயபதமாம். நினைத்தபடி யெல்லாவற்றையு மறிதல் - நினைவின்வழியே செல்லல் - மனதையுமறியாமல் மறைத்தல் - மறைத்தவற்றை யெல்லாமுணர்தல் - வினைக்கீடான தேகங்களைப் படைத்தல் - எல்லாவற்றையுந் தன்னிடம் பொருந்தச்செய்தல் - மனதிற்களிப்பையுண்டாக்கல் - சமுசாரத்தைக் காட்டலென்னு மெட்டுக்குணங்களுடன் மேற்கூறிய நாற்பது குணங்களுங்கூடி நாற்பத்தெட்டுக் குணங்களுடன் விளங்குவது மாநதபதமாம். வாளால் வெட்டல்-கயிற்றாற்கட்டல்-அடித்தல் - விட்டுவிடல் - உலகமுழுதுந் தொடர்தல் - சமுசாரத்திற் புகுத்தல் - மீண்டும் அருள்செய்தல் - அழியாது ஜீவித்தலாகிய எட்டுக்குணங்களுடன் முற்கூறிய நாற்பத்தெட்டுக் குணங்களுஞ்சேர ஐம்பத்தாறு குணங்களுடன் விளங்குவது கங்காரபதம். விரும்பியபடி சிருஷ்டித்தல் - காத்தல் - அழித்தல் - அதிகாரம்பொருந்தல் - தூரத்திலுண்டாக்கல் - மனதைப் பிரவர்த்தியிற் சேர்தல் - உலகத்தைப்படைத்தல் - இன்பதுன்பஞ் செய்தல் ஆகிய எட்டுக்குணங்களுடன் முற்கூறிய ஐம்பத்தாறு குணங்களுஞ்சேர அறுபத்துநான்கு குணங்களுடன் விளங்குவது புத்திபதமென்று சிவனடியார்களிற் சிறந்தவர்கள் சொல்வார்கள். பூமிபதம் பேய்களைசுவரியமும், ஆப்பியபதம் அரக்கர் அயுசுவரியமும், தைசதபதம் யக்ஷராயிசுவரியமும், வாயுபதம் தேவர் அயிசுவரியமும், ஆகாயபதம் இங்

திரனயிசுவரியமும், மாநஸபதம் சந்திரனயிசுவரியமும், அகங்காரபதம் தசப்பிரமாக்கள் அயிசுவரியமும், புத்திபதம் பிரமனயிசுவரியமும், புத்தி பதத்திற்கு மேம்பட்ட முக்குணப்பகுதி பதம் விஷ்ணு அயிசுவரியமும், அதற்கு மேம்பட்டி புருஷபதம் சூலபாணியாகிய சிவபிரான் அயிசுவரியமுமாகும். இவ்வகைப்பட்ட பதகுணங்களின் அயிசுவரியத்தை விரும்பாதிகழ்ச்சிசெய்து அழியாத முத்திவீட்டை யடைவதையே விரும்பத்தக்கது. உலகவிர்த்தியைக் கருதி யோகியானவன் போகத்திற்பொருந்தியிருந்தாலும் அழியாதமுத்திவீட்டையடையும்படி யோகசாதனஞ்செய்து வரும்விதத்தைச் சொல்கின்றேன்.

திவ்வியமங்கள சுபதினத்திலே சிவாலயத்தை யடைந்து பூமியை மெழுகி மேலேவிதானங்கட்டி மணம்வீசும் மலர்களைச் சொரிந்து அகிற்றூபமிட்டு, தருப்பை முதலியவற்றுடன் ஓமஞ்செய்து, யோகஞ்செய்ய வேண்டும். தீப்பற்றியெரிந்த விடத்திலும், ஆற்றின் இடிகரையிலும்,கடற்கரையிலும், மசகமுதலிய சிறுபூச்சுகளுள்ள விடத்திலும், சருகுகளுள்ள விடத்திலும்,புலிபாம்பு முதலிய துஷ்டபிராணிகளுள்ள விடத்திலும், மனிதர்கள் அநேகரிருக்குமிடத்திலும், மயானத்திலும், அழிந்த * கோட்டத்திலும்,அம்பலத்திலும்,புற்றிருக்குமிடத்திலும்,பாழ்மனையிலும்,நாற்சந்திகூடுமிடத்திலும், பாழ்பட்ட நந்தவனத்திலும், தகுதியல்லாதவிடத்திலுமிருந்து யோகசாதனஞ்செய்தல் தகுதியுடையதன்று என்று யோகநூல்கள் கூறுநிற்கும். வயிறுரவுண்டகாலத்திலும், மிகப்பசியாயிருக்குங்காலத்திலும்,மனம் வருந்தியிருக்கையிலும், உடல் வருந்துகையிலும், ஆசிரியன் கட்டளையிட்டபணிவிடையைச்செய்யுங்காலத்திலும்,வேதங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட யோகசாதனஞ்செய்வது தகுதியன்றும். உணவு பயிற்சி உறக்கமுதலியவற்றைச் சிறிதாக முயன்றே யோகஞ்செய்தல் தகுதியாம். புலித்தோல் மான்றோல் முதலிய ஆசனங்களில் தமக்கியைந்ததோர் ஆசனத்திற் பொருந்தியிருந்து, ஆசிரியன் முதலானோரைப்பணிந்து, சிரம் கண்ட முதலியன கோணுதலின்றி நேராக நிறுத்தி, கண்களைத்திறந்து, நாவின் முனையைப் பல்லின் முனைமேல் வைத்து, இருகுதிகளாற் குறியை நெருக்கிக்கொண்டு, இருகரங்களையும் இருதுடைமேலமர்த்தி, வலப்புறப் புறங்கையானது இடப்புறப் புறங்கையினுள்ளே பொருந்தும்படி யமர்த்தி, முதுகை நிமிர்த்து, இருகண்களாலும் மூக்கு முனையைப் பார்த்துப் பிராணவாயுவை யடக்கி, வலிய கருங்கல்போலிருந்து, மலர்ந்த இதழ்களையுடைய இதபதாமரையிலே சந்திரசேகரனாகிய சிவபெருமானையும் உமாதேவியையுந் தியானித்துப் பூசைசெய்யவேண்டும். அன்றியும் மூலாதாரம் அதிஷ்டானம் நாபி † இதயமிவற்றுடன் பொருந்தி, புருவமத்தியம் நெற்றி பிரமரந்திரம் துவாதசாந்தமென்ற விடங்களில் ஓரிடத்தில்,

* கோட்டம் - கோயில் அல்லது பசுமந்தைதங்குமிடமென்க.

† இதயத்திற்குப்பதிலாக நாவெனத் தமிழ்நூல் சொல்லுகின்றது.

சிவபெருமானை உமாதேவியுடன் தியானித்து மிக்க அன்புடன் பூஜை செய்யவேண்டும். அப்பொழுது புருவமத்தியில் தோன்றுங் கமலமானது கதிர்மன்ஒளிபோன்று இரண்டிதழ்கள் பெற்று அவற்றிறுதியில் இரண்டெழுத்துடன் விளங்கும். கண்டத்திலுளதாகுங் கமலம் பதினறிதழ்கள் பெற்றுப் பதினறெழுத்துடன் விளங்கும். இதயத்திலுண்டாகும் பொற்ருமரையானது பன்னிரண்டிதழ்களுடன் பன்னிரண்டெழுத்துக்களாய்ப் பொருந்தும். உந்தியில் விளங்குங் குளிர்ந்த வெண்டாமரையானது பத்திதழ்களோடும் பத்தெழுத்துக்களோடும் விளங்கும். சுவாதிஷ்டானத்திற் பொருந்தும் பதுமமானது அக்கினிநிறமாய் ஆறிதழ்களோடும் ஆறெழுத்துக்களோடும் விளங்கும். மூலாதாரத்திற் பிரகாசிக்குந் தாமரையானது பசும் பொன்னிறமாய், நான்கிதழ்களோடும் நான்கெழுத்துக்களோடும் விளங்கும். மேற்கூறிய விடங்களிலுள்ள கமலங்களில் யாதானுமொன்றிலே, நெல்லின் வாலளவாகவும், அங்குஷ்டத்துயரமாகவும், விளக்கொளிபோலவும், தாமரை நாளத்திலுண்டாகும் நூல்போலவும், இளஞ்சந்திரன்போலவும், வெள்ளிய கடப்பமொட்டுபோலவும், புல்லின் முனையிற்றங்கிய பனித்துளிபோலவுஞ் சிவபெருமானை நன்ருகத் தியானஞ் செய்யவேண்டும். மேற்சொல்லியவகையாகத் தியானஞ்செய்வது அருமையாயின், சந்திரனை யணிந்த சடையையுடைய அஷ்டமூர்த்திகளை யானும், பிரமன்முதற் சதாசிவனீருயுள்ள மூர்த்திகளையானும் பொருந்தத் தியானஞ்செய்யவேண்டும்.

கோரம் மிசிரம் சாந்தமென்று சொல்லப்படுஞ் சிவமூர்த்தங்கள் மூவகையிலே பாவங்களகலவேண்டிற் கோரமூர்த்தத்தையும், சித்தியடையவேண்டின் மிசிரமூர்த்தத்தையும், சாந்தியடைய வேண்டிற் சாந்தமூர்த்தத்தையும் பூசிக்கவேண்டும். சீகண்டமூர்த்தியை மனதிற்றியானித்தால் எல்லாச்சித்திகளுங் கைகூடுமாதலின், சிறந்தவர்கள் யாவரும் அந்தச் சீகண்டமூர்த்தியையே யெப்பொழுதும் மனதில் தியானித்துக்கொண்டிருப்பார்கள். மனநிலை யெய்தவேண்டின் தூலமாகிய தியானத்தை யறிவார்கள். தூலத்தினல் விளங்காத மனமே, சொல்லமுடியாத மேம்பட்ட சூக்ஷ்மதியானத்தில் விளங்குஞ் சிவபெருமானைத் தியானஞ்செய்தால், எல்லாச்சித்திகளும் விரைவிற் கைகூடும். மேற்சொல்லிய மூர்த்திகளைத் தியானஞ்செய்வதாலேயே சித்திகளுண்டாகமாட்டா. மனம் எதிற்பொருந்துமோ அம்மூர்த்தியையே தியானஞ்செய்யவேண்டும். பிராணுயாமத்தாற் சாந்தி பிரசாந்தி தீத்தி பிரசாதமென்னும் நால்வகைச் சித்திகளுமுண்டாகும். அவற்றுள், பாவங்களையெல்லா மொழித்தல் சாந்தியென்றும், அகத்தும்புறத்துமுள்ள அஞ்ஞானத்தை விலக்கல் பிரசாந்தியென்றும், அகத்தும்புறத்துமுள்ள ஒளிமுழுவதையும் பார்த்தல் தீத்தியென்றும், புத்தியின் தெளிவுண்டாதல் பிரசாதமென்றுங் கூறப்படும். தியானத்தால் முத்தியுண்டாகுமாதலின் - தியானமே செய்யத்தக்கது.

ஞானத்தாலேயே தியானமும் தியானத்தாலேயே ஞானமுமுண்டாதலின் ஞானமுந்தியானமுமுடையவர்கள் முத்தியைப் பெறுதலுண்மை. சூரியன் சிறிதாயினும் இருட்பிழம்பை யெல்லாமொழிக்குமாறு, தியானமும் யோகமும் சிறிதளவு தனக்குவரத்தாலுண்டாயின் இருவினைகளொழியும். சிவபெருமானைத் தியானஞ்செய்யுந் தியானத்திற்கு அழிவில்லையாம். தீர்த்தஸ்நானம் - யாகம் - தவமுதலியன யாவுந் தியானத்திற்குச் சமானமாகமாட்டாவாதலின், இதனையோசித்து யோகிகள் கெடுதலற்ற தியானத்தைச் செய்ததனாலே சித்திகளெல்லாம் பெறுவர். பின்னே யிறப்புண்டாயின் உருத்திரலோகத்தை யடைந்து இன்புற்று வாழ்ந்து, மீண்டும் யோகியாக ஜனித்து ஞானமும் யோகமுமடைந்து முத்தியடைவர். யோகி யொருவனுக்கு அன்னமளித்தால் வேதங்களிற் புகழ்ந்து சொல்லப்பட்ட உத்தமர்களான கோடிவேதியருக்கு அன்னமளித்த பலனுண்டாகும். யோகிகளைக் குறைகூறினவர்கள் நரகத்திலாழ்வார்கள். யோகிகளுக்கு அன்னம் வஸ்திர முதலியவற்றைக் கொடுத்தவர்கள் எழுபிறவிகளிற் செய்த பாவங்களையெல்லாஞ் சூரியன்முன் இருள்போலொழித்து உயர்பதவியில் வாழ்வார்கள். யோகி தெரியாது பாவஞ்செய்தாலும் தாமரையிலையின்மேல் தண்ணீரொட்டாததுபோல அதன்பயன் அவனை யடையாது. அவனுள்ளவிடமும் புனிதமாகவே யிருக்கும். ஆதலால் யோகமே சிறந்ததென்றுணர்ந்து அதனைச்செய்து உயிர்விட்டுச் சிவகதியிலடைவது உத்தமமானதென்று பெருந்தவசிகள் தம்முணர்ச்சியாற் கூறியிருக்கின்றார்கள்.

உடலொழியத்தக்க அடையாள மேதேனும் மனதிற்குப் புலப்படுமாயின், நன்மையாகிய யோகத்தை மேலுஞ் செய்வதற்கு முடியாதென்று தனக்குள்ள பலவீன முதலியவற்றாலறிந்து, சிவபெருமான் பரமகாருண்ய ரூபியாக எழுந்தருளியிருக்குஞ் சிவக்ஷேத்திரங்களிலடைந்து வசிக்கவேண்டும். அல்லது பெரிய விரதங்களை யநுஷ்டித்து ஆகாரத்தை விலக்கி உபவாசமிருந்து உயிரையொழிக்கவேண்டும். அல்லது இந்தச் சரீரத்தைச் சிவாக்கினியிலிட்டு உயிர் நீங்கவேண்டும். அல்லது தெய்வீகந்தங்கிய சிவதீர்த்தத்திலே வீழ்ந்து இந்தத் தேகத்தைப்போக்கிவிடவேண்டும். இவ்விதமாகத் தமது தேகத்தை யொழிப்பார்களாயின் சிவகதியடைதல் சத்தியம். சிவக்ஷேத்திரங்களில் வசித்து நோய்முதலியவற்றாலிறப்பினும் முத்திகைகூடும். மேற்கூறிய வெல்லாவற்றினும், யோகத்தினாலே உயிர் பிரிதலே மிகச்சிறந்ததாம். சிவத்துரோகியாய்ச் சிவநிந்தை செய்பவனைக் கொன்றதாலிறந்தவன் மீண்டும் மாநுடதேகம் பெறாது உமாசமேதனாகிய சிவபெருமானுலகத்தில் அழியாப்பதவியிலமர்வான். சிவத்துரோகியைக் கொல்லும் வல்லபமில்லாதவன் அதற்காகத் தன்னுயிரை மாய்த்துக்கொண்டால் தன் இருபத்தொரு தலைமுறைகளோடுஞ் சிவகதியை யடைவானெனப் பெருந்தவமுடைய முனிவர் கூறுவர்.

சிவபிரான் காரணமாகவும், சிவனடியர் காரணமாகவும், சிவகுரு காரணமாகவும், சிவமந்திரங் காரணமாகவும் அச்சமின்றி உயிரொழிந்தவனுக்குச் சமானமான முத்தியை யெவனுமடைதலரிது. அவ்வாறு சிவசம்பந்தமாக உயிர்விட்டவனைப் புதைத்தாலுஞ் சரி. தகனஞ்செய்தாலுஞ் சரி. எங்கேயாவது எறிந்துவிட்டாலுஞ் சரி. அவனுக்கு உத்தரகிரியைகள் செய்யவேண்டியதில்லை. அவன் சிவபெருமானால் ஆண்டருளப்படுதலின் அவன் விஷயமாக ஆசவுசமே கிடையாது. அவனுடைய செல்வங்களைச் சிவப்பிரீதியே செய்யத்தக்கது என்றிவ்வகையாக உபமந்யுமுநிவர் ஞானயோகத்தின்றன்மையைக் கிருஷ்ணமூர்த்திக்குக் கூறியவகையாக வாயுபகவான் அறுகுலத்துதித்த முநிசிரேஷ்டர்களுக்குக்கூறி, இருகைகளையுங் குவித்து எதிர்நின்ற அம்முநிவர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்து தன்னிச்சையின்படி சென்று, பிரமதேவனைத் தரிசித்துத் தான்முநிவர்களுக்குக்கூறியதும், அவர்கள் யாகஞ்செய்து சிவகடாக்ஷம் பெற்றதுஞ் சொல்லிச் சென்றனன்.

ஞானயோகமுதலியன வுரைத்தது

முற்றிற்று.

முப்பதாவது

ருஷிகள் காசியடைந்த அத்தியாயம்.

பின்னர் முநிவர்கள் தாஞ் செய்தயாகத்தை முடித்து ஸ்நானஞ் செய்யக் கருதுகையில், பிரமசரசினின்றும் வாணிநதி அவ்விடத்திற்கு வந்தது. அவர்கள் அதனைக்கண்டு களித்து அதில் ஸ்நானஞ்செய்து முன்னம் பிரமதேவன்கூறியதைக் கருதிக் காசிக்ஷேத்திரமடைந்து மணிகன்னிகையில் ஸ்நானஞ்செய்து விசுவநாதப்பெருமானைப் பூசித்துத் துதித்து நின்றார்கள். அப்பொழுது கோடிசூரியப்பிரகாசமாய் ஓர் சோதி ஆகாயத்தி லுண்டாயிற்று. அதில் பாசுபத விரதிகளான முநிவர்கள் பலர் சேர்ந்தார்கள். உடனே அந்தச்சோதி மறைந்தது. அதன்வரலாற்றினை யறியாத அம்முநிவர் பிரமதேவனை யடைந்தார்கள். அச்சமயத்திலே நாரத தும்புருவர் வீணைவாசிப்பதில் ஒருவரோடொருவர் போர்செய்துகொண்டிருத்தலின், வாயில்காப்போர் முநிவர்களைநோக்கி உள்ளே செல்லாது தடுத்தார்கள். சிறிதுநேரத்தில் நாரதமுநிவன் தும்புருவுடன் சமானமாக வீணைவாசித்து அனேக அரமகளிரும் கந்தருவரும் புடைசூழப் பிரமதேவன் கோயிலின் வாயிலையடைய, அம்முநிவர்கள் நாரதனைக்கண்டு கைகூப்பி வணங்கித் தேவரீரைத் தரிசிக்கச் சமயம் வாய்த்ததேயென்று கூறவும், நாரதமுநிவரும்யான் உங்களைத் தரிசித்தற்குச் சமயம்வாய்த்ததே. இன்று உத்தமதினமென்று கூறிச்சென்றனன். அதன்பின்னர், வாயில் காவலர்கள் முநிவர்களை யுள்ளே செல்ல விடைகொடுப்ப, முநிவர்கள்

அவ்வாறே சென்று பிரமதேவனைப் பணிந்து கைகட்டி நிற்ப, பிரமதேவன் முநிவர்களே! உங்கள் விஷயமெல்லாம் வாயுவால் முன்னமேயறிந்தேன். அவன் என்னிடம் வந்தபிறகு யாதுசெய்தீர்களெனக் கேட்க, முநிவர்கள் ஸ்வாமீ! எங்கள் யாக முடிந்தபிறகு காசியிலடைந்து மணிகன்னிகையில் ஸ்நானஞ்செய்து விசுவநாதப் பெருமானைத் தரிசித்துப் பணிந்து துதித்துக்கொண்டிருக்கையில் ஆகாயத்தில் ஒருஜோதியுண்டாகி அதில் அநேக முநிவர்கள் சேர்ந்தார்கள். உடனே ஜோதிமறைந்தது. அதனை யின்னதென்றறியோமாகித் தெரிந்துகொள்ளும்படி தேவரீரை யடைந்தோமென்று கூற, பிரமன் முநிவர்காள்! அந்த ஜோதியே சிவலிங்கமாம். மேருமலையிற் சநற்குமார முநிவரிருக்கின்றனர். நீங்கள் அவர் பாற்செல்க. முன்னொருகாலத்திற் சிவபெருமான் சநற்குமாரரிடம் வர, அவர் யோகிலிருந்தமையாற் பணியாதிருப்பதுநோக்கிய நந்திதேவர் வெகுண்டு, ஒட்டகமாருகவெனச் சபிக்க அவ்வடிவானதைக் கண்டியான் மனம்வருந்திச் சிவபெருமானை யாசித்து அவனருளால் நந்திதேவர் கிருபையடைந்து பண்டையவடிவேற்கச்செய்தனன். அப்பொழுது சிவ்பிரான் நந்திதேவரை நோக்கி நீயிவனுக்கு ஞானத்தைப் போதிக்கவெனக் கட்டளையிட, அவ்வாறே நந்திதேவர் எல்லா நூல்களையும் விரித்துபதேசித்தனர். மேலும், சநற்குமார முநிவர் திருநந்திதேவ ரருளைப் பெற இன்னுந் தவஞ்செய்து கொண்டிருத்தலின், நீங்கள் அவ்விடஞ் செல்லக்கடவீர் என்றனுப்ப, முநிவர்கள் மேருமலையிலே குமாரசிகரத்தை யடைந்தார்கள். அங்கேயோர் பொற்றாமரைத் தடாகத்தின் வடகரையிலே கற்பகத்தரு நீழலிலே வயிரமேடையிலே மான்றோலாசனத்திலே பொருந்தித் தியானயோகத்திலிருக்குஞ் சநற்குமார முநிவரை யடைந்து பணிந்து கைகுவித்து நிற்க; சநற்குமார முநிவர் அவர்களைநோக்கி நீங்கள் இங்குவந்த காரணமென்னவெனவினவ, அவர்களுந் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள். அவர்கள் அதனைத் தெரிவித்தகாலத்திலே தேவதுந்துபி முழங்கின. சூரியப்பிரகாசமும் ஈடல்லவென்று சொல்லத்தக்க காந்தியோடுகூடிய தெய்வவிமானமொன்று அநேககணங்கள் புடைசூழ்ந்து வீணைவாசிக்கவுங் கீதம்பாடவுங் கின்னரர்களும் அரம்பாஸ்திரீகளும் நடிக்கவும் அநேக மாதர்கள் சாமரையிரட்டவும் அநேகர் துவசம்பிடிக்கவும், அதனிடையே சுயசாதேவியுடன் திருநந்திதேவர் சூலப்படையைத் திருக்கரத்திலேற்று விளங்கக்கண்டு, சநற்குமார முநிவரும் அங்குற்ற முநிவர்களும் நிலமிசைவீழ்ந்தெழுந்து கைகளைச் சிரமேற் கூப்பிநிற்க, சநற்குமார முநிவர் சொல்கின்றார். அறுகுலத்துதித்த இம்முநிவர்கள் பிரமன்கூறி யனுப்பியபடி தேவரீரைத் தரிசிக்க இங்குவந்தார்கள். எனக் கூற, நந்திதேவர் அவர்களையெல்லாம் பார்த்து, பாசத்தைவிலக்கி, சிவதருமம் சிவஞானம் சிவயோகம் முதலியவற்றை யுணர்த்தி விமானத்திலேறிச் சிவசந்நிதியை யடைந்தனர்.


திருநந்தி தேவர்கூறிய ஞானயோகத்தை ஸநற்குமார முனிவர் வியாஸ முனிவருக்குரைத்தனர். வியாஸமுனிவர் எனக்குரைத்தனர். தவ ஞானச் செல்வர்களாகிய முனிவர்களே! அதனையான் உங்களுக்குக் கூறினேன். இந்தப்புராண ரத்தினத்தை வேதமறியாதவர்களுக்கும், சிவபக்தியில்லாதவர்களுக்கும், மாணுக்கரல்லாதவர்களுக்கும், மோக்ஷமுந் தெய்வமுமில்லையென்பவர்களுக்குஞ் சொல்லுவோர் மீளாநரகத்தை யடைவார்கள். வேதப்பொருளை விளங்கச்செய்யும் இப்புராணத்தைக் குற்றமறப் படித்தவர்களும் பிறர்க்குச் சொன்னவர்களும் எழுதிவைத்தவர்களும் தர்மார்த்த காமங்களையடைந்து, பின்னர் உமாசமேதனுகிய ஸ்ரீகண்ட பரம சிவனுடைய திருவடியை யடைவார்கள். இந்தப்புராண கதை யான் அன்புடன் சொல்லவும் நீங்கள் அன்புடன் கேட்கவும் முடிந்தது. இனி நன்மை நாடோறும் அபிவிர்த்தியாகுகவென்று கூறி, சிவத்தியானஞ் செய்து ஸூதமுனிவர் விடைகொண்டு தமதிச்சையின்படி சென்றனர். அதைக்கேட்ட முனிவர்களுஞ் சிவத்தியான பரராய்க் காசிக்ஷேத்திரமடைந்து மணிகன்னிகையில் ஸ்நானஞ்செய்து விசுவநாதப் பெருமானைப் பணிந்து சிவயோகத்திலமர்ந்து சிவபதவியை யடைந்தார்கள்.

ருஷிகள் காசியடைந்தது
முற்றிற்று.

உத்தரபாகம் முற்றுப்பெற்றது.

வாயுஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.



LITHO. M. PRESS, MYLAPORE.

வித்யேசுவரஸம்ஹிதை.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

வித்யேசுவரஸம்ஹிதை.

காப்பு.

𑌆𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌙𑍍𑌗𑌳𑌮𑌜𑌾𑌤𑌸𑌮𑌾𑌨𑌭𑌾𑌵
𑌮𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌜𑌰𑌾𑌮𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌦𑍇𑌵𑌂 ।
𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌨𑌂𑌪𑍍𑌰𑌬𑌲𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌨𑍋𑌦𑌶𑍀𑌲𑌂
𑌸𑌂𑌭𑌾𑌵𑌯𑍇𑌮𑌨𑌸𑌿𑌶𑌙𑍍𑌕𑌰𑌮𑌮𑍍𑌬𑌿𑌕𑍇𑌶𑌂 ॥

ஆத்யந்தமங்களமஜாதஸமாநபாவ
மாத்யந்தவிஸ்வமஜராமரமாத்மதேவம் |
பஞ்சாநநம்ப்ரபலபஞ்சவிநோதஸீலம்
ஸம்பாவயேமநஸிஸங்கரமம்பிகேஸம் ||

சிருஷ்டியின் ஆரம்பத்திலும் முடிவிலும் எல்லோருக்கும் மங்களத்தைச் செய்பவரும், சமானுதிகரகிதரும், உலகத்திற்கு ஆதியிலும் அந்தத்திலும் காரணரூபரும், குலதேவரும், ஈசானமுதலிய ஐந்து திருமுகங்களையுடையவரும், பிரபலமான சிருஷ்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்பவரும், யாவருக்குஞ் சுகச்சைதச்செய்பவரும், உமாதேவி நாயகருமாகிய சிவபகவானை மனதில் தியானிக்கின்றேன்.

முதலாவது

ருஷிகள் பிரமதேவனையடைந்த அத்தியாயம்.

ஸத்தியவிரதத்தில் விருப்பமும் மிக்ககாந்தியும் தபோபாக்கியமும் விரதத்தில் திடசித்தமும் பெற்றுவிளங்குஞ் சௌநகர் முதலிய மஹருஷிகள் ஒருகாலத்திலே பிரயாகையில் ஓர் மஹாயாகத்தைச் செய்தார்கள். வியாஸமுநிவருக்குச் சிஷரும் எல்லாப் புராணங்களையு முணர்ந்தவருமாகிய ஸூதமுநிவர் அதைக் கேள்விப்பட்டு அவ்விருஷிகளைக் கண்டு

களிக்கும்படி அங்குவந்தனர். அப்படிவரும் ஸூதமுநிவரை ருஷிகள் கண்டு சந்தோஷசித்தத்துட னெதிர்சென்றழைத்து வந்து முறைப்படி பூஜைசெய்து ஆதனத்தமர்த்தி, முநிபுங்கவரே! வேதசாரமான ஈசுவரஸ்வரூபத்தை விளக்கும் புராணத்தை எங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லலாயினர்: ருஷிகளே! நீங்கள் வினவிய புராணங்களிற் சிறந்ததொன்றைச் சொல்கின்றேன். முன்னே பிரளயத்தின் பின் வெகுகாலஞ் சென்றபிறகு இக்கல்பத்திற் சிருஷ்டி காரியத்தை மீண்டுந் தொடங்கியபொழுது, திரிவேணி நதிக்கரையிற் சில ருஷிகள்கூடி, சிவதத்துவஞ் சிறந்ததென்றுஞ் சிறந்ததன்றென்றும் விவாத முண்டானபடியால், ருஷிகள் சிருஷ்டிகர்த்தாவும் நாசமற்றவருமான பிரமதேவரை யடைந்து மிகவணக்கத்தோடும் அஞ்சலிசெய்து சுவாமீ! சிருஷ்டிகர்த்தாவுங் காரணபூதருந் தேவரீரே! எந்தப்புருஷன் தத்துவங்களுக்கெல்லாம் அதீதப்பட்ட ஆதிபுருஷனென்பதை யெங்கட்குணர்த்த வேண்டுமெனக் கேட்க, பிரமதேவர் கூறுகின்றார். ருஷிகளே! மன வாக்குகட் கதீதப்பட்டவரும், பிரம விஷ்ணு ருத்திராதிகளுக்குஞ் சகல லோகங்கட்கும் ஐம்பூதங்கட்கும் இந்தியங்கட்கும் பிரபுவாயிருந்து படைத்தளித்தழிக்கும் பிரபுவும், சகலமுமறிந்தவரும், மகாதேவருமாகிய சாம்பவமூர்த்தி இதோவிருக்கிறார். இப்பெருமானையே பத்தியுடன் தரிசனஞ்செய்யவேண்டும். பக்தியின்றிச் சேவைசெய்யலாகாது. நானும் விஷ்ணுவும் உருத்திரனுஞ் சகலதேவர்களும் பக்தியுடன் சிவதரிசனஞ் செய்வதில் ஆசையுடையவர்கள். பலவார்த்தைகள் யாதுக்கு? சிவபக்தி அவசியம். பக்தியாலேயே அநுக்கிரகமும், அநுக்கிரகத்தாலேயே பக்தியு முண்டாகும். நீங்கள் பூலோகத்தையடைந்து ஆயிரவருஷம் உக்கிரமான தவத்தைச் செய்வீர்களாகில், யாகாதிபனான சிவபெருமானுடைய அநுக்கிரகத்தாற் சாத்தியசாதனமான வேதசார முழுவதுமறிவீர்கள் எனக் கட்டளையிட, ருஷிகள் பிரமதேவரைநோக்கி, சாதிக்கத்தக்கது யாது? சாதனமெது? சாதகமெப்படிப்பட்டது? இவற்றை விளங்கக்கூறவேண்டு மெனவினவ, பிரமதேவர் கூறுகின்றார்: சிவபதத்தையடைவதே சாதிக்கத்தக்கது! அவரைத் தரிசிப்பதே சாதனம்! நித்திய நைமித்திய காமியங்களின் பலனில் இச்சைவையாத அச்சிவமூர்த்தியின் அநுக்கிரகமே சாதகம்! வேதத்திற்கூறப்படும் யாகாதிகளைச்செய்து அவற்றின் பலனைச் சிவார்ப்பணஞ் செய்யவேண்டியது. அவரவர்களுடைய பக்திக்கேற்பச் சிறந்த பலன்களை அச்சிவபெருமானே கொடுத்தருளுவர். அச்சிவசேவை யர்ச்சனை முதலியன எண்ணிறந்தவகையாக அவ்விறைவனாலேயே சொல்லப்பட்டுள்ளன. அவ்விஷயத்தை மிகவுஞ்சுருக்கிச் சொல்லுகின்றேன்: காதாற்கேட்பதும் வாயாற்றுதிப்பதும் மனதாற்றியானிப்பதுமே சாதனமாமென வேதங்கூறுகின்றது. எல்லாப் பாக்கியங்களையும் இறுதியில் முத்தியையுங் கொடுக்கவல்ல சாம்பவமூர்த்தியை மனதால் தியானஞ் செய்து அடையக்கடவீர்கள். பிரத்தியட்சமில்லாத அச்சிவதத்துவத்தைச்

செவியாற் கேட்டால், பின்னர் அதனைப் பிரத்தியட்சமாகக் கண்களாற் பார்த்து மோட்சத்தையடையலாமாதலின், குருமூலமாகச் செவியிலேற்று மனதால் தியானித்து வாயாற்றுதித்துக் கிரமமாகச்சிவசம்பந்தத்தையடையவேண்டும். அவ்வாறு செய்வதாற் சரீரஜாட்டியங்களொழிந்து, சகலசுகங்களுமுண்டாகிச் சர்வமங்களங்களும் விருத்தியாகுமென்று பிரமதேவர் கூறினர்.

ருஷிகள் பிரமதேவனையடைந்தது

முற்றிற்று.

இரண்டாவது

ஸநத்குமாரர் வியாஸருக்குபதேசித்த அத்தியாயம்.

ருஷிகள் பிரமதேவனை நோக்கி, ஸ்வாமீ! மனதால் தியானிப்பதும், செவியாற் சிரவணஞ்செய்வதும், வாயால் துதிப்பதும் எப்படி? என வினவ, பிரமதேவர் கூறுகின்றார். பூஜை ஜபம் ஈசுவரகுணம் ரூபம் விலாசம்முதலியவற்றைப்பக்தியுடன் மனதால் தியானஞ்செய்வது மனனமெனப்படும். மனனமே சகல சாதனங்களிலேயுஞ் சிறந்தது. கீதத்தாலாவது வேதத்தாலாவது சிவமூர்த்தியின் பராக்கிரமத்தைத் துதிப்பதையும், சாமவேதத்தால் நன்றாகக் கானஞ்செய்வதையுங் கீர்த்தனமெனப்படும். எவ்வகையாகவாவது சிவபரமான சப்த சமூகங் கேட்கப்படுகிறதோ, எவ்வஸ்துவை ஸ்திரீகேளிபோல மிகவுந் திடமாய் வைக்கப்படுகிறதோ, அதையே பெரியோர்கள் சிரவணமென்பார்கள். அந்தச் சிரவணம் சாதுக்களின் சம்பந்தத்தாலுண்டாகத்தக்கது. சிரவணத்தாலேயே சிவபக்தியுண்டாகும். சிவத்தியானமே எல்லாவற்றிலு மேம்பட்டது. சிவத்தியானத்தாற் சிவகடாக்ஷமும், சிவகடாக்ஷத்தாற் சகல பாக்கியமுமுண்டாகுமென்று கூறினர். ஸூதமுநிவர் சொல்கின்றார்: ருஷிகளே! இந்தச் சாதன மகாத்மியத்தில் முன்னடந்ததை யுங்கட்குச் சொல்லுகின்றேன். சாவதானமாகக் கேளுங்கள். பராசரமுநிவர் புதல்வரும் என் ஆசிரியருமான ஸ்ரீவியாஸபகவான் முன்னொருகாலத்திற் சிவப்பிரமத்தை யடையவேண்டுமென்று கருதினவராய், ஸரஸ்வதி நதிதீரத்தில் அரிய தவஞ்செய்கையில், சூரியகாந்தியைப்போலப் பிரகாசிக்கும் விமானமிவர்ந்து விருப்பின்படி சஞ்சரிக்கும் ஷட்குணைசுவரிய சம்பன்னரான ஸநத்குமாரமுநிவர் அவரைப் பார்த்தார். வியாஸமுநிவரும் ஸநத்குமாரரைக்கண்டு தியானத்தைவிட்டு விழித்துக்கொண்டு ஆசாரியர் வந்துவிட்டாரென்று மிக்க பயத்துடனுஞ் சந்தோஷத்துடனும் நமஸ்காரஞ்செய்து அர்க்கிய பாத்தியாதிகளையும் உயர்ந்த ஆதனத்தையுங்கொடுத்து நேரே கைகட்டி நிற்க, பிரமதேவருடைய புத்திரராகிய ஸநத்குமாரமுநிவர் கம்பீரமாகச் சொல்வாராயினர். முநிவனே! சிவபெருமான் பிரசன்னமாகத்தக்க அரிய சிவதத்

துவ சொரூபமான தியானயோகத்தை இதாசக்தியில்லாமல் யாது கரு திச்செய்கின்றனே? என வினவ, வியாஸமுநிவர், ஸ்வாமீ! அறம்பொருளின் பம் விடென்னு நான்கு புருஷார்த்தங்களையும் வேதத்திற் கூறியவாறே தேவரீருடைய கிருபையால் யாவருக்குமுரைத்தேன். அப்படிக் கூறிய தால் உலகங்களெல்லாவற்றிற்கும் அவற்றிற்குக் குருவான எனக்கும் மேம்பட்ட முக்தியை யுண்டுசெய்யத்தக்க ஞானமுண்டாகவில்லை. ஆத லின், மோக்ஷமடைய விரும்பித் தவஞ்செய்கின்றேன். மோக்ஷோபாய மான ஞானமுண்டாகவில்லையென விண்ணப்பிக்க, ஸநத்குமார முநிவர் சொல்லுகின்றார். சிவநாமங்களைச் சிரவணஞ்செய்வதும், நாவாற்றுதிப்ப தும், மனசால் தியானிப்பதுமாகிய இவையே வேதத்திற்குச் சம்மதமான சாதனமென்று சொல்லப்படும். இவ்விஷயம் பூர்வத்தில் யான் ஸாதனத் தாற் பிராந்தியுடன் சலியாத மந்தரபர்வதத்தில் உக்கிரமான தவஞ்செய் கையில், பகவானுன சிவபெருமானுடைய ஆக்கினையினுற் கணேசுவரரும் சர்வசாக்ஷியும் இரண்டாஞ் சம்புவுமான நந்திதேவர் என்பாலடைந்து, செவியாற் கேட்பதும் வாயாற் றுதிப்பதும் மனசாற் றியானிப்பதுமே வேதசம்மதமான மோக்ஷசாதனமென்று சர்வலோகநாயகனுன சிவபெரு மானுபதேசித்தனரென்றனர். ஆதலின் வியாஸமுநிவனே! சிரவணுதி மூன்றனையும் இடைவிடாது செய்யக்கடவையென்று பிரமபுத்திரரான ஸநத்குமார முநிவர் கட்டளையிட்டு விமானமேறி உடன்வந்தவர்க ளோடு தன்னிச்சையின்வழி சென்றனரென்று கூறிய ஸூதமுநிவரை நோக்கி ருஷிகள் வினவுகின்றார்கள். தேவரீர் சிரவண முதலிய மூன்றுமே மோக்ஷத்திற்கு முக்கிய சாதனங்களெனக் கூறினீராதலின், செவியினுற் கேட்கவும் வாயாற் றுதிக்கவும் அசக்தராயிருப்பவர்கள் யாதுசெய்யலாம்? பிரயத்தனமில்லாமலே எவ்வகையாக மோக்ஷமுண்டாகலாம்? இவற்றை யுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸூதமுநிவர் சொல்லத் தொடங் கினர்.

ஸநத்குமாரர் வியாஸருக்குபதேசித்தது

முற்றிற்று.

மூன்றுவது

இலிங்க விக்கிரகங்களின் வரலாறுரைத்த அத்தியாயம்.

ருஷிசிரேஷ்டர்களே! செவியாற்கேட்பது முதலியவற்றில் அசக் தன் சிவலிங்கத்தையாவது சிவரூபத்தையாவது பிரதிஷ்டைசெய்து நா டோறும் பூஜித்து, சமுசாரமாகிய கடலைத் தாண்டவேண்டும். அவனுக் குத் திரவியமிருந்தால் அதைச் சிவப்பிரீதி செய்யவேண்டியது. தன் சக் திக்கேற்றபடி சிவார்ச்சனை செய்யவேண்டியது. அவன் சிவபக்தியுடன் மண்டபம் கோபுரம் குளம் மடம் உற்சவம் வஸ்திரம் வாசனைத் திரவியங் கள் மாலை தூபம் தீபம் பக்ஷியங்கள் சித்திரான்னங்கள் குடை சாமரம்

கொடி அழகிய வாகனங்கள் முதலியவற்றைச் சமர்ப்பித்து, அரசனை யுபசரிப்பதுபோலச் சிவலிங்கஞ் சிவவிக்கிரகமிவற்றையுபசரிக்கவேண்டியது. சக்திக்கேற்பப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்யவேண்டியது. இவ்வகையாகத் தன்னுயிருள்ளவரையிற் பக்தியோடு சக்திக்கேற்பச்செய்து சிவார்ச்சனையைக் கடைப்பிடித்தால், சிவபெருமானுக்குக் கிருபையுண்டாகி, சிரவண முதலிய மூன்று சாதனங்களில்லாமலே சித்தியை யடைவான். பெரியோர்களுள்ளே முன்னே சிவலிங்கபூஜையாற் பலரும், சிவவிக்கிரகபூஜையாற் பலருமாக முக்தியடைந்திருக்கிறார்கள் எனக்கூற, ருஷிகள் ஸூத முனிவரே! எவ்விடத்தும் எல்லாத்தேவர்களும் விக்கிரகரூபத்திலேயே பூஜிக்கப்படுகையில், சிவபெருமான்மட்டுமேன் லிங்கரூபத்திலும் விக்கிரகரூபத்திலும் பூஜிக்கப்படுகிறார்? இதன் விவரத்தையு மெங்களுக்குக் கூற வேண்டுமெனக்கேட்க, ஸூதர் சொல்லுகிறார்: ருஷிகளே! மிகவும் புண்ணியசீலமான கேள்வியைக் கேட்டீர்கள். இதற்குச் சமாதானம் அந்தச் சிவபெருமானேயன்றி வேறொருவருஞ் சொல்லமாட்டார்கள். ஆயினும் என் குருவான வியாஸபகவான் கூறியபடியே சொல்லுகிறேன். சிவபெருமானே பரப்பிரமஸ்வரூபி. அவரே சகலரூபியாதலிற் குணஸ்வரூபியாயும், நிர்க்குணஸ்வரூபியாயுமிருக்கிறார். நிர்க்குணஸ்வரூபியாகையால் அச்சிவபெருமானுக்கு உருவமில்லாமலிருக்கிற லிங்கவடிவமுண்டாயது. குணஸ்வரூபியாகையால் உருவத்துடன் கூடிய விக்கிரகவடிவமுண்டாயது. குணநிர்க்குணரூபியாகையால், பரமான பரப்பிரமமென்று பெயர். சிவபெருமானை மட்டுமே லிங்கத்திலும் விக்கிரகத்திலும் அர்ச்சிக்கத்தகும். பிறதேவர்களுக்குப் பிரம ஸ்வரூப மில்லாமையாலும், ஜீவனுடைமையாலும் சாமானியர்களுக்குப் பிரபுவாயிருப்பதாலும் நிஷ்களமான லிங்கத்தில் பூஜைசெய்யப்படவில்லை. அவர்கள் சகளமாதலின் விக்கிரகத்தில் மாத்திரமே பூஜைசெய்யப்படுகிறார்கள். சிவபெருமானுக்கே பரப்பிரமத்துவமுள்ளது. பிறதேவர்களுக்கு ஜீவத்துவமே யிருக்கின்றது. இதுவே ஓங்காரத்தின் அர்த்தத்தாலும் உபநிஷத்துகளாலும் ஏற்படுகின்றது.

நீங்கள் வினவியவண்ணமே பூர்வம் மகாபுத்திசாலியும் பிரமபுத்திரருமான ஸநத்குமார முனிவர் மந்தரகிரியில் நந்திகேசுவரரை நோக்கி, சிவபெருமானை நீங்கிய பிறதேவர்களைப் பக்திசெய்பவர்கள் விக்கிரகத்திலே மட்டும் பூஜைசெய்கையில், சிவபெருமானைப் பக்திசெய்பவர்கள் மாத்திரம் லிங்கத்திலும் விக்கிரகத்திலும் பூஜைசெய்கிறார்களே. இதின் விவரத்தை யதார்த்தமாகச் சொல்லவேண்டுமென்னவினவ, நந்திதேவர் சொல்லுகிறார்: பரப்பிரம லக்ஷணமாயும், சிவபெருமானாற் சொல்லப்பட்டுச் சிரேஷ்டமாயும், இரகசியமாயுமிருக்கிற இவ்விவரத்தை மிகப்பக்தியோடு கேட்கின்ற உனக்குச் சொல்லுகின்றேன். அந்தச் சிவபெருமான் பிரமஸ்வரூபியும் நிஷ்களருமாயிருப்பதால் அவரை லிங்கரூபமாகப் பூஜிப்பதும், அவரே சகளராயுமிருப்பதால் அவரை விக்கிரகரூபமாகப் பூஜிப்

பதும் சகலதேவ சம்மதம். பிறதேவர்கட்கு ஜீவத்துவமாத்திரமாதலின் விக்கிரக ரூபமாத்திரமே பூஜிக்கப்படவேண்டுமென்பது சகலசுருதி சம்மதம். சிவபெருமான் குணஸ்வரூபியும் நிர்க்குணஸ்வரூபியுமாதலின், அவரை லிங்கம் விக்கிரகமிரண்டிடத்தும் பிரத்தியக்ஷமாகப் பூஜைசெய்கிறார்கள் எனக்கூற, ஸநத்குமார முநிவர் சந்தோஷித்து, தேவரீர் நன்றாகவுரைத்தருளினமையின் அநுவிஷயத்திற் சந்தேகமொழிந்தேன். யோகிசுவர சிரேஷ்டரே! அந்த லிங்கவடிவம் விக்கிரகவடிவம் இவற்றின் உற்பத்தியையும் சிவஸ்வரூப லக்ஷணத்தையுங் கேட்டறிய அவாவுகின்றேனெனக்கூற, நந்திகேசுவரர் சொல்லுகின்றார். பூர்வம் பிரளயகால முடிந்தவுடன் பெருந்தேவர்களான பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் ஒருவரையொருவரெதிர்த்து நான் பெரியவன் நான் பெரியவனென்று இறுமாப்புடன் போர்புரிந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய மமதையையொழிக்க அவ்விருவர்க்குமிடையே பரமேசுவரர் தன்னுடைய ஸ்வரூபத்தை ஸ்தம்பமாகக் காட்டினார். அதுமுதல் சர்வலோகத்திலும் சிவலிங்கத்தையும் அவருடைய வுருவத்தையும் பூஜிக்கிறார்கள். பிறதேவர்களை விக்கிரகத்திற் பூஜித்து இஷ்டசித்திகளை யடைவதைக்காட்டிலும் மேலான பலன்களைச் சிவபெருமானை இலிங்கத்திலாவது விக்கிரகத்திலாவது பூஜிப்பதனாலடையலாமென்று கூறினர்.

இலிங்க விக்கிரகங்களின் வரலாறுரைத்தது

முற்றிற்று.

நான்காவது

பிரம விஷ்ணுக்கள் போர்செய்த அத்தியாயம்.

நந்திதேவர் ஸநத்குமார முநிவரைநோக்கிச் சொல்லுகின்றார். முன்னொருகாலத்தில் விஷ்ணுமூர்த்தியானவர் திருப்பாற்கடலிலே சேஷசயனத்திலே யோகநித்திரையிலிருக்கையில், பிரமதேவன் இச்சைவழிச் சென்று திருமால்கண்டுயிலுமிடத்தை யடைந்து அவரைக்கண்டு பின்வருமாறு சொல்கின்றனன்: நீயாவன்? மதிப்பின்றி என்முன்னேயும் பரமபுருஷனைப்போலிறுமாந்து படுத்திருக்கின்றனை? யானுன் ரக்ஷகன். குருவையும் பெரியோரையும் பார்த்தவுடன் எழுந்து மரியாதை செய்யாதவனுக்குப் பிராயச்சித்தம் விதித்திருக்கின்றது எனக்கூற, விஷ்ணு பிரமனைநோக்கி, மகனே! எங்குவந்தாய்? எனப் பிரமன் நீயே யென்மகன்; யானே உலகங்களைப் படைத்தேனென, விவாதமுண்டாகி ஒருவரையொருவர் கொல்லுவதென்று கருதிப் போர்புரியத் தொடங்கினார்கள். விஷ்ணு பிரமன் மார்பிலும் பிரமன் விஷ்ணுமார்பிலுமாக அநேக பாணங்களை யெய்தார்கள். அநேக சூரியருக்குச் சமானமாயும் ஆயிரமுகத்தையுடையதாயும், மிகவும் உக்கிரமாயும், ஊழிக்காலத்துக்கு நிகராயும் பயங்கர

மாயுமிருக்கிற அவ்விருவருடைய அஸ்திரங்களும் ஆகாயத்திற் கிளம்பிப் போர்செய்தன. இவ்விதமாக எண்ணிறந்த அஸ்திர சஸ்திரங்களாற் பிரம விஷ்ணுக்கள் மிகக்கோரமான யுத்தஞ்செய்கையில், சகலதேவர்களும் மதிமயங்கி, அரசர்க்குள்ளே யுத்தமுண்டான காலத்திலே அதனை விலக்கும்படி யோசனைசெய்யும் வேதியனைப்போல, சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்து எப்பொழுதுமிறவாது மங்களரூபியாயுள்ளவனெவனோ, எவனுடைய வநுமதியின்றிப் புல்லையுங் கிள்ளமுடியாதோ, அப்படிப்பட்ட பரம்பிரமஸ்ரூபியாய்த் திரிசூலங்களைத் திருக்கரத்தேந்திய சிவபெருமானுக்கு நமஸ்காரமென்று சொல்லி நமஸ்கரித்து, மிகவும் உந்நதமான ஸ்ரீகைலாசகிரியை யடைந்து நமஸ்கரித்து, மேலேறிச் சந்நிதியிற்சென்று இரத்தினசிங்காசனத்திலே பார்வதி தேவியுடன் எழுந்தருளியிருக்குந் தேவநாயகனாகிய சிவபெருமானைப் பணிந்து, இடதுதுடையின்மேலே பார்வதிதேவியை யமர்த்தி அவள் தோளின்மேலே இடதுகரத்தை வைத்து, உருத்திரகணங்கள் முதலியன பணிசெய்ய எழுந்தருளியிருக்கின்ற அப்பரமபுருஷனுடைய சந்நிதியிலே கண்ணீர்துளித்துக்கொண்டு சிறிது தூரத்திலிருந்தார்கள். சிவபெருமான் அவர்களைத் தமது மதுரமொழியால் அருகே யழைத்து, மங்களகரமுங் கம்பீரமுமான தமது திருவாக்காற் சொல்லத்தொடங்கினர்.

பிரம விஷ்ணுக்கள் போர்செய்தது

முற்றிற்று.

ஐந்தாவது

அடிமுடிதேடிய அத்தியாயம்.

சிவபெருமான் சொல்லுகின்றார்: தேவர்களே! என் கடாக்ஷத்தால் உங்களுக்கு மங்களமுண்டாகுக. உலகமுழுவதுந் தத்தந் தொழின்முறையிலிருக்கின்றதா? பிரமனும் விண்டுவும் போர்செய்வதை யான் முன்னமே யறிவேன். உங்கள் வருகையால் இரட்டிப்பாகத் தெரிந்ததென்று பார்வதி பாகனாகிய பகவான் புன்சிரிப்போடும் இன்மொழியோடுங் கூறித் தேவர்களைச் சந்தோஷிப்பித்த பின்னர், அவ்விருவரும் போர்செய்யுமிடத்திற்குப் புறப்படவேண்டுமென, அநேக கணங்கள் அநேகவிதமான வாத்தியங்களை முழக்கின. அப்பொழுதுசிவபெருமான் ஆகாயமும் பூமியும் அளாவி வியாபித்து ஓங்காரரூபமாய் ஐந்து மண்டலங்களாற் பூஷிக்கப்பட்ட மங்களகரமான இரதத்திலேறி, இந்திரன் முதலிய தேவர்கள் தத்தம் புதல்வருடனே பின்றொடரவும், சுருட்டி சாமரை புஷ்பவர்ஷம் ஆடல் பாடல் பலவித வாத்தியகோஷம் முதலிய சகல சம்பிரமங்களோடும் பார்வதிசமேதராய்ப் புறப்பட்டுத் தமது சைநியங்களுடன் பிரமனும் விஷ்ணுவும் போர்செய்யுமிடத்தை யடைந்து, வாத்தியகோஷம்

ஸைநியகோஷ முதலியவற்றை நிறுத்திக் கண்கட்குப் புலப்படாது மறைந்துவிட்டு ஆகாயத்திலிருந்தனர். பிரமா விஷ்ணுவைப் பாசுபதாஸ்திரத்தாலும், விஷ்ணு பிரமாவை மகேசுவராஸ்திரத்தாலும் அடிக்கவேண்டுமென்று ஆசக்தியுடையவர்களாயிருந்தார்கள். அதைக்கண்ட சிவபிரான் இவர்கள் போரை விரைவில் நிறுத்தாவிடின், உலகமழியுமென்று திருவுள்ளங்கொண்டு அவர்கட்கிடையே நிஷ்களராய் அக்கினிஸ்தம்பமாக நின்றனர். 'அவர்கள்விடுத்த அஸ்திரங்கள் அந்த ஜோதிஸ்தம்பத்தில் வீழ்ந்துமடிந்தன. அதுகண்ட தேவர்கள் களிப்படைந்தார்கள். பிரமவிஷ்ணுக்களும் இஃதென்ன ஆச்சரியமென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு கண்ணாற் பார்ப்பதற்கு இதுவிஷயமில்லாமலும் அக்கினிரூபமாயுமிருக்கின்றது. இதன் ஆதியந்தங்கள் காணப்படவில்லையேயென்றிருவரும் ஆலோசித்து, இதன் ஆதியையும் அந்தத்தையும் பார்க்கவேண்டுமென்று சொல்ல, பிரமனும் அதற்கிணங்க, விஷ்ணு பன்றியுருவெடுத்து அதனடியைத் தேடச்சென்றார். பிரமன் அன்னவடிவேற்று அதன்முடியைத் தேடச்சென்றான். விஷ்ணுபூமியைப் பிளந்துகொண்டு பாதலத்தையும் அண்டகடாகத்தையும் பிளந்துசென்றும் அதன்அடி தெரியாமல் மிகவுமிளைத்துத் தான்போர்செய்த விடத்தைப் பன்றிவடிவோடு சேர்ந்தனர். பிரமன் அன்னவடிவுடன் ஆகாயத்திற்சென்று மேலேழுலோகங்களையுந் தாண்டியலைவதையும் விஷ்ணுதேடி யிளைத்துத் திரும்பினதையும் பார்த்தசிவபெருமான் புன்னகைசெய்ய, சிவபெருமான் சடையிலிருந்து விழுந்து நெடுநாளாகப் பூமியைநாடிவந்துகொண்டிருக்கும் அதிவாசனையுடைய தாழம்பூவைப் பிரமதேவன் கண்டு, நீ யார் ? யார்முடியிலிருந்து வருகின்றனை ? எனவினவ, தாழைமலர் யான் நெடுநாளாக இந்தஜோதியின் முடியிலிருந்து வந்துகொண்டிருக்கின்றேனென, பிரமன் நானும் இந்த ஜோதியின்முடியைத் தேடுவதாகவே வருகின்றேன். சிநேகனான நீ எனக்குத் துணைசெய்யவேண்டியது. நான் விஷ்ணுவுடன் சபதஞ்செய்து இதன் முடியை யறிவேனென்று வந்திருக்கிறேனாதலின், நான் விஷ்ணுவுடன் இதன்முடியைக் கண்டேனெனக் கூறுகையில், நீயும் இந்தப்பிரமன் இதன் அந்தத்தைப் பார்த்தான். நான் சாக்ஷியெனச் சொல்லவேண்டும். ஒருவனுக்கு ஆபத்துக்காலத்தில் உதவிசெய்வதால், பொய்பேசிய பாவம் வந்து சேரமாட்டாது எனஸ்மிருதி யிருக்கின்றதென்று கூறி, அதைத் திட்டப்படுத்திக்கொண்டு பூமியில் வந்து வருந்திநிற்கும் விஷ்ணுவைக் கண்டு சந்தோஷத்துடன் கூத்தாடிக் கூறுகின்றனன். விஷ்ணுவே ! இந்த ஜோதிஸ்தம்பத்தின் முடியை யான்கண்டுவந்தேன். இந்தத் தாழம்பூ அதற்குச் சாக்ஷியென்று கூற, தாழம்பூ அவ்வார்த்தை சத்தியந்தானென்றது. விஷ்ணுமூர்த்தி அவ்வார்த்தை உண்மையேயென்று கருதி, அந்தப் பிரமதேவனைப் பணிந்து ஷோடசோபசாரங்கள் செய்துகொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில், சிவபெருமான் பிரமன்மீது கடுங்கோபமுற்று, தேஜோலிங்க ரூபத்திலேயே அவனைக்கொல்ல வருகையில்

விஷ்ணுவானவர் தெரிந்துகொண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து, எதிரே நின்று, ஆதிபந்தமில்லாத தேவரீரிடத்தில் மோகபுத்தியால் ஆதியந்தங்களைக் காணலாமென்று ஆசையுண்டாகி யலைகையில், தேவரீர் திருவிளையாடலாலே அது நாசமாயிற்று. அடியேன்செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் விஷ்ணுவின் பேரிற் கிருபைவைத்து, இளமையுள்ளவனே! தயையுடையவனுயினேன். என்னுடைய அடிமுடியைத் தேடவேண்டுமென்று விருப்பங்கொண்டாலும், சத்தியமொழியையே சொன்னவனுகையால் உன்னைத் தேவ ருஷிமாநுடர் முதலியோர் பூஜிக்கக்கடவர். உன்னைப் புண்ணியக்ஷேத்திரங்களிலெல்லாம் விக்கிரகரூபமாகப் பிரதிஷ்டைசெய்து பூஜைஉற்சவமுதலியன செய்பக்கடவரென்று திருவாய்மலர்ந்தருளி, தேவர்களெல்லாருங் களிக்கும்படி உனக்கு என்னைப்போலவே பூஜிதையுண்டாகுமென்று கூறியருளினர்.

அடிமுடி தேடியது

முற்றிற்று.

ஆறுவது

பிரமசிரச்சேதமும் தாழைமலர்ச்சாபமுமுரைத்த அத்தியாயம்.

விஷ்ணுமூர்த்திக்கு இவ்வகைய வரங்களைக்கொடுத்த சிவபெருமான், பொய்பேசிய பிரமன் விஷயத்திற் கடுங்கோபங்கொண்டு, அவனையடக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, தமதிருபுருவங்கட் கிடையே பைரவனை யுதிக்கச்செய்தனர், அப்பொழுது பைரவர் சிவபெருமானை நமஸ்கரித்து, ஸ்வாமீ! அடியேன் செய்யத்தக்க பணிவிடையாது? அதனை விரைவிற் கட்டளையிட்டருள வேண்டுமெனக் கேட்க, சிவபிரான் பைரவனை நோக்கி, இளம்பருவமுடையவனே! இப்பிரமன் என்னுடைய ஜோதிரூபத்தின் முடியைக் கண்டேனென்று அசத்தியமொழி யுரைத்தமையால், அவனுடைய சிரத்தை உன்கையிலுள்ள கட்கத்தினுல் அறுத்தெறிந்துவிடவேண்டியது எனக்கூற, அவ்வார்த்தையைக் கேட்ட பைரவர் உடனே விஷ்ணுபுத்திரராகிய பிரமாவின் தலைமயிரை ஒருகையாற் பிடித்துக்கொண்டு அசத்தியஞ்செய்த அவனுடைய ஐந்தாவது தலையை யறுத்து, மற்றத்தலைகளையும் அறுக்க ஆரம்பித்தனர். பின்பு பிரமன் அணிகள் வஸ்திரங்கள் மாலைகள் முதலியவற்றைவிட்டு அவிழ்ந்ததலைமயிரோடு, பெருங்காற்றா லலைப்புண்ட வாழைமரம்போல நடுநடுங்கிப் பைரவமூர்த்தியின் பாதங்களில்விழ்ந்து நமஸ்கரித்தான். அதைக்கண்டவிஷ்ணுமூர்த்தி தன் புத்திரனுன பிரமன்விஷயத்தில் மனங்கசிந்து அவனுக்குச் சிவகடாக்ஷத்தையுண்டாகச்செய்ய விரும்பி, சிவபிரானை நமஸ்கரித்து, குழந்தை தந்தையைப்பார்த்துக் கூறுவதுபோல, சகலலோகங்கட்கும் பதியான

சங்கரபகவானே! இந்தப்பிரமனுக்கு அவன்செய்தபெருந்தவத்திற்கிரங்கி முன் ஐந்துமுகங்களை அடையாளமாகக்கொடுத்தருளினீர். ஆதலின் அவனை மற்றச்சிரங்களை அறுக்காமல் மன்னித் தருளவேண்டுமென்று பணிவோடு விண்ணப்பஞ்செய்து கொண்டனர். அதனாற் சிவபகவான் சந்தோஷித்து, சகலதேவர்களுக்கும் முன்னதாகப் பைரவரையழைத்து அவருக் கோருலகுகொடுத்து அனுப்பிவிட்டு, நான்குசிரங்களுடனிருக்கும் பிரமனைப்பார்த்து, நீ மந்தபுத்தியால் என்ஸ்வரூபத்தை யறிய விரும்பினை. உன்னால் அதுமுடியாதபொழுது பொய்கூறினை. இக்குற்றங்களால் உனக்கு உலகத்திலே பூஜையும் உற்சவமுதலியனவும் இல்லாமற் போகுகவென்றனர். அவ்வார்த்தையைக் கேட்ட பிரமதேவன் மகா சம்பத்தையுடைய சிவபெருமானே! தயவுசெய்யவேண்டும். தயவுசெய்யவேண்டும். என் ஐந்தாவது சிரமே பொய்பேசினமையின் அதனை யறுத்ததுஎனக்குந் திருப்தியே! பரிசுத்தமானவரே! சகலருக்கும் பந்துவே! கைலாஸபதியே! நமஸ்காரம் என்று பணிந்தனன். சிவபிரான் பிரமனே! உலகிற்கு அரசனில்லாவிடின் நாசமுண்டாகுமாதலின் நீ உலகங்களிலுள்ள வேதியர்களுக்கெல்லாம் அரசனாயிருக்க. அக்கினிஹோத்திர முதலியவெல்லாவற்றிற்கும் நீயே குரு. உன்னையல்லாது சாங்கோபாங்கமாக யாகமுதலியவற்றைச் செய்தாலும் அதன்பயன் ஒருவனுக்கு உண்டாகமாட்டாது என்றுகூறி, பொய்ச்சாக்ஷிசொன்ன தாழைமலரைக் கோபத்துடன் பார்த்து, ஜடபுத்தியுந் துஷ்டத்தனமுமுடைய நீ இவ்விடத்தைவிட்டுத் தூரத்திற்செல். எனக்கு உன்னிடத்திற் சிறிதும் விருப்பமே கிடையாது. இனி நீ யென்பூஜைக்குதவமாட்டாய் என்றனர். அதைக்கேட்டுக்கொண்டிருந்த தேவர்கள் அதுமுதலாக உலகத்திலே ஒருநாளுந் தாழைமலரைச் சிவபூஜையிற் பிரயோசனப்படுத்துவதில்லை. தாழம்பூ சிவபெருமானைப் பணிந்து, ஸ்வாமீ! என்னைத் தேவரீருடைய பூஜையி லுபயோகப்படுத்தாவிட்டால் என் ஜனனம் நிஷ்பலமாகப்போகுமே. யான் செய்தபாவங்களை க்ஷமித்து என் ஜனனத்தைப் பலனுடையதாகச் செய்யவேண்டும். தேவரீரை மனதினாலே தியானஞ் செய்தாலுஞ் சகல பாவங்களு மொழிந்துவிடுகையில், தேவரீரைத் தரிசித்து நெடுங்காலந் தேவரீருடனிருந்த அடியேன் பொய்பேசிய பாவமும் க்ஷமிக்கப்படவேண்டுமென்று பலவாறு பிரார்த்திக்க, சிவபெருமான் சிறிது திருவுளமிரங்கி, தாழைமலரே! என் பக்தர்கள் உன்னையணிந்துகொள்க. அதனால்நீ ஜன்மசாபல்ய மடைகவென்று தாழைமலருக்கு மநுக்கிரகித்து, பிரமன் விஷ்ணு சகல தேவர்களாலுந் துதிசெய்யப்பெற்றுத் தேவர்கட்கிடையே யெழுந்தருளியிருந்தனர்.

பிரமசிரச்சேதமுந் தாழைமலர்ச்சாபமுமுரைத்தது

முற்றிற்று.

ஏழாவது

அருணாசல லிங்க மகிமைகளுரைத்த அத்தியாயம்.

திருநந்திதேவர் சொல்லுகின்றனர். ஸநத்குமாரமுநிவரே! அப்படி, சபாமத்தியிலிருக்குஞ் சிவபெருமானை வலப்பக்கலிலிருந்த பிரமதேவனும் இடப்பக்கலிலிருந்த விஷ்ணுமூர்த்தியும் நமஸ்காரஞ்செய்து அஞ்சலியஸ்தராயிருக்க, சிவபெருமான் சபையின்மத்தியிலே ஓர் சிங்காதனத்தின்பேரிலே பார்வதி சமேதராக வெழுந்தருளியிருந்தனர். அப்பொழுது பிரம விஷ்ணுக்களிருவரும் முத்துமாலை தோள்வளை கிரீடம் மணிகள் குண்டலங்கள் யஜ்ஞோபவீதம் மாலை உத்தரீயம் புஷ்பம் தாம்பூலம் கர்ப்பூரம் சந்தனம் தூபம் தீபம் துவஜம் சாமரம் முதலிய பலவற்றையுஞ் சிவபெருமானுக்குச் சமர்ப்பித்தனர். அவர்கள்செய்த பூசைக்குச் சந்தோஷித்த சங்கரபகவான் புன்சிரிப்புடன் சொல்லத்தொடங்கினர், குழந்தைகளே! நீங்கள்செய்த பூஜைக்கு நான் மிகவுங்களித்தேன். இத்தினம் மிகவும் புண்ணியசீலமான தினமாகும். இத்திதிக்குச் சிவராத்திரியென்று பெயர். இதுவே யென் இஷ்டமான திதி. இத்தினத்தில் எவன் என்னுடைய லிங்கத்தையாவது விக்கிரகத்தையாவது பூஜிக்கின்றானோ அவன் உலககாரியங்களாகிய சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்பவனாகிறான். சிவராத்திரிகாலத்தில் இரவும் பகலும் ஆகாரமின்றி ஜிதேந்திரியனாய், சாஸ்திரப்படி தன் சக்திக்கேற்பச் சிவபூஜைசெய்யவேண்டியது. சந்திரோதயகாலத்தில் விருத்தியடையுஞ் சமுத்திரத்தைப்போல, இந்தச்சிவராத்திரிகாலத்தில் எனக்குச் செய்யும் பூஜை உற்சவமுதலியவற்றால் என் களிப்பு விருத்தியாகும். யான் உங்களுக்காக ஸ்தம்பாகாரமாக ஆவிர்பவித்த காலம் மார்கழிமாசத் திருவாதிரை நக்ஷத்திரமாகலின், அந்த மார்கழிமாசத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே என்னுடைய லிங்கஸ்வரூபத்தையாவது விக்கிரகரூபத்தையாவது தரிசனஞ்செய்பவனிடத்தில் ஸ்கந்தனிடத்துள்ளவளவு அன்புவைப்பேன். மங்களகரமான இச்சிவராத்திரி தினத்தில் என்னைப்பூசித்தவன் சொல்லிமுடியாத பெரும்பலனையடைவான். யான் லிங்கரூபியாக நின்ற இவ்விடம் லிங்கஸ்தானமென்று பெயர் பெறும். ஆதியந்தங்கள் கண்டறியாத இந்தஸ்தம்பம் ஜனங்கள் தரிசித்தற்கும்பிரதக்ஷிணஞ்செய்தற்கும் அநுகூலமாகச் சிறியதாகப்போகின்றது. சகல ஜனங்களும் இஷ்டசித்திகளையும் முத்தியையும் அடைவதற்கு இதுவே உபாயம். இதைத் தரிசித்தாலும் நமஸ்கரித்தாலுந் தியானஞ்செய்தாலும் ஜன்மத்தை யொழிக்கலாகும். இது அக்கினிமலைபோ லுண்டான காரணத்தினால் இந்த ஸ்தலம் அருணாசலமென்று பிரசித்தியடையும். இங்கே பிரசித்தியான பல புண்ணிய தீர்த்தங்களுண்டாகும். இங்கே வசித்தவர்களும் மரித்தவர்களும் மோக்ஷமடைவர். இங்கே சிறந்த இரதோற்சவமுதலிய மங்களகரமான உற்சவங்களுமுண்டாகும். இவ்விடத்தில் தானம் தவம் ஹோமமுதலியன செய்யின் ஒவ்வொன்றும் ஒவ்வொரு

கோடியாகப் பலனளிக்கும். இது என்னுடைய க்ஷேத்திரங்களிலேசிறந்த தோர் க்ஷேத்திரமாம். இந்த ஸ்தலத்தை ஸ்மரிப்பதாலேயே முக்தி கைகூடும் ஆகையால் இது மேன்மையானதும் மங்களகரமானதும் அழகானதும் மோக்ஷமளிக்கவல்லதுமாம். இந்தஸ்தலத்தில் இலிங்கத்தையாவது என் விக்கிரகத்தையாவது பூஜைசெய்தவர்கள் சாலோக சாமீப சாரூப சாயுஜ்யமென்னும் பதவிகளையடைவார்கள் ஆதலின் பிரமவிஷ்ணுக்களாகிய நீங்களுஞ் சகலதேவர்களோடும் இவ்விடத்திலே உற்சவமுதலிய விபவங்களைச்செய்து இஷ்டசித்தியை யடைவீர்களாக வென்றனர்.

சிவபகவான் இவ்வாறு அநுக்கிரகித்த பிறகு, முன்னே பிரமனும் விண்டுவும் போர்செய்கையி லிறந்தவர்களையெல்லாம் உயிர்பெற்றெழச்செய்து அவ்விருவருடைய அறியாமையையுந் துவேஷத்தையும் போக்குவதற்காகச் சொல்லுகின்றார்: என் ஸ்வரூபம் சகளமென்றும் நிஷ்களமென்று மிருவகைப்படும். வேறெவனும் சகளநிஷ்கள ரூபமுடையவனல்லன். வேறெவனும் ஈசுவரனல்லன். முதலில் ஸ்தம்பரூபமாகவும் பின்னே விக்கிரகரூபமாகவுங் காணப்பட்டேனன்றோ? பிரமத்வத்தை நிஷ்களமென்றும் ஈசத்வத்தைச் சகளமென்றுஞ் சொல்லப்படும். அஜ்ஞானத்தால் நான் ஈசுவரன் நான் ஈசுவரனென்று நீங்கள் ஒருவரோடொருவர் போர்செய்ததுணர்ந்து அதனைநிவிர்த்திசெய்வதற்காக இந்த யுத்த பூமியில் வந்தேன். நீங்கள் இனி அகங்காரங்களைவிட்டு ஈசுவரனை என்னிடத்திற் பக்திசெய்யக்கடவீர்கள். எல்லாவுலகங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களும் என்னுடைய அநுக்கிரகத்தாலேயே பிரகாசிக்கின்றன. என்னுடைய பிரமத்வத்தை உங்களிடத்துள்ள அன்பினாலே விளக்கினேன். நானே சர்வலோகேசுவரனும் பஞ்சகிருத்தியங்களையு நடத்தும் பிரபுவுமாவேன். நானே சர்வலோகங்களிலும் வியாபித்த பரப்பிரமம். நானே ஆத்மா. நானே ஈசுவரன். நானே பஞ்சகிருத்தியங்களைச்செய்பவன். இவற்றை உங்கட்கறிவிக்கவேண்டி இலிங்கரூபமாகவந்தேன். இந்த ஸ்தம்பாகாரம் என் பிரமத்வத்தை விளக்குகின்றது. இதுவே யென்னுடைய லிங்கரூபம். இந்த லிங்கத்தை நீங்கள் தினந்தோறும் பூஜைசெய்யக்கடவீர்கள். என்னுடைய லிங்கத்தையாவது விக்கிரகத்தையாவது பூஜைசெய்வது சமானமாம். ஆயினும் லிங்கபூஜையே விக்கிரக பூஜையைக் காட்டினுஞ் சிறந்தது. இலிங்கத்தையும் விக்கிரகத்திற்குப் பேதமென்று நினையாது பூஜைசெய்யக் கடவீர்கள். இலிங்கப் பிரதிஷ்டைமாத்திரஞ் செய்து விக்கிரகப்பிரதிஷ்டைசெய்யாவிடினும் யான் அங்கெழுந்தருளி யிருப்பேன். விக்கிரகத்தை மாத்திரம் பிரதிஷ்டைசெய்து இலிங்கப்பிரதிஷ்டைசெய்யாவிட்டால் நான் அவ்விடத்திற் பிரதிஷ்டைசெய்யப்பட்டவனாகமாட்டேன். ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்தவன் என்சாயுஜ்யத்தையடைவான். இலிங்கம் விக்கிரகமென்னுமிரண்டில் இலிங்கமே முக்கியமாகப் பிரதிஷ்டைசெய்யத்தக்கது. இலிங்கப்பிரதிஷ்டை யில்லாதவிடம் க்ஷேத்திரமாகமாட்டாது என்று சிவபிரான் கூறியருளினர்.

அருணாசல லிங்க மகிமைகளுரைத்தது
முற்றிற்று.

எட்டாவது

பிரமவிஷ்ணுக்களுக்குபதேசித்த அத்தியாயம்.

பிரமவிஷ்ணுக்கள் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களின் லக்ஷணங்களிவையெனக் கூறியருளவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் சொல்லலாயினர்: பிரமனே! விஷ்ணுவே! ஒருவராலுமறியக்கூடாத என் பஞ்சகிருத்தியங்களின் தன்மையை உங்கள்மேலுள்ள கிருபையாற் சொல்கின்றேன். சிருஷ்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகமென்னும் என்னுடைய ஐவகைக் கிருத்தியங்களாலேதான் உலகம் நித்தியமாகவிருக்கின்றது. சிருஷ்டியென்பது சமுசாரத்தை யுண்டுசெய்வது. திதியென்பது அந்தச் சமுசாரத்தைப் பிரதிஷ்டைசெய்வது. சங்காரமென்பது அந்தச் சமுசாரத்தைப் பிடிப்பது. திரோபவமென்பது அந்தச் சமுசாரத்தினின்றும் நிவிருத்திசெய்வது. அநுக்கிரகமென்பது அந்தச் சமுசாரத்தினின்றும் நிவிருத்தியாகி மோக்ஷத்திற்குப்போவது. இவ்வைந்தும் என்னாலேயே நடத்தப்படுகின்றன. சிருஷ்டி திதி சங்காரந் திரோபவமென்னு மிந்நான்கு கிருத்தியங்களைப் பூமி ஜலம் அக்கினி வாயு இவர்கள் கோபுரந்தாங்கிகள் கோபுரத்தைத் தாங்குவதுபோலச் செய்துவருகிறார்கள். சிருஷ்டி முதலிய சமுசார கிருத்திய நான்கும், அநுக்கிரகமென்னும் மோக்ஷகிருத்தியமும் ஆக ஐந்து கிருத்தியங்களும் என்னிடத்திலேயே யுள்ளன. இப்பஞ்சகிருத்தியங்களைப் பஞ்சபூதங்களானடத்துதும். சிருஷ்டி பூமியிலும், ஸ்திதி ஜலத்திலும், சங்காரம் அக்கினியிலும், திரோபவம் வாயுவிலும், அநுக்கிரகம் ஆகாயரூபியான வென்னிடத்திலு மிருக்கின்றன. பூமியாற் சகலமுஞ் சிருஷ்டியாம். ஜலத்தால் அவை யாவும் விருத்தியாம். அக்கினியால் எல்லாம் ஸம்ஹரிக்கப்படும். வாயுவால் சகல லோகமுந் திரோபவிக்கப்படும். ஆகாசரூபியான என்னாற் சகல லோகங்களும் அநுக்கிரகிக்கப்படுமென்று புத்திமான்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இப்பஞ்சகிருத்தியங்களைச் செய்ய எனக்கு நாற்றிசைகளில் நான்கு முகங்களும் உச்சியில் ஒரு முகமுமாக ஐந்துமுகங்களுள்ளன. பிரமனே! விண்டுவே! நீங்கள் முன்னொருகாலத்தில் என்னை வேண்டிக்கொண்டபொழுது சிருஷ்டி திதி யென்னு மிரண்டையும் உங்களுக்குக்கொடுத்தேன். அப்படியே உருத்திரனும் மகேசனும் பெருந்தவஞ்செய்தபடியால் அவர்கட்கிரங்கிச் சங்காரந் திரோபவ மென்னுமிரண்டையும் அவர்களுக்குக்கொடுத்தேன். ஆனால் அநுக்கிரக கிருத்தியமாத்திரம் ஒருவராலும் அடையத்தக்கதன்று. இந்த முன்னே நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் நீங்களிருவரும் மறந்துவிட்டீர்கள். உருத்திரனும் மகேச்சுரனும் மறவாதிருக்கிறார்கள். ரூபம் காரியம் வாஹனம் ஆசனம் ஆயுதம் முதலியவைகளில் அவர்களிருவருக்கும் எனக்குச் சமானமாக விருத்தலைக்கொடுத்தேன். என்னை நீங்கள் தியானஞ்செய்ய மறந்தமையால் இப்படித் துன்புற்றீர்கள். ஆதலால் இனியேனும் என் சுபா

வத்தை யறிதற்கு ஓம் என்பதாயும், அகங்காரங்களைப் போக்குவதாயும் விளங்கும் என் மந்திரத்தை ஜபஞ்செய்யுங்கள். அவ்வோங்காரம் என் முகத்தினின்றுதித்தது. அதுவே வாசகம். நானே வாச்யன். இந்த வோங்கார தியானத்தால் என்னைத் தியானஞ்செய்த பலனுண்டாகும். அவ்வோங்காரத்திலுள்ள அகர உகர மகரங்களில், அகரம் என் வடமுகத்தினின்றும், உகரம் என் மேன்முகத்தினின்றும், மகரம் தென்முகத்தினின்றும், அநுஸ்வரம் கீழ்முகத்தினின்றும், ஓமென்னு மோசை என் ஐந்தாவது முகத்தினின்றுந் தோன்றின. ஓங்காரம் இவ்வாறு ஐந்து விதங்களாகச் சேர்ந்து ஓரெழுத்தாகின்றது. இந்த மந்திரத்தாற் சகலலோகமும் வியாபரிக்கப்பட்டது. இதுவே என் சக்திகளை யறிந்து சொல்லவல்லது. இதுவே சகல அறிவையு முண்டுசெய்யும். நமசிவாய என்னும் பஞ்சாக்ஷர மகாமந்திரமாக விளங்கும். ஓமென்பதில் அ உ ம்) ஓமென்னும் ஓசை யிவ்வைந்துமே முறையாக ந ம சி வ ய வென வாயின. அந்த நான்கு தலையையுடையதான நான்கு முகங்களிலிருந்து மூன்று பதத்தையுடையதான காயத்திரியுண்டாயிற்று. காயத்திரியினின்றுஞ் சகலவேதமுமுண்டாயின. வேதத்தினின்றும் அநேக மந்திரங்களுண்டாயின. அவ்வம்மந்திரங்கள் தத்தமக்குரிய அவ்வப்பலன்களையே கொடுக்கும். காயத்திரியோ சகல புலன்களையுங் கொடுக்கும். பிறமந்திரங்கள் சுகத்தைமாத்திரங் கொடுக்கும். பிரம விஷ்ணுக்களே ? இப்பஞ்சாக்ஷரமோ சுகத்தையும் மோக்ஷத்தையுங் கொடுக்குமென்று கூறி, அங்கோர் திரையிட்டு வடமுகமாக நிற்கும் பிரமனுக்கும் விஷ்ணுவுக்குங் குருவாகவிருந்து அந்தச் சிறந்த மந்திரத்தை அவர்கள் சிரசிற் கையைவைத்துப் பார்வதிதேவியுடன் எழுந்தருளியிருந்து உபதேசஞ்செய்து, அதற்கு யந்திரம் தந்திரம் இவற்றையுங்கொடுத்து, மந்திரத்தை மும்முறை கூறி, அவர்களைக் கிரகிக்கச்செய்தனர். அப்பொழுது அவ்விருவரும் சிவபெருமானுக்குத் தம்மையே குருகாணிக்கையாகக் கொடுத்துப்பின் வருமாறு தோத்திரஞ் செய்தார்கள். நிஷ்களசுரூபியும் தேஜஸையுடையவரும், சகலலோகநாதனும், ஆத்மஸ்வரூபியும், பிரணவ வாச்சியரும், பிரணவத்தை யடையாளமாக வுடையவரும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களைச் செய்பவரும், ஐந்து முகங்களையுடையவரும், பஞ்சப்பிரமஸ்வரூபியும், பரப்பிரமஸ்வரூபியும், பரமாத்மஸ்வரூபியும், நாசமில்லாதவரும், குணசக்திகளை யெல்லாமுடையவரும், சகலரூபியும், நிஷ்களரூபியும், சுகத்தைக்கொடுப்பவரும், சகல ஜனங்களுக்குங் குருவுமாகிய தேவரீருக்கு நமஸ்காரம்' நமஸ்காரமென்று, பலவாறு துதிசெய்ய அதற்குச் சிவபிரான் சொல்லுகின்றார். இளையோர்களான பிரம விஷ்ணுக்களே ? உங்களுக்குச் சகல தத்துவங்களையும் விளக்கினேன். ஓமென்னும் பிரணவத்தை ஜபஞ்செய்யுங்கள். பிரணவ மந்திரத்தைத் திருவாதிரை நக்ஷத்திரத்திலும், சதுர்த்தசி திதியிலும் ஜபித்தால் ஞானமும் அழியாச்செல்வமும் நாசரகிதமான கீர்த்தியும் மோக்ஷசுகமும் உண்டாகும். திருவாதிரையிலே சூரியப்பிரவேசமாயிருக்

கையில் ஜபஞ்செய்தால் அதிலுங் கோடிபங்கு அதிக பலனுண்டாம். சாயுங்காலத்திலும் பிராதக்காலத்திலும் மத்தியானகாலத்திலும் ஹோம தர்ப்பண காலங்களிலும் ஜபஞ்செய்யவேண்டியது. அஸ்தமித்தபிறகு ஒருமுகூர்த்தகாலமிருக்கிற சதுர்த்தசி அமாவாசை விசேஷமானதென்றுணர்வீர்களாக. இலிங்கமும் விக்கிரகமும் எனக்குச் சம்மதமாயினும் மோக்ஷாபேக்ஷை யுடையவர்கள் இலிங்கத்தையே மிகுதியாகப், பூஜை செய்யவேண்டும். இலிங்கத்தை ஓங்காரமந்திரத்தாலும், விக்கிரகத்தைப் பஞ்சாக்ஷர மந்திரத்தாலும் பூஜிக்கவேண்டும். இலிங்கப்பிரதிஷ்டை விக்கிரகப்பிரதிஷ்டை யிரண்டுஞ் செய்யத்தக்கதாயினும் இலிங்கப்பிரதிஷ்டையைப் பக்திபூர்வமாகச்செய்து உபசாரங்களுடன் பூஜித்தால் என் பதவியை யடையலாமென்று கூறி, அவ்விஷ்ணுவையும் பிரமனையும் ஆசீர்வதித்து அந்தர்த்தானமாயினரென்று நந்திதேவர் ஸநத்குமாரமுனிவருக்கு உரைத்தருளினர்.

பிரம விஷ்ணுக்களுக்குபதேசித்தது

முற்றிற்று.

ஒன்பதாவது

சிவலிங்கப் பிரதிஷ்டையு மந்திரஜபமுமுரைத்த அத்தியாயம்.

சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்யவேண்டிய முறையையுஞ் சிவலிங்க லக்ஷணத்தையுஞ் சிவலிங்க பூஜாமுறையையுஞ் சொல்லுகிறேனென்று நந்திதேவர் சொல்லலாயினர். ஸநத்குமாரமுனிவரே! மங்களகரமான காலத்திலே புண்ணிய தீர்த்தத்திலேயும் நதிக்கரையிலேயும் பூஜை நடக்குமிடத்திலேயும் இஷ்டமுள்ளவிடத்திலேயுஞ் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யலாம். இலிங்கத்தை முறைப்படி செய்வித்துப் பிரதிஷ்டை பண்ணிப் பூஜித்தால் விசேஷ பலனுண்டாகும். சகல லக்ஷணங்களோடும் முறைப்படி லிங்கப்பிரதிஷ்டை செய்தால் அந்தக்ஷணத்திலேயே இஷ்டமான பலன்களெல்லாஞ் சித்திக்கும். சரலிங்கமாயிற் சிறிதாகவும், ஸ்தாபிதலிங்கமாயிற் பெரிதாகவுஞ் செய்விக்கவேண்டியது. இலிங்கத்தை லக்ஷணத்தோடும் பீடத்தோடும் பிரதிஷ்டைசெய்யவேண்டும். இலிங்க பீடம் வட்டமாகவாயினும் நாற்சதுரமாகவாயினும், முக்கோணமாகவாயினும், துவஜபடம்போலாயினும், கண்டத்திற் சிறிதாகவுமிருந்தால் மகா பலனைக்கொடுக்கும். மண் கல் முதலியவற்றாலும் இலிங்கத்தைச் செய்யலாம். இலிங்கவர்ணமே பீடத்திற்கு மிருக்கவேண்டும். ஸ்திரலிங்கமே விசேஷமான பலனளிக்கும். பன்னிரண்டங்குல அளவுள்ள லிங்கம் உத்தமமென்று சொல்லப்படும். பன்னிரண்டங்குல அளவிற்குக்குறைந்த லிங்கப்பிரதிஷ்டையாற் சுலப பலனுண்டாகும். பன்னிரண்டங்குலத்திற்கதிகமானாலுந் தோஷமில்லை. ஓரங்குலங் குறைந்தாலும் அப்படியே.

பிறகு தேவர்களுடன் கூடிய விமானஞ் சிற்பனுற் செய்விக்கவேண்டியது. இலிங்கப்பிரதிஷ்டை செய்யும் ஆலயத்திற் சுத்தஸ்படிகம்போலப் பிரகாசிக்கும் இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டு, பிரதான திக்குகளிற் கோபுரங்களை யுடையதாய் நீலம் வைடூரியம் மரகதம் வச்சிரம் முத்து பவளம் கோமேதக முதலிய சிறந்த நவரத்தினங்களையுஞ் சுவர்ணத்தையும் இலிங்கப்பிரதிஷ்டை செய்யும் பள்ளத்தில் வைத்து அவற்றின்மேலே இலிங்கத்தை வைக்கவேண்டியது.

இலிங்கத்தையப்படி வைத்தபிறகு, ஸத்தியோஜாதாதி பஞ்சப்பிரமமந்திரங்களால் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு மத்தியமென்னும் ஐந்திடங்களிலுங் கிரமமாகப் பூஜைசெய்து, அவிசால் அக்கினியில் ஓமஞ்செய்து, குருவையும் ஆசாரியனையும் பூஜைசெய்து, பந்துக்களைத் தனத்தாலும் அவரவர்க்கிஷ்டமான பொருள்களாலுந் திருப்திசெய்து, யாசகருக்குத் தானஞ்செய்து, மூடன் புத்திமானென்னும் பேதமின்றிப் பலர்க்கும் பொதுவாகத்திருப்தி விளைத்து, தாவர ஜங்கமப் பொருள்களையும் நீர் முதலியவற்றால் திருப்திசெய்து, நவரத்தினமுதலியவற்றின் மேரில் வைத்திருக்கும் இலிங்கத்தில் ஸத்தியோஜாதாதி மந்திரங்களால் மங்களங்களெல்லாவற்றையுங் கொடுக்கும் ஆதிதேவனைத் தியானஞ்செய்து மகாமந்திரமான பிரணவத்தை உச்சஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு பிரதிஷ்டைசெய்து, பின்னர் பீடத்தையுஞ் சேர்க்கவேண்டும். பின்னர் உறுதிபடும்படி சுண்ணமுதலியவற்றைப் பூசி அசையாமல் நிறுத்திவிடவேண்டும். இப்படியே அழகிய விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்யவேண்டும். விக்கிரகங்கள் உலோகங்களாற் செய்யப்பட்டவையாயின் உற்சவ முதலியன செய்வதற்காக ஸ்தாபிதஞ்செய்யப்படாது. குருவினிடத்திருந்ததும் பெரியோரிடத்திருந்ததுமான விக்கிரகங்களை வாங்கிப் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கவேண்டியது. அன்றியும், ஸ்தாவர ஜங்கமங்களென்னு மிருவகை லிங்கங்களுள. அவை மரமுதலிய ஸ்தாவரங்களும் மத்ஸ முதலிய ஜங்கமங்களும் லிங்கங்களாம். அவற்றிற்கு நீர் ஆகாரமுதலியவற்றால் திருப்திசெய்வதும் லிங்கபூஜையாம். ஆதலின் அவரவர்க்கேற்ப லிங்கபூஜைசெய்யவேண்டும். பீடம் பிரகிருதிஸ்வரூபமும், லிங்கம் ஞானஸ்வரூபமுமாம். சிவபெருமான் பார்வதியை மடியில் வைத்துக்கொண்டிருப்பதுபோலவே லிங்கம் எப்பொழுதும் பீடத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்றது. சக்திக்கேற்பப் பூஜாதிரவியங்களைக்கொண்டு லிங்கபூஜை செய்யவேண்டும். சிவபதவியைக் கொடுக்கத்தக்க லிங்கப்பிரதிஷ்டை இவ்வகையாகச் செய்யவேண்டும். ஜங்கம லிங்கத்தைப் பூஜித்தாலுஞ் சிவபதவியைக்கொடுக்கும். ஆவாகனம் - ஆசனம் - அர்க்கியம் - பாத்தியம் - ஆசமனம் - அப்பியங்கனம் - வஸ்திரம் - வாசனைத்திரவியம் - புஷ்பம் - தூபம் - தீபம் - நைவேத்தியம் - ஆர்த்தி - தாம்பூலம் - நமஸ்காரம் - விஸர்ஜனமென்னும் ஷோடசோபசாரங்களோடும் பூஜைசெய்யவேண்டும். சக்தி

யில்லாவிடின், அர்க்கியமுதல் நைவேத்திய மீறானவற்றிற் கூடியவற்றைச் செய்யலாம். அபிஷேகம் நமஸ்காரம் தர்ப்பணம் இவற்றைச் சக்திக்கேற் பச் செய்துவந்தால், அவன் சிவபதமடைவான். தானேயுண்டான சுயம்பு லிங்கங்களுக்கும் பெரியோராற் பிரதிஷ்டைசெய்துள்ள லிங்கங்களுக்கும் பூஜாவுபகரணங்களைக் கொடுத்தாற் சிறிது பலனுண்டாகும். எப்பொழு தும் பிரதக்ஷிண நமஸ்காரங்களை மாத்திரஞ் செய்துவருவோர் சிவலோகத் தில் வாழ்வார்கள். சிவலிங்கதரிசனம் ஒருவன் செய்தமாத்திரத்திலேயே சகல மங்கலங்களையு மடைவான். மண் மா அலரி பசுவின்சாணம் வெல் லம் பஞ்சவர்ணபுஷ்பம் பஸ்மம் அன்னம் இவற்றைச்சேர்த்து லிங்கத் திற்குப் பூஜைசெய்தாற் சகலாபீஷ்டங்களுங் கைகூடும். எவ்விதமாகவா வது லிங்கபூஜையைச் செய்யவேண்டும். சுலபமாகப் பூஜித்தாலும் பலனுண் டாம். இலிங்கபூஜை செய்யமுடியாதவன் இலிங்கதானமாவது செய்ய லாம். இலிங்கதானஞ் செய்யமுடியாதவன் இலிங்கவிலையான பொருளை யாவது சிவபக்தனுக்குத் தானஞ்செய்யலாம். இவ்விதஞ் செய்பவனுக் குஞ் சிவஸ்தானஞ் சித்திக்கும். அல்லது நாளொன்றுக்குப் பதினாயிர முறை பிரணவ ஜபஞ்செய்தாலுஞ் சிவஸ்தானம் வரும். பிரணவத்தை ஜபஞ்செய்கையால் அது மனதைச் சுத்திசெய்யும். பஞ்சாக்ஷரமந்திரத்தை ஒருமுறை உச்சரித்தாலும் அது விசேஷ பலனைக்கொடுக்கும். சந்தியா காலத்தில் ஆயிரமுறை ஜபித்தாற் சிவஸ்தானம் வரும். பிராமணர்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தையே பிராமணனுஞ் சத்தியவானும் புனிதனும் ஞானியுமான குருபதேசம் பெற்று ஜபஞ்செய்யக்கடவர்கள். பிராமணர் கள் நமஃவென்பதை முதலிலே வைத்து ஶிவாயநமஃ என்று சொல்லவேண் டும். பிராமணரல்லாத பிறஜாதியர் நமஃ என்பதை யிறுதியில் வைத்து, ஶிவாயநமஃ என்று சொல்லவேண்டும். ஸ்திரீகள் இவற்றில் எவ்வகை யாகவாவது ஜபிக்கலாம். பிராமணஸ்திரீகள் நமஃ என்பதையே முத லாக ஜபிக்கவேண்டும். ஐந்துகோடி யுரு ஜபித்தவர்கள் சிவசமானத்துவ மடைவார்கள். ஒருகோடி ஜபத்தாற் பிரமபதமும், இரண்டுகோடி ஜபத் தால் விஷ்ணுபதமும், மூன்றுகோடி ஜபத்தால் உருத்திரபதமும் நான்கு கோடி ஜபத்தால் மகேசபதமும் அடையலாகும். அல்லது அக்ஷர லக்ஷ மாக [எழுத்துக்கொரு லக்ஷம் ; ஐந்திலக்ஷம்] ஜபஞ்செய்தாலும் விசேஷ பலனுண்டாகும். நாளுக்காயிரஞ் ஜபித்து அந்தணருக்கு அன்னமளித் தாலும் இஷ்டசித்திகளுண்டாகும். பிராமணன் நாடோறும் பஞ்சாக்ஷர சபஞ்செய்தாற் சிவபதவி யடையலாமென்று வேதங்கூறும். ஏகாக்ஷர மாகிய பிரணவத்தை ஆயிரமுறை ஜபஞ்செய்யும் நியதிகொண்டு ஆயுண் முடிவுவரையிற் செய்துவருவோர் சிவாநுக்கிரகத்தாற் புஷ்பம் பழம் நந்தவனம் பயிர் செல்வமுதலிய சகலாபீஷ்டங்களையும்பெற்று இறுதியிற் சிவபதமடைவார்கள். ஞானவான்களும் ஞானஹீனர்களும் இதனை ஜபிப் பதால் மோக்ஷமடைவார்கள். சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்துள்ள விடத் தைச்சுற்றி நாற்பக்கலிலும் நூறுமுழவளவு பூமியைப் புண்ணியக்ஷேத்

திரமென்று பெரியோர்கூறுவர். தேவர்களாற் பிரதிஷ்டைசெய்த லிங்கத்தின் நாற்புறத்திலும் ஆயிரஞ்சாணும் நூறுமுழமுமான பூமியைப் புண்ணியபூமியென்பர். புண்யக்ஷேத்திரத்திலுள்ள கிணறுதடாகம் இவற்றைச் சிவகங்கை யென்றறியவேண்டும். புண்யதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சிவக்ஷேத்திரத்தில் வசித்து மரணமடைந்தவனுக்கு அந்த க்ஷேத்திரத்திலே தகனமாவது தசாஹமாவது மாசிகமாவது ஸபிண்டீகரணமாவது ஆப்திகமாவது நடந்தாலும், அல்லது அந்தக்ஷேத்திரத்திற் பிண்டப்பிரதானஞ் செய்தாலும் அவன் அந்தக்ஷணத்திலேயே சகல பாவங்களையுமொழித்தவனாகிறான். இதற்கு இயலாதவன் சிவக்ஷேத்திரத்தில் ஏழுநாளாவது ஐந்திராத்திரியாவது மூன்றிராத்திரியாவது ஓரிரவாவது வசித்தாலுங் கிரமமாகச் சிவலோகப் பிராப்தியுண்டாகும். உலகத்தில் மாநுடர் தங்குலாசாரங்கட்கேற்பச் சிவஸ்தலத்தை யடைந்தால், தத்தம் பக்திக்கேற்பப் பலத்தையடைவர். இஷ்டசித்திக்காகச்செய்யாது மோக்ஷத்தையே கருதிச் சகலத்தையுஞ் செய்தால், சிவஸ்தானம் எப்பொழுதும் வாசபூமியாகும். காலை யுச்சி மாலையென்னும் முக்காலங்களினுஞ் சிவாராதனையும் நற்கருமங்களைச் செய்தலும் இஷ்டசித்திகளை யடைதற்குஞ் சிவபதம் பெறுதற்குஞ் சாதனங்களாம். இரவில் ஆராதித்தலும் அவ்வாறே பலன்கொடுக்கும். அர்த்தராத்திரி சிவாராதனைக்கு விசேஷகாலமென்று சொல்லப்படும். இவற்றையறிந்து ஆராதித்தாற் பலன்களை யடையலாம். கலியுகத்திலே இதுபோலச் செய்வோர் அதிகமான பலன்களைப் பெறுவார்கள். எவ்வகையிலாவது சிவசிந்தனையுந் தருமசிந்தனையுமே அவசியமிருக்கவேண்டுமென்றுகூறிய ஸூதமுநிவரை நோக்கி, ருஷிகள் ஸ்வாமீ! உலகத்திலே ஸ்திரீகளும் புருஷர்களும் எந்த க்ஷேத்திரங்களிலடைந்து வசித்துச் சிவபூஜை செய்தாற் சிவலோகமடைவார்களோ அந்த க்ஷேத்திரங்களையும் அவற்றின் பிரபாவங்களையுஞ் சொல்லவேண்டுமெனக்கேட்க, யோகிகளிற் சிறந்தவரான ஸூதமுநிவர் சொல்லலாயினர்.

சிவலிங்க பிரதிஷ்டையு மந்திரஜபமுமுணாத்தது

முற்றிற்று.

பத்தாவது

தீர்த்த க்ஷேத்திர மகிமைகளுணாத்த அத்தியாயம்.

சிவபக்தியுண்டைய முநிவர்களே! மோக்ஷங்கொடுக்கத்தக்க சிவக்ஷேத்திரங்களையும் அவற்றின் பிரபாவங்களையும் லோகரக்ஷணார்த்தமாகச் சொல்லுகிறேன். அன்புமிகுந்து கேட்பீர்களாக. இந்தப் பூமியானது சிவாக்கினையால் ஐம்பதுகோடி யோஜனை விஸ்தீர்ணமுடையதாய் மலை காடு நதிமுதலியவற்றுடன் விளங்குகின்றது. பிரபுவான சிவபகவான் சகல ஜனங்களும் மோக்ஷமடையவேண்டுமென்னுங் கருத்தால்

அவ்வவ்விடங்களிற் காசிமுதலிய பலபுண்ய க்ஷேத்திரங்களை நியமித்தருளினர். ருஷிகள் வசிப்பதாலுந் தேவதைகளிருப்பதாலும் உலகத்தை யிரக்ஷிக்கவேண்டியதாலுஞ்சிலபாகங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களாயின. புண்ணியகரமான தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தலும், புண்ணியக்ஷேத்திரங்களில் ஜபந் தவமுதலியவற்றைச் செய்தலும் அவசியம். அப்படிச் செய்யாதவன் ரோகியும் தரித்திரனும் ஊமையுமாவான். பரதகண்டத்திலே புண்ணியக்ஷேத்திரத்திலிறந்த வொருவன் அந்தக்ஷேத்திர விசேஷத்தாற் பிறவியை யொழிவான். ருஷிகளே! புண்ணியக்ஷேத்திர வாசத்தாற் சிறிதும் பாவமுண்டாகமாட்டாது. ஆதலின் பிரயத்தனத்தாலாவது க்ஷேத்திரத்தில் வசிக்கவேண்டும். சமுத்திரதீரத்திலுங் கங்கைமுதலிய தீர்த்தங்களின் கரையிலும் அநேக புண்ணியக்ஷேத்திரங்களுள்ளன. அறுவிதமாகப் பிரிந்திருக்கின்ற ஸரஸ்வதிநதி மிகவும் புண்ணியசீலமானது. அங்கேவசித்தவன் சிவஸ்தானத்தை யடைவான். ஹிமாசலத்தினின்று நூறுபிரிவுகளாகவருங் கங்காநதி மிகவும் புண்ணியகரமானது. அதன் கரையிலே காசிமுதலிய அநேகம் புண்ணியக்ஷேத்திரங்களுள்ளன. அக்கங்காநதிக்கரையிலே பத்துப்பிரிவையுடையதும் ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுப்பதுமாகிய சோணபத்திரமிருக்கின்றது. அதில் தைமாசத்திலே மகரலக்கினத்திற் புதவாரத்தில் ஸ்நான உபவாசாதிகளைச் செய்தால் விநாயகபதவி கிடைக்கும். இருபத்துநான்கு பிரிவுகளையுடைய நர்மதா நதியில் ஸ்நானமும் வாசமுஞ்செய்தால் விஷ்ணுபதவி கிடைக்கும். தமஸாநதி பன்னிரண்டு பிரிவுகளையும் ரேவாநதி பத்துப் பிரிகளையுமுடையன. பதினொருபிரிவுகளையுடைய கோதாவரி பிரமஹத்தி கோஹத்தி முதலிய மஹாபாதகங்களையுமொழித்து, ருத்திரலோகத்தைக் கொடுக்கும். பதினெட்டுப் பிரிவையுடைய கிருஷ்ணவேணிநதி எல்லாப் பாவங்களையுமொழித்து விஷ்ணுபதமளிக்கும். பத்துப்பிரிவையுடைய துங்கபத்திரை பிரமலோகத்தைக் கொடுக்கும். முகரிநதியுந் துங்கபத்திரையை யொத்தது. முகரிநதிக்கருகே, பிரமலோகத்தினின்றுவந்த சரசுவதிநதி பம்பாநதி கன்யாநதி இவையிருக்கின்றன. இந்நதிதீரங்களில் வசிப்பவன் இந்திரபதமடைவான். சையபர்வதத்திலுண்டாகி மிகப்புண்ணியகரமாயிருக்கிற காவேரிநதி இருபத்தேழு பிரிவுகளையுடையதும், அங்குவசித்தவர்களுக்குச் சுவர்க்கலோகமும் பிரமலோகமும் விஷ்ணுலோகமுமுண்டாக்குவதுமாம். சிவசம்பந்தமான நதிகள் சிவலோகத்தைக் கொடுக்கும். சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும்.

ருஷிகளே! நைமிசாரணியத்திலும் வெதிரிகாச்சிரமத்திலும், சித்திரைமாச மேஷலக்கினத்திற் புதவாரத்தில் ஸ்நானஞ்செய்தால், சிவலோக வாசமுண்டாகும். சிந்துநதியில் ஆவணிமாச கடகலக்கினத்தில் ஸ்நானஞ்செய்து தவம் பூஜைமுதலியவற்றைச் செய்தாற் பிரமலோகமுண்டாகும். ஆவணிமாசத்திற் சிங்கலக்கினத்திற் புதவாரத்திற் க்ண்டகி

நதியில் ஸ்நானஞ்செய்க. கேதாரநதியின் சலத்தைப் பானஞ்செய்தாலும் அதில் ஸ்நானஞ்செய்தாலும்ஞானமுண்டாகும். புரட்டாசிமாசத்திற் குரு கன்னியா லக்கினத்துடன்கூடி யிருக்கும்போது ஸ்நானஞ்செய்தவன் சிவலோகமடைவானென்று சிவபெருமானே சொல்லியிருக்கிறார். அர்ப்பிசி மாசத்திற் குரு துலாலக்கினத்துடன் கூடியிருக்கையில் ஸ்நானஞ்செய்தால் தர்மலோகமான விநாயகலோகத்தில் வசிக்கலாமென்று பெரியோர்கள் சொல்வார்கள். கார்த்திகைமாசத்தில், குரு விருச்சிகலக்கினத்திற்கூடி யிருக்கையில், காவேரியில் ஸ்நானஞ்செய்தால் எல்லாவிருப்பங்களுங் கைகூடுமென்று விஷ்ணுபகவான் சொல்லியிருக்கிறார். மார்கழிமாசத்திற் குரு தநுர்லக்கினத்திற் சேர்ந்திருக்கையில் நர்மதாநதியில் விதிப்படி ஸ்நானஞ்செய்தால் விஷ்ணுபதவிவரும். அக்காலத்திற் சுவர்ணமுகியில் ஸ்நானஞ்செய்தலும் அப்படியே. தைமாசத்தில், குரு மகரலக்கினத்துடன்கூடிய காலத்தில் ஜாநவிநதியில் ஸ்நானஞ்செய்தாற் சிவலோகம் வருமென்று பிரமதேவர் சொல்லியிருக்கிறார். பிரமவிஷ்ணு பதங்களையடைந்தவர்கள் ஞானரூபியான சிவபெருமானுலகத்தையும் பின்னேயடைவார்கள். மாசி மாசத்தில், சூரியன் கும்பராசியிலிருக்கையில், கங்கையிற் சிராத்தமாவது பிண்டதானமாவது பிதிர்வமிசமாதிருவமிசங்களுக்குக் கொடுத்தால், கோடிகுலத்திற்குத் தர்ப்பணஞ்செய்து மோக்ஷத்திற்குச் சேர்த்ததற்குச் சரியாகும். பங்குனிமாசத்திலே குருவுஞ் சூரியனும் மீனலக்கினத்திலிருக்கையிற் கிருஷ்ணாவேணியிலே ஸ்நானஞ்செய்து சிராத்தாதிகளைச் செய்தாற் புண்ணியபலனுண்டாம். அந்தந்தத் தீர்த்தங்களில் அந்தந்த மாசங்களிற் காலமறிந்து ஸ்நானஞ்செய்யவேண்டும். கங்காநதி தீரத்திலுங் காவேரிதீரத்திலும் வசிப்பது சிறந்தது. தாமிரபர்ணி வேகவதியென்னு நதிகள் பிரமபதவியைக் கொடுக்கும். அவற்றின் கரையில் அநேக க்ஷேத்திரங்களுள்ளன. இந்நதிகளிரண்டிற்கும் இடையே அநேக க்ஷேத்திரங்களுள்ளன. அவையாவும் முத்திகொடுக்க வல்லவை. தெரிந்தவன் அவற்றுளொன்றில் வசித்து, சிவத்தியானஞ்செய்து இஷ்டசித்தியையும் மோக்ஷத்தையுமடையலாம். க்ஷேத்திரத்திற்செய்தபுண்ணியம்விருத்தியாகும். அங்கேசெய்த பாவமும் விருத்தியாகும் ஆதலின், தீர்த்தயாத்திரை க்ஷேத்திரவாசஞ் செய்யுங்காலங்களிற் சிறிதும் பாவஞ்செய்யாது புண்ணியத்தையே செய்யவேண்டும். பாவம் தியானமுதலியவற்றால் க்ஷயமடையும். பாவமும் புண்ணியத்தைப்போல வாசிகம் காயிகம் மானசமென மூவகைத்து. மானசபாவம் வச்சிராயுதம்போலப் பிரளயகாலத்திலும் விடாதுவரக்கூடியது, அது தியானத்தினாலேயன்றிப் பிறிதொன்றனாலும் போகமாட்டாது. வாசிகபாவம் ஜபத்தினாலேயே நாசமடையும். காயிகபாவம் உடலைச் சோஷிக்கச் செய்வதால் நாசமடையும். கெட்டநடத்தையால் தேடியபாவம் தானத்தினாலேயே தொலையும். சில சமயங்களிற் பாவத்தாற் புண்ணியக்ஷயமுண்டாவதுமுண்டு. பாவமானது பீஜாம்ஸமென்றும் விருத்தியம்ஸமென்றும் பெயர்கள்பெறும். பீஜாம்

சம் ஞானத்தாலும், விருத்தியம்சம் கீழ்ச்சொன்னதாலும் நாசமடையு மென்று பெரியோர்கள் சொல்வார்கள். போகாம்சமென்னும் பாவம் போகத்தாலேயே யொழிவது. சுகநிமித்தமாக வந்தபாவம் சிவபூஜை யாலும் பிராமணருக்குச் செய்யுந்தானத்தாலும் போக்கக்கூடியது. ஆகை யால், சுகத்தை யபேக்ஷிக்கிறவர்கள் எப்பொழுதும் பாபஞ்செய்யாமலே புண்ணிய சீலர்களாக வசிக்கவேண்டும்.

தீர்த்த க்ஷேத்திர மகிமைகளுரைத்தது

முற்றிற்று.

பதினொன்றாவது

ஸர்வாசாரமுரைத்த அத்தியாயம்.

ருஷிகள் சொல்லுகிறார்கள் : ஸூதமுநிவரே ! உலகங்களையெல் லாம் ஜயிக்கத்தக்க நல்ல ஆசாரத்தையும் சுவர்க்க நரகங்களைக் கொடுக் கத்தக்க புண்ணிய பாவஸ்வரூபங்களையும் எங்கட்குச் சொல்லியருள வேண்டும் எனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லுகின்றார் : பிராமணன் நல்ல ஆசாரத்துடன் வேதசார வுணர்ச்சியும், க்ஷத்திரியன் அற்பமான ஆசாரமும் அற்பவேதவாராய்ச்சியும், வைசியன் சிறிது ஆசாரமும் வியா பாரமுதலியவற்றாற் சீவனமும் உடையவர்களா யிருக்கவேண்டும். வியா பாரஞ்செய்யும் பிராமணனைச் சூத்திரபிராமணனென்று சொல்லப்படும். பொறாமையும் பிறரைவஞ்சித்தலுமுடைய பிராமணன் சண்டாளபிராமண னெனப்படுவான் .பூமியை யாள்பவன் அரசன். பிறர் சாதாரண க்ஷத்திரி யர். மணிமுதலியவற்றை விற்பவர்களுஞ் சாதாரண வைசியர். பிரம க்ஷத்திரிய வைசியர்களுக்குப் பணிவிடை செய்பவன் சூத்திரன். பிறர் திருடர்கள். மேற்கூறியவெல்லாரும் பிராதக்காலத்திலெழுந்து கிழக்கு முகமாயிருந்து ஈசுவரதியானஞ்செய்து, தர்மத்தையும் பொருளையுந் தேடு வதில், நியாயத்தையும் இலாப நஷ்டத்தையுஞ் சிந்திக்கவேண்டியது. காலையிலெழுந்திருந்து கிழக்குமுகமாகப் பார்த்தால் ஆயுசும், அக்கினி மூலையைப் பார்த்தால் துவேஷமும், தெற்குமுகமாகப் பார்த்தால் மரண மும், தென்மேற்கு மூலையைப் பார்த்தாற் பாவமும், மேற்குமுகமாகப் பார்த்தாற் சம்பத்தும், வடமேற்கு மூலையாகப் பார்த்தால் வியாதியும், வடக்குமுகமாகப் பார்த்தாற் புஷ்டியும், வடகிழக்கு மூலையாகப் பார்த் தாற் சக்தியுமுண்டாகின்றன. இரவின் கடைசி ஜாமத்தைப் பிராதக் காலமென்று சொல்லப்படும். அந்த ஜாமத்தின் பாதியை ஸந்தியை யென்பர். பிராமணன் அந்தக்காலத்திலெழுந்து, வீட்டைவிட்டுச் சிறிது தூரஞ்சென்று, தலையில் உத்தரீயத்தைச் சுற்றிக்கொண்டு வடமுகமா யுட்கார்ந்து ஜலம் அக்கினி பிராமணர் தேவர் இவர்களுக்கெதிரில்லாமல், குயியை இடக்கரத்தாலும் முகத்தை வலக்கரத்தாலும் மூடிக்கொண்டு

மலஜல விசர்ஜனஞ் செய்யவேண்டியது. இராக்காலத்தில், தென்முக நோக்கி விசர்ஜனஞ்செய்க. மலவிசர்ஜனஞ் செய்தபிறகு அதனைத் திரும்பிப் பார்க்கப்படாது. பின்னர் ஜலத்தை யெடுத்துக்கொண்டு அந்த ஜலத்திற்குத் தூரமானவிடத்திற் சௌசஞ்செய்யவேண்டியது. அது எழுமுறை ஐம்முறை மும்முறையாவது மண்ணால் ஸ்தானத்தை யலம்பிப் புன்னைக்காயளவுமண்ணாற் குறியையலம்பி யெழுந்து கைகால்களை எட்டுமுறை சௌசஞ்செய்து, நீர்நிலைக்கு வெளியேவந்து சாஸ்திரப்படி தந்த காஷ்டங்கொண்டு தந்ததாவனஞ்செய்து, ஜலத்தையுந் தேவர்களையும் நமஸ்கரித்து மந்திரபூர்வமாக ஸ்நானஞ்செய்யவேண்டியது. அதற்குச் சக்தியில்லாதவன் இடைவரையிலுமாவது அதற்குஞ் சக்தியில்லாதவன் முழங்கால் வரையிலுமாவது ஸ்நானஞ் செய்யவேண்டியது. அதுவுமியலாதவன் சலத்தைப் புரோக்ஷித்துக்கொண்டு மந்திரஸ்நானஞ் செய்யலாம். அதன்பின்னர், தேவர்முதலானவர்களுத் தர்ப்பணஞ்செய்யவேண்டும். வெள்ளைவஸ்திர முடுத்துக்கொண்டு, ஜாபாலக ருஷி சொல்லியபடி திரிபுண்டரமாகப் பஸ்மதாரணஞ் செய்துகொள்ளவேண்டும். சலத்தால் விசேஷ புண்டரந்தரித்தவன் நரகமடைவான். பாவம்போவதற்காக "ஆபோஹிஷ்டாமயோபுவ:" என்று சிரசிலும், "யஸ்யக்ஷயாயஜின்வத்" என்னும் மந்திரத்தாற் பாதத்திலும் சலத்தைப் புரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். இது ஸந்திபுரோக்ஷணமென்னப்படும். "ஆபோஹிஷ்டாமயோபுவ:" என்றுபாதத்திலும், "ஸ்தான ஊர்ஜேததாதன" என்று சிரசிலும், "மஹேரணாயசக்ஷஸே" என்று இதயத்திலும், "யோவஸ்ஶிவதமோரஸ:" என்று சிரசிலும், "தஸ்யபாஜப தேஹந:" என்று இதயத்திலும், "உஶதீரிவமாதர:" என்று பாதத்திலும், "தஸ்மா அரங்கமாமவ:" என்று இதயத்திலும், "யஸ்யக்ஷயாய ஜின்வத" என்று பாதத்திலும், "ஆபோஜனயதாசன:" என்று சிரசிலும் ஜலத்தைப் புரோக்ஷித்துக்கொள்வதுவே மந்திரஸ்நானமென்று தெரிந்தவர்களாற் சொல்லப்படுகிறது.

பரிசுத்தமில்லாத வஸ்துவைப் பரிசித்தகாலத்திலும், சக்தியில்லாத சமயத்திலும், அரசனாற்பயமுண்டான வேளையிலும், வழிநடந்து செல்லுகையிலும் மந்திரஸ்நானஞ்செய்யலாம். பிராதக்காலத்தில் "*ஸூர்யச்ச மாமன்யுச்ச" என்னுமந்திரத்தாலும், மாலைக்காலத்தில் "†அக்னிச்ச மாமன்யுச்ச" என்னுமந்திரத்தாலுந் தீர்த்தபானஞ்செய்ய வேண்டியது. காயத்திரி மந்திர ஜபமுடிவில் மும்முறை மேலேயும் மத்தியானத்தில் ஒருமுறையும், சாயுங்காலத்தில் மேற்கே பார்த்துக்கொண்டு பூமியிலும், பிராதக்காலத்திற் கையாற் சலத்தையெடுத்தும் அர்க்கியம்விட்டு, விரற்சந்தினாற் சூரியனைப்பார்த்து, பிரதக்ஷிணஞ்செய்து சுத்தாசமனஞ் செய்யவேண்டும். ஒருநாள் சந்தியாவந்தனஞ் செய்யத்தவறினால் நூறு காயத்திரி ஜபமும், பத்துநாள் தவறினால் லக்ஷ காயத்திரி ஜபமுஞ் செய்ய

* ஸூர்யாநுவாகம். † அக்ந்யாநுவாகம்.

வேண்டும். நித்தியகருமமான சந்தியாவந்தனத்தை ஒருமாசஞ் செய்யத் தவறினால் மறுபடியும் உபநயனஞ்செய்துகொள்ளவேண்டும். ஒருவன் தன் செல்வவிர்த்திக்காக, சிவபெருமான் உமாதேவி கணேசன் முருகன் விஷ்ணு பிரமன் இந்திரன் யமன் இவர்களை ஜலத்தாற் கற்பிக்கவேண்டியது. பின்பு பிரமதேவனுக்குத் தர்ப்பணஞ்செய்துவிட்டு, சுத்தாசமனஞ் செய்யவேண்டும். புண்ணியதீர்த்தத்தின் தென்கரை - மங்களமான மடாலயம் - மந்திராலயம் - தேவாலயம் - தன்வாசஸ்தானம் - நிச்சலமானவிடம் இவற்றுளோரிடத்தில், சகல தேவர்களையும் நமஸ்கரித்து, ஸ்திர புத்தியோடு ஆசனத்திலிருந்து ஓமென்னும் பிரணவ மந்திரத்தை யப்பியாசஞ்செய்து காயத்திரியைச் சபஞ்செய்து, பிரணவத்தை ஜீவனுடன் கூடிய பிரமத்திற்குச் சமானமாகக்கருதிச் சபித்து, திரிலோகங்கட்குஞ் சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவனையும், இரக்ஷிப்பவராகிய விஷ்ணுமூர்த்தியையும், சங்கரிப்பவருந் தனக்குத்தானே சமானருமான உருத்திர பகவானையும் உபாசிக்கிறேன். ஞானம்-செய்யத்தக்ககாரியங்கள் - இந்தியங்கள் - மனோவியாபாரங்கள் - புத்தி-சுகம்-மோக்ஷம் இவற்றைக்கொடுக்கும்படி, ஞானமுந் தர்மமுமுடைய மனதைக் கொடுப்பார்களாகவென்று தியானிப்பவன் பரப்பிரமத்தை யடைவது நிச்சயம். அர்த்தஞானமில்லாவிடினும் பிராமணத்துவம் சித்திப்பதற்காக நாடோறும் ஜபஞ்செய்யவேண்டும். உத்தமர்கள் ஆயிரம் ஜபம் பிராதக்காலத்திற் செய்வார்கள். மற்றையோர் சக்திக்கேற்பச் செய்யலாம். மாலையில் இருபத்தெட்டுமுறை ஜபிக்கவேண்டும். மூலாதாரமுதற் பன்னிரண்டாவதான பிரமரந்திர வரையிலுள்ள ஹயக்கிரீவன் பிரமன் விஷ்ணு ருத்திரன் முதலானவர்களைப் பரப்பிரமமென்கிற புத்தியுடன் கருதி, ஹயக்கிரீவன் முதலான தேவர்களோடு தன்னையு மொன்றாகக்கருதித் தானே அவரென்று நினைத்து ஜபஞ்செய்யவேண்டும். பிரமருத்திராதியரையே பிரமரந்திர முதலியவற்றில் இருப்பதாயும், அவர்கள் சரீரத்திற்கு வெளியே சஞ்சரிப்பதாயும் நினைக்கவேண்டும். பரமேசுவரனுக்கு எண்ணிறந்த தேகங்களிருப்பதால் ஒவ்வொரு ஜபத்தால் ஒவ்வொரு தேகத்தை யதிக்கிரமித்து மெள்ளமெள்ளப் பரப்பிரமத்தினிடத்திற் சேர்வதுதான் ஜபதத்துவம். ஜபதத்துவத்திற்கு நூற்றெட்டுத் தேகங்களுண்டு. ஆயிரம் ஜபத்தாற் பிரமஸ்தானமும், நூறு ஜபத்தால் இந்திரஸ்தானமும் வரும். இருபத்துநான்குமுறை நாடோறும் ஜபஞ்செய்த சூத்திரன் பிராமணகுலத்திற் பிறப்பான். ஆதலாற் சூத்திரன் இப்படி உபஸ்தானஞ்செய்யக்கடவன். பன்னிரண்டுலக்ஷ ஜபஞ் செய்தவன் பூர்ண பிராமணனாகிறான். லக்ஷத்திற்குக்குறைவான காயத்திரி ஜபஞ்செய்தவனை வேதகாரியங்களில் வைக்கப்படாது. அப்படி ஏழு வருஷம் நியமமாக ஜபித்துப் பின்னே சந்நியாசாச்சிரமத்தைக் கைக்கொள்ளவேண்டியது.

ருஷிகளே! சந்நியாசியானவன் விடியற்காலத்திற் பன்னீராயிர முறை பிரணவ மகாமந்திர ஜபஞ்செய்யவேண்டியது. ஒருதினந் தவறி

பன்னிரண்டாவது

பஞ்சயஜ்ஞங்களும் வாரபூஜையுமுரைத்த அத்தியாயம்.

ருஷிகள் சொல்லுகிறார்கள்: பிரபுவான ஸூதமுநிவரே! அக்கினியஜ்ஞத்தையும் தேவயஜ்ஞத்தையும் பிரமயஜ்ஞத்தையும் குருபூஜையையும் பிராமணதிருப்தியையும் எங்களுக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸூதமுநிவர் சொல்லலாயினர்: அக்கினியஜ்ஞமென்பது திரவியங்களை அக்கினியில் ஓமஞ்செய்வது. பிரமயஜ்ஞமென்பது பிரமசரியாச்சிரமத்திலிருப்பவர்களுக்குச் சமிதாதானஞ்செய்வது. பிரமசாரிவிரதமுதல் விசேஷயாகங்களைச் செய்வது பிரமசாரிகளுக்கு ஔபாசனமென்று பிராமணர்கள் சொல்லுகிறார்கள். வானப்பிரஸ்தர்களும், சந்நியாசிகளும், பரிசுத்தமான அன்னத்தைப்புசிப்பதே ஹோமமென்று வேதவித்துக்கள் சொல்கிறார்கள். ஔபாசனம் அக்கினிஸ்தானம் இவைசெய்யவாரம்பித்து நன்றாக ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். அக்கினி குண்டத்திலாவது பாத்திரத்திலாவது வைத்திருக்கும் அக்கினியை அஜஸ்ரமென்று சொல்லப்படும். அரச னுபத்திரவத்தாலேனும், தெய்வத்தால் தனக்கு நேர்ந்த ரோகத்தாலேனும், அக்கினிக்கு விக்கினம்வராமல் தன்னிடத்திலாகிலும் விறகிலாகிலும் வைத்துக்கொண்ட அக்கினியை ஸமாரோபிதமெனப்படும். வேதிய சிரேஷ்டர்களே! சாயுங்காலத்தில் அக்கினியில் ஓமஞ்செய்வது சம்பத்தையும், காலையிற் சூரியனுக்கு ஆகுதிசெய்வது தீர்க்காயுவையுங் கொடுக்கும். பிராதக்காலத்திலே செய்யும் யஜ்ஞத்தைச் சூரியயஜ்ஞமென்று சொல்லவேண்டியிருக்க,அக்கினியஜ்ஞமென்று சொல்வதென்னெனில், பகலில் அக்கினியின் காந்தியில்லாமலே சூரியனிடத்திற் போகிறபடியாலும், சூரியனுக்குச் செய்வதே அக்கினிக்குச் செய்வதுபோலாகையாலும் அக்கினியஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. இந்திரன்முதலிய சகலதேவர்களையும் உத்தேசித்து அக்கினியிற் சமித்துமுதலியவற்றை ஹோமஞ்செய்வதும் ஸ்தாலீபாகமுதலிய யஜ்ஞங்களுந் தேவயஜ்ஞமெனப்படும். கர்ப்பாதான முதலியவற்றையும் ஔபாசனம்போலவே கொள்ளவேண்டும். பிராமணன் தேவர்களுக்குத் திருப்தியுண்டாக்கவேண்டி அடிக்கடிப் பிரமயஜ்ஞஞ்செய்யவேண்டும். வேதாத்தியயனமே பிரமயஜ்ஞமாம். நாடோறும் நித்தியகர்ம முடிந்தபிறகு மாலைவரையிற் பிரமயஜ்ஞஞ் செய்யவேண்டும். அதற்கு மேம்பட்டுப் பிரமயஜ்ஞஞ்செய்ய விதிகிடையாது. எல்லாவுலகங்கட்கும் பிரபுவும் எல்லாமறிந்தவரும் பரமதயாளுவுமாகிய மகாதேவன் சகலலோகங்களுக்கும் உபகாரமாக வாரங்களை யுண்டுசெய்தனர். சமுசாரரோக வைத்தியராகிய அந்தப்பகவான் சமுசாரரோகத்திற்கு அமிழ்தம்போன்ற தன் தினத்தையும், தன்னுடைய சம்பத்தை யுண்டுசெய்யுந் தினத்தையும், ஆலசியம் பாவமிவற்றைப்போக்கவும் வியாதியைப்போக்கவும் சுப்பிரமணியருடைய தினத்தையும், உலகங்களுக்கு இதஞ்செய்ய விரும்பி விஷ்ணு

மூர்த்தியின் தினத்தையும், சம்பத்து ஆயுள்முதலியன விர்த்தியாகும்படி உலகங்களைச் சிருஷ்டிசெய்த பிரமனுடைய தினத்தையும், மூன்றுலகங்களும் விருத்தியாவதற்காகச் செய்தபுண்ணியாதிகாரிகளான இந்திரன் யமன் இவர்கள் சுகத்தைக்கொடுப்பதாயும் மிருத்துவை நாசஞ்செய்வதாயுமிருக்கிற தினத்தையும் உண்டுசெய்து, சுகம் துக்கமிவற்றைப் பிரகாசிக்கச் செய்பவர்களாயிருக்கிற சூரியன் முதலானவர்களை யவ்வவ் வாரங்கட்கதிபர்களாகச்செய்தனர். ஆதலின் அவ்வவ்வாரங்களில் அவ்வவ் வதிபர்களைப் பூசைசெய்து அவ்வப்பலனை யடையவேண்டும். சுகம் சம்பத்து வியாதிநிவாரணம் புஷ்டி ஆயுள்போகம் மிருத்யுவின்மை இப்படிப் பட்ட பலன்களைக் கொடுக்கும் வாரபலன்களை யறிந்து பூசைசெய்யவேண்டியது. வெகுதேவர்களைப் பூஜித்தாலுஞ் சிவபெருமானே அந்தப்பலனை யெல்லாங் கொடுப்பார். தேவர்களுக்குத் திருப்தியுண்டாவதற்காகப் பூசையில் மந்திரம் சபம் ஓமம் தானம் தவமென்று ஐவகைகள் விதிக்கப் பட்டுள்ளன. அக்கினிஹோத்திர முதலியவற்றைச்செய்த பூமியிலும், பிரதி பிம்பத்திலும் பிராமண சரீரத்திற்கு ஷோடசோபசாரங்களைச் செய்ய வேண்டும். இவ்வுபசாரங்களைக் காட்டிலும், கண்வலி தலைவலி குஷ்டம்முதலிய ரோகங்களொழிவதற்காக முதலிற் சூரியபூசைசெய்து பிறகு பிராமண போசனஞ்செய்விக்கவேண்டியது. பிராமணபோசனம் நாடோறும் மாலைப்பொழுதில் ஒருவருஷமாவது மூன்றுவருஷமாவது செய்விக்கவேண்டும். சமாராதனையை விசேஷமாகச் செய்துவந்தால் ரோகம் கிழத்தனம் முதலியன வொழிந்துவிடும். இஷ்டதேவதைகளுக்கு ஜபமுதலியவற்றைச் செய்தால், கீழ்ச்சொன்ன வாரபூசையால் வருகின்ற விசேஷமான பலன்களுண்டாகும்.

முநிவர்களே! ஆதிவாரத்தில் விசேஷபலனுடைய வஸ்துவைச் சூரியனுக்கும் தேவர்களுக்கும் பிராமணர்களுக்குங் கொடுப்பதாற் பாவமொழியும். சோமவாரத்தில் மகாலக்ஷ்மியைப் பூஜித்தாற் சம்பத்துண்டாகும்; தம்பதிகளான அந்தணருக்கு நெய்யோடுகூடிய அறுசுவைபொருந்திய அன்னத்தாலுந் திருப்திசெய்யவேண்டும். மங்களவாரத்திற் காளியார்முதலானவர்களைப் பூஜித்தால் ரோகமொழியும். பிராமணரை வடை தோசை முதலியவற்றுடன்கூடிய விசேஷபக்ஷ்ய போஜ்யங்களால் உண்பித்துத் திருப்திசெய்யவேண்டும். புதவாரத்தில் விஷ்ணுமூர்த்திக்குத் தயிர்சேர்த்த அன்னத்தை நிவேதனஞ்செய்தவனுக்குப் புத்திரன் சிநேகன் மனைவிமுதலியவர்களோடு செல்வம்பெற்று வாழ்வு உண்டாகும். ஆயுளை விரும்பினவன் குருவாரத்திற் புஷ்டியுண்டாவதற்காக, சகலதேவர்களுக்கும் உபவீதம் வஸ்திரம் இவற்றைப் பிரீதிசெய்து பால் நெய்முதலியவற்றை நிவேதனஞ்செய்யவேண்டும். சுகத்தை யபேக்ஷித்தவன் சுக்கிரவாரத்தில் மந்திரசபமுந் தியானமுஞ்செய்யவேண்டும்; பிராமணர்களுக்கு அன்னமளித்து, பிராமண ஸ்திரீகளுக்கும் வஸ்திரதானமுதலியவற்றையுஞ் செய்ய

வேண்டும். அபமிருத்யுவை யொழிக்கச் சனிவாரத்தில் உருத்திராதி தேவர்களைப் பூசைசெய்து திலதானமுந் திலான்னமும் பிராமணருக்குக் கொடுக்கவேண்டும். இப்படி வாரபூசையைச்செய்து ஆரோக்கியமுதலியவற்றையடையலாம். திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் இவற்றில் எதிலாவது எந்தத்தேவரையாவது பூசைசெய்தாலும் சிவப்பிரீதியேயாம். எப்படியென்றாற் சிவபெருமானே அந்தந்தத் தேவதாஸ்வரூபமுடையவனாயிருந்து அவற்றைப்பெற்று அவ்வவ்வபிஷ்டங்களைக் கொடுத்தலினென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஒருகருமத்தைத் தொடங்கிய வொருவன் அதற்கு விக்கினம் வாராதபடி ஆதித்தன் முதலிய கிரகங்களைப் பூசைசெய்யவேண்டும். ஆதலால் தேவபூசையே சர்வாபீஷ்டங்களையுங்கொடுக்கும். விசேஷ பலனை விரும்புகிறவர்கள் ஏழுவாரங்களிலுந் தமது சக்திக்குத் தக்கபடி பூசைசெய்யவேண்டும். தரித்திரன் தேவர்களுக்குத் தவத்தாலும், செல்வந்தன் திரவியத்தினாலும் பூசைசெய்யலாம். தனமுடையவன் சுகமடைவதற்காகச் சிரத்தையோடு அடிக்கடி தர்மஞ்செய்தால், பெரும் போகத்தை யநுபவிப்பான். மரமுதலியவற்றை வைத்து நிழலையும், தடாகமுதலியன வெட்டி நீரையு முண்டுசெய்த அப்பூஸ்திதி விளைகழனி கால்நடைகள் முதலியவற்றைச் சற்பிராமணருக்குத் தானஞ்செய்யவேண்டியது. காலவசத்தினாலும் புண்ணியத்தினாலும் ஞானமுண்டாகும். இந்த அத்தியாயத்தைப் படித்தவனும், பிறருக்குச் சொன்னவனும், பிறர் வாசிக்கக் கேட்டவனும், பிறரைக் கேட்பிக்கச் செய்தவனுஞ் சிவகடாக்ஷம் பெறப் பாத்திரர்களாவார்கள்.

பஞ்சயஜ்ஞங்களும் வாரபூஜையுமுரைத்தது

முற்றிற்று.

பதின்மூன்றாவது

தான தேசகாலங்க ளுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவரே! தானஞ்செய்தற்குத்தேசம்காலமுதலியவற்றைக் கிரமமாகச் சொல்லவேண்டுமென்ற ருஷிகளுக்கு ஸூதமுனிவர் சொல்லுகின்றார். தேவயாக முதலியவற்றைப் புனிதமான விடத்திற் செய்தால் விசேஷ பலனுண்டாகும். பசுவின் தொழுவத்திற் செய்தால் அதைவிடப் பத்துப்பங்கும், சலக்கரை அதிலும்பத்துப்பங்கும், வில்வமரத்தடி-துளசிமரத்தருகு அல்லது அரசமரவேர் இவற்றினருகே செய்தால் அதிலும் பத்துப்பங்கும், தேவாலயம் புண்ணியஸ்தலம் புண்ணியதீர்த்தம் அதிலும் பத்துப்பங்கும், நதி அதிலும்பத்துப்பங்கும், புண்ணியநதி அதிலும் பத்துப்பங்கும், சத்த கங்காநதிக்கரை அதிலும் பத்துப்பங்கும், அதிகமாக வொன்றற்கொன்று ஏற்றமான பலனைக்கொடுக்கும். கங்கை-கோதாவரி - காவேரி - தாமிரபர்ணி - ஸிந்து - சரயு - நர்மதை-யமுனை யென்

பவையே சத்தகங்கை யெனப்படும். சத்தகங்கையைக் காட்டிலும் சமுத்திரகரை பத்துப்பங்கு அதிகபலனைக் கொடுக்கும். மனதிற்கு இஷ்டமான ஸ்தானமேயாகம் தானம்பூசைசெய்வதற்கு யோக்கியமான ஸ்தானமாம். கிரேதாயுகத்தில் முழுப்பலனும், திரேதாயுகத்தில் முக்காற்பலனும், துவாபரயுகத்தில் அரைப்பலனும், கலியுகத்தில் காற்பலனும், கலியின் இடையில் அரைக்காற்பலனும் உண்டாகுமென்று சொல்லப்படும். சுத்தமான மனமுடையவனுக்குச் சுத்தமான தினமாயிருந்தால், சரியான பலனுண்டாகும். சூரிய சங்கிரமணம் அதிற் பத்துப்பங்கும், துலாலக்கின மேஷலக்கின சங்கிரமணம் அதிற் பத்துப்பங்கும், கடகலக்கின சங்கிரமணம் அதிற் பத்துப்பங்கும், மகரலக்கின சங்கரமணம் அதிற் பத்துப்பங்கும், சந்திரகிரகணம் அதிற் பத்துப்பங்கும் அதிகமான புண்ணியங் கொடுக்குந்தினங்கள். சூரியகிரகணம் பூர்ணமான பலனைக்கொடுக்குந் தினமாம். உலகரூபமான சூரியனுக்குக் கிரகணமுண்டாகையில் உலகுக்கு ரோகமுண்டாகுமாதலால் அந்த ரோகத்தைப் போக்குவதற்காக ஸ்நானம் தானம் சபம் இவற்றைச் செய்யவேண்டும். ரோகத்தைப் போக்குங்காலமாதலின் அதனைப் புண்ணியகாலமென்று பெரியோர்கள் சொல்வார்கள். தபோநிஷ்டை ஞானநிஷ்டையுடைய யோகிகள் பூசாயோக்கியர்களும் பாவங்களை யொழிக்க வல்லவர்களுமாவர். இருபத்துநான்கு லக்ஷங்காயத்திரி சபஞ்செய்த வேதியன் சம்பூர்ணபலனைக் கொடுக்க யோக்கியதையுடையவன். பாத்திரமென்றது நரகத்தினின்று காப்பாற்றுவதென்று பொருள். கொடுப்பவனுடைய பாவத்தினின்று அவனை ரக்ஷிப்பதாலும் பாத்திரமென்று பெயர்வழங்கும். தன்னை ஸ்மரிப்பவனை நரகத்தினின்று காப்பாற்றுவதாற் காயத்திரியெனப்படும். எப்படித் தரித்திரன் உலகத்தில் ஒருவனுக்குப் பொருள் கொடானோ எப்படித் தனவான் ஒருவனுக்குப் பொருள்கொடுப்பானோ அப்படியே தான் பரிசுத்தனுயுள்ள பிராமணன் இதரர்களைப் பிரக்ஷிக்க யோக்கியனாகிறான் ஆனபடியால், காயத்திரி சபத்தாற் பரிசுத்தனாகி விருப்பவனே தானபாத்திரனுயுள்ளவனென்று தெரிந்துகொள்ளவேண்டும். தானம் சபம் ஓமம் பூசைமுதலியவெல்லாக் காரியங்களிலும் பாவத்தினின்று ரக்ஷிப்பதிலுங் காயத்திரி சபத்தாற் பரிசுத்தனான வேதியனே பாத்திரனாகிறான். பசியடைந்தவனே அன்னம்புசிக்கப் பாத்திரன். எப்பொழுதுந் தபோநிஷ்டையுடைய சிறந்த அந்தணனை யழைத்துத் தன் அபீஷ்டங்கள் நிறைவேறவும், நல்லவிஷயங்களைப் போதிக்கப்பெறவும் விரும்பித் தானஞ்செய்கிறானோ, அப்பொழுது அந்தத்தானம் சம்பூர்ணபலனைக் கொடுக்குமென்று சொல்கிறார்கள். ஒருவன் கேட்டபொருளைத் தானஞ்செய்வதால் அரைப்பங்கு பலனுண்டாகும். தன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பதாற் காற்பங்கு பலன்வரும். பிறப்பால் வேதியனாகி ஏழையாயுள்ளவனுக்குத் தானஞ்செய்தவன் பூலோகத்திற் பத்துவருஷங்களும, வேதவித்தாயுள்ளவனுக்குத் தானஞ்செய்தவன் சுவர்க்கலோகத்திற்

பத்துவருஷங்களும், காயத்திரி சபஞ்செய்தவனுக்குத் தானஞ்செய்தவன் சத்தியலோகத்திற் பத்துவருஷங்களும், விஷ்ணுபக்தனுக்குங் கொடுத்தவன் வைகுண்டத்திலும், சிவபக்தனுக்குக் கொடுத்தவன் கைலாயத்திலும் சுகத்தையநுபவித்து வாழ்வார்களாதலின் அவ்வவ் வுலகவின்பங்களை யடையவேண்டி அவ்வத்தானங்களைச் செய்யவேண்டியது. சந்மானம் - ஆஹ்வானம் - அப்பியங்கனம் - பாதசேவை - வஸ்திரம் கந்தமுதலியவற்றாற் பூசை - நெய்யாற்செய்த பக்ஷ்யபோஜ்யங்கள் - ஷட்ரஸோபேதமான அன்னம் - சாகாதிகள் - தக்ஷிணையோடுகூடியதாம்பூலம் - நமஸ்காரம் - பின்சென்று வழிவிடல் - சுவர்ணதானம் - இவை தசாங்கமென்னப்படும். இந்தத் தசாங்கத்துடன்கூடின அன்னத்தை ஆதிவாரத்திற் கொடுத்தவன் மறுசனனத்திற் பத்துவருஷங்களும்பத்துவேதியர்களுக்கு இவ்வகையாகவே ஆதிவாரத்திற் கொடுத்தவன் நூறுவருஷங்களும் ஆரோக்கியமடைவார்கள். சோமவாரமுதலிய வாரங்களிற் கொடுத்தவர்கள் அவ்வவ்வாரபலனை இப்பூலோகத்திலேயும் சன்மாந்தரத்திலேயும் அடைவார்கள். வித்தையை விரும்புகிறவன் இளவயதுடைய பிராமணனைப் பிரமனாகப் பாவித்தும், புத்திரபாக்கியத்தை விரும்புகிறவன் யவ்வனபருவமுடைய பிராமணனை விஷ்ணுவாகப்பாவித்தும், ஞானத்தைவிரும்புகிறவன் விருத்தவேதியனை உருத்திரனாகப் பாவித்துந் தானஞ்செய்யவேண்டியது. புத்தியை விரும்புகிறவன் வேதிய கன்னிகையைச் சரசுவதியாகப் பாவித்தும், போகத்தைவிரும்புகிறவன் யவ்வனஸ்திரீயை லக்ஷ்மியாகப் பாவித்தும், ஆத்மஞானத்தை விரும்புகிறவன் விருத்த சுமங்கலியைப் பார்வதியாகப் பாவித்துந் தானஞ்செய்யவேண்டியது. தான் தேடியபொருளும், யாசகஞ்செய்தபொருளும், குருதக்ஷிணை கொடுத்து மிகுந்தபொருளும் பரிசுத்தமானவை, அவற்றைத் தானஞ்செய்வதால் பூர்ணமானபலனுண்டாம். வேதியனிடத்துப்பெற்ற திரவியம் மத்திபமானது. சேவகம் வியாபாரம் இவ்வழியிற்றேடிய திரவியம் அதமமென்று பிராமணர்களறியவேண்டியது. க்ஷத்திரியர் சௌரியத்தினாலும், வைசியர் வர்த்தகத்தினாலும், சூத்திரர்கூலியினாலும், தர்மத்தை விரும்பிய ஸ்திரீகள் பிதுர்சம்பந்தம் கணவன் சம்பந்தமாக வந்தபொருள்களிவை உத்தமப் பொருள்களாம். * கோதானம் பூதானம் திலதானம் சுவர்ணதானம் நெய்தானம் வஸ்திரதானம் தானியதானம் வெல்லதானம் வெள்ளிதானம் உப்புத்தானம் பூசணிக்காய்தானம் கன்னிகாதானமென்னும் பன்னிரண்டும் சித்திரைமுதலான பன்னிரண்டுமாசங்களில் வெவ்வேறாக முறையேயாவது, புண்ணியகாலங்களில் ஒருமிக்கவாவது தத்தம் விருப்பத்திற்காகத் தானஞ்செய்யவேண்டியது. கோதானத்தில், சாணமுதலிய பஞ்சகவ்வியங்களிருத்தலின் தனதானியாதிகளுக்காகச் செய்த பாவங்களொழி

* கோபூதிலஹிரண்யாஜ்ய வாஸோதாந்யகுடாநிச |
ரௌப்யம்லவணகூஷ்மாண்டே கந்யாத்வாதஶகந்தா ||

யும். கோமூத்திரத்தால் நீரிற்செய்த பாவமும் நெய்யாலுண்டான பாவமு மொழியும். பால் - தயிர் - நெய் இவற்றைத் தானஞ்செய்தால் மன வாக்குக் காயங்களாற்செய்த பாவமொழிந்து தேகபுஷ்டி யுண்டாகும். பூதானத்தால் பூலோகத்திலேயும் பரலோகத்திலேயுங் கீர்த்தியுண்டாம். திலதானத்தாற் பலமும், மரணநிவாரணமும், சுவர்ணதானத்தாற் சடராக்கினி வீரியம் இவற்றின்விர்த்தியும், நெய்யாற் புஷ்டியும், வஸ்திர தானத்தால் ஆயுள்விர்த்தியும், தானியதானத்தால் அன்னசமுர்த்தியும், வெல்லதானத்தால் மதுரமான பதார்த்தபோசனமும், வெள்ளிதானத்தால் ரேதஸ்விர்த்தியும், உப்புதானத்தால் ஷட்ரஸோபேதமான உணவும், பூசணித்தானத்தால் சகலலோகங்களும் தேகபுஷ்டியும், இகலோகத்திலும் பரலோகத்தியும் இஷ்டசித்தியும், கன்னிகாதானத்தால் ஜன்மங்கடைத்தேறுதலும், சகலஜன்மங்களிலுஞ் செய்த பாவநிவாரணமும் உண்டாகும். பலா - மா - விளா - வாழை முதலியபழங்கள் - கந்தமூலங்கள் உளுந்துமுதலான பருப்புகள் - காய்கனிகள் - கடுகுமுதலிய உபகரணங்கள் இவற்றில் எந்த ருதுவில் எது கிடைக்குமோ அந்தருதுவில் அந்தப் பதார்த்தத்தைத் தானஞ்செய்யவேண்டும். சுரோத்திராதி இந்தியங்கள் திருப்தியடையும்படி கீதம் வாத்திய முதலியவற்றைக் கொண்டுசெய்தவன் தன் இந்திரியங்கள் களிப்பெய்த வாழ்ந்திருப்பான். வேத சாஸ்திரங்களை ஆசிரியனுலுணர்ந்து கர்மங்களைச் செய்வதாலே பலனுண்டென்று நினைப்பது ஆஸ்திக்யம். பந்துக்களுக்கும் அரசனுக்கும் பயந்து காரியங்களைச்செய்வது சிரத்தை. சிரத்தை ஆஸ்திக்யத்திலுங் குறைந்தது. தரித்திரனயிருப்பவன் வாக்கினலேயும் காரியத்தினலேயும் யாகஞ் செய்யவேண்டும். மந்திரம் ஸ்தோத்திரம் ஜபமுதலியன வாசிகயாகமும், தீர்த்த யாத்திரை விரதமுதலியன காயிகயாகமுமாம். எந்தவுபாயத்தாலாவது சிறிதளவாவது சிவப்பிரீதியாகச் செய்தகாரியமும் சுகத்தைக் கொடுக்கும். தவம் தானம் இரண்டுமே செய்யத்தக்கன. பொன்முதலியவற்றை ஈசுவரார்ப்பணமாகத் தானஞ்செய்தால் மோக்ஷமுண்டாகி மீண்டும் உயர்ந்தபதவியை யடைவான். இந்த அத்தியாயத்தை வாசித்தவர்கள் தர்மபுத்தியும் ஞானசித்தியும் அடைவார்கள்.

தானதேசகாலங்க ளுரைத்தது

முற்றிற்று.

பதினன்காவது

பார்த்திவலிங்கபூஜை முதலியனவுரைத்த அத்தியாயம்.

ருஷிகள் எல்லாவிருப்பங்களையுங் கொடுக்கத்தக்க பார்த்திவலிங்க பூஜாவிதானத்தை யெங்களுக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லுகின்றார்: ருஷிகளே! உங்களால் நல்லவிஷயங்

கேட்கப்பட்டது. அது எல்லாப்பாக்கியங்களையுங் கொடுக்கவல்லதும், கேட்டமாத்திரத்திலேயே அகாலமிருத்யுவையுங் காலமிருத்யுவையு மொழிப்பதும், தனகனகாதி வஸ்துக்களையும் பக்ஷ்யபோஜ்யாதிகளையும் வஸ்திராதிகளையுங் கொடுக்கவல்லதுமாதலின், அதனை மனப்பூர்வமாகச்சொல்கின்றேன் : கேட்பீர்களாக. பார்த்திவலிங்கப் பிரதிமாதிகளைப் பூஜிப்பது பூலோகத்திற் சகலாபீஷ்டங்களையுங் கொடுப்பது. அது புருஷர்களாலும் ஸ்திரீகளாலுஞ் செய்யத்தக்கது. அது நதி தடாகம் கூபமுதலியவற்றிலுள்ள மண்ணையெடுத்துவந்து பரிசோதித்துக் கந்தமுதலியவற்றைக் கூட்டிப்பிசைந்து பாலைக்கூட்டி அங்கப்பிரத்தியங்கங்களுடன் ஆயுதசகிதமாக விளங்கும்படிசெய்து, பத்மாசனத்தில் நிறுத்தி ஆசையோடு பூஜைசெய்யவேண்டியது. அவை யாவையெனின் விநாயகன் சூரியன் திருமால் உமாதேவி சிவபெருமான் இவர்களைப் பூஜைசெய்யவேண்டியது. சிவபெருமானையாவது சிவலிங்கத்தையாவது இஷ்டசித்திக்காகப் பக்திபூர்வமாகப் பூஜைசெய்யவேண்டியது. முதலிற் புஷ்பத்தாலெடுத்து நீரைப் புரோக்ஷித்து மந்திரபூர்வமாக அபிஷேகித்து, சாலியன்னத்தால் நிவேதனமுஞ்செய்யவேண்டும். இவையாவும் குடவமானத்தாற் செய்யத்தக்கது. குடவமானமாவது மநுஷ விஷயத்தில் ஒரு பிரஸ்தமும், தேவபூஜையில் மூன்றுபிரஸ்தங்களும், ஈசுவரபூஜையில் ஐந்துபிரஸ்தமுங்கொண்டு செய்தால் பூர்ணபலமுண்டாகும். ஆறுபிரஸ்தங்களைக் கொண்டுசெய்வதால் விசேஷபலமுண்டாகும். ஆயிரம் பிரஸ்தங்களால் அர்ச்சிப்பதால் அந்தச் சிவபெருமான் சத்தியமாகச் சத்தியலோகத்தைக் கொடுப்பார். சலம் தைலம் கந்தம் முதலியவற்றை மாநுஷ ரிஷி சம்பந்தமும் சுவயம்புவுமாகவுள்ள சிவலிங்க பூசையில் அளவின்படி கொண்டுசெய்வது மகாபூசையென்று சொல்லப்படும். அபிஷேகத்தால் ஆத்மசுத்தியும், கந்தத்தாற் புண்ணியமும், நைவேத்தியத்தால் ஆயுளுந் திர்ப்தியும், தூபத்தால் திரவியமும், தீபத்தால் ஞானமும், தாம்பூலத்தாற் போகமும் உண்டாகுமாதலின் இவையாறும் மிக்க பிரயத்தனத்துடன் செய்யவேண்டும். நமஸ்காரம் சபம் சகலாபீஷ்டங்களையுங் கொடுக்குமாதலின் பூசை முடிந்தபின்னர், போகமோக்ஷங்களை யிச்சிப்பவர்கள் எப்பொழுதுஞ் செய்யவேண்டும். எப்பொழுதும் முதலில் மனதாற்பூஜித்து, பின்னரே பூசைசெய்ய ஆரம்பிக்கவேண்டும். அப்படித் தேவபூசை செய்வதால் அவ்வத்தேவலோகங்களை யடைகிறான். அன்றியும், இடையிடையிலுள்ள லோகங்களிலும் விசேஷமான போகங்களை யநுபவிக்கிறான். ருஷிகளே! கேளுங்கள் ஆவணி புரட்டாசிமாதத்து, சுக்லபக்ஷ சதுர்த்தியில் சுக்கிரவாரத்திலும், மார்கழிமாசத்தில் சதபிஷ நக்ஷத்திரத்திலுங் கணேசனை விதிமுறையாகப் பூசைசெய்தால் பூலோகத்தில் சகல பாக்கியங்களையுமடைவான். தேவர்களிடத்தும் அக்கினியிடத்தும் எப்பொழுதும் மாநுடர் விருப்பத்தைக் கொடுத்து எல்லாப் பாவங்களையுமொழித்து ஆத்துமசுத்தியை யுண்டுசெய்கிற சிவபெருமான் முதலியோருடைய வார

பூசையைச் சிரத்தையோடு செய்யவேண்டும். திதி நக்ஷத்திரயோகங்கள் விரதகாலத்திற் சம்பூர்ணமாக விருக்கவேண்டுவது உசிதம். பூசையென்றல் மோக்ஷசுகத்தை யுண்டுசெய்வது என்று பொருள். அந்தப்பூசை நித்தியம் நைமித்திகம் காமியமென மூவகைத்து. நித்தியம் - பக்ஷம் - மாசம் - வருஷங்களாகச்செய்த பூசையால் பாபக்ஷயமும் இஷ்டசித்தியுமுண்டாகும். கணபதிபூசையைக் கிருஷ்ண சதுர்த்தசியிற் செய்தால் அந்தப்பக்ஷத்திற்செய்த பாவங்கள்போய்ப் பலன்களுண்டாம். சித்திரைமாச சதுர்த்தியிற்செய்த பூசையால் ஒருமாசபலமும், ஆவணிமாச சுக்லபக்ஷ சதுர்த்தியிற்செய்தபூசையால் ஒருவருஷபலனும் வரும். ஆவணி மாசத்தில் சப்தமி அஸ்தம் ஆதிவாரங்களிலும் கணபதியைப் பூசைசெய்ய வேண்டும். மாசிமாசத்தில் சப்தமி ஆதிவாரங்களில் சூரியனைப் பூசை செய்யவேண்டும். ஆனிமாசத்தில் புதவாரம் துவாதசி திருவோணம் இவற்றில் இஷ்டசம்பத்துக்களை விரும்பி விஷ்ணுமூர்த்தியைப் பூசைசெய்ய வேண்டும். அப்படிச்செய்தால் கோதானமுதலிய துவாதசதானஞ்செய்த பலனுண்டாகும். துவாதசிதிதியில் விஷ்ணுவை யுத்தேசித்துப் பன்னிரண்டு பிராமணர்களுக்குப் போஜனஞ்செய்வித்தால் சகலபோகங்களுமுண்டாகும். இவ்வகையாகவே யெல்லாத்தேவர்களையுங் கருதிச்செய்தால் அவ்வத்தேவர்கள் பலனையளிப்பார்கள். ஆடிமாச நவமி மிருகசீரிஷம் சோமவாரம் இவற்றிலும், அர்ப்பிசிமாச சுக்லபக்ஷ நவமியிலும் பார்வதி தேவியைப் பூசைசெய்தால் சகலபோகங்களுமுண்டாகும். கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி ஆதிவாரங்களிலும் ஆருத்திரா நக்ஷத்திரத்திலும் சூரியன் ஆருத்திராவிற் பிரவேசித்தகாலத்திலும் சிவபூசை விசேஷமான பலனைக்கொடுக்குமென்று சொல்லப்படும். மாசிமாச கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி [சிவராத்திரி] சகலாபீஷ்டங்களைக் கொடுப்பதும் ஆயுள்விர்த்தி செய்வதும், அபமிருத்யுவை பொழிப்பதுமாம். ஆனிமாசத்தில் சூரியன் ஆருத்திராவிற் பிரவேசித்தபொழுதும், சதுர்த்தசியிலும், மார்கழிமாச ஆருத்திராவிலும் ஷோடசோபசாரங்களோடு சிவபெருமானை விக்கிரகத்திலாவது லிங்கத்திலாவது பூசைசெய்தால் போகமோக்ஷங்கள் உண்டாகும். கார்த்திகைமாசம் வந்தவுடனே எல்லாத்தேவர்களையும் தானத்தாலுந் தவத்தாலும் ஓமத்தாலும் சபத்தாலும் நியமத்தாலும் ஷோடசோபசாரத்தாலும் பூசைசெய்து பிராமண சந்தர்ப்பணமுடித்தால், காமக்குரோதாதிகளால் உண்டான பீடையொழியும். கார்த்திகை ஆதிவாரங்களில் சூரியபூசையாலும் தயிலம் பருத்தி வஸ்திரம் பால்முதலியன தானஞ்செய்தால் குஷ்டரோகமும் க்ஷயரோகமுமொழியும். தீபமுங் கடுகுந் தானஞ்செய்தால் மூர்ச்சை ரோகமொழியும். கார்த்திகை மாச சோமவாரங்களில் பூசைசெய்தால் தரித்திரமொழிந்து சம்பத்துண்டாகும். பிராமணருக்கு வீடு பூமிமுதலியவற்றைத் தானஞ்செய்தாலும், கார்த்திகைமாசம் மங்களவாரத்தில் குமாரசுவாமி பிரீதியாகப் பூசைசெய்து தீபம் மணி இவற்றைத் தானஞ்செய்தால் வாக்குச்சுத்தியாகும்.

கிருத்திகை நக்ஷத்திரத்துடன்கூடிய புதவாரத்தில் விஷ்ணுபூஜை செய்வதாலும், தயிர்ச்சாதத்தைத் தானஞ்செய்வதாலும் சற்சந்தானமுண்டாகும். கிருத்திகையுடன்கூடிய குருவாரத்தில், பிரமஸ்வரூபமான பிராமணரைத் தனமுதலியவற்றாற் பூஜைசெய்வதாலும், தேன் பொன் நெய் இவற்றைத் தானஞ்செய்வதாலும் போகங்கள் விருத்தியாகும். கிருத்திகை நக்ஷத்திர சம்பந்தமான சுக்கிரவாரத்தில் கணேசபூஜை செய்வதாலும், கந்தம் புஷ்பம் அன்னம் இவற்றைத் தானஞ்செய்வதாலும் சகலபோகங்களுமுண்டாகும். இந்தப் பூஜையை மலடிசெய்வாளேனும் நல்லபுதல்வனைப் பெறுவாள். கிருத்திகை சம்பந்தமான சனிவாரத்தில் அஷ்டதிக்குப் பாலர்களையும் அஷ்டதிக்கசங்களையும் திரிநேத்திரரான சிவபெருமானையும், பாவங்களையொழிக்கும் விஷ்ணுவையும், ஞானத்தைக்கொடுக்கும் பிரமதேவனையும், அசுவினிதேவர்களையும், தன்வந்திரியையும் பூஜைசெய்வதாலும் இலவணம் இரும்பு எண்ணெய் உளுந்து சுக்கு திப்பிலி மிளகு பழங்கள் கந்தம் நீர் இவற்றைத் தானஞ்செய்வதாலும் ரோகம் அபமிருத்யுமுதலியன விலகும். பால்முதலிய திரவபதார்த்தங்களையும் ஒரு * பிரஸ்தமாகத் தானஞ்செய்யவேண்டும். தானியமுதலிய கடினபதார்த்தங்களை ஒருமரக்காலளந்து தானங்கொடுக்கவேண்டும். தநுர்மாசத்தில் உஷக்காலத்தில் சிவபெருமான் முதலிய சகலதேவர்களையும் பூஜைசெய்வதால் சுவர்க்கபதவியுஞ் சகலகாரியசித்தியுமுண்டாகும். புனிதமான சாலியன்னத்தை நிவேதனஞ் செய்தால் நல்லபுண்ணியமுண்டாகும். சித்திரான்னம் திலான்னம் உளுந்துசேர்த்த அன்னம் சர்க்கரைசேர்த்த அன்னமுதலிய நாலுவகையான அன்னங்களைத் தநுர்மாசத்தில் நிவேதிப்பது உசிதமானது. அவ்வாறு நிவேதித்து அந்தணருக்களித்தவன் இஷ்டசித்தியையும், பாபக்ஷயம், ஆரோக்கியம் தர்மம்முதலியவற்றையுமடைவான். வேதவுணர்ச்சியுற்று, வேதவிதிப்படி நடந்துவருவதால் இகபரலோகங்களில்பெருவாழ்வுடன் பெரும்புண்ணியமுமடைவான். மார்கழிமாசத்தில் அன்னதானஞ் செய்தவனுக்கு ஞானம் உண்டாகும். சக்தியில்லாதவன் மார்கழிமாசத்தில் விடியற்காலத்தில் மூன்று தினங்களேனுந் தேவதாராதனை செய்தால், சகலசம்பத்துகளையுமடைவான். தநுர்மாசத்திற் பூஜைசெய்யாதவனுக்கு ஒரு பலனுமில்லை. தநுர்மாசத்திற் காலையில் ஆறுநாழிகைக்குள்ளாகப் பூஜைசெய்யவேண்டியது. தநுர்மாசத்தில் ஆகாரத்தைவிலக்கி ஜிதேந்திரியனாய், மத்தியானம் [இரண்டு யாமம்] வரையிலும் வேதமாதாவான காயத்திரியை இரவில் நித்திரைசெய்யும் வரையில் பஞ்சாக்ஷர மந்திரத்தையும் சபஞ்செய்தவன் ஞானமடைந்து தேகாந்தத்தில் முத்தியடைவான். பிராமணரல்லாத இதரஸ்திரீ புருஷர்கள் மூன்றுதினங்களில் காலையில் ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷர மந்திரசபஞ் செய்தால் உத்தமஞானத்தை யடை

* பிரஸ்தம்—இஃதோரளவு - முன் விளக்கப்பட்டது.

வார்கள். தமக்கிஷ்டமான மந்திரங்களைச் சபித்தாலும் பாபக்ஷயமுண்டாகும். தநுர்மாசத்தில் விசேஷமாகப் பகவானான சிவபெருமானுக்கு மஹாநைவேத்தியஞ் செய்யவேண்டும்.

மஹா நைவேத்தியஞ் செய்வ தெப்படியென்றால், சாலி நெல்லரிசி ஒருபாரம், மிளகு ஒருமரக்கால், தேன் பன்னிரண்டு குடவம், நெய் பன்னிரண்டுகுடவம், பச்சைப்பருப்பு பன்னிரண்டு மரக்கால் இவை சேர்த்துச் சமைத்த அன்னமும், நெய்யாற்சமைத்த அபூபம் [பலகாரவகை] அரிசிமா முதலியவற்றாற்செய்த மோதகம். பன்னிரண்டு மரக்கால் பாலுந்தயிரும், தேங்காய் பன்னிரண்டு, பாக்குகள் பன்னிரண்டு வெற்றிலை முப்பத்தாறு கர்ப்பூரசூர்ணம் ஏலம் லவங்கம் ஜாதிக்காய் ஜாபத்திரி குங்குமப்பூ இவற்றுடன் தாம்பூலம் சமர்ப்பிக்கவேண்டியது. இவ்வகையாக மகாநைவேத்தியத்தை ஒருமுறை சமர்ப்பித்தவன் இராச்சியாதிபதியாய், சுவர்க்கபதவியடைந்து வாழ்வான். இப்படி ஆயிரமரக்கால் நிவேதனஞ்செய்தவன் சத்தியலோகத்திலே பிரமனுயுள் வரையில் சுகமுற்று வாழ்வான். முப்பதாயிரமரக்கால் செய்தவன் பிரமலோகத்தின்மேலுலகடைந்து பிறவியின்றி வாழ்வான். முப்பத்தாறாயிர மரக்கால் நிவேதித்தவன் தான்பிறந்தது முதல் நாடோறும் நிவேதனஞ் செய்தவனாகிறான். அது ஜன்மநைவேத்தியமென்று சொல்லப்படும். அதுவே மகாபூர்ணமென்றும் பெயர்பெறும். அவ்வகைய ஜன்மநைவேத்தியஞ்செய்தவன் மீண்டும் ஜன்மமடையமாட்டான். இதற்குச் சங்கற்பஞ்செய்துகொள்பவன் கார்த்திகைமாசத்திற் செய்யத்தொடங்கவேண்டும். சங்கிராந்தி - வியதீபாதம் - ஜந்மநக்ஷத்திரம்-பூரணைமுதலிய தினங்களிலாவது, வருஷத்தில் தான் பிறந்தநாளிலாவது ஜந்மநைவேத்தியஞ்செய்வது உத்தமம். மாசந்தோறும் ஜன்மநக்ஷத்திரம் பூரணை இத்தினங்களிற்செய்துவரலாம். ஒரேநாளிற்செய்தாலுஞ் செய்யலாம். சிறிது சிறிதாகச் செய்து கணக்காக்கினுஞ் செய்யலாம். இந்த ஜன்மநைவேத்தியத்தாற் சிவபெருமான் உள்ளங்களித்தவராவார். இந்த ஜன்மநைவேத்தியத்தைச் சிவபெருமானுக்கே செய்யவேண்டியது. ஏனென்றால், அவரே ஜன்மத்தைக் கொடுக்கவும் ஒழிக்கவும் வல்லவராதலின் என்றறியவேண்டும். பிறதேவர்கட்குச் செய்வதிற் பலனின்று. தாவர ஜங்கமஸ்வரூபமான இந்தப் பிரபஞ்சமானது விந்து நாதங்களின் ஸ்வரூபமாகும். விந்துவே சக்தியும் நாதமே சிவமுமாம். ஆதலின் இந்தப் பிரபஞ்சம் சிவசக்தியாத்மகமென்று சொல்லப்படும். பிந்து நாதத்தையே ஆதாரமாகவுடையது. பிரபஞ்சமுழுவதும் விந்துவை ஆதாரமாகவுடையது. இவ்விரண்டுமே பிரபஞ்சகாரணம். பிந்துநாதஸ்வரூபமான யாவும் சகளீகரணமாகும். சகளீகரணத்தால் ஜகத்து ஜனித்ததாகும். பிந்துநாதஸ்வரூபமே ஜகத்திற்குக்காரணம். பிந்துநாதஸ்வரூபமான சிவலிங்கத்தை ஜன்மநிவிர்த்திக்காகப் பூஜைசெய்யவேண்டியது. பிந்துரூபமான பராசக்தியே தாயும்,

நாதரூபமான பரமசிவனே தந்தையுமாவர். தாய்தந்தையரைப் பூசிப்ப தாற் பரமானந்தமுண்டாகுமல்லவா? ஆனந்தகாரணமாகவே சிவலிங்க பூசைசெய்யவேண்டும். தாய்தந்தையர் தம்மைப்பூசிக்கும் புதல்வர்பேரிற் பெருவிருப்படைவரன்றோ? அங்ஙனமே, தம்மைப்பூசிப்பவருக்குச் சிவ பிரான் தம்முடைய ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். பர்க்க சப்தவாச் சியனை சிவபெருமானே புருஷன். புருஷனிடத்திலிருந்து பிரகிருதி யுண்டாயது: அவ்வியக்தமான வயிற்றில் அதிஷ்டானமான கர்ப்பத்தைப் புருஷனென்று சொல்லப்படும். தோன்றும் வியக்தமான உதரத்தில் அதிஷ்டானமான கர்ப்பத்தைப் பிரகிருதியென்னப்படும். முதலிற் பிறந்த புருஷன் பிதாவாவன். அப்புருஷன் பிரகிருதியுடன் கூடியிருப்பது முதல் ஜன்மமாகும். அப்பிரகிருதியிலிருந்து வெளிவருதல் இரண்டாஞ்சன்ம மாகும். ஜனனமரணங்களிரண்டும் புருஷனுலேயே யுண்டாகும். மாயையே ஜன்மமுண்டாதற்கும் விருத்தியடைதற்குங் காரணம். ஜீவனென்பதற் குப் பிறப்பு விருத்தியடைதல் பாசபத்தமடைதல் நசித்தல் முதலியவற் றையுடையதெனப் பொருள். ஜன்மபாச நிவிர்த்திக்காக ஜன்மலிங்கத் தைப் பூசைசெய்யவேண்டும். பிரகிருதி சம்பந்தமான சப்தாதி தன் மாத்திரைகளாலும், பிரகிருதி சம்பந்தமான இந்தியங்களால் போகிப்ப தாலும் விருத்தியடைவது என்னும்பொருளால் பகः என்பதற்குப் பிர கிருதியென்று சொல்லப்படும். பிரகிருதி சம்பந்தமான வஸ்துக்கள் போகமெனப்படுமாதலின். பகமென்பது பிரகிருதி. அந்தப் பிரகிருதியை யுடையவன் சிவபிரான். ஆதலின் பகவானுன சிவபெருமானே போக தாதா. சிவபெருமானைக் காட்டிலும் போகங்களைக்கொடுக்கத்தக்கவர் பிறிதொருவருமிலர். அந்தச் சிவபிரானைப் பகவான் பர்க்கன் என்னும் வார்த்தைகளாற் பெரியோர் அழைக்கிறார்கள். ஆதலின் இகபோகத் தையும் பரபோகத்தையும் அபேக்ஷிக்கிறவர்கள் சிவபெருமானை லிங்க மூர்த்தத்தில் அர்ச்சனைசெய்யவேண்டியது. உலகிலுள்ளவர்கள் ஷோட ஸோபசாரத்துடன் சிவலிங்கபூஜை செய்யவேண்டும். இது மாநசிகமாக வும் பூசிக்கத்தக்கது. ஆதிவாரத்திற் பூசித்தால் ஜன்மநாசமுண்டாகும். அது பிரணவமந்திரத்திலேயே, பஞ்சகவ்வியங்களாலும் தேன் கரும்பி ரசம் பால்முதலியவற்றாலும் அபிஷேகித்து, நைவேத்தியமும் பிரணவத் தாலேயே செய்யவேண்டியது. அவ்வாறு பூசிப்பவன் ஜீவன் முக்தனு வான். உருத்திராக்ஷதாரணத்தாற் கால்பங்கு பக்தியும், பஸ்மதாரணத் தால் அரைப்பங்கு புக்தியும், சிவமந்திர ஜபத்தால் முக்காற்பங்கு பக்தி யும், சிவபூசையாற் பூர்ணபக்தியுமுண்டாகும். சிவலிங்கத்தையும் சிவ பக்தனையும் பூசிப்பதால் மோக்ஷம் உண்மையாகக் கைகூடும். இந்த அத்தியாயத்தைப் பக்திசிரத்தையுடன் வாசிப்பவனுக்குச் சிவபக்தியுண் டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

பார்த்திவலிங்கபூஜை முதலியனவுரைத்தது

முற்றிற்று.

பதினைந்தாவது

பிரணவ மஹாத்மியமுதலியனவுரைத்த அத்தியாயம்.

பிரணவமஹாத்மியமும், ஷள்ளிங்கமும் [அறுவிதலிங்கமும்] சிவபக்த பூசையுமாகிய விவற்றைச் சொல்லவேண்டுமெனக்கேட்ட ருஷிகளுக்கு ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். ருஷிகளே! தபோதனர்களான நீங்கள் நல்ல கேள்வியைக் கேட்டீர்கள். இவற்றினை விரித்துக்கூற மகாதேவனன்றி வேறொருவனும் அருகனாகமாட்டானாயினும், நீங்கள் என்னைப் பொருட்படுத்திக்கேட்டமையால், எனக்குத் தெரிந்தவரையிற் சொல்லுகின்றேன். அந்தச் சிவபெருமானே உங்களையும் என்னையுந் தயை செய்து ரக்ஷிக்கவேண்டும். ப்ரணவமென்பதற்கு, சமுசாரசாகரத்திற்குத் தெப்பமென்றும், உங்கட்குப் பிரபஞ்சமில்லையென்றும், அதிசயத்தால் மோக்ஷமடையச் செய்வதென்றும், தன்னை ஜபித்தவர்கட்குப் பாபக்ஷயஞ் செய்து ஞானமுண்டு செய்வதென்றும் பொருள்படும். அந்தப் பிரணவம் ஸூக்ஷ்மமென்றும் ஸ்தூலமென்றும் இருவகைப்படும். அவற்றில் ஸூக்ஷ்மம் ஓரெழுத்தையும் ஸ்தூலம் ஐந்தெழுத்தையுமுடையவை. ஸூக்ஷ்மத்திற் காணக்கூடாத ஐந்தெழுத்துக்களும் ஸ்தூலத்திற் காணக்கூடிய ஐந்தெழுத்துக்களு மிருக்கின்றன. ஜீவன்முக்தனானவன் ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரத்தைத் தன் உடலொழியும் வரையும் அநுசந்தானஞ்செய்தால், தன்தேகமழிந்தவுடன் பரிபூரணனான சிவபெருமானிடத்தில் நிச்சயமாக லயமடைவான். பிரணவமந்திரத்தை முப்பத்தாறுகோடி ஜபித்தவன் யோகசித்தியை யடைவான். அந்த ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரமும் ஹ்ரஸ்வதீர்க்கங்களால் இருபேதப்படும். அகார உகார மகார பிந்து நாதங்களுடன் கூடிச் சப்தகாலகலான்விதமாயுள்ளது தீர்க்கப்பிரணவம். அது யோகிகளுடைய இதயாகாசத்திற் பிரகாசிக்கும். மகாரத்திலே விளங்கும் அகார உகார மகாரங்கள்மூன்றுந் தமோகுணங்களென்னுந் திரிதத்துவங்களாம். இதுவே ஹ்ரஸ்வப்பிரணவமெனப்படும். அன்றியும் அகாரம் சிவன், உகாரம் சக்தி, மகாரம் ஐக்கியம். சிவசக்திகளின் ஐக்கியமே தத்துவத்திரயமாகிய மகாரத்தின் பொருள். ஸர்வபாப க்ஷயத்தை விரும்புகிறவர்கள் ஹ்ரஸ்வபிரணவ ஜபஞ்செய்யவேண்டும். இஷ்டகாமியங்களையுடைய பிரவிர்த்திமார்க்கத்திலிருப்பவர்கள் மந்திரத்துடன் ஹ்ரஸ்வப்ரணவத்தையும், நிஷ்காமிகளான நிவிருத்திமார்க்கத்திலிருப்பவர்கள் தீர்க்கப்பிரணவத்தைத் தனியேயும் உபாசிக்கவேண்டியது. வேதமோதத் தொடங்குகையிலும், காலைமாலைகளிற் செய்யுஞ்சந்தியாவந்தன முதலிலும், குருவந்தனைசெய்கையிலும் பிரணவோச்சாரணஞ் செய்யவேண்டும். தீர்க்கப் பிரணவத்தை ஒன்பதுகோடி செபஞ்செய்தால் பரிசுத்தனாகிறான். மீண்டும் ஒன்பதுகோடி செய்தால் பிருதிவி தத்துவத்தையும், மீண்டும் ஒன்பதுகோடி செய்தால் அப்புதத்துவத்தையும், மீண்டும் ஒன்பதுகோடி செய்தால்

அக்கினிதத்துவத்தையும், ஒன்பதுகோடி மேலுஞ்செய்தால் வாயுதத்துவத்தையும் மீண்டும் ஒன்பதுகோடி செய்தால் ஆகாயதத்துவத்தையும் ஜயிப்பான். மீண்டும் ஒன்பதொன்பது கோடிசெய்வதால் கந்தாதி தன்மாத்திரைகளும், மீண்டும் ஒன்பதுகோடியால் அகங்காரமும் ஜயிக்கக்கப்படும். தினந்தோறும் ஆயிரஞ்செய்வதால் பரிசுத்தனாகிறான். அதன்பின்னரே தத்துவங்களை ஜயிக்கவேண்டி ஜபஞ்செய்யவேண்டும். இவ்வகையாக நூற்றெட்டுக் கோடி தீர்க்க ப்ரணவஜபஞ்செய்தவன் சுத்தயோகமடைகிறான். அவனே ஜீவன்முக்தன். பிரணவஸ்வரூபியான சிவபகவானை எப்பொழுதும் தியானஞ்செய்துகொண்டும் ஜபஞ்செய்துகொண்டுமிருப்பவன் சிவனேயென்று சொல்லப்படுவான். ருஷி சந்தஸ் தேவதைகளை மனதில் தியானஞ்செய்து, பின்னரே ஜபிக்கவேண்டும். பிரணவத்தை * மாதருகாயுக்தமாகத் தேகத்தில் நியாசஞ் செய்தால் ருஷியாகலாம். தசமாதருக ஷடத்துவாதிகங்களையெல்லாஞ் செய்தால் நியாசபலனுண்டாகும். பிரவிருத்தி நிவிர்த்தி லக்ஷணங்களுடன் கூடிய இவ்வர்ணங்களுடைய சமுதாயமே ஸ்தூலப்பிரணவமென்று சொல்லப்படும்.

சிவயோகிகளைக் கிரியாயோகிகள் தபோயோகிகள் ஜபயோகிகளென மூவகையாகக் கூறப்படும். அவருள், தமக்குண்டானதனமுதலிய விபவங்களுடன் கரமுதலிய அவயங்களால் சிவலிங்கபூஜை செய்பவன் கிரியாயோகியெனப்படுவன். சிவலிங்கபூசைசெய்துகொண்டு மிதபோசனங்கொண்டு பாஹ்யேந்திரிய ஜயமடைந்து, பரத்துரோகஞ்செய்யாதவன் தபோயோகியெனப்படுவான். மேற்கூறிய இருவகை லக்ஷணங்களுமுற்று, சர்வகாமனாபரித்தியாகஞ்செய்து எப்பொழுதும்ஜபத்தையே செய்துகொண்டு சாந்தனாயிருப்பவன் ஜபயோகியெனப்படுவான். ஷோடசோபசாரங்களுடன் சிவயோகிகளைப் பூசைசெய்வதால், சாலோக்யாதி கிரமமாகப் பரிசுத்தனாய் முக்தியடைவான். இனி ஜபயோகத்தைச் சொல்லுகின்றேன். எந்தஜபத்தைச்செய்தால் பாவமொழியுமோ அந்தச் சிவபஞ்சாக்ஷரஜபத்தைத் தவசியாயுள்ளவன் ஜபஞ்செய்யவேண்டும். சிவ என்னுமிரண்டெழுத்துக்களுக்கு முன்னே நமஃ என்பதைச்சேர்த்து, சதுர்த்தியந்தமாக்கிச் [நமஃ சிவாய என்று] சபிக்க, பஞ்சதத்வாத்மகமான ஸ்தூலப்பிரணவமாகும். அந்தஸ்தூலப் பிரணவமே சிவபஞ்சாக்ஷரம். அதனை ஜபித்தலால் சகல காரிய சித்தியுமுண்டாகும். அப்பஞ்சாக்ஷரத்தின் முதலிலே பிரணவத்தைச் சேர்த்துஞ் சபிக்கலாம். குருஉபதேசம்பெற்றுச் சுபதினத்தில், புனிதமான விடத்திலிருந்து பூர்வபக்ஷத்திலே சங்கற்பஞ்செய்துகொண்டு கிருஷ்ணபக்ஷ சதுர்தசிவரையில் ஜபிக்கவேண்டும். மாசிமாத புரட்டாசி மாதங்கள் சர்வகாலங்களிலும் உத்தமம். தினத்திற் கொருமுறை மிதபோசனஞ்செய்து,

* அ இ உ முதலிய வர்ணங்கள்.

இந்தியங்களையடக்கி எசமானனுக்கும் பெற்றோருக்கும் பணிவிடைசெய்து பஞ்சாக்ஷரஜபம் ஆயிரஞ்செய்தாற் பரிசுத்தனுவான். இப்படிச்செய்தவன் தேவபிதுர் ருணத்திலிருந்துநீங்குவான். பத்மாசனத்திலிருந்தும், மங்களங்களைக்கொடுத்தும், கங்கையையுஞ் சந்திரனையுஞ் சிரமிசை யணிந்தும், வாமபாகத்தில் உமாதேவியை யமர்த்தியும், பிரமதகணங்களாற் சேவிக்கப்பட்டும், மான் டமருக மிவற்றைத் திருக்கரத்தேந்தியும், வரதாபய அஸ்தங்களுற்றும், எப்பொழுதும் பக்தர்களுக்கநுக்கிரகித்தும் விளங்கும் பரமசிவனைத் தியானித்துக்கொண்டு பஞ்சாக்ஷர மந்திரத்தை ஐந்திலக்ஷ ஜபஞ்செய்யவேண்டும். அன்றியும் மேற்கூறிய லக்ஷணங்களையுடைய சிவமூர்த்தியைத் தன்மனதிலாவது சூரியமண்டலத்திலாவது பூசிக்கவேண்டும்.

இது கிழக்குமுகமாக நோக்கிச் செய்யத்தக்கது. கிருஷ்ணசதுர்த்தசியில் உதயத்தில் ஸ்நானஞ்செய்து நித்தியகரும முடித்துக்கொண்டு பரிசுத்தமானவிடத்திற் பன்னிரண்டாயிரம் பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து, குடும்பவான்களான சிவபக்தியுடைய அந்தணரை வரித்து, அவரிற்சிறந்த ஒருவரைக்குருவாகவும், ஒவ்வொருவரை ஈசானதற்புருஷ அகோர வாமதேவ சத்தியோசாதமூர்த்திகளாகவுங்கொண்டு பூஜாதிரவியங்களைச் சம்பாதித்துச் சிவபூசைசெய்யவேண்டியது. பூசைமுடிந்தபிறகு ஓமஞ்செய்யவேண்டியது. ஓமத்தின்முன்னே தமதுசூத்திரப்படி அக்னிப்ரதிஷ்டாபனமுதல் அக்கினிமுகாந்தஞ் செய்யவேண்டும். பஞ்சாக்ஷரமந்திரத்தால் ஓமத்தைப் ஆயிரம் நூறு அல்லது பத்து முறையேனும் கபிலைப்பசுவின் நெய்யால் தானேயாவது, சிவபக்தரைக்கொண்டு நூற்றெட்டுமுறையாவது செய்யவேண்டும். ஓமாந்தத்தில், குருவுக்கு இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். பின்னர் ஈசானுதி பஞ்சமூர்த்திஸ்வரூபமான பிராமணர்களை வஸ்திராலங்காரமுதலியவற்றாற் பூசைசெய்து பரமசிவனுகத் தியானஞ்செய்து, அவர்களால் மார்ஜனஞ்செய்த நீரால் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்வாறுசெய்தால் முப்பத்தாறுகோடி தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தபலனுண்டாகும். ஓமத்துக்குப் பத்திலொருபங்கு பிராமணபோஜனஞ்செய்விக்கவேண்டும். குருவும் பஞ்சப்பிரமங்களுமாகக்கொண்டவர்களுடைய பாரியைகளைப் பார்வதியாகப் பாவித்து விசேஷ தக்ஷிணையுடன் ஆடையாபரணுதிகளையும் அன்னபானுதிகளையுங் கொடுத்து நமஸ்கரிக்கவேண்டியது. இவர்கட்கெல்லாம் உருத்திராக்ஷமுதலியவற்றையுங் கொடுத்துப் பலிதானஞ்செய்து அங்குள்ள எல்லாருக்கும் போஜனஞ் செய்விக்கவேண்டும். பின்னர், தேவனைப் பிரார்த்தித்து ஜபத்தைமுடிக்கவேண்டும். இவ்வாறு செய்தவன் மந்திரசித்தியடைவான். மீண்டும் ஐந்திலக்ஷஜபத்தாற் சர்வபாவக்ஷயமுண்டாகும். மீண்டும் ஐந்திலக்ஷஜபத்தால் அதலாதிலோகங்களை ஜயித்து அவ்விடத்து ஐசுவரியங்களை யடைவான். இப்படிச்செய்கையில் அவன் இறந்தால், மீண்டும் மானுஷ ஜனனத்தில், சிவமந்திரஜபஞ்செய்பவனுகவே தோன்றி, அதனை யாசரிப்பவனு

வான். மேலும் ஐந்திலக்ஷத்தால் பிரமசாமீப்பமும், மேலும் ஐந்திலக்ஷத்தாற் சாரூப்பியைசுவரியமும் உண்டாகும். நூறுலக்ஷமானுற் பிரமனுக்குச்சமானமான தன்மையுண்டாகிப் பிரமபிரளயம்வரையில் இஷ்டப்படி வாழ்ந்திருந்து, மறுபிறவியிற் பிரமனுக்கே புதல்வனாகித் தபோபலனால் முக்தனாவான்.

பிந்துவிமுதல் உலகங்கள் பதினான்கும் பிரமதேவனால் நிருமிக்கப்பட்டன. சத்தியலோகமுதல் க்ஷமாலோகம் வரையில் விஷ்ணுலோகங்கள் பதினான்கு. க்ஷமாலோகத்திலே விஷ்ணுபகவான் வைகுண்டநகரத்திலே லக்ஷ்மிதேவியுடன் மகாபோகங்களை யநுபவித்து உலகரக்ஷகனாகவிருக்கிறான். அதன்மேலே சுசியிறுதியாக இருபத்தெட்டுச் சிவலோகங்களுள்ளன. அந்தச்சுசிலோகத்திலே கைலாசத்திலேயுள்ள உருத்திரன் சகலபிராணிகளின் இதயத்திலுமிருக்கின்றனன். அதன்மேலே அஹிம்ஸா என்பதை யிறுதியாகவுடைய ஐம்பத்தாறுலகங்கள் மகேசலோகங்கள். அவற்றில் ஞானகைலாசநகரத்திலே மகேசன் ஆன்மாக்களுக்குத்திரோபவஞ்செய்து கொண்டிருப்பான். அதன் மேலே காலசக்கிரம் காலாதீதம் என்னுமிரண்டு லோகங்களுண்டு. அவற்றுள், காலாதீதத்திலே ஈசுவரன் என்னும்பெயருடைய காலன் சிவபிரானுடன்கூடி மகிஷதர்மத்தை யடைந்து, சகலபிராணிகளையுங் காலத்துடன் சேர்க்கின்றான். அசத்தியம் அசுசிஹிம்ஸை நிர்த்தயை யென்பவற்றைப் பாதங்களாக்கொண்டு சுயேச்சாரூபியாயிருப்பான். அங்கே நாஸ்திஜயலக்ஷ்மீ - வேதபாஹ்யத்துவனி - துஸ்ஸங்கமுதலியனவுந் திரோதானமு மிருக்கும். அதன் கீழிருப்பவர்களுக்குக்கர்மயோகமும் கர்மமாயையும் திரோதானமும் பாசபந்தமுமிருக்கும். காமிய கர்மாநுஷ்டானம்-விந்துபூசை - சிவபெருமானையன்றிப் பிறதேவர்களைப்பூசித்தல் - ஜீவஸ்வபாவம்-தேகேந்திரியாபிமானம் - சமுசாராபிமானம் - பிரகிருதிசம்பந்தமான திரவியங்களாற் பூசை-சக்திலிங்கபூசை-ஆவரணலிங்கபூசை-கற்பிதலிங்கபூசை - பாஹியலிங்கபூசை இவற்றையுடையவர்கள் வசிப்பார்கள். அப்பிரதேசத்தில், நூற்றுப்பனிரண்டு சக்திலோகங்களுண்டு. அவையாவும் பிந்துமயம். கர்மலோகம் அதன்மேலே ஞானபோகமயமாய் ஞானமயமாய் நித்தியபோகமயமாய்த் திரோதான ரகிதமாய்ப் பாசபந்தரகிதமாய் நிஷ்காம கர்மஜனயோக்கியமாயிருக்கும். நிஷ்காமியமாக லிங்கபூசைசெய்தவர்கள் - சிவபிரானேசரணமென்று நம்பினவர்கள் - பரசிவசொரூபமுடையவர்கள் - ஜீவன்முக்தர்கள்-புருஷமயமான திரவியத்தாற் பூசைசெய்பவர்கள் - சிவசொரூபமான ஆத்தியாத்மிகபூசை செய்பவர்கள் ஆகிய விவர்கள் வசிப்பார்கள். சிவலிங்கந் தேஜோமயமாயும் ஆவரணரகிதமாயுங் கற்பிதமல்லாததாயும் அந்தரங்க ஸ்வரூபமாயும் நாதரூபமாயும் விளங்கும். அவ்விடத்திலேயே நமஸ்கார சப்தமிருக்கும். மதம் அகங்காரமுதலியன நசிக்கும். ஞானமென்பதற்குத் திரோதானநாசமென்றுபொருள். இப்படிப் பிராகிருத வைதிக லோகங்கள் நியமிக்கப்

பட்டுள்ளன. சத்தியமுதலிய தர்மங்களோடு சிவபூசைசெய்பவர்கள் அதர்ம மேருபமான மகிஷத்தை யதிஷ்டித்த காலசக்கிரத்தைக் கடப்பார்கள்.

அதன்மேலே தர்மஸ்வரூபமான ருஷபம் பிரமசரிய ரூபத்துடனிருக்கின்றது. அது சத்தியமுதலிய நான்குபாதங்களைக்கொண்டு சிவலோகத்தின் முன்னே வசிக்கும். அதற்குச்சாந்தமே கொம்புகள். சாந்தமேசெவிகள். ஆஸ்திக்யமே கண்கள். வேதாக்ஷரமயமான உசுவாசநிசுவாசங்கள் பொருந்திய நாசியுடையதாய் வேதத்தொனியுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும். கிரியைமுதலிய ருஷபங்கள் காரணப்பிரமன் முதலியவர்கள் சந்நிதியிலிருக்கும். மேற்கூறிய லக்ஷணங்களுடன் தர்மஸ்வரூபியான ருஷபத்தைக் காலாதீதனான சிவபெருமான் அதிஷ்டித்துளன். பிரமன் விஷ்ணு ருத்திரன் மகேசுரன் இவர்களுடைய ஆயுள்காலம் சிவபெருமானுக்கு ஒருபகலாகும். அதன்மேலே அவ்வளவுகாலம் இரவாகும். அவ்விரவில் ஜனனமரணங்களொன்றுங் கிடையாது. அதன் பின்னர், காரணப்பிரமன் சத்தியலோகம் வரையிற் பதினான்குலகங்களையும் பூததன் மாத்திரைகளாற் படைப்பான். ஆதலின் பதினான்குலகங்களும் தன் மாத்திரைகளின் சொரூபமாம். அவ்வகையாகக் காரணவிஷ்ணு அப்பதினான்குலகங்களையும், காரண ருத்திரன் இருபத்தெட்டுலகங்களையும், காரணேசுவரன் ஐம்பத்தாறுலகங்களையும் படைப்பார்கள். அதன்மேலுள்ள சிவவாங்கிகரணமும் பஞ்சாவர்ணமும் பஞ்சமண்டலங்களும் பஞ்சப்பிரமமயமும் ஆதிசக்தியுடன் கூடியதும் ஆதிசிவலிங்கத்திற் கிருப்பிடமுமான சிவலோகம் அழிவற்று எப்பொழுதும் விளங்கும். இவ்வகையாகப் பரமாத்மாவான சிவபெருமானுடைய ஆலயத்தை உங்களுக்குவிளக்கினேன். அவ்விடத்திற் சிவபகவான் தன் சக்தியான உமாதேவியுடன் கூடியிருந்து பஞ்சகிருத்தியங்களைச்செய்துகொண்டெழுந்தருளியிருந்து, தன்னைத் தியானிப்பவர்களுக்குச் சதாகாலத்திலும் அநுக்கிரகஞ்செய்துகொண்டு தன்னிற்றானே சந்தோஷித்திருப்பான். கர்மதியானாதிகளால் தரிசிக்கத் தக்க சிவபிரானை, நித்திய கர்மாநுஷ்டானஞ்செய்வதிற் றவறாதவனுக்குப் பூசைசெய்யப் புத்தியுண்டாகும். கிரியைமுதலிய சிவகர்மங்களாலே சிவஞானமுண்டாகும். சிவஞானிகளைத் தரிசித்தவர்கள் யாவரும் முக்தராவார்கள். ஆத்மஸ்வரூபத்தால் முக்தியும், தன்னில் தானே யானந்தமடைதலுமுண்டாகி, கிரியை ஜபம் தவம் தியானம் ஞானம் தர்மம் இவற்றில் நன்றாக நடந்தவனுமாவான். சூரியன் தன் கிரணபரிசத்தால் அபரிசுத்தத்தையொழிப்பதுபோலவே, சிவதரிசனமடைந்தவன் பிறரையும் பரிசுத்தராக்கித் தானும் பிரமானந்தமடைவான். தயையோடு யாவரையும் பரிபாலிக்குஞ் சிவபெருமான் தன்னைத் தரிசித்தவர்களுடைய அஜ்ஞானத்தையொழிப்பான். அஜ்ஞானமொழிந்தவுடனே சிவஞானமுதிக்கும். சிவஞானத்தால் ஸ்வஸ்வரூபந்தெரியும். தன்னில் தானே யானந்திக்கு மெல்லையுங் கிருதார்த்தனுகமாட்டான்.

ருஷிகளே! ஸ்தூலப் பிரணவமான பஞ்சாக்ஷரத்தை நூறுலக்ஷ ஜபஞ்செய்வதாற் பிரமபதமும், மீண்டும் நூறுலக்ஷத்தால் விஷ்ணுபதமும், மீண்டும் நூறுலக்ஷத்தால் ருத்திரபதமும், மீண்டும் நூறுலக்ஷத்தால் மகேசபதமும், மீண்டும் நூறுலக்ஷத்தாற் சிவலோகத்திற்கு ஆதிபூதமான காலசக்கிரபதமும் வரும். சிருஷ்டி மோகங்களைச்செய்யும் பிரமசக்கிரமும், போகமோகங்களைச்செய்யும் விஷ்ணு சக்கிரமும், கோபமோகங்களைச் செய்யும் ருத்திரசக்கிரமும், பிரமணத்தைச்செய்யும் ஈசுவரசக்கிரமும், ஞானமோகங்களைச்செய்யுஞ் சிவசக்கிரமும் ஆகிய இவற்றைத்தனித்தனி நூறு நூறு லக்ஷத்தால் தாண்டவேண்டும். மீண்டும் பத்துக்கோடியாற் காரணப்பிரமலோகமும், மீண்டும் பத்துக்கோடியாற் பிரமபத ஐசுவரியமும், இப்படிப் பப்பத்துக்கோடியால் விஷ்ணுவாதிகளின் லோகங்களையடைந்து மீண்டும் பப்பத்துக்கோடியால் அவ்வப்பத ஐசுவரியங்களையும் பெறுவார்கள். மீண்டும் நூற்றெட்டுக்கோடியால், ஐந்து ஆவரணங்களைக்கொண்ட சிவலோகத்தின் புறத்தையடையலாம். அங்கே ரஜோமயமான நந்திதேவர் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கத் தரிசனமுண்டாகும். அதன்மேலே சத்தியோஜாதமூர்த்தி எழுந்தருளியிருக்கும் ஐந்தாமாவரணமும், வாமதேவமூர்த்தியின் நான்காமாவரணமும், அகோரமூர்த்தியின் மூன்றுமாவரணமும், தற்புருஷமூர்த்தியின் இரண்டாமாவரணமும், ஈசானமூர்த்தியின் பிரதமாவரணமும் உள்ளன. முதலாவரணத்தில் தியானதர்மங்களுக்கு ஸ்தானமாய், பூர்ணமான அமிர்தத்தைக்கொடுக்கும் பலிநாதமண்டபம் - சந்திரசேகரமண்டபம் - சோமாஸ்கந்த மண்டபம் - நிர்த்தமண்டபம் - மூலமாயமண்டபமென்னும் ஐந்துமண்டபங்களுள்ளன. இவற்றைக் கடந்தால் லிங்கஸ்தானமான கர்ப்பக்கிருகம். அங்கே வெளியே பஞ்சாக்ஷர ஜபத்துடன் நந்தீசனும் உள்ளேபரமசிவனுமெழுந்தருளியிருப்பர். (வியாஸமுனிவனே! இவை யாவும் நந்தியெம்பெருமானால் எனக்குச் சொல்லப்பட்டன என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.) அதன்பின்னர் சிவதரிசனவிபவத்தை யவரவரே யறிந்துகொள்ளத்தக்கது. அது சொல்லத்தக்கதன்று. பரமசிவவிபவத்தை வேறொரு வகையாலு மறியமுடியாது. இப்படியே ஜிதேந்திரியர்களான பிராமணர்கள் ஜீவன்முக்தர்களாவார்கள்.

இன்னும், பிறர் யாவரும் பரமசிவோபாசனை செய்யும்வகையையுஞ் சொல்லுகின்றேன். பிராமண குருகடாக்ஷத்தால் நமஃ என்பதையிறுதியாகவுடைய பஞ்சாக்ஷரத்தை யுபதேசிக்கப்பெற்று ஐந்திலக்ஷ ஜபஞ்செய்தால் ஆயுளைச் சயிப்பான். மேலும் ஐந்திலக்ஷ ஜபஞ்செய்தால் ஸ்திரீசம்பந்தமான தோஷங்களொழியும். இம்மந்திரத்தாலேயே கிரமமாக முக்தனுவான். க்ஷத்திரியன் ஐந்திலக்ஷத்தால் தன் க்ஷத்திரத்துவமொழிந்து பிராமணனுவான். வைசியன் ஐந்திலக்ஷ ஜபத்தால் க்ஷத்திரியனாகி மீண்டும் ஐந்திலக்ஷத்தால் மந்திர பிராமணனாகிறான். சூத்திரன் இருபது லக்ஷத்தால் மந்திரவிப்பிரனாகிறான். க்ஷத்திரியாதிகுலத்

திறுதித்த ஸ்திரீ புருஷர்களில் யாவராயினுஞ் சற்குருவால் உபதேசம் பெற்று நமஃ பூர்வமாகவாவது நமஃ அந்தமாகவாவது ஜபஞ்செய்தாற் கிருதார்த்தர்களாவார்கள். ஸ்திரீமுதலிய தெரியாதவர்களுக்கு ஜபஞ் செய்யுமுறையைக் குருவானவன் கிரமமாக வுபதேசிக்கவேண்டியது. சாதகன் ஐந்திலக்ஷ முடிந்தவுடன் சிவப்பிரீதியாக மகாபிஷேகம் மகா நைவேத்தியமுதலியன செய்து சிவபக்தர்களுக்கு அன்னமுளிக்கவேண் டும். சிவபக்த பூசையாற் சிவபெருமான் சந்தோஷிப்பர். சிவபிரானுக் குஞ் சிவபக்தனுக்கும் பேதமில்லை. சிவபிரானே பக்தன். பக்தனே சிவ பிரான். சிவஸ்வரூபமான பஞ்சாக்ஷர மந்திரஞ்சபிப்பவன் சிவனே யா வான். சிவபக்த சரீரத்திற் சிவபிரான் விருப்புற்று வசிப்பர். சிவபக் தர்கள் செய்வனவெல்லாம் வேதத்திற்கூறியவையேயாம். சிவமந்திரத்தை விசேஷமாகச் செபஞ்செய்யுந்தோறும் உயர்ந்த சிவசாந்நித்யங் கிடைக் கும். சிவபக்தர்கள் வீட்டு ஸ்திரீகளுந் தேவிமந்திரஞ் சபிக்கவேண்டும். சிவபெருமான் சப்தஸ்வரூபனாதலின் அவனை மந்திரங்களாலேயே மகிழ்வு செய்யவேண்டும். சிவலிங்கத்தைச் சிவபெருமானாகவும், தன் சரீரத்தைச் சக்திரூபமாகவும், சிவலிங்கத்தை நாதரூபமாகவும், தன் சரீரத்தைப் பிந்துரூபமாகவுங்கொண்டு, தன்னிடத்துள்ள சக்தியைச் சிவலிங்கத்தில் ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டும். சிவபூசை செய்வோரைச் சிவபிரா னாகவே கருதிச் சோடசோபசாரத்துடன் பூசித்தால் இஷ்டசித்தியுண்டா கும். சிவபக்தனையும் அவன் மனைவியையும், தானுந் தன் மனைவியுமாகக் கூடிப் பக்திபூர்வமாகப் பூசித்து அன்னபானாதிகள் அளிக்கவேண்டும். அவ்வாறு பூசித்தவர்கள் பிறவியொழிவார்கள். பக்தர்கள் தேகத்தில், நாபிக்குக்கீழுள்ளது பிரமபாகமும், நாபிக்குமேற் கழுத்துவரையுள்ளது விஷ்ணுபாகமும், கழுத்துக்குமேற்பட்டது சிவபாகமுமாம். பிதுர்களை யுத்தேசித்துச் சிவபக்தர்களுக்குப் பூசைசெய்தால், பிதுர்கள் தடையின்றி முக்தியடைவார்கள். பக்தபூசை செய்கையில் முதலில் தேவிபூசையைச் செய்யவேண்டும். தபோயோகி கிரியாயோகிகள் பதின்மருக்கும் ஜப யோகி தபோயோகி நூற்றுவருக்கும், சிவஞானி ஜபயோகியர் ஆயிர வருக்கும், தியானி சிவஞானி லக்ஷத்தவருக்கும், சமாதியுடையவன் கோடி தியானிக்குஞ் சிறந்தவர்கள். பூஜாகாலத்தில் இவர்கள் மேற்கூறியவகை யால் ஒருவரிலொருவர் மேம்பட்டவர்கள். இவர்கள் மகிமையைப் பெரி யோர்களுமறியமாட்டார்கள். யாவர்தாம் அறியவல்லவர்? சிவபூசையுஞ் சிவபக்தபூசையும் இவ்வகையாகச் செய்தவர்கள் சிவரூபமுற்றுச் சிவத் திற் கலப்பார்கள். வேதசமானமான இவ்வத்தியாயத்தை வாசித்தவர்க ளும் சிவபக்தர்கட்குச் சொன்னவர்களுஞ் சிவசந்நிதியில் வாழ்வார்கள்.

பிரணவ மஹாத்மியமுதலியனவுணாத்தது

முற்றிற்று.

பதினாறுவது
பந்தமோக்ஷஸ்வரூபாதிகளுரைத்த அத்தியாயம்.

ருஷிகள் ஸூதமுநிவரைநோக்கி, ஸ்வாமீ! தேவரீர் வியாஸமுநிவரால் யாவுமுணர்ந்தவராதலின், சிவமயமெல்லாஞ் சொன்னீர். இனி, பந்தமோக்ஷங்களின் ஸ்வரூபத்தைச் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸூதமுநிவர் சொல்லலாயினர்: முநிவர்களே! பிரகிருதிமுதல் எண்வகைப் பந்தங்களையுடையவன் ஜீவனெனவும், அப்பந்தங்களினின்று விலகியுள்ளவன் முக்தனெனவுஞ் சொல்லப்படுவர். பிரகிருதிமுதலிய எட்டையுஞ் சுவாதீனஞ் செய்துகொள்வதே மோக்ஷம். ஜீவன் பத்தஜீவனென்றும் முக்தஜீவனென்றும் இருவகை. பிரகிருதிமுதலிய வெட்டாற் செய்யப்பட்டது தேகம். தேகத்தாற் கர்மமும், கர்மத்தால் தேகமுமுண்டாகும். சரீரம் ஸ்தூலமென்றும் ஸூக்ஷ்மமென்றுங் காரணமென்றும் மூவகை. அதில் நடக்கவும் இருக்கவும் உணவாதிகளைப் புசிக்கவும் ஸ்தூலதேகமும், இந்தியபோகங்களுக்கு ஸூக்ஷ்மசரீரமும், ஆத்மபோகத்திற்காக ஜீவ கர்மாநுசரணமாக வுள்ளது காரணசரீரமுமாம். சுகந்துக்கமுதலியன அவரவர்செய்த கர்மங்கட்குப் பலனாகவுண்டாகுமாதலின், கர்மமாகிய கயிற்றாற் கட்டப்பட்டவன் ஜீவன். மூவகைச் சரீரத்தாலுண்டான கர்மங்களாற் சமுசாரமாகிய சாகரத்தில் ஜீவன் சக்கிராகாரமாகச் சுழல்கின்றான். இந்தப்பாதை யகல்வதற்காகக் கர்த்தாவான சிவபகவானை ஸ்தோத்திரஞ் செய்யவேண்டியது. உலகத்தையெல்லாம் நடைபெறச்செய்யுஞ் சிவபிரானே சக்கிரகர்த்தாவெனப்படுவான். சிவபகவானே பரிபூரணன்; சர்வஜ்ஞன்; மமகாரமற்றவன். ஆயினும் இப்பிரபஞ்சத்தைத் தன் சுவாதீனத்திலிருத்தி, யாவரையும் அநுபவிக்கச் செய்கிறான். பரமேசனுக்கு ஸர்வஜ்ஞத்தும் திருப்தி அநாதிபேதம் சுதந்திரம் குறையாவன்மை அநந்தசக்தி யென்னுமாறும் மாநச ஷட்குணங்கள். இந்த ஷட்குணைசுவரியத்தை வேதங்களறியும். சிவப்பிரசாதத்தாலேயே பந்தங்களொழியுமாதலின்,சிவகடாக்ஷமுண்டாவதற்காகச் சிவபூசையைச் செய்யவேண்டும். சிவலிங்கத்தையாவது சிவபக்தரையாவது சிவப்பிரீதிபாகத் திரிகரணங்களாலுந் தனத்தாலும் பூசித்தாற் சிவபெருமான் சத்தியமாக அநுக்கிரகிப்பான். சிவாநுக்கிரகத்தாற் கர்மஞ் சுவாதீனப்படும். அஷ்டபந்தமான கர்மசுவாதீனத்தால் முக்தனாவான். பரமேசாநுக்கிரகத்தாற் கர்மதேகம் சுவாதீனப்பட்ட காரணத்தாற் சிவலோகவாசமுண்டாகும். அதுவே சாலோக்யமாம். சப்தாதிபஞ்சதன்மாத்திரைகள் சுவாதீனப்படுதலாற் சிவசாமீப்யமுண்டாகும். சாமீப்யத்திற் கிரியைகள் சாதனைகள் திரிசூலமுதலிய ஆயுதங்கள் கிடைத்துச் சிவசாரூப்யமுண்டாகும். பின்னர்ச் சிவாநுக்கிரகத்தாற் புத்தி சிவபிரானிடத்திலேயே பொருந்தியிருத்தலாற் சிவசாயுச்சியமுண்டாகும். சர்வஜ்ஞத்துவ்முதலிய சிவைசுவரியங்கள் சித்திக்கும். இலிங்கமுதலியவற்றிற்

சிவார்ச்சனை செய்வதாற் கிரமமான முக்தி கிடைக்கும். ஆதலாற் சிவானுக்கிரகமுண்டாகச் சிவபூசை செய்யவேண்டியது. சிவகிரியை சிவதவம் சிவமந்திரஜபம் சிவஞானம் சிவத்யானம் இவ்வைந்தும் ஒவ்வொன்றாகச் செய்துமுடித்து மேலொவ்வொன்றாகச் செய்யவேண்டும். நாடோறும் நித்திரைசெய்யும்வரையில் மரணபரியந்தஞ் சிவசிந்தனையுடன் காலங்கழித்துச் சிறந்தமலர்களாற் சிவபூசை செய்தாற் சிவத்தையடைவான் என்றனர்.

அப்பொழுது, ருஷிகள் ஸ்வாமீ! லிங்கபேதத்தையுஞ் சிவலிங்க பூஜாவிதியையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லுகின்றார். முனிவர்களே! லிங்கத்தின் கிரமத்தைச் சொல்லுகிறேன். சர்வகாமங்களையுங் கொடுப்பது பிரணவலிங்கம். அது ஸூக்ஷ்மப்ரணவஸ்வரூபமும் நிஷ்களமுமாம். சகலமாகவுள்ளது ஸ்தூலலிங்கம். அதுவே பஞ்சாக்ஷரமெனப்படும். இவற்றின் பூசையுந் தவமும் மோக்ஷங்கொடுக்க வல்லவை. புருஷர்களால் நிர்மிக்கப்பட்ட பிரகிருதிரூபமான லிங்கங்கள் அநேகமுள. அவற்றையெல்லாஞ் சொல்லச் சிவபிரானே வல்லவன். யான் வல்லவனல்லன். ஆயினும் எனக்குத்தெரிந்த மகாலிங்கங்களைச் சொல்லுகிறேன். தானேயுண்டான ஸ்வயம்புலிங்கம் முதலாவது. இரண்டாவது விந்துலிங்கம். மூன்றாவதுபிரதிஷ்டிதலிங்கம். நான்காவதுசரலிங்கம். ஐந்தாவது குருலிங்கம். அவற்றில், தேவர்கள் ருஷிகள் முதலானோர் தவத்திற்கிரங்கிப் பூமியினின்று நாதரூபத்துடன் முளைத்துவந்த லிங்கம் ஸ்வயம்புலிங்கமாம். அதனைப் பூசைசெய்வதால் ஞானம் விருத்தியாகும். பொன் வெள்ளி முதலியவற்றாற் பூமியிலாவது பீடத்திலாவது தன் கையாற் செய்து பிரணவமந்திர ஜபத்துடன் அமர்த்தியலிங்கம் பிந்துலிங்கம். இலகுமகாயந்திரம் குருமகாயந்திரம் இவற்றிலொன்றெழுதி, அதன்மேலே லிங்கமெழுதி, பிந்துநாதஸ்வரூபமாகவும், தாவர ஜங்கமங்களிலொன்றாகப் பரமசிவன் அங்கிருக்கின்றானென்னும் பாவனையுடன் பூசைசெய்தாற் பலனுண்டாகும். தன்கையாற் பர்வதமுதலிய விடங்களில் இலிங்கமெழுதி அதிற் சிவபிரானை உபசாரங்களோடு ஆவாகனஞ்செய்து பூசித்தால் ஐசுவரியமும் அப்பியசித்தாற் சிவஞானமுமுண்டாகும். தேவர்களும் ருஷிகளுங் காரியசித்திக்காக மந்திரபூர்வமாகத் தங்கையாற் புனிதமானவிடத்தில், பாவனையோடு ஸ்தாபித்த லிங்கம் பிரதிஷ்டித லிங்கமென்றும், பௌருஷலிங்கமென்றும் பெயர்பெறும். அதனைப்பூசிப்பதாற் புருஷர்கள் தக்கபலனை யடைவார்கள். பிராமணர் க்ஷத்திரியர் முதலானவர்கள் திரவியத்தைச் செலவிட்டுச் சிற்பிகளை வருவித்து அவர்களாற் சிற்பவிதிப்படி லிங்கஞ்செய்வித்து ஸ்தாபித்ததும் பிரதிஷ்டிதலிங்கமேயாம். சிவபக்தர்கள் தம் வீட்டிலேயும் பெட்டகத்திலேயும் வைத்துச் செல்லுமிடந்தோறுங் கொண்டுசென்று ஆன்மார்த்தமாகப் பூசிப்பது சரலிங்கம். சரலிங்கங்களில் ரசலிங்கஞ் சிரேஷ்டமானது. அதைப் பிராமணர் பூசித்தால் எல்லாப்

பலனுமுண்டாகும். பாணலிங்கத்தை க்ஷத்திரியர் முதலியோர் பூசித்தால் இராச்சியமுதலியன வுண்டாகும். சுவர்ணலிங்கத்தை வைசியர் பூசித்தால் திரவியமுதலியன வுண்டாகும். சிலாலிங்கங்களைச் சூத்திரர் பூசித்தாற் கோரிக்கைகள் கைகூடும். ஸ்படிகலிங்கம் பாணலிங்க முதலியவற்றை எல்லாவருணத்தவரும் பூசிக்கலாம். தமது வருணத்திற்குக் கூறியலிங்கங் கிடையாவிடின், அன்னியர்க்கு விதித்த லிங்கத்தைப் பூசித்தாற் ரோஷமில்லை. சுமங்கலிகள் பார்த்திவலிங்கத்தைப் பூசிப்பது விசேஷம். விதவைகள் படிகலிங்க பூசைசெய்யலாம். அவளுக்குங் கோரிக்கையிருந்தால் ரஸலிங்கத்தைப் பூசிக்கலாம். பாலிய யவ்வன வார்த்திக பர்வங்களிலும் ஸ்திரீகளுக்கு ஸ்படிகலிங்கமே சகல பாக்கியங்களையுங் கொடுக்கும். காமியார்த்தமாகப் பூசிப்பவர்கள் பெரியோருபதேசப்படி பீடபூசையை விசேஷமாகச் செய்யவேண்டும். பூசைமுடிந்த பின்னர், சரலிங்கத்தைச் சம்புடத்திலாவது ஓர் அறையிலாவது வைத்துவைக்க வேண்டும். நிவிர்த்திமார்க்கத்திலிருந்து கரபூசை செய்வோர் தாம்புசிப்பதை நிவேதனஞ்செய்க. அவர்கட்கு ஸூக்ஷ்மலிங்க மொன்றுண்டு. அது விபூதியையே லிங்கமாகச்செய்து விபூதியையே நிவேதனமுஞ் செய்தலாம். அவர்கள் பூசைமுடித்த பின்லிங்கத்தைச்சிரசில் தரிக்கவேண்டும்.

விபூதியானது லௌகிகம் வைதிகம் சிவாக்கினி சம்பந்தமென மூவகை. லௌகிகாக்கினியாலுண்டானது திரவிய சுத்திக்காகும், மண் மரம் லோகம் தான்னியம் திலமுதலிய திரவியங்கள் வஸ்திரம் நேற்றைய பொருள்கள் நாய்முதலியவை பரிசித்தபொருள்கள் இவற்றையெல்லாம் பஸ்மமே சுத்திசெய்யும். நீரிற்கலந்ததும் கலவாததுமான பஸ்மத்தை அவ்வப்பொருளுக்கேற்ப வுபயோகிக்கலாம். வேதாக்னியாலுண்டான பஸ்மம் அநுஷ்டான சமயங்களி லுபயோகிக்கத்தகும். பஸ்மமேகர்மங்களைத் தகனஞ்செய்யும். பஸ்மதாரணத்தாற் சற்குணங்களுண்டாகும். வில்வமரத்து விறகையும் கபிலைப்பசுவின் கோமயவுருண்டையையும் சமிவிறகு அரசவிறகு பலாசவிறகு ஆலவிறகு இவற்றையும் அகோரமந்திரத்தால் பஸ்மஞ்செய்துகொண்டது சிவாக்கினிபஸ்மம். தர்ப்பையைச் சிவமந்திரத்தாற் பஸ்மஞ்செயினுஞ் சிவாக்கினிபஸ்மமாம். இப்பஸ்மத்தை நல்ல வஸ்திரத்தாலரித்துப் புதியமட்கலயத்தில் வைக்கவேண்டும். இது சிவதேஜசுண்டாகு நிமித்தம் அணியத்தக்கது. அரசன் குடிகளிடத்துச் சாரமான தானியத்தைக்கொண்டு களிப்பதுபோலவும், பிரஜைகள் பயிர் செய்து அதிற்சாரத்தைப்பெற்று மகிழ்வது போலவும், ஜடாராக்கினி ஆகாரத்தைத்தகித்துச் சாரத்தாற் சரீரத்தைப் போஷிப்பதுபோலவும், பிரபஞ்ச கர்த்தாவான பரமேசுவரன் தன்னிடத்துள்ள பிரபஞ்சத்தின் பாவத்தைப் பஸ்மத்தால் நசிக்கச்செய்து சுகத்தைக்கொடுக்கிறான். சிவபிரான் பஸ்மோத்தூளன காரணத்தால் ஜகத்து என்னும் சாரத்தைக் கிரகிக்கின்றனன். ஆகாசசாரத்தாற் கேசமும், வாயுசாரத்தால் முகமும், அக்கினி

சாரத்தால் இதயமும், ஜலசாரத்தாற் கடிபாகமும், பிருதிவிசாரத்தால் முழங்காலுமாகச் சிவபெருமான் தேகங்கொண்டிருக்கின்றனன். பிரம விஷ்ணு ருத்திரர்களுக்குச் சாரமானது திரிபுண்டரம். மகேசனும் விபூதியைத் திலகமாக நெற்றியிலணிகின்றான். [பஎதானே பிரகாசிப்பதுஸ= எல்லாவற்றினும்] எனவே பொருள்படுதலின், பஸ்மம் ஸர்வசாரங்கட்கும் மூலதனமென்று சிவபெருமான் சுவாதீனஞ்செய்துகொண்டனன். சிவபெருமானையன்றிப் பிறிதொருவன் பஸ்மசுவாதீனஞ் செய்தவனல்லன். [ஶி=புருஷன், வ=சக்தி] சிவசக்திகளின் ஐக்கியமே சிவசப்தத்தின் பொருள் ஆதலின் ஒருவன் தன் சரீரத்தைச் சிவசொரூபமாக்கிக்கொண்டு முதலிலே பஸ்மோத்தூளனஞ்செய்து பின்னர், திரிபுண்டர மணியவேண்டும். ஸ்திரீ புருஷர்கள் பூஜாகாலத்தில் நீரிற்கலந்தும், பிறகாலங்களில் தனியாயும் பஸ்மமணிக. நீரிற்கலந்த திரிபுண்டரமணிந்து பூசைசெய்தவர்கள் சிவபூசாபலனை யதோக்தமாகப் பெறுவார்கள். சிவமந்திரத்தாற் பஸ்மமணிந்தவர்கள் சிவாசிரமிகளெனப்படுவார்கள். சிவவிரதமிருப்பவனுக்கு அபரிசுத்தஞ் சூதகமுதலியனவில்லை. நெற்றியிற் பஸ்மதாரணஞ் செய்துகொண்டு, தன் கையாலாவது குருகையாலாவது மிருத்திகையால் திலகமணியவேண்டும். [கு=அகங்காராதிகுணங்களை, ரு=நிக்கிரகிப்பவன்] விகாரங்களுடன்கூடின ராஜஸ தாமஸகுணங்களை யொழிப்பவனாதலிற் குணாதீதனான பரசிவனே குருரூபமடைந்தனனெனத் தெரிந்துகொள்ளவேண்டும். பிரபஞ்சத்திலுள்ள தன் சிஷர்களெல்லாருக்குங் குணத்திரயத்தாலுண்டான அஜ்ஞானத்தையொழித்துச் சிவஸ்வரூபத்தையுணர்த்துதலிற் குருவென்று சொல்லப்படுகிறான். அவ்வகைய குருவின் சரீரமே குருலிங்கம். குருவுக்குப் பணிவிடை செய்வதே குருலிங்க பூசை. குருகூறியவை உசிதமாயினும் உசிதமற்றவையாயினும் மனமுதலியவற்றாலுந் திரவியத்தாலும் அவற்றைச்செய்பவனே சிஷன் எனப்படுவான். உடல் பொருள் ஆவியையுங் குருவுக்குக்கொடுத்து, தான் புசிக்குமுன் அவருக்கு உணவுகொடுத்துப் பின்னே தான் புசிக்கக்கடவன். எப்பொழுதும் பணிவிடைசெய்வதால், சிஷ்யனே புத்திரனெனப்படுவான். நாவாகிய சிசனத்தால், செவியாகிய யோனியில், மந்திரமாகிய விந்துவை ஆசிரியன் புகுத்தலால் ஜனித்தவன் மந்திரபுத்திரனெனப்படுவான். குருபூசைசெய்வதால், சிவபூசைசெய்த பலனுண்டாகும். குருபுசித்து மிகுந்தது சிஷன்புசிக்க யோக்கியமானது. அவற்றைச் சிவப்பிரசாதமாகக் கொள்ளவேண்டும். குருகட்டளையின்றிச் செய்பவ்வ பலன்கொடுக்கமாட்டா. குருவும் விசேஷ புத்திமானாகவிருக்கவேண்டும். அல்லாவிடிற் சிஷனுடைய அஜ்ஞானத்தை யகற்ற அவனுக்குச் சக்தியிராது.

ஒவ்வொரு காரியமும் நிறைவேறவேண்டி முதலிலே விக்னேச்வரனைப் பூசிக்கவேண்டியது. அதன்பின் சகலபாதைகளு மொழியும்படி சகல தேவர்களையும் பூசிக்கவேண்டியது. ஆதியாத்மிகமானவை ஜ்வராதி

க்ரந்திரோகங்கள், பசாசம் - நரிமுதலியவை-புற்றுவைத்தல்-பல்லிமுதலியன மேல்விழுதல் - வீட்டில் ஆமை பாம்பு துர்ச்சனர்முதலாக வருதல்-தகாதகாலத்தில் மரங்கள் ஸ்திரீகள் பசுக்கள் பிரசூதியாதல் முதலியன வருங் கஷ்டத்தையுணர்த்திய குறிகளாம். இவையாவும் ஆதிபௌதிகங்கள். வீட்டில் மலமுதலியன விழுதல்-இடிவிழுதல் - மஹாமாரிரோகம் - மாரீஜ்வரம் - விஷூசி - கோமாரி - கொப்புளங்காண்டல் - ஜன்மராசியில் துஷ்ட கிரகங்கள் சேர்தல் - துஷ்டசொப்பனம் முதலியன ஆதிதைவிகங்கள். சவம் - சண்டாளன்-பதிதன்முதலோரைப் பரிசித்தல்முதலிய விபத்துக்களுண்டானபோது வருந்துன்பத்தை யொழிக்கும்படி சாந்தியஜ்ஞஞ் செய்யவேண்டும். தேவாலயம் - பசுக்கொட்டில் - நந்தவனம் - வாசஸ்தானம் முதலியவற்றிலோரிடத்தில் இரண்டு அஸ்தபரிமாணமான மண்டபஞ்செய்து தானியத்தைப்பெய்து அதன்மேலே கமலமொன்றுவரைந்து, அதைச்சுற்றிலும் திக்குகளெட்டிலும் எட்டுக்கமலங்களெழுதி, பெரிய கசலமொன்றை நூல்சுற்றிச் சாம்பிராணிமுதலிய தூபங்கொடுத்து மத்தியிலமர்த்தி, இவ்வகையே எட்டுக்கும்பங்களைச் சுற்றுமெழுதிய கமலங்களில் வைத்து, தர்ப்பைகூர்ச்சம் மாவிலைமுதலியனவைத்து, வாசனைத் திரவியஞ்சேர்த்த நீரைச்சொரிந்து நவரத்தினங்களை ஒன்பது கலசங்களிலுமிட்டு, சாந்திவிதானமறிந்த வேதியனை ஆசாரியனகக்கொள்ளவேண்டியது. நடுவிலிருக்கும் மகாகும்பத்தில், சுவர்ண நிர்மிதமான விஷ்ணு பிரதிமையும், சுற்றிலுமுள்ள எட்டில் இந்திராதி எட்டுப்பதுமைகளும் வைத்து, மத்தியகலசத்தில் விஷ்ணுவையும், சுற்றுக்கலசங்களில் அஷ்டதிக்பாலர்களையும் ஆவாகித்துப் பூசைசெய்யவேண்டியது. ஆவாகனமுதலிய சகல காரியங்களையும் ஆசாரியனைக்கொண்டு செய்விக்கவேண்டும். ஆசாரியன் ருத்விக்குகள் முதலானருடன் யஜமானனும் பிரதிமந்திரங்களையும் நூற்றெட்டு ஜபஞ்செய்யவேண்டும். மண்டபத்தின் மேற்புறத்தில் ஜபமுடிந்தபின், கோடி அல்லது லக்ஷம் அல்லது ஆயிரம் அல்லது நூற்றெட்டு ஓமஞ்செய்யவேண்டும். இதை ஒருதினமுதல் ஒன்பதுதினவரையில் தேசகாலாநுசாரமாகச் செய்யலாம். சாந்திக்காக ஓமஞ்செய்கையிற் சமிவிறகும், விருத்திக்காகச் செய்கையிற் பலாசவிறகும் ஓமஞ்செய்யவேண்டும். சமித்து நெய் அன்னம்முதலியவற்றை அவ்வத்தேவர் பெயர்சொல்லி ஓமஞ்செய்க. ஓமத்திற்குக் கொண்டுவரும் பொருள்கள் அதுமுடியுமெல்லையும் இருக்கவேண்டும். கடைசிதினத்திற் புண்ணியாஹவாசனஞ்செய்து அந்த ஜலத்தைச் சிரசிற் புரோக்ஷணஞ்செய்துகொள்ளவேண்டும். பிராமணபோஜனம் ஓமக்கணக்கிற்குத்தக்கபடி செய்விக்கவேண்டும். ஆசாரியனும் ருத்விக்குகளும் அவியுணவே புசிக்கவேண்டும். ஓமாந்தத்தில் ஆதித்தியாதி நவக்கிரக பூசையைச் செய்யவேண்டியது. ருத்விக்குகளுக்கு நவரத்தினங்களையே தக்ஷிணையாகக் கொடுத்து விசேஷமாகப் பூசைசெய்யவேண்டியது. பாலர்கள் பிரமசாரிகள் வனவாசிகள் கன்னிகைகள் சுமங்கலிகள் விதவைகள் முதலியோருக்கெல்

லாம் பூரிதானங்கொடுத்து, மண்டபத்தில்வைத்த பூஜாதிரவியங்களை ஆசாரியனுக்குக் கொடுத்துவிடவேண்டும். மகாமாரி முதலிய ரோகங்களையுண்டுசெய்யும் இயமனுக்குப் பிரீதியாகக் காலபுருஷதானஞ் செய்க. அது நூறுவராகனெடை அல்லது பத்துவராகனெடை பொன்னாற் பாசாங்குசமேந்திய கோலமாகச்செய்த காலவிக்கிரகம் பூர்ணதக்ஷிணையோடு தானங்கொடுத்தலாம். பூர்ணாயுள்வேண்டின் திலதானமும், வியாதி நிவாரணத்திற்காகச் செப்புப்பாத்திரத்திற் கிருததானமுஞ் சகஸ்ரபிராமணபோஜனமுஞ் செய்விக்கவேண்டும். தரித்திரன் தன் சக்திக்கேற்ப அன்னதானஞ்செய்க. பூதசாந்தி மஹாபாதகசாந்திக்காகப் பைரவபூசை செய்க. இவைமுடிந்த பின்னர், சிவபெருமானுக்கு மகாபிஷேகமும் மகாநைவேத்தியமுஞ் செய்க. இது பங்குனிமாசத்திலே செய்யலாம். தீக்கனாமுதலிய வுண்டானவிடத்து ஒருமாசத்திற்குள்ளே செய்க. வியாதிவந்தவிடத்திற் சங்கற்பஞ்செய்து இவ்வகைச்சாந்தியுஞ் செய்க. தரித்திரன் தேவாலய மடாலயங்களில் தீபதானஞ் செய்க. அதற்குஞ் சக்தியற்றவன் ஸ்நானஞ்செய்து சிறிது தானமுஞ் சூரியநமஸ்காரமுஞ்செய்து சூரியமந்திரம் நூற்றெட்டு ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் கோடி ஜபஞ்செய்து நமஸ்காரமுஞ் செய்க. அதற்குஞ் சக்தியில்லாவிடின், சிவலிங்கப் பிரதக்ஷிணஞ்செய்து தான் புசிப்பதைப் சிவநிவேதனஞ்செய்து தாம்பூலஞ் சமர்ப்பித்து நூற்றெட்டு ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் பத்துலக்ஷம் கோடி பிரதக்ஷிணங்களையாவது செய்க. தானேசெய்யச் சக்தியில்லாவிடின், பிறரைக்கொண்டு செய்விக்க. சிவபிரதக்ஷிணத்தாற் சகலபாவமும் அப்பொழுதே நாசமாகும். வியாதியால் துக்கமும், பாதகங்களால் வியாதியுமுண்டாகும். அவ்வகைப் பாவங்களைத் தர்மத்தாலுஞ் சிவபிரதக்ஷிணத்தாலும் போக்கடிக்கலாம்.

சிவதர்மங்களிற் சிறந்தது பிரதக்ஷிணம். அதுவே கிரியா பிரணவம். ஜனன மரணங்களிரண்டும் மாயாசக்கிரம். மாயாசக்கிரமே சிவபிரானுக்குப் பலிபீடம். பலிபீட முதற் பிரதக்ஷிண கிரமமாகச்சுற்றிப் பலிபீடத்தையடைந்து நமஸ்கரிப்பதே பிரதக்ஷிணமென்று சொல்லப்படும். பலிபீடத்தினின்று புறப்படுவது பிறப்பும், மீண்டும் பலிபீடத்தையடைந்து நமஸ்கரித்து ஆத்மாவைச் சமர்ப்பிப்பது மரணமுமாம். மாயாகற்பிதமான ஜனன மரணங்கள் வேண்டாமென்று பிரார்த்திப்பதே நமஸ்காரமாம். காரியங்களைச் செய்யும்வரையிற் பந்தமுடைய ஜீவனென்றும், தேகத்திரயத்தைச் சுவாதீனஞ்செய்துகொண்டு மற்றவற்றையெல்லாம் விடுவது முக்தியுடைய ஜீவனென்றுஞ் சொல்லப்படும். ஜனன மரணங்களை யுண்டுசெய்பவனும் ஒழிப்பவனுஞ் சிவபெருமானே யாவான். ஆதலின் ஜனன மரணங்களைச் சிவபகவானுக்கே சமர்ப்பிக்கவேண்டியது. சிவபிரானுக்குப் பிரதக்ஷிணமும் நமஸ்காரமும் அதிப்பிரியமாதலின், பிரதக்ஷிண நமஸ்காரங்களின்றி ஷோடசோபசாரங்களுடன் செய்த விசேஷபூஜையும் பலன்கொடுக்கமாட்டாது. சிவபூஜாபரனை மௌனி சத்திய

முதலிய நற்குணங்களுடன் கிரியை தவம் ஜபம் ஞானம் தியானமுதலியவற்றில் ஒவ்வொன்றை யாசரிக்கவேண்டும். இவற்றால் ஐசுவரியம் திவ்யதேகம் ஞானம் அஜ்ஞானநாசனம் சிவசாந்நித்யம்முறையே யுண்டாகும். சிவபக்தன் தேசகாலங்களையுந் தேகநிலைமையையுந் தனத்தையும் யோசித்து அவற்றிற்கேற்பக் கிரியாயஜ்ஞமுதலியவற்றைச் செய்துகொண்டு ஜீவஹிம்ஸை முதலியனவில்லாத சிவக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்து பஞ்சாக்ஷர ஜபத்தைச்செய்துகொண்டு தனக்குக்கிடைத்ததைப் புசித்துக் காலங்கழிக்கவேண்டும். தரித்திரனுயின் பிக்ஷான்னத்தால் உதரபோஷணஞ்செய்தாலும் ஞானவிருத்தி யுண்டாகும். சிவயோகிகள் பிக்ஷான்னத்தாற் சீவிப்பதைச் சம்புசத்திரமென்று சொல்வார்கள். எவ்வகையிலாவது புண்ணியக்ஷேத்திரத்தில் வசித்துப் புனிதமான அன்னத்தைப் புசித்துக்கொண்டு சிவபக்தர்களுக்குச் சிவமஹாத்மியத்தைச் சொல்லவேண்டியது. சிவமந்திர ரகசியத்தைச் சிவபிரானன்றி ஒருவனுமறியமாட்டான். சிவபக்தன் சிவலிங்கத்தை ஆசிரயிப்பதாற் சிவசமானனுவான். சரலிங்க பூசையால் நிச்சயமாக முக்தனுவான். சாத்தியசாதனலக்ஷணங்களை வியாஸபகவானுல் யான் கேட்டறிந்த வகையே உங்கட்குச் சொன்னேன். இப்புராண முழுவதையுங்கேட்ட உங்களுக்கும் சொல்லிய எனக்கும் சிவபக்தி யுண்டாகுமாக. உங்களுக்கெல்லாம் மங்களமுண்டாகுமாக. இவ்வத்தியாயத்தைக் கேட்டவர்களும் சொன்னவர்களும் சிவகடாக்ஷம்பெறுவார்கள் என்று ஸூதமுநிவர் விடைகொண்டு சென்றனர்.

பந்தமோக்ஷஸ்வரூபாதிகளுணாத்தது

முற்றிற்று.

வித்யேசுவரஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சிவமஹாபுராணம் முற்றியது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.

உ

சிவமயம்.

ஸ்ரீ சிவமஹாபுராணத்தின் அட்டவணை.

ஞானஸம்ஹிதை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
௧	புராணவரலாறு	௧
௨	ஜோதிலிங்கோற்பவவர்ணனம்	௨
௩	பிரமவிஷ்ணுக்களுக்கு வரமளித்தது	௭
௪	சிவலிங்கமகிமை	௧௧
௫	சிருஷ்டிநிரூபணம்	௧௬
௬	ஷை	௧௮
௭	சிவபூஜாவிதி	௨0
௮	ஷை	௨௫
௯	தேவர்களது துயருரைத்தது	௨௬
௧0	சிவபெருமான் யோகத்தமர்ந்தது	௨௯
௧௧	பார்வதி பரிவர்த்தனம்	௩௪
௧௨	பார்வதி தபோவர்ணனம்	௩௬
௧௩	ஷை	௩௮
௧௪	பார்வதிக்கு வரங்கொடுத்தது	௪0
௧௫	பார்வதியை மணம்பேசியது	௪௪
௧௬	திருமணத்திற்குத் தேவர்வந்தது	௪௯
௧௭	மேனை அஞ்ஞான மயக்கமுற்றது	௫௩
௧௮	பார்வதி விவாகம்	௫௬
௧௯	தாரகன்வதையுந் திரிபுரத்தோற்றமும்	௬௧
௨0	திரிபுரஸம்ஹார ஆலோசனை	௬௪
௨௧	ஜைநதீக்ஷோபதேசம்	௬௫
௨௨	திரிபுராதியரை வஞ்சித்தது	௬௭
௨௩	திரிபுரோபாக்கியானம்	௬௯
௨௪	திரிபுரதகனம்	௭0
௨௫	விசுவகர்மா சிவலிங்கமளித்தது	௭௩
௨௬	பாஹ்யாந்தர லிங்கங்களுரைத்தது	௭௬
௨௭	நித்தியகருமம்	௭௮
௨௮	பூஜாவிதி வர்ணனம்	௮௧
௨௯	ஷை	௮௨
௩0	தாழம்பூவின் சாபம்	௮௫
௩௧	சண்பகப்பூவின் சாபம்	௮௭
௩௨	கணபாலன் அவதரித்தது	௯௧
௩௩	கணபாலன் போர்புரிந்தது	௯௫
௩௪	கணபதி பட்டாபிஷேகமும் விரதமும்	௯௮
௩௫	கணபதி தாய்தந்தையரை வலம்வந்தது	௧0௩
௩௬	கணபதி விவாஹம்	௧0௫
௩௭	உருத்திராக்ஷமகிமை	௧0௬
௩௮	ஜோதிலிங்கங்களின் தொகை	௧0௯
௩௯	நந்திகேசுவரலிங்கமகிமை	௧௧௨
௪0	ஷை	௧௧௪

ஞானசம்கிதை.

அட்டவணை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
௪௧	அத்திரீசுவர மகிமை	௧௧௫
௪௨	நாகேசுவர மகிமை	௧௨0
௪௩	அந்தகேசுவர மகிமை	௧௨௩
௪௪	ஆதிசைவர் சிறப்பு	௧௨௪
௪௫	சோமேசுவர மல்லிகார்ச்சுன மகிமை	௧௨௬
௪௬	மகாகாள ஓங்காரலிங்கங்களின் மகிமை	௧௩௧
௪௭	கேதாரேசுவர மகிமை	௧௩௪
௪௮	பீமசங்கர மகிமை	௧௩௫
௪௯	காசியின் மகிமை	௧௩௮
௫0	காசிநகர வர்ணனம்	௧௪௫
௫௧	ஷை	௧௪௯
௫௨	கௌதமேசுவர மகிமை	௧௫௧
௫௩	கோதாவரியின் தோற்றம்	௧௫௪
௫௪	திரியம்பக லிங்கமகிமை	௧௬0
௫௫	வைத்தியநாதேசுவர மகிமை	௧௬௩
௫௬	போகேசுவர மகிமை	௧௬௬
௫௭	இராமேசுவர மகிமை	௧௭0
௫௮	குஸ்மேசுவர மகிமை	௧௭௧
௫௯	இரணியகசிபன் வரம்பெற்றதும் பிரகலாதனைப் படிப்பித்ததும்	௧௭௬
௬0	பிரகலாதன் விஷ்ணுமகிமையுரைத்தது	௧௮௪
௬௧	நரசிங்க சரபாவதாரங்களின் சரிதங்கள்	௧௮௬
௬௨	நளராஜனது பூர்வகதை	௧௯௨
௬௩	கண்ணனும் வியாதனும் பாண்டவரிடம் வந்தது	௧௯௩
௬௪	அர்ச்சுனன் தவஞ்செய்தது	௧௯௫
௬௫	மூகாசுர சங்காரம்	௧௯௯
௬௬	சிவபெருமான் அர்ச்சுனனையடைந்தது	௨0௨
௬௭	அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது	௨0௪
௬௮	அர்ச்சுனன்செய்த சிவபூஜாவிதானம்	௨0௭
௬௯	கண்ணன் சிவபூஜைசெய்தது	௨௧0
௭0	திருமால் நேமிபெற்றது	௨௧௨
௭௧	சிவநாமங்களாயிர முரைத்தது	௨௧௩
௭௨	சிவராத்திரி விரதமகிமை	௨௨0
௭௩	சிவராத்திரி உத்தியாபனவிதி	௨௨௪
௭௪	வேடுவன் சிவராத்திரி பலனடைந்தது	௨௨௬
௭௫	வேதநிதி சிவராத்திரி பலனடைந்தது	௨௩௩
௭௬	முத்திலக்ஷணமும் சிவரூபமும்	௨௩௫
௭௭	சிவபெருமானது நித்தியத்துவம்	௨௩௬
௭௮	ஞானப்பிரகரண முரைத்தது	௨௩௮

தர்மஸம்ஹிதை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
௧	சிவமஹாத்மியமுரைத்தது	௨௪௨
௨	ஷை	௨௪௫
௩	திரிபுரசங்காரம்	௨௫௨
௪	அந்தகாசுரன் கதை	௨௫௫
௫	அந்தகாசுரன் முத்தி	௨௭0
௬	ருருவின் கதை	௨௭௪
௭	சத்தி சிவங்களின் சிறப்பு	௨௭௮
௮	காமத்தின் கதை	௨௮௯
௯	மன்மதன் கதை	௨௯௩
௧0	ஷை	௨௯௯
௧௧	ஷை	௩0௭
௧௨	ஷை	௩௧௨
௧௩	ஷை	௩௧௯
௧௪	ஷை	௩௨௫
௧௫	நித்தியநைமித்திக பூஜாவிதி	௩௨௬
௧௬	சிவலிங்க பூஜாபலன்	௩௩௨
௧௭	சிவனடியவர் சிறப்பும் அடியவர் பூஜாபலனும்	௩௩௮
௧௮	பாவவிவரணம்	௩௪௯
௧௯	பாவிகள்பெறுந் தண்டனை	௩௫௫
௨0	புண்ணியர்பெறும் பதவி	௩௬௬
௨௧	அன்னதான பலன்	௩௭௫
௨௨	பானதானம் தவம்முதலியவற்றின் சிறப்பு	௩௭௬
௨௩	புராணசிரவண மகிமை	௩௮0
௨௪	சுவர்ணதான பூதானங்களின் மகிமை	௩௮௩
௨௫	பூதானவிதி	௩௮௮
௨௬	திலஹஸ்தி தானம்	௩௯0
௨௭	சதுர்த்தசி விரதம்	௩௯௨
௨௮	சதுர்த்தசிவிரத சமானம்	௩௯௯
௨௯	துலாபுருஷதானம்	௪0௬
௩0	பரசுராமர் சரிதம்	௪0௯
௩௧	பாதாளலோக வர்ணனை	௪௧௨
௩௨	நாகலோக வர்ணனை	௪௧௫
௩௩	பூமண்டல விஸ்தீரணம்	௪௧௭
௩௪	பாரதவருஷ விஸ்தீரணம்	௪௧௯
௩௫	மிருத்யுஞ்சய மந்திரம்	௪௨௨
௩௬	மிருத்யுஞ்சயப் பிரபாவம்	௪௨௪
௩௭	பஞ்சப்பிரம மந்திரம்	௪௨௮
௩௮	ஈசான கல்பம்	௪௨௯
௩௯	தத்புருஷ கல்பம்	௪௩௧
௪0	அகோர வாமதேவ ஸத்தியோஜாத கல்பங்கள்	௪௩௨
௪௧	க்ஷத்திரிய தருமம்	௪௩௮
௪௨	கருப்பவாச கஷ்டம்	௪௪0
௪௩	ஸ்திரீகளின் சுபாவம்	௪௪௫
௪௪	அருந்ததியின் கற்பியல்பு	௪௫௩
௪௫	சாவித்திரியின் சரிதம்	௪௫௫

அட்டவணை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
௪௬	மரணகாலமறிவது	௪௫௮
௪௭	யோகநிலை	௪௬௧
௪௮	சாயாபுருஷ தரிசனமும் புராண சிரவணமும்	௪௬௬
௪௯	திரிமூர்த்திகளின் தோற்றம்	௪௬௭
௫௦	பிரமவிஷ்ணுக்கள் வரம்பெற்றது	௪௬௯
௫௧	உலகசிருஷ்டி	௪௬௯
௫௨	உலகவிருத்தி	௪௭௧
௫௩	ஷை	௪௭௨
௫௪	காசிபர் முதலானோர் பரம்பரை	௪௭௩
௫௫	உலகநாயகர்	௪௭௭
௫௬	பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவம்	௪௭௮
௫௭	பூதேவி பசுவடிவுற்றது	௪௮௧
௫௮	மந்வந்தரமுரைத்தது	௪௮௨
௫௯	சஞ்ஞிகை சாயையின் சரிதமுரைத்தது	௪௮௫
௬௦	வைவசுவதமநு மரபுரைத்தது	௪௮௭
௬௧	ஷை	௪௯௧
௬௨	பிதுர்தேவர் சிறப்புரைத்தது	௪௯௫
௬௩	பிதுர்பத்தியின் பலனுரைத்தது	௪௯௮
௬௪	ஷை	௪௯௯

கைலாயஸம்ஹிதை.

௧	சத்திரயாகஞ்செய்தது	௧
௨	பார்வதி பரமசிவ ஸம்வாதமுரைத்தது	௩
௩	ஷை	௪
௪	பஞ்சாவரண பூஜாமண்டலமுரைத்தது	௮
௫	பஞ்சாவரணபூஜாவிதியும்அங்கநியாஸகரநியாசமுமுரைத்தது	௯
௬	பூஜாமந்திரமும் சதாசிவரூபமுமுரைத்தது	௧௩
௭	வாமதேவர் முருகப்பிரானையடைந்தது	௨௧
௮	ஸந்நியாசக்கிரமமுரைத்தது	௨௫
௯	ஷை	௨௯
௧௦	ஷட்விதார்த்தமுரைத்தது	௩௩
௧௧	ஆசாரியாபிஷேகமுரைத்தது	௪௪
௧௨	தகனகனனவிதியுரைத்தது	௪௭
௧௩	ஸூதமுநிவர் விடைகொண்டது	௫௪

அட்டவணை முற்றிற்று.

ஸநத்குமாரஸம்ஹிதை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
க	ஸநத்குமாரர் நைமிசமடைந்தது	க
உ	உலகோற்பத்தியுரைத்தது	உ
௩	ஷை	ரு
ச	பாதாளவர்ணனை	அ
ரு	மேலுலகவர்ணனை	கக
சு	உருத்திரமூர்த்தியின் பிரபாவம்	க௩
எ	ஷை	கரு
அ	ஸநத்குமாரர் வரம்பெற்றது	கஎ
கூ	பிரமகீதையுரைத்தது	உஉ
க0	திரிமூர்த்தி நகரங்களுரைத்தது	உ௩
கக	பலதேவருலகுரைத்தது	உஅ
கஉ	அழியாப்பதவியுரைத்தது	உகூ
க௩	சிவக்ஷேத்திரங்களுரைத்தது	௩0
கச	சிவபூசாபலனுரைத்தது	௩ச
கரு	புண்ணியக்ஷேத்திரங்களுரைத்தது	௩எ
கசு	ஷை	௩கூ
கஎ	ஷை	௩கூ
கஅ	சிவபெருமானது பிரபாவம்	சக
ககூ	மலர்களின் மகிமை	சஉ
உ0	சிவபுண்ணியமுரைத்தது	ச௩
உக	சுவர்ணபுஷ்ப சமானமுரைத்தது	சரு
உஉ	மாசோபவாசமகிமை	சஎ
உ௩	நாமாஷ்டமி விதி	ரு0
உச	லக்ஷணாஷ்டமி விதி	ரு௩
உரு	தானபலனுரைத்தது	ருச
உசு	உபவாசபலனுரைத்தது	ருஅ
உஎ	நியமப்பிரபாவமுரைத்தது	ருகூ
உஅ	சந்திரதாரணமும் விஷபானமுமுரைத்தது	சுஉ
உகூ	பர்ணாதன்தவமும் விபூதிமகிமையுமுரைத்தது	சு௩
௩0	சிவநாமமகிமை	சுச
௩க	அறுபத்தெட்டுஸ்தலங்களுரைத்தது	சுசு
௩உ	பிரணவோச்சாரணபலனுரைத்தது	சுஅ
௩௩	பிராணாயாம விதி	கூகூ
௩ச	தாரணையுரைத்தது	எக
௩ரு	பாஹ்யாந்தரயோகங்களுரைத்தது	எஉ
௩சு	இதயசோமமண்டலமுரைத்தது	எ௩
௩எ	ஷை	எச
௩அ	தேகந்தெய்வமயமென்பது	எரு
௩கூ	பிரமநாடியுரைத்தது	எசு
ச0	அவிமுக்தமகாத்மியமுரைத்தது	எஅ
சக	ஹரிகேசன் சரிதமுரைத்தது	எகூ
சஉ	பிரதாபமகுடன் சரிதமுரைத்தது	அரு
ச௩	சிவபெருமானது காசிவாசகாரணமுரைத்தது	அஅ
சச	புஷ்பவாகன் சரிதமுரைத்தது	அக
சரு	சிலாதமுநிவர் தவஞ்செய்தது	கூ௩

அட்டவணை.

அந்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
௪௬	நந்திதேவர் பேறுபெற்றது	௯௭
௪௭	கணங்களின் வருகையுரைத்தது	௧௦௧
௪௮	நந்திதேவர்பட்டாபிஷேகம்	௧௦௪
௪௯	நந்திதேவர் திருமணம்	௧௦௫
௫௦	நீலகண்ட வரலாறு	௧௦௮
௫௧	முப்புரத்தோற்றம்	௧௧௪
௫௨	முப்புரங்களைப்பொடித்தது	௧௧௫
௫௩	பாவருசியின் சரிதமுரைத்தது	௧௧௬
௫௪	சிவயோக விபூதி	௧௧௮
௫௫	நாடிவிசேஷணமுரைத்தது	௧௨௧
௫௬	நாடிசக்கிரமும் பிராண உத்க்ரமணமுமுரைத்தது	௧௨௩
௫௭	சிவபுரத்தின் பிரபாவமுரைத்தது	௧௨௫

வாயுஸம்ஹிதை.

(பூர்வபாகம்.)

௧	வித்யாவதாரமுரைத்தது	௧௨௯
௨	ருஷிகள் பிரமலோகமடைந்தது	௧௩௩
௩	வாயுபகவான் நைமிசவனமடைந்தது	௧௩௮
௪	சிவஞானநிலைமையுரைத்தது	௧௩௯
௫	காலஸ்வபாவமுரைத்தது	௧௪௮
௬	காலவளவுந் தேவராயுவுமுரைத்தது	௧௫௦
௭	சக்தியாதி ப்ரளயாந்தமுரைத்தது	௧௫௨
௮	அண்டோற்பத்தியுரைத்தது	௧௫௩
௯	சுவேதவராககற்பமுரைத்தது	௧௫௫
௧௦	பலவகைச்சிருஷ்டியுரைத்தது	௧௫௬
௧௧	பிரம விஷ்ணு உற்பத்தி	௧௬௦
௧௨	உருத்திரோற்பத்தி	௧௬௨
௧௩	பிரமன் உருத்திரனைத்துதித்தது	௧௬௩
௧௪	மாதர் சிருஷ்டி	௧௬௫
௧௫	பிரமவமிசோற்பத்தி	௧௬௬
௧௬	தக்கன் முதலானோர் சாபமேற்றது	௧௬௮
௧௭	வீரபத்திராவதாரமுரைத்தது	௧௭௧
௧௮	தக்ஷயாகத்தையடைந்தது	௧௭௪
௧௯	தக்ஷயாகத்தையழித்தது	௧௭௬
௨௦	தேவர்க்கருளியது	௧௭௯
௨௧	தேவி கௌரநிறம்பெற்றது	௧௮௧
௨௨	கௌரி மந்தரமடைந்தது	௧௮௫
௨௩	சோமநந்தி சரிதமுரைத்தது	௧௮௬
௨௪	உலகம் அக்கினிசோமமயமென்பதுரைத்தது	௧௮௭
௨௫	ஷடத்துவாக்களுரைத்தது	௧௮௮
௨௬	சிவவிஜயமுரைத்தது	௧௯௦
௨௭	சிவாநுக்கிரகவியல்பு	௧௯௨
௨௮	பாசுபதயோகமும் அஷ்டநாமமுமுரைத்தது	௧௯௫
௨௯	பாசுபதவிரதமுரைத்தது	௧௯௯
௩௦	உபமந்யு பேறுபெற்றது	௨௦௪

அட்டவணை.

(உத்தரபாகம்.)

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
க	கண்ணன் சிவதீக்ஷைபெற்றது	உ0அ
உ	சிவனே பசுபதியென்பது	உ0கூ
௩	யாவுஞ்சிவன்செயலென்பது	உகக
ச	பஞ்சப்பிரம அஷ்டமூர்த்தங்களுரைத்தது	உகஉ
ரு	சிவஞ்சக்திகளின் விபூதியுரைத்தது	உக௩
சு	ஈசுவரப்பிரபாவமுரைத்தது	உகரு
எ	நிஷ்களமுஞ் சகளமுமுரைத்தது	உகசு
அ	உமாமகேசுவரோபாசனையும் ஆகமோற்பத்தியுமுரைத்தது	உகஎ
கூ	தேவர்களுக்குச் சிவாகமமளித்தது	உஉக
க0	ஆசிரியர் பெயரும் மாணாக்கர் பெயருமுரைத்தது	உஉ௩
கக	சிவபெருமானுமாதேவிக்கருளியது	உஉச
கஉ	பஞ்சாக்ஷரமந்திரப்பிரபாவம்	உ௩0
க௩	குருதீக்ஷாவிதியுரைத்தது	உச0
கச	சமயதீக்ஷாவிதி	உசச
கரு	விசேஷதீக்ஷாவிதி	உசஅ
கசு	ஸாதகதீக்ஷாவிதி	உருச
கஎ	ஆசாரியாபிஷேகமுரைத்தது	உருரு
கஅ	நித்தியநைமித்திககருமமுரைத்தது	உருஎ
ககூ	மானஸபூஜாவிதி	உசு௩
உ0	கிரியாபூஜாவிதி	உசுச
உக	சிவஹோமமுரைத்தது	உசுகூ
உஉ	மாஸபூஜாவிதி	உஎஉ
உ௩	காமியகன்மபலமுரைத்தது	உஎ௩
உச	ஸ்தோத்திரமுரைத்தது	உஎசு
உரு	அக்கினிகாரியமுரைத்தது	உஅ0
உசு	சிவவிரதமுரைத்தது	உஅஉ
உஎ	இலிங்கோற்பவமுரைத்தது	உஅ௩
உஅ	சிவலிங்கஸ்தாபனவிதி	உஅசு
உகூ	ஞானயோகமுதலியனவுரைத்தது	உஅகூ
௩0	ருஷிகள் காசியையடைந்தது	உகூக

வித்யேசுவரஸம்ஹிதை.

க	ருஷிகள் பிரமதேவரையடைந்தது	உகூகூ
உ	ஸநத்குமாரர் வியாஸருக்கு உபதேசித்தது	௩0க
௩	இலிங்க விக்கிரகங்களின் வரலாறுரைத்தது	௩0உ
ச	பிரமவிஷ்ணுக்கள் போர்செய்தது	௩0ச
ரு	அடிமுடிதேடியது	௩0ரு
சு	பிரமசிரச்சேதமும், தாழைமலர்ச்சாபமுமுரைத்தது	௩0எ
எ	அருணாசல லிங்கமகிமைகளுரைத்தது	௩0கூ
அ	பிரமவிஷ்ணுக்களுக்குபதேசித்தது	௩கக
கூ	சிவலிங்கப்பிரதிஷ்டையு மந்திரஜபமுமுரைத்தது	௩க௩
க0	தீர்த்தக்ஷேத்திர மகிமைகளுரைத்தது	௩கசு
கக	ஸர்வாசாரமுரைத்தது	௩ககூ
கஉ	பஞ்சயஜ்ஞங்களும் வாரபூஜையுமுரைத்தது	௩உச
க௩	தானதேசகாலங்களுரைத்தது	௩உஎ

பிருகஸ்பதிமனைவி தாரை. ஞானசங்கிதை - 130
சந்திரன்பிதா அத்திரிமுனிவர். ஞானசங்கிதை - 130
இரணியாட்சன்புதல்வன் நந்தி
சேகரன் } ஞான 123